九
Zm2, N06
N08.3-5
166912

C. KRISHNAN Esq., M. A., *Barrister-at-Law,*
Second Judge, Presidency Court of Small Causes, Madras.
மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட்டு 2-வது ஜட்ஜி, மிஸ்டர் சி. கிருஷ்ணன். எம் எ, பாரிஸ்டர்-அட்-லா.

OFFICE OF THE REGISTRAR

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தரமாதாந்திரசஞ்சிகை.

பத்திராசிரியர்—கமிட்டி.

பிரசுரிக்கிறவர்கள்:—ந. ராதாகிருஷ்ண அண்டு கோ.

வால்யம் 3.] சென்னப்பட்டணம், 1908௵ ஜனவரி௴ [பாகம் I.

அடக்கம்.

		பக்கம்.
1.	மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட்டு ஜட்ஜி மிஸ்டர்-சி. கிருஷ்ணன், எம். ஏ., பாரிஸ்டர் அட்லா.	
2.	ஒரு ஹிந்து குடும்பமும் விதவையான மருமகளும்	1
3.	முக்கியமான தீர்ப்புகள்	6
4.	இந்தியன் லா ரிப்போர்ட்டுகளிலுள்ள கேசுகள்...	11
5.	சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்	14
6.	பொது வர்த்தமானம்	16
7.	ஹிந்துலா ஸ்வீகாரம்	16
8.	கவர்ன்மெண்டு ஆர்டர்களும், போர்டு புரோசிடிங்ஸ்களும்	19

பிஞ்ஞாபனம்.

இப்பூமண்டலத்தில் மானிடராய்ப் பிறந்தோமெல்லோரும் நம்முடைய சகோதரர்களாகிய சுதேசிகளுக்கு யாதேனும் ஒரு நன்மை பயக்கும் பொருட்டு நாம் [illegible] கின்ற தொழில்களிலெல்லாம் முக்கியமாய் நாம் [illegible] ஒன்றரை வருஷகாலமாக நம்முடைய சுதேசிகளுக்கு சட்டநிபந்தனைகளை போதித்து, நம்முடைய ராஜதானியிலும் இன்னும் இதர இடங்களிலும் நேரிடும் சட்ட சம்பந்தமானதும் மற்ற சமாச்சாரங்களும் நம் நேயர்கள் அறிந்து விர்த்தியடையவேணுமென்கிற எண்ணத்தைக் கொண்டு இப்பத்திரிகையை வெளியாக்கி வருகின்றோமல்லவா. ஆகையால் நாம் இப்போது பிறந்த 1908ஹுத்தில் செய்யவேண்டிய தொழில் யாதென்று சற்று நிதானிப்போமாகில் முதல் முதல் நம்மருகாமையிலும் அதி தூரத்திலும் வாசஞ் செய்கின்ற நம்முடைய கெஜெட்டுக்கு சந்தாதாரர்களாயிருந்து இப்பத்திரிகையை இன்புற்று வாசித்து வரும் நண்பர்களுக்கும் இன்னும் நம்முடைய கெஜெட்டு விருத்தியாகவேணுமென்கிற எண்ணத்தைக்கொண்டு இந்த பத்திரிகையை ஆதரித்து வரும் கனதனவான்களுக்கும் வந்தனமளிப்பதே முதல் முதல் செய்யவேண்டிய தொழிலென்று நாம் உணர்ந்தோமாகையால் நம்மை பிறப்பித்த ஐயன் அருளினால் நாமெல்லோரும் இவ்வுலகில் களி கூர்ந்து சுகமாய் நாள் கழிப்போமென்று சதா கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

மாதம் மாதம் கிரமமாய் யாதொரு தவக்கமுமின்றி பிரசுரமாய்க் கொண்டிருந்த நம்முடைய பத்திரிகை சென்ற மூன்று மாதங்களாக அந்தந்த மாதத்தில் கிரமமாய் பிரசுரிக்கப் படாமல் தவக்கம் நேரிட்டதைப்பற்றி நம்முடைய சந்தாதாரர்களுக்கு மன வருத்தமும் அருவெறுப்புமாகவே யிருக்குமென்பது ஏற்கனவே நாமறிந்திருந்தும் தவக்கம் நேரிட்டதற்கு காரணம் யாதெனில், நம்முடைய கெஜெட்டுக்கு பத்திராசிரியரா யிருந்தவரால் நேரிட்ட சில அசந்தர்ப்பங்களினாலும், இன்னும் அதை அச்சிடுவதினால் நேரிட்ட சில கஷ்டங்களினாலும், நம்முடைய சட்ட கெஜெட்டுக்கு சந்தாதாரராய் சேர்ந்து அதில் பிரசுரித்து வரும் விஷயங்களை இன்புற்று வாசித்து சட்ட ஞானம் பெற வேண்டுமென்கிற அவா வுடன் அவர்கள் பெயரை சந்தாதாரர்களாக ரிஜிஸ்டர் செய்துகொள்ளும்படி ஆர்டர் அனுப்பிவைத்த சில கனவான்கள் பிறகு சட்ட புஸ்தகத்தை தபால் மூல்யமாய் அவர்களுக்கு அனுப்பி வைத்தால் அதை பெற்றுக் கொள்ளாமல் வாபீஸ் செய்து விடுகிறார்கள், அவர்கள் அப்படி செய்வதினால் தபால் சார்சு முதலான கஷ்ட நஷ்டங்கள் நேரிடுவதுமல்லாமல் புஸ்தகங்களும் மிக்க கேவலமாய் கிழிந்து சேதமாகி மிக்க நஷ்டத்தை விளைத்தமையாலுமேயாம். ஆகையால் இனிமேல் கனவான்கள் இவ்விதமாய் செய்யாமல் சந்தாதாரராய் ரிஜிஸ்டர் செய்துகொள்ளும்படி ஆர்டர் அனுப்பிவித்து பிறகு இத்தியாதி நஷ்டங்களை விளைவிக்காதபடி புஸ்தகத்தை வாபீஸ் செய்யாமல் பெற்றுக் கொள்ளுவீரென்று பிரார்த்திக்கின்றோம். இப்பத்திரிகையை விருத்தி செய்து இந்தியன் லா ரிபோர்டுகளை பிரசுரித்து வரும் ஏற்பாடுகளை அனுசரித்து ஏறக்குறைய அவ்விதமாகவே இந்த பத்திரிகையையும் இனி யாதொரு தவக்கமுமின்றி பிரசுரித்து வரவேணுமென்கிற கருத்தை பெரிதாகக்கொண்டு அதன் விஷயமாய் செய்யவேண்டிய ஏற்பாடுகளை செய்திருக்கிறோமாகையால் இனி யாதொரு தவககமுமின்றி பிரதி மாதத்திலும் கிரமமாய் பிரசுரித்து வரப்படுமென்று திண்ணமாய் கூறுகின்றோம்.

நம்முடைய சந்தாதாரர்களில் சிலருடைய வேண்டுகோளின்பேரில் இது வரையிலும் ஆகஸ்டு மாதத்திலிருந்து பிரசுரிக்கப்பட்டு வந்த இந்த கெஜெட்டு இனி மேல் ஜனவரி மாதம் முதல் 3-வது வால்யூமாக பிரசுரிக்கப்பட்டு வரும். இன்னும் நம்முடைய கெஜெட்டு விஷயமாய் மிக்க சிரத்தையும் ஊக்கமும் உள்ள நம்முடைய நண்பர்களின் உதவியைக்கொண்டு அவர்கள் நம்முடைய கெஜெட் விஷயமாய் அப்போதைக்கப்போது கோர்ட்டாரால் தீர்மானித்து வரும் தீர்ப்பு விஷயங்களையும் முன்னிலும் மிக்க மேலாகவே பிரசுரித்து வரும்படியாகவும் இப்போது முழுதும் புதிதாய் செய்து திருத்தப்பட்டுள்ள சிவில் புரோசிடர், லிமிடேஷன் இன்சால்வன்சி இப்படிப்பட்ட ஆக்டுகளை சட்ட நிருபனை சபையார் ஒவ்வொரு பிரிவையும் எவ்விதமாய் மாற்றி திருத்தியிருக்கிறார்கள் என்பதை பற்றியும் என்ன காரணத்தைக் கொண்டு அப்படிப்பட்ட திருத்துப்பாடு செய்தார்கள் என்பதைப்பற்றியும் இந்துலா, மகம்மதியலா, கண்டிராக்ட்டு ஆக்டு, டிரான்ஸ்பர் ஆப்பிராப்பாட்டிக்டு, ரெண்ட் ரிகவரி ஆக்டு இன்னும் சில முக்கியமான ஆக்டுகளையும் ஜனங்களுக்கு சுலபமாய் தெரியும்பொருட்டு மிக்க கவனத்துடனும் [illegible]கையுடனும் நம்முடைய கெஜெட்டில் ஒவ்வொரு மாதத்திலும் சிலா சிலாவாய் பிரசுரித்து வரும்படியான புது ஏற்பாடுகளும் செய்திருக்கின்றோம்.

இந்த கெஜெட்டு விருத்தி யடைந்து நிலைபெற்று இருக்க வேண்டுமென்று சதா கோரிக்கையுள்ள நம்முடைய சந்தா தாரர்களாகிய தங்களுடைய பேருதவியினால் தான் இப்பத்திரிகை இதுவரையிலும் நீடித்து அதிகரித்து வரப்படுகிறதென்பது திண்ணம்! இனிமேலும் இம்மாதிரியாகவே இந்த சட்ட கெஜெட்டை நீடித்தகாலம் நிலை பெற்றோங்கும்படியாய் ஆதரித்து வருவீர்களென்று மிக்க ஆவலுடன் பிரார்த்திக்கின்றனம்.

நம்முடைய சுதேசிகளாகிய எல்லாரும் பிரதிதினமும் கோர்ட்டு விவகாரங்கள் சிலது பார்க்கவேண்டி யிருக்கிறது அவசியமாகையால் அது விஷயமாய் சட்ட சம்பந்தமான விஷயங்கள் நன்றாய் தெரியாமல் மிக்க திரவியத்தை செலவழித்து விடுகிறார்கள் அதை தடுப்பதற்கு ஏதுவான சட்ட ஞானம் தெரிந்துக்கொள்ளவேண்டிய தென்பது கோட்பாடே யல்லாமல் வேறல்ல அல்லவா. ஆகையால் நம்முடைய சந்தாதாரர்களாகிய கனதனவான்கள் தங்களால் இயன்றமட்டில் சில சகாயங்கள் செய்து இன்னும் தங்கள் சிநேகிதர்கள் எல்லோருக்கும் தெரிவித்து தயை கூர்ந்து சந்தாதாரர்களாய் சேர்ப்பித்து விருத்திசெய்து வருவீர்களென்று சதா வந்தனமளித்து பிராத்திக்கின்றோம்.

Mr. C. KRISHNAN, M. A., BARRISTER-AT-LAW., SECOND JUDGE, PRESIDENCY COURT OF SMALL CAUSES.

மிஸ்டர். சி. கிருஷ்ணன், எம். எ., பாரிஸ்டர் அட்லா 2-ம் ஜட்ஜி சென்னை ஸமால்காஸ் கோர்ட்டு.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே
நலமிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்களுரைப்பதுவும் நன்றே
அவரோடிணங்கியிருப்பதும் நன்று.

என்று ஔவையார் சொல்லியிருப்பதுபோல சட்டஞானத்தில் தேர்ந்து பாக்கியாதி யடைந்த விற்பன்னர்களின் திருவுருவை ஒவ்வொரு சஞ்சிகையிலும் பளிங்குபோல் பதிப்பித்து வருகின்றோம். அல்லவா. இம்முறை நமது சஞ்சிகையில் சென்னை ஸ்மால்காஸ் கோர்ட்டு ஜட்ஜ் மிஸ்டர் கிருஷ்ணன், எம். ஏ., பாரிஸ்டர் அவர்களின் திருவுருவபடத்தை பதிப்பித்திருக்கின்றோம். அத்துடன் அவருடைய சரித்திரத்தையும் இதனடியில் விரிவாய் வரைகின்றோம். அதாவது இவர் மலையாளத்தைச் சேர்ந்த கன்னனூர் என்னும் நகரத்தில் 1868ஹுத்தில் பிறந்தவர். இவர் இளம்பிராயத்தில் அவ்விடத்தில் அப்போதிருந்த கவர்மெண்டு ஹைஸ்கூலில் வாசித்து வந்தார். அவர் ஒவ்வொரு வகுப்பிலும் முதல் பரிசு பெற்றவர் 12-வது வயதில் மிடில் ஸ்கூல் பரிட்சையில் முதல் வகுப்பில் தேறினர். பின்னர் மெட்ரிகுலேஷன் பரீட்சையிலும் முதல் வகுப்பிலேயே தேர்ந்தார். பிறகு பாண்டித்தியத்தோடு (Scholarship) கவர்மெண்டு காலேஜில் சேர்ந்து எப். ஏ. பரீட்சையில் இந்த ராஜதானியில் தேர்ந்தவர்களி லெல்லோருக்கும் 2-வதிலும், மலையாளம் ஜில்லாவில் எல்லா மாணுக்கருக்கும் முதன்மையாயும் தேறினதால் உபகார சம்பளம் (District Scholarship) பெற்று அதன் பின் சென்னப்பட்டணத்திலுள்ள பிரசிடென்சி, காலேஜில், சேர்ந்து பீ. ஏ. பரீட்சைக்கு இரசாயன சாஸ்திரத்தை பூராய் கற்றுணரவேணுமென்கிற அவாவுடன் அதை (Chemistry) தான் கோரிய பாடமாக (Optional Subject) எடுத்துக்கொண்டு வாசித்து வந்தார். அப்பொழுது அந்த காலேஜில் இரசாயன சாஸ்திர போதகராயிருந்த டாக்டர், வில்சன் என்பவருக்கு மிகவும் பிரியமுள்ள மாணுக்கராய் ஆகும் பாக்கியத்தை பெற்று தமது 18-வயதில் மதிராஸ் சர்வகலாசாலையில் பீ. எ. பரீட்சையில் எல்லா பிரிவுகளிலும் (Branches) முதன்மையாய் தேறினர். இத்தகைய இளம் பிராயத்தில் முதன்மையாய் தேரிய நமது கிருஷ்ணன் அவர்களுக்கு ஆரணி பொன் பதக்கம் (Arni Gold Medal) அளித்து கௌரவிக்கப்பட்டது. அந்த வருஷத்தில் தான் முதல் முதல் இந்தியா கவர்ன்மெண்டார் உபகார சம்பளம் (Government of India Scholarships) கொடுத்து வருவது ஆரம்பமாயிற்று. அந்த வருஷம் அந்த சம்பளம் கொடுப்பதற்கு சென்னப்பட்டணத்தின் முறையானபடியால் கவர்மெண்டார் அதற்காக ஏற்படுத்தியிருக்கும் பரிக்ஷையில் (Competitive Examination இல்) இவர் முதலாய் நின்றமையால் இந்த (Scholarship) உபகார சம்பளத்தை அவருக்கு அளித்தார்கள்.

1887ஹுல் அவர் இங்குலாந்துக்குப் போய் (Cambrige) கேம்பிரிட்ஜ், சர்வகலாசாலையைச் சேர்ந்த (Christ College) இல் சேர்ந்து அதே சமயத்தில் நியாஸ்தலங்களில் பாரிஸ்டராக, லாக்கி யுள்ளவராக வேணுமென்று மிடில், டெம்பில், லண்டனில் ஒரு மெம்பராக சேர்ந்தார். இதன்றி அவர் சாஸ்திரங்களில் மிக்க ஞானமுண்டாய் தேர்ச்சி யடையவேண்டுமென்று தான் கொண்டிருந்த அபேட்சையை பூர்த்தி செய்வதற்கு இது தான் தகுந்த சமயமென்று எண்ணி கேம்பிரிட்ஜில் சாஸ்திரங்களை படிக்க ஆரம்பித்தார். அவர் லத்தீன் (Latin) பாஷையிலாகும் பிரதம பரீட்சையில் தேர்ந்து சகல சாஸ்திரத்தில் (Physics) இல் பண்டிதரான டி, டி, தாம்சன், பிராணிகளின் தர்ம குணவித்தை (Physiology) இல் பண்டிதரான பாஸ்டர், தாவர சாஸ்திரத்தில் (Botany) இல் பண்டிதரான டார்வின், இரஸாயன (Chemistry) சாஸ்திரத்தில் பண்டிதர்களான லிவிங், டிவார், ரகிமான் இப்படிப்பட்ட பண்டிதர்களிடமிருந்து வாசித்து மேற்கூறிய 4 - சாஸ்திரங்களிலும் குறிக்கப்பட்டுள்ள பரீட்சையாகிய (Natural Science-Tripos Part I.) இல் 1890ஹு முதல் வகுப்பில் பரீட்சை கொடுத்து அதே வருஷத்தில் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையின் பீ. ஏ. பரீட்சையிலுந் தேர்ந்தார். இவ்விதமாய் சாஸ்திரங்களிலும் மற்றும்பல பரீட்சைகளிலும் இந்திய மாணுக்கர் ஒருவர் இந்த இளம்பிராயத்தில் அநேகபரிக்ஷைகளில் முதன்மையாய் தேறினதைகண்டு மிகவும் உற்சாகம்கொண்டு இத்துடன் பாரிஸ்டர் பரீட்சையிலும் தேறினர். இவ்வித தேற்சியைகண்டுஅவ்வருஷம் பவுன்டேஷன்ஸ்காலர்ஷிப் (Foundation Scholarship) என்று வருஷாந்தரம்60-பவுன் அவருக்கு கொடுக்கப்பட்டது. அவ்வருஷமே அவர் அவ்விடத்திய பாரிஸ்டர் கூட்டத்தில் ஒரு மெம்பரானர். இந்தியர் ஒருவர் இந்த இளம்பிராயத்தில் இவ்வளவு தேர்ச்சியடைந்ததை இந்திய செகிரிட்டரிகண்டு சந்தோஷம்கொண்டு இவருக்கு மாத்திரம் மறுபடியும் 1-வருஷத்துக்கு 200 பவுன் ஸ்காலர்ஷிப்பை கொடுக்கும்படி உத்தரவு செய்தார். அதை பெற்றுகொண்டு இன்னும் சாஸ்திர சம்பந்தமான விஷயங்களையே வாசித்து அதில் உயர்தரமான பரீட்சையிலும் (Natural Science, Tripos, Part II.) முதல் வகுப்பில் முதன்மையாய தேறினர். இவ்விதம் சாஸ்திரங்களில் முதன்மையாய் தேர்ச்சியடைந்ததைக்கண்ட இந்திய செகிரிட்டரி மறுபடியும் ஒரு வருஷத்திற்கு மேற்படி 200-பவுன் ஸ்காலர்ஷிப்பை கொடுத்து வாசிக்கும்படிசொல்ல நமது ஜட்ஜி கிருஷணன் வாசிக்க ஸ்காலர்ஷிப்பு கொடுப்பதாக சொலலுவதேயல்லாமல் அப்படி வாசித்து தேர்ச்சியடைவனால் அதற்கு தகுந்த பதவி (Appointment) கொடுக்கப்படும் விஷயம் ஸ்திரமாய் தெரியாத்தினாலும் தாம் ரிவினியூ இலாகாவில் உயாந்த பரீட்சையாகிய ஐ. சி. எஸ். இல் தேரவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டும் அப்பரீட்சைக்குறிய வயது தாம் கடந்துவிட்டமையாலும் இந்தியாவுக்கு திரும்பும்படி நேரிட்டது.

இவ்விடம் வந்தபிறகு தாம் தேர்ச்சியடைந்த சாஸ்திரங்களை பயன்படுத்தக்கூடிய உயர்பதவி கிடைக்காததனால் சென்னை ஹைகோர்ட்டில் பாரிஸ்டர் ஆனர். பின்னர் உதவி இரசாயன சாஸ்திரியாகவும் அதன்பின் ராஜதானி கல்லூரியில் (Presidency College) இல் ரசாயன சாஸ்திர போதகராயும் இஞ்சியனியரிங்காலேஜில் சாஸ்திரஉபன்னியாசாரயும் சிறிதுகாலம் அலுவல் பார்த்து முடிவில் இவைகளினால் தாம் கோரிய வண்ணம் உயர்பதவி சாஸ்திர விஷயத்தில் [illegible] சமயம் கிடைக்காதென்று தேர்ந்து மறுபடியும் பாரிஸ்டராகவே வந்து 16-வருஷகாலம் பாரிஸ்டராயிருந்து தம்மிடம் வரும் கேசுகளில் காசு, காசு, என்றளவிலேயே இராமல் கட்சிக்காரருக்கும் மேலான கவலைகொண்டு அந்த கேசுகளை ஜெயித்து கொடுப்பதிலேயே நோக்கமாயிருப்பார். இவ்விதமாய் சிவில் கேசுகளிலும் கிரிமினல் கேசுகளிலும் தாம் நின்று கேசுகளை ஜெயித்துக்கொண்டுவந்ததினால் இவர் பெயர் அதிக பிரசித்தி ஆய்விட்டது. ஆகையால் தென்வல்லூர் ஜமீன்தார் மந்திராலோசனை சபையில் (Privy Council) நடத்த இருந்த கேசில் பிரதிவாதி தரப்பு அதாவது தன் தரப்பில் வாதிக்கும்படி அனுப்ப அந்த கேசிலும் ஜெயம்பெற்று வந்ததன்றியில் தாமும் அதே சமயத்தில் அங்கே, எம்-எ, பரீட்சையையும் கொடுத்து வந்தனர். பின் 1895ஹு சமஸ்கிரத பண்டிதரின் செல்வபுதல்வியை தாம் மணாந்து கொண்டனர். இவர் தம் கல்வி திறமையை ஒத்தவாறு இவர் தம்மனைவியும் சமஸ்கிரத பண்டிதரின் புதல்வியாதலின் அவரும் கல்வியில் தேர்ந்த அம்மையே என்பதற்குகிஞ்சித்தும் சந்தேகமில்லை. பதிக்கேற்ற சதியை அமைத்தபகவான் இவருக்கு 2-புத்திரரையும் 4-பெண்மணிகளையும் அருளியிருக்கின்றனர். இக்கண்மணிகள் பெற்றோர் பொன்னடி பின்பற்றும் நீடுழி வாழுமாக.

இவருக்கு ஏற்கனவே இருக்கும் கல்வி தேர்ச்சியையும், பாரிஸ்டராக தான் நின்றுவாதிக்கும் கேசுகளில் கோர்ட்டாருக்கும் கக்ஷிக்காரருக்கும் அதிருப்தியாவது கஷ்டமாவது கொடுக்காமல் கேசு இருக்கும் நியாயங்களை சட்டயுக்தமாக நயம்பட நடத்தி ஜெயம்பெற்று வந்ததினாலேயே இவரை 1906ஹு சென்னை ஸ்மால்காஸ், கோர்ட்டு 3-வது ஜட்ஜியாக நியமிக்கப்பட்டு அந்த வருஷம் முடிவுக்குள் 2-வது ஜட்ஜியாக நியமனம்பெற்று இருக்கின்றனர். இவர் தம் தொழில் முறைமையின் மேன்மையை என்னென்று வரைவாம். வக்கீல்கள். கக்ஷிக்காரர்கள் மற்று யாவரிடத்தும் அன்புடனும் அமைதியுடனும் அவர்கள் சொல்லும் விஷயங்களை குளிர்ந்த பார்வையுடனும் மிக்க கவனத்துடனும் ஏற்று நடுநிலைமையான தீர்ப்பு செலுத்தி வருகின்றார். அதனாலேயே கேஸ் தோற்றுவிட்ட கக்ஷிக்காரரும் ஆக யாவரும் திருப்தி யடைகிறார்களேயல்லாமல் மற்றபடி வருத்தமடைந்தவர்களே கிடையாது இவர்தான் இந்திய பாரிஸ்டர்களில் முதல் முதல் ஜட்ஜாக வந்தவர். இப்போது அதிர்ஷ்டவசமாய் ஹைகோர்ட்டில் ஆனரபில், மிஸ்டர் ஜஸ்டிஸ், போடாம் பென்ஷன் வாங்கிக்கொண்டு போவதால் அந்த ஸ்தானம் காலியாக போகின்றது. ஹைகோர்ட்டு ஆக்டின்படி ஹைகோாட்டு ஜட்ஜிகளில் மூன்றில் இரண்டுபங்கு ஐரோப்பியர்களாகவும் ஒரு பங்கு சுதேசிகளாகவும் இருக்கவேண்டுமென்கிற நிபந்தனை இருக்கிறது. அந்த நிபந்தனையின்படி தற்காலம் இருக்கும் ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் ஏழுபேரில் ஒருவர் தான் ஜட்ஜியாயிருக்கின்றார். மேலும் இப்பொழுது காலியாகப் போகிற ஸ்தானமோ பாரிஸ்டர் ஜட்ஜ ஸ்தானம் இதன்றியில் கோர்ட்டு ஏற்பட்ட இதுகாலம் வரையில் மதிராஸில் இந்திய பாரிஸ்டர் ஜட்ஜாக இருந்ததே கிடையாது. ஆகவே பாரிஸ்டராகவும் கல்வியில் மிக்க தேர்ந்த விர்ப்பன்னருமான நமது ஜட்ஜி கிருஷ்ணன் அவர்களை மேற்படி ஸ்தானத்துக்கு நியமிப்பது மிகவும் பொருத்தமானதாய் இருக்கும் இதுவரையில் மூன்றில் ஒருபங்கு இந்தியராய் இல்லாமலே இருக்கும் பெருங்குறையையும் நீக்கும் என்பதற்கு சந்தேகமில்லை. இது இப்படிக்கிருக்க சர்ஜான் ஜார்டைன் என்பவர் இந்தியஸ்டேட் செக்கிரிடேரி மிஸ்டர் மோர்லி என்பவரை இதுவரையில் ஹைகோர்ட்டு ஜட்ஜுகளில் சுதேசியாயிருப்பவர் யாராவது ஹைகோர்ட்டு ஜட்ஜி வேலைக்கு லாயியாய் பாரிஸ்டராக இருந்திருக்கிறார்களா என்று கேட்க அதற்கு மிஸ்டர் மோர்லி என்பவர் அப்படி இதுவரையில் எந்த சுதேசியும் இந்திய பாரிஸ்டராக ஜட்ஜ் வேலையில் இருந்ததிலலை. ஆனல் ஹைகோர்ட்டு வக்கீல்கள் தான் வந்திருக்கிறார்கள் என்று மறு உத்தரம் கூறி இப்போது மிஸ்டர் ஜஸ்டிஸ் பாடம் என்பவர் பென்ஷன் பெற்றுக்கொண்டு போவதால் அந்த வேலைக்கு அப்படியே இந்த தேசத்தாருடைய அனுபோகமும் ஊர் வழக்கங்களும் நன்றாய் அறிந்திருக்கும் இந்திய பாரிஸ்டர் ஒருவருக்கு கொடுக்க மனமுள்ளவராய் தெரிவித்திருக்கிறார். ஆகையால் கவர்ன்மெண்டார் களிகூர்ந்து மேற்சொல்லியிருப்பவைகளை அனுசரித்து இப்போது இந்திய பாரிஸ்டர் ஜட்ஜாயிருக்கும் மிஸ்டர் சி. கிருஷ்ணன் அவர்களுக்கே இந்த உயர்பதவியை அளிப்பார்களென்று மிக்க ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். கடவுள் அருள்புரிவாராக.

Indian Law Gazette Office, Law Publication Series.

இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ் சட்ட பிரசுரங்கள்.

A PREVENTION TO FRIVOLOUS EXPENSES.

விரதாச் செலவுகளுக்கு ஒரு தேக்கம்.

A

HAND BOOK.

OF

CIVIL AND CRIMINAL LAWS,

VOL I

சிவில் கிரிமினல் சட்ட மஞ்சரி.

பெரும்பாலான ஜனங்கள் அரசாங்கத்தார் உண்டாக்கியிருக்கும் சட்டதிட்டங்களையும் கோர்ட்டு நடவடிக்கைகளையும் தெரிந்துகொள்ளாமல் சாதாரணமான அற்ப விஷயங்களில்கூட சட்டஞான சூனியர்களுடைய பேச்சையும் போதனையையும் கேட்டு அவர்களுடைய கையில் சிக்கி அசல், அப்பீல் கிஸ் அப்பீல் வரையில் வியாஜ்ஜியமாடி தாங்கள் அரும்பாடுபட்டுத் தேடின சொத்தைவாரி இறைத்துச் செலவிட்டு ஓட்டாண்டியாய் போய் கடைசியில் அன்னவஸ்திரத்திற்கே கஷ்டப்படுகிறார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் யாவருக்கும் தெரிந்த விஷயம்! நம் சகோதரர்கள் இவ்வித வியாஜ்ஜியப் படுநரகத்தில் விழுந்து பரிதவிப்பதைப்பார்த்து மனம் சகியாது அவர்களுக்கு, கவர்ன்மெண்டாரால் உண்டாக்கப்பட்டிருக்கும் முக்கியமான சட்டங்களை அச்சடித்து சொற்பவிலைக்குக் கொடுக்கிறதென்று தீர்மானித்திருக்கிறோம். இந்த தீர்மானத்திற்கிணங்க இப்போது சிவில் கிரிமினல் சட்டமஞ்சரி என்கிற புஸ்தகத்தை அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கிறோம். இதில் அடியிற்கண்ட முக்கிய ஆக்ட்டுகள் அடங்கியிருக்கின்றன.

The Indian Stamp Act.
இந்து தேசத்து முத்திரைக் கடிதாசியைக் குறித்த ஆக்ட்.
The Indian Registration Act.
1877-ம் வருஷத்திய இந்து தேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்.
Court Fees Act
1870-ம் வருஷத்திய கோர்ட் கட்டண ஆக்ட்.
Indian Limitation Act.
இந்து தேசத்து கால நிர்ணயச் சட்டம்.
The Indian Easements Act.
இந்து தேசத்து வழிநடை முதலிய வசதி உரிமைகளையும் லைசென்சுகளையும் குறித்த ஆக்ட்.
The Indian Trusts Act.
இந்து தேசத்து திரஸ்ட்டுகளைக் குறித்த 1882-வருஷத்திய 2-வது ஆக்ட்.
The Transfer of Property Act.
உபயத்திராளுடைய விவகாரத்தினாலே சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதைக்குறித்த ஆக்ட்.

இப்புத்தகம் முத்துக்கள்போன்ற எழுத்துக்களால் தும்பமலர்போல் வெண்மையாயுள்ள கடிதத்தில் அச்சிடப்பட்டு வெகு உன்னதமாக பயிண்டு செய்யப்பட்டிருக்கின்றது.

இதன் விலை அணா. 8. வி. பி. தபால் சார்ஜ்ஜுடன் அணா 10.

ஆனால் 1907-ம் வருடு டிசம்பர்மீ 31உ வரையில் இந்திய சட்டகெஜெட்டிற்குச்சந்தாதாரர்களாய்ச் சேருகிறவர்கள் தபாற் சார்ஜ் ஒரு அணாமட்டிலும் அனுப்பினால் இப்புத்தம் இனாமாகக் கொடுக்கப்படும்.

ந. ராதாகிருஷ்ணா அண்டு கோ.

மானேஜர்கள்.

இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ் நெ. 37. நாட்டுப் பிள்ளையார் கோவில் வீதி,

ஜியார்ஜ் டௌன் சென்னை.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் 3.] சென்னப்பட்டணம், 1908வருடு ஜனவரிமீ [பாகம். 1.

WIDOWED DAUGHTER-IN-LAW IN A HINDU FAMILY.

ஒரு ஹிந்து குடும்பமும் விதவையான மருமகளும்.

ஒரு ஹிந்து குடும்பத்தில் புருஷன் இறந்துபோய் விதவையான மருமகளுக்குள்ள ஜீவனாம்ச பாத்தியம் சம்பந்தப்பட்ட வரையில் அவளுடைய நிலைமை இன்னதென்பதையும் கூடுமானால் அது விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் தீர்மானங்கள் திருப்திகரமாய் இல்லையென்பதையும் சுருக்கமாய் இந்த வியாசத்தில் விவரிக்க உத்தேசிக்கின்றோம். ஹிந்துக்களுக்குள் பாலிய விவாகங்கள் நடந்துவரும் வழக்கத்தைக்கொண்டு யோசிக்கும்பொழுது, ஒரு சிறு பெண் புருஷனுடைய ஆதரணையை இழந்துபோகிறதையும் அவளுடைய கலியாணத்துக்குப் பிறகு அவளுடைய தகப்பன் சொத்தில் அவளுக்கு ஜீவனாம்சபாத்தியமில்லாமல் போய் விடுவதையும் காண்பது அருமையாக இருக்கவில்லை. புருஷன் எவ்வளவு பாலியத்தில் இறந்துபோனாலும் அவன் ஏதேனும் சொந்த சொத்தையோ அல்லது அவன் ஒரு அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவனாயிருந்து பிதுரார்ஜித சொத்தில் யாதாமொரு பாத்தியத்தையோ விட்டு விட்டு இறந்துபோனால் ஒரு சங்கடமும் இல்லை. ஏனென்றால் அந்த கேசில் அந்த விதவை தன்னுடைய ஜீவனாம்சத்தைப்பெற யாதொரு கஷ்டமுமில்லை. புருஷன் யாதொரு சொத்தையும் வைக்காமலும், சம்பாதிக்க ஆரம்பிக்கும் முன்னேயும் பிதுரார்ஜித சொத்தே அவனுக்கு இல்லாமலும் இறந்து போகின்ற கேசுகள் சொற்பமாயில்லை. அப்படிப்பட்ட கேசுகளில் அந்தப் புருஷனுடைய விதவைக்கு ஜீவனாம்சத்திற்கு ஏதேனும் ஆதாரம் இருக்கவேண்டியது அவஸ்யம். அன்றியும் தன் புருஷனுக்குப் பிற்காலம் ஜீவித்திருக்கும் யாதாமொரு பந்துவின்பேரில் தொடரலாமா என்பதையும அப்படித் தொடரக் கூடுமானால் அவர்களில் யார் பேரில் எவ்வளவு தொகை வரையில் தன்னுடைய ஜீவனாம்சத்திற்காகத் தொடரலாமென்பதையும் அறிவது அவளுக்கு உயிர் நிலைபோல் அவ்வளவு முக்கியமான விஷயம். வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு ஹைகோர்ட்டார்கள் இது விஷயமாய் என்ன அபிப்பிராயத்தைக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பதை முதல் முதல் சொல்லுவது சவுகர்யமாயிருக்கும். இரண்டாவது, அது சம்பந்தமாயிருக்கும் சில வசனங்களை விவகரித்து, மூன்றாவது, ஏற்பட்டிருக்கும் தீர்மானங்கள் எவ்வளவு வரையில் ஹிந்துலாவினுடைய தாத்பரியத்துக்கு ஒத்தவையாயிருக்கின்றவென்பதை எடுத்துக்காட்டி, கடைசியாக அப்படிப்பட்ட கேசுகளில் விதவைகளின் நிலைமையைப்பற்றி எவ்வாறு எந்த விஷயங்களில் புனராலோசனை செய்வது உசிதம் என்பதையும் கூறுவோம்.

முதல் முதல் அலகபாத் ஹைகோர்ட்டார் அவர்களுடைய தீர்மானங்களை நாம் யோசிப்போம்.

1875ஹுத்தில் N. W. P. H. C. R. Page, 261-முகமத்லால் திருவார் V. கங்காபிஷான். ல் கண்ட புல் பெஞ்சுகேசில், முந்தி யிறந்துபோன ஒரு குமாரனுடைய விதவை அந்தக் குடும்பத்தின் பிதுரார்ஜ்ஜித சொத்திலிருந்து ஆதரிக்கப்பட அவளுக்கிருக்கும் பாத்தியத்தை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த கேசில் விதவை தன்னுடைய மாமனார்பேரிலும் மைத்துனர்கள் பேரிலும் வியாச்சியம் தொடுத்தாள். அதில் சொத்து அந்தக் குடும்பத்தின் பொதுவான பிதுரார்ஜிதசொத்தென்றும் அந்த விதவையின் புருஷன் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவனாதலினால் ஓர் பாகத்திற்குப் பாத்தியஸ்தனென்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால் 1876ஹுத்தில் I. L. R I. All. 170-(கங்காபாய் V. சீதாராம்.) ல் கண்ட கேசில் மற்றொரு புல்பெஞ்சு தீர்மானம் ஏற்பட்டது. அது என்னவென்றால் முந்தி யிறந்துபோன ஒரு குமாரனுடைய விதவைக்கு அவளுடைய மாமனாரிடமிருந்து ஜீவனாம்சம் பெறும் பாத்தியமானது அந்த மாமனாரிடத்தில் பிதுரார்ஜித சொத்து இருந்தாலொழிய ஏற்படமாட்டாது என்பதே; இந்தக் கேசில் ஒரு நாட்டுப்பெண் தன்னுடைய மாமனார் பேரில் ஜீவனாம்சத்திற்காக வியாச்சியம் கொண்டுவந்தாள். இதில் ஏற்பட்ட கட்சி, மாமனார் வசத்தில் பிதுரார்ஜித சொத்தோ, அல்லது ஸ்தாவரசொத்தோ கிடையாதென்றும், அவனுடைய குமாரன் உயிருடனிருந்தால் அதன் விநியோகத்தைத் தடுக்கக்கூடிய யாதொரு ஐவேஜியும் அவன் வசமில்லை என்றும், அவன் தன்னுடைய குமாரனுடைய சொத்து யாதொன்றையும் அவன் இறந்த பிறகு அடையவில்லை என்றும், தன் குமாரன் இறந்ததனால் அவனுக்கு எந்த சொத்திலேயாவது பாத்தியம் அதிகரிக்கவில்லையென்றுமேயாம். அந்த நம்பர் ஜட்ஜிமெண்டில் "இந்த வியாச்சியத்திற்கு ஆதாரமாய் இந்த மாகாணங்களிலுள்ள எந்த கிரந்தத்திலிருந்தாவது யாதொரு வாக்கியமும் எடுத்துச் சொல்லப்படவில்லை, இந்த மாகாணங்களிலேயோ அல்லது இந்த இராஜதானியிலேயோ அல்லது மிதாக்ஷரலாவுக்கு உட்பட்ட சென்னப்பட்டண இராஜதானியின் எந்த பாகத்திலேயோ உள்ள எந்தக் கோர்ட்டாராலாவது அந்த மாதிரி பாத்தியம் ஸ்தாபிக்கப்பட்டதாய் யாதொரு தீர்மானமும் எடுத்துச் காட்டப்படவில்லை ஆகையால் ஒரு நாட்டுப் பெண்ணுடைய பாத்தியமானது தர்மசாஸ்திரப்படியே ஒழிய நியாயசாஸ்திரப்படி கட்டுப்படுத்தத் தக்கதல்ல" என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு அடுத்த ஜானகி V நந்தராம் கேசு 1888-ஹுத்தில் I. L. R. 11 All. 194ல் கண்ட புல்பெஞ்சு தீர்மானம். இந்த கேசின் சங்கதிகள் மிதாக்ஷரலாவுக்கு உட்பட்ட ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்தில் யாதொரு பொது சொத்தோ அல்லது பிதுரார்ஜித சொத்தோ கிடையாது. ஆனால் தகப்பனிடம் சில பிரத்தியேகமான சுயார்ஜித சொத்திருந்தது. அவனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் ஒரு விதவையை விட்டு விட்டு முந்தி இறந்துபோய்விட்டான். பிறகு தகப்பன் உயில் எழுதி வைக்காமல் ஒரு குமாரனையும் ஒரு விதவையையும் விட்டு விட்டு இறந்துபோனான். மேற்சொல்லிய இறந்துபோன குமாரனுடைய விதவை தன் புருஷன் இறந்துபோன பொழுது மைனராயிருந்தது மல்லாமல் தன் புருஷனுடன் கூடி வாழவாவது அல்லது அவன் குடும்பத்தில் வசிக்கவாவது அந்தக் குடும்பத்திலிருந்து யாதொரு போஷணையும் பெறவாவது இல்லை. ஆனால் அவன் தன்னுடைய தகப்பனோடேயே வசித்து தன்னுடைய தகப்பனாலேயே போஷிக்கப்பட்டு வந்தாள். அவள் தன்னுடைய மாமனார் இறந்த பிறகு தன்னுடையமைத்துனன்பேரிலும் தன்னுடைய மாமனாரின் விதவையின் பேரிலும் ஜீவனாம்சம் கிடைக்கவேண்டுமென்று வழக்கிட்டாள். அவள் தனக்கு ஜீவனாம்சம் தன் மாமனார் உயிருடனிருக்கும் பொழுது அவருக்குச் சொந்தமாயிருந்ததும் இப்பொழுது பிரதி வாதிகளின் வசத்திலிருப்பதுமான ஸ்தாவர சொத்தைப் பொருத்துக் கிடைக்கவேண்டுமென்று பாத்தியம் கொண்டாடினாள். தர்மசாஸ்திரப்படி மாமனாருக்கு ஒரு கடமையிருந்தது என்ற காரணத்தைக்கொண்டு அந்த வியாச்சியத்தை வாதி மைத்துனன்பேரிலும் மாமியார் பேரிலும் தொடர, பாத்தியமுள்ளவளென்று தீர்மானிக்கப்பட்டது. அந்த தீர்மானத்தில் மாமனாருடைய கடமையானது "தன்னுடைய ஜீவகாலத்தில் மட்டும் விதவையான தன்னுடைய நாட்டுப் பெண்ணைப் போஷிக்க வேண்டியதுமட்டும் அல்லாமல் அவளுடைய பிந்திய ஜீவனாம்சத்திற்கு ஒருவகை செய்யதான் உபயோகப்படுத்தி யிருக்கக்கூடிய சுயார்ஜித சொத்து அவனுக்கிருந்த படியால், அவன் இறந்தபிறகு அவளுக்கு ஜீவனாம்சம் கிடைக்கும்படி ஒரு ஏற்பாடு செய்ய வேண்டியதாகவும் இருக்கிறதென்றும், சுயார்ஜிதமான சொத்திருந்த நிமித்தம் மாமனாருக்கு தர்மசாஸ்திரப்படி உண்டான கடமையானது, அவன் இறந்தபிறகு சொத்தையடைந்த காரணத்தினால் மைத்துனனுக்கு நியாய சாஸ்திரப்படி ஒரு கடமையை உண்டாக்கியிருக்கிறதென்றும், அந்தக் கடமையை ஸ்தாபித்துக்கொள்ள, அவன் பேரிலும் விவாத சொத்தின்பேரிலும் வியாச்சியம் தொடரலாமென்றும், ஆனால் வாதி சம்பந்தப்பட்டவரையில் மேற்கண்ட சொத்தை, மைத்துனன் வசமிருக்கும் பிதுரார்ஜித சொத்து "என்று மதிக்கக்கூடாதென்றும்" தீர்மானிக்கப்பட்டது. 1900ஹுத்தில் I. L. R. 23 All 86-ல் பெச்சா V முத்தினால் கண்ட கேசில் பிதுரார்ஜித சொத்தை வைத்துக்கொண்டிருக்கிறவன் விதவையின் ஜீவனாம்ச பாத்தியம் தவறிப்போகும்படியாய் அப்படிப்பட்ட சொத்தைப் பாராதீனம் செய்யக்கூடாதென்று இரண்டு ஜட்ஜிகளால் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. இந்த கேசில், முந்தி யிறந்து

166912
Zm2, N06
N08.3-5

போன ஒரு குமாரனுடைய விதவையானவள் தன்னுடைய மாமனாருடைய உயில் (மரணசாசனம்) மூலமாய்ப் பாத்தியம். கொண்டாடின பேர்கள் பேரில் தன்னுடைய ஜீவனாம்ச பாத்தியத்தை ஸ்தாபிக்க வியாச்சியம் தொடர்ந்தாள்.

சென்னப்பட்டணத்தில் 1870ஹுத்தில் M. H. C. R. 150-(விசாலாட்சியம்மாள் V. அண்ணாசாமி சாஸ்திரி) ல் கண்ட தீர்மானத்தில் ஒரு ஹிந்து விதவையானவள் தன்னுடைய மாமனாரின் சுவாதீனத்திலிருக்கிற சில நிலத்தின்பேரில் தன்னுடைய ஜீவனாம்சம் பாத்தியத்தை ஸ்தாபித்துக் கொள்ளலாம் என்றும், அந்த சொத்தானது குடும்பப் பிதுரார்ஜித சொத்தில் ஓர் பாகமாயிருந்து பாகப் பிரிவினை காலத்தில் அதன் பொருமானத்துக்குச் சரியான தொகைக்குப் மற்றொருவரிடத்தில்பந்தகம் வைக்கப்பட்டிருந்தது,பிறகு அவளுடைய மாமனாரால் அவனுடையசுயார்ஜித ஐவேஜியைக்கொண்டு மீட்கப்பட்டதா யிருந்தாலும் அந்தசொத்து அவள் மாமனாருடைய வசத்திலுள்ள பிதுரார்ஜித சொத்தென்று தீர்மானிக்கப்பட்டது. அந்த கேசின் சங்கதிகள் இருந்த நிலைமையில் கோர்ட்டாரவர்கள் மாமனார் தன்னுடைய பிரத்தியேகமான சுயார்ஜித சம்பாத்திய ஐவேஜியிலிருந்து தன்னுடைய நாட்டுப்பெண்ணுடைய ஜீவனாம்சத்திற்கு ஒரு வகை செய்ய சட்டப்படிக் கடமைப்பட்டிருக்கிறான என்பதைப்பற்றி யாதொரு அபிப்பிராயத்தையும் வெளிப்படுத்துவது அனாவசியம் என்று நினைத்தார்கள். பிறகு (1887)ஹுத்தில் I. L. R. II Mad 91-(அம்மாக்கண்ணு V. அப்பு) ல் கண்ட கேசில் சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார், ஒரு ஹிந்துவானவன் தன்னுடைய சுயார்ஜித சொத்திலிருந்து தன்னுடைய வயதுவந்த குமாரனையோ, அல்லது தன் குமாரனுடைய விதவையையோ போஷிக்கக் கடமைப்பட்டிருக்கவில்லை யென்றும், ஒரு நாட்டுப் பெண்ணானவள் தன்னுடைய மாமனாருடைய சுயார்ஜிதமாயிருப்பதும் அவனுடைய பேரனுக்குக் கிடைத்திருப்பதுமான சொத்தின்பேரில் தன்னுடைய ஜீவனாம்சத்தைப் பற்றி—அவளுடைய ஜீவனத்திற்கு வகைசெய்யும் கடமைக்குட்பட்டு அந்த சொத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மாமனார் தன்னுடைய நடத்தையினாலோ அல்லது வேறு விதமாகவோ, சந்தேகமில்லாதபடி தன்னுடைய கருத்தை வெளிப்படுத்தியிருந்தால் ஒழிய யாதொரு பாத்தியத்தையும் ஸ்தாபிக்க முடியாது என்று தீர்மானித்தார்கள். 1898ஹுத்தில் I. L R 22 Mad 305-(ரெங்கம்மாள் V. எச்சம்மாள்) ல் கண்ட கேசில் அடியிற்கண்டபடி சங்கதிகள் இருந்த நிலைமையில் ஒரு விதவையான நாட்டுப் பெண்ணுக்கிருக்கும் ஜீவனாம்ச பாத்தியத்தைப்பற்றி ஆலோசிக்க வேண்டியிருந்தது :—

ஒரு ஹிந்து தன்னுடைய பெண்ஜாதிவசம் சொத்தை விட்டு விட்டு இறந்தான். அந்த சொத்தில் சிலபாகம் அவனுடைய சுயார்ஜிதமாயும், பாக்கி சொத்து அவனுடைய மாதாமகனிடமிருந்து அடைந்ததாயுமிருந்தது. அவன் தன் பெண்ஜாதிக்கு ஒரு உயில் மூலமாகவும் சில சொத்தைக் கொடுத்தான். அவனுக்கு முந்தியே இறந்துபோன அவனுடைய குமாரனும் ஒரு பெண்ஜாதியை விட்டுவிட்டு இறந்துபோய்விட்டான். இந்த நாட்டுப் பெண் தன் மாமியார் பேரில் ஜீவனாம்சத்திற்கு வழக்கிட்டாள். மாதாமகனிடமிருந்து கிடைத்தசொத்தானது சுயார்ஜித சொத்து ஆகமாட்டாது சுயார்ஜித சொத்து ஜீவனாம்சத்துக்குக் கட்டுப்படமாட்டாதென்னும் விதியானது மேற்சொல்லிய சொத்துக்குப் பொருந்தாதென்றும், ஆகையால் அந்த சொத்து ஜீவனாம்சத்துக்குக் கட்டுப்படத்தக்கதென்றும், தீர்மானித்தார்கள். மேற் சொல்லிய I. L. R. 11 Mad. 91-(அம்மாக்கண்ணு V. அப்பு) ல் கண்ட தீர்மானத்துக்கு விரோதமாகவே ஒரு அபிப்பிராயம் ஒரு குமாரனுடைய விதைவையைப் போஷிக்க அவனுடைய மாமனாருக்கு தர்ம சாஸ்திரப்படி உண்டாயிருக்கும் கடமையானது அவன் இறந்தவுடன் அவனுடைய வார்சுகளின் வசத்திலுள்ள அவனுடைய சுயார்ஜித சொத்தின்பேரில் சட்டப்படிக்குள்ள ஒரு கடமையின் வலிமையை அடைகிறதென்றும் அப்படிப்பட்ட சுயார்ஜித சொத்தின் மூலமாய்ப் பராதீனம் செய்தாலும் அது தர்மசாஸ்திரப்படிக்குள்ள பாத்தியம் சட்டப்படிக்குள்ள பாத்தியமாய் மாறியிருக்கிற ஒரு பேர்வழியின் பாத்தியத்தைக் கெடுக்கமாட்டாதென்று தெரிவித்தார்கள்.

நாம் கல்கத்தா கேசுகளை ஆராய ஆரம்பிப்போம். 1865ஹுத்தில் 2 W. R. 134-(கூடி மொனிதாபியா V தாராச்சந்து சுக்கர் புத்தி)ல் கண்ட கேசில் ஹைக்கோர்ட்டார் ஒரு குமாரனுடைய விதவையானவள் கற்புள்ளவளாய் இருந்து வருகிற வரையில் அவள் ஜீவனாம்சம்பெற பாத்தியமுள்ளவள் என்று தீர்மானித்தார்கள். விதவையான நாட்டுப் பெண் தன் மாமனார்பேரில் ஜீவனாம்சம் கிடைக்கவேண்டும் என்று தொடர்ந்த தாவாவானது, அவனுடைய வசத்தில் ஏதாவது பிதுரார்ஜித சொத்து இருந்ததா அல்லது இல்லையா என்கிற விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்யாமலே தாவாப்படியே தீர்ப்பு செய்யப்பட்டதென்று நாம் சொல்லத் தேவையில்லை.

1866-ஹுத்தில் 5 W. R. 225-(ரத்தன் சந்து ஷெளரி V ஷிரீமுட்டி ஹாரிமொனி)ல் கண்ட கேசில் மாமனார் தன்னுடைய நாட்டுப் பெண்ணைப் போஷிக்கக் கடமைப்பட்டிருக்கிறான் என்ற விஷயம் வேறு இரண்டு ஜட்ஜுகளால் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் ஒரு ஹிந்து தன்னுடைய நாட்டுப் பெண்ணைப் போஷிக்கக் கடமைப்பட்டிருக்கிற விஷயம் அப்படி அவன் செய்யச் சக்தியுள்ளவனாய் இருக்கின்றான என்கிற விஷயத்தைப் பொருத்திருக்கிறதென்றும் தீர்மானித்தார்கள். பிறகு 1868-ம்ஹுத்தில் 2 Bengal L. R. 15; 10 W. R. 89-(கேத்திரமணிதாசி V. கேசி, நாத்தாஸ்) ல் கண்ட கேசுக்கு வந்து சேருகிறோம். அந்தக்கேசில், ஒரு இந்து

குமாரன் யாதொரு சொத்துமின்றி ஒரு பெண்ஜாதியை விட்டுவிட்டு இறந்துபோனான். அவன் இறந்ததும் அவள் தன்னுடைய மாமனார் வீட்டை விட்டுப் புறப்பட்டு தன்னுடைய தகப்பனுடைய வீட்டில் வசிக்கப்போய் விட்டாள். அவளுடைய மாமனாருக்கு யாதொரு பிதுரார்ஜித சொத்தும் கிடையாது. அவள் தன்னுடைய மாமனார் பேரில் கடந்த ஜீவனாம்சமும், எதிர்கால ஜீவனாம்சமும் கிடைக்கவேண்டுமென்று வியாச்சியம் கொண்டுவந்தாள். அந்த கேசானது இரண்டு ஜட்ஜிகள் முன் விவகரிக்கப்பட்டது. அவர்கள் அடியிற்கண்ட விஷயத்தைத் தீர்மானிப்பதற்காக புல்பெஞ்சுக்கு ரிபர் செய்து கொண்டார்கள்.

“ஒரு ஹிந்துவின் விதவை தன்னுடைய மாமனார் வீட்டில் வசிக்க மறுதளித்துவிட்டு ஜீவனாம்சத்திற்காக சில தொகை கொடுக்கவேண்டுமென்று அவன் பேரில் கொண்டுவந்திருக்கிற வியாச்சியத்தை ஆதரிக்கக் கூடுமா” என்கிற பிரஸ்னையின் விஷயமாய் அந்த புல் பெஞ்சிலிருந்த ஜட்ஜிகள் வித்தியாசமான அபிப்பிராயங்களைக் கொண்டார்கள். இரண்டு ஜட்ஜிகள் பிதுரார்ஜித சொத்தில்லாவிட்டாலும் சுயார்ஜித சொத்து மட்டும் இருந்தால் மாமனார் பேரில் விதவையான நாட்டுப் பெண்ணுக்கு ஜீவனாம்ச பாத்தியமிருக்கிறதென்று அபிப்பிராயங் கொண்டார்கள். பின்னும் இரண்டு ஜட்ஜிகள் நாட்டுப் பெண் தன்னுடைய தகப்பனார் வீட்டில் வசிப்பதற்கு நாடும் வரையில் அவளுடைய மாமனாரால் போஷிக்கப்பட அவளுக்கு சட்டப்படி யாதொரு பாத்தியமுமில்லை யென்று அபிப்பிராயப்பட்டார்கள். ஆகையால் அந்த கேசானது சீப் ஜஸ்டிஸினுடைய அபிப்பிராயப்படி தீர்மானம் செய்யப்பட்டது. அந்த விதவை லெட்டர்ஸ் பேடெண்டு 15-வது பிரிவுப்படி அப்பீல் செய்து கொண்டாள். அந்த அப்பீலை ஹைக்கோர்ட்டு ஜட்ஜிகள் ஏழுபேர்களிருந்து விசாரித்தார்கள் அவர்கள் எல்லாரும் சீப் ஜட்ஜியினுடைய அபிப்பிராயத்தை ஒப்புக்கொண்டு வாதியின் வழக்கை தள்ளுபடி செய்துவிட்டார்கள். பிறகு 1875-௵த்தில் 24 N. R. 474 (மசமத் ஹெமா கூறி V அயோஜ்ஜிய பிரசாத்) ல் கண்ட கேசில் ஜட்ஜி மேற்சொல்லிய 1868-௵த்திய கல்கத்தாக் கேசானது வங்காளத்தியலாவினால் ஆளப்படுகிறபடியால் அதை வேற்றுமை கண்டு, மிதாக்ஷரலாப்படி தீர்மானிக்கவேண்டிய விஷயம் தகப்பனும் பிள்ளையும் அவிபக்தர்களா என்பதும் பிள்ளை இறந்துபோகும்பொழுது அப்படிப்பட்ட ஜீவனாம்சம் கொடுபடவேண்டிய பாத்தியத்துக்குட்படுத்தி ஏதாவது அவிபக்த சொத்தை வைத்திருந்தானா என்பதுமே என்று தீர்மானித்தார். 1889-௵த்தில் I. L. R. 17 Cal 373 (சாமினிகாஸ V சந்திரபோதி கேசில்,) ல் கண்ட ஒரு சொத்தை யடையும் வார்ஸானவன் முந்தின சுவாந்தாரனுடைய பரலோக சாதகத்துக்காக அதை அடைகிறான் என்றும் ஆகையால் முந்தின சுவாந்தாரன் தர்ம சாஸ்திரப்படி போஷிக்கக் கடமைப் பட்டிருந்த பேர்களை போஷிக்கச் சட்டப்படி கட்டுப்பட்டிருக்கிறான் என்றும் சொல்லும் விதியானது வங்காள சாஸ்திரிகளின்படி ஹிந்துலாவில் பூரண ஆதாரத்தைப் பெற்றிருக்கிறதென்று தீர்மானித்து மேலேசொன்ன ஜானகி V நந்தராம் உடைய கேசை அனுசரித்து, விதவை தன்னுடைய புருஷனுடைய சகோதரர்களின் பேரில் ஜீவனாம்சத்திற்காகக் கொண்டுவந்திருந்த வியாச்சியத்தைத் தீர்ப்பு செய்தார்கள். இந்த கேசில் அந்த விதவையின் புருஷன் அவனுடைய தகப்பனுக்கு முந்தி இறந்துபோய் அவளுடைய மாமனாரின் சொத்துக்களை அவளுடைய புருஷனுடைய மேற்சொல்லிய சகோதரர்கள் அடைந்திருந்தார்கள். 1895-௵ I. L. R. 22 Cal 410 தேவிபிரசாத் V குன்வந்திகோர் கேசில் ஒரு விதவை தன்னுடைய மைத்துனர்கள் பேரிலும் மைத்துனருடைய பிள்ளையின் பேரிலும் கொண்டுவந்த தாவாவை, அவளுடைய இறந்துபோன புருஷனுக்கு பாத்தியமுள்ள பிதுரார்ஜித சொத்து இருந்ததென்ற காரணத்தின்பேரிலும், பிதுரார்ஜித சொத்திருக்கிறதென்பதைத் தவிரவும் மைத்துனர்களும் மைத்துனன் பிள்ளையும் அவளுடைய மாமனாரின் தர்மசாஸ்திரப்படிக்குள்ள கடமையை நிறைவேற்றச்சட்டப்படி கட்டுப்பட்டிருக்கிறார்களென்ற காரணத்தின் பேரிலும், தீர்ப்பு செய்தார்கள். 1902௵ I. L. R 29 கல்கத்தா 557-சித்திசூரிதாசி V ஜனார்த்தன ஸர்க்காரின் கேசில் ஒரு விதவையான நாட்டுப்பெண் அவளுடைய மாமனார் இறந்தபிறகு அவனுடைய சொத்தையடைந்தவனிடமிருந்து பிரத்தியேகமான ஜீவனாம்சம் பெறப் பாத்தியமுள்ளவளென்றும், இந்த அம்சத்தில் வங்காளலாவுக்கும், மிதாக்ஷரலாவுக்கும் வித்தியாசம் கிடையாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கடைசியாய்ப் பம்பாய் தீர்மானங்களைப் பார்ப்போம். 1866௵ 2 B. H. C. R. 323, சந்திர பாகாபாய் V காசிநாத்தின் கேசில் ஒரு விதவை தன்னுடைய மாமனார்பேரில் கொண்டு வந்திருந்த தாவாவை ஒப்புக்கொண்டு அவளுடைய நிலைமையைப் பற்றிய விவாத அம்சங்களைத் தீர்மானிக்கும்படி ரிமாண்டு செய்தார்கள்; 1868௵ 5 B. H. C. R 130 திம்மப்பட்டு V பரமேஸ்வரியம்மாளினுடைய கேசானது இன்னும் பலமானது. அந்த கேசில், பிரதிவாதியின் முந்தியே இறந்துபோன குமாரனுடைய விதவைக்கு ஜீவனாம்சம் தீர்ப்பு செய்திருந்த அப்பீல் கோர்ட்டாருடைய தீர்மானத்தை ஹைக்கோர்ட்டார் ஒப்புக்கொண்டார்கள். பிறகு 1872௵ 9 B. H. C R 283 இராமாபாய் V திரிம்பக்கணேஷனுடைய கேசில் ஒரு விதவை தன்னுடைய புருஷனுடைய சிற்றப்பன்பேரிலும் சிற்றப்பன் மகன் பேரிலும் பிதுரார்ஜித சொத்தில் தன்னுடைய புருஷனுக்குள்ள பாகம் எவ்வளவோ அவ்வளவுதொகைக்கு தன்னுடைய ஜீவனாம்ச பாத்தியத்தைப்பற்றி வியாச்சியம் செய்து பெற்றுக்கொள்ள பாத்திய முள்ளவளென்றும், தீர்மானித்தார்கள். அந்தக்கேசில் விதவையானவள் பிதுரார்ஜித சொத்து இருந்ததென்றும் அந்த சொத்தில் தன் புருஷனுக்கு அவன் இறந்து போகும்பொழுது பாத்

தியம் இருந்ததென்றும் கட்சி யாடினாள். ஆனால் ஜட்ஜி, வாதியின் புருஷன் தன்னுடைய பாகத்தைப் பெற்றுக்கொண்டு பிரதிவாதிகளிடமிருந்து விலகி தனியாய்ப் போயிருந்தால் அவர்கள் பேரில் விதவைக்கு யாதொரு பாத்தியமும் இல்லையென்று சொன்னார். 1873௵ 10 B. H. C. R 483 உதாராம் V சொங்காபாய் உடைய கேசில், ஒரு ஹிந்து மாமனார் தன்னுடைய இறந்த குமாரனுடைய விதவையை, குமாரன் இறந்துபோகையில் வைத்திருந்த சொத்து யாதொன்றும் தன்வசம் கிடைத்திராவிட்டாலும், போஷிக்க சட்டப்படி கட்டுப்பட்டிருக்கிறான் என்று தீர்மானித்தார்கள். பிறகு நாம் 1878௵ I. L. R. 2. Bom 573 சாவித்திரி பாய் V. லெக்ஷுமி பாய் உடைய கேசுக்கு வந்து சேருகிறோம். அந்தக் கேசில் விதவையானவள் ஜீவனாம்சம் கிடைக்கவேண்டுமென்று தன் புருஷனுடைய பாட்டியார் பேரிலும் சிற்றப்பன் பேரிலும் வழக்கிட்டாள். அந்த வியாச்சியத்திற்கு அநேக வருஷங்களுக்கு முந்தியும் வாதியின் புருஷன் இறப்பதற்கு முந்தியும் அவன் சிற்றப்பன் (2-ம் பிரதிவாதி), சதாசிவ் வியாச்சியம் தொடர்ந்து குடும்ப சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டு விட்டானென்றும், பிறகு சொத்து விஷயத்தில் குடும்பத்தை சேர்ந்தவர்கள் யாருடனும் மறுபடியும் சேர்ந்துகொள்ளவில்லை யென்றும் ருசுவாயிற்று. ஜட்ஜி விரிவாய்க் காரணங்களை எடுத்துக்காட்டி, முடிவில் அவளுடைய புருஷனும் அவனுடைய தகப்பனும் பிரதிவாதியாகிய சதாசிவமும் பாகம் பிறிந்துவிட்டார்களென்றும், வியாச்சிய தேதியில் வாதியின் புருஷனுக்கும் அவனுடைய தகப்பனுக்கும் ஏதேனும் பங்குள்ள பிதிராஜித சொத்தும் பிரதிவாதியின் வசத்தில் இல்லையென்றும் ஆகிய இந்த இரண்டு காரணங்களுக்காக வாதியின் கேசு தவறிவிட்டதென்று அபிப்பிராயப்பட்டார். அதே தேதியில் (1878௵ மே௴ 1௳) மற்றொரு புல் பெஞ்சில், சாவித்திரி பாய் V லெக்ஷுமி பாய் உடையகேசை அனுசரித்து ஒரு விதவைக்கு அவளுடைய புருஷனுடைய சொத்தோ அல்லது ஏதேனும் பிதிரார்ஜித சொத்தோ தன் வசமில்லாதிருக்கிற புருஷனுடைய சகோதரன் பேரில் ஜீவனாம்ச பாத்தியம் இல்லையென்று தீர்மானிக்கப்பட்டது. (1878௵ I. L. R 2 Bom. 632 அப்பாஜி V கங்காபாய்.)

1882௵த்தில் I. L. R 7 Bom 127 காளு V காசிபாய் உடைய கேசில் முந்தி யிறந்துபோன ஒரு குமாரனுடைய விதவையும் அவளுடைய குழந்தைகளும், அவளுடைய மாமனாரினால் அவனுடைய சுயார்ஜித சொத்தைக்கொண்டு போஷிக்கப்பட யாதொரு பாத்தியத்தையும் பெற்றிருக்கவில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. இந்தக் கேசில், கிரந்த வசனங்களையும் தீர்மானங்களையும் சுருக்கமாய் கவனித்து, முடிவில், கோர்ட்டார், ஹிந்துக்களுள் சாஸ்திரப்படிக்குள்ள கடமையானது எவ்வளவு விரிவாக இருந்தபோதிலும், சட்டப்படிக்குள்ள கடமையை கிரந்த வசனங்களின் நடையினால் தெளிவாயும் வெளிப்படையாயும் ஏற்படுகிற அர்த்தத்தைக் காட்டிலும் விரிவாய்க் கொள்ளக்கூடாதென்று அபிப்பிராயப்பட்டார்கள்.

1886௵ I. L. R 14 Bom 199 ஆதிபாய் உடைய கேசில் விதவை தன் புருஷனுடைய சகோதரன் பேரில் கொண்டுவந்த தாவா ஒப்புக்கொள்ளப்பட்டது, அந்த கேசில் அவளுடைய மாமனாருடைய சொத்தானது அவளுடைய மைத்துனன் வசத்தில்வந்ததும் பிதிரார்ஜித சொத்தாகிவிட்டதென்றும் அது விதவையின் ஜீவனாம்ச பாத்தியத்துக்கு உட்பட்டதென்றும் ஜட்ஜி அபிப்பிராயங் கொண்டார்.

1890௵ I. L. R 14 Bom. 460 கோக்கிபாய் V. லெக்ஷுமிதாஸ கிமஜி உடைய கேசில், மாமனார் பேரில் ஜீவனாம்சத்திற்காக விதவை கொண்டுவந்த தாவாவை, ஒப்புக்கொள்ளப்பட்டது. ஏனென்றால், அந்தக்கேசில் பிரதிவாதி லெக்ஷுமிதாஸ் தன் வசத்தில் பிதிரார்ஜித சொத்திருக்கிறதென்று ஒப்புக்கொண்டு விட்டான்.

1899௵ I. L. R. 23 Bom 608 ல் முந்தி யிறந்துபோன ஒரு குமாரனுடைய விதவை அவனுடைய தகப்பனுடன் சேர்ந்து வசித்துக் கொண்டிருந்தாள். அவள் அவளுடைய மாமியார் வார்சு கிரமத்தில் அடைந்திருக்கிற மாமனாருடைய சுயார்ஜித சொத்திலிருந்து மாமியாரால் போஷிக்கப்பட சட்டப்படி பாத்தியமுள்ளவளென்று தீர்மானிக்கப்பட்டது. மி-ர் ஜஸ்டிஸ் ரானடே, ஜானகி V. நந்தராம் உடைய கேசின்|ஜட்ஜ்மெண்டின் கடைசிபாகத்தில் ஜஸ்டிஸ் மாமூது பிரஸ்தாபித்தபடி பொதுவான நடு நியாயத்தையும் ஜன சகவாச நியாயத்தையும் யோசித்து, ஆதிபாய், சரஸ்வதிபாய் கேசுகளை வேற்றுமைப்படுத்தி, முந்தி யிறந்துபோன குமாரன் இறந்துபோன காலத்தில் அவனுடைய தகப்பனுடன் ஒன்றாய் வசித்துக்கொண்டிருந்த அந்தக் குமாரனுடைய விதவையின் ஜீவனாம்ச பாத்தியமானது இறந்துபோன அவள் மாமனாருடைய வார்சுகளின் வசத்திலிருக்கும் மாமனாரின் சுயார்ஜித சொத்தின்பேரில் பரவுமென்று தீர்மானித்திருக்கிறார்.

1900௵த்தில் I. L. R. 25 Bom 263 பாய் பார்வதி V. தார்வாடி தோலத்தராம் உடைய கேசில், முந்தியிறந்துபோன அவிபக்த குமாரனுடைய விதவையானவள், மாமனாருடைய யாவத்து சுயார்ஜித சொத்துக்களையும் உயில் மூலமாய் அடைந்திருக்கிறவனிடமிருந்து ஜீவனாம்சம் பெற யாதொரு பாத்தியத்தையும் பெற்றிருக்கவில்லை யென்று தீர்மானிக்கப்பட்டது. அந்தகேசில் ஜட்ஜிகள் ரெங்கம்மாள் V. எச்சம்மாளுடைய கேசில் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் அவர்கள் சொல்லியிருப்பதை அனுசரிக்க மறுதளித்து, யமுனாபாய் V. மானுபாய் உடைய கேசை வேற்றுமைப்படுத்தினார்கள்.

இத்தோடு தீர்மானங்களின் பரீக்ஷை முடிந்து விட்டது. விதவையான நாட்டுப்பெண்ணின் ஜீவனாம்ச பாத்தியத்தைப்பற்றி அபிப்பிராயம் சொல்லும்படியாக யாதொரு கேசும் பிரிவிகௌன்சில் முன் விசாரணைக்குப்போனதாகத் தெரியவில்லை.

மேற்கண்ட தீர்மானங்களிலிருந்து அடியிற்கண்ட சித்தாந்தங்களை நிதானிக்கலாம்.

I. முந்தி இறந்துபோன ஒரு குமாரனுடைய விதவையானவள், தன் புருஷன் இறந்துபோகிற காலத்தில் அவன் ஒரு பாகத்திற்கு பாத்தியஸ்தனாயிருந்த பிதுரார்ஜித சொத்து இருக்கிற பக்ஷத்தில் ஜீவனாம்சம் பெற பாத்தியஸ்தியாவாள். அவள் தன்னுடைய பாத்தியத்தை தன்னுடைய மாமனார் பேரிலோ அல்லது பிதுரார்ஜித சொத்தை வைத்துக்கொண்டிருக்கும் தன் புருஷனுடைய எந்த பந்துவின் பேரிலோ, ஸ்தாபித்துக்கொள்ள வல்லவளாய் இருப்பாள்.

II. மாமனார் முந்தி இறந்துபோன தன்னுடைய குமாரனுடைய விதவையை தன்னுடைய ஜீவகாலத்தில் தன்னுடைய சுயார்ஜித சொத்திலிருந்து போஷிக்கும் கடமையானது தர்ம சாஸ்திரப்படியே ஒழிய சட்டப்படிக்குள்ள கடமையல்ல (ஆனால் இதற்கு விரோதமான அபிப்பிராயத்தை கல்கத்தா, பம்பாய் ஹைகோர்ட்டார்கள் ஒரு காலத்தில் கொண்டிருந்தார்கள்.)

III. முந்தி இறந்துபோன குமாரனுடைய விதவையைத் தன்னுடைய சுயார்ஜித சொத்திலிருந்து போஷிக்க மாமனாருக்கு தர்ம சாஸ்திரப்படிக்குள்ள கடமையானது, மாமனார் இறந்தபிறகு சொத்தானது வார்சுகளின் வசம் போய்ச்சேர்ந்ததும் சட்டப்படிக்குள்ள கடமையாய் மாறி விடுகிறது.

IV. மாமனார் இறந்து போகும்போது அவனோடு சேர்ந்து வசித்து வந்த முந்தி யிறந்துபோன குமாரனுடைய விதவை யானவள் மாமனாருடைய சுயார்ஜித சொத்தை உயில் மூலமாய் அடைந்தவனிடமிருந்து ஜீவனாம்சம் கேட்க யாதொரு பாத்தியதையும் பெற்றிருக்கவில்லை.

மேற்சொல்லிய தீர்மானங்கள் அன்றியும், சிறந்த வசனங்கள், ஒரு விதவையான நாட்டுப்பெண், அவளுடைய புருஷனுக்கு பாகங் கிடைத்திருக்கக் கூடிய யாதொரு பிதுரார்ஜித சொத்தும் இல்லாவிட்டாலும், அவளுடைய மாமனாரினாலோ அல்லது அவள் புருஷனுடைய மற்ற பந்துக்களினாலோ போஷிக்கப்படவேண்டு மென்பதில் யாதொரு சந்தேகத்தையும் ஹிந்துவினுடைய மனதில் உண்டாக்கமாட்டாது. கோர்ட்டுகள் எல்லாம் இந்த கிரந்த வசனங்கள் வழிஷயக் காட்டினவே யொழிய கட்டாயமாய் அனுஷ்டிக்கப்பட வேண்டியவைகள் அல்லவென்று அபிப்பிராயப் பட்டிருக்கிறபடியால் அவைகளைப்பற்றி விவரமாய்ப் புனராலோசனை செய்வது அவசியமல்ல. கிரந்த வசனங்களில் அவைகள் கேவலம் தர்ம சாஸ்திரப்படிக்குள்ள கடமையே யொழிய சட்டப்படிக்குள்ள கடமை யல்லவென்று காட்டத்தகுந்த தொன்றுமில்லை யென்று இதனைப் படிப்பவர்கள் அறியுமாறு இங்கே சில வசனங்களை மட்டும் எடுத்துச் சொல்லி யிருக்கின்றோம்.

மனு :—"ஜீவனாம்சத்துக்குப் பாத்தியமுள்ளவர்களை நன்றாய்ப் போஷிப்பதற்கு சுவர்க்கத்தில் சுகம் பிரதிப் பிரயோஜனமாகும். யாருடைய அசட்டையினால் அவளுடைய குடும்பமானது துன்பமுறுகின்றதோ அவனுக்கு நரகம் கிடைக்கும். ஆகையால் அவன் தன் குடும்பத்தை அதிக ஜாக்கிரதையோடு போஷிக்கக் கடவன்."

பிரகஸ்பதி :—"ஒருவன் தன் குடும்பத்திற்கு அன்ன வஸ்திரம் கொடுத்தபிறகு பாக்கி யிருப்பதைக் கொடுக்கலாம். தன்னுடைய குடும்பத்தாருக்கு வஸ்திரங்கூட இல்லாமற்செய்து ஜாஸ்தியாகக் கொடுக்கிறவன் முதல் முதல் தேனை உருசிபார்ப்பவன் ஆவான். ஆனால் பிறகு அதை அவன் விஷமாய்க் காண்பான்."

"சகோதரர்களுடையவும் பிள்ளைகளுடையவும் குழந்தை யில்லாத மனைவிகளுக்கு, ஏற்பட்ட விதியை கண்டிப்பாய் அனுஷ்டித்து, அவர்களுடைய ஞானாசிரியர்களான பெற்றோர்கள், கேவலம் அன்னமும், கிழியாத பழைய வஸ்திரங்களையும் கொடுக்க வேண்டியது."

மேலே சொல்லிய வசனங்களை ஹிந்துக்களுடைய வழக்கங்களையும் ஹிந்துலாவின் மொத்தக் கருத்தையும் கிரந்த கர்த்தாக்களுடைய மனோபாவங்களையும் தெரிந்துகொண்டு வாசித்தால் அவைகள் சட்டப்படிக்குள்ள கடமைகள் என்பதை யறிந்து கொள்ளுவது கஷ்டமாயிருப்பதாக புலப்படவில்லை.

IMPORTANT RULINGS.
முக்கியமான தீர்ப்புகள்.

ஒரு ஹிந்து விதவைதான் ஜீவித்திருக்கும்பொழுதே குடும்பத்தில் அப்போதுள்ள ஒரு அனந்தரவார்சுக்கு தன் ஹக்கை கொடுத்துவிட்டாள். அவள் மரணமடைந்த பொழுதுள்ள அனந்தரவார்சு அவளுடைய சொத்திற்கு தான் ஹக்குதாரனென்று வாதித்தான். ஆனால் முன்செப்பிய அனந்தரவார்சு பின் செப்பியவனுக்கு விரோதமாய் அவளுடைய சொத்தை கைப்பற்றி அனுபவித்துக் கொள்ளலாமென்று தீர்ப்பு செய்யப்பட்டது.

அனுதி—V. இந்திரபூசன் 12 C. W. H. 49

ஒரு ஹிந்து குடும்பத்தில் ஒருவன் தன் குமாரத்திகளுக்கு விவாகமாகும் காலத்தில் குடும்ப சொத்திலிருந்து போதுமான அளவு தானம் செய்ய ஹக்குண்டு.

தகப்பன் ஜீவித்திருக்கும்பொழுதே தன் பெண்களுக்கு விவாகமாய் விட்டது. ஆனால் யாதோ காரணத்தால் தகப்பன் அவர்களுக்கு குடும்பத்திலிருந்து யாதொன்றும் கொடுக்கவில்லை. ஆயினும் அக்குடும்பத்தில் பெரியவனாக காரியம் நடத்திவரும் தமையன் தன் சகோதரிகளுக்கு அவர்களுடைய விவாககாலத்தில் போதுமான சொத்து குடும்பத்திலிருந்து தானம் செய்தான். அப்படி அவன் செய்ததர்னம் ஹத்துமீறி நடந்ததாக தீர்ப்பு செய்யப்பட்டது.

கிலாம்பி V. ஸ்ரீமத்திருமலை 17 மூ. லா. ஜ 528.

ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்திலுள்ள மைனர்களைச் சேர்க்காமல் யுக்த வயதுள்ளவர்களை மாத்திரம் பிரதிவாதிகளாகச் சேர்த்து செய்திருக்கும் ஓர் தாவாவில் குடும்ப சொத்து முழுமைக்கும் உட்படுத்தி தீர்ப்புசெய்ய ஒரு கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு. அந்த தீர்ப்பின்படி போடப்பட்ட ஏல விற்பனை கிரமமானதென்று தீர்ப்பு செய்யப்பட்டது.

அந்த குடும்பத்திலுள்ள மைனர்கள் அந்த தீர்மானத்தை ரத்துசெய்து தங்கள் பாகத்தை பெறுவதற்காக சட்டப்படி ஏற்பட்டிருக்கும் காலத்திற்குள் வியாச்சியம் செய்யாமல் குறித்தகாலம் கடந்தபின் தாவா செய்ய லாகாதென்று தீர்ப்பு செய்யப்பட்டது.

பண்டாலா—V. யானு ஜெகன்னுதா. 17 மூ. லா. ஜ. 541. சி. பு. கோ.

ஒரு டிக்கிரியை நிறைவேற்றுவதற்காக ஒருவன் ஜப்தி மனு செய்தான். இதரகடன்தாரர்களும் அச்சொத்தின் விற்பனை மொத்தத்தில் தங்களுக்கு தாமாஷாப்படி பாகித்துத் தரும்படி மனுசெய்தார்கள். முன் சொல்லிய கடன்தாரன் பிரதிவாதியின் இன்சால்வென்டு மனுவில் சொல்லியிருக்கும் மற்ற கடன்தாரர்களைவிட விசேஷ ஹக்குடையவனல்ல. உள்ளடியாய் அச்சொத்திற்கு ஹக்குண்டென்று சொல்லும் நபரின் மீது வியாச்சியம் செய்யலாம். ஆனால் ஒருவன் டிக்கிரியை நிறைவேற்றி ஜப்திசெய்த சொத்தை அந்த வியாச்சியத்தில் கட்சிதாரனாக சம்மந்தப்படாத ஒருவன் அபகரித்துக்கொண்டான். அவன்மீது வியாச்சியம்செய்து தன்சுதந்தரத்தை ஸ்தாபிக்கவேண்டியதே யொழிய மற்றபடி அவன்மீது ஷை டிக்கிரியை நிறைவேற்றலாகாது.

சங்கரலிங்கரெட்டி V. கந்தசாமிதேவன் இ. லா. ரி. 30. சென் 413.

1884௵ ஒரு வியாச்சியத்தின் வாதிகள் பிரதிவாதியின்பேரில் ஸ்வாதீன அடமானப்பத்திரம் எழுதிக்கொடுத்து அடமான சொத்தை பிரதிவாதியினிடம் ஒப்புவித்தார்கள். 1901௵ வாதிகள் அக்குதுவையின் அசல் தொகையை கொடுத்து சொத்தை ஒப்புவிக்கும்படி கேட்டதற்கு பிரதிவாதி சம்மதிக்கவில்லை. அதன்பேரில் வாதிகள் அந்த குதுவையின்மீது கொடுக்கவேண்டிய அசல் தொகையை T. P. Act 83-வது பிரிவின்படி கோர்ட்டில் கட்டிவிட்டு குதுவை சொத்தை மீட்டுக்கொள்ள ஷை ஆக்டு 62-வது பிரிவின்படி வியாச்சியம் செய்தார்கள். கோர்ட்டார் குதுவை சொத்தை ஒப்புவிக்கும்படி டிக்கிரி செய்தார்கள்.

1904௵ வாதிகள் குதுவை மொத்தத்தை கோர்ட்டில் கட்டின தேதிமுதல் ஷை டிக்கிரியை நிறைவேற்றி பிரதிவாதியினிடமிருந்து வாதிகள் குதுவை சொத்தை சுவாதீனம்செய்து கொண்ட தேதி வரையில் தங்களுக்கு அச்சொத்தின் மாசூல் சேர வேண்டுமென்று பிரதிவாதியின்மீது தாவா செய்தார்கள். முன்னதாகவே மாசூலுக்கும் தாவா செய்யாமல் தீர்ப்பு செய்துவிடப்பட்ட தென்கிற ரெஸ்ஜுடிகேடா காரணத்தால் கோர்ட்டார் வியாஜ்ஜியத்தை தள்ளி விட்டார்கள்.

குதுவை மொத்தத்தை ஆஜர் செய்ததுமுதல் அல்லது கோர்ட்டில் கட்டின தேதிமுதல் குதுவை வைத்துக்கொண்டவன் குதுவை வைத்தவனுக்கு ஒருவிதமான டிரஸ்டியாயிருக்கிறான். ஆகவே குதுவை சொத்தை மீட்டுக்கொள்ள என்ன ஹக்குண்டோ அதே விதமாய் அச்சொத்தின் அசல் தொகையை கட்டினதேதி முதல் மாசூலையும் குதுவை வைத்துக்கொண்டவன் செலுத்த பந்தப்பட்டவனாகிறான்.

ருக்மணிபாய் V. வெங்கிடேஷ் 31 பம் 527.

CRIMINAL கிரிமினல்.

கிரிமினல் புரோசீடர் கோடு:—1528-வது பிரிவுகள் ஷை கோடு 2-வது பிரிவின்படி ஒரு அட்டிஷனல் டிஸ்ட்ரிக்டு மாஜிஸ்திரேட்டுக்கு டிஸ்ட்ரிக்டு மாஜிஸ்திரேட்டு கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தரல்ல. அட்டிஷனல் மாஜிஸ்த்திரேட்டுக்கும் டிஸ்ட்ரிக்டு மாஜிஸ்திரேட்டுக்கும் இன்னவிதமான சம்பந்த முண்டென்பதை கி. பு. கோடில் விளங்கச்சொல்லவில்லை. ஷை கோடு 528-வது பிரிவின்படி ஒரு உத்தியோகஸ்தர் பயலிலிருந்து இன்னொரு உத்தியோகஸ்தருக்கு ஒரு கிரிமினல் வழக்கை மாற்றும்படியாய் உத்தரவு செய்யும்போது மாற்றுவதற்காக உள்ள காரணங்களைக் கண்டெழுதவேண்டும். அப்படி காரணங்களை கண்டெழுதாமல் செய்த உத்தரவு, குற்றவாளிக்கு விரோதமாயில்லாவிடில், அந்த உத்தரவை ரத்துசெய்ய வேண்டுமென்பதற்கு அது காரணமாகாது.—

இ. லா. ரி. 34 கல் 918.

Cattle Trespass Act (1 of 1871) 20-வது பிரிவு ஆடுமாடுகள் அத்துமீறி நடப்பதைப் பற்றிய ஆக்டின் 20-வது பிரிவின்படி ஆடுமாடுகளை அக்கிரமமாய் பிடித்து பவுண்டி லடைத்து நிருத்திவைப்பது கி. பு. கோ. (4) வது பிரிவின்படி ஒரு குற்றமாகும். அந்த குற்றத்தை ஷை கோடு இரண்டாவது ஷெடியூலின் கடைசியில் கண்டிருப்பதுபோல் எந்த மாஜிஸ்த்திரேட்டும் விசாரணை செய்யலாம், ஷை ஆக்டின் 20-வது பிரிவின்படி அப்படிப்பட்ட குற்றங்களை விசா

ரணைசெய்ய டிஸ்ட்ரிக்டு மாஜிஸ்த்திரேட்டு, அல்லது அப்பிரிவின்படி தனியாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற மாஜிஸ்திரேட்டு அவர்கள் விசாரணை செய்யவேண்டியதாயிருந்த போதிலும், அந்த மாஜிஸ்திரேட்டு தன் பயலில் எடுத்துக்கொண்டு கி. பு. கோ. 192-வது பிரிவின்படிக்கு தனக்கு கீழ்ப்பட்ட எந்த மாஜிஸ்த்திரேட்டுக்காவது விசாரணை செய்யும்படி மாற்றிவிடலாம்.

இ. லா. ரி. 34 கல் 926.

கிரிமினல் புரோசீடர் கோடு :—**107**-வது பிரிவு.

ஒருவன் புலத்தில் ஒருவன் அத்துமீறி நடந்தானென்னும் குற்றத்தை கி. பு. கோ. 107-வது பிரிவின்படி ஒரு மாஜிஸ்திரேட்டு விசாரணை செய்கையில் அவன் தனக்கு ஹக்குண்டென்று சொல்லும் பாத்தியதையை எதிராளி தகரார்செய்து மறுதளித்தால் அப்படிப்பட்ட பாத்தியதை அவனுக்கு உண்டாஇல்லையென்று மாஜிஸ்திரேட்டு மிக்க ஜாக்கிரதையாய் விசாரணை செய்யாமல் பெரும்பாலும் சிவில் கோர்ட்டார் விசாரணைக்கு விடலாகாது. ஆனால் வாதி, பிரதிவாதி உபயத்திராளுக்கும் பாத்தியதை கிடையாதென்று மாஜிஸ்திரேட்டு சந்தேகப்பட்டால் உபயத்திராளிடத்திலும் நல்ல நடவடிக்கைக்காக ஜாமீன் வாங்கவேண்டியது. ஆயினும் மாஜிஸ்திரேட்டுக்கு பாத்தியதைவுடையவன் இன்னானென்று ஐயமின்றி தெரியும் விஷயத்தில் அத்துமீறி நடந்த குற்றம் செய்தவனை மாத்திரம் நல்ல நடவடிக்கைக்காக ஜாமீன் கொடுக்கச் சொல்லவேண்டியது.

இந்த பிரிவின்படி மாஜிஸ்டிரேட்டு செய்த வுத்தரவு யிருதரத்தாரும் சட்டப் பிரகாரம் அவரவர்களுக்குள்ள பாத்தியதையை மீறி நடவாதபடி யிருக்கவேண்டும்.

தீன் தயால் மோசம்டார் V. சக்கிரவர்த்தி இ. லா. ரி. 34 கல் 935.

கன்டோன்மென்டு ஆக்டு: **13**-வது பிரிவு.

ஒரு சோல்ஜரின் வேலைக்காரன் தன் எஜமானன் உத்தரவின்படி அவர் கொடுத்த காசைக்கொண்டு ஒரு சாராயக் கடைக்குப்போய் சாராயம் வாங்கிவந்து கொடுத்தான். அதற்காக அவனை மாஜிஸ்திரேட்டு கண்டோன்மென்டு ஆக்டு (12 of 1889) 13-வது பிரிவின்படி ஒரு சோல்ஜருக்கு சாராயம் கொடுத்த குற்றத்தை செய்தானென்று தீர்மானித்து சிக்ஷை செய்தார்.

ஐக்கோர்ட்டார் ஒரு வேலைக்காரன் தன் எஜமானனுக்கு அவனுடைய காசைக்கொண்டு சாராயம் வாங்கி கொடுத்தால் குற்றமாகாதென்று தீர்மானித்தார்கள்,

சக்கிரவர்த்தி—V. பாஸ்க்கல் ஷீமா இ. லா. ரி. 31 பம் 523

கிரிமினல் புரோசீடர்கோடு **488**-வது பிரிவு

ஒருவன் பெண்ஜாதி தன் புருஷன்பேரில் கி. பு. கோ. 488-வது பிரிவின்படி தன் ஜீவனாம்சத்திற்கு உத்தரவு பெற்றாள்.

சொற்ப காலத்திற்குப்பின் புருஷன் தன் பெண்ஜாதியை முதல் பிரதிவாதியாகவும், தன் மைனர் பிள்ளையை இரண்டாம் பிரதிவாதியாகவும் சேர்த்து தன் சொத்துகளில் அவர்களுக்கு யாதொரு பாகமும் கிடையாதென்றும் ஜீவனாம்சத்துக்கு ஹக்குமில்லையென்றும் தீர்மானிக்கும்படி சிவில் கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்தான்.

ஐக்கோர்ட்டார் இந்த வியாஜ்ஜியம் கி. பு. கோ. 488-வது பிரிவின்படி மாஜிஸ்திரேட்டு செய்த உத்திரவை ரத்துசெய்யும்பொருட்டு செய்த வியாஜ்ஜியமாகாதென்றும் அப்படி செய்த உத்திரவை ரத்துசெய்ய இன்ஜங்க்ஷன் வியாஜ்ஜியம் செய்யலாகாதென்றும் தீர்மானித்தார்கள்.

இ. லா. ரி. 30 சென்னை. 400.

இ. பி. கோ. 411 வது பிரிவு ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்தில், தகப்பன், பிள்ளை, பேரன் இருந்தார்கள். இவர்கள் வாசம் செய்துக்கொண்டிருந்த வீட்டில் சில வஸ்த்திரங்கள் திருடுபோய்விட்டது. போலீசார் சோதனை போட்டதில் சுமார் 5 மணங்கிடையுள்ள துணி மூட்டை ஒன்று அந்த வீட்டில் பூட்டு போட்டிருந்த ஒரு அறையில் கிடைத்தது. பிள்ளை வீட்டு காரியங்களை நடத்தும் குடும்பத் தலைவனாயிருந்தான். அவன் அந்த திருட்டு சொத்தைகண்டெடுத்த அறையின் சாவியை ஆஜர் செய்தான். அந்த துணி மூட்டையை கண்டுபிடித்தவிடம் குடும்பத்திற் சேர்ந்தவர்கள் புழங்கு மிடமாயிருந்தாலும் இவர்களனுமதியின்றி துணி மூட்டை அவ்விடத்திலிருப்பதற்கு காரணமில்லை யென்று சொல்லி குடும்பத் தலைவனாகிய பிள்ளையை இ. பி. கோ. 411-வது பிரிவின்படி குற்றவாளியென்று தீர்மானித்து சிக்ஷை செய்தது கிரமமென்று தீர்ப்பு செய்தார்கள்.

சக்கிரவர்த்தி V புத்தால் இ. லா. ரி. 20 அ 598.

சுயராஜியம் 'Swaraj'—இ. பி. கோ. 124 A வது பிரிவு கி. பு. கோ. 108-வது பிரிவு. Swaraj என்னும பதத்திற்கு அர்த்தம் யோசிக்குமளவில் அதற்கு இத்தேசத்தை அரசாட்சி செய்வதென்று அர்த்தம் செய்யாமல் அல்லது அது தனியாய் தேசபரிபாலனம் செய்யும் அரசாட்சிஎன்றும் அர்த்தங்கொள்ளாமலே பொதுவாய் அவரவர்கள் வீட்டின் அரசாட்சி யென்று அர்த்தமாகும். ஆகையால் சுயராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பதற்காக கூடும் ஒரு கூட்டத்தின் மெம்பர்கள் செய்யும் பிரயத்தனங்கள் யாவும் இ. பி. கோ. 124 A பிரிவின்படி ஒரு குற்றமாகா தாகையால் அப்படி செய்தது கி. பு. கோ. 108-வது பிரிவின்படி செய்ததல்லவென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

பெனி பூஷன்ராவ் V சக்கரவர்த்தி இ. லா. ரி. 34 கல் 991.

கி. பு. கோ. 195-வது பிரிவு:—A என்பவன் B என்பவன்பேரில் இந்தியன் பினல்கோர்டின் பிரகாரம் பொய் சாட்சியம் சொன்ன குற்றம் செய்ததாக பிரா

சிகியூஷனுக்கு கி. பு. கோ. 195 (6) வது பிரிவின்படி சாங்க்ஷன் கேட்டான், முதல் கோர்ட்டார் சாங்க்ஷன் கொடுத்தார்கள். அப்பீல் கோர்ட்டார் முதல் கோர்ட்டார் கொடுத்த சாங்க்ஷனை ரத்துசெய்துவிட்டார்கள். அப்பீல் கோர்ட்டார் சாங்க்ஷன் கொடுக்கப்படாதென்று செய்த வுத்திரவின் பேரில் ஐக்கோர்ட்டாருக்கு அப்பீல் செய்துகொள்ள ஹக்குண்டென்று தீர்ப்பு செய்யப்பட்டது.

முத்துசாமி முதலி V வீனிசெட்டி இ. லா. ரி 30 சென் 382.

ஒரு குற்றவாளி இன்ன குற்றம் செய்தானென்று தெளிவாய்த் தெரியும் விஷயத்தில் செஷன்ஸ் ஜட்ஜி அவர்கள் ஜூரிகள் குற்றவாளியை குற்றம் செய்தவனாகவோ அல்லது குற்றம் செய்யாதவனாகவோ சொன்ன தீர்ப்புக்கு காரணம் யாதென்று (கோர்ட்டார்) அவர்களைக் கேட்கலாகாது.

சக்கரவர்த்தி V சிராந்து இ. லா. ரி. 30 சென் 369.

கி. பு. கோ. 145-வது பிரிவின்படி ஒரு குற்றத்தை விசாரணைசெய்யும் மாஜிஸ்திரேட்டு வழக்கின் வாக்குமூலத்தைத்தானே தன் சொந்த கையெழுத்தில் எழுதாமல் தன் அதிகாரத்துக்குட்பட்டமாஜிஸ்திரேட்டை வாக்குமூலமெடுக்கும்படி சொல்ல அதிகாரமில்லை—அப்படி தன் அதிகாரத்திற்கு மீறி செய்த உத்தரவு ரதது செய்யப்படுமென்று தீர்மானிக்கப்பட்டது.

ஆறுமுகம் V. வெங்கடசுப்பய்யர். 17 மூ. லா. ஜ. 535

CIVIL.

பஞ்சாயத்தாரின் தீர்மானம்.

சி. பு. கோ. 522-வது பிரிவு:—ஒரு பஞ்சாயத்தார் தங்களுக்கு அனுப்பிவைத்த வியாஜ்ஜியத்தை விசாரணை செய்து அவர்களுடைய தீர்மானத்தை கோர்ட்டில் தாக்கல் செய்தவுடன் அப்படி செய்யப்பட்ட தீர்மானத்திற்கு யாதேனும் ஆக்ஷேபனையிருந்தால் அதை கோர்ட்டாருக்கு மனுமூலமாய் சட்டப்படி குறிக்கப்பட்டுள்ள காலத்திற்குள் தெரிவிக்கவேண்டும். அந்த காலத்திற்குள் மனுகொடுத்து நோடிசு பிரப்பிக்காமலே பஞ்சாயத்தாரின் தீர்ப்பின்படி கோர்ட்டார் டிக்ரி செய்தார்கள். இப்படிப்பட்ட டிக்கிரியின்மீது கிரமமாய் அப்பீல் செய்துக்கொள்ள ஹக்குண்டென்று தீர்மானிக்கப்பட்டது.

கைஜாமுதீன் V ஆமத் இ. லா. ரி. 29 ல. 584.

MADRAS DISTRICT MUNICIPALITIES
(Act 4 of 1884.)

நெல்லூர் முனிசிபல் சேர்மேன் V. துவார பள்ளிகோட்டம்மா, இ. லா. ரி. 30 சென் 423.

ஒரு முனிசிபல் சங்கத்தார் ஷை முனிசிபல் ஆக்டு 47-வது பிரிவின்படி வீடுகளின் பேரில் விதித்திருக்கும் தீர்வை ஸ்ய சவுக்கரியத்திற்காக வாய்தாவாய் வசூல் செய்திடினும் அது பூராய் வருஷமுழுமைக்கும் செலுத்தவேண்டிய மொத்த தீர்வையாகும். முனிசிபாலிடியார் வீட்டின் பேரில் தீர்வை விதித்தபிறகு, ஒருவன் தன் வீட்டை மற்றொருவனுக்கு விற்றுவிடுகிறான். அந்த வீட்டை வாங்குகிறவன் வீட்டின் வருஷத் தீர்வை முழுமையும் செலுத்தவேண்டியவனாவானென்றும், ஒருவன் அந்த வீட்டை கிரயம் வாங்கின பின் எவ்வளவு காலமிருக்கிறதோ அந்த காலத்திற்கு மாத்திரம் முனிசிபாலிடியார் டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்டின் நிபந்தனைகளின் பிரகாரம் தாமாசாய்ப்படி பாகித்து வசூல் செய்யவேணுமென்பது அவசியமல்லவென்றும் தீர்மானித்தார்கள்.

டிக்கிரியான பிறகு கோர்ட்டுக்கு வெளியிலே ராஜீ செய்து கொள்வது.

சி. பு. கோ. 258-வது பிரிவு:—

ஒரு டிக்கிரியின்படி செலுத்தவேண்டிய பணமானது கோர்ட்டுக்கு வெளியிலே செலுத்தப்பட்டாலும் டிக்ரிபெற்றவருக்குத்திருப்திகரமாய் அந்த டிக்கிரியைக்குறித்து முழுதுமாவது சிறிதுமட்டிலாவது வேறேவிதமாய் ஒழுங்கு செய்யப்பட்டாலும் (1) அப்படி பணஞ்செலுத்தப்பட்டது அல்லது ஒழுங்கு செய்யப்பட்டதைக் குறித்து டிக்கிரி பெற்றவர் டிக்கிரியை நிறைவேற்றவேண்டிய கோர்ட்டாருக்கு ஸெர்டிபை (பதிவு) செய்ய வேண்டுமென்றும் (2) தீர்ப்பான கடனாளியும் அப்படி பணஞ்செலுத்தப்பட்டது அல்லது ஒழுங்கு செய்யப்பட்டதைக் குறித்துக் கோர்ட்டாருக்குத் தெரிவித்து ஸெர்டிபை பண்ணப்பட்டதாகப் பதிவுசெய்யக்கூடாதென்பதற்குக் காரணத்தைக் கோர்ட்டாரால் நிர்ணயிக்கப்படும் தினத்திலே தெரிவிக்கவேண்டுமென்று டிக்கிரி பெற்றவருக்கு நோடீசு பிறப்பிக்கும்படி கோர்ட்டாருக்கு மனு செய்துகொள்ளலாம். அப்படிப்பட்ட நோடீசு கிரமமாய் சேர்ப்பிக்கப்பட்ட பின்பு டிக்கிரி பெற்றவர் பணம் செலுத்தப்பட்டது அல்லது ஒழுங்கு செய்யப்பட்டதை ஸெர்டிபை பண்ணப்பட்டதாகப் பதிவு செய்யக்கூடாதென்பதற்குக் காரணம் தெரிவிக்கத்தவறிப்போனால், கோர்ட்டார் அதேபிரகாரம் அதை மனுவில் கண்ட பிரார்த்தனையின்படி பதிவு செய்யவேண்டுமென்றும், (3) அப்படி பணம் செலுத்தப்பட்டதையாவது ஒழுங்கு செய்யப்பட்டதையாவது மேலே கண்டபடி ஸெர்டிபை பண்ணுமலும் பதிவு செய்யாமலுமிருந்தால் அதை யெந்த கோர்ட்டாரும் அங்கீகரிக்கக்கூடாதென்று சி. பு, கோ. 258-வது பிரிவில் சொல்லியிருக்கிறது. அந்தப்படி கோர்ட்டுக்கு வெளியே செய்துக்கொண்ட ஏர்ப்பாட்டை கோர்ட்டாருக்குத் தெரிவித்து ஸெர்ட்டிபை செய்துக்கொள்ளாததால் பிரதிவாதிசெய்த அப்படிப்பட்ட வாதம் செல்லாதென்று ஐக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

வீரப்பசெட்டியார் V. பொன்னையா. இ. லா. ரி. 17. சென். ல. ட. 527.

சி. பு. கோ. 375-வது பிரிவு.—இந்த பிரிவில் சட்ட சம்மதமான யாதொரு உடன்படிக்கை மூலமாயாவது ராஜி மூலமாயாவது தங்களுக்குள்ள வியாஜ்ஜிய முழுதுமாகிலும் ஓர் அளவிற்காகிலும் தீர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறதென்று கோர்ட்டாருக்கு திர்ப்திகரமாய் ருஜுவானாலும் வியாஜ்ஜிய விஷய முழுமையுங் குறித்தாவது அதில் யாதொரு பாகத்தைக் குறித்தாவது வாதிக்குப் பிரதிவாதி யாதொரு வகை செய்தாலும் கோர்ட்டார் அப்படிப்பட்ட உடன்படிக்கை ராஜி அல்லது வகை செய்ததை எழுதிக்கொள்ளும்படி உத்தரவு பண்ணி, அது வியாஜ்ஜியத்திற்குச் சம்மந்தப்படுகிற மட்டிலே அதற்கொத்திருக்கும் படியாக டிக்ரி பிறப்பிக்கவேண்டும். அந்த உடன்படிக்கை, ராஜி, அல்லது வகை செய்தல் வியாஜ்ஜிய விஷயத்திலே எவ்வளவின் விஷயமாய்ச் செய்யப்பட்டிருக்கிறதோ அவ்வளவுக்குச் சம்மந்தப்படுகிற மட்டில் அப்படிப்பட்ட டிக்ரி முடிவானதாகுமென்று சொல்லியிருக்கிறது. அவ்விதமாக ஒருவியாஜ்ஜியத்தின் (பிலெயின்ட்) தாவாவில் கேட்டிராத சிலவிஷயங்களைப்பற்றியும் ராஜி செய்துகொண்டு ஷை பிரிவில் சொல்லியபடி அந்த ராஜியை கோர்ட்டாருக்கு தெரிவித்து டிக்ரி பெற்றுக்கொண்டார்கள். ஆனால் ஷை ராஜிக்கு யாதாகிலும் ஆக்ஷேபனையுண்டா யென்று நோடீசு பிறப்பிப்பதற்கு சட்டப்படியுள்ள வாயிதாவுக்குள் நோடீசு பிறப்பிக்காமலேயே அந்த டிக்கிரியை அடைந்தார்கள். அப்படிப்பட்ட டிக்கிரியின்மீது கிரமமாய் அப்பீல் செய்துகொள்ளலாமே ஒழிய மற்றபடி டிக்கிரியை நிறைவேற்றுவதற்காக செய்யும் மனுவில் ஆக்ஷேபிக்கலாகாதென்று தீர்மானிக்கப்பட்டது.

மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மன் தேவஸ்தானம் மானேஜர் V அப்துல் காசிம் சாயபு இ. லா. ரி. 30 சென் 421.

ஜீவனாம்ச ஹக்கின் ஆதாரத்தின்பேரில் கொடுக்கப்பட்ட பணம்.

டி. ப்ரா. ஆக்டு, 62-வது பிரிவு:—

ஒரு சொத்தில் ஒரு ஸ்திரீக்கு ஜீவனாம்ச ஹக்கு மாத்திரமிருந்தது. அந்த சொத்தை கோர்ட்டார் ஏலத்தில் விற்பனை செய்தார்கள். ஒருவர் ஷை ஜீவனாம்சஹக்குக்கு உட்படுத்தி அந்த சொத்தை ஏலத்தில் கிரயத்திற்கு பெற்ற பிறகு அந்தசொத்து மறுபடியும் ஏல விற்பனைக்கு போக வொட்டாமல் அவர் ஷை ஜீவனாம்சத்திற்காக அந்த ஸ்திரீக்கு சிலா சிலாவாய் சில தொகைகள் கடனாய் கொடுத்துவந்தார். அப்படி கொடுத்து வந்த தொகையை அவள் இறந்த பிறகு அந்த சொத்துக்கு சொந்தக்காரனிடம் வசூல் செய்ய ஷை பிரிவின்படி ஹக்கு கிடையாது.

மங்களத்தம்மாள் V. நாராயணசாமி அய்யர் இ. லா. ரி. 30 சென் 61.

தப்பு சர்வே நம்பர்.

இ. வி. ஆ. 91, 95, பிரிவுகள்:—

A என்பவன் B என்பவனுக்கு ஒரு நிலத்தை விற்பனை செய்தான். கிரய தஸ்தாவேஜியில் விற்பனை செய்த நிலத்தின் சரியான சர்வே நம்பரைச் சொல்லாமல் தப்பு சர்வே நம்பரை கண்டெழுதி விட்டான். பிறகு B என்பவன் தனக்கு வாஸ்தவமாய் விற்பனை செய்ய உத்தேசித்ததும் கிரயம் செய்ததுமான நிலத்தின் சரியான சர்வே நம்பர் வேறே என்று ருசு செய்ய பாத்தியமுண்டு.

கருப்ப கவுண்டன் V. பெரியத்தம்பி கவுண்டன் இ. லா. ரி. 30 சென் 397.

வீட்டுக்காரனுக்கும் குடக்கூலிக் காரனுக்கும்

A என்பவன் தன் குடக்கூலிகாரனாகிய B என்பவன்மீது வீட்டை காலிசெய்து ஒப்புவிக்கும்படி தாவா செய்தான். அந்த தாவாவில் பிரதிவாதி B என்பவன் வாதி A என்பவன் வீட்டுக்குச் சொந்தக்காரனல்லவென்றும், தான் A என்பவனுடைய குடக்கூலி தாரனல்லவென்றும் வாதித்தான். கோர்ட்டார் அப்படியே பிரதிவாதி வாதியின் குடக்கூலி தாரனல்லவென்று தாவாவைத் தள்ளிவிட்டார்கள். A என்பவன் மறுபடியும் B என்பவனைத் தன் வீட்டில் அக்கிரமமாய் சட்டத்திற்கு விரோதமாக பிரவேசித்தவனென்று சொல்லி வீட்டை காலி செய்து தன் வசப்படுத்தும்படி தாவா செய்தான். இக்கோர்ட்டார் வாதிக்கு அப்படிப்பட்ட தாவா செய்வதற்கு ஹக்குண்டென்று தீர்மானம்செய்தார்கள். இ. லா. ரி. 34 கல் 922.

பாப்பர் வியாஜ்ஜியமாடின வாதி கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தவேண்டிய கோர்ட்டு பீஸ் ஸ்டாம்பின் தொகைக்காக வேறொருவனிடம் அடமானம் வைத்திருக்கும் வாதியின் சொத்தை ஏலம்போட்டு விற்பனை செய்யப்பட்டது, ஷை அடமானம் பெற்றுக்கொண்டவன் அதேசொத்தின்பேரில் நிறைவேற்றி அதை ஏலத்திற்குக் கொண்டுவருவதைத் தடைப்படுத்தமாட்டாது. இ. லா. ரி, 29 அல 537.

இ. பு. கோ, 45 - பிரிவின்படி கவர்ன்மெண்டாரால் உண்டாக்கப்பட்ட விதிகளின்படி ஜில்லா மாஜிஸ்டிரேட் செய்த உத்தரவு நிர்வாக உத்தரவாகவும் ஹைக்கோர்ட்டார் ரிவிஷன் செய்யும்படியான அதிகாரத்திற்கு உட்பட்ட உத்தரவாகவுமிருக்கிறது. அதாவது மாஜிஸ்டிரேட்டின் ஷை கூறப்பட்ட உத்தரவை ஹைக்கோர்ட்டார் பரிசீலனை செய்து காயப்படுத்தவாவது அல்லது ரத்து செய்யவாவது அதிகார மற்றவர்கள். இ. லா. ரி 19, அல, 563.

A. என்பவனுக்குச் சொந்தமான மாட்டை B யினுடைய வேலைக்காரர்கள் மேய்த்துக்கொண்டிருந்த போது ஷை மாடுகளை அருகாமையிலிருக்கும்படியான கவர்ன்மெண்டு தோட்டத்தில் மேயவிட்டான். இந்தக் குற்றத்திற்காக ஷை மாடுகள் யாருடையதோ அவனாகிய A என்பவன்பேரில் Mischief (விஷமம்) என்கிற குற்றத்தை ஸ்தாபித்து தண்டிக்கக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 29, அல. 565.

மத சம்பந்தமான ஒரு வீதிப்புறப்பாடை நடத்தி வைப்பதில் சம்பந்தப்பட்டவர்கள் ஷை ஊர்கோலம் எந்த விதமாக

நடத்தி வைக்கப்பட வேண்டுமென்று போலிசார் உத்தரவு செய்தார்களோ அந்த உத்தரவுகளை நிராகரித்து விட்டார்கள். இப்படி நிராகரித்து விட்டதால் கலகம் சம்பவிக்கக்கூடியதாக யிருந்தது. போலிசார் ஆயுதபாணிகளாக கலகம் நடக்கக்கூடிய இடத்திற்கு வந்து கலகம் நடக்க வொட்டாமல் தடுத்து விட்டார்கள். இப்படி போலிசார்கள் செய்த உத்திரவை நிராகரித்தவர்கள்பேரில் இ பி. கோ. 153-பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறபடி கெட்ட எண்ணத்துடன் நிராகரித்தார்கள் என்று குற்றம் சுமத்த முடியாமற் போனபோதிலும் ஷை பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறபடி "வேணுமென்று" நிராகரித்தார்கள் என்கிற குற்றம் சுமத்தி தண்டிக்கலாமென்று தீர்மானித்திருக்கிறார்கள். இ. லா. ரி 29 அல. 869.

ஒரு திருடன் திருடிக்கொண்டிருக்கையில் ஒரு சாதாரண மனிதன் (போலீஸ் காரனல்ல) சட்டப்படி அவனைக் கைதிசெய்து சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகும்படியாக அவனை கிராம சவுக்கிதாரிடம் ஒப்புவித்தான். கிராமச் சவுக்கிதார் அவனை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகும் வழியில் மூன்று பேர்கள் சவுக்கிதாரைக் கட்டிப் பிடித்துக்கொண்டு திருடனை தப்பித்துக்கொண்டு ஓடிப்போகும்படி செய்துவிட்டார்கள், இப்படி தப்புவித்துவிட்டவர்களை இ. பி. கோ. 225-வது பிரிவின்படி குற்றம் ஸ்தாபித்து தண்டிக்கலாமென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 29, அல. 569

இ. பி. கோ. 211-வது பிரிவின்படி ஒரு மனிதனைப் பிராசிக்கியூட் செய்யவேண்டுமானால், அவனைப் பிராசிக்கியூட் செய்வதற்கு முந்தி அவன் கொண்டுவந்த கேசை ஸ்தாபிக்கும்படி அல்லது ருஜுப்படுத்தும்படியான வசதி கொடுக்கப்படவேண்டும். இ. லா. ரி. 29, அல. 587.

இந்துலா தானம்.

மிதாக்ஷர லாவை அனுசரிக்கும் ஒரு அவிபக்த குடும்பத்தைச்சேர்ந்த ஒருவன் அந்த குடும்ப சொத்தில் ஏராளமான அசையும் அசையாப் பொருள்களை அந்த குடும்பத்திலுள்ள பெண்களுக்கு தானம்செய்ய அதிகாரம் கிடையாது. அப்படி தானம் செய்தசொத்தின் ஒரு பாகத்தை குடும்ப சொத்திலிருந்து பிரிவினைசெய்து யாருக்கு தானம் கொடுக்கப்பட்டதோ அவர்களுக்குக் கொடாமல் அந்த சொத்தினால் வரும் வரும்படியை மாத்திரம் அவர்களுக்கு கொடுத்து வந்தார்கள். அவர்களுக்கு வரும்படியை கொடுத்து வந்ததைப்பற்றிதாயாதி ஆக்ஷேபிக்காமல் ஒப்புக்கொண்டிருந்தாலும் பிறகு அந்த சொத்தை தானம்செய்ய ஹக்கு கிடையாதென்று அவன் ஆக்ஷேபிக்கலாமென்று தீர்மானம் செய்யப்பட்டது.

காமாக்ஷியம்மாள் V. சக்ரபாணிசெட்டி 30 சென் 452.

ஹிந்துலா.—ஒரு ஹிந்துவும் அவனுடைய

தாழ்ந்த குலத்தைச்சேர்ந்த வைப்பாட்டியும்.

ஒரு ஹிந்து ஒருவன் தன் குலத்தைவிட தாழ்ந்த குலத்தைச்சேர்ந்த ஒரு ஸ்திரீயை தன் வீட்டிற்கு அழைத்து வந்து தன் வைப்பாட்டியாக வைத்துக்கொண்டு தன் சொந்த பெண்ஜாதி பிள்ளையை தன்னிடமிருந்து அப்புறப்படுத்தி வெளியே துரத்திவிட்டு வைப்பாட்டியுடன் சுகமாய் காலம் கழித்துவந்தான். புருஷன் இவ்விதமாய் செய்வதினால் அவன் தன்பெண்ஜாதியை கொரூரமாய் நடத்தினவனாவான், ஆகையால் அவன் பெண்ஜாதி தன் புருஷனை விட்டுத் தனிமையாய் ஜீவனாம்சம் பெற்றுக்கொண்டுவேறே குடியிருக்கலாமென்றும் புருஷன் மறுபடியும் தன் பெண்ஜாதியை அழைத்துக்கொண்டுபோக அவனுக்கு ஹக்கு கிடையாதென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

டல்வார் கோயார் V. தவாரகனாத்மிசர் இ. லா. ரி. 34 கல், 971.

IMPARTIBLE ESTATE.

பாகிக்கக் கூடாத ஒரு ஜெமீந்தாரி எஸ்டேட்டில் தலைமையாயிருந்த ஜமீன்தார் இறந்துபோய் விட்டார். அவருக்குப் பின் ஜமீன்தார் பட்டத்திற்கு வந்த ஒருவர் தனக்கு மின் பட்டத்திலிருந்த ஜமீன்தாரருக்கு வெளியிலிருந்து வசூலாகவேண்டிய பாக்கித் தொகையை வசூல் செய்ய வேண்டுமானால் சக்செஷன் சர்ட்டிபிகேட் ஆக்டின்படி (Act. VII of 1889) சர்ட்டிபிகேட்டு பெற்றுக்கொண்டு தான் வசூல் செய்ய ஹக்குண்டென்று தீர்மானம் செய்யப்பட்டது.

காளாஸ்திரி ராஜா V. அச்சிகாடு இ. லா. ரி. 30 சென் 454.

CASES FROM THE INDIAN LAW REPORTS.

இந்தியன் லா ரிபோர்ட்டு களிலுள்ள கேசுகள்.

சென்னப்பட்டணம் ஐகோர்ட்டு

ஜட்ஜிகள் :— சர்சார்லஸ் அர்னால் வொயிட், சீப் ஜஸ்டிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

சி. வெங்கட்ட சுப்பய்யசெட்டி—வாதி—அப்பீல் வாதி.

V.

டி. கோவிந்தராஜலு நாயடு—2-ம் பிரதிவாதி—அபீல் பிரதிவாதி.

(29—11—07)

இந்தியன் எவிடென்ஸ் ஆக்டு, பிரிவுகள் 91, 92. உடன் படிக்கையின் ஷரத்துகள்—ஒரு கம்பெனியார் பட்ட கடனை கொடுக்க கட்டுபட்டவர்களார்.

கேசின் விபரம் :—இந்த வியாஜ்ஜியத்தில் 1, 2 பிரதிவாதிகள் இருவரும் ஒரு வியாபாரத்தில் பாகஸ்தர்களாய் கூட்டு வியாபாரம் செய்துக்கொண்டிருந்தார்கள். முதல் பிரதிவாதி வாதியினிடத்தில் ஒரு பாண்டின்பேரில் அந்தப்பத்திரத்தில் கண்டிருக்கும் தொகையை அந்த கம்பெனிக்காக கடன் வாங்கினார்களென்று தாவா செய்யப்பட்டது.

ஆனால் அந்த பத்திரத்தில் முதல் பிரதிவாதி மாத்திரம் கையெழுத்து செய்திருந்தான். முதல் பிரதிவாதி தனக்காகவும் அவனுடைய பாகஸ்தனென்று சொல்லப்படும் இரண்டாம் பிரதி வாதிக்காகவும் தாவா பத்திரத்தில் கையெழுத்துசெய்த சந்தர்ப்பங்களை வாதி ருஜுசெய்ய ஹக்கு கிடையாதென்று ஜில்லா ஜட்ஜி சொல்லுவதை நாங்கள் வொப்புக்கொள்ளவில்லை.

ஒரு வியாபாரத்தைச் சேர்ந்த ஒரு பாகஸ்தன் பத்திரம் எழுதிக்கொடுத்து உடன்படிக்கை செய்துகொண்டால், அந்தஉடன்படிக்கையில் கையெழுத்துப்போட்ட பாகஸ்தனை மாத்திரம் கட்டுப்படுத்துமா அல்லது அவனுடன் கூட்டு வியாபாரஞ் செய்யும் பாகஸ்தனையும் சட்டப் பிரகாரம் கட்டுப்படுத்துமாவென்னும் விஷயம், எழுதிக்கொடுத்திருக்கும் உடன்படிக்கை தஸ்தாவேஜியின் ஷரத்துகளின்

படி மாத்திரம் நிச்சயிக்க முடியாது. (பாகஸ்தர்களாய் கூட்டுவியாபாரம் செய்வதை பற்றிய சட்டம் லிண்ட்லி என்பவரின் 7-வது எடிஷன் புஸ்தகத்தில் 207-வது பக்கத்தில் காணலாம்). ஒரு வியாபார விஷயமாய் ஒரே ஒரு பாகஸ்தன் அவன் பேரால் மாத்திரம் செய்துகொள்ள வேண்டியதாயிருக்கிற ஒரு உடன்படிக்கையை செய்யும்பொழுது வாஸ்தவத்தில் அவன் அந்த வியாபாரம் செய்யும் கூட்டத்தாரெல்லோருக்கும் ஏஜண்டாகவும் செய்திருந்தால் அந்த ஒப்பந்த உடன்படிக்கையில் அவன் எல்லோருக்கும் ஏஜெண்டாய் கையெழுத்து செய்ததாக [illegible] அந்த கூட்டுவியாபாரத்தைச் சேர்ந்த பாகஸ்தர்கள் எல்லோரும் அந்த ஒப்பந்தத்திற்கு உடன்பட்டவர்களாக எண்ணப்படுவார்களாகையால் பாகஸ்தர்கள் எல்லோர்பேரிலும் வியாஜ்ஜியம் செய்யலாம். இவ்விஷயம் பெக்காம் V. டிரேக் 11 M. W. 315 என்னும் கேசில் விசதமாய் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

அந்த வியாஜ்ஜியத்தின் விபரம்யாதெனில், வாதி டிரேக், ஸ்டார்ஜி என்பவர்களுடன் கூட்டு வியாபாரம்செய்ய ஒப்புக்கொண்டு பாகபத்திரம் எழுதிக் கொண்டார்கள். ஆனால் அந்த உடன்படிக்கையின் படி நடவாமையால் வாதி டிரேக், ஸ்டார்ஜி என்பவர்கள்பேரில் வியாஜ்ஜியம் செய்தான். அந்த பாகப் பத்திரத்தில் டிரேக் என்பவனுடைய பெயரைச் செப்பவில்லை. அவன் அந்த பாகபத்திரத்தில் கையெழுத்து செய்யவுமில்லை. அந்த ஒப்பந்த பத்திரம் ஏற்பட்ட காலத்தில் அவனை வாதியினுடன் ஒரு பாகஸ்தனென்று நினைக்கவுமில்லை. ஆயினும் அந்த ஒப்பந்த பத்திரத்தில் சொல்லியிருக்கும் விஷயங்கள் மொத்தத்தில் கம்பெனி முழுதுக்கும் சம்பந்தப்பட்டவைகளாக ஸ்பஷ்டமாய் தெரியவருகிற தாகையால் அந்தகெம்பனியைச் சேர்ந்த பாகஸ்தர்கள் மூவரும்ஒன்றுசேர்ந்து அந்தக் கடனைக் கொடுக்கக் கட்டுப்பட்டவர்களாவார்களென்று தீர்மானிக்கப்பட்டது. 18 ம. லா. ஜ. 1.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரனையர்.

அண்ணாமலை ஷ்—
டிக்கிரியை பெற்றவன்--மனுதாரன் } அப்பீல் வாதி.

V

ராமையர் வகையரு—
பிரதிவாதி } அப்பீல் பிரதிவாதி.

லிமிட்டேஷன் ஆக்டு 179 (4) ஆர்டிகலின்படி செய்தமனு—டிக்கிரியை நிறைவேற்றுவதற்கு ஆதாரமான—மனு சி. பு. கோ. 232-வது பிரிவு—டிக்கிரியை கிரயம்பெற்றவன்-தன்னை டிக்ரி கடன்தாரனாக ஒப்புக்கொண்டு டிக்ரியை நிறைவேற்றுவதற்கு உத்தரவளிக்கும்படி செய்துக்கொள்ளும் மனு.

இது நாகப்பட்டணம் சப் கோர்ட்டார் செய்த உத்திரவின்பேரில் செய்த அப்பீல்.

லாயர்கள்:—டி. நரசிம்ம ஐயங்கார் வாதி தரப்பிலும், டி. வி. சேஷகிரி ஐயர் பிரதிவாதிகள் தரப்பிலும் பேசினார்கள்.

தீர்ப்பு:—இந்த வியாஜ்ஜியத்தில் அப்பீல் வாதி 1901ஞு டிசப்பர்மீ 2உ சி. பு. கோ. 232-வது பிரிவின்படி கோர்ட்டார் தன்னை ஒரு வியாஜ்ஜியத்தின் டிக்கிரியை கிரயம் பெற்றவனாய் அங்கீகரித்து உத்தரவு செய்யும்படியாகவும் பிறகு தான் டிக்கிரியை நிறைவேற்றுவதற்காக மனு செய்துகொள்வதாகவும் சொல்லி மனு செய்தான். 1902ஞு ஜூலைமீ 5உ கோர்ட்டார் வாதியின் மனுப்பிரகாரம் உத்தரவு செய்தார்கள். 1904ஞு மார்ச்சுமீ 11உ அப்பீல் வாதி டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்டு 89-வது பிரிவின்படி உத்தரவை ஊர்ஜிதப்படுத்தும்படி மனு செய்துகொண்டான். ஆனால் சப் கோர்ட்டார் டிக்கிரி ஆன தேதி (5-8-1900) முதல் மூன்று வருஷம் கடந்த பிறகு மனு செய்யப்பட்டதென்றும் 1901ஞு டிசம்பர்மீ 2உ செய்துக்கொண்ட மனு லிமிடேஷன் ஆக்டு இரண்டாவது ஷெடியூல் 179-வது ஆர்டிகல் (4) கிளாசில் சொல்லியிருக்கிறபடி டிக்கிரியை நிறைவேற்றுவதற்காக செய்த ஒரு மனு ஆகாதென்று அபிப்பிராயப்பட்டு சப்கோர்ட்டார் தீர்மானத்தை ஐக்கோர்ட்டு ஜட்ஜிகள் அங்கீகரிக்கவில்லை. மனுவில் எழுதியிருக்கும் விஷயங்களைப் படித்தால் டிக்கிரியை கிரயம் பெற்றவன் அந்த டிக்கிரியை நிறைவேற்றுவதற்கு ஹக்கு உள்ளவனென்று உத்தரவு செய்யும்படிசெய்த மனு வாகையால் அம்மனு டிக்கிரியை நிறைவேற்றுவதற்கு அதை கிரயம் பெற்றவன் சட்டப்படி செய்துகொண்ட மனுவென்று தீர்மானித்தார்கள்.

இ. லா. ரி. 29 அ 301, 18 ம. லா. ஜ. 24.

ஒரு மைனருக்குப் போதுமான வயது எப்போது வருகிறதென்பதைக் குறித்த சம்பாஷணை.

சுப்பய்யர். ஒரு மைனருக்கு எந்த வயதுக்கு மேல் போதுமான வயது வருகிறதென்று சட்டத்தில் சொல்லப்படுகிறது அதை எனக்குச் சொல்லுங்கள்.

இ. சாதாரணமாய் 18 வயது முடிந்த பின் ஒரு மைனருக்குப் போதுமான வயது வருகிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

சு. ஆனால் 18-வது வயது முடிந்த பிறகும் போதுமான வயது வரவில்லை என்று சொல்லும் சட்டமும் இருக்கிறதோ?

இ. அப்படியும் ஒரு சட்டமிருக்கிறது.

சு. அந்தச் சட்டம் எது?

இ. அது 1890ஞுத்திய VIII-வது ஆக்ட்டு.

சு. அந்தச் சட்டத்தின் பெயரென்ன?

இ. அதற்கு கார்டியன் அண்டு வார்ட்ஸ் ஆக்ட்டு, அதாவது கார்டியனையும் மைனரையும் பற்றிய சட்டம் என்று பெயர்.

சு. அதற்கு முந்தி ஒரு சட்டம் 1875ஞுத்திய IX-வது ஆக்ட்டு மெஜாரிடி ஆக்ட் என்று இருந்ததே அது ரத்தாய் விட்டதா என்ன?

இ. அது இரத்தாகவில்லை, ஆனால் அதன் 3-வது பிரிவு பிந்திய ஆக்டின் 52-வது பிரிவினால் மாற்றப் பட்டிருக்கிறது.

சு. அந்த மாறுதல் இன்னதென்று விவரமாய்ச் சொல்லுங்கள்.

இ. ஒரு மைனருடைய சொத்துக்கோ அல்லது அவனுடைய சரீரத்துக்கோ 1890ஞு VIII-வது ஆக்ட்டின்படி ஒரு கார்டியனை கோர்ட்டார் அவர்களால் நியமிக்கப்பட்டிருக்குமானால் அந்த மைனருக்கு 21-வயது முடிவாகிற வரையில் போதுமான வயது வந்ததாகப் பாவிக்கப்படமாட்டாதென்று மாற்றப்பட்டிருக்கிறது.

சு. அந்த சட்டப்படி ஒரு கார்டியனை கோர்ட்டார் நியமித்து விட்டால் மைனர் பாடு அனர்த்தந்தான் போலிருக்கிறதே! அந்த மைனர் 19-வயதிலே சர்க்கார் பரீக்ஷைகளிற் தேறி சர்க்கார் வேலையிலும் அமர்ந்து ஒரு ஜவாப்தாரியான வேலையையும் செய்யலாம். ஆனால் தன் குடும்பக் காரியங்களைப் பார்க்கிறதற்கு மட்டும் அவனுக்குப் போதுமான ஞானம் உண்டாகவில்லை போலும் அவன் தன் சொத்தைப் பெற்று மானேஜ் செய்யப் பிறகு மூன்று வருஷம் கழிந்து 21-வயது முடிவாகிற வரையில் காத்திருக்க வேண்டியதற்கு வேறு என்ன காரணம் சொல்லக் கூடும், வெகு நன்றாயிருக்கிறது. இந்த சட்டப்படி கார்டியன் நியமிக்கப்பட்டிருக்கிற மைனர்களுக்கு 18-வயது பூர்த்தியானாலும் 21-வயது முடிவதற்கு முன் சர்க்கார் வேலைகளில் நியமிக்கக் கூடாதென்று சட்ட மிருக்கிறதோ அப்படிப்பட்ட சட்டம் ஒன்றும் இதுவரையில் காணோமே இனி ஒருக்கால் ஏற்பட்டாலும் ஏற்படும்.

இ. நீர் மிகவும் யுக்தியாக வாதிக்கிறீரே. கோர்ட்டார் அவர்களால் கார்டியன் நியமிக்கப்பட்டிருக்கிற கேசுகளில் 21-வயது முடிகிறவரையில் போதுமான வயது வரவில்லையென்றே சட்டத்தினுடைய நிட்சயமான கோட்பாடு.

சு. அதிருக்கட்டும், ஒரு கார்டியனைக் கோர்ட்டார் நியமித்திருக்கிற கேசில் மைனருக்கு 18-வயது முடிந்தபிறகு அந்த கார்டியன் [illegible] காரணத்திற்காகவாவது தன்னுடைய [illegible] ஸ்தானத்திலிருந்து நீக்கப்பட்டால் அப்போது அந்த மைனர் மேஜர் என்று பாவிக்கப்பட்டு தன் சொத்தை அடையலாமல்லவா?

இ. சொத்தை அடைய முடியாது. அவன் இன்னமும் 21-வயது முடிகிறவரையில் மைனர் என்றே பாவிக்கப்படுகிறான். (Full Bench ruling) புல் பெஞ்சு ரூலிங்கு இருக்கின்றது.

சு. அந்த கேசின் சங்கதியை விவரமாய்ச் சொல்லுங்கள்.

இ. 1904ஞு ஜனவரிமீ 6உ ஆக்ரா (Agra) டிஸ்திரிகட்டு ஜட்ஜி 1890ஞு VIII-வது ஆக்ட்டுபிரகாரம் அப்பொழுது சுமார் 15-வயதாயிருந்த முரளிதார் என்ற ஒரு மைனரின் சரீரத்துக்கும் சொத்துக்கும் சாதுலால் என்றவனைக்கார்டியனாய் நியமித்தார். அந்த சாதுலால் 1906ஞு ஜனவரிமீ 11உ வரையில் கார்டியனாக இருந்து பிறகு கார்டியன் முறைமையை இராஜிநாமா கொடுத்து கோர்ட்டில் மனு செய்தார். அதன்பேரில் கோர்ட்டார் அவர்கள் 1890ஞு VIII - வது ஆக்ட்டு 40-வது பிரிவின்படி அவரை விலக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் மைனருடைய ப்ளீடர் இடம் ரூ. 19—9—9 கொடுத்துவிட்டார் என்றும், ஆனாலும் அந்தத் தொகையை மைனருடைய ப்ளீடர் கார்டியனுடைய கணக்கைச் சரியென்றுதான் ஒப்புக்கொள்ளவில்லையென்ற ஆக்ஷேபனைக்குட்பட்டு பெற்றுக்கொண்டிருப்பதாயும் கார்டியனிலிருந்து விலக்கப்பட்டிருந்தாலும், சாதுலால் மோசம் செய்திருப்பதாய் இனிமேல் கண்டுபிடிக்கப்பட்டால் அந்த மோசத்திற்கு அவர் பாத்தியப்படவேண்டியது என்றும் உத்தரவு செய்தார்கள். இந்த உத்திரவுக்கு பிறகு முரளிதார் நேரில் சாதுலால் பேரில் "பின்னும் சில தொகை அவரிடமிருந்து கிடைக்கவேணுமென்று ஒரு வியாச்சியம் கோர்டில் தாக்கல் செய்தான். அப்பொழுது முரளிதாருக்கு 18-வயது ஆய்விட்டது ஆனால் 21-வயதுக்குள்ளாக இருந்தான் முதல் கோர்ட்டில் முரளிதார் மைனராயிருப்பதால் அடுத்த சினேகிதன் இல்லாமல் வியாச்யம் கொண்டுவரக் கூடாதென்று ஆக்ஷேபிக்கப்பட்டது. அந்தக் கோர்ட்டார் அந்த ஆக்ஷேபனையை ஒப்புக்கொள்ளவில்லை. ஆனாலும் வியாச்சியத்தை வேறு காரணங்களுக்காக தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் அப்பீல் செய்யப்பட்டது. அப்பீல் கோர்ட்டாரும் கீழ்கோர்ட்டார் போலவே முரளிதார் மைனர் அல்லவென்றும் அந்த வியாச்சியம் 1890ஞு VIII-வது ஆக்டினால் தடைப்பட்டவில்லையென்றும் தீர்மானித்து [illegible] சாரம்சத்தின்பேரில் விசாரித்து முடிவு செய்யும்படி கீழ்கோர்ட்டாருக்கு ரிமாண்டு செய்தார்கள். அதன்பேரில் [illegible] கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டது. [illegible] முரளிதார் வியாச்சியம் [illegible] காலத்தில் அவனுக்கு 21-வயது பூர்த்தியாக [illegible]

படியால் அவனுக்கு அந்த வியாச்சியத்தை நேரில் கொண்டுவர பாத்தியமில்லையென்று கட்சி பாயப்பட்டது. அதன்மேல் 1875ளு IX-வது ஆக்ட்டு 3-வது பிரிவை 1890ளு VIII-ஆக்ட்டின் 52-வது பிரிவினால் திருத்தம் செய்திறபடி வாசித்தால், ஒரு கார்டியன் நியமிக்கப்பட்டிருந்து அந்தக் கார்டியன் பிறகு இராஜினாமாகொடுத்தோ அல்லது வேறு காரணங்களினாலோ கார்டியன் முறைமையிலிருந்து விலகிவிட்டாலும், ஒரு மைனர் மெஜாரட்டியை அடையும் விஷயம் அவனுக்கு 21-வயது பூர்த்தியாகிற வரையில் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதென்பது சட்டத்தின் தெளிவான தாத்பரியம் என்று ஹைக்கோர்ட்டார் அவர்கள் தீர்மானித்து இரண்டு கீழ்க்கோர்ட்டு தீர்மானங்களையும் மாற்றி அசல் கோர்ட்டுக்கு வியாச்சியத்தை திருப்பியனுப்பி பிராதை வாபஸ் கொடுத்து விடும்படிக்கும் வேண்டுமானால் அதை மறுபடியும் மைனரின் அடுத்த சிநேகிதன், கோர்ட்டார் அவர்களுடைய அனுமதியைப்பெற்று கோர்ட்டில் தாக்கல் செய்யலாமென்றும் தீர்மானித்தார்கள். இந்த தீர்மானம் அலகபாத் ஹைக்கோர்ட்டார் அவர்களால் (Full Bench) புல்பெஞ்சியில் No 10 of 1906 - ல் செய்யப்பட்டது.

MISCELLANEOUS SUITS.

சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.

மைசூர் சீப் கோர்ட்டு.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் கிருஷ்ணராவ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சந்திரசேகரய்யர்.

நாடகசாலையில் சுருட்டு பிடிப்பது.

1907ளு பிப்ரவரிமீ 14உ இரவு மைசூரில் தேவனங்கெரி என்னுமொரு நகரில் ஒரு நாடகசாலைக்குள் வந்திருந்தவர்களில் ஒருவர் சுருட்டு பிடித்துக்கொண்டிருந்தார். அவ்விடமிருந்த போலீசு இன்ஸ்பெக்டர் அவர் சுருட்டு பிடிப்பதைக்கண்டு நாடக நோடீசில் கண்டிருக்கும் ஷரத்தின்படி சுருட்டு பிடிக்கலாகாதென்று தடுத்தார். அதற்கு அவர் அதைப்பற்றி எனக்கு உத்திரவுசெய்ய நீ யாரென்றும், உமக்கென்ன அதிகாரமுண்டென்றும், கேட்டு சில கடினவார்த்தைகளைச் சொன்னார். போலீசு இன்ஸ்பெக்டரே அதற்கு குண்டப்பட்டவராகி குற்றவாளி இந்தியன் பினல்கோடு 290,504,505வ பிரிவுகளின்படி குற்றம் செய்தவனாக குற்றஞ் சாற்றி சார்ஜ் செய்தார். தாலுக்கா மாஜிஸ்திரேட்டு [illegible] -505வது பிரிவின்படி அக்குற்றத்தை விசாரணை செய்ய தனக்கு அதிகாரமில்லையென்று அபிப்பிராயப்பட்டு [illegible] மாஜிஸ்திரேட்டு அவர்களுக்கு அனுப்பிவிட்டார். அவர் அந்த கேசை தேவனங்கிரி 1st Class மாஜிஸ்திரேட்டினிடம் விசாரணைக்கு அனுப்பினர்; பின்செப்பிய மாஜிஸ்திரேட்டு அந்த குற்றவாளி 124 - A பிரிவின்படி ராஜத்துரோக குற்றம் செய்ததாக அபிப்பிராயப்பட்டு கட்டை மறுபடியும் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்திரேட்டுக்கு அனுப்பிவிட்டார்; டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட்டு 290-வது பிரிவின்படி குற்றவாளியின் மேல் சார்ஜு ஏற்படுத்தி கேசை விசாரணை செய்தார். கேசின் விர்த்தாந்தங்களை படித்து இந்த கேசில் குற்றம் நேரிட்டயிடம் 290-வது பிரிவின்படி 'பப்ளிக்' இடமல்ல, ஆகையால் டை பிரிவின்படி செய்திருக்கும் சார்ஜு கிரமமல்லவென்று தீர்மானித்தார். ஆயினும் குற்றவாளி ஒரு பப்ளிக் உத்தியோகஸ்தன் சட்டப்படி செய்யும் உத்திரவை மீறி நடந்ததாக அபிப்பிராயப்பட்டு, 186 - வது பிரிவின்படி குற்றவாளியை தண்டித்தது சட்டப்படி செய்ததா அல்லவாவென்றும், அப்பிரிவில் சொல்லியிருக்கிற பிரகாரம் 'பப்ளிக்' வேலையென்று சொல்லுவதற்கு தாத்பரியம் யாதெனில் சட்டப்படி கிரமமாய் செய்யவேண்டிய தொழில்கள் மாத்திரமேயல்லாமல் மற்றப்படி வேறே தன்னிஷ்டப்பிரகாரம் செய்யும் எல்லா உத்திரவும் 'பப்ளிக்' வேலையாகாதென்று தீர்ப்புசொல்லி; பிரஸ்தாபகேசில், போலீஸ் இன்ஸ்பெக்டர், ஜனங்களுக்குள் சண்டை சச்சரவு நேரிடாதபடி நாடகசாலையிலிருந்திருக்கலாம், ஆனால் அவ்விடத்தில் சுருட்டு பிடிக்கலாகாதென்று தடுக்க போலீசு உத்தியோகஸ்தனுக்கு அதிகாரம் கிடையாதென்றும், அப்படி ஒரு போலீசு இன்ஸ்பெக்டர் உத்தரவு செய்ய அதிகாரம் கொடுக்கும் சட்டமில்லையென்றும், நாடக விளம்பர நோட்டீசில் கண்டிருக்கும் ஷரத்தின்படி நாடகசாலைக்குள் சுருட்டுபிடிக்கலாகாதென்பதை ஒரு போலீசு உத்தியோகஸ்தன் தடுக்க அதிகாரம் உண்டென்று மாஜிஸ்திரேட்டு அபிப்பிராயப்பட்டதை சீப் கோர்ட்டார் அங்கீகரிக்காமல், நாடகசாலையின் நோடீசில் கண்ட ஷரத்திற்கு மீறி நடந்ததாக ஒரு போலீசு உத்தியோகஸ்தன் அதைத் தடுத்து விசாரிக்கலாகாது, அந்த போலீசு உத்தியோகஸ்தன் சட்ட நிபந்தனைக்கு ஐயமின்றி மீறி நடந்தவனாவான் என்று தீர்ப்புசொல்லி குற்றவாளியை சட்டத்திற்கு விரோதமாய் தண்டிக்கப்பட்டபடியால் அவனிடத்திலிருந்து முன்னமேயே அபராதத்தை வசூல் செய்திருந்தால் அதை அவருக்கு வாபஸ்செய்துவிடும்படி உத்தரவு செய்தார்கள்.

சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டு.

1907ளு [illegible] கிரிமினல் அப்பீல் [illegible]

இந்தியன் பினல் கோட் [illegible] பிரிவின்படி கைதியின் 'பேரில்' மரண தண்டனை [illegible] ஹைக்கோர்ட்டார் அவர்களுடைய [illegible]

க்கு ரிபர் செய்யப்பட்ட கேசில் சாட்சியமானது சம்பாவிதத்திற்கு விரோதமாயிருக்கிறதென்ற காரணத்தின் பேரில் கைதியை மரண தண்டனையிலிருந்து விடுதலை செய்தது.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

கைதி :—எரிகல சுப்படு.

கேசின் விபரம் :—1907ளு ஜனவரிமீ 25உ கைதி எரிகல சுப்படு என்பவன் பீமக்கா என்ற ஒரு பெண் பிள்ளையை கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு பெல்லாரி செஷன் கோர்ட்டார் அவர்கள் முன் 1907ளு 32-ந. கியாலண்டர் கேசில் விசாரணைக்கு வந்து மேற்படி செஷன் ஜட்ஜு அவர்கள் அசெஸர்கள் சொன்ன அபிப்பிராயத்துக்கு முற்றிலும் விரோதமாய்க் கொலைக் குற்றத்தை ஸ்தாபித்து மரண தண்டனை விதித்து ஹைக்கோர்ட்டார் அவர்களுடைய உறுதிப்பாட்டுக்கு அனுப்பினர். அந்தக் கேசில் ஏற்பட்ட ருசு என்னவென்றால் 15-வயதுள்ள கோமிலி என்ற ஒரு பெண்ணுடையவும், 13-வயதுள்ள சங்கெளி காடு என்ற ஒரு பையனுடையவும் சாட்சியமேயாம். இந்த இரண்டு சாட்சிகளும் மேற்படி ஜனவரிமீ 25உ மத்தியான வேளையில் இறந்தவள் புல்லறுத்துக்கொண்டிருக்கும் சமயத்தில் அவளைக் கைதியானவன் பல தடவை கீழே தள்ளியதைப் பார்த்ததாகவும், அவள் இறந்து போகிறேன் என்று கத்தினதைத் தாங்கள் கேட்டதாகவும் சொல்லுகிறார்கள். அந்தப்பெண் தான் பயந்துகொண்டு வீட்டுக்கு ஓடிப்போய் தன் மாமியிடம் சொன்னதாகவும், அன்று இராத்திரி தன்னுடன் படுத்திருந்த தன் புருஷனிடம் சொல்ல வில்லையென்றும் சொல்லுகிறாள். அந்த பையன் குற்றம் நடந்தபிறகு உடனே கைதி தன்னிடம் வந்து சேர்ந்தானென்றும், அவனுடைய நெற்றியில் ஒரு சிகப்புப் பொட்டிருந்ததைத் தான் கவனித்தாயும், அவன் அந்தப் பெண்பிள்ளை பின்னால் போனதைப் பற்றித் தான் அவனை எச்சரித்ததாகவும், அதற்கு கைதி அதைப்பற்றிக் கிராமத்தில் ஒன்றும் சொல்லாமலிருக்கும்படி தன்னிடம் சொன்னதாகவும் சொல்லுகிறான். அந்த பையன் சாயங்காலம் தன் வீட்டுக்குப் போன பொழுது பீமக்கா கொலையுண்டதைப்பற்றி கேள்விப்பட்டான், ஆனால் அவன் அதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்னால்தான் கண்டதாகச் சொல்லுகிற விஷயத்தைப்பற்றி ஒரு வார்த்தை கூட அந்த பெண்பிள்ளையின் பெற்றோர்களுக்காவது பந்துக்களுக்காவது அல்லது தன்னுடைய ஜனங்களுக்காவது அவன் சொல்லவில்லை. கிராமமாஜிஸ்திரேட்டு 26உ காலையில் வந்தார் ஸ்டேஷன் ஹௌஸ் ஆபீசர் 26உ பிற்பகலில் வந்துசேர்ந்தார். பிரேதவிசாரணை நடந்தது; ஆனால் அப்பொழுது இந்த இரண்டு சாட்சிகளில் யாரேனும் இந்தக் கைதியை அந்தக் குற்றத்தில் சம்பந்தப்படுத்தக்கூடியதாய் [illegible] ஒரு வார்த்தை கூட சொல்லப்படவில்லை. 27உ சப் மேஜிஸ்திரேட்டு [illegible] வந்தார். ஆனால் அவருக்கு யாதொரு சமாசாரமும் கிடைக்கவில்லை. அவர் மறுபடியும் 28உ வந்தார், அப்போது கோமிலியும், சங்கெளிகாடுவும் தங்கள் கதையைச் சொன்னார்கள். இந்த பெண்ணும் பையனும் தாங்கள் பார்த்ததாய்ச் சொல்லுகிறபடியே பீமக்காவைக் கைதி கீழே தள்ளினதை வாஸ்தவத்தில் பார்த்திருந்து பிறகு, சாயங்காலத்தில், தாங்கள் அவள் துன்பப்படுவதைப்பார்த்த இடத்திலேயே அவள் கொலைசெய்யப்பட்டிருப்பதைக்கண்டும் இருப்பார்களேயானால் அதைப்பற்றி ஒரு வார்த்தையேனும் தங்கள் பந்துக்களுக்கோ, கொலை செய்யப்பட்ட பெண்பிள்ளையின் பெற்றோர்க்களுக்கோ, கிராம மேஜிஸ்திரேட்டுக்கோ, அல்லது கொலை நடந்த மறுநாள் போலிசார் அந்த விஷயத்தைப்பற்றி விசாரணை பண்ணிக்கொண்டிருக்கும்பொழுது அவர்களுக்கோ சொல்லாமல் இருந்திருப்பார்களா வென்பது மிகவும் அசம்பாவிதமாயிருக்கின்றது. இந்த சாட்சிகள் தங்களைக் கேசில் சாட்சிகளாக்கி விடுவார்களென்று பயந்துசங்கதியை வெளிப்படுத்தாமல் இருந்துவிட்டார்களென்று நினைக்கக் கூடாதபடி அவ்வளவு சிறுவர்களாயிருக்கிறார்கள். அப்படிப் பயந்திருப்பது சம்பாவிதம்; இந்த இரண்டு சாட்சிகளும் குற்றஞ்செய்யும் ஜாதியாகிய சுகளிய ஜாதியைச்சேர்ந்தவர்களாயும், ஒருவருக்கொருவர் சமீப பந்துவாயும் இருக்கிறார்கள்.

ஆகையால் கொலை நடந்த 25உக்கும் அவர்கள் தங்கள் கதையைச்சொன்ன 28உக்கும் இடையில் அவர்களைப் பொய்சாட்சி சொல்லும்படி போதித்திருக்கலாமென்று நினைப்பது இலகுவாயிருக்கின்றது. அவர்களுடைய சாட்சியத்தை நியாயமான சந்தேகமின்றி யிருப்பதாய் அங்கீகரிக்கக் கூடவில்லையென்று ஜட்ஜிகள் கண்டு அசெசர்களுடைய அபிப்பிராயத்தோடு இணங்கி கைதியைக் குற்றத்திலிருந்து விலக்கி விடுதலை செய்யும்படி தீர்மானித்தார்கள்.
இந்தத் தீர்மானத்தினால்

" ஏதிலார் யாதும் புகல இறைமகன்
கோதறீ இக்கொள்கை முதுக்குறைவு—கோரின்று
காக்கை வெளிதன்பாரென் சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு "

என்று பெரியோர் கூறிய முதுமொழிப்படி பிரத்தியக்ஷ சாட்சியங்களின் பொய்மையைக்கண்டு பிடித்து அபிமானத்தைக்கொண்டு கேசை முடிவுசெய்த ஹைக்கோர்ட்டு ஜட்ஜிகளுடைய பேரறிவு விளங்குகின்றது.

GENERAL NEWS.

பொது வர்த்தமானம்.

பாடசாலைகளில் பிள்ளைகளை புதிதாய் சேர்ப்பிப்பது.

இந்தியாதேசத்தில் சாதாரணமாய்ப் பாலர்களுக்கு தற்காலத்தில் பாடசாலைகளில் கற்பித்துவரும் ஏற்பாட்டின் விஷயமாய் டைரெக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்டரக்ஷன் துரையவர்கள் செய்திருக்கும் ரிப்போர்ட்டை மதராஸ் கவர்ன்மெண்டார் யோசித்து வித்தியாகலைசாலைகளுக்காக ஏற்படுத்தியிருக்கும் 47-வது விதியை பின்வருமாறு மாற்றியிருக்கிறார்கள்.

இதற்கு காரணம் யாதெனில் தற்காலத்தில் முதல் முதல் பாலர்களுக்கு கல்வி போதித்து வரும் அவ்வவ்விடத்திய சொற்ப பாடசாலைகளில் வாசித்து வரும் பாலர்கள் நான்காவது ஸ்டான்டெர்ட் வகுப்பு வரையில் வாசித்தான பிறகு அவர்கள் அதற்குமேல் வகுப்பில் வாசிக்க அபேட்சித்து இரண்டாம்தர பாடசாலைகளில் வந்து சேரக்கோரினால் அவர்கள் முன் வாசித்துக்கொண்டிருந்த பாடசாலையிலிருந்து நல்ல நடவடிக்கையுடையவனாகவும் வருஷக்கடைசியிலான பரிட்சையில் தப்பிப்போகாமல் தேர்ந்தவனாகவும் அதை பாடசாலையின் மானேஜரிடமிருந்து ஓர் சர்ட்டிபிகேட்டு இரண்டாந்தர பாடசாலை ஹெட்மாஸ்ட்டருக்கு ஆஜர்செய்யாமல் சேர்த்துக் கொள்ளுவதினால் பாலர்கள் சரியாய் வாசிப்புத்திறமையின்றி துர்நடவடிக்கையுள்ளவர்களாயிருக்கிறார்களாம். ஆகையால் இனிமேல் இரண்டாம்தர பாடசாலையின் பெரிய உபாத்தியாயர் அவர்கள் அப்படிப்பட்ட சர்ட்டிபிகேட்டு ஆஜர்செய்யாத பட்சத்தில் புதிதாய் சேருவதற்குவரும் பாலர்களை பரிட்சித்து அவர்கள்மேல் வகுப்பிற்கு யோக்கியதை யுள்ளவர்களா அல்லவா யென்று தெரிந்தெடுக்கவேண்டியது. அவர்களைப் பரிட்சித்ததையும் பூர்வீக பாடசாலையின் சரித்திரத்தையும் தெளிவாய் கண்டெழுத வேண்டியது, அதை வருஷாந்தரம் பார்வையிடவரும் இன்ஸ்பெக்டர் அவர்களிடம் ஆஜர் செய்யவேண்டியது, அவர் அதைப் பார்வையிட்டு தகுந்த பைசல்செய்வாரென்று கவர்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

அபினி முதலான லாகிரி வஸ்துக்களின்மீது வரி.

இவ்வரி மூலமாய் 1905-1906ஹுத்தில் 180,999,91-ம், 19.6-1907-ஹுத்தில் ரூ. 195,556,88-ம் வசூலாயிற்றும். இவ்விதமாய் அதிக தீர்வை வசூலானதற்கும் முன்விட இப்போது லாகிரி வஸ்துக்களை விசேஷமாய் உபயோகிப்பதற்கும் காரணம் என்னவென்றால்,—தற்காலம் மழை அதிகரித்து எங்கும் ஜலப்பிரியையாய் தேசம் மிக்க செழித்து க்ஷேமகரமாயிருப்பதால் ஏற்கனவே ஜனங்கள் மிக்க திரவியந்தராயிருக்கிறார்களென்று எண்ணப்படுகிறது.

1906-1907ஹு லாகிரி வஸ்துக்களை உபயோகித்தவர்கள் ஏறக்குறைய 100-க்கு 40-பேர் அதிகரித்திருப்பதாக தெரியவருகிறது. இந்த சென்னை ராஜதானியின் எல்லா ஜில்லாக்களிலும் சீடட் (Ceded) (Kurnool) ஜில்லாக்களில் லாகிரி வஸ்துக்களை விசேஷமாய் உபயோகிக்கிறார்களாம். தென் ஜில்லாக்களில் அப்படிக்கில்லாமல் 100-க்கு 27 பேர் தான் உபயோகிக்கிறார்களாம்.

இத்தியாதி வருஷங்களைவிட ஏல் சாராயம், பீர், போர்ட்டர் முதலான பிரதேச சாராயங்கள் மிக்க கொஞ்சமாய் உபயோகப்பட்டுவருகிறது; முக்கியமாய் சுதேசபொருளாகிய மலபார் ஜில்லாவில் உற்பத்தி செய்யும் கட் சாராயம் (Toddy arrack) யென்பது மிக்க விசேஷமாய் உபயோகப்படுகிறதாம். சென்ற 1906-1907-ல் கொளம்பு சாராயம் ஏற்றுமதியாவதில் 11,225 காலன் குறைந்துவிட்டதாம். ஆகையால் இவ்விதமாய் லாகிரி வஸ்துக்களை விசேஷமாய் உபயோகிப்பதை தடுத்து நிறுத்துவதற்கு வரியை அதிகப்படுத்துவதே யுக்தமான வழியென்று யுத்தேசித்து இவ்விராஜதானியின் சில ஜில்லாக்களில் லாகிரி வஸ்துக்களின் பேரில் ஆப்காரி தீர்வையை அதிகரித்திருக்கிறார்கள்.

HIDU LAW.

இந்து லா.

CAPHTER IV.

அத்தியாயம் 4.

ADOPTION.

ஸ்வீகாரம்.

ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்திற்கு A. என்பவன் சபிண்டனாயிருந்தான். அக்குடும்பத்திற்கு B என்பவனை தத்தெடுத்துக்கொண்டார்கள். A என்பவன் அப்படி ஸ்வீகாரமெடுப்பதினால் தன் அனுபவத்திலுள்ள குடும்ப சொத்திற்கு யாதொரு நஷ்டமும் வராதபடி தத்து புத்திரனிடம் ஏற்பாடு செய்துகொண்டு நல்லெண்ணத்துடன் தத்தெடுத்துக் கொள்வதற்கு சம்மதித்தான். அப்படிசெய்துகொண்ட ஸ்வீகாரம் செல்லுமென்று தீர்மானம் செய்யப்பட்டது.

சினிவாச அய்யங்கார் V. ரங்கசாமி அய்யங்கார் 30 சென் 450.

புருஷனுடைய உத்திரவின்றி பெண்சாதி ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளலாமா ?

I. புருஷனுடைய உத்தரவின்றி பெண்சாதி சபிண்டர்களுடைய அனுமதியின்பேரில் ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளலாமென்று ராமனாதபுரம் ஜெமீன்தாரி கேசில் மந்திராலோசனை சபையாரால் (Privy Council) தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இ. லா. ரி 2 சென் 231.

II. ஆனால் ஸ்வீகாரமெடுத்துக்கொள்ள புருஷனுடைய உத்திரவில்லாவிடில் எப்படிப்பட்ட பந்துக்களின் அனுமதிபெற்றால் புருஷன் உத்தரவுக்குச் சமானமாகும் ?

இறந்துபோன புருஷனுடைய குடும்பம் அவிபக்த குடும்பமாயிருந்து பெண்சாதிக்கு அந்த குடும்பத்தில் ஜீவனும்ச ஹக்குமாத்திர மிருந்தபோதிலும் குடும்பத் தலைவனாயிருக்கும் புருஷனுடைய தகப்பன் உயிரோடிருந்தால் பெண்சாதி ஸ்வீகாரமெடுத்துக் கொள்வதற்கு அவனுடைய மாமனாரின் அனுமதி ஒன்றே போதுமானது. அப்படி மாமனார் ஜீவந்தரமில்லாவிடில் குடும்பத்தில் புருஷன் சொத்திற்கு பாத்தியதையுள்ள புருஷனுடைய எல்லா சகோதரர்களின் அனுமதியின்பேரில் ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளலாம்.

இ. லா. ரி. 16 பம் 110; விதோபா V. பாபா,

யார் (ஒருவனை) ஸ்வீகாரம் கொடுக்கலாம் ?

ஒரு இந்து குடும்பத்தின் பிள்ளையை வேறொரு குடும்பத்திற்கு ஸ்வீகாரம் கொடுப்பதினால் அந்தப் பிள்ளை தான் பிறந்த குடும்பத்தைவிட்டு அவனை ஸ்வீகார மெடுத்துக்கொள்ளும் குடும்பத்திற்கு போய்விடுவது மொத்தத்தில் அந்த பிள்ளை அவனுடைய வாழ்நாளில் அடையும் சுகதுக்கங்களைப் பொருந்தியதானபடியாலும் அவன் ஸ்வீகாரம் போகும் தருணத்தில் பிரத்தியேகமாய் உத்தரவு செய்திருந்தால் அவள் அப்படி செய்யலாம்.

இ. லா. ரி 24 பம் 89.

III. ஒருவன் தன் உடன்பிறந்த சகோதரனை ஸ்வீகாரம் கொடுக்க அதிகாரில்லை.

மானிடராய்ப்பிறந்த எல்லோர்க்கும், முக்கியமாய் தாய் தகப்பன்மாருக்கு அவர்களுடைய பிள்ளையின்பேரில் ஏற்கனவே எவ்வளவு அன்பும் பிரீதியுமிருக்குமோ அவ்வளவு அன்பும் பிரீதியும் மாற்றாந்தாயிக்கு அவள் புருஷனுடைய முதல்தாரத்தின் பிள்ளையின்பேரில் இராதென்னும் காரணத்தால் ஒரு மாற்றாந்தாய் அப்பிள்ளையை ஸ்வீகாரம் கொடுக்க அதிகாரமுள்ளவளல்ல.

பாபம்மா V. அப்பாராவ் இ. லா. ரி. 16 சென் 384.

ஒரு பிள்ளையை வேறொரு குடும்பத்திற்கு ஸ்வீகாரம் கொடுப்பதினால் அந்தப்பிள்ளை தான்பிறந்த குடும்பத்தைவிட்டு ஸ்வீகாரம் போகும் குடும்பத்திற்கு போய்விடுவதினால் அவன் தன் வாழ்நாளில் அடையும் சுகதுக்கங்களை பொருத்ததானபடியாலும் அவன் தத்துபோகும் தருணத்தில் ஏற்கனவே [illegible] இளவயதுள்ள மைனராயிருப்பானாயினும் ஒரு பிள்ளையின் தாய் தகப்பன்மார்தான் தத்து கொடுக்கலாமே யொழிய மற்றப்படி குடும்பத்தில் வேறே யாருக்கும் ஸ்வீகாரம் கொடுக்க அதிகாரமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

இ. லா. ரி. 6 பம் 83.

ஒரு ஹிந்துவினுடைய தகப்பன் மகம்மதியர் மதத்தில் சேர்ந்து மகம்மதியனாய் விட்டாலும் தன் பிள்ளையை ஸ்வீகாரம்கொடுக்க அதிகாரம் உண்டு. இவன் தன்சுய மதத்தைவிட்டு வேறே மதஸ்தனாய் விட்டானென்கிற காரணத்தினால் தன்னுடைய சிவில் ஹக்கு பாத்தியதைகளை யிழந்து விடவில்லை; ஆனால் ஸ்வீகாரம் கொடுக்கும் காலத்தில் கட்டாயமாய் செய்யவேண்டிய சடங்குகளை அருகிலிருந்து செய்வதற்கு ஜாதிபிரஷ்டனாய் விட்டானென்னும் காரணத்தினால் யோக்கியதை யற்றவனாயிருந்த போதிலும் அவன் அந்த ஜாதியிலுள்ள வேறே யாரையாவது அந்த சடங்குகளை செய்யும்படி அதிகாரம் கொடுக்கலாம்.

குஷ்டரோகியாய்விட்ட ஒருவன் தன் புத்திரனை ஸ்வீகாரம் கொடுக்கலாம் 1864 W. R. 173.

மதராஸிலும் அலகபாத்திலும் ஒரு விதவை தன்னுடைய ஒரே பிள்ளையை ஸ்வீகாரம் கொடுக்கலாகாதென்று தன் புருஷன் ஜீவந்தனாயிருக்கையில் ஆட்சேபித்திருந்தாலொழிய மற்றப்படி அவசியமானால் சபிண்டர்களுடைய அனுமதியைப் பெற்றுக் கொண்டு ஸ்வீகாரம் கொடுக்கலாம்.

ஸ்ரீ பாலுசுருசாமி V. ஸ்ரீபாலுசு இ. லா. ரி. 22 சென் 398 ராமலக்ஷ்மம்மாள். ராதாமோஹன் V. ஹார்தாய் பீ பீ, இ. லா. ரி. 26 ஆ 113.

ஒரு தகப்பன் தன் பிள்ளையை ஸ்வீகாரம் கொடுப்பதற்கு மனப்பூர்த்தியாய் ஒப்புக்கொண்டு அருகிலிருந்து மதாச்சார சடங்குகளைச் செய்வதற்கு சக்தியற்றவனாயிருந்தால் அச்சடங்குகளைச்செய்ய தன் இனத்திலே வேறேயொருவரை நியமிக்கலாம் (இ.லா. ரி 7 சென் 548, 8 C. R. 244, 21 சென் 497); இவ்விதமாகவே ஒரு இளம் வயதுள்ள ஒரு விதவை சம்மதித்து ஸ்வீகாரம்கொடுக்கும் சடங்குகளைபெரும்பாலும் செய்துவிட்டு மற்ற ஓமம் முதலான சடங்குகளை மாத்திரம் செய்வதற்கு தன்னுடைய பந்து ஒருவரை செய்யும்படிவேண்டிக்கொண்டதின்பேரில், அவன் அப்படியே செய்தான் இவ்விதமாய் கொடுக்கப்பட்ட ஸ்வீகாரம் செல்லுமென்று தீர்மானமாயிருக்கிறது.

லக்ஷ்மிபாய் V. ராமசந்திரன் இ. லா. ரி. 22 பம். 590.

ஒரு குடும்பத்திலிருந்து வேறொரு குடும்பத்திற்கு ஹிந்து ஒருவனை ஸ்வீகாரம் கொடுக்கையில் அப்பிள்ளையின் சம்மதம் அவசியமில்லை; ஏனென்றால் சாதாரணமாய் பிள்ளைகளை ஸ்வீகாரம் கொடுக்கையில் அவர்கள் மிக்க பால்லியர்களாகவே யிருப்பதினால் ஸ்வீகாரம் போவதற்கு சம்மதிக்கவாவது [illegible] வாவது அவர்கள் மிற்றால் [illegible]

ங்களை ஒருதுவதற்காவது போதுமான அறிவும் வயதுமுள்ளவர்கள் அல்ல.

ஒரு குடும்பத்திற்கு ஸ்வீகாரம்போன தகப்பன் ஒருவன் அவனுடைய ஸ்வீகார பிள்ளையை ஸ்வீகாரம் கொடுக்கலாகாது. கோர்ட் ஆப் வார்டாருடைய அதிகாரத்தின் கீழிருக்கும் மைனர் பிள்ளைகளை ஸ்வீகாரம் எடுப்பதற்கு ரெவினியூ போர்டார் அனுமதி பெறவேண்டும்; மற்றெல்லா விஷயங்களிலும் கவர்ன்மெண்டாரின் அனுமதி அவசியமில்லை.

யாரை (எப்படிப்பட்ட பிள்ளையை) ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளலாம்?

ஸ்வீகாரம் போகும்பிள்ளை, ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும் தகப்பனுக்கு அவனுடைய சொந்தப் பிள்ளையைப்போலாய் விடுகிறுனைகையால் அவன் பிள்ளைமுறை உள்ளவனுகவே யிருக்கவேண்டும்; அப்படிக்கில்லாமல் பெண்ணின்பிள்ளையையாவது, சகோதரியின் பிள்ளையையாவது, தாயாருடைய சகோதரியின் பிள்ளையயாவது, ஸ்வீகாரமெடுக்கக் கூடாதென்று காணுகா என்பவர்சொல்லியிருக்கிறுர்.

சூத்திரர்கள் சகோதரியின் பிள்ளையையாவது குமார்த்தியின் பிள்ளையையாவது ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளலாமென்று கௌதரமாவும், காகலாவும் சொல்லியிருக்கிறுர்கள். ஸ்வீகார மெடுப்பதற்கு அப்படிப்பட்ட பிள்ளைகள்தான் சிரேஷ்டமானவர்களென்று மையூகாவில் சொல்லியிருக்கிறது.

ஒரு குடும்பத்திற்கு ஸ்வீகாரம் போன ஒருவன் சட்டப்படி செலாமணி யாகத்தக்க ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளப்பட்டவனுயென்று அறிந்துக் கொள்வதற்கு பின்வரும் நிபந்தனைகளை ஜாக்கிரதையாய் கவனிக்கவேண்டியது.

(I) ஸ்வீகாரம் போனபிள்ளையும்ஸ்வீகார மெடுத்துக்கொண்ட தகப்பனும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்களாயிருக்கவேண்டும்.

(II) அவசியமானல் ஸ்வீகாரத்திற்குண்டான மதாச்சார சடங்குகளை செய்ய யோக்கிதையுள்ளவனுயிருக்கவேண்டும்.

(III) ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளும் பிள்ளையினுடைய தாயார் பால்லியமாயிருக்கையில் ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளும் தகப்பன் அவளை விவாகம் செய்துக்கொள்ளக்கூடிய முறையுள்ளவனுயிருக்கவேண்டும்.

IV. மதராஸ் அலகபாத் இடங்களைத் தவிர மற்ற இடங்களிலெல்லாம் ஸ்வீகாரம் மெடுக்கும் பிள்ளை அவனுடைய தாய்தகப்பன்மாருக்கு ஒரே பிள்ளையாயிருக்கலாகாது.

V. அத்தைப்பிள்ளை தகப்பன் வம்சத்தைச் சேர்ந்த சிறிய தகப்பன், தாய் வம்சத்தைச் சேர்ந்த அம்மான் இவர்களை ஸ்வீகாரமெடுக்கலாகாது.

தாசிகள் மாத்திரம்தான் ஒரு பெண்ணை ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளலாம். ஆனல் தாசிகள்கூட ஒரு பெண்ணை ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளலாகாதென்று பம்பாயிலும், கல்கத்தாவிலும் தீர்மானமாயிருக்கிறது.

இ. லா. ரி. 13 பம் 690.

ஒரு பிள்ளையை ஸ்வீகாரமெடுக்கையில் அவன் பெரும்பாலும் மிக்க இளவயதுள்ள மைனராகவே யிருப்பானுகையாலும் "ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் கொடுப்பதற்கு அந்தப் பிள்ளையின் தாய் தகப்பன்மார் இருவருக்கும் அதிகாரமுண்டு. ஆனல் ஒரு ஸ்திரி அவளுடைய பத்தாவின் அனுமதியின்றி தானே ஸ்வீகாரம் கொடுக்க அதிகாரமில்லை யென்று வஸிஷ்ட்ட மஹாமுனி சொல்லியிருக்கிறுர்.

ஒரு பிள்ளையின் தகப்பனுவது, தாயாவது (அவள் புருஷன் அனுமதியின்பேரில்) அல்லது, தாய், தகப்பனிருவரும் ஒன்றுசேர்ந்தாவது தன் பிள்ளையை வேறொருவனுக்கு அவர்கள் துன்பப்படும் காலத்தில் ஸ்வீகாரம் கொடுத்து அந்த ஸ்வீகாரத்தை தர்ப்பணம் முதலிய சடங்குகள் செய்துக் கொடுத்தால் அவனை சாஸ்திர சம்மதமாய் வேறொரு குடும்பத்திற்கு ஸ்வீகாரம் கொடுக்கப்பட்டவனென்று மனு சொல்லுகிறுர்.

தகப்பன் அல்லது தாய் மனப்பூர்வமாய் கொடுத்துவிடப்பட்ட பிள்ளை தான் 'தத்தக' புத்திரனென்று வியாஜ்ஜிய முனி சொல்லியிருக்கிறுர்.

ஆகையால் ஓர் தகப்பன் தன் பிள்ளையை ஸ்வீகாரம் கொடுக்க சர்வ அதிகார முள்ளவனென்றும் தாயோ அவளுடைய புருஷன் அந்த ஸ்வீகாரத்தை சம்மதிக்க சட்டப்பிரகாரம் யோக்கியதை யுள்ளவனுயிருக்கும் பட்சத்தில் அவன் அனுமதியின்றியும்ஸ்வீகாரம் கொடுக்க அதிகாரமில்லை. ஆனல் தன் புருஷன் மரணமடைந்த பிறகாவது, சதாபருநியாய் போய் விட்டானலாவது, வேறே தேசத்தில் குடியேறினவனுயாவது; வேறே மதத்தை அனுசரித்து ஜாதிப்பிரஷ்ட்டனுய் விட்டாலாவது, புத்தி சுவாதீனமில்லாத பயித்தியக்காரனுய் விட்டாலாவது அவள் தான் ஒருத்தியே ஸ்வீகாரம் கொடுக்கலாம்.

ஒரு தாய்க்கு ஒரு பிள்ளை விருத்தியடைந்து க்ஷேமகரமாயிருக்கவேண்டு மென்கிற கோரிக்கை சதா அவளுடைய மனதில் குடிகொண்டிருக்குமாகையால் மின் சொல்லியபடி தான் ஒருத்தியே தன் பிள்ளையை ஸ்வீகாரம் கொடுக்கலாமென்று திடமாய்ச் சொல்லியிருக்கிறது.

இ. லா. ரி. 30 கல், 395.

I. குறிப்பு:— தகப்பனைப்பெற்று பாட்டனுக்கு தன் பௌத்திரனை ஸ்வீகாரம்கொடுக்க அதிகாரமில்லை.

இ. லா. ரி. 10 பம் ஐ. சி, 235.

II. ஒரு விதவை இரண்டாம் விவாகம் செய்துக்கொண்டால் தன் முதல் புருஷனுக்கு தான் பெற்ற பிள்ளையை ஸ்வீகாரம்கொடுக்க அதிகாரமில்லை. ஆனல் அப்படி ஸ்வீகாரம் கொடுப்பதற்கு முதல் புருஷன் பிரத்தியேகமாய் நெருங்கின பந்துக்களாகிய சபிண்டர்களிருந்திடினும் குடும்பத்தில் சேர்ந்திராத அன்னியனொருவனை தத்தெடுத்துக் கொள்ளலாமென்று தீர்மானித்திருக்கிறது.

(23 W. R. 340, Call 587, 5 I. A. 40).

GOVERNMENT ORDERS.

கவர்ன்மெண்டு ஆர்டர்கள்.

1908-ம் ஞுத்திய ஜனவரி 16உ 79நெ. J.

மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட்டு.

மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட்டில் இதுவரையில் பிரமாணப் பத்திரிகைகளை ரெஜிஸ்ட்ரார், எட் கிளார்க் மூன்பால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வருகிறது. ஆனல் இனிமேல் அந்த கோர்ட்டில் உத்தியோகமாயிருக்கும் எந்த உத்தியோகஸ்தரையாவது பிரமாணம் செய்விக்கும்படிக்கு கமிஷனராய் நியமிப்பதற்கு கவர்ன்மெண்டார் அதிகாரம் கொடுத்திருக்கிறுர்கள்.

வேலூர் சென்ட்ரல் ஜெயில்.

1908ஆ ஜனவரி 16உ 76 நெ. J.

இதுவரையில் வேலூர் சென்ட்ரல் ஜெயிலில் செய்துக்கொண்டிருந்த கூடாரங்களை இனிமேல் கோயம்புத்தூர் சென்ட்ரல் ஜெயிலில் செய்துவரும்படி மாற்றிவிட்டார்கள்.

கெனடா தேசத்திற்கு போவது.

1908ஆ ஜனவரி 17உ 53 நெ. P.

அமெரிகா கண்டத்திலுள்ள கெனடா தேசத்திற்கு அனுப்பப்படும் தொழிலாளிகள் இனிமேல் அவர்கள் சொந்த கிராமத்திலிருந்தாவது வாசம் செய்யுமிடத்திலிருந்தாவது நேராய் கெனடாவுக்கு டிக்கட்டுபெற்று வந்தாலொழிய மற்றப்படி கெனடா தேசத்திலிறங்கக் கூடாதென்றும் அவர்களை அனுப்பும் நபர்கள் நேராய் டிக்கட்டுகளில்லாமல் அனுப்பலாகாதென்றும் தாக்கிது செய்யும்படி ஜில்லா மாஜிஸ்திரேட்டுகளுக்கும் மதராஸ் போலீசு கமிஷனருக்கும் தெரிவித்திருக்கிறுர்கள்.

1908ஆ ஜனவரி 17உ 94 நெ. J.

வேலூர் போலீசு ட்ரெயினிங் ஸ்கூலிலுள்ள நபர்களின் ஜீவனும்சத்திற்கா தற்காலம் உடனே ரூபாய் 500-ம் வருஷாந்தரம் ரூபாய் 1,200-ம் கிராண்டு தொகையாக கொடுத்து வரவேண்டியதென்று உத்தரவாயிருக்கிறது.

G. O. No 2190 Rev. (V. Is), dated 30 August 1907.

மதராஸ் கவர்ன்மெண்டு, ரிவினியூ டிபார்ட்மெண்டு உத்தரவு.

1907ஆ ஆகஸ்டு 30உ ஆர்டர் ந. 2190 ரிவினியூ.

1905ஆ III-வது ஆக்டாகிய "மதராஸ் லாண்டு என்குரோச்மெண்டு" ஆக்கிரமிப்பு சட்டத்தின் 8-வது பிரிவை யனுசரித்து, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அவர்கள் அடியில்கண்ட விதிகளை நிருபிக்கிறுர்கள் :—

விதிகள்.

I. மதராஸ் அல்லாத இதர டவுனின் எல்லைகளுக்குள் அனுமதியன்னியில் கைப்பற்றியிருக்கும் சர்க்காருக்குச் சொந்தமான நிலங்களின்பேரில் "மதராஸ் லாண்டு என்குரோச்சுமெண்டு" ஆக்ரமிப்பு ஆக்டாகிய 1905ஆ III-வது சட்டம் (ii) பிரிவிப்படி வசூலாகவேண்டிய தீர்வையானது, மேற்படி டவுனில் நிலவரி வசூலுக்கு தற்காலம் ஏற்பட்டிருக்கும் விதிகளை அனுசரித்த நிலவரியாகும்.

II. கிராமங்களில் சர்க்காருக்கு சொந்தமான நிலங்களாகிய வகுக்கப்பட்டு தீர்வை ஏற்படாத நிலங்களை அனுமதியன்னியில் கைப்பற்றியவைகளின்பேரில் டை ஆக்டு 3 (i)-வது பிரிவுப்படி வசூலாகவேண்டிய தீர்வையானது, டை நிலங்கள் நஞ்சையாயிருந்தால் ஜில்லாவில் அனுஷ்டானத்திலிருக்கும் உயர்ந்த நஞ்சை தீர்வை ரேட்டுக்கு அதிகப்படாமலும், புஞ்சையாயிருந்தால் ஜில்லாவில் அனுஷ்டானத்திலிருக்கும் உயர்ந்த புஞ்சை தீர்வை ரேட்டுக்கு அதிகப்படாமலும் கலெக்டர் அவர்கள் தீர்மானிக்கிற ரேட்டுகளின்படி வசூல் செய்யப்படும்.

G. O. No. 442. MARINE, DATED 20th NOVEMBER 1907.

சிங்கப்பூர் துறைமுகத்தில் 1907ஆ நவம்பர் 13உ ஒரு பிளேக்கேஸ் சம்பவித்ததாக சமாச்சாரம் வந்திருப்பதால் டை துறைமுகத்திலிருந்து மதராஸ் இராஜதானியிலுள்ள பிளேக் வியாதியால் பீடிக்கப்படாத எல்லா துறைமுகங்களுக்கும் வரும் கப்பல்கள் விஷயமாய் வெளிஸ்சானிடெரிகன் வென்ஷன் விதிகள் மறுபடி அனுஷ்டிக்கப்படவேண்டியதென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அவர்கள் கட்டளை யிடுகிறுர்கள்.

PROCEEDINGS OF THE BOARD OF REVENUE AND COLLECTORS' CIRCULARS.

ரேவினியூ போர்ட் புரோசீடிங்ஸ்களும், ஜில்லா சர்க்குலர்களும்.

திருச்சிறுப்பள்ளி ஜில்லா கலெக்டர் அவர்களால் பிறப்பித்திருக்கும் சர்க்குலர் ஆர்டர்கள் :—

Circular No 1. D. Divs. No. 3369, R of 1907.

வைகுரியிலிருந்து பாதுகாக்கப்படாத் குழந்தைகளின் ஜாப்தா வைப்பதைக்குறித்து இப்போது செய்துவருவது, யென்னவெனில், வருஷாவருஷம் ஏப்ரல் 1உ யில் அம்மை வைத்துக்கொள்ளாததும் இதர்காரணங்களால் பாதுகாக்கப்படாததுமான குழந்தைகளின் பெயர்களை பழைய ஜாப்தாவிலிருந்து புது ஜாப்தாவுக்கு கொண்டுவரப்பட்டு அதற்குப்பின்னிட்டு பிறக்கும் குழந்தைகளை பிறந்ததும் ஜாப்தாவில் சேர்க்கப்படுகின்றன. இந்த ஏற்பாட்டினுல் விளை

மத்திலுள்ள பாதுகாக்கப்படாத எல்லா குழிகளுந்தான் ஜாப்தாவில் காட்டப்படுகிறதில்லையென்று தெரியவந்திருக்கிறது. இது கிராம முன்சீபுகள் கவனிக்காததால் மட்டுமல்ல, ஆனால் ஒரு கிராமத்தில் பிறந்த குழிகள் அந்த கிராமத்திலுள்ள பாதுகாக்கப்படாத ஜாப்தாவில் சேர்க்கப்பட்டிருந்து மற்றொரு கிராமத்திற்கு கொண்டுபோகப்பட்டால் அது எங்கே கொண்டுபோகப்பட்டதோ அந்த கிராம ஜாப்தாவில் அதன் பெயர் தாக்கல் செய்யப்படாத காரணத்தினாலும் நேரிடுகிறது. இப்பேர்ப்பட்ட தவறுதல் முக்கியமாய் ஜமீன் கிராமங்களில் சாதாரணமாயிருக்கிறது. ஆகையினால் ஒவ்வொரு கிராம முன்சீபுகள் தமது ஜாப்தாக்கள் பூர்த்தியாக யிருக்கிறதாவென்று விசாரிக்க சமயாசமயங்களில் ஒவ்வொரு வீடாகசென்று விசாரிக்கவேண்டும். இவ்விதமான விசாரணை ஒவ்வொரு வருஷம் மார்ச்சு மாதத்தில் நன்றாக செய்து வரவேண்டும்.

Circular No. 2.

1. 1905ஹூத்திய ஆக்கிரமிப்பு சட்டத்தின் 7-வது செக்ஷன்படி கொடுக்கப்படவேண்டிய நோட்டீசு தண்டத்தீர்வை விதிப்பதற்கு முன்னமே கொடுக்கப்படவில்லை யென்றும்.

2. அல்லது நோட்டீசு அதிககாலதாமதத்துடன் ஸார்வு செய்யப்பட்டதென்றும் அல்லது ஆட்சேபனைகளைத் தெரிவித்துக்கொள்ள ஏற்படுத்தப்பட்ட தேதி ஷை ஆட்சேபனைகளைச் சொல்லிக்கொள்ள முடியாதபடி வெகு சமீப காலத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்ததென்றும் கலெக்டரவர்களுக்கு தெரியவந்திருக்கிறது.

இவ்விதமான சட்ட விரோதங்களை ஜாக்கிரதையாக தவிர்க்கவேண்டும்.

Circular No. 4.

1890-ஹூத்திய 3-வது ஆக்ட்டு (1884-ஹூத்திய மதராஸ் லோகல் போர்ட்டு ஆக்ட்டை திருத்தம் செய்யப்பட்ட ஆக்ட்டு) 2-வது பிரிவினால் திருத்தலானபடி 1884ஹூத்திய 5-வது மதராஸ் லோகல் போர்டு ஆக்ட்டு, 65-வது பிரிவின்படி 1317-ம் பசலிக்கு லாண்டுசெஸ் ஏற்படுத்துவதற்காக கலெக்டர் துரையவர்கள் எல்லா ஜமீன்தார்களையும் மிட்டாதார்களையும், பாளையக்காரர்களையும், ஜாகிர்தார்களையும் இனாம் தார்களையும் ரயித்வாரி அல்லாமல் வேறு விதமாய் நிலம் அனுபவிக்கிற எல்லாரையும் இதனால் கட்டளையிடுகிறதாவது அவரவர்கள் தங்கள் இலாகாவுக்கு சம்மந்தப்பட்ட தாலூகாவின் தாசில்தார்களுக்கு நாளது 1907-ஹூ டிசம்பர்மீ 31உக்குள்ளாக தங்கள்வசத்தில் தாங்களோ அல்லது குடிகளாலோ கைப்பற்றப்பட்டிருக்கிற எல்லா நிலங்களுக்கும் சரியான ஜாப்தாக்கள் கொடுக்கவேண்டியது. ஒவ்வொரு கேஸிலும் குடிகளால் சர்க்காருக்கு நேரே செலுத்தப்படுகிற ஏதாவது தண்ணீர் தீர்வை நீங்கலாக ஷை நிலங்களின் வருஷாந்தர தீர்வையையும் ஷை ஜாப்தாக்களில் காட்டவேண்டியது.

2 மேற்குறித்த ஜாப்தாக்களை மேற்குறித்த தேதிக்குள் கொடுக்கத் தவறுகிறவர்கள் ஷை ஆக்டின் 67-வது பிரிவின்படி ஜாப்தா கொடுபடுகிற வரையிலோ கலெக்டர் துரையவர்களால் அந்த நிலங்களுக்கு வருஷாந்தர தீர்வைத் தொகை நிர்ணயிக்கப்படுகிற வரையிலோ ஒவ்வொரு நாள் தாமதத்திற்கும் 50 ரூ-க்கு அதிகப்படாத அபராதத்திற்குட்படுகிறார்கள்.

3. இந்த நோட்டீஸ் படிக்கு கொடுக்கப்படும் ஜாப்தாவில் 1316-பசலியில் கைப்பற்றப்பட்டிருந்த நிலங்களின் விவரத்தை காட்ட வேண்டியது.

4. ஷை ஜாப்தாக்களில் புலவாரி விவரம் காட்டவேண்டியதில்லை. கிராமவாரி விவரமட்டும் காட்டினால் போதுமானது.

தஞ்சாவூர் ஆக்டிங் கலெக்டர் துரை அவர்களுடைய 1907ஹூ அக்டோபர்மீ 25உ Dis. ம் ந. 1165 ரிவினியூ புரோஸீடிங்ஸ்கள் :—

(1) கிராம ரிஜிஸ்டர், தாலூகா B. ரிஜிஸ்டர்; ஹுஜூர் இனாம் ரிஜிஸ்டர் வைக்கப்படவேண்டியதைப்பற்றிய கற்பனைகள் அடங்கிய ரிவினியூ போர்டார் அவர்களுடைய 1906ஹூ மேமீ 17உ (லாண்டு ரிவினியூ) ந. 165 புரோஸீடிங்ஸ்;

(2) இனாங்கள் ரிசியூம் செய்து ரத்து செய்ய பிறக்கலான உத்தரவுகளை அனுஷ்டானத்துக்கு கொண்டு வரவேண்டிய நடவடிக்கைகள் அடங்கிய ரிவினியூ போர்டாரவர்களுடைய 1907ஹூ ஜூன்மீ 24உ (லாண்டு ரிவினியூ) ந. 172 புரோஸீடிங்ஸ்;

(3) ரிசியூம் உத்தரவுகளை அனுஷ்டானத்துக்கு கொண்டு வருவதில் தாலூக்காக்களில் உள்ள வழக்கங்களைக் காட்டிய தாசில்தார்களுடைய ரிபோர்ட்டுகள் படிக்கப்பட்டன.

உத்திரவு.

1907ஹூ ஜூன்மீ 24உ லாண்டு ரிவினியூ ந. 172. போர்டு புரோஸீடிங்ஸ் எல்லா தாசில்தார்களுக்கும் அனுப்பப்படும்; அதில் கண்ட கற்பனைகளை இனி அவர்கள் தவறாமல் அனுஷ்டிக்க வேண்டியதென்று கட்டளையிடப்படுகிறார்கள்.

(2) தாலூக்காவிலுள்ள கிராம B ரிஜிஸ்டரில் இனாங்கள் சம்மந்தமான காயமான மாறுதல்களை ஒருபோதும் எழுதுகிறதில்லையென்று கலெக்டர் எண்ணகாரணமிருக்கிறது. ஆனதால் தாலூக்கா உபயோகத்துக்கு ஏற்பட்ட ஷை B ரிஜிஸ்டர் பிரதியானது நாளது தேதிவரையிலுள்ளதை காட்டக் கூடியதாக வைக்கப்படவில்லை.

(3) ஒரு இனாம் ரத்துசெய்து ரிசியூமான உத்தரவு தாலூக்காவுக்கு வந்தவுடனே தாலூக்காவிலுள்ள கிராம B ரிஜிஸ்டரிலும் தாலூக்கா மானியுவல் ந. 7. ரிஜிஸ்ட்டரிலும் ஷை உத்தரவு பதிவாக வேண்டியது. அப்படி ரிசியூமான இனாம் பூரா இனாம் கிராமத்தில் ஒரு பாகமாயிருக்குமானால், இந்த மாறுதல் தாலூக்கா B. ரிஜிஸ்ட்டரிலும் தாக்கலாகவேண்டும். ஷை இரண்டு கேசிலும் வெர்னாகுலர் "குவிட்டுரெண்டு" ரிஜிஸ்ட்டர் திருத்தப்படவேண்டும்; தவிர ரிசியூமான விஷயம் கிராமாதிகாரிகளுக்கு தெரியப்படுத்தவேண்டும்; இனாம்தாருக்கும் தெரியப்படுத்தவேண்டும், கிராமாதிகாரிகள் மாறுதல்களை கிராம ந. 3 கணக்கிலும் காயமான A. B ரிஜிஸ்ட்டர்களிலும் தாக்கல் செய்யவேண்டும். ஜமாபந்தி ஆபீஸர்கள் தாலூக்கா ந. கணக்கை கிராம கணக்குகளுடன் தவறாமல் தணிக்கைசெய்து இந்த கற்பனைகள் சரிவர அனுஷ்டிக்கப் படுகின்றனவாவென்று பார்க்கவேண்டியது. தாலூக்காவிலுள்ள கிராம B ரிஜிப்படரையும் ஜமாபந்தி காலத்தில் கிராமாதிகாரிகள் ஆஜர்செய்ய வேண்டியது.

(4) மேலே கண்ட கற்பனைகளை கண்டிப்பாய் அனுஷ்டித்துவர தாசில்தார்கள் ஜவாப்தாரி யாக்கப்படுகிறார்கள்.

1907ஹூத்திய சர்க்குலர் ந. 10.

1907ஹூ நவம்பர்மீ 2உ R. Dis. ந. 1197 ரிவினியூ.

பாதுகாக்கப்படாத சர்க்கார் நிலங்களில் கட்டிடங்களுக்கு வேண்டிய கல், மண் முதலானவைகள் பூமியிலிருந்து வெட்டி எடுப்பதைப்பற்றி, பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்டுமெண்டார் டிஸ்டிரிக்டு போர்டு, தாலூக்கா போர்டுகள், முனிசிபாலிட்டிகள் ரயில்வே கம்பெனிகள் மற்ற சங்கத்தார்களால் நியமிக்கப்படும் கண்டிராக்டர்கள் அனுஷ்டிக்கவேண்டிய விதிகள்.

ரிவினியூ போர்டார் அவர்களுடைய நிலையான உத்திரவு ந. 25. (B,IV)

(1) ரிவினியூ டிபார்ட்டுமெண்டு விதிகளின்படி ஆறுகளின் உள்வாய்களிலும் படுகைகளிலும் பாதுகாக்கப்படாத சர்க்கார் நிலங்களிலு மிருந்து கட்டிடங்களுக்கு வேண்டிய மண் வகையராக்கள் வெட்டி யெடுக்கும் கண்டிராக்டர்கள் அவைகளுக்கு "சீனியரேஜ்" வரி செலுத்தவேண்டும். இதற்கு விலக்கு :—பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்டுமெண்டாரின் வசத்திலிருக்கும் ஆறுகளின் உள்காயிலிருந்து ஷை டிபார்ட்மெண்டுக்கு சில்லரையில் செய்யும் துண்டு வேலைக்காரர்களால் எடுக்கப்படும் மணலுக்கு 1907ஹூ மார்ச்சுமீ 26உயுள்ள ந. 1401 கவர்ன்மெண்டாரவர்களுடைய உத்தரவுபடி "சீனியரேஜ்" வரிவசூலாகிறதில்லை.

(2) காலதாமதம் காஸ்பாண்டென்ஸ், பிசகான அல்லது அபராத தீர்வை இவைகளை விலக்கும் பொருட்டு, ஷை சாமான்களை வேண்டும் எல்லா கண்டிராக்டர்களும் வெட்டியெடுக்க அனுமதி கொடுக்க தங்களை வேலையில் நியமித்தவர்களுக்கு முதலில் மனுசெய்துக் கொள்ளவேண்டும்.

குறிப்பு:—பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்டுமெண்டு வசத்திலிருக்கும் ஆறு உள்வாய்கள் படுகைகள் விஷயத்தில் ஷை மனுக்கள் கண்டிராக்டர்கள் தங்களை நியமித்தவர்கள் மூலமாய் ஷை டிபார்ட்டுமெண்டாருக்கு அனுப்பப்படவேண்டும்.

(3) பிறகு கண்டிராக்டர்களை நியமித்தவர்கள் (அல்லது, ஆறுகள் படுகைகள் விஷயத்தில் பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்டுமெண்டு சப் டிவிஷனல் ஆபீசர்) பிரதம பெர்மிட்டுகள் (அனுமதிச் சீட்டுகள்) பிறப்பிப்பார்கள். ஷை சீட்டுகளில் அடியில் கண்டவை எழுதப்படவேண்டும்.

(I) வேண்டிய சாமான்களின் விவரம் ;

(II) வெட்டி யெடுக்கப்படவேண்டிய ஸ்தலம் ;

(III) உத்தேசம் எவ்வளவு சாமான் வேண்டியது ;

(IV) எந்த வேலை அல்லது வேலைகளுக்கு வேண்டியது.

அப்படி வெட்டி யெடுக்கப்படுவதால் ஷை ஸ்தலமானது அற்றறுதியாக சேதப்படமாட்டாதென்றும் அல்லது ஆற்றுக்கரைகளுக்கு அபாயம் நேரிடாதென்றும் ஒரு செர்ட்டிபிகேட்டும் ஷை பெர்மிஷன் முடிவில் கண்டெழுதவேண்டியது.

(4) இவ்வகை பிரதம பெர்மிட்டுகளை கண்டிராக்ட்டர்கள் தாசில்தாரிடம் கொடுத்து ஏற்பட்ட ரேட்டுகளின்படி "சீனியரெஜ்"—வரியும் செலுத்தினதின்மேல் இவர்களுக்கு வெட்டி யெடுக்க லைசென்ஸ்கள் கொடுக்கப்படும். ஷை லைசென்சுகளின் டூப்ளிகேட்டு காப்பிகளை கிராமாதிகாரிகளுக்கு அறிவிப்புக்காக தாசில்தார் அனுப்பவேண்டியது.

(5) இந்த லைசென்சுகள் பெறுவதற்கு முந்தி வெட்ட ஆரம்பிக்கக்கூடாது.

(6) கண்டிராக்டர்கள் இந்த விதிகளின்படி நடக்கவாதேனும் தவறினால் அவர்கள் அபராத தீர்வை செலுத்த நேரிடும். தவிர சர்க்கார் நிலத்துக்கு கெடுதி நேரிட்டால் இந்தியன் பினல்கோடு XVII-வது அத்தியாயப்படி கெடுதி குற்றத்துக்காக கிரிமினல் பிராஸிக்யூஷனுக்கும் உள்ளாவார்கள்.

1907-ஹூத்திய சர்க்குலர் நெ. 11.

1907-ஹூ நவம்பர்மீ 12உ R. Dis. நெ. 1236 ரிவினியூ கிராமாதிகாரிகள் தர்க்காஸ்து "A" மெமோக்களை உத்தரவுக்கு அனுப்பும்போதெல்லாம், அடமானத்துக்கு சிபார்சு செய்யப்படும் தரிசு நிலங்கள் கிராமத்தில் அல்லது மேய்ச்சல் நிலமாக தேவையாயிருக்குமாவென்று விவரம் ஷை மெமோக்களில் கண்டெழுத வேண்டியதென்று இந்த ஆபீஸ் "A" 1907ஹூ அக்டோபர்மீ 18உ R. Dis. நெ. 1137 ரிவினியூ சர்க்குலருக்கு தொடர்ச்சியாக ஆக்டிங் கலெக்டர் அவர்கள் இதனால் கட்டளை யிடுகிறார்கள். கிராமத்தில் மேய்ச்சலுக்கு இப்போதுள்ள சவுகரியங்களைப் பற்றிய ஸ்பெஷல் ஷராவுக்கு தொடர்ச்சியாக மேலே சொல்லிய விவரம் கண்டெழுத வேண்டியது. ஆனதால் "A" மெமோக்களின்பேரில் உத்திரவு செய்யும் ஆபீசர் இந்த விஷயமாய் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடும் என்பதையும் அவசியமென்பதையும் கவனிக்கக் கூடியதாயிருக்கும்.

தஞ்சாவூர் டிஸ்டிரிக்டு மாஜிஸ்திரேட்டு அவர்களுடைய புரோசீடிங்ஸ்.

1907-ஹூ நவம்பர்மீ 23உ ஆர் டிஸ் நெ. 66-எம்.

தகவல் டிஸ்டிரிக்டு மாஜிஸ்திரேட்டு அவர்களுடைய 1907ஹூ மேமீ 11உயுள்ள 1907ஹூத்திய ஆர். டிஸ். நெ. 27 மாஜிஸ்திரேட்டு டிபார்ட்டுமெண்டு சர்க்குலர் உத்திரவு.

கிரிமினல் பிராசிக்யூஷன் ஆரம்பம் செய்து நடவடிக்கை நடத்த மேலான அந்தஸ்துள்ள உத்தியோகஸ்தர்கள் தகுதியானவர்களென்று சொல்லப்பட்டிருக்கிற கேசுகளில், 1907ஹூ மேமீ 11உயுள்ள மாஜிஸ்திரேட்டு டிபார்ட்டுமெண்டு நெ. 27-வது சர்க்கியுலரின் நாலாவது பாராவில் எல்லா ரெவினியூ ஆபீசர்களையும் ஷை நடவடிக்கை ஆரம்பத்தில் வரையறுத்து விலக்கியிருப்பதாக எண்ணவேண்டியது. உதாரணம் ஷை சர்க்குலரின் 4-வது பாராவில் கண்ட எந்த விஷயமாகவும் ரிவினியூ இன்ஸ்பெக்ட்டர்கள் பிராசிக்யூஷன் ஆரம்பம் செய்யக்கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

1894-ஹூத்திய மதிராஸ் Proprietary Estates கிராம ஊழியம் II-வது சட்டத்தின் 32-வது பிரிவின்படிக்கும் 1891-ஹூத்திய ஜெனரல் கிளாசஸ் 1-வது சட்டத்தின் 15-வது பிரிவின்படிக்கும் தங்களுக்குக் கொடுபட்டிருக்கும் அதிகாரத்தை அனுசரித்து கவர்ன்மெண்டாருடைய அனுமதியின்பேரில் 1901ஹூ எப்பிரல்மீ 2உ யுள்ள போர்ட் செண்டு ஜார்ஜ் கெஜெட்டு 2-வது பார்ட்டு 586-வது பக்கத்தில் கண்ட விளம்பரத்தால் மாறுதலான 1897-ஹூ நவம்பர்மீ 9உ யுள்ள போர்டு செண்டு ஜார்ஜ் கெஜெட்டு 2-வது பார்ட்டு 1231—1236-பக்கங்களில் பிரசுரமாயிருக்கும் விதிகளுக்கு அடியில்கண்ட மாறுதலை ரிவினியூ போர்டார் செய்திருக்கிறார்கள்.

3 (iv)-வது விதியில் "பேரீஜ்" என்ற வார்த்தைக்குப்பிறகு "கவர்ன்மெண்டுக்கு செலுத்தப்படவேண்டிய நீர்க்கூலி அல்லது குயிட்ரெண்டு" என்ற வார்த்தைகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

தஞ்சாவூர் கலெக்டர் அவர்கள் விடுத்திருக்கும் சர்க்குலர்.

1907ஹூத்திய சர்க்குலர் ந. 9.

1907ஹூ அக்டோபர்மீ 18உயுள்ள ஆர். டிஸ். ந. 1,137.

சர்க்கார் புறம்போக்கு நிலம் பயிரங்கமான ஏலத்தில் விற்பனை செய்யவாவது, அல்லது தீர்வை இனத்துக்கு மாற்றி தர்க்காஸ்து ரூல்படி அடமானம் செய்யவாவது உத்தேசிக்கப்படும்போதெல்லாம், ஷை நிலம் பொது நன்மைக்குத் தேவையில்லையென்று முதலில் கிராமாதிகாரிகளிடமிருந்து ஒரு ஸ்டேட்டுமெண்டு எழுதி வாங்க வேண்டியதென்று ஆக்டிங் கலெக்டர் அவர்கள் இதனால் கட்டளையிடுகிறார்கள். பிறகு ஷை நிலத்தை தணிக்கை ஆபீசர்—அதாவது டிவிஷனல் தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தார், ஒருபொழுதும் ரிவினியூ இன்ஸ்பெக்ட்டர் அந்தஸ்துக்கு கீழ்ப்படாத ஆபீசர்—பேரில்

பார்க்கவேண்டியது; கிராமாதிகாரிகளுடைய ஷை [illegible] மென்டுக்குக் கீழாக ஷை ஆபீசர் தம்முடைய அபிப்பிராயத்தை எழுதவேண்டியது.

2. இந்த விதிகள் இனி கண்டிப்பாய் அனுஷ்டிக்கப்பட்டு வருவதை தாசில்தார்கள் கவனிக்கவேண்டியது.

விளம்பரம்.

1907ஞு நவம்பர் 23உ யுள்ள 1907ஞுத்திய

C. R. ந. 5,677.

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள தாலூக்காக்களின் 1317-ம் பசலி ஜமாபந்தி மாயவரம், திருத்துரைப்பூண்டி தாலூக்காக்கள் தவிர அந்தந்த தாலூக்காக்களுக்கு சம்மந்தப்பட்ட டிவிஷனல் ஆபீசர்களால் நடத்தப்படுமென்றும் ஷை இரண்டு தாலூக்காக்களின் ஜமாபந்தி கலெக்டரவர்களால் நடத்தப்படுமென்றும் இதனால் விளம்பரம் செய்யப்படுகிறது.

2. 1908ஞு மேமீ கடைசிக்குள் ஜமா பந்தி முடியவேண்டும்பொருட்டு எல்லா கிராம கர்ணம்களும் தங்கள் அடங்கல் கணக்குகளை 1907ஞு டிசம்பர்மீ 31உ க்குள்ளும் மற்ற கிராம கணக்குகளை 1908ஞு ஜனவரிமீ 31உ க்குள்ளும் எழுதி முடிக்கவேண்டியதென்று இதனால் கட்டளையிடப்படுகிறார்கள்; ஆகவே 1908ஞு பிப்பரவரிமீ மத்தியில் ஜமாபந்தி ஆரம்பம் செய்யலாகும்.

POLICE SHEET. போலீசு பத்திரிகை.

TANJORE.

தஞ்சாவூர்.

1907ஞு நவம்பர்மீ 13உ யுள்ள புரோசீடிங்ஸ் நெ. 921.

பொது நன்மையான காரியத்துக்கு உதவியாக வேலை செய்ததற்காக திருக்கோடி காவல் கோவிந்த படையாச்சி என்பவனுக்கு, ஒரு தங்க பதக்கம் அல்லது ஒரு தங்கவளை இனும் கொடுக்க சிபார்சு அடங்கிய தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட் போலீஸ் சூப்பரின்டன்டு அவர்களுடைய 1907ஞு நவம்பர்மீ 4உ யுள்ள R. C. நெ. 3150 ஜெனரல் லெட்டர் படிக்கப்பட்டது.

புதுச்சேரி ஜெயிலிலிருந்து தப்பி ஓடிவந்த ஒரு கைதியை ஜாக்கிரதையுடன் பிடித்ததற்காக திருக்கோடி காவல் கோவிந்தபடையாச்சிக்கு ரூபா. 25-க்கு அதிகப்படாத் விலையில் ஒரு தங்கவளை இனும் கொடுக்கப்படும்.

தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்கட்டு மாஜிஸ்திரேட்டு அவர்களுடைய புரோசீடிங்ஸ்

1907ஞு நவம்பர்மீ 14உ டி. நெம்பர். 926.

(1) திருப்பயனம் கிருஷ்ணசாமி அய்யருக்கு ஒரு தங்க பதக்கமும் ஷை கிராமத் தலையாரி மகாதேவ மூப்பனுக்கு ஒரு வெள்ளிகாப்பும் இனும்கொடுக்க சிபார்சு அடங்கிய தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்டு போலீஸ் சூப்பரின்டன்டு அவர்களிட 1907ஞு ஆகஸ்டுமீ 14உ யுள்ள ஆர். ஸ். நெ. 2425. ஜெனரல் லெட்டர்;

(2) கிருஷ்ணசாமி அய்யருக்கு ரூபா. 15-ல் ஒரு தங்க பதக்கமும், மகாதேவ மூப்பனுக்கு ரூபா. 8-ல் ஒரு வெள்ளி காப்பும் இனும் கொடுக்க ஸாங்ஷன் அடங்கிய 1907ஞு ஆகஸ்டுமீ 23உ யுள்ள இந்த ஆபீஸ் R. C. நெ. 1167-எம். புரோசீடிங்ஸ்;

(3) ரூபா. 15-க்கு ஒரு தங்க பதக்கம் தயார் செய்ய முடியாதென்று 1907ஞு செப்டெம்பர்மீ 14உ யுள்ள R. C. நெ. 2735-ஜெனரல் லெட்டர் படிக்கப்பட்டன.

உத்திரவு.

1907ஞு ஆகஸ்டுமீ 23உ இந்த ஆபீஸ் R. C. நெ. 1167-எம் புரோசீடிங்ஸுக்கு மாறுதலாக, 1907ஞு 25-நெ. செஷன் கேஸில் சம்பந்தப்பட்ட ஒரு கொலையாளியை பிடித்ததில் நல்லவேலைசெய்த திருப்பயனம் கிராம மாஜிஸ்திரேட்டு முனிசிபு கிருஷ்ணசாமி அய்யருக்கு ரூபா. 20-க்கு அதிகப்படாத ஒரு தங்க வளையும், ஷை கிராமத் தலையாரி மகாதேவ மூப்பனுக்கு ரூபா. 8-க்கு அதிகப்படாத ஒரு வெள்ளி காப்பும் இனுமாக கொடுக்கப்படும்.

(4) 1907ஞு நவம்பர்மீ 22உ D. Divs. நெ. 948- மாஜிஸ்திரேட்டு புரோசீடிங்ஸ்.

(1) தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட்டு போலீஸ் சூபரின்டன்டு அவர்களுடைய 1907ஞு செப்டம்பர்மீ 5உ R. C. நெ. 2347/1907ஞு லெட்டர்;

பூந்தோட்டம் கரணம்.

இராஜுவே [illegible] அய்யங்கார். 1. [illegible] இரங்கசாமி அய்யங்கார் 2. திருவேணமங்கலம் [illegible] முன்சீபு கிருஷ்ணபிள்ளை.

(இதற்கு ஜவாப்பாக, 1907ஞு செஷன் கேஸ் நெ. 26-ல் மூன்று எதிரிகளை ஜாக்கிரதையுடன் பிடித்ததற்காக மூன்று நபர்களுக்கும் தலா ரூபா 10 இனும்கொடுக்க சிபார்சு அடங்கிய 1907ஞு நவம்பர்மீ 15உ R. C. நெ. 3195/1907 எம் லெட்டர் படிக்கப்பட்டன.

உத்திரவு.

மேலே கண்ட மூன்று நபர்களுக்கும் தலா ரூபா 10 (பத்து) இனும் இதனால் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சிங்கப்பூரிலிருந்து துரத்தப்பட்டு 14—11—1907ல் நாகப்பட்டணம் போலீசார் கண்கோக்கத்திற்கு தெரிப் போன தண்டனையடைந்த இராமசாமி என்பவனின் அங்க அடையாள ஜாப்தா.

பெயர் = இராமசாமி

ஊர் = கோயம்புத்தூர் டவுன்

வயது = சுமார் 30 அல்லது 35

உயரம் = 5 அடி 5 அங்குலம்

அங்க அடையாளம் = தடித்த திரேகம், கருப்பு நிறம், கடி மாதிரியான தழும்புகள், கழுத்தைச் சுற்றி யிருக்கும் வலதுகணுக்கைக்குமேல் ஒரு தழும்பு. கண்டு பிடிக்கப்பட்டால் தஞ்சாவூர் ஜில்லா போலீஸ் சூப்பிரண்டென்டெண்டுக்குத் தெரிவிக்கவும்.

2. தஞ்சாவூர் ஜில்லா ஜெயிலிலிருந்து 9--11--1907ல் விடுதலையாகி பருரியாயிருக்கிற பசுபதி அய்யனுடைய அங்க அடையாளம் அடியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கண்டுபிடித்தால் தஞ்சாவூர் ஜில்லா போலீசு சூப்பிரின்டென்டெண்டு துரையவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டியது.

பெயர் = பசுபதி அய்யன்

ஜாதி = பிராமணன்

வயது = 19

உயரம் = 5 அடி 6-அங்குலம்.

நிறம் = சிகப்பு

இருப்பிடம் = மன்னார்குடி

முக்கிய அங்க அடையாளம் = இருபுஜத்திலும் அம்மை வைத்த தழும்புகள்; முதுகில் ஒரு தழும்பு; குந்தாம் பட்டையில் ஒரு தழும்பு.

குற்றம்—இவன் நாகப்பட்டணம் ஜாயின்ட் மாஜிஸ்திரேட்டரால் 1906ஞு ஜனவரி 15உ [illegible] 18-மாதம் கடுங்காவல் தண்டனையும், விடுதலையானபிறகு 8-வருஷத்துக்கு

கு தன் இருப்பிடத்தை போலீசாருக்கு தெரிவிக்கவேண்டுமென்று தண்டனை விதிக்கப்பட்டவன்.

1907ஞு நவம்பர்மீ 20உ யில் தஞ்சாவூர் மன்னார்குடி டவுனிலிருக்கும் சிங்காரி வீட்டில் களவு போன சொத்துகளின் ஜாப்தா:—D டிவிஷன் மன்னார்குடி டவுன் ஸ்டேஷன் Crime ந. 30/1907 இ. பி. கோ. 380-வது பிரிவு.

நம்பர்	சொத்து விபரம்.	மதிப்பு.
		ரூ. அ. பை.
1.	மேல் பண்டியில் கொஞ்சம் சொட்டை விழுந்த பித்தளைக்குடம் 1-க்கு	4 0 0
2.	10 கல்லிழைத்த ஒத்து ஜோடி 1-க்கு	20 0 0
3.	கல்லிழைத்த குருடு மாட்டில் ஜோடி 1-க்கு	7 0 0
4.	சாதாபஞ்ச கலசவாளியின் மயிர்மாட்டில் ஜோடி 1-க்கு	8 0 0
5.	பொன் திருகுப்பு 1-க்கு	6 0 0
6-	வெள்ளி காலாளி பிலாளி, கெதிஜோடி 1-க்கு	1 0 0
	மொத்தம்.	46 0 0

மேற்சொன்ன சொத்துகள் கண்டுபிடிக்கப்பட்டால் தஞ்சாவூர் போலீசு சூப்பரின்டென்டெண்டு துரையவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டியது.

1907ஞு நவம்பர்மீ 23உ யில், தஞ்சாவூரிலிருக்கும் தென்னிந்தியா ரயில்வே கம்பனியாரின்பப்ளிக் வொர்க்ஸ் (Public Works) இன்ஸ்பெக்டரான சான்டலே துரையவர்களின் பங்களாவிலிருந்து திருட்டுப்போன சொத்துகள் (B டிவிஷன், தஞ்சாவூர் டவுன் ஸ்டேஷன் Crime ந. 83,1907ஞு இ. பி. கோ. 379-வது பிரிவுபடி.)

நம்பர்		மதிப்பு.
		ரூ. அ. பை.
1.	நம்பர் 1596-185 யுள்ள நிக்கல் வெள்ளி கடியாரம் 1-க்கு	25 0 0
	(ஷை கடியாரம் P. Orr and sonsல் தாயாரானது.)	
2.	கை கடியாரத்தின் சங்கிலி 1-க்கு (Albert மாதிரி.)	10 0 0
3.	முனையுடைந்த பேனாகத்தி 1-க்கு	0 2 0
	ஆக மொத்தம்	35 2 0

கண்டுபிடிக்கப்பட்டால் தஞ்சாவூர் ஜில்லா போலீசு சூப்பரின்டென்டெண்டு துரை அவர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டியது.

அரந்தாங்கி ஸ்டேஷன் Crime ந. 44. 1907ஞு இ. பி. கோ. 457, 380 and 323-வது பிரிவுகளின்படிக்கான சேலிமாங்குடி சுப்பையா வாத்தியார் வீட்டில் 29—11—1907 இராத்திரி களவுபோனதுடைய ஜாப்தா.

நம்பர்	சொத்து விபரம்.	மதிப்பு.
		ரூ. அ. பை.
1.	பவுனில்செய்த தாலிக்கொடி 1, திருமங்கிலியம் 1, குண்டு 2, 6-பவுனில் செய்தது	90 0 0
2.	பவுன் கொடி 1-க்கு	60 0 0
3	பவுன் குண்டு 6, தாயித்து 2, திருமங்கிலியம் 2,	60 0 0
4.	[illegible] வைத்த மூக்குத்தட்டு	2 4 0
5.	பதக்கமில்லாத கடியார அட்டிகை	75 0 0
6.	சிகப்பு கல்லிழைத்த ஓலை ஜோடி 1-க்கு	50 0 0
7.	ஒட்டியாணம் [illegible] 1-க்கு	10 0 0
8.	பவுன் திருமங்கிலியம் 1, குண்டு 2-க்கு	7 0 0
9.	வெள்ளி கம்பளி [illegible] 1-க்கு	[illegible]
10.	பொரலீஸ் கம்பி சலங்கைசெய்த 9×6 வேஷ்டிக்கு ஜோடி 1-க்கு	3 [illegible] [illegible]
	4-12-07. ஆக மொத்தம்	358 0 0

1907ஞு டிசம்பர்மீ 2உ இராத்திரி கும்பகோணம் கவர்ன்மென்ட் காலேஜ் பிரின்ஸிபால் T. O. ஹாட்ஜர் துரையவர்களின் பங்களாவிலிருந்து திருட்டுப்போன சொத்துகளின் ஜாப்தா, சபீடிவிஷன், மாமாங்கோணம் ஸ்டேஷன் Crime 45/1907 இ. பி. கோ. 380-வது பிரிவுபடி.

நம்பர்	சொத்துவிபரம்.	மதிப்பு.
		ரூ. அ. பை.
1.	நம்பர் T. A/74, 18477 உள்ள 100 ரூபாய் சலாவணி நோட்டு 1-க்கு	100 0 0
2.	பவுன் 5-க்கு	75 0 0
3.	ரூபாய்கள்	12 0 0
4.	பைசா	0 0 1
	ஆக மொத்தம்	187 0 1

கண்டு பிடிக்கப்பட்டால் தஞ்சாவூர் ஜில்லா போலீசு சூப்பிரன்டென்டெண்டு துரையவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டியது.

7—12—1907.

1907ஞு டிசம்பர் 2உ இராத்திரி நாகப்பட்டணம் தாலூகா புத்தூர் கிராமம் வீராசாமி அய்யர் வீட்டில் களவு போன தடயங்களின் ஜாப்தா:—(Jii டிவிஷன். கீக்கல் ஸ்டேஷன் Crime ந. 58 1907, இ. பி. கோ. 457, 380-வது பிரிவுப்படி)

நம்பர்	சொத்து விபரம்.	மதிப்பு
		ரூ. அ. பை.
1.	பவுன் கொடியில் கோர்த்த திருமங்கலியம் 2, குண்டு 6, தாயத்து 1 க்கு	100 0 0
2.	கல்லிழைத்த சிகப்பு கடுக்கன் 2-க்கு	16 0 0
3.	அரைப்பவுன் 1-க்கு	7 8 0
4.	சோட்டு பப்பளி சிகப்பு சேலை 2-க்கு	53 0 0
5.	சன்ன வாழப்பு சிகப்புகரை இறங்கின் சேலை 1-க்கு	17 0 0
6.	புதிய புதுக்கோட்டை சாயவேஷ்டி 3-க்கு	3 0 0
7.	பழைய சிகப்புத் துண்டுகள் 4-க்கு	1 0 0
8.	தகரப்பெட்டி 1-க்கு	2 0 0
9.	கைமரப்பெட்டி 1-க்கு	1 8 0
10.	வெல்வெட் ரவிக்கை 3-க்கு	10 0 0
11.	சாதா குறநாட்ரவிக்கை 3-க்கு	3 0 0
12.	பழைய வெள்ளை புடவை 2-க்கு	2 0 0
13	சிகப்பு கல்லிழைத்த கர்ணப்பூ 1-க்கு	3 0 0
14.	கட்டை வைத்து செய்த வெள்ளி கால்காப்பு ஜோடி 1-க்கு	15 0 0
15.	½-பவுன் இடையுள்ள பொன் ஓலைக்கம்பி 2-க்கு	7 0 0
16.	சோட்டுப்பப்பளி சிகப்பு சேலை 1-க்கு	23 0 0
17.	தய்யாவைத்து தைத்த வெள்ளைப்புடவை 1-க்கு	5 0 0
18.	ருத்திரகண்டி சிகப்பு சேலை 1-க்கு	10 0 0
	9—12—1907. மொத்தம்	279 0 0

தஞ்சாவூர் ஜில்லாவில் D. டிவிஷன் [illegible] நெ. 397 கண்ணுசாமி என்பவர் சென்ற 20-6-1907 [illegible] வெளியில் இருந்து திருடர்களை [illegible] செய்ததில் [illegible]

லைசெய்ததற்காகவும் Cii. டிவிஷன் கா. நெ. 329-491 சொக்கலிங்கம், வெங்கட்டநூவ் இவர்கள் ஒரு திருட்டுக்கேசில் நல்லவேலை செய்ததற்காகவும், Gi. டிவிஷன் 2 கி. எ. கா. நெ. 470 மகாதேவரூவ். இ. பி. கோ. 457-380-வது பிரிவுகளின்படியுள்ள ஒரு கேசில் நல்லவேலைசெய்ததற்காகவும் இவர்களுக்கு நல்ல ரிமார்க்கு கொடுக்கப்பட்டு ரிஜிஸ்தரில் பதிவுசெய்துக்கொள்ளப்பட்டது.

தஞ்சாவூர் ஜில்லா தென்ரேஞ்சு போலீசு டிப்டி இன்ஸ்பெக்ட்டர் ஜெனரல் துரையவர்களால் அடியிற்கண்ட வெகுமதி கொடுக்கப்பட்டிருக்கின்றன.

F. டிவிஷன் கா-நெ. 300-356 சந்தரசேகரன், ஹரிரூவ் இவர்கள் சீர்காழி ஸ்டேஷனில் நடந்த ஒரு திருட்டுக்கேசில் நல்லவேலை செய்ததற்காக முன் சொல்லப்பட்ட நபருக்கு ரூபா 5-ம், மற்றொருவருக்கு ரூபா 3-ம், Jii டிவிஷன் 1 கி. எ-கா. நெ. 151 அருணாசலம்பிள்ளை என்பவரும் ஷை டிவிஷன் கா-நெ. 598 சின்னசாமிரூஜா என்பவர் கி-பு-கோ. 109-வது பிரிவுப்படிக்கான ஒரு கேசில் நல்லவேலை செய்ததற்காக முதல் சொல்லப்பட்டவருக்கு ரூபா 3-ம் மற்றொருவருக்கு ரூபா 2-ம், Gi. டிவிஷன் கா. நெ. 824 அட்சயலிங்கம் என்பவர் மாயவரம் தாலூகா ஸ்டேஷன் சரகத்தைச்சேர்ந்த பரூரியாயிருந்த ஒரு கேடியை கண்டுபிடித்ததற்காக ரூபா 4-ம் வெகுமானம் பெற்றூர்கள்.

தஞ்சாவூர் ஜில்லா பர்மனெண்டு குறகேங்கைச்சேர்ந்து பரூரியாயிருக்கிற நபரின் அங்க அடையாளங்கள்.

காங்கின் ஜில்லா நம்பர் 24; பரூரியாயிருக்கிற நபரின் நம்பர் 2; பெயர். அரசன்; தகப்பன் பெயர் வெங்கடாசலம்; வயது 36/1907; உயரம் 5 அடி 2 அங்குலம்; கருப்பு நிறம்; வலது புருவத்திற்குமேல் ஒரு துவரம் பருப்பளவு மச்சம்; பரட்டைமயிர்; முதுகின் வலது பக்கத்தில் காயதழும்பு (1); வலது சூத்தாம்பட்டையில் காலணு அளவு தழும்பு (2); உதடு வெந்துபோயிருக்கிறது. நன்னிலம் தாலூகா சென்னு ஊரில் பெரியதகப்பன் கேடி வீரப்பன் பெண்ஜாதி அலமேலு; மகன் குப்பமுத்து; மகள் துளசி.

ஷரா:—23-8-1906-ல் நாகப்பட்டணம் ஜாயிண்டு மாஜிஸ்திரேட் துரையவர்களால் கி-பு-கோ. 109-வது பிரிவுப்படி நல்ல நடத்தையாயிருக்க ஜாமீன் கேட்டு கொடுக்காததால் ஒருவருஷம் கடினகாவல் தண்டனை பெற்றவன் 23-7-1907-ல். தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்டு ஜயிலிலிருந்து விடுதலையானவன். இன்னும் தன் சொந்த ஊர் வந்து சேரவில்லை. கண்டுபிடிக்கப்பட்டால் தஞ்சாவூர் ஜில்லா போலீசு சூப்பரின்டென்டெண்டு துரையவர்களுக்கு தெரியப்படுத்தவேண்டியது.

பாசி, பரிசல் குத்தகைகள்.

பாசி, பரிசல் குத்தகை தொகைகளை 9, 10, 12, 13, 14, 15, 17நெ. கிராமகணக்குகளிலிருந்தும் 12,15, 17, 37நெ. தாலூகா கணக்குகளிலிருந்தும் எடுத்துவிடவேண்டும் என்று போர்டாரவர்கள் உத்தரவு செய்திருக்கிறூர்கள். அவைகள் இனிமேல் இதர லோக்கல்பண்டு வரவுகளைப்போல லோக்கல்பண்டு டி, சி. பி. கணக்கில் சேர்க்கப்படும். தாலூக்கா போர்டு பிரசிடென்டுகளாலும், லோக்கல்பண்டு ஆடிட் டிபார்ட்மென்டாராலும் மேல் பார்வையிடப்படவேண்டும். வருஷா வருஷம் குத்தகையில் விடப்படாமல் நிலையான குத்தகைக்கு அந்தந்த பட்டாதார்களுடைய நிலத்தீர்வை பட்டாவில் ஷை குத்தகை தொகையை காட்டப்பட்டு விடப்படும். பாசி குத்தகைகளும் ஷை ஜில்லாவிலிருந்து வருவதாக தெரியவருகிறது. அப்பேர்ப்பட்ட குத்தகை தொகைகளை நிலத்தீர்வை பட்டாக்களிலிருந்து நீக்கி விடவேண்டும். தாலூக்கா போர்டு பிரசிடென்டுகள் அப்பேர்ப்பட்ட சாஸ்வத குத்தகைதாரர்களுக்கு இனிமேல் தனிப்பட்டாக்கள் கொடுக்கவேண்டும். இம்மாதிரியான தனிப்பட்டாக்கள் கொடுப்பதற்காக தாசில்தார்கள் தாலூக்கா பிரசிடென்டுகளுக்கு பாசிக்குத்தகை எந்தெந்த குளங்களுக்காக நிலையாக ஏற்பட்டிருக்கிறதோ அந்தக்குளங்களின் ஜாப்தாவுடன் குத்தகை தொகைகளும் தெரியப்படுத்தவேண்டியது.

(இந்தக்கடிதம் எல்லா ஜில்லாகலெக்ட்டர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.)

இந்தியா கவர்ன்மெண்டு அண்டர் செக்ரிட்டெரி ஜெ. காம்பல் துரையிடமிருந்து மதராஸ் கவர்ன்மெண்டாருக்கு வந்த கடிதம் :—1907ஹு செப்டம்பர்மீ 25உ உள்ள 8101, 8115, 194-நெ. கடிதம்.

உயர்ந்த விலையுள்ள குறைந்த நம்பர் ஸ்டாம்புகள் போதுமாயிருக்க தாழ்ந்த விலையுள்ள அநேக ஸ்டாம்புகளை கவர்ன்மெண்டு ஆபீசுகள் சம்மந்தமான தபால் சாமான்களின் பேரில் ஒட்டிவரும் அநேக ஆபீசிலுள்ள வழக்கத்தால் தபால் ஸ்டாம்புகள் வீணை செலவழிந்து வருவது இந்தியா கவர்ன்மெண்டாருக்குத் தெரியவந்திருக்கிறது.

2. ஸ்டாம்புகள் தயார் செய்வதில் ஷை வழக்கத்தால் அனுவசியமான அதிக செலவு நேரிடுவதுடன் ஷை வழக்கம் தபாலாபீசருடைய ஸ்தானத்திலிருந்து பார்க்குமளவில் அநேக ஆக்ஷேபனைகளுக்கு இடமாயிருக்கிறது. தாழ்ந்த விலையில் அநேக ஸ்டாம்புகள் ஒட்டினுல் அவைகளில் சிலது தபால் முத்திரை படாமல் தப்பிப்போகக்கூடும். இதுவுமன்னியில் ஒவ்வொரு ஸ்டாம்பின்பேரில் தபால் முத்திரை குத்தவேண்டியதால் தபால்காரருக்கு தொந்திரவும் அனுவசியமான வேலையும் ஏற்படுகிறது. தபாலாபீசில் மிக்க அவசியமாயிருக்கும் சுரு சுருப்பான வேலையில் ஷை தபால் உத்திபோகஸ்தர்கள் ஸ்டாம்பு போதுமாவென்று பார்க்கவேண்டியதில் கஷ்டமும் நேரிடும். இவ்விதமாக தாழ்ந்த விலை ஸ்டாம்புகள் அதிக இடம் மூடப்படுவதால் அவைகளை எடுத்துவிட்டு பார்சலை அல்லது கடிதத்தைக் கிழித்து அதிலுள்ளதை எடுத்துக்கொண்டு கவரின்பேரில் காணப்படும் கிழிந்த இடத்தை மறுபடியும் அந்த ஸ்டாம்புகளால் ஒட்டிவிடவுங்கூடும்.

1907ஹு அக்டோபர்மீ 5உயுள்ள 513நெ.

Financial உத்தரவு.

மேல்கண்ட இந்தியா கவர்ன்மெண்டாருடைய போதனைகள் எல்லா டிபார்ட்டுமெண்டாருடைய பிரதான ஆபீசர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறது.

2. கவர்ன்மெண்டு சர்வீஸ் தபால் சாமான்களின்பேரில் ஒட்டவேண்டிய ஸ்டாம்புகளை கூடியமட்டும்குறைந்த நம்பர் ஸ்டாம்புகளை ஒட்டவேண்டிய அவசியத்தை எல்லா ஆபீசர்கள் மீதும் ஆபீசுகள் மீதும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் வற்புறுத்துகிறூர்கள்.

3. இந்த போதனைகளை மீறி நடந்திருக்கும் ஒவ்வொரு சமயத்திலும் சாமான்களைப் பெற்ற ஆபீசர்கள் எந்த ஆபீசிலிருந்து அந்த சாமான் வந்ததோ அந்த ஆபீசு தலைமை உத்தியோகஸ்தருக்குத் தெரியப்படுத்தவேண்டியது.

1907-ஹு ஜூலைமீ 11உயுள்ள 238-நெ, போர்டாருடைய உத்தரவை அனுசரித்து முழுதிலும் ரெவினியூ டிபார்ட்டுமெண்டாருடைய மேற்பார்வைக்குட்படுத்தப்படும் வாய்க்கால்களின் கரைகளின்பேரில் இதனடியில் கண்டிருக்கும்

எட்டு அணு முத்திரைக் கடுதாசியில் எழுதவேண்டிய அக்கிரிமெண்டு நமூனுவின் நிபந்தனைகளுக் குட்பட்டு எருத்தழைகளுக்காக பயிர் செய்யப்படும் மரங்களையும் செடிகளையும் நடுவதற்காக கலெக்டரவர்கள் சூபெரின்டென்டிங்கு இஞ்சினீர் அவர்களுடன் ஆலோசித்து அனுமதி கொடுக்கத் தீர்மானித்திருக்கிறூர்.

எருத்தழைகளுக்காக பயிர் செய்யப்படும் மரங்களை நடுவதற்குப் பிரியமுள்ள எல்லாருக்கும் இந்த உத்தரவை டிவிஷனல் ஆபீசர்கள் தெரியப்படுத்துவார்களாக. நீரோட்டத் தடுக்கும்படி ஒரு மரமும் நடத்திருக்கும்படி ஜாக்கிரதை செய்யவேண்டும்.

190 ஹு மீ உ இதனடியில் குத்தகைதார் என்ற பெயரால் குறிப்பிடப்படும் (குத்தகைதார் என்ற பதம் அவருடைய வார்சுகளையும் ஏஜண்டுகளையும் குறிப்பிடும்) ஆலோசனை சபையிலுள்ள மாக்ஷிமை தங்கிய இந்தியா சகிரிடரி ஆப் ஸ்டேட் அவர்களுக்கு எழுதிக்கொடுத்த அக்ரிமெண்டு.

1. இந்தத் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்குள்ளாக அந்தக்காலத்திலிருக்கும் டிவிஷனல் ஆபீசரால் அப்போதைக்கப்போது அங்கீகரிக்கப்படும் இடங்களில் மைல் பர்லாங்கிலிருந்து மைல் பர்லாங்கு மத்தியிலுள்ள வாய்க்காலின் கரையின்மீது (அல்லது காட்டப்படும் மற்ற எல்லைகளுக்கு மத்தியில்) மனுதார் இதனடியில் காட்டப்படும் பிரகாரம் மார்ஜனில் குறிப்பிட்டிருக்கும் எருத்தழைகளுக்காக விருத்திசெய்யப்படும் மரங்களை நடுவாராகவும்.

2. மரங்கள் குறைந்த பக்ஷம் ஒவ்வொன்றுக்கு மத்தியில் 7-அடி தூரத்தில் இன்ஸ்பெக்டிங் ஆபீசர்கள் செல்வதற்கும் வழக்கமான வண்டிமாடுகள் நடப்பதற்கும் இடஞ்சலில்லாமல் நடவேண்டும், ஷை வாய்க்கால் சம்பந்தமான செங்கல் அல்லது கருங்கல் கட்டிடத்திற்கு 100-அடி சமீபத்தில் ஒரு மரமும் நடப்படாது.

3. மனுதார் அந்த மரங்களைப் போஷித்தும் இந்தத்தேதியிலிருந்து இரண்டு வருஷத்திற்குள் பட்டுப்போகும் மரங்களுக்குப் பதிலாக மற்றமரங்களைப் பயிர்செய்தும் வருவாராக. அந்த இரண்டு வருஷத்திற்குப் பின்னிட்டு புதுமரம் ஒன்றும் பயிர் செய்யவும் படாது ஷை கரையில் குறிப்பிட்ட பூரா மரங்களின் எண்ணிக்கை குறைவு படாதபடி பாதுகாத்தும் வரவேண்டும்.

4. இவ்விதமாக பயிர் செய்யப்பட்ட எல்லா மரங்களும் சகிரிடரி ஆப் ஸ்டேட்டுடைய சொத்தாக பாவிக்கப்படும். எந்த மரமாவது காய்க்காமலிருந்தாலும் பட்டுப்போனாலும் மனுதார் டிவிஷனல் ஆபீசருக்குத் தெரியப்படுத்தி அவருடைய உத்தரவின்பேரில் அவைகளை அங்கிருந்து எடுத்துவிடும்படியாக ரிபோர்ட்டு செய்வாராக.

5. இதனடியில் தீர்மானிக்கப்படும் விதமாக மனுதாருக்கு எந்தமரத்தின் தழைகளையும்கழித்து எடுத்துக்கொள்ள பாத்தியதையுண்டு. ஆனுல் மனுதார் தன்னுடையகுத்தகையை டிவிஷனல் ஆபீசருடைய எழுத்து மூலியமான அனுமதியன்னியில் ஒருவருக்கும் மாற்றப்படாது.

6. மரங்களை நடுவதினுலாவது அல்லது அவைகளைப் போஷிப்பதினுலாவது அல்லது அவைகளின் மாறுதல்களை சேர்ப்பதினுலாவது மேற்படி வாய்க்கால்களின் கரைகளுக்கு நஷ்டமுண்டானுல் மனுதார் அதற்குப் பாத்தியப்படுவார். இந்த அக்கிரிமென்டு ஷரத்துகளின் கீழுள்ள சுதந்தரத்தை அனுபவிப்பதில் மேற்படி கரைகளுக்கு நேரிடும் எல்லாவித வேலைகளுக்கும் ரிபேர்களுக்குமுள்ள செலவை மனுதார் டிவிஷனல் ஆபீசருடைய உத்தரவின்பேரில் ஷை யாருக்குச் செலுத்தவேண்டும்.

7. அப்போதைக்கிருக்கும் கலெக்டருடைய அபிப்பிராயத்தில் மேற்படி மரங்கள் எல்லாவற்றையும் அல்லது அவைகளில் சிலதை இதற்குப் பின்னிட்டு எப்போதாவது வெட்டி விடவேண்டுமென்று தோன்றினுல் இந்த அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்தும்படியான நோட்டீசை மனுதாருக்கு சார்வுசெய்த ஒருவாரத்திற் கப்புறம் டிவிஷனல் ஆபீசர் உத்தரவு பிரகாரம் மேற்படி மரங்களை வெட்டி அப்புறப்படுத்த வேண்டும். இதனுல் குத்தகைதாருக்கு ஏற்படும் நஷ்டத்திற்கு சர்க்கார் பாத்தியப்படமாட்டார்கள்.

8. இந்த அக்கிரிமென்டின் ஷரத்துகளுக்குமீறி குத்தகைதார் நடந்தால் டிவிஷனல் ஆபீசர் எழுத்து மூலியமான நோட்டீசு குத்தகை தாரின்பேரில் அல்லது அவர் கடைசியாகக் குடியிருந்த வீட்டில் சார்வுசெய்து அக்கிரிமென்டை ரத்துசெய்து விடலாம். மேல்படி நோட்டீசு சார்வான ஒருவாரத்துக்குப் பின்னிட்டு இதற்கு முன்னமேயுண்டான சுதந்தரங்களைத் தவிர மற்ற எல்லாப் பாத்தியதைகளும் முடிவாகிவிடும்.

9. இந்த அக்கிரிமென்டின் ஷரத்துகளின் அர்த்த விஷயத்திலாவது அல்லது குத்தகைதார் இதில்கண்ட நிபந்தனையை மீறிநடந்த விஷயத்திலாவது அல்லது இது சம்மந்தமான வேறெந்த விஷயத்திலாவது அபிப்பிராய வித்தியாசங்கள் அல்லது தகரார் ஏற்பட்டால் அப்பேர்ப்பட்ட வித்தியாசங்களும் தகராரும் கலெக்டருக்குத் தெரியப்படுத்த வேண்டும். அவருடைய உத்தரவு முடிவானதாகும், இரண்டு கட்சிக்காரரையும் அது கட்டுப்படுத்தும்.

10. இதில்கண்ட எந்த விஷயமும் மேற்படி வாய்க்கால் கரைகளின் நிலத்தில் அல்லது அதன் எந்தப் பாகத்திலாவது ஓர் வித பாத்தியதையை உண்டாக்கியதாக அல்லது உண்டாக்கக்கூடியதாக எண்ணப்படாது.

இதற்கு சாட்சியாகச்சகிரிடெரி ஆப் ஸ்டேட்டுக்குப்பதிலாக டிவிஷன் டிவிஷனல் ஆபீசரும் குத்தகைதாரரும் மேலே கண்ட தேதியில் தமது கையொப்பமிட்டிருக்கிறூர்கள்.

மேல்கண்ட	கையொப்பம்	முன்னிலையில்
மேற்படி	மேற்படி	மேற்படி

கவர்ன்மெண்டார் தமது 14-9-07உயுள்ள 2,300 Rev, நெ. உத்தரவால் பட்டா நமூனுக்களையும், கிஸ்து புஸ்தகங்களையும், கெட்டுப்போன முத்திரைக் கடுதாசிகளின் கிரயத்தை வாபீசு வாங்கவாவது அல்லது அவைகளைப் புதிப்பிக்கவாவது செய்து கொள்ளும் மனுவின் நமூனுக்களையும் விற்பனை செய்வதை நிறுத்தி ஷை நமூனுக்களை கிரயமன்னியில் எல்லாருக்கும் சப்ளை செய்யவேண்டுமென்று உத்தரவு செய்திருக்கிறூர்கள்.

CERTIFICATES GIVEN TO SAWMYNADHA IYER.

(Certificate given by Honorable V. Bashyam Iyenger Avergal High Court Vakeel Madras.

Kumbakonam Mr. Anumanur—Ramalinga Chettiar's Agent Saminadaier consulted me
professionally in regard to two or three cases. I was very much struck by his lucid and intelligent
statement of the facts of the Cases which enabled me without trouble and waste of time to give my
professional advice.

18th *Lodge*, MYLAPORE.
3—12—89.

(Signed) **V. BASHYAM IYENGAR.**

சர்டிபிகேட் சாமிநாதய்யர்.

(ஹானரபில் ஹைக்கோர்ட்டு வக்கீல் V. பாஷியம் அய்யங்காரவர்களால் கொடுத்த சர்டிபிகேட்)

கும்பகோணம் ம-ா-ா-ஸ்ரீ அனுமானூர்-இராமலிங்கசெட்டியார் அவர்களுடைய ஏஜெண்டு சாமிநாதய்யர் இர
ண்டு மூன்று கேசுகளைக் குறித்து வியவஹார விஷயமாய் என்னிடம் ஆலோசித்தார். அவர் அந்த கேசுகளின் சங்கதி
களைத் தெளிவாயும் புத்திசாலித்தனமாயும் எனக்கு எடுத்துக்காட்டினதானது எனக்கு யாதொரு சிரமமன்னியிலும்
காலதாமதமன்னியிலும் நான் என் வியவஹார அபிப்பிராயத்தை உடனே தெரிவிக்கும்படி செய்ததைப்பற்றி நான் மிக
வும் ஆச்சரியமடைந்தேன்.

மைலாப்பூர் 18-நெ, பங்களா
3—12—89.

(ஒப்பம்) **V. பாஷியம் ஐயங்கார்.**

As an agent of Mr. A. Ramalinga Chettyar the bearer Saminatha Iyer has consulted me
in several cases and I have had other occasions also of judging of his qualifications. He is well
conversant with the procedure and rules of evidence in Civil and Magesterial Courts. He is
intelligent and well uderstanding the cases entrusted to him, states them clearly. His character
is good.

Combaconam
3rd February 1890.

(Signed) **V. RAMACHANDRA ROW.**
High Court Vakil.

இதை வைத்துக்கொண்டிருக்கிற சாமிநாதய்யர் ம-ா-ா-ஸ்ரீ A. இராமலிங்க செட்டியாருடைய ஏஜெண்டாக
அநேகம் கேசுகளில் என்னிடம் ஆலோசித்திருக்கிறார். அவருடைய திறமையை நிதானிப்பதற்கு எனக்கு அநேகம்
சமயங்களும் நேர்ந்திருக்கிறது. சிவில் மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டுகளில் நடக்கிற நடவடிக்கைகளிலும் சாக்ஷி சட்டங்
களிலும் அவர் நன்றாகத் தெரிந்தவர். அவர் புத்திசாலி, அவரிடம் ஒப்புவிக்கப்பட்ட கேசுகளை செவ்வையாக தெரிந்து
கொண்டு தெளிவாய் அவைகளை எடுத்துச் சொல்லுகிறார். அவருடைய நடத்தை நல்லது.

கும்பகோணம்
1890ஸ்ரீ பிப்ரவரிமீ 3உ

(ஒப்பம்) **V. இராமச்சந்திரராவ்**
ஹைகோர்ட்டு வக்கீல்.

CERTIFICATE.

(Certificate given by Raja T. Rama Row Avergal High Court Vakeel.)

This is to certify that I have known Saminadaier for the last nine years and during this
period he had entursted me with the conduct of several appeals in the High Court and also consulted
me professionally in respect of several matters. I found him invariably well up with all the intricate
and minute points of his cases and he enabled me by his very lucid and intelligent statement of the
relevant facts and ready reference to the documentary and oral evidence in each case, to master the
same without any trouble. In my opinion he is well acquainted with all the ordinary procedure in
the Civil and Criminal Courts and he can be very safely trusted by any professional gentleman in
the conduct of any suit.

I have no doubt whatever from my long experience of Saminadaier that, Mr. Anumanur—
Ramalinga Chettyar Avergal was extremely fortunate in having secured the services of such an able
and intelligent agent for the management of his business in Civil and Criminal Courts.

8th April 1895
Madras.

(Signed) **T. RAMA ROW.**
High Court Vakil.

சர்டிபிகேட்.

(ஹைக்கோர்ட்டு வக்கீல் ராஜா. டி. ராமராயரவர்களால் கொடுத்த சர்டிபிகேட்.)

சாமிநாதய்யரை சென்ற ஒன்பது வருஷங்களாக எனக்குத்தெரியும். இந்த காலத்தில் ஹைக்கோர்ட்டில்
அநேக அப்பீல்கள் நடத்தும்படி அவர் என்னிடம் கொடுத்திருப்பதுமன்றி அநேக சங்கதிகளைப்பற்றி வக்கீல் முறைமை
யில் என்னிடம் அவர் ஆலோசனை பண்ணியுமிருக்கிறார். அவருடையகேசுகளில் சிக்கலானவும், நுட்பமானவும், உள்ள
பாயிண்டுகளைத்தவறாமல் தெரிந்துகொண்டிருந்தாரென்று நான் அறிந்துகொண்டேன். அவர் ஒவ்வொரு கேசிலும்
ஒத்துமையான சங்கதிகளை மிகவும் தெளிவாயும் புத்திசாலித்தனமாயும் எடுத்துச் சொன்னதைக்கொண்டும், தஸ்தா
வேஜி ருசு, வாய்மொழிருசு இவைகளைக் குறிப்பாய் எடுத்துச்சொன்னதைக் கொண்டும் கேசுகளை யாதொரு சிரமமுமில்
லாமல் நான் பூருவாய்த் தெரிந்துகொண்டேன். சிவில் கிரிமினல் கோர்ட்டுகளில் சாதாரணமான எல்லா நடவடிக்
கையும் அவருக்கு நன்றாகத் தெரியுமென்பதும் வியாச்சிய நடவடிக்கையில் எந்தப் பிரபுவும் அவரை அதிகமாக நம்பலா
மென்பதும் என்னுடைய அபிப்பிராயம்.

சிவில் கிரிமினல் கோர்ட்டுகளில் தன் காரியங்களை நடத்துவதற்காக இப்பேர்க்கொற்ற சாமர்த்தியமுள்ள புத்
திசாலியான ஏஜெண்டு ம-ா-ா-ஸ்ரீ. அனுமானூர்-இராமலிங்கசெட்டியார் அவர்கள் சம்பாதித்த விஷயத்தில் அவர் மகா
அதிர்ஷ்டசாலியென்பதற்குக் கொஞ்சங்கூட சந்தேகமில்லையென்று சாமிநாதய்யரிடம் எனக்குள்ள நீண்ட அநுபோ
கத்தினால் எனக்குத் தெரிகிறது.

1895ஸ்ரீ எப்பிரல்மீ 9உ
சென்னபட்டணம்.

(ஒப்பம்) **T. ராமாராவ்.**
ஹைகோர்ட்டு வக்கீல்.

J. H. BAKEWELL, Esq., LL.B., BAR-AT-LAW.

Chief Judge, Court of Small Causes, Madras.

மதராஸ் ஸ்மால் காஸ் கோர்ட்

சீப் ஜட்ஜ் மிஸ்டர் ஜே யச். டேக்வல், LL.B., BAR-AT-LAW.

Block made by M. Dhanum.

இந்திய சட்ட கெஜெட்.

சென்னை யன். இராதாகிருஷ்ண கம்பெனியாரால்
வெளியிடப்படும் உயர்தர மாதாந்த சஞ்சிகை.

3-வது புஸ்தகம், 2-3 வது பாகங்கள்

1908ஹ பிப்பரவரி, மார்ச்சு மீ

அடக்கம்.

		பக்கம்.
1.	உருவப்படம் :—சென்னை ஸ்மால்காஸ் கோர்ட் சீப் ஜட்ஜ் மிஸ்டர் ஜே. யச். பேக்வல்.	
2.	உயில்கள்	27
3.	இந்தியாவில் துஷ்கிருத்திய ஜாதியர்கள்	31
4.	ஒரு தாசியால் எடுத்துக் கொள்ளப்படும் மைனர்ப்பெண் சுவீகாரமானது செலாவணியாகுமா ?	34
5.	சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்	34
6.	சென்னை ஹைகோர்ட் 1908ஹ முதலாவது கிரிமினல் வியாஜ்ஜியங்கள்	37
7.	முக்கியமான தீர்ப்புகள்	43
8.	பொது வர்த்தமானம்	45
9.	ஹிக்துலா (ஸ்வீகாரம்)	46
10.	கவர்மெண்ட் ஆர்டர்கள் முதலியன	50
11.	1908ஹ 1-வது நெம்பர் இந்துதேசத்து கால நிர்ணயத்தைப்பற்றிய மசோதா ஆக்ட்	56
12.	உண்மைகளே யன்றி கற்பனைகளல்ல	63
13.	விழுப்புரம் கலகக் கேஸ்	64
14.	ஒரு சம்பாஷணை	75
15.	இந்தியன் லா ரிப்போர்ட்டிகளிலுள்ள கேசுகள்	78
16	காண்டிராக்ட் லா	80

J. H. BAKEWELL Esq LL. B., Bar-at-Law.

மிஸ்டர் ஜே. யச். பேக்வல் LL. B., Bar-at-Law.

இவர் லண்டன் நகரில் மெர்ச்சண்ட் டெயிலர்ஸ் கலாசாலையிலும் யூனிவர்சிடி காலேஜிலும் கல்விபயின்ருர். இவர் யூனிவர்சிடி காலேஜில் தர்ம சாஸ்திரத்தில் ஜோசம் ஹியூம் ஸ்காலர்ஷிப்பும் அதாவது மாணுக்கருக்கு கொடுக்கும் வேதனம்) லிங்கான்ஸ் இன்னில் காமன் லா லா ஆப் ரியல்அண்ட் பெர்ஸனல் பிராப்பரிடி ஈகுவிட்டி அதாவது நீதி விஷயத்திலும் மூன்று ஸ்காலர் ஷிப்பும் பெற்ருர். பின்னும் இவருக்கு இன்ஸ் கோர்ட்டாரால் தர்ம சாஸ்திரத்திலும் ரோமன் லாவிலும் ஸ்டேண்ட்ஷிப் கொடுக்கப்பட்டது.

இத்துடன் பார்ஸ்டன் லா ஸ்காலர்ஷிப்பும் கொடுக்கப்பட்டு 1886வு ஜூலைமீ 7வ லிங்காலஸ் இன் பாரில் பாரிஸ்டரானுர். "கற்க கற்க கசடறும்" என்பதுபோல் இவர் அமரிக்கா ஐக்கிய மாகாணத்திற்கு சென்று பேடண்ட் லா வாசித்து, சீமைக்கு திரும்பின காலத்திலும் மிஸ்டர் சடாயக் ஹீலி, தற்காலம் கவுண்டி கோர்ட் ஜட்ஜாகிய மிஸ்டர் ஜான் ஜெண்ட் இவர்களின் சேம்பரில் வாசித்தார். கடைசியாய் லண்டன் யூனிவர்சிடியில், காமன் லா ஈகுவிட்டி என்னும் விஷயங்களில் முதல் வகுப்பில் முதன்மையாய் தேறி பேச்சுலர் ஆப் லாஸ் பட்டம் பெற்று 1894-ம்வு வரையில் லண்டன் சான்ஸரி பாரில் பாரிஸ்டராயிருந்து 1895-ம்வு சென்னைக்கு வந்து மதராஸ் ஹைகோர்ட்டில் ஒரு வருஷம் வரையில் அட்வகேட்டாகயிருந்தார். 1896வு மேமீ 11வ மதராஸ் ஹைகோர்ட்டு ஒரிஜினல் சைட் டிப்டி ரிஜிஸ்டராராக நியமிக்கப்பட்டார். அது சமயத்தில் ஹைகோர்ட்டு ஒரிஜினல் சைட் அனுஷ்டான சட்டங்களை சரி பார்த்தார். இதன் பின் பொரோவின்ஷல் கோர்ட்டுகளுடையவும் ஹைகோர்ட்டு ஒரிஜினல் சைட்டுடையவும் அனுஷ்டான சட்ட நகல் தயாரிக்கும்படி பிரத்தியேகமாய் இவர் நியமிக்கப்பட்டார். இவர் அது சமயத்து செய்த நகல்களே, 1902வு சிவில் ரூல் ஆப் பிராக்டிஸாகவும், ரூல்ஸ் ஆப் ஹைக்கோர்ட்டாகவும் ஊர்ஜிதத்துக்கு வந்தன.

1896வு இவர் இன்ஸால்மெண்ட் கோர்ட்டு சீப் கிளார்க்காய் நியமிக்கப்பட்டார். இது சமயத்திலும் இந்த கோர்ட்டு அனுஷ்டான சட்ட நகல் தயாரித்தார். தனக்கு வாய்த்த சமயங்களிலெல்லாம் சீர்திருத்தத்தின்கண் பெரிதும் நோக்கம் வைத்து அத்தியாவசியமான சட்டங்களை தயாரிப்பதே தனது இன்றியமையாக்கடமை எனப்பூண்டவர். இவர் சென்னை சர்வகலாசாலை லா பரீக்ஷை, லா அப்பிரண்டிஸ் பரீக்ஷை, பிளீடர் பரீக்ஷை இவைகளுக்குப் பரிசோதகராகவும், கவர்ன்மெண்ட் பரீக்ஷைகளுக்கு கமிஷனராகவும் இருந்து வந்தார். இம்மட்டோ! "பிரசிடன்சி ஸ்மால்காஸ் கோர்ட் ஆக்ட்"டுக்கும் அடமானம் பாகப்பிரிவினை முதலியவைச்சார்ந்த வியாஜ்ஜிய விஷய அனுஷ்டானத்துக்கும் விரித்துரை வெளியிட்டனர்.

1907வு அக்டோபர்மீ சென்னை ஸ்மால்காஸ்கோர்ட் சீப் ஜட்ஜ மிஸ்டர் ஜான் ஜி. ஸ்மித் பி. எ., (பாரிஸ்டர்) அவர்களுக்கு பதிலியாக நியமனம் பெற்ருர். மிஸ்டர் ஜான் ஜி. ஸ்மித் காலமாய் விடவும், 1908வு ஜனவரிமீ இவரே ஷை ஸ்மால்காஸ் கோர்ட் சீப் ஜட்ஜாக நியமனம் பெற்றிருக்கிருர். ஏழை கக்ஷிக்காரர்களின் பெருங்குறையை ஒழிக்கவே, சீர்திருத்தத்தின்கண் பெரிதும் நோக்கங்கொண்ட, நமது பெருமான் பேக்குவல் துரையவர்களை ஸ்மால்காஸ் கோர்ட் சீப் ஜட்ஜாக அருளினுர் கடவுள் என்போம்.

இத்திரு அருள் கிடைப்பதற்குமுன் ஸ்மால்காஸ் கோர்ட்டுக்கு மாதத்தவணை பணம் கட்டவோ இன்னும் மற்றெந்த விவகார விஷயத்துக்காகவோ, சில்லரை சிப்பந்திகளிடத்தில், முந்தி வந்த ஏழை காலும் கடுக்க காலைமுதல் மாலை வரையில் காத்திருக்க, பிந்திவந்த பணக்காரர்கள் ½ - மணி சாவகாசத்துக்குள் காரியம் முடித்துக்கொண்டு போவார்களென்ருல், ஏழைகளின் கஷ்டமும் சில்லரை சிப்பந்திகளின் நடவடிக்கைகளும் இத்தன்மையதென இங்கு எடுத்து காட்டுவது அனுவசியம். சில்லரைக் காசில்லாத ஏழைகள் அனந்தமே. அதனுல் மாதத்தவணை செலுத்த தவறிவிட்டதாக ஏற்பட்டு முழுத்தொகையும் ஏககாலத்தில் வசூலிக்கப்பட்டது அனந்தம் இருக்கலாம். அப்படி ஏககாலத்தில் செலுத்தத் தவறி கடன்கார் ஜெயிலுக்கு போனதும் தட்டுமுட்டு பாத்திரங்களை வாரண்டில் அழுது அம்பலமானதும் அநேகம் இருக்கலாம். நிற்க,

சென்னை ஸ்மால்காஸ் கோர்ட்டு தற்கால சீப் ஜட்ஜ் அவர்கள், பணம் என்ருல் பேய்போல் திரிந்து ஏழை கக்ஷிக்காரர்களுக்கு இடையூறு விளைவித்துவந்த பழம் பெருச்சாளிகளை கண்டுபிடித்து தண்டித்து சீர்திருத்தியிருக்கிருர். இவ்வித சீர்திருத்தமானது கக்ஷிகார்கள் எல்லோருக்கும் பெரும் சந்தோஷத்தையும் நன்மையையும் விளைவித்திருக்கின்றது. பின்னும் தமக்கு முன் வரப்படும் கேசுகளில், கக்ஷிக்காரர் தரப்பில் வக்கீலிருந்தாலும் இல்லாவிட்டாலும், தீர்க்க பரிசீலனைசெய்து கக்ஷிக்காரர்களின் நிலைமையை ஆழ்ந்து அறிந்து தீர்ப்பு சொல்வதானது வாதி பிரதிவாதிகள் இருவருக்கும் பூர்ணதிருப்தியை கொடுத்து வருவதால் இவர்தம் மேன்மையான குணத்தை புகழாதார் ஒருவரும் இல்லை. இத்தகைய புகழ்ச்சிக்கு பாத்திரராய் விளங்கும் இவருக்கு சென்னை ஹைக்கோர்ட்டிலிருக்கும் நீடித்த அனுபோகமானது கூடிய சீக்கிரத்தில் சென்னை ஹைக்கோர்ட் ஜட்ஜாக நியமனம் பெறச் செய்யும் என்று நம்புகின்ருேம்.

ERRATTA.

பிழை திருத்தம்.

1. 70-வது பக்கம், 2-வது பத்தி; 2-வது பாரா 23-வது வரியில்.—இரத்தினசாமி தன்னிடம் பிரயாதியின் மகன் என்றிருப்பதை பிரயாதியின் மகன் இரத்தினசாமி தன்னிடம் என்றும், ஷை பாரா 6-வது வரியில் ஷயன் என்றிருப்பதை அவன் என்றும், ஷை பத்தி 3-வது பாரா கடைசி 9-வது வரியில் இருவரும் என்றிருப்பதை ஒருவரும் என்றும் திருத்திக்கொள்ளவும்.

2. 71-வது பக்கம், 2-வது பத்தி, கடைசி 9-வது வரியில் எரிவழி என்றிருப்பதை ஒரு வழி என்றும், ஷை 11-வது வரியில் தந்தின் என்றிருப்பதை ரதத்தின் என்றும், ஷை 13-வது வரியில் பார்த்தால் என்றிருப்பதை பார்த்தநால் என்றும் திருத்திக்கொள்ளவும்.

3. 72-வது பக்கம், 2-வது பத்தி, 23-வது வரியில், அப்படியேன் என்றிருப்பதை அப்படியே என்று திருத்திக்கொள்ளவும்.

4. 73-வது பக்கம், 2-வது பத்தி, 4-வது பாரா, 2-வது வரியில் திலாக்கரமான என்றிருப்பதை தீர்க்கமான என்று திருத்திக்கொள்ளவும்.

பட்டணம் பொடி.

உயர்ந்ததும், நெடு நாளைக்கு மணம் கெடா குணமுள்ள பொடி, மதராஸ், மண்ணடி, அ. கிருஷ்ண அண்ட் கம்பெனியில் கிடைக்கும். ஆர்டரில் இப்பத்திரிகையைக் காணவும்.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்,

வால்யம் 3.] சென்னப்பட்டணம், 1908வு பிப்ரவரி மார்ச்சு மாதங்கள் [பாகம். 2 & 3.

THE WILLS.

உயில்கள்.

உயில் அல்லது மரணசாஸனம் என்பது ஒருவன் தன்னுடைய சொத்துகளை தான் ஜீவித்திருக்கும்போதே தானதி முதலான பராதீனங்கள் செய்யாமல் தான் மரணமடைந்தபின் லிகிதமூலமாய் தான் தெரிவித்திருக்கும் தனக்குச் சொந்தமான இன்னின்ன சொத்துக்களை இன்னுர் இன்னுர் ஆண்டு அனுபவித்துக்கொள்ள வேண்டியதென்று தன்மனோபாவத்தை விவரித்து எழுதிவைக்கும் ஒரு சாஸனம். பண்டைகாலத்தில் ஹிந்து கிரந்த கர்த்தர்கள் உயில் மூலமாய் சொத்தை அடைவதென்பது இந்து தர்ம சாஸ்திரங்களில் கிடையாதென்று சொல்லியிருக்கிருர்கள். பூர்வகாலத்தில் மரணமடைந்த ஒரு ஹிந்துவினுடைய சொத்திற்கு அவனுடைய வார்சுகள் தான் சுதந்தரவாளியாகிருர்களென்பது கிடையாது. ஏனென்ருல் "எக்கியாதி முதலான ஹோம சடங்குகளினுல் அடையும் தக்ஷிணை முதலான சம்பாத்தியங்கள் பூமி, எழுதிவைத்திருக்கும் தஸ்தவேஜுகள் ஆகாரம், ஜலம், ஸ்திரீகள்," இவைகளெல்லாம் பிரிவினை செய்யக்கூடிய பொருள்கள் அல்லவென்று ஸ்மிரிதி சந்திரிகாவில் உஸானு என்பவர் எடுத்துக்காண்பித்து இருக்கிருர். முன்னோர்களுடைய ஆஸ்திகளை பிரிவினைசெய்து பாகித்திருந்தாலும் அவர்களுடைய சொத்திற்கு இன்னுன்தான் சுதந்தரவாளியென்பது கிடையாதென்றும் அச்சொத்துக்களை அனுபவித்துக் கொள்ளலாமேயொழிய மற்றப்படி அவைகளை விக்கிரயம் தானம் முதலான பராதீனங்கள் செய்யலாகாதென்று ஸ்மிரிதி சந்திரிகாவில் விரத்த பெக்னவால் சியா என்பவர் சொல்லியிருக்கிருர்.

ஒரு ஹிந்து குடும்பத்தைச்சேர்ந்த ஒரு தாயாதி மற்ற தாயாதிகளின் அனுமதியின்றி அக்குடும்பத்தில் பொதுவாயுள்ள ஸ்தாவர சொத்துக்களை தானதி முதலான பராதீனங்கள் செய்யலாகாதென்று வியாஸ் தயாபாகா இரண்டாவது அத்தியாயம், 27-வது சுலோகத்தில் சொல்லியிருக்கிருர்.

ஒரு ஹிந்து குடும்ப சொத்தை பாகித்து கொடுப்பதனுல் அச்சொத்தை இன்னுர் இன்னுர் ஆண்டு அனுபவிப்பதற்கே யல்லாமல் மற்றப்படி வார்சுதன் அச்சொத்துக்களை பராதீனம் செய்வதற்காக அல்லவென்றும் ஏக குடும்பமென்பது சிலர் ஒன்று சேர்ந்திருக்கும் ஒரு கூட்டத்தாரென்றும் அக்கூட்டத்தின் தலைமைகர்த்தர் ஒருவர் குடும்ப சொத்தை தன் இஷ்டப்படி பராதீனம் செய்யக்கூடாதென்பது ஆதி கிரந்தகர்கள் உடைய கருத்தாகுமென்றும் ஆகையால்தான் உயிலென்பதே இந்து சாஸ்திரங்களில் கிடையாதென்றும் மி-ர் கோஸ் என்பவர் சொல்லியிருக்கிருர். பூர்வகாலத்தில் ரோமன் ஜாதியார் தவிர மற்ற எந்த கூட்டத்தாராகிலும் உயில் மூலமாய் சொத்தை பராதீனம் செய்வதென்பது கிடையாதென்று ஸர். எச். மெயின் என்பவர் எடுத்துக் கூறியிருக்கிருர்.

முதல் முதல் மதராசில் உயில் விஷயமாய் 1829வுத்திய 5-வது சட்டதிட்டம் உண்டாயிற்று. அந்த

சட்டத்தை அனுசரிக்க ஜனங்களுக்கு சமாதானமில்லாமல் இருந்தபடியால் அதை 1829-௵த்து 9-வது சட்டதிட்டத்தில் இந்துக்களுக்குள் உயில் சாஸனம் என்பது இன்னதென்று தெரியாதென்று எடுத்துக்காட்டி மேற்செப்பிய 1820௵த்து 5-வது சட்டதிட்டத்தை ரத்துசெய்து விட்டார்கள்.

பம்பாயிலும் உயில் என்பதைப்பற்றி அவர்களுடைய சாஸ்திரங்களில் யாதொன்றும் சொல்லியில்லையென்று சாஸ்திரிகள் அபிப்பிராயம் கொண்டிருந்தார்கள். அம்மாதிரியாகவே பம்பாய் இராஜதானி முழுதிலும் உயில் என்பது 1866௵-ம் வரையிலும் இல்லாமலேயிருந்தது. வங்காளத்திலும் சுப்ரீம் கோர்ட்டார் ஒரு ஹிந்துவினுடைய உயிலுக்கு புரோபேட் என்னும் ஒரு அதிகாரப்பத்திரம் கொடுக்கப்படாதென்று தீர்மானித்திருந்தார்கள்.

இவைகளையெல்லாம் யோசிக்குமளவில் இந்தியா முழுமைக்கும் உயில்என்பதே கிடையாதென்று தெளிவாய் ஏற்படுகிறது. ஆனால் உயில் என்பதைப்பற்றி இந்துக்கள் முதல் முதல் மகம்மதியரிடத்திலிருந்து உணர்ந்து கொண்டார்களென்பதற்கும் யாதொரு அத்தாக்ஷியும் காணப்படவில்லையென்று மிஸ்டர்-கோஸ் சொல்லியிருக்கிறார்.

1792௵த்தில் பெயர்போன்ற நந்தியாகேசிலும் 1893௵த்தில் தயால் சந்தா V. கிஸ்ஸாமரி, மான்ட்ரியோ 371-லும் 1800௵த்தில் நாக்கிஸன உயில், மான்ட்ரியோ 381-லும் 1808௵த்தில் நிமைசாரன் மல்லக்கேசிலும் 1812௵த்தில் 2 ஸ்தர்திவானி 23, 2-ஸ்தர்திவானி 42-லும் சுப்ரீம் கோர்ட்டார் இது விஷயமாய் முன் செய்யப்பட்டிருந்த தீர்மானங்களுக்கு விரோதமாய் ஜனங்கள் சாதாரணமாய் ஒப்புக்கொண்டிருந்தபடி ஒரு ஹிந்துவானவன் தன் சொத்தை உயில் மூலமாய் பராதீனம் செய்யக்கூடுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். வங்காளத்திலும் இம்மாதிரியாகவே நடந்தேறிக்கொண்டு வந்தது. ஆனால் பவான் சாரன் V. ராம்பாத் வார்சுகள் கேசில் ஒரு ஹிந்து தகப்பன் எழுதிவைத்த உயில்சாஸனம் செலாவணி யுள்ளதல்லவென்று 1816௵த்தில் தீர்மானித்தார்கள். ஆயினும் இம்மாதிரியான கோட்பாடு நீடித்த் காலமிராமல் 1849௵த்தில் சுப்ரீம் கோர்ட்டு ஜட்ஜிகள் ஒரு இந்துவானவன் தன் சொத்தை உயில் சாஸனம் எழுதி பராதீனம் செய்யக்கூடியவனு அல்லவா என்பதைப்பற்றி தீர்மானிக்கும்படி ஸதாதிவானி அதாலத் கோர்ட்டாரை கேட்டதற்கு அந்த கோர்ட்டு ஜட்ஜிகள் பின் வருமாறு மறுமொழி கூறினார்கள் :—

“ எங்களுடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பிய விஷயத்தைப்பற்றி நாங்கள் தீர்க்க யோசித்ததில் இதற்குமுன் ஸதர்திவானி அதாலத் கோர்ட்டாரும் இன்னும் இதரகோர்ட்டார்களும் செய்திருக்கும் தீர்மானங்களை அனுசரித்தும் ஜனங்களுடைய வழக்கப்படிக்கும் வங்காள மாகாணத்தில் ஒரு ஹிந்துவானவன் தனக்கு புத்திரர்கள் இருந்திடினும் அவன் தன்னுடைய புத்திரர்களுடைய அனுமதியின்றி அவனுடைய பிதிரார்ஜித சொத்தை விற்கவும் தானம் செய்யவும் கொதுவை வைக்கவும் அர்ஹனென்றும், அவன் தன்னுடைய புத்திரர்கள் அனுமதியின்றி அவனுடைய சொத்தை தன் புத்திரர்கள் அடையாதபடி உயில் மூலமாய் தடுத்து இதர எற்பாடு செய்யவும் அர்ஹனென்றும் தீர்மானிக்கிறோம்.'' ஜஜ்மோஹன் V. ஸ்ரீமூர்த்தி மார்டன். 9.

இவ்விதமாய் வங்காளத்து சுப்ரீம் கோர்ட்டார் செய்த தீர்மானித்திருந்த சட்டத்தை பம்பாயிலும் ஆதியிலேயே அனுசரித்து வந்தார்கள்.

ஆனால் மதராஸிலோ உயில் என்பது சட்டப்படி செலாவணியுள்ளதென்று லெகுவில் ஒப்புக்கொள்ளாமல் 1851௵த்தில் சுப்ரீம் கோர்ட்டு ஜட்ஜிகள் வங்காளதேசத்தில் செய்யப்பட்டிருக்கும் தீர்மானங்களை அனுசரித்து ராம்டனுட் முல்லக் V. கோபு நடராஜாவின் கேசில் செய்திருக்கும் தீர்மானத்தின்படி மதராஸில் நாகலக்ஷ்மி V. கோபு நடராஜா கேசில் 1855௵-ம் டிசம்பர் மாதத்திய ரிப்போர்ட்டு 226-வது பக்கத்தில் ஒரு ஹிந்து தன் சொத்தை உயில் மூலமாயும் தானம் முதலான பராதீனங்கள் செய்யலாமென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் இந்தத் தீர்மானம் வழக்கத்தில் அனுசரிக்கப்படாமலேயிருந்து மந்திராலோசனை சபையாரால் (Privy Council) மேற்செப்பிய நாகலக்ஷ்மி V. கோபு நடராஜாயென்னும் கேசில் மதராஸ் ஹைக்கோர்ட்டார் செய்த தீர்மானத்தை ஊர்ஜிதம்செய்தார்கள் 6. மு. 309; ஆனால் மதராஸ் ஹைகோர்ட்டார் இந்த தீர்மானத்தை அனுசரிக்க மனமில்லாதவர்களாகவேயிருந்தார்கள்.

(மதராஸ் ஹைகோர்ட் 1861௵ டிசம்பர்௴த்திய ரிபோர்ட்டு 67-பக்கத்தில் காணலாம்.)

ஆயினும் கடைசியாய் மாட்சிமை தங்கிய மகாராணியவர்களுடைய சார்டரென்னும் அதிகாரப் பத்திரத்தின்படி சுப்ரீம் கோர்ட்டை ஹைகோர்ட்டென்று ஏற்படுத்தியதற்குப் பின் மதராஸ் ஹைகோர்ட்டார், முன் பிரிவு கவுன்சிலார் செய்திருக்கும் தீர்மானத்தை அனுசரித்து ஒரு ஹிந்துவானவன் தன் சொத்தை உயில் மூலமாய் பராதீனம் செய்வது ஒப்பத்தகுந்ததல்லவென்பதற்கு ஹிந்துலாவில் விரோதமான சட்டம் ஒன்றும் காணப்படவில்லையென்று முடிவான தீர்மானம் ஒன்று செய்திருக்கிறார்கள்.

வள்ளிநாயகம் V. பாச்சி, ம. ஹை. கோ. ரி, 336.

தற்காலத்தில் இந்தியா முழுமைக்கும் உள்ள இராஜதானிகளெல்லாவற்றிலும் ஹிந்துக்களுக்குள் உயில் என்பது செலாவணியுள்ளதா அல்லவா என்பதற்கு யாதொரு ஐயமுமின்றி சட்டப்படி செலாவணியாகின்றது. ஹிந்து ஒருவன் மிதாக்ஷர சட்டத்தின்படி தான் தானம் முதலான பராதீனம் செய்யக்கூடிய தனக்குச் சொந்தமான சொத்துக்களை தான் ஜீவித்திருக்கும்போதே உயில் மூலமாய் ஒரு [illegible]

வருக்கு கொடுத்துவிட அவனுக்கு பாத்தியம் உண்டு. (1 ம. ஹை. ரி. 326, 339). இன்னும் தன்னுடைய சுயார்ஜித சொத்தில் அல்லது குடும்பத்தைச்சேர்ந்த எந்த சொத்திலாவது எந்த பாகத்தையாவது தன் மனோபாவத்தின் பிரகாரம் உயில் மூலமாய் கொடுத்துவிடலாம். இதுவுமன்றி புத்திர பௌத்திர சந்தான மில்லாமலிருந்தாலாவது சகோதராள் முதலான பந்துவர்க்கங்களில்லாமல் இருந்தாலாவது சொத்துள்ள ஒரு ஹிந்துவானவன் தான் ஜீவித்திருக்குமளவில் தன் ஜீவனாம்சத்திற்கு வேண்டிய சொத்தை தக்க ஏற்பாடு செய்துக்கொண்டு மற்றப்படி தன்னிடத்திலுள்ள பிதிரார்ஜ்ஜித சொத்தைக்கூட தன்னிஷ்டப்படி உயில் மூலமாய் ஒருவருக்குக்கொடுத்துவிடலாம். (6 மூ. இ. அ. 309, 344 ; 10 மூ. இ. அ. 308, ; 12. மூ. இ. அ. 38; 3 பம். ஐ. 6; இ. லா. ரி. 12. ம. 126). ஆனால் ஏக குடும்பமாக சேர்ந்திருக்கும் ஒருஹிந்து குடும்பத்திலுள்ள பாகஸ்தன் தனக்கு பிதிரார்ஜ்ஜித சொத்திலுள்ள தன்னுடைய பாகத்தை உயில்மூலமாய் ஒருவனுக்கு கொடுத்துவிட ஹக்குள்ளவன் அல்ல. ஏனென்றால்தான் ஜீவித்திருக்கும்பொழுது அவன் தனக்கு ஏக குடும்பத்திலுள்ள தன்னுடைய பாகத்தை பராதீனம்செய்ய அவனுக்கு ஹக்கு இருந்தபோதிலும், அவன் மரணமடையும்போது அதைச்சார்ந்த குடும்பத்திலுள்ள இதரபாகஸ்தாளுடைய பொது ஹக்கு பாத்தியதை விசேஷித்ததாய் விடுகிறபடியால் அவன் தான்மரணமடைந்த பின் தன்னுடைய சொத்து இன்னார் இன்னார் அடையவேண்டியதென்று உயில் எழுதிவைக்கும் பாத்தியதை அவனுக்குத் தவறிப்போகிறதென்று தீர்மானித்திருக்கிறார்கள். (8 ம. ஐ.6, 3 பம். 66; 11 பம். ஐ. 66; இ. லா. ரி 5. பம். 48 ; இ. லா. ரி. 12 பம். 105) தயாபாகாவில் சொல்லியிருக்கிறபடி ஒன்று சேர்ந்து ஏக குடும்பமாயிருப்பவர்களின் தகப்பன் அவனுடைய ஸ்தாவர ஜங்கம பிதிரார்ஜ்ஜித சொத்துகளை உயில் மூலமாய் தன்னிஷ்டப்பிரகாரம் கொடுத்து விடலாமென்று சொல்லியிருந்தாலும் அந்த சொத்துகள் எல்லாவற்றிற்கும் அந்த குடும்பத்திலுள்ளவர்கள் எல்லோரும் பொதுவாய் சுதந்தரவாளிகளாகாமல் தனித்தனியாய் பிரத்தியேக பாத்தியதையை அடைகிறபடியால் அவர்கள் தங்கள் பாகங்களை உயில் மூலமாய் கொடுத்துவிட பாத்தியமுள்ளவர்களாகிறார்கள். (4 க ஐ 159. 9 க. ஐ. 396, 6 மூ. இ. அ. 344) ஸ்திரீகள் தங்களுக்கு சர்வசுதந்தரமும் பாத்தியதையுமுள்ள தங்களுடைய ஸ்திரீதனம் முதலான சொத்துகளை உயில் மூலமாய் ஒருவருக்கு கொடுத்துவிடலாம். (இ. லா. ரி. 2 சென். 333). ஆனால் ஸ்திரீகள் தங்களுடைய வார்சுக் கிரம பாத்தியத்தை அனுசரித்து அவர்களுடைய பர்த்தாக்களிடமிருந்து அந்த சொத்தை உயில் மூலமாய் பராதீனம்செய்யலாகாது (3 ஸக்தி. 49; 1 ப. 56, 67; இ. லா. ரி. 10 பம். 372). ஸ்திரீகள் பொதுவான வயது வராத மைனர்களாயிருந்தால் அவர்கள் தங்கள் சொத்தை உயில் மூலமாய் வினியோகம் செய்ய பாத்தியமுள்ளவர்களல்ல. இரண்டு மூன்று விதங்துகளுக்குப் பொதுவாய் அவர்கள் எல்லோருக்கும் பாத்தியதையுள்ள சொத்தை அவர்களில் யாராவது உயில் மூலமாய் கொடுத்துவிட பாத்தியதையுள்ளவர்களல்ல.

போதுமான வயது வராத மைனர்கள், பயித்தியம் பிடித்தவர்கள் குஷ்டரோகிகள் இப்படிப்பட்டவர்களுக்கு உயில் மூலமாய் சொத்து எழுதிவைத்தால் செல்லும்.

உயில் மூலமாக கொடுக்கப்பட்ட சொத்தை உயில் எழுதிவைத்தவன் ஜீவித்திருக்கும்போதே யார் யாருக்குக் கொடுக்கவேண்டியதோ அவர்கள் வசப்படுத்தவேண்டுமென்பது அவசியமல்ல; உயில் எழுதி வைத்தவன் இறந்த பிறகு தான் அவர்களுடைய வசப்படுத்தவேண்டும்.

ஹிந்து ஒருவன் தான் பட்டிருக்கும் ரொணசல்லியத்தை தீர்க்காமலும் இன்னும் தான் குடும்பத்தில் கொடுக்கவேண்டிய ஜீவனாம்ச விஷயத்தைப்பற்றியும் யாதொரு ஏற்பாடு செய்யாமலும் தன்னுடைய சொத்துகள் யாவற்றையும் உயில் மூலமாய் கொடுத்துவிட்டால் அந்த சொத்து யார் யாருக்குக்கொடுக்கப்பட்டதோ அவர்கள் அந்த சொத்தில் முழு பாத்தியமும் அடையாமல் அந்த கடன்கள் அல்லது ஜீவனாம்சங்கள் விஷயத்தில் கிரமமாய் செலுத்தவேண்டியவைகளைச் செலுத்திவிட்டதுபோக மிகுதி நிற்கும் சொத்தில் மாத்திரம்தான் அவர்களுக்குச் சுதந்தரமுண்டாகும் (3 மதராஸ் லா ஜர்னல், 174). அப்படி கடன் கொடுத்தவர்களும், ஜீவனாம்சம் பெற்றுக்கொள்ள ஹக்குள்ளவர்களும் முதலில் அவர்களுடைய கடனையும், ஜீவனாம்சத்தையும் வசூல் செய்துக்கொண்டு மிகுதி நிற்கும் சொத்தை உயிலில் கண்டபடி தானம் முதலானது செய்யும்படி விட்டுவிடவேண்டியது (இ. லா. ரி. 14 பம், 438). ஹிந்து ஒருவன் உயில் எழுதி வைக்கும்போது தன்னுடைய சொத்தை முதலில் ஒருவன் அனுபவிக்கவேண்டியதே ஒழிய மற்றப்படி கிரயம், கொதுவை, தானம் முதலானது செய்யலாகாதென்றும் அவனுக்குப் பின் அந்த சொத்து அல்லது யாதேனும் ஒரு பாகத்தை மற்றொருவன் அனுபவித்துக்கொள்ளலாமேயல்லாமல் பராதீனம் செய்யலாகாதென்றும், உயிலில் கண்டு எழுதியிருந்தால் அவன் அப்படியே அந்த சொத்தை அல்லது ஒரு பாகத்தை அனுபவித்துக்கொள்ளலாம். தானம் முதலான பராதீனம் செய்யலாகாது. அப்படி பராதீனம் செய்தால் அந்தக் கிரயம், தானம், கொதுவை முதலிய பராதீனங்கள் ரத்தாக எண்ணப்படும்.

ஹிந்து ஒருவன் தன் சொத்தை தான் மரணமடைந்த பிறகு இன்னார் அனுபவிக்க வேண்டுமென்று உயில் எழுதி வைத்திருந்தால் அந்த [illegible] இருக்கவேண்டும். அல்லது [illegible]

இருக்கவேண்டும். 8 மூ. இ. அ. 85, இ. லா. ரி. 4, க 23; இ. லா. ரி. 10, க 952, இ. லா. ரி. 16 க 71, 380, இ. லா. ரி. பம் 38, 4 க. ஜ. 188; 9 க. ஐ. 397.

திருஷ்டாந்தம்.

A என்பவன் தன் மனப்பூர்வமாய் எழுதிவைத்த உயில் சாஸனத்தில் தன் சொத்துகளெல்லாம் B என்பவன் அவன் ஆயுள் வரையில் கைபற்றி அனுபவித்துக்கொள்ள வேண்டியதென்றும் பிறகு அந்த சொத்து C என்பவனுக்குச் சேரவேண்டியதென்றும் எழுதி ஏற்பாடு செய்திருக்கிறது. A என்பவன் இறந்துபோகும் காலத்தில் B, C, என்பவர்கள் பிறந்தாவது அல்லது தாயின் கர்ப்பத்திலாவது இருக்கவேண்டும். அப்படிக் கில்லாவிடில் அந்த ஏற்பாடு செல்லாது. அவன் உயில் எழுதும் காலத்தில் பிறந்து அல்லது கர்ப்பத்தில் இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. உயில் எழுதினவன் இறந்துபோகும் காலத்தில் பிறந்து அல்லது கர்ப்பத்திலிருக்கவேண்டியது அவசியம்—அம்மாதிரியாகவே B ஹிந்து ஒருவன் தனக்குப் பின் ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ள தன்னுடைய மனைவிக்கு அதிகாரம் கொடுத்த பின் தன் சொத்துகளையெல்லாம் தனக்குப் பின் தன்னுடைய விபக்த சகோதரன் ஆண்டு அனுபவிக்க வேண்டியதென்றும் அவனுக்குப் பின் பெண்சாதி ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும் பிள்ளைக்கு தன் சொத்து முழுதும் சேரவேண்டியதென்றும் உயில் எழுதி வைத்தான். அப்படிப்பட்ட உயிலும் செல்லும்.

(C) ஹிந்து ஒருவன் அவன் மரண மடைந்த பிறகு அவனுடைய சொத்து முழுமையும் ஒருவன் அனுபவிக்க வேண்டியதென்றும் அவனுக்குப் பின் உயில் எழுதி வைத்தவனுடைய பெண்ணின் பிள்ளைக்குச் சேரவேண்டியதென்றும் உயில் எழுதி வைத்தான். உயில் எழுதினவன் இறந்து போகையில் அவனுடைய பெண்ணுக்கு பிள்ளையும் ஜெனிக்கவில்லை, கர்ப்பத்திலு மில்லை. உயில் எழுதினவன் மரண மடைந்தபிறகு அந்த பெண்ணுக்குப் பிள்ளை பிறக்குமாகில் அந்த பிள்ளைக்கு உயிலில் கண்ட சொத்துகளுக்கு உயில் பாத்தியதை உண்டாக மாட்டாது. இ. லா. ரி. 8 க 837.

(D) ஹிந்து ஒருவன் தன் சொத்துகளையெல்லாம் உயில் எழுதி ஐந்து பெயர்களுக்குப் பாகித்துக் கொடுத்து அவர்களில் யாராவது சந்தான மில்லாமல் இறந்து விட்டால் அவனுடைய பாகம் மற்றுள்ள நால்வருக்கும் சேரவேண்டியதென்று கண்டெழுதினான். இந்த ஐந்து நபர்களும் உயில் எழுதினவன் இறந்துபோகும் காலத்தில் பிறந்திருக்கிறார்கள். பிறகு அந்த ஐவரில் ஒருவன் இறந்து விடுகிறான். அவனுக்குப் பின் அவனுடைய பாகம் அவனுடைய பெண்சாதி பெண்களுக்குப் போகாதென்றும் மற்றுள்ள நால்வருக்குச் சேருமென்றும் மர்ஹிா லோசனை சபையார் (Privy Council) தீர்மானித்திருக்கிறார்கள். 6 மூ. இ. அ. 526; 9 மூ. இ. அ. 123.

(E) ஹிந்து ஒருவன் தன் சொத்து முழுதும் தான் மரண மடைந்த பிறகு ஒருவனுக்குச் சேரவேண்டுமென்றும் அவனுக்குப் பின் இன்னொருவனுக்குச் சேரவேண்டுமென்றும் அவனுக்குப் பின் இன்னொருவனுக் கென்றும் இம்மாதிரியாக ஐந்து ஆறு பேருக்குச் சேர்ந்து அதற்குப் பின் ஆறுவது நபரின் தலைப் பிள்ளைக்குச் சேர வேண்டுமென்றும் உயில் எழுதி வைத்தான். அப்படிப்பட்ட உயில் அந்த உயில் எழுதினவன் இறந்து போகும் காலத்தில் யார் பிறந்து அல்லது கர்ப்பத்தில் இருக்கிறார்களோ அவர்களுக்கு மாத்திரம் பாத்தியம் உண்டுபண்ணுமே யொழிந்து மற்றப்படி அவன் எழுதி வைத்திருக்கிறபடி எல்லா நபர்களுக்கும் பாத்தியத்தை தரமாட்டாது. ஆகையால் தர்ம சாஸ்திரங்களில் ஏற்பட்டிருக்கும் வார்சு பரம்பரைக் கிரமத்தை உயிலில் நிபந்தனைகள் எழுதி மாற்ற முடியாது. இ. லா. ரி. 16 க 383, 10 க 952; 7 க 269, 11 க 684; 4 க. ஐ. 171, 212; 9 க. ஐ. 396:— டாகோ. உயில் கேஸ், இ. லா. ரி. 6 க 421.

சாதாரணமாய் உயில் சாஸனத்தில் ஒரு சொத்தை கொடுத்து அந்தசொத்தைக் கொதுவை, கிரயம், தானம் முதலான பராதீனங்கள் செய்யலாகாதென்றும் இன்னும் இப்படிப்பட்ட சட்டத்திற்கு விரோதமான நிபந்தனைகள் கண்டெழுதினால் அந்த உயில் செல்லமாட்டாது. 8 மூ. இ. அ. 66, 76; இ. லா. ரி. 8 க 378; இ. லா. ரி. 6 க 106; 14 க 175; 1 க 104; இ. லா. ரி. 5 க 438; 8 க. ஐ. 400; இ. லா. ரி. 10 க 952; 14 க 222; 9 சென் 499. 11 க 684, 2 க. ஐ. 11, 25; 7 க 268, 4 க. ஐ. 231, 265. இம்மாதிரியாகவே.

போதுமான வயது வராத மைனர் ஒருவனுக்கு உயில் மூலமாய் சில சொத்துகளைக் கொடுத்து அந்த சொத்தை கைப்பற்றி அனுபவிக்கும் விஷயத்தில் யாதேனும் ஊத்து நிபந்தனை ஏற்படித்திருந்தால் அந்த ஏற்பாடு அவன் மைனராயிருக்கும் வரையில் செல்லுமோ யொழிந்து மற்றப்படி அவனுக்கு வயது வந்த பிறகு சொல்லமாட்டாது. இ. லா. க. 104, 8 க. ஐ. 400; இ. லா. ரி. 8 க 378.

யாதேனும் ஒரு காரணத்தால் ஒரு உயில் அல்லது அதன் ஒரு பாகம் செலாவணியுள்ள தல்லவென்று ரத்தாய் விட்டால் அப்படி ரத்தான பாகத்தைச் சேர்ந்த சொத்து உயில் செய்தவனுடைய வார்சுகளையே சேரும். 2 க 38; 4 க 198; 9 க. ஐ. 402, 407; இ. லா. ரி. 3 க 583, 4 க. ஐ. 187; 14 க 175; இ லா. ரி- 2 பம் 488.

உயில் மூலமாய் ஒருவனுக்கு சில சொத்துகள் கொடுக்கப்படுகிறது. யாருக்கு சொத்து கொடுக்கப்பட்டதோ அவன் உயில் எழுதினவனுக்கு முன்னமேயே இறந்து விடுகிறான். அந்த சொத்து உயில் எழுதி வைத்தவனுக்கே சேரும்.

உயில் என்பது லிகிதமாய் தான் இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. வாய் மொழியாகவும் இருக்கலாம். ஆனால் எழுத்து மூலமாயிருந்தால் ருசு செய்வதற்கு சுலபமாயிருக்கும். உயில் ஸ்டாம்பு காகிதத்தில் எழுதி ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்பது அவசியமில்லை. ஒருவன் இறந்துபோவதற்கு முன் தன் சொத்தை தனக்குப் பின் இன்னவிதமாய் இன்னார் அனுபவிக்கவேண்டியதென்று கோர்ட்டாருக்கு மனு மூலமாய் தெரிவித்தான். அவன் இறந்த பிறகு அந்த மனுவே உயிலாக ஒப்புக்கொள்ளப்பட்டது. 14 க. ஐ. 226; 3 ஸ 138; 12 மூ. இ. அ. 12 26 ஸ 55; இ. லா. ரி. 3 பம் 7; 11 பம் 89; 7 அ 163; 18 க 1 மதராஸ், பம்பாய், வங்காளம் இந்த இடங்களிலுள்ள ஹிந்துக்கள் எழுதி வைக்கும் உயில்கள் விஷயமாய் செய்யப்பட்டுள்ள சட்டங்களாவன:—

1871ம்௵த்து 21 ஹிந்து உயில் சட்டம், 1881ம்௵த்து 5-ம்நெ. ஆக்ட், 1860ம்௵த்து 27-ம் நெ. ஆக்ட் உயில் எழுதிவைக்கிறவன் தான் இறந்து போகும் வரையில் தன் உயிலில் கண்டிருக்கும் எந்த சங்கதியும் வேறொருவருக்குத் தெரியக்கூடாதென்றும், அந்த உயிலை யாரும் பார்க்காமல் ஜாக்கிரதையாய் காப்பாற்றவேண்டுமென்றும், கருதினால் ரிஜிஸ்ட்டிரேஷன் ஆக்ட் (Act III of 1877) 42-வது பிரிவின்படி அந்த உயிலை ஒரு காகித உறையில்போட்டு சீல் செய்து ரிஜிஸ்தருராபீசில் அமானத்தாக வைத்து வைக்கும்படி கேட்டுக்கொள்ளலாம். அவர் அப்படியே அந்த உயிலை இரும்புப்பெட்டியில் பந்தோபஸ்தாய் காப்பாற்றி உயில் செய்தவன் மரணமடைந்த பிறகு புஸ்தகத்தில் பதிவு செய்துக்கொண்டு மனு கொடுப்பவர்களுக்கு கையில் கொடுப்பார். உயில் செய்தவன் ஜீவித்திருக்கையில் அந்த உயிலை வாபீஸ்பெற்றுக் கொள்ள விரும்பினால் அப்படியே தன்னிஷ்டப்படி பெற்றுக்கொள்ளலாம். ஒருவன் இரண்டு மூன்று உயில்கள் எழுதிவைத்தாலும் அவைகளில் அவன் கடைசியாய் எழுதின உயில்தான் அனுஷ்டானத்திற்கு வரும். கடைசியாய் எழுதின உயிலை மாற்றலாம் ரத்து செய்யலாம். இ லா. ரி. 3 க 326; 3 ம. லா. ஜ. 174.

ஒருவன் உயில் எழுதிவைத்தபிறகு அவன் தன்னுடைய சொத்தை கிரயம் செய்துவிட்டாலும் அல்லது ஒருபிள்ளையை ஸ்வீகாரம் செய்துக்கொண்டாலும் அந்த உயில் ரத்தாய்விட்டதாக எண்ணப்படும்.

உயில் எழுதிவைத்த பிறகு அதைத் திருத்தி மாற்றினால் அது திருத்தத்தின் அளவுக்கு ரத்தாகுமே ஒழிய முழு உயிலும் ரத்தாகமாட்டாது. (8 இண்டியன் ஜூரிஸ்ட் 290.)

CRIMINAL TRIBES IN INDIA.

(By Mr. A. V. Seyalam.)

இந்தியாவில் துஷ்கிருத்திய ஜாதியார்கள்.

இந்தியாவிலிருக்கும் சில துஷ்கிருத்திய ஜாதியார்களின் குறிகளையும், அவர்களின் குணங்களையும் பற்றி சாகர் (*Saugor*) என்னும் இடத்திலிருக்கும் போலீஸ் டிரேயினிங் ஸ்கூல் (*Police Training School*) தலைவராகிய மிஸ்டர். ஜி. டப்ளியூ கேயர் அவர்கள் செய்த பிரசங்கங்களின் சாராம்சத்தைச் சோதர பத்திரிகை யாகிய மதராஸ் மெயில் (*The Madras Mail*) பதிப்பித்ததினின்றும் மொழி பெயர்த்து எழுதுகின்றோம். இவர் தம் போலீஸ் இலாக்காவின் நீடித்த அனுபவத்தாலும், அதனைச் சார்ந்த ரிக்கார்டுகளில் இவருக்கிருந்த இடை விடாத பழக்கத்தாலுமே, கொள்ளை யாடும் இவ்விநோதக் கூட்டத்தாரின் தன்மைகளையும் அவர்களுடைய துஷ்கிருத்திய போக்குகளையும் சவிஸ்தாரமாய் எடுத்துச் சொல்ல சாத்தியப்பட்டது. இவை, போலீஸ் இலாக்காவின் இளம்பருவ கூட்டத்தாருக்கு அளவிடக்கூடாத பயனை விளைவிக்கக் கூடியன வன்னியில், அவர்கள் முன்னதாகக் கொண்டிருக்கும் கருத்துகளநேகவற்றின் களங்கத்தை நீக்கி, அப்பியாசத்துக் குறிய ஒழுங்குகளைக் காட்டக் கூடியனவாயும் இருக்கின்றன.

மியூஸ், மிவாட்டிஸ் என்றவர்களுடன் கலந்திருக்கும் மைனாஸ் என்பவர்கள் ஜெயிப்பூரிலும் கரோலி ஸ்டேட்டிலும் 400 வருஷங்களுக்கு முன் நல்லவர்களாயும், யோக்கியமான பயிராளிகளாயும் இருந்ததாக சரித்திரம் கூறுகிறது. ஆஜ்மீரிலும், மார்வாருக்கு வடகிழக்கிலும் மைனாஸ் என்பவர்கள் கொள்ளையிடுவதிலும் வழி பறித்தலிலுமே முழுகி யிருக்கிறார்கள். அவர்கள் அக்டோபர் மாதம் துடங்கி ஜூன் மாதவரையில் மேற்படி துர்க்கிருத்தியங்களைச் செய்வது வழக்கம். அதற்காகப் பெண்டு பிள்ளைகளை அழைத்துப் போகாமல் தாங்கள் மாத்திரம் குறைந்தது ஐந்து கூட்டங்களாக பிரிந்து புறப்படுவார்கள். அவர்கள் இந்தியாமுழுவதும் சஞ்சரித்தாலும், பம்பாய் இராஜதானியும், மத்திய மாகாணமுமே அவர்கள் கிருத்தியங்களுக்கு அதிர்ஷ்டமான இடங்கள். அவர்கள் சந்திரோதயத்துக்கு ஏற்ற மாதிரி இரவை "நிலவு காலம்" என்றும், "கருக்கல் காலம்" என்றும், இரண்டு பிரிவாக்கி யிருக்கிறார்கள். முற்பாகமாகிய நிலவு காலத்தில் பிச்சை எடுக்கப் புறப்பட்டு தருமானவர்களின் வீடுகள் தோறும் சென்று அன்னம் ஆடை முதலியவற்றிற்குக் கெஞ்சிக் கூத்தாடுவார்கள். இது சமயத்தில் தாங்கள் குறிப்பிட்ட வீடுகளை பிற்பாகமாகிய கருக்கல் காலத்தில் கொள்ளையிட ஆரம்பிப்பார்கள். முற்பாகமாகிய ஒரே நிலவு காலத்தில் அவர்கள் 40-50 மைல் தூரமும் கடந்து சென்று குறிப்பிட்ட வீடுகளை வரிசைக் கிரமப்படி கொள்ளையிட்டு பழையபடி திரும்பி விடுவார்கள். மைனாஸ் என்று

சொல்லப்படும் இந்தக் கூட்டத்தார்கள், வட இந்தியாவில் பெரும்பான்மையாய் ஜனங்கள் வெளியில் படுத்து உறங்கும் காலமாகிய கோடை காலத்தில், அவர்களிடமிருக்கும் சாமான்களை அடித்துக்கொண்டு போய்விடுவார்கள். சிலவாகாத திருட்டுச் சொத்துகளை, தாங்கள் தங்கும் இடங்களிலிருந்து ஒருமைலுக்கு ஒரு மைல்தூரத்தில் மண்ணில் புதைத்து வைத்து, கூட்டத்தில் ஒருவன் ஆங்காங்கு காவல் இருப்பான். இவன் பிறர் சந்தேகப்படாமலிருக்க அவ்விடத்தில் சமையல் செய்துக்கொண்டாவது, ஸ்நானம்செய்துக்கொண்டாவது இருப்பான். மைநாஸ் என்றவர்கள் பல விதமான வேஷம் போடுவார்கள். அதில் யாத்திர வாசிகளைப்போல வேஷம் போடுவதே அவர்களுக்கு மிகவும் பிரியம், சில வேலைகளில் பிராமணர்களைப் போலவும் தென்படுவார்கள். பின்னும் ஜயகாலத்தில் தாங்கள் திருடின நகைகளை அணிந்துக்கொண்டு மார்வாரி கோலத்துடன் இருப்பார்கள். சென்னை இராஜதானியில் தென் ஜில்லாக்களில் கள்ளரைப்போல, தங்கள் கூட்டத்தாரை தங்கள் எஜமான் வீட்டில் கொள்ளை யடிக்காமல் தடுக்கும் ஒரு விஷயத்தில் இவர்களை மிகவும் நம்பலாமாதலால், இந்த மைநாஸ் என்றவர்களை, அதிக பணக்கார இந்தியர்கள் அடிக்கடி தங்கள் காவலாளிகளாய் நியமித்துக் கொள்ளுகிறார்கள்.

ஒரு காலத்தில் வேடர்களாயிருந்து, பின் நாடோடிகளாகவும், கன்னக்காரர்களாகவும், கள்ள நாணயம் புதிப்பிப்பவர்களாயும், சிதைந்தவர்கள் அடங்கிய கீழ்தர கூட்டத்திற்கு பௌரியா என்று சொல்லப்படும். இவர்கள் இராஜாக்களிடத்தில் கொலையாளிகளா யிருந்தவர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்களென்று பெருமைபாராட்டுகிறதுண்டு. இவர்களுக்கு மரமணிகள் கோர்க்கப்பட்ட ஆரங்களை அணிந்துக்கொள்ளும் விநோத வழக்கம் உண்டு. இவர்களில் சில உட்பிரிவார், முன்பற்களுக்கு இடையில் பொன் திருகாணியை பதித்திருப்பார்கள். இவர்களில் காலட், பார்வார், கர்த்தர் என்பதாக ஏழு வகுப்புண்டு. இவர்கள் தான் கண்டுபிடிக்கக்கூடாத கள்ள நாணயங்களைச் செய்வார்கள். இது விஷயமாய் அவர்கள் உபயோகிக்கும் அச்சு மிகவும் சாமர்த்தியமானது. இவர்களின் ஒவ்வொரு கூட்டமும், வெளிப் புறப்படும்போது இதரக்கூட்டங்கள் தங்களைத் தொடர்ந்து வரும்பொருட்டு, வழிகள்தோறும் மரங்களில் ஓர்வித அடையாளத்தையாவது அல்லது குறிப்பான இடங்களில் கற்களையாவது வைத்துக் கொண்டே போவார்கள். இந்த பௌரியா கூட்டத்தில் பாட்காஸ் என்னும் ஒரு பெரிய கிளையார் இருக்கிறார்கள். இவர்கள் விசேஷமாய் பைராகிகளைப் போலவும், உள்ளூர் சாமியார்களைப்போலவும் நடிப்பார்கள்; என்றாலும் அவசரமான காலத்தில் வேறு வேஷங்களும் போடுவார்கள். இவர்கள் கூட்டங்களில் இருந்துகொண்டே பக்ஷிகள் விற்கும் குறவர்களாகவும், பலாபலனைத் தெரிந்து சொல்லும் ஜோசியர்களாகவும் பகிரங்கமாய்த் திரிவார்கள். அவர்கள் தாங்கள் செய்யும் களவு முதலிய கிருத்தியங்களுக்குத் துணை செய்யும்படி, அவர்கள் வெயர்த்து இளைக்கக் கூடியவிதமாய் மூதாதைகளைப் பிரார்த்தனை செய்யும் ஆச்சரியமான வழக்கமுடையவர்கள். இவர்கள் கட்டட களவு செய்வதில் கைதேர்ந்தவர்கள். இவர்கள், பொறுப்பான எந்த சாமான்களையும் திருடுவார்கள் என்றாலும் நகைகளையும், பணத்தையுமே முக்கியமாய் அடித்துக்கொண்டு போவார்கள். தமது குழந்தைப் பருவத்தில் இடது மணிக்கட்டில் இரும்பு கம்பியினால் சூடிட்ட மூன்று வடிவு உள்ளவர்களே பாட்காஸ் என்று சொல்லப்படுவார்கள். இந்த வடிவினாலும் தேவாராதனைக்காக அவர்கள் கைவசமிருக்கும் கோதுமைக் களியினாலும் அடிக்கடி கண்டு பிடிக்கப்படுகிறார்கள். இவர்கள் திருட்டு சொத்துக்களை மறைத்து வைப்பதில் மிகவும் சாமர்த்தியசாலிகள். பொன் ஆபரணங்களையும் இரத்தினங்களையும் செருப்புகளிலும், உடைகளிலும் வைத்து தைத்து, மூங்கல் குழாய்களில் அடக்கம் செய்து, அதை லத்திகளாகக்கொண்டு போகிறார்கள். தேவிதுர்க்கை பூசைசெய்யும் பார்திகள் ஷை பௌரீஸ்களில் மற்றொரு வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சௌவான்கள், போடர்கள், சலோங்கள் என்பதாக வகுக்கப்பட்டிருக்கிறார்கள். துர்க்கையை, அம்பா மாரிமாதா, காளி பகவானி என்னும் பெயர்களால் வணங்குகிறார்கள். லங்கோட்டி பார்திகள், பார்திகளுடன் பந்துமுறை கொண்டாடுவார்கள். இவர்கள் கொள்ளையடிக்க துடங்குவதற்கு முன் அவரவர்களின் முக்கியமான தேவதைகளைத் தங்களுக்குத் துணையாகும்படி பிரார்த்தனை செய்துகொண்டு, பிறகுதான் திருட ஆரம்பிப்பார்கள். ஒவ்வொரு லங்கோட்டிகளின் குடிசையிலும் வெள்ளி மாரியம்மன் விக்கிரகம் வைத்து வணங்கப்படுவதால் லங்கோட்டி பெண்களில் ஒருவளாவது இடுப்புக்குக் கீழ் வெள்ளி நகைகளை அணியமாட்டாள். மாரியம்மனுக்குச் சம மட்டத்தில் ஒன்றும் இருக்கக்கூடாதென்னும் காரணத்தால் அவள் துணிகளை சுவரிலாவது, குச்சியிலாவது போட்டு வைக்கமாட்டாள். சௌனு பெண்கள் சாராயத்தையும் குடிக்கமாட்டார்கள். நீரில் வாழும் ஜந்துக்களையும் புசிக்கமாட்டார்கள். லங்கோட்டி ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் ஏககாலத்தில் ஒன்றாயிருந்து போஜனம் செய்வார்கள். ஆனால் பெண்பிள்ளைகள் சாப்பிடுவதற்கு முந்தி ஆண்பிள்ளைகள் சாதத்தைத் தொடவே மாட்டார்கள். இப்படிச் செய்வது பெண்களிடத்திலுள்ள அனுதாபத்தாலுமல்ல, பக்ஷத்தினாலுமல்ல. முன்னொரு காலத்தில் லங்கோட்டி பெண் ஒருவள் சாப்பாட்டில் விஷம்வைத்து புருஷனைக்கொன்று விட்டாள் என்னும் பழங்கதையே இதற்குக்காரணம். அவர்களில் அதிக்கிரமங்கள் நடந்தால் அபராதம் போடுவார்கள். அந்த அபராதமாவது சாராயம். இம்மட்டோ! அதிக்கிரமங்கள் செய்த அந்த ஆணோ பெண்ணோ, தான் அபராதமாய்ச்செலுத்திய

சாராயத்தை சாப்பிடவேண்டியதே தீர்மானம். விபசார குற்றங்களுக்கு குற்றவாளிகளின் இடது காதுகளைக் கீறிவிடுவதுதான் தண்டனை.

ஆத்வ்வியர்கள் எனப்படுவோர், தப்பு நாணயங்களையும், போலி நகைகளையும் செய்து ஜீவிக்கும் ஒரு துர்க்கிருத்திய ஜாதியார்கள். இவர்களை ஜப்பல்பூர், பெனாரஸ் (காசி)-பாட்னா-மாங்கீர்-கல்கத்தா-குவாலியர்-சாகர்-மூர்ஷிதாபாத்-நாக்பா முதலிய பட்டணங்களில் ஏராளமாய்க் காணலாம். ஜீவனத்துக்கு வேண்டிய பிரத்தியக்ஷமான தொழில் ஒன்றும் இவர்களுக்கு இல்லாமலிருந்தும், இவர்களுடைய ஸ்திரீகள் எப்பொழுதும் பொன்காய்த்த மரமாய் இருப்பார்கள். இவர்கள் பயிரிடுவதும் கிடையாது. வியாபாரம் செய்வதும் கிடையாது. எவ்விதம் ஜீவிக்கிறீர்கள்? என்று கேட்டால், பிச்சை யெடுத்துப் பிழைக்கிறோம் என்பார்கள். ஆனால் இவர்களில் பெரிய ஆள்களும், சிற்றாள்களும் மழைகாலத்துக்குச் சிறிதுமுந்தியே புறப்பட்டு வெளிகளில்போய் மழைக்காலம் கழிந்தும் வராமலிருப்பதினாலேயே உண்மை வெளிபாகிறது. இவர்களில் சிலர் பொன் கட்டட வேலையிலும், போகர வேலையிலும் கெட்டிக்காராதலால், தங்களுடைய துர்க்கிருத்தியங்களை ஒழித்துவிடும் பக்ஷத்தில், இவர்கள் யோக்கியமாய்க் காலம் கழிக்கலாம்.

கேய்க்காரர்கள் என்னும் மற்றொரு ஜாதியார் வலைபோட்டு பக்ஷிகளைப் பிடிப்பதிலும், வேட்டையாடுவதிலும் கைதேர்ந்தவர்கள். ஆனால் குரங்குகளைப்பிடித்துப் பழக்குவதும், திருடுவதுமே அவர்களுக்கு ஏற்ற தொழில்களாகக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் போலீசாருக்குச் சிக்காமலிருக்க, ஒரு நிலையில்லாமல் ஒரு இடத்துக்கு ஒரு இடம் மாறிக்கொண்டே, நிலமாகூல திருடிவைத்துக்கொண்டு ஜீவிப்பார்கள். இவர்கள் சமயம் வாய்த்தால் சிறு கட்டட களவுகளும் செய்வார்கள். லவனுக்கள்-பாப்புக்கள் - நாயக்குகள் - துர்க்கியாக்கள் பேட்டுக்கள்-முக்காரிகள்-என பலவகையாய் வகுக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களிடத்தில் சில நூதன வழக்கங்கள் இருக்கின்றன. திருஷ்டாந்தமாக இவர்களின் ஒவ்வொரு குடிசையிலும், பழைய திருடனை மித்து புக்கியாவின் சிலை வைக்கப்பட்டிருக்கும் பிரத்திபேகமான இடம் ஒன்று உண்டு. இதற்கு முன்பாக வெள்ளைக்கொடிகட்டிய மூங்கில் ஒன்று புதைக்கப்பட்டிருக்கும். பழந் திருடனின் சிலையை வணங்கியவுடன், தங்கள் உதவிக்காகக் கோறும் விஷயங்களுக்கெல்லாம் பதில் அளிக்கப்படுமாம். கொள்ளையிட நாடியிருக்கும் கள்ளர்களெல்லாம் ஒன்றாகச்சேர்ந்து ஷை இடத்திற்கு வந்து, மித்து புக்கியாவிடத்தில் தங்கள் நாட்டத்தை இரகசியமாய்ச் சொல்லுவார்கள். அது சமயத்தில் அங்கு நெய்விட்டு எரியும் விளக்குத்திரி ஏதோ ஒருபுரமாய் சாய்ந்தால், அவர்கள் கிருத்தியங்களுக்கு ஆரம்பிப்பார்கள். இல்லையானால், சிறிது காலத்திற்கு நிறுத்திவிடுவார்கள். இவர்கள் கொள்ளையடிக்கப் போகும் காலங்களில் ஒருவரும் வாயைத்திறக்கவாவது, குசுகுசு என்று பேசவாவது கூடாது. பின்னும், இது சமயத்தில், ஒருவன் தும்பினால், பிரதிகூலம் விளைவிக்கும் கெட்ட சகுனம் என்று கூட்டம் முழுவதும் தங்கள் குடிசைக்குத் திரும்பிவிடும்.

பெயர்போன சான்கியா வகையராவைச் சேர்ந்த ஓர் கிளையாகிய குஞ்சர்கள் மிகவும் சீர்கேடானவர்கள். ஆடவர்கள் திருட்டிலும் பெண்கள் விபசாரத்திலும் பெயர்போனவர்கள். இவர்கள் ஓபாக்குடியர்கள். அபரிமிதமாய் கொள்ளையிடும் சில காலங்களில் அளவு கடந்தும் குடித்துவிட்டு தலைகால் தெரியாமல், ஒருவரை ஒருவர் கொல்லக்கூடிய அவ்வளவு சண்டையிட்டுக் கொள்ளுவார்கள். இந்த ஜாதியாரைச்சேர்ந்த ஒருவகையாகிய பேரியாஸ் என்பவர்களும் ஹாபுராஸ் என்பவர்களும் நரசோரம் செய்கிறதன்னியில், சில சமயங்களில் தன் சொந்த குழந்தைகளையே, தங்களிலும் தாழ்ந்த ஜாதியாருக்கு விற்றாவது அடிமைப்படுத்தியாவது, பணம் வாங்கி ஜீவிக்கிறவர்கள். பாசி கூட்டங்களும், கொள்ளையடிப்பவர்களே. அவர்கள் ஒன்பது வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் மற்ற கூட்டங்களைப்போல் ஊரூராய்த் திரியாமல், மிகவும் அநாகரீகமான குக்கிராமங்களில் வசித்து, பன்றிகளை மேய்த்தும், பன்றி இறைச்சிகளை விற்றும் காலம் கழிப்பார்கள். ஆனால் சிறிய களவுகள் செய்யப் பிரியப்படுவதில்லை. பாஞ்சாராக்கள் என்னும் நிலையற்றுத் திரியும் மற்றொரு சாதியார் அநேக பிரிவுகளாக இருக்கிறார்கள். அவர்களில் சிலர் மகம்மதியர்கள்; சிலர் இந்துக்கள் லாவானஸ், பாரப்நாய்க்ஸ், என்று சொல்லப் படுபவர்கள் எல்லாம் இந்துக்கள். துர்க்கியா, போய்ட், முகேரி என்று சொல்லப் படுபவர்கள் எல்லாம் மகம்மதியர்கள் தென் இந்தியாவில் இவர்கள் சாரான்கள் என்றும், மூத்திரிகள் என்னும் லாம்பாரனி என்றும் சொல்லப்படுவார்கள். இவர்கள் பழம் பெருச்சாளியாகிய மித்து பூக்கியா என்னும் சிலையை வணங்குவார்கள். சிவ பாயாயையும் மாரியாயையும் வணங்குவார்கள். இவர்களில் சில சாதியார் ரிஷபத்தையும் வணங்குவதுண்டு. வர்ணத்துணிகளால் அலங்கரிக்கப்பட்டு கடவுளாக பாவிக்கப்படும் ரிஷபத்துக்கு யோக காலம் என்றே சொல்லவேண்டும் இவர்களில் அனேகர் வர்த்தகம் செய்கிறார்கள். உப்பு, ஜவுளி இவைகளை தேசத்துக்குள்ளாக அநேக மைல்தூரம் சுமந்து சென்று நல்ல வியாபாரம் செய்வார்கள். காஞ்சார்கள் என்று சொல்லப்படும் ஜாதியார், டெக்காணிலும், தென் இந்தியாவிலும் ஏராளமாய்ப் பரவியிருப்பதைக் காணலாம். முன் காலத்தில் இந்த ஜாதியிலிருந்துதான் தக்ஸ் என்பவர்கள் புதிதாக ஏற்பட்டார்கள். இவர்கள் குழந்தைகளை அதிகமாய் தூக்கிக்கொண்டுபோய் விடுவார்கள், இத்துடன் பல வித களவு செய்வதிலும், கொள்ளை யடிப்பதிலும் பிரீதி யுற்றவர்கள் அல்ல. காஞ்சார்களின் ஸ்திரீகள் நீண்ட சாரியையும், கை

கள் நீண்ட சட்டைகளையும், உடுத்திக் கொள்வதினுலும், எப்பொழுதும் இடது மூக்கில் பொன் நத்து அணிந்திருப்பதாலும், காஞ்சார்கள் என்று எளிதில் தெரிந்து கொள்ளலாம். அவர்களின் குடிசைகளில் கழுதைகள் இருப்பதும் அவர்கள் காஞ்சார்கள் என்பதற்கு ஓர் அடையாளம். இவர்கள் ஓயாக் குடியர்களாய் இருப்பதன்னியில் சாராயம் இல்லாமல் சிறிது நேரமும் இருக்கமாட்டார்களாதலால் இவர்கள் செய்யும் துர்க்கிருத்தியங்கள் எளிதில் கண்டு பிடிக்கப் படுகின்றன. மிஸ்டர்-கேயர் தெரிவிக்கும் இதர ஜாதியார்கள், ஊரூராய்த்திரிந்து கொள்ளை யடிக்கும் காயோடாக்கள், ஸான்ஸிகள் ஹாபுராக்கள் ஆகிய இவர்களும் திருடியும், மற்றும் அயோக்கிய விதமாய் ஜீவனம் செய்யும் மாக்துகளும் டாமுகளும், பஞ்சாபியிலிருக்கும் மநறமத்திய ஜாதியாராகிய ஹார்ணிகளும், கால் நடைகளைக் கொள்ளை யிட்டும் அவைகளின் தோலுக்காக விஷம் வைத்துக்கொன்றும் ஜீவிக்கும் ஏராளமான இதர சிறிய கூட்டங்களுமேயாம்.

WHETHER THE ADOPTION OF A MINOR GIRL BY A DANCING GIRL, IS VALID ?

ஒரு தாசியால் எடுத்துக்கொள்ளப்படும் மைனர்ப் பெண் சுவிகாரமானது செலாவணி யாகுமா ?

கடந்த ஜனவரி௴ 4௳ பெங்களூர் ரெசிடண்ட் கோர்ட்டில், தலைப்பில் கண்ட கேள்வியே முக்கியமான இஷ்யூ வாகக்கொண்டு தீர்ப்பு சொல்லப்பட்டது. கேசின் சாராம்ஸமாவது.—ஒரு தாசிக்கு நான்கு சகோதரிகள். அந்த தாசி ஒரு மைனர் பெண்ணை சுவீகாரம் எடுத்துகொண்டாள். ஷை சகோதரிகளில் ஒருவளுடைய சந்ததியார் அப்பீல் தார்கள். பிரஸ்தாப சுவீகாரமானது நீதி தவறுனதும், உலக விவகாரத்துக்கு விரோதமானதுமா யிருத்தலால், அது செலாவணி யல்லவென்பது அப்பீல் தாவா. இது விஷயமானது மெஸ்ஸர்ஸ் யல். ஸ்ரீனிவாஸ அய்யங்காராலும், லக்ஷ்மண ஜௌதா அவர்களாலும் விஸ்தாரமாய் வாதிக்கப்பட்டது. கடைசியாக ஹானரபில் ரெசிடண்ட் அவர்கள், வாதிக்கப்பட்ட ஒரு விஷயத்தை யாகிலும் விட்டு விடாமல் தழுவி, வாசு மகோசரமாய் தீர்ப்பு சொன்னார்.

தாசிகள் எடுத்துக்கொள்ளும் சுவீகாரமானது சட்ட பொருத்தமான தென்றும் சிலாவணியானதென்றும், ஒப்புக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்கள் விஷயமாய் தென் இந்தியாவில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் சட்டத்தை தெளிவாய் காட்டப்பட்டிருக்கும் மதிராஸ் ஹைக்கோர்ட்டு தீர்மானங்களை சுட்டிக்காட்டி,—தாசிகள் எடுத்துக்கொள்ளும் சுவீகாரமானது குழந்தைகளை இளமையிலேயே அபகீர்த்தியான வாழ்க்கைக்கு உட்படுத்துவதால், அது கோர்ட்டாரால் சட்ட பூர்வமாய் அங்கீகரிக்கப் படாதென்றும், பின்னும் சுவீகாரம் புகுந்தவனுக்கு யாதொரு சுதந்தரமும் கொடுக்கப்படாதென்றும் இ. லா ரி. பம், 545-ல் தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கும் ஜஸ்டிஸ் வெஸ்ட் (West J.) டின் அபிப்பிராயத்தை ஒப்பவில்லை. ரிகார்ட் (அதாவது பதிவு) செய்யப்பட்ட கேசு ஒன்றில் கண்ட மதராஸ் ஹைக்கோர்ட்டு ஜட்ஜிகளில் ஒருவராகிய காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ ஜஸ்டிஸ் முத்துசாமி அய்யர் அவர்களின் அபிப்பிராயத்தை அனுசரித்தார். (ஷை அய்யர் அவர்களின் திருவுருவப்படமும், ஆயுள் சரித்திரமும் நமது இந்திய சட்ட கெஜெட், வால்யம் 2, பாகம் 3-ல் பதிப்பிக்கப்பட்டிருப்பதை காணலாம்.)

அந்த அபிப்பிராயமாவது பின் வருமாறு:—

The Dictum of the late Mr. Justice Muthusawmy Iyer.

OF THE MADRAS HIGHCOURT.

"The Indian Penal Code contains no provision which expressly prohibits adoption by dancing girls or others. Section 372 of the Code only enacts that a minor should not be sold, let out on hire or other-wise disposed of, for immoral purposes. The act prohibited is the disposition of the minor for purposes of prostitution and the reason of the prohibition is the protection of the chastity of girls under 16 years of age. Taking it then that the rule of public law contained in Section 372 contests the private law and is an index of public policy, the further question arises, whether it operates to prevent a dancing girl from adopting a daughter altogether, or to prevent her only either from prostituting or from entering into a contract for prostituting the adopted daughter so long as she is under 16 years of age. Adoption, as recognised by Hindu law, is allowed partly for continuing the family and partly for securing a person competent to perform the funeral obsequies of the adoptive parents and to take their property, which should not, therefore in the case of dancing girls, be confounded with prostitution, which is neither its essential condition or an accessary consequence.

"தாசிகளாலும் அல்லது மற்றவர்களாலும் எடுத்துக் கொள்ளப்படும் சுவீகாரத்தை பரீஷ்காரமாய் தடுக்கக் கூடிய யாதொரு ஆதாரமும் இந்தியன் பினல் கோடில் சொல்லப்படவில்லை. ஷை இந்தியன் பினல் கோட் 372-வது செக்ஷனுனது மைனரை நீதி தவறுன காரியங்களில், ஊதியத்துக்காவது அல்லது மற்றெந்த காரணத்துக்காவது விடக்கூடாதென்றும் விற்கக்கூடாதென்றும் நிரூபிக்கிறது. விபசார செய்கைகளுக்கு மைனர்களின் நியமிப்பை சட்டமானது தடுக்கிறது. அப்படி தடுப்பதின் காரணம் 16 வயதுக் குட்பட்ட பெண்களின் கற்பை காப்பாற்றும்பொருட்டே ! எனவே, 372-வது செக்ஷனில் அடங்கியிருக்கும் விதியானது சாமானிய சட்டத்தை தடுத்து ராஜ நீதியின் சூசிகையானதென எடுத்துக்கொள்வதால், அது — இதர பெண்ணை ஒதி தாசி சுவீகாரம் எடுத்துக் கொள்ளுகிறதை தடுக்கச் செய்கிறதா ? அல்லது, தான் சுவீகாரம் எடுததுக்கொண்ட 16-வயதுக் குட்பட்ட பெண்ணை, அவள் விபசாரப் படுத்துவதை யாவது விபசார ஒப்பந்தத்திற்கு முயற்சிப்பதை யாவது தடுக்கச் செய்கிறதா ? என்னும் கேள்வி யுண்டாகிறது. ஹிந்துலா அங்கீகரித்தப்படி குடும்பத்தை விர்த்திக்குகொண்டு வருவதற்காகவும், சுவீகாரம் எடுத்துக்கொண்ட பெற்றோருக்கு உத்திரகிரியை முதலியன நடத்துவதற்காகவுமே சுவீகாரம் ஏற்பட்டிருக்கிறது. அப்படி யிருக்க, தாசிகள் விஷயத்தில் மாத்திரம் விபசார நிபந்தனையாவது அல்லது அதற்கு உடந்தையான காரியமாவது இல்லாத சுவீகாரத்தை விபாசரத்திற் கென்று (ஒன்றை வேறென்ருக நினைத்து) பிரம்மிக்கக்கூடாது."

இந்த அபிப்பிராயததை கலந்து பிரஸ்தாப கேசின் விஷயங்களையும் கவனித்தால், தன் குடும்பத்தை நிலை நிறுத்தும் பொருட்டும், தன் சொத்துக்கு வாரசு ஏற்படுத்தும் பொருட்டும் சுவீகாரம எடுத்துக்கொண்டதாக ஊகிக்க வேண்டியதாதலால் சுவீகாரமானது செலாவணியான தென்றும் அப்பீல் தாருக்கு சொத்தில் யாதொரு ஹக்கும் கிடையாதென்றும், அப்பீல் தள்ளப்பட்டது. பின்னும் பிரதிவாதியின் கோர்ட் காஸ்டை கட்டி கொடுக்கும்படி தீர்ப்பு சொல்லப்பட்டது.

MISCELLANEOUS SUITS.

சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.

மதராஸ் ஹைகோர்ட்.

ஜட்ஜிகள் :—சீப் ஜஸ்டிஸ்,

மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

தற்காப்பின் சுதந்திரம்.

பாரிஸ்டர் மிஸ்டர் ரிச்மண்ட் மரணஹேதுவான ஆயுதபாணிகளாய்க் கலகம் விளைத்துச் சிலரைப் படுகாயப்படுத்தியதாய் குற்றஞ் சாட்டப்பட்டு நெல்லூர் டிப்டி மாஜிஸ்திரேட்டு அவர்கள் ஆறுமாத, மூன்றுமாத கடினகாவல் தண்டனையடைந்து அப்பீலிலும் நெல்லூர் செஷன் கோர்ட்டாரால் தண்டனை உறுதி படுத்தப்பெற்ற கடமரெட்டிக்காகவும், ராமச்சந்திர ரெட்டிக்காகவும் வேறுநால்வர்களுக்காகவும் ஆஜராகி கிரிமினல் ரிவிஷன் மனுவை ஏற்றுக்கொள்ளவும் (Admit) குற்றவாளிகளை ஜாமீன்பேரில் விடுதலைசெய்யவும் மனுகொடுத்தார்.

கேசின் விபரம்:—மூன்ருவது குற்றவாளியும் மற்றையோரும் டிரிமர்லா ஏரியில் மீன்பிடிக்கும் சுதந்திரம் வகித்திருந்தனர். இவர்கள் டிரிமர்லா விவசாயிகள். அந்த ஏரியில் திருட்டுத்தனமாய் மீன் பிடிக்கின்றனரென்று அனுமானித்து அதைத் தடுக்குமாறு மூன்ருவது குற்றவாளிக்கு சொந்தமாகிய துப்பாக்கி யொன்று கைக்கொண்டு சென்ற அக்டோபர்௴ 12௳ இரவு மேற்கூறிய ஏரிக்குச் சென்றதும் மீன் பிடித்திருந்த விவசாயிகளுக்கும் இவர்களுக்கும் ஏரிக்கரையில் நடந்தேறிய அபரிமிதமான கலகத்தில் குற்றவாளிகளின் தரப்பார் வெடி தீர்க்க எதிரிகளுள் இருவருக்கு காயம் பட்டது.

மிஸ்டர் ரிச்மண்ட்—செஷன் ஜட்ஜி அவர்கள் வாதிகளின் (விவசாயிகளின்) தரப்பார் குற்றவாளிக்குச் சொந்தமாகிய மீன்களைத் திருடிக் கொண்டிருந்தனரென்பதை ஆராய்ந்துணர்ந்ததாலேயே குற்றவாளிகள் தற்பொருள் காப்பிற்குறிய சுதந்தரர்களாவார்களென்றும் எதிரிகளின் பலத்தை யொடுக்கியேனும் தம் பொருளைக் காப்பாற்றிக்கொள்ள குற்றவாளிகள் முயன்றது ஞாயமாகுமென்றும் போலீசாரின் உதவிபெற அது தருணமாயிருந்ததில்லை யென்றும் போலீசாரைத் திரட்டிப் போவதற்குள் மீன் திருடிகள் காரியானுகூலத்துடன் ஓடிப்போவார்களென்கிற காரணத்தை முன்னிட்டு அதி தீவிரமாய்ச் செல்ல நேர்ந்ததென்றும் செஷன் ஜட்ஜி அவர்கள் தற்பொருள் காப்பின் செய்கையில் குற்றவாளிகளுக்குண்டான சுதந்தர விஷயமாய்க் கொண்ட அபிப்பிராயம் தவரான தென்றும் வாதித்தார். அதன் பேரில் ஹைகோர்ட் ஜட்ஜிகள் அவருடைய மனுவை ஏற்றுக்கொண்டு மூன்ருவது குற்றவாளியை அவன் எழுதித்தந்த 500 ரூபாய் பத்திர ஜாமீனேடும் தலைக்கு 500 ரூபாயாக இரண்டு நபர் ஜாமீன்கள் பேரிலும் மற்றவர்களை அவர்கள் தனித்தனியாய்த் தலைக்கு 100 ரூபாய்க்கு எழுதிக்கொடுத்த ஜாமீன் பத்திரங்கள்பேரிலும் விடுதலை செய்யும்படி உத்தரவு செய்தார்கள்.

டவுன் போலீஸ் கோர்ட்.

மிஸ்டர் ஜெ. ஆர். கூம்ப்ஸ் துரைக்கு முன்.

குறும்பனுகிய கப்பற் சுயம்பாகி.

ப்ளாக் வெல் புகைக் கப்பலின் சுயம்பாகியாகிய எல். எப். அலெக்ஜாண்டர் கொளம்புக்கும் சூயஸுக்கும் இடையிலுள்ள நடுச் சமுத்திர பிரயாண காலத்தில் கீழ் படியாமைக்காகவும், அவதூரு வார்த்தைகள் புகன்றதற்காகவும் குற்றஞ் சாட்டப்பட்டான்.

குற்றவாளி கப்பல் உக்கிராணியின் உத்திரவை மீறி நடந்ததாயும் அவர் எதிர்த்ததின்பேரில் வைததாயும் வாக்குமூலம் கொடுக்க, குற்றவாளி அதை மறுத்தும் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் அவன் குற்றவாளியே யென்றறிந்து இரண்டுவாரக் கடினகாவல் விதித்தனர்.

எழும்பூர் போலீஸ் கோர்ட்.

மிஸ்டர்:—எப். டி. பர்ட் துரையின் முன்.

தந்தியிலாகா உத்தியோகஸ்தனின் மோசம்.

மதராஸ் ஸிடி போலீஸ் இன்டெலிஜென்ட் டிபார்ட் மெண்டு இன்ஸ்பெக்டராகிய மிஸ்டர் எஸ் பவானந்தம் பிள்ளை சென்ற 25௳ துரைசாமி அல்லது சுப்பிரமணிய செட்டி என்பவன் மேல்.

(1) மோச எண்ணத்துடன் தப்பு கையொப்பம் செய்யும் போர்ஜரி கையொப்பமிட்டது.

(2) இன்டியன் பினல் கோட் 468,419,420-வது பிரிவுகளின் பிரகாரம் குற்றத்திற் குள்ளாகும் ஆள்மாற்றம் செய்தது.

ஆகிய இரண்டு குற்றங்களைச் சுமத்தி எழும்பூர் தலைமை மாஜிஸ்ட்ரேட் முன் இரண்டு குற்றப் பத்திரங்கள் கொண்டுவந்தார்.

மோசத்தின் விவரமாவது.

ஜனவரி௴ 1௳ அண்ணமலை செட்டி என்பவர் தந்தி மணியார்டர் மூலமாய் ரூபாய் 200 அனுப்பும்படி கோயம்புத்தூர் வாசியாகிய அப்பு அய்யருக்குக் கொடுத்த தந்தியொன்று வேப்பேரி போஸ்ட் ஆபிஸாரால் கோயம்புத்தூருக்கு அனுப்பப்பட்டது. அப்பு அய்யர் அவ்வாரே சென்ற ஜனவரி௴ 3௳ வேப்பேரிக்கு ரூபாய் 200 அனுப்பினர். தந்தி மணியார்டர் மூலமாய் ரூபாய் 200 அனுப்ப கோயம்புத்தூர் வாசியாகிய வெளிங்க கவுண்டனுக்கு பள்ளணசாமி கவுண்டன் கொடுத்த மற்றதொரு தந்தியும் வண்ணு

ரப்பேட்டை போஸ்ட் ஆபீஸாரால் கோயம்புத்தூருக்கு அனுப்பப்பட்டது. வெளிங்க கவுண்டன் ரூபாய் 100 அனுப்பினார்.

இவ்விரு தொகையையும், கோயம்புத்தூர் போஸ்டாபீஸ் உத்தியோகஸ்தனாகிய குற்றவாளி அதிகாரிகளை ஏமாற்றிக் கைவசப் படுத்திக்கொண்டு மறைந்தனன். இந்த உண்மை வெளிப்பட்டதும் போஸ்டாபீஸ் அதிகாரிகளின் அறிக்கையின்பேரில் குற்றவாளி கோயம்புத்தூர் ஷிடி போலீஸாரால் அவ்வூரிலேயே கண்டு பிடிக்கப்பட்டான்.

மாஜிஸ்ட்ரேட் விசாரணையை தள்ளி வைத்திருக்கின்றார்.

கைம்பெண்ணின் விவாகம்.

சொற்பதினங்களுக்கு முன் கல்கத்தா ஹைகோர்ட் ஜட்ஜ் ஜஸ்டிஸ் அஷ்டடாஷ முக்கர்ஜி அவர்களின் புதல்வியாகிய பால விதந்துவின் புனர் விவாகம் ஆக்ஷேபனை சமாதானங்கள் முறையே நடை பெற்றதாம்.

எப்படியென்றால்; ஜட்ஜ் அவர்கள் தனது புதல்விக்குத் திருமணஞ்செய்ய அவர் கொண்ட தீர்மானத்தை யறிந்த அப்பெண் மணியாருடைய (காலஞ் சென்ற) முதல் மணாளனின் உற்றார் பெற்றார் அவ்வாறு செய்தல் அடுக்காதென்று தடிக்க ஜஸ்டிஸ் அவர்கள் கவனியாதிருக்கவே அவர்கள் அலிப்பூர் ஜில்லா ஜட்ஜிடம் அந்த விவாக சம்பந்தத்தில் தங்களுக்குச் சில ஆக்ஷேபனைகளிருப்பதால் அவ்விஷயமாய் கோர்ட்டார் தீர்மானம் கிடைக்கும் வரையில் விவாகத்தை நிறுத்திவைக்கவேண்டுமென்னும் விவரமடங்கிய விண்ணப்பமொன்று கொடுத்தனர். ஜட்ஜி அவர்கள் மனுவில் கண்டவாறு விவாகத்தை நிறுத்தத் தீர்மானிக்குந் தருணத்தில் பிரதிவாதியாகிய ஜஸ்டிஸ் அவர்களிடம் வக்காலத்து பெற்ற டாக்டர் ராஷ்விகாரிகோஸ் அன்றிரவே விவாகம் நடைபெறப் போவதால் வாதிகளின் ஆக்ஷேபனை காலதாமதமானதென்றும் விவாகத்திற்காக வேண்டிய பலவும் சித்தமாயிருக்கும் அந்த சமயம் நிறுத்துதல் பொருந்தாதென்றும் தூங்கின நேரம் தூங்கிக் கலகம் ஓங்கி வளர்ந்தபின் தடியொன்று தாங்கிவந்த கதையாய் அடி நாளெல்லாம் படுதுயில் கொண்டிருந்து எல்லாம் படிந்த இந்த சமயம் ஆக்ஷேபிக்க முன்வந்தது ஞாயமல்லவென்றும் வாதிக்க ஜில்லா ஜட்ஜ் அவர்கள் ஷெ விண்ணப்பத்தைத் தள்ளிவிட்டார். விவாகம் குறித்த காலத்தில் ஜாம்ஜாமென்று நடத்தப்பட்டது. இஷ்ட ஜன குடும்ப வர்க்கத்தார் நூற்றுக் கணக்காய் விஜயம் செய்து விவாகத்தை சிறப்பித்தது மன்றி யுதிட்டிரரிழைத்த ராஜசூயம் எனப் புகழ்ந்து மகிழ்ந்தனர். அம் மஹோற்சவம் நடைபெற்ற சீரை எமது நண்பரொருவரின் லிகிதத்தால் அறிந்த யாமும் ஆனந்தாப்தியில் மூழ்கினோம். ஆனால் நமது ஜட்ஜ் அவர்களின் முதற் சம்பந்தி வர்க்கத்தாருக்கு மாத்திரம் வெறுப்பாயிருந்தது; ஏனோ? இளம்பிராயத்தில் விதந்துவாகிய ஓர் பெண்ணிற்கு புனர்விவாகம் முடிக்கவாவது மற்றையோர் முடிக்க எண்ணுவதைத் தடுக்கவாவது பெற்றோர்கள் அதிகாரிகளா? அல்லது காலஞ்சென்ற புருடனின் குடும்பத்தார் அதிகாரிகளா? எது சட்ட சம்மதம் என்பதைப்பற்றி இவர்கள் சிந்தித்துக் கொண்டிருக்க விவாகம் நடந்தேறி விட்டபடியால் இனிமேல் வியாஜ்ஜியம் நடக்காதென்று நம்புகின்றோம்.

கனவான்களே! இது விஷயத்தைப்பற்றி யோசிக்குமிடத்து அதிமேதாவியும் தருமப் பிரபுவுமாகிய திவான் பகதூர் ரகுநாதராவ் சபாரஞ்சன வாக்விலாசராகிய மி-ர் எ. சி. பார்த்தசாரதி நாயுடு முதலாயர் விதந்து விவாக விஷயமாய்ச் செய்துவரும் நன் முயற்சிகள் யாவும் இப்பொழுது தான் அங்குமிங்கும் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பலன்பெற்று வருகின்றனவென்றே சொல்ல வேண்டியவர்களாகின்றோம்.

லௌகீகம் இத்தகைய தென்பதை யுணரா அதிபால்ய திசையிலேயே ஆளரைப் பறி கொடுத்த பெண் மணிகளுக்கு புனர் விவாகம் நடத்திவைத்தல் இன்றியமையாததென்று மேற் குறித்த உபன்யாசகர்கள் உறைப்பதெல்லாம் பொய்யா. ஐயோ எல்லா உண்மையையும் நன்குணர்ந்த பெரியோர் தத்தம் புத்ரிகாரத்னங்களை அவர்கள் இவ்வுலகிலுய்யுமளவும் ஆழ்த்திவைப்பது தருமமாகுமா? புனர் விவாகம் உத்தமலக்ஷணத்திற்கு சுத்த விரோதமானதும் மதிப்புக் கிடமானது மேயாயினும் சித்த பேதத்தால் ஹத்து மீறிவிட்டார்களானால் அதனிலும் பத்தத்தனை பழி வந்து சாருமே.—புனர் விவாகம் செய்யக் கூடாதென்கிற தீர்மானத்தையே கடைப்பிடியாய்க் கொண்டால் முன்னால் கொண்டிருந்த உடன் கட்டையேறல் என்னும் கொள்கையை யனுசரிப்பதே முக்கியமானதாகும். காருண்ய கவர்ன்மெண்டாரால் அது விலக்கப்பட்டிருக்கும் இக்காலத்தில் புனர் விவாகம் அத்யாவஸ்யமானதே. பாலப்பெண் தன் வாலைப்பருவத்தில் சபலசித்தத்தினராய்க் கவலைக் குள்ளாவதினும் தரும சாக்ஷியாய் ஒருவருக்கு வாட்கைப்பட்டு க்ருஹஸ்த ஆஸ்ரம தர்மத்தைச் சரிவர நடத்திவருவது மேலானதாகாதோ! சத்திய பரிபாலனம் செய்தவர்களாகும் சந்திர சூரிய வம்சாதிபதிகளின் உத்பவம் எவ்வகைத்து வேரறுக்கப்பட்ட க்ஷத்திரிய குல மடந்தையர் வம்ச விர்த்திக்காக இயற்றிய கருமம் தருமமே யென்று சாற்றப்பட்டிருக்கக் குலப்பெயர், குடிப்பெயர், கோத்திரப்பெயர் முதலியன கெடாமலிருக்கவும் ஸ்திரி தருமம் நிலை பெறவும் நடத்திவைக்கும் பாலிகாபுனர் விவாகம் எவ்விதம் ஞாயமற்றதாகும் ஒன்றினு மற்றொன்று மேலான தென்றாயின் அப்படிப்பட்ட கருமம் செய்தலே நன்றாம். இப்பொழுது கல்கத்தா நகர் ஜட்ஜ் அவர்கள் செய்தது எவ்வளவு மேலான

காரியம். தருமா தருமத்தை ஆராய்ந்தறிந்து நீதிசெய்ததும் அதிபராகிய இவர் நாம சமான ரஹிதமென்று கொண்டாடப்பட வேண்டியவரல்லவா இந்த மாஹான் செய்த காரியம் இனி எல்லோரும் வழிபடுதற்கும் ஓர் ஆதாரமாயிருக்குமென்று நம்புவதுடன் மணமகள் குண நிதிகளென்று உலகோர்புகழ் நெடிது வாழ்க.

பம்பாய் கோர்ட்டுகளுள் ஒன்றிலோர் சம்பவம்.

மிஸ்டர் க்ராபோர்ட் துரையவர்கள் அத்துமீறியதாய்க் கொள்ளப்பட்டது. பம்பாய் சிவில் செர்விஸிலிருந்து விலகியவராகிய மிஸ்டர் க்ராபோர்ட் துரையவர்கள் எஸ்ப்ளனேட் போலீஸ் கோர்ட்டில் தன்னுடைய பூனையைக்கொல்லுமாறு மிஸ்டர் ப்ராட்டன் துரை அவருடைய நாயை ஏவியதாகிய குற்றங்கூறும் விண்ணப்பமொன்று தந்தார். மாஜிஸ்திரேட் அவர் அவ் விண்ணப்பத்தைக் கவனித்திருக்குந் தருவாயில் மி-ர் க்ராபோர்ட் சாக்ஷிகள் நிற்பதாய் அவர்கள் ஸ்தானங்கள் சேரக் கேட்டுக்கொண்டனர்.

மாஜிஸ்ட்ரேட் அவர்கள் விண்ணப்பத்திற் கண்டவைகளை வாசித்துப் பார்த்து எந்த சட்டப்பிரிவை ஆதாரமாய்க்கொண்டு மிஸ்டர் ப்ராட்டன் துரையைக் குற்றவாளியாக்கி இவ்விண்ணப்பம் கொடுக்கப்பட்டதென்றார்.

மிஸ்டர் கிராபோர்ட் :—அந்தத் தவறு ஓர் ப்ரமாதமானதல்லவே?

மாஜிஸ்திரேட் :—பூனைகளை எதிர்ப்பதானது நாய்களின் சுபாவமல்லவா?

கி. அஃது சகஜமேயாயினும் அவைகள் அவ்விதம் செய்யலாகா தென்பதற்கும் சட்டமிருக்கின்றது. போலீஸ் சட்டமும் அச்செயலிற் கிடங் கொடுக்கிறதில்லை.

மா. எந்தப்பிரிவை ஆதாரமாய்க் கொண்டீர்?

கி. அங்கு வீற்றிருந்த கோர்ட் காரிய நிர்வாகிகளை நோக்கி சமீபகாலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள போலீஸ் சட்டங்கள் பலவற்றில் தனது வார்த்தையை யுறுதிப்படுத்தும் சட்டமொன்றை ஞாபகத் திருத்தியுள்ளவரெவரேனு மிங்குண்டோ வென்று வினவினர்.

இன்ஸ்பெக்டர் காக்ஸன் 118-வது பிரிவு இந்த வழக்கிற்கு உறித்தானதாகும்.

மாஜிஸ்திரேட் மிஸ்டர் கராபோர்டை நோக்கி குற்றவாளி தனது நாயைத் தமது பூனையை எதிர்த்து ஹிம்சிக்க ஏவியதாய் எவ்வாறு நிரூபிப்பீர்?

கி. அதை எனது விண்ணப்பத்தில் விசிதமாய்க் காட்டியிருக்கின்றேன்.

மா. குற்றவாளி நாயைப் பூனையின்மேல் ஏவக்காணப்பட்டதாய்ச் சொல்லுகின்றீரல்லவா?

கி. அவரே தனது நாய் ஓர் பூனையைப் பிடித்திருந்ததாய்ச் சொல்லினர். அந்தப் பூனைதான் என்னுடையது.

மா. அங்ஙனமாயின் குற்றவாளி பூனையின்மேல் நாயை ஏவியதை நிரூபிக்க யார் சாக்ஷி?

கி. நடந்ததையெல்லாம் பார்த்திருந்த எனது புதல்வியே அதை நிரூபிக்க முன்வருவாள்.

மா. இந்த மனுவை ஏற்றுக்கொள்ளேன்.

கி. தாங்கள் நிராகரித்தால் இக்ஷணமே ஹைகோர்ட்டில் தாவா செய்வேன்.

மா. நீர் எந்தக் கோர்ட்டிற்கு போனாலும் சரி.

கி. இது விஷயத்தில் தம்முடைய தீர்மானத்திலும் மேன்பாடாகிய பொது ஜன மனோபாவத்தை வேண்டலாமல்லவா? நானே முப்பத்தைந்து வருடகாலம் ஞாயாதிபதியாயிருந்தவன். எந்நாளும் இப்படி யெவராலும் நடத்தப்பட்டவனல்ல. இனிமேலும் இங்ஙனம் நடத்தப்படமாட்டேனென்பது திண்ணம் என்னைக் கைதி செய்யும் சக்தி தமக்குண்டெனின் அல்லது அத்தகைய துணிவு ஏற்படுமாயின் செய்யலாம்.

மா. ஓர் ஜீவஜெந்துவை ஹிம்சிக்க நாயை ஏவியதை நிரூபிக்க சாக்ஷியுண்டோவென்பது தானே தம்மைக்கேட்ட கேழ்வி?

கி. நான் சிறிது நேரத்திற்கு முன்தானே அச்செய்கையைப் பார்த்திருந்தவளாகிய எனது புதல்வியே அதற்கு சாக்ஷியாவாள் என்று சொல்லியிருக்கின்றேன் நான் அக்கேள்விக்கு விடையளிக்க இயலாது. எனது விண்ணப்பத்திற் கண்டுள்ளதனைத்தும் அவள் கண்ணாரக்கண்டு மனமிடிந்து சொன்னவார்த்தைகளே யாகும். அதற்குமேல் நானொன்றும் சொல்லமுடியாது.

இம்மட்டாக மாஜிஸ்ட்ரேட் விண்ணப்பத்தைக்கவனித்திருந்தனர். சாக்ஷிப்பெட்டியிலிருந்த மிஸ்டர் கிராபோர்ட் அப்பெட்டியின் கிராதித் தலைப்பில் முடிசாய்த்தார், துரையின் தளர்ச்சியைக்கண்ட சில போலீஸ் உத்தியோகஸ்தர் அப்பெட்டியை யணுகித் துரையை யோர் நாற்காலியிலமர்த்திப் பருகத்தண்ணீர் கொடுத்தனர். சிறிது ஆயாசந்தீர்ந்ததும் மிஸ்டர் கிராபோர்ட் நான் நோயாளி, துர்பலன் மற்றெக் கோர்ட்டிலும் ஓர் நாற்காலி கொடுக்கப்பெற்றிருப்பேன். இக்கோர்ட்டாரும் என்னை யுபேக்ஷித்தனர் (சற்று நிதானித்து) பிரியமாயின் நீர் புன்னகை புரியலா மென்றார்

மா. உமது நரைத்த சிகைக்கேயன்றி நீர் வெளியிட்ட மற்றெக் கவுரவத்திற்கும் நான் மரியாதை செய்யக் கருதுகின்றேனில்லை.

கி எனது நரைத்த ரோமத்திற்கு மரியாதை செய்வது அனாவஸ்யம், இத்தகைய வியாஜ்ஜியம்தொடுக்கத்துவக்கும் பொழுதே பூனைகளைக்கொல்

லல் நாய்களின் சுபாவமல்லவாயென்று ப்ரஸ்னிக்காதவரும் என்னை யுபசரிக்கக் கூடியவருமாகிய மற்றொரு மாஜிஸ்ட்ரேட்டின் கோர்ட்டிற்கு இவ்வழக்கைமாற்ற மனுசெய்துக்கொள்ளுகின்றேன். மானவ இயற்கையாகா வார்த்தையல்லவா இது நான் இங்கு அடிவைத்தது முதல் என்னைச் சர்வ விதங்களிலும் அகவுரவித்தே வருகின்றீர்.

மா. உமது மனு நிராகரிக்கப்பட்டது.

ஹ. ஆச்சர்ய சித்தனானேன். அத்யாச்சர்யமேயிது, நான்உட்புகுந்ததும் என்னைத்தூஷித்தீர். எனது நரைத்த சிகைக்கு கவுரவம் கொடுப்பதாய் வார்த்தையேதோ சொன்னீர். அதைச் செய்கையிற் காட்டியதாய் என் புத்திக் கெட்டவில்லை. உம்மையடக்கும் வகை தேடுகின்றேன். (என்று சொல்லிக்கொண்டே சாக்ஷிப்பெட்டியினின்று மிறங்கினார்.)

மா. இவரைக் கைதி செய்யுங்கள். இப்பெரிய மனிதன் இக்கோர்ட்டைவிட் டகல லாகாது.

ஹ. எந்தப் பெரியமனிதன் ? நீர் பெரியமனிதனல்லவா, ஐயா அவ்வுத்தாவு வந்த க்ஷணத்தில் ஓர் போலீஸ் உத்தியோகஸ்தர் மி-ர் கிராபோர்ட் துரையிடம் மாஜிஸ்ட்ரேட் அவர்களின் உத்தரவை ஓதினார். மிஸ்டர் கிராபோர்ட், ஓர் நாற்காலியிலமர்ந்து ஐயா நான் காலை முதல் ஆகாரமின்றி யிருக்கின்றேன். இளைப்பின் மிகுதியால் இக்கோர்ட்டில் என்னுயிர் நீங்கிற்றானால் அதற்குத் தம்மையே உத்தரவாதி யாக்குவேன். அப்பழியைச் சுமக்காதேயும். நூய ஒழுங்கிற்கு இது சுத்த ஹீனமானது என்று மிகபடப் பேசித் தன்றலையைத் தொங்கவிட்டவராய் எனக்கு வயித்தியருதவி வேண்டுமென்றிரைந்தார்.

மா. இங்கு வைத்தியர் யாவரேனு முளரோ ? தெய்வகதியாய் அச்சமயத்தில் அங்கமர்ந்திருந்த டாக்டர் மக்குவின் எழுந்து நின்றார்.

மா. தயவு செய்து இப்பிணியாளிக்கு சிகிச்சை செய்யும். துரையவர்களின் தேகஸ்திதியைப் பரிசீலனை செய்த டாக்டர் அவர்கள் இவரைக் கோர்ட்டிற்குப் புரம்பாக்குதலே உசிதமா மென்னும் அபிப்பிராயந்தந்தார்.

மாஜிஸ்ட்ரேட் அவர்கள் கோர்ட்டார் காவலில் அவரைக் கோர்ட் அரையினின்றும் விலகச் சொல்லியும் போலீஸ் உத்தியோகஸ்தர்களால் மேல்மாடியினின்றும் கீழறைக்குக் கொண்டு போகப்பட்டார். மாஜிஸ்ட்ரேட் அவரை விடுதலை செய்து கோர்ட்டிற்குக் கீழ்ப்படியாததாகிய குற்றம் சாட்டிச் சம்மன் பிறப்பித்தனர். பிறகு மாஜிஸ்ட்ரேட் அன்றைய தினமே கிராபோர்ட் துரையின் கைக்குச் சம்மன் எட்டவைப்பது ஓர் கால் அவருடைய ப்ராண ஹானிக்கிடந் தருமோவென்று டாக்டர் அவர்களை வினவ அவர் அங்ஙன மியற்றுதலால் உயிர் சேதம் நிகழாதென்றும் அன்று பொறுத்து மருநாள் சம்மன் சேர்வ் செய்வதே பலவகையிலும் உசிதமாகுமென்றும் மறு உத்தரமளிக்க அவ்வாறே மாஜிஸ்ட்ரேட் அவர்களும் மறுநாள் சம்மன் சேர்வ் செய்ய ஆஞ்ஞாபித்தனர்.

HIGH COURT OF JUDICATURE AT MADRAS

சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டு.

THE FIRST CRIMINAL SESSIONS.

1908-ம்௵த்திய முதலாவது கிரிமினல் சேஷன் விசாரணை.

ஜட்ஜி:—கனம் பொருந்திய மிஸ்டர் ஜஸ்டிஸ் ஜெ. எச். மன்ரோ.

முதல் நாள்.

(3—2—08)

பணப்பை திருடின கேஸ்.

குற்றவாளி:—பாபா.

குற்றம்:—திருட்டு.

ஜூரிகள்:—மெசர்ஸ். ஜெ. ஜி.பாஸ்கெட் (போர்மன்), பி. செங்கல்வராய பத்தர், பி. கண்ணய்ய செட்டி, எச். இ. கௌ, டி. பாலகிருஷ்ண பிள்ளை, ஜெ. சாட்விக், எஸ். மெக்லார்டி, டி. கெ. அருணாசல அய்யர், டப்ளியூ. பர்க்.

கேசின் விபரம்:—குற்றவாளி பல முறை சிக்ஷையடைந்து ஜெயிலிக்குப் போய் வந்தவன். சென்ற 1907-ம்௵ டிசம்பர்௴ 20௳ அப்துல் அஜீஜ் என்பவர் தன்னுடைய சட்டை ஜேப்பியில் ரொக்க ரூபாய் 2—4—0 அடங்கிய (Money Purse) என்று சொல்லும்படியான பணப்பை வைத்துக்கொண்டு சென்னப்பட்டணம் பீபில்ஸ்பார்க் பார்ஸி நாடகசாலையில் டிக்கட்டு வாங்கிக்கொண்டிருக்கையில் குற்றவாளி இந்தப் பையை அவர் ஜோப்பியிலிருந்து திருடிக்கொண்டு ஓட்டம் பிடித்ததாக குற்றம் சாட்டப்பட்டான்.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளி அக்குற்றத்தை தான் செய்ததாக ஒப்புக்கொள்ளவில்லை. பிராசிக்கியூஷன் தரப்பில் அநேக சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள்.

ஜூரர்களின் அபிப்பிராயம்:—செஷன் ஜட்ஜி கேசின் சாராம்சத்தை ஜூரர்களுக்கு எடுத்துச் சொன்னவுடன் ஜூரர்கள் எல்லோரும் கைதி குற்றவாளியென்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:— கோர்ட்டார் ஜூரர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு குற்றவாளிக்கு 5 வருஷம் கடினகாவல் தண்டனை விதித்து, அவன் ஜெயிலை விட்டு வந்தவுடன் தன்னுடைய போக்குவரத்துகளையும் இருப்பிடங்களையும் 5 வருஷம் வரையில் போலீசாருக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கவேண்டுமென்று உத்தரவு செய்து தண்டனை விதித்தார்கள்.

II

நம்பிக்கை துரோகக்கேஸ்.

குற்றவாளி:—இராகவன்.

குற்றம்:—நம்பிக்கை துரோகம்.

கேசின் விபரம்:—குற்றவாளி இதற்குமுன் ஏழுமுறை சிக்ஷையடைந்து ஜெயிலுக்குப் போய் வந்தவன். சென்ற 1907-ம்௵ டிசம்பர்௴ 16௳ மதராஸையடுத்த எழும்பூரில் குற்றவாளி ஒருவரிடத்தில் ரூபாய் 8—8—0 மதிப்புள்ள கடுக்கன் ஜோடி ஒன்று இரவலென்று வாங்கிக்கொண்டுபோய் அயோக்கியதையாய் அதை அடமானம் வைத்து பணம் வாங்கித் தானே அபகரித்துக்கொண்டு நம்பிக்கை மோசம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டான்.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளி அக்குற்றத்தைத் தான் செய்ததாக ஒப்புக்கொண்டான்.

தீர்ப்பு:—கோர்ட்டார் 5 வருஷ கடினகாவல் தண்டனை விதித்து, அவன் ஜெயிலை விட்டு வந்தவுடன் தன்னுடைய போக்குவரத்துகளையும் இருப்பிடங்களையும் 5 வருஷம் வரையில் போலீசாருக்குத் தெரிவித்துக்கொண்டிருக்க வேண்டுமென்று உத்தரவு செய்து தண்டனை விதித்தார்கள்.

III

கட்டடம் புகுந்து திருடின கேஸ்.

குற்றவாளி:—கோவிந்தன் செட்டி.

குற்றம்:—திருட்டு.

கேசின் விபரம்:—குற்றவாளி சென்ற ஜனவரி௴ 17௳ மதராஸ் மியூஜியத்தில் அயோக்கியதையாய் ஓர் கட்டிடத்தில் புகுந்து அனந்தாச்சாரி என்பவருடைய சில பொன் நகைகளும், கொஞ்சம் ரொக்கமும் அடங்கிய ஒரு பையைத் திருடிக்கொண்டு ஓட்டம் பிடித்ததாக குற்றம் சாட்டப்பட்டான்.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளி அக்குற்றத்தை செய்ததாக ஒப்புக்கொள்ளவில்லை. பிராசிக்கியூஷன் தரப்பின் சாக்ஷிகள் விசாரணை ஆனவுடன் குற்றவாளி தன் தரப்பில் மாஜிஸ்திரேட்டு முன் பால் இரண்டு சாக்ஷிகள் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அவர்கள் செஷன் கோர்ட்டில் ஆஜராகும்படி அவர்களிடமிருந்து பத்திரம் எழுதி வாங்கியிருந்தும் அவர்கள் அப்போது கோர்ட்டில் ஆஜரில்லை யென்றும் சொன்னான். அதன் பேரில் கனம் பொருந்திய செஷன் ஜட்ஜி அவர்கள் கேசை தள்ளி வைத்து மேற்கண்ட இரண்டு சாக்ஷிகளின் பேரில் வாரண்டு பிறப்பிக்கும்படி உத்தரவு செய்தார்கள்.

IV

கர்ரன்ஸி நோட்டுகள் திருடின கேஸ்.

குற்றவாளி:—காதர் உசேன் என்கிற பாபு.

குற்றம்:—திருட்டு.

கேசின் விபரம்:—குற்றவாளி இதற்கு முன் ஆறு முறை சிக்ஷையடைந்து ஜெயிலுக்குப் போய் வந்தவன். சென்ற ஜனவரி௴ 14௳ எழும்பூர் ரெயில்வே ஸ்டேஷனில் மதுரைக்குப் போகும் பிரயாணியாகிய மகம்மது யூசுப் என்பவருடைய ஜேப்பியிலிருந்து ஐந்து ரூபாய் நோட்டுகள் ஏழு (அதாவது ரூபா 35) அடங்கிய ஒரு சுருளையைத் திருடிக்கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டான்.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளி அக்குற்றத்தை தான் செய்ததாக ஒப்புக்கொள்ளவில்லை. பிராசிக்கியூஷன் தரப்பில் மூன்று சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள்.

ஜூரர்களின் அபிப்பிராயம்:—செஷன் ஜட்ஜி அவர்கள் கேசின் சாராம்சத்தை ஜூரர்களுக்கு எடுத்துச் சொன்னவுடன் ஜூரர்கள் எல்லோரும் கைதி குற்றவாளியென்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—கோர்ட்டார் ஜூரர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு குற்றவாளிக்கு 7 வருஷம் கடினகாவல் தண்டனை விதித்து, அவன் ஜெயிலை விட்டு வந்தவுடன் தன்னுடைய போக்குவரத்துகளையும் இருப்பிடங்களையும் 5 வருஷம் வரையில் போலீசாருக்குத் தெரிவித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று உத்தரவு செய்து தண்டனை விதித்தார்கள். கோர்ட்டார் இடைவேளை போஜனத்திற்கு எழுந்தார்கள்.

V

கட்டடம் புகுந்து திருடின கேஸ்.

குற்றவாளி:—கோவிந்தன் செட்டி.

குற்றம்:—திருட்டு.

கேசின் விபரம்:—இடைவேளை போஜனமாய் கோர்ட்டார் மறுபடியும் கூடினவுடன் முன் மூன்றுவது கேசில் செப்பிய குற்றவாளி கோவிந்தன் செட்டி என்பவன் தான் சென்ற ஜனவரி௴ 17௳ மியூஜியத்தில் நகைகளும் பணமும் அடங்கிய பையை அனந்தாச் சாரியாருடைய ஜேப்பியிலிருந்து திருடினது வாஸ்தவமல்லவென்று சொன்னதின் பேரில் குற்றவாளி தரப்பில் ஒரு சாக்ஷியை விசாரணை செய்தார்கள்.

ஜூரர்களின அபிப்பிராயம்:—செஷன் ஜட்ஜி அவர்கள் கேசின் சாராம்சத்தை ஜூரர்களுக்கு எடுத்துச் சொன்னவுடன் ஜூரர்கள் எல்லோரும் கைதி குற்றவாளி யென்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு :— கோர்ட்டார் ஜூரர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு குற்றவாளிக்கு 5 வருஷம் கடினகாவல் தண்டனை விதித்து, அவன் ஜெயிலை விட்டு வந்தவுடன் தன்னுடைய போக்கு வரத்துகளையும் இருப்பிடங்களையும் 5 வருஷம் வரையில் போலீசாருக்குத் தெரிவித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று உத்தரவுசெய்து தண்டனை விதித்தார்கள்.

VI

கோத்தவால்சாவடியில் உருளைக்கிழங்கு திருடின கேஸ்.

குற்றவாளி :—பொன்னுசாமி.

குற்றம் :—திருட்டு.

ஜூரிகள் :—மெசர்ஸ். ஏ. ஓ. பென்டிங் (போர்மன்) S. பென்ட், P. புருக்ஸ், ஜெ. பி. கன்லிங், ஜி. சக்ரபாணி செட்டி, பி. வேலுசெட்டி, அப்பாதுரை பிள்ளை, K. அச்சுதன், இ. ஜி. டப்ளியூ ஏவிட்.

கேசின் விபரம் :—குற்றவாளி சென்ற 1907ஹு டிசம்பர்மீ 9வ சென்னப்பட்டணம் கோத்தவால் கடையில் ரூபா 1—12—0 பொறுமான 12 வீசை நிறையுள்ள உருளைக்கிழங்கு திருடினதாக குற்றம் சாட்டப்பட்டான்.

கேசின் நடவடிக்கை :—குற்றவாளி அக்குற்றத்தை தான் செய்ததாக ஒப்புக்கொள்ளவில்லை. பிராசிகியூஷன் தரப்பில் அனேக சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள்.

ஜூரர்களின் அபிப்பிராயம் :— செஷன் ஜட்ஜி அவர்கள் கேசின் சாராம்சத்தை ஜூரர்களுக்கு எடுத்துச்சொன்னவுடன் ஜூரர்களில் எட்டு பெயர் கைதியை குற்றவாளி யென்றும் ஒருவர் மாத்திரம் குற்றம் செய்தவனல்லவென்றும் கூறினார்கள்.

தீர்ப்பு :—கோர்ட்டார் ஜூரர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு குற்றவாளிக்கு 7 வருஷம் கடினகாவல் தண்டனை விதித்து, அவன் ஜெயிலை விட்டு வந்தவுடன் தன்னுடைய போக்கு வரத்துகளை 5 வருஷம் வரையில் போலீசாருக்குத் தெரிவித்துக்கொண்டிருக்க வேண்டுமென்று உத்தரவு செய்து தண்டனை விதிததார்கள்.

VII

குழந்தையின் பொன் காப்பு திருடின கேஸ்.

குற்றவாளி :—வேணு என்கிற கொலந்தை.

குற்றம் :— திருட்டு.

கேசின் விபரம் :—குற்றவாளி சென்ற 1907ஹு டிசம்பர்மீ 20வ மதராஸ் ஜியார்ஜ்டவுனில் சுவாமி கோயிலிலிருந்து ஊர் பிரதக்ஷணம் வருகையில் பீமாராவ் என்பவருடைய குமாரத்தியாகிய குழந்தையின் கையில் போட்டிருந்த 35 ரூபாய் மதிப்புள்ள ஒரு பொன் காப்பை கழட்டித் திருடிக்கொண்டுபோனதாக குற்றம் சாட்டப்பட்டான்.

கேசின் நடவடிக்கை :—குற்றவாளி அந்த குற்றத்தை தான் செய்ததாக ஒப்புக்கொள்ளவில்லை, பிராசிகியூஷன் தரப்பில் அனேக சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள்

ஜூரர்களின் அபிப்பிராயம்:— செஷன் ஜட்ஜி அவர்கள் கேசின் சாராம்சத்தை ஜூரர்களுக்கு எடுத்துச் சொன்னவுடன் ஜூரர்கள் எல்லோரும் கைதி குற்றவாளி என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு :— கோர்ட்டார் ஜூரர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு குற்றவாளிக்கு 5 வருஷம் கடினகாவல் தண்டனை விதித்து, அவன் ஜெயிலை விட்டு வந்தவுடன் தன்னுடைய போக்கு வரத்துகளை 5 வருஷம் வரையில் போலீசாருக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கவேண்டுமென்று உத்தரவு செய்து தண்டனை விதித்தார்கள்.

இரண்டாம் நாள்.

VIII

(4—2—1908.)

கொலைசெய்ய எத்தனித்த கேஸ்.

பெங்களூர் சிவில் மிலிட்டெரி ஸ்டேஷன் டிஸ்ட்ரிக்டு மாஜிஸ்த்திரேட்டு L. மூர் துரையவர்களால் அனுப்பி வைக்கப்பட்டது.

குற்றவாளி :—ஹியூஜ் ஜெங்கின்ஸ்.

ஜூரிகள் .—மெஸர்ஸ் பிரான்வலின் சாட்டர்டன் (போர்மன்), W. H. டாட், வி. எ. அனந்தராமையர், ஜெ. மெ. ப்ரௌன், ஆர். பிலிப்-வொயிட், எ. கொண்டய்ய செட்டி, சின்னய்ய பந்துலு, ஜெ. மிச்சல், W. ஹட்டன்.

கேசின் விபரம் :—ஆகஸ்ட்டுமீ 31வ பிரியாதி தன் உள்ளில் படுத்துக்கொண்டிருக்கையில் குற்றவாளி அவரை கொலை செய்யும்பொருட்டு துப்பாக்கியால் சுட்டாரென்றும் அந்தக் குண்டு அவர் சிரசின் மேல் பறந்தோடிப் போயிற்றென்றும் பிரியாதி உடனே தன் படுக்கையை விட்டு எழுந்திருந்து குற்றவாளியை கைப்பிடியாய்ப்பிடித்து பத்தெரி சார்ஜென்ட் மேஜரிடம் ஒப்புவித்தாரென்றும் கிரௌன் பிராசிகியூடர் ஜூரர்களுக்கு எடுத்துக் கூறினார்.

குற்றம் :—குற்றவாளி கொலை செய்ய எத்தனித்ததாகவும் அல்லது பிராணசேத முண்டாகக்கூடிய அபாயகரமான செய்கையை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டான்.

கேசின் நடவடிக்கை :—குற்றவாளி அக்குற்றத்தை செய்ததாக ஒப்புக்கொள்ளவில்லை. பிராசிகியூஷன் தரப்பில் அனேக சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். கீழ்க் கோர்ட்டில் குற்றவாளி எழுதி வைத்த வாக்குமூலம் ஜூரர்களுக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டது. கோர்ட்டார் குற்றவாளியைப் பார்த்து நீ ஒயில்ட்கூஸ் என்பவரைச் சுட்டுக் கொலை செய்ய எத்தனித்ததென்று குற்றஞ்சாட்டப்போகிற சாக்ஷியத் தைக் குறை கூறுகிறது அதற்கு என்ன சொல்லுகிறு யென்று கேட்டதற்கு குற்றவாளி தான் நிரபராதி யென்றும் தனக்கு ஒன்றும் தெரியாதென்றும் பிராஸிகியூஷன் சாக்ஷிகள் சொல்லும் வாக்குமூலம் வாஸ்தவமோ அல்லவோ அதைப்பற்றி தன்னால் சொல்ல முடியாதென்றும் சொன்னான். குற்றவாளி தரப்பில் பேசின பாரிஸ்டர் லாரென்ஸ் என்பவர் குற்றவாளியும் பிரியாதியும் மித்த சினேகிதமாகவேயிருந்தார்களென்றும் அப்படி கொலைசெய்ய எத்தனிப்பதற்கு குற்றவாளி கருத்து கொண்டவனாக ஏற்படவில்லையென்றும் சொன்னார்.

ஜூரர்களின் அபிப்பிராயம் — செஷன் ஜட்ஜ் கேசின் சாராம்சத்தை ஜூரர்களுக்கு எடுத்துச் சொன்னவுடன், ஜூரர்கள் எல்லோரும் குற்றவாளி கொலைசெய்ய எத்தனித்தவனல்லவென்றும் முரட்டுத்தனமாய் பராமுகமான செய்கையைச் செய்தவனை யென்றும் ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு :—கோர்ட்டார் ஜூரர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு குற்றவாளிக்கு மூன்று மாத கடினகாவல் தண்டனை விதித்தார்கள்

IX

கொலை செய்ய எத்தனித்த கேஸ்.

சென்னப்பட்டணம் சிப்பிரெசிடென்ஸி மாஜிஸ்திரேட்டு W. E. கிளார்க்கு துரை அவர்களால் அனுப்பப்பட்டது.

குற்றவாளி :—மருதமுத்து பலவராயன்.

ஜூரிகள் :—மெஸர்ஸ் F. லீவின் (போர்மன்), டி. ஆல்பர்ட் மல்லர், எம். பார்த்தசாரதி ராஜு, ஜெ. ராட்ஜெர்ஸ், ஜி. மோர்ஹஸ், W. A. லாங்லி, ஆல்பர்ட் ஹர்லி, ஜி. கோவிந்தராஜுலு செட்டி, நரசிம்மராவ் குருராவ்.

கேசின் விபரம் :—சென்ற ஆகஸ்டுமீ 14வ காப்டன் ப்ரௌன் பெனிடென்ஷரி ஜெயிலிலுள்ள தன் ஆபீசுக்குப் போய்க்கொண்டிருக்கையில் குற்றவாளியென்று தீர்ப்பாய் ஜெயிலில் சிறைபட்டிருந்த கைதி அவரை கத்தியினால் குத்தியதாக கிரௌன் பிராசிகியூடர் ஜூரர்களுக்கு எடுத்துக் கூறினார்.

குற்றம் :—குற்றவாளி மருதமுத்து பலவராயன் என்பவன் ஒரு பப்ளிக் உத்தியோகஸ்தர் தன் தொழில் முறையைக் கவனித்துக்கொண்டிருக்கையில் அவரை அவன் கொலைசெய்ய எத்தனித்தானென்று குற்றம் சாட்டப்பட்டான்.

கேசின் நடவடிக்கை:—காப்டன் ப்ரௌன் என்பவர் சொன்னவர்க்கு மூலமாவது:—சென்ற ஆகஸ்ட்டுமீ 14வ பெனிடென்ஷரி ஜெயிலில் தன்னுடைய வேலையை பார்த்துக் கொண்டுவந்தபோது எதிரியின் பேரில் ஒரு பிராது அவரிடம் வந்து அவர் அதை விசாரித்து குற்றவாளி ஜெயிலில் பார்த்துக்கொண்டு வந்த ஓவர்சியர் வேலையிலிருந்து கீழ் அந்தஸ்திற்கு மாற்றி விட்டாரென்றும் அவர் அன்றையதினம் (14—8—07) பகல் 2½ மணிக்குத் தான் ஆபீசுக்குப் போனபோது சிறையடைந்து இருப்பவர்களில் ஒருவன் ஆபீசுக்கு வெளியே தாழ்வாரத்தில் நின்றுக் கொண்டிருந்ததைக் கண்டாரென்றும் தான் தன்னுடைய டொப்பியை தன் சிரசில் தரித்துக்கொண்டு அவ்விடம் போனபொழுது அவர்மேல் சில தப்பைகள் விழுந்ததென்றும் அவர் தன் டொப்பியை சிரசிலிருந்து எடுத்துவிட்ட உடனே குற்றவாளி அந்த தாழ்வாரத்தின் இன்னொரு கோடிக்கு ஓடிப்போய் விட்டதின் பேரில் அவர் குற்றவாளியினுடைய கையில் ஒரு கத்தியைக்கண்டு அவன் கையிலிருந்து கத்தியை பிடுங்கிக்கொள்வதற்காக அவன் பின் சென்றும் அந்தக் கத்தியை அவனிடமிருந்து பிடுங்கிக் கொள்ள தன்னால் முடியாமல் இவ்விதமாய் போராடிக்கொண்டிருக்கையில் குற்றவாளி, ஒருவன் சகாயமாய் வருகிறவனையிலும் அவருடையசிரசின் மேலும் முதுகின்மேலும் அடித்துக் கொண்டிருந்ததாகவும் முதல் முதல் குண்ணிக் கண்ணன் என்பவன் சகாயத்திற்கு வந்தானென்றும் அவனையும் கத்தியால் காயப்படுத்தினதின்பேரில் ஜெயிலிலிருந்த மற்ற உத்தியோகஸ்த்தர்கள் குற்றம் நேரிட்ட இடத்திற்கு ஓடிவந்து குற்றவாளியின் கையிலிருந்த கத்தியை பிடுங்கிக்கொண்டார்கள். குற்றவாளி கூடார ஷாப்பில் வேலை செய்துக்கொண்டிருந்தவனென்றும் கூறினார். பிராசிகியூஷன் தரப்பில் சாக்ஷி சொன்னவர்களில் நாராயண பணிக்கன் என்பவன் அன்றைய தினம் 2 மணிக்கு குற்றவாளியைச் சூப்பெரின்டென்டெண்டு ஆபீசுக்கு அருகாமையில் தாழ்வாரத்தில் கண்டு அங்கே ஏன் நிற்கிறாய் என்று கேட்டதற்கு அவன் சூப்பெரின்டென்டெண்டை கேட்டு காகிதம் வாங்கிக்கொண்டுபோக வந்தானென்றும், சாக்ஷி ஸ்டோர் கீப்பரை அழைத்துக்கொண்டு வர போனபோது சூப்பெரின்டென்டெண்டு ஆபீசில் கூச்சல் கேட்டு அவன் அவ்விடத்திற்கு ஓடினபோது சூப்பெரின்டென்டெண்டை கத்தியால் குத்திக்கொண்டிருப்பதைப் பார்த்து உடனே குற்றவாளியை அரெஸ்டு செய்து காவலில் அடைத்தார்களென்றும் சொன்னான். மற்ற சாக்ஷிகளும் அம்மாதிரியாகவே சொன்னார்கள்.

ஜூரர்களின் அபிப்பிராயம் :— செஷன் ஜட்ஜ் ஜூரர்களுக்கு கேசின் சாராம்சத்தை எடுத்துச் சொன்னவுடன் ஜூரர்களெல்லோரும் கைதி முதல் செப்பிய கொலை செய்ய எத்தனித்த குற்றத்தை செய்தவனல்லவென்றும் குற்றவாளி கத்தியால் குத்தி உபத்திரவத்தை உண்டாக்கக்கூடிய குற்றத்தை செய்தவனென்றும் ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—கோர்ட்டார் ஜூரர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு குற்றவாளிக்கு மூன்று வருஷம் கடினகாவல் தண்டனை விதித்தார்கள்.

X.

அட்டம் புகுந்து திருடின கேஸ்.

குற்றவாளி:—சகாதேவன் என்கிற சப்பாபதி.

கேசின் விபரம்:—சென்ற ஜனவரி௴ 24௳ பிரியாதி முனுசாமிநாயுடு என்பவர் தன் வீட்டை விட்டு வெளியேபோயிருந்தபோது குற்றவாளி அவன் வீட்டுக்குள்சென்று சில சாமான்களை திருடிக்கொண்டிருக்கையில் அண்டை வீட்டுக்காரர் ஒருவர் இந்த சப்தத்தைக் கேட்டு அந்த வீட்டுக்குள் சென்று பார்த்தபோது குற்றவாளி திருடிக்கொண்டிருப்பதைக்கண்டு அவனை அரெஸ்ட்டு செய்து போலீசாரிடம் ஒப்பிவித்ததாக ஜூரர்களுக்கு கிரௌன் பிராஸிகியூடர் எடுத்துக் கூறினர்.

கேசின் நடவடிக்கை:—முன் கேசின் ஜூரர்களே இந்த கேஸையும் விசாரித்தார்கள். குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. பிராஸிகியூஷன் தரப்பில் நான்கு சாக்ஷிகள் விசாரிக்கப்பட்டார்கள்.

ஜூரர்களின் அபிப்பிராயம்:— செஷன் ஜட்ஜ் கேசின் சாரம்சத்தை ஜூரர்களுக்கு எடுத்துச்சொன்னவுடன் ஜூரர்கள் எல்லோரும் கைதி குற்றவாளியென்று ஏகோபித்து கூறினர்கள்

தீர்ப்பு:—கோர்ட்டார் ஜூரர்களின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு குற்றவாளிக்கு பத்து வருஷம் கடினக்காவல் தண்டனை விதித்தார்கள்.

XI.

மூன்றும் நாள்.

(5—2—08)

ஐந்து மாதக்குழந்தையை தனியாய் விட்டுபோவது.

குற்றவாளி:—பாக்கியம்மாள்.

குற்றம்:—குழந்தையை விட்டுவிட்டு போவது.

ஜூரிகள்:—மெசர்ஸ் ஆர்-எச். மெரிஷத் (போர்மன்), டப்பிளியூ பண்சிகா, எச். லிங்கார்ட், கெ. ரங்காச்சாரி, சி, எச். பார்கன்ஸ், பி. நீ. இப்ராஹீம், எச், இங்காம், ஜே. ஆர். தாம்சன்.

கேசின் விபரம்:—சென்ற 1907௵ ஆகஸ்டு௴ 8௳ குற்றவாளி ஜியார்ஜ் டவுன் ராமண்ணன் சாலையில் ஒரு கடையின் தாழ்வாரத்தில் தன்னுடைய 5 மாத குழந்தையை பத்திரமாய் பாதுகாக்காமல் அதை போட்டுவிட்டு போகவேணு மென்கிற எண்ணத்துடன் அந்த குழந்தையை மறுபடியும் வந்து பார்க்காமலிருந்து விட்டாளென்றும் கடைக்காரன் அன்று மாலை எண்ணெய்க்கடையில் ஒரு விசுப்பலகையின்மேல் ஒரு குழந்தை படுத்திருப்பதைக்கண்டு போலீசாருக்குத் தெரிவித்தான். போலீசார் அந்த குழந்தையை முதலில் போலீஸ்டேஷனுக்கு எடுத்துக் கொண்டுபோய் பிறகு அவ்விடமிருந்து மணிகார் சாவுடி பௌன்டிங் ஆஸ்ப்பத்திரிக்கு எடுத்துக் கொண்டுபோய் விட்டார்கள். அந்த குழந்தை ஒன்பது, பத்து நாள் ஜீவித்திருந்து பிறகு இறந்துவிட்டதென்றும் இரண்டு மூன்று மாதத்திற்கு பிறகு குற்றவாளி அந்த குழந்தையின் தாயென்று தெரிந்துகொண்டு அவளைக் கேட்டதில் அவள் தான் தாயென ஒப்புக்கொண்டாளென்றும் கிரௌன் பிராஸிகியூடர் எடுத்துக் கூறினர்.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்ளாமல் தான் அவ்விடத்தில் குழந்தையை விட்டுவிட்டு பிச்சை யெடுக்கப் போனதாகவும் பிறகு அவ்விடம் வந்து பார்த்தபோது குழந்தை அவ்விடத்தில் இல்லாததைக் கண்டு போய்விட்டதாகவும் தான் அப்படி விட்டுப்போக வேணுமென்கிற துர் எண்ணத்துடன் செய்தவளல்லவென்றும் சொன்னாள். பிராஸிகியூஷன் தரப்பில் சில சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டார்கள்.

ஜூரர்களின் அபிப்பிராம்:—குற்றவாளி நிரபராதி (குற்றவாளியல்ல) யென்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினர்கள்.

தீர்ப்பு:—கோர்ட்டார் குற்றவாளியை விடுதலை செய்யும்படி உத்தரவு செய்தார்கள்.

தபாலாபீஸ் மோசக்கேஸ்.

குற்றவாளி:—தேவராஜுலு நாயுடு.

குற்றம்:—திருட்டு அல்லது திருட்டு சொத்தை வைத்திருப்பது.

கேசின் விபரம்:—குற்றவாளி மதராஸ் ஜெனரல் போஸ்டாபீஸ் டெலிவரி டிபார்ட்மெண்டில் முத்திரை குத்துகிற உத்தியோகஸ்தன். அவன் சென்ற 1907௵ நவம்பர்௴ 9௳ K. S S. and Co., என்று குறிப்புபோட்டு மீராசாயப்பு கம்பெனியாருக்கு தபால் மூலமாய் அனுப்பிய ஒரு பாகட்டை அயோக்கியதையாய் எடுத்துக்கொண்டுபோய் விட்டதாக அல்லது அது திருட்டு சொத்தென்று அறிந்திருந்தும் பாக்கெட்டிலிருந்த நான்கு வேட்டிகளையும் தன்னிடம் வைத்திருந்தானென்றும் குற்றம் சாட்டப்பட்டான்.

கேசின் நடவடிக்கை:—பிராசிகியூஷன் தரப்பில் வீட்டை சோதனை போட்டதில் இவ்விதமாய் இன்னும் அனேக மாதிரி குற்றவாளியின் வீட்டில் கண்டதாகச்சொல்லும் கான்ஸ்டபில் உள்பட அனேக சாக்ஷிகள் விசாரணை யெய்யப்பட்டார்கள்.

ஜூரர்களின் அபிப்பிராயம்:—ஜட்ஜி கேசின் ஸாராம்சத்தை ஜூரர்களுக்கு எடுத்துச் சொன்னதின்பேரில் ஜூரர்கள் சிறிது நேரம் ஆலோசனை செய்து குற்றவாளி திருடினவன் தானென்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினர்கள்.

தீர்ப்பு—கோர்ட்டார் ஜூரர்களின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு குற்றவாளிக்கு ஒருவருஷம் கடின காவல் தண்டனை விதித்தார்கள்.

பிஷரி டிபார்ட்மெண்ட் கேஸ்.

குற்றவாளி:—வி. வி. இராமன்னன்.

கேசின் விபரம்:—குற்றவாளியும் அவனது சிப்பந்திகளும் 1906௵ ஏப்பிரல்-மே மாதங்களில் சுற்றுப் பிரயாணம் செய்யாமலிருந்தும் ஷை காலத்தில் சுற்றுப் பிரயாணம் செய்ததாக பொய் ரிகார்டு ஏற்படுத்தி 1906௵ மே௴ 16௳யில் ரூ 347-12-9க்கு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்குப் பில் அனுப்பி மதராஸ் பாங்கி செக்கு பெற்று அதை மாற்றிப் பணத்தை எடுத்துக்கொண்டு குற்றவாளி கவர்ன்மெண்டை மோசம் செய்தான். இதே மாதிரி, ஏப்பிரல் மாதத்தில் குற்றவாளியும் அவனது சிப்பந்திகளும் சுற்றுப் பிரயாணம் செய்யாமலிருந்தும் ஷை காலத்தில் செய்ததாக பொய் ரிகார்டு ஏற்படுத்தி 1906௵ அக்டோபர்௴ 4௳யில் ரூ 143-15-6க்கு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களுக்குப் பில் அனுப்பி மதராஸ் பாங்கி செக்கு பெற்று அதை மாற்றி பணத்தை எடுத்துக்கொண்டு கவர்ன்மெண்டை மோசம் செய்தான்.

இதனடியில் கண்ட ஸ்பெஷல் ஜூரிகள் ஏற்படுத்தப்பட்டார்கள்.

மிஸ்டர் ஆர். டி. பிரியர், (போர்மன்) மெஸர்ஸ் எ. யச். டீன், சி. பத்மாப நாய்க்கர், ஜி. ஏ. சேம்பர்ஸ், டப்லியூ ஐ. ஜாக்ஸன், யப். பி. பம்கார, ஜி யூ. காட்டன், ஜி. மிச்சல், ஏ. கொண்டைய்ய செட்டி.

கேசின் நடவடிக்கை:—கிரௌன் பிராசிகியூட்டர் ஜான் ஆடம், கேசைத்துவக்கி தெரிவித்ததாவது:- தானும் தன் சிப்பந்திகளும், சுற்றுப்பிரயாணம் செய்யாத காலத்தில் சுற்றுப் பிரயாணம் செய்ததாக அகௌண்டெண்ட் ஜெனரல் அவர்களுக்கு தப்பான பில் அனுப்பி பணத்தை அபகரித்துக் கொண்டதற்காக முதலாவது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. இந்த முதல் குற்றத்தில் குற்றவாளியாவது அல்லது அவன் சிப்பந்திகளில் ஒருவராவது சுற்று பிரயாணம் செய்ததே கிடையாது என்பது ருசுவாகும். இரண்டாவது குற்ற விஷயமாய், சுற்று பிரயாணம் செய்ததாய் தெரிவித்திருக்கும் தேதிகளில், குற்றவாளியின் சிப்பந்திகளின் ஒரு பாகம் சுற்று பிரயாணம் செய்தார்களே தவிர, குற்றவாளி பிரயாணம் செய்யவில்லை என்பது ருசுவாகும்.

இதன் பிறகு பிஷரி இலாக்காவைப் பற்றியும், குற்றவாளியைப் பற்றியும், கிரௌன் பிராசிகியூட்டர் சொன்னதாவது:—குற்றவாளி நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன். பின்னும் உயர்ந்த வாசிப்புடையவன். அப்படி இல்லாவிட்டால், அவன் இந்த உத்தியோகத்தில் அமைக்கப்பட்டிருக்கமாட்டான். ஒருவன் சுதேச யூனிவர்சிடியில் அடையக்கூடிய உயர்ந்த பட்டமாகிய யம். ஏ. (M. A.) பட்டத்தைச் சென்னை சர்வகலா சாலையில் பெற்றிருக்கிற தன்னியில், ஜீவ சாஸ்திர (*Biology*) த்திலும் பூகற்ப சாஸ்திர (*Geology*) த்திலும் மிக்க தேர்ந்தவன். மீன் பிடித்தல் முதலியவற்றைச் சார்ந்த தொழில் விசாரணை செய்வதற்காக வங்காளம் முதலிய இந்தியாவின் மற்ற பாகங்களில் ஏற்பட்டிருக்கும் இலாக்காவைப் போல, இவ்விடத்திலும் ஒன்று ஏற்படுத்த சர்க்காரக் துறைய மூன்று வருஷங்களுக்கு முன்பு முடிவு செய்தார்கள். உபகாரச் சம்பளம் பெற்று வருபவரும், ஜனங்களின் நன்மைக் குரிய சகல விஷயங்களிலும் மிக்க சிரத்தை எடுத்துக்கொண்டு உழைத்தவருமாகிய, ஸர். பிரடிரிக் நிக்கல்ஸன், இந்த புதிய இலாக்காவுக்கு (சம்பள மில்லாமல்) கீர்த்திக்காக தான் தலைமை வகிப்பதாக சொல்லவும், அவருக்கு சிப்பந்திகள் ஏற்பாடு செய்து கொடுத்து வேலையை சரியாய் நடத்தும்படிக்கும் அவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. அதன்படி. அவர் வேலையை ஆரம்பித்த காலத்தில் இலாக்காவின் தன்மைக்கேற்ற அனுபோகமும் கல்வியும் உடைய ஒருவர் வேண்டுவது அவசியமாய்த் தோன்றியது. அதன்படி அத்தகைய ஒருவருக்காக நெடுநாள் ஆராய்ச்சி செய்து கடைசியாக இந்த குற்றவாளியை தெரிந்து எடுத்தார். அச்சமயத்தில் இந்த குற்றவாளி நெல்லூர் ஜில்லாவில் புரோ பேஷனரி டிப்டி தாசில்தாராக இருந்தான். இவன் யம். ஏ. பட்டதாரி யாகவும் ஷை இலாக்காவிற் குரிய விஷயங்களில் தேர்ந்தவனாகியும் இருப்பதை, தக்கோர் பலருடன் கலந்து, தான்கோறிய ஸ்தானத்துக்கு இவனே மிகவும் பொறுத்தமானவன் என்பதாக நிச்சயித்து, ரைட்டர் ஒருவர்—டைப் ரைட்டர் ஒருவர்—ஜவான்கள் அடங்கிய ஆபீசுக்கு, இவரை மீ 1-க்கு ரூ 175 சம்பளத்தில் மானேஜராக நியமித்தார். ஷை இலாக்காவின் முக்கிய நோக்கமாவது இராஜதானி முழுதிலும் சென்று ஆற்றங் கரைகளையும், மீன் பிடிக்கும் துறைகளையும், பார்வையிட வேண்டியது. ஆதலால் பற்பல ஊர்களுக்குச் சென்று பார்வை யிட்டு அது விஷயமாய் கவர்ன்மெண்டுக்குத்தெரிவிக்க வேண்டியதே ஷை இலாக்கா சிப்பந்திகளின் முக்கிய கடமை, இந்த இலாக்கா ஏற்பட்ட 6 மாதங்களுக்குப் பின், அதாவது 1906௵ மார்ச்சு மாதத்தில் ஜப்பான் முதலிய இடங்களுக்குச் சென்று ஆங்காங்கு மீன் பிடித்தலைப் பற்றியும் அதைச் சார்ந்த தொழில்கள் நடந்தேறுவதைப் பற்றியும் கவர்ன்மெண்டுக்குத் தெரிவிக்கும்படி ஷை ஸர், பிரடிரிக் நிக்கல்ஸனை நியமித்தார்கள். அதன்படி அவர் போகும்போது, இந்த குற்றவாளி ஷை ஆபீசை திருவல்லிக் கேணியிலிருக்கும் தன் வீட்டில் வைத்துக் கொள்ளும்படிக்கும், பிரயாண விஷயமாய் ஏற்படும் சிலவுகளுக்கு, மேல் அதிகாரிகளின் ஒருவருடைய கையெழுத்து மில்லாமல், தானே பில் முகாவாய் பெற்றுக் கொள்ளும் படிக்கும் ஏற்பாடு செய்துபோனர்.

பிரஸ்தாப மோசத்தில் குற்றவாளி மேலான உத்தியோகஸ்தனயிருந்ததால், இரண்டாவது கிளாஸ் டிகட்டு இரண்டும், வண்டி சத்தத்திலும் மைலு

க்கு சாதாரணமான அளவுக்கு இரட்டிப்பான சத்தமும் போட்டுக்கொள்ள அனுமதியுண்டு. ஆதலால் குற்றவாளி மோசம்செய்த தொகையில் பெரும்பான்மை, தன் வயிற்றில் போட்டுகொண்டிருக்கிறான் அதாவது ரூ 218. சக்கரப்பாணி என்னும் மற்றொரு ரைட்டர் 98-ரூபாய் அடைந்திருக்கிறான். மற்றும் சிறு பான்மையான தொகையை ஜவான்கள் அடைந்திருக்கிறார்கள்.

ஷை இலக்காவின் ரைட்டர் சக்கரபாணி அய்யங்காரும், இன்னும் 9-சாக்ஷிகளும் விசாரணை செய்யப்பட்டார்கள். இந்த விசாரணையில், சக்கரபாணி அய்யங்கார் குற்றவாளிக்குக் கீழ்ப்பட்ட உத்தியோயோகஸ்தனைகவும், குற்றவாளி வீட்டிலேயே ஷை ஆபீஸ் இருந்தமையாலும், தப்பான சில ரிகார்டுகளை இவன் எழுத மறுத்த காலத்தில், இவனை காயிதம் முதலான வஸ்துக்கள் திருடினதாக குற்றம் சாட்டுவேன் என்று குற்றவாளி பயமுறுத்தியதாகவும், அப்படியிருந்தும் இது விஷயங்களை எவ்வளவு தூரம் ஸர். பிரடிரிக் நிகல்ஸன் அவர்களுக்கு தெரிவிக்கக்கூடுமோ அவ்வளவும் கடிதமூலமாய் தெரிவித்துகொண்டு வந்தானென்றும், 1907ஸு மேமீ அவர் ஊரிலிருந்து வந்தவுடன் இது விஷயமாய் பிரயாது செய்தானென்றும், ஜவான்களுக்கு மீ சம்பளமாகிய ரூ. எட்டோடு ஸர். பிரிடிரிக் நிக்கல்ஸென், தன் சொந்த பணத்திலிருந்து இனாமாய் கொடுத்துவந்த இரண்டு ரூபாயை, அவர் வெளியூரிலிருந்த காலத்திலும் அனுப்பிவந்தாரென மாறுட்டமாக சொல்லி, தான் மோசம்செய்த பணத்தில் ஜவான்கள் பாகத்துக்குச் சேரவேண்டிய தொகையாகிய 12, 13 ரூபாயைத் தன்னுடைய கெட்ட எண்ணத்தைத் தெரிவிக்காமலே குற்றவாளியானவன் கொடுத்து வந்தானென்றும் ருசுவானது.

முதலில் குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை; என்றாலும் கடைசியாக இரண்டு குற்றங்களையும் செய்ததாக ஒப்புக்கொண்டான். குற்றவாளி தரப்பில் ஆஜரான மிஸ்டர் ஆஸ்பரன்—

குற்றவாளி நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவனென்றும், யம். ஏ. பட்டதாரி என்றும், இத்துடன் இந்த இராஜதானியில் சாஸ்திர சம்பந்தமாய் பிரக்கியாதியான பட்டத்தைப்பெற்ற முதலாவது இந்தியன் இவனே என்றும், கிரௌன் பிராசிக்கியூட்டரே தெரிவித்திருப்பதால் தான் அதைப்பற்றி அதிகம் தெரிவிக்கவேண்டியதில்லை என்றும், கோர்ட்டாரின தண்டனை எத்தகையதாய் இருந்தாலும், இந்தக்கேசினாலும் தான் ஒத்துக்கொண்ட குற்றங்களினாலும் குற்றவாளியின் அபிவிர்த்தி ஏற்கனவே நசுக்குண்டு போய்விட்டதென்றும், குற்றவாளி வாலிபன் என்றும், இவன் பொருப்பான உத்தியோகம் ஏற்றது இதுதான் முதல்தடவை என்றும், துரதிர்ஷ்ட வசமாய் இவ்விதமாய் நேர்ந்ததென்றும் தெரிவித்து, இது விஷயங்களை எல்லாம் கோர்ட்டார் தயவுடன் கவனித்து தீர்மானம் செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

தீர்ப்பு:—குற்றவாளிக்கு இரண்டு குற்றங்கள் விஷயமாய் ஆறுமாத கடுங்காவல் தண்டனையும், முறையே ரூ. 500-ம்-ரூ. 300-ம் அபராதமும், செலுத்தும் பக்ஷத்தில், இந்த கேசில் கவர்ன்மெண்டை மோசம் செய்ததாக ஏற்படும் தொகையை அக்கவுண்டெண்ட் ஜனரலுக்கு கொடுத்துவிடும்படிக்கும், அபராதம் செலுத்தத் தவறினால் ஒவ்வொரு கேசுக்கும் பின்னும் ஒவ்வொருமாத கடுங்காவல் தண்டனை என்றும் தீர்மானிக்கப்பட்டது.

(மூன்றும்நாள் பகல் துவக்கப்பட்ட இந்த கேசு 4-வது 5-வது நாள்களிலும் விசாரணை நடந்து 6-வது தினமாகிய பிப்பிரவரிமீ 10௳ தீர்ப்பு சொல்லப்பட்டது. இத்துடன் முதல் கிரிமினல் செஷன்ஸ் முடிவு பெற்றது.)

IMPORTANT RULINGS.
முக்கியமான தீர்ப்புகள்.

CIVIL.
சிவில்.

சிவில் புரோசிஜர் கோடு, 1882-டிக்கிரியை நிறைவேற்ற செய்தமனு ஜப்தி. ஜப்தி செய்தது சரியல்லவென்கிற ஆட்சேபனைகள் செய்து ஜெயித்தது. ஆனால் ஆக்ஷேபனை செய்தவர்களின் சிலவை கொடுக்கும்படி உத்தரவு செய்யவில்லை. அப்படிப்பட்ட சிலவுகளைத் தனியாய் வியாஜ்ஜியம் செய்து வசூலிக்கத் தகுந்ததல்ல. A என்பவன் B என்பவன்பேரில் வியாஜ்ஜியம்செய்து டிக்கிரி பெற்றான். அந்த டிக்கிரியை நிறைவேற்றி B என்பவனுடைய சில சொத்துக்களை ஜப்தி செய்தான். அப்படி செய்த ஜப்தி கிரமமானதல்லவென்றும் ஜப்திசெய்த சொத்துகள் பிரதிவாதியாகிய B என்பவனுடைய சொத்தல்லவென்றும், அந்தச் சொத்துக்குச் சொந்தக்காரர்கள் தாங்களென்றும் சிலர் ஆக்ஷேபனை செய்தார்கள். இப்படி அவர்கள் செய்த ஆக்ஷேபனைகளில் ஜெயமடைந்தார்கள். ஆனால் கோர்ட்டார் அவர்களுக்கு அது விஷயமாய் நேரிட்ட சிலவுகளைக் கட்டிக்கொடுக்கும்படி உத்தரவு செய்யவில்லை. அப்படி உத்தரவு செய்யாததற்குத் தகுந்த காரணங்களையும் சொல்லவில்லை. அதன்பேரில் தங்களுடைய சொத்தை அக்கிரமமாய் ஜப்தி செய்த காரணத்தால் தங்களுக்கு சில நஷ்டங்கள் நேர்ந்ததாயும், அப்படிப்பட்ட ஜப்தியை ஆக்ஷேபித்ததில் நேரிட்ட சிலவைக் கட்டிக்கொடுக்கும்படி கோர்ட்டார் உத்தரவு செய்யாத சிலவுமொத்தத்திற்கும் டிக்ரி பெற்றவனாகிய A என்பவன்பேரில் பிரத்தியேகமாய் தா

வா செய்தார்கள். ஹைகோர்ட்டார், வாதிகள் தங்களுக்குச்சேரவேண்டுமென்று தாவா செய்த சிலவுத்தொகையை வசூல்செய்ய பிரத்தியேகமாய் தாவா செய்யலாகாதென்று தீர்மானித்தார்கள். இ. லா. ரி. 9, அல. 474.—(சாலிக்ராம் V. டீகாராம் 1908 A. W. S. 18.)

சி. பு. கோ. 13-பிரிவு ரெஸ்ஜுடிகேடா. ஒரு தாவாவில் பிரதம ஆக்ஷேபனையின்மேல் தீர்மானம். அப்பீலில் அந்த தீர்மானம் ரத்து செய்யப்பட்டது. தாவாவில் ஏற்பட்ட இதர விவாத அம்சங்களின்மேல் மறுபடியும் விசாரணை செய்யும்படி அனுப்புதல். வியாஜ்ஜியத்தின் உபய கக்ஷிக்காரர் எவரும் ஹாஜராகாமல் வியாஜ்ஜியம் தள்ளிவிடப்பட்டது.

A என்பவன் B என்பவன்மீது ஒரு குத்தகைச்சீட்டின்மேல் வாடகைக்கு தாவாசெய்து அந்த வியாஜ்ஜியம் அப்பீலில் கலெக்டர் முன் வந்தபோது அவர் அந்த குத்தகை செலாவணியுள்ளதல்லவென்று சொல்லி தாவாவில் ஏற்பட்டிருக்கும் இதர விவாத அம்சங்களை மறுபடியும் விசாரணை செய்யும்பொருட்டு தாவாவை கீழ்க்கோர்ட்டாருக்கு திருப்பி அனுப்பிவிட்டார். அந்த வியாஜ்ஜியம் மறுபடியும் விசாரணைக்கு வந்தபோது உபய கட்சிக்காரர்களில் எவரும் ஆஜராகாமல் வியாஜ்ஜியம் தள்ளிவிடப்பட்டது. அதன்பேரில் வாதி A என்பவன் மறுபடியும் B என்பவன்பேரில் வாடகைக்குப் புது வியாஜ்ஜியம் செய்தான். முன் செய்த வியாஜ்ஜியத்தில் குத்தகை செலாவணியுள்ளதல்லவென்று கலெக்டர் சொல்லியிருக்கும் தீர்மானத்தை கண்டெழுதி ஒரு டிக்ரி பிறந்தில்லாவிடினும், கலெக்டர் முன்செய்த உத்தரவிற்கு அதை ஒரு காரணமாக கண்டெழுதியதால் அந்த விஷயம் இதே கட்சிக்காரர்களுக்குள் முந்திகொண்டு வரப்பட்ட வியாஜ்ஜியத்தில் விசாரித்து முடிவாய்த் தீர்மானம் செய்யப்பட்டதாக (Res Juticota) ஹைகோர்ட்டார் தீர்மானித்தார்கள். ஷேக் ஆலம் V. பர்மானந்த (5 A. L. J. 48.)

சி. பு. கோ. 224-வது பிரிவு கிரயச்சர்ட்டிபிகேட்டில் கோர்ட்டார் செய்ததப்பு. அதைத் திருத்துவதற்குண்டான அதிகாரம். அந்த சொத்தை ஸ்வாதீனப்படுத்தல்.

ஒரு வியாஜ்ஜியத்தில் இரண்டு சொத்துகள் ஏலத்தில் விற்கப்படுமென்று கோர்ட்டு இஸ்தியார் பிறந்து அந்த இரண்டு சொத்துகளில் ஒன்று மாத்திரம் தான் விற்கப்பட்டது. ஆனால் கிரயம் வாங்கினவனுக்கு கோர்ட்டார் கொடுத்த கிரய சர்ட்டிபிகேட்டில் தப்பாய் இரண்டு சொத்துகளையும் கிரயதாரனுக்கு ஸ்வாதீனம்செய்து ஒப்புவித்தார்கள். அப்படி கிரய சர்ட்டிபிகேட்டில் நேரிட்ட தப்பிதத்தைத் திருத்துவதற்கு கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டென்றும், இப்படிப்பட்ட விஷயம் ஒரு டிக்ரியை நிறைவேற்றுவதில் உண்டாகும் விஷயமாகையால் சி. பு. கோ. 244-வது பிரிவின்படி கிரய சர்ட்டிபிகேட்டை திருத்தலாமென்றும், அந்த கிரயத்தை ரத்து செய்வதற்கு வேறே மனு செய்யவேண்டியது அவசியமல்லவென்றும் தீர்மானித்தார்கள்.

A. A. O. (No. 15807 கல்கத்தா.)

சி. பு. கோ. 1882, 230 - வது பிரிவு இந்தியன் கால நிர்ணயச்சட்டம் (XV of 1877) இரண்டாம் ஷெடூல் 179-வது ஆர்டிகல் 2-ம் கிலாஸ், டிக்கிரியை நிறைவேற்றுதல் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிவாதிகளின்மேல் செய்யப்பட்ட ஒரே டிக்ரி அந்த வியாஜ்ஜியத்தில் டிக்ரி ஆகாத அம்சத்தைப்பற்றி மாத்திரம் சில டிக்ரி கடன்தாரர்கள்மேல் செய்த அப்பீல். மற்ற டிக்ரி கடன்தாரர்கள்மேல் கால நிர்ணயதோஷம் ஏற்படுத்துவதற்கு, எது முதல்கால நிர்ணயம் செய்ய வேண்டும்.

ஒரு சொத்தை பாகித்து ஸ்வாதீனம் செய்யும்படிக்குக் கொண்டுவந்த ஒரு தாவாவில் வாதிகளுக்கு 1-வது நெம்பர் என்று குறிப்பிட்ட சொத்தில் நாலில் ஒரு பாகம் ஒப்புவிக்க வேண்டியதென்று 1, 2, 3, 7-பிரதிவாதிகள் மேலும் 2-வது நம்பர் என்று குறிப்பிட்ட சொத்தில் சில பாகத்தை வாதிகளுக்கு ஒப்புவிக்கும்படி 1, 2, 3, 5 - பிரதிவாதிகள் மேலும், டிக்கிரி ஆயிற்று. 4 - ம் பிரதிவாதியின் மேல் ஒரு தலை பட்சமாய் (Exparte) டிக்கிரி செய்யப்பட்டது. 4-ம் பிரதிவாதியின் மேல் ஷை டிக்கிரியை நிறை வேற்றுவதற்கு வாதிகள் மனு கொடுத்தார்கள். அந்த மனுவில் 4-ம் பிரதிவாதி ஆஜராகி தன் மட்டில் ஒரு தலை பட்சமாய் (Exparte) டிக்கிரி ஆயிற்றென்றும், ஆகையால் சி. பு. கோ. 230-வது பிரிவின்படியும் டிக்ரி ஆன தேதி முதல் கணக்கிட்டதில் இந்தியன் கால நிர்ணய சட்டத்தின் இரண்டாம் ஷெடுல் 179-வது ஆர்டிகலின்படியும் டிக்ரி தன் பேரில் கால தோஷமாய் விட்டதென்றும் வாதித்தான். வாதிகளின் தரப்பில் டிக்ரியில் கண்ட மற்ற பிரதிவாதிகள் டிக்ரியை தகரார் செய்து வாதித்தார்களென்றும், அந்த அப்பில் மூன்று வருடகாலத்திற்குமேலேயே நடந்து கடசியாய் சீப் கோர்ட்டார் செய்த டிக்ரி தேதிமுதல் மூன்று வருஷம் ஆக வில்லை. ஆகையால் ஷை கண்ட 179-வது ஆர்டிகலின்படி டிக்ரிக்கு கால தோஷம் ஆகவில்லை என்றும் தகரார் செய்தார்கள். ஹைக்கோர்ட்டார் எல்லா பிரதிவாதிகளும் ஒரே சொத்துக்கு ஹக்குள்ளவர்களா யில்லாமலிருந்தபோதிலும் வாதிக்கு கிடைத்த டிக்ரி ஒன்றேயல்லது இரண்டல்லவென்றும் பிரதிவாதிகள் எல்லோர் மேலும் ஒரே ஏக டிக்ரி ஆனபடியால் அது எப்போது அப்பீலில் டிக்ரி செய்யப்பட்டதோ அது முதல்தான் அந்த டிக்ரியை நிறைவேற்றுதலுக்கு காலம் நிர்ணயம் செய்ய வேண்டியதென்னும் காரணத்தால், நிறைவேற்றுவதற்கு இன்னும் கால தோஷமாக வில்லையென தீர்மானித்தார்கள்.—ஆன்வர் அலி V இனுயத் அலி (9 P. L. R. 21.)

சி. பு. கோ. 574-வது பிரிவு:—கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய தீர்ப்பு. இப்பிரிவின்படி இல்லாமையால் மறு விசாரணைக்கு அனுப்பப்பட்டது.

அப்பீல் கோர்ட்டாருடைய தீர்ப்பானது எழுதப் பட்டிருக்கவேண்டும்; மேலும் அதிலே (1) பைசல் பண்ணவேண்டிய அம்சங்களையும், (2) அவைகளின் மேல் செய்யப்பட்ட தீர்மானத்தையும் (3) அந்தத் தீர்மானத்துக் குண்டான காரணங்களையும் (4) எதன்மேல் அப்பீல் செய்துக்கொள்ளப் படுகிறதோ அந்த டிக்ரி ரத்து பண்ணப்படுகிற விஷயத்திலே, அப்பீல் வாதி இன்ன பரிகாரம் பெற அர்ஹராயிருக்கிறாரென்பதையும், கண்டெழுத வேண்டும். மேலும், அது சொல்லப்படுகிற காலத்தில் அதிலே அந்த ஜட்ஜாகிலும் அதை ஆமோதிக்கிற ஜட்ஜாகிலும் கையெழுத்தும் தேதியும் போடவேண்டும் என்று சி. பு. கோ. 573-வது பிரிவில் சால்லியிருக்கிறபடி, ஒரு கீழ் அப்பீல் கோர்ட்டாரின் தீர்ப்பு கிரமமானதல்லவென்று ஹைக்கோர்ட்டாருக்குத் தெரிய வந்தால் அவர்கள் இரண்டாம் அப்பீலில் அந்த வியாஜ்ஜியத்தின் கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய டிக்ரியை ரத்து செய்து அந்த தாவாவை மறு விசாரணை செய்யும்படி அனுப்பி விடுவதுதான் உசிதமென்று சொல்லி, அப்படி ஒரு வியாஜ்ஜியம் அனுப்பப்படும் பொழுது அந்த தாவாவை முன் விசாரணை செய்து பைசல் செய்த ஜட்ஜ் அவ்விடத்திலேயே இருந்து மறு விசாரணை செய்யாமலே மேற் செப்பிய நிபந்தனையின்படி அந்த தீர்ப்பை எழுதி பூர்த்தி செய்யலாமென்று அபிப்பிராயப் பட்டால் அவர் கருதியபடியே செய்யலாம்; அப்படிக்கில்லாமல், முன் விசாரணை செய்து பைசல் செய்த ஜட்ஜ் அவ்விடத்திலில்லாமல் வேறே ஜட்ஜ் அவ்விடத்தில் இருக்கும் பட்சத்திலாவது அல்லது முன் விசாரணை செய்த ஜட்ஜ் அந்த வியாஜ்ஜியத்தை விசாரணை செய்துதான் மேற் செப்பிய பிரிவின் பிரகாரம் தீர்ப்பு எழுதி பூர்த்தி செய்யவேண்டுமென்று அபிப்பிராயப் பட்டாலாவது தாவாவை மறுபடியும் விசாரணை செய்துதான் தீர்ப்பு எழுதி பூர்த்தி செய்யவேண்டும்.

இ. லா. ரி. 20 சென் 496; 22 சென் 12; 25 கல் 97; 17 பம். 428; 19 பம் 551.

GENERAL NEWS.

பொது வர்த்தமானம்.

சிப்பாய்களின் வழிபறி.

மத்திய மாகாணத்தைச்சேர்ந்த ஜான்சி என்னும் ஊரில் சமீபகாலத்தில் வழிபறி நடந்தது. அதாவது சுதேச ஷாப்புக்காரர் ஒருவர் இரவு 7-மணி சுமாருக்கு ஷாப்பை மூடிக்கொண்டு பண முடிப்புடன் போய்க்கொண்டிருந்தார். இது தெரிந்து ஷை ஜான்சியில் வைக்கப்பட்டிருக்கும் 87-வது பஞ்சாப் பட்டாளத்தை சேர்ந்த இரண்டு சிப்பாய்கள் இவனை தொடர்ந்து சென்று ஷை ஷாப்புக்காரர் கொஞ்சம் தூரம் போனவுடன் லத்திகளினால் அவனை அடித்து பண முடிப்பை பிடுங்கிக்கொண்டார்கள். இவ்விதமாய் பிடுங்கின விசையில் முடிப்பு அவிழ்ந்து பணம் பூமியில் சிதறுண்டதன்னியில் அதனுள் வைக்கப்பட்டிருந்த ரூ. 93-அடங்கிய சிறிய பணப்பையும் கீழே விழுந்தது. இதற்குள் மேற்படி ஷாப்புக்காரர் கூச்சலிடவும் அக்கூச்சல் கேட்டு ஜனங்கள் சேரவும் கீழே விழுந்த சிறிய பணப்பையை மாத்திரம் சிப்பாய்கள் எடுத்துக்கொண்டோடி விட்டார்கள். சிலர் அவர்களை துரத்திக்கொண்டுபோய் கடைசியாய் சிறிய பணப்பை வைத்திருந்த சிப்பாய் நாஷீர் டின் என்பவனை பிடித்துக் கொண்டார்கள். அவன் விசாரிக்கப்பட்டு இரண்டு வருஷ கடினகாவல் தண்டனை அடைந்தான்.

பட்டத்து யானை பாவையைக் கோன்ற விநோதம்.

கடந்த ஜனவரிமீ 12உ ஞாயிற்றுக்கிழமை காலை 10-11-மணிக்கு ஹைதிராபாத்தில் ஒரு பயங்கரமான சம்பவம் நேர்ந்தது. அதாவது வாராவதிக்கு கீழ் அப்ஜல்கஞ் ஆஸ்பத்திரிக்கு அருகாமையாய், நகரத்துக்குள் போகும் வழியில் H. H. நைஜாம் அவர்களின் யானைகளுக்கு தீனி போடும் இடம் ஒன்றிருக்கிறது. மேற் குறித்த தினம் மூன்று வாலிப பெண்கள், யானைகள் தின்னும் கரும்பு துண்டுகளை பொறுக்கி எடுத்துவர அந்த இடத்திற்கு போனார்கள். அப்படி போனவர்களில் ஒருவளின் தலை மயிரை அங்கிருந்த யானை பற்றியிழுத்தது. மயிர் போனாலும் போகட்டும், உயிர் தப்பினால் போதுமென்று ஒரு சிம்பு சிம்பி இழுக்க பாதி மயிர் யானை தும்பிக்கையில் சிக்கிக்கொள்ள மற்ற பாதி மயிருடன் அவள் தப்பித்துக் கொண்டோடி விட்டாள். இவ்விதமாய் இவள் தப்பித்தக்கொண்டோடி விட்டதை கண்ட அந்த யானை, அங்கிருந்த மற்றொரு பெண்ணின் துணியை பிடித்து இழுக்க, அதை அவள் கிழித்து எறிவதற்குள், அது தன் தும்பிக்கையால் அவள் இடுப்பை வளைத்து சுற்றி செண்டுபோல் தூக்கி ஆகாயத்தில் எறிந்தது. கீழ் விழுந்தவுடன் மறுபடியும் அதே மாதிரி தூக்கி எறிந்தது. இவ்விதமாய் இரண்டு தடவை செய்து கடைசியாய் மூன்றாந் தடவை அவளை கால் வைத்து மிதித்து கிழித்து விட்டது. கொல்லப்பட்ட இந்த பெண்ணுக்கு கலியாணம் நடந்து 14-பதினன்கு நாள் கூட ஆகவில்லை என கேட்க மிகவும் வருத்தப்படுகின்றோம். இந்த துஷ்ட மிருகம் இதற்கு முந்தி ஐந்து பேரை கொன்றிருப்பதால், மன்னுயிரை கொன்றது இது தான் முதல் தடவை யல்ல. இந்த யானையை நைஜாம் அவர்கள் புலி வேட்டைக்கு போகும்போது கொண்டுபோவது வழக்கமாம். ஆனால் இது மன்னுயிரை கொல்ல ஆரம்பித்தது முதல் இதை அழைத்து போவதில்லையாம். கலியாணம் நடந்து 14-நாள் கூட ஆகாத கன்னிகையை கொன்ற நிமித்தமாகவே இந்த யானையானது நைஜாம் அவர்களின் உத்திரவுப்படி சுட்டு கொள்ளப்பட்டது.

திருவிட மருதூர் இரத விபத்து.

தென்னிந்தியாவிலிருக்கப்பட்ட எல்லா இரதங்களை பார்க்கிலும் திருவிடை மருதூர் இரதம் மிகவும் பெரியது. பின்னும் அதன் மேல்புரத்து அலங்கரிப்பு அதின் அமைப்பைகாட்டிலும் பதின்மடங்காகத் தோற்றுவிக்கும் விமரிசை பொருந்தியது. பெரிய மிராசுதாரின் குடிகளாகிய மூப்பனார் தேவர் என்னும் பலவகையான 3000, 4000 ஜனங்களால் வடம் பிடித்து இழுக்கப்படுவது. இந்த இரதமானது பெரிய வீதிகளின் இருபுரத்திலுமுள்ள கால்வாய்களைச் சார்ந்தும், அதன் மேல்தட்டு அலங்கரிப்பு மாளிகை சிகரங்களின்மேல் தவழ்ந்தும், ஊர்வலம் வருவது மிகவும் பார்க்கத்தக்க காக்ஷியே. இரதத்தை நடத்துவதில் வல்லவர்களாகிய காத்தான்கள், இருபுரத்திலும் இரதம் கொஞ்சமும் மாறிப்போகாமல் அவ்வளவு ஜாக்கிரதையாய் பார்த்து வருவார்கள். இவ்வருஷ உச்சவகாலத்தில் பகல் 3-மணி சுமாருக்கு வடக்கு ரத வீதியாய் இரதம் வரும்போது, துரதிர்ஷ்டவசமாய் ஷை காத்தான்களில் சக்தியையும் கடந்து சென்று மஹாராஜா அவர்கள் மாளிகையின் மேல்மாடியில், இரதத்தின் மேல்தட்டு மோதி, அம்மாடியின் மூன்று விசித்திர ஸ்தம்பங்களை அடியோடு பேர்த்து விடவும், கீழிருந்த ஜனங்கள் அநேகர் ஷை ஸ்தம்பங்கள் விழுந்து காயப்பட்டார்கள். இவர்களில் 25-வயதுள்ள பிராமண ஸ்திரீ ஒருவள், ஸ்தம்பங்கள் தடால் என்று விழுந்தவுடன் திடீல் என்று இறந்துவிட்டாள். அந்தோ! பாபம்! முந்தி இறந்த இந்த அம்மாளோடு 50-வயதான முதலியார் ஒருவரும் மாண்டனர். ஒரு வாலிப பிராமண விதவையுடன் நின்றுகொண்டிருந்த 4, 5-வயதுள்ள பெண்ணும் உயிர் துறந்தது. இந்த விதவைக்கும் தலையில் பலமாய் காயம்பட்டது. கொசவுக்காரன் ஒருவனுடைய மண்டையும் பிளந்தது. போலீஸ் ஜவான் ஒருவனுடைய மண்டையும் பிளவு படாமல், அவன் அணிந்திருந்த கவர்ன்மெண்ட் தலைகுட்டை தடுத்தது புண்ணிய வசமேயானாலும், சிறிது காயம்பட்டது. அங்கிருந்த அநேக ஜனங்களுக்கும் காயம்பட்டது. காயப்பட்டவர்கள் எல்லாம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகப்பட்டார்கள்.

HAVE you APPARTMENTS TO LET? then advertise in the INDIAN LAW GAZETTE. Don't forget to advertise all your wants in the INDIAN LAW GAZETTE.

HINDU LAW.

ஹிந்து லா.

CHAPTER IV.

அத்தியாயம் 4.

ADOPTION.

ஸ்வீகாரம்.

பெண்சாதியின் சகோதரனுடைய குமாரனை ஸ்வீகாரமெடுத்துக் கொள்வது தென் இந்தியாவிலும், பம்பாயிலும் செலாவணியுள்ளதென்று தீர்மானமாயிருக்கிறது. (ஸ்ரீராமுலு V. ராமையா, இ. லா. ரி. 3 சென் 15, 22 பம் 973.) பெண்சாதியின சகோதரியினுடைய பிள்ளையையும் ஸ்வீகாரம் செய்துக் கொள்ளலாமென்றும் தீர்ப்பாயிருக்கிறது.

இ. லா. ரி. 20. சென் 283.

எவ்விடத்திலும் சூத்தரர்களுக்குள் தாயாதி சகோதரியின் பிள்ளையை ஸ்வீகாரம் செய்துக்கொள்வது வழக்கமாயிருக்கிறது. சின்ன நாகையா V. பெத்த நாகையா, இ. லா. ரி. 1 சென் 62; ஆனால் தென் இந்தியாவில் பிராமணரும், ஜைனியர்களும் இப்படிப்பட்ட ஸ்வீகாரம் செய்துக்கொள்ளலா மென்று அலகபாத் ஹைக்கோர்ட்டார் தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

இ. லா. ரி. 21 அல 412.

பிராமணருக்குள் சகோதரியின் பிள்ளையை ஸ்வீகாரமெடுத்துக் கொள்வது தேசாச்சார வழக்கப்படிக்கு செலாவணியுள்ளதல்லவென்று அலகபாத் ஹைக்கோர்ட்டு தீர்ப்பு யிருக்கிறது. பகவான் சிங்கு V. பகவான் சிங்கு இ. லா. ரி. 17 அல 294. இவ்வழக்கம் பம்பாயிலும் செலாவணியுள்ளதல்ல.

4 Bom, A. C. 130.

பெனரஸ் சட்டப்படிக்கும், பம்பாயிலும் பெண்ணின் பிள்ளையை ஸ்வீகாரமெடுப்பது செலாவணியுள்ளதல்ல; ஆனால் அப்படி செய்வது தென் இந்தியாவில் நடந்தேறிவருகிறது. வைத்தியநாதன் V. அப்பு.

இ. லா. ரி. 6 சென் 44.

பெண்சாதியின் சகோதரனை ஸ்வீகாரம் செய்துக்கொள்ளலாம். இ. லா. ரி. 22 பம் 973

ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் செய்துக் கொள்ளும் பொழுது அவனுடைய வயது எவ்வளவாய் இருக்கவேண்டுமென்பதைப்பற்றி சட்டம் என்ன சொல்லுகிறது?

மதராசிலும், பெங்கால், அலகபாத் இந்த இடங்களிலும் ஸ்வீகார மெடுப்பதற்கு பிள்ளையின் வயதிவ்வளவு இருக்கவேண்டு மென்பதைப் பற்றி கோர்ட்டார் இதுவரையில் வரையறுத்துச் சொல்லவில்லை; ஆயினும் பிராமணருக்குள் உபநயனத்திற்கு முன்னும சூத்தராளில் விவாகத்திற்கு முன்னுமென்று தீர்ப்பாயிருக்கிறது.

10 மூ. இ. அ 279; 9 அல 523.

ஆயினும் மதராசில் ஒரு உபநயனமாய் விட்ட பிள்ளை, ஸ்வீகாரமெடுத்துக் கொள்பவனுடைய கோத்திரத்தையே சேர்ந்தவனாயிருந்தால் அவனை ஸ்வீகார மெடுத்துக்கொள்ளலாம் (வீரராகவன் V. ராமலிங்கம், இ. லா. ரி. 9 சென் 148.) முன்னமேயே விவாகமாய் விட்டவனை சட்டப்படி ஸ்வீகாரமெடுக்கலாகாது. (பிச்சுவையன் V. சுப்பராயன்).

இ. லா. ரி. 13 சென் 128.

ஒரு இந்து குடும்பத்தின் தலைப்பிள்ளையை ஸ்வீகார மெடுத்துக்கொள்வது செலாவணியுள்ளதென்றும் தீர்மானமாயிருக்கிறது. (ஜானகி V. கோபால் 2 கல் 365; சின்ன கவுண்டன். V குமார 1 ம. ஹை. ரி. 54; குருலிங்கசாமி V. ராமலக்ஷ்மு அம்மாள் 18 சென் 53.) இம்மாதிரியாகவே ஒரு குடும்பத்திற்கு ஒரே புத்திரனாய் இருக்கப்பட்டவனையும் ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளலாமென்று தீர்ப்பாயிருக்கிறது.

இ. லா. ரி. 22 சென் 398; 11 சென் 43; 24. பம் 367; 21 அல 460.)

ஹிந்து ஒருவனுக்கு இரண்டு பிள்ளைகளிருந்தார்கள். அவர்களில் ஒருவன் இறந்துவிட்டான். காலம் சென்ற இந்தப் பிள்ளைக்கு ஒரு குமாரனிருந்தான். இந்த பௌத்திரன் ஜீவித்திருக்கையில் தகப்பன் தனக்கு ஒரே புத்திரனாக ஜீவித்திருந்த 2-ம் புத்திரனை இன்னொரு குடும்பத்திற்கு ஸ்வீகாரம் கொடுத்தான். இப்படிப்பட்ட ஸ்வீகாரம் செல்லாதென்று வாதம் செய்தார்கள். ஆனால் கல்கத்தா ஹைக்கோர்ட்டார் இப்படிப்பட்ட ஸ்வீகாரம் இந்துலாப்படி கிரமமானதென்று தீர்மானம் செய்தார்கள்.

இ. லா. ரி. 17 கல் 518.

ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் கொடுப்பதென்றாலும், ஸ்வீகாரம் எடுப்பதென்றாலும் எவ்விதமாய்ச் செய்யவேண்டியதென்பதைப்பற்றி தர்ம சாஸ்திரங்களில் சொல்லியிருப்பது இன்னதென்று சற்று கவனிப்போம் :—

ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் கொடுப்பதினாலும், எடுப்பதினாலும் :—பிள்ளையை ஸ்வீகாரம் கொடுப்பவன் தன் பிள்ளையின் கையை பிடித்து ஸ்வீகாரம் பெற்றுக்கொள்ளுகிறவன் கையில் ஒப்புவிக்க, அவன் அப்பிள்ளையை வரவழைத்துக் கொண்டானென்கிற இந்த இரண்டு சடங்குகளை செய்தாலே போதுமென்றும், நெருப்பின் முன் தத்தஹோமம் என்னும் சடங்கைச் செய்து தான் ஸ்வீகாரம் கொடுக்கவேண்டுமென்பது விசேஷமாய் சூத்தரர்களுக்குள் அவசியமல்லவென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். தங்கத்தண்ணி V. இரத்தின முதலியார் 5 சென். 358. ஆனால் பூனால் தரிக்கும் ஹிந்துக்களுக்குள் இவ்விதமாய் ஒரு பிள்ளையை கொடுப்

பதிலும் வாங்குவதிலுமே கிரமமாய் ஸ்வீகாரம் கொடுக்க அல்லது எடுக்கப்பட்டவனாக மாட்டானென்றும் நெருப்பின் முன் தத்தஹோமம் செய்தாலொழிய ஹிந்துலாப்படி அது கிரமமான ஸ்வீகாரமாக மாட்டாதென்றும் வங்காளத்து கோர்ட்டார் அபிப்பிராயப் படுகிறார்கள். லக்ஷ்மன் V. மோஹன் 16 W. R. 179. அலகாபத் ஹைகோர்ட்டாரில் சிலர் இவ்விதமாய் அபிப்பிராயங் கொள்ளவில்லை. ஆத்மாராம் ராவ் V மாதுராவ் 6 அ. 276. ஆனால் இது விஷயமாக இதுவரையில் ஆயிருக்கும் தீர்மானங்களை கவனிக்கும் விஷயத்தில் பெண்ணின் குமாரனையாவது சகோதரனின் குமாரனையாவது ஸ்வீகாரமெடுத்தால் பிள்ளையைக் கொடுப்பதும் வாங்குவதுமே போதுமான சடங்குகளென்றும் நெருப்பின் முன் தத்தஹோமம் செய்து கொடுக்கவேண்டுமென்பது அவசியமில்லையென்றும் வாஸ்தவத்தில் இதுவரையில் ஏற்பட்டிருக்கும் தீர்மானமாய் தோன்றுகிறது. இது இப்படிநிற்க, மதராஸ் ஐகோர்ட்டார் இது விஷயமாக சட்டம் இப்படித்தான் இருக்கவேண்டு மென்பதைப்பற்றி இதுவரையில் ஓர் முடிவான தீர்மானம்செய்திருப்பதாய்க்காணவில்லை. இது விஷயமாய் முதல் முதல் மதராஸ் ஐகோர்ட்டார் முன்வந்த கேசில் தத்தஹோமம் என்னும் ஓர் சடங்கு சாஸ்த்ரோக்தமாய் மிக்க விசேஷித்ததாய் இருந்திடினும் அப்படி நெருப்பின்முன் தத்தஹோமம் என்னும் சடங்கு செய்துதான் ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் கொடுக்கவேண்டுமென்பது அவசியமில்லையென்று தீர்மானித்தார்கள். சிங்கம்மாள் V. வெங்கடாசார்லு, 4 சென். ஹை. ரி. 165. சரிறம் மாலா V முக்தமாலா, இ. லா. ரி. 6 சென் 20. ஆனால் வெங்கடா V சுபத்ரா இ. லா. ரி. 7 சென் 548 என்னும் கேசில் இப்படி ஸ்வீகாரப்கொடுப்பது கிரமமானதல்லவென்று சந்தேகித்தார்கள். இது இப்படியிருக்க, இதே மதராஸ் ஹைகோர்ட்டார் ஒரு புல் பென்சில் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளுகிற தகப்பனும் அந்த தத்துபிள்ளையின் சொந்ததகப்பனும் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கும் பக்ஷத்தில், நெருப்பின்முன் தத்த ஹோமம் செய்து கொடுக்கவேண்டுமென்பது அவசியமில்லையென்று கோவிந்தையர், V தொரைசாமி, இ. லா. ரி. 11 சென் 5 ல் தீர்மானம் செய்திருக்கிறார்கள். சிலோன் தீவின் சட்டப்படி கிரமமாய் ஸ்வீகாரம்செய்து கொள்ளப்பட்டதென்று சொல்லுவதற்கு அத்தாட்சியாக ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும் தகப்பன் மஞ்சல் தண்ணீர் குடிக்கவேண்டுமென்கிற ஓர் சடங்கு செய்யவேண்டியது மிக்க அவசியமாம்.

சென்னபட்டணத்தில் பிராமணன் ஒருவன் ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டான், ஆனால் நெருப்பின் முன் தத்த ஹோமம் என்னும் சடங்கை நிறைவேற்றுவதற்கு முன் இறந்து விட்டான்; அவனுடைய விதவை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்ட தகப்பன் இறந்துபோனபிறகு நெருப்பின் முன் செய்யவேண்டிய தத்த ஹோம சடங்கை செய்துமுடித்தாள். இவ்விதமாக செய்துக் கொண்ட ஸ்வீகாரம் கிரமமாய் செய்யப்பட்டதென்று தீர்மானித்திருக்கிறார்கள். சுப்பிராயர் V. சுப்பம்மாள். 21 சென். ஹை. ரி. 497.

இம்மாதிரியாகவே பம்பாயில் ஓர் ஸ்திரி ஒரு ஏஜெண்டை நியமனம் செய்து, அந்த ஏஜெண்டின் மூலமாய் செய்யப்பட்ட ஓர் ஸ்வீகாரமும் அதன் சடங்குகளும் கிரமமானதென்றும் ஒரு நோயாளி தகப்பன் ஸ்வீகாரத்திற்குரிய சடங்குகளை ஒரு ஏஜெண்டின் மூலமாய் செய்விக்கலாம் என்று பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (விஜயரங்கம் V. லக்ஷ்மண 8. B H. C. R. 244; ஜம்னுபாய் V. ராமசந்த்ர 7 B. 225.) ஆனால் மதராஸ் ஐகோர்ட்டாரோ தகப்பன் ஜீவித்திருக்கும்போதே பிள்ளையை தத்து கொடுக்கல் வாங்கல் என்னும் சடங்குகளை செய்துவிட்டு நெருப்பின் முன் தத்த ஹோமம் என்னும் சடங்கைச் செய்யாமல் இறந்துபோன பின் அவனுடைய சகோதரன் அவனுக்கு பதிலாக அந்த மதாச்சார சடங்குகளை செய்து முடிக்கலாம் என்று தீர்மானித்தார்கள். வெங்கடா V. சுபத்ரா இ லா. ரி. 7 சென் 548.

ஒருவனை கிரமமாய் ஸ்வீகாரம் எடுக்கப்பட்ட புத்திரனென்று தீர்மானித்திருக்கும் தீர்ப்பை (Judgment) சாக்ஷியாக கோர்ட்டில் தாக்கல் செய்தல், அந்த தீர்ப்பு அந்த வியாஜ்ஜியத்தில் கண்டிருக்கும் நபர்களைவிட அவ்வியாஜ்ஜியத்தில் கக்ஷிதாரரல்லாத இதர நபர்களை கட்டுப்படுத்தாதென்றும் தீர்மானித்தார்கள். (ஏரகாலப்மாள் V. அங்கலா 2 சென் ஹை ரி. 276). ஆனால் அப்படிப்பட்ட தீர்ப்பு அந்த பிள்ளை அந்த குடும்ப சொத்திற்கு தத்து புத்திரன் என்றே சுதந்தரம் பாராட்டி வந்தானென்பதற்கு சாக்ஷியமாகுமே யொழிய மற்றப்படி அந்தப்பிள்ளை அக்குடும்பத்தின் தத்து புத்திரன் தான் என்று ருஜுவாகமாட்டதென்று தீர்மானித்திருக்கிறார்கள். அநந்தமாரி V. ஷீப் சுந்தரராய். 9. மூ. இ. அ. 287.

ஒரு தத்து சட்டபடி செலாவணியுள்ளதா அல்லவா என்று டிக்ளேர் செய்யும்பொருட்டு கொண்டுவரும் தாவாவிற்கு இந்தியன் லிமிடேஷன் ஆக்டில் இத்தனை வருஷங்களுக்குள்ளாகத்தான் வியாஜ்ஜியம் தொடரவேண்டுமென்று யாதேனும் ஒரு நிபந்தனை உண்டா? ஒரு ஸ்வீகாரம் இந்துலாப்படி செலாவணியுள்ள தல்லவென்றுவது அப்படிப்பட்ட தத்து ஒருபோதும் செய்யப்பட்டதல்லவென்றுவது டிக்ளேர் செய்யும்பொருட்டு வியாஜ்ஜியம் தொடர்ந்தால் மேற்செப்பிய இந்தியன் கால நிர்ணய சட்டத்தின் 118-வது ஆர்ட்டிகலின்படி அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் செய்யும் வாதி அந்த ஸ்வீகாரத்தைப் பற்றி எப்பொழுது கேள்விப்பட்டானோ அல்லது தெரிந்துகொண்டானோ அந்த காலம் முதல் 6 வருடத்திற்குள்ளாக வியாஜ்ஜியம் தொடரவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட வியாஜ்ஜியம் டிகிளேர் செய்யும்படிக்கு மாத்திரம் மேற்கண்டபடி 6 வருஷத்திற்குள் கொண்டுவரலாமே யொழிய சொத்தை ஒப்புவிக்கும்படியாகவும் கொண்டுவரும் தாவாவிற்கு இந்தியன் லிமிடேஷன் ஆக்டின் 14-வது ஆர்டிகலின்படி 12 வருஷத்திற்குள் தாவா செய்யலாமென்று தீர்மானித்திருக்கிறார்கள். பார்ஸ்டியோ V. கோபால் 13 R. 644.

ஒருவன் தன் குடும்பத்தைவிட்டு வேறொரு குடும்பத்திற்கு ஸ்வீகாரம் போவதனால் விளையும் பயன்களாவன :—

1. ஒருவன் தான் பிறந்த சொந்த குடும்பத்தைவிட்டு தன்னை ஸ்வீகார மெடுத்துக்கொள்ளும் குடும்பத்திற்குப்போவதினால் அவன் தன் சொந்த குடும்பசொத்தில் தனக்குள்ள ஹக்கு சுதந்திரங்களை இழந்து வேறொரு குடும்பத்திற்கு மாறி விடுகிறான். ஆனால் அவன் தன் சொந்த குடும்பத்தை விட்டு வேறொரு குடும்பத்திற்கு ஸ்வீகாரம் போகாமலிருந்தால் அவனுக்கு தன் சொந்த குடும்பத்தில் விவாகம், ஸ்வீகாரம், சூதகம் அவ்விஷயங்களில் என்ன ஹக்கு பாத்தியதைகளுண்டோ அவைகளை இழந்தவனல்ல.

2. அவன் தான் ஸ்வீகாரம் போகும் குடும்ப சொத்திற்கு அந்த குடும்பத்தில் பிறந்த புத்திரனைப் போலவே சர்வ ஹக்கு சுதந்திரங்களையும் பெறுகிறான்.

3. அவன் தன்னை ஸ்வீகார மெடுத்துக்கொள்ளும் தகப்பனை குடும்ப சொத்தை பாகித்துத் தரும்படி யாகவும் கேட்கலாம்.

4. மித்தாக்ஷரா சட்டத்தைஅனுசரிக்கும் ஒரு இந்து குடும்பத்திற்கு ஸ்வீகாரம் போகும் பிள்ளை தன்னை ஸ்வீகார மெடுத்துக்கொண்ட தகப்பனுக்கு பங்காளியாய் உடன் சுதந்தரமுள்ளவனுவதுமல்லாமல் அந்த குடும்பத்திலேயே பிறந்த சொந்த பிள்ளையைப் போல் தன்னுடைய பங்காளிகளுடைய சொத்திற்கு ஹக்கு சுதந்தரமுள்ளவனுகிறான்.

5. ஸ்வீகாரம் போவதனால் அக்குடும்பத்திற்கு வம்சக் கிரமமாயும் ஒரே கோத்திரத் தலைவனினின்றும் தோன்றிய ரத்தக்கலப்புள்ளவனுகிறானென்றும் தீர்ப்பாயிருக்கிறது. பத்மகுமாரி V. கோர்ட் ஆப் வார்ட்ஸ் 8 இ. அ. 239; இ. லா. ரி. 8 கல் 302.

6. ஸ்வீகாரம்போகும் பிள்ளை தன்னை ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளும் தகப்பனுடைய பெண்சாதியாகிய ஸ்வீகாரமெடுத்துக்கொண்ட தாய் வர்க்கத்திலும் சொந்த பிள்ளையைப்போல் சர்வ ஹக்கு சுதந்தரங்களை அடைகிறான். (ஷாம்குவார் V. கயாடின் புல்பென்சு இ அ 256; உமாசங்கர் V. காளிகோமல் 6 கல் 256) இந்த தீர்மானங்கள் பிரிவிகவுன்சில் தீர்மானத்தினால் ஊர்ஜிதமாயிருக்கின்றன. 10 இ. அ. 138, இ. லா. ரி. 10 கல் 232. ஆகையால் அவன்தன்னை ஸ்வீகார மெடுத்துக்

கொண்டதாய் அவனுடைய தகப்பனிடமிருந்து அவள் அடைந்தசொத்திற்கும் ஹக்குள்ளவனுகிறான்.

7. இந்து ஒருவன் ஜீவித்திருக்கும் தன்னுடைய இரண்டு பெண்ஜாதிகளில் ஒரு பெண்சாதியுடன் மாத்திரம் கலந்து ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டால் எந்த பெண்சாதி தன் புருஷனுடன் கலந்து ஸ்வீகார மெடுத்துக்கொள்ளுகிறாளோ அவள் மாத்திரம் தான் அந்த பிள்ளைக்கு ஸ்வீகார மெடுத்துக்கொண்டதாய் ஆகிறாள். இன்னொருபெண்சாதியோ அந்த பிள்ளைக்கு 'சபத்னிமாதா' ஆகிறாள் என்று தீர்மானமாயிருக்கிறது. ஊத்துமலை கேஸ் என்று வழங்கும் (அன்னபூரனி V. போர்ப்ஸ், இ. லா. ரி. 18 சென் 278; இந்த தீர்மானம் பிரிவி கவுன்சில் தீர்மானத்தால் ஊர்ஜிதமாயிருக்கிறது. 26 இ. அ. 246, 23 மூ. 1) காவரிஅம்மாள் V. சாஸ்திரி ராமய்யர் இ. லா. ரி. 26 சென் 104.

ஸ்வீகார மெடுத்துக்கொள்ளும் தகப்பன் தான் ஒருவன் மாத்திரம் ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டாலும் அல்லது அவனுக்கு அனேக பெண்சாதிகளிருந்து அவர்கள் எல்லோருடனும் கலந்து ஸ்வீகாரம் செய்துக்கொண்டாலும் அந்த பெண்சாதிகள் அனைவரும் அந்தப் பிள்ளைக்கு ஸ்வீகார மெடுத்துக்கொண்ட தாய் மார்களாகிறார்கள்.

ஒருவன் சட்டப்பிரகாரம் இன்னொரு குடும்பத்திற்கு ஸ்வீகாரம் போகும் தருணத்தில் சாஸ்திரோக்தமாயும் லாப்படியும் செய்யவேண்டிய சடங்குகள் யாவும் கிரமமாய் செய்து தத்தெடுத்துக் கொள்ளப்பட்டவனென்று ருஜுவாகாவிடில் ஸ்வீகாரம் எடுத்துக்கொண்ட பிள்ளை தன் ஜீவனும்சமும் தன்னுடைய விவாகச் சிலவும் இவைகள் மாத்திரம் தான் தன்னை ஸ்வீகாரமெடுத்துக்கொண்ட குடும்பத்திலிருந்து தனக்கு கிடைக்கவேண்டியதென்று ஹக்கு பாராட்டலாம். ஆயினும் மதராசிலும் பம்பாயிலும் சட்டப்படி ஸ்வீகாரம் செய்துக்கொள்ளப் பட்டவனென்று ருஜுவாகாவிடில் அந்தப் பிள்ளை தன்னை ஸ்வீகார மெடுத்துக்கொண்ட தகப்பனுடைய சொத்திற்கு தாவா செய்யலாகாதென்பது மனுவின் மூலவாக்கியம். ஆனால் அவன் பிறந்த சொந்த குடும்பத்தில் அவனுக்கு என்ன ஹக்கு சுதந்தரங்களுண்டோ அவைகள் பாதிக்கப் படவில்லை யென்று சந்தேகிப்பதற்கு ஏதுவாயிருக்கலா மென்று தீர்மானமாயிருக்கிறது. பவானி V அம்பாபாய் ? சென் ஹை. ரி. 363; 12 பம் ஹை. ரி. 397.

ஒரு ஸ்வீகாரம் கிரதகா ஏற்பாட்டின்படி செய்துக்கொள்ளப்பட்ட தென்னும் காரணத்தால் ரத்து செய்யப்பட்டால் ஸ்வீகார மெடுத்துக்கொள்ளப் பட்ட பிள்ளை அவன் ஸ்வீகாரம் போன குடும்பத்தில் அவனுக்குள்ள ஹக்கு சுதந்தரங்களை இழந்து விடுவது மல்லாமல் அவன் தான் பிறந்த சொந்த குடும்பத்தைச்சேர்ந்த தன்னுடைய சொந்த தாய் தகப்பன்மாருடைய சொத்திற்கும் தனக்குள்ள ஹக்கு சுதந்

தரங்களேயும் இழந்து விடுகிருனென்று வங்காளத்து ஹைகோர்ட்டார் அபிப்பிராயப் படுவதாக ஹுடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஈஷான் கிஷோர் V ஹரிசந்திர 3 பெ. லா. ரி. அப்பில் 42.

ஹிந்து ஒருவன் ஒரு பிள்ளையை ஸ்வீகாரமெடுத்துக்கொள்கிருன்; அதற்குப் பின் அவனுக்கு ஒரு புத்திரன் பிறக்கிருன். சூத்திராளுக்குள் ஸ்வீகாரம் செய்துக்கொண்ட பிள்ளையும் அவனுக்கு பின் பிறந்த புத்திரனும் சம பாகமாய் பாகித்துக் கொள்கிறார்கள். ஹனு மந்தம்மா V ராமி ரெட்டி இ. லா. ரி 4 சென் 272 ஆனல் பூணூல் தரிக்கப்பட்டவர்களுக்குள் தத்து புத்திரன் பின் பிறந்த சொந்த புத்திரனுடைய பாகத்தில் காலில் ஒரு பங்கு அடைகிருன். அதாவது முழு சொத்தை நான்கு பாகமாகப் பிறித்து அதில் மூன்று பாகம் பின் பிறந்த சொந்த பிள்ளையும் ஒரு பாகம் தத்து புத்திரனும் அடைகிறார்கள். கிரப்ப V கிங்கப்பா இ. லா. ரி. 17 பம் 100.

ஒரு குடும்பத்தில் தத்து புத்திரனும் ஸ்வீகாரத்திற்கு பின் பிறந்த புத்திரனும் குடும்ப சொத்தை இருவரும் உடந்தையாய் அனுபவித்துக் கொண்டிருக்கையில் பின் பிறந்த புத்திரன் இறந்து விட்டால் மதராஸில் தத்து புத்திரன் அந்த சொத்து முழுமைக்கும் சொந்தக்காரனுகிருனென்று தீர்மானம் செய்திருக்கிறார்கள். (1 செ ஹை ரி 49.)

மிதாக்ஷர சட்டத்தை அனுசரிக்கும் ஒரு அவிபக்த குடும்பத்தில் A என்ற தகப்பனும் B, C என்ற இரண்டு பிள்ளைகளும் ஏக குடும்பமாயிருந்தார்கள். அதில் முதலில் A என்னும் தகப்பன் இறந்துவிட்டான். பின்பு B என்னும் மூத்தப்பிள்ளை தன்பெண்சாதியாகிய D என்னும் விதவையை விட்டு விட்டு இறந்துவிட்டான், பிறகு C என்னும் இளைய குமாரனும் அவனுடைய பெண்ஜாதியாகிய E என்னும் விதவையை விட்டு விட்டு இறந்துவிட்டான் அதற்குப் பின் B என்னும் மூத்தப்பிள்ளையின் விதவை D என்பவள் காலம் சென்ற தன் புருஷனுக்கு F என்னும் ஒரு பிள்ளையை ஸ்வீகார மெடுத்துக்கொண்டாள். இந்த கேசில் மூத்தப்பிள்ளையாகிய B என்பவன் இறந்தவுடன் குடும்ப சொத்தில் B என்பவனுக்கு உள்ள பாகத்தை இளையவனுகிய C என்பவன் அடைகிருன். அந்த இளையபுத்திரனுகிய C. என்பவனும் இறந்துவிட்டாலவுடன் அவனுக்கு குடும்பசொத்தில் உள்ள பாகத்திற்கு இளையவனுடைவிதந்தாகிய E. என்பவள் சுதந்தரவாளியாகிறாள். இத்தியாதி காரணங்களினல் மூத்தப்பிள்ளையாகிய B. என்பவனுக்கு F. என்பவனை ஸ்வீகார மெடுத்துக்கொண்ட காரணத்தினல் C. என்னும் இளையவனுடைய விதவையாகிய E. என்பவள் அவனுக்கு F. என்பவனை ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளப்பட்டதோ அந்த நபராகிய B என்பவன் மூலமாய் அந்த பாகத்தை (சொத்தை) அடையவில்லையென்னும் காரணத்தினல் தன் புருஷனுகிய இளைய குமாரன் C என்பவன் இறந்தவுடன் அவள் (E) அவளுடைய புருஷன் மூலமாய் அடைந்த சொத்தை இழந்துவிடமாட்டாள் (சந்தரா V. கோஜ்ரர்யாய், இ. லா. ரி. 41 பம் 463).

1872௵த்திற்குப் பின் ஒரு பிள்ளையை ஸ்வீகாரமெடுத்துக் கொள்வதற்காக கொடுக்கும் அதிகாரமும் உயில் சாசனத்தின் மூலமாய் அல்லாமல் வேறே எவ்விதமாயிருந்தாலும் பத்து ரூபாய் முத்திரை கடிதாசியில் எழுதி ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்டு (III of 1877) 17,49-வது பிரிவுகளின்படி ரிஜிஸ்டர் செய்யவேண்டியது அவசியம். ஆனல் அப்படி கொடுக்கும் அதிகாரம் லிகிதமூலமாயிராமல் வாச்சாவாயும் இருக்கலாமாகையால் அப்பொழுது ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்கிற பேச்சு கிடையாது.

CHAPTER. V.

அத்தியாயம். 5.

மைனரும் கார்டியனும்.

பூர்வகாலத்தில் ஹிந்துலாப்படி வங்காளத்தில் 15-வயது கடந்தவுடனும் இதரமாகாணங்களில் 16-வயது முடிந்தவுடனும் ஒருவன் போதுமான வயது வந்தவனுக பாவிக்கப்படுகிருனென்று நடந்தேறிக்கொண்டு வந்தது; ஆனல் 1875 ௵த்திய 9-வது ஆக்டின்படி 18-வயது முடிந்தபின் தான் ஒரு மைனருக்குப் போதுமான வயது வருகிறது. ஆயினும் அந்த மைனருக்கு ஒரு கோர்ட்டார் கார்டியனை நியமித்திருந்தாலும் அல்லது அந்த மைனர் கோர்ட் ஆப் வார்ட்ஸாரினுடைய ஆதீனத்திலிருந்தாலும் அந்த மைனருக்கு 21-வயது முடிவாகிற வரையில் போதுமான வயது வந்தவனுகப் பாவிக்கப்படமாட்டான்.

சாதாரணமாய் போதுமான வயது வராத மைனர் சட்டப்படி யாருடைய வசத்திலிருக்கவேண்டுமென்பதைப்பற்றி நிதானிக்குமளவில் அந்தமைனருடைய (1) தகப்பன் அப்படிக்கில்லாவிடில் அவனுடைய (2) தாயார் அதற்குப்பின் அவனுடைய (3) சகோதரன் அல்லது (4) தகப்பன் வம்சத்தைச் சேர்ந்த நெருங்கிய ஆண் பந்து (5) அதற்குப்பின் தாய் வம்சத்தைச் சேர்ந்த நெருங்கிய ஆண் பந்து இவர்கள் தான் ஒரு மைனரை அவாள் வசத்தில் வைத்திருக்க ஹக்குள்ளவர்கள். தகப்பன் வேறே மதஸ்தனுய் விட்டான் என்கிற காரணத்தினலே அவன் தன் பிள்ளை தன்னுடைய வசத்திலிருக்கவேண்டுமென்று சொல்ல அர்ஹனல்ல என்பதற்கு நியாயமில்லை ஆனல் தகப்பன் துன்மார்க்கனுய் தன் பிள்ளையை விரோதமின்றி சரியாய் பாதுகார்த்து வருவதற்கு யோக்கியதை யற்றவனுயிருந்தாலும் அல்லது அந்த மைனர் தன் மதாசாரத்தின் கோட்பாடுகளை நன்ருய் உணர்ந்து அதைப்பற்றி வாதிப்பதற்கு போதுமான புத்தியுள்ளவனுயிருக்கும் பக்ஷத்தில் கோர்ட்டார் அவனை அவனுடைய தகப்பனுரிடம் போகும்படி கட்டாயப்படுத்தார்கள். 5 W. R. 235.

ஒருவன் தன் பிள்ளையை தன்னுடைய வசத்தில் இருக்கவேண்டுமென்று சொல்லுவதற்கு தனக்குள்ள ஹக்கை அடியில் கண்டிருக்கும் விஷயங்களில் இழந்துவிடுகிருன். அதாவது —

(1) தகப்பன் பிள்ளையை வேருெரு குடும்பத்திற்கு ஸ்வீகாரம் கொடுத்து விடுவதினலும்.

(2) தகப்பன் வசிக்கும் இடத்தைத் துன்மார்க்கர்கள் வாசம் செய்கிறார்கள் என்னும் காரணத்தினலும்.

(3) தகப்பன் நல் நடவடிக்கை யுள்ளவனல்ல அல்லது பிள்ளையை பத்திரமாய் பாதுகாப்பதற்கு யோக்கியதை யற்றவனுய் அந்த மைனருக்கு அபாயம் நேரிடுமென்னும் காரணத்தினலும்.

(4) தகப்பன் புத்தி சுவாதீனமற்று பயித்தியக்காரனுய் விட்டான் என்கிற காரணத்தினலும்.

போதுமான ஒரு மைனரினுடைய தாயார் வேறே மதஸ்தியாய் விட்டாள் அல்லது மறு விவாகம் செய்துக்கொண்டாள் என்னும் காரணத்தாள் தன் பிள்ளை தன்னுடைய வசத்தில் தான் இருக்கவேண்டுமென்று சொல்ல தனக்குள்ள ஹக்கை இழந்துவிடுகிறாள்.

16-வயதுள்ள ஒரு பிராமணப்பிள்ளை தன்னுடைய தகப்பன் வீட்டைவிட்டு ஒரு மிஷனெரி வீட்டுக்குப்போய் அவர் வீட்டில் வசித்துக்கொண்டு ஞானஸ்நானம்பெற்று கிருஸ்தவ மதஸ்தனுயிருந்தான். அந்தப் பிள்ளையினுடைய தகப்பன் தன் பிள்ளையை தன் வசம் செய்யும்படி அந்த மிஷனெரியின் மீது தாவா செய்தான். அந்த வியாஜ்ஜியத்தில் தகப்பனுக்கு அவனுடைய பிள்ளையின்மேல் 18-வயது வரையில் அதிகாரமுண்டென்னும் காரணத்தால் தகப்பன் அதுவரையில் தன் பிள்ளை தன் வசத்தில் தான் இருக்கவேண்டுமென்பதற்கு ஹக்குள்ளவனுயிருக்கிருனென்று சொல்லி அந்த மைனர் பிள்ளையின் கோரிக்கை எப்படிப்பட்டதென்று கவனிக்கவேண்டியது அவசியமில்லையென்று தீர்மானித்து அந்த மைனர் பிள்ளையை அவனுடைய தகப்பனரின் வசம் ஒப்புவிக்கும்படி டிக்ரி செய்தார்கள். ரீதி V. கிருஷ்ணு. இ. லா. ரி. (9 சென் 391).

ஒரு ஹிந்து குடும்பத்தில் போதுமான வயது வராத ஒரு சிறு பெண் விதவையாயிருந்தாள். அவளுக்கு அவளுடைய காலம் சென்ற புருஷனுடைய பந்துக்கள் தான் கார்டியனுயிருப்பதற்கு யோக்கியதையுள்ளவர்களென்றும் அந்தப்பெண்ணின் தகப்பன் வம்சத்தைச்சேர்ந்த பந்துக்கள் கார்டியனுயிருப்பதற்கு மேற் சொல்லியவர்களைப்பார்க்கிலும் விசேஷமான ஹக்குள்ளவர்களாகார்கள் [illegible] தீர்மானமாயிருக்கிறது. (இ. லா. ரி. 16 கல் 584).

ஹிந்து ஒருவன் இறந்துவிடுகிருன். அவன் பெண்ஜாதியாகிய விதவை புனர் விவாகம் செய்துக்கொண்டால் காலம் சென்றவனுடைய பிள்ளைகள் யாருடைய வசத்திலிருக்கவேண்டுமென்பதைப்பற்றி 1864௵த்தின் 5-வது ஆக்டின் 3-வது பிரிவில் அந்த விதவையாவது அல்லது வேறே யாராவது அந்த பிள்ளைகளுக்கு கார்டியனுயிருக்க வேண்டுமென்று காலம் சென்ற தகப்பன் உயில் மூலமாய் வெளிப்படையாய் நியமணம் செய்யாதிருக்கும் பக்ஷத்தில் காலம் சென்ற அந்த புருஷனுடைய தாயாராவது அல்லது பாட்டியாவது அல்லது ஆண் பிள்ளையாயிருக்கும் அவனுடைய பந்துக்களில் யாராவது அந்த பிள்ளைகளுக்கு தன்னை கார்டியனுய் நியமிக்கும்படி ஜில்லா கோர்ட்டாருக்கு மனுவுசெய்துக்கொள்ளலாம். அப்படி அவளை அல்லது அவனை கார்டியனுய் நியமணம் செய்த பிறகு அவன் அல்லது அவள் அந்தப்பிள்ளையை அவனுடைய தாயாருக்கு பதிலாய் தன் வசத்தில் வைத்திருக்க ஹக்குண்டென்று சொல்லியிருக்கிறது.

"THE INDIAN LAW GAZETTE"—The *Indian Law Gazette*, the Tamil monthly law journal which has been conducted with success for the last two years, has now entered upon the third year of its career with the current issue. The number before us contains an excellent portrait of Mr. C. Krishnan, Barrister-at-Law, second Judge of the Madras Court of Small Causes, followed by an appreciative sketch of this Judge. The journal, after reviewing Mr Krishnan's brilliant academic career both in this country and in England, and referring to his good work as an Advocate of the Madras High Court, urges his claim to be appointed to the High Court Bench as an Indian Barrister of experience and ability. The number contains, besides the usual budget of reports of important cases, an interesting article on the legal rights and status of a widowed daughter-in-law in a Hindu family. Madras Mail 6th April 1908.

GOVERNMENT ORDERS.

கவர்ன்மெண்டு ஆர்டர்கள்.

1908ம் ௵த்திய ஜனவரி௴ 16௳ 79நெ. J

தென்ஞர்க்காடு ஜில்லாக்கலெக்டர் சர்க்குயுலர்கள்.

சிதம்பரம் தாலூகா குடிகள் பாச்சல்வாய்க்கால்களில் அவர் அவர்களுக்கு முறையில்லாத நாட்களிலும் ஆக்ஷேபகரமான விடங்களிலும் மண் கொண்டங்களை கட்டியாவது அல்லது வேறு எவ்விதமாகவாவது ஜலப்போக்கை தடுக்கிறார்களென்று நமக்கு தெரியவருகிறது. அப்படி செய்தானது கிரிமினல் தரப்பில் தண்டிக்கப்படும் குற்றமாகும். அப்படி தண்டனை செய்வதற்கு வேண்டுமான சாக்ஷியமில்லாத கேசுகளில் மேல்கண்ட அணைகளினல் பலனடையும் எல்லா நிலங்களுக்கும் அதிகமாய் தண்டத்தண்ணீர் தீர்வை விதிக்கப்படும்.

2. ஷை வாய்க்கால்களில் சர்க்காரில் ஒப்புக்கொள்ளப்பட்ட முறைகள் ஏற்பட்ட கொண்டங்களும், முறை தினங்களும், மணியம் எல்லா குடிகளுக்கும் தெரியும் பொருட்டு தென்ஞர்க்காடு ஜில்லா கெஜெட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

3. மேலும் பப்ளிக் ஓர்க்ஸ் டிபார்ட்டுமெண்டிலிருக்கப்பட்ட சிப்பந்திகள் குறைவாயிருப்பதினல் குடிகளுடைய உதவியன்றியில் மேற்சொல்லப்பட்ட சட்டவிரோதமான காரியங்களை தடுப்பது கஷ்டம். ஆகையால் சம்பந்தப்பட்ட குடிகள் அவரவர்களுடைய முறை நாட்களில் வாய்க்கால் கரைகளை காத்துக் கொண்டிருந்து தங்களுடைய முறையை பிறர் துராகிருதமாய் தடுக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டியது.

கொள்ளிடம் தென்புறம் வெள்ளக்கரையானது லோயர் அணைக்கட்டிலிருந்து சமுத்திரம் வரையிலும் தஞ்சாவூரிலுள்ள காவேரி டிவிஷன் எக்ஜிகியூடிவ் இஞ்சினீயர் அவர்கள் சார்ஜுக்கு மாற்றப்பட்டிருப்பதால் அதின் சம்பந்தமான எல்லா நடவடிக்கைகளைப்பற்றி ஷை யாருக்கு எழுதிக்கொள்ள வேண்டியதென்பதாய் இதன் மூலமாய் தெரியப்படுகிறது.

REVENUE CIRCULAR.

No. 5.

திருச்சினாப்பள்ளி ஜில்லா கலெக்டர் சர்க்குலர்கள்.

செட்டில் மெண்டிலாகா ரிவினியூ போர்டாருடைய 1907ஆம் நவம்பர் மீ 2உ யுள்ள 352 நெ. உத்திரவு.

சர்க்காரிலிருந்து கடன்வாங்க மனு செய்துக்கொண்ட பிறகு வேலை முடிவு பெற்ற கேசுகளில் கடன் கொடுப்பதைக்குறித்த நடவடிக்கையைப்பற்றி செய்யலான செட்டில் மெண்டிலாகா ரெவினியூ போர்டாருடைய 1894ஆம் ஜனவரி மீ 29உ யுள்ள 49 நெ. உத்திரவு வாசிக்கப்பட்டது.

மேல் குறித்த உத்திரவை மறுபடியும் ஆலோசித்துப் பார்த்து கலெக்டர்கள் தமது அதிகாரத்துக் குள்ளிருந்தும் சர்க்காரிலிருந்து கடன்வாங்கும் நம்பிக்கையின்பேரில் சர்க்கார் கடன் வந்தவுடன் திருப்பிக்கொடுத்துவிடும் நிபந்தனையின்பேரில் வேரிடத்திலிருந்து கடன்வாங்கி வேலை முடிவு செய்த கேசுகளில் போர்டாருடைய சாங்ஷன் வாங்கவேண்டுமென்றிருந்த விதியை ரத்துசெய்ய போர்டாருடைய உத்திரவு மேல்கண்ட விதியை பொருந்தமிட்டு ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

2. ஆனபோதிலும் கலெக்டர்கள் ஒவ்வொரு கேசிலும் கடன் கொடுக்கவேண்டியது அவசியமென்பதும் கடன் அந்தந்த வேலைக்காகவே வாங்கப்பட்டதென்றும் "சர்க்கார் கடன் வருமென்னும் நம்பிக்கையின்பேரில் வாங்கப்பட்டதென்றும் நன்றாக விசாரித்துக்கொள்ளவேண்டும்.

No. 6.

உழைப்பேரி நீர்க்கூலியைக்குறித்து 1904ஆம் நவம்பர் மீ 23உயுள்ள 1904ஆம்த்திய R. Dis. 1008 நெ. சர்க்கியுலர் உத்திரவிலும் 1903ஆம்த்திய ஜூலை மீ 30உ யுள்ள 1903ஆம்த்திய R. Dis. 593 நெ. சர்க்குலர் உத்திரவிலும் அடங்கிய உத்திரவுகளுக்கு ரத்தாக அடியில்வரும் திருத்தப்பட்ட சர்க்குலர் உத்திரவு உழைப்பேரி நிலங்களில் நீர்க்கூலி விதிப்பதைக்குறித்து எல்லா ரிவினியூ அதிகாரிகளுக்கும் தெரியும்படியாக பிரசுரஞ்செய்யப்படுகிறது.

1. இருபோகப்பயிர்களுக்காக இறைத்த உழைப்பேரி நிலங்களில் ஜலம் பாய்ச்சப்பட்டால் முதல் பயிருக்கு உழைப்பேரி தீர்வையும் மற்ற பயிருக்கு சமீபத்திலுள்ள நஞ்சை நிலங்களுக்கு ஏற்பட்டுள்ள நஞ்சை தீர்வையில் ஏகர் ஒன்றுக்கு 8-அணா வீதம் குறைத்து விதிக்கப்படும்.

ஆனால் இந்த உழைப்பேரி வரையறுப்பு வெகு சீக்கிரத்தில் எல்லா சர்க்கார் கிராமங்களில் முழுதிலில்லாவிடிலும் சற்றேறக்குறைய முழுதிலும் எடுத்துவிடப்போகிறபடியால் சர்க்கார் நிலங்களை பொருத்தபட்டும் தாளடிக்காக உழைப்பேர் தீர்வையில் பாதித் தீர்வையை விதிக்கும் இப்போதிருந்து வரும் வழக்கத்தில் ஓர்வித மாறுதலும் செய்யப்படவேண்டியதில்லை.

2. இருபோக பயிர்களுக்காக உழைப்பேரிநிலங்களில் நேராக ஜலம் பாய்ச்சப்பட்டால் ஏகர் ஒன்றுக்கு உழைப்பேரி தீர்வையுடன் நீர்க்கூலிக்காக ஒரு ரூபாயும் முதற்பயிருக்காக விதிக்கப்படவேண்டும். இரண்டாவது பயிருக்கு சமீபத்திலுள்ள நஞ்சை நிலத்திற்கு ஏற்பட்ட நஞ்சை தீர்வையில் பாதி விதிக்கவேண்டும்.

[illegible] பயிர்களுக்கும் எறைப்பு ஜலம் பாய்ச்சிக்கொள்ள [illegible] பேரி நிலங்கள் விஷயத்தில் முதல் பயிருக்காக [illegible] ஒன்றுக்கு ரூபா ஒன்று அதிக நீர்க்கூலியும் இரண்டாவது பயிருக்காக 8-அணா மட்டும் விதிக்கவேண்டும்.

3. உழைப்பேரி நிலத்தில் ஒரு பயிர் எறைப்பு ஜலம் பாய்ச்சப்பட்ட நிலத்தின் நஞ்சைத் தீர்வையில் பாதியும் விதிக்கப்படவேண்டும்.

மேல்குறித்த மூன்று கேசுகளிலும் சமீபத்திலுள்ள ஜலம் பாய்ச்சப்பட்ட நிலத்தின் நஞ்சைத் தீர்வையை தீர்மானிக்க அடியில்வரும் விதிகளை கவனிக்கவேண்டும்.

அக்கம் பக்கத்தில் நஞ்சைத் தீர்வை ரேட்டு ஒன்றைவிட அதிகமாயிருந்தால் அதிக சமீபத்திலுள்ள நஞ்சை நிலத்தின் தீர்வையும் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அப்பேர்ப்பட்ட புலங்கள் சமமாக சமீபத்திலிருந்தால் எந்த புலத்தின்பேரில் அதிக தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த தீர்வையும் விதிக்கவேண்டும்.

4. கிராமத்தில் சமீபத்தில் நஞ்சை நிலங்களில்லாமலிருந்தால் பக்கத்திலுள்ள புஞ்சை நிலத்தின் நஞ்சைக்கு மாற்றப்பட்டால் ஏற்படும் நஞ்சைத் தீர்வைதான் விதிக்கவேண்டும்.

No. 7.

நீர்க்கூலி.

இதனால் விளம்பரம் செய்வது யென்னவெனில் நஞ்சை நிலங்களிலுள்ள பயிர்களின் அடித்தூர் கட்டைகள் அழுகி எருவாக உபயோகப்படுவதற்காக மட்டும் பாய்ச்சிக்கொள்ளப்படும் ஜலத்திற்காக நீர்க்கூலி விதிக்கப்படாது.

No. 8.

1900ஆம்த்திய V-வது சட்டத்தால் திருத்தப்பட்ட 1865ஆம்த்திய VII-வது சட்டத்தின் 1-(b) செக்ஷன் கீழ் நீர்க்கூலி விதிக்கப்படும் ஒவ்வொரு கேசிலும் இனிமேல் 6-நம்பர் கிராமக் கணக்கின் 15,16, அல்லது 17-வது கலத்தில் நிலத்தின் பேரிலிருக்கும் பயிருக்கு பாய்ச்சப்பட்ட ஜலம் பிரயோஜனகரமானதும் போதுமானதுமாயிருந்தது என்ற ஷராவும் அந்த ஷரா கலெக்டருக்கு கீழுள்ள அதிகாரியால் செய்யப்பட்டிருந்தால் கலெக்டர் அதை அங்கீகாரம் செய்ததாரென்பதைக் காட்டக்கூடிய அவருடைய ஷராவும் எழுதப்படவேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்டு 1907ஆம் ஜூன் மீ 21உ யுள்ள 1814 Mis-நெ. போர்டார் உத்தரவின் பேரில் இந்த ஆபீஸிலிருந்து சில தகவல்கள் கேட்டதின் பேரில் போர்டாரவர்கள் திருத்தப்பட்ட அடியில்வரும் போர்டுகளை பிரசுரம் செய்திருக்கிறார்கள். அவைகளை எல்லா ரிவினியூ ஆபீஸர்களுக்கு தெரியும்படியாக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது.

ஷை சட்டத்தின் செக்ஷன் 1-(a) கீழ் நீர்கூலி விதிக்கப்படும் கேசுகள் ஷை சட்டத்தின் 1-(b) கீழ் விதிக்கப்படும் கேசுகளிலிருந்து பிரத்தியேகமாயிருக்கின்றன. "நதி, ஓடை, வாய்க்கால், குளம், அல்லது சர்காருக்கு சொந்தமான கட்டிடத்திலிருந்து அல்லது சர்க்காரால் கட்டப்பட்ட கட்டடத்திலிருந்து" ஜலம் பாய்ச்சப்பட்டு சாகுபடியாகும் கேசுகளை செக்ஷன் 1-(a) குறிப்பிடுகிறது. ஆனால்செக்ஷன் 1-(b) செக்ஷன் 1-(a) கீழ் வராத எல்லா கேசுகளையும் குறிப்பிடுகிறது. ஆனால் செக்ஷன் 1-(a) செக்ஷன் 1-(b) கீழ் வராத எல்லா கேசுகளையும் குறிப்பிடுகிறது. அதாவது "ஷை நதி, ஓடை, வாய்க்கால், குளம், அல்லது கட்டடத்திலிருந்து அல்லது பக்கநிலத்திலிருந்து பாயும் கழிவு ஜலத்தால் அல்லது கசிவு ஜலத்தில் அல்லது நேராகவாவது அல்லது எறைப்பு ஜலத்தாலாவது பாய்ச்சப்படும் அல்லது ஏதாவது ஒரு குட்டை அல்லது குளத்திலிருந்து பாய்ந்து அங்கிருந்து பாய்ச்சப்படும்" கேசுகளை குறித்திருக்கின்றது. அந்த வது சுயவுர்பாட்டின்பேரிலில்லாமலும் அல்லது ஒன்றிலிருந்து ஒன்றுக்கு பாயப்படும் ஏதாவாலும் அல்லது கசிவாலும் பாயப்படும் கேசுகளை குறித்திருக்கின்றது.

செக்ஷன் 1-(b) கீழ்வரும் கேசுகளில் ஷை ஜலப்பானத்தால் பிரயோஜனமடைந்த நிலத்திற்கு நீர் கூலி விதிக்கவேண்டுமானால் அந்த ஜலப்பாசனம் "பயிருக்காக பிரயோஜனம் கொடுக்கக் கூடியதும் போதுமானதுமா யிருக்கவேண்டும்" என்னும் சட்ட நிபந்தனை நிலத்தின்பேரிலுள்ள பயிர் அழிந்துபோனால் நீர்கூலி விதியாதிருக்கவேண்டுமென்பதற்காகத்தான் ஏற்படுத்தப்பட்டது. சர்க்கார் ஜலத்தைக் கொண்டு சாகுபடிசெய்து பயிர்கைக்குவந்தால் முழுதிலும் சர்க்கார் பாசனமாகவே யிருக்காமல் மழை ஜலத்தைக்கொண்டும் சொந்த ஜலத்தைக்கொண்டும் சர்க்கார் ஜலம் தட்டுப்பட்டபோது உதவப்பட்டிருந்தாலும் ஷை சர்க்கர் பாசானம் "பயிருக்கு பிரயோஜனம் கொடுக்கக் கூடியதும் போதுமானதுமா" யிருந்ததாக எண்ணப்படும். இந்த விஷயத்தைக் குறித்து புதிதாக சட்டமேற்படுத்த அவசியமில்லையென்று போர்டார் எண்ணுகிறார்கள்.

3. பாசனம் பயிருக்கு பிரயோசனம் கொடுக்கக்கூடியதும் போதுமானதுமாயிருந்தது என்னும் 1907ஆம் ஜூன் மீ 21உ யுள்ள 1814 L. R. நீ போர்டார் உத்தரவில் உத்திரவு செய்யப்பட்ட சர்ட்டிபிகேட்டு செக்ஷன் 1-(b) கீழ்வரும் நிலங்கள் விஷயமாய் மட்டும் கொடுக்கவேண்டியது. அதை ஸ்டேட்மெண்டுக்கு கடைசியில் எழுதினால் போதுமானது. ஒவ்வொரு கேசுக்கும் தனித்தனியாக எழுத வேண்டியதில்லை.

4. செக்ஷன் 1-(b) கீழ்வரும் நிலங்கள் விஷயத்தில் சர்க்கார் ஜலத்தைக்கொண்டு சாகுபடியான பயிர் அழிந்துபோனால் சட்டப்படி நீர்கூலி ஒன்றும் விதிக்கப்படாது. இந்த மாதிரி கேசுகளை 6-நீ கிராமக் கணக்கில் எழுதி 5-நீ கிராமக்கணக்கில் வஜாசெய்யப்படாது. அதுவுமின்றி 9-நீ கிராமக் கணக்கில் அவைகளின்பேரில் லாண்டு செஸ்விதிக்கப்படாது. ஏனென்றால் 1884ஆம்த்திய V-வது மதராஸ் சட்டத்தின் 64-வது பிரிவின்படி லாண்டு செலுத்தக்கூடிய நீர்க்கூலியின் பேரில் தான் விதிக்கவேண்டும். இதுபோலவே செக்ஷன் 1-(a) கீழ் வரும் கேசுகளில் தீர் 6-நீ கிராமக் கணக்கில் விதித்து 9-நீ கிராமக் கணக்கில் அதன்பேரில் லாண்டுசெஸ் விதிக்கவேண்டும். இவைகள் விஷயத்தில் பயிர்களுடைய ஸ்திதியைப்பற்றி கவனிக்கவேண்டியதில்லை. ஆனால் பயிர் அழிந்துபோனால் தயா விஷயமாக 5-நீ கிராமக்கணக்கில் நீர் கூலி வஜா செய்தாலும் செய்யலாம்.

5. செக்ஷன் 1-(b) கீழ்வரும் கேசுகளில் பயிர் நஷ்டப்பட்டு போனதாக ரிபோர்ட்டு கிடைத்திருந்தால் தவராமல் கலெக்டர் டிவிஷனல் ஆபீசர் அல்லது ஜமாபந்தி ஆபீசர் முன்னிலையில் நீர்க்கூலி விதிக்கவேண்டுமா இல்லையா என்பது பைசல் செய்யப்படவேண்டும்.

தஞ்சாவூர் ஜில்லா கலெக்டர் சர்க்குலர்கள்.

அடப்பான் முதலிய நோயினாலிறந்துபோகும் பிராணிகளின் உடலைத்தொடுவது முதலியதினாலுண்டாகும் அபாயத்தை குறித்து. அடப்பான் முதலிய நோயினாலிறந்து போகும் பிராணிகளின் உடலை அழிக்குந் தொழிலாளிகளுக்கு அனேகஞ்சமயங்களில் பயங்கரமான தொத்துநோய் நேரிட்டிருக்கிறது. சில சமயங்களில் அந்த நோயினாலே மரணமும் முண்டாயிருக்கிறது. இப்படி இந்த நோயினாலே மனுஷருக்கு மரணமுண்டாகிறதென்கிற சங்கதி பிரசித்தப்படுத்தவேண்டியது ரொம்பவும் அவசியமே. யாருக்காவது கைமுழுவதிலுமெங்கேயாவது தோலுராய்ந்த காயஞ் சொற்பமாயிருந்த போதிலும் அப்படிப்பட்டவர்கள் இந்த நோயினாலிறந்து போயாவது இந்த நோய்கண்டிருக்கையில் கொல்லப்பட்டாவதிருக்கிற பிராணிகளின் உடலை எவ்வளவேனும் தொடக்கூடாது. அடப்பான் வியாதினாலிறந்து போகும் பிராணிகளின் உடலைத் தோலுரிக்காமலும் அழிக்காமலும் முழுசாய் பள்ளத்தில் போட்டு அதின் பேரில் சுண்ணாம்பு நீரு செவ்வையாய்ப் பரப்பி ஆறு அடி ஆழத்திற்குக் குறையாமல் மண்மூடிப் புதைக்கவேண்டியது.

இதில் எவ்வளவேனுங் குறைவுபட நடந்தால் இந்தியன் பினல்கோடு 269-வது பிரிவுப்படி தெண்டிக்கப் படத்தக்க குற்றத்தை செய்தவனாக எண்ணப்படுவான். மேலே சொன்ன விதிகளும் சட்ட திட்டங்களும், வெக்கை முதலிய நோய்களிலும் அனுஷ்டித்து வரவேண்டியது.

குறிப்பு:—அழல் வெக்கை, சீதவெக்கை, ரெத்த வெக்கை, விஷசுரம், இரத்த சுரம், பெரிய சோவு, பிசங்சோவு என்றுபெயர்.

அடப்பான்:—மண்ணீரில் சன்னி அல்லது மண்ணீரல் அடப்பான் கருங்கால், தொண்டையடைப்பான் அல்லது கொடும் புண்ணுள்ள தொண்டை, சந்தடப்பான், பிரசவி அல்லது நீரடப்பான் அடப்பான் காய்ச்சல், படுவன், பிளவை, தெரியன், குன்னல் சந்தடப்பான், குலேழுட்டி குதிரை வலிப்பு என்றுபெயர். மதராஸ் ஹைகோர்ட்டு 1890ஆம்த்திய கிரிமினல் ரிவிஷன் கேஸ் ந. 27-ல் ஹைகோர்ட்டார் அவர்களுடைய ஆர்டர்.

குற்றம் ஏற்பட்டது சரியென்பதற்கு எங்களுக்கு சந்தேகமில்லை. குற்றவாளியின் செய்கை உயிருக்கு அபாயகரமான வியாதியை பரவச்செய்யக் கூடியதென்பது வாஸ்தவமான விஷயமாக 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு கண்டுபிடித்திருக்கிறார், இப்படி கண்டு பிடித்ததின் பேரிலான தீர்மானம் சரியானதுதான். தண்டனை ரொம்பவும் லகுவாய்த் தோணுகிறது. இந்த குற்றம் சாதாரணமாய் நடக்கும் பக்ஷத்தில் அதற்கு இன்னும் கடுமையான தண்டனை விதிக்கவேண்டியது.

TREASURE TROVE.

புதயல் அகப்பட்டது.

R. C No. 4, 624—G. R of 1907, Dated 10th November 1007.

இதனடியில்கண்ட 5 செப்பு விக்கிரகங்களாகிய புதையல் 1907ஆம் ஜூலை மீ த்தில் மன்னார்குடி தாலூக்கா ஆலங்குடி கிராமத்தில் குன்னியூர் சாம்பசிவ அய்யர் பேரால் தகலா யிருக்கும் நஞ்சை சர்வே நெம்பர் 174-F நிலத்தில் அகப்பட்டது.

புதையல்	நிறைசேர்	உத்தேச விலை ரூ.	அ.	பை.
1. நடராஜா	323	100	15	0
2. கணபதி	81	25	5	0.
3. சிவகாமி அம்மன்	93	29	1	0.
4. மாணிக்க வாசகர்	67	20	5	0.
5. கிருஷ்ணன்	32	10	0	0.
	596	186	4	0

2. இந்த புதையலுக்காவது இதன் சில பாகத்துக்காவது பாத்தியம் கொண்டாடுபவர் எல்லாரும் சட்டப்படி இதை விசாரித்து முடிவு செய்வதற்காக தஞ்சாவூர் ஜில்லா [illegible]

கலெக்டர் அவர்கள் முன்பாக அவர்கள் ஆபீஸில் 1908௵ ஏப்பரல்மீ 4௳ நேரிலாவது ஏஜெண்டு மூலமாயாவது ஆஜராகும்படி இதனுல் கட்டளையிடப் படுகிருர்கள்.

1908௵ ஜனவரிமீ 13௳ டி டி. ஸ். ந. 181 ரிவினியூ.

1907௵ அக்டோபர்மீ 1௳ டிஸ்டிரிக்டு கெஜெட்டில் பிரசித்தமா யிருக்கும் விளம்பரத்துக்கு மாறுதலாகவும் மதுராஸ் லோகல் போர்டிஸ் ஆக்டாகிய 1884௵ V-வது ஆக்டு 65-வது பிரிவின் படிக்கு மதுராஸ் புரொப்ரைட்டரி எஸ்டேட்டுகளில் வில்லேஜ் சர்வீஸ் ஆக்டு 21-வது பிரிவுப்படிக்கும் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள எல்லா ஜமீன்தார்களும் பூரா இனும் கிராமங்களின் சொந்தக்காரர்கள் புகலிளும் தார்கள் ரயத்துவாரி அல்லாத மற்ற எல்லாவித நில சொந்தக்காரர்களும் இதனுல் கேட்டுக்கொள்ள படுகிறது என்னவென்ருல் தங்களுடைய சொந்த அனுபோகத்திருந்தாலுஞ்சரி, தங்களுடைய அல்லது தங்களிடம் கிரமப்படி அதிகாரம்பெற்ற ஏஜென்டுகளுடைய கையெழுத்து செய்து ஜாப்தா ஒன்று தயார் செய்து 1908௵ ஜூலைமீ 31௳க்குள்ளாவது அதற்கு முந்தியாவது அடியில் கையொப்பமிட்டவர்களிடம் அனுப்பிகொடுக்கவேண்டியது ஷை ஜாப்தாவில் ஒவ்வொருகேஸிலும் நிலவிபரம், விஸ்தீரணம் 1317-ம் பசலியில் அதன் வருஷாப்தர குத்தகை பொருமானம், பலன் தரக்கூடிய மரங்களின் வரி, ஷை பசலியில் வியாண்டு செலவிதிக்கக்கூடிய அவர்கள் அடையும் மற்றெல்லாவித வருமான பாபத்துகளையும் கண்டெழுதவேண்டியது. இந்த ஜப்தா தயார் செய்யவேண்டியதற்கான கற்பனைகள் அவர்களுக்கு ஏற்கனவே அனுப்பப் பட்டிருக்கிற கலெக்டரவர்களுடைய 1903௵ நவம்பர்மீ 14௳ யுள்ள ஆர். டிஸ். ரிவினியூ, நெ. 1140 சர்க்கியுலரில் கண்டிருக்கின்றன.

2. மேற்சொல்லிய கணக்குகளை கொடுக்கத் தவறிலும் அல்லது ஷை மதுராஸ் லோகல் போர்டு ஆக்ட்டு 68-வது பிரிவின்படி கலெக்டரவர்களாலேயே அன்னியங்களின் வருஷாந்தர வரும்படி நிர்ணயக்கப்படும் வரையிலும் உண்டாகும் தாமதத்திகது நாள் ஒன்றுக்கு ரூபா 50 பரியந்தம் அபராதம் விதிக்கப்படலா மென்பதை எல்லா ஜமீன்தார்களும் புரொப்ரைட்டர்களும் தெளிவாய் அறியவேண்டியது 1894௵த்திய 2-வது ஆக்ட்டு 31 - வது பிரிவின்படி 100-ரூபா பரியந்தம் அபராதம் விதிக்கப்படலாம் என்பதையும் அறியவேண்டியது. ஷை பிரிவின் நிபந்தனைகள் வற்புறுத்தப்படுமென்பதாய் அவர்கள் எச்சரிக்கப்படுகிருர்கள். ஏதாவது விசேஷ முகாந்தரங்களின் நிமித்தம் கண்க்குகள் தயார்செய்து கொடுக்க அதிகக லம் வேண்டியிருந்தால் அது விஷயமாய் கலெக்டவர்களிடமிருந்து எழுத்து மூலயாய் முன்னுடியே உத்திரவு பெற்றுக்கொள்ளவேண்டியது அதி விசேஷகாரணங்கள் இருந்தால் மட்டுந்தான் அப்படி அனுமதி கொடுக்கப்படும். கணக்குகளை இந்த ஆபீசுக்கு நேராக அனுப்பவேண்டியது.

3. 1316-ம் பசலிக் கூடுதலாக வைத்துக்கு வைத்துக்கொண்டு பேஷ்குஷுன் வீணைகளில் வசூல் செய்யப்படும்.

திருச்சினுப்பள்ளி ஜில்லா கலெக்டர் சர்க்குலர்.

ஒவ்வொரு கிருமகர்ணனும் ஜில்லா கெஜட் அனுபந்தத்தை வரிசைக்கிரமமாய் புஸ்த்தகமாய் தைத்து வைக்கவேண்டும். அஜாக்கிறதையாயிருந்தால் அதற்கு அவன் உத்திரவாதியாவான். ஷை புஸ்தகம் கிருமரிகார்டுகளை சேரவேண்டியதுடன் ஒவ்வொரு கர்ணனும் அதை தன் உத்தியோகத்திற்கு யார் வருகிருனே அவனிடத்தில் ஒப்பிக்கவேண்டியது.

Circular No. 5.

இந்த தேசத்திற் மூலதனத்தையும் உழைப்பையும் அபிவிருத்தி செய்யும்பொருட்டு ஏற்படுத்தலான சங்கம்.

சங்காத்தார்கள்.

சங்கத்தலைவர் (பிரசிடெண்டு).

திவான் பகதூர் கிருஷ்ணசாமிராவ், ஸி. ஐ. இ.

இரண்டாம் சங்கத்தலைவர்கள் (வைஸ் பிரசிடெண்டுகள்)

திவான் பகதூர் P. ராஜரத்தினமுதலியார், ஸி. ஐ. இ.

மிஸ்டர் N. சுப்பராவ் பந்துலு, பி-ஏ., பி-எல்.

பொறுப்பாளிகள் (டிரஸ்டிகள்.)

ஆனரபில் நவாப் சயித்து மகமது சாயிப் பகதூர்.

காரியதரிசிகள் (ஸெகரிடேரிகள்.)

மிஸ்டர் G. சுப்பிரமணி ஐயர், பி ஏ.

,, D. V. ஹனுமந்தராவ் பந்துலு.

பொக்கிஷதாரர் (திரஜரர்.)

மிஸ்டர் C. ஸ்ரீனிவாஸாசாரியார்.

மஹாஜன சபைமண்டபம், மவுண்ட்ரோட்.

சென்னபட்டணம், 1907-ம் ௵ நவம்பர்மீ 27௳

இந்தியா முழுவதிலுமுள்ள கைத்தொழில் நெசவுதாரிகளின் போட்டாபோட்டி.

இத்தேசத்தில் வேளாண்மைக்கு அடுத்த மிகவும்முக்கியமான கைத்தொழில் நெசவு தறியால் நெய்வதே என்பது நன்ருய்த் தெரிந்தவிஷயம் இப்போதிருக்கிற நெசவு தறிகளில் பலவிதமான அபிவிர்த்திகள் அப்போதைக்கப்போது குறிக்கப்பட்டிருக்கிறதல்லாமல் விசேஷமான நூல் நாழி தறிகள் உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஆனுல் இதுவரையில் சாமான்ய நெசவுக்காரர்கள், அவைகளை உபயோகிக்க அதிக ஆசையை வெளிக்குக்காட்டவில்லை இது ஆச்சரியப்படத் தக்கதல்ல. ஏனெனில் போதுமான காலத்தில் அனுபவங்களால் நூல் நாழி தரிகளுக்கும் சாதாரணமான நெசவு தறிகளுக்கு முள்ள தாரதம்மியத்தையும் குறைகுணத்தையும். நெய்வதற்குச் சிறந்த ஏற்பாடுகளையும் மெய்ப்பிப்பதற்கு வேண்டிய தொரு கிரமமான பிரயத்தினமும் இதுவரையில் செய்யப்படவில்லை. அவ்விதமான பரீட்சையை நடத்துவதற்காகவே தேசத்தின் மூலதனத்தையும் உழைப்பும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு, ஏற்படுத்தப்படலான சங்கத்து மானேஜிங் கமிட்டியார்கள் இந்தியாவில் செய்யப்பட்ட கைநெசவு தறிகளிலும் இத்தேசத்தில் சிறிது காலத்திற்குள்ளாக பழக்கத்துக்கு கொண்டுவரப்பட்ட அபிவிருத்தியாக்கப்பட்ட கைநெசவு தறிகளிலும் நெசவுதறி போட்டாப்போட்டி ஒன்று ஏற்படுத்துவதாகத் தீர்மானித்திருக்கின்ருர்கள். அப்பேர்ப்பட்ட போட்டாபோட்டியானது தொடர்ச்சியாக ஆறுகள் நடத்தப்படும்.

அந்த ஆறு நாள்களில் அதே வேலைக்காரர்கள் காலை 8-மணி முதல் மாலை 5½-மணி வரை தினம் ஒன்றுக்கு ஏழு மணி நேரம் வேலை செய்யவேண்டும். காலை மணிக்குப் பின்பு ஒரு மணி நேரமும் மாலை 1-மணிக்குப் பின்பு ஒன்றரைமணி நேரமும் அவர்களுக்கு இடைவெளி குடுக்கப்படும்.

தேசத்தின் மூலதனத்தையும் உழைப்பையையும் அபிவிருத்திசெய்யும்பொருட்டு ஏற்படுத்தப்படலான சங்கத்தார் ஆயிரம் ரூபாயிக்குக் குறையாமல் சேகரிக்கவும் அவசியமான ஏற்பாடுகளைச் செய்யவும் உடன்படவேண்டு மென்றும் நிபந்தனையின் பேரில் சென்னை தூரீதன்ந்தார் இவ்விஷயத்துக்காக நன் கொடையாக 2500 ரூபா அளிப்பதற்கு களிகூர்ந்து. உத்திரவு கொடுத்திருக்கிருர்கள். சங்கத்தாரும் இதற்கு தடையில்லாமல் உடன்பட்டிருக்கிருர்கள். 1908௵ பிப்பரவரிமீ ஜனவரிமீ வாரத்தில் போட்டி பரீட்சை நடத்தப்படும்.

போட்டி பரீட்சையின் காரியக் கருமம் :—

நெசவு போட்டி பரீட்சை.

1908௵ பிப்ரவரிமீ சென்னை ஸ்கூல் ஆப் ஆர்ட்டுக்குச் சேர்ந்த பூமியில் ஒரு நெசவுப்போட்டி ஏற்படுத்தப்படும். அப்பொழுது குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி வேலைசெய்கிற கைநெசவு தறிகளுக்கு கீழ்கள் படிய வெகுமதிகள் அளிக்கப்படும்.

1. பிப்ரவரிமீ 24௳ திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு, சனிக்கிழமை மாலை 5-30 வரையில் பரீட்சைகள் நடத்தப்படும் நெசவுக்காரர்கள் தினந்தோரும் காலை 10-மணி முதல் 11 வரையிலும், மாலை 1 மணி முதல் 1-30 மணி வரையிலும் இளைப்பாறுவதற்கு இடைவெளி கொடுக்கப்படும்.

2. போர்ட்டிச்சிவர உத்தேசிக்கிறவர்கள் தாங்கள் எந்த வகுப்புகளுக்கும் பிரிவுகளுக்கும் பரீட்சைக்கு போக பிரியப்படுகிருர்களோ அவைகளை அவைகளுக்கென்று ஏற்படுத்திருக்கின்ற நமூனவில் விண்ணப்பம் செய்துக்கொள்ள வேண்டியது. அவ்விண்ணப்ப நமூன சென்னை, மவுண்ட்ரோட் மஹா ஜென சபையின் உபத்தில் "இந்திய முழுவதிலும் கைநெசவு தறி போட்டா போட்டியின்" கௌரவ காரியதரிசிகளைக் கேட்டுக் கொண்டால் சப்ளை செய்யப்படும்.

அம்மாதிரியான விண்ணப்பங்கள் ஜனவரிமீ 15௳க்கு முந்திலே அவர்களுக்கும் போய்ச் சேரவேண்டும். ஒவ்வொரு போட்டிக்காரனும் தன் சொந்த நெசவுத் தறியையே நாட்டிக்கொள்ளவேனும். கூடிய வரையில் நெசவுத் தறிகளை நட அனுகூலமா யிருப்பதற்காக சுதேச கைநெசவுத் தறிகள் மண் தரையுள்ள கொட்டிலுக்குள் வைக்கப்படும்.

3. ஒவ்வொரு போர்ட்டிக்காரனும் போர்ட்டி நிபந்தனைகளுக் கேற்க தன் சொந்த நெசவுப்பாவை வைத்துக்கொண்டு அதை முன்னுடியே நெசவுத் தறியில் மாட்டிக்கொண்டு போர்ட்டி ஆரம்பிப்பதற்கு முன் இரண்டு கெஜ நீளத்துக்கு அதிகப்படாமல் நெய்துக்கொள்ளலாம், ஒவ்வொரு வேலைக்காலத்தின் பின்னும் அக்காலத்தில் நெய்யப்பட்ட நீளம் வரையிலும் ஒரு மெல்லிய சிவப்பு நாடாவில் அடையாள மிடப்படும். மோப்டிக் காரர்கள் தன் சொந்தத் தறிகளையே வைத்துக்கொள்ளவேண்டும். போட்டி யெவ்வளவு வேண்டியதோ அவைகளை வைத்துக் கொள்ளவேண்டியது.

4. போட்டிக்காரர்கள் தங்களுடைய நெசவுத்திற்கு வாரம் முழுவதும் வேலை யிருக்கும்படியாக போதுமான நீளமுள்ள நெசவு பாவுடன் வரவேண்டும்.

5. வெகுமதி யளிப்பதில் நியாயாதிபதிகள்:—

(1) வாரத்தில் நெய்யப்பட்ட துணியின் மொத்த நீளத்துக்கும்.

(2) தினசிரி நெய்யப்பட்ட துணியின் நீளம் வேறுபடாமலிருத்தலுக்கும்.

(3) நெய்வதில் ஒன்றுபோல நூலெடுப்பதும் நூலின் நுனி அறுகாமலிருக்கிறதும் முக்கியமான அங்கங்களாயிருப்பதோடு நெய்வதின் குணத்திற்கும் நெய்யவேண்டிய துணியின் மாதிரிக்கு அநேகமாய் இசைந்திருத்தலுக்கும் மார்க்குகளை கொடுப்பார்கள்.

விசேஷ வெகுமதி.

சுதேச நெசவுக்காரர்களுடைய வேண்டுகோளுக்கு நன்ருக இசைந்தனவாயும் உயர்ந்ததும் மட்டமானது மான நூல்களைக் கொண்டு திருப்திகரமான வேலையைச் செய்யும் படியாயுமுள்ள போட்டிக்குக் கொண்டு வரப்படுகிற சிறந்தகை செவு வசத்தில் கொடுக்கப்படும். நெசவு தறியின் முதல் விலை நியாயமானதென்றும் அது வெகுவாய் கெட்டுப்போகாதென்றும் அதை சுளுவில் சீர்ப்படுத்தக் கூடுமென்றும், சிறிது மாறு பாடுகளுடன் உயர்ந்த நூலைக்கொண்டும் மட்டமான நூலைக்கொண்டும் வெகுவாய் அதில் வேலை செய்யக்கூடுமென்றும், அதினுல் நல்ல உற்பத்தியை அடைவதற்கு விசேஷமான வல்லமை வேண்டி யிருதென்றும் சாதாரணமாய் அதைக்கொண்டு வேலை செய்வதனுல் நெசவுக்காரர்களுக்கு அதிகமான உற்பத்தி நேரிடும் என்றும் நியாயாதிபதிகள் தாங்களே மனே திருப்தி யடைந்துக்கொள்ள வேண்டும்.

ஆசாரணையில் சமமான குணங்களோடு கூடின இரண்டு தறிகளிருக்கும் பட்சத்தில், அவைகளில் ஒன்றைக்கையாடுவதினுல் நெசவுக்காரர்களின் க்ஷேமம் மிகவும் அபிவிருத்தி யாகுமென்றும் நியாயாதிபதிகள் கருதுவார்களாயின் இரண்டு விசேஷ ஏறபடுத்தப்படும், புதுமையான அம்சங்களுடைய தறிகளுக்கான இவ்வெகுமதிகள் அளிக்கப்படுமென்பதைத் தெளிவாய் அறியவேண்டியது.

I பிரிவு-சுதேச கை நெசவு தறிகள்.

கீழ்க் குறிப்பிட்டவைகளில் சிறந்த வேலைகளைச் செய்யும் தறிகளுக்கு 100-ரூபாய், 75-ரூபாய், 50-ரூபாயாக வெகுமதிகள் கொடுக்கப்படும்.

I. அங்குலத்துக்கு 48 நூலாகவும், இழைக்கு 48-இன்ளாகவுமாக, தாருக்கும் பாவுக்கும் 20-ம் நெ. நூலைக்கொண்டு ஒரு கெஜம் துணி நெய்யும் நெசவு தறிகள்.

2. அங்குலத்துக்கு 72 நூலாகவும், இழைக்கு 72 இன்ளுமாக மாவுக்கும் தாருக்கும் 60-ம் நெ. நூலைக்கொண்டு 45-முதல் 54-அங்குலம் வரை அகலமுள்ள துணி நெய்யும் நெசவு தறிகள்.

3. 45-அங்குலம் முதல் 54-அங்குலம் வரை அகலமுள்ள துணியை அங்குலத்துக்கு 80-நூலும் அழைக்கு 80-இன்ளுமாக பாவுக்கும் தாருக்கும் 100-ம் நே. நூலைக்கொண்டு நெய்யும் நெசவுதறிகள்.

4. பாவுக்கும் தாருக்கும் 40-ம் நெ. நூல்கொண்டு மதிருஸ் கை குட்டைகள் நெய்வதற்கான நெசவு தறிகள் அங்குலத்துக்கு 72-நூல் கொண்ட பாவும் 72-இன்ளு கொண்டதாரும் திட்டமான அகலம் கஜமே.

5. பாவுக்கு 60-ம் நெ. நூலும் தாருக்கு 40-ம் நெ. நூலும் உள்ள நேர்த்தியான கைக்குட்டைகள் நெய்தற்குரிய நெசவு தறிகள் அங்குலத்துக்கு 80-நூலுள்ள பாவும் 108-இன்ளுள்ள தாரும், திட்டமான அகலம் ஒரு கஜம்.

II பிரிவு-இந்தியாவிலுண்டாக்கப்பட்ட விருத்தியாக்கப்பட்ட கை நெசவு தறிகள்.

கீழ்வரும் போட்டிகளில் சிறப்பாய் வேலை நடத்தும் கை நெசவு தறிகளுக்கு வெகுமதிகள் 100-ரூபாய், 75-ரூபாய் 50-ரூபாயாக கொடுக்கப்படும்.

I. 20-ம் நெ. நூலில் ஒரு கஜ அகலமுள்ள துணியை நெய்கின்ற நெசவுதறிகள்.

2-60-ம் நெ. நூலில் 45-முதல் 54-அங்குலம் வரையில் அகலமுள்ளது துணியை நெய்கின்ற நெசவுதறிகள்.

3. 100-ம் நெ. நூலினுல் பாவும் தாரும் போடப்பட்டு 45-முதல் 54-அங்குலம் வரை அகலமுள்ள துணியை நெய்கின்ற நெசவுதறிகள்.

4. பாவுக்கும் தாருக்கும் 40-ம் நெ. நூலினால் சென்னை கைக்குட்டைகள் நெய்கின்ற நெசவுதறிகள்.

5. 60-ம் நெ. நூலினால் பாவும் 40-ம் நெ. நூலினால் தாருமுள்ள நேர்த்தியான கைக்குட்டைகள் நெய்கின்ற நெசவு தறிகள்.

(பாவும் தாரும் I-வது பிரிவிலுள்ளபடி தான்.)

III-வது பிரிவு.

II-வது பிரிவின்படி அயல் நாட்டு கை நெசவு தறிகள் எவ்விதமான போட்டிகளுக்கும் கொண்டுவருதல் ஆகும். ஆனால், அவைகள் பிரத்தியேகமாய் தீர்மானிக்கப்படும். அவைகள் இந்தியாவில் உபயோகப் படுத்துவதற்கு போதுமான யோக்கியதை யுடையதாக இந்நாட்டு நெசவு தொழிலை அபிவிருத்தி செய்வதற் கனுக்கூலமா யிருப்பதற்காக கருதப்படுமாயின் தங்கத்தினாலும், வெள்ளியினாலும் கீர்த்தி முத்திரைகள் உண்டாக்கி அம்மாதிரியான தறிகளுக்கு வெகுமதியாய் அளிக்கும்படியாக நியாயாதிபதிகள் வசம் ஒப்புவிக்கப்படும்.

போட்டியில் ஏதாவது ஒரு வகுப்புக்கோ அல்லது எல்லா வகுப்புகளுக்குமோ நெசவு தறிகளைக் கொண்டு வரக்கூடும். ஆனால் ஒரு மாதிரியான தறிக்கு ஒரே கீர்த்தி முத்திரை தான் கொடுக்கப்படும். தறிகள் இந்தியாவிலுள்ள நெசவுக்காரர்களால் உபயோகப் படுத்தப் படலா மென்பதற்காக அவர்கள் அபிப்பிராயப்பட்டா லொழிய, எந்த நெசவு தறிக்கும் வெகுமதி யளிக்கக்கூடா தென்பதாக நியாயாதிபதிகள் நன்றாய்த் தெரியப்படுத்தப் படுவார்கள்.

பொது விதிகள்.

ஒரே விதமான வேலைப்பாடுள்ள தறிகள் எவ்வளவானாலும் எந்த விதமான போட்டிக்கும் தாக்கல் செய்யப்படலாம். ஆனால் பிரதி போட்டியிலும் ஒரு மாதிரி வேலைப்பாடுள்ள தறிக்கு ஒரே ஒரு வெகுமதி தான் அளிக்கப்படும் நெசவுக்காரர் வெகுமதி யென்பதாக விசேஷமான 25-ரூபாய் வெகுமானம் கொடுக்கப்படும். தறியினது யோக்கியதையைத் தவிர்த்து கைச்சா துரியமும் கெட்டிக்காரத் தனமும் உள்ள நெசவுக்காரர்களுக்கு மாத்திரம் ஒவ்வொரு போட்டியிலும் மேற்சொன்ன மாதிரி மூன்று வெகுமதிகள் நியாயாதிபதிகளால் கொடுக்கப்படும்.

II. பிரிவுகளின்படி ஜெயிக்கின்ற போட்டிக்காரர்கள் கோரினால், நாணயவெகுமதிக்குப் பதிலாக தங்கம் வெள்ளியினால் செய்யப்படலான கீர்த்தி முத்திரைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

போட்டிக்காக கோருகிறவர்கள் 1908௵ பிப்ரவரி௴ 1௳ முன்பாக வேதங்கள் நெசவு தறிகளை சிகிறடேரிகளுக்கு (ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ்க்கு) சேரும்படியாக அனுப்ப வேண்டும்.

போட்டி ஆரம்பிக்கும் தேதிக்கு குறைந்தபக்ஷம் 2 நாள் முன்னதாகவே ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸிலிருக்கும் சிகிறடேரிகளுக்கு தங்கள் வரவை யறிவிக்கவேண்டும்

கட்சிக்காரர்கள் தங்கள் நெசவு தறிகளை நாட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தங்கள் சொந்தச்செலவு கொண்டே செய்துகொள்ளவேண்டியது.

அதிகமாக நெசவு தறிகளை தாக்கல் செய்கிற போட்டிக்காரர்கள் ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ்க்குச் சேர்ந்த நிலத்தில் இடமுள்ளவரையிலும் தங்கள் தாறில் நூல்சுற்றிக்கொள்ள வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துக்கோள்ளலாம்.

K. கிருஷ்ணசாமி ராவ்,
பிரஸிடெண்டு.
G சுப்பிரமணிய அய்யர்,
D. V. ஹனுமந்த ராவ்,
கௌரவ ஸெகரடேரிகள்.

கைநெசவுதறியில் இந்தியா முழுவதிலும் போட்டி போட்டிக்காரராக கோருகிறவர்க்கான விண்ப்ப நமூனா.

விண்ணப்பதாரின் பெயர்.
இருப்பிடம்.
போட்டியின் பிரிவு.
பிரிவின் வகுப்பு.
தாக்கல் செய்யப்பட்ட நெசவு தறிகளின் சங்கை.
நெசவு தறிகளில் வேலைசெய்யும் நெசவுக்காரர் பெயர்.
நெசவு தறியின் விவரம்.
நெசவு தறியின் விற்பனை விலை.
போட்டிக்காக தாக்கல் செய்யப்பட்ட பாவின் நீளம்.
அங்குலம் 1-க்கு உள்ள நூல்களின் தொகை.
பாவிலும் தாறிலும் உபயோகப்படுத்துகிற நூலின் சரியான நெம்பர்.

Circular No. 6.

பசுமாடுகள் அடிக்கடி சினைப்படுவதும் சினைப்படுவதினால் அவைகள் சரீர நிலைமைக்கும் அவைகள் கொடுக்கும் பலனுக்கும் உண்டாகும் குணங்களாவன,

பசுவின் கர்ப்பம் ஒன்பது மாதம் என்பதும் பத்து மாதத்துக்கு ஒருதரம் கன்று போடுமென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இப்படி கன்று போடுவது சீக்கிரமான அபிவிர்த்தி யென்றே சொல்லவேண்டும். இப்போது பசுக்கள் கர்ப்பத்துக்கும் மறு கர்ப்பத்துக்கும் மத்தியில் போதுமான காலம் விட்டு கன்று போடுவது சிலாக்கியமா? அல்லது தாமதிக்காம் உடனுக்குடன் கன்று போடுவது சிலாக்கியமா? என்பதை நாம் முக்கியமாய் கவனித்துப் பார்ப்போம். பத்து மாதத்துக்கு ஒரு தரம் இடை விடாமல் கன்று போட்டால் ஒவ்வொரு கன்று போட்டதற்கு பிறகு பசு ஏழு அல்லது எட்டு மாதத்துக்கு பால் கறக்கும். பால் தாராளமாக கொடுத்தாலும் அப்படி கொஞ்ச காலத்துக்கு தான் கொடுக்கும். அடிக்கடி கன்று போடும் பசுக்கள் சரீரம் தளர்ந்து பலம் குன்றி அடிக்கடி கன்று போடாத பசுக்களை விட சீக்கிரத்தில் நகிர்ந்துப் போகின்றன. முதல் தோற்றத்தில் அடிக்கடி கன்று போடும் பசுக்கள் சிலாக்கியமென்று தோன்றினால் மற்ற எல்லா விஷயங்களையும் ஆலோசிக்குங் காலத்தில் அப்படி கன்று போடுவது சிலாக்கியமென்று நினைக்க காரணமில்லை. சினைப்படும் காலத்தில் பால் கறவை குறைய ஆரம்பிக்கிறது. வயிற்றில் கன்று அபிவிர்த்தி ஆக பால் கறவையும் அதற்கு தக்கபடி ஆஸ்தியாக குறைந்து வருகிறது. இந்த பசு 12, 14, 16-மாசங்களுக்கு ஒரு தரம் கன்று போடும் பசுவின் பால் அதே காலத்தில் மூன்று கன்று போடும் பசுவின் பாலைப்பார்க்கிலும் நிறையிலும் அளவிலும கிறயத்திலும் ஜாஸ்தியாகவே யிருக்குமன்றியில் சரீர திடத்திலும் முதல் பசு இரண்டாவதைப்பார்க்கிலும் ஜாஸ்தியாகவே யிருக்கும் தெரிந்த வரையிலும் அடிக்கடி கன்று போடும் பசுக்களை ஜனங்கள் சிலாக்கியமாக கொண்டாடுகிறார்கள். அவ்விதமாக கன்று போடுவது மிகுதியான காலத்துக்கு பால் கறவைக்கு இடையூறென்றும், 16-மாதங்களுக்கு ஒரு தரம் கன்று போடும் பசு கொடுக்கும் பால் கொடுக்காதென்று ஒரு கன்றுக்கும் இடை மாதம் காலமாவது அவசியம் வேண்டுமென்று தோன்றுகின்றது. இந்த தேசத்தில் பொலி காளையைப்பற்றி ஜனங்கள் அதிகமாக கவனிக்கிறதில்லை. அதனால் மாட்டின வர்க்கங்கள் அநேக இடங்களில் சிலாக்கியமில்லை பாடுகளை வளர்ப்பதிலும் ரொம்ப குணங்களுண்டு. இப்போது இந்த இடத்திலிருக்கும் சந்தைகளில் மாடுகளை கிறயப் படுத்துவதினால் ஒரு ஜில்லாவின் நல்ல மாடுகள் இதர ஜில்லாக்களுக்கு போகக்கூடியதாயும் அதனால் நல்ல வர்க்கங்கள் உண்டாக்கக் கூடியதாயுமிருக்கிறது. ஆனதால் மாடுகள் வைத்திருப்பவர்கள் இது விஷயங்களை கவனித்து அபிவிர்த்தி செய்யவேண்டியது அவசியம். இந்த சந்தையில் மாடு விற்பதிலிருந்து கூடிய சீக்கிரத்தில் இந்த திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் முன் ஐதர் ஆதிகாலத்தில் உயர்ந்த மாடு வர்க்கங்கள் எப்படி யிருந்ததோ அம்மாதிரி உயர்ந்த மாடுகள் உற்பத்தியாகுமென்னும் முன் காலத்தில ஐதர் ஆலி இந்த ஜில்லாவிலிருந்து மைசூரிக்கு நல்ல மாடுகள் கொண்டுபோய் அவ்விடமுள்ள மாடுகளுடன் கலக்கும்படி செய்து எப்படி பேர்போன ஸாலினார் ஜாதை மாடுகள் யேறப்பட்டதோ அவ்விதம் கூடிய சீக்கிறம் இந்த ஜில்லாவிலும் நல்லவர்கள் ஏற்படுமென்று சொல்ல தயிர்யம் உண்டாகிறது குடுத்தனக் காரர்களுக்கு முக்கியமாய் சொல்லவேண்டிய சங்கதி இன்னவென்றிருக்கிறது. அதாவது மாடுகளுக்கு அனுகூலசியமாய் சூடு போடுவது இப்படி சூடு போடுவது ரொம்ப கொடுமையாகவும் அனவசியமாகவும் இருக்கிறது. அதனால் வரும் நஷ்டம் இவ்வளவென்று ஜனங்களுக்கு தெரியவில்லை கன்றுக்குட்டி வயிற்றில் மறித்து பிறப்பதாக நினைத்து அதை உயிர்ப்பிக்க வேண்டிய முயற்சி செய்யாமல் எவ்வளவு நஷ்டம் நேரிடுகிறதோ அவ்வளவு நஷ்டம் இந்த சூடு போடுகிறதினால் நேரிடுகிறது. இதே சங்கதியைப்பற்றி கும்பகோணத்தில் நடந்த விவசாய சங்கத்தின் மீட்டிங்கில் பிரஸ்தாபித்து இருப்பதை இப்போது உங்களுக்கு தெரிவிக்கின்றேன். வயற்றில் மறித்து பிரப்பதாக நீங்கள் நினைத்திருக்கிற கன்றுகளை பிறந்தவுடன் அதன் மூக்கில் இருக்கிற

Bill introduced in the Council of the Governor-General of India for making Laws and Regulations.

இதனடியிற்கண்ட மசோதா ஆக்டானது சட்டதிட்டங்கள் செய்வதற்காக ஏற்பட்ட இந்து தேசத்து கவர்னர் ஜேனரலவர்களுடைய ஆலோசனை சபையிலே 1908-ம௵ ஜனவரி௴ 3௳ கொண்டுவரப்பட்டது

No. I. of 1908.

1908-ம் வருஷத்து I—வது நம்பர்

THE INDIAN LIMITATION BILL.

இந்து தேசத்து கால நிர்ணயத்தைப்பற்றிய மசோதா ஆக்ட்.

A BILL TO CONSOLIDATE AND AMEND THE LAW FOR THE LIMITATION OF SUITS AND FOR OTHER PURPOSES.

வியாஜ்ஜியங்களைக்குறித்துக் கால நிர்ணயஞ் செய்வதற்காகவும் மற்ற காரியங்களுக்காகவும் உண்டான சட்டதிட்டத்தைத் திருத்தி ஒன்றாய்ச் சேர்ப்பதற்கான மசோதா ஆக்ட்.

வியாஜ்ஜியங்களையும் அப்பீல்களையும் கோர்ட்டுக்குச் செய்துக்கொள்ளப்படும் சில மனுக்களையுங் குறித்த கால நிர்ணய சட்டத்தைத் திருத்தி ஒன்றாய்ச் சேர்ப்பது யுக்தமாயிருக்கிறபடியாலும் ஸ்வாதீனத்தினாலே வழி நடை முதலிய வசதியுரிமைகளிலும் மற்ற சொத்திலும் சொத்துவம் அடைவதற்காக விதிகள் ஏற்படுத்துவது யுக்தமா யிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

1-ம் பாகம்.

பீடிகாவிதிகள்.

சுருக்கமான பெயரும், வியாபகமும், வழங்கத் தொடங்குவதும்.

(1) இந்த ஆக்ட் 190-ம் வருஷத்திய இந்து தேசத்துக் காலநிர்ணயச்சட்டமென்று சொல்லலாம்.

(2) இது பிரிட்டிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கிறது ; மேலும், (3) இந்தப்பிரிவும் 33-வது பிரிவும் உடனே செலாவணியாகத் தொடங்கவேண்டும். இந்த ஆக்டின் மிகுதி பாகமானது 1909-ம௵ ஜனவரி௴ முதல்தேதி யன்றைக்குச் செலாவணியாகத் தொடங்கவேண்டும்.

அர்த்தம்.

2. இந்த ஆக்டிலே சங்கதியினாலாவது முன் பின் தொடர்ச்சியினாலாவது விரோதமெதுவு மில்லாவிட்டால்.

(1) "பில் ஆப் எக்ஸ்சேஞ் (Bill of Exchange)" என்பதிலே "(Hundi) உண்டியும்," "(Cheque) செக்குங்" கூட அடங்கும்.

(2) "பாண்ட் (Bond) அல்லது பத்திரம்" என்பதிலே சந்தர்ப்பத்துக்கேற்றபடி குறித்த யாதொரு காரியம் நிறைவேற்றப் பட்டாலும் நிறைவேற்றப்படாவிட்டாலும் உடன்படிக்கை ரத்தாய் விடுமென்கிற ஷரத்தின்மேல், ஒருவர் வேறொருவருக்குப் பணம் செலுத்துவதாக உடன்பட்டு எழுதிக்கொடுக்கிற யாதொரு ஆதரவென்பதும் அடங்கும் ;

(3) "வழி நடைமுதலிய வசதியுரிமை" என்பதிலே ஒப்பந்த உடன்படிக்கையினாலே உண்டாகாமல், மற்றபடி எதனாலே ஒருவர் வேறொருவருடையதாயிருக்கிற நிலத்தின் யாதொரு பாகத்தையாவது, வேறொருவருடைய நிலத்தில் வளர்ந்துக்கொண்டாகிலும் அதோடு சேர்க்கப்பட்டாகிலும் அதன்மேல் ஜீவித்துக்கொண்டாகிலு மிருக்கிற யாதொரு பொருளையாவது தம்முடைய சொந்த பிரயோசனத்துக்காக அப்புறப்படுத்தவும் உரித்தாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பாத்தியம் உண்டாயிருக்கிறதோ அப்படிப்பட்ட சுதந்தரமென்பதும் அடங்கும்.

(4) "அன்னியதேசம்" என்பது பிரிடிஷ் இந்தியா அல்லாமல் வேறே யாதொரு தேசமென்று அர்த்தமாகும்.

(5) "நல்ல எண்ணம்" தகுந்த ஜாக்கிரதையுடனும் கவனத்துடனும் செய்யப்படாதது எதுவோ அது நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்டதாக எண்ணப்பட மாட்டாது.

(6) "அசையும் பொருள்" என்பதிலே வளர்ந்துக்கொண்டிருக்கும் பயிர் என்பதும் அடங்கும்.

(7) "வாதி" என்பதிலே வியாஜ்ஜியந்தொடர எவரிடத்திலிருந்து அல்லது எவர் மூலமாய் வாதி சுதந்தரமடைகிறாரோ அந்த நபர் என்பதும் அடங்கும் ; "மனுதாரர்" என்பதிலே மனுசெய்துகொள்ள எவரிடத்திலிருந்து அல்லது எவர் மூலமாய் மனுதாரர் சுதந்தர மடைகிறாரோ அந்த நபர் என்பதும் அடங்கும். "பிரதிவாதி" என்பதிலே வியாஜ்ஜியம் தொடருவதற்கு எவரிடத்திலிருந்து அல்லது எவர் மூலமாய் பிரதிவாதி பொறுப்பு அடைகிறாரோ அந்த நபர் என்பதும் அடங்கும்.

(8) "ப்ராமிஸொரிநோட்" என்பது. (ஆதரவில்) குறித்திருக்கிற காலத்திலாவது கேட்டவுடனேயாவது தரிசனமானவுடனேயாவது குறித்த யாதொரு தொகையை ஒருவர் வேறொருவருக்கு அறுதியாய்ச் செலுத்துவதாக உடன்பட்டு எழுதிக்கொடுக்கிற யாதொரு ஆதரவென்று அர்த்தமாகும்.

(9) "வியாஜ்ஜியம்" என்பதிலே, அப்பீலென்பதாவது மனு வென்பதாவது அடங்காது.

(10) "ட்ரஸ்டி" என்பதிலே பிணைதார் என்பதாவது; சொத்தைக்குச் சரிசொல்லப்பட்ட பின்பு (வெசந்தை) ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டே யிருக்கிற சொத்தை வைத்துக் கொண்டவரென்பதாவது, [illegible] ஸ்வாதீனத்தில் வைத்துக் கொண்டிருக்கிற அக்கிரமஸ்தரென்பதாவது அடங்காது.

2 - ம் பாகம்.

வியாஜ்ஜியங்களுக்கும் அப்பீல்களுக்கும் மனுக்களுக்கும் கால நிர்ணயம்.

நிர்ணயமான காலத்திற்குப் பின்பு தொடருவது முதலியவை செய்யப்பட்ட வியாஜ்ஜிய முதலியவைகளைத் தள்ளிவிடுவது.

3. முதல் ஷெடியூலில் அதற்காக நிரணயத்திருக்கிற கால அளவுக்குப் பின்பு தொடரப்பட்ட பிரதி வியாஜ்ஜியமும், செய்யப்பட்ட அப்பீலும், செய்துக்கொள்ளப்பட்ட மனுவும் பிரதிவாதி பட்சத்தில் கால நிர்ணயதோஷம் எடுத்துக் காட்டப்படாமற்போன போதிலும், 4-வது பிரிவு முதல் 27-வது பிரிவு உட்பட அதுவரையிலுள்ள பிரிவுகளில் கண்டிருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டுத் தள்ளிவிடப்படும்.

விவரணம்:—சாதாரணமான விஷயங்களிலே தகுந்த உத்தியோகஸ்தரிடத்தில் ப்ளெயின்ட் கொடுக்கப்படும்போது பாபர் விஷயத்திலே, பாபராக வியாஜ்ஜியம் தொடர அனுமதி கொடுக்கும்படி அவர் மனு செய்யும்போதும், கோர்ட்டாரால் முடிவு செய்யப்படுகிற யாதொரு கம்பெனியின் மேல் உண்டாகிய தாவா விஷயத்திலே, அபீஷல்லிக்விடேடர் என்னும் கடன் பைசல் செய்கிறவரிடத்திற்கு தாவா தாரர் தம்முடைய தாவாவை முதலில் அனுப்பும்போதும், வியாஜ்ஜியம் தொடரப்படுகிறதாகிறது.

திருஷ்டாந்தம்.

(*a*) நிர்ணயமான கால அளவுக்குப் பின்பு ஒரு வியாஜ்ஜியம் தொடரப் படுகிறது. பிரதிவாதி பட்சத்தில் கால நிர்ணயதோஷம் எடுத்துக் காட்டப்படவில்லை; வாதி பட்சத்தில் தீர்ப்பு கொடுக்கப் படுகிறது. பிரதிவாதி அப்பீல் செய்கிறார். அப்பீல் கோர்ட்டார் அந்த வியாஜ்ஜியத்தை தள்ளி விடவேண்டும்.

(*b*) நிர்ணயமான காலத்திற்குப் பின்பு கொடுக்கப்பட்ட அப்பீலானது ஏற்றுக்கொண்டு ரிஜிஸ்டர் செய்யப் படுகிறது. அந்த அப்பீலை தள்ளி விடவேண்டும்.

கெடுவுகாலம் முடியும்போது கோர்ட் மூடியிருந்தால்.

4. யாதொரு வியாஜ்ஜியத்திற்காகவாவது அப்பீலுக்காகவாவது மனுவுக்காகவாவது நிர்ணயிக்கபபட்ட கெடுவுகாலம் கோர்ட் மூடியிருக்கிற தினத்தில் முடியுமாகில், கோர்ட் மறுபடி திறக்கிற தினத்திலே அந்த வியாஜ்ஜியம் தொடரலாம், அப்பீல் செய்யலாம், மனு செய்துக் கொள்ளலாம்.

சில விஷயங்களில் கெடுவு காலத்தை அதிகப்படுத்துவது.

5. யாதொரு அப்பீலையாவது தீர்ப்பைப் புனராலோசனை பண்ணும்படி கொடுக்கப்பட்ட மனுவையாவது வேறே எந்த மனுவுக்கு இந்தப் பிரிவு பிரயோகப் படும்படியாக சிவில் புரோஸீஜர் கோடினல் செய்யப்படுமோ அந்த மனுவையாவது அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கெடு வு காலத்திற்குள் அப்பீல் செய்யாமைக்காகவாகிலும் மனு செய்துகொள்ளாமைக்காகவாகிலும் தமக்குத் தகுந்த காரணமிருந்ததென்று அப்பீல் வாதியோ அல்லது மனுதாரரோ கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய்த் தெரிவிக்கும்போது அந்த கெடுவுகாலத்திற்குப் பின்பு ஏற்றுக்கொள்ளலாம்.

சில அப்பீல்களுக்காவது தீர்ப்பைப் புனராலோசனை பண்ணும்படி செய்துக்கொள்ளப் படுகிற மனுக்களுக்காவது கால நிர்ணயம்.

6. யாதொரு அப்பீலுக்காவது தீர்ப்பைப் புனராலோசனை பண்ணுவதற்கான மனுவுக்காவது நிர்ணயிக்கப் பட்டுள்ள கெடுவு காலம் கழிந்த பிறகு அப்படிப்பட்ட அப்பீலோ அல்லது மனுவோ செய்துகொள்ளப்பட்டால், மேற்படி அப்பீல் வாதியாகிலும் மனுதாரராகிலும் அவ்வாறு செய்தபோது, ப்ரெஸிடென்ஸி மாகாணம் அல்லது டிஸ்ட்ரிக்டின் ஹைகோர்ட்டாருடைய யாதொரு உத்தரவு-வழக்கம்-அல்லது தீர்ப்பினால் வகை மோசம் போனாரென்று கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய் தெரிவிக்கப்படுகிற பட்சத்திலே, அந்த அப்பீலாவது மனுவாவது வேறே வகையினால் சட்டத்தை யனுசரித்திருக்குமாகில் அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கெடுவு காலத்திற்குள் அது செய்து கொள்ள பட்டதாய்ச் சகல காரியங்களுக்கும் எல்லா கோர்ட்டாராலும் எண்ணப்படும்.

சட்டப்படிக்குண்டான அசமர்த்ததை.

7. (1) வியாஜ்ஜியம் தொடரவாவது மனு செய்துகொள்ளவாவது சுதந்தரமுடைய நபர் எது முதல் கெடு வு காலம் கணக்கிடப்படுகிறதோ அந்தக் காலத்தில் மைனராய் (போதுமான வயது வராதவராய்) இருந்தாலும், வைத்தியக்காரரா யிருந்தாலும், உன்மத்தரா யிருந்தாலும் அந்த அசமர்த்ததை நீங்கின பின்பு, முதல் ஷெடியூலின் மூன்றாவது கலத்திலே அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கால முதற்கொண்டு மற்றப்படி கொடுத்திருக்கும்படியான அதே காலத்திற்குள் அவர் வியாஜ்ஜியம் தொடரலாம் அல்லது மனு செய்துக்கொள்ளலாம்.

இரட்டை அசமர்த்ததையும், தொடர்ச்சியான அசமர்த்ததையும்,

(2) எது முதல் கொடுவுகாலம் கணக்கிடப்படுகிறதோ அந்த காலத்தில் அந்த நபருக்கு அப்படிப்பட்ட இரண்டு அசமர்த்ததை உண்டாயிருந்தாலும் அவருடைய அசமர்த்ததை நீங்கு முன்னே அவருக்கு வேறொரு அசமர்த்ததை உண்டானாலும் அந்த இரண்டு அசமர்த்ததைகளும் நீங்கினபின்பு, அப்படி நிர்ணயிக்கப்பட்ட காலமுதற்கொண்டு மற்றப்படி கொடுத்திருக்கும்படியான அதே காலத்திற்குள் அவர் வியாஜ்ஜியம் தொடரலாம் அல்லது மனு செய்துகொள்ளலாம்.

(3) அந்த அசமர்த்ததை அப்படிப்பட்ட நபருடைய மரணம் வரையிலிருக்குமாகில், சட்ட சம்மதமான அவருடைய பிரதிநிதி அந்த மரணத்திற்குப் பின்பு, அப்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கிற கால முதற்கொண்டு மற்றப்படி கொடுத்திருக்கும்படியான அதே காலத்திற்குள் அவர் வியாஜ்ஜியம் தொடரலாம் அல்லது மனு செய்துகொள்ளலாம்.

(4) அந்த மரண தேதியில் அப்படிப்பட்ட பிரதிநிதிக்கு அவ்வகையான யாதொரு அசமர்த்ததை யுண்டாகாமலிருந்தால், (1), (2) குறிப்பிட்ட உட்பிரிவுகளிற் கண்ட விதிகள் பிரயோகப்படவேண்டும்.

திருஷ்டாந்தம்.

(*a*) ஒரு படகுக்கூலிக்காக வியாஜ்ஜியம் தொடரும்படியான சுதந்தரம் ஏ-என்பவருக்கு அவர் மைனராயிருந்த காலத்தில் உண்டாகிறது. அந்த சுதந்தரமுண்டான நான்கு வருஷத்திற்குப் பின்பு அவர் பருவமடைகிறார். அவர் பருவமடைந்த தேதிமுதல் மூன்று வருஷத்திற்குள் எப்போதாவது வியாஜ்ஜியம் தொடரலாம்.

(*b*) உயில் மூலமாய் ஏற்பாடான ஆஸ்திக்காக வியாஜ்ஜியம் தொடரும்படியான சுதந்தரத்தை மைனராயிருந்த காலத்தில் அடைந்த ஏ-என்பவர் அந்தச் சுதந்தரமுண்டான பதினொரு வருஷத்திற்குப் பின்பு பருவமடைகிறார். சாதாரணமான சட்டப் பிரகாரம் ஏ. என்பவர் வியாஜ்ஜியம் தொடருவதற்கு இன்னும் ஒரே வருஷந்தான் மிகுதியாயிருக்கிறது. ஆனால், இந்தப் பிரிவின்படியும் 9-வது பிரிவின்படியும் அவருக்குப் பின்னும் இரண்டு வருஷம் இருக்கக் கொடுக்கப் படுமாதலால் அவர் பருவமடைந்த தேதி முதல் எல்லாம் சேர்ந்து மூன்று வருஷமாகும்; அதற்குள் அவர் வியாஜ்ஜியம் கொண்டு வரலாம்.

(*c*) வியாஜ்ஜியம் தொடரும்படியான சுதந்தரம் இஜெட்-என்பவருக்கு அவர் மைனராயிருந்த காலத்தில் உண்டாகிறது. அது உண்டானபின்பு அவர் இன்னும் மைனராயிருக்கும்போதே அவருக்குப் பைத்தியம் பிடிக்கிறது. அவருடைய பைத்தியமும் சிறு (மைனர்) வயதும் ஒழிகிறதேதி முதல் அவருக்குக்காலம் கடந்து கொண்டேவரும்.

(*d*) வியாஜ்ஜியம் தொடரும்படியான சுதந்தரம் எக்ஸ்-என்பவருக்கு அவர் மைனராயிருந்த காலத்தில் உண்டாகிறது. அவர் பருவமடைவதற்கு முன்னமே இறந்துபோய், அவருடைய மைனர் குமாரராகிய ஒய்-என்பவர் அவருக்குப்பின் வருகிறார். ஒய்-என்பவர் பருவமடைகிற தேதி முதல் அவருக்குக்காலம் கடந்து கொண்டேவரும்.

(*e*) பரம்பரையான தொழிலுக்காக வியாஜ்ஜியம் தொடரும் படியான சுதந்தரம் ஏ-என்பவருக்கு அவர் பித்தராயிருந்த காலத்தில் உண்டாகிறது. அந்தச்சுதந்தரமுண்டான ஆறு வருஷத்திற்குப் பின்பு ஏ-என்பவர் புத்திஸ்வாதீன மடைகிறார். சாதாரணமான சட்டப்பிரகாரம், அவருக்குப் பைத்தியம் தீர்ந்த தேதி முதல் வியாஜ்ஜியம் தொடருவதற்காக ஏ. என்பவருக்கு ஆறுவருஷமிருக்கிறது. இந்தப்பிரிவை 9-வது பிரிவோடு சேர்த்துவாசிக்கும்போது இந்தப்பிரிவின்படி அவருக்கு அதிககாலம் ஒத்துக்கொடுக்கப்படமாட்டாது.

(*f*) குடிக்கூலிக்காரரிடத்திலிருந்து ஸ்வாதீனம் படுத்திக்கொள்ள வீட்டுக்காரராய வியாஜ்ஜியம் தொடருவதற்காக உன்மத்தராயிருக்கிற ஏ. என்பவருக்குச் சுதந்தரமுண்டாகிறது. ஏ. என்பவர் உன்மத்தராயிருந்தபடியே அந்தச்சுதந்தரமுண்டான மூன்று வருஷத்திற்குப்பின்பு இறந்து போகிறார். சுதந்தரத்தில் ஏ. என்பவருடைய பிரதிநிதியாயிருப்பவருக்குச் சாதாரணமான சட்டப்பிரகாரம் ஏ. என்பவருடைய மரணதேதி முதல் வியாஜ்ஜியங்கொண்டு வருவதற்காக ஒன்பது வருஷமிருக்கிறது. பிரதிநிதிக்கு அந்த பிரதிநிதியத்வம் உண்டாகும்போது அவரும் அசமர்த்தரா யிருந்தாலொழிய, இந்தப்பிரிவை 9-வது பிரிவோடு சேர்த்து வாசிக்கும்போது இந்தப்பிரிவினாலே அந்தக்காலம் அதிகப்படாது.

கூட்டாய் கடன் கொடுத்தவர்களில் ஒருவருடைய அசமர்த்ததை.

8. கூட்டாய்க்கடன் கொடுத்தபலபேர்களில் அல்லது தாவாதாரர்கள் பலபேர்களில் ஒருவராவது மனு செய்து கொள்ளச் சுதந்தரமடைந்திருக்கும் பலபேர்களில் ஒருவராவது அப்படிப்பட்ட யாதொரு அசமர்த்ததைக்கு உட்பட்டவராயிருந்து, அப்படிப்பட்ட நபருடைய அனுமதியில்லாமல் பரிஷ்காரஞ் செய்யப்படக்கூடியதாயிருக்குமாகில் அவர்களெல்லோருக்கும் காலம் கடந்து கொண்டேவரும். ஆனால், அப்படிப்பட்ட பரிஷ்காரம் செய்யக்கூடாமையாயிருக்குமாகில், அவர்களில் எவராவது மற்றவர்களுடைய அனுமதியல்லாமல் அப்படிப்பட்ட பரிஷ்காரம் செய்யக்கூடியவ ராகிறவரையில் அவர்களில் ஒருவருக்கும் காலங்கடக்க மாட்டாது.

திருஷ்டாந்தம்.

(*a*) பி. ஸி. டி. என்பவர்கள் பங்குக்காரர்களாயிருக்கிற ஒரு வர்த்தகக்கூட்டத்துக்கு ஏ. என்பவர் கடன் பட்டிருக்கிறார். பி என்பவர் பித்தராயும் ஸி. என்பவர் மைனராயுமிருக்கிறார்கள். பி. ஸி. என்பவர்களுடைய அனுமதி யில்லாமல் டி. என்பவர் அந்தக்கடனைப்பரிஷ்காரம் செய்து விடக்கூடும். பி. ஸி. டி. என்பவர்களுக்குக் காலங் கடந்துக்கொண்டேவரும்.

(*b*) இ. எம். ஜி. என்பவர்கள் பங்குக்காரர்களாயிருக்கிற ஒரு வர்த்தகக்கூட்டத்துக்கு ஏ. என்பவர் கடன் பட்டிருக்கிறார். இ. எப். என்பவர்கள் பித்தராயிருக்கிறார்கள், ஜி. என்பவர் மைனராயிருக்கிறார், இ. என்பவராவது எப். என்பவராவது புத்திஸ்வாதீன மடைகிற வரையிலாகிலும், ஜி. என்பவர் பருவமடைகிற வரையிலாகிலும் அவர்களில் எவருக்கும் காலங்கடக்கமாட்டாது.

9. எவ்வளவு காலத்திற்குள் யாதொரு வியாஜ்ஜியம் கொண்டு வரவேண்டியதோ அல்லது மனு செய்து கொள்ளவேண்டியதோ அந்தக்காலமானது, அசமர்த்ததை நீங்கினது முதற் கொண்டாவது, அசமர்த்ததையுண்டான நபர் இறந்து போனது முதற் கொண்டாவது, 7-வது, அல்லது 8-வது பிரிவிலுள்ள தெதனாலும் மூன்று வருஷத்தை விசேஷநிவாரணைகள் விட அதிகப்படுவதாக எண்ணக்கூடாது; சாமந்த பாத்தியதையை நிறைவேற்றுவதற்காகக் கொண்டு வரப்படுகிற வியாஜ்ஜியங்களுக்கும் 7-வது அல்லது 8-வது பிரிவிலுள்ளதெதுவும் பிரயோகப்படாது.

குறிப்பு:—சாமந்த பாத்தியதை என்பது யாதொருபொருளை மற்றவர்களுக்கு முன்னே கிரயத்திற்குக் கொள்வதற்கான பாத்தியதையாகும்.

10. காலம் கடக்க ஒருதரம் ஆரம்பித்திருக்குமாகில், பின்னிட்டுண்டாகிற அசமர்த்ததையினாலாவது வியாஜ்ஜியந்தொடர அசக்தியனாலாவது அது தடைபடமாட்டாது;

காலம் தொடர்ச்சியாய்ச் செல்லுவது.

ஆனால், கடன் கொடுத்தவருடைய ஆஸ்திக்காக லெட்டர்ஸ் ஆவ் அட்மினிஸ்ட்ரேஷன் என்னும் அதிகார பத்திரமானது அவருடைய கடனாளிக்குக் கொடுக்கப்பட்டிருக்குமாகில், அந்தக்கடனை வசூல் செய்ய வியாஜ்ஜியத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட காலமானது அந்த அட்மினிஸ்ட்ரேஷன் இருக்கும்போது கடக்கவொட்டாமல் நிறுத்தி வைக்கப்படும்.

வெளிப்படையான ட்ரஸ்டிகள் மேலும் அவர்களுடைய பிரதிநிதிகள் மேலும் வியாஜ்ஜியம்.

11. இதில் முன்னமே என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே குறித்த யாதொரு காரியத்திற்காகச் சொத்தானது ட்ரஸ்டில் யாருக்குச் சங்கிரமித்திருக்கிறதோ அந்த நபரின் மேலாவது அவருடைய சட்ட சம்மதமான பிரதிநிதிகளின் மேலாவது (பெருமான ஐவேஜுக்காக ஒப்படைக்காரர்களல்லாத) ஒப்படைக்காரர்கள் மேலாவது, அவருடைய அல்லது அவர்களுடைய வசத்தில் அப்படிப்பட்ட சொத்தையாகிலும் அதன் வரும்படியை யாகிலும் தொடருவதற்காகவோ அல்லது அப்படிப்பட்ட சொத்து அல்லது வரும்படியைப்பற்றிய கணக்குக்காகவோ கொண்டுவரப்படும் வியாஜ்ஜியமானது எவ்வளவு தீர்க்க காலத்தினாலாகிலும் தடைபடமாட்டாது.

அன்னியதேசத்து ஒப்பந்த உடன்படிக்கைகள் மேல் வியாஜ்ஜியம்.

12. (1) அன்னியதேசத்தில் செய்யப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கைகளின் மேல் பிரிடிஷ் இந்தியாவில் தொடரப்படும் வியாஜ்ஜியங்கள் இந்த ஆக்டினாலே நிர்ணயிக்கப்பட்ட விதிகளுக்கு உட்பட்டிருக்கின்றன.

அந்நிய தேசத்துக்காலநிர்ணயச் சட்டம்.

(2) யாதொரு அன்னிய தேசத்தில் செய்யப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையைக் குறித்து பிரிடிஷ் இந்தியாவில் தொடரப்படுகிற வியாஜ்ஜியத்திலே அந்நியதேசத்துக் காலநிர்ணய விதியை அந்த விதியினாலே அந்த உடன்படிக்கை அற்றுப்போயிருந்தும், அந்த விதியினாலே நிர்ணயிக்கப்பட்ட காலவரையில் அப்படிப்பட்ட தேசத்திலே அந்தக்கட்சிக்காரர்கள் வாசஞ் செய்துமிருந்தாலொழிய, பிரதிவாதிக்கு ஆதாரமாக எடுத்துச் சொல்லலாகாது.

3-ம்பாகம்

நிர்ணயிக்கப்பட்ட கெடுவு காலத்திற்கு நாள் எண்ணுவது.

வியாஜ்ஜியம் தொடரும் படியான சுதந்தரம் என்றைக்கு உண்டாகிறதோ அந்த நாளைக் கணக்கில் சேர்க்காமலிருப்பது

13 (1) யாதொரு வியாஜ்ஜியம். அப்பீல் அல்லது மனுவிற்காக நிர்ணயிக்கப்பட்ட கெடுவு காலத்திற்கு நாள் எண்ணுவதில், என்று முதல் அந்த கெடுவு காலத்திற்கு நாள் எண்ணப்படுகிறதோ அந்த நாளைக் கணக்கில் சேர்க்காமல் தள்ளிவிடவேண்டும்.

அப்பீல்கள் விஷயத்திலும் சில மனுக்கள் விஷயத்திலும் கழித்துக்கொடுப்பது.

(2) அப்பீலுக்கும், பாப்பராக அப்பீல் செய்ய அனுமதி கேட்டுக் கொள்ளுகிற மனுவுக்கும், தீர்ப்பைப் புனராலோசனை செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிற மனுவுக்கும் நிர்ணயிக்கப்பட்ட கெடுவு காலத்திற்கு நாள் எண்ணுவதில், எதன்மேல் பிரியாது செய்யப்பட்டதோ அந்த தீர்ப்பு சொல்லப்பட்ட நாளையும், எதன்மேல் அப்பீல் செய்யப்பட்டதோ அல்லது எதை புனராலோசனை செய்யும்படி கேட்டுக்கோள்ளப்பட்டதோ அந்த டிக்ரி-தீர்ப்பு-அல்லது உத்தரவுக்கு நகல் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த காலத்தையும் கழித்துக்கொடுக்கவேண்டும்.

(3) யாதொரு டிக்ரியின் மேல் அப்பீல் செய்யப்பட்டாலும் அதைப் புனராலோசனை பண்ணும்படி கேட்டுக்கொள்ளப் பட்டாலும், அதற்கு ஆதாரமாயிருக்கிற தீர்ப்புக்கு நகலைப் பெற்றுகொள்ளுவதற்கு வேண்டியிருக்கிற காலத்யையும் கழித்துக் கொடுக்கவேண்டும்.

(4) யாதொரு தீர்மானத்தை ரத்துபண்ணும்படி செய்யப்பட்ட மனுவுக்கு நிர்ணயிக்கப்பட்ட கெடுவு காலத்திற்கு நாள் எண்ணுவதில், அந்தத் தீர்மானத்திற்கு நகல் பெற்றுக் கொள்ளவேண்டியிருந்த காலத்தைக் கழித்துக் கொடுக்கவேண்டும்.

பிரதிவாதி பிரிடிஷ் இந்தியாவிலில்லாத காலத்தைக் கழித்துக் கொடுப்பது.

14. யாதொரு வியாஜ்ஜியத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கெடுவு காலத்திற்கு நாள் எண்ணுவதில், பிரிடிஷ் இந்தியாவில் பிரதிவாதி இல்லாத காலத்தைக் கழித்துக் கொடுக்கவேண்டும்.

அதிகாரமில்லாத கோர்ட்டில் நல்ல எண்ணத்தோடு வியாஜ்ஜியம் தொடர்ந்திருக்கிற காலத்தைக் கழித்துகொடுப்பது.

15. (1) யாதொரு வியாஜ்ஜியத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கெடுவு காலத்திற்கு நாள் எண்ணுவதில், யாதொரு அசல் கோர்ட்டிலானாலும் அப்பீல் கோர்ட்டிலானாலும், பிரதிவாதியின்மேல் வேறொரு சிவில் விவகாரத்தைத் தகுந்த ஜாக்கிரதையோடு வாதி நடத்திக்கொண்டிருந்த காலத்தை அந்த விவகாரம் அதே வியாஜ்ஜியமூலத்தை ஆதாரமாகக் கொண்டும், அதிகாரவரம்பு குறைவினாலாகிலும் அத்தன்மையான வேறே காரணத்தினாலாவும் அதை ஏற்றுகொள்ளக்கூடாமையாயிருக்கிற யாதொரு கோர்ட்டில் நல்ல எண்ணத்தோடு நடத்தப்பட்டு மிருக்குமாகில், கழித்துக் கொடுக்கவேண்டும்

மனுவு விழயத்தில் அப்படியே கழித்துக்கொடுப்பது.

(2) யாதொரு மனுவுக்கு நிர்ணயிக்கப்பட்ட கெடுவுகாலத்திற்கு நாள் எண்ணுவதில், அதேபரிகாரத்திற்காக மனுதாரர் வேறொரு மனுசெய்து கொண்டிருந்த காலத்தை அந்த வேறுமனுவானது அதிகாரவரம்பு குறைவினாலாகிலும் அத்தன்மையான வேறேகாரணத்தினாலாகிலும் அந்த மனுவின்படி நடப்பிக்கக்கூடாமையாயிருக்கிற யாதொரு கோர்ட்டில் நல்ல எண்ணத்தோடு செய்யப்பட்டிருக்குமாகில் கழித்துக்கெடுக்கவேண்டும்.

விவரணம் 1.—முந்திய வியாஜ்ஜியமாவது மனுவாவது நடந்துகொண்டிருந்த அல்லது செய்யப்பட்டிருக்கிற காலத்தைக் கழித்துக் கொடுப்பதில், அந்த வியாஜ்ஜியம் தொடரப்பட்ட அல்லது மனு செய்யப்பட்டநாளும் அதில் நடவடிக்கைகள் முடிந்த நாளுமாகிய இரண்டு நாளையும் கணக்காக்கிக் கொள்ளவேண்டும்.

விவரணம் 2.—கொடுக்கப்பட்ட அப்பீலை அதிகாரவரம்பில்லை யென்கிற ஆதாரத்தின்மேல் ஆட்சேபிக்கிற வாதியானவர் இந்தப் பிரிவின் தாற்பரியப்படி வியாஜ்ஜியம் நடத்துகிறவராக எண்ணப்படுவார்

வியாஜ்ஜியம் தொடருவது அல்லது டிக்ரியை நிறைவேற்றுவது இன்ஜங்ஷன் என்னும் கட்டளை அல்லது உத்திரவினாலே எதுவரையில் நிறுத்திவைக்கப் படுகிறதோ அந்தக் காலத்தைக் கழித்துக்கொடுப்பது.

16. யாதொரு வியாஜ்ஜியம் தொடருவது அல்லது டிக்ரியை நிறைவேற்றுவது இன்ஜங்ஷன் அல்லது உத்தரவினாலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்குமானால் அந்த வியாஜ்ஜியத்திற்காகவாகிலும் டிக்ரியை நிறை வேற்றிக்கொள்வதற்கான மனுவுக்காகவாகிலும் நிர்ணயிக்கப்பட்ட கெடுவு காலத்திற்கு நாள் எண்ணுவதில், அந்த இன்ஜங்ஷன் அல்லது உத்தரவு எது வரையிலிருக்கிறதோ அந்தக் காலத்தையும், அது பிறப்பிக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட நாளையும் அது நிறுத்திவிடப்பட்ட நாளையும் கழித்துக் கொடுக்கவேண்டும்.

17. டிக்ரியை நிறைவேற்றும் பொருட்டுச் செய்யப்பட்ட விற்பனையிலே கிரயத்துக்குக் கொண்டவரால் ஸ்வாதீனம்செய்யும்படி தொடரப்பட்ட வியாஜ்ஜியத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கெடுவு காலத்திற்கு நாள் எண்ணுவதில், தீர்ப்பான கடனாளி டிக்ரியை நிறைவேற்றுவதற்காகச் செய்யப்பட்ட விற்பனையை ரத்து பண்ணுவதற்கு எத்தனப்பட்டுக்கொண்டிருக்கிற காலத்தைக்கழித்துக்கொடுப்பது அந்த விற்பனையை ரத்து பண்ணும்படி, தீர்ப்பான கடனாளி விவகாரம் நடத்திக் கொண்டிருந்த காலத்தைக் கழித்துக் கொடுக்கவேண்டும்.

ஸ்டேட் செக்ரிடெரி அவர்கள்மேல் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்திலே நோடீஸ் காலவரையறையைக் கழித்துக்கொடுப்பது.

18. ஆலோசனை சபையிலுள்ள இந்தியாஸ்டேட் செக்ரிடெரி அவர்கள்மேலாவது யாதொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தரால் அவருடைய உத்தியோக ஹோதாவிலே செயயப்பட்டதாகப் பொருள்படுகிற யாதொரு காரியத்தைக் குறித்து அந்த ஸர்கார் உத்தியோகஸ்தர்மேலாவது வியாஜ்ஜியம் தொடருவதற்கு முன்னமே, இது விஷயத்தில் ஸிவில் புரோஸிஜர் கோடிற் கண்ட நிபந்தனைகளின்படி கொடுக்கவேண்டிய எழுத்து மூலமான நோடீஸானது அந்த நிபந்தனைகளையனுசரித்து ஒப்பிக்கப்பட்டிருந்தாலும் சேர்ப்பிக்கப்பட்டிருந்தாலும், அந்த வியாஜ்ஜியத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட, கெடுவு காலத்திற்கு நாள் எண்ணுவதில், நோடிஸ் அந்தப்படி ஒப்பிக்கப்பட்ட அல்லது சேர்பிக்கப்பட்ட பிறகு அடுத்துவரும் இரண்டுமாத காலத்தைக் கழித்துக்கொடுக்கவேண்டும்.

வியாஜ்ஜியம் தொடரும் படியான சுதந்தரமுண்டாவதற்கு முன்னமே இறந்துபோவதினாலே இன்னதுண்டாகுமென்பது.

19. (1) ஜீவித்திருந்தால் வியாஜ்ஜியம் தொடர அல்லது மனுசெய்துகொள்ளச் சுதந்தரமுடையவராகிறவர் அந்தச் சுதந்தரமுண்டாவதற்கு முன்னமே இறந்து போனால், அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் தொடர அல்லது மனு செய்துகொள்ளக் கூடுமானவராய், இறந்துபோனவருக்குச் சட்டசம்மதமான பிரதிநிதி ஏற்படுகிற காலமுதற் கொண்டு கெடுவு காலத்திற்கு நாள் எண்ணப்படும்.

(2) ஜீவித்திருந்தால் எவர்மேல் வியாஜ்ஜியம் தொடர அல்லது மனு செய்துக்கொள்ளச் சுதந்தரமுண்டாயிருக்குமோ அவர் அந்தச் சுதந்தரமுண்டாவதற்கு முன்னமே இறந்து போனால், எவர்மேல் வாதி அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் தொடரலாமோ அல்லது மனுசெய்துக்கொள்ளலாமோ அப்படிப்பட்ட சட்டசம்மதமான பிரதிநிதி இறந்துபோனவருக்கு ஏற்படுகிற காலமுதற்கொண்டு கெடுவு காலத்திற்கு நாள் எண்ணப்படும்.

(3) சாமந்த பாத்தியதையை நிறைவேற்றுவதைப் பற்றிய வியாஜ்ஜியங்களுக்காவது, அசையாப் பொருள் அல்லது பரம்பரையான தொழிலின் ஸ்வாதீனத்தைப் பற்றிய வியாஜ்ஜியங்களுக்காவது (1) குறிப்பிட்ட உட்பிரிவிலுள்ளதெதுவும் பிரயோகப் படமாட்டாது.

மோசத்தினாலே இன்னதுண்டாகுமென்பது.

20. வியாஜ்ஜியம் தொடர அல்லது மனு செய்துகொள்ளச் சுதந்தரமுடையவரெவராவது அப்படிப்பட்ட சுதந்தரம் அல்லது அதற்கு ஆதாரமான ஹக்கு அவருக்குத் தெரியவரவொட்டாமல் மோசவகையாய் வைத்திருக்கப் பட்டிருந்தாலும்; அப்படிப்பட்ட சுதந்தரத்தை ஸ்தாபிப்பதற்கு அவசியமான யாதொரு தஸ்தவேஜு அவருக்குக்கிட்டாமல் மோசடியாய் மறைத்து வைக்கப்பட்டிருந்தாலும்,

(*a*) மோசஞ்செய்தவர் அல்லது அதற்கு உதவியாயிருந்தவர் மேலாவது,

(*b*) பெறுமான ஐவேஜுக்காகவும் நல்ல எண்ணத்தோடு மல்லாமல் மற்றப்படி அவர் மூலமாய் தாவா செய்கிறவரெவர் மேலாவது,

வியாஜ்ஜியம் தொடர அல்லது மனுசெய்துக்கொள்ள நிர்ணயிக்கப்பட்ட காலமானது.—

மோசத்தினாலே கெடுதியடைந்த நபருக்கு அது முதலில் தெரியவந்த காலமுதற்கொண்டும், ஒளித்து வைக்கப்பட்ட தஸ்தவேஜு விஷயத்தில் அதைக்கொண்டுவரவாவது கொண்டுவரும்படி கட்டாயப்படுத்தவாவது அவருக்கு முதலில் வகையுண்டான காலமுதற்கொண்டும் கணக்கு செய்யப்படும்.

21. (1) யாதொரு டிக்ரியை நிறைவேற்றிக்கொள்வதற்கான மனு உட்பட யாதொரு சொத்து அல்லது சுதந்தரத்தைக் குறித்த எழுத்து மூலமாய் ஒப்புக்கொள்வதனாலே இன்னது உண்டாகுமென்பது வியாஜ்ஜியத்திற்காவது மனுவுக்காவது நிர்ணயிக்கப்பட்ட காலம் கழிவதற்கு முன்னமே, அப்படிப்பட்ட சொத்து அல்லது சுதந்தரத்தை குறித்து உத்தரிப்பதாக ஒப்புக்கொள்வது—அப்படிப்பட்ட சொத்து அல்லது சுதந்தரத்தைக் குறித்து எவர்மேல் தாவாசெய்யப்படுகிறதோ அந்த நபரினாலாகிலும், யார் மூலமாய் அவர் ஹக்கு அல்லது பொறுப்பு அடைகிறாரோ அந்த யாதொரு நபரினாலாகிலும் எழுதிக் கையெழுத்து செய்யப்பட்டிருக்குமாகில், அப்படி கையெழுத்து செய்யப்பட்ட காலமுதற்கொண்டு, ஆதி பொறுப்பு எப்படிப்பட்டதோ அதற்குத்தக்கபடி புதிதாய்க் கெடுவு காலத்திற்கு நாள் எண்ணவேண்டும்.

(2) ஒப்புக்சொள்வதைக் கண்டு எழுதிக்கொடுக்கப்பட்ட ஆதாரவிலே தேதி போடாதிருந்தால், அதில் கையெழுத்து செய்யப்பட்ட காலத்தைக் குறித்து வாய்மொழிச் சாட்சியம் கொடுக்கலாம்; ஆனால், அதில் கண்டிருக்கிற சங்கதிகளைக் குறித்து வாய்மொழி சாட்சியம் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

விவரணம் 1.—ஒப்புக்கொள்ளுவதில் அந்த சொத்து அல்லது சுதந்தரம் இப்படிப்பட்டதென்று சரியாய்க் கண்டிராவிட்டாலும், செலுத்துவதற்காவது ஒப்பிப்பதற்காவது நிறைவேற்றுதற்காவது அனுபவிப்பதற்காவது இன்னும் காலம் வரவில்லையென்று கண்டிருந்தாலும், செலுத்துவதற்காவது ஒப்பிப்பதற்காவது நிறைவேற்றுதற்காவது அனுபவிக்க விடவாவது மறுப்பதையும்கூடக் கண்டிருந்தாலும் எதிர்க்கடன் தாவாவையும் கூடச்சேர்த்து எழுதியிருந்தாலும், அந்தச்சொத்து அல்லது சுதந்தரத்திற்குப் பாத்தியமுடையவரல்லாத வேறே எவர் பெயருக்காவது எழுதியிருந்தாலும், இந்தப்பிரிவிற் சொல்லியிருக்கிற காரியங்களுக்காக அந்த ஆதரவே போதுமானதாகலாம்.

விவரணம் 2.—இந்தப்பிரிவில் "கையெழுத்து செய்யப்பட்டு" என்பது—நேராகவாகிலும் இது விஷயத்தில் கிரமமாய் அதிகாரங் கொடுக்கப்பெற்ற ஏஜெண்டினாலாகிலும் கையெழுத்து செய்யப்பட்டு என்று அர்த்தமாகும்.

வட்டிக்கென்று பணம் செலுத்தினால் இன்னதுண்டாகுமென்பது.

அசலுக்காக எவ்வளவாவது செலுத்தினால் இன்னதுண்டாகுமென்பது.

22. (1) நிர்ணயமான காலமுடிவதற்கு முன்னமே கடனுக்காகிலும் மரணசாஸன மூலமாய் ஏற்பாடான ஆஸ்திக்காகிலும் வட்டியானது—அந்தக்கடன் அல்லது ஏற்பாடான ஆஸ்தியைச் செலுத்துவதற்குட் பட்டவராலாகிலும், இது விஷயத்தில் கிரமமாய் அதிகாரங்கொடுக்கப்பெற்ற அவருடைய ஏஜெண்டினாலாகிலும் அப்படிப்பட்டதாகச் செலுத்தப்பட்டாலும், நிர்ணயமானகாலம் முடிவதற்கு முன்னமே அசல் கடனுக்கு எவ்வளவாவது பாக்கிதாராலாகிலும் இது விஷயத்தில் கிரமமாய் அதிகாரங் கொடுக்கப்பெற்ற அவருடைய ஏஜெண்டினாலாகிலும் செலுத்தப்பட்டாலும், அப்படி செலுத்தப்பட்ட காலமுதற் கொண்டு, ஆதி பொறுப்பு எப்படிப்பட்டதோ அதற்குத் தக்கபடி புதிதாய் கெடுவு காலத்திற்கு நாள் எண்ணப்படும் :

ஆனால், அசல் கடனுக்கு எவ்வளவாவது செலுத்தப்படுகிற விஷயத்தில், பணம் செலுத்துகிறவருடைய கையெழுத்தினாலே பணஞ் செலுத்துகிற சங்கதி எழுதியிருக்கவேண்டும்.

(2) கொதுவை நிலமானது கொதுவை வைத்துக்கொண்டவருடைய ஸ்வாதீனத்திலிருக்குமாகில், அப்படிப்பட்ட நிலத்தின் வாடகை அல்லது மாசூலைப் பெற்றுக்கொள்வது—(1) குறிப்பிட்ட உட்பிரிவிற் சொல்லியிருக்கிற காரியத்தின் பொருட்டுச் செலுத்தினதாக எண்ணப்படும்.

விவரணம் :—கடன் என்பதிலே கோர்ட் டிக்கிரியின்படி செலுத்தத்தக்க பணமென்பதும் அடங்கும்.

ஏஜெண்ட் என்பதிலே அசமர்த்ததையாயிருக்கும் நபரின் கார்டியன் அல்லது மானேஜர் என்பதுமடங்குமென்பது.

23. (1) 21-வது, 22-வது பிரிவுகளிற்கண்ட "இது விஷயத்தில் கிரமமாய் அதிகாரங் கொடுக்கப்பெற்ற ஏஜெண்ட்" என்னும் சொற்றொடரிலே அசமர்த்ததையாயிருக்கும் நபரின் விஷயத்தில், அவருடைய சட்ட சம்மதமான கார்டியன் (சவரட்சகர்) அல்லது மானேஜர் (நிர்வாககர்த்தர்) என்பதும் அல்லது ஒப்புக்கொள்வதற்கான டை ஆதரவிலே கையெழுத்து செய்யவோ மேலே கண்டபடி பணம் செலுத்தவோ அந்த கார்டியன் அல்லது மானேஜரிடமிருந்து கிரமமாய் அதிகாரம்பெற்ற என்பதும் அடங்கும்.

(2) கூட்டான பல ஒப்பந்தக்காரர்கள் பங்குக்காரர்கள் எக்ஸிக் யூட்டர்கள் அல்லது கொதுவை வைத்துக் கொண்டவர்களில் யாவரொருவராகிலும் சிலராகிலும் அப்படிப்பட்டவருடைய ஏஜெண்டினாலாகிலும் ஒப்புக்கொண்டு எழுதிக் கையெழுத்து செய்யப்பட்டிருக்கிறதென்னும் ஹேதுவினால் மாத்திரமாவது பணம் செலுத்தப்பட்டிருக்கிறதென்னும் ஹேதுவினால் மாத்திரமாவது அவர்களில் வேறொருவர் மேல்கண்ட பிரிவுகளிலுள்ள தெதனாலும் உள்ளாகத் தக்கவரல்ல.

கூட்டமான ஒப்பந்தக்காரர் முதலானவர்கள் ஒருவர் ஒப்புக்கொள்வதனாலாவது பணம் செலுத்துவதனாலாவது அவர்களில் வேறொருவர் உள்ளாகத் தக்கவரல்லவென்பது.

24. (1) யாதொரு வியாஜ்ஜியம் தொடரப்பட்ட பின்பு, புதிதாய் வாதியாவது பிரதிவாதியாவது பார்த்தி செய்யப்பட்டாலும் சேர்க்கப்பட்டாலும், அவர்மட்டில் அந்த வியாஜ்ஜியமானது அப்படி அவர் கட்சிக்காரராகச் செய்யப்பட்டபோது ஆரம்பமானதாக எண்ணப்படும்.

(2) யாதொரு வியாஜ்ஜியம் நடந்து கொண்டிருக்கும்போது எந்த பாத்தியதையாகிலும் ஒப்படை செய்யப்பட்டது காரணமாகவோ இன்னொருவரைச்சேர்ந்து விட்டது காரணமாகவோ யாதொரு கட்சிக்காரர் சேர்க்கப்பட்டாலும் பார்த்தி செய்யப்பட்டாலும், அல்லது வாதி பிரதிவாதி யாக்கப்பட்டாலும் அப்படிப்பட்ட விஷயத்துக்கு (1) குறிப்பிட்ட உட்பிரிவிலுள்ள தெதுவும் பிரயோகப்படமாட்டாது.

விடாமல் தவறிப்போவதும் அக்கிரமிப்பதும்.

25. ஒப்பந்த உடன்படிக்கை தவறிப்போவது இடைவிடாததாயிருக்கிற விஷயத்திலும், ஒப்பந்த உடன்படிக்கை சம்பந்தமில்லாமல் இடைவிடாத அக்கிரம முண்டாயிருக்கிற விஷயத்திலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி தவறுதலோ அல்லது அக்கிரமமோ நடந்து வருகிற காலம் வரையிலே அந்தந்த க்ஷணத்தில் புதிதாய்க் கெடுவு காலம் செல்லத் தொடங்கும்.

பிரத்தியேகமான நஷ்டமில்லாமல் வியாஜ்ஜியம் தொடரத் தகாத காரியத்துக்காகப் பிரதிபலனைப்பற்றி வியாஜ்ஜியம்.

26. யாதொரு காரியத்தினாலே ஏதாவது குறித்த கெடுதி வாஸ்தவமாய் உண்டானாலொழிய வியாஜ்ஜிய மூலத்திற்கு இடங்கொடாத அந்த காரியத்தைக் குறித்தும் பிரதிபலனைப் பற்றின வியாஜ்ஜிய பலனைப் பற்றின வியாஜ்ஜிய விஷயத்தில் அந்தக் கெடுதி யுண்டாகிற காலமுதற்கொண்டு கெடுவு காலத்திற்கு நாள் எண்ணப்படும்.

திருஷ்டாந்தம்.

(a) ஒரு புலத்தின் மேற்புரம் எ. என்பவருக்குரியது. அதன் உட்புறம் பி. என்பவருக் குரியது. மேற்புறத்துக்கு உடனே கண்ணுக்குத் தென்படும்படியான யாதொரு கெடுதியு முண்டுபண்ணுமல் பி. என்பவர் அதிலிருந்து கரிவெட்டி எடுக்கிறார்; ஆனால், கட்சியில் மேற்புறம் உள்ளது முந்திப்போகிறது. பி. என்பவர்மேல் எ. என்பவர் வியாஜ்ஜியம் தொடருகிற விஷயத்தில் அப்படி உள்ள முந்திப்போன காலமுதற்கொண்டு கெடுவு காலம் செல்லும்.

(b) வார்த்தைகளைப் பார்த்தால் அவைகளினாலே பிரத்தியேகமான நஷ்டமுண்டாகாமல் வியாஜ்ஜியம் கொண்டுவரத்தகாதவைகளாயிருக்கிற தூஷணையான வார்த்தைகளை பி. என்பவரைக் குறித்து எ. என்பவர் பேசிப் பிரசித்தம் பண்ணுகிறார். அதனாலே ஸி. என்பவர் தம்முடைய குமாஸ்தாவாக பி. என்பவரை அமர்த்திக்கொள்ள நிராகரிக்கிறார். தூஷணையைக்குறித்துப் பிரதிபலனுக்காக எ. என்பவர்மேல் பி. என்பவா வியாஜ்ஜியம் தொடருகிற விஷயத்தில், நிராகரிக்கப்படுகிற வரையில் கெடுவு காலம் ஆரம்பிக்கமாட்டாது.

ஆதாரவுகளில் கண்டிருக்கிற காலத்தைக் கணக்கு செய்வது.

27. இந்த ஆக்டிற் சொல்லியிருக்கிற காரியங்களினிமித்தம் சால ஆதாரவுகளும் க்ரெகொரி (Gregory) என்பவரால் கணித்திருக்கப்பட்ட பஞ்சாங்கத்தை அனுசரித்து எழுதப்பட்டவைகளாக எண்ணப்படும்.

திருஷ்டாந்தம்.

(a) ஒரு ஹிந்துவானவர் சுயதேதி மாத்திரம் போட்டு, அந்த தேதிக்கு நான்கு மாதத்திற்குப் பின்பு செலுத்துவதாக ஒரு ப்ராமிஸரி நோட் எழுதிக்கொடுக்கிறார். அந்த ப்ராமிஸரி நோட்டின்மேல் வியாஜ்ஜியத்திற்குச் சம்மந்தப்படும்படியான கெடுகாலமானது க்ரெகொரி என்பவரால் கணிக்கப்பட்ட பஞ்சாங்கப்படிக்குக் கணக்கு செய்யப்பட்ட தேதிக்குப் பின்பு நான்குமாதம் கழிந்தது முதல் செல்லும்.

(b) ஒரு ஹிந்துவானவர் சுயதேதி மாத்திரம் போட்டு, ஒரு வருஷத்திற்குள் மறுபடி பணம் செலுத்துவதாகப் பத்திரமெழுதிக் கொடுக்கிறார். அந்தப் பத்திரத்தின் மேல் வியாஜ்ஜியத்திற்குச் சம்மந்தப் படும்படியான கெடுவு காலமானது க்ரெகொரி என்பவரால் கணிக்கப்பட்ட பஞ்சாங்கம்படிக்குக் கணக்கு செய்யப்பட்ட தேதிக்குப் பின்பு ஒரு வருஷம் கழிந்தது முதல் செல்லும்.

4-ம் பாகம்.

ஸ்வாதீனத்தில் உரிமை அடைவது.

வழி நடை முதலிய வசதி யுரிமைகளுக்குச் சுதந்தரமடைவது.

28. (1) வெளிச்சமாவது காற்றாவது யாதொரு கட்டிடத்துக்கு வருவதையும் அந்தக் கட்டிடத்திற்காக உபயோகப் படுவதையும் வசதி யுரிமையாகவும் சுதந்தரப் பொருளாகவும் தடையில்லாமல் இருபது வருஷகாலம் நிம்மதியாய் அதனுடன் அனுபவித்திருந்தாலும்,

யாதொரு வழியையாவது, தண்ணீர்க்காலையாவது, தண்ணீரின் உபயோகத்தையாவது, தம் செய்கையினாலே அனுபவிக்கப்படுகிறதாக வாகிலும் பிறருடைய தடையின்றி அனுபவிக்கப்படுகிறதாகவாகிலு மிருக்கிற வேறே யாதொரு வசதி யுரிமையையாவது, வசதி யுரிமையாகவும் சுதந்தரப் பொருளாகவும் அதற்குப் பாத்தியதை கொண்டாடுகிறவரெவராகிலும் தடையில்லாமல் இருபது வருஷகாலம் நிம்மதியாயும் வெளிப்படையாயும் அனுபவித்திருந்தாலும்,

அப்படிப்பட்ட வெளிச்சம் அல்லது காற்றின் வருகைக்கும் உபயோகத்திற்காவது, வழி, தண்ணீர்க்கால், தண்ணீரின் உபயோகம் அல்லது வேறே வசதி யுரிமைக்காவது உண்டாகிய சுதந்தரம் அடிபட்டுப்போக மாட்டாமல் பூர்த்தியாகும்.

மேற்சொல்லிய பிரதி இருபது வருஷகாலமும் விவாதத்திலிருக்கிற அந்த கால சம்பந்தமான தாவாவைக் குறித்து வியாஜ்ஜியம் தொடருவதற்கு அடுத்து முந்திய இரண்டு வருஷத்திற்குள் முடிகிற காலமாக எடுத்துக்கொள்ளப்படும்.

கவர்ன்மெண்டாருக்கு விரோதமாக,

(2) (1) குறிப்பிட்ட பிரிவின்படி எந்த சொத்தின்மேல் சுதந்தர மிருப்பதாகச் சொல்லிக்கொள்ளப்படுகிறதோ அந்த சொத்தானது கவர்ன்மெண்டாரைச் சேர்ந்ததாயிருந்தால், ஷை உட்பிரிவை "இருபது வருஷகாலம்" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாய் "அறுபது வருஷகாலம்" என்னும் வார்த்தைகளை அமைக்கப்பட்டிருந்தாற்போல் வாசிக்கவேண்டும்.

விவரணம்:—தாவாதாரல்லாமல் வேறே எவருடைய செய்கையினாலாவது உண்டு பண்ணப்பட்ட தடைகாரணமாக அந்த ஸ்வாதீனம் அல்லது அனுபவம் வாஸ்தவமாய் நின்றுபோயும், அந்த தடையைக்குறித்தும் அதைச் செய்கிறவர் அல்லது செய்யும்படி உத்தரவு கொடுக்கிறவரைக் குறித்தும் தாவாதாரர் தெரிந்துக்கொண்ட பின்பு ஒரு வருஷகாலம் அப்படிப்பட்ட தடைக்கு உட்பட்டு அல்லது சம்மதித்திருந்தாலன்றி மற்றப்படிக்கு இந்தப் பிரிவின் தாற்பரியப்படி எதுவும் தடையாகமாட்டாது.

(a) வழி நடைபாத்தியதை தடுக்கப்பட்டதற்காக 1911-ம்ளுத்தில் வியாஜஜியம் கொண்டுவரப்படுகிறது. தடுத்ததைப் பிரதிவாதி ஒப்புக்கொண்டு வழிநடை பாத்தியதையை மறுக்கிறார். வாதியானவர் அந்த பாத்தியதைக்கு வசதி யுரிமையாகவும் சுதந்தரப் பொருளாகவும் ஹக்கு உடைத்தாயிருக்கிறதாம் அதை 1890-ம்ளு ஜனவரிமீ 1உ முதற்கொண்டு 1910-ம்ளு ஜனவரிமீ 1உ வரைக்கும் தடையில்லாமல் நிம்மதியாயும் வெளிப்படையாயும் அனுபவித்து வந்ததாக ருஜுபடுத்துகிறார். வாதிக்கு தீர்ப்பு கிடைக்கத்தக்கதா யிருக்கிறது.

(b) அவ்வித வியாஜ்ஜியத்திலே வாதியானவர் இருபது வருஷகாலம் நிம்மதியாயும் வெளிப்படையாயும் அந்தச் சுதந்தரத்தை தான் அனுபவித்து வந்ததாக ருஜு செய்கிறார். இந்த இருபது வருஷ காலத்திலே ஒரு தருணத்தில் அந்தச் சுதந்தரத்தை அனுபவிக்க அனுமதி கொடுக்கும்படி வாதி தம்மைக் கேட்டுக்கொண்டாரென்று பிரதிவாதி ருஜு செய்கிறார். வியாஜ்ஜியம் தள்ளுண்டுபோகும்.

வசதியுரிமைக்கு உட்பட்டிருக்கிற ஆட்சி எவருக்குப் பிந்தி சித்திக்கிறதோ அவர் பட்சத்தில் கழித்துக் கொடுப்பது.

29. யாதொரு வசதியுரிமையானது எதன்மேல் அல்லது எதற்கு மேலாக அல்லது எதிலிருந்து அனுபவிக்கப்பட்டிருக்கிறதோ அல்லது அடையப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு நிலமாவது தண்ணீராவது ஆயுள் வரையிலாகிலும், அது கொடுக்கப்படுகிறது முதல் மூன்று வருஷத்திற்கு மேற்பட்டு எத்தனை வருஷத்திற்காகிலும் உண்டாகிய யாதொரு பாத்தியதையைப்பற்றி யாவது அடையப்பட்டிருக்குமாகில், அப்படிப்பட்ட பாத்தியதை அல்லது கெடுவு காலம் நடந்து வருகிறவரையில் அப்படிப்பட்ட வசதி யுரிமையை அனுபவித்து வருகிற காலமானது, அப்படிப்பட்ட பாத்தியதை அல்லது கெடுவுகாலம் முடிந்தவுடனே மேற்படி நிலம் அல்லது தண்ணீருக்குப் பாத்தியஸ்தராகிறவர் அப்படி முடிந்த பின்பு அடுத்த மூன்று வருஷத்திற்குள் அந்தச் சுதந்தரத்தை எதிர்க்கிற பட்சத்தில், மேற்படி இருபது வருஷகாலக் கணக்கிலே சேர்க்காமல் தள்ளிவிடப்படும்.

திருஷ்டாந்தம்.

பி. என்பவருடைய நிலத்தின்மேல் தமக்கு வழி நடைபாத்தியதை முண்டாயிருப்பதாக நிச்சயிக்கும்படி எ. என்பவர் வியாஜ்ஜியம் தொடருகிறார். அந்த பாத்தியதையை இருபத்தைந்து வருஷம் தாம் அனுபவித்ததாக எ. என்பவர் ருஜுபடுத்துகிறார்; ஆனால், பி. என்பவர் இந்த வருஷங்களில் பத்து வருஷகாலம் ஒரு இந்து விதந்துவாகிய ஸி. என்பவள் அந்த நிலத்திலே ஆயுள்வரையில் சுதந்தரமுடையவளாயிருந்தாளென்றும் ஸி. என்பவள் இறந்துபோனவுடனே தமக்கு (பி. என்பவருக்கு) அந்த நிலத்தில் ஹக்கு உண்டாயிற்றென்றும் ஸி. என்பவள் இறந்துபோன பின்பு இரண்டு வருஷத்திற்குள் அந்த பாத்தியதைக்கு எ. என்பவருக்குண்டான தாவாவைத் தாம் ஆட்சேபித்தாரென்றும் ரூபிக்கிறார். இந்தப் பிரிவிலுள்ள நியந்தனைகளின் பிரகாரம் எ-என்பவர் பதினைந்து வருஷம் அனுபவித்ததாக மாத்திரம் ருஜுப்படுத்தினபடியால் அந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிடவேண்டும்.

சொத்துக்குப் பாத்தியதை யற்றுப்போவது.

30. யாதொரு சொத்தின் ஸ்வாதீனத்தைக் குறித்து வியாஜ்ஜியம் தொடருவதற்கு எவருக்காகவது இதனால் நிர்ணயக்கப்பட்ட காலம் முடிந்தவுடனே அப்படிப்பட்ட சொத்துக்கு அவருக்குள்ள பாத்தியதையானது அற்றுப்போகும்.

5 - ம் பாகம்.

நிவாரணைகளும் ரத்தானவைகளும்.

நிவாரணைகள். 31 (1) இந்த ஆக்டிலுள்ளதுவும்:—

(a) 1872-ம் ளுத்திய இந்து தேசத்துக் காண்ட்ராக்ட் ஆக்ட் 25-வது பிரிவைப் 1872-ம் ளுத்து 9-வது ஆக்ட் பாதிக்கமாட்டாது.

(b) பிரிடிஷ் இந்தியாவில் இப்போதாவது இனிமேலாவது வழங்கிவரும் யாதொரு விசேஷ சட்டதிட்டத்தினாலாகிலும் பிரதேச சட்டத்தினாலாகிலும் யாதொரு வியாஜ்ஜியத்திற்கோ அப்பீலுக்கோ அல்லது மனுவுக்கோ பிரத்தியேகமாய் நிர்ணயிக்கப்பட்ட யாதொரு கெடுவு காலத்தைப் பாதிக்கவும் மாட்டாது மாற்றவும் மாட்டாது.

(2) 2-வது 34-வது பிரிவுகளிலாவது 2-வது, 3-வது, பாகங்களிலாவது கண்டதெதுவும்.

(a) இந்து தேசத்து விவாகசம்பந்த நிவர்த்தி ஆக்டின் படிக்கான வியாஜ்ஜியங்களுக்கும்

(b) 1831 - ம் ளுத்திய சென்னப்பட்டணத்துப் பரம்பரையான உத்தியோகங்களைக் குறித்த சட்டதிட்டத்தின் படிக்கான வியாஜ்ஜியங்களுக்கும் பிரயோகப்படமாட்டாது

(3) 28 - வது, 29 - வது பிரிவுகளும் 2 - வது பிரிவிற்கண்ட "வழிநடை முதலிய வசதிவுரிமை" என்பதன் அர்த்தமும் 1882-ம் ளுத்திய இந்து தேசத்து வழி நடை முதலிய வசதியுரிமைகளைக் குறித்த ஆக்ட் அந்தந்த காலத்தில் வியாபிக்கக் கூடிய பிரதேசங்களில் உண்டாகும் வியாஜ்ஜியங்களுக்கு பிரயோகப் படமாட்டாது.

32. இதில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, யாதொரு வியாஜ்ஜியத்துக்காக இந்த

எந்த வியாஜ்ஜியங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட கால அளவானது 1877-ம் ௵த்திய இந்து தேசத்துக் கால நிர்ணயச் சட்டத்தினுல் நிர்ணயிக்கப்பட்ட கால அளவைக்காட்டிலும் குறைவாயிருக்கிறதோ அந்த வியாஜ்ஜியங்களுக்காக நிபந்தனே.

ஆக்டினுல் நிர்ணயிக்கப்பட்ட கெடுவு கலாமானது 1877-ம் ௵த்திய இந்து தேசத்துக் கால நிர்ணயச் சட்டத்தினுல் நிர்ணயிக்கப்பட்ட கெடுவு காலத்தைக் காட்டிலும் குறைவாயிருந்தால், அப்படிப்பட்ட வியாஜ்ஜியத்தை இந்த ஆக்ட் ஜாரிசெய்த பிறகு அடுத்து இவரும் இரண்டு வருஷகாலமாவது 1877-ம் ௵த்திய இந்து தேசத்துக்கால நிர்ணயசட்டத்தினுல் ஷை வியாஜ்ஜித்துக்காக நிர்ணயிக்கப்பட்டகால அளவாவது இந்த இரண்டுகால அளவுகளில் எது முதலில் முடிவாகிறதோ அந்தக்கால அளவுக்குள்ளே தொடரலாம்.

33. (1) இதில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, இரண்டாவது ஷெட்யூலிற் கண்ட பிரதேசங்களில் யாதொரு கொதுவைக் கொண்டவர் (கொதுவைச் சொத்தை) மீட்டுக் கொள்வதற்கான பாத்தியதை அற்றுப்போவதற்காவது விற்பனைக்காவது வியாஜ்ஜியம் தொடரவேண்டுமானுல் அந்த வியாஜ்ஜியத்தை இந்த ஆக்ட் ஜாரியான் தேதியிலிருந்து இரண்டு வருஷகாலமாவது கொதுவையின்மேல் வாங்கப்பட்ட பணம்பாக்கியான தேதியிலிருந்து அறுபது வருஷகாலமாவது இந்த இரண்டு காலங்களில் எதுமுதலில் முடிவாகிறதோ அந்தக்காலத்துக்குள்ளே தொடரலாம்; மேலும் மேல் கண்ட பிரதேசங்களில் அப்படிப்பட்ட வியாஜ்ஜியமானது ஷை அறுபதுவருஷகாலத்துக்குள் தொடரப்பட்டு இந்த ஆக்ட் ஜாரியாகுந் தேதியிலே நடந்துகொண்டிருந்தால், அந்த வியாஜ்ஜியத்தைக் காலநிர்ணய தோஷத்துக்குட்பட்டதென்னும் ஹேதுவினுல் தள்ளிவிடக்கூடாது. (2) மேலேகண்ட பிரதேசங்களிலே (1) குறிப்பிட்ட உட்பிரிவின் கண்ட தன்மையுள்ள ஓர் வியாஜ்ஜியமானது காலநிர்ணய தோஷத்துக் குட்பட்டதென்னும் ஹேதுவினுலேயே 1907-ம௵ ஜுலை௴ இருபத்திரண்டாந்தேதிக்குப் பிறகு தள்ளிவிடப்பட்டிருந்தால, அந்த வியாஜ்ஜியத்தை தள்ளிவிட்ட கோர்ட்டாருக்கு எழுத்துமூலமாக மனுசெய்துக்கொள்ளப் படுவதன்மேல் அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளலாம்; ஆனுல் இந்த ஆக்ட் ஜாரி செய்யப்படும் தேதியிலிருந்து தொண்ணூறு தினங்களுக்குள்ளாக ஷை மனுசெய்துக் கொள்ளப்படவேண்டும். (வியாஜ்ஜியமானது) மேல்கண்டபடி மறுபடியும் எடுத்துக் கொள்ளப் படுவதன்மேல், (1) குறிப்பிட்ட உட்பிரிவிற் கண்ட நிபந்தனைகள் அந்த வியாஜ்ஜித்துக்குப் பிரயோகப்படும்.

இரண்டாவது ஷெட்யூலிற் கண்ட பிரதேசங்களில் சில கொதுவைவைத்துக் கொண்டவர்களால் தொடரப்படும் வியாஜ்ஜியங்களுக்காக நிபந்தனே.

34. மூன்றுவது ஷெட்யூலிற்கண்ட சட்ட திட்டங்கள் அந்த ஷெட்யூலின் நான்காவது காலத்தில் குறிப்பிட்ட அளவுக்கு ரத்து செய்யப்படுகின்றன.

ரத்தானவைகள்.

FACTS NOT FANCIES.

(By Mr. A. V. Seyalam.)

உண்மைகளேயன்றி கற்பனைகளல்ல.

இச்சென்னை மாநகரின் கண் குபேரன் முதல் குப்பைகாரன் வரையிலும், கிழவன் முதல் குழந்தை வரையிலும், ஆக எல்லோருமே (பெண்களையும் சேர்த்து கொள்ளுங்கள்) சிறிதேனும் சார் (*Sir*) நோ (*No*) குமோனி (*Good Morning*) ஆகிய இவைபோன்றனவற்றை உபயோகித்து பேசுவதே தங்களுக்கு கௌரவமாக நினைத்து அதன்படி நடக்கிறார்கள் என்பது யாவரும் அறிந்த விஷயம்.—இவர்களில் சிலர் இந்த நினைப்பினுலேயே பெரிய சபைகளிலும் கனைத்து கௌரவத்திற்கு பதிலாக அகௌரவத்தையடைகிறார்கள். அந்தோ! பாபம்! பாபம்! திருஷ்டாந்தமாக சில மாதங்களுக்கு முன், சிங்கப்பூரைச் சேர்ந்த சரட்டட்டியல் கோர்ட்டில், முத்து தம்பி என்னும் யாழ்பாணத்தானுக்கும் அவனது வைப்பாட்டிக்கும் நடந்த வியாச்சிய காலத்தில் ஷை யான் வசனித்த இங்கிலீஷ் மொழியை, இங்கிலீஷ் தெரிந்த நமது கையொப்ப நேயர்கள் தெரிந்துகொள்ளும் பொருட்டு இதனடியில் பதிப்பிக்கின்றோம்.

Complainant:—"Lakshmi won't marry your worship." (Laughter)

Mr. Mantagu Harris (in clear language):—"That is to say Lakshmi refused to marry my client."

Complainant:—"The Jewel was made of saffairine"—(Laughter).

Mr. Mantagu Harris (smiling):—"The Jewel was made of sapphires and rubies."

Mr. Chopard, (the defendant's lawyer):—"No. He meant to say the Jewel was made of sovereigns."

நமது நண்பர் கனம் நியாயாதிபதி முன்னுக்கு பேசிய இங்கிலீஷின் மொழி பெயர்ப்பை இதனடியில் காண்க:—

"இலக்ஷிமி என்பவள் நீதிபதியவர்களை விவாகம் செய்யமாட்டாள்" என்று கூறவே யாவரும் நகைத்தார்கள். உடனே அவரது லாயர் எழுந்து "என் தரப்பு வாதியை விவாகம் செய்துக் கொள்ளுவதற்கு இலக்ஷிமி என்பவள் மறுத்தனள்" என்பதே அதன் கருத்து என்று விளக்கினர்.

மறுபடியும் வாதி "அந்த நகை சவ்வேயறைனுல் செய்யப்பட்டது" என்று கூறினுர். உடனே எல்லோரும் நகையாடினர். இதே சமயத்திலும் அவரது லாயர் புன்சிரிப்போடெழுந்து "நீல ரத்தினங்கள் அமைத்து இயற்றப்பட்ட நகை" என்பதே அதன் கருத்து என்று விளக்கினுர். இதனை கேட்ட பிரதிவாதி லாயர் எழுந்து, "அப்படியல்ல. அந்நகை பவுண் மாற்றினுல் செய்யப்பட்டது" என்பதே கருத்து என்றுர்.

அன்பர்காள்! பார்த்தீர்களா! அரை குறை இங்கிலீஷ்படித்து அம்பலமேற வந்தோர் அடைந்த அகௌரவத்தை.

THE VILLIPURAM RIOT.

விழுப்புரம் கலகக் கேஸ்.

கடந்த டிசம்பர்௴ 10௳ விழுப்புரத்தில் நடந்த கலகத்தில் சம்பந்தப்பட்ட 23 நபர் மேல் குற்றம் சாட்டப்பட்டு கூடலூர் ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட் முன்பாக கடந்த ஜனவரி௴ 10௳ விசாரணைக்கு கொண்டுவரப்பட்டது.

பிராசிகியூஷன் தரப்பில் பப்ளிக் பிராசிகியூடர் மிஸ்டர் ஸ்ரீனிவாசராவ் அவர்களும் முதல் குற்றவாளி பக்கம் மிஸ்டர் ஸ்ரீனிவாஸ அய்யங்கார் பி-ஏ., அவர்களும் மற்ற குற்றவாளிகள் தரப்பில் மிஸ்டர் பி-எஸ். சக்கரவர்த்தி அவர்களும் மிஸ்டர் டி. வெங்கடராமய்யர் அவர்களும் ஆஜரானுர்கள்.

கடந்த டிசம்பர்௴ 10௳ ரோமன் கத்தோலிக் ஊர்கோலத்தை தேவராயபிள்ளை வீட்டுக்கு அழைத்துபோக பிரயத்தினப்படவும் குற்றவாளிகள் சேர்ந்த ஒரு பெரிய கூட்டம் ஷை தேவராயபிள்ளை வீட்டுக்குள் நுழைந்து அவருடைய சாமான்களை நாசப்படுத்தியும் பெண்களை இம்சித்தும், இன்னும் ஏனைய துர்கிருத்தியங்களை செய்ததனுல், இவர்கள் பகைக் கொண்டிருக்கும் தேவராயபிள்ளையை இவர்கள் கையில் சிக்காமல் மறைத்துவைக்க நேர்ந்தது என்பதாக பிராசிகியூட்டர் கேசை ஆரம்பித்தார். பின்பு கலகம் நடந்த இடத்தின் பிளானையும் தாக்கல் செய்தார்.

தேவராயபிள்ளை தான் ரோமன் கத்தோலிக் கிரிஸ்தவரென்றும், தான் வியாபாரி என்றும், தனக்கு விழுப்புரத்தில் சொந்த எண்ணெய் மிஷன் இருக்கிறதென்றும், ஷை ஊர்கோலத்தில் மிக்க அக்கரைக் கொண்டு அதிக பணம் செலவழித்தவரென்றும், அதனுலேயே ஷை ஊர்கோலத்தை தன் வீட்டுக்கு அழைத்துப்போக பிரியப்பட்டார் என்றும் சொன்னுர். இவரது பிந்திய வாக்குமூலம் பின் வருமாறு.

இந்த ஊர்கோலம் என் வீட்டுக்கு வருவதைப்பற்றி சில ஹிந்துக்கள் ஆக்ஷேபித்தார்கள். ஆனுல் அந்த ஊர்கோலம் வருவதற்கு லைசென்ஸ் வாங்கப்பட்டிருந்தது. ஊர்கோலம் என் வீட்டுக்கு வரும் பக்ஷத்தில் சிலர் கலகம் விளைவிக்க தயாராய் இருக்கிறார்களென இருவர் என்னிடம் வந்து தெரிவித்தார்கள். நானும் என்னுடைய குடும்பத்தாரும் வீட்டின் தெருக்கதவுகளை நன்றாய் தாள் போட்டுவிட்டு பின்புரம் போய் பதுங்கிக் கொண்டோம். 1, 2, 3, 8, 9, 10, 16, 18, 19 குற்றவாளிகளடங்கிய ஒரு பெரிய கூட்டம் என் வீட்டை நாடி வருவதை நான் ஜன்னல் வழியாய் பார்த்துத் தெரிந்துகொண்டு, ஜீவ பயத்தால், என்னை காபாற்றும்படி அவர்களை வேண்டிக்கொள்ள நினைத்தேன், என்னுடைய குமாரத்திகளும், பிள்ளைகளும் நான் அந்த கூட்டத்தின் முன்பு போவதே அபாயத்திக்கு இடம் என்று, முதலாக என்னை கொல்லையிலும் பிறகு கோழி கொட்டகையிலும், கடைசியாய் புழக்கமில்லாத இருட்டறையிலும் மறைத்து வைத்தார்கள். நான் இந்த இடத்தில் இருந்தபோது தெருக் கதவுகள் உடை படுவதையும், பெண்கள் கதறுவதையும் கேட்ட தன்னியில் வீட்டு மோட்டின்மேல் நெருப்பு பொரி வந்து விழுவதையும் பார்த்தேன். (தனக்கு நேர்ந்த நகை நஷ்டத்தின் மதிப்பையும், அலமாரியில் வைத்திருந்த ரூ 500—ரொக்கம் போய் விட்டதையும் தெரிவித்தான்) அவன் பெண்சாதி யணிந்திருந்த நகைகள் எல்லாம் பிடுங்கிக்கொள்ளப்பட்டு காதும் அறுக்கப்பட்டது. இதே மாதிரி அவன் பெண்ணும், மருமகளும் அணிந்திருந்த நகைகளும் அபகரிக்கப்பட்டன. அவன் மகன் இரத்தினசாமிக்கு தலையிலும், வாயிலும் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அவன் வீட்டுக்கு வெளியில் வைக்கப்பட்டிருந்த எண்ணெய் டப்பிகள் உடைக்கப்பட்டு சாக்கடையில் கவிழ்க்கப்பட்டன. அவனுடைய வண்டிகளும, மிஷன் வேலைக்காக வைக்கப்பட்டிருந்த கட்டைகளும், வீட்டுக்கு பின் புரமிருந்த 50 வண்டி வைக்கோலும், அதைச் சார்ந்திருந்த இடங்களும், கொட்டகைகளும், கொளுத்தப்பட்டன. பொழுது விடிகிற வரையில் நெருப்பு தணியவில்லை அந்த இராத்திரியே லோக்கல் ஆபீசர்கள் வந்து பார்வை யிட்டார்கள். பொழுது விடிந்தவுடன் தேவராயபிள்ளை வில்லேஜ் மாஜிஸ்டிரேட்டுக்கு எழுத்துமூல பிரயாது கொடுத்தான். தனக்கு நேர்ந்த நஷ்டத்தின் மதிப்பு சுமார் ரூ 10,000 என்று சொன்னுன்.

இவன் பெண்சாதியின் வாக்குமூலமாவது தன் புருஷன் தெரிவித்த மாதிரி இருவர் முன்னதாக வந்து ஒரு பெரிய கூட்டம் தங்களுடைய வீட்டை நாடி வருவதைப் பற்றி தெரிவித்தார்களென்றும் தானும் தனது மக்களும் தங்களை காப்பாற்றும்படி கூட்டத்தை வேண்டிக்கொள்ள, அவர்கள் தங்களில் மூவர் ஏற்கனவே மாதா கோயிலுக்கு எதிரில் சுட்டு கொல்லப்பட்டார்களென்றும் அந்த பழிக்கு பழி அவளுடைய புருஷனுகிய தேவராய பிள்ளையை கொன்று விட யோசித்திருக்கிறதாய் தெரிவித்து அவன் பதுங்கியிருக்கும் இடத்தை காட்டும்படி கேட்டார்கள். 6-வது குற்றவாளி எண்ணெய் டப்பிகளை தலைகீழாக கவிழ்த்து விட்டான். முதல் குற்றவாளி கோடாலியைக் கொண்டு கதவுகளை பிளக்கவும், மற்ற 25 பேர்கள் வீட்டுக்குள் நுழைந்தார்கள். முதல் குற்றவாளி அவளை பூமியில் தள்ளி, மார்பின் மேல் இருந்து, காதுகளை அறுத்துவிட்டு, நகைகளை கழற்றிக்கொண்டான். அறுபட்ட காது டிஸ்டிரிக்ட் ஸர்ஜனுல் தைக்கப்பட்டது. இப்பொழுது தான் சொஸ்தப்பட்டு வருகிறது. 3-வது 8-வது குற்றவாளிகள் அவள் அணிந்திருந்த காப்பு கொலுசுகளை கழற்றிக்கொண்டார்கள். பின்னும் அவள் பூமியில் விழுந்து கிடந்த இந்த சமயத்தில் சிலர் அவளை கையி

னாலும், தடிகளினாலும் அடித்தார்கள். 7-வது குற்றவாளி, அவளுடைய மகள் மங்களத்தை மயிர் பிடித்து இழுத்து கீழே தள்ளி தாலியை அறுத்துவிட்டான். இந்த குற்றவாளியையும் மற்றும் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 19, ஆகிய இந்த குற்றவாளிகளையும் தெரிந்து காண்பித்தாள். மேற்படி ஊர்கோலத்தை பார்ப்பதற்கு புதுச்சேரியிலிருந்து வந்திருந்த அவர்களுடைய பந்துக்கள் அக்குடும்பத்தின் சின்ன பெண், பிள்ளை, மருமகள் ஆகிய இவர்களை தப்புவிக்கும் பொருட்டு புதுச்சேரிக்கு அழைத்துக்கொண்டுபோய் விட்டார்கள்.

இந்த 2 சாக்ஷிகளின் பிள்ளையாகிய இரத்தினசாமி என்பவன், தன் வீட்டை நோக்கி வந்த பெரிய கூட்டத்தில் 12-13-14-வது குற்றவாளிகளைதான் பார்த்ததாகவும், அவர்களில் ஒருவன் நாற்காலியின் கைப்பிடியைக்கொண்டு தன் மண்டைமேல் அடிக்க இரத்தம் வடிந்ததென்றும் சொன்னான்.

மருமகள், தன்னுடைய நகைகள் அபகரிக்கப்பட்ட தன்னியில் தான் தொந்திரவும், அவமானமும் படுத்தப்பட்டதாக சாக்ஷியம் சொன்னாள். ஆனால் குற்றவாளியை காட்ட அவளால் கூடாமையாய் போய்விட்டது. இந்த கேசின் 2-ம் நாள் விசாரணை காலத்தில் இன்னும் இருவரும் குற்றவாளிகளாய் சேர்க்கப்பட்டார்கள். ஆதலால் குற்றவாளிகளின் தொகை 25-ஆனது. முதல் நாள் விசாரணையில் ஆஜராயிருந்த குற்றவாளிகளில் ஒருவன் ஜெயிலில் திரேக அசௌக்கியமாய் போய்விடவும், அவன் கோர்ட்டில் ஆஜராகமுடியாதென்று டாக்டர் சர்டிபிகட் ஏற்படவும், குற்றவாளியாக கொண்டுவரப்பட்ட ஒருவன் ஆஜரில்லாத காலத்து அவன் சம்பந்தமான சாக்ஷி வாக்குமூலத்தை பதியக்கூடாததால் அன்று விசாரணை நடக்கவில்லை. அடுத்த தினமும் ஷை குற்றவாளிக்கு உடப்பு சௌக்கியப்படாததினால் அவன் ஆஜராகவில்லை என்றாலும், அவன் தரப்பு வக்கீலுக்கு கேஸை நடத்தும்படி அதிகாரம் கொடுத்தான். பப்ளிக் பிராசிகியூடரும், இப்பொழுது ஆஜரில்லாமலிருக்கும் குற்றவாளி சம்பந்தமாய் வாக்குமூலம் கொடுக்கும் சாக்ஷிகளை, அவசியமாயிருந்தால் மறுபடியும் அழைத்து விசாரிப்பதாய் ஒத்துக்கொண்டார்.

புதிதாய் சேர்க்கப்பட்ட இரண்டு குற்றவாளிகளின் நிமித்தம் முதல் நாள் விசாரித்த சாக்ஷிகளை மறுபடியும் பப்ளிக் பிராசிகியூடர் விசாரணை செய்தார். வில்லேஜ் மாஜிஸ்டிரேட்டுக்கு இவர்கள் பெயரைக்கண்டு எழுத்து மூல பிரயாது கொடுத்த முதல் சாக்ஷி, மறுபடியும் அவர்களை கோர்ட்டில் காட்டினான்.

முதல் சாக்ஷியின் பெண்சாதியாகிய இரண்டாம் சாக்ஷி, தன் முன்பாக இருக்கும் குற்றவாளிகளி யாவரும், தான் பார்த்தவர்களாய் இருப்பதால், தான் பார்த்திராத ஒருவரையும் அந்த கூட்டத்தில் காட்டவில்லை.

ஷை முதல் சாக்ஷியின் பிள்ளையாகிய 3-வது சாக்ஷி புதிதாய் சேர்க்கப்பட்ட குற்றவாளிகளை காட்டினது மன்னியில், இவர்கள் கூட்டத்துடனிருந்து கதவுகளை உடைக்க பேசிக்கொண்டிருந்ததை கேட்டதாகவும் சொல்லி, வில்லேஜ் மாஜிஸ்டிரேட்டினிடத்தில் தெரிவித்த இவர்கள் பெயரை இப்பொழுதும் தெரிவித்தான்.

இன்றைய தின விசாரணையில், மருமகள் தன்னுடைய நகைகள் அபகரிக்கபட்டதென்று சொல்ல, பப்ளிக் பிராசிக்கியூட்டர் அதைச்சார்ந்த கேள்வி ஒன்று கேட்கவும், தன்னை அவமானப் படுத்தவில்லை என்றும், நகையை கழற்றி கொடுக்கும்படி பய முறுத்தினார்களென்றும், அதனால் தான் நகைகளை கழற்றி கொடுத்துவிட்டதாகவும் மறுமொழிச் சொன்னாள். இது சமயம், வில்லேஜ் மாஜிஸ்டிரேட் முன்னால் இவள் கொடுத்த வாக்குமூலம் வாசிக்கப்பட்டது. அதில் அவள் தொந்திரவும், அவமானமும் படுத்தப்பட்டதாக சொல்லி யிருக்கிறாள்.

மிஸ்டர் ஆர். வி. ஸ்ரீனிவாஸ அய்யங்காரால் செய்யப்பட்ட கிராஸ் விசாரணையில் முதல் சாக்ஷி சொன்னதாவது.

சுமார் 3-வருஷத்திற்கு முன்பு ரோமன் கத்தோலிக் ஊர் கோலம் சாதாரணமாய் போகும் வழியை விட்டு வேறு வழியாய் போவதைப்பற்றி தடங்கல் ஏற்பட்டது. அவன் 24 வருஷகாலமாய் விழுப்புரத்தில் வசிக்கிறதாகவும், புதிய வழியாக ஊர் கோலம் போவதற்கு, மூன்று வருஷத்திற்கு முன் நடந்தது தான் முதல் பிரயத்தினமென்றும், அந்த காலத்தில் ஜில்லா போலீஸ் சூபரிண்டெண்டின் ஆணையால் அந்த ஊர்கோலம் நடந்ததென்றும், கடந்த வருஷம் ஊர்கோலம் யாதொரு தடங்கலும் இல்லாமல் அமரிக்கையாய் நடந்ததென்றும், இவ்வருஷத்திய ஊர்கோலத்தில் தான் எது விஷயத்திலும் தலைமையான பொறுப்பு வகிக்கவில்லை என்றும், ரோமன் கத்தோலிக் பாதிரியே அந்த பொறுப்பு ஏற்றவரென்றும், பிரஸ்தாப கலகம் நடக்க இரண்டு வாரத்திற்கு முன்னமே சகல ஏற்பாடுகளும் நடந்தன வென்றும், ஊர்கோலத்தை தன்னுடைய வீட்டுக்கு அழைத்துக்கொண்ட போகலாம் என்றே இந்த ஊர்கோலத்தில் சிரத்தை எடுத்துக்கொண்டதாகவும், இதற்கு பாதிரியும் உடன்பட்டு தன்னை உதவி செய்யும்படி கேட்டதாகவும், ஊர் கோலம் போவதற்கு தன்னுடைய வீடு உள்பட தயாரித்த பாதைகளின் பிளானை அதிகாரிகளுக்கு அனுப்பி லைசென்ஸ் பெற வேண்டுமென்று பாதிரி சொன்னதாகவும், நூதன வழியாய் ஊர் கோலத்தை கொண்டுபோக லைசென்ஸ் கொடுக்கும் பக்ஷத்தில், தான் பாதிரி இஷ்டப்படி உதவி செய்வதாய் வாக்களித்ததாகவும், ஆனால் பாதிரி தயாரித்தபடி புது வழி அங்கீகரிக்கப்பட்டால், தொந்தரவுக

ளும் ஹிந்துக்களால் தடங்கலும் உண்டாகும் என்று அஞ்சினதாகவும், ஊர் கோலம் நூதன வழியாய் போக உத்திரவு கொடுக்கக் கூடாதென்று அதிகாரிகளுக்கு இந்துக்கள் மனு செய்துக்கொண்டிருந்ததை தான் கேள்விப்பட்டதாகவும், இதற்கு இராஜூ முதலி என்னும் சாமானிய (Private) வக்கீலும், இன்னும் சிலரும் காரணமென்று தெரிந்தும், அவர்களை இது விஷயமாய் யாதொன்றும் கேட்கவில்லை என்றும் சொன்னான். சாக்ஷி, இராஜூ முதலியை வரவழைத்து ஊர்கோல விஷயமாய் ஹிந்துக்கள் எதிர்க்கிறார்கள் என்று தெரிவிக்கவும், ராஜூ முதலி தன் பேச்சு ஏற்காது என்று சொல்லிவிட்டான். தானும் இராஜூ முதலியும் பேசிக்கொண்டிருந்த முறையில் அபாயகரமான தடங்கள் உண்டாகுமென தெரிந்து கொள்ளக்கூடிய யாதொரு குறிப்பும் சாக்ஷிக்கு ஏற்படவில்லை. ஊர் கோலம் செவ்வையாய் நடக்கும்படி இந்துக்களையும் கத்தோலிக்கரையும் ஒற்றுமைப் படுத்தும்படி சாக்ஷியானவன் இராஜூ முதலியை கேட்க, அதற்கு திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை. ஊர் கோல விஷயமாய் இந்துக்கள் கூடப்போகும் கூட்டத்தில் சாக்ஷியும் வருவதாக தெரிவித்த தன்னியில் ஊர் கோலம் புதிய வழியாய் போவதை அவர்கள் யாதொன்றும் தடை செய்யாமலிருக்கும்படி கடிதம் எழுதி மிகவும் கேட்டுக்கொண்டான். இந்த வேண்டுகோளுக்கிணங்க 7 நபர்கள் தான் சம்மதித்து கையெழுத்து போட்டார்கள். இதன் பிறகு சாக்ஷி இது விஷயமாய் கவலை எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும், ஊர்கோலத்தை தன் வீட்டுக்கு கொண்டுபோகும் முயற்சியையும் தளர விடவில்லை. இவ்விதமாய் இராஜூ முதலி தலைமையின் கீழ் ஊர் கோலத்திற்கு தடை கேரிடலாம் என்னும் விஷயத்தை சாக்ஷி, பாதிரிக்கு சொல்லவில்லை. ஊர் கோலத்திற்கு லைசென்ஸ் கொடுக்கும்படி உத்திரவாய் இருப்பதாக போலீஸ் இன்ஸ்பெக்டர் சாக்ஷிக்கு தெரிவித்தார். கலகம் நடப்பதற்கு முந்திய நாள் மாலை, ஊர்கோல விஷயமாய் ஹெட் அஸிஸ்டண்ட் மாஜிஸ்டிரேட்டுக்கு மனு செய்துக்கொள்ள, இந்துக்கள் திருவண்ணாமலைக்கு போயிருப்பதாக சாக்ஷி கேள்விப்பட்டான். இது விஷயத்தையும் பாதிரிக்கு தெரிவிக்கவில்லை. சாக்ஷி தன் வீட்டுக்கு அருகாமையாய் குடியிருக்கும் ரோமன் கத்தோலிக்கை சேர்ந்த சப் மாஜிஸ்டிரேட் அவர்களையும், கத்தோலிக்கர்களுக்கு துணை செய்யும்படி கேட்க இல்லை. அவன் டிசம்பர்மீ 10உ காலை ஹெட் அஸிஸ்டண்ட் மாஜிஸ்டிரேட்டையாவது, சப் மாஜிஸ்டிரேட்டையாவது போலீஸ் இன்ஸ்பெக்டரையாவது பார்க்கவில்லை. ஆனால் பகல் இரண்டு மணி சுமாருக்கு ஒரு பெரிய கூட்டம் சேரவும் ஏதோ கலகம் நடக்கலாம் என்று நினைத்தான். அவனுடைய மனுஷால் வந்து, தன் மேல் அதிகப்பகைக்கொண்டு கூட்டம் வருகிறது என்று தெரிவிக்கிறவரையில், அவன் அந்த கூட்டம் தன்னை நாடி வருகிற தென்று நினைக்கவே யில்லை, அவன் வீட்டில் பதுங்கிக்கொள்வதற்கு முன்பாக கடைசியாக ஒரு முறை, கூட்டத்தை யாதொரு கலகமும் செய்யாமலிருக்கும்படி கேட்கலாம் என்று நினைத்தான். ஆனால் வீட்டார், அவனை வீட்டில் தள்ளி அடைத்துவிட்டார்கள். அப்படி யிருந்தாலும் அவன் அடைக்கப்பட்டிருந்த வீட்டின் பெரிய ஜன்னல் வழியாய், 40 கெஜ தூரத்தில் சுமார் 500 ஜனங்களடங்கிய ஒரு கூட்டம் வருவதைக்கண்டு, அவர்கள், 4,5.கெஜதூரம் அருகாமையாய் வருகிற வரையில் பார்த்திருந்தான். அவன் பதுங்கியிருந்த இடம் நேர் பார்வையானதாயிருந்தது. கோர்ட்டில் காண்பித்த 10 நபர்களும் கூட்டத்தின் முன்வரிசையில் வந்துகொண்டிருந்தார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் கையில் தடி வைத்திருந்தார்களென்று அவனால் சொல்ல முடியவில்லை அன்று சாயந்திரம் பாபு சாயபு தோட்டத்தில் அவன் பதுங்கியில்லை. விழுப்புரம் போலீஸ் இன்ஸ்பெக்டரும் சில ஜனங்களும் கலகம் நடந்த உடனே வந்தார்கள். சாக்ஷி கோர்ட்டில் சொன்ன 10 நபர்களை அப்பொழுது அவர்களுக்கு தான் பார்த்ததாக சொல்லவில்லை. அது விஷயத்தை அவனுடைய வீட்டார்களும் சொன்னவர்களல்ல. அடுத்தநாள் கலெக்டர், சப் கலெக்டர், ஜில்லா போலீஸ் சூபரிண்டண்ட் முதலிய அதிகாரிகள் சாக்ஷியின் வீட்டுக்கு வந்தார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு ஒரு சமயம் அவன் வாய்மொழியாய் பிரயாது செய்திருக்கலாமேயன்றி மற்றபடி எந்த அதிகாரிகளுக்கும் எழுத்து மூல பிரயாது கொடுக்கவில்லை. சாக்ஷி போலீசாரால் விசாரிக்கப்படவில்லை. இந்த கேஸ் விஷயமாய் ஏற்பாடான போலீஸ் இன்ஸ்பெகடர்களுக்கு தான் வாய்மொழியாகவாவது எழுத்து மூலமாயாவது பிரயாது கொடுத்ததாய் சாக்ஷிக்கு கவனம் இல்லை. அடுத்த நாள் வில்லேஜ் மாஜிஸ்டிரேட்டு சாக்ஷியின் வீட்டுக்கு வருவதற்கு முன், அவனும் அவன் குடும்பத்தாரும் இந்த கேஸைப்பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். வில்லேஜ் மாஜிஸ்டிரேட் விசாரணை செய்ய ஆரம்பித்தபொழுது, போலீஸ் இன்ஸ்பெக்டர் சாக்ஷியினுடைய வீட்டில்தான் இருந்தார். முதல் சாக்ஷியை விசாரிக்கும்பொழுது, இப்பொழுது கோர்ட்டு முன்னிலையில் ஆஜராயிருக்கும் சாக்ஷிகளாகிய அவனுடைய குடும்பத்தார், அவன் அருகாமையில் தான் இருந்தார்கள். இது விஷயமான கூட்டத்தில் குற்றவாளியை கண்டுபிடிக்கும்படி போலீசார் சாக்ஷியை கேட்கவில்லை. ரோமன் கத்தோலிக்கு ஊர்கோலத்தை ஆக்ஷேபிக்கும் விஷயத்தில், அந்த இடத்தின் தக்க குடிகளாகிய, இந்த சாக்ஷியின் தகப்பனும் சகோதரரும் சேர்ந்தவர்களா என்பது அவனால் சொல்ல முடியவில்லை.

[குறிப்பு:—பிரயாதியினுடையவும் அடிஷனல் மாஜிஸ்டிரேட்டினுடையவும் வாக்கு மூலங்களை மாத்திரம் முழுதும் பதிப்பித்திருக்கின்றோம். மற்ற சாக்ஷிகளின் வாக்குமூலங்களும் இங்கு பதிப்பிக்கப்பட்டிருந்தாலும், ஷை இரண்டு சாக்ஷிகளின் வாக்கு மூலங்களால் ஏற்பட்ட விஷயங்களையே தெரிவிப்பதற்கும் அம்சம் மாத்திரம் விடப்பட்டிருக்கிறது. Ed., I. L. R.]

பிராசிகியூஷன் தரப்பில், பிரயாதியின் மற்றொரு பிள்ளையாகிய சூசை என்பவன் சாக்ஷியாக விசாரிக்கப்பட்டான். புதுச்சேரியிலிருந்து வந்த பிறகு டிசம்பர்மீ 15உயில் 3—9—15-17-வது குற்றவாளிகள் தன்னையும் தன் பெண்சாதியையும் இம்சித்த தன்னியில் நகைகளையும் பிடுங்கிக்கொண்டதாக வாக்குமூலம் கொடுத்தான்.

டி பிரயாதியின் குமாரத்தி மங்களம் என்பவள் குற்றவாளிகள் செய்த பல வித அக்கிரமங்களை உறுதியாய் சொன்ன தன்னியில் தான் கூட்டத்தில் பார்த்த வைத்தியலிங்க முதலி என்பவனை இவ்விடத்தில் (கோர்ட்டில்) காணுமென்றும் சொன்னாள். பின்னும், தன்னை பிடித்து பூமியில் தள்ளி காலால் மிதித்துக்கொண்டு நகையை கழற்றிக்கொண்டதாகவும் சொன்னாள்.

பிரயாதியின் பிந்திய வாக்குமூலம்—தான் வட்டிக்கு பணம் கொடுப்பதென்றும், அந்த வட்டியும் பல வகையாய் இருக்குமென்றும், விழுபுரத்திலிருக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமல்லாமல், 7-மைலுக்குட்பட்ட கிராமத்தில் உள்ளவர்களுக்கும் வட்டிக்கு பணம் கொடுப்பதென்றும், முதல் குற்றவாளியின் தகப்பனுக்கும் தனக்கும் லாவாதேவி உண்டென்றும், இரண்டாவது குற்றவாளியின் மேல் 400 ரூபாயுக்கு டிக்கிரி பெற்றிருப்பதாகவும், அந்த டிக்கிரியின் பணம் வசூலாகும் என்ற நம்பிக்கை யில்லாதிருந்தாலும் லாவாவதி யாகாமல் வைத்திருப்பதாகவும், 6—8—9 16-குற்றவாளிகளிடத்திலும் சொற்ப லாவாதேவி யுண்டு என்றும், கோர்ட்டில் தாக்கல் செய்திருக்கும் ஜாபிதாவில் கண்ட நகைகள் எல்லாம் டிசம்பர்மீ 10உ நடந்த கொள்ளையில் உண்மையாகப் போய் விட்டதென்றும், கலகம் நடந்த அன்று மாலை அடுத்த பூங்காவன செட்டி வீட்டில் நகைகளை கொண்டுபோய் பத்திரப் படுத்தினது கிடையாதென்றும், தன்னுடைய மருமகன் சாமியல் பிள்ளையை தன்னிடம் வைத்துகொண்டு, விழுப்புரத்தில் தன்னுடைய வேலையை கவனிக்கும்படியாகவும், இருப்பு பிடிக்கும்படியாவும்செய்தது உண்மைதான் என்றும்; அதன்படி கடந்த கிருஸ்மஸ் பண்டிகை வரையில் ஒத்தாசையாயிருந்து, அதன் பின்னர் தனக்கே சத்துராதியாகி பணத்தை எடுத்துக்கொண்டோடி பதுங்கி விட்டான் என்றும், வில்லேஜ் மாஸ்டிரேட் முன்னால் பிரயாதி கொடுத்த காலத்தில் 18-வது குற்றவாளியின் பெயர் தெரியாமல், சில குறிப்புகளின் மூலமாய் எழுதி வைத்திருக்க, 13உ கோர்ட்டு காலத்தில் 18-வது குற்றவாளியின் பெயர், கலகம் நடப்பதற்கு முந்திய [illegible] முதலி என்று தெரியுமெனச் சொன்னது தனக்கு புத்தி சாஸ்திய காரணமென்றும், 19-வது குற்றவாளி விஷயமாய் வாக்கு மூல பேதப்பட்டதும் அதே காரணந்தான் என்றும், ஊர் கோலத்தை வரவேற்பதற்கு 10உ காலையில் தன் வீட்டுக்கு எதிரில் பந்தல் போட்டான் என்றும், தன் வீட்டில் அன்றைய தினம் தமாஷ் நடக்கும் என்று யாருக்கும் சொல்லவில்லை என்றும், ஆனால் பந்தலை பார்க்கவாவது அல்லது அதன் சிங்காரிப்பை பார்க்கவாவது சிலர் தங்கள் இச்சைபாய் வந்திருக்கக் கூடும் என்றும், 2—3—4—5—8—17—19 வது குற்றவாளிகள் நாபாளயம் தெருவில் வசிக்கிறவர்களென்றும், இரோமன் கத்தோலிக் கோயிலை சுற்றி 30-40 கிருஸ்தவ வீடுகள் இருக்கின்றன வென்றும், தற்கால பாதிரி கோயிலுள்ள பங்களாவில் தான் வசிக்கிறார் என்றும், நாபாளயம் தெருவிலிருக்கும் முருகேசனும் மற்றவர்களும் தங்கள் இனத்தார் கோயிலுக்கு போகும்போது அவர்களை பார்த்துநகைத்து கேலி செய்கிறார்கள் என்று, ரோமன் கத்தோலிக்கை சார்ந்தவராகிய சப் மேஜிஸ்டிரேட்டுக்கு தெரிவித்ததே கிடையாதென்றும் சொன்னான். இது சமயத்தில் கோர்ட்டார் கேட்ட கேள்விக்கு பொது ஜனங்கள், ஊர் கோலத்தை புது வழியாய் கொண்டு போவதற்கு விரோதமா யிருப்பதால், அது விஷயமாய் உத்தரவு கொடுக்க, டிஸ்டிரிக்ட் போலீஸ் சூபரிண்டெண்டெண்ட் மறுத்துவிட்டது தனக்கு கவனம் இருக்கிறதென்றும், இதை முன்னிட்டே தான் ஊர் கோலத்தை தன் வீட்டுக்கு அந்தரங்கமாய் கொண்டுபோக பிடிஷன் அனுப்பி இந்துக்களை அனுமதி கேட்டதென்றும் சொன்னான்.

முதல் சாக்ஷியின் பெண்சாதியாகிய 2-வது சாக்ஷி தன்னுடைய வீட்டுக்குள் வந்த 20-25 நபர்களில் 10-நபர்களையே தெரிந்துகொள்ள சாத்திய பட்டதென்றும், மற்றவாள் விஷயமாய் தனக்கு ஆளும் தெரியாது, பெயரும் தெரியாதென்றும், தனக்கு 8—9—11 குற்றவாளிகள் கொஞ்ச காலமாய் தெரிந்திருந்தும் அவர்கள் பெயர் மாத்திரம் தனக்கு தெரியாதென்றும், தான் தப்பித்துக்கொண்டு போக பிரயத்தனப் பட்ட காலத்தில் சிலர் தன்னை அடித்தார்களென்றும், நகைகளை தவிர மற்ற கணக்கு புஸ்தகம் முதலிய ரிகார்டுகள் ஒன்றையும் சேதப்படுத்த வில்லை என்றும் சொன்னாள்.

பிரயாதியின் பிள்ளை இரத்தின சாமியின் வாக்குமூலம்—தான் 1—10—11—12—14—20 குற்றவாளிகளை கூட்டத்தில் பார்த்ததாகவும், இவர்களில் இருவர் எண்ணெய் டப்பிகளை தரை கீழாய் கவிழ்த்து விட்டதை தான் ஜன்னல் வழியாய் பார்த்ததாகவும், கூட்டம் வீட்டுக்குள் நுழைந்தவுடன் அவனைத்தான் முதலில் அடித்தார்களென்றும், அப்படி அடித்ததை தன்னுடைய தாயாரும் சகோதரி மங்களமும் பார்த்திருந்தார்களென்றும், 23-வது குற்றவாளி தவிர மற்ற குற்றவாளிகளை தனக்கு முன்னதாகவே தெரியுமென்றும், 11-வது குற்றவாளியின் பெயர் கே. டி. ரெட்டி என்றும், (ஆனால் வில்லேஜ் மாஜிஸ்டிரேட் முன்னால் கொடுத்த வாக்கு மூலத்தில் இவன் பெயரைச் சொல்லாமல், இருக்கும் இடத்தையும் அங்க அடையாள உருவையும் [illegible] சொன்னான்) வில்

லேஜ் மாஜிஸ்டிரேட் முன்னுக்கு 1-வது குற்றவாளி தன்னை அடித்தான் என்று சொன்னது தவறு என்று தெரிந்துகொண்டதாகவும், ஆதலால் 13-வது குற்றவாளிதான், தன்னை உடைந்த நாற்காலி துண்டினால் அடித்தான் என்றும் சொன்னான்.

பிறகு நெ. 452 போலீஸ் ஜவான்-ஸேவண்ட் ஸ்காவியர் ஊர் கோலம் புறப்பட தயாரா யிருந்ததென்றும், போலீஸ் ஜவான்கள் எல்லாம் வீதியின் இரு புரத்திலும் கோடு போட்டதுபோல பந்தோபஸ்துக்காக நின்றுகொண் டிருந்தார்கள் என்றும், துப்பாக்கிசுடப்பட்டு 20-நபர் காயப்பட்டார்களென்றும், கல்ரா எங்கையோ ஒன்று இரண்டுதான் இருந்ததென்றும் சொன்னான்.

பிறகு விழுப்புரம் பிளீடர் மிஸ்டர் டி. வெங்கடராமய்யர்—தான் இந்துக்கள் மகமதியர்கள் கோறிக்கையின்படி, கிரிமினல் புரோசிஜர் கோட் 144-வது செக்ஷன்படி ஊர் கோலத்தை நடத்த உத்திரவு கொடுக்கக் கூடாதென்று ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட்டுக்கு மனு கொடுத்ததையும் அது தள்ளிவிடப்பட்டதையும் சொன்னார்.

பிறகு விழுப்புரம் வில்லேஜ முனிசிப் வெங்கடாச்சாரி—தான் போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்திரவுபடி டிசம்பர்மீ 10உ ரோமன் கத்தோலிக் ஊர் கோலம் நடை பெற, அதிகாரிகள் உத்திரவு கொடுத்திருப்பதால், ஜனங்கள் அதற்கு யாதொரு தடங்கலும் செய்யக்கூடாதென்பதாக, 9உ தமக்கு போட்டு வைத்ததாகவும், தான் விழுப்புரத்து பூர்வ குடி என்றும், இதுவரையில் மாரியம்மன் கரகமும் ரோமன் கத்தோலிக் ஊர் கோலமும் ஒரே தினத்தில் நடந்தது கிடையாதென்றும், அந்த காலத்தில் கடைகளை மூடும்படி தமுக்கு போட்டதும் கிடையாதென்றும், துப்பாக்கி சுட்டதினால், ஒரு கோமுட்டியும் ஒரு அய்யங்காரும் சக்கிலி ஒருவனும் சுட்டு கொல்லப்பட்டதாகவும், 8-10 நபர்களும் காயப் பட்டதாகவும் எங்கும் சமாசாரம் பரவினதென்றும், பிரயாதியால் சொல்லப்பட்ட வைத்தியலிங்க முதலி மிக்க தன் வந்தனென்றும், இதைப் போலவே குற்றவாளிகளில் அனேகர் எல்லாம் தனவந்தர்கள்தான் என்றும், கலகக் கூட்டத்தில் வெளி கிராமத்திய ஜனங்களும் இருந்தார்களென்றும், தேவராய பிள்ளைக்கு விரோதி என்று ஜனங்கள் சொல்லும் முருகேச முதலியின் சகோதரன் மகன் 4-வது குற்றவாளி என்றும், 5-வது 7-வது குற்றவாளிகளும் [illegible] முதலிக்கு பந்து வென்றும், 6-வது குற்றவாளியாகிய ஒரு மகம்மதியன் கடந்த வருஷம் மசூதி பக்கம் கொண்டுபோன கிருஸ்தவ சவத்தை தடை செய்தானென்றும், இக் குற்றவாளிகளில் ஏழ்மையானவர்களும் கலந்திருக்கிறார்களென்றும், பிரயாதி குறிப்பிட்ட குற்றவாளிகளைக் காட்டிலும் இன்னும் அதிக பணக்கார இந்துக்களும் மகமதியர்களும் நாயக்கர் பாளயம் வீதியில் குடியிருக்கிறார்களென்றும் சொன்னான்.

பிறகு போலீஸ் இன்ஸ்பெக்டர் சிவப் பிரகாச முதலியார்—தான் இரண்டு வருஷகாலமாய் விழுப்புரத்திலிருப்பதாகவும், தோரணங்கள் 10-12 அடி உயரத்தில் கட்டப்பட்டிருந்தன வென்றும், ரோமன் கத்தோலிக் இரதம் 20-அடி உயரமானதால் தோரணங்கள் ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட்டின் உத்திரவுப்படிநீக்கப்பட்டனவென்றும், துப்பாக்கி சுட்டதினால் காயப்பட்ட குருவப்பசெட்டி, முதல் குற்றவாளியின் பந்து வென்றும், இது வரையில் மாரியம்மன் கரகத்துக்கு சுமார் 300-400 ஜனங்களே கூடுவார்களென்றும், ஆனால் இவ்வருஷம் மாத்திரம் 3000 ஜனங்களுக்கு அதிகமாய் சேர்ந்ததென்றும், நெல்லூரிலிருந்து வந்த போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்கள், இந்த கேசை கண்டு பிடிக்கும்படி, பண்ருட்டி இன்ஸ்பெக்டரை நியமித்தாரென்றும், ஆதலால் 11உ மாலை இதை சார்ந்த ரிகார்டுகளை பண்ருட்டி இன்ஸ்பெக்டரிடம் ஒப்பு வித்ததாகவும், கடைசியாய் டிசம்பர்மீ 15உ பாவாடை பத்தன் என்னும் ஒருவனால் குற்றவாளிகளை கண்டு பிடிக்கலாயிற்று என்றும் சொன்னார்.

பிரயாதியின் பிள்ளை சூசை என்பவன்—இதற்கு முந்தின வருஷங்களிலெல்லாம் ஊர் கோலம் தன் தகப்பனார் வீட்டண்டையில் தங்கினதே கிடையாதென்றும், தங்கள் வீட்டுக்கு ஊர் கோலம் வருவதாயிருந்தால் பிராமண வீதி வேளாள வீதி ஆகிய இந்த இரண்டு வீதியாய் வரவேண்டுமென்றும், பூங்காவன செட்டி வீட்டில் நகையாவது அல்லது மற்று எந்த சாமான்களாவது பத்திர படுத்தப்பட்ட சமாசாரம் தனக்கு தெரியாதென்றும் சொன்னான்.

சூசையின் பெண்சாதி தங்கம்மாள்—கலகக் கூட்டம் வீட்டுக்கு வந்தகாலத்தில் நாத்தனார் சுந்தரம்மாளும், அவளுடைய புருஷன் சாமியல் பிள்ளையும் இருந்த இடம் தனக்கு தெரியாதென்றும், கலகம் நடந்த அந்த இரவு போலீஸ் இன்ஸ்பெக்டரிடத்தில் குற்றவாளிகளின் பெயரையாவது பணம் போய் விட்டதென்றாவது, தங்களில் ஒருவரும் சொன்னதாக கவனம் இல்லை என்றும் சொன்னாள்.

விழுப்புரம் தாசில் மி-ர் யம். [illegible]சாச்சாரி, பி. ஏ.-மாமூலுக்கு விரோதமாய் கத்தோலிக் ஊர் கோலம் புறப்படுவதைப்பற்றி ஆக்ஷேபனை உண்டானால் ஊர்கோலத்தை நிறுத்தவேண்டுமென்று கண்ட, போலீஸ் டிஸ்டிரிக்ட் சூபரிண்டெண்ட் ஆர்டர் தான் பார்க்கவில்லை என்றும், கலகம் நடந்த அன்று காலை இராஜு முதலி உள்பட 20-நபர்கள் தன்னை வந்து பார்த்து, இப்பொழுது நடக்க இருக்கும் கத்தோலிக் ஊர்கோலமானது மாமூலுக்கு விரோதமென்றும், அதனால் ஊர்கோலத்தை ஒரு வாரத்திற்கு நிறுத்தி, மாரியம்மன் கரகம் நடந்த பின்னர், அதை நடத்தும்படி உத்திரவு செய்யவேண்டுமென்று கேட்டதாகவும், இதற்கு அதிகாரிகள் உத்தரவு கொடுத்திருப்பதால்; இது விஷயமாய் கோர்ட்டில் [illegible]

பீல் செய்துக்கொள்வதே நல்லதென்றும், மற்றப்படி ஊர்கோலத்தை தடங்கல் செய்வது நியாயமல்லவென்றும், மேலும் மாமூல் வழக்கம் பப்ளிக் ரஸ்தாக்களுக்கு செல்லாதென்றும், தெரிவித்ததாக சொன்னார்.

கிராஸ் விசாரணையில் போலீஸ் இன்ஸ்பெக்டரின் வாக்கு மூலத்தால்—மாமூலுக்கு விரோதமாய் ஊர்கோலம் நடக்கக்கூடாதென்று போலீஸ் சூபரின்டெண்டு முதலாவது உத்தரவுசெய்து, பிறகு டிஸ்டிக்ட் மாஜிஸ்டிரேட்டின் உத்தரவை அனுசரித்து புதியுபாதையாய் ஊர்கோலத்தை கொண்டுபோக மறு உத்தரவு செய்ததாக ஏற்படுகிறது. இத்தகைய கத்தோலிக் ஊர்கோலத்தை 1875 - 1876 - வருஷத்தில் இந்த வருஷத்தை போல நடத்த பிரயத்தினப்பட்டதாகவும், அது சமயத்து சப் கலெக்டர் நேரில் வந்து விசாரணைசெய்து, மாமூலுக்கு விரோதமென தெரிந்து ஊர்கோலத்தை நிறுத்திவிட்டதாகவும் ஏற்படுகிறது.

பிரயாதியின் பிந்திய வாக்குமூலத்தில், தன்னுடைய பெண் பாபா என்பவள் கலகத்தன்றைய இராத்திரியே புதுச்சேரிக்குப் போய்விட்டதாகவும், கலகம் நடப்பதற்கு மூன்றுநாள் முன்னதாக, தன்னுடைய பெண்சாதிக்கும், முதல் குற்றவாளிக்கும் யாதொரு சண்டை சச்சரவு கிடையாதென்றும் முதல் குற்றவாளியை கிருஸ்துவ மதத்திற்கு வரும்படியான யாதொரு பிரேரேபணையும் கிடையாதென்றும், தன் வீட்டுக்கு முதல் குற்றவாளி எப்பொழுதாவது வருவது உண்டென்றும், ஆனால் வீட்டு பெண்களிடத்தில் அவனுக்கு யாதொரு பேச்சுவார்த்தைகள் கிடையாதென்றும், பெண்சாதி மாத்திரம் முதல் குற்றவாளியின் சகோதரர் அருணஜல செட்டி வைத்திருக்கும் ஜவுளிக்கடைக்குப் போய் துணிகள் வாங்குவதுண்டேயன்றி தன்னுடைய பெண்கள் அவ்விடத்திற்கு போவது கிடையாதென்றும், சொன்னான்.

பிரயாதி பெண்சாதி, அவள்தம் பிந்திய வாக்குமூலத்தில், டிசம்பர்௴ 10௳ இரவு தன்னுடைய மகன் லௌரிதாசும், மகள் பாபாவும் புதுச்சேரிக்குப் போனதாகவும், கலகக்காரர்களுக்கு 100-ரூபாய் நோட்டு இரண்டும், இரண்டு சவரனும் பாபா கொடுத்ததாக தன்னிடம் சொன்னதை பிரயாதிக்கு தெரிவித்ததாகவும் சொன்னாள். (இது விஷயத்தை பிரயாதியாவது அவனுடைய பெண்சாதியாவது வில்லேஜ் மாஜிஸ்டிரேட்டிடத்தில் சொன்னவர்கள் அல்ல)

பிரயாதியின் மருமகன் (அதாவது பிரயாதியின் மகள் சந்திரம்மாளின் புருஷன்) சாமியல்பிள்ளை—தான்விழுப்புரத்தில் எண்ணெய் வியாபாரம் செய்து கொண்டிருந்ததாகவும், கலக தினத்தன்று தானும் தன்னுடைய மாமனார் குடும்பமும், கத்தோலிக் கோவிலுக்கு போயிருந்ததாகவும், அது சமயத்தில் இந்துக்களின் கூட்டத்திலிருந்தும் கிருஸ்தவர்கள் கூட்டத்திலிருந்தும் கற்கல் எறியப்பட்டனவென்றும், கூட்டத்தை துபாக்கியால் சுட ஆரம்பித்தபோது தன்னுடைய மச்சான் லௌரிதாஸ் என்பவன், தன்னை வீட்டுக்குபோய் சொத்துக்களை பத்திரப்படுத்தும்படி சொன்னதாகவும், அதன்படி தான் வீட்டுக்கு திரும்பிவந்த காலத்தில், ஊர்கோலத்தை வரவழைப்பதற்கு, மாமனார் பந்தல் சிங்காரிப்பதை பார்த்து, லௌரிதாஸ் சொன்ன சமாசாரத்தை தெரிவித்ததாகவும், இந்த எச்சரிக்கையை தேவராய பிள்ளை கவனிக்கவேயில்லை என்றும், தானும் தன்னுடைய சூசையென்னும் மற்றொரு மச்சானும் கிடங்குக்கு போய், கணக்குகளையும் இருப்பு பெட்டியையும், மணிலா கொட்டை போருக்கு கீழ் மறைத்துவிட்டதாகவும், பிறகு தன்னுடைய மாமியாரை, தானும் சூசையும் இது விஷயமாய் எச்செரிக்கை செய்ததாகவும், மங்களம் அவள் அணிந்திருந்த நகைகளையும் ஆடைகளையும் பத்திரப்படுத்தும்படி வேணுகோபால செட்டியிடம் கொடுத்துவிட்டு, கூட்டத்தின் கையில் சிக்காமலிருக்க டை வேணுகோபால செட்டி வீட்டிற்கு போயிருந்தாளென்றும், லௌரிதாஸ் பெண்சாதி சப் மாஜிஸ்டிரேட் வீட்டிற்கு போயிருந்தாளென்றும், தன்னுடைய பெண்சாதி சந்திரம்மாளும், தன்னுடைய மச்சான் பெண்சாதி தங்கம்மாளும், நகைகளை கழற்றி தன்னிடம் கொடுத்ததாகவும், தன்னுடைய மாமியாரும் காப்பு கம்மல் தவிர மற்ற நகைகளையெல்லாம் கழற்றி தன்னிடம் கொடுத்ததாகவும், தான் இவற்றை எல்லாம், வேணுகோபால்செட்டியாருடைய வீட்டிற்கு கொண்டுபோய் அவருடைய பீரவில் வைத்து, தான் சாவிவைத்து கொண்டதாகவும், கலகக்காருக்கு ரூ 200-ம் இரண்டு சவரன்களும் கொடுத்ததாக சொல்லும் பாபா என்பவள் தேவராயபிள்ளை வீடு கொள்ளையடிக்கப்பட்ட காலத்தில், பூங்காவன செட்டி வீட்டின் மேல் மாடியிலிருந்தவர்களுடன் கூடியிருந்தாளென்றும், தன்னுடைய மாமனார் வீட்டை கொள்ளையடிக்க வந்தவர்களெல்லாம் அநேகமாய் பறையர்களென்றும், தன்னுடைய மாமனாரின் நகைகள், கோழி கொட்டகையில் மறைக்கப்பட்டு மறுநாள் காலையில் தன்னுடைய மாமியாராலும், மச்சானாலும் அவ்விடத்திலிருந்து நகை எடுக்கப்பட்டதென்றும், தன் மச்சான் இரத்தினசாமியின் காப்பும் கடுக்கனும் பத்திரப்படுத்தப்பட்டிருந்த மற்றோரிடத்திலிருந்து எடுக்கப்பட்டதென்றும், அன்றைய தினம் லௌர்தாஸ் கூடவிருந்து ரூ. 2500-க்கு நூறுரூபாய் நோட்டுகள் 25 கொண்டுவந்தானென்றும், இதில் 15-நோட்டுகள் கடலைக்காய்போரில் மறைக்கப்பட்ட இரும்பு பெட்டியில் வைக்கப்பட்டதென்றும், 3000-ரூபாயை தானும் தன் மாமனாரின் மகம்மதிய குமாஸ்தாவும் இரண்டு பையில் போட்டு கட்டி, புதுவீட்டின் முன் கட்டிலுள்ள பீரவில் வைத்தார்களென்றும், சூசையின் மச்சானும் அவன் பெண்சாதியும் தவிர மற்றொருவரும் தன் மாமனார் வீட்டிலிருந்து புதுச்சேரிக்குப் போகவில்லை என்றும், சூசையின் அண்ணியினுடைய [illegible]புகள் துலைந்ததால், சூசையின் காப்புகள் [illegible]

பர்த்தி செய்யப்பட்டதென்றும், இந்த கொள்ளையில் தன்னுடைய பெண்சாதியாவது மங்களமாவது, சூசையாவது பாபாவாவது நகையை இழக்கவில்லை என்றும், தானும் டையார்களோடு புதுச்சேரிக்குப் போயிருந்ததாகவும், வந்த பிறகு வேணுகோபால் செட்டியார் வீட்டிலிருந்து நகைகளை எடுத்து கொண்டுபோய் தனது எண்ணெய்க் கடையில் வைத்ததாகவும், பிறகு விழுப்புரத்தைவிட்டு வெளியூருக்குப் போயிருந்த காலத்தில், தன்னுடைய நகைகள் களவாடப்பட்டதென்றும், இந்த களவு விஷயமாய் தன்னுடைய (மாமனாரின் பிள்ளைகள்) மச்சான்கள் இருவர்மேல் போலீசில் பிரயாது செய்ததாகவும், முதல் குற்றவாளி தன்னுடைய மாமனார் வீட்டுக்கு போக்குவரத்து உண்டென்றும், பின்னும் முதல் குற்றவாளி தன் மாமனாருடனும் மாமியாருடனும் மச்சினிச்சிமார்களுடனும் பேசுவது உண்டென்றும் சொன்னான்.

பிறகு வேணுகோபாலச் செட்டி—தான் வியாபாரி யென்றும், தனக்கும் பிரயாதிக்கும் லாவாதேவியுண்டென்றும், மங்களமும் சாமியல்பிள்ளையும் ஒரு மூட்டை நகைகளை கொண்டுவந்து தன்னிடம் கொடுத்து வைத்திருக்கும்படி சொன்னதாகவும், ஆனால் அந்த பொருப்பை தான் ஏற்றுக்கொள்ளாமல், ஒரு பீரவை சாமியல்பிள்ளை வசத்தில் ஒப்புவித்து, அவரையே நகைகளை வைத்து பந்தோபஸ்து செய்துகொள்ளும்படி சொன்னதாகவும், அந்த பிரகாரம் பீரவில் வைத்திருந்து மறுநாள் காலையில் அதை எடுத்துகொண்டு போய்விட்டார்களென்றும், பிரயாதியின் பெண்சாதி கலகத்தன்று மாலை 5-30 - க்கு தன் வீட்டுக்கு வந்திருந்தாளென்றும், ஆனால் இவ்வளவு காலம் தன் வீட்டில் இருந்தாளென்பது தனக்கு தெரியாதென்றும், சாமியல் பிள்ளையும், அவன் பெண்சாதியும், அவன் குழந்தைகளும், பாபாவும் அன்று இராத்திரி தன் வீட்டிலேயே படுத்திருந்தார்களென்றும் சொன்னான்.

பிறகு, வேர்கடலை வியாபாரம் செய்யும் சுப்பிராய ரெட்டி—பிரயாதி அதிக வட்டிக்கு பணம் கொடுப்பது தனக்கு தெரியும் என்றும், அநேகமாய் பறையரே பிரயாதியினிடத்தில் கடன் வாங்குவதென்றும், கடந்த ஜூலை மாதத்தில் சப் மாஜிஸ்டிரேட் மாளிகையில் கலியாணம் நடந்தது முதல், பிரயாதி ஷை சப் மாஜிஸ்டிரேட்டுக்கு சிநேகமானாரென்றும், கலகம் நடந்த சமயத்தில் 16 - வது குற்றவாளியாகிய தனது குமாஸ்தா தன் வீட்டை காத்துக் கொண்டிருந்தானென்றும், கலகக் கூட்டத்தில் முதல் குற்றவாளி ஆயுதபாணியாய் இருந்ததை தான் பார்க்கவில்லை என்றும், 40 - 50 - பரப்பையன்கள் கலகக் கூட்டத்தில் இருந்ததை பார்த்ததாகவும், பிரயாதியின் பிள்ளை இரத்தினசாமி தன் குமாரன் பாலன் என்பவனுக்கு கலகத்தன்று இராத்திரி ஒரு ஜதை காப்பும் கடுக்கனும் கொடுத்ததாகவும், அதை தான் மறுநாள் காலையில் இரத்தினசாமியை வரவழைத்து கொடுத்துவிட்டதாகவும் சொன்னான்.

பிறகு பிரயாதியின் குமாஸ்தா வாகிய காஸிம்கான்—கலகம் நடந்தபின் சாயந்திரம், தன் பெண்சாதிக்கு நேர்ந்த ஒரு விபத்து விஷயமாய் டாக்டர் வீட்டுக்குபோன காலத்தில் அவ்விடத்தில் இரண்டாம் குற்றவாளியைக் கண்டதாகவும், ஆதலால் அவ்விடத்தில் ஷயன் இருக்கவேண்டியதென்னவென்று தான் கேட்க, டாக்டர், இரண்டாவது குற்றவாளியால் ஊர் அமரிக்கை கெடாமலிருக்க (டாக்டர்) ஜாமீன் ஆதலால் அவன் இங்கு இருக்கிறான் என்று சொன்னதாகவும், அதன் பின் தான் வீட்டுக்கு திரும்பின காலத்தில் பிரயாதியின் வீடு அப்பொழுது தான் கொள்ளை யடிக்கப்பட்டு கூட்டம் கலைவதை தான் பார்த்ததாகவும், அதே காலத்தில் துபாக்கி சுட்டதால் காயப்பட்ட குருவப்ப செட்டியை முதல் குற்றவாளியும் இன்னும் சிலரும் வண்டியில் போட்டு எடுத்துக்கொண்டு போனதை பார்த்ததாகவும், 16 - வது குற்றவாளி, பிரயாதியின் மனைவியையும், மகள் மங்களத்தையும் அவர்கள் வீட்டிலிருந்து பூங்காவன செட்டி வீட்டுக்கு அழைத்துக்கொண்டு துணையாகப் போனதாகவும், மற்றபடி 16-வது குற்றவாளி கலகக் கூட்டத்தில் தென்படவில்லை என்றும், தன்னுடைய காப்பும் கடுக்கனும் துலைந்துவிட்டதென்று இரத்தினசாமி தன்னிடம் பிரயாதியின் மகன் தெரிவித்தாகவும் சொன்னான்.

பிரயாதியின் மருமகன் சாமியல் பிள்ளை பிந்திய வாக்கு மூலத்தில், டிசம்பர்௴ 26௳ வரையில் தானும் மாமனாரும் ஒற்றுமையாயிருந்ததாகவும், அதன்பின் விரோதம் நேர்ந்ததென்றும், 7-வருஷத்திற்கு முந்தி பிரயாதியின் மகள் சந்திரம்மாளை தான் கலியாணஞ் செய்து கொண்டதாகவும், பெண்சாதியின் நகைகளை தான் அழித்ததில்லையென்றும், பிரயாதி வியாபார விஷயமாய் தனக்கு யாதொரு பொருளுதவியும் செய்ததில்லை என்றும், ஆனால் வட்டிக்கு பணம் கொடுத்தது உண்டென்றும், மாதம் ரூ 15 பிரயாதியிடம் கொடுத்து அவர் வீட்டில், தானும் பெண்சாதியும் குழந்தைகளும் சாப்பிட்டு வந்தார்கள் என்றும், இந்த கேசில் குற்றவாளிகளுக்கு அனுகூலமாய் சாக்ஷிசொல்லும் பக்ஷத்தில், தனக்கு விழுப்புரத்தில் ஒரு வீடு வாங்கிக்கொடுப்பதாகவாவது அல்லது தனது வியாபாரத்துக்கு பொருளுதவி செய்கிறதாகவாவது, இருவரும் சொல்லவில்லை என்றும், பூங்காவன செட்டியானவர் குற்றவாளிகளுக்கு அனுகூலமாய் சாக்ஷி சொல்லாத பக்ஷத்தில் அவருடைய வீட்டையும் கொளுத்திவிட்டு அவரையும் துரத்திவிடுவதாகபூச்சி காட்டினது கிடையாதென்றும், கொள்ளையில் நகைகள் போய்விட்டதென்று சொன்னதும் நிமித்தம் பிரயாதியின் நகைகள் எல்லாம் புதுச்சேரிக்கு கொண்டு போகப்பட்டதென்றும் சொன்னான்.

இதன்பின் வளவனூர் மாசிலாமணி பிள்ளையும் கொண்டா ரெட்டியும் தமது சாக்ஷியத்தில், சில்லரை மாத்துவதற்கு அன்று மாலை முதல் குற்றவாளியின் தகப்பனாரிடம் வந்திருந்ததாகவும், அது சமயம் முதல் குற்றவாளி வீட்டிலிருந்ததை பார்த்ததாகவும் சொன்னார்கள்.

திண்டிவனம் முதல் கிளாஸ் டிவிஷன் மாஜிஸ்டிரேட்டாயிருந்த மிஸ்டர் இ. பர்க்கன் ஹாம் வாலஸ் ஐ. சி. யஸ். அவர்கள் வாக்கு மூலத்தின் சாராம்சம் பின் வருமாறு:—விழுப்புரத்தில் டிசம்பர்௴ 10௳ நடக்கப்போகும் ரோமன் கத்தோலிக் ஊர் கோலத்தை நிறுத்திவிடும்படி பிளீடர் வெங்கடராமய்யர் மூலமாய் டிசம்பர்௴ 9௳ திருவண்ணாமலையில் அவருக்கு மக்ஜர் செய்துகொள்ளப்பட்டது. ஜில்லா மாஜிஸ்டிரேட் உத்திரவு பெற்றிருக்கும் ஊர் கோலத்தை தடைப் படுத்த யாதொரு காரணமும் இல்லாததால், மக்ஜரில் கண்டபடி இணங்கவில்லை; ஆனால் பொது ஜன சமாதானத்துக்கு கெடுதல் ஒன்றும் நேராமல் கவனிக்கும்படி போலீசாருக்கு உத்திரவு செய்யப்பட்டது. 9௳ மாலை 1-கிளாஸ் மாஜிஸ்டிரேட் விழுப்புரம் இரயில் ஸ்டேஷனில் வந்து இறங்கி, அங்கேயிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு ஷை உத்திரவை கொடுத்தார். அவர், பைசிகல் வண்டியை விழுப்புரம் ஸ்டேஷனுக்கு பாக்கு செய்து இரயிலில் அனுப்பிவிட்டு, தான் திண்டிவனத்துக்கு நேருக டிக்கட்டு வாங்கி யிருந்தும், தன் சொந்த அலுவலாக விழுப்புரத்தில் தங்கினார். இது சமயம் தன்னை சந்தித்த தாசில்தாராவது, சப் மேஜிஸ்டிரேட்டாவது அல்லது இருவரும் ஏகோபித்தாவது ஷை ஊர் கோலத்தின் பொருட்டு விழுப்புரத்தில் அவரை தங்கும்படி கேட்டுகொண்டார்களா என்பது அவருக்கு கவனப்படவில்லை. அவர்கள் இவருடன் பேசியிருந்த விஷயங்களால் மாத்திரம் நாபாளயம் வீதியிலுள்ள சில கிறிஸ்தியார் ஊர் கோலத்துக்கு தடங்களாய் இருப்பார்களென தெரிந்துகொண்டார். மேலும், இந்த ஊர் கோல விஷயமாய் பொது ஜனங்கள் எல்லாம் வெறுப்புறாய் இருக்கிறார்களென தெரிந்துகொண்டார். ஆனால் தாசில்தாராவது சப் மாஜிஸ்டிரேட்டாவது போலீஸ் இன்ஸ்பெக்டராவது தாங்கள் விபரீதமான கலகம் ஏற்படும் என்று நினைத்ததாய் அவருக்கு தெரிவிக்கவில்லை. இன்ஸ்பெக்டர் மாத்திரம் ஷை ஊர் கோல தடங்கள் விஷயத்தில் தலைமை காரியஸ்தர்களான சில போக்கிரிகளை தான் கவனித்துக் கொண்டிருப்பதாக தெரிவித்தார். அவர் தாலுக்கா போர்ட் சபா நாயகராயிருந்தார். அதனால் அவ்விடத்தில் கல்வி வான்களின் பரிசம் உண்டு. ஆனால் அவர் சபா நாயகராக வந்து 25 தினங்கள் தான் ஆனதால் ஷை கல்விவான்களுள் தலைமையானவர்களை அவர் தெரிந்திருக்க அவகாசமில்லை. அதனாலேயே அத்தகையாரை வரவழைத்து ஊர் நிலைமையின் அளவை தெரிந்துக் சொல்லக் கூடவில்லை. 10௳ காலை ரோமன் கத்தோலிக் மாதா கோயிலுக்கு எதிரிலுள்ள நாபாளயம் வீதிக்கு அவர் சென்று பூமி மட்டத்துக்கு 8-10 அடி உயரத்தில் வீதிக்கு குறுக்காய தோரணங்கள் கட்டி யிருப்பதை பார்த்தார். ரோமன் கத்தோலிக் ஊர் கோலத்தின் பெரிய இரதமானது தடையின்றி போவதற்காக, தோரணங்களை பூமி மட்டத்துக்கு 21-அடி உயரத்தில் கட்டும்படி ஏற்கனவே அவர் உத்திரவு செய்திருந்தார். அதனால், அவர் உத்திரவுபடி தோரணங்களை 21 அடி உயரத்திற்கு தூக்கி கட்டும்படியாவது அல்லது ஷை ஊர் கோலம்போகிற வரையில் சிறிது நேரத்துக்கு அவிழ்த்து விடும்படியாவது ஜனங்களுக்கு சொன்னார். அதே காலத்தில் இரோமன் கத்தோலிக் ஊர் கோலம் மாலை 4-மணிக்கு துவக்கி 6-மணிக்குள்ளாக முடிவாக வேண்டுமென்றும் உத்திரவு செய்தார். இந்த விதம் அவர் உத்திரவு செய்த பொழுது தாசில்தாரும் சப் மாஜிஸ்டிரேட்டும் போலீஸ் இன்ஸ்பெக்டரும் அவர் அருகாமையில்தான் இருந்தார்கள். நாபாளயம் வீதி நீங்க, நகரத்துக்குள் அவர் சென்ற வழியிலிருந்த மற்ற வீதிகளிலெல்லாம் ஜனக் கூட்டமே கிடையாது. அவர் கவனித்த வரையில் அவர்களுடைய நிலைமையும், நடையும், கௌரவமும் இவர்களிடத்தில் மரியாதையாயும் இருந்ததே யல்லாமல் மற்றபடி பகைமையான யாதொரு குறிகளும் தோன்றவில்லை. இதன் பிறகு அவ்விடத்திய சப் ரிஜிஸ்ட்ரார் ஆபீசை பார்வையிடச் சென்றிருந்தார். இந்த காலத்தில் கடைகளை மூடி விடும்படிக்கும் ஜனங்களெல்லாம் நாபாளயம் வீதியில் மாரியம்மன் சாத்துக்கு வந்து சேரும்படிக்கும் தமுக்கு போடுகிறார்கள் என்பதாக, போலீஸ் இன்ஸ்பெக்டர் இவருக்கு தெரிவித்தார். இவர் உத்திரவுபடி, ஷை தமுக்கு போட்டவனை இவர் முன் ஆஜர் செய்யப்பட்டது. அப்படி ஆஜர் செய்யப்பட்டவனை, விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கிக்கொண்டு, ஊரின் சமாதானத்துக்கு அவனை கட்டுப்படுத்தினார். இந்த அரைமணி சாவகாசத்துக்குள்ளாக மறுபடியும் தமுக்கு போடப்பட்டது. இப்படி தமுக்கு போடும் கூட்டத்தின் தலைமையான காரியஸ்தனையும் மேற் சொன்ன விதம் கட்டுப் படுத்தினார். மேலும் இனி தமுக்கு போடுபவர்கள் எல்லாம் மேற்சொன்ன விதம் கட்டுப்பட்டவர்களென்றும் எச்சரிக்கை செய்தார். இவர் தோரணத்தை பார்த்தால் ஏற்பட்ட சந்தேகத்தை ஒழித்துக்கொள்ள மாதா கோயிலுக்கு போய் அவ்விடத்திய பாதிரியுடன் தத்தின் உயரத்தைப் பற்றி விசாரித்தார். ஆனால், இவ்வருஷ ஊர் கோலத்துக்கு புதிதாக எரிவழி ஏற்பாடு ஏன் செய்யப்பட்டதென்பதை இவர் பாதிரியை கேட்கவில்லை. ஜனங்களின் தடையாவது புதிய வழியாய் போகக் கூடாதென்பதே யொழிய மற்றபடி ஊர் கோலம் நடத்தக்கூடாதென்பதல்ல வென்பது இவருக்கு கிடைத்த மக்ஜரினாலேயே தெரிந்திருக்கிறார். ஊர் கோலத்தை விமரிசையாய் நடத்தும் பொருட்டு ரோமன் கத்தோலிக்கர்களும் அதிக வழிகளை ஏற்பாடு செய்தார்களென்பது இவர் நம்பிக்கை நாபாளயம் வீதியில் ஜனங்கள்

எவ்வளவு காலம் கூடி யிருக்கவேண்டுமென்று தமுக்கு போடப்படவில்லை என்றாலும் ஊர் கோலத்தை தடுக்கும் பொருட்டு ஜனங்களை ஒன்று கூடும்படி தெரிவிக்கப்பட்டதின் பொருளை வாசித்தறிந்தார். ஊரில் கலவரம் ஒன்றும் இல்லாதிருக்கையில் தோரணம் கட்டி யிருக்கிறார்கள் என்று தாசில்தார் இவருக்கு சொன்னார். ஆதலால் இவர் விகாதம் உண்மையானதல்லவென்று சந்தேகித்தார். இவருக்கு எல்லா உச்சவகாலத்திலும் கடைகள் மூடப்படுவது தெரியும். அப்படி யிருக்க இது சமயத்தில் மாத்திரம் கடைகள் அடைத்து விடும்படியாய் தமுக்கு போட்டது வழக்கமில்லா வழக்கம், கடைசியாய் இவர் முசாபரி பங்களா (Travellers' Bungalow)வுக்கு போயிருந்து மறுபடியும் பகல் 2-மணிக்கு நாபாளயம் வீதிக்கு வந்தார். வரும் வழியில் கடைகள் எல்லாம் மூடப்பட்டிருந்ததை பார்த்தார். இவர் உத்திரவு செய்தபடி, நாபாளயம் வீதியில் தோரணம் அவிழ்க்கப் படாமலிருப்பதைக் கண்டு, தாலுக்கா போர்ட் பிரசிடெண்டுக்கு, லோகல் போர்ட் ஆக்ட் செக்ஷன் 98-பி. யிலுள்ள அதிகாரப்படி, இலாக்கா சிப்பந்திகளைக் கொண்டு தோரணங்களை அப்புறப்படுத்தினார். ரோமன் கத்தோலிக் ஊர் கோலம் போகும் வழிகளில் எல்லாம் இம்மாதிரி தோரணங்கள் கட்டியிருப்பதாகவும் தெரிந்துகொண்டார். பகல் 4-மணிக்கெல்லாம் சரக ஊர் கோலம் முடிக்க வேண்டுமென்று உத்திரவு செய்திருக்க மணி 2-ஆகியும் இன்னும் முடியவில்லையென்று போலீஸ் இன்ஸ்பெக்டர் இவருக்கு தெரிவித்து, இன்னும் கொஞ்ச நேரம் அனுமதி கொடுக்கலாம் என்று அபிப்பிராயப்பட, அந்தப்படி இவர் ஒத்துக்கொண்டார். ஆனால் முசாபரி பங்களாவிலிருந்து இவர் வரும்போது முடிவு பெற்ற சரக ஊர் கோலத்தை மறுபடியும் ஆரம்பம் செய்வதை கண்டார். குதிரை மேல் இருந்த இவரை பிடித்து இழுக்க பிரயத்தனம் செய்யப்பட்டது. இவர் கால் கட்டையாய் இருந்திருந்தால் கையும் புனைக்கப்பட்டே யிருப்பார். இவர் மாலை 4 15 மணிக்கு மாதா கோயிலுக்கு போனார். இவருடைய டபேதாரன் இவர் மேல் ஜனங்கள் விழாதபடிக்கும் குதிரை மேலிருக்கும் இவரை பிடித்து இழுக்காமலிருக்கும் படிக்கும், ஜனங்களை விலக்கிக்கொண்டு முன்னாதாகப் போனான். கூட்டங்கள் அதிகமாய் துள்ளிக்குதித்துக்கொண்டும், மற்றவர்களையும் அதே மாதிரி செய்யும்படியான ஜாடைகள் செய்துக்கொண்டுமிருந்தன. மற்ற இடங்களைக் காட்டிலும் மாதா கோயிலுக்கு எதிரில் தான் கூட்டம் அதிகமாயும், தலை கால் தெரியாமல் குதித்துக்கொண்டும் இருந்தது. இப்படி இவர்கள் தலை கால் தெரியாமல் கூத்தாடினது, அதிக கோபத்தினாலோ அல்லது ஏவுதலாலோ அல்லது குடி வெறியினாலோ என்பது இவருக்கு தெரியாது. மாதா கோயிலுக்கு எதிரில்தான் பயங்கரமான கூட்டமாயிருந்தது. இந்த கூட்டத்தில், தாம் உயிருடன் கோயிலுக்குள் போவோம் என்று இவர் நினைக்கவே யில்லை. கோயிலுக்கு வந்தவுடன் ஒருவன் இவரை மார்பில் குத்தினான். உடனே, இவர் உத்திரவுபடி இன்ஸ்பெக்டர் பிகில் கொடுத்தார். இவர்களை காப்பாற்றும் பொருட்டு போலீஸ் ஜவான்களும் கோயிலுக்கு, உட்புரத்தில் வந்து இவர்களை சுத்தி பந்தோபஸ்தாய் இருந்தார்கள். கற்கள் கும்ப கும்பலாய் இவர்கள் மேல் விழுந்துக்கொண்டிருந்தன. கோயிலுக்கு அருகாமையாய் கூடியிருந்த கூட்டத்தாரெல்லாம், ரோமன் கத்தோலிக் ஊர் கோலத்தை நிறுத்தி விடும்படி ஒரே கூச்சலாய் இவருக்கு தெரிவித்தார்கள். ஜனங்கள் தெரிவிக்கும் சமாசாரங்களை பூராய்த்தெரிந்து கொள்ளக்கூடிய விதம் தமிழ் தெரியும், தன்னுடைய அபிப்பிராயத்தை தமிழிலேயே வெளியிடவும் சற்றேறக்குறையத் தெரியும். கற்கள் எந்த திசையிலிருந்து வருகிறது என்பது தெரியவில்லை. ரோமன் கத்தோலிக் ஊர் கோலத்தை புதிய பாதையாய் கொண்டுபோகக் கூடாதென்பதே இக்கூட்டத்தின் கக்ஷியே யல்லாமல், மற்றபடி அதை அடியோடே நிறுத்தி விடவேண்டுமென்பதல்ல என்று தீர்மானித்துக்கொண்டார். இவர் ஊர் கோலத்தை புதிய பாதையாய் கொண்டு போகாமல் பழைய பாதையாக கொண்டுபோகும்படி பாதிரிக்கு தெரிவித்தார். பாதிரியும் அப்படியே நடத்த ஒத்துக் கொண்டார். இதற்குள் கேட்வழியாய் மாத்திரமல்லாமல் பல வழியாகவும் கூட்டங்கள் கோயிலுக்குள் புக ஆரம்பித்தன. ரோமன் கத்தோலிக் ஊர் கோலம் நிறுத்தப் பட்டதென்று கூட்டங்களுக்கு கேட்கும்படி அவ்வளவு கெட்டியாய் சொல்லும்படி போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு திட்டம் செய்தார். ஊர் கோலத்தை நிறுத்தும்படி இவர் உத்திரவு கொடுத்த அத்தக்ஷணமே ஜனங்கள் பின்னும் மும்மரமாய் கோயிலுக்குள் நுழைய ஆரம்பித்தன. இவர்களை தடுக்க போலீசாராலும் சாத்தியப்படாமல் பின்னடைய தலைப்பட்டார்கள். விழுப்புரம் ஸ்டேஷன் மாஸ்டர் ஹாக்கின்ஸ் (தென் இந்தியா ரெயில்வே) யஸ். ஐ. ஆர். வாலண்டியர் படைகளை பாதுகாப்புக்காக கொண்டு வருவதாய் சொன்னார். இவர் ஒரு காலத்தில் மதுரை ஜில்லாவில் போலீஸ் அசிஸ்டெண்ட் சூபரிண்டெண்டாக இருந்தவராதலால் போலீசின் சட்டங்கள் நன்றாய் தெரியும். மேலும் அனந்தபூர் ஜில்லாவைச் சேர்ந்த இந்து பூரில் நடந்த கலகத்தை தாம் அடக்கும்படியான சமயமும் வாய்த்திருந்தது. அந்த காலத்தில் துப்பாக்கி கொண்டு சுடாமலே அந்த கலகத்தை அடக்கினார். அப்படியிருந்தும் இது சமயத்தில் துபாக்கிக் கொண்டு சுடாமலே கோயிலுள்ள ஜனங்களின் உயிரை காபாற்ற வேறு வழி யில்லை. ஊர்கோலம் நிறுத்தப்பட்டு விட்டதால் இனி கூட்டம் உடனே கலைந்து போகவேண்டியதென்று இன்ஸ்பெக்டரை ஜனங்களுக்கு சொல்லும்படி உத்திரவு செய்தார். இப்படி சொல்லியும் கூட்டம் கலைந்த பாடில்லாமல் மேல் நோக்கியே வந்துகொண்டிருந்தது. இவர்களுக்கும் கூட்டத்தாருக்கும்

40-50 கெஜ தூரம் இருக்கும் போதே ஜவான்கள் எல்லாம் பின்னடைந்தார்கள். இனி தப்பித்துக் கொள்ள வேறு விதம் ஒன்று மில்லாததால் துப்பாக்கியால் சுடும்படி உத்திரவு செய்தார். முதலாவது மேல் நோக்கி அதாவது ஆகாயமார்க்கமாய் சுடப்பட்டது. இதற்கும் கூட்டம் அஞ்சாமல் நெறுங்கி வந்துகொண்டிருந்தது. இதைக்கண்டு இவர் கூட்டத்தின்மேல் சுடும்படி சொல்லியும் மறுபடியும் ஆகாய மார்க்கமாகவே சுடப்பட்டது. அதற்கும் அஞ்சாமல் கூட்டம் வேகமாய் நெறுங்கி வந்தது. கடைசியாய் கூட்டத்தின்மேல் சுடும்படி உத்திரவு கொடுத்தார். அதன்படி கூட்டத்தின் மேல் சுட்டும் அவை கலைந்த பாடில்லாமல் முன்னினும் அதிக வேகமாய் நெறுங்கி வந்தது. உத்தியோகஸ்தர்களும் போலீஸ் சிப்பந்திகளும் பாதிரியும் ஒன்றுந்தோன்றாமல் கோயிலுக்குள் புகுந்து பதுங்கிகொண்டார்கள். கூட்டம் அங்கிருந்த வண்டிகளை கொளுத்திவிட்டது. இதற்குள் இரயில்வே வாலண்டியர் படையைச் சேர்ந்த 15 பேர் துப்பாக்கிகளுடன் வந்து இவரை இரயில்வே ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டுபோய் விட்டார்கள். இவர்கள் இரயிலுவேய்க்கு அருகாமையாய் போகும்போது கற்கள் பறந்து வந்து மேல் விழுந்த தன்னியில் இவர் முதுகில் ஒரு குத்தும்பட்டது. கொஞ்சமும் ஆதரவு இல்லாமல் கூட்டத்தின் கையில் சிக்கிக்கொண்டு தத்தளிக்கும் ஊரை காப்பாற்ற ஒரு பட்டாளத்தை அனுப்பும்படி கவர்ன்மெண்டுக்கு தந்தி கொடுத்தார். இத்துடன் அந்த ராத்திரியே, டிஸ்டிரிக்ட் சூபரிண்டெண்டுக்கும் போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜனரலுக்கும் தந்தி கொடுத்தார். என்ன கொடுத்தும் யாதொரு உதவியும் செய்ய அவர்களால் சாத்தியப்படாமல் போய்விட்டது. துப்பாக்கி காயப்பட்டு அதிகமாய் இரத்தம் வடிந்துக்கொண்டிருந்த ஒரு பிராமணன் இவருக்கு முன்பு கொண்டுவரப்பட்டான். இந்த பிராமணன் தமிழில் சொன்னவை இவருக்கு தெரியாததினால் அவர் அருகிலிருந்த தாசில்தாரை கவனித்து கேட்கும்படி சொன்னார். அன்றிரவு இரல்யிவேயில் வேலை செய்வோரெல்லாம் மிகவும் பயந்து தங்கள் பெண்டு பிள்ளைகளுடன் யஸ். ஐ. ஆர். வாலண்டியர் காவல் இருக்கும் இரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் தங்கி இருந்தார்கள். விடிந்த பின்பு இவருக்கு தேவராய பிள்ளை வீடு கொள்ளையடிக்கப்பட்ட சமாசாரம் தெரியவந்தது.

குற்றவாளிகள் தரப்பில் சம்மன் செய்து வரவழைக்கப்பட்ட இன்னும் சில சாக்ஷிகள் விசாரணை செய்யாமல் தவிர்க்கப்பட்டன.

18 நாள் விசாரணை நடந்த பின்பு, கடைசியாய் 1908ஹ பிப்பரவரி௴ 12௳ ஜட்ஜ்மெண்ட் சொல்லப்பட்டது. பட்டம்பகலில் வீட்டு கதவுகளை உடைத்தும் கொள்ளை யடித்தும் கொளுத்தியும் இன்னும் ஏனைய துர்கிருத்தியங்களை செய்ததற்காக கணேச செட்டி முதலாக 25 நபர்களை சார்ஜ் செய்த விஷயம் தெரிந்தே யிருக்கிறது. மாஜிஸ்டிரேட் இந்த கேசில் 10 நபர்களை விடுதலை செய்துவிட்டு மற்ற 15 நபர்களை செஷனுக்கு கமிட்டி செய்துவிட்டார். மாஜிஸ்டிரேட் அவர்கள் தமது ஜட்ஜ் மெண்டில் முதலாவது, கலகம் நடந்ததற்கு ஏதுவாயிருந்த முந்தின சம்பவங்களை எடுத்துக் காட்டுகிறார்.

எதிரி ஊர்கோலத்தை ஒழுங்குப் படுத்தவும் எப்பொழுதும் போல ஊரை சமாதானத்துடன் இருத்தவும் அதிகாரிகள் எடுத்து கொண்ட முயற்சிகளையும் கோயிலுக்கு முன்பாக நடந்துக்கொண்டிருந்த கலகத்துக்கு மாஜிஸ்டிரேட் சென்றிருந்ததையும் விவரித்துக் காட்டி, பின்னும் சொல்வதாவது—

"சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோயில் எல்லைக்குள் வந்தவுடன் கணக்கில்லாமல் கற்கள் பறந்து வந்து விழுந்தன. இன்ஸ்பெக்டர் சப் மாஜிஸ்டிரேட் தாசில்தார் பாதிரி ஆகிய இவர்கள் எல்லாம் ஊர் கோலத்தை நிறுத்திவிட சம்மதித்தார்கள். ஸப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் இப்படி நிறுத்தப்பட்டதை கூட்டத்துக்கு தெரிவிக்கும்படி இன்ஸ்பெக்டருக்கு உத்திரவு செய்தார். இன்ஸ்பெக்டரும் கூட்டத்தின் முகமாய் திரும்பினார். பலமாக கற்கள் வந்து வீழ்ந்துக்கொண்டே யிருந்தன. ஜனங்கள் நெறுங்க சாத்தியப்படாத அவ்வளவு மும்மரமாயும் வேகமாயும் கற்கள் வந்து வீழ்ந்துக்கொண்டே யிருந்தன. உத்தியோகஸ்தர்கள் நிலைமை மிகவும் அபாயகரமாய் தோற்றவும், சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் சுடும்படி உத்திரவு கொடுத்தார். சுட்டதினால் கூட்டம் மிகவும் மூர்க்கம் கொண்டது. அதன் பலனும் அவர்கள் உத்தியோகஸ்தர்களின் உயிரை வாங்கிவிட பார்க்கிறதாக தாசில்தார் தெரிந்துகொண்டார். இந்த உத்தியோகஸ்தர்கள் இரயில் ரோட்டு வழியாய் இரயில்வே ஸ்டேஷனுக்கு பந்தோபஸ்தாய் கொண்டு போக யஸ். ஐ. ஆர். வாலண்டியர்கள் வந்தார்கள். ஆனால் அந்த வழியாய் போவதும் அபாயம் என்று தாசில்தார் யோசனை செய்து அவரும் உத்தியோகஸ்தர்களும் ஓடி விட்டார்கள்."

இதன் பின் கொள்ளை நடந்த விஷயமாய் ஏற்படும் சாக்ஷிகள் வாக்கு மூலங்களின் திலாக்கரமான வரலாற்றை பரிசிலனை செய்து சொல்வதாவது.

"பிராசிகியூஷன் தரப்பு முதல் சாக்ஷியாகிய பிரயாதி, துலை தூரத்தில் வந்த குற்றவாளிகளை தெரிந்துகொண்ட காலத்தில், நேரிடப்போகும் ஜீவ பயத்தோடும் மனக் கலக்கத்தோடும் இருந்திருக்கிறான். இந்த சமயத்தில் கோபா வேஷத்துடன் பகைக் கொண்டுவந்த பெரிய கூட்டத்தில் குற்றவாளிகளைக் கவனித்து தெரிந்து கொண்டதாக சொல்வது நம்பக்கூடியதல்ல. இதே விஷயமாய், பழிக்கஞ்சாத சுபாவமுடைய இந்த சாக்ஷியின் இதர வாக்குமூலங்கள் தேவை யில்லை. தன்னை போலீசார் விசாரணை செய்ததாவது தான் அவர்களுக்கு வாக்குமூலம் கொடுத்ததாவது கிடையவே கிடையாதென்று நிராகரிப்பது நியாய விரோதமா யிருக்கிறது. ஊர் கோலத்துக்காக விசேஷ பணம் கொடுத்ததாக ஒத்துக் கொள்ளுகிறான். பின்னும், நூதன ஆசாரத்துக்கு தக்க அதிகாரிகளிட மிருந்து உத்திரவு கிடைக்கும் பக்ஷத்தில், தான் பொருளுதவி செய்வதாக பாதிரிக்கு வாக்கு கொடுத்தான். இராஜூ முதலியை தலைமையாய் கொண்டு நூதன ஆசாரத்துக்கு விரோதமாக ஜனங்கள் அதிகாரிகளுக்கு மனு செய்திருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டவுடன், சமாதானம் செய்யும்படி இராஜூ முதலியை மூன்று முறை வரவழைத்தும் பிரயோசன மில்லாமல் போய்விட்டது. பிந்தி, நூதன ஆசாரத்தை அங்கீகரித்ததாக கையொப்பம் செய்யும்படி, இந்துக்களுக்கு ஒரு பிடிஷன் அனுப்பினான். இதற்கு உடன்பட்டு 7 நபர்கள் தான் கையொப்பம் செய்தார்கள். கலகம் நடந்த அன்றைய தினம் காலையிலேயே, கலகம் உண்டாகும் என்று தெரிந்துகொண்டான். தெரிந்துகொண்டும் ஜனங்கள் அமரிக்கையோடு இருக்க பார்ப்பது கவர்ன்மெண்டின் கடமை யாதலின் அலக்ஷியமாய் இருந்துவிட்டான். இந்த காரணங்களால் இந்த சாக்ஷியின் வாக்கு மூலத்தை முழுதும் தள்ளிவிட வேண்டியதாயிருக்கிறது."

இந்த பிராசிகியூஷன் தரப்பு சாக்ஷி வாக்கு மூலத்தின் தன்மையைப் போன்ற, மற்றொரு சாக்ஷியாகிய போலீஸ் ஜவான், குற்றவாளிகளில் அநேகர் பிரயாதி வீட்டை நோக்கி சென்றதை தான் பார்த்ததாகச் சொல்லுகிறான், கோயிலில் கலகம் நடந்த காலத்தில், அதிகாரிகளின் உத்திரவையும் ஜனங்களின் அமரிக்கையையும் பாது காப்பதற்காக மற்ற ஜவானகளுடன் இவனும் அந்த இடத்தில் வேலைமேல் இருந்திருக்கிறான். அபாயம் நேரிடக்கூடிய அவ்வளவுக்கு கலகம் மும்மரமான் காலத்தில் இவனுக்கு நாக்கு வரட்டலுண்டாகி, வீடுகளில் தாகத்துக்கு ஜலம் கேட்டுக்கொண்டே குளத்துக்குப்போனான். உண்மையில், வேலையை விட்டுவிட்டு போனது தன் ஜீவனை [illegible] இருந்திருக்க வேண்டும். கலகம் முடிந்தவுடன் சாக்ஷிகளை [illegible] இன்ஸ்பெக்டர் [illegible] இவ்விதம் [illegible] செய்தவர் [illegible] இவர்களும் ஒரு குற்றவாளியின் பெயரையும் சொல்லவில்லையாம். [illegible] பிராசிகியூஷன் தரப்பு முதல் சாக்ஷி ஊரெல்லாம் [illegible] பொறாமை கொண்டார்களென்று தெரிவித்திருக்கிறது. [illegible] வீதியிலுள்ள குடிகளுக்கு விசேஷம் பொருந்தி கொடுத்த பாதிரி வாக்குமூலத்தில், அவர்கள்மேல் தப்பெண்ணமும் அதிகமாயிருக்கிறது. பிராசிகியூஷன் தரப்பு முதல் சாக்ஷி, தனக்கு இப்பாதிரி ஞானகுருவாயிருப்பதன்னியில் தனக்கு சிநேகிதர் என்றும் ஒத்துக்கொண்டிருக்கிறான். கொள்ளையடிக்கப்பட்ட குடும்பத்தார் வேண்டுமானால், தங்கள்மீது அதிகப்பகை கொண்டிருப்பவர்களை எல்லாம் தங்கள் ஞாபகத்துக்கு கொண்டுவரக்கூடிய போதிய சாவகாசம் அந்த இரவு முழுதும் அவர்களுக்கு இருந்திருக்கிறது. எல்லா விஷயங்களும் சந்தேகிக்கக் கூடியதாயிருப்பதால் பிராசிகியூஷன் தரப்பு முதல் சாக்ஷியின் வாக்குமூலத்தை தள்ளிவிட்டதுபோல இந்த போலீஸ் ஜவானின் வாக்குமூலத்தையும் தள்ளிவிட்டேன்."

மற்ற சாக்ஷிகளின் வாக்குமூலத்தையும் தள்ளிவிட்டு கடைசியாய் மாஜிஸ்டிரேட் சொன்னதாவது.

"சட்டத்தையும், உத்திரவுகளையும் புறக்கணித்து, அதிகா[illegible]ம் பகலில், மிருகத்தன்மையான கலகம் சில பாதகர்கள் செய்தார்களென்பதற்கு கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. பிரயாதியை சம்மந்தப்படாதவர்களிலாவது அல்லது கவர்ன்மெண்ட் உத்தியோகத்திலில்லாதவர்களிலாவது ஒருவரேனும் பிராசிகியூஷனுக்கு அநுசரணையாக முன்வரவில்லை என்பது முக்கியமான உண்மை, பின்னும் பிரயாதியின் வீட்டுவேலைக்காரரில் ஒருவராவது இதற்கு சார்பாய் வந்தாரில்லை. ஆகையால் இந்த கேசில் உறுதியான வாக்குமூலத்தை நாடுவது வியர்த்தமே. ஒரு சாக்ஷி மாத்திரம் அவனுக்கு விரோதமாய் வாக்குமூலம் கொடுத்திருந்தாலும், இவைகளை எல்லாம் நன்றாய் கவனிக்கும்போது, பழமையான பகையும் [illegible] தங்களுக்கும் பிரயாதியின் குடும்பத்துக்கும் [illegible] சாக்ஷிகளை எல்லாம் செஷனுக்கு கமிட்டி செய்வது நியாய யுக்தமாகத் தோற்றுகிறது." ஆதலால் 1 3 4 5 6 9 10 11 12 13 14 15 17 19 20 ஆகிய குற்றவாளிகள் செஷனுக்கு கமிட்டி செய்யப்பட்டு, மற்ற குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

FRIVOLITY.

(By Mr. A. V. Sevalam.)

வக்கீல்:—நீ பொய் சாக்ஷிதானே!

சாக்ஷி:—நீர் பிடிக்கிற கேசும் பொய் கேசுதானே?

வ:—நீயே இவர்கள் கேசுகளுக்கெல்லாம் சாக்ஷியாக வருகிறாயே அது ஏன்?

சா:—கக்ஷிக்காரனை கேட்டால் தெரியும்.

வ:—கக்ஷிக்காரனை கேட்பது இருக்கட்டும், நீதான் சொல்லேன்.

சா:—நான் சொல்ல, சரி! நீரே இவர்கள் கேசுகளுக்கெல்லாம் வக்கீலாக வருகிறீரே அது ஏன்?

"[illegible] நீர் [illegible] பொருந்த [illegible] புல்லினும் திண்மை நிலை போம்."

என்னும், இப்பாட்டை பட்டணத்து [illegible] ஒருவனுக்கு ஒரு உபாத்தியாயர் சொல்லி [illegible]

[illegible]

போது, நெல்லை பார்த்தது உண்டா? என்றார். சிஷ்யனே குலை குலையாய் மரத்தில் தொங்க பார்த்திருக்கிறேன் என்றான். உருவம் எப்படியிருக்கும்? என்றார்? உருண்டை வடிவாய் இருக்கும்; தின்றால் புளிக்கும் என்றான். ஓ! ஓ!! பையன் நெல்லிக்காயை சொல்லுகிறான் என்று தெரிந்து, அரிசி எங்கே உண்டாகிறது? என்றார் கடையில் உண்டாகிறது என்றான். இன்னும் கேட்டால் விபரீதமாய் முடியும் என்று உபாத்தியாயர் வாயை மூடிக்கொண்டார்.

A DIALOGUE.

(By Mr. A. V. Seyalam.)

பாபா:—அன்னி! அன்னி!!

(குழந்தை குவா குவா என அழத்தொடங்கிற்று. கனகசபையும் வந்து சேர்ந்தனன்.)

கனகசபை:—பாபா! நீலா எங்கே? காணோமே!

பாபா:—அத்தான்! குழந்தை அழுதுகொண்டிருந்தது—அதை எடுத்துக்கொண்டு தோட்டத்திற்கு போய் மற்றும் குழந்தைகளை கூட்டவைத்துக்கொண்டு.

"ஒருபுட்டம்-திருபுட்டம்-ஒடிவாமக்கள்ம்- பருப்பாஞ் சோறும்-பன்னிரண்டு வகையாம்-செக்கை திரும்பி-செவ்வெண்ணெய் வார்த்து-மாடுங் கன்றும் வரும்போது-மஞ்சா தண்ணி தெளிக்கும் போது-காலை மடக்கடி காமாக்ஷி."

என்று தொண்ட தொட்டு விளையாடிக்கொண்டிருக்கின்றாள்.

(இதற்குள் நீலா வருகிறாள்)

நீலா:—அத்தான்! எப்பொழுது வந்தீர்கள்?.........உங்கள் வரவை நோக்கி இவ்வளவு நேரம் கண் பூத்துப்போகக் காத்திருந்தேன்—மானம் மப்பு மந்தாரமாய் இருக்கவே வருவீர்களோ வரமாட்டீர்களோ என்று நினைத்து இப்பொழுது தான் [illegible]

கனகசபை:—அப்படியா? நீலா [illegible] விசேஷம் உண்டா?

(இதற்குதான் நீலாவை தேடினதென்று புன்னகை குரலால் நடை ஓடிய இடை துவள கட்டை விரல் முகவா கட்டையைத்தாவ கனகசபையின் மனைவி கமலா ஒருபுரம் நிற்க.)

நீலா:—அத்தான்!

"[illegible] மாதக்கிரமம் [illegible] [illegible] சீரிழிவாம்
போதப் பெருவயிறும் புத்திரற்கு—மாதன்ரயின்
வந்த வினை தீர்க்க மருந்தறியான் வேலூரன்
எந்த வினை தீர்த்தான் இவன்."

என்னும் பாட்டில் வேலூராகிய வைத்திய நாத சுவாமிக்கு ஓர்கால் வாதம் என்றும் அவர் மைத்துனராகிய விஷ்ணுவுக்கு நீரிழிவு என்றும் அவர் பிள்ளைக்கு பெருவியாதியென்றும் சொல்லியிருக்கிறதே, அவை எவ்விதம் பொருந்தும்?

கனகசபை:—நீலா! இந்தப்பாடலை இதுவரையில் கேட்டிராத எனக்கு எவ்விதம் நீ கேட்கிற கேள்வி தெரியும்? உன்னைப் போன்ற சௌபாக்கியவதிகளுக் கேனும் அல்லது புகை வண்டிக் கோவையைக் கண்டு புது தெய்வம் ஒன்று முளைத்து எழாநின்ற தெனக்கொண்டு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, மலஜலோ பாதையை நீக்குவான் கருதிப் பஞ்சமனிடம் குறியொன்று கேட்டு, அண்ணன் தம்பியை அவதியுறச் செய்யப் பல்லியைப் பரிந்தே பலதரம் கேட்டு, பாழ் முகப் பெண்ணைப் பாராது கொள்ளவே புட்டம் வைத்து பிடாரியை கேட்டு, பாசைக்கோறித் திருவுளச் சீட்டைப்போட்டு, வலது கண் துடிப்பையும் இடது தோள் துடிப்பையும், அடுப்பிற் சாதம் பொங்கும் வைபவத்தையும், காகம் கத்தலையும், ஆந்தை ஒற்றொலியையும், ஒற்றை பார்ப்பானையும், ஒருமுண்டையையும் எண்ணெய்க் குடம் கொண்டு ஏகிய வணிகனையும் அலங்காரத்துடன் சுடலை ஏகும் சவத்தையும், மற்றும் இன்னோரன்ன கணக்கிடுதற்கு அரிதான பற்பல சாமான்ய சம்பவங்களை எல்லாம் பெரும் நன்மைதீமைகளை காட்டும் குறியெனக் கொள்ளும் சாமியார்கள் முதலானோருக்கு தெரியுமன்றி இவற்றையெல்லாம் ஆராய்ந்து அறிய ஒழிவில்லாது காலையிற்சென்று மாலை வரையில் உழைக்கும் என்னைப்போன்ற உத்தியோகஸ்தர்களுக்கு எவ்விதம் தெரியும்?

(இவைகளை எல்லாம் கேட்டிருந்த கனகசபையின் மச்சான்)

சோமசுந்தரம்:—அத்தான்! சிவன் காளியுடன் வாதிட்டு ஆடினபொழுது ஒருகாலைத்தூக்கி ஆடினாரதனால் வாதக்காலென்றும், விஷ்ணுவிற்கு பாதத்தில் கங்கையுற்பத்தியாதலால் நீரிழிவென்றும், புத்திரராகிய விநாயகருக்கு இயல்பாகவே பெருவயிறாதலால் பெருவயிறென்றும் சாதுர்யமாய் சொன்னதேயன்றி வேறல்ல.

(இதைகேட்டு எல்லோரும் சந்தோஷப்பட)

கனகசபை:—சோமா! ஏன் நிற்கிறாய்? உட்காருகிறது தானே.

சோமசுந்தரம்:—அத்தான்! பெரியவர்களாகிய உங்களுடன் சமதையாய் சிறியேன் உட்காருதல் மரியாதையா?

(இதைக்கேட்டு கமலா, நீலா, பாபா ஆக யாவரும் அடுத்தவீட்டு மாணிக்கந்தான் அத்தானுக்கு ஏற்றவன்; மாநா பொடி போட்டால், நான் பொடியும் போடுவேன், சொட்டும் பிடிப்பேன் என்றுசொல்லுகிறவனாச்சே! இவ்வளவு உட்காரு என்று சொன்னால் அத்தான்மேல் ஏறிவிடுவான் [illegible] குசு குசு என்று பேசிக்கொண்டு சிரித்தார்கள்.)

கனகசபை:—இவன் [illegible] குருவை விழுங்கின முதலை சிஷ்யனாயிருக்கிறான் அப்பா! இல்லையில்லை இப்படி சொல்லுகிறாயே! உன்னுடைய தந்தை [illegible] மே உட்காருகிறானே.

சோமசுந்தரம்:—சாஸ்திர விதிப்பிரகாரம் [illegible] வயது ஆண்பிள்ளையைக் கண்டால் 50 வயதுபெண்பிள்ளை எழுந்திருக்கவேண்டியதுதான். சௌபாக்கியம் குழந்தையானதால் அவளுக்கு தெரியாது.

(இதைகேட்டு கமலா முதலிய யாவரும் [illegible] க்கொண்டு புன்னகையுடன் "சொன்னதை கேட்டாயா இப்பொழுது பட்டம் என்றான் நீலா.")

(இதை எல்லாம் கேட்டிருந்த அடுத்தவீட்டு மாணிக்கம் வருகிறான்.)

மாணிக்கம்:—அண்ணே! சுந்தரம்! இவ்வளவு சாஸ்திரம் படித்துவிட்டாயே! [illegible] என்று சொல்லும் கிறிஸ்துவர்கள் [illegible]

ஆகிய இவர்களில் பெண்கள் புருஷரைக் கண்டால் எழுந்திருக்கிறார்களா!

(இதை கேட்டு எல்லோரும் கொல்லென்று சிரிக்க)

கனகசபை.—அப்பா! மாணிக்கம்! கூடியவரையில் புத்திசாலியாயிருக்கிறாய்! மேலும் கொஞ்சம் வாசிப்பும் இருக்கும் என்று நினைக்கிறேன். அப்படியிருக்க "பரமண்டலத்திலிருக்கிற எங்கள் பிதாவே!" என்று ஒரு மதத்தினர் வணங்குவதை நீ தூஷிக்கலாமா? மதத்துவேஷம் உனக்கேன். உன் மதத்தின் உண்மையை நீ தெரிந்திருந்தால் இதர மதத்தை நீ தூஷிக்கமாட்டாய். இதைப்போலவே ஒவ்வொரு மதத்திலும் உண்மைதெரிந்த பெரியோர்கள் இதர மதங்களையாவது அவர்கள் குறியீடெதந்து வணங்கும் கடவுளையாவது தூஷிக்கமாட்டார்கள். மேலும் எத்தனை ஐரோப்பியர்கள் அதாவது வெள்ளைக்காரர்கள் ஹிந்துக்களுடன் பரஸ்பர ஒற்றுமையும் நேசமும் பாராட்டி ஒரு வயிற்றில் பிறந்த சகோதரர்கள்போல் பாவித்து வருகிறார்கள். இம்மட்டோ? நமது இந்துதேசத்தின் அபிவிர்த்தியின் கண்ணும் நோக்கமாகவே இருக்கிறார்கள். இவைகளை எல்லாம் நீ தெரிந்திருந்தால் அவ்விதம் தூஷிக்கமாட்டாய். தம்பீ! மாணிக்கம்! கவனித்துப் பார். ஔவைபிராட்டியார் சொன்ன வாக்கியம் "தெய்வம் இகழேல்" என்பது எத்தன்மையானது? தண்ணீர் என்னும் ஒருவஸ்துவுக்கு எத்தனைவித பெயர்கள் இருக்கின்றன. சிலர் ஜலம் என்கிறார்கள், வேறு சிலர் வாட்டர் (Water) என்கிறார்கள் மற்றும் சிலர் பாணி என்கிறார்கள். இவ்விதமாய் பெயரிடப்பட்டாலும் தண்ணீர் தண்ணீர் தானே. அதில் ஏதாவது மாறுதலுண்டா? அதைப்போல அந்தந்த மதஸ்தர்கள் குறியீடு தந்து வணங்கும் கடவுள், நீ குறியீடுதந்து அதாவது 'மகாவிஷ்ணு' என்றும், 'பரமசிவம்' என்றும் வணங்கும் கடவுளாதலின், உன் கடவுளையே நீ இகழ்ந்தவனாகி நரகமடைவாய். தம்பீ! [illegible] ஞானிகள் கிரிஸ்தவரல்லராகும் நீவிர் யாவரும் அஞ்ஞானிகளே என்று வாய்ப்பறை யடித்தே வெளிவரும் பல்லாயிரக் கிறிஸ்துவப் பிரஜைகளில் எத்தனைபேரோ தேவகுமாரன் கிறிஸ்துவைப்போல் உலகத்தை ரக்ஷிக்கத் தத்தம் உயிரைத் தத்தம் செய்யத் தயாராயிருப்பவர்? இவர்களைப்போலவே அந்தந்த மதத்திலும் இருப்பார்கள். ஆதலால் தம்பீ! இன்றுமுதல் மதாதூஷணையாவது தெய்வ நிந்தனையாவது செய்யாமலிருப்பாயாக!

இந்த ஐரோப்பிய மாதர்களும் ஆடவரைக்கண்டால் தாழிருக்கும் ஆசனத்தை விட்டெழுந்து வந்த ஆடவருக்கு ஆசனம் கொடுத்துவிட்டு பிறகுதாம் உட்காருகிறார்கள். அநேக தடவைகளில் பார்த்திருக்கிறேன். மாணிக்கம்!

மாணிக்கம்:—சார்! (Sir = ஐயா) என்னை எக்ஸ்கியூஸ் (Excuse = மன்னிப்பு) பண்ணுங்கள்.

கனகசபை:—மாணிக்கம்! இப்பொழுது பார் [illegible] சார்' என்றும் 'எக்ஸ்கியூஸ்' என்றும் சொன்ன வார்த்தைகள் [illegible] மத்த பாஷையைச் சேர்ந்ததல்லவா? அப்படியிருக்க அவர் [illegible] மதத்தையும் கடவுளையும் தூஷிக்கலாமோ? அவர் [illegible] பாஷையை மாத்திரம் நீ உபயோகிக்கலாமா?

(எல்லோரும் கொல்லென்று சிரிக்கிறார்கள். கமலா, [illegible] எல்லாம் [illegible] பெரிய வாயாடி [illegible] அத்தான் அடங்க ஒடுக்கத்தில் வைத்துவிட்டாரே" என்று பேசிக்கொண்டார்கள்.)

கனகசபை:—மணியோ $7\frac{3}{4}$-ஆய்விட்டது. வானமோ மின்னிக்குமுறுது. மழை வரும்போலிருக்கிறது; நான் போய் வருகிறேன்.

(என்று எழுந்திருக்க)

சோமசுந்தரம்:—அத்தான்! குருவை விழுங்கிய முதலை சிஷ்யன் என்றீரே அதன் விர்த்தாந்தத்தை சொல்லிவிட்டு போகக்கூடாதா?

கனகசபை:—இன்னொரு சமயம் சொல்லுகிறேன் சோமா!

(என்று சொல்லிக்கொண்டே போக அப்படி அல்ல! அப்படி அல்ல!! அத்தான் என்று சோமசுந்தரம் பின்செல்ல கனகசபை தான்போய் வருகிற குறியை கையினால் காட்டிக்கொண்டே போயினன். சோமசுந்தரம் வீட்டிற்குத் திரும்பி சதவை தள்ளிட்டுக்கொண்டு உள்ளே போய்விட்டான். இதுநிற்க, நீலா சொன்னதற்காக சௌபாக்கியம் விம்மி விம்மி கண்ணீர் சொரிந்து கொண்டிருக்க.)

நீலா:—சௌபாக்கியம்!

"என்னடி பிழைபட இசைத்தேன் ஏழை!
தூண்ணிய கண்ணீர் துளிப்பதின்றனை
நதியுறு புனலை நலியவெற்றினை
மதியிலியுரனும் மகிழ்விளையாட்டில்
பேசிய வுரைதனை பிழையெனக் கொள்ளேல்
ஏசுதல் எனக்கும் இயற்கை யன்று காண்
[illegible] கமலவாண்முகமோர்
பெண்கள் இரக்கப் பெரிது வாடிநற்!
இறைகளும் குறைகளும் இலங்கப் பூண்டேம்
[illegible] விரிமலர்த்தொகுதியை
[illegible]
மழை [illegible]
ஆடையாபரணம் ஆரம்புனை
சேடியர் யாரும் சேர்த்து கும்மி
கொட்டவும் எழுக! கோதையே! விரைந்து
[illegible] புனைந்து பூண்பன பூண்டு
[illegible]
உள்ளம் களித்தனள் [illegible]
செல்வத்தில் [illegible]
[illegible]"

(சௌபாக்கியம் [illegible] தான்பிடித்திருந்த கொடுசான இரும்பு கம்பி போயிற்று இரக்கமுள்ள [illegible] [illegible] ளைக்கவும் தான் முறையில் நினைத்து கொண்டே திரும்பி வந்து)

கனகசபை:—சோமா! சோமா!!

(என்று கதவைத்தட்டினன்.)

நீலா:—[illegible] போய் பார்! அத்தான் குரல் போலிருக்கிறது.

பாபா:—யார் அது?

கனகசபை:—பொன்னம்பலம்.

பாபா:—அன்னி! அது யாரோ பொன்னம்பலமாம்.

(இதற்குள்)

சோமசுந்தரம்:—பொன்னம்பலமா! அது யார் புதுசாயிருக்கிறது.

(என்று சொல்லிக்கொண்டே கதவை திறந்தான்)

(இதை [illegible] அன்பர்களே! [illegible] கிற்கிறது? கனகசபை உடனே உள்ளுக்கு வந்தான்.)

நீலா :—அத்தான் ! எது திரும்பிவந்து விட்டது. சாஸ்திரம் பார்க்காமல் சென்றவர் சடுதியில் வந்ததேது ?

(எல்லோருமே சிரிக்கிறார்கள்.)

பாபா :—"பொன்னம்பலம்" என்று பெயர் மாறுட்டமாய் சொல்ல எப்பொழுது படித்துக் கொண்டீர்கள் ?

நீலா :—அத்தான் ! அத்தான் !! அது என் அத்தான் பொன்னம்பலம் என்று சொன்னீர்கள் ?

கனகசபை :—"பொன்னம்பலம்" தான் என் பெயர் நீலா!

சோமசுந்தரம் :—அது என்ன அத்தான் ?
"கனகசபை" என்று வைத்துக் கொண்டு "பொன்னம்பலம்" என்று சொல்லிகிறீரே ! நல்ல வேடிக்கையாக இருக்கிறது அத்தான்.

கனகசபை:—கனகசபை என்றால் என்ன ? பொன்னம்பலம் என்றால் என்ன ? இரண்டும் ஒன்றுதானே, சோமா !

சோமசுந்தரம் :—அதெப்படி யத்தான் இரண்டும் ஒன்று ?

கனகசபை :—கனகம் என்றால் பொன்.
சபை என்றால் அம்பலம்.
தெரிந்துக் கொண்டாயா ? சோமா !

சோமசுந்தரம் :—பேஷ் ! பேஷ் !! மிகவும் புத்தி கூர்மையானது, அத்தான் ! இதை போலவே முதலை சிஷ்யன் கதையும் அற்புதமாய் இருக்குமா ? அத்தான் !

கனகசபை :—சோமா ! அதையும் சொல்லுகிறேன், கவனமாய்க் கேள் !

ஒரு கிராமத்தில் ஒரு பிராமணன் ஒரு நாள் இரவு தன் பெண்சாதியுடன் படுத்திருக்குங் காலையில் மோட்டிலிருந்து துரும்பு ஒன்று விழுந்தது. விழுந்த துரும்பு தானும் பாம்பாகி தூங்கும் பிராமணஸ்திரீயைகடித்தது. உடனே அவள் இறந்தாள். இதை கேட்கும் உங்களுக்கே ஆச்சரியமாயிருக்குமென்றால் கண்ணால் கண்டவனுக்கு உண்டான ஆச்சரியத்தை சொல்வது அசாத்தியம். பிராமணனோ அந்த பாம்பை தொடர்ந்து சென்றான். பாம்போ மாடாய் மாறியது. மாறிய மாடும் இருவரை கொம்பினால் குத்தி தள்ளிமாய்த்தது. மாய்த்தது தானும் பின்னும் நாயாய் உருவெடுத்தது. உருவெடுத்தது தானும் ஒருவன் வீட்டிலும் கடித்துக்கொன்றது. இவ்வித அதிசயங்களை பார்த்து, பிராமணனும் பின் செல்லலானான். என்ன ஆச்சரியம் ! என்ன ஆச்சரியம் !!

(கமலா, நீலா, பாபா, செனபாக்கியம், சோமசுந்தரம் ஆக யாவரும் கண்ணிமையாது கவனமாய்க் கேட்டு வருகிறார்.)
[illegible] கவனமாய் கேட்கிறாயா சோமா !

சோமசுந்தரம் :—நன்றாயிருக்கிறது அத்தான் சொல்லுங்கள்.

கனகசபை :—மாலையோ நெருங்கிற்று. நாயோ கங்கை [illegible]போயிற்று. அந்த நங்கையோ அருகில் இருக்க பூஞ்சோலைக்குச் சென்று கற்பு பூர்த்த ஆண்மை வல்லிக் கொடியாய் மாமரத்தைப்பற்றி நின்றது. இச்சமயம் வேட்டைக்கு சென்றிருந்த அவ்வூர் இராஜகுமாரர்கள் இருவர் இளைப்பாற அங்குவந்து சேர்ந்தனர். என்னவிதிவசமோ !

சோமசுந்தரம் :—அது என்ன விதிவசம் அத்தான் ?

கனகசபை :—இவ்விரு இராஜகுமாரர்களில் மூத்தவன் 16 வயதுள்ள பாலகுமாரனதலால், அங்[illegible] [illegible]சம் [illegible] [illegible] [illegible] [illegible]சோலை [illegible]

யினிடை வளர்ந்த கரும்புகளை வில்லாக வாங்கி, அலர்ந்து தோன்றிய மலர்களையே பஞ்சவாளிகளாகப்பூட்டி, அவர்கள் காலடியில் சுறங்கும் கமல ஓடையின் மீன்களையே கொடியாக யுயர்த்தி, அப்புஷ்ப வனத்திடை ஆடல் புரியவந்த காமவேல், அவை அசேதனமென்று இகழ்ந்தே அறிவு மணங்கமழும், மூத்த இராஜகுமாரன் மனதையே நடனசாலையாக்கி தாண்டவமாடினன். என் செய்வான் ? சோமா !

சோமசுந்தரம் :—இவ்வளவு சாதுர்யமான கதை சொல்வீர்களென்று நான் நம்பவே இல்லை அத்தான்.
(நாங்களும் அப்படிதான் நினைத்தோம் என்று கமலா முதலானோர் சொல்லி, கதையை முடியுங்களென்றார்)

கனகசபை :—கேளுங்கள் ! உடனே அம்மூத்த குமாரன் தன் எதிரில் நிற்கும் நங்கையை பார்த்து ஆ ஆ ! என் கண்டேன் !

அஞ்சனவேல் தடவிழிகள் அருத்தியொடும் கடை நிலவ
கஞ்சமுகை கடிகமழக் கன்றுடைந்து விரிந்த தெனச்
செஞ்சவிசேர் திலகமணி செழுமதியா வதனமிசை
விஞ்சும் எழில் இளமுறுவல் விளைக்குமு யான் கண்டேனே.

"சாந்து அணிந்து திருந்திய அவளது இளமுடி தோள் மீதுவீழ மருண்ட நோக்குடைய மையுண்ட கண்களினின்றும் அன்பு பெருக, [illegible] சிறியாய் அடுக்கிய முல்லை யரும்புகள் தோன்ற அவளது செவ்விதழ்கள் மந்தஹாசம் புரிய, பிறையையொன்ற நுதலினிடை சிந்தூரம் இலங்கயான் கண்ட இவ்வணங்கனார் முகத்தை எதற்கு ஒப்பிடுவேன்.' என்ற அளவில் அவ்விசித்திர நங்கை அவ்விராஜகுமாரனை நோக்கி கலைகடல் குடைந்து செருக்கிவர்த்த புலவோரன்னும் போர் களிறுகளை எல்லாம் பிளிறுபட வெட்டிய கவிச்சிங்கமே ! உன் [illegible] வழிப்பட்டார்பால் உள்ள அறியாமை என்னும் இருள் [illegible] விரிக்கும் ஞானபாஸ்கரனே [illegible] இப்பொழுது என் பசிக்கு சிறிது கனிகளைக் கொண்டுவா. நாமே சென்று கொணர்ந்து [illegible] சேர சித்தமாயிருக்கின்றேன் என்றாள். [illegible]

(ஆ ! ஆ ! கேட்க கேட்க எவ்வளவு இன்பமாயிருக்கின்றது. மறுமுறை இதை சொல்லுவீர்களா அத்தான் என்று சத்தமே பெரிதாயிருந்தது.)

கனகசபை :—கேட்டீர்களா ! பைங்கிளிக்கு சமதையான பாவை யொருவள் 16 - வயது பாலகனை நாடி பணம் ஆபரணம் முதலிய உயர்ந்த வஸ்துக்களைக் கேளாமல் பசிக்கு சிறிது கனிவர்க்கம் கேட்டால் எப்பாலன்தான் மறுப்பான். மறக்கான் ஆதலால் உடனே அவன் தம்பியை அவ்விடம்விட்டு, கனிவர்க்கம் கொண்டுவரச் சென்றான். இவ்வளவு அதிசயத்தையும் பார்த்து கொண்டுதான் இருக்கிறான் தொடர்ந்து வந்த பிராமணன். மற்றொரு இராஜகுமாரனோ தமயன் வாக்கின் படி தான் இருந்த இடத்தைவிட்டு போர்நிலான். தமயனும் கனிகளைப்பறித்து எடுத்து வந்தான். அப்பொழுது இராஜகுமாரனை [illegible] பார்த்து.... [illegible] இராஜகுமாரா ! உன்னுடைய கனியும் வேண்டாம் உன்துணையும் [illegible] பாதகனே உன் தம்பி [illegible] என்று [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] இருவரும் இறந்தனர். [illegible] பாபம் ! பாபம் !! [illegible] [illegible]

கதிரோனும் மறைந்தனன். அப்பெண்ணும் ஒரு பெரிய வராக அங்கிருந்த தடாகத்தின் கரையிற் சேர்ந்து பூசைக்கு தொடங்கிற்று. அதிசயங்களை பார்த்து வந்த பிராமணனே இது தான் சமயம் என்று அவரை அணுகி. ஓ ! உத்தம புருஷரே ! நீர் துரும்பாய் இருந்தது முதல் இது வரையில் அநேக உயிர்களை கொன்று விட்டீரே ! இந்த பாபம் எல்லாம் யாரைச் சாருமென்றான். அதற்கு அவர் யானே தூதன் ; எமதர்மராஜன் கட்டளைப்படி யாம் செய்தோமாதலால் அப்பாவங்கள் எம்மைச் சாராது என்று சொல்ல பிராமணன் ஆனால் எனக்கெவ்விதம் இருந்து என்று கேட்க 85-வது வயதில் (கொள்ளடம்) நதியில் ஸ்னானம் செய்ய அவ்விடத்தில் உன்னை முதலை விழுங்கி விடுமென்று அப்பெரியவர் செல்லக் கேட்டு அவன் தன் வீடு அடைந்து மனைவியை எடுத்து தகனம் செய்துவிட்டு அவ்வூரிலேயே 83-வது வயது வரையில் இருந்து வந்தான்.

கனகசபை :—மரணத்துக்கு தப்பித்துக் கொள்வான் வேறொரு நகரம் போய்ச்சேர்ந்து, அந்த நகரத்து இராஜகுமாரனுக்கு குருவாய் இருந்து கல்வி கற்பித்துக் கொண்டு 84 வயதையும் கழித்தனர். இராஜன் மேற்படி (கொள்ளட) நதியில் ஸ்நானம் செய்யக்கருதி குடும்ப சமேதராய் புரப்படயுத்தேசித்து தன் குமாரனை அழைத்தனர். குமாரனோ குருவராமல் தான்வருவதில்லை என்றான். குருவோ பிராணன் போலும் அவ்விடம் வருவதில்லை என்றார். காரணம் விசாரித்த காலத்தில் தன் மரணபயத்தை வெளியிட்டு வருவதேயில்லை என்றார். இதைக் கேட்டு இராஜன் உமது, ஐயந்திர செய்கிறேன் வாருமென்று மகனையும் குருவையும் அழைத்துக்கொண்டு அந்நதியடைந்து அந்நதியின் குறிப்பிட்ட இடத்தின் இருபக்கத்திலும் ஜலம் புகாமல் அடைத்து இடையிலிருந்த ஜலத்தை இரைத்துவிடச் செய்து, பின்னர் பனைமரம் அவ்வளவு உயரத்திற்கு நூல் இழைப்புகும் இரும்பு கம்பிகளை இருபுரத்தும் நாட்டி அந்த இடத்தில் ஜலம் பிரவேசிக்கச்செய்து, தானும் தன் மனைவியும் ஸ்நானம் செய்து கரையேறினர். பின்னர் மகனை ஸ்நானம் செய்யச்சொல்லினர். குருவராமல் தான் தனியாய் ஸ்நானம் செய்யமாட்டேன் எனவே, குருவும் அவனுடன் இறங்கி ஒரு முழுக்கு முழுகினவுடன் அச்சிஷ்யனே முதலையாகி குருவை விழுங்கி விட்டான். சோமா ! இது தான் முதலை சிஷ்யன் குருவை விழுங்கின கதை. (இதைக் கேட்டு எல்லோரும் சந்தோஷப்பட கனகசபை தன்வீடுபோய்ச்சேர்ந்தான்.)

பூகம்பம்.

கடந்த ஜனவரிமீ 11உ சனிக்கிழமை காலை 9-22-க்கு சிலோனில் பூகம்பம் தொடங்கி $\frac{1}{2}$-மணி சாவகாசம் இருந்ததாம். அடுத்த தினமாகிய ஞாயற்றுக்கிழமை காலை 3-50.க்கு பம்பாய் மாகாணத்தைச்சேர்ந்த குவிட்டாவில், 10-வருஷங்களுக்கு முன் உண்டான அவ்வளவு பயங்கரமான பூகம்பம் உண்டானதாம். அதனால் அவ்விடத்திலுள்ள பெரிய கட்டடங்கள் எல்லாம் சக்கரம்போல் ஆடினவென்றாலும், யாதொரு அபாயமும் நேரிட்டதாக ஏற்படவில்லை. பின்னும் கால்மணி சாவகாசம் கழித்து உபாயமான பூகம்பம் உண்டானதாம். இதனால் கட்டிடங்களுக்கு சொற்ப கெடுதி நேரிட்டதென்றாலும் குவிட்டாவுக்கு வட கிழக்காயுள்ள, வடமேற்கு இரயில்வே (N. W. Railway) யைச் சேர்ந்த சிந்ட் பிஷின் (Sind Pishin) பாதையில் ஷாரிக் (Sharigh) என்னும் இடத்திலிருக்கும் இரயில்வே கட்டடத்தின் பாதிபாகம் இடிந்து விழுந்து விட்டதாம். பிராணச்சேதமாவது காயமாவது நேரிடவில்லை என அறிய சந்தோஷப்படுகிறோம். இவ்விடத்திற்கு கொஞ்சம் தூரத்தில் நெருப்பு இடி விழுந்ததாகவும் சமாசாரம் எட்டுகிறதென டயம்ஸ் ஆப் இந்தியா (Times of India) பத்திரிகை கூறுகிறது.

CASES FROM THE INDIAN LAW REPORTS.

இந்தியன் லா ரிபோர்ட்டுகளிலுள்ள கேசுகள்.

சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டு.

சிவில் அப்பீல்.

ஜட்ஜிகள் { மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநயர்.

1907 அக்டோபர் 25

வெங்கடேஸ்வர ஐயர் (வாதி) அப்பீல் வாதி.
V
இந்தியா ஸ்டேட் செக்ரிடரி (பிரதிவாதி) அப்பீல் பிரதிவாதி.

பிளெயிண்டில் கண்டிருக்கும் நிலங்களுக்கும், சத்திரத்திற்கும், கவர்ன்மெண்டார் பூராவரிவிதிக்க அவர்களுக்கு உரிமை கிடையாதென்பதாக உத்திரவு செய்யும்படி தாவா (திண்டிக்கல் டி. மு. கோர்ட் 1902ளு அசல் வியாஜ்ஜியம் நெ. 473-ல் டி. முனிசிப் அவர்களால் வாதிக்கு அநுகூலமாய் தீர்ப்பு சொல்லப்பட்டது. இந்த தீர்ப்பானது கீழ் கோர்ட்டு (மதுரை டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் கோர்ட்டு 1904ம்ளு அப்பீல் வியாஜ்ஜியம் நெ. 76-92) அப்பீலில் மாற்றப்பட்டது. கீழ் கோர்ட் அப்பீல் தீர்ப்பில் வியாஜ்ஜியத்தின் சகல சங்கதிகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு:—

"திண்டுக்கல் டவுனில் பர்க்கி வேங்கடராவ் சத்திரம் என ஒரு கட்டடம் இருக்கிறது. வாதி இந்த கட்டடத்தின் ஹக்குதாரர். பின்னும், பிராமணருக்கு தர்ம சாப்பாடு போடும்படி, 200 வருஷங்களுக்கு முன் பர்க்கி வெங்கடராவ் என்னும் ஒருவர் தானம் கொடுத்த சில நிலங்களும் வாதியின் வசத்தில் இருக்கின்றன. கிராண்ட்டில் கண்ட நிபந்தனைகள் எல்லாம் நிர்வகிக்கப் பட்டிருந்ததினால் மதராஸ் கவர்ன்மெண்டார் தமது பிரதி நிதியாகிய இனாம் கமிஷனர் மூலமாய் ஷை நிலங்களின் தீர்வையை நீக்கி விடுவதாய் ஒப்புக் கொண்டார்கள். யக்சிபிட் இஜட் (Ex. Z) தான் இனாம் உரிமையை ஸ்திரப்படுத்தும் தஸ்தாவேசு. பின் விசாரித்த காலத்தில் தர்ம கைங்கரியங்கள் செவ்வையாய் பரிபாலிக்கப் படுவதில்லை என்று தெரிந்தால், கவர்ன்மெண்டார் ஷை இனாமை நீக்கி விடத் தீர்மானித்தார்கள். 7-வது யக்சிபிட்டாகிய, (Ex. 7) 1900ளு பிப்பரவரிமீ 13உ யுள்ள நெம்பர். 81, ரிவினியூ போர்ட் புரொசிடிங்ஙிஸில் கவர்ன்மெண்டார் வரி இல்லாமல் இனாம் செய்த ஷை சத்திரத்தின் மனைக்கும் தர்ம நிலங்களுக்கும், பூராய் வசூல் செய்ய உத்தேசித்ததன்னியில், மற்றபடி வாதியை ஷை நிலம் அல்லது சத்திர சுவாதீனத்தி னின்றும் நீக்கிவிட எப்பொழுதும் உத்

தேசித்தது கிடையாதென்பது, ஸ்பஷ்டமாய் தெரிகிறது. அந்த உத்திரவை ரத்து செய்யும்படி வாதி தாவா செய்திருக்கிறார்.''

''இந்த வியாஜ்ஜியத்தில், கவர்ன்மெண்டார் மறுபடியும் கைப்பற்றிக்கொண்டது லாண்டு ரிவினியூவைச் சேர்ந்த கிராண்ட்டு என்பது தெளிவாகிறது. 1871ஹு பென்ஷன் ஆக்ட் 4-வது சேக்ஷனே லாண்டு ரிவினியூ கிராண்ட்டைச் சம்பந்தப்பட்ட எந்த வியாஜ்ஜியத்தையும், எந்த சிவில் கோர்ட்டிலும் பிடிக்கக்கூடாதென்று, ஸ்பஷ்டமாய் கூறுகிறது. லாண்டு ரிவினியூவைப் பற்றிய இந்த வியாஜ்ஜியமானது பென்ஷன் ஆக்ட் 4-வது செக்ஷனில் தான் அடங்குகிறது. ஆதலால் இது விஷயமாய் சிவில் கோர்ட்டுகளுக்கு (ஜூரி டிக்ஷன் அதாவது) அதிகாரம் கிடையாதென்று தீர்மானிக்கிறோம்.''

வாதி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் (1904ஹு 2-வது அப்பீல் கேஸ் நெம்பர் 1612-1613) செய்துக்கொண்டார்.

அப்பீல் வாதி தரப்பில் மெஸ்ஸர்ஸ். கே. ஸ்ரீனிவாஸ அய்யங்காரும், யன். இராஜகோபாலாச் சாரியாரும் ஆஜரானார்கள்.

அப்பீல் பிரதிவாதி தரப்பில் கவர்ன்மெண்ட் பிளீடர் ஆஜரானார்.

ரூலிங்ஸ்:—பிராமணாளுக்கு தர்மத்துக்கு சாதம் போடும்படியாக, 200-வருஷங்களுக்கு முன் பார்க்கி வெங்கடராவ் என்னும் ஒருவரால் தன் முன்னோர்களுக்கு மான்யம் விடப்பட்டதும், தான் சுவாதீனத்திலுள்ளதுமான சில நிலங்களுக்கு பூரா வரி போட்டிருக்கும் கவர்ன்மெண்ட் ஆர்டரை விலக்கும்படி வாதி தாவா செய்திருக்கிறார். கிராண்ட்டின் நிபந்தனைகள் சரிவர அனுஷ்டிக்கப்படும் வரையில் (குயிட் ரெண்ட் அதாவது) நிலவரி தவிர மற்றபடி இனாமாய் அனுபவிக்கும்படி வாதியினுடைய முன்னோர்களில் ஒருவருக்கு, இனாம் கமிஷனர் கொடுத்திருக்கும் இனாம் ஊர்ஜித பத்திரமானது, அதை பெற்றுக்கொண்டவருக்கும் அவர் சந்ததியாருக்கும் இனாம் பாத்தியதையை ஸ்தாபிக்கிறது. கீழ் அப்பீல் கோர்ட்டார் 1871ஹு 23-வது ஆக்ட்டுக்குள் அடங்கும் கேசுகள் கோர்ட்டார் பிடிப்பதற்கு, அதிகாரம் கிடையாதென அபிப்பிராயப் பட்டார்கள். இந்த கோர்ட்டாரால் விசாரிக்கப்பட்ட, இந்தியா ஸ்டேட்செக்ரிடரி ν. அப்தல் ஹக்கிம் மகான் (இ-லா-ரி 2 சென்., 294), கொளந்தை ν. சங்கரா, (இ-லா-ரி 5 சென்., 302), சுப்பிரமணிய ν. இந்திய ஸ்டேட் செக்ரிடரி (இ-லா-ரி, 6 சென்., 361), ஆதவல்லா ν. கௌஸ் (இ-லா-ரி, 11 சென் 283) ஆகிய இந்த கேசுகளில், மதசம்பந்தமான அல்லதுதெய்வத்தன்மையான கைங்கரியத்திற்குறிய மான்யங்கள் பென்ஷன் ஆக்டின் 4-வது செக்ஷனில் அடங்காது என்றும், ஆனால் ஸ்வசியமான கிராண்ட்டுகள். விஷயத்தில் ஷை செக்ஷனை கையாள வேண்டுமென்றும், தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது.

பம்பாய் ஹைகோர்ட்டார், மியாவாலி அல்லா ν. சாயத்பாவா சாந்தியா (இ-லா-ரி, 22 பம்., 496) என்னும் கேசில், பென்ஷன் ஆக்டானது மத விஷயங்களுக்கும் பொருந்தும் என்பதாக தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் இந்தக் கோர்ட்டார், அநேகத் தீர்மானங்களில், வேறான அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்களாதலால், நாங்கள் பம்பாய் தீர்மானத்தை அனுசரிக்க ஆயத்தப்படவில்லை. நமது மூன் எடுத்துக் காட்டப்பட்டதும், பம்பாய் கேசுகளில் அனுசரிக்கப்பட்டதுமான, மஹாரவால் மோஹன் சிங்ஜி ஜேஸ் சிங்ஜி ν. பம்பாய் கவர்ன்மெண்ட் (L. R. 81 A., 77) என்னும் கேசின் பிரிவி கௌன்சல் தீர்மானமானது, இந்தக் கோர்ட்டின் அபிப்பிராயத்திற்கு ஒவ்வாது. என்று நாங்கள் அபிப்பிராயப்படவில்லை. மேல் எடுத்துக்காட்டிய இந்தக்கோர்ட்டின் ரூலிங்ஸ் அதாவது தீர்மானங்களை அனுசரித்து, இந்த கேசைப் பிடிக்க சிவில் கோர்ட்டுகளுக்கு அதிகாரம் (அதாவது ஜூரிஸ் டிக்ஷன்) உண்டு என அபிப்பிராயப்படுகிறோம். அதனாலேயே கீழ்க் கோர்ட்டு அப்பீல் தீர்மானத்தை ரத்துசெய்து, டிஸ்டிரிக்ட் ஜட்ஜிக்கு, இந்தக் கேசை முன்போல தன்னுடைய பைலுக்கு எடுத்துக்கொண்டு விசாரிக்கும்படி உத்திரவு செய்திருக்கிறோம். இந்த கோர்ட்காஸ்டை பெற்றுக் கொள்ள அப்பீல்வாதி உரிமைப்பட்டிருக்கிறான். அப்பீல் வாதியின் கிழ்க்கோர்ட்டுக் காஸ்டுகள், இனி ஏற்படும் கீழ் கோர்ட்டுத் தீர்ப்பில் கொடுக்கப்படும். -இ. லா. ரி., 31 சென்., 12.

சிவில் அப்பீல்.

ஜட்ஜிகள் { மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன். மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

1907 செப்டம்பர் 3

பெரிய கருப்பப்பிள்ளை (வாதி)-அப்பீல் வாதி.

V.

சிவகங்கை ஜமீன் இஜாரர்தார்களின் மானேஜர் (பிரதிவாதி)-அப்பீல் பிரதிவாதி.

ரேண்ட் ரிகவரி ஆக்ட், 18-வது செக்ஷன்படி தீர்வை ஜப்தியை ரத்துசெய்யும்படி தாவா.

வாதி:—சிவகங்கை ஜமீனைச் சேர்ந்த திருபுவனம் என்னும் கிராமத்தின் குடியானவன். பிரதிவாதி இஜாரர்தார்களின் மானேஜர்.

வாதிக்கு அந்த பசலியின் பட்டா கொடுக்கப்பட்டது; ஆனால் வாதி அந்த சமயம் ஆஜரில்லாததால் நேரில் கொடுக்கப்படவில்லை. பின் பட்டாவில் கண்ட ஏற்பாட்டுகளின்படி தீர்வை கேட்கப்பட்டது. வாதி தீர்வை செலுத்தவில்லை. பிரதிவாதி ரேண்ட் ரிகவரி ஆக்ட்படி வாதியின் சொத்துக்களை ஜப்திசெய்தார்.

வாழைக்கும் இன்னும் இதர சாகுபடிகளுக்கும் விதித்த தீர்வை சாஸ்தியானபடியால் ஜப்தியை

ரத்து செய்யவேண்டுமென்று இராமநாதபுரம் ஹெட் அஸிஸ்டண்ட் கலெக்ட்டரிடத்தில் (1904ஹு சம்மரி சூட் நெ. 221) தாவா செய்தார்.

சொத்துக்களை ஜப்தி செய்ததற்கு ஆதாரமான பட்டாவில் கண்டிருக்கும் அநேக அம்சங்களின் தீர்வை அதிகமாய் இருப்பதைக்கண்டு, அடியில்கண்ட உத்திரவு செய்தார்.

"இஸ்யூ 13—பிரஸ்தாப டிமாண்டானது திருத்தமானதும் தகுதியானதும் தானோ?

இது விஷயமானது—(1) டிமாண்டுக்கு ஒற்றுமையான பட்டா திருத்தமானதா? (2) அப்படி டிமாண்டுடன் ஒவ்வாமலிருக்கிற தென்பதற்கு நியாயமான காரணங்களிருக்கின்றனவா? என்னும் இவ்விரண்டு அம்சங்களையும் பொருத்திருக்கின்றது. நியாயமாய் கட்டி வாங்கக்கூடிய வட்டி விஷயம் தவிர மற்ற விஷயங்களுக்கு அக்கிரிமண்ட் அதாவது ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. முன்னதாக சுட்டிக் காட்டப்பட்ட திருத்தங்கள் பட்டாவில் செய்யவேண்டியது; அதை அனுசரித்தே டிமாண்டும் கொண்டுவரவேண்டும். அந்த டிமாண்டில் ஏற்படக்கூடிய தொகை யளவுக்கு ஜப்தி செல்லுபடியானது"

இதன்மேல் வாதி மதுரை டிஸ்டிரிக்ட் ஜட்ஜிக்கு (1905ஹு அப்பீல் சூட் நெ. 315) அப்பீல் செய்துக்கொண்டார். டிஸ்டிரிக்ட் ஜட்ஜ், சிலவற்றைத் திருத்தி தாம் திருத்தியபடி ஏற்படக்கூடிய தொகையளவுக்கு ஜப்தி செல்லுபடியானது என தீர்ப்பு செய்தார்.

இதன்மேல் வாதி ஹைகோர்ட்டுக்கு (1906ஹு இரண்டாவது அப்பீல் நெ. 472) அப்பீல் செய்துகொண்டார்.

வாதி தரப்பில் டி. ரங்காச்சாரியாரும், பிரதிவாதி தரப்பில் கனம் அட்வகேட் ஜனரலும், கனம் மிஸ்டர் பி. எஸ். சிவசாமி அய்யரும் ஆஜரானார்கள்.

ஜட்ஜிமெண்ட்:—நியாயமாய் சேரவேண்டிய தீர்வைக்கு மேற்கொண்டத் தொகைக்கு ஜப்தி செய்திருப்பதாக கண்டுபிடித்த கோர்ட்டார், பிரஸ்தாப ஜப்தியை சட்ட பொருத்தமானதல்லவென்று ரத்து செய்திருக்க வேண்டுமென்ற, அப்பீலுக்கு ஆதாரமான ஒரு விஷயமே வாதிக்கப்பட்டது. இதற்குத்துணையாய், இ. லா. ரி. 26, சென். 260. பிச்சு ஐயங்கார் v. அலிவர், வாதி தரப்பில் எடுத்துக்காட்டப்பட்டது. அந்த கேஸ் விக்கிரயத்தை பொருத்தது; ஆகலால் அதிகமாய் டிமாண்ட் செய்யப்பட்ட தொகையை செலுத்த குடியானவனால் முடியாமல் போய்விட்டது என்றாலும், நியாயமாய் சேரவேண்டிய தொகைக்கு டிமாண்ட் செய்யப்பட்டிருந்தால், அந்ததொகையை, அவன் செலுத்தி விக்கிரயத்தைத் தடுக்க சாத்தியப்பட்டிருக்கலாம் என்னும் காரணத்தால், விக்கிரயம் ரத்து செய்யப்பட்டது. இந்த பிரஸ்தாப கேசோ, ஜப்தியே யல்லாமல் மற்றபடி அதைப்போல் விக்கிரயம் அல்ல. ஜப்திக்கும் விக்கிரயத்திற்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது. ஜப்தியில் குடியானவன் செலுத்தவேண்டிய தொகைக்கு பொருப்பாக மாத்திரம் அவனுடைய சொத்துக்கள் எடுக்கப்படுகின்றன. அதிலும், அதிக ஜப்தியாய் இருந்தால், அதை கலெக்டருக்குத் தெரிவித்துக்கொள்ளலாம். விக்கிரயத்தில் குடியானவனுடைய சொத்து மற்றொருவனுடைய வசத்தில்போய் விடுகிறது. இக்காரணங்களால், இந்தக் கேசிலிருந்து பிச்சு அய்யங்கார் V. அலிவர் கேசு பேதப்படுத்தக் கூடும் என நினைக்கிறோம். பின்னும், இந்தக் கேசு-இ. லா. ரி. 10 சென்னை. 229 ராமச்சந்திரா v நாராயணசாமி கேசின் தீர்மானமாகிய "கிஸ்தி பாக்கிக்காக சட்டப்படி செய்யப்படும் ஜப்திசெல்லாவணியாகாதென்று சொல்ல யாதொரு காரணமுமில்லை" என்றும், தெளிவான பிரமாணத்தால் தீர்க்கப்பட்டிருக்கிறது. இ. லா. ரி. 23 சென்., 268 பூபதிராஜு v ராமசாமி கேசிலும், இதே அபிப்பிராயம் கொள்ளப்பட்டது. இந்தத் தீர்மானங்கள் வாதி வக்கீலால் எடுத்துக் காட்டப்பட்ட, இ. லா, ரி. 25 சென்., 613 ஷண்முக முதலி v பலநாட்டி குப்பு செட்டி கேசாலாவது அல்லது இ. லா. ரி. சென்., 465, நெல்லியப்ப பிள்ளையான் v அம்பலவாண பண்டாரசன்னதி கேசாலாவது, ரத்து செய்யப்படவில்லை. பின்னும் வாதி தரப்பு வக்கீலால் எடுத்துக் காட்டப்பட்ட இ. லா. ரி. 29 சென், 75. வாமதேவ தேசிகர் v. முருகேச முதலி கேசானது, மேல் எடுத்துக் காட்டப்பட்ட நான்கு கேசுகளுக்காவது பிரஸ்தாப கேசுக்காவது பொருத்தமானதல்ல. ஏனென்றால் அந்தக்கேசில் பட்டா மாற்றப்பட்டிருக்கிறது. இந்தப்பிரஸ்தாபக் கேசில் பட்டாவானது கோர்ட்டாரால் மாற்றப்படவில்லை. ஆனால் பட்டாபடி கணக்கிடப்பட்ட கிஸ்திபாக்கி பிசகாயிருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டு சரியான கணக்குபடி ஏற்படும் தொகையளவுக்கு ஜப்தி செலாவணியாக்கப்பட்டது. ஆதலால் அப்பீலை தள்ளிவிட்டு பிரதிவா[illegible] காஸ்ட்டை கட்டிக் கொடுக்கும்படி தீர்மானிக்கி[illegible] இ. லா. ரி. 31. சென், 22.

I. L. R., 10 Mad., 229.
"There is no reason why the attachment should not hold good for the amounts as may be recoverable under the Act."

LAW OF CONT[illegible]T.

(Specially contributed to the Indian Law Gazette by Mr. W. V. Runagsawmy Iyengar, B. A., B. L., High Court Vakil, Madras.)

காண்டிராக்ட் லா.

ஆங்கிலேயர்களால் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற கோர்ட்டுகளில் அனுசரிக்கிற லாவின் முக்கியமான ஒரு பிரிவுக்கு லா ஆப் காண்டிராக்ட் என்று பெயர். அதாவது வுடன்படிக்கைகளை சேர்ந்த லா. எல்லா வுடன்படிக்கைகளும் காண்டிராக்ட் ஆகுமா? ஆகாது. கோர்ட்டாரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட

வுடன்படிக்கைகளுக்கு காண்டிராக்ட் என்று பெயர். ஏற்றுக்கொள்ளுதல் என்றால் ஒப்புக்கொண்ட உடன்படிக்கையை செய்யத் தவறினால் எவனிடத்தில் ஒப்புக்கொண்டானோ அவன் கோர்ட்டில் தாவா செய்து பரிகாரம் பெறுவானாகில் அப்பொழுது தான் அந்த உடன்படிக்கையை கோர்ட்டார் ஏற்றுக்கொண்டதாக சொல்லப்படும். ஆனால் எப்படிப்பட்ட வுடன்படிக்கையை கோர்ட்டார் ஏற்றுக்கொள்ளுவார் என்றுகேட்டால், அப்படிப்பட்ட வுடன்படிக்கைகளுக்கு பொது லக்ஷணம் சொல்வது கஷ்டம். கோர்ட்டார் புத்திக்குத் தோன்றியபடி தீர்ப்புசெய்யவேண்டியது. உதாரணமாக, நான் ஒருவனை விருந்திற்கு அழைக்கிறேன். அவனும் வருவதாக ஒப்புக்கொள்ளுகிறான். ஆனால் வர தவறிப்போகிறான். செய்துவைத்த பண்டங்கள் பாழாய் போகின்றன. இந்த வுடன்படிக்கையை கோர்ட்டார் ஏற்றுக்கொள்வார்களா? நான் தாவா செய்தால் எனக்கு ஏதேனும் பரிகாரம் கிடைக்குமா? கோர்ட்டார் ஏற்றுக்கொள்ளவு மாட்டார்; பரிகாரமும் கிடைக்கமாட்டாது. காரணம், ஒருவனை விருந்திற்கு அழைக்கும்போது நாம் அவனிடத்தில் வராததற்கு பரிகாரம் கோறும் எண்ணத்துடன் அழைப்பதில்லை.

உடன்படிக்கை என்றால் என்ன? அதை எப்படி உண்டாக்குவது? இவைகளைப்பற்றி சற்று விசாரிப்போம். உடன்படிக்கை என்றால் பிரிதிபலனுடைய ஒரு வாக்குத் தத்தமாம். பிரதிபலனாவது காண்டிராக்ட் ஆக்ட் இரண்டாவது செக்ஷன் பிரகாரம், "வாக்குத்தத்தம் செய்யப்படுகிறவனாவது வேறே எவனாவது ஏதோ ஒன்றை செய்திருந்தாலும் செய்யாதிருந்தாலும், செய்தாலும் செய்யாவிட்டாலும், செய்யவாவது, செய்யா தொழியவாவது வாக்குத்தத்தம் செய்தாலும், அப்படிப்பட்ட செய்கையாவது செய்யா தொழிகையாவது வாக்குத் தத்தமாவது அந்த வாக்குத்தத்தத்திற்கு பிரதிபலன் என்று சொல்லப்படுகிறது." ஆகையினால் பிரதி பலன் செய்தலாவது செய்யா தொழிதலாவது இருத்தல் வேண்டும். அ[illegible]க்காலத்திலும் இருக்கலாம்: அதாவது முந்தியே[illegible]திருக்கலாம், தற்காலம் நடத்தலாம். இனிமே[illegible]வதாக வாக்கு தத்தம் செய்யலாம். அன்றியு[illegible]த்தம் செய்யப்படுகிறவனே அதை நடத்த[illegible] என்கிற அவசியம் இல்லை. வேறு யாராவது நடத்தலாம். வாக்குத்தத்தமாவது ஒருவன் ஒரு பிரேரேபனைசெய்து மற்றொருவனால் அங்கீகரிக்கப்பட்டால் அது ஒரு வாக்குத்தத்தம் ஆகிறது. பிரேரேபனை என்றால் காண்டிராக்ட் ஆக்ட்டு இரண்டாவது செக்ஷன் பிரகாரம் "ஒருவன் யாதொரு காரியத்தை செய்யவாவது செய்யாமல் இருக்கவாவது இஷ்டம் கொண்டு அப்படி செய்வதற்காவது செய்யாமல் இருப்பதற்காவது வேறொருவனுடைய அனுமதியை பெறவேண்டும் என்கிற எண்ணத்தோடு தன்னுடைய இ[illegible]த்தை அந்த வேறொருவனுக்குத் தெரிவிக்கும்போது அவன் பிரேரேபனை செய்கிறதாக சொல்லப்படுகிறான்." அங்கீகரித்தல் என்றால் பிரேரேபனைக்கு ஒப்புகொள்ளுதல்.

பிரேரேபனை வெளிப்படையாயும் செய்யலாம், உள்படையான செய்கைகளினாலும் செய்யலாம். அதேமாதிரி அங்கீகரித்தலும் இரண்டுவிதம் உண்டு. வெளிப்படையாய் செய்வதற்கு உதாரணம் நான் என்னுடைய குதிரையை 50-ரூபாயிக்கு விற்க போகிறேன். நீ வாங்கிக்கொள்ளுகிறாயா என்று ஒருவனைப் பார்த்து நான் சொன்னால் அது வெளிப்படை பிரேரேபனையாகும். இதற்கு மற்றொருவன் நான் 50-ரூபாயிக்கு வாங்கிக்கொள்ளுகிறேன் என்றால் இது வெளிப்படை அங்கீகரித்தல். உள்படை பிரேரேபனைக்கும் அங்கீகரித்தலுக்கும் உதாரணம்: ஒரு கடைக்குப் போகிறோம். ஒரு சாமான் வாங்கிக்கொள்கிறோம். கடைக்காரனும் கொடுக்கிறான். அவன் ஒன்றும் வாயால்சொல்லாத போனபோதிலும் அதன்விலையை நாம் அவனுக்கு கொடுக்கவேண்டியது. ஏனென்றால் கடை வைப்பதில் கடைக்காரன் உள்படையாய் சரக்கின் கிரயத்திற்கு, விற்பதாக பிரேரேபிக்கிறான். நாம் அதை எடுத்துக்கொண்டால் அதற்குள்ள விலையை கொடுப்பதாய் நாமும் உள்படையாய் அங்கீகரிக்கிறோம். பிரேரேபனையும் அங்கீகாரமும் தெரியப்படுத்தினால் ஒழிய உடன்படிக்கையாகாது. ஒருவன் தன் குதிரையை 5()-ரூபாய்க்கு விற்பதற்கு தயாராய் இருக்கிறான். அதை வெளிப்படுத்தாவிட்டால் பிரேரேபனையாகாது. அதே மாதிரிதான் அங்கீகாரமும். ஆனால் தெரியவந்த காலத்தில் தான் பிரேரேபனையும் அங்கீகாரமும் பூர்த்தியாகிறதாவென்றால் அதற்கு காண்டிராக்ட் ஆக்ட் 4-வது செக்ஷன்பதில் சொல்லுகிறது "எவனுக்கு யாதொரு பிரேரேபனை தெரிவிக்கபடுகிறதோ அவனுக்கு அது தெரிய வரும்போது அந்த பிரரேபனை தெரியப்படுத்துவது பூர்த்தியாகிறது. அங்கீகாரத்தை தெரியப்படுத்துவது:—அங்கீகரிப்பவனுடைய சுவாதீனத்திலிருந்து ஒழியும்படியாக அது பிரேரேபிப்பவனுக்கு அனுப்பப்படும் தோரணையிலிருக்கையில், பிரேரேபிப்பவனை உடன்படுத்தும்படிக்கும் அதுபிரேரேபிப்பவனுக்கு தெரிய வருகையில் அங்கீகரிப்பவனை உடன்படுத்தும்படிக்கும் பூர்த்தியாகிறது." அதாவது நான் ஒருவீட்டை விற்பதாக மற்றொருவனுக்குக் கடிதம் எழுதினால் அந்த கடிதம் அவனுக்கு சேர்ந்தவுடன் நான்செய்த பிரேரேபனை பூர்த்தியாயிற்று. அவன் நான்செய்த பிரேரேபனையை கடிதமூலமாய் அங்கீகரித்தால் அந்த கடிதத்தை எனக்கு தபாலில் போட்டவுடன் அந்த அங்கீகாரம் என்னை உடன்படுத்தும்; தபால் என் கைக்குவந்து சேர்ந்தவுடன் அவனை உடன்படுத்தும். உடன்படுத்தின காலத்தில் பூர்த்தியாகிறது. நாம் இப்பொழுது சொன்னதை சுருக்கமாய் சொன்னால்;—பிரேரேபனை அங்கீகரிக்கப்பட்டால் வாக்குத்தத்தம். வாக்குத்தத்தத்திற்கு பிரதி பலன் இருந்தால் உடன்படிக்கை. உடன்படிக்கையைக் கோர்ட்டார் ஏற்றுக்கொண்டால் காண்டிராக்ட். (தொடர்ச்சியுண்டு.)

P. RAJARATHNA MUDALIAR AVERGAL, B.A.,
3RD PRESIDENCY MAGISTRATE, G. T., MADRAS.

பி. ராஜரத்தின முதலியார் அவர்கள், பி. எ.,
பிரிஸிடென்ஸி மூன்ருவது மாஜிஸ்ட்ரேட், சென்னை.

THE GUARDIAN PRESS, ARTISTIC PRINTERS, MADRAS.

14 NOV 1908

...ட்ட கெஜட்.

... வெளியிடப்படும்

பாகம் 4.

...ஸ்ரீ பி. ராஜரத்தின முதலியார், பி. எ., ...
மதராஸ்.

... கொடுக்க சக்தியின்மைக்குரிய ஆக்ட் (ப்ரொவின்ஷியல் இன்சால் ... —Act III of 1907) ... ...

... ...

... ...

... ஸ்டாம்ப் ... ...

... திருக்களிலுள்ள ... சென்னப்பட்டண ... 1908 ...

... தீர்மானங்கள் ... ...

OFFICE OF THE REGISTRAR
14 NOV 1908
MADRAS.

இந்திய சட்ட கெஜட்.

சென்னை யன். இராதாகிருஷ்ண கம்பெனியாரால் வெளியிடப்படும்
உயர்தர மாதாந்த சஞ்சிகை.

வால்யம் **3.** சென்னப்பட்டணம், **1908**ஞு ஏப்ரல் மாதம். பாகம் **4.**

அடக்கம்.

பக்கம்.

ம-ா-ா-ஸ்ரீ பி. ராஜரத்தின முதலியார், பி. ஏ., திருவுருவப்படம் ப்ரெசிடென்ஸி மாஜிஸ்த்ரேட், மதராஸ்.

1. வெளிமாகாணங்களில் கடன் கொடுக்க சக்தியின்மைக்குரிய ஆக்ட் (ப்ரொவின்ஷியல் இன்சால் வென்ஸி ஆக்ட்—Act III of 1907) 83

2. கேசுகளின் குறிப்புகள் 87

3. படங்களுடன் போலீஸ் வர்த்தமானம் 88

4. கேசுகளின் குறிப்புகள்—முக்கியமான ஸ்டாம்பு பிரசனை 90

5. பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1908-ஞு 1-வது ஆக்ட் அட்டவணை 91

6. முக்கியமான தீர்மானங்கள் 98

NOTICE.

Contributions other than original are neither invited nor required.

All literary contributions and books for Review should be addressed to Mr. V. NATHAMUNI MUDALIAR, late Tamil Bench Clerk, High Court, Appellate Side, Madras, Editorial Staff, *Indian Law Gazette,* Madras.

OURSELVES.

நம் பத்திரிகை.

நமது இந்திய சட்டகெஜட்டுக்கு சந்தாதாரர்களாகிய நேயர்களுக்கு அறிவிப்பது யாதெனில்,—

பிரதமத்தில், இப்படிப்பட்ட சட்டகெஜட்டை பிரசுரித்து நம்முடைய நண்பர்களுக்கு சட்டஞானத்தை போதித்து அப்போதைக் கப்போது அவ்வவ்விடத்திய நியாயஸ்தலங்களில் நம்மையாளும் துரைத்தனத்தாரால் செய்யப்பட்டுள்ள சட்டதிட்டத்தை சரியாய் பரிசீலனை செய்து ஏற்படும் தீர்மானங்களில் மிக்க முக்கியமானவைகளை ஜனங்களுக்கு அறிவித்து வரவேண்டுமென்கிற கருத்துடன் தற்காலம் சட்டஞானமில்லாத பிரஜைகளுக்கு உண்டாகும் கஷ்டதுக்கங்களும் இன்னும் அநேக இடையூறுகளும் நீங்கி ஜனங்கள் சுகமடையும்பொருட்டும் இவ்விதமான முயற்சி செய்து இங்கிலீஷ் பாஷையில் தவிர இவ்விந்தியா தேசத்தில் வழங்கிவரும் மற்ற எந்தபாஷைகளிலும் வெளியாகாத சட்டஞானத்தை அறிவிக்காமலிருப்பதைக் கண்டு இந்த சட்டகெஜட்டு செந்தமிழ் பாஷையில் எழுதி வெளியாய் வருகின்றது என்கிற விஷயம் யாவரும் அறிந்த விஷயமே. இதில் சட்டஞானத்தை விசேஷித்து போதிப்பதுமில்லாமல் பிரதி சஞ்சிகையிலும் சட்டத்தை நன்றாய் கற்றுணர்ந்த சீமான்களின் திருவுருவப்படமும், அவர்களுடைய சரித்திரத்தையும் பிரசுரித்து வருவதுடன் இந்த சஞ்சிகையில் 88, 89-வது பக்கங்களில் அச்சிட்டிருக்கும் படங்களைப் (Illustrations) போலவே இனிமேல் பிரதிமாதத்தின் ஒவ்வொரு சஞ்சிகையிலும் முக்கியமான போலீஸ் முதலிய வர்த்தமானங்களுக்குத் தகுந்த படங்களுடன் (Illustrations) பிரசுரித்து வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கின்றோம். இந்த சட்டகெஜட்டினால் ஜனங்களுக்கு உண்டாகும் நன்மையை அனுசரித்து துரைத்தனத்தாரால் ஏற்படும் சட்டதிட்டங்களையும் கவர்ன்மென்ட் உத்தரவுகளையும் யாதொரு கட்டணமின்றி கிரயத்தை பெறாமலேயே நம்முடைய கெஜட் ஆபீசுக்குஅனுப்பிவரவேண்டுமென்று கவர்ன்மென்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். இன்னும் அநேக கற்றுணர்ந்த சீமான்களாகிய ஹைகோர்ட் ஜட்ஜ் மணி ஐயர் முதலிய அநேக கனவான்களும் மதராஸ்மெயில் முதலிய இங்கிலீஷ் வர்த்தமான பத்திரிகைகளிலும் விசேஷித்த அன்பு பாராட்டி இதன் அபிவிர்த்தியைக் கோறி புகழ்ந்து சொல்லி இருக்கிறார்கள் என்னும் விஷயம் முன்னமேயே எல்லோரும் அறிந்த விஷயம் தான். இப்பொழுது, சென்னை ஸிடிஸிவில் கோர்ட்டு ஜட்ஜ், பி. ஏ., பி. எல். ம-ா-ா-ஸ்ரீ, சி. வி. குமாரசாமி சாஸ்திரியார் அவர்களும் இந்த சட்ட கெஜட்டில் மிக்க திடமாய் ஜனங்களுக்கு பிரயோசனகரமுள்ள சட்ட சம்பந்தமான வர்த்தமானங்கள் எழுதப்பட்டு வருகின்றதென்றும், ஜனங்கள் இந்தகெஜட்டில் பிரசுரித்து வருவதை வாசித்து யாதொரு பிழையின்றி விசேஷித்த சட்ட ஞானத்தை அறிவதற்கு இது சிரேஷ்டமான கெஜட் என்றும் புகழ்ந்து கூறியிருக்கிறார்.

Public Department

ORDER :—R. No. 633
Dated 5–11–06.

"The Superintendent, Government Press, will be directed to supply to the Editor of the *Indian Law Gazette*, George Town, Copies of all proceedings of Government laid on the Editor's Table.

DEVONSHIRE HOUSE, 8–9–06.

The Hon. Justice Sir S. Subramania Iyer, B.L., K.C.I.E., Dewan Bahadur, writes :—

" . . . . This Journal will prove useful to those who are unacquainted with English in the Tamil districts . . . . To show that I am not insensible of the efforts you are making to convey legal information to those who cannot obtain it through English publications I enclose herewith a cheque which I trust you will accept . . . ."

M.R.Ry. C. V. Kumarasawmy Sastriar Avergal, B. A., B. L., Judge, C. C. Court, writes:—

" . . . . . . I have gone through some of the parts of the *Indian Law Gazette* and am of opinion that the articles are well written and the issues contain *accurate and useful information.* I am sure that the public will find the Law Gazette *an excellent means of getting accurate information on legal topics.* Trusting that your venture will meet with success it deserves.

இதுவுமல்லாமல், புதுக்கோட்டை சமஸ்தானத்தின் திவான் பி. ஏ., பி. எல். ம-ா-ா-ஸ்ரீ, வெங்கடராமதாஸ் நாயுடுகாரும் அவர் எழுதிய 1906-ம் ஹு த்திய 2270-வது நெம்பர் லெட்டரில் "இது மிக்க உசிதமான தமிழ்சட்டசஞ்சிகை. புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள சீப் கோர்ட்டில் ஆங்கிலேய பாஷை தெரியாத ப்ளீடர்கள் இந்தசட்ட கெஜட்டுக்கு சந்தாதாரர்களாகச் சேர்ந்து இதை வாங்கி வாசித்து வரவேண்டுமென்று அறிவித்திருக்கிறார்."

M. R. Ry. Venkataram Doss Naidu Garu, B. A., B. L., Dewan of Pudukotta writes (Letter, No. 2270 of 1906):—

" Your Magazine . . . .
. . . .
those pleaders of the Chief Court who do not know English have been advised to subscribe for the same."

நமது கெஜட்டை வெளி அச்சாபீசுகளில் அச்சிட்டு வருவதினால் உண்டாகும் சஷ்ட நஷ்டங்களையும், தவக்கங்களையும் அனுசரித்து நமது கெஜட்டுக்காகவே பிரத்தியேகமாய் ஒரு அச்சாபீசு வைத்துக்கொண்டால் இப்பொழுது நேரிட்டுவரும் தவக்கங்கள் நீங்கி பிரதிமாதமும் சரியாய் கெஜெட்டை வெளிப்படுத்திவரலாமென்கிற சிரத்தையுடன் அச்சாபீஸ் ஏற்பாடுகள் செய்துவருகின்றோம். ஆகையால் இனிமேல் தவக்கமின்றி அந்த அந்த மாதத்திய கெஜட்டு கிரமமாய் பிரசுரித்து வரப்படுமென்று திடமாய் கூறுகிறோம். இந்தியசட்ட கெஜெட்டின் விஷயமாய் நம்முடைய நேயர்கள் சகாயம் செய்யவேண்டுமென்கிற விசுவாசத்துடன் எவ்வளவு சந்தாதாரர்களைச் சேர்ப்பித்து அபிவிர்த்தி செய்கிறார்களோ அவ்வளவு தீவரமாய் மாதம் இருமுறை கூட தமிழ் பாஷையில் மாத்திரமல்லாமல் இன்னும் இதர பாஷைகளிலும் வெளியாகிவரும். நாம்முன் அச்சாபீஸ்சம்மந்தமாய் அறிவித்திருந்தபடி நம்முடைய சந்தாதாரர்களில்,சொற்ப நபர்கள் தவிர விசேஷமாய் அநேகர் மிக்க அன்புபாராட்டி விசுவாசத்துடன் இதுவரையிலும் புது வருஷத்திய சந்தாவிற்காக வி. பி. மூலயமாய் ஆர்டர் அனுப்புவதை விட்டு பிரதமத்திலேயே மணி ஆர்டர்கள் செய்ததற்காக அவர்களுக்கு மிக்க வந்தனம் அளிக்கின்றோம். இதுவுமல்லாமல் அப்படி ஆர்டர் அனுப்பாமலிருக்கும் இதர சந்தாதாரர்களும் உடனே ஆர்டர் அனுப்பி இன்னும் விசேஷமாய் சந்தாதாரர்களைச் சேர்ப்பித்து முதலிலே மணி ஆர்டர் மூலமாய் அனுப்பாவிடினும் வி. பி. மூலமாயாவது தீவரமாய் ஆர்டர் அனுப்பி ஆதரித்து வருவார்களென்று கோறுகிறோம்.

ACT III OF 1907.
THE PROVINCIAL INSOLVENCY ACT, 1907.

வெளிமாகாணங்களுக்காகிய 1907ஹுத்திய ப்ரொவின்ஷியல் இன்சால்வென்ஸி (கடன் கொடுக்க சக்தியின்மை) ஆக்ட்.

இத்தேசத்தில், கடன் வாங்கியவர்கள் மீண்டும் கடன் கொடுத்தவர்களுக்குச் சேரவேண்டிய தொகைகளை செலுத்த சக்தியற்றுப்போகும் விஷயத்தில், சட்டசம்மதமாய் அவர்கள்பேரில் இத்தேசத்தில் துரைத்தனத்தாரால் ஏற்படுத்தப்பட்டுள்ள நியாயஸ்தலங்களில் சம்மன், வாரன்டு முதலாகிய அமுல்கள் நடத்தி வசூல் செய்வது வழச்கமல்லவா. இது இப்படியிருக்க, கடன்காரர்களுடைய சொத்தின்பேரிலும், நபரின் பேரிலும், வாரன்டுகள் முதலான அமுல்கள் நடத்தி வருவதினால் ஏற்கெனவே ஜனங்களுக்கு கஷ்டமும், துக்கமும், விளைவிக்கின்றதல்லவா. இவ்விதமாய் கடன் வாங்கினவர்களுக்கு விளையும் கஷ்டங்களையும், துன்பங்களையும் ஓர்விதமாய் நீக்குவதற்கு பரிகாரமாய் நிபந்தனைகள் செய்வது யுக்தமமென்று நம்மையாளும் சக்கரவர்த்திக்குத் தோன்றிற்று. அந்த நிபந்தனைகள் தான் இப்பொழுது இன்ஸால்வென்ஸி ஆக்ட் என்று வழங்கி வருகிறது. இப்படிப்பட்ட இன்ஸால்வென்ஸி ஆக்ட் என்னும் ஓர் நிபந்தனை இவ்விந்தியாதேசத்தில் இருந்ததேயில்லை. ஆனால், இதுகாலம் வரையில் கடன் வாங்கினவர்களுக்கு இன்ஸால்வென்ஸி கொடுத்து வருவது எவ்விதமெனில், இங்கிலாந்தில் ஆதிகாலத்தில் உண்டாகிய ஓர் ஸ்டாடியூட் (Statute) டின் பிரகாரம் தானேயொழிய மற்றப்படி இவ்விந்தியாதேசத்தின் இராஜதானிகளில் வேறே நிபந்தனை ஒன்றும் இருந்ததேயில்லை. கடன்கொடுக்க சக்தியற்றுப் போகிறவர்களுக்கு கஷ்ட துக்கங்கள் விளைவிக்காமல் அவர்களை ஆதரிக்கும்பொருட்டு இந்தியாவிலும் ஓர் நிபந்தனை ஏற்படுத்துவது யுக்தமமென்று துரைத்தனத்தாருக்கு தோன்றியது.

ஏனெனில், சொற்ப தினங்களுக்குமுன் விசேஷமாய் பெருந்தொகைகளில் ரொக்க லாவாதேவிகளும், பெரும்படியாய் பலவித சரக்குகளிலும் அநேக நூற்றூண்டாய் வியாபாரம் செய்துகொண்டு வந்தவர்களாக ஜனங்களுக்கு மதிப்புள்ள பெரும் கம்பெனியாராகிய அர்பத்னட்டாரும், இன்னும் சில பெரிய வியாபாரிகளும், குடிகளும், தாங்கள்வாங்கிய கடன்களை கொடுக்க சக்தியற்றுப்போன மாதிரியாய் இன்னும் அநேக குடிகள் இவ்விதமாய் கஷ்டப்படுவார்களெனக் கருதி, அவர்களை ஆதரிக்கத் தகுந்த பரிகாரங்கள் செய்ய யுக்தமமான நிபந்தனைகள் இதுவரையில் வெளி நாடுகளில் இல்லாமையால், இந்த 1907, ப்ரொவின்ஷியல் இன்ஸால்வென்ஸி ஆக்ட் என்னும் ஓர்சட்டம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அநேக நூற்றூண்டுகளுக்கு முன் இப்படி கடன்கொடுக்க சக்தியற்றுப் போகிறவர்களைப் பற்றி இராஜாங்கத்தார் என்ன நிபந்தனைகள் செய்திருந்தார்கள், அவர்களை எவ்விதமாய் ஆதரித்து வந்தார்கள், என்பதைப்பற்றி சற்றுயூகித்துப் பார்ப்போம். அவ்விதமாய் நிதானிக்குமளவில் அதை விஸ்தரித்துச் சொல்லவேண்டியதாயிருக்கிறதேயன்றி சொற்ப வார்த்தைகளில் சுருக்கிவிடலாமென்பதற்கு இடம் கொடுக்கவில்லை. ஏனெனில், நியாயஸ்தலங்களில் ப்ளீடர்கள் எனபெயர்வகித்துலாயர்களாயிருப்பவர்களுக்கு இச்சட்டம் தெளிவாய் தெரியவராது. அது யாது காரணமெனில், இராஜதானிகளின் முக்கிய பட்டணங்களாகிய, மதராஸ், பம்பாய், கல்கத்தா. கோர்ட்டுகளிலும் இந்த ப்ளீடர்எனபெயர்வகித்தலாயர்மார்கள், கடன்கொடுக்க சக்தியற்றுப் போகிறவர்களாகிய இன்ஸால்வெண்டுகளுக்காக ஆஜராகி வாதிக்க நியாயமில்லையென விதியிருக்கின்றதல்லவா. ஆகையால் தான் இந்த இன்ஸால்வென்ஸி ஆக்டின் நிபந்தனைகள் இவர்களுக்கு சரிவர தெரியாதென்று பின்னும் வற்புறுத்திச் சொல்லலாயிற்று.

"இன்ஸால்வேன்ஸி" என்றால், ஒருவன் தனக்குச் சொந்தமாய் வைத்திருக்கும் சொத்தின் மதிப்பைவிட அவன் கொடுக்கவேண்டிய கடன்கள் அதிகரித்திருப்பதுதான். ஒருவன் தன் கடன்களை மீண்டும் கொடுக்க சக்தியற்றுப்போவது, அல்லது அவன் தன் மனப்பூர்வமாய் செய்திருந்த ஒப்பந்தங்களை நிறைவேற்ற தவறிப்போவது, இவைகளைத் தான் இன்ஸால்வென்ஸியாகிப்போவது என இங்கிலாந்தின் நியாயஸ்தலங்களில் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். (James V. Scott, 53 P. st. 178). தினே தினே நாகரீகம் அதிகரித்துக்கொண்டுவரும் இத்தேசங்களில் இவ்விதமாய் கடன்கொடுக்க சக்தியற்றுப் போகிறவர்களுக்கு ஆதரவாயும், கடன்கொடுத்தவர்கள் மீண்டும் அவர்கள் கொடுத்த தொகைகளை வசூலிக்க பரிகாரமாயும், எவ்விதமான நிபந்தனைகள் செய்வது நியாயமென்றால், அவர்கள் கடன்கொடுக்க சக்தியற்றுப் போகும் பொழுது பின்வருமாறு நடவடிக்கை நடத்துவது தான் ; அதாவது, கடன் கொடுத்தவர்களுடைய க்ஷேமத்தைக்கோறியும், கடன் வாங்கியவர்களின் கஷ்ட துக்கங்களை யனுசரித்தும், (1) கடன்வாங்கினவன் என்ன பெருமானமுள்ளவன் என்று தீர விசாரணைசெய்து பரீட்சித்துப் பார்ப்பது, (2) அவனுக்கு உள்ளசொத்துகளை கிரமமாய் வசூலிக்கவேண்டியவிதமாய் வசூலித்து அப்பொருளை கடன்கொடுத்தவர்களுக்கு நியாயப் பிரகாரம் அவாளவாள் கொடுத்த கடன் தொகைகளின் தாமாஷாவின்படி பாகித்துக்கொடுப்பது, (3) இவ்விதமாய் கடன்வாங்கினவர்களை வாரன்டில் பிடிப்பது முதலான கஷ்ட துக்கங்களிலிருந்து நிவர்த்திசெய்வது, (4) கடன் வாங்கினவர்களுக்கு உள்ள சொத்துகளை வசூல் செய்வதற்காகவேண்டிய சகாயங்கள் கடன் வாங்கினவன் செய்யவேண்டியதென்பதற்கு நியந்தனைகள் செய்வது, (5) கடன் வாங்கினவன் தனக்கு வெளியில் வரவேண்டிய சொத்தை வசூல் செய்வதற்கு வேண்டிய சகாயங்கள் செய்து வரத்தவறினால் அவனை இன்ன சிஷ்டைசெய்து தண்டிக்கலாமென்று நிபந்தனைகள் செய்வது. இவைகள் தான் இன்ஸால்வென்ஸி ஆக்டின் பிரதம கோட்பாடென கூறலாம்.

பூர்வகாலத்தில் கடன்வாங்கியவர்களுக்கு இவ்விதமான நிபந்தனைகள் யாதொன்றும் இல்லாமல், அப்பண்டகாலத்தில் இது விஷயமாயுள்ள ஏற்பாடுகள் குடிகளுக்கு மிகக் குரூரமாகவும் கஷ்டமாகவுமிருந்தனவென்று சட்டத்தை வாசித்துவரும் பாலர்களுக்குத் தெரிந்த விஷயமல்லவா. அப்படிப்பட்ட குரூரமான சட்டதிட்டங்கள் யாதென தீர விசாரிப்போமாகில், அக்காலத்தில் ஒருவன் கடன் கொடுக்க சக்தியற்றுப்போனவுடனே அவனுக்கு கடன்கொடுத்தவர்கள் அவனை என்ன செய்யலாமென்று அவர்கள் புத்திக்குத் தோன்றுகிறதோ அவ்விதமாகவே அவன்பேரில் நடவடிக்கைகள் நடத்திக்கொள்ள கடன்கொடுத்தவர்களுக்கு விசேஷ அதிகாரங்கள் கொடுத்திருந்தன. அநேக நூற்றூண்டுகளுக்குமுன் "The Twelve Tables" என ஓர் சட்டம்

ரோமன் தேசத்தில் வழங்கி வந்ததாம். அதிலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் கடன் கொடுத்த ஒருவன் கடன் வாங்கினவனுடைய சொத்தை விற்றுக்கொள்ளலாம், அல்லது அச்சொத்தை அவன் நினைத்தவண்ணம் விநியோகம் செய்யலாம்; இம்மாதிரியாகவே Julius Caesar என்னும் அரசனுடைய அரசாட்சிவரையில் நடந்தேறி வந்தது. இவ்வரசனுடைய காலத்தில்தான் கடன்கொடுக்க சக்தியற்றுப்போகும் இன்ஸால்வெண்டுகளுக்கு ஓர் சட்டம் செய்யவேண்டுமென்பது யுக்தமாகத்தோன்றி இவ்விஷயத்தில் சட்டம் ஏற்படுத்தினார்கள். அச்சட்டத்தின் பிரகாரம் கடன்வாங்கினவர்கள் கடன்கொடுக்கசக்தியற்றுப்போகும் தருணத்தில் அவர்களுடைய சொத்தை கடன் கொடுத்தவர்களுக்கு அவர்களே விட்டுவிட்டுப் போய்விடவேண்டியது: இப்படி விட்டுவிட்டுப் போவதும் அவர்கள் வெறுமையாய்ப் போகலாமா என்று நிதானித்தாலோ, அப்படியும் போகலாகாதாம்; மற்றப்படி எவ்விதமாய்ப் போகலாமென்றால்கோர்ட்டார்அறிந்தோஅல்லதுஅறியாமலோ ஓர்உறுதிமொழிசெய்துதான்அவர்களுடையசொத்தை கடன் கொடுத்தவர்களுக்கு விட்டுவிட வேண்டுமாம். இப்படி கடன் வாங்கிக்கொண்டவர்கள் விட்டுவிடப்பட்ட சொத்தை விற்றுமுதல்செய்து அப்பொருளை கடன் கொடுத்தவர்களுக்குள் பாகித்துக்கொள்வது வழக்கமாயிருந்தது. ஆனால் ஒவ்வொரு கடன் கொடுத்தவனுடைய பாக்கித்தொகை பூராய் செல்லாகிறவரையில் கடன் வாங்கினவன் விடுதலையானவனாக பாவிக்கப்படாமல், கடன் வாங்கினவனை மரியல் (arrest) செய்து ஜெயிலில் அடைப்பதுமாத்திரம்கடன்கொடுத்தவர்களுடைய இஷ்டத்தின்பேரில் நடந்தேறிக்கொண்டுவந்தது. அதாவது, ஓர் கடன் வாங்கினவன் இன்ஸால்வெண்டாய்விட்டபின் யாதேனும் ஓர் சொத்தை சம்பாதிக்குமளவில், அவனுக்கு கடன் கொடுத்தவர்கள் அச்சொத்தையும் கைப்பற்றி கடன் வாங்கினவன் ஜீவிப்பதற்கு வேண்டிய அளவைநீக்கி தங்கள் கடனுக்கு செல்லாக்கிக்கொள்ளலாம். (Mackenzie's Roman Law, 271). இது இப்படிக்கிருக்க இதுவிஷயமாய் அக்காலத்தில் இங்கிலாந்தில் சட்டம் யாதென்று சற்று கவனிக்குமளவில் அது மிக்க விநோதமாயிருக்கிறது! அவ்விடத்திலேயோ கடன்வாங்கினவன் மீண்டும் கடனைக்கொடுக்க சக்தியற்றவனாய் பராரியாய் விட்டானென்று கடன்கொடுத்தவனுக்கு தெரிந்த அளவில், அவனுடைய சொத்துகள் யாவும் யாவென்றறிந்து அவைகளை கடன் கொடுத்தவர்கள் கைப்பற்றி விற்றுமுதல்செய்து அப்பொருளை அவர்கள் கடன்களுக்கு சரிவர பாகித்துக்கொண்டு, கடன்காரனை கடன்கொடுத்தவர்கள் சட்டப்படி நடவடிக்கைகள் நடத்தி கோட்டு அமுல் மூலமாய் அவனை ஜெயிலிலடைக்காமல் விட்டு வந்தார்கள். இப்படி நடந்தேறி வருங்கால் Henry VIII. என்னும் அரசன் தன் காலத்தில் கடன்வாங்குகிற குடிகள் கடனவாங்கும் அத்தொகையை தாங்கள் அபகரிக்க வேண்டுமென மோசமாய்க் கருதி அப்பொருள்களைக் கைப்பற்றிக்கொள்கிறவர்களுக்கும், பிரதிநபரின்சொத்தை ஒருவன் அடைந்து அதைமீண்டும் அவனுக்குத்தரலாகாதெனும் மோச எண்ணத்துடன் அக்கடனைக்கொடாமல் ஓடிப்போய் சுகமாய் வாழ்ந்துவரும் குடிகளுக்கும், ஓர் சட்டம் ஏற்படுத்துவது நியாயமென்று எண்ணி 34, 35 ஸ்டாடியூட்—இங்கிலீஷ் பான்க்ரப்ட்ஸி லா (Statute-English Bankruptcy law) என்னும் சட்டத்தை ஏற்படுத்தினாராம். அச்சட்டத்தினால் அக்காலத்திலுள்ள Lord Chancellor, இன்னும் இதர பெரிய அந்தஸ்துள்ள உத்தியோகஸ்தர்கள் கடன்பட்டவர்களுடைய சொத்தைக்கைப்பற்றி அவைகளைக்கடன் கொடுத்தவர்களுக்கு பாகித்துக் கொடுத்து வந்தார்களாம். இப்படி சிலகாலம் நடந்தேறிவர, Elizabeth அரசாளும் காலத்தில் ஓர் சட்டம் (13. Eliz. Chap. VII) ஏற்பட்டதாம். அதன்பிரகாரம் இன்ஸால்வெண்டுகளின் சொத்துகளை கைப்பற்றி கடன் கொடுத்தவர்களுக்கு பாகித்துத்தர வேண்டிய ஓர் அதிகாரத்தை Lord Chancellor, கமிஷனர்கள் ஏற்படுத்தி அத்தொழிலை செய்துவர அதிகாரம் உண்டென்று உத்தரவளிக்கலாம். ஆனால் அச்சட்டம் அக்காலத்தில் வியாபாரிகளுக்குள் மாத்திரம் தான்செலாவணியாய்க்கொண்டுவந்தது. இவ்விதமாய் இன்ஸால்வென்ஸியைப்பற்றிய சட்டதிட்டங்கள் அப்போதைக்கப்போது மாறிக்கொண்டு வந்தன. கடைசியாய் Queen Anne என்பவள் அரசாளும் காலத்தில் Bankruptcy Law என்னும் ஓர் சட்டதிட்டம் உண்டாய் அதன்பிரகாரம் கடன்கொடுக்க சக்தியற்றவனை ஓர் குற்றவாளியாக பாவிக்கப்பட்டு அவனை கடன் கொடுத்தவர்கள் அவர்களுக்கு தோன்றியபடி என்ன செய்தாலும் செய்யலாமென ஏற்பட்டது. ஆயினும் அக்கடன்பட்டவர்கள் ஓர்தடவை இன்ஸால்வென்டாகிய பிறகு, யாதேனும் சொத்தை சம்பாதிக்குமளவில் அச்சொத்தின்பேரில் முன் கடன்கொடுத்தவர்கள் தொடரலாகாதென்று Queen Anne Statutes 4, C. 17; 10, C. 15. சட்டங்களில் நிபந்தனைகள் உண்டானது, முதல் முதல் இந்த Statutesகளின் பிரகாரம் தான். இன்னும் அநேக திருத்துப்பாடுகளும், மாறுதல்களும் அப்போதைக்கப்போது உண்டாயின.

அவைகளைப்பற்றி இவ்விடத்தில்விசதமாய் எழுதுவது அனாவசியமெனத் தோன்றுகின்றது. கடைசியாய் William VI. என்பவர் அரசாளும் காலத்தில், Statutes 1 and 2. C. 56. உண்டாயிற்று. அதன் பிரகாரம் Court of Bankruptcy என்று ஓர் நியாய ஸ்தலம் ஏற்படுத்தி அதில் Official Assignee (அபீஷல் அசைனி) என்னும் ஓர் உத்தியோகஸ்தனை நியமித்தார்கள். இதுதான் முதல்முதல் உண்டான இங்கிலீஷ் பாங்கிரப்ட்ஸி லா என்று தெரியவருகிறது. அதற்குப்பின்னும் இது விஷயமாய் சில சட்டதிட்டங்கள் 1849, 1861-வது வருஷங்களில் உண்டாயின. இச்சட்ட திட்டங்களை கவனித்துப்பார்க்கிலோ, அவைகளை அரசன் இந்த இன்ஸால்வென்ஸி அதிகாரத்தை நாமே வகித்துக்கொள்ளலாமா, அல்லது சில உத்தியோகஸ்தர்களுக்கு இவ்வதிகாரத்தைக்கொடுத்து பரிபாலனம் செய்யச் சொல்லலாமா என்று மயங்கி கலவரத்துடன் செய்த சட்டதிட்டங்களாகத்தோற்றுகின்றது. ஆனால், இந்த ஆக்டுகளினால் உத்தியோகஸ்தர்கள் நியமித்து பரிபாலனம் செய்வதே யுக்தமமென்று தோற்றியதாக தெரிய வருகிறது. இதுஇப்படிக்கிருக்க 1869ஷுத்தில் இவ்விஷயமாய்ஓர் சட்டதிட்டம் உண்டாகி அதன் பிரகாரம் கடன் கொடுத்தவர்களுக்கு அனுகூலமாய் மிக்கசிரேஷ்டமான அதிகாரம் கொடுக்கப்பட்டது. இந்த இன்ஸால்வென்ஸி விஷயமாய் 1883ஷுத்தில் ஓர் நிபந்தனை உண்டாகி அதன்பிரகாரம் கடன்காரர்களுக்கு மிக்க அதிகாரம் கொடுத்திருக்கிறதெனக் கருதி அதை தடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வது நியாயமென்று உண்டாகிய ஓர் சட்டதிட்டமாய்த் தோன்றுகின்றது. இத்தருணத்தில் தான் ஒருவன் இன்ஸால்வென்ஸியாய்விடில் முக்கியமாய் எதை கவனிக்க வேண்டியதென்று தோன்றிற்றென்றால், கடன் கொடுத்தவர்களுக்குள் பாகிப்பதற்கு கடன்பட்டவர்களுடைய சொத்துகள் வாஸ்தவத்தில் எவ்வளவு உண்டென்று பரிட்சித்துப் பார்ப்பதுதான். இதுவுமன்றி ஒருவன் இன்ஸால்வென்டாய்விடில் அதாவது, கடன்கொடுக்கசக்தியில்லாவிடில், அவ்விஷயம்கடன்கொடுத்தவர்களுக்கும், கடன் வாங்கினவர்களுக்கு மாத்திரம் உள்ள பொருப்பல்ல

வென்றும், அவ்விஷயம்இராஜாங்கத்தாருடையபொருப்பென்றும், ஆசையால் அவர்கள் நியாயஸ்தலங்களுக்குப் போய் ஓர் பரிகாரத்தையடைய வேண்டியதென்றும் இப்பொழுதுதான் தோன்றிற்றும். பிரிட்டிஷ் இந்தியாவில் இன்ஸால்வென்ஸி ஆக்டின் அதிகாரத்தை முதல் முதல்கல்கத்தா, மதராஸ், சுப்ரீம்கோர்டுகளுக்கும், பம்பாய் ரெகார்டர் கோர்ட்டுக்கும், George III. 39, 40 C. 70. Statuteடின்படிகொடுத்து அதன்பிரகாரம் (1759) வதுலார்ட்ஸ் ஆக்ட்டின்படியுள்ள பரிகாரங்களை இந்தியாதேசத்திலுள்ள இன்ஸால்வென்ஸி கடன்காரர்களுக்கும் செய்துவருவதற்கு வேண்டிய விதிகளை செய்வதற்கு மேற்சொன்ன கோர்ட்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டதுமல்லாமல் அக்காலத்தில் சுப்ரீம் கோர்ட்டார் இதுவிஷயமாய் செய்திருந்த விதிகளை மஞ்சூர் செய்துகொள்ளப்பட்டது. ஆனால் George IV. அரசாளும் காலத்தில் 9. G. 73. என்னும் ஓர் சட்டம் உண்டாகி அதனால் பிரத்தியேகமாய் இன்ஸால்வெண்டு கோர்ட்டுகள் என்று ஏற்படுத்தி இவ்விஷயம் பரிபாலனம் செய்யப்பட்டு வந்தது. முதல் முதல் இச்சட்டம் நான்கு வருஷங்களுக்கு மாத்திரம் தான் என ஏற்படுத்தி, அதை மறுபடியும் 1848-ம் வருஷம் வரையிலும் அனுசரித்து கடைசியாய் ரத்துசெய்து Queen Victoria அரசாளும் காலத்தில் 11, 12. C. 21 என்னும் ஓர்சட்டம் ஏற்பட்டது. இதுதானையா! இன்சால்வென்ஸி முதல் முதல் மதராஸ் ப்ரெசிடென்ஸி டவுனில் ஏற்பட்டு இதுகாலம்வரையில் நடந்தேறிவரும் சட்டம் (Act). இந்த ஆக்டு இந்தியாதேசத்தின் முக்கிய பட்டணங்களாகியமதராஸ், கல்கத்தா, பம்பாய் டவுன்களில் மாத்திரம் கடன்பட்டு அதைக்கொடுக்க சக்தியற்றுப் போய் ஜெயிலில் அடைபடும் இன்ஸால்வென்டு கடன்காரர்களுக்கு மாத்திரம் செலாவணியாய்க்கொண்டுவந்தது.

வெளிநாடுகளிலோ இப்படிப்பட்ட இன்ஸால்வென்ஸி லா இதுவரையிலும் இருந்ததே யில்லை. ஆனால், ஓர் உபசாரமாய் தற்காலத்திய சிவில் ப்ரோசீஜர் கோர்டு 295-வது செக்ஷன்படி (Corresponding to Sec. 271 of the old Code of Civil Procedure of 1859). முதல்முதல் கடன்பட்டவனுடைய சொத்தைவன் ஜப்தி செய்கிறானோ அவனுக்குச் சேரவேண்டிய பூராய்த் தொகையும் செல்லான பிறகு மிகுதி நிற்கும் தொகையை இதர கடன்தாரர்கள் தாமாஷாப்படி பாகித்துக் கொள்ளவேண்டியதென்று ஓர் நிபந்தனை செய்திருக்கிறார்கள். ஆனால், இதுமிக்க நியாயமானதாக தோற்றவில்லை. 1877, 1882 இவ்வருஷங்களில் பிறந்த சிவில் ப்ரொசீஜர் கோடின்படியும், Dekhan Agriculturists Relief Act 1879, C. 4. and Punjab Laws Act 172, Secs. 22, 23 now repealed—இவைகளின்படியும், ஜில்லா கோர்டார்களுக்கு—தீர்ப்பான கடன்காரர்கள் விஷயமாய்—இன்ஸால்வென்ஸி அதிகாரம் கொடுக்கப்பட்டது.

இப்போது புதிதாய் அமுலுக்கு வந்த இந்த இன்சால்வென்ஸி ஆக்டு இங்கிலாந்தில் 1883, 1890 இந்த வருஷங்களில் ஏற்படுத்திய Bankruptcy ஆக்டுகளின் நிபந்தனைகளை ஒற்றே அவைகளைப் போலவே செய்யப்பட்டிருக்கின்றது.

ஷெட்யூல்ஜில்லாக்களிலும், இத்தேசத்தின்முக்கிய பட்டணங்களாகிய மதராஸ், பம்பாய், கல்கத்தா இப்பட்டணங்களிலும் தவிர மற்றபடி பிரிட்டிஷ் இந்தியா முழுமைக்கும் இந்த ப்ரொவின்ஷியல் இன்சால்வென்ஸி ஆக்டு சென்ற 1908ஷு ஜனவரிமீ 1உ முதற்கொண்டு பிரயோகிக்கப்பட்டுவருகின்றது. இந்த ஆக்டின்படி ஒவ்வொரு ராஜதானியின் ஸிவில் அசல் விசாரணை அதிகார வரம்புள்ள ஜில்லா கோர்ட்டுகளுக்கு இந்த இன்சால்வென்ஸி லாவை பரிபாலனம் செய்துவரும்படி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. சில முக்கியமான கேசுகளில் ஜில்லா கோர்ட்டுகளுக்கு தாழ்ந்த சபார்டினேட் கோர்ட்டார்களுக்கும் இந்த இன்சால்வென்ஸி லாவை பரிபாலனம்செய்துவர அதிகாரம் கொடுக்க அவ்வவ்விடத்திய பிரதேச கவர்ன்மெண்டார்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

Secs. 1 and 3; செக்ஷன் 1, 3:—இந்த ஆக்டின் 1-3 பிரிவுகளின்படி இன்சால்வென்ஸி லாவை பரிபாலனம் செய்துவர அதிகாரம் கொடுக்கப்பெற்ற எல்லா கோர்ட்டார்களும் இந்த ஆக்டின்படி செய்யப்படும் நடவடிக்கைகள் என்னவென்றால் அவ்வவ்விடத்திய அசல் ஸிவில் விசாரணை செய்ய அதிகார வரம்புள்ள கோர்ட்டுகளில் தற்காலம் என்னென்ன நடவடிக்கைகள் நடந்தேறிவருகின்றனவோ அம்மாதிரியாகவே இந்த ஆக்டின்படி ஏற்படுத்திய இன்சால்வென்ஸி கோர்ட்டுகளிலும் நடவடிக்கைகள் நடத்திவரவேண்டியது.

Sec. 4; செக்ஷன் 4:—இந்த செக்ஷனில் இன்சால்வென்ஸி மனுக்கள் எந்தெந்த சந்தர்ப்பங்களில் எந்தெந்த ஹேதுக்களைக் கொண்டு, அதாவது எந்தெந்த க்ரவுண்டுகளின்மேல் செய்யலாமோ அவைகளை விபரமாய் சொல்லியிருக்கின்றன. அந்த க்ரவுண்டுகள் (grounds) யாதென்று அடியில் வருமாறு சுருக்கிச் சொல்வோம்:—

(a) ஒரு கடன்காரன் தான் வசிக்கும் வீட்டை விட்டாவது, அல்லது தான் மாமூலாய் தொழில் அல்லது வியாபாரம் செய்து வரும் இடத்தைவிட்டாவது வெளி தேசத்துக்கு பராரியாய் ஓடிப்போய் அவ்விடத்தில் இருப்பிடம் வைத்துக் கொண்டாலும்,

(b) இன்சால்வென்டாகிப்போய்விடும் ஒருகடன்காரன் சாதாரணமாய் தன் சொத்தை கடன் கொடுத்தவர்களுடைய லாபகரத்துக்காவது, கடன்கொடுத்தவர்களை மோசம் செய்ய வேண்டுமென்கிற எண்ணத்துடனாவது பராதீனம்செய்தாலும், கடன் கொடுத்தவர்கள் அநேகர் இருக்க ஒரு கடன்கொடுத்தவனின் நன்மைக்காக மாத்திரம் தன் சொத்தை பராதீனம் செய்தாலும் இந்த க்ரவுண்டுகளின் மேல் (grounds) இன்சால்வென்ஸி மனுக்கள் கொடுக்கலாமென்றுசொல்லியிருக்கிறது.

Sec. 6; செக்ஷன் 6:—இந்த 6-வது செக்ஷனில் கடன் வாங்கினவனாவது கடன் கொடுத்தவனாவது எந்தெந்த நிபந்தனைகளுக்குட்பட்டு இன்சால்வென்ஸிக்காக மனுசெய்துக் கொள்ளலாமோ அவைகளைப்பற்றி சொல்லி இருக்கின்றது. ஒருவன் இந்த இன்ஸால்வென்ஸி ஆக்டின்படி மனு செய்துக்கொண்டால் இன்ஸால்வென்ஸி கோர்ட்டார் அம்மனுவைதள்ளிவிடாமலாவது அல்லது அதை திருத்தும்படி வாபீஸ் செய்யாமலாவது வரப்பற்றிக் கொண்டு, அதாவது, அட்மிட் செய்துக்கொண்டு அம்மனுவு [illegible] விசாரணை செய்யப்படுமென்று ஓர் தினம் [illegible] அத்தினத்தைப்பற்றி கடன் கொடுத்தவர்கள் [illegible] ருக்கும் நோடீஸ் மூலமாய் தெரிவிக்கவேண் [illegible]

இதுவுமன்றி ஒரு கடன்காரன் தன் இருப்பிடத்தை விட்டு வெளிநாட்டுக்கு பராதியாய் ஓடிப்போவான் அல்லது தன் சொத்தை மறைத்துவிடுவான் அல்லது தன் சொத்தை தானிருக்கும் கோர்ட்டாருடைய எல்லைக்கு வெளியே அனுப்பிவிடுவான் அல்லது தன் சொத்தைச் சேர்ந்த தஸ்தாவேஜு முதலான சாக்ஷியங்களை மறைத்துவிடுவான் என்று நினைக்க இடமிருந்தால் அப்படிப்பட்ட விஷயங்களில் கடன்காரன் தகுந்த ஜாமீன் கொடுக்க வேண்டுமென்றாவது அல்லது ஜெயிலில் அடைபட்டிருக்க வேண்டுமென்றாவது அல்லது அவனுடைய சொத்துகள், தஸ்தாவேஜுகள், கணக்கு முதலிய புஸ்தகங்கள் யாவற்றையும் ஜப்திசெய்து பந்தோபஸ்து செய்யவேண்டுமென்றாவது கோர்ட்டார் உத்தரவுசெய்யலாம். அப்படி கொடுக்கப்பட்ட இன்சால்வென்ஸி மனுவை விசாரணை செய்யும்பொழுது கோர்ட்டார் அந்த கடன்காரனுக்கு இன்சால்வென்ஸி ஆக்டில் சொல்லியிருக்கிறபடி முடிவான தீர்ப்பு சொல்லுவதற்கு முன் இந்த இன்சால்வென்ஸி ஆக்டின் 6-வது செக்ஷனில் கண்டிருக்கும் நிபந்தனைகளின்படி மனு கொடுக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்று திருப்திகரமாய் தெரிந்துக்கொண்டு அதன்பின்தான் முடிவான தீர்மானம் சொல்லவேண்டியது. ஆனால், கடன் கொடுத்தவன் ஒரு கடன் வாங்கினவனை இன்சால்வென்டென்று தீர்மானிக்கும்படி கொடுத்த மனுவாயிருந்தால் கோர்ட்டார் அம்மனுவைப்பற்றி கடன் வாங்கினவனுக்கு நோட்டீசு கொடுக்கப்பட்டதா இல்லையா வென்று திருப்தியடைந்துதான் அம்மனுவின் பேரில் முடிவான உத்தரவு செய்யவேண்டியது. அப்படிப்பட்ட மனுவின்பேரில், கடன்வாங்கினவன் தன் லாவாதேவிகளில் கிரமமாய் நல் நடவடிக்கையுடன் நடந்தானென்பதையும் சொத்தை சட்டத்திற்கு விரோதமாய் பராதீனம் செய்யவில்லையென்பதையும் விசாரணை செய்து பரிக்ஷித்துப் பார்த்து அப்படி செய்த விசாரணையை எழுதிக் குறிப்பிட்டு அப்படி விசாரணை செய்ததில் கோர்ட்டாருக்கு கடன்காரன் மேற்செப்பியபடி செய்தவனல்ல அவன்தான் வாங்கிய கடனைக்கொடுக்க சக்தியுள்ளவனென்று திருப்திகரமாய் தெரிந்தால் கடன் கொடுத்தவன் இந்த இன்சால்வென்ஸி ஆக்டின்படி கொடுத்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டியதுமன்றி அப்படிச் செய்யப்பட்ட மனு கடன்காரனை அனுவசியமாய் அலைக்கழித்து துன்பம்செய்ய வேண்டுமென்று செய்த மனுவாக கோர்ட்டாருக்குத் தோற்றுமாகில் கடன்கொடுத்தவன் கடன் வாங்கினவனுக்கு Rs. 1000 ஆயிரரூபாய் வரையில் காம்பென்சேஷன் (பிரதிபலன்) கொடுக்கும்படியாய் தீர்மானம் செய்யலாம். ஆனால் அந்தமனு தள்ளுபடிசெய்யாவிடில் (1) கடன்காரன் தன்னுடைய சொத்துகளையும் விவகாரங்களையும் பரிபாலனம்செய்ய கடன்கொடுத்தவர்களுக்குள் ஓர் ஏற்பாடு செய்யலாம். அப்படிப்பட்ட ஏற்பாட்டை பெரும்பாலும் எல்லோரும் ஒப்புக்கொண்டால், அதாவது, கடன் கொடுத்தவர்களில் முக்கால்வாசி நபர்கள் நேரில் ஆஜராயாவது அல்லது ப்ளீடர்கள் மூலமாயாவது ஒப்புக்கொண்டால் அப்படிப்பட்ட ஏற்பாட்டை இன்சால்வென்ஸி மனுவில் முடிவான உத்தரவு செய்தபிறகு கூட கோர்ட்டார் ஒப்புக்கொண்டு அவ்விதமாகவே செய்யும்படி உத்தரவு செய்யலாம். (2) அப்படிக்கில்லாவிடில் கடன்காரனை இன்ஸால்வென்டென்று தீர்ப்பு செய்து உத்தரவுசெய்யலாம். அவ்விதமாய் உத்தரவு செய்வதினால் கடன்பட்டவனுடைய (அமுல் நடத்தி) ஜப்தி செய்யக்கூடிய சொத்துகள் யாவும் கோர்ட்டார் ஏற்படுத்தும் ரிஸீவர் வசம் ஒப்புவிக்கப்படும். இன்சால்வென்டை அதன்பின் வாரன்டில் பிடித்து ஜெயிலில் அடைக்கலாகாது கடன்பட்டவன்பேரில் யாதொரு தாவா முதலிய நடவடிக்கைகள் இன்சால்வென்ட் கோர்ட்டார் உத்தரவன்னியில் நடத்தலாகாது.

Sec. 18, etc.; செக்ஷன் 18 :—இந்த பிரிவுகளில் இன்சால்வென்டாய் விடும் ஒரு கடன்காரனுக்கு கோர்ட்டார் ரிஸீவர் (Receiver) ஏற்படுத்தவேண்டிய விதிகளையும் அந்த ரீஸீவர் செய்யவேண்டிய தொழில்களையும் அவருக்கு அதன் விஷயமாயுள்ள அதிகாரங்களையும் இன்னும் இதர நடவடிக்கைகளைப்பற்றியும் விசதமாய் செப்பியிருக்கின்றது.

Sec. 21; செக்ஷன் 21 :—இந்த பிரிவில் இன்சால்வென்டாய்விடும் கடன்காரனுடைய ஸ்தாவர சொத்துகளை எவ்விதமாய் விற்றுமுதல் செய்யலாம் என்பதைப் பற்றி செப்பியிருக்கிறது.

இந்த ஆக்டின்படி இன்சால்வென்டாய் விட்ட ஒரு கடன்காரனுடைய சொத்தை அவன்பேரில் டிக்ரி அடைந்த ஒருவன் ஜப்தி செய்து கோர்ட்டு ஏலத்தில் விற்றுமுதலாக்கியபின் அந்த கடன்காரனுடைய இன்சால்வென்ட் மனுவின்பேரில் கடசியான தீர்ப்பு சொல்லப்பட்டால் அப்பொழுது அப்படி விற்றுமுதலாக்கிய பொருள் டிக்ரி பெற்ற கடன்கொடுத்தவன் அடையவேண்டியதே ஒழிய மற்றபடி ரீஸீவருக்குப் போகாது. ஆனால், ஒரு கடன்காரனுடைய சொத்தை ஜப்திசெய்து கோர்ட்டுக்கு கொண்டுவந்து வைத்திருந்து அதை ஏலம் போடுவதற்குமுன் இன்சால்வென்ட் மனுவின்மேல் முடிவான தீர்ப்பு சொல்லப்பட்டால் அந்த சொத்து ரீஸீவருக்கு ஒப்புவிக்கப்படும். (Secs. 34 & 35)

Secs. 36, etc.; செக்ஷன் 36 :—இந்த பிரிவுகளின்படி கடன்காரன் மோசக்கருத்துடன் செய்யும் சில பராதீனங்களை தடுக்கலாம்.

Sec. 22; செக்ஷன் 22 :—இப் பிரிவின்படி ரீஸீவர் செய்யும் செய்கைகள் அப்பீலுக்குட்பட்டது.

Sec. 23; செக்ஷன் 23: —இப் பிரிவின்படி கோர்ட்டார் ரீஸீவர் ஏற்படுத்தாமல் கோர்ட்டாரே ரீஸீவர் செய்யவேண்டிய தொழில்களைச் செய்யலாம்.

Sec. 52; செக்ஷன் 52 :—இப் பிரிவின்படி ரீஸீவர் பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதிக்குட்பட்டு ஹைகோர்ட்டாரால் விதிக்கப்படும்தொழில்களை செய்யலாம்.

Secs. 24, etc.; செக்ஷன் 24 :—இப்பிரிவுகளின்படி கடன்காரன் கொடுக்கவேண்டிய ருசுவான கடன் தொகைகள் யாவற்றுக்கும் கோர்ட்டார் ஷெட்யூல் ஒன்று தயார் செய்யவேண்டியது. அந்த ஷெட்யூலை கடன்காரனாகிய இன்ஸால்வென்ட் அல்லது கடன்கொடுத்தவன் அல்லது ரீஸீவர் மனுவுசெய்து கொள்வதன்மேல் திருத்தலாம் அல்லது மாற்றிவிடலாம்.

Sec. 39; செக்ஷன் 39 :—இந்த பிரிவின்படி ரிஸீவர் வசூல் செய்யும் தொகைகளில் எவ்வளவு தன் கையில் நிறுத்திக்கொள்ள வேண்டியதோ அதை நிறுத்திக்கொண்டு மிகுதி தொகையை வீதப்படி பாகித்து கொடுக்கவேண்டியதென்பதைப்பற்றி சொல்லியிருக்கிறது.

Sec. 40; செக்ஷன் 40 :—இந்த பிரிவின்படி வசூலாகிய தொகையில் கடன்காரனும் அவனுடைய குடும்பத்தாரும் ஜீவிப்பதற்காக இவ்வளவு கொடுத்துவர வேண்டியதென்று கோர்ட்டார் உத்திரவு செய்யலாம்.

Sec, 43; செக்ஷன் 43 :—இந்த பிரிவின்படி கடன்காரனாகிய இன்சால்வென்ட் தன்னுடைய கணக்குப்புஸ்தகங்கள் யாவும் ஆஜர்செய்ய வேண்டியதென்றும் அவனுக்கு வரவேண்டிய தொகைகளை வசூல் செய்வதற்கான சகாயம்செய்து வரவேண்டியதென்றும் அவனுக்கு கடன்கொடுத்தவர்களுக்கு பாகித்து கொடுத்த பிறகு யாதேனும் மிகுதி நிற்கும் பட்சத்தில் அந்த தொகையை வட்டியுடன் இன்ஸால்வென்டாய் விட்டாலுங் கொடுத்துவிட வேண்டியதென்றும் சொல்லியிருக்கிறது. ஆனால் கடன்பட்ட இன்சால்வென்ட் ஒரே முரட்டுத்தனமாய் கடன்கொடுத்தவர்களை மோசம்செய்ய வேண்டுமென்கிற துர்எண்ணம் கொண்டவனாய் இருந்தால் அவனை கோர்ட்டார் ஒருவருஷத்திற்கு அதிகப்படாமல் சொற்பகாவலில் ஜெயிலில் அடைத்து வைக்கும்படி உத்தரவு செய்யலாம்.

Sec. 53; செக்ஷன் 53 :—இந்த பிரிவில் ஒருவன் இன்சால்வென்டென்று கோர்ட்டு மூலமாய் உத்தரவு பெற்ற பிறகு ஒருவனிடத்தில் போய் தான் இன்சால்வென்டாய் விட்ட சமாச்சாரத்தை தெரிவிக்காமலேயே ரூபாய் 50 அல்லது அதற்கதிகப்பட்ட கடனை வாங்குவானாகில் அவனை ஆறுமாத காவலுக்காவது அல்லது அபராதம் விதித்தாவது அல்லது இரண்டுமாவது உத்தரவு செய்து தண்டிக்கலாம்.

Sec. 44; செக்ஷன் 44 :—இந்த பிரிவில் எந்தெந்த விஷயங்களில் கடன்காரனுக்கு பூரான டிஸ்சார்ஜ் கொடுக்கலாமோ எந்தெந்த விஷயங்களில் கொடுக்கலாகாதோ அந்த நிபந்தனைகளை விவரித்துச்சொல்லியிருக்கின்றன; பூராய் இன்ஸால்வெண்ட் உத்தரவு பெற்றவன் ராஜாங்கத்தாருக்கு கொடுக்கவேண்டிய கடன் தவிர மற்ற கடன்கள் யாவற்றிலிருந்தும் பூராய் நிவர்த்தியானவனாக பாவிக்கப்படுவான்.

இன்னும் இன்சால்வென்ஸி மனுவை வாபீஸ் செய்துக்கொள்வதற்கும் இதர நடவடிக்கைகள் நடத்துவதற்கும் வேண்டிய நிபந்தனைகள் 7, 8, 9, பிரிவுகளில் செய்யப்பட்டிருக்கின்றன. இன்சால்வென்ட் ஆக்டின்பிரகாரம் செய்யப்படும் உத்தரவுகளின்பேரில் அப்பீல் செய்துகொள்ளலாமென்று 46-வது செக்ஷனில்கூறியிருக்கிறது. இந்த இன்சால்வென்ஸி ஆக்டின் நிபந்தனைகளை அனுசரித்து விதிகள்செய்ய ஹைகோர்ட்டாருக்கு அதிகாரம் கொடுக்கபட்டிருக்கிறது. முக்கியமாய் இந்த ஆக்டின் நிபந்தனைகளின்படி எப்பொழுது இன்சால்வென்ஸிக்கு மனுவு கொடுக்கலாமென்றால் ஒரு கடன்காரனை வாரண்டில் பிடித்து அல்லது ஜெயிலில் அடைத்தால் அல்லது அவன் சொத்துகளை ஜப்தி செய்திருந்தால் மாத்திரமே மனுவு கொடுக்கலாமே யொழிந்து மற்றப்படி கொடுக்கலாகாதென்று 63-வது செக்ஷன்படி தெரியவருகிறது.

அலஹபாட் ஹைகோர்ட்டு.

குடிக்கூலி கேஸ்.

A என்பவன் தன்வீட்டை B-க்கு 10 வருஷம் விடுகிறதாக ஒப்புக்கொண்டு, ஒரு குடிக்கூலி பத்திரம் எழுதிக் கொடுத்தான். மேலும், எப்பொழுதாவது A-க்கு அட்வான்ஸாக குடிக்கூலி வேண்டியிருந்தால், அதை B என்பவன் கொடுக்கவேண்டியவனென்றும், அதற்கு A ஒரு ரசீது கொடுக்கவேண்டியதென்றும், ஒரு நிபந்தனை அந்த பத்திரத்தில் கண்டிருந்தது. பத்திரம் எக்ஸிகியூட் ஆகி, ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. இதன் பிறகு, கோர்ட்டாருடைய டிக்ரீயை எக்ஸிகியூட் செய்யும்பொருட்டு அந்தவீட்டை ஏலம்போட்டு விற்து விட்டார்கள். C என்பவன் வாங்கி B என்னுங் குடிக்கூலிக்காரனை குடிக்கூலிகேட்டான், இதற்கு எதிராக, B என்பவன் சொன்னதாவது. எங்கள் பத்திரப் பிரகாரம் குடிக்கூலியை அட்வான்ஸாக A-க்கு கொடுத்து விட்டேன் என்று சொன்னான். C குடிக்கூலிக்கு தாவா செய்தான். கோர்ட்டாரவர்கள் செய்த

தீர்மானம் :—இந்த பத்திரம் ரிஜிஸ்டராயிருந்தது. ஆகையால் C என்பவன் தெரிந்துகொண்டிருக்க வேண்டியது. ஏலத்தில் வாங்கினபொழுதே இந்தபத்திரத்தில் கண்டபடி குடிக்கூலி அட்வான்ஸாக B கொடுத்தானா, இல்லையா என்றதை விசாரிக்காமல் வாங்கினவனாகையால், அந்த குடிக்கூலி மறுபடியும் C-க்கு கொடுக்கப்படமாட்டாது. Nand Kishore *v.* Anwar Hussain (1908 A. W. N. 13).

மதராஸ் ஹைகோர்ட்டு.

ரெண்டுரிகவரி கேஸ்.

ரெண்டு ரிகவரி ஆக்டின் 83-வது ஸெக்ஷன் பிரகாரம், சில சமயங்களில் ஜாமீன்முதலிய சொத்துகளுக்கு மானேஜர்கள் நியமிக்கப்படுகிறார்கள். வேறு சில சமயங்களில் சிவில் கோர்ட்டார் உத்தரவினால் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அத்தகைய நிலங்களின்பேரில் அட்டாச்மெண்ட் உடையவர்களாகிறார்கள். இம்மானேஜராவது சர்க்கார் உத்தியோகஸ்தராவது ஜமீன்தார் முதலியோர்களைப் போலவே குடிகளின்பேரில் ரெண்டுக்காக கேஸெடுக்கலாம். அக்குடியானவர்களும் அந்த மானேஜர் மேலாவது சர்க்கார் உத்தியோதஸ்தர் மேலாவது கேஸெடுக்கலாம். இப்படியிருக்க, ஸிவில் கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட ரிஸீவரொருவரின் மேல் கேஸெடுக்க கோர்ட்டார் உத்திரவு வேண்டுமா, வேண்டாமா என்பதை தீர்மானிக்க வேண்டியதாயிற்று. கோர்ட்டாரவர்கள் செய்த

தீர்மானம் :—கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட ரிஸீவர் பப்ளிக் உத்தியோகஸ்தர். அப்படிப்பட்டவர் மேல் கேஸெடுக்க ஸெக்ஷனே உத்திரவு கொடுக்கிறபடியால், கோர்ட்டாருத்திரவு பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது அவசியமில்லை. Kuppuswamy Aiyar *v.* Suppan Chetti (3 M. L. T. 7).

இந்துலா கேஸ்.

ஜாப்பாலால் V. சஜ்ஜுமல் என்றகேஸில், குடும்பமானது பங்குபிரித்துக்கொண்டிராத ஹிந்து குடும்பம். இதில் 2 தம்பி தமயன்மாரும், இவர்களில் ஒருவருடைய குமாரர்களும் இருந்தார்கள். இவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து 1872 - வது வருஷத்தில் கொஞ்சம் பித்ரார்ஜித சொத்தை கொதுவை வைத்தார்கள். 1884-வது வருஷத்தில் குதுவை வைத்திருந்த சொத்து மற்றொரு பணக் கடனுக்காக விற்கப்பட்டு, A என்பவர் வாங்கினார். 1890-வது வருஷத்தில் A என்பவர் B என்பவருக்கு சுவாதீன அடமானம்செய்தார். 1904-வது வருஷத்தில், முன் குதுவை வைத்திருந்தவர்களின் ஒருவனுடைய குமாரர்கள் (வாதிகள்) முதல் குதுவையை மீட்டுக் கொடுக்கும்படி தாவா செய்தார்கள். கோர்ட்டார் செய்த

தீர்மானம் :—இந்தக் கேஸில் நடந்த விற்பனை வாதிகளுக்குத்தெரியாமல் நடந்தபடியால், அவ்வாதிகள் அதனால் கட்டுப்படமாட்டார்கள். ஆகையால்

காமகரத்தின்பேரில் நேரிட்ட ஓர் கோரமான காட்சி.

தகப்பன் தன் பிள்ளையை—தன்னுடைய மனைவியை நேசிக்கும்
சோரநாயகனென்று பிசகாய் எண்ணி—கொலை செய்தது.

இருவரும் மறிக்க சுட்டான்.

மிக்க பரிதாபமான ஓர் கண்காட்சி:—பிசகாய் எண்ணி அனுமானத்தின்பேரில் நேரிட்டது—இக்காட்சி அமெரிக்கா கண்டத்தைச்சேர்ந்த தென் இல்லியனாஸ் என்னும் மாகாணத்தில் சம்பவித்தது:—

அது யாதெனில், மேற்செப்பிய மாகாணத்தில் வசிக்கும் ஒரு தனவந்தனான வியாபாரி ஒருவர்—ஜூலியஸ் டர்னர் (Julius Turner) என்பவர் தன்னுடைய மனைவியையும்—தன் மனைவியை நேசிக்கும் சோரநாயகனென்று பிசகாய் கருதி—தன் சொந்த புத்திரனையும் சுட்டு கொன்றுவிட்டான். அவருடைய மனைவியாகிய மிஸ்ட்ரெஸ் டர்னர் (Mrs. Turner) என்னும் துரைமகள் தன் நாயகனுடைய வயதைப்பார்க்கிலும் இருபத்தைந்து வருடம் சிறியவள். அவளோ மிக்க எவ்வருணமுள்ள ஒரு ரூப சுந்தரி. அவளுடைய நாயகன் யாதொரு ஹேதுவின்றி பிசகாய் எண்ணின தப்பிதத்தினால் அவள் தன் புருஷனைவிட்டு

சதா பிரிந்திட நேரிட்டது. ஆனால் இவளுடைய புருஷன் இவள் நடவடிக்கையை பலமுறையும் அனுமானித்து கண்டித்து வந்தார். அவாள் இருவருக்கும் இதன் விஷயமாய் சம்பவித்த பல சச்சரவுகளினால் நேரிட்டிருந்த விரோதத்தை தவிர்த்து சமாதானம் செய்யப்பட்டு வந்தன. அவள் தன் புருஷனுடைய நற்போதனையை கவனிக்கவே யில்லை. ஒரு நாள் இரவில் அவளுடைய வீட்டிற்கருகாமையிலுள்ள க்ளே ஸிடி (Clay City) என்னும் ஒரு கிராமத்திலுள்ள கிரிஸ்தவர்களின் தேவாலயக் கடைக்கு தன்னுடைய ஆறடி உயரமுள்ள புத்திரனை தனக்கு வழித்துணையாக தன்னுடன் அழைத்துக் கொண்டு போயிருந்தாள். இதுவிஷயத்தைப்பற்றி யாதொன்றும் தெரியாத அவளுடைய நாயகனான டர்னர்என்பவர் அந்த தேவாலயத்திற்கு அருகாமையுள்ள ஓர் அடர்ந்த தோப்பில் ஒளித்துக் கொண்டு தன் மனைவியின் வரவைஎதிர்பார்த்துக் கொண்டிருந்தார். மிஸ்ட்ரெஸ் டர்னர் என்பவளும் அவளுடன் மிக்க உயரமான ஒரு மனிதனும் போய்க்கொண்டிருப்பதை டர்னர்(Mr. Turner) என்பவர் கண்டு தன்னுடைய மனைவியை மூன்று தடவையும் அந்த மனிதனை இரண்டு தடவையும் சுட்டார். அதன் பின் அவர் வெளி வந்து அந்த தேவாலயத்தை விட்டு வரும் ஜனங்களைக்கண்டு பின்செப்பிய வண்ணம் கூக்குரலிட்டார்— அதாவது: "நீங்கள் எல்லோரும் இங்கேவாருங்கள்— நான் செய்த நீதியைப் பாருங்கள்." ஜனங்கள் எல்லோரும் அப் பிரேதங்களின் அருகாமைவந்து பெருங் கூட்டமாய் சூழ்ந்து கொண்டார்கள் ஆனால், அப்பொழுது இரவான படியால் அப்பிரேதங்களின் முகங்கள் நன்றாய்த் தெரியவில்லை.



தன் மனைவியின் சோரனல்ல, சொந்த புத்திரன் என்று கண்டான்.

ஆகையால் டர்னர் (Turner) என்பவர் அந்த மனிதனுடைய முகத்தை அந்த தோப்பின் ஓரமாய் தேவாலயத்தின் விளக்கின் ஒளி ஸ்பஷ்டமாய்த் தெரியும் வெளிச்சத்தில் இழுத்துக்கொண்டு போய் பின்வருமாறு கூறினர்: "அந்த மனிதன் யாரென்று நாம் இப்பொழுது பார்ப்போம்." அந்த பிரேதத்தின் திரேகத்தை திருப்பிப்பார்த்து அவன் தன் புத்திரனென்றறிந்து மிக்க துயரத்துடன் பெருங்குரலிட்டு புலம்பி அழுது தனக்குத்தானே தன்னுடைய திரேகத்தைச் சுட்டுக்கொண்டார். அதைக்கண்டு அதி தீவரமாய் நடந்து நேரிட்ட சங்கதியைத் தெரிவிக்கச் சென்றவன், அவர் சுட்டுக்கொண்ட காயத்தினால் அவருக்கு மரணம் நேரிடவில்லை என்று சொன்னான். ஆயினும், டர்னர் (Turner) என்பவர் மறுபடியும் தனக்குத்தானே சுட்டுக்கொள்வதற்கு முன் அவனுடைய கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்கிக்கொண்டார்கள். மேற்செப்பிய டர்னர் (Turner) என்பவர் இப்பொழுது சென்ட்ரல் ஜெயிலில் ஒரு கைதியாயிருக்கிறார். அவ்விடத்தில் (ஜெயிலில்) அவர் தான்பிசகாய் கருதி செய்த தப்பிதத்திற்கு தண்டனையாக அன்ன ஆகாரமின்றி மரித்துப்போகிறேனென்று சொல்லிக்கொண்டு சாப்பிடாமல் இருக்கிறாராம்.

இதன் தொடர்ச்சி அந்த கேசு நடந்து முடிந்தவுடன் பின்னிட்ட சஞ்சிகையில் அறிவிப்போம்.

அவர்கள் இப்பொழுது அந்தசொத்தை மீட்டுக்கொள்ள ஹக்குடையவராகிறார்கள்.

ஆதாரங்கள் :—21 கல். 37; 30 கல். 763; 17 அல் 520; 22 சென். 372; 22 பம். 624; செக்ஷன் 99, டிரான்ஸ்பர் பிராபர்டி ஆக்டு.

Jabba Lal *v.* Chaggu Mal (1908 A. W. N. 1).

அலஹபாட் ஹைகோர்ட்டு.

ஹிந்துலா கேஸ்.

மேகன் தூபி v. பிரான்சிங்கு கேஸில், ஒரு குதுவை பத்திரம் எழுதப்பட்டது. அது பங்கு பிரித்துக்கொண்டிராத ஓர் ஹிந்து குடும்பத்தின் பிரயோசனத்திற்காக உண்டாயிற்று. ஆனால், அந்த குதுவையானது அக்குடும்பத்தைச் சார்ந்த ஓர் மைனர்பேரால் எக்ஸிகியூட் செய்யப்பட்டிருந்தது. இந்தக் காரணத்தினாலேயே அந்த குதுவையானது லாவுக்கு விரோதமானதாகையால் ரத்தாய் விடுமா என்ற கேள்வி உண்டாயிற்று கோர்ட்டாரவர்கள் இதன்பேரில் செய்த

தீர்மானம் :—அந்த குதுவையானது மைனர் பேரிலிருந்தாலும் அக்காரணத்தினாலேயே ரத்தாய் விடவில்லை.

ஆதாரம் :—30 கல். 539.

Meghan Dube *v.* Pran Singh (1908 A. W. N. 10).

மதராஸ் ஹைகோர்ட்டு.

பட்டாவைபற்றிய கேஸ்.

பெரிய கருப்பபிள்ளை v. மில்லர் என்ற கேஸில், பட்டாவில் கண்ட தொகைக்கு அதிகமானதொரு தொகைக்கு அட்டாச்மெண்டு செய்திருந்தால், அந்த அட்டாச்மெண்டானது சரியுள்ளதா, அல்லது சட்டத்துக்கு விரோதமானதா என்று தீர்மானிக்கவேண்டியதாக விருந்தது. கோர்ட்டாரவர்கள் செய்த

தீர்மானம் :—அப்படிப்பட்ட அட்டாச்மெண்டானது ஜாஸ்தி தொகையைக் கொண்டதினாலேயே முழுதும் சரிதப்பினதாகி விடவில்லை. டெண்டர் செய்த பட்டா மாத்திரம் சரியானதாக விருக்கும் பக்ஷத்தில், சரியாய் கணக்கு போட்டால் எவ்வளவு ஆகிறதோ அந்த தொகையவ்வளவுக்கு அந்த அட்டாச்மெண்டு லாவுக்கு விரோதமானதன்று.

ஆதாரங்கள் :—10 சென். 299, 23 சென். 268, 27 ,, 465, 29 ,, 75.

Periakaruppa Pillai *v.* Miller (3 M. L. T. 29).

மதராஸ் ஹைகோர்ட்டு.

ஹிந்துலா கேஸ்.

குஜிலி காமாட்சி அம்மாள் v. பப்புலு சக்கரபாணி செட்டியார் கேஸில், குடும்பமானது பங்கு பிரித்துக்கொள்ளாத ஹிந்து குடும்பம். இதின் மெம்பர்கள் R என்ற தகப்பனும், அவனுடைய பிள்ளையுமே. இந்த பிள்ளையில்லாத, R என்பவனுக்கு 1 பெண்ஜாதியும், 3 பெண்களும் இருந்தார்கள். R என்பவன் இந்த பொது பித்ரார்ஜித சொத்தில் பெரும்பான்மையும் தன்னுடைய பெண்ஜாதிக்கும் 3 பெண்களுக்கும் இனாமாக கொடுத்து விட்டான். பிற்காலத்தில், R என்பவனுடைய பௌத்திரன் இது இந்து லாவுக்கு விரோதமானதென்று தாவா செய்தான். இதன்பேரில் கோர்ட்டாரவர்கள் செய்த

தீர்மானம் :—தென்னிந்தியாவில் வழங்கிவரும் மிதாக்ஷர நீதி பிரகாரம், R என்பவன் இம்மாதிரியாக இனாம் கொடுத்து விடுகிறதற்கு யாதொரு நியாயமுங் கிடையாது. ஆகையால் அந்த இனாம் சொத்துகள் அந்தப்பெண்களுக்கு சேரக்கூடாது.

ஆதாரங்கள் :—29 பம். 51, 24 பம். 541, 22 சென் 113,

Kujili Kamakshi Ammal *v.* Bappulu Chakrapani Chettiar (3 M. L. T. 23).

ஓர் பிரசனை.

நமது இந்தியா சட்ட கெஜட்டுக்கு சந்தாதார்களில் ஒருவர் ம-ா-ா-ஸ்ரீ மதுரை ஸ்ரீனிவாசாச்சாரியார் என்பர் "ஓர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் இன்னொருவனுக்கு தன் ஹக்கு சுதந்தரத்தை ரிலீஸ் விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்து பிரதிபலனாக ரொக்கம் பெற்றுக்கொண்டால் அது ரிலீஸ் விடுதலைப் பத்திரமென்று 5-ரூபாய் முத்திரை கடுதாசியில் எழுதுகிறதா? அல்லது விக்கிரைய தஸ்தாவேஜு என்று அந்த பத்திரத்தில் செப்பியிருக்கும் தொகையின்மேல் 100-க்கு 1-வீதம் முத்திரை கடுதாசி வாங்கி எழுதவேண்டுமா?" என்று கேட்ட பிரசனைக்கு; பின்வருமாறு பம்பாயில் நடந்த ஒருகேசை உதாரணமாகக்கண்டு மறு உத்தரம் கூறுகின்றோம், அதாவது :—

ஒரு கம்பெனியில் A B, C, என்று மூன்று வர்த்தகர்கள் பாகஸ்தர்களாய் கூட்டுவியாபாரம் செய்து வந்தார்கள். அவர்களில் A என்பவனுக்கு முக்கால் பாகமும் B, C, என்பவர்கள் இருவருக்கும் சேர்ந்து கால்பாகமும் வைத்துக்கொண்டு இவ்வியாபாரத்தை கூட்டாய் நடத்தி வந்தார்கள். அவர்களில் கால்பாகத்துக்கு சொந்தக்காரர்களாகிய B, C, என்பவர்கள் தங்களுக்கு அந்த கம்பெனியிலுள்ள ஹக்கு சுதந்தரத்தை D என்பவனுக்கு விற்றுவிட்டார்கள். அதின்பின் D என்பவன் இறந்துவிட்டான்; அவன் மரணமடைந்தபின் D என்பவனுடைய ஸ்வீகார புத்திரனாகிய E என்பவன் அக்கம்பெனியிலுள்ள மெஷீன் முதலான யாவற்று சொத்துகளிலும் தனக்குள்ள ஹக்கு சுதந்தரங்களை F என்பவனுக்கு கொடுத்து விட்டு அவனிடமிருந்து பிரதிபலனாக 18,000-ரூபாய் பெற்றுக்கொண்டு அவன் பேருக்கு ஸ்டாம்ப் ஆக்ட் (Stamp Act II of 1899) 55-வது ஆர்ட்டிகலின்படி ரிலீஸ் (Release) என்னும் விடுதலைப் பத்திரம் ஒன்று 5-ரூபாய் மூத்திரை கடுதாசியில் ஏழுதிக்கொடுத்திருந்தான். அந்த பத்திரத்தை ரிஜிஸ்தர் செய்வதற்காக சப் ரிஜிஸ்தரார் ஆபீசில் ஆஜர் செய்தபோது அந்த சப் ரிஜிஸ்தரார் அது ரிலீஸ் (விடுதலைப்பத்திரம்) ஆகாதென்றும் அது விக்கிரைய தஸ்தாவேஜு என்றும் அபிப்பிராயப்பட்டு ஸ்டாம்ப் ஆக்ட் (Stamp Act) 38-வது பிரிவின்படி கலெக்டருடைய தீர்மானத்திற்கனுப்பிவிட்டார். கலெக்டர் அவர்கள் சப் ரிஜிஸ்தராரின் அபிப்பிராயம் சரியென்று அந்த தஸ்வேஜியில் சம்பந்தப்பட்ட நபர்கள் நியாயமாய் கொடுக்கவேண்டிய ஸ்டாம்பு கட்டணத்தை கொடாமல் தங்களுடைய சாமர்த்தியத்தால் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்கிற துர் எண்ணங் கொண்டவர்களென்று கருதி ஸ்டாம்ப் ஆக்ட் (Stamp Act) 40-வது பிரிவின்படி குறைவு பட்டிருக்கும் ஸ்டாம்பு ரூபாய் 175-ம் அபராதம் ரூபாய் 1750-ம் கட்டும்படியாய் உத்தரவு செய்தார். இது விஷயமாய் கலெக்டர் அவர்கள் தான் கொண்ட அபிப்பிராயத்திற்கு ஆதாரமாய் சொல்லிய நியாயம் யாதெனில்,—

THE MADRAS ESTATES LAND ACT I OF 1908.

ஜமீன்களிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908—ம்ஹுத்து 1-வது ஆக்ட்.

இது ஆலோசனை சபையிலுள்ள சென்னப்பட்டணம் கவர்னரவர்களால் செய்யப்பட்டு 1908-ம்ஹு மார்ச்சுமீ 25வ சிறப்புற்றோங்கும் கவர்னரவர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

விஷயசங்கிரகம்.

பீடிகை.

1-ம் அத்தியாயம்.

பீடிகாவிதிகள்.

பிரிவுகள்.

1. சுருக்கமான பெயர்.
   வழங்கத்தொடங்குவது.
   வியாபிக்குமிடம்.
2. ரத்து.
3. அர்த்தம்.

2-ம் அத்தியாயம்.

பொதுவான பாத்தியதைகள்.

4. குத்தகைத்தொகையை வசூல்செய்ய நிலத்துக்குடையவருக்குள்ள பாத்தியதை.
5. குத்தகைத்தொகையானது கைப்பற்று நிலத்தின்மேலும் அதன் மாசூலின்மேலும் ஏற்படும் முதல் செலவாகுமென்பது.
6. ரயத்திநிலத்திலுள்ள அனுபோக பாத்தியதை
7. சுரங்க மறுப்பதற்கான பாத்தியதைகளைத் தாமே வைத்துக்கொள்வது.
8. அனுபோக பாத்தியதை மற்ற பாத்தியதைகளோடு சேர்ந்துபோவது.
9. ரயத்தை (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்த நிலத்துக்குரியவருக்குள்ள பாத்தியதை.
10. அனுபோக பாத்தியதை வமிசபரம்பரையாய் வரத்தக்கதென்பதும் ஒருவர்பேரிலிருந்து மற்றொருவர்பேருக்கு ட்ரான்ஸ்பராகத்தக்கதென்பதும்.
11. நிலத்தை ரயத்து உபயோகித்துக்கொள்ளுவது.
12. மரங்களை உபயோகித்துக்கொள்வதற்கான பாத்தியதை.
13. சீர்திருத்தம்செய்ய அனுபோக ரயத்துக்குள்ள பாத்தியதை.
14. அனுபோக பாத்தியதையில்லாத ரயத்துக்கு சீர்திருத்தம்செய்வதற்காகவுள்ள சுதந்தரம்.
15. சீர்திருத்தத்தின் சம்பந்தமாக உண்டாகிற விவாதங்களைப் பைசல்செய்ய கலெக்டருக்குள்ள அதிகாரம்.

பிரிவுகள்.

16. நிலத்துக்குடையவர் செய்யும் சீர்திருத்தங்களை ரெஜிஸ்டர் செய்துவைப்பது.
17. சீர்திருத்தத்தின் விஷயமாகச் சாட்சியத்தை எழுதிவைக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொள்வது.
18. சாகுபடிபண்ணும்போது சாதாரணமாய்ச் செய்யப்படும் சீர்திருத்தங்கள் விஷயத்திலே நிவாரணை.
19. ரயத்துகள்-நிலத்துக்குடையவர்கள்-ஆகிய இவர்களுக்கும் இவர்களுடைய பாயக்காரிகளுக்குமுள்ள சம்பந்தம்.
20. சமுதாய நிலங்கள் கொடுக்கத்தக்கவைகளல்லவென்பது.
    ஏரியின் அடிக்தரை நிலங்களின் விஷயத்திலே நிவாரணை.
21. சமுதாயநிலங்களை விதிக்கு விரோதமாக அனுபோகத்தில் வைத்திருக்கும் நபர்களை நீக்குவது.
22. சென்னபட்டணத்து நிலம் ஆக்கிரமிப்பதைப் பற்றிய ஆக்டிற்கண்ட நிபந்தனைகளை 20-வது 21-வது பிரிவுகளின்படிக்கான உத்தரவுகளுக்குப் பிரயோகிப்பது.
23. ரயத்திநிலம் என்பதாகக்கொள்வது.

3-ம் அத்தியாயம்.

ரயத்துகள் செலுத்தத்தக்க குத்தகைத்தொகை வீதங்களுக்குச் சம்பந்தப்பட்ட பொதுவான நிபந்தனைகள்.

24. அதிகப்படுத்துவதைப்பற்றி நிர்ப்பந்தம்.
25. இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கினபிறகு ரயத்திநிலத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்க அனுமதிபெறுவதன்மேல் செலுத்தத்தக்க குத்தகைத்தொகை.
    ப்ரிமியம் (மேலவாசி) பெற்றுக்கொள்வது விஷயத்திலே நிவாரணை.
26. கரம்பு நிலத்தைச் சாகுபடிக்கு உதவும்படி செய்வதற்காகவாவது ஆதியில் குறைந்த வீதப்படி நிஷ்கரிசைசெய்யப்பட்ட குத்தகைத் தொகையை அதிகப்படுத்துவது.
27. கைப்பற்றுநிலத்தின் திட்டங்களைக்குறித்தும் குத்தகைத்தொகையின் அளவைக்குறித்தும் இன்னபடி கொள்ளவேண்டுமென்பது.
28. குத்தகைத்தொகை வீதம் நியாயமானதுதானா என்பதைப்பற்றி இன்னபடி கொள்ளவேண்டுமென்பது.
29. வாரவீதங்கள் அதிகப்படுத்தப்படுவதற்கு உள்ளாகமாட்டாவென்பது.
30. வியாஜ்ஜிய மூலமாகக் குத்தகைத்தொகையை அதிகப்படுத்துவது.

பிரிவுகள்.

31. விலை அதிகரித்திருக்கிறதென்னுங் காரணத்தினாலே குத்தகைத்தொகையை அதிகப்படுத்துவதைப்பற்றிய விதிகள்.

32. நிலத்துக்குடையவர் செய்திருக்கும் சீர்திருத்தத்தின் காரணமாகக் குத்தகைத்தொகையை அதிகப்படுத்துவதைப்பற்றிய விதிகள்.

33. கவர்ன்மெண்டார் செய்திருக்கும் சீர்திருத்தத்தின் காரணமாகக் குத்தகைத்தொகையை அதிகப்படுத்துவதைப்பற்றிய விதிகள்.

34. நதி ஓட்டத்தின் காரணமாகக் குத்தகைத்தொகையை அதிகப்படுத்துவதைப்பற்றிய விதிகள்.

35. குத்தகைத்தொகையை அதிகப்படுத்துவது நியாயமானதாகவும் தருமமானதாகவும் இருக்கவேண்டுமென்பது.

36. சிறிது சிறிதாய் (குத்தகைத்தொகையை) அதிகப்படுத்தும்படி உத்தரவு செய்ய அதிகாரம்

37. குத்தகைத்தொகையை அதிகப்படுத்தும்படி அடுத்தடுத்து வியாஜ்ஜியங்களைக்கொண்டுவருவதற்கான பாத்தியதையைக்குறித்து வரையறை.

குத்தகைத்தொகையைக் குறைப்பது.

38. வியாஜ்ஜியமூலமாகக் குத்தகைத்தொகையைக் குறைப்பது.

39. குத்தகைத்தொகையைக் குறைக்கும்படி அடுத்தடுத்து வியாஜ்ஜியங்களைக்கொண்டு வருவதற்கான பாத்தியதையைக்குறித்து வரையறை.

குத்தகைத்தொகையை (பணமாக்) மாற்றிக்கொள்வது.

40. தானியமாகச் செலுத்தத்தக்க குத்தகைத்தொகையை வியாஜ்ஜியமூலமாய் (பணமாக) மாற்றிக்கொள்வது.

41. குத்தகைத்தொகையை (பணமாக) மாற்றின பிறகு 20 வருஷகாலம் வரையில் அதை அதிகப்படுத்தக்கூடாதென்றும் குறைக்கக்கூடாதென்றும் நிர்ப்பந்தம்.

விஸ்தீர்ணத்துக்குத்தகுந்தபடி குத்தகைத்தொகையை மாற்றுவது.

42. விஸ்தீர்ணத்திலுண்டாகும் மாறுதலை அனுசரித்துக் குத்தகைத்தொகையை மாற்றுவது.

43. நிலத்தை அளந்துபார்க்க நிலத்துக்குடையவருக்குள்ள சுதந்திரம்.

44. நிலவிஸ்தீர்ணத்துக்குத் தக்கபடி குத்தகைத்தொகையை இன்னவிதமாய் மாற்றவேண்டுமென்று நிஷ்கரிஷை செய்வதற்கான விதிகள்.

45. நிலத்துக்குடையவரின் சம்மதம் பெறாமல் ரயத்து நிலத்தை அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்காகச் செலுத்தவேண்டிய வீதங்கள்.

பிரிவுகள்.

அனுபோக பாத்தியதையில்லாத ரயத்துகள்.

46. சாசுவதமான அனுபோக பாத்தியதையைக் கொடுப்பதற்கான நடவடிக்கை.

47. பழைய கரம்பைச்சார்ந்த ரயத்துக்குக் குத்தகைத்தொகையை அதிகப்படுத்துவதைக்குறித்து நோடீஸ் சேர்ப்பிப்பது.

48. (1) அதிகப்படுத்தப்பட்ட குத்தகைத்தொகையைச் செலுத்த ரயத்து இஷ்டப்படுவதாய்த் தெரிவிப்பதன்மேல் நடவடிக்கை.

(2) ரயத்து அந்தப்படி தெரிவிக்கத்தவறினால் நடவடிக்கை.

49. அப்புறப்படுத்தும்படி விண்ணப்பஞ் செய்துகொள்ளப்பட்டபிறகு ரயத்து அதிகப்படுத்தப்பட்ட குத்தகைத்தொகையைச் செலுத்த இஷ்டப்படுவதாய்த் தெரிவித்தாலும் தெரிவிக்கத்தவறினாலும் நடவடிக்கை.

4-ம் அத்தியாயம்.

பட்டாவும் முச்சிலிக்காவும்.

50. (1) இந்த அத்தியாயம் எந்த ரயத்துகளுக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த ரயத்துகள்.

(2) பட்டா முச்சிலிக்கா பெற்றுக்கொள்ள ரயத்துக்கும் நிலத்துக்குடையவருக்குமுள்ள சுதந்தரம்.

51. பட்டாவிலும் முச்சிலிக்காவிலும் காணவேண்டியவைகள்.

52. எவ்வளவு காலத்துக்காகப் பட்டாகொடுத்து முச்சிலிக்கா பெற்றுக்கொள்ளலாமென்பது.

53. பட்டா கொடுக்கக்காட்டினால்தான் நிலத்துக்குடையவர் கைப்பற்று நிலத்தை விற்பனை செய்யவும் ஜப்திபண்ணவும் சுதந்தரமுடையவராவாரென்பது.

54. இன்னவிதமாகப் பட்டாகொடுக்கக் காட்டவேண்டுமென்பது.

55. பட்டா பெறுவதற்காக வியாஜ்ஜியம்.

56. பட்டாவை அங்கீகரிக்கும்படி கட்டாயப்படுத்துவதற்காக வியாஜ்ஜியம்.

57. பட்டாவைக் கொடுக்கும்படியோ அங்கீகரிக்கும்படியோ கட்டாயப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியத்தைத் தீர்மானிக்கையிலே இன்னது செய்யவேண்டுமென்பது.

58. கர்ணம் பட்டாவிலும் முச்சிலிக்காவிலும் கையெழுத்துபண்ணி அவைகளை ரெஜிஸ்டர் செய்யவேண்டுமென்பது.

பிரிவுகள்.

5-ம் அத்தியாயம்.

குத்தகைத்தொகையைச் செலுத்துவதும் குத்தகைத்தொகை பாக்கியும்.

59. தவணைகளாகக் குத்தகைத்தொகையைச் செலுத்துவது.

60. குத்தகைத்தொகை பாக்கி.

61. பாக்கிக்கு வட்டி.

62. குத்தகைத்தொகைக்காக ரசீதுபெற ரயத்துக்குள்ள சுதந்தரம்.

63. சட்ட சம்மதமான ரசீதில் காணவேண்டியவைகள்.

64. தவணைகளுக்காகச் செலுத்தப்படும் தொகைகளை வரவு வைத்துக்கொள்வது.

65. ரசீது கொடுக்காமலிருப்பதற்காகப் பிரதிபலன்.

66. தொகை செலுத்தவேண்டிய இடம்.

67. குத்தகைத்தொகை பெறுவதற்காக நிலத்துக்குடையவரென்று அங்கீகரிக்கப்பட்டுள்ள அல்லது நியமிக்கப்பட்டுள்ள நபர் ரசீது கொடுப்பதனால் இன்னதுண்டாகுமென்பது.

குத்தகைத்தொகையை டிபாஸிட்செய்வது (கட்டிவைப்பது).

68. குத்தகைத்தொகையை டிபாஸிட் செய்வதற்காக விண்ணப்பம்.

69. ரெவினியு ஆபீஸிலே கட்டின டிபாஸிட்டுக்காகக் கொடுக்கப்பட்ட ரசீது சட்ட சம்மதமாயுள்ள பூர்த்தியான ரசீதாகுமென்பது.

70. டிபாஸிட் வரப்பெற்றுக்கொண்டதைக் குறித்துப் பிரசித்தஞ் செய்வது.

71. டிபாஸிட் தொகையைச் செலுத்திவிடுவது அல்லது வாபஸ் பண்ணுவது.

72. வியாஜ்ஜியங்களுக்குத் தடை.

மாசூலுக்கு மதிப்புப்போடுவதும் அதைப்பகிர்வதும்.

73. பயிரின் ஸ்வாதீனத்தைப்பற்றிய சுதந்தரங்களும் பொறுப்புகளும்.

74. மாசூலுக்கு மதிப்பேற்படுத்தும்படியாகவாவது அதைப் பகிர்ந்துகொடுக்கும்படியாகவாவது அதை நிர்ணயிக்கும்படியாகவாவது கலெக்டருக்கு விண்ணப்பம் பண்ணிக்கொள்வது.

75. அப்படிப்பட்ட விண்ணப்பம் வரப்பெறுவதன்மேல் இன்னது செய்யவேண்டுமென்பது.

76. பிரவேசிப்பதற்கான அதிகாரம்.

பிரிவுகள்.

6-ம் அத்தியாயம்.

வியாஜ்ஜியமூலமாகவாவது அசையும்பொருளையாகிலும் கைப்பற்றுநிலத்தையாகிலும் ஜப்திபண்ணி விற்பனை செய்தாவது குத்தகைத்தொகை வசூல்பண்ணுவது.

77. வியாஜ்ஜிய மூலமாகவோ ஜப்திசெய்தோ பாக்கி வசூல் பண்ணுவது.

78 இன்னவிதமாய் ஜப்தி செய்யவேண்டுமென்பது.

79. ஜப்திசெய்வது பாக்கிக்குச் சரியாயிருக்கவேண்டுமென்பதும், சொத்தின் ஜாபிதாவைச் சொந்தக்காரருக்குச் சேர்ப்பித்து அதற்கு நகலை விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டுமென்பதும்.

80. ஜப்தி செய்கிறவர் போலீஸாருடைய உதவியைப் பெறலாமென்பது.

81. ஜப்தி சொத்து பாக்கிக்குச் சரியாயிருக்கவேண்டுமென்பது.

82. ஜப்தி செய்யவேண்டிய காலம்.

83. மாசூலை அறுவடைசெய்து காப்பாற்றிவருவதற்கான சுதந்தரம்.

84. ஜப்தி பண்ணுகிறவர் இன்ன இடங்களைப் பலாத்காரமாய்த் திறக்கலாமென்பது.

85. போலீஸ் உத்தியோகஸ்தர்முன்பாகக் கதவுகளைப் பலாத்காரமாய்த் திறக்கவும் அந்தப்புரத்தில் நுழையவும் அதிகாரம்.

86. ஜப்தி செய்யப்பட்ட கால்நடைகளையாவது சரக்குகளையாவது உபயோகிக்கக்கூடாதென்பது.

87. டிபாஸிட் செய்வதன்மேலாவது தொகைசெலுத்துவதன்மேலாவது ஜாமீன் சவதரித்துக் கொடுப்பதன்மேலாவது ஜப்திவிடுதலைசெய்வது.

88. ஜப்திசெய்யப்பட்ட சொத்து காணாமற்போனாலும் கெட்டுப்போனாலும் ஜப்திதாரர் உத்தரவாதம் பண்ணவேண்டுமென்பது.

89. ஜப்திசெய்யப்பட்ட சொத்தில் சுதந்தரம் அல்லது பாத்தியதை இருப்பதாக மூன்றாவது மனிதர் தாவாசெய்வது.

90. ஜப்திசெய்வதைத் தடுப்பதற்காக மோசமாய்ப் பராதீனஞ்செய்யப்பட்ட அல்லது ஜப்தி செய்தபிறகு பலவந்தமாகவாவது திருட்டுத்தனமாகவாவது அப்புறப்படுத்தப்பட்ட சொத்தை ஒப்பிப்பது.

91. பிரதிபலனுக்காக வியாஜ்ஜியம்.

92. விற்பனைக்காக விண்ணப்பம்.

93. விண்ணப்பத்தில் கண்டிருக்கவேண்டிய விஷயங்கள்.

94. நோடீஸ் சேர்ப்பிப்பதற்குக் கட்டணம்.

பிரிவுகள்.

95. விண்ணப்பத்தை வரப்பெற்றுக்கொண்டதன் மேல் நடத்தவேண்டிய நடவடிக்கை.

96. இன்னபடிக்கானல் விற்பனை நடத்தலாமென்பது.

97. விற்பனை நடத்தவேண்டிய இடம்.

98. அழிந்துபோகத்தக்க பொருள்களை விற்பனை செய்வது.

99. இன்னபடிக்கானல் மாசூல்களை விற்பனை செய்யலாமென்பது.

100. விற்பனைசெய்யும் விதம்.

101. விற்பனையைத் தள்ளிவைப்பது.

102. கிரயத்தொகையைச்செலுத்துவது.

103. ஜப்தி செய்வதில் கிரமப்பிசகிருந்தால் அதைத்தெரிவிக்கக் கடமைப்பட்டிருப்பது.

104. ஜப்திசெய்வதில் கிரமப்பிசகிருப்பதனல் உண்டாவது இன்னதென்பது.

105. கிரயதாரருக்கு ஸெர்டிபிகேட் கொடுக்கவேண்டுமென்பது.

106. விற்றுவந்த பணத்தை ஒருவகைசெய்வது.

107. விற்பனைநடத்தும் உத்தியோகஸ்தராவது (அவருக்குக்) கீழ்பட்டிருப்பவராவது சொத்தை விலைக்குக்கேட்கவுங்கூடாது வாங்கவுங்கூடாதென்று தடுப்பது.

108. பாயக்காரியாவது பயிரிடுகிறவராவது தம்முடைய நிலக்காரருக்காகச் செலுத்தியிருக்கிற தொகையைக் குத்தகைத்தொகையிலிருந்து கழித்துக்கொள்ள அந்தப்பாயக்காரி அல்லது பயிரிடுகிறவருக்குள்ள பாத்தியதை.

109. நிலத்துக்குடையவர் ஜப்திசெய்வதும் கோர்ட்டார் ஜப்திசெய்வதும் முரண்படுவது.

110. ஆட்சேபனைசெய்துகொண்டே தொகை செலுத்துகிரதாகக்காட்டினல், அதைச் சட்டசம்மதமானதென்று எண்ணவேண்டுமென்பது.

ரயத்தின் கைப்பற்று நிலத்தைவிற்பது.

111. கைப்பற்றுநிலத்தை விற்பது.

112. விற்பனைசெய்ய உத்தேசித்திருப்பதைக்குறித்து நோடீஸ்.

113. சேர்ப்பித்த தேதியை நிலத்துக்குடையவருக்குத் தெரிவிப்பது.

114. விற்பனைக்காக விண்ணப்பம்.

115. 114-வது பிரிவின்படிக்கான விண்ணப்பத்துக்குக் காலநிர்ணயம்.

116. விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தரை நியமிப்பது.

பிரிவுகள்.

117. விற்பனையைப்பற்றிய பிரகடனம்.

118. பாக்கியாயிருக்கிற தொகை பூர்த்தியாய்ச் செலுத்தப்படாவிட்டால் விற்பனை.

119. விற்பனை நடத்தவேண்டிய இடம்.

120. விற்பனைசெய்யும் விதம்.

121. விற்பனையைத்தள்ளிவைப்பது.

122. விற்பனையை நிறுத்திவிடுவது.

123. கிரயத்தொகையைச் செலுத்துவது.

124. (1) கிரயத்தொகையைக் கலெக்டருக்கு அனுப்பவேண்டுமென்பது.

(2) கிரயதாரருக்கு ஸெர்டிபிகேட் கொடுப்பது.

125. சிக்குச்சிலகுகள்.

126. விற்பனைக்குக் கொண்டுவரவேண்டிய கைப்பற்று நிலத்தின் அளவு.

127. விற்றுவந்த பணத்தை ஒருவகை செய்வதற்கான விதிகள்.

128. கைப்பற்றுநிலத்தில் பாத்தியதையுள்ள நபர் பாக்கியாகிற பணத்தைச் செலுத்துவதன்மேல் அவருக்குள்ள சுதந்தரம்.

129. ரயத்துக்காகச் செலுத்தப்பட்ட தொகையைக் குத்தகைத்தொகையிலிருந்து கழித்துக்கொள்ள பாயக்காரி அல்லது கீழ்பாயக்காரிக்குள்ள பாத்தியதை.

130. நிலத்துக்குடையவர் விற்பனையின்போது விலைகேட்கலாமென்பது.

131. பாக்கிதாரரான ரயத்து விற்பனையை ரத்து செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து கொள்ளுவது.

132. குத்தகைத்தொகை பாக்கிக்கான டிக்கிரிகளை நிறைவேற்றுவதற்கு இந்த அத்தியாயம் பிரயோகப்படுவது.

133. டிக்ரியை நிறைவேற்றுகிற கலெக்டர்—(தொகை) செலுத்த பாக்கிதாரருக்கு அவகாசம் கொடுக்கலாமென்பது.

134. இந்த அத்தியாயத்திற்கண்ட நிபந்தனைகளின் பிரயோகத்தை அதிகப்படுத்துவது.

———

7-ம் அத்தியாயம்.

நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான கட்டுவேலைகளின் மராமத்து.

135. நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான கட்டுவேலைகளின் மராமத்துக்காக டிஸ்ட்ரிக்ட் கலெக்டரிடத்தில் விண்ணப்பஞ் செய்துகொள்ளுவது.

பிரிவுகள்.

136. விண்ணப்பஞ் செய்துகொள்வதன்மேல் விசாரணை.

137. விசாரணை செய்வதன்மேல் உத்தரவு.

138. கட்டுவேலையானது சிறிதுபாகம் ஒரு பூஸ்திதிக்கும் சிறிதுபாகம் கவர்ன்மென்ட் நிலத்துக்கும் உபயோகப்படுகிற விஷயத்தில் நடத்தவேண்டிய நடவடிக்கை.
கவர்ன்மென்டாரைச்சேர்ந்த கட்டுவேலைகளுக்குப் பாதகமில்லையென்பது.

139. மரமத்து செலவை ரயத்துகளிடத்திலிருந்து வசூல்செய்வது.

140. மரமத்து செய்துமுடிக்கும் நபர்களுக்குத் தொகை செலுத்துவது.

141. மரமத்து செலவுகளைக் குத்தகைத் தொகையிலிருந்து கழித்துக்கொள்வது மூலமாக வசூல் செய்ய சுதந்தரம்.

142. அப்பீல் செய்துகொள்ள சுதந்தரம்.

———

8-ம் அத்தியாயம்.

சட்டத்துக்கு விரோதமான ஸெஸ்ஸுகள் (வரியிறைகள்.)

143. குத்தகைத் தொகையோடுகூட எதையும் விதித்து வாங்கக்கூடாதென்று தடுப்பது.

144. சட்டத்துக்கு விரோதமாய்ப் பலாத்காரமாகத் தொகை வசூல் செய்வதற்குத் தண்டனை.

———

9-ம் அத்தியாயம்.

கைப்பற்று நிலங்களையும் பூஸ்திதிகளையும் உட்பிரிவினை செய்வதும் ட்ரான்ஸ்பர் பண்ணுவதும்.

145. கூட்டுப் பங்குக்காரர்களுக்குள்ளாவது (கைப்பற்று நிலத்தின்) ஒரு பாகம் ட்ரான்ஸ்பராவதன் மேலாவது கைப்பற்று நிலத்தைப் பிரிவினை செய்வது.

146. ரயத்தின் செய்கையினலாவது ஸிவில் கோர்ட் டிக்ரியை நிறைவேற்றுகையிலாவது செய்யப்படும் கைப்பற்று நில ட்ரான்ஸ்பரை நிலத்துக்குடையவர் அங்கீகரிக்க வேண்டுமென்பது.

147. நோடிஸ் கொடுப்பதற்குமுன்னே ட்ரான்ஸ்பர் செய்தவருக்கு அல்லது கூட்டுப்பங்குக்காரருக்கு விரோதமாக ஏற்பட்ட நடவடிக்கைகள் ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவருக்கு அல்லது கூட்டுப்பங்குக்காரருக்கு விரோதமாகச் செலாவணியாகுமென்பது.

148. நிலத்துக்குடையவரும் ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவர் அல்லது கூட்டுப் பங்குக்காரரும் ட்ரான்ஸ்பரைக் குறித்து அல்லது பாகம் பிரித்துக்கொள்வதைக்குறித்து நோடிஸ்.

———

10-ம் அத்தியாயம்.

ராஜிநாமா கொடுப்பதும் (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்துவதும் (இஜெக்ட்மென்டும்).

149. ரயத்து கைப்பற்று நிலத்துக்கு ராஜிநாமா கொடுப்பது.

பிரிவுகள்.

150. நோடிஸ் சேர்ப்பிப்பதற்காக ரெவினியு ஆபீஸரிடத்தில் விண்ணப்பஞ் செய்துகொள்ளுவது.

151. (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்துவதற்கான வியாஜ்ஜியம்.

152. சேதம் சரிப்படுத்தக்கூடியதாயிருக்கிற அல்லது பணரூபமான பிரதிபலன் போதுமான பரிகாரமாயிருக்கிற சந்தர்ப்பத்திலே டிக்ரி.

153. அனுபோக பாத்தியதை யில்லாத ரயத்தை என்ன ஹேதுக்களின் மேல் (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்தலாமோ அந்த ஹேதுக்கள்.

154. அனுபோக பாத்தியதையில்லாத ரயத்து செய்திருக்கும் சீர்திருத்தத்துக்காகப் பிரதிபலன்.

155. பயிரின் விஷயத்திலும் விதைப்பதற்காகத்தயார் செய்யப்பட்ட நிலத்தின் விஷயத்திலும் (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்தப்பட்ட ரயத்துக்குள்ள சுதந்தரம்.

156. முந்தியபிரிவின்படி நிலத்தை அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்காக ரயத்துதொகை செலுத்துவது.

157. பழைய கரம்பைச்சேர்ந்த பாயக்காரியை அப்புறப்படுத்துவது.

———

பாயக்காரிகளை நீக்கிவிடுவது.

158. கலெக்டர் பிறப்பிக்கும் வாரன்டின்மேல் பாயக்காரியை நீக்கிவிடுவது.

159. வாரன்டில் கண்டிருக்க வேண்டிய விஷயங்கள்.

160. வாரன்டை நிறைவேற்றுவது.

161. பாயக்காரி பாத்தியதை முடிவாவது.

162. நிவாரணை செய்வதற்கான பகுதி.

163. துராகிருதமாக நுழைகிற நபரை (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்துவது.

———

11-ம் அத்தியாயம்.

ஸர்வேசெய்வதும், உரிமை தஸ்தவேஜு ஏற்படுத்துவதும், குத்தகைத்தொகைகளைப் பைசல்செய்வதும்.

164. ஸர்வே செய்யும்படிக்கும் உரிமைதஸ்தவேஜு ஏற்படுத்தும்படிக்கும் உத்தரவுசெய்ய பிரதேச கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம்.

165. எழுதிவைக்கவேண்டிய விவரங்கள்.

166. (1) பிரதம தஸ்தவேஜைப் பிரசுரம் செய்வதும் அதற்குண்டான ஆட்சேபனைகளை வரப்பெற்றுக்கொள்வதும்.

(2) முடிவான தஸ்தவேஜைப் பிரசுரம் செய்வது.

167. உரிமை தஸ்தவேஜு முடிவாகப் பிரசுரிக்கப்பட்டதைப்பற்றியும் அது சரியாயிருப்பதைப் பற்றியும் இன்னவிதமாய்க் கொள்ளவேண்டுமென்பது.

168. குத்தகைத்தொகைகளைப் பைசல்செய்வது.

169. பைசல் ரெகார்டைப் பிரதமத்தில் பிரசுரஞ் செய்வதும் திருத்துவதும்.

பிரிவுகள்.

170. பைசல் ரெகார்டை முடிவாகத் திருத்துவதும் அதை உரிமை தஸ்தவேஜில் சேர்த்தெழுதுவதும்.

171. மேலான ரெவினியு உத்தியோகஸ்தரிடத்தில் அப்பீல் செய்துகொள்வதும் அவர் புனராலோசனை செய்வதும்.

172. ரெவினியு போர்டார் புனராலோசனை செய்வது.

173. இன்னபடிக்கானல் பைசல் ரெகார்டிலுள்ள பதிவுகள் ஸிவில் வியாஜ்ஜிய மூலமாய் ஆட்சேபிக்கப்படுவதற்குள்ளாகுமென்பது.

174. 171-வது 173-வது பிரிவுகளின்படிக்கான தீர்மானங்களின் குறிப்பை உரிமை தஸ்தவேஜிலே பதிவு செய்வது.

175. (i) பைசலிலுள்ள தப்பிதங்களை ரெவினியு ஆபிஸர் திருத்துவது.
(ii) உரிமை தஸ்தவேஜிலுள்ள தப்பிதங்களைத் திருத்துவது.

176. 168 முதல் 171 வரையிலுள்ள பிரிவுகளின்படி பைசல் செய்யப்பட்ட குத்தகைத்தொகை சரியானதென்று கொள்வது.

177. குத்தகைத்தொகை பைசல் எந்தக்காலமுதல் செலாவணியாக வேண்டுமோ அந்தக்காலமும், (குத்தகைத்தொகை) அதிகப்படுத்துவதற்குக் காலவரையறையும்.

178. உரிமைதஸ்தவேஜு தயார்செய்யும் காலத்திலே நடவடிக்கைகளை நிறுத்திவைப்பது.

179. உரிமைதஸ்தவேஜுக்குச் சம்பந்தப்பட்டவைகளாயுள்ள குத்தகைத்தொகையல்லாத வேறே விஷயங்களிலே ஸிவில்கோர்ட்டாரின் அதிகார வரம்பு.

180. செலவுகளைப் பங்கிடு செய்வது.

12-ம் அத்தியாயம்.

நிலத்துக்குடையவரின் சொந்த நிலம்.

181. நிலத்துக்குடையவரின் சொந்த நிலத்துக்குப் பாதகமுண்டாகமாட்டாதென்பது.

182. நிலத்துக்குடையவரின் சொந்த நிலத்தை ஸர்வே செய்யும்படிக்கும் அதற்குத் தஸ்தவேஜு ஏற்படுத்தும்படிக்கும் உத்தரவுசெய்ய அதிகாரம்.

183. நிலத்துக்குடையவர் அல்லது (நிலத்தை) அனுபவிப்பவர் விண்ணப்பஞ்செய்து கொள்வதன் மேல் சொந்த நிலத்துக்குத் தஸ்தவேஜு ஏற்படுத்த அதிகாரம்.

184. சொந்த நிலத்துக்கு இன்னவிதமாகத் தஸ்தவேஜு ஏற்படுத்தவேண்டுமென்பது.

185. நிலத்துக்குடையவரின் சொந்தநிலமென்று தீர்மானிப்பதற்கான விதிகள்.

பிரிவுகள்.

13-ம் அத்தியாயம்.

கட்டிடங்கட்டுவதற்காகவும் வேறே காரியங்களுக்காகவும் நிலத்துக்குடையவர் நிலமெடுத்துக்கொள்ளுவது.

186. கட்டிடங் கட்டுவதற்காகவும் வேறே காரியங்களுக்காகவும் நிலத்துக்குடையவர் நிலமெடுத்துக்கொள்ளுவது.

14-ம் அத்தியாயம்.

ஒப்பந்தம்.

187. ஒப்பந்தத்தைப்பற்றிய நிர்ப்பந்தங்கள்.

188. பழைய கரம்பில் அனுபோக பாத்தியதை அடைவது சம்பந்தமாக ஒப்பந்தத்தைப்பற்றிய நிர்ப்பந்தம்.

15-ம் அத்தியாயம்.

அதிகாரமும் நடவடிக்கையும்.

189. (1) வியாஜ்ஜியங்களும் விண்ணப்பங்களும்.
(2) அப்பீல்கள்.

190. இரண்டாவது அப்பீல்கள்.

191. 189, 190-வது பிரிவுகளின்படிக்கான அப்பீல்களுக்குக் காலநிர்ணயம்.

192. ஸிவில் ப்ரோஸீஜர் கோட் பிரயோகப்படுவது.

193. குத்தகைத் தொகையை அதிகப்படுத்துவதற்காவது குறைப்பதற்காவது சம்பந்தப்பட்ட வியாஜ்ஜியங்களில் ரயத்துகள் ஒன்றுசேர்வது.

194. குத்தகைத் தொகையானது வாதிக்கல்லாமல் மூன்றும் நபருக்குச் சேரவேண்டியதென்று கொண்டுவரும் வழக்கைக் கோர்ட்டில் தொகை செலுத்தினல்தான் பிடிக்கவேண்டுமென்பது.

195. கேட்கப்படுகிற குத்தகைத்தொகையானது அதிகமாயிருக்கிறதென்று கொண்டுவரும் வழக்கை, பாக்கியாக ஒத்துக்கொள்ளப்பட்ட தொகையைக் கோர்ட்டில் செலுத்தினல்தான் பிடிக்கவேண்டுமென்பது.

196. 194-வது 195-வது பிரிவுகளின்படி கோர்ட்டில் செலுத்தத்தக்க தொகையை நிஷ்கரிஷை செய்ய கலெக்டருக்குள்ள அதிகாரம்.

197. கலெக்டர் ரசீது கொடுக்கவேண்டு மென்பது.

198. ஒன்றுசேர்ந்த ரயத்துகளுக்குச் சம்பந்தப்பட்ட வியாஜ்ஜியத்தின் விஷயத்திலே தனித்தனி விசாரணை நடக்க உத்தரவுசெய்ய அதிகாரம்.

199. வியாஜ்ஜியம் அல்லது விண்ணப்பத்தில் ராஜியாய்ப்போவது.

200. கட்சிக்காரர்களா யிருக்கக்கூடிய நிலத்துக்குடையவர்கள்.

201. பணம் செலுத்துவதற்கான டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றுவதற்காக ட்ரான்ஸ்பர் பண்ணுவது.

202. விதிகள் செய்ய ஹைகோர்ட்டாருக்குள்ள அதிகாரம்.

203. உரிமை தஸ்தவேஜிலுள்ள பதிவுகளைக் கோர்ட்டார் கவனிக்கவேண்டுமென்பது.

பிரிவுகள்.

204. வேலையைப் பங்கிடவும், வியாஜ்ஜியங்களை விசாரணையினின்றும் எடுத்துவிடவும் ட்ரான்ஸ்பர் செய்யவும் டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்கும் ரெவினியு போர்டாருக்குமுள்ள அதிகாரம்.

205. ரெவினியு ஆபிஸர்களின் நடவடிக்கைக் குறிப்புகளை வரவழைத்துப் புனராலோசனை செய்ய அதிகாரம்.

206. ரெவினியு அல்லது ஜுடிஷல் ஆபிஸருக்குக் கலெக்டருடைய அதிகாரங்களைக் கொடுக்க அதிகாரம்.

207. உடன்சேர்க்கையாக டிஸ்ட்ரிக்ட் கலெக்டரை நியமிப்பது.

208. ஷெட்யூலிற்கண்ட டிஸ்ட்ரிக்டுகளுக்கு டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்களும் கலெக்டர்களும்.

209. வியாஜ்ஜியங்கள் அல்லது நடவடிக்கைகளைக் கொண்டுவரவேண்டிய அல்லது நடத்தவேண்டிய இடம்.

16-ம் அத்தியாயம்.

காலநிர்ணயம்.

210. வியாஜ்ஜியங்கள் முதலியவற்றிற்குக் காலநிர்ணயம்.

211. இந்துதேசத்துக் காலநிர்ணய சட்டத்திலே அப்படிப்பட்ட வியாஜ்ஜியங்கள் முதலியவைகளுக்குப் பிரயோகப்படாத பாகங்கள்.

17-ம் அத்தியாயம்.

உடன்சேர்க்கையானது.

தண்டனை.

212. மாமூலின் விஷயத்தில் சட்டத்துக்கு விரோதமாய்ப் பிரவர்த்திப்பது முதலியவைகளுக்குத் தண்டனை.

வியாஜ்ஜியங் கொண்டுவருவதற்கான பொதுவான பாத்தியதை.

213. நஷ்டஈட்டுக்காக வியாஜ்ஜியங் கொண்டுவருவதைப்பற்றிய பொதுவான பாத்தியதை.

நிலத்துக்குடையவர்களின் ஏஜெண்டுகள்.

214. ஏஜெண்ட் மூலமாகப் பிரவர்த்திக்க நிலத்துக்குடையவருக்குள்ள அதிகாரம்.

ஆக்டின்படிக்கான விதிகள்.

215. விதிகள் செய்யப் பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.

ஷெட்யூல்.

A பாகம்.—கலெக்டர் விசாரணை செய்யத்தக்க வியாஜ்ஜியங்கள்.

B பாகம்.—டிஸ்ட்ரிக்ட் கலெக்டர், கலெக்டர் அல்லது வேறே ரெவினியு ஆபிஸர் பைசல் செய்ய வேண்டிய விண்ணப்பங்கள்.

ஓர் பிரசனை—Contd.

"சப்ரிஜிஸ்தராரின் ரிப்போர்ட்டின் பிரகாரம் தஸ்தவேஜியில் கையெழுத்து செய்தவன் 18,000 ரூபாய் பெற்றுக்கொண்டானுகையால் இந்த தஸ்தவேஜு ரிலீஸ் (விடுதலைப்பத்திரம்) அல்ல, விக்கிரய தஸ்தவேஜு ஆகையால் 180 ரூபாய் முத்திரைகடுதாசியில் எழுதியிருக்க வேண்டுமேயொழிந்து 5 ரூபாய் கடுதாசியில் எழுதலாகாது. தான் இவ்விதமாய் கொண்ட அபிப்பிராயத்திற்கு ஆதாரமாக கிரிஸ்டி v. இன்லான்டு ரெவினியு கமிஷனர்கள், லா. ரி. 2 எக். 46; பிலிப்ஸ் v. இன்லான்டு ரெவினியு கமிஷனர்கள், லா. ரி. 2 எக். 399; இந்த தீர்மானங்களை எடுத்துக் கூறினர். தஸ்தவேஜியில் ரிலீஸ் என்று எழுதியிருந்தபோதிலும் அந்த தஸ்தவேஜியில் சம்பந்தப்பட்ட நபர்களின் வாஸ்தவமான தாத்பரியம் யாதென்று யோசிக்கவேண்டியதேயல்லாமல் அந்த தஸ்தவேஜியை எழுதினவர்கள் அதற்கென்ன பெயர் கொடுத்து எழுதினர்களோ அது ஸ்டாம்பு கட்டணத்திற்கு முக்கியமான காரணமாகாதென்று தீர்மானித்தார்."

இவ்விதமாய் கலெக்டர் செய்த உத்தரவின்படி கேட்ட குறைந்த ஸ்டாம்பு தொகையையும் அவர் விதித்த அபராத மொத்தத்தையும் தஸ்தவேஜை ஆஜர் செய்தவன் கட்டிவிட்டு ஸ்டாம்ப் ஆக்ட் (Stamp Act, 1899) 45-வது பிரிவின்படி கமிஷனர் அவர்களுக்கு தான் கட்டிய குறைவு ஸ்டாம்பு மொத்தத்தையும் அபராதத்தையும் வாபீஸ்செய்ய உத்தரவளிக்கும்படி கமிஷனர் அவர்களுக்கு மனு செய்துகொண்டான். அதன்பேரில் கமிஷனர் அவர்கள் ஸ்டாம்ப் ஆக்ட் (Stamp Act) 57-வது பிரிவின்படி ஹைகோர்ட்டாரை பின்வருமாறு பிரசனைகேட்டு அவர்களுடைய தீர்மானத்திற்கு அனுப்பி வைத்தார். பிரசனை "ஸ்டாம்பு ஆக்ட் (Stamp Act) 55-வது ஆர்ட்டிகலின்படி ரிலீஸ் (Release) விடுதலைப் பத்திரம் என்னும் தஸ்தாவேஜியின் பிரகாரம் கையெழுத்து செய்து எழுதிக்கொடுத்தவன் ரொக்கம் ரூபாய் 18,000 பெற்றுக்கொண்டு தனக்கு அதில் செப்பியிருக்கும் சொத்திலுள்ள ஹக்கு சுதந்தரங்களை கொடுத்துவிட்டால் அந்த தஸ்தவேஜு, அதில் செப்பியிருப்பதைப்போல ரிலீஸ் என்று எழுதியிருந்தாலும், ஸ்டாம்ப் ஆக்ட் 55-வது ஆர்ட்டிகலின்படி ரிலீஸ் (விடுதலை) பத்திரமாகுமா? அல்லது ஷை ஆக்ட் 23-வது ஆர்ட்டிகலின்படி ஏன் விக்கிரய தஸ்தவேஜு ஆகாது?" இந்த பிரசனையை ஐகோர்ட்டார் பின்செப்பியபடி தீர்மானித்தார்கள்:—

தங்கள் அபிப்பிராயத்திற்கு அனுப்பியிருக்கும் தஸ்தவேஜியின் பிரகாரம் அதை எழுதிக்கொடுத்திருக்கும் நபர் ரூபாய் 18,000 பெற்றுக்கொண்டு தன் ஹக்கு சுதந்தரங்களை அர்த்தகிரயமாய் கொடுத்துவிட்டமையால் இந்த தஸ்தவேஜு கிரய தஸ்தவேஜு என்று முடிவான தீர்மானம் கூறினர்கள்.

ஆகையால் நம் சந்தாதாரராகிய நேயர் கேட்ட கேள்விக்கு ரிலீஸ் பத்தரமல்லவென்றும், கிரய தஸ்தவேஜு என்றும் அந்ததஸ்தவேஜியில் செப்பியிருக்கும் மொத்தத்தின்மேல் 100-க்கு 1 வீதம் முத்திரை கடுதாசியில் எழுதவேண்டுமென்றும் கூறுகின்றோம்.

இதற்கு முன் தொடர்ச்சி 90-வது பக்கம் பார்க்கவும்.

IMPORTANT RULINGS.

முக்கியமான தீர்ப்புகள்.

ஒருபோலீசு கான்ஸ்டேபிலுக்குக் கடன்கொடுத்திருந்தவர்கள், தங்களுக்கு அவனுல் சேரவேண்டிய பாக்கி ரூபா இரண்டும் தீருகிறவரையில் அவன் சம்பளத்தில் மாதாமாதம் பிடித்துக்கொண்டு வரவேணுமென்று போலீசு டிஸ்டிரிக்ட் சூபிரண்டெண்டண்டைக் கேட்டுக்கொண்டார்கள். அவ்விதமாய் அவன் சம்பளத்தில் பிடித்து வரும்படியாக உத்திரவானதின் பேரில் கடனாளி, தான் கொடுக்க வேண்டியிருந்த முழுதொகையாகிய 18-ரூபாயுஞ் சேர்ந்துவிட்டதாக ஒரு ரசீது ஆஜர்படுத்தினுன். அந்த ரசீது 8-ரூபாய்க்கு கொடுக்கப்பட்டிருந்ததில் 8-க்குமுன் '1' என்கிற எண்ணைச்சேர்ந்தது 18-ரூபாய்க்கு ரசீதென்று காணும்படியாகச் செய்தானென்று பின்னிட்டு தென்பட்டது. இவ்விஷயத்தில் இந்த குற்றவாளியின் மனதிலிருந்த உண்மையான எண்ணம், தன் சம்பளத்திலிருந்து தன் மேலான உத்தியோகஸ்தரை அக்கிரமமாய் பிடித்தம் பிடிக்கவொட்டாமல் தடுக்க வேணுமென்பதாயிருந்தமையால், கிரிமினல் கேசில், கோர்ட்டார் அவனுக்குப் புத்தியில்பட்டிருந்த இந்த எண்ணத்துக்கு மேலும், அல்லதுமாருகவும் அவன் எண்ணிக்கொண்டிருந்ததாக யூகிக்கப்படாது என்றும் ; அப்படி அவன் செய்துவிட்டதினுல் கடனை மோசஞ்செய்ய வேணுமென்று ரசீதை திருந்தும்படி யோசித்ததாக அர்த்தமாகவில்லையென்றும் ; அவன்பேரில் பினல்கோடு 471-வது பிரிவின்படி குற்றஸ்தாபனை செய்திருக்க கூடாதென்றும் தீர்மானிக்கலாச்சுது. I. L. R. 7. All. 403.

ஒருவன் ஒரு பகிரங்கமான பாட்டைக்கு எட்டு கஜதூரத்துக்குட்பட்ட தன் சொந்த நிலத்தில் திறந்தபடியாயிருக்கும் ஒரு கிணற்றைச்சுற்றி வேலிபோடாமல் விட்டிருந்தால் அவன் தன் நிலத்திலிருக்கும் கிணற்றிற்கு சுவர்போடாமல் வைப்பதினுல் சகல ஜனங்களுக்கும் இடையூருன காரியம் ஒன்றை செய்வதால் ஏற்படக்கூடிய குற்றத்தைச் செய்ததாகச் சொல்லக்கூடாது என்று தீர்மானித்தார்கள். ஏனெனில் சொந்த நிலத்திலிருக்கும் கிணற்றிற்குச் சுற்றிலும் சுவர் போடாமல் விடுவது குற்றமாகுமென்று எந்த சட்டத்திலும் சொல்லப்படவில்லை. அதுவுமல்லாமல் அப்படிச் சுவர்போடாமல் விட்டதிற்காக சிவில் வியாஜ்ஜியம் தொடருவதற்கும் யாருக்கும் பாத்தியம் கிடையாது. ஆகையினுலே அவன் சுவர்போடாமல் விட்டது அக்கிரமமான காரியமாகமாட்டாது. I. L. R. 6. Mad. 280. டிப்டி தாசில்தாராயிருந்த ஒருவர் தன்னுடைய அனுபவத்திலிருந்த நிலங்களைப் பற்றி, தனக்குமேலான அதிகாரிக்கு அனுப்பவேண்டிய கணக்கில் தனக்கு யாதொரு நிலமுமில்லையென்பதாய் ஒரு பொய்யான "வெறும்" கணக்கனுப்பினுர். அதுவிஷயமாய் மேற்குறித்த காரணங்களாலேயே அவர் செய்த காரியமும் அக்கிரமமானதென்று சொல்லக்கூடாதென்றும் தீர்மானிக்கலாச்சுது. I. L. R. 14. Mad. 484.

குஷ்டரோகி புத்திரன் :—குடும்பச்சொத்து பாகப் பிரிவினை செய்யப்படுவதற்கு முந்தி ஒரு பாகஸ்னுக்கு கொடிதாகிய அல்லது ரணமுள்ள குஷ்டரோக முண்டாகிவிட்டால் அவனுக்குக் குடும்பச்சொத்தில் ஜீவனும்சம் கிடைக்கக்கூடியதேயன்றி குடும்பசொத்தில் பாகம் கிடைக்கமாட்டாது. அனந்தா V. ரும்பாய் இ. லா. ரி. 1 பம் 554. (I. L. R. 1 Bom 554.)

புருஷனும் பெண்சாதியும் :—ஒருவன் பெண்ஜாதி தன்னுடைய புருஷனுடன் கூடவிருந்து வசிக்காமல் தனியேவசிக்க ஜீவனும்சம் வேண்டுமென்று புருஷன் பேரில் வியாஜ்ஜியஞ் செய்ய பாத்தியமில்லை. புருஷன் தன்னை சரிவர சம்ரெட்சிக்கவில்லை என்றும், புருஷன் விபசாரஞ் செய்கிறவன் என்றும், புருஷனுடன் கூடி வாழ புருஷன் தடை செய்தானென்றும் ருசுப்படுத்தினுல் ஜீவனும்சம் கிடைக்கும். சிட்லிங்கம்பா V. சிதேவா இ. லா. ரி. 2 ம் 624 (I. L. R. Bom 624.)

சக்களத்தி தாயார் :—பிதிரார்ச்சித சொத்துக்களை அடையாத சக்களத்தி பிள்ளைகள் தங்களுடைய சக்களத்தி தாயாருக்கு ஜீவனும்சம் கொடுக்க சட்டப்படி கட்டுப்பட்டவர்களல்ல. பாய்தாயா V. நதகோவிந்தலால் இ. லா. ரி, 9 பம் 279. (I. L. R. 9 Bom 279.)

தீர்ப்புக்கு முந்தின ஜப்த்தி :—தீர்ப்பு பெறுவதற்கு முந்தி ஜப்த்தி செய்வதின் கருத்து என்னவென்றால் வாதிக்கு டிக்கிரி கிடைத்தால் அந்த டிக்கிரியின் தொகையை வசூல்செய்து கொள்ளுவதற்கு ஒரு பந்தோபஸ்தே தவிர, மற்றப்படி ஜப்த்திசெய்த கடன்காரனுக்கு மற்றகடன்காரர்களைவிட (கடன் கொடுத்தவர்கள்) அச்சொத்தில் முந்திய பாத்தியதை யிருக்கிறதென்று தார்பரியப்படுத்திக் கொள்ளக்கூடாது. 10. சல். வி. நோ. 634 (10 Cal. W. N.)

வைப்பாட்டி :—ஒருவன் ஒருவளை நீண்ட காலமாக வைப்பாட்டியாக வைத்திருந்து பின்பு விட்டுவிடுகிருன். அவள் அப்புருஷன்பேரில் வழக்கிட நியாயமில்லை. ருமநரசு V. புச்சம்மா இ. லா. ரி. 23 சென். 282 (I. L. R. 23 Mad. 282.)

———————— :—ஒருவன் ஒரு வைப்பாட்டியை வைத்திருந்து இறந்து விடுகிருன். அவள் பிற புருஷமுகம் பார்க்காம விருப்பவளாயிருக்கும் பக்ஷத்தில் அவளுடைய வைப்புப் புருஷனுடைய சகோதரர்கள் அவளுக்கு ஜீவனும்சம் கொடுக்க கடமைப்பட்டவர்கள். யஷலண்டிராவ் V. காகூஷிபேய் இ. லா. ரி. 12 Bom 26. (I. L. R. 12 Bom 26.)

நிலவிர்த்தி :—நிலம் விர்த்தி செய்யப்பட்டபோது நான் மைனராயிருந்தேன் ஒன்று டிபன்ஸ் கூறுவது அப்படி நிலம் விர்த்திசெய்யப்பட்டதற்குப் பிடித்த செலவைக் கொடுக்கக் கடமைப்பட்டிருப்பதினின்று விடுவிக்கமாட்டாது. 10. வீ. நோ. (10. W. N.)

மகமடன் லா (முகமதியச் சட்டம்) :—மகமடன் லாப்பிரகாரம் ஒரு தாயார் தன்னுடைய மைனர் புத்திரனின் சொத்துக்களை பராதீன முதலியவைகள் செய்ய யாதொரு சுதந்தரமும் கிடையாது. அவளால் எழுதிக்கொடுக்கப்பட்ட விக்கிரய சாசனம் செலாவணியாக மாட்டாது. சீதாராம் இ. லா. ரி. 8. அல. (324. I. L. R. All. 324.)

ஸ்திரி தனசொத்தின் உயில் :—புருஷனும் பெண்சாதியும் கூடி வாழுங்காலத்தில் புருஷன் பெண்சாதிக்கு அடிக்கடி சொந்த செலவிற்காக கொஞ்சம் பணம் கொடுத்து வந்தான். இந்தப்பணத்தை அவள் சேர்த்துக்கொண்டு வருகிருள். இதையன்றி அவளுக்கு ஸ்திரி தன மூலியமாய் கொஞ்சபணமும் கிடைத்தது. இந்த இரண்டு ஐவேஜிகளைக்கொண்டு அவள் சில ஸ்தாபர சொத்துக்கள் வாங்குகிருள். இந்த சொத்துக்கள் அவளுடைய ஸ்திரி தன சொத்துக்களாக எண்ணப்படவேண்டும். அவள் அச்சொத்துக்களை தன் இஷ்டப்படி பராதீனம் செய்யலாம். உயில் எழுதிவைக்கலாம். வெங்கட்டருமராவ் V. வெங்கட்டசூரியராவ். இ. லா. ரி. 1 சென். 281; (I. L. R. 1. Mad. 281.)

THE REGISTRAR OF B... REGIST... 30 SEP 1908 MADRAS



THE LATE MR. H. T. BODDAM.
காலஞ்சென்ற மிஸ்டர் யச். டி. போடாம்.

இந்திய சட்ட கெஜெட்

சென்னை யன். இராதாகிருஷ்ண கம்பெனியாரால் வெளியிடப்படும்
உயர்தர மாதாந்த சஞ்சிகை

வால்யம் 3] சென்னப்பட்டணம், 1908ளு மே ஜூன் மாதங்கள் [பாகம். 5. 6

அடக்கம்.

உருவப்படம்.—காலஞ் சென்ற ஜட்ஜ் மிஸ்டர் போடாம்.

மே மீ

1. திருநல்வேலி இராஜ நிந்தனைக் கேஸ்—சிதம்பரம் பிள்ளையை செஷனுக்கு கமிட்டி செய்த ஆர்டர் ... 99
2. பூமிக்குடையவரும் குடிகளும்—ஓர் சம்பாஷணை 101
3. பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம்ளுத்து 1-வது ஆக்ட் ... 103
4. நில விருத்தி சம்பந்தமான கடன்களை குறித்த 1883-ளுத்து 19-வது ஆக்டின் படிக்கும், வியவசாயகாரர்களுக்குக் கடன் கொடுப்பதைக் குறித்த 1884-ளுத்து 12-வது ஆக்டின்படிக்கும் கடன் கொடுப்பதற்கான விதிகள் 119
5. போர்டாரின் உத்தரவுகள், ஜில்லா சர்குலர்கள் 125

ஜூன் மீ

1. ஒரு வருக்காகவே இரண்டு வக்கீல்கள் அட்டிரஸ் செய்யலாமா?... 135
2. மதராஸ் ஹைகோர்ட்டின் முதலாவது மகம்மதிய ஜட்ஜ் 136
3. பத்திரிகாசரியர் குறிப்புகள் 138
4. சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள் 139
5. மாலாவதி—ஓர் இனிய தமிழ் கதை 145
6. பொது வர்த்தமானம் 148
7. கவர்ன்மெண்ட் ஆர்டர்கள், போர்ட்டார் உத்தரவுகள் ஜில்லா சர்க்கியுலர்கள் 152
8. சென்னப்பட்டணம் 1908-ளுத்து I-வது ஆக்ட் 154
9. இந்தியன் லா ரிபோர்ட்டுகளிலுள்ள கேசுகள் 166

THE LATE JUSTICE MR. BODDAM.

காலஞ்சென்ற ஜஸ்டிஸ் மிஸ்டர் போடாம்.

சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜிகளில் ஒருவராயிருந்து, 1908௵ மே௴ 7௳ விலகிய ஜஸ்டிஸ் மிஸ்டர் போடாம் அவர்கள், அடுத்த தினமாகிய 8௳ சென்னை வாசிகளின் வந்தனோப சாரங்களைப்பெற்று தமது ஜனன பூமிக்கு பிரயாணமாகி போகும்போது இடைவழியில் அதாவது ரெய்ச்சூரில் இறந்து விட்டதற்காக மிகவும் துக்கிக்கின்றோம். இவர் தம் திருவுருவப்படமும், ஆயுள் சரித்திரமும் நமது இந்தியா சட்ட கெஜட் வால்யம் 2, பாகம் 1-ல் பதிப்பிக்கப்பட்டிருப்பினும், நமது கையொப்ப நேயர்களின் வேண்கோளுக்கிணங்க அவர் திருவுருவ படத்தை இம்முறையும் பிரசுரித்திருக்கின்றோம் இது விஷயமாய் மே௴ 19௳ வெளிவந்த போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் கெஜட்டில் இடதுபக்கத்தில் கண்ட விளம்பரம் வெளியாயிருக்கிறது. அதன் பொருளாவது பின் வருமாறு—"தாம் கடைசி முறையாக சீமைக்குப் புறப்பட்டு சென்ற பிரயாணத்தில், கனம் மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம், அவர்கள், தாம் ஹைக்கோர்ட்டு ஜட்ஜியாக விருந்து ரிடயரான அதாவது விலகிக்கொண்டதற்கு அடுத்த தினமாகிய 1908௵ மே௴ 8௳ யன்றே காலமாய் விட்டன ரென்ற சமாசாரத்தை, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அவர்கள் மிகவும் அற்றொணுதுயரத்தோடு ஏற்று இருக்கிறார். பெருத்தலோகோபகாரியும் பொது ஜன நன்மைக்குரிய விஷயங்களை முக்கியமாய் ஆதரிப்பவரும், உள்ளன்போடும் ஊக்கத்தோடும்-உழைத்த நியாயாதிபதியுமாகிய கனம் மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம் அவர்களின் மரணம் எங்கும் துக்கம் கொண்டாடப்படும்."

"H. E. the Governor in Council has received, with profound regret, intelligence of the death of the Hon'ble Mr. Justice Boddam on the 8th May 1908, the day following that on which having completed his service as a judge of the High Court, he had started on his last journey Home. A man of great public spirit, a prominent supporter of philanthropic movements and an earnest and industrioous judge, the Hon'ble Mr. Boddam's death will be universally lamented."

DO IT FIRST !

இதை முதலாவது செய்யும்!

இதனடியில்கண்ட திருத்தங்களை முதலாவது செய்துகொண்டு பிறகு வாசியுங்கள்.

பக்கம்	கலன்	பாரா	வரி	என்றிருப்பதை	என்று திருத்தவும்.
99	2	....	3	மானேஜாகவும்	மானேஜராகவும்
100	1	4	12	ஜீ-ஜீயில் 2	ஜீ-யில் 2
102	1	1	6	பாத்துயங்களை	பாத்தியங்களை
ஷை	ஷை	13	3	கிரயந்தான்	கிரயம் தானம்
103	1	3	5	வாசித்தீதாராறல்	வாசித்தீராறல்
147	1	2	6	லேயோடும்	கலேயோடும்.

பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப் பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம் ௵த்து Iவது ஆக்ட்டின், 3வதுபிரிவு-3வது உட்பிபிரிவு-1வது வரியில் "கைப்பாற்று" என்பதை "கைப்பற்று" எனவும் ஷை 4வது உட்பிரிவு (104 வது பக்கம்)எப் பாரா 6வது வரியில் "மதங்" என்பதை "மதம்" எனவும், ஷை 5வது உட்பிரிவு, 2-வது பாரா 8-வது வரி "ரேரிட்டால்" என்பதை "நேரிட்டால்" எனவும், ஷை 11 வது உட்பிரிவு (105வதுபக்கம்) 13வது வரியில் "விஷத்திலே" என்பதை "விஷயத்திலே" எனவும் ஷை 16 வது உட்பிரிவு, வி பாரா 6 வது வரியில் "நிலக்கள்" என்பதை "நிலங்கள்" எனவும், ஷை 19 வது உட்பிரிவு (106 வது பக்கம்) 8 வது வரியில் "பரதேச" என்பதை "பிரதேச" எனவும், ஷை ஆக்ட் 2-ம் அத்தியாயம், 4-வது பிரிவு, மாரிஜனில் "செயய நிலத்துக்குடைய வருக்குன்ள" என்பதை "செய்ய நிலத்துக்குடைய வருக்குள்ள." எனவும், 8 வது பிரிவு (107-ம் பக்கம்) 12 வது வரியில் "அருக்கு" என்பதை "அவருக்கு" எனவும், ஷை 15 வது வரியில், "பதாக முண்டாக" என்பதை "பாதகமுண்டாக" எனவும் ஷை பிரிவு 2 வது உட்பிரிவு (107-ம்பக்கம்) 9-வது வரியில் "மூன்றும்" என்பதை "மூன்றும்" எனவும், 3-வது உட்பிரிவு 4-வது வரியில் "சோந்த" என்பதை "சொந்த" எனவும், 4-வது உட்பிரிவு 2-வது பாரா 4-வதுவரி "தேச" என்பதை "தேதி" எனவும், 3-வது பாரா 8-வதுவரி "அடைப்பட்டாலும் "என்பதை" அடையப்பட்டாலும்" எனவும், 10-வது பிரிவு (108-ம்பக்கம்) 2-வது வரியில் "பரம்பரையாய்" என்பதை "பரம்பரையாய்" எனவும், 11-வது பிரிவு 4-வது வரி "தகுதியற்றதாகங" என்பதை "தகுதியற்றதாகச்" எனவும், 12-வது பிரிவு 4-வது வரியில், "எவ்விதம்" என்பதை 'எவ்வித' எனவும், 20-வது வரியில், "உடையவராவார்" என்பதை "உடையவராகார்" எனவும், 13வது பிரிவு 2வது உட்பிரிவு, 2-வது வரியில் "இஷ்டமுடையவராயிருந்து" என்பதை "இஷ்ட முடையவரா யிருந்து" எனவும், 17வது பிரிவு, 1வது உட்பிரிவு மார்ஜனில் "சிர்திருத்தம்" என்பதை 'சீர்திருத்தம்" எனவும், 10-வது வரியில் "ஆதாரங்கள" என்பதை "ஆதாரங்கள்" எனவும், 19-வது பிரிவு மார்ஜனில் "பயக்காரி" என்பதை "பாயக்காரி" எனவும், 21-வது பிரிவு, மார்ஜனில் "நிலங்கனை" என்பதை "நிலங்களை" எனவும், 26-வது பிரிவு (110-வது பக்கம்) 1-வது உட்பிரிவு மார்ஜனில் "நிஷ் கரிஷை செயபப் பட்ட" என்பதை "நிஷ்கரிஷை செய்யப்பட்ட" எனவும், 30-வது பிரிவு, மார்ஜனில் "வியாஜ்ஜிய மூலகாவக்" என்பதை "வியாஜ்ஜிய மூலமாகவாவது" எனவும், ஷை பிரிவு 1-வது உட்பிரிவு பி பாரா 4-வது வரியில் "தொகைபில்" என்பதை "தொகையில்" எனவும், 112 வது பக்கம், டி பாராவில் "வருஷக்களா" என்பதை "வருஷங்களா" எனவும் ஷை பக்கம் இ பாரா 3-வது வரியில் "பாணமானது" என்பதை "மாணமானது" எனவும், 6-வது வரியில் "விலக்கி" என்பதை "விலக்கு" எனவும், 32-வது பிரிவு, 1-வது உட்பிரிவு, முதல் வரியில், "விரிவை" என்பதை "பிரிவை" எனவும், ஷை உட்பிரிவு, பி-யில் 1-3-வது வரியில் "அயிவிருத்தி" என்பதை "அபிவிருத்தி" எனவும், 33-வது பிரிவு 4வது வரியில் "செய்யடும்போது" என்பதை "செய்யப்படும்போது" எனவும் 35வது பிரிவு மார்ஜனில் "வேண்டுமெபது" என்பதை "வேண்டுமென்பது" எனவும், 38-வது பிரிவு எ-பாரா 2-வதுவரி "மணணனது" என்பதை "மண்ணனது" எனவும், 39-வது பிரிவு, மாரிஜனல் "குத்தகைத்தொகையை குறைக்கும்படி அடுத்தடுத்து வியாஜ்ஜியங்களை..." எனவும், ஷை பிரிவு 9-வது வரியில் "டிய்ரி" என்பதை "டிக்ரி" எனவும், 42-வது பிரிவு, ஏ-பாரா 1-வது வரியில் "குத்தகைத்தொகை" என்பதை "குத்தகைத்தொகை" எனவும், பி பாரா 1-வது வரியில் "முத்தகை" என்பதை "குத்தகை" எனவும், 115-வது பக்கம், 1-வது கலம் 3 என்று குறிப்பிட்ட பாரா, 8-வது வரி "அமர்.....நியாயமற்றதாகவாகிலும்" என்பதை "அவர் போதா நியாய மற்றதாகவாகிலும்" எனவும், பிருஸ்தாப விஷயத்தின் சந்தர்ப்பங்களை யோசிக்கும் வரியில் "சந்தர்ப்பத்தில்" என்பதை "சந்தர்ப்பத்திலும்" எனவும், 10-வது வரியும் ஷை பக்கம், 2-வது கலம் 9-வது பாரா "சார்சரி" என்பதை சராசரி" எனவும், அடுத்த பாரா 7-வது வரியில் "குறைப்பட்ட" என்பதை "குறைக்கப்பட்ட எனவும், 45-வது பிரிவில், "யாதொரு நபர்......அடைந்துராத ரயத்து" என்பதை "யாதொரு நபர் நிலத்துக்குடையவருடைய சம்மதத்தைப் பெறுமல் பரம்பரை பாத்தியதை மூலமாகவாவது சட்டப்படிக்கான டினான்ஸியர் மூலமாகவாவது தாம் அடைந்திராத ரயத்து" எனவும், ஷை பிரிவு 19-வது வரியில் "தீர் மானிக்கப்படும்" என்பதை "தீர்மானிக்கப்படும்" எனவும், 47-வது பிரிவு 19-வது வரியில் "விரும்புகிறோரோமா" என்பதை "விரும்புகிறோரோ" எனவும், 48-வது பிரிவு 1-வது உட்பிரிவு 10 வது வரியில் "தெரிவிக்கத் தவறிஞலும்" என்பதை "ரெவினியு" எனவும், 49-வது பிரிவு மாரிஜனில் "ரெவினியு" என்பதை "தெரிவித்தாலும் தெரிவிக்கத் தவறிஞலும்" எனவும், ஷை பிரிவு 4-வது குறிப்பிட்ட பாரா கடைசி வரியில் "செலாவணியற்றதாய்" என்பதை "செலாவணியற்றதாய்" எனவும், 52-வது பிரிவு, 1-வது உட்பிரிவு, 7-வதுவரியில் "நிலத்துக்குடையவரும்" என்பதை "நிலத்துக்கு

(இதன் தொடர்ச்சியை 172-ம் பக்கத்தில் பார்க்கவும்,

30 SEP 1908

THE INDIAN LAW GAZETTE

இந்திய சட்ட கெஜட்

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்

வால்யம் 3] சென்னப்பட்டணம், 1908௵ மே மாதம் [பாகம். 5

TINNEVELLY SEDITION CASE

P. R. C. I. of 1908.

King Emperor *v.* Chidambaram Pillai

திருநல்வேலி இராஜ நிந்தனை கேஸ்.

மகராஜா சக்கிரவர்த்தி *v.* சிதம்பரம் பிள்ளை.

திருநல்வேலி அட்டிஷனல் டிஸ்டிரிக்ட் மாஜஸ்டிரேட் மிஸ்டர் இ. யச். வாலெஸ், உ. ஓ. சிதம்பரம் பிள்ளையின் மீது பின்வருமாறு குற்றஞ் சாட்டுகிறார்.

முதலாவது :—1908௵ மார்ச்சு௴ 3௳ தூத்துக்குடியில் நீர் செய்த பகிரங்க பிரசங்கத்தால், பிரிடிஷ் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற கவர்ன்மெண்ட் விஷயத்தில், பகை அல்லது நிந்தனையை உண்டாக்கியோ அல்லது உண்டாக்க பிரயத்தனப்பட்டோ அல்லது கோபத்தை மூட்டியோ அல்லது மூட்ட பிரயத்தனப்பட்டோ யிருக்கிறீராதலால், செஷன் கோர்ட்டார் விசாரித்து தண்டிக்கக்கூடிய இந்தியன் பினல் கோட் 124 எ., செக்ஷன்படிக்கான குற்றத்தை செய்திருக்கிறீர்.

இரண்டாவது :—மார்ச்சு மாதம் 9௳யும் திருநல்வேலி ஆற்றங்கரையில் மேற் கண்ட மாதிரியாகவே பிரசங்கஞ் செய்திருக்கிறீர்.

ஆதலால் அதே குற்றத்தின் பேரில் ஷை கோர்ட்டாராலேயே அதாவது செஷன் கோர்ட்டாராலேயே நீர் விசாரிக்கப்படும்படி இதனால் தீர்மானிக்கிறோம்.

இந்த பிரசங்கத்தில் நீர் வெளியிட்ட சட்ட விரோதமான இரண்டு விஷயங்களும், இந்தியன் பினல் கோட் 153 எ., செக்ஷன்படிக்கான குற்றங்கள்.

ORDER OF COMMITMENT

கமிட்மெண்ட் ஆர்டர்

அதாவது

குற்றத் தீர்மானம்

1. தூத்துக்குடியில் சிலகாலம் இரண்டாவது கிரேட் வக்கீலாகவும், அவ்விடத்திலுள்ள சுதேச ஸ்டீம் நாவிகேஷன் கம்பினியில் அஸிஸ்டண்ட் மானேஜராகவும் இருந்த தூத்துக்குடி உ. ஓ. சிதம்பரம்பிள்ளை என்னும் ஒருவர் இக்கேசில் குற்றவாளி. இவர் மீது, கடந்த பிப்ரவரி மார்ச்சு௴ அநேக தேதிகளில் திருநல்வேலியிலும் தூத்துக்குடியிலும் இராஜ நிந்தனையான விஷயங்க ளடங்கிய பகிரங்கமான பிரசங்கங்களை செய்து, அதனால் கவர்ன்மெண்டார் பேரில் வெறுப்பையும், வெள்ளைக்கார ஜாதியார் பேரில் விரோதத்தையும் கொள்ளும்படி பிரயத்தினப்பட்டதாகிய இந்தியன் பினல் கோட் 124 எ., 153 எ., செக்ஷன்களின் படிக்கான குற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கிரிமினல் புரோஸீசர் கோட் 196 வது செக்ஷன்படி பெறவேண்டிய லோக்கல் கவர்ன்மெண்டாரின் அதிகாரம் பெற்று, இவர் பேரில் பிராது கொண்டுவரப்பட்டது.

2. இக்கேசானது துடங்கி நடந்து வருங்காலையில் விசாரணையைப்பற்றிய பல ஆக்ஷேபனைகள் குற்றவாளியாலும், அவரது பிளீடர்களாலும் கொண்டுவரப்பட்டன வென்றாலும், யாம் அவ்வவற்றிற்கும் அவ்வப்போது எடுத்துக்காட்டி, பிரத்தியேகமாய் பதிவு செய்திருக்குங் காரணங்களால் புறக்கணிக்கப்பட்டன

வாதலால், அவைகளை யாம் இங்கு பதிய வேண்டியதில்லை.

3. பிராசிக்கியூஷன் தரப்பில் 26 சாக்ஷிகள் விசாரிக்கப்பட்டார்கள். இவர்களின் வாக்கு மூலங்களை இரண்டாக பிரிக்கலாம். அதாவது, (எ) பிரசங்கங்கள் அளவில் ஏற்பட்ட குறிப்புகள். (பி) அப்பிரசங்கங்களினால் அவற்றை கேட்டவர்களுக்கும், பொதுவாய் மற்ற ஜனங்களுக்கும் உண்டானபலன். இவற்றில் ஒவ்வொரு பிரிவையும் பின்னும் இரண்டாக பிரிக்கலாம். எ.,யில்1 பிரசங்ககாலங்களில் ஆஜராயிருந்த போலீஸ் உத்தியோகஸ்தர்களால் எழுதப்பட்ட விஷய குறிப்புகள். எ-யில் 2., மற்ற சாக்ஷிகளால் சேகரிக்கப்பட்ட பிரசங்க விஷ்யங்களின் சில பாகங்களடங்கிய குறிப்புகள். பி-யில் 1., கவர்ன்மெண்டார் மீது ஜனங்களுக்கு உண்டாகிய உணர்ச்சி விஷயமான பிரசங்கபலன். பி-யில் 2., வெள்ளைக்கார வகுப்பாரிடத்தில் ஜனங்களுக்கு உண்டாகிய உணர்ச்சி விஷயமான பிரசங்க பலன். ஆகிய இந்த நான்கு அம்சங்களையே குற்ற தீர்மானத்தில் எடுத்திருக்கிறோம்.

4. பிப்பரவரி 8-தேதி முதல் மார்ச்சு மாதம் 13 தேதிவரையில், தூத்துச்குடியில் 20 அல்லது அதற்கு அதிகப்பட்ட அநேக தடவைகளில், முதலாக 400 ஆக இருந்து பின் 4000 மாக அதிகரித்து விட்ட விசேஷமாய் கீழ்த்தரமானவர்களடங்கிய கூட்டத்தாருக்கும் பின் மார்ச்சுமீ இரண்டுதடவைகளில் திருநல்வேலி ஆற்றங்கரையில் கீழ்த்தரமானவர்களும், பள்ளிகூடத்து பிள்ளைகளும் விசேஷமாய் கூடியிருந்த சுமார் 400 ஜனங்களுக்கும், குற்றவாளி பகிரங்கமான தமிழ் பிரசங்கங்களை செய்தாரென்பதற்கு ஆத்தாக்ஷிகள் இருக்கின்றன.

குற்றவாளி, தூத்துக்குடியில் பிப்பரவரிமீ 19உ செய்த பிரசங்கத்திற்கு ஸி. குறிப்பிட்ட எக்சிபிட்டும்: பிப்ரவரிமீ 23உ பிரசங்கத்திற்கு ஸி. என்றும் ஜி. என்றும் குறிப்பிட்ட யக்சிபிட்டுகளும், பிப்பரவரிமீ 26உ பிரசங்கத்திற்கு ஜி. யில். 2, என்று குறிப்பிட்ட எக்சிப்பிட்டும், மார்ச்சுமீ 3உ பிரசங்கத்திற்கு இ. என்றும் கே என்றும் குறிப்பிட்ட எக்சிபிட்டுகளும் மார்ச்சுமீ 9உ பிரசங்கத்திற்கு பி. என்றும், பி-யில் 1 என்றும், குறிப்பிட்ட யக்சிபிட்டுகளும், மார்ச்சுமீ 11உ பிரசங்கத்திற்கு பி - யில் 2 என்று குறிப்பிட்ட எக்சிபிட்டும் அத்தாக்ஷிகளாய் இருக்கின்றன. எக்ஸிபிட்டுகளாகிய பி,பி-யில் 1,பி-யில் 2, ஜி, ஜி-ஜி யில் 2, கே ஆகிய இவைகள் தமிழிலும், எக்ஸிபிட்டுகளாகிய ஸி, ஸி-யில் 1, இ ஆகிய இவைகள் இங்கிலீஷிலும் எழுதப்பட்டுள்ளன. பிரசங்கங்கள் தமிழில் செய்யப்பட்டவாயினும், பிராசிகியூஷன் தரப்பு இரண்டாவது சாக்ஷியாகிய திருநல்வேலி போலீஸ் இன்ஸ்பெக்டர், தமிழைவிட இங்கிலீஷில் சாதுரியமாக எழுதக்கூடியவரானதால் அவர், பி, பி-யில் 1, பி-யில் 2, ஆகிய இந்த எக்ஸிபிட்டுகளில் அடங்கிய ரிபோர்ட்டுகளை இங்கிலீஷில் எழுதியிருக்கின்றனர். (2) ஸி, ஸி-யில் 1, இ-ஆகிய இந்த எக்சிபிட்டுகளை பிராசிகியூஷன் தரப்பு 11-வது சாக்ஷியாகிய தூத்துக்குடி போலீஸ் இன்ஸ்பெக்டர் எழுதியிருக்கின்றனர். (3) ஜி, ஜி-யில் 2, ஆகிய இந்த எக்சிபிட்டுகளை பிராசிகியூஷன் தரப்பு 14-வது சாக்ஷியாகிய தூத்துக்குடி போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் எழுதியிருக்கின்றனர். (4) கே எக்சிபிட்டை பிராசிகியூஷன் தரப்பு 21-வது சாக்ஷியாகிய கான்ஸ்டபில் ஒருவர் எழுதியிருக்கின்றனர். இந்த கே என்று குறிப்பிட்ட எக்சிபிட்டைத்தவிர மற்றவைகளெல்லாம் போதுமான சாமர்த்தியமும் தக்க உத்தரவாதமுமுள்ள போலீஸ் உத்தியோகஸ்தர்களால் எழுதப்பட்டிருக்கின்றன. எக்சிபிட் கே யானது சாமான்ய கான்ஸ்டெபிளினால் எழுதப்பட்டுள்ள தாகையால், தெளிவாயிராமலும் சிற்சில சமயங்களில் கலவரப்படுத்தக் கூடியதாகவும் இருக்கிறது. ஆனால் மற்றவைகளோ முற்றும் உண்மைக் குதாரமானவையாகவும், நம்பக்கூடியனவாயும் இருக்கின்றனவென்பது எமக்கு பூரணமாகவிருக்கிறது. குற்றவாளி பிரசங்கஞ்செய்த காலங்களில் மேற்படி ஆபீஸர் ஆஜராயிருந்ததைப் பற்றியாவது, அவர்கள் எழுதிய குறிப்புகளின் சரியைப்பற்றியாவது யாதும் அதிகமாக எதிர்வாதம் செய்யப்படக் காணோம். பிரசங்கங்கள் தமிழில் செய்யப்பட்ட வாயினும், தமிழ் பதங்களுக்கு சரியான இங்கிலீஷ் பதங்கள் உபயோகப் படுத்தப்பட்டிருக்கின்றனவென்பது ஒத்துக்கொள்ளப்பட வேண்டியதா யிருக்கிறது. பல தடவைகளில் எழுதப்பட்ட குறிப்புகள் வேண்டுமென்றே ஜோடிக்கப்பட்டவை என்று ஒரு மாதிரியாக எதிர்வாதம் செய்யப்பட்டதே யொழிய நல்லதிடமாய் எதிர் வாதம் செய்யப்படாமையைக் கொண்டு யாம் அதை நம்ப இடமில்லை. அது விஷயமாக வாதிக்கப்பட்ட விஷயங்களை எடுத்து பார்க்கப்புகின்பிராதின் மாதிரியே அக்குறிப்பெடுக்கப்பட்டவைகள் உண்மையானவைகள் எனப்புலப்படுகிறதாக விருக்கிறது. பின்னும் பார்க்கப்புகின் அபிஷியல் உத்தியோகஸ்தரல்லாதவர்கள் எடுத்துள்ள மற்ற குறிப்புகளுடன் ஒத்திட நிச்சயக்கிறதாக விருக்கிறது.

(5) குறிப்பெடுக்கப்பட்டுள்ளவைகளின் சாராம்சத்தை இப்போது கவனித்தாலும் அவைகள் மிகுந்த கடூரமானவைகளும் அதின் கருத்துகள் மிகவும் வெளிப்படையானவையுமா யிருக்கின்றன வென்றால்—குற்றவாளிக்கு யாம் யாதும் அநீதமாக நடந்து கொள்ள வில்லை யென நம்புகிறோம்.

(இதன் தொடர்ச்சியை 131-வது பக்கம் பார்க்கவும்.)

600 008

A DIALOGUE

ஓர் சம்பாஷணை

SUBJECT:—Landlord and Tenant

விஷயம்:—பூமிக்குடையவரும் [illegible]

(BY MR. A. V. SEYALAM.)

குடியானவன்:—சுவாமி! நமஸ்காரம்.

வக்கீல்:—மகாராஜனாயிரு!... இன்றைக்கு மழை வரும் போலிருக்கிறது...கோர்ட்டிருக்கும் இடமும், வக்கில் முகமும் தெரியாதவர் நீர் இன்று வரவே வானமும் மப்பு மந்தாரமாயிருக்கிறது...கட்டாயம் மழை வரும்.

கு:—எவ்வளவு காலம் கோர்ட்டுக்குப் போகக் கூடாதென்று ஒன்றுக்கு முக்கால் வாங்கி சமாதானமாய்போனாலும், சென்னப்பட்டணத்திற்கு சென்று கோச்சுமான் வேலையிலிருந்து, அதில் பணம் சம்பாதித்து கால்அரைக்காணிநிலங்களை வாங்கியிருக்கும் பறையன்கள் வீண்வம்புக்கு வருவதல்லாமல், "முதலியாரே! முடிச்சு அவுழ்த்துக்கொள்ளும்!...கோர்ட்டுக்கு போவோம்," என்று அடிக்கடி வாயரட்டை அடிக்கிறார்கள். ஒருசமயம் வம்புக்காவது என்னை கோர்ட்டுக்கு இழுத்துவிட்டால் எனக்கு என்ன தெரியும்? ஆதலால்தான் சிலசங்கதிகளை தெரிந்து வைத்துக் கொள்ளவந்தேன். சாவகாசம் இருக்குமா?

வ:—முதலியார் சாவகாசம் பார்த்துதானே வருவீர்கள். இன்றைக்கு ஞாயற்றுக்கிழமை; மேலும் போஜனமாய் விட்டது. ஆத்துக்காரியும் பசகளும் அகிலாண்ட ஈஸ்வரர் தெப்பல் உற்சவத்துக்கு போயிருக்கிறார்கள், கேட்கவேண்டியதெல்லாம் கேளும். ஏதோ எனக்கு தெரிந்தவரையில் சொல்லுகிறேன்... அதிருக்கட்டும், உமக்கு போஜனமாய் விட்டதா?... ஜமீன்தார் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் இன்னும் சாப்பிடாமலா இருப்பார்கள்!—ஆனாலும் பாதகம் இல்லை. நம்மாத்திலும் சிறிது போஜனம் செய்யப்படாதா?

வக்கீலின் மாப்பிள்ளை:—போஜனத்து அழைத்தார்களேயென்று வரவும் மாட்டீர்கள். அழைக்கவில்லையென்று கோபித்து கொள்ளவும் கூடாது.

(எல்லோரும் கக்கட கக்கட நகைக்கிறார்கள்.)

கு:—ஏது! மாப்பிள்ளையும் மாமனாரைப்போலவேயிருக்கிறார்...இரண்டும் மா! கேட்பானேன்?...சுவாமி! முதல் முதல் கும்மனியார் நம்முடைய ஊருக்கு வந்தார்களாமே அப்பொழுது இந்த நிலங்களெல்லாம் யார்வசத்தில் இருந்தன!

வக்கீலின் மாப்பிள்ளை:—இது தெரியாதா? எல்லாம் மனுஷாள் வசத்தில்தான் இருந்தன.

கு:—மாப்பிள்ளை! சரி; சிவபூஜை வேளையில் கரடி புகுந்தது போலத்தான்.

வ:—கும்மனியாரும் கிம்மினியாரும் வரவில்லை. ஆனால் நம்முடைய தேசத்துக்கு வந்தவர்கள், "ஈஸ்ட் இந்தியா கம்பெனியார்" என்று சொல்லப்படுவோர்கள். அவர்கள் தான் நம்முடைய தேசத்துக்குவர்த்த வெளி [illegible]க்காரர்கள். இவர்கள் நம்முடைய தேசத்தை கைப்பற்றியகாலத்தில் நிலங்கள் ஜமீன்தார்கள், மிருசுதார்கள், குடிகள், பயிராளிகள், ஆகிய இந்த நால்வர் வசத்தில் இருந்தன.

கு:—அக்காலத்தில் சாகுபடி தீர்வை முதலியவை எப்படி?

வ:—ஸ்திரமான நிலத்தீர்வைகள் ஏற்படவில்லை; அவையும் ஜமீன் முதலியவர்களுக்கு சௌகரியமானதாகவும் இல்லை. அப்போதைக்கப்போது நியமனம் பெறும் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள், அடிக்கடி மேற்படி தீர்வைகளைப்பற்றி விசாரித்து தங்கள் தங்கள் மனம்போன போக்காய் தீர்வைகளை விதித்து வந்தார்கள். இப்படியாய் தீர்வைகள் விதிக்கப்பட்டு வந்ததில் ஜமீன் முதலியவர்களுக்கு அநேக விதங்களில் கெடுதிகள் நேரிட்டன. பின்னும் நிலங்களும் சரிவர சாகுபடியாகஹேதுவில்லாமல்! போய்விட்டன. இம்மட்டோ! ஜன தனவிர்த்திகளுக்கு தடையுண்டாயின. தங்களுக்காவது சொத்துகளுக்காவது பயமில்லை என்று நினைக்க இடமில்லை யாதலால் ஜனங்களுக்கு சந்துஷ்டி என்பதே கிடையாது.

கு:—இவ்வித துன்பங்களை நிவர்த்திக்கக் கும்மனியார் ஒன்றும் செய்யவில்லையா?

வ:—கும்மனியார் என்றீர் அவர்கள் யார்?

கு:—அதான்சாமி! யாரோ கம்பனியார் என்று சொன்னீர்களே அவர்கள் தான்..."ஈஸ்ட் இந்தியா கம்பெனியார்"

வ:—அப்படி சொல்லும்! ஜனங்களுடைய மேற்படி கஷ்டங்களை கம்பனியார் செவ்வையாய் உணர்ந்து அவைகளை ஒழிக்குமாறு ஜமீன்களுக்கும், அவர்கள் வார்சுக்கும், பின் சந்ததியார்களுக்கும் சாஸ்வத நிலபாத்தியமும் நிரந்தரமான தீர்வையும் ஏற்படுத்த 1802-ம் வருஷத்திய 25-வது ரெகுலேஷன் என்னும் ஓர் சட்டத்தை பிறப்பித்தார்கள்.

கு:—பிறப்பித்ததால் ஜனங்களுக்கு ஏதாவது பிரயோஜனமுண்டா?

வ:—அந்த சட்டபடி கவர்ன்மெண்டார், ஜமீன் முதலிய காணியாக்ஷிகாரர்களுக்கு, அவர்களுடைய நில பாத்தியா பாத்தியங்களையும் தீர்வை முதலிய விபரங்களையும் கண்டு, மீல்க திஸ்க் மீரார்சன்னது என்ற ஓர் விதபத்திரம் கொடுத்து, அவர்களிடமிருந்து மேற்படி ஷரத்துகளடங்கிய (Cabooleat) கபூலியெட் என்னும் எதிர்ப்பத்திரமும் கவர்ன்மெண்டார் வாங்கியிருக்கிறார்கள்.

கு:—ஏதாவது தகரார் உண்டானால் அந்த காலத்தில் இந்த பத்திரங்கள் பிரயோஜனப்படுகின்றனவா?

வ:—நிலத்தீர்வை முதலிய வகைகளில் ஏற்படும் தகரார் காலத்தில் தகராரை விசாரணைசெய்யும் ஜட்ஜிகள் மேற்படி இரண்டு பத்திரங்களையும் வரவழைத்து பார்வையிட்டு அவைகளில்கண்ட ஷரத்துகளின்படி தீர்ப்பு சொல்லிவருகிறார்கள்.

கு:—அப்படியானால், இப்பொழுது கவர்ன்மெண்டார் தீர்வையை மாற்றுகிறதில்லையா?

வ:—நிலத்தீர்வை நீங்களாக மேற்படி [illegible], சாயர் (Sea-Custom) [illegible], இந்

தேச சாமான்வரி, கள்ளு சாராயங்களின் ஆப்கரி வரி, போதை அல்லது லாகிரி வஸ்துக்கள் வரி, தொழில் வரி, ஆள்வரி, கடை சந்தை இவைகள் வரி, நிலத்தீர்வை இல்லாத அல்லது சகாயமாய் விதிக்கப்கட்ட நிலங்களின் இதர வரி ஆகிய இவைகளை மாற்றல் முதலிய பாத்தாயங்களை துரைத்தனத்தார் கைவிடவில்லை.

கு:— நிலத்தீர்வை எப்படி வசூலிக்கப்பட்டது? தீர்வை வஜாஉண்டா?

வ:—நிலத்தீர்வை அவ்வத்தேச நாணயங்களாக வசூலிக்கப்பட்டது. வரள் சேதம், வெள்ளச்சேதம், அல்லது காலவித்தியாசங்களால் ஏற்பட்ட கெடுதிகளுக்கு தீர்வை வஜா செய்யப்படவேண்டியதென்று அக்காலத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வந்த விதிகள் ரத்து செய்யப்பட்டன.

கு:—தீர்வை செலுத்தப்படாமலிருந்தால் என்ன அமூல் நடத்தப்படும்?

வ:—பூமிக்குடையவர்கள் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய நிலத்தீர்வையை சரிவர செலுத்தாவிடில், முதலாவது சொத்துக்களை ஜப்திசெய்து பின்பு நிலங்களை எலம்போட்டு, கடைசியாய் அவர்களின் சுதந்தர பாத்தியங்களை மாற்ற வேண்டுமென்று விதிகளேற்பட்டன.

கு:— காணியாக்ஷி பாத்தியத்தால் விளைந்த அனுகூலமென்ன?

வ:—மேற்கண்ட விதமாய் பூமிக்குடையவர்களுக்கு காணியாக்ஷி பாத்தியம் உண்டாகிவிட்டதால், கவர்ன்மெண்டார் முதலியோரின் அனுமதியைப் பெறுமலே, தங்கள் நிலங்களை சாசனம் தானம் முதலியன மூலமாய் பராதீனங்கள் செய்ய வழியுண்டாயிற்று.

கு:—அப்பராதீனங்கள் சிலாவணியாகுமா?

வ:— ஹிந்துலா, மகம்மதியலா பிரிட்டிஷ்துரைத்தன சட்டங்கள் ஆகிய இவைகளுக்கு விரோதமில்லாத பக்ஷத்தில், ஜட்ஜிகளும் ஏனைய கவர்ன்மெண்டு அதிகாரிகளும் அப்பாராதீனங்களை அனுசரித்தே தீர்ப்பு செய்யவும், உத்திரவு பிறப்பிக்கவும், முறையே கடமைப் பட்டவர்களாயிருக்கிருர்கள்.

கு:—பராதீனம் செய்யப்பட்ட நிலத்திர்வையை யாரிடம் வசூல் செய்யப்படும்

வ:—இப்பராதீனங்கள் கலெக்டர் ஆபீஸ் ரிஜஸ்த்தரில் பதிவு செய்து கொள்ளப்பட்டு, அந்நிலங்களுக்கு பிரத்தியேகமாய் தீர்வை ஏற்படாவிட்டால், ஷை நிலங்களை வாங்கினவர்களிடமிருந்து, அவர்களுடைய சொத்துக்களைத் தடர்ந்தாவது அல்லது மற்றெவ் விதத்நிலாவது, தீர்வையை வசூல் செய்ய கவர்ன்மெண்டார் எவ்விதத்திலும் கட்டுப்பட்டவர்களல்ல.

கு:—பராதீனம் செய்தவரை தீர்வை பாதிக்காமலிருப்பதற்காக, என்ன செய்ய வேண்டியது?

வ:—ஜமீன் நிலங்களின் சிலபாகம் சர்க்கார் கிஸ்தி பாக்கிக்காவது, கோர்ட்டு டிக்கிரிக்காவது எலவிற்பனை செய்யப்பட்டாலும், அல்லது கிரயந்தான் முதலியன மூலமாய் பராதீனங்கள் செய்யப்பட்டாலும், அப்படி செய்யப்பட்ட காலத்திற்கு முந்திய மூன்று வருஷங்களில் அல்லது மூன்று வருஷங்களுக்கு மேற்பட்ட வருஷங்களில், ஷை ஜமீன் நிலங்கள் முழுவதிலும் ஏற்பட்ட வரவு சிலவுகளையும், தற்காலம் பராதீனங்கள் செய்யப்பட்டிருக்கும் ஜமீன் பாகத்தில் ஷை காலத்தில் ஏற்பட்ட வரவு சிலவுகளையும் கலெக்டர் அவர்களுக்கு ஸ்பஷ்டமாக தெரிவிக்கவேண்டும்,

கு:—இதன் மேல் கலெக்டர் என்ன செய்கிருர்.

வ:—மேற்கண்ட வரும்படிகளை கலெக்டர் நிர்தாரணஞ் செய்து அந்தத் தாமாஷாவின் பேரில் பிரிக்கப்பட வேண்டிய ஜமீன் நிலத்தின மதிப்பையும் பாக்கி ஜமீன் நிலத்தின் மதிப்பையும் திட்டப்படுத்திக்கொண்டு அந்த விகிதாசாரம் சர்க்கார் கிஸ்தியை ஏற்படுத்தி ரிஜஸ்டரில் பதிந்து கொண்டு, தீர்வை வசூலிக்க ஏற்பாடு செய்வார்கள்.

கு:—பராதீனப்படி பட்டா, மிருசு மாறுதல்கள் செய்யப்படுமல்லவா?

வ:—பராதீனங்களின்படி பட்டா மிருசு மாறுதல்கள் செய்யவேண்டுமென்று கலெக்டருக்கு தெரிவித்து கொண்டால் அவர் விசாரித்து அதன்படி உத்திரவு செய்வார்.

கு:—இந்த உத்திரவு சாயமானது தானே?

வ:—நீர் என்ன கேட்கிறீர்கள்?...எனக்கு விளங்கவில்லை.

கு:—அவர் செய்த உத்திரவு எந்த கக்ஷிக்காரருக்காவது விரோதமாயிருந்தால் என்ன செய்வது?

வ:—கலெக்டர் செய்த உத்திரவானது எந்த கக்ஷிக்கு விரோதமாகத் தோற்றுகிறதோ அந்த கக்ஷிகாரர், ஷை தனித் தீர்வை விதிக்கப்பட்ட மூன்று மாதங்களுக்குள் அதாவது 90 நாட்களுக்குள் ரிவினியூ போர்ட்டாருக்கு அப்பீல் செய்துக் கொள்ளலாம்: அல்லது சிவில் கோர்ட்டு மூலமாக வேண்டிய பரிகாரங்களைத் தேடிக்கொள்ளலாம்.

கு:—பூமிக்குடையவர்கள் புதியவரிகள் ஏற்படுத்தலாமா?

வ:—தேவாதாயம், பிரமாதாயம், அல்லது அக்கிரகாரம், யாமியா ஜீவதான் அல்லது முட்ட மாஷ், அல்லது பீரான், பகிரான், அல்லது லக்கிராஜ் என்ற வகுப்பில் சேர்ந்த தீர்வையில்லா பூஸ்திதிகளுக்கு ஜமீன்தார் முதலிய பூமிக்குடையவர்கள் எவ்வித புதிய வரிகளையும் ஏற்படுத்தக்கூடாது.

கு:—இதனுல் புதியவரிகள் ஏற்படுத்த பூமிக்குடையவர்களுக்கு வழியில்லையல்லவா?

வ:—என் வழியில்லை? கவர்ன்மெண்டாருக்கு முன்னுடி தெரிவித்து அவர்கள் அனுமதியின் பேரில் ஷை புதியவரி விதிக்கலாம்.

கு:—புதிய தாய் விதித்தவரியானது பூமிக்குடையவர்களுக்கு தானே சேரும்?

வ:—இவ்வித கேசுகளில் கவர்ன்மெண்டார் ஷை புதியவரி விகிதாசாரம் ஜமீன்தார் முதலிய பூமிக்குடையவர்களிடமிருந்து புதிய தீர்வை வசூலிப்பார்கள்.

கு:—குத்தகை விஷயமாய் ஜமீன்தார் முதலியவர்களுக்கும் குடிகளுக்கும் எவ்வித ஏற்பாடு இருக்கவேண்டும்?

வ:—ஜமீன்தார் முதலிய பூமிக்குடையவர்கள் நிலத்தின் பகுதி அல்லது குத்தகை விஷயமாய், குடிகளிடத்தில் ரொக்கமாவது தானியமாகவாவது ஏற்பாடு செய்துக்கொள்ளலாம். அவை செலுத்தப்படவேண்டிய காலம் முதலிய சகல விபரங்களையுங் கண்டு குறிப்பிட்ட ஓர் காலத்திற்குள், குடிகளுக்கு, பட்டா அல்லது கவுல் ஷை ஜமீன்தார் முதலிய பூமிக்குடையவர்கள் கொடுக்க வேண்டியதோடு, குடிகளால் செலுத்தப்படும் தானியம் அல்லது ரொக்கங்களுக்கு கிரமப்படி ரசீதும் கொடுக்கவேண்டும். தவறினல்—அது விஷயமாய் கோர்ட்டில் வழக்கிட்டு தங்களுக்கு நேரிட்ட நஷ்டமுதலிய பரிகாரங்களை தேடிக்கொள்ள, குடிகள் பாத்திய முடையவர்கள்.

கு:—ஜமீன்தார்களுக்கும், குடிகளுக்குமுள்ள சம்பந்தா சம்பந்தங்களும், பாத்தியா பாத்தியங்களும் எவை?

வ:—ஜமீன்தார் முதலிய பூமிக் குடையவர்களுக்கும், குடிகளுக்குமுள்ள சம்பந்தா சம்பந்தங்களையும் பாத்தியா பாத்தியங்களையும் நிஷ்கரிஷிக்க வேண்டியதற்காக 1865ஸ்ரீ த்திய 8-வது ஆக்ட் என்ற சட்டமேற்பட்டது. அதை வாசித்தீதாராளுல் அதுவே நீர் கேட்ட கேள்விக்கு போதிய சமாதானமாயிருக்கும்.

கு:—அந்த சட்டத்தின் பெயர் என்ன?

வ:—1865-ம் வருஷத்திய 8வது ஆக்டாகிய ரேண்ட் ரிகவரி ஆக்ட். (Act VIII of 1865, Recovery of rent:) என்று சொல்லப்படும்.

கு:—அந்த ஆக்ட் இவ்விடத்தில் இல்லையா?

வ:—இருக்கிறது. நீங்கள் பார்க்க வேண்டுமோ? ...அப்படியானுல் இதோ இருக்கிறது பாரும்.

கு:—எனக்கு கண்பார்வை சிறிது குறைவு; ஆதலால் நீங்களே சிறிது வாசியுங்கள் கேட்போம்.

வ:—நீங்கள் மிகவும் தந்திரவாதி. நீர் வாசித்தால் ஒரு சமயம் அர்த்தமாகாது. நாம் வாசித்தால் தெரிந்தும் தெரியாததை கேட்டுக் கொள்ளலாம் என்ற எண்ணம் போலும்...சரி! ஆனுல் கவனமாய்க்கேளும்!

THE MADRAS ESTATES LAND ACT I OF 1908

பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம்ஸ்ரீ த்து 1-வது ஆக்ட்

AN ACT TO DECLARE AND AMEND THE LAW RELATING TO THE HOLDING OF LAND IN ESTATES IN THE PRESIDENCY OF MADRAS.

சென்னபட்டணம் ப்ரேஸிடென்ஸியிலிருக்கும் பூஸ்திதிகளிலுள்ள நிலத்தை வைத்துக்கோண்டிருப்பதற்குச் சம்பந்தப்பட்ட சட்டதிட்டத்தைத் திருத்திப் பிரசித்தஞ்செய்வதற்கான ஆக்ட்

பீடிகை

சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியிலிருக்கும் பூஸ்திதிகளிலுள்ள நிலத்தை வைத்துக் கொண்டிருப்பதற்குச் சம்பந்தப்பட்ட சட்டதிட்டத்தைத் திருத்திப் பிரசித்தஞ்செய்வது யுக்தமாயிருக்கிறபடியால், இதனுல் விதிக்கப்படுகிற தென்னவென்றல்:—

1-ம் அத்தியாயம்

பீடிகா விதிகள்

1. இந்த ஆக்டை, பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம்ஸ்ரீ த்து ஆக்ட் என்று சொல்லலாம்:

இது - 1908-ம்ஸ்ரீ ஜூலைமீ முதல்தேதி செலாவணியாகத் தொடங்கவேண்டும்:

மேலும், இது-இராஜதானிப் பட்டணமும், மலபார் டிஸ்டிரிக்டும், நீலகிரி டிஸ்ட்ரிக்டிலே தென்கிழக்கு வைனுட் என்று சொல்லப்படும் பாகமும் நீங்கலாக, சென்னை இராஜதானி முழுமைக்கும் வியாபிக்கும்.

2. 1865 - ம்ஸ்ரீ த்திய சென்னப்பட்டணத்து 8-வது ஆக்டும் 1871-ம்ஸ்ரீ த்திய சென்னபட்டணத்து 2 - வது ஆக்ட்டாகிய "ரேண்ட்ரிகவரி" அதாவது குத்தகையை வசூல் செய்வதை குறித்த ஆக்டும் 1890ம்ஸ்ரீ த்திய சென்னபட்டணத்து 3-வது ஆக்ட் 7 - வது பிரிவும் இதனுல் ரத்து செய்யப் படுகின்றன.

3. இந்த ஆக்டிலே, சங்கதியினுலாவது முன்பின் தொடர்ச்சியினுலாவது விரோதமொன்று மில்லாவிட்டால்,—

(1) "வியவசாயம்" என்பதன் இலக்கண வேறுபாடுகளும் அதே இனமான சொற்றொடர்களுமுட்பட, அநிலே தோட்டம் வைத்துப் பயிர் செய்வதும் அடங்கும்.

(2) "பூஸ்திதி" என்பது—

(எ) நிலையாகப் பைசலேற்பாடு செய்யப்பட்ட யாதொரு பூஸ்திதியென்ருவது அங்காமியாகப் பைசலேற்பாடு செய்யப்பட்ட யாதொரு ஜமீன்தாரியென்ருவது அர்த்தமாகும்.

(பி) நிலையாகப் பைசலேற்பாடு செய்யப்பட்ட அந்த பூஸ்திதியைச் சேர்ந்ததாகவோ அங்காமியாகப் பைசலேற்பாடு செய்யப்பட்ட அந்த ஜமீன்தாரியைச் சேர்ந்ததாகவோ கலெக்டராபீஸில் பிரத்தியேகமாய் ரெஜிஸ்டர் செய்யப் பட்டிருக்கிற யாதொரு பாகமென்று அர்த்தமாகும்;

(ஸி) பைசலாகாத யாதொரு பாளையம் அல்லது ஜாகீர் என்று அர்த்தமாகும்;

(டி) எந்தக் கிராமத்தின் நிலத்தீர்வைமாத்திரம் அதன் குடிவார பாத்தியதை யடைந்திராத யாதொரு நபருக்கு இனுமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு கிராமம் அல்லது அந்தக் கிராமத்தினின்றும் பிரிக்கப்பட்டிருக்கிற யாதொரு பாகமென்று அர்த்தமாகும்; ஆனுல், அது மேலே கண்டபடி இனுமாக ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்டாவது ஊர்ஜ்ஜிதஞ் செய்யப்பட்டாவது அங்கீகரிக்கப் பட்டாவதிருக்கவேண்டும்.

(இ) மேற்கண்ட (எ), (பி), (ஸி) பகுதிகளிற் கண்ட பூஸ்திதிகளில் யாதொன்றைச் சேர்ந்த ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களடங்கியதாய், சாசுவதமான கீழ்க்குத்தகையாகக்கைப்பற்றிலிருக்கும் யாதொரு பாகமென்று அர்த்தமாகும்.

(3) "கைப்பாற்று நிலம்" என்பது ஒரே ஒரு கிராமத்தில் ஒரேஒரு பட்டாவின் படியாவது ஒப்பந்தத்

தின் படியாவது கைப்பற்றிலிருந்து வரும் நிலத்துண்டு அல்லது துண்டுகளென்று அர்த்தமாகும்.

ஆனால், நிலத்துக்குடையவரும் ரயத்தும் எழுத்து மூலமாய்ச் சம்மதிக்கிற பக்ஷத்தில் மேற் கூறப்பட்ட அர்த்த படிக்குள்ள ஒரு கைப்பற்று நிலத்தைச் சேர்ந்த யாதொரு பாகத்தை பிரத்தியேகமான கைப்பற்று நிலமாகப் பாவிக்கவேண்டும்.

(4) "சீர்திருத்தம்" என்பது - ரயத்தின் கைப்பற்று நிலத்துக்குச்சம்மந்தமாய் உபயோகப் படும்போது அந்தக் கைப்பற்று நிலத்தின் மதிப்பை விசேஷமாய் அதிகப்படுத்துவதும், அதற்குத் தகுதியுடையதாயும் அதன் லட்சணத்துக்குப் பொருத்தமுடையதாயுமிருப்பதும், கைப்பற்று நிலத்தின்மேலே செய்யப்படாமற் போனபோதிலும் நேரே அதனுடைய பிரயோசனத்துக்காகச் செய்யப்பட்டோ அல்லது செய்தான பிறகு நேரே அதற்குப் பிரயோசனப்படும்படியாய் ஏற்படுத்தப்பட்டோ இருப்பதுமாகிய யாதொரு வேலையென்று அர்த்தமாகும்; அல்லாமலும், மேலே சொன்ன நிபந்தனைகளுக்குட்பட்டு அதிலே,—

"சீர்திருத்தம்"

(எ) விவசாய சம்பந்தமான காரியங்களுக்காகத் தண்ணீரைச் சேர்த்து வைப்பதற்காகவோ சர்ப்பரா செய்வதற்காகவோ பங்கீடு செய்வதற்காகவோ வேண்டிய ஏரிகள், கிணறுகள், தண்ணீர்க்கால்வாய்கள் இதர கட்டு வேலைகளாகிய இவற்றை ஏற்படுத்துவதும்,

(பி) நிலத்திலிருந்து தண்ணீரை வடிப்பதற்கான, அல்லது வெள்ளத்தினின்றோ கரைந்துபோவது முதலிய தண்ணீரினால் நேரிடக் கூடிய இதர நஷ்டத்தினின்றோ நிலத்தைப் பாதுகாப்பதற்கான கட்டு வேலைகளை ஏற்படுத்துவதும்,

(ஸி) நிலத்தைக் கரம்புதிருத்துவது - பரிஷ்கரிப்பது - நிலத்துக்கு அடைப்படைத்துவைப்பது - சமமாக்குவது அல்லது வரப்பு ஏற்படுத்துவதும், நீர்ப்பாய்ச்சலுக்காக நிலத்தைத் தயார்செய்வதும்,

(டி) கைப்பற்று நிலத்தைச் சௌகரியப்படும்படியாகவாவது, பிரயோசனப்படும்படியாகவாவது உபயோகித்து வருவதற்காகிலும் அனுபோகத்தில வைத்திருப்பதற்காகிலும் வேண்டியபடி, அந்தக் கைப்பற்று நிலத்தில் அல்லது கிராம நத்தம் தவிர அந்த நிலத்துக்கு மிகவும் சமீபித்த வேறு இடத்தில் கட்டிடங்கட்டுவதும், ரயத்துக்காகவும் அவருடைய குடும்பத்துக்காகவும் வேலைக்காரர்களுக்காகவும் குடியிருப்பு வீடுகளைக் கட்டுவதும்,

(இ) ஷை வேலைகளில் யாதாமொன்றைப் புதுப்பிப்பது அல்லது மீண்டும் ஏற்படுத்துவதும் அல்லது அதில் திருத்தங்கள் செய்வதும் அல்லது அதைப் பெரிதாக்குவதும்,

(எப்) பழச்செடிகளையும், பழத்தோட்டங்களையும் வைத்தும், பயிராக்குவதும், அடங்கும்; ஆனால், அதிலே-நிலத்துக்குடையவருடைய வேறே-யாதொரு நிலத்தைப் பிரதிகூலப் படுத்துகிற யாதொரு வேலையானது, நிலத்துக்குடையவருடைய எழுத்து மூல சம்மதம் பெற்று செய்யப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, அடங்காது.

(5) "நிலத்துக்குடையவர்" என்பது ஒரு பூஸ்திதிக்கு அல்லது அதன் பாகத்துக்குச் சொந்தக்காரரென்று அர்த்தமாவது மாத்திரமே யல்லாமல், அதிலே சொந்தக் காரரிடத்திலிருந்தாவது அவருக்கு முந்தி பாத்தியதை யடைந்தவரிடத்திலிருந்தாவது யாதொரு ட்ரான்ஸ்பர் பெற்றிருப்பதை யனுசரித்தாகிலும், தகுந்த அதிகாரமுள்ள யாதொருகோர்ட்டாருடைய எந்த உத்தரவை யனுசரித்தாகிலும், சட்டத்திலுள்ள யாதொரு நிபந்தனையை யனுசரித்தாகிலும் அந்த பூஸ்திதி முழுவதின் அல்லது அதன் யாதொரு பாகத்தின் குத்தகைத் தொகைகளை வசூல்செய்யச் சுதந்தரமுள்ள யாதொரு நபரென்பதும் அடங்கும்.

"நிலத்துக் குடையவர்"

இரண்டு அல்லது பல நபர்களில் இந்த ஆக்டிற் கண்ட சகல காரியங்களுக்குமாகவாவது அவைகளில் எதற்காகவாவது நிலத்துக் குடையவர் யார் என்னும் விஷயமாகவாகிலும், இரண்டு அல்லது பல கூட்டாகவுள்ள நிலத்துக்குடையவர்களில் யார் அப்படிப் பட்ட நிலத்துக்குடையவராகப் பிரவர்த்திக்கவும் அமுல் நடத்தவும் பாத்தியதையுடையவராவா ரென்னும் தன் விஷயமாகவாகிலும் விவாதம் நேரிட்டால், அப்படிப்பட்ட காரியங்களுக்காக நிலத்துக்குடைய வராயிருப்பதாக எண்ணப்படவேண்டிய நபர் தகுந்த அதிகார முள்ள யாதொரு ஸிவில் கோர்ட்டாருடைய யாதொரு டிக்ரி அல்லது உத்தரவுக்குட்பட்டு, கலெக்டரானவர் இது விஷயமாய்ப் பிரதேச கவர்ண்மெண்டாரால் ஏற்படுத்தப்படும் விதிகளின்படி யாரை அப்படிப் பட்ட நிலத்துக்குடையவராய் அங்கீகரிக்கக்கூடுமோ அல்லது நியமிக்கக்கூடுமோ அந்த நபராகும்.

(6) "அனுபோக ரயத்து" என்பது தம்முடைய கைப்பற்று நிலத்திலே சாசுவதமான அனுபோக பாத்தியதை பெற்றிருக்கிற ரயத்தென்று அர்த்தமாகும்.

"அனுபோக ரயத்து"

(7) "பழைய கரம்பு" என்பது யாதொரு பூஸ்திதியிலே சொந்த நிலமாயிராமல்,—

(1) நிலத்துக்குடையவரால் குத்தகைக்கு விடப்பட்ட காலத்தில் தொடர்ச்சியாய்ப் பத்து வருஷங்களுக்குக் குறையாத ஒரு காலத்துக்கு அந்த நிலத்துக்குடையவருக்காகிலும், அவருக்கு முந்தி பாத்தியதை பெற்றிருந்தவர்களுக்காகிலும் சொந்த ஸ்வாதீனத்திலிருந்தும், அந்தக் காலத்திலே தொடர்ச்சியாய்ப் பயிர் செய்யப்படாமலே இருந்து வந்ததுமான யாதொரு நிலமென்று அர்த்தமாவது மாத்திரமேயல்லாமல், அந்த நிலமென்பதும் அடங்கும்; மேலேகண்ட காலவரையறையானது இந்த ஆக்ட் ஜாரிசெய்யப்பட்டதற்குப் பிந்தியுள்ளதாகவாவது, சிறிதுமட்டில் அதற்கு முந்தியும் சிறிதுமட்டில் அதற்குப் பிந்தியுமுள்ளதாகவாவது, இந்த ஆக்ட் ஜாரி செய்யப்பட்டதற்கு முன் இருபது வருஷங்களுக்குட்பட்ட தாகவாவதிருக்கவேண்டும்; அல்லது,

(2) இந்த ஆக்ட் ஜாரி செய்யப்பட்டபிறகு, நிலத்துக்குடைய வரால் யாதொரு குத்தகைக்கு விடப்பட்ட காலத்தில், அப்படி குத்தகைக்கு விட்டதற்கு அடுத்து முன்னதாய்ப் பத்துவருஷங்களுக்குக் குறையாமல், தொடர்ச்சியாயுள்ள ஒரு கால வரையறைக்

குள்ளே, எப்போதாகிலும் அனுபோக பாத்தியதை எதுவும் அடையப்படாமலிருந்துவருகிற, யாதொரு நிலமென்று அர்த்தமாவது மாத்திரமேயல்லாமல் அந்த நிலமென்பதும் அடங்கும்; மேலும், "பழையகரம்பு" என்பதிலே,-தகுந்த அதிகாரமுடைய யாதொரு ஸிவில் கோர்ட்டாரிடமிருந்து, ரயத்துக்கு அனுபோக பாத்தியதை இல்லையென்று ஸ்தாபிப்பதற்காக முடிவான டிக்ரியை நிலத்துக்குடையவர் எதன் விஷயமாய் இந்த ஆக்ட் ஜாரி செய்யப்பட்டதற்கு முன் பெற்றிருக்கிறாரோ அந்த ரயத்தி நிலமென்பது அடங்கும்; அப்படிப்பட்ட டிக்ரியின் தேதிக்குப் பிறகு அனுபோக பாத்தியதை அடையப்படா மலிருக்கிற வரையில்தான் அந்தப்படி அடங்கும்.

(8) "செலுத்த," "செலுத்தத்தக்க," "செலுத்துதல்" என்பவை-குத்தகைத்தொகை சம்பந்தமாய் உபயோகப்படும்போது, அவைகளில் "ஒப்பித்துவிட," "ஒப்பித்துவிடத்தக்க," "ஒப்பித்துவிடுதல்" என்பவைகளும் அடங்கும்.

(9) "நிர்ணயிக்கப்பட்ட" என்பது-ஸர்க்கார் கெஜட்டில் விளம்பரமூலமாகப்பிரதேச கவர்ன்மெண்டாரால் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப்பட்ட என்று அர்த்தமாகும்.

(10) "சொந்த (ப்ரைவேட்) நிலம்" என்பது-நிலத்துக்குடையவரைச் சேர்ந்ததாய், கம்பத்தம்- காஸ்-ஸீர்-அல்லது பண்ணை என்பது போன்ற எந்த பெயராகிலும் வழங்குகிற (டொமெயன்) நிலத்துக்குடையவரின் சொந்த அனுபவத்திலுள்ள நிலம் அல்லது (ஹோம் பாரம்) வீட்டைச்சேர்ந்த வியவசாய நிலம் என்று அர்த்தமாகும்.

(11) "குத்தகைத்தொகை" என்பது-யாதொரு நிலத்துக்குடையவரின் பூஸ்திதியிலுள்ள நிலத்தை வியவசாயகாரியத்தி னிமித்தம் உபயோகித்துக் கொள்வதற்காவது, அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்காவது, அந்த நிலத்துக்குடையவருக்குப் பணமாகவோ தானியரூபமாகவோ அல்லது இரண்டுமாகவோ, சட்டப்படி செலுத்தத்தக்கது எதுவாயிருந்தபோதிலும், அதுவென்று அர்த்தமாகும்; மேலும், அதில்-நிலச்சாகுபடிக்காகச் சர்ப்பரா செய்யப்பட்ட அல்லது எடுத்துக்கொள்ளப்பட்ட ஜலத்தி னிமித்தம் ஏற்பட்டுள்ள வரியானது அந்த நிலத்துக்குச் செலுத்தத்தக்க குத்தகைத்தொகையொடு ஒன்றாய்ச் சேர்க்கப்படாதிருக்கிற விஷயத்திலே, அந்த ஜலத்தை உபயோகித்துக்கொள்வதற்காகவும் அதனாலுண்டாகும் பலனை அனுபோகித்துக் கொள்வதற்காகவும் செலுத்தத்தக்கது எதுவாயிருந்தபோதிலும் அதுவும் அடங்கும்.

மேலும், 59 முதல் 72, 77 முதல் 131, 143 முதல் 148, வரையிலுள்ள பிரிவுகள், 165, 210, 211 ஆகிய இப் பிரிவுகளின் காரியங்களுக்காகவும், ஷெட்யூலின் காரியத்துக்காகவும், குத்தகைத்தொகை என்பதிலே அடியிற்கண்டவைகளும் அடங்கும்:—

(எ) சட்டப்படியாவது சட்டத்தைப்போல் செலாவணியாய்க் கொண்டிருக்கிற மாமூல்படியாவது நிலத்தின் விஷயத்தில் பாக்கியாகிற குத்தகைத்தொகையோடு கூட ஒரு ரயத்து, ரயத்தென்னும் முறைமையில் செலுத்தத்தக்க யாதொருபிரதேசவரி, ஸெஸ் (இறை), கட்டணம் அல்லது தொகை யென்பதும், குத்தகைத் தொகையாயிருந்தாலெப்படியோ அப்படியே அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கிற யாதொரு சட்டதிட்டப்படி வசூலிக்கத்தக்க பண மென்பதும்;

(பி) (கால்நடைகளை) மேய்ப்பதற்காகச் செலுத்தும் கட்டணம் காரணமாகவும் பாசிகுத்தகை காரணமாகவும் யாதொரு ரயத்து, ரயத்தென்னும் முறைமையில் செலுத்தத்தக்க தொகைகளென்பதும்;

(ஸி) யாதொரு இனும்தாரர், நிலத்துக்குடையவருக்கு, இனும் தாரரென்னும் முறைமையில் செலுத்தத்தக்கதாயிருக்கிற குவிட்ரெண்டும், ஜோடியும், பொறுப்பும், இதுபோன்றதும்.

விவரணம்.—குத்தகைத்தொகையைக் குத்தகைக்கு எடுத்திருப்பவர் நிலத்துக்குடையவருக்குச் செலுத்தவேண்டிய தொகைகள் இந்த ஆக்டின்படி வசூல் செய்யத்தக்கவைக ளாகமட்டா.

(12) "ரேவினியு புலம்" என்பது-நிஷ்கரிஷையான குத்தகைத் தொகை செலுத்தத் தக்கதாயிருக்கிற, அல்லது விவாதம் நேரிடும் விஷயத்திலே ரெவினியு புலமென்று கலெக்டரால் நிர்ணயிக்கப்படக்கூடிய யாதொரு நிலத்துண்டென்றாவது புலமென்றாவது ஸர்வே புலமென்றாவது அர்த்தமாகும்.

"ரேவினியு புலம்"

(13) "ரேவினியு ஆபீஸர் (உத்தியோகஸ்தர்)" என்பது கலெக்டர் என்று அர்த்தமாகும்; மேலும், அதிலே-இந்த ஆக்டின்படி ஒரு ரெவினியு ஆபிஸருக்குள்ள அலுவல்களில் எதையாவது செய்யும்படியாக பெயரைக் குறித்தோ அல்லது உத்தியோக முறைமையிலோ பிரதேச கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டிருக்கிற யாதொரு நபரென்பதும் அடங்கும்.

(14) "ரேவினியு வருஷம்" என்பது ஜூன்மீ 30உயோடு முடிவாகிற வருஷமென்று அர்த்தமாகும்.

(15) "ரயத்து" என்பது-ஒரு பூஸ்திதியிலுள்ள ரயத்தி நிலத்துக்குச் சட்டப்படி சேலுத்தவேண்டிய குத்தகைத் தொகையை, நிலத்துக்குடையவருக்குச் செலுத்துவதாகத் திட்டமேற்படுத்திக்கொண்டு, அந்த நிலத்தை வியவசாயகாரியத்துக்காக வைத்துக்கொண்டிருக்கிற நபரென்று அர்த்தமாகும்.

(16) "ரயத்தி நிலம்" என்பது-யாதொரு பூஸ்திதியில் சொந்த நிலமல்லாத பயிரிடத்தக்க வேறே நிலமென்று அர்த்த மாகும்;

"ரயத்திநிலம்"

ஆனால் அதிலே,—

(எ) ஏரியின் அடித்தரைநிலங்களும்,

(பி) கிராமத்தாருடைய பொதுவான உபயோகத்திற்காக யாதொரு பூஸ்திதியில் பிரத்தியேகமாய் விடப்பட்டிருக்கும் களத்துமேடுகளும் கால்நடைக் கொட்டில்களும் கிராமநத்தங்களும் இதர நிலங்களும்,

(ஸி) இந்த ஆக்ட் ஜாரி செய்யப்பட்டதற்கு முன் கொடுக்கப்பட்டதாயிருந்தால் குத்தகைத்தொகை இல்லாமலோ அனுகூலமான குத்தகைத்தொகை வீதங்களின்படியோ அல்லது ஷை தேதிக்குப்பிறகு கொடுக்கப்பட்டதாயிருந்தால் குத்தகை இல்லாமலோ ஊழியக்காணியாகஷி ஷரத்துபடி நிலக்கள் கொடுக்கப்பட்டிருந்து ஷை காணியாட்சி இருந்து கொண்டே இருக்கிற வரையில் அப்படிப்பட்ட நிலங்களும், அடங்கமாட்டா.

(17) "கையெழுத்து செய்யப்பட்ட" என்பதிலே,- கையெழுத்து செய்ததாகப் பொருள்படுகிற நபரின் பெயர் முத்திரைபோடப்பட்ட என்பதும் அடங்கும்.

(18) "தாசில்தாரர்" என்பதிலே டெப்புடி தாசில் தாரரென்பதும் அடங்கும்.

(19) "கிராமம்" என்பது-ஒரு பூஸ்திதியிலுள்ள தாகவாகிலும் அந்த பூஸ்திதியாகவாகிலும் இருக்கிற யாதொரு பிரதேச விஸ்தீர்ணமானது ரெவினியு கணக்குகளில் ஒரு கிராமமாகப் பெயரிடப்பட்டு, அதற்காக ரெவினியு கணக்குகள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கர்ணங்களினால் பிரத்தியேகமாய் வைத்தாதரிக்கப்பட்டு வந்தாலும், இந்த ஆக்டின் காரியங்களுக்கா ஒரு கிராமமென்று பரதேச கவர்ண்மெண்டாரால் இப்போது அங்கீகரிக்கப்பட்டாவது ஷை காரியங்களுக்காக இனிமேல் ஒரு கிராமமென்று அவர்களால் நிர்ணயிக்கப்படுவதாகவாவ திருந்தாலும், அப்படிப்பட்ட பிரதேச விஸ்தீர்ணமென்று அர்த்தமாகும்; மேலும், ஷை "கிராமம்" என்பதிலே-அதனுடன் சேர்க்கப் படக்கூடிய யாதொரு மஜரா அல்லது மஜராக்கள் என்பதும் அடங்கும்.

2-ம் அத்தியாயம்

பொதுவான பாத்தியதைகள்

குத்தகைத்தொகையை வசூல் செய்ய நிலத்துக்குடைய வருக்குள்ள பாத்தியதை

4. இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, நிலத்துக் குடையவர் ரயத்தின் அனுபோகத்திலிருக்கும் சகலரயத்தி நிலத்தின் விஷயமாகவும் குத்தகைத் தொகையை வசூல் செய்ய பாத்தியதையுள்ளவராவர்.

குத்தகைத் தொகை யானது கைப்பற்று நிலத்தின் மேலும் அதன்மாகூலின் மேலும்ஏற்படும் முதல் செலவாகு மென்பது

5. (1) ரயத்தி நிலத்தின் குத்தகைத் தொகையானது அதன் விஷயமாய்ப் பாக்கியாகும் யாதொரு வட்டி சகித மாக கைப்பற்று நிலத்தின்மேலும் கைப்பற்று நிலத்தின் மாகூலின் மேலும் அல்லது அதன் யாதொரு பாகத்தின் மேலும் ஏற்படும் முதல் செலவாகும்; ஆனால், மாகூல் அறுவடையாயிருந்தால், அது ரயத்தின் வசத்திலோ ஸ்வாதீனத்திலோ, இருக்கவேண்டும்; அல்லது, புலத்திலோ அல்லது வீடு அதைச்சேர்ந்தவளவு ஆகிய இவைகளுக்குள்ளோ கைப்பற்று நிலத்தின்மேலாவது களத்துமேடு அல்லது (தானியம்) போர் அடிப்பதற்கான இடத்தின் மேலாவது இதுபோன்ற இடத்தின்மேலாவது சேர்த்து வைக்கப்பட்டிருக்கவேண்டும்.

(2) இந்தப் பிரிவிலுள்ளதெதனுலும் கவர்ண்மெண்டாருடைய எந்த பாத்தியதைக்கும் பாதகமுண்டாவதாக எண்ணக்கூடாது.

ரயத்தி நிலத்திலுள்ள அனுபோகபாத்தியதை

6. (1) இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒரு நிலத்துக்குடையவரின் பூஸ்திதியுள்ள பழைய கரம்பாயிராத ரயத்தி நிலத்தை இப்போது தம் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிற அல்லது ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்க அந்த நிலத்துக்குடைய வரால் இனிமேல் அனுமதி கொடுக்கப்பெறும் பிரதி ரயத்தும் தம்முடைய கைப்பற்று நிலத்தில் சாசுவதமான அனுபோக பாத்தியதை யுடையவராவார்; ஆனால், இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்கு முன்னே பழைய கரம்பாயிருந்த நிலத்திலே அடைந்திருக்கக் கூடிய சாசுவதமான யாதொரு அனுபோக பாத்தியதைக்கு இந்த உட்பிரிவிற் கண்டதெதனுலும் பாதக முண்டாக மாட்டாது.

(2) சாசுவதமான அனுபோக பாத்தியதை சகிதமாக யாதொரு ரயத்தின் கைப்பற்றியிலிருக்கும் நிலமானது ராஜி நாமா செய்யப்பட்டோ, விட்டு விடப்பட்டோ, அல்லது 8-வது பிரிவைச்சேர்ந்த (4) குறிப்பிட்ட உட்பிரிவுக்குள்ளும் 8-வது பிரிவைச்சேர்ந்த விலக்குக்குள்ளும் அடங்குகிற விஷயங்களிலன்றி மற்ற விஷயங்களிலே ஷை நிலமானது நிலத்துக்குடையவரின் ஸ்வாதீனத்துக்கு வந்தோ இருந்து, மேலே கண்டபடி ராஜிநாமா செய்யப்பட்ட அல்லது விட்டுவிடப்பட்ட அல்லது ஸ்வாதீனத்துக்கு வந்த தேதியிலிருந்து பத்து வருஷ காலத்துக்குள்ளாக ஷை நிலத்துக்குடையவர் அந்த நிலத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்க யாதொரு நபருக்கு அனுமதி கொடுத்திருந்தால், அந்தப்படி அனுமதி கொடுக்கப்பெற்ற நபர் அதிலே சாசுவதமான அனுபோக பாத்தியதை யுடையவராவார்.

விவரணம்.—பழைய கரம்பல்லாத வேரே ரயத்தி நிலத்தை அனுபவித்துவருகிற யாதொரு நபரிடத்திலிருந்து 45-வது பிரிவின் படி செலுத்தப்படும் யாதொரு தொகையை வரப்பெற்றுக்கொண்டிருக்கிற அல்லது, வசூலித்துக் கொண்டிருக்கிற ஒவ்வொரு நிலத்துக்குடையவரும்-ஷை தொகையையாவது பல தொகைகளாகச் செலுத்தப்பட்டிருந்தால் முதலில் செலுத்தப்பட்ட தொகையையாவது வரப்பெற்றுக்கொண்ட அல்லது வசூலித்த தேதி முதல் இரண்டு வருஷ காலத்துக்குள்ளாக அந்த நிலத்துக் குடையவர் அப்படிப்பட்ட நபருக்கு விரோதமாய் (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்துவதற்காக கலெக்டருக்கு முன்பாய் வியாஜ்ஜியம் தாக்கல் செய்தாலன்றி மற்றப்படி, மேலே கண்டபடி வரப்பெற்றுக் கொண்டிருக்கிற அல்லது வசூலித்துக்கொண்டிருக்கிற காரணத்தினால் அந்த நபருக்கு (நிலத்தை) ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்க அனுமதி கொடுத்திருப்பதாகக் கொள்ளவேண்டும்.

(3) பழைய கரம்பை அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருக்க யாதொரு ரயத்துக்கு அனுமதிகொடுக்கப்பட்டால், நிலத்துக்குடையவரும் ரயத்தும் தங்களுக்குள் சம்மதிக்கிற ஷரத்துகளின்படி அந்த நிலத்துக்குடையவர் அதைக் குத்தகைக்கு விடுவது சட்டசம்மதமாகும்; ஆனால், அந்தப்படி அனுமதி கொடுத்திருப்பதினாலேயே அனுமதிகொடுக்கப்பெற்ற ரயத்துக்கு மேலே கண்டபடி குத்தகைக்கு விடப்பட்ட நிலத்திலே சாசுவதமான அனுபோக பாத்தியதை எதுவும் உண்டாய் விடமாட்டாது; மேலும் பூஸ்திதியைச்சேர்ந்த கரம்பு நிலத்திலே சட்டப்படியாவது மாமூல்படியாவது ரயத்துகளுக்கு இருக்கக்கூடிய எவ்வித விசேஷ சுதந்தரங்களுக்காகிலும் இந்த உட்பிரிவினால் பாதகமுண்டாகமாட்டாது.

(4) கரம்புநிலத்தின் கால்நடைகளை மேய்ப்பதற்காக ஒப்பந்தப்படி அனுமதிபெற்றிருப்பதனாலும் ஒரு

நிலத்துக்குடையவரால் காட்டு உற்பத்திக்காக வென்று வாஸ்தவத்தில் விட்டுவைக்கப்பட்டிருக்கிற நிலத்தில் விவசாயசம்பந்தமான பயிர்வைத்துச் சிறிதுகாலத்துக்குச் சாகுபடி செய்வதற்காக ஒப்பந்தப்படி அனுமதி பெற்றிருப்பதனாலுமே, அந்தப்படி அனுமதிபெற்றிருக்கிற நபருக்கு சாசுவத மான அனுபோகபாத்தியதை எதுவும் உண்டாய்விடமாட்டாது.

(5) யாதொரு நிலத்துக்குடையவர் தம்முடைய சொந்தவேலைக் காரர்களைக் கொண்டாவது கூலியாட்களைக்கொண்டாவது கரம்பு நிலத்தைத் திருத்தியிருந்தால், அவர் அப்படி திருத்தின பிறகு முதல் தடவை சாகுபடி செய்த தேதியிலிருந்து முப்பது வருஷ காலம் வரையில் ஷை நிலவிஷயமாக எவரும் சாசுவதமான அனுபோக பாத்தியதை அடையக்கூடாதென்று எழுத்துமூலமான ஒப்பந்தமூலமாய்த் தடுக்கலாம்.

(6) குத்தகைத்தொகை குத்தகைதாரராகவோ இஜாராதாரராகவோ நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிற யாதொரு நபர்-அந்தப்படி வைத்துக்கொண்டிருக்கும்போது, இஜாரா அல்லது குத்தகையிற் சேர்ந்த யாதொரு நிலத்தில் பரம்பரை பாத்தியதை மூலமாகவாகிலும் மரணசாஸன மூலமாகவாகிலுமல்லாமல் மற்றப்படி அனுபோக பாத்தியதை அடையக்கூடாது.

விவரணம்:—நிலத்தில் அனுபோக பாத்தியதையுடையவராயிருக்கிற யாதொரு நபர்-பிற்பாடு நிலத்துக்குடையவராக நிலத்தில் சுதந்தரமுள்ளவராகும் காரணத்தினலாவது, பிற்பாடு நிலத்தை இஜாரா அல்லது குத்தகையின்மேல் வைத்துக்கொண்டிருக்கிற காரணத்தினலாவது ஷை பாத்தியதையை இழக்கமாட்டார்.

சுரங்கமறுப்பதற்கான பாத்தியதைகளைத் தாமே வைத்துக்கொள்வது

7. ரயத்தி நிலத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்க யாதொரு நிலத்துக்குடையவர் எந்த நபருக்காவது அனுமதி கொடுக்கும்போது, சுரங்க மறுப்பதற்கான பாத்தியதைகளைத் தாமே வைத்துக்கொள்ள அந்த நிலத்துக்குடையவருக்கிருக்கிற எவ்வித சுதந்தரத்துக்கும் இந்த ஆக்டிலுள்ளதெதனுலும்பாதக முண்டாக மாட்டாது.

அனுபோக பாத்தியதை மற்ற பாத்தியதைகளோடு சேர்ந்துபோவது

8. (1) இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்கு முன்பாவது பிறகாவது கைப்பற்று நிலத்தைச்சேர்ந்த யாதொரு நிலத்தில் நிலத்துக்குடையவருக்கும் அனுபோக ரயத்துக்கு முள்ள சுதந்தரங்களெல்லாம் ட்ரான்ஸ்பர் மூலமாகவோ ஒருவருக்குப்பின் ஒருவர் உரிமையடைவது மூலமாகவோ வேறே விதமாகவோ ஒரே நபரிடத்தில் சேர்ந்துவிடுகிற போதெல்லாம், அந்த நபர் ஷை நிலத்தை நிலத்துக்குடையவராக வைத்திருக்க வேண்டியதேயல்லாமல், ஒரு ரயத்தாக அதை வைத்துக்கொண்டிருக்க அருக்குப் பாத்தியதை யில்லை; ஆனால் மேலே சொன்ன நபர்களல்லாத வேறே யாதொரு நபருடைய பாத்தியதைகளுக்கு இந்த உட்பிரிவிலுள்ளதெதனுலும் பிரதி கூலமாயப்பதாகமுண்டாகமாட்டாது.

(2) இந்த ஆக்ட் வழங்கத்தொடங்குவதற்கு முன்பாவது பிறகாவது யாதொரு நிலத்திலுள்ள அனுபோகபாத்திதையானது நிலத்துக்குடையவராக நிலத்தில் கூட்டுப் பற்றுள்ளவராயிருக்கிற யாதொரு நபருக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டிருக்கும் போதெல்லாம், அவர்-தம்முடன் கூட இருக்கும் நிலத்துக்குடையவர்களுக்குக் குத்தகைத்தொகையில் அப்போதைக்கப்போது செலுத்தத்தக்கதாயிருக்கும் பாகங்களை அவர்களுக்குச் செலுத்துவதற்குட்பட்டு, அந்த நிலத்தை வைத்துக்கொண்டிருக்க அர்ஹ ராவார்; அல்லாமலும், மேலே கண்டபடி ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவர் மூன்றும் நபருக்கு நிலத்தைக் குத்தகைக்கு விட்டால், அந்த மூன்றும் நபர் ஷை நிலத்தின் விஷயமாய் அனுபோக ரயத்தாயிருப்பதாக எண்ணப்படுவார்.

(3) (1), (2) குறுப்பிட்ட உட்பிரிவுகளின்படி அனுபோக பாத்தியதையானது (நிலத்துக்குடையவரின் பாத்தியதையோடு) சேர்ந்துபோவதனால், ரயத்தி நிலம் சோந்த நிலமாக மாறுது.

(4) கைப்பற்று நிலத்தில் ரயத்துக்குள்ள சுதந்தரமானது குத்தகைத்தொகை பாக்கிக்காகச் செய்யப்படும் விற்பனையில்லாமல் மற்றப்படி இந்த ஆக்ட் ஜாரிசெய்யப்படுவதற்கு முன்னே நல்ல மதிப்புள்ள ஐவேஜுக்காகப் பண்ணப்படும் ட்ரான்ஸ்பர் மூலமாக நிலத்துக்குடையவருக்கு வந்திருக்கிற விஷயங்களிலாவது பரம்பரை பாத்தியதை மூலமாக வந்திருக்கிற விஷயங்களிலாவது, நிலத்துக்குடையவர் இந்த ஆக்ட் ஜாரிசெய்யப்பட்டதிலிருந்து பன்னிரண்டு வருஷகாலத்துக்கு, தாமும் யாதொரு நபரும் சம்மதிக்கும் ஷரத்துகளின்படி அப்படிப்பட்ட நிலத்தை அந்த நபர் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்கு அனுமதி கொடுப்பதற்கான சுதந்தரமுடையவராவார்; அந்தப்படி அனுமதிகொடுக்கப்பெற்ற நபர் ஷை காலவரையறையிலே 46-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளினுலுண்டாகக்கூடிய பிரயோசனத்தையடைவதற்குப் பாத்தியதையுடைய வராகமாட்டார்.

மேலேகண்ட சுதந்தரமானது பரம்பரை பாத்தியதை மூலமாக இந்த ஆக்ட் ஜாரியானபிறகு நிலத்துக்குடையவருக்கு வந்திருக்கிற விஷயங்களிலே, அந்த நிலத்துக்குடையவர் ஷை பாத்தியதையடைந்த தேசமுதல் பன்னிரண்டு வருஷகாலத்துக்கு அதே பாத்தியதை உடையவராவார்.

விலக்கு.—இந்தப் பிரிவில் என்னசொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்கு முன்பாவது பிறகாவது, 3-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (d) அடையாளமிட்ட பகுதியின் கீழ்வருகிற யாதொரு பூஸ்திதியில் அடங்கியுள்ள யாதொரு நிலத்தின் குடிவார பாத்தியதையானது இனம்தாரரால் அடையப்பட்டிருந்தாலும், அடைப்பட்டாலும், அப்படிப்பட்ட நிலமானது ஷை பூஸ்திதியின் பாகமாயிருக்கமாட்டாது.

ரயத்தை (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்தநிலத்துக்குடையவருக்குள்ள பாத்தியதை

9. இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின் படிக்கன்றி மற்றப்படி ரயத்தை அவருடையகைப்பற்று நிலத்திலிருந்தாவது அதன் யாதோரு பாகத்திலிருந்தாவது அப்புறப்படுத்த எந்த நிலத்துக்குடையவரும் நிலத்துக்குடையவ ரென்னும் முறைமையிலே பாத்தியதையுள்ளவராக மாட்டார்.

அனுபோகபாத்தியதை வமிசபரம்பரையாயவரத்தக்க தென்பதும்ஒருவர் பேரிலிருந்து மற்றொருவர்பேருக்குட்ரான்ஸ்பராகத்தக்க தென்பதும்

10. (1) சகல அனுபோகபாத்தியதைகளும் வமிசபரம்பரையாய் வரத்தக்கவைகளாக இருக்கவேண்டும்; மேலும், அவைகள் விற்பனை மூலமாகவோ தானமாகவோ அல்லது வேறே விதமாகவோ ஒருவர் பேரிலிருந்து மற்றொருவர் பேருக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்படத் தக்கவைகளாயுமிருக்கவேண்டும்.

(2) யாதொரு ரயத்தானவர் அனுபோக பாத்தியதை விஷயத்திலே மரணசாஸனம் எழுதிவைக்காமலும் கவர்ன்மென்டாரைத்தவிர வேறே யாதொரு வாரிசுமில்லாமலும் இறந்துபோகிற பட்சத்திலே அவருடைய அனுபோக பாத்தியதையானது அற்றுப்போகும்; ஆனால், எந்த நிலத்தின் விஷயத்திலே அவருக்கு அப்படிப் பட்ட அனுபோக பாத்யதை யிருந்ததோ அந்த நிலமானது ரயத்தி நிலமாயிராமற்போகாது.

நிலத்தை ரயத்து உபயோகித்துக்கொள்ளுவது

11. நிலத்தின் மதிப்பை முக்கியமான அம்சங்களில் குறைக்காதபடிக்காவது விவசாய சம்பந்தமான காரியங்களுக்கு அதைத் தகுதியற்றதாகச் செய்து விடாதபடிக்காவது எவ்விதமாகவேனும் ரயத்து தம்முடைய கைப்பற்றிலுள்ள நிலத்தை உபயோகித்துக்கொள்ளலாம்.

மரங்களை உபயோகித்துக்கொள்வதற்கான பாத்தியதை

12. மாமூல்படியாவது இந்த ஆக்ட் ஜாரியாவதற்குமுன் ரயத்து எழுதிக்கொடுத்த ஒப்பந்தத்தின்படியாவது நிலத்துக்குடையவருக்கே இருக்கிற எவ்விதம் பாத்தியதைகளுக்கு முட்பட்டு, ஒவ்வொரு அனுபோக ரயத்தும் இப்போது தம்முடைய கைப்பற்று நிலத்திலுள்ள சகல மரங்களையும் உபயோகித்துக்கொள்ளவும் அவைகளின் பலனை அனுபவித்துக்கொள்ளவும் அவைகளை வெட்டிவிடவும் பாத்தியதை உடையவராவார்; இந்த ஆக்ட் ஜாரியானபிறகு ரயத்தால் வைத்துப் பயிர் செய்யப்படக்கூடிய அல்லது கைப்பற்று நிலத்திலே இயற்கையாகவே பயிராகக்கூடிய மரங்களின் விஷயத்திலே, அவைகளை உபயோகித்துக்கொள்ளவும் அவைகளின் பலனை அனுபவித்துக்கொள்ளவும் அவைகளை வெட்டிவிடவுங் கூடாதென்பதற்கு எவ்வித ஒப்பந்தமாயினும் மாமூலாயினும் ஏற்பட்டிருந்தும் பாதகமில்லாமலே, அவர்-அவைகளை மேலேகண்டபடி உபயோகித்துக் கொள்ளவும் அவைகளின்பலனை அனுபவித்துக்கொள்ளவும் அவைகளை வெட்டிவிடவும் பாத்தியதை உடையவராவார்.

சீர்திருத்தஞ் செய்ய அனுபோக ரயத்துக் குள்ள பாத்தியதை

13. (1) யாதொரு ரயத்துக்குத் தம்முடைய கைப்பற்று நிலத்திலே சாசுவதமான அனுபோகபாத்தியதை இருந்தால், ரயத்தாவது நிலத்துக்குடையவராவது ரயத்தாகவோ நிலத்துக் குடையவராகவோ தாமே செய்ய இஷ்டமுடையவராயிருக்கிறாரென்னும் காரணத்தினாலன்றி மற்றப்படி, கைப்பற்று நிலத்தின்விஷயமாகச் சீர்திருத்தம் செய்யவொட்டாமல் ஒருவர் மற்றொருவரைத் தடுக்கச் சுதந்தரமுள்ளவராவார்.

(2) ரயத்தும் நிலத்துக்குடையவரும் ஒரே சீர்திருத்தத்தைச்செய்ய இஷ்டமுடையவராயிருந்து, அதனால் அதே நிலத்துக்குடையவருக்குக் கீழிருக்கிற வேறொரு ரயத்தைச்சேர்ந்த கைப்பற்று நிலத்துக்குப் பாதகமுண்டாகாமலிருக்கிற பட்சத்திலே, அந்த சீர்திருத்தத்தைச்செய்ய ரயத்தே முந்திய பாத்தியதையுள்ளவராவார்; வேறொரு ரயத்தைச்சேர்ந்த கைப்பற்று நிலத்துக்குப் பாதகமுண்டாகிற விஷயத்திலே நிலத்துக்குடையவரே முந்தியபாத்தியதையுள்ளவராவார்.

(3) இதற்கு மாறாக என்ன மாமூல் அல்லது ஒப்பந்தமிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, யாதொரு ரயத்து தம்முடைய செலவில் மாத்திரமே சீர்திருத்தம் செய்துகொண்டகாரணத்தினால், அப்படிப்பட்ட சீர்திருத்தம் செய்ததன்பலனாக சாகுபடியான மாசூலில் ஏதாவது அதிகரிப்பு உண்டாயிருந்தால் அது நிமித்தமாயாவது சாகுபடி செய்யப்பட்ட பயிரின் தன்மையில் ஏதாவது மாறுதல் உண்டாயிருந்தால் அது நிமித்தமாயாவது (முன் செலுத்திவந்த வீதத்தைக்காட்டிலும்) அதிகமான வீதப்படி குத்தகைத்தொகை செலுத்துவதற்கு உட்பட்டவராகமாட்டார்.

அனுபோகபாத்தியதை யில்லாத ரயத்துக்கு சீர்திருத்தம் செய்வதற்காகவுள்ள சுதந்தரம்

14. அனுபோகபாத்தியதையில்லாத யாதொரு ரயத்தானவர்-விவசாயத் தொழிலைக்கிரமமாய் நடத்திக்கொண்டிருக்கையிலே, தம்முடைய கைப்பற்று நிலத்தைக் கரம்புதிருத்த, பரிஷ்கரிக்க, அதற்கு அடைப்படைக்க, அதைச் சமமாக்க, அதற்கு வரப்பேற்படுத்த அல்லது அதிலுள்ள சேற்றை அப்புறப்படுத்தவும், அந்தக் கைப்பற்று நிலத்தின் நீர்ப்பாய்ச்சலுக்காக ஒரு கிணற்றை அது சம்பந்தமான சகல கட்டு வேலைகளோடுங்கூட ஏற்படுத்தவும் பரிபாலித்து வரவும் மராமத்து செய்யவும் பாத்தியதை யுள்ளவராவார்; ஆனால், அவர் தம்முடைய கைப்பற்று நிலத்தின் விஷயத்திலே நிலத்துக்குடையவரின் அனுமதியில்லாமல் வேறே எந்த சீர்திருத்தத்தையும் செய்ய பாத்தியதையுள்ளவராகமாட்டார்.

சீர்திருத்தத்தின் சம்பந்தமாக உண்டாகிற விவாதங்களைப்பைசல் செய்யக் கலெக்டருக்குள்ள அதிகாரம்

15. (எ) சீர் திருத்தத்தைச் செய்வதற்கான பாத்தியதையின் விஷயத்திலோ,

(பி) குறித்த ஒரு வேலை சீர்திருத்தமா அல்லது சீர்திருத்தமாகுமா என்பதன் விஷயத்திலோ,

ஒரு ரயத்துக்கும் நிலத்துக்குடையவருக்கும் விவாதம் நேரிடுகிற பட்சத்திலே, உபய கட்சிக்காரர்களில் ஒருவர் விண்ணப்பஞ் செய்து கொள்வதன்மேல் கலெக்டரானவர் அந்தவிவாத விஷயத்தைக் குறித்துத் தீர்மானம் செய்யலாம்.

நிலத்துக்குடையவர்செய்யும் சீர்திருத்தங்களை ரெஜிஸ்டர் செய்துவைப்பது

16. (1) யாதொரு நிலத்துக்குடையவர் தாம் சட்டப்படி செய்திருக்கிற அல்லது தம்முடைய செலவில் சட்டப்படி செய்யப்பட்டிருக்கிற சீர்திருத்தத்தையாவது எந்த சீர்திருத்தம் செய்கையில் ஒரு ரயத்துக்குத் தாம் உதவி செய்திருக்கிறாரோ அந்த சீர்திருத்தத்தையாவது ரெஜிஸ்டர் செய்து வைக்கும்படி பிரதேச கவர்ன்மெண்டாரால் நியமிக்கப் படக்கூடிய ரெவினியு ஆபிஸருக்கு விண்ணப்பஞ் செய்துகொள்ளலாம்.

(2) மேற்படி விண்ணப்பமானது பிரதேச கவர்ன்மெண்டார் விதிமூலமாக எந்த நமூனைப்படி அது இருக்கவேண்டுமென்று கட்டளையிடுகிறார்களோ அந்த நமூனைப்படி யிருக்கவேண்டியதுமல்லாமல், அதில் என்ன சங்கதி அடங்கி யிருக்கவேண்டுமென்று கட்டளை யிடுகிறார்களோ அந்த சங்கதி அடங்கியுமிருக்கவேண்டும்; மேலும், அது அவ்வவ்விடத்தில் விசாரணை செய்தவன் மூலமாகவோ அல்லது வேறேவிதமாகவோ பிரதேச கவர்ன்மெண்டார் எந்தவிதமாய்ச் சரிபார்க்கவேண்டுமென்று கட்டளையிடுகிறார்களோ அந்த விதமாய்ச் சரிபார்க்கப்பட்டு மிருக்கவேண்டும்.

(3) அந்த விண்ணப்பத்தை வரப்பெற்றுக் கொள்ளுகிற உத்தியோகஸ்தர் வேலை முடிந்த தேதியிலிருந்து பன்னிரண்டுமாத காலத்துக்குள்ளாக அது செய்து கொள்ளப்படாமலிருந்தால் அதைத் தள்ளிவிடலாம்.

சீர்திருத்தத்தின் விஷயமாகச் சாட்சியத்தை எழுதிவைக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொள்வது

17. (1) ஒரு கைப்பற்று நிலத்தைச்சேர்ந்த ரயத்தாவது யாதொரு நிலத்துக்குடையவராவது ஒரு கைப்பற்று நிலத்தின்விஷயத்திலே இந்த ஆக்ட் ஜாரியான பிறகு செய்யப்பட்ட யாதொரு சீர்திருத்தத்துக்குச் சம்பந்தமான சாட்சியத்தை எழுதிவைக்க வேண்டுமென்று விரும்பினால், அவர் கலெக்டருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்; அதன்மேல் கலெக்டரானவர் மேலேகண்ட விண்ணப்பத்துக்கு ஆதாரங்கள் இல்லையென்று நினைத்தாலன்றி மற்றப்படி, காலத்தையும் இடத்தையுங் கண்டு இருகிறத்தாருக்கும் நோட்டீஸ் கொடுத்து அந்தக்காலத்திலும் இடத்திலும் ஷை சாட்சியத்தை எழுதிவைக்கவேண்டும்; மேலே கண்டபடி ஆதாரங்களில்லை யென்று நினைப்பதற்குரிய காரணங்கள் எழுதிவைக்கப் படவேண்டும்.

(2) இந்தப்பிரிவின்படி எந்த விஷயமாவது எழுதிவைக்கப்பட்டிருக்கும்போது, அந்தப்படி எழுதிவைத்திருக்கிற விஷயமானது நிலத்துக்குடையவருக்கும் ரயத்துக்குமாவது அவர்களுக்குட்பட்டு பாத்தியதை கொண்டாடுகிற எந்த நபர்களுக்குமாவது பிற்காலத்தில் நடக்கும் ஒவ்வொரு விவகாரத்திலும் சாட்சியத்தில் ஏற்றுக்கொள்ளத் தக்கதாகும்.

சாகுபடி பண்ணும்போது சாதாரணமாயச் செயயப்படும்சீர்திருத்தங்கள் விஷயத்திலேவிவாதனை

18. 13, 14, 15-வது பிரிவுகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ரயத்தானவர் சிறிது காலத்துக்கு இருக்கக்கூடியவைகளாய்க் கிணறுகளையாவது தண்ணீர்க் கால்வாய்களையாவது கரைகளையாவது ஏற்படுத்திக்கொள்ளவோ நிலத்தைச் சமப்படுத்திக்கொள்ளவோ அடைப்படைத்துக்கொள்ளவோ வேறே வேலைகளைச் செய்யவோ அல்லது சாகுபடி பண்ணும்போது சாதாரணமாய்ச் செய்யப்படும் கட்டுவேலைகளில் சொற்பமாறுதல்கள் செய்யவோ அல்லது அவைகளுக்கு சொற்ப மராமத்துகள் செய்யவோ பாத்தியதையுள்ளவராவார்; 17-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகள் அப்படிப்பட்ட வேலைகளுக்காகிலும் மராமத்துகளுக்காகிலும் பிரயோகப்படமாட்டா.

ரயத்துகள்-நிலத்துக்குடையவர்கள் ஆகிய இவர்களுக்கும் இவர்களுடைய பயக்காரிகளுக்குமுள்ள சம்பந்தம்.

19. இந்த ஆக்டிலே பிரத்தியேகமாய் வேறே விதமாக நிபந்தனைகண்டிருந்தாலன்றி மற்றபடி, ஒரு ரயத்துக்கும் அவரைச் சேர்ந்த பாயக்காரிகளுக்கும் அல்லது நிலத்துக்குடையவருக்கும் அவருடைய சொந்த நிலத்தைச் சேர்ந்த பாயக்காரிக்குமுள்ள சம்பந்தத்தைக் குறித்தும், வேறே எந்த நிலச்சொந்தக்காரர்களுக்காகிலுமுள்ள பாத்தியதைகளைக் குறித்தும் இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளினால் ஒழுங்கேற்படவில்லை.

சமுதாய நிலங்கள் கொடுக்கத்தக்க வைகளல்லவென்பது

20. கிராமத்தாருடைய பொது உபயோகத்திற்காக யாதொரு பூஸ்திதியிலே பிரத்தியேகமாய் விடப்பட்டிருக்கும் களத்துமேடுகளையும், கால்நடைக் கொட்டில்களையும், கிராமநத்தங்களையும், இதர நிலங்களையும், பிரதேச கவர்ன்மெண்டாரால் இதுவிஷயமாய்ச் செய்யப்படும் விதிகளுக்குட்பட்டு டிஸ்ட்ரிக்ட் கலெக்டரிடத்திலிருந்து எழுத்துமூலமான உத்தரவைப் பெற்றுக்கொள்ளாமல் வேறே யாதொரு காரியத்துக்காகக் கொடுக்கவுங்கூடாது உபயோகிக்கவுங்கூடாது.

விவரணம்.—நிலையான பைசலேற்பாட்டுக்குப் பிறகு நிலத்துக்குடையவரால் அந்தப்படி பிரத்தியேகமாய் விடப்பட்டிருக்கும் யாதொரு நிலமானது எந்த சமுதாய காரியங்களுக்காகவாகிலும் இனி அவசியமில்லையென்று கலெக்டர் அபிப்பிராயப்படுகிறபட்சத்திலே, நிலத்துக்குடையவருக்கே மறுபடியும் சேர்ந்துவிடும்.

ஏரியின் அடித்தரை நிலங்களின் விஷயத்திலே நிவாரணை

இந்தப்பிரிவிலுள்ளதெதுவும் யாதொரு பூஸ்திதியிலுள்ள ஏரியின் அடித்தரை நிலங்களுக்குப் பிரயோகப்படவும் மாட்டாது, அவைகள் விஷயமாய் நிலத்துக்குடைய வருக்கிருக்கிற பாத்தியதைகளுக்கு இந்தப்பிரிவிலுள்ள தெதனாலும் பாதகமுண்டாகவும்மாட்டாது.

சமுதாய நிலங்களை விதிக்கு விரோதமாக அனுபோகத்தில் வைத்திருக்கும் நபர்களை நீக்குவது

21. யாதொரு நபர்-20-வது பிரிவிற்கண்ட நிலங்களிலெதையாவது அந்த நிலம் எந்தக்காரியத்துக்காகப் பிரத்தியேகமாய் விட்டுவைக்கப் பட்டிருக்கிறதோ அந்தக் காரியம் தவிர வேறே யாதொரு காரியத்துக்காகவாவது பிரதேச கவர்ன்மெண்டாரால்ஏற்படுத்தப்பட்ட விதிகளுக்கு விரோதமாகவாவது அனுபோகத்தில் வைத்திருந்தால், அவரை அந்தப்படி எதுமுதல் அனுபோகத்தில் வைத்திருந்தாரோ அதிலிருந்து முப்பது வருஷத்துக்குள்ளாக எப்போதாகிலும், 1905-ம்ளு சென்னப்பட்டணத்து நிலம் ஆக்கிரமிப்பதைப்பற்றிய ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிறவிதமாகக் கலெக்டர் சுருக்கவகையாய் நீக்கலாம்; மேலும், அந்த நிலத்தில் பயிர்செய்திருக்கக்கூடிய யாதொரு மாசூல் அல்லது வேறே விளைபொருளையாவது, அந்த நிலத்தின்மேல் ஏற்படுத்தியிருக்கக்கூடிய யாதொரு கட்டுக்கோப்பையாவது, அதன்மேல் சேர்த்து வைத்திருக்கக்கூடிய யாதொரு வஸ்துவையாவது. டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் எந்தசமுதாய காரியங்களுக்கு உபயோகிக்கவேண்டுமென்று தீர்மானிப்பாரோ அந்த சமுதாய காரியங்களுக்கு உபயோகிக்கவேண்டும்.

சென்னபட்டணத்து நிலம் ஆக்கிரமிப்பதைப் பற்றிய ஆக்டிற் கண்ட நிபந்தனைகளை 20-வது 21-வது பிரிவுகளின் படிக்கான உத்தரவுகளுக்குப் பிரயோகிப்பது

22. 1905-ம்௵த்திய சென்ன பட்டணத்து நிலம் ஆக்கிரமிப்பதைப்பற்றிய ஆக்டின் 10 முதல் 14 வரையிலுள்ள பிரிவுகளிற் கண்ட நிபந்தனைகள் இந்த ஆக்டின் 20-வது 21-வது பிரிவுகளின் படிக்கான உத்தரவுகளுக்கு எவ்வளவு மட்டில் பிரயோகப்படக்கூடுமோ அவ்வளவு மட்டில் பிரயோகப்பட வேண்டும்.

ரயத்தி நிலமென் றூகக்கொள்வது

23. யாதொரு நிலமானது பழையகாம்பா அல்லது பழைய கரம்பல்லாத வேறே ரயத்தி நிலமா என்று யாதொரு வியாஜ்ஜியத்திலாவது நடவடிக்கையிலாவது தீர்மானிப்பது அவசியமாகும்போது அது பழைய கரம்பல்லாத வேறே ரயத்தி நிலமல்லவென்று ருஜு செய்யப்படுகிற வரையிலே அதை ரயத்தி நிலமாகவே கொள்ளவேண்டும்.

3-ம் அத்தியாயம்

ரயத்துகள் செலுத்தத்தக்க குத்தகைத்தொகை வீதங்களுக்குச் சம்பந்தப்பட்ட பொதுவான நிபந்தனைகள்.

அதிகப்படுத்துவதைப்பற்றி நிர்ப்பந்தம்

24. ஒரு ரயத்து செலுத்தவேண்டிய குத்தகைத் தொகையை இந்த ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிறபடிக் கல்லாமல் மற்றப்படி அதிகப்படுத்தக்கூடாது.

இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கினபிறகு ரயத்தி நிலத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக் கொண்டிருக்க அனுமதி பெறுவதன் மேல் செலுத்தத்தக்க குத்தகைத்தொகை

25. பழைய கரம்பல்லாத வேறே ரயத்தி நிலத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்க இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கினபிறகு நிலத்துக்குடையவரால் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கும் பிரதிரயத்தும் அக்கம் பக்கத்தில் ஷை நிலத்துக்குள்ள அனுகூலங்களைப் போன்ற அனுகூலங்களை பொருந்தியுள்ள அதே மாதிரியான நிலங்களுக்கு விதிக்கப்படுகிற வீதத்துக்கு அதிகப்படாத ஒரு வீதத்தின்படியாவது, அப்படிப்பட்ட வீதத்தைத் தெரிந்துகொள்ள முடியாதவிஷயத்திலே விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதன்மேல் கலெக்டர் நியாயமானதும் தருமமானதுமென்று தீர்மானிக்கக்கூடிய வீதத்தின்படியாவது குத்தகைத்தொகை செலுத்தக் கடமைப்பட்டவராவார்.

ப்ரீமியம் மேல்வாசி பெற்றுக்கொள்வது விஷயத்திலே நிவாரணம்

(நிலத்தை) ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்க ரயத்துக்கு அனுமதிகொடுக்கும்போது யாதொரு ப்ரீமியம் (மேல்வாசி) பெற்றுக்கொள்வதற்கு இந்தப் பிரிவிலுள்ளதெதனாலும் நிலத்துக்குடையவருக்குத் தடையுண்டாகமாட்டாது; ஆனால், அந்தப்படி அனுமதிகொடுக்கப்பெற்ற ரயத்து எவ்வித சந்தர்ப்பமாயிருந்தாலுஞ்சரி, அப்படிப்பட்ட அனுமதிபெறுவதற்காக ப்ரீமியமாகவோ வேறேஜவேஜாகவோ தாம் ஸ்வாதீனம் பெற்றபிறகு அந்த நிலத்துக்குடையவருக்கு எதுவும் செலுத்துவதற்குட்பட்டவராகமாட்டார், அல்லாமலும், அப்படிப்பட்ட யாதொரு ப்ரீமியம் அல்லது ஜவேஜு விஷயமாகவாவது அதன் யாதொரு பாகத்தின் விஷயமாகவாவது அந்த ரயத்தின் எந்தக் கைப்பற்று நிலத்தையும் எவ்வித பொறுப்புக்காகிலும் உட்படுத்தக்கூடாது.

கரம்பு நிலத்தைச் சாகுபடிக்கு உதவும்படி செய்வதற்காகவாவது கைப்பற்று நிலத்தின் மேல் சீர்திருத்தம் செய்வதற்காகவாவது ஆதியில் குறைந்த வீதப்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட குத்தகைத் தொகையை அதிகப்படுத்துவது

26 (1) பூஸ்திதியிலுள்ள கரம்பு நிலத்தைப் பரிஷ்கரித்துச் சாகுபடிக்கு உதவும்படியாய்ச் செய்யும் காரியத்துக்காகவாவது கைப்பற்று நிலத்தின்மேல் சாசுவதமான யாதொரு சீர்திருத்தத்தைச் செய்யும் காரியத்துக்காகவாவது மரம்வைத்துப் பயிராக்குவதற்காகவாவது, யாதொரு ப்ரீமியம் (மேல்வாசி), கடன் அல்லது வேறே நல்ல மதிப்புள்ள ஜவேஜுக்காக இந்த ஆக்ட் வழங்கத்தொடங்குவதற்கு முன்னே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தப்படியாவது, யாதொரு ரயத்து அந்த நிலத்துக்கு முன்னே சட்டப்படி செலுத்தத்தக்கதாயிருந்த வீதத்தைவிட குறைந்த குத்தகைத்தொகை வீதப்படியாகிலும், அக்கம்பக்கத்தில் அதே தன்மையுள்ளதும் அதற்குள்ள அனுகூலங்களைப்போன்ற அனுகூலங்களை பொருந்தியுள்ளதுமான நிலத்துக்குச் சட்டப்படி செலுத்தத்தக்கதாயிருக்கிற வீதத்தைவிட குறைந்த குத்தகைத்தொகை வீதப்படியாகிலும் நிலத்துக்குடையவரிடத்திலிருந்து பட்டா அங்கீகரித்திருந்தாலும், அவருடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தாலும், என்ன ஷரத்துகளின் பிரகாரமும் என்ன காரியங்களுக்காகவும் மேலேகண்டபடி குறைந்தவீதம் ஏற்படுத்தப்பட்டதோ அந்த ஷரத்துகளையும் காரியங்களையும் ரயத்து முக்கிய அம்சங்களில் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறவரையிலும் எந்தக் காலவரையறைக்கு அந்தக்குறைந்தவீதம் ஒப்பந்தப்படியோ அல்லது மாமூல்படியோ செலுத்தத்தக்கதாயிருக்கிறதோ அந்தக் காலவரையறையிலே ஷை குத்தகைத்தொகை அதிகப்படுத்தப்படுவதற்கு உள்ளாகமாட்டாது.

(2) எந்தக்காலவரையறைக்கு மேலேகண்ட குறைந்த குத்தகைத்தொகை வீதம் செலுத்தத்தக்கதாயிருக்கிறதோ அந்தக் காலவரையறைகழிந்தபிறகு, அல்லது என்ன ஷரத்துகளின்படியும் என்ன காரியங்களுக்காகவும் அப்படிப்பட்ட குறைந்தவீதம் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டதோ அந்த ஷரத்துகளும் காரியங்களும் முக்கிய அம்சங்களில் நிறைவேற்றப்படாவிட்டால், நிலத்துக்குடையவர் முழுவீதப்படி (குத்தகைத்தொகை) விதித்து வாங்கச் சுதந்தரமுள்ளவராவார்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி என்ன குத்தகைத்தொகை வீதப்படி நிலத்துக்குடையவரால் நிலம் கொடுக்கப்பட்டிருக்குமோ அப்படிப்பட்ட வீதமானது அதே நிலத்துக்காவது அக்கம்பக்கத்தில் அதே தன்மையுள்ளதும் அதற்குள்ள அனுகூலங்களைப்போன்ற அனுகூலங்களை பொருந்தியதுமான நிலத்துக்காவது (நிலம்) கொடுக்கப்பட்டதேதிக்கு முன்னமே ரயத்து சட்டப்படி செலுத்தத்தக்கதாயிருந்த வீதத்தைவிட குறைவாயிருக்கிற பட்சத்திலே, மேலேசொன்ன குத்தகைத்தொகை வீதமானது நிலத்துக்குடையவரின் வாழ்நாளுக்குப் பிறகு குத்தகைத்தொகையை யாத்தியமாய் வைத்திருக்கும் நபரைப் பிணைப்பதாகக் கூடியதாகாது.

கைப்பற்று நிலத்தின் திட்டங்குறித்தும் குத்தகைத் தொகையின் அளவைக்குறித்தும் இன்னபடி கொள்ளவேண்டுமென்பது

27. ரயத்தால் செலுத்தப்படத்தக்க குத்தகைத் தொகையைக் குறித்தாவது யாதொரு ரெவினியு வருஷத்தில் எந்த திட்டங்களின்படி அவர் (நிலத்தைக்) கைப்பற்றில் வைத்திருக்கிறாரோ அந்த திட்டங்களைக் குறித்தாவது விவாதம் நேரிடுகிற பட்சத்திலே, அவர் இதற்குமாறாக ஏதாகிலும் ருஜு செய்யப் படுகிறவரையிலே, அடுத்து முந்திய ரெவினியு வருஷத்திலிருந்த வீதப்படிக்கும் திட்டங்களுக்குட்பட்டும் (நிலத்தைக்) கைப்பற்றில் வைத்துக்கொண்டிருப்பாராகப் பாவிக்கப்படுவார்.

குத்தகைத் தொகை வீதம் நியாய மானது தானு என்பதைப்பற்றி இன்னபடி கொள்ளவேண்டுமென்பது

28. இந்த ஆக்டின்படிக்கான சகல நடவடிக்கைகளிலும் ஒரு ரயத்து அந்தந்தகாலத்தில் சட்டப்படி செலுத்தத்தக்க குத்தகைத் தொகையாவது குத்தகைத்தொகை வீதமாவது நியாயமானதல்லவென்றும் தருமமானதல்லவென்றும் ருஜு செய்யப்படுகிறவரையிலே, நியாயமாயிருப்பதாகவும் தருமமாகயிருப்பதாகவும் எண்ணப்படும்.

வாரவீதங்கள் அதிகப்படுத்தப் படுவதற்கு உள்ளாக மாட்டாவென்பது

29. ஒரு அனுபோக ரயத்து தம்முடைய கைப்பற்றிலுள்ள யாதொரு நிலத்துக்காக "வாரத்தின்படி" (அதாவது, நிலத்துக்குடையவருக்கும் ரயத்துக்கும் மாசூலைப் பங்கிடுசெய்வதற்காகக் கிராமத்தில் ஏற்பட்டிருக்கிற வீதப்படி) ரொக்கமும் சேர்த்தோ அல்லது சேர்க்காமலோ குத்தகைத் தொகை செலுத்தினாலும், மற்றப்படி தானிய ரூபமாகவோ அல்லது மாசூலின் ஒரு பாகத்துக்கு மதிப்பேற்படுத்தப்பட்ட கிரயத்தின்மேலோ குத்தகைத்தொகை செலுத்தினாலும், மாசூலுக்குத் தகுந்தபடி வேறுபடுகிற வீதங்களின் பிரகாரம் குத்தகைத் தொகை செலுத்தினாலும், இறுதமட்டில் மேலே சொன்னவகைகளிலே ஒரு வகைப்படியும் சிறிதுமட்டில் வேறொரு அல்லது மற்ற வகைப்படியும் குத்தகைத் தொகை செலுத்தினாலும், அந்தக் குத்தகைத்தொகை அதிகப்படுத்தப்படுவதற்கு உள்ளாகமாட்டாது.

வியாஜ்ஜிய மூலமாகக் குத்தகைத் தொகையை அதிகப்படுத்துவது.

30. ஒரு ரயத்து தம்முடைய கைப்பற்றிலுள்ள யாதோரு நிலத்துக்கு ரொக்கமாகக் குத்தகைத்தொகை செலுத்திக்கொண்டிருந்தால், நிலத்துக்குடையவர் அடியிற் கண்ட ஹேதுக்களில் ஒன்று அல்லது பலவற்றின்மேல் அந்தக் குத்தகைத் தொகையை அதிகப்படுத்தும்படி கலெக்டரிடத்தில் வியாஜ்ஜியம் கொண்டுவரலாமேயல்லாமல் வேறே ஹேதுக்களின்மேல் கொண்டுவரக்கூடாது:—

(i) இப்போதைய குத்தகைத்தொகை செலுத்தப்பட்டு வருகிற காலத்திலே தாலூகா அல்லது ஜமீன்தாரி டிவிஷனில் பிரதான உணவுத் தானியங்களின் பிரதேச சராசரி விலை அதிகரித்திருக்கிறதென்பது;

(அ) ஆனால், குத்தகைத்தொகையானது நிஷ்கரிஷை செய்யப்பட்டுள்ள ஒரு வீதம் அல்லது வீதங்களின்படி சாசுவதமாய்ச் செலுத்தத்தக்கதாயிருந்தால், அது விலை அதிகரித்திருக்கிறதென்னும் ஹேதுவின்மேலே இந்தப் பகுதியின்படி அதிகப்படுத்தப்படுவதற்குள்ளாகமாட்டாது.

(ஆ) மேலும், இந்தப் பகுதியின்படி அதிகப்படுத்தப்படும்போது, நிலத்துக்காக முன்னமே செலுத்தத்தக்கதாயிருந்த குத்தகைத்தொகையில் ரூபாயொன்றுக்கு இரண்டு அணாவைவிட அதிகமாகக் குத்தகைத்தொகை உயர்த்தப்படக்கூடாது.

(ii) இப்போதைய குத்தகைத்தொகை செலுத்தப்பட்டுவருகிற காலத்தில் நிலத்துக்குடையவராலோ, அவருடைய செலவிலோ செய்யப்பட்ட சீர்திருத்தத்தினால், ரயத்து வைத்திருக்கும் நிலத்தின் வளப்பம் விருத்தியடைந்திருக்கிறதென்பது;

(iii) நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான யாதொரு கட்டுவேலையாவது வேறே சீர்திருத்தமாவது கவர்ன்மென்டாருடைய செலவில் செய்யப்பட்டிருந்து, நிலத்துக்குடையவர் அது காரணமாக கைப்பற்று நிலத்தின் விஷயத்திலே கவர்ன்மென்டாருக்கு முன்னிருந்ததைவிட அதிகமாகத் தீர்வை அல்லது (தீர்வை) வீதம் சட்டப்படி செலுத்தவேண்டியவராயிருக்கிறாரென்பது;

(iv) ரயத்து வைத்திருக்கும் நிலத்தின் வளப்பமானது நதி ஓட்டத்தினால் விருத்தியடைந்திருக்கிறதென்பது.

விவரணம்—"நதி ஓட்டம்" என்பதிலே-ஒரு நதியிலிருந்து நீர்ப்பாய்ச்சிக்கொள்ளுவது முன்னே சாத்தியப்படாமலிருந்த இடத்திலே சாத்தியப்படும்படியாக அந்த நதியின் ஓட்டத்திலுண்டாகும் மாறுதலும் அடங்கும்.

விலை அதிகரித்திருக்கிறதென்னும் காரணத்தினாலே குத்தகைத்தொகையை அதிகப்படுத்துவதைப்பற்றிய விதிகள்

31. 30-வது பிரிவைச்சேர்ந்த (i) குறிப்பிட்ட பகுதியின் பிரகாரம் (குத்தகைத்தொகையை) அதிகப்படுத்தும்படி தாவாசெய்யப்படும்போது—

(அ) கலெக்டரானவர்-வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டதற்கு அடுத்து முந்திய பத்து வருஷ காலவரையறையின் சராசரி விலையை, வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டதற்கு அடுத்து முந்திய இருபதுவருஷத்தோடு முடிகிற பத்துவருஷ காலவரையறையின் சராசரி விலையோடு ஒத்திட்டுப்பார்க்கவேண்டும்;

(ஆ) அ பகுதியிற்கண்ட பத்துவருஷகாலவரையறைகளை எடுத்துப்பார்த்து சாத்தியமல்லவென்று கலெக்டருக்குத்தோற்றினால், அவர் தமக்கு யுக்தமாகத்தோற்றுகிறபடி ஷை காலவரையறைகளுக்குப் பர்த்தியாக இன்னும் குறைவாயுள்ள எந்தக்காலவரையறையையாவது எடுத்துப்பார்க்கலாம்;

(இ) பிரதேச கவர்ன்மென்டாருடைய உத்தரவின்படி பிரசித்தஞ்செய்யப்பட்ட விலைகளே-கலெக்டர் (ஒத்திட்டுப்பார்க்கும்போது) எடுத்துக்கொள்ளவேண்டிய சராசரி விலைகளாகும்; மேலும், இந்த ஆக்ட் ஜாரியான பிற்பாடு [illegible] வருஷத்துக்குத் தயார்செய்யப்படும் ஜாபிதாக்களிற் கண்ட விலைகள் சரியானவையென்று கலெக்டர் [illegible]வேண்டும்; அல்லாமலும், இந்த ஆக்ட் ஜாரியானதற்கு முன்னே ப

தொரு வருஷத்துக்காகத் தயார் செய்யப்படும் ஜாபிதாக்களிற்கண்ட விலைகள் சரியானவைகளல்லவென்று ருஜூப்படுத்தப் பட்டாலன்றி மற்றப்படிக்கும் அந்தப்படி ருஜூப்படுத்தப்படுகிற வரையிலும், அந்த விலைகள் சரியானவைகளென்று கலெக்டர் கொள்ளலாம் ;

(டி) சராசரி விலைகளை ஒத்திட்டுப் பார்ப்பதற்காக எடுத்துக்கொள்ளப்படும் பத்து வருஷ காலவரையறைகளானவை-யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தின் விஷயமாகப் பஞ்சவருஷக்களாயிருக்கின்றனவென்றோ அல்லது பஞ்ச வருஷக்களாயிருந்திருக்கின்றனவென்றோ பிரதேச கவர்ன்மெண்டார் பிரசித்தஞ் செய்யதக்க சகல வருஷங்களும் நீங்கலாகப் பத்துவருஷங்கொண்ட காலவரையறைகளாயிருக்கவேண்டும் ;

(இ) அதிகரிக்கப்பட்டுள்ள குத்தகைத்தொகைக்கும் முந்திய குத்தகைத்தொகைக்குமுள்ள சங்கியாபரிமாணமானது கடைசி பத்துவருஷ காலவரையறையின் சராசரி விலைக்கும் ஒத்திட்டுப் பார்க்கும் காரியத்துக்காக எடுத்துக்கொண்ட முந்தி பத்துவருஷ காலவரையறையின் சராசரி விலைக்குமுள்ள சங்கியாபரிமாணமாகவே இருக்கவேண்டும் : ஆனால், மேற்கண்ட சங்கியாபரிமானத்தைக் கணக்கிடுகையிலே-பிந்திய காலவரையறையின் சராசரி விலையானது முந்திய காலவரையறையின் சராசரிவிலையைவிட எவ்வளவு அதிகமாயிருக்கிறதோ அதில் அரைப் பங்குக்கு, மேலேசொன்ன பிந்திய காலவரையறையின் சராசரி விலையைக் குறைக்கவேண்டும்.

நிலத்துக்குடையவர் செய்திருக்கும் சீர்திருத்தத்தின் காரணமாகக் குத்தகைத் தொகையை அதிகப்படுத்துவதைப் பற்றிய விதிகள்

32. (1) 30-வது விரிவைச்சேர்ந்த (ii) குறிப்பிட்ட பகுதியின்பிரகாரம் (குத்தகைத்தொகையை) அதிகப்படுத்தும்படி தாவாசெய்யப்படும்போது-

(ஏ) செய்யப்பட்ட சீர் திருத்தம் இந்த ஆக்டின்படி ரெஜிஸ்டராயிராவிட்டாலும் இந்த ஆக்ட் வழங்கத்தொடங்குவதற்கு முன்னுள்ள பதினைந்து வருஷகாலத்திற்குள்ளாக அந்தச் சீர்திருத்தம் செய்யப்பட்டிராவிட்டாலும், (கலெக்டர் குத்தகைத்தொகையை) அதிகப்படுத்துவதற்கு உத்தரவு கொடுக்கக்கூடாது ;

(பி) அதிகப்படுத்தவேண்டியது இவ்வளவென்று தீர்மானிக்கையிலே, கலெக்டரானவர் —

(i) நிலத்தின் வளப்பத்திலே சீர் திருத்தத்தினால் ஏற்பட்ட அல்லது வெகுசாய் ஏற்படக்கூடிய அபிவிருத்தியையும்,

(ii) அந்த சீர்திருத்தத்துக்காகப் பிடித்த செலவையும்,

(iii) அந்த சீர்திருத்தத்தை உபயோகப்படுத்திக்கொள்வதற்கு வேண்டிய முன்னேற்பாடு செய்ததற்காகவும் சாகுபடி செய்ததற்காகவும் பிடித்தசெலவையும்,

(iv) தற்காலத்திய குத்தகைத்தொகையும், இன்னும் அதிக குத்தகைத்தொகையைத் தாங்குவதற்கு அந்த நிலத்துக்குள்ள சக்தியையும்,

கவனிக்கவேண்டும்.

(2) அந்த சீர்திருத்தத்தினால் மதிப்பேற்படுத்தப்பட்ட பலன் உண்டாகாமற்போகும் விஷயத்திலாவது உண்டாவது நின்றுபோகும் விஷயத்திலாவது ரயத்தாகிலும் பாத்தியதை பெற்று அவருக்குப் பின் வருபவருகிலும் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், இந்தப் பிரிவின்படி டிக்ரியான (குத்தகைத்தொகை) அதிகரிப்பானது கலெக்டரால் புனராலோசனை செய்யப்படுவதற்குள்ளாகும்

கவர்ன்மெண்டார் செய்திருக்கும் சீர் திருத்தத்தின் காரணமாகக் குத்தகைத்தொகையை அதிகப்படுத்துவதைப்பற்றிய விதிகள்

33. 30-வது பிரிவைச்சேர்ந்த (iii) குறிப்பிட்ட பகுதியின் பிரகாரம் (குத்தகைத்தொகையை) அதிகப்படுத்தும்படி தாவாசெய்யபடும்போது, கவர்ன்மெண்டார் செய்திருக்கிற சீர்திருத்தத்தின் காரணமாக அவர்களுக்கு நிலத்துடையவர் சட்டப்படி செலுத்தவேண்டியிருக்கிற தொகையினால் அல்லது தொகையின் சங்கியாபரிமாணப்படியுள்ள பாகத்தினால் குத்தகைத்தொகையை அதிகப்படுத்தலாம்.

நதி ஒட்டத்தின் காரணமாகக் குத்தகைத்தொகையை அதிகப்படுத்துவதைப்பற்றிய விதிகள்

34. 30-வது பிரிவைச்சேர்ந்த (iv) குறிப்பிட்ட பகுதியின் பிரகாரம் (குத்தகைத்தொகையை) அதிகப்படுத்தும்படி தாவா செய்யப்படும்போது

(ஏ) அங்காமியாக அல்லது அகஸ்மாத்தாகவே உண்டாயிருக்கிற யாதொரு அதிகரிப்பைக் கலெக்டர் கணக்கில் சேர்க்கக்கூடாது;

(பி) கலெக்டர் தமக்கு நியாயமானதாகவும் தருமமானதாகவும் தோற்றுகிற ஒரு தொகைக்குக் குத்தகைத்தொகையை அதிகப்படுத்தலாம்; ஆனால், நிலத்தின் மாசூலில் ஏற்பட்ட அதிகரிப்பிலே செலவுபோக மிகுதி இருக்கும் பாகத்தின் மதிப்பில் அரைப்பங்குக்கு மேற்பட்டு நிலத்துக்குடையவருக்கும் போகும்படியாகக் குத்தகைத்தொகையை அதிகப்படுத்தக்கூடாது.

குத்தகைத்தொகையை அதிகப்படுத்துவது நியாயமானதாகவும் தருமமானதாகவும் இருக்கவேண்டுமென்பது

35. 31 முதல் 34 வரையிலுள்ள பிரிவுகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, கலெக்டரானவர்-அந்த விஷயத்தின் சந்தர்ப்பங்களின்படி நியாய மற்றதாகவோ அதருமமானதாகவோ இருக்கிற, அல்லது கைப்பற்று நிலம் எந்த கிராமத்திலிருக்கிறதோ அந்த கிராமத்தில் ஏற்பட்டுள்ள வாரத்தை 40-வது பிரிவிற் கண்ட நிபந்தனைகளின்படி பணமாக மாற்றி உண்டாகிற கிரயத்தைக்காட்டிலும் குத்தகைத்தொகை அதிகமாயிருக்கும்படியாகச் செய்யக்கூடிய யாதொரு (குத்தகைத்தொகை) அதிகரிப்புக்கு எப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் டிக்ரிகொடுக்கக்கூடாது.

சிறிது சிறிதாய் (குத்தகைத்தொகையை) அதிகப்படுத்தும்படி உத்தரவுசெய்ய அதிகாரம்

36. 30-வது பிரிவைச்சேர்ந்த (i), (ii), (iv) குறிப்பிட்ட பகுதிகளின் பிரகாரம் (குத்தகைத்தொகையை) அதிகப்படுத்தும்படி டிக்ரி பிறப்பிக்கிற கலெக்டரானவர் அந்த டிக்ரியை உடனே பூர்த்தியாக அமுலுக்குக்கொண்டுவருவதனால் ரயத்துக்குக் கஷ்டம் உண்டாகுமென்று அபிப்பிராயப்படுவாராகில், அவர்-சிறிது சிறிதாக அதிகப்படுத்தவேண்டுமென்று கட்டளையிடலாம், எனவே அதிகப்படுத்தவேண்டுமென்று டிக்ரிசெய்திருக்கிறதோ அவ்வளவுக்கு அதிகப்படுத்தியாகிறவரையிலே, ஐந்து வருஷத்துக்கு மேற்படாமல் எத்தனை வருஷத்துக்காகிலும் சிறிதுசிறிதாக வருஷவாரியில் குத்தகைத்தொகையை அதிகப்படுத்தவேண்டுமென்று கட்டளையிடலாம்.

குத்தகைத்தொகையை அதிகப்படுத்தும்படி அடுத்தடுத்து வியாஜ்ஜியங்களைக் கொண்டுவருவதற்கான பாத்தியதையைக்குறித்து வரையறை.

37. (1) விலைகளில் ஏற்ற முண்டாகரணத்தினால் (குத்தகைத்தொகையை) அதிகப்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட வியாஜ்ஜியத்தைக் கொண்டுவருவதற்கு அடுத்து முந்திய இருபது வருஷகாலத்துக்குள்ளாக குத்தகைத்தொகையானது இந்த ஆக்ட் ஜாரியானதற்கு முற்பட்டாகிலுஞ்சரி பிற்பட்டாகிலுஞ்சரி (பணமாக) மாற்றப் பட்டிருந்தாலும் அதிகப்படுத்தப்பட்டிருந்தாலும், (குத்தகைத்தொகையை) அதிகப்படுத்துவதற்கான ஒரு வியாஜ்ஜியமானது யோக்கியதாம்சங்களை யனுசரித்துத் தள்ளிவிடப்பட்டிருந்தாலும், மேலேகண்ட வியாஜ்ஜியத்தை ஏற்றுக்கொள்வக்கூடாது:—

(2) இந்தப்பிரிவிலுள்ள தெதனாலும் ஸிவில் ப்ரோஸீஜர் கோட் 373-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குப் பாதகமுண்டாகமாட்டாது.

குத்தகைத்தொகையைக் குறைப்பது

வியாஜ்ஜியமூலமாகக் குத்தகைத் தொகையைக் குறைப்பது

38. (1) ஒரு அனுபோக ரயத்து தம்முடைய கைப்பற்றிலுள்ள யாதொரு நிலத்துக்காக ரொக்கமாய்க் குத்தகைத்தொகை செலுத்திக்கொண்டிருந்தால், அவர் அடியிற்கண்ட ஹேதுக்களில் ஒன்று அல்லது பலவற்றின் மேல் தம்முடைய குத்தகைத்தொகையைக் குறைக்கும்படி கலெக்டரிடத்தில் வியாஜ்ஜியங்கொண்டு வரலாமேயல்லாமல், வேறே ஹேதுவினால் கொண்டுவரக்கூடாது :—

(ஏ) திடீரென்றோ அல்லது நாளாவர்த்தியிலோ மணல் சேர்ந்துவிட்டதனாலாவது நிலத்தின் மண்ணானது, ரயத்தினுடைய த்வறுகாரணமாகவல்லாமல், சாசுவத்மாகப் பீடாய்ப் போய்விட்டிருப்பது ;

(பி) நீர்ப்பாய்ச்சப்பெறும் நிலத்தின் விஷயத்திலே, அது எந்த நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையினின்றும் நீர்ப்பாயச்சப்பெறுகிறதோ அந்தக் கட்டுவேலையிலிருந்து நிலையாக (ஜல) சப்பரா நின்றுபோயிருப்பது;

(சி) இப்போதைய குத்தகைத்தொகை செலுத்தப்பட்டுவருகிறகாலத்தில் தாலூகா அல்லது ஜமீன் ஜாரி டிவிழனிலே பிரதான உணவுத் தானியங்களின் பிரதேச சராசரிவிலைகள் அங்காமியான ஒரு காரணத்தினாலல்லாமல் குறைந்துபோயிருப்பது.

(2) இந்தப் பிரிவின்படி கொண்டு வரப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்திலே, கலெக்டரானவர்-தமக்கு நியாயமானதாகவும் தருமமானதாகவும் தோற்றுகிற பிரகாரம் குத்தகைத்தொகையைக் குறைக்கும்படி கட்டளையிடலாம்; மேலும், (1) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த (c) அடையாளமிட்ட பகுதியின்படி குறைக்கும் தொகையைத் தீர்மானிக்கையில், கலெக்டரானவர் 31-வது பிரிவைச்சேர்ந்த ஏ. பி. ஸி. டி. பகுதிகளிற் கண்ட விஷயங்களைக் கவனிக்கவேண்டும்.

குத்தகைத்தொகையைக் குறைக்கும் அடுத்தடுத்து வியாஜ்ஜியங்களைக் கொண்டு வருவதற்கான பாத்தியதையைக் குறித்து வரையறை

39. 38-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட ஸி பகுதியின்படி கொண்டுவரப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்திலே, குத்தகைத் தொகையைக் குறைத்தாவது வியாஜ்ஜியத்தின் யோகக்கியதாம்சங்களை யனுசரித்து அந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டாவது டிக்ரி பிறப்பிக்கப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட டிக்ரியின் தேதியிலிருந்து இருபதுவருஷகாலத்துக்குள்ளாக அதே உட்பிரிவின்படி புதிதாய் வியாஜ்ஜியம் கொண்டுவரப்படுகிற பக்ஷத்திலே அதை ஏற்றுக்கொள்ளக்கூடாது; ஆனால், இந்தப் பிரிவிலுள்ளதெதனாலும் ஸிவில் ப்ரொஸீஜர்கோட் 373-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குப் பாதகமுண்டாகமாட்டாது.

குத்தகைத்தொகையை (பணமாக) மாற்றிக்கொள்வது

தானியமாகச் செலுத்தத்தக்க குத்தகைத் தொகையை வியாஜ்ஜியமூலமாய்(பணமாக) மாற்றிக் கொள்வது

40. (1) தானியரூபமாகவோ - மாசூலின் ஒரு பாகத்துக்கு மதிப்பேற்படுத்தப்பட்ட கிரயத்தின் மேலோ மாசூலுக்கு தகுந்தபடி வேறுபடுகிற வீதங்களின் படிக்கோ சிறிது மட்டில் மேலேசொன்ன வகைகளில் ஒரு வகையாகவும் சிறிதுமட்டில் வேறொரு வகையாகவுமோ-சிறிது மட்டில் இந்தவகைகளில் ஒன்று அல்லது பலவகைகளாகவும் சிறிதுமட்டில் ரொக்கமாகவுமோ ஒரு அனுபோக ரயத்துதம்முடைய கைப் பற்றிலிருக்கும் யாதொரு நிலத்துக்குக் குத்தகைத்தொகை செலுத்திவந்தால், அந்த ரயத்தாவது நிலத்துக்குடையவராவது அந்தக் குத்தகைத்தொகையைத் திட்டமான ஒரு ரொக்கக் குத்தகைத்தொகையாக மாற்றிக்கொடுக்க வேண்டுமென்று கலெக்டரிடத்தில் வியாஜ்ஜியம் கொண்டுவரலாம்.

(3) அப்படிப்பட்ட வியாஜ்ஜியத்திலே, கலெக்டரானவர் - (குத்தகைத்தொகைகையைப் பணமாக) மாற்றிக்கொள்ள அனுமதி கொடுக்கவேண்டுமா வென்னும் விஷயத்தைத் தீர்மானிக்கவேண்டும்; அவர்-(பணமாக) மாற்றிகொள்ள அனுமதிகொடுக்கிற விஷயத்திலே, தானியரூபமாகவோ வேறே விதமாகவோ குத்தகைத்தொகையைச் செலுத்துவதற்குப் பர்த்தியாக ரொக்கக் குத்தகைத்தொகையாகச் செலுத்தவேண்டிய பணத்தையும் எந்தக்காலமுதல் அந்தப்படி மாற்றிக்கொள்ளலாமோ அந்தக்காலத்தையும் நிர்ணயித்து டிக்ரி பிறப்பிக்கவேண்டும்.

(3) மேலே சொன்னபடி நிஷ்கரிஷை செய்கையிலே, கலெக்டரானவர் அடியிற்கண்ட விஷயங்களையும்

வொன்றையும் கிரமமாய்க் கவனிக்கவேண்டும். அந்த விஷயங்களெவையென்றால்:—

(எ) யாதொரு பிரதேச விஸதீர்ணத்தின் விஷயத்திலே பஞ்சவருஷங்களென்றுவது பஞ்சவருஷங்களாயிருந்திருக்கின்றன வென்றுவது பிரதேச கவர்ன்மென்டார் பிரசித்தஞ்செய்யத்தக்க வருஷங்கள் நீங்கலாக முந்திய பத்து வருஷகாலத்திலே நிலத்துக்குடையவருக்குப் பாக்கியாகி வாஸ்தவத்தில் சேர்ந்துவந்த குத்தகைத்தொகையின் சராசரிமதிப்பு, அல்லது அந்தக் காலவரையறைக்கு மதிப்பைத் தெரிந்துகொள்ள முடியாமலிருந்தால், பஞ்சவருஷங்கள் நீங்கலாக (ஷை காலவரையறைக்குக்) குறைவான எவ்வளவு காலத்துக்குச் சாட்சியம் கிடைக்கத்தக்கதாயிருக்குமோ அந்தக்காலத்திலே ஷை குத்தகைத்தொகையின் சராசரிமதிப்பு;

(பி) அதே கிராமத்திலாவது அடுத்த கிராமங்களிலாவது அதே தன்மையுள்ளதும் அதற்குள்ள அனுகூலங்களைப்போன்ற அனுகூலங்களே பொருந்தியுள்ளதுமான நிலத்துக்கு அனுபோக ரயத்துகள் ரொக்கமாய்ச் செலுத்தத்தக்க குத்தகைத்தொகை ;

(ஸி) கைப்பற்று நிலத்தின் விஷயததிலே நிலத்துக்குடையவராவது ரயத்தாவது செய்திருக்கிற சீர் திருந்தங்களும், 32-வது பிரிவிற்கண்ட விதிகளும்.

குத்தகைத் தொகையை (பணமாக) மாற்றினபிறகு 20 வருஷகாலம் வரையில் அதை அதிகப்படுத்தக் கூடாதென்றும் குறைக்கக் கூடாதென்றும் நிர்ப்பந்தம்

41. (1) யாதொரு கைப்பற்று நிலத்தின் குத்தகைத்தொகையானது 40-வது பிரிவின்படி (பணமாக) மாற்றப்பட்டிருந்தால், 30-வது பிரிவைச்சேர்ந்த (ii), (iii) குறிப்பிட்ட பகுதிகளிற்கண்ட காரணங்களினலாவது கைப்பற்று நிலத்தின் விஸ்தீர்ணமானது பிற்பாடு மாறியிருக்கிறதென்னும் காரணத்தினலாவது அல்லாமல் மற்றப்படி, அந்த குத்தகைத்தொகையை - இருபது வருஷம்வரையில் அதிகப்படுத்தக்கூடாது ; கைப்பற்று நிலத்தின் விஸ்தீர்ணமானது மாறியிருக்கிறதென்னும் காரணத்தினலாவது 38-வது பிரிவைச்சேர்ந்த. (1) குறிப்பிட்ட உட்பிரிவிலுள்ள (எ). (பி). பகுதி களிற்கண்ட காரணத்தினலாவது அல்லாமல் மற்றப்படி, அந்தக்குத்தகைத்தொகையை இருபது வருஷம்வரையில் குறைக்கவுங்கூடாது.

(2) குத்தகைத்தொகையை (பணமாக) மாற்றினது எந்தத் தேதியிலே செலாவணியாகுமோ அந்தத் தேதிமுதல் மேலேகண்ட இருபது வருஷகாலவரையறையைக் கணக்கிட வேண்டும்.

விஸ்தீர்ணத்துக்குத் தகுந்தபடி குத்தகைத் தொகையை மாற்றுவது

விஸ்தீர்ணத்திலுண்டாகும் மாறுதலை அனுசரித்துக் குத்தகைத் தொகையை மாற்றுவது

42. (1) ஒவ்வொரு ரயத்தும்—

(எ) தாம் எதற்காக முந்தி குத்தகைத்தொகை செலுத்தியிருக்கிறரோ அந்த விஸ்தீர்ணத்தைவிட அதிகமாயிருப்பதாக ருஜூப்படுத்தப்பட்ட நிலம் முழுவதுக்கும் அதிக குத்தகைத்தொகை செலுத்த உட்பட்டவராவார் ; ஆனல், முந்தி கைப்பற்று நிலத்தோடு சேர்ந்திருந்து வெள்ளத்தினலாவது வேறே காரணத்தினலாவது இழக்கப்பட்டு அதற்காகக் குத்தகைத்தொகை குறைக்கப்படாமலிருந்த நிலம் அந்தக் கைப்பற்று நிலத்தோடு சேர்ந்திருப்பதனல் மேலே சொன்ன அதிக விஸ்தீர்ணம் ஏற்பட்டிருக்கிறதென்று ருஜூப்படுத்தப்பட்டால், அவர் மேலேகண்ட அதிக குத்தகைத்தொகை செலுத்தவேண்டியவராக மாட்டார்.

(பி) தாம் எதற்காக முந்தி குத்தகைத்தொகை செலுத்தியிருக்கிறரோ அந்த விஸ்தீர்ணத்தோடு தம்முடைய கைப்பற்று நிலத்தின் விஸ்தீர்ணத்தை ஒத்திட்டுப் பார்க்கையிலே இதில் குறைவு இருப்பதாக ருஜூப்படுத்தப்பட்டால் அந்தக்குறைவை யனுசரித்து குத்தகைத்தொகை குறைக்கப்பெறுவதற்கு பாத்தியதையுள்ளவராவார் ; ஆனல், அடைமண்காரணமாகவாவது வேறே காரணமாகவாவது கைப்பற்று நிலவிஸ்தீர்ணத்தோடு சேர்க்கப்பட்டு, அந்தப்படி சேர்க்கப்பட்ட விஸதீர்ணத்தின் விஷயமாகக் குத்தகைத்தொகை அதிகப்படுத்தப்படாமலிருக்கிற யாதொரு நிலம் இல்லாமற்போவதனல் மேலே சொன்ன விஸ்தீர்ணக்குறைவு ஏற்பட்டிருக்கிறதென்று ருஜூப்படுத்தபட்டால், அவர் மேலே கண்டபடி குத்தகைத்தொகை குறைக்கப் பெறுவதற்கு பாத்தியதை யுள்ளவராகார்.

(2) ஆனல், விவாதம்நேரிடுகிற விஷயங்களிலே, குத்தகைத்தொகையின் அளவை மாற்றவேண்டு மென்று இதுவிஷயத்தில் சம்பந்தப்பட்ட நிலத்துக்குடையவராவது ரயத்தாவது கலெக்டருக்கு விண்ணப்பஞ் செய்துகொள்வதன்மேல் அந்தக் கலெக்டர் செய்யும் உத்தரவின்படிக்கன்றி மற்றப்படி, இந்தப் பிரிவின் பிரகாரம் குத்தகைத்தொகையின் அளவை மாற்றுவதற்கு அனுமதி கொடுக்கப்படமாட்டாது.

நிலத்தை அளந்துபார்க்க நிலத்துக் குடையவருக்குள்ள சுதந்தரம்

43. அடுத்து முந்திய பிரிவிற்கண்ட காரியங்களுக்காக ஒவ்வொரு நிலத்துக்குடையவரும்-தாமாகவோ இதுவிஷயமாய்த் தம்மால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபரைக்கொண்டோ, தம்முடைய ஜூஸ்திதியிலடங்கியுள்ள யாதொரு நிலத்தில்எப்போதாகிலும் பிரவேசித்து அதை அளந்து பார்க்காலாம்.

நிலவிஸ்தீர்ணத்துக்குத் தக்கபடி குத்தகைத் தொகையை இன்னவிதமாயமாற்றவேண்டு மென்றுநிஷ்கரிஷை செயவதற்கான விதிகள்

44. (1) 42-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி விண்ணப்பஞ்செய்துகொள்வதன்மேலும், எதிர்க்கட்சிக்காரருக்கு நோடிஸ் கொடுப்பதன்மேலும், கலெக்டரானவர்-தமக்குத்தகுதியாகத் தோற்றுகிறபடி அளந்து பார்க்கச்செய்த பிறகும், கட்சிக்காரர்கள் கொண்டு வரக்கூடிய சாட்சியத்தை விசாரித்தபிறகும், எந்த விஸ்தீர்ணத்துக்காகக் குத்தகைத்தொகை முன்னெ செலுத்தியிருக்கிறதோ அந்த விஸ்தீர்ணத்தையும், அந்தக் குத்தகைத் தொகையோடு கூட ஏதாவது தொகை சேர்ப்பதாயிருந்தால் அதையும் அல்லது அந்தக்குத்தகைத் தொகையிலிருந்து ஏதாவது தொகை கழிப்பதாயிருப்பதாயிருந்தால் அதையும் நிஷ்கரிஷை செய்யவேண்டும்.

(2) எந்த விஸதீர்ணத்துக்காகக் குத்தகைத்தொகை முன்னே செலுத்தியிருக்கிறதோ அந்த விஸ்தீர்ணத்தை நிஷ்கரிஷைசெய்கையிலே, கலெக்டரானவர் அடி

யிற்கண்ட விஷயங்களில் ஒவ்வொன்றையும் கவனிக்க வேண்டும்.

(எ) இன்னவிதமாக அனுபோகம ஆதியில் உண்டானதென்பதும் இன்ன திட்டங்களின்படி உண்டானதென்பதும், திருஷ்டாந்தமாக, குத்தகைத்தொகையானது கைப்பற்று நிலம்முழுமைக்காகவும் ஒன்றய்ச் சேர்ந்து ஏற்படுத்தப்பட்டுள்ள குத்தகைத்தொகையா என்பதும்;

(பி) ரயத்து செலுத்தவேண்டிய மொத்த குத்தகைத்தொகை அதிகப்பட்டிருக்கிறதையனுசரித்தோ அல்லது வேறே விதமாகவோ, என்ன காரணத்தைக் கொண்டு ஜாஸ்தியாய் நிலம் வைத்துக்கொண்டிருக்க அந்த ரயத்துக்கு நிலத்துக்குடையவர் அனுமதிகொடுத்திருக்கக்கூடுமோ அப்படிப்பட்ட யாதொரு காரணமும்;

(ஸி) என்னகாரணத்தைக்கொண்டு ரயத்து நிலவிஸ்தீர்ணம் குறைந்திருந்தும் அதற்குச்சரியாகத் தாம் கட்டவேண்டிய குத்தகைத்தொகையில் குறைவில்லாமலே அந்தக்குறைவான நில்விஸ்தீர்ணத்தை வைத்துக்கொண்டிருப்பதற்குச் சம்மதித்திருக்கக்கூடுமோ அப்படிப்பட்ட யாதொருகாரணமும் ;

விவரணம்:—ரயத்து ஜாஸ்தியாய் நிலம் வைத்துக்கொண்டிருக்க நிலத்துக்குடையவர் அனுமதிகொடுத்திருக்கிறரா என்பதையாவது, நிலவிஸ்தீரணம் குறைந்திருந்தும் அந்தக்குறைவுக்குத் தக்கபடி குத்தகைத்தொகை குறைவில்லாமலே அந்தக்குறைவான நிலவிஸ்தீரணத்தை வைத்துக்கொண்டிருக்க ரயத்து சம்மதித்திருக்கிறரா என்பதையாவது தீர்மானிக்கையிலே, கலெக்டரானவர்-குத்தகைத்தொகையைக்குறித்தோ விஸ்தீர்ணத்தைக் குறித்தோ விவாதம் நேரிடாமலே எவ்வளவுகாலம் (நிலம்) அனுபோகத்தி லிருந்திருக்கிறதென்பதைப்பற்றி யோசிக்கலாம் ;

மேலும்,

(டி) விண்ணப்பம் செய்துகொண்ட காலத்திலே உபயோகிக்கப்பட்ட அல்லது அவ்வவ்விடத்தில் உபயோகத்திலிருக்கிற அளவுகோலின் நீளத்தோடு ஒத்திட்டுப் பர்க்கையில் அனுபோகம் ஆதியில் ஏற்பட்ட காலத்திலே உபயோகிக்கப்பட்ட அல்லது அவ்வவ்விடத்தில் உபயோகத்திலிருந்த அளவுகோலின் நீளமும்.

(3) குத்தகைத்தொகையோடு சேர்க்கவேண்டிய தொகை இவ்வளவென்று தீர்மானிக்கையிலே, கலெக்டரானவர்-அந்தகிராமத்திலாவது அடுத்த கிராமங்களிலாவது அதே தன்மையுள்ளவைகளும் அதற்குள்ள அனுகூலங்களைப்போன்ற அனுகூலங்களே பொருந்தியுள்ள வைகளுமான நிலங்களுக்கு ரயத்துகள் செலுத்தத்தக்க வீதங்களைக் கவனிக்க வேண்டும் ; மேலும், அமர்-பிரஸ்தாப விஷயததின் சந்தர்ப்பங்களை யோசிக்கும்போது நியாயமற்றதாகும்போது நியாயமற்றதாகவாகிலும் அதருமமானதர்கவாகிலும் இருக்கிற யாதொரு குத்தகைத்தொகையை எந்த சந்தர்ப்பத்தில் நிஷ்கரிஷைசெய்வது கூடாது.

(4) குறித்த யாதொரு நிலம் அதிகமாய்க் கைப்பற்றிலிருந்து வருகிறதென்று நிலத்துக்குடையவராவது ரயத்தாவது எடுத்துக்காட்ட அசக்தராயிருக்கிற பட்சத்திலே, அந்த அதிக விஸ்தீர்ணத்தினிமித்தம் சேர்க்கவேண்டிய குத்தகைத்தொகையை-அப்படிப்பட்ட அதிக விஸ்தீர்ணம் நீங்கலர்கக் கைப்பற்றிலிருக்கும் சகல நிலங்களுக்காகவும் செலுத்தப்படும் சர்சரி குத்தகைத்தொகை வீதப்படி கணக்கிடலாம்.

(5) குறைக்கிற விஷயத்திலே குத்தகைத்தொகையிலிருந்து குறைக்கப்பட்ட தொகையானது-கைப்பற்று நிலத்தின் வருஷாந்தர மொத்த மாசூலில் ஏற்படும் குறைவுக்குத்தக்கபடி இருக்கவேண்டும்; அல்லது, ஷை மாசூலில் ஏற்படும் குறைவு இவ்வளவென்று திருப்திகரமாய் ருஜூவாகாமற் போகிறபட்சததிலே, குத்தகைத்தொகையிலிருந்து குறைப்பட்ட ஷைதொகையானது கைப்பற்று நிலத்தின் விஸ்தீர்ணத்திலுள்ள குறைவுக்குத்தக்கபடி இருக்கவேண்டும்.

(6) இந்தப்பிரிவின் பிரகாரம் குத்தகைத்தொகையை அதிகப்படுத்துவதையாவது குறைப்பதையாவது இந்த ஆக்டின் தாற்பரியப்படி குத்தகையை அதிகப்படுத்துவதாகவோ குறைப்பதாகவோ எண்ணக்கூடாது.

நிலத்துக் குடையவரின் ஸம்மதம்பெறுமல்ரயத்து நிலத்தை அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்காக செலுத்த வேண்டிய வீதங்கள்.

45. யாதொருநபர் நிலத்துக்குடையவருடையவருப்பெறுமல், பரம்பரை பாத்தியதையுடைய சம்மதத்தை மூலமாக வாவது சட்டப்படிக்கான டிரான்சுபர் மூலமாகவாவது தாம் அடைந்துராதரயத்து நிலத்தை விவசாய சம்பந்தமான காரியங்களுக்காக அனுபோகத்தில் வைத்தால், அவர் ஒவ்வொரு ரெவினியு வருஷத்துக்ககா அல்லது அதன் பாகத்துக்கோ அந்த நிலத்திற்காக நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிற குத்தகைத்தொகையை அல்லது குத்தகைதொகை நிஷ்கரிஷை செய்யப்பட்டிராத விஷயத்திலே விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதன்மேல் தகுதியானதென்று நியாயமானதென்றும் கலெக்டரால்தீர்மானிக்கப்படும் தொகையையும், அந்தப்படி அனுமதி பெறுமல் அனுபோகத்தில் வைத்திருந்ததற்கு நஷ்டஈடாகக் கலெக்டரால் மேலே கண்டபடி நிஷ்கரிஷை செய்திருக்கிற அல்லது தீர்மானித்திருக்கிறகுத்தகைத் தொகைக்கு அதிகப்படாமல் தீர்மானிக்கப்படும் தொகையையும் செலுத்துவதற்கு உட்பட்டவராவார்; மேலும், அந்த நிலத்தின்மேல் பாக்கியாகிற குத்தகைத் தொகையை வசூல்செய்வதற்காக இந்த ஆக்டின்படி ஏற்பட்டிருக்கிற சகல பரிகாரங்களையும் அவருக்கு விரோதமாக நிலத்துக் குடையவர் அடையக்கூடியவராவார்.

அனுபோகபாத்தியதையில்லாத ரயத்துகள்

சாசுவதமான அனுபோக பாத்தியதையைக் கொடுப்பதற்கான நடவடிக்கை

46. (1) 6-வது பிரிவைச்சேர்ந்த (4) (5) குறிப்பிட்ட உட்பிரிவுகளுக்கும் 8-வது பிரிவைச்சேர்த (4) குறிப்பிட்ட உட்பிரிவுக்கும் உட்பட்ட விஷயங்களில் தவிர வேறேவிஷயங்களிலே, நிலத்துக்குடையவர்-ஏதாவது ஒப்பந்தம் இதற்கு மாருக ஏற்பட்டிருந்தாலும் ஏதாவது குத்தகை கொடுக்கப்பட்டிருந்தாலும் பாதகமில்லாமலே, அனுபோகபாத்தியதையில்லாத யாதொரு ரயத்து விண்ணப்பஞ் செய்துக் கொள்வதன்மேலும் பிரஸ்தாப நிலத்தின் விஷயத்திலே செலுத்தத்தக்க வருஷாந்தர குத்தகைத் தொகையில் இரண்டரை மடங்குக்குச் சரியான ஒரு தொகையையும் இதுகாரியத்துக்காக வேண்டியிருக்கிற

யாதொரு ஆதரவைத் தயார்செய்வதற்குப் பிடிக்கும் செலவையும் ஷை ரயத்தானவர் கொடுக்கக் காட்டுவதன் மேலும், அப்படிப்பட்ட நிலத்தின் விஷயத்திலே அந்த ரயத்துக்குச் சாசுவதமான அனுபோகபாத்தியதையைக் கொடுக்கவேண்டும்.

ஆனால், அப்படிப்பட்ட யாதொரு விண்ணப்பத்தின் காரியத்துக்காகவும் (தொகை) கொடுக்கக்காட்டும் காரியத்துக்காகவும் ரயத்தும், அப்படிப்பட்ட யாதொரு விண்ணப்பம் தமக்குச் செய்துக்கொள்ளப்படுவதன் மேலும் (தொகை) கொடுக்கக் காட்டப்படுவதன் மேலும் நிலத்துக்குடையவரும் இந்தப்பிரிவின் காரியத்துக்காக நிலத்தின் குத்தகைத்தொகையை நிஷ்கரிஷை செய்யும்படி கலெக்டருக்கு விண்ணப்பம் செய்துக்கொள்ளலாம்; அப்படிப்பட்ட நிலத்தின் விஷயத்திலே செலுத்தக்க குத்தகைத் தொகை வீதமானது அக்கம்பக்கத்திலுள்ள அதேமாதிரியானதும் அதற்குள்ள அனுகூலங்களைப்போன்ற அனுகூலங்களைபொருந்தியுள்ளதுமான நிலத்துக்காக அனுபோக ரயத்துகளால் வழக்கமாய்ச் செலுத்தப்படும் வீதத்தைக் காட்டிலும் அதிமாகவோ குறைவாகவோ இருக்கிறதென்று கலெக்டருக்குத் திருத்திகரமாய் ருஜுப்படுத்தப்பட்டால், அந்தக் கலெக்டரானவர் 26-வது பிரிவில் என்னசொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பிற்பாடு சொன்ன வீதப்படி குத்தகைத்தொகையை நிஷ்கர்ஷை செய்யலாம்; அப்படி நிஷ்கர்ஷை செய்யப்பட்ட குத்தகைத்தொகையானது இந்தப்பிரிவின் காரியத்துக்காக, ஷை விண்ணப்பஞ் செய்துகொள்ளப்பட்டு (தொகை) கொடுப்பதாகக் காட்டப்பட்ட தேதியிலே ரயத்தால் செலுத்தத்தக்கதாக யிருப்பதாகவும் செலுத்தத்தக்கதாக யிருந்ததாகவும் எண்ணப்படும்.

(2) எந்த நிலத்துக்குடையவருக்கு யாதொரு ரயத்து விண்ணப்பஞ்செய்து கொண்டு (தொகை) கொடுப்பதாகக் காட்டியிருக்கிறாரோ அந்த நிலத்துக்குடையவர் சாசுவதமான அனுபோக பாத்தியதையை ஒரு மாதம்வரையில் கொடுக்காமலிருந்தால், ஷை ரயத்தானவர் மேலேகண்ட தொகையைக் கலெக்டருடைய ஆபீஸில் கட்டி, அந்த நிலத்தின் விஷயத்திலே தமக்குச் சாசுவதமான அனுபோக பாத்தியதையைக் கொடுக்கும்படி கலெக்டருக்கு விண்ணப்பஞ் செய்துக் கொள்ளலாம்.

(3) அதன்மேல் கலெக்டர் அந்த விண்ணப்பத்தைக்குறித்து நிலத்துக் குடையவருக்கு நோடிஸ் கொடுக்கவேண்டும்; மேலும், கலெக்டரானவர் நிலத்துக்குடையவர் ஹாஜரானால் அவர் சொல்லிக்கொள்ளுகிறதைக் கேட்ட பிறகும் தமக்கு அவசியமாகத் தோற்றுகிற விசாரணையைச் செய்தபிறகும், அந்த நிலத்தின் விஷயத்திலே பாயக்காரிக்கு சாசுவதமான அனுபோகபாத்தியதையைக் கொடுப்பதற்காக வேண்டியிருக்கிற யாதொரு ஆதரவை எழுதிக்கொடுக்கலாம்; மேலும், நிலத்துக்குடையவரே எழுதிக்கொடுத்தால் என்ன பிரயோசனம் உண்டாகுமோ அதே பிரயோசனம் மேலே கண்டபடி எழுதிக்கொடுப்பதனால் உண்டாகும்.

(4) மேலே கண்டபடி அனுபோகபாத்தியதை கொடுக்கப்பட்டிருந்தால் மேலே சொன்ன பிரகாரம் அனுபோக பாத்தியதையை அடையும் காரியத்துக்காக ரயத்து என்ன வீதப்படி குத்தகைத்தொகை செலுத்தவேண்டியவரா யிருக்கிராரோ அந்த வீதமானது-28-வது பிரிவின் தாத்பரியப்படி அவர் சட்டப்பிரகாரம் செலுத்தத்தக்கதாயிருக்கிற வீதமாயிருப்பதாக எண்ணப்படும்; மேலும், ஷை வீதமானது விலை அதகரித்திருக்கிறது அல்லது குறைந்திருக்கிறதென்னும் காரணத்தினல் இருபது வருஷகாலம் வரையில் அதிகப்படுத்தப்படுவதற்காவது குறைக்கப்படுதற்காவது உள்ளாகமாட்டாது.

(5) அனுபோகபாத்தியதையை அடைவதற்காக இந்தப்பிரிவின்படி செலுத்தத்தக்க தொகைகளை-பூஸ்திதியின் அல்லது அதன் ஒரு பாகத்தின் சொந்தக்காரராயிருக்கிற நிலத்துக்குடையவரிடத்தில் செலுத்தவேண்டும்; மேலும், இந்தப்பிரிவின்படி செய்து கொள்ளப்படும் யாதொரு விண்ணப்தையர்வது நடத்தப்படும் யாதொரு நடவடிக்கையையாவது அப்படிப்பட்ட நிலத்துக்குடையவருக்கே அல்லது அவருக்கு விரோதமாகவே செய்துகொள்ளவேண்டும் அல்லது நடத்தவேண்டும்.

பழைய கரம்பைச்சேர்ந்த ரயத்தக்கு குத்தகைத் தொகையை அதிகப்படுத்துவதைக் குறித்து நோடிஸ் சேர்ப்பிப்பது

47. யாதொரு ரயத்து செலுத்தவேண்டிய குத்தகைத்தொகையானது எழுத்துமூல்மான எவ்வித உடன்படிக்கையினாலாகிலும் நிஷ்கரிஷை செய்யப்பட்டிராவிட்டாலும், அவர் வருஷாவருஷம் பாயக்காரியாயிருந்து வந்தாலும், அவர் தம்முடைய குத்தகைக் காலவரையறை கழிவானபிறகும் (நிலத்தை) கைப்பற்றில் வைத்திருந்தாலும் அப்படிப்பட்டவர் யாதொரு பழைய கரம்பின் விஷயத்திலே செலுதத்தக்கதாயிருக்கிற குத்தகைத் தொகையை நிலத்துக்குடையவர் அதிகப்படுத்த இஷ்டப்பட்டு, அப்படி அதிகப்படுத்தப்படுவதற்கு ரயத்து சம்மதிக்காவிட்டால், நிலத்துக்குடையவர் - (குத்தகைத்தொகையை) அதிகப்படுத்துவது எந்த ரெவினியு வருஷத்தில்செலாவணியாகவேண்டுமென்று விரும்புகிறாரோ அந்த ரெவினியு வருஷம் ஆரம்பிப்பதற்கு ஆறுமாதத்துக்குக் குறையாமலும் பன்னிரண்டு மாதத்துக்கு மேற்படாமலும் முன்னதாக் கலெக்டர்மூலமாய் அந்த ரயத்துக்கு, எவ்வளவு அதிகப்படுத்த உத்தேசிக்கிறாரோ அதைகுறித்து நோட்டீஸ் சேர்ப்பிக்கச் செய்யலாம்.

அதிகப்படுத்தப்பட்ட குத்தகைத் தொகையைச் செலுத்த ரயத்து இஷ்டப் படுவதாயத் தெரிவிப்பதன் மேல் நடவடிக்கை

48. (1) அடுத்த முந்திய பிரிவின்படி நோட்டீஸ் சேர்ப்பிக்கப் படுவது முதல் ஒரு மாத காலத்துக்குள்ளாக, அந்த நோட்டீஸ் சேர்ப்பிக்கப் பெற்ற ரயத்து நோடீஸ் பிறப்பிக்கிற கலெக்டருக்கு அதிகப்படுத்தப்பட்ட குத்தகைத் தொகையைத் தாம் செலுத்த இஷ்டப்படுவதாய்த் தெரிவித்து ஒரு ஸ்டேட்மெண்ட் எழுதிக்கொடுத்தால், அந்த ரயத்து-அடுத்து வருகிற ரெவினியு வருஷ ஆரம்பமுதல் அந்தக் குத்தகைத் தொகையைச் செலுத்த உடன்பட்டிருப்பவராக எண்ணப்படுவார்.

ரயத்து அந்தப்படி தெரிவிக்கத் தவறினல் நடவடிக்கை

(2) மேலகண்ட ஒருமாத காலத்துக்குள்ளாக ரயத்து மேலே சொன்னபடி கலெக்டருக்கு ஸ்டேட்மெண்ட் எழுதிக்கொடுக்காவிட்டால், நிலத்துக் குடையவர் அடுத்துவருகிற ரெவினியு வருஷத்தின் ஆரம்பத்துக்குப் பத்துவாரத்துக்குக் குறையாமல் முன்னதாக, அந்த ரயத்தை அப்புறப்படுத்தும்படி கலெக்டருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்.

அப்புறப்படுத்தும்படி விண்ணப்பஞ் செய்து கொள்ளப்பட்டபிறகு ரயத்து அதிகப் படுத்தப்பட்ட குத்தகைத் தொகையைச் செலுத்த இஷ்டப் படுவதாயத்தெரிவித்தாலும்விக்கத்தவறினலும்நடவடிக்கை

49. (1) அடுத்துமுந்திய பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி விண்ணப்பஞ் செய்து கொள்ளப்படும்போது, ரயத்து ஹாஜராகி (செலுத்தும்படி) கேட்கப்பட்ட அதிகப்படுத்தப்பட்ட குத்தகைத் தொகையைச் செலுத்த உடன்பட்டால், அதன்மேல் அவர் உடன்பட்டிருப்பதை எழுதிவைக்கவேண்டும்; மேலும், அவரை அப்புறப்படுத்தக்கூடாது; ஆனல், மேலே கண்ட உட்பிரிவின்படி நிலத்துக் குடையவர் செய்துகொண்ட விண்ணப்பத்தின் தேதிக்கு அடுத்துப் பின்வருகிற ரெவினியு வருஷ ஆரம்பமுதல் அந்தக்குத்தகைத் தொகையைச் செலுத்த ஷை ரயத்து உட்பட்டவராவார்.

(2) ரய்த்து ஹாஜராகத்தவறினலும், அவர் ஹாஜராவதன்மேல் (செலுத்தும்படி) கேட்கப்பட்ட அதிகப்படுத்தப்பட்ட குத்தகைத் தொகையைச் செலுத்தச் சம்மதிக்காவிட்டாலும், கலெக்டரானவர் அந்த நிலத்தின் விஷயத்திலே (குத்தகைத்தொகை) அதிகப்படுத்தவேண்டியதா யிருந்தால் அதை எவ்வளவு அதிகப்படுத்துவது நியாயமாகவும் தருமமாகவுமிருக்குமோ அதைத் தீர்மானிக்கவேண்டும். ஆனல், எவ்வளவாவது (குத்தகைத்தொகையை) அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டுமா என்பதையும் எவ்வளவு அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டு மென்பதையும் தீர்மானிக்கையில் கலெக்டரானவர் - இந்த ஆக்டைச் சேர்ந்த 30முதல் 37 வரையிலுள்ள பிரிவகளிற்கண்ட நிபந்தனைகளின்படி நடந்துகொள்ளவேண்டும்.

(3) அந்தப்படி தீர்மானிக்கப்பட்ட குத்தகைத் தொகையைச் செலுத்த ரயத்து சம்மதித்தால், 48-வ்து பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நிலத்துக்குடையவர் செய்துகொண்ட விண்ணப்பத்தின் தேதிக்கு அடுத்துப்பின்வருகிற ரெவினியு வருஷத்தின் ஆரம்பமுதல் அந்த குத்தகைத்தொகையின்படி நிலத்தை அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருக்க ஷை ரயத்துக்குச் சுதந்தரமுண்டு.

(4) (2) குறிப்பிட்ட உட்பிரிவின் பிரகாரம் மேலேகண்டபடி தீர்மானிக்கப்பட்ட குத்தகைத்தொகையைச் செலுத்த ரயத்து சம்மதிக்காவிட்டால், கலெக்டரானவர் - 155-வது 156-வது பிரிவுகளிற் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும், 154-வது பிரிவின்படி ரயத்துக்கு ஏதாவது பிரதிபலன் சேரவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டால் அந்தப் பிரதிபலன் தொகையை நிலத்துக்குடையவர் உத்தரவின் தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாகக் (டிபாஸிட்) கட்டிவைப்பதற்குட்பட்டும், அந்த ரயத்தை அப்புறப்படுத்துவதற்காக உத்தரவு செய்யலாம். அப்படிப்பட்ட தொகை மேலேகண்டபடி கட்டிவைக்கப்படாவிட்டால், அப்புறப்படுத்துவதற்கான அந்த உத்தரவானது செலாவணிற்றதாய் விடும்.

4-ம் அத்தியாயம்

பட்டாவும் முச்சிலிக்காவும்

இந்த அத்தியாயம் எந்த ரயத்துகளுக்குச் சம்பந்தப் படுகிறதோ அந்த ரயத்துகள்

50. (1) இந்த அத்தியாயத்திற்கண்ட நிபந்தனைகள் சாசுவதமான அனுபோக பாத்தியதையுள்ள சகல ரயத்துகளுக்கும் பிரயோகப்படுவதோடுங் கூட, எழுத்துமூலமான குத்தகைச் சீட்டின்படிக்கன்றி மற்றபடி, ஒரு நிலத்துக்குடையவருக்குக் கீழ்ப்பட்டு பழைய கரம்பை வைத்துக்கொண்டிருக்கிற ரயத்துகளுக்கு எவ்வளவுமட்டில் பிரயோகப்படக்கூடுமோ அவ்வளவுமட்டிலே அவர்களுக்கும் பிரயோகப்படும்.

பட்டா முச்சிலிக்கா பெற்றுக்கொள்ள ரயத்துக்கும் நிலத்துக் குடையவருக்குமுள்ள சுதந்தரம்

(2) யாதொரு நடைமுதல் ரெவினியு வருஷத்துக்காகத் தமக்குப்பட்டாகொடுக்கும்படி தம்முடைய நிலத்துக்குடையவரைக்கேட்க ஒவ்வொரு ரயத்துக்கும் சுதந்தரமுண்டு; நடைமுதல் யாதொரு ரெவினியு வருஷத்துக்காகப் பட்டா பெற்றுக்கொண்டு அதற்குப் பர்த்தியாகத் தமக்கு முச்சிலிக்கா கொடுக்கும்படி தம்முடைய ரயத்தைக்கேட்க ஒவ்வொரு நிலத்துக்குடையவருக்கும் சுதந்தரமுண்டு.

பட்டாவிலும் முச்சிலிக்காவிலும் காண வேண்டியவைகள்

51. (1) (ஒப்பந்தஞ் செய்துகொள்ளுகிற) நபர்களின் பெயர்களையும், நிலத்தின் அவ்வவ் விடத்திய விவரத்தையும் விஸ்தீர்ணத்தையும், ரொக்கமாகவோ தானியரூபமாகவோ மாசூலின் ஒரு பங்காகவோ குத்தகைத்தொகை எந்த விதமாக ஷை நிலத்துக்குச் செலுத்தத்தக்கதாயிருக்கிறதோ அதையும், குத்தகைத்தொகை வீதத்தையும் அல்லது அதன் அளவையும், சட்டத்தின்படியாவது சட்டத்தைப்போல் செலாவணியாய்க்கொண்டிருக்கிற வழக்கத்தின்படியாவது குத்தகைத்தொகையோடுகூட செலுத்தத்தக்க யாதொரு பிரதேசவரி, ஸெஸ் (இறை) அல்லது கட்டணம் அல்லது (சார்ஜ்) செலவுத்தொகையையும், எந்தக் காலவரையறை அல்லது காலவரையறைகளில் அப்படிப்பட்ட குத்தகைத்தொகை - பிரதேசவரி - ஸெஸ் - கட்டணம் அல்லது செலவுத்தொகையைச்செலுத்தவேண்டுமோ அந்தக் காலவரையறை அல்லது காலவரையறைகளையும், பட்டாதேதியையும் எந்த விசேஷ ஷரத்துகளின்படி ஷை நபர்கள் பிணைப்பட்டிருக்கவேண்டுமென்று உத்தேசிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட சகலமான விசேஷ ஷரத்துகளையும் பட்டாவில் காணவேண்டும்; மேலும், ஷை பட்டாவிலே நிலத்துக்குடையவர் கையெழுத்து பண்ணவேண்டும். முச்சிலிக்காவானது நிலத்துக்குடையவருடைய இஷ்டப்படி பட்டாவின் பிரதியாக இருக்கலாம் அல்லது அந்தப்பட்டாவிற்கண்ட ஷரத்துகளின்படி நடப்பதாகச் செய்துகொள்ளும் வெறும் உடன்படிக்கையாக இருக்கலாம்; மேலும், அந்த முச்சிலிக்காவிலே ரயத்து கையெழுத்து பண்ணவேண்டும்.

(2) யாதொரு ரயத்து சாகுபடி செய்வதைப்பற்றியாவது நிர்ப்பந்தமாகவோ, குறித்த யாதொரு காலத்திலே யாதொரு அனுபோக ரயத்து தம்முடைய நிலத்தின் ஸ்வாதீனத்தை விட்டுவிடுவதைப்பற்றியோ கண்டிருக்கும் யாதொரு திட்டமானது சட்டசம்மதமில்லாத்தாய்ப் போவதோடுங் கூட பிரயோசன மற்றதாயும் போய்விடும்.

52. (1) ஒரு ரெவினியு வருஷத்துக்காவது பல ரெவினியு வருஷங்களுக்காவது பட்டா கொடுத்து முச்சிலிக்கா பெற்றுக்கொள்ளலாம்; ஆனால், ஒரு ரெவினியு வருஷத்துக்கு மேற்பட்ட ஒரு காலவரையறைக்காக எந்த நிலத்துக்குடையவரும் பட்டா கொடுப்பதாகக் காட்டவும், எந்த ரயத்தும் அதை அங்கீகரிக்கவும் கடமைப்பட்டவராகார்.

எவ்வளவு காலத்துக்காகப் பட்டா கொடுத்து முச்சிலிக்கா பெற்றுக்கொள்ளலாமென்பது

(2) (3) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, யாதொரு பட்டா அல்லது முச்சிலிக்கா எந்தக் காலவரையறைக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்தக் காலவரையறை ஆரம்பமான பிறகு பன்னிரண்டுமாத காலத்துக்குள்ளாக அந்தப் பட்டா அல்லது முச்சிலிக்கா கொடுப்பதாகக் காட்டவேண்டும். அந்த முச்சிலிக்கா அல்லது பட்டா கொடுக்கும்படி கேட்கவேண்டும்.

(3) யாதொரு ரெவினியு வருஷத்துக்காக அங்கிகரிக்கப்பட்ட, பரிவர்த்தனம் செய்து கொள்ளப்பட்ட அல்லது டிக்ரி செய்யப்பட்ட பட்டாக்களும் முச்சிலிக்காக்களும் - எந்த ரெவினியு வருஷத்துக்குப் புதிதாகப் பட்டாக்களும் முச்சிலிக்காக்களும் அங்கீகரிக்கப்பட்டோ பரிவர்த்தனம் செய்துகொள்ளப்பட்டோ அல்லது டிக்ரி செய்யப்பட்டோ இருக்கின்றனவோ அந்த ரெவினியு வருஷம் ஆரம்பமாகிறவரையில் செலாவணியாய்க் கொண்டே வரவேண்டும்; ஆனால், யாதொரு பட்டாவாகிலும் முச்சிலிக்காவாகிலும் ஒன்றுக்கு மேற்பட்ட ரெவினியு வருஷங்களுக்குச் செலாவணியாய்க்கொண்டேயிருந்தால், புதிதாக பட்டா அல்லது முச்சிலிக்கா எந்த ரெவினியு வருஷத்தில் கொடுப்பதாகக் காட்டப்படுகிறதோ, அங்கீகரிக்கப்படுகிறதோ, பரிவர்த்தனஞ் செய்துகொள்ளப்படுகிறதோ அல்லது டிக்ரி செய்யப்படுகிறதோ அந்த ரெவினியு வருஷத்துக்கு அடுத்து வருகிற ரெவினியு வருஷம் ஆரம்பமாகிறவரையிலே அதே கைப்பற்று நிலத்துக்கு ஷை புது பட்டாவாவது முச்சிலிக்காவாவது செலாவணியாகமாட்டாது.

53. (1) யாதொரு நிலத்துக்குடையவர் ரயத்துக்குப் பட்டாகொடுத்து முச்சிலிக்கா பெற்றிருந்தாலன்றி மற்றப்படிக்காவது, அந்த ரயத்து அங்கீகரிக்கக் கடமைப்பட்டிருக்கும் ஒரு பட்டாவை அவருக்குக் கொடுக்கக் காட்டியிருந்தாலன்றி மற்றப்படிக்காவது, சட்டசம்மதமான யாதொரு பட்டா அல்லது முச்சிலிக்கா செலாவணியாய்க் கொண்டேயிருந்தாலன்றி மற்றப்படிக்காவது, 6-ம் அத்தியாயத்தின்படி அந்த ரயத்துடைய அசையும்பொருளை ஜப்திபண்ணி விற்பனை செய்தாவது அவருடைய கைப்பற்று நிலத்தை விற்பனை செய்தாவது குத்தகைத் தொகையை வசூல் செய்வதனிமித்தம் அந்த ரயத்துக்கு விரோதமாக அமுல் நடத்த ஷை நிலத்துக்குடையவருக்கு அதிகாரம் இல்லை.

பட்டா கொடுக்கக் காட்டினால்தான் நிலத்துக்குடையவர் கைப்பற்று நிலத்தை விற்பனைசெய்யவும் ஜப்திபண்ணவும் சுதந்தரமுடையவராவாரென்பது

(2) யாதொரு நிலத்துக்குடையவர் கொடுப்பதாகக் காட்டியிருக்கிற பட்டாவானது முழுவதும் சரியாயிராமற்போனபோதிலும் சிறிதுமட்டில் சரியாயிருக்கிறதென்று கலெக்டர் அபிப்பிராயப்படுகிற பட்சத்திலே, அது - (சிறிதுமட்டில்தான் சரியாயிருந்தும்) பாதகமில்லாமலே எவ்வளவு வரையில் சரியாயிருக்கிறதென்று காணப்படுகிறதோ அவ்வளவுவரையில் செலாவணியாகத்தக்கதாகும்.

54. (1). 78-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி. நோடிஸ் சேர்ப்பிப்பதற்காக நிபந்தனை கண்டிருக்கிற விதமாய் ரயத்தினிடத்திலே பட்டா கொடுப்பதாகக் காட்டலாம்; அல்லது, யாதொரு பூஸ்திதியின் விஷயமாகவோ பூஸ்திதியைச்சேர்ந்த யாதொரு பாகத்தின் விஷயமாகவோ நிலத்துக்குடையவர் விண்ணப்பம் செய்து கொள்வதன்மேல் கலெக்டர் அனுமதி கொடுக்கிறபட்சத்திலே, கலெக்டர் ஆபிஸிலோ பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடுகிற வேறே யாதொரு உத்தியோகஸ்தருடைய ஆபிஸிலோ அந்தப் பட்டாவைக் கொண்டுவந்து தாக்கல் செய்யலாம்; அப்படி தாக்கல் செய்யப்பட்டால், கலெக்டர் அல்லது மேலேகண்ட உத்தியோகஸ்தர்-மேலே சொல்லியிருக்கிற விதமாய் நிலத்துக்குடையவரின்செலவிலே அந்தப் பட்டாவை ரயத்துக்குச் சேர்ப்பிக்கவேண்டும்.

இன்ன விதமாகப்பட்டா கொடுக்கக்காட்ட வேண்டுமென்பது

(2) ப்ளெய்ன்டில் (பிரியாதில்) செய்வதைப்போலவே, ஷை விண்ணபத்தில் கை யெழுத்திட்டு உறுதிமொழி யெழுதவேண்டும்; மேலும், சேர்ப்பிப்பதன் விஷயமாய்ப் பிடிக்கும் செலவு காரணமாகப் பிரதேச கவர்ன்மெண்டார் விதியேற்படுத்தி அதன் மூலமாய் நிர்ணயிக்கக்கூடிய தொகையை ஷை விண்ணபத்தோடுகூட அனுப்பவேண்டும்.

55. கேட்டுக்கொண்டபிறகு மூன்று மாதகாலம் வரையில், ஒரு நிலத்துக்குடையவர் யாதொரு ரயத்து என்ன ஷரத்துகளின்படி பட்டா பெற்றுக்கொள்ள சுதந்தரமுடையவராயிருக்கிறாரோ அந்த ஷரத்துகளின்படி பட்டா கொடுக்கத் தவறினால், அப்படிப்பட்டபட்டாவினிமித்தம் அந்தரயத்து கலெக்டரிடத்தில் வியாஜ்ஜியந் தொடருவது சட்ட சம்மதமாகும்.

பட்டா பெறுவதற்காக வியாஜ்ஜியம்.

56. கொடுக்கக்காட்டின பிறகு ஒருமாதகாலம் வரையில் யாதொரு ரயத்து தமக்குக் கொடுப்பதாகக் காட்டப்பட்ட பட்டாவை அங்கீகரிக்கவும் அதற்குப் பரிவர்த்தனமாக ஒரு முச்சிலிக்கா கொடுக்கவும் தவறினால், நிலத்துக்குடையவர் அந்தப்பட்டாவை அங்கீகரிக்கும்படி கட்டாயப் படுத்தும்பொருட்டுக் கலெக்டரிடத்தில் வியாஜ்ஜியம் தொடரலாம்.

பட்டாவை அங்கீகரிக்கும் படி கட்டாயப் படுத்துவதற்காக வியாஜ்ஜியம்

57. 55-வது 56-வது பிரிவுகளின்படி தொடரப்பட்ட வியாஜ்ஜியங்களைத் தீர்மானிக்கையிலே, கலெக்டரானவர் யார்மேல் வியாஜ்ஜியம் தொடரப்பட்டதோ அவர் பட்டாவைக் கொடுக்க அல்லது அங்கீகரிக்கக் கடமைப்பட்டவர்தானா என்று முதலில் விசாரிக்கவேண்டும்; இதுருஜுவானாலன்றி மற்றப்படி அந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட வேண்டும். யார்மேல் வியாஜ்ஜியம் தொடரப்பட்டதோ அவர் பட்டாவைக்கொடுக்க அல்லது அங்கீகரிக்கக் கடமைப்பட்டவரென்று வாதி ஸ்தாபிப்பாராகில், கலெக்டரானவர்-கேட்கப்படுகிற அல்லது கொடுக்கக் காட்டப்படுகிற பட்டாவானது சரியானது தானாவென்று விசாரிக்கவேண்டும். சரியானதென்று காணப்பட்டால், கலெக்டரானவர் முச்சிலிக்காவுக்குப் பரிவர்த்தனமாகப்பட்டா கொடுக்கவேண்டுமென்றாவது பட்டாவை அங்கீ

பட்டாவைக் கொடுக்கும்படியோ அங்கீகரிக்கும்படியோ கட்டாயப் படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியத்தைத் தீர்மானிக்கையிலே இன்னது செயய வேண்டுமென்பது

கரித்து அதற்குப் பரிவர்த்தனமாக முச்சிலிக்கா கொடுக்க வேண்டுமென்றாவது பிரதிவாதிக்குக் கட்டளையிட்டு டிக்ரி பிறப்பிக்கவேண்டும். கேட்கப்படுகிற அல்லது கொடுக்கக் காட்டப்படுகிற பட்டாவானது சரியானதல்லவென்று கலெக்டருக்குத் தோற்றினால், அவர்-அந்தப்பட்டாவில் இன்ன ஷரத்துகள் கண்டிருக்கவேண்டுமென்று தீர்மானிக்கவேண்டிய தோடுங்கூட தம்முடைய டிக்ரியில் அந்த ஷரத்துகளைச் சேர்க்கவும்வேண்டும்; ஷை டிக்ரியானது-பட்டாவும் முச்சிலிக்காவும் பரிவர்த்தனமாகக்கொடுக்கப்பட்டும் பெற்றுக்கொள்ளப்பட்டு மிருந்தாலெப்படியோ அப்படியே செலாவணியாக வேண்டியதுமல்லாமல் பிரயோசனகரமாயுமிருக்கவேண்டும்.

58. கைப்பற்றுநிலம் எந்தக் கிராமத்திலிருக்கிறதோ அந்தக் கிராமத்தின் கர்ணம்-அந்தக் கைப்பற்று நிலத்தைப் பற்றிய பட்டாக்களிலும் முச்சிக்காக்களிலும் கிரமமாய்க் கையெழுத்துபண்ண வேண்டியதோடுங்கூட அவைகளைரெஜிஸ்டர் செய்யவும் வேண்டும்.

கர்ணம் பட்டாவிலும் முச்சிலிக்காவிலும்கையெழுத்து பண்ணி அவைகளை ரெஜிஸ்டர் செயயவேண்டுமென்பது

(தொடர்ச்சியை 154-வது பக்கம் பார்க்கவும்.)

RULES FOR THE GRANT OF LOANS UNDER THE LAND IMPROVEMNT LOANS ACT XIX OF 1883 AND THE AGRICULTURISTS' LOANS ACT XII OF 1884.

நிலவிருத்திசம்பந்தமான கடன்களை அதாவது வா ர கத்தைக் குறித்த 1883-ம் வருஷத்து 19-வது ஆக்டின்படிக்கும், விவசாயக்காரர்களுக்குக் கடன் கொடுப்பதைக்குறித்த 1884-ம்வருஷத்து 12-வது ஆக்டின்படிக்கும் கடன் கொடுப்பதற்கான விதிகள்.

1.—பொது விதிகள்.

1. அடியிற்கண்ட காரியங்களுக்காக நிலத்தின் சொந்தக்காரர்களுக்கும் அனுபோகதாரர்களுக்கும் இதனடியிற்கண்ட அளவாகக் கடன் கொடுக்கலாம்:—

இன்ன காரியங்களுக்காகக் கடன் கொடுக்கலாமென்பது.

	கொடுக்கக்கூடிய தொகை.	
	அதிகப்பட்டது.	குறைந்தது.
(எ) நிலவிருத்தி சம்பந்தமான கடன்களைக்குறித்த 1883-ம்வருஷத்து ஆக்டின்படி,— கிணறுகள் அல்லது ஏரிகளை ஏற்படுத்துவதற்காவது மராமத்து செய்வதற்காவது; தரிசு நிலத்தைச் சீர்ப்படுத்துவதற்காவது; விவசாயக் காரியங்களுக்காக நிலத்தை வாடகைக்கு விடுவதற்கேற்ற மதிப்பு எந்தவேலையினால் நிலையாய் அதிகப்படுமோ அப்படிப்பட்ட வேறே யாதொரு வேலைக்காவது	வேண்டிய அளவு	50 ரூ.
(பி) வியவசாயக்காரர்களுக்குக் கடன்கொடுப்பதைக்குறித்த 1884-ம்வருஷத்து ஆக்டின்படி,—		
(i) விதைத்தானியம், உழவுக்குரிய கால்நடை; விரையடியாத குதிரை இவற்றைக் கிரயத்திற்கு வாங்குவதற்காவது; நெருப்பு அல்லது வெள்ளத்தினால் அழிந்		

பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம் வருஷத்து 1-வது ஆக்ட் 1908வரு ஜூன்மீ 28உ கவர்னர் ஜெனரல் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

	கொடுக்கக்கூடிய தொகை.	
	அதிகப்பட்டது	குறைந்தது.
துபோன வீடுகளை மறுபடியும் கட்டுவதற்காவது	1,000 ரூ.	வேண்டிய அளவு.
(ii) கிருஹகிருத்தியங்களுக்காகவும் வியவசாயக் காரியங்களுக்காகவும் உபயோகமாகத் தக்க கால்நடைக்குத் தீனிவாங்குவது; கரும்பு ஆலைகளையும் நீலத்தொட்டிகளையும் வியவசாயசம்பந்தமான பண்படுத்தாதமாகூல் விஷயமாய்ப் பிரவர்த்திப்பதற்கேற்ற மேற்கண்ட மாதிரியான உபகரணங்களையும் அமைப்பது; தண்ணீர் மொள்ளுவதற்காக இரட்டைக் கவலை அல்லது வேறே உபகரணங்களை ஏற்படுத்துவது; குடியிருப்புக்காகவும் வியவசாயத்திற்காகவும் நூதனமாய்க் கிடைக்கும்படி செய்யப்பட்ட இடங்களில் விவசாயக்காரர்கள் வீடுகளைக் கட்டிக்கொள்வது; இவைபோன்ற வியவசாய சம்பந்தமான வேறே காரியங்களுக்காக	2,000 ரூ.	ஷை
(iii) துன்பம் நேரிட்டிருக்கிறதென்று பிரதேச கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டிருக்கும்போது, நிலத்தின் சொந்தக்காரர்களும் அனுபோகதாரர்களும் அவர்களை அடுத்தவர்களும் அடுத்த மாகூல் பலிதமாகிற வரையில் ஜீவிக்கக்கூடியவர்களாயிருக்கும்பொருட்டு அந்தத் துன்பத்தின் பரிகாரத்திற்காக... ...	200 ரூ.	ஷை

இன்ன உத்தியோகஸ்தர்கள் கடன்கொடுக்கலாமென்பதும், உயர்ந்தது இவ்வளவுவரையில் கடன் கொடுக்கலாதுமென்பதும்.

2. (சுயேச்சையான விசாரணை வகித்திருக்கும் டெப்படி தாசில்தாரர்கள் உட்பட) தாசில்தாரர்களும் டிவிஷனல் ஆபீஸர்களும் கலெக்டர்களும் அடியிற்கண்ட தொகைகளுக்கு மேற்படாமல் கடன் ஜாரிசெய்ய அதிகாரமுடையவர்களாவார்கள்:—

	ரூ.
தாசில்தாரர்கள்	250
டிவிஷனல் ஆபீஸர்கள்	500
கலெக்டர்கள்	1,000

1,000 ரூபாய்க்கு மேற்பட்ட கடன் தொகைகள் ரெவினியு போர்டாராலும், 10,000 ரூபாய்க்கு மேற்பட்ட கடன் தொகைகள் பிரதேச கவர்ன்மெண்டாராலும் ஜாரிசெய்யப்ப டும்.

விவரணம்.—பற்பல கடன்தொகைகளின் மொத்தத்தொகையானது நிர்ணயிக்கப்பட்ட உச்ச அளவுக்கு மேற்பட்டபோதிலும், ஒரே நபருக்குப் பற்பல கடன்தொகைகளைக் கொடுக்க இந்தவிதினால் யாதொரு உத்தியோகஸ்தருக்குத் தடையுண்டாகமாட்டாது. ஆயினும், அப்படிப்பட்ட கடன்தொகைகள் வெவ்வேறு காரியங்களுக்கென்று கண்டிருக்க வேண்டியதுமல்லாமல், அவைகளில் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே வெவ்வேறு ஈடுகாட்டப்பட்டுமிருக்க வேண்டும்.

வட்டிவீதம்.

3. 100-க்கு வருஷத்திற்கு $6\frac{1}{4}$ வீதம் வட்டிபோடப்படும்; ஆனால், வியவசாயக்காரர்களுக்குக் கடன் கொடுப்பதைக்குறித்த 1884-ம் வருஷத்து ஆக்டின்படி துன்பத்தின் பரிகாரத்திற்காகக் கொடுக்கப்படும் கடன்களுக்கு 100-க்கு 3 வீதம் வட்டிபோடப்படும். கடன் வாங்கிக்கொண்டவர்கள் ஏழைகளென்று தெரியவருகிற விஷயத்தில் கலெக்டருக்கு யுக்தமாகத்தோற்றினால் வட்டி வாங்காமல் தள்ளிவிடலாம்.

பிரதேச கவர்ன்மெண்டார்தங்களுக்கு யுக்தமாகத்தோற்றினால் விசேஷ சந்தர்ப்பங்களிலே குறைந்த வட்டிக்காவது வட்டியில்லாமலாவது கடன் கொடுக்கலாம்.

4. கடன்களைக்கொடுக்கும் தேதிமுதல் வட்டி கணக்காகும். கடன் சில தவணைகளாகக் கொடுக்கப்படுமாகில், ஒவ்வொரு தவணைக்குமுரியவட்டியானது அத்தவணைத்தொகை கொடுக்கப்படும் தேதிமுதல் கணக்காகும்.

கடனைத் தீர்த்துவிடுவதற்காகக்கொடுக்கப்படும் காலவரையறையும் அதைவசூல்செய்யும் மாதிரியும்.

5. சமமான வருஷாந்தர தவணைத் தொகைகளாக அசலையும் வட்டியையுஞ்செலுத்தித் தீர்த்துவிடத்தக்கதாகும்.

கடன்களைத்தீர்த்து விடுவதற்காகக் கொடுக்கப்படும் காலவரையறையையும், தவணைத் தொகையையும் நிர்ணயிக்கும்போது கலெக்டரானவர் (அல்லது கடன் கொடுக்கும் வேறே உத்தியோகஸ்தரானவர்)-கடன்வாங்குகிறவருடைய சௌகரியத்தையும், அந்தந்த விஷயத்தைப் பற்றிய கூலாம்சங்களையும், செய்யப்போகிறதாகப் பிரேரேபிக்கப்படும் விருத்தியானது வெகுசாய் எவ்வளவு காலம்வரையில் நிலைக்குமென்பதையும், கொடுப்பதாகச் சொல்லப்படுகிற ஈட்டின் மதிப்பையும் அல்லது அது போதுமானதா அல்லவாவென்பதையும் யோசித்து நிர்ணயிக்க வேண்டும்; ஆனால், அப்படி நிர்ணயிக்கையிலே, அடியிற்கண்ட உச்சவரையறைகளுக்கு அதிகமாகப்போகாதபடி நிர்ணயிக்கவேண்டும்:—

(ஏ) நிலவிருத்தி சம்பந்தமான கடன்களைக்குறித்த 1883-ம் வருஷத்து ஆக்டின்படி கொடுக்கப்படும் கடன்கள் விஷயத்திலே,—

(i) கிணறுகளை ஏற்படுத்துவதற்காகவோ அல்லது மராமத்து செய்வதற்காகவோ,—30 வருஷம்.

(ii) வேறே காரியங்களுக்காக—

கடன் 500 ரூபாய்க்கு மேற்படாவிட்டால்,—10 வருஷம்.

கடன் 500 ரூபாய்க்கு மேற்பட்டு 1,000 ரூபாய்க்கு மேற்படாவிட்டால்,—15 வருஷம்.

கடன் 1,000 ரூபாய்க்கு மேற்பட்டால்,—20 வருஷம்.

(பி) விவசாயக்காரர்களுக்குக் கடன்கொடுப்பதைக்குறித்த 1884-ம் வருஷத்து ஆக்டின்படி கொடுக்கப்படும் கடன்களுக்காக,—

(i) விதைவாங்குவதற்காகவானால்,—1 வருஷம்.

(ii) துன்ப நிவர்த்திக்காகவானால்,—3 வருஷம்.

(iii) வேறே எந்த காரியத்திற்காகவானால்,—10 வருஷம்

கடனைத் தீர்த்துவிடுவதற்காக மேலே குறிக்கப்பட்ட காலமானது கடன்கொடுக்கப்படும் தேதிமுதல் கணக்காகும்; அல்லது, கடன் தவணைத்தொகைகளாகக் கொடுக்கப்படுமாகில், கடைசி தவணைத்தொகை கொடுக்கப்பட்ட தேதிமுதல், கணக்காகும்.

கடனைத் தீர்த்துவிடுவதற்காகக் கொடுக்கப்படும் காலவரையறையானது 26-வது விதியின்படி மாற்றப்படுவதற்குள்ளாகத்தக்கது.

ஆனால், கடன் வாங்கிக்கொண்டவர் வருஷாந்தர தவணைத் தொகைக்கு அதிகமாகத் தொகையைச்செலுத்தி இன்னும் சீக்கிரத்தில் கடனைத் தீர்த்துவிடுவதற்கு இந்த விதியினுள்ளதெதனாலும் அவருக்குத் தடையுண்டாவதாக எண்ணக்கூடாது. அந்தப்படி செலுத்தப்பட்ட ஜாஸ்தித்தொகையானது அசலுக்கு உடனே வரவு வைத்துக் கழித்துக்கொள்ளப்படும்; அதன்பிறகு எத்தனை தடவைகளில் தவணைத்தொகைகளைச் செலுத்தவேண்டுமோ அத்தனை தடவைகள், அவசியமானால், குறைக்கப்படும்; ஆனால், பிற்பாடு செலுத்தவேண்டிய தவணைகளின் தொகையில் எவ்வித வேறுபாட்டுக்கும் அனுமதிகொடுக்கப்படமாட்டாது; பிற்பாடு செலுத்தவேண்டிய தவணைத்தொகைகளை ஒற்றிச் செலுத்தவும் அனுமதிகொடுக்கப்படமாட்டாது.

6. ஒவ்வொரு வருஷாந்தரதவணைத் தொகையையும் செலுத்துவதற்கான தேதியை, டிஸ்ட்ரிக்டின் லாண்ட் ரெவினியு (நிலத்தீர்வை) கிஸ்திகளில் ஒரு கிஸ்தியின் தேதிக்கு ஒத்திருக்கும்படி நிர்ணயிக்கவேண்டும். வட்டி சகிதமான அசலின் முதல் தவணைத்தொகையைக் கடனைச் சேர்ந்த கடைசி தவணைத்தொகை கொடுக்கப்பட்ட தேதிமுதல் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறைந்தகாலத்திற்குள்ளே கேட்கவுங் கூடாது, முப்பது மாதங்களுக்கு மேற்பட அதை ஒற்றிவைக்கவுங்கூடாது. கடன்வாங்குகிறவர் முதல் தவணைத்தொகையை (திரும்பச்) செலுத்திவிடுவதற்கான தேதியை-அவர் கிரமமானபடிஜாக்கிரதையாயிருக்கும்பட்சத்தில் ஷை தவணைத்தொகையைச்செலுத்துவதற்குமுன்னே அதைச் செலுத்தப்போதுமான வருமானம் அவர்செய்யும் விருத்தியின் மூலமாய் அவருக்குக் கிடைக்கச்சவகாசம் இருக்கக்கூடியவிதமாக, மேலே கண்ட வரையறைகளுக்குள்ளே (எனவே, 12 மாதங்களுக்குக் குறையாமலும் 30 மாதங்களுக்கு மேற்படாமலுமுள்ள கால இடையிலே) வரத்தக்கபடி நிர்ணயிக்கவேண்டும். இந்த இடைக்காலத்திலே, அதனோடு சாதாரணவட்டி விதித்து முதல்தவணைத்தொகை திரும்பச் செலுத்தப்படும்போது அதனோடு வசூல்செய்யவேண்டும்.

7. விருத்திசெய்யப்போகிற நிலம் எவ்விடத்திலிருக்கிறதோ அந்தக் கிராமத்தின் கிராம உத்தியோகஸ்தர்களிடத்திலாவது தாலூகா கஜானாவிலாவது கடனைச் செலுத்திவிடலாம். கலெக்டரானவர் தமக்கு யுக்தமாகத்தோற்றினால், வேறே யாதொரு கவர்ன்மெண்ட் கஜானாவில் கடனைச் செலுத்திவிட அனுமதி கொடுக்கலாம்.

8. எந்த ரெவினியுவருஷத்தில் தொகைசெலுத்தவேண்டியிருக்கிறதோ அந்த ரெவினியு வருஷம் முடிவாவதற்கு முன்னே செலுத்தப்படாமலிருக்கும் வட்டியைப்பற்றிய அல்லது அசலையும் வட்டியையும்பற்றிய ஒவ்வொரு தவணைத்தொகைக்கும், எந்தத் தேதியில் தொகைசெலுத்தியிருக்கவேண்டுமோ அந்தத் தேதிமுதல் $6\frac{1}{4}$ விழுக்காடு வட்டிபோடப்படும்: ஆனால், விசேஷ

மான சந்தர்ப்பங்களிலே தொகை செலுத்தத்தவறினதற்குக் கடனாளி அசக்தராயிருப்பது தான் காரணமென்றும் அப்படிப்பட்ட வட்டிவிதித்துவாங்குவதனால் துன்பம் உண்டாகுமென்றும் கலெக்டருக்குத் திருப்திகரமாய்த் தெரிந்தால், அவர் அப்படிப்பட்ட வட்டிமேல் வட்டியையும் அபராத (தண்ட) வட்டியையும் வஜா செய்யலாம். அல்லது குறைக்கலாம்.

ஃந்த விதியின்படி வட்டியைக் கணக்கிடுகையிலே, ஒருமாதத்துக்குக் குறைந்தகாலமா னது பதினைந்துதினங்களுக்கு உட்பட்டிருக்குமானால் அதை அரைமாதமாகவும் பதினைந்துதினங் களுக்கு உட்படாமலிருக்குமானால் ஒருமாதமாகவும் கணக்கிடவேண்டும், மேலும், ஒரு ரூபாய்க குக்குறைந்த சில்லறை எட்டணாவுக்குட்பட்டதாயிருந்தால் அதை அரைரூபாயாகவும் எட்டணா வுக்குட்படாததாயிருந்தால் ஒரு ரூபாயாகவும் கணக்கிடவேண்டும்.

9. கடன் ஜாரி செய்திருக்கிற உத்தியோகஸ்தர் - கடன் வாங்கினவர் ஸ்வாதீனத்துக்கு படாத காரணங்களினால், வருஷாந்தரத் தவணைத்தொகையைச் செலுத்துவது மிகவும் கஷ்ட சாத்தியமாயிருக்கும்படி அவ்வளவு விசேஷமாக அவருடைய மாகூல் நிஷ்பலிதமாய்ப்போகும் போதெல்லாம் அந்தத்தவணைத்தொகையைச் செலுத்துவதை நிறுத்திவைக்கலாம். விசேஷ விஸ் தீர்ணத்திலே தீர்வைவசூல் பெருத்த அளவாக நிறுத்திவைக்கப்படும் போதெல்லாம், அப்படி எந்த வருஷம் அல்லது வருஷங்களுக்காக நிறுத்திவைக்கப் படுகிற அந்த வருஷம் அல்லது வருஷங்களில் சேரவேண்டிய கடன் தவணைத்தொகைகளையும் வசூல்செய்யாமல் நிறுத்திவைக்க வேண்டும். யாதொரு தவணைத்தொகையைச் செலுத்துவதை நிறுத்திவைக்கும் போதெல்லாம், பிரஸ்தாபகடனைச்சேர்ந்த மற்றத் தவணைத்தொகைகள் எல்லாவற்றையும் ஒரு தவணையின் கால த்துக்கு ஒற்றிவைக்கவேண்டும் ; மேலேகண்டபடி நிறுத்திவைப்பது காரணமாக அதிக வட்டி எவ்வளவும் விதிக்கக்கூடாது. கலெக்டராவது அவருடைய கீழுத்தியோகஸ்தர்களாவது தவ ணைத் தொகைகளை வசூல் செய்யாமல் நிறுத்திவைக்கும் சகல விஷயங்களைப்பற்றியும் போர்டா ருக்குச் சங்கதி தெரியும்பொருட்டுக் கலெக்டர் ரிபோர்ட் பண்ணவேண்டும்.

10. கிணறுகளை ஏற்படுத்துவதற்காகவாவது மராமத்து செய்வதற்காகவாவது கொடுக்க ப்படும் கடன் உட்பட நிலவிருத்தி சம்பந்தமான கடன்களைக்குறித்த ஆக்டின்படி கொடுக்க கப்படும் கடன்களின் விஷயத்திலே - கடன்வாங்கினவருடைய ஸ்வாதீனத்துக்குட்படாத காரணங்களினால் பிரஸ்தாபவேலை நிறைவேறாமற்போனால், போர்டார் - அந்த விஷயத் தைப்பற்றிய சகல சங்கதிகளையுங் குறித்துக் கலெக்டர் மூலமாகத் தங்களுக்குப் பூர்த்தியான ரிப்போர்ட் வருவதன்மேல், தங்களுக்கு யுக்தமாகத்தோற்றுகிற வாயிதாக்களின்படி கடனை வசூல் செய்வதற்கும், என்ன வட்டி வீதப்படி கடன் ஜாரிசெய்யப்பட்டதோ அந்த வட்டி யை, ஷை வேலையைச் செய்துமுடிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட காலவரையறை கழிவது முதல் கணக்கிட்டு வாங்குவதற்கும் அனுமதிகொடுக்கலாம்; அல்லது, கடனில் இன்னுஞ்செலுத்த ப்படாமல் பாக்கியாயிருக்கும் தொகை முழுவதையுமாவது அதில் எவ்வளவையாவது வஜா செய்யலாம். விதைத்தானியம் வாங்குவதற்காகவும் வியவசாயக்காரர்களுக்குக் கடன்கொடுப்ப தைக்குறித்த ஆக்டின்படிக்கான இதர காரியங்களுக்காகவும் கொடுக்கப்பட்ட முன்பணத்தை வஜா செய்வதற்கு நியாயம் காணப்படுகிற விசேஷ விஷயங்களிலே, ஒவ்வொரு விஷயத்தைப் பற்றி சங்கதிகளைக்குறித்தும் கலெக்டரிடத்திலிருந்து பூர்த்தியான ரிபோர்ட் கிடைப்பதன் மேல் போர்டார் அந்தப்படி வஜாசெய்யலாம்.

11. கொடுப்பதாகச் சொல்லப்படும் ஈட்டின் மதிப்பானது கேட்டுக்கொள்ளப்படுங் கடன் தொகைக்கு குறைந்தது கால்பங்கு அதிகமாயிருந்தாலன்றி மற்றப்படி கடன் கொடுக்கப்பட மாட்டாது.

ஈடு.

வேண்டியிருக்கிற ஈட்டின் லட்சணமானது அடியிற்கண்டபடியிருக்கவேண்டும்:—

(எ) நில விருத்தி சம்பந்தமான கடன்களைக் குறித்த 1883-ம் வருஷத்து ஆக்டின்படி —விருத்திசெய்யப்போகும் நிலம்: செய்யப்போகும் கட்டுவேலை எவ்விடத்தில் அமைவதாயிரு க்கிறதோ அந்த இடமும் அதில் சேர்ந்ததாயிருக்க வேண்டும்.

விருத்திசெய்யப்போகும் நிலத்தில் விண்ணப்பதாரருடைய பாத்தியதையின் மதிப்பான து கேட்கப்படும் கடன்தொகைக்குக் கால்பங்கு அதிகப்படாமலிருந்தால், மேல் ஜாமீன் கே ட்கவேண்டும்.

மேல்ஜாமீன் அடியிற்கண்டபடியிருக்கவேண்டும் :—

(i) விண்ணப்பதாரருக்குரிய மற்ற நிலங்கள் ; அல்லது,

(ii) தம்முடைய ஜாமீன்தாரராக இருக்க இஷ்டப்படுகிற மற்றவர்களுக்குரிய நிலம் ; அல்லது,

(iii) இவ்விரண்டும்.

(பி) வியவசாயக்காரர்களுக்குக் கடன்கொடுப்பதைக்குறித்த 1884-ம்வருஷத்து ஆக் டின்படி.—விண்ணப்பதாரர் வைத்துக்கொண்டிருக்கும் நிலங்களில் அவருக்குள்ள விற்பனை செய்யத்தக்க பாத்தியதை : ஆனால், அப்படிப்பட்ட பாத்தியதையின் மதிப்பானது கேட்

கப்படும் கடன்தொகைக்குக் கால்பங்கு மேற்படாவிட்டால், மேல்ஜாமீன் கேட்கவேண்டும்; கடன்தொகை இரண்டுவருஷங்களுக்குள்ளாக செலுத்திவிடத்தக்கதாயிருந்தாலும், துன்பத்தின் பரிகாரத்திற்சாகக் கொடுக்கப்பட்டிருந்தாலுமன்றி மற்றப்படி ஷை மேல்ஜாமீன் அசையாப் பொருளாயிருக்கவேண்டும் ; கடன்தொகையானது அந்தப்படி இரண்டு வருஷங்களுக்குள் செலு த்திவிடத்தக்கதாயிருந்தாலும், துன்பத்தின் பரிகாரத்திற்காகக் கொடுக்கப்பட்டிருந்தாலும் நபர் ஜாமீன் ஏற்றுக்கொள்ளலாம்.

(சி) நிலவிருத்தி சம்பந்தமான கடன்களைக்குறித்த ஆக்டின்படி கொடுக்கத்தக்க கடன் தொகை வேண்டுமென்று ஒரு கிராமக் குடிகளாவது ஒரு தொகுப்பான வியவசாயக்காரர்களா வது தங்களுடைய கூட்டு நபர்ஜாமீன்மேல் கேட்டுக்கொண்டால், கலெக்டரானவர் - தமக்கு யுக்தமாகத் தோற்றுகிறபட்சத்திலே, அந்த விண்ணப்பதாரர்களுடைய பெயர்களில் ரெஜிஸ்ட ராயிருக்கும் நிலத்தின் வருஷாந்தரதீர்வைக்கு ஐந்தத்தனைக்கு மேற்படாமல் ஒரு தொகையை அந்த ஜாமீன்மேல் கொடுக்கலாம்.

வியவசாயக்காரர்களுக்குக் கடன் கொடுப்பதைக்குறித்த ஆக்டின்படி கொடுக்கப்படும் கடன் கள் இரண்டு வருஷங்களுக்குள் செலுத்தத்தக்கவைகளாயும் 100 ரூபாய்க்கு மேற்படாமலும் இருக்குமானால் அவைகளையும், விண்ணப்பதாரருடைய நபர் ஜாமீன்மேலாவது விண்ணப்பதார ரும் மற்றவர்களல் ஒருவர் அல்லது பலரும்சேர்ந்து கொடுக்கும் நபர் ஜாமீன் மேலாவது கொடு க்கலாம் ; ஆனால், விண்ணப்பதாரருடைய நிலத்தின் வருஷாந்தரத்தீர்வையாவது அவருடைய தும் அவருடைய கூட்டு ஜாமீன்தாரருடையதுமான நிலத்தின் வருஷாந்தரத் தீர்வையாவது கேட்கப்படும் கடன் தொகைக்கு ஐந்திலொருபாகத்துக்குக் குறையாமலிருக்கவேண்டும்.

12. கடன்வாங்கிக்கொண்ட எவராவது அக்கடன் என்ன நிட்டங்களை யனுசரித்துக்கொடு க்கப்பட்டதோ அவைகளில் யாதொன்றை நிறைவேற்றத்தவறியிருக்கிறாரென்று கலெக்டருக் காகிலும் கடன்கொடுக்கும் வேறே உத்தியோகஸ்தருக்காகிலும் எப்போதேனும் திருப்திகர மாகத் தெரியவந்தால், அவர் - தம்முடைய தீர்மானத்திற்குள்ள ஆதாரங்களை எழுதிவைத்த பிறகும், ரெவினியுபோர்டாருடைய அதிகாரத்திற்குட்பட்டும், அந்தநபரிடத்திலிருந்தாவது அந்த நபருடைய யாதொரு ஜாமீன்தாரரிடத்திலிருந்தாவது, கடன் தொகையில் செலுத்தப்படாமல் பாக்கியாயிருக்கும் தொகை முழுவதையும், அதற்காகச் செலுத்தத் தக்கவட்டி ஏதாவதிருந்தால் அதையும் செலவுகளையும் நிலவருமான பாக்கியைப்போல உடனே வசூல்செய்யத்தொட ங்கலாம் ;

ஆனால், அப்படிப்பட்ட உத்தியோகஸ்தரானவர் – தமக்கு யுக்தமாகத் தோற்றினால், கடன்தொகையில் செலுத்தப்படாமல் பாக்கியாயிருக்கும் தொகை முழுவதையும்விட குறைந்த யாதொரு தொகையை, அந்தப்படி பாக்கி நிற்கும்தொகையில் மற்றபாகத்தைப் பிற்பாடு எப் போதாவது வசூல்செய்யத் தமக்குள்ள சுதந்தரத்துக்குப் பாதகமில்லாமலே மேலேகண்டபடி வசூல் செய்யலாம்.

13. ரெவினியு இன்ஸ்பெக்டருடைய அந்தஸ்துக்குக்குறைவுபடாத அந்தஸ்துள்ள யாதொரு ரெவினியு உத்தியோகஸ்தருக்கு வாய்மொழியாகவாவது எழுத்துமூலமாகவாவது கடன் வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்து கொள்ள லாம். எழுத்துமூலமாகச் செய்துகொள்வதானால், இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கிற 1-ம் நம்பர் நமூனாப்படியாவது (அதன் அச்சிட்டபிரதிகளைச் சகல கச்சேரிகளிலும் ரெவினியு இன்ஸ்பெக் டர்களிடத்திலும் கட்டணமில்லாமலே பெற்றுக்கொள்ளக்கூடும்), அல்லது அதைப்போன்ற ஒரு நமூனாப்படியாவது விண்ணப்பம் இருக்கவேண்டும் ; அவ்விண்ணப்பத்தை நேரிலாவது கொடுத்துக்கொள்ளலாம் அல்லது தபால்மூலமாகவாவது அனுப்பலாம். வாய்மொழியாக விண்ணப்பஞ்செய்துகொள்வதானால், அந்தப்படி யாருக்கு விண்ணப்பஞ்செய்துகொள்ளப்படு கிறதோ அந்த உத்தியோகஸ்தரானவர் நிர்ணயிக்கப்பட்ட நமூனாவில் அதை எழுதுவித்து, விண்ணப்பதாரரைக்கொண்டு அதில் கையெழுத்து செய்விக்கவேண்டும். எந்தக் கடனுக்காக நிலமாவது வேறே அசையாப்பொருளாவது ஈடாகக் கொடுப்பதாய்ச் சொல்லப்படுகிறதோ அந்தக் கடனுக்காகச் செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு விண்ணப்பத்திலும் - ஈடாகக் கொடு ப்பதாய்ச் சொல்லப்படுகிற சொத்தின்மேல் இன்னவிதமான சிக்குச்சிலுகுகள் இவ்வளவுக்கிரு க்கின்றனவென்பதைப்பற்றி எழுதியிருப்பவை தமக்குப் பூர்த்தியாய்த் தெரிந்தமட்டிலும் தாம் பூர்த்தியாய் நம்பக்கூடிய வரையிலும் வாஸ்தவமானவை யென்றும், ஷை சொத்தின்மேல் வே றே எந்த சிக்குச்சிலுகுகளுமில்லையெனத் தாம் நம்பியிருப்பதாகவும் விண்ணப்பதாரராகிலும் அவருடைய ஜாமீன் தாரராகிலும் ஒரு உறுதிமொழி அந்த விண்ணப்பத்தில் எழுதிக் கையெ ழுத்து போடவேண்டும்.

விண்ணப்பஞ்செய்து கொள்ளும் விதம்.

14. பிரதேச விசாரணையில்லாமல் கடன் கொடுக்கக்கூடாது. விண்ணப்பத்தை வரப் பெற்றுக்கொள்வதன்மேல், ரெவினியு இன்ஸ் பெக்டராவது அவருக்கு மேற்பட்ட உத்தி யோகஸ்தராவது அந்த விண்ணப்பத்தைக்குறித்துத் தாம் விசாரணை நடத்த உத்தேசித்திருப்ப தாகவும், கடன் கொடுக்கக்கூடாதென்று செய்யும் ஆட்சேபனைகளை வரப்பற்றிக்கொண்டு அவைகளைப்பற்றி ஆலோசனை பண்ணத் தாம் சித்தமாயிருப்பதாகவும் கிராமத்தில் தண்டோ ரா மூலமாய்ப் பிரசித்தஞ்செய்யவேண்டும். அப்படி பிரசித்தஞ்செய்த பிறகு கூடிய சீக்கிரத் திலே, அவர் - நிலத்தைப்பார்ட் வையிளண்டுள் விணப்பத்திலு, பதிவுகள் சரியானவைகளா

பிரதேச விசாரணைசெய்ய சகலவிஷயங்களிலும் வேண்டு மென்பது.

என்பதைக்குறித்துக் கிராமத்தில் சுருக்கவகையான விசாரணை செய்து, இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கிற 6-வது நமூனாப்படியாகிலும் அதைப்போன்ற ஒரு நமூனாப்படியாகிலும் ரிபோர்ட் அனுப்புவதோடுகூட, ஆட்சேபனைகள் எவையேனும் வரப்பெற்றிக்கொள்ளப்பட்டிருந்தால் அந்த ஆட்சேபனைகளை அங்கீகரித்தோ அல்லது தள்ளிவிட்டோ செய்திருக்கும் உத்தரவுகளை எழுதிவைக்கவும்வேண்டும். கேட்டுக்கொள்ளும் தொகை 500 ரூபாய்க்கு மேற்படுமாகில், டெப்யுடி தாசில்தாருடைய அந்தஸ்துக்குக் குறைவுபடாத அந்தஸ்துள்ள யாதொரு உத்தியோகஸ்தர் பிரதேசவிசாரணை நடத்தவேண்டும்.

15. விண்ணப்பதாரர் நேரில் ஹாஜராகவேண்டிய அவசியமில்லை ஆனால், எப்போதாவது நேரில் ஹாஜராகவேண்டுமென்றாயினும் தமக்கிஷ்டமிருந்தால் கிரமமாய் அதிகாரங் கொடுக்கப்பெற்ற ஏஜெண்டை ஹாஜர் செய்விக்கவேண்டுமென்றாயினும், இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கிற 4-ம் நம்பர் நமூனாப்படிக்கோ அல்லது அதேமாதிரியான ஏதேனும் ஒரு நமூனாப்படிக்கோ நோட்டீஸ் மூலமாக விண்ணப்பதாரருக்கு உத்தரவுசெய்யலாம்; விண்ணப்பதாரர் அந்தப்படி செய்யாவிட்டால், விண்ணப்பத்தைத் தள்ளிவிடலாம்.

16. விண்ணப்பதாரர் நல்ல எண்ணத்துடன் கேட்கிறாரா என்பதைப்பற்றியும், கடனைத் தீர்க்க அவருக்குச் சக்தியிருக்கிறதாவென்பதைப்பற்றியும், கொடுப்பதாய்ச்சொல்லும் ஜாமீன் போதுமானதா என்பதைப்பற்றியும் நிச்சயமாகத் தெரிந்துகொள்ள முக்கியமாய்க் கவனஞ் செலுத்தவேண்டும். விண்ணப்பதாரர் வாஸ்தவத்தில் சொந்தக்காரராவென்றும், நிலம் சிக்குச்சிலுகுகளில்லாதபடிக்காவது, நில்வருமானபாக்கி ஏறியிராமலாவது, அதற்கு முன்னமே வாங்கியிருக்கும் கடனுக்காகக் கவர்ன்மெண்டாரிடத்தில் ஏற்கெனவே அந்த நிலம் ஈடுகாட்டப்படாமலாவது இருக்கிறதாவென்றும் நிச்சயித்தறிந்து கொள்ளும்பொருட்டு, விருத்திசெய்யப்போகும் நிலங்களில் விண்ணப்பதாரருக்குள்ள சுதந்தரங்களைக்குறித்தும் மேல்ஜாமீனாக நிலங்கள் கொடுப்பதாய்ச் சொல்லப்படுமானால் அவைகளைக்குறித்தும் ஜாக்கிரதையாய் விசாரணை செய்யவேண்டும். மேல் ஜாமீனாக ஜாமீன் தாரர்களால் கொடுப்பதாகச்சொல்லப்படும் நிலங்களின் விஷயத்திலும் மேற்கண்டமாதிரியாகவே விசாரணை செய்யவேண்டும்; அப்படிசெய்யும்போது, ஜாமீன்தாரர் ரெஜிஸ்டரான பட்டாதாரராயிருப்பதோடுகூட நிலத்தின் வாஸ்தவமான சொந்தக்காரராகவு மிருக்கிறாராவென்றும், நிலத்தில் மற்றவர்களோடு கூட்டாக அவருக்குப் பாத்தியதை யிருக்குமானால், அதில் அவருக்குமாத்திரம் உரித்தாயிருக்கிற பாத்தியதை அளவுக்கு அதிகமாக, கூட்டுச்சொந்தக்காரர்களின் எழுத்துமூலமான சம்மதியின்றி அவருடைய பாத்தியதைக்குக் கடனேற்படாமலிருக்கிறதாவென்றும் பார்ப்பதில் கவனமாயிருக்கவேண்டும். நிலமாவது வேறே அசையாப் பொருளாவது நிலவிருத்தி சம்பந்தமான கடன்களைக்குறித்த ஆக்டின்படி மேல் ஜாமீனாகவாகிலும் வியவசாயக்காரர்களுக்குக் கடன் கொடுப்பதைக்குறித்த ஆக்டின்படி ஜாமீனாகவாகிலும் கொடுப்பதாய்ச் சொல்லப்பட்டால், ஜாமீனாகக் கொடுப்பதாய்ச் சொல்லப்படுகிற சொத்தின் விஷயத்தில் சிக்குச்சிலுகு உண்டா இல்லையா என்பதைப்பற்றிய ஸெர்டிபிகேட்டுக்காக இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கிற 7-ம் நம்பர் நமூனாப்படியாயினும் அதைப்போன்ற வேறே யாதொரு நமூனாப்படியாயினும் ரெஜிஸ்ட்ரேஷன் இலாகாதாரரைக் கேட்பது அவசியமென்றோ யுக்தமென்றோ கலெக்டர் அல்லது கடன்கொடுக்க அதிகாரம் பெற்றிருக்கிற வேறே உத்தியோகஸ்தர் அபிப்பிராயப்படுகிற பட்சத்தில், அவர் அப்படியே செய்யலாம்; அந்தப்படி செய்யும்போது, அதற்குண்டான நியாயங்களை எழுதிவைக்கவேண்டும். மற்றப்படிக்கும் விருத்திசெய்யப்போகும் நிலமே ஜாமீனாக அங்கீகரிக்கப்படுகிற சகல விஷயங்களிலும் மேலேகண்டபடி கேட்கவேண்டிய அவசியமில்லை. கடனுக்காகச் செய்துகொண்ட விண்ணப்பத்தின் தேதிக்கு முந்தின பன்னிரண்டு வருஷகாலத்திய தஸ்தவேஜுகளைமாத்திரம் ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீஸுகளில் சோதனைசெய்தால் போதும்.

17. கொதுவை வைத்துக்கொண்டவர்கள் நிலத்தைத் தங்கள் சுவாதீனத்திலுடையவர்களாயிருந்தபோதிலும் நிலவிருத்திக்காகக் கடன்வேண்டு மென்று செய்துகொள்ளும் விண்ணப்பங்கள் சாதாரணமாய் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

18. கடன்வேண்டு மென்று விண்ணப்பஞ் செய்து கொள்ளுகிறவர் பாயக்காரியாயிருந்து, விருத்திசெய்யப்போகிற நிலத்தில் தமக்குண்டாயிருப்பதாகக் கொண்டாடப்படுவதும் வேறொருவருக்கு மாற்றப்படத்தக்கதாயிருப்பதாகச் சொல்லப்படுவதுமான யாதொரு பாத்தியதையையாவது, வேறே யாதொரு தகுந்த ஈட்டையாவது கடனுக்கு ஈடாகவைப்பதாய்ச் சொல்லுவாராகில், கலெக்டராகிலும் கடன் கொடுக்கும் வேறே உத்தியோகஸ்தராகிலும் இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கிற 3-ம் நம்பர் நமூனாப்படியாவது அதைப்போன்ற ஒரு நமூனாப்படியாவது அந்த நிலச்சுவான்தாரருக்கு நேராய் அவ்விண்ணப்பத்தைக் குறித்து ஒரு பிரத்தியேகமான நோட்டீஸ் சேர்ப்பிக்கவேண்டும்; அல்லது, அவருக்கு நேரில் அப்படி நோட்டீஸ் சேர்ப்பிப்பது சாத்தியமாகாவிட்டால், அந்த நோட்டீஸுக்கு ஒரு நகலைக் கலெக்டர் அல்லது மேற்படி வேறே உத்தியோகஸ்தருடைய ஆபீஸிலும், அந்த நிலச்சுவான்தாரர் வசிக்கிற வீட்டிலும் எல்லாருக்கும் தெரியும்படியான ஓரிடத்திலே ஒட்டிவைக்கவேண்டும்; அல்லது, விண்ணப்பஞ்செய்துகொள்ளப்படுகிற டிஸ்ட்ரிக்டில் அவர் வாசஞ்செய்யாவிட்டாலும் அவருடைய வாசஸ்தலம் தெரியாவிட்டாலும், ஷை நிலத்தின் விஷயமாய் அந்த நிலச்சுவான்தாரருக்குப் பிரதேச ஏஜெண்டாய்ப் பிரவர்த்திக்கிற நபருக்கு நோட்டீஸைச் சேர்ப்பிக்கவேண்டும். அந்த நோட்டீஸுக்கு ஒரு பிரதியைப் பிரஸ்தாப நிலத்திலும் கிராமச்சாவடியிலுங்கூட ஒட்டிவைக்கவேண்டும்.

(தொடர்ச்சியுண்டு)

GENERAL NEWS

109 வயதான கிழவி

இம்மாதம் 20௳ ரங்கூனில் 109 வயதுள்ள பர்மக்கார ஸ்திரீ இறந்து விட்டாள். இவள் இறக்கும் வரையில் பூர்ண புத்தி சுவாதீனத்தோடும், தினம் தினம் 5-அடி உயர படிகட்டின்மேலேறி தன்னுடைய வீட்டுக்கு கிரிவிஞயில் டின் நிறைய ஜலம் கொண்டுபோகும் பலத்தோடு மிருந்தனளென அறிய ஆச்சரியப்படுகிறோம். இம்மாது தன் 5 குழந்தைகளை விட்டு இறந்தனளாம். இவள் கடைக்கோட்டி குழந்தையின் வயது 78 (எழுபத்தெட்டு) என அறிகிறோம்.

காஞ்சீபுரம் ரத விபத்து

இம்மீ 19௳ காஞ்சீபுரத்தில் பிரமாண்டமான வரதருடைய தேர் வந்தேமாதர கோஷ்டத்துடன் புறப்பட்டு மாலை 6-மணிக்கு இரட்டை மண்டபம் வந்து சேர்ந்தது. இதற்குமேல் இரதம் இழுக்கக்கூடாதென்று முதலாவது யோஜனை செய்தும், பிறகு ஜனங்கள் எல்லாம் கூடி வடம்பிடித்து இழுத்தார்கள். இரதம் வேகத்தோடு வந்து ஒரு புளிய மரத்தின் மேல் மோதி, ஜனங்கள் அதிகமாய் கூடியிருந்த டிச்சின்மேல் அதை கவியச் செய்தது. உடனே இரதமும் வீதியின் மத்தியில் சுழன்று 7 நபர்மேல் ஏறிவிட்டது. அதில் இருவர் சக்கரத்தில் அகப்பட்டு இறந்து விட்டார்கள்; மற்ற எழுவர் தொடையில் பலத்த காயப்பட்டு ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள்.

வெள்ளி ரவை சுரங்கம்

விஜயநகரத்திலிருந்து ஏறக்குறைய 35-மைல் தூரத்திலுள்ள சங்கம் என்னும் கிராமத்தில், மிஸ்டர் யு. நரசின்ன சாஸ்திரியா ரென்னும் தர்மவானுடைய நிலத்தில் வெள்ளி ரவைச் சுரங்கம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. அதன் உண்மையான விஸ்தீரமும் மதிப்பும் இன்னும் தெரியவில்லை. பின்னும் அது விஷயமாய் பூகர்ப்ப சாஸ்திர ஆராய்ச்சியும் செய்யவில்லை; ஆனபோதிலும் நிலத்து சொந்தக்காரர் அவ்விடத்திய தட்டார்களைக்கொண்டு முரட்டு சோதனை செய்து ஏராளமான வெள்ளியும் பிரகாசம் பொருந்திய கற்களும் யிருக்கக்கண்டார். சுரங்கத்தில் அருமையாய் வேலை செய்வதாக சிலர் தெரிவித்தும் அவர்கள் ஒருவராவது சாஸ்திரியாரால் அங்கீகரிக்கப் படவில்லையாம்.

பணப்பை மாயமான விநோதம்.

கடந்த மார்ச்சுமீ 7௳ சனிக்கிழமை காலை 10-மணியிலிருந்து 11-மணிக்குள்ளாக ரூ. 2000 (வெள்ளி நாணயம்) பம்பாய் பாங்கியிலிருந்து மாயமாய் போய் விட்டது. அதாவது அன்றையதினம் 10-மணிக்கு, பை 1-க்கு ரூ 2000 (வெள்ளி நாணயங்கள் அடங்கிய) 75-பணப்பைகள் கஜானாவிலிருந்து எடுக்கப்பட்டன வாம். இவைகளில் மூன்று பைகள் சரிபார்த்து வரிசையாய் வைப்பதற்காக கொடுக்கப்பட்டது. 70-பைகள் டிராலி வண்டியில் போட்டு கரன்ஸி ஆபீசுக்கு அனுப்பப்பட்டன. மீதி இரண்டுபைகள் இடை போடுபவரிடத்தில் வைக்கப்பட்டிருந்தன. சார்ட்டர் இருவர்கள் வசத்தில் ஷை பைகள் இரண்டும் இருந்தன. அவர்களில் ஒருவன் 10-45-க்கு ஒரு பையை காணோம் என்று தெரிவித்தான். இதுவிஷயமாய் போலீஸார் விசாரணைசெய்து வருகிறார்கள். முடிவு சீக்கிரமே தெரியவரும்.

காலராவை தடுக்கும் நூதனமாதிரி:—பிரான்சு இலாக்காவாகிய மாஹியில் கால்ரா என்னும் கொள்ளை நோயை தடுக்க ஒரு நூதன ஏற்பாட்டை அனுஷ்டித்து வருகிறார்கள். அதாவது உணவு பொருள்களின் தற்கால அதிகவிலை இறங்குகிறவரையில், மிகவும் ஏழ்மையான ஜனங்களுக்கெல்லாம், இனமாய் அன்னம் அளிக்க அதிகாரிகள் தீர்மானித்திருக்கிறார்கள், யாவரும் விரும்பத்தக்க இந்த தர்மவிஷயமாய் பேருபகாரம் செய்திருக்கும் அய்யஞ்சேரி இராஜகுமாரர்களுக்கு மனமார்ந்த வந்தனம் செலுத்தவும் நன்றிபாராட்டவும் ஜனங்கள் கடமைப்பட்டவர்கள். நிற்க, சமயல் செய்தல் ஏழைகளுக்கு பரிமாறுதல் ஆகிய இந்த இரண்டு விஷயங்களில் தக்க மேற்பார்வை இருத்தல் அவசியம். இன்றேல், கொண்ட நோக்கத்திற்கு முற்றும் மாறாக முடியுமென அஞ்சுகின்றோம். ஆதலின் ஷை இரண்டு விஷயங்களிலும் அதிகாரிகள் தக்க கவனம் செலுத்தல் அவசியம்.

Board's Proceedings
and District Circulars.

லாண்ட் ரெவினியூ செட்டில்மெண்ட் விஷயமாய் அப்பீல்கள்.

1899௵ ஆகஸ்டுமீ 19௳ 256 நெ.

ரேவினியூ போர்டாரவர்களின் தீர்மானம்.

ரெவினியூ செட்டில்மெண்டு விஷயத்தைப்பற்றி செய்துகொள்ளும் விண்ணப்பங்களின் கால நிர்ணயதைக்குறித்து சில நாட்களுக்குமுந்தி கேள்விகள் பிறந்திருக்கின்றமையால் அவ் விஷயத்தில் போர்ட்டார் தீர்க்காலோசனை செய்து பின்வரும் உத்தரவுகளைப் பிறப்பிக்கத் தீர்மானம் செய்கிறார்கள்:—

(எ) புதிய ஸர்வே வீதங்கள் அடங்கிய பட்டாக்களை முடிவாய்ப் பட்டுவாடா செய்யுமுன் பட்டாதார்கள் செட்டில்மெண்டு ஆபீசரவர்களிடத்தில் ஆக்ஷேபனைகளையும் மனுக்களையும் தாக்கல்செய்துகொள்ள ஆஸ்பதம் கொடுக்கப்படவேண்டியது. ஒவ்வொரு கிராமத்திற்கும் அந்தந்த கிராமத்தின் பட்டாதார்களிடமிருந்து ஆக்ஷேபனைகளையும் மனுக்களையும் விசாரிக்கும்பொருட்டு தக்க காலமும் ஊரும் நிஷ்கரிசை செய்யவேண்டியது. மேற்படி காலத்தைப்பற்றியும் ஊரைப்பற்றியும் நோட்டீஸ் பத்து நாட்களுக்குக் குறையாமல் முன்னதாக கிராமச்சாவடியில் ஒட்டிவைக்கப்படும். கிராமத்தில் தண்டோரா மூலமாய் பயிரங்கப்படுத்தப்படும். அந்தநதப் பட்டாதாரர்களுக்கு பட்டுவாடா செய்யும்பொருட்டு கணக்கனிடத்தில் கொடுக்கப்படும் ரப் பட்டாக்களிலும் தாக்கல் செய்யப்படவேண்டியது.

அந்தந்தப் பட்டாதாரர்களுக்கு ரப் பட்டாக்களை பட்டுவாடா செய்ய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது. ஆனால் ஊரில் குடியில்லாமலும் ஆஜருமாகாத பட்டாதார்கள், கணக்கனிடமிருந்து அவரவர்களின் ரப் பட்டாக்களைப் பெற்றுக்கொள்ளத் தகுந்த ஏற்பாடுகள் செய்து கொள்ளவேண்டியது.

மேற்சொல்லிய குறித்த காலத்திற்குப் பிறகு, வாய்தா கடந்து தாமதமான விஷயத்தைப்பற்றி சொல்லும் முகாந்தரம் செட்டில்மெண் டாபீசருக்குத் திருப்தியாய் இருந்தாலொழிய தீர்வை வீதங்களைப் பற்றிய ஆக்ஷேபணைகள் செட்டில்மெண்டாபீச ரவர்களால் ஏற்றுக்கொளப்படமாட்டாது.

ரிவினியூ செட்டில்மெண் டாபீசர் அவர்களுடைய உத்தரவின்பேரில் அப்பீல் ரெவினியூ செட்டில்மெண்டு கமிஷனரிடத்தில் தாக்காலாக வேண்டியது. அது மேற்படி உத்தரவின் தேதி முதல் மூன்று மாதத்திற்கு அதிகப்படாமல் தாக்கல் செய்யப்பட வேண்டியது. செட்டில்மெண் டாபீசர் அவர்களிடத்தில் தாக்கல் செசெய்யும் விண்ணப்பத்திற்காவது அப்பீல் விண்ணப்பத்திற்காவது ஸ்டாம்பு ஒட்டவேண்டியதில்லை.

(பி) சர்வே நெம்பர்கள், விஸ்தீரணங்கள், பட்டாதார்களுடைய பெயர்கள், புஞ்சை, நஞ்சை, சர்க்கார் இனம், புறம்போக்கு இவைகள்போலொத்த விஷயங்களில் உண்டாகும் பிழைகள் செட்டில்மெண்டுக்கும் பிந்தி எப்போதாவது சீர்திருத்தும் பொருட்டு ரயத்துகளால் வெளிக்குக் கொண்டுவரப் படலாம்.

விளம்பரம்

இதனால் சகலமானஜனங்களுக்கும் தெரியும்பொருட்டு கனம் ரிவினியூ போர்டாரவர்கள் விளம்பரம் செய்வதாவது,

1898-ஞு ஜுன்மீ 28வயுள்ள சென்னபட்டணம் கெஜட் 2-வது பாகம் 912 (எ)பக்கத்தில் பிரசுரம் செய்யப்பட்டும் 1895ஞு 111-வது ஆக்ட் 20-வது செக்ஷன்படிக்குள்ள ரூல்களுடன் சேர்க்கப்படவேண்டியதுமான பின்வரும் மசோதா ரூல் 1908 ஆகஸ்ட் 1வயிலாவது அதற்கு பிந்தியாவது கவனிக்கப்படும். அதைக்குறித்து ஆட்சேபணை சம்பந்தமான சஜ்ஜெஷன் எல்லாம் அந்த தேதிக்கு முந்தி ரிவினியூ போர்டாபீசில் வந்துசேரும்படி அனுப்பவேண்டும்.

மசோதா ரூல் 57-எ.

ரிவினியூ போர்டாரவர்கள் முன்வரும் ஒவ்வொரு மனு அப்பீல் இவைகளைப்பற்றி செலவு துகை கொடுக்கவும் அல்லது பாக்கிக்காகவும் அல்லது செலவுதுகையே கொடுக்கக்கூடாதென்று உத்திரவு செய்யவும் சகல சுதந்தரமும் போர்டாரவர்களுக்கே இருக்கிறது. மேலும் போர்டார்முன்பாக வரும் அப்பீல் வியாச்சியம் விஷயமாய் அதைப்பற்றி கீழ் கோர்ட்டாரால் செலவு துகையைப்பற்றி செய்யப்படும் யாவற்று உத்திரவையும் மாற்றவோ சீர்திருத்தவோ அல்லது சேர்க்கவோ அதற்குள்ள சுதந்தரத்தையும் ரிவினியூ போர்டாரவர்களே வகிக்கிறார்கள்.

ANIMALS DIED FROM ANTHRAX, &c.

அடப்பான்முதலியநோயினலிறந்துபோகும்பிருணிகளின் உடலைத்தோடுவது முதலியதினலுண்டாகும் அபாயத்தைக்குறித்து.

அடப்பான் முதலிய நோயினலிறந்துபோம் பிருணிகளின் உடலை அழிக்குந் தொழிலாளிகளுக்கு அனேகஞ் சமயங்களில் பலமான தொத்துநோய் நேரிட்டிருக்கிறது. சில சமயங்களில் அந்த நோயினலே மரணமுமுண்டாயிருக்கிறது. இப்படி இந்த நோயினலே மனுஷருக்கு மரணமுண்டாகிறதென்கிற சங்கதி பிரசித்தப் படுத்தவேண்டியது மிகவும் அவசியமே! யாருக்காவது கைமுழுவதிலு மெங்கேயாவது தோலுருய்ந்த காயஞ் சொற்பமா யிருந்தபோதிலும், அப்படிப்பட்டவர்கள் இந்த நோயினு லிறந்துபோயாவது, இந்த நோய் கண்டிருக்கையில் கொல்லப்பட்டாவதிருக்கிற பிருணிகளின் உடலை எவ்வளவேனுந் தொடக்கூடாது. அடப்பான் வியாதினலிறந்துபோகும் பிருணிகளின் உடலைத் தோலுறிக்காமலும் அழிக்காமலும் முழுசாய் பள்ளத்தில் போட்டு அதன்பேரில் சுண்ணும்பு நீறு செவ்வையாப் பரப்பி ஆறுஅடி ஆழத்திற்குக் குறையாமல் மண்மூடிப் புதைக்கவேண்டியது.

இதில் எவ்வளவேனுங் குறைவுபட நடந்தால் இந்தியன் பினல் கோடு 269-வது பிரிவுப்படி தெண்டிக்கப்படத்தக்க குற்றத்தை செய்தவனுக எண்ணப்படுவான். மேலே சொன்ன விதிகளும் சட்டதிட்டங்களும் வெக்கை முதலிய நோய்களிலும் அனுஷ்டித்து வரவேண்டியது.

குறிப்பு.

வெக்கை:—அழல்வெக்கை, சீதவெக்கை, ரெத்தவெக்கை, விஷசுறம், இரத்தசுறம், பெரியநோவு, பிச்சை நோவு, என்றும் பெயர்.

அடப்பான்.—மண்ணீரல் சன்னி அல்லது மண்ணீரல் அடப்பான், கருங்கால், தொண்டையடப்பான் அல்லது கொடும்புண்ணுள்ள தொண்டை, சந்தடப்பான், பிராக்சி அல்லது நீரடப்பான் அடப்பான் காய்ச்சல், படுவன், பிளவை, தெரியன், குன்னல், சந்தடப்பான், குலேமுட்டி, குதிரைவலிப்பு என்றும் பெயர்.

COPY OF HIGH COURT'S ORDER IN CRIMINAL REVISION CASE NO. 27 OF 1890.

மதுராஸ் ஹைகோர்ட்டு 1890-ஞுத்திய கிரிமினல் ரிவிஷன் கேஸ் ந. 27-ல் ஹைக்கோர்ட்டார் அவர்களுடைய ஆர்டர்.

குற்றம் ஏற்பட்டது சரியென்பதற்கு எங்களுக்கு சந்தேகமில்லை. குற்றவாளியின் செய்கை உயிருக்கு அபாயகரமான வியாதியை பரவச்செய்யக்கூடிய தென்பது வாஸ்தவமான விஷயமாக 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டு கண்டுபிடித்திருக்கிறார்; இப்படி கண்டுபிடித்ததின்பேரிலான தீர்மானம் சரியானதுதான். தண்டனை மிகவும் லகுவாயத் தோனுகிறது. இந்த குற்றம் சாதாரணமாய் நடக்கும்பக்ஷத்தில், அதற்கு இன்னும் கடுமையான தண்டனை விதிக்கவேண்டியது.

செந்துருக்கை எண்ணெய்

சோளம் முதலான பயிர்களில் ஆடுமாடுகள் பிரவேசிக்காமலிருப்பதற்காக கரிசல் நிலங்களின் ஓரங்களில் மதுரை, திருநெல்வேலியாகிய தமிழ் ஜில்லாக்களிலும், கடப்பை, அனந்தபுரம், பல்லாரி கர்னூலாகிய தெலுங்கு ஜில்லாக்களிலும் செந்துருக்கை முத்து சாகுபடியாகிறது.

மேற்படி தெலுங்கு ஜில்லாக்களில் செந்துருக்கை முத்தை உமிபோக்கிப் புடைத்தபிறகு செக்கில் ஆட்டி நல்லெண்ணெய் எந்தெந்தகாரியங்களுக்கு உபயோகப்படுகிறதோ அந்தந்த காரியங்களுக்கெல்லாம் உபயோகப்படத்தக்க எண்ணெயை எடுப்பது வழக்கமாயிருக்க, மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களில் கொட்டைமுத்து அதாவது ஆமணக்கு விரையை வேகுவித்து விளக்கெண்ணெய் யெப்படி எடுக்கிறார்களோ அதே விதமாய் விலைமதிப்பேயில்லாத விளக்கெண்ணெய் மாத்திரம் எடுத்து சக்கையை எறிந்துவிடுகிறார்கள்.

தெலுங்கு ஜில்லாக்களில் செந்துருக்கை முத்துப் பிண்ணுக்கை மாடுகளுக்குத் தீனியாகவும் அல்லது எருவாகவும் உபயோகிக்கிறார்கள்.

தெலுங்கு ஜில்லாக்களில் செந்துருக்கை முத்து எண்ணெய் கடைகளில் பட்டணம் பக்காப்படி ஒன்றுக்கு சுமார் 10-அணு வீதமாகவும், பிண்ணுக்கு ரூ. 1-க்கு சென்னை மணங்கு ஒன்று 26 ராத்தல் வீதம் மூன்று அல்லது மூன்றரை மணங்கும் விற்கப்படுகிறது.

மேற்சொன்ன தெலுங்கு, தமிழ் ஜில்லாக்களில் எல்லாம் செந்துருக்கை முத்தை வறுத்து புளி, உப்பு வறுத்த மிளகாய் முதலியவைகளோடு சேர்த்து துகையிலரைக்கிறார்கள். அவுல், பொறி கடலைமுதலானதுகளுடன் வறுத்த செந்துருக்கை முத்தை கலந்து மேற்சொன்ன தெலுங்கு ஜில்லாக்கள் சிலவற்றிலு கடைகளில் விற்கிறார்கள். ஒட்டப்பிடாரம் தாலூகாவில் செந்துருக்கை முத்தை வறுத்து மிளகுபொடி செய்வதில் வாசனை யேற்றுவதற்காக சிலர் உபயோகிக்கிறார்கள்,

நாளது மாதம் 5வ யன்றைக்கு கவர்ன்மெண்டு ஆக்டிங் ஸ்தாவரசாஸ்திரியாகிய ம-ா-ா-ஸ்ரீ சி. கே. சுப்பாராவ் தாட்பத்திரியிலிருந்து வரவழைக்கப்பட்டிருந்த ஒருவிதமான திருகையில் 40-பட்டணம் பக்காப்படி செந்துருக்கைமுத்தை அரைத்ததினல் கிடைத்த பருப்பை ஒட்டப்பிடாரத்துக்கு 3-மைல் தூரத்திலுள்ள பொதிமுத்தூர் கிருமத்தில் தாசில்தார் முதலானவர்கள் முன்பாக செக்கில் ஆட்டி நல்லவாசனையுள்ள நாலரையே அரைக்கால் பக்காபடி எண்ணெயையெடுத்தார்.

அவர் ஒட்டப்பிடாரத்தில் 6வ சாயந்திரம் ஜனங்களை சபைகூட்டி செந்துருக்கைமுத்து எண்ணெயிலே வறுக்கப்பட்ட ஆமவடையைக்கொடுத்தார். நெய்யில் வறுக்கப்பட்டா லெப்படியோ அவ்வளவு ருசியாய் இருந்ததென்று ஜனங்கள் சொன்னார்கள்.

பொதிமுத்தூரில் செந்துருக்கை முத்துப்பிண்ணுக்கை எருதுகள் ஆவலோடு தின்றன.

செந்துருக்கைமுத்தை வேகுவித்து விளக்கெண்ணெய் யெடுத்தால் 8 படி விரைக்கு ஒருபடியெண்ணெய் காண்கிறது: பொதிமுத்தூரில் செக்கில் ஆட்டினதினல் கிடைத்த யெண்ணெய் அந்த அளவில் சற்று குறைந்திருந்தது: ஒருபந்தத்தைகொளுத்தி செக்கினுள்ள் பிண்ணுக்குக்கு சுற்றிலும் அனல் காட்டி வந்திருந்தால் இன்னும் கொஞ்சம் கிடைத்திருக்கும். ஆனால் யெண்ணெய் புகைநாற்றமடையுமென்று அப்படி செய்யவில்லை. மேற்சொன்ன தமிழ் ஜில்லாக்களில் உற்பத்தியாகும் செந்துருக்கை முத்து மேற்படி தெலுங்கு ஜில்லாக்களில் உற்பத்தியாகும் செந்துருக்கை முத்தைவிட சிறியது. அத்தெலுங்கு ஜில்லாக்களிலிருந்து நல்ல விரையை வரவழைத்து தமிழ் ஜில்லாக்களில் விரைத்தால் அதனுலுற்பத்தியாகும் செந்துருக்கை விரையிலிருந்து ஜாஸ்தி யெண்ணெய் கிடைக்கும்.

செந்துருக்கை புண்ணுக்கையும் மற்ற எருக்களையும் கரும்புக்கு அநேக வருஷங்களாகப் போட்டுவந்ததில் செந்துருக்கைப் புண்ணுக்கே அப் பயிருக்கு உத்தமமான எருவென்று இந்தியா கவர்மெண்டாருக்கு ரசாயன சாஸ்திரியாகிய டாக்டர் லதந் துரை சொல்லியிருக்கிறார். செந்துருக்கைபுண்ணுக்கு நெல்லுக்கும் மற்ற நீர்ப்பாய்ச்சலுள்ள பயிர்களுக்குங்கூட நல்ல எருதான்.

மேற்சொன்ன தெலுங்கு ஜில்லாக்களில் செந்துருக்கை முத்தை எண்ணெய் ஆட்டும்செக்கு வேலையை ஒரே எருதுதான் செய்கிறது. வாணியன் ஆஜராயிருக்கிறானே யில்லையோ வென்பதை அறியக்கூடாதபடி எருதுக்குக் கண் மூடப்படுகிறது. நிற்கும்போதெல்லாம் சுளீரென்று அடிபடுவதினல் எருது நிற்கிறதேயில்லை. இதனல் மாட்டை ஒட்ட ஆள் தேவையில்லாமற் போகிறது. வாணியன் செந்துருக்கை விரையை செக்கில் தள்ளிக்கொடுக்கும் வேலையிலேயே யிருந்துகொண்டு மாடு எப்போதாவது நின்றால் அதை அடிக்கிறான். அதோ சாதாரணமாய் நிற்கிறதேயில்லை.

திருகையும், எண்ணெயும், பிண்ணுக்கும் ஒட்டப்பிடாரம் தாலூகாக் கச்சேரியில் வேண்டியவர்கள் பார்பதற்காக வைக்கப்பட்டிருக்கின்றன.

நெல் பயிர்

நடவு நடுதல்

1. இதனது நடவு வேலை கூலிக்காக செய்யும் ஆள்கள் இஷ்டப்படி சாதாரணமாய் விடப்படும் நஞ்சை நில சாகுபடியின் விபரம். அதோ ஒவ்வொரு நஞ்சை நில சொந்தக்காரர்களாகிய மிறுசுதார்களும் ஜாக்கிறதையாய் கவனிக்கவேண்டிய விஷயம். அநேக ஜில்லாக்களில் சுமார் 10 முதல் 30 நாட்களுக்குள் சேர்ந்து ஒரே கும்பலாய் நடப்படுவதை சாதாரணமாய் பார்க்கிறோம். பயிர் பழுத்து பதமாயிருக்கும்போது

அப்பேர்க்கொத்ததை ஒரு கட்டுப் பிடுங்கி பரிசோதித்துப்பார்த்தால் அநேகம் நாற்று பதமாக இடமில்லாமலிருப்பது தெரியவருவதுடன், பழுத்து நெல் கதிருடனிருக்கிற பயிர் சரிவர செழித்ததல்லவென்றும், வேர்களெல்லாம் நெருங்கி ஒன்றுபட்டும், கதிர்கள் சிறிதாயும் தானிய நிறைந்திருக்கவில்லை யென்றும் தெரியவரும்.

2. நாற்றுகளை ஒரே கும்பலாய்ச சேர்த்து நடாமல் தனித்தனியாய் நடுகிற வழக்கமானது எந்த விடத்தில் அது பரீட்சித்துப் பார்க்கப்பட்டதோ அந்தவிடத்தில் அனுகூலமாயிருக்கிறதென்று தீவிரமாய் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். புதிதாய் நடப்பட்ட பயிரானது அவ்வளவு மெலிந்ததுபோல் காணப்படுவதால் அநேகம் பேர் சோதனை செய்வதில் பற்றுதலில்லாதவர்களா யிருக்கிறார்கள். இந்தப்படி போலி குறைவானது இருந்தபோதிலும் தனக்குத் தானாகவே சீக்கிரத்தில் விமோசனமடைகிறது. ஒவ்வொரு நாற்றும் அதின் வேர் ஊன்றி பரவுகிறது இவ்வளவு விஸ்தீரணத்துக்குள்பட்டு என்று ஏற்பட்டு விடுகிறது. அதினால் பயிர் விலாசமாய் பயிராவதுடன் எவ்வளவு முளை செம்மையாய் பயிராகக்கூடுமோ அத்தனை முளைதானிருக்கிறது. இந்த விதமாய் நடப்பட்ட நாற்றில் பழுத்த பயிரைக் கண்ணுற்றுப் பார்த்ததும் அதின் மேன்மை கண்ணாடிபோல் நன்றாய்த்தெரியும். கதிர்கள் பெரிதாகிவிடுவதுடன் அவைகள் கொழுத்து பருமனுயுமிருக்கிறது. நாற்று தனித்தனியாய் நடுவதினால் உண்டாகும் பற்பல அனுகூலங்களில் பின்வரும் அம்சங்கள் செம்மையாய் கவனிக்க அருகமானது.—

1. களை கொத்துவது மிகவும் இலகுவாய்விடுகிறது; ஏனெனில் கும்பலாய் நாற்றுகளைச் சேர்த்து நடுவதில் சாதாரணமாய் உண்டாகும் புல் பூண்டுகள் முளைக்கிறதற்கு ஏதுவில்லாமல் போய்விடுகிறது.

2. இந்த விதமாய் பயிராகி எடுபடும் விதை ஜாதிக்கு ஒத்தே பயிராகும்படி செய்யக்கூடும். இதரவித விதையினால் உண்டான பயிர்களைக் கண்டு பிடித்து அவைகளைப் பிடுங்கி விடக்கூடும். பயிரிடும் மிராசுதார் கொஞ்சம் சிரமம் எடுத்துக்கொண்டால் வயலில் பயிராகிக் கொண்டுவருகிறபோதே மிகவும் திறமாய் செழித்துப் பயிராகியிருப்பதைப் பொறுக்கி அறுத்து; தனியாக அதைத் தாத்தி போரடித்து அதற் கடுத்த வருஷத்துக்கு உபயோகப்பட விதை சேகரித்து வைத்துக்கொள்ளக்கூடும். இந்த விதமாய் விதையின் தினுசை அநேகமாய் அபிவிர்த்தி செய்யலாம். நாற்றுக்களை இத்தனை அடி தூரத்தில் நடவேண்டு மென்பதைப் பயிரிடும் மிராசுதாரே தீர்மானித்துக்கொள்ள வேண்டியது. சுபாவத்திலேயே ஊற்றுள்ள செழிப்பு நிலத்தில் ஊற்று சரியாயில்லாத உபயோகமற்ற நிலத்தில் நடுவதை விட மிக்க ஜாஸ்தி தூரத்தில் நடவேண்டியது. மேலும் அதை நிஷ்கரிஷையாய் தெரிந்து கொள்வது பயிரிடுகிறவரின் பொறுப்புத் தான். அவருக்கு சந்தேகம் ஏதாவது ஜனித்தால் , 6, 8, 10 அங்குல தூரத்தில் கொஞ்ச தாக்கில் நடவு நட்டு இன்ன மாதிரி நிலத்துக்கு எந்த விதம் மிகவும் தகுதியென்று தாமே தெரிந்துகொள்ளலாம்.

நாற்றுகளைத் தனித்தனியாய் நடுவதில் பின்வரும் அம்சங்களை கவனிக்கவேண்டியது:—

1. ஒரு ஏக்கர் நிலத்தில் நடவேண்டியதற்கு போதுமான நாத்துகளுக்கு விதை அளவு எவ்வளவு தேவை யென்பதைப்பற்றி பட்டணம் படி 10-படி விதைக்கு மேலபடாமலிருக்கவேண்டியது; ஆனல் விதை நல்லதாயிருந்தால் அதாவது விதை தகுந்த ஜாதியானதாயும் சரிவர சேகரிக்கப்பட்டதாயு மிருந்தால் மிகவும் குறைவான அளவு போது மானதாயிருக்கலாம்.

2. விதையானது ஸ்வயமாயும் வேறு ஜாதிவிரையுடன் கலக்காமலு மிருக்கவேண்டியது.

3. நாற்றங்காலில் விதையை நெருககமாய் தெளிக்கக்கூடாது.

4. பிடுங்கி நடுவதற்குமுன்னமே நாற்றுகள் தேவைக்குமேல் ஜாஸ்தியாய் முதிராமலிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது.

5. நடவு நடவேண்டிய வயல்களை செம்மையாய் நிரவி மட்டமாயிருக்கும்படி ஜாக்கிறதையாய்ப் பார்ப்பதுடன் நடவு நட்டுமுடிந்ததும் அந்தவயலில் ஆழமாய் தண்ணீர் கட்டாமலிருக்கவேண்டியது.

கால்நடைகளை வைத்து பாதுகாத்து மானேஜ்மெண்ட் செய்தல்

அடிக்கடி கோடைகாலத்தில் கால்நடைகளுக்கு வேண்டிய வைக்கல் முதலியதை தனியாய் பாகித்து சேகரித்து வைத்திருந்தால் கால்நடைகள் தீனியில்லாமல் வருந்தாமலிருக்கும். முதன்மையாய் குடியானவர் தங்களுக்கு விளைந்த வைக்கலை ஒருபோதும் விற்காமல் எப்போதும் ஜாக்கிரதையாய்ப் பார்த்து வரவேண்டியது. தங்கள் மாட்டுப்பட்டியிலிருந்து அந்த வைக்கல் அளவை எரு ரூபமாய் நிலத்துக்குத் திரும்பிச்சேர்த்துவிட வேண்டியது.

தங்கள் கால்நடைகளுக்குத் தேவைக்குமேல் அதிகவைக்கலிருந்தால் அடுத்தகால பயிர் இன்னபடி என்ற விபரம் தெரிகிறவரையில் அதை கட்டிக்கடையாய் வைத்திருக்கவேண்டும். ; போதுமான வைக்கலுக்கு ஜாஸ்தியிருப்பதை மாடுகளுக்குப் படுக்கைக்காக உபயோகப்படுத்தி அதையும் எருவாக ஆக்கிவிட வேண்டும். குடியானவர் தான் ஒருவித தானியத்துக்குமேல் பயிரிட்டால் கால்நடைகள் தீனியுடன் வைக்கலை சேர்த்து விடவேண்டும். உதாரணமாக கொஞ்சம் மேய்ச்சலுக்கு இடமிருக்கும்போது முதலில் தன்னிடமிருக்கும் சோளத் தட்டை செலவழித்து விட்டு கோடை அருந்தல் காலத்தில் கம்பந் தட்டைத் தவிற கால்நடைகளுக்கு வேறொன்று மில்லாமல் தவிக்கக்கூடாது.

இரண்டு தட்டையையும் சேர்த்து ஒன்றைத்தள்ளி மற்றொன்றை கால்நடைகள் தங்காதிருக்கும்படி அவ்வளவு ஜாக்கிரதையாய் இரண்டையும் கலந்து போடவேண்டியது. அதைச்செய்யும் சிரேஷ்டமான விதமாவது அந்த தட்டைகளை நன்றாய் அடித்துப்போடவேண்டியது. குடியானவருக்கு ஏராளமான கால்

நடைகளிருந்தால் ஒரு வைக்கல் கத்திரிக்கோல் வாங்கி ஒரு நாளைக்கு வேண்டியதைக் கத்தரித்து வைத்தால் சிட்டங்கட்டிவரும். ஆறு அல்லது எட்டு கால்நடைகளுக்கு மேலில்லாத பட்சத்தில் சாதாரணமாய் வைக்கலை கருக்கருவாளால் நறுக்கி உபயோகப்படுத்தினால் போதுமானது. இதேமாதிரியாய் தட்டைகள் இலை முதலியதை ஒன்றாய்ச் சேர்த்து,கால்நடைகள் ஒன்றைத் தள்ளி மற்றதைமட்டும் விரும்பா திருக்கும்படி போடவேண்டியது. கால்நடைகளுக்கு வைக்கும் எத்தவித தீனியும ஒரு தொட்டி முதலிய பாத்திரத்தில் அதின்காலால் மிதிக்காமலிருக்கும்படி போடவேண்டியது. கால்நடைகள் தீனியை தன்னிஷ்டத்துக்கு தகுந்தபடி பொறுக்கித் திங்கும் சுபாவமுடையது. அதிகப் பசியாயிருக்கும்போது கீழேபட்டு மண்ணில் பிரண்டு கெட்டுப்போன தீனியை எடுக்காது. இது முக்கியமாய் தீனி அருந்தல் காலத்தில் கவனிக்கவேண்டியது. இப்படிச் செய்வதனல் வேண்டிய காலத்துக்கு தட்டில்லாமலும் கால்நடைகள் தீனியற்று அவஸ்தைப் படாமலு மிருக்கும்படிச் செய்யும்.

ஒரு ஜோடி எருது மாடாயிருந்து ஒன்றை மற்று ஒன்று நன்றாய்ப் பழகித் தெரிந்தாலொழிய தீனி போடும்போதெல்லாம் கால்நடைகளைக் கட்டித்தான் தீனி போடவேண்டும். இப்படிச் செய்யாதவரையில், ஒரு கிடையில் ஒரு கால்நடை தலைமையா யிருந்து, மீதி பயந்த கால்நடைகளுக்கு வேண்டிய பாகம் தீனிசேர்க்காமலும் தனக்கு வேண்டியதற்குமேல் அதிகமாய்த் தின்றும், தன் வயிற்றை ரொப்பிக்கொள்ளும். பால்கறக்கும் பசுகளுக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு பசும் புல் போடவேண்டும். குடியானவன் தன் கிடையின் கன்றுகளை விருத்தியம்சத்துக்குக் கொண்டுவரவேண்டுமானல் இதை முக்கியமாய் கவனிக்கவேண்டும். பசும்புல் கிடைக்காதபட்சத்தில் அந்தக்கறவை பசுக்களுக்கு அரிசித்தவிடும் எள்ளுபுண்ணுக்கும் சேர்த்து கஞ்சியாய்க் கொடுக்கவேண்டும். பசுக்கள் நன்றாய் பால்கறக்க வேண்மானல் அவைகளுக்கு சமம்பலான தீனி போடவேண்டும். கன்றுகள் நன்றாய் செழித்து வளர வேண்டுமானல் தாராளமாய் பசுவினிடத்தில் பால் குடிக்கும்படி விடவேண்டும்.

ஒரு குடியானவர் தனக்கு லாபம் வேண்டுமென்று கருதினல் தன் கிணற்றுப் பாய்ச்சலில் கால்நடை மேய்ச்சலுக்காக சொல்ப விஸ்தீரணம் புல் பயிரிட்டு அந்தப் புல்லை பொலி கிடாக்களுக்கு விடவேண்டியது. கன்றுகள் அநேகமாய் நன்றாய் வளருவதற்கு ஏதுவில்லாமல் குடியானவர்கள் அஜாக்கிரதையா யிருந்துவருகிறார்கள். அதனல் உழவுமாடுகள் தேவையான போது வலை கொடுத்து, மாடுகளை ஏர் உழ வாங்கவேண்டியதா யிருக்கிறது. கன்றுகள் 6-வாரத்துக்கு மேல்பட்ட வயததானவுடன் அவைகளுக்கு நல்ல பசும்புல் மேய்ச்சல் கிடைக்கும்படி செய்யவேண்டும், அல்லது பசும்புல் அறுத்து அவைகளுக்கு கொண்டுவந்துபோட வேண்டும். சில பசுமாடுகளின் பாலைக்கறந்து வீட்டு உபயோகத்துக்கு எடுத்துக்கொண்டால், அவைகளின் கன்றுகளுக்கு சுளுவில் ஜீரணஸ்தியாகும்படியான எள்ளு புண்ணுக்கு சேர்த்து கஞ்சி கொடுத்து வரவும். பசுமாடு சரியான பால் சுரவை யில்லாதபோதும் கன்றுக்கு வேண்டிய பால் குடிக்க போதாமலிருக்கும்போதும், அதேமாதிரி கஞ்சி கொடுத்து வரவேண்டியது.

தன்னுடைய கால்நடைகளை தானே வளர்த்து விருத்தியாம்சம் செய்யும் ஒரு குடியானவர் மிகவும் சிலாக்கியமான கறவை மாடுகளின் கிடாரிக் கன்றுகளைப்பொறுக்கி தனியாய் வைக்கவேண்டியது. பால் கறவை மட்டாயுள்ளதும் பலஹீனமுமான பசுக்களின் கன்றுகளை விற்றுவிட வேண்டியது. ஏனெனில், அப்பேர்க்கொத்தது வளர்ந்து பெரிதானபோதும் சொல்ப கறவையுடன் பலஹீனமுள்ளதாயிருக்கும்.

ஒவ்வொரு குடியானவரும் தன்னிடமிருக்கும் ஒவ்வொரு கால்நடையின் குணுபங்கத்தைத் திரநன்றாய் அறிந்திருக்க வேண்டியதுடன் அந்தக் கால்நடைகளுக்கு எதில் பிரியமோ எதில் பிரியமில்லையோ அதையும் தெரிந்துகொள்ளவேண்டியது.

நஞ்சை நிலங்களுக்கு தழை முதலிய பச்சைபூண்டு எரு இடுதல்

இராஜதானி முழுதும் சாதாரணமாய் எங்கும் எருவுக்கென்றே தானியம் அவிரி வகையறு பயிரிடுவதினலுண்டாகும் நன்மை குடியானவர்களுக்குள் நன்றாய் தெரிந்த விஷயம். ஆனல் எருவுக்கென்றே பயிரிட்ட பயிரின லுண்டாகும் நன்மையானது அநேகருக்குத் தெரியாது. அநேக மிராசுதார்கள் தங்கள் நஞ்சை நிலத்தில் பனிப்பயிறுகப் பயிரிடுகிறார்கள்; ஆனல் அது எருவுக்காகவென்று உழப்படுவது அபூர்வமாயிருக்கிறது. பயிர்முழுவதையும் வெட்டி, தானியம்சேகரிக்க வேண்டி கொண்டுபோகிறார்கள். பின்னும் அநேக மிராசுதார்கள் கொளிஞ்சி, ஆவாரம், முதலிய தழைகளைச் சேகரித்து நஞ்சை நிலத்தில் போட்டு மிதிக்கிறார்கள். ஆனல் அதையே நஞ்சை நிலத்தில் பயிரிட்டு அதை நிலத்தில் உழவுடன் உழுது விடுவதினல் செலவு மட்டாயும் அனுகூலம் ஜாஸ்தியாயு மிருப்பதென்று அநேகம்பேருக்குத் தெரியாது.ஒரு குடியானவருக்கு இன்ன விதமான எரு வேண்டிய அனுகூலத்தை விளைவிக்குமென்பதைப்பற்றி உறுதியான அபிப்பிராயம் கூறசாத்தியப்படாது. பூமியின் ஸ்பாவம், பருவம், மழை முதலியதின்பேரில் அவ்வளவும் பொருத்தது; ஆனல் பின்னல் விவரித்திருக்கும் அம்சங்கள் மிக்க உபயோகமானவை.—

மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் மாங்காய்க்காக மழை வழக்கமாய்பொழியும் ஜில்லாக்களில் தென்மேற்கு காற்று வாடை வீசும்பொழுது நடவு ஆரம்பிக்கிறது. அதற்கு மத்தியிலிருக்கும் இரண்டு மாதங்களில மழை தண்ணீரின் ஒத்தாசையை முன்னிட்டுமட்டுமே சீக்கிரம் பயிருகும் பயிர் ஒன்றை விதைத்து அந்தப் பயிரை உழவுடன் உழ சவுகரியப்படும். அநேகமாக சணல் பனிப்பயிறு இவைகள் ஏராளமாய் தழை கொடுத்து அதினல் அதிக அனுகூலமிருப்பதைக் காட்டும். பெய்த மழை சணல் பனிப்பயறு பயிரிட போதுமானதாயில்லாத பட்சத்தில் அதற்கு பதிலாய் கொள்ளு விதைக்கலாம் (கொள்ளுப் பயிர் அவ்வளவு தழை கொடுக்காமற் போனபோதிலும்) சில ஜில்லாக்களில் வட கிழக்கு வாடை ஆரம்பமாய் குளங்கள் தண்ணீர் நிரம்பாத வரையில் நடவு ஆரம்பிக்கிறதில்லை. அம்மாதிரி இடங்களில் மொச்சை முதலிய பயிர் எருவுக்காக பயிரிடலாம். நெல் அறுப்பு அறுத்த உடன்காலில் தரையில் ஈரசைப்பு இருக்கும்போதே இவைகளை விதைத்து உழ

லாம்; அல்லது மாங்காய்க்காக பெய்யும் மழைத் தண்ணீர் உதவியை வைத்துக்கொண்டு விதைக்கலாம்.

இத்தியாதி நிபந்தனைப்படி சில பயிர் பயிரிடலாம்; அது உழப்படுகிற வரையில் பச்சையாயிருக்கும். நீரோட்டம் சரியாயிருக்கும் கொளிஞ்சி எருவுக்கு பொறுத்தமானது. ஜாஸ்தி கனமான பூமியில் நீரோட்டம் செம்மையாயிருந்தால் அவிரிப் பயிர் எருவுக்காக பயிரிடுவது உசிதமாகும். அவ்வளவு செம்மையாய் நீரோட்டமில்லாத பூமிக்கு பேயாவாரை எருவுக்காக பயிரிடலாம்.

ஆவாரை உசித்த காரை போலொத்த செடிகள் அக்கம்பக்கத்தில் தானே படுமுதலாய் பயிராயிருந்தால், அந்த நிலத்தில் எருவுக்காக பயிரிடலாம். இந்த விதை விதைத்து முளைக்க சொல்ப ஈரந்தான் சாதாரணமாயிருப்பதால் அது நன்றாயப் பூமியில் வேர் ஊன்றுவதை முன்னிட்டு விதைப்பதற்கு முந்தி நிலத்தை செம்மையாய் உழுது கடைசி உழவில் அந்த விதைகள் மூடப்பட்டுப் போகவேண்டும். நஞ்சை நிலங்கள் கோடை காலத்தில் அறுப்பானதும் கால்நடை மேய் உபயோகத்துக்கு வேண்டுமென்று அடிக்கடி ஆட்சேபனை சொல்லுகிறார்கள். ஆனால் தழை எருவுக்கு உபயோகப்படுத்தும் விதத்தில் அந்த ஆட்சேபனை கவனிக்கவேண்டிய தவசியமல்ல. மேற்சொன்ன பயிர்களின் தழையை கால் நடைகள் தின்காததினால் அந்தப் பயிரிருக்கும்போதே நஞ்சை நிலத்தில் கால்நடை மேயலாம். உண்மையில் அந்தப் பயிரின் சொல்ப நிழலும் ஜாஸ்தி பயிரும் சேர்ந்து மேய்ச்சலை ரொம்ப நல்லதாயும் சிலாக்கியமாயும் செய்யும். நஞ்சை நிலங்களுக்கு இந்த மாதிரி எருபோடுவதை பரீட்சித்துப் பார்த்த குடியானவர்களெல்லாம் ஆரம்பத்திலேயே அனுகூலமிருப்பது தெரிந்து கொள்ளக் கூடாதவர்களாயிருக்கிறார்கள். சொல்ப அபஜயத்தினால் அவர்கள் மன தளர்ச்சி யடையாமல் தாங்கள் செய்யும் சாகுபடியின் பிறகு இன்னதென்று தெரியவரும் வரையில் அல்லது அந்த எருப்பயிர் அந்த நிலத்துக்கு அனுபோகத்தில் ஏற்றதென்று தெரியவரும் வரையில் எருவுக்காக அந்தப் பயிர் செய்ய வேண்டும்.

விதை பொறுக்கி யெடுக்கும் விதம்.

இந்த தேசத்தில் விதைகளைப் பொறுக்கியெடுப்பதினால் உண்டாகும் அனுகூலம் எவ்வளவு தூரம் தெரிந்து கொள்ளவேண்டுமோ அவ்வளவு தூரம் ஜனங்கள் தெரிந்து கொள்ளவில்லை. செலவன்னியில் அவைகள் நடைமுதலுக்குக் கொண்டுவரக் கூடியதானதால் அதின் குணங்கள் பிரபலமாய்த் தெரிந்து கொள்ளவேண்டியது ஆவசியகரமாயிருக்கிறது. சொல்ப ஜாக்கிரதையும் சிரமமும் எடுத்துக்கொள்ள வேண்டியதுதான் தேவை. அது அனுபோகத்திற்கு ஜாஸ்தியாய் வராதபோனபோதிலும் ஒவ்வொரு குடியானவருக்கும் அதின் அம்சம் சாதாரணமாய் தெரியக் கூடியதுதான். குடியானவரின் ஏழ்மைத் தனத்தினால் விதைகள் விலைக்கு வாங்கும்படி நேரிட்டாலும் அப்படி விதை விலைக்கு வாங்குவது மிக்க விசனிக்கத் தக்கதே.

அப்படி விதைகளை தெரிந்து எடுப்பது சுலபமானது என்பதற்குள்ள காரணங்கள் இன்னதென்று சற்று கவனிப்போம்! முதலில் விதைக்கிற விதையை ஒத்ததான தானியம் கிடைக்கும். அதாவது, நிலத்தில் சோளம் விதை விதைத்தால் அந்த விதையைப் போலத்தான் அதின் கண்டுமுதல் விதையு மிருக்குமென்பது தெரிந்த விஷயமே. இப்போர்க்கொத்த எல்லா பயிரும் ஒன்றோடொன்று ஒத்தில்லாமலும் விதைத்த விதை மாதிரி இல்லாமலுமிருப்பதுடன் தப்பை தழை முதலியதின் கனம் நீளம் கதிர் இவைகளில் வித்தியாசமிருப்பதையும் புத்தி கூர்மையுள்ள ஒவ்வொரு குடியானவருக்கும் வியக்தமாய்த் தெரியும். இந்த மாதிரி வித்தியாசங்களினாலிருக்கும் அனுகூலத்தின் மகிமையை வியவசாயம் செய்கிறவர்களெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

விதையின் பருமனைமட்டும் பார்த்து அநேகமாய் விதையைத் தெரிந்து பொறுக்குகிறார்கள். அது செழிப்பான வளர்ச்சியைப் பொருத்தது. அந்தமாதிரி விதையை விதைப்பதினால் பருமன் பெரிதாயுள்ள விதை கண்டுமுதலாவது உண்மை யென்றாலும், விதையின் அளவு குணம் இரண்டு மிருக்கும்படி நாம் பார்க்கவேண்டியது. நம்முடைய கருத்து நல்ல மாதிரியான விதையையே நாடியிருக்கவேண்டும் அதாவது கண்டுமுதல் ஜாஸ்தியாக யிருக்கவேணுமென்பதுடன் விதை சரியாய் பழுத்து செழித்து வளர்ந்ததாயு மிருக்கவேண்டும். உதாரணமாக ஒரு வயலிலுள்ள நெல், பருத்தி இவைகள் உடனே பழுத்து விரைக்கு லாயக்காகிறதில்லை யென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. ஆனால் சில பயிர் சீக்கிரததில் பழுத்துவிடுகிறதென்றும் வேறு சிலது நாள் கழித்து பழுக்கிறதென்றும் நமக்குத் தெரியும்; விடாமல் விதையைப் பொறுக்கியெடுத்து வரும் பக்ஷத்தில் ஒரு குறிப்பிட்ட பயிரின் விரைமாதிரியே கண்டு முதலாகும்படி செய்யக்கூடும்.

இந்த விதத்தை அனுஷ்டித்ததினால் 8-மாதப் பயிராகி திருநெல்வேலி காடைக்கடித்தான் என்னும் நெல்லும் இரண்டு மாதத்திய கார் சம்பா நெல்லும் உண்டாயிற்றென்பது நிச்சயமானது. அதேமாதிரியாக சோளக்கொண்டையின் நுனியில் வெற்று பூவாயிருப்பதையும் சில பூவில் அன்னம் பிடிக்காமலும் சிலதில் பூ சொல்பமாயிருப்பதையும் பார்த்திருக்கிறோம். அன்னம் பிடிக்காமல் வெற்று பூவாய் கண்டு முதலாவது நஷ்டமென்பது நன்றாய்த் தெரியும். ஆகையால், கடைசியாய் சொன்னமாதிரி விதை கிடைக்கவேணுமென்று நாம் முயற்சிக்கவேண்டும். முடிவாய் எந்தமாதிரி விதை வேணுமென்றாலும், பொறுக்கிற செடிகள் ஒரே மாதிரியா யிருக்கும்படி பார்ப்பது ரொம்ப அவசியகரமானது. தானியம் பருத்தி இவைகளின் விதைகள் ஒன்றோடொன்று ரொம்ப ஒத்துமையா யிருக்கும்படியானதாகப் பார்த்து நாம் பொறுக்க வேண்டும். அப்படிப்பட்ட விதைகள் ஒத்துமையில்லாமல் வித்தியாசமாயிருக்கும் விதைகளைப் பார்க்க ஜாஸ்தி விலைக்குப் போகும்.

பின் சோல்லியிருப்பது ஒரு சவுகரியமான விதம்

பஞ்சுத்துணித் துண்டுகளை அநேகம் எடுத்துக்கொண்டு பயிரிருக்கும் வயலுக்குள் நுழைந்து பருமன் செழிப்பு இவைகளினால் நமக்கு ஸ்திரமென்று தோற்றும் செடிகளை குறிக்கவேண்டும். வயல் முழுதும் பூராசுற்றிப்பார்த்த பிறகு ரொம்ப சிலாக்கியமானதைத் தவிர்த்து, (?) மற்றதை தள்ளிவிடவேண்டியது. கடைசியாய் அந்த வயலில் பயிராயிருக்கும் செடிகளில் மகா திரமானதாய் சுமார் 12 செடிகளை விலக்கி நிறுத்த வேண்டும். இவைகளின் விதையை தனியாய் வைத்து அடுத்தசாலில் விதைக்கு உதவுகிறப்போல் வைத்து வைக்கவேண்டும். பருத்திச்செடிகளில் ரொம்ப திறமான காய்களின் அடியில் சின்ன துணிப்பைகள் கட்டி பொருக்கி முடிவாகிற வரையில் அந்தத் துணிப்பைடி கொடலைகள் அப்படியே யிருக்கவேண்டும். அப்படி மிகவும் சிரமப்பட்டு விதையைப்பொறுக்கியான பிறகு அதை அதிக ஜாக்கிரதையுடன் விதைக்கோட்டையாக கட்டிவைக்க வேண்டும்.—*Trichi Dt. Gazette Circular.*

THE INDIAN LAW GAZETTE

இந்திய சட்ட கெஜட்

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்

வால்யம் 3] சென்னப்பட்டணம், 1908ௗ ஜூன் மாதம் [பாகம். 6

TINNEVELLY SEDITION CASE

P. R. C. I. of 1908.

King Emperor *v.* Chidambaram Pillai

திருநல்வேலி இராஜ நிந்தனை கேஸ்.

மகாராஜா சக்கிரவர்த்தி *v.* சிதம்பரம் பிள்ளை.

(முன்தொடர்ச்சி.)

6. குற்றவாளி செய்த பிரசங்கங்களில் தூத்துக்குடியில் மார்ச்சு 3-ந்தேதியும், திருநல்வேலியில் 9-ந்தேதியும் செய்யப்பட்டவைகளே மிகவும் முக்கியமானவைகளாகும். பிராசிக்கியூஷன் தரப்பு 11-வது 21-வது சாக்ஷியங்களையும், இ என்றும் ஆர் என்றும் குறிப்பிட்ட எக்சிபிட்டுகளையும் கவனித்தால் குற்றவாளி ஷை மார்ச்சு மாதம் பிரசங்கத்தில்—“கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் நம்மிடம் குற்றங்களையே கண்டுபிடிக்க தங்களாலான வரை முயற்சி செய்கின்றனர். எழுந்து நின்றாலும் அதை யொரு குற்றமாக எடுத்து கொள்ளுகிறார்கள்.........நாம் சுவராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க விரும்புகிறோம்.........இங்கிட்டியாராவது சுவராஜ்ஜியத்தைத் தவிர அன்னிய அரசாக்ஷியை விரும்புகிறவர்களிருக்கிறார்களா?.........கடந்த நூறு வருஷங்களாக ஐரோப்பியர்கள்மீது கொண்டுவரப்பட்ட அனேக கேசுகளில் ஒன்றிலாவது அவர்களுக்கு தண்டனை விதிக்கவில்லை......அவர்கள்மேல் ஏற்படும் கொலை முதலிய வைகளெல்லாம் விசாரிக்கப்பட்டு சொற்ப வெறுங்காவலும், அபராதமுமாகவே முடிந்தன. சுதேசிகள் ஐரோப்பியர்களை நம்புகிறதில்லை; ஏனெனில் சுதேசிகள் ஐரோப்பியர்களிடத்தில் எவ்வளவு விசுவாச முள்ளவர்களாக விருப்பினும், அவர்கள் நம்மை நம்புகிறதில்லை. ஒரு ஐரோப்பியனுடைய வார்த்தையானது தூத்துக்குடியில் 35000 சுதேசிகளுடைய வார்த்தைகளுக்கு மேலாக மதிக்கப்பட்டிருப்பதால், அதிகாரிகள் உங்களுக்கு உதவி செய்வார்களென நம்பாதேயுங்கள்...நாம் சுவராஜ்ஜியத்தை அடையும்வரை நாம் நீதிநியாமென்பதை அடையப்பெறோம். நம்மை க்ஷீணத்திற்கு கொண்டுவந்த அன்னிய நாட்டினர் இன்னமும் குழப்பங்கள் செய்துவருகின்றனர். சுதேசிகளைத் தவிற வேறொருவர் அதாவது அன்னிய நாட்டினர் நமக்கு உதவி புரிவார்களென நம்பாதேயுங்கள்....சுவராஜ்ஜியம் நமக்கு கிடைக்கப்பெறுமானால், தற்கால பூமிக்குரியவர்களான பரவர்களே முக்கியமானவர்களாக கருதப்படுவார்கள்,”—எனக்கூறியுள்ளார். இந்த பிரசங்கமானது விசேஷமாய் யந்திரசாலையினட்களும், கூலிகளும், பரவர்களுமே ஈராயிரம் பேர்களுக்கு அதிகமாய் சேர்ந்திருந்த கூட்டத்தாருக்கு செய்யப்பட்டது.

(7) பிராசிக்கியூஷன் தரப்பு 2-வது 3-வது சாக்ஷியங்களையும், பி-என்றும், பி-யில் 2 என்றும் குறிப்பிட்ட எக்ஸிபிட்டுகளையும் கவனித்தால், மார்ச்சு மாதம் 9ௗ திருநெல்வேலியில் குற்றவாளி—“ பிரக்கியாதியும் அவதார மூர்த்தியுமான மிஸ்டர் பாலவர்களது விடுதலையின் காரணமாக கொண்டாட இங்கிட்டு கூடியி

ருக்கிறோம்......மிஸ்டர் பாலவர்களது முக்கியமான போதனையெல்லாம் இந்தியாவில் சுவராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கும்படியாகவே! அன்னிய அரசாக்ஷியில் இருக்கும்வரை நாம் முன்னேற போகிறதில்லை. அன்னியர்களுக்கு நாம் அடிமைகளாய் இருக்கும்வரை கஷ்டங்களுக்கே உள்ளாகியிருப்போம்...நீங்கள் அன்னிய நாட்டு பொருட்களை விலக்குவீர்களானால் மூன்று மாதங்களில சுவராஜ்ஜியத்தை அடைந்து விடுவீர்கள். முப்பத்தி மூன்று கோடி ஜனங்களாயிருக்கும் நாம், மூன்றுகோடி ஜனங்களுக்கு அடிமைகளாய் கிடப்பது ஆச்சரியமாகவிருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் ஆறுயிரம் மைல் தூரத்தி லிருக்கும்படியான ஒரு நாட்டிற்கு நூற்றெண்பதுகோடி ரூபாய்களை அனுப்பிக்கொண்டிருப்பதால், நாம் நாளுக்கு நாள் க்ஷீணத்திற்கு வருகிறோம். இப்படி செய்துவந்தால் நமது நாடு எப்படி கடைதேறும்? ஒரு காலத்தில் நமது நாடு உன்னத ஸ்தானத்தி லிருந்தது. தற்போது எவ்வளவோ தாழ்ந்துவிட்டது. இப்போது இந்த நாடு முன்னேற காலம் வந்துவிட்டது. நாம் எல்லோரும் ஒன்றுக கூடியிருக்கிறதை தெரிந்த தூத்துக்குடி வெள்ளைக்காரர்களுக்கு பயம் விழுந்திருக்கிறது,"— என்றனர். இந்த பிரசங்கமானது திருநெல்வேலி ஆற்றங்கரையில் விசேஷமாய் கீழ்த்தரமானவர்களும் பள்ளிக்கூடப்பிள்ளைகளுமாய் சுமார் 400 பேர்கள் சேர்ந்திருந்த கூட்டத்தாருக்கு செய்யப்பட்டது.

இந்நாடானது அன்னிய அரசாக்ஷியினின்று நீக்கப்பட வேண்டுமென்றும், அந்நிய அரசாக்ஷியானது இந்நாட்டின் உரிமை சிலாக்கியங்களுக்கு இடைஞ்சலாகவிருக்கிற தென்றும், இங்கிலீஷ் உத்தியோகஸ்தர்களிடமிருந்து நீதியென்பதே கிடைக்கப் பெறுகிறதில்லையென்றும், அவர்கள் தங்கள் சொந்த நாட்டினர்களுக்கு தாக்ஷிண்ணியம் புரிகின்றனர்களே யொழிய சுதேசிகளை நம்பப் போகிறதில்லை யென்றும், சுவராஜ்ஜியம் கிடைக்கப் பெற்று ஐரோப்பியர்கள் வெளியே துரத்தப்பட்டுவிடின், எல்லாம் சௌக்கியமாக விருக்குமென்றும் ஆகிய இக்கருத்துகளைத்தான் பொதுஜன உணர்ச்சிக்கு கொண்டுவர வேண்டுமென்கிற எண்ணம் குற்றவாளி பூரா கொண்டிருந்தா ரென்பதற்கு அவரது மற்றைய பிரசங்கங்கள் பின்னும் நிச்சயப்படுத்துகின்றன. இதற்கு அத்தாக்ஷியாக பிராசிகியூஷன் தரப்பு 11-வது சாக்ஷியத்தையும், ஸி என்று குறிப்பிட்ட எக்ஸிபிட்டையும் கவனித்தால் பிப்பரவரி மாதம் 19உயில் குற்றவாளியானவர்,— 'இந்தியாவிலுள்ள 33 கோடி ஜனங்களில் வருஷாவருஷம் 30 லக்ஷம் பேர் பசியினாலும், பஞ்சத்தினாலும் சாகின்றனர். இந்தியாவில் 50 ஆயிரம் ஐரோப்பியர்களிருக்கின்றனர். அடுத்தவருஷம் பசியினால் உண்மையாக சாகப்போகிற 30 லக்ஷம் பேர்களும், இப்பொழுதே சாக தீர்மானஞ்செய்து கொள்வார்களானால், அந்த 50 ஆயிரம் ஐரோப்பியர்களும் அவர்களுக்கு பெருந்தொகையாக மாட்டாது'' என்று பேசியிருக்கின்றார். இது பசியால் வருந்தும் ஜனங்களை ஐரோப்பியர் மேல்விழுந்து, நாசமாக்கும் படித்தூண்டும் சாதனையேயன்றி மற்றபடிவேறுவிதமாய் என்னால் அர்த்தஞ் செய்யமுடியாது. பிராசிகியூஷன் தரப்பு 11-வது, 14-வது சாக்ஷியங்களையும், சி-யில் 1, என்றும், ஜீ என்றும் குறிப்பிட்ட யக்ஸிபிட்டுகளையும் கவனித்தால், பிப்ரவரி மாதம் 23உயில் குற்றவாளியானவர்,—''இந்தியாவில் 50 ஆயிரம் ஐரோப்பியர்களிருக்கின்றனர். அவர்களை பலவந்தமாக ஒட்டிவிடுவது ஒரு கஷ்டமான காரியமல்ல; ஆனால் இந்தியர்கள் பலவந்தம் செய்யக்கூடாது. அதே சமயத்தில் இந்தியர்கள் ஐரோப்பியர்களுக்கு 'பயப்படக்கூடாது,'' என பேசியிருக்கின்றனர். இப்பிரசங்கத்தின் இடையில் "......ஆனால், இந்தியர்கள் பலவந்தம் செய்யக்கூடாது," என பேசியிருப்பது, சுத்த கபடமான வார்த்தைகளேயென எனக்குப் படுகிறது. குற்றவாளி பலவந்தம் செய்யும்படி ஜனங்களை உண்மையில் தூண்டாதவரா யிருந்தால், "ஐரோப்பியர்களை பலவந்தமாக ஒட்டிவிடுவது ஒரு கஷ்டமான காரியமல்ல,'' என்று சொல்ல மனந்துணிந்திருக்க மாட்டார். பி-யில் 2, என்று குறிப்பிட்ட யக்ஸிபிட்படி மார்ச்சு மாதம் 11தேதியில் குற்றவாளியானவர் சுப்பிரமணியசிவா எடுத்து பேசிய ஒரு விஷயத்தை எடுத்துக்காட்டி, "ஒரு சிறு பிள்ளையின் தலையின் மீது பலகை யொன்றை வைத்து அதன்மேல் ஜனங்கள் குந்துவார்களானல், குழந்தையாவது சாக வேண்டும்; அல்லது பலகையாவது ஒடிந்துவிடவேண்டும். பிள்ளை பல சாலியானல் பலகை மீதுள்ள ஜனங்களை குப்புற புரட்டி விடும்,'' என்றனர். இதன் பொருளாவது,—சிறுபிள்ளை இந்தியாவென்பதும், அதை நெருக்குவது ஜனங்களென்பதுமே, இவர் குறிப்பின் அர்த்தமென்பதில், எனக்கு சொற்ப சந்தேகமாயினும் பிராசிக்கியூஷன் தரப்பு 2-வது சாக்ஷியாகிய போலீஸ் இன்ஸ்பெக்டர் அதனை நன்கு தெரிந்து கொண்டிருக்கின்றனர். குற்றவாளியானவர் பிராசிகியூஷன் தரப்பு 10வது சாக்ஷியோடு சம்பாஷித்த காலையில் இங்கிலீஷ்காரரை இந்தியாவை விட்டு துரத்தும் வரை தான் சும்மாய் இருக்க மாட்டேனென்று சொன்ன விஷயமானது ஷை சாக்ஷியாகிய தூத்துக்குடி சப் மேஜஸ்டிரேட்டிடமிருந்து கிராஸ் விசாரணையில் வெளிபடுத்தப்பட்டது.

(9) யக்ஸிபிட்டுகள் அதாவது கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் தஸ்தாவேஜுகளில் கண்டிருக்கும் விஷயங்கள் தெரிவிக்கிறபடி, பிப்பரவரிமாதம் 25-தேதி சுவராஜ்ஜியம் என்கிற வார்த்தை முதலாவது சொல்லப்பட்டது. அதன் பிறகு செய்த பிரசங்கத்தில் குற்றவாளி அந்த வார்த்தையையே

அடிக்கடி உபயோகித்திருக்கின்றனராதலால், அது யென்ன கருத்தோடு உபயோகப் படுத்தப்பட்டது என்பதை அறிவது முக்கியமானது. மார்ச்சு மாதம் 3-தேதி 9-தேதி சுவராஜ்ஜியத்தைப்பற்றி பேசியதானது, "அன்னிய அரசாக்ஷியினின்று முழுவதும் விடுதலையாக்கி கொள்வது'' என்கிற அர்த்தத்தைநன்குவிளங்குகிறது. இதை உறுதிப்படுத்துவது அவசியமானல், குற்றவாளியானவர் ஷை கொள்கையினின்றும் எப்பொழுதும் பேதப்படாவிட்டாலும் பிப்ரவரி மாதம் 5 தேதி அவரது உடன் கொள்கைக் காரரான சுப்பிரமணிய சிவா செய்த பிரசங்கத்தில் அவர் கொண்டுள்ள கருத்தையே இவரும் கொண்டுள்ளதைக் காணலாம். பிராசிகியூஷன் தரப்பு 11-வது சாக்ஷியத்தையும் டி என்று குறிப்பிட்ட யக்ஸிபிட்டையும் கவனித்தால், இராஜாங்கத்தார்-" கடைசியாக நமக்கு சுவ்ராஜ்ஜியத்தை சில நிபந்தனைகளின்பேரில் அநேகமாய் கொடுப்பார்களானாலும் இதை நாம் அங்கீகரிப்பது கூடாததாக விருக்கும். யாதும் நிபந்தனையின்றி தாராளமாக கொடுக்கப்பட்டாலொழிய சில நிபந்தனைகளின்பேரி லதை ஏற்றுக்கொள்ளாதேயுங்களென தெரிவித்து கொள்ளுகிறதோடு உங்களை இரஞ்சி மன்றாடுகிறேன். ஏதாவது நிபந்தனைகளிருக்குமானல், அது சரியான சுவராஜ்ஜியமென கருதப்படாது. ஒரு முறை சுவராஜ்ஜியம் கொடுக்கப்பட்டுவிடின் இந்நாடானது இந்தியர்களுக்கே சொந்தமாகிவிடுவதோடு, இந்தியர்களுக்கும் இங்கிலீஷ்காரர்களுக்கும் யாதுமே சம்பந்தமிருக்கலாகாது,"-என்று சொல்லி யிருக்கிறார். இக்கூட்டத்திலும், இதற்கு பிந்திய கூட்டங்களிலும், "சுவராஜ்யம்'' என்னும் பதத்தை உபயோகித்து, மாறுத சகாயமாய் பேசிய குற்றவாளியானவர், அதை ஷை தாத்பரியத்தினின்றும் வேறுபடுத்தி காட்டவில்லை என்பதற்கு அத்தாக்ஷிகளிருக்கின்றன. இத்துடன் தாம் செய்த பிரசங்கங்களிலும் "தன்னந்தனியான சுயாதிபத்திய அரசாக்ஷி'' என்ற தாத்பரியத்திலேயே சுவராஜ்யம் என்னும் பதத்தை உபயோகித்திருக்கிறாரென்பது விசிதமாய் விளங்குகிறது.

(10) குறிப்பெடுத்துள்ள இந்த பேச்சுகளுடன் மற்றுமான பேச்சுகள் அடங்கிய பிரசங்கங்கள் விசேஷமாய் கீழ்த்தரமானவர்கள் சுமார் 400 முதல் நாலாயிரம் வரையில் கூடியிருந்த பொதுகூட்டங்களில் பகிரங்கமாக செய்யப்பட்டுள்ளதில், கவர்ன்மெண்டிற்கு வெறுப்புண்டாகவும், பிரீதியின்மை விளையவுமான உணர்ச்சிகள் ஏற்படும்படியாக் பேசப்பட்டிருக்கிறது. ஜனங்கள் ஒன்றாக சேர்ந்துவிடுவதே ஐரோப்பியர்களை பயங்கொண்டு ஊரை விட்டோடும்படி செய்து விடுமென்றும் அல்லது பயமுறுத்தியாவது அல்லது கட்டாயப்படுத்தியாவது அன்னியநாட்டு சாமான்களை விலக்கியாவது அன்னிய நாட்டினரை விரட்டிவிடவேண்டுமென்றும், அரசாங்க உத்தியோகஸ்தர்களிடமிருந்து நீதி நியாய மென்பதே கிடைக்கப் பெறுவதில்லை யென்றும், சுவராஜ்ஜியம் கிடைக்கப்பட்டாலே ஜனங்கள் நன்மை யடைவர்களென்றும், சுவராஜ்ஜியம் இன்னும் சில மாதங்களில் கிடைத்து விடுமென்றும், இப்படிச்செல்லாம் பேசப்பட்டிருப்பதின் நோக்கமானது, கவர்ன்மெண்டார்பேரில் பிரீதியின்மையையும், வெறுப்பையும், தூண்டவேண்டுமென்றதேயன்றி வேறல்ல. இச்செய்கையானது சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்ட கவர்ன்மெண்டாருக்கு துணைப்பட்ட தன்னுடைய கடமையில், ஒரு குடியானவர் கவர்ன்மெண்டாரின் ஏற்பாடுகளைப்பற்றியாவது அல்லது கவர்ன்மெண்டாரின் பரிபாலன நடவடிக்கைகளைப் பற்றியாவது, அம்சமதத்தை தெரிவித்த வியாக்கியானமாக மாட்டாது. குற்றவாளியோ, கவர்ன்மெண்டாருக்கும் அவருடைய அரசாக்ஷிக்கும் பிரீதியின்மை உண்டாகும்படி கவர்ன்மெண்டாரின் வெறுப்பையும் உதாசினத்தையும், கூட்டங்களுக்கு அஞ்சாநெஞ்சங்கொண்டு தெரிவித்ததன்னியில், கவர்ன்மெண்டை துரத்திவிட்டு அதற்கு பதிலாக சுவராஜ்ஜிய ஏகாதி பத்தியத்தை நியமிக்கும்படி கூட்டங்களை வேண்டுமென்றே தூண்டியிருக்கிறார்.

இப்படியானவைகளினெல்லாம் குற்றவாளி இ. பி. கோ- 124 எ., செக்ஷன்படியான குற்றத்தை அல்லது குற்றங்களை சந்தேகமறச் செய்திருக்கின்றனர்.

(11) குற்றவாளியானவர், அன்னியர்களென்று சொன்ன வெள்ளைக் காரர்களுக்கும், சுதேசிகளுக்கும்பகை உண்டாக்கக் கூடிய விஷயங்களை ஒழிக்க வேண்டுமென்னும் மேன்மையான எண்ணம் சிறுது மின்றி ஷை இரண்டு குலத்தாருக்கும் மிகுதியான விரோத பான்மையையும், வெறுப்பையும் உண்டாக்க மிக்க தீரமாய் தீர்மானித்தார் என்பது அவர் செய்த பிரசங்கங்களால் விசிதமாகிறது. குற்றவாளியின் எண்ணமாவது பகையை உண்டாக்கக்கூடிய விஷயங்களை நீக்க வேண்டுமென்பதல்ல; ஆனல் வெள்ளைக் காரர்களை ஊரை விட்டு நீக்கவேண்டு மென்பதுதான். அதனலேயே, யாதொன்றும் செய்யாத வெள்ளைக்காரர் பேரில் பொது ஜனப்பகையை தூண்டவேண்டுமென்பது பின்னும் அவரது முக்கிய நோக்கமாகும்.

எனவே இந்த நோக்கம் கொண்டு புரிந்த பிரசங்கங்களால் குற்றவாளியானவர் இ-பி-கோ 153 எ., செக்ஷன்படியான குற்றத்தை அல்லது குற்றங்களை செய்திருக்கிறார்.

(12) கவர்ன்மெண்ட் உத்தியோகத்தில் இல்லாதவர்களால் எழுதப்பட்டுள்ள குற்றவாளி பேசிய முக்கிய விஷயங்களும் கவனிக்கப்படத்தக்கவை; அவைகளும் சதாரண ஜனங்களுக்குள் எத்தகையான பகைமையான எண்ணத்தை மூட்டி, விக்கினம் உண்டாக்கும் படியாக விருந்ததென்பதை விளக்கி காட்டுகின்றன. தூத்துக்குடி சப்கோர்ட் கிளார்க்காகிய பிராசிகியூஷன் தரப்பு 1வது சாக்ஷியத்தினல்,-"இந்தியாவில் 30 கோடி இந்தியர்களும் 50 ஆயிரம் ஐரோப்பியர்களுமிருக்கின்றனர். நாம் மாத்திரம் யாவரும் ஒன்று கூடிவிடுவோமானல், அப்பொழுது நாம் விடும் மூச்சு ஆதாவது சுவாசம் ஒன்றே அவ்வளவு அன்னியர்களையும் ஊதிவிடும். இந்த ஜில்லாவில் மாத்திரம் இருக்கும் எத்தனையோ ஆயிரம் சுதேசிகளுக்கிடையில் கைப்பிடியளவு ஐரோப்பியர்கள் தான் இருக்கின்றனர். நமக்குள் ஒற்றுமை மாத்திர மிருக்குமானல் அவர்களை நமது பெருவிரலினல் நசுக்கிவிடலாம். மேலும் தற்போதிய கவர்ன்மெண்டானது ஓர் அன்னிய கவர்ன்மெண்டாகும். நமக்கு வேண்டியதெல்லாம் சுவராஜ்ஜியமே;"—என குற்றவாளி பேசியதாகதெரிகிறது.

(இதன் தொடர்ச்சியை 164-வது பக்கம் பார்க்கவும்)

வாய்ப் பூட்டுச் சட்ட மறுப்பு.

இப்பெயர் வாய்ந்த தமிழ் புத்தகம் இராயல் 1-16 அளவுக்கு 90-பக்கங்களுடையதாய், கிலேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டு, ஆர்காடு புதூர் நாட்டேறி ஜோதிஷம்-ஸ்ரீபார்த்தசாரதி நாயகரால் குறிக்கப்பட்டபடி,

"சந்திரன் பூசம் மூன்ருவதுபாதத்தில் 11கலேயில் கடகராசியில் ஆட்சியாய்ப் சுபிஷ்டம் பெற்று லக்கின கேந்திரத்தில் நிற்கவும், பிரகஸ்பதி பூசம் நான்காகாவது பாதத்தில் 149 கலேயில் உச்சராசியில் லக்கின கேந்திரத்தில் விரத்திச் சந்திரன் சகிதமாய் இரண்டு கிரகங்களும் ஏகராசியில் ஏக நஷத்திரத்தில் அதி பலிஷ்டராய் நிற்கின்ற சுக்கிலபக்ஷ சப்தமிதிதியும் பூச நஷத்திரமும், குருவாரமும், உத்திராயணமும், அமுர்த யோகமும், இரண்டு நேத்திரமும் அர்த்த ஜீவமும் சம்பந்தப்படவும், நவக்கிரங்களும் நட்பு ஆட்சி உச்சராய் நிற்கவும் பெற்று, அக்காலத்தில் செய்யப்படும் சர்வ முகூர்த்தங்களும் ஆயிர வருஷகாலம் அபிவிர்த்தியாய்த் திரிலோகத்திலும் புகழ்-கீர்த்தி-மூர்த்திகரம் விளங்கக் கூடிய மகிமையுற்ற, 12 வருஷத்திற்கு ஒரு முறை கிடைப்ப தருமையான நாளானது 1908ளு மேமீ 7உக்குச்சரியான கீலகளு சித்திரைமீ 25உ பகல் மணி 11-2 முதல் 11-27 வரையில் சம்பவித்தகாலத்தில், வெளியிடப்பட்டது." இப்புத்தகத்தில் அடங்கியிருக்கும் விஷயங்கள் நூல் முகத்தில் தெரிவித்திருப்பதற்கு ஒற்றுமையாய் இருப்பதால் அதை இங்கு பதிப்பிக்கின்ருேம்.

சனி	சூரி	செவ் புத	சுக் இராகு
	இரக நிலே		சந்தி லக் குரு
கேது			

"...இத்தகைய நூல்கள் தமிழ் நாடெங்கும் பரவுவதும், தமிழர் ராஜாங்க அறிவுபெற்றுத் தத்தம் சுதந்திரங்களேயும் கடமைகளேயும் செவ்வனே தெரிந்து கொள்வதும், அரசாங்கத்தாரால் செய்யப்படும் சட்ட திட்டங்களின் நோக்கங்களேயும் காரணங்களேயும் சீர்தூக்கி, அவ்வவற்றின் தாரதம்மியங்களேத் தெளிவதும் பல ஏதுக்களால் அவசியமாயிருத்தலின், இந்நூல் அவசிய மென்பதும், இது தமிழர் வாசித்துச் சிந்திக்கத்தக்க தென்பதும் சொல்லாமே யமையும். சென்ற சில வருஷங்களாகத் தேசத்திலே ஆளுவோர், ஆளப்படுவோராகிய இருதரத்தார் மனதிலும் புது உணர்ச்சிகள் தோன்றிவருகின்றன. ஆளுவோர்மனதில் தோன்றியிருக்கும் உணர்ச்சிகள் அவர் தம் செய்கைகளால் விளங்குகின்றன. ஆளப்படுவோர் மனதில் தோன்றியிருக்கும் உணர்ச்சிகள் தத்தம் நிலேமையை சரிவரத் தெரிந்து கொள்ள வேண்டு மென்னும் அவாவினுலும், தமக்கும் அரசாங்கத்தாருக்கு முள்ள சம்பந்தத்தைப் பிரஜைகளுக் கனுகூலமாகவும், தேச க்ஷேமத்துக்குக் காரணமாகவும் திருத்தவேண்டு மென்னும் முயற்சியாலும் ஒருவாறு விளங்கும். தேசத்தின் தற்கால நிலமையும், ஜனங்களது உணர்ச்சியும் இத்தன்மைத்தாயிருப்பதனுலே அரசாங்கத்தார் தமது சட்டதிட்டங்களில் காட்டும் உண்மையானதும், வெளிப்படையானதுமான நோக்கத்தை எல்லாரும் அறியும்படியாகத் தெரிவிக்கக்கூடிய புத்தகங்கள் பல வெளிவரினும் அவையொவ்வொன்றும் பிரயோசனம் தராதுபோகாது. மேலும் அரசாங்கத்தார் செய்யும் செயல்களெல்லாம் பொதுஜன நன்மை யொன்றையே பொருந்திருக்கின்றன வென்ருவது, முற்றிலும் சாவதான புத்தியையே தழுவியிருக்கின்றன வென்ருவது, சுயஜாதியபிமானம் கலக்கப்பெறு திருக்கின்றன வென்ருவது சொல்வதற்கு இடமில்லே யென்பதை சென்ற சில்வருஷங்களாகத் தேசத்தில்நடைபெற்றுவரும் செய்திகளே நோக்கினுர் ஒத்துக்கொள்வாரென்று நம்பலாம். திருஷ்டாந்தமாக இந்நூலினின்றும் மற்ருெரு பக்கத்தில் வெளியாயிருக்கும் "வாய் பூட்டுச்சட்டத்தை" ஜனவாக்குக்கு விரோதமாகவும், மிக்க அவசரமாகவும் கவர்ன்மெண்டார் நிறைவேற்றி யமுலுக்குக் கொண்டுவந்திருக்கும் நோக்கம் எத்தகைய தென்பதனையூன்றி யாராயும்போது அராசங்கத்தார் அகாரணமாய்க் கொண்டிருக்கும் துவேஷமும் திகிலும், அவற்றின் பயனுய்ஜனங்களது தலேயிற் பொறுத்திருக்கும் பெரிய பாரமும் நன்குவிளங்கும். ஆளுபவரின் துவேஷத்தையும் திகிலேயும் நீக்கி ஜனங்களிடத்து ஒற்றுமையுணர்ச்சியையும் நம்பிக்கையையும் நிலே பெறச்செய்வது அறிவுடையோர்கடமையாகும். அதுபோன்று ஆளப்படுவோர்க்கு நற்போதனேசெய்து அப்போதனேயின் வன்மையால் அவர்கள் மனதில் அபிமானத்தை வளர்த்து அவ்வபிமானத்தாலேற்படும் ஒற்றுமை யுணர்ச்சியாலும் அறிவாலும் தீய சட்டங்களே யெதிர்க்கவும், அவை அகாரணமும் அனுவசியமுமானவையெனக் காட்டித் தமக்கும் அரசாங்கத்தாருக்கும் நன்மையைத் தேடவும் வல்லவர்களாகும்படி ஜனங்களுக்குக் கற்பிப்பதும் தேசாபிமானிகளின் முக்கிய கடமைகளி லொன்ருகும்; ஆகையால் இந்நூல் சமயத்துக் குற்றதாகவும், பிரயோசன முடையதாயு மிருக்கின்றது. இந்நூல் வேருேர் அமிசத்திலும் சிறந்தது. பெரிய தேசாபிமானிகளும் மதியூகிகளுமாகிய ஆனரெபில் மிஸ்டர் கோபால கிருஷ்ண கோக்கலே, ஆனரெபில் டாக்டர் ராஷபிகாரிகோஸ் முதலியோர் இச் சட்டவிஷயமாய்த் தெரிவித்திருக்கும் அபிப்பிராயங்கள் அவ்வப்போது பத்திரிகைகளின் வாயிலாய் வெளிவந்திருப்பினும், அவையெல்லாம் எப்போதும் படிக்கக்கூடியதாய் இந்நூலாசரியர் செய்திருக்கும் நன்முயற்சி கொண்டாடத்தக்கது. *பின்னும் ஷை தேசாபிமானிகளின்திருவருவப்படம் இந்நூலில் பதிப்பிக்கப்பட்டிருப்பதை காணலாம். இந்நூல் ஆங்கில மொழிபெயர்ப்பேயெனினும் அப் பாஷையின் கருத்தைத் தழுவியதாய், வாசிக்க இனிமையுடையதாய், அவற்ருனே வாசிப்போர்க்கு அறிவுகொடுப்பதாயிருக்கிறது. இந்நூலுக்குப் பாயிரமாய் ஆசரியரா லியற்றப்பட்டிருக்கும் கலிவெண்பா சொல்லழகும், அரசாங்க சம்பந்தமான பொருளழகும் பொருந்தியமைந்திருப்பது, ராஜாங்கவிஷயங்களே செய்யுள் நடையில் ஜனங்களுக்குக் கற்பித்து மனதில் நிலேபெறச்செய்யும் முறைமையைத் தழுவியதா யிருக்கின்றது. என்றும் நிலேக்கக்கூடியவையும் பிரயோசனமானவையுமாகிய விஷயங்களே வசன நடையிலிருப்பதினும் செய்யுள்நடையிலிருப்பது ஞாபகப்படுத்திச் சிந்திப்பதற்கிலகு வெனக்கருதிக் தமிழாசரியர்கள் நீதிகளே செய்யுளிலியற்றியதுபோல் இந்நூலாசரியர் அரசாங்க விஷயங்களேயும் அம் முறையே தழுவிக் கற்பிக்கத் தூண்டப்பட்டிருப்பது ஒவ்வொருவரும் வாசிக்கத்தக்கது. இந்நூலாசரியர் இச் சட்டசம்பந்தமான முக்கிய விஷயங்களேயெல்லா மொன்ருய்த் திரட்டியிருப்பதும், புத்தகத்தில் காட்டப்பட்டிருக்கும் சிற்சில விஷயங்களே நன்கு விளக்குமாறு இறுதியிற் குறிப்புரை யொன்றமைத்திருப்பதும் இப் புத்தகம் யாவருக்கும் உபயோகமாக வேண்டுமென்னும் இவரது கருத்தை நன்கு விளக்கும்..." இதன் விலே தபால் கூலியுள்பட விலே அணு 8.

* இது நூல் முகவுரையில் கண்டதல்ல.

WHETHER TWO COUNSEL CAN SUM UP FOR ONE?

ஒருவருக்காகவே இரண்டு வக்கீல்கள் அட்டிரஸ் செய்யலாமா?

திருநெல்வேலி அட்டிஷனல் செஷன் கோர்ட்டில் சுப்பிரமணிய சிவா, சிதம்பரம்பிள்ளே ஆகிய இருவர்கள்பேரில் நடந்துவரும் இராஜதுரோகக்கேசில், முதல் குற்றவாளியாகிய சிவா தரப்பில் ஆஜராயிருக்கும் மிஸ்டர் ஏ. யஸ். கௌடல், மிஸ்டர் பால்பீட்டர் பிள்ளே ஆகிய இருவர்களில், சீனியராகிய மிஸ்டர் ஏ. யஸ். கௌடல் அவர்களே கோர்ட்டுக்கு அட்டிரஸ் செய்யும்படியாய் விட்டு, அதாவது முதல் குற்றவாளிக்குள்ள நியாயங்களே கோர்ட்டாருக்கு தொகுத்து சொல்லும்படியாய் விட்டு, கவர்ன்மெண்ட் ப்ளீடர் மிஸ்டர் பவல் இக்கேசை துவக்கியகாலத்தில் தெரிவித்த சில அம்சங்களேப்பற்றி மாத்திரம், மிஸ்டர் பால்பீட்டர் பிள்ளே கோர்ட்டாரை அட்டிரஸ் செய்ய பிரியப்பட்ட காலத்தில், "ஒருவருக்காகவே இரண்டு வக்கீல்கள் கோர்ட்டாரை அட்டிரஸ் செய்யலாமா?" என்னும் கேள்வி உண்டானது. ஒரு குற்றவாளிக்காகவே இரண்டு வக்கீல்கள் அட்டிரஸ்செய்ய அனுமதி கொடுப்பது கோர்ட்டாரின் இஷ்டத்தை பொறுத்ததென்றும், ஆனல் அவ்விதம் செய்வது இங்கிலாந்தில் சகஜமென்றும் மிஸ்டர் ஏ. எஸ். கௌடல் தெரிவித்தார். மிஸ்டர் பவலோ, தாம் அவ்வித வழக்கத்தை இத்தேசத்தில் பார்த்ததில்லே என்ருர். கடைசியாய், மிஸ்டர் பால் பீட்டர் பிள்ளே அட்டிரஸ் செய்ய பிரியப்பட்ட அம்சங்களே மிஸ்டர் ஏ. எஸ். கௌடலுக்கு சொல்லும்படி இக்கேசை விசாரணைசெய்துவரும் ஜட்ஜ் மிஸ்டர் ஏ. யப். பின்ஹே தீர்மானித்தார். அதன்படி மிஸ்டர் பால் பீட்டர் பிள்ளே தாம் அட்டிரஸ் செய்ய பிரியப்பட்ட அம்சங்களே மிஸ்டர் ஏ. யஸ். கௌடலுக்கு சொல்ல, மிஸ்டர் ஏ. யஸ். கௌடல் முதல் குற்றவாளிக்குள்ள நியாயங்களே கோர்ட்டாருக்கு தொகுத்து சொன்னுர். நிற்க,

ஒருவர் தரப்பிலேயே ஆஜரான இரண்டு வக்கீல்கள், விஷயங்களே இருவரும் பகிர்ந்துகொண்டு அதன்படி இருவரும் தனித்தனியாய் கோர்ட்டாரை அட்டிரஸ் செய்யும் சுதந்திரத்தை நீக்கவாவது அவ்விதம் செய்வதை தடுக்கவாவது கிரிமினல் புரோசிர் கோடில் யாதொரு ஆதாரமும் இல்லே. கல்கத்தாவில் ஒரிஜினல் தரப்பிலும், அப்பீல் தரப்பிலும், ஒரு கக்ஷிக்காகவே ஒரு வக்கீலுக்கு பின் மற்ருெரு வக்கீல் தொடர்ந்து அட்டிரஸ் செய்கிருர்கள். இதற்கு அத்தாக்ஷிகள் இந்தியன் லா ரிபோர்ட்ஸ் கல்கத்தாபிரிவில் அநேகம் இருக்கின்றன. இ-லா-ரி., 24 கல் 589, 24 கல் 786, 27 கல் 428, 27 கல் 338-ல் காணலாம். பின்னும், இதே கேள்வியானது மதராஸ் ஹைகோர்ட்டிலும் சில வருஷங்களுக்கு முன், இ-லா-ரி, 27 சென், 435-வித்திய பூரண தீர்த்தசாமி V வித்தியாநிதி தீர்த்த சாமி கேசில் உண்டானது. இந்த கேசை தீர்மானஞ்செய்த ஜஸ்டிஸ் ஸர். யஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்களும், ஜஸ்டிஸ் ஸர். பாஷியம் அய்யங்காரும் இதனடியில்கண்ட குறிப்பை தங்கள் தீர்ப்பில் சேர்த்திருக்கிருர்கள்.

The following note has been appended by Justice Sir Subramania Iyer and Justice Sir V. Bhashyam Iyengar to their Judgment in Vidyapurna Tirtha Swami, v. Vidianithi Tirtha Swami,

I. L. R., 29 Mad., 435.

"At the hearing of this appeal, when Mr. Sundram Iyer, Junior vakil for the second respondent, began to argue the case, following his senior, Mr C. Ramachandra Row Sahib, objection was taken on behalf of the appellant to second counsel being heard for the same party. This objection was overruled as it is the well-established practice not only in England, including the Judical committee of the Privy Council, but also in this country, though this right is not frequently exercised in this Court, the only limitation being here as in England that a third counsel is not at liberty to address the Court on behalf of the party entitled to reply. We are aware second counsel have been heard in this Court and some of the cases in which this was done were referred to by the learned Pleader for the second respondent"

"இந்த அப்பீல் விசாரணே காலத்தில் அப்பீல் பிரதிவாதி தரப்பில் ஆஜரான மிஸ்டர் சி. இராமசந்திர ராவ் சாஹிப், மிஸ்டர் சுந்திரம் அய்யர் ஆகிய இருவர்களில், மிஸ்டர் சுந்திரம் அய்யர் தமக்கு சீனியராயிருக்கும் மிஸ்டர் சி. இராமசந்திர ராவ் சாஹிப் அவர்களேத் தொடர்ந்து, இரண்டாம் அப்பீல் பிரதிவாதிக்குள்ள நியாயங்களே கோர்ட்டாருக்கு தொகுத்து சொல்ல ஆரம்பித்த காலத்தில், ஒருவருக்காகவே இரண்டாவது வக்கீல் தொகுத்து சொல்லக்கூடாதென்பதாக அப்பீல் வாதி தரப்பில் ஆக்ஷேபிக்கப்பட்டது. இங்கிலாந்தைப் போல இத்தேசத்திலும், பதில் சொல்ல பாத்தியமுள்ள ஒரு கக்ஷிக்காரன் தரப்பில் மூன்ருவது வக்கீல் கோர்ட்டை அட்டிரஸ் செய்யக்கூடாதே யொழிய மற்றபடி ஒருவனுக்காகவே இரண்டாவது வக்கீல் கோர்ட்டை அட்டிரஸ் செய்யும் வழக்கமானது இங்கிலாந்திலுமட்டு மல்லாமல் இத்தேசத்திலும் நன்ருய் நிலேபட்டிருக்கும் காரணத்தால் ஷை ஆக்ஷேபனே புறக்கணிக்கப்பட்டது. பின்னும், இதே மதராஸ் ஹைகோர்ட்டில் ஒருவருக்காகவே இரண்டாவது வக்கீல் செய்யும் அட்டிரசுக்கு செவி கொடுத்திருப்பது எங்களுக்கு கவனம் இருக்கிறது. இதற்கு அத்தாக்ஷியாய் சில தீர்ப்புகளே இரண்டாவது அப்பீல் வாதியின் பிளீடரும் எடுத்து காட்டியிருக்கிருர்."—இந்த குறிப்பே, பிரஸ்தாப திருநெல்வேலி கேசில் உண்டான கேள்விக்கு ஒரே முடிவான பதிலாயிருக்கிறது. ஆதலால் இதுவிஷயமாய் மிஸ்டர் ஏ. யப். பின்ஹே செய்த ரூலிங் அதாவது தீர்மானம் தவறு என்பதாய் கூடலூர் பிளீடர் ஆர். சீனிவாச அய்யங்கார் மதராஸ் மெயில் (Madras Mail) பத்திரிகைக்கு எழுதியிருக்கிருரென்ருலும் ஷை தவறுதலான தீர்பானது எந்த விதத்திலாவது குற்றவாளிக்கு அபகாரம் விளேவித்ததென்று சொல்லக் கூடாதென்றும், ஆனல் இரண்டு வக்கீல்களேயும் முதல் குற்றவாளிக்குள்ள நியாயங்களே கோர்ட்டாருக்கு தொகுத்துச் சொல்லும்படியாக அனுமதிகொடுத்திருந்தால் மிகவும் திருப்திகரமாயிருந்திருக்குமென்றும், துரதிர்ஷ்டவசமாய் டிபன்ஸ் தரப்பால் பார்க்காது விடப்பட்ட ஷை பிரக்கியாதிபெற்ற மதராஸ் ஹைகோர்ட் ஜட்ஜிகளுடைய குறிப்பானது, மிஸ்டர் ஏ. யப். பின்ஹே அவர்களுக்கு எடுத்து காட்டப்பட்டிருந்தால், அவர் அதன்படி மிக்க பிரீதியோடு அனுமதி கொடுத்திருப்பாரென்றும் முடித்திருக்கிருர்.

THE FIRST MOHOMEDAN JUDGE OF THE MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டின் முதலாவது மகம்மதிய ஜட்ஜ்

சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜுகளில் ஒருவராயிருந்த விலகிய காலஞ்சென்ற ஜஸ்டிஸ் போடாம் ஸ்தானத்துக்கு ஒருவரும் இதுவரையில் நியமிக்கப்படாமல் இருந்தது. இது விஷயமாய் சென்னை மஹாஜனசபையார் இந்தியா ஸ்டேட் செக்ரிடரி அவர்களுக்கு ஒரு மகஜர் அனுப்பினார்கள். அந்த மகஜரில்.—

1888௵த்திய பப்ளிக் சர்விஸ் கமிஷனர்கள் தெரிவித்த ரிப்போர்ட்டின் 83-வது பாரில், ஹைகோர்ட் ஜட்ஜ்கள் ஐவரானகாலத்தில், அவர்களில் இருவர் இந்தியர்களாய் இருக்க வேண்டுமென்று சிபார்சு செய்ததை இந்திய கவர்ன்மெண்டார், 1888௵ அக்டோபர்௴ 9௳யுள்ள 58-வது நெம்பர் 27-வது பாராவில் அங்கீகரித்து, அதன்படி ஸர்-யஸ் சுப்பிரமண்ணிய அய்யர் அவர்களையும் ஸர். வி. பாஷ்யம் அய்யங்கார் அவர்களையும் மதராஸ் ஹைகோர்ட்டு ஜட்ஜுகளாக நியமித்தார்களென்றும், ஹைகோர்ட்டு ஜட்ஜ்கள் எழுவரான தற்காலத்தில், ரிடயரான ஷை இந்தியா ஜட்ஜுகள் இருவருக்கு பதிலாக கனம் ஜஸ்டிஸ் சி. சங்கரநாயர் என்னும் இந்தியர் ஒருவர்தான் நியமிக்கப்பட்டிருக்கிறாரென்றும், ஆதலால் மற்றொரு இந்தியரை ஜட்ஜியாக நியமிப்பதற்கு இதுவே தக்க சமயமென்றும், சார்டர் ஆக்ட்24-25 விக்டோரியா, 104-வது அத்தியாயம் இரண்டாவது செக்ஷன்படி (Charter Act 24, & 25 Victoria, Chapter 104, Section 2) ஜட்ஜ்களில் மூன்றில் ஒருபங்கு பாரிஸ்டர்களாகவும், மூன்றில் ஒருபங்கு சிவிலியன்களாகவும், அதாவது (ஐ. சி. யஸ்.) கலெக்டராகவும் இருக்கவேண்டிய தவசியமாதலால், மதராஸ் ஹைகோர்ட்டுஜட்ஜ்கள் எழுவரில் மூவர்பாரிஸ்டர்களாகவும், மற்று மூவர் கலெக்டர்களாகவும், ஒருவர் வக்கீலாகவும் இருப்பதே பொருத்தமானதென்றும், முதல் முதல் அலஹாபாத் ஹைகோர்ட்டிலும் அதன் பின் பம்பாய் ஹைகோர்ட்டிலும், முறையே இந்திய பாரிஸ்டர்கள் இரண்டாவது இந்திய ஜட்ஜ்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்களென்றும், ஆதலால் மதராஸ் ஹைகோர்ட்டிலும், காலியாயிருக்கும் காலஞ்சென்ற ஜஸ்டிஸ்போடாம் ஸ்தானத்துக்கு இந்திய பாரிஸ்டர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்றும், கண்டிருந்தது. சென்னைவாசிகளெல்லாம் பாரிஸ்டர் மிஸ்டர் யன். சுப்பிரமணியத்திற்காவது அல்லது சென்னை ஸ்மால்காஸ் கோர்ட் இரண்டாவது ஜட்ஜ் பாரிஸ்டர் மிஸ்டர் சி. கிருஷ்ணனுக்காவது பிரஸ்தாப ஜட்ஜ்ஸ்தானம் கிடைக்குமென்றும், மிஸ்டர் யன். சுப்பிரமணியத்தின் வயதை யோசிக்கும் பக்ஷத்தில் கட்டாயம் மிஸ்டர் சி. கிருஷ்ணன் அவர்களுக்கே கிடைக்குமென்றும் நம்பியிருந்தார்கள். ஆனால் கல்கத்தாவில் பிரக்கியாதி பெற்றபாரிஸ்டரும், இந்தியருமாகியமிஸ்டர் பி. சக்கரவார்த்தி அவர்களுக்கு ஷை ஜட்ஜ்ஸ்தானம் கொடுக்கப்பட்டதென்றாலும் அவர் அங்கீகரிக்கவில்லை என்று பங்காளி பத்திரிகை கூறுகிறது. இப்பொழுது கல்கத்தா ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜ் பாரிஸ்டர் நவாப் எ. யப். யம். அப்துல் ராஹீம் மதராஸ் ஹைகோர்ட் ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிறாரென அறிகிறோம்.

இவர் 1890௵ பாரிஸ்டராக வெளிவந்ததும் கல்கத்தா பிரஸிடென்சி மாஜிஸ்ட்டிரேட்டாக நியமனம் பெற்று அதன்பின் கல்கத்தா ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜாக நியமனம் பெற்றார். மகம்மதியர்களின் அபிவிர்த்தியில் மிக்கவும் நோக்கம் கொண்டிருந்த காலஞ்சென்ற ஜஸ்டிஸ் போடாம் ஸ்தானத்திற்கு, பாரிஸ்டராகவும் இந்தியரில் மகம்மதியராயுமுள்ள மிஸ்டர் அப்துல் ராஹீம் அவர்களை தேர்ந்தெடுத்தது மிக்கவும் பொருத்தமானதாதலின், இந்தியர்களுக்கு அதிலும் முக்கியமாய் மகம்மதியர்களுக்கு அதிக சந்தோஷத்தை விளைவித்திருக்கிறதென்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. மதராஸ் ஹைகோர்ட்டில் முதல் முதல் ஜட்ஜாக நியமனம்பெற்ற மகம்மதிய கனவான் இவரேயாதலின், இவர் தம் ஜீவசரித்திரத்தையும் திருவுருவத்தையும் முறையே காதாரக்கேட்டு, கண்ணாரக்கண்டு களிக்க பேரவாக்கொண்டிராத இந்தியர் ஒருவரும் இருக்க மாட்டார்களென்றே நம்புகின்றோம். ஆதலின் மிஸ்டர் அப்துல் ராஹீம் அவர்களின் ஜீவசரித்திரத்தையும் திருவுருப்படத்தையும் நமது அடுத்தமாசத்திய கெஜட்டில் பிரசுரிக்க முயல்வோமாக.

வாய்ப் பூட்டுச் சட்டம்

(3 வருஷவாயிதாவுடையது)

வரையறை

இச்சட்டத்தில் "பொதுக்கூட்டம்" என்னும் சொல்லுக்குப் பொதுவாயாவது, பொதுவில் ஓரினம் அல்லது பகுதியாயாவது கூடும் ஒரு கூட்டமெனப் பொருள் படும்.

ஒரு கூட்டமானது மறைவிடத்தில் சேர்ந்திருந்தாலும், சீட்டு முதலிய தின்றி அதில் நுழையக் கூடாமையாயிருந்தாலுங்கூடப் பொதுக் கூட்டமாகலாம்.

இச்சட்டக் கருத்தின்படி (அப்படிக்கில்லை யென்றேற்படு மட்டும்) 20-பேருக்கு மேல் பட்ட ஒரு கூட்டம் ஒரு பொதுக் கூட்டமெனக் கொள்ளப்படும்.

பொதுக் கூட்டத்துக்கு நோட்டீஸ் கொடுத்தல்

கலக்கத்தை யாவது ஆவேசத்தையாவது உண்டு பண்ணுவதாய்த் தோன்றும் எவ்விஷயத்தையும் விர்த்திபண்ணுவதற்காகவாவது, எந்தராஜாங்க விஷயத்தையும் விவாதிப்பதற்காகவாவது, எவ்விஷயத்தைப் பற்றியும்எவ்வெழுத்தையும் காண்பிக்கவாவது, எவ் விளம்பரத்தையும் விநியோகம் செய்வதற்காகவாவது குறிப்பிட்ட எவ்விடத்திலும் கூட்டங்கூடும கருத்தையும், காலத்தையும், இடத்தையும் யுக்தப் படிப் போலீஸ டிஸ்ட்ரிக்டு சூபரிண்டெண்டு அல்லது போலீஸ் கமிஷனருக்குக் குறைந்ததாய் 3-தினத்துக்கு முற்பட்டே நோட்டீசெழுதியனுப்பியிராவிட்டாலும், யுக்தப்படிப் போலீஸ் டிஸ்ட்ரிக்ட் சூபரின்டெண்டி அல்லது போலீஸ் கமிஷனரிடமிருந்து எழுத்தாலே கூட்டத்துக்கு உத்திரவு பெற்றுக் கொண்டிராவிட்டாலும் பொதுக் கூட்டம் கூடக் கூடாது.

பொதுக் கூட்டத்தைப் பற்றிப் போலீஸ் ரிபோர்ட்

அதிகாரம்

இன்ஸ்பெக்டர் அந்தஸ்த்துக்குக் கீழ்படாத எந்த போலீஸ் ஆபீசராவது எழுத்து மூலமான உத்தரவினாலே அக்கூட்டத்துக்குப்போயிருந்து நடவடிகளை அறிவிப்பதற்காக ஒரு அல்லது சில போலீஸ் ஆபீசர்களையாவது, மற்றவர்களையாவது குறித்தனுப்பலாம்,

விலக்கு:—எந்த நிலையான அல்லது மற்ற அவசரமான நியாய அதிகாரத்தின் படிக்காவது, கூடும் எந்தப் பொதுக் கூட்டத்துக்காவது, ஒரு ஷெரிபால்கூடும் பொதுக்கூட்டங்களுக்காவது, பிரதேச கவர்மெண்டாரின் சாதாரணமான அல்லது விசேஷ உத்திரவினால் இதற்காக விலக்கப்பட்ட எந்தப்பொதுக் கூட்டங்களுக்காவது, அப்பொதுக் கூட்டங்களின் வகுப்புக்காவது இப்பிரிவிலெதுவும் சம்மந்தப்படமாட்டாது.

பொது கூட்டங்களைத் தடுக்கும் அதிகாரம்

யுக்தப்படி டிஸ்ட்ரிக்டு மாஜிஸ்ட்ரேட்டாவது, போலீஸ் கமிஷனராவது தக்ஷணம் பகிரங்கவிளம்பரத்தோடு எழுத்து மூலமான உத்தரவினால் எப்போதாவது அக்கூட்டம் தன் கருத்தின்படி ராஜநிந்தனை அல்லது அதிகார அதிருப்தி கரத்தை விருத்தி பண்ணுவதாகவாவது ஜன அமரிக்கைக்கு இடையூறு செய்வதாகவாவது தோற்றும் பக்ஷத்தில் ஒரு குறிப்பிட்டவிடத்தில் எந்தப்பொதுக் கூட்டத்தையாவது தடுக்கலாம்.

தண்டனை

பொதுக் கூட்ட நோட்டீசுக்கு விரோதமாய் ஒரு குறிப்பிட்ட விடத்தில் ஒரு பொதுக் கூட்டத்தை விர்த்தி பண்ணுவதிலாவது நடத்துவதிலாவது சம்பந்தப் பட்ட எந்த நபருக்காவது ஆறுமாச காலத்துக் காவல் வைப்பாவது, அபராதமாவது, இரண்டுமாவது விதிக்கப்படும்.

குறிப்பு:—பொதுக் கூட்டங்களைத் தடுக்கும் அதிகாரத்தின் படித் தடுக்கப்பட்ட எந்தப் பொதுக் கூட்டமாவது இந்தியன் பினல் கோடின் 8-ஆவது அத்தியாயத்துக்கும் 1898-ஆம் வருஷத்திய கிரிமினல் புரோசிஜர் கோடின் 9-ஆவது அத்தியாயத்துக்கும் பொருளானபடி அக்கிரமமான கூட்டமாகக் கொள்ளப்படும்.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் பொதுக் கூட்ட நோட்டீசின் படிக்கான அல்லது விலக்கப்பட்டுள்ள பொதுக் கூட்டந் தவிர மற்றபடி ஒருபொது விடத்திலாவது, ஜனசங்கத்திலாவது, யுக்தப்படி டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது போலீஸ் கமிஷனருக்கு எழுதி முன்னாடியே உத்தரவு பெற்றுக் கொள்ளாமல் வந்திருப்பவர்களுக்குக் கலக்கத்தை யாவது ஆவேசத்தையாவது உண்டு பண்ணுவதாகத் தோன்றும் எந்த விஷயத்தைப் பற்றியாவது, எந்த ராஜாங்க விஷயத்தைப் பற்றியாவது எவ்வித பிரசங்கம், போதனை, விளக்கமாகவும் யாரேனும் பேசினால் வாரண்டில்லாமலும் பிடிக்கப்படுவது மன்றி ஆறு மாசத்துக்குக் காவல் வைப்பு அபராதம், அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

THE BIRTHDAY HONOURS

சக்கிரவர்த்தி பிறந்தநாளை முன்னிட்டு கொடுக்கப்பட்ட பட்டங்கள்

இவ்வருஷம் ஜூன்௴ 26௳ சக்கிரவர்த்தி அவர்கள் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டு அநேகருக்கு பட்டங்கள் கொடுக்கப்பட்டன. அவற்றுள் இந்தியாவில் நீதியிலாக்காவைச் சேர்ந்தவர்கள் அடைந்த பட்டங்களையும், அவர்கள் பெயர்களையும் இதனடியில் பதிப்பிக்கின்றோம்.:—

நைட்

வங்காள அபிகூதியேடிங் சீப் ஜட்ஜ் மிஸ்டர் ஆர். யப் ராம்பினி.

ரேய்பஹதூர்

1. கல்கத்தா ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜாக இருந்து விலகிய அதாவது ரிட்டயரான (retired) பாபு பிபீன் பிஹாரி முக்கர்ஜி.
2. ரிட்யர்ட் சப்ஜட்ஜி மிஸ்டர் பாபு அன்னதை பிரசாத் பக்ஜி.

ராவ் பஹதூர்

1. தஞ்சாவூர் பிளீடரும் மிராஸ்தாருமான மிஸ்டர் கே-யஸ்-ஸ்ரீனிவாசப் பிள்ளை.

2. தென் ஆர்காடு பப்ளிக் பிராசிகியூட்டரும் கவர்ன்மெண்ட் பிளிடருமான பிரம்மஸ்ரீ கே-யஸ்- ஸ்ரீனிவாச ராவ்

கான்சாஹப்

1. லயாலப்பூர் டிஸ்டிரிக்ட் (கௌரவ) ஹானரரி மாஜிஸ்டிரேட் மிஸ்டர் சையத் மிஹ்ர்தோஷா.
2. குவிட்டா ஹானரரி மாஜீஸ்டிரேட் சேத் மஹமத் ஆலி ஆலிபாய்.

இராஜா

சித்தூர் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் மிஸ்டர் கே. சி. மானவேதன ராஜா.

கேய்சரி ஹிண்ட் போன் பதக்கம்

தர்பாங்கா மாஜிஸ்டிரேட் மிஸ்டர் டப்லியூ. ஈ. கர்ட்டன்.

கேய்சரி வெள்ளி பதக்கம்

பாவின் ஹானரரி மாஜிஸ்டிரேட் மிஸ்டர் மாக்டெட் பையோ.

ஸ்ரீ தமது சோதரரைப் போல பரோபகார சிந்தையுடன் மிக்க தான தர்மங்கள் செய்து வரும் பிரசித்

Dewan Bahdur R. Ragunatha Row, Gopal Vilas, Kumbakonam, writes:

24th, MAY 1908.

" . . . The Indian Law Gazette which you have been publishing is a very useful Journal. I hope it will be patronized as it ought to be........."

திபெற்ற விஜய நகரம் மஹாராஜா குமாரிகா அம்மாளுக்கு கேஸ்ரி ஹிண்ட் கோல்ட் மெடல் அதாவது பொன் பதக்கம் கொடுக்கப்பட்டதை அறிய மிகவும் சந்தோஷப்படுகிறோம்.

EDITORIAL NOTES

THE MADRAS LAND ESTATES ACT

கனம் பொருந்திய கவர்னர் ஜனரல் அவர்களால் அங்கிகரிக்கப்பட்ட மதராஸ் லாண்ட் யஸ்டேட் ஆக்ட்டானது ஜூலைமீ 1௳ அமூலுக்கு வருகிறது.

A MAD DOG BET A MAGISTRATE

மிர்ஜபூர் ஜாயிண்ட் மாஜிஸ்திரேட் மிஸ்டர் இ. பி. ரோஸை பயித்தியக்கார நாயொன்று கடித்துவிட்டது. கடியுண்ட மாஜிஸ்டிரேட் சிகிச்சையிலிருக்கிறார்.

THIRD CRIMINAL SESSIONS

மதராஸ் ஹைகோர்ட் 3-வது கிரிமினல் செஷன்ஸ் 1908ஞு ஆகஸ்டுமீ 3௳ ஆரம்பமாகும்.

TEMPORARY SUB-JUDGE'S COURT

அடுத்த ஜூலை மாதம் முதல் ஆறுமாதகாலம் வரையில் மதுரையில் சப்ஜட்ஜ கோர்ட்டு ஏற்படுத்தும்படி சென்னை கவர்ன்மெண்டார் உத்திரவு செய்திருக்கிறார்கள்.

HON. MR. K. SREENIVASA RAO

சென்னை ஆலோசனை சபையில் (Madras Cegislative Louncil) வடஜில்லா போர்ட்களின் பிரதிநிதி அங்கத்தனராயிருக்கும் கனம் மிஸ்டர் கே. ஸ்ரீனிவாசராவ் அவர்கள் தூத்துக்குடி முதல் கிரேட் சப்ஜட்ஜாக நியமனம் பெற்றிருக்கிறார்.

NORTON HAS BEEN CALLED TO ACCOUNT

கால் நூற்றாண்டுக்கு அதிகமாய் சென்னையில் பாரிஸ்டராயிருந்து இப்பொழுது கல்கத்தாவிலிருக்கும் மிஸ்டர் நார்ட்டன் அவ்விடத்திய வக்கில் கூட்டத்தை (Bar) நிந்தனை செய்ததற்கு காரணத்தை தெரிவிக்கும்படி ஷை யாரை கல்கத்தா அட்வகேட் ஜெனரல் மிஸ்டர் யஸ். பி. சிங்கா அவர்கள் கேட்டிருக்கிறார் என்று தெரிய வருகிறது.

ORDER TO PROSECUTE AN ADVOCATE

இரங்கூன் சீப் கோர்ட் அட்வகேட்டாகிய பாபு ரூப் நாத் பனர்ஜீயானவர், இரங்கூன் ஸ்மால் காஸ் கோர்ட்டில் தீனசிங் என்னும் ஒருவர் பேரில் கொண்டு வந்த சிவில் வியாஜ்ஜியத்தில், கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட தஸ்தாவேசு ஒன்றை ஷை அட்வகேட் கிழித்துவிட்டதற்காக ஷை ஸ்மால் காஸ் கோர்ட் அட்டிஷனல் ஜட்ஜ் ஷை யாரை பிராசிகியூட் செய்யும்படி உத்திரவு பிரப்பித்திருக்கிறார்.

MYSORE GOVERNMENT

சம்மன் மூலமாயாவது அல்லது வேறுவித உத்திரவு மூலமாயாவது அழைக்கப்படும் காலத்தில் அதன்படி, சுங்க அதிகாரி (Excise Offices) முன் ஆஜராகவேண்டுமென்னும் நிபந்தனையின் பேரில், சுங்க ரிகுலேஷன் 34-வது செக்ஷன்படி அரெஸ்ட் செய்யப்படுபவர்களை இனி ஜாமீனில் விடும்படிக்கு மைசூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த எல்லா சுங்க அஸிஸ்டாண்டு இன்ஸ்பெக்டர்களுக்கும் மைசூர் கவர்ன்மெண்டார் அதிகாரம் கொடுத்திருக்கிறார்களென அறிகிறோம்.

SURGEON S. P. CHATTERJI'S APPEAL

கொலைக்கே சொன்றில் மரண சோதனை விஷயமாய் தவறான அபிப்பிராயம் கொடுத்ததையும் கீழ் இரண்டு கோர்ட்டிலும் பொய் சாக்ஷியம் சொன்னதையும் சம்பந்தப்பட்ட ஆறு குற்றங்களுக்காக பர்மா-டெல்டா டிவிஷன் செஷன்ஜட்ஜால் ஆறுமாத கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்ட சர்ஜன்-யஸ்-பி-சாட்டர்ஜி, அப்பீல் செய்துக்கொண்டதில் இரங்கூன் ஆக்டிங் சீப் ஜட்ஜானவர் குற்றங்களில் உடந்தையானதைப்பற்றிய பாயிண்டானது அதிக கஷ்டத்தை கொடுப்பதால் இந்த கேசை புல் பெஞ்சுக்கு ரிபர்செய்திருக்கிறார்

PRACTICE OF HAND-CUFFING UNDER TRIAL PRISONERS

விசாரணையிலிருக்கும் குற்றவாளிகளுக்கு, அவர்களை கோர்ட்டுக்கு அழைத்துவருங் காலத்திலும் மறுபடியும் கோர்ட்டிலிருந்து கொண்டுபோகும் காலத்திலும் கைவிலங்கிடும் வழக்க மிருக்கிறது. ஷை குற்றவாளிகள் வம்பு செய்வார்களென்றும் அல்லது தப்பித்து ஓடிவிடுவார்களென்றும் நம்புவதற்கு காரணம் இருக்கும் காலந்தவிற மற்ற சமயங்களில், ஷை வழக்கத்தை விட்டுவிடும்படி கவர்ன்மெண்டார் கட்டளையிட்டிருக்கிறார்கள். ஆனால், ஷை நம்பிக்கைக்கு ஆஸ்பதமான அத்தகைய குற்றவாளிகளுக்கு கைவிலங்கிட வேண்டுமோ வேண்டாமா என்னும் விஷயம் போலீசார் நிரணயிக்க வேண்டியதாதலால், இது விஷயமான அம்சங்களை விரிவாய் தெரிவிக்கும்படி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் கேட்டு கொள்ளப்பட்டிருக்கிறார்.

BAIL TO NAMBUDRIS

வடமலபாரைச்சேர்ந்த (டெலிச்சேரி) படகாரா என்னும் இடத்தில் சமீபகாலத்தில் கூடிய ஜென்மி சபையில் நம்புதிரிகள்பேரில் ஏற்படும் கிரிமினல் கேசுகளில், பெயில் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பங்களிலும்

கொடுக்கப்படாமல் ஜெயிலில் ரிமாண்டில் வைத்து, கடைசியாய் குற்றவாளியல்லவென்று ஏற்பட்டாலும் மறுபடியும் எந்தகாலத்திலும் அவன் ஜாதியில் சேர்க்கப்படமாட்டான். ஆதலால் நம்புதிரிகளின் கிரிமினல் கேஸ்களில் பெயில் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பங்களில் அவர்களை ஜாமீன்பேரில் விடுதலை செய்ய உத்திரவு பிரப்பிக்கும்படி கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொள்ளவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அது சமயம் அங்கு விஜயம் செய்திருந்த கொள்ளங்கோடு இராஜா வாசுதேவராஜா அவர்கள், இது கஷ்டத்தை மாக்ஷிமை தங்கிய கவர்னர் அவர்களுக்கு தாம் நேரில் தெரிவிப்பதாக வாக்களித்தனராம்.

A JUDGE AMONG CANNIBALS

பிரிடிஷ் இராஜ்ஜியத்திற் கெல்லாம், சர்கூட் போகும் போது உயிரை கையில் பிடித்துக்கொண்டே செல்லும், ஒரே ஒரு ஜட்ஜ்தானிருக்கிறார். அவர் தான் பிரிட்டிஷ் நியூ கினியா ஜட்ஜ் மிஸ்டர் முறே. இந்த முறே என்னும் ஜட்ஜானவர், ஏழுவருடங்களுக்கு முன் லண்டன் மிஷனரி சங்கத்தைச் சேர்ந்த ரெவரண்ட டாக்டர் சாமன்ஸ், ரெவரண்ட் டி-யப்-டாம், கின் என்னும் இரண்டு பாதிரிகளை கொன்று புசித்த நரமாமிசபக்ஷணிகளுக்கும், கொலை பாதகத்துக்கு அஞ்சாத வேடர்களுக்கும் பெயர்போன்ற வாசஸ்தானமாயிருக்கும் கோவாரபாரி (Goarbari) என்னுமிடத்திற்கு, ஷை கொலையுண்ட பாதிரிகளின் கபாலத்தை கொண்டுவரும் நிமித்தமாகவே மிக்க தைரியத்துடன் சென்றார். சென்றவர் தம்மைக்கண்டு, சிறந்த உணவாகக் கொள்ள சீரி எழுந்த பாபுன் (Papuan) என்னும் காட்டு மனிதர்களை, அநேக வெகு மதிகளாலும் உற்சாகமான வார்த்தைகளாலும் சமாதானப்படுத்தி காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பிவிட்டார். இவர் ஷை இடத்தில் இருந்த காலத்தில், படகுகள் எல்லாம் கபாலங்களால் நிறப்பப்பட்டிருப்பதையும் நரமாமிசங்கள் எங்கும் சமைக்கப்படுவதையும் தாம் பார்த்ததாக தெரிவிக்கிறார்.

BAD MEMORY TO A LEADING BARRISTER

கல்கத்தாவில் வெடிகுண்டு விபத்து விசாரணை நடந்து வரும்போது ஓர் சந்தர்பத்தில் டிபன்ஸ் தரப்பு பிளீடர் பிராசிகியூஷன் தரப்பு பாரிஸ்டர் மிஸ்டர் நார்ட்டனை, "நீர் காங்கிரஸில் சேர்ந்தவர்தானே?" என்று கேட்டதாகவும், அதற்கு மிஸ்டர் நார்ட்டன், "1894ஞு நான் காங்கிரஸை விட்டுவிட்டேன்" என்று சொன்னதாகவும் கடந்த ஏப்ரல்மீ 25௳ வெளியான ஹிந்து பத்திரிகை மூலமாய் தெரியவருகிறது.

Pleader:—" Mr. Norton, you also belong to the Congress."
Mr. Norton:— " I left Congress in 94."

இங்கு சொல்லப்பட்டிருக்கும் நார்ட்டனே சென்னையில் பிரக்கியாதிபெற்ற பாரிஸ்டாயிருந்து இப்பொழுது கல்கத்தாவில் வசிக்கிறவர் இவர் 1894ஞு த்திலேயே காங்கிரஸ் சபையைவிட்டு விலகியதாக சொன்னது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. ஏனென்றால் 1903-ம் வருஷத்தில் அதாவது அவர் விலகியதாக தெரிவித்த காலத்திற்கு ஏழுவருஷங்களுக்கு பிந்தி சென்னையில் கூடிய காங்கிரஸ் மகா சபையில் பிரக்யாதிபெற்ற அங்கத்தினராய் வீற்றிருந்து பம்பாய் கனவானாகிய ஸர் பி.யம். மேத்தா அவர்கள்—மிஸ்டர் லால் மோஹன்கோஷ் அவர்களை சபாநாயகராக ப்ரேரேபித்ததை தாம் ஆதரித்து பேசிய காலத்தில், ஏற்கனவே தம்கால் நூற்றாண்டு காலத்தை கழித்த இச்சென்னை இராஜதானிமுன்னிலையில் தாம் மனப்பூர்வமான சந்தோஷத்தோடும் சோதரவாஞ்சையோடும் மிஸ்டர்லால் மோகனகோஷின் வரவை ஏற்றுகொள்வதாய் தெரிவித்திருக்கிறார். இதற்கு அத்தாக்ஷியாய் அவ்வருஷத்திய பிரதிநிதிகளின் ஜாப்தாவில் (list of delegates) மிஸ்டர் நார்ட்டன்பெயரானது நெ. 19-வது (சென்னை பிரதிநிதியாக பதிவு செய்யப்பட்டிருக்கிறதென்றும் ஹிந்து பத்திரிகைக்கு ஒரு நிரூபர் எழுதியிருக்கிறா. இவ்விஷயங்களை யெல்லாம் அடியோடு மறந்து தாம் 1894-ம் வருஷத்திலேயே காங்கிரஸைவிட்டு விலகினதாக மிஸ்டர் நார்ட்டனே சொன்னுரென்றால், சாதாரண படிப்பாளிகளாயும் அல்லது அதுவுமில்லா சூனியர்களாயுமுள்ள கக்ஷிக்காரர்கள் சாக்ஷிக்காரர்கள் ஆகிய இவர்களின் மறதிக்கு கணக்குண்டோ ?

"...On behalf of the Presidency of Madras, a Presidency in which I have already passed nearly one quarter of a century, and in which I seem destined to spend another quarter—on behalf of Madras of which I am proud as I am fond—I tend to Lal Mohan Ghose the right hand of good fellowship and the warmth of a real and sincere welcome (cheers)."

Miscellaneous Suits

எழும்பூர் போலீஸ் கோர்ட்

(மிஸ்டர் யப்-டி-பர்ட் முன்பாக)

22-5-08

தப்பு நோட்டுகள்

சமீப காலத்தில் சிங்கப்பூரிலிருந்து வந்த மஹமத் கரிம் என்னும் ஒரு மகமத்தியன், பம்பாய் நோட்டு மாதிரியான, 10ரூ நோட்டு இரண்டு தப்பு நோட்டை மூர்மார்க்கட்டில் கொடுத்ததற்காக குற்றம் சாட்டப்பட்டு, மாஜஸ்டிரேட் அவர்களால், அடுத்த மதராஸ் ஹைகோர்ட்டு கிரிமினல் செஷன்ஸுக்கு கமிட்டி செய்யப் பட்டான். கேசின் விபரம் பின் வருமாறு:—குற்றவாளியும், மதராஸ் ஹைகோர்ட்டில் அட்டண்டராயிருக்கும் மஹமத் சாலர்கான் என்பவனும் ஆகிய இருவரும் மூர்மார்கட்டுக்கு சென்று சில சாமான்களை வாங்கி அதற்காக தப்புநோட்டுகளை கொடுத்தார்கள். ஷாப்புக்காரன் சந்தேகப்பட்டு போலீசுக்கு சமாசாரம் தெரிவிக்க, இருவரும் அரஸ்டு செயயப்பட்டார்கள். ஊருக்கு அன்னியனாகிய முதல் குற்றவாளி தன் வீட்டுக்கு வந்து, தங்கியிருந்து தன்னை ஏமாற்றிய விதத்தைஇரண்டாம் குற்றவாளி தன்னுடைய வக்கீல் மிஸ்டர் பி. ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார் மூலமாய் தெரிவித்துக் கொள்ள, மாஜஸ்டிரேட் இவன் விஷயத்தில் குற்றம் ஒன்றும் காணததால் இவனை (2-வது குற்றவாளியை) விடுதலை செய்து விட்டார். தப்பு நோட்டுகள் கைவசம் இருந்ததற்காகவும் தப்பு நோட்டுகள் என்று தெரிந்து, மூர்மார்க்கடடில் அவைகளை கொடுத்ததற்காகவும் 1-ம் குற்றவாளி குற்றஞ்சாட்டப்பட்டு, செஷனுக்கு கமிட்டி செய்யப்பட்டான்.

18-6-08

நம்மாள்வார்நாயுடு என்னும் வாலிபன் முதலாவது தான் கனம் குருப்பம் இராஜாவின் ஏஜெண்டு என்று தெரிவித்து மேஜர் ஜி-ஜி-கிப்பர்ட், ஐ-யம்-யஸ், அவர்களிடமிருந்து 60-ரூபாயும், இரண்டாது தான் விசாகப்பட்டணம் மஹாராணி லேடி கஜபதிராவ் அவர்களின் ஏஜெண்டு என்று தெரிவித்து மெஸ்ஸர்ஸ் டப்லியூ-இ. ஸ்மித் அண்ட் கம்பெனியில் 13ரூபாயுக்கு மருந்தும் வாங்கிக்கொண்டதற்காக, ஸப் இன்ஸ்பெக்டர் ஷார்ட் ஷை யானை பிராசிகியூட் செய்தார்.

பிராசிகியூஷன் தரப்பில், பிராசிகியூடிங் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் டி-பத்மநாபனுயுடுவும்-குற்றவாளி தரப்பில் வக்கீல் மிஸ்டர் வி-யன். குப்பாராவும் ஆஜரானுர்கள்.

முதலாவது மேஜர்-ஜி-ஜி-கிப்பிர்ட் அவர்கள், குற்றவாளி தன்னிடம் வந்து, அவன் கனம் குருப்பம் இராஜாவின் ஏஜெண்ட் என்றும், அவன் வாங்கிய மரச்சாமான்களுக்கு கொடுக்க ரூ-60 அவசரமாய் வேண்டுமென்று கேட்டதாகவும், தான் குற்றவாளியை ஷை இராஜகூட்டத்தோடு போகும்போது பார்த்திருப்பதால், அவன் கேட்டபடி ரூபாய்கொடுத்ததாகவும் சொன்னுர்.

இரண்டாவது ஷை முதல் சாட்சியின் பட்லராகிய மேனுயலும் ஷை வாக்கு மூலத்துக்கு ஒற்றுமையாகவே சொன்னுன்.

மூன்ருவது மெஸ்ஸர்ஸ் ஸ்மித் கம்பினியைச் சேர்ந்த மிஸ்டர் டபலியூ-இ-ஸ்மித்து, குற்றவாளி யானவன் விசாகப்பட்டணம் மஹாராணி லேடி கஜபதிராவிடமிருந்து வந்ததாக தனக்கு தெரிவித்த தின்பேரில் அவனுக்கு வைபுரோனு முதலிய சில மருந்துகள் 13 ரூபா யிக்கு கொடுத்ததாகச் சொன்னுர்.

குருப்பம் இராஜாவும் மஹாராணி லேடி கஜபதிராவும் ஆக இருவர்களும் கோர்ட்டில் ஆஜாக முடியவில்லையென்றும், மொத்த கேள்விகளையும் அவர்களுக்கு அனுப்பிவைக்கலாமென்றும், பிராசிக்கியூஷன் தரப்பார் கோர்ட்டாருக்கு தெரிவித்ததிஞலும், அதைடிபென்ஸ் தரப்பார் ஆட்சேபிக்காததிஞலும், அதன்படி அனுப்பப்பட்டது.

கேசும் அடுத்த ஜூலைமீ 31தேதிக்கு நிறுத்த வைக்கப்பட்டது.

புதுப்பேட்டை கோலைக் கேசு

(26-6-08)

இம்மீ 10வ புதன் கிழமை இரவு 11மணிக்கு சென்னை புதுப்பேட்டையிலிருக்கும் செம்பு பித்தளை பாத்திரங்கள் வியாபாரம் செய்யும் மீரா நயினு என்பவன் தன் பெண் சாதி விஷயத்தில் சந்தேகங் கொண்டு அவளை கத்தியினுல் குத்தவும், இதை தடுக்க வந்த 12 வயதுள்ள காதர் மீரா என்னும் அவன் மகனையும் கழுத்தில் குத்த, அவன் சொற்ப காயத்துடன் தப்பித்தோடிவிடவும், தானும் தன்னுடைய வயிற்றை குத்திக் கொண்டான். இதற்குள் இது சமாசாரம் போலீசாருக்கு எட்டி அவர்கள் வந்து பார்க்கும் காலத்தில் மீரா நாயனு என்பவன் சுரணை தப்பி அபாயகரமான நிலையிலும், அவனுடைய பெண்சாதி இறந்தும் கிடந்தார்கள். பிறகு நடந்த மரண காரண விசாரணையில் ஸ்திரீயானவள் வேண்டுமென்றே கொல்லப்பட்டாளென்று தீர்மானிக்கப்பட்டு கொலை செய்தவனை ஆஸ்பத்திரிக்கும் சவத்தை மயானத்திற்கும் அனுப்பப்பட்டது.

இந்த கொலைக் கேசானது இன்றையதினம் எழும்பூர் போலீஸ் கோர்ட்டில் மிஸ்டர் யெப்-டி. பர்ட் முன்பாக விசாரணைக்கு வந்தது.

பிராசிக்கியூஷன் தரப்பில் போலீஸ் பிராஸிகியூட்டிங் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் பத்மநாபநாயுடுவும் குற்றவாளிதரப்பில் பாரிஸ்டர் மிஸ்டர் இ. ஆர். ஆஸ்பரனும், வக்கீல்கள் மெஸ்ஸர்ஸ் சல்லாகுருசாமி செட்டியாரும் வி. சங்கர நாருயாண சாஸ்திரியும் ஆஜரானுர்கள்.

கொலை சாஷியின் பிளானை தயாரித்தவர் முதல் சாக்ஷியாக விசாரிக்கப்பட்டார். பின் மேஜர் டொனேவன் I. M. S., பிருசிகியூஷன் இரண்டாவது சாக்ஷியாக விசாரிக்கப்பட்ட காலத்தில், கொலையுண்ட ஸ்திரீக்கு 12 இடங்களில் காயம் பட்டிருந்ததென்றும், அவற்றுள் கழுத்தில் பட்டிருந்த பலத்தகாயந்தான் அவள் இறப்பதற்கு காரணமென்றும், இந்த காயமானது தனக்கு காண்பிக்கப்பட்ட கத்தியைப்போன்ற ஒரு கூர்மையான கத்தியால் குத்தப்பட்ட காயமென்றும் தெரிவித்தார். இந்த சாக்ஷி விசாரணை முடிந்த பின்பு, டிபன்ஸ் தரப்பு பாரிஸ்டர் மிஸ்டர் ஆஸ்பரன், ஜெயிலிலிருக்கும் தமது கக்ஷிக்காரனை தாம் நேற்று பார்த்ததாகவும், ஜெயில் அதிகாரிகள் அவனுடன் பேச போதுமான சாவகாசம் கொடுத்தும், அவனுக்கு தெரிந்த ஹிந்துஸ்தானி பாஷையில் தாம் பேசியும், அவன்தன் மேலிருக்கும் கேசை தெரிந்துக்கொள்ளவாவது அல்லது அது விஷயமாய் தனக்கிருக்கும் கக்ஷியை தெரிவிக்கவாவது அவனுல் கூடாமைபாய் விட்டதால் கி.பு. கோ. 464வது செஷன்படி அவனுடைய தற்கால மனநிலமையை தெரிந்து கொள்ளும் பொருட்டு அவனை டாக்டர் சிகிச்சையில் இருத்தும்படி கோர்ட்டாரை கேட்டுக்கொண்டார். என்ருலும், இது விஷயமாய் எழுத்து மூல மனு கொடுக்கும் பக்ஷத்தில் அப்பொழுது கவனிக்கப்படும் என்பதாய் கேஸ் இம்மீ 29வ திங்கட் கிழமைக்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

(29-6-08)

அதன்படி 29வ திங்கட்கிழமை ஷை கோட்டில் ஷை மாஜிஸ்டிரேட்டு முன்பாக கேஸ் துவக்கப்படவும் எற்கனவே சொல்லப்பட்ட வக்கீல்கள் ஆஜரானுர்கள்.

ஜெனரல் ஆஸ்பத்திரி அஸிஸ்டாண்ட் சர்ஜன் வர்கீஸ் சாக்ஷியாக விசாரிக்கப் பட்டார். தாம் குற்றவாளியை பார்வையிட்ட தாவுகம் அது சமயத்தில் அநேக காயங்களைக்கண்டதாகவும, அந்த காயங்களெல்லாம் கோர்ட்டில் வைக்கப்பட்டிருக்கும் கத்தியால் தான் ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும், குற்றவாளியானவன் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்ட காலத்தில் காதர்மீரு என்னும் பையனையும் பார்த்ததாகவும், அவனுக்குப் பட்டிருந்த காயங்களும் கோர்ட்டில் வைக்கப்பட்டிருப்பதைப் போன்ற கத்தியினுல் தான் ஏற்பட்டிருக்க வேண்டு மென்றும் தெரிவித்தார்.

இதன் பின், குற்றவாளியின் மாமனுர் சைதாப்பேட்டை இப்ராஹிம்சாஹிப் 20-வருஷங்களுக்குமுன் தன்னுடைய மகளை குற்றவாளிக்கு விவாகம் செய்து கொடுத்ததாயும், மகள் இறந்த சமாசாரம் 10வ இரவு 10 மணிக்கு தன்னுடைய சகோதரர் மூலமாய் தனக்கு தெரிய வந்ததென்றும், கோர்ட்டில் வைக்கப் பட்டிருப்பதை போன்ற கத்தியை தன்னுடைய மருமகன் வைத்திருக்க, தான் எப்பொழுதும் பார்த்ததே கிடையாதென்றும், குற்றவாளி வீட்டில் தன்னுடைய மகளும், மருமகனுகிய குற்றவாளியும், மச்சனிச்சியும் ஆகிய இவர்களோடு நான்கு குழந்தைகளும், இரண்டு மூன்று வேலைக்காரர்களு மிருந்தார்களென்றும், தெரிவித்தார்.

இதன் பின், குற்றவாளியின் மகன் 12 வயதுள்ள காதர் மீராவின் வாக்கு மூலம்:—என் தாயார் 10-15 நாளைக்கு முன் இறந்து விட்டாள். அவள் பகலில் இறந்ததும் இராத்திரியில் இறந்ததும் எனக்கு தெரியாது. அவளை யாரோ வீட்டில் குத்தி விட்டார்கள். அவளை குத்தினதையாவது குத்தினவரையாவது நான் பார்க்கவில்லை. நான் அவளை மயானத்தில் பார்த்தேன். ஜனங்கள் அவள் குத்தி கொல்லப்பட்டாள் என்று சொன்னுர்கள். அவளை மயானத்திற்கு கொண்டு போனது எனக்குத் தெரியாது. தாயாரும், தகப்பனுரும் அழுதுக் கொண்டிருந்ததை நான் கேட்டு, என் பாட்டனுருக்கு சொன்னேன். நான் சொன்ன காலம் இராத்திரிதான். என்னுடைய தாயார் அரையிலும் தகப்பனுர் தாழ்வாரத்திலும் இருந்தார்கள். அப்பொழுது வீட்டில் விளக்கே கிடையாது. என்னுடைய தாயாரும் தகப்பனுரும் கூச்சல் போட்டதை நான் கேட்டேன். அப்பொழுது யாரோ என்னை கீறி, என்விரலை காயப்படுத்தி ஓடிவிட்டார். நான் தெருக்கதவை திறந்துகொண்டு வெளியில் ஓடிவிட்டேன். இருட்டாயிருந்ததால், எதுகொண்டு என்னை கீறீனுரென்பது எனக்குத் தெரியாது. நான் தெருக்கதவை திறந்தபோது நாலைந்து நபர்கள் பின்புர வழியாய் வெளியில் ஓடினுர்கள். என்னுடைய தகப்பனுர் படுக்கையிலேயே பிறண்டு அழுதுக்கொண்டிருந்தார். இந்த அழுகைக்கூச்சலைக் கேட்டு, படுக்கையை விட்டெழுந்து, தகப்பனுரை என்ன சமாசாரம்என்று கேட்டபொழுது யாரோ ஒருவன் என்னை கீறிவிட, நான் வெளியில் ஓடிவிட்டேன். நான் என்ன சமாசாரம் என்று கேட்டதற்கு தகப்பனுர் பதில் ஒன்றும் சொல்லவில்லை. நாங்கள் மீன் முதலியவைவையும் காய்கரி பதார்த்தங்களையும் அறுகாமனையில் தான் அறுப்பது. கோர்ட்டில் வைக்கப்பட்டிருப்பதை போன்ற கத்தி ஒன்றும் எங்கள் வீட்டில் கிடையாது. தகப்பனுரோடு நானும் டாக்டரிடத்திற்கு சென்றேன். (அது சமயத்தில் இந்த சாக்ஷியானவன் காயம் உண்டான விதத்தை டாக்டருக்கு சொன்னுன்.) மறுநாள் காலையில் என் தாயின் பிரேதத்தை மயானத்தில் பார்த்தேன். இப்ராஹீம் சாகிப் அப்பொழுது இல்லை மரணகாரண விசாரணை நடந்த காலத்தில் நான் என்ன சொன்னேனே, அது எனக்கு இப்பொழுது கவனம் இல்லை, போலீசார் சொல்லிக் கொடுத்த மாதிரி நான் அப்பொழுது சொன்னேன்.

(கேசு ஜூலைமீ 6வ நிறுத்திவைக்கப் பட்டது.)

டவுன் போலீஸ் கோர்ட்

(மிஸ்டர் ஜெ. ஆர். கூம்ஸ் முன்பாக)

16-6-08

கடந்த மேமீ 20வ சி. டிவிஷனைச்சேர்ந்த போலீஸ்கான்ஸ்டபில் சாலமன் என்பவன், ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு எதிராக போய்க்கொண்டிருந்த வண்டியை நிறுத்தி, அது போக்குவரத்துக்கு தடையாயிருந்ததாக சாக்குசொல்லி ஆறுகாசு அதாவது அரையணு தனக்கு கொடுக்கும்படி வண்டிக்காரனை கேட்டான். இதை பார்த்திருந்த கவர்ன்மெண்ட் இரயில்வே போலீஸ் இன்ஸ்பெக்டர் இராமமூர்த்தி, உடனே சார்ஜண்ட் டெயிலருக்கு தெரிவிக்கவும், அவர் அவ்விடத்திலேயே விசாரித்து சோதித்ததில், யாரும் பாராத சமயத்தில் போலீஸ்காரனை எடுத்துக்கொள்ளும்படி, இரயில்வே கைப்பிடிசுவரில் வண்டிக்காரன் வைத்த ஆறுகாசானது கண்டு பிடிக்கப்பட்டு, ஷை கோர்ட்டில் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டதில், கான்ஸ்டபில் குற்றத்தை ஒப்புக்கொள்ள வில்லை என்ருலும், மாஜீஸ்டிரேட் இவனை குற்றவாளி யென்று தீர்மானித்து இவனுக்கு மூன்று மாத கடின காவல் தண்டனை விதித்தார்.

30-6-08

சுலிமான் என்னும் ஒருவன் தப்புநாணயத்தை சில்லரை மாத்தும் நிமித்தம் கொடுத்தான் என்பதாக இன்று குற்றம் சாட்டப்பட்டான். விசாரணையில் இவன் கடந்த மேமீ 24வ ஒரு கடைகாரனிடத்தில், சவரன் என்று ஒரு நாணயத்தை கொடுத்து, ஒரு அணு வட்டம் பிடித்துக்கொண்டு மீதி சில்லரை கொடுக்கும்படி கேட்டதாகவும், கடைக்காரன் சந்தேகப்பட்டு சில சாக்ஷிகள் முன்னிலையில் அதை சோதித்துப் பார்த்ததில், பொன் மொலாம் பூசப்பட்ட வெள்ளி நாணயமாகக் காணப்பட்ட தென்றும் ருசுவானது. ஆதலால் குற்றவாளிக்கு 18-மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

(மிஸ்டர் ராஜரத்தின முதலியார் முன்பாக)

19-6-08

பல வேறு பெயர்கள் உள்ள கந்தசாமி என்பவன் பொன் காப்பு திருடினதாக குற்றம் சாட்டப்பட்டான். ஒருவன் இடுப்பிலிருந்து ஊர்கோலத்தை பார்த்து கொண்டிருந்த ஒரு குழந்தையின் பொன்காப்பை கழற்ற முயன்ற போது, குற்றவாளி பிடிப்பட்டான் என்பதாக ருசுவானது. இவன் இதற்கு முந்தி ஆறு தடவைகளுக் கதிகமாய் தண்டனை யடைந்த பழய குற்றவாளியாயின தால், செஷனுக்கு கமிட்டி செய்யப் பட்டான்.

மதராஸ் ஹைகோர்ட்

(மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலஸ் முன்பாக)

3-6-08

வக்கீல் டிவான் பஹதூர் யல். ஏ. கோவிந்தராகவய்யர் அவர்கள் குண்டூர் டிஸ்டிரிக்ட் பாரஸ்ட் ஆபீஸ் ஹெட்குமாஸ்தாவாகிய, தமது கக்ஷிக்கார் கே. லக்ஷ்மணநாராயண அய்யர்மேல், குண்டூர் டிப்டி மேஜிஸ்டிரேட்

கோர்ட்டில் நடந்து வரும் கிரிமினல் கேசை, மேற்படி டிப்டி மாஜிஸ்டிரேட் பையலிலிருந்தும் குண்டூர் செஷன் ஜட்ஜ் பையலுக்கு மாற்றும்படி கேட்டுக்கொண்டார். முதலாவது தமது கக்ஷிக்காரரிடத்தில், மேற்படி பாரஸ்ட் ஆபீசைச் சேர்ந்த ஒரு சர்வேயரினுடைய நடத்தையைப் பற்றிய ரிகார்டுகள் ஒப்புவிக்கப்பட்டு, அது விஷயத்தை முதலாவது காட்டிலாக்கா ஆக்டிங் டிஸ்டிரிக்ட் ஆபீசர் மிஸ்டர் டி-யன் ஹியர்சே அவர்களுக்கும், இரண்டாவது காட்டிலாகா கன்ஸர்வேட்டர் அவர்களுக்கும் தெரிவிப்பதற்காக, ரிபோர்ட்டு தயாரிக்கும்படி கேட்டுக்கொள்ளப் பட்டதென்றும், பிராசிகியூஷன் தரப்பில், மேற்படி ஹெட் குமஸ்தா மேற்படி ஸர்வேயருக்குக் கிடைக்க விருக்கும் தண்டனையினின்றும் காப்பாற்றுவதற்காக, வேண்டுமென்றே ரிபோர்ட்டை வெளிக்குக் கொண்டுவராமல் நிறுத்தி விட்டாரென்று தெரிவித்திருக்கிறார்களென்றும், அதன்படி டிப்டி மேஜஸ்டிரேட்டும் ஏற்கனவே ஒரு குற்றம் ஏற்படுத்தி விட்டாரென்றும் ஷை வக்கீல் தெரிவித்து, முதலாவது இந்த கேசில் லாவை பொருத்த முக்கிய விசாரணை கலந்திருக்கிறதென்றும், இரண்டாவது ஷை ஆபீசின் சில குறைகளை தமது கக்ஷிகாரர் வெளியிட்ட நிமித்தம், தமது கக்ஷிக்காரர் பேரில் அவருடைய மேல் உத்தியோகஸ்தரானவர் மாச்சரியம் கொண்டிருக்கிறாரென்றும், ஆகிய இந்த இரண்டு விஷயங்களையும், கேசை டிப்டி மாஜஸ்டிரேட்டி னிடத்திலிருந்து செஷன் ஜட்ஜுக்கு மாற்றும்படியாக கேட்டுக் கொண்டதற்கு காரணங்களாக எடுத்துக் காட்டினார்.

பப்ளிக் பிராசிகியூட்டருக்கு பதிலாக பாரிஸ்டர் மிஸ்டர் லபோ இந்த மனுவை ஆக்ஷேபித்தார். என்றாலும், மனுப்படி இந்தக் கேசை குண்டூர் செஷன் ஜட்ஜ் அவர்கள் விசாரிக்கும்படி உத்திரவு செய்யப்பட்டதன்னியில், ஷை விசாரணை முடிகிறவரையில், குற்றவாளியை ஜாமீனில் விடப்பட்டது.

கோயம்பத்தூர் டிஸ்டிரிக்ட் கோர்ட்

9-6-08.

தாராபுரம் சப்ரிஜஸ்டரார் ஆபீசின் ரிஜஸ்டிரேஷன் புஸ்தகத்திலிருந்து சில தாள்களை கிழித்துவிட்டு ஷை சப்ரிஜஸ்டராரிடம் 300 ரூபாயை பெற்றுக் கொண்டு, பிறகு அந்த தாள்களை கொடுத்ததாக டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்டிரார் ஆபீஸ் கிளார்க் அதாவது குமஸ்தா ஆர்-ஸ்ரீனிவாச அய்யங்கார் குற்றம் சாட்டப்பட்டு டிப்டி மாஜஸ்டிரேட்டால், இ-பி-கோ 215-வது செக்ஷன்படி, ஒரு வருஷ கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டார். இதன் பேரில் செஷன் ஜட்ஜுக்கு அப்பீல் செய்துக்கொள்ளப்பட்டது. செஷன் ஜட்ஜானவர், குற்றத்தை-திருட்டு சொத்தை திருப்பிகொடுக்க இனாம் வாங்கிக்கொள்ளுதல் - அபகரித்தல் - திருட்டு சொத்தென்று தெரிந்தும் அதை தன் வசம் வைத்திருத் தலாகிய, முறையே இந்தியன் பினல் கோட் 215, 384, 411-வது செக்ஷன்களின் படியுள்ள குற்றங்களாகமாற்றி, கீழ் கோர்ட்டு தண்டனையை காயப்படுத்தினார்.

கல்கத்தா ஹைகோர்ட்

(சீப் ஜட்ஜ் முன்பாக)

15-6-08

கல்கத்தாவில் மெஸ்ஸர்ஸ் கர்த்தார்ஸ் கம்பெனி என்பவர்கள் அட்டரணிகள். இந்த கம்பெனியைச் சேர்ந்த மிஸ்டர் வில்சன் என்பவர், ஒரு வியாஜ்யத்தில் வாதி தரப்பிற்கு ஒரு அட்டரணியும் பிரதிவாதி தரப்பிற்கு வேறொரு அட்டரணியு மென்று, கோர்ட்டார் நம்பும் படியாய், வாதி தரப்பில் ஷை கம்பெனிபெயராலும், பிரதிவாதி தரப்பில் தன் சொந்த பெயராலும், தாமே வாதி பிரதி வாதிகளுக்கு அட்டரணியாய் ஏற்பட்டார். இந்த அயுக்தமான செய்கைக்காக ஷை அட்டரணி கல்கத்தா ஹைகோர்ட்டில் ஸ்பெஷல் பெஞ்சி முன்பாக விசாரிக்கப்பட்டார். விசாரணையில், முதலாவது—ஒரே அட்டரணி இரண்டு பெயர்களால் இரணடு கக்ஷிகளுக்கும் ஏற்பட்டதானது, கோர்ட்டாரை ஏமாற்ற வேண்டுமென்ற பூரா எண்ணத்துடன் செய்ததாக விளங்கினது. இரண்டாவது—பிரதிவாதிகள் வாக்ப் ('Waqf') தர்ம சொத்துக்களுக்கு டிரஸ்டிகள் என்றும், ஆதலால் ஷை சொத்துக்களில் ஒன்றையும் ரத்து செய்வதற்கு அவர்கள் உடன் படாமலே ஷை வாக்ப் ஆதாரத்தை வற்பொருத்த வேண்டியது அவர்கள் கடமை யென்று தெரிந்திருந்தும், பிரதி வாதிகள் தரப்பின் எழுத்து மூல விவரணமானது அதாவது ரிட்டன் ஸ்டேட் மெண்டானது அயுக்தமாய் எழுதப்பட்டிருக்கிற தென்றும், மூன்றாவது—16 வருஷகாலமாய் அட்டரணியா இருந்துவரும் மிஸ்டர் வில்ஸனானவர், இந்த வியாஜ்ஜியமானது ஹாதி அப்துல்கான்சாயபு எழுதிக்கொடுத்த வாக்ப்பை ரத்து செய்யும் பொருட்டு, கூடி கர்ப்பனை செய்து கொண்டுவரப்பட்ட சூதான வியாஜ்ஜிய மென தெரிந்து கொண்டிருக்கவேண்டு மென்றும், கடைசியாய் விசாரணை தினத்தன்று காலை யில், தமது அப்பிடவேட் (பிரமாணபத்திரம்) ஒன்றை பிரமாணஞ் செய்ய கோர்ட்டுக்கு வந்த ஷை அட்டரணியானவர் ஷை விசாரணை காலத்தில் ஆஜாராகாமலிருந்ததே அவருடைய துர் நடத்தைக்கு அத்தாக்ஷியாயிற் றென்றும், இச் செய்கைகளால் அவர் கோர்ட்டை அலக்ஷியம் செய்தல், கோர்ட் ஆபீசரின் துர் நடத்தை என்னும் குற்றங்களை செய்ததாகவும் கருதப்பட்டது.

ஆதலால், மிஸ்டர் வில்ஸன் என்னும் அட்டரணியை, ஒரு வருஷம் வரையிலும் அல்லது அதற்கு மேற்பட்டு அவர் ஷை கோர்ட்டின் ஒரிஜனல் தரப்புக்குள்ளாக, தம்முடைய சொந்த பெயரினாலேயே அட்டரணி தொழில் செய்வதாய் எவ்வளவு காலம் வரையில் கோர்ட்டாருக்கு திருப்தி செய்யாமலிருக்கிறாரோ அவ்வளவு காலம் வரையிலும், சஸ்பண்ட் செய்திருக்கிறார்கள்.

பின்னும் ஷை அட்டரணியை, இந்த கோர்ட் காஸ்டையும், லா கூட்ட சங்கத்தார் (Incorporoted Law Society) தரப்பில் ஆஜரான அட்வகேட் ஜனரல், மிஸ்டர் பக் ஆகிய இவர்களின் தனித் தனி காஸ்டுகளையும் கட்டிகொடுக்கும்படி தீர்ப்பு சொல்லப்பட்டது.

திருநெல்வேலி கலகக் கேஸ்

15-6-08

மேற்படி கலகத்தில் சம்பந்தப்பட்டதாக கொண்டுவரப்பட்ட 65 நபர்களில் திருநெல்வேலி அடிஷன் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் மிஸ்டர் இ. யச். வாலஸ் 13 நபர்களை விடுதலை செய்து, குருநாத அய்யர், லோகநாத அய்யர், சங்கரநாராயண பிள்ளை, கனகசபாபதி பிள்ளை இவர்கள் உள்பட 52 நபர்களை திருநெல்வேலி செஷனுக்கு கமிட்டி செய்திருக்கிறார். குற்றவாளிகள் எல்லாம் ரிமாண்டிலிருக்கிறார்கள்.

கல்கத்தா சீப் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்

17-6-08

கல்கத்தா-ஜார்பாகன் என்னும் ஊரில் வெளிதேசத்தான் ஒருவன் வசித்து வந்தான். அவன் கடந்த வருஷம் ஒரு ஸ்திரீயை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு, கல்கத்தா போலீஸ் கோர்டடில் விசாரணை நடந்தது. அந்த விசாரணையில் போலீசாரின் சாக்ஷியம் போதுமானதாய் இல்லாமலும் அதிருப்திகரமாயும் இருந்தபடியால், அவன் குற்றவாளியல்லவென்று விடுவிக்கப்பட்டான். அதுமுதல் போலீசார் அவனைபற்றி கவனிக்கவேயில்லை. அப்படியிருக்க, அவன் இம்மீ (ஜூன்) 9உ ஜாரபாகன் போலீஸ் ஸ்டேஷனுக்கு தன் இச்சையாய் சென்று, தனக்கும் கொலையுண்ட ஸ்திரீக்கும் கிருத்திகமம் இருந்ததென்றும், அதனால் ஸ்திரீயை தான் வேண்டுமென்றே பொறாமைகொண்டு கொலை செய்ததாகவும், ஆதியோடந்தமாய் தெரிவித்த தன்னியில், தான் நிர்தோஷி யென்று விடுவிக்கப்பட்ட நாள் முதலாய், ஒருநாழிகையாவது நிம்மதியாயும், சந்தோஷகரமாயும் இருந்ததே கிடையாதென்றும், ஆனால் தான் செய்த குற்றமே தன் மனதை புண்படுத்தி சதாபாதித்து வருகிறதென்றும், தான் செய்த கொலைபாதகத்துக்கு தான் தண்டிக்கப்படாலன்றி தனக்கு தூக்கம் பிடிக்காதென்றும், ஆதலால் தன்னை மீண்டும் விசாரணை செய்யும்படி கேட்டு கொள்ளுவதற்காகவே, தன்னிச்சையாய் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தானென்றும் தெரிவித்தான்.

இவன் இம்மீ 10உ கல்கத்தா போலீஸ் கமிஷனர் மிஸ்டர் ஹோலிடே முன் ஆஜர் செய்யப்படவும், இவன் கோரியபடி இவனை கொலை குற்றத்திற்காக மாஜிஸ்டிரேட்டின் விசாரணைக்கு கொண்டு போகும்படி உத்திரவு செய்தார்.

அதன்படி ஜூருகு ஆஹிர் என்னும் இவன் இம்மீ 17உ புதன்கிழமை கல்கத்தா சீப் பிரஸிடென்சி மாஜிஸ்டிரேட மிஸ்டர் தாரன்ஹில் முன்பாக விசாரணைக்கு கொண்டுவரப்பட்டான்.

பப்ளிக் பிராசிக்கியூட்டர் மிஸ்டர் ஹியூம் என்பவர், ஷையான் ஆறுமாதங்களுக்கு முன்பு கொலை குற்றம் சாற்றப்பட்டானென்றும், விசாரணையில் குற்றத்தை ருசுபடுத்த போதுமான சாக்ஷியம் இல்லாததினால் கடந்த ஜனவரிமீ விடுதலை செய்யப்பட்டானென்றும், தெரிவித்தார். அவன், தான் எப்பொழுதும் கொலை குற்றத்திற்காக விசாரிக்கப்படவே கிடையாதென்று சொன்னான். பிறகு மாஜிஸ்டிரேட் அவர்களை ஷையானை கேட்ட காலத்தில், நந்தான் சிங் என்னும் ஒருவனை கொலைசெய்ததற்காக, தான் கோர்ட்டின் கீழ்மாடியில் விசாரிக்கப்பட்டான் என்று தெரிவித்தான். இதன்பின்.—

மாஜிஸ்டிரேட்:—இன்னும் சொல்ல வேண்டியது ஏதாவது உண்டா?

குற்றவாளி:—ஒன்றுமில்லை.

மா:—எதற்காக நீ இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறாய்?

கு:—என் இச்சையாகவே போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்று குற்றத்தை தெரிவித்தேன்; அதன்பேரில் போலீஸார் என்னை அரெஸ்ட் செய்து கொண்டு வந்தார்கள்.

மா:—எதனால் நீ அப்படி தெரிவித்துகொண்டாய்?

கு:—எனக்கு புத்தி சுவாதீனமில்லாததினால்.

மா:—நீ நோயாயிருந்தையா?

கு:—எட்டு ஒன்பது மாதங்களுக்கு முன்பாக எனக்கு தலைதோஷம் உண்டானது. அது முதல் யாராவது என்னிடம்வந்து பேசினால், அவர்கள் பேரில் எனக்கு அறு வெறுப்பும் கோபமும் உண்டாகிறது. இந்த விபரீதமான மனோவிகாரத்தில் சிக்குண்டிருப்பதால், நான் வலிய வந்து குற்றத்தை தெரிவித்துக்கொண்டேன். நான் குற்றவாளியல்ல வென்று விடுதலை செய்யப்பட்ட கடந்த ஜனவரிமாதம் முதல் வண்டி யோட்டிக்கொண்டிருந்தேன். இப்பொழுது எனக்கு அத்தகைய வேலையிலும் பிரியமில்லாததினால், சாப்பிட உணவும், இருக்க இடமும் இனாமாய் கொடுக்கப்படும் ஜெயிலுக்கு என்னை அனுப்பும்படியாய் வந்திருக்கிறேன்.

கடைசியாய் இவனை இரண்டுவாரத்திற்கு சிகிச்சையில் இருத்தி, மறுபடியும் ஆஜர் செய்யும்படி உத்திரவு செய்யப்பட்டது.

கிருஷ்ண சர்மா

கிருஷ்ணசர்மா அல்லது கிருஷ்ணசாமி சர்மா என்று சொல்லப்படுபவர், சில நாட்களுக்கு முன் அடிக்கடி மூர்மார்க்கட்டு மைதானத்தில் சுதேசிய பிரசங்கஞ் செய்து வந்தவர். இவர் ஒரு பெரிய குடும்பத்தை சேர்ந்தவர். 19-வயதுள்ளவர். பச்சையப்பன் கல்லூரியில் அதாவது காலேஜில் வாசித்தவர். ஒரு வருஷத்திற்கு அதிகமாகவே இவர் சுதேசிய பிரசங்கஞ் செய்யத் தலைப்பட்டு, செங்கல்பட்டு கோயம்புத்தூர் திருச்சினாப்பள்ளி முதலிய ஜில்லாக்களுக்கும் சென்று பிரசங்கஞ் செய்திருக்கிறார். இவர் சில மாதங்களுக்கு முன் கரூரில் இராஜதுரோகமான பிரசங்கஞ் செய்ததாக, ஈரோட் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டால், இ. பி. கோ. 124, ஏ., 153, ஏ., 505-வது பிரிவுகளின் படி இவர்பேரில் வாரண்டு பிறப்பிக்கப்பட்டது. இந்த வாரண்டின்படி இம்மீ 12உ வெள்ளிக்கிழமை காலை, கரூர் போலீஸ் ஆபீசர் ஒருவரால் கிருஷ்ணசர்மா அரெஸ்ட் செய்யப்பட்டு, அன்று பகல் எழும்பூர் போலீஸ் கோர்ட்டு சீப் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் மிஸ்டர்

யப். டி. பர்ட் முன்பாக ஆஜர் செய்யப்பட்டார். கிருஷ்ணசர்மாவை ஜாமீனில் விடும்படி வக்கீல் பிரம்மஸ்ரீ பி. திருமலாச்சாரியார் கேட்டுக்கொண்டும் ஜாமீன் கொடுக்கப்படவில்லை. ஆதலால் அன்றுமாலை மெயில் வண்டியில் போலீஸ் பந்தோபஸ்துடன் கிருஷ்ணசர்மா கொண்டுபோகப்பட்டார்.

கோயம்புத்தூர் செஷன் கோர்ட்

(மிஸ்டர் ஆர். டி. பிராட்புட்)

17-6-08

கரூரில் இராஜ நிந்தனையான பிரசங்கங்களை செய்ததாக சென்னப்பட்டணத்தில் அரெஸ்ட் செய்து கொண்டுபோகப்பட்ட கிருஷ்ணசர்மாவை ஜாமினில் விடும்படி இன்றைய தினம் ஹைகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் யஸ். யஸ். வெங்கடரமண அய்யர் ஷை கோர்ட்டுக்கு மனு செய்துகொண்டார்.

பிரஸ்தாப குற்றமானது குற்றவாளியை ஜாமீனில் விடக்கூடாத பெரிய குற்றமென்று, பப்ளிக் பிராசிகியூடர் மிஸ்டர் டி. பாலகிருஷ்ண அய்யர் மனுவை ஆக்ஷேபித்தார்.

மனுதாரின் வக்கீல் குற்றவாளியானவர் சுதேசியத்தைப்பற்றி பிரசங்கஞ் செய்ததால், அவ் விஷயங்களுக்கும் இராஜாங்க விஷயங்களுக்கும் யாதொரு சம்பந்த மில்லை என்று வாதாடினர். என்ன வாதாடியும் மனுதள்ளப் பட்டது.

26-6-08

இந்த கேசானது இம் மீ 26வ ஈரோட் டிப்டி மாஜிஸ் டிரேட் முன்பாக துவகக்கப்பட்டு எழுசாக்ஷிகள் விசாரிக்கப்பட்டன. 1908ஆ மார்ச்சுமீ 6வயும், 17வ யும் ஷை சர்மா செய்த பிரசங்கத்தில், தூத்துக்குடி ஜனங்களைப் போல ஒன்று சேர்ந்து, பப்ளிக் ஆபீஸ் கட்டடங்களை இடித்து விடும்படிக்கும், வெள்ளையர்களை ஊரைவிட்டு துரத்திவிடும்படிக்கும், தூண்டினதாக தெரியவருகிறது. இதன்முடிவு பிந்தியே தெரியவரும்.

கண்டி (சிலோன்) போலீஸ் கோர்ட்

24-6-08

கடுகன்னுவா கிராமத்து ஒரு சிங்களவன் தேயிலைச்செடிகளை நடுவதற்காக குழிதோண்டுகையில், அவனுக்கு அகப்பட்ட புத்தரின் பித்தளை விக்கிரகங்கள் முதலிய சிலவற்றை சட்டப்படி கவர்ன்மெண்டுக்கு தெரிவிக்காமலிருந்த குற்றத்திற்காக, அவன் ஷை போலீஸ் கோர்ட்டில் மிஸ்டர் டி. பி. ரஸல் முன்பாக ஆஜர் செய்யப்படவும், பாதிவிசாரணை நடந்து கேசு நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

மலபார் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் கோர்ட்

26-6-08

தன் பெயர் பிரயர் (Pryer) என்று சொல்லி ஒரு வெள்ளைக்காரன் முனிசிபல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றிருந்தான். அவன் உடம்பு குணப்பட்டு ஆஸ்பத்திரியிலிருந்து வந்தபிறகு தான் வைநாடுக்கு போக தனக்கு பொருளுதவி செய்யும்படி சில வெள்ளைக்கார கனவான்களை கேட்க தலைப்பட்டான். இதுசமயத்தில் தன் பெயர் மெகன்ஜி என்று தெரிவித்து வந்தான். இவனை, டவுன் போலீஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் ஞானபிரகாசம்பிள்ளை, ஹௌரா போலீசார் தேடிக்கொண்டிருக்கும் ஆசாமியா இருக்கவேண்டு மென்று சந்தேகப்பட்டு, ஆங்கிரீகமாய் விசாரணை செய்ததின் பலனாய், சில நாட்களுக்கு முன்னர் இவன் வயித்திரி என்னுமிடத்தில் அரெஸ்ட் செய்யப்பட்டு இம்மீ 26வ (மலபார்) டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்முன் ஆஜர் செய்யப்பட்டு, இப்பொழுது சார்ஜண்ட் வார்னருடையவும் ஒரு ஹெட் கான்ஸ்டபிளுடையவும் காவலில் கல்கத்தாவுக்கு கொண்டுபோகப் பட்டிருக்கிறன்.

பம்பாய் யஸ்பலனேட் போலீஸ் கோர்ட்

29-6-08

பம்பாய், முதல் மெரீன் தெருவிலிருக்கும் சேகத் ஹாஜி உஸ்மான் ஷேக் சுலிமானுடைய வெண்மையான வெள்ளாட்டை, ஜமாபாய் என்னும் கிழவி அதிக ஆசையோடு பார்த்து அது கட்டுப்பட்டிருந்த இடத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டுபோய் விட்டாள். அதற்காக அவள் இம் மீ 3வ இரண்டு வாரம் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டாள். பிரஸ்தாப வெள்ளாடானது கிழவியை மயக்கி விட்டதென்றே சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனென்றால், அந்த கிழவி ஜெயிலிலிருந்து வந்தவுடன் மறுபடியும் அந்த வெண்மையான வெள்ளாட்டை போய் பார்த்தாள். பார்க்கப்பார்க்க அவளுக்குண்டான ஆசை மிகுதியால், அந்த வெள்ளாட்டை தன்னிடமே வைத்துக்கொள்ளுவதற்காக, அதை அவிழ்க்க முயன்ற காலத்தில், அவள் பிடிக்கப்பட்டு போலீசார் வசம் ஒப்புவிக்கப்பட்டாள். இந்த கிழவியும் வெள்ளாடும் இம்மீ 29வ ஷை போலீஸ் கோர்ட் 3-வது மாஜிஸ்டிரேட் மிஸ்டர் டிரேகப் முன்னால் ஆஜர் செய்யப்படவும், கிழவி வெள்ளாட்டை பார்த்து, குற்றத்தை ஒப்புக்கொண்டாள். இவளுக்கு இப்பொழுது இரண்டு மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

கொலைவாளியும் கொலை செய்ய யத்தனித்தவனும்

உதகமண்டலம் சப் மேஜஸ்டிரேட் முன்பாக, இரண்டு மகம்மதிய சகோதரர்களில் ஒருவர் கொலை செய்ததாகவும், மற்றொருவர் கொலைசெய்ய முயன்றதாகவும் குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்கள். பிராசிகியூஷன் தரப்பில் கூனூர் இன்ஸ்பெக்டர் மீச்சனும், குற்றவாளிகள் தரப்பில் மிஸ்டர் இராமாராவும் ஆஜராயிருக்கிறார்கள். முதல் குற்றவாளியின் பெண்சாதியும், இரண்டாவது குற்றவாளியின் சகோதரன் பெண்சாதியுமாகிய, பிராசிகியூஷன் தரப்புமுதல் சாக்ஷியின் வாக்கு மூலத்தால், கேசின் விபரம் தெரியவருகிறது. அதாவது இந்த சாக்ஷிக்கு 18-வயதுள்ள ஒரு பெண்ணும் 7-வயதுள்ள ஒரு பெண் குழந்தையும் உண்டு. இவளுக்கும் இவளுடைய புருஷனுக்கும் உண்டான சில மனவருத்தங்களால், அவளும் அவளுடைய பெண்களும் தாண்டல் பிங்கா (போஸ்ட்) இடத்திலிருக்கும் இப்ராஹிம்கான் வீட்டில் வசித்து வந்தார்கள். புருஷன் மாத்திரம், உதகமண்டலத்திற்கு வெளியாக சில மைல் தூரத்திலுள்ள படாகர் கிராமத்தில் வியாபாரம் செய்து கொண்டிருந்தான். இதற்கு இடையில் 1-வது குற்றவாளி தன்னுடைய பெண்சாதியும் பெண்களும் ஷை இப்ராஹிம்கான் வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறார்களென்று காண்டால் போலீஸ் ஸ்டேஷனுக்கு தெரிவித்தான். கடந்த மேமீ 16வ மூத்தப்பெண் வரமாட்டேனென்று சொல்லி விடவும், பெண்சாதியும் சிறிய பெண்ணும் 1-வது குற்றவாளியுடன் சேர்ந்து, ஸ்டேடன் குளத்துக்குச் சமீபமாய் வரும்போது, முதல் குற்றவாளி தன் பெண்சாதியை குளத்தில் தள்ளி விட்டான். இரண்டாவது குற்றவாளி, பெண் குழந்தையை குளத்தில் எறிந்துவிட்டான். எறியப்பட்ட குழந்தை நீரில் மூழ்கி இறந்துவிட்டது. பெண்சாதி மாத்திரம் தப்பித்துக்கொண்டாள்.

தென் மலபார் சேஷன்ஸ்

அய்யப்பன் என்னும் ஒரு சருமாவும், அவனுடைய பெண்சாதி காளி என்பவளும் ஏதோ வித்தியாசத்தால் பிறிந்து விட்டார்கள். இதன் பின் காளி என்பவள் வேறொரு சருமாவை கலியாணம் செய்துக்கொண்டாள். இதைக்கண்ட அய்யப்பன் ஷை யாள்பேரில் வஞ்சம் வைத்துக்கொண்டேயிருந்து, ஒரு நாள் அவள் பாராம்பா வழியாய்ப் போய்க்கொண்டிருந்த பொழுது, அவள் மேல் பாய்ந்து கத்தியால் குத்தி கொன்று விட்டான். இவன் கொலை குற்றவாளியாக தீர்மானிக்கப்பட்டு, செஷன் ஜட்ஜ மிஸ்டர்-யல்-ஜே-மூர் அவர்களால் மரண தண்டனை விதிக்கப்பட்டான்.

சாணர்களின் அப்பீல்

மதுரை ஜில்லாவைச் சேர்ந்த கமுதி என்னுமிடத்தில் ஒரு சிவன் கோயிலிருக்கிறது. இந்த கோயிலுக்கு இராம நாதபுரம் இராஜா அவர்கள் பரம்பரையான டிரஸ்டி. அவ்விடத்திலுள்ள சாணர்கள் மேற்படி கோயிலுக்குள் ஆசாரத்துக்கு விரோதமாய் பிரவேசிக்கவும், தேங்காய் முதலியவற்றை வைத்து தேவாராதனைசெய்யவும் முயற்சித்தார்கள். சாணர்கள் கோயிலுக்குள் வரவே கூடாதென்பது டிரஸ்டியினுடையவும், மற்றும் கோயிலபிமானிகளுடையவும் கக்ஷி. ஆதலால் சாணர்களை கோயிலுக்குள் விடாமல் தடுத்து வந்தார்கள். இதன்பேரில் சாணரும் தாங்கள் கோயிலுக்குள் சென்று சுவாமிதரிசனம் செய்ய பாத்தியமுள்ளவர்களென்று வாதித்து வந்தார்கள். இவர்கள் பேச்சளவிலேயே நில்லாமல் தங்களுக்குள்ள பாத்தியதையை நன்றாய் தெரிந்து கொள்ளும் பொருட்டு, ஒரு நாள் மேற்படி கோயிலின் உள் பிரகாரத்திற்கு சென்று, ஹிந்துக்களைப் போலவே தேங்காய் முதலியவற்றை வைத்து தேவாராதனை செய்தார்கள். சாணரின் இவ்வித அடாத செய்கையாம் தோஷத்தை நிவர்த்திக்க கும்பாபிஷேகம் நடத்தும்படி நேர்ந்த தென்றும், சாணர் கோயிலுக்குள் பிரவேசிக்க பாத்தியமற்றவர்களென்றும், ஆதலால் அவர்கள் கோயிலுக்குள் பிரவேசிக்கக்கூடாதென்று (இஞ்சங்க்ஷன்) உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்றும், மதுரை சப் ஜட்ஜ் அவர்களுக்கு 1898-ம்ஆ 33-வது நெம்பர் அசல் வியாஜ்ஜியம் தாவா செய்துக்கொள்ளப்பட்டது. இந்த கேசானது மூன்று மாதங்கள் வரையில் நடந்தது. 135 சாக்ஷிகள் விசாரிக்கப்பட்டு, 100 தஸ்தாவேஜுக்கள் ருஜுக்களாய் பார்வையிடப்பட்டன. கடைசியாக, சப் ஜட்ஜானவர், இதற்கு முந்தி எப்பொழுதும் சாணர் கோயிலுக்குள் சேர்க்கப்பட்டது இல்லையா தென்றும், பின்னும் கோயிலுக்குள் பிரவேசிப்பதனின்றும் சாஸ்திர யுக்தமாயும் ஆசாரப்படியும் தடுக்கப்பட்டிருப்பவர்களைச் சேர்ந்த ஒருவகுப்பார் சாணரென்றும் தெரிந்து, சாணர் கோயிலுக்குள் பிரவேசிக்கப் பாத்திய மற்றவர்களென்று டிக்ளேர் செய்த தன்னியில் அதாவது தெரிவித்த தன்னியில், தாவாப்படி சாணர் ஷை கோயிலுக்குள் போகக் கூடாதென்று உத்திரவும் செய்து, ஷை கோயிலுக்குள் சாணர் துராக்கிரதமாய் சென்றதினால் நேர்ந்த நஷ்டம் ரூ 500-ம் கட்டி கொடுக்கும்படி தீர்ப்பு சொன்னார். இதன்பேரில், (இருளப்பநாடானும் 13 நபர்களும்) சாணர் மதராஸ் ஹைகோர்ட்டுக்கு (1900ஆ 11-வது 77-வது நெம்பர்) அப்பீல் செய்து கொண்டார்கள். மதராஸ் ஹைகோர்ட்டாரும், 1902ஆ பிப்பரவரிமீ 14வ யில், மதுரை சப் ஜட்ஜ் அவர்களின் தீர்மானத்தையே காயப்படுத்தினார்கள். கடைசியாய்சாணர் பிரிவிகௌன்சிலுக்கு அப்பீல் செய்துக் கொண்டார்கள். இந்த அப்பீல் விசாரணையானது பிரிவிகௌன்சில் ஜூடிசல் கமிட்டிக்கு முன் நடந்தது. அப்பீல் வாதிகளாகிய சாணர் தரப்பில் மிஸ்டர் டி குருத்தர் K. C. யும், மிஸ்டர் கைப்பின்னும், அப்பீல் பிரதிவாதிகளாகிய டிரஸ்டி ராமனாதபுரம் ராஜா தரப்பில் மிஸ்டர் கென்வொர்த்தி பிரௌனும் ஆஜரானார்கள். அப்பீல் வாதிகள் தரப்பு வாதங்கள் மட்டும் கேட்கப்பட்டு, அப்பீல் தள்ளிவிடப்பட்ட தன்னியில், அப்பீல் பிரதி வாதிகளாகிய கோயில் டிரஸ்டியின் கோர்ட்டு காஸ்ட்டையும் சாணரை கட்டிக் கொடுக்கும்படி தீர்மானிக்கப்பட்டது.

MALAVATHI

A Tamil Novel By Mr. A. V. Seyalam

மாலாவதி

ஒரு நாள் மாலை சுமார் 4 மணிக்கு மழை பூச்சிக் காட்டிக்கொண் டிருந்தது. எப்பூச்சிக்கு பயப்படா விட்டாலும் மழை பூச்சிக்கு அநேகமாய் யாவரும் பயப்படுவார்கள். வெளியில் புறப்பட அஞ்சுவார்கள். அதிலும் தலைப்பிள்ளைகள், தம்மை இடி தூக்கி வரும் தாத்தா பாட்டி கதைக்கு பயந்து தலையை வெளியில் காட்டவே மாட்டார்கள். இப்பேர்பட்ட காலத்தில் மேல் மாடி யொன்றில் ஒரு உருவம் தென்பட்டது. சொல்லவா? மெல்ல செல்லவா? ஆ! ஆ!! எட்டு ஜாணில் ஒரு ஜாண் தான் தெரிந்தது. அதுதான் பிரதானம். அதுவும் மறைந்து போய் விட்டது. பின் அரை நாழிகைக்கெல்லாம் அஷ்டஜாணும் அலங்காரத்துடன் வெளிவந்தது. வெளிவந்ததென்ன? உற்றுப்பார்த்திருந்த பாலகுமாரர்களைக் கேட்டால் தெரியும். அவளை பருவத்தியென்பார்கள். உண்மையில் அவள் கையால் அவள் உடம்பு எட்டு ஜாண்; அவ்வெட்டு ஜாணில் பிரதானமாகிய சிரசைக்காட்டின காலம் 4-மணி; அதுவும் மாலை 4-மணி; அதாவது சற்றேறக்குறைய பகல் மூன்றுங்காலம்; ஆகவே எட்டையும் நாலையும் மாறினால் [illegible] முடிபத்திரண்டு; இவள் பருவமோ அதாவது வயதோ முப்பத்திரண்டு இருக்கலாம். [illegible]

ன்று சொல்வது !... சொல்ல நினைத்தால் பெரியம்மாள் பிடித்து கொள்வாள்...தேகமோ பசுங்கொடி! வாசப்படியை பேர்த்துவைக்க கொல்லத்துக்காரரைத் தேடவேண்டும். மற்ற அவலக்ஷணத்தைச் சொன்னால் மயக்கம் உண்டாகும். அவள் சரிகைச்சேலை (எந்த சரிகையாயிருந்தாலென்ன?) ஜலஜலவென்று ஜொலித்துக்கொண்டிருந்த தென்போம். இனி இந்த ரூபலாவதியை நகர பூங்காவனத்திற்கு அனுப்பி வைப்போம். பூங்காவனத்துக்கு இவள் தனிமையாய் போவது எப்படி?...துணை வேண்டுமே!...சுற்று முற்றும் பார்த்து சுந்தரியும் அடிமேல் அடிவைத்து நடந்து காட்டினாள். முன்னதாகவே பார்த்திருந்த பால குமாரர்கள் பின் அடிவைத்தார்கள். இந்த ரூபலாவதியாம் கவர்னருக்கு பாலகுமாரர்களாம் பாடிகார்டுகள் அதாவது துருப்புகள் போகும் போது, வேறு துணை வேண்டுமா? அடி வைக்குந்தோறும் அவள் காலணி ஓசை கலீர் கலீர் என்று ஒலிக்கிறது. பையன்கள் மார்பும் பளீர் பளீர் எனப் பிளவுபடுகின்றது. மோதும் காற்றோ முனிசிபல் சாக்கடை நாற்றத்தை மாற்றி மோகன சுந்தரி பூசியிருக்கும் பரிமளத்தை வாரி வீசுகிறது. இது ஒரு விசேஷமே! முன்னடி பின்னடி யாக்கி பின்னடி முன்னடி யாக்கிச் செல்லும் பால குமாரர்கள், என் என்று வாயை திறந்தவர்கள், னடி? என்பதை விழுங்கி விட்டார்கள். இன்னும் பாதிவழியாக வில்லை. தாய் தந்தையர் கண்ணில் வேலை மணலைத் தூவி, பகலை இரவாக்கி இன்பம் அனுபவிக்கும் பாலர்களை வந்த வழியே திருப்ப, பரிதியும் அதாவது சூரியனும் மறைந்தான். பாவையும் பையன்கள் காலை யொடிக்கிறாள். மணியோ $7\frac{3}{4}$ ஆய்விட்டது. "தண்ட்சோத்து ராமா குண்டு போட்டு வா?" என்பது போல இரவு எட்டுமணிக்குள் வீட்டுக்கு வர வேண்டியவர் ஆயாசமாய் திரும்பி விட்டார்கள். தாய் தந்தையருக்கு அடங்காமல் கைக்கு அகப்பட்ட வரையில் வாரி விட்டு தரதலையாய்த் திரியும் தம்பிரான்கள் மாத்திரம் பின் செல்லுகின்றார்கள். நகரப் பூங்காவனம் நெருங்கிக் காட்டுகிறது. இவளின் குலம் என்னமோ? குணம் என்னமோ? நமக்கு கிட்டுமோ? கிட்டாதோ? என்னும் யோசனைகள் தாதலைகளை வாட்டுகின்றன. பூவையும் பூங்காவனத்தில் பிரவேசித்தாள். பிரவேசித்தவள் தானும் பின் பற்றியவர்களை கவனியாதது போல் அங்கிருந்த பெஞ்சு ஒன்றில் அமர்ந்தாள். தம்பிரான்களும் தம்பிச்சையாய் வந்தது போலத் தையல் முன் உலாவிக் காட்டுகிறார்கள். மௌனம் கலக நாஸ்தி யென்பதாய் மங்கையும் இருக்கிறாள். இவள் சமீபத்தில் வேறு பெஞ்சுகள் கிடையாது. தலைதூரத்தில் இருப்பு பெஞ்சுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை எடுப்பதே கஷ்டம். ஒரு சமயம் எடுத்தாலும் காவலாளிகள் சண்டைக்கு வருவார்களே! என்ன செய்வார்கள்? கால்களும் ஒரு புறம் வலிக்கின்றன; கையிலும் காசில்லை!......இப்பாவையின் மாளிகை முந்தியே தெரிந்திருக்கிறது. பணம் வேண்டுமே! அதற்கு என்ன யோசனை? என்னும் எண்ணம் மேற்கொண்டு டிஸ்கவுண்டு பேரம் செய்ய அவரவர்களும் மார்வாடிகளைத் தேடிச் சென்றார்கள். தாங்கள் வாங்கும் தொகைக்குமேல் $\frac{1}{4}$ $\frac{1}{2}$ $\frac{3}{4}$ பங்கு அதிகமாகவே அவரவர்த்துக்குத் தக்கபடி எழுதி கொடுத்து பணம் வாங்கும் டிஸ்கவுண்ட் பேரம் தெரிந்தேயிருப்பதால் அதைப்பற்றி இன்னும் விவரிப்பது அனாவசியம். இப்பொழுது பூங்காவனத்தாள் எப்படியிருக்கிறாள்? தனிமையாய் இருக்கிறாள். தனித்திருக்கும் இவளைக்காண சந்திரனும் வந்தான். இவன்பின் சுந்திரன் ஒருவனும் நாகரீக உடுபாவனைகளுடன் பூங்காவனத்திற்குள் பிரவேசித்தான். பிரவேசித்ததும் பார்த்துவிட்டான். எதை?...அதை...சொல்ல வேண்டுமா?... அனாவசியம். இவனோ பெரிய உத்தியோகஸ்தன். மாதச் சம்பளம் 1,536 ஆயிரத்து ஐந்நூற்று முப்பத்தாறு தம்படி. தம்படிதான் காசு. காசுதான் சல்லி. சல்லிதான் பை. பைதான் அரைதுட்டு. மற்றபடி இவனுக்கு பிரதிதினம் கிடைக்கும் வாய்க்கரிசி எட்டு ரூபாய்தான். வேலை காலத்தில் ஆளைப்பார்த்தால் முதல் நெம்பர் பில்லை ஊஞ்சலாடும் பக்கிரிசா. இவன் வேலையோ, சேவக் என்றால், ஆஜர் என்பது தான். (Peon !...Yes Sir !) மற்ற காலங்களில் நவாப்சா (டாசாசில்க்) பட்டு கோட்டுதான். காலர் டை என்னும் படிப்படியான கழுத்துப்பட்டைகள் இல்லாத காலமிராது. கஷ்டப்படும் மாதச் சம்பளமாகிய எட்டு ரூபாய்தான் தாலி கட்டிக் கொண்டவளுக்குப் போகும். அனுமத்துகாசெல்லாம் அவாளுக்குப்போகும். ஆதலால் ஆபீஸ் காலமும் சாப்பாட்டு வேளையும் தவிற மற்ற காலமெல்லாம் அவாள் வீடுதான் கதி. அப்படியிருக்க, அவன் இன்றையதினம் பூங்காவனத்திற்கு வந்தது ஒரு ஆச்சரியந் தான். வழக்கத்துக்கு விரோதமில்லாமல் பூங்காவனத்திலும் ஒருவள் இருந்தது அதிக ஆச்சரியமே! இவன் அவளைப் பார்க்க அவள் இவனைப் பார்க்க இருவரும் முறைத்து கொண்டார்கள். ஒன்று ஒன்றை முறைக்கும் இடத்தில் உத்தமர்கள் இருக்கமாட்டார்கள். ஒரு சமயம் அவர்கள் இருந்தாலும், அண்டை அயலார் அவர்களை தூர அழைத்துக்கொண்டு போய் விடுவார்கள். பாலசந்திரனோ விளையாட்டுக்காரன்! தான் விளையாடுவதல்லாமல் ஊரிலிருக்கிறவர்களை எல்லாம் ஆடப் பாடச் செய்வான். இப்பேர்ப்பட்டவன் ஆணும் பெண்ணும் முறைக்கிற முறைப்பை வேடிக்கை பார்க்கிறான். மேக அண்ணன் சந்திரனைத் தாவி இழுத்துக் கொண்டுபோய் விட்டான். இல்லையானால்—சென்னை பெத்து நாய்க்கன் பேட்டை நாட்டு பிள்ளையார் கோவில் வீதி திருவண்ணாமலை மடத்துக்குச் சமீபமாய் 1908௵ ஜூன்௴ 17உ புதன்கிழமை பகல் சுமார் 2-மணிக்கு ஒரு கலியாண வீட்டண்டை எருமையும் பசுவும் ஒன்றோடொன்று முறைத்து, டீ கொடுத்து கடைசியாய் பசு ஓடிவிட, அங்கு எதிர்ப்பட்ட ஒரு பையனை முட்டச் சென்ற எருமை, அங்கு நின்றிருந்த சுமார் 60 வயதுள்ள கிழவனை முட்ட, அதன் கொம்பானது அவன் அணிந்திருந்த கம்பிளி சொக்காயில் சிக்கிக்கொள்ள, சொக்காய் கிழியாமல் கையில் நன்றாய் புதைந்துகொள்ள, அது வாலை கிளப்பி கும்மாள மிட்டுக் கொண்டு கிழவனை மல்லாத்தி பர பர வென்று இழுத்துக் கொண்டே ஓடி, வடக்கு தெற்காயுள்ள ஷை தெருவில் வடக்கு தெருக்கோடி (சுமார் 150 கெஜதூரம்) வரும் போது எதிர்ப்பட்ட பலர் எருமையை பலமாய் பிடித்து

கிழவன் கையில் புதைந்திருந்த கொம்பை பிடிங்கினார்கள். பிடிங்கின உடனே பாரம் ஒழிந்ததென்று, எருமை ஒருவருக்கும் அகப்படாமல் கம்பி நீட்டி விட்டது. கிழவன்கை பிளவு பட்டு வடிந்த இரத்தத்தை கண்ணால் பார்க்க சாத்தியப்படாது. என்றாலும், அவன் அவ்விடத்தில் கீழண்டை வாடையில் கலியாணம் நடந்து கொண்டிருந்த டாக்டர் வீட்டுக்கு கொண்டுபோகப்பட்டான்—இந்த கிழவன் கதிதான் நமது இளம் பிறைக்கும் சந்திரனுக்கும் நேர்ந்திருக்கும் போலும்! அதிர்ஷ்ட வசமாய் மேக அண்ணன் புண்ணியம் கட்டிக் கொண்டான். புண்ணியம் கட்டிக் கொண்ட போதிலும், வந்திருக்கும் சுந்திரன் வனிதையை வேயன்னா சீயன்னா என்று தெரிந்து கொண்டது, இது விஷயங்களில் இவனுக்கிருக்கும் போதிய அனுபோக வெளிச்சத்தால் என்று சொல்ல மறக்கக் கூடாது. இனி சொல்ல வேண்டுமா? காசு ஈந்தால் தாசி என்று இக்காலத்தில் கை குழந்தையும் சொல்லுமே! பயம் என்ன? சந்தர பிள்ளையும் சரேல் யென்று வந்துவிட்டான். சுந்திர பிள்ளையாண்டானும் துரிதமாய் அவளருகில் சென்றான். தன் பக்கலில் சேர்ந்த சீமானைக்கண்டு சித்திரவிழியால் சிறிதே புட்டமசைத்து உட்கார்ந்தாள். போதாதா இவ்வளவு மரியாதை! இதற்குளிவன், அவள் ஏதோ எழுந்துநின்றது போல், "பாதகமில்லை! உட்கார்ந்திரு" என்று பல்லெலாம் தெரியக் காட்டி ஊர் பெயர் பூங்காவனத்திற்கு வந்த வரலாறு முதலிய வற்றை விசாரித்தான். இதற் கிவ்வளவு லேசாய் பதில் கிடைத்து விடுமா? அம்மம்ம! "எதற்காக கேட்கிறீர்கள்?" என்றாள் அந்த யானையைப் போன்ற இளங்கொடி. என்ன சொல்வான் பாவம்! இவனோ தேர்ந்த அனுபோகஸ்தன் என்பது உண்மைதான். பூனையைப்போல இவன் முனமுனக்கிறான். பார்த்தாள் இவன் முன முனப்பை. என்ன சமாச்சாரம் சொல்லுமே? என்றாள் பின்னும். என்ன சொல்வான்! விழிக்கிறான். இதற்குள், அவள் "அதற்கு தானே" என்றாள். அப்பா!...இப்பொழுது தான் இவனுக்கு வயற்றில் பால் வார்த்தது போலாயிற்று. சந்தோஷங் கொண்டான். "ஆமாம், அதற்கு தான்." ஓர் இராத்திரிக்கு கொடுக்க வேண்டியதை சொன்னால் இப்பொழுதே கொடுத்து விடுகிறேன். வா! போவோம்! உன்னுடைய வீடு எங்கே? யென்றான்.

வேசி:—ஐயா! நீங்கள் நல்லவராக காணப்படுகிறீர்கள். இது சமாசாரத்தை மறுபடியும் எடுக்காதீர்கள். தாசியாகிய எனக்கு கொடுப்பதை உமது மனைவிக்கு நகையை பூட்டி அழகு பாருங்கள்.

சுந்தரன்:—அது என்ன அப்படி சொல்லுகிறாய்? நான் குறைவாய் பணம் கொடுப்பேன் என்ற எண்ணமா?

என்று சொல்லிக்கொண்டே, ஜோபியில் கையை விட்டு 50 ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினான். நீட்டினவனை நிமிர்ந்துகூட பார்க்காமல் நீங்கள் 50 ரூபாய் கொடுத்தாலும் சரி; 100 ரூபாய் கொடுத்தாலும் சரி; எனக்கு வேண்டாம்...வந்தவழியைப் பாருங்கள் என்றாள். என்ன செய்வான்? இவன் கையில் இருப்பதெல்லாம் 80 ரூபாய் தான். அவள் சொன்னதை பார்த்தால் நூறு ரூபாயிருந்து கொடுத்தாலும் இணங்கமாட்டாள் போல் தெரிகிறது. ஒரு சமயம் இன்னும் அதிக பணத்திற்கு ஆசைப்படுகிறாளோ? என்னமோ பார்ப்போம்! என்று சிந்தித்துக்கொண்டே "பெண்ணே என்னும் வழியில் திரும்பி, உனக்கு வேண்டியது தான் எவ்வளவு?" என்றான்.

நீங்கள் எவ்வளவு பணம் கொடுத்தாலும் எனக்கு வேண்டாம் என்று பதில் சொன்னாள். இதற்கு மேலும் என்ன செய்வான்! பாபம்! பாபம்!! சூரியனாயிருந்தால் இந்த பாபத்தை பார்க்கக் கூடாதென்று போய் விடுவான். இருப்பவனோ சந்திரன். பதினாறு கலையோடும் வேடிக்கைப்பார்க்கிறான். காலைப்பிடித்து கையை பிடித்து கெஞ்சி கூத்தாடி தன்னிஷ்டப்படி இணங்கும்படி கேட்கிறான் சுந்திரன். தனக்கு தாரா கிடைத்த வரலாற்றை சிந்தித்து, "கண் காட்டி அழைக்க வாராதவள் கைப்பிடித்திழுத்தால் வருவாளோ?" என்று சிரிக்கிறான், சந்திரன். பூங்காவனத்து தாசி புன்னகை காட்டி சொல்லுகிறாள்:—

நீங்கள் யாரோ? எந்த பிரபுவினுடைய பிள்ளையோ தெரியாது. கேவலம் வேசியாகிய என் காலைப் பிடிப்பது அடுக்குமா? வலியவந்து இவ்வித பலாத்காரம் செய்வது நியாயமா? முதலாவது மறுத்த நான் இப்பொழுது உமக்கு இணங்கினாலும் இந்தியன் பீனல் கோட் * 375-வது செக்ஷன்படி நீர் குற்றவாளியாகிறீர். நீர் குற்றவாளியாவது ஒருபுறம் இருக்கட்டும் நாங்கள் உங்களுக்கு நோயைக் கொடுத்துவிட்டோம் என்று எங்களை கோர்ட்டுக்கு இழுக்காது விட்டால் போதாதா? சாதாரணமாய் ஓர் இராத்திரிக்கு எனக்கு ஒருவர் கொடுப்பது பத்து ரூபாயுக்கு அதிகப்படாது. பத்து ரூபாய் பெற்றுக்கொள்வதும் போதும்! பிறகு கோர்ட்டேறி பத்து பத்தாய் செலவழிப்பதும் போதும்!! போதும்!!! இதற்கு இடையில் கஷ்டங்கள் எவ்வளவு? கடைசியாய் மானமும் போகிறது. இதற்கு என்ன சொல்லுகிறீர்?

சுந்தரன்:—பேஷ்! பேஷ்!! நன்றாயிருக்கிறது. உன்னைப்போல் தந்திரவாதி ஒருவரையும் நான் பார்த்ததில்லை. இல்லாத சமாசாரங்களை எல்லாம் எடுத்துக் கோர்த்து பாடம் படிக்க எங்கே கற்றுகொண்டாய்? பின்னும் உன்னை நாடி தேடி ஓடி வந்தவருக்கு லா பூச்சி காட்டுகிறாய். இதெல்லாம் எதற்கு?

Sec. 375. I. P. C.

RAPE.

A man is said to commit "rape" who, except in the case hereinafter excepted, has sexual intercourse with a woman under circumstances falling under any of the following five descfiptions:—

First.—Against her will.

Secondly.—Without her consent.

Thirdly.—With her consent, when her consent has been obtained by putting her in fear of death or of hurt.

Fourthly.—With her consent, when the man knows thath e is not her husband and that her consent is given because she believes that he is another man to whom she is, or believes herself to be, lawfully married.

Fifthly.—With or without her consent, when she is under 12 years of age.

Explanation.—Penetration is sufficient to constitute the sexual intercourse necessary to the offence of rape.

Exception.—Sexual intercourse by a man with his own wife, the wife not being under 12 years of age, is [illegible]

வேசி:—இன்னுங்கோ! இல்லாத சமாசாரங்களை எல்லாம் எடுத்துக் காட்டி, குழந்தைக்கு காட்டுவது போல் பூச்சிக்காட்டி, தங்களைப்போல் வரும் பிரபுக்களை அனுப்பிவிடவா நாங்கள் வேசிகளாகப் பிறந்தோம். அப்படி அனுப்பிவிட்டால் எங்கள் வயறு மண்ணையாத் தின்னும். இதையெல்லாம் நீங்கள் யோசிக்கவில்லையே என்று வருத்தப்படுகிறேன்.

சுந்திரன்:—இது உண்மையே! அப்படியிருக்க—கோர்ட்டுக்கு இழுக்கிறார்கள்; நாங்கள் பத்து பத்தாய் சிலவு செய்யவேண்டியிருக்கிறதென்று சொன்னது பொய்தானே?

வேசி:—ஆ! ஆ!! பொய்சொல்லியாவது வயற்றை வளர்ப்பது அநேகம் உண்டு. ஆனால், தனக்கு வலியகிடைப்பதற்கு உண்மை சொல்லாமல் உதறிவிடுவது எங்கேயாவது உண்டா?...ஐயா!

சென்னை பரங்கிமலையில் வைக்கப்பட்டிருக்கும் 83வது பீரங்கி பட்டாளத்தைச் சேர்ந்த பிரைவெட் ஹர்பர்ட் பரன் என்னும் துரை, சென்னை சமுத்திரக்கரை அங்கப்ப நாய்க்கன் வீதியில், மேகரண வியாதியுள்ள ஒருவள் 1908 ஷு மார்ச்சு மீ 29தேதி தன்னுடன் சேர்ந்து, ஸ்திரீ வியாதியாகிய கொறுக்கு நோயை தொத்தகொடுத்து பிராணனுக்கு அபாயம் விளைவித்தாளென்று பிரயாது செய்ய, பி. டிவிஷன் போலீசார் அந்த ஸ்திரீயின் பேரில் இ.பி.கோ., 269வது சேக்ஷன்படி குற்றம் சுமத்தி சென்னை ஜார்ஜ்டவுன் போலீஸ் கோர்ட்டில் விசாரணைக்கு கொண்டு வந்தார்கள். குற்றவாளியாகியவேசி தரப்பில் ஆஜரான வக்கில் ம-ா-ா-ஸ்ரீ சல்லா குருசாமி செட்டியார், இத்தகைய சந்தர்பங்களில் ஒரு வேசியின் பேரில் இ.பி.கோ., 269வது செக்ஷன்படி குற்றம் சுமத்தக்கூடாதென்றும், ஆனால், வேசியொருவள் தனக்கு நோயிருப்பது தெரிந்தும், தான் யாதொரு நோயும் இல்லாத சுகதேகியென்று தெரிவித்து புணர்ச்சி செய்திருப்பாளேயானால் அப்பொழுது அவளை இ.பி.கோ. 417அல்லது 420வது செக்ஷன்படி குற்றவாளியாக தீர்மானிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கும் இ. லா. ரி. 11. பம். 59 மகாராணி V. இரக்குமா கேசில் அடங்கிய பம்பாய் ஹைகோர்ட்டு (மிஸ்டர் ஜஸ்டிஸ் வெஸ்ட், மிஸ்டர் ஜஸ்டிஸ் நானுபாய் ஹரி தாஸ் அவர்களுடைய) தீர்மானத்தை எடுத்துக்காட்டி பிரஸ்தாபகேசில், பிரயாதிக்கு மேற்கண்டபடி குற்றவாளி தெரிவித்தாளென்பதற்கு யாதொரு அத்தாக்ஷியும் இல்லாததினால் வேசியை விடுதலை செய்யவேண்டுமென்று வாதாடினர். மாஜிஸ்டிரேட் அவர்கள், இ.பி.கோ. 342-வது செக்ஷன் இந்த வியாஜ்ஜியத்தில் கலந்துலா சிக்கல் எற்பட்டிருப்பதினால் இதை சென்னை ஹைகோர்ட்டுக்கு ரிபர் செய்வோம் என்று தெரிவித்து கேசை 1908ஷு ஜுலைமீ 21உக்கு நிறுத்திவைத்திருக்கிறார்.

Sec. 269, I. P. C.
Whoever unlawfully or negligently does any act which is and which he knows or has reason to believe to be, likey to spread the infection of any disease dangerous to life, shall be punished with imprisonment of either description for a term which may extend to six months or with fine, or with both.

Sec. 420, I. P. C.
Whoever cheats and thereby dishonestly induces the person deceived to deliver any property to any person, or to make, alter, or destroy the whole or any part of a valuable security, or anything which is signed or sealed and which is capable of being converted into a valuable security, shall be punished with imprisonment of either description for a term which may extend to seven years and shall also be liable to fine.

I. L. R. 11 Bom. 59.
A prostitute, who while suffering from syphilis communicates the disease to a person who has sexual intercourse with her, is not liable to punishment under Section 269 of the Indian Penal Code, (Act XLV of 1860) "for a negligent act and one likely to spread infection of any disease dangerous to life.
Semble.—She may be charged with cheating under section 417 or 420, if the intercourse was induced by any misrepresentation on her part.

Sec. 417, I. P. C.
Whoever cheats shall be punished with imprisonment of either description for a term which may extend to one year or with fine or with both.

Sec. 342, I. P. C.
Whoever wrongfully confines any person shall be punished with imprisonment of either description for a term which may extend to one year, or with fine which may extend to one thousand rupees or with both.

இதுவும் பொய்தானோ?

சுந்திரன்:—அப்படியானால் உண்மைதான். இவை எல்லாம் உனக்கு எப்படி தெரியும்?

வேசி:—சென்னை, (37, நாட்டு பிள்ளையார் கோயில் வீதி) யன். இராதாகிருஷ்ண கம்பெனியாரால் மாதம் மாதம் வெளியிடப்படும் 'இந்தியா சட்டகெஜட்டில்' எல்லா சட்ட விஷயங்களும், கேஸ் நடவடிக்கைகளும் விபரமாய் தமிழில் பிரசரிக்கப்படுகிறது. நான் அதை வாசித்துவருவதால் இது விஷயங்கள் யாவும் எனக்குத் தெரியும்.

(இன்னும் வரும்.)

GENERAL NEWS

பய முறுத்தப்பட்ட ஒரு மகாராஜா

தர்பாங்கா மகாராஜா அவர்களுக்கு ஆறு மாதத்திற்குள் கட்டாயம் மரணம் சம்பவிக்கும் என்று பயமுறுத்தி எழுதப்படும் ஊர் பேரில்லா அனமத்து கடிதங்கள் ஷை மகாராஜாவுக்கு கிடைத்திருக்கின்றனவென்றும், அதனாலேயே தாம் சிம்லாவுக்கு போகயிருந்த பிரயாணத்தையும் நிறுத்தி விட்டு, போலீஸ் மெய்க்காவலருடன் மகாராஜா அவர்கள் இருக்கிறாரென்றும், கல்கத்தாவில் பிரசுர மாகும் 'வந்தேமாதரம்' பத்திரிகை கூறுகிறது.

வீண் புரளிகள்

புதிய ஒரு அணா நாணயங்கள் அடுத்த ஆகஸ்டுமீ 1உ முதல் செலாவணியாகாவென்று இரங்கூனில் உண்டாயிருக்கும் வீண்புரளியால் அவ்விடத்திய சுதேச கடைக்காரர்கள் ஷை நாணயத்தை வாங்க மறுத்துவிடுகிறார்களாம். பின்னும் அவ்விடத்தில் ஷை தேதிக்கு பிந்தி பாங்கியில் சவரன்கள் கொடுக்கப்படாவென்ற புரளியும் உண்டாயிருப்பதாக அறிகிறோம்.

இரயில் விபத்து

இம்மீ 28உ ஞாயிற்றுக் கிழமை பகல் 10 மணிக்கு (கொயம்பத்தூர் ஜில்லா) திருப்பூர் ஸ்டேஷனில் பட்டணத்திலிருந்து இரவு $8\frac{1}{2}$ மணிக்கு புறப்பட்ட 87-ம் நெம்பர் போதனூர் மெயில் வண்டியானது, சேலத்திலிருந்து வந்து ஜோலார்பேட்டைக்குப் புரப்படும் சமயமாயிருந்த கூட்சு வண்டியின்மேல் மோத, இரண்டு இஞ்சின்களும் சேதமாய்விட்டன. இதனால் கூட்ஸ் வண்டியிலிருந்த டிரைவருக்கு காயம் படவில்லை. என்றாலும் மெயில் வண்டி டிரைவருக்கு காயம்பட்டது. சப் இன்ஸ்பெக்டர் ஒருவருக்

கும் தாடையில் பலமான காயம் பட்டதாயும், மொத்தத்தில் சுமார் 30 நபர்களுக்கு காயம் பட்டதென்றும் காயப்பட்டவர்களெல்லாம் திருப்பத்தூர் அஸிஸ்டெண்ட் சர்ஜனால் சிகிச்சை செய்யப்பட்டார்களென்றும், கடவுள் கிருபையால் யாதொரு உயிர்ச்சேதமும் நேரிட வில்லை யென்றும் தெரியவருகிறது.

கோயம்பத்தூர் ஜில்லா போர்ட் கூட்டம்

இம்மீ 27உ சனிக்கிழமை கூடிய கொயம்பத்தூர் ஜில்லா போர்ட் கூட்டத்தில், பாளையங்கோட்டையிலிருக்கும் செவுடு, ஊமை ஏழைகளின் பள்ளிகூடத்திற்கு (Deaf and Dumb Poor School) நூறு ரூபாய் நன்கொடையும், திருப்பூரில் ஓர் ஔஷதச்சாலை கட்ட 6,050 ரூபாயும் டிஸ்டிரிக்ட் போர்ட் இஞ்சினியர் தெரிவித்தவிதம் 1908-09ஷு நடக்கவேண்டிய வேலைகளின் மதிப்பு 34,400 ரூபாயும் சாங்கஷன் செய்யப்பட்டது.

காலணா நாணயம்

எட்வர்ட் ராஜாவின் முகர்கொண்டு நவீனமாய் செலாமணியாகிவரும் காலணா செம்பு நாணயங்களில் ஏதோ அதிசய சக்தியிருப்பதாக சிலர் அக்காலணாக்களை ஜாஸ்தியணாக்கொடுத்து வாங்கிவருவதாக தெரியவருகின்றன. இதன் ரகசியமென்ன வென்றால் காசடிக்கும் தங்கசாலையில் செம்பு திராவகத்துடன் தங்க திராவகத்தையும் கைப்பிசகாய்க் கலந்துவிட்டதாகப் பிரஸ்தாபிக்கப் படுகின்றன. ஆகவே ஒரு காலணாவில் சுமார் இரண்டணாமதிப்புள்ள தங்கமிருப்பதாக நம்பப்படுகிறது. அக்காலணாவும் பொன்னணயம்போன்ற சப்தமுடையதாயிருப்பதால் உண்மையென்றே யூகிக்கிறோம். ஆயினும் சோதித்துப் பார்த்தால் தான் தெரியவரும்.—P. M.

தீவட்டிக்கொள்ளை

இம்மாதம் முதலில், பர்மா தாராவாடி ஜில்லாவைச் சேர்ந்த ஒரு கிராமத்தில், ஒரு பெரிய கள்ளர் கூட்டமானது துப்பாக்கிகளுடனும் தீபட்டிகளுடனும் புகுந்து 21,000 ரூபாய்வரையில் கொள்ளையடித்துவிட்டார்களாம்.

இனம்

மைசூர் அணிக்கால் தாலுக்காவைச் சேர்ந்த இன்கியாலி கிராமத்தில் ஒரு பெண்புலியானது தனது இரண்டு குட்டிகளுடன் பிரவேசித்து அவ்விடத்திய மனிதர்களுக்கும் கால் நடைகளுக்கும் பெருத்த அபாயம் விளைவித்து வருவதால் அதை கொல்லுபவருக்கு தக்க வெகுமானம் கொடுப்பதாக மைசூர் கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

கட்டடச்சேதம்

இம்மீ 2உ இரங்கூனில் பர்மா செகிடிரி யேட் ஆபீஸ் மேற்கூரையின் ஓர்பாகம் அகஸ்மாத்தாய் இடிந்து வித்தியா இலாக்காயிருக்கும் அரையில் விழுந்தது. அதிர்ஷ்டவசமாய் ஒருவருக்கும் காயம் படவில்லை. இப்படி விழுந்த சமயத்தில் பள்ளிக்கூடங்களின் டிப்டி இன்ஸ்பெக்டர் மிஸ்டர் ஸ்னோவும் அவ்விடத்தில் இருந்தாரென அறிகிறோம். இந்த அகஸ்மாத்தான சம்பவத்திற்கு அவ்விடத்தில் சமீபகாலத்தில் பெய்த அதிகமழையே காரண மென சொல்லப்படுகிறது.

குதிரை மயிர் கலந்த மழை

இம்மாதம் கடைசியில் ரங்கோனில் மழை பொழிகையில் மழைத்துளிகளுடன் குதிரை ரோமங்களும் விழுந்தனவாம். ஏதோ கப்பலில் குதிரை மயிர் கொண்டுபோகப்பட்டபோது கப்பல் முழுகி, குதிரை மயிர் சமுத்திரத்தில் விழுந்திருக்க வேண்டுமென்றும் நீராவியாய் மேலெழும்புகையில் ரோமமும் கூட இழுக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும், அவ்வாவி மேகமாய் மாறி மழையாய் விழுகையில் அம்மயிர்களும் விழுந்திருக்க வேண்டுமென்றும் நினைக்கப் படுகிறதாம். பர்மா தேசத் தாரிது தெய்வத்தன்மையால் விளைந்ததென்று நினைக்கிறார்களாம்.—P. M.

முதலையிடத்தில் அகப்பட்ட சோல்ஜர்கள்

இம்மாதம் இடையில் $4\frac{1}{2}$ சோல்ஜர்கள் இந்து நதியில் படகின் பேரில் ஏறிச் சென்றார்கள். சென்றவர்களெல்லாம் சித்துபந்தர் என்னு மிடத்தில் படகை விட்டிறங்கி நதியில் நீஞ்சலடித்தார்கள். நிஞ்சலடித்து திரும்பும்போது, இவர்களில் ஒருவரை முதலை பிடித்துகொண்டது. முதலையிடத்தில் அகப் பட்டவனுக்கு துணைப்பட்ட மற்றொருவனையும் முதலைப் பிடித்துக் கொண்டது. படகுக்காரன் ஒருவனுடைய முயற்சியால் பின்னவன் விடுவிக்கப்பட்டான். முன்னவனை முதலை நீருக்குள் இழுத்துக்கொண்டு போய் மணலில் சொறுகிவிடவும் அவன் இறந்தான்.

கல் மழை

இம்மீ 8-ந்தேதி தொக்கியோ நகரத்தில் ஆலங்கட்டியென்ற கல்மழை வருஷித்து அதிக சேதமுண்டாக்கி விட்டது. இவ்விதமான கன்மழை $6\frac{1}{2}$ வருடங்களுக்கிடையில் பெய்ததே கிடையாதாம்.—P. M.

ஸர் ஆர்தர் ஹாவ்லக்கின் மரணம்

பத்தொன்பதாவது நூற்றாண்டின் கடைசி ஐந்து வருஷத்தில் அதாவது 1895ஷு முதல் 1900-வருஷம் வரையில் சென்னையில் கவர்னராயிருந்தவராகிய ஸர் ஆர்தர் ஹாவ்லக் பெருமான் காலமாய் விட்டாரென கேட்க வியசனிக்கிறோம்.

தெய்வத்தன்மையுள்ள தட்டு

ஆமதாபாத்துக் கருகாமையில் ஒரு ஹிந்து யோகீஸ்வரர் தோன்றி யிருக்கிறாரென்றும் அவர் தம்மிடத்திலுள்ள ஒரு தட்டு சிறிய உணவைக்கொண்டே அநேகமாயிர ஜனங்களுக்கு உணவு அளிக்கிறாரென்றும் தெரிய வருகிறது. இந்த தட்டானது தெய்வத்தன்மை பொருந்தியதாய் இருக்கவேண்டுமென ஊகிக்கின்றோம்.

மூர்மார்கட்டு மைதானம்

சுதேசிய பிரசங்கங்கள் செய்வதற்கு யுக்த இடமாய் சில மாதங்களாக உபயோகப்படுத்தப்பட்டு வந்த, சென்னை மூர்மார்கட்டுக்கு பின் புறத்துள்ள மைதானத்தை, இம்மாதம் முதலில் சென்னை முனிசி

பாலிடியார், பழய கண்டிராக்டர் வசத்திலிருந்து தாமே பெற்றுக்கொண்டு, ஷை மைதானத்தில் இனி கூட்டங்கள் கூடாலாகாதென உத்திரவு செய்து அந்த உத்திரவை சரிவர நிறைவேற்றும்படி அநேக போலீசாரையும் இம்௴ 11௳ அவ்விடத்தில் வைத்தார்கள். அன்று முதல் அவ்விடத்தில் பிரசங்கங்கள் நடைபெறுவதில்லை.

கடற்கரை வெளி

சென்னை மூர்மார்க்கட்டுக்கு பின்புரத்திலுள்ள மைதானத்தில் கூட்டங்கூடாதென்று முனிசிபாலிடியார் தடுத்துவிடவும், 'லேடி வேன்லாக்' பார்க்கு எதிராக கடற்கரை வெளியில் சுதேசிய பிரசங்கங்கள் கிளம்பின. இவைகள் நாளுக்குநாள் உக்கிரகமாய் கிளம்புவதைக்கண்ட அபிஷியேட்டிங் போலீஸ் கமிஷனர் மிஸ்டர் யப். ஏ. டீன், மதராஸ் சிட்டி போலீஸ் ஆக்ட 41-வது செக்ஷனில் கமிஷனராவது அவருடைய உத்திரவுக்குட்பட்டு ஹெட் கான்ஸ்டேபிலின் அந்தஸ்துக்கு மேற்பட்ட யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தராவது ஜனங்கள் நடமாடுகிற பாட்டைகள் தெருக்கள் முதலாகிய ராப்தாவானஇடங்களில் ஊர்கோலம் உற்சவ முதலான சகல கூட்டங்களும் இன்னபடி நடந்து கொள்ள வேண்டுமென்று அந்தந்த காலத்திற்குத் தக்கபடி அப்போதைக்கப்போது உத்திரவு செய்யலாம்; அப்படிப் பட்ட ஊர்கோலம் உற்சவம் முதலான சகல கூட்டங்களும் இன்ன காலத்தில் இன்ன மார்க்கமாய் போக வேண்டுமென்று நிர்ணயிக்கலாம்; ஜனங்கள் நடமாடுகிற பாட்டைகள், தெருக்கள் முதலான ராப்தாவான இடங்கள் சரக்கு முதலானவை இறங்குகிற இடங்கள், ஜனங்கள் வழக்கமாய் கூடுகிற மற்றெல்லா இடங்களிலும் கிரமமேற்படுத்தலாம்; ஷை ஊர்கோலம் முதலானவை வருகிற சமயத்தில் மேற்கண்ட பாட்டை முதலானவைகளில் தடங்கலொன்றுமில்லாமற் செய்யலாம். ஜனங்கள் தேவாராதனை செய்கிற காலத்தில் ஆலயத்திற்கு சமீபத்திலும் ஷை பாட்டை முதலானவைகளில் ஜனங்கள் நெருங்கியிருக்கத் தக்க அல்லது தடங்கலுண்டாகும் படியான யாதொரு சமயத்திலும், தடங்கலில்லாமற் செய்யலாம், மேலும் தெருக்களில் வாத்தியம் சேவிப்பதற்கு கிரமமேற்படுத்தி லைசென்ஸ் கொடுக்கலாம். அன்றியும் ஜன அமரிக்கை அல்லது பந்தோபஸ்த்தை காப்பதற்காக யாதொரு ஊர்கோலம் உற்சவ முதலான கூட்டத்தைப் போகக் கூடாதென்று தடுப்பது தனக்கு அவசியமாகத் தோற்றினால் கமிஷனர் அந்தப்படியே தடுக்கலாம்; யெவனாவது மேற்கண்டபடி பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்திரவுக்கு விரோதமாக நடந்தாலும், அதன்படி நடக்கா விட்டாலும், அப்படிப்பட்ட யாதொரு லைசென்சிற் கண்ட திட்டங்களை மீறி நடந்தாலும், அப்படிப்பட்ட ஒவ்வொருவனும் குற்றவாளி யென்று தீர்மானிக்கப்படுவதின் பேரில், நூறு ரூபாய்க் கதிகப்படாமல் அபராதத்திற்குள்ளாவான்" என்று சொல்லப்பட்டிருப்பதால், அந்த செக்ஷன்படி ஷை கடற்கரை வெளியில் கூடும் கூட்டங்களையும் தடுக்கும்படி உத்திரவு செய்தார்.

The Madras City Police Act.
Act III of 1888.

Section 41.—The Commissioner, or, subject to his orders, any Police officer above the rank of head constable, may, from time to time, as occasion may require, direct the conduct of all assemblies and processions in the public roads, streets, or thoroughfares ; prescribe the routes by which and the times at which such processions may pass ; keep order in the public roads, streets, thoroughfares, landing-places and all other places of public resort, and prevent obstructions on the occasion of such assemblies and processions, and in the neighbourhood of places of worship during the time of public worship, and in any case when the roads, streets, thoroughfares, landing-places, or places of public resort may be thronged or liable to be obstructed ; and may license and regulate the use of music in the streets ; **and the Commissioner may prohibit any assembly or procession if he considers such prohibition to be necessary for the preservation of the public peace or, public safety ;** and every person opposing or not obeying any order issued as aforesaid, or violating the conditions of any such license, shall be liable on conviction to a fine not exceeding (one hundred rupees) Rs. 100.

இந்த உத்திரவை அனுசரித்து இம்௴ 15௳ திங்கட்கிழமை போலீஸ் கான்ஸ்டபில்களும் அரை டஜன் சார்ஜண்டுகளும், இன்ஸ்பெக்டர் நார்த்தின் தலைமையின் கீழ் ஷை கடற்கரைக்கு சென்று, சுதேசீய பிரசங்கஞ் செய்ய கூடினவர்களை கலைத்து விட்டார்கள்.

டிகட்டு கொடுக்கும் வேலையில் பெண்கள்

ஈஸ்ட் இந்தியா இரயில்வேயில் ஹௌரா ஸ்டேஷனில் டிகட்டு கொடுக்கும் வேலையில் பெண்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களால் பிரயாணிகளுக்கு அதிக அசௌகரியம் விளைவதாகத் தெரியவருகிறது. வாசிப்பு தெரியாத நாட்டுபுரவாசிகள் இவர்களிடம் படுங்கஷ்டம் சொல்லமுடியாதாம். திருஷ்டாந்தமாய் இம்மாதம் முதலில் வெளிதேசத்து ஹிந்து ஒருவன் மேற்படி ஸ்டேஷனுக்கு சென்று டில்தார்நகரத்துக்கு டிக்கட்டு கேட்டான். அந்த இடத்தில் டிகட்டு கொடுக்கும் அம்மாள் அடுத்தாப் போல் கேட்கும்படி சொன்னார். அதன்படி அவன் கேட்க அங்கிருந்த டிகட் கொடுக்கும் அம்மாளும் அதேமாதிரி சொன்னார். மூன்றாவது அம்மாளும் அதேமாதிரி சொல்லி விட்டாள். கடைசியாய் ஸ்டேஷனில் வந்திருந்த கல்கத்தா டிக்ஸன் லேன், 18வது இலக்க மாளிகையில்வசிக்கும் மிஸ்டர் லாலித் மோஹன்ராய் அவர்களை கேட்கவும், அவர் சரியான இடத்தை காண்பித்து டிகட்டு பெறும்படிசெய்தாரெனதெரியவருகிறது. அம்மாக்களின் கொண்டாட்டம் பிரயாணிகளுக்கு திண்டாட்டமாய் முடிகிறது. வாசிப்பில்லாத பிரயாணிகளின் கதி இவ்விதமானால் மற்றவர்களின் கதி என்ன? இதற்கு திருஷ்டாந்தமாக கல்கத்தா லாலித் மோஹனராயுக்கு நேர்ந்த நஷ்டத்தைச் சொல்வோம். மே மாதம் 12-ந்தேதி இவர் ஷை அம்மாமார் ஒருவளிடத்தில் ஒரு ரூபாய் கொடுத்து பர்தவானுக்கு டிகட்டு கேட்டார். டிகட்டை மாத்திரம் கொடுத்துவிட்டு மிச்ச காசை கொடுக்காமல் ஏதோ கணக்கு வேலையாய் இருப்பதாக புஸ்தகத்தை புரட்டிக்கொண்டு காலம் கழித்தாள். வண்டி புரப்படும் சமயமாயிருந்ததால் மேற்படியார் காசை வாங்காமல் வண்டியில் ஏறிவிட்டார். இதைப்போன்ற இன்னும் எவ்வளவோ அசௌகரியங்கள், டிகட்டு கொடுக்கும் வேலையில் பெண்கள் நியமிக்கப்பட்டிருப்பதால் விளைகின்றனவென்று மேற்படி மோஹனராய் அவர்கள் கல்கத்தாவில் பிரசுரமாகும் வந்தேமாதர பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார்.

காயித விளையாட்டு

இம்மாதம் 28-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை கல்கத்தா கோபல்பூரில் ஷேக் சுல்தான் ஆலி என்னு மகமத்தியன் மற்றொருவனோடு பச்சீஸ் ஆடிக்கொண்டிருந்தான். அது சமயத்தில் ஷேக் தொர்ப், பன்றுத்துலா என்னும் இரண்டு மகம்மதியர் வந்து, மேற்படி ஆலியை காயித மாடலாம் என்று சொன்னார்கள். அவன் அதற்கு மறுத்து விடவும், ஒருவருக்கொருவர் வாய் சண்டை நடந்து, கடைசியாய் மேற்படி இரண்டுமகமதியர்களும் லத்திகளைக்கொண்டு மேற்படி ஆலியை தலையில் பலமாய் அடித்துவிட்டார்கள். அடிபட்டவன் உடனே டாணாவுக்கு கொண்டுபோகப்பட்டு, அங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகப் பட்டான். என்றாலும் மூளை கலங்கிவிட்டபடியால், மறுநாள் திங்கட்கிழமை காலையில் ஆஸ்பத்திரியில் இறந்து விட்டான். இரண்டு குற்றவாளிகளும் அரெஸ்ட் செய்யப்பட் டிருக்கிறார்கள்.

இரயில் வண்டியில் களவு

இரயில் போய்க்கொண்டிருக்கும் போதே, திருப்பூருக்கும் ஈரோட்டுக்கும் மத்தியில் சின்ன ரயில் என்று சொல்லும் தென் இந்தியா ரயில் வேயின் 1-வது 2-வது வகுப்பு வண்டிகளில் இராக்காலங்களில் களவுகள் நடப்பது வர வர அதிகரித்துக் கொண்டுவருகிறது. கடந்த மே௴ 28௳ 2வது வகுப்பு வண்டியில் பிராயாணஞ் செய்த பாளையங் கோட்டை சாரா டக்கர் காலேஜைச் சார்ந்த மிஸ் சாப்மன் என்னும் மாதின் 460-ரூ மதிப்புள்ள சொத்துக்களும், இரயில்வே பெரிய உத்தியோகஸ்தர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கும் சாலூன் வண்டியில் இம்௴ 4௳ பிரயாணம் செய்த ஷை இரயில்வே ஆக்டிங் சீப் இஞ்சினியர் மிஸ்டர் லிண்ட்சேவினுடைய 360 ரூபாய் மதிப்புள்ள சாமான்களும் இம் ௴ 5௳ 1-வது வகுப்பில் பிரயாணம் செய்த மிஸ் மார்டன் என்னும் மாதின் 150 ரூபாய் சொத்துக்களும் களவாடப் பட்டன. இவற்றுள் ஷை இஞ்சினியருடைய வெள்ளி சிகரட்டு டப்பிமாத்திரம் திருப்பத்தூர் இரயில் வேஸ்டேனுக்கு சமீபமாயிருக்கும் பனந்தோப்பிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதென்றும், இக்களவுகளை கண்டு பிடிக்க போலீசார் முயன்று வருகிறார்களென்றும் அறிகிறோம்.

தீவிபத்து

சில நாட்களுக்கு முன்னர் விஜய நகரத்தில் அக்கினிபகவான் புகுந்து 500 ஓலைகொத்து வீடுகளை அடியோடு வாயில் போட்டுக்கொண்டான். இவ்விடத்தில் எக்காலத்திலுமிருக்கும் ஜலகஷ்டத்தால் நெருப்பை அணைத்து சொத்துக்களை காப்பாற்றமுடியாமல் போய்விட்டது. என்றாலும், வீடுகளை அக்கினி பகவானுக்கு பரிகொடுத்து தவிக்கும் ஏழைகளுக்கு, மீண்டும் இவ்வித கஷ்டம் வராமலிருக்க தட்டோடு வீடுகள் கட்டிகொடுப்பதற்காக, ஓர் பண்டு ஏற்படுத்தப்பட்டது. இந்தபண்டுக்கு கலெக்டர் யச்-ஆர்-போர்ட்ஸ்வெள் முதலாக ரூபா100 கொடுக்கவும், ஏற்கனவே 2000-ரூபாய் வரையில் வசூலாயிருக்கிறது. சமஸ்தானத்து மானேஜர் மிஸ்டர் யச்-ஏ-காஸ் அவர்களும் புதிய வீடுகள் கட்ட விசேஷ மரங்கள் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார். பின்னும் இம்௴ 30௳ விஜய நகரத்து ராஜா அவர்களும் ஷை பண்டுக்கு (பதினாயிரம்) 10,000 ரூபாய் கொடுத்தாரென கேட்க மிகவும் சந்தோஷப்படுகிறோம்.

தீவட்டி கொள்ளை

வங்காளத்தைச்சேர்ந்த பாங்கூருக்கு அருகாமையாய் சந்தி பாபு ஆஹுத் என்பவரின் மனைவியாகிய ஜாபாடாகி என்னும் ஹிந்து பெண் வீட்டில் கடந்த மே௴ 27௳ நடு இராத்திரியில் தீவட்டி கொள்ளை நடந்தது. இந்த பெண்ணின் புருஷன் சமீபகாலத்தில் இறந்து விட்டமையால் அவன் சொத்துக்கள் எல்லாம் இவள் வசம் இருந்தன. சுமார் 20 பேர்கள் அடங்கிய ஒரு கூட்டம் வீட்டாரெல்லாம் நல்ல தூக்கத்திலிருந்த போது வீட்டுக்கதவுகளை உடைத்து உள் புகுந்து ஷை பெண்ணையும் அவள் தாயாரையும் கட்டி விட்டு இம்சித்து சொத்துக்களிருக்கும் இடத்தை காண்பிக்கும்படி கேட்டார்கள். அதன்படி காண்பிக்கப்படவும், பூமியில் புதைக்கப்பட்டிருந்த அநேக விலையுயர்ந்த சொத்துக்கள் தோண்டி எடுக்கப்பட்டு, கொள்ளைக்காரர்களால் எடுத்துக்கொண்டு போகப்பட்டன. இது சமாசாரம் அலிப்பூர் ஜில்லா போலீசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எதிர் பட்டவர்களை எல்லாம் குத்திய கித்முத்கார்

கடந்த மே௴ 28௳ காலை கல்கத்தா ரிப்பன் தெரு 88 நெம்பர் வீட்டிலிருக்கும் மிஸ்டர்-யப்-லீஸ் அவர்களிடத்தில் கித்முத்கார் வேலையிலிருந்த சக்கி சந்த தாஸ்த் என்பவன், தன் எஜமானன் இல்லாத சமயத்தில் அவர் கத்தியை எடுத்து சமயல்காரனை குத்தி விட்டான். உடனே கூச்சல் கிளம்பவும், வீடு பெருக்குபவன் ஒருவன் இவனை பிடிக்கவும் அவனும் குத்தப்பட்டான். இதன் பின் வீதியில் சென்று தன் எதிரில் வந்து கொண்டிருந்த அரியா வேலைக்காரன் ஒருவனையும் கம்மாளன் ஒருவனையும் குத்தி விட்டான். பிறகு அதே வீதியில் குடியிருக்கும் மிஸ்டர் சிட்ன்ஸ் அவர்களுடைய வேலைக்காரனையும் குத்திவிட்டான். இவர்களுக்கெல்லாம் பலத்த காயம் பட்டது. பின்னும் அவ்வழியாய் வந்து கொண்டிருந்த மூவரும் குத்துப் பட்டார்களென்றாலும் அக்காயத்துடன் தப்பித்துக்கொண்டோடி விட்டார்கள். ஜனங்கள் பெருத்த கோஷ்டத்துடன் ஒருவர் மேல் ஒருவர் விழுந்து, இந்த பித்தனிடத்தில் சிக்கிக் கொள்ளாமல் ஓடி மறைந்து விட்டார்கள். இது சமயத்தில் டியூட்டியின் மேல் இருந்த போலீஸ் ஜவான் ஒருவன், அவ்விடத்திய ஐரோப்பியர் ஒருவரின் துணை கொண்டு சாமார்த்தியமாய் பிடித்து கத்தியை கைப்பற்றி டாணாவுக்கு கொண்டு போனான். இப்பித்தன் இதற்கு முன் ஒரு மாத காலமாய் குணமாறுபாடாயிருந்தானென தெரியவருகிறது. காயப்பட்டவர்களெல்லாம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகப்பட்டார்கள்.

போலீஸ் ஜவானின் தற்கொலை.

கடந்த மே௴ 29 வெள்ளிக்கிழமை பெங்களூர் சி அண்ட் யம் போலீஸ் ஸ்டேஷன் ஹெட்கான்ஸ்டபில் டேனியல் என்பவன் உல்சூர் குளத்தில் விழுந்து தற்

கொலைசெய்துகொண்டான். அன்று வீட்டைவிட்டு காலையில் சென்ற அவன், மறுபடியும் திரும்பிவராததால், வீட்டார் பயந்து போய் போலீசாருக்கு தெரிவித்தார்கள். ஷை யானின் பிரேதம் ஷை குளத்தில் மிதப்பதை கடந்த மே௴ 31௳ ஞாயிற்றுக்கிழமை பகல் 1-30-மணிக்கு கண்டார்கள். டானியலின் சுற்றத்தார் அன்று இராத்திரி வீடெல்லாம் தேடி பார்த்தார்கள். அது சமயத்தில் டானியல் வியாழக்கிழமை எழுதிய இரண்டு கடிதங்கள் அகப்பட்டன. ஒரு கடிதம் அவன் மனைவிக்கு எழுதியிருந்தது. அதாவது தான் குளத்தில் விழுந்து இறக்க உத்தேசித்திருப்பதை தெரிவித்து, தானும் பெண்சாதியும் பரமண்டலத்தில் ஒன்றாய் கூடுவோம் என்ற நம்பிக்கையிருப்பதால், தன் மரணத்தை பற்றி மனைவியை துக்கப்பட வேண்டாமென்றும் எழுதியிருந்தது. மற்றொரு கடிதம் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டுக்கு எழுதப்பட்டிருந்தது; அதாவது,—தன் மேல் சாக்ஷிகள் அபாண்டம் கூறினார்களென்றும், தான் நிரபராதி என்றும், தான் அந்நியாயமாய் தண்டிக்கப்பட்டிருக்கிறான் என்றும், அவ்வித தண்டனையை ஏற்று ஜீவித்திருக்க தன் மனம் சகிக்க வில்லை யென்றும் எழுதியிருந்தது. அவனை வேலையினின்றும் நீக்கப்பட்ட ஆர்டர், வெள்ளிக்கிழமை அவன் கைக்கு எட்டுவதற்கு முன், இதர போலீஸ் ஜவான்களை வேலையினின்றும் நீக்கினது போல் அல்லாமல் அவனை போலீஸ் ஆக்ட்படி, வேலையில் அலக்ஷியம் என்ற குற்றம் சாட்டி பிராசிக்யூட் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்களென தெரிய வந்ததால் இவ்விதம் தற் கொலை செய்து கொண்டானும் பின் சோதனை நடந்து சவம் புதைக்கப்பட்டது.

காற்று மழை:— கடந்த மே௴ 29௳ மாலை இரங்கூனில் பலத்த மின்னல் இடியுடன் காற்று மழையுண்டாகி கடைசியாய் கேம்மண்டைனி லிருக்கும் செண்ட் மிச்சல் ஸ்கூல் கட்டடத்தின் மேல் இடி விழவும், 12-14 வயதுள்ள 15 பர்மாகார பிள்ளைகள் காயப்பட ஷை இடியானது ஷை ஸ்கூல் கட்டடத்தின்மேல் விழுந்து துளைத்துக் கொண்டு பூமியில் இறங்கினதினால் கட்டடத்தின் முக்கிய பாகம் தகர்க்கப்பட்டது. சேதமான கட்டடத்தின் நஷ்டமதிப்பு ரூபாய் 1000 என தெரியவருகிறது. காயப்பட்ட பிள்ளைகள் யாவரும் ஆஸ்பத்திரியில் சொஸ்தப்பட்டு தேறிவருகிறார்களாம்.

GOVERNMENT ORDERS 'BOARD'S PROCEEDINGS AND COLLECTORS' CIRCULARS

D. DIS. NO. 172-MAGL. OF 1908 DATED 14TH MARCH 1908

Present :—J. P. Bedford Esq., I. C S.,

Acting District Magistrate

கும்பகோணம் ஸ்டேஷனரி சப்-மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டில் 1907௵த்து கியாலண்டர் கேஸ் நம்பர் 330-ல் சம்பந்தப்பட்ட குற்றவாளியை சந்தேகப்பட்டு பிடித்ததில் நல்லவேலை செய்ததற்காக கும்பகோணம், தாலூகா வீரமாங்குடி கிராமம் வெட்டி முத்து சாம்பானுக்கு இனம் கொடுக்கவேணுமென்று கும்பகோணம் சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டு சிபார்சு செய்து 1908௵ பிப்ரவரி௴ 18௳யில் எழுதின R. C. ந. 44 எம். கடிதமும்;

(2) இந்த ஆபீசிலிருந்து தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட்டு போலீஸ் சூப்பரின்டெண்டெண்டுக்கு 1908௵ பிப்ரவரி௴ 21௳யில் எழுதின R. C. ந. 341-எம் கடிதமும்;

(3) தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட்டு போலீஸ் சூப்பரின்டெண்டிடமிருந்து 1908௵ மார்ச்சு௴ 3௳யில் எழுதப்பட்ட R. C. ந. 651-ஜெனரல் பதிலும் படிக்கப்பட்டன.

உத்திரவு.

இதனால் இனம் ரூ 5 (ஐந்து) சாங்கிஷன் செய்யப்பட்டிருக்கிறது.

2. கிராம மாஜிஸ்டிரேட்டின் சுருசுருப்பான நடவடிக்கை மெச்சிக்கொள்ளப்பட்டிருக்கிறது.

D. DIS., NO, 217-MAGL. OF 1908, DATED 29TH MARCH 1908.

நாகபட்டணம் ஸ்டேஷனரி சப்-மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டில் 1907௵ கியாலண்டர் கேஸ் நம்பர் 700-ல் டெலிபோன் தந்திக்கம்பியை திருடினதை கண்டுபிடித்து, சம்பந்தப்பட்ட குற்றவாளியை தண்டனைக்கு கொண்டுவந்ததில் நல்ல வேலை செய்ததற்காக நாகப்பட்டணத்திலிருக்கும் இரும்பு வியாபாரி மாணிக்க செட்டிக்கு ரூ 10 இனம் கொடுக்கவேணுமென்று சிபார்சு செய்யலான நாகபட்டணம் போலீஸ் அசிஸ்டெண்டு சூப்பரின்டெண்டெண்டு எழுதிய 1908௵ மார்ச்சு௴ 12௳யுள்ள R. C. ந. 432-ஜெனரல் கடிதமும்;

உத்திரவு.

இனம் ரூ 10 (பத்து) இதனால் சாங்கிஷன் செய்யப்பட்டது.

கொக்கரகுளத்திலிருக்கிற திருநெல்வேலி சேஷன் கோர்ட்டில் 1908௵ ஜூலை௴ 6௳ திங்கட்கிழமை 10-மணிக்கு குற்றங்களைப்பற்றி செஷன் விசாரணை நடத்தப்படும்.

கூடலூரிலிருக்கிற தென்னார்காடு சேஷன் கோர்ட்டில் 1908-௵ ஜூலை௴ 9௳ வியாழக்கிழமை 1-மணிக்கு குற்றங்களைப்பற்றி செஷன் விசாரணை நடத்தப்படும்.

1908௵ ஜூலை௴ 6௳ திங்கட்கிழமை காலமே 10-மணிக்கு திருச்சிறைப்பள்ளியி லிருக்கிற செஷன் கோர்ட்டு வீட்டில் ஷை செஷன் விசாரணை நடத்தப்படும்.

B. P. No. 51 L. R., DATED 17-3-08

1895-ம்௵த்திய மதராஸ் III-வது ஆக்ட் 20-வது பிரிவின் பிரகாரம் உண்டாக்கப்பட்டு 28-6-1898 தெய்தியுள்ள போர்ட் செயின்ட் ஜியார்ச் கெஜட்டின் 2-வது பாகம் 912 (எ) பக்கத்தில் பிரசுரமாகியிருக்கிற விதிகளுடன் சேர்க்கப்படப்போகிற, பின்கண்ட சீர்திருத்தப்படக்கூடிய விதி 1-8-1908-ல் அல்லது அந்த தெய்திக்குப் பின் கவனிக்கப்படும் என்றும் அதுவிஷயமாய் இருக்கக்கூடிய ஆலோசனைகளையும் ஆட்சேபனைகளையும் ரெவினியுபோர்ட்டாரவர்களுக்கு அந்த தெய்திக்கு முன்னதாகவே தெரியப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் ரெவினியூ போர்டாரவர்கள் இதனால் தெரியப்படுத்துகிறார்கள்:—

சீர்திருத்தப்படக்கூடிய 57-எ நமபர் விதி

போர்டாரவர்களுக்கு அனுப்பப்படுகிற ஒவ்வொரு விண்ணப்பம் அல்லது அப்பீல் விஷயமாய் சிலவு துகைகளை கொடுக்கும்படி, அல்லது சிலவு துகைகளை பாகித்துக்கொடுக்கும்படி, அல்லது சிலவு துகைகளை கொடுக்கக்கூடாதென்று உத்திரவு செய்ய போர்டாரவர்களுக்கு பூறாயுக்தம் உண்டு. ஒரு வியாச்சியம், விண்ணப்பம், நடபடிக்கை விஷயமாய் போர்டாரவர்களுக்கு அனுப்பப்படுகிற அப்பீல் அல்லது ரிவிஷனில், அந்த வியாச்சியம், விண்ணப்பம் நடவடிக்கை விஷயமாய் நேரிட்ட சிலவுகளைப்பற்றி கீழ்க்கோர்ட்டார் செய்த உத்திரவை போர்டார் ரத்துச்செய்யலாம் அல்லது மாற்றலாம், அல்லது கீழ்க்கோர்ட்டார் செய்த உத்திரவுடன் சேர்த்து உத்திரவுகள் பிறப்பிவிக்கலாம்.

நிர் 267—1881-ம்௵த்திய (1881-ம்௵த்து XXVI-வது ஆக்ட்) நெகோஷியபிள் இன்ஸ்ட்ருமெண்டுகள் ஆக்ட் 25-வது பிரிவின் விஸ்தரிப்புப்படி, மாட்சிமைதங்கிய இந்திய சக்கிரவர்த்தி அவர்களின் ஜனனநாளை கொண்டாடுகிறதற்காக 1908ம்௵ ஜூன்௴ 26௳ வெள்ளிக்கிழமை பப்ளிக் ரஜாநாளாக இருக்குமென்று ஆலோசனை சபையிலுள்ள மாட்சிமைதங்கிய கவர்னரவர்கள் உத்திரவு செய்கிறார்கள்.

டிராப்ட்டு விளம்பரம்

B. P. No. 1,479 Mis., S., L. R. & A., Dated 24-3-08

கும்பகோணம் தாலூகா கொட்டையூர் கிராமத்தில் இனம் கமிஷனர் அவர்களாய் ரிசியூம்செய்து திரீப்பு தாக்கல் செய்யலான இனம் நிலங்களை ஜில்லா கலெக்ட்டர் அவர்களுடைய நேரான உத்திரவுகளை அனுசரித்து சர்வே செய்யப்பட்டு காயமாக டிமார்க்கேஷன் அடையாளங்கள் செய்து கற்கள் நாட்டப்படவேண்டியதென்று மதுராஸ் சர்வே பவுண்டரீஸ் ஆக்ட்டு 1897௵த்திய 4-வது ஆக்ட்டு 5-வது பிரிவுப்படி ஆலோசனை சபையுடன் கூடிய கவர்னர் அவர்கள் உத்திரவு செய்கிறார்கள்.

நிர் 307—மதுராஸ் டவுன் நியூசன்ஸ் ஆக்ட் 3 முதல் 10 வரையுள்ள (இரண்டு பிரிவுகளுமுள்பட.) பிரிவுகளின் நிபந்தனைகள் திருநெல்வேலி ஜில்லா சாத்தூர் தாலூகா மார்ஜனில் கண்ட கிறுமங்களின் எல்கைக்குள் 1908 ௵ ஜூலை௴ 3௳ முதல் ஒரு மாதகாலத்திற்கு ஊர்ஜிதத்திலிருக்குமென்று ஷை ஆக்ட் 1 (2)-வது பிரிவின்படி தமக்கு அளிக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தைக் கொண்டு ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் உத்தரவு செய்கிறார்கள்.

1. முத்துலாபுரம்
2. சக்கிலியப்பட்டி
3. தெற்கு முத்துலாபுரம்
4. கோட்டேர்
5. வீரப்பட்டி
6. கீழ்நாட்டுக்குரிச்சி
7. தோழமலைப்பட்டி
8. தப்பட்டி
9. அருணாசலபுரம்

நோட்டிஸ்

இதனால் சகலமான ஜனங்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்:—

பிரஞ்சிலிருந்து இங்கிலீஷுக்கு வெல்லத்தையும், வெல்லத்தினாலும் சர்க்கரையினாலும் செய்த பண்டங்களையும், கொண்டுவரக்கூடாதென்கிற உத்தரவை போர்டாரவர்களுடைய 1908-ம்௵ பிப்பர்வரி௴ 14௳ 32/294 உள்ள உத்தரவில் ரத்துசெய்து விட்டார்கள்.

விளம்பரம்

கூடலூரிலிருந்தும், பெண்ணையார் நதிக்கு தெற்கிலுள்ள மற்ற இங்கிலீஷ் கிராமங்களிலிருந்தும் வருகிற சகல ஜனங்களுக்கும் இதனால் அறிவிக்கிறதாவது:—

தங்கள் வசம் பிரஞ்ச் இலாகாவுக்குப்போக கொண்டுவரும் சகலமான சாமான்களும் ஒரு ஜாப்தா எழுதி அதை கங்கணங்குப்பம் பெட்டி ஆபீசரிடம் ஆஜர் செய்து ஷை யாரிடம் கையெழுத்து வாங்கினாலொழிய இதர தீர்வை சாவடிகளுக்கு கொண்டு போகும்போது தீர்வை போட்டு விடுவார்கள். ஷை பெட்டி ஆபீசர் கையெழுத்து அதில் போடப்பட்டிருந்தால் அதில் சம்பந்தப்பட்ட சாமான்கள் இங்கிலீஷிலிருந்து வந்திருப்பதாக அங்கீகரிக்கப்படும்.

விளம்பரம்

தென்னார்காடு ஜில்லா சிதம்பரம் தாலூகா சிதம்பரத்தில் நடக்கப்போகிற ஆனித்திருமஞ்சனம் உற்சவகாலத்தில் பெல்லாரிஜில்லா, சேலம் ஜில்லா, ஹோசூர் தாலுகா, மலையாளம் ஜில்லா. சிரகல் தாலூகா கள்ளிக்கோட்டை முனிஸிபாலிடி நீலகிரி ஜில்லா கூனூர் தாலூகா உதகமண்டலம் முனிஸிபாலிடி மைசூர் ராச்சியம் பிளேக்கினால் பீடிக்கப்பட்டிருப்பதாக விளம்பரம் செய்யப்பட்டிருக்கும் மற்ற இடங்கள் முதலியவைகளிலிருந்து ஜனங்களை சிதம்பரத்துக்குப் போகவிட்டால் பிளேக் நோய் உண்டாகக்கூடிய அபாயமிருக்கிறதென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அவர்களுக்கு திருப்திகரமாக ஏற்பட்டிருக்கிறபடியால்:

1897-ம் ௵த்திய தொத்து வியாதிகளைக் குறித்த சட்டத்தின் கீழ் தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, 1908-ம்௵ ஜூன்௴ 19௳ முதல் ஜூலை௴ 5௳ வரைக்கும் இரண்டு தேதியும் உள்பட மேற்சொன்ன இடங்களிலிருந்து ஜனங்கள் மேற்படி உற்சவத்திற்கு போகக் கூடாதென்று தடுப்பதுடன் மேற்சொன்ன தேதிகளுக்கிடையில் மேற்சொன்ன உற்சவத்திற்குப்போக உத்தேசித்திருக்கும் அல்லதுபோக உத்தேசித்திருப்பதாக நம்பப்படும் எந்த நபருக்கும் சென்னை தென்மராட்டா ரயில்வேக்கலியிலுள்ள கடியபல்லி, குப்பம், மூலானூர் பாச்சூர் ஸ்டேஷன்களில் தென்னிந்தியா ரெயில்வேயிலுள்ள ஆலப்பாக்கம், புதுசத்திரம், பரங்கிப்பேட்டை, கிள்ளை, சித

ம்பரம், கொள்ளிடம், சீயாழி முதலிய ஸ்டேஷன்களுக்கு ரயில் வழியாக பிரயாணஞ்செய்ய டிக்கட்கள் விற்கப்படக்கூடாதென்றும் உத்தரவு செய்கிறார்கள்.

இந்த விளம்பரத்துக்கு விரோதமாகப்போகும் ஜனங்கள் எல்லாரையும் திருப்பியனுப்பப்படும்.

இந்தியா கவர்ன்மெண்டார் அவர்களின் நோட்டிபிகேஷன் பைனன்ஸ் டிபார்ட்மெண்ட் (செப்பரேட் ரிவினியூ ஸ்டாம்பு நன்ஜுடிஷல்) கல்கத்தா-1908ஞு மார்ச்சமீ 10௳ நெ. 1474 எக்ஸைஸ்.

1899-ஞுத்திய II-வது ஆக்ட் அதாவது இந்தியன் ஸ்டாம்பு ஆக்ட் 9-வது ஸெக்ஷன் (a) கிளாசின்படி உள்ள அதிகாரத்தை முன்னிட்டு மகாகனம் தங்கிய இந்தியா கவர்னர் ஜனரல் இன் கவுன்சல் துரையவர்கள் இதனால் உத்திரவு செய்கிறதாவது.—

1884-ஞு XII-வது ஆக்ட் அல்லது அக்கிரிகல்சரிஸ்ட் லோன்ஸ் ஆக்ட்டுப்படி கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படும் 20-ரூ.க்கு மேல்பட்ட அட்வான்ஸ் துகை ரசீதுகளுக்கு அந்த ஆக்டின் 1-வது ஷெடியூல் 53-வது ஆர்டிகள்படியுள்ள டியூட்டியை வஜா செய்கிறார்கள்.

சென்னப்பட்டணம் 1908-ம்ஞுத்து 1-வது ஆக்ட்

முன் தொடர்ச்சி.

5-ம் அத்தியாயம்

குத்தகைத்தோகையைச் செலுத்திவரும் குத்தகைத் தோகை பாக்கியும்

தவணைகளாகக் குத்தகைத் தொகையைச் செலுத்துவது.

59. உடன்படிக்கையின் பிரகாரமோ உடன்படிக்கை இராத பட்சத்திலே உறுதியாய் ஏற்பட்டுள்ள மாமூல் பிரகாரமோ குத்தகைத்தொகை தவணைகளாகச் செலுத்தத்தக்கதாகும்.

குத்தகைத்தொகை பாக்கி

60. எந்தத்தேதியில் குத்தகைத் தொகையின் தவணைத்தொகை செலுத்த வேண்டியதாகிறதோ அந்தத்தேதியில் அது செலுத்தப்படாவிட்டால், அது அடுத்த தேதியிலே குத்தகைத்தொகை பாக்கியாய்விடுகிறது.

பாக்கிக்கு வட்டி

61. பாக்கி எந்தத் தேதியில் ஏற்பட்டதோ அந்தத்தேதிமுதல் அதுசெலுத்தப்படுகிற வரையிலே மாதமொன்றுக்கு நூற்றுக்கு அரை விழுக்காடு இந்த பாக்கித் தொகைக்குத் தனிவட்டி வாங்கப்படும்.

குத்தகைத் தொகைக்காக ரசீதுபெற ரயத்துக்குள்ள சுதந்தரம்

62. (1) குத்தகைத்தொகை விஷயமாக நிலத்துக்குடையவருக்குத் தொகை செலுத்துகிற ஒவ்வொரு ரயத்தும்-தாம் செலுத்தின தொகைக்காக நிலத்துக்குடையவராலாவது அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற ஏஜெண்டாலாவது கையெழுத்து செய்யப்பட்டு எழுத்துமூலமாயுள்ள ரசீதை உடனேபெற அர்ஹராவார்.

(2) நிலத்துக்குடையவராகிலும் அவருடைய ஏஜெண்டாகிலும் அந்த ரசீதுக்கு ஒரு கவுண்டர்பாயில் (எதிரிடை) தயார்செய்து அதை வைத்திருக்கவேண்டும்.

சட்டசம்மதமான ரசீதில் காணவேண்டியவைகள்.

62. (1) அடியிற்கண்ட விவரங்களிலே தொகை செலுத்தும் காலத்தில் நிலத்துக்குடையவர் குறிப்பிடக்கூடிய விவரங்களை ரசீதில் காணவேண்டும். அந்த விவரங்களெவையென்றால்:—

(a) தொகை செலுத்துகிறவர் தொகை செலுத்தப்பெறுகிறவர்-ஆகிய இவர்களுடைய பெயர்;

(b) எந்தகிராமத்தில் கைப்பற்றுநிலம் இருக்கிறதோ அந்தக்கிராமத்தின் பெயர்;

(c) செலுத்தியிருக்கிற தொகை;

(d) எதற்காகக் குத்தகைத்தொகை செலுத்தியிருக்கிறதோ அந்தக் கைப்பற்று நிலத்தின் விவரம்;

(e) செலுத்தப்பட்டதொகை எந்த வருஷத்துக்கும் தவணைக்கும் வரவாக வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதோ அந்த வருஷமும் தவணையும்;

(f) செலுத்தியிருக்கிறதொகை பூர்தியாகச் செலுத்தியிருக்கிற தொகையாக அங்கீகரித்திருக்கிறதா அல்லது சிறிதுமட்டில்தான் செலுத்தியிருக்கிற தொகையாக அங்கீகரித்திருக்கிறதா என்பது;

(g) குத்தகைத்தொகை செலுத்திய தேதி.

ஆனால், பொதுவாகவோ குறித்த யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்துக்கோ அல்லது வகுப்பைச்சேர்ந்த விஷயங்களுக்கோ பிரதேச கவர்ன்மெண்டார் மாற்றப்பட்ட ஒரு நமூனாவை அப்போதைக்கப்போது நிர்ணயிக்கலாம்.

(2) இருக்கவேண்டுமென்று இந்தப்பிரிவில் சொல்லியிருக்கிற விவரங்கள் முக்கிய அம்சங்களில் ஒரு ரசீதில் கண்டிராவிட்டால், ஷை ரசீதை அது எந்தத் தேயில் கொடுக்கப்பட்டதோ அந்தத்தேதிவரையில் பாக்கியாயிருக்கிற சகல குத்தகைத்தொகைகளுக்கும் பூர்த்தியான ஒரு ரசீதாகக்கொள்ளலாம்.

தவணைகளுக்காகச் செலுத்தப்படும் தொகைகளை வரவுவைத்துக்கொள்வது.

64. (1) குத்தகைத் தொகையினிமித்தம் யாதொரு ரயத்து தொகை செலுத்தும்போது, அவர் அதை எந்த வருஷத்துக்கும் தவணைக்கும் வரவாக வைத்துக்கொள்ளவேண்டும்மென்று விரும்புகிறாரோ அதை நிர்ணயிக்கலாம்; செலுத்திய தொகை அந்தப்படியே வரவாகவைத்துக்கொள்ளப்படவேண்டும்.

(2) செலுத்திய தொகையை அந்தப்படி ரயத்து எவ்வித நிர்ணயமும் செய்யாத பட்சத்திலே, காலம் கடந்துபோகாமலிருக்கிற யாதொருபாக்கிக்கு வரவாக வைத்துக்கொள்ள நிலத்துக்குடையவருக் கிஷ்டமிருந்தால் அந்தப்படியே வைத்துக்கொள்ளலாம்.

ரசீது கொடுக்காமலிருப்பதற்காகப் பிரதிபலன்

65. நியாயமான காரணமில்லாமலே, நிலத்துக்குடையவர் ரயத்து செலுத்தியிருக்கிற யாதொரு குத்தகைத் தொகைக்காக 62-வது 63-வது பிரிவுகளிற் கண்ட நிபந்தனைகளின்படி ஒரு ரசீதை அந்த ரயத்துக்கு ஒப்பிக்கவோ, செலுத்தியிருக்கிற குத்தகைத்தொகையை எந்த வருஷத்துக்கும்

தவணைக்கும் வரவாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று ரயத்து கேட்டுக்கொண்டிருக்கிறாரோ அந்த வருஷத்துக்கும் தவணைக்கும் அதை வரவாக வைத்துக்கொள்ளவோ மாட்டேனென்று நிராகரித்தால் செலுத்தியிருக்கிற குத்தகைத்தொகையின் அளவு அல்லது மதிப்பின் இரட்டிப்புக்கு அதிகப்படாத பிரதிபலன். தொகையைக் கலெக்டரிடத்தில் வியாஜ்ஜியம் கொண்டுவந்து அதன்மூலமாக ஷை நிலத்துக்குடையவரிடத்திலிருந்து வசூல்செய்ய அந்தரயத்துக்குச் சுதந்தரமுண்டு.

தொகை செலுத்த வேண்டிய இடம்

66. ரயத்து தம்முடைய குத்தகைத்தொகையை டிபாஸிட்செய்ய (கட்டிவைக்க) இந்த ஆக்டின்படி அனுமதி பெற்றிருக்கிற விஷயங்கள் தவிர மற்ற விஷயங்களிலே, நிலத்துக்குடையவருடைய கிராம ஆபிஸிலாவது எந்தக்கிராமத்தில் கைப்பற்று நிலம் இருக்கிறதோ அந்தக் கிராமத்திலிருந்து ஐந்துமைல் தூரத்துக்குள்ளாக இதுவிஷயமாய் நிலத்துக்குடையவரால் ஏற்படுத்தப்படக்கூடிய வேறே யாதொரு சௌகரியமான இடத்திலாவது தொகைசெலுத்தவேண்டும்.

ஆனால், பிரதேச கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளின்படி ரயத்துகள் தாங்கள் செலுத்தவேண்டிய குத்தகைத்தொயை நிலத்துக்குடையவருக்குத் தபால் மணி ஆர்டர் மூலமாகச் செலுத்தலாம்.

மேலும், குத்தகைத்தொகை தானியரூபமாகச் செலுத்தத்தக்கதாயிருந்தால், எந்தக் கிராமத்தில் கைப்பற்று நிலமிருக்கிறதோ அந்தக் கிராமத்திலே நிலத்துக்குடையவரின் களஞ்சியத்தண்டையாவது மேற்படி கிராமத்திலிருந்து பத்து மைல் தூரத்துக்குள்ளாக இது விஷயத்திலே நிலத்துக்குடையவரால் ஏற்படுத்தப்படக்கூடிய வேறே யாதொரு களஞ்சியத்தண்டையாவது அந்தக் குத்தகைத்தொகையை ஒப்பிக்கவேண்டும்.

குத்தகைத்தொகை பெறுவதற்காக நிலத்துக்குடையவரென்று அங்கீகரிக்கப்பட்டுள்ள அல்லது நியமிக்கப்பட்டுள்ள நபர் ரசீது கொடுப்பதனால் இன்னதுண்டாகுமென்பது

67. நிலத்துக்குடையவருக்குக் குத்தகைத்தொகை பாக்கியாயிருந்தால், குத்தகைத் தொகைபெறும் காரியத்துக்காக நிலத்துக்குடையவரென்று 3-வது பிரிவைச் சேர்ந்த (5) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அங்கீகரிக்கப்பட்டுள்ள அல்லது நியமிக்கப்பட்டுள்ள நபர் மேலே கண்டபடி பாக்கியாயுள்ள குத்தகைத்தொகை விஷயமாய்ச் செலுத்தப்பட்ட யாதொரு தொகைக்காக ரசீது கொடுத்திருந்தால், அது குத்தகைத் தொகை செலுத்தியதற்குப் போதுவான ரசீதாகும்; மேலும், குத்தகைத்தொகை செலுத்துவதற்குட்பட்டிருக்கிற நபர்-மேலே கண்டபடி அங்கீகரிக்கப்பட்டுள்ள அல்லது நியமிக்கப் பட்டுள்ளவர் தாவா செய்யும்போது, குத்தகைத்தொகை யாதொரு மூன்றும் நபருக்குச் சேரவேண்டியதென்று எதிர்வாதஞ் செய்யச் சுதந்தரமுடையவராகமாட்டார். ஆனால், அந்தப்படி அங்கீகரிக்கம்பட்டுள்ள அல்லது நியமிக்கப்பட்டுள்ள நிலத்துக்குடையவருக்கு விரோதமான அப்படிப்பட்ட யாதொரு மூன்றும் நபருக்கு இருக்கக்கூடிய எவ்வித பரிகாரத்துக்காவது இந்தப்பிரிவிலுள்ள தெதனாலும் பாதகமுண்டாகமாட்டாது.

குத்தகைத்தோகையை டிபாஸிட்செய்வது (கட்டிவைப்பது)

குத்தகைத் தொகையைடிபாஸிட் செய்வதற்காக விண்ணப்பம்

68. (1) குத்தகைத்தொகை பாக்கியாயிருந்து பணமாகச் செலுத்தத்தக்கதாயிருக்கும் அடியிற்கண்ட சந்தர்பங்களில் எதிலாவது, யாதொரு ரயத்துகலெக்டர் ஆபிஸிலோ அல்லது பிரதேச கவர்ன்மெண்டார் நியமிக்கக்கூடிய வேறே யாதொரு உத்தியோகஸ்தருடைய ஆபிஸிலோ அப்போது பாக்கியாகிற முழுகுத்தகைத் தொகையையும் டிபாஸிட்செய்வதற்கு அனுமதிவேண்டுமென்று ஷை கலெக்டர் அல்லது வேறே உத்தியோகஸ்தருக்கு எழுத்துமூலமாம் விண்ணப்பம் கொடுத்துக்கொள்ளலாம். மேலேகண்ட சந்தர்ப்பங்களெவையென்றால்:—

(எ.) ரயத்து தம்மிடத்திலிருந்து சேரவேண்டியிருக்கிற குத்தகைத் தொகையின் நிமித்தம் பணம் செலுத்தி விடுவதாகக்காட்டி, நிலத்துக்குடையவர் அதை வாங்கிக் கொள்ளமாட்டேனென்று நிராகரிப்பது அல்லது அதற்காக ரசீது கொடுக்கமாட்டேனென்று நிராகரிப்பது ; அல்லது,

(பி) குத்தகைத்தொகை கூட்டாக இரண்டு அல்லது பல நபர்களுக்குச் செலுத்தத் தக்கதாயிருந்து பணத்துக்காக அவர்களிடத்திலிருந்து கூட்டாய் ரசீது பெற்றுக்கொள்ள ரயத்து அசக்தராயிருப்பதும், அவர்களுக்காகக் குத்தகைத்தொகையை வரப்பற்றுக்கொள்ள யாரும் அதிகாரம் கொடுக்கப்பெறாமலிருப்பதும்; அல்லது,

(ஸி) குத்தகைத்தொகை வசூல் செய்வதற்காக பாத்தியதையை இரண்டு அல்லது பல நபர்கள் தனித்தனியே கொண்டாடுவது, அல்லது பாக்கியாயிருக்கிற குத்தகைத்தொகையை வரப்பற்றிக்கொள்ள யாருக்குச் சுதந்தரமிருக்கிறதென்பதைக்குறித்து ரயத்து வாஸ்தவத்தில் சந்தேகத்படுவது.

(2) அந்த விண்ணப்பம் என்ன ஆதாரங்களைக் கொண்டு செய்துகொள்ளப்பட்டிருக்கிறதோ அந்த ஆதாரங்களை அதில் காணவேண்டும். மேலும், அதில்-செலுத்தியிருக்கும் தொகையை என்ன பாபத்து அல்லது பாபத்துகளுக்கு வரவாக வைத்துக்கொள்ள வேண்டுமோ அவைகளையும்—

(எ) குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலே, டிபாஸிட் தொகையை யாருடைய வரவாக எழுதிவை

க்கவேண்டுமோ அந்த நபருடைய பெயரையும்,

(பி) குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலே, குத்தகைத்தொகை யாருக்குச் சேரவேண்டியதா யிருக்கிறதோ அவர்களுடைய பெயர்களேயும், அல்லது அவர்களில் எத்தனை நபர்களுடைய பெயர்களை ரயத்து குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவராயிருக்கிறாரோ அவர்களுடைய பெயர்களேயும்,

(ஸி) குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலே, குத்தகைத்தொகை கடைசியாக யாருக்குச் செலுத்தப்பட்டதோ அந்த நபர் அல்லது நபர்களுடைய பெயரையும், அதை இப்போது சுதந்தரித்துக் கேட்கிற நபர் அல்லது நபர்களுடைய பெயரையும்,

காணவேண்டும்.

(3) ப்ளெய்ன்டில் (பிரியாதில்) செய்வதைப்போலவே, ஷை விண்ணப்பத்தில் கையெழுத்து செய்து உறுதிமொழி யெழுதவேண்டும்; மேலும், செலவு காரணமாகப் பிரதேச கவர்ன்மெண்டார் விதி ஏற்படுத்தி அதன் மூலமாய் நிர்ணயிக்கக்கூடிய தொகையை அந்த விண்ணப்பத்தோடு அனுப்பவேண்டும்.

ரெவினியு ஆபிஸிலே கட்டின டிபாஸிட்டுக்காகக் கொடுக்கப்பட்ட ரசீது சட்ட சம்மதமாயுள்ள பூர்த்தியான ரசீதாகுமென்பது

69. (1) அடுத்த முந்திய பிரிவின்படி யாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறதோ அந்த கலெக்டருக்காவது வேறே உத்தியோகஸ்தருக்காவது, குத்தகைத்தொகையை டிபாஸிட்பண்ண (கட்டிவைக்க) அந்தப் பிரிவின்படி விண்ணப்பதாரருக்குச் சுதந்தர முண்டென்று தோற்றுமாகில் அவர் அந்தத்தொகையை வரப்பற்றிக்கொண்டு அதற்காக ரசீது கொடுக்கவேண்டும்.

(2) மேலே கண்டபடி டிபாஸிட் செய்யப்பட்டிருக்கிற (கட்டிவைக்கப்பட்டிருக்கிற) குத்தகைத்தொகையானது—

அடுத்த முந்திய பிரிவிற்கண்ட (எ) குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலே, டிபாஸிட்தொகையை யாருடையவராக எழுதிவைக்க வேண்டுமென்று விண்ணப்பத்தில் கண்டிருக்கிறதோ அந்த நபராலும்,

அதே பிரிவிற்கண்ட (பி) குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலே, யாருக்குக் குத்தகைத்தொகை சேரவேண்டியதாகிறதோ அந்த நபர்களாலும்,

அதே பிரிவிற்கண்ட (ஸி) குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலே,குத்தகைத்தொகையை வரப்பற்றிக்கொள்ள பாத்தியதையுள்ளவர்களாயிருக்கும் நபர்களாலும்

வரப்பற்றிக் கொள்ளப்பட்டிருந்தால், இந்தப் பிரிவின்படி கொடுக்கப்பட்ட ரசீது என்ன விதமாகவும் எவ்வளவுக்கும் செலாவணியாகுமோ அதேவிதமாகவும் அதே அளவுக்கும் அந்த ரசீது மேலேகண்ட குத்தகைத்தொகைக்காகப் பூர்த்தியான ரசீதாய்ச் செலாவணியாகும்.

டிபாஸிட் வரப்பெற்றுக்கொண்டதைக் குறித்துப் பிரசித்தஞ் செய்வது

70. (1) டிபாஸிட்டை வரப்பெற்றுக்கொள்ளுகிற கலெக்டராவது வேறே உத்தியோகஸ்தராவது-அப்படிப்பட்ட டிபாஸிட் வரப்பெற்றுக் கொண்டதைக்குறித்து முக்கியமான சகல விவரங்களும் எழுதியிருக்கிற ஒரு சூசிகை (ஸ்டேட்மென்ட்) அடங்கியுள்ள விளம்பரத்தை டிஸ்ட்ரிக்டின் சுதேசபாஷையிலெழுதித் தம்முடைய ஆபிஸில் யாவர்க்கும் தெரியும்படியான ஒரு இடத்திலே உடனே ஒட்டுவிக்கவேண்டும்.

(2) அந்தப்படி விளம்பரம் ஒட்டப்பட்ட தேதிக்கு அடுத்து வருகிற பதினைந்து தினத்துக்குள்ளாக டிபாஸிட் தொகையானது அடுத்துவருகிற பிரிவின்படி செலுத்தப்படாமலிருந்தால், உடனே கலெக்டராவது வேறே உத்தியோகஸ்தராவது—

68-வது பிரிவிற்கண்ட (எ) குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலே, டிபாஸிட் தொகையை யாருடைய வரவாக எழுதிவைக்க வேண்டுமென்று விண்ணப்பத்தில் கண்டிருக்கிறதோ அந்த நபருக்கு டிபாஸிட் வரப்பெற்றுக்கொண்டதைக் குறித்த நோடிஸைச் சேர்ப்பிக்கும்படி செய்யவேண்டும்;

அதே பிரிவிற்கண்ட (பி) குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலே, நிலத்துக்குடையவருடைய கிராம ஆபிஸ் அல்லது வாசஸ்தலத்திலும், எந்தக் கிராமத்தில் அந்தக் கைப்பற்றுநிலம் இருக்கிறதோ அந்தக்கிராமத்தில் யாவர்க்கும் தெரியும்படியான ஒரு இடத்திலும் டிபாஸிட் வரப்பெற்றுக் கொண்டதைக்குறித்த ஒரு நோடிஸை ஒட்டிவைக்கும்படி செய்யவேண்டும்;

அதே பிரிவிற்கண்ட (ஸி) குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலே, டிபாஸிட் தொகையை யார் சுதந்தரித்துக் கேட்கிறாரென்றாவது பெற்றுக்கொள்ளச் சுதந்தர முள்ளவராயிருக்கிறாரென்றாவது நம்ம கலெக்டர் அல்லது வேறே உத்தியோகஸ்தருக்கு நியாயமிருக்கிறதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் மேலேகண்ட நோடிஸைப்போன்ற ஒரு நோடிஸைச் சேர்ப்பிக்கும்படி செய்யவேண்டும்.

டிபாஸிட் தொகையைச் செலுத்தி விடுவது அல்லது வாபஸ்பண்ணுவது

71. (1) கலெக்டராவது வேறே உத்தியோகஸ்தராவது - டிபாஸிட் தொகையைப் பெற்றுக்கொள்ளச் சுதந்தரமுள்ளவரென்று தமக்குத்தோற்றுகிற யாதொரு நபருக்கு அந்தத்தொகையைச் செலுத்தலாம்; அல்லது, தமக்குத் தகுதியாகத் தோற்றினால், அவர் அவ்விதமான சுதந்தரமுள்ளவர் யாரென்பதைக்குறித்து ஸிவில்கோர்ட்டார் தீர்மானஞ் செய்கிறவரையிலே அந்தத் தொகையை வைத்து வைக்கலாம்; மேலும், 68 - வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிலுள்ள(ஸி) அடையாளமிட்ட பகுதியின்படி டிபாஸிட் செய்திருந்த, விவாதம் நடத்தும் கட்சிக்காரர்கள் தொகை செலுத்தும் கூட்டாய் விண்ணப்பஞ் செய்துகொண்டிராத பட்சத்திலே, அந்தப்படியே வைத்துவைக்கவேண்டும்.

(2) மேலே கண்டபடி செலுத்வேண்டிய தொகையில் மணி ஆர்டர் கம்மிஷன் (தாகு) நீங்கலாக மிகுதியுள்ளதைத் பிரதேச கவான்மெண்டாரால் நிர்ணயிக்கப்படும் விதிகளின்படி தபால் மணி ஆர்டர் மூலமாகச் செலுத்தலாம்.

(3) டிபாஸிட் செய்திருக்கிற தேதியிலிருந்து மூன்றுவருஷம் கழிவதற்கு முன்னமே இந்தப்பிரிவின்படி தொகை செலுத்தப்படாமலிருந்தால், டிபாஸிட் செய்திருக்கிற நபர் விண்ணப்பம் செய்துகொண்டு, குத்தகைத்தொகை யாரிடத்தில் டிபாஸிட் செய்யப்பட்டதோ அந்தக் கலெக்டராவது வேறே உத்தியோகஸ்தராவது கொடுத்த ரசீதைத் திரும்பக் கொடுப்பதன் மேலாகிலும் அவர் டிபாஸிட் செய்திருக்கிறாரென்பதற்குக் கலெக்டருக்குப் போதுமானதாகப் தோற்றுகிற வேறே சாட்சியத்தைக் கொண்டுவருவதன்மேலாகிலும், டிபாஸிட் செய்திருக்கிற தொகையை டிபாஸிட் செய்திருக்கும் ஷை நபருக்குச் செலுத்திக்கூடாதென்று சரியான அதிகாரவரம்புள்ள ஒரு கோர்ட்டார் யாதொரு உத்தரவும் செய்திராத பட்சத்திலே மீண்டும் அந்த நபரிடத்தில் செலுத்திவிடலாம்.

அப்படிப்பட்ட எந்த டிபாஸிட் தொகையையாகிலும் வரப்பற்றிக்கொள்ள பாத்தியதை யடைந்திருக்கும் யாதொரு நபர் - இந்தப் பிரிவின்படி அது யாரிடத்தில் செலுத்தப் பட்டிருக்கிறதோ அவரிடத்திலிருந்து அதை ஸிவில்கோர்ட்டில் வியாஜ்ஜியம் நடத்தி வசூல் செய்வதற்கு இந்தப பிரிவிலுள்ளதெதனுலும் தடையுண்டாகமாட்டாது.

வியாஜ்ஜியங்களுக்குத் தடை

72. 68 முதல் 71 வரையிலுள்ள பிரிவுகளின்படி டிபாஸிட் சம்பந்தமாய்க் கலெக்டர் அல்லது வேறே உத்தியோகஸ்தர் நடத்தியிருக்கும் யாதொரு நடவடிக்கை விஷயமாக, ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெகெர்டெரி அவர்கள் மேலாவது யாதொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர் மேலாவது எந்த வியாஜ்ஜியமும் கொண்டுவரக்கூடாது, வேறே நடவடிக்கையும் நடத்தக்கூடாது.

மாசூலுக்கு மதிப்புப் போடுவதும் அதைப் பகிர்வதும்

பயிரின் ஸ்வாதீனத்தைப் பற்றிய சுதந்தரங்களும் பொறுப்புகளும்

73. (1) அறுவடையாகாத பயிருக்கு மதிப்புத் போடுவதன்மேல் குத்தகைத்தொகை வாங்கிக்கொள்ளப்படுகிற விஷயத்திலே அந்தத் பயிரைத் தாமே ஸ்வாதீனத்தில் வைத்துக்கொள்ள ரயித்துக்குச் சுதந்தரமுண்டு.

(2) மாசூலைப் பகிர்ந்து கொள்வதன்மேல் குத்தகைத்தொகை வாங்கிக்கொள்ளப்படுகிற விஷயத்திலே, அந்த மாசூலைத் பகிர்ந்துகொள்ளுகிறவரையில் மாசூல் முழுவதையும் தாமே ஸ்வாதீனத்தில் வைத்துக்கொள்ள ரயத்துக்குச் சுதந்தரமுண்டு; ஆனால், அந்த மாசூலைத் தக்ககாலத்தில் கிரமமாய்த் பகிர்ந்துகொள்ள முடியாப்படி செய்யக்கூடிய ஒரு காலத்திலாவது விதமாகவாவது அதன் யாதொரு பாகத்தையும் களத்துமேட்டிலிருந்து அப்புறப்படுத்த அந்த ரயத்துக்குச் சுதந்தரமில்லை.

(3) மேலே சொன்ன இரண்டு விஷயங்களில் எதிலாகிலும், நிலத்துக்குடையவர் எவ்விதமாகவேனும் பிரவேசிக்கவேண்டியதில்லாமலே, சாகுபடி செய்கையில் எந்தக்காலத்திலே மாசூலை அறுவடைசெய்து சேர்த்துவைக்கவேண்டுமோ அந்தக் காலத்தில் அறுத்துச் சேர்த்துவைக்க ரயத்துக்குச் சுதந்தரமுண்டு. ஆனால், மாசூலை அறுக்கவோ அல்லது சேர்க்கவோ ஆரம்பிப்பதற்குமுன்னமே, ரயத்து - தாம் அப்படிசெய்ய உத்தேசித்திருப்பதாய் நிலத்துக்குடையவருக்காகிலும் அதிகாரம் கொடுக்கப்பெற்ற அவருடைய ஏஜெண்டுக்காகிலும் நியாயமானபடி தெரிவிக்கவேண்டும்.

(4) பயிர் அல்லது மாசூலுக்குச் சரியான மதிப்பேற்படுத்தவோ அல்லது அதைக் கிரமமாய்ப் பகிர்ந்துகொள்ளவோ முடியாதபடி செய்யக்கூடிய ஒரு காலத்திலாவது விதமாகவாவது அதன் யாதொரு பாகத்தை ரயத்து அறுத்தாலும் அப்புறப்படுத்தினாலும், அந்த மாசூலானது அக்கம்பக்கத்திலுள்ள அதே மாதிரியான நிலத்திலே அந்தக்காலத்தில் விளைந்திருக்கும் அதே தன்மையுள்ள பயிர் பூர்த்தியாயிருந்தால் எவ்வளவிருக்குமோ அவ்வளவு பூர்த்தியாய் இருந்திருப்பதாக எண்ணப்படும்.

மாசூலுக்குமதிப்பேற்படுத்தும்படியாகவாவது அதைப்பகிர்ந்து கொடுக்கும்படியாகவாவது அதை நிர்ணயிக்கும்படியாகவாவது கலெக்டருக்கு விண்ணப்பம்பண்ணிக்கொள்வது

74. பயிருக்கு மதிப்பு போட்டாவது மாசூலைப் பகிர்ந்து கொண்டாவது குத்தகைத் தொகை வாங்கிக்கொள்ளப்படுகிற விஷயத்திலே,—

(எ) அந்தப்படி மதிப்பு போடுவதற்கு அல்லது பகிர்ந்துகொள்வதற்குச் சரியான காலத்தில் நிலத்துக்

குடையவராவது ரயத்தாவது தாமாகவோ அல்லது ஏஜென்ட் மூலமாகவோ வரத்தவறினாலும்,

(பி) பயிரின் அளவு மதிப்பு ஆகிய இவைகளைக் குறித்தாவது, 73-வது பிரிவைச் சேர்ந்த (4) குறிப்பிட்ட உட்பிரிவின்படி எது பூர்த்தியான பயிராகுமென்பதைக் குறித்தாவது, மாசூலைப் பகிர்ந்துகொள்வதைக் குறித்தாவது விவாதம் நேரிட்டாலும்,

அந்தப்படி பகிர்ந்துகொடுப்பதற்காகவோ அல்லது மதிப்பு போடுவதற்காகவோ அல்லது நிர்ணயிப்பதற்காகவோ ஒரு உத்தியோகஸ்தரை நியமித்தனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, உபயகட்சிக்காரர்களில் எவராகிலும் கலெக்டருக்கு விண்ணப்பம் கொடுத்துக்கொள்ளலாம்.

இது விஷயமாய்ச் செய்யப்பட்ட விதிகளிலே பிரதேச கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்படக்கூடிய கட்டணத்தை அந்த விண்ணப்பத்தோடு விண்ணப்பதாரர் காட்டவேண்டும்.

அப்படிப்பட்ட விண்ணப்பம் வரப்பெறுவதன் மேல் இன்னது செய்ய வேண்டுமென்பது

75. (I) அப்படிப்பட்ட விண்ணப்பம் வரப்பெற்றுக்கொள்வதன் மேல், கலெக்டரானவர்-எதிர் கட்சிக்காரருக்கு எழுத்துமூலமான நோடிஸ் பிறப்பித்தும் அந்த நோடிஸில் குறக்கப்பட்டுள்ள தேதியிலும் மணிநேரத்திலும் இடத்திலும் வந்து ஹாஜராகும்படி எதிர் கட்சிக்காரருக்குத் தெரிவிக்கவேண்டியதுமல்லாமல், மேலே கண்டபடி பகிர்ந்து கொடுப்பதற்காகவாவது மதிப்பேற்படுத்துவதற்காகவாவது நிர்ணயிப்பதற்காகவாவது, ஒரு உத்தியோகஸ்தரை (நியமித்து) அனுப்பவும் வேண்டும்.

(2) பகிர்ந்து கொடுத்தோ அல்லது மதிப்பேற்படுத்தியோ குத்தகைத்தொகை வாங்கப்படுகிறதில்லையென்றாகிலும் குத்தகைத்தொகை எதுவும் செலுத்தத்தக்கதல்லவென்றாகிலும் எதிர் கட்சிக்காரர் ஆட்சேபனை செய்வாரானால், (நியமித்து) அனுப்பப்படுகிற ஷை உத்தியோகஸ்தர் அந்த ஆட்சேபனையை எழுதிவைக்கவேண்டும்; ஆனால், அந்த உத்தியோகஸ்தர் இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடி நடவடிக்கை நடத்தவேண்டும்.

(3) ஏற்படுத்தப்பட்ட தேதியிலாவது அதற்கு முன்பாவது விவாதவிஷயம் பைசல் செய்யப்படாமலிருக்குமானால், அவர்-மாசூலைப் பகிர்ந்து கொடுக்கும் விஷயத்திலாவது பயிருக்கு மதிப்பேற்படுத்தும் அல்லது அதை நிர்ணயிக்கும் விஷயத்திலாவது சகாயம் செய்வதற்காக அக்கம்பக்கத்தில் வசிக்கும் ஒருவரை அஸெஸராக (மத்தியஸ்தராக) குறித்த ஒரு காலத்துக்குள் நியமிக்கும்படி கட்சிக்காரர்களில் ஒவ்வொருவருக்கும் உத்தரவு செய்யவேண்டும்.

(4) உபயகட்சிக்காரர்களில் எவராவது ஹாஜராகவோ அஸெஸரை நியமிக்கவோ தவறினால், (நியமித்து) அனுப்பப்படுகிற ஷை உத்தியோகஸ்தர்-அந்தக் கட்சிக்காரர் சார்பில் ஒரு அஸெஸரை நியமிக்கவேண்டும்.

(5) (நியமித்து) அனுப்பப்படுகிற ஷை உத்தியோகஸ்தர் அஸெஸர்களுடைய அபிப்பிராயங்களை எழுதிவைக்கவேண்டியது மல்லாமல், தாம்தீர்மானம் கொடுக்கையில் ஷை அபிப்பிராயங்களைக் கவனிக்கவும் வேண்டும்; ஆனால், அவர் அந்த அபிப்பிராயங்களினால் கட்டுப்படவேண்டியவராகமாட்டார்.

(6) மாசூலைப் பகிர்ந்துகொள்ளும் விஷயத்தில், கட்சிக்காரர்கள் ஷை தீர்மானத்துக்குச் சம்மதிக்கிறபட்சத்திலே, அந்தப்படியே பகிர்ந்து கொடுத்துவிடவேண்டும். அந்தப்படி பகிர்ந்துகொள்வதற்குக் கட்சிக்காரர்கள் சம்மதிக்காத பட்சத்திலும், அறுவடையாகாமலிருக்கிற பயிருக்கு மதிப்பேற்படுத்தி குத்தகைத்தொகை செலுத்தத்தக்கதாயிருக்கிறசகல விஷயங்களிலும் அல்லது, பூர்த்தியான ஒரு பயிரின் மதிப்பை நிர்ணயிக்க வேண்டியிருக்கிற சகல விஷயங்களிலும், (நியமித்து) அனுப்பப்படுகிற ஷை உத்தியோகஸ்தர் மாசூல் அல்லது பயிருக்கு மதிப்பு போட்டு, செலுத்தத்தக்க குத்தகைத் தொகையை நிர்ணயிக்க வேண்டும். பிறகு அவர்- கட்சிக்காரர்களுக்கு நோடிஸ் கொடுத்தபின்பு, தம்முடைய தீர்மானத்தைக்கொடுத்து, அதை-தாம் நடத்திய நடவடிக்கைகளுக்கு ஒரு ரிப்போர்ட் சகிதமாகக் கலெக்டருக் அனுப்பவேண்டும்.

(7) அஸெஸர்கள் ரெவினியு ஆபீஸரோடு ஏகோபிக்கிற விஷயங்களில் அந்த தீர்மானம் முடிவானதாகும்; அந்தப்படி ஏகோபிக்கிற விஷயங்களிலன்றி மற்ற விஷயங்களிலே, எந்தத்தேதியில் ஷை தீர்மானம் கொடுக்கப்பட்டதோ அந்தத் தேதிக்குப் பிறகு ஒரு வாரகாலத்துக்குள்ளாக ஷை கட்சிக்காரர்கள் தங்களுக்கிஷ்டமிருந்தால் அந்தத் தீர்மானத்துக்கு ஆட்சேபனைகள் தாக்கல் செய்யலாம்; மேலும், கலெக்டர் அந்த ஆட்சேபனைகளைக்கேட்டு, இன்னும் (ஏதாவது விசாரணை செய்வது அவசியமென்று தோற்றுகிற பட்சத்திலே அப்படிப்பட்ட விசாரணை செய்தபிறகு ஷை ஆட்சேபனைகள் விஷயமாக உத்தரவுகள் ஜாரிசெய்யவேண்டும்.

பகிர்ந்து கொடுப்பதனாலாவது மதிப்பேற்படுத்துவதனாலாவது குத்தகை செலுத்தத்தக்கதல்லவென்றாகிலும் குத்தகைதொகை எதுவும் செலுத்தத்தக்கதல்லவென்றாகிலும் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டு கலெக்டர் ஷை ஆட்சேபணையே ஆங்கீகரிக்கிற பட்சத்திலே, அவர் - ஷை தீர்மானத்தை ரத்துசெய்துவிடவேண்டும்.

வேறே யாதொரு ஆட்சேபனை தாக்கல்செய்யப்படுகிற விஷயத்திலாவது, ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யப்படாத விஷயத்திலாவது, கலெக்டரானவர் ஷை தீர்மானத்தை ஊர்ஜ்ஜிதப்படுத்தலாம், அல்லது கட்சிக்காரர்கள் சொல்லிக்கொள்ள வேண்டியதைச் சொல்லிக்கொள்ள அவர்களுக்குச்சமயம் ஏற்படுத்திக் கொடுத்தபிறகு தமக்குத் தகுதியாகத் தோற்றுகிறபடி அந்தப் தீர்மானத்தை மாற்றலாம்; மேலும், அவர்- குத்தகைத்தொகை தொகையையும் செலவு (ஏதாமதிருந்தால்) அதையும் செலுத்துவதற்காக ஜாரி செய்யவேண்டும்: இந்த உத்திரவானது முடியானதாயிருக்கவேண்டியதேடுய்கூட, குத்தகைத் தொகை பாக்கிக்காகப் பிறப்பிறக்சப்பட்ட ஒரு டிச்ரியைப்போல் செலாவணியாகவும்வேண்டும்.

(8) இந்தப் பிரிவின்படிக்கான எந்த நடவடிக்கைகளிலாகிலும், கலெக்டர் - மாசூலின் மதிப்பு ஏற்படுத்தப்படுகிறவரையிலாவது அது பகிர்ந்துகொள்ளப்படுகிறவரையில்ாவது அதை அப்புறப்படுத்தக்கூடாதென்று உத்தரவுமூலமாய்த் தடுக்கலாம்.

பிரவேசிப்பதற்கான அதிகாரம்

76. (நியமித்து) அனுப்பப்படுகிற ஷை உத்தியோகஸ்தர் மேலேகண்டபடி பகிர்ந்து கொடுக்கும் காரியத்திற்காகவும் மதிப்பேற்படுத்தும் காரியத்திற்காகவும், எந்த நிலத்தின்மேல் மாசூலிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு நிலத்திலாவது எந்தக் கட்டிடத்தில் மாசூலிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு கட்டிடத்துக்குள்ளாவது தம்முடைய அஸெஸர்கள் சகிதமாகத் பிரவேசிக்கலாம்.

6-ம் அத்தியாயம்

வியாஜ்ஜிய மூலமாகவாவது அசையும் பொருளையாகிலும் கைப்பற்று நிலத்தையாகிலும் ஜப்திபண்ணி விற்பனைசெய்தாவது குத்தகைத் தொகை வசூல்பண்ணுவது

வியாஜ்ஜிய மூலமாகவோ ஜப்தி செயதோ பாக்கி வசூல் பண்ணுவது

77. குத்தகைத்தொகை பாக்கியாய்விட்ட பிறகு எப்போதாகிலும்—

(i) நிலத்துக்குடையவர் பாக்கி வசூல் செய்வதற்காகக் கலெக்டரிடத்தில் வியாஜ்ஜியம் கொண்டுபோகலாம்; மேலும்,

(ii) அடுத்து முந்திய பன்னிரண்டு மாதகாலத்தில் பாக்கியாகச் சேர்ந்துவந்திருக்கிற யாதொரு குத்தகைத்தொகை பாக்கியின் விஷயத்திலே, அந்த நிலத்துக்குடையவர்- இந்த ஆக்டின்படி தாம் கிடைக்கப்பெறுவதற்கு பாத்தியஸ்த்ராயுள்ள வேறே யாதொரு பரிகாரத்தோடுகூட, பாக்கிதாரராயிருக்கிற ரயத்துடைய அசையும்பொருளையாகிலும் விளைந்து கொண்டிருக்கும் பயிரையாகிலும், அந்த பாக்கிதாருடைய கைப்பற்று நிலத்திலுள்ள மரங்கள் அல்லது நிலத்தினின்றும் உண்டாகத்தக்க மாசூலையாகிலும் தம்முடைய சொந்த பொறுப்பின்மேலே ஜப்திசெய்யலாம்.

ஆனால், அடியிற்கண்ட சாமான்களைப் பாக்கிக்காக ஜப்திசெய்யக்கூடாது. அந்த சாமன்கள் எவையென்றால்:—

(எ) பாக்கிதாரர்-அவருடைய மனைவி குழந்தைகள் ஆகிய இவர்களுடைய அவசியமான உடைகளும் சமையல்பாததிரங்களும் படுக்கைகளும் படுக்கைச் சாமான்களும், ஒரு ஸ்திரீ தன்னுடைய தேகத்தில் அணிந்துகொள்வதகான ஆபரணங்களில் மதாசாரப்படி தன்னுடைய தேகத்தினின்றும் நீக்கிவிடக்கூடாத ஆபரணங்களும்;

(பி) பாக்கிதாரருடைய விவசாயத்துக்கு வேண்டிய கலப்பை முதலிய உபகரணங்களும், ஏர் உழும் கால்நடைகளும், ரயத்தாவது பயிரிடுகிறவராவது சேர்த்துவைத்திருக்கிற எருவும், அடுத்த வருஷத்திலே கைப்பற்று நிலத்தைக் கிரமமாய்த் பயிரிடுவதற்கு அவசியமானவிதைத்தானியமும்.

இன்னவிதமாய் ஜப்தி செயய வேண்டுமென்பது

78. (1) ஜப்தி செய்கிறதற்கு முன்பாவது ஜபதி செய்யும் காலத்திலாவது, நிலத்துக்குடையவராகிலும் கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற அவருடைய ஏஜென்டாகவாகிலும் இருக்கக்கூடிய ஜப்திதாரர்-என்ன காரணங்களில்மேல் தொகை டிமாண்டு செய்யப்படுகிறதோ அந்தக்காரணங்கள் கண்டுள்ள ஒரு கணக்கு சகிதமாய் பாக்கித் தொகை இவ்வளவென்று விவரமாய்க் கண்டு எழுத்துமூலமான ஒரு டிமாண்டைப் பாக்கிதாரருக்குச் சேர்பிக்கவேண்டும்.

(2) ஷை டிமாண்டிலும் கணக்கிலும் ஜப்திதாரர் தேதிபோட்டுக் கையெழுத்து பண்ணவேண்டும்; மேலும், அவைகளுக்கு ஒரு பிரதியை-பாக்கிதாரரிடத்திலாவது, அவர் சாதாரணமாய் வர்சஞ்செய்யும் இடமானது அந்த ஜப்தி எந்த நிலத்துக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த நிலத்துக்குச் சமீபமாயிருந்தால் அந்த இடத்தில் இருக்கும் அவருடைய குடும்பத்தைச்சேர்ந்த வயதுவந்த யாதொரு புருஷரிடத்திலாவது ஷை நபருடைய அதிகாரங் கொடுக்கப்பெற்ற ஏஜன்டினிடத்திலாவது ஒப்பித்தோ அல்லது அப்படிச்செய்ய முடியாதபட்சத்திலே அந்த நோடிஸ் எந்த நிலத்துக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த நிலத்தில் யாவர்க்கும் தெரியும்படியான ஒரு பாகத்திலே அதற்கு ஒரு பிரதியை ஒட்டியோ மேலேகண்ட டிமாண்டையும் கணக்கை

யும் எந்தத் தேதியில் பாக்கி சேரவேண்டியதாயிருக்கிறதோ அந்தத் தேதி முதல் ஒரு வருஷகாலத்துக்குள்ளாக பாக்கிதாரருக்குச் சேர்ப்பிக்கவேண்டும். அந்த டிமாண்டில் காணவேண்டியவைகள் எவையென்றால் :—

(எ) சேரவேண்டியதாயிருக்கிற பாக்கித் தொகையும் அதற்கு வட்டி ஏதாவதிருந்தால் அதுவும் ;

(பி) அது எந்தக் கைபற்று நிலத்தின் விஷயமாகப் பாக்கியாகிறதோ அந்தக் கைப்பற்றுநிலம் ;

(ஸி) அது எந்தக் காலவரையறைக்காகப் பாக்கியாகிறதோ அந்தக் காலவரையறை.

ஐப்திசெய்வது பாக்கிக்குச் சரியாயிருக்கவேண்டுமென்பதும், சொத்தின் ஜாபிதாவைச் சொந்தக்காரருக்குச் சேர்ப்பித்து அதற்கு நகலை விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டுமென்பதும்

79. (1) மேலே கண்ட டிமாண்டுக்கு உடனே தொகை செலுத்தினாலன்றி மற்றப்படி, ஐப்திதாரர்-பாக்கித் தொகைக்கும் ஐப்தி செலவுக்கும் சரியாயிருக்கும்படியாகச் சொத்தை ஐப்திசெய்யலாம் ; மேலும், ஷை சொத்துக்கு ஒரு ஜாபிதாவையாவது விவரப்பத்திரிகையையாவது உடனேதயார்செய்து அதிலே தேதி போட்டுக் கையெழுத்துபண்ணி, அதை எழுத்துமூலமாயுள்ள டிமாண்டை எந்த விதமாய்ச் சேர்ப்பிக்கவேண்டுமென்று முந்திய பிரிவில் நிபந்தனை கண்டிருக்கியதோ அந்த விதமாய் பாக்கிதாரருக்கு ஆலசியம் பண்ணாமல் சேர்ப்பிக்கவேண்டும் ; அல்லாமலும், எழுத்துமூலமாயுள்ள டிமாண்டுக்கும் கணக்குக்கும் ஒரு நகல் சகிதமாக மேலே கண்ட ஜாபிதா அல்லது விவரப்பத்திரகைக்கு ஒரு நகலை, பாக்கிதாரருக்கு டிமாண்டைச் சேர்ப்பித்தது முதல் பத்து தினத்துக்குள்ளாக, ஐப்திதாரர்-பாக்கிக்காக ஐப்திசெய்யப்பட்ட சொத்தைவிற்க 1839-ம்௵த்திய சென்னபட்டணத்து 7-வது ஆக்டின்படி அதிகாரம் கொடுக்கப்பெற்றும் விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தர் என்று இதில் பின்னால் சொல்லப்பட்டுமுள்ள ஸ்ர்தார் உத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டும்.

(2) பயிரிடுகிறவர் பாக்கிதாரரல்லாமல் வேறே யாதொரு நபரென்று ஐப்திதாரருக்குத் தெரிந்திருக்கிறபட்சத்திலே, ஷை டிமாண்டுக்கும் சொத்தின் ஜாபிதா அல்லது விவரப்பத்திரிகைக்கும் ஒரு நகலைப் பயிரிடுகிற அந்த நபரிடத்தில் மேலேகண்ட விதமாகவே சேர்ப்பிக்கவாவதுவேண்டும் ஒப்பிக்கவாவதுவேண்டும்.

ஐப்தி செய்கிறவர் போலீஸாருடைய உதவியைப் பெறலாமென்பது

80, ஐப்திசெய்ய அதிகாரம் பெற்றிருக்கும் யாதொரு நபர்-எவ்வித கலகமும் நேரிடாதபடி செய்வதற்கு என்ன சகாயம் அவசியமாயிருக்குமோ அந்த சகாயத்துக்காக அதிசமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு விண்ணப்பம் யாருக்குச் செய்துகொள்ளப்படுகிறதோ அந் அதிகாரியானவர்-ஷை காரியத்துக்காக அந்தபடி ஐப்திசெய்யுங்காலத்திலே ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட போலீஸ் உத்தியோகஸ்தர்கள் வந்திருக்கும்படி அனுப்பவேண்டும்.

ஐப்திசொத்து பாக்கிக்குச் சரியாயிருக்கவேண்டுமென்பது

81. ஐப்திசொத்து அதிகமாயிருக்கக்கூடாது எனவே—ஐப்தி செய்யப்பட்ட சொத்தின் மதிப்பானது சேரவேண்டியதாயிருக்கிற பாக்கித் தொகைக்கும் ஐப்தி செலவுக்கும் கூடுமான மட்டில் சரியாயிருக்கவேண்டும்.

ஐப்திசெய்யவேண்டிய காலம்.

82. சூரியோதயத்துக்குப் பிறகும் சூரியாஸ்தமனத்துக்கு முன்னும் ஐப்தி செய்யவேண்டுமேயொழிய மற்றக்காலங்களில் ஐப்திசெய்யக்கூடாது.

மாசூலை அறுவடை செய்து காப்பாற்றி வருவதற்கான சுதந்தரம்

83. (1) ஐப்தி செய்திருந்தும் பாதகமில்லாமலே, பயிருக்குச் சொந்தக்காரர்-அறுவடையாகாமலிருக்கிற பயிரையும் வேறே மாசூலையும் பாதுகாத்துக்கொண்டிருந்து, ஐப்திதாரருக்கு நோடிஸ் கொடுத்த பிறகு அறுவடைசெய்து குவித்து வைக்கலாம்.

(2) பயிருக்குச் சொந்தக்காரர் ஷை பயிரையாவது மாசூலையாவது பாதுகாத்துக்கொண்டிருக்கவோ அறுவடை செய்யவோ அல்லது குவித்துவைக்கவோ அசட்டைபண்ணுவாராகில், ஐப்திதாரர்-சொந்தக்காரருடைய செலவில் அந்தபடி செய்யலாம்.

(3) ஐப்திபண்ணப்பட்ட சொத்தை-ஐப்திதாரரால் இது விஷயமாய் நியமிக்கப்பட்ட யாதொரு நபரின் வசத்திலே வைக்கவேண்டும் ; அந்தப்படி நியமிக்சப்பட்ட நபர்-ஷை சொத்தை சமீபத்திலுள்ள சௌகரியமான ஒரு இடத்திலே சொந்தக்காரருடைய செலவில் சேர்த்துவைக்கவேண்டும்.

ஐப்திபண்ணுகிறவர் இன்ன இடங்களைப் பலாத்காரமாய்த் திறக்கலாமென்பது

84. யாதொரு லாயம், பசுமாட்டுத்தொழுவம், களஞ்சியம், கிடங்கு, வீட்டைச்சார்ந்து வெளியே அருகிலுள்ள அறை, அல்லது வேறே கட்டிடத்தை, ஐப்திபண்ணுகிறவர் பலாத்காரமாய்த் திறப்பது சட்டசம்மதமாகும் ; மேலும் அவர்-வெளிக்கதவு திறந்திருக்கிற யாதொரு குடியிருப்பு வீட்டிலும் பிரவேசிக்கலாம் ; அல்லாமலும், பாக்கிதாரருடையதாகி உள்ளே வைக்கப்பட்டிருக்கிற சொத்தை ஐப்திசெய்யும் காரியத்துக்காக அப்படிப்பட்ட குடியிருப்பு வீட்டிலுள்ள யாதொரு அறையின் கதவை உடைத்துத்திருக்கலாம்; ஆனால் எப்போதும், இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, அந்தக் குடியிருப்புவீட்டில் ஸ்திரீகள் வாசஞ்செய்வதற்காகிலும் அந்தப்புரமாகவாகிலும் உபயோகிக்கப்படும் யாதொரு அறையை மேற்கண்ட ஐப்திதாரர் உடைத்துத் திறப்பதாவது அதில் நுழைவதாவது சட்டசம்மதமாகாது.

போலீஸ் உத்தியோகஸ்தர் முன்பாகக் கதவுகளைப் பலாத்காரமாயத் திறக்கவும் அந்தப்புரத்தில் நுழையவும் அதிகாரம்

85. வெளிக்கதவு மூடியிருக்கிற யாதொரு குடியிருப்பு வீட்டிற்குள்ளேயாவது ஸ்திரீகளால் உபயோகிக்கப்பட்டுத் தேசவழக்கப்படி அந்தரங்கமாகப் பாவிக்கப்படுகிற யாதொரு அறைக்குள்ளேயாவது பாக்கிதாரருடைய சொத்து வைக்கப்பட்டிருக்கிறதென்று நம்பஜாதிதாரருக்கு நியாயமிருக்கிறபட்சத்திலே அந்த ஐப்திதாரர் - அந்தச் சங்கதியை

அதிசமீயத்திலுள்ள போலீஸ்ஸ்டேஷன் விசாரணை உத்தியோகஸ்தருக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டும்: அந்தப்படி ரிபோர்ட் செய்வதன்மேல், ஷை ஸ்டேஷன் விசாரணை உத்தியோகஸ்தர் அந்த இடித்துக்கு ஒரு பொலீஸ் உத்தியோகஸ்தரை அனுப்ப வேண்டும் ; ஐப்திதாரர் அந்த-குடியிருப்பு வீட்டின் வெளிக்கதவையும்ஷை வீட்டிற்குள்ளே அநதப்புரம் தவிர வேறே யாதொரு அறையின் கதவையும் ஷை பொலீஸ் உத்தியோகஸ்தருக்கு முன்பாக உடைத்துத்திறக்கலாம் அல்லாமலும், அந்தப்புறத்திற்குள்ளே இருக்கும் ஸ்திரீகளை அப்புறப்படுத்துவதற்காகக் கிரமப்படி நோடிஸ் கொடுத்தபிறகும், (அந்த ஸ்திரீகள் தேசவழக்கப்படி பஹிரங்கத்தில் வரக்கூடாத அந்தஸ்துள்ள ஸ்திரீகளாயிருந்தால்) அவர்களைத் தகுதியான விதமாக அப்புறப்படுத்துவதற்கான சாதனங்களை ஏற்படுத்திக்கொடுத்த பிறகும், ஷை ஐப்திதாரர் - அந்தப்புரமாய் உபயோகிக்கப்படும் அறைகளிலே, ஐப்திதாரருடைய சொத்து எதாகிலும் வைத்திருந்தால் அதை ஐப்திபண்ணுவதற்கு மேலேகண்ட பொலீஸ் உத்தியோகஸ்தருக்கு முன்பாக அந்த அறைகளுக்குள் நுழையலாம். அப்படிப்பட்ட சொத்து ஏதாவது காணப்படுகிறபட்சத்திலே, அந்த அரைகளில் முன்னிருந்தவர்கள் மறுபடியும் உள்ளே தாராளமாய்ப் போகும்படி அந்த அறைகளிலிருந்து ஷை சொத்தை உடனே எடுத்துவிடவேண்டும்.

ஐப்திசெய்யப்பட்ட கால்நடைகளை யாவது சரக்குகளை யாவது உபயோகிக்கக் கூடாதென்பது

86. ஐப்திதாரர்-ஐப்தி செய்யப்பட்ட எருது முதலிய கால்நடைகளிடத்திலே வேலை வாய்கவுங் கூடாது, ஐப்திசெய்யப்பட்ட சொத்தை உபயோகிக்கவுங்கூடாது. அவர்-கால்நடைமுதலிய ஜீவப்பிராணிகளுக்கு வேண்டிய தீனிபோடவேண்டும் ; அதற்காகப் பிடிக்கிற செலவை பாக்கிதாரராகிய ரயத்து-ஏற்றுக்கொள்ளவேண்டியதோடுங்கூட, ஐப்திசெல்வைப்போல அது வசூல் செய்யப்படத்தக்கதுமாகும்.

டிபாஸிட் செய்வதன் மேலாவது தொகைசெலுத்துவதன்மேலாவது ஜாமீன் சவதரித்துக்கொடுப்பதன்மேலாவது ஐப்திவிடுதலை செய்வது

87. (1) இந்த அத்தியாயத்தின்படி ஐப்தி செய்யப்பட்டிருக்கிற பிறகும் விற்பனைக்காக ஏற்படுத்தப்பட்ட தேதிக்கு முன்பு யாதொருகாலத்திலும், பாக்கிதாரராகிலும் பயிரிடுகிறவராகிலும் சொத்தின் சொந்தக்காரராகிலும்-78-வது பிரிவின்படி எழுந்து மூலமாயுள்ள டிமாண்டில் குறித்திருக்கிற தோகையைப் பிறகு ஏற்படும் வட்டி செலவுகள்-ஆகிய இவைகள் சகிதமாக ஐப்திதாரரிடத்தில் கொடுப்பதாகக் காட்டலாம் அல்லது செலுத்தலாம் ; அல்லது, ஐப்திதாரருக்குத் திருப்திகாமாய் ஜாமீன் சவதரித்துக்கொடுக்கலாம் ; அந்தப்படி செய்வதன்மேல், ஐப்திதாரர் மேலேகண்டபடி கொடுக்கவந்ததையோ அல்லது செலுத்தினதையோ அல்லது ஜாமீனையோ அங்கீகரித்திருப்பதாக எழுதிக்கொடுத்து, உடனே சப்திவிடுதலைசெய்யவேண்டும்.

(2) ஐப்திபண்ணப்பட்ட சொத்தை விற்பனை செய்வதற்குமுன்னே எப்போதாகிலும், பாக்கிதாரராவது பயிரிடுகிறவராவது ஐப்திபண்ணப்பட்ட சொத்தின் சொந்தக்காரராவது விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தரிடத்திலே, 78-வது பிரிவின்படி எழுத்துமூலமாயுள்ள டிமாண்டில் குறித்திருக்கிற தொகையை பிறகு ஏற்பட்ட வட்டி-செலவுகள்-ஆகிய இவைகள் சகிதமாகச் செலுத்தினால், விற்பனை நடத்தும் ஷை உத்தியோகஸ்தர் அதற்காக ரசீதுகொடுத்து உடனே ஐப்தி விடுதலை செய்யவேண்டும்.

ஐப்தி செய்யப்பட்ட சொத்து காணாமற்போனாலும் கெட்டுப்போனாலும் ஐப்திதாரர் உத்தரவாதம் பண்ணவேண்டுமென்பது

88. ஐப்தி செய்யப்பட்ட சொத்தானது - ஐப்திதாரருடைய வசத்திலிருக்கையில், அவர் அதைக் காப்பாற்றிவைப்பதற்கு வேண்டிய நியாயமான முன்னெச்சரிக்கையாயுள்ள ஏற்பாடுகள் செய்யாமையினாலே, திருட்டுப்போனாலும் காணாமற்போனாலும், சேதப்பட்டாலும் அழிந்துபோனாலும், நஷ்ட ஈட்டுக்காகச் சொந்தக்காரர் கலெக்டரிடத்தில் ஐப்திதாரர்மேல் வியாஜ்ஜியம் கொண்டுவரலாம்.

ஐப்தி செய்யப்பட்ட சொத்தில் சுதந்தரம் அல்லது பாத்தியதை இருப்பதாக மூன்றுதது மனிதர் தாவா செயவது

89. ஐப்தியிலிருக்கிற அசையும் பொருள்களில் எதிலாவது தமக்குச் சுதந்தரம் அல்லது பாத்தியதை இருக்கிறதாகத் தாவா செய்கிற மூன்றும் நபர் கலெக்டருக்காகிலும் விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தருக்காகிலும் விற்பனை தேதிக்கு முன்னதாக விண்ணப்பம் செய்துகொள்ளலாம் ; அதன்மேல் கலெக்டரானவர் - உடனே விசாரணைசெய்யவேண்டும் அல்லது செய்விக்கவேண்டும் ; மேலும், தகுந்த காரணமிருப்பதாகத் தோற்றுமாகில், அந்தச்சொத்தை விற்பனை செய்யாமல் நிறுத்திவைக்கலாம். கலெக்டரானவர் அந்தத் தாவாவைக்குறித்துத் தமக்குத் தகுதியாகத் தோற்றுகிறபடி உத்தரவு பிறப்பிக்கவேண்டும்.

ஐப்தி செய்வதைத் தடுப்பதற்காக மோசமாய்ப் பராதீனஞ் செயயப் பட்ட அல்லது ஐப்தி செயதபிறகுபலவந்த மாகவாவது திருட்டுத் தனமாகவாவது அப்புறப் படுத்தப்பட்டசொத்தை ஒப்பிப்பது

90. ஐப்திதாரர் விண்ணப்பம்செய்துகொண்ட பிறகு,—

(எ) பாக்கிக்காகஐப்தி செய்வதைத் தடுக்கும்பொருட்டு பாக்கிதாரர் அசையும்பொருளை பராதீனம்செய்திருக்கிறாரென்றாகிலும்,

(பி) ஒருமுறை ஐப்திசெய்யப்பட்ட அசையும்பொருளை யாதொரு நபர் பலவந்தமாகவோ அல்லது திருட்டுத்தனமாகவோ எடுத்துக்கொண்டு போயிருக்கிறாரென்றாகிலும், கலெக்டருக்குத் திருப்தியாகும்படி ருஜுசெய்யப்பட்டால், கலெக்டரானவர் - ஐப்திகாரருககு ஷை பொருளைத் திரும்பவும் கொடுத்துவிட வேண்டுமென்றாயினும் அதன் மதிப்புக் கிரயத்தைச் செலுத்திவிட வேண்டுமென்றாயினும் உத்தரவு பிறப்பிக்கவேண்டும்.

பிரதிபலனுக்காக வியாஜ்ஜியம்.

91. ஐப்திதாரருக்கு யாதொரு சொத்தை ஒப்பித்துவிட வேண்டுமென்றாவது திரும்பவும் கொடுத்துவிடவேண்டுமென்றாவது அதன் மதிப்புக் கிரயத்தைச் செலுத்திவிடவேண்டுமென்றாவதுகட்டளையிட்ட

89-வது பிரிவின்படியாகிலும் 90-வது பிரிவின்படியாகிலும் பிறப்பிக்கப்படுகிற உத்தரவினால் துன்பமடைகிற யாதொரு நபர்-பிரதிபலனுக்காக ஜப்திதாரர்மேல் ஸிவில் கோர்ட்டில் வியாஜ்ஜியங் கொண்டுவரலாம்.

விற்பனைக் காக விண்ணப்பம்.

92. (1) ஜப்திதாரர் - ஜப்தி தேதிமுதல் பதினைந்து தினத்துக்குள்ளாக, 79 - வது பிரிவில் கண்டிருக்கிற ஜாபிதா அல்லது விவரப்பத்திரிகையில் குறிக்கப்பட்டுள்ள சொத்தை விற்பதற்காக விற்பனைநடத்தும் உத்தியோகஸ்தரிடம் விண்ணப்பஞ் செய்துகொள்ளவேண்டும்.

(2) அப்படிப்பட்ட விண்ணப்பம் செய்துகொள்ளப்படாவிட்டால், சொத்தின்மேலுள்ள ஜப்தியானது மேற்கண்ட பதினைந்து தினக்காலவரையறை சுழிவதன்மேல் செலாவணியாகாமல் நின்றுபோகும்.

விண்ணப்பத்தில் கண்டிருக்கவேண்டிய விண்ணப்பங்கள்.

93. ஷை விண்ணப்பமானது எழுத்துமூலமாக இருக்கவேண்டும்; மேலும் அதில் அடியிற்கண்ட விவரங்களைக் குறிக்கவேண்டும். அவையாவன:—

(a) பாக்கிதாரரின் பெயரும் இருப்பிடமும், 79-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிற விஷயத்திலே பயிரிட்டவர் பெயரும் இருப்பிடமும் ;

(b) சேரவேண்டிய தொகையும் ;

(c) ஜப்தி தேதியும் ;

(d) ஜப்தி செய்யப்பட்ட சொத்து எவ்விடத்திலிருக்கிறதோ அந்த இடமும்.

நோடிஸ்சேர்ப்பிப்பதற்குக் கட்டணம்.

94. விண்ணப்பத்துடன் கூடவே, ஜப்திதாரர் - நோடிஸ் சேர்ப்பிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கிற கட்டணத்தையும் விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தரிடம் செலுத்திவிடவேண்டும்.

விண்ணப்பத்தை வரப்பெற்றுக்கொண்ட தன்மேல் நடந்த வேண்டிய நடவடிக்கை.

95. (1) அப்படிப்பட்ட விண்ணப்பத்தையும் கட்டணத்தையும் வரப்பெற்றுக்கொண்டவுடனே, விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தரானவர்-ஷை விண்ணப்பத்துக்கும் 79-வது பிரிவில் கண்டிருக்கிற ஜாபிதா அல்லது விவரப்பத்திரிகைக்கும் ஒரு நகலைக் கலெக்டருக்கு அனுப்பி, பாக்கிதாரருக்கு ஒரு நோடிஸ் சேர்ப்பித்து, கேட்கப்படுகிற (டிமாண்ட் செய்யப்படுகிற) தொகையைச் செலுத்திவிடவேண்டு மென்றாயினும் நோடிஸ்சேர்ப்பித்த தேதி முதல் 15 தினத்துக்குள்ளே ஷை ஜப்தியை ஆட்சேபிப்பதற்காகக் கலெக்டரிடத்தில் வியாஜ்ஜியந்தொடரவேண்டுமென்றாயினும் அவருக்குக் கட்டளையிடவேண்டும்.

(2) 79-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிற விஷயத்திலே, இதேமாதிரியான நோடிஸைப் பயிரிட்டவருக்குச் சேர்ப்பிக்கவேண்டும்.

(3) விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தரானவர்-சந்தர்ப்பத்திற்கேற்றபடி (1) அல்லது (2) குறிப்பிட்ட உட்பிரிவின் பிரகாரம் நோடிஸ் சேர்ப்பித்த தேதிமுதல் 15 தினத்துக்குக் குறையாமலுள்ள ஒரு தேதியை விற்பனைக்காக உத்தரமூலமாய் நிஷ்கரிஷைசெய்து, ஜப்திசெய்யப்பட்ட யொப்து இருக்கிற கிராமத்தில் அதைத் தண்டோரா மூலமாகப் பிரசித்தஞ் செய்விக்கவேண்டும் ; மேலும், அவர் தம்முடைய உத்தரவுக்கொரு நகலைக் கிராமத்தில் யாவருக்கும் தெரியும்படியான ஒரு இடத்தில் ஒட்டவும் வேண்டும்.

மேலேகண்டபடி பிரசித்தஞ்செய்த தேதிமுதல் அதமம் எழுநாள் கழிந்தபிறகுள்ள ஒரு தேதியை விற்பனை தேதியாக நிஷ்கரிஷை செய்யவேண்டும்.

(4(மேலேகண்ட நோடிஸிலும் பிரகடனத்திலும்—

(d) விற்கப்போகிற சொத்தையும்,

(b) 93 -வது பிரிவின்படிக்கான விண்ணப்பத்தில் கண்டிருக்கிற தொகையையும்;

(c) எந்த காலத்தில் எந்த இடத்திம்லவிற்பனை நடத்தப்படுமென்பதையும், விவரமாய்க் கானவேண்டும்.

இன்னபடிக் காறுல் விற்பனை நடத்தலாமென்பது.

96. 95-வது பிரிவிற்கண்ட நோடிஸ் சேர்ப்பிக்கப்பட்ட தேதிமுதல் பதினைந்து தினங்களுக் குள்ளாக மேலேகண்ட பாக்கிதாரான ரயத்தாவது பயிரிட்டவராவது- ஷை ஜப்தியை ரத்து செய்விப்பவற்காகக் கலெக்டரிடம் வியாஜ்ஜியம் தாக்கல் செய்யாவிட்டாலும், அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் தாக்கல்செய்து அது அவருக்கு விரோதமாகக் கலெக்டரால் தீர்மானிக்கப்பட்டும் 89-வது பிரிவின்படியாகிலும் 103-வது பிரிவின்படியாகிலும் 104-வது பிரிவின்படியாகிலும் விற்பனைநிறுத்திவிடப்படாமலும் அல்லது தளிவைக்கப் படாமலுமிருந்தாலும், விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தரானவர் ஷை டிமாண்ட் தொகையும் ஜப்திசெய்ததற்காக உண்டான செலவுகளென்று அவர் நிர்ணயிக்கும் தொகையும் பூர்த்தியாகச் செலுத்தப்பட்டாலன்றி மற்றப்படி, இதில் பின்னால் சொல்லப்பட்டிருக்கிறவிதமாக ஷை சொத்தையோ, அந்த சொத்திலே டிமாண்ட்தொகைக்கும் ஜப்தி செலவுகளுக்கும் விற்பனைச்செலவுகளுக்கும் ஈடுசெய்வதற்கு அவசியமாகும் யாதொரு பாகத்தையோ விற்க ஆரம்பிக்கவேண்டும்.

விற்பனை நடத்த வேண்டிய இடம்.

97. சொத்தானது எவ்விடத்தில் ஜப்திசெய்யப்பட்டதோ அல்லது வைத்துவைக்கப்படுகிறதோ அந்தக் கிராமத்திலாவது, அதற்கு மிகவும் அருகாமையில் ஜனங்கள் விசேஷமாய் வந்துசேரக்கூடிய

இடத்தில் ஷை சொத்து வெகுசாய் நல்லவிலைக்கு விற்கலாமென்று விற்பனைநடத்தும் உத்தியோகஸ்தர் அபிப்பிராயப்படுகிறபட்சத்திலே அவ்விடத்திலாவது, சாதாரணமாய் விற்பனையை நடத்தவேண்டும். எந்த சந்தர்ப்பத்திலாயினும் சரி, விற்பனையை நடத்தவேண்டிய இடத்திலும் காலத்திலும் ஜப்திதாரர் ஷை சொத்தைக் கொண்டுவரக் கடமைப்பட்டவராவார் : அதைக் கொண்டுவருவதற்காகப் பிடிக்கும் செலவை ஜப்திசெய்வதற்குப் பிடித்த செலவில் ஒருபாகமாகக் கொள்ளவேண்டும்.

அழிந்துபோகத்தக்க பொருள்களை விற்பனை செயவது.

98. இந்த அத்தியாயத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஜப்திதாரர்-சீக்கிரத்தில் அழிந்து போகுந்தன்மையுள்ள விளைபொருள்களை அல்லது மாசூல்களைக் கூடியசீக்கிரத்தில் விற்றுவிடவேண்டும் ; விற்பனையினால் கிடைத்ததொகை விற்பனைநடத்தும் உத்தியோகஸ்தரிடத்தில் கட்டிவைக்கப்படவேண்டும்.

இன்னபடிக் காறுல் மாசூல்களை விற்பனை செய்யலாமென்பது.

99. (1) சேர்த்துவைக்கக்கூடிய லக்ஷணத்தையுடைய விளைபொருள்கள் அல்லது மாசூல்களை அறுவடை செய்தோ அல்லது குவித்தோ சேர்த்துவைப்பதற்காகச் சித்தப்படுத்துவதற்கு முன்னே அவைகளை விற்கக்கூடாது.

(2) சேர்த்து வைக்கக்கூடாத லக்ஷணத்தையுடையமாசூல்களையோ விளைபொருள்களையோ அறுவடை செய்வதற்கு அல்லது குவிப்பதற்குமுன்னே விற்றுவிடலாம் மேலும், கிரயதாரர் தாமாகவேயாகிலும் இந்த விஷயத்துக்காகத் தாம் நியமிக்கும் யாதொரு நபர் மூலமாகவாகிலும் நிலத்தில் பிரவேசிக்கவும், அவைகளைப் பாதுகாத்தறுப்பதற்கோ குவிப்பதற்கோ அவசியமான எல்லாக்காரியங்களையுஞ் செய்யவும் சுதந்தரமுடையவராவார்.

விற்பனைசெய்யும் விதம்

100. சொத்தை விற்பனைநடத்தும் உத்தியோகஸ்தருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி ஒரு தொகுதியாகவோ பல தொகுதிகளாகவோ செய்து, பகிரங்கமான ஏலத்தில் விற்கவேண்டும்; டிமாண்டும், ஜப்தி-விற்பனை-இவைகளுக்குண்டான செலவுகளும், ஷை சொத்தின் ஒரு பாகத்தை விற்பதனாலே ஈடுசெய்யப்படும் பட்சத்தில், உடனே மற்றபாகத்தை ஜப்தியினின்றும் விடுதலைசெய்துவிடவேண்டும்.

விற்பனையைத் தள்ளிவைப்பது

101. சொத்தை விற்பனைக்குவிட்டதன்மேல் விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தர் அபிப்பிராயப்படி சரியான விலை வராமற்போய்,—

(எ)பாக்கிதாரரோ பயிரிட்டவரோ ஷைசொத்தின் சொந்தக்காரரோ அல்லது அவர் பரமாயிருந்து காரியம் நடத்த அதிகாரம் பெற்ற யாதொரு நபரோ அல்லது ஜப்தி தாரரோ மறுநாள்வரையிலும் விற்பனையைத் தள்ளிவைக்கவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொள்ளுகிறபட்சத்திலே, அல்லது,

(பி)விற்பனை நடத்துமிடத்திலாவது அதற்குச் சமீபத்திலாவது ஒரு சந்தைகூடுகிறபட்சத்திலே,

சந்தர்ப்பத்துக் கேற்றபடி மறுநாள் வரையிலுமாவது மறுசந்தைநாள் வரையிலுமாவது விற்பனையைத் தள்ளிவைத்திருந்து, அன்றைக்கு ஷை சொத்துக்கு என்னவிலை வந்தாலும் விற்பனையை முடித்துவிடவேண்டும்.

கிரயத் தொகையைச் செலுத்துவது.

102. பிரதிதொகுதியின் விலையையும் விற்பனைக்காலத்திலேயாகிலும்,அதற்குப்பிற்பாடு எவ்வளவு சீக்கிரமாகச் செலுத்தவேண்டுமென்று விற்பனைநடத்தும் உத்தியோகஸ்தர் சுட்டளையிடுகிறரோ அவ்வளவு சீக்கிரமாகவாகிலும், செலுத்திவிடவேண்டும்; அப்படிச் செலுத்தத் தவறும்பட்சத்திலே, சொத்தை மறுபடியும் ஏலத்தில்விட்டு விற்பனைசெய்து, அப்படிப்பட்ட மறுவிற்பனையில் நேரிடக்கூடிய விலக்குறைவு ஏதாகிலுமிருந்தால் அதைக்குறித்தும் அப்படிப் பட்ட மறுவிற்பனையி[illegible] [illegible] [illegible]செலவுகளைக் குறித்தும் விற்பனைநடத்தும் ஷை உத்தியோகஸ்தர் கலெக்டருக்கு ஸெர்டிபை செய்யவேண்டும் ; மேலும் ஜப்திதாரர்-பாக்கிதாரர் அல்லது பயிரிட்டவர் கேட்டுக்கொள்ளுவதன்மேல், அவருக்குக் கிடைக்கக்கூடிய வேறே யாதொரு பரிகாரத்துக்குப் பாதகமில்லாமலே ஷை விலைக்குறைவும் செலவுகளும் (சொத்தை ஏலத்திலெடுத்து) கிரயத்தொகை செலுத்தத்தவறிப்போனவரிடத்திலிருந்து, கலெக்டரிடத்தில் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியத்தின்மூலமாய் வசூல்செய்யத்தக்கவைகளாகும்.

(சொத்தை யேலத்திலெடுத்து) கிரயத்தொகை செலுத்தத் தவறிப்போனவரிடமிருந்து இந்தப்பிரிவின்படி வசூல்செய்யப்பட்ட யாதொரு தொகையானது விற்பனையினால் கிடைத்த தொகையாயிருந்தாலெப்படியோ அப்படியே, அதுவிஷயத்தில்-106-வது பிரிவின்படி பிரவர்த்திக்கவேண்டும்.

ஜப்தி செயவதில் கிரமப் பிசகிருந்தால் அதைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருப்பது.

103. விற்பனைநடத்தும் உத்தியோகஸ்தரானவர் ஜப்திதாரர் இந்த ஆக்டைச் சாக்கிட்டுக்கொண்டு செய்திருக்கக்கூடிய யாதொரு முக்கியமான கிரமப்பிசகைக் கலெக்டருக்குத் தெரிவிக்கவேண்டும்; அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கலெக்டருடைய உத்தரவு கிடைக்கிறவரையிலே அவர் விற்பனையைத் தள்ளிவைக்கலாம்.

104. (1) ஜப்திதாரர்-78-வது பிரிவிற்கண்டபடி எழுத்துமூலமான ஒரு டிமாண்டையத்துக்குச் சேர்ப்பிக்கவில்லையென்றுகிலும், 79-வது பிரிவில் சொல்லியிருக்கிற ஜாபிதா அல்லது விவரப்பத்திரிகையைச் சேர்ப்பிக்கத் தவறிவிட்டாரென்றுகிலும், 92-வது பிரிவின்படி உத்தரவுக்காக விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தரிடத்தில் விண்ணப்பஞ் செய்துகொள்ளத் தவறிவிட்டாரென்றுகிலும், ஜப்தியானது அதிகமென்றுகிலும், கலெக்டருக்குத் தெரியவந்தால், அவர்-விற்பனை நடத்தும்படி உத்தரவாவது செய்யலாம்.விற்பனையைப்பற்றி வேறொரு நோட்டீஸ் அல்லது பிரகடனத்தைப் பிறப்பிக்கும்படி கட்டளையாவதிடலாம் ; இந்தப்படி கட்டளையிடும் போது, அவர்-மறுவிற்பனைக்காகப்பிடிக்கும் செலவை ஜப்திதாரர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உத்தரவு செய்யவேண்டும்.

ஜப்தி செய்வதில் கிரமப்பிசகிருப்பதனால் உண்டாவது இன்னதென்பது.

(2) ஜப்தியானது தொந்தரவுண்டாக்குவதற்கென்றே செய்யப்பட்டதென்றுகிலும் காரணமில்லாமற் செய்யப்பட்டதென்றுகிலும் கலெக்டருக்குத்தோற்றினால், ஜப்திசெய்யப்பட்ட சொத்தை மீண்டும் கொடுத்துவிட வேண்டுமென்று அவர் உத்தரவு செய்யலாம்.

(இன்னும் வரும்.)

TINNEVELLY SEDITION CASE.

P. R. C. I. of 1908.

King Emperor *v.* Chidambarm Pillai

திருநல்வேலி இராஜ நிந்தனை கேஸ்.

மகாராஜா சக்கிரவர்த்தி *v.* சிதம்பரம் பிள்ளை.

(முன்தொடர்ச்சி.)

தூத்துக்குடி கால்ட்வெல், காலேஜில் பண்டிதாராயிருந்த பிராசிக்கியூஷன் தரப்பு 17வது சாக்ஷியினுல்,-"இந்தியாவில் 39 ஆயிரம் இங்லீஷியரும் 32 கோடி இந்தியருமிருக்கின்றனராகையால், நாம் மாத்திரம் அவர்களுடைய வர்த்தகத்தை விலக்குவோமாயின் அன்னிய நாட்டினர்களை விரட்டி விடுவோம். ஒவ்வொரு வருஷமும் கோடா கோடி ரூபாய்கள் அன்னிய தேசம் போய் விடுகிறதால் நாம் திருப்தியற்று வருந்தி வருகிறோம். அன்னிய நாட்டினர்களெல்லாம் ஒழிந்து போனுல்தான் நாம் முன்னேறுவோம். இந்தியா இந்தியர்களுடைய தேயாயினும் இங்கிலீஷார் ஆளும்வரை நாம்யாதும் நீதியே அடையோம்"-என குற்றவாளி பேசியதாக தெரிகிறது. பிராசிக்கியூஷன் தரப்பு 18-வது சாக்ஷியாகிய தூத்துக்குடிவாசியொருவரின் வாக்கு மூலத்தால்,—"ஒவ்வொரு வருஷமும் 3 கோடி ஜனங்கள் பஞ்சத்தால் சாகின்றனர். அவர்களெல்லோரும் சாக துணிவார்களானுல் 50 ஆயிரம் ஐரோப்பியர்களை ஜெயமடைந்து சுவராஜ்ஜியத்தை ஸ்தாபித்துவிடக்கூடும். சுவராஜ்ஜியம் என்னவென்னில் இந்துக்களுடைய கொடியென அர்த்தமாகும். அதாவது இந்தியர்களெல்லோரும் ஒன்று கூடி ஒரு கொடியை உயர்த்துவதேயாம். நாம் அன்னிய கவர்ன்மெண்டை மதிக்கவேகூடாது. சுவராஜ்ஜியத்தை தான் மதிக்கவேண்டும். நாமெல்லோரும் ஒன்றுகசேர்ந்து விடுவோமாயின் அன்னிய நாட்டினர் போய்விடுவார்கள். அப்போது சுவராஜ்ஜிய கொடியை ஏற்றிவிடலாம்,"-என குற்றவாளி பேசியதாகத் தெரிகிறது. மற்றொரு தூத்துக்குடி வாசியாகிய பிராசிகியூஷன் தரப்பு 19வது சாக்ஷியினுல்,—"ஒவ்வொரு வருஷமும் 3 கோடி ஜனங்கள் பஞ்சத்தால் சாகின்றனர். அந்த 3 கோடி ஜனமும் ஒரேமட்டாக சாகத்துணிவார்களாயின் நாம் சுவாராஜ்ஜியத்தை அடைந்துவிடுவோம். பூர்வநாட்களில் தமிழ் இராஜாங்கமேயிருந்தது"-என குற்றவாளி பேசியதாகத் தெரிகிறது. பிராசிகியூஷன் தரப்பு 20வது சாக்ஷியினுல்,—"இந்த நாட்டில் 30 கோடி இந்தியர்களிருக்கின்றனர் ; அன்னிய நாட்டினர்களோ 50 ஆயிரமேயிருக்கின்றனர். நாம் எல்லோரும் ஒன்றுக சேர்ந்துவிடுவோமாயின் அவர்களை வெளியே துரத்திவிடலாம்"-என பேசியதாக தெரிகிறது.

(13) இச் சாக்ஷியங்களினுல் குற்றவாளியானவர் தன்னுடைய பிரசங்கங்களை கேட்கிறயாவரும் ஒன்று சேர்ந்துகொள்ளவும், தற்போதிய கவர்ன்மெண்டை அதாவது அன்னிய நாட்டினர்களை அடியோடு விரட்டிவிடவும் 'இந்தியா இந்தியர்களுக்கு' என்னும் சுவராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கவும் எண்ணம் மனதில் உதிக்கும்படியான கருத்துகளை கொண்டிருக்கிறதாக வெளியாகிறது. அப்படியானுல், அந்த பிரசங்கங்கள் கவர்ன்மெண்டுக்கும் இங்கிலீஷ்காரருக்கும் விரோதமான எண்ணம் எழுப்பியதாக நமக்கு புலப்படுகிறது. இந்த சாக்ஷியங்களோ குற்றவாளி மீது 124 எ., செக்ஷன்பிரகாரமும் 153 எ., செக்ஷன்பிரகாரமும் குற்றம் ஏற்படுத்தபோதுமானதாக விருக்கிறதால், மற்றும் அதிகமாக ருஜுப்படுத்தத் தேவையில்லை.

(14) குற்றவாளியினுடைய பிரசங்கங்கள், அவைகளை கேட்டவர்களால் மிகுந்த சந்தோஷத்தோடும் கரகோஷத்தோடும் அங்கீகாரம் செய்யப்பட்டதற்கு சாக்ஷியங்களிருக்கின்றன. அப்பிரசங்கங்களை கேட்டிருந்தவர்களுள்ளும் பொது ஜனத்துள்ளும் ஏற்பட்ட பலனுனது அநேக சாக்ஷிகளாலும் உத்தியோகஸ்தர்களாலும், திருநெல்வேலி தூத்துக்குடியில் வசிக்கும் தக்க சுதேச கனவான்களாலும் சொல்லப்படுகிறது. அச்சாக்ஷியங்களை எல்லாம் இங்கு விவரிக்கவேண்டிய அவசியமில்லை. அவைகளெல்லாம் ஜனங்களுக்குள் கலாபனையையும் இராஜ அவிசுவாசத்தையும் உண்டாக்க கூடியவைகளாயும், ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் கவர்ன்மெண்டானது சொற்ப காலத்திற்குள் தேசத்தை விட்டு துரத்திவிடப்படுமாதலால் இன்னும் சில காலம் தான் அது இருக்கும் என்பதை மனதில் பதிய செய்வதாயும் இருப்பதாக எல்லா சாக்ஷிகளும் ஒத்துக்கொள்ளுகின்றன. அவைகள் வெகுசீக்கிரத்தில் ஜனங்களுக்குள்ள சிநேகத்தைக்கெடுத்து கவர்ன்மெண்டிற்கும் ஐரோப்பியர்களுக்கும் விரோதமான எண்ண முண்டாக்க கூடியதாகவிருக்கின்றன. அதின் காரணமாகவே, பிப்பரவரி 26-ந்தேதி செய்த பிரசங்கமானது தூத்துக்குடியின் பவழயந்திரசாலையின் வேலையாட்களுக்கு, கூலி குறைவாய் கொடுக்கப்படுகிறது என்ற காரணத்தாலல்லாமல், அச்சாலையானது ஐரோப்பியரின் கைத்தொழில் மார்க்கமாய் இருக்கும் காரணத்தாலும், அதற்கு பங்குமுண்டானுல் ஐரோப்பிய வர்த்தகத்திற்கு பங்கமுண்டானதென்ற நோக்கத்தாலும் ஷை பவழச்சாலை வேலைக்கட்டுப்பாடான ஒரு கலாபனையை உண்டாக்கியது. பிப்பரவரிமீ 26உ செய்த பிரசங்கத்தின்பிறகே அடுத்த நாள் வேலைக்கட்டுப்பாடு நிகழ்ந்தது.

பின்னும், பிராசிகியூஷன் தரப்பு 26-வது சாக்ஷிவாக்கு மூலப்படி ஷை பவழ ஆலையின் வேலையாள்கள் மறுபடியும் எப்பொழுதும்போல வேலைக்கு வந்து, முன் தாங்கள் பெற்றிருந்த கூலிக்கே வேலை செய்து வருகிறார்களாதலால் அவர்கள் தங்களுக்கு கிடைத்த கூலியைப்பற்றி அதிருப்தியடையவில்லை என்பது விளங்குகிறது. பிரஸ்தாப பிரசங்கங்கள் செய்யப்படுவதற்குமுன் நகரமானது நிம்மதியாயும், சிநேகபான்மையாயும் இருந்ததென்றும் பிறகு ஜனங்கள் சிறிது சிறிதாக விரோத பான்மை கொண்டார்களென்றும்-பிராசிகியூஷன் தரப்பு 4-வது 5-வது 7-வது 3-வது 15-வது சாக்ஷிகளும், தூஷணைகளும்-சொற்ப தொந்திரவுகளும், பயங்கரமாய் தாக்கும்படி அதிகரிக்கிற வரையில் பிரசங்கங்கள் நடந்துகொண்டிருந்தனவென்று பிராசிகியூஷன் தரப்பு 8-வது 9-வது சாக்ஷியும், ஐரோப்பியர்களுக்கு அதாவது வெள்ளைக்காரர்களுக்குகொடுக்கப்படும் உணவு பொருள்களை நிறுத்திவிடும்படி பின்னும் ஏற்பாடு செய்யப்பட்டதென்று-பிராசிகியூஷன் தரப்பு 4—வது-5-வது 1-வது சாக்ஷியும், முடிவாக ஐரோப்பியர்கள் உண்மையாகவே திகிலடைந்தார்களென்று தூத்துக்குடியில் வசிக்கும் அநேக ஐரோப்பியர்களும் தெரிவித்திருக்கிறார்கள். பிராசிகியூஷன் தரப்பு 15-வது சாக்ஷியாகிய உப்பு இலாக்கா அஸிஸ்டண்ட் கமிஷனர் ரீனியஸ் அவர்களின், வாரத்திற்கு வாரம் நடந்த சமாசாரங்கள் அடங்கிய (The Weekly Diaries) புத்தகங்களாகிய, யச், யச்சில்-1, யச்சில்-2, யச்சில்-3, என்பதாக குறிப்பிடப்பட்ட யக்ஸிபிட்டுகளானவை-பிரசங்கங்கள் எப்படி நடந்தனவோ, அப்படியே விரோதபான்மையும் நாளடைவில் அதிகரித்துக் கொண்டுவந்ததை ஷையார் கவனித்தானெ, காட்டுகின்றன. இராஜவிசுவாசிகளான சுதேசிகளும் ஐரோப்பியர்களைப் போலவே நடத்தப்படலானுர்களென்று பிராசிகியூஷன் தரப்பு 10-வது, 22-வது, 23-வது சாக்ஷிகள் கூறுகின்றன. தூத்துக்குடியில் பிரசங்கங்கள் நடப்பதற்குமுந்தி நகரமானது ஒழுங்காயும், அதிகாரிகளுக்கு கீழ்ப்படிந்தும், நிம்மதியாயிருந்ததென்றும், பின்குற்றவாளியின் பிரசங்கங்களானவை கவர்ன்மெண்டார் விஷயத்தில் வெறுப்பையும், உதாசினத்தையும், வெள்ளைக்காரர்கள்-இராஜவிசுவாசிகளாகிய இவர்களிடத்தில் விரோதத்தையும், ஜனங்களுக்குண்டாக்கி மார்ச்சுமீ 15உ நடந்தபயங்கரமான கலகம் உண்டாகிற வரையில் பிரசங்கங்கள் எவ்விதம் பலத்து வந்தனவோ, அவ்விதம் அவைகளை பலப்படுத்திக்கொண்டு வந்தன வென்பது தூத்துக்குடி பிரசங்கங்களின் சாராம்சத்தைப் பற்றிச் சொல்லும், எல்லா சாக்ஷிகளினுடைய அபிப்பிராயமாகும்.

(15) மார்ச்சு மீ 9உ 11உ குற்றவாளி திருநல்வேலியில் செய்த பிரசங்கங்களின் பலனுய், அக்காலங்களில் சுதேசி கூட்டங்களால், தாங்கள் தூஷிக்கப்படவும், தொந்தரவு செய்யப்படவு மாயினர்களென்றும், ஷை மீ 13உ பிரசங்கத்தின் பலனுய் ஜட்கா வண்டிக்காரர்கள் தங்கள் பேரில் கற்களை விட்டெறியும்படி கூட்டத்தார்கள் ஏற்பாடு செய்யப்பட்டார்களென்றும் திருநல்வேலி வாசிகளாகிய இரண்டு ஐரோப்பியர்கள் ருஜுப்படுத்தி யிருக்கிறார்கள். ஷை 13-ம் தேதியே திருநல்வேலியில் ஒரு பயங்கரமான கலகம் உண்டானது. இக்கலகக் கூட்டங்களின் கோபாவேச முழுமையும் முனிசிபல் கட்டடங்கள்-கவர்ன்மெண்ட் கட்டடங்கள், பப்ளிக் கட்டடங்கள் ஆகிய இவற்றின் பேரில் திரும்பி அவைகளை கொளுத்தி நுவம்ஸம் செய்த-தானது கவர்ன்மெண்டார் விஷயத்தில் ஏற்பட்ட அவிசுவாசமும் வெறுப்புமே, ஷை பிரசங்கத்தின் நேர்பலன்களென்பவை பிரத்தியக்ஷமாக்குகிறது.

(16) (இருபதும் அதற்கு அதிகமாயும் பிரசங்கங்கள் புரியப்பட்டிருக்க) ஒவ்வொரு பிரசங்கத்தின் பெயரும் அவ்வவற்றின் தேதிகளும் சொல்ல முடியுமா? அல்லது முக்கிய பேர்வழிகளல்லாமல் கூட்டத்தில் பலரும் கெடுதி விளைவிக்கும்படி தூண்டியிருக்க) அப்படி தூண்டிய முக்கிய நபர்களை சொல்ல முடியுமா? என்று எவரும் தெளிவாய் சொல்லுவார்களென்று ஒருவரும் எதிர்பார்க்கக் கூடாத இவ்விஷயங்களைப்பற்றி, விசேஷமாய் கவர்ன்மெண்ட் உத்தியோகத்தில்லாத பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகளும், பிரசங்க குறிப்புகளை எழுதி தெரிவிக்கும்படி தங்களுக்கு முக்கியமாய் உத்திரவு கொடுக்கப்பட்டிருந்ததா என்று போலீஸ் உத்தியோகஸ்தர்களாகிய சாக்ஷிகளும், திருநல்வேலி 8உ பிரசங்கத்தில் தாங்கள் ஆஜராயிருந்தார்களா, என்று, பிராசியூஷன் தரப்பு 1வது, 2வது, 8வது, போலீஸ் சாக்ஷிகளும், பிராசிக்கியூஷன் தரப்புவாக்குமூலங்களை பேதப்படுத்தி காட்டுவதற்காக டிபன்ஸ்தரப்பாரால் கிராஸ் செய்யப்பட்டார்கள். கிராஸ் விசாரணையினுல், டிபன்ஸ் தரப்புக்கு முக்கியமான யாதொரு உண்மைகளும் வெளிப்படுத்தப்படவில்லை என்றும், மிகவும் பிரதானமான பிராசுகியூஷன் கேசை அசைக்கக்கூடாமல் போய்விட்ட தென்றும் யாம் அப்பிராயப் படுகிறோம். குற்றவாளியின் சொந்த வாக்கு மூலத்தை கொடுக்கும்படி கேட்டதற்கு, இந்த கோர்ட்டில் கொடுக்க தனக்கு பிரியமில்லை என்பதாய் குற்றவாளி தெரிவித்திருக்கிறார்.

(17) பிரதானமான பிராசிக்கியூஷன் கேசானது யாதும் அசைக்கப்படவில்லை என்பதற்கு, மேற்கண்ட 8, 9 10, 11 பாராக்களில் யாம் சொல்லியிருக்கும் ஆதாரங்களை மறுபடியும் இங்கு சொல்லவேண்டிய தில்லை. குற்றவாளியானவர் தான் செய்தபிரசங்கங்களில் இ-பி-கோ. 124 எ. 153 எ. செக்ஷன்களின்படிக்கான குற்றங்களை அடிக்கடி செய்திருக்கிறுரென்பது வெளிப்படையாயிருக்கிறது. இ-பி கோ-124 எ. செக்ஷன்படிக்கானகுற்றங்களை செஷன் கோர்ட்டார் அல்லாமல் மற்ற கோர்ட்டார் விசாரணை செய்யக்கூடாதென்றுலும் இ-பி-கோ. 153. எ, செக்ஷன்படிக்கான குற்றங்களை பஸ்ட் கிளாஸ் அதாவது முதல்வகுப்பு மாஜிஸ்டிரேட் விசாரணை செய்யலாம். இருந்த போதிலும் (இவ்விரண்டு செக்ஷன்கள்படிக்கான குற்றங்களடங்கிய, இக்கேசானது செஷன் கோர்ட்டிலேயே விசாரிக்கப்படவேண்டுமென யாம் அபிப்பிராயப்படுகிறோம்.மார்ச்சுமீ 9உ பிரசங்கத்தில் குற்றவாளிபேசிய இரண்டு முக்கியமான விஷயங்களை மிக்க கவனித்தல் அவசியம். இவ்விரண்டு பிரசங்கங்களிலும் குற்றவாளி இ. பி. கோ. 124 எ., 153 எ., படிக்கான குற்றங்களை செய்திருக்கிறுர். யாம் மேற்கண்ட 6-வது 7-வது பாராக்களில் கண்டிருக்கும், ஜன உணர்ச்சியை தூண்டக்கூடியவையென முக்கியமாய் கருதப்பட்ட விஷயங்கள் குற்ற விஷயமாய் கலவரப்படுத்துவதால் ஒவ்வொரு பிரசங்க விஷயத்தின் நோக்கத்தையும் பலனையும் மொத்தத்தில் கவனிக்கவேண்டியதென்று யாம் நினைக்கிறோமாதலால், அக்கருத்தானது [illegible] அத்தனியானவாக்கியத்தை யாம் சார்ஜில் எழுத வில்லை.

குறிப்பு:—இந்தியன் பினல் கோட் 124 எ., 153 எ., செக்ஷன்களின் விபரம் மற்றொரு பக்கத்தில் பிரசுரித்திருப்பதை பார்க்கவும்.. பt—ர்.

(18) ஆதலால், இ. பி. கோ. 124 எ., 153 எ., செக்ஷன்களின்படியான குற்றங்களை ஏற்படுத்தி, அடுத்த திருநல்வேலி செஷனுக்கு குற்றவாளியை கமிட்டு செய்கிறோம்.

(கையொப்பம்) இ. யச். வாலஸ்,

8-5-08. அட்டிஷனல் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்.

[குறிப்பு:—இக்கேசு விஷயமான செஷன்ஸ் விசாரணையை நமது கெஜட்டில் பதிப்பிப்பதென்றால் குறைந்தது 5 பாரம் அதாவது 20-பக்கம் கொள்ளுமென்று ஊகிக்கிறோம். ஆதலால், ஷை செஷன்ஸ் விசாரணையை தெரிந்துகொள்ள நமது பெரும்பான்மையான கையொப்ப நேயர்கள் பிரியப்படில், அங்ஙனமே பிரசுரிப்போமாக. (ப. ர்.)

CASES FROM THE INDIAN LAW REPORTS

இந்தியன் லா ரிபோர்ட்டு களிலுள்ள கேசுகள்

ஜட்ஜ்கள். { சீப் ஜட்ஜ் ஸர் ஆர்னல்ட் ஒயிட். மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

1907 ஆகஸ்டு 7, 8 13

சாம்பசிவ முதலியார் (எதிர்மனுதார்.) —அப்பீல் வாதி.

v

பஞ்சநாதப்பிள்ளை (மனுதார்.) —அப்பீல் பிரதிவாதி.

ரிவினியூ ரிகவ. ஆக்ட், 40-வது செக்ஷன்படி கும்பகோணம் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டுக்கு (1905ஆ நெ. 2780) அசல் வியாஜ்யம் செய்துகொள்ளப்பட்ட மனு.

Sec. 40.
Revenue Recovery Act.
Where, not with-standing such publication, any lawful purchaser of land may be registered and prevented from obtaining possession of his purchased land, any court of competent jurisdiction, on application and production of certificate of sale provided for by sec. 38, shall cause, the proper process to be issued for the purpose of putting such purchaser in possession, in the same manner as if the purchased lands had been decreed to the purchaser by a decision of the court.

1902ஆ ஜூன்மீ 13உ ரிவினியூ ஏலத்தில் மனுதார் சில நிலங்களை வாங்கினார். அப்படி வாங்கின நிலங்களை தன் வசப்படுத்தும்படி 1903ஆ ஜூன்மீ 15உ முனிசிப் கோர்ட்டுக்கு மனுசெய்துக்கொண்டார். படி கட்டாததினால் மனு 1903ஆ ஜூன்மீ 19உ தள்ளிவிடப்பட்டது. பிரஸ்தாப மனுவானது 1905ஆ நவம்பர்மீ 24உ செய்துகொள்ளப்பட்டது. இந்தமனுவுக்கு காலாவதி தோஷம் உண்டாயிருக்கிறது என்று ஆக்ஷேபிக்கப்பட்டது. லிமிடேஷன் ஆக்ட், இரண்டாவது ஷெடியூல், 179 ஆர்டிகல்படி முதலில் மனுசெய்துகொண்ட காலம் துவக்கி, மூன்று வருஷத்திற்குள்ளாகவே பிரஸ்தாப மனு கொண்டுவரப்பட்டிருப்பதனால் காலாவதி தோஷம் உண்டாகவில்லை என முனிசீப். தீர்ப்பு சொன்னார். இந்த தீர்ப்புக்கு மாற்றமாய் தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் ஜட்ஜுக்கு செய்துகொண்ட (1906 ஆ அப்பீல் வியாஜ்ஜியம் நெம்பர் 332) அப்பீலில் முனிசீப் தீர்மானமே காயப்படுத்தப்பட்டது. அப்படி காயப்படுத்தின ஜட்ஜ்மெண்டில் கண்ட முக்கியமான விஷயம் பின்வருமாறு:—"ரிவினியு ரிகவரி ஆக்ட் 40-வது செக்ஷன்படி மனு செய்துகொள்ளப்பட்டு, வற்றுக் கொள்ளப்பட்டது. டிபன்ஸ் தரப்பார் மனுவுக்கு காலாவதி தோஷம் உண்டாயிருக்கிறதென்று ஸ்தாபிக்கிறார்கள். கீழ் கோர்ட்டார், லிமிடேஷன் ஆக்ட் 2-வது ஷெடியூல் 179-வது ஆர்ட்டிகலை தெளிவாய் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். லிமிடேஷன் ஆக்ட் இரண்டாவது ஷெடியூலிலாவது சிவில் புரொஸீஜர்கோட் 230-வது செக்ஷனிலாவது காலவரம்பு நிரணயிக்கப்பட்டிருக்கும் மனுக்களைப்போலல்லாத இந்த மனுவுக்கு 178-வது ஆர்டிகலை பொருத்தியிருக்கவேண்டுமென்று வாதிக்கப்படுகிறது. ஆதலால் வாதி தரப்பில் வாதிக்கிறபடி இந்த மனுவானது 178-வது ஆர்டிகலில் அடங்குகிறதா என்பது தான் கேள்வி.

Art. 179 of Schedule II, Limitation.
For the execution of a decree or order of any Civil Court provided for by No. 180 or by the Code of Civil Procedure, section 230.
Period of limitation:— There years; or where a certified copy of the decree or order has been registered, six years
Time from which period begins to run:—
1. The date of the decree or order or
2. (Where there has been an appeal) the date of the final decree or order of the appellate Court, or
3. (Where there has been a review of Judgment) the date of the decision passed on the review, or
4 (Where the application next here in after mentioned has been made) the date of applying in accordance with law to the proper court for execution or to take some step in aid of execution of the decree or order, or
5. (Where the notice next here in after mentioned has been issued) the date of issuing a notice under the Code of Civil Procedure, sec. 248, or
6. (Where the application is to enforce any payment which the decree or order directs to be made at a certain date) such date.

Art 173 of Sch. II, Limitation.
Application for which no period of limitation is provided elsewhere in this schedule, or by the Code of Civil Procedure, sec. 230
Period of Limitation:— Three years.
*Time from which period begin to ru:—*The date ofthe decree nappealed against.

ரெவினியூ ரிகவரி ஆக்ட் 40-வது செக்ஷனில் ரிவினியூ ஏலத்தில் நிலத்தைவாங்கின ஒருவன் அதை தன் வசப்படுத்தும்படி சிவில் கோர்ட்டாருக்கு செய்துக்கொள்ளும் மனு விஷயத்தில், ஷை நிலங்களை தாங்கள் மனுதாருக்கு டிக்கிரி கொடுத்ததுபோல அந்த கோர்ட்டார் பாவித்து அதே நடவடிக்கைகளை நடத்த வேண்டுமென்று கூறுகிறது. இதுவிஷயத்தையே, மதராஸ் லா ஜர்னல் 14-வது புஸ்தகம் 433-வது பக்கம், ஞானசம்பந்த பண்டார சன்னதி v தாவித் நாடார் கேசில்—ஏலத்தில் எடுத்தவன் டிக்கிரி பெற்றவனுக்கு சமத்துவமாக வைக்கப்படுகிறான் என்றும் அதாவது டிக்கிரி பெற்றவன் நிறைவேற்றும் காரியங்களை நடத்தும்போது அவனுக்கு எவ்வளவு பரிகாரங்கள் கிடைக்குமோ அவ்வளவு பரிகாரங்களும் பெற ஏலத்தில் எடுத்தவன் பாத்தியப்பட்டிருக்கிறான் என்பதாக சுருங்கச்சொல்லி விளங்கவைத்திருக்கிறது. எப்பொழுது ஏலத்தில் எடுத்தவனுக்கும் டிக்கிரி பெற்றவனுக்கும் சமத்துவமான பரிகாரம் கிடைக்கிறதோ, அப்பொழுது காலநிரயணமும் சமத்துவமே. பின்னும், ரிவினியூ ரிகவரி ஆக்ட்டில் அப்பீல் செய்துக்கொள்ள யாதொரு ஆதாரமும் இல்லாதிருந்தாலும், சி. பு. கோ. 244 வது செக்ஷன் பிரயோகிக்கப்படுவதால், நிறைவேற்று காரியங்களில் ஏற்பட்ட சிவில் கோர்ட் உத்திரவுக்கு மாற்றமாய், டிக்கிரி பெற்றவன் எவ்விதம் அப்பீல் செய்துக்கொள்வானோ அவ்விதமே ஏலத்தில் எடுத்த மனுதாரும் செய்துக் கொள்ளலாமென மதராஸ் லா ஜர்னலில் கண்ட ஷை தீர்ப்பு கூறுகிறது. சி-பு- கோ., 230-244 வது செக்ஷன்கள், பிர

14 M. L. J., 433.
"Placing the purchaser in the position of a decree-holder, and, that is, entitled to such remedies, as are open to a decree-holder in execution Proceedings."

யோசிக்கப்பட்டிருப்பதால், 179வது ஆர்டிகல் இந்த கேசுக்கு பொருத்தமானதென அபிப்பிராயப்பட்டு, அதன்படி மனுவுக்கு காலாவதி தோஷம் உண்டாகவில்லையென தீர்ப்பு சொன்னது சரியென தீர்மானிக்கிறேன்."

எதிர்மனுதார் ஹைகோர்ட்டுக்கு (1906ஆ 85வது நெம்பர் சிவில் மிஸிலேனியஸ் இரண்டாவது) அப்பீல் செய்து கொண்டார். அப்பீல் வாதிதரப்பில் மிஸ்டர்-யன்- இராஜகோபாலச் சாரியாரும், அப்பீல் பிரதிவாதி தரப்பில் மிஸ்டர் கே. இராமச்சந்திர அய்யரும் ஆஜரானார்கள்.

ஜட்ஜ் மெண்ட்

1864ஆ இரண்டாவது ஆக்ட்டாகிய (Act II of 1864) ரிவினியூ ரிகவரி ஆக்ட், 36 வது செக்ஷன்படி, ஸ்தாவர சொத்து ஒன்று (ஏல) விக்கிரயம் செய்யப்பட்டு, அப்படிவிக்கிரயம் செய்யப்பட்ட ஸ்தாவர சொத்தை சுவாதீனம் செய்யும்படி, ஷை ஆக்ட் 40வது செக்ஷன்படி, ஏலம் எடுத்தவரால் மனு கொடுக்கப்பட்டிருந்தால் அதற்கு லிமிடேஷன் ஆக்ட் இரண்டாவது ஷெடியூல் 179வது ஆர்டிகலில் கண்டகாலவரம்பு பொருந்துமா? அப்படி 179வது ஆர்டிகல் பொருந்தாத பக்ஷத்தில் 178வது ஆர்டிகல் பொருந்துமா? அல்லது இதற்கு கால நிரணயமே கிடையாதா? என்னும் இக்கேள்விகளை இந்த அப்பீலில் நிச்சயிக்கவேண்டியிருக்கிறது.

179 வது ஆர்டிகலை பிரயோகிக்கலாமென்று டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் அபிப்பிராயப்பட்டிருக்கிறார். நாங்கள் அந்த அபிப்பிராயத்தை ஏற்கவில்லை. ஷை ரிவினியு ரிகவரி ஆக்ட் 38 வது செக்ஷன்படி கொடுக்கப்பட்ட ஏல சர்டிபிக்கட்டை தாக்கல் செய்யும் பக்ஷத்தில், அப்படி தாக்கல் செய்த மனுதாருக்கு அவர் ஏலத்தில் எடுத்த நிலங்களை கோர்ட்டார் டிக்கிரி கொடுத்திருந்தால், நிறைவேற்றுகாரியங்களை எவ்விதம் நடத்துவார்களோ அவ்விதமே ஏலமனுதாருக்கு ஷை ஏலத்தில் எடுத்த நிலங்களை சுவாதீனப்படுத்த, நிறைவேற்று காரியங்களை நடத்தும்படி ஷை. ஆக்ட் 40வது செக்ஷனானது கோர்ட்டாருக்கு அதிகாரம் கொடுக்கிறது. ஷை 40 வது செக்ஷனை கவனித்து வாசித்தால், ரிவினியூ அதிகாரிகள் கொடுத்த ஏலசர்டிபிகட்டுக்கு பலனுண்டாக்கும் பொருட்டு கோர்ட்டார் தங்கள் அதிகாரத்தை செலுத்தி ஏலமனுதாருக்கு நிலத்தை சுவாதீனப்படுத்துவதற்காக, ஏலமனுதாரை டிக்கிரி பெற்றவருக்கு சமத்துவமாக்குகிறதே யல்லாமல் மற்றபடி சிவில் கோர்ட்டாருடைய ஆர்டர்களுக்கும் டிக்கிரிகளுக்கும் அனுசரிக்கப்படும் கால நிர்ணயசட்டத்தை, ரிவினியூ ரிகவரி ஆக்ட் 40-வது செக்ஷனைச் சேர்ந்த நடவடிக்கைகளுக்கு அனுசரிக்க இடந்தரவில்லை. பின்னும் 179-வது ஆர்ட்டிகலானது சிவில் கோர்ட்டு டிக்கிரிகளுக்கும் ஆர்டர்களுக்கும் பொருத்தமானது. அப்படியிருக்க, 40-வது செக்ஷன் காரியங்களுக்காக ரிவினியு அதிகாரிகளால் கொடுக்கப்பட்ட ஏல சர்டிபிகட்டையே சிவில் கோர்ட் டிக்கிரியாகவாவது உத்திரவாகவாவது பாவிக்கப்பட்டபோதிலும், ஷை செக்ஷனில் கண்ட காரியங்களுக்கு அந்த ஏல சர்டிபிக்கட்டானது சிவில் கோர்ட்டாரின் டிக்கிரியாகவாவது அல்லது ஆர்டராகவாவது பாவிக்கக்கூடுமென்று நாங்கள் நினைக்கவில்லை. அப்பீல் வாதி தரப்பில் ஆதாரமாய் காட்டப்பட்ட (A. A. A. O. No. 27 of 1899) சேம்பர் ராமன் மீனன் v. பட்டின் ஹட்டீரி தாமோதரன் நம்புரி கேசிலும், 14 மதராஸ் லா ஜர்னல் 433-ல் சொல்லப்பட்டிருக்கும் ஞானசம்பந்த பண்டார சன்னதி v. தாவித்நாடார் கேசிலும், சிவில் கோர்ட் டிக்கிரி பெற்றவருக்கும் - ரிவினியு ஏல மனுதாருக்கும், நிறைவேற்று காரியங்களிலும் - அப்பீல் செய்துக்கொள்வதிலும் சம பாத்தியதை யுடையவர்களென்றும், இக்கேசுகளில் மனுகொண்டுவந்த பிறகு கோர்ட்டாருக்குள்ள அதிகாரங்கள் இன்னவையென்றும் இந்த (சென்னை ஹை) கோர்ட்டார் தீர்ப்புசொல்லியிருக்கிறார்களே யன்றி மற்றபடி ஏல மனுவுக்குரிய கால நிர்ணயத்தைப்பற்றி யாதொன்றும் சொல்லவில்லை. இ. லா. ரி. 17. கல். 491 - டின்கவுரிடான் v. டிபேந்திரநாத் மூகர்ஜி, இ. லா. ரி. 24. கல். 473 ஜோகிமேயாடாஸி v. தாக்காமணிடாஸி, ஆகிய இவ்விரண்டு கல்கத்தா கேசு தீர்மானங்களில், ஒரு கோர்ட்டார் தாங்கள்பிறப்பித்த டிக்கிரியை, நிறைவேற்றும் பொருட்டு மற்றொரு கோர்ட்டுக்கு அனுப்பினால், அந்த டிக்கிரியின் காலவரம்பை நிர்ணயிக்கவேண்டியது, டிக்கிரி பிறப்பித்த கோர்ட்டாரை பொருத்ததேயல்லாமல் மற்றபடி நிறைவேற்றும் கோர்ட்டாரை பொருத்ததல்லவென்று சொல்லப்பட்டிருப்பது, இந்த கேசிற்கு நெருங்கிய சம்பந்தத்தை கொடுக்கிறது. பிந்தி கூறப்பட்ட இ. லா. ரி, 27 கல். 473 (491-வது பக்கம்,) கேசில் "நிறைவேற்றும்படியாக இந்த கோர்ட்டிற்கு அனுப்பப்பட்ட டிக்கிரியை, இந்த கோர்ட்டார் அசல் தரப்பில் செய்த டிக்கிரியாகவேபாவித்து அதே மாதிரி நிறைவேற்று காரியங்களை நடத்தவேண்டும்" என்று சி-பு-கோ-227-வது செக்ஷன் ஏவுகிறதென்றும், ஷை செக்ஷனில் 'மாதிரி' என்னும் சொல் நிறைவேற்று காரியங்களுக்கு பொருந்துமே தவிர மற்றபடி காலவரம்புக்கு பொருந்தாதென்றும், ஆனால் அப்படி சொல்லப்பட்டிருப்பது, டிக்கிரியை நிறைவேற்றுதலுக்கு ஹைகோர்ட் இயந்திரங்களை உபயோகிப்பதற்காகவேயென்றும் ஜஸ்டஸ் டிரிவிலியன் சுட்டி காட்டுகிறார்.

Section 36, Limitation Act
In the sale of immoveable property under this Act, the following rules shall be observed:—
*First:—*The sale shall be by public auction to the highest bidder. The time and place of sale shall be fixed by the collector of the District in which the property is situated, or other officer empowered by the collector in that behalf. The time may be either pre vious to or after the expiration of the fusly year.

Section 33. Limitation Act.
(5) After the confirmation of any such sale the collector shall register the lands sold in the name of the person declared to be the purchaser and shall execute and grant a certificate of sale bearing his seal and signature to such purchaser.
Such certificate shall state the property sold and name of the purchaser and it shall be conclussive evidence of the act of the purchase in all courts and tribunals, where it be may be necessary to prove the same; and no proof of the collec'or's seal or signature shall be necessary, unless the authority before whom it is produced and shall have reason to doubt is genuineness.

I.L.R., 27 Cal. 473 at p. 491.
"Section 277 of the Civil Procedure Code directs this court to execute the decree sent to it, "in the same manner as if it had been made by this court in the exercise of it ordinary original civil jurisdiction."
The 'manner' of execution refers to the procedure under which the execution is to be had and has no reference to the limitation. It simply applies the High Court machinery to the execution of the decree."

இ. லா. ரி. 29 சென் 529 குசைப்பிள்ளை v. அய்யாகண்ணு பிள்ளை கேசில், லிமிடேஷன் ஆக்ட் 175, வது ஆர்டிக்கலில்கண்டிருக்கும் சி-பு-கோ 582 வது செக்ஷனில் ஷை கோட் 587 வது செக்ஷன்படிக்கான இரண்டாவது அப்பீல் அடங்காவென்று தாத்பரியப்பட இடமிராது என்று ஏற்பட்ட (சீப்ஜட்ஜ் ஸர் ஆர்னல்ட் வைட், மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன் கூடிய) புல் பெஞ்ச தீர்ப்பானது இந்த கேசுக்கு பொருத்தமாயிருப்பதாக தோற்றுகிறது. 178வது-ஆர்டிக்களில் "மனு" என்று சொல்லப்பட்டிருப்பது சி-பு-கோட்படி செய்யப்படும் மனுவுக்குத்தான் என்றும் ஆதலால் 179வது ஆர்டிகல் இதற்கு பொருந்தாதென்றும் சொல்லுப்படுவதால், 178வது ஆர்டிக்கலும் இதற்கு பொருந்தாதென்றும், ஆதலால் இதற்கு கால நிரணயமேகிடையாதென்றும், அப்பீல் பிரதிவாதி தரப்பில் வாதிக்கப் படுகிறது.

I. L. R., 29 Mad., 529
(Full Bench Decision.)

The reference to section 582 of the Code of Civil Procedure in article 175 (c) of schedule II of the Limitation Act does not include by implication second appeals referred to in section 587 of the Code of Civil Procedure.

The period of limitation for bringing in the representative of a deceased respondent in a second appeal is not that prescribed by article 175 (c) of schedule II of the Limitation Act, but that prescribed by article 178.

Act. 176 of Schedule II, Limitation Act.

Under section 368 of the Code of Civil Procedure to have the legal representative of a deceased defendant, made a defendant or under that section and section 582 of the same Code to have the legal representative of a deceased plaintiff-respondent or defendant-respondent made a plaintiff's---respondent or defendant-respondent.

Period of Limitation :—Six Months.

Time from which period begins to run :—The date of the death of the deceased defendant or of the deceased plaintiff-respondent or defendant-respondent

இதற்காதாரமாக, இ-லா-ரி, 8 சென் 207 - ஜானகி v. கேசவலு, இ-லா-ரி. 17 சென் 379—ஞனமுத்து உபதேசி v. வானகோயில் பிள்ளை நாடான் ஆகிய இவ்விரண்டு கேசுகளின் தீர்மானங்களை காட்டுகிறார்கள். இதற்குபதில்—ரிவினியூ ரிகவரி ஆக்ட் 40வது செக்ஷன்படி செய்யப்பட்ட மனுவானது சி-பு-கோடின் சட்டங்களை பிரயோகிக்கும்படி கோறுகின்ற மனுவாதலால், இது 178வது ஆர்டிக்கலில்அடங்குகிற தென்பதாக சுருக்கி சொல்லுகிறோம். பின்னும் ஷை இரண்டு கேசுகளிலும், மனுவானது சி-பு-கோடின் நிபந்தனைகளுக்கு சம்பந்தப்பட்டதல்ல.

இந்த கேசுக்கு 178-வது ஆர்டிகல் பொருத்தமான தென்று அபிப்பிராயப்படுகிறோம்.

இந்த அபிப்பிராயப்படி மனுவுக்கு காலாவதி தோஷம் உண்டாயிருக்கிறது. ஆதலால் அப்பீலை ஏற்றுக்கொண்டு மனுவை தள்ளிவிடுகிறோம்.—இ-லா-ரி. 31 சென். 24

1905ஹு ஜூலை மாதத்தில் மைசூர் ஜெயிலிலிருந்து பாராக்காரனை கொலை செய்துவிட்டு தப்பித்தோடி விட்ட இரண்டு குற்றவாளிகளில், ஒருவன் மாத்திரம் சமீப காலத்தில் ஒரு கிராமத்தில் கண்டு பிடிக்கப்பட்டு அரெஸ்ட் செய்யப்பட்டும், மறுபடியும் தப்பித்துக் கொண்டோடி விட்டானதலால் குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்குரிய புலஞ் சொல்லுவோர்களுக்கு 200 ரூபாய் இனும் கொடுப்பதாய் மைசூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தெரிவித்திருக்கிறார்.

ஜட்ஜ்கள். { மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன். / மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலஸ்.

1907 செப்டம்பர் 13 / 25

ஜீவரத்தின முதலியார், (2-வது பிரதிவாதி.)-அப்பீல் வாதி.

v.

ஸ்ரீனிவாச முதலியார், (மேடோவர்பெற்ற வாதி.)-அப்பீல் பிரதிவாதி.

வியாஜ்ஜிய சங்கதிகள் ஜட்ஜ்மெண்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்பீல் வாதி தரப்பில் மிஸ்டர் சி. பலராமராவும், அப்பீல் பிரதிவாதி தரப்பில் மிஸ்டர் பி. தொரைசாமி ஐயங்காரும் ஆஜரானார்கள்.

ஜட்ஜ்மெண்ட்:—வாதி, தான் சென்னை ஸ்மால்காஸ் கோர்ட்டில் 1905-ம் ஹு 6613 நெ. வியாஜ்ஜியத்தில் பெற்ற பண டிக்ரியை அப்பீல் பிரதிவாதிக்கு மேடோவர் கொடுத்துவிட்டார். மேடோவர் பெற்றவர். சி. பு. கோ. 232 வது செக்ஷன்படி டிக்கிரையை நிறைவேற்ற கோர்ட்டார் உத்தரவும் பெற்றுகொண்டார். மேடோவர் தாரர் டிக்ரியை சிட்டி சிவில் கோர்ட்டுக்கு மாற்றிக்கொண்டு மேடோர்வர் செய்தவரிடத்தில் அடமானமிருக்கும் கடனாளி சொத்தை ஜப்திசெய்து ஏலத்துக்குகொண்டுவர (1906ஹு 368வது நெ. எக்ஸிகியூஷன்)மனுகொடுத்தார்.டிக்ரிகடனாளியோ டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்ட் 99-வது செக்ஷன்படி அடமான சொத்தை ஏலத்திற்கு கொண்டுவர இவருக்கு பாத்தியதை கிடையாது என்பதாக ஆக்ஷேபித்தார். சிட்டி சிவில் கோர்ட்டார்,—

Sec. 232 C. P. C.

If a decree be transfered by assignment inwriting or by operation of law from the decree-holder to any other person, the transferee may apply for its execution to the court which passed it; and, it that court thinks fit, the decree may be executed in the same manner and subject to the same condition as if the application were made by such decree-holder.

Sec: 99
Transfer of Property Act.

Where a mortgage in execution of a decree for the satisfaction of any claim, whether arising under mortgage or not attaches the mortgage property, he shall not be entitled to bring such property to sale, other than by instituting a suit under section sixty seven.

இ-லா- 27 அல 450, பானுஹபரில் v. மன்னிலால், கேசின் தீர்மானத்தை ஆதாரமாகக்கொண்டு ஷை ஆக்ஷேபனையை புறக்கணித்து மேடோவர்தார் செய்துக்கொண்ட மனுப்படி ஜப்திசெய்யவும், ஏலத்திற்கு கொண்டுவரவும் உத்தரவு செய்தார்கள். இந்த உத்திரவுக்கு மாற்றமாக, டிக்ரி கடனாளி (1907ஹு நெ. 41 சிவில் மிஸ்லேனியஸ்) அப்பீல் செய்திருக்கிறார். டிரான்ஸ்பர் ஆப்பிராபர்டி ஆக்ட் 99-வது செக்ஷனது, "அடமானத்தை அனுசரித்தாவது அனுசரிக்காமலாவது பிறந்த டிக்கிரியை நிறைவேற்ற, அடமானதாரன் ஒருவன் அடமான சொத்தை ஜப்தி செய்தால் டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்ட் 67-வது செக்ஷன்படி வியாஜ்ஜியம் கொண்டுவராமல் அத்தகைய சொத்தை ஏலத்திற்கு கொண்டுவரக்கூடாதென்று கூறுகிறது. இந்த செக்ஷனால் ஏற்படுத்தப்பட்ட துர்பலமானது அடமானதாரனுக்கு ஏற்பட்ட துர்பலமாகும், மேலும் ஒரு அடமானதாரன் தானே பண டிக்ரியொன்றை மேடோவர் வாங்கியிருந்தால் அப்பொழுது அவன் அடமான சொத்தின்மேல் டிக்கிரியை நிறைவேற்றுவதிலிருந்து விஞ்சிற்றும் சந்தேகமில்லாமல் இந்த செக்ஷனால் தடுக்கப்படுகிறான். அடமானதாரன் ஒருவ

ன்தான் பெற்ற பண டிக்கிரியை வேறொருவனுக்கு மேடோவர் செய்தால், டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்ட் 67-வது செக்ஷன்படியல்லாமல் மற்றபடி அடமானதாரன் அடமான சொத்தை ஏலத்திற்கு கொண்டுவரக் கூடாதென்ற, ஏலமுகாந்திரமாக் கூறும் அந்த செக்ஷனது மேடோவர் பெற்றவனை பாதிக்காது என்பதாக வாதிக்கக்கூடும்; என்றாலும், சி. பி. கோ. 232, 233-வது செக்ஷன்களில், டிக்கிரியை மேடோவர் பெற்றவனுக்குரிய பாத்தியதைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதலால் இந்த செக்ஷன்களைக் கொண்டே இந்தக் கேசில் மேடோவதாருக்கிருக்கும் விக்கிரயஞ் செய்யும் பாத்தியதை நிச்சயிக்க வேண்டியது. டிக்கிரி பெற்றவன் எந்த மாதிரியாய், எந்த நிபந்தனைகளின்படி, டிக்கிரியை நிறை வேற்றுவானோ அதேமாதிரியாயும் அதே நிபந்தனைகளின் படியும் நடத்த மாத்திரமே, சி. பு. கோ. 232-வது செக்ஷன்படி மேடோவர்தாரன் கடமைப்பட்டவன். பின்னும்— டிக்கிரி கடன்காரன் டிக்கிரி தாரன்மேல் வற்பொருத்திய நியாயங்கள் ஏதேனும் இருப்பின் அந்த நியாயங்களுக்கு கட்டுப்பட்டே மேடோவர்தாரன் டிக்கிரியை கைக்கொள்ளவேண்டுமென்று, சி-பி-கோ. 233 வது செக்ஷன் கூறுகிறது. எங்கள் அபிப்பிராயத்தில், மேடோவர்தாரன் டிக்கிரியை நிறைவேற்றுகையில் அடமான சொத்தை ஏலத்திற்கு கொண்டுவருவதனின்றும் ஷை இரண்டு செக்ஷன்களாலும் தடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று ஏற்படுகிறது. டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்ட் 67 வது செக்ஷன்படி வியாஜ்ஜியம் கொண்டுவந்தாலன்றி, மற்றப்படி அடமானசொத்தை ஏலத்திற்கு கொண்டுவருவதில்லை என்ற நிபந்தனைக்கு கட்டுப்பட்டே ஷை 99 வது செக்ஷன்படி டிக்கிரிதாரன் டிக்கிரியை நிறைவேற்றவேண்டும். ஆதலால், எங்கள் அபிப்பிராயத்தில், இந்த நிபந்தனைக்கு கட்டுப்பட்டே மேடோவர்தாரன் டிக்கிரியை பெற்றிருக்கிறான் என்று ஏற்படுகிறது. மேடோவர்தார், அடமான தாரரல்லாததினால் 67 வது செக்ஷன்படி வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டுமென்பது பாதிக்காதென்ற விஷயம், "மற்றப்படி அடமான சொத்தை ஏலத்திற்கு கொண்டுவருவதில்லை" என்ற நிபந்தனையினின்றும் அவரை நீக்காது. பம்பாய் லா ரிபோர்ட்ஸ் 9 வது புஸ்தகம், 728 வது பக்கத்தில் கண்டிருக்கும் சாகன் குமான் v. லக்ஷ்மண்டாகுடு கேசில், பம்பாய் ஹைகோர்ட்டார் கொண்ட இந்த அபிப்பிராயத்தை நாங்கள் அங்கீகரிக்கிறோம். இ-லா-ரி, 22 கல் 813 சந்திர நாத் v. பரோடா சுந்தரி கோஷ் கேசில், டிக்கிரி தாரன் 99வது செக்ஷன்படி ஏலத்திற்கு கொண்டுவருவதனின்றும் தடுக்கப்பட்ட அந்த சொத்தை, மேடோவர்தாரும் ஏலத்திற்கு கொண்டுவரக்கூடாது என்பதாக தீர்ப்புச் சொல்லப்பட்டிருக்கிறது. இ-லா-ரி, 27 அல 450, பானுஹபால் v. மன்னிலால் கேசில், பாண்டித்தியமுள்ள நியாயாதிபதிகள் சி-பு-கோ 232-வது செக்ஷனிலுள்ள, மேடோவர்தாரரின் பாத்தியதையைப் பற்றி கவனிக்கவில்லையாதலால், அவர்கள் முடிவுசெய்த தீர்மானத்தை நாங்கள் அங்கீகரிக்கக்கூடாமையாயிருக்கிறது.

Sec: 233, C. P. C.

Every transferee of a decree shall hold the same subject to the equities (if any) which the judgment debtor might have enforced against the original decree-holder

அப்படியிருந்தாலும், டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்ட் 99-வது செக்ஷனில் ஜப்தியை தடுக்க யாதொரு ஆதாரமும் இல்லை. ஆதலால் அப்பீலை ஏற்றுக்கொண்டு, (ஏல உத்திரவை ரத்து செய்து) 1906ஹு டிசம்பர்மீ 26உ சிட்டி சிவில் கோர்ட்டாரவர்கள் அடமான சொத்தின் மேல் கொடுத்த ஜப்தி உத்திரவை மாத்திரம் காயப்படுத்தி, இக்கோர்ட்டுடையவும் கீழ் கோர்ட்டுடையவும், கோர்ட் சிலவை அப்பீல் பிரதிவாதியை கொடுக்கும்படி தீர்மானிக்கிறோம்.—

இ-லா-, 31. சென்., 33.

ஜட்ஜ்கள். { மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலீஸ். / மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

1907 செப்டம்பர் 19

கார்டியன் சங்கரசாஸ்திரிகள் மூலமாய் மைனர் இராகவனும் மற்றொருவரும், (பிரதிவாதிகள்—ரிவிஷன் மனுதாரர்) v.—அப்பீல் வாதிகள்.

அலமேலு அம்மாளும் மற்றொருவரும் (வாதிகள் எதிர்மனுதார்.)-அப்பீல் பிரதிவாதிகள்.

வியாஜ்ஜிய விஷயங்கள் ஜட்ஜ்மெண்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்பீல் வாதிகள் தரப்பில் மிஸ்டர் கே. இராமச்சந்திர அய்யரும், அப்பீல் பிரதிவாதிகள் தரப்பில் மிஸ்டர் டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியாரும் ஆஜரானார்கள்.

ஜட்ஜ்மெண்ட்:—1904-ம் ஹு காலஞ்சென்ற கலியாணராம சாஸ்திரியார் என்னும் ஒருவருடைய விதவைகளாகிய வாதிகளின் பேரில், ஷை யார் இறக்கும் சமயத்தில் வசூலாகாமல் பாக்கியிருந்த அவர் சொத்திற்கு 1905-06 வருஷத்திற்காக வருமான வரி விதிக்கப்பட்டது. பிரஸ்தாப பாக்கிகள் தங்களுக்கு வந்து சேரவில்லையென்றும், அவைகள் காலஞ்சென்றவர் எழுதிவைத்த உயில்படி தற்கால பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்டதென்றும் சொன்னார்கள். அப்படி சொல்லியும் வருமான வரிவிதித்த அதிகாரிகள் வாதிகளிடமிருந்தே வரியை வசூல் செய்துவிட்டார்கள். பிரதிவாதிகளுக்காக தாங்கள் செலுத்திய வரிபணம் அவர்களிட மிருந்து தங்களுக்கு கிடைக்க வேண்டுமென்று வாதிகளின் தாவா.

1906-ம் வருஷத்திய 132 நெம்பர் ஸ்மால்காஸ் சூட்டாக தாக்கல் செய்து கொண்டு விசாரித்த கும்பகோணம் சப்ஆர்டினேட் ஜட்ஜானவர் இந்த வியாஜ்ஜியமானது இந்தியன் காண்டிராக்ட் ஆக்ட் 70 வது செக்ஷனில் அடங்குகிறதென்று தீர்மானித்து வாதிகளுக்கு டிக்கிரி கொடுத்தார். இதன்மேல் பிரதிவாதிகளால் ஹைகோர்ட்டுக்கு செய்துக் கொள்ளப்பட்ட (1906 வருஷத்திய 486 வது நெம்பர்) சிவில் ரிவிஷன் மனுவிலும், ஹைகோர்ட் ஜட்ஜானவர் சப்ஆர்டினேட் ஜட்ஜின் தீர்மானத்தின் [illegible] மறந்து விட்டார். இதன்மேல் லெட்டர்ஸ் [illegible]

Section 70
Indian Contract Act

Where a person lawfully does anything for another person or delivers anything to him, not unwilling to do so gratutously, and such of the person enjoys the benefit thereof, the latter is bound to make compensation to the former in respect of, or to restore, the thing so done or delivered.

15வது செக்ஷன்படி இப்போழுது (1907-ம் வருஷத்திய 23-வது நெம்பர்) அப்பீல் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த கோர்ட்டில் அப்பீல் பிரதிவாதிகள் இந்தியன் காண்டிராக்ட் ஆக்ட் 69 வது செக்ஷனையும் ஆதாரமாய்க் கூறுகிறார்கள். ஆனல் இந்த வியாஜ்ஜியமானது ஷை 69, 70 வது ஆகிய இரண்டு செக்ஷன்களிலும் அடங்கவில்லை என்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். 1886-ம் வருஷத்திய (வருமான வரி ஆக்ட் அதாவது) இன்கம் டாக்ஸ் ஆக்ட் 14-வது செக்ஷன்படி, இன்னவித வருமான முள்ள இன்னார் இவ்வளவு வரி செலுத்தவேண்டுமென்பதாய் [நான்காவது பாகத்தை (Part IV) அனுசரித்து,] கலெக்டர் நிச்சயிக்கவேண்டியது. இந்த கேசில், பிரதிவாதிகள் நான்காவது பாகத்தின்படி வருமான வரி செலுத்தவேண்டியவர்களென்று கலெக்டர் நிச்சயிக்கவும் இல்லை. அல்லது அவர்களுக்கு வரி விதிக்கவும் இல்லை. ஆதலால் பிரதிவாதிகள் வரியை செலுத்த சட்டப்படி கட்டுப் பட்டவர்களல்ல. எனவே, 69 வது செக்ஷன்படி பிரதிவாதிகள் தங்களுக்கு பர்த்திசெய்ய கட்டுப்பட்டவர்களென்று வாதிகள் சொல்லக் கூடாது. பின்னும், 70 வது செக்ஷன்படி தாவா கொண்டுவரும் நிமித்தமாக—தாங்கள்பிரதிவாதிக்காக பணம் செலுத்தியதை இனமாக வெண்ணி செய்யவில்லையென, வாதிகள் சொல்வதும் கூடாதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். வரியானது வாதிகளிடமிருந்தே கேட்கப்பட்டு அதன்படி அவர்களிடமிருந்தே வசூலிக்கப்பட்டது. வாதிகளிடமிருந்து வசூலித்ததை காட்டிலும், பிரேரேபித்தபடி வருமான வரி அதிகாரிகள், பிரதிவாதிகளிடம் வரியை டிமாண்டு செய்து அதன்படி வசூலித்திருக்க வேண்டியதென்னு மிக் காரணத்தினலேயே, வாதிகள் பிரதிவாதிகளுக்காகத்தான் வரி செலுத்தினர்களென்று சொல்லக் கூடாது. மேலும் பிரஸ்தாப வருஷத்திற்கு பிரதிவாதிகள் வரிவிதிக்கப்படக் கூடிய வருமானத்தை பெற்று வந்தார்களென்பதற்கு இந்த வியாஜ்ஜியத்தில் யாதொரு அத்தாக்ஷியும் காணேம். ஆதலால் நாங்கள் அப்பீலை ஏற்றுக்கொண்டு, சபார்டினேட் ஜட்ஜ் கொடுத்த டிக்கிரியை ரத்து செய்து, ஆதி முதல் இதுவரையில் அப்பீல்வாதிகளுக்கு ஏற்பட்ட கோர்ட்டு சிலவை வாதிகளை கட்டி கொடுக்கும்படி தீர்மானிக்கிறோம்.—இ-லா-ரி-, 31 சென், 35.

> **Section 69**
> **Indian Contract Act.**
> Aperson who is interested in the payment of money which another is bound by law to pay and was therefore pays it, is entitled to be reimbursed by the other.

> **Section 14**
> **Income Tax Act II of 1886.**
> The Collector shall from time to time, deteremin what persons are chargeable under Part IV and the amount at which every person so chargeable shall be assessed.
>
> **Part IV Income Tax Act.**
> Source of Income :—Any source of income not included in Part I., II., or Part III., of this schedule.
>
> Rate of Tax :—(a) If the annual income is assessed at

Not less than Rs.	less than Rs.	the tax shall be Rs.
1,600	1,250	20
1,250	1,500	28
1,500	1,750	35
1,750	2,000	42

> (b) If the annual income is assessed at Rs. 2,000 or upwards—five pies in the rupee on the income.

ஜட்ஜகள். { மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர். மிஸ்டர் ஜஸ்டிஸ் மன்றே.

1907 நவம்பர்மீ 29. டிசம்பர் 10.

இராஜமகேந்திரி முனிசிபாலிடி சேர்மன் (வாதி) அப்பீல் வாதி.

v.

ஞுசர்லா வெங்கடேசவாருலு என்று சொல்லப்படும் வெங்கடகிருஷ்ண பிரம்மசாஸ்துருலும் மற்றெருவரும் (பிரதிவாதிகள்)—அப்பீல் பிரதிவாதிகள்.

இது இராஜமகேந்திர புரத்து தர்பஹவாரி சத்திரத்திற்கு, தர்பா வெங்கம்மா என்னும் மாது டிரஸ்டியாயிருந்தகாலத்தில் ஷையாருக்கு முதல் பிரதிவாதியின் தாயாராகிய சவரக்ஷணை கர்த்தாவால், எழுதிகொடுக்கப்பட்ட மார்ட்கேஜ் பத்திரபாபத்தில் சேரவேண்டிய தொகையை வசூல்செய்வதற்காக, இராஜமஹேந்திரி முனிசிபாலிடி சேர்மன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தாவா. மேற்படியம்மாள் சத்திர காரியங்களை அக்கிரமமாய் நடத்திவந்தார் என்னும் காரணத்தால் டிரஸ்டி ஸ்தானத்திலிருந்தும் விலக்கப்பட்டார். இதன்பின்பு கவர்ன்மெண்டார் ரிவினியூ போர்டார் கேட்டுக்கொண்டபடி ஷை சத்திரத்தின் நிர்வாகத்தையும் - மேற்பார்வையையும் இராஜ மஹேந்திரி முனிசிபாலிடியார் வசம்ஒப்புவித்தார்கள். அப்படி ஒப்புவித்ததினல் தான். இந்த (மஸ்லிபட்டாம் டி-மு-கோர்ட் 1899-வது வருஷத்திய 414 நெம்பர்) வியாஜ்ஜியம் இராஜமஹேந்திரபுரம் முனிசிபாலிடியாரால் கொண்டுவரப்பட்டது.

அடமான பத்திரமானது முனிசிபாலிடியாருக்கு சாட்டப்பட்டதாக யாதொரு எழுத்துமூல தஸ்தாவேஜு இல்லாததினல், இந்த தாவா கொண்டுவர வாதி பாத்திய மற்றவர் என்று பிரதிவாதிகள் வழக்காடினர்கள்.

1884-ம்௵ 4-வது ஆக்ட்டாகிய டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடிகளின் ஆக்ட்டின் 26-வது செக்ஷன்படி ஷை தர்ம சத்திரத்தின் நிர்வாகவும் மேற்பார்வையும், இராஜமஹேந்திரபுரம் முனிசிபாலிடியாருக்கு ஒப்புவிக்கப்பட்டது; ஆதலால் சாட்டுதல் ஒன்றுமில்லாமலே வாதி தாவா கொண்டுவரலாமென்று தீர்மானித்து, வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்.

இதன்பேரில் பிரதிவாதிகள், மசலிபட்டாமில், கிருஷ்ணு டிஸ்டிரிக்ட் ஜட்ஜுக்கு (1901-ம் ௵ 531-வது நெம்பர்) அபீல்செய்துகொண்டார்கள். டிஸ்டிரிக்ட் ஜட்ஜானவர் வாதிதாவா கொண்டுவர பாத்தியமற்றவரென்று தீர்மானித்து கீழ்கோர்ட்டு டிக்கிரியை ரத்து செய்து விட்டார்.

வாதி மதராஸ் ஹைகோர்ட்டுக்கு (1905-ம்௵ 716 வது நெம்பர் இரண்டாவது) அப்பீல் செய்துகொண்டார்.

அப்பீல் வாதிகள் தரப்பில் டி. வி. சேஷகிரி அய்யரும், டி. வி. முத்து கிருஷ்ண அய்யரும், 2-ம் அப்பீல் பிரதிவாதி தரப்பீல் கனம் ஆக்டிங் அட்வகேட் ஜெனரலும், 2-ம் அப்பீல் பிரதிவாதி தரப்பில்- நாகபூஷணமும் ஆஜரானர்கள்.

ஜட்ஜ்மெண்ட்:—வெங்கம்மா என்பவர் இராஜமஹேந்திர புரத்திலிருக்கும் ஒரு சத்திரத்திற்கு டிரஸ்டியாயிருந்தார். அவர் சத்திர காரியங்களை சீர் கேடாய் நடத்திவந்ததால் டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடி ஆக்ட் 26 வதுசெக்ஷன்படி ஷை சத்திர நிர்வாகத்தையும், மேற்பார்வையையும் இராஜமஹேந்திரபுரம் முனிசிபாலிடியாருக்கும் மாற்றப்பட்டது. அதுசமயத்தில் வெங்கம்மாள்யாதொரு ஆக்ஷேபனையும் செய்யாமல் பலவித பத்திரங்கள் உள்பட சத்திரத்தின் சகல சொத்துகளையும் முனிசிபாலிடியாருக்கு ஒப்புக்கொடுத்தார். அப்படி ஒப்புகொடுத்ததில், இராஜமஹேந்திரம் முனிசிபாலிடியார் தற்போது தாவாகொண்டு வருவதற்கு ஆதாரமான அடமான பத்திரம் ஒன்று. அந்த அடமானபத்திரத்தை யாதொரு எழுத்து மூல சாட்டுதல் இல்லாமல் வாதிதாவாகொண்டு வரலாமா. என்னும் ஒரே விஷயம் தான் நாம் கவனிக்க வேண்டியது. டிஸ்டிரிக்ட் ஜட்ஜானவர், சரியானபடி நிர்வகிக்கப் படுகிறதா என்று மேர்பார்வை வைத்துக்கொள்ளும் ஒரே அதிகாரத்தையுடைய ரிவினியூ போர்டாரை காட்டிலும் வாதி (யாகிய முனிசிபாலிடியாரு)க்குவிசேஷ அதிகாரங்கள் கிடையாததாலால் வாதிதாவா கொண்டு வரக்கூடாதென்று தீர்மானித்திருக்கிறார். மேற்கண்ட ஒரே ஆதாரத்தினல் இந்த தீர்மானமானது அட்வகேட் ஜனராலும் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. தர்ம சொத்துக்களின் டிரஸ்டிகள், அத் தருமசொத்துக்களை அத்தர்மகாரியங்களுக்கே தகுந்தபடி உபயோகித்துக்கொள்வதை மெய்ப்பிக்கும் மேற்பார்வை அதிகாரத்தை மாத்திரம் 1817-ம் வருஷத்து 17வது ரெகுலேஷன்படி ரெவினியூ போர்டாருக்கு கொடுக்கப் பட்டிருப்பதென்பது உண்மையே. (இதற்கு அத்தாக்ஷியாய், 12 சென் 366, பாண்டுரங்கா v. நாகப்பா கேசின் தீர்மானத்தை பார்க்கவும்) இந்த பிரஸ்தாபகே-

> **Madras District Municipalities Act IV of 1884**
> 26. (1) Nothing in this act shall be deemed to affect the duties and powers vested in the Board of Revenue in respect of charitable endowments by Regulation VII of 1817.
>
> (2) But it shall be competent to the said Board, with the written consent of the Governor in council and of the Municipal council, to make over to the Municipal council the management and superintendence of any such endowment, and thereupon all powers and duties which attach the Board of Revenue in respect thereof shall attach to such Municipal Council as if they had been specifically named in the said Regulation.

சில், சத்திரமானது முனிசிபாலிடியாருக்கு மாற்றுததற்கு முந்தி இப்பொழுது சொல்லப்பட்ட அதிகாரங்கள் மாத்திரம் ரிவினியூ போர்டாருக்கு இருந்தன வாதலால், அவர்கள் பத்திரத்தை புதிதாய் தாவா கொண்டுவரக் கூடாது. ஆனல் ரிவினியூ போர்டார் வகித்திருந்த ஸ்தானத்திற்கு வந்த முனிசிபாலிடியாருக்கும், அவர்களுக்கிருந்த அதிகாரத்தைக் காட்டிலும் விசேஷித்த அதிகாரங்கள் கிடையா வென்று வழக்காடுவது சரியானதல்ல. டிஸ்டிரிக்ட் முனிஸிபாலிடிகளின் ஆக்ட் 26 வது செக்ஷன்படி முனிசிபாலிடியாருக்கு மாற்றப்பட்டது. மேற் பார்வையொன்று மாத்திர மல்லாமல், சத்திரத்தின் பூராநிர்வாகமும் மாற்றப்பட்டது. இப்படி மாற்றபட்டிருக்கிறதென்பது ஷை செக்ஷனை தொடர்ந்திருக்கும் கவர்ன்மெண்டு ஆர்டரினல் விளங்குகிறது. தர்மசொத்தின் நிர்வாகமும், மேற் பார்வையும் மாற்றப்பட்ட பிறகு ரிவினியூ போர்டாருக்கு அது விஷயமாயிருந்த எல்லா அதிகாரங்களும், கடமைகளும் முனிசிபாலிடியாரை சேரவேண்டுமென்பதாய் ஷை செக்ஷனது கூறுகிறதென்பதில் சந்தேகமில்லை; என்றாலும் இவ்வதிகாரங்களும் கடமைகளுமாத்திரமே சேரவேண்டுமென்று சொல்லப்படவில்லை. இந்த பிரஸ்தாப சந்தர்ப்பத்தில் கவர்ன்மெண்டார், ரிவினியூ போர்டாருக்கு இராமலிருந்த அதிகாரங்களையும் கடமைகளையும் முனிசிபாலிடியாருக்கு கொடுத்திருக்கிறார்கள். ஆதலால் இந்த பத்திர வியாஜ்ஜியத்தை முறைமையான எழுத்து மூல சாட்டுதலில்லாமலே கொண்டுவரலாம். எனவே டிஸ்டிரிக்ட் ஜட்ஜின் தீர்மானம் ரத்து செய்யப்பட்டு, மறுபடியும் இதை அவர் விசாரணை செய்து பைசல் செய்யும்படி தீர்மானிக்கப்பட்டது. கோர்ட்டு காஸ்டு இனி விசாரணையில் ஏற்படும் தீர்ப்பை பொறுத்தது.—

இ-லா-ரி, 31 சென், 111

ஜட்ஜகள். { மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ். மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

1907 அக்டோபர் 29, 30

சிதம்பரஞ்செட்டியார் (மனுதார்)— அப்பீல் வாதி.

v.

திருநெல்வேலி சாரங்கபாணி சக்கரை ஆலை லிமிடெட் கம்பெனியின் அபிஷல் லிக்குவிடேட்டர் மிஸ்டர் யப். யஸ். கிளார்க்கு (எதிர் மனுதார்.) அப்பீல் பிரதிவாதி.

1893௵ ஜூன்மீ 21௳ மனுதாரும், மனுதாருடைய தகப்பனரும்-சக்கரை ஆலை நடைபெறுவதற்கு வேண்டிய தொகை கொடுத்துவருவதாகவும், தொகையானது வட்டியுடன் சேர்த்து திருப்பிக்கொடுக்கப்படுகிற வரையில் ஷை ஆலையானது தங்கள் வசத்தில் இருக்க வேண்டுமென்றும் அதன்படி தங்கள் வசத்தில் இருக்குங்காலத்தில் கிடைக்கும் சர்க்கரை விற்பனைத் தொகைக்கு, தங்களுக்கு தரகு கொடுக்கவேண்டுமென்றும், சாரங்கபாணி சக்கரையாலை கம்பனியின் பிரசிடெண்டோடு ஒப்பந்தம் செய்துகொண்டு, அதன்படி பணம் கொடுத்துவந்தார்கள்.

இதன் பின்பு, திருநெல்வேலி டிஸ்டிரிக்கோர்ட்டார் தமக்கு செய்துகொள்ளப்பட்ட (1903௵ 342-வது நெம்பர் மிஸ்லேனியஸ்) பிடிஷன்படி அதாவது மனுவின்படி ஷை ஆலைக்கம்பனியை நிறுத்திவிடும்படிக்கு உத்திரவுசெய்து, இந்த உத்தரவின்படி, கணக்கு முதலியவற்றை பார்த்து பூர்த்தி செய்ய கவர்ன்மெண்ட் லிக்குவிடேட்டர் என்னும் காரியஸ்தர் ஒருவரையும் நியமித்தார்கள். இதன்பின் சிறிது காலம் பொருத்து, மனுதாரின் எந்த பாத்தியதையையும் பாதிக்காதபடி, அவர்கள் வசமிருக்கும் சொத்துக்களை ஷை காரியஸ்தரிடம் ஒப்புவிக்கவேண்டியதென்று ஏற்பட்ட கோர்ட்டார் உத்தரவுப்படி சொத்துக்களியாவும் 1905௵ டிசம்பர்மீ 5௳ ஒப்புவிக்கப்பட்டன. பிறகு, சிதம்பரச்செட்டியார் ஆலை நடைபெறும் செலவுக்காக தாம் கொடுத்த பணத்தையும், அதன் வட்டியையும், தரகையும், ஆகமொத்தத்தில் தமக்கு சேரவேண்டிய தொகையை ஷை காரியஸ்தர் வசத்திலிருக்கும் சர்க்கரையை விற்று முதலாவது தமக்கு கொடுக்கும்படிக்கும், அப்படி கொடுத்தும் பாக்கியேற்பட்டால், அப்படி ஏற்படும் பாக்கிக்கு கம்பனியின் மற்ற சொத்துக்களை ஈடாக்கவேண்டுமென்றும் டிஸ்டிரிக்ட் கோர்ட்டுக்கு (1906-ம்௵ 342-வது நெம்பர் இண்டர்லொக்யூட்டரி) அப்பிளிகேஷன் செய்துகொண்டார்.

டிஸ்டிரிக்ட் கோர்ட்டார், ஆலை சிலவுக்கு கொடுக்கப்பட்டதும் அதன் வட்டியும், தரகும், ஆகமொத்தத்தில் ஆலை கம்பனி நிறுத்தப்பட்ட தேதிவரையில் ஏற்படுகிறதொகையை பெற மனுதாருக்கு பாத்தியதை இருப்பதாக ஒப்புக்கொண்டார்கள்; என்றாலும், ஷை தொகையை சர்க்கரை விற்பனையின் பேரிலாவது அல்லது கம்பனியின் சொத்துக்களின் பேரிலாவது வசூல்பொருத்த மனுதாருக்கு பாத்தியம் கிடையாதென்று தீர்மானித்தார்கள்.

மனுதார் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொண்டார்.

அப்பீல் வாதி தரப்பில் மிஸ்டர் கே. ஸ்ரீனிவாஸ அய்யங்காரும். அப்பீல் பிரதிவாதி தரப்பில், மிஸ்டர் கே. ராமநாத ஷேணையும் ஆஜரானர்கள்.

> **Indian Contract Act.**
> **Sec. 221.**—In the absence of any contract to the contrary, an agent is entitled to retain goods, papers, and other property, whether moveable or immoveable, of the principal received by him, until the amount due to himself for commission, disbursments, and services in respect of the same, has been paid or accounted for to him.

ஜட்ஜ்மெண்ட்:—மனுதாருக்கும் - கம்பெனியாருக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தில், இந்தியன் கண்டிராக்ட் ஆக்ட் 221-வது செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கும் உரிமையை அப்புறப்படுத்தத் தக்கதாவது இருக்கிறதென்று நாங்கள் நினைக்கவில்லை; வேலையை நிறுத்தும் படியாய் உத்திரவு செய்த தேதிவரையில், கம்பனிக்கு சிலவு செய்யப்பட்டிருப்பதால் ஷை செக்ஷன்படி, அப்பீல் வாதிக்கு பாத்தியமிருக்கிறது. ஆதலால், வேலையை நிறுத்தும்படி உத்திரவு செய்யப்பட்ட தேதியில், அவர் வசமிருந்த சொத்துக்களிலும் சாமான்களிலும் அவருக்கிருந்த பாத்தியதையை, டிஸ்டிரிக்ட் ஜட்ஜானவர் ஒப்புக்கொள்ளாமல் மறுத்துவிட்டது பிசகு. இந்தியன் கம்பெனி ஆக்ட் 149-வது செக்ஷனனது ஒருவன் தான் கொடுத்த கடனுக்கு ஈடாகப்பெற்றிருக்கும் சொத்தை, அவன் வசமிருந்து விலக்க, கோர்ட்டாருக்கு அதிகாரம் கொடுக்கவில்லை.

> **Indian Companies Act.**
> **Sec 149.**—The court may at any time after making an order for winding up a company, require any contributory for the time being settled on the list of contributories, trustee, receiver, banker or agent or officer of the company to pay, deliver, convey, surrender, or transfer forthwith, or within such time as the court directs, to or into the hands of the official liquidator, any sum or balance, books, papers, estate or effects which happen to be in his hands for the time being, and to which the company is *prima facie* entitled.

இந்த பிரஸ்தாப கேசில் 1905 ௵ டிசம்பர் மீ 5௳ ஏற்பட்ட கோர்டாரின் உத்திரவுப்படி மனுதாரன் பாத்தியதைக்கு யாதொரு பாதகமில்லாமல், சொத்துக்கள் ஒப்புவிக்கப்பட்டதாக விளங்குகிறது. இந்தியன் காண்டிராக்ட் ஆக்ட் 221வது செக்ஷன்படி, மனுதார் தனக்கு சேரவேண்டிய தொகைகள் கொடுக்கப்படுகிறவரையில் கம்பனியின் சொத்துக்களை தம் வசத்திலேயே வைத்திருக்க பாத்திய முள்ளவராயிருந்தால், கம்பனியை நிறுத்திவிடவேண்டுமென்ற உத்திரவான்து சொத்துக்களை அவர் வசம் வைத்திருக்கவும், பின்னும் அவசியமான சிலவுகளை செய்யவுமான அவர் பாத்தியதையை பாதிக்காது: பிந்திய சிலவுகள் என்று சொல்லப்பட்டவை கம்பனியை நிறுத்தும்படி உத்திரவான தேதிக்கும், கம்பனியின் சொத்துக்களை ஒப்புவிக்கப்பட்ட தேதிக்கும் இடையில் ஏற்பட்டனவாக சொல்லப்பட்டிருக்கிறது. இச்சிலவுகளையும் கம்பனியை நிறுத்தும்படி ஏற்பட்ட உத்திரவுக்குமுன் செய்யப்பட்ட சிலவுகளைப் போலவே கொள்ளவேண்டும் என்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

ஆதலால் நாங்கள் டிஸ்டிரிக்ட் ஜட்ஜின் உத்திரவை ரத்து செய்து கம்பெனியை நிறுத்தும்படி ஏற்பட்ட உத்திரவுக்கு பிந்திய சிலவுகளில் அப்பீல்வாதிக்கு சேரவேண்டியது எவ்வளவு என்றும், கோர்ட்டார் விலக்கிய காலத்தில் அவர் வசத்தில் இருந்த சொத்துக்கள் என்னவென்றும், இந்தியன் காண்டிராக்ட் ஆக்ட் 221 வது செக்ஷன்படி அந்த சொத்துக்களில் எவ்வளவு தொகைக்கு அவர் பாத்திய முள்ளவரென்றும் தீர்மானிக்கும்படி இக்கேசை மறுபடியும் டிஸ்டிரிக்ட் ஜட்ஜுக்கு அனுப்புகிறோம். புதிய சாக்ஷி ஆதாரமூலங்களை அங்கீகரிக்கலாம். அப்பீல் ஏற்றுக்கொண்டு வாதியின் அந்த கோர்ட்டின் காஸ்டையும் கீழ்கோர்ட்டின் காஸ்டையும் கட்டி கொடுக்கும்படி தீர்மானிக்கிறோம், காஸ்டானது எஸ்டேட்டிலிருந்துகொடுக்கப்படவேண்டியது. இ-லா-ரி 31 சென் [illegible]

டையவரும்'' எனவும், 58-வது பிரிவு 2-வது வரியில் "முச்சிக்கா'' என்பதை "முச்சிலிக்கா" எனவும்; 154-வது பக்கம், 5-ம் அத்தியாய தலைப்பில் "குத்தகை...... 'செலுத்துவரும்'' என்பதை "குத்தகைத் தொகையைச் செலுத்துவதும்'' எனவும், 67-வது பிரிவு கடைசி 2-வது வரியில் "மூன்றும்'' என்பதை "மூன்றும்'' எனவும், 70-வது பிரிவு 2-வது உட்பிரிவு 4-வது பாரா 5-வது வரியில் "நம்ம" என்பதை "நம்ப'' எனவும், 75-வது பிரிவு 1-வது உட்பிரிவு 5-வது வரியில் "குறைக்கப்பட்டுள்ள'' என்பதை "குறிக்கப்பட்டுள்ள'' எனவும், 2-வது உட்பிரிவு 3-வது வரியில் "தொகை" என்பதை "தொகை'' எனவும், 7-வது பிரிவு 4-வது உட்பிரிவில் "தேயில்?'' என்பதை "தேதியில்'' எனவும், 159-பக்கம் 1-வது கலம் 2-வது பாரா 9-வது பிரிவில் "குத்தகைத்தொகை தொகையை'' என்பதை "குத்தகைத்தொகையை'' எனவும் 78-வது பிரிவு 1-வது உட்பிரிவு கடைசியில் "டிலாண்டை'' என்பதை "டிமாண்டை'' எனவும்; 79-வது பிரிவு 1-வது உட்பிரிவு 10-வது வரியில், "எருத்து'' என்பதை "எழுத்து" எனவும், ஷை உட்பிரிவு கடைசி வரியில், "ஸர்தார்'' என்பதை "ஸர்கார்" எனவும், 89-வது பிரிவு முதல் வரியில் "பொருள்பளில்" என்பதை, "பொருள்களில்" எனவும், 95-வது பிரிவு 1-வது உட்பிரிவு கடைசி 3-வது வரியில், "ஜப்திதை'' என்பதை "ஜப்தியை'' எனவும், ஷை பிரிவு 3-வது உட்பிரிவு, 6-வது வரியில் "யொய்து'' என்பதை "சொத்து'' எனவும், 4-வது உட்பிரிவு சி (c) பாராவில், "இடத்திமல்" என்பதை, "இடத்தில்'' எனவும் திருத்திக்கொள்க.

உதகமண்டலம், 1908௵ ஜூன்௴ 23௳.

நெ.938.—1884-ம்௵த்துச் சென்னபட்டணம் லோக்கல் போர்டுகளாக்ட 144-வது பிரிவைச்சேர்ந்த (16)-வது பகுதியின்படி, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள்-லோகல் பண்ட் ஊழியக்காரர்களின் பிரயோஜனத்திற்காக ப்ராவிடெண்ட் பண்டுகளென்னும் எதிர்கால சகாய நிதிகளை ஸ்தாபிக்கும் விஷயத்தில் டிஸ்ட்ரிகட்டு போர்டார் அனுசரித்து நடக்கும்பொருட்டு முறையே 1901-௵ ஜூன்௴ 25௳, 1903-ம்௵ மார்ச்௴ 17௳, 1904-ம்௵ ஜனவரி௴ 26௳, 1906-ம்௵ ஜூன்௴ 26௳யுள்ள போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் கெஜெட் I-ஏ பாகத்தின் 360-வது, 95-வது, 34, 35, 36-வது, 327-வது பக்கங்களில் பிரசுரிக்கப்பட்ட 528-ம் நி. 304-ம் நி., 109-ம் நி., 870-ம் நி., விளம்பரங்களினல் திருத்தப்பட்ட படிக்குள்ள 1900-ம்௵ ஆகஸ்ட்௴ 21௳ போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் கெஜெட் I-ஏ பாகத்தின் 262-வது பக்கத்தில் பிரசுரித்திருக்கும் 676-ம் நி. விளம்பரத்திலடங்கிய விதிகளில் அடியிற்கண்ட மாறுதல்களைக் களிகூர்ந்து செய்கிறார்கள். மேலும் ஷை ஆக்ட் 146-வது பிரிவின்படி இந்த மாறுதல்கள் எல்லா ஜில்லாக்களிலும் 1908-ம்௵ ஆகஸ்ட்௴ 1௳ அமுலுக்கு வரவேண்டுமென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் கட்டளையிடுகிறார்கள்:—

மாறுதல்கள்.

(1) 3-வது விதியிலே "(ஏ) ஸாலெரி ரிஸல்ட் ஸ்கூல் மாஸ்டர்கள்'' என்னும் வார்த்தைகளை எடுத்துவிட்டு, (பி) (ஸி) குறிப்பிட்ட பகுதிகளை (ஏ) (பி) என்று திருப்பி இலக்கமிட்டுக்கொள்க.

(2) 3-வது விதியின் 1-வது குறிப்பை எடுத்துவிட்டு, ஷை விதியின் 2-வது குறிப்புக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட குறிப்பை அமைத்துக்கொள்க.—

"1. ப்ராவிடெண்ட் பண்ட் என்னும் எதிர்கால சகாய நிதிக்குச் சந்தாதாரர்களாயுள்ளவர்கள் பென்ஷனுக்கு லாயக்கல்லாத ஊழியத்துக்குச் சிறிதுகாலத்துக்கு மாற்றப்பட்டால், அவர்கள்-அப்படிப்பட்ட ஊழியத்துக்கு மாற்றப்பட்ட பிறகும் தங்களுடைய நிலையான உத்தியோகங்களில் தங்களுக்குள்ள பாத்தியதையை விட்டுவிடாமல் வைத்திருக்கிற பட்சத்திலே, அந்த நிதிக்குச் சந்தாத்தொகை செலுத்திக்கொண்டேவரலாம்."

இந்தியன் பீனல் கோட்.

124. ஏ.—பேசப்பட்ட அல்லது எழுதப்பட்ட சொற்களினலாவது சைகைகளினலாவது கண்ணுக்குப் புலப்படத்தக்கக்குறிகளினலாவது யாதொரு நபர் மஹாராணி யவர்களிடத்திலேனும் பிரிடிஷ் இந்தியாவில் சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்ட கவர்ன்மெண்டாரிடத்திலேனும், வெறுப்பு அல்லது உதாசினத்தை உண்டாக்கினலும், உண்டாக்க எத்தனித்தாலும் அப்படிப்பட்டவன் ஆயுள்வரையிலாவது அதற்குக் குறைந்த ஒரு காலத்திற்காவது தீபாந்திர சிக்ஷை விதிக்கப்படுவான்; அதுவுமல்லாமல் அவனுக்கு அபராதமும் விதிக்கலாம்; அல்லது மூன்று வருஷத்திற்கு மேற்படாமல் அவன் காவலில் வைக்கப்படுவான்; அதுவுமல்லாமல் அவனுக்கு அபராதமும் விதிக்கலாம்; அல்லது அவன் அபராதமாத்திரம் விதிக்கப்படுவான்.

Indian Penal Code

124 A. Whoever by words either spoken or written, or by signs, or by visible representation or otherwise brings or attempts to bring into hatred or contempt, or excites or attempts to excite disaffection towards Her Majesty or the Government established by law in British India shall be punished with the transportation for life, or any shorter term, to which fine may be added, or with imprisonment which may extend to three years, to which fine may be added, or with fine.

153. ஏ:—பேசப்பட்ட அல்லது எழுதப்பட்ட சொற்களினலாவது சைகளினலாவது கண்ணுக்கு புலப்படத்தக்க குறிகளினலாவது மற்றெவ்விதத்திலினலாவது யாதொரு நபர் மஹாராணி யவர்களுடைய குடிகளின் பற்பல வகுப்பாருக்குள் விரோதமான அல்லது அருவருப்பான எண்ணங்களை உண்டாக்கினலும், உண்டாக்க எத்தனப்பட்டாலும், அப்படிப்பட்டவன் இரண்டு வருஷத்திற்கு மேற்படாமல் சிறைச்சாலையில் வைக்கப்படுவதற்காகிலும், அபராதத்திற்காகிலும், இவ்விரண்டு தண்டனைக்குமாகிலும், உட்படுவான்.

153 A., I. P. C.—Whoever, by words, either spoken or written or by signs, or by visible representations, or otherwise, promotes or attempts to promote feelings of enmity or hatred between different classes of Her Majesty's subjects, shall be punished with imprisonment which may extend to two years, or with fine, or with both.

505.—எவனவது—(ஏ) மஹாராணி அவர்களுடைய இராணுவத்திலாவது, கப்பற்சேனையிலாவது, ராயல் இந்தியன் மெரீன் இலாக்காவிலாவது, இம்பீரியல் சர்வீஸ் டுரூப்ஸ் என்னும் இராணுவ இலாக்காவிலாவதுள்ள யாதொரு ஆபீசர், சோல்ஜர் அல்லது செயிலரைக் கலகம் பண்ணும்படிக்கோ அல்லது அப்படிப்பட்ட ஹோதாவில் அவனுடைய அலுவலை வேறே விதமாய் அலட்சியம் பண்ணும்படிக்கோ அல்லது அவனுடைய அலுவலில் தவறும்படிக்கோ செய்யவேண்டுமென்கிற எண்ணங் கொண்டாகிலும் உண்டாக்கு வேண்டுமென்கிற ஏஷியத்தைக் கொண்டாகிலும்,

505. I P. C. Whoever makes, publishes, or circulates any statement, rumour or report,-

(a) with virtue to cause, or which is likely to cause, any officer, soldier, or sailor in the army or navy of Her Majesty, or in the Royal Indian Marine, or in the Imperial Service Troops, to mutiny, or otherwise disregard or fail in his duty as sueh ; or

(b) with intent to cause, or which is likely to cause, fear or alarm to the public, or to any section of the public, whereby any person may be induced to commit an offence against the state or against the public tranquillity; or

(c) with intent to incite, or which is likely to incite, any class or community of persons to commit any offence against any other class or community shall be punished with imprisonmeut which may extend to two years or with fine or with both.

(பி) இராஜாங்கத்தாருக்குவிரோதமாகவாவது ஜனஅரிக்கைக்கு விரோதமாகவாவது குற்றஞ்செய்யும்படி ஒருவனை தூண்டதக்க விதமாகப் பொது ஜனங்களுக்காயினும் அவர்களைச் சேர்ந்த எந்த பிரிவாருக்காயினும் பயம் அல்லது திகிலை உண்டாக்கவேண்டுமென்கிற ஏஷியத்தைக் கொண்டாகிலும்,

(சி) ஜனங்களின் ஒரு வகுப்பார் அல்லது கூட்டத்தாரை வேறொரு யாதொரு வகுப்பார் அல்லது கூட்டத்தாருக்கு விரோதமாக யாதொரு குற்றம் செய்யும்படி தூண்டவேண்டுமென்கிற எண்ணங்கொண்டாகிலும், தூண்டவேண்டுமென்கிற ஏஷியத்தைக் கொண்டாகிலும்,

யாதொரு சங்கதி வதந்தி அல்லது அறிக்கையைத் தெரிவித்தாலும், பிரசித்தஞ் செய்தாலும், பரவவிட்டாலும் அப்படிப்பட்டவன் இரண்டு வருஷத்திற்கு மேற்படாமல் சிறைச்சாலையில் வைக்கப்படுவதற்காவது அபராதம் விதிக்கப்படுவதற்காவது இவ்விரண்டு தண்டனைக்குமாவது உட்படுவான்.

C. V. KUMARASWAMY SASTRIAR ESQ., B.A., B.L.,
Judge, City Civil Court, Madras.

பிரம்மஸ்ரீ. சி. வி. குமாரசுவாமி சாஸ்திரியார் அவர்கள், பி.ஏ., பி.எல்.,
ஜட்ஜ், சிட்டி சிவில் கோர்ட், மதராஸ்.

இந்திய சட்ட கெஜட்.

சென்னை யன். இராதாகிருஷ்ண கம்பெனியாரால் வெளியிடப்படும்
உயர்தர மாதாந்த சஞ்சிகை.

[illegible] 3. சென்னபட்டணம், 1908ளு ஜூலைமாதம்.

அடக்கம்.

1. உருவப்படம் :—பிரம்மஸ்ரீ சி. வி. குமாரசுவாமி சாஸ்திரியார் அவர்கள் பி-ஏ., பி-எல்., ஜட்ஜ்
சிட்டி சிவில் கோர்ட், மதராஸ்.

2. நம்பத்திரிகை ... ...

3. கிராமவாசிகளின் தற்கால நிலைமை ... ...

கவர்ன்மெண்டாரின் கடமை ... ...

4. பத்திரிகாசரியர் குறிப்புகள் ... ...

6. சிங்கப்பூர் நாட்டுகோட்டை செட்டிகளைப்பற்றிய அவதூரு கேஸ் ... ...

[illegible] புதிய பிரசுரங்கள் ... ...

7. ஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம்ளுத்து 1-வது ஆக்ட்

8. சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள் ... ...

9. கவர்ன்மெண்ட் ஆர்டர்கள், போர்டார் உத்தரவுகள், ஜில்லா சர்குலர்கள்

10. இந்தியன் லா ரிபோர்ட்டுகளிலுள்ள கேசுகள். ... ...

C. V. Kumaraswamy Sastriar Esq.

B.A., B.L., Judge, City Civil Court, Madras.

மதருஸ் சிட்டி சிவில் கோர்ட் ஜட்ஜ்,
பிரம்மஸ்ரீ, சி. வி. குமாரசுவாமி சாஸ்திரியார் அவர்கள்,
பி.ஏ., பி.எல்.

சீர்மேவும் செந்தமிழ் தேசமெங்கும் சிறப்புற்றோங்கிய பிரம்மஸ்ரீ இரங்கநாத சாஸ்திரியார் அவர்களின் பௌத்திரரும், பிரம்மஸ்ரீ சி. வி. சுந்தர சாஸ்திரியார் அவர்களின் செல்வ புத்திரருமாகிய, மதராஸ் சிட்டி சிவில் கோர்ட் ஜட்ஜ் பிரம்மஸ்ரீ சி. வி. குமாரசுவாமி சாஸ்திரியார் அவர்களின் ஜீவித சரித்திரத்தை இவ்விடத்தில் சிறிதே சுறுங்க சொல்லி விளங்கவைப்பது நமது நேயர்கள் அனைவருக்கும் அளவிலா ஆனந்தத்தை விளைவிக்கும் என்பது உண்மை.

இவர் 1870-ம் வருஷத்தில் ஜனித்தவர். "யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே" என்பதுபோல, பெற்றோர் இவருக்கு வெற்றியில் நிகரில்லா சாக்ஷாத் குமாரசுவாமிகளின் திருநாமத்தை சூட்டினார்கள். பெற்றோர் உவந்தளித்த அரிய பெயருக்கு ஏற்றமாதிரி இளமையிலே கல்விபயிலத் துடங்கி, ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாய் தேர்ச்சியடைந்து, தமது பன்னிரண்டாம் பிராயத்தில் அதாவது 1882-ம் வருஷத்தில் சென்னை இராஜதானிக் கல்லூரியில் யப்.ஏ., வகுப்பில் (MADRAS PRESIDENCY COLLEGE, F.A., JUNIOR CLASS) சேர்ந்தார். வெற்றி பெயர் தாங்கிய இவ்விற்பன்னர் யப்.ஏ., பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்து (ELPHINSTONE SCHOLARSHIP) எலிபின்ஸ்டன் ஸ்காலர்ஷிப்பும், பிறகு பி.ஏ., வகுப்பில் வாசித்து, அதிலும் முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்து (THOMPSON SCHOLARSHIP) தாம்ஸன் ஸ்காலர்ஷிப்பும் பெற்று வந்தார். இம்மட்டோ! யப்.யல்., (F. L. EXAMINATION) பரீக்ஷையிலும் முதன்மையாகத் தேர்ச்சியடைந்து (MOREHEAD LAW SCHOLARSHIP) மூர்ஹெட் லா ஸ்காலர்ஷிப்பும் பெற்று மதராஸ் ஹைகோர்ட்டு வக்கீல் பரீக்ஷையாகிய பி-எல், பரீக்ஷையில் தேர்ச்சியடைந்தார். இவரின் கல்வி அபிவிர்த்தியைப் பற்றி எவ்வளவு எழுதினாலும் எழுதலாம். இவர் ஆங்கிலத்தில் அதாவது இங்கிலீஷில் மாத்திரமேயல்லாமல் வடநாலிலும் அதாவது சமஸ்கிரதத்திலும் மிக்க தேர்ந்தவர். கல்வியில் தேர்ச்சியடைவதற்கு நமது சாஸ்திரியார் அவர்கள் அனுஷ்டித்துவந்த முறையானது இக்காலத்தில் நாம் காணுவது அரிது. இக்காலத்தில் திருஷ்டாந்தமாக சனி நீராடு என்னும் ஒரு வாக்கியத்தை மனதில் பதியவைப்பதற்காக தற்கால மாணவர்கள், சனி-சனி-சனி, சனிநீர்-சனிநீர்-சனிநீர், ஆடு-ஆடு, சனிநீர்-ஆடு, சனிநீர் ஆடு, என்று தொண்டையெல்லாம் போக்கி கடைசியாய் ஷை வாக்கியத்தை வரப்படுத்துவார்கள். இது சமயம் கழித்து மறுசமயம்கேட்டால், மாணாக்கர்கள் மரதியில் சிக்குண்டு மண்டையை உடைத்துக்கொண்டும், விரலைக்கடித்தும் இன்னும் கவனத்திற்கு கொண்டுவரக்கூடிய ஏனைய செய்கைகளை புரிந்தும் விழிப்பார்கள். இவ்வகுப்பார் தமது ஜீவிதகால முழுதையும் கல்விமான்களாய் கழிப்பதெப்படி? மேற்கண்ட கஷ்டத்தில், அவர்கள் பரீக்ஷகாலத்தில் தேறின அடுத்த க்ஷணமே, வாசித்த புஸ்தகங்கள் குஜிலி கடைக்குப்போய்விடும். பாஸ்செய்தவர் என்ற காரணத்தால் ஜீவனோபாயம் கிடைத்துவிட்டால் பின் புஸ்தகங்களை பார்க்கும் தோஷத்தில்போவதே கிடையாது. காரணம் தாங்கள் பாஸ்செய்த கல்வி கஷ்டமானது, அதை மீண்டு வாசிக்கும் இஷ்டத்தை எங்கனம் வருவிக்கும்? நமது சாஸ்திரியார் அவர்களோ, புஸ்தகத்தை ஒரு முறை பொருள்பட வாசித்து மூடிவிட்டு, மறுமுறை வாசித்த கருத்தை தானாகவே யெழுதி, பின் புஸ்தகத்திற்கும் தாம் எழுதியதிற்கும் ஒத்திட்டு, ஏற்படும் பேதா பேதங்களை செவ்வையாய் தெரிந்து சீர் திருத்திக்கொள்ளுவார். முற்கால இச்சீர்திருத்த அப்பியாசத்தால், பிரைமரி-லோயர் செகண்டரி என்னும் சொற்ப பரீக்ஷைகளில் தேர்ச்சியடைந்தவர்களானாலும், அவர்கள் தற்கால பி-ஏக்களுக்கு சமத்துவமாயும், மேற்பட்டும் விளங்குகிறார்கள். முற்கால சொற்ப பரீக்ஷைகளில் தேர்ச்சியடைந்தவர்களின் நிலைமை இவ்விதமானால், உயர்ந்த பரீக்ஷைகளில் தேர்ச்சியடைந்தவரின் அபாரமானக் கல்வியை தற்கால எவ்வகுப்பாருக்கு ஒப்பிட்டுக்கூறுவதோ அறியோம்! நமது சாஸ்திரியார் அவர்களோ மஹா கல்விப்பிரியர். இதற்கு அத்தாக்ஷியாய், 'கற்க கற்க கசடறும்' என்னும் மூதுரையை இவர் கைப்பிடித்து, இப்பொழுதும் தமக்கு ஒழிந்த சமயங்களில் வடநூல்களை விசேஷமாய் வாசித்து வருதைக் காணலாம். சங்கீதத்திலும் இவர் மிக்கப் பிரியமுள்ளவர். கோபம் என்னும் கொடியன் அணுகவொட்டாமல் தடுத்து, இவரை என்றும் அடுத்திருக்கும் ஈ இரக்கம் முதலிய நற்குணங்கள் முகத்தில் மலர்ந்து தோன்றுவதை இன்றும் காணலாம். 1894-ம் வருஷத்தில் மதராஸ் ஹைகோர்ட்டு வக்கீலாக வெளி வந்தனர். இவர் காசைக்காட்டிலும், இரட்டிப்பான சிரத்தை தமது கக்ஷிகாரர்கள் விஷயத்தில் வைத்து, அவர்கள் வியாஜ்ஜியங்களை ஜெயித்து கொடுப்பதிலேயே நோக்கமாயிருந்ததால், இவரது வெற்றி பெயரானது சென்னை முற்றிலும் பரவியது. பின்னும், இவர் மதராஸ் ஹைகோர்ட் ஒரிஜனல் தரப்பில் பிராக்டிஸ்செய்யும் காலத்தில், (THE ORIGINAL RULES OF PRACTICE") ஒரிஜினல் தரப்பு பிராக்டிஸ் விதிகள் என்னும் புஸ்தகம் வெளியிட்டதானது, பிராக்ஷனர்களுக்கு மிக்கவும் உபயோகமாயிருக்கிறது. இதனால் இவர் வக்கீலாகவெளிவந்த 11-வருஷங்களுக்கெல்லாம் அதாவது 1905-ம் வருஷத்தில், பதினைங்கு பாஷைகளிலும் பயின்ற தமது பாட்டனார் பிரம்மஸ்ரீ- இரங்கநாத சாஸ்திரியார் அவர்களைப் போலவே, சென்னை ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜயாக நியமனம் பெற்றார். பிறகு ஒரு வருஷத்திற்கெல்லாம் அதாவது 1906-ம் வருஷம், தற்கால சிட்டி சிவில் கோர்ட் ஜட்ஜபதவியில் நியமிக்கப்பட்டனர். இவர் வக்கீல்களையும் கக்ஷிக்காரர்களையும் மற்றும் ஏனையோரையும் பக்ஷமாய் நடத்தி, குறை கூற சிறிதும் இடமின்றி நடுநிலையாய் நின்று தீர்மானஞ்செய்து வருவதானது கூடிய சீக்கிரத்தில், தந்தை பரிந்தளித்த வெற்றிபெயருக்கேற்ப இன்னும் மென்மேலான உன்னத பதவிகளில் நமது சாஸ்திரியார் அவர்களை வீற்றிருக்கச்செய்யுமென்பதில் சந்தேகமில்லை. சாக்ஷாத் கடவுளும் அருள் புரிவாராக.

பிழை திருத்தம்.

பக்கம் 183, பத்தி-1-வரி 6ல் "விருஷங்கள்" என்றிருப்பதை "வருஷங்கள்" என்று வாசிக்கவும்.

பக்கம் 184., பத்தி-1-கடைசி 11வது வரியில் "காசு" என்றிருப்பதை "தூசி" என்று வாசிக்கவும்.

THE INDIAN LAW GAZETTE.

இந்திய சட்ட கெஜட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் 3. சென்னப்பட்டணம், 1908௵ ஜூலைமாதம். பாகம் 7.

NOTICE.

THE Editor of the *Indian Law Gazette* glad to consider short stories, articles &c., on legal topics and writers are cordially invited to send in their contribution for consideration. All ORIGINAL contributions will be paid for when published.

☞ *Contributions other than original are neither invited nor required.*

All literary contributions and books for Review should be addressed to MR. A.V. SEYALAM, Editorial Staff, *Indian Law Gazette*, Madras.

OURSELVES.

நம் பத்திரிகை.

நம் தேச தமிழ் செல்வர்களுக்கு சட்ட ஞானம் பரவ செய்வதற்காக சட்ட விஷயங்களேயே அதிகமாய் அடங்கப்பெற்றும், ஒவ்வொரு சஞ்சிகையிலும் சட்ட விற்பன்னர்களின் திரு உருவப்படம், அவர்கள் தம் ஜீவிய சரித்திரம் ஆகிய இவ்விரண்டை முதன்மையாக ஏற்றும், கடந்த இரண்டு விருஷங்களாக பிரசுரிக்கப்பட்டு வருவது நேயர்களுக்கு தெரிந்த விஷயமே! இதனால் விளைந்திருக்கும் நன்மைகள் நம் நேயர்களினாலேயே யல்லாமல் கனம் ஜஸ்டிஸ் ஸர் யஸ் சுப்பிரமணிய அய்யர் அவர்கள் முதலிய பெரியோராலும், மதராஸ் மெயில் முதலிய நீடித்த ஆங்கிலேய பத்திரிகைகளாலும் புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. இதற்கு அத்தாக்ஷியாய், "ஹைகோர்ட் ஜட்ஜ் மணி அய்யர்" என்று தேசமெங்கும் பிரசித்தமாய் கூறும் கனம் ஜஸ்டிஸ் சர் யஸ் சுப்பிரமணிய அய்யர் அவர்களும், மற்றும் பெரியோரும், நமது இந்திய சட்ட கெஜட்டின் அபிவிர்த்தி விஷயத்தில் உள்ளபடி விசுவாசங்காட்டி பொருளுதவி செய்திருக்கிறார்கள். என்றாலும், நமது கெஜட்டானது நாம் ஏற்கனவே தெரிவித்த அசந்தர்ப்பங்களால் தவக்கப்பட்டு வருவதை முன்னிட்டு நேயர்களுக்கு உண்டாயிருக்கும் ஆயாசத்தை அறஒழிக்க நாம் எடுத்துக்கொண்ட முயற்சியானது கடவுள் கிருபையால் ஈடேறி, தவக்கப்பட்டிருந்த ஏப்பிரல் மே ஜூன் மீ சஞ்சிகைகள் இம்முறை ஏககாலத்தில் வெளி வந்திருக்கின்றன. இனி இத்தகைய தவக்கங்கள் சிறிதும் ஏறபடாமல் அந்தந்த மாதத்திய கெஜட் அந்தந்த மாதத்திலேயே வெளிவரும்படிக்கான சகல ஏற்பாடுகளும் செய்திருக்கின்றோம். இத்துடன் நமது கெஜட்டுக்காகவே பிரத்தியேகமாய் அச்சாபீஸ் ஒன்றும் ஏற்படுத்த பெரிதும் முயற்சி செய்து வருகின்றோம். இம்முயற்சிக்கு வேண்டிய உதவியையும் ஷை. பெரியோர்கள் செய்வதாய் வாக்களித்திருக்கிறாராதலின், கடவுள் கிருபையாலும் பெரியோர் ஆசீர்வாதத்தாலும் நேயர்களின் ஒற்றுமையாலும், இரண்டொரு மாதங்களில் நாம் கொண்ட முயற்சி கைகூடுமென்று நம்புகின்றோம். அது சமயத்தில் ஆந்திர பாஷைச் செல்வர்களின் வேண்டுகோளின்படி நமது இந்திய சட்ட கெஜட்டை ஆந்திரத்திலும் அதாவது தெலுங்கிலும் வெளியிடுவோமென்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. இதற்கிடையில், நமது இந்திய சட்ட கெஜட்டுக்கு எவ்வளவுக்கெவ்வளவு கையொப்ப நேயர்கள் சேர்ந்து ஆதரிக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு பத்திரிகையானது அவசியமான சீர் திருத்தங்களோடு விர்த்தியடைந்து மாதம் இரு முறையாகவும், கூடுமானால் வாரம் ஒரு முறையாகவும் வெளியாகக்கூடும். கடைசியாய் 1909-ம்௵ முதல் அமுலுக்கு வருவதும், நமது நேயர்களுக்கு மிக்க அவசியமானதுமான "சிவில் புரொஸீசர் கோட்" என்னும் சட்டப் புத்தகத்தை தமிழில் அச்சிட்டு, நமது கையொப்ப நேயர்களுக்கு மாதாந்தரம் இனமாய்க்கொடுக்கத் தீர்மானித்திருக்கின்றோம்.

DEVONSHIRE HOUSE, 8-9-06.

The Hon. Justice Sir. S. Subramania Iyer, B.L., K.C.I.E., Dewan Bahadur, writes :—

" . . . . This Journal will prove useful to those who are unacquainted with English in the Tamil districts . . . . To show that I am not insensible of the efforts you are making to convey legal information to those who cannot obtain it through English publications I enclose herewith a cheque which I trust you will accept . . . . "

The Present State of the Village Population.

கிராமவாசிகளின் தற்கால நிலைமை.

எதொன்றை எடுத்துப் பேசவாவது அல்லது எழுதவாவது துணிந்த காலத்தில், அதனுடைய பெரும் பான்மையான குணங்களையே ஆதாரமாய் வைத்துக்கொள்ள வேண்டும். திருஷ்டாந்தமாக பீ.ஏ., பீ.எல்., பரீக்ஷை அதாவது ஹைகோர்ட்டு வக்கீல் பரீக்ஷை கொடுத்த ஒருவர் எக்காரணத்தினாலோ ஒரு கிராமத்தில் வசித்துவருகிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். இதனாலேயே கிராமவாசிகளெல்லாம் படிப்பாளிகள் என்று சொல்லலாமா? சொல்லக்கூடாது. காரணம் கிராமவாசிகள் அநேகமாய் படிப்பாளிகளல்லர். காலையிலெழுந்து மாலைவரையில் தங்கள் தங்கள் நிலங்களை உழுவதும், நீர்பாய்ச்சுவதும், விதைவிதைப்பதும், ஆகிய ஏனையப் பயிர்த்தொழில் வேலைகளை செய்வதே தவிர வேறொன்றும் தெரியாது. பகல் போஜனத்துக்கும் வீட்டுக்கு திரும்பார்கள். அவர்கள் வேலை செய்யும் இடத்திற்கு சாப்பாடு போகும். சில சமயங்களில் இராக்காலங்களிலும் நிலத்தருகிலேயே படுத்துகொள்ளுவார்கள். இவர்களுக்கிடையில் சொற்ப படிப்பாளி யாராவது ஒருவர் இருந்து விட்டால், அவர் "ஆலையில்லா ஊருக்கு இலுப்பப்பூ சர்க்கரை" தான். அவர் சொற்படியே அனைவரும் நடப்பார்கள். இரண்டொரு சமயங்களில் அவரால் தங்களுக்கு ஏதாவது அனுகூலம் விளைந்து விட்டாலோ, அவரேதான் கடவுள் குரு என்று நம்பிவிடும் சுபாவமுடையவர்கள். பின் இவர்கள் கொண்ட நம்பிக்கையை மாற்றுவதென்றால் எவராலும் முடியாது.... மிகவும் கடினம். இதனாலேயே, சில சந்தர்ப்பங்களில் "என்ன? நாட்டுப்புறத்தாரைப்போல் பேசுகிறீரே" என்று சொல்வதும் உண்டு. காரணம், நாம் சொல்லும் விஷயங்களை ஏற்காமலே அவர்கள் சொல்லப்புகுந்த விஷயங்களையே மூச்சுவிடாமல் பேசுவார்கள். இவர்களுக்கு பணத்தை தேடவேண்டிய அவசியமில்லை இவர்களுக்கு வேண்டிய அநேக உணவு பொருள்களை தாமே பயிர் செய்கிறார்கள். அப்படி பயிர் செய்யப்படாத இரண்டொரு உணவு பொருள்களை, தாங்கள் பயிரிட்ட உணவு பொருள்களைக் கொண்டு மாற்றிக்கொள்ளுவார்கள். மற்றும் ஆடை முதலிய சகலத்திற்குமே தானியங்களைக் கொண்டு மாற்றிக்கொள்வார்கள். பணம் வேண்டிய வாயிதா அதாவது வரி கட்டவேண்டிய காலத்தில் தாங்கள் நம்பி யிருக்கும் ஷை யார்வசம் வேண்டிய தானியத்தை ஒப்புவித்து விடுவார்கள். இனி பணம் கட்டவேண்டியது, தானியத்தை ஒப்புக்கொண்டவரின் பாரம். இது சமயத்திலும் இவர்கள் பணத்தைத் தேடவேண்டிய அவசியமில்லை. நகரவாசிகள் மிகவும் அலக்ஷியம் செய்யும் ஒரு காசை, கிராமவாசிகள் ஒரு பவுன் அதாவது சவரனை மதிப்பார்கள். அதனாலேயே, காசு கிடைப்பதாயிருந்தாலும் தொலைதூரம்செல்லுவார்கள். கலெக்டர், தாசீல்தார், ரிவினியூ இன்ஸ்பெக்டர், கிராம முன்சீப், கர்ணம் முதலிய சகல அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்தும், பிராமண-க்ஷத்திரிய-வைசிய-சூத்திர என்னும் நான்கு வகுப்புகளுக்கும் அவ்வவற்றிற்குறிய மரியாதையோடும் நடந்து கொள்ளுவார்கள். திருஷ்டாந்தமாக, கிராமங்களிலிருக்கும் பிராமண வீதியில் பறையர்கள் போகவேமாட்டார்கள். பிராமணர்களைக் கண்டால் வெகு தூரத்தில் ஒதுங்கிக் கொள்ளுவார்கள். இப்படி இவர்கள் நடந்து கொள்வது, பிராமணர்களுக்குப் பயந்து என்ற அற்ப எண்ணம் கொள்ளக்கூடாது. ஒருவர் நாற்காலியின் மேல் உட்கார்ந்திருக்கும் சமயத்தில் பெரியவர் ஒருவர் வருகிறார். அவரைக்கண்டவுடன், நாற்காலியிலிருப்பவர் எழுந்து விடுகிறார். இப்படி இவர் எழுந்தது வந்தவருக்கு பயந்தா? பின்னும், ஒரு வெள்ளைக்கார மாது தம்மைப் பார்க்க வருவாரேயானால், வெள்ளைக்காரர்கள் தாம் இருக்கும் ஆசனத்தை விட்டெழுந்து வந்தமாதை அதே ஆசனத்தில் அமரும்படி செய்கிறார்கள். இப்படிச் செய்வது மாதுக்கு பயந்தா? ஒருக்காலுமல்ல வென்று முக்காலும் சொல்லுவோம். இவற்றிற்கு காரணம் அன்பேயல்லது மற்றொன்றும் அல்ல. *"அடிமையிடத்துண்டாவதாகிய அன்பினால் தயையும், மனைவியிடத்துண்டாவதாகிய அன்பினால் காதலும், மகனிடத்திண்டாவதாகிய அன்பினால் பாசமும், தோழனிடத்துண்டாவதாகிய அன்பினால் நேசமும், தாய் தந்தை குருவாகிய இம் மூவர்களிடத்திலுண்டாவதாகிய அன்பினால் வணக்கமும், கடவுளிடத்திலுண்டாவதாகிய அன்பினால் பக்தியும் தோன்றுவது" இயற்கை. ஆதலால் கிராமவாசிகள் இதராளுக்கு பயந்தே அவர்களுக்கு கீழ்ப்படிந்தும், மரியாதையாயும், நடந்துகொள்கிறார்களென்று நினைப்பது முற்றும் தவறு. மேலும் பயத்தினால் செய்யப்படும் காரியங்கள் பலிக்கா. பலித்தாலும் அன்பினால் செய்யப்படும் காரியங்களைப் போல் நீடித்திருக்கா வென்பதை, ஒவ்வொருவரும் அனுபவத்தில் தெரிந்தே யிருக்கிறார்கள். முடிவாக சொல்லுமிடத்து, கிராமவாசிகள் எல்லோரும், "செங்கோலுக்கு முன் சங்கீதம் செல்லுமா?" என்னும் பழமொழியைக் கைப்பிடித்தவர்கள். முற்றிலும் இராஜ விசுவாசிகள். நிற்க,

சில நாட்களுக்கு முன்னர், யாம் சித்தூர் ஜில்லாவுக்கு சென்றிருந்தகாலையில், ஷை ஜில்லாக்களின் அநேக கிராமங்களை பார்க்கும் சமயம் வாய்த்திருந்தது. அது சமயத்தில் ஒவ்வொரு கிராமத்தின் வாசிகளும் கேட்கத்துணிந்த கேள்விகள் மிகவும் ஆச்சரியமாயிருந்தன. சுதேசீயம் என்றவர் எங்கேயிருக்கிறார்? வடக்கே யிருந்து 'வந்தே மாதரம்' என்றவர் வந்திருக்கிறாராமே, அவர் எப்படிப்பட்டவர்? அவர் சவரன்களும் போட்டிருக்கிறாராமே! அது மெய்தானா? வெள்ளைக்கார சாமான்களை எல்லாம் வேண்டாமென்று தடுக்கிறாராம்; அதன்படி அவைகளும் நின்றுவிடுகின்றனவாமே!" என்றும், பத்திரிகையில் வெளியிடக்கூடாத சில விபரீத கேள்விகளும் உண்டாயினவென்றால், கிராமவாசிகளின் தற்கால நிலைமையானது எவ்விதமாயிருக்கிறதென்பதை வாசிப்பவர்களே ஊகித்துக் கொள்ளலாம். 'சுதேசீயம்,' 'வந்தேமாதரம்' ஆகிய இவற்றை மானிடராகக் கருதியிருக்கிறார்களென்றால், அவர்களின் அறியாமைக்கு என்ன சொல்லுவோம்! இவ்வித அந்தகாரத்திலிருக்கும் கிராமவாசிகளுக்கு, இதுவரையில் அவர்கள் அடைந்திராத விசேஷ நன்மைகள் கிடைக்குமென்றும், அப்படி கிடைப்பதற்குரிய மார்க்கங்கள் இன்னவையென்றும், துற்போதனை செய்யப்பட்டாலும் அல்லது பரவினாலும், அதன்படி செய்ய முயலுகிறார்கள். காரணம் தங்களுக்கு செய்யப்பட்ட போதனையானது நற்போதனையா துற்போதனையா என்று பகுத்தறியும் ஞானம் கிடையாது. இதனாலேயே அநேக குழப்பங்களும் கலகங்களும் உண்டாகின்றன. அந்தோ! பாபம்! இக்கலகங்களும் குழப்பங்களும் நம்மை ஆளும் துரைத்தனத்தாருக்கு விரோதமானவை என்பதும் தெரியாது. ஒருசமயம் அவர்களுக்குத் தெரிந்திருந்தாலும், அவை தங்களை பாதிக்கும் என்பது தெரியாது. திருஷ்டாந்தமாய் ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால், பிராமணர்கள் வேளாளர் முதலிய சிலர் தவிர மற்றப்படி கீழ்த்தரமானவர்களே விசேஷமா யிருப்பார்கள். நம் இராஜதானியில் இதுவரையில் நடந்த கலகங்களை கீழ்த்தரமானவர்களேகூடி செய்ததாக விளங்குகிறது. இக்கலகங்களை அமர்த்த அதிகாரிகள் செய்த முயற்சியில் உயிரிழந்தவர்களும், காயப்பட்டவர்களும், மற்றும் ஏனைய கஷ்டங்களை அனுபவித்தவர்களும் விசேஷமாய் கீழ்த்தரமானவர்களே யல்லது மற்றப்படி துற்போதனை செய்த அல்லது துற்போதனை பரவுவதற்கு காரணமான உயர்தரமானவர்க ளல்லர்; அதாவது படிப்பாளிகளல்லர். இவர்களெல்லாம் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டு விசாரணைக்கு கொண்டு வரப்பட்டார்களென்பது உண்மையேயானாலும், கலககாலத்தில் கஷ்டத்தை அனுபவித்தவர்கள் கீழ்தரமானவர்களே. உயர்தரமானவர்களாகிய படிப்பாளிகளுள், ஓர் வகுப்பார் துற்போதனை செய்ய அல்லது அதைப்பரவச்செய்ய, கங்கணம் கட்டிக்கொள்ளுவார்களே யொழிய ஒருபோதும் அவர்கள் கலகஞ்செய்ய கூடமாட்டார்கள். எனவே, இவர்களின் தூண்டுதலுக்கு கீழ்தரமானவர்கள் உட்படாவிட்டால், கலகம் ஏது? குழப்பம் ஏது? மற்றும் தொந்திரவுகள் ஏது?... ஒன்றும் கிடையாது. இனி கீழ்தரமானவர்களின் அறியாமையை ஒழிப்பது எப்படி?

* MANMATHAKANTHA, Vol. I, p. 101.

துலுக்கர் கலாபனை அல்லது ஹைதர் கலாபனை என்று பெரியோர்கள் சொல்லுகிறதை கேட்டதில்லையா? அம்மம்ம! அதை கேட்கும்போதே பஞ்ச பிராணனும் பதை பதைத்து ஒடுங்குமென்றால், அக்காலத்தில் நம்மவர்கள் அடைந்த கஷ்ட நஷ்டங்களுக்கு அளவுண்டோ? அக்காலத்தில் வீடு வாசல் பெண்டுபிள்ளைகள் உற்றார்பெற்றார் உறவினர் முதலிய சகலரையும் விட்டு மூலைக்கொன்றாகப் பரந்து கடும்புலி வாழுங்காட்டில் நம் முன்னோர்களை மறைந்து காலம் கழிக்கும்படி செய்த கொடுங்கோன்மை எங்கே பரந்தது? பொருளை விசேஷமாய் சில விட்டும் திருடர் கையில் அகப்பட்டு உதையுண்டும், பொருளை யிழந்தும், மானங்கெட்டும், இன்னும் ஏனைய கஷ்ட நஷ்டங்களுடன் 6 மாதம் ஒரு வருஷம் வரையில் பிரயாணஞ்செய்த காலம்போய், சென்னையில் வசிக்கும் ஒருவர் சிறிதும் கஷ்ட நஷ்டமின்றி சுகமாய் நாலைந்து தினங்களில் காசி க்ஷேத்திரத்தை அடையும் மார்க்கம் ஏற்பட்டது எப்பொழுது? அவ்வவ்விடத்திய சமாசாரங்களை அவ்வப்போது இலேசாக தெரிந்துகொள்ளும் சௌகரியத்தையும், அபாரமான கல்வியையும், அக்கல்விக்கேற்ற உன்னத பதவியையும், இன்னும் ஏனைய சாஸ்வதமான பெரும்நன்மைகளையும் நாம்அடைந்தது, அன்றொருநாள் பரதன் ஒரு குடைக்கீழடங்கியாண்ட இப்பெரும் பூமியை பகவான் காலக்கிரமத்தில் மாக்ஷிமை தங்கிய ஆங்கில நன்னாட்டார் ஆதீனத்திற்கு உட்படுத்தின பிறகன்றோ? இதனை மறுப்பார் எவருமிலர் ஒருக்கால் இதனை மறுக்க எவரேனும் முற்படினும், அவர்தம் மன சாக்ஷியானது இடந்தராதென்பது முற்றிலும் உண்மை. எனவே, கவர்ன்மெண்டார் நமக்கு செய்த பலவித உபகாரங்களை யெல்லாம் முற்றும் மறந்து, அவர்கள் அதிருப்தியடையும்படியான சட்ட விரோத காரியங்களைச் செய்வது அல்லது செய்யும்படி தூண்டுவது அடுக்குமா?

* "நல்லோ ரொருவ நக்குச்செய்த வுபகாரங்
கன்மே லெழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மே லெழுத்துக்கு நேர்."

என்னும் இப்பாடலின் கருத்தென்ன? நமக்கு பிரிடிஷ் கவர்ன்மெண்டார் செய்த உபகாரங்கள் என்னமாயின? நாம் என்ன வாயினோம்? ஆ! ஆ!! உலகத்தில் நல்லவர்களென்று பெயர் எடுப்பது கடினம். "இந்தியர்கள் இராஜவிசுவாசிகள்" என்று எடுத்த பெயரை இழப்பதென்றால் என்ன பேதமை!

"கண்ணெனப் படுவமூன்று காவலன் கல்விகாமர்
விண்ணினைச்சூழலவோடும் வெய்யவனென்னும்போ
வெண்ணினுட்டலைக் கண்வைத்துக்கண்ணஃதில்லையாயின்
மண்ணினுக் கிருளை நீக்கும் வகைபிறிதில்லமன்னோ!"
சூளாமணி.

"அந்தணர் நூற்கு மறத்திற்குமாதியாய்
நின்றது மன்னவன் கோல்."—குறள்.
"மாதவர் நோன்பும் மடவார் கற்புங்
காவலன் காவலின்றெனி னின்றால்."—மணிமேகலை.

ஆதலால் நம்மவர்களுக்கு முதற் கண்ணாகியும் சகல வளப்பத்திற்கும் சுக சௌகரியங்களுக்கும் காரணமாகியுமிருக்கும் நமது காருண்ணிய கவர்ன்மெண்டாருக்கு விரோதமாய் நடக்கலாமா? கிராமவாசிகளின் க்ஷேமத்தைக் கருதி வியவசாயம் அதாவது பயிர்த்தொழிலை விர்த்தி செய்வதற்காக துரைத்தனத்தார் எடுத்திருக்கும் அபாரமான முயற்சிகளை அறியாதவர் யாவர்? இது விஷயமாகவே, சென்னையில் "மத்திய வியவசாயசங்கம்" தலைமையாகவும், மற்றும் வியவசாயசங்கங்கள் கிளைச் சங்கங்களாகவும் ஆங்காங்கு ஏற்பட்டு நடந்து வருவதை அறியீர்போலும்! சென்னை சைதாப்பேட்டை வியவசாயக் கல்லூரியை பின்னும் பெரிதாக்கி, கோயம்பத்தூரில் பிரம்மாண்டமான கட்டடம் கட்டப்பட்டிருப்பதும் பொய்யோ? இம்மட்டோ! வியவசாய விஷயமாய் வெளிவரும் பத்திரிகைகளையும் ஆதரித்து வருகின்றனர். இதற்கு அத்தாக்ஷியாய் "வியவசாய தீபிகை" என்று மாதம் ஒரு முறை தமிழில் பிரசுரிக்கப்படும் பத்திரிகையை அதிகமாய் † வாங்கி தங்கள் பார்வையிலுள்ள பாடசாலை முதலியவற்றிற்கு கொடுத்துவருகிறார்கள். இன்னும் இது விஷயமாய் துரைத்தனத்தார் செய்து வரும் முயற்சிகளை யெல்லாம் எழுதுவதென்றால் நம்பத்திரிகையே இடம்பெறாது. கைத்தொழில்விஷயமாய் சென்னையிலிருக்கும் சித்திர கல்விச்சாலையே (SCHOOL OF ARTS) போதுமான சாக்ஷி. இச்சாலையில் கைத்தொழில் கற்றுவரும் நம் இராஜதானி சிறுவர்களுக்குக் கணக்கு வழக்கில்லை. இதனால் இன்றைக்கும் ஜீவித்து வரும் நம்மவர்கள் அநேகர் இருக்கிறார்கள். மற்றும் பொதுவாய் பாடசாலைகளென்ன, ஆஸ்பத்திரிகளென்ன, அதிலும் கோஷா ஆஸ்பத்திரிகளென்ன, இவை போன்ற குடிகளின் நன்மையை நாடிய ஸ்தாபனங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அப்படியிருக்க கவர்ன்மெண்டார் எந்த விஷயத்தில் நமக்கு குறை செய்திருக்கிறார்கள்? ஒன்றை சொல்லுங்கள் கேட்போம்!... உத்தியோக விஷயமாய் சிறிதே கவனிப்போம். இரண்டொரு பொறுப்பான உத்தியோகங்

* The valued favors the deserving gain,
Like sculptures in eternal rock remain;
Of virtues tribute charity is sure:
But kind attention to the worthless shown,
Who debts and duties are evermore disown
Like letters written in the wave endure.

† Vide Proceedings of the Madras Government (Financial Department) Order R. No., 162 dated 5th September 1904, Order No. 174 dated 19th September 1904, and the Proceedings of the Court of Wards No. 2977, Misc., dated 3rd November 1904.

கள் தவிர மற்றவைகளிலெல்லாம் நம்மவர்களே அல்லாமல் வேறு யார் இருக்கிறார்கள். அவ்விரண்டொரு பொறுப்பான உத்தியோகங்களைத்தான் நம்மவர்களுக்கு ஏன் கொடுக்கக்கூடாது என்று கேட்பீர்களோ? சொல்லுவம் கேண்மின்! சகல பொறுப்புள்ள உத்தியோகங்களை எல்லாம் குடிகளுக்கே கொடுத்துவிட்டால், பின் அரசாளும் வகுப்பினர் செய்வது தான் என்ன? இராஜப்பிரதிநிதி, சேனாதிபதி முதலிய பொறுப்புள்ள சிலபதவிகளை க்ஷத்திரியர்கள் என்று நம் முன்னோர்கள் சொன்ன அரசாளும் வகுப்பினர் வகிப்பதே முறைமை. அப்படியல்ல வென்றால், நம்மையாண்ட எந்த அரசர் காலத்தில் குடிகளுக்கு சேனாதிபதி இராஜப் பிரதிநிதி முதலிய பொறுப்புள்ள பதவிகள் கொடுக்கப்பட்டிருந்தன? இராஜாங்கத்தில் தற்காலம் நம்மவர்கள் பெற்றிருக்கும் பதவிகளில் ஆயிரத்தில் ஒருபங்கும் அக்காலங்களில் குடிகள் அடைந்ததில்லையே. விஷயங்கள் இவ்வாறாக இருக்க, மேல் நாட்டாரின் கைத்தொழிலின் அபிவிர்த்தியையும் வியாபாரப் பெருக்கையும் கண்டு பொறாமை கொண்டு, அந்நியநாட்டு சாமான்களைக் கொளுத்தியும், வீண்கலகங்களை விளைவித்தும் வருவது எதற்கு? ஒருவருக்கு சமமாகவாவது மேலாகவாவது வரவேண்டுமானால் பொறாமையை (Envy) விட்டு, அவர் செய்து வரும் வழிகளையே பின்பற்றி தளராமல் உழைத்து வரவேண்டும். (Emulation) அப்பொழுதே தாம் கொண்ட நோக்கம் ஈடேறும். அன்பீர்! உண்மையில் நம் தேசத்தின் வியவசாயம், கைத்தொழில், வியாபாரம் இவற்றை விர்த்திசெய்து தேசத்தை செல்வாக்குக்கு கொண்டு வரவேண்டுமென்றால், அப்படி கொண்டுவரக்கூடாதென்று தடுத்தவர்கள் யார்? பின்னும், நமது காருண்ணிய துரைத்தனத்தார் அதற்கு வேண்டிய உதவியைச் செய்வார்களோ. "சுதேசீயம்" என்பதின் உண்மையானகொள்கை தேசத்தின் வியவசாயம் கைத்தொழில் வியாபாரம் இவற்றை விர்த்தி செய்வதானால், அது விஷயத்தில் பூராய் விசுவாசம் காட்டுகிறோம் என்பதாக, நமது சென்னை கவர்னராகிய ஸர் ஆர்தர் லாலி பெருமான் 1906௵ செப்டம்பர்௴ 24௳ கோயம்பத்தூரில் வியவசாயக்கல்லூரியின் அஸ்திவாரக் கல்லை நாட்டிய காலத்தில் சொல்லியிருப்பதே இதற்கு ஓர் முக்கிய அத்தாக்ஷியாகும். இதை விட நமக்கு வேண்டியது வேறென்ன? முடிவாக, மதுரை வாசியாகிய புதுக்கோட்டை மிஸ்டர் துரைராஜ் அவர்கள், மதராஸ் மெயில் பத்திரிகையில் பிரேரேபித்திருக்கிறபடி அந்தகாரத்தி லிருக்கும் ஜனங்களுக்கு, நம் துரைத்தனத்தாரால் நமக்கு கிடைத்துள்ள சாஸ்வத நன்மைகளையும், இனி கிடைக்கக்கூடிய நன்மைகளையும் சவிஸ்தாரமாய் எடுத்துச் சொல்ல இது சமயத்தில் "இராஜவிசுவாச சங்கங்கள்" (Loyal Societies) ஏற்படுவது அவசியம். பின்னும், இது விஷயமாய், இராஜவிசுவாச பத்திரிகைகள் தேசபாஷைகளில் (Vernacular Loyal Journals) வெளிவரில் விசேஷமே. இத்தகையான சங்கங்களும், பத்திரிகைகளும் ஏற்பட்டால் மட்டும் போதாது. துற்போதனைகளில் இக்குண்டு [illegible] முதலிய வீண் புரளிகள் செய்வதால், தங்களுக்கு யாதொரு கஷ்டத்திற்குள்ளாகாமல் விசேஷித்த நன்மைகளையும் சுதந்திரங்களையும் [illegible] [illegible] என்னும் தப்பு எண்ணமு [illegible] அதிகமாய [illegible] [illegible] குடிகளுக்கு, சட்ட ஞானத்தை உண்டாக்குவது அவைகளின் இன்றியமையாக் கடமையாகும். உண்மையில், இந்தியன் பினல் கோட் 124-ஏ., 153-ஏ., செக்ஷன்கள் மாத்திரம் கிராமவாசிகளுக்குத் தெரிந்திருந்தால், துற்போதனை செய்யுங் கூட்டத்தை கண்டளவில் வெகு தூரத்தில் விலகிக்கொள்வார்கள். பின்னும், துற்போதனை செய்பவர் எதிர்ப்பட்டாலும் தலையை நிமிர்ந்துகூட பார்க்கவேமாட்டார்கள். நகரவாசிகளாகிய படிப்பாளிகளில் ஓர் வகுப்பார் துற்போதனை செய்ய பாத்திரர்களேயொழிய மற்றப்படிதாமே கலகஞ்செய்ய முற்படமாட்டார்களென்று முன்னமே சொல்லி விட்டிருப்பதால் அவர்களைப்பற்றிய கேள்வி இது சமயம் உண்டாகாதென்றே நம்புகின்றோம். இனி,

H. E. The Governor's Speech.

"......*Swadeshi*. If it means self-help, if it means encouragement of local enterprise, if it means devolopment of Indian industries and the exploitation of the marvellous resources which she has at her command, then this movement has my entire sympathy.."

Duty of the Government.

கவர்ன்மெண்டாரின் கடமை

என்ன? மேற்கண்டபடி ஏற்படும் இராஜவிசுவாச சங்கங்களுக்கும் பத்திரிகைகளுக்கும், கவர்ன்மெண்டாரின் அவ்வப்போதைய நடவடிக்கைகளும், அவர்கள் ஏற்படுத்தும் சட்டங்களும் உத்திரவுகளும் அடங்கிய போர்ட் சேண்ட் ஜார்ஜ் கெஜட், ஜில்லா கெஜட், முதலிய ஏனைய அவசியமானவும் தமக்கு யுக்தமாகத் தோற்றக்கூடியனவுமான சகல பிரசுரங்களையும் இனமாய்க் கொடுத்து ஆதரிக்கவேண்டியது கவர்ன்மெண்டாரின் முக்கிய கடமையாகும். பின்னும் கிராமவாசிகளுக்கு உபயோகப்படக்கூடியவையும், அவர்கள் அந்தகாரத்தை யொழித்து அவர்களுக்கு இராஜ விசுவாசத்தை வளரச் செய்யக்கூடியவையுமான தேசபாஷா பிரசுரங்களை தருவித்து ஒவ்வொரு கிராமமுனிசீப்புக்கும் இனமாய்த்தந்து பத்திரப்படுத்திவைக்கும்படி செய்வதும், டிஸ்ட்ரிக்ட் கெஜட்டுகளில் மாஜிஸ்டிரிகல் சர்குலர் என்னும் தலைப்பின்கீழ் வரும் இந்தியன் லா ரிபோர்ட்டுகளில் கண்ட தீர்மானங்களை அந்தந்த ஜில்லா பாஷைகளில் பதிப்பிக்கும்படி செய்வதும், பின்னும் விசேஷமே.

NOTICE.

BEST Madras Snuff, **A. S.** Sugantha Mookoothool, Snuff Boxes &c., can be had at

A. KRISHNA & CO.,

Next to Mannady Market, G. T., MADRAS.

WANTED

AN appointment by a Head Watch repairer of ten years' experience in Burma State Railway. Excellent testimonials.

Apply to "C. A." c/o MANAGER

The Morn, Madras, E.

TO ADVERTISERS.

WHEN making your next advertisement list don't forget the INDIAN LAW GAZETTE which is circulated most widely among the masses throughout India, Burma, Ceylon &c.

"The Constant Cooing Lover
Carries off the blushing maid
And the Constant Advertiser
Is the one who gets the trade."

EDITORIAL NOTES.

பத்திரிகாசரியர் குறிப்புகள்.

The Boddam Statute Memorial.

காலஞ்சென்ற ஜட்ஜ் போடாம் அவர்களின் ஞாபக சின்னத்திற்காக ரூ 10,207 இதுவரையில் சேர்ந்திருக்கிறது.

Hon. Justice Sir. Robert Rampini.

கல்கத்தா ஹைகோர்ட் கனம்- ஜஸ்டிஸ் ஸர். ராபர்ட் ராம்பினி அவர்கள் வேலையினின்றும் நீங்கிக்கொண்டு, அடுத்த ஆகஸ்ட்௴ சீமைக்குப் போவாரெனத் தெரியவருகிறது.

Police Cashier in Trouble.

கல்கத்தா போலீஸ் ஆபீஸ் காஷ்கீப்பர் அதாவது பொக்கிஷதார் ரூ 14,000 அபகரித்திருப்பதாக சார்ஜ் செய்யப்பட்டு அரெஸ்ட் செய்யப்பட்டிருக்கிறார்.

Crown Prosecutor for Madras.

சென்னை கிரௌன் பிராசிக்கியூட்டராகிய மிஸ்டர் ஜான் ஆடம் ரஜா பெற்றிருப்பதால் அவருக்கு பதிலாக மிஸ்டர் நியூஜெண்ட் கிராண்ட் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

Attempt to Bribe Jurors.

குல்னா கலகக்கேசில் சிலரை தண்டனைக்குட்படுத்துவதற்காக, வங்காள வாசியாகிய போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர், ஜூரிகளுக்கு லஞ்சம் கொடுக்க முயன்றதாக குற்றம்சாட்டப்பட்டு அலிபூரில் விசாரணை நடந்துவருகிறது.

Mr. Alfred L. Vaillant.

1900௵க்கு முந்தி 18-வருஷங்களாய் இரங்கூன் போலீஸ் கோர்ட்டில, கவர்ன்மெண்ட் பிராசிகியூட்டராயிருந்த மிஸ்டர் ஆல்பிரட் யல். வையிலண்ட், இம்௴ 16௳ காலஞ்சென்றாரெனக் கேட்க வியசனிக்கிறோம்.

The New Madras Judge.

காலஞ்சென்ற ஜட்ஜ் போடாம் ஸ்தானத்திற்கு புதிதாய் நியமிக்கப்பட்ட மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ராஹிம், இம்மாதம் 24௳ வெள்ளிக்கிழமைதினம் வேலையை ஒப்புக்கொண்டு, இரண்டாவது அப்பீல் கோர்ட்டில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லருடன் அமர்ந்தார்.

The Karur Sedition Case.

கரூரில் மிஸ்டர் கிருஷ்ண சர்மா இராஜத்துரோக பிரசங்கங்கள் செய்ததாக, இந்தியன் பினல்கோட் 124. ஏ., 153. ஏ., 505-வது செக்ஷன்களின்படி குற்றம் சாட்டப்பட்டகேஸ், அடுத்த ஆகஸ்ட்மாதம் 17௳ கோயம்பத்தூர் செஷன்ஸ் கோர்ட்டில் மிஸ்டர் [illegible] முன்பாக துடங்கும்.

Punishment to a Sub-Inspector.

சமீபகாலத்தில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் அவுரா டிப்டி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் சிறிது நேரம்கழித்து வந்தாராம். இதற்காக சப் இன்ஸ்பெக்டர் விசாரணைக் கூட்டிற்குள் நிற்கும்படி உத்திரவு செய்யப்படவும், அதன்படி சப் இன்ஸ்பெக்டர் ஒரு நாளெல்லாம் நின்றாராம்.

The Malvalli Riot Case.

மைசூர் மல்வள்ளி கலகக்கேசில், சிட்டி மாஜிஸ்டிரேட்டால் தண்டிக்கப்பட்ட 14 மகம்மதியர்கள், டிஸ்டிரிக்ட் செஷன் ஜட்ஜுக்கு அப்பீல் செய்துகொண்டதில் இம்மாதம் 16௳ வியாழக்கிழமை தினம் கீழ்க்கோர்ட்டாரின் தண்டனை ரத்துசெய்யப்பட்டு, குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

A Riding Accident to a Judge.

இம்மாதம் 10௳ காலை, இரங்கூன் சீப்கோர்ட் ஆக்டிங் சீப் ஜட்ஜாகிய மிஸ்டர் ஜஸ்டிஸ் இர்வின், டல்ஹௌசி பார்க் வழியாய் குதிரைசவாரி போகும்போது, சமீபகாலத்தில் பெய்த கனத்தமழையால் நேர்ந்த ரோட்டின் மிகுந்த சீர்கேடால் குதிரை கால் இடறவும், இவர் கீழ்விழ வலது புஜத்து பூணா எலும்பு ஒடிந்துவிட்டதாம்.

Land Cess for Fasli 1318.

மலபார் கலெக்டரின் யோசனையை அனுசரித்து 1318-ம் பசலிக்கு அடியில் கண்டபடி டிஸ்டிரிக்ட் போர்ட் லாண்ட் ஸெஸ் விதிக்கும்படி கவர்ன்மெண்டார் உத்திரவு செய்திருக்கிறார்கள்:—

	ரூ.	அ.	பை.
சிரக்கால் தாலுக்கா	0	1	8.
கொட்டயம், கள்ளிக்கோட்டை ...	0	1	4.
குரும்பரநாத்	0	1	3.
ஏறநாட், வள்ளுவநாட், பாலக்காடு, பொன்னானி	0	1	5.
கொச்சி, வைநாத்	0	2	0.

Mr. E. B. Powell.

கவர்ன்மெண்ட் பிளீடரும்- பப்ளிக் பிராசிகியூட்டருமாகிய மிஸ்டர் இ. பி. பவலுக்கு எட்டுமாத ரஜா கொடுக்கப்பட்டிருக்கிறது. இவருக்குப் பதிலாக, 22-வருஷங்களாக வக்கீலாய் இருப்பவரும், முன்னொரு சமயத்தில் கவர்ன்மெண்ட் பிளீடருக்கு பதிலாய் வேலை பார்த்தவரும், சிலகாலம் லாகாலேஜ் போதகாசரியராயிருந்தவருமான மிஸ்டர் கே. நாராயணராவ் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஷை ரஜாவானது இம்௴ 24௳யிலிருந்து துடங்குகிறபடியால் ராவ் அவர்கள் 23௳ மாலை ஷை வேலையை ஒப்புக்கொண்டார்.

The Peranai Dam Appeal.

பேரானை அணைக்கட்டு வியாஜ்ஜியத்தில் மதுரை (மேற்கு) சப்ஜட்ஜ் அவர்கள்செய்த தீர்மானத்திற்கு மாற்றமாய், மதுரையிலிருக்கும் மிஸ்டர் ஆர். பிஷர் வகையரா மதராஸ் ஹைகோர்ட்டுக்கு செய்துகொண்ட அப்பீல் இம்மாதம் 20௳ சீப்ஜட்ஜ் அவர்கள், மிஸ்டர் ஜஸ்டிஸ் பின்ஹே அவர்கள் ஆகிய இவ்விருவர்கள் முன்பாக நடந்துவருகிறது. இந்த அப்பீல் முடிய குறைந்தது இரண்டுவாரம் செல்லும் போல் தோற்றுகிறது. வாதிகள் தரப்பில் [illegible]

கோர்ட்டு வக்கீல் மிஸ்டர் டி. ரங்காசாரியாரும் அப்பீல் பிரதிவாதிகளாகிய கவர்ன்மெண்டார் தரப்பில், கனம் அட்வகேட்ஜனரலும், மிஸ்டர் டி. சுப்பிரமணிய அய்யரும் ஆஜராயிருக்கிறார்கள்.

The Mysore Chief Court.

மைசூர் சிப் கோர்ட் 3-வது ஜட்ஜாகிய மிஸ்டர் ஜஸ்டிஸ் பி. யஸ். கிருஷ்ணராவ் 3-மாத ரஜா எடுத்துக்கொள்ளுவதால், மைசூர் வாசியும் 20-வருஷ அநுபோகமுள்ளவரும்-பம்பாய் ஹைகோர்ட் அட்வகேட்டுமாகிய மிஸ்டர் யஸ். யஸ். செட்லர், பி.எ., யல். யல். பி., (MR. S. S. SETLUR, B.A., LL. B.,) அவர்கள் ஷை யாருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டிருப்பதானது மைசூர்வாசிகளுக்கெல்லாம் பெருத்த சந்தோஷத்தை விளைவித்திருக்கிறது. இவர் இம்௴ 20௳ திங்கட்கிழமை பெங்களூரைச்சேர்ந்து 22௳ புதன்கிழமை ஷை வேலையை ஒப்புக்கொண்டார். மேல் உத்தியோகஸ்தருக்குள் சில மாறுதல்கள் உண்டாகுமாதலால் இவ்வருஷ கடைசிக்குள் ஷை வேலையில் இவர் காயமாக்கப்படுவாரெனக் கருதப்படுகிறது.

A Reward of Rs. 1,000.

இம்மாதம் 5௳ மதராஸ் சதரன்மராட்டா ரயில்வேயின் வடகிழக்கு பாதையில், சிங்கராயகொண்டா தங்கத்தூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு மத்தியில், பாலேறு வாராவதியின் தென் கோடியிலிருந்து ரயில் தண்டவாளங்களிரண்டைப் பேர்த்துவிட்டதால், சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குப் புறப்பட்ட மெயில் வண்டியானது, இரவு 1-மணிக்கு மிகவும் அபாயகரமாய், தண்டவாளத்தை விட்டுப் புரண்டது. (பிரயாணிகள் ஒருவருக்கும் காயப்படவில்லை என்றாலும் டிரைவருக்கும், இரண்டு பயர்மென்களுக்கும் காயப்பட்டது). இவ்விதமாய் இரண்டு தண்டவாளங்களைப் பேர்த்து, ரயில் வண்டியை சேதப்படுத்த முயன்ற குற்றவாளிகளை, கண்டு பிடித்து தண்டனைக்குள்ளாக்க புலஞ் சொல்வோருக்கு, ஆயிரம் ரூபாய் இனம் கொடுப்பதாக சென்னை கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

The Milk Supply Bye-laws.

கல்கத்தா முனிசிபாலிடி ஹெல்த் ஆபீசர் டாக்டர் பியர்ஸ், பால் சப்பளை செய்தல் விஷயமாய் சரியான பார்வை இருக்கவேண்டுமென்பதை உத்தேசித்து சில விதிகளைத் தயாரித்திருக்கிறார். கல்கத்தாவில் பால் தயிர் முதலியவைகளின் வியாபார நிலைமையானது சற்றே அநாகரீகமாயும், சுகமில்லாத விதமாயும் இருக்கிறது. இதை சீர்திருத்துவது கடினமாயிருக்குமென்றாலும், எவ்விதமான சீர்திருத்தமாயிருந்தாலும், அதைத்துட்ங்கும்படி ஏற்கவேண்டியதென்பதாக இங்கிலீஷ்மன் பத்திரிகை கூறுகிறது. பின்னும், இப்பொழுது இடையர்கள் அடிக்கடி செத்தைகளையும், மாட்டுத் தொழுவங்களிலிருந்து விலக்கப்படும் வைக்கோல் கூளங்களையும் தங்கள் கரவை மாடுகளுக்குப் போடுவதைத் தடுத்து, சரியானபடி அவைகளை போஷிக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்த, இன்ஸ்பெக்டர்களுக்கு அதிகாரம் கொடுக்கக்கூடிய ஓர் பிரிவு ஷை விதிகளில் ஏற்படவேண்டுமென்று ஷை இங்கிலீஷ்மன் பத்திரிகை வற்புறுத்துகிறது.

The Madras Sedition Case.

சென்னப்பட்டணத்தில் இப்பொழுதுதான் இராஜநிந்தனை கேஸ் துடங்கியது. இதில் எதிராஜ சுரேந்திரநாத் ஆரியா என்பவர் குற்றவாளி. இவர் வங்காள தேசத்துக்கடுத்த பெயர் வைத்துக்கொண்டாலும், இவர் சென்னைவாசியே. ஜாதியில் நாயுடு. இவர் நான்கு வருஷகாலம் வடதேசத்தில் வேதாந்தம் வாசித்துக்கொண்டிருந்தார். பிபின் சந்த்ரபாலர் சென்னைக்கு வந்தகாலத்தில்தான், சென்னை வாசிகளுக்கு இவர் நன்றாய்த் தெரியவந்தது. அது முதல், இவர் ஆந்திர பாஷை அதாவது தெலுங்கு பாஷையில் சுதேசியப் பிரசங்கங்கள் அடிக்கடி செய்யத்தலைப்பட்டார். கடைசியாய் கடந்த மார்ச்சு௴ 9௳யும், மே௴ 3௳யும், மற்று இரண்டு சமயங்களிலும் இராஜ நிந்தனையான பிரசங்கங்கள் புரிந்ததாக இ. பி. கோ., 124-எ., 153-எ., செக்ஷன்களின்படி குற்றம் சாட்டப்பட்டு இம்௴ 9௳ வியாழக்கிழமை மாலை (பெரியமெட்) அவர் வீட்டில் அரெஸ்ட் செய்யப்பட்டார். இவர் எழும்பூர் போலீஸ் கோர்ட்டில் மிஸ்டர் யப். டி. பர்ட் முன்பாக விசாரிக்கப்பட்டு செஷனுக்கு கமிட்டு செய்யப்பட்டிருக்கிறார். (இதன் மற்ற விபரம் அடுத்த மாதத்திய கெஜட்டில் வெளிவரும் செஷன்ஸ் விசாரணையில் காணலாம். இ. லா. கெ., ப—ர்.)

The Tilak Case.

பூனாவாசியாகிய பாலகங்காதரதிலகர் அவர்கள், தாம் இயற்றிவந்த கேஸரி என்னும் வாராந்தர மஹாராஷ்டர பத்திரிகையில், தேசத்தின் துரதிர்ஷ்டம் என்னும் ஏனைய இராஜ நிந்தனையான விஷயங்களை கடந்த மே௴ 12௳யும், ஜூன்௴ 9௳யும் வெளியிட்டதாக, இந்தியன் பீனல்கோட் 124-எ., 153-எ., செக்ஷன்களின்படி (நான்கு) குற்றம் சாட்டப்பட்ட கேசானது, இம்௴ 13௳ முதல் 22௳ இராத்திரி 10-மணி வரையில் பம்பாய் ஹைகோர்ட்டு கிரிமினல் செஷன்ஸில் நடந்து, ஏழு வெள்ளைக்காரர்களும், இரண்டு பார்சிகளுமடங்கிய ஜூரிகள் குற்றவாளி என்று சொல்லவும், பாலகங்காதர திலகர் முதல் இரண்டு குற்றங்களுக்கு தனித்தனி மும்மூன்று வருஷ தீவாந்தர சிக்ஷை விதிக்கப்பட்டதன்னியில், மூன்றாவது குற்றத்திற்கு ரூ 1,000-அபராதம் போடப்பட்டு, நான்காவது குற்றத்திற்காக விடுதலை செய்யப்பட்டு, உடனே கவர்ன்மெண்ட் கப்பலில் ஏற்றப்பட்டார். இவ்விதமாய் பாலகங்காதர திலகருக்கு ஆறு வருஷ தீவாந்தர சிக்ஷை விதிக்கப்பட்ட விஷயமாய் இந்தியர்களெல்லாம் துக்கம் கொண்டாடுகிறார்கள். இம்௴ 23௳ வெள்ளிக்கிழமை இரங்கூனில் அரிசி வியாபாரிகளும், நகை வியாபாரிகளும், மற்றவர்களும் தத்தம் கடைகளை அடைத்துவிட்டார்கள்.

[நிற்க, நமது இந்திய சட்ட கெஜட்டானது சில மாதங்களாக தவக்கப்பட்டு வருவதை அற ஒழித்து, இனி அம்மம்மாதங்களில் கிரமமாய் வெளிவருவதற்காக, தவக்கப்பட்ட ஏப்ரல், மே, ஜூன் மாதங்களின் கெஜட்டை இப்பொழுது ஏககாலத்தில் வெளியிட்டிருக்கிறோமாதலால், பாலகங்காதர திலகரை பம்பாயில் பிடித்ததும், லக்ஷரூபாய் வேண்டுமானாலுங் கட்டுவதாய் தெரிவித்து ஜாமீனில் விடும்படிக் கேட்டதும், அது மறுக்கப்பட்டதும், பிறகு கீழ்க் கோர்ட்டில் நடந்த விசாரணையும், செஷனுக்கு கமிட்டி செய்யப்பட்ட ஆர்டரும், செஷன்ஸில் வக்கீல் வைக்காமல் பாலகங்காதர திலகர் தாமாகவே நின்று வாதித்ததும், செஷன் ஜட்ஜானவர் கேஸின் சாராம்சத்தை ஜூரர்களுக்கு சொன்னதும், கடைசியாக ஜட்ஜ்மெண்ட் கொடுக்கப்பட்டதும், இதற்கிடையில் ஊர் இருந்த நிலைமையும், போலீஸாரின் பந்தோபஸ்தும், பத்து வருஷங்களுக்குமுன் பாலகங்காதர திலகர் தண்டிக்கப்பட்டு 1½-வருஷத்திற்கெல்லாம் விடுதலை செய்யப்பட்ட விபரமும், இம்மாதத்திய கெஜட்டில் பதிப்பிக்க முயன்றால், பத்திரிகை தவக்கப்படும் என்று யோசித்து விடுத்தனம் என்றாலும், அடுத்த கெஜட்டில் ஷை விஷயங்கள்யாவும் விபரமாய் பதிப்பிக்கப்படும். இ. லா. கெ., ப-ர்.]

THE SINGAPORE CHETTIES.

A LIBEL CASE.

சிங்கப்பூர் நாட்டுகொட்டை செட்டிகளைப் பற்றிய அவதூரு கேஸ்.

சிங்கப்பூரில் "ஸ்டிரேயிட் டைம்ஸ்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகை யொன்று பிரசுரிக்கப்படுகிறது. கடந்த ஜனவரி௴ 21௳ செவ்வாய்க்கிழமை வெளியானபத்திரிகையில், சிங்கப்பூர் நாட்டு கொட்டை செட்டிகளைப்பற்றி ஒரு அவதூரான சமாசாரம் எழுதப்பட்டது. அதாவது, "முதல் வகுப்பார் குருக்கள் என்றும், இரண்டாது வகுப்பார் க்ஷத்திரியர்கள் என்றும் சொல்லப்படும் அநேக உட்பிரிவுகளடங்கிய தென் இந்தியா தமிழ் வம்சத்தாருக்குள், நாட்டு கொட்டை செட்டிகள் மூன்றாவது வகுப்பைச் சேர்ந்தவர்கள். எதற்காக நாட்டு கொட்டைசெட்டிகள் தங்கள் தலையை மொட்டையடித்து கொண்டும், காதுகளை தொளை செய்து கொண்டுமிருக்கிறார்கள் என்று கேட்டால், அது காரணத்தை அவர்களில் ஒருவரும் வெளியிடுவதில்லை. இது விஷயமாய் பத்திரிகையில் வெளியிடக்கூடாத அநேக காரணங்களிருந்தாலும், அடியில் கண்டிருக்கும் காரணத்தைக் காட்டிலும், அங்கீகரிக்கத்தக்க வேறொருநல்லகாரணம் கிடையாது. அதாவது, ஆதியில் உலகம் உண்டான காலத்தில், ஒரு மகம்மதியன் ஆசாரத்துக்கு விரோதமாய் தமிழ் ஸ்திரீயை அதாவது ஹிந்து ஸ்திரீயை கலியாணம் செய்து கொண்டான். இவர்களுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். ஆசாரத்துக்கு விரோதமான கலியாணத்தால் உதித்த இந்த ஆண்பிள்ளையை, எந்த ஜாதியைச் சேர்ந்தவனென்று சொல்வது என்னும் சந்தேகம் உண்டானது. கடைசியாக, தந்தையாகிய மகம்மதியனைப் போல தலையை மொட்டையடித்துக்கொள்ளவும், தாயாகிய ஹிந்துஸ்திரீயைப்போல காதுகளை தொளை செய்து கொள்ளவுமான ஒரு நூதன ஜாதியைச் சேர்ந்தவனாக ஏற்படுத்த வேண்டுமென்று பெற்றோர் முடிவு செய்தார்கள். இந்த ஏற்பாட்டின் மூலமாய் உண்டானவர்கள் தான், தற்கால நாட்டுகொட்டை செட்டிகள்.

மேற் சொன்னவற்றில், நம்பக்கூடியவரையில் அங்கீகரிக்கலாம். இது எப்படியானாலும், செட்டி இவ்விடத்தில் (அதாவது சிங்கப்பூரில்) இருந்து, அவர் வியாபாரத்தை விர்த்திசெய்து வருகிறார்."

The Strait Times, 21st Jan., '08.

"The Chetties form the third caste of the numerous sub-divisions of the Tamil race of Southern India, the priest being the first and the warriors the second....

Just why he shaves his head and punctures his ears is a sore point with the Chetty, one on which he refuses to enlighten the inquisitive and audacious Occidantal. There are numerous stories to account for it, most of them like a good deal else connected with the Hindu religion, unprintable, but the following may be taken for lack of a better :—

It is said that in the days when the world and the Tamil race were in their infancy, a Mahomedan committed the heinuos offence of marrying in Hindu woman. The Indian Mahomedans shave their heads, while the Hindus puncture their ears. When the offspring of this ill-assorted marriage appeared upon this mundane scene, the question as to what his caste and religion should be were hotly debated by the parents, who eventually decided that he should establish a new caste which should have the shaven head of the Mahomedan and the punctured ears of the Hindu. The result of the Chetty of to day.

This may be taken for what it is worth. At any rate, the Chetty is here and is rapidly extending the field of his labours."

இதைக்கண்ட சிங்கப்பூர் செட்டிகளும், அவர்கள்மதஸ்தர்களும் ஷை பத்திரிகையின் சொந்தக்காரர்களாகிய ஸ்ட்ரெய்ட் டைம்ஸ் பிரஸ், லிமிடெட் கம்பெனியார்பேரில் 50,000 டாலருக்கு மான நஷ்டதாவா செய்திருக்கிறார்கள். இந்த வியாஜ்ஜியமானது இம்௴ 14௳ செவ்வாய்க் கிழமை சிங்கப்பூர் சுப்ரீம் கோர்ட்டில் சீப் ஜட்ஜ் மிஸ்டர் ஏ. ஜி. லா முன்பாக துவக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மிஸ்டர் ஆர். ஜி. வான் சோமிரனும், மிஸ்டர் ஆர்-செண்ட். ஜே. பிராட்டலும், பிரதிவாதிகளாகிய ஷை பத்திரிகையின் சொந்தக்கார் தரப்பில் மிஸ்டர் இ. வி. எல்லிசும், மிஸ்டர் இ. எமர்சனும் ஆஜரானார்கள்.

இந்த வியாஜ்ஜியத்தில், எ. கே. யம். வீரப்ப செட்டி, கே. வி. ஏ. எல். சோமசுந்தரஞ்செட்டி, ஏ. ட்டி. கே. பி. யல். சுப்பிரமணியஞ்செட்டி, யல். ஆர் யம். யஸ். வி. பலனியப்பசெட்டி, பி. ஏ. பி. பலனியப்பசெட்டி, யம். ட்டி. ட்டி. கே. ஆர். ஏ. ஆர். முத்தையசெட்டி, ட்டி. யஸ். குளந்த வாளன் செட்டி, ஏ. ட்டி. க. யல். ஏ. ட்டி. சுப்பிரமணியஞ் செட்டி, யம். ட்டி. ட்டி. கே. ஆர். வி. வைரவன் செட்டி, ஆர். யம். பி. வி. அண்ணாமலை செட்டி, யஸ். ஆர். யம். சுப்பிரமணியஞ் செட்டி, ஆர். யம். வி. யல். சிதம்பரம் செட்டி, கே. பி. வி. ஆர். வீரப்பசெட்டி, யம். யல். ஆர். யம். சூனசுந்தரஞ் செட்டி, யம். வி. முத்து கருப்பன் ஆகிய இவர்கள் தங்களுக்காகவும், சிங்கப்பூரி லிருக்கும் இதர செட்டிகளுக்காகவும், செட்டிக்கூட்டத்தாருக்காகவும், வாதிகளாக ஏற்பட்டார்கள்.

கடந்த மே௴ 8௳ வெள்ளிக்கிழமை சேம்பரில், மிஸ்டர் ஜஸ்டிஸ் லா முன்பாக, ஷை வியாஜ்ஜியமானது விசாரணைக்கு வந்த பொழுது, மேல் நடவடிக்கைகள் நடத்துவதற்கு முன்னமே, "இதர செட்டிகளை நீக்கி யாராவது ஒருவர்பேரில் அவதூரு குறிப்பிடப்பட்டிருக்கிறதென்று பிராதில் கண்டிருப்பது சந்தேகமாயிருப்பதாலும், அப்படி அந்த அவதூரு வார்த்தை யாரையாவது பாதிக்குமேயானாலுங்கூட, செட்டிக் கூட்டத்தாருடைய சமுதாயத்தை தான் பாதிக்குமாகையாலும், வாதியின் வியாஜ்ஜியம் செல்லத்தக்கதா?" என்னும் இஷ்யூவை விசாரிக்கவேண்டுமென்று உத்திரவு செய்தார். பின்னும், இவ்வியாஜ்ஜியத்தின் பிரதிவாதியை ஷை இஷ்யூவில் வாதியாக பாவித்துக்கொள்ளவேண்டுமென்றும் உத்திரவு செய்தார்.

பிராதில் கண்டிருக்கிறதாவது :— சிங்கப்பூர் செட்டிகளும், செட்டி கூட்டத்தாரும், சிவபெருமானை வழிபடும் சிவனடியார்களான ஹிந்து மதத்தைச்சேர்ந்த தென்னிந்தியாவின் சுதேசிகள். மதம்-ஜாதி-விஷயத்தில், எல்லா ஹிந்துக்களிலும் மேன்மைபொருந்திய குலஸ்தர்களான தனி[illegible] சேர்ந்தவர்கள். பரம்பரை மூலமாயாவது அல்லது மற்றெம் மூலமாயாவது அவர்கள் தமிழ்[illegible]யைச் சேர்ந்தவர்களல்லர். அவர்கள் [illegible]

மான சந்ததியைச் சேர்ந்தவர்களென்று வழங்கிவருகிறார்கள். அவர்கள் இதர ஜாதியர்களோடாவது, மதஸ்தர்களோடாவது விவாகம் மூலமாயாவது அல்லது எவ்விதமாயாவது சம்பந்தஞ் செய்வதினால், தங்களுடைய ஜாதியாருக்கு ஒரு இகழ்ச்சியும் அசுத்தமும் வரவொட்டாமல், அவர்கள் முன்னோர்கள் காலமுதற்கொண்டே அனேக நூற்றாண்டுகளாக, அதிக ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்துக்கொண்டு வருகிறார்கள். அப்படி தங்களுடைய ஜாதியில் ஆணோ, பெண்ணோ, ஒருவர் ஹத்துமீறி இதரவம்சத்தார்களோடாவது அல்லது தங்களுடைய ஜாதியைச் சேராதவர்களோடாவது விவாக மூலமாயாவது அல்லது எவ்விதமாவது சம்பந்தம் செய்யும் பக்ஷத்தில், அவரை உடனே அசுத்தரென்று தங்களுடைய ஜாதியை விட்டு நீக்கிவிடுகிறார்கள். ஆகையால் யாராவது ஒரு செட்டியையாவது செட்டிகளையாவது அல்லது அவர்களுடைய முன்னோர்களையாவது அவதூறில் காணப்பட்ட விவாக மூலமாய் அல்லது வேறுவித சம்பந்தத்தால் ஜனித்தவர்களென்று சொல்வது, செட்டிகளுக்கு மிக மானக்குறைவையும் இகழ்ச்சியையும் கோபத்தையும் உண்டுபண்ணத் தக்கது. மேலும் அப்படிச் சொல்வதினால் அவர்கள் ஹத்து மதத்தின் உயர்ந்த வகுப்பார் தங்களைப்போலொத்த இதர ஜாதியரிடம் ஒருவிதமான இகழ்ச்சியையும் அவமானத்தையும் அடைகிறார்கள். பின்னும் செட்டிகள் தமிழாளென்றாவது அல்லது தமிழ் வம்சத்திலுண்டானவர்களென்றாவது சொல்வதுங்கூட அவர்களுக்கு இகழ்ச்சியையும் கோபத்தையும் உண்டுபண்ணத்தக்கது.

பிரதிவாதிகளானவர்கள், நாட்டு கொட்டை செட்டிகளும், ஹிந்துக்களும், மகம்மதியர்களும், இன்னும் ஏனைய தென்னிந்தியா வாசிகளும் பரவியிருக்கும் இந்தியாதேச முழுவதிலும், இன்னும் அதற்கு கிழக்கு பிராஞ்சங்களிலும் பரவி வரும் "ஸ்டிரய்ட் டைம்ஸ்" என்னும் தங்கள் பத்திரிகையில், ஷை அவதூரான விஷயத்தை பிரசுரித் திருப்பதானது, அவர்களுடைய (அதாவது நாட்டுகொட்டை செட்டிகளுடைய) கௌரவத்திற்கும், கீர்த்திக்கும் ஹானி விளைவித்து, ஹிந்து மதத்தைச் சேர்ந்த இதர ஜாதியாருடையவும், பொதுவில் மக்மதியர்கள் முதலான தென் இந்தியா சுதேசிகளுடையவும் பரிகாசத்துக்கு ஆளாக்கி, ஷை யார்களுடனும், அவர்கள் கூட்டத்தாருடனும் தங்களுக்கு அதாவது நாட்டு கொட்டை செட்டிகளுக்கிருந்த சினேக சஹவாசத்தை பாதித்து விலக்கக காரணமாயிருக்கிறதென்றும், பின்னும் தாவாவில் குறிக்கப்பட்டிருக்கிறது.

சிங்கப்பூர் நாட்டு கொட்டை செட்டி கூட்டத்தாரனைவரும், அதைச்சேர்ந்த ஒவ்வொரு செட்டிகளும், கடந்த ஜனவரி மீ 25௳ பிறந்த ஒரு பத்திரம் மூலமாக, இந்த வியாஜ்ஜியத்தை நடத்தும்படி வாதிகளுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். முடிவு பிந்தியே தெரியவரும்.

பூலோக விநோதக்கதை.

(5-ம் புஸ்தகம்.)

இப்புத்தகத்தின் முதல் நான்கு புத்தகங்களை வாசித்துள்ளோமாதலின், அவற்றில் அடங்கியது போலவே புத்திபுகட்டக்கூடிய அநேக விநோதமான கதைகள் படங்களுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

NEW PUBLICATIONS.

புதிய பிரசுரங்கள்.

THE DAYS OF A DANCING GIRL:

Messrs. REX & Co., Madras. Price Re. 1-0-0

This book which is obviously the production of a shrewd observer of the life of India, is, perhaps, the only one of its kind, that we have come across. It is with the greatest skill that the writer has brought together a great store of worldy wisdom within the limits of a single volume. The way in which all kinds of shams in Indian life are exposed and all the pitfalls in life are pointed must prove very useful to the young and the inexperienced. A few more works from the pen of the author as brilliant as the Days of the Dancing Girl would entitle the author to the honour now so widely and so secretly paid to the great Reynolds himself.

போஜ சரித்திரம்.

" நெல்லுக்கு உமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவுக்கும் உண்டு "

என்னும் மொழியையே பொய்ப்படுத்துமாறு, எது விஷயத்திலும் யாதொரு குறைவுபாடுமின்றி போஜ சரித்திரம், நாடக ரூபமாக வெளிவந்திருப்பதைக் கண்டு அகமகிழ்கின்றோம். புஸ்தகத்தை பார்த்த அளவிலேயே, 'போஜதருவான கொடை' யாளரின் புண்ணிய சரித்திரமென்பதை, அதன் நேர்த்தியான பயிண்டும், அப்பயிண்டின் ஒரு புரத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மி படத்தின் அலங்காரமுமே கூறும். இவ்வளவு அற்புதமான பயிண்டு செய்யப்பட்டுள்ள தமிழ் நூல், இது வரையில் வெளிவரவில்லை யென்பதை எவரும் மறுக்க முடியாது. புஸ்தகத்தைத்திறந்து பார்த்தாலேபோதும். மிகவும் உயர்ந்த கடிதத்தில் முத்துபோல அச்சடிக்கப்பட்டிருப்பதும், இடை இடையில் மிகவும் பளபளப்பான கடிதத்தில் பொட்டகிராப் சித்திரங்கள் 16 அமைக்கப்பட்டிருப்பதும், விஷயங்களை படிக்க இடங்கொடாமல் கண்களை தம்வயமாக்குகின்றன. இதன் பின் விஷயங்களை வாசிக்க வாசிக்க, செந்தமிழ் பாடல்களும் வடநூல்களும் மேற்கோள்களாக முன்வந்து, ஸ்ரீ போஜராஜருடைய பால்ய சரித்திரத்தை பளிங்குபோல் காட்டுகின்றன. நவரசமும் சொட்டும் இந்நாடகத்தை, மதராஸ் ஹைகோர்ட்டு வக்கீல் பிரம்மஸ்ரீ த. ச. நாராயண சாஸ்திரியார் பி. ஏ., பி. எல்., அவர்கள் நந்தமிழ் செல்வர்கள் யாவரும் இதனை வாசிக்குமாறு எளிய தமிழ் நடையில் வெளியிட்டிருப்பதைக்கண்டு மிகவும் களிக்கின்றோம். விலை ரூபா 1—8—0.

இதன் நூலாசிரியராகிய ம-ா-ா-ஸ்ரீ பி. ஏ. வ. இராஜேந்திரம் பிள்ளையவர்கள், தமது 'விகடதூதன்' பத்திரிகைக்காக ஓயாமல் உழைத்து வந்ததில், தேக அசௌக்கியப்பட்டிருந்ததால், முதல் நான்கு புத்தகங்களை வாசித்த அன்பர்களின் வேண்டுகோளின்படி, இவ்வைந்தாம் புத்தகத்தை துரிதமாய்கொண்டுவர தவக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. என்றாலும், இத்தமிழ் உலகத்துக்கு இத்தகைய ஞானநூல்களை கதாரூபமாய், மேலும் மேலும் எழுதி உதவும்படி ஷை பத்திராதிபருக்கு தீர்க்காயுளையும் நோயற்ற வாழ்வையும் கடவுள் கிருபை செய்வாராக.

THE MADRAS ESTATES LAND ACT I OF 1908.

பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம் ௵ 1-வது ஆக்ட்.

(முன் தொடர்ச்சி.)

கிரயதாரருக்கு ஸெர்டிபிகேட் கொடுக்க வேண்டுமென்பது.

105. கிரயத்தொகை பூர்த்தியாய்ச் செலுத்தப்பட்டிருக்கிறபோது, விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தர் சொத்தைக் கிரயதாரரிடத்தில் ஒப்பிப்பதோடுங்கூட, வாங்கப்பட்ட சொத்தையும் செலுத்தப்பட்ட கிரயத்தையும் விவரமாகக்கண்ட ஒரு ஸெர்டிபிகேட்டில் தாம் கையெழுத்திட்டு அதை அவருக்குக் கொடுக்கவும் வேண்டும்.

விற்றுவந்த பணத்தை ஒருவகை செய்வது.

106. (1) இந்த ஆக்டின்படி ஜப்திசெய்யப்பட்ட சொத்தின் ஒவ்வொரு விற்பனையிலும் கிடைத்த பணத்திலிருந்து, விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தர் - விற்பனைக்குப்பிடித்த செலவுகளுக்காக ரூபாய்க்கு ஒரு அணாவுக்கு மேற்படாத வீதப்படி கழித்துக்கொண்டு, அந்தப்படி கழித்த தொகையைத் தாசில்தாரருக்கு அனுப்பவேண்டும்.

(2) பிறகு, ஷை உத்தியோகஸ்தர் - ஜப்தி விஷயமாகவும் 95-வது பிரிவிற்கண்ட விற்பனையைப்பற்றிய நோட்டீஸையும் பிரகடனத்தையும் பிறப்பிப்பது விஷயமாகவும் ஜப்திதாரருக்குப் பிடித்திருக்கும் செலவுகளில், அந்த ஜப்திதாரரால் சவதரிக்கப்பட்ட செலவுக் கணக்கைப் பரிசோதித்துப் பார்த்தபிறகு எவ்வளவுதொகை கொடுப்பது நியாயமென்று ஷை உத்தியோகஸ்தருக்குத் தோற்றுகிறதோ அவ்வளவு தொகையை ஜப்திதாரருக்குக் கொடுத்துவிடவேண்டும்.

(3) எதற்காக ஜப்தி செய்யப்பட்டதோ அந்த பாக்கியைத் தீர்ப்பதற்காக, மிகுந்திருக்கும் தொகையை உபயோகப்படுத்தவேண்டும்.

(4) (இன்னும் ஏதாவது) மிகுதி இருந்தால் அதை யாருடைய சொத்து விற்கப்பட்டிருக்கிறதோ அந்த நபரிடத்தில் ஒப்பிக்கவேண்டும்; இவர் - விற்றுவந்த பணத்திலிருந்து ஏதாவது பாக்கி தீர்க்கப்பட்டிருந்தால் அதற்காக விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தரிடமிருந்து ஒரு ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும்.

(5) ஜப்திதாரராவது ஜப்திசெய்யப்பட்ட சொத்தின் சொந்தக்காரராவது விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தருடைய தீர்மானத்தைப்பற்றி அதிருப்தியடைந்தால், உபய கட்சிக்காரர்களில் எவராகிலும் கலெக்டருக்கு விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், அந்தக் கலெக்டரானவர் - சொத்தை ஜப்திசெய்து விற்பனைக்குக் கொண்டுவந்ததற்காக இவ்வளவுதொகை செலவாயிருக்குமென்று நிர்ணயிக்கவேண்டும்.

விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தராவது (அவருக்குக்) கீழ்ப்பட்டிருப்பவராவது சொத்தை விலைக்குக் கேட்கவுங் கூடாது வாங்கவுங் கூடாதென்று தடுப்பது.

107. இந்த ஆக்டின்படி சொத்தை விற்பனைசெய்யும் எந்த உத்தியோகஸ்தரும், அப்படிப்பட்ட உத்தியோகஸ்தரால் வேலையில் வைத்துக்கொள்ளப்பட்டோ அல்லது அவருக்குக் கீழ்ப்பட்டோ இருக்கும் எந்த நபரும் - நாமாகவாகிலும் இதரர்கள் மூலமாகவாகிலும் அப்படிப்பட்ட விற்பனையில் விற்கப்படும் யாதொரு சொத்தை விலைக்குக் கேட்கவுங்கூடாது, அந்த சொத்தில் எவ்வித பாத்தியதை அடையவுங்கூடாது, அடைய எத்தனிக்கவுங்கூடாது.

பாயக்காரியாவது பயிரிடுகிறவராவது தம்முடைய நிலக்காருக்காகச் செலுத்தியிருக்கிற தொகையைக் குத்தகைத் தொகையிலிருந்து கழித்துக்கொள்ள அந்தப் பாயக்காரி அல்லது பயிரிடுகிறவருக்குள்ள பாத்தியதை.

108. (1) தமக்கு அடுத்து மேற்பட்டுள்ள நிலக்காரரல்லாமல் வேறே யாதொரு நபர் ஜப்தி நடவடிக்கைகள் மூலமாக யாதொரு பாயக்காரி அல்லது பயிரிடுகிறவரிடமிருந்து குத்தகைத் தொகை பாக்கியை வசூலித்தால், அந்தப் பாயக்காரி அல்லது பயிரிடுகிறவர் - அந்தப்படி வசூலிக்கப்பட்ட தொகையை ஷை நிலக்காரருக்குத் தாம் செலுத்தத்தக்க யாதொரு குத்தகைத் தொகையிலிருந்து கழித்துக்கொள்ளச் சுதந்தரமுள்ளவராவார்; அவ்விதமாகவே, இந்த நிலக்காரர் - தாம் பாக்கிதாரராயிராத விஷயத்திலே தம்முடைய நிலக்காரருக்குத் தாம் செலுத்தத்தக்க யாதொரு குத்தகைத் தொகையிலிருந்து அந்தத் தொகையைக் கழித்துக்கொள்ளச் சுதந்தரமுள்ளவராவார்; பாக்கிதாரராயிருக்கிற நிலக்காரருக்குக் கீழேயுள்ள ஒவ்வொரு நிலக்காரரும் இந்தப்படியே செய்துகொள்ளச் சுதந்தரமுள்ளவராவார்.

(2) 87-வது பிரிவின்படி தொகை செலுத்துகிற யாதொரு பாயக்காரி அல்லது பயிரிடுகிறவர் தாம் செலுத்தியிருக்கிற தொகையில் இந்தப் பிரிவின்படி தாம் கழித்துக்கொண்டிராத யாதொரு பாகத்தைப் பாக்கிதாரரிடமிருந்து வசூலிப்பதற்கு ஸிவில் கோர்ட்டிலே வியாஜ்ஜியம் தொண்டுவருவதற்காக அந்தப் பாயக்காரி அல்லது பயிரிடுகிறவருக்குள்ள பாத்தியதைக்கு இந்தப் பிரிவிலுள்ள எதனாலும் பாதகமுண்டாகமாட்டாது.

நிலத்துக்குடையவர் ஜப்தி செய்வதும் கோர்ட்டார் ஜப்தி செய்வதும் முரண்படுவது.

109. 5-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி எந்த மாசூலிலிருந்து (தமக்குச் சேரவேண்டியதை) முதல்கடனைகப் பெறுவதற்கு யாதொரு நிலத்துக்குடையவர் பாத்தியதையுள்ளவரா யிருக்கிறாரோ அந்த மாசூலை ஜப்தி செய்யும்போது அவருக்குள்ள சுதந்தரமும் ஒரு ஸிவில் கோர்ட்டாரால் செய்யப்பட்ட ஜப்திமூலமாகப் பாத்தியதை கொண்டாடுகிற நபருக்குள்ள சுதந்தரமும் எவ்விதமாகவேனும் முரண்படும்போது, ஷை நிலத்துக்குடையவருடைய சுதந்தரமே பலமானதாகும்; ஆனால், அப்படிப்பட்ட நிலத்துக்குடையவர் செய்த ஜப்திகாரணமாகக் கலெக்டர் ஷை சொத்தை விற்றால், அப்படி விற்றுக்கிடைத்த பணத்தில் மிகுதியாக நிற்கும்தொகை யாருடைய சொத்து விற்கப்பட்டிருக்கிறதோ அந்த நபருக்கு 106-வது பிரிவின்படி செலுத்தப்படாமல், எந்தக் கோர்ட்டிலிருந்து ஜப்தி உத்தரவு பிறந்ததோ அந்தக் கோர்ட்டில் டிபாஸிட்டாகக்கட்டிவைக்கப்படும்.

ஆட்சேபனை செய்துகொண்டே தொகை செலுத்துகிறதாகக் காட்டினால், அதைச் சட்ட சம்மதமானதென்று எண்ணவேண்டுமென்பது.

110. நிலத்துக்குடையவரால் தாவா செய்யப்படுகிற குத்தகைத்தொகைபாக்கி ஆட்சேபனை செய்துகொண்டேயானாலும் செலுத்துவதாகக்காட்டினால், அதைச் சட்டசம்மதமானதாகவே கொள்ளவேண்டும்; அப்படி செலுத்துவதாகக்காட்டினதன்மேல், ஜப்திதாரர்—சொத்தை ஜப்திசெய்வதையோ விற்பதையோ நிறுத்திவிடவும் ஜப்திசெய்யப்பட்டிருந்தால் ஜப்திசெய்யப்பட்ட சொத்தை விடுதலை செய்யவும் கடமைப்பட்டவராவார்: ஆனால், அப்படிக்கொடுப்பதாகக் காட்டுகிற தொகையைப் பெற்றுக்கொள்ளும்போது, தொகை செலுத்துகிற நபருக்குக் கொடுக்கப்படும் ரசீதில் ஆட்சேபனையோடே தொகை செலுத்தப்பட்டதென்னும் சங்கதியைக் கண்டெழுதவேண்டும்.

ரயத்தின் கைப்பற்று நிலத்தை விற்பது.

கைப்பற்று நிலத்தை விற்பது.

111. யாதொரு பாக்கியானது எந்த ரெவினியு வருஷத்தில் பாக்கியாகச் சேர்ந்து வந்திருக்கிறதோ அந்த ரெவினியு வருஷத்துக்குள் செலுத்தப்படாவிட்டால், ஷை பாக்கிக்கும் அதற்குள்ள வட்டிக்கும் விற்பனைக்கு ஏதாவது செலவு பிடித்திருந்தால் அதற்கும் ஈடாய் இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிற விதமாக நிலத்துக்குடையவர் கைப்பற்று நிலத்தையாவது அதன் யாதொரு பாகத்தையாவது விற்பது சட்டசம்மதமாகும்.

விற்பனை செய்ய உத்தேசித்திருப்பதைக் குறித்து நோடீஸ்.

112. யாதொரு பாக்கி யாருக்குச் சேரவேண்டியதாயிருக்கிறதோ அந்த நிலத்துக்குடையவர் இதற்கடுத்து முந்திய பிரிவின்படி கொடுக்கப்பட்ட அதிகாரங்களை உபயோகப்படுத்திக்கொள்ள உத்தேசிக்கிறபட்சத்திலே, அவர்-பாக்கிதாரருக்குக் கலெக்டர் மூலமாக ஒரு எழுத்து மூலமான நோடீஸ் சேர்ப்பிக்கவேண்டும்: அந்த நோடீஸில்-பாக்கிக்காகவும் வட்டிக்காகவும் செலவேதாவதிருந்தால் அதற்காகவும் எவ்வளவுதொகை சேரவேண்டுமென்பதையும், எந்தக் காலவரையறைக்காக அது சேரவேண்டுமென்பதையும் எந்தக் கைப்பற்று நிலத்தின் சம்பந்தமாக அது சேரவேண்டுமென்பதையும் காணவேண்டியது மல்லாமல் நோடீஸ் சேர்ப்பித்த தேதிமுதல் முப்பது தினத்துக்குள்ளாக ஷை பாக்கிதாரர் அந்தத் தொகையைச் செலுத்தாவிட்டாலும் விற்பனை செய்வதற்குரிய பாத்தியதையை ஆட்சேபித்துக் கலெக்டரிடத்தில் வியாஜ்ஜியம் தாக்கல் செய்யாவிட்டாலும் ஷை நோடீஸில் குறிப்பிட்டிருக்கும் மேலேகண்ட கைப்பற்று நிலமாவது அதைச்சேர்ந்த யாதொரு-பாகமாவது விற்றுவிடப்படுமென்று (ஷை நோடீஸ் மூலமாக) அவருக்குத் தெரியப்படுத்தவும் வேண்டும். எந்த ரெவினியு வருஷத்துக்காக மேலேகண்டபடி பாக்கியிருக்கிறதோ அந்த ரெவினியு வருஷத்தின் முடிவிலிருந்து ஒரு வருஷகாலத்துக்குள்ளாக ஷை நோடீஸைக் கலெக்டருக்கு அனுப்பவேண்டும்.

ஷை நோடீஸைச் சேர்ப்பிப்பதற்கான கட்டணத்தோடுகூட அந்த நோடீஸுக்கு நான்கு பிரதிகளைக் கலெக்டருக்கு அனுப்பவேண்டும்; கலெக்டரானவர்-பாக்கிதாரருக்காவது அதிகாரம் பெற்றிருக்கிற அவருடைய ஏஜெண்டுக்காவது அவர் சாதாரணமாய் வாசஞ்செய்யும் இடத்திலுள்ள அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த யாதொரு வயதுவந்த புருஷருக்காவது ஒரு பிரதியை ஒப்பித்துச் சேர்ப்பிக்கும்படியாய்ச் செய்யவேண்டும்; அல்லது, அந்தப்படி சேர்ப்பிக்கமுடியாத விஷயத்திலே, அவர் கடைசியாக வாசஞ்செய்த இடம் தெரிந்திருந்து அப்படிப்பட்ட இடம் ஏதாவது அவருக்குக் கைப்பற்று நிலத்திலிருந்து பத்து மைல் தூரத்துக்குள்ளாக இருக்கிற விஷயத்திலே அந்த இடத்தில் யாவருக்கும் தெரியும்படியான யாதொரு பாகத்திலாவது, கைப்பற்று நிலத்தில் யாவருக்கும் தெரியும்படியான யாதொரு பாகத்திலாவது, ஷை நோடீஸின் பிரதியை ஒட்டிச் சேர்ப்பிக்கும்படியாய்ச் செய்யவேண்டும்.

ஒவ்வொரு விஷயத்திலும் ஷை நோடீஸுக்குப் பிரதிகளை—அந்த நோடீஸ் எந்த நிலத்துக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த நிலத்தின்மேலும் அந்த நிலம் எந்தக் கிராமத்திலிருக்கிறதோ அந்தக் கிராமத்திலும் யாவருக்கும் தெரியும்படியான இடங்களில் ஒட்டிவைக்கவேண்டும்.

சேர்ப்பித்த தேதியை நிலத்துக்குடையவருக்குத் தெரிவிப்பது.

113. (நோடீஸ்) சேர்ப்பித்ததேதியை நிலத்துக்குடையவருக்குத் தபால்மூலமாக உடனே தெரிவிக்கவேண்டும்.

விற்பனைக்காக விண்ணப்பம்.

114. மேலேகண்ட நோடீஸ் சேர்ப்பிக்கப்பட்ட தேதிமுதல் முப்பது தினத்திற்குள்ளாக பாக்கித்தொகை செலுத்தப்படாமலும் விற்பனை செய்வதற்குரிய பாத்தியதையை ஆட்சேபித்துக் கலெக்டரிடத்தில் யாதொரு வியாஜ்ஜியமும் செய்துகொள்ளப்படாமலுமிருந்தால், அல்லது அப்படிப்பட்ட வியாஜ்ஜியத்தில் பாக்கிதாரருக்கு விரோதமாகத் தீர்ப்பு செய்யப்பட்டிருந்தால், நிலத்துக்குடையவர் விற்பனைக்காகக் கலெக்டருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்.

114-வது பிரிவின்படிக்கான விண்ணப்பத்துக்குக் கால நிர்ணயம்.

115. (1) யாதொரு வியாஜ்ஜியமும் கொண்டுவரப்பட்டிராத விஷயத்திலே, அப்படிப்பட்ட விண்ணப்பத்தை—113—வது பிரிவின்படி சேர்ப்பித்த சங்கதியைத் தெரிவிப்பதற்காகக் கலெக்டர் தபாலனுப்பும் தினத்திலிருந்து நாற்பத்தைந்து தினத்திற்குள்ளாகச் செய்துகொள்ளவேண்டும்.

(2) யாதொரு வியாஜ்ஜியம் கொண்டுவந்திருந்து அது பாக்கிதாரருக்கு விரோதமாகப் பைசல் செய்யப்பட்டிருந்தாலும், வாப்ஸ்வாங்கிக்கொள்ளப்பட்டிருந்தாலும், அந்தப்படி பைசல் செய்யப்பட்ட அல்லது வாப்ஸ்வாங்கிக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து முப்பது தினத்திற்குள்ளாக அப்படிப்பட்ட விண்ணப்பத்தைச் செய்துகொள்ளவேண்டும்.

விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தரை நியமிப்பது.

116. அப்படிப்பட்ட விண்ணப்பத்தை வரப்பெற்றுக் கொண்டவுடனே, கலெக்டரானவர்- விற்பனையை நடத்துவதற்காக ஒரு உத்தியோகஸ்தரை நியமிக்கவேண்டும்.

விற்பனையைப்பற்றிய பிரகடனம்.

117. (1) விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தரானவர்-விற்பனைக்காக ஒரு தேதியை உத்திரவு மூலமாய் நிஷ்கரிஷைசெய்து, கைப்பற்று நிலம் எந்தக் கிராமத்திலிருக்கிறதோ அந்தக் கிராமத்தில் அதைத் தண்டோரா மூலமாய்ப் பிரசித்தஞ் செய்விக்கவேண்டும்; மேலும், அவர்-தம்முடைய உத்திரவுக்கு ஒரு நகலை ஷை கிராமத்தில் யாவர்க்கும் தெரியும்படியான ஒரு இடத்திலே ஒட்டவும்வேண்டும்.

மேலே கண்டபடி பிரசித்தஞ்செய்த தேதிமுதல் அதமம் முப்பதுதினம் கழிந்த பிறகுள்ள ஒரு தேதியை விற்பனை தேதியாக நிஷ்கரிஷை செய்யவேண்டும்.

(2) ஷை உத்திரவிலும் பிரகடனத்திலும்—

(ஏ) விற்கப்போகிற கைப்பற்று நிலம் அல்லது அதன் பாகத்தையும்,

(பி) செலவு சகிதமாகவும் பிறகு வட்டி ஏதாவது ஏற்பட்டிருந்தால் அது சகிதமாகவும் 112—வது பிரிவின்படிக்கான எழுத்துமூலமாயுள்ள நோடீஸிற் கண்ட தொகையையும்,

(ஸி) யாதொரு சிக்குச்சிலுக்கு உட்பட்டு சொத்து விற்கப்படுவதற்குட்பட்டதாயிருந்தால் அப்படிப்பட்ட சிக்குச்சிலுகையும்,

(டி) எந்தக் காலத்தில் எந்த இடத்திலே விற்பனை நடத்தப்படுமென்பதையும்,

விவரமாய்க் காணவேண்டும்.

பாக்கியாயிருக்கிற தொகை பூர்த்தியாய்ச் செலுத்தப்படாவிட்டால் விற்பனை.

118. மேலேகண்ட தொகை பூர்த்தியாய்ச் செலுத்தப்படாவிட்டால், விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தர்-இதில் பின்னால் சொல்லியிருக்கிற விதமாக ஷை சொத்தையோ அந்த சொத்திலே டிமாண்ட் தொகைக்கும் விற்பனைச்செலவுகள் முதலிய செலவுகளுக்கும் ஈடுசெய்வதற்கு அவசியமாகும் யாதொரு பாகத்தையோ விற்க ஆரம்பிக்கவேண்டும்.

விற்பனை நடத்தவேண்டிய இடம்.

119. கைப்பற்று நிலம் எந்தக் கிராமத்திலிருக்கிறதோ அந்தக் கிராமத்திலாவது அதற்கு மிகவும் அருகாமையில் ஜனங்கள் விசேஷமாய் வந்து சேரக்கூடிய இடத்தில் ஷை சொத்து வெகு சாய் நல்லவிலைக்கு விற்கலாமென்று விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தர் அபிப்பிராயப்படுகிறபட்சத்திலே அவ்விடத்திலாவது சாதாரணமாய் விற்பனையை நடத்தவேண்டும்

விற்பனை செய்யும்விதம்.

120. சொத்தை-விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி, ஒரு தொகுதியாகவோ ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளாகவோ செய்து பகிரங்கமான ஏலத்தில் விற்கவேண்டும்; ஆனால் அந்தத் தொகுதிகளில் எதுவும்-நிலத்துக்குடையவர் சம்மதித்தாலன்றி மற்றப்படி, ஒரு ரெவினியு புலத்துக்குக் குறை

வாயிருக்கக்கூடாது ; டிமாண்ட் தொகையும், ஜப்தி-விற்பனை-இவைகளுக்குண்டான செலவுகளும் ஷை சொத்தின் ஒரு பாகத்தை விற்பதனாலே ஈடுசெய்யப்படும்பட்சத்தில், மிகுதியாயுள்ள பாகத்தை விற்பனை செய்வதை உடனே நிறுத்திவிடவேண்டும்.

விற்பனையைத் தள்ளிவைப்பது.

121. சொத்தை விற்பனைக்கு விட்டதன்மேல் விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தர் அபிப்பிராயப்படி சரியான விலை வராமற்போய், பாக்கிதாரராவது அவர் சார்பாகப் பிரவர்த்திக்க அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கிற யாதொரு நபராவது நிலத்துக்குடையவராவது மறுநாள் வரையிலும் விற்பனையைத் தள்ளிவைக்கவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டால், விற்பனையை அந்தத் தினம்வரையிலும் தள்ளிவைத்து அன்றைக்கு ஷை சொத்துக்கு என்ன விலைவந்தாலும் விற்பனையை முடித்துவிடவேண்டும்.

விற்பனையை நிறுத்திவிடுவது.

122. நிலத்துக்குடையவர் விற்பனைக்காகத்தாம் செய்துகொண்ட விண்ணப்பத்தை வாப்ஸ் வாங்கிக்கொண்டாலும், (ஏலத்துக்காகப் பிரிக்கப்பட்ட) தொகுதியின் விற்பனை முடிவாவதற்கு முன்னே, பிரகடனத்தில் கண்ட தொகையும் விற்பனைக்காகப் பிடித்த செலவுகளும் விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தரிடத்தில் கொடுப்பதாகக் காட்டப்பட்டாலும், அந்தத்தொகை கலெக்டரிடத்தில் செலுத்தப்பட்டிக்கிறதென்பதற்கு ஷை உத்தியோகஸ்தருக்குத் திருப்திகரமாக ருஜு காட்டப்பட்டாலும், அப்படிப்பட்ட ஒவ்வொரு விற்பனையையும் நிறுத்திவிடவேண்டும்.

கிரயத்தொகையைச் செலுத்துவது.

123. பிரதி தொகுதியின் விலையையும் விற்பனைகாலத்திலேயாவது அதற்குப்பிற்பாடு எவ்வளவு சீக்கிரமாகச் செலுத்தவேண்டுமென்று விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தர் கட்டளையிடுகிறாரோ அவ்வளவு சீக்கிரமாகவாவது செலுத்திவிடவேண்டும். அப்படி செலுத்தத்தவறும்பட்சத்திலே, சொத்தை மறுபடியும் ஏலத்தில் விட்டு விற்பனைசெய்யவேண்டும் ; அப்படிப்பட்ட மறு விற்பனையில் விலைக்குறைவு ஏதாகிலும் நேரிடும்பட்சத்திலே, அதைக்குறித்தும் அப்படிப்பட்ட மறு விற்பனையினாலுண்டான சகல செலவுகளைக்குறித்தும் விற்பனை நடத்தும் ஷை உத்தியோகஸ்தர் கலெக்டருக்கு ஸெர்டிபை செய்யவேண்டும். மேலும், நிலத்துக்குடையவராயினும் பாக்கிதாரராயினும் கேட்டுக்கொள்வதன்மேல், அவருக்குக்கிடைக்கக்கூடிய வேறே யாதொரு பரிகாரத்துக்குப் பாதகமில்லாமலே, ஷை விலைக்குறைவும் செலவுகளும்-(சொத்தை) ஏலத்திலெடுத்து கிரயத்தொகை செலுத்தத் தவறிப்போனவரிடமிருந்து கலெக்டருக்கு முன்பாகக் கொண்டு வரப்பட்ட வியாஜ்ஜியத்திலே வசூல் செய்யத்தக்கவைகளாகும்.

(சொத்தை) ஏலத்திலெடுத்து கிரயத்தொகை செலுத்தத்தவறிப்போனவரிடமிருந்து இந்தப்பிரிவின்படி வசூல்செய்யப்பட்ட யாதொரு தொகையானது விற்பனையினால் கிடைத்த தொகையாயிருந்தாலெப்படியோ அப்படியே, அது விஷயத்தில் 127-வது பிரிவின்படி பிரவர்த்திக்கவேண்டும்.

கிரயத்தொகையைக்கலெக்டருக்கு அனுப்பவேண்டுமென்பது.

124. (1) விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தர் வரப்பற்றிக்கொண்டிருக்கிற கிரயத்தொகையையெல்லாம் உடனே கலெக்டருக்கு அனுப்பிவிடவேண்டும்.

கிரயதாரருக்கு ஸெர்டிபிகேட் கொடுப்பது.

(2) கிரயத்தொகை பூர்த்தியாய்ச் செலுத்தப்படுவதன்மேலும், விற்பனைத்தேதியிலிருந்து முப்பது தினம் கழிவாவதன்மேலும், கலெக்டரானவர்-131-வது பிரிவின்படி விற்பனையை ரத்து செய்யும்படி விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டுத் தள்ளிவிடப்பட்டிருந்தாலும், விற்கப்பட்ட சொத்தையும் கிரயதாரருடைய பெயரையும் விற்பனைத்தேதியையும் செலுத்தப்பட்ட தொகையையுங்கண்டு ஒரு விக்கிரய ஸெர்டிபிகேட்டைக் கிரயதாரருக்குக் கொடுக்கவேண்டியதோடுங்கூட விற்கப்பட்ட சொத்தை அவருடைய ஸ்வாதீனப்படுத்தவும் வேண்டும்.

சிக்கிச்சிலுகுகள்.

125. யாதொரு கைப்பற்று நிலத்துக்காகிலும் அதைச்சேர்ந்த யாதொரு பாகத்துக்காகிலும் சேரவேண்டிய பாக்கிக்காக அந்தக் கைப்பற்று நிலத்தையாவது அதன் பாகத்தையாவது விற்பனை செய்யும்போது, அதை வாங்குகிறவர்-நிலத்துக்குடையவருடைய ரெஜிஸ்டராயுள்ள எழுத்துமூலமான அனுமதியின்மேல் அதில் ரயத்துக்கு உண்டாக்கியிருக்கிற யாதொரு பாத்தியதை அல்லது சுதந்தரத்துக்குட்பட்டும், இந்த ஆக்ட் ஜாரியாவதற்கு முன்னே உண்டாயிருக்கக்கூடிய ஏதாவது சிக்கிச்சிலுகுகளுக்குட்பட்டும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

விற்பனைக்குக் கொண்டுவரவேண்டிய கைப்பற்று நிலத்தின் அளவு.

126. நிலத்துக்குடையவர் விற்பனைக்குக்கொண்டு வந்திருக்கிற கைப்பற்று நிலத்தின் பாகமானது சேரவேண்டிய பாக்கித் தொகைக்கும் செலவுகளுக்கும் மதிப்பில் கூடியமட்டில் ஏறக்குறைய சரியாயிருக்கவேண்டும்.

விற்றுவந்த பணத்தை ஒருவகை செய்வதற்கான விதிகள்.

127. இந்த அத்தியாயத்தின்படி ஒரு கைப்பற்று நிலத்தின் விற்பனையினால் கிடைத்த பணத்தை ஒருவகை செய்கையிலே, அடியிற்கண்ட விதிகளை அனுசரிக்கவேண்டும். அவைகளென்னவென்றால் :—

(ஏ) கைப்பற்று நிலத்தை விற்பனைக்குக் கொண்டுவந்ததற்காக நிலத்துக்குடையவருக்குப் பிடித்திருக்கும் செலவுகளை அவருக்கு முதலில் கொடுத்துவிட வேண்டும் ;

(பி) பிறகு, தொகை செலுத்தவேண்டிய தேதிவரையில் பாக்கிக்காகவும் வட்டிக்காகவும் நிலத்துக்குடையவருக்குச் சேரவேண்டியதாயிருக்கும் தொகையை அவருக்குக் கொடுத்துவிடவேண்டும் ;

(ஸி) இந்தத்தொகைகளைக் கொடுத்துவிட்டபிறகு மிகுதியிருந்தால், விண்ணப்பம் அல்லது வியாஜ்ஜியத்தின் தேதிமுதல் விற்பனையின் தேதிவரையில் ஷை கைப்பற்று நிலத்தின் விஷயமாக நிலத்துக்குடையவருக்குச் சேரவேண்டியதாயிருக்கக்கூடிய யாதொரு குத்தகைத் தொகையை மேலேகண்ட மிகுதிப் பணத்திலிருந்து அந்த நிலத்துக்குடையவருக்குக் கொடுத்துவிடவேண்டும் ; அந்தப்படி செலுத்தப்பட்ட தொகைக்காகப் பாக்கிதாரர் விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தரிடமிருந்து ஒரு ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும் ; இந்தப்பகுதியின்படி யாதொரு தொகையைப் பெறுவதற்காக நிலத்துக்குடையவருக்குள்ள சுதந்தரத்தைப்பற்றி பாக்கிதாரர் ஆட்சேபித்தால், கலெக்டர் ஷை ஆட்சேபனையை ஒரு வியாஜ்ஜியமாக ரெஜிஸ்டர்செய்து அதைத் தீர்மானிக்க ஆரம்பிக்கவேண்டும் ;

ஆனால், விற்பனைத்தேதிமுதல் முப்பதுதினம் கழிவாகிற வரையிலே, இந்தப் பிரிவைச்சேர்ந்த (ஏ) (பி) (ஸி) குறிப்பிட்ட பகுதிகளின்படி நிலத்துக்குடையவருக்கு எந்தத் தொகையையும் கொடுக்கக்கூடாது.

(டி) (ஸி) குறிப்பிட்ட பகுதியிற்கண்ட தொகை செலுத்தின பிறகு மிகுதி (ஏதாவது) இருந்தால் அதை-அடியிற்கண்டதற்கு மாறாக யாதொரு ஸிவில் கோர்ட்டார் பிறப்பித்திருக்கும் உத்திரவுக்குட்பட்டு, பாக்கிதாரர் விண்ணப்பம் செய்து கொள்வதன்மேல், விற்பனைத்தேதி முதல் மூன்றுமாதகாலம் கழிந்த பிறகு அவருக்குக் கொடுத்துவிட வேண்டும்.

கைப்பற்று நிலத்தில் பாத்தியதையுள்ள நபர் பாக்கியாகிற பணத்தைச்செலுத்துவதன்மேல் அவருக்குள்ள சுதந்தரம்.

128. (1) யாதொரு கைப்பற்று நிலத்தையாவது அதன் பாகத்தையாவது விற்பதற்காகப் பிரசித்தஞ் செய்திருந்த, விற்பனையினால் பாதிக்கப்படக்கூடிய பாத்தியதையை அதில் அடைந்திருக்கிற யாதொரு நபர்-விற்பனையைத் தடுக்கும்பொருட்டு, 122-வது பிரிவின்படி கட்டவேண்டிய தொகையைக் கலெக்டரிடத்திலாகிலும் விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தரிடத்திலாகிலும் செலுத்தினால்,—

(ஏ) அந்தப்படி அவர் செலுத்தியிருக்கிற தொகையை வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஆறு விழுக்காடு வட்டி கிடைக்கக்கூடியதாயும் கைப்பற்று நிலத்திலிருந்து செலுத்த வேண்டியதாயுமுள்ள கடனாகக்கொள்ளவேண்டும் ; மேலும்,

(பி) ஷை கடனானது-குத்தகைத்தொகை பாக்கிவிஷயமாய் ஏற்படும் செலவும் இந்தப் பிரிவின்படி முன்னதாகச் செலுத்தவேண்டிய வேறே யாதொரு செலவும் நீங்கலாக ஷை கைப்பற்று நிலத்தின்மேல் ஏற்படும் மற்றசெலவுகளைக் காட்டிலும் முன்னதாய்ச் செலுத்தவேண்டியதாகும்.

(2) அப்படிப்பட்ட யாதொரு நபர் அடைவதற்குச் சுதந்தரமுள்ளவராயிருக்கும் வேறே யாதொரு பரிகாரத்துக்கு இந்தப் பிரிவிலுள்ளதெதனாலும் பாதகமுண்டாகமாட்டாது.

ரயத்துக்காகச் செலுத்தப்பட்ட தொகையைக் குத்தகைத் தொகையிலிருந்து கழித்துக்கொள்ள பாயக்காரி அல்லது கீழ்ப்பாயக்காரிக்குள்ள பாத்தியதை.

129. பாக்கிதாரராயுள்ள ஒரு ரயத்தின் கைப்பற்று நிலத்தையாகிலும் அதன் பாகத்தையாகிலும் விற்கப்போகிறதாகப் பிரசித்தஞ் செய்திருந்து, விற்பனையினால் பாதிக்கப்படக்கூடிய பாத்தியதையையுடையவராய் ஷை நிலத்தைச்சேர்ந்த யாதொரு பாயக்காரியோ கீழ்ப்பாயக்காரியோ ஷை விற்பனையைத்தடுக்கும்பொருட்டு 122-வது பிரிவின்படி கட்டவேண்டிய தொகையைக் கலெக்டரிடத்திலாயினும் விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தரிடத்திலாயினும் செலுத்தினால், அவர்-தமக்குச் சட்டப்படி யேற்பட்டிருக்கும் வேறே யாதொரு பரிகாரத்தோடுங்கூட, அப்படி செலுத்தின தொகை முழுவதையுமாவது அசல் யாதொரு பாகத்தையாவது தமக்கடுத்து மேற்பட்டுள்ள நிலக்காரருக்குத் தாம் செலுத்தவேண்டிய யாதொரு குத்தகைத்தொகையிலிருந்து கழித்துக்கொள்ளலாம் ; அவ்விதமாகவே, இந்த நிலக்காரர்-மேலே கண்டபடி [illegible] தொகையைத் தமக்கு அடுத்துமேற்பட்டுள்ள நிலக்காரருக்குத் தாம் செலுத்[illegible] யாதொரு குத்தகைத்தொகையிலிருந்து கழித்துக்கொள்ளலாம் ; பாக்கிதார[illegible] நிலக்காரருக்குக் கீழேயுள்ள ஒவ்வொரு நிலக்காரரும் இந்தப் படியே [illegible]

நிலத்துக்குடையவர் விற்பனையின் பொது விலை கேட்கலாமென்பது.

130. ஒரு ரயத்தின் கைப்பற்று நிலத்தையோ அதன் பாகத்தையோ பாக்கிக்காக விற்பனைக்குக் கொண்டுவந்திருக்கிற ஒரு நிலத்துக்குடையவர் ஷை கைப்பற்று நிலத்தையோ அதன் பாகத்தையோ விலைக்குக்கேட்கலாம் அல்லது வாங்கலாம்.

பாக்கிதாரரான ரயத்து விற்பனையை ரத்து செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொள்வது.

131. (1) ஒரு ரயத்தின் கைப்பற்று நிலத்தையாவது அதன்பாகத்தையாவது அதற்குச் சேரவேண்டிய பாக்கிக்காக விற்கிறபோது, பாக்கிதாரராயுள்ள ரயத்தாகிலும் விற்பனையினால் பாதிக்கப்படக்கூடிய பாத்தியதையை அல்லது சுதந்தரத்தை ஷை நிலத்தில் அடைந்திருக்கிற யாதொரு நபராகிலும்.

நிலத்துக்குடையவருக்குச் செலுத்தும்பொருட்டு, எந்தத் தொகையை வசூலிப்பதற்காக விற்பனைக்கு உத்தரவு கொடுக்கப்பட்டதோ அந்தத் தொகையாக விற்பனைப் பிரகடனத்தில் கண்டுள்ள தொகையும் கைப்பற்று நிலத்தை விற்பனைக்குக் கொண்டுவந்த விஷயத்தில் ஷை நிலத்துக்குடையவருக்குப் பிறகு ஏதாவது செலவுபிடித்திருந்தால் அதுவும் சேர்ந்து ஏற்படுகிற தொகையிலிருந்து, விற்பனைப்பிரகடன தேதிக்குப்பிறகு ஷை நிலத்துக்குடையவர் வரப்பற்றியிருக்கக்கூடிய யாதொரு தொகையைக் கழித்து மிகுதி நிற்கும் தொகையையும்,

கிரயதாரருக்குச் செலுத்தும்பொருட்டு, கிரயத் தொகையில் நூற்றுக்கு ஐந்து வீதத்துக்குச் சரியாயிருக்கிற ஒரு தொகையையும்,

கலெக்டரிடத்தில் கட்டிவைப்பதன்மேல், விற்பனை தேதிமுதல் முப்பது தினத்திற்குள்ளாக எப்போதாயினும், ஷை விற்பனையை ரத்துசெய்யவேண்டுமென்று ஷை கலெக்டருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்.

(2) அந்த முப்பது தினத்திற்குள்ளாக மேலேகண்டபடி (பணம்) கட்டப்பட்டால், கலெக்டரானவர் அந்த விற்பனையை ரத்துசெய்து உத்தரவு பிறப்பிக்கவேண்டும்; அந்தப்படி ரத்துசெய்யப்பட்ட விற்பனையின் விஷயத்திலே சிவில் புரொஸீஜர் கோடின் 315-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகள் பிரயோகப்படும்.

குத்தகைத்தொகை பாக்கிக்கான டிக்ரிகளை நிறைவேற்றுவதற்கு இந்த அத்தியாயம் பிரயோகப்படுவது.

132. இந்த அத்தியாயத்திற்கண்ட நிபந்தனைகள் குத்தகைத்தொகை பாக்கிக்கான யாதொரு டிக்ரியை ஒரு ரெவினியு கோர்ட்டார் நிறைவேற்றுவதற்கு எவ்வளவுமட்டில் பிரயோகப்படக்கூடுமோ அவ்வளவுமட்டில் பிரயோகப்படும்.

டிக்ரியை நிறைவேற்றுகிற கலெக்டர் - (தொகை) செலுத்த பாக்கிதாரருக்கு அவகாசம் கொடுக்கலாமென்பது.

133. (எ) இந்த ஆக்டின்படி யாதொரு வியாஜ்ஜியத்திலே பாக்கிக்காகக் கொடுக்கப்பட்ட டிக்ரியை நிறைவேற்றுகையிலாவது, (பி) இந்த அத்தியாயத்திற்கண்ட நிபந்தனைகளின்படி யாருடைய கைப்பற்றுநிலம் விற்கப்படப்போகிறதோ அந்த பாக்கிதாரர் விண்ணப்பஞ் செய்துகொள்ளுவதன்மேலாவது, கலெக்டரானவர் - ஷை கைப்பற்று நிலத்தையாகிலும் அதன் பாகத்தையாகிலும் விற்பனை செய்வதற்காக உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்னும், கடன்தொகை - செலவுகள் - வட்டி இவைகளுக்காக ஷை கலெக்டருக்குத் திருப்தி யுண்டாகும்படி பாக்கிதாரர் ஜாமீன் கொடுப்பதன்மேலும், பாக்கியாயிருக்கிற தொகையை இவ்வளவு காலத்திற்குள் செலுத்தவேண்டுமென்று பாக்கிதாரருக்கு அவகாசம் கொடுக்கலாம்; ஆனால், அந்தப்படி ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிற யாதொரு காலவரையறையாயினும் காலவரையறைகளின் மொத்தமாயினும் - பிரதேச கவர்ன்மெண்டார் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவுமூலமாக இரண்டு மாதத்தைவிட அதிக காலம் ஏற்படுத்திக் கொடுத்தாலன்றி மற்றப்படி, இரண்டு மாதத்துக்கு மேற்படக்கூடாது.

இந்த அத்தியாயத்திற்கண்ட நிபந்தனைகளின் பிரயோகத்தை அதிகப்படுத்துவது.

134. அசையும் பொருளை ஜப்திபண்ணி விற்பனைசெய்வதன் மூலமாய் யாதொரு ரயத்தினிடமிருந்து குத்தகைத்தொகையை வசூல் செய்வதற்காக இந்த அத்தியாயத்திற்கண்ட நிபந்தனைகள்—

(1) யாதொரு நிலத்துக்குடையவரும் பூஸ்திதியிலுள்ள சொந்த நிலத்தைச்சேர்ந்த யாதொரு பாயக்காரியும் தங்களுக்குள் பட்டா முச்சிலிக்கா பரிவர்த்தனஞ் செய்துகொண்டிருந்தால், அந்தப் பாயக்காரியினிடமிருந்து நிலத்துக்குடையவர் குத்தகைத்தொகை வசூல் பண்ணுவதற்கும்,

(2) கவர்ன்மெண்டாரோடு செய்துகொண்ட ரயத்வாரி பைசலேற்பாட்டுக்குட்பட்டிருக்கிற அல்லது நேராய்க் கவர்ன்மெண்டாருக்கு நிலத்தீர்வை செலுத்துவதற்கு எவ்விதமாகவாகிலும் உட்பட்டிருக்கிற யாதொரு நிலச்சுவான்தாரராவது சொத்துவ பாத்தியதையாய் நிலத்தை வைத்துக்கொண்டிருப்பவராக ரெஜிஸ்டராயுள்ள வேறே யாதொரு நபராவது-செலுத்தப்படவேண்டிய குத்தகைத் தொகையைக் கண்டெழுதியுள்ள உடன்படிக்கையை எந்தப் பாயக்காரியினிடமிருந்து பெற்றிருக்கிறாரோ அந்தப் பாயக்காரியினிடமிருந்து குத்தகைத் தொகை வசூல் பண்ணுவதற்கும்,

எவ்வளவுமட்டில் பிரயோகப்படக்கூடுமோ அவ்வளவுமட்டில் பிரயோகப்படும்.

7-ம் அத்தியாயம்.

நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான கட்டுவேலைகளின் மராமத்து.

நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான கட்டுவேலைகளின் மராமத்துக்காக டிஸ்ட்ரிக்ட் கலெக்டரிடத்தில் விண்ணப்பஞ் செய்துகொள்வது.

135. நீர்பாய்ச்சப்பெற்ற நிலத்தை ஒரு நிலத்துக்குடையவருக்குக் கீழ்ப்பட்டு வைத்துக்கொண்டு நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான யாதொரு கட்டுவேலையின் கீழுள்ள ஆயக்கட்டின் குத்தகைத் தொகையில் நாலிலொருபங்குக்குக் குறையாமல் செலுத்திவருகிற அல்லது ஆயக்கட்டின் விஸ்தீர்ணத்தில் நாலிலொருபங்குக்குக் குறையாமல் வைத்துக்கொண்டிருக்கிற யாதொரு ரயத்தாவது ரயத்துகளாவது - தம்முடைய அல்லது தங்களுடைய கைப்பற்றிலிருக்கும் நிலத்துக்கு எந்த நீர்ப்பாய்ச்சற் கட்டுவேலையினால் நீர்பாய்ச்சப்படுகிறதோ அந்தக்கட்டுவேலை கிலமாயிருக்கிறதென்றும், தாம் அல்லது தாங்கள் விண்ணப்பம்செய்துகொண்டதன்மேல் அவசியமான மராமத்துகளை நிலத்துக்குடையவர்செய்யமாட்டேனென்று நிராகரித்திருக்கிறார், அல்லது அசட்டை பண்ணியிருக்கிறாரென்றும், ஆகையால் தாம் அல்லது தாங்கள் நீர்ப்பாய்ச்சி சாகுபடிசெய்யப்படும் மாசூல் உண்டாக்க அசக்தர்களாயிருக்கிறார்களென்றும் கண்டு, ஷை கட்டுவேலையை மராமத்து செய்வதற்காக 137-வது பிரிவின்படி உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, டிஸ்ட்ரிக்ட் கலெக்டரிடத்தில் விண்ணப்பஞ்செய்துக்கொள்ளலாம். ஷை விண்ணப்பத்தில் - அவசியமென்று எண்ணப்படும் மராமத்துகள் இன்னவிதமானவையென்பதையும், ஷை கட்டுவேலையினால் நீர்பாய்ச்சப்பெற்ற நிலம் இவ்வளவு விஸ்தீர்ணமுடையதென்பதையும், அதிலிருந்து வரக்கூடிய குத்தகைத்தொகை இவ்வளவென்பதையும் போதுமானபடி விவரமாகக் காணவேண்டும். அதன் பிறகு டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் தாமாகவேயாவது, டெப்யுடி தாசில்தாருடைய அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்துடையவராய்த் தமக்குக்கீழ்ப்பட்டுள்ள ஒரு உத்தியோகஸ்தருக்கு விசாரணை செய்யு மதிகாரத்தைக்கொடுத்து அவர் மூலமாகவாவது, ஷை விண்ணபத்திற்கு நகலையும் ஒரு நோடீஸையும் நிலத்துக்குடையவருக்குச் சேர்ப்பித்து, கேட்டுக்கொள்ளப்பட்ட உத்தரவை ஏன் பிறப்பிக்கக்கூடாதோ அதற்குக் காரணத்தை அந்த நோடீஸிற் குறிக்கப்படும் தேதியன்றைக்குக் காட்டவேண்டுமென்று அந்த நோடிஸ்மூலமாகக் கட்டளையிடவேண்டும். மேலும், நீர்ப்பாய்ச்சப்பெற்ற நிலம் இருக்கும் கிராமம் அல்லது கிராமங்களில் ஷை நோடிஸ் ஒட்டப்படவேண்டும்.

விண்ணப்பஞ்செய்துகொள்வதன்மேல் விசாரணை.

136. ஷை நோடீஸிற் குறிக்கப்பட்ட தேதியிலாவது, விசாரணையைத் தள்ளிவைத்திருந்தால் எதுவரைக்கும் தள்ளிவைத்திருக்கிறதோ அந்தத் தேதியிலாவது, டிஸ்டரிக்ட் கலெக்டரோ மேலேகண்ட உத்தியோகஸ்தரோ-விண்ணப்பதாரர் அல்லது விண்ணப்பதாரர்களும், நிலத்துக்குடையவரும், ஷை கட்டுவேலையினால் நீர்பாய்ச்சப்பெற்ற நிலத்தைச்சேர்ந்த ரயத்தும் எவர்களாயினும் ஹாஜராயிருந்தால் அவர்களும் சொல்வதைக் கேட்கவேண்டும்; மேலும், அவருக்கு யுக்தமாகத்தோன்றும் யாதொரு சாக்ஷியத்தை யெடுத்துக்கொள்ளலாம். ஷை விசாரணையானது டிஸ்ட்ரிக்ட் கலெக்டரல்லாத வேறே உத்தியோகஸ்தாரால் செய்யப்பட்டால் அவர் டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்கு அதைப்பற்றி ரிபோர்ட் செய்யவேண்டும்.

விசாரணை செய்வதன்மேல் உத்தரவு.

137. (நீர்ப்பாய்ச்சல்) கட்டுவேலையினால் நீர்ப்பாய்ச்சப்படுகிற நிலத்தின் விஷயத்திலே நிலத்துக்குடையவருக்குச் செலுத்தத்தக்க குத்தகைத்தொகையானது ஷை நிலம் அந்தப்படி நீர் பாய்ச்சப்படாவிட்டால் செலுத்தத்தக்கதாயிருக்கும் குத்தகைத் தொகையைக் காட்டிலும் அதிகமாயிருக்கிறதென்றும், ஷை நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையை ஆதாரமாகக்கொண்ட நிலங்களுக்கு நீர் பாய்வதை விசேஷமாய் விக்கினப்படுத்தும்படியான அளவுக்கு அந்தக் கட்டுவேலை கிலமான ஸ்திதியிலிருக்கிறதென்றும், ரயத்துகளுடைய தப்பான செய்கைகள் காரணமாகவாவது 1858-ம் வருஷத்துச் சென்னபட்டணம் 1-வது ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி ரயத்துகள் செய்யக்கடமைப்பட்டிருக்கும் சுவல்ப மராமத்துகளைச் செய்யாமலிருந்தது காரணமாகவாவது ஷை கிலமானஸ்திதி உண்டானதல்லவென்றும் டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்குத் திருப்திகரமாகத் தோற்றினால், அவர் - விண்ணப்பத்திற்கண்ட அல்லது விசாரணைக்காலத்தில் காட்டப்பட்ட வேலைகளிலெவை நீர்ப்பாய்ச்சற்கட்டுவேலை மறுபடியும் உபயோகப்படும்படியான ஸ்திதிக்கு வருவதற்கு அவசியமானவையென்றும் அந்த வேலைகளுக்கு உத்தேச செலவு மதிப்பையும் கண்டும் ஷை வேலைகளைக் குறித்த ஒருகாலத்திற்குள்ளாக நிலத்துக்குடையவர் செய்து முடிக்கவேண்டுமென்று கட்டளையிட்டும் உத்தரவுபிறப்பிக்கலாம். நிலத்துக்குடையவர் ஷை வேலைகளைச் செய்யமாட்டேனென்று நிராகரித்தாலும் குறித்த ஒருகாலத்திற்குள்ளாகவாகிலும் டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் அதிகமாய்க் கொடுக்கக்கூடிய காலத்திற்குள்ளாகவாகிலும் நிலத்துக்குடையவர் அந்த வேலைகளைச் செய்து முடிக்கத் தவறினாலும், விண்ணப்பதாரர் தாமாகவேயாயினும் தம்மோடு சேர இஷ்டப்படுகிற வேறே எந்த ரயத்துகளுடனாயினும் கலெக்டருக்கு விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், கலெக்டரால் நிஷ்கரிஷை செய்யப்படும் ஒரு நியாயமான காலத்திற்குள்ளாக ஷை வேலைகளில் யாதொன்றையோ அல்லது யாவற்றையோ

றையுமோ செய்துமுடிக்க அதிகாரங்கொடுக்கப் பெறலாமென்றும் டிஸ்டிரிக்ட் கலெக்டர்
ஷெ உத்தரவில் நிர்ணயிக்கலாம். ஆனல், அப்படிப்பட்ட வேலைகள் மராமத்து வேலைகளாக-
மாத்திரமே யிருக்கவேண்டும்; நிலத்துக்குடையவருடைய சம்மதியின்றி மற்றப்படி விஸ்
தாரப்படுத்துவதோ சீர்திருத்தங்கள் செய்வதோ ஷெ வேலைகளில் சேரக்கூடாது; ஜலவரு
வாய்க் கால்களிலிருந்தும் ஜலத்தைப் பங்கீடு செய்யும் கால்களிலிருந்தும் குப்பை முதலிய
வற்றை வருஷவாரியில் அப்புறப்படுத்துவதைப்போல, தேசாசாரப்படி ரயத்துகள் செய்து
முடிக்கவேண்டிய சொற்ப வேலைகளெதுவும் ஷெ வேலைகளில் சேரக்கூடாது.

நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையைப் பராமரித்துவரும் கடமையானது நிலையான பைச
லேற்பாட்டுக்கு முன் ஜாரிசெய்யப்பட்டு ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாரால் ஜோடி மாத்திரம்
செலுத்தவேண்டியதென்று ஏற்பாடு செய்யப்படாமல் ஊர்ஜ்ஜிதஞ் செய்யப்பட்டிருக்கிற
தசபந்தம் இனம் வைத்துக்கொண்டிருக்கும் ஒரு இனம்தாரருக்கு விதிக்கப்பட்டிருக்கிற
தென்றுவது வேறேவிதமாய் நிலத்துக்குடையவரிடத்திலிருந்து இன்னொருவருக்கு டிரான்ஸ்
பர் செய்யப்பட்டிருக்கிறதென்றுவது அந்த நிலத்துக்குடையவர் ஸ்தாபித்தாலும், ஷெ
கட்டு வேலையை மராமத்துசெய்வது நிலத்துக்குடையவரும் ரயத்துகளும் ஆகிய இருதிறத்
தாருக்கும் அனுகூலமாயிருக்குமென்று டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் தெரிந்து திருப்தியடையா
விட்டாலும், அவர் இந்தப் பிரிவின்படி உத்தரவு பிறப்பிக்கக்கூடாது.

கட்டுவேலையானது சிறிதுபாகம் ஒரு பூஸ்திதிக்கும் சிறிதுபாகம் கவர்ன்மெண்ட் நிலத்துக்கும் உபயோகப்படுகிற விஷயத்தில் நடத்தவேண்டிய நடவடிக்கை.

138. நீர்ப்பாய்ச்சற் கட்டுவேலையானது சிறிதுமட்டில் ஒரு பூஸ்திதிக்கும் சிறிதுமட்
டில் கவர்ன்மெண்ட் நிலத்துக்கும் உபயோகப்படுகிற
விஷயத்திலே, மேலேகண்ட மராமத்துக்களைஎப்போ
தும் கலெக்டர் செய்து முடிக்கவேண்டும்; மேலும்,
நிலத்துக்குடையவருக்கு நோடீஸ் கொடுத்து மரா
மத்து செய்வதற்காக எவ்வளவு செலவு பிடிக்கிற
தென்று சொல்லப்படுகிறதோ அதைப் பரிசோதிப்ப
தற்கும் அது விஷயமாய் அவருக்கு ஏதாகிலும் ஆட்சேபணை இருந்தால் அதைக் கொண்டு
வருவதற்கும் அந்த நோடீஸ் மூலமாக ஷெ நிலத்துக்குடையவருக்குச் சமயம் ஏற்படுத்திக்
கொடுத்தபிறகு, பிடித்த செலவுகளை - கவர்ன்மெண்டாருக்குச் சொந்தமாய் ஷெ கட்டு
வேலையினின்றும் நீர்பாய்ச்சப்பெறுவதற்குப் பாத்தியதை யுள்ளதென்று ரெஜிஸ்டர் செய்
யப்பட்டிருக்கிற நில விஸ்தீர்ணத்துக்கும், நிலத்துக்குடையவருக்குச் சொந்தமாய் ஷெ
கட்டுவேலையினின்றும் பிரத்தியேகமான கட்டணமில்லாமல் நீர் பாய்ச்சிக்கொள்வதற்குத்
தாம் சுதந்தரமுள்ளவராயிருக்கிற நில விஸ்தீர்ணத்துக்குமுள்ள சங்கியா பரிமாணப்படி,
கவர்ன்மெண்டாரும் நிலத்துக்குடையவரும் பங்கிட்டுக் கொள்ளவேண்டும். நிலத்துக்குடை
யவரிடத்திலிருந்து சேரவேண்டிய பாகமானது நிலத்தீர்வைப் பாக்கியைப்போல வசூல்
செய்யத்தக்கதாகும்.

கவர்ன்மெண்டாரைச்சேர்ந்த கட்டு வேலைகளுக்குப் பாதகமில்லையென்பது.

கவர்ன்மெண்டாரைச் சேர்ந்தவைகளாய்க் கவர்ன்மெண்டார் பராமரித்துவரக் கடமைப்
பட்டிருக்கும் எந்தக் கட்டுவேலைகளிலிருந்து கட்
டணமில்லாமல் ஜலசர்ப்பரா பெற்றுக்கொள்ள நிலத்
துக்குடையவருக்குச் சுதந்தர மிருக்கிறதோ அந்தக்
கட்டுவேலைகளுக்கு இந்தப் பிரிவிலுள்ளதெதுவும்
பிரயோகப்படமாட்டாது.

மராமத்து செலவை ரயத்துகளிடத்திலிருந்து வசூல் செய்வது.

139. ரயத்துகள் யாதொரு வேலையைச் செய்துமுடிக்கலாமென்று 137-வது பிரிவின்
படி கலெக்டர் உத்தரவு செய்திருந்தால், அதைச்
செய்துமுடிக்கப்பட்ட பிறகு, செலவுகளை வசூல்
செய்வதற்காக உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று
டிஸ்ட்ரிக்ட் கலெக்டரிடத்தில் விண்ணப்பஞ் செய்து
கொள்ளலாம். பிற்பாடு, டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் - ஷெ விண்ணப்ப விஷயமாய் ஆட்சேபணை
களைத் தெரிவிப்பதற்காக நிலத்துக்குடையவருக்குச் சாவகாசம் கொடுக்கவேண்டியதோடுங்
கூட, வேலைகள் சரியாகவும் குறிக்கப்பட்ட காலத்திற்குள்ளாகவும் செய்து முடிக்கப்பட்ட
தென்றும், கேட்கப்படும். செலவுகள் அதிகமல்லவென்றும் தாம்தெரிந்து திருப்தியாவதற்கு
அவசியமாகத்தோற்றும் காரியங்களைச் செய்யவும்வேண்டும். அப்படி அவருக்குத் திருப்தி
யுண்டானல், செய்துமுடித்த வேலைக்காக நியாயமாய்ச் சேரவேண்டியதென்று அவருக்குத்
தோற்றும் தொகையைக்கண்டு அவர் உத்தரவு பிறப்பிக்கவேண்டும்; மேலும், எஸ்டிமேட்டு
களுக்காகவும் பார்வையிடுவதற்காகவும் பிடித்த செலவையும் அவர் ஷெ உத்தரவில் சேர்க்
கலாம். பிறகு ஷெ உத்தரவிற்கண்ட தொகையைச் செலுத்தவேண்டுமென்று நிலத்துக்
குடையவருக்கு முதலில் கட்டளையிடவேண்டும்; நிலத்துக்குடையவர் ஷெ தொகையைச்
செலுத்த நிராகரிக்கிற பட்சத்திலே, டிஸ்டரிக்ட் கலெக்டரானவர் - ஷெ நீர்பாய்ச்சற் கட்டு
வேலைகளின் கீழுள்ள நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிற ரயத்துகளிடத்திலிருந்து ஷெ
தொகையை வசூல் செய்வதற்காக உத்தரவு பிறப்பிக்கவேண்டும். அந்தப்படி ஒவ்வொரு
ரயத்தும் வைத்துக்கொண்டிருக்கிற நிலத்தின் குத்தகைத் தொகைக்குத்தக்கபடி அவர்
செலுத்தவேண்டிய தொகை ஷெ உத்தரவிற் கண்டிருக்கவேண்டும். இந்தப்பிரிவின்படி
நிலத்துக்குடையவர் செலுத்துவதாக உடன்பட்டிருக்கிற அல்லது ரயத்துகள் செலுத்த
வேண்டிய யாதொரு தொகையானது ஷெ உத்தரவின் தேதிமுதல் வருஷமொன்றுக்கு நூற்
றுக்கு ஆறு விழுக்காடு வட்டிசகிதமாக நிலத்தீர்வை பாக்கியைப்போல வசூல் செய்யத்தக்க
தாகும்.

மராமத்து செய்துமுடிக்கும் நபர்களுக்குத் தொகை செலுத்துவது.

140. வசூல் செய்யப்பட்ட தொகையில், செய்துமுடித்த வேலைகளைப் பார்வையிடுவ
தற்காக ஏதாவது செலவு பிடித்திருந்தால் அது
போக, மிகுதியை 137-வது பிரிவின்படி ஷெ வேலை
களைச்செய்துமுடிக்க அதிகாரங் கொடுக்கப்பெற்ற
நபர்களுக்குச் செலுத்தவேண்டும்.

மராமத்து செலவுகளைக் குத்தகைத்தொகையிலிருந்து கழித்துக்கொள்வது மூலமாக வசூல்செய்ய சுதந்தரம்.

141. நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான யாதொரு கட்டுவேலை விஷயமாய் 139-வது பிரிவிற்
கண்ட நிபந்தனைகளின்படி யாரிடத்திலிருந்து யா
தொரு தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறதோ அப்ப
டிப்பட்ட ஒவ்வொரு ரயத்தும் - தாம் நிலத்துக்
குடையவருக்குச் செலுத்தவேண்டிய குத்தகைத்
தொகையிலிருந்து, ஷெ கட்டுவேலையின் கீழுள்ள
தாய்த் தம் கைப்பற்றிலிருக்கும் நிலத்துக்கு நீர் பாய்ச்சப்பெற்றுல், விதிக்கப்படும் வீதத்
துக்கும் நீர் பாய்ச்சப் பெருவிட்டால் விதிக்கப்படும் வீதத்துக்கும் வித்தியாசமெவ்வளவோ
அதற்குச்சரியான ஒரு தொகையைக் கழித்துக்கொள்ள பாத்தியதையுள்ளவராவார். நீர்
பாய்ச்சப்பெருவிட்டால் விதிக்கப்படும் வீதம் இன்னதென்று தெரியாத விஷயத்திலே,
கலெக்டரானவர் - விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதன்மேல், அதே கிராமத்திலாவது
அக்கம்பக்கத்திலுள்ள கிராமங்களிலாவது அதே தன்மையுள்ளவைகளும் அதற்குள்ள அனு
கூலங்களைப்போன்ற அனுகூலங்களே பொருந்தியுள்ளவைகளுமான புஞ்சை நிலங்களுக்கு
விதிக்கப்படும் வீதங்களை யனுசரித்து, ஷெ வீதத்தை நிர்ணயிக்கவேண்டும். ரயத்து தம்
முடைய கைப்பற்று நிலத்திலே நீர் பாய்ச்சப்பெறும் நிலம் - நீர்ப்பாய்ச்சப்பெருத நிலம்
ஆகிய இரண்டும் வைத்திருந்து அவைகளுக்கு மொத்தமாகச் சேர்த்து குத்தகைத்தொகை
செலுத்திவந்து, நீர்ப்பாய்ச்சல் பெறும் விஷயத்தில் விதிக்கப்படும் வீதம் இன்னதென்று
தெரியாவிட்டால், கலெக்டர் விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதன்மேல் அதைத் தீர்மா
னிக்கவேண்டும்.

ஆனல், அப்படி கழித்துக்கொள்ளுவது - 139-வது பிரிவின்படி வசூலிக்கப்பட்ட
தொகை வருஷமொன்றுக்கு நூற்றுக்கு ஆறு விழுக்காடு வட்டி சகிதமாக ஈடு செய்யப்பட்
டானவுடனே நின்று முடிந்துவிடவேண்டும்.

அப்பீல் செய்துகொள்ள சுதந்திரம்.

142. இந்த அத்தியாயத்தின்படி டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் நடத்தின நடவடிக்கைகள்
சம்பந்தமாக எந்த ஸிவில் கோர்ட்டாரும்யாதொரு
வியாஜ்ஜியத்தைப் பிடிக்கவுங்கூடாது, யாதொரு
இன்ஜங்ஷனென்னும் உத்தரவைப் பிறப்பிக்கவுங்
கூடாது; ஆனல், டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் பிறப்பித்த யாதொரு உத்தரவின்மேல் ரெவினியு
போர்டாரிடத்தில் அப்பீல் செய்துகொள்ளலாம்: அவர்களுடைய தீர்மானம் முடிவான
தாகும்:

8-ம் அத்தியாயம்.

சட்டத்துக்கு விரோதமான ஸெஸ்ஸுகள் (வரியிறைகள்).

குத்தகைத் தொகையோடுகூட எதையும் விதித்து வாங்கக்கூடாதென்று தடுப்பது.

143. நியாயமாய்ச் செலுத்தத்தக்க குத்தகைத் தொகையோடுகூட எதையாகிலும் எந்
தப் பெயரிட்டாவது எந்த சாக்கிட்டாவது நிலத்
துக்குடையவர்கள் தங்கள் ரயத்துகளிடத்திலிருந்து
பலாத்காரமாய் விதித்து வாங்கக்கூடாது. அப்படி
அதிகமாய்ச் செலுத்துவதைப்பற்றிய சகல ஒப்பந்
தங்களும் நிர்ப்பந்தங்களும் செலாவணியாகமாட்டா.

சட்டத்துக்கு விரோதமாய்ப் பலாத்காரமாகத் தொகை வசூல் செய்வதற்குத் தண்டனை.

144. அந்தந்தகாலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு விசேஷ சட்ட
திட்டப்படிக்கன்றி மற்றப்படி ஒவ்வொரு ரயத்தும்
நியாயமாய்ச் செலுத்தவேண்டிய குத்தகைத்தொகை
யைப்பார்க்கிலும் அதிகமாக யாதொரு தொகையை
யாவது நிலத்தின் மாசூலிலே யாதொரு பாகத்தை
யாவது அவரிடத்திலிருந்து நிலத்துக்குடையவர்
பலாத்காரமாக வாங்கியிருந்தால், அவர் - கலெக்டரிடத்தில் வியாஜ்ஜியந்தொடர்ந்து, அப்
படி பலாத்காரமாய் வாங்கப்பட்ட தொகையோடுங்கூட அல்லது வாங்கப்பட்டதன் மதிப்
போடுங்கூட, நூறு ரூபாய்க்கதிகப்படாமலாகிலும் ஷெ தொகை அல்லது மதிப்பின் இரட்
டிப்பானது நூறு ரூபாய்க்கதிகப்படுகிற பட்சத்திலே அந்தத் தொகை அல்லது மதிப்பின்
இரட்டிப்புக்கு அதிகப்படாமலாகிலும் கலெக்டருக்கு யுக்தமாகத் தோற்றுகிற யாதொரு
அபராதத் தொகையையும் வசூல் செய்துகொள்ளச் சுதந்தரமுள்ளவராவார்.

9-ம் அத்தியாயம்.

கைப்பற்று நிலங்களையும் பூஸ்திதிகளையும் உட்பிரிவினைசெய்வதும், ட்ரான்ஸ்பர் பண்ணுவதும்.

கூட்டுப் பங்குகாரர்களுக்குள்ளாவது (கைப்பற்று நிலத்தின்) ஒரு பாகம் ட்ரான்ஸ்பராவதன் மேலாவது கைப்பற்று நிலத்தைப் பிரிவினைசெய்வது.

145. (1) யாதொரு ரயத்து தம்முடைய கைப்பற்று நிலத்தின் ஒரு பாகத்தை ட்ரான்ஸ்பர் செய்தாலும், யாதொரு கைப்பற்று நிலமானது கூட்டுப் பங்குக்காரர்களுக்குள் பிரிவினை செய்யப்பட்டாலும், ஷை கைப்பற்று நிலத்தை உட்பிரிவினை செய்வதற்கு ஆட்சேபிக்க நிலத்துக்குடையவருக்கு அதிகாரமில்லை; ஆனால், பிரிவினைசெய்யப்பட்ட பாகங்களுக்குள் நிலத்துக்குடையவராலாவது அவருடைய அனுமதியின் மேலாவது குத்தகைத்தொகை பங்கிடப்படவேண்டும்.

மேலும், யாதொரு ரெவினியு புலத்தையாவது அதன் பாகத்தையாவது உட்பிரிவினை செய்வதனால் ஏற்படுகிற ஒவ்வொரு பாகமும்-அந்தப் புலமானது நீர்ப்பாய்ச்சப்பெறாத வகுப்பைச்சேர்ந்ததாயிருந்தால் ஐந்து ஏகரா விஸ்தீர்ணத்துக்கும், நீர்ப்பாய்ச்சப்பெறுகிற அல்லது தோட்டக்கால் வகுப்பைச்சேர்ந்ததாயிருந்தால் ஒரு ஏகரா விஸ்தீர்ணத்துக்கும் குறையாமலிருந்தாலன்றி மற்றப்படி, அந்த ரெவினியு புலத்தையாவது அதன் பாகத்தையாவது உட்பிரிவினை செய்வதை அங்கீகரிக்க எந்த நிலத்துக்குடையவரும் கடமைப்பட்டவராகார்.

(2) அந்தப்படி பங்கிடுசெய்திருப்பது அநியாயமானதாயிருந்தாலும், அநியாயமான ஒரு காலம்வரையில் அந்தப்படி பங்கிடுசெய்யும் விஷயத்தில் ஆலசியம் உண்டானாலும், கலெக்டரானவர்-ரயத்து விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், நியாயமாய்ப் பங்கிடு செய்யவேண்டும்; இந்தப்படி பங்கிடுசெய்வது அதுசம்பந்தமான நபர்களைக் கட்டுப்படுத்தக்கூடியாதாகும்.

ரயத்தின் செய்கையினலாவது ஸிவில் கோர்ட் டிக்ரியை நிறைவேற்றுகையிலாவது செய்யப்படும் கைப்பற்று நில ட்ரான்ஸ்பரை நிலத்துக்குடையவர் அங்கீகரிக்கவேண்டுமென்பது.

146. (1) யாதொரு ரயத்தின் செய்கையினலாவது, அவருக்கு விரோதமாக யாதொரு ஸிவில் கோர்ட்டார் ஜாரிசெய்த டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றுகையிலாவது, கவர்ன்மெண்டாருக்குச் சேரவேண்டிய தீர்வைபாக்கிக்காகவோ அப்படிப்பட்ட பாக்கியைப்போல வசூல்செய்யத்தக்க யாதொரு டிமாண்டுக்காகவோ செய்யப்படும் விற்பனையினலாவது யாதொரு கைப்பற்று நிலமாகிலும் அதன் யாதொரு பாகமாகிலும் ட்ரான்ஸ்பர் செய்யப்படுகிறபக்ஷத்திலே, ட்ரான்ஸ்பர் செய்தவரும் ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவரும் நிலத்துக்குடையவருக்கு எழுத்து மூலமான நோடீஸ் கொடுத்தாலும், ட்ரான்ஸ்பரை ஸ்தாபிதப்படுத்தி யாதொரு ஸிவில் கோர்ட்டார் பிறப்பித்திருக்கிற டிக்ரி அல்லது உத்தரவுக்கு ஸெர்டிபைசெய்யப்பட்ட ஒரு நகலைக் கொண்டுவந்து காட்டினாலும், ட்ரான்ஸ்பரானது யாதொரு கோர்ட்டார் அல்லது ஸர்க்கார் உத்தியோகஸ்தருடைய உத்தரவின் படிக்கான விற்பனை மூலமாய்ச்செய்யப்படும் விஷயங்களில், விக்கிரய ஸெர்டிபிகேட்டையாவது ஸெர்டிபை செய்யப்பட்ட அதன் நகலையாவது கொண்டுவந்து காட்டினாலும், ஷை ட்ரான்ஸ்பரை 145-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நிலத்துக்குடையவர் அங்கீகரிக்கவேண்டும்.

(2) சந்தர்ப்பத்திற்கேற்றபடி ட்ரான்ஸ்பர் செய்தவரும் ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவருமாவது கூட்டுப்பங்குக்காரர்களாவது எழுத்துமூலமான நோடீஸ் கொடுப்பதன்மேல், நிலத்துக்குடையவர்- எந்த ரெவினியு வருஷத்தில் நோடீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதற்கு அடுத்துவருகிற ரெவினியு வருஷமுதல் (பிரிவினையினல் ஏற்பட்ட) உட்பகுதிகளைக் கைப்பற்றில் வைத்திருப்பவர்களோடு தனித்தனியாக ஒப்பந்தங்கள் செய்துகொள்ளவேண்டும்.

நோடீஸ் கொடுப்பதற்கு முன்னே, ட்ரான்ஸ்பர் செய்தவருக்கு அல்லது கூட்டுப் பங்குக்காரருக்கு விரோதமாக ஏற்பட்ட நடவடிக்கைகள் ட்ரான்ஸ்பர்செய்யப்பெற்றவருக்கு அல்லது கூட்டுப் பங்குக்காரருக்கு விரோதமாகச்செலவணியாகுமென்பது.

147. (1) 146-வது பிரிவின்படி நோடீஸ் கொடுப்பதற்கு முன்னேயாவது 146-வது பிரிவின்படி டிக்ரி அல்லது உத்தரவுக்கு அல்லது விக்கிரய ஸெர்டிபிகேட்டுக்கு அப்படிப்பட்ட நகலைக் கொண்டுவந்து காட்டுவதற்கு முன்னேயாவது, ட்ரான்ஸ்பர்செய்தவருக்கு அல்லது கூட்டுப் பங்குக்காரர்களுக்கு விரோதமாக இந்த ஆக்டின்படி ஆரம்பிக்கப்பட்ட அல்லது செய்துமுடிக்கப்பட்ட எல்லாக் காரியங்களும் நடவடிக்கைகளும்- அப்படிப்பட்ட காரியங்களும் நடவடிக்கைளும் எதற்காகப் பாக்கி சேரவேண்டுமோ அந்த நிலத்தையும், அதில் பயிராய்க்கொண்டிருக்கும் மாசூல்களையும், அதிலிருந்து சேகரிக்கப்பட்ட விளைபொருள்களையும் பாதிக்கிறதாகப் பொருள்படுகிறமட்டிலே, ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவருக்கு அல்லது கூட்டுப் பங்குகாரருக்கே விரோதமாக அப்படிப்பட்ட காரியங்களும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டு அல்லது நடத்தப்பட்டு அவரே பாக்கிதாரராயிருந்தாலெப்படியோ அப்படியே அவருக்கு விரோதமாகச் செலாமணியாவதோடுங்கூட பிரயோசனப்படத்தக்கவைகளுமாகும்.

(2) 146-வது பிரிவின்படி கொடுக்கவேண்டிய நோடீஸை 78-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில் நிபந்தனைகண்டிருக்கிறவிதமாகச்சேர்ப்பிக்க வேண்டும்.

(3) மேலேகண்டபடி எழுத்துமூலமான நோடீஸ் கொடுக்கப்படுகிறவரையிலே, ட்ரான்ஸ்பர் செய்தவராவது கூட்டுப்பங்குக்காரராவது-ட்ரான்ஸ்பர் அல்லது பிரிவினை செய்தகாரணத்தினல் மாத்திரமே, ஒரு ரயத்தாக அவருக்கு ஏற்பட்டிருக்கிற பொறுப்புகளில் எதற்காவது உட்பட்டவராகாமற் போகமாட்டார்.

நிலத்துக்குடையவரும் ட்ரான்ஸ்பர் செய்யப் பெற்றவர் அல்லது கூட்டுப்பங்குகாரும் ட்ரான்ஸ்பரைக்குறித்து அல்லது பாகம் பிரித்துக்கொள்வதைக் குறித்து நோடீஸ்.

148. யாதொரு நிலத்துக்குடையவர் தம்முடைய பூஸ்திதி அல்லது நிலம் முழுவதையுமோ அதில் ஒரு பாகத்தையோ ட்ரான்ஸ்பர்செய்தாலும்கூட்டுப் பங்குகாரர்களுக்குள் யாதொரு பூஸ்திதியாவதுநிலமாவதுபாகம்பிரிக்கப்பட்டாலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஷைநிலத்துக்குடையவரும் ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவர் அல்லது கூட்டுப்பங்குக்காரரும்-ஜில்லா கெஜட்டிற் பிரசுரஞ்செய்தும் இன்னும் பிரதேச கவர்ன்மெண்டார் விதியேற்படுத்தி எப்படி கட்டளையிடுவார்களோ அப்படிப்பட்ட வேறேவிதமாகவும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி ட்ரான்ஸ்பர்செய்யப்பட்ட அல்லது பாகித்துக்கொள்ளப்பட்ட நிலத்தை அனுபோகத்திலுடைய ரயத்துகளுக்கு ஷை ட்ரான்ஸ்பர் அல்லது பாகுபாட்டைக்குறித்து நோடீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிப்பட்ட நோடீஸ் கொடுத்தாலன்றி மற்றப்படிக்கும் கொடுக்கிறவரையிலும், மேலேகண்டபடி ட்ரான்ஸ்பரானபிறகு அல்லது பாகித்துக்கொள்ளப்பட்டப் பிறகு சேரவேண்டியிருந்து அப்படிப்பட்ட ட்ரான்ஸ்பர் அல்லது பாகுபாட்டைக்குறித்த நோடீஸ் ரயத்துக்குக் கொடுக்கப்பட்டதற்கு முன்னே ஷை நிலத்துக்குடையவரிடத்தில் செலுத்திவிட்ட யாதொரு குத்கைதத்தொகை விஷயமாய் ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவருக்காயினும் எந்த ரயத்தும் ஜவாப்தாரியாகமாட்டார்; மேலும், அப்படிப்பட்ட நோடீஸ் கொடுக்கப்பெறுத ரயத்துக்களில்எவராவது ஷை நிலத்துக்குடையவர் மேல் நடத்தின நடவடிக்கைகளெல்லாம்-ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவர் அல்லது கூட்டுப் பங்குக்காரர்மேலேயே முதலில் நடத்தப்பட்டிருந்தாலெப்படியோ அப்படியே அவருக்குவிரோதமாய்ச் செலாவணியாவதோடுங்கூட அவரைக் கட்டுப்படுத்தக்கூடியவைகளுமாகும்.

10-ம் அத்தியாயம்.

ராஜிநாமா கொடுப்பதும் (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்துவதும், (இஜெக்ட்மெண்டும்).

ரயத்து கைப்பற்று நிலத்திற்கு ராஜிநாமா கொடுப்பது.

149. (1) நிஷ்கரிஷைசெய்யப்பட்ட ஒரு காலவரையறைக்குக் குத்தகைச் சீட்டின்படியாவது எழுத்துமூலமான இதர உடன்படிக்கையின்படியாவது கட்டுப்பட்டிருக்கிற பழைய கரம்பைச்சேர்ந்த ரயத்தல்லாத வேறே ஒவ்வொரு ரயத்தும்-யாதொரு ரெவினியு வருஷத்தின் முடிவிலிருந்து ஊர்ஜிதத்துக்கு வரும்படியாய், ஒரு ரெவினியு புலத்தைக்காட்டிலும் குறைவாயிராத தம்முடைய கைப்பற்று நிலத்துக்காகிலும், அதன்யாதொரு பாகத்துக்காகிலும் ராஜிநாமா கொடுத்துவிடலாம்; ஆனால், ராஜிநாமா கொடுக்கப்பட்ட பாகமானது போக்குவரவு வசதியமைந்ததாயிருக்கவேண்டும்; மேலும், (ராஜிநாமா கொடுக்காமல்) வைத்துக்கொள்ளப்படும் பாகத்துக்குச் செலுத்தவேண்டிய குத்தகைத்தொகையை-ரயத்து விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல் கலெக்டரால் புனராலோசனை செய்யப்படுவதற்குட்பட்டு, நிலத்துக்குடையவர் பகுத்துக்கொடுக்கவேண்டும். (ராஜி நாமாகொடுக்காமல்) வைத்துக்கொள்ளப்படும் பாகத்தைப் புதிய கைப்பற்று நிலமாகப் பாவிக்கவேண்டியதோடுங்கூட, எந்த வருஷத்தில் ராஜிநாமாவைப்பற்றி நோடீஸ் கொடுக்கப்படுகிறதோ அந்த வருஷத்துக்கு அடுத்துவரும் ரெவினியு வருஷத்துக்காக ஷை பாகத்தின் சம்பந்தமாய்ப் புதிய பட்டா முச்சிலிக்கா பரிவர்த்தனம்செய்துகொள்ளவும்வேண்டும்.

(2) அந்தப்படி தம் கைப்பற்று நிலத்துக்கோ அதன் பாகத்துக்கோ ராஜிநாமாகொடுக்கிற யாதொரு ரயத்து - ராஜிநாமா கொடுக்க தாம் உத்தேசித்திருப்பதைக்குறித்து ஏப்ரல் மாதம் முதல்தேதியன்றைக்காயினும் அதற்கு முன்னதாகவாயினும் நிலத்துக்குடையவருக்கு நோடீஸ் கொடுத்தாலன்றி மற்றப்படி, ஷை நிலத்துக்குடையவர் கலெக்டரிடத்தில் வியாஜ்ஜியஞ் செய்துகொள்ளும்பட்சத்திலே, அப்படி ராஜிநாமாகொடுக்கும் தேதிக்கு அடுத்துவருகிற ரெவினியு வருஷத்தில் அந்தக்கைப்பற்றுநிலத்தின் அல்லது அதன் பாகத்தின் [illegible]த்திலே உண்டாகக்கூடிய யாதொரு குத்தகைத்தொகை நஷ்டத்தை நிலத்துக்குடையவருக்குக் கட்டிக்கொடுக்க உட்பட்டவராவார்.

நோடீஸ் சேர்ப்பிப்பதற்காக ரெவினியு ஆபீஸரிடத்தில் விண்ணப்பஞ் செய்து கொள்வது.

150. (1) **149**-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு நோடீஸைப் பெற்றுக்கொள்ளமாட்டேனென்று நிலத்துக்குடையவர் நிராகரித்தால், ரயத்து-யாதொரு ரெவினியு ஆபீஸரிடத்தில் ஏப்ரல் மாதம் பதினைந்தாம் தேதிக்கு மேற்படாமல் விண்ணப்பஞ் செய்துகொள்ளலாம்; அதன்மேல் அந்த ரெவினியு ஆபீஸர் அப்படிப்பட்ட நிலத்துக்குடையவருக்கு அந்த நோடீஸைச் சேர்ப்பிக்கவேண்டும்; சேர்ப்பிப்பதற்குப் பிடிக்கும் செலவை ரயத்து கொடுக்கவேண்டும்.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு நோடீஸும் எப்போது முதலில் கொடுப்பதற்காகக் காட்டப்பட்டதோ அப்போது பெற்றுக்கொள்ளப்பட்டதாக எண்ணப்படும்.

(நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்துவதற்கான வியாஜ்ஜியம்.

151. (1) யாதொரு அனுபோக ரயத்து-விவசாய காரியங்களின் சம்பந்தமாகத் தம் கைப்பற்றுநிலத்திற்குள்ள மதிப்பை விசேஷமாய்க் கெடுத்து அந்த நிலத்தை முக்கியமான அம்சங்களில் அப்படிப்பட்ட காரியங்களுக்குத் தகுதியற்றதாக்கிவிட்டாரென்னும் ஹேதுவைக்கொண்டு தான் அந்த ரயத்தை ஷெ கைப்பற்றுநிலத்திலிருந்து அப்புறப்படுத்தவேண்டுமென்று நிலத்துக்குடையவர் கலெக்டரிடத்தில் வியாஜ்ஜியம் செய்துகொள்ளலாம்.

(2) இந்தப் பிரிவில் என்னசொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, யாதொரு நிலத்துக்குடையவர் -(நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்துவதோடுங்கூட அல்லது அதற்குப் பர்த்தியாகப் பிரதிபலனுக்காகவாகிலும், பிரதிபலன் சகிதமாகவோ அது இல்லாமலோ, யாதொரு இன்ஜங்ஷனென்னும் உத்தரவுக்காகவாகிலும், சேதப்பட்டதை அல்லது வீண்போனதைச் சரிப்படுத்திக்கொடுக்கவேண்டுமென்றாகிலும், கலெக்டரிடத்தில் வியாஜ்ஜியம் தொடரலாம்.

சேதம் சரிப்படுத்தக்கூடியதாயிருக்கிற அல்லது பணரூபமான பிரதிபலன் போதுமான பரிகாரமாயிருக்கிற சந்தர்ப்பத்திலே டிக்ரி.

152. முந்திய பிரிவின்படிக்கான யாதொரு வியாஜ்ஜியத்திலே யாதொரு அனுபோக ரயத்தானவர் (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்தப்படுவதற்குள்ளாயிருப்பதாகத் தெரிந்தும், கைப்பற்று நிலத்துக்கு நேரிட்ட சேதம் சரிப்படுத்தக்கூடியதாயிருக்கிறதென்றாவது பணரூபமான பிரதிபலன் போதுமான பரிகாரமாயிருக்குமென்றாவது காணப்படுகிற பட்சத்திலே, டிக்ரி தேதிமுதல் ஒருமாதத்துக்குள்ளாகவாகிலும், கலெக்டர் காரணங்களைக்கண்டெழுதிவைத்து இன்னும் எவ்வளவு காலங் கொடுக்கிறாரோ அதற்குள்ளாகவாகிலும், ஷெ ரயத்து அந்த சேதத்தைச் சரிப்படுத்தாமலோ அல்லது கலெக்டரால் நிர்ணயிக்கப்பட்டு டிக்ரியில் கண்டெழுதியிருக்கிற தொகையைப் பிரதிபலனைச் செலுத்தாமலோ இருந்தால், அவரை அப்புறப்படுத்தவேண்டுமென்று ஷெ டிக்ரியில் ஏற்பாடு பண்ணவேண்டும்.

அனுபோக பாத்தியதை யில்லாத ரயத்தை என்ன ஹேதுக்களின்மேல் (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்தலாமோ அந்த ஹேதுக்கள்.

153. அனுபோக பாத்தியதையில்லாத யாதொரு ரயத்து-இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, அடியிற்கண்ட ஹேதுக்களில் ஒன்று அல்லது பலவற்றைக்கொண்டு கலெக்டரிடத்தில் வியாஜ்ஜியம் நடத்தி அந்த வியாஜ்ஜியத்தின் மூலமாய் அப்புறப்படுத்தப்படுவதற்குள்ளாவாரேயல்லாமல் மற்றப்படி அப்புறப்படுத்தப்படுவதற்குள்ளாகமாட்டார்:—

(ஏ) ஷெ ரயத்து நிலத்தைப் பாயக்காரி பாத்தியதை விஷயமான காரியங்களுக்குத் தகுதியற்றதாக்கிவிடக்கூடியவிதமாக அதை உபயோகப்படுத்தியிருக்கிறாரென்பது;

(பி) கைப்பற்று நிலத்தின் சம்பந்தமான குத்தகைத்தொகை பாக்கிக்காக அவர்மேலாகிலும் அவர் யாருக்குச் சட்டசம்மதமான பிரதிநிதியாயிருக்கிறாரோ அப்படிப்பட்ட யாதொருநபர்மேலாகிலும் பிறப்பிக்கப்பட்ட டிக்ரியானது-எந்த ரெவினியு வருஷத்தில் அது பிறப்பிக்கப்பட்டதோ அதற்கு அடுத்துவருகிற ரெவினியு வருஷம் முடிவாகிறபோது சரிசொல்லப்படாமலே இருக்கிறதென்பது;

(ஸி) **94**-வது பிரிவின்படி தீர்மானிக்கப்பட்டு நியாயமானதாகவும் தருமமானதாகவுமிருக்கிற குத்தகைத் தொகையைச் செலுத்துவதற்குச் சம்மதிக்கமாட்டேனென்று அவர் நிராகரித்திருக்கிறாரென்பது;

(டி) நிலத்துக்குடையவரின் அனுமதியில்லாமலே ரயத்து தம்முடைய கைப்பற்று நிலத்துக்குள்ளே லாபத்துக்காகச் சுரங்கமறுத்திருக்கிறாரென்பது, அல்லது பருக்கைக்கல் வெட்டியெடுத்திருக்கிறாரென்பது, அல்லது களிமண் தோண்டி எடுத்திருக்கிறாரென்பது;

(இ) ஐந்து வருஷத்திற்கு மேற்பட்ட ஒரு காலவரையறைக்கு ரெஜிஸ்டராயுள்ள குத்தகைச் சீட்டின்படி நிலத்தை அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருக்க அவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிற பட்சத்திலே அந்தக் குத்தகைச் சீட்டின் காலவரையறை முடிவாய்விட்டிருக்கிறதென்பது.

அனுபோகபாத்தியதை யில்லாத ரயத்து செய்திருக்கும் சீர்திருத்தத்துக்காகப் பிரதிபலன்.

154. (1) பழைய கரம்பைச்சேர்ந்த யாதொரு ரயத்தாவது அதே பாத்தியதைபெற்று அவருக்கு முன்னிருந்தவராவது இந்த ஆக்டின்படியாகிலும் நிலத்துக்குடையவரின் சம்மதத்தைப்பெற்றாகிலும் தம்முடைய கைப்பற்று நிலத்தின் விஷயத்திலே சீர்திருத்தம் செய்திருந்தால், எந்த நடவடிக்கைகள் காரணமாக அவரை (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்துவதற்கான டிக்ரி அல்லது உத்தரவு பிறப்பிக்கப்பட்டதோ அந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபிறகு அவர் ஷெ சீர்திருத்தம் செய்ய ஆரம்பித்திருந்தாலன்றி மற்றப்படி, அந்த சீர்திருத்தத்துக்காக ஏற்கெனவே பிரதிபலன் செலுத்தப்பட்டிராதபட்சத்திலே அந்தப் பிரதிபலனை அவர் பெறுகிறவரையிலும் அவரை அப்புறப்படுத்தக்கூடாது.

(2) ரயத்தை (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்துவதற்கான டிக்ரி அல்லது உத்தரவைப் பிறப்பிக்கிற ரெவினியு கோர்ட்டார் இந்தப் பிரிவின்படி அந்த ரயத்துக்கு ஏதாவது பிரதிபலன் சேரவேண்டியதாயிருந்தால் அந்தப் பிரதிபலன் தொகையை நிர்ணயிக்கவேண்டும்; மேலும், ரயத்தினிடமிருந்து ஏதாவது குத்தகைத்தொகை பாக்கி அல்லது செலவுத்தொகை நிலத்துக்குடையவருக்குச் சேரவேண்டியதிருக்கிறதென்று மேலே கண்டபடி அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளின் மூலமாய் நிச்சயித்தறியப்பட்டால், ஷெ பிரதிபலன் தொகையில் இந்தப் பாக்கித்தொகை அல்லது செலவுத்தொகைபோக மிகுதியிருப்பதை நிலத்துக்குடையவர் டிபாஸிட் செய்கிறவரையிலே ஷெ ரெவினியு கோர்ட்டார் (அந்த டிக்ரி அல்லது உத்தரவை) நிறைவேற்றாமல் நிறுத்திவைக்கவேண்டும்.

(3) ரயத்துக்குக் கிடைக்கக்கூடிய யாதொரு முக்கியமான பிரயோசனத்தை அனுசரித்துப் பிரதிபலன் இல்லாமலே சீர்திருத்தம் செய்யும்படி அவரைக் கட்டுப்படுத்தும் ஒரு ஒப்பந்தத்தின் பிரகாரம் அவர் சீர்திருத்தம் செய்திருந்து அந்தப் பிரயோசனத்தையும் அவர் அடைந்திருந்தால், அப்படிப்பட்ட சீர்திருத்தத்துக்காக இந்தப் பிரிவின்படி பிரதிபலன் வேண்டுமென்று கேட்கக்கூடாது.

(4) சீர்திருத்தங்களுக்காகக் கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்படும் பிரதிபலனை மதிப்பிடும் காரியத்துக்காக எத்தனை அஸெஸர்களை ஏற்படுத்திக்கொள்வது பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் தகுதியாகத் தோற்றுகிறதோ அத்தனை அஸெஸர்களை ரெவினியு கோர்ட்டார் தங்களோடு சேர்த்துக்கொள்ளும்படி செய்வதற்காகவும், அந்த அஸெஸர்களுக்கு இன்ன யோக்கியதாம்சங்கள் இருக்கவேண்டுமென்றும் அவர்களை இன்ன விதமாய்த் தெரிந்தெடுக்கவேண்டுமென்றும் நிர்ணயிப்பதற்காகவும் பிரதேச கவர்ன்மெண்டார் விதிகள் செய்யலாம்.

(5) சீர்திருத்தங்களுக்காகக் கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்படும் பிரதிபலனை மதிப்பிடும்போது,—

(ஏ) குத்தகை மதிப்பிலாவது கைப்பற்று நிலத்தின் மாகூலிலாவது அந்த மாகூலின் மதிப்பிலாவது சீர்திருத்தத்தின் காரணமாக எவ்வளவு அதிகரிப்பு உண்டாகிறதோ அதையும்,

(பி) அந்த சீர்திருத்தத்தின் நிலைமையையும், அதனால் உண்டாகும் பிரயோசனம் வெகுசாய் எவ்வளவு காலத்துக்கிருக்குமோ அதையும்,

(ஸி) அந்த சீர்திருத்தத்தை அனுசரித்து நிலத்துக்குடையவர் ரயத்துக்கு குத்தகைத் தொகையை எவ்வளவாவது கழித்துக்கொடுத்திருந்தாலும் வஜாசெய்திருந்தாலும் வேறே யாதொரு நன்மையைச் செய்திருந்தாலும் அதையும், கவனிக்கவேண்டும்.

பயிரின் விஷயத்திலும் விதைப்பதற்காகத் தயார் செய்யப்பட்ட நிலத்தின் விஷயத்திலும் (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்தப்பட்ட ரயத்துக்குள்ள சுதந்தரம்.

155. கைப்பற்று நிலத்தினின்றும் அப்புறப்படுத்தப்பட்ட ஒவ்வொரு ரயத்தின் விஷயத்திலும் அடியிற்கண்ட விதிகள் பிரயோகப்படத்தக்கவைகளாகும்:—

(1) ரயத்து (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்தப்பட்ட தேதிக்குமுன்னமே, அவர் கைப்பற்று நிலத்திலடங்கியிருக்கிற யாதொரு நிலத்திலே விதை விதைத்திருந்தாலும் நடவு நட்டிருந்தாலும், நிலத்துக்குடையவருக் கிஷ்டமிருந்தால், அந்த நிலத்தின் ஸ்வாதீனத்தை வைத்துக்கொண்டேயிருந்து அந்தப்பயிரைக் காப்பாற்றுங் காரியத்திற்காகவும் மாசூல் அறுவடைசெய்யுங்காரியத்திற்காகவும் அந்த நிலத்தை உபயோகித்துக்கொள்ளவாவது, அந்த நிலத்தைத் தயார்செய்து விதைத்ததற்காகவும் நடவு நட்டுப் பயிரைக் காப்பாற்றி வந்ததற்காகவும் அந்த ரயத்துக்குப்பிடித்திருக்கும் கஷ்டத்துக்கும் செலவுக்கும் ஏற்படும் உத்தேசமதிப்பை அதற்கு நியாயமான வட்டி சகிதமாக நிலத்துக்குடையவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளவாவது அந்த ரயத்துக்குச் சுதந்தரமுண்டு.

(2) ரயத்து அப்புறப்படுத்தப்பட்ட தேதிக்குமுன்னமே, அவர் [illegible] கைப்பற்று நிலத்திலடங்கியுள்ள யாதொரு நிலத்தை விதைவிதைப்பதற்காகத் தயார்செய்திருந்தும் அந்த நிலத்திலே அவர் விதை விதைக்காமலாவது நடவு நடாமலாவதிருந்தால், நிலத்தை அந்தப்படி தயார் செய்ததற்காக அவருக்குப் பிடித்திருக்கும் கஷ்டத்திற்கும் செலவுக்கும் ஏற்படும் உத்தேச மதிப்பை அதற்கு நியாயமான வட்டி சகிதமாக நிலத்துக்குடையவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள அந்த ரயத்துச்குச் சுதந்தரமுண்டு:

ஆனால், ரயத்தை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நிலத்துக்குடையவர் நடத்த ஆரம்பித்தபிறகு ரயத்து பிரதேச வழக்கத்துக்கு விரோதமாக யாதொரு நிலத்தில் சாகுபடிசெய்திருந்தாலும் அந்த நிலத்தை (சாகுபடிக்காகத்) தயார் செய்திருந்தாலும், இந்தப்பிரிவின்படி ஷை நிலத்தின் ஸ்வாதீனத்தை வைத்துக்கொண்டிருக்கவோ அதன் விஷயமாய் யாதொரு தொகையைப் பெறவோ அந்த ரயத்துக்குச் சுதந்தரமில்லை:

மேலும், அப்புறப்படுத்தப்படுகிற காலத்திலே நிலத்துக்குடையவருக்கு ரயத்து ஏதாவது குத்தகைத்தொகை செலுத்தவேண்டியதாயிருந்தால் அதை இந்தப்பிரிவின்படி ரயத்துக்குச் செலுத்தத்தக்க எந்தத் தொகைக்காகிலும் எதிர்க்கட்டலாம்.

முந்தியபிரிவின்படி நிலத்தைஅனுபோகத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்காக ரயத்து தொகைசெலுத்துவது.

156. அடுத்து முந்திய பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட பகுதியிற்கண்ட காரியத்திற்காக யாதொரு நிலத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டேயிருக்க நிலத்துக்குடையவர் அந்தப்பகுதியின்படி யாதொரு ரயத்துக்கு அனுமதிகொடுக்க இஷ்டப்பட்டால், எவ்வளவு காலத்திற்கு ஷை நிலத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்க ரயத்து அனுமதி பெறுகிறரோ அந்தக்காலத்திலே அந்த நிலத்தை உபயோகித்துக் கொள்வதற்காகவும் அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்காகவும், ரயத்து - தாம் என்ன வீதத்தின்படி நிலத்தைக் கைப்பற்றில் வைத்திருந்தாரோ அந்த வீதத்தின்படி நிலத்துக்குடையவருக்குக் குத்தகைத்தொகை செலுத்தவேண்டும்.

பழையகரம்பைச்சேர்ந்த பாயக்காரியை அப்புறப்படுத்துவது.

157. இதற்கு மாறுக என்ன ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பழைய கரம்பைச்சேர்ந்த ஒரு பாயக்காரியை-இந்த ஆக்டின்153-வது பிரிவிற்கண்ட காரணத்தினலல்லாமல் அல்லது 48, 49, 154, 155-வது பிரிவுகளிற்கண்டநிபந்தனைகளின்படிக்கும் அந்தநிபந்தனைகளுக்குட்பட்டு மல்லாமல் மற்றப்படி நிலத்துக்குடையவர் அந்த ஹோதாவிலே அப்புறப்படுத்தக்கூடாது.

பாயக்காரிகளை நீக்கிவிடுவது.

கலெக்டர் பிறப்பிக்கும் வாரண்டின்மேல் பாயக்காரியை நீக்கிவிடுவது.

158. ஒருபூஸ்திதியிலுள்ள சொந்த நிலத்தைச்சேர்ந்த யாதொரு பாயக்காரியிடத்திலிருந்து ஒரு ரெவினியுவருஷக்கடைசியில் பாக்கிவர வேண்டியிருந்து அந்த பாக்கியைத் தீர்ப்பதற்குப் போதுமான ஜப்திசெய்யத்தக்க சொத்து வளவின் மேலில்லாவிட்டால், நிலத்திற்குடையவரோ அதிகாரம்பெற்ற அவருடைய ஏஜெண்டோ ஷை வளவில்தாம் பிரவேசித்து அதை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளத் தமக்கதிகாரங்கொடுப்பதற்கான வாரண்டுக்காகக் கலெக்டரிடத்தில் விண்ணப்பஞ்செய்துகொள்ளலாம். அப்படிப்பட்ட வாரண்டுக்காக விண்ணப்பஞ்செய்துக்கொள்ளும் நபருடைய எழுத்துமூலமான ஸ்டேட்மெண்டை ஹாஜர்படுத்துவதன்மேல் ஷை வாரண்டைக் கொடுக்கவேண்டும்; பாக்கிதாரருடைய பெயரையும், வளவின் விவரத்தையும் விஸ்தீர்ணத்தையும், பாக்கிக்காகவும் வட்டிக்காகவும், ஜப்திசெலவு ஏதாவதிருந்தால் அதற்காகவும் சேரவேண்டியதொகை இவ்வளவென்பதையும், பாக்கிசெலுத்தியிருக்கவேண்டியதான தேதியையும், ஷை வளவின்மேல் போதுமான ஜப்திசெய்யத்தக்க சொத்து இல்லையென்பதற்கு உறுதிமொழியையும் மேலேசொன்னஸ்டேட்மெண்டில் கண்டெழுதவேண்டும். எந்த ஆபீஸிலிருந்து ஷை வாரண்ட் பிறப்பிக்கப்படுகிறதோ அந்த ஆபீஸில் அப்படிப்பட்ட ஸ்டேட்மெண்டைத் தாக்கல் செய்யவேண்டும்.

வாரண்டில் கண்டிருக்கவேண்டிய விஷயங்கள்.

159. அந்த வாரண்டில் - பாக்கிதாரருடைய பெயரையும், சேரவேண்டிய மொத்தத்தொகையையும், வளவின் விவரத்தையும் விஸ்தீர்ணத்தையும் காணவேண்டும்; மேலும், பதினைந்து தினத்திற்குள்ளாகத் தொகை செலுத்தப்படாவிட்டால் பாக்கிதாரர் (வளவின்)ஸ்வாதீனத்தை விட்டு நீக்கப்படுவாரென்றும் அதில் கண்டிருக்கவேண்டும். இந்தப்பிரிவிற் சொல்லியிருக்கிற பதினைந்து நாள் காலவரையறையைக் கலெக்டரானவர் விசேஷ காரணங்களைக்கொண்டு அதிகப்படுத்தலாம்.

வாரண்டை நிறைவேற்றுவது.

160. அந்த வாரண்டை ஒரு போலீஸ் உத்தியோகஸ்தரிடத்தில் ஒப்பிக்கவேண்டும்; அவர் - 78-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்சொல்லியிருக்கிறவிதமாக அதைச் சேர்ப்பிக்கவேண்டும். (வாரண்ட்) சேர்ப்பித்ததுமுதல் பதி

னைந்து தினத்திற்குள்ளாகவோ அடுத்து முந்திய பிரிவின்படி கலெக்டர் அதிகப்படுத்தின காலவரையறைக்குள்ளாகவோ ஷை வாரண்டிற்கண்ட தொகை செலுத்தப்படாமலிருந்து அந்த வாரண்டை ரத்துசெய்யவேண்டுமென்று பாக்கிதாரர் கலெக்டரிடத்தில் யாதொரு வியாஜ்ஜியமும் தாக்கல் செய்யாதிருக்கிறபட்சத்திலே, அல்லது அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் பாக்கிதாரருக்கு விரோதமாய்த் தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறபட்சத்திலே ஷை போலீஸ் உத்தியோகஸ்தரானவர் நிலத்துக்குடையவரை (வளவின்) ஸ்வாதீனப்படுத்தவேண்டும்.

பாயக்காரி பாத்தியதை முடிவாவது.

161. அடுத்து முந்தியபிரிவின்படி ஸ்வாதீனம் ஒப்பிக்கப்பட்டபிறகு பாக்கிதாரர்-ஷை நடவடிக்கைகளை ரத்துசெய்து தமக்கு மறுபடியும் ஸ்வாதீனம் கொடுக்கும்படி உத்தரவாகவேண்டுமென்று, அப்படி ஸ்வாதீனம் ஒப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றுமாதகாலத்திற்குள் ஸிவில் கோர்ட்டில் வியாஜ்ஜியம் தாக்கல் செய்யலாம்; அப்படி வியாஜ்ஜியம் தாக்கல்செய்யப்பட்டால் அந்த வியாஜ்ஜியத்தின் முடிவுக்குட்பட்டு ஷை வளவில் பாக்கிதாரருக்குள்ள பாத்தியதையும் சுதந்தரமும் அற்றுப்போய் முடிவாய்விடும்.

நிவாரணைசெய்வதற்கான பகுதி.

162. **158, 161**-வது பிரிவுகளிற்கண்டதெதுவும்-எந்தநிலத்தில் பாயக்காரிக்கு விற்கத்தக்க பாத்தியதை இருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு நிலத்துக்குப் பிரயோகப்படமாட்டாது.

துராகிருதமாக நுழைகிற நபரை (நிலத்லதவிட்டும்) அப்புறப்படுத்துவது.

163. (1) யாதொரு நபர் ஒருபூஸ்திதியிலுள்ள ரயத்தின் நிலத்தைப்பரம்பரை பாத்தியதை மூலமாகவாவது சட்டசம்மதமான ட்ரான்ஸ்பர் மூலமாகவாவதன்றி மற்றப்படி அனுபோகத்தில் வைத்திருந்து நிலத்துக்குடையவரால் ரயத்தென்று அங்கீகரிக்கப்பட்டிராவிட்டால், அவர்-ஸிவில்கோர்ட்டில் தொடரப்படும் வியாஜ்ஜியமூலமாய், துராகிருதமாக நுழைந்தவராக அப்புறப்படுத்தப்படுவதற்குள்ளாவார்.

(2) இந்தப்பிரிவின்படி அப்புறப்படுத்துவதற்காகத் தொடரப்படுகிறயாதொரு வியாஜ்ஜியத்திலே, தமக்கு 45-வது பிரிவின்படி செலுத்தத்தக்கதாயிருக்கும் யாதொரு தொகையை வசூல்செய்துகொள்ளவும் நிலத்துக்குடையவருக்கு சுதந்தரமுண்டு.

11-ம் அத்தியாயம்.

ஸர்வேசெய்வதும், உரிமை தஸ்தவேஜு ஏற்படுத்துவதும், குத்தகைத் தொகைகளைப் பைசல்செய்வதும்.

ஸர்வே செய்யும்படிக்கும் உரிமை தஸ்தவேஜு ஏற்படுத்தும்படிக்கும் உத்தரவு செய்ய பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.

164. (1) பிரதேச கவர்ன்மெண்டார்-ஒரு பூஸ்திதியின் விஷயமாகவாவது ஒரு பூஸ்திதியைச்சேர்ந்த பாகத்தின் விஷயமாகவாவது ஒரு ரெவினியு உத்தியோகஸ்தர் ஸர்வேசெய்யவேண்டுமென்றும், உரிமைகளைப்பற்றிய தஸ்தவேஜு தயார் செய்யவேண்டுமென்றும் அடியிற்கண்ட விஷயங்களில் கட்டளையிட்டு உத்தரவு செய்யலாம். அந்த விஷயங்களாவன:—

(ஏ) (i) நிலத்துக்குடையவராகிலும் ரயத்துகளாகிலும்,

(ii) நிலத்துக்குடையவர்கள் மொத்தத்தில் எத்தனைபேர் இருக்கிறார்களோ அதில் பாதிக்குக் குறையாதவர்களாகிலும்,

(iii) பூஸ்திதியிலாவது பூஸ்திதியின்பாகத்திலாவது முறையே நிலத்துக்குடையவருக்கோ நிலத்துக்குடையவர்களில் ஒருதொகையாருக்கோ இருக்கிற பாத்தியதையாயினும் பாத்தியதைகளின் மொத்தமாயினும் மதிப்பிலே அந்த பூஸ்திதி அல்லது பாகத்திலுள்ள சகல நிலத்துக்குடையவர்களின் மொத்த பங்குகளில் பாதிக்குக் குறைவாயிராவிட்டால், அந்த நிலத்துக்குடையவராகிலும் தொகையாராகிலும்,

(iv) ரயத்துகள் மொத்தத்தில் எத்தனைபேர் இருக்கிறார்களோ அதில் நாலிலொரு பங்குக்குறையாதவர்களாகிலும்,

செலவுகளைச் செலுத்துவதன்பொருட்டுப் பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடுகிற தொகையை டிபாஸிட் செய்து அல்லது அந்தத் தொகைக்காக ஜாமீன்கொடுத்து, மேலேகண்ட உத்தரவுக்காக விண்ணப்பஞ்செய்துகொள்வது;

(பி) ஒரு பூஸ்திதியையாவது அதன் பாகத்தையாவது சேர்ந்த நிலத்துக்குடையவரோ பொதுவாய் ரயத்துகளோ தமக்கு அல்லது தங்களுக்குச் சட்டப்படிக்குண்டான பாத்தியதைகளை நிலத்துக்குடையவர் அல்லது ரயத்துகள் என்னும் முறைமையில் அனுபவிப்பதைப் பாதுகாக்கும்பொருட்டு அப்படிப்பட்ட ஒரு தஸ்தவேஜைத் தயார்செய்வது அவசியமென்று பிரதேச கவர்ன்மெண்டார் எண்ணுவது, அல்லது அப்படிப்பட்ட தஸ்தவேஜைத் [illegible]

ய்வதனால், பொதுவாய் ரயத்துகளுக்கும் அவர்களைச்சேர்ந்த நிலத்துக்குடையவருக்கும் தற்காலத்தில் ஏற்பட்டிருக்கிற அல்லது இனிமேலுண்டாகக்கூடிய ஒரு பிரமாதமான விவாதமானது முடிவடையக்கூடியதாகுமென்றோ தடுக்கப்படக்கூடியதாகுமென்றோ பிரதேச கவர்ன்மெண்டார் எண்ணுவது; அல்லது,

(வி) அந்த பூஸ்திதியானது கவர்ன்மெண்டாருடைய நிர்வாகத்திலாகிலும் கோர்ட் ஆவ் வார்ட்ஸாருடைய மேல்விசாரணையின்கீழாகிலும் இருக்கிற பூஸ்திதியாயிருப்பது;

(2) இந்தப் பிரிவின்படிக்கான உத்தரவை ஸர்க்கார் கெஜட்டில் பிரசுரம்செய்வது-அந்த உத்தரவு கிரமமாய்ச் செய்யப்பட்டிருக்கிறதென்பதற்கு முடிவானசாட்சியமாகும்.

சென்னப்பட்டணம் 1897-ம்ஞூத்து 4-வது ஆக்ட்.

(3) ஸர்வேயையும் எல்லைகளையுங் குறித்த சென்னப்பட்டணம் 1897-ம்ஞூத்து ஆக்டின்படி ஸர்வே செய்யவேண்டும்; பிரதேச கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்படும் விதிகளை அனுசரித்து உரிமை தஸ்தவேஜு தயார்செய்யவேண்டும்; மேலும், பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடுகிறபட்சத்திலே—

(i) தண்ணீர் ஏரியிலிருந்து கிடைப்பதாயிருந்தாலுஞ்சரி கிணற்றிலிருந்து கிடைப்பதாயிருந்தாலுஞ்சரி (தண்ணீர்) சர்ப்பராகிடைக்கிற வேறே யாதொரு ஜலாதாரத்திலிருந்து கிடைப்பதாயிருந்தாலுஞ்சரி, அதை ரயத்துகள் வியவசாயசம்பந்தமான காரியங்களுக்காக உபயோகித்துக்கொள்ளுவது விஷயமாகவும்,

(ii) ஒவ்வொரு ரயத்தும் கைப்பற்றில் வைத்திருக்கிற நிலத்தைப் பயிரிடுவதற்காகத் தண்ணீர் சர்ப்பராசெய்வதற்கு உபயோகமான கட்டுவேலைகள் அப்படிப்பட்ட நிலத்தின் எல்லைகளுக்குள்ளே இருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி, அந்தக் கட்டுவேலைகளை மராமத்துசெய்து பராமரிப்பதுவிஷயமாகவும்,

ஒவ்வொரு ரயத்துக்கும் நிலத்துக்குடையவருக்கும் உள்ள சகல சுதந்தரங்களையும் கடமைகளையும்பற்றிய தஸ்தவேஜு ஷை உரிமை தஸ்தவேஜில் அடங்கியிருக்கலாம்.

எழுதிவைக்கவேண்டிய விவரங்கள்.

165. அடுத்துமுந்திய பிரிவின்படி உத்தரவு செய்யும்போது, இன்ன விவரங்களை எழுதிவைக்கவேண்டுமென்று அந்த உத்தரவில் காணவேண்டும்; மேலும், அவைகளில் மற்றவிவரங்களில்லாமலாகிலும், மற்றவிவரங்களுடன் கூடவாகிலும், அடியிற்கண்டவைகளெல்லாம் அல்லது அவைகளில் சில அடங்கியிருக்கவேண்டும். அவையாவன:—

(ஏ) பூஸ்திதியிலாவது அதன் பாகத்திலாவது ஒவ்வொரு நிலத்துக்குடையவரின் பெயரும் ஒவ்வொரு ரயத்தைச்சேர்ந்த நிலத்துக்குடையவரின் பெயரும்;

(பி) ரயத்தின் பெயரும், ரயத்து அனுபோக ரயத்தா அல்லது அனுபோகபாத்தியதையில்லாத ரயத்தா என்பதும், அல்லது ரயத்தில்லாத விஷயத்திலே அனுபோகதாரருடைய பெயர்;

(ஸி) ரயத்து வைத்துக்கொண்டிருக்கிற நிலம் கிராம ஸர்வே மாப்பில் (படத்தில்) காட்டியிருக்கிறபடி எங்கேயிருக்கிறதென்பதும், அதன் விஸ்தீர்ணமும், எல்லைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவையும்;

(டி) நிலமானது நீர்பாய்ச்சப்பெறும் நிலமா நீர்பாய்ச்சப்பெறுதநிலமா அல்லது தோட்டக்கால்நிலமா யென்பதும், நீர்பாய்ச்சப்பெறும் நிலமாயிருக்கிறபட்சத்திலே ஒருபோகம் விளையும் நிலமா இருபோகம் விளையும் நிலமா என்பதும்;

(இ) தஸ்தவேஜு தயார்செய்யப்படுங்காலத்திலே சட்டப்படி செலுத்தத்தக்க குத்தகைத்தொகையும், 30- வது பிரிவைச்சேர்ந்த (i) குறிப்பிட்ட பகுதியிற்கண்ட (ஏ) அடையாளமிட்ட விலக்கினாலுண்டாகக்கூடிய பிரயோசனத்தையடைய ரயத்துக்குச் சுதந்தரமிருக்கிறதா என்பதும்;

(யப்) குத்தகைத்தொகை எவ்விதமாக நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிறதென்பது, எனவே, யாதொரு டிக்ரியின்படி நிஷ்கரிஷைசெய்யப்பட்டிருக்கிறதா, இந்த ஆக்டின் நிபந்தனைகளின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிறதா, அல்லது வேறே விதமாய் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிறதா என்பதும்;

(ஜி) கைப்பற்று நிலத்தின் சம்பந்தமாகச் சட்டப்படி உண்டாகும் எவையேனும் பாத்தியதைகள்;

(எச்) குத்தகைத்தொகையானது சிறிதுசிறிதாக அதிகமாகிற குத்தகைத்தொகையாயிருக்கிற விஷயத்திலே, அது இன்னகாலத்திற்கொருதரம் அதிகமாகிறதென்பதும் (ஒவ்வொருதரமும்) இன்ன அளவுக்கு அதிகமாகிறதென்பதும்;

(ஐ) நிலமானது குத்தகைத்தொகையில்லாமல் வைத்துக்கொண்டிருப்பதாகப் பாத்தியதை கொண்டாடப்படும்பட்சத்திலே, அந்தக்குத்தகைத்தொகை வாஸ்தவத்தில் செலுத்தப்படுகிறதா இல்லையாயென்பதும்; குத்தகைத்தொகை செலுத்தப்படாதவிஷயத்திலே, அப்படிப்பட்ட குத்தகைத்தொகை செலுத்தாமலே அந்த நிலத்தை வைத்துக்கொண்டிருக்க அனுபோகதாரருக்குச் சுதந்தரமிருக்கிறதா என்பதும், அப்படி சுதந்தரமிருக்கும் பட்சத்தில் எந்த அதிகாரத்தினால் சுதந்தரமிருக்கிறதென்பதும்; ஷை நிலமானது குத்தகைத்தொகை செலுத்துவதற்குட்பட்டிருக்கும் பட்சத்திலே, செலுத்தத்தக்க குத்தகைத்தொகையும்;

(ஜே) **164**-வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிற நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான பாத்தியதைகளைப்பற்றிய தஸ்தவேஜு.

பிரதம தஸ்தவேஜைப் பிரசுரம் செய்வதும் அதற்குண்டான ஆட்சேபனைகளை வரப்பெற்றுக்கொள்வதும்.

166. (1) உரிமை தஸ்தவேஜு தயார்செய்கிற உத்தியோகஸ்தர் தமக்கு யுக்தமாகத் தோற்றுகிற விசாரணை செய்தபிறகு பூஸ்திதிக்காவது அதன்பாகத்துக்காவது ஒரு பிரதம தஸ்தவேஜைப் பூர்த்தி செய்திருந்தால், அவர்-அதன் மசோதாவை நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விதமாகவும், நிர்ணயிக்கப்பட்டிருக்கிற காலத்துக்கும் பிரசுரம் செய்வதுடன், அந்த மசோதாவிலுள்ள யாதொரு பதிவைப்பற்றியாகிலும் அதனின்றும் யாதொரு அம்சம் விட்டுவிடப்பட்டிருப்பதைப்பற்றியாகிலும் மேலே கண்டபடி பிரசுரித்திருக்கிற காலத்தில் கொண்டுவரப்படும் யாதோரு ஆட்சேபனையை வரப்பெற்றுக்கொண்டு அதைக்குறித்து ஆலோசனை செய்யவும்வேண்டும்.

முடிவான தஸ்தவேஜைப் பிரசுரம்செய்வது.

(2) அப்படிப்பட்ட ஆட்சேபனைகளைப் பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கும்விதிகளின் பிரகாரம் ஆலோசித்துப் பைசல் செய்வதன்மேல், மேற்சொன்ன உத்தியோகஸ்தர்-அந்த தஸ்தவேஜை முடிவாக யேற்படுத்தி, நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விதமாக அதை அவ்விடத்திலே பிரசுரம் செய்விக்கவேண்டும்; இந்த அத்தியாயத்தின்படி அந்ததஸ்தவேஜு கிரமமாய் யேற்படுத்தப்பட்டதென்பதற்கு மேலேகண்டபடி பிரசுரம் செய்வதே முடிவான சாட்சியமாகும்.

(3) பூஸ்திதியின் வெவ்வேறு பாகங்களின் சம்பந்தமாய் மசோதாவாகவோ முடிவாகவோ தனித்தனியான தஸ்தவேஜுகளை இந்தப்பிரிவின்படி பிரசுரஞ்செய்யலாம்.

உரிமை தஸ்தவேஜு முடிவாகப் பிரசுரிக்கப்பட்டதைப்பற்றியும் அது சரியாயிருப்பதைப்பற்றியும் இன்னவிதமாய்க் கொள்ளவேண்டுமென்பது.

167. (1) இந்த அத்தியாயத்தின்படி தயார்செய்து பிரசுரிக்கப்பட்டிருக்கிற ஒரு உரிமை தஸ்தவேஜாவது கிரமமாய் ஸெர்டிபை செய்யப்பட்டுள்ள அதன் நகலாவது அதனின்றும் எடுக்கப்பட்ட எக்ஸ்ட்ராக்டாவது யாதொரு வியாஜ்யத்திலாகிலும் வேறே விவகாரத்திலாகிலும் கொண்டுவந்து காட்டப்படுகிறபட்சத்திலே, அது முடிவாகப் பிரசுரிக்கப்படவில்லையென்று வெளிப்படையாய் மறுக்கப்பட்டாலன்றி மற்றப்படி, அது அப்படி பிரசுரிக்கப்பட்டிருப்பதாகவே கொள்ளப்படும்; மேலும், இந்த அத்தியாயத்தின்படி உரிமை தஸ்தவேஜானது முடிவாகப் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறதென்று கண்டு ரெவினியூ ஆபீஸராவது உரிமைதஸ்தவேஜு சம்பந்தப்படுகிறபூஸ்திதியாகிலும் அதன் பாகமாகிலும் முழுவதுமோ அல்லது சிறிதுமட்டிலோ எந்த டிஸ்ட்ரிக்டிலிருக்கிறதோ அந்த டிஸ்ட்ரிக்ட் கலெக்டராவது கையெழுத்து செய்துகொடுத்திருக்கும் ஸெர்டிபிகேட்டானது அப்படி பிரசுரம் செய்யப்பட்டதற்கு முடிவான சாட்சியமாகும்.

(2) யாதொரு பூஸ்திதியிலாகிலும் பூஸ்திதியின் யாதொரு பாகத்திலாகிலும் அடங்கியிருக்கிற ஒவ்வொரு கிராமத்துக்காகவும் உரிமை தஸ்தவேஜு முடிவாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதென்று ஷை பூஸ்திதியின் விஷயத்திலாவது பாகத்தின் விஷயத்திலாவது பிரதேச கவர்ன்மெண்டார் விளம்பரமூலமாய் நிர்ணயஞ்செய்யலாம்; அந்த விளம்பரமானது மேலே கண்டபடி பிரசுரிக்கப்பட்டிருக்கிறதென்பதற்கு முடிவான சாட்சியமாகும்.

(3) அந்தப்படி பிரசுரிக்கப்பட்ட யாதொரு உரிமை தஸ்தவேஜிலிருக்கிற பிரதிபதிவும்- அந்தப்பதிவில் கண்டெழுதப்பட்டிருக்கிற சங்கதிக்குச் சாட்சியமாவதோடுங்கூட, அது (ஷை பதிவு) சரியல்லவென்று ருஜு செய்யப்படுகிறவரையிலே, அது சரியாயிருப்பதாகவே கொள்ளவும்வேண்டும்.

குத்தகைத் தொகைகளைப் பைசல்செய்வது.

168. (1) **166**-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி உரிமை தஸ்தவேஜு முடிவாய்ப் பிரசுரமான தேதிமுதல் இரண்டு மாதகாலத்துக்குள்ளாக நிலத்துக்குடையவராகிலும் ரயத்துகளாகிலும் குத்தகைத்தொகை பைசல்செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டால், ரெவினியூ ஆபீஸர்-பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடுகிறபட்சத்திலே, நிலத்தின்விஷயமாய் நியாயமானதும் தருமமானதுமான குத்தகைத்தொகையைப் பைசல் செய்யவேண்டும்: ஆனால், ரயத்துகள் விண்ணப்பஞ்செய்துகொள்ளுகிற விஷயத்திலே, கிராமத்திலுள்ள கைப்பற்று நிலங்களின்மொத்த விஸ்தீர்ணத்திலே குறைந்தது நாலிலொருபாகத்தைக் கைப்பற்றில் வைத்திருப்பவர்கள் விண்ணப்பஞ்செய்துகொள்ளவேண்டும்.

விவரணம்.—யாதொரு நிலத்துக்குடையவர்-தம்முடைய பூஸ்திதியோ அதன் பாக மோ அங்காமியாகக் குத்தகைக்கு விடப்பட்டிருந்தும் பாதகமில்லாமலே, குத்தகை தொகை பைசல்செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துக்கொள்ளலாம்.

(2) இந்தப் பிரிவின்படி குத்தகைத்தொகை பைசல் செய்யும்போது, அந்த உத்தி யோகஸ்தர் - அப்போதிருக்கிற குத்தகைத்தொகை நியாயமானதாகவும் தருமமானதாகவு மிருக்கவில்லை என்று ருஜு செய்யப்படுகிறவரையிலே, அது நியாயமானதாகவும் தருமமா னதாகவும் இருப்பதாகவே கொள்ளவேண்டியதோடுகூட, ரயத்தால் செலுத்தப்படத்தக்க குத்தகைத்தொகை வீதங்களை நிஷ்கரிஷை செய்வதன்விஷயமாக இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளைக் கவனிக்கவும் வேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி நேரிடுகிற யாதொரு விஷயத்திலே, ரெவினியூ ஆபீஸர்-தமக்கு நியாயமானதாகவும் தருமமானதாகவும் தோற்றுகிற குத்தகைத்தொகையையாவது குத்தகைத்தொகை வீதத்தையாவது உபயகட்சிக்காரர்களிடத்திலும் பிரேரேபிக்கலாம்; அப்படி பிரேரேபிக்கப்படும் குத்தகைத்தொகையை அவர்கள் வாய்மொழிமூலமாகவாவது எழுத்து மூலமாகவாவது ஒத்துக்கொள்ளுகிற பட்சத்திலே, அதை நியாயமானதாகவும் தருமமானதாகவுமிருக்கிற குத்தகைத்தொகையென்று எழுதிவைக்கலாம்; மேலும், அது இந்த ஆக்டின்படி கிரமமாய்ப் பைசல்செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளவும் வேண்டும்.

(4) ஷை கட்சிக்காரர்கள் தங்களுக்குள்ளே ராஜிசெய்துகொண்டாவது வேறுவித மாகவாவது குத்தகைத்தொகையின் சம்பந்தமாக ஏகோபித்துப்போகிறபட்சத்திலே, அவர் கள் ஏகோபித்து ஏற்படுத்திக்கொண்ட தொகை நியாயமானதாகவும் தருமமானதாகவும் இருக்கிறதா என்று ரெவினியூ ஆபீஸர் பார்த்துத் திருப்தியடையவேண்டும்; அவர் அப்படி திருப்தியடைந்தால், மேலே கண்டபடி ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட தொகை நியாயமான தாகவும் தருமமானதாகவும் இருக்கிற குத்தகைத்தொகையென்று எழுதிவைக்கவேண்டும்; மேலேகண்ட பிரகாரம் அவர் திருப்தியடையாவிட்டால், அவ்வாறு எழுதிவைக்கக்கூடாது. அவர் அப்படி திருப்தியடையாதபட்சத்திலே, (2) (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளில் நிபந் தனை கண்டிருக்கிற பிரகாரம் நியாயமானதும் தருமமானதுமான ஒரு குத்தகைத் தொகை யைத் தாமே பைசல் செய்யவேண்டும்.

பைசல் ரெகார்டைப் பிரதமத்தில் பிரசு ரஞ்செய்வதும் திருத்துவதும்.

169. (1) **168**-வது பிரிவின்படி பைசல்செய்து முடிவாயிருந்தால், ரெவினியூ ஆபீஸர் - நிலத்துக்குடையவர் பெயரையும் ரயத்தின் பெயரை யும் கைப்பற்று நிலத்தின் விஸ்தீர்ணத்தையும் பிர தேச கவர்ன்மெண்டார் கட்டளையிடுகிற இதர விவ ரங்களையும் அந்தக் கைப்பற்று நிலத்துக்காகப் பை சல் செய்தேற்படுத்தப்பட்ட குத்தகைத் தொகையையும் கண்டு ஷை பைசலைப்பற்றி ஒரு ரெகார்ட் தயார் செய்வித்து, அதற்கு ஒரு பிரதியை நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விதமாக வும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற காலத்துக்கும் பிரசுரஞ்செய்விக்கவேண்டும்; மேலும், ஷை ரெவினியூ ஆபீஸர் - அப்படிப்பட்ட ரெகார்டிலுள்ள யாதொரு பதிவைப்பற்றியாகிலும் அந்த ரெகார்டிலிருந்து யாதொரு விஷயம் விடப்பட்டிருக்கிறதென்பதைப்பற்றியாகிலும் மேலேகண்டபடி பிரசுரஞ் செய்திருக்கிற காலத்தில் கொண்டுவரப்படும் எவையேனும் ஆட் சேபனைகளை வரப்பெற்றுக்கொண்டு அவைகளைக்குறித்து ஆலோசனை செய்வதோடுங்கூட, அவைகளைக்குறித்துப் பிரதேச கவர்ன்மெண்டார் ஏற்படுத்துகிற விதிகளின்படி தீர்மானஞ் செய்யவும் வேண்டும்.

(2) ஷை ரெவினியூ ஆபீஸரானவர்-பைசல் ரெகார்டை 170-வது பிரிவின்படி ஊர்ஜ ஜிதப்படுத்துவதற்கான அதிகாரிக்கு அனுப்புவதற்குமுன் எப்போதாவது, தாமாகவேயாகி லும் பிரதிகூலமாய்ப் பாதிக்கப்பட்டிருக்கிற யாதொரு நபர் விண்ணப்பஞ்செய்துகொள் ளுவதன் மேலாகிலும், ஷை ரெகார்டில் பதிவுசெய்யப்பட்டிருக்கிற யாதொரு குத்தகைத் தொகையைத் திருத்தலாம்.

ஆனால், சம்பந்தப்பட்ட நபர்கள் ஹாஜராகி இந்த விஷயத்தில் அவர்கள் சொல்லிக் கொள்ளவேண்டியதைச் சொல்லிக்கொள்வதற்காக அவர்களுக்கு நியாயமான நோடீஸ் கொடுத்தாகிறவரையில் அப்படிப்பட்ட எந்தப் பதிவையும் திருத்தக்கூடாது.

பைசல் ரெகார்டை முடிவாகத் திருத்து வதும் அதை உரிமை தஸ்தவேஜில் சேர்த் தெழுதுவதும்.

170. (1) **169**-வது பிரிவின்படி சகல ஆட்சேபனைகளைக்குறித்தும் தீர்மானஞ்செய்தா யிருந்தால், ரெவினியூ ஆபீஸர் - தம்முடைய பிரேரே பனைகளுக்குண்டான ஹேதுக்கள் கண்டெழுதியு ள்ள பூர்த்தியான ஒரு ஸ்டேட்மெண்டுடனும் தாம் (எவையேனும்) ஆட்சேபனைகள் வரப்பெற்றுக்கொ ண்டிருக்கிற பட்சத்திலே அவைகளுக்கு ஒரு சங்கிர கத்துடனும் பைசல் ரெகார்டை, ஊர்ஜ்ஜிதப்படுத்துவதற்காகப் பிரதேச கவர்ன்மெண்டா ரால் நியமிக்கப்படும் அதிகாரிக்கு அனுப்பவேண்டும்.

(2) ஊர்ஜ்ஜிதஞ்செய்யும் உத்தியோகஸ்தர்—பைசலேற்பாட்டைத் திருத்தியாவது திருத்தாமலாவது அதற்கு அனுமதி கொடுக்கலாம் அல்லது புனராலோசனைக்காக அதைத் திரும்பவும் அனுப்பலாம்:

ஆனால், சம்பந்தப்பட்ட நபர்கள் ஹாஜராகி இந்த விஷயத்தில் அவர்கள் சொல் லிக்கொள்ள வேண்டியதைச் சொல்லிக்கொள்ளுவதற்காக அவர்களுக்கு நியாயமான நோ டீஸ் கொடுத்தாகிற வரையில் யாதொரு பதிவைத் திருத்தவுங்கூடாது, பதிவுசெய்யவிட் டுப்போனதைச் சேர்க்கவுங்கூடாது.

(3) ஊர்ஜ்ஜிதஞ்செய்யும் உத்தியோகஸ்தர் பைசல் ரெகார்டுக்கு அனுமதி கொடுத் தபிறகு, அந்த ரெகார்டை 165-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிரசுரிக்கப்பட்டிருக்கிற உரிமை தஸ்தவேஜில் சேர்த்தெழுதவேண்டும்; மேலும், இவ்விதம் திருத்தப்பட்டிருக்கிற உரிமை தஸ்தவேஜை நிர்ணயிக்கப்பட்ட மாதிரியாக முடிவாய் மீண் டும் பிரசுரஞ் செய்யவேண்டும்; அப்படி பிரசுரிப்பதானது அந்த தஸ்தவேஜு கிரமமாய்த் தயார் செய்யப்பட்டதென்பதற்கு முடிவான சாட்சியமாகும்.

மேலான ரெவினியூ உத்யோகஸ்தரிடத் தில் அப்பீல்செய்துக்கொள்வதும் அவர்புன ராலோசனை செய்வதும்.

171. **169**-வது பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு ஆட்சேபனையின்மேல் ஒரு ரெ வினியூ ஆபீஸர் பிறப்பிக்கிற பிரதி உத்தரவின்மேலும் அப்பீலுண்டு; அந்த அப்பீலை எந்த உத்தரவின்மேல் அப்பீல்செய்து கொள்ளப்படுகிறதோ அதன் தேதி யிலிருந்து இரண்டுமாதத்திற்குள்ளாகக் கொடுத்துக் கொள்ளவேண்டும்; மேலும், அப்படிப்பட்ட அப் பீலை-பிரதேச கவன்மெண்டார் விதிமூலமாய் நிர்ணயிக்கிற மேலான ரெவினியூ உத்யோகஸ் தரிடத்திலாவது பிரதேச கவர்ன்மெண்டார் இதுவிஷயத்தில் பிரத்தியேகமாய் அதிகாரங் கொடுக்கிற உத்யோகஸ்தரிடத்திலாவது செய்துக்கொள்ளவேண்டும்.

ரெவினியூ போர்டார் புனராலோசனைசெய் வது.

172. ரெவினியூ போர்டார் - யாதொரு விஷயத்தில் விண்ணப்பம் செய்யப்படுவதன் மேலோ தாமாகவோ, **166**-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு உரிமைதஸ்த வேஜு முடிவாய்ப் பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு வருஷங்களுக்குள்ளாக எப்போதாவது, **168**-வது பிரிவின்படி குத்தகைதொகை பைசல் செய்யப்பட்டிருந்தால் ஷை தஸ்தவேஜு **170**-வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின் பிரகாரம் மீண்டும் பிரசுரிக்கப்பட்ட தேதியி லிருந்து இரண்டுவருஷத்துக்குள்ளாக எப்போதாவது, ஒரு ஸிவில் கோர்டார் **173**-வது பிரி வின்படி பிறப்பித்திருக்கிற யாதொரு உத்தரவைப் பாதிக்கக்கூடாத விதமாய், ஷை உரிமை தஸ்தவேஜையாகிலும் அதன் யாதொரு பாகத்தையாகிலும் புனராலோசனை செய்யும்படி கட் டளையிடலாம்.

ஆனால், சம்பந்தப்பட்ட சாட்சிக்காரர்கள் ஹாஜராகி இதுவிஷயத்தில் தாங்கள்சொல் லிக்கொள்ளவேண்டியதைச் சொல்லிக்கொள்வதற்காக அவர்களுக்கு நியாயமான அவகாசம் கொடுத்தாகிற வரையில் மேலேகண்டபடி கட்டளையிடக்கூடாது.

இன்னபடிக்கானல் பைசல் ரிகார்டிலுள்ள பதிவுகள் ஸிவில் வியாஜ்ஜிய மூலமாய் ஆட் சேபிக்கப்படுவதற்குள்ளாகுமென்பது.

173. (1) **168** முதல் **171** வரையிலுள்ள பிரிவுகளின்படி தயார்செய்யப்பட்டதும் **170**-வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரி வின்படி முடிவாய்ப் பிரசுரிக்கப்பட்ட உரிமை தஸ்த வேஜில் சேர்த்தெழுதப்பட்டதுமான பைசல் ரெகார் டிலுள்ள யாதொரு பதிவினாலாவது குத்தகைத்தொ கையைப் பைசல்செய்ய தவறிப்போய்விட்டதனாலா வது பிரதிகூலமாய்ப் பாதிக்கப்பட்டிருக்கிற யாதொரு நபர்-எந்தநிலத்துக்கு அந்தப்பதிவு சம்பந்தப்படுகிறதோ அல்லது எந்த நிலத்தில் (குத்தகைத்தொகை பைசல்) செய்யத்தவறிப் போனதோ அந்த நிலத்தை ஸ்வாதீனபடுத்துவதற்கான வியாஜ்ஜியத்தை வரவேற்றுக் கொள்ள அதிகாரம் பெற்றிருக்கும் ஸிவில் கோர்ட்டாரிடத்தில் வியாஜ்ஜியங் கொண்டுவர லாம்.

(2) அப்படிப்பட்ட வியாஜ்ஜியத்தை - **170**-வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி உரிமை தஸ்தவேஜு முடிவாய்ப்பிரசுரஞ்செய்யப்பட்ட தேதியிலிருந்து ஆறுமாதக்காலத்துக்குள்ளாகவாவது, ரெவினியூ உத்தியோகஸ்தரிடம் **171**-வது பிரிவின்படி அப்பீல்செய்துக்கொள்ளப்பட்டிருந்தால் அந்த அப்பீல் பைசல் செய்யப்பட்ட தேதியிலி ருந்து ஆறுமாதகாலத்திற்குள்ளாகவாவது கொண்டுவரவேண்டும்.

(3) அடியிற்கண்ட ஹேதுக்களில் யெதையேனும் தவிர வேறே ஹேதுவினாலல்லா மல் அப்படிப்பட்ட வியாஜ்ஜியத்தை கொண்டுவரலாம். அந்த ஹேதுக்கள் யெவையென் றால்:—

(ஏ) நிலத்துக்குடையவருக்கும் ரயத்துக்குமுள்ள சம்பந்தம் யிருந்துகொண்டி ருக்கிறது அல்லது இல்லாமலிருக்கிறது யென்பது;

(பி) நிலமானது குத்தகைத்தொகை செலுத்துவதற்குட்பட்டதல்லவென்பது;

(ஸி) நிலமானது யாதொரு குத்தகைத்தொகையுமில்லாமலே வைத்துக்கொள்ளப் பட்டிருப்பதாக உரிமை தஸ்தவேஜில் பதிவுசெய்யப்பட்டிருந்தபோதிலும் அது குத்தகைத்தொகை செலுத்துவதற்குட்பட்டதென்பது;

(டி) [illegible]-வது பிரிவைச்சேர்ந்த (டி), (யீ), (ஜெ) குறிப்பிட்ட பகுதிகளின்படி [illegible] பதிவில் பிழை[illegible]யென்பது;

(யி) அனுகூலமான விதப்படி கைப்பற்றில் வைத்துக்கொண்டிருப்பதைக் குறித்த விசேஷ திட்டங்கள் பிசகாய் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன என்பது அல்லது எழுதாமல் விட்டுவிடப்பட்டிருக்கின்றனவென்பது ;

(எப்) பைசலான குத்தகைத்தொகை 177-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி எந்தத்தேதியிலிருந்து அமுலுக்கு வரவேண்டுமோ அந்தத்தேதியை ரெவினியூ ஆபீஸர் பிசகாய் நிஷ்கரிஷைசெய்திருக்கிறாரென்பது.

அப்படிப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்திலே ஆலோசனைசபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெகொர்டெரியவர்களைப் பிரதிவாதியாக்கக்கூடாது.

(4) குத்தகைத்தொகைக்குச் சம்பந்தப்பட்ட பதிவானது பிசகென்று கோர்ட்டாருக்குத் தெரியவந்தால், அவர்கள் - (3) குறிப்பிட்ட உட்பிரிவிற்சொல்லப்பட்ட (ஏ), (பி) அடையாளமிட்ட விஷயங்களிலே, யாதொரு குத்தகைத்தொகையும் செலுத்தவேண்டியதில்லையென்றாவது நிர்ணயிக்கவேண்டும், அல்லது நியாயமானதும் தருமமானதுமான குத்தகைத்தொகையைக் கலெக்டர் நிஷ்கரிஷைசெய்யவேண்டுமென்றாவது கட்டளையிடவேண்டும் ; (சி) அடையாளமிட்ட விஷயத்திலே, நிலம் குத்தகைத்தொகை செலுத்துவதற்குட்பட்டதென்று நிர்ணயிக்கவேண்டும் ; (டி), (யி) அடையாளமிட்ட விஷயங்களிலே, இன்னது பதிந்திருக்கவேண்டுமென்று தீர்மானஞ் செய்யவேண்டும் ; (எப்) அடையாளமிட்ட விஷயத்திலே பைசலான குத்தகைத்தொகை எந்தத்தேதிமுதல் அமுலுக்கு வரவேண்டுமோ அந்தத்தேதியை நிர்ணயிக்கவேண்டும்.

(5) ஸிவில்கோர்ட்டார் இந்தப்பிரிவின்படி முடிவான உத்தரவுகளையாவது டிக்ரியையாவது பிறப்பித்திருந்தால், அதைப்பற்றி அவர்கள் டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்குத் தெரிவிக்கவேண்டும்.

171-வது 173-வது பிரிவுகளின்படிக்கான தீர்மானங்களின் குறிப்பை உரிமை தஸ்தவேஜிலே பதிவு செய்வது.

174. **171**-வது பிரிவின்படிக்கான அப்பீலின்மேல் செய்யப்படும் சகல தீர்மானங்களைப் பற்றியும், ஸிவில்கோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்டு **173**-வது பிரிவைச்சேர்ந்த (5) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கலெக்டருக்குத் தெரிவித்திருக்கிற சகல உத்தரவுகள் அல்லது டிக்ரிகளைப்பற்றியும் ஒரு குறிப்பை-**170**-வது பிரிவின்படி எந்த உரிமைதஸ்தவேஜில் பைசல்ரெகார்ட் சேர்த்தெழுதப்பட்டிருக்கிறதோ அந்த உரிமை தஸ்தவேஜில் எழுதிவைக்கவேண்டும் ; அந்தக் குறிப்பை ஷை தஸ்தவேஜைச்சேர்ந்த பாகமாக எண்ணவேண்டும்.

பைசலிலுள்ள தப்பிதங்களை ரெவினியூ ஆபீஸர் திருத்துவது.

175. (i) பிரதேச கவர்ன்மெண்டாரால் இது விஷயத்திலே பிரத்தியேகமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு ரெவினியூ ஆபீஸரானவர்-விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதன்மேலாவது தாமாகவேயாவது, கெட்ட எண்ணத்துடன் செய்யப்படாத யாதொரு தப்பிதத்தை **168**-வது அல்லது **169**-வது பிரிவின்படிக்கான யாதொரு தீர்மானம் அல்லது உத்தரவின் தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாகத் திருத்தலாம் ; அந்தத் தப்பிதம் தம்மால் செய்யப்பட்டிருந்தாலுஞ்சரி தமக்கு மேற்படாத அந்தஸ்திலுள்ள வேறே யாதொரு ரெவினியூ ஆபீஸரால் செய்யப்பட்டிருந்தாலுஞ்சரி அந்தப்படி திருத்தலாம் ; ஆனால், **171**-வது பிரிவின்படியாகிலும் **173**-வது பிரிவின்படியாகிலும் பிறப்பிக்கப்பட்ட யாதொரு டிக்ரி அல்லது உத்தரவுக்கு அந்தப்படி திருத்துவதனால் பாதகமுண்டாகக்கூடாது :

மேலும், அப்படிப்பட்ட உத்தரவு அல்லது டிக்ரியின்மேல் **171, 173** அல்லது **179**-வது பிரிவின்படி அப்பீல் செய்யப்பட்டு அது பைசலாகாமலிருந்தாலும், தீர்மானிக்கப்பட்டிருந்தாலும், அல்லது சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்கள் ஹாஜராகி இது விஷயத்தில் தாங்கள் சொல்லிக்கொள்ளவேண்டியதைச் சொல்லிக்கொள்வதற்காக அவர்களுக்கு நியாயமான அவகாசம் கொடுத்தாகிறவரையிலும் அந்த உத்தரவு அல்லது டிக்ரியை மேலே கண்டபடி திருத்தக்கூடாது.

உரிமைதஸ்தவேஜிலுள்ளதப்பிதங்களைத் திருத்துவது.

(ii) இதுவிஷயத்திலே பிரதேச கவர்ன்மெண்டாரால் பிரத்தியேகமாக அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு ரெவினியூ ஆபீஸரானவர்-விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதன்மேலாவது தாமாகவேயாவது, உரிமை தஸ்தவேஜிலுள்ள யாதொரு பதிவானது வாஸ்தவமாய் ஏற்பட்ட யாதொரு தப்பிதத்தினால் செய்யப்பட்டிருக்கிறதென்று அவர் தெரிந்து திருப்தியடைந்தால், **166**-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அந்த உரிமை தஸ்தவேஜு கடைசியாய்ப் பிரசுரம் செய்யப்பட்டதைக்குறித்த ஸெர்டிபிகேட்டின் தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாக அந்தப்பதிவைத்திருத்தலாம் :

ஆனால், அப்படிப்பட்ட பதிவை பாதிக்கக்கூடியபடி **171, 173** அல்லது **179**-வது பிரிவின்பிரகாரம் அப்பீல் செய்யப்பட்டு அது பைசலாகாமலிருந்தாலும், தீர்மானிக்கப்பட்டிருந்தாலும், அல்லது சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்கள் ஹாஜராகி இது விஷயத்தில் தாங்கள் சொல்லிக்கொள்ளவேண்டியதைச் சொல்லிக்கொள்வதற்காக அவர்களுக்கு நியாயமான அவகாசம் கொடுத்தாகிறவரையிலும், மேலேகண்டபடி எவ்வித திருத்தமும் செய்யக்கூடாது.

168 முதல் 171 வரையிலுள்ள பிரிவுகளின்படி பைசல் செய்யப்பட்ட குத்தகைத்தொகை சரியானதென்று கொள்வது.

176. **173**-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, **168** முதல் **170** வரையிலுள்ள பிரிவுகளின்படி பைசல்செய்யப்பட்டு, **166**-வது பிரிவின்படி முடிவாய்ப் பிரசுரிக்கப்பட்ட உரிமைதஸ்தவேஜில் பதிவு செய்யப்பட்டிருக்கிற, அல்லது **171** வது பிரிவுன்பிரகாரம் பைசல் செய்யப்பட்டிருக்கிற, சகல குத்தகைத்தொகைகளும்-இந்த ஆக்டின்தாற்பரியப்படி சரியாய்ப்பைசல் செய்யப்பட்டிருக்கின்றனவென்றும் நியாயமானதும் தருமமானதுமாகவுள்ள குத்தகைத்தொகைகளென்றும் எண்ணப்படும்.

குத்தகைத்தொகை பைசல் எந்தக்கால முதல் செலாவணியாகவேண்டுமோ அந்தக் காலமும், (குத்தகைத்தொகை) அதிகப்படுத்துவதற்குக் காலவரையறையும்.

177. யாதொரு குத்தகைத்தொகை இந்த அத்தியாயத்தின்படி பைசல்செய்யப்படுகிறபோது, அந்தப் பைசலேற்பாடானது-குத்தகைத்தொகையை நிஷ்கரிஷைசெய்கிற முடிவான உத்தரவு அல்லது தீர்மானத்தின் தேதிக்குப் பிறகு அடுத்துவருகிறரெவினியூ வருஷ ஆரம்பமுதல் செலாமணியாகும் ; மேலும், **30**-வது பிரிவைச்சேர்ந்த (ii), (iii) குறிப்பிட்ட பகுதிகளிற்கண்டகாரணமாக வாவது கைபற்று நிலத்தின் விஸ்தீரணத்தில் பின்னால் உண்டான காரணமாகவாவது அல்லாமல் மற்றபடி பைசல்செய்த ஷை குத்தகைத்தொகையை மேலேகண்ட காலத்துக்குப் பிறகு இருபது வருஷம் வரையில் அதிகப்படுத்தவும்கூடாது ; அந்தக் கைப்பற்று நிலத்தின் விஸ்தீரணத்தில் உண்டான மாறுதல் காரணமாகவாவது **38**-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிலுள்ள (ஏ), (பி) அடையாளமிட்ட பகுதிகளிற்கண்டகாரணமாகவாவது அல்லாமல் மற்றபடி அந்த குத்தகைத்தொகையைஷை காலவரையறைக்குள்ளாகக் குறைக்கவுங்கூடாது.

உரிமை தஸ்தவேஜு தயார் செய்யும் காலத்திலே நடவடிக்கைகளை நிறுத்தி வைப்பது.

178. (1) **168**-வது பிரிவின்படி ஒரு விண்ணப்பம் செய்யப்பட்டிருக்கிறபோது, **170**-வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி உரிமைதஸ்தவேஜு முடிவாய் பிரசுரித்தாகிறவரையில் யாதொரு ஸிவில் அல்லது ரெவினியூ கோர்ட்டாரிடத்தில் **30, 38, 40**-வது பிரிவுகளின் பிரகாரம் யாதொரு வியாஜ்ஜியம் கொண்டு வரவுங்கூடாது, யாதொரு நடவடிக்கை நடத்தவுங்கூடாது ; அல்லது ஏற்கெனவெ ஏதாவது வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கைக்குக் கொண்டுவரப்பட்டாவதிருந்தால் அதைப்பற்றி மேல்நடவடிக்கை நடத்தவுங்கூடாது.

(2) உரிமை தஸ்தவேஜைத் தயார்செய்யக் கட்டளையிட்டு **194**-வது பிரிவின்படி ஒரு உத்தரவு செய்திருக்கிறபோது, அந்த உரிமை தஸ்தவேஜு எந்த விஸ்தீர்ணத்துக்குச் சம்பந்தபடுகிறதோ அந்த விஸ்தீர்ணத்தின் குத்தகைத்தொகையை மாற்றுவதற்கான யாதொரு வியாஜ்ஜியம் அல்லது விண்ணப்பத்தை எந்த ஸிவில் அல்லது ரெவினியூ கோர்ட்டாரும்-அப்படிப்பட்ட உரிமைதஸ்தவேஜு முடிவாய்ப் பிரசுரிக்கப்பட்டாகிற வரையில் வரப்பெற்றுக்கொள்ளவாவது அதைக்குறித்து நடவடிக்கை நடத்தவாவது கூடாது.

உரிமை தஸ்தவேஜுக்குச் சம்பந்தப்பட்டவைகளாயுள்ள குத்தகைத்தொகையல்லாத வேறே விஷயங்களிலே ஸிவில் கோர்ட்டாரின் அதிகாரவரம்பு.

179. இந்த அத்தியாயத்தின்படி உரிமை தஸ்தவேஜைத் தயார் செய்யக் கட்டளையிடுகிற யாதொரு உத்தரவைக்குறித்தாவது, அப்படிப்பட்ட யாதொரு தஸ்தவேஜையோ அதன் யாதொரு பாகத்தையோ உண்டாக்குவது, பிரசுரிப்பது, அதில் கையெழுத்துசெய்வது அல்லது அத்தாட்சிக்கையெழுத்து போடுவதைக் குறித்தாவது, **173**-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றபடி, **168** முதல் **172** வரையிலுள்ள பிரிவுகளின்பிரகாரம் பைசல் செய்யப்பட்டிருக்கிற குத்தகைத்தொகையைப்பற்றிய அப்படிப்பட்ட ஒரு தஸ்தவேஜிலிருக்கும் யாதொரு பதிவை மாற்றுவதைக் குறித்தாவது எந்தஸிவில் கோர்ட்டாரிடத்திலும் வியாஜ்ஜியம் கொண்டுவரக்கூடாது.

ஆனால், யாதொரு நபர்-**164**-வது பிரிவைச்சேர்ந்த (i) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிறந்த உத்தரவை யனுசரித்துத் தயார்செய்யப்பட்ட உரிமை தஸ்தவேஜிலுள்ளதும் தமக்கு ஸ்வாதீனமாகவுள்ள யாதொரு பாத்தியதைக்குச் சம்பந்தப்பட்டதுமான யாதொரு பதிவைக்குறித்தாவது அந்த பாத்தியதைக்குச் சம்பந்தப்பட்ட விஷயம் ஷை தஸ்தவேஜில் எழுதாமல் விடப்பட்டிருப்பதைக்குறித்தாவது அதிருப்தியடைந்தால், அவர்-தம்முடைய பாத்தியதையை நிர்ணயிப்பதற்காக **1877**-ம்௵த்து ஸ்பெஸிபிக் ரிலீப் ஆக்ட் என்னும் குறித்த பரிகார ஆக்ட் **6**-ம் அத்தியாயத்தின்படி வியாஜ்ஜியம் கொண்டுவரலாம். **1877-ம்௵த்து I-வது ஆக்ட்.**

செலவுகளைப் பங்கீடுசெய்வது.

180. (1) இந்த அத்தியாயத்தின் பிரகாரம் உரிமை தஸ்தவேஜைத் தயார்செய்யும்படி உத்தரவு செய்யப்பட்டாலும் ஷை தஸ்தவேஜைத் தயார்செய்ய ஏற்றுக்கொண்டாலும், யாதொரு பூஸ்திதியிலாவது அதன் யாதொரு பாகத்திலாவது இந்த அத்தியாயத்திற்கண்ட நிபந்தனைகளை அமுலுக்குக் கொண்டுவருவதற்காகக் கவர்ன்மெண்டாருக்குப் பிடிக்கும் செலவையாகிலும் பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடுகிற

படி அந்தச்செலவின் ஒரு பாகத்தையாகிலும், அந்த பூஸ்திதி அல்லது அதன் பாகத்திலுள்ள ரயத்துகளும் நிலத்துக்குடையவரும், அந்த பூஸ்திதிக்குள்ளாக யாதொரு நிலம் அனுகூலமான ஷரத்துகளின்படி வைத்துக்கொள்ளப்பட்டிருந்து உரிமை தஸ்தாவேஜில் அடங்கியிருக்கிறபட்சத்திலே அந்த நிலத்தைக் கைப்பற்றில் வைத்துக்கொண்டிருக்கிறவர்களும்-பிரதேச கவர்ன்மெண்டாரால் சந்தர்ப்பங்களையெல்லாம் கவனித்து நிர்ணயிக்கப்படுகிற சங்கியா பரிமாணங்களின்படி கொடுக்கவேண்டும்; அந்தச் செலவுத்தொகையில் அப்படி யாதொரு நபர் செலுத்தவேண்டிய பாகத்தை நிலத்தீர்வையாக எண்ணவேண்டியதுமல்லாமல், அது நிலத்தீர்வை பாக்கியாயிருந்தாலெப்படியோ அப்படியே சந்தர்ப்பத்துக்கேற்றபடி 1864-ம்௵த்தியசென்னப்பட்டணத்துஸர்க்கார் தீர்வை வசூல் ஆக்டின் நிபந்தனைகளின்படிக்காவது 1867-ம்௵த்திய சென்னை இராஜதானிப்பட்டணத்து நிலவரியைக்குறித்த (திருத்துவதற்கான) ஆக்டின்படிக்காவதுவசூல் செய்யலாம்.

1864-ம்௵த்துச்சென்னபட்டணம் 2-வது ஆக்ட். 1867-ம்௵த்துச்சென்னபட்டணம் 6-வது ஆக்ட்.

(2) நிலத்துக்குடையவர்களுக்கும் ரயத்துகளுக்கும் கொடுப்பதற்காக இந்த அத்தியாயத்தின்படி தயார் செய்யப்பட்ட உரிமை தஸ்தவேஜு ஸர்வே (மாப்புகள்) படங்கள் இவைகளின் பிரதிகளைத் தயார் செய்வதற்காகப் பிடிக்கும் செலவை, இந்த அத்தியாயத்திற்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் பிடிக்கும் செலவின்பாகமாகக் கொள்ளவேண்டும்.

12-ம் அத்தியாயம்.

நிலத்துக்குடையவரின் சொந்த நிலம்.

நிலத்துக்குடையவரின் சொந்த நிலத்துக்குப் பாதகமுண்டாகமாட்டாதென்பது.

181. 6, 8, 10, 11, 12, 19, 46-வது பிரிவுகளிற் கண்டதெதனுலும், நிலத்துக்குடையவரின் சொந்த நிலத்திலே அனுபோகப் பாத்தியதை உண்டாகவுமாட்டாது; மேலும், அது ஷை நிலத்துக்கு எவ்விதமாகவேனும் பிரயோகப்படவுமாட்டாது.

ஆனல், ஒரு நிலத்துக்குடையவர் தம்முடைய சொந்த நிலத்தை-ரயத்தி நிலமாக மாற்றிக்கொள்வதற்கு இந்தப் பிரிவிலுள்ளதெதனுலும் தடை யுண்டாகமாட்டாது.

நிலத்துக்குடையவரின் சொந்தநிலத்தை ஸர்வே செய்யும்படிக்கும் அதற்குத் தஸ்தவேஜு எற்படுத்தும்படிக்கும் உத்தரவு செய்ய அதிகாரம்.

182. பிரதேச கவர்ன்மெண்டார்-குறித்த ஒரு பிரதேச விஸ்தீர்ணத்திலே நிலத்துக்குடையவரின் சொந்த நிலங்களாக இருக்கிற சகல நிலங்களையும் ஸர்வே செய்யும்படிக்கும் அவைகளுக்குத் தஸ்தவேஜு ஏற்படுத்தும்படிக்கும் ஒரு ரெவினியூ உத்தியோகஸ்தருக்குக் கட்டளையிட்டு உத்தரவு செய்யலாம்.

இந்தப் பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவை எந்த ஸிவில் கோர்ட்டிலாவது ரெவினியூ கோர்ட்டிலாவது ஆட்சேபிக்கக்கூடாது.

நிலத்துக்குடையவர் அல்லது (நிலத்தை) அனுபவிப்பவர் விண்ணப்பஞ் செய்துகொள்வதன்மேல் சொந்த நிலத்துக்குத் தஸ்தவேஜு ஏற்படுத்த அதிகாரம்.

183. (1) நிலத்துக்குடையவரின் சொந்த நிலமென்று சொல்லப்படுகிற யாதொரு நிலத்தின் விஷயத்திலே, அவராவது அதை அனுபவித்துவரும் யாதொரு நபராவது விண்ணப்பஞ்செய்துகொள்வதன்மேலும, செலவுக்காக வேண்டியிருக்கும் தொகையை டிபாஸிட்டாகக் கட்டுவதன்மேலும், யாதொரு ரெவினியூ ஆபீசர்-இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரால் செய்யப்பட்ட விதிகளுக்குட்பட்டு, பிரஸ்தாப நிலமானது நிலத்துக்குடையவரின் சொந்த நிலமா அல்லவா என்பதைக் கண்டறிந்து தஸ்தவேஜு ஏற்படுத்தலாம்.

(2) யாதொரு உடன்படிக்கை அல்லது ராஜியிலாகிலும், கூட்டுக்கள்ளயோசனை செய்தாவது மோசடியாகவாவது பெறப்பட்டதென்று ஒரு ரெவினியூ ஆபீஸருக்குத் திருப்திகரமாய் ருஜுவான யாதொரு டிக்ரியிலாகிலும், என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, யாதொரு நிலமானது நிலத்துக்குடையவரின் சொந்த நிலமென்று 185-வது பிரிவில் விவரித்திருக்கிற தன்மையுள்ளதாய்த் திருப்திகரமாயிருக்கிற சாட்சிய மூலமாக ருஜு செய்யப்பட்டாலன்றி மற்றப்படி, அந்த நிலத்தை நிலத்துக்குடையவரின் சொந்த நிலமென்று ஷை ரெவினியூ ஆபீசர் எழுதிவைக்கக்கூடாது.

சொந்த நிலத்துக்கு இன்னவிதமாகத் தஸ்தாவேஜு ஏற்படுத்த வேண்டுமென்பது.

184. ஒரு ரெவினியூ ஆபீஸர் 182-வது பிரிவின்படிக்காவது 183-வது பிரிவின்படிக்காவது பிரவர்த்திக்கும்போது, 166, 167, 179, 180-வது பிரிவுகளிற் கண்ட நிபந்தனைகள் கூடியவரையில் பிரயோகப்படும்.

நிலத்துக்குடையவரின் சொந்த நிலமென்று தீர்மானிப்பதற்கான விதிகள்.

185. யாதொரு வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கையிலே யாதொரு நிலம் நிலத்துக்குடையவரின் சொந்த நிலமா என்னும் விஷயத்தைத் தீர்மானிக்க அவசியம் நேரிடுகிறபோது, அவ்வவ்விடத்திய வழக்கத்தையும், அந்த நிலம் 1898-ம்௵ ஜுலைமீ 1உக்கு முன்னமே சொந்த நிலமென்று

குறிப்பிட்டுக் குத்தகைக்கு விடப்பட்டதா என்னும் விஷயத்தையும், கொண்டுவரப்படக் கூடிய வேறே யாதொரு சாட்சியத்தையும் கவனிக்கவேண்டும்; ஆனல், அந்தநிலம் சொந்த நிலம்தானென்று ருஜு செய்யப்படுகிறவரையிலே, அதைச் சொந்த நிலமா யிராததாகவே பாவிக்கவேண்டும். அல்லாமலும், இந்த ஆக்ட் வழங்கத்தொடங்குவதற்கு அடுத்து முந்திய பன்னிரண்டு வருஷகாலமாக, எந்த நிலம்-நிலத்துக்குடையவராலேயே தம்முடைய சொந்த கால்நடைகளைக்கொண்டாவது வாடகைக்கு வாங்கப்பட்டிருக்கிற கால்நடைகளைக் கொண்டாவது தம்முடைய சொந்த வேலைக்காரர்கள் மூலமாகவோ அல்லது கூலியாட்கள் மூலமாகவோ சொந்த நிலமாகப் பயிரிடப்பட்டிருக்கிறதென்று ரூபிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட சகலநிலத்தையும் நிலத்துக்குடையவரின் சொந்தநிலமாகவே எண்ணவேண்டும்.

13-ம் அத்தியாயம்.

கட்டிடங்கட்டுவதற்காகவும் வேறே காரியங்களுக்காகவும் நிலத்துக்குடையவர் நிலமெடுத்துக்கொள்வது.

கட்டிடங் கட்டுவதற்காகவும் வேறே காரியங்களுக்காகவும் நிலத்துக்குடையவர் நிலமெடுத்துக்கொள்வது.

186. (1) அசல் அதிகார வரம்புள்ள ஒரு பிரதான ஸிவில் கோர்ட்டார் நிலத்துக்குடையவர் விண்ணப்பஞ் செய்துகொள்வதன்மேலும்,

நிலத்தைக் கட்டிடம் கட்டுவதற்கான மனையாக உபயோகிப்பதுட்பட, தம்முடைய பூஸ்திதியின் அல்லது அந்த பூஸ்திதியிலுள்ள கைப்பற்று நிலத்தின் நன்மைக்குச் சம்பந்தப்பட்டு நியாயமானதாகவும், போதுமானதாகவுமுள்ள ஏதோ ஒரு காரியத்துக்காகவாவது, யாதொரு மதசம்பந்தமான-வித்தியாசம்பந்தமான-அல்லது தர்மார்த்தமான காரியத்துக்காகவாவது, சுரங்கங்கள் வெட்டி வேலை செய்வதற்காகவாவது ஷை கைப்பற்று நிலம் முழுவதையோ அதன் பாகத்தையோ எடுத்துக்கொள்ள நிலத்துக்குடையவர் விரும்புவதாய்த் தாங்கள் (ஷை கோர்ட்டார்) திருப்தியடைவதன்மேலும்,

கலெக்டருடைய ஸர்டிபிகேட்டின்மூலமாய் அந்தக்காரியம் நியாயமானதும்போதுமானதுமென்று தாங்கள் திருப்தியடைவதின்மேலும், தங்களுக்கு யுக்தமாகத்தோற்றுகிற திட்டங்களின்படி அதை ஷை நிலத்துக்குடையவர் எடுத்துக்கொள்ள அதிகாரங்கொடுத்து, ரயத்துக்குப் பூர்த்தியான பிரதிபலன் உட்பட, தாங்கள் (கோர்ட்டார்) அங்கீகரிக்கும் ஷரத்துகளின்மேல் ஷை கைப்பற்று நிலம் முழுவதிலோ அல்லது அதில் தாங்கள் அங்கீகரிக்கும் யாதொரு பாகத்திலோ ரயத்துக்குள்ள பாத்தியதையை நிலத்துக்குடையவருக்கு விற்றுவிடும்படி ரயத்துக்குக் கட்டளையிடலாம்.

(2) பிரதிபலன் தொகையைத் தீர்மானிக்கும் விஷயத்தில், நிலமெடுத்துக்கொள்வதற்கான 1894-ம்௵த்து 1-வது ஆக்ட் 23-வது 24-வது பிரிவுகளிற்கண்ட நிபந்தனைகளையனுசரித்துக் கோர்ட்டார் கூடியமட்டில் நடந்துகொள்ளவேண்டும்; மேலும், பலவந்தப்படுத்தி எடுத்துக்கொள்வதற்குப் பிரதிபலனுக, நிலம்-ரயத்தினல் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள்-இவைகளின் முழுமதிப்புக் கிரயத்தோடு நூற்றுக்குப் பதினைந்து வீதம் சேர்க்கவேண்டும்.

ஆனல், சுரங்கங்கள் வெட்டி வேலைசெய்வதற்காக நிலம் எடுத்துக்கொள்ளப்படும் விஷயத்திலே, ஷை கோர்ட்டார்-ரயத்துக்கு கனிஜவஸ்துக்களில் யாதொரு பாத்தியதை இருக்கிறபட்சத்தில், அந்த பாத்தியதையின்பொருட்டுப் பிரதிபலன் கொடுக்கும்படி தீர்மானிக்கவேண்டும்.

14-ம் அத்தியாயம்.

ஒப்பந்தம்.

ஒப்பந்தத்தைப்பற்றிய நிர்ப்பந்தங்கள்.

187. (1) இந்த ஆக்ட் ஜாரியாவதற்கு முன்பாவது ஜாரியானதற்குப் பிறகாவது நிலத்துக்குடையவரும் ரயத்தும் செய்துகொண்ட யாதொரு ஒப்பந்தத்திலுள்ளதெதனுலும்,—

(எ) இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி சீர்திருத்தங்கள் செய்ய-ஷை ரயத்துக்குள்ள பாத்தியதையானது எடுபட்டுப் போகவுமாட்டாது, அதற்கு வரையறை ஏற்படவுமாட்டாது;

(பி) 11-வது பிரிவில் நிபந்தனை யேற்படுத்தியிருக்கிறபடி நிலத்தை உபயோகித்துக்கொள்ள யாதொரு அனுபோக ரயத்துக்குள்ள பாத்தியதையானது எடுபட்டுப்போகவுமாட்டாது, அதற்கு வரையறை ஏற்படவுமாட்டாது;

(ஸி) 38-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிலே (ஏ) (பி) அடையாளமிட்ட பகுதிகளிலாகிலும், 62-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிலாகிலும் கண்ட ஹேதுக்களின்மேலாவது, நிஷ்கரிஷையான ஒரு காலவரையறைக்காக 1908-ம்௵ ஜனவரிமாதம் முதல்தேதிக்கு முன்னே ஏற்பட்டு இன்னும் செலாவணியாய்க்கொண்டிருக்கிற யாதொரு

குத்தகை விஷயந்தவிர மற்ற விஷயங்களில் 38-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிலே (ஸி) அடையாளமிட்ட பகுதியிற்கண்ட ஹேதுவின் மேலாவது குத்தகைத் தொகையைக் குறைக்கும்படியாக வியாஜ்ஜியங்கொண்டுவரவோ விண்ணப்பம் செய்துகொள்ளவோ ஒரு அனுபோக ரயத்துக்குக்குள்ள பாத்தியதையானது எடுபட்டுப்போகமாட்டாது ;

(டி) 42-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளின் பிரகாரம் குத்தகைத்தொகையை மாற்றும்படி விண்ணப்பஞ் செய்துகொள்வதற்கு ஒரு அனுபோக ரயத்துக்குள்ள பாத்தியதை எடுபட்டுப்போக மட்டாது ;

(இ) 50-வது பிரிவின்படி குத்தகைத்தொகையை (பணமாக) மாற்றிக்கொள்வதற்கு வியாஜ்ஜியங் கொண்டுவர ஒரு நிலத்துக்குடையவர் அல்லது அனுபோக ரயத்துக்குள்ள பாத்தியதையானது எடுபட்டுப்போகமாட்டாது ;

(எப்) 149-வது பிரிவின்படி தம்முடைய கைப்பற்று நிலத்துக்கு ராஜிநாமா கொடுத்துவிட ஒரு அனுபோக ரயத்துக்குள்ள பாத்தியதையானது எடுபட்டுப்போகமாட்டாது ; அல்லது

(ஜி) இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படிக்கன்றி மற்றப்படி ஒரு ரயத்தை (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்த ஒரு நிலத்துக்குடையவருக்குப் பாத்தியதை உண்டாகமாட்டாது.

(2) இந்த ஆக்ட் ஜாரிசெய்யப்பட்ட பிறகு நிலத்துக்குடையவரும் ரயத்தும் செய்துகொள்ளும் யாதொரு ஒப்பந்தத்திலுள்ளதெதனுலும், செலுத்தத்தக்க வட்டித்தொகை அதிகப்படும்படியாக, குத்தகைத்தொகை பாக்கியின்மேல் செலுத்தத்தக்க வட்டி சம்பந்தமாகவுள்ள 61-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குப் பாதக முண்டாகமாட்டாது.

பழைய காம்பில் அனுபோக பாத்தியதை அடைவது சம்பந்தமாக ஒப்பந்தத்தைப்பற்றிய நிர்ப்பந்தம்.

188. இந்த ஆக்ட் ஜாரியாவதற்கு முன்பாவது ஜாரியானதற்குப் பிறகாவது, பழைய காம்பைச்சேர்ந்த ஒரு ரயத்தும் யாதொரு நிலத்துக்குடையவரும் செய்துகொண்ட யாதொரு ஒப்பந்தத்திலுள்ளதெதனுலும், அந்த நிலத்தின் விஷயத்திலே ஒரு அனுபோக ரயத்தின் அந்தஸ்தையடைய ஷை ரயத்துக்குள்ள பாத்தியதை எடுபட்டுப்போகவுமாட்டாது, அந்த பாத்தியதைக்கு வரையறை ஏற்படவுமாட்டாது.

15-ம் அத்தியாயம்.

அதிகாரமும் நடவடிக்கையும்.

வியாஜ்ஜியங்களும் விண்ணப்பங்களும்.

189. (1) ஷெட்யூலைச்சேர்ந்த எ, பி, பாகங்களிற்கண்ட தன்மையுள்ள சகல வியாஜ்ஜியங்களையும் விண்ணப்பங்களையும், கலெக்டராவது இந்த ஆக்டின்படி பிரத்தியேகமாய் அதிகாரங்கொடுக்கப்பெற்ற வேறே ரெவினியூ ஆபீஸராவது ஒரு ரெவினியூ கோர்ட்டாக இருந்து விசாரித்துத் தீர்மானிக்கவேண்டும் ; எந்த ஸிவில் கோர்ட்டாரும் - தங்களுடைய அசல் அதிகாரம் செலுத்துகையிலே, எந்த விவாதம் அல்லது விஷயத்தின் சம்பந்தமாய் மேலேகண்ட யாதொரு வியாஜ்ஜியம் கொண்டுபோகக்கூடுமோ அல்லது விண்ணப்பம் செய்துகொள்ளக்கூடுமோ அந்த விவாதம் அல்லது விஷயத்தை விசாரிக்கக்கூடாது.

அப்பீல்கள்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிறப்பிக்கப்படும் டிக்ரிகளும் உத்தரவுகளும் ஷெட்யூலைச்சேர்ந்த எ, பி, பாகங்களிலே ஆருவது கலத்தில் சொல்லியிருக்கிறபடி அப்பீல்செய்துகொள்ளப்படுவதற்கு உட்பட்டவைகளாகும்.

(3) ரெவினியூ கோர்ட்டாருடைய அதிகாரவரம்புக்குள்ளேயே பிரத்தியேகமாய் அடங்கியிருக்கிற யாதொரு விஷயத்தைக்குறித்து இந்த ஆக்டின்படி யாதொரு வியாஜ்ஜியத்திலாவது நடவடிக்கையிலாவது ஒரு ரெவினியூ கோர்ட்டாராலாகிலும் அப்பீல் கோர்ட்டாராலாகிலும் புனர் விசாரணை செய்யும் அதிகாரியாலாகிலும் செய்யப்பட்ட தீர்மானமானது - அந்த வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கையைச்சேர்ந்த கட்சிக்காரர்களுக்கும் அவர்கள் மூலமாகப் பாத்தியதை கொண்டாடுகிற நபர்களுக்கும் அதே விவாத விஷயத்தைக்குறித்து ஒரு ஸிவில் கோர்ட்டில் நடத்தப்படும் யாதொரு வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கையிலே அவர்களைக் கட்டுப்படுத்தும்.

இரண்டாவது அப்பீல்கள்.

190. (1) 15-வது பிரிவின்படிக்கான விண்ணப்பத்தின் விஷயத்திலாவது 40-வது பிரிவின்படிக்கான வியாஜ்ஜியத்தின் விஷயத்திலாவது டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் அப்பீலிலே ஜாரிசெய்யும் உத்தரவின்மேல் ரெவினியூபோர்டாரிடத்தில் இரண்டாவது அப்பீல் செய்துக்கொள்ளலாம்.

(இன்னும் வரும்).

MISCELLANEOUS SUITS.

சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.

எழும்பூர் போலீஸ் கோர்ட்.

(மிஸ்டர் யப். டி. பர்ட் முன்பாக.)

10-7-08.

எட்டு வருஷங்களுக்கு தண்டிக்கப்பட்டு ஜெயிலிலிருக்கும் ஆறுமுகம் என்னும் கைதி ஷை ஜெயிலின் வெள்ளைக்கார வார்டரை அதாவது பாது காவலனை கொலை செய்வதற்காக இம்மீ 4உ பலமாய் குத்தினுன் என்பதாக சார்ஜ் செய்யப்பட்டான்.

ஜெயிலில் சக்கிலி ஷாப்புக்கு தலைமையாயிருக்கும் மிஸ்டர் யப். ஹால் என்பவர் இம்மீ 4உ காலை 7-மணிக்கு வேலையின்பேரிலிருந்த சமயத்தில், காவல்கார வேலையிலிருக்கும் பஞ்சடு என்னும் கைதி குற்றவாளிக்கு பதப்படுத்தா சாமான்களைக் கொடுத்த விஷயமாய், இருவருக்கும் சண்டை உண்டானதென்றும், ஹால் சண்டையில் பிரவேசித்து குற்றவாளியை அடித்து சண்டையை விலக்கினுரென்றும், அன்றையதினம் மாலை 4 மணிக்கு ஷை யார் தையல் மிஷனண்டையிலிருந்து, சில வேலைக்காரர்களை கவனித்துக் கொண்டிருந்தபோது முதுகில் பலமாய் குத்து விழுந்ததென்றும், திரும்பிப் பார்க்க குற்றவாளி கையில் கத்தியோடிருப்பதைகண்டு, அவனை பிடிக்க முயன்றதில் அவன் ஓடினுன் என்றும், அவன் ஓட இவரோட கடைசியாய் கேட்டண்டை குற்றவாளி பின்னுக்குத்திரும்பி, இடது பக்கத்தில் அவரை மறுபடியும் குத்தினுன் என்றும், அதனல் மிஸ்டர் ஹால் தவறி கீழே விழுந்துவிடவும், குற்றவாளி ஜெயிலர் ஆபீசுக்காக ஓடவும், ஹெட்வார்டர் ஒருவரால் அவன் பிடிக்கப்பட்டு, இராமசாமி என்னும் மற்றொரு கைதியால் அவன் கையிலிருந்த கத்தி பிடுங்கப்பட்டதென்றும் ருஜுவானது. பின்னும் பிரயாதியின் முதுகில் முக்கால் அங்குல ஷை வார்டரின் நீளமும் ஒன்றரை அங்குல அகலமுமான காய மிருந்ததென்பதாக வைத்திய சாக்ஷியத்தால் ஏற்பட்டது.

குற்றவாளி செஷனுக்கு கமிட்டி செய்யப்பட்டான்.

20-7-08.

கைதியின் தற்கொலை முயற்சி :—இம்மாதம் 17-தேதி ஜெயிலிலிருக்கும் முனுசாமி என்னும் குற்றவாளி, கயிறுகட்டி தூக்கு போட்டுக்கொள்ள முயற்சித்தான் என்பதாக அவனை இன்ஸ்பெக்டர் யப். ஹார்ட்னெட் சார்ஜ் செய்தார். ஜெயிலில் பாரா வேலையிலிருக்கும் கைதி யொருவன் சுற்றிப்பார்த்து வரும்போது ஷை (முனுசாமி) கைதியின் அறையில் ஒரு சத்தம்கேட்டு, சந்தேகங்கொண்டு விளக்கை தூக்கி ஜன்னல் வழியாய்ப் பார்க்கும்போது, முனுசாமி கயிற்றை மாட்டிக்கொண்டு தொங்குவது தெரிந்து, ஜன்னல்கம்பிகளின் வழியாய் பாராக்காரன் தன் கையைவிட்டு, அவன் கையை பிடித்து தன் பக்கமாய் இழுக்க கயிறு அறுந்து விட்டதென்றும், பிறகு கதவைதிறந்து பார்த்ததில், கைதி சுரணையில்லாமல் காணப்பட்டான் என்றும் ருஜுவானது.

குற்றவாளி, தான் நோயினல் பாதைப்பட்டுக் கொண்டிருந்த போதுந் தன்னை வேலைசெய்யும்படி உத்திரவு செய்ததால், தான் மேற்கண்ட விதம் செய்து கொண்டதாக தெரிவித்தான்.

மாஜிஸ்டிரேட் குற்றவாளிக்கு ஒருமாத வெறுங் காவல் தண்டனை விதித்து, இதை ஏற்கனவே விதிக்கப்பட்டிருக்கும் தண்டனை முடிவில் சேர்த்துக் கொள்ளவேண்டு மென்றும், குற்றவாளி சொஸ்தப்படுகிற வரையில் ஜெயில் அதிகாரிகள் அவனுக்கு யாதொரு கடினவேலையும் கொடுக்கவேண்டிய தில்லையென்றும் தீர்மானித்தார்.

(மிஸ்டர் மீர் சுல்தான் மோஹிதீன் சாயப் முன்பாக).

10-7-08.

அஜாக்கிரதையான போலீஸ் பிராசிகியூஷன் :—இம்மீ 18உ மாலை மாசிலாமணி, கோவிந்தன் என்னும் இரண்டு சிறுவர்கள் சண்டை போட்டுக்கொண்டிருந்ததாக போலீஸ் கான்ஸ்டெபில் ஒருவன் சார்ஜ் செய்தான். இதை விசாரணைசெய்த மாஜிஸ்டிரேட் அடியில் கண்ட தீர்மானஞ் செய்திருக்கிறுர் :—

Sec. 75
Madras City Police Act.

Whoever is found drunk and incapable of taking care of himself, is guilty of any riotuous, disorderly or indecent behaviour in any street or thorough fare, in any place of public amusement or resort, or on board any passenger boat or vessel, and whoever is guilty of any violent, disorderly, or indecent behaviour in any Police Court, Office, or Station, shall be liable on conviction to fine not exceeding fifty rupees, or to imprisonment not exceeding one month, or to both.

சென்னப்பட்டணம் 1888-ம் வருஷத்து 3-வது ஆக்ட்டாகிய, சிட்டி போலீஸ் ஆக்ட், 75-து செக்ஷனில் யாதொரு தெரு அல்லது ராதாரியிலாவது ஜனங்கள் விநோதமாய்க் காலங்கழிக்கும் இடம் அல்லது வழக்கமாய்க் கூடும் இடத்திலாவது, யாதொரு பயணக்காரர் படகு அல்லது மரக்கலத்திலாவது, எவனுவது குடித்து வெறிகொண்டு மெய் மறந்திருந்து கலகம் உண்டாகும்படி யாகவாவது, தாறுமாறுக வாவது, அக்கிரமமாக வாவது, நடந்து கொண்டாலும், யாதொரு போலீஸ் கோர்ட்-ஆபீஸ் அல்லது ஸ்டேஷனில் எவனுவது போக்கிரித்தனஞ் செய்தாலும், கலகஞ்செய்தாலும், அவமரியாதையாய் நடந்தாலும், அவன் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதின்பேரில் ஐம்பது ரூபாய்க்கு அதிகப்படாமல் அபராதத்துக்குள்ளாவான் ; அல்லது ஒரு மாசத்துக்கு அதிகப்படாமல் காவலில் வைக்கப்படுவான் ; அல்லது இவ்விரண்டு தண்டனைக்கு உள்ளாவான், என்று சொல்லப்பட்டிருக்கிறது. "இந்த 75-வது செக்ஷன்படி குற்றவாளிகளாகிய சிறுவர்கள் சார்ஜ் செய்யப்பட்டிருக்கிறுர்கள். இதற்காதாரமாய் விடப்பட்ட ஒரே சாக்ஷியாகிய 1572-வது நெம்பர் போலீஸ் ஜவான், தனக்கு இது விஷயமாய் யாதொன்றுமே தெரியாதென்றும், சப் இன்ஸ்பெக்டர் உத்திரவு செய்தபடி அவர்களை சார்ஜ் செய்ததாகவும் சொல்லுகிறுன். சுமார் 10-வயதுள்ள ஷை சிறுவர்கள், தாங்கள் விளையாடிக்கொண்டிருந்ததே தவிற மற்றப்படி சண்டைப்போடவில்லை என்று சொல்லுகிறுர்கள். ஒவ்வொரு போலீஸ் ஜவானும், பிரதிமாதமும் எட்டு கேஸுகளுக்கு குறையாமல் 10-கேஸுகள் வரையில் கண்டு பிடித்துக்கொண்டு வரவேண்டுமென்றும், தவறினுல் தண்டிக்கப்படுவாரென்றும், ஹெட் கான்ஸ்டபிலும், ஸ்டேஷன் அவுஸ் ஆபீசரும் தனக்கு சொன்னதாக ஷை கான்ஸ்டேபில் தெரிவிக்கிறதன்னியில், தான் இதுவரையில் ஒரே கேஸ்தான் பிடித்திருக்கிறதாக கூறுகிறுன். இவ்விதமாய் மேலதிகாரிகளின் சரியான தவனிப்பு இல்லாமல், போலீஸாரால் கொண்டுவரப்படும் கேசுகளை, யாம் அநேக தடவைகளி

கண்டு ரிமார்க் செய்திருக்கிறோம். பகுத்தறியாமல் கொண்டுவரும் கேசுகளை தடுக்க தக்க ஏற்பாடுகள் செய்தே தீரவேண்டுமென்று யாம் நினைக்கிறோம். ஹெட் கான்ஸ்டபிலும், ஸ்டேஷன் ஆபீசரும் போலீஸ் ஜவானுக்கு செய்த ஷை உத்திரவாவது, அல்லது அவ்வித தாற்பரியமாவதுகுடி கொண்டிருக்கும் பக்ஷத்தில், அவைகள் ரத்து செய்யப்பட வேண்டியன. கான்ஸ்டபில்களின் மேல் செலுத்தும் மிக்க கவனமான மேற்பார்வையினாலேயே, போலீஸ் ஆக்டில் சொல்லப்பட்டிருக்கும் குற்றங்களும் இவ்வித அஜாக்கிரதையான பிராசிக்கியூஷனும் குறைய வேண்டியது. யாதொரு சாக்ஷியும் இல்லாததினால், சிறுவர்கள் நிரபராதிகளென விடுதலை செய்யப்பட்டார்கள்.

Order.

"..The Constable says that each constable has to prosecute eight to ten cases every month, otherwise he is punished; ...He has been told this by the Head Constable and Station House Officer.. That order or understanding if any such exists, should be cancelled. Close supervision over the Constables ought to reduce the offences under the Police Act, as well as reckless prosecution, as in this case.."

22-7-08.

தஞ்சாவூர் ஜில்லா திருப்பனந்தூர்த்தியிலிருக்கும் சிப்பாய் வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஆர். அப்துல் சதார் என்னும் ஆர். சதார் தான் கல்கத்தா சர்வ கலாசாலையைச் சேர்ந்த அதாவது யூனிவர்ஸிடியைச்சேர்ந்த பி.ஏ., பட்டதாரி என்று பெயர் வகித்துக்கொண்டு, தப்பு கையெழுத்துகள் செய்யப்பட்ட அநேக நற்சாக்ஷி பத்திரங்களைக் காட்டி வேலைக்கு முயற்சித்ததாக சார்ஜ் செய்யப்பட்டான். இவன் ஒரு வருஷதண்டனை யடைந்து, (படைக்கு முன்போய் வழியை சரிபடுத்தும்) 64-வது சிப்பாய் பட்டாளத்திலிருந்து (64 Pioneers) நீக்கப்பட்டவன். இவன் தனக்கு சப் இன்ஸ்பெக்டர் வேலை வேண்டுமென்று போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜனரலுக்கு ஷை நற்சாக்ஷிபத்திரங்களை அடக்கம் செய்து ஓர் அர்ஜி கொடுத்தான். முதலாவது குற்றவாளி கல்கத்தா சர்வ கலாசாலையின் பி.ஏ., பட்டதாரி என்ற விஷயத்தில், போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் சந்தேகங்கொண்டு விசாரித்ததில், பி.ஏ., பட்டதாரியல்லவென்றும், நற்சாக்ஷிபத்திரங்கள் எல்லாம் தப்பானவை யென்றும் ருஜூவானது. குற்றவாளியானவன் தான் அர்ஜி கொடுத்தது வாஸ்தவமென்றும், தான் பி.ஏ., பட்டதாரி அல்லவென்றும், தான் வேலையில்லாமலிருந்ததால், ஒரு வேலை பெறுவதற்காக இவ்விதம் முட்டாள் தனமாய் முயற்சித்ததாகவும் தெரிவித்து குற்றத்தை ஒப்புக்கொண்டான்.

குற்றவாளிக்கு ஆறுமாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

மதராஸ் ஹைகோர்ட்.

23-7-1908.

(மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் முன்பாக.)

கர்னூல் டிஸ்டிரிக்ட் மாஜஸ்டிரேட், கிரிமினில் புரோசீஜர் கோட் 428-வது செக்ஷன்படி, மதராஸ் ஹைகோர்ட்டாருக்கு ரிபர் செய்த விஷயமாய், ஆதரித்துப்பேச பப்ளிக் பிராசிகியூடர் மிஸ்டர் இ. பி. பவல் இன்று ஆஜரானார். கடந்த ஜனவரிமாதம் 4ௗ கர்னூல் ஜில்லா, பட்டுகொண்டா தாலுக்கா, தூடகொண்டா என்னுமிடத்தில் கதாபிரசங்கம் நடந்து கொண்டிருந்தது. இது சமயத்தில் இமாம் சாயப் என்னும் ஒருவன் தம்பட்டம் அடித்துக்கொண்டு கதாபிரசங்கம் கேட்டிருக்கும் கூட்டத்தில் வந்தான். இவனை கூட்டத்திலிருந்த ஒருவர் தடுக்கவும், கலகம் உண்டானது. இதன் பேரில் ஏழு போயாக்கள் தடிகளுடனும் மழுக்களுடனும் வந்து, தம்பட்டம் அடிக்கக்கூடாதென்று இமாம் சாயப்பை தடுத்தவன் பேரில் விழுந்து அடித்தார்கள். இவர்கள் பிடிபட்டு, பட்டுகொண்டா தாலுக்கா சப்மேஜஸ்டிரேட்முன் விசாரணைக்கு கொண்டுவரப்பட்டதில், "இந்த தாலுக்காவானது குரூரமான போயாக்களுக்கும் - மாலாக்களுக்கும் - மாடிகாக்களுக்கும் பெயர் போனதென்றும், பிரஸ்தாப கேசில் சம்பந்தப்பட்டிருக்கும் குற்றவாளிகள் போயாக்களென்றும்" குறித்து ஒவ்வொருவருக்கும் ஆறு வாரகடினகாவல் தண்டனை விதித்தார். அப்பீலில் கர்னூல் டிப்டி மாஜிஸ்டிரேட்டானவர் ஷை தண்டனையை 25 நாளாக குறைத்துவிட்டார். இப்படி குறைக்கக் கூடாதென்றும், முதலில் கொடுக்கப்பட்ட தண்டனையே சரியானதென்றும் அபிப்பிராயப்பட்டு, கர்னூல் டிஸ்டிரிக்ட் மேஜிஸ்டிரேட் மதராஸ் ஹைகோர்ட்டாருக்கு ரிபர் செய்தார். மதராஸ் ஹைகோர்ட்டாரும் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் அபிப்பிராயப்படி, முதல் விதிக்கப்பட்ட தண்டனையையே காயப்படுத்தினார்கள்.

Pattukonda Sub-Magistrate's Remark.

"The Taluq is notorious for its blood-thirsty Boyas, Malas and Madigas. In the present case the accused are Boyas."

Government Orders, Board's Proceedings and District Circulars.

கவர்ன்மெண்ட் ஆர்டர்கள், போர்டாரின் உத்திரவுகள், ஜில்லா சர்க்கியுலர்கள்.

Reference.—G. O. No. 787, Judicial, dated 2nd June 1908

மதிராஸ் கிராம கோர்ட்டுகளின் ஆக்ட்டு 1888 (1889-ஞுத்திய 1-வது ஆக்ட்டு) 6-வது செக்ஷன் 1-வது கிளாஸ் படிக்கும் 9-வது செக்ஷன் 1வது உள் செக்ஷன் படிக்கும் தமக்கு கொடுபட்டிருக்கும் அதிகாரத்தை அனுசரித்து ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் உடையார்பாளையம் தாலூக்கா உடையார் பாளையம் ஜெமீன்தாரியைச் சேர்ந்த அடியில் கண்ட கிராமங்கள் 1908-ஞு அக்டோபர்மீ 1ௗ முதற் கொண்டும் அதற்குப்பிறகும் ஒரே தொகுதியாயிருக்கவேண்டுமென்று இதனால் உத்திரவு செய்ய களிகூர்ந்திருக்கிறார்கள்.

(i) உடையார்பாளையம்.
(ii) தத்தனூர்.
(iii) எலையூர்.
(iv) வரியங்காவல்.
(v) எந்தல்.
(vi) எடையார்.
(vii) பரணம்.
(viii) கழுமங்கலம்.

2. ஷை கிராமங்களுக்காக இப்போது இருந்துக்கொண்டிருக்கும் 8-கிராம கோர்ட்டுகளுக்குப் பதிலாய் ஷை குரூப் செய்யப்பட்ட கிராமங்களுக்கு ஒரு கிராம கோர்ட்டு ஏற்படுத்தப்படவேண்டும்.

3. ஷை ஆக்ட்டின் 9-வது செக்ஷனைச் சேர்ந்த 2-முதல் 8-வரையில் (ஷை இரண்டும் சேர்ந்த) உள் பிரிவுகள் ஷை தேதிமுதற்கொண்டும் அதற்குப்பிறகும் ஷை குரூப்பில் அமுலுக்கு வரவேண்டும்.

4. ஷை ஆக்ட்டின் 9-வது பிரிவின் விஷயத்திற்காக உடையார்பாளையம் கிராம முன்சீபு ஷை குரூப்பின் வில்லேஜ் முன்சீபாயிருக்கவேண்டும்.

விளம்பரம்.

போர்டாரவர்களுடைய உத்திரவு லாண்டு ரேவினியூ

நெ. 82, தேதி 23-4-1908.

ஜனங்கள் குடியிருக்கிற வீடுகளின் சுவர்கள் வரையில் நஞ்சை சாகுபடி செய்வதில் உண்டாகக்கூடிய தீங்குகளை நிவர்த்திக்கும்படி, ஒவ்வொரு கிராம குடியிருப்பு இடத்தைச்சுற்றி ஒரு வட்டம் (வரட்சியான நில வட்டம்) யேற்படுத்தப்படவேண்டுமென்றும், அந்த வட்டத்திற்குள் புதிதாய் நஞ்சை சாகுபடிசெய்ய உத்திரவு கொடுக்கக்கூடாதென்றும் கவர்ன்மெண்டார் உத்திரவு செய்திருக்கிறார்கள். இந்த வட்டம் சாதாரணமாய் 50 கஜம் உள்ளதாயும், ஒருவருடைய வீட்டுக்கு சம்பந்தப்படாமல் கிராம நத்தத்திற்கு சம்பந்தப்பட்டதாயிருக்கும். அந்த வட்டத்திற்குள் இருக்கிற எந்த புஞ்சை நிலத்திலும் தண்ணீர் பாய்ச்சுகிறதற்கு சர்க்கார் ஜலம் விடப்படமாட்டாது. அந்த வட்டத்திற்குள் கணக்குகளில் புஞ்சை என்று தாக்கல்செய்யப்பட்டு இருக்கிற நிலங்கள் நஞ்சைக்கு மாற்றப்படமாட்டாது.

2. வட்டத்திற்குள் இருக்கிற நிலங்களில் நஞ்சை சாகுபடிசெய்ய ஜலம் வேண்டுமென்று கொடுக்கப்படுகிற மனுக்கள் அங்கீகரிக்கப்படமாட்டாது. உத்திரவு இல்லாமல் சர்க்கார் ஜலத்தைக்கொண்டு அப்பேர்ப்பட்ட நிலங்களை நஞ்சை நிலங்களாக திருத்தினால் அதற்கு ஜாஸ்தியான தெண்டத்தீர்வை விதிக்கப்படும்.

(Gazetted) கெஜட்டெட் ஆபிசர்களால் அவர்களுடைய உத்தியோக முறைமையில் கொடுபடும் வக்காலத்துகள் உறுதிப்படுத்தப்படவேண்டியதில்லையென்று போர்டாரவர்களுடைய 1908-ஞு மேமீ 6ௗ யுள்ள 90-நெ, யல். ஆர். நெ.ல். திர்மானித்திருக்கிறார்கள்.

B. P. N., 66 L. R., dated 16th March 1908.

சர்க்கார் காரியங்களுக்காக நிறுத்திவைக்கப்பட்ட நிலங்கள் அல்லது அவைகளை அடமானம் செய்யும் பட்சத்தில் வேறுவித ஆட்சேபம் இருக்கும் கேசுகள் நீங்கலாக, உத்திரவன்னியில் ஆக்கிரமித்துக்கொள்ளும் தீர்வை ஏற்பட்ட நிலங்களை பைசல் செய்யும் விஷயத்தில் ரெவினியூ போர்டாரவர்கள் அடியில் கண்ட புது கற்பனைகளை பிறப்பித்திருக்கிறார்கள்.

கிரமமான விண்ணப்பமன்னியில் தீர்வை ஏற்பட்ட நிலங்கள் ஆக்கிரமிக்கப்படும் பட்சத்தில் ஷை நிலத்திற்கு பட்டா பெற்றுக்கொள்ள பிரியமா அல்லது பிரியமில்லையா என்பதைப்பற்றி ஷை ஆக்கிரமித்திருப்பவர்களிடம் கிராம உத்தியோகஸ்தர் வாக்குமூலம் வாங்கவேண்டியது. பட்டா தேவையென்று அவர் சொல்லும்பட்சத்தில் உடனேகிரமமான விண்ணப்பம் கொடுக்கும்படி திட்டம்செய்யவேண்டியது. கிரமப்படி கொடுக்கப்படும் தர்க்காஸ்து விண்ணப்பங்களின் பைசல் விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் விதிகளின்படி ஷை விண்ணப்பங்களை கிராம உத்தியோகஸ்தர்களும் தாசில்தார்களும் பைசல் செய்யவேண்டியது. அதாவது நிலங்களின் கைப்பற்றைப்பற்றிய நோட்டீசை கிராமத்தில் 15-நாள் பிரசுரம் செய்து அதின் பிறகு ஏ. நமூனாவில் தாசில்தாருக்கு யாதாஸ்து ஒன்று அனுப்பவேண்டியது. நிலத்தை கைப்பற்றி இருப்பவர்கள் பட்டா தேவையில்லையென்று சொல்லும்பட்சத்தில் உத்திரவன்னியில் ஆக்கிரமித்திருப்பதைப்பற்றி பி. நமூனாவில் பிரதி மாதத்திலும் தாலுக்காவுக்கு ரிப்போர்ட்டு செய்யவேண்டியது. பட்டாதேவை அல்லது தேவையில்லை யென்பதைப் பற்றி ஆக்கிரமிப்புதாரர்களிடம் வாங்கிய வாக்குமூலங்களை எப்போதும் மற்ற அடக்கங்களுடன் ஏ. அல்லது பி. மிமோருண்டத்துடன் அனுப்பவேண்டியது.

2. நில அடமானத்தைக்குறித்து தாசில்தார் செய்த உத்தரவை கிராமத்திலிருந்து வந்த ஏ. மிமோவில் பதிந்து ஷை ஏ. மிமோவின் மற்றொரு பிரதியை தாசில்தாருடைய உத்பரவோடு உடனே கிராம அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டியது. மேலும் தாசில்தார் சம்மந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்கும் ஷை உத்திரவின் தகவலை கொடுக்கவேண்டியது. தாசில்தார் உத்திரவடங்கிய ஏ. மிமோ கிடைத்ததின் மேல் கிராம உத்தியோகஸ்தர்கள் அடமானம் பெற்றவன் அடுத்த ஜமாபந்தியில் பட்டா பெற லாயக்குள்ளவனென்று அவனுடைய பெயரை உடனே கிராம 3-நெ. கணக்கிலும் தர்க்காஸ்து லிஸ்டு ரிஜிஸ்தரிலும் பதிவு செய்யவேண்டும். அப்பீலின்பேரில் தாசில்தாருடைய உத்தரவு ரத்தாகிவிடும்பட்சத்தில் தாசில்தாரிடமிருந்து அப்பீல் உத்தரவு கிடைத்ததின்மேல் கிராம ரிகார்டுகளில் கிராம அதிகாரிகள் அவசியமான திருத்தல்களைச் செய்யவேண்டியது. அப்பீல் உத்தரவின் ஆதாரத்தின் பேரில் நிலத்தை ஸ்வாதீனத்தில் வைத்திருப்பவன் ஜோலிக்குப்போகக்கூடாது. ஏனெனில் சட்டப்படி அவனை உடனே நிலத்தைவிட்டு அப்புறப்படுத்துவதற்கில்லை. யார் பேரால் முடிவாய் நிலம் அடமானம் செய்யப்பட்டதாய் பதிவாச்சுதோ அவனுக்கு கிரமப்படி பட்டா கொடுக்கப்படும். அந்த ஆதாரத்தைக் கொண்டு வியாச்சியமூலமாயாவது அல்லது வேறு விதமாகவாவது அவன் நிலத்தை ஸ்வாதீனம் பெற்றுக் கொள்ள வேண்டியது.

3. எல்லா தாசில்தார்களும் டிப்டி. தாசில்தார்களும் ரெவினியூ இன்ஸ்பெக்டர்களும் ஷை கற்பனைகளை முக்கியமாய் கவனித்து அவைகளை கிராம உத்தியோகஸ்தர்களுக்கு வாய் மொழியாய் விவரித்துச் சொல்லி ஷை புது விதிகளின்படி இனி எல்லா கேசுகளையும் பைசல் செய்யவேண்டியது.

திருச்சி டிஸ்டிரிக்ட் சர்குலர்.

சர்குலர் நெம்பர் 22.

Ref.—B. P. No. 100, R. S., dated 18th March 1908.

ஒரு நஞ்சை நிலத்தில் பல ரேட்டுகளின்படி நீர்க்கூலி ஏற்படக்கூடிய பல புஞ்சைப்பயிர் சாகுபடியானால் தீர்வை வஜாசெய்து கொடுக்கவேண்டிய விஷயத்திற்காக ஷை பூரா நிலத்திலும் உயர்ந்த நீர்க்கூலி ரேட்டு ஏற்படக்கூடிய புஞ்சைப்பயிர் சாகுபடி செய்யப்பட்டதாக பாவித்து ஷை பூரா நிலத்திற்கும் ஏற்பட்ட நஞ்சைத்தீர்வையிலிருந்து ஷை உயர்ந்த புஞ்சை நீர்க்கூலி ரேட்டைக்கழித்து மீதியை ரிமிஷனாக வஜா செய்யவேண்டும்.

1907-ஞுத்திய கலெக்டர் சர்குலர் 43-நெம்பராக பிரசுரமாயிருக்கும் இந்த ஆபீஸ் சர்குலர் 1907-ஞுத்திய அக்டோர்பர்மீ 10ௗ [illegible]

R. Dis. 956-நெம்பருக்கு துடர்ச்சியாய் ஷை சர்க்குலரை இதன் மூலமாய் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

16—5—08.

சி. டி. யச். ஜான்சன்.
ஆக்டிங் கலெக்டர்.

திருச்சி டிஸ்டிரிக்ட் கலெக்டர் சர்குலர்.

சர்குலர் நெம்பர்-35.

1907-ஞுத்திய 42-நெம்பர் கலெக்டர் ஸ்டாண்டிங் சர்க்குலராக பிரசுரமாயிருக்கும் இந்த ஆபீஸ் 1907-ஞு அக்டோபர்மீ 10உ யுள்ள R. Dis. Rev. of 07,956-நெம்பருக்குத் துடர்ச்சியாய் இதனால் சகலருக்கும் அறிவிப்பதாவது:—

1907-ஞு செப்டெம்பர்மீ 13உ யுள்ள 311-நெ R. S. போர்டு புரோசீடிங்ஸில் விவரிக்கப்பட்டிருக்கும் விதிப்படி ஒரு பூரு நஞ்சை நிலத்தின் ஒரு பாகத்தில் புஞ்சைப் பயிர் சாகுபடியாகி சர்க்கார் ஆசருவிலிருந்து ஜலம் பாய்ச்சப்பட்டு மற்றபாகம் தரிசு போடப்பட்டிருந்தால் பூரு நஞ்சைத் தீர்வைக்கும் பூரு நிலத்தின் புஞ்சைத் தீர்வையும் அதின்பேரில் ஏற்பட்ட நீர்க்கூலிக்குமுள்ள வித்தியாசத்தை தீர்வை கம்மி ரிமிஷனாக பாவிக்கவேண்டும்.

அதேபிரமாணம் இருபோக நிலங்களின் தீர்வை கம்மி ரிமிஷன் விஷயத்திலும் ஏற்படுகிறது.

இருபோக நில விஷயத்தில் இருபோக தீர்வைக்கும் பூரு நிலத்தின் புஞ்சைத் தீர்வையும் அதின் பேரில் ஏற்பட்ட எல்லா புஞ்சைப் பயிர்களின் நீர்க்கூலிக்குமுள்ள வித்தியாசத்தை தீர்வை கம்மி ரிமிஷனாகபாவிக்கவேண்டும்.

உதாரணம்:—ஒரு இருபோக நிலம் 5-ஏக்கர் விஸ்தீரணமாயிருந்து அதில் முதல் போகத்தில் ஒரு ஏக்கர் புஞ்சைப் பயிருக்கு ஜலம் பாய்ந்தும் இரண்டாம்போகத்தில் 50-செண்டு புஞ்சைப் பயிருக்கு ஜலம் பாய்ந்தும் இருந்தால் முதல் போகத்தில் ஒரு ஏக்கருவுக்கும் இரண்டாம் போகத்தில் அரை ஏக்கருவுக்கும் ஜலம் பாய்ந்திருந்தபோதிலும் புஞ்சை தீர்வையும் முதல்போகம் 5-ஏக்கர், இரண்டாம்போகம் 5-ஏக்கருக்குள்ள நீர்க்கூலியும் சேர்த்து சார்ஜ் செய்யவேண்டும்.

கவர்ன்மெண்டு ஆசருவில்ஜலமிருந்தால்மட்டும் இவ்விதம் சார்ஜ் செய்யவேண்டும்.

27—5—08.

சி. டி. யச். ஜான்சன்,
ஆக்டிங் கலெக்டர்.

சிதம்பரம் முனிசிபல் விளம்பரம்.

வீட்டு உபயோகத்திற்காக உபயோகப்படும் ஒவ்வொரு கிணற்றைச் சுற்றி அது பொதுக் கிணறயிருந்தாலும் ஒருவருடைய சொந்தக் கிணறயிருந்தாலும் மூன்று அடி அகலமுள்ள தளவரிசையும் மூன்று அடி உயரமுள்ள கைப்பிடி சுவரும் கட்டியிருக்கவேண்டியது.

தண்டனை.

இந்த பைலாவை மீறி யார் நடந்தாலும் குற்றம் செய்ததாக தண்டிக்கப்பட்டால் அவர்கள் ஐம்பது ரூபாய்க்கு அதிகப்படாமல் அபராதத்துக்கு உள்ளாவார்கள். மேல் சொன்னபடி தண்டனை அடைந்தவர்கள் மறுபடியும் ஷை குற்றத்தை முதல் தண்டனை அடைந்தது முதலும் முனிசிபல் கௌன்ஸிலிடமிருந்து ஷை பைலாவை மீறி நடந்ததாக நோடீஸ் கிடைத்தமேலும் மீறி ஷை குற்றத்தை செய்து வருவதாக ஏற்பட்டால் மீறிய தினம் ஒன்றுக்கு பத்து ரூபாய்க்கு மேல்படாமல் அபராதத்துக்கு உள்ளாவார்கள்.

1908-ஞு ஜூன் மீ 9உ

கே. வரஹாசாரி,
சேர்மன்.

திருச்சி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் ஆபீஸ் 1898-ஞு ஜூன்மீ 4உ யுள்ள Dis. நெ. 175 M. of 08-ல் பெஞ்சு கோர்ட்டுகள் நடந்து கொள்ளவேண்டியதற்காக தெரிவிக்கப்பட்டு இப்போது அனுஷ்டானத்திலிருக்கும் விதிகளின் 1-வது விதியானது அடியில் கண்டபடி மாற்றப்பட்டிருக்கிறது.

1-வது விதி.— "திருச்சினாப்பள்ளி டவுன் பெஞ்சு கோர்ட்டு ஒவ்வொரு வாரத்திலும் திங்கள், புதன், சனிக்கிழமைகளில் டவுன் சப் மேஜிஸ்திரேட்டாபீசில் பகல் 2-மணிக்கு நடத்தப்படும்".

Notification by Survey Officer, under Section II (4) of the Madras Survey and Boundaries Act IV of 1897.

1897-ஞுத்திய மதிராஸ் சர்வே எல்லைகள்,
4-வது ஆக்டு 11 (4) வது பிரிவுப்படி சர்வே
ஆபீசாரல் செய்யப்படும் விளம்பரம்.

மேற்சொல்லிய பிரிவுப்படி இதனால் தெரிவிப்பதென்னவென்றால், திருநெல்வேலி ஜில்லா திருநெல்வேலி தாலூக்கா கீழே செல்லிய கிராமங்களின் சர்வே முடிவாகிவிட்டது.

2. டிமார்க்கேஷனில் தப்பிதமிருக்குமானால், அதைப்பற்றி இந்த நோடீஸ் பிரசுரமான தேய்தி முதல் அதாவது 1-7-08 முதல் 3-மாசத்திற்குள்ளாக திருநெல்வேலியிலிருக்கும் திருநெல்வேலி சர்வே ஆபீசில் சர்வே ஆபீசரிடம் ஷை ஆக்ட்டு 12-வது செக்ஷன் 1-வது சப் செக்ஷன் (பி) கிளாஸ்படி தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

3. மேற்சொன்ன 3-மீ கடந்த பின் வரும் மனுக்கள் அங்கீகரிக்கப்படமாட்டா.

கிராம நம்பரும் பெயரும்.

23. வடுகம்பட்டி ; 32. பழவூர்

I—7—08.

வி. வெங்கடராயர்,
சர்வே ஆபீசர்.

Paddy Transplanting.

நெல் நடுகை.

நஞ்சை நிலங்களை சாகுபடி செய்வதில் நடத்தவேண்டிய வேலைகளில் நெல் நடுகை ஒன்று. நஞ்சை நிலம் சாகுபடி செய்யும் ஒவ்வொரு கிருஷிகரும் தாமே அவ்விஷயத்தை ஜாக்கிறதையுடன் கவனித்து நடத்தவேண்டியிருக்க அப்படிச் செய்யாமல் நடுகை நடும் கூலிக்காரர்களின் இஷ்டம்போல் நடத்த விட்டு விடுகிறார்கள்.

அநேக ஜில்லாக்களில் 10 முதல் 30 நாற்றுகளை ஒன்றாய்ச் சேர்த்துச் சேர்த்து நடுவதை நாம் காண்கிறோம். அப்படி நட்ட வயலிலுள்ள பயிர் விளைவானவுடன் அதில் ஒரு நடுகையைப் பிடுங்கிப் பரிசோதிப்போமானால் அதில் அநேக நாற்றுகள் பலுகிப் பெருக மார்க்கமன்னியில் போய்விட்டதையும் அப்படிப் பலுகிப் பெருகிக் கதிர் வாங்கின நாற்றும் நன்றாய் ஓங்கி வளரப் போதுமான இடமின்றி நெருக்குண்டிருப்பதையும் அவைகளின் வேர்கள் சடைப்பின்னலடைந்திருப்பதையும் தான்யமணிகள் பருக்காமலும் கதிர்கள் சிறிதாயிருப்பதையும் காணலாம்.

2. எங்கெங்கே கிருஷிகர் பரீக்ஷார்த்தமாய் ஒற்றை நெல் நாற்று நடுகை நடத்தி வருகிறார்களோ அங்கெல்லாம் கும்பல் கும்பலாய் நடுவதைப் பார்க்கிலும் ஒற்றை நெல் நாற்று நடுவது சிலாக்கியமானதென அவர்கள் அதிசீக்கிரத்தில் கண்டு பிடித்து அதைக் கையாடி வருகிறார்கள். ஒற்றை நெல் நாற்று நட்ட பயிர் நட்டவுடனே அதிகக் கலப்பாயும் கேவலமாயும் காணப்படுகிறபடியால் அநேக ஜனங்கள் அப்படி நட்டால் எப்படி யாகுமோவென்ற பயத்துடன் ஆலசியம் செய்கிறார்கள். என்றாலும் இப்படிப் பார்வைக்குக் கேவலம்போல் தோற்றிய பயிரின் ஸ்திதி வெகு சீக்கிரத்தில் மாறி மேன்மையடையும். இப்படி நட்ட ஒவ்வொரு முதலுக்கும் வேர்கள் கிளைத்து நன்றாய்ப் பரவுதற்குத் திட்டமான விஸ்தீரணம் இருப்பதால் அந்தப்பயிர் நன்றாய் மூடு கட்டிப் பக்கம் வைத்து வளர்ந்துவரும். அப்படி மூடு கட்டுவதிலும் எத்தனை பலனுக்கு வரக்கூடுமோ அத்தனை பக்கத் தாழ்கள்தான் உண்டாகும். இப்படி நட்ட பயிரை விளைவுக்கு வந்தபின் பார்ப்பதாலேயே ஒற்றை நெல் நாற்று நடுகை வெகு விசேஷமானதென்று தெளிவாய்த் தெரியும். அதின் கதிர் குலைகள் நீளமாயும் தான்ய மணிகள் பருமனாயும் இருக்கும்.

ஒற்றை நெல் நாற்று நடுவதாலுண்டாகும் அனுகூலங்களில் அடியில் கண்ட விஷயங்கள் கவனிக்கத் தக்கவைகளாயிருக்கின்றன:—

(1) களை பரிப்பு இதனால் லெகுவாகிறது. ஏனெனில் குத்துக் குத்தாய் நடுகிற நெல் பயிரில் நாம் சாதாரணமாய்க் காண்கிற கெட்ட களைகள் இதிலுண்டாக இடமிராது.

(2) இப்படி நடப்பட்ட பயிரில் விளைவாகும் விதையில் கலவனிராது. ஏனெனில் வயலில் அறுவடை செய்யும்போதே வேறு தினுசு பயிர் ஊடே ஊடே கலந்திருந்தாலும் அந்த வித்தியாசம் நன்றாய்த் தெரியும். ஆகையால் அந்தக் கலவன் மூடுகளை நீக்கி நமக்கு வேண்டிய நெல் தினுசையே அறுவடை செய்து கலவனில்லாத நெல் விதையை சேகரித்துக் கொள்ளக்கூடும். (குத்துக் குத்தாய் நட்ட பயிரில் கலவனிருந்தால் எளிதில் தெரியாது. அப்படிக் குத்தாய் நட்ட ஒரு நடுகையில் ஒரு தினுசு நாற்றின் ஊடே மற்றொரு தினுசின் நாற்றொன்று சேர்ந்திருக்கக்கூடும். அது விளைவுக்கு வரும்போது கலவன் பயிர் நன்றாய்த் தெரியாது. அந்தக் கதிர்த் தாளைமட்டும் விலக்கி மற்றத் தாள்களை அறுவடை செய்வது சாத்தியமாகாது).

மேலும் கிருஷிகர் கொஞ்சம் சிரத்தை எடுக்கும் பக்ஷத்தில் தங்கள் வயல்களில் பயிர் வளரும் காலத்திலேயே எந்த மூடுகள் மற்றவைகளைவிட வாய்ப்பாயும் சிலாக்கியமாயும் உண்டாகிறதென்று கவனித்து (குலைத்தாக்கும் பருமணி நெல்லும் உள்ளவைகளைத் தெரிந்தெடுத்து) அவைகளை வேறாய் அறுவடை செய்து அந்த நெல்லை மறு வருஷத்தின் விதைக்காக வைத்துக்கொள்ளக்கூடும். இவ்விதமாக ஒரு தினுசு வித்தை சிலாக்கியமான ஸ்திதிக்கு விருத்தி செய்ய முடியும்.

எவ்வளவு இடைவிட்டு நடுகை போட வேணுமென்பதை கிருஷிகர் தாங்களே தீர்மானித்துக் கொள்ளவேண்டியதாயிருக்கிறது. இயற்கையில் நீர் வடிவும் நிலவளமும் பொருந்திய இடங்களில் நடுகை கலப்பாயும் நீர் வடிவசௌகரியமில்லாத சாரமற்ற நிலங்களில் அதைவிட நெருக்கமாயும் நடவேண்டி வரும். ஆகையால் நடுகையின் கலப்பும் நெருக்கமும் கிருஷிகளின் அனுபோகத்தைப் பொருத்திருக்கிறது. இதைப் பற்றி சந்தேகம் ஏதேனும் அவர்களுக்கு ஏற்படும் விஷயத்தில் ஒரு வயலை சிறு தலைகளாகப் பிரித்து ஒன்றில் 4 அங்குல இடைவிட்டும் இப்படியே 8 அங்குலம் 10 அங்குலம் இடைவிட்டு வெவ்வேறு தலைகளில் நட்டும் பரிக்ஷைசெய்து எந்தெந்த நிலங்களுக்கு எவ்வளவு இடை விட்டு நட்டால் அதிக சிலாக்கியமாயிருக்குமென்று கண்டு கொள்ளலாம்.

ஒற்றை நெல் நாற்று நடுகை போடும்போது அடியில் கண்ட விஷயங்களைக் கவனிக்கவேண்டும்:—

(1) ஒரு ஏக்கர் நிலம் நடவேண்டியதற்காக நாற்றங்காலில் விதைக்க வேண்டிய விதைகள் பட்டணம் படிக்கு 10-க்கு அதிகப்படக்கூடாது. சரியாய்ப் பதனப்படுத்தப்பட்ட நல்ல விதையாயிருக்குமாகில் அவ்வளவுகூட வேண்டியதில்லை.

(2) கலவனில்லாத சுத்தமான விதையாயிருக்க வேண்டும்.

(3) நாற்றங்கால்களில் விதையைக் கலக்க விதைக்கவேண்டும்.

(4) நாற்று முதிருமுன் பிடுங்கி நடவேண்டும்.

(5) இப்படி நடவேண்டிய வயல்களைச் சமதளமாய் ஜாக்கிரதையுடன் பரம்படிக்கவேண்டும். நட்டபின் அதிகத் தண்ணீர் கட்டாமலும் பார்த்து வர வேண்டும்.—*Tinnevelly District Gazette.*

கல்வி இலக்கா, 9-6-08ல் ஏற்பட்ட 444-வது நெம்பர் உத்தரவு.

ஒரு வருஷகால அளவிற்கும், மாதம் 20-ரூபாய் சம்பளத்திற்கும் அதிகப்படாமல் காலியாகும் வேலைகளுக்கும் சொற்பகால வேலைகளுக்கும் பாஸ் செய்தவர்கள் உண்மையில் கிடைக்காத பக்ஷத்தில், பாசு பண்ணாதவர்களை அவ்வேலைகளில் நியமிக்க உத்தரவு செய்யும்படி, பப்ளிக் சர்விஸ் நோட்டிபிகேஷன், 7-வது பிரிவு, 4-வது உட்பிரிவில் ஏற்பட்ட மாறுதல்களை அனுசரித்து, கவர்ன்மெண்டார் ஜில்லா கலெக்டர்களுக்கு களிகூர்ந்து அதிகாரங் கொடுத்திருக்கிறார்கள்.

2. இப்பொழுது ஊர்ஜிதத்திலிருக்கும் கையெழுத்து பரீக்ஷையும், சொல்வது எழுதல் பரீக்ஷையும், (Handwriting and Dictation test) பிரயோஜனமில்லை என்று ரிவினியூ போர்டாரின் அபிப்பிராயம் கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டு ஷை பரீக்ஷைகள் தள்ளிவிடப்பட்டன. மெட்ரிகுலேஷன், யப்.ஏ., பரீக்ஷை தேறியவர்கள், கவர்ன்மெண்ட் உத்தியோகம் பெறுவதற்காக இனி ஷை கையெழுத்து பரீக்ஷை, சொல்லுவது எழுதல் பரீக்ஷைகளில் தேறவேண்டிய அவசியமில்லை.

3. பப்ளிக் சர்விஸ் நோட்டிபிகேஷனில் அடுத்த முறை ஏற்படும் மாறுதல் காலத்தில் ஷை விஷயமாய் அவசியமான திருத்தங்கள் செய்யப்படும்.

ஜுடிஷல் இலாக்கா 8-5-08-ல் ஏற்பட்ட 673-வது. நெம்பர் உத்திரவு.

ஒருவரின் சொந்தவிஷயமான பாதுகாப்புக்காகப்ளை செய்யப்படும் போலீஸ் கான்ஸ்டபில்கள் விஷயமாய், மதறாஸ் டவுனுக்குள் கான்ஸ்டபில் 1-க்கு மீ ரூ. 10-8-0 வீதமும், வெளி ஊர்களில் ரூ. 9-8-0 வீதமும் இனி வசூல் செய்யும்படி உத்திரவாயிருக்கிறது.

Cases from the Indian Law Reports.

இந்தியன் லா ரிபோர்ட்டுகளிலுள்ள கேசுகள்.

[குறிப்பு:—டி. மு.—என்றால் டிஸ்டிரிக்ட் முனிசீப். ஒரு கேசுக்கு ஆதாரமாய், இ. லா. ரி. 28 சேன்., 192, என்று சொல்லப்பட்டிருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அப்படி என்றால் என்ன? இந்தியன் லா ரிபோர்ட்ஸ் சென்னைப்பிரிவு, 28-வது புத்தகம், 192-வது பக்கத்தில் கண்டிருக்கும் கேசு என்பதுதான். பின்னும் சென்னைப்பிரிவு என்றால் என்ன? இந்தியாவிலுள்ள ஹைகோர்ட்டார் செய்த தீர்மானங்கள், கவர்ன்மெண்டாரால் அச்சடிக்கப்பட்டு அடங்கப்பெற்றிருக்கும் புத்தகத்துக்கு இந்தியன் லா ரிபோர்ட்ஸ் என்று பெயர். இப்புஸ்தகம் நான்காக பிரிக்கப்பட்டிருக்கிறது. மதராஸ் ஹைகோர்ட்டு தீர்மானங்கள் உள்ள புஸ்தகம் மதராஸ் அல்லது சேன்னை பிரிவு என்றும், பம்பாய் ஹைகோர்ட்டு தீர்மானங்கள் உள்ள புஸ்தகம் பம்பாய் பிரிவு என்றும், கல்கத்தா ஹைகோர்ட்டு தீர்மானங்கள் உள்ள புஸ்தகம் கல்கத்தா பிரிவு என்றும், அலகாபாத் ஹைகோர்ட் தீர்மானங்கள் உள்ள புஸ்தகம் அலகாபாத் பிரிவு என்றும், முறையே சென்., அல்லது மது., பம்., கல்., அல., என்னும் குறிகளால் விளங்கும்.]

மதராஸ் ஹைகோர்ட்டு
சிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { சீப் ஜட்ஜ் சர் ஆர்னால்ட் ஒயிட்
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

ஐயாசாமி அய்யர் (3-ம் வாதி—அப்பீல் வாதி.

v.

1907 March 12 December 4 5, 6. 1908 January 8.

தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் போர்ட் வகையரா,—(பிரதிவாதி முதலாவது இரண்டாவதுவாதிகள்) — அப்பீல் பிரதிவாதிகள்.

வியாஜ்ஜிய சங்கிரகமானது கீழ்கோர்ட் தீர்ப்பில் பின்வருமாறு விரிவாய் சொல்லப்பட்டிருக்கிறது :—

தஞ்சாவூர் ஜில்லா—மாயவரம் தாலுக்கா பட்டமங்கலம் கிராமத்திற்கு மேற்கிலிருக்கும் ரோட்டின் கீழ் செல்லும் 140, 141-வது நெம்பர் நீர் தாரைகளின் வாய்களை தஞ்சாவூர் ஜில்லாபோர்டார் அகலப்படுத்தினார்கள். ரோட்டின் கீழ் செல்லும் நீர் தாரைகளுக்கு, ஆதியில் ஏற்பட்ட அளவை, ஜில்லா போர்டார் மாற்றக்கூடாதென்று தடுக்கும் நிலையான உத்திரவையும், அவர்களால் இப்பொழுது மாற்றப்பட்டிருக்கும் நீர்தாரைகளை பழய அளவுபடி அமைக்க வேண்டுமென்று விடுக்கும் சமய உத்திரவையும் பிறப்பிக்கவேண்டுமென்று ஷை பட்டமங்கல கிராமத்தின் 35 குடிகள், மாயவரம் டி. மு. கோர்ட்டில் (1902-௵ 185-வது நெம்பர் அசல்) தாவாகொண்டு வந்தார்கள்.

ரோட்டின் மேற்கில்போகும் ஒரு கால்வாயானது, ரோட்டின் கீழுள்ள நான்கு நீர் தாரைகளின்வழியாய் ரோட்டை கடந்து வாதிகளின் கிராமத்தில் பாய்கிறது. இந்நீர்தாரைகளில் இரண்டு அகலப்படுத்தப்பட்டதால், வேண்டிய அளவுக்குமேல் தங்கள் நிலங்களில் ஜலம் பாய்கிறதென்றும், ரோட்டுக்கு கிழக்கிலுள்ள ஜலத்தை வற்றச்செய்யும் அதாவது வெளியில் போக்கும் கால்வாயானது ஷை அதிக ஜலத்தை இழுக்காமல் இருத்தலால், தங்கள் நிலங்கள் பயிரிடுவதற்கு லாயக்கில்லாமல், வருஷவாரியில் தாங்கள் அடையும் நஷ்டமானது பணத்தால் ஈடுபடுத்த முடியாததாயிருக்கிற தென்றும் வாதிகள் சொல்லுகிறார்கள்.

நீர்தாரைகளின் வாய்களை ஓர் குறிப்பிட்ட இடத்தில்தான் சீர்திருத்த வேண்டுமென்று கட்டாயப்படுத்த வாதிகளுக்கு யாதொரு பாத்தியமும் கிடையாதென்றும், வாய்க்கால்ஜலத்தை வெளிப்போக்க முடியாத நிலைமையில் பழய நீர்தாரைகள் இருப்பதால் ரோட்டானது அடிக்கடி சேதப்பட்டு போக்குவரத்துக்கு மிகவும் அசௌகரியமாயிருக்கிற தென்றும் இந்தஅசௌகரியத்திற்கு மூலகாரணமாயிருக்கும் ரோட்டின் கீழ்செல்லும் நீர்தாரைகளை சீர்திருத்தி ரோட்டைபாதுகார்க்க தாங்கள் கடமைப்பட்டவர்களென்றும், ஆதலால் பிரஸ்தாபிக்கப்பட்ட கால்வாய்களின் மாற்றமானது சட்டப்படிபொருத்தமானதென்றும், இக்காரணங்களால் வாதிகள் தாவா கொண்டுவரக்கூடாதென்றும், பிரதிவாதிகளாகிய டிஸ்டிரிக்ட் போர்டார் கக்ஷியாடினார்கள்.

வாதிகளின் நிலங்களை ஜலம் மூடிக்கொள்ளுவதனின்றும் யுக்தப்படி காப்பாற்றாமல், நீர்தாரைகளின் வாய்களை அகலப்படுத்தினது நியாயமாகமாட்டாததாதலால் அச்செய்கையானது வாதிகளின் நிலங்களுக்கு கெடுதி விளைவித்ததாகவே கருதப்படுகிறதென்றும், இக்காரணத்தால் தாவாப்படியான (இஞ்ஜங்ஷன்) உத்திரவுகளைப் பெற வாதிகள் அருகரென்றும் டி. மு. தீர்மானித்தார்.

இதன்பேரில் தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் போர்டார், கும்பகோணம் ஸப் ஜட்ஜுக்கு (1903-௵ 764-வது நெம்பர்) அப்பீல்செய்து கொண்டார்கள்.

ரோட்டுகளை சரியானபடி பாதுகார்ப்பது டிஸ்டிரிக்ட் போர்டாரின் கடமை யென்றும், இதராளுக்கு கெடுதி விளைவதற்கு ஆஸ்பதமாய் தங்களுடைய அதிகாரங்களை மீறி நடந்தார்களென்றாவது அல்லது துர்விநியோகப்படுத்தினார்களென்றாவது அல்லது அஜாக்கிறதையாய் செலுத்தினார்களென்றாவது ருஜூப்பட்டாலொழிய, வாதிகளின் நிலங்களுக்கு நேரிட்டிருக்கும் கெடுதிக்கு டிஸ்டிரிக்ட் போர்டார் உத்தரவாதிகளல்லர் என்று ஸப் ஜட்ஜ் அவர்கள் தீர்மானித்து, கீழ் கோர்ட்டாரின் தீர்ப்பை ரத்துசெய்து, வாதிகளின் தாவாவை தள்ளிவிட்டார்.

இதன்பேரில் மூன்றாவது வாதி மதராஸ் ஹைகோர்ட்டுக்கு (1904-௵ 584-வது நெம்பர்) இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார் அப்பீல்வாதி தரப்பில் டி. வி. சேஷகிரி அய்யரும், பி. கோவிந்த நம்பியாரும், அப்பீல் பிரதிவாதி தரப்பில் கனம். மிஸ்டர் வி. கிருஷ்ணசாமி அய்யரும் ஆஜரானார்கள்.

ஜட்ஜ்மெண்ட் :—பப்ளிக் ரோட்டின் கீழ் செல்லும் நீர்தாரைகள் அதாவது சிறிய மதகுகளில் இரண்டின் அளவை தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் போர்டார் எப்பொழுதும் விஸ்தரிக்கக்கூடாதென்று சாஸ்வதமான (இஞ்ஜங்ஷன்) உத்திரவு பிறப்பிக்கும்படி வாதிகள், மற்றும் குடிகளின் முன்னிலையாகவும், கோறுகிறார்கள்.

வடக்கு தெற்காய் போகும் ஷை ரோட்டிற்கு மேற்கில் பல்லவன் கால்வாய் என்னும் ஒரு பாய்ச்

சல் கால்வாயானது, பிரஸ்தாபிக்கப்பட்ட இரண்டு நீர்தாரைகள் இருக்கும் இடம்வரையில் ரோட்டோடு சமமாகவந்து, பின் அவைகளின் வழியாய் ரோட்டின் கீழ்சென்று, கிழக்கிலிருக்கும் வாதிகளினுடையவும்மற்றும்குடிகளினுடையவும் நிலங்களுக்குப் பாய்கிறது. இந்நீர்தாரைகளிரண்டும் கிலமாய் விட்டதால், மழைகாலங்களில் ரோட்டை அறுத்து சேதப்படுத்தக்கூடிய அளவு, மேலண்டையில் உயரும் ஜலத்தைத் தடுத்து அதிகமாய் இழுத்துக்கொள்ளும் நிமித்தம் நீர்தாரைகளை அகலப்படுத்துவதாகிய மராமத்துசெய்ய டிஸ்டிரிக்ட் போர்டார் அதாவது ரோட்டை பாதுகார்க்கும் அதிகாரிகள் தீர்மானித்தார்கள். வாதிகளுடைய தாவாவோ, கீழண்டையிலிருக்கும் கால்வாயானது, இழுத்துகொள்ள முடியாத அவ்வளவு அதிகமான ஜலம், நீர்தாரைகளில் வருவதால், தங்களுடைய நிலங்கள் ஜலத்தில் அமிழ்ந்தும், பயிர்கள் நாசமாகியும் போகின்றனவென்று சொல்லுகிறார்கள். வாதிகள் தெரிவித்த பிரகாரம் அவர்கள் நஷ்டப்படுவார்களென்பதைக்கீழிரண்டுகோர்ட்டார்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் பிரஸ்தாப சந்தர்ப்பங்களை அனுசரித்து, அவர்கள் கோறும் (இஞ்ஜங்ஷன்) உத்திரவைப்பெற பாத்தியதையுள்ளவர்களா என்னும் விஷயத்தை நாம் கவனிக்க வேண்டியதாயிருக்கிறது. இது விஷயமாய் பிரஸ்தாபிக்கப்பட்ட நீர்தாரைகளானவை, ரோட்டுகள் ஏற்பட்ட காலத்திலேற்பட்டனவா? அல்லது ரோட்டுகள் ஏற்பட்டபிறகு அந்த ரோட்டுகளுக்காகவே அவைகள் ஏற்பட்டனவா? அல்லது ரோட்டுகள் ஏற்படுவதற்கு முந்தியே ஏற்பட்ட பாய்ச்சலுக்குரிய நீர்தாரைகளா? என்னும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளுவதற்காக, ஸப் ஜட்ஜ் அவர்களை விசாரணைசெய்து தெரிவிக்கும்படி உத்திரவு செய்ததில், அது விஷயங்கள் ஒன்றும் ஸ்திரமாய் ஏற்பட போதுமான சாக்ஷிகள் இல்லை என்றும் ஆனால் கடந்த 50 வருஷங்களாய் ரோட்டும் நீர்தாரைகளும் சேர்ந்திருக்கின்றன வென்றும், அதுகாலமாய் நீர்தாரைகள் மாற்றி அமைக்கப்படவில்லை யென்றும், தீர்மானித்து தெரிவித்திருக்கிறார். ஆதலால் 1871-ம் வருஷத்திய மதராஸ் 4-வது ஆக்ட் 8-வது செக்ஷன்படி ஷை ரோட்டானது லோக்கல்பண்டு போர்டுவசம் ஒப்புவிக்கப்பட்டு, பிந்தி 1884-ம் வருஷத்து 5-வது ஆக்ட் 4-வது செக்ஷன்3-வது ஸப் செக்ஷன்படி டிஸ்டிரிக்ட் போர்டாருக்கு மாற்றப்பட்டதென்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. முதலாவது ரோட்டானது லோக்கல் பண்டாரிடம் ஒப்புவிக்கப்பட்ட காலத்தில் இவ்விரண்டு நீர் தாரைகளும் இருந்திருக்கின்றன. கெடுதியில் அகப்பட்டிருக்கும் வாதியின் நிலங்களுக்கு, தீங்கு நேரிடுவதாயிருந்தால் பல்லவன் கால்வாய் ஜலத்தினால்தான் உண்டாகு மென்பதை இருதரப்பாரும் ஒத்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. ஆனால் அவ்வித கெடுதி நேரிடுவது, கால்வாயில் பாய்ச்சலுக்கு வேண்டிய ஜலம் இருக்கிற காலத்திலா, அல்லது சாதாரணமாய் வெள்ளம் பெறுகும் காலத்திலா, அல்லது அதிக வெள்ளம் உண்டாகும் காலத்திலா, என்பது கண்டுபிடிக்கப்படவில்லை. வருஷவாரியில் மழைகாலத்தில்தான் ரோட்டுக்கு கெடுதி உண்டாகிற தென்பதற்கு சில சாக்ஷி வாக்குமூலங்களும், ஸப் ஜட்ஜின் தீர்மானமும் இருக்கின்றன. ஆனால் வாதிகளின் நிலங்களுக்கு உண்டாகும் கெடுதியைப்பற்றி, ரோட்டுக்குக் கீழண்டையில் ஓர் கரையேற்படுத்தினால், எப்பொழுதும் சம்பவிக்காத விசேஷ மழையுண்டானாலும், வாதிகளின் நிலங்களுக்கு யாதொரு கெடுதியும் நேரிடாதென்பதாக தெரிவித்த ஒரே சாக்ஷி வாக்குமூலத்தை டி. மு. எடுத்துக்காட்டியிருக்கிறார். இத்தீர்மானங்களில் ஏற்பட்ட உண்மைகளானவை அநேக விஷயங்களில் பூர்த்தியடையவில்லை. 1884-௵ த்து, லோக்கல்போர்ட் 5-வது ஆக்ட்டில் சொல்லியிருக்கிற அதிகாரங்களை ஆதாரமாகக்கொண்டு இருதரப்பாரும் கக்ஷியாடுகிறார்கள். ஆதலால் நாமும் அந்த ஆதாரத்தைக்கொண்டே இந்தக்கேசைமுடிவு செய்யவேண்டியிருக்கிறது.

தங்கள் ரோட்டுகளின் கீழ் சிறு மதகுகள் அதாவது பாலங்களைக் கட்ட டிஸ்டிரிக்ட் போர்டாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தாலும், அவ்வதிகாரத்தை இதராளுக்கு யாதொரு தீங்கும் நேரிடாதமார்க்கமாய் மாத்திரமே நிறைவேற்ற வேண்டுமென்று அப்பீல் வாதிகளின் வக்கீல் மிஸ்டர் சேஷகிரி அய்யர் வாதிக்கிறார். நீர்தாரையை அகலப்படுத்த டிஸ்டிரிக்ட் போர்டாருக்கு அதிகாரமிருக்கிறதா இல்லையா என்னும் விஷயத்தை நாம் ஆராய்ச்சி செய்யவேண்டியிருப்பதால் ஷை வாதித்த விஷயமானது இதற்கு சம்பந்தப்படவில்லை. 1884-௵ மதராஸ் 5-வது ஆக்ட் 95-வது செக்ஷன் மூலமாய், தம்மிடத்திலிருக்கும் பணத்துக்குத் தக்கப்படி ரோட்டுகள்-வாராவதிகள்-முதலிய போக்குவரத்தான மார்க்கங்களை உண்டாக்கவும் மராமத்துசெய்யவும் பாதுகார்க்கவும், டிஸ்டிரிக்ட் போர்டார் உத்திரவு செய்யப்பட்டிருக்கிறார்கள். பிரஸ்தாப ரோட்டானது ஷை செக்ஷனுக்கு பொருத்தமான ரோட்டுகளில் ஒன்று என்பது மறுக்கப்படவில்லை. பின்னும் ஒரு நீர்தாரை அல்லது சிறியமதகானது,'வாராவதி'யுமல்ல,போக்குவரத்துக்குறிய மார்க்கமுமல்ல என்று வைத்துக்கொண்டாலும், அது ஷை ஆக்ட் 50-வதுசெக்ஷனால் டிஸ்டிரிக்ட் போர்டார்வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. ஷை ஆக்டினால் டிஸ்டிரிக்ட் போர்டார்வசம் ஒப்புவிக்கப்பட்ட ஒரு நீர்தாரை அல்லது சிறிய மதகும், அவர்களுடைய பாதுகார்ப்புக்கு உட்பட்டிருந்தாலொழிய ஷை நீர்தாரை அல்லது சிறிய மதகின் மேல் போகும் ரோட்டை பாதுகார்க்க அவர்களால் முடியாது ;—என்றே தோற்றுகிறது. ரோட்டை பாதுகார்க்கும் கடமையானது டிஸ்டிரிக்ட் போர்டாரை சேர்வதால் அந்த ரோட்டின் கீழ் இருக்கும் அவசியமான நீர்தாரைகளை பாதுகார்க்கும் கடமையும் அகத்தியமாய் அவர்களைச்சேர்கிறது. ரோட்டொன்றை ஏற்படுத்தும்படி கொடுக்கப்பட்ட உத்திரவானது, அந்தரோட்டை நீரோட்டத்தின் குறுக்காக பந்தோபஸ்தாய் கட்டி முடிக்க வேண்டிய நிமித்தம், அவசியமான நீர்தாரைகளை கட்டும்படியான உத்திரவையும் அது சேர்த்துகொள்ளுகிறதென்பது எவரும் மறுக்கமுடியாத விஷயம். பின்னும், புதிதாய் கட்டப்படவேண்டிய ரோட்டிற்கும் போர்டார் வசம் ஒப்புவிக்கப்பட்ட ஏற்கனவே கட்டிமுடிந்த ரோட்டிற்கும், வித்தியாசமான விதியிருப்பதாக மிஸ்டர் சேஷகிரி அய்யர் சொல்லவில்லை. ஆதலால், இத்தகைய ரோட்டுகளை பாதுகார்ப்பதற்கு, இவைகளின் கீழிருக்கப்பட்ட நீர்தாரைகளை சீர்திருத்துவது அவசியமாயிருந்தால், அத்தகைய அவசியமான சீர்திருத்தங்களை செய்யும் கடமையும் டிஸ்டிரிக்ட் போர்டார்மேல் சுமத்தப்பட்டிருக்கிறதாக எங்களுக்குத் தோற்றுகிறது. இ. லா. ரி. 28 சென்., 72-ல் சொல்லப்பட்டிருக்கும், சங்கர வடிவேலு பிள்ளை v. இந்திய ஸ்டேட் செக்ரிடரிபேரில் கொண்டுவந்த, 1902-௵ 1351-வது நெம்பர் இரண்டாவது அப்பீல் வியாஜ்ஜியத்தில், சீப் ஜட்ஜ் ஸர் ஆர்னால்ட் ஒயிட்டுடனிருந்து தீர்மானஞ்செய்த, ஜஸ்டிஸ் ஸர் சுப்பிரமணிய அய்யர் அவர்கள் —

*கலிங்கலைக்கட்ட அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரமும் 'புதிய வேலைகள்' உண்டாக்கப்படுதலைப் பொருத்தமட்டில், இதராளுக்கு யாதொரு கெடுதியும் நேரிடாதபடி கட்டப்படல் வேண்டுமென்னும் சரியான சட்ட தாத்பரியத்தோடு கூடியிருக்கிறது. ஆதலால் இந்த தாத்பரியப்படி கலிங்கலைக் கட்டியிருக்கவேண்டும்; அப்படிக்கின்றி கலிங்கல் ஜலமானது வாதிகளின் நிலங்களில் பாய்ந்து அவற்றை ஜலத்தில் அமிழ்த்தி பயிரிடுவதற்கு லாயக்கில்லாமல் செய்யும்படியான இடத்தில் கலிங்கல் கட்டப்பட்டிருப்பதால், வாதிகள் தாவாப்படி கலிங்கலை அடைத்துவிடவேண்டும்.

என்று தீர்மானித்திருப்பதால், பிரஸ்தாப கேஸில் சொல்லப்பட்ட நீர்தாரைகள் அல்லது சிறிய மதகுகளும், அந்தக் கேசில் சொல்லப்பட்டிருக்கிற கலிங்கலைப்போன்றவை யென்றும், ஆதலால் டிஸ்டிரிக்ட் போர்டார் அவற்றை அகலப்படுத்திக் கட்டியதை "இதராளுக்கு யாதாரு கெடுதியும் உண்டாக்காமல் கட்டவேண்டும் என்னும் சரியான சட்டதாத்பரியத்தோடு கொடுக்கப்பட்ட அதிகாரப்படி கட்டப்படும் 'புதியவேலை'களைப்போல் பாவிக்கவேண்டுமென்று," மிஸ்டர் சேஷகிரி அய்யர் வாதிக்கிறார்."

இப்பொழுது எடுத்துகாட்டப்பட்ட (இ. லா. ரி. 28 சென்., 72.) கேசும் பிரஸ்தாபகேசும் பேதப்படக்கூடியவை. அதாவது பிரஸ்தாபகேசில், சட்டமானது ரோட்டைப் பாதுகார்க்கும்படி டிஸ்டிரிக்ட் போர்டாருக்கு உத்திரவுசெய்கிறதே தவிர, மற்றப்படி ஆதியில் கற்பனைசெய்து முடிக்கப்பட்ட மாதிரியாகவே ரோட்டைவைத்து பாதுகார்க்கும்படி கட்டுப்பாடு செய்யவில்லை. அவ்வித வெளிப்படையான கட்டுப்பாடானது அதிகாரத்தோடு சேர்ந்திராமையால், ரோட்டைப்பாதுகார்க்கும்படி கொடுக்கப்பட்ட உத்திரவானது, ரோட்டை சரியானபடி பாதுகாப்பதற்காக அப்போதைக்கப்போது வேண்டிய அவசியமான புதிய வேலைகளைச்செய்யும்படியான கடமையையும் சுமத்துகிறது.

"இதராளுக்கு கெடுதி உண்டாக்காமல் அதிகாரத்தை செலுத்தவேண்டுமென்பது சட்டத்தின் சரியான தாத்பரியம்" என்று லார்ட் வாட்ஸனால் தீர்மானிக்கப்பட்ட (1899 A. C., 535) இங்கிலீஷ் ரிபோர்ட்டில்கண்டிருக்கும், கன்னடியன் பெசிபிக் ரெயில்வே *v.* பார்க் கேசுக்கும், பிரஸ்தாப கேசுக்கும் ஒற்றுமை கிடையாது. அந்த கேசில், பிரதிவாதியின் சுய நன்மைக்காக அதிகாரம் கொடுக்கப்பட்டது. இந்த கேசில் முற்றும் பொதுஜன நன்மைக்காக பிரதிவாதிகளாகிய டிஸ்டிரிக்ட் போர்டாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது: ஏனென்றால், ரோட்டுகளிலிருந்து அவர்கள் அடையும் பயன் யாதொன்றுமில்லை. அந்தகேசில், தன்னுடைய நிலத்துக்குப் போதுமான ஜலம் பிரதிவாதியிடமிருந்தாலும், அந்த நிலத்திற்கு அல்லது அதன் ஒரு பாகத்திற்கு தன்னிஷ்டமிருந்து ஜலம் பாய்ச்சினாலும் பாய்ச்சலாம் அல்லது பாய்ச்சாமல் விட்டாலும் விடலாம். இந்த கேசில், ரோட்டின் பாதுகாப்பிற்கு அவசியமான சீர்திருத்தங்களை கையில் பணம் இருப்பதற்கு ஏற்றமாதிரி, செய்தே தீரவேண்டியது பிரதிவாதிகளாகிய டிஸ்டிரிக்ட் போர்டாரின் கடமையாயிருக்கிறது. ஆதலால் இக்கேசுகள் ஒன்றுக்கொன்று பேதப்பட்டிருக்கின்றன. இங்கிலீஷ் ரிபோர்ட்டுகளில் கண்டிருக்கும் (11. A. C., p. 45) லண்டன் பிரைட்டன், அண்ட் சவுத் கோஸ்ட் ரெயில்வே கம்பெனி *v.* டுரூமன்கேசும், பிரஸ்தாப கேசும் மிகவும் ஒற்றுமையாயிருக்கிறது. ஷை ரெயில்வே கம்பனி கேசில், ரெயிலில் நடக்கும் கால் நடைகள் அதாவது ஆடுமாடு முதலியவற்றின் ஏற்றுமதி இறக்குமதிக்காக ஓர் இடத்தை அடையும்படிக்கும், அந்த இடத்தில் அவைகள் ஒதுங்குவதற்கான தொட்டிகளையும், தொழுவங்களையும் கட்டிக்கொள்ளும்படிக்கும் ரெயில்வே கம்பெனியாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. இந்த அதிகாரப்படி கட்டப்பட்ட காலத்தில், அது இங்கிலீஷ் ரிபோர்ட்டில் கண்டிருக்கும் (1899, A. C., 535) கன்னடியன் பெசிபிக் ரெயில்வே *v.* பார்க் கேசில் லார்ட் வாட்ஸன் தீர்ப்பு சொல்லியிருக்கிறபடி, கம்பனியின் சட்ட சம்மந்த கடமையால் "ரெயில்வேயின் ஒரு பாகமாகிறது." பின்னும் இங்கிலீஷ் ரிபோர்ட்டில் கண்டிருக்கும் (L. R., 4 C. P., 629) கிராக்னல் *v.* மேயர் வகையரா கேசையும் இந்த கேசிற்கு ஆதாரமாய்க் கூறலாம்.

இக்கேசுகளில், அதிகாரத்தின் தாத்பரியம் வெளிப்படையாய்க் கொடுக்கப்பட்டதின்பேரில் வேலைகள் நடத்தப்பட்டன வென்பதில் சந்தேகமில்லையென்றாலும், அதிகாரப்படி ஒரு வேலையை நிறைவேற்ற என்னென்ன அவசியமாய் செய்யவேண்டுமோ அவ்வவற்றையும் செய்துமுடிக்கும்படிக்கே அவ்வதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதை, ஏற்கனவே இக்கேசில் நாம் எடுத்துக் காட்டியிருப்பதால், வெளிப்படையான தாத்பரியம் கொடுக்கபட்ட அதிகாரத்திற்கும், அப்படி கொடுக்கப்படாத அதிகாரத்திற்கும் இயற்கையில் யாதொரு வித்தியாசமும் கிடையாது. பிரஸ்தாபக் கேசில் ரோட்டுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் சிறிய மதகு அதாவது பாலத்தைக் கட்டுவது ஜில்லா போர்டார்மேல் ஏற்பட்ட கடமையல்ல வாதலால், கொடுக்கப்பட்ட அதிகார அளவைத் தவிரவேறொன்றையும் நாம் கருதலாகாதென்று மிஸ்டர் சேஷகிரி அய்யர் தெரிவிக்கிறார். ஆனால், அவ்விதம் கருதலாம் என்பதற்கு இங்கிலீஷ் ரிபோர்ட்டில் கண்ட (11. A. C. p. 45) லண்டன் பிரைட்டன் அண்ட் சவுத் கோஸ்ட் ரெயில்வே கம்பெனி *v.* டுரூமன் கேசே போதுமான ஆதாரமாயிருக்கிறது. பின்னும், இங்கிலீஷ் ரிபோர்ட்டுகளில் கண்ட (6 Ch., D., 521) ஹாலி *v.* ஸ்டீவி கேசில் ஸர் ஜார்ஜ் ஜெஸ்ஸல் அவர்களின் தீர்மானத்தை ஆதாரமாய் எடுத்துகாட்டுகிறோம். அதில், தேசகாவலாக சைனியம் இருக்க அடையப் பெற்ற ஓர் நிலமானது, அக்கம்பக்கத்தாருக்கு தொந்தரவு கொடுக்கக்கூடிய விதமாய், துப்பாக்கி சுட்டு பழக, உபயோகிக்கப்பட்டது. "பார்லிமெண்ட் உத்திரவு பெறாமல், இவ்விதம் உபயோகப்படுத்தினது சட்ட விரோதமாயிருந்திருக்கக் கூடுமென்றாலும், அப்படி உபயோகப் படுத்தினது இராணுவ அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்படி ஏற்பட்ட சட்டபொருத்தமானதாகும். ஆதலால், அக்கம் பக்கத்தாருக்கு தொந்திரவாய் இருப்பதற்காக தாவா கொண்டுவருவது முற்றும் கூடாமை" என்று தீர்மானித்ததனியில், ஷை இடத்தின் இந்த பாகத்தை இன்னவேலைக்காக உபயோகிக்கும்படி தீர்மானிக்கவேண்டியது கோர்ட்டார் அல்லவென்றும் சுட்டிக்காட்டியிருக்கிறார். நிற்க,

ENGLISH LAW REPORTS
6 Chancery Division, 521.

Sir George Jessel's Opinion.

"The Power conferred upon the military authorities was a legal right to the use of the land for that purpose, although such a use would, without the authority of parliament, have been illegal. If that is so, it is impossible to maintain an action for nuisance."

பிரஸ்தாபக்கேசில், வருஷப் பிரதி வருஷம் ரோட்டுக்கு நேரிடும் கெடுதியை நீக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. அக்கெடுதியை மூன்று விதங்களால் நீக்கலாம். (1) ரோட்டு மார்கத்தை உயர்த்தலாம் (2) ரோட்டின் மேலண்டையில் ஓர் கரையேற்படுத்தலாம் (3) நீர்தாரையை அகலப்படுத்தலாம். இவற்றில் முதல் இரண்டும் அனுபவத்தில் ஒரே பலனைத் தரக்கூடியவைகள். சாக்ஷி வாக்குமூலத்தை ஆதாரமாகக் கொண்டு, ரோட்டையும் உயர்த்தவேண்டும், நீர்தாரைகளையும் அகலப்படுத்தவேண்டும் என்று, டி. மு. அவர்கள் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயத்தை, சப் ஜட்ஜானவர் அங்கீகரித்திருப்பதால் ஷை இரண்டு விதங்களில் ஒன்றை செய்தாலே, அதுவே கெடுதியை தடுக்கப்போதுமானதென்பது ஸ்பஷ்டமாய் ஏற்படவில்லை. கரைப்பட்ட ரோட்டை அதிகமாய் உயர்த்துவதாவது அல்லது அதன் ஒருபாகத்தை உயர்த்துவதாவது, ரோட்டை குறுகலாக்கி பிரயோஜனப்படாமல் செய்துவிடுமென்பது தெரிந்த விஷயமே. பிரஸ்தாப கேசில், ரோட்டிற்கு மேற்கில் தனியாய் ஒரு கரையேற்படுத்த இடமில்லாம லிருக்கலாம், அல்லது அப்படி ஏற்படுத்துவதானது போர்டார் வசமிருக்கும் இருப்பானது இடங்கொடுக்காத அவ்வளவு அதிகச் சிலவு பிடிக்கக்கூடியதா யிருக்கலாம். ஆதலால், பொதுஜனநன்மைக்காக, ரோட்டைப்பாதுகார்க்கும் நிமித்தம், அதன்கீழிருக்கும் நீர்தாரைகளை அகலப்படுத்திக் கட்ட டிஸ்டிரிக்ட்போர்டார் தீர்மானித்தது, அயுக்தமல்ல வென்பது தெளிவாகிறது. தீர்மானித்தவண்ணம் அவர்கள் செய்து முடித்ததில் அசட்டையான செய்கையொன்றும் ஏற்பட வில்லை. பின்னும், எந்த பாகத்திலுள்ள நீர்தாரையை அகலப்படுத்திக் கட்டினால், தங்கள் நிலங்களுக்கும் கெடுதி யில்லாமல், ரோட்டையும் பாதுகார்க்க உதவியாய் இருக்குமோ அதை வாதிகள் எடுத்துக் காட்டினார்க ளில்லை.

ஆதலால், அப்பீல் காஸ்டுடன் தள்ளிவிடப்பட்டது.—இ. லா. ரி., **31** சென்., **117**.

* கலிங்கலை சிலர் (ஏரி) கலங்கல் என்று சொல்வதும் உண்டு.

ஜட்ஜ்கள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம். / மிஸ்டர் ஜஸ்டிஸ் மன்றோ.

பக்ருடீன் சாஹிப்பும் மற்றொருவரும் (1-வது 2-வது மனுதார்கள்—3-வது 4-வது பிரதிவாதிகள்)—அப்பீல் வாதிகள்

1908
January.

v.

அப்துல் ரஹீம் சாஹிப் (எதிர் மனுதார்-வாதி)—அப்பீல் பிரதி வாதி.

இந்த வியாஜ்ஜிய சங்கரகமானது ஜட்ஜ்மெண்டில் விரிவாய் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்பீல்வாதி தரப்பில் ஜி. யஸ். இராமச்சந்திர அய்யரும், அப்பீல் பிரதிவாதிதரப்பில் கனம். ஆக்டிங் அட்வகேட் ஜனராலுக்குப் பதிலாக டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியாரும் ஆஜரானார்கள்.

ஜட்ஜ்மெண்ட் :—திருவாட்டி டி. மு. கோர்ட்டில் 1901-ம் வருஷத்திய 203-வது நெம்பர் அசல் வியாஜ்ஜியமாகிய மார்ட்கேஜ் சூட்டில், சில நிலங்களை ஏலம் போட அப்பீல் பிரதிவாதியானவர், அப்பீல் வாதிகளின் தகப்பனார் பேரில் ஓர் டிக்கிரி பெற்றிருந்தார். டிக்கிரி பிறந்த பிறகு (ஷை தகப்பனாராகிய) பிரதிவாதி யிறந்துவிட்டார். "ஒரு டிக்கிரியானது முற்றும் நிறைவேற்றப்படுவதற்குமுன் டிக்கிரிகடனாளி ஒருவர் இறந்துவிட்டால், அப்படி இறந்துவிட்டவருக்கு சட்டப்படியான பிரதிநிதியா யிருக்கப்பட்டவர்பேரில் ஷை டிக்கிரியை நிறைவேற்ற, டிக்கிரி கொடுத்த கோர்ட்டாருக்கு மனு செய்துகொள்ளவேண்டுமென்று சிவில் புரோஸீஜர் கோட் 234-வது செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது." ஆதலால் அப்பீல் வாதியானவர் டிக்கிரியை அப்பீல் பிரதிவாதிகளின்பேரில் நிறைவேற்றி, நிலங்களை ஏலத்திற்குக் கொண்டுவர சி. பு. கோ., 234-வது செக்ஷன்படி (1906-ம் வருஷத்திய 71-வது நெம்பர் நிறைவேற்று) மனுகொடுத்தார். அப்பீல் வாதிகளோ, ஏலத்திற்கு உத்தரவு செய்யப்பட்ட நிலமானது (waqf) வாக்ப் என்னும் சமர்ப்பிக்கப்பட்ட இனம் சொத்தென்றும், தாங்கள் காலஞ்சென்ற தகப்பனாரின் பிரதிநிதிகள் என்ற மேரையிலல்லாமல், பரம்பரையான டிரஸ்டிகளென்ற மேரையில், ஷை சொத்து தங்கள் வசமிருக்கிறதென்றும், தெரிவித்து மனுவை ஆக்ஷேபித்தார்கள்.

CIVIL PROCEDURE CODE.

Sec. 234.—If a Judgment-debtor dies before the decree has been fully executed, the holder of the decree may apply to the court which passed it to execute the same against the legal representative of the deceased.

சி. பு. கோ., 244-வது செக்ஷனானது இந்த ஆக்ஷேபனையை அங்கீகரிக்க இடந்தரவில்லை என்று டி. மு. அவர்கள் ஷை ஆக்ஷேபனையை புறக்கணித்துவிட்டார். இதற்கு மாற்றமாய் தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் அவர்களுக்கு செய்துகொண்ட (1906-ம் வருஷத்திய 383-வது நெம்பர்) அப்பீலும், கீழ் கோர்ட்டார் செய்த தீர்மானமே சரியென்பதாய், அப்பீல் தள்ளிவிடப்பட்டது.

இதன்பேரில், மதராஸ் ஹைகோர்ட்டாருக்கு (1907-ம் ஸு 14-வது நெம்பர்) இரண்டாவது அப்பீல் செய்துகொள்ளப்பட்டது.

கீழ் கோர்ட்டார் கொண்ட அபிப்பிராயமே சரியென நாங்களும் நினைக்கிறோம். அப்பீல் வாதிகள் தகப்பனாரின் பிரதிநிதிகளென்ற ஸ்தானத்திலில்லாமல் டிரஸ்டிகள் என்னும் ஸ்தானத்திலிருந்து ஆக்ஷேபிக்கிறார்கள். ஆதாலால் இந்த ஸ்தானத்துக்கு 244-வது செக்ஷன் பொருந்தாது.

இ. லா. ரி., 23 பம்., 237-ல் கண்ட மூரிகேயா *v.* ஹயத் சாயப் பேரில் கொண்டு வந்த கேசில், ஜஸ்டிஸ் ரனேட் இதே தீர்மானஞ் செய்திருப்பதோடு, டிரஸ்டிகள் கிரமமாய் நடத்தவேண்டிய நடவடிக்கைகள் இன்னவை என்பதை அடியில் வருமாறு காட்டியிருக்கிறார். "ஒருவர், மற்றொருவர் அல்லது பலருக்காகவாவது, அல்லது மதசம்பந்தமான தர்மம் அல்லது ஸ்தாபனத்துக்காவது, உபயோகப்படும்படி தம்மிடம் வைக்கப்பட்டிருப்பதாக உறுதியாய் சொல்லுகிறவர் சி. பு. கோ. 278 முதல் 283 வரையிலுள்ள பிரிவுகளின்படி தாவா கொண்டுவர வேண்டியது. பின்னும் ஷை டிரஸ்டி சொத்தின்பேரில் கொடுக்கப்பட்ட தீர்ப்பை, ஆக்ஷேபிக்க பிரத்திபேகமாய் தாவா கொண்டுவரவேண்டுமேயொழிய மற்றப்படி அந்தத் தீர்ப்பின்பேரில் அப்பீல் செய்யக்கூடாது."

I. L. R., 23 BOM., 237.

Wherever he asserts that he holds the property in trust for ...some third person or body of persons or a religious charity or institution, the claim must be investigated under the provisions of sections 278 to 283, and the order passed therein cannot be challenged by an appeal but must form the subject of a separate suit.

இ. லா. ரி., 23 சென்., 195-ல்கண்டிருக்கும் இராமநாதன்செட்டியார் *v.* லவ்வை மரக்காயர்பேரில் கொண்டுவந்த கேசிலும், இ லா. ரி., 30 சென்., 26-ல் கண்டிருக்கும், குமரேட்டா சேர்வைக்காரன் *v.* சுப்பைய செட்டியார் பேரில் கொண்டுவந்த கேசிலும், மேற்கண்ட விதமே தீர்மானம் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த பிரஸ்தாப கேசில், டிக்கிரியானது (*ultra vires*) பிறப்பிக்கப்பட அதிகாரமில்லை யென்று சொல்ல யாதொரு ஆதாரமும் இல்லை. சிலசந்தர்ப்பங்களில் வாக்ப் சொத்தானது சந்தேகமற சிலாவணியாகலாம். ஆனால், இந்த வாக்ப் சொத்து [illegible]

போட கொடுக்கப்பட்டிருக்கும் டிக்கிரியைப்பற்றி பொதுஜன ஆக்ஷேபணைகள் ஒன்றும்உண்டாகவில்லை. ஆதலால் அப்பீல் வாதிகள் தரப்பிற்கு ஆதாரமாய் எடுத்துக் காட்டப்பட்ட, இ. லா. ரி., 26 சென்., 31-ல் கண்டிருக்கும் லக்ஷ்மணசாமி நாயுடு v. இரங்கம்மாபேரில் கொண்டுவந்த கேசும், இ. லா. ரி., 28 சென்., 84-ல் கண்டிருக்கும், விஜயநகரம் இராஜா v. தண்டிவட்டா செல்லய்யா பேரில் கொண்டுவந்த கேசும், இக்கேசுக்கு பொருந்தா. ஆதலால் அப்பீலை கோர்ட்டு சிலவுடன் தள்ளி விடுகிறோம்.—இ. லா. ரி., 31 சென்., 125.

ஜட்ஜ்கள். { மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர்.

முனுசாமி முதலியார் (வாதி)—அப்பீல் வாதி.

1907 December 11, 18.

v.

சுப்பராயர் வகையரா (பிரதிவாதிகள்)—அப்பீல் பிரதிவாதிகள்.

பிரதிவாதியினுடைய ஒப்பந்தப்படி கிரயம் செய்விக்கவேண்டு மென்பது தாவா.

1-ம் பிரதிவாதியும் மூன்றும் பிரதிவாதியின் காலஞ்சென்ற புருஷனும், இரண்டாம் பிரதிவாதியின் பிள்ளைகள் 1890-ம் ஸுத்தில் இரண்டாம் பிரதிவாதியானவர் குடும்ப சொத்துக்களில் தனக்கு யாதொரு பாத்தியமும் கிடையாதென்பதாய் ஷை பிள்ளைகள் பேரில் ரிலீஸ் பாண்டு எழுதிவைத்தார். 1901-ம் ஸு த்தில், 1-ம் பிரதிவாதியானவர் ஷை ரிலீஸ் பாண்டில் கண்ட சில சொத்துக்களை வாதிக்கு விக்கிரயம்செய்வதாய் ஒப்பந்தம் செய்துகொண்டார். ஒப்பந்தப்படி விக்கிரயம் செய்யவில்லை. வாதி நாகப்பட்டணம் சப்ஜட்ஜுக்கு தாவா (1902-ம்ஸுத்திய 9வது நெம்பர் அசல் வியாஜ்ஜியம்) செய்தார்.

இரண்டாம் பிரதிவாதியோ, தனக்கிருந்த கடன்காரர்களை தான் கொடுத்ததைப் பெற்றுக்கொண்டு ராஜியாய்ப் போகும்படி செய்வதற்காக, ரிலீஸ் பாண்டை தன்னுடைய பிள்ளைகள் பேரில் நாமகார்த்தமாய் தான் எழுதிவைத்ததாகவும், சகல சொத்துக்களையும் தானே அனுபவித்து வருவதாகவும், ஆதலால் 1-ம் பிரதிவாதிக்கு சொத்தில் யாதொரு பாத்தியமும் கிடையாதென்றும், வழக்காடினார்.

இக்கேசில் சாக்ஷிகள் சொல்லிய வாக்குமூலங்களைக்கொண்டு இரண்டாவது பிரதிவாதி தெரிவித்தபடி ரீலீஸ் பாண்டானது நாமகார்த்தமானதென்றும் (Benami) ஆனால் நாமகார்த்தமாய் எழுதின நோக்கத்தின்படி கடன்காரர்களில் யாராவது மோசம் செய்யப்பட்டார்களென்பதற்கு யாதொரு அத்தாக்ஷியு மில்லை என்றும், சொத்துக்களுக்கு பிரதிவாதி சகல சுதந்தர முடையவரல்லவாதலால், 2-ம் பிரதிவாதியின் உடன் சுதந்தர பாத்தியதைகள் ஸபலமாக்கப்படவில்லை யென்றும் ஸப் ஜட்ஜானவர் முடிவு செய்து 2-ம், 3-ம் பிரதிவாதிகளின் பாத்தியதைகளுக்கு பாதகமில்லாமல், 1-ம் பிரதிவாதி சொத்துக்களை வாதிக்கு விக்கிரயம் செய்யவேண்டுமென்று தீர்ப்பு சொன்னார்.

இதன் பேரில் வாதி ஹைகோர்ட்டுக்கு (1904-ம்ஸு 72-ம் நெம்பர்) அப்பீல் செய்துகொண்டார்.

அப்பீலுக்கு ஆதாரமான அம்சங்களில் 6-வது 7-வது அம்சங்கள் பின்வருமாறு:— "யக்சிபிட்ஜீ" யாகிய, ரிலீஸ் பாண்டானது நாமகார்த்தமானதென, கீழ்க்கோர்ட்டார் செய்த முடிவு சரியெனவைத்துக்கொண்டாலும், தான் செய்த குற்றத்தை அனுகூலமெனக்கருதி, தன்னுடைய மோசத்தையே ஆதாரமாகக்கொண்டு, 2-ம் பிரதிவாதியை எதிர் வழக்காடும்படியாக விடக்கூடாது.

இரண்டாம்பிரதிவாதியக்சிபிட்-ஜீமூலமாய் தன்னுடைய கடன்காரர்களை மோசம் செய்திருப்பதால், அத்தகைய மோசத்தையே தன்னுடைய கக்ஷிக்கு ஆதாரப்படுத்தும்படி இடங்கொடுக்கப்படமாட்டாரென்று கீழ்க்கோர்ட்டார் தீர்மானித்திருக்க வேண்டியது.

அப்பீல் வாதிகள் தரப்பில் மிஸ்டர் பி. ஆர். சுந்தர அய்யரும், மிஸ்டர். டி. நரசிம்ம அய்யங்காரும், அப்பீல் பிரதிவாதிகள் தரப்பில் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யரும் ஆஜரானார்கள்.

ஜட்ஜ்மெண்ட் (ஜஸ்டிஸ் வாலிஸ்):— தனக்கிருந்த கடன்காரர்களை வஞ்சிக்கும் நிமித்தமாக, 1-ம் பிரதிவாதியாகிய தன்னுடைய பிள்ளைக்கும், 3-ம் பிரதிவாதியின் காலஞ்சென்ற புருஷனாகிய தன்னுடைய மற்றொரு பிள்ளைக்கும், இரண்டாம் பிரதிவாதி எழுதிவைத்த ரிலீஸ் பாண்டானது நாமகார்த்தமானதென்றும், ஷை ரிலீஸ் பாண்டானது ஏற்பட்ட நோக்கத்தின்படி கடன்காரர்கள் யாராவது உண்மையில் வஞ்சிக்கப்பட்டார்களென்று ஏற்படவில்லை யென்றும், ஸப் ஜட்ஜானவர் சாக்ஷிவாக்குமூலங்களைக்கொண்டு முடிவு செய்திருப்பதை யாம் ஏற்றுக்கொள்ளுகிறோம். ஆதலால், இந்த வியாஜ்ஜியத்தில் கவனிக்க வேண்டிய தென்னவென்றால்:—யக்சிபிட் ஜீ யாகிய ரிலீஸ் பாண்டானது நாமகார்த்தமானதென்ற ஆதாரத்தால், 2-ம் பிரதிவாதிக்கு பாத்தியதையுள்ள அதில் கண்ட சொத்துக்களை, 1-ம் பிரதிவாதியின் ஒப்பந்தப்படி தனக்கு விக்கிரயம் செய்யவேண்டுமென்று வாதி கொண்டுவந்திருக்கும் தாவாவானது, 2-ம் பிரதிவாதியால் தடை செய்யப்படுமா? என்பது தான்.

நாமகார்த்தமாய் எழுதிவைத்ததினால், எந்த கடன்காரராவது மோசம்போயிருந்தால், அப்பொழுது இ. லா. ரி., 18 சென்., 378, ரங்கம்மாள் v. வெங்கடாசாரிபேரில் கொண்டுவந்த கேசிலும், இ. லா. ரி., 20 சென்., 326, எரமேட்டி கிருஷ்ணய்யா v. சந்துரு பாபய்யாபேரில் கொண்டுவந்த கேசிலும் ஏற்பட்டிருக்கும்தீர்மானப்படி, யக்சிபிட்-ஜீயாகிய ரிலீஸ் பாண்டில் கண்ட சொத்துக்களை திரும்பக் கேட்பதினின்றும் 2-ம் பிரதிவாதி தடைசெய்யப்பட்டிருப்பார். எப்பொழுது தான்கொண்ட மோசமானது நிறைவேற்றப்பட வில்லையோ, அப்பொழுது இங்கிலீஷ் லா ரிபோர்ட்டுகளில் கண்டிருக்கும் (Law Reports, 9 Equity, 475) சைம்ஸ் v. ஹியூக்ஸ் பேரில் கொண்டுவந்த கேசில், லார்ட் ரோமிலி செய்த தீர்ப்பின்படியும், (Law Reports, 1 Queen's Bench Division, 291) டெயிலர் v. பவர் பேரில் கொண்டுவந்த கேசின் அப்பீல் தீர்மானப்படியும், இரண்டாம் பிரதிவாதி தன்னுடைய சொத்துக்களை மறுபடியும் அடைவதினின்றும் தடை செய்யப்படவில்லை. இந்த தீர்மான கொள்கைகளைப் பின்பற்றி, இந்தியன் டிரஸ்ட் ஆக்ட் 84-வது செக்ஷனானது, சட்ட விரோதமான காரியம் செய்வதற்காக ஒருவர் தம்முடைய சொத்துக்களை வேறொருவருக்கு டிரான்ஸ்பர் செய்தாலும், தாம் நினைத்தபடி சட்ட விரோதமான காரியம் செய்யாதபக்ஷத்தில், டிரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவர், அந்த சொத்துக்களை தன்னிடம் நம்பிவைக்கப்பட்ட சொத்துக்களாகவும் அவது டிரஸ்டாகவும், தன்னை அதனைப் பாதுகாக்கும் டிரஸ்டியாகவும் பாவித்து, டிரான்ஸ்பர் செய்தவர்

> **INDIAN TRUSTS ACT.**
>
> **Sec. 84.**—Where the owner of property transfers it to another for an illegal purpose, and such purpose is not carried into execution or the transferor is not as guilty as the transferee or the effect of permitting the transferee to retain the property might be to defeat the provisions of any law, the transferee must hold the property for the benefit of the transferor.

கேட்கும்போது, சொத்தை அவருக்குத் திருப்பிகொடுத்துவிடவேண்டியது என்னும்நிபந்தனையைஏற்படுத்துகிறது. இவ்விந்தியா தேசத்தில் இத்தகைய கேசுகளில் நாம் தீர்மானிப்பதற்கு வழிகாட்டவேண்டிய சட்ட விவகாரங்களை ஷை செக்ஷனானது வெளிப்படுத்தியிருக்கிறதென்று யாம் அபிப்பிராயப்படுகிறோம். ஷை இந்தியன் டிரஸ்ட் ஆக்ட் அங்கீகரிக்கப்பட்ட பிறகு, இங்கிலீஷ் லா ரிபோர்ட்டுகளில் கண்டிருக்கும் (Law Reports, 24 Queen's Bench Division, 742) கியாலி v. தாம்ஸன்பேரில் கொண்டுவந்த கேசில், அப்பீல் கோர்ட்டார், ஷை ஆக்ட் ஷை செக்ஷனில் அடங்கியிருக்கும் சட்ட ஏற்பாட்டின் நியாய விஷயத்தில் சந்தேகங்கொண்டு தீர்மானித்திருப்பதை நாம் கவனிப்பது அவசியம். இ. லா. ரி., 18 சென்., 378-ல் கண்டிருக்கும் ரங்கம்மாள் v. வெங்கடாச்சாரிபேரில் கொண்டுவந்த கேசில், ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ஷை செக்ஷனில் கண்ட நிபந்தனையை அங்கீகரித்திருக்கிறார். இ. லா. ரி, 20 சென்., 326-ல் கண்டிருக்கும், எரமேட்டி கிருஷ்ணய்யர் v. சந்துரு பாப்பய்யா பேரில் கொண்டுவந்த கேசில் தீர்ப்பு சொன்ன இரண்டு ஜட்ஜகளில் ஒருவராகிய ஜஸ்டிஸ் பென்ஸன், இந்தியன் டிரஸ்ட் ஆக்ட் 84-வது செக்ஷனை அனுசரிக்கவில்லை; மேலும், அவருடைய தீர்மானமானது ஷை செக்ஷனில் கண்ட நிபந்தனையை விட கடினமானதால், அதை யாம் அங்கீகரிக்க முடியவில்லை. மற்றொருவராகிய ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர், பிரஸ்தாப கேசுக்கு சம்பந்தப்படாத, வேறு ஆதாரங்களின்பேரில் தீர்ப்பு சொல்லியிருக்கிறார். பிரஸ்தாப கேசைப்போன்ற சந்தர்ப்பங்களில், நாமகார்த்தமாய் எழுதிவைத்தவர் மறுபடியும் சொத்தை பெற பாத்தியமுள்ளவரென்பதாக, அநேக இந்திய தீர்மானங்களை அதாவது இந்தியாவிலிருக்கும் ஹைகோர்ட்டார் செய்த தீர்மானங்களைத் தழுவி, இ. லா. ரி., 33 கல்., 976-ல் கண்ட ஜாடுநாத் போடார் v. ரூப்லால் போடார் பேரில் கொண்டுவந்த கேசானது முடிவு செய்யப்பட்டிருப்பதால் அக்கேசில் தழுவப்பட்ட தீர்மானங்களை மறுபடியும் நாம் இங்கு எடுத்துக்காட்டவேண்டியது அனாவசியம் அப்பீல் வாதி தரப்பில் ஆதாரமாய் எடுத்துக்காட்டப்பட்டதும் சமீபகாலத்தில் தீர்ப்பு சொல்லப்பட்டதுமான, இ.லா. ரி, 31 பம்., 405-ல் கண்ட லிட்லிங்கப்ப v. ஹிராசா பேரில் கொண்டுவந்த கேசில், மோசம் நடத்தப்பட்டு, அதனால் டிக்கிரிதாரன் தன்னுடைய பாத்தியதையை யினின்றும் வஞ்சிக்கப்பட்டான்; எனவே இந்த நடவடிக்கையானது ஷை செக்ஷனில் கண்ட நிபந்தனையாகமாட்டாது. ஆதலால், டிரான்ஸ்பர் செய்த நோக்கத்தின்படி மோசம் நடத்தப்பட்டதால், அப்படிசெய்த மோசத்தையே ஆதாரமாகக் கொண்டு கக்ஷியாடுவதனின்றும், டிரான்ஸ்பர் சொத்தை மறுபடியும் பெறுவதினின்றும் தடைசெய்யப்பட்டிருக்கிறார் என்று, பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருப்பது, பிரஸ்தாப கேசுக்கு பொருந்தாது. இத்தீர்ப்பைக் கொடுத்த சீப் ஜட்ஜ அவர்களே மற்றும் ஜட்ஜகளுடனிருந்து தீர்மானித்த, இ. லா. ரி., 28 கல்., 962-ல் கண்ட, கோபர்தான் சிங் v. ரித்துராய் பேரில் கொண்டுவந்த கேசில், மோசம் நடந்திருக்கும் கேசுக்கும், மோசம் நடக்காமலிருக்கும் கேசுக்கும், வித்தியாசமிருக்கிறதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இக்காரணங்களால் அப்பீலை சிலவுடன் தள்ளிவிடவேண்டுமென்று யாம் அபிப்பிராயப்படுகிறோம்.

ஜஸ்டிஸ் சங்கரநாயர்:—இந்த அபிப்பிராயத்தை யாம் அங்கீகரிக்கிறோம்.—இ. லா. ரி., 31 சென்., 97.

கல்வி இலாக்கா 31-8-08–ல் ஏற்பட்ட 251-வது நெம்பர் உத்தரவு.

1908 ஸு அக்டோபர் மீ நடக்கும் ஸ்பெஷல் டெஸ்ட் பரீக்ஷையில் சிவில் ஜுடிகல் டெஸ்டுக்கு ஆஜராகும் மாணுக்கர்களை, 1909 ஸு ஜனவரி மீ 1௳ வரையில் அமுலுக்கு வராத, சீர்திருத்தப்பட்டிருக்கும் சிவில் புரோசீஜர் கோடிலல்லாமல், இப்பொழுது ஊர்ஜிதத்திலிருந்துவரும் சிவில் புரோசீஜர் கோடைகொண்டே பரீக்ஷைசெய்யவேண்டுமென்று, கவர்ன்மெண்ட் பரீக்ஷகளின் கமிஷனரவர்களுக்கு தெரிவிக்கப்படும்.

கல்வி இலாக்கா 30-5-08-ல் ஏற்பட்ட 421-வது நெம்பர் உத்தரவு.

கவர்ன்மெண்டார் பார்வையிலிருக்கும் தொழில் கல்விச்சாலைகளில், கிராண்ட் இன் எயிட் கோட் 15-வது பிரிவில்சொல்லப்பட்டிருக்கும் கீழ்தரமானவகுப்பார் அல்லது ஜாதியாரை பாதிசம்பளஞ்செலுத்தும்படி அனுமதிகொடுக்க வேண்டுமென்று, கல்வி இலாக்கா டைரெக்டர் அவர்கள் செய்த சிபார்சை, கவர்ன்மெண்டார் களிகூர்ந்து அங்கீகரித்திருக்கிறார்கள்.

கல்வி இலாக்கா 24-3-08 ல் ஏற்பட்ட. 226-வது நெம்பர் உத்தரவு.

மாதம் இருபது ரூபாய் சம்பளத்திற்கு உட்பட்ட கவர்ன்மெண்ட வேலைகளுக்காக, பப்ளிக் சர்விஸ நோடிபிகேஷன் 1-வது பிரிவில் கண்ட எந்த பரீக்ஷைகளிலும் இனி தேற வேண்டிய அவசியமில்லை என்பதாக சொல்லப்பட்டிருக்கிறது.

* * *

GOVERNMENT ORDERS.

G. O. No. 251, Educational, dated 31st March, 1908.

The Commissioner for Government Examinations will be informed that candidates appearing for the Civil Judicial Test in the Special Test Examinations to be held in October 1908 should be examined on the Code of Civil Procedure now in force and not on the revised Code which will not come into operation until the 1st January, 1909.

G. O. No. 327, Educational, dated 2nd May 1908.

In the circumstances stated, the Inspector of European and Training Schools may, under article 18 of the Code of Regulations for European Schools, permit, as a special case, the Managers of European Schools to prepare pupils in the current year for both the Matriculation examination and the High School examination. Arrangements should, however, be made at the same time for holding the High School examination in the current year.

G. O. No. 421, Educational, dated 30th May, 1908.

The Government are pleased to accept the recommendation of the Director of Public Instruction that all the backward classes or castes specified in article 15 of the Grant-in-Aid Code may be permitted to pay fees at half the prescribed rates in professional institutions under public management.

THE REGISTRAR REGISTERED 11 NOV 1908

G. O. No. 444, Educational, dated 9th June, 1908.

In modification of clauses (4) and (7) of article 4 of the Public Service Notification, the Government are pleased to empower Collectors of districts to sanction the employment of unpassed candidates in acting and *sub. pro tem* vacancies and in temporary posts, when the vacancy does not exceed twelve months in duration and when the acting allowance, exclusive of any local allowance, is not more than Rs. 20 per mensem, provided that *bona fide* efforts have been made without success to obtain passed candidates.

2. As regards the Handwriting and Dictation test, the Government agree with the Board of Revenue that this test is of little practical use, and accordingly direct that it be abolished. Candidates who have passed the Matriculation examination or the First Examination in Arts will not in future be required to pass this test for entrance to the public service.

3. The necessary alterations will be made in the Public Service Notification when it is next revised.

G. O. No. 814, Judicial, dated 13th June, 1908.

The Government approve the proposals of the District Magistrate, Chingleput, for the permanent extension of the Madras Towns Nuisances Act to the union of Tiruvottiyur and for the formation of a Bench of Magistrates at the place to be presided over by the Stationary Sub-Magistrate, Ponneri, for the trial of offences charged under the Act.

2. The District Magistrate will nominate suitable gentlemen to serve on the Bench and submit their names to Government, with the necessary draft notification.

3. The following notification will be published in the *Fort St. George Gazette*:—

NOTIFICATION.

In exercise of the powers conferred by section 1 (2) of the Madras Towns Nuisances Act, 1889, the Governor in Council is pleased to extend, with effect from the 1st July, 1908, the provisions of sections 3—10 (both inclusive) of the said Act to the local areas comprised in the union of Tiruvottiyur, Saidapet taluq, Chingleput district.

G. O. No. 825, Judicial, dated 15th June, 1908.

His Excellency the Governor in Council, under sanction accorded by the Government of India, is pleased to delegate to the Inspector-General of Police the power to sanction the renting of houses as quarters for the Inspectors and Sub-Inspectors of the Madras Criminal Investigation Department, subject to the following limits:—

	Limit of rent *per mensem.* Rs.
Inspectors	30
Sub-Inspectors (Indian)	12

G. O. No. 645, Judicial, dated 4th, May 1908.

All talaiyaries whose pay is debited to 20. POLICE should be designated "Police talaiyaries."

2. The Government approve of the proposal of the Inspector-General of Police to raise the pay of the thirty-eight police talaiyaries in the Guntur district from Rs. 3 to Rs. 5 each per mensem.

3. The proposition statement is sanctioned and this sanction has been registered as No. 20 of 1908-1909.

G. O. No. 673, Judicial, dated 8th May, 1908.

The Government direct that the rates of recovery on account of police constables supplied to private parties should in future be Rs. 9-8-0 in the mofussil and Rs. 10-8-0 in the Madras City.

G. O. No. 216, Financial, dated 18th May, 1908.

* * * *

2. The pay of type-writing clerks in Government offices who have passed the Advanced examination in Type-writing will be fixed at Rs. 35—1—50.

G. O. No. 388, Educational, dated 19th May, 1908.

The Government are pleased to empower the Director of Survey, the Director of Land Records and the Director of Agriculture to sanction the employment of unpassed candidates in acting and *sub. pro tem* vacancies and in temporary posts, when the vacancy does not exceed twelve months in duration and when the acting allowance, exclusive of any local allowance, is not more than Rs. 25 per mensem, provided that *bona fide* efforts have been made without success to obtain passed candidates.

2. The three officers above named will also be empowered to sanction the exemption from special tests of the subordinates in their respective departments until the results of the next examination are known, provided that the total period of such exemption shall not exceed a year.

3. The necessary alterations will be made in the Public Service Notification when it is next revised.

G. O. No. 226, Educational, dated 24th March, 1908.

ABSTRACT.—Stating that candidates for appointment to posts the salary of which is less than Rs. 20 will not in future be required to have passed any of the examinations mentioned in article 1 of the Public Service Notification; and requesting the Commissioner for Government Examinations to submit a draft notification rendered necessary by this alteration.

G. O.—No. 405, Educational, dated 26th May, 1908.

The following notification will be published in the *Fort St. George Gazette*:—

NOTIFICATION.

In articles 1, 2 and 4 of the Public Service Notification published at pages 481—488 of Part I-B. of the *Fort St. George Gazette*, dated the 10th September 1907, for the word and figures "Rs. 15" wherever they occur shall be substituted the word and figures "Rs. 20."

A SWADESI MART.

We learn that a Swadesi Mart has been started at Door No. 1/15, Ramasawmy Street, Muthialpet, Madras, E., at the request of several friends of the locality, where Piece-goods, Punjab Cutlery, Stationery, Hosiery, Mysore Scents, Scented Hair-Oils, Perfumery, Rosewater etc., Fruit Syrups, Soaps, Best Ghee and Superior Asafœtida can be had at a cheap rate, and we wish the enterprise every success.

THE HON'BLE JUSTICE C. SANKARA NAYAR, B.A., B.L.,
High Court, Madras.
ஹானரபில் ஜஸ்டிஸ் சி. சங்கர நாயர், பி.ஏ., பி.எல்.,
ஜட்ஜ் ஹை கோர்ட், மதராஸ்.

ERRATA

பக்கம்	கலம்	பாரா	வரி	என்றிருப்பதை	என்று திருத்தவும்
245	1	1	1	15-8-08 எதிராஜ என்பதற்கு முன்வாசிக்கவும்	
252	1	2	42	உபத்திரம்	உபத்திரவம்
252	2	6	கடசிவரி	ர்மானித்தார்	தீர்மானித்தார்
254	2	2	51	துதிதியை	ஸ்திதியை
254	2	2	53	ஸ்ராதீனம்	பராதீனம்

NOTICE

கவனிப்பு

தாங்கள் இந்தியா சட்ட கெஜட்டுக்காக செலுத்தியிருந்த சந்தாத்தொகை சென்ற ஜூலைமீ 31வ யுடன் பூர்த்தியாய்விட்டமையால் மறுவருஷமாகிய இவ்வாண்டிற்காக செலுத்த வேண்டிய சந்தாவை நாளது அக்டோபர்மீ 31வக்குள் இதில் உள்ளடக்கம் செய்திருக்கும் ஆர்டர் பாரத்தில் கையொப்பஞ் செய்து அரைஅணா ஸ்டாம்பு ஒட்டி அனுப்பினால் மாத்திரந் தான் தங்கள் பெயரை ரிஜிஸ்தர் செய்துக்கொண்டு தங்களவருக்கு வி. பி. மூலமாய் இவ்வருஷத்திய செப்டெம்பர் மாதத்தின் சஞ்சிகையையும் ஒருவருஷத்திற்கு உறுதிமொழி சீட்டையும் இனமாய் விலை யுயர்ந்த நேர்த்தியான அலாரம் டைம்பீசையும் சேர்த்து அனுப்பப்படும்.

இதுவுமன்றி இவ்வருஷம் ஜனவரிமீ முதல் இதுவரையில் வெளியாய்வந்த முந்திய இந்தியா சட்டகெஜட்டு சஞ்சிகைகள் வேண்டுமென்று கோரி ஆர்டர் அனுப்புகிறவர்களுக்கு முந்திய பிரிதிகளையும் ரூபாய் ஐந்து விலையுள்ள நேர்த்தியான சின்ன கைகெடியாரம் ஒன்றும் வி. பி. மூலமாய் அனுப்பிவருவது மல்லாமல் பின்னிட்டு டிசம்பர்மீ வரையில் வெளியாகும் சஞ்சிகைகளையும் யாதொரு கட்டணமுமின்றி அனுப்பிவரப்படும். இப்படிப்பட்ட முந்திய சஞ்சிகையின் கையிருப்பு கொஞ்சமாயிருப்பதால் இத்தருணத்தை வீண்போக்காமல் உடனே ஆர்டர்கள் அனுப்பவேண்டியது.

14 NOV 1908

இந்திய சட்ட கெஜட்

சென்னை யன். இராதாகிருஷ்ண கம்பெனியாரால் வெளியிடப்படும்
உயர்தர மாதாந்தர சஞ்சிகை.

ால்யம் 3.] சென்னப்பட்டணம், 1908ஹு ஆகஸ்டுமீ [பாகம் 8.

அடக்கம்

பக்கம்

கனம்பொருந்திய மிஸ்டர் ஜஸ்டிஸ் சி. சங்கரன்நாயர் அவர்கள், பி.ஏ., பி.எல்., திருவுருவப்படம்,
மதராஸ் ஹைகோர்ட் ஜட்ஜ்.

1. ஷை ஜட்ஜ் அவர்களுடைய சரித்திரம் 227
2. பூஸ்திதிகளுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம்ஹுத்து 1-வது ஆக்ட் அட்டவணை 231
3. ஹைகோர்ட் செஷன்ஸ் ஆரியாவின் விசாரணை 245
4. சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள் 248
5. இந்து லா 5-ம் அத்தியாயம்—மைனரும், கார்டியனும் 253
6. பர்மா, இந்தியன் லா ரிப்போர்ட் கேசுகள் 255
7. கவர்ன்மென்டு உத்தரவுகளும், போர்ட் ப்ரோஸீடிங்ஸ-ம் 257
8. இந்தியன் லா ரிப்போர்ட்டு கேசுகள் 259
9. பொது வர்த்தமானங்கள் 261

NOTICE

Contributions other than original are neither invited nor required.

All literary contributions and books for Review should be addressed to Mr. V. NATHAMUNI MUDALIAR, late Tamil Bench Clerk, High Court, Appellate Side, Madras, Editorial Staff, *Indian Law Gazette*, Madras.

OURSELVES

நம் பத்திரிகை.

நமது இந்திய சட்டகெஜட்டுக்கு சந்தாதாரர்களாகிய நேயர்களுக்கு அறிவிப்பது யாதெனில்:—

பிரதமத்தில், இப்படிப்பட்ட சட்டகெஜட்டை பிரசுரித்து நம்முடைய நண்பர்களுக்கு சட்டஞானத்தைபோதித்து அப்போதைக் கப்போது அவ்வவ்விடத்திய நியாயஸ்தலங்களில் நம்மையாளும் துரைத்தனத்தாரால் செய்யப்பட்டுள்ள சட்டதிட்டத்தை சரியாய் பரிசீலனைசெய்து ஏற்படும் தீர்மானங்களில் மிக்க முக்கியமானவைகளை ஜனங்களுக்கு அறிவித்துவரவேண்டுமென்கிற கருத்துடன் தற்காலம் சட்டஞானமில்லாத பிரஜைகளுக்கு உண்டாகும் கஷ்டதுக்கங்களும் இன்னும் அநேக இடையூறுகளும் நீங்கி ஜனங்கள் சுகமடையும்பொருட்டும் இவ்விதமான முயற்சிசெய்து இங்கிலீஷ்பாஷையில் தவிர இவ்விந்தியாதேசத்தில் வழங்கிவரும் மற்ற எந்தபாஷைகளிலும் வெளியாகாத சட்டஞானத்தை அறிவிக்காமலிருப்பதைக் கண்டு இந்த சட்டகெஜட்டு செந்தமிழ் பாஷையில் எழுதி வெளியாய்வருகின்றது என்கிற விஷயம் யாவரும் அறிந்தவிஷயமே. இதில் சட்டஞானத்தை விசேஷித்து போதிப்பதுமில்லாமல் பிரதி சஞ்சிகையிலும் சட்டத்தை நன்றாய் கற்றுணர்ந்த சீமான்களின் திருவுருவப்படமும், அவர்களுடைய சரித்திரத்தையும் பிரசுரித்து வருவதுடன் இந்த சஞ்சிகையில் 88, 89-வது பக்கங்களில் அச்சிட்டிருக்கும் படங்களைப் (Illustrations) போலவே இனிமேல் பிரதிமாதத்தின் ஒவ்வொரு சஞ்சிகையிலும் முக்கியமான போலீஸ் முதலிய வர்த்தமானங்களுக்குத் தகுந்த படங்களுடன் (Illustrations) பிரசுரித்துவருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கின்றோம். இந்த சட்டகெஜட்டினால் ஜனங்களுக்கு உண்டாகும் நன்மையை அனுசரித்து துரைத்தனத்தாரால் ஏற்படும்சட்டதிட்டங்களையும் கவர்ன்மென்ட் உத்தரவுகளையும் யாதொரு கட்டணமின்றி கிரயத்தை பெறாமலேயே நம்முடைய கெஜட் ஆபீசுக்கு அனுப்பிவரவேண்டுமென்று கவர்ன்மென்டார் உத்தரவுசெய்திருக்கிறார்கள். இன்னும் அநேக கற்றுணர்ந்த சீமான்களாகிய ஹைகோர்ட் ஜட்ஜ் மணி ஐயர் முதலிய அநேக கனவான்களும் மதராஸ்மெயில் முதலிய இங்கிலீஷ் வர்த்தமான பத்திரிகைகளிலும் விசேஷித்த அன்பு பாராட்டி இதன் அபிவிர்த்தியைக் கோரி புகழ்ந்து சொல்லி இருக்கிறார்கள் என்னும் விஷயம் முன்னமேயெல்லோரும் அறிந்தவிஷயந்தான். இப்பொழுது, சென்னை ஸிடி ஸிவில் கோர்ட்டு ஜட்ஜ், பி, ஏ., பி. எல்., ம-ா-ா-ஸ்ரீ, ஸி. வி. குமாரசாமிசாஸ்திரியார் அவர்களும் இந்த சட்டகெஜட்டில் மிக்க திடமாய் ஜனங்களுக்கு பிரயோசனகரமுள்ள சட்டசம்பந்தமான வர்த்தமானங்கள் எழுதப்பட்டு வருகின்றதென்றும், ஜனங்கள் இந்தகெஜட்டில் பிரசுரித்து வருவதை வாசித்து யாதொரு பிழையின்றி விசேஷித்த சட்ட ஞானத்தை அறிவதற்கு இது சிரேஷ்டமான கெஜட் என்றும் புகழ்ந்து கூறியிருக்கிறார்.

இதுவுமல்லாமல், புதுக்கோட்டை சமஸ்தானத்தின் திவான் பி. ஏ., பி.எல்., ம-ா-ா-ஸ்ரீ, வெங்கடராமதாஸ் நாயுடுகாரும் அவர் எழுதிய 1906-ம் வருஷத்திய 2270-வது நெம்பர் லெட்டரில் "இது மிக்க உசிதமான தமிழ்சட்டசஞ்சிகை. புதுக்கோட்டைசமஸ்தானத்திலுள்ள சீப் கோர்ட்டில் ஆங்கிலேயபாஷை தெரியாதப்ளீடர்கள் இந்தசட்டகெஜட்டுக்கு சந்தாதாரர்களாகச் சேர்ந்து இதை வாங்கி வாசித்து வரவேண்டுமென்று அறிவித்திருக்கிறார்.''

நமது கெஜட்டை வெளி அச்சாபீசுகளில் அச்சிட்டுவருவதினால் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களையும், தவக்கங்களையும் அனுசரித்து நமது கெஜட்டுக்காகவே பிரத்தியோகமாய் ஒரு அச்சாபீசு வைத்துக்கொண்டால் இப்பொழுது நேரிட்டுவரும் தவக்கங்கள் நீங்கி பிரதிமாதமும் சரியாய் கெஜட்டை வெளிப்படுத்திவரலாமென்கிற சிரத்தையுடன் அச்சாபீஸ் ஏற்பாடுகள் செய்துவருகின்றோம். ஆகையால் இனிமேல் தவக்கமின்றி அந்த அந்த மாதத்திய கெஜட்டு கிரமமாய் பிரசுரித்துவரப்படுமென்று திடமாய்க் கூறுகிறோம். இந்திய சட்டகெஜட்டின் விஷயமாய் நம்முடைய நேயர்கள் சகாயம் செய்யவேண்டுமென்கிற விசுவாசத்துடன் எவ்வளவு சந்தாதாரர்களைச் சேர்ப்பித்து அபிவிர்த்தி செய்கிறார்களோ அவ்வளவு தீவிரமாய் மாதம் இருமுறைகூட தமிழ்பாஷையில் மாத்திரமல்லாமல் இன்னும் இதரபாஷைகளிலும் வெளியாகிவரும். நாம் முன் அச்சாபீஸ் சம்பந்தமாய் அறிவித்திருந்தபடி நம்முடைய சந்தாதாரர்களில் சொற்ப நபர்கள் தவிர விசேஷமாய் அநேகர் மிக்க அன்புபாராட்டி விசுவாசத்துடன் இதுவரையிலும் புதுவருஷத்திய சந்தாவிற்காக வி. பி. மூலமாய் ஆர்டர் அனுப்புவதை விட்டு பிரதமத்திலேயே மணி ஆர்டர்கள் செய்ததற்காக அவர்களுக்கு மிக்க வந்தனம் அளிக்கின்றோம். இதுவுமல்லாமல் அப்படி ஆர்டர் அனுப்பாமலிருக்கும் இதர சந்தாதாரர்களும் உடனே ஆர்டர் அனுப்பி இன்னும் விசேஷமாய் சந்தாதாரர்களைச் சேர்ப்பித்து முதலிலே மணிஆர்டர் மூலமாய் அனுப்பாவிடினும் வி. பி. மூலமாயாவது தீவரமாய் ஆர்டர் அனுப்பி ஆதரித்து வருவார்களென்று கோருகிறோம்.

Public Department

ORDER:—R. No 633,
Dated 5-11-06.

"The Superintendent, Government Press, will be directed to supply to the Editor of the *Indian Law Gazette*, Georgetown, Copies of all proceedings of Government laid on the Editor's Table."

DEVONSHIRE HOUSE, 8-9-06.

The Hon. Justice Sir S. Subramania Iyer, B.L., K.C.I.E., Dewan Bahadur, writes:—

" . . . . . This Journal will prove useful to those who are unacquainted with English in the Tamil Districts . . . . To show that I am not insensible of the efforts you are making to convey legal information to those who cannot obtain it through English publications I enclose herewith a cheque which I trust you will accept . . . . "

M.R.Ry. C. V. Kumarasawmy Sastiar Avergal, B. A., B. L., Judge, C. C. Court, writes:—

" . . . . . I have gone through some of the parts of the *Indian Law Gazette* and am of opinion that the articles are well written and the issues contain *accurate and useful information*. I am sure that the public will find the Law Gazette *an excellent means of getting accurate information on legal topics*. Trusting that your venture will meet with success it deserves.

M. R. Ry Venkataram Doss Naidu Garu, B. A., B.L., Dewan of Pudukotta writes (Letter, No. 2270 of 1906):—

" Your Magazine . . . . those pleaders of the Chief Court who do not know English have been advised to subscribe for the same."

OFFICE OF THE ... 14 NOV 1908 ... MADRAS

THE INDIAN LAW GAZETTE.

இந்திய சட்ட கெஜட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 3.] சென்னப்பட்டணம், 1908௵ ஆகஸ்டு மாதம். [பாகம். 8

NOTICE.

Contributions other than original are neither invited nor required.

All literary contributions and books for Review should be addressed to Mr. V. NATHAMUNI MUDALIAR, late Tamil Bench Clerk, High Court, Appellate Side, Madras, Editorial Staff, *Indian Law Gazette*, Madras.

நோட்டீசு.

(1) சீக்கிரத்தில் இண்டியன் லா கெஜட்டை மாதத்துக்கு இருமுறையாக பிரசுரஞ் செய்வதாக உத்தேசித்திருக்கிறோம். சந்தாதார் தயவுசெய்து இந்த விஷயத்தில் தங்களுடைய அபிப்பிராயங்களை எமக்குத் தெரியப்படுத்துவார்களென கோருகிறோம்.

(2) இருமுறையாக்கினபோதிலும் டிசம்பர்மீ வரைக்கும் இருக்கும் எம் சந்தாதாரருக்கு சந்தாவை உயரப்படுத்தமாட்டோம்.

(3) மேலைய இரண்டாவது பாராவில் கண்டிருக்கிற காரணத்தினால், சந்தாதார் ஜாஸ்தியானால், முதல் பாராவில் கூறிய எமது எண்ணம் எளிதில் முடியும். ஆகையால் இப்பொழுதிருக்குஞ் சந்தாதாரரை இந்த பேபரை பலபேருக்குந் தெரிவிக்கும்படி முயற்சிசெய்ய கேட்டுக்கொள்ளுகிறோம்.

(4) இனி மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் என்று தலையிலிடப்பட்டு, எல்லா ஜில்லாக்களினின்றும் ஹைகோர்ட்டுக்கு வருகிற ஸெகண்டு அப்பீல் முதலானவைகளும் ரிபோர்ட்டு செய்யப்படும். இது சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டில் அப்பீலிருக்கிறவர்களுக்கு மிகவும் உபயோகமாகவிருக்கும்.

(5) பட்டணத்தில் தங்கள் அப்பீல்கள் முதலியவற்றைப்பற்றி தெரியவேண்டுமானால், எமக்கு எழுதித் தெரிந்துக்கொள்ளலாம்.

(6) யாராவது எமக்கு தந்தியடிக்க வேணுமானால் "Rados, Madras" என்ற மேல்விலாஸத்தோடு தந்தியனுப்புவித்தால், எம்மை வந்து சேரும்.

கனம்பொருந்திய மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர் அவர்கள் மதராஸ் ஹைகோர்ட் ஜட்ஜு.

கனம்பொருந்திய மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர் அவர்கள் இப்பொழுது 24 ஜில்லாக்களிலுள்ளுமுள்ள கோர்ட்டுகளுக்கெல்லாம் உயர்ந்து உன்னத ஸ்தானத்திலிருக்கும்படியான சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டில் நியாயாதிபதிகள் எழுவருள் ஒருவராய் விளங்குகிறார். இவர் 1857-வது வருஷத்தில் மலையாளம் ஜில்லாவில் மண்கரையென்னும் ஊரில் பிறந்தவர். மிகச்சிலாக்கியம் பெற்றதோர் நெடுநாளாக நீடித்து வரும் குடும்பத்தில் தோன்றியவர். இவருடைய மூதாதையரும் முன்னோரும் முன்காலத்திலே மைசூரை செங்கோல் செலுத்திவந்த டிப்புசுல்தானது அரசாட்சியிலே பல பெரிய உத்தியோகங்களில் இருந்தார்கள். இராமுண்ணி பணிக்கர் என்னும் இவர் தகப்பனார் மலையாளம் ஜில்லாவிலே நெடுங்காலம் தாசில்தாராயிருந்தார்.

சங்கரநாயர் தகப்பனார் தாசில்தார் வேலையை செய்யுமிடத்து அடிக்கடி இடம் விட்டு இடம்பெயர வேண்டியதாக யிருந்தபடியால், இவரும் அவருடன் போகவேண்டியதாக யிருந்தது. ஆகையால் இவர்

முதல் முதல் பயிர்ச்சி செய்த பாடசாலையாவது இடமாவது இதொன்றுதான் என்று சொல்ல முடியாது. இப்படி கொஞ்ச காலங்கழித்து, பின்னர் பத்துரூபாய் பரீக்ஷையும், இருபது ரூபாய் பரீக்ஷையும், கள்ளிக்கோட்டையில் அப்பொழுதிருந்த புரோவின்ஷல் பாடசாலையினின்று முறையே தேறினார். இதற்கு பிறகு பி. ஏ. பட்ட பரீக்ஷைக்கு அப்பொழுது அங்கே வேறொரு பாடசாலையும் இல்லாதபடியால், சென்னப்பட்டணத்திற்கு வந்து ராஜதானிக் கலாசாலையில் 1875-வது வருஷத்தில் சேர்ந்தார். உடனே இவருடைய ஊக்கத்தினாலும் முயர்ச்சியுடைமையாலும் அக்கலாசாலைத் தலைவரான தாம்ஸன் துரையவர்களுடைய பிரிய சிஷ்யனானார். இத்தருவாயில் அவர் படித்தது அபாரம். வியாஸங்களெழுதியன அநேகம் இவற்றுள், பௌத்த மதத்தின்பேரில் ஒரு வியாசம். அதில் பொதிந்த நுண்ணறிவும், கல்வியுணர்ச்சியும் விசிதமாக துலங்கினமையால், அவ்வருஷம் எல்பின்ஸ்டன் பிரைஸ் என்னும் சன்மானத்தைப் பெற்றார். பி. ஏ. பட்டபரீக்ஷையில் இவ்வளவு பிருதுடன் தேர்ச்சிபெற்று, பி. எல். என்னும் நீதிசாஸ்திரப் பரீக்ஷைக்குப் படிக்கத் தொடங்கினார். முடிவுஞ் சொல்லவேண்டுமோ. பரிக்ஷையில் தேறினவர்கள் பெயர்களை பார்த்தால், அதில் சங்கரநாயர் முதலாகத் தேறினார். உடனே லாயர் தொழிலை செவ்வனே கற்றறிய, பாரிஸ்டராயிருந்து பிறகு அட்வொகேட் ஜெனரலும் ஜட்ஜுயுமான ஷெப்பர்டு துரையவர்களுடன் அமர்ந்து, சிலகாலஞ் சென்றபின் 1880-வது வருஷத்தில் வக்கீலாக ஹைகோர்ட்டைச் சேர்ந்து சென்னபட்டணத்திலேயே பயிலத்தொடங்கினார். சீக்கிரத்தில் இவரை டிஸ்டிரிக்டு முனிசிபாக வெளியில் அனுப்பினார்கள், இரண்டு மாஸம் வேலைசெய்து திரும்பிவந்த பிறகு,மறுபடியும் காயமாய் அவ்வேலையைக் கொடுக்க மறுத்துவிட்டார்.

இது முதலாக இவர் சிரப்புற்றோங்கிய சென்னைமாநகரிலேயே லாயர் வேலைசெய்து வந்தார். வேலைக்குக்கூட இவர் காத்துக்கொண்டிருக்க வேண்டியதாயிருக்கவில்லை. ஏனெனில், வேலையானது மேலும் மேலும் தானாகவே இவரை வந்து அடையத் தொடங்கி இவருக்கே கொஞ்சங்கூட சாவகாசமில்லாமலிருக்கும்படி செய்துவிட்டது. மேலும் இவர் பட்டணத்திலிருந்தது இரண்டொரு காரணங்களுக்கு ஒத்தாசையாகவேயிருந்தது. முதலாவதென்னவென்றால், மலையாள தேசாசாரத்தின் நூதனமே. அப்பொழுது சென்னையிலிருந்தவர் ஐரோப்பிய பாரிஸ்டர்களுங் கீழ்நாட்டு வக்கீல்களுமே. இவர்கள் மருமக்கட்டாயம் அலியசந்தான முதலிய நியாயங்களைஏட்டுப் பிரதிகளில் கண்டார்களேயன்றி, அவரவர் வீட்டில் இப்படி இருக்கிறது, இப்படி இவர்கள் ஒழுகுகிறார்கள் என்பனவற்றை அறியார்களாகையால், இவை பொதிந்த வியாச்சியங்களை நடத்துவதற்கு அதிக சிறத்தையும் விடாமுயற்சியும் வேண்டியதாயிருந்தது. அப்படியல்ல நாயரவர்கள். அவ்வூரிலுதித்தவர். அச்சாதியிலிருந்தவர். அவ்வாசாரங் கொண்டவர். காணம், மருமக்கட்டாயம் முதலிய நியாயங்களில் சுயமே தேர்ந்தவர். ஆகையால் இவையடங்கிய கேசுகளை செவ்வனே உணர்ந்து தெளிவுற வாதித்து தான் போகும் வியாச்சியங்களில் ஜயமுறும் சக்தியுடையவர் என்றால் இவருக்கு கேசுகள் மேலும் மேலும் பெருகின என்பதற்கு வேறொரு காரணமும் வேண்டுமோ.

ஆனால் மற்றுமொரு காரணம் இவருக்கு சகாயமாக விருந்தது. சாதாரணமாக கக்ஷிக்காரர்கள் வந்தால் அவர்களுடன் லாயர்கள் பேசுவது அக்கக்ஷிக்காரர்கள் பாஷையிலல்லவா. அப்பொழுதுதான் லாயருக்குண்டாகும் பல சந்தேகங்களும் நிவர்த்தியாகும். அவ்வளவு சக்தியுடன், பக்கத்திலிருப்பவன் மொழிபெயர்த்தாலும் அவ்வளவு விசிதமாக விளங்காதல்லவா. அக்காலத்தில் இங்கிருந்த கீழ்நாட்டு லாயர்கள் என்செய்வார்கள்? கட்சிக்காரன் சொல்லுவதை மொழிபெயர்த்துக்கொள்ளத்தான் வேண்டியதாகயிருந்தது. நாயரவர்களிடத்து இக்கஷ்டங்களுக்கெல்லாம் இடமில்லாமலாகிவிடுகிறதல்லவா? ஆகையால் என்றைக்கு மலையாளவாசிகள் சென்னையில் தங்களைப்போலொத்தவோர் மலையாளவாசி பட்டணத்திலிருக்கிறாரென்று கேட்டனரோ அன்றையிலிருந்து அவரையே தேடத் தொடங்கினார்கள்.

கேசுகளை நடாத்துவதில் நாயரவர்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம் என்று பார்த்தவர்கள் சொல்லுவார்கள். இதற்கு கொஞ்சங்கூட சந்தேகமேயில்லை. அவசரமில்லாமல் ஒவ்வொரு பாயிண்டாக நியாயாதிபதிக்குத் தெரிவிப்பார். அது அவர் மனதில் நன்றாய்ப் புதைந்தவுடன்தான் மறுபாயிண்டுக்குப் போவார். சமாசாரங்களை கும்பலாகச்செய்யாமல் தடுமாற்றமில்லாமல் தெளிவாக எடுத்துரைப்பார். வாதிப்பதோ ஒன்றையொன்று தொடுத்ததாகவேயிருக்கும். ஆங்கிலேய லாவிலும் நிபுணர்; இதை இந்தியன் லாவுக்கு கொணர்ந்து கோர்த்துச் சொல்லும் இவர் திறமையானது எதிரிருந்து பார்த்துதான் அதிசயிக்கவேண்டும்.

1884-வது வருஷத்திலே இவர் மலையாள நிலக்குடிவார விசாரணை சங்கத்தினரொருவராக நியமிக்கப்பட்டார். அப்பொழுது இவருடன் இருந்தவர்கள் ராஜா ஸர் டி. மாதவராவ் முதலிய கனவான்களே. இதில் இவர் எழுதிய ரிபோர்ட்டானது மிகவும் சிறப்புற்றதாகையினாலே ஸர் சார்லஸ் டர்னர் துரையவர்கள் அதை மிகவும் சிலாக்கியமாக எடுத்துக் காட்டியிருக்கிறார். இதுமாதிரியாக பொது நன்மைக்காக பாடுபட்டதினால் கவர்மெண்டார் கவர்மெண்ட் லா சபையில் ஒரு ஆனரபில் மெம்பராக 1889தில் நியமித்தார்கள். இதற்கு இரண்டு வருஷங்களுக்குபின் கவர்மெண்ட் ப்ளீடர் வேலை காலியானவுடன் இவர் அதற்கு பதிலியாகயிருந்தார். அப்பொழுதுதான் தென்காசி கலகக்காரர் கேசில் கவர்மெண்ட் தருபில் மிகவும் சாமர்த்தியத்துடன் கேசை நடத்தினார். இதற்குபிறகும் அநேகதடவைகள் கவர்மெண்ட் ப்ளீடர் வேலையை செலுத்திவந்தார்.

சென்னை இராஜதானியின் கவர்னராய் வீற்றிருந்த மகா கனம்பொருந்திய ஆம்டில் பிரபு 1905வது வருஷத்தில் ஜஸ்டிஸ் பென்ஸன் இராஜாவில் போனபொழுது நாயரவர்களை பதிலிருக்கும்படி கருணைகூர்ந்தார். அதே வருஷத்தில் மருபடியும் ஜஸ்டிஸ் டேவிஸுக்கும் பதிலாக நியமிக்கப்பட்டார். இந்த வேலை முடிந்தவுடன் இதுவரைக்கும் எச் சுதேசியும் காயமாய் பார்த்திராத அட்வொகேட் ஜெனரல் என்னும் லாயர்களில் உன்னத ஸ்தானத்தைப் பெற்றார். ஜஸ்டிஸ் மணி ஐயர் வேலையை ராஜீனமா கொடுத்தவுடன் நாயரவர்களை 4000 ரூபாய் சம்பளத்தின்மேல் ஹைகோர்ட்டு ஜட்ஜாய் காயம் செய்தார்கள்.

நாயர் அவர்கள் லாவில் மாத்திரம் அல்ல பெயர்பெற்றது. மற்றும் அநேக வழிகளில் தன் முயற்சியை செலுத்தினார். இராஜாங்கமுறை விஷயங்களில் நிபுணர். இவரே அமராவதியில் நடந்த இந்தியன் நாஷனல் மகா சபைக்கு அக்கிராசனாதிபதி விடத்தை அலங்கரித்தார். அவர் அப்பொழுது செய்த பிரசங்கம் மிகவும் சாதுரியமுடைத்தாயும், சாமர்த்தியமுடைத்தாயும் இருந்தது. ஆங்கிலேயரும், இந்தியரும் இருவரும் ஒன்றுசேர இதை புகழ்ந்தார். சீமையில் இருக்கும்படியான நியூஸ்பேபர்களில் முதன்மையதான லண்டன் டைம்ஸ் (London Times) மிகவும் புகழ்ந்து பேசியது.

நாயர் அவர்கள் உற்சாகமுள்ள ஆசார சீர்திருத்தக்காரர்களிலொருவர். ஏட்டுப் பிரதியில் இருப்பதும் சாதாரண லோக வியவகாரங்களில் நடப்பதும் செவ்வனே தேர்ந்தறிந்துள்ளவர். நம்முடைய துராசாரங்களை யெல்லாம் மறந்துபோய் நன்மை பொருந்தியவைகளெல்லாம் கைகூட வேண்டுமென்பது இவரது கொள்கை. மற்றைய இந்து சாதிக்காரர்கள்போலவே நாயன்மார்களும் சீமைக்குப் போகக்கூடாதென்கிற ஒரு வீண்பக்தியை யுடையவரா யிருந்தனர். அதை மாற்ற இவர் பிரயாசப்பட்டதின் அளவு வரையறுக்க முடியாது. இவர் தாமே பலமுறை வெளியூருக்கு போனதுமல்லாமல் மற்றவரையும் போகும்படி செய்தார். சிலகாலஞ் சென்றபிறகே நாயன்மார் சீமைக்கு அடிக்கடி போக ஆரம்பித்தார்கள். இப்பொழுது அவர்களுக்கு அந்த வீண்பக்தியே கிடையாது. மேலும் மலையாள விவாகக்கிரம சட்டம் (Malabar Marriage Law) என்பதை சட்ட நிரூபண சபையார் அங்கீகரிக்கும்படி பாடுபட்டவர் இவரே.

கல்வி கேள்விகளில் மிகவும் அக்கரையுள்ளவர். பஞ்சமர் முதலிய தண்ணியவருணத்தோர் ஸ்திதியைக் கண்டு அநுதாபங்கொண்டவர். மண்கரை என்னும் நன்னகரிலே இப்படிப்பட்டவர்களுக்கு சொந்த செலவு செய்து ஒரு பாடசாலையை நடாத்திவருகிறார். மதராஸ் லா ஜர்னல் என்னும் லா பத்திரிகையும், மதராஸ் ரிவ்யு என்னும் இங்கிலீஷ் பத்திரிகையும் தொடங்கியவர் இவரே.

இம்மாதிரியாக இம்மகான் அநேக அரிய பெரிய காரியங்களை செய்தார். எவரிடத்தும் பட்சமுள்ளவர். மின் கோபம் என்பது கிடையாது. பரோபகார எண்ணமுடையவர். நானாவித வழிகளிலும் புகழ்க்குரியவர். ஆகையால் மகா கனம்பொருந்திய ஆம்டில் மகா பிரபுவானவர் சி. ஐ. இ. (C. I. E) என்னும் சம்மானத்தை இவர்க்கு கொடுக்கச் செய்ததுமல்லாமல் அதை நேராக அளிக்கும்பொழுது இவருடைய கியாதியை மேலாக நயந்துக்கொண்டார். இத்தகையவர் நீடூழி வாழ்ந்து ஓங்கிய புகழ்பெருவாராக.

அவதூறென்பதியாது.

அவதூறென்றால் ஒருவனைப்பற்றி நிந்தனையாகப் பேசுவது. இக்குற்றம் எழுத்து ரூபமாயும், வாக்கினாலும்,சித்திரவேலைமுதலியவைகளினாலும் செய்யப்படும். இந்தியன் பினல்கோடானது அவதூறைப்பற்றி பின்வருமாறு சொல்லுகிறது. யாவனொருவனுடையபெயரை கெடுக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டாவது, கெடுதியுண்டாகுமென்று தெரிந்தாவது, அப்படிப்பட்ட கெடுதி விளையும் என்றதற்கு ஹேது இருந்தாவது, அவனைக்குறித்து வாயினும் பேசியாகிலும், பிறர்படிக்கும்படி எழுதியாகிலும், பலரறிய பாவனைக்காட்டியாகிலும், எவனாவது யாதொரு நிந்தனை செய்தாலும், பலரறியத் தூற்றினாலும், அப்படிப்பட்டவன், அடியிற்குறிக்கப்பட்ட 10 விஷயங்களில் தவிர, மேற்படியானை அவதூறு செய்தானென்று சொல்லப்படுவான். இறந்துபோனவனை நிந்தித்தல் அதுவும் சிலகாலங்களில் அவதூறாகலாம். இந்த அவதூறு கூட்டத்தாரையாவது சபையாரையாவது சமூகத்தாரையாவது குறிக்கலாம். மறைபொருளாக நிந்திப்பதுகூட மேலேசொல்லிய எண்ணத்துடன்சொல்லப்பட்டிருந்தால் அவதூறாகலாம். உதாரணமாக ம என்பவன் ந-என்பவனுடைய கடிகாரத்தைத் திருடினதுண்டென்று நம்பும்படி செய்யவேண்டுமென்கிற எண்ணத்துடன்,"ம-என்பவன்பரமயோக்கியன். அவன் கடிகாரத்தை ஒருபோதுந் திருடவில்லை" என்றால் இது அவதூறாகும்.

ஆனால் அவதூறில் ஒரு கெடுதி விளையவேண்டுமென்று இருக்கிறது. அது எம்மாதிரி கெடுதியென்றால் நிந்திக்கப்பட்டவனுடைய ஒழுக்கத்தைக் குறித்தாவது விவேகத்தைக்குறித்தாவது மற்றவர்களுடைய எண்ணத்திலே நேராகவாவது ஜாடையாகவாவது தாழ்வுபடுத்துவதாய் இராவிட்டாலும், அவனுடைய ஜாதியைக்குறித்தாவது தொழிலைக்குறித்தாவது அவனை தாழ்வுபடுத்தியிராவிட்டாலுஞ்சரி, அவனுடைய நாணயத்திற்கு குறைவு உண்டுபண்ணுவதாய் இராவிட்டாலுஞ்சரி, அவனுடைய சரீரம் அருவருப்பான ஸ்திதியிலேனும் சாதாரணமாய் அசங்கிதமாய் நினைக்கப்பட்ட ஸ்திதியிலேனும் இருக்கிறதென்று நம்பும்படி செய்வதாயிராவிட்டாலுஞ்சரி, அப்படிப்பட்ட நிந்தனையானது ஒருவனுடைய பெயருக்கு கெடுதி பண்ணுவதாக எண்ணப்படாது.

ஆகையால் இதுவரைக்கும் நமக்குத் தெரிந்ததென்னவென்றால், எழுத்து முகாந்திரத்தினாலாவது, பேச்சியினாலாவது,ஜாடை, குறிப்பு, சித்திரம் முதலியவைகளினாலாவது தப்பு எண்ணத்துடன் செய்வது

அவதூருகும். ஆனல் சிலசமயங்களில் சில நிபந்தனை களுக்குட்பட்டால் அவதூறு இல்லையென்று ஏற்படும். இந்த சந்தர்ப்பங்கள் பத்து விலக்குகள் என்னப்படும். அவையாவன:—

முதல் விலக்கு:—பொதுஜன நன்மைக்காக சொல்லவேண்டியதாகவிருந்தால், அப்படி ஒருவனைப் பற்றி உண்மையாகவிருப்பதை வெளிப்படுத்துவது அவதூருகமாட்டாது. பொதுஜன நன்மை யுண்டா இல்லையா என்பது அந்தந்த கேசுகளின் சந்தர்ப்பங்கள் கொண்டு யோசிக்கவேண்டியதாயிருக்கும்.

இரண்டாவது.—சர்க்கார் உத்தியோகஸ்தருடைய நடத்தையைக்குறித்தாவது அவருடைய குணத்தைக்குறித்தாவது அதிகமாகச் சொல்லாமல் நல்ல எண்ணத்தோடு ஒரு அபிப்பிராயத்தைத் தெரிவிப்பது அவதூருகமாட்டாது.

மூன்ருவது.—ஜனங்களின் பொது சங்கதியைப் பற்றி ஒருவனுடைய குணத்தைக் குறித்தாவது அதிகரித்துச் சொல்லாமல் நல்ல எண்ணத்துடன் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பானுனல் அது அவதூருகமாட்டாது.

நான்காவது.—நீதிவிசாரணை நடத்துகிற கோர்ட்டாருடைய நடவடிக்கையாவது அவைகளின்முடிவையாவது அறிக்கை செய்வதற்காக யதார்த்தமான சங்கதியை வெளிப்படுத்துவது அவதூருகமாட்டாது.

ஐந்தாவது:—வியாஜ்ஜியத்தின் தன்மையைப்பற்றியாவது அதன் சம்பந்தப்பட்ட சாக்ஷி முதலானவருடைய நடத்தையைக் குறித்தாவது அவருடைய குணத்தைக் குறித்தாவது, மிகுதியாக சொல்லாமல் நல்ல எண்ணத்துடன் அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்துவது அவதூருகமாட்டாது.

ஆருவது:—புஸ்தகம், பிரஸங்கம் முதலியவைகள் செய்கிறவன், செய்கிறவன் குணத்தைக் குறித்தாவது அந்த கிரந்தங்களைக் குறித்தாவது அதிகரித்து நல்ல எண்ணத்துடன் அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்துவது அவதூருகமாட்டாது. ஒருவன் புஸ்தகத்தை அச்சிட்டு வெளிப்படுத்தினுல் அது எல்லா ஜனங்களும் பார்த்து அவர்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லும்படி வெளியிடப்பட்டதாகும்.

ஏழாவது:—வேரொருவன்மேல் சட்டப்படியாவது, உடன்படிக்கையினுலாவது அதிகாரத்தை செலுத்துவதில் அப்படிப்பட்ட நடத்தையைப்பற்றி நல்ல எண்ணதுடன் கண்டிப்பது அவதூருகமாட்டாது.

எட்டாவது.— ஒருவன்மேல் குற்றம் சாட்டும் விஷயத்தில் அந்த விஷயமாய் அவன் சட்டப்படி அதிகாரமுள்ளவர் எவர் முன்பாவது நல்ல எண்ணத்தோடு குற்றம் சாட்டுவது அவதூருகமாட்டாது. ஒரு உத்தியோகஸ்தருடைய நடத்தையைக்குறித்து அவருடைய எஜமானிடத்தில் குற்றம் சாற்றுகிறதாவது பிராது செய்கிறதாவது இதிலடங்கும்.

ஒன்பதாவது:—ஒருவன் வேரொருவன் குணத்தை நிந்தித்தால் அது அப்படி நிந்திக்கிறவனுடைய பிரயோஜனத்தையாவது இதரர்களுடைய பிரயோஜனத்துக்காவது பொதுநன்மைக்காவது நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்டால் அவதூருகமாட்டாது. ஒரு கடைக்காரனுனவன் ம-என்பவனுடைய குணத்தைகுறித்து எனக்கு நல்ல அபிப்பிராயமில்லாதபடியினுலே ரொக்கங்கொடுத்தாலொழிய அவனுக்கு சரக்கு விற்கவேண்டாம் என்று தன்னுடைய வர்த்தகத்தை செய்கிறவனுக்குச் சொல்லுகிறுன். அந்தக் கடைக்காரனுனவன் தன்னுடைய சொந்த பிரயோஜனத்தைக் காத்துக்கொள்ளுவதற்காக ம-என்பவனை நல்ல எண்ணத்தோடு அப்படி நிந்தித்திருந்தால் அவன் இந்த விலக்குக்கு உட்பட்டவனுயிருக்கிறுன்.

பத்தாவது :— இப்படிப்பட்டவனுகிய இவனிடத்திலே ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமென்று ஒருவனுக்கு நல்ல எண்ணத்தோடு முன்னெச்சரிக்கை செய்தால், அப்படி யாருக்குச் செய்யப்படுகிறதோ அவருடைய நன்மைக்காவது பொதுஜன நன்மைக்காவது அப்படி செய்கிறபட்சத்தில் அவதூருகமாட்டாது.

(நல்லெண்ணத்தைப்பற்றி இன்னும் வரும்.)

Devonshire House, 8-9-06.

The Hon. Justice Sir. S. Subramania Iyer, B.L., K.C.I.E., Dewan Bahadur, writes:—

"... . This Journal will prove useful to those who are unacquainted with English in the Tamil districts . . . . To show that I am not insensible of the efforts you are making to convey legal information to those who cannot obtain it through English publications I enclose herewith a cheque which I trust you will accept . . . ."

M. R. Ry. C. V. Kumaraswmy Sastriar Avergal, B.A., B.L., Judge, C. C. Court, Madras, writes:—

"... ... I have gone through some of the parts of the *Indian Law Gazette* and am of opinion that the articles are well written and the issues contain *accurate and useful information.* I am sure that the public will find the Law Gazette *an excellant means of getting accurate information on legal topics.* Trusting that your venture will meet with success it deserves.

M. R. Ry. Venkataram Doss Naidu garu, B.A., B.L., Dewan of Pudukotta writes (letter, No. 2270 of 1906).—

"Your Magazine .... those pleaders of the Chief Court who do not know English have been advised to subscribe for the same."

TO ADVERTISERS.

WHEN making your next advertisement list don't forget the INDIAN LAW GAZETTE which is circulated most widely among the masses throughout India, Burma, Ceylon &c.

"The Constant Cooing Lover
Carries off the blushing maid
And the Constant Advertisers
Is the one who gets the trade."

(2) இரண்டாவது அப்பீல் விசாரணையைக்குறித்துக் கட்சிக்காரர்களுக்கு நோடிஸ் கொடுக்கவேண்டும். மேலும், அவர்கள் நேரிலாகவும் அவரவர்களுடைய பிளீடர்களின் (பிரதிவாதிகளின்) மூலமாகவாகிலும் கிரமமாய் அதிகாரங் கொடுக்கப்பெற்ற ஏஜெண்டுகளின் மூலமாகவாகிலும் விசாரணைசெய்யப்பட அவர்களுக்குச் சுதந்தரமுண்டு.

191. 189, 190-வது பிரிவுகளின்படி செய்யப்படும் யாதொரு அப்பீலுக்காக [illegible] காலவரையறையானது [illegible] மேல் அப்பீல்செய்யப்படுகிறதோ அந்த உத்தரவு அல்லது டிக்கிரியின் பிரதியைப் பெற அப்பீல்களுக்கு வதற்குப் பிடிக்குங் காலம் நீங்கலாக, அந்த உத்தரவு அல்லது டிக்கிரியின் தேதிமுதல் தொடங்கி, அடியிற்கண்டபடி இருக்கவேண்டும். அதாவது:—

(எ) டிஸ்டிரிக்ட் கோர்ட்டாரிடத்திலாவது டிஸ்டிரிக்ட் கலெக்டரிடத்திலாவது அப்பீல் செய்துகொள்ள வேண்டியபோது—முப்பதுநாள்;

(பி) [illegible] அப்பீல் செய்துகொள்ளவேண்டியபோது—தொண்ணூறு நாள்.

1882-ம் ஞூ த்த 14-வது ஆக்ட் 192. இந்த ஆக்டின் இதர நிபந்தனைகளுக்கும் அடியிற்கண்ட திருத்தங்களுக்கும் உடன்சேர்க்கையான நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, ஸிவில் ப்ரொஸீஜர் கோடின் நிபந்தனைகள் அவைகளுக்கும், இந்த ஆக்டின்படிக்கான சகல வியாஜ்ஜியங்களுக்கும் அப்பீல்களுக்கும் இதர நடவடிக்கைகளுக்கும் விரோதமில்லாதவரையில், அந்த வியாஜ்ஜிய முதலியவைகளுக்கு பிரயோகிப்படும்.

1882-ம் ஞூ த்த 14-வது ஆக்ட் (எ) ஸிவில் ப்ரொஸீஜர் கோடின் 121 முதல் 127 வரையில் இவை இரண்டும் உட்பட உள்ள பிரிவுகளும், 129, 303, 310 எA, 313-வது பிரிவுகளும், 320 முதல் 326 வரையில் (இவை இரண்டும் உட்பட) உள்ள பிரிவுகளும், 20, 26, 33, 39, 40, 43, 44-ம் அத்தியாயங்களும், அப்படிப்பட்ட யாதொரு வியாஜ்ஜியம் அப்பீல் அல்லது இதர நடவடிக்கைக்குப் பிரயோகப்படமாட்டாது;

1882-ம் ஞூ த்த 14-வது ஆக்ட் [illegible] கோடின் 25-வது பிரிவானது இந்த ஆக்டின்படிக்கான அப்பீல்களை ஒரு டிஸ்டிரிக்ட் ஜட்ஜினுடைய கோர்ட்டிலிருந்து வேறொரு டிஸ்டிரிக்ட் ஜட்ஜினுடைய கோர்ட்டுக்கு டிரான்ஸ்பர் செய்வதற்குமாத்திரம் பிரயோகிப்படும்.

(பி) 68-வது, 71-வது, 74-து பிரிவுகளின்படி செய்யப்படும் விண்ணப்பங்களை எதிர்கட்சிக்காரருக்கு நோட்டிஸ் பிறப்பிக்காமலே டைசல்செய்யலாம்;

1882-ம் ஞூ த்த 14-வது ஆக்ட் (சி) ஷை கோடின் 37-வது பிரிவைச்சேர்ந்த (எ), (பி) குறிப்பிட்ட பகுதிகளிலே, "வாசஞ்செய்யாத கட்சிக்காரர்களுக்காக" என்பதற்குப்பாதியாக "கட்சிக்காரர்கள் வாசஞ்செய்தாலுஞ்சரி வாசஞ்செய்யாவிட்டாலுஞ்சரி அவர்களுக்காக" என்பதை அமைத்துக் கொள்ளவேண்டும்.

1882-ம் ஞூ த்த 14-வது ஆக்ட் (டி) (i) ஷை கோடைச்சேர்ந்த 50-வது பிரிவிற்கண்டிருக்கிற விவரங்களுடன்கூட, எந்த நிலத்தைப்பற்றி வியாஜ்ஜியங் கொண்டுவரப்படுகிறதோ அந்தநிலம் இருக்கிற கிராமத்தின் பெயரையும், அந்த நிலத்துக்குப் பெயர் ஏதாவது இருந்தால் அதையும், அந்த நிலத்தை அடையாளம் கண்டுபிடிப்பதற்குப் போதுமான அதன் விஸ்தீர்ணத்தையும் பிளெய்ண்டில் (பிரியாதில்) கண்டெழுதவேண்டும்;

(ii) மேலும், எந்தவிஸ்தீர்ணத்தில் உரிமை தஸ்தவேஜு தயார்செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த விஸ்தீர்ணத்துக்குள் ளேயிருக்கிற நிலத்தின் விஷயமாய்ச் சேரவேண்டிய குத்தகைத்தொகையை வசூலிப்பதற்காக வியாஜ்ஜியங் கொண்டுவரப்பட்டால், ஷை உரிமை தஸ்தவேஜுப்படி கைப்பற்றுநிலத்தின் குத்தகைத்தொகையைக்குறித்த ஒரு ஸ்டேட்மெண்டையும் பிளெய்ண்டில் கண்டெழுதவேண்டும்.

ஆனுல், கைப்பற்றுநிலத்துக்குச் சம்பந்தப்படுகிற உரிமைதஸ்வேஜின் நகலையாவது அதிலிருந்து ஒரு எக்ஸ்ட்ராக்டையாவது கேட்பது கோர்ட்டாருக்கு எப்போதாவது யுக்தமாகத் தோற்றுகிறபட்சத்திலே, வாதியானவர் அதை ஹாஜர்ப்படுத்தவேண்டும்: அல்லது அவசியமானுல், கோர்ட்டார் கேட்டுக்கொள்வதன்மேல் கலெக்டரானவர் அந்த நகலையோ எக்ஸ்ட்ராக்டையோ சவதரிக்கவேண்டும்; அப்படி சவதரிப்பதன்பொருட்டு, பிரதேசகவர்ன்மெண்டார் இந்த ஆக்டின்படி செய்யப்படும் விதிமூலமாய் நிர்ணயிக்கிற கட்டணத்தைக் கோர்ட்டார் கட்டளையிடுகிறபடி வாதியாவது பிரதிவாதியாவது செலுத்தவேண்டும்.

(iii) குத்தகைத்தொகை பாக்கிக்காக வியாஜ்ஜியங் கொண்டுவரப்பட்டிருக்கிற பட்சத்திலே, வியாஜ்ஜியம் சம்பந்தப்படுகிற காலத்துக்குச் செலுத்தத்தக்கதாயிருக்கிற தவணைத்தொகைகளையும் தொகை ஏதாவது வரப்பெற்றிருந்தால் அதையும், பாக்கியென்று தாவாசெய்யப்பட்டிருக்கிற தொகையும் கண்ட கணக்கு ஜாபிதா ஒன்று பிளெய்ண்டில் (பிரியாதில்) அடங்கியிருக்கவேண்டும்.

(இ) இந்த ஆக்டின்படி கொண்டுவரப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்தில், சட்டப்படிக் கிருந்தாலுஞ்சரி தருமமானதாயிருந்தாலுஞ்சரி எதிர்க்கடன் கொடுக்கவேண்டுமென்று வழக்குப்பேசக்கூடாது.

(எப்) யாதொரு கோர்ட்டில் பைசலாகாமலிருக்கிற ஒரு வியாஜ்ஜியவிஷயமாய் குத்தகைத்தொகை ஜாபிதா அல்லது வசூல் அல்லது அளவுசம்பந்தமான தஸ்தவேஜுகளை நிலத்துக்குடையவர் அந்தக்கோர்டில் ஹாஜர்ப்படுத்தியிருந்தால், ஷை தஸ்தவேஜுகளின் பிரதிகளையோ அல்லது அவைகளிலிருந்து எடுக்கப்பட்ட எக்ஸ்ட்ராக்டுகளையோ-அவைகள் சரியான பிரதிகள் அல்லது எக்ஸ்ட்ராக்டுகளென்று அந்தக் கோர்ட்டைச்சேர்ந்த கிரமமாய் அதிகாரங் கொடுக்கப் பெற்றிருக்கும் ஒரு உத்தியோகஸ்தர் ஸெர்டிபை செய்வதன்மேல், அந்தக்கோர்டிலாவது வேறொரு கோர்டிலாவது கொண்டுவரப்பட்ட வேறே யாதொரு வியாஜ்ஜியத்தில், அசல் தஸ்தவேஜுகளை ஹாஜர்படுத்தும்படி உத்தரவுசெய்வது யுக்தமென்று ஷை பிரதிகள் அல்லது எக்ஸ்ட்ராக்டுகள் எந்தகோர்ட்டில் ஹாஜர்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்தக் கோர்ட்டாருக்குத் தோன்றினலன்றி மற்றப்படி, அசல் தஸ்தவேஜுகளுக்கு ருஜுவாக சாட்சியத்திலேற்றுக்கொள்ளலாம்.

(ஜி) குத்தகைத்தொகை வசூல்செய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியத்தில் டிக்ரி கொடுக்கும்போது, கோர்ட்டார்-டிக்ரி பெற்றிருக்கிறவர் வாய்மொழியாக் கேட்டுக் கொண்டால், அந்த டிக்ரியை உடனே நிறைவேற்றுவதற்கு உத்தரவுகொடுக்கலாம்.

(எச்) ஜப்திக்காவது விற்பனைக்காவது உள்ளாகமாட்டாவென்று ஷை கோடின் 266-வது பிரிவிலே விவரித்திருக்கிறவைகளுடன் "ஒரு விவசாயியால் சேர்த்துவைக்கப்பட்ட எரு" என்பதையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். 1882-ம் ஞு த்த 14-வது ஆக்ட்.

(ஐ) டிக்ரியை நிறைவேற்றும்பொருட்டு, (பூமியிலிருந்து) வெட்டிப் பிரிக்கப்படாத மரம்-விளைந்துகொண்டிருக்கும் பயிர்-பூமியிலுண்டாகும் இதர விளைபொருள்கள் ஆகிய இவைகளை அசையும் பொருள் விஷயத்தில் செய்கிறமாதிரியாகவே ஜப்திசெய்து விற்கலாம்; ஜப்திசெய்யப்பட்ட சொத்தானது விளைந்துகொண்டிருக்கும் பயிராகவோ பூமியிலுண்டாகும் இதர விளைபொருள்களாகவோ இருக்கும்பட்சத்திலே, அப்படிப்பட்ட பயிராவது விளைபொருள்களாவது குத்தகைத்தொகை பாக்கிக்காக ஜப்திசெய்யப்பட்டால் அவைகளைக் காத்துக்கொண்டிருப்பது-அறுவடைசெய்வது-ஓரிடத்தில் சேர்த்துவைப்பது-இவற்றின் விஷயமாய், முறையே பயிரிடுகிறவருக்கும் ஜப்திதாருக்கும் 83-வது பிரிவின்படி என்ன பாத்தியதைகள் ஏற்படுமோ அதே பாத்தியதைகள் தீர்ப்பான கடனுக்கும் டிக்ரி பெற்றவருக்கும் ஏற்படும்.

குத்தகைத் தொகையை அதிகப்படுத்துவதற்காவது குறைப்பதற்காவது சம்பந்தப்பட்ட வியாஜ்ஜியங்களில் ரயத்துகள் ஒன்றுசேர்வது

193. (1) குத்தகைத்தொகையை அதிகப்படுத்துவதற்காகவோ குறைப்பதற்காகவோ தொகுப்பாய் அநேக ரயத்துகளுக்கு விரோதமாகவாவது அவர்களாலாவது வியாஜ்ஜியங் கொண்டுவரப்படலாம்;—

ஆனால், அப்படிப்பட்ட சகல ரயத்துகளும் ஒரே நிலத்துக்குடையவரைச் சேர்ந்த ரயத்துகளாயிருக்கவேண்டியதோடுகூட, எந்தக் கைப்பற்றுநிலங்களின் விஷயத்திலே வியாஜ்ஜியங் கொண்டுவரப்படுகிறதோ அந்த சகல கைப்பற்றுநிலங்களும் ஒரே கிராமத்தில் இருக்கவும்வேண்டும்; மேலும், (குத்தகைத்தொகையை) அதிகப்படுத்துவதற்கான அல்லது குறைப்பதற்கான ஆதாரங்களும் ஒன்றாகவே இருக்கவேண்டும்.

(2) யாதொரு நபர் ஹாஜராகிச் சொல்லவேண்டியதைச் சொல்லிக்கொள்வதற்காக அவருக்குச் சமயம் வாய்த்திருக்கிறதென்று கலெக்டர் தெரிந்து திருப்தியடைந்தாலன்றி மற்றபடி, அந்த நபருடைய உரிமைக்குப் பாதகமுண்டாகும்படியாக மேலே சொன்ன யாதொரு வியாஜ்ஜியத்திலே டிக்ரி பிறப்பிக்கக்கூடாது.

(3) எவ்வளவுவரையிலே ரயத்துகளில் ஒவ்வொருவரும் அந்த டிக்ரியினால் பாதிக்கப்படுகிறாரென்பதை டிக்ரியில் காணவேண்டும்.

குத்தகைத் தொகைபான [illegible]

194. (1) குத்தகைத்தொகை வசூல்செய்வதற்காக இந்த ஆக்டின்படி கொண்டுவரப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்திலாவது நடத்தப்பட்ட யாதொரு நடவடிக்கையிலாவது ஒரு ரயத்து தாம் குத்தகைத்தொகை செலுத்தவேண்டியவரென்று ஒத்துக்கொண்டிருந்தும் அந்த குத்தகைத்தொகை வாதி அல்லது விண்ணப்பதாரருக்கல்லாமல் மூன்றாம் நபருக்குச் சேரவேண்டியதென்றாவது இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகள் நிறைவேறவில்லை [illegible] வழக்குப்பேசினால், கலெக்டரானவர் விசேஷ காரணங்களிருந்தாலன்றி மற்றப்படிக்கும், செலுத்தவேண்டியதாக [illegible] தம்முடைய கோர்ட்டில் அந்த ரயத்து செலுத்தினாலன்றி [illegible] மேலேகண்ட விசேஷகாரணங்கள் எழுதிவைக்கப்படவேண்டும்.

க்கோர்ட்டில் தொகைசெலுத்தினால்தான் பிடிக்கவேண்டுமென்பது

(2) அப்படி தொகை செலுத்தப்பட்டு, குத்தகைத்தொகை வாதி அல்லது விண்ணப்பதாரருக்கல்லாமல் மூன்றாம் நபருக்குச் சேரவேண்டியதென்று வழக்குப்பேசப்பட்டால், கலெக்டரானவர் தொகை செலுத்தினதைப்பற்றி அந்த மூன்றாம்நபருக்கு உடனே நோடிஸ் சேர்பிக்கச்செய்யவேண்டும்.

(3) அந்த மூன்றாம்நபர் அப்படி நோடிஸ் பெற்றுக்கொண்டதுமுதல் மூன்றுமாத காலத்துக்குள்ளாக, வாதிக்காவது விண்ணப்பதாரருக்காவது விரோதமாய் ஸிவில்கோர்ட்டில் வியாஜ்ஜியம்தொடர்ந்து, தொகை செலுத்தாமல் நிறுத்திவைக்கவேண்டுமென்று அந்த வியாஜ்ஜியத்தில் உத்தரவுபெற்றாலன்றி மற்றப்படி, வாதி அல்லது விண்ணப்பதாரர் விண்ணப்பஞ்செய்து கொள்வதன்மேல் அவருக்குக் குத்தகைத்தொகை செலுத்தப்படவேண்டும்.

(4) (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி வாதி அல்லது விண்ணப்பதாரருக்குச் செலுத்தப்பட்ட எந்தத்தொகையையாகிலும் ஸிவில்கோர்ட்டில் வியாஜ்ஜியமூலமாக அவரிடமிருந்து வசூலிக்க யாதொரு நபருக்குள்ள பாத்தியதைக்கு இந்தப்பிரிவிலுள்ளதெதனாலும் பாதகமுண்டாகமாட்டாது.

கேட்கப்படுகிற குத்தகைத்தொகையானது அதிகமாயிருக்கிறதென்று கொண்டுவரும் வழக்கை, பாக்கியாக ஒத்துக்கொள்ளப்பட்ட தொகையைக் கோர்ட்டில் செலுத்தினால்தான் பிடிக்கவேண்டுமென்பது

195. குத்தகைத்தொகை வசூல்செய்வதற்காக இந்த ஆக்டின்படி கொண்டுவரப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்திலாவது நடத்தப்பட்ட யாதொரு நடவடிக்கையிலாவது, ஒரு ரயத்து தம்மிடத்திலிருந்து வாதிக்கோ விண்ணப்பதாரருக்கோ குத்தகைத்தொகை சேரவேண்டியதென்று ஒத்துக்கொண்டிருந்தும், தாவாசெய்யப்படுகிற தொகையானது பாக்கியாயிருக்கிற தொகையைவிட அதிகமென்று வழக்குப்பேசினால், கலெக்டரானவர் விசேஷ காரணங்களிருந்தாலன்றி மற்றப்படிக்கும், அந்தப்படி செலுத்தவேண்டியதாக ஒத்துக்கொள்ளப்பட்ட தொகையைத் தம்முடைய கோர்ட்டில் அந்த ரயத்து செலுத்தினாலன்றி மற்றப்படிக்கும், அந்த வழக்கைக் கேட்கமாட்டேனென்று நிராகரிக்கவேண்டும்; மேலேகண்ட விசேஷகாரணங்கள் எழுதிவைக்கப்படவேண்டும்.

194-வது 195-வது பிரிவுகளின்படி கோர்ட்டில் செலுத்தத்தக்க தொகையை நிஷ்கரிஷைசெய்யக் கலெக்டருக்குள்ள அதிகாரம்

196. 194-வது அல்லது 195-வது பிரிவின்படி ஒரு ரயத்து கலெக்டருடைய கோர்ட்டில் தொகைசெலுத்துவதற் குட்பட்டிருந்து, அந்த ரயத்தினுடைய வழக்கைக் கேட்பதற்குப் போதுமான காரணங்களிருக்கின்றனவென்று கலெக்டர் அபிப்பிராயப்படும்பட்சத்திலே, அந்த ரயத்து மேற்படி தொகையில் கலெக்டர் உத்தரவிடுகிறபடி ஒரு நியாயமான பாகத்தைச் செலுத்துவதன்மேல் மேற்படி கலெக்டர் அந்தப்படி கேட்கலாம்.

கலெக்டர் ரசீதுகொடுக்கவேண்டுமென்பது

197. 194-வது பிரிவின்படியாவது 195-வது பிரிவின்படியாவது ஒரு ரயத்து தொகை செலுத்தும்போது, கலெக்டர் அந்த ரயத்துக்கு ரசீது கொடுக்கவேண்டும்; அப்படிக்கொடுக்கப்பட்ட அந்த ரசீதானது குத்தகைத்தொகையைப் பெற்றுக்கொள்ள சட்டப்படி பாத்தியதையுடைய நபராலே கொடுக்கப்பட்டிருந்தால் எவ்விதமாகவும் எவ்வளவுக்கும் செலாவணியாகவேண்டுமோ அவ்விதமாகவும் அவ்வளவுக்கும் பூர்த்தியான ரசீதைப்போலச் செலாவணியாகவேண்டும்.

ஒன்றுசேர்ந்த ரயத்துகளுக்குச் சம்பந்தப்பட்ட வியாஜ்ஜியத்தின் விஷயத்திலே தனித்தனி விசாரணைசெய்ய உத்தரவுசெய்யும் அதிகாரம்

198. குத்தகைத்தொகையை அதிகப்படுத்துவதற்காகவாவது குறைப்பதற்காகவாவது தொகுப்பாய் அநேக ரயத்துகளுக்கு விரோதமாயாகிலும் அவர்களாலாகிலும் கலெக்டரிடத்தில் வியாஜ்ஜியங் கொண்டுவரப்பட்டு அந்த வியாஜ்ஜியம் ஒரேவியாஜ்ஜியமாக விசாரணைசெய்வதற்காவது பைசல்செய்வதற்காவது அநுகூலப்படமாட்டாதென்று கலெக்டருக்குத் தோற்றுகிறபட்சத்தில், அந்த உத்தியோகஸ்தர் பிரதம விசாரணைக்கு முன்பே எப்போதாவது தாமாகவேயாகிலும் உபயகட்சிக்காரர்களில் எவராவது விண்ணப்பஞ்செய்து கொண்டாலாகிலும், கட்சிக்காரர்கள் சம்மதிக்கிறவிஷயத்தில் வியாஜ்ஜியத்தின் யாதொரு பிந்திய தசையிலாகிலும், ஒவ்வொரு ரயத்துக்கும் விரோதமாகவோ அவராலே கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியத்தைக்குறித்து தனித்தனி விசாரணையைச் செய்யும்படி உத்தரவுசெய்யலாம், அல்லது [illegible] யுக்தமென்று தோன்றுகிற வேறே உத்தரவு செய்யலாம்.

199. (1) ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 3-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகள் நிலத்துக்குடையவராலும் ரயத்தாலும் [illegible] ஹோதாவில் கொண்டுவரப்பட்ட யாதொரு வியாஜ்ஜியம் அல்லது செய்யப்பட்ட யாதொரு விண்ணப்பத்துக்கும் பிரயோகப்படமாட்டாது.

1882-ம் ஞு த்த 14-வது ஆக்ட். வியாஜ்ஜியம் அல்லது விண்ணப்பம் [illegible]

(2) நிலத்துக்குடையவராலும் ரயத்தாலும் அந்தந்த ஹோதாவில் கொண்டுவரப்பட்ட யாதொரு வியாஜ்ஜியம் அல்லது செய்யப்பட்ட யாதொரு விண்ணப்பத்தைச் சட்டப்படிக்கான யாதொரு உடன்படிக்கைமூலமாயாவது ராஜிமூலமாயாவது [illegible]

[illegible] தீர்த்துக்கொண்டாலும், வியாஜ்ஜியம் அல்லது விண்ணப்பத்தின் விஷயம்முழுவதையுங் குறித்தாவது அதில் யாதொரு பாகத்தைக் குறித்தாவது, வாதிக்குப் பிரதிவாதி [illegible] செய்தாலும், அப்படிப்பட்ட உடன்படிக்கை-ராஜி அல்லது ஈடுகொடுத்தது வியாஜ்ஜியம் அல்லது விண்ணப்பத்துக்குச் சம்பந்தப்படுகிறமட்டிலே [illegible] கோர்ட்டாராகிலும் கலெக்டராகிலும் டிக்ரி அல்லது உத்தரவு பிறப்பிக்கலாம்;

ஆனால், அப்படிப்பட்ட உடன்படிக்கை, ராஜி அல்லது ஈடு-அநியாயமானதென்றும் அநுமானமானதென்றும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி கோர்ட்டாராவது கலெக்டராவது நினைக்க காரணங்களிருக்கிற பட்சத்திலே, மேலேகண்டபடி டிக்ரியையாகிலும் உத்தரவையாகிலும் பிறப்பிக்கமாட்டேனென்று நிராகரிக்கலாம்; அந்தக் காரணங்கள் எழுதிவைக்கப்படவேண்டும்.

(3) சட்டசம்மதமான யாதொரு உடன்படிக்கை ராஜி அல்லது ஈட்டுக்கொடுத்திருக்கும்படியாகப் பிறப்பிக்கப்பட்ட டிக்ரி அல்லது உத்தரவானது மேற்படி உடன்படிக்கை, ராஜி அல்லது ஈடு வியாஜ்ஜியம் அல்லது விண்ணப்பத்தின் விஷயத்திலே எவ்வளவுக்குச் செய்யப்பட்டிருக்கிறதோ அவ்வளவுக்கு அது சம்பந்தப்படுகிறமட்டில் முடிவானதாகும்.

200. (1) குத்தகைத்தொகையை அதிகப்படுத்துவதற்கான, குறைப்பதற்கான அல்லது [illegible] (பணமாக) மாற்றிக்கொள்ளுவதற்கான யாதொரு வியாஜ்ஜியமாகிலும், [illegible] விஸ்தீர்ணத்துக்குத் தக்கபடி குத்தகைத்தொகையை மாற்றுவதற்கான யாதொரு விண்ணப்பமாகிலும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி பூஸ்திதியையாவது சம்பந்தப்பட்ட பாகத்தையாவது தம் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிற நிலத்துக்குடையவராலேயே அல்லது அவருக்கு விரோதமாகவே கொண்டுவரப்படவேண்டும் அல்லது செய்யப்படவேண்டும்.

ஆனால், [illegible]

(i) அப்படிப்பட்ட நிலத்துக்குடையவர் பூஸ்திதியின் அல்லது சம்பந்தப்பட்ட பாகத்தின் சொந்தக்காரரல்லவென்று தோற்றினால், அந்த வியாஜ்ஜியம் அல்லது விண்ணப்பத்தைக் குறித்துச் சொந்தக்காரருக்கு வாதி அல்லது விண்ணப்பதாரருடைய செலவில் கோர்ட்டார் நோடிஸ் கொடுக்கவேண்டும்; அந்த சொந்தக்காரர் மேற்படி வியாஜ்ஜியம் அல்லது விண்ணப்பத்தின் கட்சிக்காரராக்கப்படவேண்டும்;

(ii) அப்படிப்பட்ட நிலத்துக்குடையவர் பூஸ்திதி அல்லது சம்பந்தப்பட்ட பாகத்திற்குச் சொந்தக்காரராயிராமலிருந்து, குத்தகைத்தொகையை அதிகப்படுத்த அல்லது (பணமாக) மாற்ற வியாஜ்ஜியங்கொண்டுவரவாவது குத்தகைத்தொகையை மாற்றும்படி விண்ணப்பஞ் செய்துகொள்ளவாவது இஷ்டப்படாவிட்டால், சொந்தக்காரர் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நிலத்துக்குடையவரைக் கட்சிக்காரராக்கி அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் தொடரலாம், அல்லது அப்படிப்பட்ட விண்ணப்பஞ் செய்துகொள்ளலாம்; ஆனால், அந்த வியாஜ்ஜியம் அல்லது விண்ணப்பத்திலே கோர்ட்டாரால் நிர்ணயிக்கப்படக்கூடிய யாதொரு குத்தகைத்தொகையானது அந்த பூஸ்திதி அல்லது சம்பந்தப்பட்ட பாகத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கச் சுதந்தரமுடையவராயிருக்கிற நிலத்துக்குடையவருக்குத்தான் செலுத்தத்தக்கதாகும்.

(2) 7-ம் அத்தியாயத்திற்கண்ட நடவடிக்கைகளை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நிலத்துக்குடையவர்மேல் நடத்தவேண்டும்; ஆனால் அப்படிப்பட்ட நிலத்துக்குடையவர் சொந்தக்காரராயுமில்லாமலிருந்தால், அந்த நடவடிக்கைகளில் சொந்தக்காரரை ஒரு கட்சிக்காரராக்கவேண்டும்.

(3) பூஸ்திதியைத் தற்காலத்திலே ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கச் சுதந்தரமுடையவராயிருக்கும் நிலத்துக்குடையவர் அதன் சொந்தக்காரரா யில்லாமலிருந்தால், அந்த நிலத்துக்குடையவராவது சொந்தக்காரராவது 164-வது, 168-வது அல்லது 186-வது பிரிவின்படி நிலத்துக்குடையவராக விண்ணப்பஞ் செய்துகொள்ளலாம்; ஆனால், அந்த விண்ணப்பத்தைக்குறித்து மற்றவருக்கு நோடிஸ் கொடுக்கவேண்டும்.

பணம் செலுத்துவதற்கான டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றுவதற்காக ட்ரான்ஸ்பர் பண்ணுவது.

201. ஒரு ரெவினியு கோர்ட்டாராவது யாதொரு அப்பீல் விசாரணை அதிகாரியாவது புனர்விசாரணைசெய்யும் அதிகாரியாவது பிறப்பித்த பணஞ் செலுத்துவதற்கான ஒரு டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றுவதற்காக ஒரு ஸிவில் கோர்ட்டுக்குத்தான் ட்ரான்ஸ்பர் பண்ணலாம்.

விதிகள் செய்ய ஹைகோர்ட்டாருக்குள்ள அதிகாரம்.

202. ஹைகோர்ட்டார் பிரதேச கவர்ன்மென்டாருடைய அங்கீகாரத்தின்மேல், ஸிவில் ப்ரொஸீஜர் கோடைச்சேர்ந்த எந்த பாகங்களாவது நிலத்துக்குடையவராலும் ரயத்தாலும் அந்தந்த ஹோதாவில் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியங்களுக்காகிலும் அப்படிப்பட்ட வியாஜ்ஜியங்களில் குறிப்பிட்ட எந்த வகுப்புக்களுக்காகிலும் பிரயோகப்படமாட்டாவென்றாவது (தாங்கள் செய்ப்

போகிற) விதிகளில் குறிப்பிட்டிருக்கும் மாறுதல்களுக்குட்பட்டுப் பிரயோகப்படுமென்றாவது கண்டு, இந்த ஆக்டுக்கு முரண்படாமல் விதிகள் செய்யலாம்.

உரிமை தஸ்தவேஜிலுள்ள பதிவுகளைக்கோர்ட்டார் கவனிக்கவேண்டுமென்பது.

203. (1) யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்துக்காக உரிமைதஸ்தவேஜொன்று தயார்செய்யப்பட்டு 166-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது, 170-வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது முடிவாகப் பிரசுரஞ்செய்யப்பட்டிருந்தால், நிலத்துக்குடையவராலும் ரயத்தாலும் அந்தந்த ஹோதாவிலே கொண்டுவரப்படும் சகல வியாஜ்ஜியங்களிலும், வாதியானவர் எந்த நிலத்தைக்குறித்து வியாஜ்ஜியங்கொண்டுவரப்படுகிறதோ அந்த நிலத்துக்குச் சம்பந்தப்பட்டதாய் உரிமைதஸ்தவேஜிலுள்ள யாதொரு பதிவுக்கு ஸெர்டிபை செய்யப்பட்ட ஒரு பிரதியை ப்ளெய்ன்டுடன் சேர்க்கவேண்டும்; கோர்ட்டாருக்குப் போதுமானதாகத் தோற்றுகிற யாதொரு காரணத்தினால் அவர் அந்தப்படி செய்யத் தவறுகிறபட்சத்திலே, கோர்ட்டாரால் நிஷ்கரிஷைசெய்யப்படும் ஒரு நியாயமான காலத்திற்குள் அப்படிப்பட்ட பிரதியை ஹாஜர்ப்படுத்தவேண்டும்.

(2) அப்படிப்பட்ட வியாஜ்ஜியங்களில் தீர்மானஞ் செய்கையிலே, கோர்ட்டார் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஹாஜர்ப்படுத்தப்பட்ட பதிவுகள் தப்பானவைகளென் றிரூஜுசெய்யப்பட்டாலன்றி மற்றப்படி, அந்தப்பதிவுகளைக் கவனிக்கவேண்டும்; கோர்ட்டார் அந்தப் பதிவுகளுக்கு விரோதமாக டிக்ரி பிறப்பிக்கும்போது, அவர்கள் அப்படி செய்வதற்காகத் தங்களுக்குள்ள காரணங்களை எழுதிவைக்கவேண்டும்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட காரியத்துக்காக வேண்டியதாயிருக்கிற உரிமை தஸ்தவேஜியின் பதிவுகளுக்கு ஸெர்டிபை செய்யப்பட்ட பிரதிகள் கொடுப்பதற்காக யாதொரு கட்டணமும் விதித்து வாங்கக்கூடாது.

(4) அப்படிப்பட்ட வியாஜ்ஜியங்களின் விஷயத்திலே, பின்வரும் பகுதியை ஸிவில் ப்ரொஸீஜர் கோடின் 54-வது பிரிவோடு (இ) குறிப்பிட்ட பகுதியாகச் சேர்த்திருப்பதாய்க் கொள்ளவேண்டும். அந்தப்பகுதியாவது:—

(இ) பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டின் 203-வது பிரிவு சம்பந்தப்படுகிற யாதொரு வியாஜ்ஜியத்தில், அந்தப் பிரிவிற் சொல்லியிருக்கிற ஸெர்டிபைசெய்யப்பட்ட பிரதியானது ப்ளெய்ன்டுடன் சேர்க்கப்படாமலிருந்து, அதை ஹாஜர்ப்படுத்தும்படி வாதிக்குக் கோர்ட்டார் உத்தரவுசெய்திருந்தும் அவர் கோர்ட்டாரால் ஏற்படுத்தப்பட்ட காலத்திற்குள் ஹாஜர்செய்யத் தவறிவிட்டாலும்.

வேலையைப் பங்கிடவும், வியாஜ்ஜியங்களை விசாரணையினின்றும் எடுத்து விடவும் ட்ரான்ஸ்பர்செய்யவும் டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்கும் ரெவினியு போர்டாருக்குமுள்ள அதிகாரம்

204. (1) டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் அந்த டிஸ்ட்ரிக்டிலுள்ள யாதொரு கலெக்டரால் அல்லது வேறே ரெவினியு ஆபிஸரால் இந்த ஆக்டின்படி விசாரிக்கப்படத்தக்க யாதொரு வேலையை, எழுத்துமூலமான உத்தரவைக் கொண்டு தகுதியாகத் தோற்றுகிற விதமாய்ப் பங்கீடுசெய்யலாம்; மேலும், அதேமாதிரியான உத்தரவைக்கொண்டு அவர் அந்தக் கலெக்டர் அல்லது வேறே ரெவினியு ஆபஸரிடத்திலே பைசலாகாமலிருக்கிற எந்த வியாஜ்ஜியத்தையாவது (அவருடைய விசாரணையினின்றும்) எடுத்துவிட்டு, அதைத் தாமே பைசல்செய்யலாம், அல்லது அந்த டிஸ்ட்ரிக்டிலிருக்கிற வேறே யாதொரு கலெக்டர் அல்லது ரெவினியு ஆபிஸர் பைசல்செய்யும்படி, அந்த வியாஜ்ஜியத்தை எழுத்துமூலமான உத்தரவைக்கொண்டு அவருக்கு அனுப்பலாம்.

(2) ரெவினியு போர்டார்-சகல டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்கள் விஷயத்திலும், (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் யாதொரு உத்தரவு பிறப்பித்திருந்தும் பாதகமில்லாமலே, டிஸ்ட்ரிக்ட் கலெகட்ருக்குக் கீழ்ப்பட்டுள்ள ரெவினியு ஆபிஸர்கள் விஷயத்திலும், மேலேகண்ட மாதிரியாகவே பங்கிடுசெய்வதற்கான அதிகாரங்களையும் எடுத்துவிடுவதற்கான அதிகாரங்களையும் அனுப்புவதற்கான அதிகாரங்களையும் உடையவர்களாவார்கள்.

ரெவினியு ஆபிஸர்களின் நடவடிக்கைக் குறிப்புகளை வரவழைத்துப் புனராலோசனை செய்ய அதிகாரம்

205. ரெவினியு போர்டார் அல்லது டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் யாருடைய தீர்மானத்தின்மேல் அப்பீல் கிடையாதோ, அந்த ரெவினியு ஆபீஸர் நடத்தும் நடவடிக்கையிலே, மேற்படி ஆபீஸர் தமக்குச் சட்டப்படி சங்கிரமித்திராத அதிகாரத்தைச் செலுத்தியிருப்பதாகத் தோற்றினாலும், சட்டப்படி சங்கிரமித்திருக்கிற அதிகாரத்தைச் செலுத்தத் தவறியிருக்கிறதாகத் தோற்றினாலும், தம்முடைய அதிகாரத்தைச் செலுத்திப் பிரவர்த்திக்கை

யில் தீர்மானத்தின் குணதோஷங்களைப்பாதிக்கும்படி சட்டத்தின் குறித்த யாதொரு நிபந்தனை யை நடந்ததாகத்தோற்றி அதனால் பிரமாதமான நியாயபங்கம் நேரிட்டிருந்தாலும் அந்த நடவடிக்கைக்குச் சம்பந்தமான தஸ்தவேஜை வரவழைக்கலாம்; மேலும், சந்தர்ப்பத்திற்கேற்றபடி ரெவினியு போர்டாரோ அல்லது டிஸ்ட்ரிக்ட் கலெக்டரோ கட்சிக்காரர்கள் ஹாஜரானால் அவர்களை விசாரணைபண்ணினபிறகு, யுக்தமாகத் தோற்றுகிற உத்தரவைப் பிறப்பிக்கலாம்.

ரெவினியு அல்லது ஜுடிஷல் ஆபிஸருக்குக் கலெக்டருடைய அதிகாரங்களைக்கொடுக்க அதிகாரம்

206. பிரதேச கவர்ன்மெண்டார்-இந்த ஆக்டின்படி கொண்டுவரப்பட்ட சகல வகுப்பு அசல் வியாஜ்ஜியங்கள் அல்லது நடவடிக்கைகள் விஷயமாகவாவது அவைகளில் யாதொரு வகுப்பின் விஷயமாகவாவது கலெக்டருக்குண்டான சகல அதிகாரங்களையுமாகிலும் அவைகளிலெதையாகிலும் யாதொரு பிரதேச விஸ்தீர்ணசம்பந்தமாய் எந்த ரெவினியு ஆபிஸருக்காயினும் ஜுடிஷல் ஆபிஸருக்காயினுங் கொடுக்கலாம் மேலும், அந்த அதிகாரங்களை மறுபடியும் வாங்கிக்கொள்ளலாம்; அல்லாமலும், அந்த ரெவினியு ஆபிஸர் அல்லது ஜுடிஷல் ஆபிஸர் அப்படி அதிகாரங் கொடுக்கப்பெற்றிராவிட்டால், அந்த வியாஜ்ஜியங்கள் அல்லது நடவடிக்கைகளை எந்தக் கலெக்டர் விசாரித்திருப்பாரோ அந்தக் கலெக்டர்செய்த தீர்மானங்களைப் போலவே, மேற்படி ரெவினியு ஆபிஸர் அல்லது ஜுடிஷல் ஆபிஸர் செய்யும் தீர்மானங்கள் அப்பீல் செய்யப்படுவதற்குள்ளாகும்.

உடன் சேர்க்கையாக டிஸ்ட்ரிக்ட்கலெக்டரை நியமிப்பது

207. பிரதேச கவர்ன்மெண்டார்-இந்த ஆக்டின்படி டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்குண்டான அதிகாரங்கள் யாவற்றையுமாவது அவைகளிலெதையாவது செலுத்தும்படி டிஸ்ட்ரிக்ட் கலெக்டரோடுகூட ஒரு உத்தியோகஸ்தரை நியமிக்கலாம்.

ஷெட்யூலிற்கண்ட டிஸ்ட்ரிக்டு கலெக்டர்களும், கலெக்டர்களும்

208. கஞ்சம் விசாகபட்டணத்தைச்சேர்ந்த ஷெட்யூலிற்கண்ட டிஸ்ட்ரிக்டுகளில் கவர்னரவர்களுடைய ஏஜெண்டும், கோதாவரியைச்சேர்ந்த ஷெட்யூலிற்கண்ட டிஸ்ட்ரிக்டுகளில் கவர்ன்மெண்ட் ஏஜெண்டும் இந்த ஆக்டின் காரியங்களுக்காக, டிஸ்ட்ரிக்ட் கலெக்டராவார்; அல்லாமலும், இந்த டிஸ்ட்ரிக்டுகளிலுள்ள அஸிஸ்டண்ட் ஏஜெண்டுகள் அதே காரியங்களுக்காகக் கலெக்டர்களாவார்கள்.

வியாஜ்ஜியங்கள் அல்லது நடவடிக்கைகளைக் கொண்டுவரவேண்டிய அல்லது நடத்தவேண்டிய இடம்

209. (1) இந்த ஆக்டின்படி கொண்டுவரப்பட்ட சகல வியாஜ்ஜியங்களையுமாவது நடத்தப்பட்ட சகல நடவடிக்கைகளையுமாவது எதன் சம்பந்தமாய் வியாஜ்ஜியங் கொண்டுவரப்படுகிறதோ அல்லது நடவடிக்கை நடத்தப்படுகிறதோ அந்தக் கைப்பற்றுநிலமாகிலும் அதன் பெரும்பாகமாகிலும் எந்த ரெவினியு டிவிஷனிலிருக்கிறதோ அந்த ரெவினியு டிவிஷனிலே கொண்டுவரவேண்டும் அல்லது நடத்தவேண்டும்.

(2) டிஸ்ட்ரிக்ட் கலெக்டருடைய உத்திரவுக்குட்பட்டு, கலெக்டர் அல்லது வேறே ரெவினியு ஆபிஸர் இந்த ஆக்டின்படி கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியங்களையும் நடத்தப்பட்ட நடவடிக்கைகளையும் பைசல்செய்வதற்காக அந்த டிஸ்ட்ரிக்டிலுள்ள எந்த இடத்திலாவது இருந்து விசாரணைசெய்யலாம்.

16-ம் அத்தியாயம்

காலநிர்ணயம்

வியாஜ்ஜியங்கள் முதலியவற்றிற்குக் காலநிர்ணயம்

210. (1) அடுத்துவருகிற பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கும் ஷெட்யூலிலோ 191-வது பிரிவிலோ நிர்ணயிக்கப்பட்டகாலவரையறை கழிந்தபிறகு கொண்டுவரப்பட்டாவது கொடுத்துக்கொள்ளப்பட்டாவது செய்துகொள்ளப்பட்டாவதுள்ள பிரதி வியாஜ்ஜியத்தையும் அப்பீலையும் விண்ணப்பத்தையும் காலநிர்ணய தோஷம் உண்டாயிற்றென்று எதிர்வாதஞ் செய்யப்படாதிருந்தபோதிலும் தள்ளிவிடவேண்டும்.

(2) இந்த ஆக்ட் வழங்கத்தொடங்குவதற்கு அநேகம் முன்பாகக் கொண்டுவரப்பட்டு, கொடுத்துக்கொள்ளப்பட்டு அல்லது செய்துகொள்ளப்பட்டிருந்தால் காலநிர்ணய தோஷத்துக்குட்பட்டிருக்கக்கூடிய யாதொரு வியாஜ்ஜியத்தைக் கொண்டுவருவதற்காவது அப்பீலைக் கொடுத்துக்கொள்வதற்காவது விண்ணப்பத்தைச் செய்துகொள்வதற்காவது உள்ள பாத்தியதையானது இந்தப்பிரிவிலுள்ளதெதனாலும் மீண்டும் உண்டாகமாட்டாது.

இந்துதேசத்துக் காலநிர்ணயச்சட்டத்திலே அப்படிப்பட்ட வியாஜ்ஜியங்கள் முதலியவைகளுக்குப் பிரயோகப்படாத பாகங்கள்

211. (1) அடுத்து முந்திய பிரிவிற்கண்ட வியாஜ்ஜியங்களுக்கும் விண்ணப்பங்களுக்கும், 1877-ம் வருஷத்திய இந்துதேசத் திக் காலநிர்ணய சட்டத்தின் 7-வது, 8-வது, 9-வது, 19-வது, 20-வது பிரிவுகள் பிரயோகப்படமாட்டா. 1877-ம் வருஷத்து 15-வது ஆக்ட்

(2) 1877-ம் வருஷத்திய இந்துதேசத்துக் காலநிர்ணயசட்டத்தின் நிபந்தனைகள் இந்த அத்தியாயத்திற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, அடுத்து முந்திய பிரிவிற்கண்ட சகல வியாஜ்ஜியங்களுக்கும் அப்பீல்களுக்கும் விண்ணப்பங்களுக்கும் பிரயோகப்படும். 1877-ம் வருஷத்து 15-வது ஆக்ட்

17-ம் அத்தியாயம்

உடன்சேர்க்கையானது தண்டனை

மாசூலின் விஷயத்தில் சட்டத்துக்கு விரோதமாய்ப் பிரவர்த்திப்பது முதலியவைகளுக்குத் தண்டனை

212. (1) யாதொரு நபர்—

(ஏ) இந்த ஆக்டைச் சாக்கிட்டு யாதொரு சொத்தை மோசமாய் ஜப்திசெய்தாலும் விற்றாலும் அல்லது விற்கச்செய்தாலும்,

(பி) இந்த ஆக்டின்படி கிரமமாய் ஜப்திசெய்வதைத் தடுத்தாலும், இந்த ஆக்டின்படி கிரமமாய் ஜப்திசெய்யப்பட்ட யாதொரு மாசூலைப் பலவந்தமாகவோ அல்லது திருட்டுத்தனமாகவோ அப்புறப்படுத்தினாலும், பாக்கிக்காக ஜப்திசெய்வதைத் தடுக்கும்பொருட்டு சொத்தை மோசடியாய்ப் பராதீனஞ்செய்தாலும்,

(ஸி) ஒரு கைப்பற்றுநிலத்தின் யாதொரு மாசூலை அறுக்கவொட்டாமலோ, சேர்க்கவொட்டாமலோ, சேமித்துவைக்கவொட்டாமலோ, அப்புறப்படுத்தவொட்டாமலோ அல்லது வேறேவிதமாய் அதன் விஷயத்தில் பிரவர்த்திக்கவொட்டாமலோ ரயத்தினுடைய அனுமதி அல்லது சம்மதத்தைப்பெறாமல் மற்றப்படி சட்டவிரோதமாய்த் தடைப்படுத்தினாலும் தடைப்படுத்த எத்தனித்தாலும்,

(டி) யாதொரு பூஸ்திதியிலுள்ள ரயத்திநிலத்திலிருந்து 163-வது பிரிவின்படி அப்புறப்படுத்தப்பட்டிருந்து அந்த நிலத்தையோ அதன் யாதொரு பாகத்தையோ நிலத்துக்குடையவரின் சம்மதத்தைப்பெறாமல் அநுபவித்தாலும்,

அவர் இரண்டாவது க்ளாஸ் (வகுப்பு) மாஜிஸ்ட்ரேட்டின் அந்தஸ்துக்குக் கீழ்ப்படாத அந்தஸ்திலுள்ள ஒரு மாஜிஸ்ட்ரேட்டினால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல் ஐந்நூறு ரூபாய்க்கதிகப்படாமல் அபராதம் விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

(2) யாதொரு நபர் (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட யாதொரு செய்கையைச் செய்வதற்கு உடந்தையாயிருந்தால், அவர் இந்தியன் பினல் கோடின் தாத்பரியப்படி ஒரு குற்றத்துக்கு உடந்தையாயிருந்ததாக எண்ணப்படுவார். 1860-ம் வருஷத்து 45-வது ஆக்ட்

(3) யாதொரு நபர் இந்த ஆக்டின் நிபந்தனைகளுக்கு விரோதமாய் ஸ்திரீகளிருக்கும் அறைகளில் பிரவேசித்தாலும், குடியிருப்பு வீடுகளின் வெளிக்கதவுகளைப் பலவந்தமாய்த் திறந்தாலும், அவர் இந்தியன் பினல் கோடின் தாத்பரியப்படி (அத்துமீறி) வீட்டில் நுழைவதென்னும் குற்றத்தைச் செய்தவராக எண்ணப்படுவார். 1860-ம் வருஷத்து 45-வது ஆக்ட்

வியாஜ்ஜியங்கொண்டுவருவதற்கான பொதுவான பாத்தியதை

நஷ்டஈட்டுக்காக வியாஜ்ஜியங்கொண்டுவருவதைப்பற்றிய பொதுவானபாத்தியதை

213. (1) (ஏ) இந்த ஆக்டைச்சாக்கிட்டு நடத்தப்பட்ட யாதொரு நடவடிக்கையினாலோ அல்லது (பி) இந்த ஆக்டின் நிபந்தனைகளிலெதையாவது அசட்டை பண்ணினதனாலோ மீறிநடந்ததனாலோ, யாதொரு நபர் தமக்குத் துன்பம் நேரிட்டதென்று எண்ணினால், அவர் தமக்கு இஷ்டமிருந்தால் கலெக்டரிடத்தில் நஷ்டஈட்டுக்காக வியாஜ்ஜியங்கொண்டுவந்து பரிகாரந் தேடிக்கொள்ளலாம்.

(2) ஸிவில்கோர்ட்டாருடைய அதிகாரவரம்பிலிருந்து இந்த ஆக்டினால் எடுக்கப்பட்டிராத யாதொரு வியாஜ்ஜியத்திலே ஸிவில் கோர்ட்டில் நடவடிக்கை நடத்துவதற்கான எவ்விதபாத்தியதைக்கும் இந்தப்பிரிவினால் தடையுண்டாவதாக எண்ணக்கூடாது.

(3) ஆனால் எப்போதும், (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நஷ்டஈட்டுக்காக வியாஜ்ஜியங் கொண்டுவருகிற யாதொரு நபர் அதே வியாஜ்ஜிய மூலத்தின் விஷயமாக ஸிவில்கோர்ட்டில் வியாஜ்ஜியங்கொண்டுவர சுதந்தரமுடையவராகமாட்டார்.

நிலத்துக்குடையவர்களின் ஏஜெண்டுகள்

ஏஜெண்ட்மூலமாகப் பிரவர்த்திக்க நிலத்துக்குடையவருக்குள்ள அதிகாரம்

214. (1) யாதொரு நிலத்துக்குடையவர், யாதொரு கலெக்டர் அல்லது கோர்ட்டின் முன்பாக யாதொரு காரியம் நடத்தவோ ஹாஜராகவோ விண்ணப்பஞ்செய்துகொள்ளவோ இந்த ஆக்டின்படி வேண்டியிருந்தாலும் அதிகாரம் பெற்றிருந்தாலும், மேற்படி நிலத்துக்குடையவருடைய கையெழுத்து சகிதமாய் எழுத்துமூலமாக இது விஷயத்தில் அதிகாரங் கொடுக்கப்பெற்றுள்ள ஒரு ஏஜெண்டின் மூலமாய் அந்தக்காரியம் நடத்தலாம், ஹாஜராகலாம், அல்லது விண்ணப்பம் செய்துகொள்ளலாம் [illegible]

(2) ஒரு நிலத்துக்குடையவருக்கு இந்த ஆக்டின்படி சேர்ப்பிக்கவேண்டியதாகவாகிலும் கொடுக்கவேண்டியதாகவாகிலுமுள்ள பிரதி நோடிஸும், அந்த நிலத்துக்குடையவருக்காக அந்த நோடிஸ் சேர்ப்பிக்கப்படுவதை அங்கீகரிக்கவோ அல்லது அதை வரப்பற்றிக்கொள்ளவோ மேலேகண்டபடி அதிகாரம்பெற்ற ஒரு ஏஜெண்டினிடத்தில் சேர்ப்பிக்கப்பட்டாலும் கொடுக்கப்பட்டாலும், அது அந்த நிலத்துக்குடையவரிடத்திலே நேராகச் சேர்ப்பிக்கப்பட்டாகிலும் கொடுக்கப்பட்டாகிலுமிருந்தாற்போலவே இந்த ஆக்டின் காரியங்களுக்காகச் செலாவணியாகவேண்டும்.

(3) ஒரு ஏஜெண்டை நியமிக்கிற அல்லது அவருக்கு அதிகாரங்கொடுக்கிற சாஸனம் நீங்கலாக, இந்த ஆக்டின்படி நிலத்துக்குடையவர் கையெழுத்துச் செய்யவேண்டியாவது ஸொர்டிபை பண்ணவேண்டியாவதிருக்கிற பிரதி தஸ்தவேஜிலும், அவருடைய ஏஜெண்ட் இது விஷயத்தில் எழுத்துமூலமாய் அதிகாரம்பெற்றிருந்தால், அந்த ஏஜெண்ட் கையெழுத்துசெய்யலாம் அல்லது ஸொர்டிபை பண்ணலாம்.

ஆக்டின்படிக்கான விதிகள்

விதிகள் செய்யப் பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்

215. பிரதேச கவர்ன்மெண்டார்—

(1) கலெக்டர்களும் ரெவினியு ஆபீஸர்களும் இந்த ஆக்டினாலோ ஆக்டின்படியோ அவர்களுக்கு ஏற்பட்ட யாதொரு கடமையைச் செலுத்துகையில் இன்னமாதிரி நடவடிக்கை அனுசரிக்கவேண்டியதென்று ஒழுங்கேற்படுத்துவதற்காக, இந்த ஆக்டுக்கு முரண்படாமல் விதிகளை முன்னதாகப் பிரசுரஞ்செய்து ஏற்படுத்தலாம்; மேலும், அப்படிப்பட்ட விதிகளைக் கொண்டு அப்படிப்பட்ட யாதொரு ஆபீஸருக்கு—

(ஏ) வியாஜ்ஜியங்களை விசாரணைசெய்யும்போது ஒரு ஸிவில் கோர்ட்டார் செலுத்தும் யாதொரு அதிகாரத்தையும்,

(பி) யாதொரு நிலத்தில் பிரவேசிப்பதற்கும் அதை ஸர்வேசெய்து அதற்கு எல்லைகட்டி அதன் மாப் (படம்) ஒன்று தயார்செய்வதற்குமுள்ள அதிகாரத்தையும், ஸர்வேயையும் எல்லைகளையும் குறித்த சென்னப்பட்டணம் 1897-ம் ஷூ 4-வது ஆக்டின்படி யாதொரு உத்தியோகஸ்தர் செலுத்தத்தக்க யாதொரு அதிகாரத்தையும்,

1897-ம் ஷூ 4-த்துச் சென்ன பட்டணம் 4-வது ஆக்ட்

(ஸி) யாதொரு நிலத்திலுள்ள மண்ணின் வளப்பத்தை மதிப்பிடும் நோக்கத்துடன் அந்த நிலத்திலிருக்கும் பயிர்களை அறுத்துப் போரடிப்பதற்கும் மாசூலை எடைபோடுவதற்கும் அல்லது அளப்பதற்கும் அதிகாரத்தையும்

கொடுக்கலாம்; மேலும், பிரதேச கவர்ன்மெண்டார்—

(2) இந்த ஆக்டின்படி பிறப்பிக்கவேண்டிய நோடிஸுகள் இன்ன நமூனாப்படி இருக்கவேண்டுமென்றுவது அவைகளை இன்னவிதமாகச் சேர்ப்பிக்கவேண்டுமென்றுவது இந்த ஆக்டிலாகிலும் வேறே யாதொரு ஆக்டிலாகிலும் நிர்ணயிக்கப்படாமலிருந்தால், அப்படிப்பட்ட நமூனாக்களையும் விதத்தையும் நிர்ணயித்தும்,

(3) இந்த ஆக்டின்படி செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்களிலே அனுசரிக்கவேண்டிய நடவடிக்கையைக் குறித்தும்,

(4) இந்த ஆக்டின் காரியங்களுக்காகச் செலுத்தவேண்டிய கட்டணங்கள், செலவுகள் (சார்ஜுகள்) பட்டுபடிகளைக்குறித்தும்,

(5) சமுதாயகாரியங்களுக்காகப் பிரத்தியேகமாய் விடப்பட்டிருக்கும் களத்துமேடு கால்நடைக்கொட்டில் கிராமநத்தம்முதலிய நிலங்களை உபயோகிப்பதற்காகவும்,

(6) யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தில் எவற்றைப் பிரதான உணவுத்தானியங்களாக எண்ணவேண்டுமென்று நிர்ணயிப்பதற்காகவும், விலைஜாபிதாக்களைத் தயார்செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு உதவியாயிருப்பதற்காகவும்,

(7) ஜப்தி செய்யப்பட்ட பயிர்கள் அல்லது விலைபொருள்கள் சீக்கிரம் அழியுந்தன்மையுள்ளவைகளாயிருந்தால் அவைகளை விற்பனை செய்வதற்காகவும்,

(8) நிலங்களை ஸர்வேசெய்து உரிமை தஸ்தவேஜையும் குத்தகைத்தொகை பைசல் ரெகார்டையும் தயார்செய்வதற்காகவும்,

(9) குத்தகைத்தொகை பைசலுக்குச் சம்பந்தமான பிரதம தஸ்தவேஜைப்பற்றிய ஆட்சேபணைகளைக்குறித்து ஒரு ரெவினியு ஆபீஸர் செய்த உத்தரவுகளின்மேல் எந்த மேலான ரெவினியு அதிகாரியிடம் அப்பீல் செய்துகொள்ளலாமென்பதை நிர்ணயித்தும்,

(10) கலெக்டர் தாம் விசாரித்துத் தீர்மானஞ்செய்த வியாஜ்ஜியங்களையும் விண்ணப்பங்களையுங் குறித்து எந்த நமூனாப்படி ரெஜிஸ்டர் வைத்திருக்கவேண்டுமென்பதை நிர்ணயித்தும்,

(11) இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளைப் பொதுவாய் நிறைவேற்றுவதற்காகவும், இந்த ஆக்டுக்கு முரண்படாமலே விதிகளை முன்னதாகப் பிரசுரஞ்செய்து ஏற்படுத்தலாம்.

ஷெட்யூல்.

A பாகம்.—கலெக்டர் விசாரணைசெய்யத்தக்க வியாஜ்ஜியங்கள்.

தொடர்ச்சியான நம்பர்.	ஆக்டின் பிரிவு.	வியாஜ்ஜியத்தின் விவரம்.	நிர்ணயிக்கப்பட்ட காலவரையறை.	காலவரையறை எப்போது முதல் செல்லத்தொடங்குமென்பது.	அப்பீல் செய்துகொள்வதானால் எந்தக்கோர்ட்டுக்குச் செய்யவேண்டுமென்பது.
1	2	3	4	5	6
1	6	தொகை செலுத்தியிருக்கிற ஒரு நபர் துராகிருதமாய் நுழைந்தால் அவரை அப்புறப்படுத்துவதற்காக வியாஜ்ஜியம்.	இரண்டு வருஷம்.	தொகை பெற்றுக்கொண்ட அல்லது மறுவிக்கப்பட்ட தேதி.	டிஸ்ட்ரிக்ட் கோர்ட்.
2	30	ஒரு ரயத்து செலுத்தத்தக்க குத்தகைத்தொகையை அதிகப்படுத்துவதற்காக.	ஒன்றுமில்லை (37-வது, 41-வது, 177-வது பிரிவுகளுக்குட்பட்டு).	ஒன்றுமில்லை (37-வது, 41-வது, 177-வது பிரிவுகளுக்குட்பட்டு).	டிஸ்ட்ரிக்ட் கோர்ட்.
3	38	குத்தகைத்தொகையைக் குறைப்பதற்காக	ஒன்றுமில்லை (39-வது, 41-வது, 177-வது பிரிவுகளுக்குட்பட்டு).	ஒன்றுமில்லை (39-வது, 41-வது, 177-வது பிரிவுகளுக்குட்பட்டு).	டிஸ்ட்ரிக்ட் கோர்ட்.
4	40	குத்தகைத்தொகையை (பணமாக) மாற்றிக்கொள்வதற்காக.	ஒன்றுமில்லை ...	ஒன்றுமில்லை ...	(a) டிக்ரியில் குத்தகைத்தொகையை (பணமாக) மாற்றிக்கொள்வதற்கு அனுமதி கிடைக்கிறமட்டிலாவது கிடாதென்று நிராகரித்திருக்கிறமட்டிலாவது அந்த டிக்ரியின்மேல் டிஸ்ட்ரிக்ட் கலெக்டர். (b) குத்தகைத்தொகையை (பணமாக) மாற்றிக்கொள்ளும் காலத்தில் விலைமதிப்பை நிஷ்கரிஷை செய்கிற டிக்ரியின் [illegible] குத்தகைத்தொகையாக இன்னதொகை செலுத்தவேண்டுமென்றாவது இன்னகாலமுதல் அந்தப்படி மாற்றிக்கொள்ளவேண்டுமென்றாவது நிர்ணயிக்கிறமட்டில் அந்த டிக்ரியின்மேல்—டிஸ்ட்ரிக்ட் கோர்ட்.

A பாகம்—கலெக்டர் விசாரணை செய்யத்தக்க வியாஜ்ஜியங்கள்—தொடர்ச்சி.

தொடர்ச்சியான நம்பர்.	ஆக்டின் பிரிவு	வியாஜ்ஜியத்தின் விவரம்.	நிர்ணயிக்கப்பட்ட காலவரையறை.	காலவரையறை எப்போது முதல் செல்லத் தொடங்குமென்பது.	அப்பீல் செய்வதானால் எந்தக்கோர்ட்டுக்குச் செய்ய வேண்டுமென்பது.
1	2	3	4	5	6
5	55	பட்டா பெற்றுக்கொள்ள	மூன்றுமாதம் ...	கேட்டதுமுதல் மூன்றுமாதகாலம் எப்போதுகழிவாகிறதோ அந்தத் தேதி.	டிஸ்ட்ரிக்ட் கோர்ட்.
6	56	பட்டாவை அங்கீகரிக்கும்படி கட்டாயப்படுத்த ...	ஷை ...	அங்கீகரிக்கத்தவறின பிறகு ஒரு மாதகாலம் எப்போது கழிவாகிறதோ அந்தத் தேதி.	
7	65	ரசீது கொடாதிருப்பதற்குப் பிரதிபலனுக்காக ...	ஷை ...	தொகைசெலுத்தின தேதி.	
8	77	குத்தகைத்தொகை பாக்கியை வசூல்செய்வதற்காக நிலத்துக்குடையவரால்.	மூன்று வருஷம்.	எந்தத்தேதியில் பாக்கித்தொகை செலுத்தவேண்டுமோ அந்தத் தேதி, அல்லது குத்தகைத்தொகையை நிச்சயிக்கும் காரியத்திற்காக வியாஜ்ஜியம் அல்லது வேறு நடவடிக்கை நடத்தப்பட்டிருந்தால், எந்த டிக்ரி அல்லது உத்தரவினால் குத்தகைத்தொகை முடிவாக நிச்சயிக்கப்படுகிறதோ அந்த டிக்ரி அல்லது உத்தரவின் தேதி—இந்த இரண்டு தேதிகளில் எது பிந்தினதோ அது.	
9	88	ஜப்திசெய்யப்பட்ட சொத்தானது திருட்டுப்போனாலும், காணாமற்போனாலும், சேதப்பட்டாலும, அழிந்துபோனாலும் நஷ்ட ஈட்டுக்காக.	ஆறு மாதம் ...	சொத்தானது திருட்டுப்போன, காணாமற்போன, சேதப்பட்ட, அல்லது அழிந்துபோன தேதி.	
10	95	ஜப்தியை ரத்துசெய்வதற்காக ரயத்தால்	பதினைந்து நாள்.	கேட்ட தொகையைச் செலுத்தவேண்டுமென்றாவது வியாஜ்ஜியம் தொடரவேண்டுமென்றாவதுகண்டு நோடிஸ் எந்தத் தேதியில் ரயத்தினிடத்தில் சேர்ப்பிக்கப்பட்டதோ அந்தத்தேதி.	
11	102	இரண்டாவது விற்பனையிலேற்படும் விலைக்குறைவையும் செலவுகளையும் விலை செலுத்தத்தவறின கிரயதாரரிடத்திலிருந்து வசூலிக்க.	மூன்று மாதம் ...	விற்பனைநடந்தும் உத்தியோகஸ்தருடைய ஸெர்டிபிகேட்டின் தேதி.	

தொடர்ச்சியான நம்பர்.	ஆக்டின் பிரிவு	வியாஜ்ஜியத்தின் விவரம்.	நிர்ணயிக்கப்பட்ட காலவரையறை.	காலவரையறை எப்போது முதல் செல்லத் தொடங்குமென்பது.	அப்பீல் செய்வதானால் எந்தக்கோர்ட்டுக்குச் செய்ய வேண்டுமென்பது.
12	112	கைப்பொருள் நிலத்தை விற்பதற்குள்ள பாத்தியதையைக் குறித்து ஆட்சேபிக்க.	முப்பதுநாள் ...	பாக்கித்தொகையைக் கொடுக்கவேண்டுமென்றாவது விற்பனைபாத்தியதையைப் பற்றி ஆட்சேபித்து வியாஜ்ஜியம் தாக்கல்செய்யவேண்டுமென்றாவது கண்டு நோடிஸ் எந்தத்தேதியில் பாக்கிதாரரிடம் சேர்ப்பிக்கப்பட்டதோ அந்தத் தேதி.	டிஸ்ட்ரிக்ட் கோர்ட்.
13	123	இரண்டாவது விற்பனையிலேற்படும் விலைக்குறைவையும் செலவுகளையும் விலை செலுத்தத்தவறின கிரயதாரரிடத்திலிருந்து வசூலிக்க.	மூன்று மாதம் ...	விற்பனைநடத்தும் உத்தியோகஸ்தருடைய ஸெர்டிபிகேட்டின் தேதி.	
14	127(c)	பிந்திய குத்தகைத்தொகையைச் செலுத்துவதற்காக ...	முப்பது நாள் ...	கைப்பற்றுநிலம் விற்கப்பட்டதேதி ...	
15	144	சட்டத்துக்கு விரோதமாய் பலவந்தப்படுத்தி வாங்கப்பட்ட தொகையை வசூல்செய்ய.	ஆறு மாதம் ...	அனுமதி பெறாத கட்டணத்தை வசூலித்த தேதி.	
16	149	கைப்பற்று நிலத்துக்கு ராஜினாமா கொடுக்கிறபோது குத்தகைத்தொகையில் உண்டாகும் நஷ்டத்துக்கு ஈடுசெய்யப்படுவதற்காக.	ஷை ...	எந்த வருஷத்தில் ராஜினாமா கொடுக்கப்படுகிறதோ அதற்கு அடுத்துவருகிற ரெவினியு வருஷ ஆரம்பம். ...	
17	151 (1)	ஒரு ரயத்தை (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்த ...	இரண்டுவருஷம்.	எந்தத்தேதிமுதல் நிலம் தகுதியற்றதாக்கப்பட்டதோ அந்தத் தேதி.	
18	151 (2)	பிரதிபலனுக்காகவாவது (இன்ஜங்ஷசன்) உத்தரவுக்காகவாவது சேதமானதை அல்லது வீண்போனதைச் சரிப்படுத்திக்கொள்வதற்காக வாவது.	ஷை ...	எப்போது சேதம் நேரிட்டதோ அல்லது வீண்போக ஆரம்பித்ததோ அப்போது.	
19	153	அனுபோக பாத்தியதையில்லாத ரயத்தை (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்த.	ஒரு வருஷம் ...	அப்புறப்படுத்தும் பாத்தியதை உண்டான தேதி.	
20	160	நீக்குவதற்குப் பிறப்பிக்கப்பட்ட வாரண்டை ரத்துசெய்வதற்காக.	பதினைந்துநாள் அல்லது 159-வது பிரிவின்படி கலெக்டர் அதிகப்படுத்தின கால வரையறை.	வாரன்ட் சேர்ப்பிக்கப்பட்ட தேதி.	
21	213	வேறேவிதமாய் நிபந்தனை கண்டிராத நஷ்ட ஈடுக்காக.	மூன்று மாதம் ...	வியாஜ்ஜிய மூலம் உண்டானதேதி. ...	

B பாகம்.—டிஸ்ட்ரிக்ட் கலெக்டர், கலெக்டர் அல்லது வேறே ரெவினியு ஆபிஸர் பைசல்செய்யவேண்டிய விண்ணப்பங்கள்.

தொடர்ச்சியான நம்பர்.	ஆக்டின் பிரிவு.	விண்ணப்பத்தின் விவரம்.	நிர்ணயிக்கப்பட்ட காலவரையறை.	காலவரையறை எப்போது முதல் செல்லத்தொடங்குமென்பது.	அப்பீல் செய்துகொள்வதானால் எந்தக்கோர்ட்டுக்குச் செய்ய வேண்டுமென்பது.
1	2	3	4	5	6
1	15	சீர்திருத்தஞ்செய்வதற்குள்ள பாத்தியதையைக்குறித்தாவது குறிப்பிட்ட ஒரு வேலை சீர்திருத்தந்தானா அல்லது சீர்திருத்தமாயிருக்குமா என்பதைக்குறித்தாவது ...	ஒன்றுமில்லை ...	ஒன்றுமில்லை	டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்.
2	16	சீர்திருத்தங்களை ரெஜிஸ்டர் செய்வதற்காக ...	ஒன்றுமில்லை (16—வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவுக்குட்பட்டு.)	ஷை	ரெஜிஸ்டர்செய்ய நிராகரித்ததன்மேல்—டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்.
3	17	சீர்திருத்தத்துக்குச் சம்பந்தப்பட்ட சாட்சியம் எழுதிவைப்பதற்காக ...	ஒன்றுமில்லை ...	ஷை	சாட்சியம் எழுதிவைக்க நிராகரித்ததன்மேல்—டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்.
4	25	நியாயமானதும் தருமமானதுமான குத்தகைத் தொகையைப் பைசல்செய்வதற்காக.	ஒரு வருஷம் ...	நிலத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும்படி விடப்பட்ட தேதி.	டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்.
5	32(2)	குத்தகைத்தொகை அதிகரிப்பைப் புனராலோசனை செய்வதற்காக.	ஒன்றுமில்லை ...	ஒன்றுமில்லை	டிஸ்ட்ரிக்ட் கோர்ட்.
6	42	விஸ்தீர்ணத்துக்குத் தகுந்தபடி குத்தகைத்தொகையை மாற்றுவதற்காக.	ஷை ...	ஷை	டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்.
7	45	பரம்பரை பாத்தியதை மூலமாகவாவது சட்டப்படிக்குண்டான ட்ரான்ஸ்பர் மூலமாகவாவதல்லாமல் மற்றப்படி நிலத்தை அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நபர் செலுத்தத்தக்க தொகையை நிஷ்கரிஷை செய்வதற்காக.	ஒரு வருஷம் ...	அனுபோகத்தில் வைத்துக்கொண்ட தேதி.	டிஸ்ட்ரிக்ட் கோர்ட்.
8	16 (விலக்கு).	அந்தப்பிரிவின் காரியத்தின் பொருட்டு நிலத்தின் குத்தகைத்தொகையைப் பைசல் செய்வதற்காக.	ஒன்றுமில்லை ...	ஒன்றுமில்லை	டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்.
9	48(2)	அனுபோக பாத்தியதையில்லாத ரய்த்தை (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்துவதற்காக.	அடுத்தவருகிற ரெவினியு வருஷ ஆரம்பத்துக்குமுன்னதாகப்பத்துவாரம்.	அதிகப்படுத்தின குத்தகைத் தொகையைச் செலுத்தும்படி ரய்த்துக்கு நோட்டீஸ்சேர்ப்பித்ததற்கு ஒரு மாதம் கழிந்த தேதி.	ஷை
10	55	கலெக்டர் அல்லது வேறே உத்தியோகஸ்தருடைய ஆபிஸிலே பட்டாவைத் தாக்கல்செய்ய அனுமதி பெறுவதற்காக.	ஒரு வருஷம் ...	எந்த ரெவினியு வருஷத்துக்குப் பட்டா சம்பந்தப்படுகிறதோ அந்த ரெவினியு வருஷத்தின் ஆரம்பம்.	ஷை

B பாகம்.—டிஸ்ட்ரிக்ட் கலெக்டர், கலெக்டர் அல்லது வேறே ரெவினியு ஆபிஸர் பைசல்செய்யவேண்டிய விண்ணப்பங்கள்—தொடர்ச்சி.

தொடர்ச்சியான நம்பர்.	ஆக்டின் பிரிவு.	விண்ணப்பத்தின் விவரம்.	நிர்ணயிக்கப்பட்ட காலவரையறை.	காலவரையறை எப்போதுமுதல் செல்லத் தொடங்குமென்பது.	அப்பீல் செய்துகொள்வதானால் எந்தக்கோர்ட்டுக்குச் செய்ய வேண்டுமென்பது.
1	2	3	4	5	6
11	68	கலெக்டர் அல்லது வேறே உத்தியோகஸ்தருடைய ஆபிஸிலே குத்தகைத்தொகையை டிபாஸிட்டாகக் கட்டிவைக்க அனுமதி பெறுவதற்காக.	ஆறு மாதம் ...	எந்தத் தேதியில் குத்தகைத்தொகை பாக்கியானதோ அந்தத் தேதி.	டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்.
12	71 (3)	டிபாஸிட்டாகக் கட்டிவைத்த குத்தகைத்தொகையைத் திரும்பவும் செலுத்துவதற்காக.	ஒன்றுமில்லை ...	ஒன்றுமில்லை	ஒன்றுமில்லை.
13	74	மதிப்பேற்படுத்தவாவது பங்கிடவாவது உத்தியோகஸ்தரை (நியமித்து) அனுப்புவதற்காக.	ஷை ...	ஷை	ஷை.
14	89	ஜப்திசெய்த சொத்தில் உரிமை அல்லது பாத்தியதை வைத்துக்கொண்டிருக்கும் மூன்றுவது நபரால்.	முப்பது நாள் ...	ஜப்திசெய்த தேதி	ஷை.
15	90	ஜப்திசெய்வதைத் தடைப்படுத்தும்படி மோசடியாய்ப் பராதீனம்பண்ணின சொத்தை ஒப்பித்து விடும்படியாவது அந்த சொத்தின் மதிப்புத் தொகையைச் செலுத்தும்படியாவது.	ஆறு மாதம் ...	எந்தத் தேதியில் பாக்கித்தொகை செலுத்தியிருக்கவேண்டுமோ அந்தத்தேதி.	ஷை.
16	90	பலவந்தமாகவோ திருட்டுத்தனமாகவோ எடுத்துக்கொண்டு போகப்பட்ட ஜப்திசெய்த சொத்தைத் திருப்பிக்கொடுப்பதற்காகவாவது, அந்த சொத்தின் மதிப்புத் தொகையைச் செலுத்துவதற்காகவாவது.	முப்பது நாள் ...	ஜப்திசெய்த சொத்தானது எந்தத் தேதியில் பலவந்தமாகவோ திருட்டுத்தனமாகவோ எடுத்துக்கொண்டு போகப்பட்டதோ அந்தத்தேதி.	ஷை.
17	106 (5)	ஜப்திசெலவைத் தீர்மானிப்பதற்காக.	மூன்று மாதம் ...	விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தருடைய தீர்மானத்தின் தேதி.	ஷை.
18	114	கைப்பற்றுநிலத்தை விற்பனைசெய்வதற்காக.	115-வது பிரிவில் கண்டிருப்பதுபோலவே.	115-வது பிரிவில் கண்டிருப்பதுபோலவே.	ஷை.
19	131	கைப்பற்றுநிலத்தின் விற்பனையை ரத்துசெய்வதற்காக.	முப்பது நாள் ...	விற்பனை தேதி	ஷை.
20	133	செலுத்தவேண்டிய பாக்கியைச் செலுத்துவதற்குக் காலம் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக	ஷை ...	விற்பனை பிரசித்தஞ்செய்யப்பட்டதேதி ...	ஷை.
21	135	நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான கட்டுவேலையை மரமத்துசெய்ய 137-வது பிரிவின்படிக்கான உத்தரவுக்காக.	ஒன்றுமில்லை ...	ஒன்றுமில்லை	டிஸ்ட்ரிக்ட் கோர்ட்.
22	137	நிலத்துக்குடையவர் தவறிப்போனால் கட்டுவேலைகளைச் செய்துமுடிக்க ரயத்துகளால்.	ஷை ...	ஷை	செய்து முடிப்பதற்காக அனுமதி கொடுக்க நிராகரித்ததன்மேல்—டிஸ்ட்ரிக்ட் கோர்ட்.

Printed at the Guardian Press, Mount Road, Madras.

B பாகம்.—டிஸ்ட்ரிக்ட் கலெக்டர், கலெக்டர் அல்லது வேறே ரெவினியு ஆபீஸர் பைசல்செய்யவேண்டிய விண்ணப்பங்கள்—தொடர்ச்சி.

தொடர்ச்சியான நெம்பர்.	ஆக்டின் பிரிவு.	விண்ணப்பத்தின் விவரம்.	நிர்ணயிக்கப்பட்ட காலவரையறை.	காலவரையறை எப்போதுமுதல் செல்லத் தொடங்குமென்பது.	அப்பீல் செய்துகொள்வதானல் எந்தக்கோர்ட்டுக்குச் செய்ய வேண்டுமென்பது.
1	2	3	4	5	6
23	139	தூர்ப்பாய்ச்சல் சம்பந்தமாயுள்ள கட்டுவேலையை மராமத்து செய்வதற்குப்பிடித்த செலவை வசூல்செய்வதற்காக.	மூன்று வருஷம் ...	மரமத்து பூர்த்தியாய் முடிந்த தேதி.	டிஸ்டிரிக்ட் கோர்ட்
24	141	நீர்ப்பாய்ச்சப் பெறும்போது அல்லது நீர்ப்பாய்ச்சப் பெருத போது விதிக்கப்படும் வீதத்தை நிர்ணயிப்பதற்காக.	ஒன்றுமில்லை ...	ஒன்றுமில்லை	டிஸ்டிரிக்ட் கலெக்டர்.
25	145 (2)	கைப்பற்றுநிலத்தை உட்பிரிவினை செய்தாலும் ட்ரான்ஸ்பர் செய்தாலும் குத்தகைத்தொகையை நிஷ்கரிஷை செய்வதற்காக.	மூன்று மாதம் ...	உட்பிரிவினை செய்யப்பட்ட அல்லது ட்ரான்ஸ்பர் பண்ணப்பட்ட தேதி.	ஷை
26	149 (1)	நிலத்துக்குடையவரால் ஏற்படுத்தப்பட்ட குத்தகைத்தொகைப்பிரிவினையைக் குறித்துப் புனராலோசனை செய்வதற்காக.	ஆறு மாதம் ...	நிலத்துக்குடையவரின் தீர்மானம் ரயத்துக்குத் தெரிவிக்கப்பட்ட தேதி.	ஷை
27	158	வளவில் பிரவேசித்து அதை ஸ்வாதீனப் படுத்திக்கொள்ள வாரன்ட் பிறப்பிப்பதற்காக.	மூன்று மாதம் ...	எந்த ரெவினியு வருஷத்துக்காக பாக்கி செலுத்தவேண்டியதாயிற்றோ அந்த ரெவினியு வருஷம் முடிவாகும் தேதி.	டிஸ்டிரிக்ட் கலெக்டர்.

ஹெச். டி. டெய்லர்,
கவர்ன்மெண்ட் ஸெகர்டெரி,
சட்ட நிருபண இலாகா.

(A true translation.)

V. RAGHAVA CHARLU,
Tamil Translator to Government.

Printed at the Guardian Press, Mount Road, Madras.

Legal Intelligence.

MADRAS HIGH COURT.

Third Criminal Sessions.
(Before Mr. Justice MILLER.)
(Eighth day, Thursday, 13th August.)

The Madras Sedition Case.

மதராஸ் ஹைகோர்ட்டு ஸெஷன்ஸ் மில்லர் துரை முன்பாக. ராஜநிந்தனை வியாச்சியம்.

இந்தக் கேஸில் எதிராஜ 15-8-08 சுரேந்திரநாத் ஆரியா என்பவர் கடற்கரையோரத்திலும் மூர் மார்க்கெட்டிலும், மார்ச்சு௴ 9வது தேதி முதற்கொண்டு ஜுன்௴ 2 உ வரையிலும் 3தரம் ராஜநிந்தனையாக பிரசங்கஞ் செய்ததற்காக மாஜிஸ்ட்ரேட்டு பர்ட்டு துரையவர்களால் கம்மிட் செய்யப்பட்டு விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டார். பாரிஸ்டர் ஆஸ்போரன் துரை சர்க்கார் தருபிலும், வக்கீல் வெங்கடரமணய்யரும், வக்கீல் கிருஷ்ணசுவாமி அய்யரும் குற்றவாளி தருபிலும் வாதித்தார்கள்.

ஆரியா தான் இந்த ராஜநிந்தனை பிரசங்கங்களால் குற்றவாளியல்ல என்று மறுத்தபிறகு, அடியிற் கண்டவர்கள் பொருந்திய ஒரு ஸ்பெஷல் ஜுரியை பொருக்கினார்கள்.—

(1) அல்லன் துரை (6) மிஸ்கிட் துரை
(2) மிட்சல் துரை (7) கோபாலய்யங்கார்
(3) கிருஷ்ணசாமி ராவ் (8) பார்டன் துரை
(4) வில்ஸன் துரை (9) அங்கர் துரை.
(5) மாம்பர்டு துரை

சீப் இன்ஸ்பெக்டர் பவானந்தம் பிள்ளையவர்கள் முதல் சாக்ஷியாக வந்தார்.

இரண்டாவது சாக்ஷி, ஹெட் கான்ஸ்டேபில் சீனிவாச பிள்ளை:—தான் மூர்மார்க்கெட் மீடிங்கில் இருந்ததாகவும், அது $5\frac{1}{2}$-மணிக்கு ஆரம்பித்ததாகவும், 1000-பேர் இருந்ததாகவும், குற்றவாளி அப்பொழுது பிரசங்கித்ததாகவும், சமுத்திரக்கரையோர மீடிங்கில் 2000-பேரிருந்தார்களென்வும், அது ஸிவாஜி பிறந்தநாளுக்காக ஏற்படுத்தப்பட்டதெனவும், அது சென்னை ஜனசங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டதெனவும் சொன்னார்.

சப்இன்ஸ்பெக்டர் ராமநரசு அய்யர்:—மூர் மார்க்கெட் மீடிங்கில் தான் இருந்ததாகவும், பிரசங்கத்தை சுருக்க எழுத்தில் எழுதினதாகவும், மீடிங்கானது 6 மணி முதல் 8 மணி வரையிலிருந்ததாகவும், குற்றவாளி அப்பொழுது பேசினதாகவும், அப்பொழுது இடையிடையே "வெட்கம்" என்ற சப்தம் கேட்டதாகவும், இதுவரைக்கும் 40 பிரசங்கங்கள் எழுதினதாகவும், அப்பொழுது ஜனங்களுக்கு மத்தியில் உட்கார்ந்திருந்ததாகவும், முக்கியமான பாகத்தை மாத்திரம் எழுதினதாகவும் சொன்னார். (இன்னமாதிரி எழுதினது என்று விவரித்தார்).

வினா—குற்றவாளி ராஜதந்திர விஷயங்களைப்பற்றி பேசினாரா?

மறு—நானதைக் கேட்கவில்லை.

வினா—ஜனசங்கமுறமை (Nationalism) யைப் பற்றி பேசினாரா?

மறு—எனக்குத் தெரியாது.

(பிறகு அவர் சொன்னதைப்பற்றிக் கேட்டார்.)

மே மாதம் 3-வது தேதி பிரசங்கத்தை நான் எழுதவில்லை. ஏனென்றால் அப்பொழுது குறுக்கின எழுத்து எழுதுபவன் ஒருவன் எழுதிக்கொண்டுவந்தான். ஜுன்மாதம் 2-வது தேதி குற்றவாளி மண்டோதரியைப்பற்றிச் சொன்னார். (இங்கு குற்றவாளி எழுதினதைப் படித்தார்கள்), பிறகு, மற்றபேர் எழுதினதை தான் பார்க்கவில்லையென்றும், தான் எழுதும்பொழுது விளக்கு வைத்துக்கொண்டிருந்ததாகவும், குற்றவாளி வேறேமாதிரி என்னவானலும் சொல்லியிருந்தால், தானதை எடுத்திருப்பாரென்றும் சொன்னார்.

சர்க்கார் பாஷாந்தர உத்தியோகஸ்தரான (Telugu Translator) ரங்கய்ய செட்டியாரவர்கள்:—தாம் அந்த பிரசங்கங்களை இங்கிலீஷில் சரியாய் மொழிபெயர்த்ததாகவும், ராவணனை அடிக்கடி மிகபராக்கிரமசாலியாக அநேகர் புகழ்வதுண்டெனவும், இராவணனை பிரதாபலிங்கேசுவரனென்று அழைத்ததாக தான் கேட்டதில்லையென்றும் சொன்னார்.

இன்ஸ்பெக்டர் ரங்கசாமி அய்யர் சொன்னதாவது:—நான் மூர்மார்க்கெட் மீடிங்கில் இருந்தேன். 1000 பேர் இருந்தார்கள். குற்றவாளி எனக்குத் தெரியும். தெலுங்கில் பிரசங்கித்தார். அவர் சொன்னதை எழுதினேன். இன்னொரு மீடிங்கிலும் நான் இருந்தேன்.

நான் 15 வருஷம் ஸர்விஸுடையவன். எனக்கு குறுக்கெழுத்து (Shorthand) தெரியாது. ஒரு விளக்கு என்னெதிரில் இருந்தது. (எழுதினமாதிரியை விவரித்தார்.) ருஷியாகாரரையும் ஜர்மானியாகாரரையும் குற்றவாளி இந்த சந்தர்ப்பத்தில் சொன்னரென்று சொல்லத்தெரியாது. இங்கிலீஷ்காரர் இந்தியாவை விட்டால் ருஷியாகாரர் பிடித்துக்கொள்வார்கள் என்று குற்றவாளி சொல்லியிருந்தால் நான் அதை எழுதிக்கொண்டிருப்பேன். மற்றைய உத்தியோகஸ்தர்கள் எழுதினதுடன் நான் எழுதினதை ஒன்றுசேரபார்க்கவில்லை. எங்களுக்கு சமயம் வாய்க்கவில்லை. மீடிங்கானவுடன் எங்கள் வீடங்களுக்குப் போய்விட்டோம். தென்னிந்தியாவில் ஸ்ரீராம ராவணாதி சங்கதிகள் எல்லாருக்கும் தெரியும். அங்கு கூடியிருந்தோருக்குந் தெரிந்திருக்கவேண்டும்.

சப் இன்ஸ்பெக்டர் கோதண்டராம முதலியார் சொன்னதாவது:—மூர்மார்க்கெட் மீடிங்குக்கு உத்தரவுபடிக்கு போனேன். 1000 பேர் இருந்தார்கள். குற்றவாளி தெலுங்கில் பிரசங்கித்தார் (எழுதினதை வாசித்தார்).

மாலை ஆறு மணி முதல் 8 மணி வரைக்கும் மீடிங்குநீடித்திருந்தது. ராவணன் லங்கைக்கதிபதி. மீடிங்



மதராஸ் ஹைகோர்ட் செஷன்ஸ் மில்லர் துரை முன்பாக, ராஜநிந்தனை வியாச்சியம்.

கில் கோலாகலமுண்டாயிற்று. சர்க்காரைப்பற்றி சொன்னவிடத்து, "வெட்கம்" என்று கத்தினார்கள். மே மாதம் மீடிங்கிலும் நானிருந்தேன். 3000 பேரிருந்தார்கள். இன்னும் வேறே போலீஸ் உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள் (பிரசங்கத்தை வாசித்தார்). மார்ச்சு மாத மீடிங்கிலும் நானிருந்தேன். ஊர்கோலத்துடன் வாத்தியம் வேண்டுமென்று கேட்டார்கள். லைசென்ஸானது கம்மிஷனரவர்களால் மறுக்கப்பட்டது. ராவணனைப்பற்றிச் சொன்னதைக் கேட்டேன். குற்றவாளி சென்னை ஜனசங்கத்து மெம்பர். அதன் காரியதரிசியும் வந்திருந்தார். நான் எழுதியதை மற்றையவரோடு ஒன்றுசேரப் பார்க்கவில்லை. ஜூன் மாதம் 2௳ மீடிங்கு மானாபிமானமும் தேசாபிமானமும் பற்றியதல்ல.

சப் இன்ஸ்பெக்டர் ராமநரச அய்யர் சொன்னதாவது:—எனக்கு குறுக்கெழுத்து தெரியும். 4 வருஷம் சேலம் டிஸ்டிரிக்ட்டு கோர்ட்டில் குறுக்கெழுத்து கிளார்க்காக இருந்தேன். அப்புறம் ஒரு வருஷம் பேட்ரியட் பத்திராதிபராபீஸில் இருந்தேன். தெலுங்கு தெரியும். சமுத்திரக்கரையோர மீடிங்குக்குப் போயிருந்தேன். 3000 ஜனங்களிருந்தார்கள். குற்றவாளி தெலுங்கில் சொன்னதை எழுதிக்கொண்டேன். (எழுதினதை வாசித்து, எழுதினமாதிரி சொல்லுகிறார்). ஸிவாஜி படத்தை ஒருவன் கொணர்ந்தான். ஸ்வராஜென்பதைப்பற்றி எனக்குத் தெரியும்.

டைம்ஸ் பத்திரிகையின் ரிபோர்ட்டரான கிருஷ்ணசாமி அய்யர் சொன்னதாவது:—பீச்சு மீடிங்கில் நானிருந்தேன். ராமநரச அய்யரும் இருந்தார். பத்திராதிபர் என்னை அங்கே போகச்சொன்னார். குற்றவாளி அங்கே சொன்னதின் தாத்பரியத்தைத்தான் நான் எழுதினேன். நான் எழுதினது எழுதினபடியே டைம்ஸ் பேபரில் வெளியாயிற்று; வெளிச்சமிருந்தது. 3000 பேரிருந்தார்கள். ஸிவாஜி படம் ஒன்றிருந்தது. ஸ்வராஜிய விவரத்தைப்பற்றி நான் கேட்டிருக்கிறேன். ராமாயணத்தில் நிகழ்ந்தவை எனக்குத் தெரியும். ஒன்றாயிருந்தோமானால் பெரிய காரியங்கள் முடிக்கலாம் என்று குற்றவாளி சொன்னார். "நாம் அநேகர். எல்லாரும் எச்சில் துப்பினால், அந்த எச்சிலில் ஐரோப்பியர் அமர்ந்து விடுவார்" களென்று குற்றவாளி சொன்னார்.

டைம்ஸ் பத்திராதிபர் ராமினி துரையவர்கள் சொன்னதாவது:—கிருஷ்ணசாமி அய்யர் என் ரிபோர்ட்டர்களிலொருவர். இவர் ஸிவாஜி பிறந்தநாள் மகோற்சவ பிரசங்கத்தைப்பற்றி என் பத்திரிகைக்கு எழுதினார். எச்சிலைப்பற்றி அவர் சொல்லியது எனக்கு ஞாபகமிருக்கிறது. இந்தியாவில் ஸ்வராஜியக்காரரென சிலர் இருக்கிறார்கள். அந்த எச்சிலைப் பற்றி நான் எழுதினவற்றிலும் எடுத்துக் காண்பித்திருக்கிறேன்.

சென்னை பூஸ்திதிக்காரர் அஸ்ஸோஸியேஷனுக்கு காரியதரிசியாகிய வெங்கடரங்கராவ் அவர்கள் சொன்னதாவது:—பீச் மீடிங்கில் நான் இருந்தேன். அன்றைக்கு குற்றவாளி தெலுங்கில் ஸிவாஜியை புகழ்ந்து பேசினார். ஸிவாஜியை மகான் என்றும், அவரைப்போல் நாமிருக்கவேண்டும் என்றும், நாம் ஒன்றாய் இருக்கிறதுதான் பலம் என்றும், ஒன்றாய் இருந்தால் நாம் முன்னுக்கு வரக்கூடுமென்றும் சொன்னார். இதற்கு உதாரணமாக, இந்தியர்கள் துப்பினால் அதில் ஐரோப்பியர் அமிழ்ந்துவிடுவார்கள்; இராஜகோபாலாசாரியார் அவர்களும், பவாநந்தம் பிள்ளையும் இருந்தார்கள்; பாய்காட்டைப்பற்றி பேசியது எனக்கு ஞாபகமில்லை; இராவணன் இறந்துவிடுவான் என்று தெரிந்தும் தான் செய்த செய்திகளையே செய்துவந்தான். சண்டையும் போட்டான். சுற்றிக்கேட்டுக்கொண்டிருந்தவர்களெல்லாம் பசங்கள். கோலாகலம் ஒன்றும் ஆகவில்லை என்று சொன்னார்.

இன்ஸ்பெக்டர் வெங்கடராமய்யர் சொன்னதாவது:—மார்ச்௴ நடந்த பீச் மீடிங்கில் நானிருந்தேன். 5000 பேர் வந்திருந்தார்கள். பாலை விடுவித்ததற்காக பாலினுடைய படத்தை மீடிங்கில் காண்பித்தார்கள். நான் பீச் வழியாகப் போய்க்கொண்டிருந்தேன். அப்பொழுது நான் யூனிபாரம் போடவில்லை. எனக்குத் தெலுங்கு தெரியும். 10௳ மதனபல்லிக்குப் புறப்பட்டேன். 11௳ மதனபல்லியிலிருந்து ரிபோர்ட்டை எழுதியனுப்புவித்தேன். ரிபோர்ட்டு எழுதும்பொழுது குற்றவாளி சொன்னது ஞாபகமிருந்தது. (ரிபோர்ட்டை வாசித்தார்கள்). 9 மணி வரைக்கும் மீடிங்கிருந்தது. இதைப்போன்ற காகிதங்கள் அங்கே கொடுத்தார்கள்.

நான் தஞ்சாவூரான், நான் தெலுங்கு வாசிக்கவில்லை. நான் போலீஸ் ஸுபரின்டென்டெண்டுக்கு கிளார்க்காக 5 வருஷமிருந்தேன். குற்றவாளி சொன்னது நான் அறிவேன். குற்றவாளியை பிராசிக்யூட் செய்வார்களென்று தெரியாது. சுப்பிரமணியய்யர் கூட பேசினார். அன்றைக்கு சங்கீதங் கிடையாது. ஸங்கீத லைசென்சு போலீஸ் கமிஷனர் கொடுக்கமாட்டேனென்றாரென்று குற்றவாளி சொன்னார். நான் மதனபல்லியில் 20௳ வரைக்கும் இருந்தேன். அந்த மீடிங்கில் போலீஸ்காரர் கிடையாது. லாவுக்கு விரோதமாய் நடக்கும்படி குற்றவாளி சொல்லவில்லை. நான் அப்பொழுது டைம்ஸை பார்க்கவில்லை. ஹிந்துவையும் ஸ்டாண்டர்டையுந்தான் படித்தேன். என்னுடைய ரிபோர்ட்டை 10௳யில் எழுத ஆரம்பித்தேன்.

கன் துரையவர்கள் சொன்னதாவது:—மெரினாவில் என் வண்டியின்மேல் கல்லெறிந்தது ஞாபகமிருக்கிறது. இது $6\frac{1}{4}$ மணிக்கு. என் பெண்ஜாதியும் பெண்ணும் அப்பொழுதிருந்தார்கள். 4 கற்கள் எறியப்பட்டன. ஒன்று என் பெண்ஜாதியின்மேலும், ஒன்று என்மேலும். 500 அல்லது 600 பேரிருந்தார்கள். உடனே ரிபோர்ட்டு செய்தேன்.

இன்ஸ்பெக்டர் வெங்கடேசுவரர் சொன்னதாவது:— 9௳ பீச்சு மீடிங்கிலிருந்தேன். ஒரு ஊர்கோலத்தில் வாத்தியமிருந்தது. குற்றவாளி தெலுங்கில் பேசினார். நானாக அங்கே போனேன். அப்பொழுது நோட்டெடுக்கவில்லை. மற்றைய நாள் ரிபோர்ட்டு எழுதியனுப்புவித்தேன்.

நான் மதுரையான். நான் தெலுங்கு படித்திருக்கிறேன். ஒருவரும் என்னை அங்கே போகச்சொல்லவில்லை. வேடிக்கை பார்க்கப்போனேன். அங்கே போனபிறகு ரிபோர்ட்டு செய்யலாமென்று தோன்றிற்று, இதை விட்டிலெழுதினேன்.

ரிபோர்ட்டர் தாசரதி நாயுடுவும், இன்ஸ்பெக்டர் ஹார்ட்னெட்டும், ரிபோர்ட்டர் சாமிநாதராவும் சாக்ஷிசொன்னார்கள். பின்னர் சப் இன்ஸ்பெக்டர் நாராயணசாமி அய்யர் சென்னை ஜனசங்கம் தெரியுமென்றும், தொளசிங்க பெருமாள் கோவில் தெருவிலிருக்கிறதெனவும், மேமீ மீடிங்கில் 3000 பேரிருந்தார்களெனவும், குற்றவாளி சங்கத்தை சேர்ந்தவரென்றும், மற்றோர் மீடிங்கில் குற்றவாளி போலீசாரை வைதாரெனவுஞ் சொன்னார்.

குற்றவாளியாகிய சுரேந்திரநாத் ஆரியா சொன்னதின் சங்கிரகம்:—

(1) தெலுங்கில் 3 மீட்டிங்கிலும் நான் பிரசங்கஞ் செய்தேன்.

(2) நான் அப்பொழுது சொன்னது ஞாபகமில்லை, ஆனால் லாவுக்கும் சர்க்காருக்கும் விரோதமாய் ஒன்றுஞ் சொல்லவில்லை.

(3) என்னுடைய வேலை ஆத்ம விவேகத்தைச் சேர்ந்தது, முன்னிருந்தோரை யுதாரணமாகக் காண்பிக்கவேண்டியதாகவிருந்தது. லாவுக்கு விரோதமானதை செய்யும்படி நான் சொன்னதே கிடையாது.

(4) போலீசார் சொல்லுகிறது சரியல்ல, அநேகம் விட்டார்கள். இன்னுமநேகம் சேர்த்தார்கள். (உதாரணமாக ராவணனைப்பற்றி சொன்னதைப் பற்றியும், எச்சிலைப்பற்றி சொன்னதையும், சங்கீத மறுப்பைப்பற்றியும் சொன்னதையும் விவரித்தார்.)

(5) சர்க்காரவர்களின் பேரிலாவது இங்கிலீஷ்காரர்களின் பேரிலாவது எனக்கு யாதொரு எரிச்சலுங் கிடையாது. எனக்கு சிநேகிதர்களில் அநேகர் ஐரோப்பியராவார்.

ஆகையால் நான் கோர்ட்டாரவர்களை என்மேல் சாட்டப்பட்ட குற்றங்களினின்று விடுவிக்கும்பொருட்டு கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிருஷ்ண பண்டிதர் என்னும் வைத்தியர் குற்றவாளி தரபில் சொன்னதாவது:—அந்த மீட்டிங்கில் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டியதென்று சொன்னார் (மண்டோதரியின் சங்கதியைச் சொன்னார்). பிறகு சுவதேசியத்தைப்பற்றிச் சொன்னார். (விவரித்தார்.) நாம் ஒன்றாயிருக்கவேண்டுமென்றார். (குற்றவாளி சொன்னதை விவரமாகச் சொன்னார்.) குற்றவாளி ராவணனையும் சர்க்காரையும் ஒப்பாகச் சொல்லவில்லை. சர்க்காருக்கு ஸிவாஜியண்டை பயமென்று சொல்லவில்லை. ருஷியாகாரரைப்பற்றி குற்றவாளி பேசினார். இன்றைக்கு சொன்னாரென்பது தெரியாது. சர்க்காரை தூஷணையாகச் சொல்லவில்லை.

ஏழெட்டு மீட்டிங்கிலிருந்தேன். நோட்டெடுக்கவில்லை. நெடுக பேசிக்கொண்டிருந்தாராகையால், தேதிகள் எனக்கு ஞாபகமில்லை. குற்றவாளியோடு நான் பேசவில்லை. இரண்டு சந்நியாசிகள் அன்றைக்கு சுதேசியத்தைப்பற்றி பேசினார்கள். நான் இதை வேறே யாருக்குஞ் சொல்லவில்லை. இரண்டுபேர் என்னைக் கேட்டார்கள். அவர்களுக்கு நான் எல்லாம் சொல்லவில்லை. எனக்கு தெலுங்கு தெரியும்.

குற்றவாளி வக்கீல் பிறகு ஜூரிமாருக்கு குற்றவாளி தருபில் கேஸ் சங்கதிகளையும், ராஜநிந்தனை லாவும் விவரமாய் எடுத்துக் காட்டினார்.

பப்ளிக் பிராசிக்யூடரானவர் இதற்கு மறுமொழிபகர்ந்து பிராசிக்யூஷன் தருபில்பேசினார்.

பிறகு, ஜட்ஜவர்கள் இந்த கேஸிலுள்ள நியாயங்களைப்பற்றி ஜூரிமாருக்கு விசதமாயும், விவரமாயுஞ் சொன்னார்.

ஜூரிமார் "குற்றவாளியின்மேல் சாட்டியுள்ள குற்றங்களுக்குள்ளாகிறான்" என்றதின்பேரில், ஜட்ஜி துரையவர்கள் 5 வருஷ காவல் தண்டனை விதித்தார்.

மதருஸ் ஹைகோர்ட்டு.

ஸர் ஆர்னல்டு ஒயிட், ஜஸ்டிஸ் மில்லர் முன்பாக.
Case.—

ராமன் செட்டியார்——பிரதிவாதி——அப்பீல் செய்தவர்.

கோபாலாசாரி——வாதி——

இந்த கேஸில் 7000 ரூபாயுக்கு ஒரு பிராமிஸரி நோட்டை பிரதிவாதி எழுதிக்கொடுத்தார். இப்பொழுது அதனால் கொடுக்கவேண்டிய தொகையை மீட்கும்படியாக வாதி வியாஜ்ஜியம் தொடுத்தார். பிரதிவாதியானவர் தஞ்சாவூரில் இருப்பவர். அங்கேதான் இந்த பிராமிஸெரி நோட்டு எக்ஸிகூட்டானது. வாதியானவர் கும்பகோணத்தில் வாசம்செய்திருந்தார். கும்பகோணம் கோர்ட்டில் கேஸ் கொண்டுவரப்பட்டது. இதற்கு பிரதிவாதியானவர் அந்த கோர்ட்டார் அதிகாரத்திற்குட்பட்டதல்ல வென்று ஆக்ஷேபித்தார். ஸப் ஜட்ஜானவர் தனக்கு அதிகாரமுண்டென்று, வாதி தரப்பில் டிக்கிரி செய்தார். டிஸ்டிரிக்டு கோர்ட்டாரவர்கள் கீழ் கோர்ட்டாருடைய தீர்ப்பை ஊர்ஜிதம்செய்தார். பிரதிவாதி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

ஸர் ஆர்னல்ட் வொயிட் தீர்ப்பு:—இந்த பிராமிஸெரி நோட்டானது அண்டிமாண்டாக இருக்கிறதே தவிர, இவ்விடத்தில் பணங்கொடுக்கவேண்டுமென்று சொல்லவில்லை. இந்த வியாஜ்ஜியம் கும்பகோணத்தில் தொடுக்கப்படுகிறது. அந்த கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டா இல்லையாவென்று இப்போது யோசிக்கவேண்டியதாயிருக்கிறது. ஸிவில் புரொஸீஜர் கோர்ட்டின் 17வது செக்ஷன் பிரகாரம் அந்தந்த கேஸில் வியவகாரகாரணம் எங்கெங்கே உண்டாகிறதோ அந்த இடத்திலேதான் கேஸ் தொடுக்கப்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. *Reynolds vs Coleman* (*36 ch D.* 453) கேஸைப்பார்க்கவும் இங்கிலீஷ் ரூல்களில் தெரியப்படுத்துவது என்னவென்றால், கண்டிராக்டின் நிபந்தனைகளையும் அப்பொழுதிருந்த சங்கதிகளையும் யோசித்துப்பார்த்து, எந்த அதிகாரத்துக்குள் அதற்கு செலுத்தவேண்டிய தொகையை எங்கே செலுத்தவேண்டுமென்று தெரிவிக்கின்றது. இந்த கேஸில் கும்பகோணத்தில்தான் கொடுக்கவேண்டுமென்று புலப்படுகிறது. வாதி அங்கே இருக்கிறானென்பது போதாதகாரணம் என்று எனக்கு புலப்படுகிறது இந்த நோக்கம் அவுஸ் ஆவ் லார்டில் சொன்ன நோக்கத்தோடு ஒத்திருக்கிறது.

ஆகையால் கும்பகோணம் கோர்ட்டாருக்கு இந்த கேஸை அங்கீகரிக்க உத்தரவு இல்லை என்று எண்ணுகிறேன். இந்த அப்பீலில் பிரதிவாதி ஜெயிக்கிறார் இனி சரியான கோர்ட்டில் வாதியானவர் பிலெயிண்டை தாக்கல் செய்யவேண்டியது. ஜஸ்டிஸ்மில்லரும் இந்த அபிப்பிராயத்தை ஒத்துக்கொண்டார்.

மதருஸ் ஹைகோர்ட்டு.

ஜஸ்டிஸ் வாலிஸ்-ம் சங்கரனாயர் அவர்களும் இந்தக் கேஸில் டிக்கிரியை தன்பேரில் மாற்றிக்கொண்டவன் கோர்ட்டார் முன்னேவந்து தன்னைமாற்றிக்கொண்ட வாதியா யங்கீகரித்தால் எக்ஸிகீயூஷன் பெடிஷன் தாக்கல் செய்கிறேன் என்று சொன்னான். இந்த டிக்கிரியின் தேதி 1900ஹு ஆகஸ்ட்டு மாதம் 15-ந்தேதி. டிக்கிரியின் பேரில் 1904 வருஷம் வியாஜ்ஜியம் தொடுத்தான். ஆனால் இதன் மத்தியில் மேலே சொல்லிய பிரகாரம் 1902ம் வருஷம் பிப்பிரவரி மாசம் 15ந்-தேதி மாற்றிக்கொண்ட வாதியாக அங்கீகரிக்கப்பட்டான்.

நாகபட்டணத்திய சப் கோர்ட்டாரவர்கள் டிக்கிரி தேதியிலிருந்து மூன்றுவருஷம் ஆய்விட்டதாகையால் லிமிடேஷன் தவணை கடந்துவிட்டதென்றும் மத்தியில் செய்த டிரான்ஸ்பர் அப்பிளிகேஷன் தேதியிலிருந்து மூன்றுவருஷம் கணக்கு போடக்கூடாதென்றும் சொன்னார்.

தீர்ப்பு.—சப்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்தை நாங்கள் ஒத்துகொள்ளவில்லை ஸிவில் புரோஸிஜர் கோடின் 232-வது செக்ஷன் இப்படிபட்ட அப்ளிகேஷன்களை நிராகரிக்கவில்லை. ஆகையால் இந்த கேஸில் டிரான்ஸ்பர் அப்பிளிகேஷனானது எக்ஸிகூஷன் செய்வதுக்குண்டான ஒரு மார்க்கமாக எண்ணவேண்டியதால், இந்த கேஸ் லிமிடேஷன் தவணை கிடைக்கவில்லை. ஆகையால் கீழ் கோர்ட்டாருடைய ஆர்டர் தள்ளப்படுகிறது (அண்ணாமலை முதலி VS. ராமய்யர் 31 சென் 234.)

ஸெகண்டு அபீல்கள் கர்னூல்.

மதறாஸ் ஹைகோர்ட்டு.

சீப் ஜஸ்டிசும், ஜஸ்டிஸ் மில்லர் முன்பாக ஸெகண்டு அபீல், 1905-ம் வருஷத்திய 95-வது கேஸ்.

இந்த கேஸில் வில்லேஜ் சர்விஸ் இனாம் என்று வகுக்கப்பட்டிருந்த நிலங்கள் 1889-ம் வருஷத்தில் மற்றொருவனுக்கு விற்கப்பட்டன, 1891-ம் வருஷத்தில் அந்த கிராமமானது விடுதலை ஆக்கப்பட்டது. முதலில் டிஸ்டிர்க்ட் முனிஸிப் கோர்ட்டில் தாகல் செய்யப்பட்டு கர்னூல்ஜில்லா கோர்ட்டில் அபீல் செய்யப்பட்டு, அபீல் ஹைகோர்ட்டாரிடத்தில் வந்தது.

ஹைகோர்ட்டாருடைய தீர்ப்பு:—இந்த பூமிகளானது வில்லேஜ் சர்விஸ் இனாமாக வகுக்கப்பட்டு இருந்தன. இரண்டாம் பிரதிவாதி 1889-வது வருஷத்தில் விலைக்கு விற்றான். இனாமானது 1891-ம் வருஷத்தில் விடுதலை செய்யப்பட்டது (Enfraanehised). 1892-வது வருஷத்தில் வாதியினிடத்தில் குதுவை வைக்கப்பட்டது. இந்த இனாமால் நிலங்கள் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் சரி, அந்த நிலத்தின்பேரில் கொடுக்கவேண்டிய தீர்வையை ரிமிஷன் செய்வதற்கிருந்தாலும் சரி, அந்த நிலங்களை டிரான்ஸ்பர் செய்தால் இனாம்கூட டிரான்ஸ்பர் செய்ததாக எண்ணவேண்டும். தெளிவாக பத்திரத்தில் இனாம் மாத்திரம் டிரான்ஸ்பர் செய்யவில்லை என்று இருந்தால், பூமி மாத்திரம் டிரான்ஸ்பர் செய்ததாக எண்ணவேண்டும். இந்த கேஸில் அப்படி இனாமை மீட்டுக்கொள்ளவேயில்லை. 1831-ம் வருஷத்து 6-வது ரெகுலேஷன் பிரகாரம் கிராம உத்தியோகஸ்தராது வருமானத்துக்காக இருக்கும் இனாம்கள் டிரான்ஸ்பர் செய்தால் அச்செய்கை செலாவணியாகாது. ஆகையால், இந்த கேஸில்கூட இனாமாவது நிலமாவது எதுவாவது பராதீனப்படுத்தியிருந்தால் அது லாவுக்கு விரோதமானது.

திருநெல்வேலி

ஜஸ்டிஸ் வாலிஸ்-ம் மதறாஸ் ஹைகோர்ட்டு ஜஸ்டிஸ் மில்லரும்.

1907-ம் வருஷத்து ஆர்டர். நெ. 6. ந. ப. ந. ம. ம. சிதம்பரம் செட்டியார். *VS.* திருநெல்வேலி ஷுகர் மில்ஸ் கம்பெனி.

இந்த கேசு இந்தியன் கான்டிராக்டு ஆக்டு 221 செக்ஷன் கீழ் கொண்டுவரப்பட்டது. அந்த செக்ஷன் சொல்லுகிறதாவது:—வேறே யாதொரு ஒப்பந்தம் இல்லாதிருக்கும் பக்ஷத்தில் ஏஜெண்டுக்கு கமிஷன் கொடுக்க வேண்டியிருந்தாலும் சரி, ஏஜெண்டு முதலாளியின் தரப்பில் பணச்செலவு செய்திருந்தாலும் சரி, இப்படிப்பட்ட கேஸ்களில் தனக்கு வரவேண்டிய தொகைகள் சேருமளவும் முதலாளியினுடைய தாவரஜங்கம சொத்துகளாவது, சாமான்களாவது பத்திரங்களாவது தன் கையில் இருந்தால் அவைகளை தொகை சேருமளவும் வைத்துக்கொள்ள லாயக்குள்ளவனாவான்.

ஹைகோர்ட்டு தீர்ப்பு:—மனுதாரருக்கும் கம்பெனிக்கு முண்டான ஒப்பந்த பத்திரத்தைப் பார்க்குமிடத்து, இந்தியன் கான்டிராக்ட்டு ஆக்டின் 221 செக்ஷன் பிரகாரம் நடக்கக்கூடாதென்று ஒன்றும் புலப்படவில்லை. அந்த செக்ஷன் பிரகாரம் மனுதாரருக்கு முதலாளியினுடைய சாமான்களையும் சொத்துக்

களையும் ஏஜெண்டுக்கு வரவேண்டிய தொகைகள் சேருமளவும் ஏஜெண்டானவன் தன் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொள்ள சுதந்தர முள்ளவனுவான். கம்பெனிகள் ஆக்டின் 149-வது செக்ஷன் இப்படிப்பட்ட செக்கூரிடியாக வைத்து இருக்கும் கேஸுகளில் பாதிக்காது. ஆகையால் அந்த ஸொத்துகளின் பேரில் மனுதாரருக்கு ஈடு (lien) கிடையாது என்ற ஜில்லா கோர்டின் தீர்ப்பு தவராகும். இந்த காரணங்களுக்கு ஜில்லா கோர்டாருடைய ஆர்டர் தள்ளப்பட்டு மறுபடியும் இந்த கேஸ் அவரிடத்தில் திரும்பி யனுப்பப்படுகின்றது. அந்த விசாரணையில் மனுதாரன் முதலாளிக்காக செலவழித்த தொகையையும், ஏஜெண்டாக மனுதாரன் இன்னென்ன சாமான்களையும் சொத்துக்களையும் வைத்திருந்தானென்றும், எவ்வளவுதொகைக்கு அந்த சொத்துகள் பிடிக்கப்பட்டனவென்றும் நிர்ணயிக்கவேண்டியது. புதிதாக சாக்ஷிகள் கொண்டுவர உத்தரம் அளிக்கப்படுகிறது. ஹைகோர்ட்டுக்கு செய்த இந்த அபீல் காஸ்டுடன் மனுதாரன் தருப்பில் தீர்க்கப்படுகிறது.

THE DEVAKOTA ZEMIN CASE.

தேவகோட்டை ஜமீன் கேஸ்.

சொற்ப தினங்களுக்குமுன் ராமநாதபுரத்தின் ஜமீனர் ராஜா அவர்கள் தேவகோட்டை ஜமீன்தாராகிய ம-ா-ா-ஸ்ரீ. அ. வ. அ. ர. அருணசலம் செட்டியாரின்மீது மேற்படி தேவகோட்டை ஜமீனை ஷை ஜமீனர் ராஜாவின் தகப்பனர் முதல் பிரதிவாதி ஷை அருணசலம் செட்டியாரின் தகப்பனருக்கு செய்து [illegible]தானம் செல்லாதென்றும், அதை ரத்து செய்து ஷை தேவகோட்டை ஜமீனை தன்வசம் ஒப்புவிக்கும்படிக்கு செய்த தாவாவை கீழ் மதுரை சப் கோர்ட்டார் ஷை வியாஜ்ஜியம் காலதாமச நிர்ணய சட்டப்படி (Indian Limitation Act X of 1877.) காலதோஷம் வந்தபிறகு செய்யப்பட்டதென்றும் வாதி ஜமீனர் தன் தாவாவில் சொல்லியபடி ஷை தேவகோட்டை ஜமீனை வாதியின் தகப்பனர் பிரதிவாதி செட்டியாரின் தகப்பனருக்கு பராதீனம் செய்ய மேற்படியாருக்கு அதிகாரம் கிடையாதென்று சொல்லியதை ருஜு செய்யவில்லையென்றும், தாவாவை செலவுடன் தள்ளுபடி செய்துவிட்டதாக தெரிய வருகிறது.

Powers of the High Cort. லெட்டர்ஸ் பேடெண்ட் 15-வது செக்ஷன்படி ஹைகோர்ட்டாருக்குள்ள அதிகாரம்.

MADRAS HIGH COURT.

மதுருஸ் ஹைகோர்ட்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரனையர், மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துல் ரஹீம் ஜட்ஜிகள்.

ஆகஸ்டுமீ 11௳ ஷை ஜட்ஜிகளின் முன்பால் நடந்த கிரிமினல் ரிவிஷன் கேஸில் கிரிமினல் ப்ரோஸீஜர் கோட், 476 ஸெக்ஷன் பிரகாரம் ஒரு மாஜிஸ்திரேட் முன்பாக நடக்கும் நடவடிக்கைகளை (Proceedings) அதன் சம்பந்தமாய் நடக்கும் சிவில் அப்பீல் முடிகிறவரையில் நிருத்திவைப்பதற்கு ஹைகோர்ட்டாருக்கு லெட்டர்ஸ் பேடெண்ட் 15-வது செக்ஷன் பிரகாரம் அதிகாரம் உண்டென்று தீர்ப்பு செய்யப்பட்டது.

கேசின்விபரம்:—நீலகிரி ஸப் கோர்ட்டில் ஜோகையா என்னும் ஒருவன் தஸ்தவேஜின்பேரில் தனக்கு பணம் வசூலாகவேண்டுமென்று சிவில் வியாஜ்ஜியம் செய்தான். இந்த வியாஜ்ஜியத்தை விசாரணை செய்கையில் தாவாவில் தாக்கல் செய்திருந்த தஸ்தவேஜை மோசஞ் செய்யவேண்டுமென்கிற எண்ணத்துடன் ஒருவன் கையெழுத்தைப்போல் தப்பு கையெழுத்துப்போட்டு (Forgery) சிஷ்டித்த தஸ்தவேஜாக ஸப் கோர்ட்டார் கண்டு அந்த தாவாவின் வாதியை பிராசிகியூஷன் செய்யும்படியாய் உத்தரவு செய்தார். இந்த பிராசிகியூஷன் கேஸ் மாஜிஸ்திரேட் முன்பால் நடந்துக்கொண்டிருக்கையில் வாதி சப் கோர்ட்டார் தீர்ப்பின்பேரில் சிவில் கோர்ட்டுக்கு அப்பீல் செய்திருந்தான். அந்த சிவில் அப்பீல் முடிகிறவரையில் கிரிமினல் பிராசிகியூஷனைச் சேர்ந்த நடவடிக்கைகளை நிருத்திவைக்கும்படி மாஜிஸ்திடிரேட்டுக்கு மனுசெய்துக்கொண்டான். ஆனல் மாஜிஸ்திரேட் அவர்கள் நிருத்திவைக்கப்படாதென்று அம்மனுவைத் தள்ளிவிட்டார். அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டுக்கு இந்த மனுசெய்துகொண்டான். ஹைகோர்ட்டார் மாஜிஸ்திரேட்டுக்குமுன்பால் நடக்கும் நடவடிக்கைகளை சிவில் அப்பீல் முடிகிறவரையில் நிருத்திவைக்கும்படி உத்தரவு செய்தார்கள்.

KUMBACONUM JOINT MAGISTRATE COURT.

கும்பகோணம் ஜாய்ன்ட் மாஜிஸ்திரேட் கோர்ட்.

மிஸ்டர். எ. எப். ஜி. மாஸ்கார்டி, ஐ. சி. எஸ். ஜாய்ன்ட் மாஜிஸ்திரேட்.

போலீஸ் உத்தியோகஸ்தரை எதிர்த்து சண்டை செய்தது.

இந்த கேஸில் அநேகர் ஒன்று கூடி கலகம் செய்து அபாயகரமான ஆயுதங்களைக்கொண்டு மிக்க உபத்திரவமுள்ள காயங்களை உண்டாக்கி குற்றம் செய்ததாக அக்கூட்டத்தைச் சேர்ந்த 11 பேர்வழிகளின் பேரில் குற்றஞ்சாட்டி மேல்செப்பிய மாஜிஸ்திரேட் முன்பால் விசாரணை நடந்தது.

கேசின் விபரம்.—சிலமாதங்களுக்கு முன் கும்பகோணம் தாலுக்காவைச்சேர்ந்த திருநாகேஸ்வரம் தேவாலயத்தின் ட்ரஸ்டிகளுக்குள் அந்தத் தேவாலயத்தைப் பரிபாலனம் செய்துவரும் விஷயங்களைப் பற்றி சில சச்சரவுகள் நேரிட்டு தேவாலயத்தைச் சேர்ந்தவர்கள் இருகட்சியாய்ப் பிரிந்திருந்தார்கள். அதில் ஒரு கட்சிக்குத் தலைமையாயுள்ள ம-ா-ா-ஸ்ரீ. முத்தய்ய செட்டியென்னும் மேற்படி தேவாலயத்தின் ஒரு ட்ரஸ்டி அந்த தேவாலயத்திற்கு இன்னொரு

ட்ரஸ்டியான ம-ா-ா-ஸ்ரீ. இராமசாமிபிள்ளை யென்பவர் அத்தேவாலய விஷயங்களை கிரமமாய் நியாயப்படி பரிபாலனம் செய்துவரவில்லையென்று புகாரா உண்டானபடியால் அந்த தேவாலயத்தின் கமிட்டியார்கள் மேற்படி தேவாலயத்தின் விஷயங்களை பரிபாலனம் செய்வதற்கு பிரத்தியேகமாய் ஒரு மானேஜரை ஏற்படுத்தினர்கள். இவ்விதமாய் ஒரு மானேஜர் ஏற்படுத்திய பிறகு தினேதினே கலகமும், சச்சரவும் விருத்தியாயிக்கொண்டு வந்து, ஒரு கட்சிகாரர்கள் இன்னொருகட்சிகாரரின்பேரில் பிராதுசெய்து, ஒருவருக்கொருவர் போட்டியாகவே விண்ணப்பங்கள் செய்துக்கொண்டு வந்தார்கள். கடைசியாய் சென்ற ஏப்ரல்மீ 19௳ அபாயகரமான ஒருபெரிய கலகம் நேரிட்டது. அதன் விபரம் அடியிற் காண்க.

மேற்சொல்லிய விண்ணப்பங்களில் ஒன்றின் வரலாற்றை விசாரிப்பதற்காக திருவிடமருதூர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் மேற்செப்பிய திருநாகேஸ்வரமென்னும் கிராமத்திற்குச்சென்று சாதாரணமாய் தான் கவனிக்கவேண்டிய போலீஸ் டூட்டிகளை செய்தானபிறகு ஒரு விண்ணப்பத்தில் கையொப்பம் செய்த நபர்களை வரவழைத்து அதில் 7ம் குற்றவாளியை (எதிரியை) தேவாலயத்தினருகிலுள்ள ஒரு சத்திரத்தில் விசாரணை செய்தார். இவ்விதமாய் விசாரணை நடந்துக்கொண்டிருக்கையில் ம-ா-ா-ஸ்ரீ. இராமசாமி பிள்ளைக்கு உடந்தையாயிருந்த ம-ா-ா-ஸ்ரீ. சுப்பிரமணிய ஐயர் என்பவர், போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கிராமத்துக்குள்வந்து, விசாரணை செய்யும் சமாச்சாரத்தைத் தெரிந்துக்கொண்டு இராமசாமி பிள்ளை என்பவரை அழைத்துவந்து அவர் தரப்பு கேஸைத் தெரிவிக்க கும்பகோணம் சென்றார். அப்படியே இராமசாமி பிள்ளை தன்னுடன் பிரியாதி 3,4 சாக்ஷிகளை கூட்டிக்கொண்டு திருநாகேஸ்வரத்துக்குப் போய் சேர்ந்தார். அவர்கள் கிராமத்துக்குள் வந்து சேர்ந்தவுடன் அந்த கிராமத்தார் அநேகர் பெருங் கூட்டமாய்கூடிக்கொண்டு கற்களைப் பொறுக்கி அவர்களின்மேல் எறிந்து சண்டை செய்ய ஆரம்பித்தார்கள். அந்தக் கூட்டத்தில் கைதிகளும் இருந்தார்கள்; அதைக்கண்டு சப் இன்ஸ்பெக்டரும், இராமசாமி பிள்ளையும், அவருடைய கட்சியை சேர்ந்தவர்களும் சத்திரத்திற்குள்ளிருக்கும் கோபுரத்துக்குள் ஒளித்துக்கொண்டார்கள். அவ்விடத்திலும் அவர்கள்மீது சில கற்களை எறிந்தார்கள். இப்பெருங் கூட்டத்தார் செய்யும் கல்பாவை அடக்கமுடியாமல் அங்கிருந்தவர்களில் இராமசாமி பிள்ளை என்பவர் அந்த கிராமத்தார் எல்லோருக்கும் விரோதியானபடியால் இவ்விதமாய் செய்கிறார்களென்று சப் இன்ஸ்பெக்டர் அந்த இராமசாமி பிள்ளையை வெளியே ஓடிப்போய் விடும்படியாய்ச் சொன்னார். இராமசாமி பிள்ளை தன்னை காக்கும்படியாய் கேட்டுக்கொண்டார். அதன்பேரில் சப் இன்ஸ்பெக்டர் அங்கிருந்த ஜனங்களுக்கு தக்க புத்திமதிகளைச் சொல்லி நல்ல வார்த்தைகளினலும், பயமுறுத்தியும் கும்பலை சற்று நீக்கி வழி ஏற்படுத்திக் [illegible] சாக்ஷிகளை கடைந்தெ[illegible] அழைத்துக்கொண்டு போனார். அவர்கள் அவ்விடம் போனவுடன் ஜனங்கள் முன்னிலும் பெருங்கூட்டமாய்க் கூடிக்கொண்டு கற்களை எறிய ஆரம்பித்தார்கள். சப் இன்ஸ்பெக்டரோ, தன்னுடனிருந்த பீட் கான்ஸ்டேபில்களின் சகாயத்தைக்கொண்டு தன்னால் கூடியவரையில் அந்தப் பெருங்கூட்டத்தைக் கலைக்கத் தக்க முயற்சிகள் செய்துக்கொண்டிருக்கையில், அவருடைய தலையின்பேரில் ஒரு கல்லினல் அடித்து அவருடைய இடது புஜத்தின்பேரிலும் இன்னொரு கல்லினல் அடித்தார்கள். அந்த கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் சிலர், போலீஸ் கான்ஸ்டேபில்களுக்குத் தப்பி ஓடிப்போய் அவர்களுக்குப் பின்னலிருந்த பிரியாதியின் சாக்ஷிகளின்மீது சண்டைசெய்தார்கள். ஆரும் எதிரி இராமசாமி பிள்ளையை கத்தியால் குத்தும்படிக்கு இரண்டாம் எதிரியை உத்திரவு செய்ய, அவன் இராமசாமி பிள்ளையை பேனு கத்தியால் சிரசின்பேரில் குத்தினன். முதல் எதிரி ஒரு கல்லை எடுத்தெறிய அது அந்த இராமசாமி பிள்ளையின் முதுகின்பேரில்பட்டது. 5,7 எதிரிகள் சுப்பிரமணிய ஐயரை தடியால் மிக்க முறட்டுத்தனமாயடித்ததினல் அவருடைய கை ஒடிந்துவிட்டது. 8, 9 எதிரிகள் சுப்பிரமணிய ஐயரின் சிகையை பிடித்தடித்தார்கள். 3, 4, 6 எதிரிகள் இராமசாமி பிள்ளைக்கு உடந்தையாயிருந்த வேறொரு சிநேகிதர் சக்கிரபாணிராவின்பேரில் கல்லெறிந்தார்கள். கடைசியாய் இந்த சாக்ஷிகளெல்லோரும் ஓர் துலுக்கர் சந்தில் புகுந்து திருவிடமருதூருக்குத் தப்பி ஓடிப்போய் அவ்விடத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் பிராது செய்து பிறகு ஆஸ்பத்திரிக்குச் சென்று காய சர்ட்டிபிகேட்டுகள் வாங்கிக்கொண்டார்கள். இந்த சர்ட்டிபிகேட்டுகளும் வாஸ்தவமென்று ஆஸ்பத்திரி டிரெஸ்ஸரினல் ருசுவாயிற்று. மேற்செப்பிய சாக்ஷிகளினல் மாத்திரமல்லாமல், இன்னும் இதர ஏழு நபர்களினலும் பிராது ருசுவானபடியினல் மாஜிஸ்திரேட் அவர்கள், மேற்செப்பிய 11 கைதிகளும் ஒன்று சேர்ந்து அவர்களுக்குள்ள கருத்தை நிறைவேற்றவேண்டுமென்கிற எண்ணத்துடன் சட்டத்திற்கு விரோதமான ஓர் கூட்டத்தைச் சேர்ந்து அபாயகரமான ஆயுதங்களைக்கொண்டு துன்பகரமான உபத்திரவத்தை உண்டுபண்ணினர்களென்று அவர்கள்பேரில் குற்றஞ்சாட்டி சார்ஜ் ஏற்படுத்தினர். மேற்படி கேசுக்கு எதிரிகள் பின்வருமாறு எதிர்வாதம் கூறினர்கள்.—

அதாவது சென்ற ஏப்ரல் மாதம் 19௳ சுமார் நடுஜாம வேளையில் அநேக மிலேச்சர்களும், பறையர்களும் சுமார் 300 பேர்வழிகள் தடிகளை எடுத்துக்கொண்டு 2 போலீஸ் இன்ஸ்பெக்டர்களும் சப் இன்ஸ்பெக்டர்களும் ஹெட் கான்ஸ்டேபில், இன்னும் பல கான்ஸ்டேபில்களுடன் கிராமத்திற்குட்சென்று தேவாலயத்திற் புகுந்தார்கள். அவ்விடத்தில் ஒரு ட்ரஸ்டியாகிய முத்தையு செட்டி என்பவருடன் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கொஞ்சம் நேரம் தடுத்த ஆக்ஷேபனை வார்த்தைகள் பேசிக்கொண்டிருந்து [illegible] அறையை பூட்டியிருந்த கதவின் பூட்டை [illegible]

பறையர்களை தேவாலயத்திற்குள்ளே செல்லும்படி உத்திரவு செய்தார். அந்த பூட்டை பலவத்காரமாய் உடைக்கையில் கிராமத்தார்கள் பெருங்கூட்டமாய் கூடிக்கொண்டு தாழ்ந்த குலத்தாராகிய பறையர்கள் தேவாலயத்துக்குள் செல்லலாகாதென்று ஆக்ஷேபிக்க, எதிர்கக்ஷிதாரர்கள் அந்த கிராமத்தார்களின் மீது கற்களை எறிந்தும் அவர்கள் அம்மாதிரியாகவே பிடிவாதமாய் சொல்லிக்கொண்டிருப்பதைக் கண்டு இங்கும் அங்குமாக கலைந்துபோய் விட்டாரென்றும், சுமார் 3 தினம் ஆனபிறகு இச்சங்கதிகளையெல்லாம் கண்டு இராமசாமிபிள்ளையின் பேரிலும், அவர் கட்க்ஷியைச் சேர்ந்தவர்கள் பேரிலும் திருவிடமருதூர் சப் மாஜிஸ்திரேட் அவர்களுக்கு பிராது செய்தாரென்று சொன்னார்கள்.

தீர்ப்பு.—மாஜிஸ்திரேட் அவர்கள் தீர்ப்பு சொல்லுகையில் பிராசிகியூஷன் தரப்பு சாக்ஷிகளுக்கும் போலீஸ் உத்தியோகஸ்தருக்கும் காயங்கள் உண்டானதைப்பற்றி எதிரிகள் யாதொன்றும் ருஜூசெய்யவில்லையென்றும், ஆனால் பிராசிகியூஷன் சாட்சிகள் கலகம் நேரிட்ட இடத்திலிருந்து நேராய்ச் சென்று அவர்களுக்கு காயங்கள் உண்டானதைப் பற்றி தகுந்த அதிகாரிகளுக்கு உடனே ரிபோர்ட் செய்திருக்கிறார்களென்றும் சொல்லி, இதுவுமல்லாமல் எதிர்த்து கலகம் செய்ய வந்தவர்கள் கிராமத்தார்களைவிட அதிகமாயிருந்தாரென்றும் எதிர்த்த உடனே கிராமத்தார்கள் ஓடிப்போய் விட்டார்களென்றும், எதிர்க்கவந்தவர்கள் தடிகளேந்திவந்தும் அவைகளைப் பிரயோகிக்காமல் சுளுவாக கற்களினால் சண்டைசெய்தார்களென்றும் சொல்லி இன்னும் எதிரிகள் கலகம் நேரிட்ட 3 தினம் ஆனபின் தான், பிராது செய்திருக்கிறார்களென்றும் கண்டு பிரியாதியின்சாட்சிகள் சொல்லிய வாக்குமூலத்தைத் திடமாய் நம்பி எதிரிகள் சார்ஜ் செய்திருக்கும் குற்றங்களை செய்தவர்கள்தானென்று அவகர்களின்மேல் குற்ற ஸ்தாபனை செய்து இ. பி. கோ. 147-வது பிரிவின்படி நியாய விரோதமான கூட்டங் கூட்டிக்கொண்டு கலகம் செய்தார்களென்று ஒவ்வொரு கைதியையும் 1 மாத கடினகாவலுக்கும் மேற்படி கோட் 324-வது பிரிவின்படி அபாயகரமான ஆயுதங்களைக்கொண்டு சண்டைசெய்ததற்காக இரண்டாம் எதிரியை 5 மாத கடின காவலுக்கும், மேற்படி கோட் 323-வது பிரிவின்படி துன்பகரமான உபத்திரம் உண்டாக்கினதற்காக 3,4,6 கைதிகள் ஒவ்வொருவரையும் 1 மாத கடின காவலுக்கும் மேற்படி கோட் 325-வது பிரிவின்படி 5, 7 கைதிகள் ஒவ்வொருவனையும் 5 மாத கடின காவலுக்கும் 8,9 கைதிகள் ஒவ்வொருவனையும் மேற்படி கோட் 323-வது பிரிவின்படி செய்த குற்றத்திற்காக 1 மாத கடின காவலுக்கும் தண்டனை விதித்தார்.

MADRAS HIGH COURT.

சென்னை ஹைகோர்ட்டு.

ஆனரபில் சிப் ஜஸ்டிஸ், மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன்நாயர் ஜட்ஜிகள் முன்பாக:—

ஆகஸ்டுமீ 21வ மேற்படி கோர்ட்டில் விசாரணைக்குவந்த ஒரு இன்சால்வென்ஸி அப்பீலில் அட்டர்னி மிஸ்டர் எஸ். கே. ராமசாமி ஐயர் என்பவர் ஹைகோர்ட்டு ஒரிஜினல் (அசல்விசாரணை) சைட் இன்ஸால்வென்ட் கோர்ட்டில் ப்ளீடர்கள் என்று பெயர் வகித்த லாயர்மார்கள் இப்பொழுது அமுலில் இருக்கும் இன்சால்வென்ஸி விதிகளின்படி இன்சால்வென்ட் கடன்காரர்களுக்கு ஆஜராகி பேசலாகாதென்று ஆக்ஷேபித்தார். வக்கீல் அஸோசியேஷன் (சபையாருக்கு) இதைப்பற்றி நோட்டீசு சார்வுசெய்திருந்தமையால் ஷை அஸோசியேஷனார் இந்த பாயின்டை எதிர்த்து வாதம்செய்ய அவர்கள்தரப்பில் ஸர். வி. பாஷியம் ஐயங்கார் ஆஜராயிருந்தும் கோர்ட்டார் அவர் வார்த்தையைகேட்காமலேயே இதற்கு முன் 1900ஞத்தில் ஸர் ஆர்தர் காலின்ஸ், மிஸ்டர் ஜஸ்டிஸ பார்கார் என்னும் ஜட்ஜிகள் செய்த தீர்மானத்தை ஆதாரமாய்க் கொண்டு மேற்செப்பிய ப்ளீடர்களென்று பெயர்வகித்த (வக்கீல்கள்) லாயர்மார்கள் ஹைகோர்ட்டு அப்பீல் சைடில் இன்சால்வென்ஸி அப்பீல்களில் ஆஜராகி இன்சால்வென்ட் கடன்காரர்களுக்காக பேசலாமென்று தீர்மானித்தார்கள்.

சென்னை ஹைகோர்ட்டு.

ஹானரபில் சீப் ஜஸ்டிஸ், மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் ஜட்ஜிகள் முன்பாக:—

கோர்ட்டு ரெகார்ட்டைச்சேர்ந்த தீர்ப்பு முதலியவை எவ்வித தஸ்தவேஜுகளின் நகல்களுக்காக செய்துகொள்ளும் விண்ணப்பங்களில் என்ன கோர்ட்டு ஸ்டாம்பு ஒட்டவேண்டுமென்பது.

ஹைகோர்ட்டில் தீர்ப்பு, உத்தரவு முதலிய தஸ்தவேஜுகளின் நகல்களுக்காக செய்துகொள்ளும் மனுவின்பேரில் ஒரு அணா ஸ்டாம்பு ஒட்டிவருவது கோர்ட்டு சட்டத்தின் நிபந்தனைபடி கிரமமல்லவென்றும் ஹைகோர்ட்டுக்கு செய்துகொள்ளும் இப்படிப்பட்ட மனுக்களின்பேரில இரண்டு ரூபா ஸ்டாம்பு ஒட்டவேண்டுமென்றும் சென்னை ஹைகோர்ட்டு ரிஜிஸ்தாரர் தீர்மானித்து அநேக மனுக்களின்மீது சரியான ஸ்டாம்பு ஒட்டப்படவில்லை யென்று திருப்பிவிட்டு மேற்படி ஆக்ட் நிபந்தனையின்படி தான்கொண்ட அபிப்பிராயத்தை ஹைகோர்ட் ஜட்ஜுகள் தீர்மானத்திற்கு அனுப்பியகேசில்,

தீர்ப்பு:—ஸர். வி. பாஷியம் ஐயங்கார் என்பவர் மேற்படி கோர்ட்பீஸ் ஆக்டு பிறந்தமுதலும், 1873 வருஷம் முதல் இதுவரையிலும் தனக்குள்ள அனுபோகத்தை அனுசரித்தும் இப்படிப்பட்ட மனுக்களுக்கு கோர்ட் பீஸ் ஆக்ட் 1ம் ஷெட்யூல் கிலாஸ் 5 ஆக்டுகளின்படி ஒரு அணா ஸ்டாம்பு வழக்கமாய் நடந்தேறிவருகிறதென்றும் அந்த ஸெக்ஷனில் செப்பியபடி ஹைகோர்ட்டும் அதில் சேர்ந்ததுதானென்று சில முகாந்திரங்களை எடுத்துக்காட்டி இதன் விஷயமாய் யாதேனும் சந்தேகமிருந்தால் அதை துரைத்தனத்தாருக்கு விரோதமாய்தான் தீர்மானிக்கவேண்டுமென்றும் கூறினார்.

ஸர். வி. பாஷியம் ஐயங்கார் சொன்னதை ஜட்ஜிகள் ஒப்புக்கொண்டு இனிமேல் ஹைகோர்ட்டுக்கு செய்யப்படும் இவ்விதமான மனுக்களின்பேரில் ஒரு அணா ஸ்டாம்பு ஒட்டுவதே போதுமானதென்று தீர்மானித்தார்கள்,

HINDU LAW.

ஹிந்து லா.

CHAPTER V.

5-ம் அத்தியாயம்.

மைனரும் கார்டியனும்.

1908-ஞ பிப்ரவரி, மார்ச்சுமீ த்திய இந்திய சட்ட கெஜெட் சஞ்சிகையின் 3-வது புஸ்தகம், 2, 3-வது பாகங்கள் 50-வது பக்கத்திலிருந்து தொடர்ச்சி.

ஹிந்து ஒருவன் தன் பிள்ளையை வேறொரு குடும்பத்திற்கு ஸ்வீகாரம் கொடுத்துவிட்டால், அவனுக்கு அந்த மைனர் பிள்ளையின் மீதுள்ள கார்டியன் பாத்தியதை நீங்கிப்போகிறது, ஆனாலும் அந்தப் பிள்ளையை ஸ்வீகாரம் கொடுத்த வீட்டில் அவனை சரியாய் போஷித்து வராமல் ஸ்வீகாரம் பெற்றுக்கொண்ட தகப்பனாவது தாயாவது இன்னும் அவர்களைச் சேர்ந்த எந்த பந்துக்களாவது அவனை சீர்மார் செய்து அவனுக்கு விரோதமாக அவனை ஹிம்சை செய்துக்கொண்டு வந்தாலும், அவனுடைய க்ஷேமத்திற்கு ஹானி செய்துக்கொண்டு வந்தாலும், சொந்த தகப்பனாவது அல்லது தகப்பன் வம்சத்தைச் சேர்ந்த எந்த பந்துக்களாவது அவர்களை அந்த மைனருக்கு கார்டியனாய் நேமிக்கும்படி கோர்ட்டுக்கு மனுசெய்துக்கொள்ளலாம். (3. பம். ஐ. 1).

சாதாரணமாய் ஒரு ஹிந்துவின் புத்திரனுடைய மதம் அவனுடைய தகப்பன் எந்த மதஸ்தனோ அந்த மதஸ்தனாகவே அவன் மதத்தை ஒற்றேயிருக்கவேண்டும்.

ஆகையால் அந்தப் பிள்ளையின் தாய், தன் குலத்தைவிட்டு கிறிஸ்து முதலிய இதர மதஸ்தியாய் விட்டாலும், அவளை ஜாதிப்ரதிஷ்டை செய்திருந்தாலும், அவளுக்குத் தன் பிள்ளையின் மீதுள்ள கார்டியன் பாத்தியதை நீங்கிப்போகிறது. அவளுடைய குழந்தைகள் தங்கள் தாயினிடத்தில் அவளுடைய சம்ரக்ஷணையிலேயேயிருக்க அபேக்ஷை கொண்டவர்களாயிருந்தால் கோர்ட்டார் அவளிடத்தில் அந்த மைனர்களைவிட்டுவைக்க உத்தரவு செய்யமாட்டார்கள். ஆனால் அந்தக் குழந்தைகள் தக்க அறிவு க்யானம் உள்ளவர்களாயிருந்து அவளிடத்திலேயே இருப்பதாக சொன்னாலும் அவர்களை அவளுடைய சம்ரக்ஷணையிலிருந்து நீக்குவதினால் அவர்களுக்கு கெடுதலை நேரிடுமென்று தோற்றும் பட்சத்திலும் கோர்ட்டார் அவர்களுடைய கோரிக்கைக்கு விரோதமாய் உத்தரவு செய்யமாட்டார்கள். (14 மு. இ. அ. 309).

ஒரு ஸ்திரீ தன் புருஷனைவிட்டு வேறே சம்சாரம் செய்துக்கொண்டு அவனுக்கு விரோதமாய் தனியாய் இருந்தால், அவள் தன்னுடைய பாலர்கள் தன் வசத்தில்தான் இருக்கவேண்டுமென்று சொல்லுவதற்கு நியாயமில்லை. இன்னும் அவள் தன் குழந்தைகளை புருஷன் அனுமதியன்றி அவனுக்கு விரோதமாய் தனியாய் அழைத்துக்கொண்டுபோய் வைத்திருந்தால் புருஷன் அவள்மீது பிராதுசெய்து தன்னுடைய பாலர்களை தன்வசப்படுத்திக்கொள்ள அதிகாரமுண்டு. (இ. லா. ரி. 8. க. 369).

ஒரு ஹிந்து தகப்பன் ஒருவன் கிறிஸ்து முதலிய வேறே மதஸ்தனாய் விட்டாலும், ஜாதி ப்ரதிஷ்டனாய் விட்டாலும் அவன் தன் மைனர் குழந்தைகளுக்கு தான் கார்டியனாயிருப்பதற்கு நியாயமுண்டு. ஆனால் அவன் வேறே மதஸ்தனாகிய பிறகு கெட்ட நடவடிக்கைகள் உள்ளவனாகவும் மைனருடைய க்ஷேமத்திற்கு விரோதமான நடவடிக்கைகள் உள்ளவனாயுமிருந்தால் அந்த மைனர் பிள்ளையை அவனிடத்தில்தான் இருக்கவேண்டுமென்று கோர்ட்டார் நிர்ப்பந்திக்கமாட்டார்கள். (R. V. Fletcher, Barry O. C. 91).

ஆண் பிள்ளையாய் இருக்கப்பட்ட ஒருவன், 14 அல்லது அதற்குக் குறைந்த வயது உள்ளவனாயிருந்தால் அவனையும், பெண்பிள்ளையாயிருக்கப் பட்டவள் 16 அல்லது அதற்குக் குறைந்த வயதுள்ளவளாயிருந்தால். அவளையும் அவர்களுடைய கார்டியன்மார்கள் அனுமதியன்றி வேறே மதத்தில் சேர்த்துக்கொள்ளுகிறவர்கள் இ. பி. கோ. 361-363 பிரிவுகளின்படி நியாயமான சம்ரட்சணை கர்த்தர்-வசத்திலிருந்து திருட்டுத்தனமாய் அல்லது அக்கிரமமாய் கொண்டுபோவது என்னும் குற்றத்தை செய்தவர்களாக பாவிக்கப்பட்டு ஏழுவருஷ கடினகாவலுக்குள்ளாவார்கள்.

மைனர் ஒருவன் ஒப்பந்த உடன்படிக்கைகள் முதலானது செய்யவாவது செய்துக்கொள்ளவாவது நியாயமில்லை. ஆகையால் மைனராயிருக்கப்பட்டவனுக்கு கடன் கொடுத்தால் அந்த அவனிடத்திலிருந்து மீண்டும் வசூல்செய்ய முடியாது. ஆனால் மைனர் ஒருவன் தனக்கு லாபகரமாய் ஒருவனுக்கு கடன் கொடுத்தால் அந்த தொகையை அந்த மைனர் வசூல் செய்ய நியாயமுண்டு. (இ. லா. ரி. 18. க. 259. 12. பம் 50).

ஒரு ஹிந்து குடும்பத்தில் மைனரை போஷிப்பதற்கும், அவனுடைய க்ஷேமத்தைக் கோறியும் அவசியமாய் அவனுக்கு வேண்டிய வஸ்துக்களை கடன் வாங்கி சிலவழித்திருந்தால் அப்படிப்பட்ட கடன்களைத் தீர்க்க மைனர் கட்டுபட்டவனாகிறானென்று இந்தியன் கன்ட்ராக்டு ஆக்டு 68-வது பிரிவில் சொல்லியிருக்கிறது.

ஒரு மைனருக்கு கார்டியனா யிருக்கப்பட்டவன் அந்த மைனருடைய லாபகரத்திற்கும், க்ஷேமத்தைக் கோறியும் அவனுடைய சொத்துகளை பராதீனம் செய்திருந்தால் அவைகள் செல்லும். ஆனால் அந்த கார்டியன் தன்னுடைய சுய நலத்தைப் பாராட்டி அவனுடைய லாபகரத்திற்காக அந்த மைனருக்கு விரோதமாய் நடவடிக்கைகள் நடத்தியிருந்தால் அவைகள் செல்லாது; அவைகளை ரத்து செய்யும்படி பிறகு அந்த மைனர் தாவா செய்துக்கொள்ளலாம். (10. மு. இ. அ. 454; 6. மு. இ. அ. 393); 2. ம. ஐ. 47; பம் 562; 5. க. 363; 3. அ. 535).

அந்த கார்டியன் செய்த நடவடிக்கைகளை அந்த மைனர் தனக்குப் போதுமான வயது வந்த பிறகு ஒப்புக்கொண்டு ஸ்திரப்படுத்தி யிருந்தால் அதைப்பற்றி மைனர் தாவா செய்யலாகாது. (8. மு. இ. அ. 319).

ஒரு மைனருடைய சொத்தை கொதுவை வைத்துக்கொள்ளுகிறவனுவது, கிரயத்திற்கு வாங்குகிறவனுவது அந்த சொத்தை அந்த மைனருக்கு லாபகரத்திற்காக அப்பொழுது கொதுவை அல்லது கிரயம் செய்யவேண்டியது அவசியமா அல்லவா என்று நீர் விசாரணை செய்து கொதுவை அல்லது கிரயம் செய்துக்கொண்டால் அது செல்லும். அப்படிக்கல்லாமல் மைனருடைய நன்மைக்கு விரோதமாய் அந்த சொத்தின் சாதாரண மதிப்பு விலைக்கு குறைவாய் அவனுடைய கார்டியனிடமிருந்து கிரயம் பெற்றுலும் அது செல்லாது. (இ. லா. ரி. 5 சென். 33).

அப்படி கொதுவை அல்லது கிரயம் செய்வது மைனருடைய பலான பலான லாபகரத்திற்காக என்று அந்த காரணங்களை தஸ்தவேஜியில் கண்டு எழுதியிருந்தால் மாத்திரம் போதாது. அந்த காரணங்களை கோர்ட்டாருக்கு திருப்திகரமாய் ருஜு செய்யவேண்டிய பொறுப்பு கொதுவை வைத்துக் கொண்டவன் அல்லது கிரயத்திற்கு பெற்றவன்து பொறுப்பாகும். (இ. லா. ரி. 3 பம். 234; 237; 6 அ. 417).

ஒரு மைனரின் தாயார் அந்த மைனரை போஷிப்பதற்கு வேண்டிய திரவியம் இல்லாமையால் அந்த மைனரின் சொத்தை அவனுக்கு கார்டியனுக குறைந்த விலைக்கு கிரயம் செய்துவிட்டாள். அந்த மைனர் தனக்கு போதுமான வயது வந்தபிறகு அப்படிப்பட்ட கிரயம் செல்லாதென்று தாவா செய்ய, கோர்ட்டார் அந்த கிரயத்தை ரத்து செய்து சொத்தை மறுபடியும், மைனர் வசம் ஒப்புவிக்கும்படி டிக்ரி செய்தார்கள். (இ. லா. ரி. 6 அ. 417).

ஒரு மைனருக்கு கார்டியனுயிருக்கப்பட்டவன் அந்த மைனருக்கு விரோதமாய் டிக்ரி அல்லது ராஜீனுமா முதலியவைகளை அக்கிரமமாய் ஒப்புக்கொண்டால், அந்த மைனர் தனக்கு யுக்த வயது வந்தபிறகு அவைகளை ரத்துசெய்யும்படிக்கு தாவாசெய்யலாம். (இ. லா. ரி. 13 பம். 137, 3 பம். 103). ஆனல் கோர்ட்டார் நியாயமென்று ஒப்புக்கொள்ளும்படியான காரணங்களுக்காக கார்டியன் அனுமதிகொடுத்திருந்தால் அவைகள் செலாவணியுள்ளதென்று தீர்ப்பாயிருக்கிறது. (14 மூ. இ. அ. 393; 12 சென். 483; 17 சென் 309; 10 க. 358).

ஹிந்து ஒருவன் வைப்பாட்டி வைத்துக்கொண்டிருந்து அவளுக்கு ஒரு குழந்தை பிறந்தால் அந்த குழந்தைக்குத் தகுந்த கார்டியன் தாய்தான். ஆனல் தாயானவள் அந்த குழந்தை வேறொருவருடைய சம்ரட்சணையிலிருக்கும்படி ஏற்பாடு செய்திருந்தால் அந்த குழந்தை அவர்களிடத்தில்தான் இருக்கவேண்டும். இதுவுமன்றி அந்தகுழந்தைக்குப் பிரதிகூலமாய் தாய் ஒழுங்கீனமான் நடவடிக்கைகளுடன் உள்ளுளவாய் நீடித்த விபசாரியாகவேயிருந்தால் அப்பொழுது கோர்ட்டார் அந்த குழந்தையை தாயினிடம் வையாமல் அவளிடமிருந்து பிரித்து வேறொருவரை கார்டியனுக நேமித்து அவருடைய சம்ரட்சணையிலிருக்கும்படி உத்தரவுசெய்யலாம்.

ஒரு பிராமணப் பெண் பால்யமாயிருக்கையில் அந்த பெண்ணுக்கு விவாகம் செய்துவைக்க அவளுடைய தகப்பன் [illegible] பிள்ளை ஏற்பாடுசெய்கையில், அந்த விவாகத்தை நடத்திவைப்பதற்கு பிரதிபலனுக அந்த மாப்பிள்ளை பெண்ணின் தகப்பனுக்கு கொஞ்சம் ரொக்கம் கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்துக்கொள்ளப்பட்டதென்னும் காரணத்தினுல் தகப்பன் தன் பெண்ணுக்கு கார்டியனுய் (சம்ரட்சணை கர்த்தனுய்) இருப்பதற்கு நியாயம் கிடையாதென்று சொல்லலாகாது. (இ. லா. ரி. 1 அ. 549). சாதாரணமாய் ஒரு குழந்தையின் நியாயமான கார்டியன் தாய் தந்தையர்கள்தான் என்றும், அவர்களுக்குப்பின் இன்னார் இன்னரென்றும் மேலேவரைந்திருக்கிறதல்லவா; அப்படியிருந்தும் ஓர் குழந்தையின் தாயானவள் தன்னுடைய புருஷன், அதாவது, அந்த குழந்தையின் தகப்பனுடைய சம்மதமின்றி அந்த குழந்தையை அயலார் வீட்டுக்கு எடுத்துக் கொண்டுபோனுலும் இன்னும் பல இடங்களுக் கழைத்துக்கொண்டுபோனுலும், அவள் இந்தியன் பினல் கோட் 361-வது பிரிவின்படி ஏற்படும் குற்றத்திற்கு உடந்தையாயிருந்தவளென்று பாவிக்கப்படுவாள் (இ. லா. ரி. 8 க. 969). ஒரு வால்யப் பெண்ணை விவாஹம் செய்துக்கொடுக்க அந்த பெண்ணினுடைய தாய் வம்சத்தைச் சேர்ந்த அம்மான் முதலிய பந்துக்கள் கோறிய இடத்தில் கொடுக்கலாகாதென்று அந்த பெண்ணின் சிற்றப்பன் அல்லது அவளுடைய தகப்பன் வர்க்கத்தை சேர்ந்த பந்துக்கள் ஆக்ஷேபித்து கோர்ட்டுக்கு மனுசெய்துக்கொள்ளலாம். (இ லா. ரி. ரீதர். V ஹீரலால் 12 பம். 480). ஒரு மைனர் (Minor) கொடுக்கவேண்டுமென்று கட்டுபட்டுள்ள குடும்பகடன் காலதோஷமாய் விட்டால் அந்த கடனுக்காக மேற்செப்பிய மைனருடைய கார்டியன் வேரேபத்திரம் எழுதிக்கொடுக்க நியாயமில்லை என்றும், அல்லது காலதோஷமாகாத கடனுக்கு சட்டப்படி குறித்திருக்கும் காலம் மறுபடியும் புதிதாய் ஆரம்பிக்கும்படியான ஏற்பாடு செய்து ஒப்புக்கொள்ள அதிகாரம் கிடையாதென்றும் கல்கத்தா பம்பாய் ஹைகோர்ட்டுகளில் தீர்ப்பு செய்திருக்கிறுர்கள். (இ. லா. ரி. 20 பம். 155, 61; 13 க. 255). ஆனல் மதருஸ் ஹைகோர்ட்டாரோ இப்படி செய்வதற்கு ஒரு மைனரின் கார்டியனுக்கு அதிகாரம் உண்டென்று பலமுறை தீர்ப்பு செய்திருக்கிறுர்கள் (சின்னையா V. குருநாதன் 5 சென். 169; 17 சென். 22; 18 சென். 456; 26 சென். 330).

ஒரு மைனர் யாதொரு விதமான உடன்படிக்கையாவது ஒப்பந்தமாவது யாரிடத்திலும் எந்த சந்தர்பத்திலும் செய்யலாகாது. ஒரு மைனரினிடத்தில் உடன்படிக்கையாவது, ஒப்பந்தமாவது செய்துக்கொண்டவர்களுக்கு கோர்ட்டார் யாதொரு பரிகாரமும் செய்யமாட்டார்களென்று நிஷ்கரிஷையான ப்ரிவி கௌன்சல் Privy Council தீர்மானம் ஒன்று இருக்கிறது. (இ. லா. ரி. 30; க. 539).

ஒரு மைனரை போஷித்துவரும் கார்டியனுக்கு அந்த மைனருடைய (எஸ்டேட்டை) ஜதிதினம் சேர்ந்தசொத்தை தன் இஷ்டப்படி எவ்விதமான ஸ்ராதீனம் செய்ய அதிகாரம் கிடையாது. இதுவுமல்லாமல் ஒரு அவிபக்த ஹிந்து குடும்பத்தைச்சேர்ந்த மானேஜரைவிட அந்த மைனருடைய தாயாருக்கு விசேஷித்த அதிகாரம் கிடையாது. (14 இ. அ. 89; 11 பம். 551; 20 பம். 61; 2 பம். ஹை. ரி 306).

ஒரு மைனருக்கு சொந்த தகப்பன் கோர்ட்டு விவகார தாவா முதலிய நடவடிக்கைகளில் கோர்ட்டாரால் கார்டியனுக நேமிக்கப்பட்டிருந்தாலொழிய மற்றப்படி அந்த மைனருக்கு ஜெனக தகப்பன் என்னும் காரணத்தால் கார்டியனுய், சமரட்சணைக் கர்த்தனுய் இருப்பதற்கு நியாயமில்லை (11 பெ லா. ரி. 171).

ஒரு அவிபக்த ஹிந்து குடும்பத்தில் தலைமையாய் குடும்ப விஷயங்களை பரிபாலனம்செய்துவரும் மானேஜர் அந்த மைனரின் நன்மைக்காக குடும்ப விஷயங்களை பஞ்சாயத்தார் முன்னிலையில் பைசல்செய்துக்கொள்ள இச்சித்து அந்த பஞ்சாயத்தாரால் ஏற்படும் (Award) தீர்மானத்தினுல் மைனர் கட்டுப்பட்டவனென்று தீர்ப்பாயிருக்கிறது. (பாலாஜீ. V. நானு இ. லா. 27 பம். 287).

ஒரு மைனரின் தகப்பன் மாத்திரம் உயில் எழுதி அதன்மூலமாய் தன்னுடைய பிள்ளைக்கு கார்டியன் ஏற்படுத்தலாம். தாய் உயில் மூலமாய் கார்டியன் ஏற்படுத்த அதிகாரமில்லை (இ. லா. ரி. 21 சென். 401). ஒரு அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மைனருக்கு பிரத்தியேகமான சொத்திருந்தாலொழிய மற்றபடி எந்த காரணத்தினுலும் கோர்ட்டார் அந்த மைனருக்கு பிரத்தியேகமான கார்டியன் நேமிக்க நியாயமில்லை (இ. லா. ரி. 19 க. 31; 20 அ. 400).

போதுமான வயது வந்த ஒரு மைனர் அவனுடைய கார்டியனுல் செய்யப்பட்ட ஒரு கிரயம் சட்டப்படி செல்லாதென்று இந்தியன் காலதோஷ நிவாரணை சட்டத்தின் (Indian Limitation Act. X of 1877.) 44-வது ஆர்டிகலின்படி அவனுக்கு யுக்த வயது வந்த தினம் முதல் மூன்று வருஷத்திற்குள் தாவா செய்யவேண்டும்.

BURMA GOURT.

பர்மமா கோர்ட்டு

ரங்கூன் கேஸ்

கூ. ந. நாச்சியப்ப செட்டி—அப்பீல்தார் (கீழ் கோர்ட்டு பிரதிவாதி.)

அ. க. அ. ம. சொக்கலிங்க செட்டி—ரெஸ்பான். (வாதி.)

இந்த கேஸில் எ. என்பவர் தம்முடைய மண்டிகளையும், அவைகளிலிருக்கும் வியாபார சாமான்களையும் பி. என்பவருக்கு அடமானம் செய்துவிட்டார். இந்த அடமான தஸ்தாவேஜானது நன்றாய்த் தெரிந்த லாயரால் எழுதப்படாமல் மனுக்கள் எழுதும் ரயிட்டரால் எழுதப்பட்டது. ஆனல் ஜிரிஸ்டரேஷன் ஆபிஸில் மாத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு இருந்தது. அந்த அடமான பத்திரம் எழுதினபோது, வாக்குமூலமாய் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதென்றும், இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம், அந்த அடமானத்தில் கண்டிராதபோதிலும் அதன் பிறகு வரும் சொத்துக்களும் அந்தக்குதுவைக்கு உட்படவேண்டுமென்றும் பி. என்பவர் வாதித்தார். அந்த அடமான பத்திரத்தின் நிபந்தனைகளை சோதித்துபார்க்க அதில் வாக்குமூலமாய் செய்த ஒப்பந்தத்திற்கு விரோதமாய் ஒன்றும் காணப்படவில்லை. இந்த வாக்குமூலமான ஒப்பந்தத்தை கோர்ட்டார் அவர்கள் ஏற்றுக்கொள்ளலாமா கூடாதா என்கிறது இந்த கேஸில் பாயிண்டு.

கோர்டார் அவர்கள் தீர்மானம்.

இந்த கேஸில் முதல் கோர்டார் அடமானத்துக்குபின் மண்டிகளில் சேரும்சாமான்களும் குதுவைக்குட்படுமென்று தீர்மானித்திருக்கிறுர். ஆனல் டிவிஷனல் ஜட்ஜ் ஆனவர் இதை ஒத்துக்கொள்ளாமல் பின்னுல் அடையப்படும் சொத்துகளெல்லாம் சிருரடியாக எண்ணப்படவேண்டுமென்று சொல்லிவிட்டு, இந்த அடமானத்தில் பின்வரும் சொத்துக்கள் எல்லாம் சேரக்கூடாதென்று கண்டிருக்கிறுர். இந்த டாக்டர் கோஸ் என்பவர் இந்திய அடமான ஞாயத்தைப்பற்றி எழுதியிருக்கும் பின்வரும் வாக்கியத்தை மேற்கோளாகக்கொண்டிருக்கிறுர்.— "பின்சேரும் சொத்துக்களை அடமானம் வைக்கவேண்டுமென்றுல் அவைகளை சரியாய்எழுத்தினுல் குறித்துக்காட்டியிருக்கவேண்டும். அப்படிப்பட்டவைகள்யில்லாமற்போனுல் அப்பொழுதிருக்கும்சொத்துக்களைதான் அடமானம் வைத்ததாக எண்ணவேண்டும். உதாரணமாக, வியாபார சொத்துக்கள் [illegible] சொல்லாவது ஏற்[illegible]ல் அவைகளுக்கு குதுவைக்குள் சேர்க்கக்கூடாது." இந்த லாவானது. சீமைகோர்ட்டுகளில் ஏற்படுத்தப்பட்டபடியால், இந்திய நிலமைகளுக்கு அப்படியே செய்யக்கூடாது. முதல் கோர்ட்டார் அவர்கள் வியாபாரசாமான் என்றுல் இன்னதென்று விவரித்திருக்கிறதே சரியானதென்று எமக்கு தோன்றுகிறது.

மேலும் இந்த கேஸில் இந்த வாக்குமூல ஒப்பந்தமானது உண்டென்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. வியாபார சாமான்களை வெச்சுவந்த தொகை வாதி கையில் கொடுக்கப்பட்டன. புதிதாய் வியாபாரசாமான்கள் வாங்க வாதி அட்வான்ஸ்கள் செய்துகொண்டிருந்தார். இந்த சந்தர்ப்பங்களிலிருந்து பின்வரும் வியாபார சாமான்களைகூட அடமானத்தில் உட்படுத்தி இருந்தார்களென்று ஊஹிக்கலாம்.

எவிடன்ஸ் ஆக்டின் 92-வது செக்ஷன் பிரகாரம் ஏதாவது தஸ்தாவேஜு எழுதப்பட்டிருந்தால், அதன் நிபந்தனைகளை மறுப்பதற்கு ஒருவாக்குமூல ஒப்பந்தத்தை ஏற்படுத்த கூடாதென்றும், இந்த கேஸில் இந்த பத்திரமானது ரிஜிஸ்டர் செய்திருக்கிறதென்றும் வாதிக்கப்பட்டது. ஆனல், இது அந்த 92-வது செக்ஷன்களில் வராமல், அதன் அடியில் கண்ட இரண்டாவது விலக்கத்தின் பிரகாரம் பார்க்க வேண்டியது. இதில் சொல்லியிருக்கிறதாவது "எழுத்து மூலமாக ஒரு தஸ்தவேஜுயிருந்தாலும் அதற்கும் வாக்குமூல ஒப்பந்தத்திற்கும் எதிரிடை ஒன்றும்காணுமற்போனுல், பின்கண்ட வாக்குமூல ஒப்பந்தமானது ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி ஏற்றுக்கொள்ளும்பொழுது அந்த தஸ்தாவேஜில் ரிஜிஸ்டர்

முதலான ஒழுக்கங்களை அனுசரித்திருக்கிறார்களா என்றதை கோர்ட்டார் கவனிக்கவேண்டும்." ஆனால் இந்த கேஸில் நன்றாய் நன்குணர்ந்த லாயரால் எழுதப்படாமல் சாதாரணமான ஒரு மனு எழுதுகிறவனால் எழுதப்பட்டிருக்கிறது.

இந்தக்கேஸில் இந்தப் பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டதென்பது ஷை கூரிய விஷயத்தைப்போல அவ்வளவு முக்கியமானவையல்ல.

அந்த தஸ்த்தாவேஜில் "இந்த அடமானம் வைத்திருக்கப்பட்ட சாமான்களை விற்றதினால் பணம் வந்தால், அந்த தொகையை மற்றயவர் எவர்களுக்காவது எந்தக் கடனுக்காவது கொடுக்கக்கூடாது. முதலுக்கும் வட்டிக்குமாக சொக்கலிங்க செட்டி கையில்தான் கொடுக்கவேண்டும்" என்று கண்டிருக்கிறது. வாக்குமூல ஒப்பந்தமானது இந்த நிபந்தனைக்கு விரோதமாக யிருக்கிறதென்று எமக்கு தோன்றவில்லை. ஆகையால் அந்த வாக்குமூல ஒப்பந்தத்தின் பிரகாரம் பின்வரும் சாமான்களும் அடமானம் வைத்ததாக எண்ணவேண்டும்.

இதை அபீல் காஸ்டுடன் டிஸ்மிஸ் செய்யப்படுகிறது.

PRIVY COUNCIL JUDGEMENT, MADURA.

பிரிவி கௌன்ஸல் தீர்ப்பு

மதுரை.

சங்கரங்கநாடான் V. ராஜேஸ்வரதுரை.

இந்த கேஸில் மதுரை சப் கோர்ட்டார் வாதி தரப்பில் நியாயம் தீர்த்தார். அபீலில் ஹைகோர்ட்டார் அதை காயம் செய்தார்கள், பிறகு இந்த தீர்ப்புக்கு எதிராக பிரிவி கௌன்ஸலில் அப்பீல் கொண்டுவரப்பட்டது.

இந்த ஸூட்டில் வாதி மதுரை ஜில்லாவிலிருக்கும் காமாக்ஷி கோவிலின் டிரஸ்டியாகிய ராமநாதபுரத்து ஜமீன்தார் அவர்கள். காமூதியில் வசிக்கும் சில சாணார்கள் பிரதிவாதிகள்.

வாதிகள் கேசானது.—பிரதிவாதிகள் சாஸ்திரங்களினாலும் மாமூல் பிரகாரமும் காமூதி கோவிலில் பிரவேசிக்கக்கூடாதென்று விலக்கப்பட்டிருக்கிறது.

இப்படியிருக்க 1900 வருஷம் மேமீ௴த்தில் பிரதிவாதிகள் ஓர் ஊர்கோலங்கொண்டு சங்கீதவாத்தியங்களுடனேயும் தீபட்டி முதலியவைகளுடனேயும் கோவிலில் பலாத்காரமாக பிரவேசித்து ஆராதனை செய்தார்கள். இதனால் கோவிலுக்கு தீட்டு உண்டாயிற்று. சட்டப்பிரகாரம் வந்து வணங்குவோர்களுக்கு தடையுண்டாயிற்று. ஆகையால் பிரதிவாதிகள் கோவிலுள் பிரவேசிப்பதற்கு பாத்தியதையுள்ளவர்களல்லவென்றும், இனிமேல் அவர்கள் அம்மாதிரி பிரவேசிக்காதிருப்பதற்கு இன்ஜென்க்ஷனும், 2,500 ரூபாய் டாமேஜும் வாதிகள் கோரினார்கள்.

பிரதிவாதிகள் வாதித்ததாவது, மாமூலாலும் சாஸ்திரங்களாலும் கோவிலில் ஆராதனைசெய்ய தாங்கள் பாத்தியதையுள்ளவர்கள். புராதினமாய் தாங்கள் இந்த பாத்தியதை அனுபவித்து வந்தவர்கள். அந்த கோவிலில் எல்லாக் குலத்தோரும் வருணத்தோரும் ஆராதனை செய்ய ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால் திவாதிகள் தங்களை விலக்குவது சரியல்ல.

சப் கோர்ட்டாரவர்கள் கேஸை விசாரணை செய்து, காமூதிசாணார்கள் இந்த கோவிலில் பிரவேசிக்க பாத்தியதையுள்ளவர்கள் அல்லவென்று ஏற்படுகிறபடியால் இனிமேல் அவர்கள் அந்தமாதிரி பிரவேசிக்கக் கூடாதென்று இன்ஜென்க்ஷன் கொடுத்து டாமேஜும் 500 ரூபாய் டிக்கிரிசெய்தார். ஹைகோர்ட்டில் ஜஸ்டிஸ் பென்ஸனும் இன்னொரு ஜட்ஜும் சப்கோர்ட்டு தீர்ப்பைக் காயப்படுத்தினார்கள்.

பிரிவி கௌன்ஸிலார் தீர்ப்பு :—இந்தக் கேஸில் கீழ்க்கோர்ட்டார் இரண்டு பேரும் வாதி தரப்பில் கண்டு இருக்கிறார்கள். சப் கோர்ட்டார் அவர்கள் மிகவும்சிரத்தையுடன் சோதித்து இருக்கிறார்கள். ஹைகோர்ட்டாரவர்களும் மிகவும் விவரமாயும் ... யும் தர்க்கித்து யோசித்து இருக்கிறார்கள்.

முதலாவது பிரதிவாதிகளுக்கு பிரத்தியேகமாக ஒரு கோவில் இருக்கிறது. சாணார்கள் காமூதிகோவிலில் எப்பொழுதாவது பிரவேசித்தார்களென்று தக்க சாக்ஷிகளும் புலப்படவில்லை. பிரதிவாதிகள் இந்த கோவிலில் வாதிகள் ஆராதனை செய்வதற்கு விலக்கப்படுவார்களென்று மாமூல்மூலமாய் ஸ்தாபித்து இருக்கிறார்கள். ஆகையால் பிரதிவாதிகளுடைய அப்பீலானது தள்ளப்படுகிறது.

இமயமலை இருக்குமிடம்.

ஒருநாள் ஒரு உபாத்தியாயர் ஒரு பையனைப் பார்த்து, "இமயமலை எங்கே இருக்கிறது சொல்" என்றார். அதற்குப் பையன் இடியிடியென்று சிறித்தான். உடனே ஆசிரியர் சினங்கொண்டு, "ஏன்டா, சிரிக்கிறாய்" என்றார். அதற்குப் பையன், "வேறொன்றிற்குமில்லை, தங்களுக்கு இவ்வளவு வயதாகியும், எம். ஏ., எல். டி. முதலிய பரீக்ஷைகளையும் பாஸ் பண்ணியும், இமயமலையிருக்குமிடம் இன்னதென்று தெரியாமல் என்னை வந்து கேட்கிறீர்களே என்று நினைக்கும்போது என்னையறியாமலே சிறிப்பு வந்துவிட்டது" என்றான்.

தகுந்த கணவன்.

கலியாணமாகாத பெண்.—அப்பா, அடுத்த வீதியிலுள்ள சீனிவாஸன் எனக்காக தன் பிராணனை வேண்டுமானாலும் கொடுப்பதாகச் சொல்லுகிறான். அவனைக் கலியாணஞ்செய்துக்கொள்ளலாமா.

தகப்பன்.— உடனே செய்துக்கொள். அவன் 50,000 ரூபாயிக்கு மரணபண்டில் இன்ஷூர் செய்துக் கொண்டிருக்கிறான். (இறந்தவுடன் அந்தப் பணமெல்லாம் பெண்ணுக்கு வந்துவிடுவதால்).

சோஸ்த மாக்குதல்

சிநேகிதன்.— உனக்கு இந்த டாக்டரிடம் மிகவும் நம்பிக்கையிருக்கிறாப் போலிருக்கிறது. அவன் உன்னை நிச்சயமாய் ஸௌக்கியப்படுத்துவானா ?

நோயாளி.— ஆம் அந்த டாக்டருக்கு அடிக்கடி நான் பணங்கொடுத்து வருவதால் என்னை சீக்கிரத்தில் சாகவிடமாட்டாரென்பது நிச்சயம்.

Government Orders Revenue, Department.

G. O. 2285. Rev. dated, 19th August, 1908.

சென்னை இராஜதானியில் பயிரிடுவோர்களுக்கு 1908-09 வருஷங்களுக்கு கொடுக்கும்படி ஸாங்க்ஷன் ஆன ரூபாய் 5,99,950. இதில் 1908ஞு மேமீ௴ 31௳ வரைக்கும் ரூபாய் 1,20,251 பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. இதில் 81,506 ரூபாய் மேமீ௴த்தில் மாத்திரம் செலவிடப்பட்டதென்ற போர்ட்டார் நடவடிக்கைகளைக் கவர்ன்மெண்டார் ரிகார்ட்டு செய்தார்கள்.

G. O. 2179. dated, 10th August, 1908.

போன பிப்ரவரிமீ௴த்தில் கவர்ன்மெண்டார் அனுவசியமான விடங்களில் ரெயில் மார்க்கமாக ஆடுமாடுகள் தீனியை குறைந்த கூலிக்கு எடுத்துக் கொண்டு போகும்படியாக உத்தரவுஅளித்துக் கருணை கூர்ந்தார். இப்பொழுது அந்தக் குறைவான ரேட்டை இந்திய கவர்ன்மெண்டார் ஜூலைமீ௴ 31௳யிலிருந்து எடுத்துவிட்டாராகையால் இனிமேல் அப்போர்ப்பட்ட ரேட்டில் ரெயிலார் ஒத்துக்கொள்ளமாட்டார்கள் என்று பிரசுரிக்கப்பட்டது.

Public Department.

G. O. 638. dated, 7th August, 1908.

திருச்சிறுப்பள்ளியிலுள்ள பழுப்பூர் என்ற ஜைனர் பிரதிமையும், சயங்கொண்ட சோளாபுரத்திலுள்ள மேற்கு வெள்ளாள தெருவிலிருக்கும், பிரதிமையும், வல்லாபுரத்திலிருக்கும்படியான சமாதி அடைங்கிய மண்டபமும், சாமஸ்கான் மசூதியும், ரஞ்சன்குடி கோட்டையும் கவர்ன்மெண்டாரால் ஆதரிக்கப்பட்ட மானுமெண்டாக விளம்பரப்படுத்தப்படுகிறது.

Local and Municipal, Department.

G. O. 805. dated, 9th June, 1908.

புதிய கிணறுகள் வெட்டுவதற்காகவும், இப்பொழுது கிணறுகளை துரஸ்துசெய்கிறதற்காகவும், கொயம்பத்தூர் டிஸ்ட்ரிக்ட் போர்டாரவர்களுக்கு 5,280 ரூபாயை கவர்ன்மெண்டார் கொடுக்கிறதாக அருள்புரிந்தார்கள்.

G. O. 982. dated, 22nd June, 1908.

வியாதிகள் முதலியவைகள் சேராதவண்ணம் முன் எச்சரிக்கை செய்யும்படியான காரியங்களுக்கு கவர்ன்மெண்டார் 2,99,120 ரூபாய் லோகல் போர்ட் முதலிய சங்கத்தார்களுக்கு கிராண்ட் செய்திருக்கிறார்கள்.

G O. 1999. Revenue, 22nd July, 1908.

1905ஞுத்தில் கோதாவரி ஜில்லாவில் சில ஏஜன்ஸி விடங்களில் குயினையின் (Quinine) பணமில்லாமல் கொடுப்பதற்கு உத்தரவு செய்தார்கள். கோதாவரி கலெக்டர் அவர்கள் கவர்மெண்டாருக்கு இம்மருந்தை அஜ்ஜனங்கள் அதிகமாக உபயோகிக்கிறார்கள் என்று எழுதினார். எட். அஸிஸ்டன்ட் கலெக்டரும் தாசில்தாரும் இப்பொழுதும் அப்படியே கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அப்படியே கவர்ன்மெண்டார் கொஞ்சநாள்வரைக்கும் செய்யும்படி ஒத்துக்கொண்டார்கள்.

Judicial Department.

G O. 1007, dated, 22nd July, 1908.

மாஜிஸ்டிரேட்டுமுன் வரும் சில கேசுகளில் கைதிகள் கடினகாவலுக்கும், போடப்படும் அபராதத்தை செலுத்தாவிட்டால் இன்னுஞ் சிலநாள் சிறையிலிருக்கும்படி உத்தரவாகிறார்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அநேககேசுகளில் அபராதத்தைக் கொடுத்துவிட்டபோதிலும் இரண்டாவது தண்டனைக்கும் உட்படுகிறார்கள். இது எப்படி வருகிறதென்றால், அபராதத்தை செலுத்திவிட்ட சங்கதி கோர்ட்டாரவர்கள் கைதியிருக்கும் ஜெயிலின் மேலுத்தியோகஸ்தர்களுக்குத் தெரியப்படுத்தாமலிருக்கிறபடியால்தான். ஆகையால் ஆலோசனை சபையில் வீற்றிருக்கும் கவர்னர் துரையவர்கள், மாஜிஸ்டிரேட்டுகள் இப்படிப்பட்ட விஷயங்களில் செய்யவேண்டிய கடமைகளை எடுத்துக்காட்டி உறுதியாக சொல்லவேண்டியிருக்கிறது. ஆகையால் பின்வரும் ரூல்கள் அப்படிப்பட்ட மாஜிஸ்டிரேட்டுகளுக்காகவும் ஜெயில் உத்தியோகஸ்தர்களுக்காகவும் பிரசுரம் செய்யப்படுகிறது.

1. அந்த மாஜிஸ்டிரேட்டானவர் ஜெயிலுத்தியோகஸ்தர்களுக்கனுப்பும் வாரண்டில் அபராதமானது முழுதிலும்கொடுக்கப்பட்டதா, கொஞ்சங் கொடுக்கப்பட்டதா, கொடுக்கப்படவேயில்லையா என்ற சங்கதியை எழுதவேண்டியது. இதைப்பற்றி வாரண்டில் எழுதப்படாவிட்டால், உடனே ஜெயிலுத்தியோகஸ்தர் எழுதி தெரிந்துகொள்ளல் வேண்டும். இதற்கு மாஜிஸ்டிரேட்டானவர் எழுதின உத்தரத்தின் சங்கிரகத்தை வாரண்டின்மேல் எழுதப்படவேண்டும்.

2. கைதியானவன் ஜெயிலில் சேர்ந்தபிறகு, அபராதம் கொஞ்சமானாலும் முழுதிலுமானாலும் செலு

த்தப்பட்டால், அந்த சங்கதியை ஜெயிலுத்தியோகஸ்தர்களுக்கு தெரியப்படுத்தவேண்டியது மாஜிஸ்டிரேட்டின் கடமையாகிறது. இப்படி மாஜிஸ்ட்ரேட்டு எழுதிய காகிதங்களை ஜெயிலார் உடனே அங்கிகாரம் செய்து எழுதவேண்டியது. இந்த அங்கிகார பத்திரங்களை மாஜிஸ்டிரேட்டு பிற்காலத்தில் பார்ப்பதற்கு ஒன்றுசேர்த்து வைத்திருக்கவேண்டியது. ஜெயிலுத்தியோகஸ்தர்கள் மேற்கண்ட செய்தியை வாரண்டில் எழுதிவைக்கவேண்டியது.

3. இந்த ரூல்களுக்கிணங்க ஜெயில்களுக்கு இன்ஸ்பெக்டர் ஜெனரலானவர், ஜெயில் கோட்பாடுகளடங்கிய புத்தகத்தில் சீர்த்திருத்தங்கள் குறிப்பிக்கவேண்டும்.

Financial Department.

G-O-No. 377 Dated 14th August, 1908.

கோஷா ஆஸ்பத்திரியின் வருஷாந்தர சிலவுக்காக கவர்ன்மெண்டார் 1,000 ரூபாய் கிராண்டு செய்யவேண்டுமென்றும், இந்த கிராண்டு மற்றையோர் தாமாக கொடுக்கும் நன்கொடையுடன் அந்த ஆஸ்பத்திரி காரியங்களை நடத்திவரலாமென்றும் காரியதரிசியானவர் கவர்ன்மெண்டாரை கேட்டார். கவர்ன்மெண்டார் அப்படியே 1,000 ரூபாய் சாங்ஷன் செய்தார்கள்.

Local and Municipal, Department.

G. O. 1096 dated, 3rd August, 1908.

மதராஸுக்கு அம்மை குத்துதலுக்கு இன்ஸ்பெக்டரான ஜஸ்டிஸ் துரை அவர்கள் சொன்னதாவது:—கவர்மெண்டார் அவர்கள் புதிய ஏர்ப்பாட்டின்படி இப்பொழுது நாலு காரியங்கள் செய்யவேண்டியதாய் ஏர்ப்பட்டிருக்கிறது.

(1) கட்டாயமாய் அம்மைகுத்தி வைக்குதல்.

(2) பிறப்போர், இறப்போர் இவர்களைப்பற்றிய சங்கதிகளை ரிஜிஸ்டர் செய்யும்படி பலவந்தம் செய்கிறது.

(3) நன்றாய்ப் பயின்ற உத்தியோகஸ்தர்களை இந்தக் காரியத்துக்கு அனுப்புதல்.

(4) கொஞ்சங் கொஞ்சம் பேராக இல்லாமல் பொது ஜனங்கள் எல்லாரையும் அம்மைகுத்த யத்தனம் செய்தல்.

சில கேசுகளில் செய்வார்களாகில் தவிரிப்போறவர்கள் தாமே அது தப்பென்று அறிவார்கள். மேலும் மற்றபோர்களுக்கும் நல்ல எண்ணத்தை உண்டாக்கும்.

டெம்பர் 1ல் கூரியது செவ்வனே செய்யப்படவேண்டுமானால், ஒவ்வொரு கிரும தலைவரும் ஒவ்வொரு ரிஜிஸ்டர் வைத்துக்கொண்டு வரவேண்டியது. அதில் அம்மைகுத்தாத குழந்தைகளையும், புதிதாக வருபவர்களைப்பற்றியும் எழுதப்பட்டு இருக்கவேண்டியது. நான் பார்த்த அனேக கிருமங்களில் இந்த ரிஜிஸ்டரை சரியாக வைக்கிறதே கிடையாது. அனேக கிருமங்களில் ரிஜிஸ்டரே கிடையாது.

இதேமாதிரியாக, சாவோர் பிறப்போர் இவர்களைப்பற்றிய சங்கதிகளைப் பலவந்தமாக ரிஜிஸ்டர் செய்யவேண்டும். இந்த ரிஜிஸ்டர்கூட சரியாக வைக்கிறதில்லை. இனிமேல் தாசில்தார் முதலியோர்கூட நன்றாய் ஊன்றி அந்த ரிஜிஸ்டர்களை இன்ஸ்பெக்ட் செய்யவேண்டியது.

எல்லா கிரும முனிஸீப்களுக்கும் இதைப்பற்றி நன்றாய் கற்பனை செய்யவேண்டியது. ரெவினியூ உத்தியோகஸ்த்தர்களும் இவர்களும் சரியாய் அப்படிப்பட்ட கட்டளைகளின் வழியாய் நடத்திவருகிறார்கள் என்று சரிபார்த்து வரவேண்டும். போனவருஷத்தில் அம்மைகுத்த தகுந்தவர்கள் 2,04,000 பேர் இருந்தார்கள். இதில் 1,77,186 பேருக்கு அம்மை குத்தப்பட்டது.

செங்கல்பட்டு, மதுரை, தென்னாற்காடு, சித்தூர், ஆகிய நாலு ஜில்லாக்களிலும் மேல்கூறிய முயர்ச்சிகள் செய்யப்பட்டன.

மதராஸ் ஸானிடெரி கமிஷனர் ஆகிய மேஜர் கிலிமிசா என்பவர் இந்த ரிபோர்ட்டை கவர்மெண்டாருக்கு அனுப்பும்போது சொன்னதாவது:—ரிபோர்ட்டில் கூரப்பட்ட ரிஜிஸ்டர்களை சரியாக பரிபாலித்து வந்தார்களே யானால் நம்முடைய முயற்சிகள் சித்திபெரலாம்.

ஆகையால் கவர்மெண்டார் அவர்கள், கிருமத்தலைவர்கள் தமது வேலைகளை சரியாய் நடத்திவரும் பொருட்டு ரெவினியூ உத்தியோகஸ்தர்களுக்கு உத்தரவு அளிக்கக் கேட்டுகொள்ளுகிறேன்.

போனவருஷம் அம்மை குத்துகிறவர்களும், இனிஸ்பெக்டர் அவர்களும் செய்த வேலை திருப்திகரமானதாய் இருக்கிறது.

இதுவரைக்கும் நம்முடைய முயற்சிகளெல்லாம் சித்திபெற்றிருக்கின்றவாகையால், தஞ்சாவூர், திருச்சினாபள்ளி ஜில்லாக்களிலும் இனி ஆரம்பிக்க உத்தரவு ஆகவேண்டும்.

கவர்மெண்டார் அவர்கள் இதை ரிகார்ட்டு செய்து, இந்த நாலு ஜில்லாக்களிலும் விளையும் பலன்களை இன்னும் ஒரு வருஷம் பார்த்து, அதற்கப்புறம் மற்ற ஜில்லாக்களுக்கும், பிறகு பரப்புவிக்கலாம் என்று சொன்னார்கள். ஸானிடெரி கமிஷனர் அவர்கள் கேட்டுகொண்டபடி ரெவினியூ உத்தியோகஸ்தர்களின்பேரில் வேண்டிய உத்தரவுபடி ரெவினியூ டிபார்ட்டுமெண்டார் யோசித்து செய்வார்கள்.

நெருப்பென்றசப்தம்

ஒருநாளிராத்திரி ஒருவன் வீதிவழியாக "நெருப்பு" "நெருப்பு" என்று கூவிக்கொண்டே போனான். எல்லோரும் "எங்கே" "எங்கே" என்றுகதவைத்திறந்துகொண்டு வெளியேவந்தார்கள். அந்த துஷ்டன் அவர்களைப்பார்த்து "சுருட்டை பற்றவைக்க கொஞ்சம் நெருப்புவேண்டும், யாராவது தயைசெய்து கொடுப்பீர்களா?" என்றான்.

மதராஸ் ஹைகோர்ட்

மிஸ்டர் ஜஸ்டிஸ் மன்ரோ
மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துல் ரஹீம் } ஜட்ஜிகள்முன்பாக

வழிமறித்து அடித்தகேசு

ஒரு வர்த்தகன் தென்மலையாள ஜில்லாவைச்சேர்ந்த அரிகோட் நகரிலிருந்து படவின்பேரில் பிரயாணஞ் செய்கையில் நான்குபேர் அவனை வழிமடக்கி உபத்திரவித்து அவனிடமிருந்த ரொக்கம் ரூபாய் 300-ம் வேறுசில பண்டங்களையும் அபகரித்துக்கொண்டார்கள். அவர்களில் இருவர் பிரத்தியட்சமாய் அகப்பட்டுக்கொண்டார்கள். பிறகு மற்ற இரண்டுபேர்வழிகளும் மறியல்செய்யப்பட்டு எல்லா குற்றவாளிகளையும் தென்மலையாளம் செஷன்ஸ் கோர்ட்டுக்கு கமிட்டு செய்திருந்தமையால் அந்த கோர்ட்டார் விசாரணைசெய்து அவர்களில் இருவர் நபருக்கு இரண்டுவருஷ கடினகாவல் சிக்ஷைபடைந்தார்கள். இந்த தீர்ப்பின்பேரில் சிக்ஷைபடைந்தவர்கள் கோர்ட்டு வக்கீல் ரங்கநாத அய்யர்மூலமாய் மதராஸ் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்துக்கொண்டதன்பேரில் துரைத்தனத்தார் தரப்பில் பப்ளிக் பிராசிகியூட்டர் ஆஜராகி வாதித்தார்.

தீர்ப்பு.—செஷன்ஸ் ஜட்ஜ் அவர்கள் சட்டப்படி விசாரணை நடத்தவில்லை; ஏனென்றால் ஸ்டேஷன் அவுஸ் ஆபீஸர் பிராசிக்யூஷன் தரப்பு சாக்ஷிகளுக்கு அப்பீல்வாதிகளை முன்னமேயே டாணவில் காண்பித்திருந்தமையால் அவர்கள் அந்தக்குற்றவாளிகளை இன்னாரென்று கண்டுபிடித்தார்களென்றும், அப்பீல் வாதிகள் சொல்லிய எதிர்வாதத்தையும் செஷன் ஜட்ஜி அவர்கள் ஜூரி அவர்களுக்கு புலப்படத் தெரிவிக்காமையால் சட்டத்துக்கு விரோதமாய் நடவடிக்கை நடத்தப்பட்டிருக்கிறதென்று தீர்மானித்து அப்பீல் செய்துக்கொண்ட இருவர்பேரிலும் விதித்த தண்டனையை ரத்துசெய்து புனர்விசாரணை செய்யும்படி உத்திரவு செய்தார்கள்.

ஸ்ரீ பார்த்தசாரதிஸ்வாமி தேவாலயக்கேசு

ஆனரபில் சீப்ஜஸ்டிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் } ஜஸ்ஜிகள்முன்பாக

கேசின் விபரம்.—சென்னையை அடுத்த திருவல்லிக்கேணியிலுள்ள ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி தேவாலயத்தின் தர்மகர்த்தர்கள் மேற்படி திருவல்லிக்கேணியிலுள்ள கெங்கநாமண்டபம் ஷை தேவாலயத்தைச்சேர்ந்த சொத்தென்றும் அந்தமண்டபத்தைத் தங்கள் வசம் ஒப்புவிக்கும்பொருட்டும் ராமானுஜாசாரி வகையரா பேரில் மதராஸ் ஹைகோர்ட்டு ஒரிஜினல் சைடில் வியாஜ்ஜியம் தொடர்ந்தார்கள். அதை முன் ஜட்ஜாயிருந்து இப்பொழுது காலமாய்விட்ட மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்துரை அவர்கள் தீரவிசாரித்து தள்ளுபடிசெய்தார். அந்த தீர்ப்பு சரியல்லவென்று மேற்படி தேவாலயத்தின் தர்மகர்த்தர்கள் அப்பீல் செய்துகொண்டார்கள்:—

தீர்ப்பு.—இந்த மண்டபத்தை கட்டியவர் சடகோபாசாரியார் ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி தேவாலயத்திற்கு தர்மகர்த்தரா யிருந்தமையால் மேற்படி மண்டபமும் இன்னும் அதைச்சேர்ந்த சில கிடங்குகள் முதலியவைகளும் பிரதிவாதியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் குடிக்கூலிக்குவிட்டு வாடகையை குடும்பத்தில் அனுபவித்துவந்திருப்பதாகவும் இன்னும் அந்த மண்டபம் கிடங்கு முதலியவைகளுக்கு அநேகரிபேர்கள் செய்திருப்பதாலும் மேற்படி சடகோபாசாரியரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் யாரும் அநேக வருஷங்களாக ஷை தேவாலயத்திற்கு தர்மகர்த்தாவாய் இல்லாவிடினும் பிரதிவாதியின் அந்த தரப்பார் சேர்ந்துகளை அனுபவித்துவந்ததாக ருஜுவானபடியால் கீழ் கோர்ட்டார் தீர்மானம் சரியென்று ஸ்திரப்படுத்தி அப்பீலைத் தள்ளிவிட்டார்கள்.

ஸ்ரீரங்கத்தில் நடந்த வடகலைகேஸ்

(1908ளு ஆகஸ்டுமீ 7உ).

மிஸ்டர் ஜஸ்டிஸ் மன்ரோ
மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துல்ரஹீம் } ஜட்ஜிகள் முன்பாக

கேசின்விபரம்.—திருச்சினாப்பள்ளிஜில்லா, ஸ்ரீரங்கத்திலிருக்கும் நாராயண அய்யங்கார் என்பவரும் இன்னொருவரும் சேர்ந்து ஸ்ரீரங்கம் நம்மாள்வார் தேவாலயத்தில் ஸ்ரீ நம்மாள்வார் ஸ்வாமியை ஊர் பிரதட்சணம் செய்விக்கப்போகிறதாகவும் அப்பொழுது அவருக்கு வடகலைநாமம் தரித்திருந்தால் கலகம் நேரிடுமென்றும் அதைத் தடுக்குமாறு மேற்படி தேவாலயத்தின் ட்ரஸ்டிகளாகிய ஐந்துபேருக்கு நோட்டீசு பிறப்பிக்கும்படி கி. பு. கோட். 144-வது பிரிவின்படி திருச்சினாபள்ளி ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டதின்பேரில், அவர் மேற்படி 144-வது பிரிவின்படி உத்தரவுசெய்ய யாதொரு ஹேதுவும் கிடையாதென்று சொல்லி அந்த மனுதாரர்களிடம் நல்நடவடிக்கையாயிருப்பதற்கு ஜாமீன் வாங்கும்படி உத்தரவுசெய்தார். அப்படியே மனுதாரர்களுக்கு கி. பு. கோ. 107-வது பிரிவின்படி நோட்டீசு அனுப்பி நல்நடவடிக்கைக்காக ஒவ்வொரு மனுதாரரிடத்திலும் பிரத்தியேகமாய் ரூபா 750-க்கும், ரூபா 3000-க்கும் பிணைஜாமீன் வாங்கிக் கொள்ளப்பட்டது. அதன்பேரில் மனுதாரர்கள் மதராஸ் ஹைகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் பி. ஆர். சுந்தரம் ஐயர் மூலமாய் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள். சர்க்காரார் தரப்பில் பப்ளிக்பிராசிகியூட்டர் ஆஜர்—தீர்ப்பு:—மேற்சொல்லிய கி. பு. கோ. 107-வது பிரிவின்படி மனுதாரர்களுக்கு நோட்டீசு அனுப்புவதற்குமுன் அதன் சந்தர்ப்பங்களை முழுதும் மாஜிஸ்திரேட் அறிந்துக்கொண்டுதான் செய்யவேண்டியிருக்க அப்படி யாதொன்றும் தெரியாமலும் மனுதாரர்கள் அபிரிக்கையால் இரமல் கலகம் உண்டாகினதாக சாட்சியத்தால் ருஜுவானதாக தென்படவில்லையென்றுசொல்லி மாஜிஸ்திரேட் உத்தரவை ரத்துசெய்துவிட்டார்கள்.

கல்கத்தாவின் ப்ராவிடென்ட் பண்டு விஷயமாய் ஏற்பட்ட நம்பிக்கை துரோக கேஸ்

கேசின் பிபரம்.—மேற்படி பண்டின் மானேஜரும் சொந்தக்காரரும் சேர்ந்து கோதாவரி ஜில்லாவிலிருக்கும் சிலர் அந்தபண்டில் சிலர் ஷேர்கட்டிக்கொண்டு வந்ததாகவும் அப்படி கட்டிய மொத்தத்தை மேற்படி பேர்வழிகள் தங்கள் சொந்த பிரயோஜனங்களுக்குச் செலவழித்துக்கொண்டு நம்பிக்கைதுரோகம் செய்து மோசம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு விசாரணை செய்து பண்டின் சொந்தக்காரனை 4 வருஷ கடினகாவலும் ரூ. 200 அபராதமும், மானேஜரை 3 வருஷகடின காவலும் 150 ரூ. அபராதமும்விதித்து சிக்ஷைசெய்தார். அந்த தீர்ப்பின்பேரில் அவர்கள் செஷன் கோர்ட்டாருக்கு அபீல் செய்துகொண்டார்கள். செஷன்ஸ் கோர்ட்டார் கீழ்கோர்ட் தீர்மானத்தைச் சரியென்று ஒப்புக்கொண்டு மானேஜருக்கு விதித்த தண்டனையை 11 மாதங்களுக்கு குறைத்துவிட்டார்கள். அதன்பேரில் அவர்கள் ஐகோர்ட்டுக்கு அப்பீல்செய்துக்கொண்டதில் ஐகோர்ட்டார் மேற்படி தீர்ப்பை ஊர்ஜிதப்படுத்தி மானேஜருக்கு விதித்த தண்டனையை 13 மாதமாக்கிவிட்டார்கள். இது இப்படி இருக்க மேற்படி பண்டின் பிரசிடெண்டையும் ஜாய்ண்டு மாஜிஸ்ட்டிரேட் தண்டித்திருந்தார். அதன்பேரில் அவர் செஷன் கோர்ட்டுக்கு அப்பீல்செய்துக்கொண்டதில் அவர் மேற்படிகுற்றத்தில் சம்பந்தப்பட்டவரல்லவென்று அவர்மீது விதித்த சிக்ஷையை ரத்துசெய்துவிட்டார்கள்.

உடையார்பாளையம் ஜமீன் கீழ்பாலூர் கிராமத்தில் தேவஸ்தான கேசு

மிஸ்டர் ஜஸ்டிஸ் மன்ரோ
மிஸ்டர் ஜஸ்டிஸ் பின்ஹே } ஜட்ஜிகள் முன்பாக

கேஸின் பிபரம்.—மேற்படி தேவஸ்தானத்தின் ட்ரஸ்டி தேவஸ்தான விஷயமாய் வசூலாகிய தொகை சுமார் ரூ. 554 லை, தன் சொந்த பிரயோஜனத்திற்காக செலவழித்துக் கொண்டாரென்று குற்றம் சாட்டப்பட்டு அரியலூர்சப்டிவிஷனல்மாஜிஸ்ட்டிரேட்டால் 18 மாத கடினகாவலுக்கும் 500 ரூ. அபராதத்துக்கும் தண்டிக்கப்பட்டார். இதுவுமல்லாமல் மேற்படி அரியலூர் மாஜிஸ்ட்டிரேட் தன்னுடைய தீர்ப்பில் மேற்படி தேவஸ்தான விஷயமாய் மிக்க ஒழுங்கீனங்களை தடுக்குமாறு இதுவரையில் யாரும் வெளிவரவில்லையென்றும் ஒருவேளை எப்பொழுதாவது யாராகிலும் இதைவெளிக்குக்கொண்டுவரும் விஷயத்தில் அப்பொழுது தேவஸ்தானத்தின் ட்ரஸ்டிகளை மிக்க குரூரமாய் சிக்ஷைசெய்ய வேண்டுமென்று சொன்னார். அந்த தீர்ப்பின்பேரில் சிக்ஷையடைந்த கைதி செஷன் கோர்ட்டாருக்கு அப்பீல் செய்துக்கொண்டதில் அவர்கள் கீழ்கோட்டின் தீர்ப்பு சரியென்று ஸ்திரப்படுத்திவிட்டார்கள். அதன்பேரில் ஐகோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ளப்பட்டது.

தீர்ப்பு.—மேற்படி தொகையை ட்ரஸ்டி தனக்கு கடனாக எடுத்துக்கொண்டதினால் அதை அவர் மோசம்செய்து தன் சொந்த பிரயோஜனத்திற்கு செலவழித்ததாக சொல்லலாகாதென்று மேற்படி கடினகாவல் தண்டனையையும் அபராதத்தையும் ரத்து செய்துவிட்டார்கள்.

குடும்பத்தில் ஏற்பட்ட ஒரு உடன்படிக்கை கேஸ்

மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் முன்பாக

ஒரு ஹிந்து குடும்பத்தில் பதினைந்துவருஷகாலமாக ஹைகோர்ட்டில் வியாஜ்ஜியம் ஆடிக்கொண்டிருந்தார்கள். கடைசியாய் அவ்வியாஜ்ஜியத்தை ஓர்விதமாய் பைசல் செய்து குடும்பத்தில்சில ஷரத்துகள்கண்டு இராஜியாய் ஒரு உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டார்கள். இப்போது இவ்வியாஜ்ஜியத்தின் வாதி (கணேஷராவ் என்கிறவெங்கட்ராவ்) தன்னுடைய தகப்பன் ராஜிசெய்து இக்குடும்பத்தில்ஏற்படுத்தியஒரு உடன்படிக்கை தன்னை கட்டுபடுத்தாதென்னும் காரணத்தால் அதை ரத்துசெய்து தனக்கு 2 லக்ஷம் ரூபாயிக்கு டிக்ரீ தரவேண்டுமென்று ஆனரபில் அட்வோகேட் ஜனரல், மிஸ்டர், டி. ஆர். வெங்கட்ராமசாஸ்திரி (ஹைகோர்ட்டு வக்கீல்) மூலமாய் மதுராஸ் ஐகோர்ட் ஒரிஜனல் சைடில் வியாஜ்ஜியஞ்செய்தார். எதிர்கட்சி துல்ஜாராம்ராவுக்கு ஐகோர்ட்டு வக்கீல்கள் மிஸ்டர் வி. மாசிலாமணிப் பிள்ளையும், மிஸ்டர் சி. பி. ராமசாமி ஐயரும் ஆஜராகி அந்த உடன்படிக்கை லாப்படி செல்லுமென்று வாதித்தார்கள்.

தீர்ப்பு.—இந்த வியாஜ்ஜியத்தில் ஒரு ஹிந்து குடும்பஸ்தர் 15-வருஷகாலமாக வியாஜ்ஜியமாடிக்கொண்டிருந்து கடைசியாய் அதை இராஜிசெய்ய வாதியின் தகப்பனால் செய்யப்பட்ட ஒரு உடன்படிக்கை கோர்ட்டார் அனுமதிபெற்றுதான் செய்திருக்க வேண்டுமென்பது அவசியமில்லையென்றும் வாதியின் தகப்பனுக்கு அப்படிப்பட்ட உடன்படிக்கை செய்துகொள்ள அதிகாரமுண்டென்றும் தீர்மானித்தார்.

மனோகரத் துணுக்குகள்

ஜட்ஜி அறிவுள்ளவரா

வாதிவக்கீல்.—(சாக்ஷியைப் பார்த்து) பிரதிவாதியை வாதி என்னவிதமான துர்ப்பாஷைகளைச் சொல்லி வைதான்? சொல்லும் பார்ப்போம்.

சாக்ஷி.—ஐயா! அந்த வார்த்தைகளை அறிவுள்ள எவனுங்கேட்க சம்மதியான்.

வக்கீல்.—அப்படியானால் ஜட்ஜியவர்களின் காதில் போய்ச்சொல்.

தங்களைப்போலத் தோற்றுகிறார்

வேலைக்காரன்.—தங்களைப் பார்க்கவேண்டுமென்று யாரோ ஒருவர் வந்திருக்கிறார்.

எஜமான்.—பெரிய மனுஷியரைப்போல தோன்றுகிறதா சொல்க.

வே.—இல்லை. அப்படி தோற்றவில்லை.

எ.—பின் எப்படித்தோற்றுகிறார்?

வே.—தங்களைப்போலத் தோற்றுகின்றார்.

காலங்கழிப்பது

கிருஷ்ணன்.—ராமா! ஏனிப்படி காலத்தையெல்லாம் வீணுக்குகிறாய்?

ராமன்.—பின்னை நானென்செய்வேன். வீணுக்குவதற்கு வேறொன்றும் அகப்படவில்லையே அதனால்தான்.

GENERAL NEWS

பொது வர்த்தமானங்கள்

Disturbance in Palamcottah Jail

பாலயங்கோட்டை ஜெயிலில் நேரிட்ட கலகம்

ஆகஸ்டு மீ 1௳ சனிவாரம் மேற் செப்பியபாலையங் கோட்டை ஜில்லா (டிஸ்ட்ரிக்ட்) ஜெயிலில் அபாயகரமான பிரமாத கலகம் ஒன்று நேரிட்டது. அதாவது, அந்த ஜெயிலில் கைதியா யிருந்தவர்களில் இருவரை அந்த ஜெயிலிலுள்ள மற்ற கைதிகளின் மேல் பார்வையிடுவதற்காக வார்டர்களாய் (Warders) நேமித்திருந்தார்கள். அவர்கள் இருவரும், அந்த ஜெயிலில் டிப்டி ஜெயிலரின் (Deputy Jailor) மீது பொய்பிராது செய்ததற்காக தண்டனையாய் அவர்கள் இருவரும் செய்துக்கொண்டு வந்த வார்டர் (Warder) தொழிலிக்கு கீழ்த்தரமான கேழ்வரகு அரைக்கும் மிக்க கஷ்டமானதொழிலை செய்து வரவேண்டியதென்று உத்தரவு செய்ததின் பேரில் மேற் செப்பிய இரண்டு கைதிகளும் அங்குள்ள மற்ற கைதிகளை ஏவிவிட்டமையால் அவர்கள் மறுதினம் காலை வேலை செய்வதற்காக அவரவர்கள் அறையை விட்டு வெளிவந்தவுடனே அவ்விடத்தில் சமையல் செய்யும் பண்டக சாலைக்குள் அநேக கைதிகள் கம்பிசுத்தி யிருக்கும் மர உலக்கைகளையும், சமையல் செய்யும் பாத்திரங்களையும் எடுத்துக் கொண்டு நுழைந்துபோய் அந்த ஜெயில் கட்டடத்தின் நடுவிலுள்ள கோபுரம் போன்ற இடத்திற்குப் போய் அவ்விடத்திலிருந்த பெரிய ஜெயிலர் (Jailor) ஜேக்கஸ் (Mr. Jacques) என்பவரை மிக்க குரூரமாய் தடியால் அடித்து உபத்திரவம் செய்தார்கள். அந்த கைதிகளில் இருவர் ஜெயிலின் வெளியிலுள்ள பிரதான கேட்டை (வாசப்படியை) தாண்டிதப்பித்து ஓடிவிடுவதற்காக மிக்க தீவரமாய் செல்லுகையில அவர்கள் வெளியே போவதற்குமுன் அவ்விடத்திலிருந்த இரண்டு மூன்று வார்டர்கள் (Warders) உடனே வந்து அவர்கள் தப்பித்துக்கொண்டு போவதற்கு செய்த எத்தனங்களைத் தடுத்தார்கள். அதற்குப்பின் துப்பாக்கியைக் கொண்டு சில வெடிகளைச் சுட்டதின்பேரில் ஜனங்கள் (கைதிகள்) எல்லோரும் அவாள் அவாள் இடம் போய் சேர்ந்தார்கள். கொஞ்சநேரத்திற்குள்ஜெயில்சூப்பரின்டென்டென்டு மிஸ்டர்லின்ஸ்டேல்(Mr. Lynsdale),ஜில்லா போலீஸ்சூப்பரின்டென்டெண்டு மிர்-தாமஸ்(Mr. Thomas), டிவிஷனில் மாஜிஸ்திரேட் ம-ா-ா-ஸ்ரீ கோபாலசாமி ஐய்யங்கார், காப்டன் ஹார்லி (Captian Harley),பாலையங்கோட்டை சப்மாஜிஸ்திரேட் மிர்-செவத்தசாமி பாண்டியன், இவர்கள் எல்லோரும் அவ்விடம் வந்து [illegible]தார்கள். அவர்களில் கடைசியாய் செப்பிய மிர்.—[illegible]தசாமி பிள்ளை என்பவர் இது விஷயமாய் தற்[illegible]செய்துக்கொண்டிருக்கிறார். ஜில்லா கலெக்டருக்கும் தந்திமூலமாய் சமாச்சாரம் தெரிவிக்கப்பட்டது. இப்பொழுது ஜெயிலில் யாதொரு கலகமுமின்றி அமைதியாகவே இருக்கின்றது.

Instructions to Magistrates

மாஜீஸ்திரேட்டுகள் கவனிக்க வேண்டியதற்காக கவர்ன்மெண்டார் பிரசுரித்திருக்கும் கற்பனைகள்.

தற்காலத்தில் ஒரு கைதியை கடின காவலில் இருக்கும்படி சிட்சைசெய்து அதனுடன் அபராதமும் கட்டும்படியாக தண்டித்திருந்த அந்த கைதிகடின காவலின் வாய்தா முடிவதற்கு முன்னமேயே அவன் கட்ட வேண்டிய அபராதத்தையும் அவனை சிட்சை செய்த மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் கட்டிவிட்டிருந்தும் அது சாமாசாரம் இந்த கைதி இருக்கும் ஜெயிலின் பெரிய உத்தியோகஸ்தராகிய ஜெயிலருக்கு தெரிவிக்க தவறிப்போவதினால் அந்த கைதி அபராதத்தை கட்டிவிட்டிருந்தும் ஜெயிலிலிருந்து விடுதலையாகாமல் சிட்சை விதித்த காலமுழுதும் ஜெயிலிலேயே இருக்கும்படி கைதிகளுக்கு நேரிடும் கஷ்டத்தை அனுசரித்து ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அவர்கள் இனிமேல் மாஜிஸ்திரேட்டுகளும் ஜெயிலர்களும் அடியிற்கண்ட கற்பனைகளை அனுசரித்து நடக்க வேண்டியதென்று உத்திரவு செய்திருக்கிறார்கள்:—

ஒரு கைதியை சிட்சை சேய்தவுடனே அவன் பேரில் பிறப்பித்திருக்கும் வாரண்டில் அந்த கைதி கட்டவேண்டிய அபராத மொத்தத்தை முழுதிலுமாவது அதில் யாதொரு பாகமாவது கட்டிவிட்டான் என்று குறிப்பிட்டு எழுதவேண்டியது. அப்படி அந்த வாரன்டில் அதைப்பற்றி ஒன்றும் எழுதி யிராவிடில் ஜெயில் உத்தியோகஸ்தர்கள் அந்த கைதியை சிட்சை செய்து அனுப்பிய கோர்ட்டாருக்கு எழுதி தெரிந்துக் கொண்டு அந்த சமாச்சாரத்தை அந்த வாரன்டின் மீது குறிப்பிட்டு வைக்க வேண்டியது:—

ஒரு கைதியை ஜெயிலுக்கு அனுப்பி வைத்தபின் அவன் கட்டவேண்டிய அபராத மொத்தத்தை பூர்த்தியாயாவது அல்லது அதில் யாதெனும் ஒரு பாகமாவது கட்டி விட்டால் அந்த சங்கதி மாஜிஸ்திரேட்டு அவர்கள் கட்டின வுடனே ஜெயிலருக்கு தெரிவிக்கவேண்டியது. அது சமாச்சாரம் ஜெயிலர்தனக்கு தெரிந்ததாக உடனே மாஜிஸ்திரோட்டு அவர்களுச்கு ஒப்புக்கொண்டுமறு உத்தரம் எழுதவேண்டியது. இந்த உத்தரங்களை மாஜிஸ்திரேட்டு அவர்கள் பைல் செய்துவைத்து வேண்டும்போது பார்த்துக்கொள்ள வேண்டியது. இவ்விதமாய் மாஜிஸ்திரேட்டு தெரிவித்த சமாச்சாரத்தை ஜெயிலர் அந்த கைதியின் வாரன்டின் மேல் தனக்கு பின்னிட்டு தெரியும்படியாய் குறிப்பிட்டு எழுதிவைக்கவேண்டியது.

மேற் செப்பிய இந்த கற்பனைகளின்படி ஜெயில் மானுயல் (Jail Manual) என்னும் புஸ்தகத்திலும் திருத்துப்பாடுகள் செய்து தெரிவிக்கும்படி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலவர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.



தாயால் வண்டியில் நேரிட்ட இரும்.



மூன்று நபர்கள் கொலையுண்டார்கள்.

Mail Van Robbed

தபால் மெயில்வண்டியில் நேரிட்ட திருடு

மூன்று நபர்கள் கொலையுண்டார்கள்

ஆகஸ்டுமீ 3உ சோமவாரம் இரவு ராம்பூர் போஆலியா (Rampur Boalia) என்னும் ஊரிலிருந்து நாட்டூருக்கு டார்ஜிலிங் (Darjiling)கின் மெயில் காகிதம் முதலிய தஸ்தவேஜுகளை கொண்டுபோன தபால் மெயில் வண்டியை அநேகதிருடர்கள் ஒன்றுசேர்ந்து கொள்ளையடிக்கதீர்மானித்து அந்த மெயில் குதிரை வண்டியை செலுத்தின சாரதியையும் இன்னும் அதில் பிரயாணம் செய்யும் இரண்டுநபர்களையும் கொன்றுவிட்டு அந்த மெயில் வண்டியிலிருந்த காகிதங்கள், பணமடங்கிய பார்ஸல்கள் முதலான விலை உயர்ந்த வஸ்துக்களை திருடிக்கொண்டுபோய்விட்டார்கள்.

இதைக்கண்டு அந்த வண்டியிலிருந்த பிரயாணிகளின் ஒருவர் மிக்க விரைவாய் சென்று நடந்த வர்த்தமானத்தை நாட்டூரில் தெரிவித்தார். அது முதல் அந்த திருடர்களைக்கண்டு பிடிக்கக்கூடுமான பிரயத்தனங்கள் செய்து வந்தும் இதுவரையில் அவர்கள் (திருடர்கள்) இன்னாரென்று தெரிந்துகண்டு பிடிக்க யாதொரு தகுதியான பேர்வழியும் வெளியாகவில்லை.

Limitation Bill

காலநிர்ணயத்தைப்பற்றிய மசோதா ஆக்ட்

ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரல் அவர்களும், லார்ட்கிச்செனர், சர். ஹாவி.டேன், டாக்டர் ராஷ்விஹாரி கோஸ். முன்ஷிமாதோலால் என்பவர்களும் நாளது ஆகஸ்டுமீ 7உ சிம்லாவில் கூடிய சபையில் மேற்படி மசோதா ஆக்டு கொஞ்சம் திருத்தப் பாடல்களுடன் சட்டமாய் (ஆக்டாய்) மஞ்சூர் செய்துக்கொள்ளப்பட்டது,

Eastern Bengal and Assam

இப்பொழுது புதிதாய் ஏற்பட்ட கிழக்குவங்காளம் (Eastern Bengal) என்னும் மாகாணத்திலுள்ள சபையார் (League) தற்காலத்தின் நிலைமையை அனுசரித்து இந்த புதிய கிழக்குவங்காளம் ஆஸாம் (Eastern Bengal & Assam) மாகாணத்தில் துடுக்கர் [illegible]ய் விசேஷத்திருப்பதை யோசித்து பொது ஜனங்களுக்கு(முக்கியமாய், துடுக்கர்களுக்கு) நியாய பரிபாலனம் கஷ்ட நஷ்டமின்றி சுளுவாய் நிறைவேறிவரும்படிக்காக இம்மாகாணத்திற்காகவே பிரத்[illegible] ஹைகோர்ட்[illegible]த்தும் படிக்கு [illegible]மண்டாருக்கு [illegible] செய்திருக்கிறார்

பர்மாவிலுள்ள துடுக்கர்கள்

துரைத்தனத்தாருக்கு செய்துகொண்ட விண்ணப்பம்.

பர்மாதேசத்திலுள்ள துடுக்கர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அவர்கள் அங்குள்ள வியாபாரிகளுக்கெல்லாம் மிக்க தலைமையானவர்கள் என்றும், கோர்ட்டு கட்டணம் முதலிய வியாஜ்ஜிய செலவுகள் அவர்களால் விசேஷமாய் செலுத்திவரப் படுகிறதென்றும் கண்டு ஒரு மஹஜர் நாமா தயார்செய்து, அதில்ரங்கூனிலுள்ள துலுக்கர்களில் தலைமையாயுள்ள அநேகர் கையொப்பம்செய்து மேற்படி ரங்கூன் ஆலோசனை சபையில் துடுக்கர் ஒருவர் மெம்பராயிருக்க வேண்டுமென்றும், மேற்படி ரங்கூன் சீப்கோர்ட்டில் மஹம்மத்திய சட்டம் முதலியதை நன்றாய் கற்றுணர்ந்த துடுக்கர் ஒருவரை ஜட்ஜாக நேமிக்கும்படியாகவும் மாட்சிமைபொருந்திய கவர்னர் ஜெனரல் அவர்களுக்கு மனுசெய்துக் கொண்டார்கள். மேற்படி உத்தியோகத்திற்கு துடுக்கர்களில் லாயக் கானவர்கள் பர்மாவில் யாரும் கிடைக்காவிடினும். இந்தியாதேசத்தில் இருந்தாகிலும் ஒருவரை நேமிக்கும்படியாய் மனுசெய்துக்கொண்டார்கள்.

Important Mercantile Case

வியாபாரிகள் முக்கியமாய் கவனிக்கவேண்டிய கேஸ்

வியாபாரம்செய்யும் கூட்டத்தார் விசேஷமாய் பிரயோகிக்கும் பில் ஆப் எக்ஸ்சேஞ் (Bill of Exchange) பத்திரத்தின் விஷயமாய் பர்மா பினான்ஷியல் கமிஷனர் அவர்கள் இந்தியன் ஸ்டாம்ப் ஆக்டின் நிபந்தனைகளின்படி சீப்கோர்டார் அபிப்பிராயத்திற்குத் தெரிவித்திருந்த கேஸில் புல்பெஞ்சார் ஆகஸ்டுமீ 10உ பின்வருமாறு தீர்ப்புசொன்னார்கள்.

தீர்ப்பு:—சாதாரணமாம் வியாபாரிகள் பில் ஆப் எக்ஸ்சேஞ்ச் என்னும் பத்திரத்தை இரண்டு மூன்று செட்டுகளாய் பிறப்பிக்கிறது வழக்கம். அதில் முதல் பிறப்பித்த பத்திரத்திற்கு ஒரு அணா முத்திரை ஸ்டாம்பு ஒட்டி இருக்கையில் அதேபத்திரத்தின் இரண்டாம் பிரிதிக்கும் ஒரு அணா ஸ்டாம்பு ஒட்டவேண்டுமா இல்லையா என்று எங்களுக்குத்தெரிவித்து இந்த கேசு நெதர்லாண்ட் (Netherland) வியாபாரக் கூட்டத்தார் செய்துவரும் வழக்கபடி, அதாவது, முதல் பில் ஆப் எக்ஸ் சேஞ்சுக்கு ஒரு அணா ஸ்டாம்பு ஒட்டுகிறதும், இரண்டாம் பிரிதிக்கு இம்[illegible]திரம் கிரமமாய் ஸ்டாம்ப் செய்யப்பட்டதென்[illegible] ஸ்டாம்பு முத்திரைகுத்தி வந்தார்கள். பினான்ஷியல் கமிஷனர் மற்ற பாங்குகளில் (Banks) [illegible]லாய் செய்துவருகிறபடி இரண்டு பிரிதிகளில் ஒவ்வொன்றிலும் ஸ்டாம்பு ஒட்டவேண்டியது தானென்று அபிப்பிராயப்பட்டார். அதன்பேரில் சீப் ஜட்ஜ், ஜஸ்டிஸ் ஹார்ட்னால், ஜஸ்டிஸ் ஆர்மண்ட் இம் மூன்று ஜட்ஜிகள் சேர்ந்திருந்த புல்பெஞ்சில் இந்தியன் ஸ்டாம்ப் ஆக்ட் 13-வது ஆக்டுகளின்படி முதல் பில் ஆப் எக்ஸ்சேஞ்சுக்கு இர[illegible] [illegible]ம்பு [illegible]ருந்தால் இரண்டாம் பிரதிக்கு ஸ்ட[illegible] யது அவசியமில்லையென்று தீர்ம[illegible]



THE HON'BLE MR. BASIL SCOTT,
the new Chief Justice of the High Court of Judicature at Bombay
பம்பாய் ஹைகோர்ட்டுக்கு புதிதாய் நேமிக்கப்பட்ட சீப் ஜஸ்டிஸ் கனம்பொருந்திய மிஸ்டர். பாஸில் ஸ்காட்.

31 MAR 1909
MADRAS.

இந்திய சட்ட கெஜட்.

சென்னை என். இராதாகிருஷ்ண கம்பெனியாரால் வெளியிடப்படும்
உயர்தர மாதாந்தர சஞ்சிகை.

வால்யம் 4.] சென்னப்பட்டணம், 1909௵ ஜனவரி௴ [பாகம் 1.

609 008.

THE HON'BLE MR. BASIL SCOTT, the new Chief Justice of the High Court of Judicature at Bombay.

பம்பாய் ஹைகோர்ட்டுக்கு புதிதாய் நேமிக்கப்பட்ட சீப் ஜஸ்டிஸ் கனம்பொருந்திய மிஸ்டர். பாஸில் ஸ்காட்.

இங்கிலாந்தில் அட்டர்னி ஜெனரலுக்கு ஆங்கிலேய கோர்ட்டுகளில் லாட் (Lord Chancellor) சான்ஸெலர் என்னும் பெரிய ஹோதாவான அந்தஸ்தைகொடுக்கும் இப்பழமையாய் வழங்கிக்கொண்டுவரும் மாமூல் முதல் முதல் மதராஸ் ஹைகோர்ட்டு சீப் ஜஸ்டிஸ் கனம்பொருந்திய ஸர் அர்னால்ட் வொயிட் (The Hon'ble Sir Arnold White) என்பவர் அட்வோகேட் ஜெனராலாயிருந்தவரை ஹைகோர்ட்டிற்கு சீப் ஜஸ்டிஸாய் நேமிக்கப்பட்டபிறகு பம்பாயிலும் அதுபோலவே அட்வோகேட் ஜெனரலாயிருந்தவரை ஹைகோர்ட்டு சீப் ஜஸ்டிஸாய் நேமகம்செய்தது முதல் முதல் இப்பிரபுவுக்குதான். கனம்பொருந்திய மிர். ஸ்காட் (The Hon'ble Mr. Scott) என்பவர் 1859-வது ௵த்தில் ஜெனித்தவர்; இவர் சென்ற நூற்றுண்டின் மத்தியில் பம்பாய் நகரத்தில் பெரும்படியாய் மிக்க திரவியத்துடன் வியாபாரம் செய்துக்கொண்டிருந்த காலம்சென்ற மிர். ஹென்ரி ஸ்காட் என்பவரின் கனிஷ்டபுத்திரர். இவர் தன்னுடைய பால்யவயதில் ஆக்ஸ்போர்ட் பெலாயிலில் (Balloil, Oxford) வாசித்து வருகையிலேயே இன்னெர் டெம்பிலில் Inner Temple) சேர்ந்து பி. எ. பரிக்ஷையில் தேர்ந்து பிறகு அதே சர்வகலாசாலையில் எம். ஏ. பரிக்ஷையும் கொடுத்தவர். அதற்குப்பின் அவர் பம்பாய் ஹைகோர்ட்டில் 15-வருஷகாலம் லாயராய் தொழில்புரிந்துவருகையில் இவர்கேசுகளில்மிக்க ஸ்ரத்தையுடன் வாதித்துப் பேசுவதற்கு வல்லவரென்று எல்லோரும் புகழ்ந்து பேசும்படியாய் பெயர் பெற்றுவந்தமையால் பம்பாய் லோக்கல் கவர்ன்மென்டார் இவரை அட்வோகேட் ஜெனரல் வேலையை பதில்பார்த்து வரும்படி இரண்டுதடவை நேமித்தார்கள். பம்பாயிலுள்ள சர்வகலாசாலையாருக்கும் (University of Bombay)-Vs-முனிசிபல்கமிஷனருக்கும் (The Municipal Commissioner) 1892-வருஷத்தில் நடந்த கேசில் (இ. லா. ரி. 16 பம் 219) இவர் மிக்க புத்திசாலித்தனமாய் விசேஷ சட்ட ஞானத்துடன் வாதித்துப் பேசினவர்.

முன் பம்பாயில் அட்வோகேட் ஜெனரலாயிருந்த மிர். பாசில் லாங்க் (Mr. Basil Lang) என்பவர் பென்ஷன் வாங்கிக்கொண்டபோது இப்பிரபுவ்வை காயமான அட்வோகேட் ஜெனரலாய் நேமித்தார்கள். 1905-ம்௵ டிசம்பர் மாதத்தில் முன் ஹைகோர்ட் ஜட்ஜாயிருந்த மிர். ஜஸ்டிஸ் டயாப்ஜி (Mr. Justice Tayabji) என்பவர் லீவின்பேரில் போனபோது அவருடைய ஹோதாவான ஹைகோர்ட் ஜட்ஜ்வேலையை இப்பிரபுவுக்குக் கொடுத்தார்கள். மேற்செப்பிய மிர். ஜஸ்டிஸ டயாப்ஜி என்பவர் இங்கிலாந்தில் காலமாய்விட்டபிறகு இவர் அந்த வேலையை ராஜினமா கொத்துவிட்டு மறுபடியும் தனக்கிஷ்டமான அட்வோகேட் ஜெனரல் வேலையையே பார்த்துக்கொண்டு வந்தார். இப்படி சொற்பகாலம் ஹைகோர்ட் ஜட்ஜ வேலையைப் பார்த்துவந்தபோது கக்ஷிதாரர்களுக்கும், வக்கீல்களுக்கும் பொதுவாய் ஜனங்கள் எல்லோருக்கும் இவர் மிக்க ஸ்ரத்தையுடன் உழைத்து தன் மனசாக்ஷிக்கு விரோதமின்றி மனப்பூர்வமாய் பொறுமையுடன் தொழில்புரிந்து வந்தவரென்று சிலாகித்து பெருமைபாராட்டி புகழ்கிறார்கள். இவர் கடவுள் கிருபையால் நீடித்தகாலம் தழைத்து வாழ்வாராக.

NOTICE.

Contributions other than original are neither invited nor required.

All literary contributions and books for Review should be addressed to Mr. V. NATHAMUNI MUDALIAR, late Tamil Bench Clerk, High Court, Appellate Side, Madras, Editorial Staff. *Indian Law Gazette*, Madras.

DEVONSHIRE HOUSE, 8-9-06.

The Hon. Justice Sir S. Subramania Iyer, B.L., K.C.I.E., Dewan Bahadur, writes :—

" . . . . This Journal will prove useful to those who are unacquainted with English in the Tamil Districts . . . . To show that I am not insensible of the efforts you are making to convey legal information to those who cannot obtain it through English publication I enclose herewith a cheque which I trust you will accept......."

M.R.Ry. C.V. Kumarasawmy Sastiar Avergal, B. A, B. L. Judge, C. C. Court, writes:—

" . . . . I have gone through some of the parts of the INDIAN LAW GAZETTE and am of opinion that the articles are well written and the issues contain ACCURATE and useful INFORMATION. I am sure that the public will find the Law Gazette ON EXCELLENT MEANS OF GETTING ACCURATE INFORMATION ON LEGEL TOPICS. Trusting that your venture will meet with success it deserves. . ."

ஜட்ஜ் - மணி ஐயர் முதலிய அநேக கனவான்களும், மதராஸ்மெயில் முதலிய இங்கிலீஷ் வர்த்தமான பத்திரிகைகளிலும் விசேஷித்த அன்பு பாராட்டி இதன் அபிவிர்த்தியைக் கோரி புகழ்ந்து சொல்லி இருக்கிறார்கள் என்னும் விஷயம் முன்னமேயே எல்லோரும் அறிந்துள்ளததான். இப்பொழுது சென்னை ஸிடிஸிவில்கோர்ட்டு ஜட்ஜ், ம-ா-ா-ஸ்ரீ, சி. வி. குமாரசாமி சாஸ்திரியார் பி,ஏ., பி. எல். அவர்களும் இந்த சட்டகெஜட்டில் மிக்க திடமாய் ஜனங்களுக்குப் பிரயோசனகரமுள்ள சட்ட சம்பந்தமான வர்த்தமானங்கள் எழுதப்பட்டு வருகின்றதென்றும், ஜனங்கள் இந்தகெஜட்டில் பிரசுரித்து வருவதை வாசித்து யாதொரு பிழையின்றி விசேஷித்த சட்ட ஞானத்தை அறிவதற்கு இது சிரேஷ்டமான கெஜட் என்றும் புகழ்ந்து கூறியிருக்கிறார்.

OURSELVES.

நம் பத்திரிகை.

நமது இந்திய சட்ட கெஜெட்டுக்கு சந்தாதாரர்களாகிய நேயர்களுக்கு அறிவிப்பது யாதெனில் :—

பிரதமத்தில், இப்படிப்பட்ட சட்ட கெஜெட்டை பிரசுரித்து நம்முடைய நண்பர்களுக்கு சட்ட ஞானத்தை போதித்து அப்போதைக்கப்போது அவ்வவ்விடத்திய நியாயஸ்தலங்களில் நம்மையாளும் துரைத்தனத்தாரால் செய்யப்பட்டுள்ள சட்டதிட்டத்தை சரியாய் பரிசீலனை செய்து ஏற்படும் தீர்மானங்களில் மிக்க முக்கியமானவைகளை ஜனங்களுக்கு அறிவித்துவரவேண்டுமென்கிற கருத்துடன் தற்காலம் சட்டஞானமில்லாத பிரஜைகளுக்கு உண்டாகும் கஷ்டதுக்கங்களும் இன்னும் அநேக இடையூறுகளும் நீங்கி ஜனங்கள் சுகமடையும்பொருட்டும் இவ்விதமான முயற்சி செய்து இங்கிலீஷ் பாஷையில் தவிர இவ்விந்தியா தேசத்தில் வழங்கிவரும் மற்ற எந்த பாஷைகளிலும் வெளியாகாத சட்ட ஞானத்தை அறிவிக்காமலிருப்பதைக் கண்டு இந்த சட்ட கெஜட்டு செந்தமிழ் பாஷையில் எழுதி வெளியாய் வருகின்றது என்கிற விஷயம் யாவரும் அறிந்தவிஷயமே. இதில் சட்ட ஞானத்தை விசேஷித்து போதிப்பதுமல்லாமல் பிரதி சஞ்சிகையிலும் சட்டத்தை நன்றாய் கற்றுணர்ந்த சீமான்களின் திருவுருவப்படமும், இவர்களுடைய சரித்திரத்தையும் பிரசுரித்து வருவதுடன் இந்த சஞ்சிகையில் இரண்டு பக்கங்களில் அச்சிட்டிருக்கும் படங்களைப் (illustrations) போலவே இனிமேல் பிரதி மாதத்தின் ஒவ்வொரு சஞ்சிகையிலும் முக்கியமான போலீஸ் முதலிய வர்த்தமானங்களுக்குத் தகுந்த படங்களுடன் (Illustrations) பிரசுரித்துவருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கின்றோம். இந்த சட்டகெஜட்டினால் ஜனங்களுக்கு உண்டாகும் நன்மையை அனுசரித்து துரைத்தனத்தாரால் ஏற்படும் சட்டதிட்டங்களையும் கவர்ன்மென்ட் உத்தரவுகளையும் யாதொரு கட்டணமின்றி கிரயத்தைப்பெறுமலேயே நம்முடைய கெஜட் ஆபீசுக்கு அனுப்பிவரவேண்டுமென்று கவர்ன்மென்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். இன்னும் அநேக கற்றுணர்ந்த சீமான்களாகிய ஹைகோர்ட்

Public Department.
ORDER:—R. No 633,
Dated 5-11-06.

"The Superintendent, Government Press, will be directed to supply to the Editor of the INDIAN LAW GAZETTE, Georgetown, Copies of all proceedings of Government laid on the Editor's Table."

இதுவுமல்லாமல், புதுக்கோட்டை சமஸ்தானத்தின் திவான் பி. ஏ., பி. எல்., ம-ா-ா-ஸ்ரீ வெங்கடராமதாஸ் நாயுடுகாரும் அவர் எழுதிய 1906-ம் ஹூ தேதிய 2270-வது நெம்பர் லெட்டரில் "இது மிக்க உசிதமான தமிழ் சட்ட சஞ்சிகை புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள சீப் கோர்ட்டில் ஆங்கிலேயபாஷை தெரியாத ப்ளீடர்கள் இந்த சட்ட கெஜட்டுக்கு சந்தாதாரர்களாகச் சேர்ந்து இதை வாங்கி வாசித்து வரவேண்டுமென்று அறிவித்திருக்கிறார்."

M. R. Ry Venkataram Doss Naid Garu, B.A.,B.L., Dewan of Pudukotta writes (Letter, No. 2270 of 1906):—

"Your Magazine. . . .

. . . .

those pleaders of the Chief Court who do not kuow English have been advised to subscribe for the same."

நமது கெஜட்டை வெளி அச்சாபீசுகளில் அச்சிட்டு வருவதனால் உண்டாகும் கஷ்டநஷ்டங்களாலும், நேரிடும் தவக்கங்களாலும் நாம் வருத்தமடைந்து இனி இவ்வகைய தவக்கத்திற் கிடம் கொஞ்சமேனும் இல்லாமலிருப்பதற்காக நமது சொந்த ஆபீசிலேயே தவக்கமின்றி நடந்துவருவதற்காக இச்சஞ்சிகை வெளிவந்த ஆபீசை ஏற்பாடு செய்திருக்கிறோமாகையால் இனிமேல் தவக்கமின்றி அந்த அந்த மாதத்திய கெஜட்டு கிரமமாய் பிரசுரித்துவரப்படுமென்று திடமாய்க் கூறுகிறோம். இந்திய சட்ட கெஜட்டின் விஷயமாய் நம்முடைய நேயர்கள் சகாயம் செய்யவேண்டுமென்கிற விசுவாசத்துடன் எவ்வளவு சந்தாதாரர்களைச் சேர்ப்பித்து அபிவிர்த்தி செய்கிறார்களோ அவ்வளவு தீவிரமாய் மாதம் இருமுறைகூட தமிழ் பாஷையில் மாத்திரமல்லாமல் இன்னும் இதரபாஷையிலும் வெளியாகிவரும். நாம் முன் அச்சாபீஸ் சம்பந்தமாய் அறிவித்திருந்தபடி நம்முடைய சந்தாதாரர்களில் சொற்ப நபர்கள்தவிர விசேஷமாய் அநேகர் மிக்க அன்புபாராட்டி விசுவாசத்துடன் இதுவரையிலும் புதுவருஷத்திய சந்தாவிற்கு வி. பி. மூலமாய் ஆர்டர் அனுப்புவதைவிட்டு பிரதமத்திலேயே மணி ஆர்டர்கள் செய்வதற்காக அவர்களுக்கு மிக்க வந்தனம் அளிக்கின்றோம். இதுவுமல்லாமல் அப்படி ஆர்டர் அனுப்பாமலிருக்கும் இதர சந்தாதாரர்களும் உடனே ஆர்டர் அனுப்பி இன்னும் விசேஷமாய் சந்தாதாரர்களைச் சேர்ப்பித்து முதலிலே மணி ஆர்டர்மூலமாய் அனுப்பாவிடினும் வி. பி. மூலமாயாவது தீவிரமாய் ஆர்டர் அனுப்பி ஆதரித்து வருவார்களென்று கோருகிறேன்.

The

Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 4.] சென்னபட்டணம், 1909 ஹூ ஜனவரி மாதம். [பாகம், 1.

NOTICE.

Contributions other than original are neither invited nor required.

All literary contributions and books for Review should be addressed to Mr. V. NATHAMUNI MUDALIAR, Late Tamil Bench Clerk, High Court, Appellate Side, Madras, Editorial Staff *Indian Law Gaztte*, Madras.

நோட்டீசு.

(1) சீக்கிரத்தில் இண்டியன் லா கெஜட்டை மாதத்துக்கு இருமுறையாக பிரசுரஞ் செய்வதாக உத்தேசித்திருக்கிறோம்.

(2) இருமுறை யாக்கினபோதிலும் டிசம்பர்மீ வரைக்கும் இருக்கும் எம் சந்தாதாரருக்கு சந்தாவை உயரப்படுத்தமாட்டோம்.

(3) ஷை இரண்டாவது பாராவில் கண்டிருக்கிற காரணத்தினால், சந்தாதாரர் ஜாஸ்தியானால், முதல் பாராவில் கூறிய எமது எண்ணம் எளிதில் முடியும். ஆகையால் இப்பொழுதிருக்கும் சந்தாதாரரை இந்த பேபரை பலபேருக்கும் தெரிவிக்கும்படி முயற்சிசெய்ய கேட்டுக்கொள்ளுகிறோம்.

(4) இனி மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் என்று தலைப்பிடப்பட்டு, எல்லா ஜில்லாக்களினின்றும் ஹைகோர்ட்டுக்கு வருகிற செகண்டு அப்பீல் முதலானவைகளும் ரிப்போர்ட்டு செய்யப்படும். இது சென்னபட்டணம் ஹைகோர்ட்டில் அப்பீலிருக்கிறவர்களுக்கு மிகவும் உபயோகமாயிருக்கும்.

(5) பட்டணத்தில் தங்கள் அப்பீல்கள் முதலியவற்றைப்பற்றி தெரியவேண்டுமானால், எமக்கு எழுதித் தெரிந்துக்கொள்ளலாம்.

The Origin of the Hindu Law.

AND

The Fate of the Hindu Joint Family.

ஹிந்துலாவின் பூர்வகிரந்தமும், இந்துக்களின் ஸமஷ்ட்டி (ஏக) குடும்பமும அதன் தற்கால நிலமையும்.

ஹிந்து லாவுக்குண்டான ஆதாரங்களை ஐந்து வகையாக பிரிக்கலாம்.

(1) ஸ்மிரிதிகள்.
(2) வியாக்கியானிகள்.
(3) நியாயவாதப் பிரிவினர்.
(4) நியாயஸ்தான தீர்மானங்கள்.
(5) மாமூலொழுக்கங்கள்.

I. முதலாவது, ஹிந்துலாவின் ஆதிகிரந்தங்கள் ஸ்ருதிகளென்றும், ஸ்மிரிதிகளென்றும், புராணமென்றும் மூன்று வகைப்படும். இவைகளில் ஸ்ருதி என்றால் காதால் கேழ்க்கப்பட்டது, சாக்ஷாத்கடவுளாலேயே மனிதனுக்கு தெரியப்படுத்தப்பட்டது. இதில் நான்கு வேதங்களும் அடங்கியன; ஸ்மிரிதி என்றால் ரிஷிகள் முதலிய மஹான்கள் அளித்தவை; இவை ஏசன்ரூபமாயும் காவிய ரூபமாயும் இருக்கிறமாக இருக்கின்றன.

வேதங்களை அநேகர் உபதேசித்தார் ஆகையினால் பாடபேதமும் அர்த்தபேதமும் அடிக்கடி உண்டாயிற்று. இவைகளைத் தம் சிஷியர்கள் மனதில் படியவைக்கும் படிக்கு சிலவற்றை காவியரூபமாக கற்பித்தார்கள். இவைகளுக்கு ஸூத்திரங்கள் என்றுபெயர். இவைகளை சற்றேறக்குறைய 2500 வருஷங்களுக்கு முன் எழுதினார்கள் என்றுசொல்லலாம். இந்த ஸூத்திரங்களில் தின நடவடிக்கைக்கடுத்தவை என்று தர்மஸூத்திரங்கள் எண்ணப்படும். இவைகளில் கௌதம தர்மஸூத்திரமென்பது மிகப் புராதனமானது. கவுதமர் 2300-வருஷங்களுக்கு முன் இருந்ததாகப் புலப்படுகிறது. இரண்டாவது பௌத்தாயனர் தென்னாட்டில் இருந்தவரென்று புலப்படுகிறது. மூன்றாவது:— ஆபஸ்தம்பா தென் இந்தியாவைச் சேர்ந்த ஆந்திரநாட்டில் 2000வருஷங்களுக்குமுன் இருந்தவர். நான்காவது:—வாஸிஷ்டர் இருந்தகாலம் சரியாக நிர்ணயிக்கமுடியவில்லை. இவர் இந்தியாவின் வடக்கு பிரதேசங்களிலிருந்தவரென்று சொல்லலாம். ஐந்தாவது விஷ்ணு புராணத்தை எழுதியவர் இன்னாரென்று சரியாய்த் தெரியவில்லை.

இந்த தர்ம ஸூத்திரங்களை பிற்காலத்தினர் தர்மசாஸ்த்திரங்களாக வியரூபத்தில் எழுதினார்கள். இவற்றுள், மனு தர்மஸாஸ்த்திரமென்பது மிக புராதனத்தையும் மேன்மையான அதிகாரத்தையும் உடையது. இதனை எழுதினகாலம் மூவாயிரம் வருஷங்களுக்குப் பின்னாகவும் இரண்டாயிர வருஷங்களுக்கு முன்னாகவும் இருக்கவேண்டுமென்று பற்பல மாதிரியாக சொல்லுகிறார்கள்.

இரண்டாவது யாஞ்ஞயவல்கியர் இவர் ஸூத்திரத்தின்மேல் எழுதின வியாக்கியானந்தான் மிதாக்ஷரமென்னப்படும். அது 1400 - வருஷங்களுக்கு முன் எழுதினதாக எண்ணலாம்.

மூன்றாவது நாரதர் இவர்ஸூத்திரத்திற்கும் மனுஸாஸ்த்திரங்களுக்கும் அநேக வித்தியாசங்கள் இருக்கின்றன என்று வரைந்திருக்கிறார். இவைகள் அனேக நூற்றாண்டுகளுக்கு முந்தியவை யென்று சொல்லியிருக்கிறார்.

II. வியாக்கியான கர்த்தாக்கள்.

இவர்களுள் மிதாக்ஷரமெழுதிய கனனேஸ்வரர் முதன்மையுடையவர். இவர் 1000 வருஷங்களுக்கு முன்னிருந்தவர். தென்னிந்தியா மேற்கு இந்தியா, காசி, முதலிய இடங்களில் இம்மஹானுடைய வியாக்கியானத்தைதான் ஆதாரமாக கொள்ளுவார்கள்.

தென்னிந்தியாவில் கொள்ளும்படியான ஆதார கிரந்தங்கள் இன்னும் நான்குண்டு. ஸ்மிருதி சந்திரிகையானது தேவாணந்தப்பட்டரால் 700 வருஷங்களுக்கு முன் எழுதப்பட்டது.

... ஸரஸ்வதி வியாஸமானது ஒரிஸாவை (Orissa) சேர்ந்த பிரதாபருத்திரதேவரால் 500 வருஷங்களுக்குமுன் எழுதப்பட்டது. தாயவிபாக மென்னப்பட்டது. விஜயநகரஸமஸ்த்தான மந்திரியாகிய மேதாவியரால் 500 வருஷங்களுக்குமுன் எழுதப்பட்டது. வியவகார நிர்ணயமானது 300 வருஷங்களுக்குமுன் திராவிட நாட்டனராகிய வரதராஜரால் எழுதப்பட்டது. தத்துக்களை (Adoption) பற்றி தத்தக சந்திரிகையென்பது தென்னிந்தியாவுக்கு ஆதாரம்.

மற்றதேசத்திய ஆதாரங்களைப்பற்றி இவ்வளவு விவரமாய் நமக்கு தெரியவேண்டியதில்லை. பங்காளத்தினருக்கு மிதாக்ஷரம் (Mitakshara) ஆதாரமல்ல. ஜிமுதவாகனர் எழுதிய தாயபாகா (Dayabaga) என்பதுதான் அவர்களுக்கு ஆதாரம். பம்பாய் ராஜதானியில் மிதாக்ஷரம் அநேக விடங்களில் ஆதாரம். ஆனால், அவர்களுள் நீலகாந்தர் முன்னூறு வருஷங்களுக்குமுன் எழுதிய மயூகத்தை (Mayuka) [illegible]டர்வார்கள்.

III. நியாயவாத பிரிவினர்கள் 5. இவர்கள் பங்காளத்து தாயபாகத்தினர், மிதிலத்திலும்காசியிலுமுள்ள கொள்கையார் மேலிந்தியாவிலுள்ள மையூகத்தைச்சார்ந்த மகாராஷ்டரர், தென்னிந்தியாவிலுள்ள திராவிடர் கடைசியாக சொல்லப்பட்ட திராவிடர் கர்னாடகர்கள் ஆந்திரர்கள், திராவிடர்கள் என முப்பிரிவாக பிரியப்படுவார்கள்.

IV. ஹிந்து லாவுக்கு நான்காவது ஆதாரம் நியாயஸ்தான தீர்மானங்கள். இவர்கள் பண்டிதர்மூலமாக தேசாசாரமதாசார குலாசாரங்கள் அனுசரித்து செய்யப்பட்ட தீர்மானங்களாதலால் ஹிந்துக்கள் இவைகளால் கட்டுப்படுவார்கள்.

The Fate of the Hindu Joint Family.

ஹிந்துக்களின் ஸமஷ்ட்டி (ஏக) குடும்பமும் அதன் தற்கால நிலைமையும்.

ஹிந்து ஸமஷ்ட்டி (ஏக) குடும்பமென்றால் என்னவென்று அதன் பொருளை ஹிந்துக்களாகிய நாமெல்லோரும் நன்றாய் அறிந்த விஷயமே. முதல், முதல் ஸமஷ்ட்டி (ஏக) குடும்பமென்று இப்பூமண்டலத்தில் ஏற்பட்டது குடிகள் அதிகரிக்க அதிகரிக்க இத்தேச நடை உடை பாவனைகளினின்று ஸ்வாபிகமாய் உண்டாகி அதன் கோட்பாடுகள் நாளுக்குநாள் விர்த்தியாய்க்கொண்டேவந்தன. ஆகையால், இவ்விதமான ஸமஷ்ட்டி (ஏக) குடும்பத்தைப்பற்றி தற்காலம் நிறைவேறிவரும் சட்டம் இப்பொழுதுள்ள ஹிந்து குடும்பங்களின் நடை உடை பாவனைகளை அனுசரித்தே செய்திருப்பதாகும். இப்பொழுது ஹிந்து ஸமஷ்ட்டி குடும்பத்தின் விஷயமாய் சட்டம் யாதென்று ஒருவர் அறியவேண்டுமானால் ஹிந்துக்கள் [illegible] தற்காலத்தில் அவரவர்களுடைய குடும்பத்தில் நடந்தேறிவரும் நடை உடை பாவனைகளையே விசேஷ [illegible]மாய்க் கொண்டு அதைப்பற்றி சட்டதிட்டங்கள் [illegible] தப்பட்டிருக்கின்றனவென்று மிக [illegible]

லாம். ஆதிகாலத்தில் இக்குடும்ப விஷயமாய் அப்போதுள்ள ஹிந்து கிரந்த கர்த்தர்கள் கிரந்தங்கள் எழுதி ஜனங்களுக்குத் தெரிவித்திருந்தார்கள். ஆனால் இப்பூர்வகிரந்தகர்த்தர்கள் சட்டத்தைமாற்றி அவர்களுடைய இச்சைபோல் எழுதினார்களென்று அவர்கள் மீது இங்கிலாந்தில் சாதாரணமாய் சட்டம் எழுதிவரும் கிரந்தகர்த்தர்களை எப்படி தூஷிக்கிறார்களோ அம்மாதிரியாகவே இவ்விந்து கிரந்தகர்த்தர்களையும் எதிர்வாதமின்றி ஒரு தலைபக்ஷமாகவே தூஷித்து வருகிறார்கள். ஆனால் மேற்சொல்லிய இங்கிலாந்து லாயர்களாகிய கிரந்தகர்த்தர்களுடைய கோட்பாட்டிற் கனுசரவாய் ஸர். ஹென்றிமெயின் (Sir Henry Mayne) என்னும் பிரபு வாதித்துவருகின்றார் இவ்விந்து கிரந்த கர்த்தர்களுடைய கோட் பாட்டிற்கு அனுசரவாய்வாதிக்க யாரும்கிடையாவிடினும் மேற்கூறிய ஸர். ஹென்றிமெயின் பிரபுவின்வாதத்தை ஹிந்து கிரந்தகர்த்தர்களுடைய கோட்பாட்டிற்கும் அனுசரவாய் எடுத்துக்கொள்ளலாம். இந்த கிரந்த கர்த்தர்கள் என்னசெய்து வந்தார்களென்று இவ்விடத்தில் சொல்வதற்கு காரணம் யாதெனில் அக்காலத்தில் அந்த கிரந்தகர்த்தர்கள் வசிக்கையில் அவர்களுடன் ஜீவித்திருந்தகுடிகள் இதைப்பற்றி எவ்விதமான தாற்பரியம்கொண்டு நடந்துவந்தார்களென்பது விசதமாய் நமக்குத்தெரியும் பொருட்டுதான்.

ஆதிகாலத்தில் ஹிந்துக்களுக்கென்று பிரத்தியேகமாய் சட்டதிட்டங்கள் செய்ய லாயர்கள்யாரும் கிடையாதிருப்பதைக் கண்டு அப்பூர்வ காலத்திலிருந்த கற்றுணர்ந்த ஹிந்து லாயர்கள் சாதாரணமாய் ஹிந்துக்கள் அவரவர்கள் குடும்பங்களில் நடந்துவரும் நடை உடைபாவனைகளையே ஹிந்து சட்டமாக்கி (Hindu Law) கிரந்தம் எழுதி அதை ஜனங்கள் மிக்கதவனத்துடன் வாசித்து வரும்படி பிரசுரம் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சட்டம் ஹிந்துக்களுக்குள் சதா எக்காலத்திலும் வழங்கிக்கொண்டுவருகிறபடியால் அப்போதைக்கப்போது ஜனங்களுடைய நட உடைபாவனைகள் எப்படி மாறிக்கொண்டுவருகின்றனவோ அம்மாதிரியாகவே இந்த சட்டமும் மாறிக்கொண்டுவருகின்றது. ஆகையால் தற்காலம் புதிதாய் நடந்தேறிவரும் சட்டமும், மின் பூர்வகிரந்தகர்த்தர்கள் எழுதியிருப்பதைப்போலவே அந்தந்தகாலத்திலுள்ள ஹிந்துகுடும்பங்களின் நடை உடைபாவனைகளுக்குத் தகுந்தபடி ஏற்படுத்திய கிரந்தங்களாகும். மேற்செப்பியவைகளை யோசிக்குமிடத்து ஹிந்துக்கள் பிரதிதினமும் அவாள் அவாள் வீட்டில் எப்படி நடந்துகொண்டிருக்கிறார்களோ அப்படிப்பட்ட இல்லறவாழ்க்கைகளின் கோட்பாடுகளை பிரதமத்தில் ஆதாரமாய்க்கொண்டு ஹிந்து லா (Hindu Law) என்னும்சட்டம் எழுதப்பட்டிருப்பதாக தெளிவாய் தெரியவருகிறது. இந்த ஹிந்து லாவின் கோட்பாடு இன்னதென்று ஹிந்துக்களல்லாத மற்றவர்களுக்கு நன்றாய் புலப்படாவிடினும் ஸ்வயமாய் ஹிந்துக்களாகவேபிறந்து நம்முடைய குடும்பங்களில் பிரதிதினமும் நாம் நடந்தேறிவரும் நடவடிக்கைகளை கண்ணுற்று பார்த்துக்கொண்டுவரும் நமக்கு இந்த ஹிந்துலா என்பது இன்னதென்று மிக்க சுலுவாய்த் தெரியவரும்.

ஹிந்துக்களின் குடும்பங்களில் நாள்தோறும் நடந்துக்கொண்டுவரும் வழக்கங்களையே ஆதாரமாய்க்கொண்டு ஏற்பட்டிருக்கும் "இந்து சமஷ்டி குடும்பம்" என்பதும் அக்குடும்பங்களைப்பற்றிய சட்டமும் மேற்செப்பிய இந்துலாவின்படி செய்ததாகவே ஏற்படுகிறது. ஒரு ஸமஷ்ட்டி குடும்பத்தைச்சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரும் அக்குடும்பத்திலுள்ள மற்றவர்களோடு கூடியமட்டில் எப்பொழுதும் பிறியாமல் ஒன்றுசேர்ந்திருக்க வேண்டியதென்பது இச்சட்டத்தின் முக்கியகருத்தாகும். இச்சட்டப்படி குடும்பசொத்தை பாகித்துக்கொள்வது என்னும் வழக்கம் பெரும்பாலும் ஒப்புக்கொள்ளத்தக்க தல்லவென்பது இச்சட்டத்தினால் தெரியவருகிறது. அவசியமாய் குடும்பகாரியத்திற் கல்லாமல் மற்ற வேறெந்த காரியத்திற்காவது குடும்பசொத்தை பராதீனம் செய்வது சட்டத்திற்கு விரோதமென்று சொல்லியிருக்கிறது. ஒரு ஹிந்து குடும்பம் எப்பொழுதும் பிறியாமல் அக்குடும்பத்தைச்சேர்ந்த ஒவ்வொருவரும் ஒன்று சேர்ந்திருப்பதற்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலைமையாய் இருப்பவரை மானேஜிங் மெம்பரென்று சட்டத்தில் சொல்லியிருக்கிறது. அந்த மானேஜிங் மெம்பருக்கு சட்டப்படி குடும்பத்தில் விசேஷ அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சிலர்கூடி ஒன்றுசேர்ந்து (Corporations) கூட்டமாயிருப்பதைப்போலவே ஒரு இந்து குடும்பமும் அதை ஒற்றிருப்பதால் அக்கூட்டத்தைச் சேர்ந்த பூஸ்திதிகள் எப்படி அந்த கூட்டத்தை விட்டகலாதோ அப்படியே நீடித்தகாலம் இந்து குடும்பத்தைச் சேர்ந்த பூஸ்திதிகளும் அந்த இந்து குடும்பத்தை நீடித்தகாலம் விட்டகலாமல் வெளியே பிறிந்து யாருக்கும் போகாதபடி காப்பாற்றி வைக்கவேண்டுமென்பதுதான் இந்து சட்டத்தின் கோட்பாடாகும், குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் அக்குடும்பத்தை அநேக பரம்பரைகளாக தொன்று தொட்டு அனுபவித்துவரும் குடிக்கூலி தாராகிறார்கள் ஒரு இந்து குடும்பத்தில் ஒருபிள்ளை பிறந்தவுடன் அவன் அக்குடும்பசொத்திற்கு இன்றியமையாத, யாவராலும் மறுக்கக்கூடாத, பாத்தியஸ்தனாய் விடுகின்றான். அப்பிள்ளையின் தகப்பன் குடும்பசொத்தின் விஷயமாய் உயில் எழுதிவைக்கவும் யோக்கியதை கிடையாது. ஏனென்றால், அந்தத்தகப்பன் அக்குடும்பத்திற்கு சட்டப்பிரகாரம் ஒரு டிரஸ்டி (Trustee) ஆகிறானபடியால் அவன் அந்தகுடும்ப விஷயமாய் செய்யும் ஒவ்வொரு நடவடிக்கையும் அந்தகுடும்ப காரியத்திற்காகவே செய்திருந்தால் சட்டப்படி செல்லும்.

ஒரு இந்து குடும்பசொத்தை சில விஷயங்களில் மாத்திரம் பராதீனம் செய்யலாம், அவைகளாவன:—

(1) குடும்ப காரியத்திற்காக குடும்பசொத்தை பராதீனம் செய்து ரொக்கம்பெற வேண்டுமென்பது இன்றியமையாததாய்த் தோற்றினாலும் அல்லது

குடும்பத்தின் தெய்வீக லௌகிக காரியங்களுக்காகவும், சொத்தை பராதீனம் செய்யலாம், இவ்விதமாய் குடும்பசொத்தை பராதீனம் செய்வதற்கு குடும்பத்தைச்சேர்ந்த மற்றவர்களும் ஒப்புக்கொள்வதினால் அந்த பராதீனம் சட்டப்படி செல்லுமென்று சொல்வதற்குக்காரணம் யாதெனில் அந்தமானேஜிங் மெம்பருக்கு குடும்பசொத்தை தன்இஷ்டப்பிரகாரம் கொடுவைவைக்கவோ, விக்கிரயம் செய்யவோ அதிகாரம் உண்டென்பதல்ல; ஆனால் அந்த பராதீனம் குடும்ப காரியத்திற்காக கிரமமாய் செய்யப்பட்டதென்பதுதான். ஒரு இந்துகுடும்பத்தில் சொத்தை இப்படி பராதீனம்செய்வது பெரும்பாலும் தெய்வீக காரியங்களுக்காகவே நடந்தேறிவருகின்றன. இத்தியாதி பராதீனங்கள் மதாச்சாரத்தின் தெய்வகாரியங்களுக்காகவும் தர்மகாரியங்களுக்காகவும் செய்துவரப்படுவதுமல்லாமல் சில சந்தர்ப்பங்களில் குடும்பத்திலுள்ளோர்மீதிருக்கும் அன்பு பிரீதியின்பேரிலும் செய்துவரப்படுகின்றன. இப்படி அன்புபிரீதியின்மேல் செய்யும் தானங்கள் பார்க்கப்பட்டவாளுக்கு கன்னியமாயிருக்கும்பொருட்டு செய்துவரப்படுகின்றமையால் அப்படிப்பட்ட தானங்களை கண்மூடிக்கொண்டு இஷ்டப்பிரகாரம் பராதீனம்செய்யக்கூடாது. அவைகள் எஸ்டேட்டின் பொருமானத்திற்குத்தகுந்தபடி யிருக்கவேண்டியதுமல்லாமல் அந்த குடும்பத்தின் மெம்பர்களுக்கு அவர்களுடைய் பாகத்தில் யாதொரு கஷ்டநஷ்டங்கள் நேரிடாமலும் இருக்கவேண்டியது. இப்படிக்கிருந்தால்தான் சட்டப்படி அந்த பராதீனம் செலாவணியுள்ளதாகும். ஒரு இந்து குடும்பத்தின் ஆண்சந்ததியில் கடைசியாய் ஒரே ஆண்வார்சு இருந்து வேறெந்தவார்சும் இடையாமற்போனால் அப்படி கடசியாயிருக்கும் ஆண்வார்சு தன்னிஷ்டப்பிரகாரம் தானாதிமுதலிய வினியோகங்கள் செய்துவிட ஹக்குண்டு. இந்துகுடும்பத்தின்சொத்தைகொடுவை, கிறயம் முதலானது செய்துகொள்ளும் நபர்களின் மீதும் குடும்பத்திற்கு கடன்கொடுத்திருக்கப்பட்டவர்களின்மீதும் சட்டம் மிக்ககண்டிப்பாயிருக்கிறது. அவர்கள் மேற்கண்டபடி குடும்பகாரியங்களுக்காகவே கடன்வாங்கப்பட்டதென்று ரூபிக்க அசக்தராயிருந்தால் அவர்கள் குடும்பசொத்தின்பேரில் கொண்டுவரும் தாவாசட்டப்பிரகாரம் ஜெயமடைவது மிக்க கஷ்டம்.

இதுதான் இந்துலாவின் பிரதமகோட்பாடென்பது கற்றுணர்ந்த நமது நேயர்கள் யாவருக்கும் இன்னும் சட்டத்தையறியாத இந்துக்கள் ஒவ்வொருவருக்கும் நன்றாய் தெரிந்தவிஷயமே. இதுதான் இந்த சட்டத்தின் உண்மையென்று ஒவ்வொருவருடைய மனதிற்கும் திடமாய் புலப்படுமென்பதற்கு ஐயமில்லை. இந்து சமூகத்தாரை நோக்குமிடத்து அவர்கள் விசேஷமாய் ஜாதி யபிமானமும், சதாகுடும்பக் கவனமும், மதாச்சார தர்மசிந்தனைகளும் பெருக உள்ளவர்களாக தெரிகிறது. ஆனால் ஆங்கிலேய சமூகத்தாரோ இப்படிக்கல்ல; அவர்களில் எவர் இப்படிப்பட்ட விஷயங்களில் திரவியத்தைச் செலவழியாமல் செட்டாயிருக்கிறாரோ அவர்தான் இங்கிலீஷ் சமூகத்தாரை சேர்ந்தவராக மதிக்கப்படுவார். பூர்வகாலத்தில் இந்தியாவில் தர்மகைங்கிரியங்கள் முன் அல்லது தற்காலத்து இங்கிலாந்தைவிட அதிகமாகயிருந்தன. ஏனென்றால், இந்துக்களுடைய் தர்மகாரியங்கள் எப்பொழுதும் அவாளவாள் மாதச்சாரத்தின்படி தெய்வவிஷயமா யுள்ளவைகளாயிருக்கும்; ஆனால், ஆங்கிலேயர்களோ அப்படிக்கல்ல இந்துக்கள் தங்கள் மதாச்சாரத்தின் சாஸ்திரப்படி சில தொழில்கள் செய்யமாட்டார்ககள், ஆனால், ஆங்கிலேயர்கள் அவர்கள் மதாச்சார ஒழுங்கின்படி எத்தொழிலைச் செய்தாலும் பாதகமில்லை: ஆகையால்தான் இந்துக்கள் தங்கள் மதாச்சார ஒழுங்கின்படி தெய்வகைங்கிரயம் செய்துவருவது கிரமமானதென்று இந்து லாவில் சொல்லியிருப்பது ஒரு நூதனவிஷயமல்ல. ஆங்கிலேய சமூகத்தாருக்கு பால்யத்திலிருந்தே அவாளவாள் குடும்பத்தில் ஒன்றுசேர்ந்துஒரு ஸமஷ்ட்டி குடும்பமாயிருக்கவேண்டுமென்பது அவசியம் இந்து வக்க சமூகத்தாருக்குஇப்படிஒன்றுசேர்ந்து ஸமஷ்ட்டி குடும்பமாயிருக்கவேண்டுமென்பது ஸ்வாபீகமென்று நன்றாய் தெரிகிறபடியால் எந்த இந்துவும் தன் குடும்பத்தைவிட்டுப் பிரியாமல் எப்பொழுதும் ஒன்றுசேர்ந்து ஸமஷ்ட்டி குடும்பமாகவே யிருப்பதற்கு விசனப்படவும் சிந்திக்கவுமாகாது. ஆங்கிலேய சமூகத்தாருக்கு. வியாபாரத்தொழிலே விசேஷமாயிருப்பதால் அவர்களுக்கு ஒன்றுசேர்ந்து ஒரு குடும்பமாயிருப்பதினால் ஒருவருடைய நயநஷ்டங்களை குடும்பத்திலுள்ள இன்னொருவன் பாராட்டவேண்டியவனு யிருக்குமாதலால் ஸமஷ்ட்டி குடும்பம் என்னும் ஏற்பாடு அவர்களுக்குள் கிடையாது இங்கிலீஷார் வியாபாரத்தில் மிக்க ஊக்கமும் ஸ்ரத்தையுமுள்ளவர்களாகையால் அவர்கள் தங்களுடைய சொத்தை நாலுபேருக்கு சுதந்தரமாக்கி திடீரென்று சட்டப்படி பராதீனம்செய்வதற்கு யோக்கியதையில்லாத நிர்ப்பந்தங்களுக்குள்ளாகாமல்தாங்கள் இஷ்டப்பட்டபோது தங்களுடைய சொத்தை எவ்விதமான பராதீனமாவதுசெய்து பொருளாக்கிக் கொள்வதற்கு கஷ்டமில்லாதபடியிருப்பது தங்களுக்கனுக்கூலமென்று நினைத்து ஸமஷ்ட்டிகுடும்பமென்னும் ஏற்பாடு தங்களுக்குள் வைத்துக்கொள்ளவில்லை.

இவ்விதமான ஏற்பாடு சதா சுறுசுறுப்பும் புத்திகூர்மையுமுள்ள ஆங்கிலேய சமூகத்தாருக்கேயடுக்குமே யொழிந்து திரவ்விய விஷயத்தில்செட்டாயிருக்கவேண்டுமென்னும் சிந்தனை பெரிதாயில்லாமல் தங்களுடைய சொத்து பிரத்தியாருக்குப் போகாமல் தங்களுடைய குடும்பத்தைச் சேர்ந்ததாகவே யிருக்கவேண்டுமென்பதும், குடும்பத்தோர் அச்சொத்தைக் காப்பாற்றிக்கொண்டு க்ஷேமமாய் ஒன்றுசேர்ந்து வாழவேண்டுமென்பதும் இந்துக்களுடைய முக்கிய கருத்தாகும், ஆகையால், இங்கிலாந்தில் நடந்துவரும் விசேஷ வியாபாரத்தையே அநுசரித்து ஏற்பட்டிருக்கும் சட்டம் இவ்விந்தியாதேசத்திற்கு ஒவ்வத்தகுந்ததல்ல.

இந்து ஸமஷ்டி (ஏக) குடும்பத்தைக் குறித்த கேசை முதல் முதல் விசாரணைசெய்த ஆங்கிலேய ஜட்ஜ் ஒருவர் இந்த இந்து லாவின் கோட்பாடுகள்

இன்னதென்று தனக்குப்புரியாமல் [illegible]வரும் இன்னும் இதர கோர்ட்டார்களும் இந்து லாவை ஆதியிலிருந்தே மிக்க அறுவெறுப்புடன் மதித்துவந்தார்கள். சாதாரணமாய் சிலர் (Corporation) கூட்டமாய்க்கூடி ஒரு சபையாராய் சேர்ந்திருப்பதற்கும் ஒரு இந்து ஸமஷ்ட்டி(ஏக) குடும்பத்திற்கும் மிக்க பேதங்களிருக்கின்றன.

ஒரு இந்து குடும்பம் மேற்செப்பியபடிக்கில்லாமல் தனித்தனியாய் பிறிந்திருப்பதே நன்மையென்று கோர்ட்டார் கருதி ஸமஷ்ட்டி (ஏக) குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பாக வியாஜ்ஜியம் செய்தால் அதை பிடித்துக்கொண்டு குடும்பத்தைச்சேர்ந்தவர்கள் செய்த ஸ்வீகாரமும், பராதீனமும், செலாவணியுள்ளதென்று தீர்மானிப்பதை நோக்குமிடத்து ஸமஷ்ட்டி ஏக) குடும்பமாயிருப்பதை வேரோடறுத்துப் போடுவதே நலமென்று யோசிப்பதைப்போல் தெரியவருகிறது; அப்படி செய்வதினால் குடும்பசொத்து அக்குடும்பத்தைவிட்டு வெளிதாண்டி விடுவதுமல்லாமல் இந்து குடும்ப பொது ஆச்சாரத்திற்கு விரோதமாக இருக்கின்றது. இப்படிசெய்து வருவதினால் பயிரிடும் குடிகளுக்கு ஊகிக்கக்கூடாத எண்ணிறந்த பெருங்கஷ்ட நஷ்டங்களைஉண்டாக்கி அவ்விந்துக்களுக்கு முதுகெலும்பைப்போல் ஆதாரமாயிருந்த ஸமஷ்ட்டி (ஏக) குடும்பமென்னும் ஏற்பாடு உடைந்துவிட்டதாக சதா வியாக்கூலத்தையே விளைவித்து எப்பொழுதும் க்ஷேமகரமாய் தழைத்து வாழ்ந்துக் கொண்டிருந்த சுகங்களை வேரோடு களைந்துவிட்டது. இந்த ஸமஷ்ட்டி குடும்பமென்னும் ஏற்பாட்டை நாளுக்குநாள் நீக்கிவருவதற்கு மூன்று கோட்பாடுகளுண்டு அவைகளாவன.—

முதலாவது:—வியாபாரம் செய்வோருக்கு அனுகூலமாயிருக்கும்பொருட்டு திரவியம்கொடுத்து சொத்தை வாங்கும் வர்த்தகர்களுக்கு யாதொரு கஷ்டமுமில்லாமலிருக்கவேண்டுமென்பது ஆங்கிலேயர் கோர்ட்டாரின் கருத்தாகும்.

இந்த கோட்பாட்டை அனுசரித்தே இங்கிலீஷ் கோர்ட்டுகளில் குடும்பசொத்தை பாகம் செய்துக்கொள்வதையும் பராதீனம்செய்வதையும் செலாவணியுள்ளதென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

இந்து சமூகத்தின் மதாச்சார ஒழுக்கங்களையும், நீதிமார்க்கங்களையும்; ஒருபிள்ளை தன் தகப்பன்மீது பக்தி விஸ்வாசத்துடன் நடக்கவேண்டுமென்பதையும் இந்துலாவில் சொல்லியிருப்பதை நோக்குமிடத்து ஒருபிள்ளை தன் தகப்பனுடைய கடன்களைக்கொடுக்க பந்தப்பட்டவனென்பது நீதிமார்க்கமென்றே விசதமாய்த்தெரிகிறது. இம்மாதிரியாகவே இதர கிரந்தங்களிலும் பிள்ளை தவிர குடும்பத்திலுள்ள மற்ற பந்துக்களும் சிலகடமைகளை செய்யபந்தப்பட்டவர்களென்று கூறியிருப்பதை ஆங்கிலேய கோர்ட்டார் சட்டப்படி செலாவணியுள்ளதல்லவென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். இப்படிச் செய்வதினால் குடிகள் செட்டாய்ச்சிலவுசெய்து விர்த்தி அடைவார்களென்று நினைத்த கோட்பாடு இந்தியாதேசத்திற்கு அனுகூலமானதாய் தோற்றவில்லை; ஏனென்றால் இந்தியாவில் கடன்கொடுப்பவர் அல்லது திரவியசகாயம் செய்வோர் இக்கருத்துடன் ஜனங்கள் நிலவிர்த்தியடையவேண்டுமென்று செய்வதல்ல; ஆனால் பலவித கஷ்டங்களினால் மெலிந்து ஏழ்மையாயிருக்கும் குடிகள் தங்கள் கஷ்டார்ஜிதமாய் சம்பாதித்திருக்கும் சொற்பபொருளையும் பிடிங்கிக்கொண்டு தாங்கள் தனவந்தனுகவேண்டுமென்கிற கருத்தே அவர்கள் (கடன் கொடுப்பவர்கள்) மனதில் சதாகுடிகொண்டிருக்கிறது. ஆங்கிலேயகோர்ட்டார்கள் இக்கோட்பாட்டை ஆதாரமாய்க்கொண்டு இந்துக்களின் அனேக கேசுகளை தீர்மானித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கோட்பாடு பெருத்தவியாபாரம் செய்வதினால் பிரதிதினமும் பொருள்வேண்டியிருக்கும்படியான இங்கிலாந்திற்கடுக்குமேயொழிந்து இவ்விந்தியதேசத்திற்கடுக்காது. இவ்விடத்தில் இவ்விதமான தீர்மானங்களின்பயனாக ஜனங்கள் அதிக கஷ்டப்படுவதுமல்லாமல் இன்னும் பலவிதமான துன்பப்படுகிறார்கள்.

இரண்டாவது:—ஒரு குடும்பத்தின் சொத்து நீடித்தகாலம் அக்குடும்பத்திலேயே வேறொருவருக்கு மாறாமல் இருப்பதை கண்டிப்பது. இவ்விதமான கோட்பாடு இங்கிலாந்தின் நிலைமைக்குத்தகுந்ததாகுமேயல்லாமல் இந்தியாவில் பிரயோகிப்பதற்கு கூடாமை. ஏனென்றால் இங்கிலாந்தில் உள்ள பூஸ்திதிகளோ கொஞ்சம் ஜனத்தொகையோ ஏராளமாய் மிக்க நெறுக்கமாயிருக்கிறது. இங்கிலாந்தில் கிடைக்கக்கூடிய சொற்பநிலங்கள் யாவற்றையும் முன்னமேயே அநேகர் கைப்பற்றிக் கொண்டார்கள் ஆகையால் இனி நிலம்வேண்டுமென்று அபேக்ஷிப்பவர்களுக்கு நிலம் கிடைக்கும்பொருட்டு இங்கிலாந்தில் இப்படிப்பட்ட ஏற்பாடு அனுகூலமானதாய்ச் செய்திருப்பதாக தோன்றுகிறது. இவ்விதமான ஏற்பாடில்லாவிடில் இங்கிலாந்திலுள்ள நிலங்கள்முழுதும் ஒரு லக்ஷம் ஜனங்களுக்குத்தான் சொந்தபொருளாயிருக்கும் அந்தநிலங்களை 5-லக்ஷம் பேர் பயிர்செய்துவர வேண்டியவராவார்கள்.

இவ்விதமாய் இங்கிலாந்தின் ஏராளமான ஜனத்தொகையில் சிலர்மாத்திரம் நிலங்களுக்குச் சொந்தக்காரராகவும் நிலங்களைப் பயிரிடுவோர்களுமாயிருந்தால் மிகுதியிருக்கும் ஜனங்கள் நிலங்களின் சுதந்தரமும் அதனால் உண்டாகும் ஜனசமூக நன்மைகளையும் ராஜாங்கத்தின் அனுக்கூலங்களையும் பெறுமலேயேயிருக்கிறார்கள். ஆகையால் இங்கிலாந்திலுள்ள ஐஸ்வரியவான்கள்மாத்திரம் நிலங்களை ஒருவர் மாற்றி ஒருவர் அனுபவித்துக்கொண்டு பராதீனம் செய்வது மிக்க உசிதமான கோட்பாடென்று பாவித்து வருகிறார்கள்.

இந்துக்களோ அப்படியல்ல அவர்கள் தங்கள் குடும்பத்தைச்சேர்ந்த நிலங்கள் தங்களைவிட்டு வெளியே போகக்கூடாதென்னும் கோட்பாட்டைச் சற்று கவனிக்குமிடத்து இங்கிலாந்தில் நடந்தேறிவரும் ஏற்பாட்டில் கொஞ்சமேனும் திருப்தியடைந்தவர்களாகக் காணப்படவில்லை முக்கியமாய் இந்துக்களின் விவசாயத்தொழில் முறைமையைப்பார்த்தால் அவர்

கள் உழைத்து தாங்களும் தங்களுடைய குடும்பத்தோறும் ஜீவனம் செய்துக்கொண்டு தாங்கள் பட்ட கடன்களையும் தீர்த்து தங்கள்நிலங்கள் குடும்பத்தை விட்டு வெளியேபோகாமல் காப்பாற்றிக்கொண்டு சர்க்காருக்கும கிஸ்த்தி செலுத்தி வருவது குடிகளுக்கு மிக்க கஷ்டமாயிருக்குமல்லவா. நிலங்களை சிறிய துண்டுகளாய்ப் பிறித்து தனித்தனியாய் ரிஜிஸ்டர் செய்வதினால் குடிகள் தங்களுக்குள்ள சொற்ப நிலங்களை உழைத்து சாகுபடிசெய்துவரும் முதலித் (மாசூலில்)விவசாயச்செலவுபோக மிகுதி தங்களுடைய ஜீவனத்த்திற்கு செலவழித்து சர்க்கார் கிஸ்த்தி கட்டுவதற்குசக்தியற்றுப்போகிறார்கள். ஆயினும், குடிகள் தங்களுடைய நிலங்கள் தங்களைவிட்டு வெளியே போகாமல் தங்களிடத்திலேயே யிருந்தால் ஆஸ்தி சேர்க்காவிடினும் பசியில்லாமல் அன்னமாவது புசித்துவரலாமென்கிற மனதிடம் செய்துக்கொண்டு சர்க்கார்தீர்வையை கட்டி விடுகிறார்கள்.

ஏழைகுடிகளை நிர்ப்பந்தித்து இம்சைசெய்து பொருள்கொடுத்து திரவியம் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்கிற எண்ணமுள்ளவர்கள் இந்த ஏழைக்குடிகள் தங்களுக்குள்ள சொற்ப நிலங்களையும் இவ்விதமாய் போக்கடித்துக்கொண்டு கஷ்டப்படும் துன்பங்களோ அதிகம். ஆகையால், இந்தியாவில் விசேஷ திரவியமுள்ளவர்கள் ஏழைகுடிகளுக்கு இவ்விதமான துன்பங்கள்தராமல் இத்தேசத்தில் சாகுபடிசெய்யாமலும் யாராலும் அபகரிக்கப்படாமலும் விவசாயத்திற்கு யோக்கியதையாயுள்ள நிலங்களை ஐஸ்வரியவான்கள் கைப்பற்றி உழைத்து திரவியம் சம்பாதித்துக்கொள்ள மார்க்கமிருக்க ; ஏழைகுடிகளை கஷ்டப்படுத்தி அவர்களை நாசமடையும்படி செய்து தாங்கள் பொருள் சம்பாதித்து சுகமடையவேண்டுமென்கிற எண்ணமுள்ளவர்களாய் காணப்படுகிறது.

மூன்றுவது :—இந்துலாவின் பிரகாரம் குடும்ப சொத்தை குடும்பத்திற்காக இன்றியமையாத காரியங்களுக்கு பராதீனம்செய்து பொருள்பெறலாமென்றிருக்கிறது. குடும்பகாரியங்களுக்காகதான் சொத்து பராதீனம் செய்யப்பட்டதென்று ரூபிக்கவேண்டிய பொறுப்பு மின் கடன்கொடுத்தவர்கள் மீதிருந்தது. இப்பொழுதோ அப்படி குடும்பசொத்தை பராதீனம்செய்தது துர்நடைக்கைக்கும் அநீதியான விஷயங்களுக்கு மல்லவென்று ரூபித்தால் போதுமென்றும் அப்படி ரூபிக்கவேண்டிய பொருப்பு ஸமஷ்ட்டி (ஏக) குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் பொருப்பாகுமென்றும் சட்டமிருக்கிறது.

இந்தியாதிகாரணங்களினாலும் இன்னும் சில முகாந்திரங்களினாலும்தான் இந்துக்களுக்குள்ள ஸமஷ்ட்டி (ஏக) குடும்பமென்னும் ஏற்பாடு நாளுக்குநாள் கீழ்நோக்கிக்கொண்டு ஜீரணமாகின்றது.

Lord Morley's Reforms.

பிரிட்டிஷ் இந்தியா ராஜாங்கத்தின் காரியதரிசி (State Secretary) மாட்சிமைதங்கிய (Lord Morley) லார்ட் மார்லி என்னும் பிரபு ராஜ்யபரிபாலன விஷயமாய் செய்திருக்கும் சீர்திருத்தங்கள்.

சுமார் இரண்டுவருஷங்களுக்கு முன் இந்தியா தேசத்தின் மாட்சிமைபொருந்திய கவர்னர் ஜெனரல் லார்ட்மின்டோ அவர்கள் எழுதிவைத்த குறிப்பில் இத்தேசத்தின் தற்கால நிலைமையை அனுசரித்து சில சீர்திருத்தங்கள் செய்வது உசிதமென கருதி பின்கூறியபடி கண்டெழுதியிருக்கிறார். தற்காலம் பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரால் நாளுக்குநாள் விருத்தியாய்க் கொண்டுவரப்பட்ட வித்தியாப்சத்தினால் ஜனங்கள் மிகத் தேற்சியடைந்து நகரவாசிகளில் சிலவகுப்பார் ராஜாங்கவிஷயமாயுள்ளவைகளை தாங்களும் கவர்ன்மென்டாருடன் ஒன்றுசேர்ந்து யோசித்து ஒழுங்கேற்படுத்த அபேட்சையுள்ளவர்களா யிருக்கிறார்களென்று கண்டு இப்பொழுது புதிதாய் ஏற்படும் சில அம்சங்களை யோசித்து தங்களுடைய அபிப்பிராயத்தை தெரிவிக்கும்படி ஒரு கமிட்டியாரை நேமித்தார். அவர்கள் அவைகளை தீர்க்க யோசித்து சில ஏற்பாடுகள் அவசியமென்று கருதி இவைகளை அமுலுக்கு கொண்டுவந்து ஜனங்கள் அவைகளை இஷ்டிக்கிறார்களா இல்லையா என்று பரிக்ஷித்துப்பார்ப்பது நலமென்று தெரிவித்தார்கள். மேற்செப்பிய லார்ட் மார்லியென்பவர் அவைகளை மஞ்சூர் செய்துக்கொண்டு கனம்பொருந்திய பார்லிமெண்டாருக்கு தெரிவித்து அவைகளை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் பிரசுரம் செய்விக்கும்படி உத்தரவு அளிக்கப்பட்டது. இன்னும், இவைகளை அவ்வவ்விடத்திய பிரதேச கவர்ன்மென்டார்களுக்கும் தெரிவித்து அவர்களுடைய அதிகாரவறம்புக்குள்ளிருக்கும் முக்கியமான கூட்டத்தாருக்கும் நாணவித ஜனசமூகத்தாரின் பிரதிநிதிகளுக்கும் இவைகளைத் தெரிவித்து அவர்களுடைய அபிப்பிராயங்களையும் அறிந்துக்கொண்டு இதன்விஷயமாய் தங்களுக்குள்ள கருத்தை வெளிப்படுத்தும்படி இந்தியா கவர்ன்மென்டாருக்கு உத்தரவுசெய்தார். பிரதேச கவர்ன்மெண்டார்கள் இவைகளை மிக்க ஊக்கத்துடன் பூர்த்தியாய் கவனித்து ஷை உத்தரவை நிறைவேற்றினார்கள். கடைசியாய் இந்தியா கவர்ன்மென்டார் மேற்செப்பியவைகள் யாவற்றையும் மிக்க கவனத்துடன் வாசித்துப் பார்த்துக்கொண்டு இதன்விஷயமாய் தங்களுடைய அபிப்பிராயத்தை விபரமாய் எழுதி தெரிவித்து இதனடியில் வரும் 1, 2, ஷெட்யூல்களில் கண்டபடி சிபார்ஸ்செய்தார்கள்.

மேற்செப்பியலார்ட் மார்லி :—பிரதமத்தில் இதன் சம்மந்தாய் பலவித கஷ்டங்கள் நேரிட்டும் கடைசியாய் இவர் இந்திய கவர்ன்மென்டாருடன் ஒப்புக்கொண்டு சில ஏற்பாடுகள் செய்வித்திருக்கிறார். அவைகளின் கருத்தை பின்வருமாறு சுருக்கச்சொல்வோம் :—

1. தற்காலத்தில் சட்ட திட்டங்கள் செய்வதற்காக ஏற்பட்டிருக்கும் சட்ட நிரூபண சபையில் மொத்தத்தில் இததனைபேர்தான் இருக்கவேண்டும் என்றும் இத்தனைபேருக்கு குறைவாய் இருக்கலாகாதென்றும் சக்கரவர்த்தியினால் செய்யப்பட்டிருக்கும் ஸ்டாட்யுட் (Statute) என்னும் சட்டத்தினால் ஏற்பட்டிருக்கிறதாகையால் மாக்ஷிமைதங்கிய கவர்னர்ஜெனரல் அவர்கள் சபையிலும் இன்னும் பிரதேசகவர்ன்மென்டுகளின் சபைகளிலும் இப்பொழுது இருக்கப்பட்ட மெம்பர்களுக்கு அதிகமாக நேமிக்க அதிகாரம் அளிப்பதற்கு கனம்பொருந்திய பார்லிமென்டாரிடத்தில் செய்துகொண்ட மனு.

2. இதுவரையில் பிரதேச கவர்ன்மென்ட்களிலும், லெப்டெனென்ட் கவர்னர் அவர்கள் சபையிலும் கனம்பொருந்திய கவர்னர் ஜெனரல் அவர்கள் மெம்பர்களை நேம்மித்துவருகிறார். ஜனசமூகத்தார் ஏற்படுத்துவதில்லை. ஆனால், அவ்வவ்விடத்திலுள்ள சிறுகூட்டத்தார்களின்பெரும்பாலோர்யாரைநேமித்து கவர்ன்மென்டுக்கு சிபாரஸ்செய்கிறார்களோ அவர்களை நேமிக்கப்பட்டுவருகின்றன. இப்போது கனம் பொருந்திய கவர்னர்ஜெனரல் அவர்கள் இதுவரையில் நேமித்துவருவதை நிறுத்திவிடவேண்டுமென்று கேட்காமல் அவர்கள் தற்காலம் நேமித்துவரும் மெம்பர்களுடன் இத்தேசத்திலுள்ள பல கூட்டத்தாரும் அவர்கள் முறையிட்டுகொள்ளவேண்டிய விஷயங்களை கவர்ன்மென்டாருக்கு விசிதமாய் தெரிவிக்கும்பொருட்டு ஜனசமூகத்தாரும் தங்கள் தரப்பில் சட்டநிரூபணசபையில் சில மெம்பர்களை பொறுக்கியெடுத்து நேமிப்பதற்கு அதிகாரம் அளிப்பதற்கு செய்துகொண்ட மனு.

3. தற்காலத்தில் திரவ்விய விஷயமாய் கவுன்சலில் வாதிக்கலாகாதென்று 1892-வருத்திய இந்தியன்கவுன்சல் ஆக்டில் நிபந்தனைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த நிபந்தனைகளை ரத்துசெய்யும்படி பார்லிமென்டாருக்கு செய்துகொண்ட மனு.

4. பொதுவாய் ஜனசமூகத்தின் நன்மைக்காக எந்தெந்த விஷயங்களைப்பற்றி யோசிக்கவேண்டியது அவசியமோ அவைகளைப்பற்றி யோசனையுடன் வாதித்து சிபார்ஸ்செய்ய சட்ட நிரூபணசபையாருக்கு அதிகாரம் அளிக்கும்படி செய்துகொண்ட மனு.

5. சட்ட நிரூபணசபையில் தலைமையாய் இருக்கவேண்டியவரை நேமிப்பதற்காக இப்பொழுது என்ன அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதை விருத்திசெய்ய வேண்டுமென்று செய்துகொண்ட மனு.

6. பம்பாய், மதராஸ் இந்த இடங்களில் ராஜ்ஜியபரிபாலன விஷயங்களை கவனித்து வேலைபார்த்துவரும் சபைகளில் (Executive Councils) தற்காலத்திலுள்ள மெம்பர்களைவிட இரண்டு மடங்கு அதிகமாய் நேமிப்பதற்கு அதிகாரம் அளிக்க செய்துகொண்ட மனு.

7. லெப்டெனென்ட் கவர்னர் அவர்கள் கவுன்சலில் இப்பொழுது மேற்சொன்னபடி எக்ஜிகூடிவ் கவுன்சல்கள் கிடையாதாகையால் இரண்டு மெம்பர்கள் அடங்கிய அப்படிப்பட்ட எக்ஜிகூடிவ் கவுன்சல் ஒன்று இருக்கவேண்டுமென்றும் அந்த எக்ஜிகூடிவ் சபையார்செய்வதை லெப்டெனென்ட் கவர்னர் அவர்கள் எந்தெந்த விஷயங்களை மீறிநடக்கலாமென்பதை விவரித்து விதிகள் ஏற்படுத்தும்படிக்கும் செய்துகொண்ட மனு.

சீர்திருத்தங்கள்.

ஷெட்யூல்—I

மாக்ஷிமைதங்கிய கவர்னர் ஜெனரல் அவர்களின் சட்ட நிரூபண சபையின் விஷயமாய் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள்.

தற்காலம் உள்ளது.

காயமாயுள்ள உத்தியோகஸ்தர்கள்.

1. பெங்கால் லெப்டெனென்ட் கவர்னர் (கவுன்ஸல் சிம்லாவில் இருக்கையில் பஞ்சாப் லெப்டெனென்ட் கவர்னர்), கமான்டர்-இன்-சீப் (ராணுவத் தலைவர்), எக்ஜிகூடிவ் கவுன்ஸல் மெம்பர்கள் ... 8

காயமாயுள்ளவர்களுடன் உடநிதையாயிருப்பவர்கள்.

ஏ. நேமிக்கப்பட்ட மெம்பர்கள் ; இவர்களில் 9 பேருக்கு அதிகப்படாமல் உத்தியோகஸ்தர்களாயிருக்க வேண்டியது ; சபையில் வேலை அதிகமாயிருந்தால் அப்பொழுது உத்தியோகஸ்தரல்லாத மற்றவர்கள் ... 14

மார்லி பிரபுவின் சீர்திருத்தங்களின்படி செய்ய உத்தேசித்திருப்பது.

காயமாயுள்ள உத்தியோகஸ்தர்கள்.

1. பெங்கால் லெப்டெனென்ட் கவர்னர் (கவுன்ஸல் சிம்லாவில் இருக்கையில் பஞ்சாப் லெப்டெனென்ட் கவர்னர்), கமான்டர்-இன்-சீப் (ராணுவத்தலைவர்), எக்ஜிகூடிவ் கவுன்ஸல் மெம்பர்கள். ... 8

காயமாயுள்ளவர்களுடன் உடநிதையாயிருப்பவர்கள்.

ஏ. மாகாணங்களுக்கு ஏற்படும் பிரதிநிதிகள் ... 8

தற்காலம் உள்ளது.—தொடர்ச்சி

பி. பொறுக்கி எடுக்கப்பட்ட மெம்பர்கள் ... 5

(i) மதராஸ், பம்பாய், பெங்கால் (யுனைடெட் ப்ராவின்ஸெஸ் சேர்ந்த மாகாணங்களிலுள்ள பிரதேச கவர்ன்மெண்டார் பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள். ... 4

(ii) கல்கத்தா (சேம்பர் ஆப்காமெர்ஸ்) வியாபாரக் கூட்டத் தலைவர் ... 1

மொத்தம். (மெம்பர்கள்) 24

மாக்ஷிமைதங்கிய கவர்னஜெனரல் அவர்களுடன் 25

மார்லி பிரபுவின் சீர்திருத்தங்களின்படி செய்ய உத்தேசித்திருப்பது.—தொடர்ச்சி.

பி. நேமிக்கப்பட்ட மெம்பர்கள், இவர்களில் 15 பேருக்கு அதிகப்படாமல் உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தரல்லாத மற்ற பொதுநலப் பிரியர்கள் ... 18

ஸி. பொறுக்கி எடுக்கப்பட்ட மெம்பர்கள் ... 28

* (i) அவ்வவ்விடத்திய பிரதேச கவர்ன்மெண்டார்களும் மத்திய மாகாணங்களிலுள்ள அட்வைசரி கவுன்சல்களும் பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள். ... 12

†(ii) மதராஸ், பம்பாய், பெங்கால், கிழக்கு பெங்கால், ஆஸாம், சேர்ந்தமாகாணங்கள், பஞ்சாப், மத்தியமாகாணங்களால் பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள். ... 7

‡(iii) பங்காளம், கிழக்கு பெங்கால், ஆஸாம், சேர்ந்த மாகாணங்கள், பஞ்சாப், மதராசும் பம்பாயும் (ஒன்றுமாற்றி ஒன்று) இவ்விடங்களிலுள்ள நிலக்கர்கள் பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள். ... 5

(iv) கல்கத்தா, பம்பாய் இவ்விடங்களிலுள்ள வியாபாரக் கூட்டத்தலைவர்கள். ... 2

(v) இந்தியரின் வியாபாரக் கூட்டத்தின் பிரதிநிதிகள். ... 2

ஆக மொத்தம். 62

மாக்ஷிமைதங்கிய கவர்னர் ஜெனரல் அவர்களுடன். 63

மதராஸ் (சென்னை).

காயமாயுள்ள உத்தியோகஸ்தர்கள்.

ராஜ்யபரிபாலன விஷயங்களை கவனிக்கும் எக்ஜிகூடிவ் மெம்பர்கள் ... 2

அட்வோகேட் ஜெனரெல் ... 1

காயமாயுள்ள உத்தியோகஸ்தர்களுடன் உடந்தையாயிருப்பவர்கள்.

ஏ. நேமிக்கப்பட்ட மெம்பர்கள்; இவர்களில் 9 பேருக்கு அதிகப்படாமல் உத்தியோகஸ்தர்களா யிருக்கவேண்டும். உத்தியோகஸ்தரல்லாத மற்றவர்கள் வருஷம் ஒன்றுக்கு 20,000 ரூபாய்க்குக் குறையாமல் பேஷ்கஷ் கட்டும் ஜமீந்தாரர் ஒருவர் இருக்கவேண்டும். இவர்கள் நானாவித கூட்டத்தாரின் முறைப்பாடுகளை தெரிவிக்க வேண்டியவர்கள் 13

பி. பொறுக்கி எடுக்கப்பட்ட மெம்பர்கள் ... 7

(i) மதராஸ் முனிசிபல் கூட்டத்தாரால் (Corporation), ... 1

(ii) முனிசிபாலிடிகளாலும், ஜில்லாபோர்டுகளாலும் ... 4

(iii) சர்வகலாசாலை (University) யாரால்... 1

(iv) வியாபாரக் கூட்டத்தலைவராவது அல்லது பொதுவாய் வியாபாரக் கூட்டத்தார்களால் ... 1

ஆக மொத்தம். 23

மாக்ஷிமை தங்கிய கவர்னர் அவர்களுடன் ... 24

மதராஸ் (சென்னை).

காயமாயுள்ள உத்தியோகஸ்தர்கள்.

எக்ஜிகூடிவ் மெம்பர்கள் ... 2

அட்வோகேட் ஜெனரல் ... 1

காயமாயுள்ள உத்தியோகஸ்தர்களுடன் உடந்தையாயிருப்பவர்கள்.

ஏ. நேமிக்கப்பட்ட மெம்பர்கள்; இவர்களில் 20 பேருக்கு அதிகப்படாமல் உத்தியோகஸ்தர்களா யிருக்கவேண்டும் உத்தியோகஸ்தரல்லாத மற்ற பொது நலப் பரியர்கள் ... 24

பி. பொறுக்கி எடுக்கப்பட்ட மெம்பர்கள் ... 19

(i) மதராஸ் முனிசிபால் கூட்டத்தாரால் (Corporation) ... 1

§(ii) முனிசிபாலிடிகளாலும், ஜில்லாபோர்டுகளாலும். ... 8

(iii) சர்வகலாசபை (University) யாரால்... 1

‖ (iv) பூஸ்திதியுள்ளவர்களால் ... 4

(v) (டீ, காபிமுதலியவை) பயிரிடும் கூட்டத்தாரால். ... 1

¶(vi) நிலக்கர்களால் ... 2

வியாபாரக் கூட்டத் தலைவரால் ... 1

இந்தியரின் வியாபாரக் கூட்டத்தாரால் ... 1

ஆக மொத்தம்! 46

மாக்ஷிமைதங்கிய கவர்னர் அவர்களுடன் ... 47

* இவர்களில் சிலரை பொறுக்கியெடுப்பதற்கென்று கூட்டத்தார்கள் ஏற்பாடாதவரையில் நேமகம்செய்ய வேண்டியதுதான்; ஆனல் கடைசியில் கூடியவரையில் கூட்டத்தார்களே தான் பொறுக்கி எடுக்கவேண்டும்.

† மதராஸ் (2) பம்பாய் (2) பெங்கால் (2), சேர்ந்த மாகாணங்கள் (2) பஞ்சாப் (1) பர்மா (1) கிழக்கு பெங்கால் ஆஸாம் (1) புதிய மாகாணங்களின் பிரதேச அட்வைசரி கவுன்சலார் (1).

‡ பொறுக்கி எடுப்பதற்கு ஒருவிதம் ஏற்படுகிறவரையில் கவர்னர் ஜெனரல் அவர்கள் அவ்வவ்விடத்திய பிரதேச கவர்ன்மெண்டார்களுடன் கலந்து யோசித்து நேமிக்கவேண்டும்.

§ இந்த ராஜதானியின் ஜில்லாக்களை 8-பிரிவுகளாக்கி ஒவ்வொரு பிரிவிக்கும் 8 ஜில்லாக்கள் வீதம் [வேண்டியது.

‖ இந்த ராஜதானியின் ஜில்லாக்களை 6 பிரிவுகளாக்கி ஒவ்வொரு பிரிவிக்கும் 4 ஜில்லாக்கள் வீதம் வோட்செய்ய.

¶ சந்தர்ப்பத்திற் கேத்தபடி பொறுக்கியாவது நேமித்தாவது கொள்ளவேண்டியது. [வேண்டியது

தற்காலம் உள்ளது.—தொடர்ச்சி

பம்பாய்.

காயமாயுள்ள உத்தியோகஸ்தர்கள்.

ராஜ்யபரிபாலன விஷயங்களை கவனிக்கும் எக்ஜிகூடிவ் மெம்பர்கள் ... 2

அட்வோகேட் ஜெனரல் ... 1

காயமாயுள்ள உத்தியோகஸ்தர்களுடன் உடந்தையாயிருப்பவர்கள்.

ஏ. நேமிக்கப்பட்ட மெம்பர்கள், இவர்களில் 9 பேருக்கு அதிகப்படாமல் உத்தியோகஸ்தர்களா யிருக்கவேண்டும். உத்தியோகஸ்தரல்லாத மற்ற பொதுஜனப் பிரதிநிதிகள் இவர்கள் நானாவித கூட்டத்தாரின் முறைப்பாடுகளை தெரிவிக்க வேண்டியவர்கள் ... 12

பி. பொறுக்கி எடுக்கப்பட்ட மெம்பர்கள் ... 8

(i) மதராஸ் முனிசிபாலிட்டி கூட்டத்தாரால் (Corporation) ... 1

(ii) முனிசிபாலிடியார்களால் ... 1

(iii) ஜில்லா போர்டார்களால் ... 2

(iv) பம்பாய் சர்வகலாசாலை (University) யாரால் ... 1

(v) டெக்கன் சர்தார்களாலும், சிந்த் ஜெமீன்தாரர்களாலும் ... 2

(vi) பம்பாய் வியாபாரக் கூட்டத்தலைவர்களால் அல்லது பொதுவாய் இதரவியாபார் கூட்டத்தார்களால் ... 1

ஆக மொத்தம். 23

மாக்ஷிமைதங்கிய கவர்னர் அவர்களுடன் ... 24

மார்லிபிரபுவின் சீர்திருத்தங்களின்படி செய்ய உத்தேசித்திருப்பது.—தொடர்ச்சி.

பம்பாய்.

காயமாயுள்ள உத்தியோகஸ்தர்கள்.

எக்ஜிகூடிவ் மெம்பர்கள் ... 2

அட்வோகேட் ஜெனரல் ... 1

காயமாயுள்ள உத்தியோகஸ்தர்களுடன் உடந்தையா யிருப்பவர்கள்.

ஏ. நேமிக்கப்பட்ட மெம்பர்கள் இவர்களில் 20 பேருக்கு அதிகப்படாமல் உத்தியோகஸ்தரா யிருக்கவேண்டும்; உத்தியோகஸ்தரல்லாத மற்ற பொது நலப்பிரியர்கள். 23

பி. பொறுக்கி எடுக்கப்பட்ட மெம்பர்கள் ... 20

(i) பம்பாய் முனிசிபாலிடி கூட்டத்தாரால் (Corporation) ... 1

(ii) முனிசி பாலிடிகளால் ... 4

(iii) ஜில்லா போர்டார்களால் ... 4

(iv) சர்வகலாசாலை (University) யாரால்... 1

(v) பூஸ்திதியுள்ளவர்களால் ... 3

(vi) நிலக்கர்களால் ... 3

(vii) பம்பாய் வியாபாரக் கூட்டத்தாரின் தலைவர்களால் ... 1

(viii) கராச்சி வியாபாரக் கூட்டத்தாரின் தலைவர்களால் ... 1

(ix) பம்பாய், ஆமதாபாத் யந்திரசாலைகளின் சொந்தக்காரர்களின் கூட்டத்தார்களால் (ஒன்று மாற்றி ஒன்று). ... 1

இந்தியரின் வியாபாரக் கூட்டத்தாரால் ... 1

ஆக மொத்தம். 46

மாக்ஷிமைதங்கிய கவர்னர் அவர்களுடன் ... 47

பெங்கால்.

ஏ. நேமிக்கப்பட்ட மெம்பர்கள்; இவர்களில் 10 பேருக்கு அதிகப்படாமல் உத்தியோகஸ்தர்களல்லாத மற்ற பொதுஜனப் பிரதிநிதிகள்; இவர்கள் நானாவிதகூட்டத்தாரின் முறைப்பாடுகளை தெரிவிக்கவேண்டியவர்கள் ... 13

பி. பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள். ... 7

(i) கல்கத்தா முனிசிபாலிட்டி கூட்டத்தாரால் (Corporation) ... 1

(ii) முனிசிபாலிட்டிகள் (ஒன்றுமாற்றி ஒன்று) 1

(iii) ஜில்லா போர்டுகளால் (Do.) ... 2

(iv) சர்வகலாசாலையாரால் (University)... 1

(v) பூஸ்திதியுள்ளவர்களின் கூட்டத்தாரால் 1

(vi) வியாபாரக்கூட்டத்தின் தலைவர்களால் அல்லது பொதுவாய் இதர வியாபாரக்கூட்டத்தார்களால் ... 1

ஆக மொத்தம். 20

மாக்ஷிமைதங்கிய லெப்டினெண்ட் கவர்னர் அவர்களுடன் 21

பெங்கால்.

ஏ. நேமிக்கப்பட்ட மெம்பர்கள் இவர்களில் 23 பேருக்கு அதிகப்படாமல் உத்தியோகஸ்தர்களா யிருக்கவேண்டும், உத்தியோகஸ்தர்களல்லாத மற்ற பொதுஜனப் பிரதிநிதிகள்; இவர்கள் நானாவித கூட்டத்தாரின் முறைப்பாடுகளை தெரிவிக்கவேண்டியவர்கள் ... 26

பி. பொறுக்கி எடுக்கப்பட்ட மெம்பர்கள். ... 20

(i) கல்கத்தா முனிசிபல் கூட்டத்தாரால் (Corporation) ... 1

(ii) முனிசிபாலிடிகளால் .. 4

(iii) ஜில்லா போர்டுகளால் .. 4

(iv) சர்வகலாசாலையாரால் (University)... 1

(v) பூஸ்திதியுள்ளவர்களால் ... 1

(vi) (டீ, காபி முதலியவை) பயிரிடும் கூட்டத்தாரால். ... 1

(vii) நிலக்கர்களால் ... 2

(viii) வியாபாரக் கூட்டத் தலைவர்களால் ... 1

ix) கல்கத்தா வியாபாரக் கூட்டத்தாரால்... 1

(x) இந்தியரின் வியாபாரக் கூட்டத்தாரால் 1

ஆக மொத்தம். 46

மாக்ஷிமைதங்கிய கவர்னர் ஜெனரல் அவர்களுடன் 47

தற்காலம் உள்ளது.—தொடர்ச்சி.

சேர்ந்த மாகாணங்கள்.

எ. நேமிக்கப்பட்டமெம்பர்கள்; இவர்களில் 7 பேருக்கு அதிகப்படாமல்; உத்தியோகஸ்தர்களாயிருக்கவேண்டும்; உத்தியோகஸ்தர்களல்லாத மற்றநாலுவித கூட்டதாரின் பொதுஜனப் பிரதிநிதிகள் ... 9

பீ. பொறுக்கி எடுக்கப்பட்ட மெம்பர்கள் ... 6

(i) முனிசிபாலிட்டிகளின் கூட்டப் பிறிவுகளால் ... 2

(ii) ஜில்லா போர்டுகளின் கூட்டப்பிறிவுகளால் ... 2

(iii) அலஹாபாத் சர்வகலாசாலையாரால் ... 1

(iv) மேலிந்தியா வியாபாரக் கூட்டத்தாரின் தலைவர்களால் அல்லது பொதுவாய் இதர வியாபாரக் கூட்டத்தார்களால் ... 1

ஆ மொத்தம். 15

மாஷிமைதங்கிய லெப்டெனென்ட் கவர்னர் அவர்களுடன் ... 16

மார்லி பிரபுவின் சீர்திருத்தங்களின்படி செய்ய உத்தேசித்திருப்பது.—தொடர்ச்சி.

சேர்ந்த மாகாணங்கள்.

எ. நேமிக்கப்பட்ட மெம்பர்கள்; இவர்களில் 23 பேருக்கு அதிகப்படாமல் உத்தியோகஸ்தர்களாயிருக்கவேண்டும், உத்தியோகஸ்தர்களல்லாத மற்ற பொதுஜனப் பிரதிநிதிகள்; இவர்கள் நாலுவித கூட்டத்தாரின் முறைப்பாடுகளை தெரிவிக்க வேண்டியவர்கள் ...

பீ. பொறுக்கி எடுக்கப்பட்ட மெம்பர்கள் ...

(i) பெரிய முனிசிபாலிடிகளால் ... 2

(ii) ஜில்லா போர்டுகளாலும், சிறிய முனிசிபாலிடிகளாலும் ... 8

(iii) அலஹாபாத் சர்வகலாசாலையாரால் .. 1

(iv) பூஸ்திதியுள்ளவர்களால் ... 2

(v) துலுக்கர்களால் ... 4

(vi) மேலிந்தியா வியாபாரக் கூட்டத்தாரின் தலைவர்களால் ... 1

(viii) இந்தியரின் வியாபாரக் கூட்டத்தாரால் 1

ஆ மொத்தம்....

மாஷிமைதங்கிய லெப்டெனென்ட் கவர்னர் அவர்களுடன் ...

கிழக்கு பெங்காலும் ஆஸாமும்.

எ. நேமிக்கப்பட்ட மெம்பர்கள்; இவர்களில் 7 பேருக்கு அதிகப்படாமல் உத்தியோகஸ்தர்களா யிருக்கவேண்டும்; உத்தியோகஸ்தர்களல்லாத நாலுவித கூட்டத்தாரின் பொதுஜனப் பிரதிநிதிகள் ... 9

பீ. பொறுக்கி எடுக்கப்பட்ட மெம்பர்கள் ... 6

(i) முனிசிபாலிடிகளாலும், ஜில்லாபோர்டுகளாலும் ... 3

(ii) பூஸ்திதியுள்ளவர்களின் கூட்டத்தாரால் 1

(iii) வியாபாரிகளின் கூட்டத்தாரால் ... 1

(iv) சிட்டகாங்க்துறை முகத்தின் கமிஷனர்களால் ... 1

ஆ மொத்தம். 15

மாஷிமைதங்கிய லெப்டெனென்ட் கவர்னர் அவர்களுடன் ... 16

கிழக்கு பெங்காலும் ஆஸாமும்.

எ. நேமிக்கப்பட்ட மெம்பர்கள்; இவர்களில் 18 பேருக்கு அதிகப்படாமல் உத்தியோகஸ்தர்களா யிருக்கவேண்டும்; உத்தியோகஸ்தர்களல்லாத மற்ற பொதுஜனப் பிரதிநிதிகள், இவர்கள் நாலுவித கூட்டத்தாரின் முறைப்பாடுகளை தெரிவிக்கவேண்டியவர்கள் ...

பீ. பொறுக்கி எடுக்கப்பட்ட மெம்பர்கள் ...

(i) முனிசிபாலிடிகளாலும், ஜில்லா, லோகல்பண்டு * போர்டுகளாலும் ... 8

(ii) பூஸ்திதி யுள்ளவர்களால் ... 2

(iii) துலுக்கர்களால் .. 2

(iv) டீ, பயிர்செய்பவர்களால் ... 1

(v) ஜனபிசி பயிர்செய்பவர்களால் ... 1

(vi) சிட்ட காங்க்துறை முகத்தின் கமிஷனர்களால். ... 1

ஆக மொத்தம்.

மாஷிமைதங்கிய லெப்டெனென்ட் கவர்னர் அவர்களுடன் ...

* பின் செப்பிய டிவிஷன்களிலுள்ள முனிசிபல் கூட்டத்தார், ஜில்லா, லோக்கல் போர்டுகளாலும் வோட் செய்யப் படவேண்டும்; டாக்கா (2), சிட்டகாங் (2), ராஜ்சாஹி (2), ப்ரம்ம புத்ரா பள்ளத்தாக்கு (1), சூர்மா பள்ளத்தாக்கு (1).

தற்காலம் உள்ளது.—தொடர்ச்சி

பஞ்சாப்.

எ. நேமிக்கப்பட்ட மெம்பர்கள்

உத்தியோகஸ்தர்கள் ... 5

உத்தியோகஸதர்களல்லாதவர்கள் ... 4

ஆ மொத்தம். 9

மாஷிமைதங்கிய லெப்டெனென்ட் கவானர் அவர்களுடன் ... 10

பர்மா.

எ. நேமிக்கப்பட்ட மெம்பர்கள்

உத்தியோகஸ்தர்கள் ... 5

உத்தியோகஸ்தர்களல்லாதவர்கள் ... 4

ஆ மொத்தம். 9

மாஷிமைதங்கிய லெப்டெனென்ட் கவர்னர் அவர்களுடன் ... 10

மார்லி பிரபுவின் சீர்திருத்தங்களின்படி செய்ய உத்தேசித்திருப்பது.—தொடர்ச்சி.

பஞ்சாப்.

எ. நேமிக்கப்பட்ட மெம்பர்கள்; இவர்களில் 12 பேருக்கு அதிகப்படாமல் உத்தியோகஸ்தர்களா யிருக்கவேண்டும்; உத்தியோகஸ்தர்களல்லாதவர்கள் துலுக்கர்கள், ஹிந்துக்கள், சிக்ஸ் இன்னும் இதர கூட்டத்தார்களின் பிரதிநிதிகளா யிருக்கவேண்டும் ... 19

பீ. பொறுக்கி எடுக்கப்பட்ட மெம்பர்கள் ... 5

(i) வியாபாரக் கூட்டத்தாரால் ... 1

[ii] பஞ்சாப் சாவகலாசாலை யாரால் ... 1

(iii] பெரிய நகரங்களால் [நகரவாசிகளால்] 3

ஆம மொத்தம். 24

மாஷிமைதங்கிய லெப்டெனென்ட் கவர்னர் அவர்களுடன் ... 25

பர்மா.

எ. நேமிக்கப்பட்ட உததியோகஸ்தர்கள். ... 8

பீ. நேமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்க ளல்லாதவர்கள் ... 7

(i) பர்மாஜாதியாரின் ஜனசமூகத்தாருடைய பிரதிநிதிகளால் ... 4

(ii) இந்தியர், சைனு தேசத்தார் இவர்களின் வியாபாரக்கூட்டத்தார்களால் ... 2

(iii) மற்ற இனத்தார்களின் பிரதிநிதிகளால் 1

சீ. பர்மா வியாபாரக் கூட்டத்தாரின் தலைவர்களால் [Chamber of Commerce, Burma] பொறுக்கி எடுக்கப்படவர்களால் ... 1

ஆ மொத்தம். 16

மாஷிமைதங்கிய லெப்டெனென்ட் கவர்னர் அவர்களுடன். ... 17

ஷெடூல் II.

Imperial Budget.

ராஜாங்கத்திற்குறிய சுமாரான வரவுசிலவு மதிப்பு.

இந்த சீர்திருத்தங்களின்படி ஏற்படும் கவுன்சல்களில் ஒவ்வொரு வருஷத்திலும் மாஷிமை தங்கிய சக்கரவர்த்திக்கு அனுப்பபடும் ராஜாங்கத்தின் வரவுசெலவு கணக்கில் எந்தெந்த அம்சங்களைப்பற்றி தர்கித்து வாதிக்கலாமோ அவைகளையும், எதெதைப்பற்றி பேசலாகாதோ அவைகளையும் விவரமாய் கண்டு அடியில் சுருக்கமாய் வரைந்திருக்கிறோம்.

ராஜாங்கத்தின் வரவு (வருமானம்).

எந்தெந்த சர்க்கார் இலாக்காக்களின் விஷயமாய் வாதிக்கலாம்.

1. நிலத்தீர்வை (Land Revenue).
2. அபினி (Opium).
3. உப்பு (Salt).
5. சுங்கம் (தீர்வை-Excise).

சிலவு.

எந்தெந்த சர்க்கார் இலாகீகாக்களின் விஷயமாய் வாதிக்கலாம்.

1. பணம் வாபஸ் செய்வதும் குறைவுபடுத்தும் Refunds and Drawbacks)
3. நிலத்தீர்வை (Land Revenue).
4. அபினி (Opium).
5. உப்பு (Salt.

ராஜாங்கத்தின் வருமானம் (வரவு).

எந்தெந்த சர்க்கார் இலாக்காக்களின் விஷயமாய் வாதிக்கலாம்.

6. மாகாணங்களின் ரேட்டுகள் — சுங்கங்கள் (Provincial Raies).
9. காடு (Forests).
10. ரெஜிஸ்ட்ரேஷன்—பத்திரங்கள் பதிவுசெய்வது—(Registration).
12. வட்டிகள் (Interests).
13. தபால் ஆபீசு (Post Office).
14. தந்தி இலாகா (Telegraph).
15. தங்கசாலைகள் (Mints).
16-B. ஜெயில்கள் (Jails).
17. போலீஸ் (Police).
19. வித்தியாம்சம் (Education).
20. வைத்திய இலாகா (Medical).
21. ரஸவாதம் முதலான சாஸ்திர சம்பந்தமான சில்லரை இலாக்காக்கள் (Scientific and Minor Departments).
22. பென்ஷன்முதல் அதிகசிலவுச்சாகவரும் வருமானங்கள்) Receipts in aid of superannuation).
23. காகிதம், பேனா, அச்சுமுதலியன (Stationery and Printing).
24. மாறுதல்களைப்பற்றி (Exchange).
25. சில்லரை அம்சங்கள் (Miscellaneous).
26. இராஜாங்கத்தின் ரயில்வேகள் (State Railways)
27. ஜாமீன் பெற்ற கம்பெனிகள் (Guaranteed Companies).
29. நீர்ப்பாய்ச்சல்களைப்பற்றிய வேலைகள் (Irrigation Major Works).
30. சில்லரைவேலைகளும் ஜலத்தின்மேல்செல்லும் ஸ்டீமர்முதலிய இலாக்காக்கள் (Minor Works and Navigation).
31. சிவில்வேலைகள் (Civil Works).

எந்தெந்த சர்க்கார் இலாக்காக்களின் விஷயமாய் வாதிக்கலாகாது.

4. ஸ்டாம்பு-முத்திரை கடுதாசி (Stamps).
7. கஸ்டமஸ் தீர்வை (Customs).
8. விதிக்கப்பட்டிருக்கும் தீர்வைகள் (Assessed Taxes).
11. சுதேச ராஜாக்கள்கட்டும் மொத்தப் பணங்கள் (Tributes from Native States).
16-A. நியாயஸ்தலங்கள் (Courts of Law).
32. சைன்னியம் (Army).
33. சமுத்திர இலாகா (Marine).
34. மிலிட்டேரி வேலைகள் (Military Works).

மாகாணங்களுக்சென்றே சுயமாய்வரும் வருமானங்கள் யாவற்றும்.

சிலவு.

எந்தெந்த சர்க்கார் இலாக்காக்களின் விஷயமாய் வாதிக்கலாம்.

6. ஸ்டாம்பு முத்திரை கடுதாசிகள் (Stamps).
7. சுங்கம் (தீர்வை—Excise).
8. மாகாணங்களின் ரேட்டுகள்—சுங்கங்கள் [Provincial Rates].
9. கஸ்டம் ஸ்தீர்வை (Customs).
10. விதிக்கப்பட்டிருக்கும் தீர்வைகள் (Assessed taxes).
11. காடு (Forest).
12. ரெஜிஸ்ட்ரேஷன்—பத்திரங்கள் பதிவுசெய்வது [Registration].
14. வட்டியும், இதர உடன்படிக்கையும் (Interest and other (Obligations).
15. தபால் ஆபீசு (Post Office).
16. தந்தி இலாகா (Telegraph)
17. தங்கசாலை (Mint).
18. சாதாரண பரிபாலன விஷயம் (General Administration).
19-A. நியாயஸ்தலங்கள் (Courts of Law).
19-B. ஜெயில்கள் (Jails).
20. போலீஸ் (Police).
22. வித்தியாம்சம் (Education).
24. வய்த்திய இலாகா (Medical).
26. ரஸவாதம்முதலான சாஸ்திர சம்பந்தமான சில்லரை இலாக்காக்கள் (Scientific and Minor Departments).
28. சிவில் பர்லோ-நின்றுப்போகிறவர்களுக்கு கொடுக்கும் கட்டணம் Civil furlough and Subsistence allowance.
29. ஊழியம் செய்தவர்களின் விர்த்தாப்பியத்தில் அவர்களுக்கு ஜீவனத்திற்(காக) கொடுக்கும் கட்டணமும் பென்ஷன்களும் (Superannuatiou allowance aud Pensions.)
30. காகிதம், பேனா, அச்சுமுதலியன (Stationery and Printing).
32. சில்லரை அம்சங்கள் (Miscellaneons).
33. பஞ்சத்தில் காப்பாற்றுவதற்காக சிலவாகும் அம்சம் (Famine Relief).
34. காக்கப்பட்ட ரயில்வே வேலைகளை செய்வதற்கு (Construction of Protective Railways.
35. காக்கப்பட்ட ஜலப்பாய்ச்சல் வேலைகளை நிறைவேற்றுவதற்காக (Construction of Protective Irrigation Works).
36. குறைப்பதும், கடன்வாங்காமலிருப்பதும் (Reduction— Av oidauce of Debti.
39. ஜாமீன்பெற்ற கம்பெனிகள் (Guaranteed Companies).
40. திரவ்விய சகாயம்செய்யும் கம்பெனிகள் (Subsidized Companies).
41. ரயில்வே சில்லரை சிலவுகள் (Miscellaneous Railway Expenditure).
42. நீர்ப்பாய்ச்சல் வேலைகளுக்காக உழைப்புக்கூலி சிலவுகள் (Irrigatiou Major works working Expenses).
43 சில்லரைவேலைகளும் ஜலத்தின்மேல்செல்லும் ஸ்டீமர்முதலிய இலாக்காக்கள் (Minor Works and Navigation).

சிலவு.

எந்தெந்த சர்க்கார் இலாக்காக்களின் விஷயமாய் வாதிக்கலாம்.

45. சிவில் வேலைகள் (Civil Works).
48. ராஜாங்கத்தாரின் ரயில்வேக்களின் முதலிலே நேரிடும் சிலவுகளில் கணக்கிடாத அம்சங்கள் (State Railways Capital Expenditure not charged to Revenue)
49. நீர்ப்பாசன வேலைகள் (Irrigation Works).

எந்தெந்த சர்க்கார் இலாக்காக்களின் விஷயமாய் வாதிக்கலாகாது.

2. கொடுத்த விவேதைப்பற்றியும், பிரதி பலன்களும் (Assignments and Compensations)
13. கடன்மீது கொடுக்கவேண்டிய வட்டி (Interest on Debts).
23. மதாச்சார விஷயமாய் (Ecclesiastical).
25. ராஜாங்க பரிபாலன விஷயமாய் (Politic).
27. ராஜாங்கத்தின் பரிபாலன விஷயமாய் கொடுக்கப்படும் பென்ஷன்கள் (Territorial and Political Pensions).
38. ராஜாங்கத்தாரின் ரயில்வேக்கள் (State Railways)
42. பெரும் வேலைகளும், கடன்மேல் கொடுக்கப்படும் வட்டியும் Major works: Interest on Debts).
46. சைன்னியம் (Army)
46-A. சமுத்திர இலாக்கா (Marine).
47. மிலிட்டேரி வேலைகள் (Military Works).
47-A. எதிர்வாதம்செய்ய பிரத்தியேகமாய் நேரிடும் சிலவுகள் (Special defence).

ராஜாங்கவிஷயமாய் நேரிடும்சிலவுகள், மாகாணங்களுக்கென்றே தனியாய் நேரிடும் சிலவுகள்.

The Provincial Budget.

பிரதி பிரதேச கவர்ன்மெண்டுக்குரிய சுமாரானவரவு சிலவுமதிப்பு.

ராஜாங்கத்தின் வரவு (வருமானம்).

எந்தெந்த சர்க்கார் இலாக்காக்களின் விஷயமாய் வாதிக்கலாம்.

1. நிலத்தீர்வை (Land Revenue).
5. சுங்கம் (தீர்வை-Excise).
9. காடு (Forest).
10. ரெஜிஸ்ட்ரேஷன்—பத்திரங்கள் பதிவுசெய்யும் இலாகா (Registration).
12. வட்டி (Interests).
16-பி. ஜெயில்கள் (Jails).
17. போலீஸ் (Police).
18. ரேவுத் துறைமுகங்களும் மாலுமிகளுக்கு கொடுக்கும் கூலியும் (Ports and Pilotage).
19. வித்யாம்சம் (Education).
20. வயித்திய இலாக்கா (Medical).

சிலவு.

எந்தெந்த சர்க்கார் இலாக்காக்களின் விஷயமாய் வாதிக்கலாம்.

1. பணம் வாபஸ் செய்வதும்—குறைவுபடுதலும். (Refunds and drawbacks)
3. நிலத்தீர்வை (Land Revenue).
6. ஸ்டாம்பு முத்திரைகடுதாசிகள் (Stamps).
7. சுங்கம்—தீர்வை (Excise).
8. மாகாணங்களின் ரேட்டுகள்—சுங்கங்கள் (Provincial rates.)
10. விதிக்கப்பட்டிருக்கும் தீர்வைகள் (Assessed taxes).
11. காடு (Forest).
12. ரெஜிஸ்ட்ரேஷன்—பத்திரங்கள் பதிவு செய்யும் இலாக்கா (Registration).

ராஜாங்கத்தின் வரவு (வருமானம்).

எந்தெந்த சர்க்கார் இலாகாக்களின் விஷயமாய் வாதிக்கலாம்.

21. ரஸவாதம் முதலான சாஸ்திர சம்பந்தமான சில்லரை இலாக்காக்கள் (Scientific and other Minor Departments).
22. ஜீவனும்சத்திற்காக கொடுக்கும் விஷயமாய்வரும் வருமானங்கள் (Receipts in aid of Superannuation &c).
23. காகிதம், பேனா அச்சுமுதலியன (Stationery and Printing).
25. சில்லரை விஷயங்கள் (Miscellaneous).
29. நீர்ப்பாய்ச்சல் வேலைகள் (Irrigation Major Works).
30. சில்லரைவேலைகளும், ஜலத்தின்மேல்செல்லும் ஸ்டீமர் முதலான இலாக்காக்கள் (Minor Works and Navigation).
31. சிவில் வேலைகள் (Civil Works).

எந்தெந்த சர்க்கார் இலாக்காக்களின் விஷயமாய் வாதிக்கலாகாது.

4. ஸ்டாம்பு முத்திரை கடுதாசிகள் (Stamps).
6. மாகாணங்களின் ரேட்டுகள்—சுங்கங்கள் (Provincial Rates).
8. விதிக்கப்பட்டிருக்கும் தீர்வைகள் (Assessed Taxes).

16-A. நியாயஸ்தலங்கள் (Courts of Law).

26. ராஜாங்கத்தின் ரயில்வேகள்.

கெவர்னஜெனரல் அவர்கள்.

ராஜாங்கத்தின் வருமானங்கள்.

சிலவு.

எந்தெந்த சர்க்கார் இலாகாக்களின் விஷயமாய் வாதிக்கலாம்.

18. பொதுவாய் பரிபாலன விஷயமாய் (General Administration)

19-A. நியாயஸ்தலங்கள் (Courts of Law).

19-B. ஜெயில்கள் (Jails).

20. போலீஸ் (Police).
21. ரேவுத்துறைகளும், மாலுமிகளுக்குகொடுக்கும்கூலியும் (Ports and Piolotage).
22. வித்யாம்சம் (Education).
24. வயித்திய இலாக்கா (Medical).
26. ரஸவாதம் முதலான சாஸ்திரசம்பந்தமான சில்லரை இலாக்காக்கள் (Scientific and other Minor Departments).
29. ஜீவனும்சத்திற்காக கொடுக்கும் கட்டணங்களும் சில்லரை இலாக்காக்களும்(Superannuation and allowances and Pensions.)
30. காகிதம், பேனா அச்சுமுதலியன (Stationery and Printing.
32. சில்லரை விஷயங்கள் (Miscellaneous).
33. பஞ்சத்தில் காப்பாற்றுவதற்காக சிலவாகும் அம்சம் (Famaine Relief).
36. குறைப்பதும், கடன்வாங்காமல் இருப்பதற்கும் (Reduction or Avoidance of Debts).
40. திரவ்வியசகாயம் செய்யும் கம்பெனிகள் (Subsidized Compaines)
41. சில்லரை ரெயில்வே சிலவுகள் (Miscellaneous Railway Expenses).
42. நீர்ப்பாய்ச்சல் வேலைகளுக்காக உழைப்புக் கூலி (Irrigation Major work working Expenses).
43. சில்லரை வேலைகளும் ஜலத்தின்மேல் செல்லும் ஸ்டீமர்முதலிய இலாக்காக்கள் (Minor works and Navigation).
44. மாகாண வருமானங்களிலிருந்து ரெயில்வே கட்டடங்கள்விஷயமாய் ஆகும் சிலவுகள் (Construction of Railways charged to Provincial revenues).
45. சிவில்வேலைகள். (Civil Works).

எந்தெந்தசர்க்கார் இலாக்காக்களின் விஷயமாய் வாதிக்கலாகாது.

2. கொடுக்கலும் பிரதிபலன்களும் (Assignnents—and Compensations).
13. கடன்மேல் கொடுக்கும் வட்டி (Interest on Debts).
25. ராஜாங்கபரிபாலன விஷயமாய் நேரிடும் சிலவுகள் (Political).
42. பெரும் வேலைகள்; கடன்மீது கொடுக்கும் வட்டி (Major Works Interest on Debt.)

ராஜாங்க விஷயமாய் நேரிடும் எல்லா சிலவுகளும் கவர்ன் கவர்னர் ஜெனரல் அவர்களின் ராஜாங்கவிஷயமாய் நேரிடும் சிலவுகள்மாத்திரம்.

இந்த சீர்திருத்தங்கள் விஷயமாய் இந்திய கவர்னமெண்டார் தங்களுக்கு தெரிவிக்கப்பட்ட யாவற்றையும் நீர்க்க யோசித்து கடைசியாய் தங்களுக்கு உசிதமென தோற்றியதீர்மானங்களை அடியிற் கூறியவாறு சுருக்கிச்சொல்வோம். இதன்படி அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாரின் சட்ட நிரூபண சபைகளில் இதுவரையில் நேமிக்கப்பட்டு தொழில் புரிந்து வந்த மெம்பர்களைவிட அதிக மெம்பர்களை நேமித்து ஒருவருக்கொருவர் தங்களுக்கு தோற்றியதை கலந்துபேசி தீர்க்கயோசனையுடன் ஏற்பாடுகள் செய்துவரும்படிக்கான நிபந்தனைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகள் யாதென்று கவனிக்குமளவில்: பிரதமத்தில், இம்பீரியல் கவர்ன்மெண்டென்று பெயர்வழங்கும் மாட்சிமைதங்கிய கவர்னர் ஜெனரல் அவர்களுடைய சபையில் இதுவரையில் 24 பேர் மெம்பர்களாயிருந்ததை இச்சீர்திருத்தங்களின்படி 62 பேர்களாக அதிகரித்து (2.) அவர்களில் இதுவரையில் 10-பேர் உத்தியோகஸ்த்தர்களாக இருக்கவேண்டுமென்பதை மாற்றி இனிமேல் இதன்படி 31 பேர் உத்தியோகஸ்தர் களாய் இருக்கவேண்டுமென்றும்; (3.) பொறுக்கி எடுக்கப்பட்ட மெம்பர்கள் 5 பேராய் இருந்ததை 28 பேர்களாயிருக்கவேண்டுமென்றும் நிபந்தனைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இனிமேல் ஒரு கவுன்சலிலுள்ள உத்தியோகஸ்தர்களாயிருக்கும் மெம்பர்களில் பெரும்பாலோர் ஒரு விஷயத்தைப்பற்றி ஒரேவிதமாய் அபிப்பிராயப் படுவார்களாயின் அப்படிப்பட்ட சபையோர்களில் உத்தியோகஸ்த்தர்களல்லாத மெம்பர்களில் பெரும்பாலோர் இத்தேசத்தின் பொதுநன்மையை அனுசரித்து செய்த தீர்மானத்தின்படி சட்டதிட்டங்களை ஏற்படுத்தி வரவேண்டுமென்றும் நிபந்தனைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியாகவே அவ்வவ்விடத்திய பிரதேச கவர்ன்மெண்டார்களுடைய சபைகளின் விஷயமாய் நிபந்தனைகள் செய்யப்பட்டிருக்கின்றன, அதாவது:—பிரதிமாகாணத்தின் சட்ட நிரூபணசபையிலும் இதுவரையில், தொழில்பார்த்து வரும்படி ஏற்பட்டிருந்த உத்தியோகஸ்தர்கள், உத்தியோகஸ்தர்களல்லாத மற்ற மெம்பர்களின் தொகையை பர்மா ஒன்று தவிர மற்றய இடங்களில் இருமடங்கு அதிகமாய் செய்யப்பட்டிருக்கின்றன. இது இப்படிக்கிருக்க கவுன்சல்களுக்கு மெம்பர்களை பொறுக்கி எடுப்பதற்காக என்னவிதிகள் செலாவணியாய் கொண்டிருந்தனவோ அவைகளை மாற்றி இப்பொழுது மெம்பர்களை பொறுக்கி நேமிப்பதற்கு ஒவ்வொரு பிரிவாரும், அதாவது, வித்தியாம்ஸத்தைச்சேர்ந்த கூட்டத்தாரும், பூஸ்திகளுள்ளவர்களும், ஜமீன்தார்களும், சாதாரணமாய் உத்தியோகம் செய்து காலம் கழித்துவருபவர்களும், வியாபாரக் கூட்டத்தாரும், அவர்கள் இந்தியராயிருந்தாலும், ஐரோப்பியராயிருந்தாலும் இருவரும் ஒன்றுசேர்ந்து யாதொரு பட்சாதாபமின்றி சமமாய் அவர்கள் தெரிவிக்கும் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளப்படுமென்று நிபந்தனைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

மொத்தத்தில் இச்சீர்திருத்தங்களினால் குடிகளுக்கு என்னபயன் உண்டென்று யூகித்து நோக்குமளவில் இனிகவுன்சலில் நேமிக்கப்படும் கவுன்சலர்களும், செய்யப்படும் நிபந்தனைகளும் பலவர்ணத்தாரடங்கிய பொதுஜன சமூகத்தாரின் தார்ப்பரியத்தின்படி செய்து வரப்படுமென்பதினாலேயே குடிகள் இச்சீர்திருத்தங்களை மிக்கவிசேஷமானவைகளென்று கருதி அனுஷ்டித்து வருவார்களென்பதற்குச் சந்தேகமில்லையென்று திடமாய் கூறலாம். இப்படி செய்வதினால் தற்காலத்தில் இந்தியாவிலுள்ள ... மாத்திரம்தான் திருப்தி அடைவார்களென்பதல்ல இன்னும்இதர இந்துசமூகத்தாருடைய ஆதரவைப் பெற்றுராஜ்ஜியபரிபாலனம் செய்துவரப்படுமென்பதேயாம்.

இந்தசீர்திருத்தங்களின்படி ஒவ்வொரு கவர்ன்மெண்டுக்கு தலைமையாய் உள்ளவருடைய வேலை அதிகரிக்குமென்று காணப்படுகிறது; அப்படிவேலை அதிகரிப்பதினால் என்னென்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமோ அவைகளை இப்பொழுது திடமாய்கூற அசாத்தியமாகையால் இச்சீர்திருத்தங்கள் அமுலுக்கு வந்து அவைகளின்படி வேலைபார்த்து வருகையில் என்னென்னவழுங்கு ஏற்பாடுகள் செய்யவேண்டியது அவசியமென தோன்றுகிறதோ அவ்விதிகளை அப்போதைக்கப்போது செய்து வரப்படுமென்று இந்தியாகவர்ன்மெண்டார் அறிவிக்கிறார்கள்.

The Indian National Congress.

ஹிந்துக்களின் காங்க்ரெஸ் என்னும் மஹாசபை.

மதராஸ்—1908 ஞ டிசம்பர் மீ.

I. நம்மையாளும் மாக்ஷிமைதங்கிய சக்கரவர்த்தி அவர்கள் அனுப்பின செய்தி.

இந்திய சக்கரவர்த்தி ஹிஸ்மெஜெஸ்டி ஏழாவது எட்வர்ட் மஹாராஜாவின் மகுடாபிஷேகத்தைக் கொண்டாடும் பொருட்டு அவர் தமது இந்திய பிரஜைகளுக்குக் கருணைகூர்ந்து அனுப்பின நல்லசேதியைப்பற்றி மேற்படி காங்கிரெஸ் சபையார் தங்களுக்குள்ள ராஜவிஸ்வாசபக்தியை மிக்கவணக்கத்துடன் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் செப்பியிருப்பவைகளெல்லாம் ஏற்கனவே மாட்சிமை பொருந்திய சக்கரவர்த்தி அவர்களால் நிறைவேற்றப்பட்டு வருகின்றனவென்பதைப்பற்றி மிக்கநன்றிவுள்ளவர்களாய்த் தெரிவித்தார்கள். இந்தியா தேசத்து நகரவாசிகள் தங்களுக்குள்ள குறைகளை ராஜாங்கத்தாருக்கு முறையிட்டு அவைகளை சீர்திருத்திக் கொள்ள காலம் வாய்த்ததென்றும் இனி நாளுக்குநாள் இது விர்த்தியாய்க் கொண்டே வருமென்கிற அபேட்சை தங்களுக்குள்ளதாகவும் காண்பித்திருக்கிறார்கள்.

II. லார்ட்மார்லி பிரபு செய்த சீர்திருத்தங்கள்.

லார்ட் மார்லி என்னும் பிரபு அனுப்பிய செய்தியில் அடங்கியிருக்கும் சீர்திருத்தங்களினால் சந்தேகமின்றி இந்த தேசத்திற்கு விசேஷநன்மை உண்டாகுமென்பதைக் குறித்து மிக்க திருப்தியடைந்தவர்களாக தெரிவித்திருக்கிறார்கள். லார்ட் மார்லி, லார்ட்மின்டோ இந்தபிரபுக்கள் அதிகஸ்ரமத்துடன் தீர்க்க யோசனைசெய்து இப்போது செய்ய உத்தேசித்திருக்கும் சீர்திருத்தங்களுக்காக மிக்கவந்தனமளிப்பதாய் கூறியிருக்கிறார்கள்.

இந்த சீர்திருத்தங்களின்படி தற்காலத்திலுள்ள சட்ட நிரூபண சபைகளை விர்த்திசெய்து அவைகளிலுள்ள எக்ஸிகூடிவ் சபையார்களில் இனி இந்துமெம்பர்களை ஹோதாவான பெரிய உத்தியோகங்களில் நேமிக்கலாமென்று அவர்களுக்கு இதுவிஷயமாய் தற்காலத்திலுள்ள அதிகாரத்தை விர்த்தி செய்திருப்பதைப்பற்றியும் இன்னும் இப்படிப்பட்ட சபைகள்இல்லாதஇடங்களில் புதிதாய் இவ்விதமான சபைகள் ஏற்படுத்துவதற்காக அதிகாரம் கொடுத்திருப்பதைப்பற்றியும் இப்படி செய்துவருவதினால் இனி ஹிந்துக்கள் தங்களுக்குள்ள முறைப்பாடுகளை தாங்களே நேரில் சட்டநிரூபண சபைகளில் அறிக்கைசெய்து அவைகளுக்குத்தக்க பரிகாரங்களை அடைவதற்கு இது மிக்கசிரேஷ்டமான ஏற்பாடுகளென்று களிகூர்ந்து மனப்பூர்வமாய் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகையால் இந்த சீர்திருத்தங்களை ஜனங்கள் மிக்கஉல்லாசத்துடன் அனுஷ்டித்து வருவார்களென்பதற்கு ஐயமில்லையென்று திடமாய்க் கூறினர்கள்.

இந்தியாதேசத்தில் இதுவரையில் செய்துக்கொண்டு வந்த கைத்தொழில் வேலைகளை ஜனங்கள் நாளுக்குநாள் விர்த்தி செய்வதற்காக முக்கியமாய் கவனிக்கவேண்டியவைகளை விசேஷ ஸ்ரத்தையுடன் கவனித்து வருகிறார்களென்பதற்கு சந்தேகமில்லையென்றார்கள்.

III. ஜனங்களுக்கு பிரதிதினமும் முக்கியமாய் வேண்டியிருக்கும் பொருள்களின் விலைகள் அதிகமாயிருப்பதைப்பற்றி.

பிரஜைகள் ஜீவத்திருப்பதற்காக அவர்களுக்கு பிரதிதினமும் அவசியமாய்வேண்டிய ஆகாரதானியங்கள் முதலியவைகளின் விலைகள் அநேகவருஷங்களாக நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டுவருவதினால் ஏழைக்குடிகளும், சுமாராய்காலம் கழித்துவருபவர்களும் படும்கஷ்டதுக்கங்கள் இப்படிப்பட்டதென்று இவ்விடத்தில்பூர்த்தியாய் எடுத்துரைக்கவோ இடமில்லை. ஆயினும், ராஜாங்கத்தார் இதைப்பற்றி கருணைபுரிந்து செய்யவேண்டிய விசாரணைகள் யாவும்செய்து பொதுவாய் ஜனங்களுக்கு அநேகவருஷங்களாக இவ்விதமாய் பஞ்சத்தால் நேரிட்டிருக்கும் கஷ்டநஷ்டங்களையும் துன்பங்களையும் நீக்குவதற்கு எப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்தால் நலமென்று அவர்களுக்கு தோற்றுகிறதோ அப்படிப்பட்ட பரிகாரங்களை (கவர்ன்மென்டார்) களிகூர்ந்து செய்யவார்களென்று காங்கிரேஸ் மஹாசபையார் கோருகிறார்கள்.

IV. வித்தியாம்சம்.

அடியிற் செப்பியிருப்பவைகளில் கவர்ன்மென்டார் களிகூர்ந்து உடனே ஏற்பாடுசெய்வார்களென்று காங்கிரேஸ்மஹாசபையார் மனுவுசெய்துக் கொள்ளுகிறார்கள்.

(a) முதல் முதல் பால்லிய வித்தியாப்பியாசம் செய்வதை இனி ஜனங்களிடத்திலிருந்து யாதொன்றும் பெறாமல் தர்மத்திற்கு கற்பித்துவருவார்களென்பதும் அதை அதிசீக்கிரத்தில் ஒவ்வொருவரும் கட்டாயமாய் அனுஷ்டிக்கும்படி செய்யவேண்டியதென்பதும்.

(b) அதற்குமேலுள்ள வித்தியாப்பியாசத்தையும் பெரும்பாலும்எல்லோருக்கும் கற்பித்துவரும்பொருட்டு கவர்ன்மென்டார் இப்போது செய்துவருவதைவிட இனி ஏராளமாய் திரவ்விய சகாயம்செய்துவருவார்களென்பது.

(c) இந்த இந்தியாதேசத்தின் அநேக மாகாணங்களில் தற்காலத்திலுள்ள ஸ்திதியையோசித்து எந்தெந்தமாகாணத்தில் என்னென்ன கைத்தொழில் வேலைகள் முதலியவைகளை ஜனங்களுக்குகற்பிப்பது உசிதமென கவர்ன்மென்டாருக்குத் தோன்றுகிறதோ அப்படிப்பட்ட மாகாணங்களில் கைத்தொழில்வேலைகள் கற்றுக்கொடுப்பதற்காக வேண்டிய ஏற்பாடுகள்செய்வது.

(d) வித்யாப்பியாசத்தின் விஷயமாய் இந்தியர் தேசத்திலுள்ள கற்றுணர்ந்த புத்திமான்கள் பேசுவதற்கு அதிகாரம் அளிப்பது.

முக்கியமாய் மேற்செப்பியவைகளைப்பற்றியும் இன்னும் சில அம்சங்களைப்பற்றியும் டை. காங்கரெஸ் மஹாசபையார் வற்புறுத்திப் பேசியிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரின் ஆட்சியால் விளைந்த நன்மைகளில் சிலவற்றை அடியில் சுருக்கிச்சொல்வோம்.

சட்டநிரூபண சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன, சட்டதிட்டங்கள்ஒழுங்குபடுத்தப்பட்டன. நீதிவிசாரணைகிரமமாய் அமைக்கப்பட்டது. கவர்ன்மென்டாரின் கீழ்கியாய விசாரணை உத்தியோகங்களிலும் நிர்வாக உத்தியோகங்களிலும் உயர்ந்தவைகள் இந்தியர்களுக்குப் படிப்படியாய்க் கொடுக்கப் பட்டுவருகின்றன. அச்சுப்பிரசுரங்களுக்கும் பொதுப்பிரசுரங்களுக்கும் நிர்ப்பந்தங்கள் நீக்கப்பட்டன. ஸ்தலசுயநிர்வாக முறைஸ்தாபிக்கப்பட்டது. பொதுப் பிரயோசனத்துக்குரிய வேலைகளை நடத்தி தேசப்பொருளாதாரங்கள் விருத்தி செய்யப்பட்டன. அறிவும் கல்வியும் பரவும்படி செய்யப்பட்டன. விவசாயவகுப்பாரும் பலவித தொழில்கள் செய்யும் வகுப்பாரும் நல்ல நிலைமைக்குவரும்படி அநேகதிட்டங்கள் செய்யப்பட்டன, மதவிஷயங்களில் ராஜாங்கத்தார் பிரவேசிக்காமலும், ஜனங்களின் பூர்வச்சுதந்தரங்கள், சம்பிரதாயங்கள். பழக்கவழக்கங்கள் மதிக்கப்பட்டுவருகின்றன. கல்வி யபிவிர்த்தி சகாயம் பெறுவதுடன் சுகாதாரநிலை முற்படுத்தப்பட்டும் சாலைகள் போடப்பட்டும் பாலங்கள் கட்டப்பட்டும், இருப்புப்பாதைகள், தந்திப்பாதைகள் இவைகள் போடப்பட்டும் தொழில்களை விருத்தி பண்ணித் தேசத்தின் பொருளாதாரங்கள் விஸ்திரிக்கப்பட்டும் வருகின்றன பிரிட்டிஷ் ராஜாங்கத்தால் நமக்குக்கிடைத்த நன்மைகள் வேறு பல உளவாயினும், மேலேசொன்ன சிலவற்றால், பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் ஐம்பதுவருஷத்தில் நமது ஒழுக்கம், செல்வம், பொதுவாழ்க்கை இவைகளில் அதிக விருத்தியடைந்திருக்கிறோம்.

நமது மாக்ஷிமைபொருந்திய சக்கவர்த்தி அவர்கள் நீடித்தகாலம் ராஜ்யபரிபாலனம் செய்துவர கடவுள் ரக்ஷிப்பாராக.

Hindu Law.

ஹிந்து லா.

Chapter VI—Continued.

6-ம் அத்தியாயம்-தொடர்ச்சி.

ஸமஷ்டி (ஏக) குடும்பங்களும், தாயாதிகளும்.

ஸமஷ்டி குடும்பம் என்றால்:—ஒரே மூதாதையின் பரம்பரையை (வம்சாவழியை)ச்சேர்ந்தவர்கள் குடும்பசொத்தை பாகித்துக்கொள்ளாமல் அவிபக்த குடும்பமாகவே ஒன்றுசேர்ந்து ஜீவித்துவருபவர்களென்று அர்த்தமாகும். அக்குடும்பத்திலுள்ள ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் கலந்து ஒன்றாய்வாழும் குடும்பம் என்றும் சொல்லலாம். அந்த குடும்பத்திலுள்ள சிலர்மாத்திரம் குடும்பசொத்தை பிரிவினைசெய்து தங்கள் பாகத்தை கொடுக்கும்படி கேட்கவும்; மற்றவர்கள் ஜீவனும்சம் மாத்திரம்கேட்கவும் ஹக்குள்ளவர்களாவார்கள்.

விவாஹமாகிய பெண்கள் அப்படிப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களாய் பாவிக்காமல் மணம்புரியாத பெண்கள்மாத்திரம் அந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களாய் எண்ணப்படுவார்கள்.

தாயாதிகள் உடன்சுதந்தரத்வமுள்ளவர்களின் குடும்பம் என்றால்:—ஒரே மூதாதையின் வம்சாவழியைச் சேர்ந்த குடும்பத்தின் பலகுமாரர்களுடைய வம்சங்களில் அவதரித்து அந்த குடும்பசொத்தை தாங்களெல்லோரும் பொதுவாய் அனுபவித்து வருவதற்கும், அச்சொத்தின்பேரில் கடன்வாங்குவதற்கும் அல்லது குடும்பத்தைச்சேர்ந்த மற்றதாயாதிகள் குடும்பசொத்தின்பேரில் பெருங்கடன்களை வாங்கி சுமத்தாமற்படி

கண்டித்து வருவதற்கும் அல்லது தங்களிஷ்டப்படிசொத்தைப் பாகித்து தங்களுடைய பங்கை தங்கள் வசப்படுத்தும்படி கேட்பதற்கும் ஹக்குள்ளவர்களென்றும் சொல்லலாம். ஒரு மூதாதை இறந்துபோய் அவருடைய உத்திரகிரியையில் பிண்டம்போடுவதற்கு ஹக்குள்ளவர்களெல்லோரும் தாயாதிகுடும்பத்தைச் சேர்ந்தவர்களென்றும் சொல்லலாம். அதாவது, ஒரு குடும்பத்திலுள்ள மூதாதையும், அவருடைய குமாரர்களும், அந்த குமாரர்களின் பரம்பரையில் அவதரிக்கும் பௌத்திரர்களும், அப்பௌத்திரர்களின் குமாரர்களும் எல்லோரும் ஒன்றுசேர்ந்து வசிக்கும் குடும்பத்திற்கு தாயாதிகுடும்பம் என்று சொல்லலாம். ஆனால் மூலபுருஷன் ஜீவந்தராயிருக்கையில் பௌத்திரர்களுடைய குமாரர்கள்தாயாதி குடும்பத்தைச்சேர்ந்தவர்களாகார்கள்.

மிதாக்ஷரா சட்டத்தின்படி:—ஒரு ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த தாயாதிகள் தாங்கள் வசிப்பதற்கு தங்களுக்கு வீடும், ஜீவனும்சமும் கொடுத்துவரும்படி கேட்கவும் இன்னும் அந்த குடும்பத்தின் மானேஜரா யிருக்கப்பட்டவன் குடும்பகாரியத்திற்கல்லாமல் தன்னுடைய சொந்த பிரயோஜனத்திற்காக குடும்பசொத்தின்பேரில் கடன் வாங்கினால் அது செல்லாதென்று அதை ரத்துசெய்யும்படி கேட்கவும், தங்களிஷ்டப்படி பாகம் பிறித்துக்கொடுக்கும்படி கேட்கவும், குடும்பத்தை பரிபாலித்து வந்ததின் விஷயமாய் சரியாய் நடத்திவரப்பட்டதா இல்லையா என்பதற்கு கணக்கு ஒப்புவிக்கும்படி கேட்கவும் ஹக்குள்ளவர்களாவார்கள்.

(தாமோதரதாஸ் மணிக்கல், vs. உத்தம்ராம் மணிக்கல், இ. லா. ரி. 17 பம் 271.)

ஒரு குடும்பசொத்தைப் பாகித்துக் கொடுக்கிறவரையில் அந்தக்குடும்பத்தைச்சேர்ந்த தாயாதிகளில் எவனாவது தனக்கு அந்த சொத்தில் குறிப்பிட்ட ஒரு பாகம் சொந்தமென்று சொல்வதற்கு நியாயமில்லை ஆகையால் அந்த சொத்தில் எந்த பாகத்திற்கும் ஒவ்வொரு தாயதிக்கும் சுதந்தரமுண்டு. ஒரு தாயாதி தனக்குப் பின்சந்ததி இல்லாமல் காலமாய்விட்டால் அவனுடைய குடும்பசொத்து தன்னுடைய பெண்சாதியைச் சேராமல் ஜீவித்திருக்கும் இதர தாயாதிகளுக்குப் பொதுவான சொத்தாய்விடும். இவ்விதமாய் ஒரு தாயாதி இறந்துவிட்டால் மிகுதி நிற்கும் தாயாதிகளின் பாகம் அதிகரிக்கும், அல்லது ஒரு குடும்பத்தில் தாயாதி ஒருவன் நூதனமாய்ப் பிறப்பானாகில் அப்பொழுதுள்ள மற்ற தாயாதிகளின் பாகம் குறையும்.

ஆனால் குடும்பசொத்தை பாகித்துக் கொடுக்கும்படி கேட்காமல் குடும்பத்தை பரிபாலித்து வந்ததின் விஷயமாயுள்ள கணக்கைமாத்திரம் மானேஜரை கேட்க ஹக்குண்டா இல்லையா என்பதைப்பற்றி சட்டத்தில் நிஷ்கரிஷையாய் ஏற்பட்டிருக்கவில்லை. ஒரு தாயாதி குடும்பசொத்தை மற்ற தாயாதிகளுடன் சேர்ந்து அனுபவிக்காமல் வேறே தனியாயிருக்கும் பட்சத்தில் அவன் அல்லது குடும்பத்தில் மைனராயிருக்கும் தாயாதி எவனாவது குடும்பகணக்கு ஒப்புவிக்கும்படி கேட்க ஹக்குள்ளவனாவான்.

ஆதியில் குடும்பசொத்தை பிரிவினை செய்யும்படிக்கு வியாஜ்ஜியம் செய்யும்பொழுதுதான் குடும்பத்தின் மானேஜர் செய்த சிலவுக்கு கணக்கு கொடுக்கும் படி கேட்கலாமென்றும், பாகம் பிறிவினை செய்துகொள்வதற்கு முன் குடும்பசொத்தை பாகித்துக்கொள்வது அவசியமா இல்லையா என்று நிட்சயிப்பதற்காக கணக்கு கேட்கலாமென்றும் இந்த இரண்டு விஷயங்களில் தவிர மற்றெந்த சந்தர்ப்பங்களிலும் மானேஜரை குடும்பகணக்கை ஆஜர்செய்யும்படி கேட்க ஹக்கு கிடையாதென்றும் தீர்ப்பாயிருக்கிறது (6. மூ. இ. அ. 540, 3. க. ஹை. ரி. 1, 9வ 483).

ஆயினும் சொற்பகாலத்திற்கு முன்கல்கத்தா ஹைகோர்ட்டார் புல் பெஞ்சில் இந்த தீர்மானங்களை ரத்துசெய்துவிட்டு குடும்பத்தைச்சேர்ந்த எந்த பாகஸ்தனாவது பாகப் பிறிவினைக்காக தாவாசெய்யாமலே அந்த குடும்ப பொதுசொத்தின் கணக்கை கொடுக்கும்படி எப்பொழுதும் மானேஜரைக் கேட்க அந்தமானேஜர் கணக்கை ஆஜர்படுத்தப் பந்தப்பட்டவனாகிறான் என்று தீர்மானம் செய்திருக்கிறார்கள்.(5க.ஹை.ரி. 354)

ஒரு ஸமஷ்ட்டி குடும்பத்தின் சொத்தைப்பற்றி யாவது அல்லது அக்குடும்பத்திற்கு வசூலாகவேண்டிய தொகையைப் பற்றியாவது தாவாசெய்தால் அந்த தாவாவில் குடும்பத்திலுள்ள எல்லா பாகஸ்தர்களும் வாதிகளாக சேர்ந்திருக்கவேண்டியது அல்லது பிரதிவாதிகளாகவாவது சேர்க்கப்பட்டிருக்கவேண்டியது அவசியம் அப்படி அவர்களை கக்ஷிதாரர்களாக சேர்க்காமல் தாவாசெய்தால் அந்த தாவா சட்டப்படி செல்லாது. (இ. லா. ரி. 8 கல் 353; 12 கல். ஹைரி 291; 4 கல் 96; 5 கல் 941; 3 பம் 23; 7 கல் 470; 7 அ. ஹை. ரி. 58; 1 கல் 226; 11 பம் ஹை. ரி. 69; 9 சென் 90; 12 பம், ஹை. ரி. 85; 11 கல் 338 615; 17 கல் 160; 7 பம் 217; 3 சென் 234). ஒரு ஹிந்து குடும்பத்தின் வம்சாவழியும் அதன் விவரணமும்



இந்த குடும்பத்தில் ஏ என்பவன் ஜீவந்தனாயிருக்கையில் பிதிரார்ஜிதசொத்தில் தனக்கு ஒருபாகம் கொடுக்கவேண்டுமென்று கேட்க பி, சி, டி என்பவர்கள் ஒவ்வொருவருக்கும் பாத்தியம் உண்டு. அவர்கள் மூவரும் குடும்பசொத்தை மூன்று பாகமாகப்பிறித்து தலைக்கொருபங்காய் எடுத்துக்கொள்ளலாம். சி என்பவன் பாகத்தில் இ,எப் என்பவர்கள் இரண்டுபேரும் சமபாகத்திற்கு ஹக்குதாரர்களாகிறார்கள். டி என்பவருடைய பாகத்தில் அவருடைய சந்ததியார்கள் பாத்தியஸ்தர்களாகிறார்கள்.

ஏ, என்பவனுடைய ஜீவகாலத்தில் சி. டி. என்பவர்கள் காலமாய்விட்டால் பி-யாவது இ, எப், ஜி இவர்களில் எவனாவது பிதரார்ஜிதசொத்தில் பாகம் கேட்கலாம். அப்பொழுது சொத்தை நான்குபாகமாகப் பிறித்து ஏ, பி, என்பவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒருபாகமும், இ, எப், என்பவர்கள் இருவருக்கும் ஒன்றுசேர்ந்து அவர்களுடைய தகப்பனாகிய சி. என்பவனுடைய பாகமும் ஜி, என்பவனுக்கு ஒரு பாகமுமாய் பிறித்துக்கொள்ளவேண்டும்.

ஆனால் இவர்களில் ஏ, பி, எச், ஜெ என்பவர்கள் மாத்திரம் ஜீவந்தராயிருந்து மற்றவர்கள் எல்லோரும் காலமாய்விட்டால் ஏ,பி, எச் இவர்கள்மாத்திரம் பிதரார்ஜிதசொத்தில் பாகஸ்தர்களாவார்கள்.

ஏனென்றால், ஏ. என்னும் மூலபுருஷனுக்கு கீழ்மூன்று தலைமுறை தாண்டினவனாகையால் ஜெ. என்பவன் பாத்தியஸ்தனாகமாட்டான். பிறகு ஏ. என்பவன் இறந்துவிட்டாலும் பிதரார்ஜித சொத்து முழுவதும் பி. எச். இவர்களுக்குச் சேருமேயொழிந்து ஜெ. என்பவனுக்குச் சேராது.

பிதரார்ஜிதம்:—ஒருவனுடைய தகப்பன், அவனுடைய தகப்பன் (பாட்டன்) அந்த பாட்டனுடைய தகப்பன் இவர்களுடைய வார்சுகளென்றாவது, அவர்கள் எழுதிவைத்த உயில் சாசனத்தின் மூலமாயாவது அல்லது இவர்களிடமிருந்து தானமாயாவது பெற்ற சொத்து பிதரார்ஜிதமென்று சொல்

லப்படும். இப்படிப்பட்ட சொத்தில் தான் மிதாக்ஷர சட்டத்தின் பிரகாரம் மூன்று தலைமுறைவரைக்கும் உள்ள புத்திர சந்ததிகளுக்கு பாகம் கேட்க நியாயமுண்டு.

சுயார்ஜிதம்:—பிதரார்ஜித சொத்தையாவது குடும்ப சொத்தில் எதையாவது உபயோகப்படுத்தாமல் ஒருவன் தன்னுடைய சுயவல்லமையால் சேகரிக்கப்பட்ட சொத்தும், தாயர், தாயின் தாய், தாயின் தகப்பன், அண்ணன், தம்பி சிறியதகப்பன், பெரியதகப்பன், இவர்களுடைய பிள்ளைகள் முதலானவர்களிடமிருந்து கிடைக்கும் சொத்து சுயார்ஜிதம் என்று சொல்லப்படும். இப்படிப்பட்ட சொத்தில் புத்திரசந்ததி யாருக்கும் எவ்விதமான பாத்தியதையும் கிடையாது. (இ. லா. ரி. 12 பம்-33; 8 கல் 131; 17 கல் 38, 9 பம்-145).

ஹிந்து ஒருவனுடைய தகப்பன் சுயார்ஜிதமாய் சம்பாதித்த சொத்து அவனுடைய பிள்ளைகளுக்கு பிதரரர்ஜித சொத்தாகிவிடுகிறதாகையால் அவர்கள் எல்லோரும் அந்த சொத்தில் தக்களுக்கு பாத்தியமுண்டென்று சொல்வதற்கு நியாயமுண்டு. அப்படி அந்த சொத்து பிள்ளைகளைச் சேருவதற்கு முன் அந்த பிள்ளைகளில் எவனுவது ஒருவன் இறந்துவிட்டால் பிறகு அவனுடைய பெண்சாதிக்காவது அவனுடைய பிள்ளைகளுக்காகவது பாத்தியமுண்டாகமாட்டாது.

எ. என்பவனுக்கு சுயார்ஜித சொத்து ஏராளமாயிருந்தது. அவனுக்கு இரண்டு குமாரர்களுமிருந்தார்கள். எ. என்பவன் ஜீவந்தனு யிருக்கையிலேயே அவனுடைய குமார்கள் இருவரில் ஒருவன் காலமாய் விட்டான் தகப்பன் ஜீவந்தனுயிருக்கும்பொழுதே ஒருவன் இறந்துவிட்டமையால் அந்த சுயார்ஜிதசொத்து முழுவதும் இன்னொருவனுக்குச் சேர்ந்தது.பிறகு காலமாய் விட்டவனுடைய பெண்சாதி விதவையானவள் தன்னுடைய கொழுணன் (மைத்துனன்) பேரில் தனக்குஜீவனும்சம் கொடுக்கும்படிக்கு தாவாசெய்தாள். இந்த கேசில் தகப்பன் சுயார்ஜிதமாய் சம்பாதித்து பிதரார்ஜிதமாவதற்குமுன் அவளுடைய புருஷன் காலமாய்விட்டானென்னும் காரணத்தால் அந்த விதவைக்கு யாதொரு பாத்தியதையும் கிடையாதென்று தீர்ப்பாயிருக்கிறது (இ. லா. ரி. 11-அ. 194).

ஹிந்து ஒருவன் தான் சம்பாதித்த சொத்தை தன்னிஷ்டப்பிரகாரம் தன்னுடைய பிள்ளைகளுக்குத் தானமாக கொடுத்துவிட்டான். அப்படி அவன் சொத்தைப்பிறித்து தானமாய்க் கொடுத்தாலும் அந்த பிள்ளைக்குக் கிடைத்த பாகம் பிதரார்ஜிதமாகவே எண்ணப்பட்டு அவர்களுடைய சந்ததியாருக்கும் அதில் ஹக்குண்டென்று தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. (6. லா. ரி. 71.—73.)

இம்மாதிரியாகவே தகப்பன் தன்னுடைய சுயார்ஜித சொத்தை உயில் மூலமாய் தன் பிள்ளைகளுக்கு வைத்துவிட்டுப்போனலும்அந்த சொத்தும் பிதரார்ஜிதமாகவே பாவிக்கப்படும். (இ. லா. ரி. 12 பம்-133; 3 சென். ஹை. ரி. 50 to 55). ஆனல் அந்த தகப்பன் உயிலெழுதிவைக்கையில் தன் பிள்ளைகள் தன்னுடைய சுயர்ர்ஜித சொத்தை சர்வசுதந்தரத்துடன் சுயார்ஜிதமாகவே ஆண்டு அனுபவிக்க வேண்டியதென்கிற எண்ணத்துடன் எழுதியிருப்பானுகில் அப்படி உயில் மூலமாய் கொடுக்கப்பட்ட சொத்து அந்த பிள்ளைகளுடைய சுயார்ஜித சொத்தென்றே தீர்மானமாயிருக்கிறது. (இ. லா. ரி. 11பம். 558).

ஒருவனுக்கு தன்னுடைய குடும்பபாகத்தில் கொஞ்சம் பிதரார்ஜித சொத்து கிடைத்தது. ஆனல் அது பாகிக்கும் காலத்தில் அதனுடைய பொருமானத்திற்கதிகமாகவே கொதுவை வைக்கப்பட்டிருந்தது. பிறகு அந்த சொத்தை பாகப்பிறிவினைகாலத்தில்தன் வசப்படுத்திக்கொண்டவன்தான் சுயார்ஜிதமாய் சம்பாதித்த பொருளைக்கொண்டு அடமானத்திலிருந்து மீட்டிருந்தாலும் அது பிதரார்ஜித சொத்தாகவே பாவிக்கப்பட்டுஅதில் அவனுடைய பிள்ளைகள் யாவருக்கும் பாத்தியம் உண்டென்று தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. (5 சென். ஹைரி. 150.)

பிதரரர்ஜித சொத்தின் சகாயத்தினுல் கல்விமுதலான விஷயத்தில் விருத்தி யடைந்திருந்தாலும் அல்லது பிரார்ஜித சொத்தினுலுண்டாகிய வட்டி முதலான வருமானம் அல்லது பிதரார்ஜித சொத்தின் மூலமாய் வியாபாரம் முதலானது செய்து சம்பாதிக்கப்பட்டலாபம் இவைகள் யாவற்றும் பிதரார்ஜித சொத்தாகவே பாவிக்கப்படும் (இ. லா- ரி- 11 சென். 146; 7 அ 402; 8 சென். ஹை. ரி.25; 8 க-ல் 131;3கல் 509.

பாகிக்கக்கூடாத ஒருஜமீன் மிதாக்ஷரசட்டத்தின்படி குடும்பத்திற்கு பொது சொத்தாகவே இருந்து வருகின்றது. அந்த குடும்பத்திலுள்ள ஜேஷ்டன் மாத்திரம் ஜமீன் ராஜ்ஜியத்தை பரிபாலனம் செய்துவர பாத்தியமுள்ளவன் அக்குடும்பத்தைச்சேர்ந்த மற்றவர்கள் ஜீவனும்சத்துக்கு ஹக்குள்ளவர்கள்ஜமீன்தாரரர்ய் ராஜ்யாதிகாரதிதைச் செலுத்துவோர் ஆண் சந்ததியில்லாமல் இறந்துவிட்டால் அந்த ஜமீன் ராஜ்ஜியம் அவருடைய பெண்சாதியைச் சேராமல் குடும்பதத்திலுள்ள அவருடைய சகோதரர்களில் மூத்தவரா யிருக்கப்பட்டவர் அந்த ஜமீன் ராஜ்ஜியாதிகாரத்தைச் செலுத்த வேண்டியவராவார்(9 மூ. இ. அ. 539, 589, 610; 13 மூ. இ. அ. 333,336).

மூத்தவர் ஜமீன் ராஜஜியபரிபாலனம் செய்துவருகையில் அந்த ஜமீன்சொத்தினுல் வரும் வருமானத்திலிருந்து சொற்ப திரவியம் சேர்ந்தால் அது அவருடைய சுயார்ஜித சொத்தாக எண்ணப்படுமாகையால் அவர் ஆண் சந்ததியின்றி காலமாய் விட்டால் அந்த திரவியமும் அந்த பொருளைக்கொணடு சம்பாதித்த சொத்தும் அவருடைய பெண்சாதிக்கு சேருமேயல்லாமல் அவருடைய தம்பிகளுக்குச் சேராது. (5 ம. 31, 41; 12 மூ. இ. அ. 540).

பாளயத்தார் ஒருவர் இறந்துபோகும்பொழுது பாளையத்தின்மீது சில கடன்களையும் அந்த பாளயத்தின் வருமானத்தைக்கொண்டு சில சொத்துகள் சம்பாதித்து அவைகளையும் வைத்துவிட்டு காலமாய்விட்டார். அந்த பாளயத்தின்மேல் அவர் வைத்துவிட்டுப்போன கடன்களுக்காக அவர் ஜமீன் வருமானத்தினுல் சம்பாதித்த அவருடைய சுயார்ஜித சொத்தை பொருப்பாக ஜப்திசெய்யலாகாது. (இ. லா. ரி. 3 சென்னை 145).

ஆனல் ஒரு ஜமீன்தார் ஜமீன் வருமானத்திலிருந்து பொருள்சேர்த்து யாதேனும் ஒரு சொத்து சம்பாதித்திருந்து அந்தசொத்து அவருக்குப்பின் ராஜ்ஜியபரிபாலனம் செய்ய வரும் ஜமீன்தாரருக்குச் சேர்த்துவிட்டால் அப்பொழுதுஅந்த சொத்து குடும்பத்திற்கு பொதுசொத்தாகவே பாவிக்கப்படும்.

ஒரு ஸமஷ்ட்டி குடும்பத்திலுள்ள பாகஸ்தர்களில் ஒருவன்தான் தன்னுடைய சாமார்த்தியத்தினுல் சம்பாதித்த சுயார்ஜிதசொத்தை குடும்ப பொதுசொத்தோடு சேர்த்துவிடும்படி உத்தரவு செய்திருந்தால் அந்தசொத்து பிதரார்ஜிதமென்றே சொல்லப்படும். (இ. லா. ரி. 15 பம் 509; 16 க 397; 18 க 341; 10 மூ, இ. அ. 506; இ. லா. ரி. 10 கல் 392; 7 சென் 458).

எப்படிப்பட்டசொத்தை பிதரார்ஜிதம் அல்லது சுயார்ஜிதம் என்று சொல்வதென்பதைப்பற்றி தர்மசாஸ்திரங்களில் சொல்லியிருப்பவை யாதெனில்.

யாக்கியவல்க்கியா:—மூதாதையின் பொருளுக்கு கிஞ்சித்தேனும் நஷ்டம்வரவொட்டாமல் ஒரு பாகஸ்த்தன் தன்னுடைய சுயவல்லமையால் சம்பாதித்த சொத்துகள் அதாவது அவனுடைய விவாககாலத்தில் தன்னுடைய மாமனர், மாமியார், சிநேகிதர்கள் கொடுத்த பரிசுகள் இப்படிப்பட்ட சொத்துகளுக்கும் மற்ற பாகஸ்தருக்கும் யாதொரு ஹக்கு பாத்தியதை கிடையாது. குடும்பத்தைவிட்டு விலகிப்போன சொத்தை ஒரு பாகஸ்தன் மீண்டும் சம்பாரிப்பானுகில் அந்தசொத்தில் மற்ற பாகஸ்தர்களுக்கு யாதொரு பாத்தியதையும் கிடையாது.

PART II.

Important Rulings.

முக்கியமான தீர்ப்புகள்.

சி. பு. கோட் 2, 562, 588 பிரிவுகள்:—

A என்பவன் B என்பவன்பேரில் டி. மு. கோர்ட்டில் தாவாசெய்தான். முனிசீபு அந்ததாவாவில் ஒன்றுக்கொன்று சம்மந்தமில்லாத பிரார்த்தனைகள் சேர்த்துக் கேட்கப்பட்டிருக்கின்றதென்று தாவாவைப் பிடியாமல் தள்ளுபடி செய்துவிட்டார், முனிசீபுசெய்த உத்தரவின்பேரில் வாதி அப்பீல்செய்தான். ஜில்லா கோர்ட்டார் கீழ் கோர்ட்டார்செய்த உத்தரவு தப்பென்றும் ஒரேதாவாவில் வாதி இரண்டுபிரார்த்தனைகளும் கேட்கத்தகுமென்று கண்டு அந்ததாவாவை மறுபடியும் பூர்த்தியாய் விசாரணை செயயும்படி உத்தரவு செய்தார். அந்த உத்தரவின்பேரில் பிரதிவாதி அப்பீல் செய்தான். ஹைகோர்ட்டார் தீர்மானம்:—முனிசீபு தாவாவைப்பிடியாமல் தள்ளிவிட்ட உத்தரவு டிக்ரி ஆகையால் அவ்வுத்தரவின்பேரில் அப்பீல் செய்ய ஹக்குண்டென்றும் ஆனல் ஜில்லாகோர்ட்டார் தாவாவை ஏற்றுக்கொண்டு மறுபடியும் பூராய் விசாரணை செய்யும்படி செய்தஉத்தரவு டிக்ரி ஆகாதாகையாலும் அந்த உத்தரவுபடி ஷகோடின் 562-வது பிரிவின்கீழ் செய்த உத்தரவாகாதாகையாலும் ஜில்லாகோர்ட்டு உத்தரவின்மேல் அப்பீல்செய்ய ஹக்கு கிடையாதென்று தீர்ப்பு சொன்னர்கள் (பிரஜவால் மித்ரா vs உபேந்த்ரகிருஷ்ண 6 க-லா-ஜ214.)

சி. பு. கோ. 103, 310, 588(8), 647 பிரிவுகள்:—

ஒருவன் தனக்கு பிரதிவாதியினிடமிருந்து ரூபா 100, பத்திரத்தின்மேல் வசூலாக வேண்டுமென்று தாவாசெய்தான். அந்த வியாஜ்ஜியத்தை விசாரணைக்கு குறித்திருந்ததினத்தில் இருகக்ஷிதாரரும், அதாவது, வாதியும் பிரதிவாதியும் ஆஜராகவில்லை. ஆகையால் கோர்ட்டார் இருதரத்தாரும் பெயர் கூப்பிடுகையில் வரவில்லையென்கிற காரணத்தைக்கண்டு தாவாவை ஷை கோடின் 103-வது பிரிவின்படி தள்ளிவிட்டார்கள். அப்படி தள்ளுபடிசெய்த உத்தரவின்பேரில் மேல்கோர்டாருக்கு அப்பீல் கிடையாது. (இ. லா. ரி. 29 அ 596).

சி. பு. கோட். 244, 310 A. பிரிவுகள்.

ஏ என்பவன் பி என்பவன்பேரில் டிக்ரிஅடைந்து அந்த டிக்ரியை நிறைவேற்றுவதற்கு பி என்பவனுடைய சொத்தை கோர்ட்டு மூலமாய் ஏலத்தில் விற்பனை செய்துவிட்டார்கள். கோர்ட்டு ஏலத்தில் சொத்தை வாங்கினவன் ஷை கோடின் 310 A பிரிவின்படி ஏலவிற்பனையை ரத்துசெய்யும்படி கேட்டுக்கொண்ட நடவடிக்கைகளில் ஏலத்தில் சொத்தை கிரயத்திற்கு பெற்றவன்யாதேனும் ஒரு மனுசெய்துக்கொண்டு அந்த மனுவை கோர்ட்டார் தள்ளுபடி செய்துவிட்டால் அப்படி தள்ளுபடிசெய்த உத்தரவை டிக்ரியை நிறைவேற்றுவதற்காக செய்துகொள்ளும் மனுவின்பேரில் செய்த உத்தரவாகக்கொண்டு, கோர்ட்டு ஏலத்தில் சொத்தை கிரயம்பெற்றவன் டிக்ரி கடன்தாரனுடைய வார்சாக பாவிக்கப்படுவோன். (17 ம. லா. ஜ. 291).

சிவில் புரோசிஜர் கோடின்படி ஒரு தலைபட்சமாய் (அதாவது விசாரணை தேதியில் வாதிமாத்திரம் கோட்டில் ஆஜராகி-பிரதிவாதி ஆஜராகாமல்) செய்தடிக்ரியாயிருந்தால் அந்தடிக்ரி கேசின்சாரம்சத்தின்மேலாவது அல்லது தகுந்தகாரணமின்றி ஆஜராகத்தவறிப்போகவில்லை யென்னும் காரணத்தின்பேரிலாவதுசெய்யப்பட்டிருக்கும் டிக்ரியின்பேரில் அப்பீல் செய்துக்கொள்ள ஹக்குண்டு (சாது கிருஷ்ணஅய்யர், vs. குப்பனஅய்யங்கார், 16 ம. லா. ஜ. 479; இ. லா. ரி. 30 சென் 54-புல்பெஞ்சு தீர்மானம்).

கார்டியன் வார்ட்ஸ் ஆக்டு 41-வது செக்ஷன் C உட்பிரிவின்படி ஒருகார்டியன் மைனர்பிள்ளையின் திரவியத்தைக்கொண்டு அந்தமைனர் வயதடைந்தபிறகு அவனுடைய சகோதரிக்கு விவாகசெலவுசெய்யும்படி தனக்குஉத்தரவு அளிக்கும்படியாய் செய்துக்கொண்ட மனுவின்பேரில் கோர்ட்டார்செய்த உத்தரவிற்குவிரோதமாய் அப்பீல்செய்ய நியாயமில்லை. ஆனல் சிவில் புரோஜீர்கோட் 622-வது பிரிவின்படி அந்த உத்தரவின்பேரில் ரிவிஷன் மனுகொடுக்கலாம் (சீதாராமா vs. பலராமா, 17, ம. லா. ஜ. 199).

ஏ என்பவனை ஒரு எஸ்டேட்டைக்குறித்த வியாஜ்ஜியத்தில் ரிஸீவராய் ஏற்படுத்தியிருந்தது. அவர் அந்த எஸ்டேட்டைப்பற்றியவியாஜ்ஜியம்கோர்ட்டில் தள்ளுபடியாய் விட்டபிறகு சில எஸ்டேட் சொத்தைவிற்ருர். அவர் அப்படி விற்பதற்கு அதிகாரமுண்டென்று கோர்ட்டார்செய்த உத்தரவின்பேரில் அப்பீல்செய்துக்கொள்ளலாம்.(இ. லா. ரி. 34 கல் 336 முக்கியமாய்339–வதுபக்கம் பார்க்கவும்).

அப்பீல் கோர்ட்டார் ஒருகிருமினல் வியாஜ்ஜியத்தில் செய்யும் தீர்ப்பில் என்னென்ன அடங்கியிருக்கவேண்டியதென்பது அநேகர் ஒன்றுகூடி குற்றம்செய்தார்களென்று பலஎதிரிகளின்மீது கொண்டுவரப்பட்ட பிரியாதில்எல்லா எதிரிகளையும் ஒன்றுசேர்த்து விசாரணைசெய்து சிட்சைசெய்ததீர்ப்பன்பேரில் அப்பீல் செய்திருந்தால் அந்த அப்பீலில் எழுதும் தீர்ப்பில் (Judgment) ஒவ்வொரு எதிரியின் வாதத்தையும் மிக்ககவனித்து கோர்ட்டாரால் தீர்க்கயோசனையுடன் செய்யப்பட்டதென்றும் அந்த தீர்மானத்திற்குள்ள காரணங்களை ஒவ்வொரு எதிரி விஷயமாயும் கண்டெழுதி ஜட்ஜ்மெண்டை பார்க்கும்பொழுதே பிரத்தியக்ஷமாய் புலப்படவேண்டியது. அப்பீல் கோர்ட்டார் செய்யும்தீர்ப்பானது முதல்கோர்ட்டாரின் (கீழ் கோர்ட்டார்) தீர்ப்பை எவ்விஷயத்திலும் அனுசரியாமல் தனியாய் பிரத்தியேகமாய் செய்யப்பட்டதா யிருக்கவேணடும்.

(ஜெமெயில்மலீக், vs. எம்பெரர் (சக்கரவர்த்தி) 12 கல். வீ. நோ 134).

அப்பீல்கோர்ட்டார் செய்யும் டிக்ரியை எழுதுவதில் முக்கியமாய் கோர்ட்டாரவர்கள் என்னகவனிக்கவேண்டுமென்பது:-

அப்பீல்கோர்ட்டார் கீழ்கோர்ட்டு தீர்மானத்தைக் காயப்படுத்துகையில் முன்கீழ் கோர்ட்டில் செய்த டிக்ரியின்படி அதை நிறைவேற்றுவதற்கு கண்டிருக்கும் காலநிர்ணயத்தை அப்பீல் கோர்ட்டார் அதிகப்படுத்தினுல் அப்படி காலம் அதி

கப்படுத்தப்பட்டதென்பதற்கு யாதொரு சந்தேகத்திற் கிடம் கொடாமல் அப்பீல் டிக்ரியில்ஸ்பஷ்டமாய் கண்டெழுதவேண்டிய தென்பதுகோர்ட்டாரின் கடமையாகும் (ராமசாமிகோன் Vs சுந்தரகோன் ; (17 ம. லா. ஜ 495).

அப்பீல் கோர்ட்டார் கீழ்கோர்ட்டார்செய்த தீர்ப்பு சரியா அல்லவா என்று யோசிக்கையில் கீழ்கோர்ட்டார் தீர்ப்பு செய்யுங்காலத்தில் என்னென்ன சந்தர்ப்பங்களின்பேரில் தீர்ப்பு செய்தார்களோ அவைகளையே கவனிக்கவேண்டுமே யொழிய அந்த தீர்மானத்திற்குப்பின் புதிதாய் நேரிட்டவைகளை கவனிக்கலாகாது; ஆனால் அப்படி புதிதாய் நேரிடும் சந்தர்ப்பங்களை கவனிக்கும் விஷயத்தில் வியாஜ்ஜியம் சுருக்கமாய் முடிந்து நியாயத்திற்கு யாதொரு பழுதின் றிருக்குமென்று கோர்ட்டாருக்குத் தோற்றுமாகில் முன் கொண்டுவந்த தாவாவின் விர்த்தாந்தங்களுக்கு வேறுபடாமல் அந்த தாவாவை திருத்திக் கொள்ளும்படி வாதிக்கு உத்தரவுகொடுக்கலாம் (ராம்ரதன் ஸாஹு V. பிஷம்சண்ட் 11, கல். வீ. நோ 732 ; 6 கல் லா. ஜ. 74).

ஒரு கக்ஷிதாரன் அப்பீல்செய்வதினால் பலன் யாதென்று நோக்குமளவில் கீழ்கோர்ட்டார்கள் செய்திருக்கும் டிக்ரீகள் சரியாய் நியாயப்பிரகாரம் செய்யப்பட்டிருக்கின்றனவா அல்லவா என்று மறுபடியும் பரிசீலனை செய்வதற்கே: ஆகையால் அப்பீல்வாதிதான் கொடுத்த அப்பீலில் கண்டிராத பாயிண்டுகளின்மீது புது இஷ்யூக்கள் ஏற்படுத்தி அவைகளை ரிமாண்டில் மறுவிசாரணை செய்யும்படிக்கு இரு கக்ஷிதாரரும் (வாதி பிரதிவாதி உபயத்திராளும்) ஒப்புக்கொள்ளலாம் (நடேசகிராமணி Vs. வெங்கடராமரெட்டி. 17. ம. லா. ஜ. 518).

அவார்ட் (Award) பஞ்சாயத்தாரின் தீர்மானம்.—சப்கோர்ட்டார் ஓர் உத்தரவுசெய்திருந்து அந்த உத்தரவின்பேரில் அப்பீல் செய்யப்பட்டிருந்தால் அப்படி அப்பீல் செய்த பிறகு அந்த உத்தரவுக்குப்பின் யாதோ ஒரு சந்தர்ப்பம் நேரிட்டதென்று சொல்லும்பட்சத்தில் அதைப்பற்றி விசாரிக்க கோர்டாருக்கு அதிகாரமுண்டு ஒருதலைபட்சமாய் செய்யப்பட்ட டிக்ரி (Exparte decree) யை நிறைவேற்றுகையில் ஒருசொத்தை கோர்ட்டுஏலத்தில் கிரயத்திற்கு பெற்றவன் மேற்செப்பிய டிக்ரி (Exparte decree) யை மாற்றிவிட்டால் அந்தடிக்ரியின்கீழ் பெற்ற கிரயம் செலாவணியில்லாமல் விடுகிறது. கோர்ட்டு எலவிற்பனையை ரத்துசெய்து அப்படி கிரயம்செயப்பட்டசொத்தை தன்வசம் ஒப்புவிக்கும்படிபிரதிவாதிமனுசெய்துக்கொள்வதற்குமுன் மேற்படி நம்பரை மறுபடியும் விசாரணைசெய்து முன்டிக்ரியைப்போலவே இன்னொரு டிக்ரி பெற்றுக்கொண்டால் முன் ரத்தாய்விட்ட டிக்ரியின் கீழ் வாதிஅந்த சொத்தின் விழயமாய் அடைந்த ஊக்கும் செலாவணியுள்ளதல்ல. மேல் கோர்ட்டார் பின் அடைந்த டிக்ரியையும் மாற்றி முன் டிக்ரியை காயம்செய்தால் இந்த விதி அதற்குச்சம்மந்தப்படாது ஹமார்மல் vs ஜாரி ஜானகி பிரசாத் (6 க. லா ஜ. 92.)

ஒருவியாஜ்ஜியத்தில் உபயத்திராளும் (வாதி, பிரதிவாதிகள் தங்கள் கேஸைக்கோர்ட்டாரே மத்திஸ்தமாய் பஞ்சாயத்தாராயிருந்து தீர்மானம் செய்யும்பட்சத்தில் தாங்கள் அப்படிப்பட்ட டிக்ரிக்கு ஒப்தக்கொள்வதாய் முச்சலிக்கா கொடுத்திருக்தார்கள், அதன்பிரகாரம் சப்கோர்ட்டார் அம்மாதிரியாகவே செய்வதற்கு ஆரம்பித்து வாதியையும், பிரதிவாதியையும் விசாரணை செய்துவிட்டு வேறே சாக்ஷிகளில்லாமையால் தன்னுடைய தீர்மானத்தின்படி (Award) டிக்ரிசெய்துவிட்டார். பிறகு சப்கோர்ட்டார் அப்படி பஞ்சாயத்தாராய் தீர்மானம் செய்வதற்குமுன் கவர்ன்மெண்டார் உத்தரவுபெறாமல் செய்தாராகையால் அந்த டிக்ரி செல்லாதென்று சொல்வதற்கு நியாயமில்லை. (பார்பபதிகள்வார் Vs. பைகுத்தநாத 4. அ. லா, ஜ. 89. I· R. 7. A. C. 15).

பஞ்சாயத்தாரின் தீர்மானத்தில அதற்காதாரமான காரணங்களை எடுத்துக் காண்பித்திருக்கவேண்டும். தகுந்த திருப்திகரமான காரணங்களின்றி சுயஇச்சப்படி செய்திருக்கப்பட்ட தீர்மானங்களையாவது அல்லது பிரிதவாதியும் பஞ்சாயத்தாரும் ஒருவருக்கொருவர் உள்ளடியாகவே செய்யப்பட்ட தீர்மானத்தையாவது கோர்ட்டார் ரத்துசெய்ய அதிகாரமுண்டு (பன்ஸிதர் vs சிடல்பிரஸாத்(3 அ-லா-ஜ 613,29 அ13).

பஞ்சாயத்தார் ஆக்டின் 19 வது பிரிவின்படி செப்பயிருக்கும் சட்ட சம்மந்தமான நடவடிக்கைகள் ஹைகோர்ட்டில் நடத்தப்படும் நடவடிக்கைகள் தான் மற்றப்படி இதரகோர்ட்டின் நடவடிக்கைகளல்லவென்று சொல்வதற்கு நியாயமில்லை இந்தராஜதானியில் ஹைகோர்ட்டார் அதிகாரவரம்பிற்குட்பட்டவேறெந்தகீழ்கோர்ட்டிலும் நடத்தப்பட்ட நடவடிக்கைகளை திருத்துவதற்கு மேற்படி பஞ்சாயத்தார் ஆக்டின் 19 வது பிரிவின்படி ஹைகோர்ட்டுக்கு அதிகாரமுண்டு ஆகையால் மேற்படி நடவடிக்கைகள் இந்தராஜதானியின் முக்கியபட்டணத்திலுள்ள ஹைகோர்ட்டின் நடவடிக்கைளாயிருக்கவேண்டுமேயொழுந்து மற்றெந்த கீழ்கோர்ட்டின் நடவடிக்கைகளல்லவென்று சொல்லவதற்கு நியாயமில்லை (ராலி பிரதர்ஸ் vs. நூர்மஹம்மத் 8 பம் லா ரி 955, 31 பம் 236).

ஒருவனுடைய சொத்தை ஜப்திசெய்தால் அச்சொத்து சட்டத்தின் வசத்தில் இருப்பதாக பாவிக்கப்படவேண்டும் டிக்ரி கடன்தாரன் இறந்துவிட்டால் அவனுடன் அந்தஜப்திறத்துவாய் விட்டதாக எண்ணலாகாது சொத்தை ஜப்திசெய்த பிறகு அனல் அந்தசொத்தை பராதீனம் செய்வதற்கு அதிகாரமற்றுப்போகிறதே யல்லாமல் மற்றப்படி அந்தசொத்துக்கு யாதொரு சுதந்தரத்தை உண்டாக்குகிறதாக நினைக்கலாகாது. (5 கல்ா ஜ 80)

லான்ட்ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 88 வது பிரிவு:—Land Registration Act Sec. 88.

மேற்படி ஆக்ட் 88வது பிரிவின்கீழ் ரெவினியு போர்டார்செய்த நடவடிக்கைகளின்படி ஏற்பட்டிருக்கும் விதிகள் சட்டத்தைப்போல் பாவிக்கப்படாது. அந்தவிதிகள் சாக்ஷியமாய் ஒப்புக்கொள்ளப்படுமாயினும் அவைகளை சட்டமாக எண்ணலாகாது. சாக்ஷிகளின் வாக்குமூலம் ஸிவில்புரோசிஜர் கோடின் நிபந்தனைகளின்படி எடுக்கவேண்டுமென்று ரெவினியூ போர்டார் செய்திருக்கும் உத்தரவு மேற்படி லான்ட்ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 88வது பிரிவின் கீழ்செய்ததல்லவாகையால்அந்த விதியை ஒருசட்டமாய் நினைக்கலாகாது. (டேபிசரன் மிசர்- Vs- சக்கரவரத்தி 11ச. வீ நோ. 470)

Cases from the Indian Law Reports.

இந்தியன் லா ரிபோர்ட்டு கேசுகள்.

பம்பாய் ஹைகோர்ட்டு.

ஜெஸ்டிஸ் சந்திரவர்கா
ஜெஸ்டிஸ் னயிட் } முன்பாக.

ராஜேந்திரலால்

vs.

சூரத் முனிஸிபாலிடி.

இந்தக்கேசில் சூரத்து முனிஸிபாலிடியார் ஓர் ஓடையின்குறுக்காக அணை ஒன்றை கட்டினார்கள். இந்த ஓடைக்குபக்கத்தில் ஒருகுழியிருந்தது. ஓடையில் வெள்ளம்வரும்பக்ஷத்தில் அதிகமான தண்ணீரை ஓடையில் செலுத்திவருவதுவழக்கம், முனிஸிபாலிடியார் [illegible] முதலியவைகள் வாரும்படி அஜாக்கிரதையாய்விட்டுவிட்டதினாலும், குப்பை கொட்டிக் கொண்டுவந்ததினாலும், நிறைந்துவிட்டது. வெள்ளம்வந்து ஓடையானது நிரம்பபட்டு மேல்வரும் தண்ணீர் குட்டையிலடங்குவதற்கு இடமில்லாமற் போனபடியால் வாதியினுடைய சொத்துகள் தண்ணீரில் அமிழ்ந்துபோகும்படியாயிற்று. அதனாலுண்டான நஷ்டத்திற்கு யார் உத்தரவாதமாகிறார்கள் என்பது இந்தக்கேசில் யோசிக்கப்பட்டது.

தீர்மானம்:—முனிஸிபாலிடியார் அஜாக்கிரதையாய் இருந்ததினால் அந்த அஜாக்கிரதையினாலுண்டான நஷ்டத்தை கொடுக்கவேண்டியவ ராகிறார்கள்.

ஆதாரம்:—ஸிட்னிமுனிஸிபாலிடியார் vs பௌர்க்கு Municipality of Sydney vs Bourke ஷோர்டிச் vs புல் (Shoreditch vs Bull)

ஜெஸ்டிஸ் மெக்லியாட் முன்பாக.

ஆலிமியா.

vs.

பி. பி. சி. ரயில்வேகம்பெனி.

A என்பவனுடன் பிரதிவாதிகளான ரெயில்வே கம்பெனியார் சில கண்டிராக்டுகள் கொடுத்தார்கள். H என்பவனுடன் B என்னும் மற்றொருவன்பங்குக் காரனாகயிருந்தான். இந்தசங்கதி ரயில்வேகம்பெனியாருக்கு தெரியாது. கம்பெனியாருடன் ஒப்பந்தம் செய்துகொண்ட A என்பவன் இறந்தபிறகு தமக்கு பாக்கியாக கொடுக்கவேண்டிய தொகையை கொடுக்கும்படி கேட்டான், இறந்துபோன A யினுடைய வார் [illegible] அந்தத்தொகை தமக்கு சேரவேணுமென்று [illegible] கம்பெனியாருக்கு வாதியும் H என்பவனுடையவார் [illegible] இருவரும் சேர்ந்து [illegible] கொடுக்கப்படமாட்டாதென்று மறுத்துவிட்டார்கள். அதன்பேரில் B என்னும் பங்குக்காரன் தொகையை தனக்கு கொடுக்கும்படிதாவா செய்தான்.

தீர்மானம்.—ரயில்வேகம்பெனியார் A யினுடன் மாத்திரம் ஒப்பந்தம் செய்துகொண்டாராகையால் அந்த ஒப்பந்தத்தின்பிரகாரம் கொடுக்கப்படவேண்டியதொகையை தனக்குகொடுக்கும்படிகேட்க A என்பவன் லாயக்குடையவனாகிறான். A என்பவன் தாவா செய்யவேண்டும். கம்பெனியாருக்கு தெரியாத பங்குக்காரனாகயிருந்த B என்பவன் A யினுடன் சேர்ந்திருக்கலாமேதவிர தனியாக இருந்து தாவாசெய்வதற்கு அர்தனல்லன்.

மதராஸ் ஹைகோர்ட்டு.

செல்லப்பசெட்டியார் vs வேலாயுததேவன்.

தீர்மானம்.—ஒருவன் கொடுக்கும்பட்டாவில் கோவில்முதலியவைகளுக்கு தன்னிஷ்டமாக கொடுக்குந்தொகைகளை யெல்லாம் சாதாரணமாக பட்டாவில்சேர்க்கப்படலாகாது. ஆனால் அந்த [illegible] பவர்களால் அந்ததொகை கொடுக்கப்படவேண்டுமென்று ரூபிக்கப்பட்டாலும் சட்டப்பிரகாரமாவது மாமூல்பிரகாரமாவது கொடுக்கப்படவேண்டியதிருந்தாலும், இந்தசந்தர்ப்பங்களில் பட்டாவில் பதிவுசெய்க்கப்படலாம்.

சீமை ஹைகோர்ட்டு.

ஸ்டிவன்ஸ் vs ஸ்டிவன்.

இந்தகேஸில் A என்பவன் வயதடைந்தவன். பொருள்சம்பாதிக்கும் யோக்கியதை உடையவனாயிருந்தபோதிலும் தன்னுடைய தாயார்வீட்டுக்கு அடிக்கடிபோய் அவனுடைய நடத்தையால் அவளுடைய உடம்புக்கு அசௌக்கியமும் மனதிற்கு ஆயாசமுமுண்டாகும்படி செய்துகொண்டுவந்தான். இவன இப்படி அவளிடத்தில் அடிக்கடிபோய் தொந்திரவுசெய்யாமலிருக்கும்படி செய்யப்படலாமா என்பது யோசிக்கவேண்டியதாயிருந்தது.

தீர்மானம்.—மேல்கூறிய சந்தர்ப்பங்களில் அந்த மதன் அவளிடத்தில் அடிக்கடிபோய் தொந்திரவுசெய்யக்கூடாதென்று ஒரு இஞ்செக்ஷன் [illegible] ரவர்கள் பிறப்பிக்கலாம்.

மகமத்குட்டிகேஸ்.

இந்தக்கேஸில் [illegible] குற்றம்சாட்டப்பட்டு [illegible] 20 [illegible] கொள்ளும்படி மாஜிஸ்டிரேட்டுக்கு அனுப்பிக்கப்பட்

டான். அங்கிருந்தவைத்தியரானவர் K என்பவர் 20 அடிகளை தாங்கமாட்டானென்றும் 6-அடிதான் தாங்குவானென்றும் சிபார்சுசெய்தார். ஆகையால் மாஜிஸ்டிரேட்டானவர் 6-அடி அடிக்கும்படி உத்தரவுசெய்துவிட்டு மற்ற 14-அடிகளுக்கு பதிலாக 3 - மாதம் கடினகாவலில் K என்பவன் இருக்கவேண்டியதென்று உத்திரவுசெய்தார்.

தீர்மானம்.—மாஜிஸ்ட்ரேட்டானவர் அப்படிகடினகாவலில் இருக்கும்படி உத்திரவுசெய்வதற்கு அதிகாரமில்லை. ஆகையால் கைதியானவன் விடுதலைசெய்யப்படவேண்டும்.

பீபுல் vs பிளின்

இந்தக்கேஸில் A என்பவன் நாடகம் எழுதுபவன். நாடககம்பெனியாரெல்லாம் ஒன்றுசேர்ந்து இவனை தம்முடைய நாடகசாலையில் வரவிடக்கூடாதென்று ஒப்பந்தம் செய்துக்கொண்டார். அப்படி அவர்கள் செய்துகொண்டது யாதொரு கெட்ட எண்ணத்துடனில்லாமல் தம்முடையமதாசார ஒழுக்கங்களை A என்பவன் தூஷிக்காமலிருப்பதற்காக அப்படி செய்யவேண்டியதாயிற்று.

தீர்மானம்.—அப்படி அவர்கள் ஒப்பந்தம்செய்துகொண்டதினால் குற்றம்செய்தவராக மாட்டார்கள். (People vs Flyon 189 N. 180)

பம்பாய் ஹைகோர்ட்டு.

கனம்-மிஸ்டர் ஜெஸ்டிஸ் தேவர்முன்பாக.

இப்ராஹீம் ம· ஹாஸம்ஷேர்பானு

vs

அஜ்பாய் & லடாபாய்

ஓர் துலுக்க மைனர்பிள்ளை யார்வசத்திலிருக்கவேண்டுமென்பது. இந்தகேஸில் முக்கியமாய்யோசிக்கவேண்டியது.

கேஸின்விவரம்:—ஷேர்பானு என்னும் ஒருதுலுக்கஸ்திரி காலஞ்சென்றதன்னுடையபுருஷனின் தம்பியாகியபிரதிவாதி லடாபாய் முதலியவர்வசத்திலிருந்த அவ்வுடைய மைனர்புத்திரனை தன்வசப்படுத்தும்படி கோர்ட்டுக்குஹேபியஸ் கார்ப்பஸ் (Habeas Corpus) என்னும் ஒருமனுகொடுத்தாள். அந்தமைனர் பிள்ளையின்தகப்பன் தன்னுடையசகோதரனுகிய லடாபாய் என்பவனையும் இன்னும் சிலரையும் மைனர்க்கு எக்ஜிகூட்டர்களாக் கேமித்து இந்த எக்ஜிகூட்டர்களில் ஒருவனுகிய தன்சகோதரன் தன்னுடைய மைனர்பிள்ளையை வைத்துக்கொண்டு அவனைபோஷித்து அவனுக்கு வித்தை கற்பித்துவரவேண்டுமென்று ஒரு உயில் எழுதிவைத்துவிட்டு இறந்துபோனுன்.

எதிர்வாதம்:—லடாபாய் என்பவன் அந்தமைனர்பிள்ளை சட்டப்படி தன்வசத்தில்தானிருக்கவேண்டுமென்று பிரமாணப்பத்திரிகை ஒன்று தாக்கல்செய்து வாதித்தான்.

வாதிதரப்பில் மிஸ்டர், லைஹண்டெல் என்பவர் பின்வருமாறு கூறினர்:—இந்தவியாஜ்ஜியத்தில் கட்சிதாரர்கள் (வாதி-பிரதிவாதிகள்) ஷியா (Shia) என்னும் துலுக்கசமூகத்தைச் சேர்ந்தவர்கள். மைனர்பிள்ளையின்தகப்பன் ஒரு உயில் எழுதி எக்ஜிகூடர்களை கேமித்து தன்பிள்ளையை பாதுகார்த்துவளர்த்துவரும்படி உத்திரவுசெய்தான். துலுக்கரில் ஷியா (Shia) என்னும் இனத்தோரைச் சேர்ந்தவர்களுக்குள்ள சட்டப்பிரகாரம் ஒருபிள்ளையின்தாய் அவனுடையதகப்பன் ஜீவந்தனுயிருக்கும்போது அவனுக்கு விரோதமாய் தன்னுடையமைனர்பிள்ளை பால்மறக்கிறவரையில் தன்வசத்தில்தானிருக்கவேண்டுமென்பதற்கு ஹக்குண்டு என்றுசொன்னர்.

(உல்ஸன், ஆர்டிகல் 449; இமாமியா of 95-1 பார்க்க)

ஜஸ்டிஸ் தேவர் சொல்லியது.—மைனர் பிள்ளை யாருடையவசத்திலிருக்கவேண்டுமென்பது அந்தப்பிள்ளையின் தாய்தகப்பன்மாருக்குள்ளாவேவழக்கமிருந்ததால்இந்தஷியாசட்டம்செல்லும். ஆனல்தகப்பன் தனக்குள்ள சுதந்தரத்தை இன்னெருவனுக்குகொடுத்து அந்த ஹக்கை நிறைவேற்றிவரும்படி உத்தரவுசெய்ய ஹக்குண்டு. தகப்பன் இறந்துவிட்ட உடனே அந்தசுதந்தரம் தாயிக்குவருகின்றது: ஆனல் தகப்பன்தான் ஜீவதிசையாயிருக்கும்போதே தனக்குள்ள ஹக்கு சுதந்தரமிருந்தபோதிலும் அதை எக்ஜிகூடர்கள் கேமித்து அவர்களுக்கு மாற்றிவிடலாம்.

உல்சன், ஆர்ட்டிகல் 111, இமாமியா P 251, மைனர்களைப்பற்றி எழுதியிருக்கும் டிரெவில்லியன் P. 70.

தகப்பன் உயில்எழுதும்காலத்தில் அவனுடைய மைனர்பிள்ளை அவனிடம்தான் வசித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அந்த உயிலின்கீழ் அவன் தன் சகோதரனை மற்ற எக்ஜிகூடர்களில் ஒருவராயிருந்துக்கொண்டு தன் பிள்ளையின் வாழ்க்கையையும் வித்தையையும் கவனித்துவரும்படி எழுதி உத்தரவுசெய்தான். உயில் எழுதிவைப்போனின் கருத்து இன்னதென்று அந்த உயிலிலெழுதிய பதங்களினலேயே புலப்படும் விஷயத்தில் உயிலில் இல்லாத வேறே பதங்களைப்போட்டு உயிலெழுதினவரின் உண்மையான தாற்பரியத்தை அறியவேண்டுமென்பது அவசியமல்ல (ஸிம்ப்ஸன்-Simpson P. 217.) எக்ஜிகூடர் மைனரைத் தன்வசம் வைத்திருக்கவேண்டுமென்று சொல்வது உயில் எழுதிவைத்தவரின் கோரிக்கைகளை நிறைவேற்றும்பொருட்டுதான்.

பிரதிவாதி தரப்பில் இன்வெரரிடி என்பவர் ஒரு மைனருக்கு தகப்பனில்லாவிடில் அப்பிள்ளை தாயின்வசம்தானிருக்கவேண்டியது. சட்டப்பிரகாரம் வேறே யாரும் அவளைத் தடுப்பதற்கு நியாயமில்லை. (உல்சன் ஆர்ட்டிகல் 1071).

மிர். ஜஸ்டிஸ் தேவரின் தீர்மானம்:—இந்த கேஸில் ஷேர்பானு என்பவள் தன்னுடைய பிள்ளையை அஜ்பாய், லடாபாய் என்பவர்கள் அக்கிரமமாய் அவ

ளிடம் போகவிடாமல் நிறுத்திக்கொண்டார்களாகையால் அவர்கள்பேரில் ஹேபியஸ் கார்ப்பஸ் (Habeas Corpus) என்னும் வாரண்டு பிறப்பித்து அவர்களை வரவழைத்து ஏன் அந்த மைனர் பிள்ளையை மனுதாரியாகிய அவளுடைய தாயினிடம் அனுப்பிக்கலாகாதென்று விசாரணை செய்து அந்த பிள்ளையை தன் வசம் ஒப்புவிக்கும்படி கேட்டுக்கொண்டாள். இந்தக் கேஸை என்னெதிரில் வாதித்து பேசுகையில் பிரதிவாதிகளின் பாரிஸ்டர் பின்வருமாறு சொல்லி அதை மிக்க யோசிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

மகம்மதிய ஷியாகுலத்தைச்சேர்ந்த மஹமெத்பாய் ஹாஸம் என்பவன் 1908ஹு நவம்பர்மீ 27உ காலமானுன். அவனுக்குப்பின் அவனுடையபெண்சாதியாகிய ஷேர்பானு என்பவளையும் குமாரனுகிய இப்ராஹீம் என்பவனையும் விட்டிறந்தான். இந்தமைனர் பிள்ளை 1903ஹு ஜுலைமீ 12உ பிறந்தவன். இவனுக்கு இப்பொழுது 5-வருஷம் நான்குமாதம் வயதாயிற்று. அஜ்பாய் என்பவள் காலஞ்சென்ற மஹமத்பாய் என்பவனுக்கு பாட்டியார் லடாபாய் என்பவன் மஹமத்பாயின் தம்பி. காலஞ்சென்ற மஹமத்பாய் என்பவன் தான் இறந்துபோகும்பொழுது தன்னுடைய மைனர் பிள்ளையுடனும் கூட அஜ்பாய், லடாபாயுடனும் வசித்துக்கொண்டிருந்தான். மஹமத்பாயின் பெண்சாதி ஷேர்பானு என்பவளோ தன்புருஷன் இறந்துபோவதற்கு இரண்டுவருஷத்திற்குமுன்னமேயே அவனிடமில்லாமல் வேறே தனியாய் வசித்துக்கொண்டிருந்தாள். மஹமத்பாய் இறந்தபின் மைனர் இப்ராஹீம் என்பவன் அஜ்பாய், லடாபாய் இவர்களிடம் வசித்திருந்தான். மனுதாரியாகிய ஷேர்பானு என்பவள் தன் மைனர்பிள்ளையாகிய இப்ராஹீம் தன்னிடம் வசிக்கவேண்டியதாகையால் அவனை தன்வசப்படுத்தும்படி அட்டர்னிமூலமாய் 1908ஹு நவம்பர்மீ 30உ ஒருகடிதம் எழுதினுள். அதன்பேரில் அஜ்பாய் லடாபாய் என்பவர்கள் தங்கள் அட்டர்னிகள்மூலமாய் காலஞ்சென்ற மஹம்மத்பாய் இறந்துபோகையில் அவனுடைய சகோதரனுகிய லடாபாய் என்பவனை எக்ஜிகூடர்களில் ஒருவனுய்கேமித்து அவனுடைய மைனர் பிள்ளையாகிய இப்ராஹீம் என்பவனை அவன்வசம்தான் வைத்திருக்கவேண்டுமென்று உத்தரவுசெய்திருக்கிறுரென்று மறு உத்தரம் எழுதி தெரிவித்தார்கள்.

இவ்விதமாய் பிள்ளையை அனுப்பமாட்டோமென்று அவர்கள் எழுதினதின்பேரில் ஷேர்பானுவென்பவள் கிரிமினல் புரோஸீஜர்கோட் 491-வது பிரிவின்படி தனக்கு உத்தரவளிக்கும்படி மனுசெய்துகொண்டாள்.

மனுதாரி.—தான் அந்தமைனர்பிள்ளையைப் பெற்றதாயென்பதினுலேயே தனக்கு அந்தப்பிள்ளையை தன் வசம்வைத்திருக்க சுதந்தரமுண்டென்று சொன்னுள். எதிர்பிரமாணப்பத்திரிகை தாக்கல்செய்து அதனுடன் உயிலின்ஜுர்ஜுமாவையும் ஆஜர்செய்து அந்தமைனர்பிள்ளை தன்வசம்தான் இருக்கவேண்டுமென்று வாதித்தான்.

கக்ஷிதாரர் உபயத்திராளும் ஷியா மஹம்மதியர்கள். அவர்களுடைய ஹக்கு சுதந்தரங்களைப்பற்றி ஷியா மஹம்மதிய சட்டத்தில் சொல்லியிருக்கின்றது. உயிலின்பிரகாரம் லடாபாய் என்பவன் அந்தமைனர் பிள்ளையை அவன்வசம் வைத்திருக்கவேண்டுமென்பதைப்பற்றி எழுதவில்லையென்றும் ஆனல் அந்தப்பிள்ளையின் க்ஷேமகரத்தையும் வித்தியாப்யாசத்தையும் அவன் அப்போதைக்கப்போது தனிக்கைசெய்து வரவேண்டுமென்றும் எழுதியிருக்கிறதேயல்லாமல் வேறல்ல என்றுசொல்லி அந்தமைனர்பிள்ளையாகிய இப்ராஹிம் என்பவனை அவனுடைய தாய் ஷேர்பானுவசம் ஒப்புவிக்கும்படி உத்தரவுசெய்தார். (11 பம். லா. ரி. 75).

ஜெஸ்டிஸ் சந்திரவர்க்கா }
ஜெஸ்டிஸ் ஹீடன் } முன்பாக.

அம்ரிதராவ்ஜிராவ்

vs.

ஷரிதார் நாராயணேக்.

நிலத்தைஸ்வாதீனப்படுத்தும்படி கொண்டுவந்ததாவா.

கேஸின்விவரம்:—தாவாநிலம் பிரதமத்தில் கந்தர்தார், தாமோதர் என்பவர்கள் இருவருக்கும் சொந்தசொத்தாயிருந்தது. வாதியின் தகப்பன் தாமோதர் என்பவன் குடும்பத்திற்கு தலைவன்-மானேஜரென்று அவன்பேரில் ஒருடிக்கிரி அடைந்து அந்தடிக்கிரியை நிறைவேற்றி மேற்கண்டசொத்தை ஏலவிற்பனைக்கு கொண்டுவந்ததில் விஷ்ணுகணேஷ் என்பவன் அந்த சொத்தை வாங்கி பிறகு அதை தன்வசத்தில் ஒப்புவித்துக்கொள்ளசெய்த நடவடிக்கையை கந்தார் என்பவன் ஆக்ஷேபித்தான். இந்த ஆக்ஷேபணையை நீக்கிக்கொள்வதற்காக ஒருகிரயதாவாசெய்தான். அந்தவியாஜ்ஜியத்தில் விஷ்ணு என்பவன் அந்தசொத்தை பாதித்து அரைபாகம் தன்வசப்படுத்திக்கொள்ள ஹக்குள்ளவனென்று 1886ஹு நவம்பர்மீ 29உ கோர்ட்டாரால் தீர்மானம்செய்யப்பட்டது.

விஷ்ணு என்பவன் தான் நவம்பர்மாதம் அடைந்த டிக்கிரியின்படி அதை நிறைவேற்றி அந்தநிலத்தின் அரைபாகத்தை தன்வசம் செய்யும்படிக்கு டிசம்பர்மாதம் தர்க்காஸ்த்து செய்துகொண்டான். அதை நிறைவேற்றும்படிக்காக அந்த தர்க்காஸ்த்து கலெக்டருக்கு அனுப்பப்பட்டது. ஹஜூர் ஸிரெஸ்ததார் அந்த டிக்கிரியை நிறைவேற்றி தாவாநிலத்தை 1895ஹு டிசம்பர்மீ 11உ விஷ்ணு என்பவன்வசம் ஒப்புவித்து அதற்கு அத்தாக்ஷியாய் அவனிடமிருந்து ரசீதுபெற்று கோர்ட்டில் தாக்கல்செய்தான்.

பிறகு 1897ஹு ஜனவரிமீ 2உ விஷ்ணு என்பவன் தாவா சொத்தை விநாயக் மஹாதேவ் என்பவருக்கு கிரயம் செய்துவிட்டான். விநாயக் மஹாதேவ் என்பவர் அந்நிலத்தை மறுபடியும் இந்த தாவாவின் வாதிக்கு விற்றுவிட்டான்.

இது இப்படி நடந்துக்கொண்டிருக்கையில் கங்காதர் என்பவன் 1894ஹு அக்டோபர்௴ 4௳ தாவாநிலத்தை பிரதிவாதியின் தகப்பனுகிய ரவ்ஜி ராவ் என்பவனுக்கு கிரயம் செய்துவிட்டான்.

1905ஹு அக்டோபர்௴ 4௳ வாதி தாவாநிலத்தை தன்வசப்படுத்தும்படிக்கு பிரதிவாதியின் பேரில் பிரஸ்தாப வியாஜ்ஜியம் செய்தான்.

சப்ஜட்ஜ் அவர்கள் தாவாவிற்கு காலதோஷம் வந்துவிட்டதென்று வியாஜ்ஜியத்தை தள்ளுபடி செய்தார். பிரதிவாதி தான் அபிப்பிராயம் கொண்டபடி தாவாநிலத்தை வாதிக்கு விரோதமாய் 1894ஹு அக்டோபர்௴ 4௳முதல் அனுபவித்துவருகிறான். பிரஸ்தாப தாவாவோ அந்ததேதிக்குப்பின் பூராய் 12 வருஷம் கடந்தபின் கொண்டுவரப்பட்டது. பிரதிவாதி அப்படிப்பட்ட அபிப்பிராயம் கொண்டிடினும் தாவாநிலத்தைப்பற்றி வாதிக்குவிரோதமாய் காலம் மேற்கண்ட கிரயபத்திரத்தின் தேதி (4-10-1894) முதல் அல்ல ஆனால் மேற்குறித்த டிக்கிரிதேதி (29-11-1886) முதல் நடக்கிறது.

சப்கோர்ட்டார் தீர்மானத்தின்மேல் ஜில்லாகோர்ட்டுக்கு அப்பீல்செய்ததில் அவர் (ஜில்லாஜட்ஜ்) சப்கோர்ட்டார் தீர்மானத்தை ரத்துசெய்து பின்வருமாறு தீர்ப்பு எழுதினர்:—

“தாவாவிற்கு காலதோஷம் வரவில்லை; ஏனென்றால் வாதிக்கு விரோதமாய் 1886ஹு நவம்பர்௴ 29௳முதல் காலநிர்ணயம் செய்யலாகாது. ஆனால் பாகடிக்ரி ஆன தேதி (4-12-1895) முதல் வாதிக்கு விரோதமாய் காலநிர்ணயம் ஏற்படுத்தவேண்டியதென்றுசொல்லி அதுமுதல் தாவா பன்னிரண்டுவருஷத்திற்குள்தான் கொண்டுவரப்பட்டது. சப் ஜட்ஜ் டிக்ரி தேதி (29-11-1886) முதல் வாதிக்குவிரோதமாய் காலநிர்ணயம்செய்யவேண்டியதென்றுகண்டார். ஆனால் அதை நான் (ஜில்லாஜட்ஜ்) ஒப்புக்கொள்ள எனக்கு தகுந்த முகாந்தரம் தோற்றவில்லை. ஏனென்றால் அந்தப் பாகடிக்ரியின் (4-12-1895) தாற்பரியப்படி வாதி தாவாநிலத்திற்கு ஹக்குதாரனுய்விடுகிறான். விஷ்ணுகனேஷ் என்பவன் ஏற்கனவே சட்டப்படி தாமோதர் என்பவனுக்கு பதிலாய் கங்காதர் என்பவனுடன் ஒரு பங்காளியாகிறான். இப்படி அவன் தாயாதியானவுடன் விஷ்ணுகனேஷ், கங்காதர் இவ்விருவருக்கும் தாவாசொத்தை சொந்தமான குடும்ப பொதுசொத்தாகவே அச்சொத்தை பாகத்தில் பிரிவினைசெய்யும் தேதிவரையில் கங்காதர் என்பவன் டிக்கிரிதாரன், அதாவது எவனிடமிருந்து கிரயம்பெற்றவனுகிய விஷ்ணு என்பவனுடன் தாயாதியாகவே அனுபவித்துவந்தான். ஆகையால் பிரதிவாதியின் அனுபோகம் 1895ஹு டிஸம்பர்௴ 11௳ முதல்வாதிக்கு விரோதமாய் நடந்தேறிவந்தது. மின்செப்பிய அந்ததேதிமுதல் காலநிர்ணயம் செய்யும்பட்சத்தில் லிமிடேஷன் சட்டப்பிரகாரம்தாவாசெய்வதற்கு இன்னும் ஏராளமான டைம் (காலம்) இருக்கிறதென்று கண்டார்.

இந்தகேஸ் காலதோஷ நிர்ணய சட்டத்தின் (Limitation Act XV of 1877) இரண்டாவதுஷெட்யூலில் 144-வது ஆர்ட்டிகலின்கீழ் வருகிறதென்பது தான் நானும் அபிப்பிராயப்படுகிறேன். ஆனால் 127-அல்லது 137-வது ஆர்ட்டிகலின்படி பார்த்தாலும் தாவாவிற்கு காலதோஷம் வரவில்லை. ஏனென்றால் முன்செப்பிய 144-வது ஆர்ட்டிகலின்படி காலநிர்ணயம்செய்தாலும் பாகமானதேதிவரையில் பிரதிவாதி வாதிக்கு விரோதமாய் தாவாநிலத்தை தனியாய் அனுபவித்து வந்தானென்று சொல்வதற்கோயிடமில்லை.

ஆகையால் வாதி தன்சுதந்தரத்தை ருசுசெய்திருக்கிறானென்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறதானதால் தாவாவிற்கு காலதோஷம் வரவில்லை. ஆனால் பிரதமத்தில் பிரத்தியக்ஷமாய் ரொக்கம் செலுத்தி ஒருஸ்ரீயாரிடமிருந்து நிலத்தைவாங்கி ஏறக்குறைய பன்னிரண்டுவருஷகாலம் அனுபவித்து வருகிறவனுகிய பிரதிவாதிக்கு விரோதமாய் தீர்ப்புசெய்வது நியாயமல்லவென்று எனக்குதோன்றிற்று. அதன்பேரில் நான் தீர்க்கயோசித்ததில் அடியிற்கண்ட காரணங்களினால் பிரதிவாதியின் ஸ்வாதீனத்திலிருந்ததாக சொல்ல நியாயமில்லை.

பிரதிவாதி தான் எதிர்த்து வாதம்செய்வதற்கு ஆதாரம் தான் ரொக்கம்செலுத்தி வாங்கினானென்கிற நியாயமும் அது குடும்ப பொது சொத்தென்று அவனுக்கு கோடிகமூலமாய் யாதொரு அறிக்கையும் கிடையாதென்பதும்தான். ஆனால் அவன் இது குடும்பபொதுசொத்தென்றறிந்து வாங்கியிருப்பானுகில் கிரயம்செய்தவன் தனக்கு சொந்தமில்லாத ஹக்கை [illegible] அல்லது அப்படி குடும்ப பொதுசொத்தென்றறியாமல் வாங்கியிருப்பானுகில் முன்னமேயே தான் கிரயத்திற்கு கொள்ளப்போகிற நிலம் எப்படிப்பட்ட நிலமென்று விசாரணைசெய்துவாங்கியிருக்கவேண்டும். அப்படிச்செய்யாவிடில் சட்டப்படி அவனுக்கு கோடியிருக்கிறதென்றுதான் நினைக்கவேண்டியது.

பாகமாகாத அவிபக்த குடும்பத்தின் ஒருதாயாதியினிடத்திலிருந்துமாத்திரம் ஒருவன் குடும்பசொத்தை கிரயத்துக்குவாங்கினால் அவனுக்கு பாகப்படி அந்த சொத்தில் யாதொரு பாத்தியதையும் உண்டாகாது. அச்சொத்தை பாகிக்கும்படிமாத்திரம் தாவாசெய்வதற்கு ஹக்குண்டென்று தீர்ப்பாயிருக்கிறது. (இ. லா. ரி-25 - சென்னை 690, 11 பம். ஐ. ரி. 76.) பிரஸ்தாப தாவாவில் பிரதிவாதி கிரயத்திற்குவாங்கின நிலம் கங்காதரின் பாகத்திற்கென்று ஏற்பட்ட நிலமல்ல. இப்படி செய்தது கங்காதரின் மோசக்கருத்து. இதுவுமல்லாமல் குடும்பசொத்தின் குதுவை டிக்ரி அடைந்தவன் தனக்கு குதுவைவைத்த சொத்தின்பேரில் [illegible] மல் குடும்பத்தில் குதுவைவைத்தவனுடைய பாகத்திற்கு எந்தநிலம் ஏற்படுகிறதோ அதன்பேரில்மாத்திரம் தான் தொடரலாமென்று தீர்ப்பாயிருக்கிறது. (இ. லா. ரி-20 கல் 563; 1 இ. அ. 106; இ. லா. ரி-24; அ. 485.) ஆகையால் பிரஸ்தாபதாவா இக்குடும்பத்தில் கங்காதருடைய பாகத்திற்கென்று ஏற்படு நிலத்தின் பேரு

மானத்தை பிரதிவாதிகளுக்குபிரதிபலனுக (Compensation) தீர்ப்பு செய்யவேண்டுமென்று தாவாசெய்யலாம்”

ஜில்லா கோர்ட்டார் தீர்மானத்தின்பேரில் ஹைகோர்ட்டுக்கு பிரதிவாதி அப்பீல்செய்தான்.

அப்பீல் வாதி தரப்பில் வித்வன்ஸ் என்பவர் பின்வருமாறு வாதித்தார்:—அப்பீல்வாதிகள் வாஸ்தவத்தில் ரொக்கபணம் செலுத்தி சொத்தை கிரயத்திற்கு பெற்று ஏறக்குறைய பன்னிரண்டுவருஷகாலம்வாழ்ந்தார்களென்றும் அதற்குமுன் அவர்களுக்கு கிரயம் செய்த நபராகிய கெங்காதர் என்பவன் அனுபவித்து வந்தானென்றும் கீழ்கோர்ட்டார் கண்டிருக்கிறார்கள். தாவாவிற்குமுன் பன்னிரண்டு வருஷத்திற்குள் அப்பீல் பிரதிவாதியாவது அவனுக்கு முன்னிட்ட எந்த சுதந்தரவாளியாவது தாவாநிலத்தை அனுபவித்தவனல்லன் என்றும் ஆகையால் தாவாவிற்கு காலதோஷம் வந்துவிட்டதென்றும் வாதித்தார். கங்காதரன் எத்தனைகாலம் அந்நிலத்தை அனுபவித்தானே அந்த காலத்தையும் தங்களுக்கனுகூலமாய் சேர்க்கவேண்டுமென்றும், கெங்காதர் விஷ்ணுக்காக அனுபவித்தானென்று சொல்வது செல்லாதென்றும், கெங்காதர் என்பவன் தங்களுக்கு ஸ்வாதீனம் ஒப்புவிக்காமல் பாகமானபிறகுகூட அவனே அனுபவித்துவந்ததின் பேரில் தாவாசெய்யும்படி நேரிட்டதென்றும் சொன்னர். பாகடிக்ரியின்படி கெங்காதர் என்பவன் தாவாநிலத்தில் பேர்பாதி விஷ்ணுவின்வசம் ஒப்புவித்துவிட அர்ஹனென்பதற்கு ஐயமில்லை. ஆனால் அவன் அப்படி ஒப்புவிக்காததினுலேயே அவன் அனுபவித்துவந்தது வாதிக்கு விரோதமென்று சொல்ல நியாயமுண்டு. அவன் தன் ஸ்வாதீனத்தில் வைத்திருந்தமையால் அவன் கிரயம்செய்வோனைப்போலாகிறான். அப்படிப்பட்டவனுடைய (கிரயம் செய்வோனுடைய) அனுபோகம் விரோதமானதென்று தீர்மானமாயிருக்கிறது. (ஆனந்தகுமாரி V. ஆலிஜெமின் இ. லா. ரி. 11 கல். 229). இந்த வாதத்திற்காதாரமாய் இன்னும் இரண்டு லாரிப்போர்ட்டுகள் எடுத்துக்காட்டினர். (ஷீவஜிராம் V. உவாமான் இ. லா. ரி. 22 பம். 939; சாமல் V. பாபாஜி இ. லா. ரி. 26 பம் 361). இதுவுமல்லாமல் விஷ்ணு என்பவன் நிலத்தை தன் வசப்படுத்தும்படி கொடுத்த தர்க்காஸ்த்து அவர்கள் கிரயம்செய்தானபிறகுதான் கொடுக்கப்பட்டதாகையால் அதன்படி கொடுத்த ஸ்வாதீனம் குடும்பத்தைச் சேராத மூன்றும் நபர்களை பாதிக்காது என்றும் சொல்லி அந்த வாதத்திற்கு ஆதாரமாய் இ. லா. ரி. 5 கல் 584; 19 பம் 620 இவைகளை எடுத்துக்காட்டினர்.

டிக்ரியின்படி விஷ்ணு என்பவன் கெங்காதரனுடன் ஒரு தாயாதியாய்விடுகிறானுகையால் அவனுடைய அனுபோகம் விரோதமானதென்று ஜில்லா ஜட்ஜ் அபிப்பிராயப்படுவது சரியல்லவென்றுசொல்லி அதற்காதாரமாய் ராம்லக்ஷ் V. தார்க்சாரு இ. லா. ரி. 11 கல் 680 எடுத்துக்காண்பித்தார்.

அப்பீல் பிரதிவாதிகள்தரப்பில் கார்பூரி என்பவர்:— இந்த வியாஜ்ஜியத்தில் அப்பீல் வாதி கங்காதரனிடத்திலிருந்து கிரயம் பெற்றவனுயிருப்பதால் கெங்காதரின் அனுபோகமே பிரதிவாதியை பாதிக்காது ஆகையால் அவனிடமிருந்து கிரயம் பெற்றவனுடைய அனுபோகம் பன்னிரண்டு வருஷமாகவில்லையானதால் அதுவும் பாதிக்காதென்று சொல்லி வாதி தரப்பில் எடுத்துக்காட்டிய ரிப்போர்ட்டுகள் இந்த கேசுக்கு சம்மந்தப்பட்டதல்லவென்றார்.

மிர் ஜஸ்டிஸ்சந்தாவர்க்காலின் தீர்மானம்:—கேசின்வரலாற்றை எடுத்துரைத்து பின்வருமாறு கூறினர். பிரதிவாதியும் அவனுக்குமுன் நிலத்தை அவனுக்கு கிரயம் செய்தவனும் பாகடிக்ரியானதேதி (29—11—1886) முதல் வாதிக்கு விரோதமாய் சொத்தை அனுபவித்துவந்தார்களாகையால் தாவாவிற்கு காலதோஷம் வந்துவிட்டதென்று கற்றுணர்ந்த சப்ஜட்ஜ்தீர்மானம்செய்தார். அத்தீர்ப்பின்பேரில் வாதி அப்பீல் செய்துக்கொண்டதில் ஜில்லா ஜட்ஜ் சப்ஜட்ஜின் அபிப்பிராயத்தை ஆமோதிக்காமல் 1886ஹு நவம்பர்௴ 29௳ முதல் கலெக்டர் டிக்ரியை நிறைவேற்றி நிலத்தை பிரிவினைசெய்தவரையில் (11—12—1895) சென்றகாலத்தை சேர்க்கலாகாதென்று சொல்லி அதற்குகாரணமாக அந்த டிக்ரிவாதிக்கு முன்னிருந்த சொந்தக்காரன் விஷ்ணுகனேஷ் என்பவன் தாமோதருக்கு பதிலாக கெங்காதருடன் கிரமமாய் ஒரு தாயாதியாயிருந்தானுகையால் அவனும் குடும்ப சொத்தை கெங்காதருடன் ஒன்றுசேர்ந்து அனுபவித்துவந்ததாகவே பாவித்து அந்த ஏக சுதந்தரம் அவனைவிட்டு பாகமாய் பிரிகிறவரையில் கெங்காதர் என்பவன் அனுபவித்து வந்தது விரோதமல்லவென்றார். பிரஸ்தாப கேசில் வாதியின் மூலமாய் சுதந்தரம் பாராட்டும் விஷ்ணுகனேஷ் என்பவன் 1886ஹு நவம்பர்௴ 29௳ பாகடிக்ரியின்படி அந்த நிலத்தில் தனக்கு பேர்பாதி சுதந்தரமுண்டென்று ரூபித்து அந்த பாதிநிலத்தை பிறித்து தன்வசம் ஒப்புவித்துக்கொள்ள ஹக்குண்டென்றான். இதை ஆதாரமாய் நோக்குமிடத்தில் கெங்காதர் என்பவன் விஷ்ணு கனேஷ் என்பவனை நீக்கி அனுபவித்துவந்தது அந்ததேதிமுதல் விரோதமாயிருந்திருக்கலாம் ஆகையால் கெங்காதரிடமிருந்து பெற்றகிரயத்தின்படி தனக்கு சுதந்தர முண்டென்று சொல்லும் பிரதிவாதி, கெங்காதர் தனியாய் அனுபவித்து வந்தகாலத்தை தனக்கனுக்கூலமாய்ச் சேர்த்தால் தன்னுடைய பன்னிரண்டு வருஷத்திற்கு அதிகமாக அனுபவித்த சுதந்திரம் விஷ்ணு கனேஷ் என்பவனுக்கும்அவன்மூலமாய் ஹக்குண்டென்றுசொல்பவருக்கு விரோதமாகையால் தனக்கு அந்த நிலத்தில் பூராய் பாத்தியதையுண்டென்று சொல்ல நியாயமிருந்திருக்கலாம். ஆனால் பிரதிவாதியாய் கக்ஷிதாரர்கள் ஒப்புக்கொண்டபடி தான் விரோதமாய் பன்னிரண்டு வருஷத்திற்கு குறைவாகவே அனுபவித்து வந்தகாலத்துடன் கெங்காதர் அனுபவித்த காலத்தை சேர்த்து காலநிர்ணயம் செய்யவேண்டியதென்று சொல்வதற்கு கெங்காதர் அனுபவித்துவந்தகாலமும் விரோதமென்று ரூபிக்கவேண்டியது. பாகடிக்ரி ஊர்ஜிதத்திலிருந்தமையால் கெங்காதரின் அனுபோகம் விரோதமாகாது. கெங்காதர் பிரதிவாதிக்கு நிலத்தைக் கிரயம்

செய்தபோது (11—10—1894) அவன்பேரிலாயிருந்த பாகடிக்ரி காலதோஷமாகாமல் அதைநிறைவேற்றி கெங்காதரனிடமிருந்து நிலத்தை ஸ்வாதீனம் செய்துக்கொள்ள ஹக்கிருந்தது ஏற்கனவே விஷ்ணுகணேஷ் என்பவன் அந்த பாகடிக்ரியை நிறைவேற்றி கலெக்டர் மூலமாய் தன் அரைபாகத்தை 1895௵ டிசம்பர்மீ 11உ ஸ்வாதீனம் பெற்றுக்கொண்டான். ஆகையால் பிரதிவாதி கெங்காதரின் ஸ்வாதீனத்தைச்சேர்த்து தாவாவிற்கு காலதோஷம் வந்து விட்டதென்று சொல்ல நியாயமில்லை. ஆகையால் இந்த தாவா பன்னிரண்டுவருஷத்திற்குள்தான் செய்யப்பட்டதென்று சொல்லி கீழ்கோர்ட்டு டிக்கிரியை சிலவுடன் காயப்படுத்தினர்.

மிர்·ஜஸ்டிஸ் ஹீடன்தீர்மானம்:—வாதிக்கு முன் சொந்தக்காரனாயிருந்தவன் நிலத்தைப் பிரிவினைசெய்து அரைபாகத்தை தன்வசம் செய்யும்படி தாவாசெய்தான். இந்த பாகடிக்ரி சொத்து முழுவதையும் அனுபவித்துக்கொண்டிருந்த கெங்காதரின் பேரில் உண்டான டிக்ரி; ஆனால் அவன்பாக டிக்ரியை நிறைவேற்றி அமுலுக்குகொண்டு வருவதற்கு முன் அந்த சொத்தை பிரதிவாதிக்கு கிரயம்செய்து அவன்வசம் ஒப்பித்து விட்டான்.

ஆகையால் அந்த பாகடிக்ரியை நிறைவேற்றி நிலத்தை பிரிவினை செய்யுங்காலத்தில் பிரதிவாதி அந்த சொத்துமுழுவதையும் அனுபவித்துக்கொண்டிருந்தான். ஆனால் அச்சொத்தின் அரைபாகத்தில் அந்த பாக டிக்ரியிலான பிரிவினையின்படி பேருக்குமாத்திரம் வாதிக்கு முன்னிருந்தவனுக்கு பாத்தியதை யுண்டாயிருந்தது. அதற்குப்பின் வாதியாவது அவனுக்கு முன்னிருந்தவனாவது பேருக்கு மாத்திரம் சுதந்தரமுண்டாயிருந்ததை வாஸ்தவத்தில் தாங்கள்ஸ்வாதீனம் செய்துக்கொள்ளவில்லை. பிரதிவாதியே அந்நிலத்தை அனுபவித்து வந்தான். பிரதிவாதி இவ்விதமாய் அனுபவித்துவந்தகாலம் பன்னிரண்டுவருஷ மாகாதிருந்த தருணத்தில் இந்த தாவாகொண்டுவரப்பட்டதானபோதிலும் கெங்காதர் அனுபவித்து வந்தகாலத்தையும் இதனுடன்சேர்த்து இக்காலமுழுவதும் வாதிக்கு விரோதமாய் அனுபவித்து வந்தகாலமென்று நிட்சயிக்கவேண்டியதென்று வாதம் செய்தான். கேசின் விர்த்தாந்தங்களை நிதானிக்கு மளவில் அவன் அப்படி சொல்வது நியாயமல்ல. வாதி டிக்ரியின்படி நிறைவேற்றி அரைபாகம் சகஜமாய் ஒப்புவித்துக்கொண்டபொழுதே அவன்தன் தாவாவின்படி பூர்த்திசெய்துக்கொண்டான். அது முதல் இந்நிலவிஷயமாய் புது ஏற்பாடுகள் உண்டாயின, புது சுதந்தரங்கள் ஏற்பட்டன அவைகளில் தன்னுடைய அரைபாகத்திற்கு பாக டிக்ரி அடைந்தவன் அந்த அரைபாகத்தை தன் வசப்படுத்திக்கொள்ள ஹக்கும் கிடைத்தது. இச்சுதந்தரம் மின்சொந்தக்காரனிடமிருந்து அடைந்ததல்ல, ஆனால் இதற்கு மின்னிருந்திராத புது சுதந்தரம் அவனுக்கு உண்டாயிற்று. ஆகையால் பிரதிவாதி தாவாநிலத்தை சட்டப்படி வாதிக்கு விரோதமாய் அனுபவித்து வந்தானென்று ருஜுவாகவில்லை. கீழ்கோர்ட்டு டிக்ரி ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

(11-பம். லா. ரி.)

Privy Council Cases.

பிரிவி கௌன்ஸல் கேஸ்

லார்ட் மெக்னடன்
லார்ட் அட்கின்ஸன்
ஸர் ஆரண்டுரூஸ் கேபில்
ஸர் ஆர்தர் வில்ஸன்
} முன்பாக.

சத்தரபதி ஸிங்

vs.

மஹராஜி பஹதூர்.

இந்தக்கேஸில், 1861-வது வருஷத்தில் மாதத்குமாரி என்பவள் (அப்பீல்தாரனுடைய பாட்டியார்). ஒரு உயில் சாஸனம் யெழுதி வைத்து 1874-வது வருஷத்தில் இறந்தாள். "தன்னுடைய ஜாதியாருக்கு போஜனம் முதலிய தர்மகாரியங்களை செய்வதற்காக" அந்தஜில்லாவிலிருந்து தனக்குவரும் வாடகையிலிருந்து 8 அணு பங்குவீதம் கொடுக்கும்படியாயும் தன்னுடைய பிள்ளைகளாகிய லக்ஷ்மீபதியும் தனபதியும் இன்னும் ஐந்து டிரஸ்டிகளுமிருந்து பரிபாலனம் செய்து வரும்படியாகவும் உயில்ஸாஸனத்தில் கண்டிருந்தது.

மாதத்குமாரி இறந்ததின் பேரில் கலெக்டராபீஸ் ரிஜிஸ்டர்களில் லக்ஷ்மீபதியும் தனபதியும் அவளுக்கு பதிலாக பதிவுசெய்யப்பட்டு, "அவரிருவர்களும் தர்மகாரியங்களுக்காக யெழுதிவைத்த ஒரு உயில்ஸாஸனப் பிரகாரம் இந்த சொத்துக்களை 8 அணு பங்குக்கு பாத்தியதை உடையவர்கள்." என்றுகண்டிருந்தது.

1886-வது வருஷத்தில் லக்ஷ்மீபதி என்பவன் இறந்ததின்பேரில் அவனுடைய மகனான சத்தரபதிஸிங் என்பவன் (அப்பீல்தாரன்) தன்னுடைய தகப்பனுக்கு பதிலாக தன்னுடைய பெயரை ரெவனியூ ரிஜிஸ்டர் பதிவுசெய்விக்க வேணுமென்று மனுவு செய்தான். டிப்டிகலெக்டரவர்கள் இந்த பிரார்த்தனைக்கிணங்கினபோதிலும் மேலதிகாரியாகிய கலெக்டரவர்கள் கூடாதென்று மறுத்துவிட்டார்.

பிறகு 1892-வது வருஷத்தில், தன்னுடைய தாயார் சொத்தை பரிபாலிப்பதாலுண்டான போக்குவரவு கணக்குகளை கொண்டுவரவும், அந்த உயிலால் தனக்குண்டான பாத்தியதைகளை நிர்ணயிக்கவும் தனபதி என்னும் தன் பெரிய தகப்பனாரின்பேரில தாவா செய்தான். கடசியாக கேஸானது ராஜியாய்ப்போய் விட்டது. கோர்ட்டாரவர்கள் அதன் நிபந்தனைபிரகாரமே ஒரு டிக்ரியை பிறப்பித்தார்கள்.

1891-வது வருஷத்தில் அப்பீல்தாரனானவன் தன்னுடைய பெயரை தனபதிஸிங்கினுடன் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டுமென்று மனுவு செய்தார். ஆனால் பிரதிவாதி அதை எதிர்த்தபடியால் (பிரதிவாதி தனபதியின் புத்திரன்) டிப்டிகலெக்டரானவர் அப்படி ரிஜிஸ்டர் செய்யமாட்டேனென்றும் மறுத்து விட்டார்.

1898 - வது வருஷத்தில் அப்பீல்தாரனானவன் மேலே கூறப்பட்ட ராஜிடிக்ரிபிரகாரம் தனக்கு 4000

ரூபாய் கொடுக்கப்படவேண்டுமென்று அந்த தொகையைவசூல்செய்ய சப்கோர்ட்டில் தாவாசெய்தான். கோர்ட்டாரவர்களும் அப்பீல்தாரன் தரப்பில் தீர்மானம் செய்தார்கள்.

பிறகு அதேவருஷத்தில் நரபதியினுடைய சொத்துக்களை வைத்துக்கொண்டிருக்கும்படியான வார்சுதாரர்களின் பேரில் அப்பீல்தாரனானவன் மற்றொருவியாஜ்ஜியம் தொடுத்தான். அந்த தாவாவில் மேற்கூறிய சமாச்சாரங்களெல்லாம் சொல்லிவிட்டு, உயிலின் பிரகாரம் மற்ற ஐந்து டிரஸ்டிகளும் தம்முடைய காரியங்களை செய்வதில்லையென்று மறுத்துவிட்டபிறகு தனபதி ஸிங்கென்பவன் முழுசொத்துக்களை மானேஜராக பரிபாலித்துக்கொண்டு வந்திருந்தானென்றும். உயில்பிரகாரமும் டிக்கிரியின் பிரகாரமும் பிரதிவாதியுடன் தான் டிரஸ்ட்டியாக இருக்க ஹக்குடையவனென்றும், ஆகையால் டிப்டி கலெக்டரானவர் தன்னுடைய பெயரை தனபதிஸிங்கினுடன் பதிப்பிக்க மாட்டேனென்றதவராகும், ஆகையால் அந்த சொத்துக்களுள்ள தன்னுடைய சுதந்தரமெல்லாம் பாதிக்கப்பட்டதென்றும் அப்பீல்தாரன் சொன்னான். மேலும் மேற்படி ஜில்லாவிலிருக்கும் சொத்துகளில் 8-அணுபங்குக்கு தனக்கும் தனபதி ஸிங்கினுடன் பாத்தியதையுண்டென்றும், சப்கோர்ட்டாவர்கள் டிக்கிரியின்பிரகாரம் தன்னுடைய பெயரானது பதிப்பிக்கப்படாதென்னும் பிரார்த்தனை பிரதிவாதிகள் தங்களுடைய விவர பத்திரிகையில் லக்ஷ்மீபதிஸிங்கென்பவன் தன்னுடைய டிரஸ்ட்டிவேலையை நிராகரித்தானென்றும் அதுமுதல்கொண்டு 12-வருஷகாலத்திற் கதிகமாய் டிரஸ்ட்டு சொத்துக்கள் பிரதிவாதிகளின் சுவாதீனத்திலேயேயிருந்துவிட்டதென்றும், ஆகையால் அந்தசொத்துக்கள் பரிபாலனத்தில் யாதொரு ஹக்கும் யில்லையென்றும் அவனுடைய பெயர் ரெவினியூ ரிஜிஸ்டரில் ரிஜிஸ்டர் செய்யக்கூடாதென்றும், பிரதிவாதி மேல்கண்ட ராஜிபத்திரம் தங்களை பாதிக்காதாகையால் தாங்கள் அதன்பிரகாரம் நடக்கவேண்டியதில்லையென்றும் வாதித்தார்கள்.

கோர்ட்டாரவர்கள் 12 இஷ்யூக்கள் பிரேரேபித்தார்கள். இவற்றுள் முக்கியமானவை :

(1) இதைப்பற்றி ராஜி டிக்கிரியில் கண்டிருக்கிற வார்த்தைகளுக்கு அர்த்தமென்ன, எந்த எண்ணத்துடன் அவைகள் அங்கே உபயோகப்படுத்தப்படுகின்றன.

(2) வாதிகளுக்கு அந்த சொத்துகளில் 8 அணு பங்குக்கு டிரஸ்ட்டிகளாக யிருக்கிறதற்கு ஏதாவது யூர்த்திதை யுண்டா? வாதியினுடைய பெயர் ரெவினியூ ரிஜிஸ்டர்களில் பதிவு செய்யப்படவேண்டுமா?

(3) வாதியானவர் இந்த நிலங்களை தன் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறாரா? அல்லது எப்பொழுதாவது வைத்துக்கொண்டிருந்திருக்கிறாரா?

சப்கோர்ட்டு ஜட்ஜானவர் கேஸை விசாரணை செய்து மேல்கூறிய இஷ்யூக்களையெல்லாம் வாதியின் தரப்பிலேயே தீர்மானம் செய்தார். பிரதிவாதிகள் கல்கத்தா ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள். ஹைகோர்ட்டார், இப்படிப்பட்ட ரெவினியூ விஷயங்களை ஸிவில்கோர்ட்டார் அங்கீகரித்து தீர்மானிக்ககூடாதென்றும், அப்பீல்தாரன் இந்த கேஸை தொடுப்பதற்கு லாயக்குடையவனல்லவென்றும், ஆகையால் சப்கோர்ட்டா ரவர்களுடைய டிக்கிரியானது ரத்து செய்யப்படவேண்டுமென்றும் சொன்னார்கள்.

தம்முடைய தீர்மானங்களை பின்வருமாறு யெடுத்துக்காட்டினார்கள் "இந்த வியாஜ்ஜியமானது ரெவினியூ உத்தியோகஸ்தர்கள் செய்த உத்திரவை புனர்யோசனை செய்யும் படியாக வாதிகள் கொண்டுவந்திருக்கிறார்கள். இது இருதரத்தார் வக்கீல்களாலேயும் ஒத்துக்கொள்ளப் படுகிறது. ஸிவில் கோர்ட்டாகிய நாங்கள் ரெவினியூ உத்தியோகஸ்த்தர்களுடைய நடவடிக்கைகளை புனர்யோசனை செய்வதற்கு யோக்கியதை அற்றவர்களாய் இருக்கிறோமென்று அபிப்பிராயப்படுகிறோம் ரெவுனியூ உத்தியோகஸ்தர்கள் சத்தரபதியின் பெயரை ரிஜிஸ்டர் செய்யமாட்டேனென்றதால் நஷ்டமென்பதை நாங்கள் யோசிப்பதற்கு உத்திரவில்லை.

சப்கோர்ட்டு ஜட்ஜானவர் வேறாக 1200-ரூபாய்க்கு டிக்கிரி கொடுத்திருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. ஏனென்றால் இதே வியாஜ்ஜியம் தொடுத்தகாலத்திலேயே தனக்கு சேரவேண்டிய தொகையின் பாக்கிக்காக மற்றொருதாவாவும் செய்திருக்கிறான். (வேறே ஏதாகிலும் நிபந்தனைகள் செய்யவேண்டியதிருந்தால் அந்த டிக்கிரியிலேயே செய்திருக்கலாம்).

முடிவில் ராஜியானவன் இந்த வியாஜ்ஜியத்தை தொடுக்க போதுமான காரணங்களை காட்டவில்லை. ஆகையால் கீழ்கோர்ட்டாருடைய டிக்கிரியை ரத்து செய்து வாதியினுடைய கேஸை காஸ்ட்டுடன் டிஸ்மிஸ் செய்கிறோம்.

பிரிவிகௌன்ஸலார் தீர்மானம்:—பிரதிவாதிகள் கூட இப்போது இந்தக்கேஸில் வாதிக்கவேண்டியதில்லை. ஹைகோர்ட்டார் சொல்லிய காரணங்கள் முழுதும் நாங்கள் ஒத்துக்கொள்ளுகிறோம். ஆகையால் இந்த அப்பீல்காஸ்ட்டுடன் டிஸ்மிஸ் செய்யப்படுகிறது.

பிரிவிகௌன்ஸல்.

லார்ட் ராபர்ட்ஸன்
லார்ட் அட்கின்ஸன்
லார்ட் காலின்ஸ்
ஸர் ஆண்டுரூஸ் கேபில்
ஸர் ஆர்தர் வில்ஸன்
} முன்பாக.

அத்தரஸிங்

vs.

தாகர்ஸிங்.

இந்த வியாஜ்ஜியத்தில் அடங்கிய சொத்தானது (நிலங்களும் தும்பலா என்னும் கிராமத்தில் ஒருவீடும் அமுராசாரத்தில் 7-வீடுகளும்) முதலில் தன்னுஸிங்

என்பவனுடையதாயிருந்தது. அவன் இறந்தபிறகு சொத்தை அவனுடைய மனைவிகள் எடுத்துக்கொண்டார்கள். அவர்களில் ஒருத்தி சிலவற்றை 1877-வது வருஷத்தில் தன்பெண்ணுக்கும் மற்றசொத்தை ஸர்தித் ஸிங்குக்கும் பரிசாக கொடுத்துவிட்டாள்.

தன்னுஸிங் சொத்துக்கு தயாள்ஸிங் வாரிசு. ஆனால் அவன் கையில் பணமில்லாதிருந்தபடியால் எவ்வளவு பிரயத்தனம் செய்தும் விதந்துக்கள் செய்த தர்ம்விநியோகத்தை ரத்து செய்வதற்கு தாவா செய்ய முடியாமற் போயிற்று.

கடசியாக 1891-வது வருஷத்தில் அப்பீல் தாரருடன் இரண்டு ஒப்பந்தங்கள் செய்துகொண்டான். இவைகளில் வியாஜ்ஜியம் தொடுத்து நடத்தவேண்டுமான செலவுகளை கொடுக்கவேண்டுமென்றும், வியாஜ்ஜியம் தன் பக்கம் தீர்ந்தால் வரும் சொத்துக்களில் ஒருபங்கை பிரதிபலனாக கொடுப்பதாகவும் கண்டிருந்தது.

பிறகு தொடுக்கப்பட்ட வியாஜ்ஜியத்தில் மேல்கூறியபடி சொத்துக்களை விதந்துகள் பரிசாகக்கொடுத்தது. அந்த விதந்துகள் ஜீவதிசைக்கப்புறம் செல்லுபடியாகாதென்று கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டது.

1894-வது வருஷத்திய ஏப்ரல்மாதத்தில் பரிசு கொடுத்த விதந்து இறந்தாள். மேமாதத்தில் மேற்கூறிய ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் சொத்தில் ஒருபங்கை தயாள்ஸிங் என்பவன் விற்றான்.

1899-வது வருஷத்தில் தயாள்ஸிங்கினுடைய மைனர் குமாரர்களான தாகுல்ஸிங்கும் கோஸிங்கும் அப்பீல் தாரிகளின் பேரிலும், தன் தகப்பனாகிய தயாள்ஸிங்கு பேரிலும் தாவாசெய்தார்கள்.

யாதொரு பிரயோஜனமுமில்லாமல் 30000-ரூபாயை வாங்கிக்கொண்டு தயாஸிங்கானவன் அப்பீல்தாரிக்கு சொத்துக்களை விற்றானென்றும், பிதுரார்ஜித சொத்தென்றும் தயாள்ஸிங்குக்கு விற்பதற்கு அதிகாரம் கிடையாதென்றும். ஆகையால் தம்முடைய சுதந்தரங்கள் அந்தவிற்பனையால் ஒருவகையாய் பாதிக்கப்படாதென்றும் வாதித்தார்கள்.

தகப்பனை தயாள்ஸிங் பிரதிவாதியாகிய தான் கொடுத்த விவரபத்திரிகையில் வாதியினுடைய தாவாவை ஆதரித்து தனக்கு யாதொருபிரதிபலனும் கொடுக்கப்படவில்லையென்றும், தான்குடிவெறியிலிருக்கும்பொழுது அந்த விற்பனைபத்திரம் எழுதப்பட்டதென்றும் சொன்னான்.

ஜில்லாகோர்ட்டு ஜட்ஜானவர் இருவிடத்திலிருக்கும் சொத்துக்களும் பிதுரார்ஜித சொத்து அல்லவென்று தாவாவை தள்ளிவிட்டார்.

சீப்கோர்ட்டாருக்கு அப்பீல் செய்ததின்பேரில் அம்பலாகிருமத்திலிருக்கும் சொத்தானது பிதுரார்ஜித சொத்தென்றும், அமுரஸாரத்திலிருக்கும் சொத்து பிதுரார்ஜித சொத்து அல்லவென்றும், 5480-ரூபாய் அப்பீல்தாரர்களிடத்திலிருந்து அவசர நிமித்தமாய் வாங்கப்பட்டதென்றும், அந்த தொகையில் 3500-ரூபாய் அப்பீல்தாரர்கள் பெற்றுக்கொண்டார்களென்றும், ஆகையால் மிகுதியான 1980-ரூபாய் அப்பீல்தாரருக்கு கொடுக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானித்து அதே பிரகாரம் டிக்கிரி கொடுத்தார்கள்.

இதன்பேரில் அப்பீல் தாரர்கள் பிரிவி கௌன்ஸலாருக்கு அப்பீல் செய்தார்கள் இரண்டு. கீழ்கோர்ட்டார்களும் அமுரசாரத்தில் யிருக்கும்படியான சொத்து பிதுரார்ஜித சொத்து அல்லவென்று தீர்மானித்தபடியால், அம்பலாகிராமத்திலிருக்கும் நிலங்களும் வீடும் பிதுரார்ஜித சொத்தா அல்லவா என்பது மாத்திரம் பிரிவிகௌன்ஸலார்முன் யோசிக்கப்பட்டது.

பிரிவிகௌன்ஸலார் தீர்மானம்.

இந்தக்கேஸில் நாங்கள் முக்கியமாய் தீர்மானிக்கவேண்டியது—இந்தநிலங்கள் பிதுரார்ஜிதசொத்தா அல்லவா என்பதுதான். முதல் கோர்ட்டார் அவைகள் பிதுரார்ஜித சொத்தல்லவென்று தீர்மானித்தார்கள். சீப்கோர்ட்டார் அவைகள் பிதுரார்ஜித சொத்துதானென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

பிதுரார்ஜித சொத்தென்று ரூபிக்கவேண்டியது வாதிகளுடையபொறுப்பாகும். அப்படிஅவர்கள் ரூபிக்காமல் போனதினால்தான் ஜில்லாகோர்ட்டு ஜட்ஜானவர் கேஸை டிஸ்மிஸ் செய்தார்.

இந்தவாதிகள் தம்முடைய தகப்பனார் மூலமாக பாத்தியதை உண்டாயிற்றென்று தாவா செய்தார்கள். ஆகையால் தன்னுஸிங்குக்கு தம்முடைய மூதாதையினிடத்திலிருந்து வந்திராமற்போனால் இந்த சொத்துக்கள் பிதுரார்ஜித சொத்துகளாகா. அந்த சொத்துகள் தன்னுஸிங்கினுடைய சுயார்ஜிதமல்லவென்று ஏற்படுத்தாமற் போனாரேயானால் அவர்களுடைய கேஸ் தோற்றுவிடும்.

இந்த நிலங்கள் தன்னுஸிங்குக்கு பாரம்பரியமாய் தன்முன்னோரிடத்திலிருந்து தொன்றுதொட்டு வந்ததென்று காட்டுவதற்கு கொஞ்சம்கூட சாக்ஷியமே கிடையாதென்று ஜில்லா கோர்ட்டு ஜட்ஜானவர் கண்டிருக்கிறார்.

அந்த ஜில்லாவில் சில நிலங்களை தன்னுஸிங்கு தன்கைப்பணம் செலவழித்து வாங்கினானென்று சாக்ஷிகள் சொல்லுகிறார்கள். ஆகையால் அந்தமாதிரியாகவே தன்னுஸிங்குக்கு நிலங்கள் கிடைத்திருக்கலாம் இவைகளில் சில நிலங்கள் அவனுக்கு தாயாதியினிடத்திலிருந்து வந்திருக்கலாம், ஆனால் இந்த நிலங்கள்தான் இவ்வகையாக வந்ததென்று சொல்வது அசாத்தியம்.

சீப்கோர்ட்டாரே "தன்னுஸிங்கு என்பவனுக்கு தன்னுடைய தயாதிகளிடத்தி லிருந்துவந்த சொத்துகள் தானே கைப்பணம்போட்டு வாங்கிய சொத்துகளினின்றும் வித்தியாசப்படுத்தி வரையறை மிகவும் அசாத்தியமாய் யிருக்கிறது" என்று சொல்லியிருக்கிறது. இந்த அஸாத்தியமான காரணத்தினால் தான் வாதிகளுக்கு இதுதான் பிதுரார்ஜித சொத்தென்று ரூபிக்க முடியாமற் போய்விட்டது.

Part IV.—The Love Tragеday.

ஒருபெண்ணை நேசிப்பதினால் நேரிட்ட கோரமான காக்ஷி.

ஒரு ரூபசுந்தரி கழுத்தறுந்து கிடைப்பதும் அவளை மிக்க அன்புடன் நேசித்துவந்த சோரநாயகனை போலீசார் பிடித்துக்கொண்டதும் சொற்ப மாதங்களுக்கு முன். இங்கிலாந்தில் ஹல் என்னும் பட்டணத்திற்கருகாமையிலிருக்கும் விதேர்ன்ஸியா என்னும் நகரத்தில் முன் ஹோட்டலில் ஒரு சிப்பந்தியாயிருந்த 21 வயதுள்ள கேட்லீ (Kate Lee) என்னும் சிறிய மாது தன்னுடைய தொண்டையறுந்து கீழே கோரமாய் விழுந்துகிடந்தாள். ஹல்பட்டணத்தின் நகரவாசியாகிய

ஹல் என்னும் நகரத்தில் பெண்ணை இச்சித்த கோரமான காட்சி.

சார்லஸ் ஹென்றி தூட்மான் என்பவர் போலீசார் வசத்திலிருந்தார். தொண்டை அறுந்துகிடப்பதற்கு காரணம் யாதென்று விசாரிக்கையில் மேற்செப்பிய தூட்மான் என்பவர் இறந்துகிடந்த இந்தப்பெண்ணை நீடித்தகாலம் நேசித்து வந்ததாகவும் ஒரு சனிக்கிழமையதினம் இப்பெண்மணி வேறொரு புருஷனோடு சமுத்திர தீரத்திலுள்ள பியரில் உட்கார்ந்துகொண்டிருந்ததை ஷை தூட்மான் என்பவர் கண்டுவிட்டார் அதே சனிக்கிழமை இரவு 9-மணிக்கு க்ரே (Gray) என்பவர் யாரோ ஒரு ஸ்திரி மணலில் மூர்ச்சியடைந்து படுத்துக்கொண்டிருக்கிறாளென்று நினைத்து அருகாமையில் சென்று பார்த்தபோது கொலையுண்டவளாகிய இப்பெண்மணியின் தொண்டையை யாரோ கத்தியால் அறுத்துவிட்டார்களென்றுஅறிந்து அந்தகத்தியும் அங்கேயே கொஞ்சம்தூரத்தில் கிடப்பதைக் கண்டார். பிறகு தூட்மான் என்பவர் ஒரு ஹோட்டலுக்குப் போனார், அந்த ஹோட்டல் சொந்தக்காரன் அந்த தூட்மான் என்பவர் பெருங்குடியனென்று அறிந்தவராகையால் அவர் அவரை வெளியேபோகும்படி சொல்லிவிட்டார். அதற்குப் பின் தூட்மான் என்பவர் தனக்கு போலீஸ் ஸ்டேஷனில் வேலையிருப்பதாகவும் தான் அங்கேபோகவேண்டுமென்றும் தன்னுடன் பேசிக்கொண்டுவந்தவரிடம் சொன்னார். இதுவுமன்றி 'இனி நீ நான் செய்ததைப்போல் எப்பொழுதும் செய்யாதே' என்றும் பாட்டையில் சொல்லிக்கொண்டு போனார். அப்பொழுது அவருடைய ஸ்திதிபோ நன்றாய் குடித்துவிட்டு சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தார். இந்த தூட்மான் என்பவரோ ஹல்பட்டணத்தின் ட்ராம்வேகம்பெனியில் ஒரு இளம்பிராயமுள்ள உத்தியோகஸ்தர். மரணமடைந்தபெண்ணோ எவ்வர்ணமுள்ள ரூபசுந்தரி.

Shocking Motor Fatality.

மோடார் வண்டியினால் நேரிட்ட குலை நடுக்கமான மரணம்.

தகப்பன்பழிக்குப் பழிதீர்க்கவேண்டுமென்று செய்த பயங்கரமான செயல்.

சுமார் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்ஜெனோவா (Genova) என்னும் பட்டணத்திற் கருகாமையிலுள்ள ஆல் பெங்கா (Albenga) என்னும் கிராமத்தில் ஐந்து நிமிஷத்திற்குள் ஒருமோடார் வண்டியினால் இருவர் மடிந்துவிட்டார்கள் இன்னும் இருவருக்கு மிக்க அபாயகரமான காயங்கள் பட்டன. எப்படியெனில்;—

ஆல்பங்கா கிராமத்தில் லீவின்பேரில் சவுக்கியத்திற்காக வந்திருந்த இஞ்சனியர் கலோரி (Galori) என்பவர் தன்னுடைய வீட்டிற்குத் திரும்பிவருகையில் அவருடைய 6 வயதுள்ள ஒரேபுத்திரன் அவரைக்கண்டு அவரண்டை ஓடினான் இந்தக்குழந்தை அங்கிருந்த மூலையண்டை ஓடிவரும்பொழுது இடீரென்று மூன்றுபேர் உட்கார்ந்துகொண்டிருந்த மோடார் வண்டிஒன்றை மிக்கவிரைவாய் ஓட்டிக்கொண்டு வந்தார்கள். கலோரி (Calori) என்பவரும் தானே தூரில் இக்காக்ஷியைக் கண்டு தன்பிள்ளையைப்பார்த்து 'மோடார்வண்டி வருகிறது வழியைவிட்டு விலகிப்போ' என்றுபலமுறையும் கூவினார் ஆயினும், சமயம்மிஞ்சிபோயிற்று. அந்த மோடார்வண்டி அந்தகுழந்தையின் மேலேறினவுடனே அந்தகுழந்தை இறந்து போயிற்று. தக்ஷணமே அந்தக்குழந்தையின் தகப்பன் மிக்க கோபங்கொண்டு பயித்தியம் பிடித்தவனைப்போல் தன்னிடமிருந்த துப்பாக்கியைப்பிடுங்கி வண்டியைப்பார்த்து சுட்டார். அவர் சுட்டதில் முதல்தடவைத் தவறிப்போயிற்று ஆயினும் அவர் இரண்டாம்தடவை சுட்டதில் அக்குண்டு அந்த வண்டியிலிருந்த இருபெண்களில் இளையவள் தேகத்தை ,தொளைத்துக்கொண்டுபோய் அந்தவண்டியை ஓட்டிக்கொண்டு போனவன்பேரில்பட்டு அவன் உடனே இறந்தான். அப்பெண்ணுக்கும் மிக்க அபாயகரமான காயம் பட்டது.

வண்டி ஓட்டுகிறவனையிழந்த அந்தவண்டி அதில் உட்கார்ந்துக்கொண்டிருந்த இன்னொருவருடன் விரைவாய் ஓடிக்கொண்டேயிருந்தது. அதில் உட்கார்ந்துக்கொண்டிருந்த மற்றொருநபரும் அதை நிறுத்த பயப்பட்டான். அந்த வண்டியோ கடசியாய் சமுத்திரதீரத்திலிருக்கும் ஓர் பெரியபாறையின்மீதுபோய் மோதி சுக்கச்சுக்கலாய் உடைந்துபோயிற்று. காயம்பட்ட அந்த பெண்ணோ பிழைப்பாளென்கிற திடமில்லை.

இஞ்ஜனியர் க்லோரி (Galori) என்பவர் தன்பிள்ளையை மிக்க பாசத்துடனும் துயரத்துடனும் கட்டிக்கொண்டிருக்கையில் போலீசார் அவரைப் பிடித்துக்கொண்டார்கள்.

Part V.—Supplement அனுபந்தம்.

ஆலோசனை சபையிலுள்ள இந்தியா கவர்னர் ஜெனரலவர்களால் செய்யப்பட்ட இந்த ஆக்டானது-1908-ம்௵ டிசம்பர்௴ 11௳ கவர்னர் ஜெனரல் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, யாவர்க்கும் தெரியும்படி இதனால் பிரசித்தம்செய்யப்படுகிறது :—

ACT No. XIV OF 1908.

1908-ம்௵த்து 14-வது ஆக்ட்.

AN ACT TO PROVIDE FOR THE MORE SPEEDY TRIAL OF CERTAIN OFFENCES AND FOR THE PROHIBITION OF ASSOCIATIONS DANGEROUS TO THE PUBLIC PEACE.

சில குற்றங்களை இன்னும் விரைவாய்ப் பரிசீலனை பண்ணுவதற்காகவும் பொதுஜன அமரிக்கைக்கு அபாயகரமாயுள்ள சங்கங்களைக் கூடவொட்டாதபடி தடுப்பதற்காகவும் நிபந்தனை யேற்படுத்துவதற்கான ஆக்ட்.

சில குற்றங்களை இன்னும் விரைவாய்ப் பரிசீலனை பண்ணுவதற்காகவும்பொதுஜன அமரிக்கைக்கு அபாயகரமான சங்கங்களைக் கூடவொட்டாதபடி தடுப்பதற்காகவும் நிபந்தனை யேற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவெனில் :—

சுருக்கமான பெயரும் வியாபகமும்.

1. (1) இந்த ஆக்டை, 1908-ம்௵த்திய இந்துதேசத்துக் குற்ற விசாரணைச்சட்டதிட்டத்தைத் திருத்துவதற்கான ஆக்டென்று சொல்லலாம்.

(2) இது-பங்காளம், கிழக்கு பங்காளம்-ஆஸாம் என்னும் மாகாணங்களுக்கு வியாபிக்கிறது ; ஆனால், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரல் அவர்கள்-எப்போதாகிலும், இந்தியா கெஜட்டில் விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பரமூலமாக, இந்த ஆக்ட் முழுவதையுமாவது அதன் யாதொரு பாகத்தையாவது வேறே யாதொரு மாகாணத்துக்கு வியாபிக்கும்படி செய்யலாம்.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி 1-ம் பாகத்தை யாதொரு மாகாணத்துக்கு வியாபிக்கச்செய்யும்போது ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரல் அவர்கள்-ஸ்பெஷல் பென்சை (விசேஷ நியாதிபதி சபையை) ஏற்படுத்துவது சம்பந்தமாக அந்தப் பாகத்திற்கண்ட நிபந்தனைகளை மேற்படி மாகாணத்தின் சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி பொருத்திக்கொள்வதற்காக என்ன மாறுதல்கள் செய்வது அவசியமென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரல் அவர்கள் அபிப்பிராயப்படுவாரோ அந்த மாறுதல்களுக்குட்பட்டு மேற்படி நிபந்தனைகள் செலாவணியாகுமென்று நிர்ணயிக்கலாம்.

1-ம் பாகம்.

விசேஷ நடவடிக்கை.

(இந்த) பாகம் பிரயோகப்படுவது.

2. (1) ஷெட்யூலிலே குறிப்பிட்டுள்ள யாதொரு குற்றத்தை யாதொரு மாஜிஸ்ட்ரேட் விசாரணைக்காக எடுத்துக்கொண்டிருந்து, அமரிக்கை-கிரமமான ஒழுங்கு - இவைகளைக் காப்பதன்நிமித்தம், அப்படிப்பட்ட குற்றவிஷயமான நடவடிக்கைகளுக்கு இந்த பாகத்திற்கண்ட நிபந்தனைகளைப் பிரயோகிக்கச் செய்யவேண்டுமென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரல் அவர்களுக்காகிலும் பிரதேச கவர்னமென்டாருக்காகிலும் தோற்றினால், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரல் அவர்களாகிலும் ஆலோசனைசபையிலுள்ள கவர்னர் ஜெனரல் அவர்களுடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு பிரதேச கவர்ன்மென்டாராகிலும் - அம்மாதிரி பொருள்படும்படி எழுத்துமூலமாக உத்தரவுசெய்யலாம் ; மேலும்

அவர்கள்-இந்த பாகத்திற்கண்ட நிபந்தனைகள் அப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்குப் பிரயோகப்படவேண்டுமென்று மேற்படி உத்தரவுமூலமாகக் கட்டளையிடலாம்.

1898-ம்௵த்து 5-வது ஆக்ட்.

(2) யாதொரு கேஸிலே 1898-ம்௵த்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடின்படி ஹைகோர்ட்டாருக்காவது ஸெஷன்கோர்ட்டாருக்காவது கமிட் செய்வதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தால் அப்படிப்பட்ட கேஸிலே (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி உத்தரவு செய்யக்கூடாது ; ஆனால், மேலேகண்டபடிக்கன்றி மற்றப்படி, யாதொரு குற்றம் இந்த ஆக்ட் வழங்கத்தொடங்குவதற்குமுன் செய்யப்பட்டாலுஞ்சரி, பின் செய்யப்பட்டாலுஞ்சரி 1-வது பிரிவின்படி இந்த பாகத்தை வியாபிக்கச்செய்திருக்கும் யாதொரு மாகாணத்தின் விஷயத்திலே அந்தப்படி வியாபிக்கச்செய்யப்பட்டதற்குமுன் செய்யப்பட்டாலுஞ்சரி பின் செய்யப்பட்டாலுஞ்சரி, அதன் சம்பந்தமாய் ஒரு உத்தரவு பிறப்பிக்கலாம்.

மாஜிஸ்ட்ரேட் விசாரணைசெய்வது.

3. (1) 2-வது பிரிவின்படிக்கான உத்தரவை வரப்பெற்றுக்கொள்வதன்மேல், குற்றத்தை விசாரணைக்காக எடுத்துக்கொண்டிருக்கிற மாஜிஸ்ட்ரேட்டாவது வேறே யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்குக் கேஸ் ட்ரான்ஸ்பர் செய்யப்படடிருக்கிறவிஷயத்திலே அப்படிப்பட்ட யாதொரு மாஜிஸ்ட்ரேட்டாவது - பிரியாதிபட்சமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் சாட்சியமானது குற்றஞ்சாட்டப்பட்டவரை ஷெட்யூலிற் குறிப்பிட்டுள்ள யாதொரு குற்றத்துக்காகப் பரிசீலனைக்குட்படுத்துவதற்குப் போதுமானதா என்பதை விசாரிக்கத்தொடங்கவேண்டும் ; மேலும், மேற்படி மாஜிஸ்ரேட்டானவர்-பிரியாதிக்காதாரமாக ஹாஜர்ப்படுத்தப்படக் கூடிய சகல நபர்களின் சாட்சியத்தையும் இதுகாரியத்துக்காகப் பிரமாணபூர்வகமாய் எழுதிவைக்கவும் வேண்டும் ; அல்லாமலும், அவர் - குற்றஞ்சாட்டப்பட்டவர் வலுவில் ஏதாவது சங்கதிகளைத் தெரிவிப்பதாய்ச்சொன்னால் அவைகளையும் எழுதிவைக்கலாம்.

1898-ம்௵த்து 5-வது ஆக்ட்.

(2) இந்த ஆக்டின்படி நடவடிக்கை நடத்த ஆரம்பிப்பதற்கு முன்னே யாதொரு சாட்சியின் சாட்சியமானது 1898-ம்௵த்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடின்படி எழுதிவைக்கப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எந்தக் குற்றத்துக்குச் சம்பந்தப்படுகின்றனவோ அதே குற்றத்தைப்பற்றி விசாரணைசெய்கையிலே, அந்த சாட்சியத்தை-(1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அது எடுக்கப்பட்டிருந்தாற்போலவே இந்த ஆக்டின் காரியங்களுக்காக பாவிக்கலாம்.

விசாரணையானது எக்ஸ்பார்ட்டியாக (ஒருதலையாக) இருக்கவேண்டுமென்பது.

4. குற்றஞ்சாட்டப்பட்டவர் வந்திருக்கவேண்டுமென்று மாஜிஸ்ட்ரேட் கட்டளையிட்டாலன்றி மற்றப்படி, 3-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி விசாரணை நடக்கும்போது குற்றஞ்சாட்டப்பட்டவர் வந்திருக்கக்கூடாது ; மேலும், அப்படிப்பட்ட யாதொரு விசாரணை நடந்துகொண்டிருக்கும்போது குற்றஞ்சாட்டப்பட்டவருக்குப் பிரதிநிதியாக யாதொரு ப்ளீடர் வந்திருக்கவுங்கூடாது ; அல்லாமலும், மாஜிஸ்ட்ரேட்டானவர் மேற்படி விசாரணையை நடத்திகொண்டிருக்கையிலே, எந்த நபரும் அந்த மாஜிஸ்ட்ரேட்டினுடைய கோர்ட்டுக்குள் பிரவேசிக்க எவ்வித பாத்தியதையும் உடையவராகவுமாட்டார்.

குற்றஞ்சாட்டப்பட்ட நபரை இன்னபடிக்கானால் விடுதலை செய்யவேண்டுமென்பது.

5. 3 - வது பிரிவில் உதகரிக்கப்பட்ட சாட்சியம் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவரை ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு குற்றத்துக்காகப் பரிசீலனைக் குட்படுத்துவதற்கு அந்த சாட்சியம் போதுமானதல்லவென்று மாஜிஸ்ட்ரேட் அபிப்பிராயப்பட்டால், அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர்-குற்றஞ்சாட்டப்பட்டவரை வேறே யாதொரு குற்றத்துக்காக 1898-ம்௵த்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடிற்கண்ட நிபந்தனைகளின்படி பரிசீலனை பண்ணவேண்டுமென்றோ பரிசீலனைக்காகக் கமிட்பண்ணவேண்டுமென்றோ தமக்குத் தோற்றினாலன்றி மற்றப்படி, தமக்குள்ள நியாயங்களை எழுதிவைத்து குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலைசெய்யவேண்டும் ; மேலேகண்டபடி பரிசீலனை பண்ணவேண்டுமென்றோ கமிட் பண்ணவேண்டுமென்றோ மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தோற்றினால், அவர் அப்பிரகாரமே செய்யத்தொடங்கவேண்டும்.

குற்றஞ் சாட்டப்பட்டவரைப் பரிசீலனைக்காக அனுப்ப அதிகாரம்.

6. அப்படிப்பட்ட சாட்சியம் எடுத்துக்கொள்ளப்பட்டதன்மேல் மாஜிஸ்ட்ரேட்டானவர் குற்றஞ்சாட்டப்பட்டவரை ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு குற்றத்துக்காகப் பரிசீலனைக் குட்படுத்துவதற்கு அந்த சாட்சியம் போதுமானதாயிருக்கிறதென்று தெரிந்து திருப்தியடைந்தால், அவர்—

(எ) குற்றஞ்சாட்டப்பட்டவர்மேல் என்ன குற்றம் சாட்டப்படுகிறதோ அதை நிர்ணயித்துத் தன் கையெழுத்து சகிதமாய்க் குற்றப்பத்திரிகை ஏற்படுத்தவும்,

(பி) குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பரிசீலனைக்காக ஹைகோர்ட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று கட்டளை செய்வதற்கான உத்தரவு பிறப்பிக்கவும்,

(ஸீ) மெற்படி உத்தரவுக்கும் மேற்படி குற்றப்பத்திரிகைக்கும் 3-வது பிரிவின்படி எடுக்கப்பட்ட சாட்சியத்துக்கும் ஒரு பிரதியைக் குற்றவாளிக்குக் கொடுப்பிக்கவும்,

வேண்டும்.

குற்றப்பிராதுகளை ஒன்ருயச் சேர்ப்பது.

7. 6-வது பிரிவின்படி யாதொரு குற்றப்பத்திரிகை ஏற்படுத்துகையில் மாஜிஸ்ட்ரேட்டானவர் - குற்றஞ்சாட்டப்பட்டவர்மேல் ஷெட்யூலிற் குறிப்பிடப்பட்டிராத எந்தக் குற்றம் அதே பரிசீலனையில் சாட்டப்படுகிறதோ அந்தக் குற்றத்துக்காகவும் ஒரு குற்றப்பத்திரிகை ஏற்படுத்தலாம்; மேலும், இந்த ஆக்டிற்கண்ட நடவடிக்கையானது அப்படிப்பட்ட யாதொரு குற்றப்பிராதுக்குப் பிரயோகப்படும்.

குற்றப்பத்திரிகை முதலியவைகளை ஹைகோர்ட்டுக்கு அனுப்பவேண்டுமென்பது.

8. 6 - வது பிரிவின்படி பரிசீலனைக்காக உத்தரவு செய்யப்பட்டிருந்தால் மாஜிஸ்ட்ரேட்டானவர் - அந்த உத்தரவை, குற்றப்பத்திரிகை சகிதமாகவும் விசாரணை ரெகார்ட் சகிதமாகவும் சாட்சியத்தில் ஹாஜர்ப்படுத்தவேண்டிய யாதாமொன்று சகிதமாகவும் க்ரௌன் க்ளர்க்குக்காகிலும் இது விஷயமாய் ஹைகோர்ட்டாரால் நியமிக்கப்படும் வேறே (யாதொரு) உத்தியோகஸ்தருக்காகிலும் அனுப்ப வேண்டும்.

உடன்சேர்க்கையான சாட்சிகளை ஸம்மனனுப்பி வரவழைக்க அதிகாரம்.

9. (1) மாஜிஸ்ட்ரேட்டானவர் - தமக்கு யுக்தமாகத் தோற்றினால், பரிசீலனைக்கான உத்தரவுக்குப்பிறகும், பரிசீலனை ஆரம்பமாவதற்கு முன்னும் உடன்சேர்க்கையான சாட்சிகளை ஸம்மனனுப்பி வரவழைத்து விசாரணை பண்ணலாம்.

(2) மாஜிஸ்ட்ரேட்டானவர் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி சாட்சிகளை விசாரணை பண்ணும்போது, அவர் - மேற்படி சாட்சிகளின் சாட்சியத்துக்கு ஒரு பிரதியைக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு உடனே கொடுப்பிக்கவேண்டும்.

குற்றஞ் சாட்டப்பட்டவர் பட்சமாகவுள்ள சாட்சிகள்.

10. குற்றஞ்சாட்டப்பட்டவர் - தாம் பரிசீலனை செய்யப்படுவதற்குமுன் எப்போதாகிலும் தாம் பரிசீலனை செய்யப்படும்போது சாட்சியம் கொடுப்பதற்காக ஸம்மனனுப்பி வரவழைக்கப்படவேண்டுமென்று தாம் விரும்புகிற நபர்களைக்குறித்த ஜாபிதா ஒன்றை க்ரௌன் க்ளர்க்கிடத்திலாவது மேலேகண்டபடிக்கான வேறே (யாதொரு) உத்தியோகஸ்தரிடத்திலாவது கொடுக்கலாம்.

ஹைகோர்ட்டில் நடவடிக்கை.

11. (1) இந்த ஆக்டின்படி பரிசீலனைக்காக ஹைகோர்ட்டுக்கு அனுப்பப்படும் சகல நபர்களையும் மூன்று ஜட்ஜுகள் சேர்ந்த அந்தக்கோர்ட்டின் ஒரு ஸ்பெஷல் பென்சார் பரிசீலனை பண்ணவேண்டும்.

(2) ஸ்பெஷல் பென்சார்முன் நடக்கும் எந்தப்பரிசீலனையும் ஜூரியைக் கொண்டு நடத்தப்படக்கூடாது.

(3) ஸ்பெஷல் பென்சாக ஏற்பட்டுள்ள ஜட்ஜுகளுக்குள் அபிப்பிராய பேதமுண்டானால், அந்த ஜட்ஜுகளுக்குள் பெருந்தொகையாருடைய அபிப்பிராயத்தை யனுசரித்துத் தீர்மானம் செய்யப்படும்.

ஜாமீன்.

1897-ம் ஸூ த்து 5 - வது ஆக்ட்.

12. இந்த ஆக்டின்படிக்கான நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கும்போது காவலில் வைக்கும்படி அனுப்பப்பட்ட எந்த நபரையும், அந்த நபரின் குற்றத்தைக்குறித்துப் பின்னும் விசாரணை பண்ணுவதற்குப் போதுமான காரணங்களிருப்பதாகத் தோற்றினால் 1898 - ம் ஸூத்து க்ரிமினல் ப்ரொஸீஜர்கோடின் 497-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி ஜாமீன் மேல் விடக்கூடாது.

1872-ம் ஸூ த்து 1 - வது ஆக்ட்.

சாட்சியத்தைப்பற்றி விசேஷ விதி.

13. 1872 - ம் ஸூத்திய இந்துதேசத்துச் சாட்சிய ஆக்ட் 33-வது பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, இந்த பாகம் பிரயோகப்படுகிற நடவடிக்கைகளில் யாதொரு மாஜிஸ்ட்ரேட்டானவர் யாதொரு சாட்சியின் சாட்சியத்தை எடுத்துக்கொண்டால் அந்த சாட்சியத்தை - அந்த சாட்சி இறந்துபோய் அல்லது அவரை ஹாஜர்ப்படுத்துவது கூடாமையாயிருந்து, குற்றவாளியின் பிரயோசனத்தையுத்தேசித்து அந்த சாட்சியின் மரணம் உண்டுபண்ணப்பட்டிருக்கிறதென்றோ அந்த சாட்சி ஹாஜராகாமலிருக்கிறாரென்றோ நம்ப ஹைகோர்ட்டாருக்கு நியாயமிருக்கிறபட்சத்திலே, ஹைகோர்ட்டார்முன் (அதை) சாட்சியமாகக் கொள்ளவேண்டும்.

1898-ம் ஸூ த்து 5 - வது ஆக்ட்.

நடவடிக்கை.

14. (1) 1898-ம் ஸூத்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடிற்கண்ட நிபந்தனைகள் இந்த பாகத்தில் நிர்ணயிக்கப்பட்ட விசேஷ நடவடிக்கைக்கு அவை எவ்வளவுமட்டில் பொருத்தமற்றவைகளாயிருக்கின்றனவோ அவ்வளவுமட்டிலே, இந்த பாகத்தின்படி நடத்தப்படும் நடவடிக்கைகளுக்குப் பிரயோகப்படமாட்டா.

(2) 11 - வது பிரிவின்படி பரிசீலனை நடத்தும்போது ஸ்பெஷல் பென்சார் - ஷை கோடின் 23-வது அத்தியாயத்திற்கண்ட நிபந்தனைகளை ஜூரியில்லாமல் ஹைகோர்ட்டார்முன் நடக்கும் ஒரு பரிசீலனையின் விஷயத்துக்கும் பொருத்திக்கொள்வதற்காக என்ன மாறுதல்கள் செய்துகொள்வது அவசியமென்று காணப்படுமோ அந்த மாறுதல்கள் சகிதமாய் மேற்படி நிபந்தனைகளைப் பிரயோகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

---

2 - ம் பாகம்.

சட்ட விரோதமான சங்கங்கள்.

15. இந்த பாகத்திலே :—

அர்த்தம்.

(1) "சங்கம்" என்பது - நபர்கள் சேர்ந்த யாதொரு சமாஜம் அல்லது கூட்டத்தைக் குறிப்பதற்காக அதற்கு யாதொரு பெயர் இடப்பட்டிருந்தாலும் சரி இடப்படாதிருந்தாலும் சரி அந்த சமாஜம் அல்லது கூட்டமென்று அர்த்தமாகும்; மேலும்,

(2) "சட்டவிரோதமான சங்கம்" என்பது—

(எ) கொடுமையான அல்லது பயமுறுத்தத்தக்க செய்கைகளைச் செய்யும்படி நபர்களைத் தூண்டிவிடுகிற அல்லது அவர்களுக்கு உதவிசெய்கிற யாதொரு சங்கமென்றாகிலும், எந்த சங்கத்தின் மெம்பர்கள் (அங்கத்தினர்கள்) வழக்கமாய் ஷை செய்கைகளைச் செய்கிறார்களோ அப்படிப்பட்ட யாதொரு சங்கமென்றாகிலும்,

(பி) இதனால் கொடுக்கப்பட்ட அதிகாரங்களின்படி ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்ஜெனரல் அவர்கள் சட்டவிரோதமானதென்று நிர்ணயித்திருக்கிற யாதொரு சங்கமென்றாகிலும்,

அர்த்தமாகும்.

சங்கம் சட்ட விரோதமானதென்று நிர்ணயிக்க அதிகாரம்.

16. யாதொரு சங்கமானது சட்டபரிபாலன விஷயத்திலாகிலும், சட்டம் ஒழுங்கு இவைகளைப் பாராமரிப்பது விஷயத்திலாகிலும், தலையிடுகிறதென்றோ அல்லது தலையிடுவதைத் தன்னுடைய நோக்கமாகக் கொண்டிருக்கிறதென்றோ அல்லது பொதுஜன அமரிக்கைக்கு அது அபாயகரமாயிருக்கிறதென்றோ ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரல் அவர்கள் அபிப்பிராயப்பட்டால், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரல் அவர்கள்-ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பரமூலமாக, அப்படிப்பட்ட சங்கமானது சட்டவிரோதமானதென்று நிர்ணயிக்கலாம்.

17. (1) யாராவது சட்டவிரோதமான யாதொரு சங்கத்தின் மெம்பராயிருந்தாலும், அப்படிப்பட்ட யாதொரு சங்கத்தின் சபைகளில் கலந்தாலும், அப்படிப்பட்ட யாதொரு சங்கத்தின் காரியத்துக்காகப் பொருளுதவிசெய்தாலும் அப்படிப்பட்ட யாதொரு பொருளுதவியைப் பெற்றுக்கொண்டாலும் அல்லது வேண்டினாலும், அப்படிப்பட்ட யாதொரு சங்கத்தின் காரியங்களுக்கு எவ்விதமாகவாயினும் உதவி புரிந்தாலும், அவருக்கு ஆறுமாதத்துக்கதிகப்படாத ஒரு காலவரையறைக்குக் காவல்தண்டனையாவது அபராதமாவது இவ்விரண்டுமாவது விதிக்கப்படும்.

தண்டனை.

(2) யாராவது சட்டவிரோதமான யாதொரு சங்கத்தை நிர்வாகம்பண்ணினாலும் அப்படிப்பட்ட சங்கத்தை நிர்வாகம் செய்வதில் உதவியாயிருந்தாலும், அப்படிப்பட்ட யாதொரு சங்கத்தின் சபையையாவது அந்த சங்கத்தைச்சேர்ந்த எவரேனும் மெம்பர்கள் அப்புடிப்பட்ட மெம்பர்களாகக்கூடும் சபையையாவது விருத்திபடுத்தினாலும் விருத்திபடுத்துவதில் உதவியாயிருந்தாலும், அவருக்கு மூன்றுவருஷத்துக்கு மேற்படாத ஒரு காலவரையறைக்குக் காவல்தண்டனையாவது அபராதமாவது இவ்விரண்டுமாவது விதிக்கப்படும்.

18. கிரமாசாரமான யாதொரு பிரிவினைச்செய்கை காரணமாகவேயாகிலும் பெயர் மாற்றப்பட்டிருப்பது காரணமாகவேயாகிலும் ஒரு சங்கமானது இராமற்போயிருப்பதாக எண்ணப்படமாட்டாது; ஆனால், அப்படிப்பட்ட சங்கத்தின் காரியங்களுக்காக அதன் மெம்பர்களில் எவர்களாகிலும் வாஸ்தவமாய் எவ்விதமாகவேனும் கூடிக்கொண்டிருக்கிற பரியந்தம் அந்த சமூகம் இருந்துகொண்டிருப்பதாகவே எண்ணப்படும்.

சங்கம் இருந்துகொண்டேயிருப்பது.

ஷெட்யூல்.

(3-வது பிரிவைப்பார்க்க).

1. இன்டியன் பீனல்கோடைச்சேர்ந்த அடியிற்கண்ட பிரிவுகளின்படிக்கான யாதொரு குற்றம். அவையாவன :— 1860-ம்ஷுத்து 45 - குற்றம். ஆக்ட்.

அத்தியாயம் 6, பிரிவுகள் 121, 121A, 122, 123, 124.

அத்தியாயம் 7, பிரிவுகள் 131, 132.

அத்தியாயம் 8, பிரிவு 148.

அத்தியாயம் 16, பிரிவுகள் 302, 304, 307, 308, 326, 327, 329, 332, 333, 363 364, 365, 368.

அத்தியாயம் 17, பிரிவுகள் 385, 386, 387, 392, 393, 394. 395, 396 397, 398, 399 400, 401, 402, 431 435, 436, 437, 438, 440, 454, 455, 457, 458, 459, 460.

அத்தியாயம் 22, பிரிவு 506.

2. வெடிக்கத்தக்க வஸ்துக்களைக் குறித்த 1908-ம் ஷுத்து ஆக்டின்படிக்கான குற்றம். மேலும், 1908-ம் ஷுத்து6 வது குற்றம். ஆக்ட்.

3. மேலேகண்ட குற்றங்களில் எதையாகிலும் செய்வதற்கான யாதொரு எத்தனம் அல்லது அந்தக் குற்றங்களில் எதற்காகிலும் எவ்விதமாகவேனும் உடந்தையாயிருப்பது.

இந்த ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

அராஜகசம்பந்தமான குற்றங்களை இன்னும் விரைவாய்ப் பரிசீலனை பண்ணுவதற்காகவும் பொதுஜன அமரிக்கைக்கு அபாயகரமான சங்கங்களை அடக்குவதற்காகவும் நிபந்தனை ஏற்படுத்துவது யுக்தமென்று சமீபகாலத்தில் நிகழ்ந்த சம்பவங்களால் நிரூபணமாயிருக்கிறது. இந்த நோக்கங்கள் நிறைவேறும்பொருட்டு இந்த மசோதா ஆக்ட் தயார் செய்யப்பட்டிருக்கிறது. சில குற்றங்களை ஹைகோர்ட் ஜட்ஜுகள் மூவர் சேர்ந்த பெஞ்சார் (சபையார்) பரிசீலனை செய்யும்படி 1-ம் பாகத்தில் நிபந்தனை கண்டிருக்கிறது. இந்த நடவடிக்கையிலே (கேஸை) கிரமாசாரப்படி கமிட்செய்வதில்லை; ஆனால், அந்தக் கேஸானது யாதொரு மாஜிஸ்ட்ரேட்டின்முன் எக்ஸ்பார்ட்டி (ஒருதலை) விசாரணை மூலமாய்ப்

பரிசீலனைக்காகத் தயார் செய்யப்படுகிறது; அந்தப் பரிசீலனையானது ஜூரியில்லாமலே நடந்தேறும். எந்தக் கேஸுகளுக்கு இந்த மசோதா ஆக்ட் பிரயோகப்படுமோ அவைகளுக்கு இரண்டு விசேஷ நிபந்தனைகள் பிரயோகப்படத்தக்கவைகளாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன. முதலாவதென்னவென்றால், குற்றஞ் சாட்டப்பட்டவரின் குற்றத்தைக்குறித்துப் பின்னும் விசாரணை செய்வதற்கு நியாயமான காரணமிருக்கிறமட்டிலும், ஜாமீன் மறுக்கவேண்டுமென்பதே. இரண்டாவதென்னவென்றால், மாஜிஸ்ட்ரேட்டால் விசாரணை செய்யப்பட்டிருக்கிற சாட்சி இறந்துபோய் அல்லது ஹாஜர்ப்படுத்தப்படக்கூடாமலிருந்து, குற்றஞ் சாட்டப்பட்டவரின் பிரயோசனத்தை உத்தேசித்து அவர் வராமலிருக்கிறாரென்றோ அவருடைய மரணம் உண்டுபண்ணப்பட்டிருக்கிறதென்றோ ஹைகோர்ட்டார் நம்புவதற்கு நியாயமிருந்தால் அப்படிப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தைப் பரிசீலனையில் ஒப்புக்கொள்ளலாமென்பதே.

சட்டவிரோதமான சங்கங்களை அடக்குவதற்காக 2-ம் பாகத்திலே நிபந்தனை கண்டிருக்கிறது: எந்தச் சங்கமானது கொடுமையான அல்லது பயமுறுத்தத்தக்க செய்கைகளைச் செய்யும்படித் தூண்டிவிடுகிறதோ அல்லது உதவிசெய்கிறதோ அல்லது எந்த சங்கத்தைச்சேர்ந்த மெம்பர்கள் வழக்கமாய் அப்படிப்பட்ட செய்கைகளைச் செய்கிறார்களோ அந்தச் சங்கத்தின் மெம்பர்களாயிருக்கிற அல்லது அதற்கு எவ்விதமாகவாகிலும் உதவி புரிகிற நபர்களைத் தண்டனைக்கு உள்ளாக்கியிருப்பதோடுங்கூட, அப்படிப்பட்ட சங்கங்களை நிர்வாகம் செய்கிற அல்லது விருத்திசெய்கிற நபர்களுக்கு இன்னும் கடுமையான தண்டனை ஏற்படுத்தியுமிருக்கிறது. அல்லாமலும், சில சங்கங்களைச் சட்டவிரோதமானவைகளென்று நிர்ணயிக்க ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரல் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்திருக்கிறது; மேலும், இப்படி நிர்ணயமானபிற்பாடு எவர்கள் மேற்படி சங்கங்களுடன் தங்கள் சம்பந்தத்தை (முன்போலவே) வைத்துக்கொண்டிருக்கிறார்களோ அந்த நபர்களுக்கு (மேலேகண்ட) அதே தண்டனைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த மசோதா ஆக்டானது பிரதமத்தில் பங்காளம், கிழக்கு பங்காளம் ஆஸாம் ஆகிய இந்த மாகாணங்களுக்கு வியாபிக்கிறது; அதை இந்த மாகாணங்களுக்கு வியாபிக்கச் செய்வதற்கு ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்கு அதிகாரங் கொடுத்திருக்கிறது.

ஜே. எம். மாக்பெர்ஸன்,

இந்தியா கவர்ன்மென்ட் ஸெகெர்ட்டெரி,

சட்ட நிரூபண இலாகா.

சட்டதிட்டங்கள் செய்வதற்கான சென்னபட்டணம் கவர்னரவர்களுடைய ஆலோசனைசபையின் கூட்டங்களில் வேலை நடந்தேறுவதைக்குறித்த விதிகளைச்சேர்ந்த 33-வது விதியின்படி, அடியிற்கண்ட மசோதா ஆக்டும் அதன் ஹேதுக்களும் நோக்கங்களுமடங்கிய சூசிகையும் யாவர்க்கும் தெரியும்படி பிரசுரிக்கப்படுகின்றன :—

ACT No. 4 OF 1908.

1908 - ம் ஹுத்து 4 - வது ஆக்ட்.

A BILL TO AMEND THE MADRAS ESTATES LAND ACT, 1908.

பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம் ஹுத்து ஆக்டைத் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்.

பீடிகை.

பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம் ஹுத்து ஆக்டைச்சேர்ந்த 3 (11) (c), 6 (1), 6 (4) குறிப்பிட்ட பிரிவுகளையும், 46 (1) குறிப்பிட்ட பிரிவைச்சேர்ந்த விலக்கையும், 138, 142, 153, 214 (3) குறிப்பிட்ட பிரிவுகளையும், ஷை ஆக்டைச்சேர்ந்த ஷெட்யூலிற்கண்ட B பாகத்தின் 21 குறிப்பிட்ட பகுதியையும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால். இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயரும், வழங்கத் தொடங்குவதும்.

1. இந்த ஆக்டை பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணத்து ஆக்டைத் திருத்துவதற்கான 1908-ம்ஹுத்து ஆக்டென்று சொலலாம் ; மேலும், இது-1908-ம்ஹு ஜுலைமீ முதல்தேதியிலிருந்து செலாவணியாய்க் கொண்டிருப்பதாக எண்ணப்படும்.

3-வது பிரிவைச்சேர்ந்த (11) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (c) அடையாளமிட்ட பகுதியை விட்டுவிடுவது.

2. பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம்ஹுத்து ஆக்ட் 3-வது பிரிவிலே (11) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (c) அடையாளமிட்ட பகுதியை விட்டுவிடவேண்டும்.

6 - வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவோடு விவரணத்தைச் சேர்ப்பது.

3. ஷை ஆக்ட் 6-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவுடன் அடியிற்கண்ட விவரணத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டும், அதாவது :-

"விவரணம்.—இந்த உட்பிரிவின் காரியத்துக்காக, யாதொரு நபர் ஒரு ரயத்தாக நிலத்தை வைத்துக்கொண்டிருந்து இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியிலே ஷை நிலத்தைத் தம் ஸ்வாதீனத்திலேயே வைத்துக்கொண்டிருந்தால், அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் இப்போது ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் ரயத்தாக எண்ணப்படுவார்."

6-வது பிரிவைச்சேர்ந்த (4) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கரம்பு நிலம் விடப்பெறுவதனால் அனுபோகதாரருக்கு 157 - வது பிரிவினாலுண்டாகும் பிரயோசனத்தையடைய சுதந்தரம் ஏற்படவுமாட்டாது, நிலம் ரயத்திநிலமாய்விடவுமாட்டாது.

4. மேற்படி ஆக்ட் 6-வது பிரிவைச்சேர்ந்த (4) குறிப்பிட்ட உட்பிரிவிலே "எதுவும் உண்டாய்விடமாட்டாது" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும். அதாவது :—

"எதுவும் உண்டாய்விடவும் மாட்டாது, 157-வது பிரிவினாலுண்டாகும் பிரயோசனத்தையடைய அவர் சுதந்தரமுடையவராகவும் மாட்டாது ; மேலும், கால்நடைகளை மேய்ப்பதற்காகவோ சிறிது காலத்துக்குச் சாகுபடி செய்வதற்காகவோ அந்தப்படி குத்தகைக்கு விடுவதும் உபயோகிப்பதுமான காரணத்தினாலேயே, மேற்படி நிலமானது ரயத்திநிலமாய் விடவுமாட்டாது."

46 - வது பிரிவிற்கண்ட (1) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த விலக்கான நிபந்தனையில் மாறுதல்கள்.

5. ஷை ஆக்ட் 46-வது பிரிவிற்கண்ட (1) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த விலக்கான நிபந்தனையிலே அடியிற்கண்ட மாறுதல்களைச் செய்துகொள்ளவேண்டும். அவையாவன :—

(i) "வீதத்தைக்காட்டிலும் அதிகமாகவோ குறைவாகவோ இருக்கிறதென்று" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் அதாவது :—

"வீதத்தைக்காட்டிலும் அதிகமாயிருந்து அனுபோக பாத்தியதையை அடைவதைத் தடைப்படுத்தக் கூடியதாயிருக்கிறதென்றாவது மேற்படி வீதத்தைக்காட்டிலும் குறைவாயிருக்கிறதென்றாவது"

(ii) "பிற்பாடுசொன்ன வீதப்படி குத்தகைத்தொகையை" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும். அதாவது :—

"முந்திய விஷயத்திலே நியாயமானதும் தருமமானதுமான ஒரு குத்தகைத்தொகையையும் பிந்திய விஷயத்திலே அக்கம்பக்கத்திலுள்ள அதேமாதிரியானதும் அதற்குள்ள அனுகூலங்களைப்போன்ற அனுகூலங்களே பொருந்தியுள்ளதுமான நிலங்களுக்கு வழக்கமாய்ச் செலுத்தப்படும் குத்தகைத்தொகையையும்."

138 - வது பிரிவின் திருத்தம்.

6. மேற்படி ஆக்ட் 138-வது பிரிவிலே அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்துகொள்ளவேண்டும். அவையாவன :—

(i) முதல் பாராவில் "கலெக்டர் என்னும் வார்த்தைக்குப் பார்த்தியாக "டிஸ்டரிக்ட் கலெக்டர்" என்னும் வார்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(ii) இரண்டாவது பாராவை (2) இல்க்கமிட்ட உட்பிரிவாக இலக்கமிட்டுக்கொண்டு, அந்தப்பாராவிலுள்ள "இந்தப் பிரிவிலுள்ள தேதுவும்" என்னும் வார்த்தைகளுக்குப்பார்த்தியாக "(1) குறிப்பிட்ட உட்பிரிவிலுள்ள தேதுவும்" என்னும் வார்த்தைகளையும் இலக்கத்தையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

(iii) (2) குறிப்பிட்ட உட்பிரிவாக மீண்டும் இலக்கமிட்டுள்ள இரண்டாவது பாராவுக்குப்பிறகு அடியிற்கண்ட நூதனஉட்பிரிவை அமைத்துக்கொள்னவேண்டும். அதாவது,-

"(3) இந்தப்பிரிவின்படிக்கான டிஸ்டிரிக்ட் கலெக்டருடைய உத்தரவின் விஷயத்திலே யாதொரு நிலத்துக்குடைவர் அதிருப்தியடைந்தால், அவர் அடியிற்கண்ட ஹேதுக்களிரண்டில் எதைக்கொண்டாகிலும் அந்த உத்தரவை ரத்து செய்யவேண்டுமென்றாவது திருத்தவேண்டுமென்றாவது யாதொரு ஸிவில் கோட்டில் வியாஜ்ஜிந்தொடரலாம் :—

(a) சம்பதப்பட்ட நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலையை மராமத்துசெய்ய அவர் கடமைப்பட்டிருக்கவில்லை யென்பது ;

(b) செலவில் எந்தப்பாகத்தை (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி தாம் செலுத்த உட்பட்டவராயிருக்கிறாரோ அது தப்பாய்க் கணக்கிடப்பட்டிருக்கிறதென்பது.

ஷை உத்தரவானது ரத்துசெய்யப்பட்டாலும் திருத்தப்பட்டாலும், கோர்ட்டார் அநியாயமாய் வசூல் செய்யப்பட்டிருப்பதாகக் காணப்படும் யாதொரு தொகையை வாபஸ் செய்யும்படி கட்டளையிடவேண்டும்."

142-வது பிரிவின் திருத்தம்.

7. ஷை ஆக்ட் 142-வது பிரிவிலே,—

(i) "யாதொரு வியாஜ்ஜியத்தைப் பிடிக்கவுங்கூடாது யாதொரு இன்ஜங்ஷன் என்னும் உத்தரவைப் பிறப்பிக்கவுங்கூடாது" என்னும் வார்த்தைகளுக்குப் பார்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும். அதாவது :—

"யாதொரு இன்ஜங்ஷன் என்னும் உத்தரவைப் பிறப்பிக்கவுங்கூடாது, 138 - வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி யாதொரு வியாஜ்ஜியத்தைப் பிடிக்கவுங்கூடாது ;"

(ii) "ஆனால், டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் பிறப்பித்த" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும். அதாவது :—

"ஆனால், 138-வது பிரிவின்படிக்கான உத்தரவல்லாமல் இந்த அத்தியாயத்தின்படி டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் பிறப்பித்த வேறே"; மேலும்,

(iii) "ரெவினியு போர்டாரிடத்தில்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும். அதாவது :—

"இந்த ஆக்டைச்சேர்ந்த ஷெட்யூலின் B பாகத்தில் வேறே விதமாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி."

அனுபோக பாத்தியதையில்லாத ரயத்தை (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்துவதைக்குறித்து 153-வது பிரிவுடன் சில வார்த்தைகளைச்சேர்ப்பது.

8. மேற்படி ஆக்ட் 153-வது பிரிவின் கடைசியில் அடியிற்கண்ட வார்த்தைகளைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். அவையாவன :—

"அனுபோக பாத்தியதையில்லாத யாதொரு ரயத்து இந்த ஆக்ட் ஜாரியாவதற்கு முன்னே கொடுக்கப்பட்ட யாதொரு குத்தகையின் காலவரையறை முடிவாவதன் காரணத்தினால் (நிலத்தைவிட்டு) அப்புறப்படுத்தப்பட உள்ளாயிருப்பதற்கு இந்தப் பிரிவிலுள்ள தெதனாலும் பாதகமுண்டாகமாட்டாது."

214-வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவிலுள்ள சில வார்த்தைகளை விட்டுவிடுவது.

9. ஷை ஆக்ட் 214-வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில், "ஒரு ஏஜெண்டை நியமிக்கிற அல்லது அவருக்கு அதிகாரங்கொடுக்கிற சாஸனம் நீங்கலாக" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

ஷெட்யூலிற்கண்ட B பாகத்தின் 21 குறிப்பிட்ட பகுதியிலே திருத்தம்.

10. ஷை ஆக்டைச்சேர்ந்த ஷெட்யூலிலே B. பாகத்திற் கண்ட 21-வது பகுதியின் 2வது கலத்தில் "135" என்னும் இலக்கத்திற்குப் பர்த்தியாக "137" என்னும் இலக்கத்தையும், 3-வது கலத்திலே "உத்தரவுக்காக" என்னும் வார்த்தைக்குப் பர்த்தியாக "உத்தரவின் மேல் யாதொரு நிலத்திற்குடையவரால்" என்னும் வார்த்தைகளையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்

பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்டைச்சேர்ந்த சில நிபந்தனைகளின் கருத்தின் விஷயமாய்க் காட்டப்பட்டிருக்கிற சந்தேகங்களை முக்கியமாய் நீக்கி இந்த நிபந்தனைகளை ஸ்பஷ்டமாகப் பண்ணுவதும், மசோதா தயார் செய்ததில் சம்பவித்த சில முன்பின் விரோதங்களை நிவர்த்திப்பதுமே மேற்படி ஆக்டைத் திருத்துவதான இந்த மசோதா ஆக்டின் நோக்கமாகும்.

2. பகுதி 2.—யாதொரு இனாம்தாரரிடத்திலிருந்து பாக்கியாய்ச் சேரவேண்டிய க்விட்ரென்ட், ஜோடி அல்லது இதுபோன்ற தீர்வை விஷயமாய் ரயத்தின்மேலோ அல்லது அவர் கைப்பற்று நிலத்தின் மேலோ யாதொரு நிலத்துக்குடையவரை விவகாரம் தொடரவொட்டவுங்கூடாது, நேராய் அந்த இனாம்தாரருக்கே விரோதமாக ஷை நிலத்துக்குடையவர் ஜப்திசெய்யும் காரியமாய் இந்த ஆக்டின்படி விவகாரம் நடத்தவுங் கூடாதென்பதே இந்த ஆக்டின் * நோக்கமாயிருந்தது. இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு, மேற்படி ஆக்டின் 3-ம் பிரிவிற்கண்ட (11) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த (c) அடையாளமிட்ட பகுதியை விட்டுவிட உத்தேசித்திருக்கிறது. நிலத்துக்குடையவர் இனாம்தாரரிடத்திலிருந்து தமக்குச் சேரவேண்டிய பாக்கியை வரப்பற்றிக்கொள்வதற்கு ஸிவில் கோர்ட்டுகளுக்குப் போகவேண்டும்.

** இந்த மசோதா ஆக்ட் சம்பந்தமாக 1908-ம்ஹு ஜனவரிமீ 11உ, 25உயுள்ள சட்ட நிரூபணசபை நடவடிக்கைக் குறிப்புகளின் 91-வது 92-வது பக்கங்களையும் 476 முதல் 478 வரையிலுள்ள பக்கங்களையும் பார்க்க.*

3. பகுதி 3.—மேற்படி ஆக்டின் 6-ம் பிரிவிற்கண்ட (1) குறிப்பிட்ட உட்பிரிவிலுள்ள "இப்போது தம் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிற" என்னும் வார்த்தைகளின் அர்த்தத்தைக்குறித்து சந்தேகங்கள் உண்டாயிருக்கிறபடியால், அந்த வார்த்தைகளின் அர்த்தத்தைக்காட்ட ஒரு "விவரணம்" சேர்ப்பது உசிதமென்று எண்ணப்பட்டிருக்கிறது.

4. பகுதி. 4.—மேற்படி ஆக்டின் 6-ம் பிரிவிற்கண்ட (4) குறிப்பிட்ட உட்பிரிவு இப்போது இருக்கிறபிரகாரம் அதன்படி - யாதொரு நிலத்துக்குடையவரால் காட்டு உற்பத்திக்காகவென்று வாஸ்தவத்தில் விட்டுவைக்கப்பட்டிருக்கிற நிலங்களை விவசாயசம்பந்தமான பயிர்வைத்துச் சிறிதுகாலத்துக்குச் சாகுபடி செய்வதற்காக ஒப்பந்தப்படி குத்தகைக்கு விடும்போது, அப்படி குத்தகைக்குவிடும் காரியத்தால் காட்டுநிலங்களாக அவைகளுக்குள்ள லட்சணம் போய்விடுவதுடன், அவைகள் ரயத்திநிலங்களென்னும் வகுப்புக்குள் அடங்கிப்போய்விடலாமென்றும் பயமுண்டாயிருப்பதாய்த் தெரியவருகிறது. (ஆக்டின்) தாற்பரியமென்னவென்றால், அப்படிப்பட்ட நிலங்களை கேவலம் அப்பிரகாரமாகக் குத்தகைக்குவிடுவது அல்லது உபயோகிப்பதனாலேயே அவைகள் ரயத்திநிலங்களாக ஆய்விடவுங்கூடாது, அனுபோகதாரர்களை ரயத்துக்களாகக் கொள்ளவுங்கூடாது, 157-ம் பிரிவினாலுண்டாகும் பிரயோசனத்தையடைய பாத்தியதையுடையவர்களாகவுங் கூடாதென்பதே. மசோதா ஆக்டின் 4-ம் பகுதி இதை ஸ்பஷ்டமாக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

5. பகுதி 5.—மேற்படி ஆக்ட் பிறப்பிக்கப்பட்டதற்கு முன் எழுதிக்கொடுக்கப்பட்ட குத்தகைச்சீட்டின்படி ஏற்பட்ட குத்தகைத்தொகைகள் மிகவும் அதிகமென்று எண்ணப்படுகிற விஷயங்களில்தான் - என்ன தொகையைச் செலுத்துவதனால் அனுபோக பாத்தியதையை அடையக்கூடுமோ அந்தத்தொகை இவ்வளவென்று நிர்ணயிக்கும்பொருட்டு குத்தகைத்தொகைவிஷயமான ஒப்பந்த விதமல்லாத வேறே ஒரு விதத்தைக்குறித்து ஆலோசிக்கவேண்டுமென்று 5-ம் பகுதியின் நிபந்தனை கண்டிருக்கிறது.

6. பகுதி 6.—138-வது பிரிவின்படிக்கான கலெக்டரின் (டிஸ்ட்ரிக்ட் கலெக்டரின் என்று இப்போது மாற்றிக்கொள்ளவேண்டும்) உத்தரவை ரத்துசெய்யும்பொருட்டு யாதொரு ஸிவில் கோர்ட்டிலே வியாஜ்ஜியம் தொடருவதற்கான பாத்தியதைக்கு இடமுண்டாகும்படி மேற்படி பிரிவைத் திருத்துவதற்கும் இந்த சமயத்தை உபயோகித்திருக்கிறது. மேற்படி பிரிவை விதித்தபோது, அப்பீல் செய்வதற்கென்று குறிப்பிட்டு நிபந்தனை செய்யப்படவில்லை; ஆகவே, கலெக்டரின் தீர்ப்பைக்குறித்து விவாதம் பண்ணும்பொருட்டுப் பிரவர்த்திக்கப் பொதுவான யாதொரு சுதந்தரம் இருக்குமா, இல்லாவிட்டால் அந்த தீர்ப்பே முடிவானதா என்று கேள்விபிறந்திருக்கிறது. மேற்படி தீர்ப்பைக்குறித்து நிலத்துக்குடையவர் விவாதம் பண்ணுவதற்கு ஆட்சேபமில்லை; ஆகையால், ஹேதுக்களை இன்னின்னவையென்று எடுத்துக்காட்டுவதன்மேல், வியாஜ்யஞ் செய்வதற்கான குறிப்பிட்ட சுதந்தரம் கொடுக்க உத்தேசிக்கப்படுகிறது.

7. பகுதி 7—7-ம் அத்தியாயத்தின்படி யாதொரு டிஸ்ட்ரிக்ட்கலெக்டர் நடத்தும் நடவடிக்கையின்மேல் ரெவினியு கோர்ட்டாருக்கு அப்பீல் செய்துகொள்ள மேற்படி ஆக்ட் 142-ம் பிரிவிலே நிபந்தனை கண்டிருக்கிறது; ஆனால், ஷெட்யூலைச்சேர்ந்த B பாகத்திற்கண்ட 21-வது 22-வது 3-வது பகுதிகளின்மேல் டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டாருக்கு செய்துகொள்ளலாமென்று அனுமதி கொடுத்திருக்கிற அப்பீல்களை நிவாரணைசெய்ய - மசோதா தயார் செய்வதில் உண்டான கவனப்பிசகால் மேற்படி பிரிவில் விட்டுப்போயிருக்கிறது. இப்போது இந்த முரண் நீக்கிவிடப்படுவதுமல்லாமல், 138-ம் பிரிவின்படி இப்போது செய்யப்படும் டிஸ்ட்ரிக்ட் கலெக்டரின் தீர்ப்பின்மேல் வியாஜ்ஜியந்தொடருவதற்கான சுதந்தரத்துக்காக நிபந்தனையும் ஏற்படுத்தப்படும்.

8. பகுதி 8.—ஐந்துவருஷம் அல்லது அதற்குக் குறைந்த காலத்துக்கு மேற்படி ஆக்ட் பிறப்பிப்பதற்கு முன்னிட்டெழுதிக்கொள்ளப்பட்ட குத்தகைசீட்டுகளின்படி அனுபோகபாத்தியதையில்லாத குத்தகைதாரர்களின் விஷயத்திலே, நிலத்துக்குடையவரின் பாத்தியதைகளைப் பாதுகாப்பதற்காக 8-வது பகுதி உத்தேசிக்கப்பட்டிருக்கிறது; ஆகவே, அப்படிப்பட்ட குத்தகை கழிந்துபோனவுடனே அந்த ரயத்துகளை அப்புறப்படுத்த ஷை பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது.

9. பகுதி 9.—மேற்படி ஆக்டின்படி நிலத்துக்குடையவர் கையெழுத்துபோட அல்லது உறுதிமொழி கூறவேண்டியிருக்கிற ஒவ்வொரு தஸ்தவேஜிலும் இதுவிஷயமாக எழுத்து மூலமாய் அதிகாரங் கொடுக்கப்பெற்றிருக்கிற அவருடைய ஏஜென்டு கையெழுத்து போடலாம் அல்லது உறுதிமொழி கூறலாமென்று ஷை ஆக்ட் 214-ம் பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறது; ஆனால், ஏஜென்டை நியமிப்பதற்காகிலும் அவருக்கு அதிகாரங் கொடுப்பதற்காகிலுமான சாஸனங்களைக் குறித்து ஒரு நிவாரணை செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிவாரணையின் சொல்நடையைப் பார்த்தால், யாதொரு ஏஜென்டை நியமிப்பதாகிலும் அவருக்கு அதிகாரங் கொடுப்பதற்காகிலுமான சாஸனமானது இந்த ஆக்டின்படி நிலத்துக்குடையவரே கையெழுத்து போடவேண்டியதாக அல்லது உறுதிமொழி கூறவேண்டியதாக உள்ள தஸ்தவேஜென்று அர்த்தமாகும்; ஆனால், அந்த அர்த்தம் உத்தேசிக்கப்பட்டதாகத் தோன்றவில்லை. இப்போதிருக்கிறபடி மேலேகண்ட உட்பிரிவினால் - நிலத்துக்குடையவருக்கு அதிகாரம் பெற்ற ஏஜென்ட் ஒருவர் சாதாரணமாகப் பிரதிநிதியாயிருந்தாலும் அந்த நிலத்துக்குடையவரே தன் பூஸ்திதியில் இல்லாமலிருக்கும் விஷயங்களிலும் அனுஷ்டானக்கிரமத்தில் கஷ்டங்கள் சம்பவிக்கக்கூடும்.

10. பகுதி 10.—மேற்படி ஆக்டைச்சேர்ந்த ஷெட்யூலின் B பாகத்திலுள்ள 21-வது பகுதியின் 2-வது கலத்தில் குறிக்கப்பட்டுள்ள '135' என்னும் இலக்கமானது ஸ்பஷ்டமாய் '137' என்பதற்குப் பர்த்தியாய் விழுந்த பிழையாகும் இந்தப்பகுதியிஇ 3-வது கலத்திலுள்ள பதிவையும் அதன் தாற்பரியம் தெளிவாய்த் தோன்றும்படி விஸ்தாரப்படுத்தியிருக்கிறது.

1908-ம்ஹு டிஸெம்பர்மீ 21உ. ஜி. எஸ். பார்ப்ஸ்.

எச். டி. டெய்லர்,

ஆலோசனைசபையின் ஸெகெர்டெரி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
30 MAR 1911
MADRAS.

இந்திய சட்ட கெஜட்.

உயர்தர மாதாந்திர சஞ்சிகை.

பத்திராதிபர் :—கமிட்டியார்.

பிரசுரிக்கிறவர்கள் :—ந. ராதாகிருஷ்ண அண்டு கோ.

வால்யம் 5.] சென்னப்பட்டணம் 1910ஹு அக்டோபர்மீ [பாகம் I.

அடக்கம்.

		பக்கம்.
1.	லார்ட் ஹார்டிஞ்ச் படம்	
2.	சாட்சி சொல்பவர்களுக்கு சட்டத்திலுள்ள அனுகூலம்	1
3.	தீங்கு ஹிம்சைகளைப்பற்றிய சட்டம்	3
4.	ஹிந்திலா	5
5.	முக்கியமான தீர்ப்புகள்...	7
6.	இந்தியன் லா ரிப்போர்ட்டு கேசுகள்	13
7.	விவசாயக் குறிப்புகள்	33
8.	ரெவினியூ விளம்பரங்களும், சர்க்குலர்களும்	36
9.	பொது வர்த்தமானங்கள்	37
10.	சட்ட சம்பந்தமான இதர கேசுகள்	39
11.	பென்ஹர்ஸ்ட் லார்ட் ஹார்டிஞ்ச் பிரபு	40

சந்தா விபரம்.

வருஷ சந்தா ...	ரூபா	4–14—0	மூன்று மாதத்திற்கு	ரூபா 1—4—0
ஆறுமாதத்திய சந்தா	,,	2—8—0	(டிபால் சார்ஜி கிடையாது	

சந்தா தொகையை அட்வான்சாகவே கட்டவேண்டியது அவசியம்.

NOTICE :—Contributions other than original are neither invited nor required. All literary contributions and books for Review should be addressed to Mr. V. NATHAMUNI MUDALIAR, late Tamil Bench Clerk, High Court, Appellate Side, Madras, Editoral Staff, INDIAN LAW GAZETTE, Madras.

இந்திய சட்ட கெஜட்.

"இந்திய சட்ட கெஜட்டில்":—அடியில்கண்ட விஷயங்கள் பிரசுரிக்கப்பட்டுவரும்.

(a) கல்கத்தா ஹைகோர்ட்டார், பம்பாய் ஹைகோர்ட்டார், அலகபாத் ஹைகோர்ட்டார் பிரதிமாதம் பிரசுரிக்கும் இந்தியன் லா ரிப்போர்ட் (Indian Law Reports) என்று ஆங்கிலத்தில் வழங்கிவரும்படியான இந்திய சட்ட ரிப்போர்ட்டுகளில் சொல்லப்பட்டிருக்கும் ஒரிஜனல், அப்பீல், சிவில் கிரிமினல் குயாஜ்ஜியங்களின் விர்த்தாந்தங்களும் சட்டக் குறிப்புகளும் ஒன்றும் தவராமல் சங்கிரகமாக எழுதப்பட்டுவரும்.

(b) பிரிவி கௌன்சில் வியாஜ்ஜியங்களும், தீர்ப்புகளும், போடப்பட்டு வரும்.

(c) இங்கிலாண்டு, பிரான்சு, ஜெர்மெனி, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய தேசங்களின் கோர்ட்டுகளில் நடக்கும் ஆச்சரியக் கேசுகள்.

(d) இந்தியாவின் இதர மாகாணங்களில் நடக்கும் முக்கியமான கேசுகள் விசாரணை விபரத்துடன்,

(e) சென்னை ராஜதானியிலுள்ள ஹைக்கோர்ட்டிலும் கீழ்க்கோர்ட்டிலும் விசாரணை செய்யப்பட்டுவரும் முக்கியமான வியாச்சியங்கள் வாக்குமூலத்துடன், சென்னை செஷன் கோர்ட்டிலும் வெளி ஜில்லா செஷன் கோர்ட்டுகளிலும் நடக்கும் கேசுகள் சாக்ஷி வாக்குமூலத்துடன்.

(f) கோர்ட் தீர்ப்புகள் சட்ட ஒழுங்கைத் தவறியிருப்பதாகக் காணப்பட்டால் அதை எடுத்து விவகரித்துப் பேசுதல்.

(g) இன்னின்ன காரியங்களுக்கு இத்தனை ரூபாய் ஸ்டாம்பில் பத்திரமெழுத வேண்டுமென்னும், அதற்கு எவ்வளவு ரிஜிஸ்டர் சார்ஜ்.

(h) வியாச்சியத் தொகைக்குள்ள ஸ்டாம்பு விபரம்.

(i) அதிகாரிகள் சட்ட வரம்பு கடந்து அமுல் நடத்தினால் அதைப்பற்றி கண்டித்துப் பேசி அரசாங்கத்தாரின் கவனத்தை இழுத்தல்.

(j) கவர்ன்மெண்டார் அப்போதைக் கப்போது வெளிப்படுத்தும் கவர்ன்மெண்டு சர்க்கியுலர்களும் ரெவினியூ போர்ட் புரோசிடிங்ஸ்களும், போலீஸ் ஆக்டர்களும் போர்ட் செயின்ட் ஜியார்ஜ் கெஜட்டிலும், ஜில்லா கெஜட்டிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கும் சட்ட சம்பந்தமான பிரசுரங்கள்.

(k) இந்தியாவிலுள்ள நீதி இலாகா உத்தியோகஸ்தர்களின் மாறுதல்கள்.

(l) வைசிராய் சட்ட சபையிலும் லோகல் கவர்ன்மெண்டார் சட்ட சபையிலும் பாசாகும் ஆக்ட்டுகளும், ஆலோசனைக்கு வரும் மசோதாக்களும்.

(m) சட்ட சபைகளில் ஜனப்பிரதிநிதி அங்கத்தினர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளும் அவைகளின் ஜவாப்புகளும்.

(n) சீர்மைப் பார்லிமெண்டில் இந்தியா சட்டங்களைப்பற்றி நடக்கும் பிரஸ்தாபங்களும் தீர்மானங்களும்.

(o) இந்துலா, முகமதியலா, இந்தியன் பினல் கோட், கிரிமினல் புரோசிஜர் கோர்ட் இந்திய சாக்ஷி சட்டம் 1867-ம் வருஷத்திய ரென்ட்ரிக்கவரி ஆக்ட் (1908-ம் வருஷத்திய 1-வது ஆக்ட்) முதலிய பல சட்டங்களைத் தழுவி இந்தியாவிலுள்ள கோர்ட்டார்கள் அப்போதைக்கப்போது சொல்லும் தீர்ப்புகள்.

(p) கோர்ட் விடுமுறை நாட்கள்.

(q) வியாச்சியமாடும் கக்ஷிகாரர்கள் தரித்துகொள்ளவேண்டிய சட்ட முறைகள்.

2. "இந்திய சட்ட கெஜட்டில்" மேல் கூறப்பட்ட சமாசாரங்களெல்லாம் சம்பூரணமான [illegible]ட்ட ஞானமும் நீடித்த அனுபோகமுமுடைய படிப்பாளிகளாலும் லாயர்களாலும் நிரூபநேயர்களா[illegible]ம், நம் தேசத்துப் பெண்மணிகள்கூட இலகுவில் வாசிக்கும்படியான எளிய சிங்காரச் செந்தமிழ் [illegible]நடையில் வாசிக்க வாசிக்க தெவட்டாத இன்பத்தையும் கொடுக்கும்படியாக எழுதி வரப்படும்.

3. "இந்திய சட்ட கெஜட்டு":—மாதாந்திர சஞ்சிகையானபடியால் ஒவ்வொரு மாதமும் நான்[illegible]காவது வாரம் பிரசுரிக்கப்படும்.

4. "இந்திய சட்டகெஜட்டின்" வருஷசந்தா { உள்ளூராருக்கு 4-8-0 / வெளியூராருக்கு 4-14-0 (தபாற்சார்ஜ் உள்பட) ஒரு வருஷத்திற்கு மாதம் ஒரு சஞ்சிகையாக 12 சஞ்சிகைகளும், அப்போதைக் கப்போது பிரசுரமாகும் சப்ளிமெண்டுகளும் அனுப்பப்படும்.

5. "இந்திய சட்ட கெஜட்டின்":—ஒவ்வொரு மாதாந்திர சஞ்சிகையிலும் ஒரு பொட்டகிராப் [illegible]படம் பிரசுரிக்கப்படும். இந்தப் படம் ஒன்றே ஒரு ரூபாய் மதிப்புள்ளது.

ந. ராதாகிருஷ்ண கம்பெனியார்,

மானேஜர்கள்,

இந்திய சட்ட கெஜட் ஆபீஸ்,

33-நாட்டுப் பிள்ளையார் கோவில் வீதி,

ஜியார்ஜ்டௌன் மதருஸ்.

Lord Hardinge of Penhurst,
THE NEW VICEROY GOVERNOR-GENERAL OF INDIA.

நமது இந்தியா தேசத்திற்கு புதிதாய்வரும் வைசிராயென்னும் இராஜப் பிரதிநிதியாகிய, கவர்னர் ஜெனரல் லார்டு ஹார்டிஞ்ச் பிரபு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS.
REGISTERED
30 MAR 1911
MADRAS.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் V.] சென்னப்பட்டணம், 1910ஞ அக்டோபர்மீ [பாகம் 1.

IMMUNITY OF WITNESSES.

ஓர் வியாஜ்ஜியத்தில் சாட்சி சொல்லும் நபர்களுக்கும் கக்ஷிதாரர்களுக்கும் சட்டத்தில் சொல்லியிருக்கும் மன்னிப்பு.

சாதாரணமாய் கோர்ட்டுகளென்று ஏற்பட்டிருக்கும் நியாயஸ்தலங்களில் பாரபட்சமின்றி கிரமமாய் நியாய பரிபாலனம் செய்யும்பொருட்டு சாட்சிகளை வரவழைத்து அவர்களை விசாரித்து அவர்களுடைய வாக்குமூலங்களை ஆதாரமாய்க்கொண்டு நியாய பரிபாலனம் செய்யவேண்டி யிருப்பதால்; அப்படி சாட்சிகளை சம்மன் கொடுத்து கோர்ட்டுக்கு வரவழைத்து பிரமாணத்தின்பேரில் கோர்ட்டில் விசாரணை செய்கையில் அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தினால் அவர்கள்மீது சிவிலில் வியாஜ்ஜியம் செய்து நஷ்டம் வசூல் செய்யவேண்டுமென்று கொண்டுவரும் தாவாவினால் அநேகர் கோர்ட்டுக்கு வந்து சாட்சியாய் வாக்குமூலம் கொடுக்கப் பயப்படுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் அப்படி வாக்குமூலம் கொடுப்பதினால் அவர்கள் சாட்சியமாய் சொன்ன பேச்சை ஆதாரமாகக்கொண்டு தாவா செய்ய நியாயமுண்டு என்கிறது அவர்களுக்கு சதா பயத்தை யுண்டாக்கிக்கொண்டே யிருக்கிறபடியால் அந்த வாக்குமூலத்தை ஆதாரமாய்க்கொண்டு அவர்கள்பேரில் நஷ்டத்திற்காக தாவா செய்ய நியாயம் கிடையாதென்று இங்கிலாந்து கோர்ட்டுகளில் தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

இது விஷயமாய் இங்கிலாந்தில் சட்டம் இப்படிக்கிருக்க இந்தியா தேசத்தில் இதைப்பற்றி என்ன நிபந்தனைகள் ஏற்பட்டிருக்கின்றனவென்று பின்வருமாறு சில தீர்மானங்களைப் பார்ப்போம். இன்னும் இந்தியாவில் இதைப்பற்றி திருப்திகரமான ஓர் முடிவான தீர்மானம் கிடையாது. இப்படி ஒரு சாக்ஷி ஓர் கோர்ட்டில் கொடுத்த வாக்குமூலத்தின்பேரில் அவன்மீது நஷ்டத்திற்கு தாவா செய்வதைப்பற்றி சட்டம் என்ன சொல்லுகிறதோ அதையும் கவனிப்போம். இந்த அம்சத்தைப்பற்றி முதல் முதல் வந்த தாவாவாகிய பாபுகனேஷ்டம் சிங்க்-Vs-முக்னிராம் சவுத்ரி 11 பங். லா. ரி 321; S. C. 17 W. R. 283. P. C.) என்னும் வியாஜ்ஜியத்தில் பிரிவி கவுன்சலார் செய்திருக்கும் தீர்மானத்தை இதேமாதிரியான பின்னிட்ட கேசுகளிலும் ஆதாரமாய்க்கொண்டு தீர்ப்பு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த கேசில் பிரதிவாதிகள் வாதியின்பேரில் கிரிமினல் வியாஜ்ஜியம் செய்தார்கள். அதை மாஜிஸ்ட்ரேட் தள்ளிவிட்டார். அதன்பேரில் வாதி பிரதிவாதிகளின்பேரில் நஷ்டத்திற்கு இந்த தாவா செய்தான். மந்திராலோசனை சபையிலுள்ளவர்கள் அபதூறு செய்தானென்று நஷ்டத்திற்கு தாவா கொண்டுவர நியாயம் கிடையாதென்றும், யாதேனும் ஓர் கோர்ட்டில் சாட்சியாய் வாக்குமூலம் கொடுத்தால் அந்த சாக்ஷி சொன்ன பேச்சுகளின்பேரில் அவன் அபதூரான பேச்சுகள் சொன்னானென்று அவன்பேரில் நஷ்டத்திற்கு தாவா செய்வதினால் சாட்சிகள் தங்கள்பேரில் நஷ்டத்திற்கு தாவா செய்வார்களென்று பயந்து அவர்கள் தங்களுக்குத் தெரிந்திருக்கும் பூராப் பேச்சையும் சொல்ல பயப்படுகிறார்கள் ஆகையால் சாக்ஷிகளின்பேரில் நஷ்டத்திற்காக தாவா செய்வது நியாயமல்லவென்றும் அவர்கள் கிரிமினல் சட்டப்படியாய் சாட்சியம் சொன்னதிற்காக நடவடிக்கைகள் நடத்தலாமென்றும் தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

இது விஷயமாய் மதராஸ் ஹைகோர்ட்டார் என்ன சொல்லியிருக்கிறார்களென்று பார்த்தாலோ:— அவர்கள் முன் முதல் முதல் வந்த கேசு ஹின்டி-Vs-பெளட்ரி (இ-லா-ரி-2ம 13) இந்த கேசில் வாதிகளும் பிரதிவாதிகளும் வியாபாரம் செய்யும் இரண்டு கம்பெனி கூட்டத்தார். வாதி பிரதிவாதிகள் இருவரிடத்திலும் லாவாதேவிசெய்யும் ஒரு கடன்காரன்பேரில் பிரதிவாதி கம்பெனியார் ரொக்கம் வசூல் செய்வதற்காக கொண்டுவந்த தாவாவில் தன்னை தூஷித்து அபதூரான பேச்சுகளெழுதி மனு கொடுத்தானென்றும், ஆகையால் அதனால் தன்னை மானபங்கம் செய்தானென்றும் நஷ்டத்திற்குத் தாவா செய்தான். இந்த கேசில் இங்கிலாந்து கோர்ட்டுகளில் செய்திருக்கும் தீர்மானங்களை ஆதாரமாய்க்கொண்டு அப்படி சிவிலில் நஷ்டத்திற்காக தாவா செய்ய நியாயம் கிடையாதென்று சொல்லிவிட்டார்கள்.

மதராஸ் ஹைகோர்ட்டில் நடந்த இன்னொரு கேசு என்னவென்றால் சிதம்பர-Vs-திருமணி (இ-லா-ரி-10 ம 87) இந்த கேசில் ஒருவன் ஒரு வியாஜ்ஜியத்தில் பொய் வாக்குமூலம் கொடுத்தானென்று அவனிடமிருந்து நஷ்டம் வசூல் செய்வதற்காக கொண்டுவந்த தாவா அதில் இப்படி சாட்சி சொன்ன வாக்குமூலத்தின்பேரில் நஷ்டத்திற்கு நம்பர் செய்ய நியாயம் கிடையாதுகிரிமினலில் பொய் சாட்சியம் சொன்னதற்காக பிராது கொடுக்கலாமென்று சொன்னார்கள். இதற்குப் பின்னிட்ட ஒரு கேசில் அதாவது, சல்லிவன்-Vs-நார்ட்டன் இ-லா-ரி-10 ம 28 இம்மாதிரியாகவே சிவில் வியாஜ்ஜியம் செய்ய நியாயம் கிடையாதென்று இங்கிலாந்தில் செய்திருக்கும் தீர்மானங்களை ஆதாரமாய்க்கொண்டு தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள்.

இதே விஷயமாய் பம்பாய் ஹைகோர்ட்டார் சொல்லியிருப்பதை கவனித்துப் பார்க்கில் அவர்களுக்கு முன் இம்மாதிரியான கேசு முதல் முதல் வந்தது நாத்ஜிமுலேஷ்வர் Vs லாப்பாய் ரவிட்ட (இ. லா. ரி. 14 பம் 97) இதில் எம்-என்பவன் ஒருவன் கொண்டுவந்த தாவாவில் தாக்கல் செய்த ஒரு மனுவில் தன் பேரில் அபதூராய் தன்னை மானபங்கம் செய்யும்பொருட்டு சில பேச்சுகளைக் கண்டெழுதியிருந்தான். ஆகையால் தனக்கு நஷ்டத் தொகை வசூலாகவேண்டுமென்று கொண்டுவந்த தாவா மேற்படி மனுவில் சொல்லியிருப்பவைகள் அபதூரான பேச்சாயிருந்திடினும் அதை ஆதாரமாய்க் கொண்டு நஷ்டம் கேட்க இங்கிலாந்தைப்போல் இந்த இந்தியா தேசத்திலும் நியாயம் கிடையாதென்று சொல்லிவிட்டார்கள்.

ஆனால் அலகபாத் கோர்ட்டார் வேறே விதமாய் இதற்கு விரோதமான அபிப்பிராயம்கொண்டு அவர்களிடத்தில் வந்த கேசில் அதாவது; அப்துல் ஹக்கீம் Vs டேஜ் சந்தர் மூக்கர் ஜி (இ. லா. ரி. 8 அ 15) இது விஷயமாய் சிவில் கோர்ட்டில் நஷ்டத்திற்காக செய்த தாவாவில் டிக்ரி கொடுத்தார்கள். அதே கோர்ட்டில் இன்னொரு கேசில் அதாவது டவான்சிங்க்-Vs-மாஹிப்சிங்க் (இ. லா. ரி. 10 அ 425.)

இந்த கேசில் ஒரே விதமான அபிப்பிராயம் கொண்டு இங்கிலீஷ் கோர்ட்டுகளில் ஏற்பட்டிருப்பதைப்போல் தீர்மானம் செய்தார்கள். இந்த வியாஜ்ஜியத்தில் வாதியாயிருப்போனை எ-ன்பவன் ஒருவன் இந்த பிரதிவாதியின்பேரில் கொண்டுவந்த தாவாவில் சாட்சியாய் சம்மன் செய்து அவன் சாட்சியம் சொன்னதில் தனக்கும் பிரதிவாதிக்கும் யாதொரு மனஸ்தாபமும் விரோதமும் கிடையாதென்று சொல்லியிருந்தான். இந்த தாவாவில் சாட்சியம் சொன்னபோது தனக்கும் பிரதிவாதிக்கும் விரோதமுண்டென்று சொன்னான். அந்த விரோதத்திற்கு காரணம் யாதென்றுகோர்ட்டார் விசாரித்ததில் பிரதிவாதி-வாதியை ஓர் தட்டுவாணி பிள்ளையென்றுசொன்னான். மி-ர். ஜ. ப்ரேஜர்ஜட்ஜ் என்பவர் இங்கிலாந்து தீர்மானங்களை ஆதாரமாய்க்கொண்டு நஷ்டத்திற்கு சிவில் தாவா செய்ய நியாயம் கிடையாதென்று சொல்லிவிட்டார். இது இப்படிக்கிருக்க கல்கத்தா ஹைகோர்ட்டார் இதைப்பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களென்று பார்ப்போம்:— இவர்கள் முன் வந்த பீகம்பர்சிங்க்-Vs-பேச்சராம் சர்க்கார் (இ. லா. ரி. 15 கல் 247) என்னும் கேசில் வாதி பிரதிவாதி இன்னொரு கேசில் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன். சாட்சியாய் சொல்லிய வாக்குமூலத்தில் தன்னைப்பற்றி நிந்தனையாய் அபதூரான வார்த்தைகள் சொன்னதாக நஷ்டத்திற்கு தாவா செய்தான். இந்த நம்பரில் சிவில் வியாஜ்ஜியம் செய்ய தகுந்த வியாஜ்ஜியமூலம் கிடையாதென்று சொல்லிவிட்டார்கள். ஆனால் இதற்கு பின்னிட்ட கேசுகளில் சிவில் தாவா செய்ய நியாயமுண்டென்று தீர்மானம் செய்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 23 கல் ; 28 கல் 794) ஆகையால் மேலே சொல்லியவைகளை யோசிக்குமிடத்து மதராஸ் பம்பாய் ஹைக்கோர்ட்டார்கள் இங்கிலாந்து கோர்ட்டுகளைப்போல் சிவில் வியாஜ்ஜியம் கிடையாதென்று சொல்லியிருக்கிறார்கள். அலகபாத் கல்கத்தா கோர்ட்டார் சிவிலில் நஷ்டத்திற்கு தாவா செய்யலாமென்றும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

சாட்சிகள்:—பொய் சாட்சிகள் கோர்ட்டில் சத்தியத்தின்மேல் வாக்குமூலம் கொடுக்கையில் பொய் சாட்சியம் சொன்னால் சிவில் கோர்ட்டில் நஷ்டத்திற்காக தாவா செய்யலாகாதென்று தீர்ப்பு சொல்லியிருக்க அவர்கள்மீது கிரிமினலில் என்ன நடவடிக்கைகள் செய்யலாமோ அதைப்பற்றி அடுத்த சஞ்சிகையில் விசதமாய்க் கூறுவோம்.

(இன்னும் வரும்.)

LAW OF TORTS.

தீங்கு-ஹிம்சை இவைகளைகுறித்த சட்டம்.

——:o:——

அக்கிரமமாய் தடுப்பதையும் அடைத்து வைப்பதையுங் குறித்து-ஒருவனுக்கு எந்த வழியாகப்போக பாத்தியதை யிருக்கிறதோ அந்த வழியாக அவனை போக வொட்டாமல் எவனாவது வேண்டுமென்று தடுத்தால் அவன் அக்கிரமமாய் தடுக்கிறவனென்று சொல்லப்படுவான். இதற்கு விலக்காய்:—தரையின் மேலாவது தண்ணீரின்பேரிலாவது போகிற பொதுவல்லாத ஒருவனுடைய சொந்த வழியைத் தடுப்பதற்கு நியாயமாய்த் தனக்கு பாத்தியதை யுண்டென்று ஒருவன் நல்லெண்ணத்தோடு நம்பி அதைத் தடுப்பது இந்தப் பிரிவின்படி குற்றமாகமாட்டாது.

திருஷ்டாந்தம்.

எந்த வழியாய்ப்போக எ-என்பவனுக்குப் பாத்தியதை யிருக்கிறதோ அந்த வழியைத் தடுக்கிறதற்கு தனக்கு பாத்தியதை யுண்டென்று பி. என்பவன் நல்ல எண்ணத்தோடில்லாமல் அதைத் தடுத்தால், அதனாலே எ-என்பவன் போகிறதற்குத் தடங்கலுண்டாகிறது, ஆகையால் எ-என்பவன் அக்கிரமமாய்த் தடுத்தவனாகிறான்.

சாதாரணமாய் ஒருவனை குறித்த ஒரு சுற்றெல்லைக்கப்பால் போக வொட்டாமல் எவனாவது எவ்விதமாகிலும் அக்கிரமமாய்த் தடுத்தால், அவன் மேற்படியானை அக்கிரமமாய் அடைத்தவனென்று சொல்லப்படுவான்.

திருஷ்டாந்தங்கள்.

1. எ-என்பவன் பி-என்பவனை சுத்தி சுவர் போட்டிருக்கும் ஓரிடத்திற்குள் போரும்படி. செய்து அவனை அவ்விடத்தில் பூட்டு போட்டால் அதனாலே பி-என்பவன் அந்தச் சுற்றுச் சுவருக்கப்பால் எந்தப் பக்கத்திலாவது போக வொட்டாமல் தடுக்கப்படுகிறான். ஆகையால் பி-என்பவனை எ-என்பவன் அக்கிரமமாய் அடைத்து வைத்தவனாகிறான்.

2. எ-என்பவனிருக்கிற ஒரு கட்டிடத்தின் வாசற்படியண்டை பி-என்பவன் சிலபேரைத் துப்பாக்கிகளோடு கூடவைத்து, அந்தக் கட்டிடத்தை விட்டு வெளியில்வர நீ எத்தனப்பட்டால் உன்னை அவர்கள் சுட்டுப் போடுவார்களென்று எ-என்பவனுக்குச் சொல்வானாகில் பி-என்பவன் எ-என்பவனை அக்கிரமமாய் அடைத்தவனாகிறான்.

எவனையாவது அக்கிரமமாய்த் தடுக்கிறவன் ஒரு மாதத்திற் கதிகப்படாமல் வெறுங் காவலில் வைக்கப்படுவான், அல்லது ஐந்நூறு ரூபாய் வரையில் அபராதத்திற்குள்ளாவான் ; அல்லது இரண்டு தண்டனைக்கும் உட்படுவான்.

எவனையாவது அக்கிரமமாய் அடைக்கிறவன் ஒரு வருஷத்திற்கு அதிகப்படாமல் இருவகைக் காவலிலெதிலாகிலும் வைக்கப்படுவான், அல்லது ஆயிரம் ரூபாய் வரையில் அபராதத்திற்குள்ளாவான் அல்லது இரண்டு தண்டனைக்கும் உட்படுவான்.

ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் எ-என்பவனைப் பிடித்து பலவந்தமாய் மறித்து மிறட்டி ரூபாய் 200 வாங்கியதற்காக குற்றஞ் சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டான் எ-என்பவனுக்கு சி-என்பவன் ஒருவன் இந்த காரியத்திற்காக பணம் கடன் கொடுத்தான். இவன் சாட்சியம் அக்கம்பிலிஸ் (உடன் குற்றவாளி) அல்லவென்று அங்கீகரிக்கப்பட்டது. ஏனெனில் இந்தப் பணம் சுய இச்சையுடன் கொடுக்கப்பட்டதல்ல போலீசார் அக்கிரமமாக முகாந்திரமின்றி கைதி செய்வதினின்று தப்பித்துக்கொண்டு தம்மை மீட்டுக்கொள்ளும்பொருட்டு கொடுக்கப்பட்ட பணம். இப்படி பணம் கொடாமற்போனால் விடவேண்டியிருக்க விடமாட்டேனென்று போலீஸ் இன்ஸ்பெக்டர் பய முறுத்தியதினால் சி-என்பவன் இன்ஸ்பெக்டர்உடன்குற்றவாளியல்ல (இ. லா. ரி. 27 கல் 925) எவனையாவது மூன்று நாள் முதல் ஒன்பது நாள் வரையில் எத்தனை நாளைக்காகிலும் அக்கிரமமாய் அடைத்து வைப்பவன் இரண்டு வருஷத்திற்கதிகப்படாமல் இருவகைக்காவலிலெதிலாகிலும் வைக்கப்படுவான், அல்லது அபராதத்திற்குள்ளாவான், அல்லது இரண்டு தண்டனைக்கும் உட்படுவான்.

எவனையாவது பத்து நாளைக்காகிலும் அதற்கு மேற்பட்டாகிலும் அக்கிரமமாய் அடைத்து வைப்பவன் மூன்று வருஷத்திற் கதிகப்படாமல் எவ்வளவு காலத்திற்காவது இருவகைக்காவலிலெதிலாகிலும் வைக்கப்படுவது மல்லாமல், அபராதத்திற்கும் உள்ளாவான். அடைக்கப்பட்டிருக்கிறவனை விட்டுவிடும்படி கிரமமாய்க் கட்டளைப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதென்று அறிந்துகொண்ட பின்பும் எவனாவது அவனை விட்டுவிடாமல் அக்கிரமமாய் அடைத்து வைத்திருந்தால், அவன் இந்தியன் பினல் கோடின் பிறகாரம் காவலிலிருக்கும்படி விதிக்கப்படுகிற தண்டனையை அநுபவிப்பதும் தவிர இன்னும் இரண்டுவருஷத்திற் கதிகப்படாமல் இருவகைக் காவலிலெதிலாகிலும் வைக்கும்படியான தண்டனைக்குள்ளாவான்.

யாதாம் ஒருவனை எவனாவது அக்கிரமாய் அடைத்து வைத்தால் அப்படி அடைத்து வைத்தது அடைக்கப்பட்டவனைச் சேர்ந்த யாவனொருவனுக்காகிலும் யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தனுக்காகிலும் தெரியாமலிருக்கவேண்டுமென்றாவது, அப்படி அடைத்திருக்கிற இடமானது அப்படிப்பட்டவர்களுக்குத் தெரியாமலாகிலும் அவர்களால் கண்டுபிடிக்கப்படாமலாகிலும் இருக்கவேண்டுமென்றாவது எண்ணங்கொண்டு அடைத்து வைத்ததாக தெரியவருகிற பட்சத்தில் அப்படி அடைத்து வைத்

தவன் அக்கிரமமாய் அடைத்து வைப்பதற் குண்டான வேறே யாதொரு தண்டனையை அனுபவிப்பதுந் தவிர, இன்னும் இரண்டு வருஷத்திற் கதிகப்படாமல் இருவகைக்காவலி லெதிலாகிலும் வைக்கும்படியான தண்டனைக்கும் உள்ளாவான்.

ஒருவன் எ-என்பவன் பேரில் வாரண்டு வாங்கி எ-அல்லாமல் இன்னொருவனை வாரண்டில் தப்பிதமாய் பிடித்துவிட்டால் அவன் அப்படி செய்தது அவனை மோசம் செய்யவேண்டுமென்கிற கருத்துடனில்லாமல் செய்தவனாய் ஏற்படும் பட்சத்தில் அவன் சட்டப்படி அந்த குற்றத்திற்கு பந்தப்பட்டவனாகமாட்டான். (8 ம. ஹை. ரி. 38.)

ஒரு சைனியத்தில் தலைமையாயிருக்கும் உத்தியோகஸ்தன் ஒருவன் அங்கே வரும் கன்ட்ராக்டரின் பேரில் என்னமோ சந்தேகங்கொண்டு அந்த கன்ட்ராக்டரைப் பிடித்து காவலில் வைக்கும்படி உத்தரவு செய்தான். ஆனால் அந்த உத்தியோகஸ்தர் அப்படி செய்கையில் தனக்கு அதிகாரமுண்டென்று நம்பி செய்தவராய்த் தெரியவருகிறதேயல்லாமல் மற்றப்படி வேண்டுமென்று மோசக் கருத்துடன் செய்ததாக புலப்படவில்லை. ஆயினும் வாதி அவனிடமிருந்து தன்னை அக்கிரமமாய் பிடித்து வைத்ததற்காக நஷ்டத்தொகை வசூல் செய்ய ஹக்குண்டு. (3 அ. ஹை. ரி. 409.)

ஜெமீன்தார் ஒருவர் தன்னுடைய சிப்பந்திகளில் சிலரை காவலில் வைக்கும்படி உத்தரவு செய்தார். அதன்பேரில் அவர்மேல் அக்கிரமமாய் அடைத்து வைத்ததாக தாவா செய்யப்பட்டது. அந்த தாவாவில் அவர் அப்படி செய்தது அக்கிரமம்தானென்று நஷ்டம் கட்டிக் கொடுக்கும்படி தீர்ப்பு செய்யப்பட்டது. (2 மூ. இ. அ. 504.)

ஒருவன் ஒருவன்மீது தப்பு சார்ஜ் செய்து அவனைப் பிடிக்கும்படி செய்கிறான். அவனை அப்படி பிடித்ததினால் அவன் தன்னை வீட்டுக்குப் போகவொட்டாமல் தடுத்ததாகவும் அதன் பேரில் அவன் ஜாமீன் கொடுத்து வீட்டுக்குப்போக நேரிட்டதினால் தனக்கு மிக்க கஷ்டமும் அசௌக்கியமும் சம்பவித்ததென்றும் தன்னுடைய பெயருக்கு அபகீர்த்தியும் மானபங்கமும் உண்டாயிற்றென்றும் தனக்கு நஷ்டம் கட்டிக்கொடுக்கும்படி தாவா செய்தான். அப்படிப்பட்ட தாவாவில் ரூபாய் 20 நஷ்டம் கொடுக்கும்படி டிக்ரி செய்தார்கள். (15 வீ. ரி. 85.)

எ-என்பவன் ஒருவன் நன்றாய் அடிபட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டுபோகப் பட்டான். அவன் அங்கே ஸ்டேஷனில் பி-என்பவனும் இன்னும் சிலரும் கூடிக்கொண்டு தன்னை அடித்ததாக சொன்னான். போலீசார் அதன்பேரில் அவர்கள் செய்யவேண்டிய பிரதம விசாரணை செய்து அவர்களையெல்லாம் கைதிகளாய் செஷன் கோர்ட்டாரிடத்திற்கு அனுப்பினார். ஜில்லா ஜட்ஜ் அவர்களை விசாரணை செய்து அவர்கள் குற்றவாளிகள் அல்லவென்று அவர்களை விட்டுவிடும்படி உத்தரவு செய்தார். அதன்பேரில் நஷ்டத்திற்காக தாவா செய்ய நியாயம் கிடையாது. (இ. லா. ரி. 29 அ 44).

யாவனொருவனை எவனாவது அக்கிரமமாய் அடைத்து வைத்தால் அடைக்கப்பட்டவனிடத்திலிருந்தாகிலும் அவனைச்சேர்ந்த வேறொருவனிடத்திலிருந்தாகிலும் யாதொரு சொத்தை அல்லது பொருமான பத்திரத்தை அவனிஷ்டத்திற்கு விரோதமாய் கொடுக்கும்படி செய்யும்பொருட்டாவது, சட்டத்துக்கு விரோதமான யாதொரு காரியத்தைச் செய்யும்படிக்காகிலும் யாதொரு குற்றத்தை செய்வதற்கு சுலபமுண்டாவதாக யாதொரு சங்கதியை தெரிவிக்கும்படிக்காகிலும் அடைக்கப் படுபவனை அல்லது அவனைச் சேர்ந்தவனைப் பலவந்தப் படுத்தும்பொருட்டாவது அடைத்து வைக்கிற பட்சத்தில் அப்படி அடைத்து வைத்தவன் மூன்று வருஷத்திற்கு அதிகப்படாமல் எவ்வளவு காலத்திற்காவது இருவகைக்காவலி லெதிலாகிலும் வைக்கப்படுவது மல்லாமல் அபராதத்திற்கும் உள்ளாவான்.

யாவனொருவனை எவனாவது அக்கிரமமாய் அடைத்து வைத்தால், யாதொரு குற்றம் அல்லது துன்மார்க்கத்தைக் கண்டு பிடிப்பதற்காக அடைக்கப்பட்டவனை யாகிலும் அவனைச்சேர்ந்த வேறொருவனையாகிலும் எதையாவது உண்டென்று ஒப்புக்கொள்ளும்படி செய்யும்பொருட்டாவது, அதைக் குறித்து யாதொரு சங்கதியைத் தெரிவிக்கும்படி செய்யும்பொருட்டாவது, யாதொரு சொத்து அல்லது பொருமான பத்திரத்தை மறுபடி கொடுத்துவிடவாகிலும் கொடுத்து விடும்படி செய்யவாகிலும் கேட்பதைக் கொடுக்கும்படியாகிலும் யாதொரு சொத்து அல்லது பொருமான பத்திரத்தை மறுபடி கொடுத்து விடுவதற்கு ஹேதுவான யாதொரு சங்கதியைத் தெரிவிக்கவாகிலும் அடைக்கப்பட்டவனை அல்லது அவனைச் சேர்ந்தவனைப் பலவந்தப் படுத்தும் பொருட்டாவது அடைத்து வைத்திருக்கிற பட்சத்தில் அப்படி அடைத்து வைத்தவன் மூன்று வருஷத்திற் கதிகப்படாமல் எவ்வளவு காலத்திற்காவது இருவகைக்காவலி லெதிலாகிலும் வைக்கப்படுவதுமல்லாமல் அபராதத்திற்கு முள்ளாவான்.

HINDU LAW.

ஹிந்துலா.

CHAPTER VI.

6-ம் அத்தியாயம்.

ஸமஷ்டி குடும்பம்,

எந்தெந்த சந்தர்ப்பங்களில் ஓர் ஹிந்து குடும்பம் 'ஸமஷ்டி' (ஏக) அவிபக்த குடும்பமென்று நாம் ஊகிக்கலாமென்று இதனடியில் சுருக்கமாய்ச் சொல்வோம்:—

(1) ஒருவன் தன்னுடைய குடும்ப சொத்தை பாகம் செய்துகொள்ளும்போது குடும்ப சொத்தை கிரயம் வாங்கின தஸ்தாவேஜுகளில் அக்குடும்பத்திலுள்ள பாகஸ்தர்களெல்லோருடைய பெயர்களின் பேரிலும் கிரயம் பெற்றதென்று ருஜு செய்யும் விஷயத்தில் அக்குடும்பம் பாகமாகாத அவிபக்த ஸமஷ்டி குடும்பமென்று பாவிக்கலாம். (24 வீ. ரி. 351.

(2) ஒரு ஹிந்து குடும்பத்திலுள்ள தமையன் ஒருவன் தன்னுடைய சகோதரனுக்கு ரொக்கம் கடன் கொடுத்துவிட்டு அதற்காக யாதொரு தஸ்தாவேஜு பெறுமலும் அந்த தொகையை பிறகு வசூல் செய்ய யாதொரு கிருஷை செய்யாமலிருப்பதும் அல்லது கடன் வாங்கிக்கொண்ட சகோதரன் அதற்கு யாதொரு ஜவாப்பு சொல்லவேண்டுமென்றே நிர்ப்பந்தமில்லாம லிருப்பதும் அவர்கள் அவிபக்த ஸமஷ்டி (ஏக) குடும்பத்தைச் சேர்ந்தவர்களென்று கருதலாம். (17 வீ. ரி. 565.)

(3) ஒரு ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு அண்ணன் தம்பிமார்கள் ஒன்று சேர்ந்து ஒருவன் பேருக்கு கடன் பத்திரம் எழுதிக்கொடுத்திருந்து பிறகு அந்த பத்திரத்திற்காக சேரவேண்டியிருக்கும் பூராய் மொத்தத்தையும் அந்த சகோதரர்கள் இருவரில் எவனாவது கொடுத்துவிட்டு பத்திரத்தை ரத்து செய்து பெற்றுக்கொண்டால் அவர்கள் இருவரும் பாகமாகாத அவிபக்த ஸமஷ்டி குடும்பத்தைச் சேர்ந்தவர்களென்று பாவிக்கலாம்.

குடும்ப சொத்தில் ஒரு பாகம் மாத்திரம் பாகமாகாத சொத்தாயிருந்து அந்த குடும்பத்தைச் சேர்ந்த எல்லா பாகஸ்தர்களும் ஏக குடும்பமாய் வசித்து காலம் கழித்துவரும் பட்சத்தில் அது பாகமாகாத அவிபக்த ஸமஷ்டி குடும்பமென்று கருதலாம். (10 வீ. ரி. 304.)

மேலும், எந்தெந்த சந்தர்ப்பங்களில் ஒரு ஹிந்து குடும்பம் ஸமஷ்டி குடும்பமாகாதென்றும் அக்குடும்பத்தை பிறிவினையாயிருக்கும் விபக்த குடும்பமென்றும் கருதவேண்டியதென்று அடியில் விவரிப்போம்:-

(1) ஒரு ஹிந்து குடும்ப சொத்தை கிரயம் பெற்றிருக்கும் கிரய தஸ்தாவேஜியிலாவது கலெக்டர் அவர்களுடைய ரிஜிஸ்டர் புஸ்தகங்களிலாவது பாகஸ்தர்களுடைய நாமதேயங்கள்.

(2) ஒரு ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த பாகஸ்தர்கள் தனித்தனியாய் வாசம் செய்துகொண்டு போஜனம் முதலானதும் பிரத்தியேகமாய் சமைத்துச் சாப்பிட்டு வரும்பட்சத்திலும் குடும்ப பூஸ்திதிகளால் உண்டாகும் மாசூலை தனித்தனியாய் அனுபவித்து வந்தாலும் அந்த குடும்பம் பாகமானதாக சந்தேகிக்க இடமுண்டு.

(3) ஆனால் பாகஸ்தர்களில் ஒருவன் 40 அல்லது 50 வருஷகாலமாக பிரத்தியேகமாய் வாசம் செய்துகொண்டும் குடும்ப சொத்துகளில் சில பாகங்களை பிறிவினையாக தனித்தனியாய் தன்னுடைய சொந்த தனிச்சொத்தாய் அனுபவித்து வருவானாகில் அவன் குடும்பத்திலிருந்து பாகித்துக்கொண்ட விபக்த குடும்பஸ்தனாக பாவிக்கப்படுவான்.

(4) குடும்ப பூஸ்திதிகளின் பட்டாக்கள் அந்தந்த பிறிவைச்சேர்ந்தவர்களின் பேரில் பதிவு செய்யப்பட்டிருந்தால் அந்த குடும்பம் பாகமான விபக்த குடும்பமென்று எண்ணப்படும். மொராவிஜித்தேஜி Vs-முக்கந்த் சிங்க் நாய்க்கன் (இ. லா. ரி. 15 பம். 210.)

(5) ஒரு குடும்பத்திலுள்ள பாகஸ்தர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வசித்து வருவதும், கூட்டாய் ஒன்று சேர்ந்து வியாபாரம் செய்து வருவதும், குடும்பத்தில் பாகப் பிரிவினை ஆகாததற்கு முன் குடும்ப பொது சொத்திருப்பதினாலேயும் ஒரு குடும்பம் பாகமாகாத ஸமஷ்டி குடும்பமென்று சொல்வதற்கு நியாயமில்லை (10 வீ. ரி. 305.)

ஒரு அவிபக்த ஹிந்து குடும்பத்தில் ஐந்துபேர் சகோதரர்களிருந்து அவர்களில் ஒருவன் எ-என்பவன் மாத்திரம் யாதொரு பிதரார்ஜித சொத்தின் சகாயமின்றி தானே தன்னுடைய சகோதரர்களின் சகாயத்தினால் திரவியம் சம்பாதித்து அந்த பொருளைக்கொண்டு பெரிய பாங்கி ஒன்று ஏற்படுத்தி வியாபாரம் செய்துவந்தான். அப்படி சம்பாதித்த சொத்துகள் ஒரு பாகமாகாத அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த சொத்துகளாகப் பாவித்து அந்த குடும்பத்திலுள்ள பாகஸ்தர் ஒவ்வொருவருக்கும் அதில் பாகம் உண்டென்றும் அது ஒரு அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த பாகஸ்தர் எல்லோருக்கும் பாகித்துக் கொடுப்பதற்குத் தகுந்த குடும்ப பொது சொத்தல்ல அவரவர்கள் வியாபாரத்தில் மாத்திரம் பாகஸ்தர்களாக இருந்தார்களே யன்றி குடும்பத்திலுள்ள பாகஸ்தர்கள் எல்லோருக்கும் பாகித்துக் கொடுக்கத்தக்க குடும்ப பொது சொத்தல்லவென்றும் ருஜு செய்யவேண்டிய பொறுப்பு அது சுயார்

ஜிதமாய் சம்பாதித்த தனி சொத்தென்று சொல்லும் நபருடைய பொறுப்பாகும். (10 மூ. இ. அ. 490.)

ஸமஷ்டி ஏக குடும்பத்தைச்சேர்ந்த தாயாதிகள் (பாகஸ்தர்கள்) ஒன்று சேர்ந்து கூட்டாய் செய்யும் வியாபார விஷயமாய் சட்டம் யாதென்று கவனிப்போம்.

(1) ஒரு ஹிந்து குடும்பத்தில் மூத்தவனாய் குடும்ப காரியத்தை பார்த்துவரும் மானேஜரல்லாமல் இதர பாகஸ்தர்களில் ஒரு தாயாதி அக்குடும்பத்தார் செய்யும் வியாபார விஷயமாய் வசூலாக வேண்டியிருக்கும் தொகைக்காக தான் ஒருவனே மற்ற பாகஸ்தர்களையும் வாதிகளாய்ச் சேர்க்காமல் தாவா செய்ய நியாயமில்லை; ஏனென்றால் அவர்கள் பாகஸ்தர்களாக செய்யும் வியாபாரம் பிதரார்ஜித சொத்தைக்கொண்டு மூதாதைகள் செய்துவந்த தொழில் என்னும் காரணத்தையே முக்கியமாய் கவனிக்க வேண்டியது. (ச. அ. 264.)

(2) ஒரு ஹிந்து குடும்பத்திலுள்ள தாயாதிகள் ஒன்று சேர்ந்து கூட்டாய் செய்யும் வியாபாரத்திற்காக அவசியமாய் கடன் வாங்கவேண்டி யிருந்து அந்த குடும்பத்தின் மானேஜர் கடன் வாங்கினால் அந்தக் கடன் தொகையை வசூல் செய்வதற்கு அக்குடும்பத்தைச் சேர்ந்த இதர பாகஸ்தர்கள் மைனர்களாயிருந்திடினும் அவர்களையும் பிரதிவாதிகளாக்கி தாவா செய்து நிர்ப்பந்தித்து வசூல் செய்ய நியாயமுண்டு. மானேஜர் குடும்ப சொத்தை குதுவை வைத்து குடும்ப வியாபாரத்திற்காக கடன் வாங்கலாம். (இ. லா. ரி. 20 பம் 767.)

(3) ஒரு ஏக குடும்பத்திலுள்ள பாகஸ்தர்கள் ஒன்று சேர்ந்து கூட்டாய் வியாபாரம் நடத்தி வருகையில் அந்த பாகஸ்தர்களில் ஒருவன் காலமாய் விட்டதனால் அவ் வியாபாரத்தை காலமாய் விட்ட பாகஸ்தனுடைய மைனர் குமாரனுக்காக ஒருவன் கார்டியனாய் நடத்தி வருவானாகில் அந்த வியாபார விஷயமாய் ஏற்படும் கடன்களை மேற்செப்பிய கார்டியன்தானே நேரில் கொடுத்து பைசல் செய்யப் பந்தப்பட்டவனல்ல; அந்த குடும்பத்தில் அவனுக்கு என்ன பாகமுண்டோ அந்த பாகத்தை மாத்திரம் அந்த கடனுக்காக ஜப்தி செய்து வசூல் செய்யக்கூடும். (இ. லா. ரி. 3 கல் 738.)

(4) ஒரு ஹிந்து ஸமஷ்டி குடும்பத்தில் மானேஜரா யிருக்கப்பட்டவன் அக் குடும்பத்திலுள்ளவர்களை காப்பாற்றுவதற்காக ஒரு வியாபாரம் செய்து அந்த வர்த்தகத்தினால் சம்பாதிக்கும் பொருளைக் கொண்டு அக் குடும்பத்திலுள்ளோரை போஷித்து வருவானாகில் அவன் அந்த ஸமஷ்டி குடும்பத்தின் பொது சொத்தை குதுவை வைத்து கடன் வாங்கி தான் செய்துவரும் வர்த்தகத்திற்காக அட்வான்சு (முன் பணம்) கொடுத்தால் அந்த குதுவையின்பேரில் ஏற்படும் கடன் தொகையை ஷை குடும்ப பாகஸ்தர்கள் எல்லோர் பேரிலும் தாவா செய்து அவர்களை நிர்ப்பந்தித்து வசூல் செய்ய நியாயமுண்டு. (இ. லா. ரி. 5 கல் 592.)

நம்மையாளும் சக்கரவர்த்தியினுடைய கவர்ன்மெண்டாரால் எனாமாக தரப்பட்ட பூஸ்திதிகளும் அல்லது ஒருவனுக்கு அபராதம் விதித்து கவர்ன்டாரால் தண்டனையாக சேர்த்துக் கொள்ளப்பட்டு பிறகு அந்த சொத்துகளை வேறொருவனுக்கு கொடுத்து விடப்பட்டால் அந்த சொத்துகள் சுயார்ஜித எஸ்டேட்டுகளாய் கருதப்படும். (இ. லா. ரி. 8 கல் 769; 3 பம் 186; மூ. இ. அ. 606) ஆயினும் அபராதம் விதித்து கவர்ன்மெண்டார் எடுத்துக்கொண்டது நியாயமல்லவென்று மறுபடியும் அந்த சொத்துகளை கொடுத்து விடும்பட்சத்தில் அந்த சொத்துகள் குடும்ப பொது சொத்துகளாகவே எண்ணப்படும். (இ. லா. ரி. 12 கல் 1.)

ஒரு பூஸ்திதியின் விஷயமாய் ஸர்க்காருக்குச் சேரவேண்டிய பாக்கியை குடும்பத்திலுள்ள ஒரு பாகஸ்தனிடத்தில் மாத்திரம் பெற்றுக்கொண்டு அவன் பேருக்கு புதிதாய் பட்டா தாக்கலாய் கொடுக்கப்பட்டிருந்தால் அப்படி தனியாய் அவன் பேரில் புதுப்பட்டா கொடுக்கப்பட்டிருக்கின்றதென்னும் காரணத்தினாலேயே அந்த சொத்து சுயார்ஜிதமாக மாட்டாது. இ. லா. ரி. 10 ம 1.)

சாதாரணமாய் ஹிந்து குடும்பங்கள் சேர்ந்த குடும்பங்களாகவே பாவிக்கப்பட்டு வருகின்றன. மேலும் சேர்ந்த குடும்பங்கள் ஒரு பாகஸ்தனுடைய அதிகாரத்தின் கீழ் இருந்திடினும் அந்த குடும்பத்தைச்சேர்ந்த சொத்துகளாகவே பாவிக்கப்படும். ஆகையால் ஒரு குடும்பத்தில் பாகப்பிரிவினையாய் விட்டதென்று கக்ஷி கூறுவோன் தான் அந்த அம்சத்தை தகுந்த சாக்ஷியத்தால் ருஜு செய்யவேண்டியவனாவான். அம்மாதிரியாகவே ஸமஷ்டி குடும்பத்தைச்சேர்ந்த ஒருவன் யாதேனும் ஓர் சொத்து தன்னுடைய சுயார்ஜிதமென்று கக்ஷி கூறினால் அந்த அம்சத்தை அவனே ருஜு செய்யவேண்டியவனாவான். அம்மாதிரியாகவே ஸமஷ்டி குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் யாதேனும் ஓர் சொத்து தன்னுடைய சுயார்ஜிதமென்று கக்ஷி கூறினால் அந்த அம்சத்தை அவனே ருஜு செய்யவேண்டியது. (இ. லா. ரி. 6 பம் 225; இ. லா. ரி. 8 பம் 154; 8 கல் 517; 2 ம 19.)

ஸர்க்கார் ரெஜிஸ்டர் புத்தகங்களிலும், கணக்கு முதலியவைகளிலும், சொத்து ஒரு பாகஸ்தன்பேரிலேயே பதிவாய்க்கொண்டு வருகிறதென்கிற காரணத்தால் ஒருவன் அந்த சொத்து தன்னுடைய சுயார்ஜிதமென்று சொல்வதற்கு நியாயம் கிடையாது. (11 மூ. இ. அ. 639.)

பிரதிவாதியினிடம் யாதொரு பொது சொத்துமில்லாமலிருந்த அவனுடைய சொத்து குடும்ப சொத்தின் உதவியால் சம்பாதிக்கப் பட்டதென்று சொல்லுகிறவன் அதை ருஜு செய்யவேண்டியவனாவான். ஒரு ஸமஷ்டி குடும்பத்தில் ஒரு பாகஸ்தனுடைய பெண்சாதி பேரால் சில சொத்துகளாவது பத்திரங்களாவது இருக்கும் பட்சத்தில் அந்த சொத்துகள் குடும்ப பொது சொத்தென்று சொல்வோன் அதை ருஜு செய்யவேண்டியவனாவான். (இ. லா. ரி. 2 ம 214.)

Important Rulings.

முக்கியமான தீர்ப்புகள்.

சிவில் புரோசீஜர் கோர்டு.

232-வது பிரிவு 2-வது பாரா; 234-வது பிரிவு.

“சரியான ஹக்குதாரன்” என்பதின் பொருள்.—மிதாக்ஷர ஸ்மிருதியின் வண்ணம் தகப்பனா யிருப்பவனுக்கு பிரதிகூலமாய் டிக்கிரி செய்யப்பட்டது—புத்திரன் அனுபவிக்கும் பிதுரார்ஜித ஆஸ்திகளுக்கு பிரதி கூலமாக நடவடிக்கைச் செய்யப்பட்டது.

ஜட்ஜிகள். ஆரிங்டன் என்பவரும், கேயட்டு என்பவரும் (ஒத்துக்கொள்ள வில்லை):—

மிதாக்ஷர ஸ்மிருதியின் வண்ணம் பாகம் பிரியாத குடும்பத்தைச் சேர்ந்தவனொருவன், அவன்பேரில் பணத்துக்காக டிக்ரீகொண்டு வந்திருக்கையில், இறந்துபோய் விடுவானானால் அவன் பிள்ளையை, சரியான வார்சுதாரன் என்று ரிகார்டில் கொண்டு வரும் பக்ஷத்தில், அவனடைந்து அனுபவித்து வரும்பிதுரார்ஜித சொத்தை தகப்பன் பட்ட கடனுக்காக, முதலில் செய்யப்பட்ட டிக்ரீயின் வண்ணமே, ஈடாக்கலாம்; மறுபடியும் வேறே ஒரு தரம் தாக்கல் செய்யவேண்டிய அவசியமில்லை.

‘வார்சுதாரன்’ இன்னான் என்பது பிறகு ஆராயப்பட்டது.

அமர்சண்ட்குண்டு Vs- ஸெபெக் சண்ட சௌதரீ. 34. C 642.

11. க. வீ. நோ. என். 593; 5 க. லா. ஜ. 491; எம். பி.

234-வது பிரிவு. சி. பி. கோ.

“டிக்ரீயை செய்த கோர்ட்டு”— டிக்ரீயை பெற்றவன் இறந்துபோனால், அவன் பிள்ளையை சரியான வார்சுதாரன் என்று ரிகார்டில் கொண்டு வரலாமென்று உத்திரவு பிறப்பிக்க நடவடிக்கையை நடத்தும் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டா? இதில் கூறிய ஆக்ஷேபனைகள் தள்ளப்பட்டன.

டிக்ரீயைப் பெற்றவன் இறந்துபோனால் அவன்பின் அவனுடைய சரியான வார்சுதாரர்களை ரிக்கார்டில் கொண்டு வரலாமென்று உத்திரவுசெய்ய, முதல் முதல் டிக்ரீயைப் பிறப்பித்த கோர்ட்டாருக்கு தான் அதிகாரமுண்டே தவிர, நடவடிக்கை நடத்த எந்த கோர்ட்டுக்கு அந்த டிக்ரீ மாற்றப்பட்டதோ அந்த கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை. ஆனால் கக்ஷிக்காரர் தங்களுக்குள், ஒரு கோர்ட்டுக்கு இந்த விஷயத்தைக் குறித்து அதிகாரம் உண்டா இல்லையா என்று யோசித்து அதில் எழுதும் ஆக்ஷேபனைகளைத் தள்ளிவிடுவார்களானால், ஷை இரண்டாவது கோர்ட்டுக்கு வேறெந்த விதத்தினாலும் அதிகாரம் பிறப்பிக்க சக்தி யுடையதா யிருந்தால், இந்த விஷயத்தில் அது பிறப்பிக்கும் உத்திரவு பிரயோஜனமில்லாமல் போகாது.

தம்புபிள்ளை Vs. ஸ்ரீராமுலு நாயுடு.

17. ம. லா. ஜ. 300.

244-வது 583-வது பிரிவுகள்.

“பிரியாது தடுக்கப்பட்டது”—சொத்து திருப்பிக் கொடுத்தல் டிக்ரீயைப்பெற்ற ஒருவன், கோர்ட்டார் உத்திரவில்லாமலே ஆஸ்திகளைத் தன் சுவாதீன மாக்கிக்கொண்டு, அதன் பேரில் பிரதிவாதியின் அப்பீலுக்கு அனுகூலமாக அந்த சுவாதீன நிலைமை தள்ளப்படுமானால் அந்த மாதிரி செய்யப்பட்ட கீழ் கோர்ட்டாரின் டிகிரீயின், பேரில் பிரியாது கொண்டுவர இடமில்லை. 244-வது 583-வது பிரிவுகளில் அந்த மாதிரி பிரியாது கொண்டுவரக்கூடாது. என்று நிராக்ஷேபனையாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. 22 ஏ; 29, 75 எ, 441-வது இவைகளைப்பார்க்கவும். இவைகளில் நமக்குத் தெரிவது என்னவென்றால், ஒருவன் சொத்தைத் திருப்பிக்கொடுக்க வேண்டுமென்று கேட்காமல், தான் அதை மறுபடியும் சுவாதீனப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்கிறான். ஆனால் இதில் தன்னுடைய பிரியாது, நடவடிக்கை நடத்த உத்திரவு தரவேண்டுமென்று கேட்பதற்கு அர்ஜியாதலால், அந்த பிரியாதுக்கு இடம் கொடுக்கவேண்டு மென்று வேண்டுகிறபடியால், அவ்வாறே அவன் வேண்டுகோளுக் கிணங்க உத்திரவு கொடுக்கப்பட்டது.

செயிதால் Vs. பளானி.

1907 அ. வீ. நோ. 98; 4. ம. லா. ஜ. 188; 29 எ. 48.

244-வது பிரிவு—“ தடுக்கப்படுவதில்லை “ டிக்ரீயின்படிக்கு நடவடிக்கைச்செய்தல், அதனைத் தள்ளிவிடுதல். அல்லது உத்தரிக்கச் செய்தல். இவைகளைக் குறித்து.”

டிக்ரீயின் வண்ணம் நடவடிக்கைச் செய்வதாகக் காட்டிச் செய்த காரியத்தில் இருந்த உண்டாகிய நஷ்டத்தின் பேரில் பிரியாது.

ஒரு டிக்ரீயில் குறித்துள்ளதைவிட அதிகமாக, வியாஜ்ஜிய முடிவில், ஆஸ்திக்குச் சொந்தகாரனிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டால், அவ்வாறு அதிகமாக எடுத்துக்கொள்ளப்பட்ட ஆஸ்தியின் பாகத்தை அந்த ஆஸ்தியின் நியாயமான சொந்தக்காரனுக்கு, நடவடிக்கை நடத்தும் கோர்ட்டார் வாங்கிக் கொடுக்கலாம். ஆனால், டிக்ரியின் வண்ணம் காரியம் செய்வதாய்க்காட்டி, டிக்ரீயைப் பெற்றவன் தானே யாகவாவது அல்லது இன்னொருவரைத் தூண்டியாவது அல்லது அவருக்குக் குறிப்பினால் சொல்லியாவது, ஆஸ்தியின் உண்மையான சொந்தக்காரனுக்கு நஷ்டத்தை உண்டாக்கினால், அந்த சொந்தக்காரன் அந்த நஷ்டத்திற்காக வேறே புதிதாக பிரியாது செய்யவேண்டுமே தவிர, கோர்ட்டாருக்கு அதில்லாமல் நஷ்டத்தை மாற்றமுடியாது.

11 வீ. ரி. 516; 12 வீ. ரி. 85; 12 ம. லா. ஜ. 201.

இந்த மாதிரி நடவடிக்கை நடத்துகையில் உண்டாக்கப்பட்ட நஷ்டத்தின் தொகையை திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று செய்யும் பிரியாது அந்த விஷயத்திற்கு மாத்தி

ரம் பிரியாதே தவிர, அந்த டிக்ரீயின் வண்ணம் காரியம் செய்யவும், அதைத் தள்ளவும், அதை உத்தரிக்கவும் கேட்டுக் கொள்ளப் பிரியாதன்று. இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

7 வீ. ரி. 45.வது பார்க்க'

தேனோநாத் பானிக்யா Vs. ராமகுமார சக்ரவர்த்தி' 6 க. லா. ஜ. 527.

244-வது பிரிவு " தடுக்கப்படுவதில்லை " ஆஸ்தியை வாங்கினவன், தான் வாங்கின ஆஸ்தியின் விஷயத்தில், டிக்ரீயைப்பெற்றவர்களும், முதலில் அந்த சொத்தை உடையனு யிருந்த கடன்காரனும் மற்றவர்களும், துராக்கிரதமாய்ப் பிரவேசித்தற்காக ஈடு செலுத்த வேண்டும் என்று பிரியாது செய்தது :—

கோர்ட்டார் ஏலம்போட அதில் சொத்தை ஒருவன் ஏலத்தில் எடுத்து பின் தன் சுவாதீன மாக்கிக் கொள்வதற்கு முன்பு, டிக்ரீயைப் பெற்றவர்களும், முதலில் கடன்காரனுயிருந்தவனும், இன்னும் பிறரும் சேர்ந்து ஏலத்தில் எடுக்கப்பட்ட சொந்தில் துராக்கிருதமாகப் பிரவேசித்தால், அதனுல் உண்டாகும் நஷ்டத்திற்கு ஈடு செலுத்துதல் வேண்டும் என்றும் ஏலத்தில் சொத்தை எடுத்தவன் பிரியாது செய்யலாம். அது தடுக்கப்படமாட்டாது. ஆனுல், இந்த பிரியாது, டிக்ரீயை ஒட்டி நடவடிக்கையைச் செய்யும் பொழுது உண்டானுல் செல்லாது.

மம்மா அமீனு Vs. பிவாசீ ஆஜீ.

17 ம. லா. ஜ. 543.

244-வது பிரிவு 310. ஏ.—கக்ஷிக்காரர். டிக்ரீயின் பேரில் நடவடிக்கை நடத்துதலைக் குறித்து—கோர்ட்டு ஏலத்தில் ஏலம் எடுத்தவன் ஸி. பி. கோ. 310-வது ஏ பிரிவின் பிரகாரம் மனு செய்துக் கொள்ளுதல்—அப்பீல்:—ஒருவன் கடன்காரனுயிருந்து அவன் சொத்தை கோர்ட்டார் ஏலம்போட அதை ஏலத்தில் எடுத்ததனுல், முதலில் கடன் காரனு யிருந்தவனுடைய உரிமைகளைப் பெற்றவன் செய்த மனு தள்ளப்படுமானுல், அதற்காக மேலுக்கு அப்பீல் செய்துக் கொள்ளலாம், 310-வது ஏ—பிரிவின்படிக்கு ஏலத்தையே தள்ளி விடுவது டிக்கிரீபடிக்கு நடவடிக்கையை நடத்துவதைச் சேர்ந்தது. கோர்ட்டார் விற்பனையில் ஏலம் எடுத்ததனுல், முதலில் கடன் காரனுக இருந்தவனுடைய பாத்யதையைப் பெறுகிறவன், அந்த கடன்காரனுக்கு பிரதி யாளாகின்ருன். ஆதலால் அவனுக்கு 310 ஏ—பிரிவின்படிக்கு மனு செய்துகொள்ள இடமுண்டு,

மாணிக்க உடையன் Vs. இராஜகோபால் பிள்ளை.

17 ம. லா. ஜ. 291.

244,310 ஏ. பிரிவுகள். அப்பீல் ; ஏலம் எடுப்பவன் அயலானு யிருந்தால். டிக்ரீயைப் பெற்றவனுக்கும் கடன் காரனுக்கும் வியாஜ்ஜியம் இல்லாத பக்ஷத்தில் :—

ஏலத்தில் வாங்குகிறவன் டிக்ரீயைப் பெற்றவ னல்லாமல் வேறே மூன்ருவது மனிதனு யிருந்தால், ஸி. பி. கோ, 310 ஏ பிரிவின்படிக்கு ஏலத்தைத் தள்ளிவிட கடன் காரன் மனு செய்கையில், டிக்ரீயைப் பெற்றவன் அதற்கு ஆக்ஷேபனை செய்யாமல் அதனுல் அவனுக்கும் கடன் காரனுக்கும் வியாஜ்ஜியம் உண்டாகா திருந்தால், கோர்ட்டார் செய்த உத்திரவு ஸி. பி. கோ. 244 பிரிவுக்குள் அடங்காது. ஆகையினுல் அப்பீல் செய்வதற்கு இடமில்லை. 26. C. 449. 1.

க. வீ. ரி. 70. 21 எம். 416.

அபீர் ராய் Vs. டெஸ்டியே சிங்கு.

5. க. லா. ஜ. 204.

244-310 ஏ பிரிவுகள். 310 பிரிவின்படிக்கு விற்பனையைத்தள்ள முடியாதென்று செய்யப்பட்ட உத்திரவின் பேரில் அப்பீல் :—ஒரு வழக்கு: 244 ஸி. பிரிவு மாற்றப்பட்ட 25 பி. இவைகளுக்குள் அடங்குமானுல், 310 ஏ பிரிவின்படிக்கு விற்பனையைத் தள்ளமுடியாதென்று செய்த உத்திரவின் பேரில் அப்பீல் செய்யலாம். ஒரு கேஸ் எப்பொழுது 244 ஸி, க்குள் அடங்கும் ? டிக்ரீயைப் பெற்றவனுக்குச் சேரவேண்டிய பணத்தை முழுமையாவது அல்லது வேறே எந்த விதத்திலாவது தடுக்குமானுல் அதில் ஒரு கேஸ் அடங்கும். எப்படி யென்ருல், டிக்ரீயைப் பெற்ற இன்னொருவன் கொஞ்சம் கொஞ்சம் ஆக தனக்குப் பணம் சேரவேண்டுமென்று செய்து இருந்தால், 310-வது பிரிவின்படிக்கு டிபாஸிட் பணத்தில் அவன் டிக்ரீ பெறுவதற்கு உடன்பட்டவனு என்பது. ஏலத்திலெடுக்கிறவன் பிரியாது செய்பவர்களில் ஒருவனல்லா விட்டாலும், அதன் முடிவுக்கு பாத்தியதையுடையவனு யிருக்கும் பக்ஷத்தில், அது எந்த விதத்திலும், மனு செய்துகொள்ளுவதற்குத் தடங்கலாகாது.

பிடா Vs சுனிலால். 9 பம்பாய் ம. ரி. 15 ; 31 ப, 207.

244, 311-வது பிரிவுகள் அப்பீல் ; இரண்டாவது முறை அப்பீல்.

ஸி. பி. கோ. 311-வது பிரிவின்படிக்கு, ஏல நோட்டீசை வெளியிடும் விஷயத்திலும், ஏலம் போடும் விஷயத்திலும் உண்டாகிய சில சரியல்லாத மார்க்க காரணமாக முதலில் கடன் காரணமாக இருப்பவன், அந்த விற்பனைத் தள்ளவேண்டுமென்று யோசனை செய்யாமல், சட்டப் புத்தகம் 244-வது பிரிவின்படிக்கு செய்வதற்கு இடம் பெற்ற தகுந்த காரணங்களைக்கொண்டு அந்த விற்பனையை மாற்ற யோசிக்கும் பக்ஷத்தில் இரண்டாமுறை அப்பீல் செய்ய இடமுண்டு. எப்படியென்ருல், நடவடிக்கையில் இருக்கும் டிக்ரீயைப் பெற்றவன் ஆஸ்தியை ஏலத்தில் வாங்கி பிறகு அந்த டிக்ரீ தள்ளப்படுமானுல், அப்பீல் செய்ய இடமுண்டு.

ராமயாத்சாகோ Vs. பந்தேச்வர குமார உபாத்தியா ம. க. லா. ஜ. 102.

278, 280-வது பிரிவுகள்—டிக்ரீயின்படிக்கு நடவடிக்கை நடத்துதல் ஜப்தி செய்யவேண்டிய சொத்து கடன்காரனது தான் என்று தெரிவிககப் பிரியாது செய்தல்:—

நடவடிக்கையின் விதம்:—கடன் கொடுத்தவன் கடன்காரனுடையதென்று சொல்லப்படுகின்ற சொத்தை ஜப்தி செய்யயிருக்கையில் அந்த சொத்து தன்னது என்று எனக் கடன்காரன் சொல்வானுனுல், அதற்காகக் கடன் கொடுத்தவன் கிரிமினல் புரொஸீஜர் சட்டம் 278-பிரிவின் வண்ணம் நடவடிக்கை நடத்தி மறு வேறு உத்திரவு பிறக்கும் வரையிலும் கார்க்கவேண்டிய தில்லை. ஆனுல், தான் ஜப்தி செய்ய ஆரம்பித்த சொத்து கடன்காரனுடையது தான் என்று தெரிவிக்கும்படி புதிதாக வேறே பிரியாது செய்யலாம்.

மக்புல் படீமா Vs லால்தா குன்வார். 1907 அ. வீ. ரோ. 207 ; 4 ம. லா. ஜ. 574.

285, 268, 490-பிரிவுகள்— தீர்மானம் ஆவதற்கு முன்னமே ஜப்தி செய்து விடுவது :— ஒரிஜினல் கோர்ட்டு—

ஸ்மால்காஸ் கோர்ட்டு—ஸ்மால்காஸ் கோர்ட்டில் பணம் செலுத்துவது!—கேழ்ப்பதற்கு முன்னதாளுகவே பணம் செலுத்துவது!—கடன்காரன் மறுபடியும் பணம் கொடுக்கவேண்டியது :—

1904ளு பிப்ரவரிமீ 23உயில் ஒரு ஒரிஜினல் பிரியாதுக்கு தீர்மானம் செய்வதற்கு முன்பாகவே, ஒரு கடன்காரனுக்குச் சேரவேண்டிய கடன் ஜப்தி செப்யப்பட்டது. ஷைளு ஏப்ரல்மீ 16உ டிக்ரி பிறப்பிக்கப்பட்டு, அதேளு செப்டம்பர்மீ 7உ கோர்ட்டில் பணத்தைச் செலுத்தி விடும்படிக்கு கடன்காரனுடைய கடன்காரனுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது.

இதற்குள்ளாக அதேளு ஜூலைமீ 19உ அதே கடன்காரனுடைய கடனை முன்னது போலவே தீர்மானத்திற்கு முன் ஜப்தி செய்து அவன் பிரியாதுகொண்டு வருவதற்கு வேறே ஒரு டிக்ரீ ஸ்மால்காஸ் கோர்ட்டில் பிறப்பிக்கப்பட்டது.

285-வது பிரிவு–ஏலத்தேதியை தள்ளிவைப்பது அதேளு டிஸம்பர்மீ 13உ ஸ்மால்காஸ் கோர்ட்டு டிக்ரீயின் படிக்கு அந்த கடன்காரனுடைய கடன் மறுபடியும் ஜப்தி செய்யப்பட்டு, ஸ்மால்காஸ் கோர்ட்டின் டிக்ரீயின்படிக்கு ஜப்தி செய்ததற்காக, ஸ்மால்காஸ் கோர்ட்டில், சேரவேண்டிய பணம் செலுத்தப்பட்டது. டிக்ரீயைப் பெற்றவனுக்குக் சேரவேண்டிய கடனை யெல்லாம் வாங்கிக்கொடுக்கும்படி நியமிக்கப்பட்ட ரிஸீவர், ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்காக கடனை கொடுக்கவேண்டுமென்று கடன்காரனுடைய கடன்காரன்பேரில் பிரியாது தாக்கல் செய்தான்.

தீர்மானம் :—ஸ்மால்காஸ் கோர்ட்டில் பணம் செலுத்தினது கேழ்ப்பதற்கு முன்னமே யென்றும், மேல் கோர்ட்டார் ஜப்தி செய்திருக்கும் விஷயம் நன்ருகத் தெரிந்திருந்தும், கீழ் கோர்ட்டில் பணம் செலுத்தினபடியால், பிரதிவாதிகள் மறுபடியும் பணம் செலுத்தவேண்டுமென்றும், ஸ்மால்காஸ் கோர்ட்டார் செய்யும் அந்தப்படிக்கு முன் அந்த கோர்ட்டில் கட்டப்பட்ட பணம் திருப்பிக்கொடுக் முடியாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதனுல் உண்டாகும் லயம் என்னவென்ருல், ஒருவன் தீர்மானம் செய்வதற்கு முன்னுக ஜப்தி சொத்தை ஜப்தி செய்து, பிறகு அவனுக்கு அனுகூலமாக தீர்மானம் செய்வதற்கு முன் டிக்ரீ பிறக்கப்பட்டால், அவன் டிக்ரீ பிறந்த பிறகே ஜப்தி செய்தவன் போலாவான்.

ராமசாமி உடையார் Vs சக்ரவர்த்தி. 17 ம. லா. ஜ. 488.

310 ஏ-வது பிரிவு—ஸ்தாவர சொத்தை விற்கப்பெற்ற ஒருவன் :—கடன்காரனுக்கு உள்பட்ட பாயக்காரிக்குப் பிரவேசிக்கிறதற்கு இடமுண்டா ?

தனக்கு நிலம் விட்டவன் செலுத்தவேண்டிய பாக்கிக்காக தன் சுவாதீனத்திலிருக்கும் நிலங்கள் ஜப்தி செய்யப்படுமானுல், ஒரு பாயக்காரி தன் சொந்த நிலங்கள் ஏலம் போடப்பட்டன என்று 310 ஏ-வது பிரிவு ஸி. பி. கோ. வின்படிக்கு மனு கொடுக்கலாம்.

சந்தரகுமாரநாத் Vs காமினி குமார கோஷ்.

310 ஏ-வது பிரிவு :—ஒருவன் கொடுக்கவேண்டிய கடனுக்காக, அவன் நிலங்களை கோர்ட்டார் ஏலம்போட்டு, அந்த ஏலம் காயம் ஆவதற்கு முன், கடன்காரன் அந்த நிலங்களை விற்று விடுவானுனுல், அந்த நிலங்களை வாங்குபவன் மனு கொடுக்கலாம்.

310-வது பிரிவு டிக்ரீயின்படிக்கு ஜப்தி செய்து நிலங்களை ஏலம்போட்டு 30 நாளாவதற்கு முன்னும், அந்த ஏலம் காயமாவதற்கு முன்னும், கடன்காரன் அந்த நிலங்களை விற்று அந்த நிலங்களை ஒருவன் விலைக்கு வாங்கினுல், அப்படி வாங்குகிறவன், அவனுடைய சொந்த ஸ்தாவர சொத்துகள் விற்கப்பட்டதாக எண்ணப்படுவான். (310 ஏ பிரிவு) அதனுல் அவன் அந்த கடன்காரன் செய்த விற்பனையை தள்ளி விடும்படி அதே பிரிவின்படிக்கு மனு செய்துக்கொள்ளலாம்.

அப்பய்ய செட்டி Vs காம்ஆலி பியாரி. 17 ம. லா. ஜ. 127.

311-வது பிரிவு வாங்கவேண்டும் என்றிருப்பவர்கள் ஒன்ருய்ச் சேர்ந்து விடுவது, எப்பொழுது கெடுதி யென்பது—எப்படி கண்டு பிடிப்பது— விற்பனையை கெடுக்குமானுல் அது கெடுதி யென்பது.

ஏலத்தில் எடுக்க இஷ்டப்படுபவர்கள் எல்லோரும் ஒன்ருய்ச் சேர்ந்து ஏலம் கேழ்ககாமல் இருந்தால், அது எந்த விதத்தினுலும் குற்றமாகாது என்பது ஒரு தள்ள முடியாத விதியென்று ஸ்தாபிக்க முடியாது. ஒரு சொத்தை கோர்ட்டார் விற்கும்பொழுது, மேலே மேலே ஏலம் ஒரு கூட்டத்தார் இதரர்களை கேழ்க்க விடாமல் தாங்களே கேழ்ப்பது அல்லது தாங்களும் கேழ்க்காமல் ஏலத்தைக் கெடுப்பது ஆகிய இவைகள் எல்லாம் இருக்கக் கூடாது.

ஆனுல் அந்த மாதிரி விற்பனைகளில் வாங்க எண்ணுகிறவர்கள் விரோதமான எண்ணத்தோடு இல்லாமல் நல்ல எண்ணத்துடன் ஒன்ருய்ச் சேர்வதைத் தடுப்பதற்கு முடியாது. வாங்க இஷ்டப்படுகிறவர்கள் நல்ல எண்ணத்துடன் ஒன்று சேர்வதற்கும், கெட்ட எண்ணத்துடன் விற்பனையைக் கெடுப்பதற்காக ஒன்று சேர்வதற்கும் வித்தியாசமுண்டு.

1 க. லா. ஜ. 85.

அவர்கள் ஒன்று சேர்வதில் அவர்களுடைய கருத்து இன்னதென்று கண்டு பிடிப்பதுதான், அவர்கள் கூட்டம் நன்மையோ, தீமையோ என்பது கண்டு பிடிக்கும் வழி. மோசம் செய்து சொத்தை வாங்கவேண்டுமென்று அவர்களுடைய கருத்தானுல், அவர்கள் ஒன்று சேர்வது குற்றமாகும்; அப்படியல்லாமல் நியாயமாக சொத்தை வாங்கவாவது அல்லது வாங்கும் சொத்தை தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வவதற்காகவாவது ஒன்று சோந்தாரானுல், அது குற்றமென்று சொல்வதற்கிடமில்லை.

ஏலம் எடுப்பவன் விஷயத்திலாவது, டிக்ரீயைப் பெற்றவன் விஷயத்திலாவது குற்றம் ஸ்தாபிக்கப்பட்டால், அந்த ஜப்தி ஏலம் ரத்தாய்விட்ட தாகும்.

அம்பிகா பிரஸ்நத சிங்கும் ஆர். எச். விட்வெல் (1) ஸீதாராம் சிங்கு (2) 6 க. லா. ஜ. 111.

315-வது பிரிவு—ஜப்தி ஏலம் ; ஏலம் தள்ளப்பட்டது. மறு ஏலத்திற்கு மனு கொடுத்தல்—லிமிடேஷன் ஆக்ட் 178-வது பிரிவு,—எங்கிருந்து ஆரம்பிப்பது :—

ஒரு டிக்ரீயின் நடவடிக்கையின் வண்ணம் போடப்பட்ட ஏலம் தள்ளப்படுமானுல், இந்த விஷயமாக மறுதரம் ஏலம் போடவேண்டும் என்று டிக்ரீயைப் பெற்றவன் செய்துங் கொள்ளும் மனு லிமிடேஷன் ஆக்ட் 178-வது பிரிவுகுள் அடங்கினது. ஏலப் புணத்தை திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று உத்திரவு பிறக்கும் தேதி வரையிலும் அவனுக்கு தவணைத் தரப்படுவதில்லை. ஏலம் எடுத்தவன், ஏலத்தைத் தள்ளி விட்டப்பிறகு, தான் ஏலத்திற்காக செலுத்தின பணத்தைத்

திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று மாத்திரம் கேழ்கலாம் என்று ஸி. பி. கோ. 315 பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அது அந்த பணத்தை ஏலம் தள்ளிவிடப்பட்ட உடனே கொடுத்து விடவேண்டுமென்று டிக்ரீயைப் பெற்றவனைக் கட்டாயப் படுத்துவதில்லை. அந்தப் பணம் திருப்பி வேண்டுமென்று கேழ்க்கப்பட்டால் மாத்திரந்தான் அவன் அதைக் கொடுக்க கட்டாயப்பட்டிருக்கிறான்; கேழ்க்காத விஷயத்தில் இல்லை. ஏலப்பணத்தைத் திருப்பிக்கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப் படுகிறவரையிலும், அவன் கடன்காரனை இரண்டாவது முறை கடன் கொடுக்கும்படி கேழ்க்கக்கூடாது.

வெங்கடப்பராவ் Vs அப்பண்ண. 17 ம. லா. ஜ. 194.

கோர்ட்டை அலக்ஷியம் செய்வது.

10 பம்பாய் லா. ரி. 169.

கோர்ட்டையும், கோர்ட்டாருடைய அதிகாரத்தையும் அவமரியாதைச் செய்யும் பாஷைகளைச் சொல்வது மேற்குறித்த அலக்ஷியமாகும்—ஜட்ஜியைக் கண்டித்தாலும், அந்த கண்டித்தல் எவ்வளவுதூரம் செல்லும் என்பதும் :—

ஒரு கோர்ட்டையாவது அல்லது அந்த கோர்ட்டின் ஜட்ஜியையாவது நிந்தனைச் செய்யத் தக்கதும், அல்லது அந்த ஜட்ஜியின் அதிகாரத்தை அகௌரவப் படுத்தத் தக்கதும், ஆகிய ஒரு காரியத்தைச் செய்தலும் அல்லது நியாய மாகச் செய்யும் செய்கைகளில் வீணே பிரவேசிப்பதும், அல்லது அவற்றைத் தடுத்தலும், ஆகிய இவையெல்லாம் கோர்ட்டு நிந்தனை எனப்படும். ஜட்ஜிகளையும் கோர்ட்டாரையும், அவர் செய்கைகளைக்கொண்டு நுட்பமாய் பிழை பார்க்கலாம்; ஒரு தொழிலை சட்டத்திற்கு விரோதமென்றும் பொது நன்மைக்குக் கெடுதலைச் செய்யும் எனவும் தக்க காரணங்களுடன் ஒருவன் எடுத்து கோர்ட்டார் முன்னிலையில் சொன்னால் அப்படிச் செய்வது கோர்ட்டை நிந்திக்கலாகாது.

ரெக் Vs கிரே; நரசிங்க Vs கேல்சார்
இரண்டாவது விசாரணை.

10 பம்பாய் லா. ரி. 1540.

கிரிமினல் விவகாரம் :—மனு விசாரணை—முதல் விசாரணையின் பிரயோசனமின்மை-ஜட்ஜியும் மத்தியஸ்தர்களும் ஒத்துக் கொள்ளலாம்—பிரயோசனமின்மை என்பது அன்று உண்மையான ஆக்ஷேபனை என்னமோ அது விசாரிக்கப்பட்டது :—

நியாயமாகிய காரணங்களால், ஒரு விசாரணை பிரயோசனம் இல்லையென்று தள்ளப்பட்டு, அந்த கேசில் நிஜமான ஆக்ஷேபனை என்னமோ அது விசாரிக்கப்படாமலிருந்தால், குற்றவாளிக்குப் பிரதிகூலமாக சாக்ஷிகள் இல்லையென்றும், அவனைக் குற்றஞ்சாட்டி தண்டிக்க சிறிதும் இடமில்லையென்றும், ரிகார்டுகளிலிருந்து தெரியவரும் சந்தர்ப்பங்களில் தவிர, வேறே எல்லாகாலத்திலும் அந்தக்கேசு மறுபடியும் விசாரிக்கப்படவேண்டும். கேசை மறுபடியும் விசாரிக்க முடியாதென்று சொல்வதற்கு ஜட்ஜியும் மத்தியஸ்தர்களும் ஒத்துக் கொள்ளவில்லையென்று சொல்லும் ஆக்ஷேபனைபோதுமானதன்று. ஜட்ஜி கண்டுபிடிக்கும் விஷயங்களின்படிக்கு மாத்திரம் நடவடிக்கைகள்நடத்தலாம் என்று சட்டத்தில் சொல்லப்பட்டபோதிலும் மத்தியஸ்தர்கள் மனதில்கொண்டு வெளியிடுகின்ற மனக்கொள்கைகள் எவ்விதத்திலும், கௌரவத்திலும், பலத்திலும்,குறைந்து போகாது. ஆகையினால் ஜட்ஜியும், மத்தியஸ்தர்களும், புதுமையான சில விஷயங்களைக் குறித்துத் தங்களுக்குள் தாங்கள் ஒத்துக்கொள்ளாமல் வெவ்வேறுவிதமாய் வெவ்வேறு விதமாக முடிவு கட்டினார்களானால் அந்த மாதிரி விஷயங்களைக் குறித்த கேசை மறுபடியும் விசாரிக்கவேண்டிய அவசியமில்லை.

துர்சா சாரகூ சன்யால் Vs சக்கிரவர்த்தி 8 க. லா. ஜ. 59.

செஷன்ஸு விசாரணை :—ஜட்சி மாறுதல்—சாக்ஷியங்களை ஒரு ஜட்ஜி பதிவு செய்தலும், உத்திரவை மற்றொரு ஜட்ஜி பிறப்பித்தலும்—நியாயமா ?—

தனக்கு முன்னிருந்த ஜட்ஜி பதிவு செய்திருக்கும் சாக்ஷியங்களைக்கொண்டு வேறொரு ஜட்ஜி நடிவடிக்கைகளை நடத்தக்கூடாது. ஒரு ஜட்ஜி மாற்றப்பட்டால், அவன் பின் வருபவன் செஷன்ஸு விசாரணையை மறுபடி புதிதாக ஆரம்பிக்கவேண்டும். தனக்கு முன்னிருந்தவன் பதிவு செய்திருக்கும் சாக்ஷிகளைக்கொண்டு அவன் பின் வரும் செஷன்ஸு ஜட்சி தீர்மானம் செய்வானானால், அந்த தீர்மானம் நியாயத்திற்கு விரோதமானது; ஆதலால் தள்ளப்படவேண்டும்.

துர்கா சாரன் சன்யால் Vs சக்கிரவர்த்தி. 8 க. லா, ஜ. 69.

—107-வது பிரிவு—ஒரு பாதையின் வழியாய் ஊர்கோலம் போகக்கூடாதென்று ஒரு கூட்டத்தாரைத் தடுக்க உத்திரவு செய்தல்—ஊர்கோலம் போக சுவதந்திரமும் :—

வேறொரு இனத்தார் கூடாதென்று மறுக்கிற ஒரு பாதையின் வழியாய் தங்கள் ஊர்கோலம் போகவேண்டுமென்று கட்டாயப்படுத்துகிற ஒரு இனத்தாரை—அந்த பாதையின் வழியாய் ஊர்கோலம் செல்வது தவறான காரியம் என்றும், ஊர்கோலக்காரரே சண்டைசெய்து அமரிக்கையை கெடுப்பாரென்றும் தெரியவந்தா லொழிய அவர்கள் கலகம் செய்யாதிருப்பதற்காக அவர்களை ஸி. பி. கோ. 187-வது பிரிவின்படிக்கு தடுக்க முடியாது.

ஜட்ஜி வுட்ராப் சொன்னது :—

ஒரு இனத்தாருக்கு ஒரு பாதையின் வழியாய் ஊர்கோலம் கொண்டுபோக சுதந்திர மிருக்கையில், மற்றொரு கூட்டத்தார் கலகஞ்செய்ய எண்ணுகிறார்களென்று, அவர்கள் ஊர்கோலத்தை நிறுத்தக்கூடாது. இம்மாதிரி சந்தர்ப்பங்களில் செய்யவேண்டியது என்னவென்றால், துராக்கிருதமாய் பிரவேசிக்க இருக்கும் மற்றொரு கூட்டத்தாரைத் தடுக்க வேண்டியது.

பேரூர்ஸ் ஆலி முல்லிக் Vs சக்கிரவர்த்தி,

12 கல். வீ. நோ. 703.

131, 136-வது பிரிவுகள்—குற்றத்திற் குள்ளானவனாகின்றான்.—ஒத்துக்கொள்வதாவது அல்லது ஆக்ஷேபனையாவது செய்வது—பீனல் சட்டம் 188 வது பிரிவு—

கிரிமினல் ப்ரோஸீஜர் சட்டம் 13-வது 133-வது பிரிவில் சொல்லியிருக்கும் விஷயத்தை ஒருவனுக்குப் பிரதிகூலமாக செலுத்தியிருந்து அவன் சட்டத்தில் சொல்லியிருக்கிற வண்ணம் அதை ஒத்துக்கொள்ளவாவது அல்லது அதை ஆக்ஷேபிக்கவாவது செய்யாதிருந்தால், இந்தியன் பீனல் சட்டம் 188-வது பிரிவின்படிக்கு அவன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும். உத்திரவிட்டபடிக்கு அவன் தனக்கிட்ட காரியத்தை மற்றொரு தவணைகுள் முடிக்கவேண்டுமென்று 140-வது பிரிவில் சொல்லி யிருப்பதை கேட்க அவனுக்கு வேறொரு நோட்டீஸ் கொடுக்கவேண்டிய தவசியமில்லை.

கலுவாலா குருவைய்யா (இரண்டாம் விசாரணை.)

18 ம. லா. ஜ. 216; 31 யெம் 280.

—195-வது பிரிவு—அனுமதி கொடுக்கப்பட்டது. (ஸாங்க்ஷன்) கிரிமினல் வியவகாரம்— மாஜிஸ்ட்ரேட் ஒரு கேசை நியாய விசாரணை செய்வது :—

பிரியாது தாக்கல்செய்து அதற்குப் பிறகு அதற்காக மாஜிஸ்டிரேட்டினிடம் அனுமதி வாங்குகையில், அவ்வாறு ஸாங்க்ஷன் கொடுப்பதற்கு முன்னம் மாஜிஸ்டிரேட் ஒன்றும் செய்யக்கூடாது. அப்படி யேதாவது நடவடிக்கை நடத்துவானால் அது சட்ட விரோதமாகும். ஆனால் ஸாங்க்ஷன் (அநுமதி கொடுத்தப் பிறகு, அந்த கேசை நியாய விசாரணை செய்வதினின்று இது அவரைத் தடுக்காது.

மஞ்சுநாத் சிவநாத் (மறு விசாரணை.)

10 பம்பாய் லா. கோ. 1053.

—195-வது பிரிவு—சாங்க்ஷனுக்கு அவசியம்—பொய்க்கேசு யெடுத்தல்—195-வது பிரிவின்படிக்கு தண்டித்தல்—ரிஜஸ்ட்ரேஷன் ஆக்ட்—விடுதலைச் செய்யப்பட்டது.—சத்தியம் பொய்யானது என்று சிவில் கோர்ட்டார் தீர்மானம் செய்தது.—ஜில்லா மாஜிஸ்டிரேட் மறுபடியும் விசாரிக்க வேண்டுமென்று உத்திரவிடுதல்—ஸிவில் கோர்ட்டார் அனுமதி அவசியம்.—மறுபடியும் விசாரிக்க வேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்கு முன்னம் நோட்டீஸ் கொடுக்கவேண்டியது அவசியம்.—

குற்றம் சாட்டப்பட்டவன் மற்றொருவன் ஒரு பொய்ப் பத்திரம் எழுதத் தூண்டிய குற்றத்திற்காக, இந்தியன் பீனல் சட்டம் 423, 467, 471-வது பிரிவுகள் படிக்கும், இந்தியன் ரிஜஸ்ட்ரேஷன் ஆக்ட் 52-வது பிரிவின்படிக்கும், விசாரிக்கப்பட்டான்; ஆனால் முடிவில் அவனுக்கு விடுதலையாயிற்று. கிரிமினல் புரோசீஜர் சட்டம் 437-வது பிரிவின்படிக்கு மறுவிசாரணை செய்யவேண்டுமென்று உத்திரவிட்டார். ஆனால் விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்னம் அந்த பத்திரம் பொய்யானது என்று சிவில் கோர்ட்டார் தீர்மானித்தார்கள்.

தீர்மானம். பொய்ப் பத்திரம் எழுதினானென்றும் அல்லது பொய்ப் பத்திரம் எழுதத் தூண்டினானென்றும் சிவில் கோர்ட்டார் சாங்க்ஷன் இல்லாமல் ஒருவன்மீது கேசை மேலுக்கு நடத்தக்கூடாது சிவில் கோர்ட்டாரின் ஸாங்க்ஷனே வேண்டாத இந்தியன் பீனல் சட்டம் 423-வது பிரிவு, இந்தியன் ரிஜிஸ்டிரேஷன் சட்டம் 82-வது பிரிவு இவைகளில் குறித்து இருக்கும் குற்றங்களுக்காக ஒருவன் சிவில் கோர்ட்டார் பொய் கையெழுத்தில் குற்றத்திற்காக தண்டிக்கலாமென்று ஸாங்க்ஷன் செய்கிறவரையிலும் அவனை தண்டிக்கக் கூடாது; ஏனென்றால், அப்படிச் செய்தால் விசாரணை முழுதும் ஒன்றாய் நடவாது துண்டு துண்டாய் நடக்குமாதலால்,

கிரிதாரி மார்வாரி Vs சக்கிரவர்த்தி 12 ம. வீ. நோ. 822; 8 க. லா. ஜ. 73.

195-வது பிரிவு—வியாஜ்ஜியத்தின் விசாரணைத் துண்டு துண்டாய் நடத்துதல் :—

ஒருவன்மீதுள்ள கேசை துண்டு துண்டாய் விசாரிப்பது நல்ல தன்று. ஆகையால் பெரிய குற்றத்திற்காக ஸிவில் கோர்ட்டார் ஸாங்க்ஷன் இல்லாமல் ஒருவனை விசாரிக்கக்கூடாதாயிருக்கையில், அவனை சிறிய குற்றங்களுக்காகவும் விசாரிக்கக்கூடாது.

கிரிதாரி மார்வாரி Vs சக்கிரவர்த்தி 12 க. வீ. நோ. 822; 8 க. லா. ஜ. 73.

195-வது பிரிவு குற்றஞ்சாட்ட ஸாங்க்ஷன்—பீனல் சட்டம் 196-வது 211-வது பிரிவுகள்—பொய்க் கேஸ் பொய்ச் சாக்ஷி :—

இந்தியன் பினல் சட்டம் 21-வது பிரிவின்படிக்கு ஸாங்க்ஷன் வேண்டுமானால், எந்த கேசுக்காக சாங்க்ஷன் வேண்டுமோ அந்த கேஸு முழுமையும் பொய்யாகவே இருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல், விஷய முழுமையிலும் கேஸ் உண்மையா யிருந்து, சாக்ஷிகள் மாத்திரம் பொய்யா யிருந்தால், மேற் குறித்த பிரிவின்படிக்கு ஸாங்க்ஷன் கொடுக்கக்கூடாது. இந்த சந்தர்ப்பத்தில் சாங்க்ஷன் கொடுக்க வேண்டியது. இந்தியன் பீனல் சட்டம் 196-வது பிரிவு தான்.

போலாநாத் டட் Vs ஹரிமோஹன் டட் 7 க. லா. ஜ. 169.

195-வது பிரிவு—பீனல் சட்டம் 183, 186, 355, 326 பிரிவுகளின் படிக்குக் குற்றங்கள்—ஸாங்க்ஷன் இல்லை—313, 365-வது பிரிவுகளின் படிக்குச் செய்யப்பட்ட குற்றங்களை விசாரிக்க மாஜிஸ்டிரேட்டுக்கு சக்தியுண்டா என்பது—ஆமீன்—ஸாங்க்ஷன்.—

தான் அமீனுடைய உத்திரவு பெற்று அதன் படிக்குக் கடன்காரனுடைய வீட்டுக் கதவைத் திறக்கப் பிரயத்தனப் படுகையில், பிரதிவாதி யானவன் தன்னை அடித்தான் எனவும், அவன் அதனால் பீனல் சட்டம் 184, 186, 155, 325-வது பிரிவுகளின் படிக்கு குற்றம் செய்தவனாகின்றான். ஒரு வாதியானவன் மற்றொருவன் பேரில் பிரியாது செய்தான்.

தீர்மானம். பீனல் சட்டம் 183, 186-வது பிரிவுகளின் படிக்குச் செய்த குற்றங்களை விசாரிக்க அமீன் கொடுத்த ஸாங்க்ஷன் (உத்திரவு) போதும் பீனல் சட்டம், 325, 355-வது பிரிவுகளில் சொல்லி யிருக்கும் குற்றங்களை விசாரிக்க ஸாங்க்ஷன் பெற்றதால் மாஜிஸ்டிரேட் விசாரிக்கக் கூடியவும் ஆகிய பல குற்றங்கள் ஒருவன் பேரில் சாட்டப்பட்டிருந்தால், அவற்றில் சில குற்றங்களை ஸாங்க்ஷன் பெறாமலிருந்தாலும், தனியே எடுத்து விசாரிக்கத் தடை யில்லை.

கிருஷ்ணபிள்ளை Vs கிருஷ்ண கண்ணன். 17 ம. லா. ஜ. 559; 30 ம. 43.

195-வது பிரிவு—வராதிருந்ததற்காக மனு தள்ளப்பட்டது :—

வராமலிருந்ததற்காக, ஸாங்க்ஷன் வேண்டு மென்று செய்துகொண்ட மனுவைத் தள்ளிவிடவேண்டு மென்று கிரிமினல் புரொஸீஜர் சட்டத்தில் சொல்லப்பட வில்லை.

கோபால் (மனு விசாரணை) 10 பம்பாய். லா. ரி. 95; 32 ப. 203.

195-வது பிரிவு, 4-வது வாக்கியம்—ஸாங்க்ஷனுக்காக மனு செய்யவேண்டு மென்பது :—

இன்னார்தான் ஸாங்க்ஷனுக்கு மனு செய்துக் கொள்ள வேண்டுமென்று கிரிமினல் புரொஸீசர் சட்டம் 195-வது பிரிவில் சொல்லப்படவில்லை. ஒரு ஜில்லா மாஜிஸ்டிரேட்டினிடத்திலிருந்து சங்கதி தெரிய வந்த பிறகு, ஸிவில் வியாஜ்ஜியத்தின் சம்பந்தமாகச் செய்யப்பட்டது என்று சொல்லப்படுகின்ற குற்றத்திற்காக ஒருவனை விசாரிப்பதற்கு வேண்

டிய ஸாங்க்ஷனை கவர்ன்மெண்டு ப்ளீடரே கேட்கலாம் இதில் தவறு ஒன்றுங் கிடையாது.

சக்கிரவர்த்தி Vs ராய் ஆதால ராய் 1908 அ. வீ. நோ. 290.

195-வது பிரிவு 6-வது வாக்கியம்—அப்பீல்—

கிரிமினல் புரொஸீஜர் சட்டம், 195-வது பிரிவின்படி ஒரு கோர்ட்டார் ஒரு கேஸை விசாரிக்க ஸாங்க்ஷன் கொடுத்தால், 18 (ஏ) வது பிரிவின்படிக்கு அந்த உத்திரவு மேல் ஒரு முறை தான் அப்பீல் செய்துக் கொள்ளலாம்.

சான்ஹை Vs சாதம்பி லால். 1908 அ. வீ. நோ. 250.

195-வது பிரிவு 6-வது வாக்கியம்—பீனல் சட்டம் 182-வது பிரிவு—வில்லேஜ் மாஜிஸ்டிரேட் ஸப் மாஜிஸ்டிரேட்டுக்கு அடங்கினவனல்ல என்பது—கீழ் உத்தியோகஸ்தன்! என்றால் என்ன ?

கிரிமினல் புரோஸீஜர் சட்டம் 195-வது பிரிவின் பொருள்படிக்கு வில்லேஜ் மாஜிஸ்டிரேட் ஸப் மாஜிஸ்டிரேட்டுக்கு அடங்கினவனல்ல. தெளிவாக சட்டத்தில் சொல்லியிருந்தாலும், அல்லது இரண்டு ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களும் ஒரே டிபார்ட்டுமெண்டைச் சேர்ந்து ஒருவன் ஒரு உயர்ந்த உத்தியோகத்தையும், மற்றவர் சிறிது தாழ்ந்து உத்தியோகத்தையும் பெற்றிருந்தாலும், அல்லாமல் ஒருவன் மற்றவனுக்குத் தாழ்ந்த உத்தியோகஸ்தன் என்று சொல்ல முடியாது.

காஸிம்மய்ய, Vs வெங்கடசாமி 18 ம. லா. ஜ. 584.

195-வது பிரிவு 6-வது வாக்கியம்—“கொடுத்தல் அல்லது தள்ளப்படுதல்”—ஆள் வாராதிருந்தால், ஸாங்க்ஷனுக்குச் செய்துகொண்ட மனுவை கீழ் கோர்ட்டார் தள்ளிவிட்டிருக்க, மறுபடியும் ஸாங்க்ஷன் கொடுக்க மேல் கோர்ட்டாருக்கு இடமுண்டா என்பது.

மனுதாரன் வத்திராமையால் ஸாங்க்ஷனுக்காகச் செய்த மனுவை கீழ் கோர்ட்டில் தள்ளிவிட்டிருக்க ஸாங்க்ஷன் கொடுக்க அப்பீல் கோர்ட்டுக்கு அதிகாரம் இல்லை. ஏனென்றால் முதல் கோர்ட்டார், க்ரி. பி. கோ. 195-வது பிரிவில் சொல்லியிருப்பது போல், ‘தள்ளவும் இல்லை, கொடுக்கவுமில்லை’ கோபால் (மறு விசாரணை).

195-வது பிரிவு 6-வது வாக்கியம்—குற்றம் சாட்டி விசாரிக்க ஸாங்க்ஷன்—ஸாங்க்ஷன் கொடுக்கவும் இல்லை யென்று தள்ளிவிடவும் இடமுண்டா யென்பது:—

கிரிமினல் புரோஸீஜர் சட்டம் 196.வது பிரிவு 6-வது வாக்கியத்தின் பொருளின்படிக்கு ஜில்லா மாஜிஸ்டிரேட் ஸெஷன்ஸ் ஜட்ஜிக்கு அடங்கின உத்தியோகஸ்தனல்ல:—

ராம்தேவி Vs நந்தலால் ராய் 1908 அ. வீ. நோ. 28; 30 ஏ. 109.

195, 439-வது பிரிவுகள்— விசாரணைக்கு ஸாங்க்ஷன் செய்தது—மறுபடியும் ரிவிஷன்—ஹைகோர்ட்டார் அதிகாரம்:—

கிரிமினல் புரொஸிஜர் சட்டம் 195-வது பிரிவில் சொல்லியிருப்பதுபோல் ஸாங்க்ஸன் வேண்டுமென்று பொய் மனுவின் பேரில் ஒரு முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட்டால் ஸாங்க்ஷனுக்கு உத்திரவு கொடுக்கப்பட்டது. 195-வது பிரிவின்படி அந்த ஸாங்க்ஷனை மாற்றவேண்டுமென்று ஸெஷன்ஸ் ஜட்ஜிக்கு மனு செய்துக் கொள்ளப்பட்டு அந்த மனு தள்ளப்பட்டது. 435-வது பிரிவின்படிக்கு அந்த கேஸில் ரிகார்டுகளுக்கு அனுப்பி வரவழைக்கவும், கிரிமினல் புரொஸீஜர் சட்டம் 439-வது சட்டத்தின்படிக்குக் கேஸில் அவசியமிருந்தால் பிரவேசிக்கவும் ஹைகோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு.

சக்கிரவர்த்தி Vs. சேர்மால். 1908 அ. வீ. நோ. 102.

195, 476-வது பிரிவுகள்—விசாரணைச் செய்ய ஸாங்க்ஷன்—கீழ் கோர்ட்டு ஜட்ஜியால் தள்ளப்பட்டது—அப்பீல் செய்தால் 476-வது பிரிவின்படிக்கு பிராஸிகூஷன் செய்யும்படி ஜில்லா ஜட்ஜி உத்திரவிடலாம்—நடவடிக்கை:—

கிரிமினல் புரோஸீஜர் சட்டம் 195-வது பிரிவின்படிக்கு ஸாங்க்ஷன் செய்தலை ஒரு கீழ் கோர்ட்டு ஜட்ஜி தள்ளிவிடுவாரானால், ஜில்லா ஜட்ஜிக்கு தனக்கு அப்பீல் செய்தால் ஷை சட்டம் 476-வது பிரிவின்படிக்கு, ஸாங்க்ஷனுக்கு உத்திரவிட, அதிகாரம் உண்டு, ஆனால் அப்படிச் செய்கையில், அவர்கூட 195-வது பிரிவு—பி. வாக்கியமும் ஷை சட்டம் 476-வது பிரிவும் ஆகிய இவற்றின்படிக்குத்தான் நடவடிக்கை நடத்தவேண்டியது.

லக்ஷமிதாஸ் (மறு விசாரணை) 10 ப. லா. நோ. 28; 32 பி. 184.

195, 476-வது பிரிவுகள்—போலீசாருக்கு பொய் சங்கதி தெரிவித்தல்—ஸாங்க்ஷனுக்கு வேண்டிய விஷயங்கள்:—

ஒரு பெண்ணின் மரணத்தைக் குறித்து போலீஸ் டாணாவில் பொய்யாகிய சமாசாரம் சொல்லப்பட்டது. அந்த சமாசாரம் சொன்னவனை இந்தியன் பீனல் சட்டம் 82, 211-வது பிரிவுகளின்படிக்கு நியாய விசாரணை செய்ய வேண்டியதென்று உத்திரவிடப்பட்டது. எதிர் கக்ஷியார் மனு செய்துக்கொண்டதின்பேரில், ஸெஷன்ஸ் ஜட்ஜி வேறு இரண்டு பேர்களை அழைத்து விசாரிக்க வேண்டுமென்று கீழ்க் குறித்தவாறு உத்திரவு பிறப்பித்தார். “டி-என்பவனும், எ-என்பவனும், சௌகிதாரனை இம்மாதிரி பொய் சங்கதி சொல்லும்படி தூண்டினார்கள் என்பதற்குச் சந்தேகமேயில்லை. சௌக்தாருடன் அந்த இரண்டு பேரையும் விசாரிக்கும்படியாக (211-வது பிரிவு) நான் உத்திரவிடுகிறேன்”. இந்த ஸாங்க்ஷன் அதிகார வரம்பிற்கு மிஞ்சியதென்றும், அது நல்லதல்லவென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தர்மதாஸ்கவார் Vs சக்கிரவர்த்தி.

7 க. லா. ஜ. 373; 121 க. வீ. நோ.

—195, 476, 435-வது பிரிவுகள்—கிரிமினல் புரொசீஜர் சட்டம் 485, 476-வது பிரிவுகள்:—கிரிமினல் புரோஸீஜர்.

தவறில்லை யென்று நீக்கப்பட்ட ஒரு பிரதிவாதி, தன்மீது கேஸைக் கொணர்ந்த வாதியை 193-வது பிரிவு இந்தியன் பீனல் சட்டத்தின்படிக்கு விசாரிக்கவேண்டுமென்று ஸாங்க்ஷனுக்காக கேஸை விசாரித்த மாஜிஸ்டிரேட்டுக்கு—முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட்—மனு கொடுத்துக்கொண்டான். அந்த மனு ஏற்றுகொள்ளப் படவில்லை. மனுதாரன் பிறகு ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு மனு கொடுத்துக் கொண்டான். அதன்பேரில், ஜில்லா மாஜிஸ்டிரேட் வாதியை இந்தியன் பீனல் சட்டம் 211-வது பிரிவின்படிக்கு நியாய விசாரணைச் செய்யவேண்டுமென்று உத்திரவிட்டார். கிரிமினல் புரோஸீஜர் சட்டம் 195-வது அல்லது 435-வது அல்லது 476-வது பிரிவின்படிக்கு அந்த உத்திரவு பிறப்பிக்க ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு அதிகாரமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

Cases from the Indian Law Reports.

இந்தியன் லா ரிபோர்ட்டு கேசுகள்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

(இரண்டாவது அப்பீல் நெ. 1597 of 1907.)

ஜட்ஜிகள்:— { மி-ர். ஜ. பென்சன். மி-ர். ஜ. கிருஷ்ணசாவமி ஐயர்.

1910-ம்ஹு ஏப்ரல்மீ 1ௗ.

நயினப்பன் சேர்வை—வாதி—அப்பீல் வாதி.

ஆலோசனை சபையிலுள்ள இந்தியாதேச செக்ரிடெரி ஆப்ஸ்டேட்—மதுரை ஜில்லா கலெக்டர் மூலமாய் } பிரதிவாதி. அப்பீல்பிரதிவாதி

1864-வதுஹு த்திய 2-வது ஆக்ட்—பிரிவு 1-ஜெமீன்தார் கீழிருக்கும் பாயக்காரி பூமிக்கு சுதந்திரவானா அல்லவா பூமி கைப்பத்துள்ளவன் நிலம்பயிர் செய்வதற்காக அனுமதியின்றி கவர்ன்மெண்ட் ஜலத்தை உபயோகித்த ஜமீன்தாரியின் பாயக்காரி கவர்ன்மெண்டாருக்கு வேரே விதமாய் தனியாய் ஏற்பட்டிருக்கும் தண்ணீர் தீர்வை செலுத்த பந்தப்பட்டவன்தான். 1864ஹுத்திய 2-வது ஆக்டில் விவரித்திருப்பதின்படி அவன் ஓர் பூமி கைப்பத்துள்ளவனென்று தான் சொல்லவேண்டும்.

இது பெரிய குளம் டி. மு. கோர்ட்டில் அசல் நெ. 291 of 1906ல் செய்த தீர்ப்பின் பேரில் மதுரை ஜில்லா கோர்ட்டில் செய்த 1906ஹுத்திய 534, 575 அப்பீல் நெம்பர்களில் செய்த தீர்மானத்தின் பேரில் செய்த இரண்டாவது அப்பீல் அப்பீல்வாதிகள் தரப்பில்:—மி-ர். டி. ரங்காசாரியார்-ரெஸ்பான்டெண்டுகள் தரப்பில்:—கவர்ன்மெண்டு ப்ளீடர்.

தீர்ப்பு.

“சுருளியார்” என்று பெயர் வழங்கும் பெரியாரிலிருந்து பிரியும் இன்னொரு கவர்ன்மெண்ட் ஓடையின் ஜலத்தைப் பாய்ச்சிக்கொள்வதற்காக கலெக்டர் ஓர் ஜமீன்தாரியின் பாயக்காரியினிடமிருந்து தீர்வை (செஸ்) வசூல் செய்தார். அந்த ஜலம் கவர்ன்மெண்டார் ஓடையிலிருந்து பாய்கிறதல்லவென்று வாதித்துப் பேசுவதற்கு யாதொரு ஆதாரமுமில்லையென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம் ஜமீன்தாரியின் பாயக்காரிக்கு தீர்வை (செஸ்) விதித்தது சட்டத்திற்கு விரோதமென்று பிரதமத்தில் மிக்க வற்புறுத்தி வாதிக்கப்பட்டது. இந்த அம்சம் தான் இந்த கேசில் மிக்க முக்கியமான பாயின்ட்.

1865ஹுத்திய 7-வது ஆக்ட் 1-வது செக்ஷன் கீழ் இந்த தீர்வை (cess) விதிக்கப்பட்டது. 1864ஹுத்திய 8-வது ஆக்டின்படி ஓர் நிலத்தின்பேரில் செலுத்தவேண்டிய சர்க்கார் தீர்வைகள் சர்க்காருக்கு தண்ணீர் பாய்ச்சலுக்காக செலுத்தவேண்டிய தீர்வைகள் தானென்றும் (cesses) நிபந்தனை ஏற்பட்டிருக்கிறது. சர்க்கார் ஜலத்தைப் பிரயோகிக்கும் ஜெமீந்தாரியின் பாயக்காரி அவன் அப்படி அந்த நிலத்தை கைப்பற்றிருப்பதினால் 1864ஹுத்திய 2-வது ஆக்டில் சொல்லியிருப்பதின் பிரகாரம் ஓர் “பூமிக்குடையவன்” தானா, அல்லவா? “பூமிக்குடையவன்” என்பதற்கு அநேக அர்த்தங்களிருக்கினும் முக்கியமாய் பின்வருமாறு விவரிக்கப்பட்டிருக்கிறது: அதாவது அதை நேராய் எவ்விதத்திலாவது சர்க்காருக்கு தீர்வை செலுத்த சம்பந்தப்பட்ட எல்லா பூமி கைப்பற்றுள்ளவர்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த நிலம் அவ்விதமாய் உட்பட்டதல்லவென்று 1865ஹுத்திய 7-வது ஆக்டின் நிபந்தனையின்படி விசதமாய் தெரியவருகிறது. “பூமி கைப்பற்றுள்ளவன்” என்பதற்கு யாதொரு விவரணமும் காணோம். ஜமீன் ஆதினத்திலிருக்கும் நிலங்களின் விஷயமாய் ஜமீன்தார் தான் நிலக்கைப் பற்றுள்ளவனென்று சொல்லவேண்டும். இனாம் ஸெட்டில்மெண்டுகளின் விஷயமாய் இனாம் தார் தான் பூமி கைப்பற்றுள்ளவன். மேற்செப்பிய விஷயங்களில் எதை யெடுத்துக்கொண்டாலும் ஓர் ஜமீன்தார் அல்லது இனாம்தாரியின் கீழிருக்கும் பாயக்காரிதான் சர்க்காருக்கு பேஷ்கஷ் அல்லது குவிட்ரென்ட் கட்ட பந்தப்பட்டவனென்று சொல்வதற்கு கஷ்டமா யிருக்கிறது. இந்த கேசில் ஆதாரமாய் எடுத்துக் கூறிய சுப்ரமணிய செட்டி—V. மகாலிங்கசுவாமி சிவன் 33 Madras 4, 1910 கேசி. 1864ஹுத்திய 2-வது ஆக்டின்படி பூமிக்குடையவன் ரிஜிஸ்தரா யிருக்கும் பட்டாதாரனை யொழிந்து மற்றப்படி அவனிடத்திலிருந்து கிரயம் முதலிய விஷயத்தில் பெற்றவனல்லவென்று ஏற்படுகிறது. தீர்வை பாக்கி யிருந்தால் அதைக் கட்டத் தவறிப்போனவனென்றும் ஏற்படும். ரிஜிஸ்தராயிருக்கும் சொந்தக்காரன் பூமி கைப்பற்றுள்ளவனென்று யாதொரு பொது விதியும் ஏற்பட்டிருக்கவில்லை (கிடையாது). குறித்த ஓர் செட்டில் மெண்ட் விஷயமாய் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட சுதந்தரவாளிகள் இருக்கையில் இதரமான மற்ற நபர்களை சர்க்காருக்கு நேராய் தீர்வை செலுத்தவேண்டியவர்களென்று சொல்வதற்கிடமில்லை யென்று நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம் சர்க்காருக்கு தீர்வை யென்று சொல்லப்பட்ட செஸ் (cess) செலுத்த உட்பட்ட ஓர் நிலமாகையால் அப்படி செலுத்த பந்தப்பட்டிருப்பது ஓர் செட்டில்மெண்டு ஜமீந்தாரி இனாம். ரயட்வாரி கீழ் அல்ல; ஆகையால் ஓர் நிலக் கைப்பற்றுள்ளவனென்று பாவிக்கப்படும் எந்த

நபரும் பூமிக்குடையவன் என்பதை விவரித்திருப்பதின் கீழ் தான் அர்த்தம் செய்யவேண்டும். நிலத்தைக் கைப்பற்றுள்ள ஓர் ஜமீன்தாரியின் பாயக்காரி சர்க்காருக்கு நிலத்தீர்வை செலுத்த பந்தப்பட்டவன்தானென்றும் ஷெ ஆக்டின் கீழ் தீர்வை செலுத்த தவறிப்போனவனென்றும் தான் சொல்லவேண்டியதா யிருக்கிறது.

ஆகையால் வாதிகளின்பேரில் தீர்வை செலுத்த வேண்டியதென்று பிறப்பித்த டிமாண்டு சட்டத்திற்கு விரோதமானதல்லவென்று வாதிகள் சொல்லும் வாதம் சட்ட சம்மதமுள்ள தல்லவென்றும் கூறுகிறோம்.

1865௵த்திய 2-வது ஆக்டின்படி ஒன்னறை மணங்கு தீர்வை வசூல் செய்வதற்கு ஹக்கு கிடையாதென்று வாதிக்கப்பட்டது. முனிசிப்பு அபராதத் தண்டனையாய் விதித்தது சட்டத்திற்கு விரோதமென்று தீர்மானித்தார். ஆனால் ஜில்லா ஜட்ஜோ இது அபராத தண்டனையாய் விதித்த தீர்வையல்ல ஆனால் வேறே விதமான தீர்வையென்று அபிப்பிராயப்பட்டார். ஜில்லா ஜட்ஜ் சொல்வது சரியல்லவென்பதற்கு இவ்விடத்தில் யாதொரு நியாயமும் கிடையாதென்று நாங்கள் நினைக்கிறோம்.

இரண்டாவது அப்பீல் சிலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

15 மதராஸ் வீக்லி நோட்ஸ் 322.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

அப்பீல் நெ. 185 of 1905.

ஜட்ஜிகள் :—சர்சாரல்ஸ் ஆர்னல் வொயிட் C. J.
மி-ர். அப்டுர் ரஹீம்.

ம. அ. பக்கீர் மகம்மத் ரவுத்தர் & Co. பிரதிவாதிகள் 3. 8, } அப்பீல் வாதிகள்.

vs

சவுத் இந்தியன் எக்ஸ்போர்ட் கம்பெனி,
வாதிகள்—அப்பீல் பிரதிவாதிகள்.

இது கும்பகோணம் சப் கோர்ட்டார் அசல் நெ. 38 of 1903ல் செய்த தீர்மானத்தின் பேரில் கொண்டு வந்த அப்பீல்.

அப்பீல் வாதிகள் தரப்பில் :—டி. ஆர். ராமசந்திரய்யர் வக்கீல்.

அப்பீல் பிரதிவாதிகள் தரப்பில்:—சி. இ. ஆட்ஜர்ஸ்.

தீர்ப்பு :—இந்த கேசில் 1, 2, பிரதிவாதிகள் சவுத் இண்டியன் எக்ஸ்போர்ட் கம்பெனியாராகிய வாதிகளுக்கு எழுதிக்கொடுத்திருந்த A குறிப்பிட்டிருக்கும் நோதுவை பத்திரத்தின் கீழ் பந்தப்பட்டவர்கள் தானென்று சப் ஜட்ஜ் தீர்மானம் செய்தார். இந்த வியாச்சியம் நடந்துக் கொண்டிருக்கையில் 3 முதல் 4 வரையிலுள்ள பிரதிவாதிகளை கட்சிதார்களாக சேர்க்கப்பட்டது. அவர்களாலும் 9-வது பிரதிவாதியாலும் அப்பீல் செய்யப்படவில்லை. அப்பீல் நடந்துக்கொண்டிருக்கையில் 5 to 7, 8 பிரதிவாதிகளின் தாயார் 6-வது பிரதிவாதியும் இறந்துபோய் விட்டாள். 1 முதல் 5 பிரதிவாதிகள் காலஞ்சென்ற கா. அல்லாபிச்சை ராவுத்தனுடைய குமாரர்கள், 6-வது பிரதிவாதி அவனுடைய விதவை 7, 8 பிரதிவாதிகள் அவனுடைய குமாரத்திகள். இந்த வியாச்சியம் 1, 2 பிரதிவாதிகள் தாவாவில் சொல்லியிருக்கும் 1, 5 பிரதிவாதிகளுக்கு சொந்தமாகிய சொத்துகளின் பொறுப்பின் பேரில் அப்போதைக்கப்போது கொடுத்துவந்த ரூ 39,000 சில்லரையை வசூல் செய்வதற்காக கொண்டு வந்த தாவா.

3 முதல் 8 பிரதிவாதிகள் ஷெ 1, 2 பிரதிவாதிகளுடைய குடும்பத்தில் சேர்ந்தவர்களென்றும் அவர்களும் அவர்களுடன் குடும்பமாய் வியாபாரம்செய்து வருகிறார்களென்றும் ஷெ கடன் அப்படி அவர்கள் குடும்பத்தில் ஏகமாய் செய்யும் வியாபாரத்திற்காக பட்டகடனென்றும் அவர்களையும் கட்சிதாரர்களாக சேர்க்கப்பட்டது. இந்த 3 முதல் 8 வரையிலுள்ள பிரதிவாதிகள் ஷை பாண்டின கடனுக்கு பந்தப்பட்டவர்க ளல்லவென்றும் அவர்கள் 1, 2 பிரதிவாதிகளுடன் கலந்து ஏக வியாபாரம் செய்கிறதில்லையென்றும் அப்படிப்பட்ட வியாபாரத்திற்காக அந்த கடன் வாங்கப்பட்டதல்ல வென்றும் சொல்லுகிறார்கள். 1, 2 பிரதிவாதிகள் A குறிப்பிட்ட சொத்துகளுக்கு ஏக சுதந்தர வாளிக ளல்லவென்றும் அந்த சொத்துகளை தனியாய் அநுபவிக்கப்பட்டவர்களல்லவென்றும் ஷெ சொத்துகள் அவர்களுடைய பொது சொத்தென்றும் அவர்களுடைய பாகம் மாத்திரம் தான் ஷெ கடனுக்கு பந்தப்படு மென்றும் வாதிக்கிறார்கள்.

3 to 8 பிரதிவாதிகள் ஏக குடும்ப சொத்தில் சுவாதீனமுள்ளவர்க ளல்லவென்று வாதிக்கப்படவில்லை. ஆனால் இந்த கேசில் முக்கியமாய் எடுத்துக் கூறிய வாதம் யாதெனில் :—

3 to 8 பிரதிவாதிகள் 1, 2 பிரதிவாதிகள் செய்த வியாபாரத்தில் பாகஸ்தர்களா அல்லவா என்பதும்; தாவா கடனை கொடுக்க பந்தப்பட்டவர்களா அல்லவா என்பதும் தான்?

இது விஷயத்தைப்பற்றி இந்த கேசில் எடுத்துக் கூறியிருக்கும் சாட்சியத்தைப் பார்க்கு மளவில் அவர்கள் ஏக குடும்ப வியாபாரம் செய்தவர்கள் தானென்றும் சொல்வதற் கிடமில்லை. சப் ஜட்ஜ் தன்னுடைய தீர்மானத்தில் ஆதாரமாய் எடுத்துக் காட்டியிருக்கும் கேசுகளும் இந்த கேசுக்கு ஒவ்வினதல்லவென்றும் சொல்லி யிருக்கிறார். அவர்கள் 1, 2 பிரதிவாதிகள் செய்யும் வியாபாரத்தில் பாகஸ்தர்கள் தானென்று சொல்வதற்கு சாட்சியமே கிடையாது. ஆகையால் இந்த அப்பீலை ஏற்றுக்கொண்டு வியாச்சியம் தள்ளுபடி செய்யப்பட்டது.

15 மதராஸ் வீக்லி நோட்ஸ் 325.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

இரண்டாவது அப்பீல் நெ. 1158 of 1906.

ஜட்ஜிகள் :— { மி-ர். ஜ. பென்சன், மி-ர். ஜ. சங்கரநாயர் } முன்பாக

படபத்ரத்திலிருக்கும் ஸ்ரீ ராதா கண்டசுவாமி தேவால்யத்திற்கு ட்ரஸ்டியாகிய கோவிந்த பரம குருவு } வாதி 1 அப்பீல் வாதி.

Vs

போத்தாசி தந்தாசி ப்ரதானு & Co., பிரதிவாதிகள்-ரேஸ்பான்டேன்கேள்.

சிவில் புரோசிஜர் கோடு—உத்தரவு 41, ரூல் 33- மதராஸ் எஸ்டேட்ஸ் லான்டு ஆகட் (1 of 1908) 1909ம்௵ 4-வது ஆக்டின் பிரகாரம் திருத்தப்பட்டபடி 6-வது செக்ஷன் 1-வது க்லாஸ் (உட்பிரிவு) பாயக்காரியின் சுதந்தரம்.

1905-வது வருஷத்தில் நம்பர் தாக்கல் செய்து அதன்பேரில் செய்த அப்பீல் 1906-வது வருஷத்தில் பைசல் செய்யப்பட்டது. அதன்பேரில் இரண்டாவது அப்பீல் நடந்துக்கொண்டிருக்கையில் மேற்செப்பிய லாண்டு எஸ்டேட் ஆக்ட் (1 of 1908) ஜாரி செய்யப்பட்டு அமுலுக்கு வந்தது. அந்த ஆக்டின் 6-வது பிரிவில் இந்த ஆக்ட் (1 of 1908) அமுலுக்கு வரும்போது அப்போது நில சுவாதீனத்திலிருந்த பாயக்காரி ஒவ்வொன்றுக்கும் சாஸ்வித அநுபோகமுண்டென்று நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது. சிவில் புரோசீஜர்கோடு 41-வது உத்தரவு 33-வது ரூலை அனுசரித்துப் பார்த்தால் இரண்டாவது அப்பீல் அப்பீல் கோர்ட்டார் பிரதிவாதியின் தாவா கிரமமான தென்று மஞ்சூர் செய்துக்கொள்ளலாமென்றும் அவன் பேரில் சுவாதீனத்திற்கு டிக்ரி ஆயிருக்கிறதென்பது யிருந்திடினும், பாயக்காரிக்கு நிலத்தை அநுபோகிக்க சுதந்தர முண்டென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அப்பீல்வாதிகள் தரப்பில் :—மிஸ்டர் ராமேசன்.

ரெஸ்பான்டெண்டுகள் தரப்பில் :—மி-ர் பி. ஆர். சுந்தரய்யர்.

தீர்ப்பு :—பிரதிவாதிகள் சாஸ்விதமாய் அநுபோகிக்க சுதந்தரமுள்ள பாயக்காரிகளென்று ஜட்ஜி தீர்மானம் செய்தது சரியா அல்லவா என்பது சந்தேகத்திற் கிடமா யிருக்கலாம். 1909-ம் வருஷத்திய 4-வது ஆக்டின் பிரகாரம் திருத்தப்பட்ட படியுள்ள 1908-வது வருத்திய 1-வது ஆக்டின் 6-வது பிரிவு 1-வது உட்பிரிவின்படி பாயக்காரிகளுக்கு சாஸ்விதமான அநுபோக சுதந்தரம் உண்டென்று நாங்கள் ஸ்பஷ்டமாய் அபிப்பிராயப் படுகிறோமாகையால் அதைப்பற்றி இவ்விடத்தில் தீர்மானம் சொல்வது அனாவசியம்.

1905-வது வருஷத்தில் தாவா கொண்டுவரப்பட்டது அதன் பேரில் செய்த அப்பீல் டிக்ரி 1906-வது வருஷத்தில் செய்யப்பட்டது. ஆனால் அப்படி டிக்ரியானபிறகு ஜாரி செய்யப்பட்டு அமுலுக்கு வந்த ஆக்டின் நிபந்தனைகளின்படி கட்சிதாரர்களுடைய சுதந்தரம் பாதிக்கமாட்டாதென்று வாதிக்கப்பட்டது. அப்படி யிருந்திடினும் இரண்டாவது அப்பீலில் கீழ் கோர்ட்டில் செய்த அப்பீலில் ஏற்பட்ட டிக்ரி சரியா அல்லவா யென்று நாங்கள் யோசிக்கவேண்டியதே யொழிந்து மற்றப்படி வேறே அம்சங்களைப்பற்றி நாங்கள் கவனிப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் கிடையாதென்றும் வாதிக்கப்பட்டது. மேற்செப்பிய பிரிவில் அடங்கியிருக்கும் வார்த்தைகள் ஸ்புஷ்டமாய் இன்னதென்று தெரிய வருகிறது. அந்த பிரிவின்படி ஷெ 1908வருத்திய 1-வது ஆக்டு அமுலுக்கு வருகையில் ஓர் ரயித்தி நிலத்தை அநுபோகித்துக்கொண்டிருக்கும்பாயக்காரிக்குசாஸ்விதமானஅநுபோகசுதந்தரமுண்டென்று திருத்தப்பட்டபடி (1909-வது௵த்திய 4-வது ஆக்ட்) நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் இந்த ஆக்ட் அமுலுக்கு வரும்போது நிலத்தை அநுபவித்துக்கொண்டிருக்கும் பாயக்காரி இந்த ஆக்டு வழங்கத்தொடங்க ஆரம்பித்த தேதியிலும் அநுபவித்துக்கொண்டிருப்பவனென்று தான் அர்த்தம் செய்யவேண்டியது, ஆனால் நாங்கள் இந்த கேசில் முக்கியமாய் யோசிக்க வேண்டிய அம்சம் யாதெனில் ஷெ லான்ட் எஸ்டேட் ஆக்டு அமுலுக்கு வந்த தேதியில் அதாவது 1908-வது வருஷம் ஜூலை மாதம் 1உயில் அந்த நிலம் அந்த பாயக்காரியின் அநுபோகத்திலிருந்ததா இல்லையாயென்பது தான் முன்னமேயே நிலத்தை சுவாதீனப்படுத்தும்படி செய்யப்பட்டிருக்கும் டிக்ரி ஒன்றிருக்கிறதென்னும் விஷயம் அனாவசியமானது. ஆகையால் பிரதிவாதிகள் நிலத்தை சாஸ்விதமாய் அநுபவிக்க சுதந்தரமுண்டென்று தான் நாங்கள் தீர்மானிக்க வேண்டியதா யிருக்கிறது. பிரதிவாதிகள் அவர்களுக்குள்ள சுதந்தரத்தை வேறே புதிதாய் ஓர் தாவா செய்து தான் தங்களுடைய சுதந்தரத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்றும் வாதிக்கப்பட்டது அநுபோக சுதந்தரமுள்ள பிரதிவாதிகளை நிலத்தை விட்டு அப்புறப்படுத்தி வேறே புதிதாய் தாவா செய்து அவர்களுடைய சுதந்தரத்தை ஸ்தாபிக்கச் சொல்லுவது அக்கிரமமென்று எங்களுக்கு புலப்படுகிறது. அப்படி அவர்களை வேறே புதிதாய் தாவா

செய்துக்கொள்ளும்படி சொல்வது வியாச்சியத்தை பெருக்கி நடத்தும் நடவடிக்கைகளாக ஏற்படும். ஜுடிகேட் சர் ஆக்டு 4-வது ரூலுக்கிணங்க சிவில் புரோசீஜர் கோடு 41-வது உத்தரவு 33 வது ரூலின் படி அப்பெல்லேட் கோர்ட்டாருக்கு பிரதிவாதிகளின் தாவாவை மஞ்சூர் செய்து ஊர்ஜிதப்படுத்துவதற்கு எங்களுக்கு அதிகாரமுண்டு. ஆகையால் சுவாதீனத்திற்காக வாதிகள் கொண்டுவந்த தாவாவை தள்ளுபடி செய்கிறோம்.

ஆனால் அனுபோக சுதந்தரமுள்ள பிரதிவாதிகள் வாதிகளுக்கு தீர்வை செலுத்தவேண்டியது அவசியம்தான். அதைப்பற்றி ஜில்லா ஜட்ஜ் யாதொன்றும் சொல்லாமையால் எவ்வளவு தீர்வை செலுத்த வேண்டியதென்று கண்டு தெரிவிக்கும்படி கேசை மறுபடியும் விசாரணைக்கு அனுப்பப்பட்டது.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

சிவில் ரிவிஷன் பிட்டிஷன் 819 of 1908.

ஜட்ஜு. மி-ர். ஜஸ்டிஸ் சங்கரநாயர்-முன்பாக.

ஸ்ரீராஜ வெங்கடரங்கய்யர அப்பா ராவ் பகதூர்-நூஜ்வேடு ஜெமீன்தார். } மனுதார்.

vs

தாடப்பல்லி ஜெகன்னாதம் வகையரா...
ரெஸ்பான்டென்டுகள்.

பூமிக்குச் சொந்தக்காரனும் பரயக்காரியும் பூமிக்குச் சொந்தக்காரனுடைய அனுமதியின்றி அவனுடைய ஏரி ஜலத்தைப் பிரயோகிப்பது—ஒப்பந்தம். தண்ணீர் தீர்வை (செஸ்) செலுத்த பந்தப்படுவது—ஒப்பந்தம் (ஏற்பாடு) இல்லாவிடில் நஷ்டம் கட்டிக் கொடுக்க பந்தப்படுவது.

ஓர் பாயக்காரி பூமிக்குச் சொந்தக்காரனுடைய அனுமதியின்றி அவனுடைய ஏறி ஜலத்தைப் பாய்ச்சி நிலத்தைப் பயிர் செய்தால், வெளிப்படையாயாவது அல்லது உள்ளடியா யாவது ஒப்பந்தம் (ஏற்பாடு) இருந்திடினும் துராக்கிரதமாய் உபயோகித்தவனென்று பூமிக்குச் சொந்தக்காரனுக்கு நஷ்டம் கட்டிக்கொடுக்கவேண்டியவனாவான். அப்படிப்பட்ட விஷயத்தில் அந்த பாயக்காரி பாய்ச்சிக்கொண்ட ஜலம் தானியம் விளைவதற்கு போதுமானதா அல்லவா யென்னும் விஷயம் அனாவசியம்.

பெஜ்வாடா முனிசீபு கோர்ட்டு 1908-ம்ஞு 553, 554 உள்ள ஸ்மால்காஸ் நெம்பர்களின் டிக்ரீகளின் பேரில் 1887-ஞுத்திய 9-வது ஆக்டு 25-வது பிரிவின்படி ஹைக்கோர்ட்டாருக்கு கொடுத்துக்கொண்ட ரிவிஷன் மனு.

கேசின் விவரம்:—வாதியின் அனுமதியின்றி பிரதிவாதி வாதியினுடைய ஏறி ஜலத்தைப் பாய்ச்சிக் கொண்டு நஞ்சை சாகுபடி செய்து அதை அனுபவித்தானென்னும் காரணத்தால் வாதி அந்த பிரதிவாதியினடத்திலிருந்து தண்ணீர் தீர்வை வசூல் செய்வதற்கு ஹக்குண்டென்று கொண்டுவந்த தாவா அப்படி செய்யும் தாவா யாதொரு சட்டம் அல்லது ஒப்பந்தம் (ஏற்பாடு) படிக்கல்லாமலிருப்பதாக தாவா செய்திருப்பது நஷ்டத்திற்கென்று நான் அபிப்பிராயப் படுகிறேன்.

பிரதிவாதி அந்தப்படி பூமிக்குச் சொந்தக்காரனுடைய நிலத்திலிருந்து யாதொரு ஜலமும் பிரயோகப்படுத்த வில்லையென்றும் வாஸ்தவத்தில் அவனுடைய ஏறியில் ஜலமே கிடையாதென்றும் எதிர் வாதம் கூறினான்.

ஏறியின் ஜலத்தைப் பிரயோகித்து தானிய சாகுபடி செய்தால்தான் ஏகரா 1-க்கு ரூபாய் 5-விகிதம் தீர்வை கட்டிக் கொடுப்பதாய் பிரதிவாதி ஒப்புக் கொண்டிருப்பதாய் தெரிய வருகிறது.

ஏறியில் ஜலமில்லாமலிருந்தபடியால் யாதொரு தானியமும் சாகுபடி செய்யவில்லையென்றும்; ஆகையால் பிரதிவாதி தீர்வை செலுத்த பந்தப்பட்டவனல்லவென்றும் சொல்லுகிறார்.

டி. முனிசீபு சொல்லும் இந்த அபிப்பிராயத்தின் பேரில் இந்த மனுவை பைசல் செய்வது கூடாமை. பிரதிவாதி ஜலத்தை பிரயோத்திக் கொள்வதற்கு வெளிப்படையாகவோ உள்ளடியாகவோ யாதேனும் ஓர் ஒப்பந்தம் (ஏற்பாடு) இருக்கும் விஷயத்தில் அப்போது வாதியின் அனுமதி பெறவேண்டுமென்பது அனாவசியம்; ஆகையால் தீர்மானிக்கவேண்டிய அம்சம் யாதெனில்—ஒப்பந்தத்தின்படி பிரதிவாதி தான் பாய்ச்சிக்கொண்ட ஜலத்திற்கு தீர்வை கட்டிக்கொடுக்க பந்தபபட்டவனா அல்லவா? என்பதும் அல்லது தானியம் விளைவிப்பதற்கு போதுமான ஜலம் பிரயோகித்துக்கொண்டால் அல்லது உபயோகிப்பதற்கு அனுமதி பெற்றிருந்தால் அப்போது மாத்திரம் தான் தீர்வை கட்டிக்கொடுக்க பந்தப்பட்டவனா? என்பதும்தான்.

யாதொரு ஒப்பந்தம் (ஏற்பாடு) இல்லாமல் பிரதிவாதி அக்கிரமமாய் உபயோகித்தவனா யிருக்கும் பட்சத்தில் அப்போது பிரதிவாதிக்கு நஷ்டம் கட்டிக் கொடுக்க வேண்டியவனாவான்.

தானியம் விளைவிக்கவில்லை யென்பது போதுமான ஜலம் உபயோகிக்கப்படவில்லை அல்லது உபயோகிக்க அனுமதி பெறவில்லை யென்பதற்கு சாட்சியமாகும் அப்படிப்பட்ட ஒப்பந்தம் (ஏற்பாடு) இருந்தாலொழிய மற்றப்படி முடிவான தீர்மானம் சொல்லக் கூடாமை.

மேலே சொல்லி யிருப்பனவகளை அனுசரித்து டி. முனிசீபு வாதிக்கு பிரதிவாதி எவ்வளவு நஷ்டம் கட்டிக் கொடுக்கவேண்டு மென்பதைப்பற்றி ஓர் முடிவான அபிப்பிராயம் கூறவேண்டியதென்று கேசை மறுபடியும் கீழ் கோர்ட்டுக்கு அனுப்பப்பட்டது.

அதன்பேரில் டி. முனிசீபு பின்வருமாறு கூறினார்: கேசிலுள்ள சாக்ஷியத்தைப் பார்க்குமளவில் வெளிப்படையாயாவது உள்ளடியாயாவது ஒப்பந்தம் (ஏற்பாடு) கிடையாதென்று தான் சொல்லவேண்டும். ஜலமில்லாமல் பிரதிவாதி ஜலத்தை உபயோகித்தானென்பதற்கும் தானியம் யாதொன்றும் விளைவிக்க வில்லையென்பதற்கும் சாட்சிய மிருந்திடினும் பிரதிவாதி வாதிக்கு ரூபாய் 2 நஷ்டம் கட்டிக் கொடுக்க பந்தப்பட்டவனென்று தான் சொல்லவேண்டுமென்று ஹைகோர்ட்டுக்கு ரிப்போர்ட்டு செய்தார்.

இதன்பேரில் இருதரத்தாரும் யாதொரு ஆட்சேபமும் சொல்லாமையால் கீழ் கோர்ட்டார் சொல்லியதை ஒப்புக்கொண்டு வாதிக்கு நஷ்டம் தாமாழா சிலவுடன் தீர்மானிக்கப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் ரிப்போர்ட்டு 7-வது வால்யம் 2-வது பார்ட்டு 230.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது அப்பீல் நெ. 481 of 1909.

ஜட்ஜிகள்:—மி-ர் ஜஸ்டிஸ் வாலிஸ். மி-ர். ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி ஐயர். } முன்பாக.

ஹரிகாமய்யா—பிரதிவாதி......அப்பீல்வாதி.

vs.

ஐயகாரிசேமையா—வாதி...அப்பீல் பிரதிவாதி.

ஓர் பிரதிவாதியின் பேரில் அசல் தாவா தள்ளுபடி செய்யப்பட்டது. எந்த பிரதிவாதியின் பேரில் டிக்கிரி செய்யப்பட்டதோ அவன் அப்பீல் செய்து கொண்டவன்—அப்பீல் செய்துக் கொள்ளாத பிரதிவாதியின் பேரிலும் டிக்ரி செய்வதற்கு அப்பீல் கோர்ட்டாருக்கு அதிகார முண்டா இல்லையா?—பழக்கம்.

வாதிகொண்டுவந்த தாவாவில் முதல் பிரதிவாதியின் பேரில் நம்பரை தள்ளுபடி செய்து 2-வது பிரதிவாதியின் பேரில் டிக்ரி செய்யப்பட்டது. 2-வது பிரதிவாதி அப்பீல் செய்துக்கொண்டான். முதல் பிரதிவாதியின் பேரில் நம்பரை தள்ளுபடி செய்ததைப்பற்றி வாதி அப்பீலாவது அல்லது மிமோ ஆப் அப்ஜெக்ஷன். ஆட்சேபணை மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அப்பீல் கோர்ட்டார்இரண்டு பிரதிவாதிகளின்பேரிலும் தீர்ப்பு செய்தார்கள்.

தீர்ப்பின் சங்கிரகம்:— இரண்டாவது பிரதிவாதி செய்த அப்பீலின் பேரில் அப்பீல் கோர்ட்டார் முதல் பிரதிவாதியின் பேரிலும் தீர்ப்பு செய்ய அதிகாரம் கிடையாது.

குலைக்காதபிள்ளை. V. விஸ்வனாதபிள்ளை. இ. லா. ரி. 28 மதராஸ் 229.

15 மதராஸ் லா-ஜ-212-ல் செய்த தீர்மானம் ஆதாரமாய் எடுத்துக் கொள்ளப்பட்டது.

நரசபூர் டி. மு. கோர்ட்டார் அ. நெ. 140 of 190 ல் செய்த தீர்ப்பின் பேரில் எல்லூர் சப் கோர்ட்டுக்கு செய்துக்கொண்டது அப்பீல் நெ. 164 of 1908-ல் செய்த டிக்ரியின் பேரில் கொண்டுவந்த இரண்டாவது அப்பீல்.

தீர்ப்பு:—முதல் பிரதிவாதியின் பேரில் நம்பர் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த தீர்மானத்தின் பேரில் வாதி அப்பீலாவது மிமோ ஆப் அப்ஜெக்ஷனாவது தாக்கல் செய்யவில்லை. ஜில்லா ஜட்ஜ் இரண்டாவது பிரதிவாதி செய்துக்கொண்ட அப்பீலின் பேரில் முதல் பிரதிவாதியின் பேரிலும் டிக்ரி செய்தது பிசகு. 2-வது பிரதிவாதியின் இண்டார்சதாரராகையால் அவன் பேரில் செய்த டிக்ரி சரிதான்.

ஆகையால் கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்த டிக்ரியை மாற்றி முனிசீபு டிக்ரியை காயம் செய்யப்பட்டது. 1-வது பிரதிவாதிக்கு இவ்விடத்திலும் கீழ் அப்பீல் கோர்ட்டிலும் நேரிட்ட சிலவுகளை வாதி கட்டிக்கொடுக்க வேண்டியது.

லாகூர் இந்தியன் கேஸ்லாரிப்போட்டு 7-வது வால்யம் 2-வது பாகம் 217.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

ஜட்ஜிகள்:—மி-ர். ஜ. பென்சன். மி-ர். ஜ. கிருஷ்ணசாமி ஐயர். } முன்பாக.

ச-ம-மெய்யப்பசெட்டி வகையரா-அப்பீல் வாதிகள்.

vs.

பெரியண்ணன்செட்டி வகையரா-ரெஸ்பான்டேண்டேகள்.

ஓர் பத்திரத்தின் தாத்பரியம்-எஜமானனும் ஏஜெண்டும் ஏஜெண்டு பணத்தைச் கையாண்டானென்பதும்,—வியாஜ்ஜியத்தில் ஏற்பட்ட தகரார்களை ராஜி செய்யப்பட்டது. ஏஜெண்டு செய்த குற்றங்களிலிருந்து அவனை நிவர்த்தி செய்து ஏற்பட்ட தஸ்தாவேஜு குற்றங்களென்றால் மோசம் என்று அர்த்தமாகும்—என்பதும்.

ஏஜெண்டை வேலையிலிருந்து நிவர்த்தி செய்த பிறகு, எஜமானன் தன்னுடைய ஏஜெண்டு சில்துகையை சட்டத்திற்கு விரோதமாய் கையாண்டானென்றும். கணக்குப் புஸ்தகங்களில் அபதமான

பதிவுகள் செய்தானென்பதும், அதன் பிறகு ராஜி செய்து கட்சிதாரர்கள். ஏஜெண்டை அவன் செய்த தப்பிதங்களி லிருந்து நிவர்த்திசெய்து ஓர் பத்திரம் எழுதிக்கொண்டார்கள். அப்படி ஏற்பட்ட பத்திரத்தின்படி குற்றங்க ளென்றால் மோசமென்று அர்த்தமாகாது யென்பதாக மறுபடியும் அந்த ஏஜெண்டை மோசத்திற்கு தாவா செய்தால் அந்தப் பத்திரம் மோசம் முதலிய குற்றங்களுக்காகதான் ஏற்பட்டதென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த கேசில் நான்காவது பிரதிவாதியின் பேரில் செய்திருக்கும் தீர்ப்பை யோசிக்கு மளவில் அது 3 குறிப்பிட்ட தஸ்தாவேஜியின் தாத்பரியப்படி தான் தீர்மானிக்க வேண்டியதா யிருக்கிறது. ஏஜெண்டை வேலையிலிருந்து நீக்கின பிறகு 4-வது பிரதிவாதி அவன் பேரில் அவன் பணத்தை சட்டத்திற்கு விரோதமாய் கையாண்டா னென்றும், கணக்குப் புஸ்தகங்களில் பொய்ப் பதிவுகள் செய்தானென்றும் தாவா கொண்டுவந்தார்கள். V. (6) (15) குறிப்பிட்ட தஸ்தா வேஜுகளின்படி ம-ர-அ-ம-விற்கு கொடுத்த அட்வான்சு வாஸ்தவமென்று வாரதிகள் நம்பவில்லை.

அதன் பேரில் வாதிகள் யேதோ ஓர் ஏற்றாடு செய்து 3 குறிப்பிட்ட தஸ்தா வேஜு எழுதிக்கொண்டார்கள். சப் ஜட்ஜ் அந்தப் பத்திரத்தைப் பற்றி சொல்வது வாஸ்தவமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். மிஸ்டேக் என்னும் பதம் அந்தப் பத்திரத்தில் எழுதி யிருக்கினும் மிஸ்டேக் என்னும் பதம் மோசம் என்பதையும் அர்த்தம் கொள்வதாக தான் நினைக்கவேண்டும். ஆகையால் 4-ம் பிரதிவாதியின் வாதத்தை நாங்கள் ஒப்புக்கொண்டு இந்த அப்பீலை தள்ளுபடி செய்கிறோம்:

CALCUTTA HIGH COURT.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

—:o:—

அப்பீல் நே. 223 of 1907.

ஜட்ஜிகள் :— {மி-ர் ஜ. ப்ரெட். / மி-ர் ஜ. வின்சென்.} முன்பாக.

ஜெய்னுத் ஜா. வகையரா—வாதிகள்-அப்பீல் வாதிகள்.

vs

சமலனுத் ஜா. வகையரா--பிரதிவாதிகள்-ரேஸ்பான்டேன்கேள்.

சிவில் புரோசீடர் கோடு (1882-ம்ஞு த்திய 14-வது ஆக்ட்) 525-வது செக்ஷன் பஞ்சாயத்தாருக்கு தெரிவித்தல். இந்துலா மிதாக்ஷர விதிப்படியுள்ள ஓர் ஹிந்து சமஷ்டி குடும்பம்-பாகப் பிரிவினையைப் பற்றியது:—ஓர் ஹிந்து ஏக குடும்பத்தின் மனேஜராயிருக்கும் கர்த்தா பஞ்சாயத்தாருக்கு தெரிவித்திருந்தால் அக் குடும்பத்தைச் சேர்ந்த மைனரும் கர்த்தா செய்ததை ஒப்புக்கொள்ள வேண்டியவன். பஞ்சாயத்தாருக்கு சூது மார்க்கமாய் தங்களுடைய கேசை தெரிவிப்பது அந்த பஞ்சாயத்தார்கள் பாரபட்சமாய் ஒரு தலைபக்ஷமாய் செய்வது.—

தீர்ப்பு:— 525-வது பிரிவின்படி செய்துக்கொள்ளும் மனுவிலேயே பஞ்சாயத்தார்களுடைய ஒழுங்கீனங்களைப்பற்றி விசாரணை செய்யவேண்டியது. புதிதாய் நம்பர் செய்துக்கொள்ள வேண்டியதில்லை, தர்பங்கா ஜில்லா ஜட்ஜ் செய்த டிக்ரியின்பேரில் செய்துக்கொண்ட அப்பீல்.

பாபஸ் ஜோகஷ்தர் தாராஸ் / ஜாய் கோபால் கோஷா } அப்பீல் வாதிகளின் வக்கீல்கள்.

பாபஸ் உமாகளி மூக்கர்ஜி, துவாரகனுத் சக்தர் பதி சந்தசேகர் மாஸெர்ஜி. } ரேஸ்பான்டேன்கேளின் வக்கீல்கள்.

தீர்ப்பு:—வாதிகள் ஓர் அவரவர் டை (பஞ்சாயத்தார்|தீர்மானத்தை, வைத்து அதன்படி டிக்ரி செய்ய வேண்டியதென்று சிவில் புரோசீடர் கோடு 525-வது பிரிவின்படி தர்பங்கா ஜில்லா கோர்ட்டுக்கு மனு கொடுத்துக் கொண்டார்கள். அம்மனுவை ஜில்லா கோர்ட்டார் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன் பேரில் வாதிகளால் இந்த அப்பீல் கொண்டுவரப்பட்டது. |ஓர் ஹிந்து குடும்பத்தில் மூத்தவன் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். இந்த குடும்பத்திற்கு மன்மோஹன் ரரயென்பவன் ஆதியில் கர்த்தா-தலைவனுயிருந்தான். பிரதிவாதிகளோ மேற்செப்பிய இந்து குடும்பத்தின் 'இளையவன் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். வாதிகள் மன்மோஹங்ஜா என்பவனை மூத்தப்பிள்ளையாகிய கெங்கனுத்ஜா என்பவன் குமாரர்களாகையால் அவர்கள் ஷை மன்மோஹன் ஜா என்பவனுக்குப் பேரன்மார்கள் பிரதிவாதிகளில் (1) கமலனுத் ஜா என்பவன் 'ஷை மன்மோஹன் ஜாவின் இளைய குமாரனுகிய டேஜ்னுத் ஜா என்பவனின் குமாரனுகையால் இவனும் ஷை மன்மோகன் ஜா என்பவனுக்குப் பேரன்தான். டேஜ் (2) வலிப்னுத் ஜா இவன் ஷை டேஜ்னுத் ஜா என்பவனின் குமாரனுகிய பூவினுத் ஜா என்பவனின் குமாரன். ஆகையால் இவனும் ஷை மன்மோகன் ஜாவிற்கு ஓர் பேரன்தான். இவர்களுடைய குடும்பமோ மித்தாக்ஷர விதியை அனுசரிக்கும் ஓர் ஹிந்து ஏக குடும்பமாக தான் ஆதியிலிருந்ததாக தெரிய வருகிறது. ஷை மன்மோகன் ஜா என்பவன் காலமான பிறகு அவனுடைய மூத்த குமாரனுகிய ஷை செங்கனுத் ஜா என்பவன் அந்த குடும்பத்திற்கு - கர்த்தா தலைவனுனான். கமலனுத் என்பவன் இறந்து விட்ட பிறகு அவனுடைய மூத்த குமாரன் பூவினுத் என்பவன் அவனுடைய இளைய சகோதரனுகிய கமலனுத் என்பவனுக்கு கார்டியனுன் ஷை பூவினுத் காலமான பிறகு கமலனுத் என்பவனுக்கும் வலிப்னுத் என்பவனுக்கும், ஷை கெங்கனுத் ஜா கார்டியனுன். கமலனுத் என்பவன் 1898 ஞுத்திற்கு முன்னமேயே யுக்த வயதடைந்தவன். வலிப்னுத் என்பவனுக்கு கெங்கனுத் என்பவனுடையகுமாரனுகிய பைத்யனுத் என்பவன் கார்டியனுயிருந்தான்.

கேசின் விபரம்:— 1898ஞு டிஸம்பர்மீ 31உ கெங்தனுத் ஜா என்பவன் தன்னுடைய பரம்பரைத்குத் தலைவனுகவும், இன்னெரு இளைய காவுக்கு கமலனுத் என்பவன் தனக்காகவும் வலிப்னுத் என்பவனுக்கு கார்டியனுகவும் ஓர் "எக்ரரார்நாமா" எழுதிகை யெழுத்து செய்தார்கள். இந்த பத்திரத்தில் சொல்லி யிருப்பது யாதெனில்:—இவர்களுடைய குடும்பம் ஆதியிலிருந்து பரம்பரையாய் தொன்றுதொட்டு ஸமஷ்டி (ஏக) குடும்பமாகவே இருந்திடினும் மேற் செப்பிய இரண்டு பரம்பரையைச் (வம்சாவழியைச்) சேர்ந்தவர்கள் பாகித்துக் கொள்ளவேண்டுமென்று கோறி அப்படியே பிரிவினை செய்துக்கொள்ள சம்மதித்தார்கள். ஆகையால் இப்படி அவர்கள் சம்மதித்துக் கொண்டபடி கொஞ்சம் முன்னதாகவே வேறே தனியாய் சமைத்து சாப்பிடுவதற்கு கூட ஆரம்பம் செய்துக்கொண்டார்கள். அதன்படி அன்றைய தேதிமுதல் மேற்செப்பிய இரு வம்சஸ்தாரும் வெவ்வேறே தனித்தனியாய் பிறிந்துபோய் வாசம் செய்துக்கொண்டு வந்தார்கள். பத்திரம் (எக்ரரார்னுமா) என்ன நோக்கம் கொண்டு எழுதின தென்று பார்த்தாலோ குடும்பத்தைச் சேர்ந்த சொத்துகளையும் குடும்கத்திலிருந்து கொடுக்கப்பட வேண்டிய கடன்களைப் பாகித்துக்கொள்வதற்காக என்று தான் புலப்படுகிறது. இப்படி அவர்கள் கறுதினபடி தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த சொத்துகளையும் கடன்களையும் யோக்கியதையாயும், மனப்பூர்வமான விசுவாசத்துடனும் தங்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு வம்சஸ்தாருக்கும் பிறிவினை செய்து கொடுக்கும்படியாய் மூன்று பேரை பஞ்சாயத்தார்களாய் ஏற்படுத்திக் கொண்டார்கள். பஞ்சாயத்தார்கள் 1905-ம்ஞு மேமீ 25உ அவார்டுசெய்தார்கள் அந்த அவார்டில் கைபொப்பம் செய்திருப்பவர்களை நோக்குமளவில் முதல் முதல் பஞ்சாயத்தார்களாய் ஏற்பட்ட மூவரில் ஒருவருடைய கையெழுத்து மாத்திரம் தான் அந்த அவார்டிலிருக்கிறது. இப்படிப்பட்ட அவார்டை வாதிகள் கோர்ட்டில் தாக்கல் செய்துக்கொண்டு அதன்பேரில் நடவடிக்கை நடத்தும் படியாய் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

பிரதமத்தில் இந்த தாவா 1905-ம்ஞு நவம்பர்மீ 1உ சப் கோர்ட்டில் தாக்கலாய் பிறகு அநேகதரம் வாய்தா போடப்பட்டுவந்து 1907-ம்ஞு ஜனவரிமீ 28உ ஜில்லா கோர்ட்டுக்கு மாத்திவிடப்பட்டது.

பிரதிவாதிகளின் எதிர்வாதம்:—

பஞ்சாயத்தாருக்கு செய்துக்கொண்ட மனு சட்டப் பிரகாரம் செல்லத் தக்கினதல்லவென்றும் மற்ற இரண்டு பஞ்சாயத்தார்கள் செய்த நடவடிக்கைகள் நியாயமான தல்லவென்றும் பஞ்சாயத்தார்கள் பக்ஷா பாதமாய் யேதோ லஞ்சம் பெற்றுக்கொண்டு செய்த அவார்டென்றும் அப்படிப்பட்ட அவார்ட் சட்டப்படி செல்லத் தக்கினதல்லவென்றும், நியாயமானதல்லவென்றும் ஆக்ஷேபித்தார்கள்.

இந்த அம்சங்களின்பேரில் சப் கோர்ட்டார் இஷ்ஷுக்கள் ஏற்படுத்தினுர்கள். ஆனல் ஜில்லா ஜட்ஜ் முக்கியமாய் ஒரு அம்சத்தைப்பற்றி மாத்திரம்தான் தீர யோசித்து முடிவு சொன்னர். அந்த அம்சம் யாதென்றலோ "கமலனுத் என்பவன் தன்னுடைய தாயாதி வலிம்னுத் என்னும் மைனருக்கு கார்டியனுய் அந்த மைனர் தரப்பில் பஞ்சாயத்தாருக்கு தெரிவித்துக்கொண்டது நியாயமும், கிரமுமானதா? —சட்டப்படி செலாவணி யுள்ளதுதானு ? என்பது தான்.

ஆகையால் கமலனுத் என்பவனுக்கு சட்டப்பிரகாரம் அப்படிப்பட்ட அதிகாரம் கிடையாதென்று தீர்மானித்து அந்த மைனர் தரப்பில் கிரமமாய் யாவருமில்லாமையால் அந்த அக்ரிமென் (எக்ரரார்நாமா) டினுல் மைனர் பந்தப்பட்டவனல்லவென்று கண்டு ஜில்லா ஜட்ஜ் மேற்படி மனுவை தள்ளுபடி செய்து விட்டார்.

வாதிகள் அப்பீல் செய்துக்கொண்டார்கள்.

தீர்ப்பு:—இருதரப்பிலும் வந்த லாயர்கள் சொல்லியதைக் கேட்கம்பட்டது. ஜில்லா ஜட்ஜிகள் தீர்மானம் நிலைக்கத் தக்கினதல்ல வென்று அபிப்பிராயம் கொள்ளப்பட்டது. பாகப் பிறிவினை செய்துக்கொண்டதின் கருத்து யாதெனில் யேற்கனவே தங்களுடைய குடும்ப சொத்தை இரண்டு வம்சஸ்தார்களும் சமபாகமாய் பிரித்துக்கொண்டு அதில் ஒவ்வொருபாகத்தையும் தனித்தனியாய் ஒவ்வொரு வம்சஸ்தாரும் அடையவேண்டிய தென்பதுதான் அந்த குடும்பத்தைச் சேர்ந்த எல்லா தாயாதிகளிடத்திலிருந்தும் பிறிந்துக் கொள்ளவேண்டு மென்பதல்ல. அந்த அக்ரிமெண்டு (ஏக்ரரார் நாமா எழுதிய தேதியில் அவர்கள் பிறித்துக்கொண்டு தனித்தனியாய் வாசம் செய்ய ஆரம்பித்தது அவர்கள் ஒருவருக்கொருவர் சம்மதித்து செய்துக்கொண்டது இது இப்படிக்கிருந்தும் அந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொரு வம்சஸ்தாருக்கும் மறுபடியும் கலந்து ஒன்று சேர்ந்திருக்க வேண்டுமென்கிற தாம்பரியம் உண்டென்றும் தெரிய வருகிறது.

பாலமக்ஸ Vs. ருக்மாபாஸ், 30 கல் 729-என்னும் பிரிவி கௌன்சில் தீர்மானம் பார்க்கவும்,) இப்படி இவர்கள் செய்துக்கொண்டதினுல் இது வரையில் ஒரு ஏக குடும்பமா யிருந்தது இப்பொழுது மிதா

க்ஷர விதியை அனுசரிக்கும் இரண்டு எக குடும்பங்களாயின அந்த மிதாக்ஷர சட்டத்தின்படி இப்பொழுது எற்பட்ட இன்னொரு குடும்பத்திற்கு யுக்த வயது வந்து குடும்பத்தில் மூத்தவனுயிருப்பவன் கமலனுத் என்பவன்தானுகையால் அவன் அந்த கானுக்கு கர்த்தாவாயினுன்.

அது அப்படிடிக் கிருக்க சட்டப்படி அவன் தான் ஸமஷ்ட (ஏக) குடும்ப சொத்தை பரிபாலனம் செய்ய அர்கனுவான். மைனர் சிப்னுத்தின் ஏக குடும்ப சொத்திற்கு 1890௵த்திய 8-வது ஆக்டாகிய கார்டியன் வார்ட்ஸ் ஆக்டின்படி கார்டியன் ஏற்படுத்தும்படி கேட்பதற்கும் நியாயம் கிடையாது (ஷாம் குவார் V. மகானந்த சாஹோ, 19 கல் 301; காரி புல்லா. V. கலக்சிங்க், 30 இந்தியன் அப்பீல் 165.) பைத்தினுதசா என்பனே கார்டியனுய் ஏற்படுத்தப்பட்டதா அல்லவா என்பதை நாம் கவனிக்கவேண்டியதில்லை; ஏனென்றுல் சட்டப்படி கமலனுத என்பவன் அந்த வம்ச பரம்பரைக்கு கர்த்தாவாகையால் சிப்னுத்தின் ஏக குடும்ப சொத்திற்கு கார்டியனுயிருப்பதற்கு அவனுக்கு முழு அதிகார முண்டென்றும் மேலும் அந்த சொத்தைப்பற்றி பஞ்சாயத்தாருக்குத் தெரிவித்து நடவடிக்கைகள் நடத்தவும் சர்வ அதிகாரம் உண்டென்று தீர்மானம் செய்து ஜில்லா ஜட்ஜ் செய்த தீர்மானம் சட்டப்படி பிசகென்று கண்டு அவர் செய்த திர்ப்பை ரத்து செய்து விட்டு பஞ்சாயத்தார் லஞ்சம் பெற்றுக்கொண்டு பக்ஷாபாதமாய் செய்த திர்மான மென்பதைப்பற்றியும் இன்னும் பிரதிவாதிகள் கூறிய மற்ற ஆக்ஷேபங்களைப் பற்றியும் இஷ்ஷுக்கள் ஏற்படுத்தி விசாரணை செய்து தீர்ப்பு சொல்லும்படிக்கு கேசை மறுபடியும் கீழ் கோர்ட்டுக்கு வாபஸ் செய்துவிட்டார்சள்.

இந்த அப்பீல் சிலவை ரெஸ்பான்டெண்டுகள் அப்பீல் வாதிகளுக்குச் செலுத்தவேண்டியது. கீழ் கோர்ட்டுகளில் நேரிட்ட சிலவுகளைப்பற்றி முடிவில் தீர்ப்பு சொல்லவேண்டியது.

லாகூர் இந்திய கேசுகள் லா ரிப்போர்ட்டு 7-வது வால்யம் 1-வது பார்ட் 31.

ALLAHABAD HIGH COURT.

அலகாபாத் ஹைகோர்ட்டு.

——:o:——

அப்பீல் நெ. 28 o;-1909.

ஜட்ஜிகள்:—மி-ர். ஜ. கரமத் உசேன். மி-ர். ஜ. ஷாமியர். } முன்பாக.

பாபுட்டக்நாத்...டிக்கிரிதாரன்...அப்பீல் வாதி,

முசமத் முன்னி வகையரா-டிக்ரி கடன் தாரர்கள் ரேஸ்பான்டேண்டுகேள்.

கொதுவை பத்திரத்தின்மேல் செய்யப்பட்ட டிக்கிரி:—முன் கொதுவை தாரனுக்குச் சேரவேண்டிய பணத்தைச் செலுத்தும்படி ஓர் வாய்தா (டயம்) கண்டிருந்தது. அந்த டயத்திற்குள் பணம் செலுத்தபடவில்லை. அதனுல் நேரிட்டது யாது-ட்ரான்சபர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்ட் (1882 வருஷத்திய 4-வது ஆக்ட்) 93-வது செக்ஷன் சிவில் புரோசீஜர் கோடு (1908௵த்திய 5-வது ஆக்டு) 148, 151-வது பிரிவுகள் டிக்ரியில் கண்டிருக்கும் வாய்தா டயத்தை இன்னும் சோற்ப தினங்களுக்கு ஓத்தி வைப்பது.

கேசின் விபரம் :—18:8௵த்தில் ஓர் கொதுவை பத்திரத்தின் பேரில் டிக்ரி செய்யப்பட்டது. அந்த டிக்கிரியின்படி மூன் கொதுவை தாரனுக்கு டிக்கிரிதாரன் சொற்ப தொகை கட்டவேண்டு மென்று கண்டு அத்தொகையை பலான தினத்திற்குள் செலுத்தவேண்டியதென்று உத்தரவு செய்திருந்தது. அபபடி அவன் அந்த டயத்திற்குள் ஷை தொகையை கட்டத்தவறினுல் நம்பர் தள்ளுபடி செய்யப்பட்டதாக பாவிக்கப்பட வேண்டுமென்று டிக்ரியில் கண்டிருந்தது. டிக்கிரியில் கண்ட தேதிக்குள் டிக்ரீதாரன் தொகை செலுத்தவில்லை. ஆனுல், டிக்கிரீயில் கண்ட டயம் கடந்த பிறகு தொகை கோர்ட்டில் கட்டப்பட்டது. அதன் பேரில் கோர்ட்டார் முதல் கொதுவை தாரனை மேற்படி தொகையை பெற்றுக்கொள்ளும்படி உத்தரவு செய்தார்கள். அதன் பிறகு சுமார் 6 வருஷ காலம் பொறுத்து டிக்ரிதாரன் தன்னுடைய டிக்கிரியை ஊர்ஜிதப்படுத்தும்படிக்கு மனுவுசெய்துக் கொண்டான்.

தீர்மானப் :—கீழ் கோர்ட்டார் டிக்கிரிதாரன் டிக்ரியில் கண்ட டயம் கடந்த பிறகு கட்டிய பணத்தை ஒப்பி வாங்கிக் ஜொண்டதும் அந்த தொகையை முன் கொதுவைதாரனுக்குச் செலுத்தியதும் மேற்படி டயத்தை மாற்றி வேறே கொஞ்சம் தினம் ஒத்திவைத்ததாக உத்தரவு செய்யாமல் நடத்தின நடவடிக்கைகள் நியாயமான தல்ல.

டிகரியில் கணட டயத்திற்குள் முன் கொதுவை தாரனுக்குச் சேரவேண்டிய தொகையை செலுத்தாமையால் மேற்கண்ட டிக்ரியின்படி இந்த நம்பரின்

உபயத்திராள் விஷயமாயும் மேற்படி நம்பர் தள்ளுபடி செய்யப்பட்டதாக ஏற்படுகிறது.

ஸ்ரீராஜபாப்பன்ன. V. ஸ்ரீ வீரப்ரெடப்பா.

18 சென்249; 23 இ. அப்பீல் 32; 13 அ. 432.

1882௵த்திய டிரான்ஸ்பர் ஆப் ப்ரரப்பர்ட்டி ஆக்ட் 93-வனு பிரிவின்படி டிக்ரியில் கண்டிருக்கும் தொகையை கட்டுவதற்கு அந்தடி..க்ரியில் கண்டிருக்கும் டயத்தை மாற்றி இன்னும் சொற்ப தினம் ஒத்தி வைப்பதற்கு கோர்ட்டார் பந்தப்பட்டவர்களல்ல.

சிவில் புரோசீஜர் கோடு 148-அல்லது 151-வது பிரிவின்படி ஸஹகோர்ட்டார் டயத்தை மாற்றிவைப்பதற்கு அதிகாரம் கிடையாது. ஏனென்றுல் 148-வது பிரிவின்படி டிக்ரி செய்வதற்கு முன் நடக்க வேண்டிய விஷயங்களைப் பற்றியதே யல்லாமல் மற்றப்படி கொதுவை தொகையை கட்டவேண்டுமென்று சொல்லி யிருப்பதைப் பற்றி யல்ல. 151-வது பிரிவு இதற்கு சம்பந்தப்படமாட்டாது.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம் பார்ட் 1. பக்கம் 36.

CALCUTTA HIGH COURT.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

ஒரிஜினல் சைடில் செய்த மனு.

ஜட்ஜிகள் :—மி-ர். ஜஸ்டிஸ் பக்.

ஹலீமாபீ காடேன் என்னும் ஓர் மகம்மதிய ஸ்திரீ எழுதிவைத்த ‘வக்ப்’ (Waqf) என்னும் சாசனத்தைப்பற்றியது.

ஹைகோர்ட்டு அதிகார வறம்பைக்குறித்து.-மகம்மதியலா-வக்ப் (Waqf) சொத்தை விற்பனை செய்வதற்காகசெய்துக்கொண்டது-அதன் பேரில் நடவடிக்கை மனுவின்பேரில் உத்தரவு செய்யவேண்டியது.

ஒரு மடத்திற் கதிகாரி (மட்வாலா) ஒருவன் வக்வ் (Wakf) சொத்துகளை விற்பனை செய்வதற்காக உத்திரவளிக்கும்படி செய்துக் கொள்ளும் மனுவின் பேரில் உத்தரவு செய்ய நியாயம் கிடையாது. ஏனென்றுல் அப்படிப்பட்ட மனுசெய்துக் கொள்வதற்கு நியாயமுண்டென்பதற்கு யாதொரு சட்ட திட்டமும் கிடையாது. கிரம தாவா கொண்டுவந்தாலொழிய மற்றப்படி இப்படிப்பட்ட விஷயத்தில் கோர்ட்டார் நடவடிக்கை நடத்தி உத்திரவு செய்ய அதிகாரம் கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம் 1-வது பார்ட் 33.

ALLAHABAD HIGH COURT.

அலகபாத் ஹைகோர்ட்டு.

அப்பீல் நெ. 13 of 1909.

ஜட்ஜிகள் :—மி-ர். ஜ. கரமத் உசேன். மி-ர். ஜ. ஷாமியர். } முன்பாக.

கிரவார்தரி வகையரா...மனுதாரர்கள்...அப்பீல் வாதிகள்.

Vs.

ஜெய்ராயன் வகையரா...,எதிரிகள்....ரேஸ்பான் டேண்டுகேள்.

இன்சால்வெண்டு ஆக்ட் (1907௵த்திய 3-வது ஆக்ட்) 15-16-44-47-வது பிரிவுகள்—சிவில் புரோசீஜர் கோடு (1882௵த்திய 14-வது ஆக்ட்) 351-வது பிரிவு—1908௵த்திய சி. பு. கோ. 5-வது ஆக்ட் 151-வது பிரிவு கடன்தாரன் கொடுத்த இன்சால்வென்ட் மனு—மனுவை தாக்கல் செய்துக்கொண்ட பிறகு எந்தெந்த காரணங்களைக் கொண்டு அந்த மனுவை தள்ளுபடி செய்யலாம்.

ஓர் கடன் தாரன் தன்னுடைய கணக்குகளை மறைத்து விட்டா னென்றுவது. அல்லது கடனை திரும்ப கொடுக்கும்படியான சக்தி தனக்கிருக்கிறதா என்று முன்பின் நிதானியாமல்க டன்கள் வாங்கினுனென்றுவது. அல்லது தான் இன்சால்வென்டென்று தன்னுடைய மனதிற்குப் பூராய் அறிந்திருந்தும் தன்னுடைய வியாபாரத்தை நடத்திக்கொண்டு வந்தானென்றுவது—அவன் கொடுத்த இன்சால் வென்ட் மனுவை தள்ளுபடி செய்யலாகாது.

மேற்படி இன்சால்வென்ட் ஆக்ட் (3 of 1907) 15-வது பிரிவு 1-வது உட் பிரிவு கடன் தாரன் கொடுத்த மனுவிற்கு சம்பந்தப்பட்ட தல்ல, கடன் கொடுத்தவன் செய்துக்கொள்ளும் மனுவிற்கு சம்மந்தப்பட்டது.

சிவில் புரோசீஜர் கோடு 351-வது பிரிவின்படி தள்ளுபடி செய்யலாமென்று சொல்லி யிருப்பது 1907௵த்திய 3-வது இன்சால்வென்டு ஆக்டின்படி பரிஷ்காரமாய் கடன் தாரனை நிவர்த்தி செய்யக்கூடாதென்பதற்கு ஆதாரமா யிருக்கலாமே யல்லாமல் மற்றபடி மனுவை தள்ளுபடி செய்வதற்கல்ல.

இதைப்பற்றி இங்கிலாந்து ஆக்டில் சொல்லி யிருப்பதும் இந்தியா தேசத்திற்கு ஒவ்வினதாகவே யிருக்கிறது.

ஓர் கடன் தாரன் தனக்கும் தெரியாமல் தன்னுடைய பிசகினு லல்லாமல் இன்சால்வென்டாய் விட்டால் அவனுக்கு மாத்திரம் தான் இன்சால்வென்டு ஆக்ட் ஏற்பட்டிருக்கிறதென்பது நியாயமான தல்ல. அவர்களுக்கு பூர்த்தியாய் நிவர்த்தி செய்யப்பட்ட

தென்று சொல்வதற்கு கூடாமை யென்று இந்த காரணங்களை எடுத்துக் கூறலாம்.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம். 1-வது பார்ட் 39.

CALCUTTA HIGH COURT.
கல்த்தா ஹைகோர்ட்டு.

அப்பீல் நே. 385 of 1909.

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹோம்உட்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சட்டர்ஜி.

ஜெகத்பாய்—அப்பீல் வாதி :—

Vs.

பாபு கெஜதார் உபதயா நாஜர்-ரேஸ்பான்டேன்ட்.

கார்டியன் வார்ட்ஸ் 1890-ம் ௵த்திய 8-வது ஆக்ட் 29,39-வது பிரிவுகள். ஓர் மைனரின் சொத்தின் விஷயமாய் ஜட்ஜுக்கு என்ன அதிகாரம் உண்டென்பது—மைனர் சொத்தை வித்து விடும்படி கோர்ட்டாரே சுதாவாய் செய்யும் உத்தரவு கோர்ட்டாருக்குள்ள அதிகாரத்தை மீறி நடப்பதற்கும்—கார்டியன்களை நீக்குவது-இது விஷயமாய் கார்டியனுக்கு நோட்டீசு கொடுக்கவேண்டியது அவசியம் என்பது.

ஷெ கார்டியன் வார்ட்ஸ் ஆக்டின் 29-வது பிரிவின்படி கார்டியன் மைனர் சொத்துகளில் சிலவற்றை வித்து விடவேண்டுமென்பது அவசியமென்று கண்டு அப்படியே வித்து விடும்படி தனக்கு உத்தரவு கொடுக்கும்படி கார்டியன் செய்துக்கொள்ளும் மனுவின் பேரில் ஜட்ஜ உத்தரவு செய்யலாமேயொழிய மற்றப்படி கோர்ட்டாரே சுதாவாய் எவ்விதமான உத்தரவும் செய்ய அதிகாரம் கிடையாது.

ஆகையால் கோர்ட்டார் சுதாவாய் ஓர் மைனரின் சொத்தை வித்து கவர்ன்மெண்டு பாண்டுகள் வாங்கி வைக்கும்படி செய்யும் உத்தரவு கோர்ட்டாருக்குள்ள அதிகாரத்தை மீறி நடப்பதாகும். கோர்ட்டார் சுதாவாய் உத்தரவு செய்கையில் எதிரியாகிய தன் அதிகார வரம்பிற்குட் பட்ட ஒருவனுக்கு நோட்டீசு கொடுத்து வரவழைத்து விசாரணை செய்து தான் உத்தரவு செய்யவேண்டும்.

கோர்ட்டார் ஓர் கார்டியனுக்கு நோட்டீசு கொடாமலேயே சுதாவாய் அவன் கோர்ட்டுமுன் என்ன சொல்லிக் கொள்ளவேண்டியிருக்குமோ அதை விசாரிக்காமல் செய்யும் உத்தரவு நியாயமானதல்ல. ஆகையால் அப்படி செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்து விடவேண்டியது.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம் 1-வது பார்ட்டு 46.

CALCUTTA HIGH COURT.
கல்கத்தா ஹைகோர்ட்டு:

அப்பீல் நே. 525 of 1909.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் மூக்கர்ஜி.
மிஸ்டர் ஜஸ்டிஸ் கார்ன்டப்.

சடெக் சர்தார் வகையரா—டிக்ரி கடன்தார்கள்-அப்பீல் வாதிகள்.

vs

காளிப்பிரசன்ன சஹா வகையரா-டிக்ரி தார்கள்—ரேஸ்பான்டேன்டுகள்.

நிறைவேற்றுதல்-பூஸ்திதி விற்பனை-அப்படி செய்த விற்பனை—பராதீனம் செய்து ஒருவருக்கு விக்கிரயம் முதலானது செய்யத் தகுந்த தல்ல என்னும் காரணத்தால் விக்கிரயம் ரத்து செய்யப்பட்டது. லிமிடேஷன்-விக்கிரயத்துக்கு உத்தரவு செய்த டிக்ரி கடன்தாரன் அறியமாட்டானென்பது-சிவில் புரோசிஜர் கோடு (1882௵த்திய 14-வது ஆக்ட்) 244-வது பிரிவு.

தீர்ப்பு.

கேசின் விபரம்:—இந்த அப்பீல் ஓர் டிக்ரியை நிறைவேற்றுகையில் செய்யப்பட்ட ஏல விற்பனையை ரத்து செய்யும்படிக்கு செய்துக்கொண்ட மனுவின்பேரில் உத்தரவு செய்யாமல் தள்ளுபடி செய்த உத்தரவின்பேரில் கொண்டுவந்தது. பிரதமத்தில் முதல் கோர்ட்டில் முக்கியமாய் இரண்டு வாதங்களைக்கொண்டு அப்படி செய்யப்பட்ட கிரயம் செல்லாதென்று வாதிக்கப்பட்டது. அதாவது (1) அந்த கிரயம் மோசடியாயும் அனேக ஒழுங்கீனங்களுடன் நடத்தப்பட்ட தாகையால் செல்லாது; (2) விற்பனை செய்யப்பட்ட சொத்து ஒருவருக்கு கிரயம் முதலியவையில் மாற்றத் தகுந்ததல்ல. ஆகையால் ரெஸ்பான்டென்ட் டிக்ரிதாரன் பெற்றிருக்கும் டிக்ரியின் கீழ் செய்யும் நிறைவேற்றுதலில் விக்கத் தகுந்ததல்ல முதல் கோர்ட்டார் இந்த இரண்டு அம்சங்களையும் வாதி பட்சம் தீர்ப்பு செய்து விற்பனையை ரத்து செய்துவிட்டார்கள். அந்த உத்திரவின்பேரில் செய்துக்கொண்ட அப்பீலில் சப் கோர்ட்டார் விற்பனை மோசடியானதென்று ருஜுவாகாமையாலும் லிமிடேஷனும் விட்டதென்றும் கண்டு முதல் கோர்ட்டு உத்தரவை மாற்றிவிட்டார்கள்.

சப் கோர்ட்டார் இப்படிப்பட்ட விஷயத்திற்கு டயம் ஒரு வருஷமென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்.

டிக்ரி கடன்தார்கள் சப் கோர்ட்டார் லிமிடேஷனைப்பற்றி கூறிய அபிப்பிராயம் சரியானதல்லவென்று பின்வரும் ஆக்ஷேபனைகளைக் கூறி வாதிக்கிறார்கள்.—

ஏனென்றால் ஏல விற்பனையை றத்து செய்தது அந்தப் பூமிக்குள்ள சுதந்தரத்தை ஒருவருக்குப் பராதீனம் செய்ய ஹக்கு கிடையாதென்னும் காரணத்தால் றத்து செய்யப்பட்டபடியால் இவ்விஷயம் சி. பு. கோ. 244-வது பிரிவின்கீழ் சம்பந்தப்பட்டதென்றும் அப்படிப் பட்டதற்கு மூன்று வருஷம் டய மென்றும் சொல்லுகிறார்கள். இந்த ஆட்சேபம் சரியான வாதமென்று நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம்.

ஆகையால் சப் கோர்ட்டார் தீர்மானத்தை நாங்கள் மாற்றி மறுபடியும் கேசை சப் கோர்ட்டார் பராதீனம் செய்ய ஹக்குண்டா இல்லையா யென்பதைப்பற்றி விசாரணை செய்து முடிவு சொல்லும்படிக்கு கேசை கீழ் கோர்ட்டாருக்கு அனுப்பும்படி உத்தரவு செய்கிறோம்.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம் 1-வது பார்ட்டு.

MADRAS HIGH COURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

இரண்டாவது அப்பீல் நே. 1591 of 1908.

ஜட்ஜிகள்:— { சர். ரால்ப் பென்சன் ஜட்ஜ
மி-ர். ஜ. கிருஷ்ணஸ்வாமி ஐயர்
முன்பாக.

சுடலமுத்துப்பிள்ளை அப்பீல்வாதி.

vs

முத்துசாமி பிள்ளை வகையரா...ரேஸ்பான்டேண் கேள்.

கொதுவைப் பத்திரத்தின்பேரில் விற்பனைக்குத் தாவா-இதர குதுவைதாரர்களின் பாத்தியத்தையும் கிரயதாரர்களுடைய ஹக்கு உரிமையையும பற்றி தாவாவில் செப்பவில்லை. நம்பர் தள்ளுபடி செய்யப்பட்டது.

கொதுவை சொத்தை அனுபவிப்பவர்கள் இன்னாரென்றும் அவர்களுக்கு கொதுவை சொத்தில் இன்ன பாத்தியதை உண்டென்றும் தாவாவில் காணவில்லையென்று வாதிகள் ருஜு செய்யவில்லை யென்னும் காரணத்தால் கொதுவைதாரன் விற்பனைக்காக கொண்டுவந்த தாவாவை தள்ளிவிடுவது நியாயமல்ல. இந்த இரண்டாவது அப்பீல் தூத்துக்கொடி முனிசீபு கோர்ட்டு அசல் நெ. 244 of 1906-ல் செய்யப்பட்ட டிக்ரியின்பேரில் தூத்துக்கொடி சப் கோர்ட்டாருக்கு செய்த அப்பீலில் செய்த டிக்ரியின்பேரில் கொண்டுவரப்பட்டது.

தீர்ப்பு:—கொதுவை வைத்துக்கொண்டவன் கொதுவை சொத்தை விற்பனை செய்யும்படிக்கு கொண்டுவந்த தாவா கொதுவைப் பத்திரத்தில் கண்டிருக்கும் 1-வது ஐடம் சொத்தை 2-வது பிரதிவாதியும். 2-வது ஐடம் சொத்தை 3-வது பிரதிவாதியும் அனுபவித்து வருகிறார்கள். 2-வது ஐடம் சொத்தை மாத்திரம் கடனுக்கு பந்தப்படுத்தி டி. முனிசீபு கொதுவையின்பேரில் சேரவேண்டிய மொத்தத்தில் கொஞ்ச பாசத்திற்கு மாத்திரம் டிக்ரி செய்தார். இரண்டாவது பிரதிவாதி அப்பீல் செய்துக் கொண்டதின்பேரில் சப் கோர்ட்டார் தாவாவை தள்ளுபடி செய்துவிட்டார்கள். அவர் தன்னுடைய தீர்மானத்தில் சொல்லியிருக்கும் காரணங்கள் ஒப்புக்கொள்ள முடியாமையாயிருக்கிறது. ஏனென்றால், இரண்டாவது பிரதிவாதியால் செலுத்திவிடப்பட்ட ஒரு கொதுவைதாரனை தாவாவில் காணவில்லை. இதன்றி கிரயம்பெற்ற 2, 3 பிரதிவாதிகளைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. ஆகையால் நம்பர் தள்ளிவிடப்பட்டது என்று சப் கோர்ட்டார் சொல்லுகிறார். இவ்விதமாய் தீர்மானிப்பது சரியல்லவென்று அபிப்பிராயங் கொள்ளப்பட்டது கொதுவை சொத்தில் அந்த சொத்தை அனுபவிப்பவர்களுக்கு என்ன பாத்தியதையுண்டென்பதை வாதி அறிந்திருக்கவேண்டுமென்றாவது அல்லது தாவாவில் செப்பவேண்டுமென்றாவது வாதியின் பொருப்பல்ல. சப் கோர்ட்டார் தீர்மானம் ஸ்பஷ்டமாய் சுத்தபிசகு. ஆகையால் சப் கோர்ட்டார் தீர்மானத்தை மாற்றி கேசை மறுபடியும் விசாரணைசெய்து சட்டப்படி தீர்மானம் சொல்லும்படிக்கு கீழ்க் கோர்ட்டாருக்கு அனுப்பப்பட்டது.

அப்பீல் காஸ்டை அப்பீல் வாதிகளுக்குச் செலுத்தவும், கீழ் கோர்ட்டுக்கு சிலவைப்பற்றி கடசியாய் செய்யும் டிக்ரியில் உத்தரவு செய்யவும்.

லாகூர் இந்தியன் கேசுகள் ரிபோர்ட்டு 7 வது வால்யம் 1-வது பார்ட்டு 49.

ALLAHABAD HIGH COURT.
அலகபாத் ஹைகோர்ட்டு.

முதல் அப்பீல் நே. 119 of 1910.

ஜட்ஜிகள் :— { மி-ர் ஜ. ட்யூடால்
மி-ர் ஜ. ஷாபியர் } முன்பாக.

டெரிய பல்வந்த் சிங்கு-வகையரா...பிரதிவாதிகள் அப்பீல் வாதிகள்.

Vs

தாக்குராமன் சிங்கு...வாதி—டேஸ்பரண்டேன்டு.

ஹிந்துலா:—ஸமஷ்டி (ஏக) குடும்பம்—தகப்பன் வைத்த கொதுவை-A கொதுவை வைத்துக் கொண்டவனுடைய தாவா-பிள்ளைகளை கக்ஷிதாரர்களாக சேர்க்கப்படவில்லை. விக்கிரயம்-பிள்ளைகள் கொதுவையிலிருந்து மீட்பதற்காக செய்த பிரத்தியேக தாவா ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்ட் (14 of 1882) 85-வது பிரிவு.

ஓர் ஹிந்து ஏக குடும்பத்தைச் சேர்ந்த தகப்பன் எழுதிக்கொடுத்த கொதுவைப் பத்திரத்தின்பேரில் டிக்ரி பெற்று அந்த டிக்ரியை நிறைவேற்றுதலில் குடும்ப சொத்தை விற்பனை செய்தான பிறகு அவனுடைய குமாரர்கள் மேற்சொல்லிய கொதுவை வைத்துக்கொண்டவன் கொண்டுவந்த கொதுவை நம்பரில் அவர்கள் கட்சிதாரர்கள் அல்ல என்னும் காரணத்தால் அவர்கள் தங்களுக்கு குடும்ப சொத்திலுள்ள பாகத்தை பாகித்துக் கொடுக்கும்படி கேட்பதற்காவது அல்லது அந்த கொதுவை சொத்தை மீட்டுக் கொள்வதற்காவது தாவா செய்ய நியாயம் கிடையாதென்றும். கொதுவை சொத்தை இன்னார் வாங்கினார்களென்பதற்கும் கொதுவை வேறே அன்னியன் வாங்கினனென்பதாவது அனுவசியமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு ஆதாரமாய் டெப்சிங்கு V ஜியாராம் **25 அ 214 ; 13 கல் 21 ; 18 அ 182 5 கல் 81E ; 15 கல் 70, 14 இ. அ. 187.**

இந்த அப்பீல் மெயின்பூரி ஜில்லா ஜட்ஜி செய்த உத்தரவின்பேரில் கொண்டுவரப்பட்டது.

தீர்ப்பு:—ஷாமியர்-ஜ:-அப்பீல் பிரதிவாதி தன்னுடைய பெரிய பாட்டனாகிய பிர்திசிங்குஎன்பவர் வாதிகளிடத்தில் வைத்திருந்த கொதுவை சொத்தை மீட்பதற்காக கொண்டுவந்ததாவா கொதுவை வைத்துக்கொண்டவர்கள் (அப்பீல் வாதிகள்) அவர்களுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் கொதுவை தஸ்தாவேஜியின்பேரில் தாவா செய்தார்கள். அந்த தாவாவில் கொதுவை வைத்தவனுடைய பிள்ளைகளையும், பேரப் பிள்ளைகளையும் அப்பீல் பிரதிவாதியின் தகப்பனையும் கக்ஷிதாரர்களாக சேர்க்கப்பட்டிருந்தது. அந்த கொதுவை பத்திரத்தின்பேரில் விற்பனைக்கு டிக்ரிபெற்று அந்த சொத்தை விற்பனை செய்ததில் கொதுவை வைத்துக் கொண்டவர்களே கிரயத்திற்கு வாங்கிக் கொண்டார்கள். அப்பீல் பிரதிவாதி தான் கொண்டுவந்த தாவாவில் சொல்வதாவது.

அப்பீல் வாதிகள் கோர்ட்டில் தாவா செய்வதற்கு முன் பிறந்திருந்ததாகவும் அப்படி அவன் பிறந்து ஜீவித்திருக்கும் விஷயம் அப்பீல் வாதிகளுக்குத் தெரியுமென்றும் ஆகையால் அப்பீல் வாதிகள் அவர்கள் கொண்டுவந்த தாவாவில் அவனையும் ஓர் கக்ஷிதாரனாய் சேர்த்திருக்க வேண்டுமென்றும் அப்படி அவர்கள் அவனை ஓர் கக்ஷிதாரனாய் சேர்க்காமையால் தான் கொதுவை சொத்தை மீட்டுக்கொள்வதற்கு இன்னும் தனக்கு சுதந்தரம் உண்டென்றும் சொல்லுகிறார்கள்.

அப்பீல் பிரதிவாதி கொதுவை சொத்தை மீட்பதற்கு தாவா செய்ய ஹக்கு கிடையாதென்று அப்பீல் வாதிகள் வாதிக்கிறார்கள். முதல் கோர்ட்டார்—கொதுவைப் பத்திரத்தின்பேரில் கொண்டுவந்த தாவாவினாலும் அந்த நம்பரில் நடந்த நடவடிக்கைகளினாலும் இந்த நெம்பர் பாதிக்கப்படுகிறதென்று கண்டு தாவாவை தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் அப்பீல் செய்ய அப்பீல் கோர்ட்டார் முதல் கோர்ட்டார் தீர்மானத்தை மாற்றி நம்பரை மறுபடியும் சாக்ஷியத்தில் விசாரணை செய்யும்படிக்கு உத்தரவு செய்தார்கள்.

இந்த கேசில் கூறிய வாதங்களுக்கு ஆதாரமாய் அநேக கேசுகளை எடுத்துக் காட்டப்பட்டன.

அவைகளில் முதல் கேசு யாதென்றால், பவானிப் ரெசாத்—V கல்லு **17 அ 547.**

இந்த கேசில் ஐந்து ஜட்ஜுகள் (பானர்ஜி ஜ. மாத்திரம் ஒப்பவில்லை) செய்த தீர்மானம் யாதெனில்:—

ஓர் அவிபக்த (பாகமாகாத) ஹிந்து ஸமஷ்டி (ஏக) குடும்பத்திலுள்ள தகப்பன் எழுதிக்கொடுத்த கொதுவை பத்திரத்தின்பேரில் அந்த குடும்பத்தைச் சேர்ந்த அவனுடைய பிள்ளைகளுக்கும் அந்த சொத்தில் சுதந்தரமுண்டென்று தெரிந்திருந்தும் அவர்களை கக்ஷிதாரர்களாய் சேர்க்காமல் கொண்டுவந்த தாவாவில் தகப்பன்பேரில் விக்கிரயத்திற்கு டிக்ரி பெற்று அந்த கிரயத்தையும் தகப்பன்பேரில் மாத்திரம் ஊர்ஜிதம் செய்துக்கொண்டிருந்தால் பிறகு பிள்ளைகள் கொதுவை வைத்துக்கொண்டவன் அவன் செய்த தாவாவில் அவர்களை கக்ஷிதாரர்களாய் சேர்க்கவில்லை யென்னும் காரணத்தைக்கொண்டே கொதுவை வைத்துக்கொண்டவன் பிள்ளைகளுக்கு அந்த சொத்திலுள்ள ஹக்கு சுதந்தரங்களைப் பெறுவதற்கு நியாயமில்லை யென்று கண்டு டெக்லேர் செய்யும்படிக்கு கேட்க ஹக்குண்டு.—

இன்னொரு கேசு யாதெனில்:— டெபிசிங்கு-V-ஜியாராம் **25 அ. 244**-ல் பெஞ்சு தீர்மானம்.

இந்த நம்பரில் பிள்ளைகள் செய்த நம்பருக்குமுன் சொத்து விற்பனை செய்யப்பட்டது. பிள்ளைகள் கொதுவை வைத்துக்கொண்டவன் செய்த நம்பரில் தாங்கள் கக்ஷிதாரர்களல்லவென்று மாத்திரம்வாதித்தால் போதாது அதுடன் அவர்கள் தங்களுடைய தகப்பன் பட்ட கடனைக் கொடுக்க ஹிந்துலாபடி பந்தப்பட்டவர்களல்லவென்றும் ருஜு செய்யவேண்டியது அவசியமென்றும் மூன்று ஜட்ஜுகள் சேர்ந்த புல்பெஞ்சார் தீர்மானம் செய்தார்கள்.

முக்கியமாய் ப்ரிவி கவுன்சல் தீர்மானப்படிக்கு **(13 கல் 21)** பிள்ளைகளை அந்த நம்பரில் கக்ஷிதாரர்களாய் சேர்க்கப்படாததினால் அந்த கடன் சட்டப் பிரகாரம் வாங்கப்பட்ட நியாயமான கடன்தானா அல்லவா என்று விசாரணை செய்யும்படி கேட்பதற்கு பிள்ளைகளுக்கு நியாய முண்டென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஆகையால் ப்ரிவி கவுன்சிலார் தீர்மானத்தையும், மூன்று ஜட்ஜுகள் சேர்ந்த

தீர்மானத்தையும் ஆதாரமாய்க் கொண்டு இந்த அப்பீலில் கேட்டிருக்கும் வண்ணம் டிக்ரி செய்கிறோம். அப்பெல்லெண்டுகளின் சிலவுகளுக்கும் டிக்ரி செய்கிறோம்.

லாகூர் இந்தியன் கேசுகள் **7**-வது வால்யம் **4**-வது பார்ட்டு **112.**

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

இரண்டாவது அப்பீல் நெ. 1156 of 1906.

ஜட்ஜிகள்:— { மி-ர் ஜ. மன்ரோ. / மி-ர் ஜ. அப்டுர் ரஹீம் } முன்பாக

முத்து நாடான், ... அப்பீல் வாதி.

vs

ஷண்முகாத்த பிள்ளை வகையரா...ரேஸ்பான்டேன்டுகள்.

தர்மம்-தர்மத்திற்கென்று ஏற்படுத்திய சொத்து-பராதீனம் செய்யக்கூடுமா என்பது.

ஓர் சொத்தை முழுமையும் தர்மத்திற்கென்றே விட்டுவிடாமல் அந்த சொத்திலிருந்து வசூலாகும் தொகையில் கொஞ்சமட்டில் தர்மத்திற்கு சிலவழிக்கவேண்டுமென்றும் மிகுதி வரும்படியை தர்மத்திற்கு வைத்தவனுடைய குடும்பத்தார்கள் அனுபவித்து வந்திருந்தால் அப்படிப்பட்ட சொத்தை அந்த தர்மகாரியத்தை காண்பித்து அதற்குட் படுத்தி பராதீனம் செய்யலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

திருத்தரப்பூண்டி டி. முனிசிபு கோர்ட்டார் அ. நெ. **145 of 1905**-ல் செய்த டிக்ரியின்பேரில் தஞ்சாவூர் ஜில்லா கோர்ட்டில் செய்துக்கொண்ட அப்பீல் நெ. **220 of 1906**-ல் செய்த டிக்ரியின்பேரில் கொண்டுவந்த இரண்டாவது அப்பீல்.

தீர்ப்பு:—ஓர் சொத்தை பூராய் தர்மத்திற்கே விட்டுவிடப்பட்டதா அல்லது அதன் வரும்படியை மாத்திரம் தர்ம கைங்கரியம் செய்ய வேண்டுமென்று அந்த சொத்தின்பேரில் ஏற்பட்ட சார்ஜா? என்பதை கீழ் கோர்ட்டார் இருவரும் சரியாய் அர்த்தங் கொள்ளவில்லை. ஆகையால் மறுபடியும் அந்த அம்சத்தை தங்களுக்குத் தெரிவிக்கும்படிக்கு ஜில்லா ஜட்ஜுக்கு மறுபடியும் கேசு அனுப்பப்பட்டது.

கீழ் கோர்ட்டார் அதன்பேரில் அந்த சொத்தின் வரும்படியில் கொஞ்சமட்டில் தான் தர்ம கைங்கிரியம் செய்யலாமென்றும் மிகுதியை அந்த குடும்பத்தார் அனுபவிக்கலாமென்று சொல்லியதால் இந்த சொத்து ட்ரஸ்டு சொத்தாகாது. குடும்ப சொத்தென்று தான் ஏற்படும் ஆகையால் அந்த சொத்தை விற்பனை செய்வதற்கு நியாயமுண்டென்று தீர்மானித்தார்கள்.

டி. முனிசிபு டிக்ரி காயம் செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் **7**-வது வால்யம் **1**-வது பார்ட்டு **79.**

CRIMINAL—க்ரிமினல்.

LOWER BURMA CHIEF COURT.

கீழ் பர்மா சீப் கோர்ட்டு.

—:o:—

க்ரிமினல் ரிவிஷன் மனு நெ. 366 of 1909.

ஜட்ஜிகள்:— { சர்சாரல்ஸ் பாக்ஸ், சீப் ஜஸ்டிஸ் / மிஸ்டர் ஜஸ்டிஸ் ஆர்மாண்ட் / மிஸ்டர் ஜஸ்டிஸ் ராபின்சன். } முன்பாக.

ஜெ. எஸ். பிரிஸ்கோ பிர்ச்—அப்பீல் வாதி.

vs.

சக்கிரவர்த்தி

க்ரிமினல் புரோசீஜர் கோட் (**1908**-ம்௵த்திய **5**-வது ஆக்ட்) **297, 537** டி-பிரிவுகள் ஜூரிகளுக்குத் தெரிவித்த சார்ஜ் முதலானது.

ஜூரிமார்கள் கேசிலுள்ள சாக்ஷியத்தை நன்றாய் தெரிந்துக்கொண்டு சார்ஜ் செய்து விசாரணை செய்யப்பட்ட குற்றத்திற்கு அந்த சாக்ஷியம் எவ்வளவு மட்டில் சம்மந்தப் படுமென்று தெரிந்துக்கொள்வதற்காக கோர்ட்டார் அந்த ஜூரிமார்களுக்கு சட்டம் இன்னதென்றும் சார்ஜ் செய்யப்பட்டிருக்கும் குற்றத்திற்கு முக்கியமாய் என்னென்ன அம்சங்கள் அமைந்திருக்கவேண்டுமென்றும் அது குற்றம்தானென்று அந்த ஜூரிமார்கள் மனதில் திடப்படுவதற்காக இன்னும் என்னென்ன விஷயங்களைத் தெரிவிக்க வேண்டுமென்று தோன்றுகிறதோ அவைகளை யெல்லாம் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். கோர்ட்டில் நியாய விசாரணை செய்யும் ஜட்ஜ் இவைகளையெல்லாம் ஜூரிமார்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்பது இன்றி யமையாததா யிருக்கிறது.

சட்டம் இன்னதென்று ஜட்ஜு ஜூரிமார்களுக்குத் தெரிவிக்கையில் எதிரி குற்றவாளிதான் என்று ஜூரிகள் குற்ற ஸ்தாபனை செய்து தெரிவிப்பதற்குமுன் கேசில் எந்தெந்த விஷயங்களை அவர்கள் கவனிக்கவேண்டுமோ அவைகளை மாத்திரம் அவர்களுக்குத் தெரிவித்தால் போதுமானது. அந்த குற்றத்தில் இன்னின்ன அம்சங்களிருந்தால் தான் அது குற்றமாகுமென்பதை அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்பது நிமித்தமில்லை. **537**-வது பிரிவில் சொல்லியிருப்பது சொற்ப தப்பிதங்கள் ஒழுங்கீனங்களைப் பத்தி மாத்திரம் தானே யொழிந்து வெளிப்படையாய் தெரிவிக்கவேண்டியதை தெரிவிக்காமல் விட்டுவிடலாமென்பதல்ல.

அப்படி மேற்கண்ட விஷயங்களை கோர்ட்டார் ஜூரிமார்களுக்குத் தெரிவிக்காமற் போனதால் நியாய வழுவு நேரிட்டதென்று தோன்றினாலொழிய மற்

றப்படி 573-வது டி. பிரிவின்படி ஜூரிகளுக்கு விஷயங்களை நன்ருய் தெரிவிக்கவில்லை யென்று ஓர் குற்ற ஸ்தாபனையை ரத்து செய்யலாகாது.

இந்தியா கிரிமினல் லா ஜர்னல் 11-வது வால்யம் 6-வது பார்ட் 340.

CRIMINAL—க்ரிமினல்.

LOWER BURMA CHIEF COURT.

கீழ் பர்மா சீப் கோர்ட்டு.

—:o:—

க்ரிமினல் அப்பீல் நெ. 856 of 1909.

ஜட்ஜிகள்:— { சர்சாரல்ஸ் பாக்ஸ், சீப் ஜஸ்டிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் பார்லெட் } முன்பாக.

போசெட் ... ... அப்பீல் வாதி.

vs

சக்கிவர்த்தி

கொலையல்ல-தன்னைத்தான் காப்பாற்றிக்கொள்ள செய்தது யென்பது-பினல் கோடு (1860-ளுத்திய 45-வது ஆக்ட்) 300-வது பிரிவு 5-வது விலக்கு—ருஜு செய்யவேண்டிய பொறுப்பு.

பிரத்தியக்ஷமாய் செய்த கொலை கேசில் தான் கொலை செய்யவேண்டுமென்கிற எண்ணத்துடன் செய்தவனல்லவென்றும் அக் குற்றம் கொலையென்னும் பெருங் குற்றமல்லவென்றும் அதற்கு குறைந்த மரணம் நேரிடும்படி செய்த குற்றமென்றும் அதற்குத் தகுந்த காரணங்களை எடுத்துக் காண்பித்து கொலை செய்தவனென்று குற்றம் சாட்டப்பட்டவன் ருஜு செய்யவேண்டியவனுவான். 5-வது விலக்கின்படி வாதிப்பவன் கொலை யுண்டவன் (மரணமடைந்தவன்) அப்படி செய்யும் பட்சத்தில் மரண மடைவோ மென்ருவது அல்லது தன்னுடைய ஜீவனுக்கு அபாயம் நேரிடுமென்று தனக்கு மனப்பூர்வமாய் தெரிந்திருந்தும் அந்தச் செய்கையைச் செய்ய ஒப்புக்கொண் டிருப்பானுகில் அந்த விலக்கின்கீழ் தனக்கு பரிகாரம் கிடைக்கவேண்டுமென்று சொல்லலாம். அப்படிக் கல்லாமல் கொலையுண்டவன் வேணுமென்றே தனக்கு மரண ஆபத்தை சம்பாதித்துக் கொண்டானென்று சொல்வது மாத்திரம் போதாது.

இந்த கேசிற்கு ஆதாரமாய் மஹாராணி-V-நாகமுடீன் 18 கல் 484 எடுத்துக் கூறப்பட்டது.

தீர்ப்பு.

கேசின் விர்த்தாந்தம்:—கொலையுண்ட மாங்பியோ ஆன் என்பவனை கத்தியால் குத்தி மரண மடையும்படி செய்வதற்கு ஒரு மாதத்திற்கு முன் 22-வயதுள்ள எதிரியும் 18-வயதுள்ள அவனுடைய பெண்சாதியும் அவனுடைய பெண்சாதி சகோதரிக்குச் சொந்தமான ஏதோ கொஞ்சம் தங்கத்தை போக்கடித்து விட்டதற்காக சச்சரவு செய்துக்கொண்டார்கள். அப்படி அவர்கள் சண்டை செய்துக் கொண்டதின் பேரில் கிராம அதிகாரி தன் முன்னிலையில் புருஷன் பெண்சாதி இருவரையும் பிறிந்து தனித்தனியா யிருக்கும்படி உத்தரவு செய்தார். அதாவது பெண்சாதியை புருஷனிடத்திலிருந்து நீக்கிவிட்டார். பெண்சாதிக்கு எதிரியின்பேரிலிருந்த அறுவெறுப்பும் மனஸ்தாபமும் அவளைவிட்டு நீங்கவில்லை. இந்த குற்றம் நேரிட்டதற்கு முன் தினம் கிராம அதிகாரி எதிரியை போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பிவிட்டார். பெண்சாதி அவன்பேரில் பொன் திருடினனென்று சார்ஜ் செய்தாள். அவனை அழைத்துக்கொண்டுபோன கிராமஸ்தார்களில் மாங்க்பியோ ஆன் என்பவனும் ஒருவனு யிருந்தவனு அல்லவா என்பது ஸபஷ்டமாய் ஏற்படவில்லை. அவன் பேரில் போதுமான சாக்ஷியமில்லாமையால் போலீசார் அவனை விட்டுவிட்டார்கள். அவன் அதன் பேரில் கிராமத்திலுள்ள அவனுடைய தகப்பன் வீட்டிற்கு திரும்பி வந்தான். அவனுடைய தகப்பன் வீடு அவனுடைய பெண்சாதியின் தாய் தகப்பன்மாருடைய வீட்டிற்கு எதிர் வீடு. இன்னும் அவனுடைய பந்துக்கள் அநேகர் அங்கேயே அக்கம் பக்கத்தில் வசிக்கிருர்கள். அவன் கிராமத்திற்கு திரும்பி வந்த தினம் காலை எதிரி தன்னுடைய தகப்பன் வீட்டிலிருந்து பொதுவாய் கிராமத்தார்களை கண்டபடி வைதுக்கொண்டு இன்னும் அந்த கிராமத்தார்கள் இவனை ஜெயிலுக்கு அனுப்ப செய்த கிருஷிகள் யாவும் தவறிப்போயிற்றென்று அவர்களை மிக்க இழிவாய் ஏளனம் செய்துக்கொண்டும் இன்னும் அவர்களை என்ன செய்கிறேன் பாரென்று பயமுறுத்திக்கொண்டு மிருந்தான். கிராம அதிகாரியின் சாக்ஷியத்தின்படி:—எதிரியை அவனெதிரில் பின்னிட்டு அழைத்துக்கொண்டு போனபோது அவன் குடித்துவிட் டிருந்ததாக தெரியவருகிறது. ஆனல் அவன் அப்படி குடித்துவிட்டாவது அல்லது வேறெவ்விதமான பலயீனத்திலுமாவதுமில்லை. இந்த தங்கம் போக்கடிந்துபோன விஷயத்தில் கிராமத்தார்கள் அவனை செய்துவிட்ட கூத்தினுல் அவன் கோபம் கொண்டவனுக அவனுடைய நடவடிக்கையினுல் தெரிய வருகிறது.

எதிரிக்கும் அவனுடைய பெண்சாதிக்கும் பந்துவாகிய மாங்க்பியோ ஆன் என்பவனொருவன் அந்த கிராமத்திற்குள் போகும் ஓர் உயர்ந்த பாதை வழியாய் வீட்டுக்குத் திரும்பி வந்துக்கொண்டிருந்தான் அவன் வரும் பாதைக்கும் எதிரியின் தகப்பனுடைய வீடு கட்டியிருக்கும் நிலத்தைச் சுற்றிப் போட்டிருக்கும் வேலிக்கும் நடுவில் ஓர் வண்டிபாதை போகிறது. அப்போது வீட்டிற்கு மின் பாரிசத்திலிருந்த எதிரியினிடம் அந்த மாங்பியோ என்பவன் வண்டி

வண்டியாய் வார்த்தைகள் சொல்லிக்கொண் டிருந்தான். அப்போது அவன் கையில் ஒரு கைப்பிடிக் கத்தி யிருந்தது. அவாள் இருவருக்கும் அப்போது வாஸ்தவத்தில் என்ன வார்த்தைகள் நடந்ததென்று பாரத்தாலோ அதைப்பற்றி வெவ்வேறு விதமாய் சாக்ஷியத்தில் ஏற்படுகிறது. ஆனல் அவாள் இருவருக்கும் நிஜமா யுண்டான சம்பாஷணையில் கொஞ்சம் இதனடியில் கூறியிருக்கும் வண்ணம்தான்.—

மாங்க்பியோ ஆன்:—"நான் இதோ ரோட்டின் மேல் வந்தேன். எதோ பார்ப்போம் நீ குத்தத் துணிவாயானல் என்னை குத்து என்ருன்."

குற்றவாளி:—"நீ அப்படி என் கத்தியினுல் குத்துண்டுசாக அபேட்சிப்பாயானல் இங்கே உள்ளே வா என்ருன்."

மாங்க்பியோ ஆன்:—"வீட்டை விட்டு கீழே இறங்கிவா—ஆனல் நீ என்னை கத்தியால் குத்தி விடுவாயோ என்ருன்."

குற்றவாளி:—அசிங்கிதமான துர் வார்த்தைகளைச் சொல்லி அவனைத் திட்டிக்கொண்டே நான் உன்னை குத்தி விடுவேனென்று வற்புறுத்திச் சொன்னுன்.

மாங்க்பியோ ஆன்:—"நீ அப்படியா நினைக்கிருய் என்ருன்."

குற்றவாளி:— அதற்கு ஆம் அப்படிதான் நினைக்கிறேனென்று வற்புறுத்திச் சொன்னுன்.

மாங்க்பியோ ஆன்:—"நீங்களெல்லோரும் சாக்ஷி—என் கையில் ஒன்றும் கிடையாது சரி-வா என்ருன்."

குற்றவாளி:—"வா என்று சொல்லி அவனை எதிர் நோக்கினுன்." அதன் பிறகு அந்த இரண்டு பேர் வழிகளும் ஒருவருக்கொருவர் எதிர்நோக்கிச் சென்று ஒருவனை ஒருவன் கட்டிக்கொண்டு சண்டை செய்தார்கள். இப்படி சண்டை நடந்துக்கொண்டிருக்கையில் மாங்க்பியோ ஆன் என்பவனுக்கு இரண்டிடத்தில் கத்தியால் குத்து பட்டன. ஒரு குத்து அவன் புஜத்திலும், இன்னென்று அவன் நெஞ்சிக்குழி எலும்பின் கீழும் பட்டது. பின் செப்பிய நெஞ்சுக்குழியண்டை பட்ட காயம் மிக்க ஆழமாயிருந்தது. இப்பொழுது கோர்ட்டார் முன் ஆஜர் செய்த கத்தியினுல்தான் எதிரி குத்தினதா யிருந்தால் மாங்க்பியோ ஆன் என்பவனின் தேகத்தில் எதிரி குத்துகையில் அவன் அந்தக் கத்தியின் அடியிலிருக்கும் கைப்பிடிகூட அந்த காயப் பள்ளத்திற்குள் புதைந்து போக குத்தி யிருக்கவேண்டும். அந்த கத்தி அவனுடைய குண்டிக்காய்களில் ஒன்றில் புதைந்திருந்தது. அவர்கள் இருவரில் மாங்க்பியோ ஆன் என்பவன் உயரமானவன் அவன் எதிரியை கீழே விழும்படி செய்தோ அல்லது எதிரியே கீழே விழுந்துவிட்டானே என்னமோ,எப்படியோ மாங்க்பியோ என்பவன் மேலும் குற்றவாளி கீழுமாயிருந்தார்கள். இதற்குள் யாரோ சகாயத்திற்கு வந்து எதிரியை விலக்கி அவனுடைய கையிலிருந்த கத்தியைப் பிடுங்கிக் கொண்டார்கள். மாங்பியோ ஆன் சாகக் குத்தப்பட்டான். ஆனல் அவன் சொற்ப மணிநேரம் ஜீவித்திருந்தான். அந்த நெஞ்சுக்குழியின் கீழ் புறத்தில் பட்ட காயம் அவனிறக்க மூர்த்திப்பாய்விட்டது.

குற்றவாளி சோல்லும் எதிர்வாதம்:—மாங்க்பியோ ஆன் என்பவனும் இன்னும் மூன்றுபேர் வழிகளும் அவனை எதிர்த்து சண்டை செய்ததாகவும் அவர்களைத் தடுத்து தனக்கு யாதொரு அபாயம் நேரிடவொட்டாமல் செய்துக் கொள்வதற்காக அவன் தன்னருகாமையிலிருந்த கத்தியை எடுத்துக் கீறிவிட்டானென்று தன்னைத்தான் காற்றுக் கொள்ள செய்தவனென்றும் சொன்னுன். ஆகையால் தான் குற்றம் செய்தவனுகானென்ருன்.

மாங்க்பியோ என்பவனை எதிரி கத்தியால் குத்துவதற்குமுன் எதிரியை (குற்றவாளியை) நான்குபேர் வழிகள் எதிர்த்து சண்டை செய்தார்களென்பது சுத்த பொய்யான வர்த்தை. ப்ராசிகூஷன் தரப்பாரின் சாக்ஷிகள் சொல்லிய விர்த்தாந்தம் வாஸ்தவமென்பதற்குச் சந்தேகத்திற் கிடமில்லை.

கேசில் ஏற்பட்டிருக்கும் கிரந்தத்தைப் பார்த்தால் இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் வேண்டுமென்றே சண்டை செய்துக் கொண்டார்களென்று மாங்க்பியோ ஆன் என்பவன் வாதியின் கையில் கத்தி யிருந்ததென்று அறிந்திருந்தும் சண்டை செய்தவனு யிருக்கிருன். இந்த கேசில் தன்னைத் தான் காத்துக் கொள்வதற்காக செய்தது என்று சொல்வது சரியல்ல. குற்றவாளி மாங்க்பியோ என்பவனை செய்தது கொலைதானென்று பிரத்தியக்ஷமாய் ஏற்படுகிற தென்பதற்கு சந்தேகமே கிடையாது.

செஷன்ஸ் ஜட்ஜ் பீனல் கோடு 300-வது பிரிவின் கீழுள்ள 1, 4 விலக்குகள் இந்த கேசுக்கு சம்பந்தப்பட்டதா அல்லவா யென்பதை யோசித்து அவைகள் இந்த கேசுக்கு சம்பந்தப்பட்டவைகளல்லவென்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறுர். இது விஷயத்தைப்பற்றி செஷன்ஸ் ஜட்ஜ் சொல்வதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனல் ஷை பிரிவின் கீழிருக்கும் 5-வது விலக்கு இந்த கேசுக்கு சம்பந்தப்பட்டதென்று சொல்லலாம். ஏனென்ருல், மாங்க்பியோ ஆன் என்பவன் தனக்குத்தானே வேணுமென்று எதிரியின் கையில் கத்தி யிருந்தது தெரிந்திருந்தும் அன்றியும் குற்றவாளி இவனை அவனண்டை வந்தால் கத்தியால் குத்திவிடுவதாக இவனை பயமுறுத்தி யிருந்தும் இவன் வேணுமென்றே உயரமாயிருந்த பாதையைவிட்டு வண்டி பாதையைத் தாண்டி எதிரி (குற்றவாளி) யினுடை தகப்பன் வீட்டின் உட்புறத்தில் வந்து எதிரியை நோக்கிச் [illegible]

னென்பது அவன் தனக்குத்தானே மரண அபாயம் தேடிக்கொண்டானென்று சொல்லலாம்.

இந்தியன் பினல் கோடின் 300-வது பிரிவு 5-வது விலக்கில் என்ன சொல்லுகிறதென்ருலோ:-"ஒருவன் தானே சம்மதித்து கொலை யுண்டு மரணமடைந்தாலாவது அல்லது அவன் தன்னுடைய மனப்பூர்வமாய் தனக்கு மரண அபாயம் தேடிக்கொள்வானுகில்கொலையுண்டவன் 18-வயதிற்கு அதிகப்பட்டவனு யிருந்தால் அந்த மரணம் கொலையாகாது.

The words of Exception 5 to Section 300 I. P. C. are :—
"Culpable Homicide is not murder when the person whose death iscaused, being above the age of eighteen years, suffers death or takes the risk of death with his own cousent."

இந்த விலக்கின் தாத்பரியம் வெவ்வேறு விதமாயிருக்கிறது; ஆயினும், வாஸ்தவத்தில் அதன் பொருள் இன்னதென்று அனேக கேசுகளில் தர்க்கித்துப்பேசி யிருக்கிருர்கள். அந்த கேசுகளை இவ்விடத்தில் கொஞ்சமட்டில் விவரித்துச் சொல்வோம்.

சக்கிரவர்த்தி-V-நாகமுடீன் இ. லா. ரி. 18 கல் 484.

இந்த கேசில் ஒருவன் தான்மரணமடைவதற்கு சம்மதித்தானென்பதற்குவாஸ்தவமான அர்த்தம்என்னவென்ருல்:—சினேகிதமாய் குத்து யென்ருல் சம்மதமே யொழிந்து மற்றப்படி எதிரியின் கையில் கத்தி யிருக்கிறதென்று தெரிந்திருந்தும் அவனை நோக்கிச் சென்று அவனுடன் சண்டை செய்யவேணுமென்றே போய் மரணமடைந்தால் அது சம்மதமல்லவென்றும் தீர்மானித்திருக்கிருர்கள்.

ஆகையால் கீழ் கோர்ட்டாரின் குற்ற ஸ்தாபனையை ஊர்ஜிதப்படுத்தி அவன்பேரில் அவனைத் தூக்குபோடும்படி செய்த உத்தரவை மாற்றி கைதியை சாகும் பரியந்தம் தண்ணீர்மேல் ஏற்றும்படிக்கு தீர்ப்பு செய்தார்கள்.

இந்தியா கிரிமினல் லா ஜர்னல் 11-வது வால்யம் 6-வது பாகம் 345.

PRIVY COUNCIL.

பிரிவி கௌன்சில்.

(மந்திராலோசனை சபை.)

பெங்கால் மாகாணத்திலுள்ள போர்ட்டுஉல்லியம் ஹைகோர்ட்டார் செய்த தீர்மானத்தின் பேரில் கொண்டு வரப்பட்ட அப்பீல்.

லார்ட் மெக்நாட்டன், லார்ட் காலின்ஸ், சர். ஆர்தர் உல்சன், மிஸ்டர் அமீர் அலி.

குமத் ஹரி நாராயன் சிங்கு டியோ பஹதூர் இறந்துபோய் அவருக்குப் பின் வார்சாய் வாந்தவராகிய குமாரர் ஜியோதிப்ரசாத் சிங்கு டியோபஹதூர்.

Vs.

ஸ்ரீராம் சக்ரவர்த்தி வகையரா.

ஜெமீன்தாரியின் கீழ் பாயக்காரியா யிருப்பவனின் உறிமை தான் சாஸ்விதமாய் அனுபவிப்பதற்கு தனக்கு பூராய் ஹக்குண்டென்பது பூமியுள் விளையும் பஞ்சலோகஙளுக்கு பாயக்காரிக்குள்ள உறிமை —சுதந்தரம்.

சுமார் 50-வருஷத்திற்கு முன் ஓர் கிராமத்தை வருஷம் ஒன்றுக்கு ஓர் ஹிந்து சுவாமி தேவாலயத்திற்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 22—15—6 கட்டி வரும்படி விட்டு விடப்பட்டது. பிரதிவாதிகள் அந்த சுவாமியினிடத்தில் குடுத்தனதாரரென்னும் காரணத்தைக் கொண்டு அந்த பூமியின் கீழிருந்த பஞ்ச லோகங்களையும் எடுக்க ஆரம்பித்தார்கள். அந்த கிராமத்திற்குச் சொந்தக்காரர்களாகிய ஜெமீன்தாரர்களான வாதிகள் பிரதிவாதிகள் பூமியின் கீழுள்ள பஞ்சலோகங்களில் வேலை செய்வதை நிறுத்தி தடுப்பதற்காக தாவா செய்தார்கள்.

ஜெமீன்தாரராகிய ராஜா பூமியின் கீழுள்ள பஞ்சலோகத்திற்கும்பாயக்காரிக்கு சுதந்தரமுண்டென்று சொல்லவில்லை யென்றும் அல்லது கிராமத்தில் பாயக்காரிக்கு பூமியிலுள்ள பஞ்ச லோகங்களை யெடுக்க அனேக வருஷ அனுபோக முண்டென்ருவது ருஜு செய்யப்படவில்லை.

சப் கோர்ட்டார் ஜெமீன்தாரியின் தாவாவை ஜெமீன்தாரி பக்ஷமாய் தீர்ப்பு செய்தார்கள். ஆனுல் ஹைகோர்ட்டார் சுவாமியின் கீழ்பெற்ற சுதந்தரம் சாஸ்விதமானதென்றும் புத்திர பௌத்திர பாரம்பரியமாய் அனுபவிக்கக் கூடியதென்றும் ஆகையால் பூமியின் கீழுள்ளிருப்பதற்கும் பாயக்காரிக்கு சொந்த முண்டென்று தாவாவை தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

அதன்பேரில் ப்ரிவி கவுன்சலுக்கு அப்பீல் செய்துகொண்டதில் ப்ரிவி சவுன்சலார் சொல்லிய தீர்மானம் :—

ஹைகோர்ட்டார் பாயக்காரியா யிருப்பவனுக்கு உள்ள சுதந்தரத்தையும் ஜெமீன்தார்களுக்குள்ள சுதந்தரத்தையும்தீர்க்க யோசித்து அதிலுள்ளதைகண்டுக்கொண்டவர்களாக தோற்றப்படவில்லை. ஓர் ஜெமீன்தாரன் ஒருவன் தன் பாயக்காரிக்கு சாஸ்விதமாய் தன் பூமியை அனுபவிக்கும்படி விட்டுவிட்டால் அந்த ஏர்பாட்டின்படி அந்த பாயக்காரிக்கு பூமியிலுள்ள பஞ்சலோகங்களுக்கும் சுதந்தர முண்டென்பதாக ஏற்புடுவதற்கு நியாயமில்லை.

தீர்ப்பு.

லார்ட் காலின்ஸ் :—இந்த கேசில் அப்பீல் வாதிகள் யாரெனில் பாச்செட் எஸ்டேட்டின ராஜா. முக்கியமாய் இந்த கேசில் தீர்மானிக்கவேண்டிய அம்சம் யாதெனில் ஜெமீன்தாரியின் கீழ் சாஸ்விதமாய் அனுபவிக்க சுதந்தரமுள்ள பாயக்காரி ஒருவனுக்கு அவன் அனுபவிக்கும் பூமியிலுள்ள பஞ்ச லோகங்களை வேலை செய்து எடுப்பதற்கு சுதந்தரமுண்டா என்பதுதான். ஓர் ஜெமீன்தார் பாயக்காரிக்கு சாஸ்விதமான அனுபவத்தில் தன்னுடைய பூமியை விடுகையில் அவன் தனக்கு அந்த பூமியில் என்னென்ன சுதந்தரமுண்டோ அத்தனையும் தான் கொடுத்துவிட்டானென்று அர்த்தம் கொள்வது சரியல்லவென்று கண்டு ஹைகோர்ட்டார் செய்த தீர்ப்பை ரத்து செய்துவிட்டு சப் கோர்ட்டார் தீர்மானத்தை சிலவுடன் ஊர்ஜிதப் படுத்தினுர்கள்.

15 வீக்லி நோட்ஸ் (1910) 311.

PRIVY COUNCIL.

பிரிவி கவுன்சல்.

(மந்திராலோசனை சபை.)

—:o:—

அவுட் மாகாணத்தின் ஜுடிஷல் கமிஷனர் செய்த தீர்மானத்தின் பேரில் செய்துக்கொண்ட அப்பீல்.

லார்ட் மெக்நாட்டன், லார்ட் காலின்ஸ், சர் ஆர்தர் உல்சன், மிஸ்டர் அமீர் அலி...முன்பாக.

மஹாராஜ் காடர் நாத் வகையரா.

Vs.

தாகூர் ரத்தன் சிங்கு.

ஹிந்து ஸமஷ்டி (ஏக) குடும்பம்—அந்த குடும்பத்தின் சொத்தை கவுர்ன்மென்டார் பற்றிக் கொண்டார்கள். மறுபடியும் அந்த குடும்பத்திலுள்ள மூத்தவனுக்கு அந்த சொத்து கொடுக்கப்பட்டது. ஏக (சமஷ்டி) குடும்ப சொத்துதானு ?

ஜி. யூ. ஆர். ஆகிய இந்த மூன்று பெயர்களும் சில பூஸ்திகளுள்ள ஒரு ஸமஷ்டி (ஏக) குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஜி என்பவன் யாதோ குற்றம் செய்தானென்று சர்க்காரால் அந்த குடும்பத்தைச் சேர்ந்த சொத்துகள் யாவும் பறிகொள்ளப்பட்டன. சொற்ப காலத்திற்குப் பின் அந்த சொத்தின் சில பாகத்தை மறுபடியும் ஜி என்பவனுக்கு கொடுக்கப்பட்டது. அக் குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் ஒன்ருய் தான் வாசம் செய்துக்கொண்டிருந்தார்கள். ஜி. என்பவன் கேட்டுக்கொண்டதின்பேரில் அந்த மூன்று நபர்களுடைய பெயர்களையும் ஜெமீந்தார்களாக புஸ்தகத்தில் பதிவு செய்துக்கொள்ளப்பட்டது. கெவர்ன்மென்டார் ஜி என்பவனுக்கு மாத்திரம் கொடுத்திருந்தபோதிலும் ஜி என்பவனுடைய அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த எல்லோருக்கும் அந்த சொத்தில் சுதந்தரமுண்டென்று குடும்ப ஏற்பாடிருப்பதாய் தான் பாவிக்கவேண்டும்.

15 மதராஸ் வீக்லி நோட்ஸ் 311.

PRIVY COUNCIL.

பிரிவி கவுன்சல்.

(மந்திராலோசனை சபை.)

ஒரு பெண்ணினிடத்தில் நீடித்த காலம் சம்போகித்திருப்பது.

அவுட் மாகாணத்தின் ஜுடிஷல் கமிஷனரின் கோர்ட்டில் செய்த தீர்மானத்தின்பேரில் கொண்டு வரப்பட்ட அப்பீல்.

லார்ட் மெக்நாட்டன், லார்ட் காலின்ஸ், சர் ஆர்தர் உல்சன், மிஸ்டா அமீர் அலி...முன்பாக.

கஜன்பர் அலிகான்.

Vs

முசமத்கானிஜ்பதீமா வகையரா.

ஒருவன் ஒரு ஸ்திரீயினிடத்தில் நீடித்த காலமாய் சம்போக சாவகாசம் செய்துக்கொண்டிருப்பதினுல் அவன் அவளை விவாகம் செய்துக்கொண்டவனுக பாவிக்கலாமென்று நினைத்த போதிலும் அவளுடைய தாயார் ஓர் விபசாரியா யிருப்பாளாகில் அப்படி நினைப்பதற்கு நியாயமில்லை.

சர் ஆர்தர் உல்சன் :—இந்த அப்பீல் அவுட் ஜுடிஷல் கமிஷனர் சீதாபூர் தீர்மானத்தை மாற்றி செய்த டிக்ரியின்பேரில் கொண்டு வரப்பட்டது.

இந்த வியாஜ்ஜியத்தில் அப்பீல் வாதி பிரதமத்தில் தன்னுடைய தகப்பனுக்கு பம் ஹரி கிராமத்திலுள்ள பாகத்தை ஸ்வாதீனம் செய்விக்கும்படி தாவா கொண்டுவந்தான். அந்த தாவாவில் அப்பீல்வாதி அவனுக்கு பிள்ளைதானு அல்லவா என்பதைப்பற்றி யாதொரு வாதமும் கிடையாது. ஆனுல் அவன் கிரமமாய் விவாகம் செய்யப்பட்டவளுக்கு பிறந்தவனு அல்லவா என்று வாதிக்கப்பட்டது. அப்பீல் வாதியின் பட்சமாய் சப் கோர்ட்டார் தீர்மானம் செய்தார்கள். அதை ஜுடிஷல் கமிஷனர் மாத்திவிட்டார். அதன் பேரில் இந்த அப்பீல் கொண்டு வரப்பட்டது.

அப்பீல் வாதியின் தாய் தகப்பன்மார் கிரமப்படி விவாகம் செய்துக்கொண்டவர்கள்தானென்பதற்கு சாக்ஷியமே கிடையாது. ஆனுல் நீடித்த காலம் சம்போகம் செய்து வந்தமையால் விவாகம் செய்துக்கொண்டவர்களாக பாவிக்கப் படுவார்களென்பது மாத்திரம் போதுமான முகாந்திரமாகாது. ஆனுல் தாயாகிய அந்தப் பெண்ணை அவர்களுடைய தகப்பன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனதற்கு முன் அவளை விபசாரியென்று சொல்வதற்கு இது போதுமான காரணமாகாது.

ஆனுல் அவனுடைய தகப்பன் அவளை பெண்சாதியென்றே ஒப்புக்கொண்டு வந்ததாகவும் சொல்லியிருக்கிறது. இதன்னியில் அவளுடன் பிறந்த சகோ

தரிகளை நல்ல அந்தஸ்துள்ள இடங்களில் கட்டிக் கொடுத்திருப்பதாயும் சொல்லப்பட்டது.

ஜூடிஷல் கமிஷனர் தீர்மானத்தை ஊர்ஜிதம் செய்து அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

15 மதராஸ் வீக்லி நோட்ஸ் **312.**

PRIVY COUNCIL.
பிரிவி கவுன்சல்.
(மந்திராலோசனை சபை.)

அலகபாத்திலுள்ள வடமேற்கு மாகாணங்களுக்கென்று ஏற்பட்டிருக்கும் ஹைகோர்ட்டார் தீர்மானத்தின்பேரில் செய்துக்கொண்ட அப்பீல்.

லார்ட் மெக்நாட்டன், லார்ட் காலின்ஸ், சர் ஆர்தர் உல்சன், மிஸ்டர் அமீர் அலி.

நவாப் கவாஜா முகா மகம்மத்கான்.

vs

நவாப் உசேனி பிகாரியென்கிற டில்பாரி பிகானி.

கன்ட்ராக்ட் (ஒப்பந்தம்) யாருடைய அனுகூலத்திற்காக கன்ட்ராக்ட் செய்துக்கொள்ளப்பட்டதோ அந்த நபர் செய்யும் தாவா அப்படிப்பட்ட தாவா செய்ய நியாயமுண்டா—மகம்மதியலா—வெத்திலை பாக்கு சிலவிற்காக வைத்த பணம்.

வாதியாகிய ஒரு துலுக்க ஸ்திரி அவளுடைய மாமனார் அவளுக்கும் அவனுடைய குமாரனாகிய அவளுடைய புருஷனுக்கும் விவாகம் செய்கையில் அவளும் அவளுடைய புருஷனும் மைனர்களாயிருக்கையில் ஒரு அக்ரிமென்ட் எழுதி வைத்ததாகவும் அதன்படி அவளுடைய மாமனார் அவளுக்கு வெத்திலை பாக்கு சிலவிற்சாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 500 எழுதி வைத்ததாகவும் அந்த கிரிமென்டின்படி அந்த பணத்தை வசூல் செய்வதற்கு அந்தப் பெண் கொண்டுவந்த தாவா. பிரதிவாதி அந்த கடனை கொடுக்க பந்தப்பட்டவனல்லவென்று பின் வருமாறு வாதிக்கிறான்.

(1) வாதி அந்த அக்ரிமென்டிற்கு ஓர் கட்சிதாரியல்ல; ஆகையால் அவள் இந்த நம்பர் கொண்டுவர நியாயமில்லையென்றும்.

(2) வாதியாகிய அந்தப் பெண் தன் புருஷனுடன் கூட கலந்து வாசம் செய்யமாட்டேனென்று துர்நடத்தை நடப்பதினால் அந்த அக்ரிமெண்டில் கண்டிருக்கும் பணத்தைக் கேட்பதற்கு ஹக்கு போய்விட்டதென்றும் வாதித்தான். சப் கோர்ட்டார் மேலே சொல்லியிருக்கும் பிரதிவாதியின் 2-வது ஆக்ஷேபத்தை ஒப்புக்கொண்டு வாதியின் தாவாவை தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன் பேரில் அப்பீல் செய்துக்கொண்டதில் ஹைகோர்ட்டார் முதல் செப்பிய ஆக்ஷேபத்தை மாத்திரம் தீர்க்கயோசித்து அவள் அந்த அக்ரிமென்டின் பேரில் நம்பர் கொண்டுவர ஹக்குள்ளவள் தானென்று கண்டு வாதியின் தாவாவை வாதி பட்சமாய் தீர்ப்பு செய்தார்கள். இந்த அப்பீலில் வாதி அந்த அக்ரிமென்டில் ஓர் கட்சிதாரியல்லாமற்போயினும் அவள் அந்த அக்ரிமென்டின் பேரில் நம்பர் செய்ய நியாய முண்டென்று தீர்மானித்து ஹைகோர்ட்டார் தீர்மானத்தை ஊர்ஜிதம் செய்தார்கள். இந்த இந்தியாதேசத்தில் துலுக்கரில் அநேக சிறிய பெண்களுக்கு விவாகம் செய்து விடுகிறார்களாகையால் பெண்சாதி புருஷனிடத்திலேயே யிருக்கும் பட்சத்தில் கொடுக்கப்படும் பின் பணம் என்னும் இங்கிலாந்திலுள்ள பொது விதி இந்தியா தேசத்திற்கு சம்மந்தப் படமாட்டாது.

மேலும் அந்த அக்ரிமென்டில் புருஷனிடத்தில் சேர்ந்து வாசம் செய்துக்கொண்டு வாழ்ந்திருந்தால்தான் வெத்திலை பாக்கு பணம் ரூபாய் 500 கொடுக்கப்படுமென்று எழுதியிருக்கவில்லை; ஆகையால் அந்தப் பணம் அவளுக்கு எப்பொழுதும் கொடுக்கப்படவேண்டியது தானென்று தீர்மானித்து ஹைகோர்ட்டார் செய்த தீர்ப்பையும் டிக்ரியையும் காயப்படுத்தி விட்டார்கள்.

15 மதராஸ் வீக்லி நோட்ஸ் **313.**

NAGPUR JUDICIAL COMMISSIONER'S COURT.
நாகப்பூர் ஜூடிஷல் கமிஷனர் கோர்ட்டு.

இரண்டாவது அப்பீல் நெ. **189 of 1909.**

ஜட்ஜு:—சர். பிபின்கிருஷ்ணபோஸ் ஏ. ஜெ. சி.

லக்ஷ்மண் ... ... வாதி...அப்பீல்வாதி.

Vs.

குண்டாஜி ... ... பிரதிவாதி—ரெஸ்பான்டென்டு.

ஹிந்துலா-மிதாக்ஷர சொத்துக்கு சுதந்தர மூண்டாகுதல்—விதவை மறுபடியும் விவாகம் செய்துக்கொள்ளுதல். அப்பொழுது சொத்தின் சுதந்தரம் யாருக்கென்பது-நல் நடவடிக்கையுடன் பத்தினியாயிருக்கும் பெண்சாதி-போன சுதந்தரங்களை மறுபடியும் பெற நியாயமுண்டா? மித்தாக்ஷர சட்டத்தை அனுசரிக்கும் ஹிந்து ஒருவன் இறந்துபோகையில் அவனுக்குப் பின் அவனுடைய பெண்சாதியாகிய விதவை பி. என்பவளும் இறந்துபோனவனுடைய தாயார் சி. என்பவளுமிருந்தார்கள். எ. என்பவன் இறந்த சொற்பகாலத்திறகெல்லாம் பி. என்பவள் வேறே மறு விவாகம் செய்துக்கொண்டாள். அப்பொழுது எ. என்பவனுடைய சொத்துகளெல்லாம் அவனுடைய தாயாராகிய சி. என்பவளுக்குச் சேர்ந்தது. சி. என்பவள் எ. என்பவனுடைய சொத்துக

ளில் சொற்ப பாகத்தை பிரதிவாதிக்கு வித்து விட்டாள். சி. என்பவள் காலமான பிறகு வாதி எ. என்பவனுக்கு நெறுங்கின கோத்ரஜாசபிந்தா—பந்துவென்றும் பிரதிவாதிக்கு வித்து விட்ட சொத்து தனக்குச் சொந்தமென்றும் பிரதிவாதிக்கு வித்து விட்ட அந்த சொத்தை ஸ்வாதீனப் படுத்திக்கொள்ள பிரதிவாதியின் பேரில் இந்த தாவா கொண்டுவரப்பட்டது. பிரதிவாதி பின் வருமாறு ஆக்ஷேபித்து வாதம் கூறினான். பி. என்பவள் வேறே விவாகம் செய்துக்கொண்டபோதிலும் அவளுக்கு அவளுடைய புருஷனுடைய சொத்துக்குள்ள ஹக்கு சுதந்தரம் கெட்டுப்போகயில்லை, அப்படியேதானிருக்கிறதென்றும் தாயார் இறந்த பிறகு மறுபடியும் சுதந்தர மிருந்துக்கொண்டே யிருக்கிறதென்றும் வாதித்தான்.

தீர்ப்பு:—சி. என்பவள் இறந்தபோனவுடன் பி. என்பவள் அவளுடைய புருஷன் சொத்துக்கு சுதந்தரவாளியாவதறகு நியாயம் கிடையாது; ஏனென்றால்.

1. முதலில், மிதாக்ஷர சட்டத்தின் **2**,வது அத்தியாயம் **1**-வது பிரிவின்படி அவள் கற்புள்ளஸ்திரீயாக எண்ணப்படமாட்டாள்.

2. மிதாக்ஷரவிதிப்படி பி. என்பவள் மறுவிவாகம் செய்துக் கொண்டபிறகு அவள் முதல் புருஷனுடைய பெண்சாதி (பத்னி) என்று சொல்வதற்கு நியாயம் கிடையாது.

கோஜாபாய் V ஷஹாஜிராவ் 17 பம், 114

மடுன்கினி V ராம்ரத்தன் 19 கல், 289

“பத்னி” என்றால் சரியான அர்த்தம் என்னவென்றும் இந்த கேசில் தீர்மானிக்கப்பட்டது, அதாவது—நியாயமானவிவாகம் செய்துக்கொண்டபத்னி (பெண்சாதி) யென்றும் அவள் புருஷன் நல்கெதி அடைவதற்கு கர்மம், திதி முதலிய சடங்குகள் நடத்துவதற்கு யோக்கியதையுள்ளவளாயிருக்கவேண்டும்.

ஓர் விதவைமறுவிவாகம் செய்துக்கொண்டால் அவளுக்கு முன் புருஷனுடைய சொத்துகளிலுள்ள சுதந்தரமெல்லாம் போய்விடுகின்றது. **1856**௵த்திய **15**-வது ஆக்ட் **2**-வது செக்ஷன் பார்க்கவும்.

லாகூர் இந்தியன் கேசுகள் **7**-வது வால்யம் **4**-வது பார்ட் **513.**

MADRAS HIGH COURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

க்ரிமினல் ரிவிஷன் கேஸ் 625 of 1909.

ஜட்ஜு:—மிஸ்டர் ஜ. அப்படுர் ரஹீம்.

கெ. நாராணன் நாயர் குற்றவாளி—மனுதாரன்.

பீனல் கோடு (**1860**-ம் ௵த்திய **45**-வது ஆக்ட் **193**-வது பிரிவு) மின் பேச்சுக்கு பின் பேச்சு மாறுபாடாய் பேசுவது எப்பொழுது குற்றமாகுமென்பது.

குற்றவாளி ஒரு காலெண்டர் கேசில் வாக்குமூலம் கொடுக்கையில் முதல் தடவை ஆர். என்பவனுடைய குமாரன் எல். என்பவன் போலீசார் வசத்திலிருந்து ஓடிப்போனதைப் பார்த்ததாகச் சொன்னான். இரண்டாம் தடவை கேட்டபோது அவன் கிழக்கு பக்கமாய் போய்க்கொண்டிருந்ததைப் பாரத்ததாகவும் அவனப்படி அப்போது பார்த்தவன் குற்றவாளி தானோ அல்லவோ என்பது தனக்கு நிட்சயமாய் சொல்ல முடியாதென்றும் சொன்னான். இப்படி அவன் மாறுபாடாய் பேசினதற்காக அவன் பேரில் கொர்ட்டார் முன் பொய் சாக்ஷியம் சொன்ன குற்றம் சாட்டப்பட்டது.

முதல் கோர்ட்டார் அவனை குற்றவாளி யென்று கண்டு அவனை சிக்ஷை செய்துவிட்டார்கள். அதன் பேரில் செஷன்ஸ் ஜட்ஜ் காயம் செய்தார். ஹைகோர்ட்டார் பின் சொல்லியதை அவன் பின் சொல்லியபோது விவரித்துக் கேட்கவில்லையாகையால் குற்றமல்லவென்று கீழ் கோர்ட்டார்களுடைய குற்றஸ்தாபனையை மாத்தி அபராதம் வசூல் செய்திருந்தால் அதை அவனுக்கு வாப்ஸ் செய்யும்படிக்கும் பெயில்பாண்டை ரத்து செய்யும்படிக்கும் உத்தரவு செய்தார்கள்.

இந்தியா க்ரிமினல் லா ஜர்னல் **11**-வது வால்யம் **6**-வது பார்ட்டு **353.**

MADRAS HIGH COURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

இரண்டாவது அப்பீல் நெ. **1913 of 1908.**

ஜட்ஜிகள்:— { மி-ர். ஜ. ஸர்ரால்ப் பென்சன் ஜ.
மி-ர். ஜ. கிருஷ்ணசுவாமி ஐயர்.

எராட்டகுளம் மேல் வீட்டில் கார்னவன் வகையரா—அப்பீல் வாதி.

vs

கெ. பி. சுப்பன் மெனன்—ரேஸ்பான்டேன்டு.

சிவில் புரோசீஜர் கோடு (**1882**-௵த்திய **14**-வது ஆக்ட் **16**-வது பிரிவு—நிறைவேற்றுதல்—பிரிட்டிஷ் இலாகா வல்லாத வெளிபிர தேசத்தில் உள்ள சொத்து—கோர்ட்டாருக்குள்ள அதிகார வரம்பு.

பாலகாட் டி. மு. கோர்ட்டு அசல் நெ. **17 of 1907** டிக்ரியின்பேரில் தென் மலையாள ஜில்லா கோர்ட்டில் செய்த அப்பீல் நெ. **310 of 1908**ல் செய்த டிக்ரிக்கு விரோதமாய் செய்த இரண்டாவது அப்பீல்.

தீர்ப்பு:—இந்த தாவாவில் செப்பி யிருக்கும் **1**-வது ஐடம் கொச்சின் தேசத்திலிருப்பதென்றும் தாவா

செய்யும்போது கூட அவ்விடத்தில் தானிருந்த சொத்தென்றும் உபயத்திராளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அப்படி கொச்சின் தேசத்திலுள்ள பூன்திதியின் ஸ்வாதீனம் கிடைக்கவேண்டுமென்று கொண்டுவரும் தாவாவை வரப்பற்றிக்கொண்டு விசாரணை செய்து தீர்ப்பு கொடுக்க பிரிட்டிஷ் இலாகாவைச் சேர்ந்த கோர்ட்டாருக்கு அதிகார வறம்பு கிடையாது. சிவில் புரோஸீஜர் கோடு 16-வது பிரிவின்கீழ் சொல்லி யிருக்கும் விவரணத்தைப் பார்க்கவும்.)

ஆகையால் கீழ் கோர்ட்டுகளில் செய்திருக்கும் டிக்ரிகளை மாற்றி 1-வது ஐடத்தின் பேரில் கொண்டுவந்த தாவாவை தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்செப்பிய 1-வது ஐடத்திலுண்டாகும் மாசூலுக்கு செய்திருக்கும் டிக்ரி ரத்து செய்யப்பட்டது. 2-வது ஐடத்தின் மாசூலைப்பற்றி மாத்திரம் கணக்கு ஏற்படுத்திக்கொள்ளவும்.

கட்சிதார்கள் ஒவ்வொருவரும் அவர்களுக்கு நேரிட்ட சிலவை அவர்களே அடையவேண்டியது.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம் 1-வது பார்ட் 67.

CALCUTTA HIGH COURT.
கல்கத்தா ஹைகோர்ட்டு.

——:o:——

அப்பீல் நெ. 169, 267 of 1909.

ஜட்ஜிகள்:—{ மி-ர். ஜ. மூக்கர்ஜி / மி-ர். ஜ. கார்ன்டப் } முன்பாக.

தாராசுந்தரி டெபி...மனுதாரன் ... அப்பீல் வாதி.
267-ல் எதிரி 16-ல்

vs

சார்தாசரன் பங்டோபத்ய ... ரேபான்டேன்டு
எதிரி 267-ல் அப்பீல்வாதி.

சிவில் புரோசிஜர் கோடு (1882-ஆுத்திய 14-வது ஆக்ட் 266-வது பிரிவு-நிறைவேற்றுதல்-ஜப்தி—வீடு கட்டுவதற்காக தகப்பனர் தன்னுடைய குமாரத்திக்கு தானமாய் கொடுத்த பணம்—குமாரத்திக்கு வீட்டிலுள்ள ஹக்கு சுதந்தரம் ஜப்தி செய்யக் கூடியதா- தகப்பன் தன்னுடைய குமாரத்திக்கு ஜீவனும்சத்திற்காக பிரதி மாதமும் கொடுத்துவரும் தொகை ஜப்தி செய்யக்கூடியதா ? ஜீவனும்சமாக கொடுக்கப்பட்ட தொகை ஒருவருக்கு பராதீனம் செய்யக்கூடியதா அல்லவா என்பது பரிசோதிக்கப்பட்டது.

ஓர் ஹிந்து பிராமண தகப்பன் தன்னுடைய் குமாரத்தியை "கூளின் பிராமணன்" என்று சொல்லப்பட்ட ஓர் ஏழை பிராம்மணனுக்கு விவாகம் செய்துக் கொடுக்கையில் அவன் ஒரு தானப் பத்திர மெழுதி அதன்படி வீடு கட்டிக்கொள்வதற்கு ரொக்கமாய் ரூபாய் 6000-மும் அவளும் அவளுடைய மைந்தர்களும் ஜீவிப்பதற்காக ஜீவனும்சமாக வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 600-தன்னுடைய சொத்திலிருந்து குமாரத்திக்கு தானமாய் கொடுத்தான். அந்த வீடு கட்டிக்கொள்ளப்பட்டது. குமாரத்தி பட்டகடனுக்காக அவளுக்கு கடன் கொடுத்தவன் மேற்படி வீட்டையும் ஜீவனும்சத் துகையையும் ஜப்தி செய்தான்:

தீர்ப்பு:—குமாரத்திக்கு அந்த வீட்டில் குடியிருப்பதற்கு மாத்திரம் தான் ஹக்கு சுதந்தரமுண்டென்று சொல்வது பிசகாசையால் அதில் குமாரத்திக்குள்ள ஹக்கு சுதந்தரம் ஜப்தி செய்யக்கூடியதுதானென்றும் ஆனால் அவளுக்கு பிரதி மாதமும் கொடுக்கப்படும் ஜீவனும்ச மொத்தம் 1882-ஆுத்திய சிவில் புரோசீஜர்கோடு 266-வது பிரிவின் கோட்பாட்டுக்கிணங்க அவளுக்கு சுதாவாயுள்ள பின்னிட்ட ஜீவனும்சம் என்றும் பொருள் படுமாகையால் அந்த ஜீவனும்ச மொத்தம் ஜப்தி செய்யத் தக்கினதல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. ஜீவனும்ச சுதந்தரம் ஒருவருக்கு பராதீனம் செய்யத் தக்கினதா அல்லவா யென்று நேரிடும் பாயின்டுக்கு சமாதானமாய் வாஸ்தவத்தில் கவனித்து பரிசோதிக்கவேண்டியது யாதெனில் அப்படி தானமாய் ஜீவனும்சம் கொர்டுக்க ஏற்பாடு செய்தவர் அந்த ஜீவனும்சம் அவளுடைய குமாரத்தி சுதாவில் அவளே அனுபவிக்கும்படி கொடுக்கப்பட்டதா அல்லது அவளுக்கு சொத்தில் ஹக்கு சுதந்தரம் ஏற்படும்படி எண்ணி கொடுக்கப்பட்டதா யென்று ஆராய்ச்சி செய்யவேண்டும். அதை அறிந்துக்கொள்வதற்கு தகப்பன் எழுதிக்கொடுத்திருக்கும் பத்திரத்திலுள்ள ஷராக்கள் யாவையும் நன்ருய் பரிசோதித்துப் பார்த்து தான் சொல்லவேண்டுமென்பது முக்கியம். அல்லது அப்படிக்கல்ல வாஸ்தவத்தில் அந்த சொத்தில் அவளுக்கு ஹக்கு சுதந்தரமுண்டாகவேண்டுமென்று கருதி தான் கொடுக்கப் பட்டதென்றும் ஆகையால் ஜப்தி செய்யக்கூடியதென்றும் தீர்மானிக்க வேண்டும்.

டாக்கா சப் கோர்ட்டார் செய்த டிக்ரியின்பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீல்.

அப்பீல்வாதி தரப்பில்:—டாக்டர் சாரத் சந்திர பாசக்.
அப்பீல் பிரதிவாதி தரப்பில்:—பாபு ஹரேந்திர நாராயண் மித்திரா கருணமாய் போஸ். } வக்கீல்கள்.

தீர்ப்பு.

கேசின் லிவரம்:—சாரதா சாரன்பனொர்ஜி தாராசுந்தரி டேபியின் பேரில் அடைந்த டிக்ரியை நிறைவேற்றுவதற்காக கோர்ட்டாருக்கு கொடுத்துக்கொண்ட மனுவின்பேரில் கீழ் கோர்ட்டார் செய்த தீர்மானம் சட்டப்பிரகாரம் சரியானதா அல்லவா என்று தீர்க்க ஆலோசித்து தீர்மானிக்கும்படிக்கு இந்த அப்பீல்கள் கொண்டுவரப்பட்டன. இப்பொழுது எந்த

உத்திரவின்பேரில் அப்பீல் செய்திருக்கிறர்களோ அந்த நம்பரில் எந்த ஆதாரத்தின்பேரில் தீர்மானம் சொல்லப்பட்டதோ அந்த விஷயங்களைப்பற்றி எங்கள் முன் வாதிக்கப்படவில்லை. சாரதாசாரன் என்பவன் ஒருவன் தாராசத்தின்பேரில் ரொக்க பணத்திற்காக டிக்ரி அடைந்து அதன்பேரில் நிறைவேற்றுதல் மனு கொடுத்து அதில் பின் வருமாறு கேட்டுக் கொண்டார்கள்:—

தாராசுந்தரி என்பவளுக்கு அவளுடைய தகப்பன் 1872-ம்ஆு செப்டம்பர்மீ 6வ கையெழுத்து செய்து எழுதிவைத்த (தான) சாசனத்தின்படி அவளுக்கு ஏற்பட்டிருக்கும் ஹக்கு சுதந்தரங்களை ஜப்தி செய்ய வேண்டியது.

அதற்கு டிக்ரி கடன்தாரன் கூறிய வாதம் யாதெனில்:—1908-ம்ஆுத்திய சிவில் புரோசீஜர் கோடு 60-வது செக்ஷனுக் கேற்றபடி 1882-ம்ஆுத்திய கோடு 266-வது பிரிவின்படி அவளுடைய ஹக்கு சுதந்தரம் ஜப்திக்குட் பட்டதல்ல வென்று வாதித்தார்கள்.

அப்படி அவள் வாதிப்பதற்கு தாத்பரியம் யாதெனில்:—தானப் பத்திரத்தின்படி தனக்கு ஹக்குண்டாயிற்றென்றும் அதில் செப்பிய சொத்தை தான் விக்க ஹக்கு கிடையாதென்றும் தான் அந்த சொத்தை அனுபவித்துக்கொண்டு தன் சுய இச்சையாயிருப்பதற்காக தானே மாத்திரம் மற்றப்படி விற்பனை முதலிய பராதீனம் செய்வதற் கல்லவென்றும் வாதித்தான். அதன்பேரில் சப் கோர்ட்டார் சொல்லியதாவது:—டிக்ரி கடன்தாரனுக்கு தானப்பத்திரத்தின்படி கிடைத்த ஹக்கு இரண்டு விதமாயிருப்பதால் ஒரு பாகத்தை ஜப்திக்குட் பட்டதென்றும் மற்றொன்றை ஜப்திக்குட்பட்டதல்ல வென்றும் தீர்மானித்தார்கள், அதன்பேரில் உபயத்திராளும் அப்பீல் செய்துக்கொண்டார்கள், முக்கியமாய் நாங்கள் இப்போது தீர்மானிக்கவேண்டிய விஷயம் யாதென்று கவனித்தாலோ தாரா சுந்தரிக்கு அவளுடைய தகப்பன் எழுதி வைத்த தானப் பத்திரத்தின்படி அவளுக்கு ஹக்குசுதந்தர முண்டென்பதுதான்.

கேசின் விர்த்தாந்தங்களை நோக்கும் விஷயத்தில் தாரா சுந்தரியின் தகப்பனுகிய இஷான் சந்திரபானெர்ஜி என்பவன் தன் குமாரத்தியாகிய தாரா சுந்தரி என்பவளை ஓர் கூளின் பிராமணனுக்கு விவாகம் செய்துக் கொடுத்தான். எவன் அவளை மணம் புரிந்தானே அவன்தான் அவளைக் காப்பாற்ற வேண்டுமென்றுள்ள சாதாரண விதிப்படிதான் மணம் செய்யப்பட்டது. அவளும் அவளுடைய குழந்தைகளும் ஜீவிப்பதற்கு வேண்டியவைகளை தகப்பன் கொடுத்துவரவேண்டியதென்று அந்த பத்திரத்தில் கண்டு எழுதி யிருக்கிறது. ஆகையால் அந்த பத்திரத்தில் கண்டபடி குடும்ப வழக்கத்தின் பிரகாரம் அவளைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு அவளுடைய பிள்ளைகளுக்கு முண்டு—இதன்றி இன்னும் அந்த தானப் பத்திரத்தில் கண்டிருப்பது யாதெனில் தன்னுடைய குமாரத்தியும் அவளுடைய சிசுக்களும் ஜீவிப்பதற்காக அவளுக்கு வருஷத்தில் ரூபாய் 600-கொடுக்க வேண்டுமென்றும், நல்ல இடமாய் பார்த்து ரூபாய் 1000-க்கு மனை வாங்கி அதன்பேரில் ரூபாய் 5000 சிலவழித்து வீடு கட்டிக்கொள்ளும்படிக்கும் கண்டிருக்கிறது. இந்த ஜீவனும்ச ரூபாய் எதிலிருந்து கொடுக்கப்பட வேண்டுமென்ருல் உயில் எழுதிவைத்த தகப்பன் வசத்திலிருந்த இரண்டு வீடுகளின் வரும்படியிலிருந்து கொடுக்க வேண்டியது. இரண்டாவது அம்சம் தன்னுடைய ஸ்திதி யிருப்பிலிருந்து கொடுக்கவேண்டியது.

இத்தியாதி காரணங்களை யோசித்து வாதி தன் மனுவில் அந்த ஹக்கை ஜப்தி செய்து விற்பனை செய்யவேண்டுமென்று கேட்டிருப்பதை உத்தரவு செய்ய நியாயம் கிடையாது. ஆகையால் கீழ் கோர்ட்டார் உத்தரவை காயம் செய்கின்றோம்.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம் 1-வது பார்ட்டு 80.

AGRICULTURAL DEPARTMENT, MADRAS.
கம்போடியா பருத்தி.

——:o:——

திருநெல்வேலி ஜில்லாவில் முன் தோட்டக்கால் [illegible]களில் பயிரிட்டு வந்த புகையிலை, கேழ்வரகு, மிளாய் முதலாகிய இறவைப் பயிர்கள் செய்த இடங்களிலெல்லாம் 'கம்போடியா பருத்தி' யென்று சொல்லப்பட்ட பருத்திப் பயிர் இப்பொழுது வழக்கமாய் கையாடி சாகுபடி செய்கிறார்கள். இதன் காரணம் அந்தப் பயிரை சாகுபடி செய்தவர்களுக்கு நன்ருய்த் தெரியும். நில இயல்புக்கு தக்கபடி நிலத்தின் மண்படை ஆழமாயிருந்தாலும், இல்லாமற்போனாலும், இந்தப் பயிர் சாகுபடி செய்வதில் பிடிக்கும் செலவெல்லாம், மாதம் ஒன்று அல்லது இரண்டு தண்ணீர் இறைப்பதைத் தவிர, மற்ற சாதாரண பருத்தி சாகுபடிக்கு எவ்வளவு செலவு பிடிக்குமோ அவ்வளவுதான் பிடிக்கும்.

2. சரியானபடி எருவிட்டுப் பருவப்படுத்திய நல்ல தோட்டக்கால் நிலங்களிப்போ லொத்த நிலங்களில் இந்தப் பருத்தியை விளைவிக்கும் கிருஷிகளுக்கு ஏகரா ஒன்றுக்கு சாதாரணமாய் 1,000 முதல், 1,250 இராத்தல் நிறைவரை மாசூல் கிடைக்கிறதாம். சில விடங்களில் ஏகரா ஒன்றுக்கு 2,000 இராத்தல் நிரை மாசூல் கிடைத்திருப்பதாயும் தெரிய வருகிறது. 250 இராத்தல் நிறைகொண்ட பொதி ஒன்றுக்கு சாதாரண பருத்திக்கு கிடைக்கும விலையைவிட இந்தத் திநுசுப் பருத்திக்கு ஒரு பொதிமேல் ரூபாய் 5 ஜாஸ்தி விலை கிடைக்கிறது. இப்படி ஜாஸ்தி விலை கிடைப்பதின் காரணம் என்னவென்ருல் இந்தப் பருத்தியிலிருந்து ஜாஸ்தி பஞ்சு கிடைப்பது தான். சாதாரண பருத்தி 2,000 இராத்தல் நிறையை அரைத்தால் 500 இராத்தல் பஞ்சு கிடைக்கும். ஆனல் இந்தப் பருத்தியிலிருந்து 500 இராத்தல் நிறை பஞ்சு கிடைக்க 1,500 இராத்தல் பருத்தி அரைத்தால் போதும். மேலும் திருநெல்வேலி ஜில்லாவிலிருக்கும் [illegible]

பாரிகள் இந்த பருத்தி பாரம் ஒன்றுக்கு சாதாரண பருத்தி விலையைவிட ரூபாய் ஐந்து ஜாஸ்தி கொடுக்கிறார்கள்.

3. இந்தப் பயிரைச் சாகுபடிசெய்யும் முறை மிக எளிது. எருச் செயத நீர் வடிவுள்ள தோட்டக்கால் நிலங்களில் நல்ல பலிதம் கிடைக்கும். இதை விதைக்கும் நிலத்தை நன்றாய் உழுது பண்படுத்தி, பருத்தி விதைகளும் பட்டத்தில் விதையை கை விரைப்பாய் வீசி கட்டைக் கலப்பையால் லேசாய் ஒரு சால் உழுது விதையை மறைக்கவேண்டும். ஒரு ஏக்ரா நிலத்தில் விதைக்க 10 இராத்தல் விதை போதுமானது. விதை விதைத்த பிற்பாடு தண்ணீர் இறைவைக்கு வேண்டிய பிரகாரம் பாத்திகளும் கால்களும் கட்டவேண்டும். பயிர் முளைத்து மேல் வந்து செடிகளில் இரண்டு இலைகள் உருவியிருக்கும்போது, கைக்களை வெட்டி நிலத்தின்மேல் பரப்பை கிளரிக் கொடுக்கவேண்டும். செடிகள் ஒருச்சாண் உயரமிருக்கும்போது ஒருச்செடிக்கும் மற்றொரு செடிக்கும் இரண்டடி தூரமிருக்கும்படி செடிகளைக் கலைத்துவிடவேண்டும். நிலத்தில் தக்கபடி எருவிட்டிருந்தால் செடிகளுக்கு மத்தியில் 2½ முதல் 3 அடி இடம் விட்டு கலைப்பிக்கலாம். இப்படிச் செடிகளை கலைப்பிவிக்காவிட்டால் செடிகள் அடர்ந்து நெருங்கி, அதன் கிளைகள் சிறுத்து கோலுருவி, சன்னமாகி, அவைகளில் பிடிக்கும் பருத்த காய்களின் பளுவை தாங்கமுடியாது. செடிகள் வளர்ந்து நிலத்தை அடைத்து மூடிக்கொள்ளுமுன் இரண்டாந்தரம் ஒருகளை வெட்டவேண்டும். இதற்குப் பின் செடிகளின் நிழல் நிலத்தை மூடிக்கொள்ளுமானதால், களைப் பூண்டுகள் வளரவொட்டாதபடி அடிக்கிக் கொள்ளும். இந்தப் பயிருக்குத் தண்ணீர் அவசியமாக வேண்டிய பொழுது மாத்திரம் இறைத்தால் போதுமானது. செடிகளில் பிடித்திருக்கும் காய்கள் வெடிக்க ஆரம்பித்த பிற்பாடும். முதல் வெடிப்பு பருத்தி எடுத்தாகும்வரை தண்ணீர் பாய்ச்சக்கூடாது. அப்பால் காய்கள் காய்த்து ஓய்ந்துபோன செடிகளில் மறுபடியும் துளிர்த்து பூத்து காய்க்கும் பொருட்டு ஜலம் இறைக்கவேண்டும். இந்தப் பருத்தியை செடிகளிலிருந்து எடுப்பது மிகவும் எளிது. ஏனென்றால் காய்கள் பெரிதாயும் களைகள் நன்றாய் வெடித்து மிருக்கும். பருத்தி எடுப்பதில் அனுபோகமுள்ள ஒரு ஆள் நாள் ஒன்றுக்கு 100 முதல் 125 இராத்தல் பருத்திவிரை சாதாரணமாய் எடுக்கக்கூடும்.

தானியப் பயிர்களை நிச்சயமாய் பயிரேற்றி பலனடையப் போதுமான தண்ணீர் வசதியில்லாத கிணற்றிறவை நிலங்களை வைத்து சாகுபடிசெய்யும் ஒவ்வொரு கிருஷிகளும் இந்தப் பயிர் சாகுபடி செய்வது ரொம்ப நலம்.

திருச்சினாப்பள்ளி, 1910-ம் ௵ ஏப்ரல் ௴ } எச். சி. ஸாம்ப்ஸன், அக்ரிகல்சர் டிப்டி டைரக்டர்.

மிளகு.

மிளகுக் கொடியானது மலபாரில் (மலையாள தேசத்தில்) ஒரு விசேஷமான பயிர். இது தற்காலத்தில்கூட மலைத் தொடர்களிலுள்ள உன்னதமான காடுகளில் யாராலும் பயிரிடப்படாமலே தானே யுண்டாகும் காட்டுச் செடிகளைப்போல் காணப்படுகின்றன. இங்கே யிருந்து ஒரு திக்கில் குடகு (Coorg), வைனாட் (Wynaad) பரியந்தமும் மற்றொரு திக்கில் தேர்குறுக்கே சமுத்திர பரியந்தமும் பரவியிருப்பதுடன், மரங்களடர்ந்த ஒவ்வொரு தோட்டத்திலும் ஒரு சிறு மிளகுத் தோட்டம் வைத்துண்டாகப் படுகின்றது. மிளகுச் செடி பூர்வீகத்தில் மலபார் (மலையாளதேசத்து) பயிராகவே யிருந்ததென்றாலும் அது மற்றப் பாகங்களுக்கு பரவி தற்காலத்தில் ஆஸ்திரேலியா பரியந்தமுள்ள எல்லா தீவுகளிலும் ஏராளமாய் பயிரிடப்படுகின்றன. இக்காரணத்தால் மிளகின் முக்கிய வியாபாரஸ்தலம் இந்தியாவிலிருந்து சிங்கப்பூருக்கு மாறிவிட்டது. தலைச்சேரி (Tellicherry) யைவிட சிங்கப்பூரில் நூறு மடங்கு சரக்கு ஜாஸ்தி ஏற்றுமதிசெய்யப்படுகிறது. ஆனால் மலபார் (மலையாள தேசத்து) மிளகு, ஏற்றுமதியின் அளவில் பின்தாங்கிவிட்டபோதிலும், வியாபாரிகள் தலைச்சேரி மிளகையே அதிசிலாக்கியமானதென்று இன்னும் எண்ணுகிறார்கள். இது இந்தியாவின் மேற்கு சமுத்திரக் கரையில் மாத்திரம் பயிரிட வாய்க்கானது.

இந்து தேச சரித்திரத்தில் மிளகின் சம்பந்தமானது மிகவும் விசேஷமானதா யிருக்கிறது. இந்தியாவின் தற்கால நிலைமைக்கு அனுகூலமாயிருந்தது மற்றெல்லா பயிரையும்விட மிளகேயென்று ஒரு வகையாய்ச் சொல்லவேண்டியதா யிருக்கிறது. இந்தியாவை சுற்றிப்பார்த்து ஆராய்ந்துபோகவந்த ஐரோப்பியர்களுடைய கவனத்தையும், ஐரோப்பிய வியாபாரிகளுடைய கவனத்தையும், ஐரோப்பிய வியாபாரிகளுடைய முக்கிய கருத்தையும் முதல் முதல் கவர்ந்தது இந்த மிளகேயாம். நல்நம்பிக்கைமுனையை (Cape of Good Hope) சுற்றி, பெயர் பெற்ற கப்பல் யாத்திரை செய்த வாஸ்கோடி காமா (Vasco de Gama) என்பவர் மலபாருக்கு (மலையாள தேசத்துக்கு) வந்ததும் மிளகின் விலையை நயமாக்குவதற்கு வழி ஏதாவது உண்டாவென்று கண்டு பிடிப்பதற்காகவே. மேல்சமுத்திரக்கரையில் போர்ச்சுகல் தேசத்தார் (The Portuguese) குடி யேறினதற்கு காரணம் அதே. ஐரோபாவில் இந்த மிளகு வியாபாரத்தில் வேறொருவருக்கும் யாதொரு பாத்தியதையுமில்லாமல் தாங்களேஒப்பந்தமாய் வியாபாரம் நடத்திவந்த டச்சுதேசத்தார்கள். (The Dutch) இதற்கு பின்வந்தார்கள். இவர்கள் மிளகின் விலையை உயர்த்தினதால்தான், தனவான்களாகிய சில லண்டன் (London) வியாபாரிகள் ஒன்றுகூடி இந்தியாவுடன் மிளகு வியாபாரம் நேரே செய்ய தீர்மானித் ஈஸ்டு இந்தியா கம்பெனி (The East India Company) யென்று ஒரு சங்கம் ஏற்படுத்தினார்கள். ஆகவே இந்து தேச சரித்திரத்திற்கே எப்போதும் ஒரு முக்கிய அடையாளமா யிருந்த ஓயாத உள்நாட்டு கொடூரசண்டை சச்சரவுகளை நிறுத்தி பற்பல நாட்டார்களையும் ஒற்றுமைப்படுத்தி ஒரே ஆளுகைக்குள்ளாக்கி இத்தேசத்தை ஆங்கிலேயர் சுவாதீனமாக்கி ஆள மிளகு முதல் காரணமா யிருந்திருக்கிறது.

மிளகுக்கொடி சாகுபடி செய்தல் மிகவும் வருத்தமில்லாத காரியம். கொடிவளர்ந்து தொத்துவதற்கு ஆதாரமாய் நடப்பட்ட மரத்தில் கொடி தொத்திக்கொண்ட பின் இந்தப்பயிருக்கு ஜாஸ்தி கவனம் செலுத்தவேண்டியதில்லை. எவ்வளவு அஜாக்கிரதையாயும் கவனம் செலுத்தாமல் பயிர் செய்தாலும் இது ஒவ்வொரு வருஷமும் தோட்டக்காரர்களுக்கு தீர்வையை செலுத்த உபகாரமாகும்படி கொஞ்சம் நல்ல மாசூலை கொடுக்கும். ஆனால் எந்தத்தோட்டத்தி லிருக்கும் மிளகுக் கொடிகளும் பலன்தருவதிலும் மற்ற விஷயங்களிலும் வெவ்வேறு தினிசாயிருப்பது ஒவ்வொருவருக்கும் தெரிந்த விஷயம். சில தினுசுகள் நன்றாயும் சில தினுசுகள் கேவலமாயும் வளர்கிறது. சில தினுசுகள் நன்றாய் காய் பிடித்து பலன் கொடுக்கும். மற்றும் சில எட்டிலோ பத்திலோ காய்த்து அற்பசொற்பமாய் பலன் கொடுக்கும். மிளகுச் செடிகளின் குண இலக்ஷணங்களை அறிந்து, அதை விருத்திசெய்து, மிளகுத்தோட்டக்காரர்களுக்கு உபகாரம் செய்யவண்டுமென்ற எண்ணத்துடன் கவர்ன்மெண்டார் தாலிபரம்பா (Taliparamba) என்னு மிடத்தில் மிளகுசாகுபடி செய்ய ஒரு பண்ணையை ஸ்தாபித்தார்கள். மிளகுக்கொடிகள் நடுமுன்னே

இன்னின்ன தினுசுகள் நல்லதென்றும், இன்னின்னவைகள் நல்ல பலன் தராதென்றும் பகுத்தறிவது இப்போது மிக எளிதான காரியமென்று தெரியவந்திருக்கிறது. இவ்விஷயங்களைக்குறித்து வேண்டிய சமாசாரங்களை அறிய விரும்புகிறவர்கள், அந்தப் பண்ணை மானேஜர் அவர்களைக்கேட்டுக் கொண்டால் அவர் மிக சந்தோஷத்துடன் தெரிவிப்பார். நல்ல தினுசுச் செடிகளையும் உபயோக மற்றவைகளையும் வைத்துப் பயிராக்கச் செல்லும் செலவு ஒன்றாகவே இருக்கும். மிளகைச்சாகுபடி செய்வதில் தற்காலத்தைவிட சற்று ஜாஸ்தி கவனம் செலுத்துவதினால், அப்படி செலுத்திய ஜாஸ்தி கவனத்திற்கு மிகுதம் அதிகமாகவே அதன் மாசூல் வருஷாவருஷம் இருக்கும். மிளகுச்செடியி லிருந்து மாசூல் கிடைக்க ஜாஸ்திநாள் ஆகுமென்பது வாஸ்தவம். இக்காரணத்தைக் கொண்டு அனேகர் அப்படி பிரயாசை எடுப்பதில் பிரயோஜனமில்லை யென்று சொல்ல இடமுண்டு. வெகுநாட் சென்று விசேஷபலன் தராத ஒரு தினுசுச் செடியை வைத்து பரிபாலிப்பதைப்பார்க்கிலும், நெடுநாள் சென்று காய்ப்புக்கு வரக்கூடியதாயும் சரியானபடி பலன்தரும் தினுசுச்செடியையே வைத்து பரிபாலிப்பது உத்தமம். பின் சந்ததிகளின் பிரயோஜனத்தையும் இலாசத்தையும் உத்தேசித்தாவது சீதோஷ்ணி மழைப்பேதங்களால் எளிதில் கெடுதியடையாமல் பொருத்துக்காய்க்கும் வலியதினுசு மிளகுச் செடிகளுக்கு சற்று கவனம் செலுத்துங்கள். நல்ல தினுசுகளைப்பார்த்து தெரிந்தெடுங்கள். வேர்களைச் சுற்றி கொஞ்சம் ஒவ்வொரு வருஷமும் தோண்டி, தோட்டத்தின் மற்ற பாகங்களிலிருந்து முக்கிய இலைச்சருகுகளையும் வீட்டைச்சுற்றி அகப்படும் குப்பையையும் சேகரித்து அக்கொடிகள் தொத்தியிருக்கும் மரத்தின் அடியில் ஒரு சிருகுவியலாய் போடுங்கள்.

ஸி. ஏ. பார்பர்,
கவர்ன்மெண்டு தாவரசாஸ்திரி.

கம்பளிப்பூச்சியைப்பற்றிய குறிப்பு.

தமிழ் ஜில்லாக்களில் "கம்பளிப்பூச்சி" என்று சொல்லுகிற மயிருள்ள புழுக்கள் பயிரைச் சேதப்படுத்தும் ஜெந்துகளொன்று தென்னிந்தியாவிலுள்ள எல்லாருக்கும் தெரியும். மழை காலத்தில் திடீரென்று உண்டாய் வெள்ளாமைகளுக்கு அதிக கெடுதிசெய்கிறது. அவைகள் சோளம், கம்பு, நிலக்கடலை, பயறு இவைகளைத் தான் விசேஷமாய் அழித்துவிடுகின்றன.

இந்தக்கம்பளிப் பூச்சிகள் பயிர்களைத் தின்றபின் மண்ணுக்குள் நுழைந்துகொண்டு பேரீச்சங்கொட்டையைப் போல் உருமாறி மறு வருஷம் மழை காலம் வரும் வரையில் அந்தப்படியே (மண்ணுக்குள்) கிடக்கும். மழைகாலம் ஆரம்பித்து தரை போதுமானபடி நனைந்ததும் இந்தப்பூச்சிகள்மேல் கோக்கித் துளைத்துக்கொண்டு தரையட்டத்துக்கு வந்து, பொட்டுப்பொட்டாயிருக்கும் சிறகுகளுடனும் மஞ்சள் அல்லது சிகப்பு வரிகளுள்ள உடம்போடும் கூடிய வெள்ளைப் பூச்சிகளாக வெளிக்கிளம்புகின்றன. இந்தப் பூச்சிகள் சாதாரணமாய் கொள்ளை கொள்ளையாய் ஒரே தடவையில் ஒருமிக்கக்கிளம்புகின்றன. அப்போது கிராமாந்தரங்களில் விளக்கைச் சுற்றிலும் இவைகள் கூட்டமாய் திரண்டுகொண்டிருப்பதைப்பார்க்கலாம். பெட்டைப்பூச்சிகள் இலைகளில் அநேக முட்டைகளிடுகின்றன. கம்பு, சோளம், நிலக்கடலை இவைகளின் இலைகளின் கீழ்ப்பக்கத்தில் திரள்திரளாய் முட்டைகளிருக்கக் காணலாம். இந்த முட்டைகள் பொரிந்து பின் கம்பளிப்பூச்சிகளாகும்.

(இதற்குப், பரிகாரமான உபாயங்கள்.—இந்தப் பூச்சிகள் முட்டையிடுவதால் தான் திடீரென்று புழுக்கள் உற்பத்தியாகின்றன. ஒரு பூச்சி 500 முதல் 1,200 முட்டைவரையிலும் இடும். ஆகையால் ஒரு பூச்சியைக்கொன்றால் பின்னிட்டு 500 முதல் 1,200 புழுக்கள் வரையிலும் கொன்றதுபோலாகும். நல்ல மழைபெய்து தரை தக்கபடி நனைந்தும் கூடுகளிலிருந்து நூற்றுக்கணக்காய் பூச்சிகள் புறப்படுகின்றன. இந்தப் பூச்சிகளுக்கு விளக்கண்டை வந்து சேர அதிக ஆவல். இந்தப் புழுக்களின் தொந்திரவுள்ள இடங்களில் சமயம் பார்த்து விளக்குப்பொறிகளைவைத்தால் இந்தப் பூச்சிகளை ஒரு மிக்க தொலைத்துவிடலாம்.

விளக்குப்பொறி என்பது விளக்கண்டை வரும்பூச்சிகளை தானாகக்கொல்லும் ஒரு சூத்திரம். இச்சூத்திரம் பூச்சிகளை இழுக்கிறதற்கு விளக்குஆதாரம், அதன்கீழ், வந்த பூச்சிகளைக் கொல்ல மண்ணெண்ணெய் கலந்த தண்ணீருள்ள தட்டம் ஒன்றும் சேர்ந்து அமைந்துள்ளது. ஒரு சிறு மண்ணெண்ணெய் விளக்கு உள்ளே வைக்கக்கூடிய நான்கு மூலை கண்ணாடி லாந்தரை வைத்துக்கொண்டு விளக்குப் பொறி செய்துவிடலாம். இதன் விலை சொற்பம். இது எல்லா ஊர்களிலும் சுமார் 6 அணாவுக்கு வாங்கலாம். தேங்காய் எண்ணெய் பாதி மண்ணெண்ணெய் பாதியாகக்கலந்து உபயோகிக்கவேண்டும். தனி மண்ணெண்ணெயை விட இந்தக்கலப்பு பிரகாசமாய் எரியும். புகையும் பிடியாது. பூச்சிகளைப்பிடிப்பதற்கான மண்ணெண்ணெய் கலந்த தண்ணீரின் விஸ்திரணம் அதிகமாய் இருக்கும்படி தட்டம் அகன்று இருக்கவேண்டியது அவசியம். 21-முதல் 3 அங்குலம் ஆழமும் இரண்டடி சதுரமும் உள்ள ஒரு தகரத்தட்டம் இதற்கு ஏற்றதென்று அநுபோகத்தில் தெரிந்திருக்கிறது. 5 அல்லது 8 அணாவுக்கு எந்த தகரக்கடைக்காரனும் செய்து கொடுப்பான். இதில்லாவிட்டால் ஏற்றச்சால்போல் அகன்றவாயுள்ள எந்தப் பாத்திரமும் இதற்கு உதவும்.

தனியாக ஒரு மூங்கில் கால் நட்டு அதிலிருந்த தட்டத்திற்கு மேலே லாந்தரை தொங்கவிடவேண்டியது. ஆழமில்லாத பாத்திரமா யிருந்தால் அதன் நடுவில் ஒரு கல்வைத்து அந்தக் கல்லின்மேல் லாந்தரைவைத்துவிடலாம். எந்தப் பயிரை காக்க இந்த ஏற்பாடு செய்கிறோமோ அந்தப் பயிர் மட்டத்திற்குமேல் இந்த கருவி முழுவதும் உயர்ந்து இருக்கவேண்டும். தூரத்திலிருந்து பார்த்தால் விளக்குத் தெரியும்படிக்கு ஒரு மண் குவியலின்மேல் வைக்கலாம்.

விளக்குப் பொறிச்சோதனைகள்.—இந்த உபாயம் பலிக்கிறதா என்பதை சோதித்தறியும்பொருட்டு 1909 வருஷம் ஜூலை ஆகஸ்டு மாதங்களில் மஞ்சகுப்பஞ் ஜில்லாவிலிருக்கிற பன்னிக்குப்பம் கிராமத்து நிலங்களில் 15 விளக்குப் பொறி வைத்திருந்தது. முதலில் ஒரு சிறு கூட்டம் முந்தியநாள் பெய்த 1 அங்குல மழைக்கப்புறம் ஜூலை௴ 23௳ இரவிலும், பிறகு அதிலும் மிகப் பெரிய கும்பல் ஆகஸ்டு௴ 8௳ பெய்த 21-அங்குல மழைக்குப்பின் 10௳ சாயந்தரமும் ஆக இரண்டு வெவ்வேறு கும்பலாக அவ்வருஷம் இப்பூச்சிகள் புறப்பட்டன. இரண்டாவது கும்பலில் நாலிரவில் 7,400 பூச்சிகள் பட்டிறந்தன. அதில் 9,800 முதல் 1,200 பெட்டைகளா யிருக்கவேண்டும். ஒரு பெட்டை 500 முதல் 1,200 முட்டைகள் வரையிடுகிறதென்பதை யோசித்துப்பா

கும்போது இந்தப்பொறி எவ்வளவு சிறந்ததென்பது தெளிவாய் நாம் காண்கிறோம். (இந்த உபாயத்தால்) தப்புவிக்கப்பட்ட நிலங்களுக்கருகில் ஒரு பூச்சி கூட காணாததினாலே பள்ளிக்குப்பம்கிராமத்துக் குடியானவர்கள். இது ஒரு கைகண்ட முறை என்று செவ்வையாய் அறிந்துகொண்டார்கள்.

முடிவு.—இந்த தந்திரத்தினால் பூரண நன்மையடையவேண்டுமானால் ஒரு கிராமத்திலிருக்கும் இரண்டொரு குடியானவர்கள் பட்டும் தங்கள் நிலங்களில் விளக்குப் பொறிகளை வைத்தால் போதாது. அப்படிச்செய்வதினால் அந்தப் புலங்களிலும் அவைகளுக் கடுத்த புலங்களிலும் உள்ள பூச்சிகள் தப்பாமல் பிடிபட்டிறக்கும் என்றாலும், இந்த விளக்குப்பொறிகளுக்கு எட்டாத தூரத்திலுள்ள மற்றப்புலங்களி விடப்பட்டிருக்கும் முட்டைகள் பொரித்த புழுகள் கடைசியில் இங்கும் வந்து சேர்ந்துவிடும். ஆகையால் ஒரு இடத்திலுள்ள எல்லா குடிகளும் ஏகோபித்து கொல்லைகளெங்கும் விளக்குப்பொறிகளை கட்டாயம் நடவேண்டும். இப்படி எல்லாரும் ஒருமித்துச் செய்வதால் இந்த உபாதையை வரவொட்டாமல் தடுக்க முடியும் என்று நம்பலாம். ஒன்று சேராமல் போனாலோ இப் பொறிகளெல்லாம் கேலிக்குத்தான் இடமாகும். கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால் (முதல்) மழை பெய்து நின்ற உடனே விளக்கு ஏற்றிவிடவேண்டும் முதனாளிரவு பிடிபடும் பூச்சிகளின் தொகை பின்னிட்டுப் பிடிபடும் பூச்சிகளெல்லாவற்றையும் விட அதிகமா யிருக்கும். ஆணும் பெண்ணும் சேர்ந்த பின்னிட்டு விளக்கண்டை பூச்சிகள் ஆவலோடு விசேஷமாய் வருகிறதில்லை. இந்த உபாயம் கைகூடவேண்டுமானால் (மழை நின்றவுடனே) சற்றும் தாமதம் செய்யாமல் விளக்குப் பொறிகளை வைத்துவிடவேண்டியது அவசியம்.

விளக்குப் பொறிவைத்தல்.—செலவு சுருக்கமான விஷயம் அதற்கு வேண்டிய கைம்முதல் ஒரு ரூபாய்க்கு மேலில்லை. லாந்தர் 6 அணா. தகரத்தட்டும் உபயோகிப்பதானால் அது ஒரு 6 அல்லது 8 அணா. மூங்கில் கால்சட்டம் வகைராவுக்கு ஒன்று அல்லது இரண்டணாவுக்குமேல் செல்லாது. பத்திரமாய் வைத்துக்கொண்டால் பல வருஷமிருக்கும். ஒரு ராத்திரிக்கு ஒரு விளக்குக்கு 6 அல்லது 8 பைசா எண்ணெய் செல்லும். மொத்தத்தில் இரண்டு வாரத்துக்குமேல் விளக்கு வைக்கவேண்டி யிராது. ஆனதினாலே எண்ணெய்ச் செலவு சுமார் 8 அணா பிடிக்கும். (இந்தக் கம்பளிப் பூச்சிகளால் விளைகிற நஷ்டத்தை பார்த்தாலோ) அரைவாசி முக்கால்வாசி பயிரைச் சேதப்படுத்தி நிலத்தின் நயத்திற்கும் பயிரின் உயர்த்திக்கும் தக்கபடி ஏகர் ஒன்றுக்கு 20 ரூபாய் முதல் 50 ரூபாய் வரையில் நஷ்டம் உண்டாகிறது.

தஞ்சாவூர் ஜில்லா கலெக்டர் விளம்பரம்.

APPLICATIONS FOR REMITTANCES ON PUBLIC SERVICE.

சர்க்கார் காரியங்களின்பேரில் உசூரிலிருந்து தாலூக்காக்களுக்கு அனுப்பும்படியாயும் தாலூக்காக்களிலிருந்து உசூருக்கு அனுப்பும்படியாயும் மாதம் ஆகையரில் பணங்கள் சகிதமாய் பல ஆபீசர்களும் மனு செய்துகொள்ளுவதில் அந்த மாதம் ஆகையருக்குள்ளாக அந்தப்படி சரியாய் அமுல் நிறைவேற்றக்கூடாமல் மாதாந்திரக் கணக்குகளை தயார் செய்யும்போது அதிக அசந்தர்ப்பம் உண்டாகிறது. கலெக்ட்டர் கஜானாவிலிருந்தும், தாலூகாக்களிலிருந்தும் பணம் அனுப்பும்படி செய்கிற மனுக்களை அந்தந்த மாதம் 22உக்குள்ளாக செய்யவேண்டுமென்று இதில் சம்பந்தப்பட்ட எல்லா ஆபீசர்களையும் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

தாலூக்காக்களில் கொடுக்கும்படி உசூரிலும் கொடுக்கும்படி தாலூக்காக்களிலும் கொடுக்கிற பணத்தை அந்த மாதம் ஆகையருக்குள்ளாக தவறாமல் பெற்றுக்கொள்ளவேண்டும்.

HOURS OF BUSINESS IN THE HUZUR TREASURY.

இதின் மூலமாய் பிரசுரஞ் செய்யப்படுகிறதாவது, தஞ்சாவூரிலுள்ள உசூர் கஜானாவில் தினமானம் வரவு செலவுகளை சாயந்திரம் 4-மணி சுமாருக்கு நிறுத்தி 5-மணி கஜானா மூடப்படும்பொருட்டு பகல் 3-மணிக்குமேல் செலான்களுடன் தொகை வாங்கிக்கொள்ளவும் தொகை பட்டுவாடாவுக்காக செக்குகள் பிரப்பிவிக்கப்படவு மாட்டாது- மாதத்தில் 10உயிலும் கடாசி நாளிலும் பகல் 2-மணிக்குமேல் வரவு, செலவு நடக்க மாட்டாது. அந்தந்த மாதம் கடைசி சனிக்கிழமைக்கு முந்திய சனிக்கிழமை கஜானா மூடப்படும்.

TREASURE TROVE.

R. C. 1,022-G. R. OF 1910, DATED 6TH AUGUST 1910.

புதையல் அகப்பட்டது.

	விபரம்.	சுமார் மதிப்பு.		
		ரூ.	அ.	பை.
1.	தங்க சரடு 1	18	0	0
2.	சங்கம்போன்ற தங்க ஆபரணம் ஒரு ஜோடி	2	8	0
3.	விஷ்ணு சக்கரம்போன்ற ஷை ...	2	8	0
4.	3-நெ. போன்ற ஷை	1	12	0
5.	தங்க அட்டிகை கொக்கிகள் 2 ...	3	6	0
6.	தங்கமோதிரம் 11	0	6	0
7.	தக்க கம்பி துண்டு 1	1	6	0
8.	4 தங்க துண்டுகள்	1	4	0
9.	2 துவாரங்களுள்ள சிறிய தங்க பாளம்	0	3	0

புதையல் விஷயமாய் அல்லது அதின் பாகத்திற்கு பாத்தியம் கொண்டாடும் எல்லாரும் சங்கதியை தஞ்சாவூர் கலெக்டர் அவர்கள் விசாரிக்க வேண்டியதின் பொருட்டு கலெக்டரவர்களிடம் நேரிலாவது அல்லது வஜண்டு மூலமாவது 1911ஆம் ஜனவரிமீ 14உ கலெக்டர் அவர்கள் ஆஜருக்க வேண்டியதென்று கட்டளை யிடுகிறார்கள்.

CIRCULAR.

R. DIS. 1,286-REV. OF 1910, DATED 21ST SEPTEMBER 1910.

சர்க்கியூலர்.

1910ஆம் ஜூலைமீ 13உயுள்ள செட்டில்மெண்டு போர்டு 334-நெ. புரொசீடிங்சுடன் அனுப்பப்பட்ட 1910ஆம் ஜூலைமீ 4உயுள்ள 2197-நெ. கவர்ன்மெண்டு உத்திரவு 2-வது பாராவை அனுசரித்து ஆக்டிங் கலெக்டரவர்கள் பார்சல் சம்பந்

மாய் நஞ்சை நிலம் விற்பனைக்கு வருங்காலத்தில் சாதன ஷரத்துகளில் "தண்ணீர் சப்ளையை நிறுத்தவும், குறைக்கவும், மாற்றவும், பூரா அதிகாரத்தையும் வகிக்கிறார்களென்றும்" ஒரு ஷரத்து ஏற்படுத்தவேண்டுமென்று கட்டளையிடுகிறார்கள்.

APPOINTMENT—நேமகம்.

D. DIS. 617-M OF 1910, DATED 1ST SEPTEMBER 1910

தஞ்சாவூர்ஹைகோர்ட்டு வக்கீல்ம-ஸ்ரீ. ஸ்ரீ கே.ஸ். ராமச்சந்திர அய்யர் அவர்கள், B.A., B. L., 1910ஆம் ஆகஸ்டுமீ 31உ முதல் 3 வருஷத்திற்கு தஞ்சாவூர் ஜில்லாவுக்கு கெவர்ன்மெண்டு வக்கீலாகவும், பப்ளிக் பிராஸிகூட்டராகவும் நியமிக்கப்பட் டிருககிறார்கள்.

VILLAGE OFFICERS' SHEET.

நோட்டீசு.

1901ஆம்த்தைப்போல் 1911ஆம் மாச்சு மாதத்தில் ஒரு ஜனசங்கை யெடுக்கப்படுமென்று இதனால் ஜனங்களுக்குத் தெரியப்படுத்தப் படுகிறது. அதற்கு முன்னால் வருகிற 1910ஆம் அக்டோபர் மாதத்தில் வீடுகளுக்கு நம்பர் போட ஆரம்பித்து 1911ஆம் ஜனவரி மாதத்தில் ஒரு முந்தின ஜனசங்கை எடுக்கஆரம்பிக்கப்படும்.

2. பஞ்ச நிவர்த்திக்குத் தக்க ஏற்பாடுகளை செய்வதும், பள்ளிக்கூடங்களை ஸ்தாபிப்பதும், ஒவ்வொரு கிராமத்தில் இரண்டு வர்க்கத்திலும் எத்தனை ஜனங்கள் இருக்கிறார்களென்றும், எத்தனை பெயர் வெவ்வேறு மதங்களையும் ஜாதியையும் சேர்ந்தவர்களென்றும், அவர்களுடைய வயது, தொழில் இன்னதென்றும் தெரிந்துகொள்வதும், இவைகளை யொத்த ராஜரீக காரியங்களுக்கு அவசியமான தகவல்கள் சர்க்காருக்குத் தெரிந்துகொள்ள வேண்டி யிருப்பதால் ஜனசங்கை யெடுக்கப் படுகிறதென்று இதனால் சகலமானவர்களுக்கும் பிரசித்தம் செய்யப்படுகிறது.

3. ஜனசங்கை எடுப்பதோடு சம்பந்தப்பட்ட சில விஷயங்கள் 1910ஆம்த்திய XVI வது இந்தியன் சென்ஸஸ் ஆக்டில் விவரிக்கப்பட் டிருக்கின்றன. முக்கியமானவைகளில் சிலது கீழே யெடுத்து எழுதப்பட் டிருக்கின்றது.

4. ஷை ஆக்டின் 4, 5 இந்தப் பிரிவுகளின்படி எனுமிரேட்டர்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேலைகளை ஜாக்கிரதையாய் செய்து முடிக்கக் கட்டுப்பட் டிருக்கிறார்கள். ஜன சங்கையை திருத்தமாய் எடுக்க உதவி செய்ய வேண்டி யிருப்பதால் படகுகள், சத்திரங்கள், கோவில்கள், பள்ளிக்கூடங்கள், வியாபாரத் தொழில் சாலைகள் இவைகளில் அதிகாரம் வகிப்பவர்களும் ஜமீன் கிராம உத்தியோகஸ்தர்களும் இவர்கள் எனுமிரேட்டர்களாக இராவிட்டாலும் டிஸ்டிரிக்ட் கலெக்டர் மாஜிஸ்ட்ரேட்டா ரவர்களுக்கு அல்லது அவர்களிடம் அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டிய உதவி செய்யக் கட்டுப்பட்டிருக்கிறார்கள்.

6. ஷெடியூல்களை தயார் செய்வதற்கு வேண்டிய கேள்விகளைக் கேட்க எனுமிரேட்டர்களுக்கும் சூபர்வைசர்களுக்கும் அதிகாரமுண்டு. அவ்விதமாக கேள்வி கேட்கப்படுகிற ஜனங்கள் தங்கள் ஜாதி ஆசாரப்படி புருஷன் பெயர் அல்லது பெண்களின் பெயர் சொல்லக்கூடாதென்ற விஷயம் தவிர மற்றவைகளுக்கு உண்மையான மறுமொழியைக் கொடுக்கவேண்டியது.

6. வீடுகளின்பேரில் இலக்கம் போடுவதற்கு சென்சஸ உகிதியோகஸ்தர்களுக்கு அதிகாரமுண்டு. அதை அழிப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

7. ஷெடியூலில் செய்யப்பட்டிருக்கிற பதிவுகளை பார்ப்பதற்கு ஒருவருககும் அதிகாரமில்லை. அதிலுள்ள கணக்குகளுக்கு மொத்தம் தயார் செய்தான பிறகு அவைகளை நிக்ரகித்துவிடப்படும். கோர்ட்டில் அவைகளை சாக்ஷியமாக உபயோகப்படுத்த முடியாது. ஆகையால் அவைகளில் செய்யப்பட்டிருக்கும் பதிவிகளினால் சொத்துக்களின் சுதந்தரங்களுகது யாதொரு கெடுதியும் நேரிடாது.

MADURA DISTRICT MAGISTRATE.

நோட்டீசு 12உ செப்டம்பர்மீ 1910.

இதனால் அறிவிக்கிறதாவது ஆயுதங்களுக்கு லைசென்ஸுடையவர்கள் ஷை லைசென்சுகளை புதுப்பிக்க விரும்பும் பக்ஷத்தில் 1911ஆம்த்துக்கு அவைகளை புதுப்பிக்கிறதற்காக தங்களுடைய விண்ணப்பங்களை ஏற்பட்ட அச்சு பாரங்களில், 1910ஆம் முடிவதற்கு முன்னமே ஷை விண்ணப்பங்களின் பேரில் உத்திரவு செய்யும்பொருட்டு 1910ஆம் அக்டோபர்மீ மத்தி பாகத்திலேயே அனுப்பவேண்டும்.

2. கையாலெழுதப்படும் ஏற்பட்ட பாரத்திலில்லாத்தவுமான விண்ணப்பங்கள் அங்கீகரித்துக் கொள்ளப்படமாட்டாது. ஷை விண்ணப்பங்களில் நூதனமான ஒரு சர்ட்டிபிகேட்டு கொடுக்கவேண்டு மென்பதை கவனிக்கவேண்டும்.

3. 1910ஆம் டிசம்பர்மீ 31உக்குமுன் புதிப்பிக்கப்படாத லைசென்சுகளை யுடையவர்கள் தாங்கள் எந்த போலீசு ஸ்டேஷன்களுடைய இலாக்காக்களுக்குள் வாசம் செய்கிறார்களோ அந்த போலீசு ஸ்டேஷன்களில் தங்களுடைய ஆயுதங்களை டிபாசிட் செய்யவேண்டும். அப்படிச் செய்யாதவர்கள் பிராசிக்யூஷனுக் குள்ளாவார்கள்.

General News.

பொது வர்த்தமானங்கள்.

—:o:—

RESIGNATION OF LORD MORLEY.

நமது இந்தியா தேசத்து ஸெக்ரிடெரி ஆப்ஸ்டேட்டாயிருந்த லார்ட் மார்லி பிரபு ராஜிநாமா கொடுத்து விட்டாராம். அவரை இங்கிலாந்து கவுன்சலில் லார்ட் ப்ரெசிடெண்டாகவும் லார்ட் க்ரூ என்னும் பிரபுவை இந்தியாதேசத்திற்கு ஸெக்ரிடெரி ஆப்ஸ்டேட்டாகவும் நேமிக்கப்பட் டிருப்பதாக நவம்பர்மீ 3உ லண்டனிலிருந்து வந்த சமாச்சாரத்தினால் தெரிய வருகிறது.

நமது இந்தியா தேசத்திற்கு புது கவர்னர் ஜெனரலாய் வரும் லார்ட் ஹார்டிஞ்ச் பிரபுவும் லேடி ஹார்டிஞ்ச் துரைசாணியும் இந்தியாவிற்கு புறப்படுகையில் நவம்பர்மீ (2உ) சாயந்திரம் விக்டோரியா ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தபோது லார்ட் ஹார்டிஞ்ச் பிரபு ஸ்டேஷன் பிலாட் பாரத்தில் தன்னுடைய சினேகிதர்களிடம் சம்பாஷணை செய்துகொண்டும் இந்தியாவிற்கு போவதைப்பற்றி அவர்களுக்குத் தெரிவிக்க வந்தன வழிப்பாடுகள் செய்துக்கொண்டு மிருக்கையில் [illegible]

வண்டி—ட்ரெயின்—ஸ்டேஷனைவிட்டு நகர்ந்து விட்டதாம். உடனே, லார்ட் ஹார்டிஞ்ச் பிரபு அவ்விடமிருந்த கும்பலில் பூந்து விறைவாய் ரயில்வண்டியின்பேரில் எகிறி குதிப்பதற்கு எத்தனித்தாராம். ஆனால் உடனே அங்கிருந்த ஓர் உத்தியோகஸ்தர் அவரை ஏற வொட்டால் பிடித்துக்கொண்டு ஸ்டேஷனை விட்டுப் போகும் ட்ரெயின் பிளாட் பாரம் விட்டு தாண்டுவதற்கு முன் ட்ரெயினையும் நிற்கும்படி செய்து அவர்கள் இருவரும் சுகமாய் ரயிலேறி இந்தியாவிற்கு வரும் சந்தோஷகரமான சமாச்சாரம் நம் நேயர்கள் எல்லோருக்கும் மிக்க ஆனந்தத்தை உண்டு பண்ணுமென்பதற்கு சந்தேகமில்லை.

பெங்கால் பட்டாபிஷேக தர்ப்பார்.

நம்மையாளும் சக்கிரவர்த்திக்கு வருகிற 1912-ம்ஹு ஜனவரி மாதத்தில் செய்வதாய் உத்தேசித்திருக்கும் பட்டாபிஷேகம் இதுவரையில் தற்காலத்தில் பெங்கால் மகாணத்திற்கு முக்கிய பட்டணமல்லாத "டெல்லி" பட்டணத்தில் வைத்துக் கொள்வதைப் பார்க்கிலும் முக்கிய பட்டணமாகிய கல்கத்தாவில் ஷை பட்டாபிஷேக உற்சவத்தை நடத்தி எல்லோரும் ஆனந்திப்பதற்கு தகுந்த ஸ்தலமென்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இது இப்படிக்கே நடந்தேறும் விஷயத்தில் எல்லோருக்கும் மிக்க சவுக்கியமா யிருக்குமென்றும் பொதுவில் பிரஜைகளெல்லோருமே சந்தோஷப் படுவார்களென்பதற்கும் ஐயமில்லை.

சென்னை லோக்கல் கவர்ன்மேண்ட் சீப் செக்ரிடேரி.

சர் உல்லியம் மேயர் துரையின் செல்வப் புத்திரன் அக்டோபர் மாதம் 23-ந்தேதி அகஸ்மாத்தாய் மேலே யிருந்து வீழ்ந்து அவருக்கு யேதோ ஓர் விபத்து நேரிட்டு அவர் இறந்துபோய் விட்டாரென்று இங்கிலாந்தி லிருந்து உட்டகாமண்டுக்கு சமாச்சாரம் வந்ததாக கேட்க எல்லோருக்கும் மிச்ச விசனமா யிருக்கிறது. உட்டகா மண்டிலிருக்கும் இறந்துபோன புத்திர கொமவியினுடைய தாய் தந்தையர்களும் இன்னும் அவ்விடத்திலுள்ள மற்ற இனத்தோர்களும் மேற்கண்ட விசனகரமான சமாச்சாரத்தைக் கேட்டு மிக்க துக்கித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தப்பித்துக்கோண்டு ஓடிப்போன கைதி.

நாளது அக்டோபர்மீ 24உ விக்டோரியா டெர்மினசிலிருந்து கல்லியாண் ஸ்டேஷனுக்கு இராத்திரி 10-30 மணிக்கு வந்து சேர்ந்த ரயில் ரிஜர்வெட்கம்பார்ட்மெண்டுடன் சேர்க்கப்பட்டிருந்த வண்டியில் நாசிக் பட்டணத்திலிருந்து பூனாவிலிருக்கும் ஜெயிலுக்கு சிக்ஷை யடைந்திருக்கும் சில சுதேசி புருஷர்களையும் பெண்களையும் அழைத்துக்கொண்டு வரப்பட்டது. ரயில் வண்டி அதி காலையில் "வாஷெனவி" என்னும் பட்டணத்திற்கு கிட்டும் தட்டுமாய் வருகையில் பில் இனத்தைச் சேர்ந்த ஒரு கைதி ரயிலிலிருந்து குதித்து தப்பித்து ஓடிப்போய் விட்டான். உடனே குய்யோ முறையோவென்று கூச்சலெழும்பிற்று, ரயில் வண்டியை நிறுத்தி விடப்பட்டது. அப்படி தப்பித்துக்கொண்டு ஓடிப்போய் விட்டவனை கண்டு பிடிக்க போலீசார் அதுமுதல் தேடிக்கொண்டு திரிந்தும் இன்னும் அவன் அகப்படவில்லையாம்.

EXHIBITION AT ALAHABAD.

யூனைடட் பிராவின்ஸ் கண்காட்சி சபை.

ஆகாயத்தில் பறத்தல்.

நிகழும் 1910ஹு டிசம்பர்மீ 1உ முதல் 1911ஹு பிப்பிரவரிமீ 28உ வரையிலும் நடக்கப்போகின்ற கண்காட்சி சபையில் இங்கிலாந்து தேசத்தில் ஆகாயத்தில் பறப்பதில் பேர்பெற்று வழங்குகிற Captain Windham and Mr. Roe துரைகள் அவர்களை இக் காக்ஷியில் பறக்கிறதற்காகப் பிரத்தியேகமாய் ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர். Mr. Roe துரை அவர்கள் சில நாளைகளுக்கு முன்னர் இங்கிலாந்தில் பறக்கின்ற தொழிலுள் புகழ் பெற்றார். அவர் இப்பொழுது வருகிறபோது ஏதோ நூதனமான ஒரு பறக்கிற யந்திரம் கொண்டு வருகிறாரும். இவர்களைத் தவிர Essex பட்டாளத்தைச் சேர்ந்த Captain Mailand துரையும் வருகிறதாக உத்தேசிக்கப் படுகிறது. இம்மூவர்கள் கூடி பறக்கின்ற தினம் தகுந்த காலத்தில் வெளிப்படுத்தப் படும். ஆனால் இக்காக்ஷி காலத்தில் ஒவ்வொரு வாரமும் பறக்கும் காக்ஷி உண்டு, இவ்வித்தையில் ஆசைகொண்டிருக்கிற கனவான்கள் தகுந்த பொருள் உதவி செய்வாரேல் கிரிஸ்ட்மஸ் காலத்தில் நடக்கப்போகிற பறவை காக்ஷி சங்கத்தில் எல்லா அவர்கொள்ளுநவர் (Amateur) களையும் சேர்க்கப்படும். எவன் ஒரு மயில் பறக்கும்படியான யந்திரத்தை உண்டுபண்ணுகிறானோ அவனுக்கு ஒரு இனாம் அளிக்கப்படும். இந்தியாவில் இம்மாதிரி யந்திரத்தை கண்டு பிடிப்பவர்கள் இந்தத் தொழிலில் முயற்சிசெய்வதுந் தவிர இந்தச் சங்கத்தினால் அனேகவிதமான சங்கதிகள் தேடுவதற்கும் காரணம் உண்டாகும். மிர்ச்சாப்பூர் பட்டணத்தார் எவன் ஓரிடத்திலும் தங்காமல் முதல் அப்பட்டணத்தை அந்த யந்திர சகாயத்தால் வந்து சேருகிறானோ அவனுக்கு இனால் கொடுக்கிறார்களாம். இவ்விஷயங்களில் நிரம்பவும் சிரத்தை எடுக்கிறவர்களுடைய சங்கத்தினால் இன்னும் அனேக யந்திரங்களை புதியதாக கண்டு பிடிக்க ஜனங்களை உற்சாகப் படுத்துகிறதும் தவிர இவ்வித்தையில் சிறந்த பழக்கமுள்ள தொழிலாளிகளினால் இதைக் குறைவின்றி நடத்தவும் அவற்றால் புகழ்பெறவும் காரணமுண்டாகும். சுதேச அபிமானியும் கனவான்களும், இந்தியாவில் நூதனமாய் அனேகமான யந்திரங்களைக் கண்டு பிடிக்குந்திறமை உள்ளவர்களுக்கு கூடிய பொருள் உதவிசெய்து அம்மாதிரி கண்டு பிடிக்கிறவர்களுக்கு இனால் ஒவ்வொரு கிறிஸ்ட்மஸ் சபையிலும் கொடுப்பார்களென்று நம்புகிறோம்.

நமது இந்தியா சட்ட கெஜெட்டை வாசிப்பதினால் யாதொரு நஷ்டமின்றி நம்முடைய நேயர்களுக்கு பெரும் லாபமுண்டாகுமென்பதற்கு ஐயமில்லை.

இதற்கு அத்தாட்சியாய் சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜு ஆனரபில் மிர். ஜ. சங்கரன்நாயர் அவர்கள் சொல்லியது :—

"பொதுவாய் ஜனங்களுக்கு சட்ட சம்மதமான விஷயங்களை போதிப்பதற்கு நீர் செய்யும் முயற்சிகள் மிகவும் புகழ்ந்து கூறத்தக்கது. அதன் அபிவிருத்தியை நான் மிக்க கோரினவனாயிருக்கிறேன்."

சென்னை ஐகோர்ட்டுஜட்ஜ் மிர். ஜ. சுப்பரமணியஐயர் அவர்கள் சொல்லியது "இந்த சட்ட கெஜெட் தென் தேசத்தில் எல்லோருக்கும் மிக்க பிரயோஜனகாமானதென்றும் இன்னும் இங்கிலீஷ் புஸ்தகங்களின் மூலமாய் தெரிந்துக்கொள்கொள்ளக்கூடாத விஷயங்களை இதில் அறிந்துக்கொள்ளலாம். இவ்விதமாய் ஜனங்களுக்கு சட்டசம்மதமான ஞானம் கொடுப்பதற்காக நீர் செய்யும் திருவைஷகளை நான் அறிந்து இந்த சட்டகெஜெட்டை சிலாகித்துச் சொல்லுகிறேன்."

Miscellaneous Cases.

சட்ட சம்பந்தமான இதர கேசுகள்.

IN THE COURT OF THE SESSIONS JUDGE OF TRIVANDRAM.

திருவனந்தபுரம் சேஷன்ஸ்கோர்ட்டில் ஜனங்களெல்லோரும் முக்கியமென்று கவனித்து வந்த ஓர் விசேஷமான செக் கேசு.

சேஷன்ஸ் ஜட்ஜு :—ம-ஸ்ரீ, ஸ்ரீ பி. வீராகவ ஐயங்கார், பி.ஏ., பி.எல்.

1086-வது ஆண்டின் முதல் துலாம் திங்கட்கிழமை மேற்படி கேசில் செய்த தீர்மானத்தின் எக்ஸ்ட்ராக்டை பார்க்குமளவில் கேசின் விர்த்தாந்தம் பின் வருமாறு தெரிய வருகிறது. திருவனந்த புரத்திலுள்ள பாங்க் ரயிட்டர் அல்லது அக்கவுன்டான்டு உத்தியோகம் செய்யும் எல். அனந்த கிருஷ்ணய்யர் என்பவர் ஒருவர் இந்தியன் பீனல் கோடு 381, 410-வது பிரிவுகளின் கீழ் அல்லது 470, 480-வது பிரிவுகளில் ஒன்றின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு திருவனந்தபுரம் முதல் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டினால் ஜில்லா கோர்ட்டு செஷன்ஸ் விசாரணைக்கு அனுப்பப்பட்டான்.

குற்றவாளி சாதாரணமாய்உஜூர்ட் ரெஷெரியிலிருந்து மதராஸ் பாங்கிக்கு அனுப்பப்படும் செக்குகளில் ஒன்றை அவன் கிரமப்படி ஷை மதராஸ் பாங்கிக்கு அனுப்பாமல் தன்னிடத்திலேயே நிறுத்திக்கொண்டு கடசியாய் அதை மெர்கண்டயில் பாங்கில் மாற்றி ரொக்கத்தை அவன் தன்னுடைய சொந்த சிலவிற்கு கையாண்டானென்றும் அது விஷயமாய் கணக்கு புஸ்தகங்களில் தப்பு பதிவுகள் செய்தானென்றும் குற்றம் சாட்டப்பட்டதற்கு எதிர் வாதமாய் குற்றவாளி தனக்கு ஒன்றும் தெரியாதென்றும் தான் அப்படி கையாண்டவனல்லவென்றும் தான் குற்றவாளியல்லவென்றும் எதிர்வாதம் கூறினான்.

செஷன்ஸ் ஜட்ஜு அவன்பேரில் குற்ற ஸ்தாபனை செய்து இது மிக்க தயிரியமாய் செய்த பிரமாதமான குற்றமென்று கண்டு அவனை ஏழு வருஷகாலம் கடின காவலிலிருக்கும்படி சிக்ஷை விதித்தார். இதன்றியும் இப்படிப்பட்ட ஒழுங்கீனங்களிருப்பதை மேலதிகாரிகள் கவனித்துப் பார்த்து சில சீர் திருத்தங்கள் செய்யவேண்டியதென்றும் முக்கியமாய் திருவனந்த புரத்திலுள்ள தர்ப்பாரைச் சேர்ந்த அதிகாரிகள் இதை கவனிக்க வேண்டியதென்றும் ஜில்லா ஜட்ஜ் ரிமார்க்கு எழுதியிருக்கிறார்.

CALCUTTA HIGH COURT.

கிர்மினல் ரிவிஷன் கேசு.

ஜட்ஜுகள் :— மி-ர். ஜ. ஸ்டீபென், மி-ர். ஜ. காங்டஷ் ஈஷ்வர் சந்திரசிங்க். முன்பாக.

சக்கிரவர்த்தி.

அபினி-சட்டத்திலுள்ள விதிகளுக்கு விரோதமாய் விற்பனை செய்தல்—ருஜு ஓபியம் (அபினி) ஆக்டு (1878-ம் வருஷத்திய 1-வது ஆக்ட்) 9, 10-வது பிரிவுகள்.

மேற்படி ஆக்டு 9-வது பிரிவில் விவரித்திருக்கும் சட்ட விரோதமான சந்தர்ப்பங்களை ருஜு செய்ய வேண்டியவன் அப்படி ரூலுக்கு விரோதமாய் விற்பனை செய்கிறவன் தானென்று ஷை ஆக்டு 10-வது பிரிவின்படி ஏற்படுகிறது. அப்படி சட்டத்திற்கு விரோதமாய் விற்பனை செய்தானென்பதற்கு ருஜு யில்லாவிடில் அவன்பேரில் குற்ற ஸ்தாபனை செய்வது நியாயமல்ல.

சிட்டகாங்க் செஷன்ஸ் ஜட்ஜி ஜெ. சி. பானெர்ஜி என்பவர் செய்த தீர்மானத்தின் பேரில் கிரிமினல் ரிவிஷன் மனு நெ. 27 of 1910.

இ. லா. ரி. 37 கல் 581.

கும்பகோணம் சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டில் 1910-ம்ஹுத்திய காலேண்டர்கேஸ் நெ. 38-ல் செய்யப்பட்ட தீர்மானத்தின் எக்ஸ்ட்ராக்டு.

ஜனங்கள் வர்த்தமானத்திற்காக விளம்பரம் செய்யப்பட்டது.

எதிரி (குற்றவாளி)—இந்தியன் பீனல் கோடு 29-வது பிரிவின்கீழ் குற்றமாகுமென்று சொல்லப்படும். அசிங்கிதமான சில பிரதிகளை ஜனங்களுக்கு கொடுத்து பரவச் செய்தான் என்னும் குற்றத்தை செய்ததாக சார்ஜு செய்யப்பட்டான்.

எதிரி (குற்றவாளி) யின் எதிர்வாதம் யாதெனில் :— அது ஓர் ஔஷதத்தைப்பற்றிய ஓர் விளம்பரமென்றும், அந்த ஔஷதத்தினால் அடையும் சுகம் இப்படிப்பட்டதென்றும், இன்னும் அதைச்சேர்ந்த சில ஷராக்களும் அந்த விளம்பரத்தில் காணவேண்டியது அவசியமென்றும் எ. குறிப்பிட்டிருக்கும் விளம்பரத்தில் இந்த மருந்தின் பெயர் "அப்ரோடிஸியாக்" அதனுடன் சேர்க்கப்பட் டிருக்கும் [illegible] யோ அந்த மருந்து எந்தெந்த விதத்தில் பிரயோஜனமான தென்றும் விவரிக்கின்றது. அந்த மருந்து எந்த விஷயங்களில் பிரயோசனப் படுத்தவேண்டுமென்பதை விவரித்து சொல்லி யிருக்கும் பாஷை அப்படி அசிங்கமானதல்லவென்றும் பொதுவாய் மானிடர் எந்தெந்த விஷயங்களில் குழந்தைகள் பெறுவதற்கு அசக்தராய் விடுகிறார்களென்பதற்கு விவரணமும் குற்றவாளி செய்யும் இந்த மருந்தை (மாத்திரைகளை உட்கொள்வதினால் நேரிடும் பயன்கள் இன்னின்னவென்று கூறுகின்றன ; அது எப்படிப்பட்ட விவரணமென்றால் :—

"ஐயா, நீங்கள் இந்த மாத்திரைகளை உட்கொண்ட பிறகு ஸ்திரீகளுடன் புணர்ந்தால் ஸ்திரீகளின் மனோரம்மியமும் அவர்கள் புகழ்ந்து சொல்வதும் உம்முடைய மனதிற்கு மிக்க திருப்திகாமுண்டுபண்ணும்."

இந்த பிரிதியில் மருந்தின்பூராய் பிரயோஜனத்தைப் பற்றியும் சொல்லி முடித்திருக்கிறது. இந்த பிரதியில் எதிரி (குற்றவாளி) என்ன நோக்கத்துடன் இப்படிப்பட்ட விளம்பரம் செய்தானென்றாலோ :— அவன் இப்படி செய்வதில் தான் இந்த "அப்ரோடிசியாக்" என்னும் மருந்தை விற்பனை செய்வதற்கும் அதை அநேகர் வாங்குவதற்கும் மோகம் கொள்வார்களென்பதற்கும் தான் இப்படிச் செய்தவன் என்றும் ஏற்படுகிறது.

ஆகையால்— இதற்கு ஆதாரமாய் எடுத்துக் கூறிய சில கேசுகளை பரிசோதிக்குமளவில் குற்றவாளி செய்த இப்படிப்பட்ட விளம்பரம் மேலே கண்டிருக்கும் இந்தியன் பீனல் கோடு 292-வது பிரிவின் கீழ் ஓர் குற்றம்தானென்று தீர்மானிக்கப்பட்டு குற்றவாளியின் மீது குற்ற ஸ்தாபனை செய்து ரூபாய் 50 அபராத தண்டனை விதிக்கப் பட்டது. அபராதத்தை கட்டாவிடில் மூன்றுவாரம் சொற்பகாவல் தண்டனைக்குட் படவேண்டியது.

பெண்சாதி சார்ஜென்ட் உத்தியோகஸ்தனாகிய தன்னுடைய புருஷனை விஷம் கொடுத்து கொன்றது.

மாஜிஸ்ட்ரேட் உத்தரவு,

"ஹௌரா" என்னும் பட்டணத்திலுள்ள போலீசார் அந்த ஊரில் 'மெக்டெர்மெட்' என்று பெயருள்ள சார்ஜென்ட் ஒருவன் மரணமடைந்து விட்டதின் காரணம் சந்தேகத்திற்கிடமானதா யிருக்கிறதென்று செய்த போலீஸ் ரிப்போர்ட்டின் பேரில் ஷை ஹௌரா பட்டணத்தின் டிஸ்ட்ரிக்டு மாஜிஸ்ட்ரேட்டு அவர் இறந்துவிட்ட சந்தர்ப்பங்களை யோசிக்குமளவில் அவரை யாரோ கொலை செய்துதா னிருப்பார்களென்பதற்கு போதுமான முகாந்திரங்க ளிருக்கிறதென்று அனுமானித்து கவர்ன்மெண்டு ரயில்வே போலீஸ் சூப்பெரின்டென்டென்டை இது விஷயமாய் செய்யவேண்டிய நடவடிக்கைகளை நடத்தி கொலை செய்த குற்றவாளி அல்லது குற்றவாளிகளை கண்டு பிடிக்கும்படி உத்தரவு செய்தார்.

அவரைக் கொலை செய்த நபர் அவருடைய பெண்சாதிதானென்று அவளை பிடித்து மறியல் செய்தார்கள். ரயில்வே போலீஸ் சார்ஜென்ட் மெக்டர்மெட் என்பவரை, அவருடைய பெண்சாதி, தான் சென்ற செப்டம்பர் மாதம் விழம் கொடுத்து கொன்றுவிட்டாளென்றும் அந்தப் பட்டணத்திலே கவர்ன்மெண்ட் ஆபீசில் உத்தியோகம் செய்யும் 25-வயதுள்ள பென்னெட் என்று நாமதேயமுள்ள ஒரு சிறுவன் அவர்களுடைய வீட்டுக்கு சினேகிதமாய் அடிக்கடி போவதென்று அவன்பேரிலும் அனுமானித்து. இவர்கள் இருவர்பேரிலும் குற்றம் சாட்டப்பட்டு இப்போது ஹௌரா மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் விசாரணை நடந்துக்கொண்டிருக்கிறது.

விஷம் கொடுத்தவிதம் எப்படியெனில் பெண்சாதி தன் புருஷனுக்கு கடிதம் எழுதி ப்ராக்கிபூட்டி அனுப்பியதாகவும் அதில் விஷம் கலந்திருந்ததென்றும் தெரிய வருகிறது.

கிரிப்பன் கொலை கேசு.

கிரிப்பன் என்பவன் செய்த கொலை கேசில் அவரை விசாரணை செய்ததாகவும் அவ்விடத்திலிருந்த உடுப்புகள் கிரிப்பன் துரையினுடையது தானென தெரியவந்தமையால் கிரிப்பன் என்பவன் அவருடைய பெண்சாதி யைக்கொன்று கிணற்றில் போட்டு நாசம் செய்து கொலைசெய்த குற்றவாளியென்று அவன்பேரில் குற்ற ஸ்தாபனை செய்தார். ஜூரிகள் குற்ற ஸ்தாபனை செய்வதற்கு முன் கிரிப்பன் துரையை ஏதாவது சொல்லிக்கொள்ள வேண்டுமானால் சொல்லிக்கொள்ளும்படி கேட்டதற்கு அவன் விசாரணை முடிகிற வரையிலும் மிக்க பொருமையா யிருந்துதான்குற்றவாளி யல்லவென்று வாதித்தான். கடைசியாய் குற்றவாளியை தூக்குபோடும்படிக்கு சிக்ஷை விதிக்கப்பட்டது.

திருச்சிநாப்பள்ளி.

ஒரு நாட்டுக்கோட்டை செட்டியார் பாங்கில் நம்பிக்கை துரோகம் செய்தது.

மதுரை ஜில்லா தேவகோட்டையிலிருக்கும் டி. ஆர். எம். என். ராமசுவாமி செட்டியாரின் பாங்கில் ஏஜெண்டாய் பாங்கில் வேலை பார்த்துக்கொண்டிருந்த ஒரு மாணிக்கம் பிள்ளை என்பவரை பாங்கில் வட்டிக்காக டிபாசிட்டாய் கட்டி வைக்கும்படி இருதாரத்தார் கொடுத்த திரவ்யத்தை அவர் பாங்கில் கட்டி கணக்கில் கொண்டு வராமல் இரண்டு பாபத்தில் நம்பிக்கை துரோகம் என்னும் குற்றம் செய்தவராக சார்ஜ் செய்யப்பட்டு திருச்சிநாப்பள்ளி டிப்டி மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் விசாரணைக்கு வந்திருக்கிறது. என்றும் கைதியை ஜெயிலில் ரிமாண்டில் வைத்திருப்பதாகவும் தெரிய வருகிறது. ஒரு நாட்டுக்கோட்டை செட்டியார் இவரிடத்தில் எவ்வளவோ நம்பகமாய் இவரை ஏஜெண்டாய் நேமித்திருந்தும் இவர் இவ்விதமாய் செய்தது மிக்க சிந்திக்கத் தக்கனதே.

LORD HARDINGE.

THE NEW VICEROY—GOVERNOR GENERAL OF INDIA,

நமது இந்தியா தேசத்திற்கு இப்போது புதிதாய் வரும் வைசிராயென்னும் இராஜப் பிரதிநிதியாகிய கவர்னர் ஜெனரல் லார்ட் ஹார்டிஞ்ச் பிரபு.

இப்போது நமது இந்தியா தேசப் பரிபாலன கர்த்தராய் வரும் கவர்னர் ஜெனரல் லார்ட் ஹார்டிஞ்ச் பிரபு சுமார் 66-67-வருஷங்களுக்கு முன் இந்த இந்தியா தேசத்திற்கு கவர்னர் ஜெனரலாயிருந்த லார்ட் ஹார்டிஞ்ச் பிரபுவின் வம்சத்தைச் சேர்ந்தவர்—முன் கவர்னர் ஜெனரலாயிருந்த லார்ட் ஹார்டிஞ்ச் பிரபு நம்முடைய தேசத்தில் வித்தியாம்சம் (Education) என்னும் வித்தை நாட்டி முதல் முதல் பரிட்சைகள் என்னும் ஏற்பாடுகள் உண்டுபண்ணி அதன்படி நன்றாய் வாசித்து பரிட்சையில் தேர்ந்தவர்களுக்கு சர்க்காரில் பெரிய அந்தஸ்துள்ள உத்தியோகம் முதலானவை தந்து விர்த்தி செய்து நம்மை ஆதரித்தார். அனேக ஆண்டுகளுக்கு முன் கவர்னர் ஜெனரலாயிருந்த இவர் இன்னும் ரயில்வேகள் ஏற்பட்டிருந்ததை விர்த்திக்கு கொண்டுவந்து ஓடும்படி செய்தவர்—பொடகிராப் என்றால் என்னவென்று இவரால்தான் முதல் முதல் இந்தியாவில் தெரியவந்தது. முக்கியமாய் உடன்கட்டி ஏறுதல் யென்னும் சட்டி (Sati)-அதாவது, புருஷன் இறந்தால் பெண்சாதியும் அவனுடன் எறிந்துபோவது-முன் காலத்தில் இந்த தேசத்திலுள்ள காண்ட்ஸ் மதஸ்தருள் மிக்க வழங்கி வந்துக்கொண்டிருந்த "நரபொலி" மனுஷாளைக் காவு கொடுப்பது, குழந்தைகளை காவு கொடுப்பது இப்படிப்பட்ட மிக்க கடூரமான பழக்கங்களெல்லாம் கண்டிக்கப்பட்டு நிறுத்தி விடப்பட்டன. இவர் இந்தியா தேசத்தில் செய்த பரிபாலனத்தைப் பற்றி மஹாராணி அவர்களும் மிக்க சிலாகித்து இவரை புகழ்ந்து கூறி யிருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவரின் வம்சஸ்தரான நமது புதியவைசிராயும் நமக்கு அவருடைய பெரியோர் செய்த நன்மைப்படி அநேக நன்மைகள் செய்வார் என்பதற்கு ஐயமே கிடையாது. ஏனென்றால், ஈ விதக்கம் பட்சாதாபம் காருண்யம் என்பதிருந்தால் கலகமற்று அமரிக்கையாய் வாழலாம் என்னும் கோட்பாடு இப்போது நம்மை யாளும் சக்கிரவர்த்தி சில வருஷங்களுக்கு முன் இந்தியா தேசத்திற்கு வந்தபோது அவருக்குண்டென்பது லார்ட் ஹார்டிஞ்ச் பிரபு தெரிந்தவராம். நம்முடைய தேசத்திற்கு இப்போது புதிதாய் வரும் கவர்னர் ஜெனரல் பின் வருமாறு சொல்லி யிருப்பதாகவும் தெரிய வருகிறது. அதாவது—"ஈ விதக்கம் பட்சாதாபம் காருண்யம் என்பதிருந்தால் இந்தியாவிலுள்ள கலகமெல்லாம் பறந்தோடும் என்பதும்; இதை முக்கியமாய் கவனிப்பதுதான் ராஜ்ய பரிபாலனத்துக்கு தகுந்தது" என்பதும் அவர் பூராய் தெரிந்துக்கொண்டிருக்கிறாரென்றும் நம்மையாளும் சக்கிரவர்த்தியும் நம்முடைய தேசத்திற்கு புதிதாய் வரும் கவர்னர் ஜெனராலும். இவ்விதமாய் ஒரே அபிப்பிராயம் கொண்டிருப்பதால் நமது தேசம் க்ஷேமமடைந்து சுகித்து தழைத்தோங்கு மென்று திடமாய்க் கூறலாம்.

இப்பிரபு இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்த பென்ஹர்ஸ்ட் என்பதைச் சேர்ந்த ஒரு பிரபு இவர் மார்சேல்ஸ் என்னும் பட்டணத்திலிருந்து "பி. ஓ. பெர்சியா" என்னும் ஸ்டீமரில் நவம்பர்மீ 4௳ இந்தியாவிற்கு புறப்படுவதாய் தெரிய வருகிறது.

HIS MAJESTY KING GEORGE V EMPEROR OF INDIA WITH FAMILY.

மாக்ஷிமை பொருந்திய நமது இந்தியா சக்கிரவர்த்தி ஜியார்ஜ் V அவர்கள் குடும்பம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
30 MAR 1911
MADRAS.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் V.] சென்னப்பட்டணம் 1910ஹு நவம்பர்மீ பாகம் 2.

IMMUNITY OF WITNESSES—Continued.

ஓர் வியாஜ்ஜியத்தில் சாட்சி சொல்லும் நபர்களுக்காக சட்டத்தில் ஏற்பட்டிருக்கும் அனுகூலமான விதிகள் (தொடர்ச்சி.)

—:o:—

சாக்ஷிகள் கோர்ட்டில் சத்தியத்தின் பேரில் வாக்குமூலம் கொடுக்கையில் பொய் சாட்சியம் சொன்னால் சிவில் கோர்ட்டில் நஷ்டத்திற்காக அவர்கள் மீது தாவா செய்ய நியாயமில்லையென்று அலகபாத் தவிர மற்ற இடங்களில் தீர்மானங்களாயிருக்க பிறகு அப்படி பொய் சாட்சியம் சொல்லும் நபர்களின்மீது கிரிமினலில் என்ன நடவடிக்கைகள் நடத்தலாமோ அதைப்பற்றி சட்டத்தில் என்ன சொல்லியிருக்கிறதென்றும் இன்னும் இந்த இந்தியா தேசத்திலுள்ள ஹைகோர்ட்டாரால் அவ் விஷயமாய் என்ன தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றனவென்றும் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

இப்படி பொய் சாக்ஷியம் சொல்வது என்னும் குற்றத்திற்காக ஏற்பட்டிருக்கும் தண்டனை முதலான நிபந்தனைகளை விவரித்துச் சொல்லும் இந்தியன் பினல் கோடு 499-வது செக்ஷனைப் பார்க்குமளவில் அது அப்படிப் பட்டவர்களுக்கு பூராவும் அனுகூலமுள்ளதென்றும் அல்லவென்றும் ஸ்பஷ்டமாய் ஏற்படவில்லை. இங்கிலாந்தில் பொய் சாட்சி சொல்பவர்கள்மீது அவதூறுக்காகவும் மானபங்கம் செய்ததாகவும் சட்டப்படி கிரிமினல் நடவடிக்கைகள் நடத்தலாமென்று சொல்லியிருந்தபோதிலும் நம்முடைய இந்தியா தேசத்தில் சட்ட நிருபணை சபையார் செய்திருக்கும் இந்தியன் பினல் கோடில் இதைப்பற்றி என் யாதொன்றும் சொல்லப்படவில்லையென்று கவனித்தாலோ அப்படி இங்கிலாந்தில் உள்ள சட்டத்தைப்போலவே இந்தியாவிலும் செய்வது தகுந்ததல்லவென்று மேற்படி சட்ட நிருபண சபையாருக்கு தோன்றியிருக்கலாம்.

Section 499 I. P. C:—

Whoever, by words spoken or intended to be read, or by signs or by visible representations, makes or publishes any impuatation concering any person intending to harm or knowing or having reason to believe that such impuatation will harm the reputation of such person, is said, except in the cases hereinafter excepted, to defame that person.

Exceptions 1 to 4.

ஆகையால் ஒரு கோர்ட்டில் இவ்விதமாய் ஒருவன்பேரில் அவதூறாய் மானபங்கமான வார்த்தைகளைச் சொல்லும் ஒரு சாக்ஷிதாரன்பேரில் என்ன செய்யலாமென்று இந்தியன் பினல் கோடில் சொல்லப்பட்டிருக்கும் பிரிவின் கீழுள்ள (விலக்குகளில்) நிவாரணைகளில் யாதேனும் ஒரு விலக்கின் கீழ் அவன் அப்படிச் சொல்லியது குற்றமாகாதென்று அவன் ரூபித்தாலொழிய மற்றப்படி அப்படி சாட்சியம் கூறப்பட்டவன் மேற்படி பிரிவின்கீழ் குற்றவாளி தானென்று தீர்மானிக்கப்பட்டு அந்த பிரிவில் சொல்லியிருக்கும் தண்டனைக் குட்படுவான். இதைப்பற்றி ஹைகோர்ட்டார் செய்திருக்கும் தீர்மானங்களைப் பார்ப்போம் :—

மட்ஜெயா V- சேஷா செட்டி இ. லா. ரி. 11 மதராஸ் 477.

இந்த கேசில் ஒருவன்பேரில் அவதூறாய் வாக்குமூலம் சொன்ன குற்றவாளியை விசாரணை செய்கையில் கோர்ட்டில் அவனைக் கேட்ட ஓர் ரத்து சவாலுக்கு அவன் அப்படிப்பட்ட மறு உத்தரம்

சொன்னானென்னும் காரணத்தால் அவன்பேரில் பொய் சாட்சியம் சொல்வதற்காக இந்தியன் பீனல் கோடில் என்ன நிபந்தனை (195-வது பிரிவு) செய்யப்பட்டிருக்கிறதோ அதன்படி தான் நடவடிக்கைகள் நடத்தலாமே யல்லாமல் மற்றப்படி அவன்பேரில் அவதூரான வார்த்தைகள் சொல்லி மானபங்கம் (Defamation) என்னும் குற்றத்தைச் செய்தானென்று அவனை உடனே வாரண்டின்பேரில் பிடிக்கவாவது அல்லது அவனை பிராசிக்கியூஷன் செய்யவாவது நியாயம் கிடையாதென்று தீர்மானித்து குற்றவாளியின்பேரில் இ. பி. கோ. 500-வது பிரிவின்கீழ் செய்த குற்ற ஸ்தாபனையை ரத்து செய்யப்பட்டது.

மதராஸ் ஹைகோர்ட்டார் செய்த இன்னொரு தீர்மானம் என்னவென்றால் :—

மஹாராணி V-கோவிந்த பிள்ளை இ. லா. ரி. 16 மதராஸ் 235 :—இந்த கேசில் ஓர் பப்ளிக் உத்தியோகஸ்தர் கி. பு. கோ. 161-வது பிரிவின் கீழ் நடத்திய ஓர் பிரதம விசாரணையில் அந்த உத்தியோகஸ்தர் கேட்ட கேள்விக்கு பதில் உத்தரமாய் ஒரு சாட்சி சொன்ன பேச்சுகள் ஓர் விஷயத்தின் உண்மையை அறிவதற்கு ஆதாரமா யிருப்பதால் அவன் சொல்லிய வாக்குமூலத்தை ஓர் ஆதாரமாய்க் கொண்டு அவன் மானபங்கம் (Defamation) என்னும் குற்றம் செய்தானென்று அவனை சார்ஜ் செய்யலாகாதென்று தீர்மானிக்கப்பட்டது. இதில் மேலே சொல்லியிருக்கும் மதராஸ் தீர்மானத்தையும் மஞ்சூர் செய்துக்கொள்ளப்பட்டது. (இ. லா. ரி. 11 சென் 477.)

கனம்பொருந்திய சென்னை ஹைகோர்ட்டார் செய்த இன்னொரு தீர்மானம்:—அல்ராஜ நாயுடு கேசில் (இ. லா. ரி. 30 மதராஸ் 222) ல் ஒரு டிஸ்ட்ரிக்டு முனிசிபு கோர்ட்டில் ஓர் வியாஜ்ஜியத்தின் கட்சிதாரன் ஒருவன் வேறொரு நபரைப்பற்றி மானபங்கமான வாக்குமூலம் சொல்வானாகில் அந்த வாக்குமூலத்தை ஆதாரமாய்க் கொண்டு அவனை அவதூறு மானபங்கம் (Defamation) என்னும் குற்றத்திற்காக சார்ஜ் செய்யலாகாது. ஆனால் அவன் பொய் சாட்சியம் சொன்னால் அவன் பீனல் கோடின்படி பெர்ஜூரி என்னும் குற்றத்தைச் செய்தவனாவான்.

இது இப்படிக்கிருக்க மதராஸ் ஹைகோர்ட்டார் தீர்மானங்களையும் அதன்பேரில் பிரிவு கவுன்சிலார் சொல்லியிருப்பதையும் அனுசரித்து பம்பாய் ஹைகோர்ட்டாரும் அம்மாதிரியாகவே அபிப்பிராயப்பட்டு மானபங்கம் (Defamation) என்னும் குற்றத்திற்காக இப்படிப்பட்ட சாக்ஷியம் சொல்பவனை பிராசிக்கியூஷன் செய்யலாகாதென்று தீர்மானம் செய்திருக்கிறார்கள். (மஹாராணி V-பாலகிருஷ்ணவிதல் இ. லா. ரி. 17 பம்பாய் 573.) இதுவுமன்றி இதன் விஷயமாய் சிவில் கோர்ட்டில் இப்படிப்பட்ட சாக்ஷிகளின்பேரில் நஷ்டத்திற்காக தாவா செய்யலாகாதென்று சொல்லி யிருப்பதைப் போலவே கிரிமினலிலும் அவர்கள்மீது இ. பி. கோ. 499-வது பிரிவின்கீழ் பிராசிக்கியூஷன் செய்யலாகாதென்றும் அபிப்பிராயம் கூறி யிருக்கிறார்கள்.

இது விஷயமாய் இப்படிப்பட்ட தீர்மானங்கள் இல்லாவிடில் கோர்ட்டில் சாட்சியம் சொல்லும் ஒவ்வொரு சாக்ஷியின்பேரிலும் மானபங்கத்திற்காக (Defamation) பிராசிக்கியூஷன் செய்யும்படிக்கு மனு செய்துக்கொள்ளப்படு மென்பது தெளிவாய் தெரிய வருகிறது. அப்படி பிராசிக்கியூஷன் செய்தால் அவன் பொய் சொல்லுகிறானென்று ருஜு செய்யவேண்டிய பொறுப்பு குற்றவாளியின் பொறுப்பாகுமென்னும் கஷ்டத்தை யனுசரித்து இவ்விதமாய் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் சாக்ஷி சொல்லப்பட்டவன் ஒரு கோர்ட்டார் முன்னிலையி லல்லாமல் பிரத்தியேகமாய் ஒரு ஜில்லா மாஜிஸ்டிரேட்டின் முன்னிலையில் இப்படிப்பட்ட வாக்குமூலம் கொடுப்பானாகில் அவன் விஷயத்தில் இந்த தீர்மானங்கள் சம்பந்தப்படாதென்றும் அப்படிப்பட்டவன் இ. பி. கோ. 499-வது பிரிவின்படிக்கு அவதூறு மானபங்கம் என்னும் குற்றத்திற்கு உள்ளாவானென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (மஹாராணி V காளிகௌடா இ. லா. ரி. 19 பம் 510.)

ஒரு கோர்ட்டார் முன்னிலையில் சாட்சி சொல்லும் ஒருவனை இ. பி. கோ. 499-வது பிரிவின்கீழ் அவதூறு, மானபங்கத்திற்காக பிராசிக்கியூஷன் செய்வதற்கும் அல்லது அவன் பொய் சாட்சியம் சொன்னானென்று அவன்பேரில் பெர்ஜூரிக்கு நடவடிக்கை நடத்துவதற்கும் உள்ள பேதம் யாதெனில் :—

‘மானபங்கம் (Defamation)’ குற்றத்திற்கு கோர்ட்டார் அனுமதி (Sanction) வேண்டியது அவசியமல்ல. ஆனால் ‘பெர்ஜூரி (Perjury), குற்றத்திற்கு கோர்ட்டாருடைய அனுமதி (Sanction) அவசியம்.

அலகபாத் ஹைகோர்ட்டார் இவ்விதமாய் சாக்ஷியம் சொல்லுகிற நபரின்பேரில் (Defamation) மானபங்கம் என்னும் குற்றத்தைச் செய்தவனென்று பிராசிக்கியூஷன் செய்வதற்கு நியாயமுண்டென்று தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 22 அல 234 29 அல 685.)

சாதாரணமாய் கோர்ட்டில் சாக்ஷி சொல்பவர்களுடைய வாக்குமூலத்தின்பேரில் அவர்கள் ஒருவனைப்பற்றி மானபங்கமான பேச்சுகள் சொன்னார்களென்று அவர்கள்மீது இ. பி. கோ. 499-வது பிரிவின்கீழ் அவர்களை பிராசிக்கியூஷன் செய்ய நியாயம் கிடையாதென்று இங்கிலாந்து தீர்மானங்களையும் பிரிவு கவுன்சலார் தீர்மானங்களையும் ஆதாரமாய்க் கொண்டு மதராஸ், பம்பாய் ஹைகோர்ட்டார்கள் தீர்மானம் செய்திருக்கிறார்கள். ஆனால் கல்கத்தா, அலகபாத் ஹைகோர்ட்டார் ஷை 499-வது பிரிவின்கீழ் பிராசிக்கியூஷன் செய்ய நியாயமுண்டென்று தீர்மானித்திருக்கிறார்கள். இது விஷயத்தைப்பற்றி இரண்டு கோர்ட்டுகளில் ஒருவிதமாகவும் மற்ற இரண்டு கோர்ட்டுகளில் வேறேவிதமாகவும் தீர்மானித்திருப்பதைப் பார்த்து சாக்ஷிகள் கோர்ட்டில் ஆஜராகி சாட்சியம் சொல்வதற்கு பயப்படுவார்க ளாகையால் சட்ட நிரூபண சபையார் இதைப்பற்றி எவ்விடத்திற்கும் ஓரே விதமான பொது நிபந்தனை ஏற்படுத்துவார்களென்று கோறப்படுகின்றது.

INTERESTED JUDGES.

பாத்தியதைப் பெற்ற நியாயாதிபதிகள்.

—:o:—

ஒரு ஜட்ஜிக்கு ஒரு கேசில் பாத்தியதை யிருக்குமானால், அவர் அந்த கேசை விசாரித்துத் தீர்மானிப்பதற்குத் தகுதியற்றவ ராகின்றார். அவரை அவ்வாறு தகுதியற்றவராகச் செய்யும் பாத்தியதை மூன்று வகைப்படும்: (1) ஒரு கேசில் அவரே வாதிப் பிரதிவாதிகளில் ஒருவராக இருப்பது, (2) அவருக்கு அந்த கேசின் தீர்மானத்தில் ஏதாவது திரவிய சம்பந்தமான பாத்தியதை யிருப்பது, (3) பக்ஷபாதமாக முடியுமென்று பயப்படவும், அல்லது சந்தேகப்படவும் இடமாக யிருப்பது. வேறே எந்தவித பாத்தியதையானாலும் இருப்பது.

ஜட்ஜே வாதிப் பிரதிவாதிகளில் ஒருவராக யிருப்பது.

ஒரு ஜட்ஜியானவர் வாதி பிரதிவாதிகளில் ஒருவராக இருக்கக்கூடாது; ஒருவரே ஜட்ஜியாகவும் பிராது செய்பவராகவும் இருக்கக்கூடாது. ஒரு ஜட்ஜி வாதி அல்லது பிரதிவாதியாகவாவது, அல்லது பல வாதிப் பிரதிவாதிகளில் ஒருவராகவாவது, அல்லது பிராது செய்பவர் அல்லது குற்றவாளியாகவாவது ரிகார்டில் பதிவு செய்யப்பட்டிருந்தால், அவர் அந்த கேசை விசாரிப்பதற்குத் தகுதியற்றவராகிறார். இதை அறிவதற்கு வேறே ஆதாரம் ஒன்றும் வேண்டியதில்லை. (a) ஆனால் ஆங்கிலேய தேசத்தின் ஒரு ஜட்ஜி வாதியாகவாவது அல்லது பிராது செய்பவராயாவது ரிகார்டில் பதிவு செய்யப் படாமலிருந்த போதிலும், உண்மையில் அவ்வாறு ஆனதாக எண்ணப்பட்டு, கேசை விசாரிப்பதற்குத் தகுதியற்றவரென்று நீக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் எத்தனையோ உண்டு. (b) ஒரு ஜட்ஜி நகர விஷயங்களை விசாரிக்கும் சங்கத்தில் ஒருவராக இருந்து அந்த சங்கமானது ஒருவன்பேரில் பிராது கொணர்ந்து, இவரும் அந்த பிராதுசெய்பவர்களில் ஒருவராக இருந்தால் இவர் அந்த கேசை விசாரித்துத் தீர்மானிக்கத் தகுதியற்றவ ராகின்றார். ஏனென்றால், இவரை பிராது செய்பவரென்று பிரத்தியேகமாக ரிகார்டில் பதிவு செய்யப்படாமலிருந்தாலும், உண்மையிலேயே இவரும் வாதி தரப்பில் சேர்ந்தவராகின்றார். (c) ஒருவர் ஒரு நகர மந்திராலோசனை சபையில் சேர்ந்தவராக இருந்து அந்த சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் கலகக் குற்றத்திற்காக குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்பட்டவர்களில் ஒருவராக இருந்தால், அவர் ஜட்ஜாக இருந்து அந்த கேசை விசாரிக்கக்கூடாது. ஏனென்றால், உண்மையில் அவரும் பிராதுகொண்டு வருபவர்களாகிய வாதிகளில் ஒருவராகின்றார். (d) இருதரத்தாரில் ஒருவராக எண்ணி ரிகார்டில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், அல்லது உண்மையிலேயே அவ்வாறாகவே யிருந்தாலும், ஒருவர் ஜட்ஜாகயிருந்து ஒருகேசை விசாரிக்க தகுதியற்றவராகின்றார் என்பது விதி. ஒரு ஜட்ஜி குற்றஞ் சாட்டி சார்ஜி செய்கிறவரென்று பாவிக்கப்பட்டாலும், நிஜமாகவே அவ்வாறாக யிருந்தாலும், அவர் நியாய விசாரணை செய்ய சக்தியற்றவராகிறார். ஏதாவது ஒரு குறித்த கேசில் இருக்கும் சந்தர்ப்பங்கள் எப்படி ஊகிக்கப்படுகின்றனவென்று யோசிக்கவேண்டும். ஒரு கேசில் ஒரு ஜட்ஜிக்கு யாதானு மொரு பாத்தியதை இருந்து, அப்படி இருந்தபோதிலும் அவர் எந்தவிதத்தாலும் மனது கலைக்கப்பட்டு பக்ஷபாதகமற்றவரென்று தெரியும் விஷயத்தில் அவர் அந்த கேசை விசாரிக்க, ஆக்ஷேபனை ஒன்றுங் கிடையாது. உண்மையிலே அவர் பக்ஷபாதகமாக நடக்க மனது கலைக்கப்பட்டரா அல்லது இல்லையா என்பதல்ல கோர்ட்டார் கேட்கவேண்டிய கேள்வி; இதைக் குறித்து அவர்கள் விசாரிக்கவேகூடாது. (e) கிரிமினல் புரொசீஜர் சட்டம் 556-வது பிரிவின்படிக்கு ஒரு மாஜிஸ்டிரேட்டு ஒருவனை விசாரணைக்கு கொண்டுவரவேண்டிய முயற்சிகளைச் செய்திருந்து, ரிகார்டில் வாதியாக பதிவு செய்யப்படாமலிருந்த போதிலும், அந்த மாஜிஸ்டிரேட்டு அந்த கேசை விசாரிக்கவேண்டிய சக்தியற்றவராகின்றார் என்று இந்தியாவிலும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. இந்த 556 பிரிவில் சொல்லியிருப்பதாவது:—ஒரு ஜட்ஜாவது ஒரு மாஜிஸ்டிரேட்டாவது தான் பார்ட்டியாக இருக்கும் ஒரு கேசை விசாரிக்கவும் கூடாது. அல்லது அந்த கேசை விசாரணைக்குக் கொண்டுவரவும் கூடாது என்பது. (f) ரெயில் வண்டியில் ஒரு மாஜிஸ்டிரேட்டு பிரயாணம் செய்கையில் அவருடன்கூட பிரயாணம் செய்துக் கொண்டிருந்த சிலர், சுருட்டு பிடித்துக்கொண்டு வந்தார்கள். அவர்களை மாஜிஸ்டிரேட்டு சுருட்டுபிடிக்க வேண்டாமென்று சொன்னார். அதை அவர்கள் கேளாமல் அலக்ஷியமாக

Section 556 Cr. P. C :—

No judge or Magistrate shall, except with the perimission of the court to which an appeal lies from his court, try or commit for trial any case to or in which he is a party, or personally interested and no judge or Magistrate shall hear an appeal from any judgment or order passed or made by himself.

EXPLANATION :—A judge or magistrate shall not be deemed to be a party or personaly interested within the meaning of this section, to or in any case by reason only that he is a municipal commissioner or otherwise concerned therein in a public capacity, or by reason only that

he has viewed the place in which the offence in alleged to have been committed, or any other place in which any other transaction material to the case is alleged to have occurred and made an inquiry in connection with the case.

பிடிவாதத்துடன் விடாமல் சுருட்டுப் பிடித்துக்கொண்டே வந்தார்கள். அதன்பேரில் மாஜிஸ்டிரேட்டு அவர்களைப் பிடித்து விசாரித்து தண்டித்தார். அவர் அந்த கேசில் வாதியாக இருந்து அவர்களை தண்டித்தது, சட்டத்தின் படிக்கும், சன்மார்க்கத்தின் படிக்கும் பிசகென்றும் அவர் விசாரிக்கவேண்டிய தகுதியற்றவரென்றும் தீர்மானிக்கப்பட்டது. (g) ஒருவன் தானாக வண்டியை ஓட்டிக்கொண்டுபோய் பலர் போவதற்குக் குறுக்காய் வந்து தடை செய்தான். அவ்வாறு தடுக்கப்பட்டவர்களில் மாஜிஸ்டிரேட்டும் ஒருவர். அவர் அந்த வண்டியின் சொந்தக்காரனைப் பிடித்து விசாரித்து தண்டித்தார். பிறகு அந்த மாஜிஸ்டிரேட்டு தடுக்கப்பட்டவர்களில் ஒருவராக இருந்து தடுக்கப்பட்டமையால் அவருக்கு அந்த கேசில் பாத்யதை இருந்ததென்றும், அதனால் அவருக்கு கேசை விசாரிக்க அதிகாரம் கிடையாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஒரு ஜட்ஜிக்கு திரவிய சம்பந்தமாக உண்டாகும் பாத்தியதை.

(h) ஒரு ஜட்ஜிக்கு ஒரு கேசில் திரவிய விஷயமாக பாத்தியதை இருந்து, அந்தப் பாத்தியதை அதிக அற்பமா யிருந்தபோதிலும், அவர் அந்த கேசை விசாரிக்க தகுதியற்றவராகின்றார். (i) ஒரு மாஜிஸ்டிரேட்டு தனக்குப் திரவிய சம்பந்தமுள்ள கேஸ் ஒன்றை விசாரணை செய்தாவது, அல்லது அந்த கேசில் தீர்மானம் சொல்லி யிருந்தாலாவது, கோர்ட்டார் அவருக்கும் அந்த கேசுக்கும் உள்ள பாத்தியதை மிகவும் சிறிதா யிருந்தபோதிலும், அவர் பக்ஷபாதகமாக நடந்தாரா இல்லையாவென்று திர விசாரித்து அறியாமல் உடனே அவர் விசாரிப்பதற்கு தகுதியற்றவரென்று சொல்லி விடுவார்கள். ஏனென்றால் அவர் அவ்வாறு செய்தது பொது நன்மைக்கு விரோதமானது. (j) உண்மையாகவே திரவிய சம்பந்தமுள்ளவராக இருந்தால் ஒருவர் ஒரு கேசை விசாரிக்கக்கூடாது. அவருக்குச் சேரவேண்டிய திரவிம் ஒரு காசைவிட குறைந்திருந்தாலும் அவர் கேசை விசாரிப்பதற்கு வேண்டிய சக்தியற்றவராகிறார். ஆனாலும் பண சம்பந்தம் அதிக அற்பமா யிருந்து, அதனால் கேஸ் பக்ஷபாதகமாக முடியாது என்று தெரிந்திருந்தால், மாஜிஸ்டிரேட்டுகள் கேசுகளை விசாரிக்கலாம் என்றும் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் திரவிய பாத்யதையால் வரும் இலாபம் உடனே கிடைப்பதா யிருந்தாலும் இல்லாவிட்டாலும் பாதகமில்லை. அது வெகுநாள் கழிந்துக் கிடைப்பதாயினும், அது ஒரு ஏற்பாட்டின்மேல் வருவதாயினும் போதும். அதனாலும் ஒரு மாஜிஸ்டிரேட்டு தகுதியற்றவராகின்றார். (k) பிராதைச் சேர்ந்த ஒரு பக்ஷத்தாருக்கு கோர்ட்டு சிலவுகளைக் கொடுப்பதாக வாக்குச் கொடுத்திருந்தாலும், (l) அவரே கோர்ட்டு சிலவுகளைக் கொடுக்க வேண்டி நேரிட்டாலும், (m) ஒரு பக்ஷத்தாருக்கு கோர்ட்டார் சிலவு சேரவேண்டியது என்று தீர்மானிக்காமையால் அவரே கொஞ்சம் கொடுக்கும்படி நேர்ந்தாலும், (n) கேசின் முடிவு இப்படித்தான் ஆகுமென்று அவர் பந்தயம் கட்டியிருந்தாலும்,—இப்படிக்கொத்த விஷயங்களிலெல்லாம் ஜட்ஜி விசாரித்து தீர்மானிக்கக் கூடாது. (o) ஆனால் ஒரு பக்ஷத்தாருக்கு யாதொரு பாத்தியதையுமில்லாமல் தானே பணம் கொடுத்தாலும், அல்லது அவர்களைச் சேர்ந்தவராக யிருந்து, பணம் கொடுக்கும்படி தொந்தரவு செய்யப்பட்டதின்பேரில் பணம் கொடுத்தாலும், அந்த கேஸ் அதனால் கெடுதி யடையாதிருக்கும் பக்ஷத்தில் அந்த ஜட்ஜி அதை விசாரிக்கலாம். (p) இவ்விதமாய் அதிக உதாரணங்கள் கொடுக்க வேண்டியது அவசியமில்லை. ஒரு மாஜிஸ்டிரேட்டு பங்குக்காரராயாவது, அல்லது வரி கட்டுகிறவராகவாவது இருந்தால், அவர் விசாரிக்கலாமா ?

ஜட்ஜி பங்குக்காரரா யிருப்பது.

ஒரு கம்பெனியில் ஒரு ஜட்ஜி பங்குக்காரராக யிருந்தால், அந்த கம்பெனியார் வாதி அல்லது பிரதிவாதியாக கொண்டு வரும் எந்த கேசையும், சிவிலானாலும், கிரிமினலானாலும், அந்த ஜட்ஜி விசாரிக்கத் தகுதியற்றவராகின்றார். ஒரு ஜட்ஜி பங்குக்காரராக யிருந்து எவ்வளவு தூரம் பாத்தியட்பட்டிருக்கிறார் என்பதும், அவர் அப்படி பாத்தியதைப் பெற்றிருப்பதால் அவர் விசாரணை விஷயம் எவ்வளவு தூரம் மாற்றப்பட்டதென்பதும் ஆகிய இவைகளைப்பற்றி சிறிதும் கோர்ட்டார் அக்கறை எடுத்துக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் கேட்பதெல்லாம் என்னவென்றால் ஏதாவது ஒரு ஜட்ஜியாவது அல்லது ஒரு நியாய ஸ்தலத்தைச் சேர்ந்த பல ஜட்ஜிகளாவது ஒரு கம்பெனியில் பங்குக்காரராக இருந்தார்களா என்பதும் ஆகும். பணம் வைத்துக்கொண்டிருக்கும் ஒவ்வொருவனும் பாங்கி முதலியவற்றில் கட்டிவைக்கும் வழக்கம் பரவியிருப்பதும், ஏறக்குறைய எல்லா கேசுகளிலும் பணத்தின் பாத்தியதையால் வரும் லாபம் மிகவும் சிறிதாக இருப்பதும், ஆகிய இந்த காலத்தில், மேற்குறித்த விதியானது காரணமில்லாமலே பிறப்பிக்கப் பட்டதாகத் தோன்றும்; ஆனாலும் இது இப்படிதான் இருக்க வேண்டியதென்று தீர்மானிக்கப்பட்ட ஒருசாதாரண சட்டமாகும். ஏனென்றால், "திரவியபாத்தியதையால் வரும் லாபம் ஒரு காசைவிட குறைந்திருந்தாலுங் கூட அதுவும் ஒரு லாபந்தானே" ரெயில் வண்டியில் டிக்கட்டில்லாமல் பிரயாணம் செய்த ஒருவனை ஒரு மாஜிஸ்டிரேட்டு விசாரித்துத் தண்டித்தார்.

ஆனால் இவர்செய்த விசாரணையும், இவர்விதித்த தண்டனையும் மேல் கோர்ட்டாரால் ரத்து செய்யப் பட்டன. ஏனென்றால், அந்த ரெயில்வே கம்பெனியில் மாஜிஸ்டிரேட்டும் ஒரு பங்குக்காரராக யிருந்தால், அந்த ஜட்ஜிகள் அந்த கேசின்விஷயத்தில் நியாயமார்க்கமாக உண்டாக்கப் பட்டவரல்லவென்றும், அவர்கள் செய்யும் தீர்மானம், பணபாத்தியதையினால் நியாயந்தப்பி செய்யாமலிருந்தாலுங் கூட அவர்கள் செய்யும் விசாரணை சரியானது அல்லவெனவும் சொல்லப்படும். ஒரு கம்பெனியார் தங்கள் வேலைக்காரன்மீது ஒரு கேசை சீப் பிரஸிடென்சி மாஜிஸ்டிரேட்டு முன்பாகக் கொண்டுவந்தார்கள். ஆனால் அந்த மாஜிஸ்டிரேட்டு அந்த கேசை விசாரிக்கக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. ஏனென்றால், அவரும் அந்த கம்பெனியில் ஒருவராக யிருந்தவர்.

ஜட்ஜின் மனதில் பக்ஷபாத முண்டாகப் பண்ணும் பாத்தியதை.

ஒரு ஜட்ஜி ஒரு கம்பெனியில் பங்குக்காரராகவும் அல்லது வாதிப் பிரதிவாதிகளில் ஒருவராகவும், அல்லது பண பாத்தியதை உள்ளவராகவும் இல்லாலாமல் இருக்கலாம். ஆனாலும், மேல்சொல்லிய இந்த விஷயங்களில் உண்டாகும் முடிவைப் போலவே முடிவைத் தரும் வேறொருவிதமான பாத்தியதையும் ஜட்ஜிக்குண்டாகலாம். ஒரு விஷயத்தின் சம்பந்தமாக ஒரு ஜட்ஜிக்கு பக்ஷபாதமாகிய எண்ணமுண்டென்று தெரியவந்தால், அந்த ஜட்ஜி அந்த கேசை விசாரிக்கவே கூடாது. இம்மாதிரியான சந்தர்ப்பத்தில், அவருக்கு மன விரோதமுள்ளதென்று தெரிந்தால் மாத்திரம் போதாது. அப்படியுள்ளதென்று நன்றாகத் தெரியவேண்டும். உண்டாயிருக்கும் பாத்தியதை உண்மையானதாகவிருந்து, அதனால் அவர் செய்திருக்கும் தீர்மானம் நியாயவழுவுள்ளதாகவிருக்குமென்று தெரிந்தால், அந்த ஜட்ஜி அந்த கேசை விசாரிக்கக் கூடாது. ஆனால் உண்டாயிருக்கும் பாத்தியதை மிகவும் சிறிதாக இருந்து அதனால் தீர்மானம் நியாயவழுகாகாதென்று தெரிந்தால், அந்த ஜட்ஜி அந்த கேசை விசாரிப்பதில் யாதொரு பாதகமுமில்லை. ஒரு ஜட்ஜி தனக்குள்ள பாத்தியதையால் தீர்மானத்தைக் கெடுப்பாரென்று சந்தேகப்படத்தக்க காரணங்களிருந்தால், அவர் அந்த கேசை விசாரணை செய்யவே கூடாது. பக்ஷபாதமுள்ளவரா யென்று ஒரு ஜட்ஜியைக்கண்டு பிடிப்பதற்கு வழி யென்னவென்றால், அவருக்கும் அந்தகேசுக்கும் உள்ள சம்பந்தம் இன்னதென்று கண்டு பிடிப்பதாகும்.

கிரிமினல் புரோஸிஜர் சட்டம் 556-வது பிரிவில் சொல்லியிருக்கும் விதி சுய பாத்தியதைப் பெற்ற ஒரு ஜட்ஜியாவது அல்லது மாஜிஸ்டிரேட்டாவது தனக்கு பாத்தியதையுள்ள கேசை விசாரிக்கக் கூடாதென்பது. இது இங்கிலாந்தின் சாதாரண சட்டத்திலிருந்து கிஞ்சித் தேனும் வேறுபட்டதன்று. இங்கிலாந்திலுள்ள பல ஜட்ஜிகள் இவ் வார்த்தைகளிலேயே தீர்மானம் சொல்லியிருக்கிறார்கள். இது நிற்க, மேற்சொல்லிய சுய பாத்யதை என்பது என்ன ? இது (a) பண பாத்தியதை (b) மனதில் கெடுதியான எண்ணத்தை யுண்டு பண்ணுவதற்குப் போதுமான வேறெந்த பாத்தியதையானாலும், ஈஷர் பிரபு சொன்னபடி கெடுதியான எண்ணத்தை யுடையவர் என்று ஜட்ஜின்மீது தக்க காரணங்களுடன் சந்தேகப் படும்படியான எந்த மாதிரி பாத்யதையானாலும் போதும். இது தன் மட்டும் பாத்தியதை யுடையது என்பதும், பொது மனிதனல்லாதவனுடைய பாத்தியதை என்பதும் மாத்திரம் அன்று. தன் முன்னிலையில் விசாரணையின் பொருட்டு கொண்டு வந்திருக்கப்பட்ட ஒரு குற்றவாளியை எப்படியோ தண்டித்து விடத்தக்க பாத்தியதை மாஜிஸ்டிரேட்டுக் குண்டாவது கூடவாகும். ஒரு சங்கத்தில் சேர்ந்து அதனிடத்திலிருந்து பீசு வாங்கும் ஒருவர் அந்த சங்கத்தின் விஷயமாக வரும் கேசுகளை விசாரிக்கக்கூடாது. ஏனென்றால், மாஜிஸ்டிரேட்டும் வாதியாகிய அந்த சங்கத்தில் ஓர் தொழில் பார்ப்பவரா யிருப்பதால் அவர் பாத்தியதைப் பெற்றவராகின்றார்.

பந்துத் தவத்தால் உண்டாகும் பாத்தியதை.

ஒரு மாஜிஸ்டிரேட்டின் பெண்சாதி வண்டியில் ஏறிக்கொண்டு போய்க்கொண்டிருக்கையில், மற்றொருவன் அதிகவேகமாக இதற்கு எதிரில் தன் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தான். அதற்காக அந்த மாஜிஸ்டிரேட்டு அந்த கேசை விசாரிக்கக்கூடாது. ஏனென்றால், மாஜிஸ்டிரேட்டு பந்துத்வத்தினால் உண்டான சுய பாத்தியதை யுடையவராகின்றார்.

பாரிஸ்டராக யிருந்தவர் ஜட்ஜியாக வந்தது.

ஒருவர் ஒரு கேசில் வக்கீல் அல்லது பாரிஸ்டராகயிருந்து அந்த கேசை நடத்திவந்தவரானால், அவர் அந்தகேசில் பாத்தியதையுள்ளவரென்றும், அதனால் அவர் அந்த கேசை விசாரிக்கக் கூடாதென்றும் சொல்லக்கூடாது. ஆனால் பாரிஸ்டராக இருந்து ஒருவர் பிறகு ஜட்ஜியாக வந்தால், அவர் பின் அந்த கேசை விசாரிக்கும் வழக்கம் இல்லை. ஆகையினால், அந்த கேசை விசர்ரிப்பதற்கு வேறே ஜட்ஜிகள் இருக்கும் பக்ஷத்தில், அவர்களை தொந்தரவு செய்யக்கூடாது. அப்படி பாரிஸ்டராக இருந்தபிறகு ஜட்ஜியாக வந்த ஒருவர், வேறே ஜட்ஜிகள் யாரும் இல்லாத காலத்தில் தான் அந்த கேசை விசாரிக்கமாட்டேனென்றும் அப்படிச் செய்தால் அது வழக்குவிரோதமென்றும் சொல்வாரானால், அது பிசகாகும். ஏனென்றால் அப்படிச் சொல்வது ஒருவருக்கு நியாய விசாரணையே யில்லை என்று சொல்வதோடொப்பாகும்.

ஒரு மாஜிஸ்டிரேட்டுக்கு ஒரு கேசில் சாக்ஷி சொல்வதற்காக சாக்ஷி சம்மன்ஸ் ஸார்வ் செய்தால், அதனால் அவர் தகுதியற்றவ ராகின்றார். அப்படியானால் ஒவ்வொரு ஜட்ஜிக்கும் சம்மன்ஸ் சார்வ் செய்துக்கொண்டே அவரை தகுதியற்றவராகச் செய்துக்கொண்டே இருக்கலாம் என்று இங்கிலாந்தில் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் தானே விசாரித்து வரும் ஒரு கேசுக்குத் தானே சாக்ஷியாக இருக்கக் கூடாது என்று கல்கத்தாவில் தீர்மானமாயிற்று. அவர் செய்யும் தீர்மானம் பிசகாகும். ஏனென்றால், அவர் சாக்ஷியாக இருக்கையில் தானறிந்திருக்கும் விஷயங்களின்படிக்கே தான் தீர்மானம் செய்வார். தன் சாக்ஷி பிசகானதென்றும், தான் ரத்து சவால் பரீக்ஷையில் தோற்றுப் போனாரென்றும் சொல்லமாட்டார். ஆனால் ஒரு குற்றவாளியை ஒரு மாஜிஸ்டிரேட்டின் முன் கொண்டுவந்து, அந்த குற்றவாளித் தன் குற்றங்களைக் குறித்து வாக்குமூலம் சொல்கையில் மாஜிஸ்டிரேட்டு சட்டத்தில் சொல்லியிருப்பதுபோல் ரிகார்டில் பதிவு செய்துக்கொள்ளாமற் போனால், அதற்காக அந்த மாஜிஸ்டிரேட்டு சாக்ஷியாகக் கொண்டு வரப்படவேண்டுமென்றும், அதற்காக அந்த மாஜிஸ்டிரேட்டு அந்த கேசை விசாரிக்கத் தகுதி யற்றவரென்றும் சொல்லக் கூடாது.

போதுவாகிய பாத்தியதை.

ஒரு கேசை விசாரிப்பதில் ஒரு ஜட்ஜி தகுதியற்றவரென்று சொல்வது ; அந்த ஒரு கேசில் மாத்திரம் அவருக்குள்ள பாத்தியதையாகும். ஜனானுகூல விஷயமாகவும், ஒரு முக்கிய சங்கத்தின் விஷயமாகவும் ஒருவர் பாத்தியதைப்பட்டு இருப்பாரானால் அவர் ஒரு கேசை விசாரிக்கவும் தகுதியற்றவராகமாட்டார். (உதாரணம்) மிருக ஹிம்சையைத் தடுக்கும் சங்கத்தாருக்கு மாஜிஸ்டிரேட்டு கருணா விஷயமாக சந்தா கொடுப்பவராக இருந்து, அந்த மாஜிஸ்டிரேட்டின் முன்பாக அச் சங்கத்தார் ஒரு கேசைக் கொண்டுவந்தால், அந்த கேசை அவர் விசாரிக்கலாம்-விசாரிக்கதகுதியற்றவராகார். ஆனால், சந்தாதாரராக இருப்பதால் இவரே அந்த பிராதுக்கு உத்திரவாதியாக விருந்தாலும் அல்லது அவ்வாறு அவர் கொண்டுவந்த பிராது இவர் சந்தாவைச் செலுத்துதலை நிறுத்திவிடும் என்று தெரிய வந்தாலும், இவர் அந்த கேசை விசாரிக்கக்கூடாது. அப்படிக்கல்லாமல் சந்தாதாரராக மட்டுமிருந்தால் அது அவரை விசாரணைச் செய்வதில் தடுக்காது. ஏனென்றால், சந்தா கொடுப்பது கருணா விஷயமாகவே யல்லாமல் வேறே எந்த பாத்தியதையினாலும் அன்று. சந்தா கொடுப்பது மாத்திரம் போதும் ஒருவரைத் தகுதியற்றவராக்குவதற்கு என்றும் ஒருவர் [illegible].

Law of Torts.

தீங்கு - ஹிம்சை இவைகளைக் குறித்த சட்டம்.

—:o:—

தீங்கு செய்வதினால் நேரிடும் டாமேஜ் (நஷ்டத்திற்கு) தாவாசெய்து வசூல் செய்வதைப்பற்றி சட்டம் என்ன சொல்லுகிறதென்று பார்ப்போம்:—

ஒருவன் மற்றொருவனுக்கு தீங்கு செய்வதினால் மற்றொருவனுக்கு யாதொரு கெடுதியும் சம்பவியாவிட்டால் அவன் யாதொரு டாமேஜிக்கும் தாவா செய்ய நியாயம் கிடையாது. ஒருவன் மற்றொருவனுடைய சொத்துக்குள்ள ஹக்கு சுதந்திரத்தின் விஷயமாய் யாதொரு முகாந்தரமின்றி யாதேனும் ஓர் கெடுதி செய்வானாகில் அவன் அதனால் அவனுக்கு நேரிடும் (டாமேஜ்) நஷ்டத்தை வசூல் செய்யலாம்.

ஒருவனுக்கு ஓர் சொத்தில் சட்டப் பிரகாரம் உண்டான ஹக்கு சுதந்தரத்தை மற்றொருவன் தடுத்து ஆக்ரமிப்பானாகில் அதனால் யாருக்கு கெடுதி நேரிட்டதோ அவனுக்கு வாஸ்தவத்தில் யாதொரு நஷ்டமும் நேரிட்டில்லாவிடினும் அவன் ஸ்பெஸிபிக்ரிலீப் ஆக்டு (1 of 1877) 42-வது பிரிவின் கீழ் தாவா கொண்டு வர நியாயமுண்டு (சூரத் முனிசிபாலிடி V. சுனிலால் மாணிக்கலால் 1906-8 பம். லா. ரி. 209.

ஓர் பாங்கி கஸ்டமர் கையெழுத்து செய்து அனுப்பிய செக்கை பாங்கார் அங்கீரிக்காமல் திருப்பி விடுவது.

ஓர் கஸ்டமர் கொடுத்த செக்கைஒருபாங்கார் அந்த கஸ்டமிரின் தொகை விசேஷமாய் பாங்கியிலிருந்தும் அதற்குப் பணம் கொடாமல் அந்த செக்கை திருப்பி விடுவார்களானால் அந்த கஷ்டமர் இதன் விஷயமாய் யாதொரு திரவிய நஷ்டமும் அடையாவிடினும் அப்படி செக்கை திருப்பிவிட்டதற்காக அந்த பாங்காரின் பேரில் தாவா செய்ய நியாயமுண்டு.

கிருஸ்தவருள் ஓர்பாதிரி விவாகசடங்குகளை செய்துவைக்கமாட்டேனென்று நிராகிரித்தால் அவர் என்னத்திற்காக அப்படி நிராகரிக்கிறாரோ அந்தசந்தர்ப்பங்கள் எப்படி யிருந்திடினும் அந்த பாதிரியின்பேரில் தாவா செய்ய நியாய முண்டு (டேவிஸ் V-ப்லாக் 1841-1 மஹாராணி பெஞ்ச் டிவிஷன் 900)

மோரான் மாகாணத்தின் மஹாராஜாவும் அவருடைய மூதாதைகளான பெரியோர்களும் அநேக நூற்றாண்டுகளாக தங்களுடைய நிலத்தின் பேரில் சாமான்களையும் விளைபொருள்களாகிய தானியம் முதலான பொருள்களையும் இடை போடுவதற்காக நிலக் குடிக்கூலிக்குப் பதிலாய் மஹாராஜா அவர்களுக்கு சுங்கம் கட்டவேண்டியதென்று ஓர் விதி இருந்தது. அப்படி அந்த சுங்கத்தை வசூல் செய்யும் சுதந்தரத்தை வாதிக்கு குத்தகைக்கு விட்டிருந்தார்கள். வாதி அந்த குத்தகைச் சீட்டின் ஷரத்துக் கிணங்க அந்த நிலத்தின்பேரில் சாமான்களை இடை போடவிடாமல், தடுத்து சுங்கத்தை வாதி வசூல் செய்வதைக்கெடுத்து நஷ்ட முண்டுபண்ணினால் வாதி தன்னை அப்படி தடுப்பதினால் அவனுக்கு நேரிடும் நஷ்டத்திற்கும், அப்படி தன்னை தடை செய்ய வொட்டாமல் எதிரிகள் பேரில் இஞ் ஜங்க்ஷன் பிறப்பிக்க வேண்டுமென்றும் தாவா செய்வதற்கு சட்ட முண்டென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (பீகி ஓஜா V-ஹாரக்கண்டு 1889 அ. வீ. நோ. 89).

ஓர் தேவாலயத்தில் எ. என்பவன் வாலாயமாய் ஓர் விக்ரக பூஜை செய்துக்கொண்டு வந்தான். அவன் அப்படி தன் முறைப்படி பூஜை செய்வதைத் தடுத்து அவனை அந்த விக்ரகத்தினிடத்தில் நெருங்க வொட்டாமல் மறு தளித்தால் அதனால் அவனுக்கு நேரிடும் நஷ்டத்திற்காக அவன் தாவா செய்ய நியாய முண்டென்று தீர்மானித்திருக்கிறார்கள். (டெலென்ட்ரோ நாத் V. ஒடிட்சர்ன் இ. லா. ரி. 3 கல் 390.)

பெங்கால் தேசத்தில் ஓர் தேவாலயப் பூஜை செய்கையில் ஓர் குறித்த தினத்தில் ஒரு குடம் தயிர்ப் பானையை சுவாமியின் முன் உடைப்பது வழக்கமான ஓர் ஐதீகமாக யிருந்தது. இப்படி தயிர்ப்பானை உடைக்கும் ஐதீகத்தை ஒருவன் அநேக காலமாய் அனுபவித்து வந்தவனா யிருந்தும் அவனை அப்படி செய்ய வொட்டாமல் தடுத்து பிரதிவாதிகள் அவர்களுடைய சொந்தத் தயிர்ப் பானையை சுவாமியின் முன் உடைத்தார்கள். அப்படிச் செய்ததினால் வாதி பிரதிவாதிகளின் பேரில் நஷ்டத்திற்காக தாவா செய்வதற்கு ஹக்குண்டு.

ஓர் யந்திரசாலைக்கு சுதந்தரவாளியாகிய பூஸ்திதியுள்ள ஒரு கனவான் சுமார் 60-வருஷங்களுக்கு அதிகமாகவே தன்னுடைய பூமியினுள்ளாகவே வந்து பாயும் ஓர் ஓடையை அனுபவித்து வந்தான். அந்த ஓடைக்கு பூமியினுள் உண்டாகும் ஊற்றின் ஜலமே ஆதாரமாய்ப் பாய்ந்துகொண் டிருந்தது. அவர் இவ்விதமாய் அனுபவித்து வந்த பூமிக்குப் பக்கத்திலிருக்கும் நிலத்தின் சொந்தக்காரன் அவனுடைய நிலத்தில் ஓர் பெரிய துரவு ஒன்று எடுத்து அந்த துரவின் ஜலத்தை அந்த ஜில்லாவிலிருக்கும் வாசஸ்தர்கள் பிரயோகித்து வந்தார்கள். இவ்விதமாய் செய்ததினால் நேரிடும் நஷ்டத்திற்கு தாவா செய்யலாகாது. (1859 7 ஹை. கோ. லா. ஜ. 349.)

ஓர் ஊரில் எ. என்பவன் ஓர் வித்தியாசாலை (பள்ளிக்கூடம்) வைத்து அந்த ஊரிலுள்ள பிள்ளைகளுக்கு வித்தை கற்பித்து வந்தான். பி. என்பவன் எ. என்பவனுக்குப் போட்டியாய் அந்த ஊரில் வேறே ஒரு பள்ளிக்கூடம் வைத்து எ. என்பவனுடைய பாடசாலையிலிருந்த பிள்ளைகளில் அநேகரை பி. என்பவன் தன்னுடைய பாடசாலையில் வந்து சேரும்படிச் செய்தான். இப்படி செய்ததற்காக எ. என்பவன் பி. என்பவன்பேரில் வியாஜ்ஜியம் செய்ய நியாயம் கிடையாது.

ஒரு வியாஜ்ஜியத்தில் வாதியா யிருப்பவன் ஒருவன் ஒரு ஷாப்பு ஒன்று ஏற்படுத்தி அந்த ஷாப்பில் இன்னின்ன பொருள்கள் விற்பனை செய்யப்படுமென்று எழுதி ஷாப்புக்கு வெளியில் பலகை (போர்டு) மாட்டி யிருந்தது. அதே வியாஜ்ஜியத்தில் பிரதிவாதியா யிருப்பவர்கள் சர்க்காரில் சட்டப் பிரகாரம் அனுமதி பெற்றுக்கொண்டு மேற்படி வாதியினுடைய ஷாப்புக்கு அருகாமையில் உள்ள கேட்டின் பேரில் தீபஸ்தம்பம் ஒன்று கட்டினான். பிரதிவாதிகள் கட்டியகட்டடத்தினால் வாதியின் ஷாப்பின்முன் பார்வை மறைந்து போயிற்று. ஆகையால் வாதிகள் பிரதிவாதிகள் பேரில் தாவா செய்து அவர்கள் கட்டடம் கட்டுவதைத் தடுக்கும்படிக்கு இஞ்ஜக்ஷன் கேட்பதற்கு நியாயம் கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டது. (பட் V. இம்பீரியல் காஸ் கம்பெனி 1866-லா ரிப்போர்ட்டு 2 சான்ஸெரி 158).

ஒருவன் தன்னுடைய வீட்டிற்கு 'ஆஸ்போர்ட் லாட்ஜ்' என்று பெயர் போட்டு அறுபது வருஷகாலமாய் அனுபவித்து வந்தான். அந்த வீட்டுக்கு பக்கத்து வீட்டிலிருந்த ஒருவன் அவனுடைய வீட்டிற்கு நாற்பது வருஷ காலமாய் 'ஆஸ்போர்ட் வில்லா' என்று பெயர் போட்டிருந்தான். பிறகு பின் சொல்லிய நபர் முன் சொல்லிய நபரினுடைய வீட்டுப் பெயரை தன் வீட்டுக்கு மாற்றிப் போட்டுக் கொண்டான். ஆகையால் முன் சொல்லிய நபர் பின் சொல்லியவன் இப்படி செய்ததினால் தனக்கு அசௌக்கியமும் கஷ்ட நஷ்டமும் நேரிடுகிறதென்று தாவா செய்தான். இன்னும் பிரதிவாதி இப்படி செய்ததினால் வாதியின் வீட்டிற்கு ஏற்கனவே உள்ள மதிப்பு குறைந்துபோய் விட்டதென்று வாதித்து வியாஜ்ஜியம் செய்ய நியாயமில்லை. (டேவீ V. ப்ரௌன்ரிக் 1878 10 சான்ஸெரி டிவிஷன் 294.

எ. என்பவன் மாமூலாய் ஓர் தேவாலயத்திற்கு வேண்டிய நைவேத்திய சாமகிரியங்களை அந்த ஆலயத்தில் வேலை பார்த்து வருபவர்களிடம் கொடுத்து வருவது வழக்கம். எ. என்பவன் அப்படி கொடுத்து வருவதை நிறுத்தி விட்டான். அதன்பேரில் அந்த தேவாலயத்திலுள்ள ஊழியக்காரர்கள் எ. என்பவன் பேரில் நஷ்டத்திற்காக தாவா செய்தார்கள். மேற்படி தேவாலயத்திற்கு எ. என்பவன் நைவேத்திய சாமான்கள் சட்டப்படி கொடுத்து வர வேண்டுமென்கிற அவசியம் கிடையாதாகையால் அவன் அப்படி கொடுக்காததினால் வாதிக்கு நஷ்டம் நேரிட்டிருந்த போதிலும் வியாஜ்ஜியம் செய்ய நியாயமில்லை. (இ. லா. ரி. 6 பம் 122).

ஒரு மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டில் பிளீடராய் வேலை பார்த்துவரும் ஒருவரை மாஜிஸ்டிரேட்டு கி. பு. கோ. 180-வது பிரிவின் கீழ் செய்யும் விசாரணையில் வாதி தரப்பில் வக்கீலாய் ஆஜராகக் கூடாதென்று உத்தரவு செய்வாராகில், அந்தபிளீடர் மாஜிஸ்டிரேட்டின்பேரில் நஷ்டத்திற்கு தாவா செய்ய நியாயம் கிடையாது. (9 பம். லா. ரி. 302).

ஓர் நகரத்தைச் சேர்ந்த முனிசிபாலிடியார் அந்த நகரத்தில் ஆடுமாடுகளை வெட்டுவதற்காக டெப்போ ஒன்று கட்டினார்கள். அந்த தொட்டிக்குப் பக்கத்தில் வசிக்கும் ஒருவர் அப்படி கட்டுவதை நிறுத்தும்படிக்கு தாவா செய்தார். அதன்பேரில் கோர்ட்டார் அப்படி தொட்டி கட்டுவதில் வாதிக்கு யாதொரு அசங்கிதமும் நேரிடவில்லையென்றும் அந்த தொட்டி நியாயப்படி ஓர் நகரத்தில் இருக்கவேண்டியதென்பது அவசியமென்றும், அப்படி தொட்டி கட்டினதினால் அண்டையில் வசிப்பவனுடைய வீட்டின் மதிப்பு குறைந்துவிடும் என்னும் காரணத்தினால் தொட்டி கட்டுவதை நிறுத்தி விடுவதற்கு நியாயமில்லை. (ரவட்டிகான் V. லாகூர் முனிசிபாலிடி, பஞ்சாப் ரிப்போர்ட்டு 106 of 1888).

ஒருவன் ஆகாய மார்க்கமாய் பெலூனில் (புகைகூண்டில்) பறந்துபோய் பிறகு ஒரு தோட்டத்தில் வந்து இறங்கினான். அவன் அப்படி இறங்கின உடனே ஜனங்கள் அதைப் பார்ப்பதற்காக திரள் திரளாய் அந்த தோட்டத்திற்குள் நுழைந்து கண்டபடி ஓடினதால் அந்த தோட்டத்திலிருந்த பயிர்களையும், காய், கறி பதார்த்தங்களையும், புஷ்பங்களையும் மெறித்து நாசப்படுத்தி விட்டார்கள். அதன்பேரில் அந்த தோட்டத்தின் சொந்தக்காரன் பெலூனில் பறந்து இறங்கின நபர் தன்னுடைய தோட்டத்திற்குள் அக்கிரமமாய் பிரவேசித்தானென்று அவன்பேரில் தாவா செய்ய கோர்ட்டார், பிரதிவாதி தன்னுடைய புகைகூண்டினாலும், இன்னும் தோட்டத்திற்குள் ஜனங்கள் கும்பல் கும்பலாய் ஓடிவந்ததினாலும் தனக்கு மிக்க நஷ்டமுண்டாயிற்றென்று அதை வசூல் செய்ய நியாயமுண்டென்று தீர்மானித்தார்கள்.

இதனடியில் சொல்லி யிருப்பவர்களுக்குத் தீங்கு செய்வதினால் நேரிடும் நஷ்டத்திற்கு அவர்கள் தாவா செய்ய நியாயமில்லை. (1) மரண தண்டனை அடைந்தவர்கள் அல்லது ஜென்மக் கைதிகள் யாதேனும் ஓர் உத்தரவின்பேரில் விடுதலையாகும் பரியந்தம் அவர்களுடைய சொத்துக்கு கெடுதலை நேரிட்டதென்றாவது அல்லது அவர்களுக்குச் சேரவேண்டி யிருக்கும் கடனை வசூல் செய்யவாவது தாவா செய்ய நியாயம் கிடையாது. அப்படிப்பட்டவர்களுக்காக தாவா செய்து வசூல் செய்யும் பொறுப்பு அட்மினிஸ்ட்ரேட்டருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. (2) சகஜமாய் ஓர் குடும்பத்தின் புருஷன் ஒருவன் தன்னுடைய பெண்சாதியினால் தனக்கு கெடுதலை நேரிட்டதென்றாவது அல்லது பெண்சாதி அவளுடைய புருஷன் அவளுக்கு தீங்கு செய்தானென்றாவது தாவா செய்ய நியாயமில்லை. ஆனால் பெண்சாதி தன்னுடைய பிரத்தியேகமான சொத்தைக் காப்பாற்றி புருஷன் தனக்கு ஒப்புவிக்க வேண்டுமென்று தாவா செய்யலாம். இதைத் தவிர புருஷன் தனக்கு திரேக ஹிம்சை செய்தானென்றாவது அல்லது பெண்சாதி புருஷனுக்கு திரேக ஹிம்சை செய்தாளென்றாவது சிவில் வியாஜ்ஜியம் செய்ய நியாயமில்லை.

புருஷனும் பெண்சாதியும் ஒற்றுமையாய் வாழ்ந்திருந்த பிறகு பெண்சாதி கோர்ட்டு மூலமாய்ப் பிறிவினையாய் விட்டபிறகு அப்படி புருஷனைவிட்டு டைவோர்ஸாய் விட்ட பெண்சாதி, புருஷன் அவளுடன் வாழும் காலத்தில் தனக்கு யாதோ திரேக ஹிம்சை செய்தானென்று தாவா செய்ய நியாயம் கிடையாது. சி. பு. சோ. (14 cf 1882) 430-வது செக்ஷனைப் பார்க்கவும்)

ஆனால் பெண்சாதி கோர்ட்டார் உத்தரவின்பேரில் புருஷனை விட்டுத் தனியாய் வாசம் செய்கையில் புருஷன் அவளை மானபங்கமான வார்த்தைகள் சொல்லி அவளுக்கு கெடுதலை செய்தானென்று அவள் தன்னுடைய புருஷன்பேரில் தாவா கொண்டு வரலாம். ஓர் கெர்ப்ப ஸ்திரீ ரெயிலில் பிரயாணஞ் செய்யும்பொழுது தற்செயலாய் திடீரென்று நேரிட்ட ஓர் ஆபத்தினால் அவளுக்கு யாதோ கொஞ்சம் கெடுதலைநேரிட்டது. அப்படி சம்பவித்த தற்செயலான செய்கையினால் அவளுக்குப் பிறந்த குழந்தையும் ரூபம் கெட்டுப்போய் விகாரமா யிருந்தது. அதன்பேரில் அந்தக் குழந்தை ரெயில்வே கம்பெனியார் மீது நஷ்டத்திற்குத் தாவா செய்ய நியாயம் கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டது.

இன்சால் வெண்டாய் போன ஓர் நபரின் சொத்துக்கு ட்ரஸ்டிகள் ஜாமீன்தார்களா யிருப்பதால் அந்த இன்சால் வெண்டாயிருக்கும் நபர் தன்னுடைய சொத்துக்கு கெடுதலை நேரிட்டதென்று தாவா செய்ய நியாயமில்லை. ஆனால் அவன் ஒருவரை மானபங்கம் செய்தாலும், தன்னிடத்தில் வேலைக்காரியா யிருப்பவளை கெடுத்தாலும் தாவா செய்யலாம்.

——:o:——

HINDU LAW.

ஹிந்துலா.

CHAPTER. 1. 1-ம் அத்தியாயம்.

Hindu Jurisprudence and sources of Hindu Law.

ஹிந்து நியாய பரிபாலனமும், ஹிந்துலாவின் மூலாதாரங்களும்.

ஹிந்துக்கள் சாதாரணமாய் 'சட்டம்' என்பது தர்ம நீதியைச் சேர்ந்த ஓர் பிரிவென்று தாத்பிரியம் கொண்டிருக்கிறார்கள். 'சட்டம்' என்பதற்கு ஸ்மிருதிகளில் யாதொரு விவரணமும் சொல்லப்பட வில்லை. 'தர்ம நீதி' என்பதற்கு பொருள் யாதெனில் (1) வேதங்களை நன்றாய் கற்றுணர்ந்தவர்களும் (2) பகை கோபம், அருவெறுப்பு, இவைகளை நீக்கி லோகாச்சாரத்திற்கு விரோதமாயுள்ளவைகளை இச்சியாதிருப்பவர்களுமாகிய நல்லொழுக்க முள்ள புண்ணியவான்களால் மனப்பூர்வமாய் அனுசரித்து வரப்படுவது தான் 'தர்ம நீதி' என்று சொல்லப்படும். இப்பிரபஞ்சத்தில் எந்தப் பொருளையும் இச்சியாமலிருப்பதுதான் நல் நடத்தை என்பதற்கு ஒரு பெருத்த குறியாகும். சகஜமாய் மானிடர் யாதேனும் லாபகரமடைய வேண்டுமென்கிற கோறிக்கையுடன் எச்செய்கையும் செய்ய விரும்புகிறார்கள்; ஆகையால் மானிடர் ஒரு லாபமடைவோமென்றாவது தண்டனைக்குட் படுவோமென்கிற பயம் கொண்டாவது எந்த விஷயத்தையும் செய்கிறார்கள். அப்படி செய்வது சரியல்ல. மானிடராய்ப் பிறந்தவர்கள் தர்மநீதி யென்பது யாதென்று உணர்ந்து அதன்படி கிஞ்சித்தேனும் வழுவின்றி நடக்க வேண்டு மென்பதைதான் எல்லாவிஷயங்களிலும் முதலாய் கவனிக்க வேண்டியது. மானிடர் இப்பூமண்டலத்தில் முக்கியமாய்கவனித்து நடக்கவேண்டிய விஷயங்களைதெய்வப் பிறப்பாயிருந்தவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். 'தர்ம நீதி' யென்பது பூலோகார்த்தமாய் பிறந்த ஓர் விஷயமென்றுசொல்வது பிசகு. தர்மநீதியென்பதற்கு முக்கியமாச நான்கு மூலாதாரங்கள்உண்டு, அவைகளாவன, (1)வேதங்கள், (2)ஸ்மிருதிகள், (3)நல்லொழுக்க முள்ள புண்ணியவான்களின் நடை உடை பாவனைகள், (4) மானிடராய்ப் பிறந்த ஒவ்வொரு ஆன்மாவின் மனசாக்ஷி. இதில்தான் சட்டத்தின் கோட்பாடுகள் உளதென்றுதெளிவாய் அறிந்துக்கொள்ளலாம். தர்ம நீதிப்படி நடவாதவர்களை தர்ம நீதியே நாசம் செய்துவிடுகின்றது. அப்படிக் கல்லாமல் தர்ம நீதிப்படி நடக்கும் புண்ணியவான்களையும் அந்த தர்ம நீதியே ஆதரித்து வருமென்பது திண்ணம். அப்படி தர்ம நீதி என்பதற்கு ஆதாரம் யாதென்று கவனிக்குமளவில் இந்த 'பிரதிவி' (பூமி) யும் அதற்கு ஓர் காரணமகா புலப்பட வில்லை. மானிடர் இன்னது செய்து வரவேண்டுமென்று தர்மநீதியில்சொல்லியிருக்கிறது. அந்த தர்மநீதியில் சொல்லியபடி அவர்கள் நடக்கத் தவறினால் அவ்விதமான கர்மத்திற்கு சுவாபீகமாய் தர்ம சாஸ்திரத்தில் சொல்லியிருக்கும் தண்டனைக்கு அவர்கள் உள்ளாக வேண்டியது அவசியம். இப்பிர பஞ்சத்தில் மானிடன் ஒருவன் யாதேனும் ஓர் குற்றம் செய்வானாகில் உடனே அவன் அந்த குற்றத்திற்காக கிரமப்படி என்ன தண்டனைக்குட் படவேண்டுமென்று சட்டத்தில் சொல்லி யிருக்கிறதோ அந்த தண்டனைக்குட் படவேண்டு மென்றிருப்பதால் அந்த தண்டனையை அவன் அனுபவிக்க வேண்டியது. அப்படிஅவன்தானே ராஜ்ஜியப் பரிபாலன கர்த்தர்களிடம் சென்று அந்த தண்டனையை அனுபவியாமல் தப்பித்துக் கொள்வானானால் அந்த பாபவிமோசனத்திற்குப் பரிகாரமாய் தர்ம நீதி சாஸ்திரங்களில் என்ன பிராயச்சித்தம் கூறி இருக்கின்றதோ அந்தப் பிராயச்சித்த கர்மங்களை—சடங்குகளை செய்ய வேண்டியவனாவான். இவ்விதமாய் மானிடர் செய்யும் ஒவ்வொரு குற்றத்திற்கும் தண்டனை யாதோ அதை அவர்கள் மேற் செப்பிய வண்ணம் அனுபவித்தவர்களானால் அவர்கள் இப்பிரபஞ்சத்தில் புண்ணியகரமான பெயர்போன நற் செய்கைகளை செய்த சீமான்கள் அடையும் பதிவியை அடைவதற்குத் தகுந்தவர்களாய் எண்ணப் படுவார்கள். ப்லேடோ (Plato)என்னும் பிரபு சொல்லியிருப்பதாவது "மானிடரரய்ப் பிறந்தவர்கள் நற்செய்கையுள்ள புண்ணியவான்களாவதற்கு தான் 'சட்டம்' என்று ஏற்பட்டிருக்கிறது." என்று சொல்லியிருக்கிறார் ப்லேடோ (Plato) என்னும் பிரபு சொல்லி யிருக்கும் அபிப்பிராயங்களுக்கும் மனோபாகங்களுக்கும் ஹிந்துக்களின் கோட்பாடுகளுக்கும் மிக்க ஒற்றுமை யிருப்பதாக ஸ்பஷ்டமாய் தெரிய வருகிறது. ஆனால் ஹிந்துக்களின் கோட்பாடுகளும் மனோபாகங்களும் தெய்வீகார்த்தமான தாத்பரியங்களையே ஆதாரமாய்க் கொண்டு செய்தவைகளாய் புலப்படுகிறது. ஹிந்து கோட்பாடுகள் மற்றெல்லாவற்றைப் பார்க்கிலும் மிக்க பூர்த்தியாகவும் விசதமாகவும் விவரிக்கப் பட்டிருப்பதால் அதன் உண்மை மிக்க விசேஷமுள்ளதென்று சொல்லலாம். பூர்வீகத்தில் ரிஷிகள் உண்மையை அறியும்படி எத்தனித்ததில் தெய்வ பக்திதான் நல் நடக்கையை விர்த்தி செய்யும் ஓர் கருவி யென்றும் தெய்வ பக்தி விசுவாசமில்லாமவிடில் நல் நடக்கை யென்பது அனுகாது என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

ஆகையால் 'சட்டம்' என்பது ராஜ்ஜிய பரிபாலன கர்த்தர்களுடைய அதிகார மொழிகளை ஆதாரமாய்க் கொண்டதாயினும் (1) நல்லொழுக்கம், (2) புண்ணியம், (3) நீதி இம்மூன்றும் நன்றாய்க் கற்றுணர்ந்த நல்லொழுக்கமுள்ள சீமான்களின் கோட்பாடுகளையும் ஆதாரமாய்க்கொண்டு ஏர்பட்டவையாகும். அதை, சட்டத்தை உணர்ந்து அந் நீதி மொழிகளின்படி நடக்கும் புண்ணியவான்கள் மிக்க கொஞ்சம் தான் உளர். அப்படிப்பட்ட சீமான்கள் தான் அந்நீதி மொழிகள் இன்னவைகளென்று இப்பூ மண்டலத்திலுள்ள மற்றவர்களுக்கு உச்சரித்து போதிப்பதுமல்லாமல் அவைகளின்படி அவர்களும் நடந்து அவர்களுடைய வாழ்நாள்களை மிக்க திருப்திகரமாகவும், மன உல்லாசத்துடனும், கழித்து வருகிறார்கள். இதைக் கண்ணோக்கும் அநேக ஆயிரங் கணக்கான இப் பிரபஞ்சத்திலுள்ள மற்றவர்களும் இதைப்போலவே ஏறக்குறைய நடந்து வருகிறார்கள். ஏனென்றால், நல்லொழுக்கமுள்ள புண்ணியவான்களை நாம் ரூபில் காணாவிடினும் அவர்களுடைய ஞாபகம் சதா எல்லோருடைய உள்ளத்திலும் பதிந்து வந்தனவழிப்பாடுகள் பெற்று வருகின்றது. ஆகையால் சட்டம்பூராயும் நான்கு வேதங்களை மாத்திரம் ஆதாரமாய்க் கொண்டதல்ல, நல்லொழுக்கமுள்ள நீதியுணர்ந்த புண்ணியவான்கள் வெளியிடும் நீதிமொழிக

ளேயும், ஆதாரமா யுளது. இப்பிரபஞ்சத்தில் மானிடர்களுக்கென்று ஏற்பட்டிருக்கும் சட்டத்திற்கு மூலாதாரம் யாதெனில் அம்மானிடருடைய நடை உடை பாவனைகளாகிய பழக்கமேதான். ஆனால் மஹாபாரதத்தில் கெட்ட பழக்கங்கள் என்பதை நீக்கிச் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த மஹாபாரதத்தில் சொல்லியிருப்பதை கவனிக்கு மளவில் மானிடர் சாதாரணமாய் நடக்கும் நல்லொழுக்க முள்ள புண்ணிய கர்மங்களுக்கு ஆதாரம் தர்மமேயாகும். இவ்விதமாய் மானிடர்கள் நடக்கும் நடை உடை பாவனைகளில் எதெது நல்லொழுக்க மென்று பாவிக்கப்படுகிறதோ அதை ஆதாரமாய்க் கொண்டு ஓர் சட்டம் என்று நிபந்தனை செய்யப்படுகிறது. பூர்வ காலத்து ரிஷிகள் சொல்லி யிருக்கும் நீதி மொழிகளை அனுசரித்து நல்லொழுக்க முள்ள புண்ணியவான்கள் செய்யும் தீர்மானம்தான் சட்டம் என்று சொல்லலாம். அப்படி அவர்கள் செய்யும் தீர்மானத்தில் யாதோ ஓர் குறைவுபாடுண்டென்று யூகிக்கப்பட்டால் அதை நம்முடைய முன்னோர்களாகிய ரிஷிகள் சொல்லியிருக்கும் நீதி மொழிகளைக் கொண்டுதான் திருத்துபாடு செய்யவேண்டும். ஆகையால் ஹிந்துலாவின் விதியை மாற்றுவதற்கு நன்றாய் கற்றுணர்ந்த சீமான்களுக்குத் தான் தகும்.

இன்னும் இதைப்பற்றி விரிவாய்ச் சொல்வது கூடாமையாய்த் தோன்றினபோதிலும் நல்லறிவுள்ள சீமான்கள் இதைப்பற்றி தீர யூகித்துக் கொள்ளலாம்.

ஆகையால் மேலே சொல்லியபடி ஹிந்துலாவிற்கு ஆதாரம்:—(1) வேதங்கள், (2) ரிஷிவாக்கியங்கள், (3) நல்லொழுக்கமுள்ள புண்ணியவான்களின் நடை உடை பாவனைகளாகிய நடத்தைகள், அவைகளின்படி நாம் மனப் பூர்வமாய் உட்கொண்டு நடப்பதும் தான் என்று சொல்லவேண்டும். இது தவிர இப் பரதவர்ஷ (கண்டம்) என்று சொல்லப்படும் ஆரியவர்த்தரின் தேசத்தில் வழங்கி வரும் நடை உடை பாவனைகளும் பழக்கங்களும் பரிசுத்தமான நீதி வாக்கியங்களுக்கு இணங்கி யிருப்பதால் அப் பழக்கங்களையும் ஹிந்துலாவிற்கு ஆதாரமாய் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆகையால் ராஜ்ஜிய பரிபாலன கர்த்தர்கள் பிரத்தியேகமாய் ஓர் தேசத்திலுள்ள ஒவ்வொரு மாகாணத்திலும் என்னென்ன பழக்கங்கள் நடந்தேறிக்கொண்டு வருகிறதென்றும் அந்த ஒவ்வொரு மாகாணத்திலும் வாசம் செய்யும் குடும்பஸ்தர்கள் தங்கள் தங்கள் குடும்பத்தில் என்னென்ன பழக்கங்களை அனுசரித்து வருகிறார்களென்றும், எந்தெந்த மதஸ்தர்களா யிருக்கிறார்களென்றும், என்னென்ன தொழில்களைச் செய்ய திறமையுள்ளவர்களென்றும், வியாபாரஸ்தர்களா யிருப்பவர்களுக்குள் என்னென்ன ஏற்பாடுகள் நடந்தேறிக்கொண்டு வருகின்றனவென்றும்; இதன்றி இன்னும் விவசாயத் தொழில் பார்த்துவரும் பயிர் செய்பவர்களுக்குள் என்னென்ன பழக்கங்கள் நடந்தேறிக்கொண்டு வருகின்றனவென்றும் கண்டறிந்து அவைகளுக்குத் தக்கபடி. சட்ட நிரூபணைகள் செய்து அவைகளை அமுலின் கீழ் கொண்டுவரப்படுகின்றன. ஹிந்துலாவின் விஷயமாய் வியாக்கியானம் எழுதியிருக்கும் கற்றுணர்ந்த புண்ணியவான்களில் ஒருவராகிய 'விஜ்ஞனேஸ்வர' என்பவரும் இன்னும் சில கிரந்த கர்த்தர்களும் எழுதியிருக்கும் வியாக்கியானங்களும் பழக்கமென்பதை சட்டத்திற்கு ஆதாரமாய்க் கொள்ளவேண்டு மென்றிருந்தபோதிலும், அப்பழக்கம் பரிசுத்தமான தெய்வ வாக்குகளாகிய நீதிமொழிகளுக்கு விரோதமாயிருந்தால் அந்த பழக்கத்தை சட்டத்திற்கு ஓர் ஆதாரமாய் எடுத்துக்கொள்ள லாகாதென்று கூறியிருக்கிறார்கள். ஆகையால், 'சட்டம்' என்பது இன்னதென்று நல்லொழுக்கமுள்ள கற்றுணர்ந்த புண்ணியவான்களினால் தான் தெரிந்துக்கொள்ள வேண்டும். கற்றுணர்ந்தவர்க ளல்லாத நல்லொழுக்க மில்லாதவர்களுடைய அபிப்பிராயம் சட்டத்திற்கு யாதொரு பயன்படாதாகையால் பொதுவாய் அது ஜனங்களுக்கு விரோதமான தென்று கருதப்படும். அதைப் பொறுத்துக்கொண்டு நடப்பதுதான் அதற்கு மரியாதை.

சுருதிகளிலும், ஸ்மிருதிகளிலும் சொல்லப்பட்டிருக்கும் நீதிமொழிகள்தான் ஹிந்துக்களுக்கு மிக்க விசேஷகரமானதும், யாவராலும் தடுக்க கூடாததுமான சட்டமென்று தெளிவாய் புலப்படுகிறது. ஸ்மிருதிகளோ ஆதி காலத்தில் ரிஷீஸ்வரர்கள் போதித்து விட்டுப் பேரய் நாளது வரையிலும் அவைகளை நாம் கவனித்து அனுசரித்து வரும் நீதிமொழிகளென்று தெரிய வருகிறது. மேற் கண்ட சுருதிகளிலும், ஸ்மிருதிகளிலும் சொல்லி யிருப்பவைகள் வேதங்களில் அடங்கி யிருக்கும் விதிகளென்று பாவிக்கப்பட்டு வருகின்றன. ஸ்மிருதிகள் என்று சொல்லப் பட்டவைகளுள் ஆதிகாலத்தில் 'மனு' என்பவர் எழுதி வைத்த மனு நீதி சாஸ்திரம் தான் மிக்க விசேஷகரமான தென்று சொல்லலாம். ஏனென்றால், அம்மனு நீதி சாஸ்திரத்தில்தான் நான்கு வேதங்களின் சராம்சம் அடங்கி யிருக்கிற தென்று திடமாய்ச் சொல்லலாம். ஸ்மிருதிகளிலும் மனு நீதியில் சொல்லப்பட்டிருக்கும் 'சட்டம்' தான் அடங்கி யிருக்கிறது. மனு என்பவர் பூர்வ காலத்தில் ஏற்படுத்தி யிருக்கும் சட்டத்திலுள்ள விதிகளின்படி நடப்பதுதான் யுக்தமமென்று ரிக்வேதத்தில் கூறப் பட்டிருக்கின்றது. ஆனால் குறித்த ஓர் விஷயத்தின் மூலாதாரம் இன்ன தென்று தெரிய வேண்டுமானால் ஸ்மிருதிகளைதான் ஓர் ஆதாரமாய் எடுத்து பார்க்க வேண்டும். ஆனால் சில ஸ்மிருதிகளில் சொல்லி யிருப்பதற்கும் இன்னும் வேறு சில ஸ்மிருதிகளில் சொல்லி யிருப்பவைகளுக்கும் வேதங்களிலிருப்பதற்கு காரணம் யாதென்று அந்தந்த காலத்திய சரித்திரத்தைப் பார்த்தால் தெளிவாய்த் தெரிய வரும்.

இன்னும் வரும்.

Important Rulings.

முக்கியமான தீர்ப்புகள்.

—:o:—

சி. பு. கோ. 9-வது பிரிவின் விவரணத்தில். அடியிற் கூறியபடி நிபந்தனை செய்ப்பப்பட்டிருக்கிறது:— அதாவது, சொத்து அல்லது ஷை நிலைப்பற்றிய சுதந்தரமானது மதாசாரங்கள் அல்லது சடங்குகளைக்குறித்த விவாதங்களின் தீர்மானத்தின்மேல் முற்றிலும் சார்ந்திருந்தபோதிலும், அப்படிப்பட்ட சுதந்தரத்தைக்குறித்து விவாதம் செய்யப்படுகிற வியாஜ்ஜியமானது ஸிவில் வியாஜ்ஜியமா யிருக்கிறது. இதன்படிக்கு ஒரு தர்ம கைங்கிரியச் சொத்துக்கு ஏற்பட்டிருக்கும் ட்ரஸ்டிகளில் ஒருவரை நீக்கவேண்டியதென்பது அந்தந்த ஜாதியாரின் மதாச்சாரத்தை அனுசரித்ததா யிருந்திடினும் அது ஜாதி சம்பந்தமான விவாதமாய் பாவிக்கலாகாது. ஓர் ஜாதியாரின் கூட்டத்தார் அந்தந்த வகுப்பினருக்கு எது யுக்தமானவைகளென்று யூகித்து விதிகள் ஏற்படுத்தி ஒழுங்கு செய்யலாம். அப்படிப்பட்ட விதிகளின்படி நடவாமல் யாதேனும் விவாதம் நேரிட்டால் அவைகள் ஜாதி சம்பந்தமான விவாதங்களென்று சொல்லலாம். ஆனால் அப்படிப்பட்ட தர்ம விஷயங்களுக்காக சில ஸ்தாவர ஜங்கம சொத்துகளை பரிபாலித்து வருவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்து ட்ரஸ்டிகள் முதலான காரியதரிசிகள் நேமிக்கப்பட்டிருக்கும் விஷயத்தில் அப்படிப்பட்ட சொத்துகளின் சம்பந்தமாய் உண்டாகும் விவாதங்களை கோர்ட்டில் பரிசீலனை செய்யக்கூடுமென்றும், அந்தந்த ஜாதியாரின் லௌகீக விஷயங்கள் மாத்திரம் ஜாதி சம்பந்தமான அம்சங்களென்று சொல்லலாமென்றும் தீர்ப்பு சொல்லி, யின்னும் ஓர்தர்மசொத்தின் விஷயமாய் ட்ரஸ்ட் என்பது எப்பொழுது ஏற்படுகிறதோ அப்பொழுதே அந்த ட்ரஸ்டைச்சேர்ந்த சொத்துகளைக் குறித்த விவாதங்கள் யாவும் சிவில் கோர்ட்டாரால் பரிசீலனை செய்யத்தக்க வியாஜ்ஜியங்களாக எண்ணப்படும். (9 பம். லா. ரி. 514).

மதாசார தெய்வீக விஷயங்களைக் குறித்த விவாதங்களை விசாரணைசெய்து பைசல் செய்வதற்கு சிவில் கோர்ட்டாருக்கு அதிகாரம் கிடையாது. ஆனால் கக்ஷிதாரருள் ஒரு சிவில் வியாஜ்ஜியத்தில் மதாச்சார தெய்வீக விஷயங்களை விசாரித்துப் பரிசீலனை செய்தால் தான் அந்த சிவில் வியாஜ்ஜியத்திலுள்ள சுதந்தரத்தைப்பற்றி வெளியாகுமென்று அபிப்பிராயப்படும் பக்ஷத்தில் சிவில் கோர்ட்டார் மதாச் சாரதெய்வீக விஷயங்களைக் குறித்து கூட விசாரணை செய்யலாம்; உதாரணம், வாதிகள் குறித்த ஓர் மசூதியில் தங்களுடைய பிரேதத்தைப் புதைக்கவும் அந்த பிரேதத்திற்காக அவர்களுடைய மதாச்சார கோட்பாட்டின்படி மந்தரம் உச்சரிக்கவும் தங்களுக்கு ஹக்குண்டென்று டெக்லேர் (டிக்ரீ) செய்யும்படிக்கு தாவா கொண்டுவந்தார்கள், பிரதிவாதி அந்த ஜாதியாரின் கோட்பாட்டின்படி தனக்கு பெரிதனமாகிய 'லப்பீ' உத்தியோகமாகையால் தான் அந்த மந்திரத்தை பிரேதத்தினிடத்தில் சொல்லவேண்டுபவனென்றும், மற்றெவரும் சொல்ல நியாயம் கிடையாதென்றும் வாதித்தான். அதன்பேரில் மாஜிஸ்டிரேட் அவர்கள் சி. பு. கோ. 147-வது பிரிவின்படி வாதிகள் தங்களுடைய இஷ்டப்படி மந்தரம் உச்சரிப்பதற்கு வேறே தங்களுடைய சொந்த குருக்களைவைத்து காரியம் நடத்தலாகாதென்றும் அப்படி அவர்கள் வேறே குருக்கள்மார்வைத்து காரியத்தை நடத்த இச்சை கொண்டால் அதை நிறுத்துவதற்கான உத்தரவுசெய்து அவர்கள் அப்படி செய்ய விரும்பும் பட்சத்தில் அதை சிவில் கோர்ட்டார் மூலமாய் அடையவேண்டியதென்று உத்தரவு செய்தார்.

தீர்ப்பு:—இவ்விதமான வியாஜ்ஜியங்களை சிவில் கோர்ட்டார் பரிசீலனை செய்ய அதிகாரமுண்டு. ஒரு பிரேதத்தை அடைக்கலம் செய்வதென்பது ஓர் சிவில் வியாஜ்ஜியம்; மந்தரம் உச்சரிப்பது பிரேதத்தை அடக்கலம் செய்வதற்காக அவசியமாய் சொல்ல வேண்டியதாகையால் அடைக்கலம்செய்யும்போது மந்திரம் அவசியமல்லவென்று அதைப் பிறித்து எடுத்து விடுவதற்கு முடியாத காரியமாகையால் மாஜிஸ்ட்ரேட்டின் உத்திரவிற்கு பின்பு கக்ஷிதாரர்கள் தங்களுக்குள்ள சுதந்தரங்களை சிவில் கோர்டுக்குப்போய் தான் விமரிஷை செய்துக்கொள்ளவேண்டியது: (16 ம. லா. ஜ. 471; இ. லா. ரி. 30 ம. 15).

மதாசார தெய்வீக விஷயங்கள் சி. பு. கோ. 9-வது பிரிவு:—(மிர். ஜ. மில்லர்.) ஓர் ஹிந்து தேவாலயத்திற்கு தர்மகர்த்தாமார்கள் அநேகர் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் மற்ற தர்மகர்த்தர்கள் பேரில் அவர்கள் மாமூலமாய் போட்டுக் கொண்டுவரும் தென்கலை நாமத்தை வடகலை நாமமாய்ப் போடலாகாதென்றும் அப்படிதென்கலை நாமம் முன்னமேயே போடப்பட்டிருப்பதை எவ்விதமா யாவது மாற்றலாகாதென்றும் அவர்கள் அதாவது பிரதிவாதிகள் தேவாலயத்திற்குள் வைத்திருக்கும் "வேதாந்த தேசிகர்" ஸ்வாமி என்னும் செப்புவிக்ரகத்தை எடுத்துக்கொண்டு போகும்படி உத்தரவு செய்யவேண்டியதென்றும் கொண்டுவரும் தாவா அந்த தேவாலயத்திற்காக விட்டிருக்கும் தர்மசொத்துகளுக்காக ஏற்பட்ட ட்ரஸ்டிகளாய் தர்மகர்த்தர்களைப் பாவித்து அவர்கள் மேல் சிவில் வியாஜ்ஜியம் செய்ய நியாயமுண்டு.

மி-ர். ஜ. வாலிஸ்:—இதுவரையில் மாமூலமாய் நடந்துக்கொண்டு வரும் வழக்கத்தை விட்டு புதிதாய் ஒரு விதி ஏற்படுத்த ட்ரஸ்டிகளுக்கு அதிகார மில்லையாகையால் எந்த ட்ரஸ்டியாவது புதிதாய் யாதொரு ஏற்பாடு செய்தால் அதை உடனே தடுப்பதற்கு சிவில் கோர்ட்டார் இஞ்ஜங்க்ஷன் உத்தாவு பிறப்பித்து நிறுத்த அதிகாரமுண்டு. வியாஜ்ஜியத்தில் செப்பி யிருக்கும் வியாஜ்ஜிய மூலங்களைப் படிக்கையில் அவைகள் நம்பிக்கை துரோகம் நேரிட்டிருக்கிறது என்பதை அறிவிப்பதற்காக மாத்திரமிருந்தால் அது சிவில் கோர்ட்டார் பரிசீலனை செய்யத்தக்க வியாஜ்ஜியமாகாது. ஆனால், அந்த தாவாவில் செப்பி யிருக்கும் இவைகள் மதாச்சார சுதந்தரங்களையும் சடங்குகளையும் குறித்ததா யிருந்தாலும் அவைகள் ஓர் ட்ரஸ்ட் சொத்து அல்லது அந்தஸ்தைப்பற்றியதா யிருந்தாலும் அவைகளை சிவில் கோர்ட்டார் பரிசீலனை செய்ய அதிகாரமுண்டு. (17 ம. லா, ஜ. 15, 30 ம. 158).

சி. பு. கோ. 13, 43-வது பிரிவுகள்:—வாதி 1884-ஞு பிரதிவாதி பேருக்கு ஒரு கொதுவைப் பத்திரம் எழுதிகொடுத்து தன் சொத்தை பிரதிவாதி வசம் ஒப்புவித்தான். பிறகு 1901-ம்ஞு வாதி கொதுவை மொத்தத்தை பூராய் பிரதிவாதிக்கு கட்டிவிடுவதாக பணத்தை ஆஜர் செய்தான். அதை பிரதிவாதி ஒப்புக்கொள்ளவில்லை. அதன்பேரில் வாதி ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்ட் 62-வது பிரிவின்படி கொது

வை வைத்திருந்த சொத்தை மீட்டு தன் வசப்படுத்தும்படிக்கு தாவா செய்தான். மேலும் அந்த கொதுவை பத்திரத்திற்காக தான் செலுத்தவேண்டிய அசல் தொகையை மேற்படி ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்ட் 83-வது பிரிவின்படி கோர்ட்டில் கட்டிவிட்டான். அதன் பேரில் கோர்ட்டார் கொதுவை சொத்தைவாதிவசம் ஒப்புவிக்கும்படி டிக்ரிசெய்தார்கள். பிறகு 1904-வது ஞு வாதி தான் முன் செய்த தாவாவில் கோர்ட்டில் கொதுவைப் பணம் கட்டின தேதி முதற்கொண்டு தனக்கு கொதுவைசொத்தை முன் டிக்ரியின்படி ஸ்வாதீனம் செய்த தேதி வரையில் அந்த சொத்தினு லுண்டாகிய மாசூலைக் கட்டித்தரவேண்டுமென்று இன்னொரு தாவா செய்தான். கீழ் கோர்ட்டார் இந்த கொதுவை சொத்தைப்பற்றி முன்னமேயே ஓர் தீர்மானம் செய்யப்பட்டிருக்கின்றதென்கிற காரணத்தினால் சி. பு. கோ. 11-வது பிரிவின்படி ரெஸ்ஜுடிகேடா (Resjudicata) தோஷம் வந்து விட்டதென்று தாவாவைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானம் :—பின்னிட்டு இரண்டாவது தட்வை கொண்டுவந்த தாவாவில் கேட்டிருக்கும் மாசூல் முன்னமேயே ஸ்வாதீனம் ஒப்புவிக்கும்படி டிக்ரி செய்திருந்த ஒரு சொத்தைப்பற்றி கேட்டிருப்பதால் வாதி தான் கொண்டுவந்த முன் தாவாவிலேயே அப்படிப்பட்ட மாசூலையும் கேட்டுயிருக்கவேண்டுமே யல்லாமல் மற்றப்படி வேறே தனி தாவா செய்யலாகாதென்று தீர்ப்பு செய்தார்கள். (9 பம். லா. ரி. 958 ; இ. லா. ரி. 3I-பம் 527).

சி. பு. கோ. 26, 53-வது பிரிவுகள் :— புதுகோடில் 1-வது அதிகாரம்-வாதிகள் 1, 4 (a), 6-ம் அத்தியாயம் 17-வது விதி) போலீஸ் இலாகாவைச் சேர்ந்த ஆறு நபர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் பேரில் நிந்தனையாய் அபதூரான பேச்சுகள் சொன்னதற்காக ரூபாய் 20,000 நஷ்டம் கொடுக்கவேண்டுமென்று தாவா செய்தார்கள். அப்படிப்பட்ட தாவா கிரமமாய் கொண்டுவரப்பட்டதல்ல வென்று தள்ளுபடி செய்துவிட்டார்கள். (இ. லா. ரி. 34 கல் 662.)

கி. பி. கோ. (ஆக்ட் v of 1898) 208, 215 & 347 பிரிவுகள் :—மேற்படி கோட் 347-வது பிரிவில் " (1) யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாக விசாரணை நடக்கையிலாவது தீர்ப்பில் கையெழுத்து செய்வதற்கு முன்னமே யாதொரு மாஜிஸ்டிரேட்டுக்கு முன்பாகப்பரிசீலனை நடக்கையிலாவது, அந்தக் கேசானது செஷன்ஸ் கோர்ட்டாராகிலும் ஹைகோர்ட்டாராலாகிலும் பரிசிலனை செய்யப்படவேண்டிய கேசென்று நடவடிக்கைகளின் எந்தத் தெசையிலாவது அவருக்குத் தோன்றி பரிசிலனைக்கு கமிட்பண்ண அவருக்கதிகாரமிருக்கிற பட்சத்தில், அவர் அப்புறம் நடவடிக்கை நடத்தாமல் நிறுத்திக் குற்றம் சாட்டப்பட்டவனை இந்த கோடில் செப்பி யிருக்கும் நிபந்தனைகளின்படி கமிட் பண்ண வேண்டும்.

(2) பரிசீலனைக்கு கமிட் பண்ண அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரமில்லாவிட்டால் அவர் அந்த கேசை மேற்படி கோடு 346வது பிரிவின்படி தனக்கு மேலிருக்கும் அதிகாரியினிடம் அனுப்பிவிட வேண்டும்" என்று நிபந்தனை செய்யப் பட்டிருக்கிறது. அதேகோடின் 208வது பிரிவில் (1) குற்றஞ் சாட்டப்பட்டவன் மாஜிஸ்டிரேட்டுக்கு முன் ஆஜராவதின் மேலாவது, கொண்டுவரப் படுவதன் மேலாவது அதை மாஜிஸ்ட்ரேட்டானவர் பிராதுக்காரன் எவனுகிலு மிருந்தால் அவன் சொல்வதை கேட்கவும், பிராது செய்தவன் பட்சத்திலாவது அல்லது குற்றம் சாட்டப் பட்டவன் பட்சத்திலாவது கொண்டுவரப் படுகிற சகல சாட்சியத்தையாகிலும் அல்லது தான் வரவழைத்திருக்கும்படியான சகல சாட்சியத்தையுமாகிலும் இதனடியில் சொல்லி யிருக்கிற விதமாய் வாங்கத் தொடங்க வேண்டும்:—(2)குற்றஞ்சாட்டப் பட்டவன் பிராது கொண்டுவந்தவன் பட்சத்திலிருக்கிற சாட்சிகளைச் சவால் செய்யலாம், அந்த விஷயத்தில் அவர்களை பிராது நடத்துவோமென்று திரும்பி விமரிசை செய்யலாம். (3) பிராதுக்காரனுவது பிராது நடத்துகிற உத்தியோகஸ்தராவது குற்றஞ் சாட்டப்பட்டவனுவது யாதொரு சாக்ஷியை ஆஜராகும்படிக்காகிலும்யாதொரு தஸ்தாவேஜையாவதுவஸ்துவையாவது கொண்டுவந்துகாட்டும்படிக்காகிலும்நிர்பந்திப்பதற்குக் கட்டளை பிறப்பிக்கும்படி மாஜிஸ்ட்ரேட்டுக்கு மனு செய்து கொண்டால், அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர் அப்படிப்பட்ட கட்டளை பிறப்பிப்பது அனுவசியமென்று தனக்குத் தோற்றுவிடில் அந்தக் கட்டளையைப் பிறப்பிக்க வேண்டும், அது அனுவசிய மென்று தோற்றும் பக்ஷத்தில் அதற்குண்டான ஹேதுக்களை எழுதி வைக்க வேண்டும்.

(4) ராஜதானி மாஜிஸ்ட்ரேட் தமக்குத் தோன்றும் ஹேதுக்களை எழுதி வைக்க வேண்டியது அவசியமென்று இந்தப் பிரிவில் சொல்லி யிருப்பதெதினுலும் எண்ணக் கூடாது' என்று நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது.

மேலே கண்டிருக்கும் 347வது பிரிவில் சொல்லி யிருப்பதை மேற்படி 208 பிரிவில் செப்பி யிருப்பதற்கு உள்பட்டதாக எண்ணி இரண்டு பிரிவுகளில் செப்பி யிருப்பதையும் ஒன்றுய்ச் சேர்த்தாப்போல் வாசிக்கவேண்டுமென்பது அவசியமென்று கருதி ஒரு மாஜிஸ்ட்ரேட் ஒருகேசை விசாரணைசெய்ததின்பேரில் அந்தக் கேசை செஷன்ஸ் கோர்ட்டார்தான் விசாரணை செய்ய வேண்டியதென்று தனக்குத்தானே திடப்படுத்திக்கொண்ட பிறகு அந்த மாஜிஸ்ட்ரேட்கோர்ட்டார் பிராது தரப்பு சாட்சிகளை ரத்து சவால் செய்யும்படிக்கும், டிபன்ஸ் (எதிரி) தரப்பு சாட்சிகளுடைய வாக்குமூலத்தை வாங்குவதற்கும் உத்திரவு செய்யவேண்டுமென்பது அவசியமல்ல. ஆகையால்இந்தகேசில்எதிரிப்ராசிக்கியூஷன் தரப்புசாட்சிகளில் ஒவ்வொருத்தனையும் பிரதம விசாரணைசெய்தான் உடனே அவனை ரத்து சவால் செய்யாமல் ப்ராசிக்கியூஷன் தரப்பார் தங்களுடைய சாட்சிகளை யெல்லாம் விசாரணை செய்தான பிறகு அவர்கள் தங்கள் தரப்பு கேசை பூர்த்தியாய் விட்ட தென்று சொல்லிய பின்னர் டிபன்ஸ்தரப்பார் தங்கள் சாட்சிகளை விசாரணை செய்யும் படிக்கு பிராதி தரப்பு சாட்சிகளை ரத்து சவால் செய்யும்படிக்கு தங்களுக்கு உத்திரவு கொடுக்க வேணுமாய் மனு செய்துக் கொண்டார்கள்.

தீர்மானம்:—மாஜிஸ்ட்ரேட்டவர்கள் ஸெஷன்ஸ்கோர்ட்டுக்குகேசைகமிட்செய்ய திடம் செய்துக் கொண்ட பிறகு பிராதி தங்களுடையசாட்சிகளை ரத்துசவால் செய்யவும் டிபன்ஸ்தரப்பு சாட்சிகளை விசாரணை செய்யவும் ஷை 347வது பிரிவின்படி நியாயம் கிடையாதென்று தீர்ப்பு சொன்னுர்கள். (இ-லா-ரி-36-கல் 48)

கி. பு. கோ. 260-வது, இ. பி. கோ. 186-வது பிரிவுகள்:—இந்தியன் பீனல் கோட் 186-வது பிரிவில் யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தனக்குள்ள ஸர்க்கார் அலுவலை நடத்திக்கொண்டிருக்கையில் அவனை எவனுவது வேண்டு மென்று தடுத்தால், அவன் மூன்று மாதத்திற்கதிகப்படாமல் எவ்வளவு காலத்திற்காவது இருவகைக் காவலிலெலாகிலும் வைக்கப் படுவான், அல்லது ஐந்நூறு ரூபாய்வரையில் அபராதத்திற்குள்ளாவான், அல்லது இரண்டு தண்டனைக்கும் உட்படுவான்" என்று நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது." இந்த பிரிவின்படி ஒருவன் பேரில் குற்றஞ் சாட்டப்பட்டால் அதை கி. பி. கோ. 260-வது பிரிவின்படி சுருக்கமாய் விசாரணை (Summary trial) செய்ய ஒரு மாஜிஸ்டிரேட்டுக்கு அதிகார முண்டா இல்லையா என்று நிட்சயிப்பதற்கு பிராதில் சொல்லி யிருப்பதினுலேயே தெரிந்துக் கொள்ள வேண்டுமென்பது அவசிய மல்ல, பிராதை வரப்படுத்திக் கொண்டு அதில் சொல்லி யிருப்பவைகளுடன் பிராது செய்பவனையும் பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்து அவன் கோர்ட்டில் நேரில் பிரமாணத்தின்பேரில் சொல்லிய வாக்கு மூலங்களினுலும் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதை சுருக்கமாய் விசாரணை செய்ய அதிகாரமுண்டென்று நிட்சயிக்கலாம் (இ-லா-ரி-36கல்67)

> **Whoever voluntarily obstructs any public servant in the discharge of his public functions shall be punished with imprisonment of either description for a term which may extend to three months or with fine which may extend to five hundred rupees, or with both.**

புதையல் முதலானவைகளால் கண்டெடுக்கப்பட்ட (சொத்து.)

இப்படி கண்டெடுக்கும் சொத்துகளைக் குறித்து ஓர் சட்டம் (Act VI of 1878) ஏற்பட்டிருக்கிறது. அதில் 3-வது பிரிவில் "பூமியிலாவது அல்லது பூமியைச்சேர்ந்த எதிலாவது ஒரு சொத்தை ஒளித்து வைத்திருந்தால்தான் இந்த ஆக்டின் நிபந்தனைகளுக்குட் படும் அதாவது, அந்த சொத்து, நிலத்துக்குச் சொந்தக்காரனைச் சேரும் ; அப்படிக்கல்லாமல் பொதுவாய் ஜனங்கள் போக்கு வரத்துள்ள பயிரங்கமான இடத்தில் கண்டெடுத்தால் அது கண்டெடுத்தவனுக்குச் சொந்தமாய் விடும். இங்கிலாந்திலும் சட்டம் இப்படிக்கேதான். ஒருவன் ஒரு சொத்தை பூமியில் புதைத்து வைக்கும்போதே அதை அவன் விட்டுவிட வேண்டு மென்கிற எண்ணத்துடன் புதைக்காமல் மறுபடியும் எடுத்துக்கொள்வோம் என்கிற எண்ணத்துடன் புதைத்து வைக்கிருனுகையால் பூமிக்குள்ளிருக்கும் அந்த சொத்தை கண்டெடுத்த போது அதற்குச் சொந்தக்காரன் இன்னுனென்று வெளி வராவிடில் அந்த சொத்தை சட்டப்படி சர்க்காரில் சேர்த்துக் கொள்ளப்படும். (இ-லா-ரி. 31 ம. 397.)

கி. பு. கோ. 195-வது பிரிவு ப்ராசிக்யூஷன் உத்திரவு அப்பீல்.

மேற்படி கோட் 195-வது பிரிவின்படி ஒருவன் பேரில் ப்ராசிக்யூஷன் நடவடிக்கைகள் நடத்தும்படி கோர்ட்டார் ஒரு கேசில் உத்திரவு செய்திருந்தால் அந்த உத்தரவின்பேரில் ஒரு தடவைதான் அப்பீல் செய்யக்கூடும். ஒரு தடவை அப்பீல் செய்து பைசலாய் விட்டால் அதன்பேரில் மறுபடியும் அப்பீல் செய்ய நியாயமில்லை. (இ-லா-ரி. 31 அ.) கலிக்காரனு Vs. ராம்ஜிலால், சக்கரவர்த்தி Vs. ஸெர்மில் முத்துசாமி Vs. வீணி செட்டி.

இ. பி. கோ. (176, 117) கி. பு. கோ. 565 (4) பிரிவுகள்.

மேற்படி இ. பீ. கோ. 176. 177 பிரிவுகளின்படி ஒருவன் குற்றம் செய்வதாக மற்றொருவனுக்குத் தெரிய வந்தால் பின் செப்பியவன் அதைப்பற்றி சட்டப் பிரகாரம் ஸர்கார் உத்தியோகஸ்தனுக்குத் தெரிவித்து அறிக்கை செய்யவேண்டியதென்று நிபந்தனை ஏற்பட்டிருக்க ஒருவன் அப்படி தெரிவிக்காமலிருந்தால் குற்றமாகுமா ; ஆகாதா, உதாரணம் :—எ. என்பவன் பேரில் குற்றஸ்தாபனை செய்து அவனை சிட்சை செய்கையில் அவன் காவலிலிருந்து வெளிவந்த பிறகு தன் னிருப்பிடம் முதலானதைப் போலீசாருக்குத் தெரிவித்து வரவேண்டுமென்று உத்தரவு செய்திருந்து அவனும் அப்படிச்செய்யாமலிருந்து விட்டான். இப்படி செய்தது மேற்படி இ. பீ. கோ. 176-வது பிரிவின் 2-வது பாராவில் சொல்லி யிருக்கும் சொற்ப தண்டனைக்குள்ளாகாமல் மேற்படி பிரிவில் முதல் பாராவில் சொல்லி யிருக்கும் சொற்ப தண்டனைக்குள்ளாவதாகத்தான் எண்ணப்படவேண்டும்.

மதராஸ் லா ரிப்போர்ட்டு 1909.

Cases from the Indian Law Reports.

இந்தியன் லா ரிபோர்ட்டு கேசுகள்.

—:o:—

Civil—சிவில்

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

இரண்டாவது அப்பீல் நெ. 779 of 1908.

ஜட்ஜிகள்:— {சர். ரால்ப் பென்சன். / மி-ர். ஜ. அப்டுர் ரஹீம்.} முன்பாக.

மகமேத் ஹார்ஜி குண்ஹம்மா வகையரா...வாதிகள்—அப்பீல் வாதிகள்.

vs

மூசாஹாஜி...பிரதிவாதி—அப்பீல் பிரதிவாதி.

மகம்மத்தியலா-மாப்லாடார்வாட்-வழக்கம். ஓர் விவாகமானஸ்திரீக்கு சீதன சொத்தை கொடுத்தல். இன்னும் தொகை சேரவேண்டியதென்று தாவா, ஜீவனும்சம்—தன் குடும்ப வீட்டைவிட்டு வெளிதாண்டின ஸ்திரீ பிரத்தியேக ஜீவனும்சம் சேரவேண்டுமென்று தாவா-இது தாலி பரம்பா டி. முனிசீபு கோர்ட் அ. நெ. 125 of 1906-ல் செய்த டிக்ரியின்பேரில் வடமலபார் ஜில்லா கோர்ட்டுக்கு செய்த அப்பீல் நெ. 229 Of 1907-ல் செய்த டிக்ரியின் பேரில் செய்துக்கொண்ட இரண்டாவது அப்பீல்.

தீர்ப்பு.

மர்ம கட்டாயம் மாப் லாடார் வாட்டைச் சேர்ந்த ஒரு விவாகமான ஸ்திரீ ஒருவளுக்கு பூஸ்திதி சீதனமாய் கொடுக்கப்பட் டிருந்தபிறகு அவள் தனக்கு முன் கொடுத்த நிலம் பாழாய் விட்டதென்னும் காரணத்தால் முன் தனக்கு கொடுத்திருந்த பூஸ்திதியின் மதிப்பு எவ்வள வுளதோ அவ்வளவுக்குச் சமானமாய் அவளுக்கு வேறே நிலம் கொடுக்க நியாயமில்லை. ஓர் மாப்லாடார் வாடைச்சேர்ந்த ஒரு ஸ்திரீ குடும்பவீட்டை விட்டு வெளியே போய் வசித்திருந்து பிறகு குடும்பத்திலுள்ளவாளை தனக்கு பிரத்தியேகமாய் ஜீவனும்சம் கொடுக்கும்படி கேட்க ஹக்கு கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டது.

இரண்டாவது அப்பீல் சிலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம், 2-வது பார்ட்டு 320.

MADRAS HIGH COURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது அப்பீல் நே. 1083 of 1907.

ஜட்ஜிகள்:— { சர். ரால்ப் பென்சன். ஜ. / மி-ர். ஜ. கிருஷ்ணசுவாமி ஐயர்.

அனந்தராமா மத்தியஸ்தர்....பிரதிவாதி...அப்பீல் வாதி.

vs

மந்தார்த்திஸ்ரீனிவாச ஆடிகா வகையரா...வாதிகள்—ரேஸ்பான்டேன்கேள்

ஹிந்துலா—ஏக குடும்பம்-கர்த்தா (மானேஜர்)—கடன் தீர்ப்பில் மூத்தவன் அவனுக்கு யுக்த வயது வந்தபிறகு தாவா செய்தல்—லிமிடேஷன்.

உடிப்பி டி. மு. கோர்ட்டு அசல் நெ. 37 of 1905-ல் செய்த டிக்ரியின்பேரில் கெனராடிஸ்ட்ரிக்டு கோர்ட்டு அ. நெ. 176 & 184 of 1906-ல் செய்துக்கொண்ட இரண்டாவது அப்பீல்.

தீர்ப்பு.

ஓர் ஹிந்து ஏக குடும்பத்தில் கர்த்தாவா யிருக்கும் மானேஜர் அந்த குடும்பத்தைச் சேர்ந்த எல்லா பாகஸ்தர்களுக்காகவும் அந்தக் குடம்பத்திற்குக் கடனுய் சேரவேண்டியிருக்கும் மொத்தத்தைப் பெற்றுக்கொண்டு ரசீது கொடுக்க அதிகாரமுண்டு. ஆனால் அந்த குடும்பத்தைச் சேர்ந்த மூத்தவன் தனக்கு யுக்தவயது வந்தவுடன் அந்த குடும்பத்திற்கு கர்த்தா மானேஜராகிறுன். அப்படிப்பட்டவன் தனக்கு யுக்த வயது வந்தபிறகு மூன்றுவருஷ காலமாய் யாதொரு கிருஷையும் செய்யாமல் மூன்று வருஷத்திற்குப் பின் தாவா செய்வானுகில் அதற்கு கால தோஷமாய் விட்டதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம் 2-வது பார்ட் 267,

MADRAS HIGH COURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது அப்பீல் நே. 95 of 1909.

ஜட்ஜிகள் :— { சர். ரால்ப் பென்சன் ஜ. / மி-ர். ஜ. சங்கரன் நாயர். } முன்பாக

ஷண்முக பல்லாவரான் வகையரா...வாதிகள்-அப்பீல் வாதிகள்.

Vs.

சூசை உடையான் ... ... பிரதிவாதி—ரேஸ்பான்டேன்டு.

கொதுவை சொத்தில் வாதிகளுக்கு மூன்றில் இரண்டுபாகம் சொந்தம்—கொதுவையிலிருந்து மீட்கல்.

ஒரு சொத்தில் வாதிகளுக்கு இரண்டு பாகமும் பிரதிவாதிக்கு ஒரு பாகமும் சொந்தமா யிருப்பதால் வாதிகள் அந்த சொத்தின்பேரில் உள்ள கடனில் மூன்றில் இரண்டு பாகமும், பிரதிவாதி ஒரு பாகமும் கொடுக்க பந்தப்பட்டவர்களா யிருக்க வாதிகள் கொதுவை மொத்தமும் பூராய் கொடுத்துவிட்டு அவர்களுக்கு ஹக்குள்ள அந்த சொத்தில் மூன்றில் இரண்டு பாகத்தையும் ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு பிரதி வாதிக்கு முன்னமையே குடும்ப சொத்தை பாகத்திக்கொண்டு தன்னுடைய பாகத்தை அனுபவிப்பவனுயிருந்தால் அவனுடைய அனுபோகத்திலிருக்கும் சொத்தின் அந்த மூன்றில் ஒரு பாகத்தை வாதிகள் பிரதிவாதியினிட மிருந்து அவர்களுக்குச் சேரவேண்டிய மூன்றில் ஒருபாகக் கடன் அவர்களுக்குச் செல்லாகிற வரையில் ஈடாகவைத்துக்கொள்ள ஹக்குண்டு. அந்த குடும்பத்தில் முன்னமே சொத்துக்களை பாகித்துக் கொண்டவர்களாயிருந்தால், வாதிகள் பிரதிவாதி அவன் கொடுக்கவேண்டிய மூன்றில் ஒரு பாகக்கடனை அவன் செலுத்துகிற வரையிலும் குடும்ப சொத்துகள் முழுமையுமே அனுபவிக்க சுதந்தர முண்டென்று தீர்மானிக்கப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம் 4-வது பார்ட்டு 537.

MADRAS HIGH COURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது அப்பீல் நே. 114 of 1906.

ஜட்ஜிகள்:— { சர். ரால்ப் பென்சன், ஜ. / மி-ர். ஜ. சங்கரன் நாயர். } முன்பாக

கெ. வெங்கட லக்ஷ்மி பதி-வாதி-ரேஸ்பாண்டேன்டே.

இனும்—மூல தஸ்தாவேஜி—அதன்படி பொருள் ஏவெதென்ன—லிமிடேஷன்.

தீர்ப்பு.

ஓர் இனும் மூல தஸ்தாவேஜியின் பிரகாரம் பிரதிவாதியின் முன்னோர்கள் ஓர் பூஸ்திதியை 1860-ம் வருஷத்திலிருந்து அனுபவித்து வந்தார்கள். அந்த குடும்பத்தைச் சேர்ந்த ஓர் விதவை அந்த சொத்தை அவள் இறந்துபோகும் வரையில் அதாவது 1903-ம் வருஷம் வரையில் அனுபவித்து வந்தவளாகக் கண்டிருக்கிறது. அதன்பேரில் கீழ் கோர்ட்டாரை இதன் அடியில் கூறியிருக்கும் அம்சங்களைப் பற்றிவிசாரணை செய்து தெரிவிக்கும்படி கேட்டதில்,

(1) இனும் தாரர்களாகிய பிரதிவாதிகளும் அவர்களுடைய மூதாதைகளும் அந்த சொத்தை அனுபவித் தவர்கள் தானு அப்படியானுல் எவ்விதமாய் எக்காலத்தில் அந்தசொத்து அவர்களுடைய ஸ்வாதீனத்தில் வந்ததென்றும், (2) இனும் மூலதஸ்தாவேஜிகளினுல் பிரதிவாதிகளுக்கு என்ன சுதந்தரம் உண்டாயிற்றென்றும், (3) தாவாவிற்கு கால நிர்ணய தோஷமுண்டா (Limitation) என்றும் தெரிவித்தரர்கள். அதன்பேரில் சப் கோர்ட்டார் மேற்செய்பிய முதல் அம்சத்தைப்பற்றி பிரதிவாதிகள் இனும்மூல தஸ்தாவேஜியின் ஆதாரத்தினுல் அந்த சொத்தை அனுபவித்து வந்தவர்களல்லவென்றும் இறந்துபோன விதவை அவர்களுக்கு அனுபவசுதந்தரம் கொடுத்தாளென்றும் காலஞ்சென்ற அந்த விதவையினுல் பிரதிவாதிகளுக்கு ஸ்வாதீனம் கிடைத்தமையால் வாதிகளின் தாவாவிற்கு கால நிர்ணய தோஷம் நேரிடவில்லையென்றும் ரிப்போர்ட்டு செய்தார்கள். சப் கோர்ட்டார் தெரிவித்ததை ஹைகோர்ட்டார் ஒப்புக்கொண்டு இரண்டாவது அப்பீலை தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம் 4-வது பார்ட்டு 530.

MADRAS HIGH COURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

Full Bench—புல் பெஞ்சு.

இரண்டாவது அப்பீல் நே. 88 of 1907.

ஜட்ஜிகள் :— { சர். அர்னுல்ட் ஒயிட், சீப்ஜஸ்டிஸ். / மி-ர். ஜ. கிருஷ்ணசுவாமி ஐயர். / மி-ர். ஜ. எய்லிங்.

இபுராம் சாராவுத்தன் வகையரா ... வாதிகள்-அப்பீல் வாதிகள்.

vs.

திருமலை முத்துவீர திருவேங்கிடசாமி நாய்க்கர் வகையரா-பிரதிவாதிகள்-ரேஸ்பான்டேன்கேள்.

ஹிந்துலா—ஹிந்துஸம்ஷ்டி குடும்பம்-கொஞ்சம் சொத்தை மாத்திரம் பாகித்துக்கொள்ளப்பட்டது. அந்த குடும்பத்தைச் சேர்ந்த ஓர் தாயாதியினிடத்தில் கிரயம் பெற்றவன்—இன்னொரு தாயாதியும் இம்மாதிரியே பாராதீனம் செய்திருக்கிறுன்.—குறித்த ஓர் சொத்தை மாத்திரம் பாகித்துக்கொள்ளுதல்.

தீர்ப்பு.

ஓர் ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு தாயாதிகளில் ஒருவன் குடும்ப சொத்துகளில் சிலவைகளை ஓர் மூன்ருவது மனிதனுக்கு வித்துவிட்டான். அது குடும்ப காரியங்களுக்காக விற்கப்படுவதுமல்ல; இன்னொரு தாயாதியினிடத்திலிருந்து கிரயத்துக்கு பெற்றவன் முழு சொத்துக்கும் பாக வியாஜ்ஜியம் செய்யாமலே குடும்ப சொத்தில் அவனுக்கு என்ன பாகமுண்டோ அதைப் பிரித்து தனக்கு கொடுக்கும்படி வியாஜ்ஜியம் கொண்டு வரலாம்.

அவிபக்த ஹிந்து குடும்பத்தின் ஓர் தாயாதிமற்ற தாயாதிகள்மேல் தன் பாகத்தை மாத்திரம் பாகித்துக் கொடுக்கும்படி கேட்பதற்கு நியாயமில்லை.

ஓர் ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த அநேக தாயாதிளில் (பாகஸ்தர்களில்) சிலரிடத்திலிருந்து மாத்திரம் சில குடும்ப சொத்துகளை கிரயம்பெற்ற ஓர் மூன்ருவது மனிதன் குடும்ப சொத்துகளிலுள்ள தனக்கு ஓர் தாயாதி கிரயம் செய்துவிட்ட பாகத்தை மாத்திரம் பிரித்துக் கொடுக்கும்படி தாவா செய்வதற்கு நியாயமில்லை, குடும்பத்தைச் சேர்ந்த சொத்துகள் யாவற்றையும் பாகித்துக் கொடுக்கும்படிக்கு கேட்க நியாயமுண்டு.

ஓர் ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த ஓர் தாயாதி (பாகஸ்தன்) ஒருவன் தனக்கு அந்த குடும்பத்திலுள்ள ஹக்கு சுதந்தரங்களை ஓர் மூன்ருவது மனிதனுக்கு வித்து விட்டான். அப்படி கிரயம் பெற்ற மூன்ருவது மனிதன் அந்த குடும்ப சொத்து எல்லாவற்றையும் பிரித்துக் கொடுக்கும்படி கேட்கவேண்டுமென்பது அவசியமல்ல அந்த தாயாதியின் பாகத்தை மாத்திரம் பிறித்துக் கொடுக்கும்படி கேட்பதற்கு நியாயமுண்டு.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம் 4-வது பார்ட்டு 565.

MADRAS HIGH COURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

ஓரிஜினல் சைட் சிவில் அப்பீல் நே. 83 cf 1906.

ஜட்ஜுகள் :— { சர். ஆர்னுல்ட் வொயிட்...சீப் ஜஸ்டிஸ். / மி-ர். ஜ. சங்கரன் நாயர். } முன்பாக.

ஆர். எம். எம். ராமனுதன் செட்டி அண்டு கோ. வகையரா. } பிரதிவாதிகள் அப்பீல் வாதிகள்

vs.

கெ. எம். அப்டுல் கரீம் சாயபு வகையரா...வாதிகள்...ரெஸ்பான்டென்கேள்.

அநேகர் ஒன்று சேர்ந்து செய்யும் வியாஜ்ஜியம்—ஒவ்வொரு வாதியின் பேரிலும் எதிர் மனு கொடுத்தல்.

இந்த வியாஜ்ஜியத்தில் வாதிகளும் இரண்டாவதுபிரதிவாதியும் பாகஸ்தர்களாக ஓர் கூட்டு வியாபாரம் செய்தவர்கள். அவர்கள் இருவருக்கும் முதல் பிரதிவாதி கொடுக்கவேண்டிய தொகையை வசூல் செய்வதற்காக கொண்டு வந்த ஜாயிண்ட் (ஏக) தாவா முதல்பிரதிவாதி தன்னுடைய விவரப் பத்திரிகையில் மேற் செப்பிய பாகஸ்தர் இரண்டு பேர்களில் ஒவ்வொருவர் பேரிலும் தனித்தனியாய் வாதம் கூறினன். இப்படிப்பட்ட வாதம் ஓர் தாவாவில்செய்வது சரியல்லவென்று ஜ. போடாம் அபிப்பிராயப்பட்டிருக்கிறார். ஹைகோர்ட்டு ஒரிஜினல் சைட் ரூல் 47-ல் சொல்லியபடி கோர்ட்டாருடைய யுக்தா யுக்தத்தின்படி அப்படிப்பட்ட எதிர் வாதத்தை மஞ்சூர் செய்துக்கொள்ளாமல் தள்ளிவிடலாம்.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம் 2-வது பார்ட்டு 26.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது அப்பீல் நே. 74 of 1907.

ஜட்ஜுகள் :— { சர். ஆர்னல்ட் வொயிட்...சீப் ஜஸ்டிஸ். மி-ர். ஜ. மில்லர்.

ஆலோசனை சபையிலுள்ள இந்தியாதேசத்து செக்ரிடெரி ஆப்ஸ்டேட். } பிரதிவாதி... அப்பீல்வாதி.

VS

கர்னூல் எம். கெ. சுப்பாராவ்...வாதி...ரெஸ்பான்டெண்ட்.

மதராஸ் ஜலப்பாய்ச்சலைக் குறித்த விதிகள். 2, 3-முழு தண்ணீர் தீர்வை யென்றால் பொருள் யாது.

கர்னூல் டி. முனிசீபு கோர்ட்டு அ. நெ 690 *of* 1904-ல் செய்த டிக்ரியின் பேரில் கர்னூல் ஜில்லா கோர்ட்டு அ. நெ. 25 *of* 1906-ல் செய்த டிக்ரியின் பேரில் செய்துக்கொண்ட இரண்டாவது அப்பீல்,

தீர்ப்பு.

இந்த வியாஜ்ஜியத்தில் தீர்மானிக்கவேண்டிய முக்கியமான அம்சத்தின் சரியான பொருளை அறிந்து சொல்வது மிக்க கஷ்டமாயினும் முனிசீபு சொல்லியபடி நஞ்சை சாகுபடி செய்தால் தான் பூராய் ஜலத்தீர்வை கொடுக்க வேண்டுமென்பதும் அப்படிக்கல்லாமல் நஞ்சை அல்லது புஞ்சைப்பயிரு பயிரிடப்பட்டு தானியங்கள் விளைவிக்கப்பட்டதென்னும் காரணத்தால் பூராய்த் தண்ணீர் தீர்வையும் கட்டவேண்டுமென்று உத்தரவு செய்வது கிரமமல்ல.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம் 2-வது பார்ட்டு 266.

MADRAS HIGH COURT.

மதராஸ ஹைகோர்ட்டு.

அப்பீல் நே. 56 of 1908.

ஜட்ஜிகள்:- { சர். ரால்ப் பென்சன். ஜ. மிர். ஜ. அப்துல் ரஹீம் } முன்பாக.

சிவில் புரோசீஜர்கோட் (1882-ம் ௵த்திய 14-வது ஆக்ட் 109-வது பிரிவு—அட்டாச்மெண்ட் செய்பவனுக்கு நோட்டீசு அவசியமா.

1882-ம் ௵த்திய 14-வது ஆக்ட் சிவில் புரோசீஜர்கோடு-109-வது பிரிவின்படிக்கு எதிரிக்கு என்று சொல்லியிருப்பது ஒரு தலை பட்சமாய் செய்யப்பட்ட டிக்ரியை ஜப்தி செய்தவனென்று அர்த்தமாகாது. அந்த செக்ஷனில் சொல்லியபடி அந்த தாவாவில் கட்சிதாரனயிருப்பவனுக்கு மாத்திரம் தான் நோட்டீசு கொடுக்கவேண்டியது. மதுரைஜில்லா கோர்ட்டார் அப்பீல் நெ. 695 *of* 1907-ல் செய்த டிக்ரியின் பேரில் கொண்டுவந்த இரண்டாவது அப்பீல்.

தீர்ப்பு.

ஜில்லா ஜட்ஜ் 1882௵த்திய சிவில் புரோசீஜர் கோடின் 109-வது பிரிவின்படி எதிரி என்றால் ஒரு தலை பட்சமாய் செய்யப்பட்ட டிகரியை ஜப்தி செய்தவனென்றும் அர்த்தமாகுமென்பது பிசகு. பண டிக்ரியை ஜப்திசெய்கிறவன் கூட அந்த டிக்ரியை கிரயம் பெற்றவனக எண்ணப்படமாட்டான். இன்னும் இந்த அப்பீலில் மோசடியான நடவடிக்கைகள் நடந்ததென்று சொல்வதற்கு யாதொரு சாட்சியமும் காணேம். ஆகையால் அதுவிஷயத்தைப்பற்றி சாக்ஷிகளை விசாரணைசெய்து அபிப்பிராயம் கூறும்படிக்கு கேசை மறுபடியும் அனுப்பி வைக்கப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம் 1-வது பார்ட் 66

MADRAS HIGH GOURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

இரண்டாவது அப்பீல் நே. 1158 of 1907.

ஜட்ஜுகள்:—சர். ரால்ப் பென்சன் ஜ. மி-ர். ஜ. கிருஷ்ணசுவாமி ஐயர். } முன்பாக

பாபூரத் கல்லியாணி அம்மாள்...வாதி...அப்பீல் வாதி.

ஏ. சின்னன் என்கிற மம்மத் ராவுத்தன்—பிரதிவாதி—ரெஸ்பான்டெண்டு.

ஓர் சொத்தை ஒருவனுக்கு அநேக காலமாய்விட்டு வைப்பதினல் நேரிடும் கெடுதிகளுக்கு பரிகாரம்—ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 114-வது செக்ஷன்.

இந்த செக்ஷனில் இந்த விஷயத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை யென்பதற்கு இடமிருந்திடினும் இப்படிப்பட்ட விஷயங்களிலும் இந்த செக்ஷன் தான் சம்பந்தப்படவேண்டியதென்று தீர்மானித்து கீழ் கோர்ட்டாராகிய சப் கோர்ட்டாரை கேசை சில இஷ்ஷுக்களின் பேரில் விசாரணை செய்யும்படிக்கு ரிகார்டை அனுப்பினதின் பேரில் மறுபடியும் விசாரணை செய்து அவர்களுடைய அபிப்பிராயத்தை ஐகோர்ட்டாருக்குத் தெரிவித்ததின் பேரில் ஹைகோர்ட்டார் சப்ஜட்ஜ் சொல்லியதை ஒப்புக்கொண்டு வாதியின் தாவாவை செலவுடன் தீர்ப்பு சொன்னர்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம் 4-வது பார்ட்டு 565

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது அப்பீல் நே. 42 of 1909.

ஜட்ஜுகள் :—மி-ர். ஜ. வாலிஸ். மி-ர். ஜ. கிருஷ்ணசுவாமி ஐயர். } முன்பாக.

வள்ளி அம்மாள் ஆச்சி ... ... அப்பீல் வாதி.

VS

மாரனன் பிள்ளை ... ... ரெஸ்பான்டெண்டு.

வியாஜ்ஜிய விசாரணை நடக்கையில்-பிரதிவாதி கோர்ட்டுக்கு ஆஜராகமற்போவது—வழக்கம்—கோர்ட்டு நடவடிக்கை—வாதி தன்னுடைய தாவாவை ருஜு செய்வதற்காக வேண்டியவைகளை சித்தமாய் ஆஜர்செய்தல்-அதன் பேரில் அப்பீல் செய்வதற்கு நியாயமுண்டா—வாதி தன்னுடைய சாக்ஷியத்தை யெல்லாம் ருஜுசெய்வதற்கு தனக்கு ஹக்குண்டென்பது.

தீர்மானம்

ஓர் வியாஜ்ஜியத்தில் விசாரணை நடந்துக்கொண்டிருக்கையில்பிரதிவாதி கோர்ட்டுக்கு ஆஜராகாமற் போனல் வாதி தன்னுடைய தாவாவை ருஜு செய்வதற்கு மாத்திரம் போதுமான சாட்சியத்தின் பேரில் டிக்ரி பெற்றுக்கொள்ளுகிறன். பிறகு அந்த டிக்ரியின்பேரில் அப்பீல் செய்துக்கொண்டதின் பேரில் அப்பீல் கோர்ட்டார் வாதி தன்னுடைய தாவா முழுமைக்கும் சாக்ஷியத்தினல் ருஜுசெய்யவில்லை யென்னும் காரணத்தால் வாதியின் தாவாவை தள்ளுபடி செய்துவிட்டார். அதன்பேரில் ஹைகோர்ட்டுக்கு இந்த இரண்டாவது அப்பீல் செய்துக்கொண்டதின் பேரில் தீர்ப்பு:—முதல் முதல் விசாரணை நடக்கையில் பிரதிவாதி வராமையால் வாதி எல்லா சாட்சியத்தையும் ஆஜர்படுத்தி ருஜு செய்யவில்லை. டிஸ்ட்ரிக்ட் முனிசீபுக்கு தன்னுடைய தாவா விஷயமாய் திருப்திசெய்வதற்குப் போதுமான சாக்ஷியம் ஆஜர்படுத்தி ருஜு செய்தான். ஜில்லா ஜட்ஜ் கேசை மறுபடியும் கீழ் கோர்ட்டுக்கு அனுப்பி இன்னும் வேண்டிய சாக்ஷியம் யாவற்றையும் வாதியை ஆஜர்படுத்தும்படி கேட்டிருந்தால் வாதி தன்னுடைய சாக்ஷிகள் யாவற்றையும் ருஜுசெய்திருக்கலாம். ஆனல் பிரதிவாதிகள் கேசை அனுப்பும்படி கேட்டமையால் வாதிகள் ரிகார்ட்டில் இருக்கும் சாக்ஷியமே போதுமென் றிருந்து விட்டார்கள். ஆகையால் வாதியை தன்னுடைய சாக்ஷியம் யாவற்றையும் ஆஜர்படுத்தி கேசை ருஜுசெய்யும்படிக்கு கேசை மறுபடியும் கீழ் கோர்ட்டுக்கு ரிமாண்டு செய்துவிட்டார்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள். 7-வது வால்யம் 4-வது பார்ட்டு 49.

ALLAHABAD HIGH COURT.

அலகாபாத் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது அப்பீல் நே. 1007 of 1909.

ஜட்ஜி:—மி-ர். ஜ. கர்மத் உஸேன்.

ஹார் சந்தா வகையரா...பிரதிவாதிகள்...அப்பீல்வாதிகள்.

கிஷோரி சிங்க்வகையரா..வாதிகள்..ரெஸ்பான்டெண்டுகள்.

ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்ட் (4 of 1882) கிரய மொத்தத்தில் கொடுபடாமல் நிற்கும் நிலுவை-மொத்தம் கிரயம் பெற்றவனுக்கு அந்த சொத்தில் என்ன பாத்தியதை யுண்டு-டிக்ரிதாரனுக்கு கொடுக்கும்பொருட்டு கிரயம் வாங்கினவனிடத்தில் கிரய மொத்தத்தில் சொற்பதொகை நிறுத்திவைக்கப்பட்டது.—லிமிடேஷன்.

ஏ-என்பவன் தன்னுடையசொத்தை பி-என்பவனுக்கு 1896-ம் வருஷத்தில் வித்துவிட்டான். அந்த கிரய மொத்தத்தில் சொற்ப தொகை கிரயம் பெற்றவனிடத்திலேயே நிறுத்தி வைத்து அவன் ஏ-என்பவன் பேரில் டிக்ரி பெற்றிருக்கும் டிக்ரிதாரனகிய சி-என்பவனுக்கு கொடுப்பதற்காக நிறுத்தி வைத்தான். பி-என்பவன் அந்தத் தொகையை டிக்ரிதாரனகிய சி-என்பவனுக்கு கொடுக்கவில்லை. ஆகையால் 1908-ம்௵த்தில் ஏ-என்பவன் பி-என்பவனிடத்திலிருந்து அந்த தொகையை வசூல் செய்வதற்காக தாவா செய்தான். தாவாவிற்கு காலதோஷம் வரவில்லை யென்றும், 1882௵த்திய ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்ட் 55-வது பிரிவின்படி நிலுவை நிற்கும் பணத்தை தனக்கு செலுத்துகிற வரைவிலும் ஏ-என்பவனுக்கு தான் கிரயம் செய்த சொத்தின்பேரில் ஹக்குண்டென்றும், அந்தப் பணம் ஓர் டிக்ரிதாரனகிய சி-என்பவனுக்கு கொடுக்கும்படி நிறுத்திவைத்திருந்தது என்னும் காரணத்தால் ஏ-என்பவனுக்கு நிலுவை பணம் தனக்கு கொடுக்கப்படுகிற வரையிலும் அவனுக்கு கிரைய சொத்திலுள்ள ஹக்கு போய்விட வில்லை யென்று தீர்மானிக்கப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள். 7-வது வால்யம் 4-வது பார்ட் 639.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது. அப்பீல் நே. 558 of 1906.

ஜட்ஜிகள்:—மிர். ஜ. மன்ரோ. மிர். ஜ. அப்துர் ரஹீம்.

மகம்மதிய ரஹீம் சாயபு—பிரதிவாதி—அப்பீல்வாதி.

சையத் மீரா கொம்மள் வகையரா—வாதி—ரெஸ்பான்டெண்டுகள்.

சிவில் புரோசிஜர் கோடு. (1882-ம்௵த்திய 14-வது கோடு ஆக்ட்) 244-வது பிரிவு—ஓர் ஹிந்து குடும்பத்தின் சொத்தில் ஓர் தயாதியினுடைய பாகத்தை வாங்கினவன் குடும்ப சொத்தை குடுக்கும்படி கொண்டுவந்த தாவா.

ஓர் அவி பக்த ஹிந்து குடும்ப சொத்திலுள்ள சொற்ப பாகத்தை ஒருவன் கோர்ட்டு ஏலத்தில் கிரையத்திற்கு எடுத்து பிறகு கோர்ட்டு மூலமாய் ஏக குடும்பத்துடன் தன்னுடைய பாகத்திற்குள்ள சுவாதீனத்தை பெற்று கொண்டான் பிறகு குடும்ப சொத்தை பாகித்து தனக்குச் சேரவேண்டியதை பாகித்து தனக்கு பிரித்து கொடுக்கும்படி கொண்டு வந்த தாவா.

இந்த கேசு சிவில் புரோசிஜர் கோடு 244-வது பிரிவின்படி செல்லாதென்று வாதிக்கப் பட்டது. அதைப் பற்றி ஜில்லா ஜட்ஜியின் அபிப்பிராயத்தை தெரிந்து கொண்டு சிவில் புரோசிஜர் 244-வது கோடு செக்ஷன் இப்படிப் பட்ட தாவாவிற்கு பாதக மாட்டா தென்று தீர்மானிக்கப்பட்டது.

MADRAS HIGH COURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

Criminal.—கிரிமினல்.

கிரிமினல் அப்பீல் நெ. 105 of 1910.

ஜட்ஜிகள்:— { மிர். ஜ. மில்லர் / மிர். ஜ. மன்ரோ } முன்பாக.

பெரியசாமி கங்காணி—முதல் கைதி—அப்பீல்வாதி.

பீனல் கோடு (1860-௵த்திய 45-வது ஆக்ட்டு) 363-வது பிரிவு—பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து ஒரு ஸ்திரீயை அழைத்துக் கொண்டுபோய் விடுதல்—பொய் சாமாச்சாரங்களைச் சொல்லி அவளை தன்னுடன் வருவதற்கு சம்மதிக்கச் செய்தல்.

எதிரிகள் சில ஸ்திரீகளை தன்னுடைய குமாரர்களுக்கு விவாகம் செய்துக் கொள்வதாய் அவர்களுக்கு மாறுபாடாய் தப்பு சமாச்சாரம் சொல்லி அவர்களை பிரிட்டிஷ் இந்தியாவை விட்டு சிலோனுக்கு வரும்படியாய் அழைத்துக் கொண்டு போய் சிலோன் போய் சேர்ந்த பிறகு அந்த ஸ்திரீகளை தேயிலை பயிர் செய்யும் எஸ்டேட்டுகளில் கூலியாள்களாய் வேலை செய்யும்படி செய்தார்கள்.

எதிரிகள் அந்த ஸ்திரீகளை அவர்களுடைய சம்மத மின்றி அழைத்துக்கொண்டு போனதாகத் தீர்மானம் செய்து எதிரிகளின் பேரில் பீனல் கோடு 363-வது பிரிவின்படி குற்ற ஸ்தாபனை செய்யப்பட்டது. 1909௵த்திய 36-வது காலெண்டர் நம்பரில் செங்கல்பட்டு செஷன் ஜட்ஜ் விதித்த சிக்ஷையின் பேரில் கொண்டு வந்த அப்பீல்.

தீர்ப்பு :—அப்பீல் வாதி பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து ஒடி ஸ்திரீகளை அழைத்துக் கொண்டு போனதாக போதுமான சாக்ஷிய மிருக்கிறது. அந்த ஸ்திரீகளை முதல் எதிரியின் குமாரர்களுக்கு விவாகம் செய்து வைப்பதாக அவர்களுக்கு பொய்யான வார்த்தைகளைச் சொல்லி அவர்களை டீ. எஸ்டேட்டுகளில் கூலிகளாக அழைத்துக் கொண்டு போகப் பட்டது. ஆகையால் அந்த ஸ்திரீகளை அவர்களுடைய சம்மத மின்றி அழைத்துக் கொண்டு போனதாக பீனல் கோடின்படி பொருள் படும். ஆனால் அந்த ஸ்திரீகளை அடிமை—முறிப் பெண்களாக்கிக் கொள்வதற்கு அழைத்துக் கொண்டு போனதாக சாக்ஷியமே கிடையாது. 367-வது பிரிவின் கீழ் குற்ற ஸ்தாபனை செய்ததை 363 - வது செக்ஷன்படி குற்ற ஸ்தாபனை செய்து கீழ் கோர்ட்டார் விதித்த சிக்ஷையை காயப் படுத்தினார்கள். இந்தியா கிரிமினல் ஜர்னல் 11-வது வால்யம் 6-ம் பாகம் 368.

MADRAS HIGH COURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது அப்பீல் நெ. 454 to 456 of 1906.

ஜட்ஜிகள்:— { மிர். ஜ. வாலிஸ் / மிர். ஜ. கிருஷ்ணசாமி ஐயர் } முன்பாக

சிரகல் கோவிலகத் கோலவர்ம ராஜா அவர்கள் அப்பீல் வாதி கோவிலகத்தோரின் வார்சு.

vs

சைதம்மடத் ஆப கொம்ப புரையில் மாயான் குட்டி வகையரு—ரெஸ்பான்டெண்டுகள்.

பூமிக்குடையவனும்-பாயக்காரியும்—குத்தகை-வேறொரு குத்தகை பெற்றுக் கொண்டு முதல் குத்தகையை ரத்து செய்தல்-பின் குத்தகை சட்டப்படி செல்லத் தக்கினதல்ல— முன் குத்தகையின் கீழுள்ள சுதந்தரம் மறுபடியும் நீடிப்பது-ஒரு தேவ சத்தைச் சேர்ந்த ஊராளன் ஒருவன் சாஸ்வித குத்தகை கொடுத்தல் சட்டப்படி செல்லாதென்பது-தாலிபரம்பாடி மு.கோர்ட்டு அ. நெ. 545 of 1904ல் செய்த டிக்கிரியின் பேரில் வடமலபார் ஜில்லா கோர்ட்டுக்கு கொண்டு வந்த அ. நெ. 9,28,12 of 1905ல்செய்த டிக்ரீகளின் பேரில் செய்துக் கொண்ட இண்டாவது அப்பீல்.

தீர்ப்பு :—வாதியின் பேருக்கு 1857-ம்௵த்தில் எழுதிக் கொடுத்திருந்த குத்தகைப் பத்திரத்தின் பேரில் பாயக்காரியை நிலத்தை விட்டு அப்புறப் படுத்த வாதி கொண்டுவந்த தாவா. முனிசிபு வாதிக்கு விரோதமாய் தீர்ப்பு செய்தார். அதைப் பற்றி ஜில்லா ஜட்ஜ் ஒன்றும் சொல்ல வில்லை. ஆகையால் தாவாவில் சொல்லி யிருக்கும் குத்தகைப் பத்திரம் வாஸ்தவமானதுதானா வென்று கண்டு சொல்லும்படி தாவாவை மறுபடியும் கீழ் கோர்ட்டுக்கு அனுப்பிக்க ஜில்லா ஜட்ஜ் அவர்கள் தாவா குத்தகை பத்திரம் வாஸ்தவமானது தானென்று சொல்ல ஜில்லா கோர்ட்டு தீர்மானத்தை ரத்து செய்து டி. முன்சீபு செய்த தீர்ப்பை ஊர்ஜிதம் செய்தார்கள்.

கோயில் சொத்துகளை ஓர் தேவசத்தின் ஊராளன் தன் சுய இச்சையாய் சாஸ்விதமான குத்தகைக்கு விட அதிகாரம் கிடையாது. முதல் குத்தகை ஊர்ஜிதத்திலிருக்கும் போதே இரண்டாவது குத்தகை ரத்தாய் விட்ட தென்றுதான் பாவிக்க வேண்டும். ஆனால் இரண்டாவது செய்த குத்தகை சட்டப்படி செலாவணியுள்ள தல்லா விடில் முதல் குத்தகை ரத்தாய் விட்டதாக பாவிக்கப்பட மாட்டாது. ராமுண்ணி V. கோலவர்மவலிய ராஜா. இ. லா. ரி. 15 மதராஸ் 166 இந்த கேசை இதற்கு ஆதாரமாய் எடுத்துக் கூறப் பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம் 2-வது பார்ட்டு. 253.

MADRAS HIGH COURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது அப்பீல் நெ. 775 of 1906.

ஜட்ஜிகள் :— { மிர். ஜ. மன்ரோ / மிர். ஜ. சங்கரன் நாயர். } முன்பாக

என். எஸ். நாராயண சாமி ஐயர் வகையரா—அப்பீல் வாதிகள்.

vs

வாத்தியார் ராம ஐயர் வகையரா......அப்பீல் பிரதி வாதிகள்

லிமிடேஷன்—எதிர் விரோதமாய் அனுபவித்தல் புரோகித வேலை செய்வதற்காக கொடுக்கப் பட்ட ஸ்வாதீனம்-புரோகித வேலையைச் செய்யாமல் நின்று போவது—அப்பொழுது அதே நபர் ஸ்வாதினத்திலிருந்தால் அவன் எதிர் விரோதமாய் அனுபவிப்பவனா ?

திண்டுக்கல் டி. மு. கோர்ட்டு அ. நெ. 471 of 1903ல் செய்த டிக்கிரியின் பேரில் கொண்டு வந்த இரண்டாவது அப்பீல்.

தீர்ப்பு :—இந்த கேகில் கண்டிருப்பதைப் பார்க்குமளவில் முதல் பிரதிவாதி புரோகித வேலை செய்வதற்காக நிலம் ஸ்வாதீனம் கொடுக்கப் பட்டது. ஆனால் அவர் (1st defendant) 1880-ம் வருஷத்திலிருந்து புரோகித வேலை செய்வதை நிறுத்தி விட்டான். அப்படியே புரோகிதவேலை செய்யாமல் நிறுத்தி விட்டானென்கிற காரணத்தால் அவன் நேர் விரோதமாய் அனுபவிப்பனென்று சொல்லலாகாது. இதற்கு ஆதாரமாய் 25 பம் 602ம்பக்கம் பார்க்கவும். ஆனால் இந்த கேசில் முதல் பிரதிவாதிதான் புரோகித வேலை செய்துக் கொண்டு வருவதாய் தன்னுடைய விவரப் பத்திரிகையில் சொல்வதை சப்கோர்ட்டார் கவனிக்கவில்லை. ஆகையால் முதல் பிரதிவாதி நேர் விரோதமாய் அனுபவித்தவனா அல்லவா வென்று கண்டு தீர்மானிக்கும்படி கேசு மறுபடியும் கீழ் கோர்ட்டாருக்கு அனுப்பப் பட்டு அதன் பேரில் சப் கோர்ட்டார் முதல் பிரதிவாதி அனுபவித்தது வாதிகளுக்கு விரோத மல்ல வென்று கண்டு தெரிவித்தார். ஆகையால் கீழ் கோர்ட்டார்களின் தீர்ப்புகளை ரத்து செய்து வாதிகளின் தாவா டிக்கிரி செய்யப் பட்டது.

இதனால் ஏற்படும் முடிவு:—ஒரு பிரதிவாதி எப்பொழுது எந்தத் தொழில் செய்ய வேண்டியதோ அதைச் செய்யாமல் நிறுத்தி விட்டால் அது வாதிகளுக்கு விரோதமாய் ஸ்வாதீனத்தி லிருந்ததாக ஏற்படமாட்டாது.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம் 2-வது பார்ட்டு 252.

PRIVY COUNCIL.
பிரிவி கவுன்சல்.

(மந்திராலோசனை சபை.)

அலகபாத் ஹைகோர்ட்டிலிருந்து செய்துக்கொண்ட அப்பீல்.

ஜட்ஜிகள்:—லார்ட் மெக் நாட்டன்.
லார்ட் காலின்ஸ்.
சர் ஆர்தர் உல்சன்.
மி-ர். அமீர் அலி.

நவாப் கவாஜா மகமத்கான்..பிரதிவாதி...அப்பீல் வாதி.

Vs.

நவாப் உசேனி பீகம் என்கிற டில்பாரி பீகம்... வாதி, ரெஸ்பான்டெண்டு.

மகம்மத்யலா—காச்பந்தான் என்னும் ஓர் அக்ரிமெண்டு—பெண்சாதிக்கு கொடுத்தமாதாந்தர தொகை—புருஷன் வீட்டிலிருக்க வேணுமென்கிற ஷராகாணவில்லை. இந்த மாதாந்தர மொத்தத்திற்காக பூஸ்திதியின்பேரில் சார்ஜ கேட்பது. பெண்சாதி புருஷனிடத்தில் வாழமாட்டேனென்று சொல்வது—மாதாந்தர மொத்தத்தைக் கேட்பதற்கே ஹக்குண்டா ?—பெண்சாதி அந்த அக்ரிமெண்டில் ஒரு கக்ஷிதாரியல்லாமலிருக்க அவள் தனக்குச் சேரவேண்டிய மாதாந்தர மொத்தத்திற்கு தாவா செய்ய ஹக்குண்டா ? அவள் தன்னுடைய கற்பிழந்துவிட்டாளா என்னும் சந்தேகம் ருஜூ இல்லாவிடில் கோர்ட்டார் சந்தேகத்திற்கிடமென்று சொல்லலாகாது.

தீர்ப்பு :—இந்த வியாஜ்ஜியம் 'கர்ச்சிபண்டான்' என்னும் ஒரு அக்ரிமெண்டின் பேரில் கொண்டுவந்த தாவா. அந்த அக்ரிமெண்டின் தாத்பரியம் யாதெனில் 'வெத்திலை பாக்கு பெட்டி சிலவு' முக்கியமாய் இந்தியாவின்மேல் மாகாணங்களிலுள்ள நல்ல அந்தஸ்துள்ள துலுக்கர்கள் தங்களுடைய பெண்சாதிமார்களுக்கு மாதாந்தரம் யேதோ கொஞ்சம் மொத்தம் வெத்திலை பாக்கு பெட்டி சிலவுக்கு எழுதிவைக்கும் மொத்தம். விவாகம் செய்துக்கொண்ட பிள்ளையும் பெண்ணும் மைனர் வயதுள்ளவர்களா யிருக்கையில் அவர்களுடைய தாய் தகப்பன்மார்களாகிய போஷண கர்த்தர்கள் (கார்டியன்கள்) ஓர் ஏற்பாடு செய்துக்கொண்டார்கள். ஆனால் சாதாரணமாய் இப்படி எழுதி வைக்கப்படும் மொத்தத்தை பெண்சாதி தன் புருஷனிடம் கலந்து வாழும்காலத்தில்தான் வாங்கிக்கொண்டு வருவது வழக்கம் ஆனால் அப்படி பெண்சாதி மாதாந்தரம் வாங்கும் அந்தத் தொகையை அவள் வெத்திலை பாக்கு

முதலான தின்பண்டங்களுக்கும் பெட்டிக்கும் சில வழிக்காமல் தான் தறித்துக்கொள்ளும் ஆபரணங்களில் சிலவழித்தாலும் அதைப்பற்றி புருஷன் அவளை கேட்பதற்காவது, தண்டிப்பதற்காவது அவனுக்கு அதிகாரம் கிடையாது.

புருஷனுடைய தகப்பன் பெண்ணின் தகப்பனுக்கு ஒரு அக்ரிமெண்டு எழுதிக்கொடுத்து அதன்படி அவன் அந்தப் பெண் அவனுடைய குமாரனாகிய அவளுடைய புருஷனிடத்தில் சேர்ந்து வாழ்ந்திருந்தால் மாத்திரம் மாதம் இவ்வளவு தொகை அவளுக்கு கொடுக்கவேண்டுமென்றுஎழுதிக்கொடுத்திருந்தான்.

பெண்சாதி புருஷனுடன் கலந்து வாழமாட்டேனென்று சொன்னால் கூட அந்த மொத்தத்தை அவளுக்கு கொடுத்துதான் வரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

பெண்சாதியானவள் அந்த அக்ரிமெண்டுக்கு ஒரு கக்ஷிதாரியல்லாவிடினும் அவளுடைய புருஷனின் தகப்பன் அவளுக்கு மாதாந்தரம் கொடுக்கவேண்டியதாக எழுதிவைத்த மொத்தம் அவனுடைய பூஸ்திதியின்பேரில் ஒரு சார்ஜாய் வசூலிக்கத்தக்கதென்று அவன் பந்தப்பட்டு அந்த அக்ரிமெண்டில் கண்டு எழுதி யிருப்பதால், அந்த அக்ரிமெண்டின் ஷரத்துப்படிக்கு அவள் தான் அதை அனுபவிக்க வேண்டியவளாகையால் அவள் அந்த அக்ரிமெண்டின் ஷரத்தை ஊர்ஜிதப்படுத்தி தொகையை வசூல் செய்வதற்கு தாவா கொண்டுவர அவளுக்கு நியாயப் பிரகாரம் பூராய் ஹக்குண்டென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அவள் தன்னுடைய கற்பிழந்து நடந்தாளென்பது ருஜுவாகாவிடினும் அவள் கற்புடையவளென்று சொல்வதற்கு திடமில்லையென்றும் சந்தேகத்திற்கிடமாயிருக்கிறதென்றும் ஒரு கோர்ட்டார் சொல்லியிருப்பது சுத்த பிசகு; ஏனென்றால் அப்படி அவளுடைய நடவடிக்கையைப்பற்றி சொல்வது மிக்க பிரமாதமான விஷயமாகையால் அப்படி அந்த கோர்ட்டு ஜட்ஜி சொல்வதற்கு கொஞ்சமேனும் நியாயம் கிடையாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 7-வது வால்யம் 2-வது பார்ட்டு 237.

PUNJAB CHIEF COURT.
பஞ்சாப் சீப் கோர்ட்டு.

சிவில் ரிவிஷன் மனு நெ. 643 of 1909.

ஜட்ஜி:—மிர். ஜ, ஷாடின்.

காஷிராம் ... வாதி...அப்பீல் வாதி.

vs

கோபிமால் வகையரா...பிரதிவாதிகள்—ரெஸ்பான்டென்டுகள்.

சி. பு. கோ. (14 of 1882) 158, 558, 623-வது பிரிவுகள்—லிமிடேஷன் ஆக்டு (15 of 1877) 2-வது ஷெடேல் 168-வது ஆர்டிகல்.

கட்சிதாரர் ஆஜராகாமல் நம்பரைத் தள்ளுபடி செய்வது.—அப்படி தள்ளுபடி செய்த டிக்ரியின்பேரில் செய்த அப்பீல் விசாரணையில் கட்சிதாரர் ஆஜராகாமல் அப்பீலும் தள்ளுபடி செய்யப்பட்டது. அப்பீல் தள்ளுபடி செய்த 30-நாள் கழிந்தபின் அந்த அப்பீலை மறுபடியும் பைலில் எடுத்துக்கொண்டு விசாரணை செய்யும்படிக்கு செய்துக்கொண்ட மனு.—அப்படி செய்துக்கொள்ளப்பட்ட மனுவை ரிவியூபிட்டிஷனாய் பாவித்தல்—ரிவியூ (புணர் விசாரணை.)

ஓர் நம்பரில் வாதி ஆஜராகாவிடில் சிவில் புரோசீஜர் கோடு 158-வது பிரிவின்படி அந்த நம்பரைத் தள்ளுபடி செய்ய நியாயம் கிடையாது. இப்படி மேற்சொல்லிய 158-வது பிரிவின் கீழ் நம்பரைத் தள்ளுபடி செய்த டிக்ரியின்பேரில் வாதி அப்பீல் செய்துக்கொண்டான். ஆனால் அந்த அப்பீலை வாதி மேனுக்கு நடத்தாமற் போயினதற்காக டிவிஷனல் ஜட்ஜ் அந்த அப்பீலை தள்ளுபடி செய்துவிட்டார். அப்படி தள்ளுபடி செய்த 30-நாள் கழிந்தபின் மறுபடியும் அந்த அப்பீலை பைலில் எடுத்துக்கொண்டு விசாரணை செய்யும்படிக்கு மனு செய்துக்கொள்ளப்பட்டது. இப்படிப்பட்ட மனுக்களுக்கு கால நிர்ணய சட்டத்தில் (லிமிடேஷன் ஆக்டில்) தள்ளுபடி செய்த 30-நாள்களுக்குள் தான் அப்படிப்பட்ட மனு செய்துக் கொள்ளவேண்டுமென்று நிபந்தனை செய்யப் பட்டிருக்கிறது—அந்த மனுவின்பேரில் டிவிஷனல் ஜட்ஜி பிரதிவாதிகளுக்கு நோட்டீசு பிறப்பித்தார். இந்த தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து அப்பீலை மறுபடியும் ஏன் விசாரிக்கலாகாதென்று பிரதிவாதிகளுக்கு நோட்டீசு போனபிறகு அந்த டிவிஷனல் ஜட்ஜை இன்னொரிடத்திற்கு மாத்திவிட்டார்கள். அவருக்குப் பதிலாய் வந்தவர் அப்பீலை மறுபடியும் விசாரணை செய்து முன் கோர்ட்டார் அந்த நம்பரின்பேரில் என்ன உத்தரவு செய்தார்களோ அதைக் காயப்படுத்திவிட்டார். அப்படி செய்த உத்தரவின்பேரில் வாதி ரிவிஷன் மனு செய்துக்கொண்டான். அப்பீலை பைலில் எடுத்துக்கொண்டு விசாரணை செய்யும்படிக்கு செய்துக்கொண்ட மனு தள்ளுபடி செய்த 30-நாள் கழிந்தபின் செய்துக்கொண்டதாகையாலும் அந்த 30-நாள் டயத்திற்குமேல் தவணை கொடுக்க சட்டப்படி கோர்ட்டாருக்கு அதிகாரம் கிடையாதாகையாலும் தள்ளுபடி செய்த டிக்ரியைத்தான் கடைசி டிக்கிரி யென்று சொல்லவேண்டியதென்றும் எதிர்வாதம் கூறினார்கள்.

தீர்ப்பு:—தள்ளுபடி செய்த உத்தரவின் பேரில் செய்துக்கொண்ட மனுவை ரிவியூ மனுவாய் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் கீழ் அப்பீல் கோர்ட்டார் முன் நடந்த நடவடிக்கைகளில் சட்டத்திற்கு விரோதமான ஒழுங்கீனம் யாதொன்றும் நடந்ததாகத் தெரியவில்லை என்று தீர்ப்பு சொன்னார்கள். இது லூடியானாமுதல் கிலாஸ் முன்சீபு நெம்பரைத் தள்ளுபடி செய்த டிக்ரியின்பேரில் செய்துக்கொண்ட அப்பீலில் அம்பாலாடிவிஷனல் ஜட்ஜி செய்த உத்தரவின்பேரில் செய்துக்கொண்ட ரிவிஷன் மனு.

லாலா பல்வன்ட் ராய் ... மனுதாரன் வக்கீல்.

லாலா லாஜ்புட்ராய்...ரெஸ்பான்டென்டு வக்கீல்.

தீர்மானம்:—இந்த கேசின் முக்கியமான ரெஸ்பான்டென்டினுடைய வக்கீல் முன்சீபு கோர்ட்டார் சி. பு. கோ. 158-வது பிரிவின்கீழ் செய்த உத்தரவு சட்டத்திலுள்ள நிபந்தனைகளுக்கு விரோதமானதல்லவென்று வாதிக்கவுமில்லை. (சீத்தாரபேகம் V. துல்சிசிங்க் இ. லா. ரி. 23 அ 462.) ஆனால் முனிசீபு கோர்ட்டார் உத்தரவின்பேரில் செய்துக் கொள்ளப்பட்ட அப்பீலை டிவிஷனல் ஜட்ஜி தள்ளுபடி செய்த 30-நாள் கழிந்தபின் அந்த அப்பீலை பைலுக்கு எடுத்துக் கொள்ளும்படி செய்துக்கொண்ட மனுவிற்கு லிமிடேஷன் ஆக்டு 2-வது ஷடேல் 168-வது ஆர்டிகலின்படி காலதோஷம் வந்துவிட்டமையால் அந்த மனுவை அங்கீகரித்துக்கொண்டு அப்பீலை விசாரணை செய்தது சரியல்லவென்று வாதிக்கப்பட்டது. இன்னும் அப்படி சட்டத்தில் குறித்திருக்கும் 30-நாளைக்குமேல் கொடுக்க உத்தரவு செய்ய கோர்ட்டாருக்கு அதிகாரம் கிடையாதென்றும் வாதிக்கப்பட்டது. இந்த வாதத்திற்கு உத்தரமாய் கோர்ட்டார் இந்த மனுவை ரிவியூ மனுவாய் எடுத்துக்கொண்டு அதன் பேரில் பிரதிவாதிகளுக்கு நோட்டீசு கொடுக்கவும் பிறகு முன் கோர்ட்டார் உத்தரவை ரத்து செய்யவும் அப்பீலை மறு விசாரணை செய்யவும். பின் வந்த ஜட்ஜிக்கு அதிகாரமுண்டென்று தான் சொல்லவேண்டும். ஆகையால் முதல் கோர்ட்டார் செய்த உத்தரவை ரத்துசெய்து கேசை மறுபடியும் விசாரணை செய்து சட்டப்படி பைசல் செய்யும்படிக்கு உத்தரவு செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பாகம் 482.

PUNJAB CHIEF COURT.
பஞ்சாப் சீப் கோர்ட்டு.

—:o:—

இரண்டாவது அப்பீல் நெ. 490 of 1908.

தாராசண்டு...பிரதிவாதி...அப்பீல்வாதி.

புத்ரால் வகையரா...வாதிகள்...ரெஸ்பான்டென்டுகள்.

காண்ட்ராக்ட் ஆக்டு (9 of 1872) 73-வது பிரிவு—காண்ட்ராக்ட் இனிமேல் வரும் ஓர் குறித்த தினத்தில் ஒருவனுக்கு தானியம் விக்கிரயம் செய்வதாக ஒப்பந்தம் செய்துக்கொள்ளுதல். அந்த உடன்படிக்கையின்படி தானியத்தை ஒப்பியாமல் தவறிப்போவது, நஷ்டத்திற்கு தாவா நாள் ஏற ஏற தானியத்தின் விலை மாறிக்கொண்டே வருவது.

ஓர் நம்பரில் பிரதிவாதி வாதிகளுக்கு ஓர் குறித்ததினத்தில் ஓர் குறித்த விலைக்கு கொள்ளு விற்பனை செய்வதாக ஒப்புக்கொண்டான். ஆனால் அந்தப்படி செய்யத் தவறிப்போனான் அதன்பேரில் வாதி குறித்த அந்த தினம் பகல் 1-மணி வரையில் கொள்ளின் விலை மிக்க அதிகமாயிருந்ததாகவும் பிறகு அன்றையதினம் சிலர் பஞ்சாய்த்து கூடி கொள்ளின்விலை இவ்வளவென்று நிஷ்கரிஷை செய்தார்களென்று சொல்லி தங்களுக்கு பிரதிவாதியினிடத்திலிருந்து காம்பென் சேஷன் (பிரதிபலன்—நஷ்டம்) கட்டிக் கொடுக்கும்படிக்கு தீர்மானம் செய்யும்படிக்குத் தாவா செய்தான்.

தீர்ப்பு:—பஞ்சாயத்தார் தீர்மானம் வாதியை எந்த விதத்திலும் கட்டுபடுத்தாதென்றும் அன்றையதினம் 4 மணி வரையில் கொள்ளு என்ன விலையாயிருந்ததோ அந்த உயர்ந்த விலை மேனிக்கு வாதி பிரதிவாதியினிடம் காம்பென் சேஷன் வசூல் செய்ய நியாயமுண்டு. இது பிராஜ்பூர் முதல் கிலாஸ் முனிசீபு செய்த டிக்ரியை டிவிஷனல் ஜட்ஜி மாற்றி செய்த டிக்ரியின்பேரில் செய்துக்கொண்ட இரண்டாவது அப்பீல்.

தீர்மானம்:—இந்த கேசில் பிரதிவாதிகளுக்கு 1903-ம் ஆண்டு ஆர்சூதி சம்பத் மாதம் 13-ந் தேதி இரண்டு கோட்டை (கோட்டை ஒன்றுக்கு 1250-மணங்குக்காகவும் மணங்கு ஒன்றுக்கு ரூபாய் 2—1—6 வும்) அதே மாதிரியான இன்னொரு கோடா கொள்ளு மணங்கு ஒன்றுக்கு ரூபாய் 2–2–6 மேனிக்கும் சப்ளை செய்வதாக ஒப்புகொண்டான். அப்படியே கொள்ளு சப்ளை செய்யப்படவில்லை. இதற்குக் காரணம் பிரதிவாதியின் பிசகுதானென்று வாதிகள் சொல்லுகிறார்கள். பிரதிவாதி சொல்வது இந்த மூன்று கோட்டை கொள்ளையும் சித்தப்படுத்தி பெற்றுக்கொள்ளும் கடமை வாதிகளுடையதென்றும் அவர்கள் அந்த ஏற்பாட்டின்படிக்குச் செய்யவில்லையென்றும் வாதிக்கிறான்.

வாதிகள் சொல்வது யாதெனில்:—குறித்த அந்த தினத்தில் கொள்ளின் விலை மணங்கு ஒன்றுக்கு ரூபாய் 2—6—3 ஆக இருந்ததாகவும் அந்த தேதியில் அவர்களுக்கு பிரதிவாதி ஒப்பந்தத்தின்படி கொள்ளு கொடுத்திருந்தால் அவர்கள் மேலே கொல்லிய 2—6—3 மேனிக்கு வித்திருபபார்களென்றும் அப்படி கெடாததினால் அவர்களுக்கு சுமார் ரூபாய் 1000 லாபம் வருவதை இகழ்ந்துவிட்டார்களென்றும் அந்த மொத்தத்திற்கு டிக்ரி செய்யும்படிக்கும் கேட்டுக்கொள்ளுகிறார்கள். கேசு அநேக காலமாய் அப்பீலாய் மறுபடியும் ரிமாண்டாய் கடைசியாய் டிவிஷனல் ஜட்ஜ் ரூபாய் 1000-மும் டிக்ரி செய்த முதல் கோர்ட்டாரின் தீர்மானத்தை ரத்துசெய்து வாதிகளுக்கு ரூபா 74—2—3 க்கு டிக்ரி செய்தார். இந்த மொத்தம் மணங்கு ஒன்று ரூபா 2—5—0 வீதம் ஏற்பட்டது. டிவிஷனல் ஜட்ஜி செய்த இந்த டிக்ரியின் பேரில் பிரதிவாதி அப்பீல் செய்துக்கொண்டான். வாதிகள் தங்களுக்கு ரூபாய் 1000-க்கும் டிக்ரி செய்திருக்கவேண்டியதென்று அப்ஜெக்ஷன் மெமோ கொடுத்தார்கள். குறித்த அந்த தினத்தில் விலை 1-மணி வரையில் அதிகமா யிருந்திடினும் பிறகு சாயந்திரம் குறைந்து விட்டதென்று அன்றையதினம் கூடிய பஞ்சாயத்தார் தீர்மானத்தினால் தெரிய வருகிறது. பஞ்சாயத்தாரை விலையைப்பற்றி தீர்மானம் செய்யும்படிக்கு யாரும் கேட்டுக் கொள்ளவில்லை யாகையால் பஞ்சாயத்தாருடைய தீர்மானத்தை ஒப்புக்கொள்ள நியாயமில்லை. டிவிஷனல் ஜட்ஜி ரூபா 2—5—0 மேனிக்குத் தீர்மானம் செய்தது பிசகு என்று சொல்லி வாதிக்கு பூராய் மொத்தம் ரூபாய் 1000-க்கும் டிக்ரி கொடுத்து பிரதிவாதியின் அப்பீலைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பாகம் 485.

CRIMINAL—கிரிமினல்.
PUNJAB CHIEF COURT.
பஞ்சாப் சீப் கோர்ட்டு.

——:o:——

கிரிமினல் ரிவிஷன் மனு நெ. 1123 of 1909.

ஜட்ஜு :—மி-ர். ஜ. ஜான்ஸ்டன்.

சக்கிரவர்த்தி பிரதிவாதி மனுதாரர்.

Vs.

ஹர்னும்சிங்க் குற்றவாளி ரெஸ்பான்டென்ட்.

இந்தியன் பினல்கோடு (45 of 1860) 498-வது பிரிவு-விவாகமாயி புருஷனிடத்தில் வாழும் ஸ்திரீயை அடித்துக் கொண்டுபோய் விடுதல், கி. பு. கோ. (5 of 1898) 345-வது பிரிவு—அந்த குற்றத்தை போலீசார் விசாரணை செய்துக் கொண்டிருக்கையில் ராஜியாய் விடுதல்.

கேசின் விபரம் :—பிரியாதியாகிய சுமார் 50-வயதுள்ள அர்ஜன் என்பவன் சுமார் 16-வயதுள்ள பெண்ணை விவாகம் செய்துக்கொண்டு புருஷனும் பெண்சாதியுமாய் வாழ்ந்துக் கொண்டிருக்கையில் 1907-ம்ஹு செப்டெம்பர்மீ 27உ தன்னுடைய பெண்சாதியை அவனிடத்திலிருந்து அழைத்துக் கொண்டுபோய் விட்டார்களென்று காரக்சிங்க் என்பவன் பேரிலும் அவனுடைய தாயாரின் பேரிலும் பிராது செய்தான். 1908-ம்ஹு ஜனவரிமீ 18உ கேசு ராஜியாய் விட்டது. ஆயினும் புருஷன் மறுபடியும் அவன் 1908ஹு டிசம்பர்மீ ஓர் நம்பர் செய்தான். அந்த நம்பரில் எதிரி பிப்ரவரிமீ தன்னுடைய வீட்டின் கதவு தாப்பாளை எடுத்துவிட்டு அந்த வீட்டிற்குள்ளிருந்த தன்னுடைய பெண்சாதியையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டுபோய் விட்டானென்று அவன் பேரில் இ. பி. கோ. 497, 498, 363-பிரிவுகளின் கீழ் பிராது செய்தான். ஆனால் அவன் முன் சொல்லிய ஸ்டேட்மெண்டிலும், விளம்பரத்திலும் தன்னுடைய பெண்சாதியையும் பிள்ளையையும் அழைத்துக்கொண்டு போனபோது தான் வீட்டில் இல்லையென்றும் யாரோ ஒரு மூன்றுவது மனுஷன் மூலமாய் தன்னுடைய பெண்சாதியையும் குழந்தையும் அழைத்துக்கொண்டு போய்விட்டார்களென்றும் சொல்லியிருக்கிறான். இந்த கேசை போலீசார் விசாரணை செய்து அர்ஜன் என்பவனுடைய பெண்சாதியும் பிள்ளையும் எதிரியினிடத்தில் இல்லையென்றும் அவனிடத்திலேயே தான் இருந்தார்களென்றும் ரிப்போர்ட்டு செய்தார்கள். 1909ஹு மார்ச்சுமீ 18உ கேசை ராஜி செய்துக்கொண்டு இன்ஸ்பெக்டர் முன்பால் வாப்ஸ் வாங்கிக்கொண்டார்கள். ஆனால் 1909-ஹு மேமீ 7உ அர்ஜன் என்பவன் தான் ராஜிக்கு ஒப்பவில்லை யென்றும் அவனை ராஜியாகும்படி பலவந்தம் செய்தார்களென்றும் சொல்லி கேசை நடத்துவதாக சொன்னான். அதன்பேரில் முதல் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டு இ. பி. கோ. 498-வது பிரிவின் கீழ் எதிரியின் பேரில் வாரண்டுக்கு உத்தரவு செய்தார். அந்த உத்தரவின்பேரில் செய்துக்கொண்ட ரிவிஷன் மனு செஷன்ஸ் ஜட்ஜு அவர்கள் இது அநேகநாள் கழிந்தபின் செய்யப்பட்டதாலேயாலும் அந்த ராஜியில் அர்ஜன் என்பவன் தன்னுடைய தம்ப்-மார்க்போட்டு (Thumb Impression) எழுத்துமூலமாய் ராஜியாய் விட்டபடியால் இப்போது அவன் அந்த ராஜிக்கு அவனை நிர்ப்பந்திந்தராக சொல்லும் பேச்சு ஏற்றுக்கொள்ளப்பட்டதல்ல வென்றும் அப்படி ராஜி செய்துக்கொண்டதும் ஓர் பொறுப்புள்ள போலீஸ் உத்தியோகஸ்தர் முன்னிலையில் செய்துக்கொண்ட ராஜியாகையால் அதைப்பற்றி விரோதம் சொல்வதற்கு நியாயம் கிடையாதென்றும் இன்னும் அந்தக் குழந்தையை இ. பி. கோ. 363-வது பிரிவுக்குள் விரோதமாய் எடுத்துக்கொண்டு போய்விட்டார்களென்பதற்கு ருஜு கிடையாதென்றும் சொல்லியிருப்பதை ஒத்துக்கொண்டு ஹைகோர்ட்டார் முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட்டு அவருடைய அதிகாரத்தை மிஞ்சி செய்த உத்தரவென்று அதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வதுபாகம் 497.

MADRAS HIGH COURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 1065 of 1907.

ஜட்ஜுகள் :—மி-ர். ஜ. மன்ரோ.
மி-ர். ஜ. சங்கரன் நாயர்.

பிட்சிநத்து அப்பீல்வாதி.

ராமசாமி நாயக்கர் வகையரா ரெஸ்பான்டென்டுகள்.

ஓர் வியாஜ்ஜியத்தில் வாதி தன்னுடைய நிலத்தை தான் அனுபவிக்கவேண்டுமென்று தாவா செய்தான். விசாரணை நடந்ததில் பிரதிவாதியும் அந்த நிலத்திற்கு ஓர் பாகஸ்தனென்று தெரியவந்தால் வாதியும் பிரதிவாதியும் சேர்ந்தாப் போல் அந்த நிலத்திற்கு ஏக சுதந்தரவாளிகளென்று தீர்மானித்து டிக்ரி செய்யலாம்.

தூத்துக்கொடி டி. மு. கோ. அசல் நெ. 86 of 1905-ல் செய்த டிக்ரியின்பேரில் தூத்துக்கொடி சப் கோர்ட் அப்பீல் நெ. 112 of 1906-ன் தீர்மானத்தின் பேரில் செய்துக்கொண்ட இரண்டாவது அப்பீல்.

தீர்மானம் :—இந்த வியாஜ்ஜியத்தில் வாதி ஓர் நிலத்திற்குத்தான் ஏக சுதந்தரவாளியென்று தீர்மானித்து அந்த நிலத்தை அவன் வசம் ஒப்புவிக்கும்படிக்குத் தாவா செய்தான். ஆனால் விசாரணை நடந்த பிறகு அந்த நிலத்திற்கு வாதி ஏக சுதந்தரவாளி யல்லவென்றும் 3-ம் பிரதிவாதியும் அதற்கு கூட்டு சொந்தக்காரனென்றும் கண்டு வாதிக்கு கோர்ட்டார் எவ்விதமான டிக்ரி கொடுக்கவேண்டுமென்று பார்த்தாலோ பிரதிவாதிக்கும் வாதியுடன் ஏக சுதந்தரமுண்டென்று டிக்ரி செய்வதுதான் யுக்தமமென்று தீர்மானித்தார்கள். ஆகையால் கீழ் கோர்ட்டார்களுடைய டிக்ரிகளை ரத்து செய்து பிரதிவாதியுடன் வாதியும் தனக்கு அந்த நிலத்தில் எவ்வளவு சுதந்தரமுண்டோ அவ்வளவு மட்டுக்கு அனுபவிக்கலாமென்று தீர்மானித்தார்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பாகம் 502.

ALLAHABAD HIGH COURT.
அலகாபாத் ஹைகோர்ட்டு.

——:o:——

ஜட்ஜு :—மிர். ஜ. கரமட் உசேன்

சையத் அமீர் உசேன்......வாதி—அப்பீல்வாதி.

vs

முசம்மட் இம்டியாஜ் பதீபா வகையரா...ரெஸ்பான்டென்டுகள்.

கொதுவை—அதன் பொருள்-மாகுலில் நிலுவை நிற்கும் தொகையை அசல்தொகையில் செல்லுவைக்க வேண்டுமென்பது.

கொதுவை பத்திரத்தின் படிக்கு கொதுவை வைத்துக் கொண்டவன் அந்த சொத்தின் குடக்கூலியை வசூல் செய்து வருஷத்தில் ரூபாய் 7-8-0 தான் கொதுவைப் பணத்திற்கு வட்டியாய் எடுத்துக் கொண்ட மிகுதி நிற்கும் மாகுல் தொகை ரூபாய் ஒன்றை கொதுவை வைத்தவனுக்கு கொடுத்து விட வேண்டுமென்றும் கொதுவை வைத்த தொகை அசலை செலுத்திவிட்டால் சொத்தை விட்டுவிட வேண்டுமென்றும் கண்டிருக்கிறது. அந்த ஷரத்தின் படிக்கு கொதுவை வைத்துக் கொண்டவன் கொதுவை வைத்தவனுக்கு மிகுதி நிற்கும் மாகுல் தொகை ரூபாய் ஒன்றை வருஷா வருஷம் செலுத்தி வரயில்லை.

அப்படி நிலுவை நிற்கும் தொகையை வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று மேனிக்கு சேர்ந்த மொத்தத்தை கொதுவையிலிருந்து மீட்கும் காலத்தில் அல்லது கொதுவை தொகையிலிருந்து கழித்துக் கொண்டு மிகுதி நிற்கும் தொகையைச் செலுத்தி விட்டு கொதுவையை மீட்டுக் கொள்ள ஹக்குண்டு.

அலிகர் அட்டிஷனல் சப்கோர்ட்டார் தீர்மானத்தின்பேரில் செய்துக் கொண்ட இரண்டாவது அப்பீல்.

தீர்மானம் :—நக்கீ உசேன் என்பவன் 1892-ம்ஹு நவம்பர்மீ 16உ அமிஉசேன் என்பவனுக்கு தன்னுடைய நிலங்களில் சில துண்டுகளை கொதுவை வைத்து பத்திரம் எழுதிக் கொடுத்து ரூபாய் 100 கடன் வாங்கிக் கொண்டான். அந்த கொதுவை தஸ்தாவேஜியில் மேற்கண்ட ஷரத்துகள் கண்டு எழுதியிருந்தன. பிறகு கொதுவை வைத்தவன் காலமாய் விட்டான். அவனுடைய வார்சு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்றுமேனிக்குக் கழித்து விட்டு மிகுதி தொகையைச் செலுத்திதன் சொத்தை-மீட்டுக் கொள்ள வேண்டுமென்று தாவா செய்தான். முதல் கோர்ட்டார் பத்திர ஷரத்தின்படிக்கு கழித்து விட்டு ரூபாய் 32 ஆறு மாதத்திற்குள் செலுத்தி விட்டு சொத்தை மீட்டுக் கொள்ளும்படி டிக்கிரி செய்தார்கள். அந்த டிக்கிரியின் பேரில் அப்பீல் செய்துக் கொண்டதில் கீழ் அப்பீல் கோர்ட்டார் பத்திர ஷரத்தின்படிக்கு பூராய்த் தொகை ரூபாய் 100யும் கட்டி விட்டுதான் சொத்தை ஒப்பித்துக் கொள்ள வேண்டியதென்று தீர்மானம் செய்தார்கள். அந்தப் பத்திரத்தில் கொதுவை வைத்துக் கொண்டவன் மிகுதி நிற்கும் மாகுல் தொகை ரூபாய் ஒன்றை வருஷா வருஷம் செலுத்தா விடில் அந்த மொத்தத்தை அசலில் கழித்துக் கொள்ளலா மென்பது ஓர் ஷரத்தாய் காணப்பட வில்லை யென்று தன் தீர்ப்புக்கு காரணம் சொன்னார். வாதி வக்கீல் கொதுவைப் பத்திரத்தில் அப்படிப் பட்ட ஷரத்தில்லா விடினும் அதைக் கழித்து விட்டு மிகுதி நிற்கும் அசல் தொகையைச் செலுத்தி விட்டு சொத்தை மீட்டுக் கொள்ள ஹக்குண்டென்று வாதித்தார். அதற்கு ஆதாரமாய் இ. லா. ரி. 6 அ 303 எடுத்துக் காண்பித்தார் அதன் பேரில் வாதி வக்கீல் சொல்லும் வாதத்தை அங்கீகரித்துக் கொண்டு கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்த டிக்கிரியை மாற்றி விட்டு முதல் கோர்ட்டார் டிக்கிரியை ஊர்ஜிதம் செய்தார்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பாகம். 503.

MADRAS HIGH COURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 146J of 1907.

ஜட்ஜிகள் :—{ ஜ. சர். ரால்ப் பென்சன். மி-ர். ஜ. கிருஷ்ணசுவாமி ஐயர். } முன்பாக

மங்கலசாமி தேவர் ... அப்பீல் வாதி.

vs

சுப்பைய பிள்ளை வகையரா...ரேஸ்பான்டென்டுகள்.

ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் (3 of 1877) 3, 17-வது பிரிவுகள்—பின் குடிக்கூலி—அந்த நிலத்தில் உற்பத்தியாகும் வெறெந்த மாகுலாவது—பின்னிட்ட குடிக்கூலியை ரூபாய் 100-க்கு கொதுவை வைத்தல்—அந்த கொதுவைப் பத்திரத்தை ரெஜிஸ்டர் செய்யவேண்டுமென்பது அவசியமா—ரெஜிஸ்தூராகாத பத்திரம் பெற்றுக்கொண்டவனுடைய ஸ்திதியாது—அக்கிரமமாய் அந்த சொத்தின்பேரில் பிரவேசிப்பது.

நிலத்தின் பின்னிட்ட குடிக்கூலியும் ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டு 3-வது பிரிவின்படிக்கு அந்த நிலத்திலுண்டாகும் மாகுலென்றுதான் அர்த்தம் செய்யவேண்டியது.

அவ்விதமாய் ஏற்பட்ட பின் குடிக்கூலி ரூபாய் 100-க்கு அதிகமா யிருந்தால் அதைக் கொதுவை வைக்கும் பட்சத்தில் அந்த கொதுவை பத்திரத்தை ரெஜிஸ்தர் செய்யவேண்டிய தென்பது அவசியம். ரெஜிஸ்டராகாத கொதுவை பத்திரத்தை வைத்துக்

கொண்டிருப்பவன் அந்த நிலத்தில் அக்கிரமமாய்ப் பிரவேசிக்கும் ட்ரெஸ்பாஸர் என்றும் அப்படிப்பட்ட பத்திரம் சாட்சியத்தில் எடுத்துக்கொள்ளப்படத் தக்கதல்ல.

இந்த இரண்டாவது அப்பீல் பரமகுடி டி. மு. கோர்ட்டு அசல் நெ. 693 of 1904-ல் செய்த டிக்ரியின்பேரில் கொடுக்கப்பட்ட மதுரை ஜில்லா கோர்ட்டு அப்பீல் நெ. 581 of 1905-ல் செய்த டிக்ரியின் பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

தீர்மானம் :—வாதிகாவூர் கிராமத்தின் நிலங்களுடைய மேல்வாரத்தில் கால் பாகத்திற்குச் சொந்தக்காரன். இந்த நப்பரில் முதல் பிரதிவாதிமேல் சப் கோர்ட்டில் அசல் நெ. 24 of 1898-ல் அந்த மேல் வாரத்தின் பங்கில் 3-பங்குகளுக்கு டிக்ரி பெற்றிருந்தான். வாதியின் கார்டியன் வாதியினுடைய தகப்பன் அக்கிரமமாய் பெற்றுக்கொண்ட குடிக்கூலிக்குப் பொறுப்பாய் வாதிக்குமேல் வாரத்திலுள்ள கால் பங்கு சுதந்தரத்தைக் கொதுவை பெற்றுக் கொண்டான். இந்த லேவாதேவி பின்னிட்ட குடிக்கூலியை கொதுவை வைத்துக்கொள்ளப்பட்ட பாபத்தென்று தான் பாவிக்கவேண்டும்.

கீழ் இரண்டு கோர்ட்டுகளிலும் அப்படி கொதுவை வைத்துக்கொண்ட பத்திரம் ரெஜிஸ்டராகாமையால் சாக்ஷியத்தில் எடுத்துக் கொள்ளத்தக்கதல்லவென்று தீர்ப்பு செய்தார்கள். ஆனால் முதல் கோர்ட்டார் முதல் பிரதிவாதி அந்த நிலத்தில் அக்கிரமமாய்பிரவேசித்த ட்ரெஸ்பாஸரென்று தீர்மானித்து வாதிக்கு ரூபாய் 496-8-6 க்கு டிக்ரி செய்தார். கீழ் அப்பீல் கோர்ட்டாரோ வாதியின் தாவாவைப் பூராகவும் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஹைகோர்ட்டார் அப்படி கொதுவை வைத்த தினத்தில் தான் கொதுவை வைத்த பொருள் இன்னதென்று ஏற்படுத்த நிக்ஷயமில்லையாகையால் அந்த கொதுவைப் பத்திரம் கிரமமான தல்லவென்றும் அது ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டின்படிக்கு ரிஜிஸ்டரா யிருக்கவேண்டிய தென்றும் தீர்மானம் செய்தார்கள்.

லாகூர் இந்தியன் கேசுசள் வால்யம் 6. பார்ட்டு 4, பக்கம் 504.

MADRAS HIGH COURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 1583 of 1908.

ஜட்ஜிகள் :—ஜஸ்டிஸ் ஸர் ரால்ப் பென்சன்.
மி-ர், ஜ. கிருஷ்ணசுவாமி ஐயர்.

மார்தோகோரோ வகையரா...அப்பீல்-வாதிகள்.

VS

கோபா பந்து நிப்பகோ வகையரா...ரேஸ்பான்டேன்டுகள்.

இந்த வியாஜ்ஜியம் ஓர் கொதுவை தஸ்தா வேஜியின்பேரில் கொண்டு வரப்பட்டது. அந்த பத்திரத்தில் வருஷா வருஷம் வட்டி செலுத்திக் கொண்டுவருவதாகவும்—கொதுவை வைத்துக் கொண்டவன் அந்த சொத்திலிருந்து வசூல் செய்யும் மொத்தத்தில் வட்டிக்காக எடுத்துக்கொண்டது போக மிகுதி தொகையை அசலில் செல்லுவைத்து வரவேண்டுமென்றும் கண்டிருக்கிறது. அப்படி வட்டி செலுத்தத் தவறினால் அந்த சொத்தையே தான் கடன் வாங்கிய அசல் தொகைக்கே கிரயம் செய்துவிடப்படமென்றும் கண்டிருந்தது. கீழ் இரண்டு கோர்ட்டார்களும் அந்த கிரயம் செல்லுமென்று தீர்மானம் செய்தார்கள்.

ஆனால் ஹைகோர்ட்டார் அது கிரயமாகாதென்றும் அந்த சொத்து கொதுவை தானென்று பாவிக்கப்படுமென்றும் தீர்மானித்து ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்ட் 92-வது பிரிவின்படிக்கு கொதுவையிலிருந்து மீட்டுக் கொள்வதற்கு நியாயமுண்டென்று தீர்மானிக்கப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பாகம் 512.

BOMBAY HIGH COURT
பம்பாய் ஹைகோர்ட்டு.

ஓரிஜினல் சிவில்சூட் நெ. 792 of 1909.

ஜட்ஜி :—மி-ர். ஜ. பீமான்.

ஜெயினுபாய் வகையரா...வாதிகள்...அப்பீல் வாதிகள்.

SV

ஆர். டி. சேத்னு வகையரா...பிரதிவாதிகள்...ரேஸ்பான்டேன்டுகள்.

மகம்மத்தியலா—தானம்—மதாச்சார தெய்வீக விஷயங்களுக்காக தானம்—மூன்றாவது நபர்களுக்கு தானம் செய்வதும் தெய்வீகார்த்தமான காரியங்களுக்காக தானம் செய்து ட்ரஸ்டுகள் ஏற்படுத்துவதும்—ரத்து செய்தல்—ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்டு 126-வது பிரிவு—பிரத்தியேக ட்ரஸ்டுகள்.

மகம்மத்தியலா விஷயமாய் எழுதப்பட்டிருக்கும் கிரந்தங்களில் மதாச்சாரமான தெய்வீக சம்பந்தமுள்ள விஷயங்களைப் பற்றி யாதொன்றும் எழுதப்படவில்லை.

தர்ம காரியங்களுக்காக எழுதி வைக்கும் ட்ரஸ்டுகளில் மூன்றாவது நபர்களுக்கு பிரத்தியேகமாய் கொடுக்கும் தானங்களையும் கண்டெழுதி வைக்கலாம். ஆனால் தர்ம காரியத்திற்கும் பிரத்தியேக விஷயத்திற்கும் யாதொரு சம்மந்தமுமில்லாமல் பிரிவினையாய் எழுதிவைக்க வேண்டும்.

அவ்விதமாய் கொடுக்கப்பட்ட தானத்தை அந்த தானப் பத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் சொத்து, குறித்த அந்த நபருக்கு கொடுபடுவதற்கு முன் ரத்து செய்யலாம். சொத்தை கொடுத்து விட்டபின்பு நெருங்கிய பந்துவானால் ரத்து செய்யலாகாது. ஆனால் தானம் பெற்றுக்கொள்ளும் நபர் நெருங்கிய பந்துவாய் அல்லாமல் தூரபந்துவா யிருந்தால் ரத்து செய்து விடலாம்.

தானமாய் எழுதிவைக்கப்பட்ட சொத்து ஓர் மூன்றாவது நபருக்காவது தூரபந்துக்காவது கொடுக்கப்பட்டிருந்தால் அப்படிப்பட்ட தானத்தை தானம்பெற்றுக் கொண்டவன் சம்மதத்தின் பேரிலாவது அல்லது கோர்ட்டார் டிக்ரியின் பேரிலாவது ரத்து செய்து விடலாம். மகம்மதியன் ஒருவன் காலமான பின்பு தன்னுடைய சொத்துகளில் சிலவற்றை ஒருவனை தானமாய் எடுத்துக்கொள்ளும்படி எழுதி வைத்து பிறகு அப்படி தானம் செய்தவன்தான் ஜீவித்திருக்கும் காலத்திலேயே அந்த தானத்தை ரத்துசெய்து விட்டிருந்தால் அப்படிப்பட்ட தானம் சட்டப்படி செலாவணியுள்ளதல்ல. ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்டு 126-வது பிரிவின் படிக்கு சில சந்தர்ப்பங்களில் ஓர் தானம் ரத்தாய்விட வேண்டியதென்று எழுதி வைக்கப்பட்ட தானப் பத்திரம் செல்லாது.

மகம்மத்திய சட்டப்படி மூன்றாவது நபர்களுக்குப் பிரத்தியேகமாய் ட்ரஸ்டுகள் எழுதி ஏற்பாடு செய்யலாமா ? செய்யக்கூடாதா ?

மெசர்ஸ் ஸ்ட்ராங்க் மான் (அட்வோகேட் ஜெனரல் மி-ர். லௌன்டெஸ்—வாதிகளின் பிளீடர்கள்.

மி-ர். சேடல்வால், மி-ர். ரைக்ஸ் உடன் 1-3 பிரதிவாதிகளின் ப்ளீடர்கள், மி-ர். மூலியா 6, 7-வது பிரதிவாதிகளின் ப்ளீடர்.

தீர்மானம்.

கேசின் விபரம் :—1902-ம் ஸு ஜுலைமீ 31உ எழுதிவைத்த உயில்சாசனப்படிக்கு ஊர்ஜிதம் செய்யும்படி வாதிகள் இந்த தாவா கொண்டு வந்தார்கள்.

இந்த நம்பரில் முக்கியமான பிரதிவாதிகள் யாரென்றால் தானப் பத்திரத்தில் கையெழுத்து போட்டு தானம் கொடுத்தவனும் அவனால் ஏற்படுத்தப்பட்ட ரிசீவர்களும்தான். தாவாவில் தாக்கல் செய்திருக்கும் தானப் பத்திரத்தில் அது ரத்தாய் விடுவதற்கும் ஷரத்துகள் கண்டெழுதி யிருக்கிறது. அந்தப் பத்திரத்தில் செப்பியிருக்கும் முக்கியமான அம்சங்கள் யாதெனில் :—தான்ம் செய்பவனாகிய செட்லார் இப்ராஹிம்பாய் ஹஷாம் பாய் என்பவன் (1) அந்தப் பத்திரத்தில் சொல்லியிருக்கும் தன்னுடைய சொத்துகளை தானும் இன்னும் அவனுடன் சில ட்ரஸ்டீகளும் தன்னுடைய ஜீவகால பரியந்தம் அனுபவிக்க வேண்டுமென்றும் (2) அவன் இறந்த பிறகு விதைவையா யிருக்கும் அவனுடைய பெண்சாதி ரஹமத்பாயிக்குமாதம் ஒன்றுக்கு ரூபாய் 1000 ஜீவனும்சம் கொடுத்துவர வேண்டியதென்றும் (3) முதல்வாதியாகிய தன்னுடைய குமாரத்தி ஜைனுபாய் என்பவளுக்கு ஜீவனும்சத்திற்காக மாதம் ரூபாய் 750 கொடுத்துவர வேண்டுமென்றும் இன்னும் இதன்றி சில தர்ம காரியங்களுக்காக அவளிடத்தில் சில சொத்துகளை ஒப்புவிக்கும்படிக்கும், (4) தன்னுடைய பெண்சாதி ரஹமத்பாய் என்பவள் காலமாய் விட்டால் அவளுக்கு ஜீவனும்சமாய் எழுதி வைத்த தொகையை தர்ம காரியங்களில் செலவிடும்படிக்கும் அவனுடைய குமாரத்தி ஜெய்னுபாய் என்பவள் காலமான பிறகு (ஆனால் இவள் இன்னும் ஜீவதெசையாய்தா னிருக்கிறாள்) தன்னுடைய மைனர் பேரனாகிய 2-வது வாதி மகமத்பாய் என்பவனுக்கு ரூ. 1,50,000 கொடுக்கும் படிக்கும் எழுதி வைத்தான். ஆனால் அந்தப் பத்திரத்தில் தான் எந்தகாலத்திலாவது இந்த ஏற்பாட்டுகளை ரத்து செய்வதற்கு தனக்கு சர்வ அதிகாரமு முண்டென்றும் கண்டெழுதி யிருக்கிறது. மேற்படி செட்லார் இப்ராஹிம்பாய் ஹஷாம்பாய் என்பவன் தான் 1902-ம் வருஷத்தில் எழுதிவைத்த ட்ரஸ்டை ரத்து செய்துவிட்டு தன்னுடன் கூட உடன்ட்ரஸ்டிகளா யிருந்தவர்களிடத்திலிருந்து அந்த சொத்துக்களை மறுபடியும் தன் பேரில் டிரான்ஸ்பர் செய்துக்கொண்டு தன்னுடைய சொத்துகளை இந்த நம்பரில் 4-வது பிரதிவாதியினிடத்தில் கொதுவை வைத்து கொதுவைப்பத்திரம் எழுதிக் கொடுத்து கடன் வாங்கினான். அந்த கொதுவை தஸ்தாவேஜியைத்தான் நான்காம் பிரதிவாதி தன்னுடைய வாதத்திற்கு ஆதாரமாய்க் கூறுகின்றான். இந்த நம்பரிலுள்ள கட்சிதாரர்கள் ஷியாமதத்தைச் சேர்ந்தவர்கள். இந்த வியாஜ்ஜியத்தில் பரிசீலனை செய்யவேண்டிய அம்சங்கள் மேற்சொல்லியவைகள்தான். மேற் செப்பிய விஷயங்களைப் பற்றி யாதொரு வாதமும் கூறப்படவில்லை.

வாதிகளின் வாதம் :—1902-ம் ஸுத்தில் ஏற்பட்ட தஸ்தாவேஜியின் பிரகாரம் தானம் செய்த செட்லார் இப்படி புதிதாய் ஏற்பட்ட ட்ரஸ்டு விஷயமாய் சொத்துகளின் குடிக்கூலிகளுக்கும், மாகூல்களுக்கும் பிரத்தியேகமாய் கணக்கு புஸ்தகங்கள் வைத்து நடவடிக்கைகள் நடத்தும் படிக்கு ஏற்பாடுகள் செய்திருப்பதாலும், முக்கியமாய் ஜானுபாய், மஹமத்பாய் இவர்கள் தானம் கொடுத்தவனுக்கு மிக்க நெருங்கின சுற்றத்தார்களா யிருப்பதாலும் அதை ரத்து செய்ய நியாயம் கிடையாது.

இப்படிப்பட்ட தாவாவிற்கு அநேக எதிர்வாதங்கள் கூறக் கூடியதா யிருந்திடினும் அவைகளில் மிக்க முக்கியமானவைகளென்று எடுத்துச் சொல்லியதை இதனடியில் கண்டெழுதி யிருக்கின்றன:—

வாதிகள் தங்களுடைய தாவாவிற்கு ஆதாரமாய் தாக்கல் செய்திருக்கும் 1902-ம் வருஷத்திய தஸ்தா வேஜிதானப் பத்திரமல்ல, வக்ப் (Waqf) பத்திரமாகையால் அதில் தானம் எழுதி வைத்தவன் தன்னுடைய ஜீவதெசை வரையிலும் சில சொத்துகளை தனக்கு வைத்துக்கொண்டமையால் அது சட்டப்படி செலாவணி யுள்ளதல்ல.

தானத்தை நிறைவேற்றுவது இனிமேல் நடக்க வேண்டுமென்று எழுதி யிருப்பதாலும் அந்த பத்திரத்தில் எழுதி யிருக்கிறபடி அந்த சொத்துகளின் சுவாதீனத்தை அந்தந்த நபர்களுக்கு ஒப்புவிக்கப் படாமையாலும் அது செலாவணி யுள்ளதல்ல.

தானப் பத்திரத்தில் சில சந்தர்ப்பங்களில் அது ரத்தாய் விடவேண்டியதென்று எழுதி யிருப்பது சட்டப்படி செலாவணி யுள்ளதல்லவென்றும், இப்படிப்பட்ட விஷயங்களில் இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் சட்ட நிபந்தனை என்னவென்று தெரிந்துக்கொள்ள வேண்டுமானால் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்டு 126-வது செக்ஷனைப் பார்க்கவும்.

1902-ம் வருஷத்தில் எழுதிவைத்த பத்திரத்தின் பாரம் (form) எவ்விதமாய் எழுதப்பட்டிருந்தபோதிலும் வாஸ்தவத்தில் அந்தப் பத்திரத்தை உயில் சாசனமென்று சொல்ல வேண்டியதா யிருக்கிறது. ஏனென்றால், சாதாரணமாய் எழுதிவைக்கப்படும் மற்ற உயில் சாசனங்களைப் போலவே இந்தப் பத்திரத்திலும் அதைஎழுதி வைத்தவன்தான் ஜீவித்திருக்கும் காலத்திலேயே அதை ரத்து செய்ய தனகு அதிகாரமுண்டென்று கண்டெழுதியிருக்கிறான்.

மேற்கண்ட வாதங்களைத் தீர்க்க யோசித்து பின் வருமாறு மறு உத்தரம் கூறப்பட்டது.

மகம்மத்தியலாவைப் பற்றி எழுதப் பட்டிருக்கும் கிரந்தங்களில் மதாச்சார தெய்வீக சம்பந்தமான விஷயங்களை சாதாரணமாய் எந்த தானப் பத்திரத்திலும் காணலாகாதென்று சொல்லி யிருக்கிறது. ஆனால் 1902-ம் வருஷத்திய தாவா பத்திரத்தில் தன்னுடைய சுற்றத்தார்களுக்குச் சில சொத்துகளை தானமாய் கொடுக்கவேண்டுமென்றும் இன்னும் மதாச்சார தெய்வீக காரியங்களுக்காக சில சொத்துகளை செலவிடவேண்டுமென்றும் எழுதி யிருப்பதால் அந்தப் பத்திரம் சட்டப்படி செல்லத் தக்கினதல்லவென்று வாதிக்கப்பட்டது.

ஆகையால் தானப் பத்திரத்தில் தானங் கொடுக்கப்பட்டவன் அதை தான் ஜீவித்திருக்கும் போதே ரத்து செய்ய தனக்கு அதிகாரமுண்டென்று கண்டெழுதி யிருப்பானாகில் அந்தப் பத்திரம் மகம்மத்திய சட்டப்படி செலாவணி யுள்ளதல்லவென்று தீர்மானித்து வாதியின் தாவாவை செலவுடன் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

இதற்கு ஆதாரமாய் 7 இ. அ. 201; இ. லா. ரி 15 கல். 164, 32 பம். 172; 9 பம். லா. ரி. 1152 20 பம் 267; 7 பம் லா. ரி. 45 பார்க்கவும்.

லாகூர் இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பார்ட்டு 513. அல்லது 12 பம் லா. ரி. 341.

BOMBAY HIGH COURT.

பம்பாய் ஹைகோர்ட்டு.

—:o:—

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 332 of 1909.

ஜட்ஜுகள்:— { ஜஸ்டிஸ் சர். என். ஜி. சண்டர்வர்கர்
மிர். ஜ. நைட்

கோவிந்த அண்ணாஜி போடானி...வாதி...அப்பீல் வாதி.

vs

ட்ரிம்பெக் கோவிந்தனேஸ்வரர்...பிரிதிவாதி—ரெஸ்பான்டென்டு.

ஹிந்துலா—ஸமஷ்டி— (ஏக) குடும்பம்—தண்ணீர் பாச்சலிலும்; கிணறுகளின் ஜலத்தை பிரயோகிப்பதிலும் ஏக குடும்பத்திலுள்ள பாகஸ்தர் ஒவ்வொருவருக்கும் என்ன சுதந்தர முண்டென்பது.

தண்ணீர்ப் பாய்ச்சிக் கொள்வதற்கும் குடும்பத்திற்குச் சொந்த மான கிணறுகளின் ஜலத்தை பிரயோகிப்பதற்கும் ஹிந்து லாவில் என்ன சொல்லுகிற தென்றால் அது பாகிக்கத் தக்க எண்ணுப் இல்லாவிடில் குடும்பத்திற்குள்ள அந்த சுதந்தரம் பாகிக்கந் தக்கதல்ல வென்றும் அப்படி பிரிவினை செய்துக் கொண்ட பாகஸ்தர்களாகிய தாயாதிகள் அதை முறை போட்டுக் கொண்டு தான் அனுபவிக்க வேண்டுமென்றும் சொல்லி யிருக்கிறது.

ஆமத் நகர் ஜாயின்ட் சப்கோர்ட்டார் சி. சூட் நெ. 265 of 07ல் செய்த டிக்கிரியை ஆமத் நகர் ஜில்லா ஜட்ஜி மாற்றி செய்த டிக்கிரியின் பேரில் கொண்டு வந்த இரண்டாவது அப்பீல்.

மிர். M. R. போடாஸ்:—அப்பீல்வாதியின் வக்கீல்.

மிர். K. H. கெல்கார்:—ரெஸ்பான்டென்டின் வக்கீல்.

தீர்மானம்:—இந்த வியாஜ்ஜியத்தில் வாதி குடும்பத்திற்குச் சொந்தமான கிணற்று ஜலத்தை பிரதிவாதியும் தானும் ஏக சுதந்தரவாளிகளாய் அனுபவிப்பதற்கு ஹக்குள்ளவர்களென்று டெக்லேர் செய்யும்படிக்கும் அப்படி வாதி அனுபவிப்பதை தடுத்து அவனுக்குள்ள சுதந்தரத்தை யில்லை யென்று சொல்லும் பின் சொல்லிய பிரதிவாதியின் பேரில் இஞ்ஜங்க்ஷன் உத்தரவு பிறப்பிக்கும் படிக்கும் தாவா. பிரதிவாதி வாதிக்கு அந்தக் கிணற்றில் யாதொரு சுதந்தரமும் கிடையா தென்றும் அந்தக் கிணறு

தனக்கே சொந்த மென்றும் தன்னுடைய தானப் பத்திரிகையில் சப் கோர்ட்டார் விசாரணைசெய்த சாக்ஷிகளினால் என்ன தெரிய வந்ததென்றால்:— இந்தக் கிணறு ஒருகாலத்தில் ஒரு ஹிந்து சமஷ்டி (ஏக) குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு அண்ணன் தம்பிமார்களுக்குச் சொந்தமான இரண்டு வீட்டுகளுக்கும் மத்தியில் இவாள் இருவருக்கும் சொந்தமாய் பொதுக்கிணரா யிருந்தது. பிறகு இந்த சகோதரர்கள் இருவரும் குடும்ப சொத்தாகிய இந்த இரண்டு வீடுகளையும் பாகித்துக் கொண்டார்கள். அப்படி பிறிவினையான சொற்ப காலற்திற்குப் பின் மேற் செப்பிய இருவர்களில் ஒரு சகோதரன் தன்னுடையபாகத்திற்கு வந்த வீட்டை வாதிக்கு வித்து விட்டான். இன்னொரு சகோதரனும் அவன் பாகத்திற்கு வந்த வீட்டை பிரதிவாதிக்கு வித்து விட்டான். இந்த நம்பரில் சாக்ஷிதாரர்கள் இருதரத்தாரும் இவை யெல்லாம் ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஜில்லா ஜட்ஜியும் இவைகள் வாஸ்தம் தானென்று கண்டெழுதி யிருக்கிறார். ஜில்வா ஜட்ஜியின் தீமானத்தின் பேரில் இந்த இரண்டாவது அப்பீல் செய்துக் கொள்ளப் பட்டது. சப்கோர்ட்டார் இந்த ஒரு கிணற்றை அண்ணன் தம்பிமார்கள் இருவரும் பாகப் பிரிவினைக்கு முன்பு சொந்தக்காரராக பொதுவாய் அனுபவித்து வந்தார்களாகையால் பாகமாகும் காலத்தில் இந்தக் கிணற்றை பொதுக் கிணராகவே பாவித்துவிட்டிருப்பார்க ளென்று கண்டு வாதியின் தாவாவை வாதி பட்சம் தீர்ப்பு செய்தார். அதன் பேரில் ஜில்லா ஜட்ஜி சப்கோர்ட்டார் சொல்வது அந்த சப் ஜட்ஜி சுதாவாய் தனக் கேற்படும் மனோபாகத்தின் பேரில் இந்தப்படி, தீர்மானம்செய்தா ரென்றும் கேசில் உள்ள சாக்ஷியத்தின் பேரில் சொல்வதல்ல வென்றும் கண்டு சப்கோர்ட்டார் செய்த டிக்கிரியை ரத்து செய்துவிட்டு வாதியின் தாவாவைத் தள்ளுபடி செய்து விட்டார்.

ஹைகோர்ட்டார் தீர்ப்பு:—கீழ் இரண்டு கோர்ட்டுகளிலும் இப்படிப் பட்ட விஷயத்தில் ஹிந்துலாவில் என்ன சொல்லி யிருக்கிறதோ அதை கவனித்தவர்களல்ல. சப்கோர்ட்டார் சொல்லியதைப் பார்த்தால் சந்தர்பத்திற் கிணங்க அவர் அப்படி மனோபாகம் செய்து சொன்னதாகத் தெரிய வருகிறது. ஜில்லா ஜட்ஜி சொல்லியதும் அவருடைய சொந்த மனோபாக மென்றுதான் சொல்ல வேண்டும். இப்படிப் பட்ட விஷயங்களில் ஹிந்து லாவில் சொல்லியிருப்ப தென்ன வென்றால் தண்ணீர் பாய்ச்சலுக்கும் கிணறுகளுக்கும் ஓர் ஹிந்து ஏக குடும்பத்தாருக்குள்ள ஹக்கு சுதந்தரம் பாகிக்க வேண்டிய எண்ணுயில்லாவிடில் அவைகளை பாகிக்கத்தக்க தல்ல வென்றும்-குடும்பத்தில் பாகப் பிரிவினையான பிறகு அவைகளை குடும்பத்தாயாதிகளாகிய பாகஸ்தர்முறை போட்டுக் கொண்டு அனுபவித்து வரவேண்டும் என்பது தான். பாகிப்பதற்கு ஹேதுவான எண்ணில்லாத தண்ணீர், கிணறுகளை ஒருவிபக்த ஹிந்து குடும்பத்தார்கள் ஒவ்வொருவரும் முறை போட்டுக் கொண்டு அனுபவிக்க வேண்டியது. (மிதாக்ஷர சட்டம் 1-ம் அத்தியாயம் 4வது செக்ஷன் 2வது சுலோகம் ஸ்டோக்ஸ் ‘ஹிந்துலா’ புஸ்தகங்களைப் பார்க்கவும்.)

‘வியவஹாரமயூகா’ என்னும்கிரந்தத்திலும் இம்மாதிரியேதான் சொல்லப் பட்டிருக்கிறது—அதாவது—படிக்கட்டுகள் உள்ள கிணற்று ஜலத்தையாவது—தோண்டிகள் போட்டு மொள்ளக் கூடிய ஜலத்தையாவது குடும்பத்திலுள்ளவர்கள் அவர்களுக்கு எப்படி தேவை யிருக்கிறதோ அவ்விதமாய் உபயோகித்துக்கொள்ள வேண்டும் (மான்ட்லிக் ஹிந்துலா 71-வது பக்கம் வரிகள் 34 to 36 பார்க்கவும்)

‘வீரமித் ரோதயா’:—ஜலம் (அல்லது) ஜலமுள்ள கிணறுகள் இவைகளை ஓர் ஹிந்து குடும்பத்திலுள்ள பாகஸ்தர்களாகிய தாயாதிகள் பாகப் பிறிவினையான பின்பு அவர்களுக்கு எவ்விதமாய் அந்த ஜலத்தை அல்லது கிணறுகளை அனுபவிக்க வேண்டுமென்று இஷ்டப் படுகிறார்களோ அவ்விதமாய் அனுபவித்துக் கொள்ள வேண்டியது.

(கொலாப் சந்தர் சர்க்கார் இந்துலா 249-வது பக்கம் பார்க்கவும்.)

ஒரு ஷமஷ்டி ஏக குடும்பத்திற்குச் சொந்தமான கிணறு, ஜலம் முதலானவைகள் பாகிக்கத் தக்கினதல்ல, ‘அவி பஜ்யம்’—அதாவது-நிலம்-பணம் இவைகளைப் போல் பாகிக்கக் கூடியதல்ல வென்று சொல்லியிருக்கிறது.

ஆகையால் பாகிக்கக் கூடிய எண்ணில்லாத ஜலம், கிணறு முதலியவற்றை முறை போட்டுக் கொண்டு தான் அனுபவிக்க வேண்டும் (வெஸ்ட் அண்டு புல்லர் 3-வது எடிஷன் 831,832-வது பக்கங்களைப் பார்க்கவும்.)

இந்த வியாஜ்ஜியத்தில் ருஜுவாயிருக்கும் சந்தர்பங்களில் வாதி தனக்கும் அந்த கிணற்றில் சுதந்தரமுண்டென்று சொல்லுகிறான். வாதி அப்படி அனுபவிப்பதற்குள்ள சுதந்தரத்தை இழந்து விட்டானென்பது அல்லதுபாகப் பிறிவினையாகும்காலத்தில் வாதிக்கு வித்தவனுடைய முதாதைகள் அவர்களுக்குண்டாயிருந்த ஹக்கு சுதந்தரத்தை பிரதிவாதிக்கு வித்தவனுடைய தமையனுக்கே கொடுத்து விட்டானென்றாவது சாட்சியத்தினால் ருஜுவாக வில்லை. அல்லது அப்படிக்கில்லாவிடில் பிரதிவாதி அந்த கிணற்றை வாதிக்குத் தெரியாமலே அநேக காலமாய் அனுபவித்து வந்தானென்றும் அப்படி அவன் அனுபவித்த காலம் சட்டப்படி விரோதமாய் அனுபவித்தவனென்னும் காரணத்தால் அவனுக்கே அந்த கிணறு சொந்தமாய் விட்டதென்றும்

முதல் கோர்ட்டார் விசாரணையில் ஏற்படவில்லை. ஆகையால் பிரதிவாதி குடும்ப சொத்தை பாகித்துப் பிறிவினை செய்யுங் காலத்தில் தானே தனியாய் அந்த கிணற்று ஜலத்தை அனுபவித்துக் கொள்வதற்கு அவனுடைய பெரியோர்கள் முன்னிலையில் ஓர் ஏற்பாடு உண்டாயிற்று இல்லையா என்று விசாரணை செய்து தங்களுக்குத் தெரிவிக்கும்படிக்கு ஹைகோர்ட்டார் மேற்படி கேசை மறுபடியும் விசாரித்து அனுப்பும்படிக்கு ஜில்லா கோர்ட்டாருக்கு கட்டை அனுப்பிவிட்டார்கள்.

இந்த அம்சத்தை ருஜு செய்யவேண்டிய பொறுப்பு பிரதமத்தில் பிரதிவாதிக்குத்தான் உளது. புதிதாய் சாக்ஷிகளை வரவழைத்து விசாரணை செய்யாமல் கேசில் முன்னமேயேயுள்ள சாட்சியத்தின்பேரிலேயே இதைக் கண்டு தங்களுக்குத் தெரிவிக்கும்படி உத்தரவு செய்தார்கள.

12 பம்பாய் லா. ரிப்போர்ட்டு 353 or லாகூர் இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பாகம் 521.

BOMBAY HIGH COURT.

பம்பாய் ஹைகோர்ட்டு.

——:o:——

சிவில் எக். மனு நெ. 244 of 1909.

ஜட்ஜிகள்:— { ஜஸ்டிஸ் சர். N. G. சந்தாவர்கர், மி-ர். ஜ. நைட். } முன்பாக.

மகன்லால் மூல்ஜி. ... டிக்ரிவாதி ... மனுதாரன்.

vs

போகிலால் நாரயன்ஜி...டிக்ரி பிரதிவாதி கடன்தாரன்... ரெஸ்பான்டென்டு.

சிவில் புரோசீஜர் கோடு (14 of 1882) 295-வது பிரிவு உத்தரவு—அப்பீல் செய்யத் தக்கினதல்ல.

இந்த அப்பீல் ஆமெடா பாட்சப் கோர்ட்டார் அ. நெ. 428 of 1908-ல் செய்த உத்தரவின்பேரில் கொண்டுவந்த அப்பீல்.

மி-ர் டி. ஆர். தேசாய்—அப்பீல்வாதி வக்கீல்.

மி-ர். எம். என். மேதா—ரெஸ்பான்டென்டு வக்கீல்.

தீர்மானம்:—சப் கோர்ட்டார் செய்த உத்தரவு சிவில் புரோசீஜர் கோடு (14 of 1882) 295-வது பிரிவின்கீழ் செய்யப்பட்டதாகையால் அந்த உத்தரவின்பேரில் அப்பீல் செய்துக்கொள்ள நியாயமில்லை. (இதற்கு ஆதாரமாய் காஷிராம் V. மனிராம் இ. லா. ரி. 14 அ 120; ஜெகதீஷ் சந்தாஷா V. கிரிப்புநாத்ஷா இ. லா. ரி. 36 கல் 130; 1 இந்தியன் கேசுகள் 783 பார்க்கவும்). ஆகையால் கீழ் அப்பீல் கோர்ட்டார் சப் கோர்ட்டில் தாக்கல் செய்த அப்பீலின்பேரில் நடவடிக்கை நடத்தி விசாரணை செய்து பைசல் செய்வதற்கு அவர்களுக்கு அதிகார வரம்பு (ஜூரிஸ் டிக்ஷன்) இடையாதென்று கீழ் அப்பீல் கோர்ட்டில் ஆக்ஷேபிக்க யில்லை. ஆகையால் அப்பீல் இடையாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பாகம் 522 or 12 பம். லா. ரி. 365.

BOMBAY HIGH COURT.

பம்பாய் ஹைகோர்ட்டு,

——:o:——

முதல் சிவில் அப்பீல் நெ. 160 of 1906.

ஜட்ஜுகள்:— { ஜஸ்டிஸ் சர் N. G. சந்தாவர்கர், மிர். ஜ. நைட் } முன்பாக

சீதாபாய்.........வாதி.........அப்பீல் வாதி.

vs

ராமச்சந்திர ராவ். வி. பான்ஸ்லி பிரதிவாதி...ரெஸ்பான்டென்டு.

ஹிந்துலா—ஜீவனும்சம்:—புருஷன் பெண்சாதியை குரூரமாய் நடத்துதல்:—குடும்பத்தை விட்டுப் போவது—சாக்ஷியம்—சாக்ஷியை ஆஜர் படுத்தும் நபர் அவனுக்கு பதுவாயிருத்தல்—சாக்ஷியம் விசேஷமல்ல.

ஒரு ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த புருஷன் ஒருவன் தன்னுடைய வீட்டில் அநேக ஸ்திரீகளை ஒன்றாய்ச் சேர்த்தாப் போல் வைப்பாட்டிகளாய் வைத்துக் கொண்டிருந்தான்—அந்த வைப்பாட்டிகளின் சிலருடைய துர்போதனைகளைக் கேட்டுக் கொண்டு புருஷன் தன்னுடைய வீட்டிலிருந்த சொந்த பெண்சாதியை அடித்து, உதைத்து அவளைத் துண்டு துண்டாய் வெட்டி விடுவதாகப் பய முறுத்தி அவளைச் சுட்டு விடுவதாக காப்ரா செய்து அவளை இவ்விதமாய்ச் சொற்ப காலம் கொரூரமாய் நடத்திப் பிறகு அவளை வீட்டை விட்டு வெளியே துரத்தி விட்டான். அப்படிக்கு நடத்தாமல் அவளை யாதொரு இம்சை யின்றி தன்னுடைய வீட்டிலேயே தன்னிடத்தில் வைத்துக்கெய்ண்டு வாழும்படிக்காவது அல்லது அவளுக்கு ஜீவனும்சம் கொடுத்து வேறே வைத்து ரக்ஷிக்கும்படிக்காவது அந்தப் புருஷனை பலமுறை கேட்டுக் கொண்டும் அவன் அப்படிக்குச் சொய்யாமல் அவள்பேரில் விபசாரத்துவமான பலவிதமான குற்றங்களைச் சாட்டி தான் அவளை தன்னிடத்தில் வைத்துக கொண்டு வாழ மாட்டேனென்று நிராகரித்து வந்தான். அவள் விபச்சாரத்துவமாய் நடந்ததாக தன்னுடைய சாக்ஷியத்தால் ருஜு செய்யவுமில்லை. அவளுக்குத் தனியாய் ஜீவனும்சமும் கொடுத்தவனுமல்ல.

ஹிந்துலாவின் பிரகாரம் பெண்சாதி தன்னுடைய புருஷனுடைய வீட்டை விட்டு வெளிதாண்டி விட்டால் புருஷன் கொரூரமாய் இம்சை செய்து நடத்தினனென்பது அவளுக்குப் பிரத்தியேகமாய் ஜீவனும்சம் கொடுத்து வரவேண்டுமென்பதற்கு ஓர் காரணமல்ல.

ஓர் சாக்ஷியை ஓர் கட்சிதாரன் கோர்ட்டுக்கு ஆஜர் செய்வித்து அந்த சாக்ஷி அந்த கட்சிதாரனுக்குப் பந்து என்னும் காரணத்தால் அவன் சொல்லும் வாக்குமூலத்தை அவநம்பிக்கையாய் நம்பாமற் போவது நியாயமல்ல.

இந்த கேசுக்கு ஆதாரமாய்—யமுனாபாய்—V. நாராயண மொரேஷ்வர் பென்சி இ. லா. ரி. 1 பம் 164 எடுத்துக் காண்பிக்கப்பட்டது.

பெல்காம் முதல்கிலாஸ் சப் கோர்ட்டார் அ. நெ. 353 of 1903ல் செய்த டிக்ரியின்பேரில் கொண்டுவந்த முதல் அப்பீல்.

மி-ர். சேடல்வாட், யோசம்பாலால், G. K. டண்டகர்...... வாதி வக்கீல்கள்.

மி-ர், பிரான்சன், மி-ர். D. A. கோ ... ரெஸ்பான்டென்டு வக்கீல்கள்.

தீர்மானம்.

அப்பீல்வாதி ரெஸ்பான்டென்டினுடைய பெண்சாதி. அப்பீல் பிரதிவாதி ஹேரி கிராமத்தின் ஜாகீர்தாரன். அவள் தன்னுடைய புருஷனாகிய வாதி அவளை மிக்க ஹிம்சை செய்து கொரூரமாய் நடத்தினனென்கிற காரணத்தால் தனக்கு பிரத்தியேகமாய் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100 ஜீவனும்சம் கொடுத்து தன்னைக் காப்பாற்றி வரும்படிக்கு பெல்காம்முதல் கிலாஸ் சப் கோர்ட்டில் தன்னுடைய புருஷன் பேரில் தாவா செய்தாள். அப்படிப்பட்ட தாவாவிற்கு விரோதமாய் பிரதிவாதி தான் அவளைக் கொரூரமாய் ஹிம்சை செய்தவனல்லவென்றும் அவள், அதாவது அவனுடைய பெண்சாதியாகிய வாதி அவளுடைய சகோதரனுடைய துர்ப்போதனைகளைக் கேட்டுக்கொண்டு தன்னுடைய புருஷனை விட்டு ஓடிப்போனவளென்றும் தர்க்கித்து எதிர்வாதம் கூறினன்.

சப் கோர்ட்டார் விசாரணை செய்ததில் புருஷனாகிய பிரதிவாதி தன்னுடைய பெண்சாதியாகிய வாதியை சட்டத்திற்கு விரோதமாய்க் கொரூரமாய் ஹிம்சை செய்து அவளை விட்டு விட்டவனென்று சாக்ஷியத்தால் ஏற்படவில்லையென்று கண்டு வாதியின் தாவாவை தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

வாதியை பிரதிவாதி கொரூரமாய் நடத்தினதாக சொல்லிய சாக்ஷிகள் பந்துக்களாயிருப்பதால் அவர்களுடைய சாக்ஷியத்தை நம்புவதற்கு இடமில்லை யென்று சொல்லி சப் கோர்ட்டார் ருஜுவாகவில்லையென்று சொன்னார்கள். இப்படிச் சொல்வது நியாயமல்ல; ஏனென்றால் இந்த கேசில் முக்கியமாய் வாதி ஓர் கோஷா ஸ்திரி, அப்படிப்பட்ட பெண்களை புருஷர்கள் ஹிம்சை செய்வதைக் கண்ணோக்கிப் பாக்கப்பட்டவர்கள் அந்த கோஷாப் பெண்களின் சுற்றத்தார்களாய் தான் இருப்பார்களே யல்லாமல் மற்றப்படி வெளி மனுஷாள் பார்க்க முடியாமை. வாதியின் பந்துக்களாலும் இன்னும் அவர்கள்எழுதின கடிதங்களினாலும் பிரதிவாதி தன்னுடைய வைப்பாட்டிகளின் துர்ப்போதனையால் வாதியை அடித்து, உதைத்து பயமுறுத்தி இம்சை செய்தவன்தானென்று ஏற்படுகிறது. இவ்விதமாய் ஹிந்து புருஷன் ஒருவன் தன்னுடைய பெண்சாதிக்கு அபாயம் நேரிடும்படியாவது அல்லது அவளுடைய அவையவங்களுக்குப் பழுது நேரிடும்படிக்காவது அவளை துன்பம் செய்து இம்சை படுத்தினால் அந்தப் பெண்சாதிக்கு புருஷன் பிரத்தியேகமாய் ஜீவனும்சம் கொடுத்து வரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. (இ. லா. ரி. 1 பம் 164) இப்படி பெண்சாதிக்குத் தனியாய் ஜீவனும்சம் கொடுத்து வரவேண்டு மென்பதைப் பற்றி ஹிந்துலாவிலும், கிரந்தங்களிலும் பின் வருமாறு கூறப்பட்டிருக்கின்றன.

'யாஜ்னவல்கியா' கிரந்தத்தின்படிக்கு:— ஒருவன் நல்நடத்தையுள்ள பதவிரதையாகிய தன்னுடைய பெண்சாதியை விட்டு விட்டுப் போய்விடுவானாகில் அவன் அப்படி போய்விட்டான் என்னும் காரணத்தினாலேயே அவன் பெண்சாதி அவனுக்குப் பிரத்தியேகமாய் ஜீவனும்சம் கொடுத்து வரவேண்டுமென்று தன்னுடைய புருஷன் பேரில் தாவா செய்ய ஹக்குண்டு. இதுவுமன்றி 'யாஜ்ன்வால்கியா' என்பவர்:—"யாரொருவன் தன்னிடத்தில் இனிமையான வார்த்தைகளாடிக் கொண்டு புத்திசாலித் தனமாய் மிக்க அடக்கம் ஒடுக்கத்துடன் வணக்கமாய் நடக்கும் பிள்ளை பெறக்கூடிய பெண்சாதியை விட்டு நீங்குகிறானோ அவன் தன்னுடைய பெண்சாதிக்கு தன்னுடைய ஸ்திதியில் மூன்றில் ஒரு பாகம் பாகித்துக் கொடுத்து பிரத்தியேகமா யிருக்கவேண்டியவனாவான் என்று சொல்லி யிருக்கிறார்".

இதைப்பற்றி 'விஜ்ஞானேஷ்வரர்' மிதாக்ஷர வியாக்கியானத்தில் சொல்லியிருப்பது:—

இவ்விதமாய் விட்டு நீங்கும் புருஷன் அவனுடைய பெண்சாதிக்குத் தன்னுடைய ஸ்திதியில் மூன்றில் ஒரு பாகம் கொடுக்கவேண்டுமென்றும்; புருஷனுக்கு ஆஸ்தியில்லாவிடில் அவன் தன்னுடைய பெண்சாதிக்கு அன்ன வஸ்திரம் கொடுத்து அவளைப் போஷித்து வரவேண்டுமென்று ராஜாங்கத்தார் அவனை கட்டு படுத்தவேண்டும்". (மோகீஸ் மிதாக்ஷரம்—மூனுவது எடிஷன் 19-வது பக்கம் பார்க்கவும்.)

ஹிந்துலாவின் விதிகளின்படி புருஷன் பெண்சாதியை இம்சை செய்தானென்பது கூட அவசியமல்ல. அந்தப் புருஷன் அவளை விட்டு விட்டு நீங்கினனென்பதே அவளுக்கு ஜீவனும்சம் கொடுத்து வரவேண்டு மென்பதற்கு ஆதாரம்.

இந்த கேசில் பிரதிவாதி வாதியை பலவிதமான இம்சைகள் செய்து வந்தானென்பதற்கும், அவன் அவளை மறுபடியும் அழைத்துக்கொண்டுபோக மாட்டேனென்று சொன்னனென்பதற்கும், அவன் அவள்பேரில் அபாண்டமாய் அவள் விபசார நடத்தையுள்ளவளென்று பொய் வார்த்தைகள் சொல்லிக் கொண்டு வந்தானென்பதற்கும், அவன் அவளை இவ்விதமாய் இம்சைகள் செய்து கடசியாய் அவளை தன்னுடைய வீட்டை விட்டு வெளியே துறத்திவிட்டானென்பதற்கும் ஏராளமான சாக்ஷிய மிருக்கிறது.

ஹிந்துலாப்படி பிரதிவாதி தன்னுடைய சொத்தில் தனக்கு மூன்றில் ஒரு பாகம் பாகித்துக்கொடுக்க வேண்டுமென்று வாதி கேட்பதற்கு இது தகுந்த கேசு, ஆனால் வாதி அப்படி கேட்காமல் மிக்க குறைவாகவே கேட்டிருக்கிறாள் என்று கண்டு வாதிக்கு பிரதி மாதமும் ரூ. 100 ஜீவனுசம் கொடுக்கும்படிக்கு டிக்ரி செய்தார்கள்.

12 பம். லா. ரி. 373 or லாகூர் இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 525.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 999 of 1906.

ஜட்ஜிகள்:— { ஜ. சர். ரால்ப் பென்சன், மி-ர் ஜ. மன்ரோ } முன்பாக,

T. S. அயிராந்த செட்டி ... அப்பீல்வாதி.

vs

அரமனு தோச்சி வகையரா ... ரேஸ்பான்டென்டுகள்.

உயில்—உயிலின் கீழ் ஒருவனுக்கு ஓர் ஸ்தாவர சொத்தை அவனுடைய ஆயுள் பரியந்தம் குடிக்கூலிதாரனாய் அனுபவிக்க சுதந்தரம் கொடுப்பது—அப்படிப்பட்ட சுதந்தரம் பெற்றவன் தான் அனுபவிக்கும் சொத்தை கொதுவை வைக்க ஹக்குண்டா?

உயில் சாசனத்தின் படிக்கு ஒருவன் ஓர் அசையாப் பொருளை அவனுடைய ஆயுள் பரியந்தம் அனுபவிக்கக் கூடிய சுதந்தரம் பெற்றிருந்தாலும் அவன் எக்ஜிகூடர் அல்லது மைனர் சுதந்தரவாளியின்

கார்டியனு யில்லாவிடில் அவன் தன்னுடைய ஹக்கு சுதந்தரத்தை கொதுவை வைக்கலாகாது.

வலங்கிமான் டி. மு. கோர்ட்டு அ. நெ. 353 of 1904-ன் பேரில் தஞ்சாவூர் ஜில்லா கோர்ட்டு அ. நெ. 1375 of 1905-ல் செய்த டிக்ரியின்பேரில் கொண்டு வரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

தீர்மானம் :—இந்த கேசில் தாக்கல் செய்திருக்கும் உயில் சாசனத்தின்படிக்கு கொதுவை வைத்தவன் எக்ஜி கூடர் அல்லது கார்டியன் அல்ல. ஆகையால் அவன் தனக்குள்ள ஹக்கு சுதந்தரத்தை கொதுவை வைக்க நியாயமில்லை.

லாகூர் இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பாகம் 533.

ALLAHABAD HIGH COURT.

அலகாபாத் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 837 of 1909.

ஜட்ஜிகள்:— { மி-ர். ஜ. ரிச்சர்ட்ஸ் / மி-ர். ஜ. டட்பால் } முன்பாக.

ரூப்ராம் ,,, வாதி ... அப்பீல்வாதி.

vs

முசமத்ரிவாடி வகையரா ... பிரதிவாதிகள்—ரேஸ்பான்டேன்டுகள்.

ஹிந்துலா—விதவை சொத்தை விற்பது—அவள் தன்னுடைய குமாரத்திக்குத் தானம் கொடுத்தல்.

அலிகர் ஜில்லா கோர்ட்டு டிக்ரியின்பேரில் செய்துக்கொண்ட இரண்டாவது அப்பீல்.

தீர்மானம்.

கேசின் விபரம் —இந்த கேசில் வாதி ஓர் ஜெமீன் கிராமமும் அந்த ஜெமீனைச் சேர்ந்த வீடும் தனக்குச் சொந்தமென்று சொல்லி அந்த சொத்துகளை தன் வசம் ஒப்புவிக்கும்படிக்கு தாவா செய்தான். ஆதியில் இந்த சொத்து நாராயண டாஸ் என்பவருக்குச் சொந்தமா யிருந்து அவன் காலமாய் விட்ட பிறகு அந்த சொத்து அவனுடைய பெண்சாதியாகிய விதவையினிட மிருந்தது. அவள் அதைக் கொஞ்சகாலம் அனுபவித்து பிறகு அதை அவள் தன்னுடைய 5-வயதுள்ள மைனர் குமாரத்திக்குத் தானமாய் எழுதி வைத்தாள். அந்தப் பெண் மைனரா யிருந்தபடியால் இந்த நம்பரில் லிமிடேஷன் பாயின்டில்லை. வாதி அந்தப் பெண்ணுக்குப் புருஷனென்று சொல்லிதான் தான் அந்த சொத்துக்கு நியாயமானவார் சென்று தாவா செய்தான். இப்படி செய்வது அனந்தரவார்சின் சுதந்தரத்தைப் பாதிக்கும்.

இந்த வியாஜ்ஜியத்திலுள்ள சாக்ஷியத்தைப் பார்க்குமளவில் அதன்படி அந்த விதவை தானப்பத்திரம் எழுதி வைத்திருந்தபோதிலும் அவளே அந்த சொத்தை அனுபவித்து வந்தவளாய் ஏற்படுகிறது. அந்த தானப் பத்திரத்தின்படி யாதொரு நடவடிக்கையும் நடத்தினதாக சாக்ஷியமே கிடையாது. ஆகையால் வாதியின் அப்பீலை சிலவுடன் தள்ளுபடி செய்தார்கள். இந்த கேசுக்கு ஆதாரமாய் போபால்ராம் vs லக்ஷ்ம கவர். இ. லா. ரி. 11 அ. 253 எடுத்துக் கூறப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பார்ட்டு 541.

CALCUTTA HIGH COURT.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

——:o:——

கிரிமினல் ரூல். நெ. 1314 of 1909.

ஜட்ஜிகள்:— { மிர். ஜ. ஸ்டீபென் / மிர். ஜ். கார்ன்டப் } முன்பாக.

பாபனுத் சக்ரவர்த்தி வகையரா...மனுதாரர்கள்.

vs

பீரிசர்மா வகையரா.........ரேஸ்பான்டேன்டேகள்.

கிரிமினல் புரோசிஜர் கோடு (5 of 1898) 145-வது பிரிவு ஜாயின்ட் சுவாதீனம்—மாஜிஸ்டிரேட்டுக்குள்ள அதிகாரம் (ஜூரிஸ் டிக்ஷன்) மீன் பிடிக்கும் சுதந்தரம் இருதரத்தாருக்குச் சொந்தமாயிருந்தது. அவ்விருவரில் எந்த நபரும் அந்த சுதந்தரம் தனக்கே சொந்த மென்று சொல்வதற்கு நியாயமில்லாமையால் அந்த சுதந்தரத்தை அனுபவிப்பதைப் பற்றி தகருர் உண்டானல் கி. பு. கோ. 145-வது பிரிவு சம்பந்தப்பட தக்கினதல்ல.

மோஹன்லால் ராய்—vs—பரதகண்டாராய் 11 கல். வீ. கோ. 512 பார்க்கவேண்டியது.

ஆனல் தகாராயிருக்கும் சுதந்தரம் மீன் பிடிக்கும் ஹக்கைப் பற்றி யில்லாமல் அந்த மீன் பிடிப்பதனுல் உண்டாகும் லாபங்களைப் பற்றியுமிருந்தால் கி. பு. கோ. 145-வது 2-வது சப் செக்ஷன் சம்பந்தப்படத்தக்கினதல்ல.

கிருஷ்ணுடிப்டி மாஜிஸ்ட்ரேட்டு உத்தரவின் பேரில் செய்துக் கொண்ட கிரிமினல் ரூல்.

பாபு நாகேந்தர நாத்கோஸ்...மனுதார்களின் வக்கீல், பாபு மன்மத நாத் மூக்கர்ஜீ...எதிரியின் வக்கீல்.

இந்த கேசில் மீன் பிடிக்கும் சுதந்தரத்தைப் பற்றி தீர்மானம் கி. பு. கோ. 145-வது பிரிவின் கீழ் மாஜிஸ்டிரேட்டு ஒரு நபரின் பட்சபாய் செய்திருந்த உத்தரவை அந்த சுதந்தரம் இருதரத்தாருக்கும் ஏக சுதந்தரமா யிருந்த தென்னும் காரணத்தாலும் மீன் பிடிக்கும் அந்த சுதந்தரத்தின் விஷயமாய் சிவில் கோர்ட்டார் முன்னமேயே ஓர் தீர்மானம் செய்திருக்கிறார்களென்னும் காரணத்தைக் கொண்டும் ஏன் ரத்து செய்யலாகா தென்று கொண்டு வந்த ஓர் ரூல் கேசு.

இந்த வியாஜ்ஜியத்தில் விசாரணை செய்த சாக்ஷிகளினுல் அந்த இருதரத்தாருக்கும் மீன் பிடிக்கும் ஏக சுதந்தர முண்டென்றும் அவர்வள் இருவரும் அந்த சுதந்தரத்தை ஏகமாய் அனுபவித்து வருகிறார்களென்றும் ஏற்படுகிறபடியால் மாஜிஸ்ட்ரேட்டுக்கு இந்த கேசை விசாரிப்பதற்கு அதிகார வறம்பு கிடையா தென்று தீர்மானிக்கப் பட்பது.

இந்த கேசுக்கு ஆதாரமாய்—மோஹன்லால்ராய் vs-பரதகண்டராய் 11 கல் வீ. கோ. 512; நித்த கோபால்சிங்க்-vs-சண்டிசாரன் கிங்க் 10 கல். வீ. நோ: 1088; 4 கிரிமினல் லா. ஜ. 215; அகலௌ சந்தரடாஸ் vs-மஹேஷ்லால் இ. லா. ரி. 36 கல் 986; 4 இந்தியன் கேசுகள் 696; யூமோஹன் டாக்கர்-vs-நரசிங்கமோஹன்டாகர் இ. லா. ரி. 27 கல் 259; 4 கல். வீ. நோ. 420.

11 கல். லா. ஜ. 412 or லாகூர் இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பாகம் 544.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 72 of 1908.

ஜட்ஜிகள்:— { மி-ர். ஜ. மன்ரோ / மி-ர். ஜ. சங்கரன் நாயர் } முன்பாக.

அகம்மத் மொகிதீன் சாயபு வகையரா...அப்பீல் வாதிகள்.

vs

சௌமியா நாராயண அய்யங்கார் வகையரா...ரெஸ்பான்டென்டுகள்.

நிறைவேற்றுதல் நடவடிக்கைகள்—சிலரை அனுவசியமாய் கட்சிதாரராய் சேர்த்தல் — தாவா (Claim) செய்யாமலிருத்தல்—சி. பு. கோ. (14 of 1882) 244, 278-வது பிரிவுகள்.

ஓர் எக்ஜிகியூஷன்—(நிறைவேற்றுதலுக்காக கொடுக்கப்படும் மனுவில் சிலரை பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட்டது. அவர்கள் வாதி செய்த ஜப்தியையும் ஏல விற்பனையையும் ஆட்சேபித்து தாவா (claim) செய்யவில்லை. அவர்கள் அப்படி தாவா (claim) செய்ய நியாயமுண்டு.

சாத்தூர் டி. மு. கோ. 13 of 1905-ன் டிக்ரிக்கு விரோதமாய் திருநெல்வேலி சப் கோர்ட்டார் அ. நெ. 241 of 1906-ல் செய்த டிக்ரியின்பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

தீர்மானம் :—இந்த நம்பரில் அப்பீல் வாதிகள் ஏ குறிப்பிட்ட டிக்ரியில் கட்சிதாரர்களுமல்ல அல்லது கட்சிதாரர்களின் வார்சுகளுமல்ல. பிரத்தியாரை வாதி தன்னுடைய நிறைவேற்றும் மனுவில் கட்சிதாரர்களாய் சேர்த்ததற்கு சட்டத்தில் யாதொரு நிபந்தனையும் கிடையாது. அப்பீல்வாதிகள் சி. பு. கோ. 244-வது பிரிவின் கீழாவது அல்லது 278-வது பிரிவின் கீழாவது இந்த தாவாவிற் கிளெயிம் (claim) மனு செய்ய நியாய முண்டு. அப்பீல் வாதிகளுக்கு இந்த நம்பரில் தகராரிலிருக்கும் வீட்டில் என்ன ஹக்கு சுதந்தரம் அல்லது சம்பந்தம் உண்டென்று கண்டு தெரிவிக்கும்படிக்கு கீழ்கோர்ட்டாருச்கு கேசு ரிமாண்டு செய்யப்பட்டது. வாதிகளுக்கு தாவா வீட்டில் யாதொரு சம்பந்தமும் கிடையாதென்று தெரிவித்ததை ஹைகோர்ட்டார் ஒப்புக்கொண்டு அப்பீலை சிலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 2-வது பாகம் 161.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது சிவில்அப்பீல் நெ. 408 of 1908.

ஜட்ஜிகள்:— { மிர். ஜ. மன்ரோ / மிர். ஜ. சங்கரன் நாயர் } முன்பாக.

பொன்னுசாமி முன் மைனர் / இப்போது மேஜர். } ......அப்பீல் வாதி

Vs.

வைதிலிங்கப் பிள்ளை வயைரா......ரேஸ்பான்டேன்கேள்.

சிவில் புரோசிஜர் கோடு (14 of 1882) 317-வது பிரிவு கலெக்டர் சர்ட்டிபிகேட்டு பெற்றிருக்கும் நபரின்பேரில் தாவாசெய்து சுவாதீனம் ஒப்புவிக்கும்படி கேட்கும் தாவா—தாவாவைத் திருத்தல்—நஷ்டத்திற்கு தாவா செய்தல்.

பிரதிவாதி மைனர் வாதிக்குச் சில நிலங்களை ஓர் கோர்ட்டு ஏலத்தில் வாங்கி அவைகளை அந்த மைனர் வசம் ஒப்புவிப்பதாய் ஏற்பாடு செய்துக்கொண்டு உடன்படிக்கை எழுதிக் கொடுத்திருந்தான். அந்த அக்ரிமெண்டின் ஷரத்தின்படிக்கு தாவா நிலங்களை மைனர் வசம் செய்யும்படிக்கு தாவா கொண்டுவாப் பட்டது.

இப்படிப்பட்ட தாவா சிவில் புரோசிஜர் கோடு 317-வது பிரிவின் படிக்கு பாராய் விட்ட தென்றும் வாதி மைனராயிருப்பதால் நஷ்டத்திற்கும் தாவா செய்வதாய் பிராதை திருத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஸ்ரீரங்கம் டி. மு. கோ. அ நெ 74 of 1905ன் டிக்ரியின் பேரில் திருச்சினுப் பள்ளி ஜில்லா கோர்ட்டு அ. நெ. 186 of 1906ல் செய்த டிக்கிரியின் பேரில் கொண்டு வரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

தீர்மானம்:—அந்த அக்ரிமெண்டை ஊர்ஜிதப் படுத்தி சுவாதீனம் கேட்பதற்கு சி. பு. கோ. (14 of 1882) 317-வது பிரிவின் கீழ் நியாய மில்லை. ஆனல் வாதி மைனரா யிருப்பதால் இந்த தாவாவில் டாமேஜ்-நஷ்டம்-கேட்பதற்கு நியாய முண்டென்று கண்டு வாதிக்கு எவ்வளவு நஷ்டத் தொகை கொடுக்கலாமென்று கண்டு தெரிவிக்கும்படி கீழ் அப்பீல் கோர்ட்டாருக்கு கேசு ரிமாண்டு செய்யப்பட்டது.

அதன்பேரில் ஜில்லா கோர்ட்டார் இந்த அக்ரிமெண்டு சட்டப்படி செலாவணி யுள்ள தென்றும் அமுலின் கீழ் கொண்டு வரத்தக்கதென்றும் கண்டு வாதிக்கு ரூபா 1800 டாமேஜாக நஷ்டத்தொகை கொடுக்கலா மென்று தெரிவித்ததை ஹைக்கோர்ட்டார் ஒப்புக் கொண்டு அந்த மொத்தத்திற்கு வாதியின் பட்சம் தீர்ப்பு செய்தார்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 2-வது பாகம் 258.

MADRA HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 1306 of 1907.

ஜட்ஜிகள்:— { மி-ர். ஜ. அப்டுர் ரஹீம், மி-ர். ஜ. கிருஷ்ணசாமி ஐயர். } முன்பாக.

டேவுபலபள்ளி காமேஸ்வா சாஸ்திரி...வாதிகள் அப்பீல் வாதிகள்.

VS

பொவரபு வீராசாருலு...பிரதிவாதி...ரெஸ்பான்டென்ட்.

ஹிந்துலா—ஸமஷ்டி (எக) குடும்பம்—சட்டப்படி பந்தப்படுவது—ஓர் குமாரனுடைய விவாகச் சிலவுகள்—விவாக சம்ஸ்கரம்:—

ஓர் அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த தாயாதிகளில் ஓர் இளைய குமாரனுக்கு விவாகம் செய்யவேண்டியது குடும்பார்த்தமான காரியங்களைச் சேர்ந்தது; ஆகையால் அந்த குடும்பத்திற்கு தலைவனயிருக்கும் காரியஸ்தன்—மானேஜர்—அப்படிப்பட்டவனுடைய விவாக சிலவிற்காக கடன் வாங்குவது நியாயமாய் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம். அவ்விதமாய் ஏற்பட்ட கடனை குடும்பத்திலுள்ள தாயாதிகள் எல்லோரும் செலுத்த பந்தப்பட்டவர்கள்தான்.

இவ்விதமாய் உண்டாகும் கடன் தொகை அந்த குடும்பத்திலுள்ள குமாரன் ஒருவனுடைய விவாகச் சிலவிற்காக வாங்கப்பட்ட தென்னும் காரணத்தைக் கொண்டு அது குடும்ப காரியங்களுக்காக பட்ட கடனென்று சொல்லி குடும்ப சொத்திலிருந்து அந்தக் கடன் தொகையை வசூல் செய்ய நியாயமுண்டு.

மஹாதேவன் பாண்டியர் Vs ராம நாராயண பாண்டியா 13 ம. லா. ஜ. 75; சரவணதேவன் Vs முத்தாயி அம்மாள் 6 ம. ஹை. கோ. ரி. 371; காரிபுல்லா—Vs காலங்சிங் இ. லா. ரி. 25 அ. 407; 7 கல். வீ. நோ. 681; 5 பம். லா. ரி. 478; 30 இ. அ. 165 பிரிவி கவுன்சல் கேஸ். இந்த கேசுகளை இந்த பாயிண்டுக்கு ஆதாரமாய் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆனல் கோவிந்தராஜுலு நரசிம்மம் Vs தேவர பொட்ல வெங்கட நரசய்ய இ. லா. ரி. 27 ம. 206-ல் செய்த தீர்மானத்தை இந்த கேசில் ஒப்புக்கொள்ளவில்லை.

சாதாரணமாய் சூத்திரர்களுக்குள் விவாகம் என்பது ஓர் சமஸ்கரமாய் அதாவது முதல் முதல் முக்கியமாய் நடக்கவேண்டிய காரியம்.

ஓர் ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த இரு பிறப்பினரொன்று சொல்லப்படும் பூனூல் தரிப்பவர்களுள் ஒவ்வொருவனும் குடும்பஸ்தனுக வேண்டுமென்பது சாஸ்திர முறைமையானதால் அது அவசியம் நடந்தேற வேண்டியதுதான்.

பெதப்பூர் டி. மு. கோர்ட்டு அ. நெ. 139 of 1906 டிக்ரியின் பேரில் காகினடா சப் கோர்ட்டு அ. நெ. 146 of 1906-ல் செய்த டிக்கிரியின்பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

தீர்மரனம்:—மி-ர். ஜ. கிருஷ்ண சுவாமி ஐயர்.—இந்த கேசில் ஓர் அவிபக்த ஹிந்து குடும்பத்தின் தலைவனுகிய குடும்ப மானேஜரென்று சொல்லப்படும் தகப்பன் (முதல்பிரதிவாதி) அந்த குடும்பத்திலுள்ள இளையவனுக்கு விவாகம் செய்துவைக்க வேண்டுமென்று குடும்ப சொத்துகள் முழுமைக்கும் கொதுவை வைத்து கொதுவை தஸ்தா வேஜு எழுதிக் கொடுத்தான். அந்தக் கொதுவை பத்திரத்தில் யுக்த வயது வந்த அவனுடைய குமாரனும் 2-ம் பிரதிவாதியும்—கையெழுத்து செய்தான். அவனுடைய இன்னொரு மைனர் குமாரனுகிய 3-வது பிரதிவாதிக்காக தான் கார்டியனுய் கையெழுத்து செய்திருந்தான். இந்த கொதுவைப் பத்திரத்தின் பேரில் வாங்கிய கடன் இரண்டாம் பிரதிவாதியாகிய தன்னுடைய குமாரனுக்கு விவாகம் செய்விக்க நேரிடும் சிலவிற்காக வாங்கினது. பிரதிவாதிகள், சூத்திரர்கள், இந்தக் கடன் பத்திரத்தில் சேரவேண்டி யிருக்கும் தொகையை வசூல் செய்வதற்காக கொண்டுவந்த தாவா. சப் கோர்ட்டார் 3-வது பிரதிவாதியின் பாகத்தைத் தள்ளுபடி செய்து டிக்ரி செய்தார். அதன்பேரில் வாதிகள் செய்துக்கொண்ட இந்த இரண்டாவது அப்பீலில் 2-வது பிரதிவாதியின் விவாகத்திற்காக வாங்கின கடன் இந்துலா பிரகாரம் ஓர் குடும்ப பார்த்தமான காரியமாய் அவசியம் வாங்கத்தக்கின தல்லவென்று அதற்காக குடும்ப சொத்தை முழுமைக்கும் கொதுவைப் பத்திரம் எழுதிக் கொடுக்க நியாயமில்லையென்றும் கண்டு சப் கோர்ட்டார் டிக்ரி செய்தது பிசகென்று வாதிக்கப்பட்டது.

ஓர் ஹிந்து குடும்பத்தின் காரியஸ்தன்—மானேஜரா யிருப்பவனுக்கு ஹிந்துலா பிரகாரம் என்னென்ன அதிகாரங்கள் உண்டென்பதை லார்ட் ஜஸ்டிஸ் நைட்புரூஸ் என்னும் நன்ருய்க் கற்றுணர்ந்த பிரபு அடியில் கண்டிருக்கும் கேசில் மிக்க விசதமாய்த் தற்கித்து பார்த்து தீர்க்க யோசித்து அவருடைய தீர்மானத்தை சொல்லி யிருக்கிருர்—அதாவது—

ஹனுமன் பிரசாத் பாண்டே Vs முசமத் பாபூயி குன்வாரி 6 ம. இ. அ. 393; 18 வீ. ரி. 81.

இந்த கேசின் 423-வது பக்கத்தில் அவர் சொல்வதாவது:—"ஒரு ஹிந்து குடிம்பத்தில் மைனரா யிருப்பவனுடைய சொத்துக்கு மானேஜரா யிருக்கப்பட்டவன் தனக்குச் சொந்தமல்லாத சொத்தின் பேரில் கடன் வாங்கி அந்த சொத்தை பெந்தகப்படுத்த அவனுக்குள்ள அதிகாரம் மிக்க கொஞ்சம் தான்.

மிதாக்ஷரம் 29-வது சுலோகத்தின்படி ஓர் ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த பாகஸ்தன் ஒருவனுக்கு விவாகம் செய்விக்கும் சிலவு குடும்பார்த்தமான சிலவென்றும் அதற்காக வாங்கிய கடன் குடும்ப காரியங்களுக்காகத்தான் வாங்கின தென்றும் அந்தக் கடனை குடும்ப பொது சொத்திலிருந்து வசூல் செய்யலாமென்பதற்குச் சந்தேக மில்லை யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. குடும்பத்திலுள்ள வர்களுக்கு விவாகம் செய்விக்க வேண்டு மென்யது அவசியமென்று மிதாக்ஷரத்தில் சொல்லி யிருக்கிறது (சம்ஸ்கரபாஸ்கர் 199-வது பக்கம் பார்க்கவும்.)

ஆகையால் 2-ம் பிரதிவாதியின் விவாகத்திற்காக வாங்கினகடன் குடும்பார்த்தமான கடனென்றுதான் சொல்லவேண்டும். 3-ம் பிரதிவாதியின் பாகமும் இந்தக் கடனுக்குப் பந்தப் பட்டது தானென்று கண்டு சப்கோர்ட்டார் 3-வது பிரதிவாதியின் பாகத்தை நீக்கி டிக்ரி செய்ததை ரத்து செய்து விட்டு மூன்ருவது பிரதிவாதியின் பாகச் சொத்தின் பேரிலும் மேற்படி கொதுவைத் தொகையை வசூல் செய்துக் கொள்ளும்படிக்கு டி. மு. செய்த டிக்கிரியை ஊர்ஜிதப் படுத்தினுர்கள்.

இதற்கு ஆதாரமாய் எடுத்துக் கூறிய ஹிந்து கிரந்தங்கள்.

மிதாக்ஷரம் அத்தியாயம் 1 பிரிவு 1 சுலோகம் 29.

ஸ்மிருதி சந்திரிகா 13-ம் அத்தியாயம் சுலோகங்கள் 33,34.

மாண்ட் லிக் என்பவர் செய்த ஆசாரத்ய-யெஜனவல்கியா 10-வது சுலோகம்.

மனு நீதி சாஸ்திரத்தின் பேரில் மேதா என்பவர் எழுதி யிருக்கும் வியாக்கியானங்கள்-10-வது அத்தியாயம் 36-வது சுலோகம்.

மனு நீதி சாஸ்திரம் 2-வது அத்தியாயம் 243 to 249 சுலோகங்கள்.

யெஜ்னவால்கியா ஆசாரத்யாய 41, 51, 52, 56, 57, பிராயச்சித்தாஸ்யா.

கௌதமர் கிரந்தம் 2-வது வால்யம் 36.

ஜெய்மினிய நியாயமாலா 12-வது அத்தியாயம் 4-வது பாடம் 7-வது ஆதிகர்மா.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 2-வது பாகம் 195.

AGRICULTURAL DEPARTMENT, MADRAS.

விவசாய டிப்பார்ட்மெண்ட்—இலாகா.

—:o:—

Leaflet No. 5, 1910—1910-ம்ஸ்ரீத்திய 5-வது பாகம்.

GREEN MANURING.

பச்சைத் தழைகளை எருவாக உபயோகித்தல்.

பசுந்தாள் உறத்திற்கான பயிர்கள்.

பசுந்தாள் உறமென்பது பசுந்தழைகளை எருவாக உபயோகப்படும்படி பூமியில் சேர்த்து உழுது விடுவதுதால். தஞ்சை ஜில்லா நீராரம்பத்தில் தழைகளை உபயோகித்தவர்கள் நல்ல மாகூலை அடையலாமென்பதை அறிந்திருப்பார்கள். அப்படித் தழைகளை உபயோகிப்பவன் நோக்கம் என்னவென்றால், தஞ்சைச் ஜில்லா நிலங்களில் குறைவா யிருக்கும் நைட்ரோஜன் (Nitrogen) என்று சொல்லக்கூடிய உப்புவாயுவைக் கொடுக்கக்கூடிய இந்திர வஸ்துவை அதிரிக்கத்தான். பசுந்தழைகளை தஞ்சை நிலங்களிலேயே பயிர்செய்வதுதான் சிலாக்கியமானதும் சொற்ப பணச் செலவினுலும் அடையக்கூடிய வழி. அவுரி, காட்டு அவுரி (கொளஞ்சி) சணல், வேர்க்கடலை, காய் தான்யங்கள், இன்னும் இவைகளைப் போலொத்த கோஜன் பயிர்கள் (Leguminous Plant) தழை எருவுச்காக சாகுபடி செய்ய சிறந்த பயிர் தினுசுகள். ஆகாயத்தில் காற்று ரூபமாயிருக்கும் உப்புவாயுவை கிரகிக்கும் குணமுடையதால், அவைகளை மடித்து உழுது விடும்போது, பின் சாகுபடிக்கு அந்த உப்பு வாயு உபயோகிக்கப் படுகிறது.

குடியானவர்களுக்கு உதவி செய்யும்பொருட்டு, விவசாய இலாகாவில், அவுரி, கொளிஞ்சி, சணல்என்ற 3 முக்கியமான பசுந்தாள் உறத்திற்கு சாகுபடி செய்யக்கூடிய பயிர் தினுசுகளின் விதையை ஏராளமாகத் தருவித்து குடிகளுக்கு கொள் முதலுக்கு கொடுக்கும்படிக்கு ஏற்பாடு செய்திருக்கிருர்கள். அவைகளை பயிர் செய்யவேண்டிய பக்குவம் கீழே குறிக்கப்பட்டிருக்கிறது.

1. அவுரி.—ஒரு ஏக்கர் தெளிக்க 2 முதல் 3 பட்டணம்படி விதை போதுமானது. இது மணல் சாரியிலும், களிமண் பாங்கான நிலத்திலும் நன்ருய் பயிராகிறது. ஆனல் கொஞ்சமாவது களர் உள்ள நிலங்களில் உண்டாகாது. நஞ்சைகளில் நெல் அறுவடையாவதற்கு சில தினங்களுக்கு முன் வயல் பயறு தெளிப்பதுபோலவே அவுரியை தனிமையாயாவது, பயருடன் கலந்தாவது தெளிக்கலாம். அவுரி விதை பயரைப் பார்க்கிலும் உறுதியானபடியால் முளைப்பதற்கு தகுந்த ஈரம் வேண்டும். பயருடன் கலந்து விதைக்கும்போது

பயற்றஞ்செடிகள் சீக்கிரமாகப் பயிராகி, இளம் அவுரிச்செடிகளை காத்துக்கொள்ளுகிறது. பயிர் நன்ருய் தழைத்திருக்குமானல், பயிறு பிடுங்கப்பட்ட உடனே, அவுரிச்செடிகளை அறிந்து தழைகளை கோணிகளில் கட்டி வைத்திருந்தால், குருவை நாற்றங்காலுக்கும் வயலுக்கும் உறம் செய்ய உபயோகப்படும். அரியப்பட்ட தாள்கள் கோடை மழையின் உதவியால் தழைத்துவர அவைகளை வயல்கள் செய் நேர்த்தி செய்யும்போது மடக்கி உழுது விடலாம். முதல் ஒரு தடவை அறியப்பட்ட தாள்கள் ஏராளமாய் புஷ்பித்துக் காய்க்கும். அதிலிருந்து அடுத்த வருஷத்திற்கு வேண்டிய விதையை எடுத்துக் கொள்ளலாம். விதை முளைப்பதற்கு வேண்டிய ஈரம் பூமியிலிருக்குமானல், நெல் அறுவடையான பிறகும் விதைக்கலாம். நிலத்தை ஒன்று அல்லது இரண்டு சால் உழுது விதையை விதைத்து ஷை விதை மூடுவதற்கு மறுசால் உழுது விடவேண்டும். நெல் அறுவடையாவதற்கு முன் தரை பதமாயிருக்கும்போது தெளிக்கப்பட்ட விதையிலிருந்து உண்டாகும் பயிரைக்காட்டிலும், நெற்பயிர் அருத்த உடன் உழுது தெளிக்கப்பட்ட பயிரானது சிலாக்கியமாயிருக்கிறது. பயிர் இளமையாயிருக்கும்போது ஆடு மாடுகளால் கொஞ்சம் கடிக்கப்பட்டாலும், வளர்ந்த அவுரியை ஆடுமாடுகள் மேய்வதில்லை.

2. கொளிஞ்சி.— இதைக் காவாளைப் பூண்டு என்றும் காட்டவுரி என்றும் சொல்வார்கள். ஒரு ஏக்கர் தெளிக்க 4 பட்டணம்படி விதை போதுமானது. இது மணல் சாரியிலும் நல்ல வடிகாலமைந்த இருமண் பாடான நிலங்களிலும், நன்ருய்ப் பயிராகிறது. களிப்பு நிலத்தில் அவ்வளவு நன்ருய் பயிராவதில்லை. கொளிஞ்சித் தழை சிலாக்கியமானதென்பது ஏற்கனவே தெரிந்தபோதிலும், அந்த நஞ்சைகளில் பயிராக்கி பசுந்தாள் உறமாக மடித்து உழுது விடலாமென்பதை அநேகர் அறிந்திருக்கமாட்டார்கள். நெல் அறுவடையாவதற்கு முன் வயல் பயிறு தெளிப்பதுபோலவே கொளிஞ்சியையும் விதைக்கலாம். கொளிஞ்சி விரை பளுவு, உறுதியுமானபடியால், வயல் பயருக்கும் அவுரிக்கும் வேண்டிய பதத்தைக் காட்டிலும் ஜாஸ்தியான ஈரம் வேண்டும். அவுரியைப்பற்றி சொல்லும்போது சொன்ன காரணத்தை உத்தேசித்தே கொளிஞ்சியையும் பயருடன் கலந்து தெளிப்பது உத்தமம். நன்ருய்ப் பயிராய்ப் விடுமானல், அப் பயிரிலிருந்து விதை விழுந்து நடப்பட்ட நெல் அறுவடையானபிறகு வயல் காய்ந்த உடன், அவ்விதைகள் (மற்றப் புல் பூண்டுகளைப் போல்) முளைத்து பயிராய் விடுகிறது. ஆகையால் நான் கொளிஞ்சிப் பயிர் அவுரியைக் காட்டிலும் சிலாக்கியமென்று சொல்லவேண்டும். கொளிஞ்சிப் பயிரை ஆடுமாடுகள் மேய்த்து விடுவதில்லை.

3. சணல் (சணப்பு அல்லது சடம்பு).—ஒரு ஏக்கர் விதைக்க 10 முதல் 12 பட்டணம்படி போதுமானது. இது அநேகமாய் எல்லா நிலங்களிலும் பயிராகும். சிற்சில இடங்களில்நாருக்காக அது சாகுபடி செய்யப்பட்டபோதிலும், அதை பசுந்தாள் எருவாக உபயோகப் படுத்தலாமென்பதை அநேகர் அறிந்திருக்கமாட்டார்கள். தஞ்சை ஜில்லாவில் வயல் பயறு தெளிப்பதுபோலவே, நெல் அறுப்பதற்கு சில நாள்களுக்கு முன் கிருஷ்ணா ஜில்லாவில் சணல் விதையைத் தெளிப்பார்கள். பூமியிலிருக்கும் ஈரத்தைக்கொண்டே விதைகள் முளைத்து பயிர் கிளம்பிவிடும். சுமார் 1½-மாதத்தில் ஷை பயிரை வெட்டி மாட்டுத் தீவனமாக உபயோகிப்பார்கள். பூமியில் வடப்பட்ட தாள்கள் அடுத்த நெல் சாகுபடிக்கு பசுந்தாள் உறமாகிறது. தகுதியான மழை பெய்யுமானல் வெட்டப்பட்ட தாள்கள் மறுபடியும் தழைந்துவர, அதை பின் சாகுபடிக்கு பசுந்தாள் உறமாக மடித்து உழுது விடலாம், தஞ்சை ஜில்லாவில் இப்படிச்செய்து சித்தி யடையலாமென்றாலும் சீக்கிரமாக காய்ந்துபோகக்கூடிய மணல் சாரியான இடங்களுக்கு இது ஒருவேளை உபயோகப்படாமற் போகலாம். ஆனல் காவேரியில் ஜலம் வந்த பிறகு சாகுபடி செய்வதுதான் மிகவும் சிலாக்கியமான தருணம். காவேரியில் ஜலம் வந்த பிறகு நாற்றங்காலில் விதை விட்டது முதல் சம்பாநடவாரும் வரையில் ஊடே ஏற்பட்டிருக்கிற 2மாத சாவகாசத்தைசணல் சாகுபடி செய்வதற்கு சுளபமாய் உபயோகப்படுத்தலாம். ஜலம் வந்த பிறகாவது, அதற்கு முன்னமேயாவது உழப்பட்ட நிலத்தில் விதையைத் தெளித்து ஷை விதையை மூடுவதற்கு மறுசால் உழப்படவேண்டும். இருபோக நஞ்சைகளுக்கு உரம் செய்ய சணலை ஏப்ரல், மே மாதங்களில் பெய்யக்கூடிய கோடை மழையின் உதவியால் விதைக்கலாம். 1½-முதல் 2 மாதத்தில் சுமார் 4-6 அடிவரையில் வளர்ந்து ஏக்கர் 1-க்கு 6 முதல் 10 வண்டி பசுந்தழையைக் கொடுக்கும்.

விவசாய டிபார்ட்மெண்டார் மேல் சொன்ன விதைகளைத் தருவித்து கீழே குறிக்கப்பட்டிருக்கிற இடங்களில் விற்பனைக்கு வைத்திருக்கிருர்கள்.

1. சீடாமங்கலம்.
2. கொரடாச்சேரி.
3. நன்னிலம்.
4. திருத்துறைப்பூண்டி.

ரெயில் மார்க்கம் விதைகள் அனுப்பப்படவேண்டுமானல் ஸ்பெஷல் டியூட்டி பாரம் மானேஜர், விஜயபுரம் போஸ்ட் தஞ்சாவூர் ஜில்லா என்ற விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம். வி. பி. மூலமாய் அனுப்பப்படும். 1 கலம் (24பட்டணபடிக்கு) குறைந்த அளவு விதைகளை ரெயில் மார்க்கம் அனுப்பமுடியாதாகையால் டெபோவிலிருந்து நேரில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

1910-ஹு மேமீ 5உ.

REVENUE DEPARTMENT.

Notification -dated Ootacamund, 23rd August 1910.

ரிவினியூ டிபார்ட்டுமெண்டு

விளம்பரம்.

உதயமங்கலம், 1910-ஹு ஆகஸ்டு மீ 23உ.

நெ. 495.—மதராஸ் லாண்டு எஸ்டேட் ஆக்டு (1 of 1908) 3, (5) and 215-வது பிரிவுகளின்படி ஆலோசனை சபையிலுள்ள மாகூனம் தங்கிய கவர்னர் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்படிக்கு பின் வருமாறு விதிகள் செய்யப்பட்டன :—

(1) ஓர் சுவாதீனக் கொதுவை மூலமாயாவது அல்லது குத்தகைக்கு விட்டாவது அல்லது வேறெந்த விதமாயாவது யாதேனும் ஒரு எஸ்டேட்டு அல்லது ஓர் எஸ்டேட்டின் ஓர் பாகம் யாராவது பராதீனம் (ட்ரான்ஸ்பர்) செய்யப்பட்டால்:-

(a) எவனுக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டதோ அவன் சுவாதீனத்திலிருந்தால் அல்லது அப்படி ட்ரான்ஸ்பர் செய்ததை அந்த நிலத்திற்குச் சொந்தக்காரன் ஆக்ஷேபிக்காமல் ட்ரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவன் தற்கால சுவாதீனத்திலிருந்தால்; எவனுக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டதோ அவன்தான் அந்த பூமிக் குடையவன் என்பதாக பாவிக்கவேண்டும்.

(b) யாருக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டதோ அவனுடைய சுவாதீனத்தில் அந்த நிலம் இல்லாவிட்டாலும் அப்படிப்பட்ட ட்ரான்ஸ்பரைப்பற்றி யாராவது தகரார் செய்தாலும் கலெக்டர் அவர்கள் சம்மேரி விசாரணை நடத்தி அந்த விசாரணையில் அந்த ட்ரான்ஸ்பர் வாஸ்தவமானது தானென்றும் அது சட்டப்படி செல்லத்தக்கினதென்றும் அதன்படி ட்ரான்ஸ்பர் பெற்றவனுக்கு பிரஸ்துத சுதந்தரம் கிடைத்ததென்றும் கண்டால் அந்த ட்ரான்ஸ்பர் பெற்றவனை பூமிக்குடையவன் என்று சொல்லவேண்டும்.

(2) அதைப்பற்றி தகரார் செய்யப்பட்டால்; அதாவது— ஓர் எஸ்டேட் அல்லது அதனுடைய ஓர் பாகம் எனக்குச் சொந்தமென்றும் இன்னொருவன் தனக்குச் சொந்தமென்றும் சில நபர்கள் ஒருவர்மேல் ஒருவர் சச்சரவு செய்துக்கொண்டாலும் அல்லது அந்த எஸ்டேட்டின் ஓர் பாகத்திற்கு ஒருவன் தனக்கிருக்கும் கொஞ்சம் பாத்தியதையினல் அந்த நிலம் தன்னுடைய சுவாதீனத்திலிருக்கிறதென்னும் காரணத்தால் தகரார் செய்வானகில் அவர்கள் சுருக்கமாய் (சம்மேரி) விசாரணை நடத்தி பிரஸ்தாப எஸ்டேட்டு அல்லது பாகத்திற்கு இன்னன்தான் பிரத்தியக்ஷமான சொந்தக்காரனென்றும் பிரஸ்துதம் இன்னனுடைய அனுபவித்தில் தானிருக்கிறதென்றும் கண்டு அவனை பூமிக்குடையவனய் பாவிக்கவேண்டியது.

(3) பிரஸ்தாப எஸ்டேட்டு அல்லது அதன் எந்த பாகத்திற்காவது இரண்டுக்கு மேற் பட்டு சில நபர்கள் சொந்தக்காரர்களா யிருந்தால் :—

(a) அப்படிப்பட்டச் சொந்தக்காரர்கள் ஓர் ஹிந்து அவிபக்த ஸமஷ்டி குடும்பத்தின் பாகஸ்தர்களா யிருக்கும் விஷயத்தில் அந்த குடும்பத்திற்கு காரியஸ்தனு யிருப்பவனகிய மானேஜரை பூமிக்குடையவனென்று பாவிக்கவேண்டும்.

(b) ஒரு எஸ்டேட்டுக்குச் சொந்தக்காரர்களா யிருப்பவர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து அவர்களில் ஒருவனை மாத்திரம் பூமிக்கு மானேஜிங் சொந்தக்காரனய் எழுத்து மூலமாய் நேமித்தாலும் அல்லது கலெக்டர் முன் ஒப்புக்கொண்டாலும் கலெக்டர் அவர்கள் அப்படிப்பட்டவனை பூமிக்குடையவனென்று பாவிக்கவேண்டும்.

(c) மற்ற விஷயங்களிலெல்லாம் அந்த குடும்பத்திற்குச் சொந்தமான எஸ்டேட்டிலிருந்து வரும் மாசூலில் அதிக பாகத்திற்கு ஹக்குள்ளவனை பூமிக்குடையவனென்று கலெக்டர் அவர்கள் பாவிககவேண்டியது. ஆனல் ஓர் எஸ்டேட்டிற்குச் சொந்தக்காரர்கள் அநேகர் இருந்து அதில் எவனுக்கும் மற்றவர்களை விட அதிகமான பாத்தியதை யில்லாமல் எல்லோரும் சமபாகத்திற்குச் சொந்தக் காரர்களாயிருந்தால் கலெக்டர் அவர்கள் அவர்களில் எவன் அந்த எஸ்டேட்டை பரிபாலனம் செய்யத் திறமையுள்ளவனென்று காண்கிருரோ அவனை பூமிக்குடையவனென்று பாவிக்கவேண்டும்.

இந்த ரூலின் கீழ் கலெக்டர் செய்யும் விசாரணை சம்மேரி விசாரணை யென்று சொல்லப்படும்.

(4) மேற்படி லாண்ட் எஸ்டேட் ஆக்ட் (1 of 1908) 3-வது உட்பிரிவின் கீழ் உண்டாகும் சச்சரவுகளின் விஷயமாய் கலெக்டர் அவர்கள் உபயத்திராளாகிய கட்சிதாரர்களையாவது அல்லது அவர்கள் சொல்லிக்கொள்ள வேண்டியதை கேட்டு தான் உத்தரவு செய்யவேண்டும்.

TANJORE COLLECTOR'S OFFICE FOREST BRANCH.

தஞ்சாவூர் கலெக்டர் ஆபீசு-பாரஸ்டு இலாகா.

——:o:——

1910ஹு அக்டோபர்மீ 10உ

CIRCULAR—சர்க்குலர்—ஒட்டுத்தரவு.

பாரஸ்டு குற்றங்களை தடை செய்வதிலும், கண்டு பிடிப்பதிலும் அளிக்கப்படும் வெகுமதிகள்.

பாரஸ்டு குற்றங்களை தடை செய்தலினலும் அல்லது கண்டு பிடிப்பதினலும் மிகவும் மெச்சத்தக்க உதவி புரிபவர்களுக்கு தஞ்சாவூர் கலெக்டர் துரையவர்கள் திருப்திகரமாய் வெகுமதிகள் சாங்ஷன் செய்வார்கள். பாரஸ்டு கான் சர்வென்சி அல்லது காப்பாற்றுத னிமித்தம் உபயோகப்படுத்தப்படும் தேசத்திய சாதாரண பீனல் சட்டங்கள் பாரஸ்டு சட்டங்கள் என்னும் பதத்தில் அடங்கியவையா யிருக்கும். வெகுமதியின் தொகை குற்றங்களின் கனத்தையும் குற்றங்களை கண்டுபிடிப்பதிலும், குற்றவாளிகளை தண்டனைக்குக் கொண்டு வருவதிலும் அனுபவிக்கக்கூடிய சிரமத்தையும் பொருத்ததாய் இருக்கும். மேலும் அதை நிர்ணயிக்கும் விஷயத்தில் பின் வருவனவைகள் கவனிக்கப்படும்.

1. (கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்கள் உள்பட) பாரஸ்டு ஆபீசர்களையும் அல்லது இதர உத்தியேகஸ்தர்களையும் தங்கள் தொழிலை நிறைவேற்றும்காலையிலாவது அல்லது ஆடு மாடுகள் மரம் விறகுமுதலிய அபகரிக்கப்பட்ட சொத்துக்களை மீட்கும் காலையிலாவது எதிர்த்தாக்குதல்.

2. ரேன்ஜ் ஆபீசர்களாவது அல்லது இதர ரிவினியூ ஆபீசர்களாவது தாங்களே பரிசோதித்து ரிப்போர்ட்டு செய்யப்பட்ட அதிக மரத்திருட்டுகள்.

3. தடுக்கப்பட்டவும் நெருக்கமானவுமான இடங்களில் சட்ட விரோதமாய் சுடுதல், பொரிவைத்தல் வலை போடுதல் நெருப்பு மூட்டல் அல்லது கரி எறித்தல்.

4. ஐம்பதுக்கு அதிகமாயாவது அல்லது மேய்ச்சலிடத்தில் சாதாரணமாய் அடங்கக்கூடிய தொகைக்கு அதிகமாயாவது ஏராளமாய் ஞாயவிரோதமாய் ஆடு மாடுகள் மேய்த்தல்.

II. இத்தகைய கேசுகளில் ஏதேனும் அறிவிப்போர் வெகுமானத்திற்காக மனு செய்துக் கொள்ளலாம்.

III. டிஸ்டிரிக்ட்டு பாரஸ்டு ஆபீசர் அவர்கள் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களால் தனக்கு செய்யப்பட்ட விசேஷமான உதவிகளைப் பற்றிய ரிப்போர்ட்டுகளைப் பெற்று வெகுமதியளித்ததற் பொருட்டு யோசித்து ஆராய்வார். ஆனல் குற்றவாளிகளை தண்டனைக்குக் கொண்டு வருவதில் அதிகமான சரீர கஷ்டம் அனுபவிக்கும்படி நேர்ந்தாலாவது அல்லது காடுகளின் வளர்ச்சிக்கு அதிகமாய் சேதம் வரும்படி இருந்தாலாவது அத்தகைய கேசுகளையே பரிசளித்ததற் குறியனவென்று சிபார்சு செய்யவேண்டுமென்றும், ஒவ்வொரு கேசும் ரிப்போர்ட்டு செய்யப்படும் காலத்தில் ரிவார்டு ஸ்டேட்மெண்டு D. என்னும் பாரத்தில் ஒவ்வொன்றினுடையவும் விசேஷ விருத்தாந்தங்களை தெரிவிக்கவேண்டுமென்றும் ஞாபகத்திலிருக்க வேண்டியது.

IV. தங்களுடைய பழுதான வேலை கலெக்டர் துரையவர்களால் அறிக்கை செய்யப்பட்ட தேதி முதலாவது அல்லது அவர்கள் அறிக்கைக்கு கொண்டுவரப்பட்ட தேதிமுதலாவது மூன்று மாதத்திற்கு தங்கள் வேலையை சரிவர செய்யாதவர்கள் யாதொரு பரிசும் அளிக்கப்படமாட்டார்களென்னும் விஷயம் மேலே கூறப்பட்டவைகளுள் அடங்கியதாயிருக்கும்.

General News.

பொது வர்த்தமானங்கள்.

பயங்கரமான டபாஸ் மருந்து வெடியல்.

பஞ்சாப் தேசத்தின் லாகூர் பட்டணத்தில் சென்ற நவம்பர்மீ 17உ சுமார் 4-மணிக்கு ஜனங்கள் மிக்க நெறுக்கமாய் புழங்கும் இடத்தில் டபாஸ் மருந்து வெடித்ததாம். அந்த வெடியின் சப்தம் அதிகதூரம் கேட்டதாகவும் அதனல் அக்கம் பக்கத்திலுள்ள வீடுகளெல்லாம் மிக்க சேதமாகிலமாய் விட்டதாம். அந்த வெடியின் மும்முரத்தினலும் வேகத்தினலும் அது எங்கே வெடித்ததோ அந்த வீட்டின் மெத்தையின் பேரிலிருந்த மரத்தினல் செய்யப்பட்ட அறையில் வேலை செய்துக்கொண்டிருந்த நான்கு நபர்களை சின்ன பின்னமாய் கிழித்துப் போட்டு விட்டதாம். 12-அடியும் அநேக மணங்கு இடையுமுள்ள மரத்துண்டு ஒன்று ஓர் வீட்டிலிருந்து பிடிங்கிக்கொண்டு அங்கிருந்து 25 கெஜதூரத்திலுள்ள கோயிலின் ஓர் மூலையில் தாக்கி விழுந்ததாம். அந்த வீட்டின்மேல் மெத்தைக்குப் போகும் படிக்கட்டுகளும் பரிசுத்தமாய் பாழாய்விட்டதாம். பக்கத்திலிரு...

...கட்டடங்களுக்கும் மிக்க நஷ்டம் நேரிட்டதாம். மேற் சொல்லிய அந்த அரையிலிருந்த நான்கு பேர்வழிகளில் ஒருவன் குத்துயிராய் பக்கத்துவீட்டின் கூரையின்பேரில் கிடந்ததாகவும் மற்ற மூன்று பேர்களுக்கும் மிக்க பயங்கரமான காயங்கள் பட்டு கேவலமா யிருந்தார்களாம். அவர்களை அன்றையதினமே ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கொண்டு போய் விட்டார்களாம். மேலே சொல்லிய நபர்கள் போரி பண்டிகைக்காக டபாஸ் வெடிகள் செய்துக்கொண் டிருந்தார்களாம். இதற்கு நாம் மிக்க சிந்திக்கிறோம். ஆகையால் இப்படிப்பட்ட மருந்து விஷயமாய் மிக்க ஜாக்கிரதையா யிருப்பீர்களென்று கோறப்படுகின்றது.

ஆகாயத்தில் பறக்கும் மோடார்.

சென்னப்பட்டணம் ஐலெண்ட் காரவுண்டில் மி-ர். M. R. உல்லிஸ் என்பவர் நவம்பர்மீ 18உ காலை ஆகாயத்தில் மோடார் வண்டியில் ஏறிப்போவதற்கு எத்தனப்பட்டதாகவும் அதன் அடிபாகத்தை மேலெழுப்புவதற்கு முயற்சி செய்கையில் அதிலிருந்த விசிரி ஒன்று பிடுங்கிக்கொண்டு ஆகாயத்தில் பறந்து போய்விட்டதாம் மோடார் தலை பூமியின்மேல் மோதினதாம். அவர் இன்னும் சொற்ப காலத்திற்குள் மறுபடியும் பறக்கப்போகிறதாக வதந்தியா யிருப்பதால் அப்பொழுதாவது தவறிப் போகாமல் அவர் ஆகாயத்தில் பறந்து ஜனங்களுக்கு நல்ல காக்ஷி தருவாரென்று கோறப்படுகின்றது.

PUBLIC DEPARTMENT.
பப்ளிக் டிப்பார்ட்மெண்ட்.

——:o:——

விளம்பரம்.

1909-ம் ளு அக்டோபர்மீ 4உ.

பாம்புகடிக்குச் சிகிச்சை செய்வதற்காக ஸர் லாடர் ப்ரண்டன் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட கருவி.

உபயோகிக்கும் விதம்.— பாம்பு கடித்தல், கடித்த இடத்துச்கு மேலேயுள்ள அங்கத்தைச் சுற்றிலும் ஒரு கைச்குட்டையையோ, துண்டு கயிற்றையோ அல்லது தலைச்குட்டையிலிருந்து கிழித்த துணித் துண்டையோ ஒரு குச்சியைக் கொண்டு முறுக்கி ஒரு கட்டு கட்டுவதே கடியுண்டவன் செய்ய வேண்டிய காரியமாகும். பாம்பின் பற்கள் பட்டு உண்டான பள்ளங்களில் தாராளமாய் அறுத்து (இந்த கருவிச்குள் காணப்படும்) பெர்மாங்கனேட் என்னும் மருந்தில் இரண்டு மூன்று கட்டிகளை அதற்குள் அழுத்தி, அந்தக் கட்டிகளைச் சிறுதுபட்டில் கரைப்பதற்காக சில நீர் துளிகளை (அல்லது நீர் கிடைக்காவிட்டால் எச்சில் துளிகளை) அதன்மேல் விடவேண்டும்; பிறகு அவைகளை, திறந்தலையான சவ்வுகளுக் குள் போகும்படி அவை கறுத்துப்போய் விடுகிற வரையில் நன்றாய்த் தேய்க்க வேண்டும்.

இந்தக்காரியமவ்வளவையும் செய்வதற்கு 2முதல் 3 நிமிஷம் மாத்திரமே செல்லும்; பெர்மாங்கனேட் என்னும் மருந்தானது மிகவும் அதிகமான பிராணாயத்தை யுண்டாக்கத் தக்க பாம்புகளின் விஷத்துக்கு முறிப்பாக எவ்வளவு எடை உபயோகிக்கப்படுமோ அதற்கதிகமாகவே எடையுள்ள விஷத்தைக் கெடுதி செய்யாமலிருக்கச் செய்கிறதென்று இதுவிஷயமாய்ச் செய்த சோதனைகளால் தெரிந்திருப்பதால், சாதாரண பாம்புகள் கடிக்கும் பல விஷயங்களிலும் அப்படி கடித்த 15 நிமிஷம் முதல் 30 நிமிஷத்துக்குள்ளாகவும், மிகப் பெரிய கோப்ரா கிரியன் அல்லது நாகப்பாம்பு கடித்தால்கூட கடித்த உடனேயும், மேலே விவரிக்கப்பட்டபடி, பெர்மாங்கனேட் ஆவ் பொடாஷ் என்னும் மருந்தைக் கொண்டு, கடித்த இடங்களிலேயே சிகிச்சை செய்யும் பட்சத்தில், அதனால் உயிரைக் காப்பாற்றக்கூடு மென்று நிச்சயமாய் நம்பலாம்; ஆகவே மேலே விவரிக்கப்பட்ட லான்செட் என்னும் சாமான்களிலே ஒன்றை வைத்துக் கொண்டு, பாம்பு கடித்தவுடனே அதை உபயோகிக்கும் பட்சத்தில், பாம்பு கடிக்கும் ஒவ்வொரு விஷயத்திலும் வெகு சாய்ப் பரிஹாரமுண்டாகும்.

PRIZE OF Rs. 250 FOR SNAKE CURE.
பாம்புகடி சிகிச்சைக்கு ரூபாய் 250—இனாம்.

——:o:——

Madras Medical Surgical Journal.
மதராஸ் மெடிக்கல் சர்ஜிக்கல் ஜர்னல்.

198-1 காரன் வாலிஸ் வீதி-கல்கத்தா.

பாம்புக்கடிக்கு பரிகாரம் என்று சொல்லும் ஔஷதத்திற்கு இனாம் ரூ. 250.

பாம்புக்கடியை சொஸ்தப் படுத்துவதற்கு ஔஷதமாய் பாதோ ஜர் கல் (விஷபாட்டார்) சிலர் வைத்திருப்பதாக அடிக்கடி விளம்பரங்கள் வெளிவந்துக் கொண்டிருக்கின்றன. அந்தக் கல்லை பாம்புகடித்த இடத்தில் வைத்தால் விஷமெல்லாம் வாங்கி விடுகிறதென்று சொல்லியிருப்பதால் அந்த கல்லிருப்பது வாஸ்தவம் தானென்று வெளிபடுத்தும் அந்த நபருக்கு ரூபாய் 250 இனாமாய்க் கொடுக்கப்படும்.

யாராவது வெளிவரும் விஷயத்தில் அவர்களுக்காக நாம் மேற்படி விலாசதாருக்கு எழுதி இந்த வெகுமானத்தை தருவித்துக் கொடுக்கிறோம்.

திருநெல்வேலி செஷன்கோர்ட்டு.
விளம்பரம்.

கொக்கர குளத்திலிருக்கிற திருநெல்வேலி செஷன்கோர்ட்டில் 1910 ம் ளு டிசம்பர்மீ 5உ திங்கட்கிழமை 10 மணிக்கு குற்றங்களைப்பற்றி செஷன் விசாரணை நடத்தபடு மென்று தெரியவருகிறது.

TREASURE TROVE TANJORE.
புதையல் அகப்பட்டது.

மன்னார்குடி தாலூகா திருமல்லிக்காவல் கிராமத்தில் நெல்லிவனநாதசுவாமி கோவிலுக்கு சொந்தமான குரவன் தோப்பில் 1909 ளு டிசம்பர்மீ 31உ அடியில்கண்ட புதையல் அகப்பட்டதென்று இதனால் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது.

விபரம்.			சுமார் மதிப்பு.
1. தங்க சுழி 1	2	8	0
2. தங்கம்போன்ற தங்க ஆபரணம் .... ஜோடி	18	0	0
3. விஷ்ணு சக்கரம்போன்ற ஜோடி	2	8	0
4. 3 ந. போன்ற ஜோடி	1	12	0
5. தங்க அட்டிகை கொக்கிகள் 2	3	6	0
6. தங்கமோதிரம் 1	0	6	0
7. தங்க கம்பி துண்டு	1	6	0
8. 4 தங்க துவாரங்கள்	1	4	0
9. 2 ஆபரணத்துக்கான சிறியதங்க பாளம்	0	3	0

புதையல் விஷயமாய் அல்லது அதின் பாகத்திற்கு பாத்தியம் கொண்டாடும் எல்லாரும் சங்கதியை தஞ்சாவூர் கலெக்டர் அவர்கள் விசாரிக்க வேண்டியதின் பொருட்டு கலெக்டர் அவர்களிடம் நேரிலாவது அல்லது ஏஜெண்டு மூலமாவது 1911 ளு ஜனவரிமீ 14உ கலெக்டர் அவர்கள் ஆபீஸில் ஆஜராகவேண்டியதென்று கட்டளை யிடப்படுகிறது.

MISCELLANEOUS CASES.
CRIMINAL—கிரிமினல்.
SESSIONS COURT OF TRICHINOPOLY.
திருச்சினாப்பள்ளி செஷன் கோர்ட்டு.

ஜெயங் கொண்ட சோழபுரம் 2-வது கிலாஸ் மாஜிஸ்டிரேட்டு P. R. கேசு நெ. 10 of 1909-ல் சில குற்றவாளிகளை

விசாரணை செய்து திருச்சினாப்பள்ளி செஷன் கோர்ட்டார் விசாரணைக்கு கமிட் செய்து விட்டார். அதன்பேரில் ஜில்லா ஜட்ஜி அவர்கள் அந்த கேசில் மேற்படி 2-வது கிலாஸ் மாஜிஸ்டிரேட்டே விசாரணை செய்து பைசல் செய்யக்கூடிய குற்றங்கள் சிலதிருக்கின்றன என்னும் காரணத்தைக்கொண்டு மேற்படி மாஜிஸ்டிரேட்டின் கமிட் மெண்ட் உத்தரவை ரத்து செய்யும்படிக்கு கி. பு. கோ. (5 of 1908) 438-வது பிரிவின்படி மதராஸ் ஹைகோர்ட்டாருக்கு எழுதித் தெரிவித்துக் கொண்டார். அதன்பேரில் கனம்பொருந்திய மதராஸ் ஹைகோர்ட்டு ஜட்ஜி மி-ர். ஜ. மில்லர் என்பவர் பிரதம விசாரணையில் ஏற்பட்ட சாக்ஷியத்தினால் செஷன் கோர்ட்டார் விசாரணை செய்யக்கூடிய குற்றங்களுடன் கீழ் கோர்ட்டில் 2-வது கிலாஸ் மாஜிஸ்ட்டிரேட்டு பைசல் செய்யக்கூடிய சில குற்றங்களும் இருந்ததாகத் தெரியவந்தபோதிலும் அந்த காரணத்தை ஓர் ஆதாரமாய்க் கொண்டு 2-வது கிலாஸ் மாஜிஸ்டிரேட்டின் கமிட்மெண்ட் உத்தரவை ரத்து செய்வதற்கு நியாயமில்லையென்று தீர்மானித்தார்.

5 இ. கே. 932; 7 ம. லா. டை. 186.

Stationary 2-Class Magistrate Ambasamudram,

ராமசாமி சேர்வை வகையரா—குற்றவாளிகள்.

கிரிமினல் புரோசீஜர் கோட் 438-வது பிரிவு:—

அம்பா சமுத்திரம் 2-வது கிளாஸ் ஸ்டேஷனரி மாஜிஸ்ட்ரேட் P. R. கேசு நெ. 5 of 1909-ல் சில குற்றவாளிகளை விசாரணைசெய்து செஷன் கமிட்மெண்ட் செய்துவிட்டார். அப்படி அவர் கேசை செஷன் கமிட்மெண்ட் செய்கையில் அந்த கேசில் சம்பந்தப்பட்ட இன்னும் சில குற்றவாளிகளை அதுவரையில் பிடிக்கப்படவில்லை யென்பது வாஸ்தவம்தான். அப்படி சில குற்றவாளிகளை அரெஸ்ட் செய்யாமற் போனதினாலே அவர் செய்த கமிட்மெண்ட் உத்தரவை ரத்து செய்யும்படிக்கு ஹைகோர்ட்டாருக்கு மனு செய்துக்கொண்டதின் பேரில் (Sessions Case 67 of 1909). கனம் பொருந்திய மி-ர். ஜ. மில்லர் என்பவர் அதைக் காரணமாய்க்கொண்டு 2-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டு செய்த கமிட்மெண்ட் உத்தரவை ரத்து செய்வதற்கு நியாயம் கிடையாதென்று தீர்மானித்தார்.

5 இ. கே 933, 7 ம. லா. டை. 187.

GAMBLING—சூதாடுவது.
THE DISTRICT AND SESSIONS COURT OF SOUTH CANARA.
தேன்கன்னடம் டிஸ்டிரிக்ட் அண்ட் செஷன்ஸ் கோர்ட்டு.

சூதாடுவதைப் பற்றிய ஆக்ட்டு 7-வது பிரிவு:—மங்களூர் சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டு காலெண்டர் கேசு நெ. 97 of 1908ல் செய்த உத்திரவின் பேரில் சவுத் கெனரா செஷன் கோர்ட்டுக்கு அப்பீல் செய்துக் கொண்ட மனுதாரர்களாகிய நாராயணபத்ரா, பி. ஸ்ரீனிவாசராவ் இவர்கள் இருவரும் சிலர் சூதாடிக் கொண்டிருந்த வீட்டிற்குள்ளிருக்கும் இன்னொரு அரையில் உட்கார்ந்துக் கொண்டிருந்தார்களாம். இவர்களும் அந்த சூதாடுபவர்களுடன் சேர்ந்தவர்கள்தானென்று இவர்கள் பேரிலும் குற்ற ஸ்தாபனை செய்யப் பட்டதை ரத்து செய்யும்படிக்கு ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் மனு செய்துக் கொள்ளப் பட்டது. அதன் பேரில் கனம் பொருந்திய மிர்-ஜ. மில்லர் முன்பாக இந்த இரண்டு நபர்களும் சூதாடிக் கொண்டிருந்தவர்களுடன் கலந்தவர்களல்ல வென்றும் இவர்கள் இருவரும் தனியே பக்கத்திலிருக்கும் வேறொரு அரையில் உட்கார்ந்துக் கொண்டிருந்தார்களாகையால் சூதாடுவதற்கென்று ஏற்பட்டிருக்கும் (Gambling Act) ஆக்ட்டு 7-வது பிரிவின் படிக்கு இவர்கள் குற்றவாளிகளாகார்களென்றும் வாதிக்கப் பட்டது. இந்த வாதம் கீழ் கோர்ட்டில் சொல்லப்படவில்லை யென்றும் இந்த இரண்டு குற்றவாளிகள் உட்கார்ந்துக் கொண்டிருந்த அரையில் வைத்திருந்த வஸ்துக்கள் சூதாடுவதற்கு வேண்டிய கருவிகள்தான் வைத்திருந்ததென்பதற்குப் போதுமான சாக்ஷிய மிருக்கிறதென்றும் கண்டு ரிவிஷன் மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

5 இ. கே 934; 7 ம. லா. டை 189.

THE DISTRICT AND SESSIONS COURT OF SOUTH CANARA.
தென்கன்னடம் டிஸ்ட்ரிக்ட் அண்ட் செஷன்ஸ் கோர்ட்டு.

——:o:——

சிவப்பாஹிகேட்:— கைதி.

கி, பி. கோ- (5 of 1908) 297-வது பிரிவு:—தென்கன்னடம் ஜில்லா செஷன் கோர்ட்டார் முன்னிலையில் ஓர் தீபட்டிக் கொள்ளை அடித்த கேசு நடக்கையில் ஜில்லா ஜட்ஜு அவர்கள் கேசின் சாராம்சத்தைப் பற்றி ஜூரிமார்களுக்குத் தெரிவிக்கும்போது குற்றவாளி இப்படி தீபட்டிக் கொள்ளை நடக்கப்போகிற தென்று முன்னமேயே தெரிந்துக்கொண்டிருக்கலாமென்றவனல்ல அல்லது இப்படிப்பட்ட கொள்ளை நடக்க வேண்டிய தென்று அறிந்தவனுமல்ல வென்று வாதிப்பதற்குப் போதுமான ஏது விருப்பதாய் தன்னுடைய மனதிற்குத் தோன்ற வில்லை யென்று ஜூரிகளுக்குத் தெரிவித்தார். செஷன் ஜட்ஜு அப்படி செய்யலாகாதென்றும் கேகில் ஏற்பட்டிருக்கும் சாக்ஷியத்தின் பேரில் அதை ஜூரிகளே ஊகித்துக் கொள்ள வேண்டு மென்றும் சொல்லி செஷன்ஸ் ஜட்ஜி செய்தது சுத்த பிசகென்று கண்டு மிர். ஜ. மில்லர் அவர்கள் குற்றஸ்தாபனையை ரத்து செய்து விட்டு கைதியை உடனே விடுதலை செய்யும்படிக்கு உத்திரவு செய்தார்கள்.

5 இ. கே. 935; 7 ம. லா. டை 191.

THE CHIEF PRESIDENCY MAGISTRATE'S COURT, EGMORE, MADRAS.
மதராஸ் எழும்பூர் சீப் பிரெசிடென்சி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு.

காலெண்டர் கேசு நெ. 9047 of 1909.

ஜேம்ஸ்ப்லெட்செர்..............மனுதாரர்.

இ. பி. கோ. 420-வது பிரிவு:—பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் ஓர் ஸ்டுடென்டுக்கு கொடுக்கப் பட்ட ரயில் வேடிக்கட்டை அவன் இன்னொரு ஸ்டுடென்டுக்கு மாத்தி விட்டானென்று ரயில்வே கம்பெனியார் அவன் பேரில் குற்றஞ்சாட்டி அவன் இவ்விதமாய் ரயில்வே கம்பெனியாரை மோசம் செய்தானென்பதாக பிராது செய்தார்கள். அவன் அந்த டிக

கட்டை இன்னொருவனுக்கு ட்ரான்ஸ்பர் செய்யக்கூடாதென்பதாக ரயில்வே ரூல் கிடையாதென்று வாதிக்கப் பட்டது. எழும்பூர் பிரெசிடென்சி மாஜிஸ்ட்ரேட்டு அவன் பேரில் குற்றஸ்தாபனே செய்து அவனை சிக்ஷை செய்தார். அதன் பேரில் ஹைகோர்ட்டாருக்கு மனுவு செய்துக கொள்ளப் பட்டது. கனம் பொருந்திய ஹைகோர்ட்டு சீப் ஜஸ்டிஸ் சர்னல்ட் வொயிட் என்பவர் அந்த டிக்கட்டை மாற்றிவிடக் கூடாதென்பதற்கு ரயில்வே ரூல் ஒன்றும் கிடையாதென்று கண்டு கீழ் கோர்ட்டாரின் குற்றஸ்தாபனையை ரத்து செய்து விட்டு குற்றவாளியிடத்திலிருந்து அபராதத்தை வசூல் செய்திருந்தால் அதை அவனுக்கு வாபஸ் செய்து விடும்படிக்கு உத்தரவு செய்தார்கள்.

5 இ. கே. 973; 7 ம. லா. டை 201.

ALLEGED CHEATING BY A PRINCE

ஓர் இராஜகுமாரன் மோசம் செய்ததாக சொல்லப்பட்ட கேசு.

1910-ம்௵ நவம்பர்௴ 16௳ சாயந்திரம் மைசூர் இளவரசர்களில் ஒருவருடைய குமாரனாகிய பிரின்ஸ் பிரோஷா என்னும் ராஜகுமாரன் இரண்டு வியாபாரக் கம்பெனியார்களை மோசம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு கல்கத்தா போலீஸ் இன்ஸ்பெக்டர் ஹைடர் என்பவர் அவரை வாரண்டில் அரெஸ்ட் செய்தார்.

கேசின் விபரம்:—மேற்சொன்ன பிரின்ஸ் பிரோஷா என்னும் ராஜாகுமாரன் நவம்பர் மாதத்தில் ஓர் தினம் இரண்டு வியாபாரக் கம்பெனியார்களாகிய மெசர்ஸ் மெக்ரபோல் அண்ட் கம்பெனிக்குச் சென்று தான் டிப்புசுல்தான் வம்சத்தைச் சேர்ந்தவனென்று சொல்லி ரூபாய் 99—10—0 பெறுமான ஒரு பொருளை விலைக்கு வாங்கிக்கொண்டு அந்த சாமானடங்கிய பார்சலை கம்பெனியார் மனிதன் ஒருவன் தன்னுடைய எல்ஜின் ரோட்டிலிருக்கும் வீட்டண்டைக் கொண்டு வந்தால் அந்தத் தொகையைச் செலுத்திவிடுவதாக சொல்லிப் போனாராம். பிறகு வீட்டுக்குப் போய் அந்த கம்பெனியாருடைய மனிதனிடத்தில் அந்தப் பொருளை சில தினங்களுக்குப் பின் வாங்கினாற்போல் பின்விட்ட தேதி போட்டு ஒரு செக்கு எழுதிக்கொடுத்து அனுப்பினாராம்.

இது இப்படிக் கிருக்க இன்னொரு தடவை ஓர் தினம் பிரின்ஸ் பிரோஷா என்னும் இந்த இராஜகுமாரன் மெசர்ஸ் டாஸ் ப்ரதர்ஸ் என்னும் வாத்தியப்பெட்டி வியாபாரிகளிடம் சென்று ரூபாய் 250 பெறுமான ஹார்மோனியம் பெட்டி ஒன்று கிரயத்திற்கு வாங்கிக்கொண்டு அதன் விலை ரூபாய் 250-ல் ரூபாய் 50 அப்பொழுதே செலுத்திவிட்டு மிகுதி தொகையை அன்றையதினம் சாயந்திரம் செலுத்துவதாயும் மறுநாள் இன்னொரு ஹார்மோனியம் விலைக்கு வாங்குவதாகவும் சொல்லிதான் அன்றையதினம் விலைக்கு வாங்கின ஹார்மோனியம் என்னும் வாத்தியப் பெட்டியை பெற்றுக்கொண்டு போய்விட்டாராம்.

மேற்படி கம்பெனியார் ஷை செக்கை நாஷனல் இன்ஷூரின்ஸ் பாங்காரிடத்தில் கொடுத்து பணத்தைக் கேட்டபோது பாங்கார் அந்த கம்பெனியாரை செக்கு கொடுத்தவரிடம் போகும்படிக்குச் சொன்னார்களாம். இதைப்பற்றி போலீசார் விசாரணை செய்ததில் பிரின்ஸ்பிரோஷா என்னும் இந்த ராஜகுமாரன் மேற்படி ஹார்மோனியம் பெட்டியை ஓர் கொதுவை தாரகரியிடத்தில் கொதுவை வைத்து ரூபாய் 90 கடன் வாங்கிக்கொண்டாராம். இதன்றி இந்த பிரின்ஸ் பிரோஷா என்பவர்பேரில் கல்கத்தா பிரெசிடென்சிமாஜிஸ்டிரேட்டுகோர்ட்டில் தாரா பஜாரில் நகை வியாபாரஞ் செய்பவர் ஒருவரை மோசம் செய்ததாக இதற்கு முன்னமேயே இரண்டு கேசுகள் நடந்துக்கொண் டிருக்கிறதாம். பிரோஷா பிரின்ஸ் என்பவரை பூராப் ஜாமீன் பெற்றுக்கொண்டு பெயில்மேல் விடும்படிக்கு உத்தரவாயிருக்கிறதாம்.

NORTH ARCOT SUB-JUDGE'S COURT.

வட ஆர்காடு சப் ஜட்ஜ் கோர்ட்டு.

—:o:—

Kalhastri Temple.

காளஸ்திரி தேவாலயம்.

கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் தாவா.

வட ஆர்காடு-சித்தூர்ஜில்லா-சப்கோர்ட்டில் தர்மரக்ஷண சபையார் ஓர் தாவா செய்திருக்கிறார்கள். மேற்படி வியாஜ்ஜியத்தில் வாதிகளாகிய சர். சுப்பிரமணிய அய்யரும், குருவாட ராகவய்ய இவர்கள் குடிமல்லம் தேவாலயத்தின் ட்ரஸ்டியாகிய காளஸ்திரி ஜெமீன்தாரியின் பேரில் கொண்டு வந்திருக்கும் விசேஷமான தாவாவின் விபரம்:—

(1) ஸ்ரீபரசுராமேஸ்வர தேவஸ்தானத்திற்கு மேற்படி காளஸ்திரி ஜெமீன்தார் ட்ரஸ்டியாக வேலை பார்த்து வந்தபோது அவருடைய வசத்திலிருந்த அந்த தேவாலயத்தின் சொத்துகள் யாவற்றுக்கும் ஒரு சரியான பட்டி கொடுக்கும்படிக்கும்

(2.) மேற்படி பிரதிவாதியாகிய காளஸ்திரி ஜெமீன்தார் ஷை ட்ரஸ்டி தொழிலைப்பார்க்க ஆரம்பித்தது முதல் இதுவரையில் அந்த தேவஸ்தான விஷயமாய்த்தான் பற்றின தொகைகளுக்கும்சிலவிட்ட மொத்தங்களுக்கும்அவரை வரவு சிலவு கணக்கு கொடுக்கும்படி கேட்கும்படிக்கும்.

(3.) பிரதிவாதியாகிய காளஸ்திரி ஜெமீன்தாரை ஷை ட்ரஸ்டிவேலையிலிருந்து நீக்கிவிட்டு அவருக்குப் பதிலாய் புதுட்ரஸ்டி அல்லது ட்ரஸ்டிகள் நேமிக்கும்படிக்கும் அப்படி புதிதாய் நேமிக்கப்படும் ட்ரஸ்டிகள் வசம் மேற்படி தேவாலய சொத்துகளை ஒப்புவிக்கும்படிக்கும்

(4) மேற்படி தேவஸ்தானத்தின் சொத்துகளை அப்படி புதிதாய் நேமிக்கப்படும் ட்ரஸ்டி அல்லது ட்ரஸ்டிகள் சரியாய்ப் பரிபாலனம் செய்து வரும்படிக்குத் தகுந்த ஏற்பாடு செய்யும்படிக்கும்; அப்படி அந்த சொத்துகளைப் பரிபாலனம் செய்து வருகையில் பாக்கியாய்த் தொகை மிகுதியாய் நிற்கும் விஷயத்தில் அந்த மிகுதித் தொகையைச் சரியாய் பிரயோகிக்கும் படிக்கும்,

(5) மேலே கண்ட விஷயங்களை யெல்லாம் நன்றாய்க் கண்டறிவதற்கு முக்கியமான கணக்குகளைப் பரிசோதிக்கும் படிக்கும், அதற்குத் தகுந்த விசாரணைகள் செய்து கோர்ட்டாருக்கு யுக்தமாய்த் தோற்றும் உத்தரவுகள் செய்யும்படிக்கும் இன்னும் மேற்படி தாவாவில் என்னென்ன செய்வது நியாயமென்று தோற்றுகிறதோ அதைச் செய்யும்படிக்கும் கொண்டுவரப்பட்டது.

VILLAGE ADMINISTRATION.

கிராம பரிபாலனம்.

சென்னை ராஜதானியின் ஜில்லாக்களிலுள்ள கிராமங்களில் கிராம பரிபாலனத்தை நிறைவேற்றுவதற்

காக சர்க்காரால் ஒவ்வொரு கிராமத்திலும் சில உத்தியோகஸ்தர்கள் நேமிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் அவரவர்களுடையத் தொழில்களைச் சரியாய் கிரமப்படி செலுத்துவதற்கும், இன்னும் ஒவ்வொரு கிராமத்திலுமிருக்கும் குடியானவர்கள் சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய வரி இறைகளைப் பற்றியும் கவர்ன்மென்டாரால் சில ஆக்ட்டுகள் ஜாரி செய்யப்பட்டு அமுலின் கீழ் நடந்தேறிக் கொண்டு வருகின்றன. அவைகளில் முக்கியமானவைகள்.

(1) சர்க்கார் தீர்வை பாக்கி வசூல் ஆக்ட்டு 2 of 1864, மதராஸ்.

(2) பூஸ்திதிகளைப் பற்றிய—லான்ட் எஸ்டேட் ஆக்ட் 1 of 1908, மதராஸ்.

(3) சென்னை சால்ட் ஆக்ட்

(4) ஆப்காரி ஆக்ட்

(5) பாரெஸ்ட் ஆக்ட்

(6) ஆடுமாடுகளைக் குறித்த ஆக்ட்

MADRAS ACT NO. II of 1864.

சென்னப் பட்டணம் 1884 ௵த்திய 2 வது ஆக்ட்.

சென்னப்பட்டணத்தைச் சேர்ந்த ராஜ்ஜியத்தில் சர்க்கார் திர்வை பாக்கியை வசூல் செய்வதற்காக உண்டாயிருக்கிற சட்டங்களை ஒன்றாய்ச் சேர்ப்பதற்கான ஆக்ட்.

சர்க்கார் திர்வையை வசூல் செய்வதைக் குறித்த சட்டங்களைச் சீர்படுத்தி ஒன்றாய்ச் சேர்ப்பது தகுதியாயிருக்கிற படியால் இதனால் விதிக்கப் படுகிறதென்ன வென்றால்:—

இந்த ஆக்டின் பிரயோகமாயிருக்கிற பூமிக்குடையவனென்னும் வார்த்தையானது எப்படிப்பட்டவனென்று அர்த்தஞ் செய்து கொள்ளப்படுமென்றால்:—

மில்கதிஸ்திமீரார் சன்னதின்படி அனுபவிக்கிற சகலமானவர்களும் மற்றெல்லா ஜமீன்தார்களும், சுரோத்திரியந்தார்களும், ஜாகிர்தார்களும், இனாம்தார்களும், சர்க்காரிடத்தில் பூமி பேரிஜம் குத்தகை செய்து கொள்ளுகிற சகலமானவர்களு மென்றும், ராயத்துவாரி திட்டப்படிக்காவது சர்க்காருக்கு நேராய்த் தீர்வை செலுத்தும்படியான வேறே எவ்விதமாகவாவது பூமியை அனுபவிக்கிற எல்லோருமென்றும் அர்த்தமாகும். நிலத்தின் பேரில் பாக்கியாயிருக்கிற சர்க்கார் தீர்வை யென்பது இந்த ஆக்டில் சொல்லியிருக்கிற காரியங்களின் பொருட்டு, பாய்ச்சலுக்காக சேரிக்கப் பட்ட தண்ணீரைக் குறித்து செலுத்தப்படத்தக்க வரி இறை முதலானது களென்றும் அர்த்தமாகும்.

நோட்ஸ்:—மில்கதிஸ்திமீரார் சன்னது என்பதுஜமீன்தாரர்களுக்கும், ஜாகிர்தாரகளுக்கும், பூஸ்திதியின் மேல் ஒரு ஹக்கை யுண்டு செய்யும் சாசனம்.

ரயத்து:—என்பவர்கள் கவர்ன்மென்டாருக்கு நேராக கிஸ்தியை செலுத்தும் குடிகள்.

2. நிலமும் அதின்பேரிலிருக்கிற கட்டடங்களும் அதிலுண்டாகிற மகசூலும் சர்க்கார் தீர்வைக்கு ஈடாக எண்ணப்படும்.

3. பூமிக்குடையவனுடைய பிரதிமனிதனும் தன்னிலத்துக்கு பாக்கியாயிருக்கிற தீர்வையை கிஸ்துபந்தி பிரகாரமாவது வேறே யாதொரு உடன்படிக்கைப் பிரகாரமாவது வாயிதா ஆய் விடுகிற தேதியிலாகிலும் அதற்கு முன்னிட்டாகிலும் கலெக்டரிடத்திலாவது அதை வாங்கிக் கொள்ளும்படி அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்திரிடத்திலாவது செலுத்த வேண்டியது; அப்படி தேதி நிஷ்கரிஷை செய்யப்படா திருந்தால், ஊர் வழக்கப்படிக்கு அந்தந் தீர்வையைச் செலுத்த வேண்டியவாய்தா ஆய்ப்போவதற்குள் செலுத்த வேண்டியது: ஆனால் மில்கதிஸ்திமீரார் சன்னதின் படிக்காவது அப்படிப்பட்ட வேறே யாதொரு சாசனத்தின்படிக்காவது பூமியனுபவிக்கப்படுகிற விஷயத்தில் தவிர மற்ற விஷயங்களிலே அந்தந்த தொகை செலுத்தப்பட வேண்டிய தேதிகளையும் டிஸ்டிரிக்ட்டு கெஜட்டில் பிரசித்தஞ் செய்வித்து அப்போதைக்கப்போது நிச்சயிக்கவும் மாற்றவும் ரெவினியூ போர்ட்டாருக்கு அதிகாரமுண்டு.

4. யாதொரு கிஸ்தி முழுமையுமாவது அதில் எவ்வளவாவது மேற் சொல்லியபடி செலுத்தப்படாதிருந்தால் அப்படி செலுத்தப்படாதிருக்கிற தொகையானது தீர்வை பாக்கி என்று எண்ணப்படும்.

5. சர்க்கார் தீர்வை பாக்கியிருந்தால், அந்த பாக்கிதாரனுடைய ஸ்தாவர ஜங்கம சொத்துக்களை ஏலத்தில் விற்றாவது, இதில் பின்னால் சொல்லியிருக்கிறபடி பாக்கிதாரனைக் காவலில் வைத்தாவது, அந்த பாக்கியையும் அதற்கு வட்டியையும் நடவடிக்கை நடத்துவதற்குண்டான செலவுகளையும் வசூல் செய்யத் தொடங்குவதற்கு கலெக்டருக்காகிலும், வசூல் செய்யும்படி கலெக்டரால் அதிகாரங் கொடுக்கப் பெற்ற வேறே யாதொரு அதிகாரிக்காகிலும் அதிகாரமுண்டு.

6. பாக்கிதாரன் மில்கதிஸ்திமீரார் சன்னதின்படிக்காவது அனுபவித்துக் கொண்டிருந்தால், அந்த சன்னதிலுள்ள ஷரத்துக்களின்படி பாக்கியை வசூல் செய்யலாகும். மற்ற பாக்கிதாரர்களின் விஷயத்தில் கலெக்டராவது பாக்கியை வசூல் செய்யும்படி கலெக்டரால் அதிகாரங் கொடுக்கப் பெற்ற வேறே யாதொரு அதிகாரியாவது-தனக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி அந்த பாக்கிதாரனுடைய அசையும் பொருளையாகிலும் அசையாப் பொருளையாகிலும் அவ்விரண்டையுமாகிலும் ஏலத்தில் விற்று அந்த பாக்கியை வசூல் செய்யத் தொடங் லாம்.

நோட்ஸ்:—பூமி யென்பது பட்டாதாருடைய பூமி [illegible]

மையும் குறிக்குமேயன்றி பாக்கி யேற்பட்ட பூமியை மாத்திரம் சுட்டிக்காட்டாது.

நோட்ஸ்:—5-6. செக்ஷன்கள் சர்க்கார் பாக்கிக்காக பாக்கிதாரனுடைய அசையும் பொருள் அல்லது அசையாப்பொருள் அல்லது இரண்டையாவது விற்பனை செய்து அதற்காக நேரிடும் செலவையும் சேர்த்து வசூல்செய்ய கலெக்டருக்காவது அவரிடமிருந்து உத்தரவு பெற்றவருக்காவது சாதாரணமாய் தாசில்தாருக்கு அதிகாரமுண்டு. பணம் கட்டாதவரினவன் ரயத்துவாரியானாலும் ஜமீன்தாரியானாலும் மேற்படி அமுலை நடத்தலாம். சன்னதின் கீழ் பூமியுடையவனா யிருக்கும் பக்ஷத்தில் சன்னதில் கண்ட ஷரத்துகளின் பிரகாரம் அமுல் நடத்தவேண்டும். அப்படிப்பட்டவனுடைய அசையும் பொருளை முதல் ஜப்திசெய்து பணம் வசூலாகாவிட்டால் பின்பு நிலத்தை ஜப்தி செய்யவேண்டியது.

ரயத்தின் அசையும் பொருளை ஜப்தி செய்வதில் பயிரிடும் கருவிகளையும் ஒரு ஜதை உழவு மாட்டையும் விட்டுவிட்டு மற்ற பொருளை ஜப்திசெய்யவேண்டும். உத்திரவின்றி சாகுபடி செய்யும் நிலத்திற்கும் தீர்வையை வசூல் செய்வதில் மேற்படி நிபந்தனையை அனுசரிக்கவேண்டும். அநேக பட்டாக்களுக்கு ஒருவன் பாக்கி செலுத்தவேண்டி யிருந்தால் ஒவ்வொரு தடவை ஜப்தி செய்யும்போதும் ஒவ்வொரு ஜதை உழவு மாடுகளைவிட்டு மற்றதை ஜப்தி செய்யவேண்டும். ஒரு பட்டாவில் அனேகர் கூட்டாக விருக்கின் ஒவ்வொருவருடைய சொத்தை ஜப்தி செய்யுங்காலத்திலும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஜதை மாடுவிட்டு மற்றவைகளை ஜப்தி செய்ய வேண்டும்.

பூமியுடையவர்களுக்கு குடிகள் செலுத்தும் பணம் ரெண்ட் என்று பெயர்.

7. சர்க்கார் தீர்வை பாக்கிக்கு வருஷமொன்றுக்கு நூற்றுக்கு ஆறுவிழுக்காடு வட்டி போடப்படும்.

நோட்ஸ்:—செக்ஷன் 7 கவர்ன்மெண்டார் பாக்கிக்கு வருஷம் 1-க்கு 100-க்கு 6 ஆக வட்டி கொடுக்க வேண்டியது. இவ்வட்டிஜயாபந்தி பைசலாகிற பரியந்தம் கிடையாது.

8. சர்க்கார் தீர்வைக்காக அசையும் பொருளை ஜப்திசெய்து ஏலத்தில் விற்கிறபட்சத்தில் அடியில் கண்டிருக்கிற நிபந்தனைகளின்படி நடப்பிக்க வேண்டும்.

முதலாவது, கலெக்டராவது, தண்டல் பத்திரிகை கொடுக்கும்படி கலெக்டரால் நேமிக்கப்பட்டிருக்கிற வேறே யாதொரு அதிகாரியாவது தண்டல் பத்திரிகை எழுதி, அதில் பாக்கிதாரனுடைய பேரையும், எதற்காக ஜப்திக்கு உத்தரவு பிறப்பிக்கப்படுமோ அந்த பாக்கித் தொகையையும், அந்த பாக்கிக்கு வாயிதா ஆய்விட்ட தேதியையுங் கண்டு, தன்னுடைய பேரால் கையெழுத்துப் போட்டு, ஜப்திசெய்யப்போகிறவன் அந்த தண்டல் பத்திரிகையை காட்டி 52-வது பிரிவின்படி அந்த பாக்கியும் தனக்குச் சேரவேண்டியபடிச் செலவும் உடனே செலுத்தப்படாவிட்டால், அந்தப் பத்திரிகையை ஜப்தி செய்வதற்கு தனக்கு அதிகார பத்திரமாக வைத்துக்கொண்டு, சொத்தை ஜப்தி செய்கிற தேதியில் அந்த பத்திரிகைக்கு நகலெழுதி, அந்த நகலின்மேல் ஜப்தி செய்யப்படுகிற சொத்தின் விவரத்தையும், அந்த சொத்து வைத்து வைக்கப்படுகிற இடத்தையும் கண்டெழுதி அந்த பாக்கிதாரனுக்கு கொடுக்கவேண்டியது.

இரண்டாவது, அந்த பாக்கிதொகையும் அதற்கு வட்டியும் படிச்செலவும் ஜப்திசெலவும் ஏலத்திற்கு முன்னமே செலுத்தப்படாவிட்டால், ஜப்தி செய்யப்பட்ட சொத்து உடனே ஏலத்தில் விற்கப்படுமென்றும் அந்த பத்திரிகையில் எழுதவேண்டியது.

மூன்றாவது, பாக்கிதாரன் ஆஜரில்லாவிட்டால், அந்த பத்திரிகையின் நகலை அதின்மேலெழுதப்பட்ட ஜப்தி சொத்தின் ஜாபிதா வகைரா சகிதமாய் ஜப்திசெய்த தேதிமுதல் மூன்றுநாளைக்குள்ளாக அந்த பாக்கிதாரன் வழக்கமாய் வாசஞ் செய்கிற இடத்திலாவது சொத்து ஜப்திசெய்யப்படுகிற இடத்திலாவது ஒட்டவேண்டியது, அல்லது கொடுத்துவிட்டு வரவேண்டியது.

9. தண்டல் பத்திரிகையின் ஷரத்துகளின்படி பாக்கித் தொகை செலுத்தப்படாவிட்டாலும், கலெக்டருக்காவது அவரால் நேமிக்கப்பட்ட வேறே யாதொரு அதிகாரிக்காவது திருப்திகரமாய் அந்தத் தொகை சேரும்படியான வகை செய்யப்படாவிட்டாலும், சேரவேண்டிய பாக்கித் தொகை-அதற்கு வட்டி-படிச்செலவு-ஜப்தி செலவு இதுகளுக்காக ஜப்தி சொத்தை ஏலத்தில் விற்கும்பொருட்டு, அந்த சொத்தின் ஜாபிதாவை 1839-ம் ஹுத்து 7-வது ஆக்டின்படி ஜப்தி சொத்தை விற்பதற்கு அதிகாரம் பெற்று சமீபத்திலிருக்கிற சர்க்கார் உத்தியோகஸ்தனுக்கு ஜப்திதாரன் அனுப்பவேண்டியது.

10. பாக்கிதாரனானவன் தன்னுடைய சொத்து ஜப்தி செய்யப்பட்ட பின்பு, ஏலத்திற்கு நிச்சயிக்கப்பட்ட தினத்திற்கு முன்னதாக, பாக்கி பணத்தையும் வட்டியையும் படிச்செலவையும் ஜப்திக்கு பிடித்த அவசியமான செலவுகளையும் கட்டுகிறதாகப் பணம் கொண்டுவந்தால் உடனே அந்தப் பணத்தை ஜப்திதாரன் வாங்கிக்கொண்டு, தட்சணம் ஜப்தி விடுதலை செய்யவேண்டியது.

11. ஜப்திதாரனானவன் பாக்கிதாரனுடைய நிலத்திலுண்டாகிய பயிர்களையாவது, பறிக்காமலிருக்கிற பலன்களையாவது ஜப்தி செய்தால் அறுக்கத் தகுந்த அல்லது பறிக்கத் தகுந்த காலத்தில் அதுகளை அவன் விற்பனை செய்விக்கலாம்; அல்லது தனக்கு யுக்தமாகத் தோற்றினால், தகுந்தகாலத்தில் அதுகளை அறுத்து அல்லது பறித்து, விற்பனையாகிற வரையில் தகுந்த இடத்தில் சேர்ப்பிக்கலாம். இவ்விதமாக அறுத்துப் பறித்துச் சேர்த்துவைத்தால், அதற்காகப் பிடிக்கிற செலவை—சொந்தக்காரன் அந்த சொத்தை மீட்டுக் கொள்ளுகிற பட்சத்தில் அவன் கொடுக்கவேண்டியது; அந்த சொத்து விற்பனை செய்யப்படுகிற பட்சத்தில் விற்ற பணத்திலே அந்த செலவு எடுத்துக் கொள்ளப்படும். யாதொரு ரயித்தினுடைய பயிராவது பலனாவது விற்பனை செய்யப்பட்டால், அவன் அந்தபயிர் அல்லது பலனுக் குண்டாகிய கிரயத்தை அது உற்பத்தியான நிலத்திற்காக அப்போதாகிலும் பின்பாகிலும் தான் கொடுக்க வேண்டிய குத்தகை தொகையிலே கழித்துக் கொள்ளலாம். மேலும் சர்க்கார் தீர்வை பாக்கிக்காக யாதொரு ரயித்தினுடைய மாசூல் ஜப்தி செய்யப்பட்டால், அவன் அந்த பாக்கியைச் செலுத்தி விட்டு, அந்த பணத்தை அப்போதாகிலும் பின்பாகிலும்தான் கொடுக்க வேண்டிய குத்தகைத் தொகையிலே மேற் சொல்லிய விதமாய்க் கழித்துக் கொள்ளலாம்.

(இன்னும் வரும்.)

C. KRISHNAN Esq., M. A., *Barrister-at-Law,*
Second Judge, Presidency Court of Small Causes, Madras.
மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட்டு 2-வது ஜட்ஜி, மிஸ்டர் சி. கிருஷ்ணன். எம் எ, பாரிஸ்டர்-அட்-லா.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் V.] சென்னப்பட்டணம், 1910-ம் வருஷம் டிசம்பர்மீ [பாகம் ;

RESTITUTION OF CONJUGAL RIGHTS.

விவாக சம்பந்தமாய் உண்டாகும் சுதந்தரங்களைக் கொண்டு பெண்சாதியைத் தன் வசம் செய்துக்கோள்ளல்.

——:o:——

இவ்விஷயத்தைப்பற்றி மதராஸ் ஹைகோர்ட்டு ஜட்ஜிகளாகிய கனம் பொருந்திய மி-ர். ஐ. சங்கரன்நாயர், மி-ர். ஐ. கிருஷ்ணசாமி ஐயர் இந்த கற்றுணர்ந்த சீமான்களால் ஓர் முக்கியமான தீர்மானம் செய்யப்பட்டது. இந்த கேசில் சாதாரணமாய் புருஷன் பெண்சாதிக்குள் உண்டாகும் உடன்படிக்கை ஒப்பந்தத்தைப் பற்றித் தற்கித்துக் கூறியிருக்கிறது.

கேசின் விபரம்:—ஓர் பிராமணன் தன் பெண்சாதியைத் தன்னிடம் வரும்படிக்கு சகஜமாய்க் கேட்டும் வராதபடியால்அந்த பிராமணன் தன்னுடைய பெண்சாதியைத் தன் வசம் செய்துக்கொள்ள 1903-ம் வருஷத்தில் ஓர் தாவா கொண்டுவந்தான். 1904-ம் வருத்தில் அந்த தாவாவை ராஜி செய்துக்கொண்டார்கள். அந்த ராஜியின்படி ஏற்பட்ட அக்ரிமெண்டின்படிக்கு அவர்கள் இருவரும் மறுபடியும் புருஷனும் பெண்சாதியுமாய் வாழ்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்துகொண்டார்கள். இன்னும் அதில் செய்துக்கொண்ட முக்கியமான ஏற்பாடு யாதெனில்:—"பெண்சாதியாகிய நீ இனி எப்பொழுதாவது உன்னுடைய புருஷனாகிய என் வீட்டில் என்னுடன் கூடி வாழ்வதற்கு உனக்கு இஷ்டமில்லாமலிருந்தால் உன் புருஷனாகிய நான் உனக்கு ரூபாய் 350 கொடுக்கக்கடவேனாகவும்." அவர்கள் இருவரும் செய்துக்கொண்ட இந்த உடன்படிக்கையின் படிக்கு வாஸ்தவத்தில் அவர்கள் இருவரும் மறுபடியும் எக்காலத்திலும் ஒன்றாய்க் கலந்து வாழ்ந்தவர்களல்ல. இவ்விதமாய் மூன்று வருஷகாலம் சென்றபின், அதாவது, 1907-ம் வருத்தில் புருஷன் மறுபடியும் பெண்சாதியின்பேரில் அவளைத் தன் வசம் செய்யும்படிக்கு ஓர் தாவா கொண்டுவந்தான். ஜில்லா ஜட்ஜி அவர்கள் அந்த தாவாவிற்கு காலதோஷம் வந்து விட்டதென்று நம்பரை தள்ளுபடி செய்துவிட்டார். ஜில்லா ஜட்ஜியின் தீர்மானத்தின் பேரில் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்துக்கொண்டார்கள். அந்த அப்பீலில் ஹைகோர்ட்டார் ஜில்லா ஜட்ஜியின் தீர்மானம் பிசகென்று சொல்லி அவர் செய்த டிக்ரியை ரத்து செய்து விட்டு பெண்சாதியைப் புருஷனிடம்போய் வாழும்படிக்கு அனுகூலமாய் தீர்மானித்தார்கள். கனம்பொருந்திய ஹைகோர்ட் ஜட்ஜிகளின் அபிப்பிராயப்படிக்கு முதலில் புருஷன் தன் பெண்சாதியை தன்னிடம் வரும்படிக்கு எப்பொழுது கேட்டுக்கொண்டானோ அந்த காலம் முதற்கொண்டு தான் கால நிர்ணயக் கணக்கு செய்யவேண்டுமென்பது சரியல்ல வென்று ஏற்படுகிறது, புருஷனும் பெண்சாதியும் தங்களுக் குள்ளிருந்த தகராரைப் பைசல் செய்துக்கொண்டு அவர்கள் இருவரும் மறுபடியும் புருஷனும் பெண்சாதியுமாய்க் கலந்து வாழ்வதாக ஏற்பாடு செய்துக்கொண்டார்கள். ஆகையால், அவர்கள் அப்படி அக்ரிமென்ட் செய்துக் கொண்டதினால் புருஷன் பெண்சாதியைத் தன்னிடம் வரும்படிக்கு முன் நோட்டீசு மூலமாய்க் கேட்டுக் கொண்டது முதல் இதற்கு கால நிர்ணயக் கணக்கு செய்யலாகாதென்றும் அந்த அக்ரிமெண்டுக்குப் பிறகு புருஷன் தன் பெண்சாதியை மறுபடியும் தன்னிடம் வரும்படிக்குப் புதிதாய்க் கேட்டுக்கொண்டிருக்க வேண்டுமென்றும் அது முதற்கொண்டுதான் கால நிர்ணய கணக்குச் செய்ய வேண்டியது. அப்படி அவர்கள் செய்துக்கொண்ட அக்ரிமென்டுக்கு பிறகு புருஷன் தன்னுடைய பெண்சாதியைத் தன்னிடம் வரும்படிக்குக் கேட்டதாக ருஜு கிடையாது. ஆகையால் கற்றுணர்ந்த கனம்பொருந்திய ஹை கோர்ட்டு ஜட்ஜுகள் இந்த கேசில் கால நிர்ணய தோஷம் கிடையாதென்று சொல்லி அவர்கள் செய்துக் கொண்ட ஏற்பாடு சட்டப்படி செலாவாணியுள்ளதென்றும், அதன்படி அமுல் நடத்தி சட்டப்படி நடவடிக்கைகள் நடத்த நியாய முண்டென்றும் தீர்மானித்தார்கள். ஆனால் அந்த அக்ரிமெண்டின் ஷரத்துப்படிக்குப் புருஷன் மறுபடியும் தன்னுடைய பெண்சாதியை தன்னிடம் வரும்படிக்கு தாவா செய்ய நியாய முண்டா இல்லையா என்பதைப்பற்றி பின் வருமாறு தீர்மானித்தார்கள். அதாவது, இப்படிப்பட்ட அக்ரிமெண்டின் ஏற்பாடு லோகாச்சார விஷயங்

களுக்கு விரோதமாயிருப்பதால் அது சட்டப்படி செல்லத்தக்கினதல்லவென்று தீர்மானித்தார்கள்.

புருஷனும் பெண்சாதியும் செய்துக் கொள்ளும் அக்ரிமென்டு லோகாச்சார வழக்கங்களுக்கு விரோதமாயிருக்கலாகாது இப்படிப்பட்ட அக்ரிமென்ட் செய்துக் கொள்வது செல்லாதென்பதாய் ஏற்படுகிறது. என்ன காரணத்தினுல் அந்த அக்ரிமென்டை புருஷன்பேரில் நிர்ப்பந்தித்து வியாஜ்ஜியம் செய்ய நியாயமில்லை யென்றும் பெண்சாதியின் பேரில் நிர்ப்பந்திக்கலாமென்று சொல்லி யிருக்கிறுர்களோ அது புலப்படயில்லை. பெண்சாதியை வரவழைத்துக் கொள்வதற்காக கொண்டுவரப்பட்ட தாவா நல் நடத்தையை விர்த்தி செய்வதற்கல்ல. இந்த தேசத்திலுள்ள நாகரீகமான மாகாணங்களில் புருஷர் தங்களுடைய பெண்சாதியார்களைத் தங்கள் வசம் வரும்படிக்குக் கோர்ட்டில் பெறும் டிக்ரீகளை நிறைவேற்றி தங்களிடம் வராத பட்சத்தில் பிரதிவாதியாகிய பெண்சாதியை ஜெயிலில் அடைத்து வைத்து காவலில் இருக்கும்படி செய்வது வழக்கமாயிருக்கிறது. இந்தியன் சோஷல் சபையிலிருக்கும் மிக்க கற்றுணர்ந்த புத்திமான்களாகிய சீமான்கள் இவ்வழக்கத்தைப் பற்றி பல முறைகள் தர்க்கித்து எதிர்வாதம் கூறுவதைக் கேட்டு இது விஷயமாய் மேல் அதிகாரிகளுக்கு அப்பீல் செய்துக் கொள்ளும்படி தீர்மானித்திருக்கிறுர்கள். ஹைகோர்ட்டார் முன்னிலையில் தற்காலத்தில் வந்த கெம்பரில் புருஷன் 1903-ம் வருஷத்திய நம்பர் நடந்துக் கொண்டிருக்கையில் ஏற்பட்ட அக்ரிமென்டில் ஓர் கட்சிதாரனுயிருந்து அவன் தன்னுடைய பெண்சாதி அவனுடன் கலந்து வாழ்வதற்கு இஷ்டப்பட்டால் அபபடிககே செய்யலாமென்றும் இல்லாவிடில் அவள் அவளுடைய சுய இச்சைபாய் தனியாயிருககலாமென்றும் சொல்லியிருக்கிறுன். இது விஷயமாய் பெண்சாதி எப்படி இஷ்டப்படுகிறுளோ அப்படியே செய்யலாமென்றிருக்கிறது. ஆனுல் புருஷன் இப்படி எழுதிக் கொடுத்திருப்பதினுல் அவன் மறுபடியும் தன்னுடைய பெண்சாதி தன்னுடத்திலிருக்க வேண்டு மென்று நிர்பந்திப்பதற்கு இந்த அக்ரிமென்டின்படி சட்ட சம்மதமாய் நியாயம் கிடையாதென்று சொல்லக்கூடியதாயினும் இப்படி ஏற்பாடு செய்வது லோகாச்சார வழக்கத்திற்கு விரோதமாயிருப்பதாக ஊகிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட ஏற்பாடு இருதாத்தாரும் ஒற்றுமையாயிருந்து கலந்து வாழ்வதற்கு அனுகூலமானதாயிருப்பதாகதான் நாம் நினைக்க வேண்டும். உலகத்தில் புருஷன் பெண்சாதிமார்கள் எவ்விதமாய் ஒற்றுமையுடன் கலந்து வாழ்வார்கள் என்பதை தீர்க்க யோசித்து சொல்லிய கருத்தாயிருக்கிறது.

LAW OF TORTS.

தீங்கு-ஹிம்சை இவைகளைக்குறித்த சட்டம்.

——:0:——

WHO CANNOT BE SUED.

யார்! யார்! மேல் நம்பர் செய்யக்கூடாது.

1. **சக்கிரவர்த்தி**:—யாதேனும் ஒரு பிசகு நடந்ததாக ராஜாங்கத்தார் பேரில்சிவிலிலாவது கிரிமினலிலாவது சந்தேகித்து தாவா செய்ய நியாயம் கிடையாது. பிரதேசராஜாங்கத்தார் பேரிலும், மந்திரிகளின்பேரிலும் இப்படிக்கே தான். இதற்கு ஆதாரமாய் 17 குவீன்ஸ் பெஞ்ச் 171 ; 28 லா. ஜ. கு. பே 310 ; 24 கு. பெ.ம டி. 368. பார்க்கவும்.

(2) சாதாரணமாப் மாவிடர் பால்யமாயிருப்பதினுலாவது புத்தி ஸ்திரமில் லாமல் பயித்தியம் படித்திருப்பதினுலாவது அவர்களால் செய்யப்படும் குற்றம் அல்லது மோசம் ஓர் குற்றமாகாதாகையால்அவர்கள் பேரில் தாவா செய்வதற்கு நியாயமில்லை. பால்யம்:—வாலிபன் ஒருவன் சட்டத்திற்கு விரோதமான குற்றம் செய்தானென்று அவன்பேரில் தாவா செய்ய நியாயமுண்டு ; ஏனென்றுல் அப்படி குற்றம் செய்யப்பட்ட சிறுவன் தன் உள்ளத்தில் துர் எண்ணங்கொண்டு தான் அப்படிச் செய்கிறுனென்பது அதற்குக் காரணமாகும். ஆகையால் குற்றம் செய்யப்பட்ட குழந்தை ஒன்றை செய்தாலும் சரி, அல்லது செய்யத் தவறினுலும் சரி அவன்பேரில் தாவா செய்யலாம்—உதாரணம்.—

இளம் வயதுள்ள சிறுவர்களை அடியல் தடியல் கேசுகளிலும், அக்கிரமமாய் அடைத்து வைக்கும் குற்றத்திற்காகவும், அவதூரான வார்த்தைகள் சொல்லி திட்டி மான பங்கம் செய்தார்களென்றும், ஒரு ஸ்திரீயைக்கெடுத்து மான பங்கம் செய்தார்களென்றும், ஒருவன் சொத்தின்பேரில் அக்கிரமமாய்ப் பிரவேசித்தார்களென்றும், சொத்துகளை அன்னியாயமாய் நிறுத்தி வைத்துக் கொண்டார்களென்றும்—மோசம் முதலிய திரவியத்தை கொள்ளை கொள்வது இன்னும் அக்கம் பக்கத்திலுள்ளவர்களுடைய சொத்தை மிக்க அசட்டையாய் எண்ணி கெடுதிசெய்வது இப்படிப்பட்ட குற்றங்களுக்காக அறியாதவர்கள் மீதிலும் பிரியாது செய்யலாம். (4 சா. அப். 591.)

இதற்காதாரமாய் இவ்விடத்தில் இந்தியா ஹைகோர்ட்டாரால் செய்யப்பட்ட ஓர் தீர்மானத்தை இதனடியில் வரைந்திருக்கின்றது. எ. என்னும் ஓர் வாலிபன் பி. என்பவனிடத்தில் சில அசையாப் பொருளை—கொதுவை வைத்து ரொக்கம் கடன் வாங்கினுன். பி. என்பவன் எ. என்பவனை யுக்த வயதடைந்தவனென்று நம்பி கொஞ்சம் ரொக்கம் அவனுக்கு கடன் கொடுத்தான். பிறகு பி. என்பவன் எ. என்பவன் பேரில் கோர்ட்டில் கொதுவை பத்திரத்தை தாக்கல்செய்து தனக்குச்சேரவேண்டிய மொத்தத்திற்கு தாவா செய்தான். அந்த தாவாவில் எ என்னும் சிறியோன்தான் ஓர் இளம் பிராயமுள்ளவனென்று வாதித்தான். ஆனுல் பி என்பவன் அப்படிப்பட்ட வாதத்திற்கு உத்தரவாய் சொன்ன தென்னவென்றுல் "எ என்பவன் கடன் வாங்கும்பொழுது அவன் யுக்த வயதடைந்தவனென்று பி என்பவனிடம் பிசகாய்ச் சொன்னதாகச் சொன்னுன். அதன்பேரில் கோர்ட்டார் எ என்பவன் கடன் வாங்கையில் இளம் பிராயமுள்ளவன் தானென்று கண்டு அப்படிப்பட்ட சிறியவன் ஒருவரிடத்தில் எவ்விதமான ஒப்பந்தமும் செய்ய யோக்கியதை யுள்ளவனல்லவென்று சொல்லி வாதியின் தாவாவை தள்ளுபடி செய்துவிட்டார்கள் இதற்காதாரமாய் தன்மல்-Vs-ராம்சந்தர் (1890) இ-லா-ரி. 24 கல் 265 பார்க்கவும்.

பயித்தியம் பிடித்தவன்:—சாதாரணமாய் பைத்தியம் பிடித்தவன் ஒருவன் மற்றொருவனுககு இம்சை செய்தானென்று அவன் பேரில் பிரியாது செய்ய நியாய முண்டென்று தீர்மானமே கிடையாது. ஆயினும் பயித்தியக்காரன் ஒருவன் மற்றொருவனுடைய சொத்தின் பேரில் அக்கிரமமாய்ப் பிரவேசிப்பானுகில் அது குற்றமாகும். அப்படி அவன் செய்ததினுல் நேரிடும் நஷ்டத்தை அவன் கட்டிக் கொடுக்க பந்தப்பட்டவன்தான். உதாரணம்;—ஒருவன் ஒரு ஓட்டலில்தான் வைத்திருந்த சாமானை இழந்து விட்டானென்பதாக அந்த ஓட்டல் சொந்தக்காரன் பேரில் தாவா செய்தான். அந்த தாவாவில் ஓட்டலுக்குச் சொந்தக்காரன் அந்த சொத்துகைசேர்ந்துபோன போது தான் மிக்க காயலாவுடன்

அசௌக்கியமா யிருந்ததினுல் ஞாபக மறதியாய் இருந்துவிட்டானென்று வாதம் செய்தான். அப்படிப்பட்ட வாதம் செல்லத்தக்கினதல்ல; ஏனென்றுல், பிரதிவாதியாகிய ஓட்டல் கீபர் தன்னுடைய ஓட்டலில் வந்து புசிப்பவர்கள் வைத்த சமான்களுக்கும் ஜவாப்தாரி யென்று கண்டுதான் தன்னுடையதிரேக அசௌக்கியத்தால் ஞாபக மறதியாயிருந்துவிட்டதாக சொல்லும் வாதம் செல்லத்தக்கினதல்ல வென்று தீர்மானிக்கப்பட்டது.

ஒருவன் பயித்தியம்பிடித்தவன் அல்லது பால்யன் என்னும் காரணத்தினுலேயே அவன் குற்றம் செய்தால் சட்டப்படி பந்தப்பட்டவனல்ல வென்று சொல்வது நியாயப்படி ஒரு பொது விதியாகாது. பயித்தியக்காரனுவது, வாலிபனுவது மோசம் செய்தால் அவன் தான் செய்வது மோச மென்று தானே தன்னுடைய மனப்பூர்வமாய் அறிந்து செய்வானுகில் அவன் பேரில் குற்ற ஸ்தாபனை செய்ய நியாயமுண்டு.

வலியினுல் பாதைப்படும் நபர்கள் செய்த குற்றங்களுக்கும் அவர்கள் இம்மாதிரியாகவே சட்டப்படி பந்தப்பட்டவர்களாவார்கள்.

குடி முதலிய லாகிரி வஸ்துகள் சாப்பிடுதல் :—ஒருவன் ஒரு குற்றத்தைச் செய்யும்பொழுது அவன் குடித்துவிட்டு இருந்ததாகவும் ஆகையால் அவன் செய்தது இன்னதென்று அவன் அறிந்து செய்ததல்லவென்றும் வாதிப்பானுகில் என்னும் ஓர் செய்கையைச் செய்யும்பொழுது அந்த செய்கையினுல் இதாராளுக்கு உபத்திரவம் நேரிடுமென்று அறிந்திருக்க வேண்டியது அவசியமாகையால் அவன் குடித்துவிட்டிருந்தானென்பதை ஓர் காரணமாய்க் கொள்ளாமல் அவனைச் சட்டப்படி பந்தப்படுத்தலாம்.

ஓர் சங்கம் அல்லது சபையார் மீது நப்பர் செய்தல்:—ஆதிகாலத்தில் ஓர் சபையார் ஒருவனை அடித்து அல்லது வேறெவ்விதமான கெடுதலை செய்தால் பிரியாது செய்ய நியாயம் கிடையாது. ஆனுல் இப்பொழுது யாதேனும் ஒருவனுக்கு திரேக இம்சை முதலான கெடுதலை செய்தால் பிரியாது செய்யலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஓர் சபையாருக்கு ஒருவுன் ஏஜென்டாயிருந்து அவனுல் செய்யப்படும் செய்கைக்கு அந்த சபையாரை பந்தப்படுத்துவதற்கு இரண்டு வழிகள் உண்டு, அதாவது—சபையார் என்ன காரியத்திற்காக அவனை ஏஜென்டாக நேமித்தார்கள் என்று பார்க்கவேண்டியது மல்லாமல் அவன் அவ்விதமான ஏஜென்டாய் அந்த தொழிலைச் சேர்ந்த செய்கையினுல் ஒருவருக்கு கெடுதலை அல்லது இம்சை செய்வானுகில் அந்த சபையார் மீது பிரியாது செய்ய நியாயமுண்டு. அப்படிக் கல்லாவிடில் குறிந்த அந்தச் செய்கையைச் செய்ய அந்த சபையைச் சேர்ந்த எந்த உத்தியோகஸ்தர்கள், அல்லது டைரெக்டர்கள்—காரியதரிசிகள் அப்படிப்பட்ட செய்கையைச் செய்ய உத்தரவளித்தார்களோ அந்த உத்தியோகஸ்தர் மீது தான் தாவா செய்யலாமே யல்லாமல் மற்றபடி அந்த சபையார் மீது பிரியாது செய்ய நியாயம் கிடையாது.

சாதாரண சட்டத்தின் கோட்பாட்டின் படிக்கு பப்ளிக் ரஸ்தாக்கள், வாரா வாதிகள் முதலானதை ஜனங்களுக்குக் கெடுதலை நேரிட வொட்டாமல் ரிப்பேர் செய்துக்கொண்டு வரவேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் கூட்டத்தார் அந்த ரோடுகளையும் வாராவதி முதலான பப்ளிக் நடைவழி முதலானதுகளை ரிப்பேர் செய்யாமல் வைத்திருந்தால் அதனுல் எவனுக்கு கெடுதலை அல்லது இம்சை நேரிட்டதோ அவன் அந்த சபையார் மீது நம்பர் செய்ய நியாயமுண்டு.

விவாகமான ஸ்திரீகள் :—சாதாரண சட்டத்தின்படிக்கு விவாகம் செய்துக்கொண்டு புருஷனிடத்தில் வாழும் ஒரு ஸ்திரி யாருக்காகிலும் கெடுதலை அல்லது மோசம் முதலான இம்சை செய்வாளாகில் அவள் நியாயமாய் பந்தப்பட்டவளென்று தான் சொல்லவேண்டும். அப்படிப்பட்ட விஷயங்களில் அவளுடைய புருஷன் ஜீவித்திருந்தால் அவனையும் பிரதிவாதியாக்கி தனியாய் நம்பர்செய்ய வேண்டியதென்றும்; அவளுடைய புருஷனையும் அப்படிப்பட்ட தாவாவில் ஓர் பிரதிவாதியாய்ச் சேர்க்க வேண்டு மென்பது அவசியமல்ல வென்றும் அவ்விதமான தாவாவில் பெண்சாதியின்பேரில் டிக்ரி செய்யப்படும் தொகையை அல்லது சிலவு மொத்தத்தை அவளுடைய தனிச் சொத்து யாதேனு மிருக்கும் பட்சத்தில் அந்த சொத்திலிருந்து வசூல் செய்ய வேண்டுமே யல்லாமல் மற்றப்படிக்கு வேறே எந்த சொத்திலிருந்தும் வசூல் செய்ய நியாய மில்லை. ஏனென்றுல், அவள் செய்யும் தீங்கு அவளுக்குச் சொத்து இருந்து செய்கிறுளா அல்லவாளென்பதை அனுசரித்தல்ல ; ஆகையால் ஓர் நம்பரில் வாதி அவள் ஒருவருக்குத் தீங்கு செய்தாளென்று ருஜு செய்யும் பட்சத்தில் வாதிக்கு டிக்ரி கொடுக்க வேண்டியது சட்டப்படி அவசியம்; அந்த டிக்ரியை நிறைவேற்றுகையில் அவளுக்குச் சொத்து கிடையாதென்று காணும் விஷயத்தில் அவன் அந்த டிக்ரியை நிறைவேற்றுமல் விட்டு விடவேண்டியதுதான்.

இந்த நிபந்தனையினுல் புருஷனையும் ஒரு பிரதிவாதியாய்ச் சேர்த்து நம்பர் செய்யலாகா தென்று கண்டிப்பாய் சொல்லியிருக்க வில்லை யென்னும் காரணத்தைக் கொண்டு புருஷனையும் ஓர் பிரதிவாதியாய் சேர்ப்பதற்கு வாதி இஷ்டப்படுவானுகில் அவனையும் பெண்சாதியுடன் பிரதிவாதியாய்ச் சேர்த்து நம்பர் செய்யலாம். (2 சான்செரி-1904-பார்க்கவும்.)

ஒரு பெண்ணுக்கு விவாகமாகாததற்கு முன் அவள் யாருக்காவது தீங்கு செய்திருப்பாளாகில் அவளைத் தனியாய் பிரதிவாதியாக்கி அவள்மீது டிக்ரிபெற்று அந்த டிக்ரி மொத்தத்தை அவளுடைய தனிச் சொத்திலிருந்து வசூல் செய்யக்கூடும். ஆனுல் அவளிடத்திலிருந்து புருஷன் யாதேனும் சொத்து பெற்றிருந்தால் அல்லது புருஷன் இறந்துபோயிருந்தால் அவனுக்குப் பின் ஜீவித்திருக்கும் அவனுடைய பெண்சாதியை எதிரியாக்கி பிரியாது செய்யலாம்.

நியாயமாய்ப் பார்க்கும் விஷயத்தில் பெண்சாதி செய்யும் மோசம் முதலான இப்படிப் பட்ட கெட்ட நடத்தைகளுக்கு அவளை மாத்திரம் தான் பந்தப் படுத்தி அந்தக் கெடுதிக்காக அவள்பேரில் நம்பர் செய்ய வேண்டும். ஆனுல் அப்படிப் பட்ட நம்பரில் யாதேனும் நஷ்டம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு செய்யும் பட்சத்தில் அந்த நஷ்டத் தொகையை வசூல் செய்வதற்கு அவளிடம் யாதொரு சொத்தும் கிடையாதாகையால் அவளுடைய புருஷனையும் அந்த நம்பரில் அவளுடன் சேர்த்து நம்பர் செய்ய வேண்டியது அவசியம்.

1882-ம் வருஷத்தில் ஜாரி செய்யப்பட்ட விவாகமான ஸ்திரீகளின் விஷயமாய் செய்த சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன் பெண்சாதிக்குத் தனியே சொத்திருந்தாலும் இல்லாவிட்டாலும் பெண்சாதி செய்த இம்சைக்கு அவளுடைய புருஷன் ஜீவித்திருந்தால் அவன் பேரில் தான் நம்பர் செய்ய வேண்டும். மேற் செப்பிய விவாகமான ஸ்திரீகளுக் கென்று ஜாரி செய்யப்பட்டிருக்கும் சட்டத்தின்படிக்கு பெண்சாதியின் பேரில் பெற்றிருந்தால் புருஷனையும் அவளுடன் ஓர் பிரதிவாதியாக்கி தாவா செய்யலாம். (விக்டோரியா 45, 46 அத்தியாயங்கள் 13, 14, 15 பிரிவுகள்.)-1882-ம் வருஷத்தில் விவாகமான

ஸ்திரீகளுக்கென்று ஜாரி செய்யப்பட்ட ஆக்டில் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளின் மொத்த கருத்து யாதென்றுலோ:—

பெண்சாதி ஒருவருக்கு யாதேனும் ஓர் கெடுதி அல்லது இம்சை செய்வாளாகில் அந்த இம்சைக்காக அவள் மீதில் மாத்திரம் தனியாய் நம்பர் செய்து அவளுடைய தனிச் சொத்திலிருந்து டிக்ரி மொத்தத்தை அல்லது சிலவை வசூல் செய்யலாம். பெண்சாதி அவளுக்கு விவாகமாவதற்கு முன் யாதேனும் ஓர் ஒப்பந்தம் செய்திருந்து அதைப்பற்றி அவளுக்கு விவாகமான பின்பு நம்பர் செய்யப்பட்டால் அப்பொழுது புருஷன் அவளிடத்திலிருந்து யாதேனும் சொத்து அடைந்திருப்பானுகில் அவனையும் அவளுடன் சேர்த்து நம்பர் செய்து எவ்வளவு சொத்து அவனிடம் வந்ததோ அவ்வளவு மட்டுக்கு வசூல் செய்யக்கூடும். விவாகமான பின்பு அவள் செய்த தீங்கிற்காக தாவா செய்யப்படும் விஷயத்தில் அவளுக்குத் தனியாய் அவளுடைய சொந்தமான சொத்தென்றிருப்பதின்பேரில் வசூல் செய்யலாம். ஆனுல் விவாகமான ஒரு ஸ்திரீ செய்த கெடுதலைக்காக ஒருவன் நம்பர் செய்வானுகில் அவளுக்குப் பிரத்தியேகமாய் தனி சொத்திருக்கும் பட்சத்தில் அந்த சொத்தின்பேரில் வசூல் செய்யலாம். இல்லாவிடில் பிரியாது செய்யப்பட்டவன் புருஷனை விட்டு விட்டு அவளை மாத்திரம் பிரதிவாதியாக்கி நம்பர் செய்யவேண்டுமென்பது இந்த ஆக்டின் படிக்கு முழு தாத்பரியமல்ல அவள் செய்த இம்சைக்காக அவளுடைய புருஷனையும் கட்சிதாரனுகச் சேர்த்து நம்பர் செய்லாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (காலின்ஸ் லா ஜர்னல் சப்ளி மெண்டு 593.)

புருஷனும் பெண்சாதியும் யாதோ ஓர் காரணத்திற்காக பிறிந்து தனித்தனியா யிருப்பதற்கு ஏற்பாடு செய்துக்கொள்வார்களாகில் அப்படிப்பட்ட பெண்சாதி தன்னுடைய புருஷனுடன் கலந்து வாழும் காலத்தில் யாதேனும் கெடுதி செய்திருந்தால் அப்பொழுது புருஷனும் பெண்சாதியும் தனித்தனியாய் வாசம் செய்திடினும் அவர்கள் இருவர் மீதும் நம்பர் செய்ய நியாயமுண்டு. (5 ச. பா. 484.)

கோர்ட்டார் உத்தாவின்பேரில் பெண்சாதி தனியாய் வாசம் செய்வாளாகில் பெண்சாதி செய்த தீங்கிற்காக புருஷன்மீதிலும் தாவா செய்ய நியாயம் கிடையாது. (விக்டோரியா 20, 21 அத்தியாயங்கள் 85-பிரிவு 26 பக்கம் பார்க்கவும்.)

யாதேனும் ஓர் தஸ்தாவேஜு படிக்கு புருஷன் பெண்சாதியை விட்டுத் தனியாயாய் வாசம் செய்யும்பட்சத்தில் அந்தப் பத்திரத்தின்படிக்கு பெண்சாதிக்கு புருஷன்காரன் அவளுடைய ஜீவனும்சத்திற்காக மாதம் கொடுககப்படும் மொத்தம் அதிகமா யிருக்கும் பட்சத்தில் புருஷன் அனுமதியின்றி பெண்சாதிகாரி செய்யும் அவதூரான கெடுதலைக்கு புருஷனையும் பிரதிவாதியாக்கி தாவா செய்ய நியாயமுண்டு.

இந்தியாவில் உள்ள பிரதானப் பட்டணங்களாகிய சென்னைப் பட்டணம், கல்கத்தா, பம்பாய் இவ்விடங்களில் ஓர் கிரிமினல் குற்றத்தைச் செய்தவன் ஹிந்துவாயிருந்தாலும், மகம்மதியனுயிருந்தாலும் அவன் செய்த குற்றம் ராஜியாகக்கூடாதராயிருந்திடினும் அந்தக் குற்றத்தினுல் அவன் மற்றொருவனுக்குள்ள சிவில் பாத்தியதையைக் கெடுப்பானுகில அவ்விதமாய்ச் சிவில் பாத்தியதையை இழந்துவிட்ட நபர் குற்றம் செய்த நபரை முன்கிரிமினல் கோர்ட்டில் பிராசிக்கியூட் செய்து தான் பிறகு அவன் மீது சிவில் வியாஜ்ஜியம் செய்ய வேண்டுமென்பது அவசியமல்ல என்று மதாாஸ் ஹைகோர்ட்டார் அப்துல்காதர்-vs-மகம்மதிய மீரா-இ-ரி (1881) 4 மதாால் 410ல் தீர்மானம் செய்திருக்கிருர்கள்.

ஆனுல் கல்கத்தா ஹைக்கோர்ட்டாரோ ஒருவன் ஒரு கிரிமினல் குத்றம் செய்தால் அவன்பேரில் பிரதமத்தில் கிரிமினலில் நடவடிக்கைகள் நடத்தி அவன்மேல் குற்ற ஸ்தாபனை செப்வித்து பிறகு தான் அவன்பேரில் சிவில் வியாஜ்ஜியம் செய்ய வேண்டு மென்பது அவசியமென்று தீர்மானித்திருக்கிருர்கள்.

(காளுமல்-Vs-சாரனே - (1867) இந்தியன் ஜுரிஸ் 187) இந்தியாவிலுள்ள ராஜதானிகளின் முக்கிய பட்டணங்கள்லாத வெளியூர்களுல் யாராகிலும் ஒருவன் தனக்கு மற்றொருவன் தீங்கு செய்தானென்று பிரியாது செய்ய வேண்டுமானுல் அவன் பிரதமத்தில் அப்படியே தீங்கு செய்தவன் பேரில் கிரிமினலில் நடவடிக்கை நடத்தி அவனே சிக்ஷை செய்வித்த பிறகு தான் அவன் அந்த தீங்கு செய்தவன் பேரில் சிவிலில் விவாஜ்ஜியம் செப்ப வேண்டு மென்பது அவசியமல்ல.

ஒருவன் மற்றொருவனே கண்டபடி வைதானென்பதாய் பிரியாது செய்யும் பட்சத்தில் அவன் முதலில் அப்படி வைதவன்பேரில் கிரிமினல் நடவடிக்கைகள் நடத்தி பிறகு தான் தனக்குண்டான சிவில் வியாஜ்ஜியத்தை செய்யவேண்டுமென்பது அவசியமல்ல. பிரதமத்தில் அப்படிப்பட்ட கிரிமினல் பிரியாது செய்யப்பட வில்லையென்று அவன் கொண்டுவரும் சிவில் வியாஜஜியத்தை தள்ளுபடி செய்ய நியாயமில்லை. இதுவுமன்றி அப்படிப்பட்ட குற்றவாளியின் பேரில் முதலில் கிரிமினல் நடவடிக்கைகள் நடத்தி கிரிமினல் கோர்ட்டார் அந்த பிரியாதை தள்ளுபடி செய்து விட்டிருந்தபோதிலும் பிறகு அவன்பேரில் சிவிலில் வியாஜ்ஜியம் செய்ய நியாயமுண்டு.

இதற்காதாரமாய் க்ஷாமாசரன் போஸ்-vs-போலாநாத் டட் 1886—6 வீ. ரி. 9; வீரண்ணு-vs-நாகையா (1881) இ. லா ரி. 3 ம 6; ஜீனு. vs-ஜோரா (1863) 1 பம். ஹை. கோ. ரி 1; ஸ்ரீனுத்-vs-கோமல் (1871) 16 வீ. ரி. 83; ரூபா ரீவா vs-ராம் கொமார் (1868) மார்ஷ் 248; 2 ஹே 13.

Hindu Law.

ஹிந்து லா.

CHAPTER, 1. 1-ம் அத்தியாயம்.—தொடர்ச்சி.

HINDU JURISPRUDENCE AND SOURCES OF HINDU LAW—CONTINUED.

ஹிந்து தர்மசாஸ்திர பரிபாலனமும் — ஹிந்து லாவின் மூலாதாரங்களும்—தொடர்ச்சி.

ஸ்மிருதிகள் எல்லாவற்றிற்கும் மனு நீதி சாஸ்திரமே மிக்க பழமையான பூர்வீக மூலாதார கிரந்தமென்று முன்னமேயே சொல்லியிருக்கிருேமல்லவா. அதற்காதாரமாய் சில அத்தாக்ஷிகளை இதனடியில் எடுத்துக் கூறுவோம். ஹிந்துலாவின் சில விதிகள் மனுவால் எழுதப்படாமல் வேறே சில கிரந்த கர்த்தர்களால் எழுதப்பட்டதாக ஸ்மிருதிகளில் கூறப்பட்டிருக்கின்றது. உதாரணம்:— கடன்கொடுத்த பணத்துக்கு வட்டி கொடுக்கவேண்டுமென்கிற சட்டம் முதல் முதல் வசிஷ்டர் சாஸ்திரத்தினுல்தான் தெரிய வந்ததாம்;

பழக்கம் என்கிற சட்டம் முதல் முதல் கௌத்தமார் தெரிய வந்ததாம்.

பாகிக்கக்கூடாத பொருள்கள் இன்னின்னதென்று விவரித்த சட்டம் பிரதமத்தில் விரஹஸ்பதியினுல் உண்டாயிற்ரும்.

ஓர் ஹிந்து குடும்பத்திலுள்ள ஸ்திரீக்கு அக் குடும்ப சொத்தில் பாகம் கிடையாதென்று சொல்லும் பட்சத்தில் அவளுடைய ஜீவனும்சத்திற்கு இவ்வளவு கொடுத்து வரவேண்டுமென்கிற சட்டம் லிகிதாஸ் சட்டத்தினுல்முதல் முதல் தெரியவந்ததாம்.

ஓர் ஹிந்து ஸ்திரீக்கு அசுர விவாகம் செய்வார்களாகில் அவளுடைய சீதன சொத்துகளெல்லாம் அவளுடைய தகப்பனைச் சேரும் என்கிற சட்டம் ஆதியில் ஏயா சாஸ்திரத்தினுல் தெரிய வந்ததாம்.

மேற்கூறிய சாஸ்திரங்களும் மனு நீதி சாஸ்திரத்தில் சொல்லியவைகளிருக்கும் சட்டத்தை ஆதாரமாய்க்கொண்டு சொல்லியவைகளாய்த் தான் தோற்றுகின்றது.

'பாத்யானு' விரஹஸ்பதி என்பவர்கள் எழுதிவைத்த ஸ்மிருதிகளைப் பார்க்குமளவில் இந்த இந்தியாதேசத்தின் தக்ஷணுதிகளுக்கும் — அதாவது—தக்ஷணத்தில் (தெற்கில்) வசிப்பவர்களுக்கும்—வடமாகாணங்களில் வசிப்பவர்களுக்கும், இன்னும் மத்திய மாகாணங்களிலிருப்பவர்களுக்கும் கிழக்கு பக்கத்திலிருப்பவர்களுக்கும் நடை உடை பாவனைகளில் சொற்ப பேதமிருப்பதாயும் ரிஷி வாக்கியங்களுக்கு விரோதமாயிருப்பதாயும் தர்க்கித்துப் பேசிப் பட்டிருக்கிறது.

இவ்விதமாய் பலகிரந்தங்களில் பலவிதமாய் கூறப்பட்டிருந்திடினும் முக்கியமாய் மிதாக்ஷர சட்டமானது ஆதியில் ஏற்பட்டிருந்த யாஜ்ஞவல்கியா சாஸ்திரத்தின்பேரில் செய்த வியாக்கியானங்களாகையால் இந்த மிதாக்ஷர சட்டப்படி தற்காலத்திலும் நமது ஹிந்துக்கள் மிக்க விசுவாசத்துடன் மரியாதை செய்து நடக்தேற்க்கொண்டு வருகிருர்கள்.

இந்த ஸ்மிருதிகளையும், சாஸ்திரங்களையும் பார்வையிட்டு வியாக்கியானங்கள் பல விதமாய் எழுதப்பட்டிருந்திடினும் இது விஷயத்தைப்பற்றி பிரிவி கவுன்சலிலும் (Privy Council) அதாவது—மந்திராலோசனை சபையிலும் தீர்ப்பு செய்திருக்கிருர்கள். அதென்ன வென்ருல் "வியாக்கியானங்கள் எழுதினவர்கள் பிசகாய் எழுதி யிருந்தபோதிலும் அவ்வியாக்கியானங்களில் எழுதியது போலவே சில நட உடை பாவனைகள் சில மாகாணங்களில் வெவ்வேருயிருந்து அந்தந்த மாகாணத்திற்குத் தக்கபடியே நடந்தேறிக்கொண்டு வருகின்றது. ஆகையால் எந்தெந்த மாகாணத்தில் எவ்வெவ்விதமான நடை உடை பாவனைகள் நடந்தேறிக்கொண்டு வந்ததோ அந்தந்த பழக்கத்தையே அந்தந்த மாகாணத்திற்கு ஓர் சட்டமாய் ஏற்படுத்தி அனுசரித்து வரவேண்டும்." மதுரை கலெக்டருக்கும் முத்து ராமலிங்கசேதுபதி என்பவருக்கும் நடந்த பிரிவி கவுன்சல் கேசில் அதாவது—12 மூ. இ. அ. 397-ல் சொல்லியிருப்பவைகளைப் பார்க்கவும். ஆகையால் ஹிந்துக்கள் மேற்கூறிய வியாக்கியானங்களின்படி நடப்பது பிசகு; அவர்கள் ஸ்மிருதிகளில் சொல்லி யிருப்பதின்படி நடப்பது தான் கிரமம். ஓர் விதியானது பிசகாய் அநேக காலமாய் நடந்தேறிக்கொண்டு வரப்பட்டதென்னும் காரணத்தினுலேயே அந்த பிசகான விதியை ஓர் சட்டமென்று பாவித்து நடந்தேறி வரவேண்டுமென்பது நியாய மாகாது. தேச பரிபாலன கர்த்தர்களாகிய மன்னர்களெல்லாம் ஸ்மிருதிகளில் சொல்லி யிருப்பதை அனுசரித்து தான் சரியான சட்ட திட்டங்கள் செய்து வருகிருர்களென்பது தெளிவாம் விளங்குகிறது. வியாக்கியானங்களில் எழுதியது அந்த சாஸ்திரத்தில் சொல்லியிருக்கும் மனோபாகங்களை ஆதாரமாய்க்கொண்டதா யிருக்கலாமே யல்லாமல் தேசப் பழக்கத்தை ஒட்டி எழுதிய வியாக்கியானங்களா யிராதென்று தோற்றுகிறது. ஆகையால் ஓர் வியாக்கியானம் எப்பொழுது பிசகென்று தெரிய வந்ததோ அந்த தப்பான வியாக்கியானத்தை சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதற்குச் சரியான பொருளென்று எப்படி பாவிக்கலாகும். 1870-ளுத்தில் பிரிவி கவுன்சலில் உள்ள ஜட்ஜுகளாகிய (Commissioners) பிரபுக்கள் இது விஷயத்தைப்பற்றி பின்வருமாறு கூறி யிருக்கிருர்கள்.

அதாவது "ஹிந்துலாவின் சட்டத்தை சரியாய்த் தெரிந்துக்கொள்ள வேண்டுமானுல் ஹிந்துக்களின் நடை உடை பாவனை பழக்கம்—இவைகளை அனுசரித்து தான் அறிந்துக்கொள்ள வேண்டுமே யல்லாமல் இதா பிரதேசங்களில் எப்படி நடந்தேறிகொண்டு வருகிறதோ அதை அனுசரித்து ஹிந்துலாவை பொருள் படுத்தலாகாதென்று சொல்லி யிருக்கிருர்கள்" பியாராம்சிங்கு-vs-பியா அகர்சிங்கு 13 மூர் 390 பார்க்கவும்.

இன்னொரு தடவை 1899-ம் வருஷத்திலும் பிரிவி கவுன்சலிலுள்ள பிரபுக்கள் அடியிற் கூறியிருக்கும் வண்ணம் கண்டெழுதி யிருக்கிருர்கள்:—

"ஸ்மிருதிகளில் சொல்லிருப்பவைகளெல்லாம் ரிஷீஸ்வரர்கள் சொல்லிய நீதி மொழிகளாகையால் அதைப்பற்றி யாதொன்றும் சொல்வதற்கிடமில்லை. ஆனுல் அந்த ஸ்மிருதிகளைப் பற்றி எழுதி யிருக்கும் வியாக்கியானங்களில் பல முறைகளில் பலவிதமான குறைவுபாடுகள் இருப்பதாக தர்க்கித்து வருகிருர்கள். அப்படிப்பட்ட வாதத்தைக் கோர்ட்டார் தான் தீர்க்க யோசித்து தகுந்த தீர்ப்பு சொல்ல வேண்டியது" 26 இ. அ. 131) இன்னொரு தடவை மேற் சொன்ன 1899-ம் வருஷத்திலேயே மறுபடியும் பிரிவி கவுன்சலிலுள்ள பிரபுக்கள் இது விஷயத்தைப் பற்றி மிக்க விசதமாய் கூறி யிருக்கிருர்கள். 26 இ. அ. 165. பார்க்கவும். இந்த கேசில் அவர்கள் சொல்வதென்ன வென்ருல் "ஹிந்துக்கள் எல்லோருக்கும் பொதுவாய் சட்டம் இருந்திடினும், அந்த சட்டத்திற்கு நிவாரணையாய் அவர்களுக்குள் உள்ள பிரத்தியேகமான பழக்கங்களை ஓர் வாதமாய் எடுத்துக்கூறலாம். இத்தியாதி விஷயங்களை நோக்குமளவில் ஹந்துக்களுக்கென்று பிரத்தியேகமாய் ஓர் பொது சட்ட மிருக்கிறதாக சொல்வதற்குக் கூடாமை. ரிஷீஸ்வரர்கள் சொல்லியது எல்லாம் ஒன்றுக்கொன்று பேதமின்றி ஒற்றுமையாய் யிருப்பதால் ஸ்மிருதிகளின் பேரில் வியாக்கியானங்கள் எழுதினவர்கள் அந்த ஸ்மிருதிகளின் மனோபாகங்களையும், வாஸ்தவமான பொருளையும் வெவ்வேருக அர்த்தம் செய்துக் கொண்டு தர்க வாதங்கள் செய்துக் கொண்டிருந்தார்களென்றுதான் சொல்ல வேண்டியதாக தோற்றுகிறதே யல்லாமல் மற்றபடி அவர்கள் தங்கள் ஜீவதெசையில் அவரவர்கள் வசித்துக் கொண்டிருந்த மாகாணங்களில் என்னென்ன பழக்கங்கள் நடந்தேறிக்கொண்டு வந்ததோ அந்த பழக்கங்களையே சட்டங்களாக பாவித்து நடந்தேறிக்கொண்டு வர வேண்டுமென்று அப்பழக்கங்களுக்கு ஆதாரமாய் எழுதின வியாக்கியானங்களாக தோற்றப்பட வில்லை. வித்தையும் புத்தியும் அதிகரிக்க, அதிகரிக்க ஓர் காலத்தில் இப்படிப்பட்ட குறைவு பாடுகள் நீங்கி ரிஷீஸ்வரர்கள் சொல்லிய நீதிமொழி வாக்கியங்களே ஹிந்துக்களுக்குள் சட்டமாய் நடந்தேறிக் கொண்டு வருமென்று திடமாய்ச் சொல்ல இட மிருந்தபோதிலும் தற்காலத்தில் பிரிட்டிஷ் ராஜ்ஜிய பரிபாலன கர்த்தர்கள் ஏற்படுத்தி யிருக்கும் கோர்ட்டுகளில் வியாக்கியானங்களை தீர்க்க யோசித்து ரிஷீஸ்வரர்கள் சொல்லியதற்கு மேலாகவே ஓர் முடிவான ஏற்பாடுகள் செய்திருக்கிருர்கள். இந்த தேசம் மகம்மதியருடைய ஆளுகையின் கீழ் இருக்கையில் சில கிரந்தங்கள் எழுதப்பட்டன வென்றும் சொல்லப்பட்டிருக்கிற

து. சென்ற நூற்றுண்டின் முதலில் எழுதப்பட்ட கிரந்தம் எல்லாவற்றிற்கும் விசேஷமான தென்று சொல்லலாமென்பதாக கூறப்பட்டிருக்கிறது. எப்படி யென்றுல்—விவாத ரத்னுகர என்னும் கிரந்தம் எழுதப்படுவதற்கு முன் விவாத சிந்தாமணி என்னும் கிரந்தம் எழுதப்பட்டமையால் பின் சொல்லிய விவாத சிந்தாமணி என்பது விசேஷமான கிரந்த மென்று பாவிக்கப் படுகிறது. இம்மாதிரியாகவே பரசரமாதவ என்னும் கிரந்தம் ஸ்மிருதி சந்திரிகா விற்குப் பின் எழுதப்பட்டதாகையால் பின் சொல்லிய கிரந்தம் விசேஷமான தென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்து தேச சரித்திரத்தைக் கவனித்துப்பார்க்கு மளவில் இந்த தேசத்தில் ஹிந்து ராஜாக்கள் அரசாளுகையில் விவாத ரத்னுகரா, பரசரமாதவ இந்த இரண்டு கிரந்தங்களையும் யாதொரு தகருரின்றி அனுசரித்து வந்தார்களாம். அதாவது, மிதிலா என்னும் மகாணத்தில் விவாத ரத்னுகரா என்னும் கிரந்தமும், தென்னிந்தியாவில் பரசரமாதவ என்னும் கிரந்தமும் நடந்தேறிக் கொண்டு வந்ததாம். பெங்கால் தேசத்தில் ஹிந்து ராஜாக்கள் ஹலாயுதாவின் ஸ்மிருதியை அனுசரித்து வந்தார்களாம். இந்த ஹலாயுதாவின் ஸ்மிருதியில் சொல்லியிருப்பவைகளை ஆதாரமாய்க் கொண்டுதான் மிதிலா சட்டம் ஏற்பட்டதாக தெரிய வருகிறது. ஆனல் பெங்கால் மகாணத்தில் அந்த ஹலாயுதாவின் கிரந்தம் கிடைப்பதற்குக் கூடாமையாயிருந்தபடியால் சற்றேறக்குறைய அந்த கிரந்தம் எழுதப்பட்ட காலத்திலேயே உண்டாயிருந்த தயாபாகா என்னும் கிரந்தத்தை பெங்கால் தேசத்து பண்டிதர்களுக்குள் ஸ்மிருதியில் தேர்ந்து நன்றாய் கற்றுணர்ந்த பண்டிதரென்றும் அவர்கள் சொல்லும் வாக்கே தகுந்த சட்ட மென்றும் பாவிக்கப்பட்டு வந்தவராகிய ரகுநந்தன என்பவர் மேற் கூறிய தயாபாகா சட்டத்தை பெங்கால் தேசத்திற்கு தகுந்த சட்டமென்று ஏற்படுத்தி யிருப்பதால் அந்த தயாபாகா சட்டத்தையே பெங்காலிலுள்ளவர்கள் அனுசரித்துக் கொண்டு வருகிருர்களாம். இந்த தயாபாகா கிரந்தத்தை எழுதினவர் இன்னுரென்று சொல்லக் கூடாமையாயிருக்கிறது.

சொற்ப காலத்திற்கு முன் இதைப்பற்றி பிரிவி கவுன்சிலிலுள்ள பிரபுக்கள் செய்த தீர்மானத்தில் தற்காலத்தில் மிக்க விசேஷமான வியாக்கியானங்களென்று சொல்லப்படும் தத்தகசந்திரிகா, தத்தகமீமான்சா என்னும் கிரந்தங்களின் விஷயமாய் சொல்லி யிருக்கும் அவர்களுடைய மனேபாகங்களை இதனடியில் சுருக்கமாய் எடுத்துக்கூறுவோம்:—“இந்த இந்தியா தேசத்தின் எல்லா மாகாணங்களிலுமுள்ள சட்ட நிரூபணை செய்யும் கிரந்த கர்த்தர்கள் (லாயர்கள்) மேற்செப்பிய தத்தகசந்திரகா, தத்தகமீமான்சா என்னும் கிரந்தங்களை மிக்க சிலாகித்து தகுந்த சட்டங்களென்று புகழ்ந்து கூறி யிருக்கிருர்களாகையாலும், ஏறக்குறைய சொற்ப காலத்திற்கு முன்பு தான் இந்த கிரந்தங்களை இங்கிலீஷ் பாஷையில் மொழி பெயர்த்திருக்கிருர்களாகையாலும் இந்த பிரிட்டிஷ் ராஜ்ஜிய பரிபாலனத்திலும் இந்த கிரந்தங்களையே மிக்க சிலாகித்து விசேஷமானவைகளென்று பாவிக்கப்பட்டு வருகின்றன. ஆனல் அதே தீர்மானத்தில் ஜஸ்டிஸ் நாக்ஸ் என்பவர் இந்த கிரந்தங்கள் இங்கிலீஷ் பாஷையிலுள்ள கிரந்தங்களைப்போல் யாதொரு குறைவுபாடு மில்லாதவைகளென்று சொல்லக்கூடாமை யென்றும் இந்த ஹிந்து கிரந்தங்களைப்பற்றி அனேக குறைவுபாடுகள் சொல்ல இடமிருக்கிறதென்றும் சொல்லியிருக்கிருர். அதை மற்ற ஜட்ஜுகள் ஒப்புக்கொள்ளாமல் ஹிந்து கிரந்தங்களில் சொல்லி யிருப்பவைகளை மாற்றி யாதொன்றும் சொல்ல லாகாதென்பதை ஒப்புக் கொண்டார்கள்.”

பிரிவி கவுன்சல் தீர்மானம் 26 இ. அ. 132 பார்க்கவும்.

ஸ்மிருதிகளிலும் அந்த ஸ்மிருதிகளின்பேரில் எழுதப்பட்டிருக்கும் வியாக்கியானங்களிலும் கூறி யிருப்பவைகளில் வாஸ்தவமான சட்டம் இன்னதென்று நமக்கு இப்பொழுது தெளிவாய்த் தெரிய வருகிறது. பெங்கால் தேசத்தில் ஓர் ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருவளுக்கு சந்ததியில்லாமல் அவள் விதவையாய் விடும்பட்சத்தில் அவளுக்கு பெங்கால் தேசத்து சட்டத்தின்படிக்கு குடும்ப சொத்தில் யாதொரு பாத்தியதையும் கிடையாதென்று ஏற்பட்டிருக்கும் சட்டம் மிக்க கடினமானதாகவும் ஸ்மிருதியில் சொல்லியிருக்கும் வாக்கியங்களுக்கு விரோதமா யிருந்திடினும் வியாக்கியானங்களில் சொல்லப்பட்டிருப்பது ஒப்புக்கொள்ளத் தகுந்ததா அல்லவா என்று தீர்க்க யோசித்துப் பார்க்காமலேயே அந்த சட்டம் நடந்தேறிக்கொண்டு வருவதை இப்பொழுதுள்ள கோர்ட்டார்கள் தள்ளுபடி செய்வார்களென்று உத்தேசிப்பதற்குக் கூடாமை.

ஹிந்துக்கள் சாதாரணமாய் அனுசரித்து வரவேண்டிய சட்டங்கள் இன்னின்னதென்று நம்முடைய கோர்ட்டார்கள் பின்வருமாறு தீர்மானித்திருக்கிருர்கள், அதாவது:—

பெங்கால் மாகாணத்து ஹிந்துக்கள் தயாபாகா சட்டத்தையும், பிஹார் மாகாணத்திலும், இன்னும் வட இந்தியா முழுமைக்கும், மாராட்டியர் தேசத்திலும், வட கன்னடத்திலும், ரத்னகிரி ஜில்லாவிலும் வாசம் செய்யும் ஹிந்துக்கள் மிதாக்ஷர சட்டத்தையும், குஜாராத்து, பம்பாய் தீவு, வட கான்கான் மாகாணம் இந்த இடங்களில் வசிக்கும் ஹிந்துக்கள் மயூகா சட்டத்தையும்; மதராசில் ஸ்மிருதி சந்திரிகா சட்டத்தையும், ஒரிசாவில் சரஸ்வதி விலாசா சட்டத்தையும், கூசீபிக்கும் கண்டக்கிற்கும் மத்தியிலுள்ள மிதிலா மாகாணத்திலுள்ளவர்கள் விவாத சிந்தாமணி சட்டத்தையும் அனுசரித்து வருகிருர்கள். ஆயினும் மிதாக்ஷர சட்டமானது பெங்கால் மாகாணம் தவிர மற்றெல்லா பாகங்களிலும் செலாவணியாய்க் கொண்டுவருகின்றது. பூனு, ஆமது நகர், காண்டெஷ் இந்த மாகாணங்களில் மயூகா சட்டத்தை மிதாக்ஷரத்தைப்போலவே அனுசரித்து வருகிருர்கள்.

மிதாக்ஷர சட்டத்தில் யாதேனும் சந்தேக முண்டாகும் பட்சத்தில் காசி (பெனுரஸ்) வித்தியாகலா சாலையில் மிக்க திடமான சாஸ்திரமென்று விசேஷித்துக் கூறப்பட்ட வீரமித்ரோதயா என்னும் சாஸ்திரத்தை அங்கீகரித்து பார்வையிடப்பட்டு வருகின்றது. (மதராஸ் கலெக்டர் 12 மூர் 437, 11 பம் 294; 30ம 533, 14 பம் 624, 605 பார்க்கவும்.)

தென் இந்தியாவில் வெளியான கிரந்தமென்று சொல்லப்படும். அபாராக்கா என்னும் சாஸ்திரம் காஷ்மீர் மாகாணத்தில் ஓர் சட்டமாய் நடந்தேறிக்கொண்டு வருகிறது.

மஹாராஷ்டா தேசத்தில் விவாத தாண்டவா கிரந்தமும் அனுசரித்து வரப்படுகின்றது.

தயாபாகாவில் இல்லாத விஷயங்களைப்பற்றி மிதாக்ஷர சட்டத்தில் சொல்லியபடி நடப்பது மிக்க விசேஷமான காரியமென்று பெங்கால் மாகாணத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் இந்த வியாகியானங்களினல் தான் அந்தந்த மாகாணத்தின் சட்டம் இன்னின்னதென்று தெரிய வருகிறதாக புலப்படுகிறது.

ஸ்வீகாரம்—தத்து இதைப்பற்றி தத்தகசந்திரகா என்னும் கிரந்தம் தான் விசேஷமான சட்டமென்று பெங்காலிலும், மதராஸ் ராஜதானியிலும் மதித்து வருகிருர்கள்.

நந்த பண்டிதரின் ‘தத்தகமீமான்சா’ என்னும் கிரந்தம் மிதிலா பெனுரஸ் இவ்விடங்களில் விசேஷமாய் வழங்கி வருகின்றது.

தென் இந்தியாவில் ‘வித்யாரன்ய’ என்பவராய் செய்யப்பட்ட தத்தகமீமான்சா என்பது விசேஷமாய் அனுசரித்து வரப்படுகிறது. 12 மூர் 437, 4 மூர் 97; 26 இ. அ. 161 பார்க்கவும்.

பம்பாய் ராஜதானியில் நந்தபண்டிதரின் தத்தகமீமான்சாவும், மயூகாவும், சான்ஸ்கரகோஸ்டவ என்னும் கிரந்தங்கள் மிக்க விசேஷமாய் புழங்கி வரப்படுகின்றன.

ஆனல் தத்தகமீமான்சாவில் சொல்லியிருக்கும் அபிப்பிராயங்கள் அவ்வளவாய் விசேஷமானதல்லவென்று சில தருணங்களில் கருதப்பட்டு வருகின்றனவாம். ஏனென்றல் அவைகளில் சொல்லியிருப்பவைகள் வியவகாரமயூகா அல்லது தர்மசிந்து, நிர்ணயசிந்து இப்படிப்பட்ட கிரந்தங்களின் கோட்பாடுகளுக்கும் தாத்பரியங்களுக்கும் விரோதமா யிருக்கும் பட்சத்தில் முன் சொல்லிய தத்தகமீமான்சாவில சொல்லியிருப்பவைகளை ரத்து செய்து விடலாமென்று பம்பாயிலும் மேற்கு இந்தியாவிலும் தீர்மானித்திருக்கிருர்கள்.

மிதிலாவில் தத்தகமீமான்சா என்பது வழங்கி வருகிறதாம் ஆனல் அவ்விடத்தில் விவாதசிந்தாமணி கிரந்தத்தை மிக்க விசேஷமாய் பாராட்டி வருகிருர்கள். இப்படிக் கிருந்திடினும் தத்தகமீமான்சா கிரந்தத்தில் சொல்லி யிராத சில பழக்கங்களை கோர்ட்டார் ஒப்புக்கொண்டு அப் பழக்கங்களெல்லாம் இப்போது மிதிலாவில் சட்டமாய் செலாவணியாய்க் கொண்டு வருகிறதாம். (வெஸ்ட் அண்ட் புல்லர் 3-வது எடிஷன் 11-வது பக்கம், 26 இ. அ. 131, 132.)

‘சட்டம்’ என்பது நல்லொழுக்கமுள்ள புண்ணியவான்கள் வெளியிடும் நீதி மொழிகளை ஆதாரமா யுள்ளதென்று முன்னமேயே சொல்லியிருக்கிறே மல்லவா ஆகையால் மானிடர் தங்களுடைய நல் நடக்கைகளிலும் கியானத்திலும் விர்த்தியாய்க்கொண்டு வர வர சட்டமும் மேலுக்குமேல் தினே தினே சீர்திருத்தப்பட்டும் மாறப்பட்டும் வருகின்றது. இத்தியாதி காரணங்களை சீர்தூக்கிப் பார்க்குமளவில் ஹிந்துலா என்னும் தர்ம சாஸ்திரம் ஒரே விதமாய் எந்நாளும் சாஸ்விதமாய் நடந்தேறிக்கொண்டு வரும் சட்டமல்ல பிரதிதினமும் புதிதாய் ஒவ்வொன்று ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. இவைகளை யோசித்து தான் பிரிட்டிஷ் கோர்ட்டார்கள் ஹிந்துலாவின் கோட்பாட்டில் பிரவேசிப்பது நியாயமல்ல வென்றும் சொல்லி யிருக்கிருர்கள்.

Important Rulings.

முக்கியமான தீர்ப்புகள்.

——:o:——

320, 325, ஏ பிரிவுகள்:—பிதுரார்ஜித சொத்து—டிக்ரீயின்படிக்கு நடவடிக்கைச் செய்தல்—சொத்து கலெக்டரின் அதிகாரத்திலிருப்பது—கலெக்டரின் அதிகாரத்தில் இருக்கும் வரையிலும் சொந்தக்காரனுக்கு உரிமைத் தத்துவ மின்மை.

சி. பி. சி. 320-வது பிரிவின்படிக்கு ஸர்க்காரால்செய்யப்பட்ட விதிகளின் வண்ணம் அதிகாரம் பெற்ற கலெக்டர் ஒருவர், தன் அதிகாரம் பெற்று ஒரு கடன்காரன் குத்தகைக்கு விட்டதுபோல், அந்தக் கடன்காரனுடைய சொத்தாகிய ஜாமீன் நிலங்களை 17 வருஷங்களுக்கு குத்தகைக்கு விடும்படிக்கு உத்தரவு கொடுத்தான்.

சட்டப் புத்தகத்தின் 325 ஏ பிரிவின்படிக்கு உண்டாகும் உரிமை தத்துவமின்மை, அந்தகுத்தகைக் காலம் முடியும் வரையிலும், கடன்காரனுக்கு நஷ்டத்தை விளைவித்தது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஆனல், எந்த கடன்களுக்காக கடன்காரனுடைய சொத்து கலெக்டரின் அதிகாரத்திற்குள் எடுத்துக் கொள்ளப்பட்டதோ அந்த கடன் முழுமையும் கொடுத்து தீர்க்கும் வரையிலும், அந்தக் கடன்காரனுக்குத் தன் ஆஸ்தியின் பேரில் சுவாதீன மில்லை.

கங்கா பிரசாத் VS கங்கா பக்ஷசிங்கு.

1907 அ. வீ. நோ. 112; 29 அ. 415.

368-வது பிரிவு—பாகம் பிரியாத ஆஸ்தியின்ஏலத்தைத் தள்ளிவிட வேண்டுமென்று பிரியாது செய்தல்—வாதிப் பிரதிவாதிகள், இவர்கள் பலரில் ஒருவன் இறந்துபோதல்—தவணைக்குள் வார்சுகள் ஏற்படுத்தப்படாமை—தள்ளிவிடுதல்:—

போடவேண்டு மென்றிருந்த ஏலத்தைத் தள்ளிவிடவேண்டுமென்று, பாகம் பிரியாத ஆஸ்தியை உடையவர்களான பல வாதிகள் கொடுத்த மனுவின் பேரில், அவ்வாறே தள்ளி விடவேண்டுமென்று 1895-வது ௵த்திய XI வது ஆக்டின் படிக்கு ஒரு டிக்ரீ பிறக்க, அதன்பேரில் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டாருக்கு அப்பீல் செய்து, அந்த அப்பீல் விசாரணை முடியாதிருக்கையில், வாதிகள் இரண்டு பெயர்கள் இறந்து போய் அவருக்கு பதிலாக வார்சுகள் தவணைக்குள் ரிகார்டில் கொண்டு வரப்படவில்லை.

இந்த விஷயத்தில் செய்த தீர்ப்பு; இறந்துபோன சொந்தக்காரனுடைய வார்சுகளை ரிகார்டில் கொண்டு வராத பக்ஷத்தில் அப்பீல் விசாரணையில், முதலில் பிறப்பிக்கப்பட்ட டிக்ரீ மாற்றப்படாது என்றும், அந்த பாகம் பிரியாத ஆஸ்தி முழுமையினுடையவும் ஏலத்தை அந்த டிக்ரீ தள்ளிவிட்டதால், இவ்வளவென்று நிச்சயிக்கப்படாத சிலருடைய பாகத்தின் விஷயத்தில் அந்த டிக்ரீ ஸ்தாபிக்கப்படுதலும், சிலர் விஷயத்தில்மாற்றப்படுதலும் செய்யப்படமாட்டாது என்றும்; மேலும், இறந்துபோன வாதிகளின் வார்சுகளை ஏன் தவணைக்குள் ரிகார்டில் கொண்டுவரவில்லை என்பதற்குப் போதுமான காரணம் அப்பீல் செய்தவர் காட்டாமையாலும், உயிருடன் இருக்கும் வாதிகளின் விஷயத்தில் மாத்திரம் அந்த அப்பீல் செல்லாமையாலும், ஸி. பு. கோ. 582, 367-வது பிரிவுகளின்படிக்கு அப்பீல் தள்ளப்பட்டது.

பரஸாத் நாராயணசிங்கு VS தராம்ஜட் நாராயண சிங்கு.

11 கல். வீ. நோ. 504; 5 கல். ஃா. ஜ. 393.

440-வது பிரிவு; கார்டியன்களையும் வார்டையும் குறித்த சட்டத்தில் 53-வது பிரிவு—தான் இறந்து போகையில் மரண சாஸனத்தில் கார்டியனை நியமிக்க சட்டத்தின் படிக்கு ஒரு ஹிந்து தகப்பனுருக்கு அதிகாரமில்லை—"இந்தவிஷயத்தில் அதிகாரம்பெற்றதுதான்."

'இந்தியா ஸக்ஸேஷன் சட்டம்' 47-வது பிரிவு:—ஹிந்துக்கள் செய்யும் உயிலுர்குச் செல்லாதாகையால், தன் மரணத்தின் பிறகு தனது பிள்ளைக்கு கார்டியனாக விருக்க ஒருவனை நியமிப்பதற்கு ஒரு ஹிந்து தகப்பனுருக்கு சட்டத்தின்படி அதிகாரமில்லை. ஸிவில் புரொசிஜர் சட்டம் 440-வது பிரிவில் "இந்த விஷயத்தில் அதிகாரம் பெற்றது" என்றிருக்கும் மொழிகள், தன் மரணத்தின் பிறகு தனது பிள்ளைக்கு ஒரு கார்டியனை தன் மரண சாஸனத்திலேயே நியமிக்க எண்ணி யிருக்கும் ஒரு ஹிந்து தக்ப்பனுர் விஷயத்தில், அவனுக்குப் பொது ஹிந்து சட்டத்தின்படிக்கு கார்டியனை நியமிக்க அதிகாரமுண்டு என்று வைத்துக்கொண்ட போதிலும், செல்லாதனவாம். ஸிவில் ப்ரொஸீஜர் சட்டம் 440-வது வது பிரிவு நியாயமாய் இயற்கையான விஷயத்தில் செல்லாதாகையால், எல்லா கார்டியன்கள் விஷயத்திலும் செல்லாது. (விசாரணை) ஹிந்து சட்டத்தின் படிக்கே தனது மைனர் பிள்ளை கார்டியனை நியமிக்க ஒரு ஹிந்து தகப்பனுருக்கு இடமுண்டா ?

பூதிலால் மூஞ்சி VS மொரார்ஜி பிரெம்ஜி.

9 பம்பாய் லா. ரி. 553; 31 ப. 413.

443 வது பிரிவு வியாஜ்ஜியத்திற்காக நியமிக்கப்பட்ட கார்டியன்—வியாஜ்ஜிய விஷயத்தில் நியாயமான கார்டியனை விட்டு வேறே கார்டியனை நியமிப்பது :—

மைனர் பிரதிவாதியின் நிமித்தம், வியாஜ்ஜியம் செய்ய கார்டியனுக ஒருவனை பிசகாய் ஏற்படுத்தினல், இவ்வாறு செய்தது ஒரு பிசகே தவிர வேறன்று; இந்த மாதிரி தவருக கார்டியனை நியமித்த விஷயம், ஒரு பிரியாதின் சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட டிக்ரீயையாவது, அல்லது அந்த டிக்ரீயின் வண்ணம் போடும் ஏலத்தையாவது அழிக்காது.

தம்மார் சிங்கு VS பிர்பூசிங்கு.

1907 அ. வீ. நோ. டப்ளியூ. என். 70; 4 அ. லா. ஜ. 29 அ. 290.

443-வது பிரிவு; வியாஜ்ஜியத்திற்காக நியமிக்கப்பட்டகார்டியன்-அப்பீல்-அப்பீல்-செய்கிறவர்களால் இந்த மாதிரி கார்டியன் பிரதிவாதிகளில் சேர்க்கப்படாமை—லிமிடேஷன்.

அப்பீல் செய்வதற்கென்று குறித்திருக்கும் தவணைக் கழிந்துபோகும் வரையிலும், வாதியானவன், பிரதிவாதிக்கு விாஜ்ஜியத்தின் பொருட்டு நியமிக்கப்பட்ட கார்டியனை, தான் செய்த அப்பீலில் தாக்கல் செய்து கொண்டுவந்த பக்ஷத்திலும், அந்த அப்பீல் தவணைக்கழிந்து வந்ததென்றுதள்ளப்படமாட்டாது

ரூப்சந்தர் VS தாஸோதா.

1907 ஏ. டப்ளியூ. என். 290.

444-வது பிரிவு; வியாஜ்ஜியத்திற்காக ஏற்படுத்தப்பட்ட கார்டியன்-இம்மாதிரி கார்டியனை நியமிக்கும் விஷயத்தில் கோர்ட்டார் என்னசெய்யவேண்டுமென்பது:—

ஒரிஜினல் வியாஜ்ஜியத்திலாவது, அப்பீல்வழக்கிலாவது பிரதிவாதியாக இருப்பவன் மைனராக இருந்தால், இந்த விஷயத்தில், ஒரு கார்டியனை நியமிக்கவும், அப்படித் தங்களால் நியமிக்கப்பட்ட கார்டியன், மைனருக்குப் பிரதியாக நின்று நியாயமாக வழக்கை நடத்தவும், வேறு எல்லாவிதத்திலும், மைனரின் நன்மையைக் கருதியே தொழிலைச் செய்ய வல்லவனும் என்று விசாரித்துச் சரியாக அறிய வேண்டியது கோர்ட்டாருடைய கடமை, கோர்ட்டார் கடமை ஒரு காரியத்தைச் செய்யவேண்டியதற்கு மாத்திரம் செய்வதன்று.

இராமசந்திரதாஸ் VS ஜோதி பிரஸாஸ்.

1907 அ. வீ. நோ. 225; 29 அ. 675.

456, 235, 248-வது பிரிவுகள்; வியாஜ்ஜிய நிமித்தம் நியமிக்கப்பட்ட கார்டியன்-அப்படி கார்டியனை ஏற்படுத்தியது எத்தனை நாள் வரையிலும் செல்லும்-'பங்காள கோர்ட் ஆப்வார்ட்ஸ் சட்டம்' 535-வது பிரிவு-ஆஸ்திகளை சுதந்தரமாக எடுத்துக்கொள்ளாமை-கோர்ட் ஆப்வார்ட்ஸ்-கார்டியன்.

நடவடிக்கை நடத்துவதற்காகச்செய்துகொண்ட மனுவில், வியாஜ்ஜிய நிமித்தம் நியமிக்கப்பட்ட கார்டியன் என்று ஒருவனைக் குறித்திருந்து, அவனுக்கு ஸி. பி. கோ. 248-வது பிரிவின்படிக்கு நோட்டீஸ் கொடுத்திருந்தால், கோர்ட்டாரும் உடந்தையாகவேயிருந்து அவனை கார்டியனுக நியமித்ததாக எண்ண வேண்டியது. அந்த வியாஜ்ஜிய விசாரணை முடிகிற வரையிலும், கோர்ட்டார் அல்லவென்று நீக்குகிற வரையிலும், ஒருவனை அந்த மாதிரி கார்டியனுக நியமித்த விஷயம் செல்லும், வார்டின் மானேஜர் சொத்துகளைத் தன் சுவாதீனமாக்கிக் கொள்ளாதிருக்கையில், அந்த சொத்தின் விஷயத்தில் கோர்ட்டாருக்கு சுவாதீனமில்லாமையோடு, அவர்கள் அதை ஒன்றும் செய்யக்கூடாது. வழக்கிலிருக்கும் ஆஸ்தியின் விஷயமாய் உண்டாகும் வியாஜ்ஜியத்தில், வார்டின் மானேஜர் மைனரின் கார்டியனுகவாவது அல்லது நெருங்கிய சிநேகிதனுகவாவது ஏற்படுத்தப் படவேண்டுமென்பது அவசியமன்று.

கிருஷ்ண பிரசாத் சிங்கு VS கோஷ்ட குண்டு.

5 கல். லா. ஜ. 434.

457-வது பிரிவு—வியாஜ்ஜிய நிமித்தம் நியமிக்கப்பட்ட கார்டியன்-கணவன் உயிருடன் வாழ்ந்துக்கொண்டிருக்கையில் தானே ஒரு பெண்பிள்ளையை கார்டியனுக நியமித்தல் :—

தன் கணவன் ஜீவதசையில் இருக்கையில் தானே ஒரு பெண் பிள்ளையை மேற்குறித்த கார்டியனுக எந்த விதத்திலும் நியமிக்கக்கூடாது. வாஸ்தவமாகவே அந்த மாதிரி நியமிக்கப்பட்டால், அப்படி நியமிக்கப்படுவது வெறுந் தவறு மாத்திரம் ஆகாது.

குஞ்சன்லால் VS கஜாதரலால்.

1907 அ. வீ. நோ. 243; 4 அ. லா. ஜ. 698; 29 அ 728.

457வது பிரிவு வியாஜ்ஜிய நிமித்தம் நியமிக்கப்பட்ட கார்டியன் சமப் பிரதிவாதி கல்யாணமானப் பெண்பிள்ளை :—

தன் கணவனைப்போல் தானும் பிரதிவாதியாகியும் பிரதிவாதிகளாகிய தன் மைனர் பிள்ளைகளுக்குத் தாயாராகியும் இருந்த ஒரு பெண்பிள்ளை தன் மைனர் பிள்ளைகளுக்கு கார்டியனுக நியமிக்சப் பட்டால்; இப்படி நியமிக்கப் பட்டது வியாஜ்ஜியத்தின் பொருட்டு இது ஸி. பு. கோ. 457-வது பிரிவுக்கு ஒத்து வாராமையால் நியாய விரோத மென்றும், புது கார்டியனை நியமித்த பிறகு அந்த பிரியாதைப் புதிதாக விசாரித்துத் தீர்மானம் சொல்ல வேண்டுமென்றும் தீர்மானம் செய்யப் பட்டது.

காளி சங்காகாஹை VS மஹா ராஜா பிரதாப உடைய நாத் ஸாஹை தேவ். ம ஸி. எல். ஜெ. 36.

462 வது பிரிவு- மைனர்-சமாதானமாய்ப் போதல் எப்பொழுது தள்ளப்படு மென்பது:-

மைனா உடந்தையாயிருந்த ஒரு வியாஜ்ஜியத்தின் விஷயத்தில் சமாதானமாக்கப்பட்டது. சமாதானமாகிய காலத்தில், வாதிக்காக விசாரணையாரம்பிக்கப்பட்டு சாக்ஷிகள் விசாரிக்கப் பட்டார்கள்;

வெகுநாளாக விசாரணையிலிருக்கும் வியாஜ்ஜியத்தில் இருதாத்தாரும் தங்களுக்குள் சமாதானம் செய்துக்கொண்டு அந்தசமாதானத்தைக் காயப் படுத்தும்படி கோர்ட்டாரை கேட்கையில், அந்த கேஸில் கோர்ட்டார் சாதாரணமாய் அறிவதை விட, இந்த தருணத்தில் இந்த கேஸில் அவர்களுக்கு அதிகமாய்த் தெரியும் மைனருக்கு வேறே ஒரு சுய நன்மையும் இல்லை; தங்களுடைய நன்மைகளைத் தாங்களே நன்ருக அறிய வல்ல பெரியவர்களும் சமாதானத்திற்கு உடந்தையாகி அதை ஒத்துக் கொண்டார்கள். இந்த சமாதானத்தில் உடந்தயாயிருந்த குழந்தை மைனரின் நன்மைக்காகவே இந்த சமாதானம் நல்லது என்று கோர்ட்டார் சொன்னுர்கள்; இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் சமாதானத்தைத் தள்ளி விடும் விஷயத்தைப் பற்றிப் பிரயத்தினப்படுவதும் முடியாத காரிய மென்று தீர்மானிக்கப்பட்டது.

நீமேசுவர பிரலாத சிங்கு VS இராமபகதூர் சிங்கு

11 கல். வீ. நோ. 173; 34 கல். 70;

17 ம. லா. ஜ. 59; 5 கல். லா. ஜ. 175; பிரிவிகவுன்சில்.

503, 505 வது பிர்வுகள்:- ஒரு சப் ஜட்ஜி ரிஸீவரை நியமித்தல்-ஜில்லா ஜட்ஜி அதனை ஸ்திரப்படுத்தினது-

இதனது நியாயம்:- தனது பேரிலேயே ரிஸீவர் பிரியாது செய்தல்:-

ஜில்லா ஜட்ஜியினிடத்திலிருந்து அதிகாரம் பெற்ற பிறகே, ஒரு கீழ் கோர்ட்டு ஜட்ஜிக்கு ரிஸீவரை நியமிக்க இடமுண்டு; அதற்கு முன் கிடையாது. ஜில்லா ஜட்ஜியின் உத்திரவு பெறுவதற்கு முன்னமே கீழ் கோர்ட்டு ஜட்ஜாரால் நியமிக்கப்பட்டு, அவ்வாறு நியமிக்கப்பட்டப் பிறகு, மேல் கோர்ட்டாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அவ்வாறு ரிஸீவரை ஏற்படுத்தப்பட்ட விஷயம் செல்லுமா என்பது கோர்ட்டாரின் அதிகாரத்திற்குள் அடங்கியதே அல்லாமல் அவர்களின் அதிகாரம் செல்லும் இடத்திற்குள் அடங்கியதன்று. கீழ் கோர்ட்டு ஜட்ஜால் ரிஸீவர் நியமிக்கப்பட்டுப் பிறகு ஜில்லா ஜட்ஜால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஷயத்தில், சட்டத்தில் கூறியுள்ளபடிக்கெல்லாம் செய்யப்பட்டது; அவ்வாறு செய்யப்பட்ட நடவடிக்கைகளில் ஏதாவது குறைவு இருந்தால், அந்த குறைவுகள் எல்லாம் கீழ்க்கோர்ட்டு ஜட்ஜால் பிறகு பிறப்பிக்கப்பட்ட உத்திரவால் சீர்திருத்தப்பட்டன; இவ்வாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, 'ரிஸீவரை நியமித்தது நியாயமா' என்று செய்த ஆக்ஷேபனைப் பிரியாதின் பின்னரே பிறப்பிக்கப்பட்டதாலும், அது செல்லும். சொந்தக்காரனுக் கிருப்பதுபோலவே ரிஸீவருக்கும் பிரியாதுகள் கொண்டு வரவும், கொண்டு வந்த பிரியாதுகளைத் தடுக்கவும், சர்வாதிகாரம் தருவதற்கு கோர்ட்டாருக்கு அதிகாரம் உண்டென சி. பு. கோ. 503-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவின் படிக்கு ரிஸீவர் நியமிக்கப்பட்டு சர்வாதிகாரம் கொடுக்கப்படுவானுனல், அந்த ரிஸீவருக்குத் தானே கோர்ட்டுக்கு பிரியாது கொண்டுவரவும், அவற்றின் படிக்கு நடவடிக்கை நடத்தவும் அதிகாரம் கொடுக்கப்படும்; இந்த மாதிரி விஷயத்தில் ரிஸீவர் நியமிக்கப்பட்ட பிரியாதில் சொந்தக்காரனுக்குப் பதிலாய் சரியான பிரதி நிதி உண்டென்றே எண்ண வேண்டியது. தானே பிரியாது செய்வதற்காக ஒரு ரிஸீவருக்கு அதிகாரம் கொடுக்க கோர்ட்டாருக்கு இடமுண்டு; ஆனல், தனது பேரில்லாமல், வேறு விதமாய் பிரியாது செய்ய இடம் பெற்ற ரிஸீவர், 503-வது பிரிவின்படிக்குத், தன்னை நியமித்த காலத்தில் கொ

டுக்கப்பட்ட சர்வாதிகாரத்தின் அனுகூலத்தால், பிரியாது செய்யலாம்.

ஜாகத் தாரணி தேசி vs நயகோபால சாஇ.

5. கல். லா. ஜ. 270; 34 கல். 305.

549 வது பிரிவு:- கோர்ட்டு செலவுக்காக ஜாமீன் காட்டுதல்-காலதாமஸம் ஆகிறது-அப்பீல் செய்பவன் தான் ஏழை யென்று அப்பீல செய்வது.

தான் ஏழையாதலால் தனக்குக் கொடுக்க சக்தியில்லை என்று அப்பீல் செய்துக் கொள்பவன் இடத்திலிருந்து சேரவேண்டிய கோர்ட்டு செலவுகளுக்காக ஜாமீன் கேட்கக் கோர்ட்டாருக்கு அதிகாரமிருந்த போதிலும், ஏதோ ஒரு அவசியமான சந்தர்பத்தில் மாத்திரம், அதற்காக உத்திரவு பிறப்பிக்கப்படுமேயல்லாமல், வேறே சமயங்களில் பிறப்பிக்கப்படமாட்டாது. கோர்ட்டு செலவுக்காக ஜாமீன் வேண்டுமென்று மனு கொடுத்துக் கொள்வோரெல்லாரும் கூடிய சீக்கிரத்தில் காலதாமசமில்லாமல் அவ்வாறு செய்துக்கொள்ள வேண்டியதே யொழிய, இருதரத்தாருக்கு அதிகமாய்ச் செலவு உண்டாயின பிறகு செய்துக் கொள்ளக்கூடாது.

ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் vs சுப்பிரமணிய ஐயர்.

17 ம. லா. ஜ. 583.

561. 647-வது பிரிவுகள்:- சமப்பிரதிவாதியின் மீது எழுதும் ஆக்ஷேபனைகளை ஞாபகமூட்டும் பத்திரம் ஸ்மால்காஸ் கோர்ட்டாரால் சோதிக்கப்பட்டமை-சோதிக்கப்படும் கேசுகளில் ஹைகோர்ட்டாருக்கு இருக்கும் அதிகாரங்கள்

எவனுக்கும் பிரதிகூலமாக கீழ் கோர்ட்டாரால் டிக்ரீ செலுத்தப்பட்டதோ, அந்தப் பிரதிவாதியாய் குற்றத்தினின்றும் நீக்கவும், கக்ஷியை சேர்ந்தவர்கள் கோர்ட்டின் முன்னிலையில் இருக்கையிலேயே வேறே புதிதாக ஒரு டிக்கியை மற்றொருவனுக்குப் பிரதிகூலமாகப் பிறப்பிக்கவும் ஹைக்கோர்ட்டாருக்கு, 1887-ம் ஹூத்திய, ப்ரொவின்ஷியல் ஸ்மால்காஸ் 9-வது சட்டம் 25-வது பிரிவின்படிக்கு, இடமுண்டு. ப்ரொவின்ஷியல் ஸ்மால்காஸ் சட்டம் 25-வது பிரிவின்படிக்கு கொடுத்துக்கொள்ளும் சோதிக்கை மனுதாரர்களுக்கு, அப்பீல் நடவடிக்கைகள் எல்லாம் செல்லுமென்று சி. பு. கோ. 647-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது; ஆகையினால், அப்படி செய்துக்கொள்ளும் மனுக்களில், ஆக்ஷேபனைகளை ஞாபகமூட்டும் பத்திரமும் அடங்கலாம். இந்த கேஸில், சமப்பிரதிவாதிகளுக்குள் இருக்கும் ஆக்ஷேபனைகளை நினைவூட்டு பத்திரத்திகு இடமுண்டென்று சொல்லப்பட்டது.

கிருஷ்ணமையங்கார் vs அப்பனையங்கார்

17 ம. லா. ஜ. 62.

592, 407 (dவாக்கியம் பிரிவுகள்-ஏழைத்தன்மையைக் குறித்து அப்பீல் செய்துக்கொள்ள உத்திரவு கொடுத்தல்-அப்பீல் கோர்ட்டாரின் அதிகாரங்கள்:--

தான் ஏழையென்று அப்பீல் செய்துக் கொள்ள ஒருவனுக்குச் சுதந்திரம் உண்டா என்னும் ஆக்ஷேபனை, அவ்வாறு அப்பீல் செய்த பிறகேதான் உண்டாகின்றது. அந்தப்படிக்கு ஒருவனுக்கு ஏழைத்தன்மைக் குறித்து அப்பீல் செய்துக் கொள்ள உத்திரவு கொடுக்கும் விஷயம் கிரிமினல் புரோஸீஜர் சட்டம் 26.வது அதிகாரத்துள்ள விதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்பீல் செய்பவர்கள் ஏழைத்தன்மயின் உண்மையை விசாரித்துத் தங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று ஹைகோர்டார் கீழ்கோர்ட்டு ஜட்ஜிக்கு உத்திரவிட்டார்கள். அவ்வாறு உத்திர விட்டபிறகு, கீழ்கோர்ட்டு ஜட்ஜி விசாரித்து, அப்பீல் செய்தவன் உண்மையிலேயே ஏழை என்றும், ஆனால், அவள், சி.பு.கோ. 407வது பிரிவு(டி)வாக்கியத்தில் சொல்லியிருப்பதைப்போல, மற்றவர்களுடன் சமாதானம் செய்ததனால், அவள் ஏழைத் தன்மைக் காரணமாய்ச் செய்யும் அப்பீலின் சுதந்திரத்தை இழந்தாளென்றும், தெரிவித்தார். ஆகையினால், அந்த அப்பீல் செய்த பெண்பிள்ளை, தான் அப்பீல் செய்த காலத்தில், மற்றவர்களுடன், சி. பு. கோ. 407-வது பிரிவில் சொல்லியிருப்பதைபோல் சமாதானம் செய்திருந்ததனால், அவளுக்கு அப்பீல் செய்ததற்கு உத்திரவு கொடுக்கப்படவில்லை-

ஏழைத்தனம் காரணமாக அப்பீல் செய்ய உத்திரவு வேண்டுமென்று செய்த மனுவின் விஷயத்தில், ஹைகோர்ட்டார் உத்திரவின்படிக்குக் கீழ் கோர்ட்டு ஜட்ஜி செய்த தீர்மானம் முடிவானது அல்லவென்றும், இந்த விஷயம் ஹைகோர்ட்டாரை எட்டினவுடன் இதைப்பற்றி அப்பீல் செய்ய உத்திரவு பிறப்பிக்கும் விஷயம் ஹைகோர்ட்டார் இஷ்டத்தை ஓட்டினதென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

ஹாம்பாபாய் vs மீன்ஜீஸெயிட்

17 ம. லா. ஜ. 447; 31 ம.

203-வது பிரிவு பிரியாது தள்ளப்பட்டது. மாஜிஸ்ட்ரேட்டின் முன்பாக நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது ஒரே விஷயத்தின் பேரில் இரண்டாவது பிரியாதிற்கு இடங் கொடுக்க கோர்ட்டாருக்கு அதிகாரம் உண்டா:—

கிரிமினல் கோர்ட்டாரால் விசாரிப்பதற்கு வேண்டிய விஷயங்கள் வெளியிட வில்லை யென்று ஒரு பிரியாதை ஒரு கோர்ட்டார் தள்ளி விட்ட பிறகு, மறுபடியும் அதே விஷயத்தைக் குறித்து, அதே கோர்ட்டில் இரண்டாவதுமுறை பிரியாது செய்யலாம். ஆக்ஷேபனை யொன்றுங் கிடையாது.

பகவான் vs திப்பா

1908 அ. வீ. நோ. 67 5 அ. லா. ஜ. 137

297-வது பிரிவு:—பஞ்சாயத்தாரருக்குச் சொல்லப் பட்டது-மனசு பேதிக்கப்படுதல்—சாக்ஷிகளின் பேரில் ஜட்ஜியின் மனக் கொள்கை—

பஞ்சாயத்துதாரர்களைக் கொண்டு ஒரு கேசை விசாரிக்கையில், கிரிமினல் புரோசீஜர் சட்டம் 164-வது பிரிவின்படிக்கு எழுதிக் கொண்ட சாக்ஷிகள் சொல்வதை ஏற்றுக் கொள்ளும் போது பஞ்சாயத்தாரர்கள் மிகவும் ஜாக்கிரதையாக விருக்க வேண்டு மென்று அவர்களுக்கு ஜட்ஜி சொல்ல வேண்டும். முதலிலிருந்து கடைசி வரையிலும் ஒரே மாதிரியாகச் சொல்லும்படி சாட்சிகளைச் கட்டாயப்படுத்த அவர்களின் வாக்கு மூலங்களை ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் பதிவு செய்துக் கொள்வது மிகவும் நல்ல தன்று என்று ஜட்ஜி பஞ்சாயத்தாரர்களுக்குச் சொல்ல வேண்டும். இம்மாதிரி போலீஸ் உத்தியோகஸ்தர் அவர் வாக்கு மூலங்களைப் பதிவு செய்துக் கொள்வது, முக்கியமாய், ஜனங்களெல்லாம் ஏகோபவித்து ஒரு மனசாய் இருக்குங் காலத்தில், நல்லதென்று யாதாமொரு சாக்ஷி சொல்லும் வாக்குமூலத்தை பஞ்சாயத்துதாரர்கள் நம்பாமலிருக்க, அவர்கள் அவ்வாறு நம்பாதிருக்கப் போதுமான காரணம் தனக்கு அகப்படவில்லையென்று ஒரு ஜட்ஜி சொல்லக்கூடாது. அப்படிச் சொல்வாரானால், அது அவர்கள் மனதைக் கெடுத்து பேதித்தவனாகும் நம்புதல் அல்லாது நம்பாதிருத்தலாகிய விஷயத்தை அவர்கள் இஷ்டப்படிக்கு விட்டுவிட வேண்டுமேயல்லது, அதைப்பற்றி ஜட்ஜி யொன்றும் சொல்லக்கூடாது. கிரௌன் பிராசிகூடர் (சர்கார் தரப்பு வக்கீல்) ஏதாவது ஒரு விஷயத்தைச் சொல்லி, அதற்குப் பக்கபலமாக சாக்ஷியங்கள் இல்லாமலிருந்து, அந்தமாதிரிவிஷயத்தை பஞ்சாயத்தார்களுக்கு ஜட்ஜி சொல்ல வேண்டுமென்றால், அவர் அவர்களுக்கு அந்த விஷயம் அனுகூலமாகிய அத்தாக்ஷி யில்லாதது என்று சொல்ல வேண்டியது.

காளி சிங்கு முதலியோர்கள் vs சக்ரவர்த்தி

7 கல். லா, ஜ. 246.

297-வது பிரிவு:-பஞ்சாயத்து தாரர்களுக்குச் சொல்ல வேண்டியது-தப்பு வழுவில் செலுத்துதல்-குற்றத்தின் உள்ளடக்கமாகிய விஷயம் சொல்லப்படாமை-கொடுத்திருக்கும் விஷயங்களிலிருந்து ஜட்ஜி மனக்கொள்கையைக் கொள்வது, கொடுத்திருக்கும் விஷயங்களைத் தீர்க்க வேண்டியவர்கள் பஞ்சாயத்துதாரர்கள் என்பது-முதலில் சங்கதி தெரிந்த உடனே தெரியப்படுத்துதல்:-

மனுஷ்ய ஹத்தியென்று சொல்லத்தகாத நினையாமல் செய்த மனித கொலைகேஸ் ஒன்று தீர விசாரிக்கும் ஜட்ஜி ஒருவர், பஞ்சாயத்து தாரர்களை நோக்கிப் பேசுகையில், சொலையைச் செய்தவன், இறந்து போனவனுடைய மரணத்தை யுண்டாக்குகையில், மரணத்தை யுண்டாக்கும் எண்ணம் இருந்ததா அல்லது மரணத்தை யுண்டாக்கும் காயத்தை யுண்டாக்கினு, அல்லது மரணத்தில் முடியும் காயம் உண்டாக்க எண்ண மிருந்ததா என்பதை பஞ்சாயத்து தாரர்கள் விசாரித்து முடிவு கட்டவேண்டு மென்று அவர்களுக்குச் சொல்ல மறந்து விட்டார்.

தீர்மானம் அப்படி அவர்களுக்குச் சொல்லாமலே விட்டது அவர்கள் ஏமாற்றி த்தப்பு வழியில் செலுத்துவதற்குத்தான். நடந்து யிருக்கும் விஷயங்களைக் குறித்து தன் எண்ணத்தை பஞ்சாயத்துதாரர்களுக்குச் சொல்லுகையில், தன் இஷ்டப்படிக்கே சொல்ல அவர்கள் கடமைப் பட்டிருக்க வில்லை யென்றும் தங்கள் இஷ்டப்படிக்கே அவர்கள் சொல்வதற்கு பந்தப்படவில்லை யென்றும் ஜட்ஜி சொல்ல வேண்டியது. முதல் முதலில் தனக்குக் கிடைத்த சங்கதியை அத்தாக்ஷியாகக் கொண்டு அவர்களுக்குப் படித்துக் காட்டும் பக்ஷத்தில், அதை முழுமையும் பூராவாக வாசித்துக் காட்ட வேண்டும். இல்லாவிட்டால் அதைப் பற்றி ஒரு சிறிதும் குறிக்கக் கூடாது. அதை அவர்களுக்குக் காட்டாமல் தான் மாத்திரம் அதைப்பற்றி ஒன்றும் சொல்லக் கூடாது.

மதபார்கோஷ் vs சக்ரவர்த்தி 12 கல். வீ. நோ. 774; 7. கல். லா. ஜ. 599; 35 கல். 531.

297-வதுபிரிவு:-பஞ்சாயத்து தாரர்களுக்கு (ஜுரி) த்தெரியப் படுத்துவது-அவர்களைத் தப்புவழியில் செல்லப் பண்ணுதல்-சாக்ஷிகளின் சட்டம் (Evidence Act) 25, 26-வது பிரிவுகள் பிரயோஜனத்தை அவர்களுக்குச் சொல்லாமல் விட்டு விடுதல்-குற்றவாளிகள் ஒத்துக்கொள்ளும் விஷயத்தைக் குறித்து உத்திரவிடுதல்:--

குற்றவாளிகள் தாங்கள் செய்த குற்றங்களை போலீசாரிடத்தில் ஒத்துக்கொண்டு, அதன் பிறகு திருட்டுச் சொத்துக்களும் கொண்டு வந்து கொடுக்கப்படுமானால், அவர்கள் ஒத்துக் கொண்ட விஷயத்தை ஏற்றுக் கொள்ளலாம் என்று ஒரு ஜட்ஜி பஞ்சாயத்துதாரர்களுக்குச் சொல்வாரானால், அது அவர்களுக்குத் தப்பாகச் சொல்லியதாகும்; அல்லது, அந்த குற்றவாளிகள் ஒத்துக் கொள்ளும் விஷயங்கள் அந்த கேஸின் விசாரணையில் கண்டுபிடிக்கப் பட்ட சங்கதிகளுக்கு மாத்திரம் செல்லும் ஆதலால் அவர்கள் ஒத்துக் கொண்ட விஷயங்கள் நாம் ஏற்றுக் கொள்ளலாம் என்று ஒரு ஜட்ஜி சொல்லாவிட்டால் அதுவும் பஞ்சாயத்துதாரர்களை தப்பு மார்க்கத்தில் செலுத்தியதாகும். ஒருவனை யல்லாமல், பலராக குற்றவாளிகள் இருக்கும் கேஸில், பஞ்சாயத்து தாரர்கள் ஒவ்வொரு குற்றவாளியின் குற்றத்தைத் தனியே எடுத்து விசாரிப்பதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது, விசாரிப்பதில் ஒருவன் சொல்லும் விஷயங்களையே மற்றவர்களுக்குப் பிரதிவாதிகளுக்குப் பிரதிகூலமாக உபயோகப் படுத்தக்கூடாது

அச்சப்பா பியோரி vs சக்ரவர்த்தி 18 ம. லா. ஜ. 25C.

297-வதுபிரிவு:-ஜூரிகளுக்குச் சொல்வது • அவர்களுக்குத் தப்பாகச் சொல்வது-குர்றவாளி சொன்ன சாக்ஷையும் அல்லது அதற்கு அனுகூலமாகிய சாக்ஷியத்தையும் சொல்லாமல் விடுதல்:—

எந்தகாலத்தில் எவ்விடத்தில்குற்றம்நடந்ததாகத் தன்பேரில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறதோ, அந்த இடத்தில் அப்பொழுது தான் இல்லை என்று குற்றவாளி சொல்லும் சாக்ஷையும், அதற்கு அனுகூலமாகிய சாக்ஷிகளையும் பற்றி, ஜட்ஜி பஞ்சாயத்து தாரர்களைநோக்கிப் பேசுகையில், சொல்லாமல்விட்டால், அதுவே பஞ்சாயத்துதாரர்களை தப்பு வழியில் செலுத்தியதாகும்· ஆனல் குற்றவாளிகளை மறுபடியும் விசாரித்தே தீரவேண்டியது.

கஞ்சி ரெட்டி புச்சன்ன (மறு விசாரணை) 18 ம. லா. ஜ.

297, 288 வது:-பிரிவுகள் பஞ்சாயத்துதாரர்களைத் தப்புவழியில் செலுத்துதல் - சாக்ஷிகளின் சட்டம் (Evidence act) 27 30-வது பிரிவுகள்-குற்றவாளியின் வாக்குமூலம் உண்மையான சங்கதியைக் கண்டுபிடிக்கக் காரணமாக யிருப்பது;-எப்பொழுது சாக்ஷி என்பது-கேசை விசாரிக்கும் மாஜிஸ்டிரேட்டின் முன்பாக சாக்ஷி சொல்லுபவனுடைய வாக்குமூலம் சாக்ஷி இல்லாமை::

ஒருவன் தன் குற்றங்களை ஒத்துக்கொள்ளும்போது போலீசார் காவலில் இருந்தானு என்பதைக் கண்டு பிடிப்பது ஜட்ஜியின் வேலையாகும்; ஒருவன் தன் குற்றங்களை ஒத்துக்கொள்ளும்போது போலீசார் வசத்தில் இருந்தான் என்பதைத் தான் கண்டுபிடித்து, அந்த விஷயத்தை ஒரு ஜட்ஜி,, பஞ்சாயத்தாரர்களுக்குச் சொல்லத் தவறினாலும், அது அவர்களை தப்புவழியில் செலுத்தினதாகாது சாக்ஷிகளின் சட்டம் 27 30-வது பிரிவுகளின்படிக்கு, ஒரு குற்றவாளி மற்றவன் மீதில் சொல்லும் வாக்குமூலத்தில் முக்கியமாய் எடுத்து யோசிக்க வேண்டியது எதுவென்றால்-அம்மாதிரி வாக்குமூலம் கொடுக்கும் குற்றவாளிக்கும் பிரதிகூலமாக யிருக்கும் ஒரு சங்கதியைக்கண்டு பிடிக்கக் காரணமாக இருக்கும் விஷயத்தை அவன் சொல்லி அதுவே அவன் குற்றத்தை ஒத்துக்கொள்வதற்குச் சமானமாக இருக்கும் பாரமாகும் போலீஸ் இன்ஸ்பெக்டர் இடத்திலாவது அல்லது கேசை விசாரிக்கும் மாஜிஸ்ட்ரேட்டினிடத்திலாவது ஒரு சாக்ஷியானவன் வாக்குமூலம் கொடுத்தால், அது குற்றவாளிக்குப் பிரதி கூலமாகிய சாக்ஷியாகாது; அந்த சாக்ஷி மாஜிஸ்ட்ரேட் முன் பின் குற்றவாளி இருக்கையிலேயே சொல்லப்பட்ட தானுலுங் கூட அது சாக்ஷி தகுந்த தாகாது; மேலும், அப்படிக்கொத்தசாக்ஷி, குற்றவாளிக்குப் பிரதி கூலமாகிய ஒரு பலமான சாக்ஷி என்று ஜட்ஜி பஞ்சாயத்தார்களுக்குச் சொல்வாரானால், அது ஒரு பெரிய தவறாகும்; அத்துடன் அது அவர்களைத் தவறாக வழிபடுத்தியதாகும்.

307-வது பிரிவு ஹைக்கோர்ட்டாருக்குத் தெரியப்படுத்துதல்-ஸெஷன்ஸ் ஜட்ஜி-தெரியப்படுத்தப்பட்ட விஷயங்கள் :-

1898-வருஷத்திய ஸிவில் புரொஸீஜர் சட்டம், 306-வது பிரிவின்படிக்கு ஒரு கேஸை ஹைகோர்ட்டாருக்குத் தெரியப் படுத்துகையில், ஸெஷன்ஸ் ஜட்ஜியானவர், தெளிவானவையும் சந்தேகத்திற்கிடமில்லனவு மாகிய வார்த்தைகளில் குர்றவாளி செய்த குர்றத்தைத் தான் எண்ணுகிற மாதிரியும், அதனல் தனக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் உள்ள அபிப்பிராய பேதத்தையும், தெரியப் படுத்தவேண்டும். அந்த பிரிவின்படிக்கு கேஸை ஹைகோர்ட்டாருக்குத் தெரியப் படுத்துகையில், சாக்ஷிகளைப் பற்றித் தான் எண்ணுகிற விதத்தையும், அவர்களுள் முக்கியமான சாக்ஷிகளை எவ்வளவு தூரம் நம்பலாம் என்பதையும் பற்றி தனக்கு உண்டாகும் அபிப்பிராயத்தை சிறிது விவரித்துத் தெரியப்படுத்தவேண்டும்; ஏனென்றால், சாக்ஷிகளின் நடவடிக்கைகளைத் தாங்களே நேரே பார்த்து ஏதாவது தீர்மானம் சொல்வதற்கு முடியாத நிலைமையில் இருப்பவராததால், ஹைகோர்ட்டார், சாக்ஷிகளை நேரே கண்டும் கேட்டும் இருக்கிற செஷன்ஸ் ஜட்ஜி சொல்லும் அபிப்பிராயத்தின் படிக்குத்தான் நடத்த அல்லது நடத்தாம லிருக்கவேண்டியது.

சக்கிரவர்த்தி vs சந்திர கிருஷ்ண.

10 பம்பாய் லா. ரி. 173.

307-வது பிரிவு-ஜட்ஜிக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் உள்ள அபிப்பிராய பேதம்-ஹைகோர்ட்டாருக்குத் தெரியப் படுத்துதல்-கேஸ் முழுமையும் எடுத்து விசாரிக்க ஹைகோர்ட்டாருக்குள்ள அதிகாரம்:-

ஸிவில் புரொஸீஜர் சட்டம் 307-வது பிரிவின்படிக்குத் தெரியப் படுத்தப்பட்ட ஒரு கேஸைப்பற்றி விசாரிக்கையில், ஹைகோர்ட்டார் கீழ் கோர்ட்டு ஜட்ஜிக்கும், பஞ்சாயத்தார்களுக்கும் இருந்த அபிப்பிராய பேதத்தை மாத்திரம் விசாரித்தால் போதாது; ஜட்ஜிக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் இருந்த அபிப்பிராய பேதத்தை எடுத்து நன்றாய் ஆராய்ந்து அதன் பிறகு தான் கேஸைத் தீர்மானம் செய்யவேண்டியது.

சக்கிரவர்த்தி vs சந்திர கிருஷ்ணர்.

10 பம்பாய் லா. ரி. 632.

362-வது பிரிவு—சிறு கேசுகளில் சாக்ஷியங்களைப் பதிவு செய்துக்கொள்வது-மாஜிஸ்டிரேட் தன் அறிவைப் பயன்-படுத்துவது-மறு விசாரணை-மாற்றப்பட்டது:-

கிரிமினல் புரொஸீஜர் சட்டம் 362-வது பிரிவு சொல்லியிருப்பது என்னவென்றால், அந்த பிரிவில் சொல்லியிருப்பதுபோல் சாக்ஷியங்களை பதிவு செய்துக்கொள்வது அவசியமில்லை என்று சொல்லப்பட்ட கேசுகளில் முழுமையும் ஒன்றும் பதிவு செய்யாமல், முடிவில் ஒரு பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் தன் இஷ்டப்படிக்குச் செய்யலாம் என்பது அல்ல. அந்த மாதிரி கேசுகளில், சாக்ஷியங்களைப் பதிவு செய்துக்கொள்ளலாமா வேண்டாமா என்னும் விஷயத்தைத் தன் அறிவினல் யோசித்து அறிய வேண்டுமென்றும், அம்மாதிரி அவர் அறிவைப் பயன் படுத்துவது தகுந்த காரணத்துடன் இருக்கவேண்டுமே அல்லது காரணமில்லாமல் இஷ்டப்படிக்கு அல்லவென்றும், அந்த பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. கேவலமாகிய சிறியகேசுகளில் சாக்ஷியங்களை பதிவு செய்துக்கொள்வது அனுவசியமாக யிருக்கலாம் ஆனல், ஒரு மரியாதை யுள்ள மனிதன்பேரில், அவன் மரியாதை யெல்லாம் போக்கவல்ல குர்றங்கள் கொண்டு வரப்பட்டால் அம்மாதிரி கேசுகளை விசாரிக்கையில் மாஜிஸ்டிரேட்டு சாக்ஷியங்களைப் பதிவு செய்துக் கொள்ளவேண்டும் ஏனென்றால், ஒரு வேளை அவனை தண்டித்து அவன் ஹைகோர்ட்டுக்குப் போவானுகையினல் ஸம்மரி கேசுகளில் கூட குற்றவாளியை விசாரித்ததில் கிடைத்த விஷயங்களின் சாராம்சத்தையும் பதிவு செய்துக்கொள்ள ஒரு கட்டாயப்பட்டிருக்கிறார்.

சக்கிரவர்த்தி vs ஹரிச்சந்திரன்.

100 பம்பாய். லா. ரி. 201.

423-வதுபிரிவுகள்-பஞ்சாயத்தார்கள் சொல்லும்தீர்மானத்தைச் சில விஷயங்களிலாவது அல்லது முழுமையுமாவது மாற்றிவிட ஹைகோர்ட்டாருக்கு இருக்கும் அதிகாரம்.

கீழ் கோர்ட்டு ஜட்ஜி பஞ்சாயத்தார்கள் தன் பேச்சினல் தவறான வழியில் செலுத்திவிட்டார் என்று தங்களுக்குத் தெரிந்தாலொழிய ஹைக்கோர்ட்டாருக்கு பஞ்சாயத்தார்களின் முடிவைச் சில விஷயங்களில் மட்டுமாவது முழுமையுமாவது மாற்றிவிட, கிரிமினல் புரொஸீஜர் சட்டம் 423-வது பிரிவின்படிக்கு, அதிகாரமில்லை. மேற் குறித்தபடிக்கு ஹைகோர்ட்டாருக்குத் தெரியவந்தால் அப்பொழுதுதான் பஞ்சாயத்தார்களின் முடிவை மாற்றிவிட அதிகாரம் உண்டு. அம்மாதிரி சந்தர்ப்பங்களில் ஹைகோர்ட்டார் தங்கள் அதிகாரத்தை பூராவாகச் செலுத்த வேண்டியது. எப்பொழுதாவது சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் தான் ஹைகோர்ட்டார் பிரவேசிக்கலாம் என்று சட்டத்தின் அர்த்தத்திலிருந்து வெளியாகின்றது.

சம்புலால் ஜீவன்தாஸ் (மறு விசாரணை.)

10 பம்பாய் லா. ரி. 565.

471-வது பிரிவு—பொய்கை யெழுத்துசெய்தல்--பொய்க்கை யெழுத்திட்டு எழுதப்பட்ட ஒரு பத்திரத்தை உண்மையான தென்று உபயோகப் படுத்தினது:—

வாக்குமூலங்களுடன் சேர்த்து வைக்கவேண்டுமெனக் கொடுத்திருந்த பத்திரங்களுடன் வைக்கவேண்டுமென்று ஒரு இனத்தார் ஒரு பத்திரத்தை கோர்ட்டில் கொண்டுவந்தார்கள். ஆனல் அதை சாக்ஷி விசாரணையில் கொண்டுவந்து காட்டவில்லை. அதனல் இந்தியன் பினல் சட்டம் 471-வது பிரிவின்படிக்கு குற்றம் ஒன்றும் செய்யப்படவில்லை யென்று தீர்மானிக்கப்பட்டது.

அம்பிகா பிரஸாத் சிங்கு vs சக்கிரவர்த்தி.

35 கல். 820.

476-வது பிரிவு—195-வது பிரிவின்படிக்கு நியாய வழியில் விசாரணைச் செய்ய வேண்டுமென்று உத்திரவிடுதல்—உடனே நடத்தின நடவடிக்கை—ஸிவில் அப்பீல் விசாரணையில் இருக்கையில், கிரிமினல் நடவடிக்கை நிறுத்தப்பட்டது:—

கிரிமினல் புரோசீஜர் சட்டம் 470 பிரிவின்படிக்கு, சிவில் அப்பீல் விசாரணை நடந்துக் கொண்டிருக்கையில் இந்தியன் பீனல் சட்டம் 193-வது பிரிவில் சொல்லியுள்ள வண்ணம் ஆரம்பித்த தொரு கிரிமினல் நடவடிக்கையை நிறுத்தமாட்டோ மென்றும் கனம் பொருந்திய ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் சொல்லிவிட்டார்கள்; அவர்கள் இம்மாதிரி சொல்லியதற்குக் காரணம் என்னவென்றால், கக்ஷிக்காரர்களாகிய இருதரத்தாரின் நன்மையின் பொருட்டு உடனே நடவடிக்கை ஆரம்பிக்க வேண்டு மென்பதேயாம்.

ஹெம் சந்திரரேய் vs அதல் பியாரி ரேய் 35 கல் 909

476-வது பிரிவு:-நியாயவாயிலாக விசாரணை செய்ய உத்திரவிடுதல் பீனல் சட்டம் 211-வது பிரிவு பொய்குற்றம் சாட்டுதல்-ப்ரேசர் முன்னிலையில் குற்றம் சாட்டுதல்-குற்றம் பொய்என்று போலீஸார் ரிப்போர்ட்டுசெய்தல்-ஜட்ஜியின் விசாரணையைப்பற்றி உத்திரவிடுதல்-நடவடிக்கை:—

போலீஸார் முன்னிலையில் ஒரு கிரிமினல் விசாரணைக் கொண்டு வரப்பட்டது. இந்தக் கேசை அவர்கள் பொய் என்று மேலுக்குத் தெரியப் படுத்தினர்கள். போலீஸ் தரப்பார் கொண்டுவரும் ரிப்போர்ட்டுகளை விசாரிக்க அதிகாரம் பெற்ற ஒரு மாஜிஸ்டிரேட்டின் முன்னிலையில் அந்த கேஸ் கொண்டுவரப்பட்டு, அதை அவர், விசாரணைக்காக வேறொரு மாஜிஸ்டிரேட்டுக்கு மாற்றி உத்திரவிட்டார் உத்திரவிடப்பட்ட இரண்டாவது மாஜிஸ்டிரேட்டுக்டுகேசை விசாரித்து அவன்மேல் முதல் மாஜிஸ்டிரேட்டுக்குத் தெரியப்படுத்தினர். அவர் கீழ் வருமாறு உத்திரவு ஒன்று பிறப்பித்தார். வாதி கொண்டுவந்த கேஸ் பொய் என்று தீர்மானிக்கப்பட்டது. குற்றம்

சாட்டியவனுகிய வாதியின் பேரில் இந்தியன் பீனல் சட்டம் 211-வது பிரிவின்படிக்கு நடவடிக்கை நடத்தலாம். வாதி விசாரிக்கப்பட்ட பின்பு இந்தியன் பீனல் சட்டம் 211-வது விரிவின்படிக்குத் தண்டிக்கப் பட்டான். மாஜிஸ்டிரேட்டின் முன்பு கொண்டுவரப்படாதவும் அல்லது விசாரணை காலத்தில் அறிய வந்தவும் ஆகிய ஒரு பொய் கேஸ் கொண்டு வந்தவனை விசாரித்து தண்டிக்க வேண்டியதென்று மாஜிஸ்டிரேட்டு உத்திரவு பிறப்பித்து நியாய விரோதமானதென்றும், ஆதலால் நடத்தப்பட்ட நடவடிக்கையைத் தள்ளிவிட வேண்டுமென்றும். மேலும், இம்மாதிரி சந்தர்பத்தில், குற்றம் சாட்டிய வாதியின்பேரில் ஒரு கேஸைக் கொண்டுவரும்படிக்கு போலீஸாருக்கு உத்திரவிடுதலே சரியானவழியென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அப்துல் ரஹீம் VS சக்கிரவர்த்தி.

7 கல். லா. ஜ. 371.

476-வது பிரிவு நடவடிக்கைகள் நடத்துவதற்கு முன்னடியாகச் செய்யப்பட்ட குற்றத்தினை நியாயமியாய் விசாரணைச் செய்தல்:—

எந்த உத்தியோகஸ்தர் முன்னிலையில் பொய் வாக்குமூலம் கொடுப்பதோ, அந்த உத்தியோகஸ்தருக்கு மாத்திரம் 476-வது பிரிவின்படிக்கு உத்திரவு பிறப்பிக்க அதிகாரமுண்டு; அவர்பின் அந்த உத்தியோகத்திற்கு வருபவருக்கல்ல.

சாந்தோஸ்ம்தா தாய்ஸ் VS கோவர்த்தன் தாஸ்.

35 கல். 133.

476, 192, 202-வது பிரிவுகள்:- 176-வது பிரிவின்படிக்கு நடவடிக்கை நடத்துதல்-விசாரணைக்காக ஒரு மாஜிஸ்டிரேட்டிடத்திற்கு ஒரு கேஸை அனுப்பியதும், அவருக்கு அவை விசாரிக்க அதிகாரமுள்ளமையும், மற்றொருவரை அவர் ஏற்படுத்தலும்:-

குற்றம் சாட்டினவனுகிய ஒருவாதி எழுதிக்கொண்ட மனுவின்பேரில், ஒரு மாஜிஸ்டிரேட் கேஸை இன்னதென அறிந்து, குற்றவாளிக்கு வியவகாரமார்கத்தை தெரியப்படுத்து முன்னமே, அந்த கேஸை விசாரணைக்காக இன்னொரு மாஜிஸ்டிரேட்டுக்கு அனுப்பினர், இரண்டாவது மாஜிஸ்டிரேட்டும், சாக்ஷிகள் முதலியவர்களை விசாரித்து கேஸைப் பொய் என்று அறிந்தார்; பிரகு கிரிமினல் புரொஸீஜர் சட்டம் 476-வது பிரிவின்படிக்கு குற்றம் சாட்டிய வாதியின்பேரில் நடவடிக்கை நடத்த ஆரம்பித்து இந்தியன் பினல சட்டம் 211-வது பிரிவின்படிக்கு அவனை விசாரணைக்கு அனுப்பினர். 192-வது அல்லது 202-வது பிரிவி கிரிமினல் புரொஸீஜர் சட்டத்தின்படிக்கு இரண்டாவது மாஜிஸ்டிரேட்டுக்கு கேஸ் மாற்றப்பட்ட பொழுது, தனக்கு அந்த கேஸ் மாற்றப்பட்டது என்னும் உத்திரவுடனே அதை விசாரிக்க வேண்டும் என்னும் உத்திரவையும் பெற்றபடியால், அவர் சாக்ஷிகளை விசாரித்து அவர்கள் ஸத்தியமிட்டுச் சொன்னவற்றை யெல்லாம் பதிவு செய்துக்கொண்டு செய்த நடவடிக்கை கிரிமினல் புரொஸீஜர் சட்டம் 4-வது பிரிவு (எம்) வாக்கியத்தில் சொல்லியிருப்பதுபோல், நியாயமான நடவடிக்கையாகும் ஆகையால், முதலிலிருந்து தன்னிடத்திற்குக் கொண்டுவரப்பட்டதாலும், அல்லது கேஸை விசாரிக்கையில் தெரியவந்ததாலும் ஆகிய கி. பி. சட்டம் 195-வது பிரிவில் சொல்லியிருக்கும், எந்த குற்றத்தை யாயினும் செய்தவனுகிற குற்றம் சாட்டிய வாதியின்மீது, கிரிமினல் புரொஸீஜர் சட்டம் 476-வது பிரிவின்படிக்கு, மறு கேஸைக் கொண்டுவந்து விசாரணை ஆரம்பிக்க அதிகாரம் பெற்றவனுகின்றுன் என்று தீர்மானம் செய்யப்பட்டது.

கான்சற கார்ஹி VS ராமகிஷன் மந்தா,

13 கல். வீ. நோ. 122.

Cases from the Indian Law Reports.

இந்தியன் லாரிபோர்ட்டு கேசுகள்.

PUNJAB CHIEF COURT.

பஞ்சாப் சீப் கோர்ட்டு.

——:o:——

கிரிமினல் ரிவிஷன் மனு நே. 553 of 1910.

ஜட்ஜு:—சர். ஆர்தர், ரீட், நைட் சீப் ஜட்ஜ்.

ஹரிகிருஷ்ண..............கைதி..............மனுதாரன்.

vs

சக்கிரவர்த்தி.........ப்ராசிக்யூடர்........ரெஸ்பான்டென்ட்.

மோசம்—கொதுவை வைப்பவன் கொதுவை வைத்த சொத்தின் விஷயமாய் தனக்குள்ள ஹக்கு சுதந்தரத்தின் பழுதை வெளியிடாம லிருத்தல்.—

இ. பி. கோ. (45 of 1860) 420-வது பிரிவு.

அம்ரிட்ஸார் முதல் கிலாஸ் மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவிற்கு விரோதமாய் அம்ரிட்ஸார் ஜில்லா ஜட்ஜ் செய்த உத்தரவின்பேரில் செய்துக்கொண்ட ரிவிஷன் மனு.

கேசின் விபரம்:—1906-ம் ஹூத்தில் ஓர் டி. என்பவனுடைய பேரப்பிள்ளையாகிய எ. என்பவன் பி. என்பவனிடத்தில் ஓர் வீட்டை ஸ்வாதீனக் கொதுவை வைத்து ரூபாய் 2000-பெற்றுக்கொண்டு கொதுவை தஸ்தாவேஜு எழுதி அதில் அவனுடைய கையெழுத்து செய்து ரிஜிஸ்தர் பண்ணிக்கொடுத்தான். பிறகு பி. என்பவனுக்கு வாஸ்தவத்தில் வீட்டின் ஸ்வாதீனத்தைக் கொடாமல் மேற்படி எ. என்பவன் பி. என்பவன் பேருக்கு ஒரு குத்தகை குடிக்கூலிப் பத்திரம் எழுதிக் கொடுத்தான். அதற்குப் பின் கொதுவை வைத்துக் கொண்டவனுகிய பி. என்பவனுடைய சகோதரனுகிய சி. என்

பவன் எ. என்பவன் தனக்கு ஏதோ சில தொகை கொடுக்க வேண்டுமென்று எ. என்பவன் பேரில் தாவா செய்து டிக்ரி பெற்றுக்கொண்டு அந்த டிக்ரியை நிறைவேற்றி அவனுடைய சகோதரனிடத்திலிருக்கும் கொதுவைக்கு உட்படுத்தி மேற்கண்ட வீட்டை ஜப்தி செய்தான். 1906-ம்ளு நவம்பர் மாதத்தில் மேற்சொல்லிய டி. என்னும் பாட்டன் அந்த ஜப்தியை தகரார் செய்து அந்த வீடு அவனுக்குச் சொந்தமானதென்று ஆட்சேபனை மனு கொடுத்தான். கோர்ட்டில் இந்த நடவடிக்கைகள் நடத்துக்கொண்டிருக்கையில் மேற்சொன்ன சி. என்பவன் தன்னுடைய சகோதரனுகிய டி. என்பவனுக்கு முக்தியார் நாமா கொடுத்து அந்த ஆட்சேபனை மனுவை ஆட்சேபிக்கும்படிக்கு கேட்டுக்கொண்டான். 1907-ம்ளு ஜூலைமீ 29உ டிக்ரியை நிறைவேற்றும் கோர்ட்டார் மேற்கண்ட ஆட்சேபனை மனுவை டி. என்பவன் பட்சம் தீர்ப்பு செய்து ஜப்தி செய்யப்பட்ட வீட்டை அட்டாச்மென்டிலிருந்து நிவர்த்தி செய்துவிட்டார்.

அதன்பேரில் சி. என்பவன் அந்த வீட்டை ஜப்தியிலிருந்து விடுதலை செய்ததை ரத்து செய்யும்படிக்கு கிரம தாவா செய்யவில்லை.

1908-ம்ளு ஏப்ரல்மீ 10உ பி. என்பவன் தான் ரூபாய் 2000 கொடுத்து ஸ்வாதீனக் கொதுவை பெற்றிருக்கும் ஹக்கை ஈடாக காண்பித்து அவனுடைய கஸ்டமர்களில் ஒருவனுகிய ஜி. என்பவரிடம் ரூபாய் 1000 கடன் வாங்கினன். இதன்றியும் மேற்படி ஜி. என்பவன் ஈடாய்க் காண்பித்திருக்கும் கொதுவை சுதந்தரத்தின் பேரில் தனக்குச் சேர வேண்டிய மொத்தத்தை வசூல் செய்வதற்கு அசக்தனுகும்பட்சத்தில் தன்னுடைய இதர சொத்துகளினுல் அந்தத் தொகையை வசூல் செய்துக்கொள்ளும்படிக்கும் ஒப்புக்கொண்டான் இதுவுமல்லாமல் மேலே சொன்ன ஜி. என்பவன் பேருக்கு ஓர் குத்தகை குடிக்கூலி பத்திரமும் எழுதிக் கொடுத்தான். மேலும் அந்த பி. என்பவன் ஷை எ. என்பவன் பேருக்கு பத்திரம் எழுதி ரிஜிஸ்தர் செய்து விட்டான். ஜி. என்பவன் பி. என்பவனிடத்திலிருந்து பெற்ற கொதுவையை அமுலின் கீழ் கொண்டுவந்து ஷை பி. என்பவன் ஷை ஜி. என்பவனுக்கு சில மாதங்களாய் வட்டி செலுத்திவந்தான். 1908-ம்ளு செப்டெம்பர்மீ ஷை டி. என்பவன் காலமாய்விட்டான். அவன் இறந்து போகும்போது ஷை வீட்டை அவனுடைய இன்ஞெரு பேரனுகிய கே. என்பவனுக்குச் சேரும்படி உயில் சாசனம் எழுதி வைத்திருந்தான். 1909-ம் வருஷம் கடைசி வரையில் மேற்படி ஜி. என்பவன் சொம்மாயிருந்து அதன் பிறகு பி. என்பவன் அவன் பேருக்கு ட்ரான்ஸ்பர் செய்கையில் ஷை வீடு எ. என்பவனுக்கு சொந்தமல்லவென்று அவனுக்குத் தெரிவிக்காமலேயே தன்னை இ. பி. கோ. 420-பிரிவின்படிக்கு மோசம் செய்தானென்று பி. என்பவன் பேரில் போலீஸ் கோர்ட்டில் பிராது கொடுத்தான்.

இந்த பிராதுக்கு எதிர்வாதமாய் பி. என்பவன் மேற்படி வீடு எ. என்பவன் ஸ்வாதீனத்தில் தானிருந்ததென்றும் அந்த எ. என்பவன் அந்த வீட்டுக்குச் சொந்தக்காரனென்றும் அந்த வீட்டின் விஷயமா யுண்டாயிருக்கும் ஆட்சேபனையைப் பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாதென்றும் சொன்ஞன்.

கீழ் இரண்டு கோர்ட்டுகளிலும் பி. என்பவன் இந்த ஆட்சேபனை நடவடிக்கைகளைப் பற்றி நன்ருய் அறிந்திருந்தவனானென்றும் அவன் ஜி. என்பவனை மோசம் செய்தானென்று கண்டு அவன்பேரில் குற்ற ஸ்தாபனை செய்து அவனை 9 மாத கடினகாவலுக்கும் ரூபாய் 1000 அபராதம் கட்டும்படிக்கும் சிக்ஷை விதித்தார்கள்.

PUNJAB CHIEF COURT.

பஞ்சாப் சீப் கோர்ட்டு.

——:o:——

முதல் சிவில் அப்பீல் நே. 40 of 1909.

ஜட்ஜு:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஜான்ஸ்டன்.

இனுயத் அலிசாயபு......வாதி......அப்பீல்வாதி.

vs

உலயத்ஷா வகையரா...பிரதிவாதிகள்...ரெஸ்பான்டெண்டுகள்.

லாகூர் டிவிஷன் ஜட்ஜ் தீர்மானத்தின்பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

இந்த கேசில் கட்சிதாரர்கள்—அவர்களில் யாராவது ஒருவர் காலமாய்விடும் பட்சத்தில் காலமாய் விட்டவரின் சொத்துகளை யெல்லாம் ஓர் தேவாலயத்திற்கு எழுதி வைப்பதாக அக்ரிமென்ட் செய்துக் கொண்டார்கள். பிறகு அப்படி ஏற்பாடு செய்துக் கொண்டவர்களில் ஒரு ஸ்திரி தன்னுடைய சொத்துகளை ஓர்தேவாலயத்தின் மானேஜர்களில் ஒருவர்வசம் ஒப்புவிக்கும்படிக்கு எழுதி வைத்தாள். அந்த தானப் பத்திரத்தை அந்த அக்ரிமென்டில் சேர்ந்த மற்ற நபர்கள் ஆட்சேபிக்க லாகாது.

இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 2-வது பார்ட்டு 231.

CRIMINAL—கிரிமினல்.

PUNJAB CHIEF COURT

பஞ்சாப் சீப் கோர்ட்டு.

——:o:——

கிரிமினல் ரிவிஷன் மனு நே. 500 of 1910.

ஜட்ஜு:-மிஸ்டர் ஜஸ்டிஸ் ரைவெஸ்.

சோமான் வகையரா ... . மனுதாரர்கள்.

சக்கிரவர்த்தி....ப்ராசிகூடர்....ரெஸ்பான்டென்ட்.

கி. பு. கோ. (Act 5 of 1898) 110 (c) வது பிரிவு போதுவில் நாலுபேர் புழங்கக்கூடிய ஓர் தேவாலயத்தில் திருடர்களும், துன்மார்க்காளும் சேர்ந்திருந்தால் அந்த கோவிலின் மானேஜர் அப்படி அவர்கள் சேர்ந்திருப்பதற்காக உத்தரவாதி யல்ல-அந்த தேவஸ்தான மானேஜர் சூதாடினதாக சில தடவைகளில் முன்னமேயே சிட்சையானவனென்னும் காரணம் அவரைக் கட்டு படுத்தாது.

ஓர் தேவாலயத்தின் மானேஜர் ஓர் தேவாலயத்திற்குச் சொந்தக்காரனல்ல தேவாலய முழுதும் அவனுடைய சொந்த ஆதீனத்திலில்லாமல் பொதுவாய் ஜனங்கள் எல்லோரும் ஓர் தேவாலயத்திற்குள் பிரவேசித்து அவர்களுடைய இஷ்டத்தைப்போல் புழங்கும்படியான இடமாகையால் அந்த தேவாலயத்தில் அனேக திருடர்கள் வந்து சேருகிறுர்களே

ன்றும் அநேக திருடர்களை பல தடவைகளில் அந்த தேவாலயத்தில் அரெஸ்ட் செய்யப்பட்டதென்றும் அந்த தேவாலயத்தில் சாதாரணமாய் சூதாடுகிறார்களென்றும் இன்னும் இப்படிப்பட்ட சூதாடிகளும், கள்ளர்களும், துன்மார்க்கர்களும் அந்த தேவாலயத்தில் அடிக்கடி புழங்குகிறார்களென்றும் காரணம் சொல்லி அந்த தேவாலயத்தின் மானேஜரை கி. பு. கோ. (Act 5 of 1898) 110 (c) பிரிவின்படி நல் நடைக்கைக்கு ஜாமீன் கொடுக்கும்படி கேட்பது நியாயமல்ல. அந்த தேவாலய மானேஜரை இதற்குமுன் ஒன்பது தடவை சிட்சை செய்திருக்கிறார்களென்பது இப்பொழுதும் இவரை நல் நடக்கை ஜாமீன் கேட்கவேண்டுமென்பதற்குத் தகுந்த காரணமாகாது.

தேவாலயம் மானேஜருக்குக் கோவில் ஓர் சொந்த வீடல்ல ஆகையால் அவர் அவ்விடத்தில் திருடர்களுக்கு இடம்கொடுத்து அவர்களைக்காக்கிறார் என்றும் அவர் முன்னமேயே ஒன்பது தடவை சிட்சை யடைந்தவரென்னும் காரணத்தைக் கொண்டும் அவரை நல் நடக்கைக்கு ஜாமீன் கேட்பது சரியல்ல.

இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 2-வது பார்ட்டு 249.

ALLAHABAD HIGH COURT.
அலகபாத் ஹைகோர்ட்டு.

——:o:——

கிரிமினல் ரெபரென்ஸ் நெ. 124 of 1910.

ஜட்ஜு:—சர். ஜியார்ஜ் நாக்ஸ், நைட்—முன்பாக.

மஹாதேயா ... ... மனுதாரன்.

vs

சக்கிரவர்த்தி ... ... எதிரி.

சூதாடுதலைப்பற்றிய சட்டம் (Gambling Act 3 of 1867) 5, 8 பிரிவுகள்—சூதாடுவோன் திரேகத்தில் காணும் ரொக்கமும் அந்த சூதாடும் வீட்டில் காணும் சூதாடும் சாமான்களும் இவைகள் இரண்டிற்கும் மேற்படி சட்டத்தில் சொல்லியிருக்கும் பேதம்.

தீர்மானம் :—மகமத் மஹாதியா என்பவன் 1867-ம்ஸுத்திய 3-வது ஆக்டின் 4-வது பிரிவின் கீழ் சிக்ஷை யடைந்தவன். மற்ற கைதிகளுடன் இவனுக்கும் அபராத தண்டனை விதித்து இன்னும் இவன் தன்னிடம் வைத்திருக்கும் ரொக்கத்தையும் இவன் தன்னுடைய வீட்டில் வைத்திருக்கும் சூதாடும் கருவிகளையும் இவாள் சூதாடும்போது உபயோகித்துக் கொண்டிருந்த கருவிகளையும் ஜப்தி செய்து சர்க்கார் பரம் சேர்ப்பிக்கும் படிக்கு மாஜிஸ்ட்ரேட் உத்தரவு செய்தார். சூதாடும் தருணத்தில் மகமத் மஹாதியாவின் திரேகத்திலிருந்த பொருள்கள். (1) கை கெடியாரம் (2) அதன் கொலுசு (3) ரொக்கம் ரூபாய் 8. அதன்பேரில் மனுதாரியாகிய மகமத் என்பவன் தான் திரேகத்தில் தரித்துக்கொண்டிருக்கும் ஆபரணங்களையும் இன்னும் தன்னிடத்திலிருக்கும் இதர ரொக்கம், பொருள் யாவற்றையும் மாஜிஸ்ட்ரேட்டு உத்தரவு படிக்கு ஜப்தி செய்து விவோர்களென்று தப்பர்த்தம் செய்துகொண்டு மேற்படி மாஜிஸ்ட்ரேட் செய்த உத்தரவை மனு விசாரணை செய்யும்படிக்கு மிர்ஜபூர் செஷன் கோர்ட்டுக்கு மனு செய்துகொள்ளப்பட்டது. மாஜிஸ்ட்ரேட்டை இதைப்பற்றி அவர் செய்த ஜப்தி உத்திரவுக்கு விவரணம் யாதென்று கேட்டதின்பேரில் அவர் தன்னுடைய ஜப்தி உத்தரவினால் அவன் தரித்துக்கொண்டிருக்கும் ஆபரணங்களையும் ஜப்தி செய்யவேண்டியதென்பது தன்னுடைய தாத்பரியமல்லவென்று சொல்லி; ஆனால் அவன் சூதாடுகையில் தன்னிடத்தில் வைத்திருந்த ரொக்கம் சூதாடுவதற்காக கொண்டுவந்ததா யிருக்கவேண்டுமென்று கருதி சூதாடும் தருணத்தில் அவன் வசத்திலிருந்த ரொக்கத்தை ஜப்தி செய்து சர்க்கார் வசம் செய்யும்படிக்குத் தான் தன்னுடைய உத்தரவின் வாஸ்தவமான தாத்பரியமென்று ஜில்லா ஜட்ஜுக்குத் தெரிவித்தார். கற்றுணர்ந்த ஜில்லா ஜட்ஜு அவர்கள் சக்கிரவர்த்தி VS வாலி மூசாஜி இ. லா. ரி. 26 பம் 641 கேசில் பம்பாய் ஹைகோர்ட்டார் செய்த தீர்மானத்தை ஆதாரமாய்க் கொண்டு இந்த கேசில் மகமத்பாய் என்பவன் தன்னுடைய திரேகத்தில் வைத்திருந்ததாக ஜப்தி செய்த ரொக்கத்தை அவனுக்கு வாபஸ் செய்யும்படிக்கு உத்தரவாகும் படிக்கு சிபார்சு செய்து கேசின் ரிக்கார்டை ஹைகோர்ட்டாருக்கு அனுப்பினார். இந்த கேசை 1867-ம்ஸுத்திய 3-வது ஆக்டில் சொல்லி யிருக்கும் நிபந்தனைப்படி பைசல் செய்யவேண்டியது. அந்த ஆக்டு 5-வது பிரிவின்படிக்கு சில அதிகாரிகள் சூதாடும் இடமென்று சந்தேகித்து அந்த வீடுகளுக்குள் பிரவேசித்து அவ்விடத்தில் சூதாடுவதற்கென்று வைத்திருப்பதாக அனுமானிக்கக் கூடிய வஸ்துகளை ஜப்தி செய்துகொள்ளவும் இன்னும் அவ்விடத்திலிருக்கும் நபர்கள் ஒவ்வொருவனையும் சோதனை போட்டு அவன் வசத்திலிருக்கும் ரொக்கம் சூதாடும் கருவிகளை ஜப்தி செய்துகொண்டு அந்த சூதாடிய நபர்களைப் பிடித்துக் காவலில் வைப்பதற்கு அதிகாரமுண்டு. மேற்படி ஆக்டு 8-வது பிரிவில் யாதேனும் ஒரு மாஜிஸ்ட்ரேட்டு ஒருவனை சூதாடினனென்று கண்டு அவனை சிக்ஷை செய்யும் பட்சத்தில் இன்னும் அந்த சூதாடிய இடத்திலிருந்து கண்டெடுத்த சூதாடும் கருவிகளை யெல்லாம் எடுத்து நாசப்படுத்தி விடும்படிக்கும் உத்தரவு செய்யலாமென்று நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது. இதன்றியும் அந்த சூதாடுமிடத்தில் சூதாடுவதற்காக வேண்டிய திரவிய நிமித்தமாய் ஈடாக வைத்த பொருள்கள் யாவற்றையும் ஜப்தி செய்து ஏலம் போட்டு அப்படி வித்து முதலாகும் பொருளை சர்க்கார் பரம் செய்யும்படிக்கும் உத்தரவு செய்யலாம். ஆனால் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் சூதாடுவதற்கல்லாமல் வேறே காரியத்திற்காக வைத்திருந்ததாக ருஜு செய்யப்படும் பொருளையாவது அதில் ஓர் பாகத்தையாவது அந்தப் பொருளின் சொந்தக்காரர்களுக்குக் கொடுத்து விடும்படிக்கும் உத்தரவு செய்யலாம். சூதாடும் நபர்களினிடத்தில் கண்ட திரவியத்திற்கும் அந்த சூதாடிய இடத்தில் காணப்படும் வஸ்துக்களுக்கும் 1867ம்ஸுத்திய 3-வது ஆக்டில் யாதேனும் பேதமுள்ளதாக சொல்லி யிருப்பதாய் காணப்படவில்லை. ஆனால் இந்த கேசில் மகமத்பாய் என்பவனிடத்தில் ஜப்தி செய்யும்காலத்திலிருந்து எடுத்த ரொக்கம் ரூபாய் 8-யை அவனிடம் கொடுத்து விடும்படிக்கும் மாஜிஸ்ட்ரேட்டு உத்தரவு செய்திருக்கலாம். ஏனென்றால் அந்தப் பணத்தை அவன் ஜப்தி செய்கிறவரையில் சூதாடுவதற்காக பிரயோகித்தவனல்ல. ஆகையால் மகமத்பாய் என்பவனுக்கு அவனிடமிருந்து எடுத்துக்கொண்ட ரூபாய் 8 டை அவன் வசம் செய்யும்படிக்கு உத்தரவு செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பாகம் 586.

CALCUTTA HIGH COURT.
கல்கத்தா ஹைகோர்ட்டு.

——:o:——

லெட்டர்ஸ் பேடென்ட் அப்பீல் நெ. 85 of 1909.

ஜட்ஜுகள்:— { சர். லாரென்ஸ் ஜெங்கின்ஸ், நைட் சீப் ஜ. / மி-ர். ஜஸ்டிஸ் டாஸ். }

சதுல்லா ஷேக் வகையரா-பிரதிவாதிகள்-அப்பீல்வாதிகள்.

பிஷம்பர்ராய்...........வாதி...........ரெஸ்பான்டென்ட்.

சாக்ஷி சட்டம் (1 of 1872) 92-வது பிரிவு—ரிஜிஸ்தரான குத்தகைப் பத்திரம்—பிறகு வாச்சா ஏற்பாட்டின் பேரில் அந்த குத்தகைப் பத்திரத்தில் சில திருத்துபாடுகள் செய்யப்பட்டன.

ரிஜிஸ்தர் செய்யப்பட்ட குடிக்கூலி தஸ்தாவேஜியில் கண்டிருக்கும் குத்தகை அல்லது குடிக்கூலி மொத்தத்தை மாத்துவதற்கு வாச்சா ஏற்பாடு செய்துகொண்டால் அந்த வாச்சா ஏற்பாடு எவிடென்ஸ் ஆக்ட் சாக்ஷி சட்டம் 92-வது பிரிவின்படி செல்லாது.

கட்சிதாரர்கள் எழுத்து மூலமாய் செய்துகொண்ட ரிஜிஸ்தர் தஸ்தாவேஜியின் பிரகாரம் நடவாமல் பிறகு யாதேனும் ஓர் ஏற்பாட்டின் கீழ் நடப்பார்களாகில் அது வாச்சா ஏற்பாடு என்று சொல்லப்படும்.

குஷ்டி முதல் முனிசிபு தீர்ப்பின் பேரில் நடியா ஜில்லா ஜட்ஜ் முன்பு கொண்டுவரப்பட்ட அப்பீலில் செய்த டிக்ரியின்பேரில் செய்துகொள்ளப்பட்ட இரண்டாவது அப்பீலில் ஹைகோர்ட்டு ஜட்ஜு மி-ர். ஜ. ரிச்சர்ட்ஸன் செய்த டிக்ரியின்பேரில் கொண்டுவரப்பட்ட லெட்டர்ஸ் பேடென்ட் அப்பீல்.

கேசின் விபரம் :—குடிக்கூலி பாக்கியை வசூல் செய்வதற்காக கொண்டுவரப்பட்ட தாவாக்கள். இந்த நம்பர்களில் வாதி 'கபூலியத்' என்னும் ஓர் அக்ரிமென்டை தாக்கல் செய்து இந்த நம்பர்கள் செய்தான். பிரதிவாதிகள் மேற்படி கபூலியத் என்னும் அக்ரிமென்டின் படிக்கு குடிக்கூலி செலுத்துவதற்கு பந்தப்பட்டவர்க ளல்லவென்றும் அவர்கள் (பிரதிவாதிகள்) அநேககாலமாய் மாமூலாய் செலுத்திக் கொண்டுவரும் குறைந்த குடிக்கூலியைச் செலுத்துவதற்குப் பந்தப்பட்டவர்களென்றும் வாதித்தார்கள். அப்படி அவர்கள் குறைந்த குடிக்கூலி செலுத்தி வரவேண்டுமென்பதாக எழுத்து மூலமாயாவது வாச்சாவாயாவது ஓர் ஏற்பாடு செய்துகொண்டவர்களாகவும் ஏற்படவில்லை. இந்த கேசின் முழு விருத்தாந்தங்களும் 2 இந்தியன் கேசுகள் 160-வது பக்கத்தில் மிக்க விசதமாய் சொல்லப்பட்டிருக்கின்றது.

பாபு ஹரிசாரன் சர்க்கெல்-பாபி துபூஷன் கங்குலிக்காக... அப்பீல்வாதிகளின் வக்கீல்.

பாபுஸ்மோஹினி மோகன் சர்கிரவர்த்தி ஹெம் சந்திரமித்ரா ஹரிஸ் சந்திராய்...ரெஸ்பான்டென்டு வக்கீல்கள்.

தீர்மானம்.

அப்பீல் நெ. 85 of 1909.

இந்தக் கேசுகளில் பிரதிவாதிகள் எழுத்து மூதமாய் செய்துகொண்ட ரிஜிஸ்தர் தஸ்தாவேஜியின் ஷரத்தை மாத்தி நடப்பதற்கு எத்தனிப்பதாக தெரிய வருகிறது. பின்னிட்ட வாச்சா ஏற்பாட்டின்படி எழுத்து மூலமாயுள்ள தஸ்தாவேஜி ஷரத்தை மாத்தலாகாதென்பதாய் எவிடென்ஸ் ஆக்ட் (சாக்ஷி ஆக்ட்) 92-வது பிரிவின்படி சொல்லப்பட்டிருக்கிறது. பிரஸ்தாப தஸ்தாவேஜுகள் [illegible] கட்சிதாரர்கள் தங்களுடைய நடவடிக்கையினால் செய்துகொண்ட [illegible] வாச்சா ஏற்பாடென்பதாய் அர்த்தம் செய்ய வேண்டுமென்று கண்டு மி-ர். ஜ. ரிச்சர்ட்ஸன் அவர்கள் தீர்மானம் சரியென்று சொல்லி அப்பீலை தள்ளுபடி செய்து விட்டார்கள்.

மற்ற அப்பீல்களிலும் இதே தீர்மானம்தான்.

இந்தியன் கேசுகள் 5-வது வால்யம் 4-வது பாகம் 576.

CALCUTTA HIGH COURT.
கல்கத்தா ஹைகோர்ட்டு.

——:o:——

ஜட்ஜுகள் { மி-ர். ஜ. ஹோம் உட், / மி-ர். ஜ. ஷர்புடனே. }

ஹரிபல்லப்ராய் வகையரா.......பிரதிவாதிகள்...அப்பீல்வாதிகள்.

VS

கோபால்லால் சிங்.........வாதி......ரெஸ்பான்டென்ட்

வியாஜ்ஜிய மூலங்களை சட்டப்படி சேர்த்து எழுதாமலிருப்பது-இஜெக்ட்மென்ட்-ஓர் ஹிந்து விதவை சொத்தை-யார் மீதில் பராதீனம் செய்தாளோ அவர்கள் மீது அனந்தர வார்சு தம்பர் செய்தல்-இஷ்யூக்களை விசாரணை செய்தல்-சிவில் புரோசிஜர் கோடு 45-வது பிரிவு.

ஓர் ஹிந்து விதவை காலமான பிறகு அவளுடைய அனந்தர வார்சு பாத்தியதை யுள்ளவன் அந்த விதவை ஜீவித்திருக்கும் காலத்தில் அவளுடைய சொத்துகளை அநேகருக்கு பராதீனம் செய்துவிட்டாளென்று அந்த சொத்துகளை வாங்கினவர்கள்மேல் தாவா கொண்டு வந்தான். பிரதிவாதிகளுக்கு அந்த சொத்துகளைப் பற்றி வெவ்வேறு விதமான எதிர் வா[illegible] தங்களிருந்திடினும் ஒரே தாவாவில் இவர்கள் எல்லோர் மீதும் தாவா செய்வது பிசகல்ல.

இதற்கு ஆதாரமாய் எடுத்துக் கூறின கேசுகள். இஷ[illegible] சந்தா ஹாஜ்ரா VS-ராமேஸ்வர் மொன்டால் இ-லா-ரி 24 க[illegible] 831; நந்தோகுமார் நாஸ்கர்-VS-மனோமஷிகர்யான் இ-லா-ரி 29 கல் 871.

இப்படிப்பட்ட தாவாவின் பிரதிவாதிகள் ஒவ்வொருவருக்கும் உள்ள வாதங்களைக்கேட்டு அந்த வாதத்திற்குத் தகுந்தபடி தனித்தனியாய் இஷ்யூக்கள் ஏற்படுத்தி ஒவ்வொரு இஷ்யூவையும் வரிசைக்கிரமமாய் பிரத்தியேகமாய் விசாரணை செய்ய வேண்டியது.

உமாபாய்-VS-விதல் இ-லா-ரி. 33 பம் 293; 11 பம். இ. லா. ரி. 34' 5 ம. லா. டைம்ஸ் 1 இந்தியன் கேசுகள் 120 இதற்காதாரமாய்ப் பார்க்கவும்.

இந்த தாவாவில் வாதி ஓர் சொத்துக்கு அனந்தர வார்சு பாத்தியதை யுள்ளவனென்று சொல்லி பின் வருமாறு தன்னுடைய தாவாவில் கண்டெழுதி யிருந்தான்-அதாவது-ஓர் ஹிந்து விதவை அவளுடைய புருஷன் காலமாய் விட்ட பிறகு புருஷன் வைத்து விட்டுப்போன சொத்துகளை பல பேருக்கு பல தினங்களில் துண்டு துண்டுகளாய் பராதீனம் செய்து விட்டாளென்றும் இன்னும் அந்த விதவை காலமாய் விட்ட பிறகு அவளுடைய தகப்பனும் மைனர் சகோதரனும் செய்த பராதீனத்தையும் ரத்து செய்து சொத்துக்களை தன் வசம் ஒப்புவிக்கும் படிக்கும் இஜெக்ட் மென்ட் நம்பர் செ[illegible] தான்.

இப்படிப்பட்ட விஷயத்தில் ஒவ்வொரு பாநீனத்தையும் தனித்தனியாய் நம்பர்கள் செய்து தனித்தனியாய் விசாரணை செய்வது மிக்க நலமென்று தீர்மானிக்கப்பட்டது.

ராஜ்பூர் முனிசீபு கோர்ட்டு டிக்ரியை மாத்தி கட்டாக் சப் ஜட்ஜு அவர்கள் செய்த டிக்ரியின் பேரில் கொண்டு வந்த அப்பீல்.

பாபுஸ்ஜியோதி பிரசாத் சர்வதிகாரி-செய்லேஸ்வர்சென் அப்பீல்வாதிகளின் வக்கீல்.

பாபு சாரத்சந்தராய் சக்கரவர்த்தி } ரேஸ்பான்டேன்டு
பாபுகோஷா ... ... } வக்கீல்கள்.

தீர்மானம்:—இந்த அப்பீல் கட்டாக்சப் ஜட்ஜு செய்த டிக்ரியின் பேரில் கொண்டுவரப்பட்டது. 1876-ம்ஹுத்தில் ஷியம் பல்லப் ராய் என்பவள் ஒருவள் காலமாய் விட்டாள். அவள் இறந்த பிறகு அனந்தரவார்சுகள் இருவரில் ஒருவர் அந்த சொத்துக்களை தன் வசம் செய்யும்படிக்கு நம்பர் செய்தார். சப்கோர்ட்டார் இஷன் சந்தா ஹஜரா-vs-ராமேஸ்வர் மன்டோல் இ-லா-ரி. 24 கல் 831. கேசில் தீர்மானித்திருப்பதை ஆதாரமாய்க் கொண்டு எல்லா பாநீனங்களையும் ஒரே தாவாவில் ரத்து செய்யும்படிக்கு கேட்டுக்கொள்ளலாமென்று வாதி பட்சம் தீர்ப்பு செய்து நான்கு சொத்துக்களின் பேரில் டிக்ரி செய்தார்.

ஆனல் ஹைகோர்ட்டார் ஒவ்வொரு பாநீனத்தைப் பற்றியும் தனித்தனியாய் நம்பர்கள் தாக்கல் செய்துக்கொண்டு விசாரணை செய்வது நலமாயிருக்கும் என்று கண்டு நான்கு நம்பர்களாய் தாக்கல் செய்துக்கொண்டு மறுபடியும் விசாரணை செய்யும்படிக்கு கீழ் கோர்ட்டுக்கு நம்பரை ரிமான்டு செய்தார்கள்.

இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பாகம் 578.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

இரண்டாவது சிவில் அப்பீல் நே. 1927 of 1908.

ஜட்ஜுகள்:— { சர். ரால்ப் பென்சன் ஜட்ஜ் / மி-ர். ஜ. கிருஷ்ணசுவாமி ஐயர் } முன்பாக

ஸையத் நூன்ஸ்லீன்சாயபு வகையரா...அப்பீல் வாதிகள்.

vs

ஸையத் இப்ராஹீம் சாயபு வகையரா-ரேஸ்பான்டேன்டுகள்.

கால நிர்ணய சட்டம் (லிமிடேஷன் ஆக்ட் 15 of 1877) 2-வது ஷெடுல் 120, 144-வது ஆர்டிகல்—ஓர் துலுக்கன் அவனுடைய குடும்பத்திலுள்ள ஸ்தாவர ஜங்கம சொத்துகளைப் பாகித்துத் தன்னுடைய பாகத்தை தன் வசம் ஒப்புவிக்கும்படிக்கு கொண்டு வரப்பட்ட தாவாவிற்கு சம்பந்தப்பட்ட விபத்தனை—ஸ்தாவர சொத்துகளைப் பற்றிக் கொண்டுவரப்பட்ட தாவாவிற்கு காலதோஷம் வந்துவிட்டதென்பது.

இதற்கு ஆதாரமாய் ரியாசாத் அலி-vs-உசேன்பானு இ.லா, ரி. 21 கல் 157; 20 இ. அ. 155; ரஞ்சோர்தாஸ்-vs-பார்வதி பாய் இ. லா, ரி. 23 பம் 725; 26 இ. அ. 71 பார்க்கப்பட்டன.

மேல் மதுரை சப் கோர்ட்டார் அ. நெ. 32 of 1908ல் செய்த டிக்ரியின்பேரில் கொண்டு வரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

தீர்மானம்:—ஓர் துலுக்கன் தன்னுடைய பெண்சாதி விட்டபிறகு தன்னுடைய குடும்பத்திலுள்ள ஸ்தாவர ஜங்கம சொத்துகளைப் பாகித்து தனக்குப் பேர்பாதி கொடுக்கும்படிக்குக் கொண்டுவந்த தாவா. இதில் இன்னும் அந்த குடும்பத்திலுள்ள இதர பாகஸ்தர்களை மற்றவர்களுடன் பிரதிவாதிகளாய்ச் சேர்க்கப்பட் டிருந்தது. அந்த பிரதிவாதிகள் வாதிக்கு விரோதமாய்க் குடும்ப சொத்துகளை அனேக காலம் அநுபவித்ததாக யாதொரு ஆக்ஷேபமும் கூறவில்லை. அசையாப் பொருள் விஷயமாய் நம்பருக்கு காலதோஷம் வரவில்லையென்று தீர்மானித்தார்கள். இதற்கு ஆதாரம் லிமிடேஷன் ஆக்டு 2-வது ஷெடுல் 144-வது ஆர்டிகல் பார்க்கவும்.

இரண்டாவது அப்பீலை சிலவுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பாகம் 579.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு,

—:o:—

ஜட்ஜுகள்:— { மி-ர். ஜ. சங்கரன் நாயர் / மி-ர். ஜ. கிருஷ்ண சுவாமிஐயர் } முன்பாக

கொளத்ததுல் இல்லத்விஷம் நம்பூதிரி...கார்னவான்...அப்பீல்வாதி.

vs

மெல் ஊத்தடத்தில் சுலையக்கான் அக்கம்மா...ரேஸ்பான்டேன்டு.

மலபார் சட்டமும்—தேசாசார வழக்கமும்—மலபார் நம்பூதிரிகள்—நம்பூதிரிகள் சம்பாதித்த சுயார்ஜித சொத்துகளின் விஷயமாய் ஹிந்துலாவின்படி பைசல் செய்யவேண்டுமே யல்லாமல் மகம்மதிய சட்டபடிக்கல்ல.

தாலிபரம்பா டி. மு. கோர்ட்டு அ. நெ. 71 of 1906ல் செய்த டிக்ரியின்பேரில் வட மலபார் ஜில்லா கோர்ட்டார் அப். நெ. 283 of 1907ல் செய்த டிக்ரியின்பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

தீர்மானம்:—சங்கரன் நாயர்—ஜஸ்டிஸ்—முதல் பிரதிவாதி காரியஸ்தனுயிருக்கும் ஓர் இல்லத்தின் இளைய பாகஸ்தனுகிய காலம் சென்ற பரமேஸ்வா நம்பூதிரி என்பவன் ஒருவன் வாங்கிய கடனை வசூல் செய்வதற்காக வாதி இந்த தாவா கொண்டு வந்தான். அவனுயடை பெண்சாதி பிள்ளைகளையும் இந்த நம்பரில் மற்ற பிரதிவாதிகளாய்ச் சேர்க்கப்பட் டிருந்தது. மேற்படி பரமேஸ்வா நம்பூதிரி என்பவன் அவனுடைய குடும்பத்தைச் சேர்ந்த ஓர் நிலத்துண்டை அனுபவித்து வந்தான். அவன் ஜீவித்திருக்கும் காலத்தில் இந்த நிலத்தின்பேரில் தன்னுடைய சொந்த சம்பாதனைப் பொருளிலிருந்து ரூபாய் 1000 செலவிட்டு ஓர் வீடு கட்டி இன்னும் இருந்த நிலத்தில் மிளகு பயிரிட்டு வந்தான். ஆனல் கீழ் கோர்ட்டிலேயே கட்சிதாரர்கள் இந்த வீடு குடும்ப நிலத்தின்பேரில் கட்டப்பட்டிருந்தபோதிலும் இது அவனுடைய சுயார்ஜிதம் தானென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

நம்பூதிரிகள் இந்த தேசத்தின் மற்ற பாகத்திலிருப்பவர்களைப் பார்க்கிலும் மிக்க வைதீக பிராமணாளாகையால் அவர்களுக்கு இந்துலாவின் விதிகள் சம்பந்தப்படுமென்று தீர்மானித்து மேற்படி பரமேஸ்வா நம்பூதிரியின் சொத்திற்கு அவனுடைய பிள்ளை தான் தகுந்த வார்சு என்று கண்டு அந்த வீட்டையும் வீட்டிலிருந்த சாமான்களையும் 4-வது பிரதிவாதியாகிய அவனுடைய பிள்ளை வசம் ஒப்புவிக்கும்படிக்கு டிக்ரி

செய்து முதல் பிரதிவாதி இந்த கடனுக்குப் பந்தப்பட்டவனல்லவென்று சொல்லிவிட்டு வாதியின் தாவாவை தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பாகம் 583.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

இரண்டாவது சிவில் அப்பீல் நே. 549 of 1907.

ஜட்ஜுகள்:— { சர் அர்னல்ட் வொயிட், நைட் சீப் ஜ. / மி-ர். ஜ. மன்ரோ. }
முன்பாக.

சாப்பகிருஷ்ணபத்ருடு வகையரா........அப்பீல்வாதிகள்

Vs.

தெல்லிமுக்குந்த சாகு............ரேஸ்பான்டேன்டு.

சௌபெட் டி. மு. கோர்ட்டு அ. நெ. 519 of 1996-ல் செய்த டிக்ரியின் பேரில் கஞ்சம் ஜில்லா கோர்ட்டு அப். நெ. 297 of 1906-ல் செய்த தீர்மானத்தின் பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல்,

பூமிக்குடையவனும்-பாயக்காரியும்-சாஸ்விதமாய் அனுபவிக்கும்-சுதந்தரம்-அப்படி சாஸ்விதமாய் அனுபவிப்பவனுக்குப் பின் வந்தவனும் சாஸ்விதமான குடிக்கூலிதாரன்.

இதற்கு ஆதாரமாய் பாரப்பதோலா-vs-தெலுகுல நீலகண்டபிஹாரா இ. லா. ரி 3045; 2. ம. லா. டை 470; இரண்டாவது அப்பீல் நெ. 1024 of 1905; இரண்டாவது அப்பீல் நெ. 1737 of 1908 எடுத்துக் காண்பிக்கப்பட்டது.

தீர்மானம்:—ஓர் ஜெமீன்தார் ஒருவன் பி. என்பவனுக்கு ராஜபோக சுதந்தரம் கொடுத்தான். அப்படிப்பட்ட சுதந்தரம் கொடுக்கப்படும்போது மூன்றுவது மனிதன் ஒருவன் அந்த நிலத்தை சாஸ்விதமான குடித்தனக்காரனும் சாகுபடி செய்து வந்தான். ஆகையால் அவன் சாஸ்விதமாய் அந்த நிலத்தை அனுபவிக்க சுதந்தரமுள்ளவனென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பாகம் 586.

Miscellancous Cases-சிவில் க்ரிமினல் வியாஜ்ஜியங்கள்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

Full Bench (புல்பெஞ்சு.)

ஜட்ஜுகள் { மிர். ஜ. வாலிஸ் / மிர். ஜ. கிருஷ்ணசுவாமி ஐயர் / மிர். ஜ. ஏய்லிங் }

தஞ்சாவூர் ஜில்லாவிலிருக்கும் ஹைகோர்ட்டு வக்கீல் மிர். என். கெ- ராமசுவாமி அய்யர்-கண்டிக்கப்பட்டார்.

தஞ்சாவூர் ஜில்லா ஜட்ஜு மிர். ஜெ. ஜிலெஸ்பி, ஐ. சி. எஸ். ஹைகோர்ட்டார் உத்திரவுக்குத் தெரிவித்துக் கொண்ட கேசு.

உத்தரவு.

தஞ்சாவூர் ஜில்லா ஜட்ஜ் முன்பால் நடந்த ஓர் செஷன்ஸ் கேஸில் ஜில்லா ஜட்ஜ் அசெசர்களுக்குக்கேசை பூராய் தெரிவித்தார் ஒரு தினமான பிறகும் அந்த கேசில் தீர்மானம் சொல்வதற்கு முன் ஜட்ஜ் அந்த கேஸில் ஆர்குமென்ட் முடிவதற்கு முன்னதாகவே குற்றவாளியின் மேல் குற்ற ஸ்தாபனை செய்து ஓர் தீர்மானம் மசோதா செய்து எடுத்து வந்ததாக வக்கீல் செஷன்ஸ் ஜட்ஜுக்கு ஒரு மனு கொடுத்ததாக கூறினர். வக்கீல் இப்படிப்பட்ட பேச்சுகள் சொன்னதற்கு ஆதாரம் இடையாதென்றும் அவர்கள் அப்படிச் சொல்லியது கிரமமல்லவென்றும் அபிப்பிராயங் கொண்டு ஓர் ஹைகோர்ட்டு வக்கீல் சொல்வது வக்கீல்களுக்குள் தகாதென்று தீர்மானித்து ஷை வக்கீலின் பேரில் குற்ற ஸ்தாபனை செய்து இனி அப்படி செய்யலாகாதென்று அவரை கண்டித்து அந்த புரோசீடிங்ஙில் நேரிட்டிருக்கும் சிலவை அந்த வக்கீலை கட்டிக் கொடுக்கும்படி உத்தரவு செய்தார்கள்.

CALCUTTA HIGH COURT.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

—:o:—

சிவில் ரூல் நே. 3982 of 1909.

ஜட்ஜுகள்:— { சர். லாரென்ஸ் ஜெங்கின்ஸ், நைட். சீப் ஜஸ்டிஸ் / மி-ர். ஜ. டாஸ். }
முன்பாக.

மாபுல்லா சர்தார் வகையரா......பிரதிவாதிகள்...மனுதாரர்கள்.

vs

ஹேமங்கினிடெபி வகையரா-வாதிகள்-எதிரிகள்.

சிவில் புரோசீஜர் கோடு (5 of 1908) 23-வது உத்தரவு 1-ம் விதி-நம்பரை வாபஸ் செய்துக்கொள்ளல்-சாக்ஷியம் கிடையாது.

1908-ம் ஹுந்திய 5-வது ஆக்டாகிய சிவில் புரோசீஜர் கோடு 23-வது உத்தரவு 1-ம் ரூலில் சொல்லியிருப்பதை ஏ. பி. உட்பிரிவுகளில் சொல்லி யிருப்பதுடன் வாசிக்க வேண்டும். ஆகையால் முதல் கோர்ட்டார் தாவாவை ருஜு செய்வதற்குப் போதுமான சாக்ஷியம் கிடையாதென்று கண்டு தீர்ப்பு செய்திருக்கையில் அப்பீல் கோர்ட்டில் வாதி தாவாவை வாபஸ் பெற்றுக்கொள்வதற்கு உத்தரவு கேட்டால் கொடுப்பதற்கு நியாயம் கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டது.

இதற்காதாரமாய் கார்டாகோ vs [illegible] 11 கல். லா. ஜ. 45; 5 இந்தியன் கேசுகள் 187 பார்க்கவும்.

லாகூர் இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பாகம் 629.

ALLAHABAD HIGH COURT.

அலகபாத் ஹைகோர்ட்டு.

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 913 of 1909.

டெபிசாஹெய் வகையரா......வாதிகள்....அப்பீல் வாதிகள்.

vs

கெங்காசாஹெய் வகையரா......பிரதிவாதிகள்... ரெஸ்பான்டென்டுகள்.

காண்ட்ராக்டு ஆக்ட் (9 of 1872) 16, 19 பிரிவுகள் நியாயமல்லாத காரியம்-மனசாக்ஷிக்கு விரோதமான லேவாதேவி-நியாயத்திற்கு விரோதமென்று சொல்லப்படும் விஷயம் உண்டென்று ருஜுவாகாவிடில் ஒப்பந்தம் செய்துக்கொண்ட வட்டி வீதத்தில் கோர்ட்டார் பிரவேசித்து டிக்ரி செய்வது சட்டத்திற்கு விரோதமென்பது எதிர்வாதம்.

இந்த கேசில் ஆதாரமாய் எடுத்துக்கூறிய கேசுகள் தனிபால் டாஸ் vs மஹேஷ்வர் பக்ஷ்சிங்கு 28 அ. 570; 4 க. லா. ஜ. 1; மதராஸ் லா டைம்ஸ் 205; 3 அ. லா. ஜ. 495; 9 கல் 188; 8 பம். லா. ரி. 491; 10 கல். வீ. நோ. 849; 16 ம. லா. ஜ. 292; பர்லகிருஷ்ணடாஸ்-vs-மதன்லால் 1907-ம்௵ அ. வீ. நோ 55; 29 அ 303; 4 அ. லா. ஜ. 222; சிர்ப்பாராம்-vs சாமி உடீன்கான் 25 அ. 284.

மீரத் ஜில்லா ஜட்ஜ் தீர்மானத்தின்பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

கேசின் விபரம்:—ஒருவன் இரண்டு கொதுவைப் பத்திரங்களின்பேரில் அவனுக்குச் சேரவேண்டிய மொத்தத்தை வசூல் செய்வதற்கு தாவா செய்தான் அந்தப் பத்திரங்களில் கடன் வாங்கிய தொகையின் பேரில் 100-க்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 1—14—0 வீதம் வட்டி கட்டிக் கொடுக்கவேண்டிய தென்று கண்டு எழுதி யிருந்தது. முதல் பத்திரம் 1897ம்௵ ஆகஸ்டு௴ 5௳ ரூபாய் 215-ச்கு எழுதிக் கொடுக்கப்பட்டது. இரண்டாம் பத்திரம் 1899 ம்௵ டிசம்பர்௴ 5௳ ரூபாய் 99-க்கு எழுதிக் கொடுக்கப்பட்டது. இந்த இரண்டு பத்திரங்களின் கீழும் வசூலாக வேண்டிய தொகையை வருஷா வருஷம் வட்டி போட்டு கணக்குப் பார்த்து ஏற்படும் மொத்தத் அசலுடன் சேர்த்து அதற்குப் பின் அவ்விதமாய் ஏற்படும் மொத்தத்தின்பேரில் காம்பவுண்ட் வட்டி—அதாவது—வட்டிக்கு வட்டிபோட்டு வசூல் செய்யப்படுமென்றும் கண்டு எழுதி யிருந்தது. இவ்விதமாய் செல்லு ரூபாய் 150 தள்ளுபடி செய்து தாவா செய்யப்பட்ட மொத்தம் ரூபாய் 1270 9 0 கீழ் கோர்ட்டார் கக்ஷிதாரர்கள் ஒப்பந்தம் செய்துக்கொண்ட மாதம் ஒன்றுக்கு 100-க்கு ரூ. 1—14—0 வீதம் காம்பவுன்ட் வட்டியைக் குறித்து தீர்ப்பு செய்தார்கள். ஜில்லா ஜட்ஜு சொல்வது யாதெனில் "இந்த நம்பரில் பிரதிவாதிகள் வட்டி வீதம் அதிகமா யிருக்கிறதென்றும் மிக்க கஷ்டமான வீதமென்றும் மனசாக்ஷிச்கு விரோதமான அக்கிரமமான வட்டி யென்றும் வாதித்தார்கள்" வட்டி அக்கிரமமான வீதமென்றும் மனசாக்ஷிக்கு விரோதமான தென்றும் கோர்ட்டாருக்குத் தோற்றும் விஷயத்தில் கோர்ட்டார் அந்த வீதத்தைக் குறைத்து டிக்ரி செய்ய அதிகாரமுண்டென்பதற்கு அனேக கேசுகள் எடுத்துக் காண்பிக்கப்பட்டன. இன்னும் ஜில்லா ஜட்ஜு அவருடைய தீர்மானத்தில் வட்டியைக் குறைக்கப்படுமென்று ஷரத்து கண்டு பத்திரத்தில் எழுதி யில்லாவிடினும் கோர்ட்டாருச்கு அக்கிரமமென்று தோற்றும் பட்சத்தில் அந்த வட்டி வீதத்தைக் குறைக்க கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டென்றும் சொல்லி யிருக்கிறூர். அக்கிரமமாய் மன சாக்ஷிக்கு விரோதமான லேவாதேவியென்று வாதிக்கப்பட யில்லை. இதே ஜட்ஜுகளின் முன் 1910-ம்௵ மே௴ 16௳, 1909-ம்௵ இரண்டாவது அப்பீல் நெ. 891 of 1909ல் செய்த தீர்மானத்தில் ஒப்பந்தம் செய்துக்கொள்ளப்பட்ட வட்டி விஷயமாய் பிரவேசித்து தீர்ப்பு செய்வதற்கு அதிகாரம் இன்னதென்று காண்ட்ராக்டு ஆக்டில் நிபந்தனை செய்யப்பட் டிருக்கிறது. இதன் விஷயமாய் அனேக ஹைகோர்ட்டு தீர்மானங்களும் பிரிவி கவுன்சல் தீர்மானமும் ஆதாரமாய் எடுத்துப் பார்வை யிடப்பட்டது. அதில் சொல்லி யிருப்பதின்படி காண்ட்ராக்டு ஆக்டு 19-வது பிரிவு தான் தகுந்த நிபந்தனை யென்றும் அந்த பிரிவின்படி கோர்ட்டார் ஒப்பந்தம் செய்துக்கொள்ளப்பட்ட வட்டி வீதத்தைக் குறைப்பதற்கு அதிகாரமுண்டு. அக்கிரமமாய் செய்துச் கொள்ளப்பட்ட ஒப்பந்தம் என்பதற்குச் சரியான விவரணம் காண்ட்ராக்டு ஆக்டு 15-வது பிரிவு 1-வது உட்பிரிவில் கூறப்பட்டிருக்கிறது. இந்த கேசில் அக்கிரமமாய் செய்துக்கொள்ளப்பட்ட வட்டி வீதமென்று வாதிக்கப்படவுமில்லை ருஜு செய்யப்படவுமில்லை. கடன் கொடுத்தவன் அக்கிரமமாய் செய்துக்கொண்ட ஏற்பாடென்றும் ருஜுவாகவில்லை. ஆகையால் கீழ் கோர்ட்டாருடைய தீர்மானத்தை மாத்தி வாதியின் தாவாப்படி முழு மொத்தத்திற்கும் தீர்ப்பு செய்யப்பட்டது. ஆனால் வட்டி வீதம் அதிகமாயிருப்பதால் நம்பர் தாக்கல் செய்த தேதி முதல் வட்டி கிடையாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பாகம் 572.

PRIVY COUNCIL.

பிரிவி கவுன்சல்.

(மந்திராலோசனை சபை.)

———:o:———

பஞ்சாப் சீப் கோர்ட்டிலிருந்து வந்த அப்பீல்.

ஜட்ஜுகள். { லார்ட். மெக்நாட்டென் / லார்ட். காலின்ஸ் / சர். ஆர்தர் உல்சன் } முன்பாக.

கன்னையலால்.......................வாதி அப்பீல்வாதி.

vv

இந்தியா நாஷெனல் பாங்க், லிமிடெட், டெல்லி.... பிரதிவாதி ரெஸ்பான்டென்ட்.

சிவில் புரோசீஜர் கோடு (14 of 1882) 102-வது பிரிவு-ஒரு தாவாவின் கொஞ்ச பாகத்தை வாபஸ் செய்துக்கொண்டதின் பேரில்-மற்ற பாகத்தின் விஷயமாய் தள்ளுபடி செய்தல்-102-வது பிரிவு இப்படிப் பட்ட மனுவிற்கு சம்பந்தப் படுமா:

வியாஜ்ஜிய சங்கிரகம்:—இந்த வியாஜ்ஜியத்தில் பிரதிவாதியாயிருப்பவன் வாதிக்கு சில சொத்துக்களை விற்பனை செய்தவன்பேரில் ஸ்வாதீனம் செய்யும்படிக் கு நம்பர் தாக்கல் செய்து டிக்ரி அடைந்து அந்தடிக்ரியை நிறைவேற்றி சில சொத்துகளை ஜப்தி செய்து பப்ளிக் ஏல விற்பனையில் அந்தசொத்தை வாங்கினுன். பிரதிவாதி பெற்றிருக்கும் டிக்ரியின் கீழ் செலுத்த வேண்டிய தொகையை வாதி கட்டிவிட வேண்டுமென்று நிர்பந்திக்கப் பட்டான். வாதி பிறகு தான் கட்டின மொத்தத்தையும் சட்டத்திற்கு விரோதமாய் ஜப்தி செய்ததினுல் தனக்கு நேரிட்ட நஷ்டத்தையும் வசூல் செய்வதற்கு இந்த தாவா கொண்டு வந்தான். அதன் பேரில் கோர்ட்டார் வாதி கட்டிய தொகையை வசூல் செய்வதற்கு தாவா கொண்டுவர சட்டப்படி நியாய மில்லை யென்றும் வாதி நஷ்டத்திற்காக செய்த தாவாவை மாத்திரம் விசாரணை செய்ய நியாய முண்டென்று தீர்மானித்தார்கள். அதன் பேரில் வாதி தான் கட்டிய மொத்தத்திற்காக கொண்டு வந்த தாவாவை தள்ளுபடி செய்த உத்திரவை கூட கோர்ட்டார் செய்த டிக்ரியில் கண்டெழுதும்படிக்கு மனு செய்துக் கொண்டான். கோர்ட்டார் அந்த மனுவை கூட தள்ளுபடி செய்து விட்டார்கள். பிறகு வாதி தான் நஷ்டத்திற்காக செய்த தாவாவை மாத்திரம் வாபஸ் செய்துக் கொள்வதாகவும் தான் கட்டிய மொத்தத்திற்காக கொண்டுவந்த தாவாவை தான் வாபஸ் செய்துக்கொள்ள இஷ்டமுள்ளவனல்லவென்றும் கோர்ட்டாருக்குத் தெரிவித்தான். அதன் பேரில் வாதி கோர்ட்டில் ஆஜரில்லாத போது பிரதிவாதி தாவாவில் ஏற்பட்டிருக்கும் மற்ற இஷ்யூக்களை ருஜு செய்வதற்காக வேண்டிய சாக்ஷியம் ஆஜர் செய்தான். கடைசியில் தாவா விசாரணைக்கு வந்த போது வாதி ஆஜராக வில்லை என்று காரணம் கண்டு கோர்ட்டார் சிவில் புரோசீஜர் கோடு 102-வது பிரிவின் கீழ் முழு தாவாவையும் தள்ளுபடி செய்து விட்டார்கள். அதன்பேரில் சீப் கோர்ட்டாருக்கு அப்பீல் செய்துக் கொண்டார்கள். சி. பு. கோ. 102-வது பிரிவின் கீழ் தள்ளுபடி செய்த டிக்ரியின் பேரில் அப்பீல் கொண்டுவருவதற்கு நியாயமில்லை யென்று சீப் கோர்ட்டார் தீர்மானம் செய்தார்கள்.

அதன் பேரில் செய்துக்கொண்ட அப்பீலில் ஹைகோர்ட்டார் வாதி கட்டிய மொத்தத்தின் விஷயமாய் முதல் கோர்ட்டார் தீர்மானம் விரோதமாயிருந்ததாகையாலும் நஷடத்திற்காக கொண்டுவரப் பட்ட தாவா வாபஸ் செய்துக் கொள்ளப்பட்டபடியாலும் சி. பு. கோ. 102-வது பிரிவு இந்த சந்தர்ப்பத்திற்குச் சரியான பிரிவல்லவென்று சொல்லி அப்பீலை மறுபடியும் விசாரணை செய்யும்படி சீப் கோர்ட்டுக்கு ரிமாண்டு செய்து விட்டார்கள்.

சர். ஆர். பின்லே அவருடன் இன்னும் இரண்டு லாயர்களும் அப்பீல் வாதியின் லாயர்கள்.

மி-ர். லெவெட் அவருடன் மி-ர். எ. எம். டியூன்-ரெஸ்பான்டென்டு லாயர்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பாகம் 592.

CALCUTTA HIGH COURT.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

———:o:———

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 2574 of 1908.

ஜட்ஜுகள்:— { மி-ர். ஜ. ப்ரெட் / மி-ர். ஜ. ரிச்செர்ட்சன் } முன்பாக.

ஹரிஷ்சந்தர் பிஸ்வாஸ்...வாதி...அப்பீல்வாதி.

VS

பூரிதாஸ் தாஸ்...பிரதிவாதி...ரெஸ்பான்டென்ட்.

இறந்துபோனவனுடைய சொத்து-இறந்துபோனவனுடைய எஸ்டேட் தரப்பில் யாரும் கோர்ட்டுக்கு ஆஜராகாமலேயே செய்த டிக்ரிஇறந்து—போனவர் எழுதி வைத்துவிட்டுப் போன உயில்—எக்ஜிக் கூடரைதாவாவில் ஒரு கட்சிதாரராய் சேர்க்கவில்லை—இவ்விதமாய் செய்யப்பட்ட டிக்ரி கிரமமானதா அல்லவா?

ஓர் தாவாவில் இறந்து போனவனுடைய சொத்தைப் பரிபாலனம் செய்யப்பட்டவரை ஓர் கட்சிதாரராய்ச் சேர்க்காமல் டிக்ரி பெற்றிருந்தால் அப்படிப்பட்ட டிக்ரியை நிறைவேற்றி சொத்தை விற்பனை செய்திருந்தால் அப்படிப்பட்ட விற்பனை அந்த சொத்தை ஏவ்விதத்திலும் பாதிக்காது.

இதற்காதாரமாய் பஸ்வந்தப் பஷி டப்பா-vs-ரானு இ. லா. ரி. 9பம் 86; கைராஜ்மல்-vs-டெய்யன்

32; இ. அ. 23;2 அ. லா. ஜ. 71; I கல். லா. ஜ. 581; 7 பம். லா ரி. 1; ம கல் வீ. நோ. 201. 32 கல். 296. பார்க்கவும்.

இறந்துபோனவன் கடன் கொடுக்க வேண்டியிருந்து அவனுக்கு கடன் கொடுத்தவன் கடன்தாரன் காலமான பிறகு அந்த கடன் தொகையை வசூல் செய்வதற்காக கொண்டுவந்த தாவாவில் அவன் உயில் எழுதி வைத்து விட்டுப்போனபடிக்கு அவனுடைய வார்சுகளை கட்சிதாரராய்ச் சேர்க்காமல் நம்பர் செய்தால் அது சட்டப்படி செல்லத் தக்கின தாவா ஆகாது.

மட்டஞ்சினி தாசி-VS-சுனிமோனிதாசி-இ. லா. ரி. 28 கல் 913 பார்க்கவும்.

ப்ரகன்ன சந்தர் பட்டா சார்ஜி-VS-கிரிஸ்டோசிட்டன்துனுபால் இ. லா. ரி. 4 கல் 342; 3 கல். லா.ரி. 154. இந்த தீர்மானம் இந்த கேசுக்கு சம்மதப் பட்டதல்ல.

ஓர் வியாஜ்ஜியம் கோர்ட்டில் பைசலாகாமல் நடந்துக்கொண்டிருக்கையில் அந்த நம்பரில் பிரதிவாதி இறந்துபோய் அந்த நம்பரில் ஒருவன் ஆஜராகி இறந்துபோனவன் உயில் எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறுனென்றும் அந்த உயிலின் கீழ்தான் இறந்துபோனவனுடைய சொத்தை பரிபாலனம் செய்வதற்காக நேமிக்கப்பட்ட ஜூர் எக்ஜிகூடர் என்றும் தன்னை மேற்படி நம்பரில் இறந்துபோன பிரதிவாதிக்கு வார்சாக பிரதிவாதிக்குப் பதிலாய் பதிவு செய்துக் கொள்ளும்படிக்காவது அல்லது தான் தன்னுடைய ஹக்கை ருஜு செய்வதற்காக வேண்டிய நடவடிக்கைகள் நடத்துவதற்காக கோர்ட்டார் மேற்படி நம்பரின் விசாரணையை நிறுத்தி வைக்கும்படிக்காவது மனு செய்துக் கொண்டான். ஆனல் இப்படிப் பட்ட தாவாவில் வாதி அந்த எக்ஜிகூடரை பிரதிவாதியின் வார்சாக சேர்க்க மேண்டு மென்று நிர்பந்திப்பானுகில் அவன் இறந்துபோனவனுடைய சொத்தின் பேரில் பெறும் டிக்ரி சட்டப்படி செலவாணியுள்ளதல்ல; ஏனென்றுல் இறந்துபோன பிரதிவாதியின் தரப்பில் சட்ட சம்மதமான வார்சு இன்னுனென்று நம்பரில் காணப்படவில்லை யென்பதே அதற்குத் தகுந்த மறு உத்தரமாகும்.

மிர்ஜபூர் முனிசிபு டிக்ரியை ஊர்ஜிதம் செய்த நெய்டா சப்கோர்ட்டார் தீர்மானத்தின் பேரில் கொண்டுவந்த இரண்டாவது அப்பீல்.

பாபுஸ்துவாரக்நாத் மிட்டெர்-பூர்ணசந்த்ர மாயிரர அப்பீல்வாதியின் வக்கீல்கள்,

பாபுஸ் மோஹேந்தரனுத்ராய்-தாராக்சந்த்ர சக்ரவர்த்தி..,.......ரெஸ்பான்டென்ட் வக்கீல்கள்.

தீர்மானம்:—இந்த வியாஜ்ஜியத்தில் முதல் பிரதிவாதி இச்சாமாயி பெய்ஷ்னபி என்பவள் பேரிலும் இன்னும் இரண்டுபேர்கள் பேரிலும் ஓர் ஹாத் சிட்டாவின்பேரில் பணம் வசூலாக வேண்டு மென்று 1904-ம்ஹூத்தில்தாவா செய்தான். மற்றவர்கள் இச்சாமாயி என்பவளுக்கு சித்தப்பன் பிள்ளைகள். இச்சாமாயி என்பவளோ ஓர் விபசாரியாயிருந்தவள். அந்த நம்பர் நடந்துக் கொண்டிருக்கையில் இச்சாமாயி என்பவள் இறந்து விட்டாள். அதன்பேரில் இறந்துபோன பிரதிவாதியாகிய இச்சாமாயி என்பவளுக்கு சட்ட சம்மதமான வார்சுயாரென்று ஓர் பிரசனை எழும்பிற்று. அந்த நம்பரில் 2, 3-வது பிரதிவாதிகள் இறந்து போனவளுக்கு சட்ட சம்மதமான வார்சுகளென்று வாதித்தார்கள். இந்த நம்பரில் வாதியாயிருந்தவன் இச்சாமாயி என்பவளை வைத்திருந்த சோரநாயகன். அவன் இச்சாமாயி என்பவள் இறந்துபோகும்பொழுது அவள் அவளுடைய சொத்துகளுக்கு அவனே சுதந்தரவாளி யென்று உயில் எழுதிவைத்துவிட்டுப் போனதாகவும், அவன்தான் அவளுக்குத் தகுந்த வார்சு என்றும் வெளி வந்து வாதித்தான். ஆனல் சட்டப்படி அவன் அப்படிப்பட்ட உயிலை கோர்ட்டில் தாக்கல் செய்து ரூபித்து புரோபேட் பெற்றவனல்ல.

அதன்பேரில் மேற்படி நம்பரை விசாரணை செய்த கோர்ட்டார் 2, 3, பிரதிவாதிகளை சட்ட சம்மதமான தகுந்த வார்சுகளென்று வியாஜ்ஜியத்தில் பதிவு செய்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தார். அதற்குப் பின் 2, 3, பிரதிவாதிகள் கோர்ட்டில் ஆஜராகவில்லையென்று நம்பரை ஒரு தலை பட்சமாய் (Ex-parte) டிக்ரி செய்தார்கள். அந்த டிக்ரியை நிறைவேற்றி இறந்துபோன இச் சாமாயினுடைய சொத்தை ஏலத்திற்கு கொண்டுவந்து அந்த ஏல விற்பனையில் இந்த நம்பரில் 4-வது பிரதிவாதியாயிருப்பவன் அந்த நம்பரில் வாதியாய் அந்த சொத்தை ரூ. 75க்கு வாங்கினுன். பிறகு இந்த நம்பரில் வாதியாயிருப்பவன் இச்சாமாயி என்பவளுடைய சோரநாயகனென்றும் அவள் எழுதி வைத்துவிட்டுப்போன உயில் வாஸ்தவமானதென்றும், கோர்ட்டில் ருஜு செய்து புரோபேட் பெற்றுக்கொண்டு இச்சாமாயி என்பவளுடைய சொத்தை ஏலத்தில் விற்பதற்கு நியாயம் கிடையாதென்றும் அவளுடைய எஸ்டேட் தரப்பில் யாரும் அந்த டிக்ரியை நிறைவேற்றுதலில் ஓர் வார்சல்லவென்றும் இச்சாமாயினுடைய தகுந்த வார்சில்லாமல் மேற்படி டிக்ரி செய்யப்பட்டமையால் அந்த டிக்ரியின் கீழ் செய்த ஏல விற்பனையினுல் தான்கட்டு பட்டவனல்லவென்றும், ஆகையால் மேற்படி ஏல விற்பனையினுல் முதல் பிரதிவாதிக்கு இச்சாமாயினுடைய சொத்தில் யாதொரு பாத்தியதையும் கிடைக்கவில்லை யென்றும் இறந்துபோன இச்சாமாயி என்பவளுடைய சொத்துக்கு அவள் எழுதி வைத்துவிட்டுப்போன உயிலின்படிக்கு அவன் தான் தகுந்த வார்சென்றும் டெக்லேர் செய்து இறந்துபோன இச்சாமாயினுடைய சொத்தை தன் ஸ்வாதீனம் செய்யும்படிக்குத் தாவா செய்தான்.

முதல் கோர்ட்டார் பிரதமத்தில் வாதி பட்சம் டிக்ரி செய்து அதன்பேரில் அப்பீல் செய்யப்பட்டதன் பேரில் அப்பீல் கோர்ட்டார் அந்த நம்பரை ரிமாண்டு செய்து விட்டார்கள். முதல் கோர்ட்டார் ரிமாண்டு விசாரணையை நடத்தி வாதியின் தாவாவை தள்ளுபடி செய்துவிட்டார். அதன் பேரில் கீழ் அப்பீல் கோர்ட்டார் முனிசிபு டிக்ரியை ஊர்ஜிதம் செய்தார். அந்த டிக்ரியின்பேரில் வாதி இந்த அப்பீல் கொண்டுந்தான். இந்த அப்பீலில் முக்கியமாய் தீர்மானிக்கவேண்டிய விஷயம் யாதெனில் 2, 3 பிரதிவாதிகள் இச்சாமாயி என்பவளுக்குத் தகுந்த சட்ட சம்மதமான வார்சா அல்லவா என்பதுதான். வாதி ஆதியிலேயே தான் தகுந்த வார்சென்று பதிவு செய்துக்கொள்ளும்படிக் கேட்டும் அப்படி அவனுடைய பெயரை வார்சாக பதிவு செய்துக்கொள்ளாமலும், அவன் அவனுடைய உயிலை கோர்ட்டில் ருஜு படுத்தி புரோபேட் பெறுவதற்கு அவனுக்கு டயம் கொடாமலும் போய்விட்டமையால் வாதி முன் நம்பரிலும் அதில் செய்யப்பட்ட டிக்ரியிலும் வார்சல்ல. ஆகையால் அந்த டிக்ரியின் கீழ் செய்யப்பட்ட ஏல விற்பனையினுல் வாதி பந்தப்பட்டவனல்லவென்று கண்டு கீழ் கோர்ட்டார் டிக்ரியை ரத்து செய்து வாதியின் தாவாவை வாதி பட்சம் எல்லா கோர்ட்டு செலவுகளுடனும் டிக்ரி செய்தார்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பாகம் 627.

CALCUTTA HIGH COURT.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

——:o:——

சிவில் மிசலேனியஸ் அப்பீல் நெ. 167 to 182 of 1909.

ஜட்ஜுகள்:—{ மி-ர். ஜ. சாட்டெர்ஜி. / மி-ர். ஜ. வின்ஸென்ட். } முன்பாக.

ரத்னேஷ்வர்சிங்க்-தீர்ப்பு கடனளி....அப்பீல்வாதி

VS

குலாப் சந்த்....டிக்ரிதாரன்.....ரெஸ்பான்டென்டு.

ஹிந்துலா—மித்தாக்ஷரம்-சுதந்தரமுள்ள வார்சு—டிக்ரியை நிறைவேற்றுதல்-சிவில் புரோசீஜர் கோடு (14 of 1882) 244-வது பிரிவு.

மிதாக்ஷர சட்டத்தை அனுசரிக்கும் ஓர் ஹிந்து குடும்பத்திலுள்ள தகப்பன் மீது டிக்ரி அடைந்த பிறகு தகப்பன் இறந்து விடுவானுதில் அப்படி காலம் சென்ற தகப்பன் சொத்திற்குச் சரியான வார்சு பாத்தியதையுள்ள அவனுடைய குமாரன் இறந்த தகப்பனுடைய சொத்துக்களுக்கு சுதந்தரவாளியான பிறகு அந்த பிள்ளையின் பெயரை ரெக்கார்டில் இறந்துவிட்டவனுக்கு வார்சாக பதிவு செய்துக் கொண்டு இறந்துபோன தகப்பனுடைய சொத்து எவ்வளவு அவனுடைய சுதந்தரத்திற்குவந்ததோ அவ்வளவு மட்டிற்கு அந்த பிள்ளையின் பேரில் டிக்ரியை நிறைவேற்றும்படிக்கு உத்தரவு செய்யலாம். ஆனல் இறந்துபோன அந்த தகப்பன் பட்ட கடன் சட்டப்படி நியாயமான விவகாரங்களுக்காக வாங்கின கடனல்லவென்றும் துர்விஷயங்களாகிய ஒழிங்கீனமான நடவடிக்கைகளுக்காக வாங்கின கடனென்றும் ருஜு செய்யும் பட்சத்தில் அந்த டிக்ரியைப் பிள்ளையின் சுதந்தரத்திற்கு வந்து அவன் கையிலுள்ள சொத்துகளின் பேரில் நிறைவேற்றுவதற்கு உததரவு செய்யலாகாதென்று தீர்மானிக்கப்பட்டது.

இதற்காதாரமாய் அமார்சந்த்ரா கண்டு-VS-சபக்சந்த்துசவுதுரி-இ. லா. ரி. 34 கல், 642; (புல் பெஞ்சு;) 11 கல். வீ. நோ. 535; 5. கல். லா, ஜ. 491: 2 ம. லா, டை. 207; பார்க்கவும். ஆனல் இ. லா. ரி. 5. கல் 148: 5 இ. அ. 88; 4 கல். லா. ரி. 226? 18 கல். 157 (பிரிவி கவுன்சல் கேஸ்): 17 இ. அ. 195. பின் செப்பிய கேசுகளுக்கும் மின் செப்பிய கேசுகளுக்கும் பேதமுண்டென்று காண்பிக்கப் பட்டது. பீரிலால் சின்ஹா-VS-சந்திசாரன்சின்ஹா. 11 கல். வீ. நோ. 163; 5 கல். லா. ஜ. 80 இந்த கேசுகளில் செய்யப்பட்ட தீர்மானம் அமார் சந்த்ர கண்டு-சிபக்சந்த் சவுத்ரி-இ. லா. ரி. 34 கல் லா. 642 (புல்பெஞ்சு;) 11 கல். வீ. நோ. 593; 5 கல். லா. ஜ. 491; 2ம. லா. டைம்ஸ் இந்த கேசுகளில் செய்யப்பட்ட தீர்மானத்தால் ரத்தாய் விட்டது.

தர்பங்கா சப்கோர்ட்டார் செய்த உந்தரவுகளின் பேரில் செய்துக் கொண்ட அப்பீல்கள்.

பாபுஸ் ஜோகெஷ் சந்த்ராய்—அக்காய் குமார் பானெர்ஜி....அப்பீல் வாதியின் வக்கீல்கள்.

பாபுஸ்நவினி ரஞ்சான் சாட்டெர்ஜி—பல்தியோ நாராயணசிங்க்....ரெஸ்பான்டென்ட் வக்கீல்கள்.

தீர்மானம்:—இந்த கேசில் டிக்ரிதாரன் சூரெஷ்வர் ராய் சிங்க் என்பவன்பேரில் ஒரு டிக்ரி பெற்ருன். இவன் யாரென்ருலோ ஓர் ஸமஷ்டி ஏக ஹிந்து குடும்பத்தில் சூரெஷ்வர் சிங்க் என்பவருடைய நான்கு புத்திரர்களில் ஒருவன் இந்த சூரெஷ்வர் சிங்க் என்னும் தகப்பனும் அவனுடைய நான்கு புத்திரர்களும் ஒன்ருய் ஏக குடும்பமாய் தான் வசித்துக் கொண்டிருந்தார்கள். இந்த குடும்பத்தார் மிதாக்ஷர சட்டத்தை அனுசரிப்பவர்கள். சூரெஷ்வர் என்னும் குமாரன் அவனுடைய தகப்பன் ஜீவித்திருக்கும் போதே இறந்துவிட்டான். இறந்துபோன அந்த பிள்ளைக்கு குமாரர்கள் இருந்தார்கள். அவர்கள் தான் இந்த நம்பரில் அப்பீல் வாதிகள். அப்பீல் வாதிகளாகிய இறந்து போனவனுடைய குமாரர்கள் காலம் சென்ற தங்களுடைய தகப்பனுருக்கு குடும்ப சொத்தில் எவ்வளவு சுதந்தர மிருந்ததோ அவ்வளவு சொத்துக்கும் சுதந்தரவாளிகளான வார்

சுகளானார்கள். காலம் சென்ற தகப்பன் சூரெஷ்வர் என்பவன் ஜீவித்திருக்கும்போதே டிக்ரியை நிறைவேற்ற மனு செய்துக்கொள்ளப் பட்டதாக தெரியவில்லை. ஆயினும் தகப்பன் இறந்துபோன பிறகு சூரெஷ்வர் என்பவனுடைய சட்ட சம்மதமான வார்சுகளை ரெக்கார்டில் பதிவு செய்துக்கொண்டு அவர்கள் பேரில் டிக்ரியை நிறைவேற்றுவதற்கு டிக்ரி பெற்றவன் மனு செய்துக்கொண்டான். அதன் பேரில் டிக்ரியில் கொண்டுவரப்பட்ட வார்சுகள் அவர்களுடைய தகப்பன் ஜீவித்திருக்கும்போதே டிக்ரியை நிறைவேற்றாமல் அவன் இறந்த பிறகு அவர்கள் தங்களுடைய தகப்பனிடத்திலிருந்து யாதொரு சொத்துக்கும் சுதந்தர வாளிகளாக வில்லையென்றும் அந்த தகப்பனுடைய சொத்து அவர்களுடைய கையில் ஒன்றும் கிடையாதென்றும் அந்த டிக்ரியை அவர்கள் மீது நிறைவேற்றுவதற்கு நியாயம் கிடையாதென்றும் எதிர்வாதம் செய்தார்கள். இதுவுமன்றி குடும்ப சொத்தில் யாதேனும் ஓர் குறித்த சொத்தை ஜப்தி செய்ய நியாயமில்லையென்றும் இன்னும் இந்த அப்பீல் வாதிகள் (குமாரர்கள்) இந்த டிக்ரியில் எவ்வளவு தூரம் பந்தப்பட்டவர்களென்று முன்னமேயே கோர்ட்டார் உத்தரவு செய்திருப்பதால் அதைப்பற்றி இந்த மனுவில் கேட்கத் தகாதென்றும் எதிர்த்து வாதம் கூறினார்கள்.

கீழ் கோர்ட்டார் முதல் வாதத்தை சரியான எதிர்வாதமல்லவென்று கண்டு மற்ற வாதங்களை தீர்மானிக்காமல் விட்டு விட்டார்கள். அதன் பேரில் இந்த அப்பீல் செய்துக்கொள்ளப்பட்டது.

அமார் சந்த்ரகண்டு vs சிபக்சண்ட் சவுத்ரி இ. லா. ரி. 34 கல் 642ல் செய்யப்பட்ட புல் பெஞ்சு தீர்மானத்தின்படி வார்சுகள் கொண்டு வந்தது சரிதானென்று ஏற்படுகிறது. இதற்கு முன்னமேயே இந்த வார்சுகளின்பேரில் தகப்பன் பேரிலடைந்த டிக்ரியை நிறைவேற்றுவதற்கு உத்தரவுகள் செய்யப்பட்டிருக்கிறதென்று கண்டு இந்த அப்பீல்களை சிலவுடன் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 6-வது வால்யம் 4-வது பார்ட்டு 582.

PUNJAB CHIEF COURT
பஞ்சாப் சீப் கோர்ட்டு.

முதல் சிவில் அப்பீல் நே. 860 of 1909.

ஜட்ஜு:—மி-ர். ஜ. ஜான்ஸ்டன்......முன்பாக.

சவன்சிங்கு வகையரா...பிரதிவாதிகள்...அப்பீல் வாதிகள்.

vs

கரீம்பக்ஷ்...........வாதி...........ரெஸ்பான்டென்ட்.

சாக்ஷி சட்டம் (1 of 1872) 90-வது பிரிவு—பூர்வீகமான மூல தஸ்தாவேஜு கைசோர்ந்து போகுதல்—வாஸ்தவமான தஸ்தாவேஜு என்பது—பழக்கம்—மனோபாகங்களின்பேரில் செய்யப்படும் தீர்மானம்-கொதுவை-முதல் ஸ்வாதீன அடமானம்-இரண்டாவது ஸ்வாதீனமின்றி ஈட்டுக் கொதுவை—லிமிடேஷன்—அதே சொத்தின்பேரிலுள்ள இதர கொதுவைகள்.

கோர்ட்டில் ஆஜர் படுத்தி தாக்கல் செய்யப்படும் பத்திரங்களின் விஷயத்தில் மாத்திரம் சாக்ஷி சட்டம் 90-வது பிரிவு சம்பந்தப் படுமென்பது சரியல்ல. ஆகையால் பூர்வீகமான மூல தஸ்தாவேஜு ஒன்று கை சோர்ந்து போயிற்றென்னும் காரணத்தைக் கொண்டும், அது கை சோர்ந்து போவதற்குமுன் இன்னொருடைய வசத்திலிருந்ததாக ருஜு செய்யும் பட்சத்தில் அந்த மூல தஸ்தாவேஜு கிரமமாய் எழுதிக் கொடுக்கட்பட்டதென்று ருஜு செய்யாமலேயே கை சோர்ந்துபோன அந்த மூல தஸ்தாவேஜியைப்பற்றி இரண்டாம் தர சாக்ஷியமாய் தாக்கல் செய்துக்கொள்ளக் கூடும்.

இதற்காதாரமாய் கெட்டர் சந்தர் மூக்கெர்ஜி vs கேட்டர்பால் ஸ்ரீ டெட்னோ 5 கல் 886; 6 கல். லா. ரி. 199; இஷ்ரி பிரசாத் சிங்க் vs லல்லிஜாஸ் கன்வார் 29 அ. 294 பார்க்கவும்.

ஓர் வியாஜ்ஜியத்தில் கக்ஷிதாரன் தன்னுடைய கேசில் சொல்லியிராத விஷயங்களை அந்த கேசில் உளதென்று பாவித்துக்கொண்டு ஒரு ஜட்ஜி நியாய பரிபலனமாய் தீர்மானம் செய்யலாகாது; எப்படியென்றால், ஓர் தாவாவின் பிரதிவாதிகள் சில நிலங்களை ரூபா 41—8—0 க்கு கொதுவை வைத்துக்கொண்டு அனுபவித்து வந்தார்கள். அதற்குப்பின் 1872ம்வருஷத்தில் கொதுவை வைத்தவன் அதே சொத்தின் பேரில் ஸ்வாதீன மில்லாமல் வெறும் ஈட்டுக் கொதுவைப் பத்திரம் எழுதிக்கொடுத்து ரூபாய் 77 கடன் வாங்கினான்.

சுமார் 30 வருஷ காலத்திற்கு அதிகமாகவே யாதொரு நடவடிக்கையும் நடத்தாமல் அதற்குப்பின் கொதுவை வைத்தவனுடைய வார்சுதாரர்கள் ரூபா 41-8-0ம் கோர்ட்டில் கட்டி விட்டு மேற்படி நிலங்களை கொதுவையினின்று மீட்டுக்கொண்டு தங்களுடைய ஸ்வாதீனம் செய்துக் கொள்ள நம்பர் செய்தார்கள். அப்படிப்பட்ட தாவாவில் பிரதிவாதிகள் இரண்டாவது கொதுவையின் பேரில் கட்ட வேண்டிய மொத்தத்தையும் கட்டிவிட்டுதான் வாதிகள் நிலத்தை கொதுவையிலிருந்து மீட்டுக் கொள்ளக் கூடுமென்று எதிர்வாதம் கூறினார்கள். அதன் பேரில் வாதிகள் சொல்லியதென்னவென்றாலோ இரண்டாவது கொதுவையை ஊர்ஜிதம் செய்துக் கொள்ளவில்லையாகையால் அந்த இரண்டாவது கொதுவை சட்டப்படி செல்லாதென்று வாதித்தார்கள்.

இரண்டாவது கொதுவையின் பேரில் தாவா செய்வதற்கு சந்தர்ப்பம் இன்னும் நேரிடவில்லையாகையால் அதற்கு லிமிடேஷன் தோஷம் வரவில்லையென்று தீர்மானித்தார்கள் இந்த இரண்டாவது கொதுவை ஸ்வாதீன மில்லாத கொதுவையானபடியால் அதை ரெவினியூ ரிஜிஸ்தரில் பதிந்துக் கொள்ளும்படி கேட்பதற்கு சந்தர்ப்பம் நேரிடவில்லையென்னும் காரணத்தை எடுத்துக் காண்பித்தார்கள்.

சியால் கோட் டிவிஷன் ஜில்வா ஜட்ஜியின் தீர்மானத்தின்பேரில் கொண்டுவரப்பட்ட முதல் சிவில் அப்பீல்.

மி-ர். சுக்டயல் :— அப்பீல் வாதிகளின் வக்கில்

மெஸெர்ஸ் ஷிர்க் கோ-ரோஷன் லால்:-ரெஸ்பான்டென்ட் வக்கீல்கள்.

தீர்மானம்:—இரண்டு கொதுவை தஸ்தரவேஜு பேரிலும் கொடுக்க வேண்டிய மொத்தங்கள் இரண்டையும் கட்டிவிட்டுதான் வாதி தாவா நிலங்களை மீட்டுக் கொண்டு தன் சுவாதீனம் செய்துக்கொள்ள ஹக்குள்ளவனாவானென்று கண்டு முதல் கோர்ட்டார் தீர்மானமே சரியென்பதாய் அங்கீகாரம் செய்துக்கொண்டு கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய தீர்ப்பை றத்து செய்து விட்டு முதல் கோர்ட்டாருடைய தீர்ப்பை-அதாவது வாதி இரண்டு கொதுவைப் பத்திரங்களின் பேரிலும் செல்லாக வேண்டிய மொத்தங்களை வட்டியுள்பட கோர்ட்டில் கட்டிவிட்டு மேற்படி நிலங்களை மீட்டுக்கொண்டு தன்னுடைய சுவாதீனம் செய்துக்கொள்ள வேண்டு மென்றும் பிரதிவாதிகள் இரண்டு கோர்ட்டிலும் சிலவழித்த சிலவு மொத்தத்தை வாதிகள் கொடுக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப் பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பாகம் 353.

PUNJAB CHIEF COURT.
பஞ்சாப் சீப் கோர்ட்டு.

——:o:——

கிரிமினல் ரிவிஷன் மனு நே. 2075 of 1909.

ஜட்ஜு:—மி-ர். ஜ. வுல்லியம்ஸ்

நியதார்மல்வகையரா........வாதிகள்.........மனுதார்கள்

vs

மி-ர். இ. என். டப்ளியூ. லெவின்........பிரதிவாதி ரெஸ்பான்டென்ட்.

பூமிக்குடையவனும் - குடித்தனக்காரனும் - காலி செய்யும்படிக்கு கொடுக்கப்பட்ட நோட்டீசு—அந்த நோட்டீசில் குறிக்கப்பட்டிருக்கும் தினத்தில் முழு வீட்டையும் காலி செய்யாமலிருப்பது-புது நோட்டீசு கொடுக்க வேண்டுமென்பது அவசியமா.

ஓர் வீட்டில் குடித்தனக்காரன் 1908-ம் வரு அக்டோபர் மீ 31உ வீட்டை காலி செய்து விடுவதாக

வீட்டுக்குச் சொந்தக்காரனுக்கு நோட்டீசு கொடுத்தான். ஆனால் அக்டோபர் மீ 30உ குடித்தனக்காரன் அந்த வீட்டின் சில பாகத்தை மாத்திரம் காலி செய்து ஒப்புவித்து விட்டு மற்ற பாகத்தை 31உக்குள் பூராகவும் காலி செய்து ஒப்புவிக்கக் கூடாதவனாயிருந்தான். குடித்தனக்காரன். பூராகவும் காலி செய்து வீட்டைவிட்டுப் போனபிறகு காலியா யிருந்த வீட்டிற்குள் வீட்டுக்குச் சொந்தக்காரன் பிரவேசித்தான். இத்தியாதி சந்தர்ப்பங்களையும் அனுசரித்து வீட்டுக்குச் சொந்தக்காரனுக்கு மறுபடியும் புதுநோட்டீசு கெடுக்கவேண்டுமென்றும் அப்படி வேறே நோட்டீசு கொடாத பட்சத்தில்வீட்டுக்குச் சொந்தக்காரன் தனக்கு ஒருமாத குடிக்கூலி கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்க ஹக்குண்டு. 1887வருஷத்திய 9-வது ஆக்டின் கீழ் டெல்லிஸ்மால்காஸ் ஜட்ஜ் செய்த வுத்தரவின் பேரில் ஷை ஆக்ட் 25-வது பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்ட ரிவிஷன் மனு.

தீர்மானம் :—வாதிக்கு புதுநோட்டீசு கொடுத்திருக்க வேண்டியது ; அப்படி கொடாததினால் வாதி இரண்டுமாத குடிக்கூலிக்கு ஹக்குகாரனென்று கண்டு வாதிபட்சம் டிக்ரி செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வல்யம் 3-வது பாகம் 355.

MADRAS HIGH COURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது சிவில் அப்பீல் நே. 1537of1908.

ஜட்ஜிகள்:—{ சர். ரால்ப். பென்சன் ஜட்ஜ்
மிர். ஜ. கிருஷ்ணசுவாமி ஐயர் } முன்பாக.

தாழிவீட்டில் பந்திரடி ஆனந்தவாரர்....பிரதிவாதி ....அப்பீல்வாதி.

vs

காவும் பெரத் இல்லத் வாசுதேவ நம்பூத்ரி. வாதி....ரெஸ்பான்டென்டு.

லிமிடேஷன் ஆக்டு....(15 of 1877) 2-வது ஷேடுல் 120-வது ஆர்டிகல்-தேவேசம் சொத்து-ஹக்கு பாத்தியதையை டெக்லேர் செய்யும்படிக்கு செய்த தாவா-லிமிடேஷன்.

ஓர்சொத்துக்கு பட்டா பிறப்பித்த ஆறுவருஷத்திற்குப் பின் அந்தபட்டாவை ஆதாரமாய்க் கொண்டு தாவாசெய்தால் அப்படிப்பட்ட தாவாவிற்கு கால தோஷம் வந்துவிட்டதென்று தீர்மானிக்கப்பட்டது.

வயித்ரி டி. மு. கோர்டு அ. நெ. 76 of 1906ல் செய்யப்பட்ட டிக்ரியின் பேரில் வடமலபார் ஜில்லா கோர்ட்டில் அப். நெ. 355 of 1907ல் செய்த தீர்மானத்தின் பேரில் கொண்டு வரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

தீர்மானம்:—வாதி தாவா செய்வதற்கு நியாயம் இடையாதென்பது தகுந்த வாதமாய் புலப்படவில்லை. தாவாவிற்கு காலதோஷம்வந்துவிட்டதென்று கண்டு வாதியின்தாவாவை தள்ளுபடி செய்யப்பட்டது.

வாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பாகம் 357. 8 ம. லா. டை 249; 1 ம. வீ. நோ. 594.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

இரண்டாவது சிவில் அப்பீல் நே. 1015 of 1906.

ஜட்ஜிகள் :— { மிர். ஜ. வாலிஸ்
மிர். ஜ. கிருஷ்ணசுவாமி ஐயர்
முன்பாக.

ராயர் சிவராம கிருஷ்ணய்யர் வகையரா...பிரதிவாதிகள்...அப்பீல்வாதிகள்.

VS

சங்ரலிங்க கோன்வகையரா-வாதிகள்...ரெஸ்பான்டென்டுகள்.

தாவாவும்-எதிர் வாதமாய் கொடுக்கப்பட்ட ரிட்டென் ஸ்டேட்மென்டென்னும் விவரபத்திரிகையும் பழக்கம்-இரண்டாவது அப்பீல்-முதல்முதல் இரண்டாவது அப்பீலில் சொல்லியவாதம்.

முதல் கோர்ட்டில் எடுத்துக்கூறாத ஓர் வாதத்தை முதல்முதல்-கீழ் அப்பீல் கோர்ட்டில் எடுத்துக்கூறலாகாது.

திருநெல்வேலி அட்டிஷனல் டி. மு. கோர்ட்டாருடைய அ. நெ. 63 of 1904ல் செய்ததீர்ப்பின்பேரில் திருநெல்வேலி சப்கோர்ட்டருக்குசெய்துக்கொண்ட அ. நெ. 278 of 1905ல் செய்த தீர்ப்பின் பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

தீர்மானம்:—இந்த இரண்டாவது அப்பீலில் ஸ்பெஸிபிக் ரிலீப் ஆக்ட் 42-வது பிரிவின்படி ஓர் தாவா செய்வதற்கு நியாயமில்லை என்னும் ஆக்ஷேபணையை முதல் கோர்ட்டில் சொல்லாமல் முதல் முதல் கீழ் அப்பீல் கோர்ட்டார் முன் எடுத்துக்காண்பிக்கப்பட்டதென்னும் காரணத்தைக்கொண்டும் இன்னும் தாவா செய்யும் தினத்தில் தாவாநிலம் வாதிகளின் சுவாதீனத்தி லிருந்ததென்று தாவாவில் சொல்லப்படவில்லையென்னும் காரணத்தை அனுசரித்தும் இரண்டாவது அப்பீலை சிலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பாகம் 354.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

சிவில் ரிவிஷன் மனு நே. 595 of 1906.

ஜட்ஜுகள்:— { மிர். ஜ. வாலிஸ்.
மிர். ஜ. கிருஷ்ணசுவாமி ஐயர்.
முன்பாக.

வாலெட்டி ஸ்ரீராமுலு வகையரா வாதியும் அவனுடைய வார்சுகளும் } அப்பீல்வாதிகள்.

VS

குடிசா வெங்கிட ரெட்டி வகையரா.........வாதிகள் ரெஸ்பான்டென்டுகள்.

கைமாரத்தக்கஆதரவுகளுக்கென்று (பத்திரங்களுக்கென்று) ஏற்படுத்தப் பட்டிருக்கும் ஆக்ட் (26. of 1881) 78-வது பிரிவு-யார் பேரில் எண்டார்சு செய்யப்பட்டதோ அவனும்-பத்திரத்தின் கீழ் செல்லாகிய மொத்தமும்.

ஏல்லூரிலிருக்கும் சப்கோர்ட்டார் S.C.S. 357 of 1906-ல் செய்த தீர்ப்பின் பேரில் கொண்டு வரப்பட்ட ரிவிஷன் மனு.

தீர்மானம்:—கைமாரத்தக்க பத்திரங்களுக் கென்றுசெய்யப்பட்டிருக்கும் ஆக்டின் (26 of 1881) 78-வது பிரிவின்படி பத்திரம் யாருடைய ஸ்வாதீனத்தி லிருக்கிறதோ அவனிடத்தில் தான் தொகை செல்லாக வேண்டியதென்றும் அப்பீல்வாதி எண்டார்சுமெண்டு பெற்று பத்திரத்தை தன்னுடைய ஸ்வாதீனத்தில் வைத்திருப்பவனென்றும் கண்டு கீழ் கோர்ட்டாருடைய தீர்ப்பை ரத்து செய்து விட்டு வாதிக்கு வட்டி, சிலவுடன் தீர்மானம் செய்தார்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பாகம் 355.

8 ம. லா. டை. 247.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

ஜட்ஜுகள்:— { சர், அர்னுல்ட் வொயிட், நைட், சீப் ஜஸ்டிஸ்
மி-ர். ஜ. எய்லிங்
முன்பாக.

இந்திய தேசத்து ஸ்டேட் செக்ரிடேரி திருநெல்வேலி கலெக்டர் மூலமாய் } அப்பீல் வாதி.

SV

அம்பலவான பண்டார சன்னதி.......ரெஸ்பான்டென்டு.

மதராஸ் ஆக்ட் 7 of 1865-தண்ணீர செஸ் (வரி)-பசலி ஜாஸ்தி-சர்க்காராருடைய தண்ணீரைக் கொண்டு பாய்ச்சினால் எப்படி-தண்ணீர் தீர்வையினின்று நிவர்த்திக்கப் பட்டிருக்கிறதென்று உள்ளடியான ஏற்பாடு தீர்வை கட்ட வேண்டுமோ அல்லவா என்பதை சோதித்தறிதல்.

மதாராஸ் ஆக்ட் 7 of 1865-ல் செய்யப் பட்டிருக்கும் நிபந்தனைகளின்படிக்கு எந்தெந்த சந்தர்ப்பங்களில் தண்ணீர் செஸ்-தீர்வை வசூல் செய்யலாமென்னும் நிபந்தனைகளை இதனடியில் சுருக்கமாய் எடுத்துக் கூறுவோம்.

2. அப்படி தண்ணீர் பாய்ச்சுவது கவர்ன்மென்டாருடைய ஆறு அல்லது ஓடை அல்லது கால்வாய் கட்டி பாய்ச்சிக் கொள்வதா யிருந்தாலும்.

அப்படி உற்பத்தியாய் வரும் ஜலம் வேறே எந்த மார்க்கமாய் வந்து பாய்ந்தாலும் அல்லது தண்ணீரை ஓர் பெருந்தொட்டி கட்டி அதில் பிடித்து வைத்திருந்து பாய்ச்சிக் கொண்டாலும் அப்படி பாயும் ஜலத்தினால் விளை பொருள்களாகிய தானியங்களுக்கு மிக்க லாபகரமானதாயிருக்கிற தென்று ரெவினியூ போர்டார் அனுமதிக்குட் பட்டு கலெக்டர் அபிப்பிராயம் கொண்டாலும்.

3. அப்படி வசூல் செய்வதற்கு விதிக்கப் படும் தீர்வை கவர்ன்மென்டாருக்கும் பூமிக்குடையவனுக்கும் உள்ள ஒப்பந்தத்திற்கு விரோதமாயிருக்கலாகாது. அப்படிப் பட்ட ஒப்பந்தத்தினால் பூமிக்குடையவன் கவர்ன்மென்டாருடைய தீர்வையில்லாமல் ஜலத்தைப் பாய்ச்சிக் கொள்ள ஹக்குண்டென்பதாயிருந்தாலும்.

இரண்டு ஓடைகள் ஒன்றாய்ச் சேர்ந்து ஒரு ஓடையாய் வந்து பாயும் பட்சத்தில் அந்த இரண்டு ஓடைகளில் ஒன்று கவர்ன்மென்டாருடைய ஓடையாயிருந்தால் அப்படி பாய்சிக் கொள்ளும் ஜலத்திற்காக தீர்வை வசூல் செய்வதற்கு கவர்ன்மென்டாருக்கு ஹக்குண்டு; அப்படி பாய்ச்சிக் கொள்ளப்படும் நஞ்சை நிலங்களின்பேரில் கவர்ன்மென்டார் இரண்டாவது போகத்திற்குக் கூட தீர்வை ஜாஸ்தி வசூல் செய்ய நியாய முண்டு.

அப்படி ஜலம் வந்து பாயும் கவர்ன்மென்டாருடைய ஓடை தங்களுக்குச்சுதந்தர மூண்டென்று சொல்லப்படும் வேறே ஓடையோ அல்லது நதியோ அதில் கலக்கிறதென்னும் காரணத்தைக் கொண்டு தீர்மானிக்க வேண்டுமென்பது அவசிய மல்ல.

அர்லம் சொந்தக்காரி-VS-இந்திய செக்ரிடேரி ஆப்ஸ்டேட் (அப். நெ. 64 of 1907). இந்திய செக்ரிடேரி ஆப்ஸ்டேட்-VS-சாமிநாதேஸ்வரர் (இரண்டாவது அப்பீல் நெ. (1019 of 1907) மேற்படி கேசுகளில் செய்த தீர்மானத்தை இந்த கேசில் ஆதாரமாய் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேலே சொல்லிய இரண்டாவது நிபந்தனையின்படி சர்க்காராருடைய ஜல ஆதாரத்தினால் லாபகரமுண்டாயிற்றென்றாவது போதுமான ஜலம் இருந்ததென்றாவது கலெக்டர் கவர்ன்மென்டாருடையவும் ரெவினியூபோர்ட்டாருடையவும் அனுமதியின்பேரில் நிட்சயிக்க மெண்டு மென்பது அவசியமல்ல.

இந்தியா செக்ரிடேரி ஆப்ஸ்டேட்-VS-சாமிநாதேஸ்வரர் இரண்டாவது அப்பீல் நெ. 1019 of 1907. ஆதாரமாய் எடுத்துக் கொள்ளப் பட்டது. தண்ணீர் தீர்வை கிடையாதென்று கவர்ன்மென்டாரால் கொடுக்கப்பட்ட சன்னத் அல்லது வேறெந்த அதிகாரத்தினாலாவது ஏற்பட்டிருப்பதாய் தெரியவந்தால் அந்த ஏற்பாடு இருபோக நிலங்களுக்கு இன்ன ஏற்பாடென்று ஸ்பஷ்டமாய் கண்டிருக்க வேண்டும். தண்ணீர் தீர்வையில்லாமல் பயிர் செய்துக் கொள்ள உள்ளடியான ஏற்பாடுண்டென்று வாதித்தால் அதை எவ்வளவு விஸ்தீரணம் அவ்விதமாய் பயிரிடப்பட்டதென்று கண்டறிய வேண்டியது அவசியம்.

சிதம்பரராவ்-VS-இந்திய செக்ரிடேரி ஆப்ஸ்டேட் இ. லா ரி. 26 ம 66. லட்சிமி தாஸ்-VS-இந்திய செக்ரிடேரி ஆப்ஸ்டேட் இ. லா. ரி 32 ம. 457. 6. ம லா. டை, 242; 3 இந்தியன் கேசுகள் 456 ஆதாரமாய் பார்க்கப்பட்டது.

இந்திய ஸ்டேட் செக்ரிடேரி-VS-பெருமாள் பிள்ளை இ. லா. ரி. 24 ம 279 11 ம. டை. 117. மரிகுசை முதலியார்-VS-இந்திய ஸ்டேட் செக்ரிடேரி 11 ம. லா. ஜ. 350. இதற்கு சம்பந்தப்பட்டவையல்ல.

மார்கன்-VS-கிர்பி இ. லா. ரி. 2 ம 46; கிருஷ்ண ஐயன்-VS-வெங்கிடாசல முதலி 7 ம. ஹை. கோ. ரி. 60; ராமச்சந்திர-VS-நாராயணசாமி 16 மதராஸ் 333 இதற்குச் சம்பந்தப்பட்டவையல்ல. ஓர் குடியானவன் சர்க்கார் ஜலத்தை மிக்க செட்டாய் பிரயோகித்து வந்ததினாலும் கால்வாயை பத்திரமாய் பார்த்து வந்ததினாலும் இருபோகம் பயிரிடக் கூடியதாயிற்றென்றும் அதிக ஜலம் பிரயோகப்படுத்த வில்லையென்றும் ருஜு செய்ய பாத்தியதை யுண்டு. ஆனால் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் கோர்ட்டார் போதுமான ருஜு இருக்கிறதா வென்று கவனிக்க வேண்டியது அவசியம்.

திருநெல்வேலி சப்கோர்ட்டார் அ. நெ. 51 of 1902-ல் செய்த டிக்ரியின் பேரில் கொண்டுவரப்பட்ட முதல் அப்பீல்.

மி-ர். சி. எப். நேபியர் (கவர்ன்மென்ட் ப்ளீடர் அப்பீல் வாதியின் கவுன்சல்.

மி-ர். பி. ஆர். சுர்தரய்யர்......ரெஸ்பான்டென்டு வக்கீல்.

தீர்மானம்.

கேசின்விபரம்:-ரெஸ்பான்டென்ட் கம்பனேரி புது குடி மிட்டாதார். அவருடைய மிட்டாவில் அவர் சர்க்கார் ஜலத்தைப் பாய்ச்சி இரண்டாவது போகம் பயிர் செய்தாரென்று கவர்ன்மென்டார் அவரிடத்தி

லிருந்து 1310-ம் பசலிக்கு ரூபாய் 835-13-7 தீர்வை ஜாஸ்தி வசூல் செய்தார்களாம். அப்படி தண்ணீர் தீர்வை விதித்தது அக்கிரமமென்று சொல்லிசெய்யப்பட்ட தாவா. 15 ஏறிகளின் கீழிருக்கும் தன்னுடைய மிட்டா நிலங்களுக்கு தன்னிடமிருந்து வசூல் செய்த மேற் சொன்ன தீர்வை ஜாஸ்தி மொத்தத்தை வாபஸ் செய்யும் படிக்கும் இனி அந்த மிட்டாதாராகிய ரெஸ்பான்டென்டினிடமிருந்து அப்படிப் பட்ட தீர்வை வசூல் செய்யாதிருக்கும்படிக்கு சாஸ்விதமான இஞ்ஜங்க்ஷன் பிறப்பிக்கும் படிக்கும் தாவா கொண்டுவரப்பட்டது. திருநெல்வேலி அட்டிஷனல் சப் கோர்ட்டார் வாதி தன்னுடைய தாவாவில் பிரார்த்திருப்பதின்படி ரூபா 835-13-7 தீர்வை ஜாஸ்தி மொத்தத்தை மிட்டாதாரராகிய ரெஸ்பான்டென்டுக்கு வாபஸ் செய்து விடும்படிக்கும் இனி அந்த மிட்டாதாரிட மிருந்து அப்படிப்பட்ட தீர்வை வசூல் செய்யாமலிருக்கும் படிக்கும் சாஸ்விதமான இஞ்ஜக்ஷன் உத்தரவு பிறப்பிக்கும்படிக்கும் இந்தியஸ்டேட் செக்ரிடெரிக்கு விரோதமாய் செய்த தீர்மானத்தின் பேரில் மேற்படி இந்தியஸ்டேட் செக்ரிடெரி தரப்பில் இந்த அப்பீல் கொண்டுவரப்பட்டது. தாவாவில் கண்டிருக்கும் ஏறிகளுக்கு கறுப்ப நதியிலிருந்து வெட்டி எடுத்த 'பாப்பான்கால்' என்னும் கால்வாயிலிருந்து பிறியும் ஜலம் அநேக கால்வாய்களின் மூலமாய் மேற் சொன்ன 15 ஏறிகளிலும் வந்து விழுகின்றது. இவ்விதமாய் கால்வெட்டி எடுத்திருக்கும் கால்வாய்களின்மூலமாய் வரும் ஜலமாகையால் அதற்குத் தீர்வை ஜாஸ்தி வசூல் செய்வதற்கு கவர்ன்மென்டாருக்கு பாத்தியதை யுண்டா இல்லையா? என்பதுதான் இந்த கேசில் முக்கியமாய் கவனிக்க வேண்டிய அம்சம் இந்த அம்சத்தைப் பற்றி பூராயும் அறிந்துக்கொள்ள வேண்டுமானால் மதராஸ் ஆக்ட் 7 of 1865-ல் செய்யப் பட்டிருக்கும் நிபந்தனைகளைப்பார்க்கவும். இந்த நிபந்தனைகள் இன்னின்னதென்று மேலே மூன்று காலங்களாக கண்டிருக்கிறோமல்லவா அவைகளைத் தான் இப்பொழுது முக்கியமாய் கவனிக்க வேண்டியது. இந்த மூன்று நிபந்தனைகளை ஒவ்வொன்றாய் தனித்தனியே வரிசைக்கிரமமாய் கவனிப்போம்.

நிபந்தனையைப் பற்றி சப் கோர்ட்டார் வாதித்து பேசாவிடினும் இவ்விடம் ஹை கோர்ட்டில் மேல் சொன்ன முதல் நிபந்தனையை மாத்திரம் வற்புறுத்தி தர்க்கித்து வாதிக்கிறார்கள். சப்கோர்ட்டார் மேலே சொன்ன மூன்றாவது நிபந்தனையை மாத்திரம் தீர்க்கயோசித்து கவனித்தவராய் தெரிய வருகிறது. கடைசியாய் அவருடைய தீர்மானம் யாதெனில் வாதிக்கும கவர்ன்மென்டாருக்கும் தீர்வை கிடையாதென்று தாத்பரியம் கொள்ளும்படியான ஒப்பந்தம் இருந்ததாக கண்டு பாய்ச்சிக்கொண்ட ஜலம் சர்க்கார் ஜலமல்லவென்றும் தீர்மானிக்காமல் வாதிக்கு தாவாப்படி டிக்ரி கொடுத்தார். பிரதமத்தில் ஹைகோர்ட்டார். முதல் நிபந்தனையை முக்கியமாய் கவனித்து கவான்மென்டாருக்கு அநுகூலமாய் தான் தீர்மானித்தார்கள். மேலே சொன்ன கறுப்பநதி என்னும் ஆறு இரண்டு ஓடைகளினால் உண்டாகிறதென்றும் அந்த ஓடைகளில் ஒன்று குளிரதி என்னும் ஓடை கவர்ன்மென்டாருக்குச் சொந்தமான குன்றுகளிலிருந்து உற்பத்தி யாகின்றது இன்னொன்று 'அருடிதலை' என்னும் ஓடை வைரவன் குலம் மிட்டாவைச் சேர்ந்த குன்றுகளிலிருந்து உற்பத்தி யாகின்றது. இநத இரண்டு ஓடைகளிலும் ஜலம் சமபாகமாய்த்தான் ஓடுகின்றன. இந்த இரண்டு ஓடைகளும் எவ்விடத்தில் சந்திக்கின்றதோ அந்த இடத்திலிருந்து அதற்கு கருப்பநதி என்று பெயர்.

அந்த கறுப்பநதி என்னும் ஆறு ஓர் புறத்தில் கவர்மென்டாருடைய நிலங்கள் ஓரமாயும் இன்னொரு புறத்தில் மிட்டாதாரருடைய நிலங்களின் ஓரமாயும் மத்தியில் இரண்டு மயில் தூரம் ஓர் நெட்டாய் ஓடுகின்றது. அவ்விடத்தில் அணைக்கட்டு கட்டி 'பாப்பான்கால்' என்னும் கால்வாய் மூலமாய் ஜலம் பாய்கின்றது. இந்த 'பாப்பான் கால்வாய்' என்னும் கால்வாயும் ஓர் அறைமயில் தூரத்திர்கு ஒரே நெட்டாய் ஒரு தரப்பில் கவர்ன்மென்டார் நிலங்களின் ஓரமாயும் இன்னொரு தரப்பில் மிட்டதாரர் நிலங்களின் ஓரமாயும் மத்தியில் ஓடுகின்றது அதற்குப் பின் அதுகொஞ்ச தூரம் கவர்ன்மென்டார் நிலங்களின் பேரிலும் சொற்பதூரம் மிட்டாதார்நிலங்களின் மீதும் ஓடுகின்றது. ஆனால் விசேஷமாய் மிட்டா நிலங்களின்மீது தான் ஓடுகிறதென்று கக்ஷிதார் உபயத்திராளும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். இந்த பாப்பான் வால்' என்னும் கால்வாயிலிருந்து அனேக உபகால்காய்கள் பிறிந்து போய் மேலே சொன்ன தாவா 15 குளங்களுக்கும் பாய்கின்றது. அந்த 15 ஏறிகளின் கீழிருக்கும் மிட்டா நிலங்களுக்காகதான் மேலே சொன்ன தீர்வை ஜாஸ்தி வசூல் செய்யப் பட்டதாம். சொற்ப நிலங்களுக்கு கால்வாய்களின் ஜலமே பாய்கின்றது. கடைசியாய் ஹைகோர்ட்டார் வாதியினிட மிருந்து வசூல் செய்த தீர்வை ஜாஸ்தி மொத்தத்தை வாபஸ் செய்யும்படிக்கு செய்த தீர்மானம் சரியென்று தீர்மானித்து இஞ்ஜங்க்ஷன் உத்தரவை எடுத்துவிட்டார்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பாகம் 357.

ACT No. XVI of 1910.

1910-ம்௵த்து 16-வது ஆக்ட்.

AN ACT TO PROVIDE FOR CERTAIN MATTERS IN CONNECTION WITH THE TAKING OF THE CENSUS.

ஸென்ஸஸ் (கானிஷ்மாரி கணக்கு) எடுப்பதைச்சேர்ந்த சில விஷயங்களைக் குறித்து நிபந்தனை ஏற்படுத்துவதற்கான ஆக்ட்.

—:o:—

1911-ம் ௵த்திலே ப்ரிடிஷ் இந்தியாவில் ஸென்ஸஸ் (கானிஷ்மாரி கணக்கு) எடுக்கும்படி தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடியாலும், அப்படிப்பட்ட ஸென்ஸஸ் எடுப்பதைச் சேர்ந்த சில விஷயங்களைக்குறித்து நிபந்தனை ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப் படுகிறதென்னவென்றால்:—

சுருக்கமான பெயரும் வியாபகமும்.

1. (1) இந்த ஆக்டை, 1910ம்௵த்திய இந்து தேசத்து ஸென்ஸஸ் ஆக்ட் என்று சொல்லலாம்.

(2) ப்ரிடிஷ் பெலுசிஸ்டான், ஸந்தால் பர்கானஸ், ஸ்பிடி பர்கானா இவைகளடங்க ப்ரிடிஷ் இந்தியா முழுமைக்கும் இது வியாபிகிறது.

ஸென்ஸஸ் ஆபிஸர்களை நியமிப்பது.

2. (1) குறித்த யாதொரு-பிரதேச விஸ்தீரணத்திற்குள் ஸென்ஸஸ் எடுப்பதற்காகிலும் அதற்கு உதவிசெய்வதற்காகிலும் அதைப் பற்றி மேல் விசாரணை பண்ணுவதற்காகிலும் பிரதேச கவர்ன்மென்டார் யாதொரு நபரை நியமிக்கலாம்.

(2) அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர்கள் ஸென்ஸஸ் ஆபிஸர்களென்று சொல்லப்படுவார்கள்.

(3) பிரதேச கவர்ன்மென்டார் ஸென்ஸஸ் ஆபிஸர்களை நியமிப்பதற்காக இந்தப் பிரிவினால் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைத் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற அதிகாரிக்குக் கொடுக்கலாம்.

ஸென்ஸஸ் ஆபிஸர்களை நியமித்ததற்கு ருஜுவும், அவர்கள் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களென்னும் நிலைமையிலிருப்பதும்.

3. (1) யாதொரு பிரதேச விஸ்தீரணத்திற்கு ஸென்ஸஸ் ஆபிஸராக யாதொரு நபர் கிரமமாய் நியமிக்கப்பட்டிருக்கிறாரென்று எழுதி, இது விஷயத்தில் பிரதேச கவர்ன்மென்டாரால் அதிகாரங் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தர் கையெழுத்து செய்திருக்கிற உறுதிமொழிப் பத்திரிகையானது அப்படி நேமகஞ் செய்திருப்பதற்கு முடிவான ருஜுவாகும்.

(2) எல்லா ஸென்ஸஸ் ஆபிஸர்களும் இந்தியன் பினல் கோடின் தாற்பரியப்படி ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களாக எண்ணப்படுவார்கள்.

சில விஷயங்களில் ஸென்ஸஸ் ஆபிஸர்களுடைய அலுவல்கள் இன்னபடி நிறைவே[ற்றப்படுமென்பது].

4. (1) (a) மஹாராஜா அவர்களுடைய இராணுவம் அல்லது மரக்கலச் சேனையாவது மஹாராஜா அவர்களுடைய இந்தியன் மெரீன் ஸர்வீஸ் என்னும் சமுத்திரச் சேவகத்தையாவது சேர்ந்த யாதொரு தொகுப்பான ஜனங்களை யாகிலும் யாதொரு போர் மரக்கலத்தையாகிலும் விசாரணை செய்துகொண்டிருக்கிற ஒவ்வொரு உத்தியோகஸ்தரும்,

(b) யாதொரு மரக்கலத்தைத் தம் விசாரணையிலாவது, அதிகாரத்திற்குள்ளாவது வைத்துக்கொண்டிருக்கிற (பைலட் என்னும் ஆறுகாட்டி அல்லது ஹார்பர் மாஸ்டர் நீங்கலாக) பிரதி நபரும்,

(c) பைத்தியக்காரர் வைத்திய சாலையையாவது ஆஸ்பத்திரியையாவது ஏழை ஜனத் தொழிற்சாலையையாவது சிறைச்சாலையையாவது குற்றவாளிகளைச் சீர்திருத்துஞ் சாலையையாவது தருமச் சாலையையாவது மத சம்பந்தமான சாலையையாவது கல்விச் சாலையையாவது தம் விசாரணையில் வைத்துக் கொண்டிருக்கிற பிரதி நபரும்,

(d) வழிப்போக்கர் இறங்கும்படியான யாதொரு வண்டிப்பேட்டை (ஸேரய்) சத்திரம்-போஜனவீடு-விடுதிவீடு-(எமிக்ரேஷன் டெபோ) குடி யேறுகிறவர்களுக்குச் சாலை அல்லது பலர் ஒன்றுகூடிச் செலவு செய்தனுபவிக்கும் க்ளப் என்னும் பொது ஸ்தானத்தை வைத்துக்கொண் டிருப்பவராகவாவது அப்படிப்பட்டதற்குக் காரியதரிசியாகவாவது அப்படிப்பட்டதை நிர்வாகஞ் செய்பவராகவாவதிருக்கிற பிரதி நபரும்,

(e) அசையாப்பொருளின் அனுபோகதாராகிய ஒவ்வொரு நபரும், ரெயில்வே அல்லது வேறே வர்த்தகம் அல்லது கைத்தொழிலுக் குறிய வேலையின் மானேஜர் அல்லது உத்தியோகஸ்தராகிய ஒவ்வொருவரும், ஸென்ஸஸ் எடுக்குங் காலத்தில், தம் கையின்கீழ் இருபது பெயருக்குக் குறையாமல் நபர்களை வேலைக்கு அமர்த்திக்கொண் டிருந்தாலும் அவர்கள் அந்த அசையாப்பொருளில் வசித்துக்கொண் டிருந்தாலும் அப்படிப்பட்ட பிரதி நபரும்—

டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாலாவது, இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மென்டார் நியமிக்கிற உத்தியோகஸ்தராலாவது உத்தரவு செய்யப்பட்டால், ஸென்ஸஸ் எடுக்குங்காலத்தில் தம்முடைய விசாரணையிலாகிலும் அதிகாரத்திற்குள்ளாகிலுமிருக்கிற நபர்கள் சம்பந்தமாகவேனும், அப்படிப்பட்ட அசையாப்பொருளில் வசிக்கிற நபர்கள் சம்பந்தமாகவேனும், ஸென்ஸஸ் ஆபிஸருடைய அலுவல்களில் எவைகளைச் செய்யும்படி அப்படிப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டாவது உத்தியோகஸ்தராவது எழுத்து மூலமான உத்தரவைக்கொண்டு கட்டளையிடுகிறாரோ அவைகளைச் செய்யவேண்டும்.

(2) இந்த ஆக்டிலே ஸென்ஸஸ் ஆபிஸர்களைக் குறித்த எல்லா நிபந்தனைகளும் பிரயோகிக்கப் படக்கூடியவரையில், இந்தப் பிரிவின் பிரகாரம் அப்படிப்பட்ட அலுவல்களை நிறைவேற்றுகையில் சகல நபர்களுக்கும் பிரயோகப் படவேண்டும்; எந்த நபராவது இந்தப் பிரிவின்படி நிறைவேற்ற வேண்டுமென்று தமக்கு உத்தரவு செய்யப்படுகிற யாதொரு அலுவலை நிறைவேற்ற மாட்டேனென்று நிராகரித்தாலும் நிறைவேற்ற அசட்டை பண்ணினாலும், அவர் இந்தியன் பினல் கோட் 187-வது பிரிவின்படி குற்றஞ் செய்தவராக எண்ணப்படுவார்.

உதவி செய்யும்படி சில நபர்களைக் கேட்க டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரம்.

5. (1) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது, பிரதேச கவர்ன்மென்டார் யாதொரு பிரதேச விஸ்தீரணத்திற்கென்று இது விஷயத்தில் நியமிக்கிற உத்தியோகஸ்தராவது,—

(a) நிலத்திற்குச் சொந்தக்காரர்கள்—நிலத்தை மானியமாக அனுபவிக்கிறவர்கள்—சில ஷரத்துகளின்மேல் நிலத்தை வைத்துக்கொ

கொண்டிருக்கிறவர்கள்—பயிரிடுங் குடிகள்—1905-ம்ஸ்ரூத்திய பர்மா மீன்பிடி துறைகளாக்டின் படிககாகிலும், அப்பர் பர்மாவைச் சேர்ந்த நிலத்தையும் வருமானத்தையுங் குறித்த 1889-ம்ஸ்ரூத்திய ரெகுலேஷன் படிக்காகிலும் பூமி நிஸ்தியைச் சாட்டிக்கொண்டவர்கள், மீன் பிடி துறைகளைக் குத்தகைக்குப் பெற்றுக்கொண்டவர்கள் ஆகிய சகலமானவர்களையும் அல்லது அவர்களுடைய ஏஜென்டுகளென்னும் காரியஸ்தர்களையும்,

(b) (சென்னபட்டணத்து) 1894-ம்ஸ்ரூத்திய ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராமவூழிய ஆக்டில் விவரித்திருக்கிறபடி பூஸ்திதிகளிலுள்ள சகல கிராம உத்தியோகஸ்தர்களையும், ஊழியக்காரர்களையும்,

(c) 1870-ம்ஸ்ரூத்திய (பங்காளத்து) கிராம சௌகீதார்களைபற்றிய ஆக்டின்படியாவது, 1883-ம்ஸ்ரூத்திய வில்ஹெட் காச்சார் கிராம போலீஸ் ரெகுலேஷன்படியாவது பஞ்சாயத்தாராக நியமிக்கப்பட்ட சகலமானவர்களையும், 1887-ம்ஸ்ரூத்திய (பங்காளத்து) சோடா நாக்பூர் கிராம போலீஸ் ஆக்டின்படி நியமிக்கப்பட்ட சகல கொட்வால்களையும் சகல ஸர்க்கில் தாசில்தாரர்களையும், ஐக்கிய மாகாணங்களைச சேர்ந்த குவான் டிவிழனி லுள்ள சகல கிராமப் பெரியதனக்கா ரர்களையும்.

ஸென்ஸஸ் எடுக்குங்காலத்திலே, சந்தர்ப்பத்திற் கேற்றபடி, அப்படிப்பட்ட சொந்தக்காரர்கள் - அனுபோகதாரர்கள்-நிலத்தை வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் - பயிரிடுங்குடிகள் - சாட்டிக் கொண்டவர்கள் ஆகிய இவர்களுடைய நிலங்களிலேயோ, அல்லது அப்படிப் பட்ட மீன்பிடி துறைகளின் எல்லைகளுக்குள்ளேயோ, அப்படிப்பட்ட கிராம உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களுமாவது பஞ்சாயத்தாரர்களாவதுகொட்வால்களாவது ஸர்க்கில் தாசில்தாரர்களாவது கிராமப் பெரியதனக்காரர்களாவது நியமிக்கப்படுகிற கிராமங்களிலேயோ அல்லது வேறே விஸ்தீர்ணங்களிலேயோ இருக்கிற நபர்களின் ஸென்ஸஸ் எடுக்கும்பொருட்டுத் தனக்கு வேண்டிய உதவி செய்யும்படி எழுத்து மூலமான உத்தரவைக் கொண்டு கட்டளை யிடலாம் : அந்த உத்தரவானது - சந்தர்ப்பத்திற்கேற்றபடி, அவருடைய டிஸ்டிரிக்ட் அல்லது அப்படிப்பட்ட பிரதேச விஸ்தீரணத்தின் எல்லைகள் முழுமைக்கும் செலாவணியாகும்

2. அப்படிப்பட்ட உத்தரவிலே, வேண்டியிருக்கிற உதவி இப்படிப்பட்டதென்று கண்டெழுதியிருக்கவெண்டும் ; அப்படிப்பட்ட சொந்தக்காரர்கள் அனுபோகதாரர்கள்-நிலத்தைவைத்துக்கொண்டிருக்கிறவர்கள் பயிரிடுங்குடிகள்-சாட்டிக்கொண்டவர்கள் - குத்தகைக்குப் பெற்றுக்கொண்டவர்கள் அல்லது அவர்களுடைய காரியஸ்தர்களும், அப்படிப்பட்ட கிராம உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும், பஞ்சாயதாரும், காட்வால்களும் ஸர்கில் தாசில்தார்களும் கிராமப் பெரியதனக்காரர்களும். அந்த உத்தரவின்படி நடக்கக் கடமைப்பட்டவராவர்கள்.

ஸென்ஸஸ் ஆபிசர்கள் கேள்விகள் கேட்பது.

ஒவ்வொரு ஸென்ஸஸ் ஆபிசரும் தாம் நியமிக்கப்பட்டிருக்கிற பிரதேச விஸ்தீரண எல்லைக்குள்ளிருக்கும் சகலமானவர்களையும், இதுவிஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரால் பிரப்பிக்கப்பட்டு ஸர்க்கார் கெஜெட்டில் பிரசித்தஞ் செய்யப்படுகிற கற்பனைகளின் பிரகாரம் தாம் கேட்கும்படி உத்தரவாயிருக்கிற கேள்விகளையெல்லாம் கேட்கலாம்.

கேள்விகளுக்குஉத்தரவு சொல்லக் கடமைப் பட்டிருப்பது.

7. அடுத்து முந்திய பிரிவின்படி யாதொரு கேள்வி கேட்கப் படுகிற ஒவ்வொருவரும் தாம் நன்றாய் அப்படிப்பட்ட கேள்விக்கு உத்தரவு சொல்லச் சட்டப்படி கடமைப் பட்டவராவார் :

ஆனால், எவரும் தம்முடைய குடும்பத்திலுள்ள யாதொரு பெண்பிள்ளையின் பெயரைச் சொல்லக் கடமைப்பட்டவரல்ல: மேலும் யாதொரு ஸ்திரீயானவள் - உயிரோடாவது இறந்து போயாவதிருக்கிற தன் புருஷனுடைய பெயரையாகிலும், வேறே யாருடைய பெயரைத் தான் சொல்லுவது வழக்கத்துக்கு விரோதமோ அவருடைய பெயரையாகிலும் சொல்லக் கடமைப் பட்டவளல்ல.

(வீடு முதலிய வற்றில்) வாசஞ் செய்கிறவர் ஸென்ஸஸ் ஆபீஸர்களை உள்ளே விடுவதும், இலக்கங்கள் போடவொட்டுவதும்.

8. யாதொரு வீட்டிலாவது அடைப்படைத்திருக்கும் இடத்திற்குள்ளாவது மரக் கலத்திலாவது வேறே ஸ்தானத்திலாவது வாசஞ் செய்கிற ஒவ்வொரு நபரும், ஸென்ஸஸ் காரியங்களின் பொருட்டு ஸென்ஸஸ் ஆபீஸர்கள் எங்கெங்கேஉள்ளே வரவேண்டுமென்கிறார்களோ அந்தப் பிரகாரம், தேசாசாரத்தை யனுசரித்து நியாயமாயிருக்கிறடி அவர்களை உள்ளே விடவேண்டும் ; மேலும், ஸென்ஸஸ் காரியங்களுக்காக அவசியமாயிருக்கும் எழுத்துக்களையாவது அடையாளங்களையாவது இலக்கங்களையாவது அப்படிப்பட்ட இடத்திலே வர்ணத்தாலெழுதவாகிலும் மற்றப்படி காட்டி வைக்க வாகிலும் அந்த ஆபீஸர்களுக்கு அனுமதி கொடுக்கவேண்டும்,

வாசஞ்செய்கிறவர் அல்லது மானேஜர் ஷெட்யூலில் எழுதுவது.

9. (1) இது விஷயத்தில் பிரதேசகவர்ன்மெண்டார் பிறப்பிக்கக் கூடிய உத்தரவுகளுக்குட் பட்டு, எந்த ஸென்ஸஸ் ஆபீசராகிலும்.—

(a) தாம் எதற்காக நியமிக்கப் பட்டிருக்கிறாரோ அந்தப்பிரதேச விஸ்தீரணத்துக்குள் யாதொரு குடி யிருப்பு வீட்டிலாவது,

(b) வர்த்தக சம்பந்தமான அல்லது உத்தியோகஸ்தர் எவரேனும் செஸன்ஸஸ் எடுக்கப்படும் காலத்தில் இருபது நபருக்குக் குறையாமல் தமக்குக்கீழ் வேலைக்கு அமர்த்திக்கொண்டிருந்தால் அவரிடத்திலாவது,

அப்படிப்பட்ட வீடு அல்லது அதில் குறித்த யாதொரு பாகத்தில் வாசஞ் செய்கிற நபராயினும் அப்படிப்பட்ட மானேஜர் அல்லது உத்தியோகஸ்தராயினும் - ஸென்ஸஸ் எடுக்கப்படுங் காலத்தில் அப்படிப்பட்ட வீடு அல்லது பாகத்திலே வசிக்கிற நபர்களைக் குறித்தோ அல்லது அப்படிப்பட்ட மானேஜர் அல்லது உத்தியோகஸ்தரின் கீழ் வேலைக்கமர்ந்திருக்கும் நபர்களை குறித்தோ பிரதேச கவர்ன்மெண்டார் உத்தரவு செய்கிற விவரங்களைக் கண்டெழுதும் பொருட்டு ஒரு ஷெட்யூலைக் கொடுக்கலாம் அல்லது கொடுப்பிக்கலாம்.

(2) அப்படிப்பட்ட யாதொரு ஷெட்டியூல் அவ்வாறு கொடுக்கப் படுமாகில், அது சம்பந்தமான வீட்டிலாவது வீட்டின் பாகத்திலாவது வாசஞ்செய்கிறவராயினும், அது யாரிடத்தில் கொடுக்கப் படுகிறதோ அந்த மானேஜர் அல்லது உத்தியோகஸ்தராகிலும், மேற் சொல்லிய காலத்தில் சந்தர்ப்பத்திற்கேற்றபடி அப்படிப்பட்ட வீட்டிலோ அல்லது வீட்டின் பாகத்திலோ வசிக்கிற நபர்களை யேனும் மேற்படி மானேஜர் அல்லது உத்தியோகஸ்தரின் கீழ் வேலையில் அமர்ந்திருக்கும் நபர்களையேனும் குறித்தமட்டில் தாம் நன்றாய் அறிந்தாவது நம்

பியாவதிருக்கிறபடி பூர்த்தியாய் அதில் எழுதியாகிலும் எழுதிவைத்தாகிலும் தன்பெயரால் கையெழுத்து பண்ணவேண்டும்; மேலும், அப்படி எழுதிக் கையெழுத்து செய்திருக்கிற ஷெட்யூலை ஸென்ஸஸ் ஆபிஸரிடத்திலாவது அவர் உத்தரவு செய்கிற யாதொரு நபரிடத்திலாவது ஒப்பிரதுவிட வேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்டால் அந்தப்படியே ஒப்புவித்துவிடவேண்டும்.

தண்டனைகள்.

10. அடியிற்கண்ட விஷயங்களி லெதிலாவது, எனவே.—

(a) யாதொரு ஸென்ஸஸ் ஆபிசராவது ஸென்ஸஸ் ஆபிசராயிருக்கும்படி நியமிக்கப்பட்ட நபராவது சென்ஸஸ் எடுக்கும் விஷயத்தில் சட்டப்படி உதவி செய்ய வேண்டியவராயிருக்கிறவராவது தமக்கு விதிக்கப்பட்டிருக்கும் யாதொரு வேலையைச் செய்து முடிப்பதிலாகினும், இந்த ஆக்டின்படிக்கோ அல்லது அதையனுசரித்துக் கிரமமாய்ச் செய்யப்பட்ட யாதொரு விதியின் படிக்கோ தமக்குப் பிறப்பிக்கப் பட்ட யாதொரு உத்தரவின்படி நடப்பதிலாயினும் நியாயமான அளவுக்கு ஜாக்கிரதையாயிருப்பதில்லை யென்று நிராகரித்தாலும் அசட்டையாயிருந்தாலும்,

(b) யாதோரு ஸென்ஸஸ் ஆபிஸர் மனப்பூர்வகமாய் எவ்வித தூர்க்கேள்வி அல்லது தகாத கேள்வி கேட்டாலும், தெரிந்தும் எவ்வித தப்பான கணக்கு கொடுத்தாலும்,

(c) யாதொரு நபர் தப்பை ஸென்ஸஸ் ஆபிசர் கேட்ட யாதொரு கேள்விக்குத் தாம் நன்றாய் அறிந்தாவது நம்பியாவதிருக்கிற மட்டில் பூர்த்தியாய் 7-வது பிரிவின்படி உததரவு சொல்லத் தாம் சட்டப் பிரகாரம் கடமைப் பட்டிருந்தும் அப்படி உத்தரவு சொல்லமாட்டேனென்று நிராகரித்தாலும்,

(d) யாதொரு நபர் தாம் வசித்துக்கொண்டிரிக்கிற யாதொரு வீடு-அடைப்படைத்திருக்கும்-மாக்கலம் அல்லது வேறே ஸ்தானத்திற்குள் 8-வது பிரிவின்படி சென்ஸஸ் ஆபிசர் நியாயமான அளவுக்குப் போக வேண்டியதாயிருந்தும் அவ்வாறு போகவொட்ட மாட்டேனென்று நிராகரித்தாலும்,

(e) யாதொரு நபர் சென்ஸஸ் காரியங்களுக்காக வர்ணத்தாலெழுதப்பட்டாவது மற்றபடி காட்டிவைக்கப்பட்டாவது உள்ள எவ்வித எழுத்துக்களையாயினும் அடையாளங்களையாயினும் இலக்கங்களையாயினும் 1911-ம்ஸ்ரூ மார்ச்சுமீ 31உக்கு முன் எடுத்துவிட்டாலும் கலைத்தாலும் திருத்தினாலும் அழித்தாலும்,

(f) குடியிருக்கும் ஒரு வீட்டிலாவது அதைச் சேர்ந்த பாகத்திலாவது வசித்துக் கொண்டிருக்கும் யாதொரு அப்படிப்பட்ட நபருக்கு ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் தண்டனை விதிக்கப்படும்.

பிராதுகளை விசாரிக்க அதிகாரம்.

11. (1) இந்த ஆக்டின்படி கொண்டுவரப்படும் பிராதுகளை இன்ன வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குமுன் கொண்டு வரலாமென்று பிரதேச கவர்ன்மெண்டார் ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பர மூலமாய் தீர்மானிக்கலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி விளம்பரம் பிரசுரஞ் செய்யப்படாதிருந்தாலும் பிரசுரஞ் செய்யப்படுகிற வரையிலும், இந்த ஆக்டின்படிக்கான எவ்வாப் பிராதுகளையும் கல்கத்தா-சென்னப்பட்டணம்-பம்பாய் இந்தப் பட்டணங்களிலே ஒரு ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகவும் கொண்டுவரவேண்டும்.

(3) பிரதேச கவர்ன்மென்டாருடைய அனுமதியையாவது அவர்களால் இது விஷயத்தில் அதிகாரங் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தருடைய அனுமதியையாவது முன்னதாகப் பெற்றுக்கொள்ளாமல் இந்த ஆக்டின்படிக்கான எவ்வித பிராதையும் கொண்டுவரக்கூடாது.

ஸென்ஸஸ் தஸ்தாவேஜுகள் பார்க்கத் தக்கவையுமல்ல, சில நடவடிக்கைகளி லே சாட்சியமாகக் கொள்ளப்படத் தக்கவையுமல்ல என்பது.

12. யாதொரு ஸென்ஸஸ் ஆபிசர் அந்த ஹோதாவிலே தம்முடைய அலுவலைச் செய்துகொண்டு வருகையில் தாம் வைத்த யாதொரு புஸ்தகத்தையாவது ரெஜிஸ்டரையாவது தஸ்தவேஜையாவது, 9-வது பிரிவின்படி ஒப்பிக்கப்பட்ட யாதொரு ஷெட்யூலையாவது பார்வையிட எவருக்கும் சுதந்தரம் கிடையாது மேலும், 1872 ம்ஸ்ரூத்திய இந்து தேசத்து ஆக்டில் இதற்கு விரோதமாய் என்ன சொல்லி யிருந்தபோதிலும் பாதகமில்லாமல், அப்படிப்பட்ட யாதொரு புஸ்தகத்திலாகிலும் ரெஜிஸ்டரிலாகிலும் தஸ்தவேஜியிலாகிலும் ஷெட்யூலிலாகிலும் இருக்கிற எந்தப் பதிவும்-யாதொரு ஸிவில் விவகாரத்திலாவது 1898-ம்ஸ்ரூத்திய க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் 12-வது அல்லது 36-வது அத்தியாயத்தின்படி உண்டான யாதொரு விவகாரத்திலாவது சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதல்ல.

முனிஸி பாலிடிகளில் ஸென்ஸஸ் எடுக்கும் வித்தத்தைக் குறித்து ஏற்பட்டிருக்கும் பிரதேச சட்ட திட்டங்களும் விதிகளும் சிறிதுகாலம் வரையில் செலாவணியாகாமலிருப்பது.

13. யாதொரு முனிஸிபாலிடியில் ஸென்ஸஸ் எடுக்க வேண்டிய விதத்தைக் குறித்து ஏற்பாடாயிருக்கும் யாதொரு சட்ட திட்டத்திலாவது விதியிலாவது என்ன சொல்லி யிருந்தபோதிலும் பாதகமில்லாமல், 1911-ம்ஸ்ரூத்திலே ப்ரிடிஷ் இந்தியாவின் ஸென்ஸஸ் எடுப்பதற் நியமிக்கப்படுங் காலத்தில், முனிஸிபல் அதிகாரிகள்-இந்த ஆக்டினால் அதிகாரம் கொடுக்கப்படிருக்கிற யாதொரு மாதிரியாக முழுமையுமாவது ஒரு பாகத்துக்காவது அந்த முனிஸிபாலிடியின் ஸென்ஸஸ் எடுப்பிக்கலாம்.

செலவுகளைக் குறித்து அதிகாரம்.

14. முனிஸிபல் அல்லது பிரதேச அல்லது கிராம நிதிகளைக் குறித்து யாதொரு சட்ட திட்டத்திலாவது விதியிலாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட யாதொரு காரியத்திற்காக நேரிட்ட செலவு முழுவதையுமாவது அதைச்சேர்ந்த யாதொரு பாகத்தையாவது எதற்குள்ளாக மேற்படி செலவு நேரிட்டதோ அந்த விஸ்தீர்ணத்திற்காக ஏற்பட்ட யாதொரு முனிஸிபல் அல்லது பிரதேச அல்லது கிராம நிதிக்கு ஏற்றலாமென்று பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளை யிடலாம்.

விதிகள் செய்ய அதிகாரம்.

15. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இந்த ஆக்டின் காரியங்களை நிறைவேற்றும் பொருட்டு விதிகள் ஏற்படுத்தலாம்.

(2) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின் பொதுத் தன்மைக்குப் பாதக மில்லாமலும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள்—

(a) ஸென்ஸஸ் ஆபிஸர்களையும், ஸென்ஸஸ் ஆபிஸர்களின் அலுவல்களி லெதையாவது செய்யவோ ஸென்ஸஸ்

எடுக்கும் விஷயத்தில் உதவி புரியவோ நபர்களையும் நியமிப்பதற்காகவும், அப்படிப்பட்ட ஆபிஸர்களுக்கும் நபர்களுக்கும் பிறப்பிக்கவேண்டிய பொதுவான கற்பனைகளுக்காகவும்,

(b) ரெயில்வேக்களில் உத்தியோகமாயிருக்கும் நபர்களையும் அவர்களுடைய குடும்பத்தாரையும், ஜனங்களுக்கே யாருக்காக விசேஷ நிபந்தனை ஏற்படுத்துவது அவசியமாகவாவது யுக்தமாகவாவது இருக்கலாமோ அப்படிப்பட்ட இதா வகுப்பாரையும் கணக்கிடுவதற்காகவும்,

(c) ஸென்ஸஸ் எடுக்கும்போது இராத்திரியில் பிரயாணஞ் செய்கிறவர்களைக் கணக்கிடுவதற்காகவும்,

(3) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இந்தப் பிரிவினால் தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்கள் யாவற்றையுமாவது அவைகளி லெதையாவது யாதொரு பிரதேச கவர்ன்மென்டாரும் தம்மால் பரிபாலிக்கப்படும் ராஜ்ஜியங்கள் விஷயமாகச் செலுத்தலாமென்று பொதுவான உத்தரவைக்கொண்டோ அல்லது பிரத்தியேகமான உத்தரவைக் கொண்டோ கட்டளையிடலாம்.

General News.

பொது வர்த்தமானங்கள்.

ENGLAND TO INDIA

இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு

i. e.

அதாவது

SEVEN DAYS FROM LONDON TO BOMBAY.

சீமையிலிருந்து பம்பாம் வந்து சேருவதற்கு ஏழே ஏழுநாள் பிரயாணம்.

——:o:——

லண்டன் என்று சொல்லப்படும் சீர்மையிலிருந்து இந்தியாவிலுள்ள பம்பாய் பட்டணத்திற்கு ஏழே ஏழு தினத்தில் வந்து சேருவதற்கு அநுகூலமாம் பெர்ஷியா (Persia) தேசத்தின் குறுக்காய் ஓர் ரயில்பாதை போடுவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமாய் இந்த ரயில்பாதை ஏற்படுமாகில் இங்கிலாந்திலிருந்து முன் 14 நாளில் பம்பாய் பட்டணத்திற்கு வருவது இப்போது ஏழு நாளில் வந்து சேரக்கூடும். முன்னமே தலை ஒன்றுக்கு 60 பவுண்ட் அதாவது ஏறக்குறைய ரூபாய் 1000 செலவு பிடித்துக்கொண்டிருந்தது. இவ்விதமான குறுக்கு வழியாய் வருவதினால் தலை ஒன்றுக்கு 40-பவுண்ட், அதாவது ஏறக்குறைய ரூபாய் 700 தான் பிடிக்குமாம். பெர்ஷியாவின் மூலமாய் போடுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் ரயில் பாதையின் கிளைகள் பெர்ஷியா குடாக்கடலிலும் (Persian Gulf) டிஹீரான் (Teheran) பட்டணத்திலும் வந்து முடியுமாம். ருஷியா தேசத்து ரயில் பாதையை இந்தியா தேசத்து ரயில் பாதைகளுடன் கலப்பதென்றால் ஏறக்குறைய 1600 மயில்வயின் போடவேண்டியிருக்குமென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ரயில்பாதை போடுவதற்கு அநுகூலப்படுமோ படாதோ என்றும் யோசிக்கவும் படுகிறது. ஆனால் இவ்விதமான புதிய ரயில் பாதையை ஏற்படுத்தி இங்கிலாந்திலிருந்து அதாவது சீர்மையிலிருந்து ஏழே ஏழுதினப் பிரயாணத்தில் பம்பாய் சேரக்கூடிய தென்பதை நோக்கும்பட்சத்தில் இந்த ஏற்பாடு யாதொரு ஆக்ஷேபமுமின்றி நடந்தேறமாகில் ஜனங்களுக்கு மிக்க சவுக்கியத்தையும் திரவிய லாபத்தையும் உண்டுபண்ணி மன உல்லாசத்தையும் தருமென்பதற்குச் சந்தேகமில்லை.

LORD CURZON'S STATUE.

லார்ட் கர்ஜான் பிரபுவின் உருவச்சிலை.

லார்ட் கர்ஜான் பிரபுவின் உருவச்சிலை ஒன்று கல்கத்தாவில் வைப்பதற்காக மி-ர். பிராம்டன் என்பவர் செய்கிறாராம். அது ஏறக்குறைய செய்து முடிந்துவிட்டதாம். கர்ஜான் பிரபுவின் இன்னொரு உருவச்சிலை கல்கத்தா விக்டோரியா மிமோரியல் ஹாலில் வைப்பதற்காக உத்தரவாயிருக்கிறதாம். மி-ர். போமெராய் என்பவரை அந்த சிலையை செய்யும்படிக்கு நேமிக்கப்பட்டிருக்கிறதாய் தெரிய வருகிறது. இந்த இரண்டாவது சிலையை கொடுத்தவர் பாவநகர் ராஜ்ஜியத்தின் திவான் மி-ர். பட்டாணி என்பவராம்.

THEFT OF STAMPS.

முத்திரை சீட்டுகளென்று சொல்லப்படும் ஸ்டாம்புகளைத் திருடின கேசு.

கல்கத்தாவிலிருந்து பாப்ளு என்னும் பட்டணத்திற்கு ஸ்டாம்புகளைக்கொண்டு போகையில் வழியில் கவர்ன்மென்டாருடைய சில ஸ்டாம்புகளைச்சொற்ப காலத்திற்கு முன் திருடிக்கொண்டுபோய் விட்ட குற்றவாளி அல்லது குற்றவாளிகளைக் கண்டு பிடித்து சமாச்சாரம் தெரிவிப்பவர்களுக்கு ரூ. 2000 இனும் கொடுப்பதாக பெங்கால் போலீசார் உத்தரவு செய்திருக்கிறார்கள். இன்னொரு தடவை கீழ் பெங்கால் மாகாணத்திலிருந்து கல்கத்தா பட்டணத்திற்கு கோர்ட்டு ஸ்டாம்புகளல்லாத இதர ஸ்டாம்புகளைக் கொண்டுபோகையில் ரூபாய் 2000 பெருமானமுள்ள தபால் ஸ்டாம்புகளைத் திருடிக்கொண்டு போனவனைக் கண்டுபிடித்து தெரிவிப்பவனுக்கு ரூபாய் 200 இனும் கொடுப்பதாயும் பெங்கால் போலீசில் உத்தரவா யிருக்கிறதாம்.

THE GOA EXPOSITION.

இந்தியா தேசத்திலுள்ள கோவா பட்டணத்தில் இறந்து போன செயின்ட் ஜாவியர் என்னும் மஹான்.

கோவா என்னும் பட்டணத்தில் மேற்கூறிய செயின் ஜாவியர் என்னும் மஹான் என்பவரை உள்ளடக்கம் செய்திருக்கும் ரூபத்தைக் காணுவதற்குப் பிரதிதினம் சுமார் 15,000 ஜனங்கள் மிக்க பக்தி விசுவாசத்துடன் போய் பார்த்து வருகிறார்களாம். அவருடைய தேகத்தை 10 வருஷத்திற்கு ஒரு தடவை தான் திறந்து காண்பிக்கிறதாகவும் அவருடைய தேகம் யாதொரு பழுதின்றி முதலில் வைத்தபோது எப்படி இருந்ததோ அப்படியே இன்னும் இருக்கிறதாகவும் அவருடைய தேகத்தை கத்தியால் அறுத்தால் இன்னும் உதிரம் சொறிகிறதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. யேசுகிறிஸ்து நாதரை பக்தி விஸ்வாசத்துடன் நம்பி பூஜித்து வந்தவராகிய இந்த மஹானின் எல்லோரும் ஆச்சரியக்கத்தக்க அற்புதமான சமாச்சாரத்தை கேட்க மிக்க வியப்பும் ஆனந்தத்தையும் விளைவிக்கின்றது.

THE INDIAN SANDOW.

இந்தியா தேசத்து 'சான்டோ என்னும் பலசாலி.

இந்தியன் சான்டோ என்னும் 'ராமமூர்த்தி' என்பவர் 16 குதிரைகளின் வலிவுள்ள 'மோடார் வண்டி' ஒன்று வேகமாய் ஓடிக்கொண்டிருக்கையில் ஸர்- ஜியார்ஜ் ரூஸ்-கேப்பேல் என்பவர் முன்பால் நிறுத்திவிட்டதாகவும் அந்த அற்புதமான காட்சியைக் கண்ட ஷை கெப்பெல் என்னும் பிரபுமேற் சொல்லிய ராமமூர்த்தி என்னும் சான்டோவிற்கு பெஷாவர் என்னும் ஊரில் பெரிய வியாபாரஸ்தர்களா யிருப்பவர்கள் தரப்பில் ஓர் தங்க மெடல் பரிசளித்ததாகவும் தந்தி சமாச்சாரம்

A BRAHMAN WIDOW R-e MARRIAGE.

ஓர் பிராமண விதவை மறு விவாகம் செய்துக் கொண்டது.

——:o:——

காக்கினாடா (Cocanada) என்னும் பட்டணத்தில் 1910-ம் வருஷம் டிசம்பர் மீ 3உ ஓர் வியாபாரியினிடத்தில் குமஸ்தா உத்தியோகம் செய்யும் 27வயதுள்ள நமநூரி வியக்ரேஷ்வரடு என்பவருக்கும், 16வயதுள்ள ஸ்ரீமதிகாமேஸ்வரம்மாள் என்னும் பிராமண விதவைக்கும் மறுவிவாகம் நடந்ததாகவும். அந்த விவாகத்திற்கு 'காலேஜ்' என்று சொல்லப் படும் சர்வகலா சாலைகளில் உபாத்தியாயர்களா யிருப்பவர்களும், கலெக் அந்த வித்தியாசாலைகளில் வாசிக்கும் மாணாக்கர்களும், பெர் ஆபீசு ரயிட்டர்களும் இன்னும் அநேக பெரிய மனிதர்களும் வந்திருந்து விவாகம் செய்துக் கொள்ளும் சதி புருஷாளை ஆசீர்வதித்து அவர்களுக்கு அநேக பரிசுகள் அளித்ததாகவும் தெரிய வருகிறது. அப்படி பரிசளித்தவர்களில் முக்கியமான கனதனவான்களின் பெயர் (1) ராமசந்தாபூர் ராஜா, (2) சர்வகலா சாலையில் தலைமையாயுள்ள பிரின்சிபால் வெங்கட்ரத்தினம். (3) கலம் ராமலிங்கய்ய.

Miscellancous Cases-சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

ஜட்ஜு:— மி-ர் ஜ. வாலிஸ்.........முன்பாக.

A Will Case

ஓர் உயில் சாசனத்தைப் பற்றிய கேசு.

1910ஞ௵ டிசம்பர்மீ 1உ வியாழக்கிழமையதினம் சென்னை ஹைகோர்ட்டில் ஓர் உயில் கேசு நடந்தது அதன் விபரம் யாதெனில்:—

திருமலாசாரியார் என்னும் ஓர் பிராமணர் தன்னுடைய ஏராளமான சொத்துகளை வைத்து விட்டு 1903ஞ௵ இறந்துவிட்டார். அவர் காலமான இரண்டு மாதங்களுக்குப் பின் அவர் உயில் சாசனம் எழுதி வைத்துவிட்டுப் போனதாகவும் அதன்படிக்கு அவருடைய விதவையாகிய வேதம்மாள் என்பவள் அவனுக்கு 'புரோபேட்' கொடுக்கும்படிக்கும் மனு செய்துக் கொண்டாள். அந்தசொத்துக்கு அனந்தாவாச பாத்தியதை கொண்டாடுகிறவர்கள் மேற்படி உயில் சாசனம் வாஸ்தவமாய் காலம் சென்றவரால் எழுதிவைக்கப் பட்டதல்லவென்று ஆக்ஷேபிக்கப்பட்டது. சென்னை ஹைகோர்ட்டு ஒரிஜினல் சைடிலும் அப்பீலிலும் மேற்படி உயில் வாஸ்தவமானதென்று கண்டுதீர்மானித்தார்கள். மேற் கண்ட உயில் கேசு சென்னை ஹைகோர்ட்டு அப்பீல் சைடில் நடந்துக் கொண்டிருக்கையில் மேலே சொல்லிய வேதம்மாளும் காலமாய் விட்டாள். அவள் இறந்துபோகும் பொழுது ஓர் உயில் எழுதி வைத்து விட்டுப் போனதாகவும் அந்த உயிலின்படிக்கு மூன்று எக்ஜிகூடர்கள் ஏற்படுத்தி அந்த மூவரில் ஒரு எக்ஜிகூடரை தான் ஸ்வீகாரமாய் எடுத்துக் கொண்ட புத்தவயது வராத அவளுடைய மைனர் பிள்ளைக்கு கார்டியனாக யிருக்கும்படி நியமித்திருந்தாள். இந்த வேதம்மாள் எழுதி வைத்த உயிலும் வாஸ்தவமானதல்லவென்று ஆக்ஷேபிக்கப் பட்டது. ஆனால் அப்படி ஆக்ஷேபித்து வாதித்தது அபலமாய் போயிற்று. இவ்விதமாய் அந்த விதவை இறந்து 4வருஷகாலம் சென்றபின் அதாவது, 1908ஞ௵த்தில் மேற்செப்ய கார்டியன்களில் ஒருவர்காலம் சென்ற திருமலாசாரியார் என்பவர் இன்னொரு உயில் எழுதி வைத்துவிட்டுப் போனதாகவும் அந்த உயில் அவர் அரைக்கு நேரா யிருந்த ஒரு கொட்ராடியில் ஒரு பீரவில் வைத்திருந்ததாகவும் அந்த பின்னிட்ட உயில் 1903-ஞ௵ டிசம்பர்மீ 26உ எழுதிவைக்கப் பட்டதாகவும் அதன்படிக்கு காலம் சென்ற திருமலாசாரியின் சொத்துகளெல்லாம் அவருடையஸ்வீகார தகப்பனுடையசகோதரியின் பேரப்பிள்ளையாகிய ரங்காசாரியார் என்பவருக்குச் சேரவேண்டுமென்றும் அவருடைய விதவையாகிய வேதம்மாளுக்கு ஜீவனாம்ச பாத்தியதை தான் உண்டென்றும் எழுதியிருந்தது. கடைசியாய் சொல்லப்பட்ட உயிலின்படிக்கு காலம் சென்ற திருமலாசாரியின் சொத்துகளுக்குச் சொந்தக்காரனாகிய ஷை ரங்காச்சாரி என்பவர் முன் சென்னை ஹைகோர்ட்டார் பிறப்பித்த புரோபேட்டை ரத்து செய்து விட்டு அவருக்குப் புதிதாய் புரோபேட்டு கொடுக்கும்படிக்கு மனு செய்துக் கொண்டார்.

மைனர் தரப்பில் ஆஜராகிய வக்கீல் இரண்டாம் தடவை கொண்டுவரப்பட்ட உயில் வாஸ்தவமான தல்லவென்றும் அது தப்பு கையெழுத்து போட்டு புதிதாய் ஸ்ருஷ்டிக்கப்பட்ட 'போர் ஜெரி' உயிலென்றும் வாதித்தார் ஆனால் இறந்துபோன திருமலாசாரி என்பவர் அவருடைய மனைவியாகிய வேதம்மாளிடத்தில் மிக்க அன்பு விசுவாசமுள்ளவராயிருந்தாராகையால் அவர் தன்னுடைய பெண்சாதிக்கு தன்னுடைய சொத்தில் யாதொரு பாத்தியதையும் தாராமல் இப்படிப்பட்ட உயில் எழுதி வைத்திருக்கமாட்டாரென்றும் எடுத்து காண்பிக்கப்பட்டது.

அதன் பேரில் கனம் பொருந்திய ஜட்ஜ் அவர்கள் காலம் சென்ற திருமலாச்சாரியின் தேகம் அவர் இறந்து போகையில் என்ன விதமாயிருந்த தென்று ருஜுவாயிற்றோ அதையும் அவர் இறந்துபோகும் பொழுது அவருக்கு டாக்டரா யிருந்தவராகிய கர்னல் ராபர்ட்சன் துரையின் சாக்ஷியத்தையும் டாக்டர் தொழிலில் மிக்க தேர்ந்தவராகிய கர்னல் கிப்ட் துரையின் சாக்ஷியத்தையும்நம்பி இறந்துபோனவர் அப்படிப்பட்ட உயில் எழுதி வைத்திருக்க மாட்டாரென்று கண்டு அதை ஓர் போர்ஜெரியென்றுதீர்மானித்து மனுவைச் செலவுடன் தள்ளுபடி செய்து விட்டார்.

மிர், N. கிரான்ட் பாரிஸ்டரும்,
மெஸெர்ஸ் ப்ரான்சன் அன்ட் ப்ரான்சன் ஸாலிஸிடர்களும் [illegible] ப்ளீடர்கள்.

மி-ர். சி. பி. ராமசுவாமி ஐயர் }
மி-ர். வி. வி. சீனிவாச அய்யங்கார். } எதிரிகளின் ப்ளீடர்கள்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

ஜட்ஜு:—மி-ர். ஜ. சங்கரன்நாயர்........முன்பாக.

The Hindupur Shooting Case.

ஹிந்துபூரில் சுட்டு கொலைசெய்த கேசு.

1910-ம் ஞு டிசம்பர்மீ 2உ வெள்ளிக்கிழமையதினம் 23-வது ஹஜூர்சைச் சேர்ந்த மாஜிஸ்ட்ரேட்டு செய்த உத்தரவின்பேரில் பப்ளிக் ப்ராசிகூடர் தாக்கல் செய்த ரிவிஷன் மனுவில் செய்த தீர்மானம்.

இந்த கேஸில் குற்றவாளி சென்ற மேமீ 2உ ஹின்டுபூர் [illegible] வண்டியில் ஓர் பெட்டியில் உட்கார்ந்துக் கொண்டிருந்த இருவரை சுட்டு கொலை செய்து விட்டான். மரணத்தை உண்டாக்கக் கூடிய கொலை செய்ததாக அவன் பேரில் குற்றம் சாட்டப்பட்டது. குற்றவாளி அவன் சுட்டுக் கொலை செய்தது அவனுடைய உயிருக்கே அபாய நேரிடு மென்று கருதி சுட்டதாக எதிர்வாதம் கூறினன்.

கொலை செய்தவன் அவனுக்கு அபாயம் நேரிடுமென்று சுட்டதாக வாதிப்பதற்கு நியாயமில்லை யென்றும் டிஸ்டிரிக்டு மாஜிஸ்ட்ரேட்டு குற்றவாளியை இ. பி. கோ. 81-வது பிரிவின்படிக்கு விடுதலை செய்தது கிரமமல்ல வென்றும் வாதித்தார்.

குற்றவாளியின் தரப்பில் ஆஜராகிய மி-ர். பாரிஸ்டர் B. W. S. லாரென்சும், மி-ர். C. கோவிந்தராஜ முதலியாரும் ஆஜராகி கொலையுண்ட இரண்டு நபர்களையும் சுடுவதற்கு குற்றவாளி எண்ணங்கொள்ள மூகாந்தரமில்லை யென்றும் அவன் தன்னுடைய உயிரைக் காப்பாற்றிக் சொள்வதற்காக செய்ததுதானென்றும் வாதித்தார்கள். அதன் பேரில் கனம் பொருந்திய ஜட்ஜ் அவர்கள் குற்றவாளியை விடுதலை செய்த டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ரேட்டினுடைய உத்தரவில் அவருடைய தீர்மானங்கள் இன்னின்னதென்றுத் தெளிவாய்க் கண்டெழுதவில்லையென்றும் இந்தியன் பீனல் கோடின் 81-வது பிரிவு இந்தகேசுக்கு ஏன் சம்பந்தப்படாதென்றும் அவருடைய காரணங்களை ஸ்பஷ்டமாய் கண்டெழுதவில்லை யென்றும் தீர்மானித்து குற்றவாளியை விடுதலை செய்த உத்தரவை ரத்து செய்து விட்டு குற்றவாளியை மறுபடியும் விசாரணை செய்யும்படிக்கும் உத்தரவு செய்தார்.

VELLORE MURDER CASE.

வேலூரில் நடந்த கொலை கேசு.

1910-ளு டிசம்பர்மீ 11உ வேலூர் பட்டணத்திற்கு அருகாமையிலுள்ள ஓர் கிராமமாகிய ராமா நாய்க்கன் பாளையத்தில் வாசம் செய்துக்கொண்டிருந்த ஓர் துலுக்க ஸ்திரி ஒருவள் தன்னுடைய சக்களத்தியின் 10-வயதுள்ள புத்திரியை கொலை செய்து விட்டதாக அவள்பேரில் குற்றம் சாட்டப்பட்டு இப்போது வேலூர் மாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டில் விசாரணை நடந்துக்கொண்டிருக்கிறது.

கேசின் விபரம்:—குற்றவாளியாகிய துலுக்க ஸ்திரி [illegible] பொன்னெடுக்கும் [illegible] வேலை செய்துகொண்டிருந்த ஓர் துலுக்கனுடைய இரண்டாவது பெண்சாதி. [illegible] பெண்ணே அவனுடைய முதல் பெண் [illegible] குமாரத்தி. சொற்பகாலங்களாக குற்றவாளி [illegible] இந்த ஸ்திரி தன்னுடைய புருஷனில்லாத காலத்தில் [illegible] அவர்களிடத்தில் அர்டைப்பாய் நடந்துக் கொண்டிருந்ததாகவும் அந்த ஸ்திரி அவளுடைய வீட்டில் சோரநாயகனிடத்தில் இவ்விதமாய் நடந்துக்கொண்டிருந்ததை அந்த 10 வயதுள்ள பெண் அவளுடைய புருஷனுக்குத் தெரிவித்து விட்டதாகவும் இவ்விதமாய் கொலை நடந்ததற்கு முன் அவளுடைய புருஷன் வீட்டை விட்டு அதாவது வேலூரை விட்டு கோலாருக்குப் போய் தன்னுடைய உத்தியோகத்தை ராஜினமா செய்து விட்டு இப்போது அவன் புதிதாய் மணம் புரிந்த இரண்டாம்தாரமாகிய சிறிய பெண்சாதியுடன் கலந்து உல்லாசமாய் காலம் கழிக்கலாமென்று எண்ணி வெளியே போயிருந்ததாகவும் தெரிய வருகிறது. இந்தப் பெண் இரண்டாம்தாரமாகிய அவளுடைய சிறிய தாயாரின் துர்நடவடிக்கையை இவ்விதமாய் தன்னுடைய புருஷனுக்குத் தெரிவித்து விட்டாளென்று அறிந்துக் கொண்டு அவள் அந்தப் பெண்ணை கொலை செய்வதற்கு தீர்மானம் கொண்டாள். ஓர் தினம் காலை 5மணிக்கு எழுந்திருந்து நித்திரை செய்துக்கொண்டிருந்த அந்தப்பெண்ணை எழுப்பி அவளுடைய வீட்டண்டையிருந்த ஓர் கிணற்றருகில் சென்று அந்தப் பெண்ணை தூக்கி அதில் போட்டுவிட்டாள். அந்தக் கிணற்றுக்கு அருகாமையில் கால்வாய்க்குப் போய்க்கொண்டிருந்த ஒருவன் அந்த ஸ்திரி செய்ததைக் கண்டு அவளைக் கையும்பிடியுமாய் பிடித்துக் கொண்டு குய்யோமுறையோ யென்றுகூக்குறலிட்டு போலீசார்வசம் ஒப்புவித்தானும். அந்த ஸ்திரீ போலீசாரிடத்தில் தான் அந்தப் பெண்ணை கிணற்றில் போட்டுவிட்டது வாஸ்தவம்தானென்னு ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்திருக்கிறாளாம். வேலூர் சப்மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் கேசு நடந்துக் கொண்டிருக்கிறது.

MADRS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

ஜட்ஜுகள்:— { மி-ர். ஜ. கிருஷ்ணசாமி ஐயர் / மி-ர். ஜ. எய்லிங் } முன்பாக.

Referred to Full Bench.

புல்பெஞ்சுக்குத் தெரிவிக்கப்பட்ட கேஸ்.

ஓர் தாவாவில் செலுத்திய கோர்ட்டு பீசு கட்டணங்களைக் குறித்து ஹைகோர்ட்டார் முன்வந்த ஓர் கேசில் கனம் பொருந்திய ஜட்ஜுகள் 1910-ம் ளு டிசம்பர் மீ 13உ தீர்மானம் சொன்னார்கள்.

கேசின் விபரம்:—மதராஸ் சிட்டி சிவில் கோர்ட்டில் சொற்பகாலத்திற்கு முன் ஒரு தாவா தாக்கல் செய்யப்பட்டது. அந்த தாவாவை ஷை சிட்டி சிவில் கோர்ட்டார் அந்த கோர்ட்டுக்குதாக்கல் செய்துக்கொள்ள அதிகார வரம்பு (Jurisdiction) கிடையாதென்று திருப்பிவிட்டு அதிகார வரம்புள்ள சரியான கோர்ட்டில் அந்த தாவாவை தாக்கல் செய்யும்படிக்கு உத்தரவு செய்தார்கள். பிறகு வாதி அந்த தாவாவை மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட்டில் தாக்கல் செய்தான் அதன் பேரில் பிரதிவாதிகள் தாவாவில் வாதி சிட்டி சிவில் கோர்ட்டில் செலுத்திய ஸ்டாம்பை அங்கீகரித்துக் கொள்ளாமல் மதராஸ் ஸ்மால்காஸ் ஆக்டின்படிக்கு அந்த தாவாவிற்கு புது கோர்ட்டு கட்டணங்கள் கட்டவேண்டியதென்று ஆக்ஷேபித்தான்.

அதன்பேரில் ஸ்மால்காஸ் கோர்ட்டு சீப்ஜட்ஜ் மி-ர். J. H. பேக்வெல் என்னும் கற்றுணர்ந்த சீமான் அந்த பாயின்டை ஹைகோர்ட்டாருக்குத் தெரிவித்து ஓர் தாவாவில் முன் செலுத்திய கோர்ட்டு பீசு கட்டணங்களை மஞ்ஜூர் செய்துக்கொள்வதுகோர்ட்டில் அநேக காலமாய் பழக்கமாயிருந்திடினும் முன் செலுத்திய ஸ்டாம்புகளை 'பஞ்ச்' சுத்திரித்து விட்டபடியால் அந்த ஸ்டாம்புகள் ஸ்மால்காஸ் கோர்ட்டில் தாக்கல் செய்த தாவாவிற்குப் பயன்படாதென்று தன்னுடைய சொந்த அபிப்பிராயத்தையும் எடுத்துக் காண்பித்தார். ஆகையால் அந்த தாவாவின்பேரில் ஸ்மால்காஸ் கோர்ட்டில் 7-வது கோர்ட்டு கட்டணங்கள் செலுத்த வேண்டியது அவசியமென்றும் தெரிவித்தார்.

கனம் பொருந்திய ஹைகோர்ட்டு ஜட்ஜுகளும் சீப் ஜட்ஜ் தெரிவித்த அபிப்பிராயத்தை மஞ்ஜூர் செய்துக்கொண்டு இப்படிப் பட்ட பாயின்ட் கோர்ட்டில் கட்சிதாரர்களால் [illegible] போது [illegible] மிக்க பிரயோஜனமானதாகையால் புல் பெஞ்சாருடைய அபிப்பிராயத்திற்கு கேசை போடும்படி உத்தரவு செய்தார்கள்.

மி-ர். C. K. [illegible]......வாதியின் வக்கீல்
மி-ர். [illegible] நாயரும் } பிரதிவாதியின் வக்கீல்கள்.
[illegible]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS. REGISTERED 30 MAR 1911 MADRAS.

C. V. KUMARASWAMY SASTRIAR ESQ., B.A., B.L.,
Judge, City Civil Court, Madras.

பிரம்மஸ்ரீ. சி. வி. குமாரசுவாமி சாஸ்திரியார் அவர்கள், பி.ஏ., பி.எல்.,
ஜட்ஜ், சிட்டி சிவில் கோர்ட், மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
10 MAR 1911
MADRAS.

DIEU ET MON DROIT
HONI SOIT QUI MAL Y PENSE

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் V.] சென்னப்பட்டணம், 1911-ம்௵ ஜனவரி௴ [பாகம் 4.

☞ NOTICE:—Contributions other than original are neither invited nor required. All literary contributions and books for Review should be addressed to Mr. V. NATHAMUNI MUDALIAR, late Tamil Bench Clerk, High Court, Appellate Side, Madras, Editorial Staff, INDIAN LAW GAZETTE, Madras.

VILLAGE COURTS.

கிராம கோர்ட்டுகள்.

GOVERNMENT'S REVIEW.

கவர்ன்மெண்டாரின் ரிவியூ.

—:o:—

நமது சென்னை ராஜதானியிலுள்ள கிராம கோர்ட்டுகள் எவ்விதமாய் பரிபாலனம் செய்யப்பட்டு வருகிறதோ அதைப்பற்றி 1909ம் வருஷத்திய ரிப்போர்ட்டுகளை கவர்ன்மெண்டார் பார்வையிட்டு பின் வருமாறு கவர்ன்மெண்ட் உத்தரவு (G. O.) பிறப்பித்திருக்கிறார்கள்:—

கிராம கோர்ட்டுகளில் நம்பர்கள் அதிகமாய் தாக்கலாய், பைசல் செய்து வரப்படுவதை நோக்குமளவில் தற்காலம் ஏற்பட்டிருக்கும் கிராம கோர்ட்டுகள் குறைவா யிருக்கின்றன என்பதற்கு ஓர் தகுந்த முகாந்தரமாயிருக்கிறது. பெல்லாரி, குண்டூர், மதுரை, நெல்லூர், தஞ்சாவூர் ஜில்லாக்களில் கிராம கோர்ட்டுகள் விசேஷமாய் குறைவா யிருந்தனவென்று கவனிக்கவேண்டி யிருந்தது. மேற் சொல்லிய இந்த ஜில்லாக்களின் கலெக்டர்களை இப்படிக் குறைவாயிருப்பதற்குக் காரணமென்னவென்று கவர்ன்மெண்டார் வினவ அதன்பேரில் மேற்கண்ட ஜில்லா கலெக்டர்கள் எழுதிய ரிப்போர்ட்டுகளைப் பார்வையிட்டதில் கிராம முனிசீபுகளை ஏற்படுத்துவதில் மிக்க ஜாக்கிரதையாயும்கவனத்துடனும் அவர்களை நேமிக்கவேண்டியதாக தெரிய வருகிறது. கொயம்பத்தூர், நெல்லூர், சேலம், தஞ்சாவூர் இந்த ஜில்லாக்களில் கிராம கோர்ட்டுகள் மிகக் குறைவாயிருந்ததைக் கவனித்திருக்கிறோம். அதற்குக் காரணம் யாதென்று ஒவ்வொரு ஜில்லா கலெக்டரையும் வினவ அவர்கள் சொல்லிய காரணங்களில் அடியிற் கூறி யிருப்பவைகளும் அடங்கி யிருந்தன:—

(1) கிராமப் பிரஜைகள், கோர்ட்டென்று சொல்லப்படும் நியாய ஸ்தலத்திற்குப்போய் அவரவர்களுக்குள்ள தகரார்களைப் பைசல் செய்துகொள்வதைப் பார்க்கிலும் அந்தந்த கிராமத்தில் வசிக்கும் இதர கிராம வாசிகளைக்கொண்டே தங்கள் தங்களுடைய வியாஜ்ஜியங்களைப் பரிசீலனை செய்துக்கொள்ளுவது உத்தமமென்று எண்ணி மிக்க பௌரஷத்துடன் கிராமங்களிலே வழக்கிடும் கிராம வாசிகள் அந்தந்த கிராமத்திலுள்ள இதர கிராம வாசிகளைக்கொண்டே அவரவர்களுடைய வழக்குகளைப் பைசல் செய்துக்கொள்ளுகிறார்கள். இதற்குக் காரணமாய் என்ன சொல்லி யிருக்கின்றார்களென்றால் 'கிராம முனிசீபு' என்று சொல்லப்படும் அந்தஸ்திலேயே மிக்கஒழுங்கீனமாய் கிராமங்களில் நடந்து வருகிறார்களென்றும் 'கிராம முனிசீபு' என்னும் அந்தஸ்துக்குள்ள அதிகாரங்களைத் தற்காலத்திலுள்ள கிராம முனிசீபுகள் நியாயப்படி திறமையுடன் செலுத்தலாகியுள்ளவர்களோ அல்லவோ என்று சந்தேகித்து அவர்கள் மீது கிராமவாசிகளுக்கு நம்பிக்கைக் குறைவாயிருக்கின்றதென்றும், இன்னும் காலம் மிக்க கஷ்டமா யிருப்பதாலும் என்றும் காரணம் சொல்லியி-

க்கிறார்கள். சில கலெக்டர்கள் அடியிற்கூறிய வண்ணம் காரணம் கண்டெழுதி யிருக்கிறார்கள்:—அதாவது, ஓர் கிராமத்திற்குத் தலைவனை ஏற்படுத்துவது வம்சப் பரம்பரையை யொட்டிதொன்று தொட்டு ஒரு குடும்பத்திலேயே நேமித்து வரவேண்டுமென்கிற விதி யிருப்பதினால் ஓர் கிராமத்தில் நல்ல அந்தஸ்துள்ள மிக்க கனவானையும், நல் நடவடிக்கை யுள்ளவனையும், வாசிப்பில் தேர்ந்தவனையும் பொதுவாய் கிராமவாசிகளுக்கும் மதிப்புள்ளவனையு மிருப்பவனைப் பொறுக்கி எடுத்து நேமிப்பதற்கு இந்த ரூல் ஓர் விதத்தில் தடையா யிருப்பதாயும் சொல்லி யிருக்கிறார்கள்.

தென் ஆர்க்காடு ஜில்லா கலெக்டர் இந்த குறைவுபாட்டைத் தீர்ப்பதற்கு ஓர் பரிகாரமாய் ஒவ்வொரு கிராம முனிசீபிற்கும் 'வில்லேஜ் மானுயல்' என்று சொல்லப்படும் புஸ்தகத்தில் முக்கியமாய் கிராம உத்தியோகஸ்தர்கள் கவனித்து நடக்கவேண்டிய தொழில்களையும், முறைகளையும் பற்றி சொல்லும் பாகத்தை மாத்திரம் அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே ஓர் புஸ்தகமாய்க் கொடுத்து அவர்களை அதிலுள்ளவைகளை வாசித்துக் கவனித்து வரும்படி செய்வது நலமாயிருக்குமென்று எடுத்துக் கூறியதை பிரத்தியேகமாய் கவனிக்கப்படும்.

கிராம முனிசீபுகள் ஒவ்வொருவரும் பைசல் செய்த வியாஜ்ஜியங்களைப் பார்க்கிலும் பெஞ்சு கோர்ட்டுகளில் பைசலாகிய தாவாக்கள் ஏற்கனவே அதிகமாயிருக்கின்றன. பெஞ்சு கோர்ட்டார்கள் மிக்க உறுதியாய் அவர்களுடைய தொழிலைச்செய்தார்களென்பது மிக்க திருப்திகரம். இந்த பெஞ்சு கோர்ட்டார் இவ்விதமாய் அவர்களுடையத் தொழில்களைச் செய்து வருவார்களானால் தொன்றுதொட்டு வம்சப் பரம்பரையிலேயே நேமிக்கப்பட்டுவரும் கிராம முனிசீப்புகளிலுள்ள குறைவுபாடுகள் நிவர்த்தியாவதற்கு இது ஓர் மார்க்கமா யிருக்குமென்று உத்தேசிக்கப்படுகிறது. 1909ம் வருஷத்தில் கஞ்சம் ஜில்லா கலெக்டா அவருடைய ஜில்லாவில் பெஞ்சு கோர்ட்டுகள் முன்னமேயே ஏற்பட்டில்லாவிடில் பெஞ்சு கோர்ட்டுகள் ஏற்படுத்துவதற்குத் தகுந்த கிருஷைகள் உடனே செய்யவேண்டுமென்று சொல்லி கோபால்பூர், இச்சாபுரம், ஆஸ்கா, ரசேல்கொண்டா இந்த இடங்களில் பெஞ்சு கோர்ட்டுகள் ஏற்படுத்தவேண்டுமென்று அவர் சிபார்சு செய்ததை ஒப்புக்கொண்டு செய்த 1909ம்௵ ஜூன்௴ 9௳ தேதியுள்ள ஜூடிஷல் கவர்ன்மெண்ட் உத்தரவு (G.O.) நெ. 765 பிரகாரம் மேற்சொல்லிய இடங்களில் பெஞ்சு கோர்ட்டுகள் ஏற்படுத்தப்பட்டன. இந்த ராஜதானியில் கிராம கோர்ட்டுகளில் வியாஜ்ஜியங்கள் அதிகரித்து வருவதைப் பார்க்கத் திருப்திகரமே. ஆனால் ஏற்கனவே இந்த ராஜதானியிலுள்ள எல்லா கோர்ட்டுகளிலும் வியாஜ்ஜியங்கள் அதிகரித்திருக்கின்றன வென்பதும் இப்பொழுது பார்வையிடும் சிவில் நியாய விசாரணையைப்பற்றிய ரிப்போர்ட்டினால் தெரிய வருவருகிறது. ஜில்லா கோர்ட்டுகளில் மாத்திரம் அப்படிக்கு வியாஜ்ஜியங்கள் அதிகரிக்கவில்லை. சென்ற 1908ம் ௵த்தில் இருந்த 408 சிவில் கேசுகள் 1909ல் 424வும் கிரிமினல் கேசுகள் 1908ல் 785 ஆனால் 1909 லோ 784. இந்த ரிப்போர்ட்டுகளின்படி இந்த சென்னை ராஜதானி முழுமைக்கும் பைசலாகும் சிவில் வியாஜ்ஜியங்களில் கிராம கோர்ட்டு வியாஜ்ஜியங்கள் ஏறக்குறைய நாலில் ஒரு பங்கிற்கதிகமாகவே யிருக்கிறது.

ஆகையால் இந்த கிராம கோர்ட்டிகளில் தலைமையாயிருந்து இந்த வியாஜ்ஜியங்களைப் பைசல் செய்ய வேண்டிய உத்தியோகஸ்தர்கள் தக்கபடி வாசிப்பில் தேர்ந்துலாகியுள்ளவர்களா யிருக்க வெண்டு மென்பது மிக முக்கியமான அம்சம். பெஞ்சு கோர்ட்டுகளில் தலைமையாயிருந்து வியாஜ்ஜியங்களை பைசல் செய்யக்கூடிய திறமையுள்ள நபர்களை ஒவ்வொரு கிராமத்திலும் இன்னார் இன்னாரென்று குறித்தெடுத்திருக்கும் லிஸ்டை மறுபடியும் ஒவ்வொரு கிராமத்திலும் கவனித்துப் பார்த்துப் பொறுக்கி எடுத்து அவர்களுடைய பெயர்களை யெல்லாம் ஓர் லிஸ்டில் தயார் செய்து வைக்கும் படிக்கு வேண்டிய கிருஷைகள் செய்து வரவேண்டியது. இந்த ராஜதானியிலுள்ள ஒவ்வொரு கலெக்டரும் இதுவிஷயத்தைப் பற்றி கவனித்து வருவார்களென்று கவர்மெண்டார் நம்புகிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள கிராம வாசிகள் அவரவர்களுடைய தகரார்களைப் பரிசீலனைச் செய்துக் கொள்ள கிராம கோர்ட்டுகளுக்குத் தான் போக வேண்டுமென்று கவர்ன்மெண்டார் நிர்பந்திக்கக் கூடாமை, ஆனால், கலெக்டர்களும் அவர்களுக்கு உதவியாயிருக்கும் அஸிஸ்டான்டுகளும் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள இந்த கிராம கோர்ட்டுகளில் மிக்க லாக்கியுள்ளவர்களைத் தான் தலைமையாயிருக்கவேண்டு மென்பதற்கு அந்ந்த கிராமத்தில் மேற் சொல்லியபடி தயார் செய்ய வேண்டிய லிஸ்டுகளை அப்போதைக்கப்போது சித்தப்படுத்தச்சொல்லி அடிக்கடி பார்வையிட்டு வரவேண்டியது அவர்களுடைய அதிகாரத்தில் தானிருக்கிறது. இதுவுமன்றி மேற் சொல்லிய உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் நேமிக்கப்படும் ஒவ்வொரு கிராம முனிசீபு தகுந்தவனா வென்றும், அத்தொழிலைச் செய்ய போதுமான வித்தை யுள்ளவனா வென்றும் தங்களால் கூடியவரையில் மிக்க ஜாக்கிரதையாய் கண்டறிந்துக் கொள்ள வேண்டியது. இந்த சென்னை ராஜதானியில் நியாய பரிபாலனம் செய்து வரும் கோர்ட்டுகள் இவ்வளவென்று கணக்கெடுத்தலும் இன்னும் அதைச் சேர்ந்த இதர விஷயங்களைப் பற்றியும் அநேக ஒழுங்கீனங்களும் தப்பிதங்களும் நேரிடுவதாய் கவர்ன்மெண்டார் முன்னமே

யே கண்டித்திருந்தும் இந்த வருஷத்திய ரிப்போர்ட்டிலும் அப்படிப்பட்ட குறைவு பாடுகளிருப்பதாய் கவர்ன்மெண்டார் கண்டு இந்த கிராம கோர்ட்டுகள் விஷயங்களைப் பற்றி கணக்கிட்டு எடுப்பதில் சிப்பந்திகள் சரியாய்ச் செய்கிறார்களா இல்லையா வென்று ஜில்லாகலெக்டர்கள்பார்வையிட்டு கண்டித்துவரவேண்டுமென்று கவர்ன்மெண்டார் இதிலும் அவர்களுக்கு வற்புறுத்திச் சொல்லுகிறார்கள்.

நாம் ஏற்கனவே நம்முடைய பத்திரிகையின் விளம்பரத்தில் சொல்லி யிருப்பதின்படி கவர்ன்மெண்டாரும் கிராம முனிசீப்புகள் வாசிப்புள்ளவர்களாகவும் அவர்கள் முன் விசாரணைக்கு வரும் வியாஜ்ஜியங்களை அப்போதைக்கப்போது ஏற்பட்டு வரும் சட்டங்களையும் அதன்பேரில் ஹைகோர்ட்டார் செய்துவரும் தீர்மானங்களையும் அறிந்து நியாயப்படி பைசல் செய்வதற்காக வேண்டிய சட்ட ஞானத்தைப் பெறுவதற்கு நம்முடைய இந்திய சட்ட கெஜட்டும் நாம் இனி பிரசுரிக்க உத்தேசித்திருக்கும் மேலே சொல்லியிருக்கும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு முக்கியமான புஸ்தகங்களையும் மிக்க பிரயோஜனகரமான தென்றும் தகுந்த சஞ்சிகையென்றும் கனம் பொருந்திய ஹைகோர்ட்டு ஜட்ஜுகளும் இன்னும் கற்றுணர்ந்த லாயர்கள் முதலானவர்கள் (Testimonials) நற்சாக்ஷி பத்திரங்கள் கொடுத்திருப்பதை நம்முடைய பிரதிமாதத்திய சஞ்சிகையின் மேல் புறத்தில் டைடில் பேஜிலும் இன்னும் நம்முடைய விளம்பரத்திலும் முன்னமேயே பிரசுரம் செய்திருக்கிறோமல்லவா அவைகளை ஒவ்வொரு கிராம முனிசீபுகளாகிய நம்முடைய நேயர்கள் வாசித்துப் பார்த்தால் அவர்கள் உடனே நம்முடைய கெஜட்டிற்கு சந்தாதாரர்களாய் இந்த மாதாந்தர சஞ்சிகையையும் இனி நாம் வெளியிட உத்தேசித்திருக்கும் புஸ்தகங்களையும் வாங்கி வாசித்து விசேஷ சட்டஞான மடைந்து கவர்ன்மெண்டார் இந்த ரிவியூவின்பேரில் செய்திருக்கும் அவர்களுடைய உத்தரவில் சொல்லி யிருப்பதின்படி அவரவர்களுடைய தொழில்களை பாரபட்சமின்றியும், பிசகு முதலியவைகளில்லாமலும் நியாயப்படி செய்து வருவதற்கு விசேஷ திறமையுள்ளவர்களாவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால் இந்தசென்னை ராஜதானியிலுள்ள நம்முடையகிராம முனிசீபுகளாகிய நேயர்கள் அனைவரும் காலத்தை வீண்போக்காமல் உடனே நம்முடைய 'இந்திய சட்டகெஜட்' என்னும் மாதாந்தர சஞ்சிகைக்கும் புஸ்தகங்களுக்கும் கையொப்ப நேயர்களாகி இதை வாங்கிவாசித்து வருவார்களென்று கோருகிறோம். சுபம்! சுபம்.

RELIGIOUS ENDOWMENTS ACT.

தெய்வீக கார்யங்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் சொத்துகளின் விஷயமாய் ஜாரிசெய்யப்பட்டுள்ள ஆக்ட்

DRAFT OF AN AMENDING BILL.

மேற்படி ஆக்டை தித்துபாடு செய்வதற்காக மசோதா ஆக்டு (BILL)

—:o:—

முன்னமேயே தெய்வீக காரியங்களின் விஷயமாய் வழங்கிக்கொண்டு வரும் 1863ம்௵த்திய 20-வது ஆக்டை தித்துபாடு செய்வதற்காக மதராஸ் தர்ம ரக்ஷண சபையார் மசோதா ஆக்டு ஒன்று தயார் செய்து மதராஸ் சட்ட நிரூபண சபையாருக்கு அனுப்புவதா யிருக்கிறார்கள். அவர்கள் அப்படி தயார் செய்திருக்கும் மசோதா ஆக்டின் (Bill-பில்லின்) தாத்பரியமும், அதற்குஏதுக்களும், நோக்கங்களும்என்னென்னவென்று இதனடியில் சுருக்கமாய் கண்டெழுதியிருக்கிறோம்:—

இந்தியா கவர்ன்மெண்டாரால் தேவாலயங்களின் விஷயமாய் ஜாரி செய்யப்பட்டு இப்போது வழங்கி வரும் 1863ம்௵த்திய 20-வது ஆக்டு 3, 4-வது பிரிவுகளின் கீழ் செய்யப்பட்டிருக்கும் நிபந்தனைகளின்படி தேவாலயங்களை தற்காலத்தில் சட்டப்படி விசாரித்துப் பரிபாலனம் செய்கிறதில்லையென்று எங்கும் பெரிய வதந்தியா யிருக்கிறது. பெரும்பாலும் இந்த ராஜதானியில் தெய்வ காரியங்களுக்காக ட்ரஸ்டாய் வைக்கப்பட்டிருக்கும் சொத்துகளைப் பரிபாலித்து வருவதில் அநேக ஒழுங்கீனங்களும், அந்த சொத்துகளை தெய்வ காரியங்களுக்கல்லாமல் இதர காரியங்களுக்காக பிரயோகித்தலும் இத்தியாதி விஷயங்களைக் கண்டிப்பதற்கு மேற்படி சட்டத்தில் (ஆக்டில்) போதுமான நிபந்தனைகள் கிடையாதென்பதாய் அநேகர் அபிப்பிராயப் படுகிறார்கள். தற்காலத்திலுள்ள தேவாலயங்களில் இப்பொழுது சாதாரணமாய் நடந்து வருவதை நோக்குமளவில் இந்த குறைவு பாடுகள் தெளிவாய்த் தெரியவரும். இப்பொழுது வழங்கி வரும் ஆக்டில் (1) தேவாய கமிட்டிகளில் மெம்பர்களாவதற்கு வேண்டிய நிபந்தனைகளும் (2) ட்ரஸ்டிகளாவது, கமிட்டி மெம்பர்களாவது ஒழுங்கீனமாய் நடந்தால் அவர்களை அவர்களுடைய ட்ரஸ்டீ அல்லது மெம்பர் அந்தஸ்திலிருந்து நீக்குவதற்காக பொது ஜனங்கள் தாவா செய்வதற்காக வேண்டிய நிபந்தனைகளிலுள்ள கஷ்டங்களும் (3) தேவாலய ட்ரஸ்டீகள் தேவாலய விஷயமாய் வைத்து வரும் கணக்குகளை அப்போதைக்கப்போது பரிசோதித்துத் தகுந்தபடி விசாரணை செய்வதற்காக வேண்டிய நிபந்தனைகள் இல்லாமையும், பொதுவாய் ஜனசமுகத்தார் இவைகளை யெல்லாம் சீராய் பரிசோதித்துக் கண்டிக்கக் கூடாமையா யிருக்கிறதென்பது விசதமாய்த் தெரிய வருகிறது.

சொற்ப காலத்திற்கு முன் கனம் பொருந்திய ஹைகோர்ட்டார் அப். நெ. 65 of 1906ல் ஓர் தேவாலய கமிட்டியாரில் யாதேனும் காலி நேரிட்டு கமிட்டி மெம்பர்கள் இருவர் தான் இருப்பதாக தெரியவந்தால் அப்படி மிகுதியாய் நிற்கும் கமிட்டி மெம்பர்கள் ஓர் கமிட்டியாய் ஒன்று சேர்ந்து நடவடிக்கைகள் நடத்துவதற்கு லாகி யுள்ளவர்களார்களென்றும், அவர்கள் அப்படி ஒரு கமிட்டியாய் ஒன்று சேர்ந்து நடத்தும் நடவடிக்கைகளும் சட்

டப்படி செலாவணி யுள்ள தல்லவென்றும் தீர்மானித் திருக்கிறார்கள். ஆகையால் தான் இப்போது வழங்கிவரும் ஆக்டு சட்ட நிரூபண சபையாரால் தித்துபாடு செய்யப்பட வேண்டுமென்கிற அவசியம் நேரிட்டது. இவ்விதமாய் இப்போது இந்த ராஜதானியில் தேவாலய சொத்துகளின் விஷயமாய் நேரிட்டுவரும் இந்தியாதி குறைவு பாடுகளின் கூக்குறளையும் சஷ்ட நஷ்டங்களையும் நிவர்த்தி செய்வதற்கு இந்த மசோதா ஆக்டின் நிபந்தனைகள் தகுந்தனவா யிருக்குமென்று உத்தேசிக்கப் படுகின்றது.

1876, 1884, 1888 இந்த வருஷங்களில் தேவாலய சொத்துகளின் விஷயமாய் தற்காலத்தில் வழங்கிவரும் சட்டத்தை நன்றாய்த் தற்கத்தறிந்து அதில் என்னென்ன தித்துபாடுகள் செய்தால் உசிதமாயிருக்குமோ அவைகளை யெல்லாம் கண்டெழுதி ரிப்போர்ட்டு செய்யும்படிக்கு கமிட்டியார்கள் நேமிக்கப் பட்டார்கள்.

1876ம் வருஷத்தில் மி-ர். ராபின்சன் துரை கமிட்டியென்றும், 1884ம் வருஷத்தில் மி-ர். ராமய்யங்கார் கமிட்டியென்றும், 1888ம் ஆண்டில் சர். தி. முத்துசாமி ஐயர் கமிட்டியென்றும் ஏற்பட்டன. மேலே கடசியாய்ச் சொன்ன கமிட்டியில் காலம் சென்ற சர். வெ. பாஷியம் ஐயங்கார், காலம் சென்ற P. இரங்கனாத முதலியார், சர் S. சுப்பிரமணிய ஐயர், இப்போது ஹைகோர்ட்டு ஜட்ஜா யிருக்கும் கனம் பொருந்திய மி-ர். ஜ. சங்கரன் நாயரும் அத்தியக்ஷர்களாய்—மெம்பர்களா யிருந்து இப்போது வழங்கிவரும் தேவாலய சொத்துகளைக் குறித்த ஆக்டை தித்துபாடு செய்வதற்காக பரிந்து பேசி விசதமான பெரிய ரிப்போர்ட்டு ஒன்று தயார் செய்து சிபாரஸ் செய்திருக்கிறார்கள்.

காலம் சென்ற மி-ர். V. சடகோபாசாரியாரும், மி-ர். கல்லியாண சுந்தரமய்யரும், மி-ர். G. ஸ்ரீனிவாசராவும் இந்த தேவாலய ஆக்டை தித்துபாடு செய்யும்படிக்கு பிரத்தியேகமாய் மசோதா ஆக்டுகள் தயார் செய்து சென்னை லோக்கல் கவர்ன்மென்டார் சட்ட நிரூபண சபையார் முன் கொண்டுவந்தார்கள். காலம் சென்ற ராவ் பஹதூர் P. அனந்தாச்சாருலு C. I. E. கல்கத்தா சுப்ரீம் கவுன்சலில் ஓர் மசோதா பில் கொண்டுவந்தார். மேற் செப்பிய மூன்று கமிட்டியார்களும் இதைப்பற்றி பரிந்து பேசின சிபார்சுகளையும் மேலே கண்ட மசோதா பில்லையும் இந்தியா கவர்ன்மென்டார் ஒப்புக்கொள்ளவில்லை. ஏனென்றால் இந்த சிபார்சுகளின்படி மேற்செப்பிய மசோதா பில் மிக்க விரிவாயும் அவைகளைப் பிரயோகப் படுத்துவது மிக்க வெளிப்படையாயும், இப்பொழுது நடந்தேறிக் கொண்டுவரும் ஆக்டு (20 of 1863) என்ன கோட்பாடுகளின் மேல் செய்யப்பட்டதோ அந்த கோட்பாடுகளுக்கு சில விஷயங்களில் விரோதமா யிருப்பதாயும் இந்தியா கவர்ன்மென்டார் அபிப்பிராயம் கொண்டார்கள்.

1863ம் வருஷத்திய 20-வது ஆக்டை தித்துபாடு செய்வதற்காக முன்னமே செய்த கிருஷைகளுக்கு விரோதமாய் இந்தியா கவர்ன்மென்டார் என்ன ஆக்ஷேபனைகள் கூறினார்களோ அவைகளுக்கு விரோதமின்றி மதராஸ் தர்மரக்ஷண சபையார் இப்போது இந்த மசோதா பில்லைத் தயார் செய்திருக்கிறார்கள்.

இப்பொழுது தயார் செய்யப்பட்டிருக்கும் இந்த மசோதா பில்லில் கண்டிருக்கும் நிபந்தனைகள் கவர்ன்மென்டார் தெய்வீக விஷயங்களைப் பற்றி எவ்வளவு துலாகவும், நடு[illegible]மாகவும் ஜாக்கிரதையாகவுமிருக்க விரும்புகிறார்களோ அதற்கு யாதொரு விரோதமின்றி இணங்க இருக்கின்றன.

இந்த மசோதா பில்லில் முக்கியமாய் தேவாலய கமிட்டிகளில் அத்தியக்ஷர்கள் (மெம்பர்கள்) ஆவதற்கு என்னென்ன யோக்கியதைகள் பொருந்தி யிருக்கவேண்டு மென்பதற்கும், அப்படிப்பட்ட அத்தியட்சர்களை மெம்பர்களைப் பொறுக்கி எடுப்பதற்காக வோட்டுகள் கொடுக்கவேண்டியவர்கள் எப்படிப்பட்டவர்களா யிருக்கவேண்டு மென்பதற்கும் தகுந்த விதிகள் ஏற்படுத்துவதற்கு லோக்கல் கவர்ன்மென்டாருக்காவது அல்லது அவர்களின் கீழுள்ள எந்த அதிகாரிகளுக்காவது அதிகாரம் கொடுக்கப்படவேண்டுமென்று நிபந்தனைகள் செய்யப்பட்டிருக்கின்றனவே யல்லாமல் வேறல்ல. இதுவுமன்றி தேவாலய கமிட்டியில் மெம்பர்களா யிருக்கப்பட்டவர்களாவது அல்லது ட்ரஸ்டிகளாவது 5 வருஷ காலம் தான் அந்த அந்தஸ்தி லிருக்கலாமென்று காலத்தை வரையறுத்து 3-வது பிரிவில் நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது. தேவாலய கமிட்டிகளில் காலி நேரிட்டால் அப்படி காலியான இடத்தில் யாரை நேமிக்க வேண்டிய தென்பதைப் பற்றி விதிகளும் அதே பிரிவில் செய்யப்பட்டிருக்கின்றன. மேற்படி தேவாலய மசோதா பில்லின் 3, 4-வது பிரிவுகளில் கண்டிருக்கும் தேவாலயங்களில் வைக்கப்பட்டு வரும் கணக்குகள் யாவற்றையும் அப்போதைக்கப்போது தணிக்கை (audit) செய்து வரவேண்டியது அவசியமென்றும் நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது. இதுவுமல்லாமல் தேவாலய கமிட்டியார்கள் ஒன்றாய்ச் சேரும்படியான மிட்டிங்குகளுக்காக என்னென்ன விதிகள் அவசியமோ அதையும் கண்டிருக்கிறது.

அன்றியும் மேலே சொல்லிய முடிவான ஹைகோர்ட்டார் தீர்மானத்தில் குறித்தவைகளையும் கவனித்து நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது. கட்சியாய் தேவாலய சொத்துகளின் விஷயமாவது தெய்வீக காரியங்களை பரிபாலனம் செய்வதிலாவது யாதேனும் தகரார்கள் நேரிடும் பட்சத்தில் அப்படிப்பட்ட தகரார்களை விசாரணை செய்து பரிசீலனை செய்வதற்காக வேண்டிய அதிகாரங்கள் கோர்ட்டுகளென்று சொல்லப்படும் நியாயஸ்தலங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவாலய விஷயமாய் யார் ஒருவன் வியாஜ்ஜியம் செய்வதற்கு வெளி வருகிறானோ அவனுக்கு அப்படி வியாஜ்ஜியம் செய்வதற்கு என்ன சிலவு பிடிக்குமோ அதற்குப் போதுமான திரவியம் தேவாலய ட்ரஸ்டிகள் தான் கொடுக்க வேண்டுமென்றும் அவர்கள் அந்த திரவியத்தைப் பெற்றுக்கொண்டு பொது ஜன சமூகத்தார் எல்லோருக்கும் நன்மை யளிக்கும்படி தகுந்த வண்ணம் நடவடிக்கைகள் நடத்த அவர்களிடமிருந்து போதுமான ஜாமீன் பெறவும் நிபந்தனைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆயினும் கடசியில் கோர்ட்டார் இவ்விதமாய் கிலவிட்ட மொத்தங்களின் விஷயமாய் எவ்விதமான உத்தரவுகள் செய்வது உசிதமென்று அபிப்பிராயப் படுகிறார்களோ அதற்கு விரோதமில்லாமலே நிபந்தனைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த மசோதா ஆக்டு (Bill) மதராஸ் சட்ட நிருபணசபையில் கொண்டுவரப்பட்டு அது விஷயமாய் மதராஸ் கவுன்சலில் நடக்கும் யாவறறு புரோசிடிங்ஸ்களையும் அப்போதைக் கப்போது நம்முடைய கெஜட்டில் வெளியிட்டு வருவோம்.

Important Rulings.

முக்கியமான தீர்ப்புகள்.

:o:

602-வது பிரிவு—பிரிவி கௌன்சில் - பிரத்யேக உத்தரவின்மேல் செய்த அப்பீல்-இவ்வளவென்று மதிப்புப் போடப்பட்ட கோர்ட்டு சிலவுகளைச் செலுத்துவதற்கு வேண்டிய [illegible] அதிகமாய் வேண்டுமென்பது:—

ஸி. பி. ஸி. 602 வது பிரிவு, ஹைகோர்ட்டாரால், பிரிவி கௌன்சிலுக்கு அப்பீல் செய்யலாம் என்று உத்தரவு பத்திரம் கொடுக்கப்பட்ட கேஸுக்குச் செல்லுமே யானாலும். இந்த விஷயத்தைக் கல்கத்தா ஹைகோர்ட்டார், பிரிவி கௌன்சிலாரால் பிரத்தியேகமாய் உத்திரவு கொடுக்கப்பெற்ற கேஸுகளுக்கு மாத்திரம் செல்லும் என்று, எண்ணுகிறார்கள்.

அப்பீல் கேஸின் விஷயத்தை ஒரு பாஷையிலிருந்து இன்னொரு பாஷையில் எழுதவும், அதை ஒன்றிலிருந்து பார்த்து இன்னொன்றில் எழுதவும், அதினு[illegible] குறிப்பெடுக்கவும், அப்பீல் இருக்கும் கேஸி[illegible] பிரிவி கௌன்சிலாருக்கு அனுப்புவதற்கும் வேண்டிய இவ்வளவென்று தீர்மானிக்கப்பட்ட சிலவுகளைச் செலுத்த வேண்டிய கால நிர்ணயத்தை அதிகரிக்க ஹைகோர்ட்டாருக்கு, ஸி. பி. ஸி. 602 வது பிரிவின்படிக்கு, இடமுண்டு. ஆனால் அவ்வாறு செய்கையில், ஹைகோர்ட்டார் தகுந்த காரணத்துடன் செய்யவேண்டியதே யல்லாமல் மற்றபடிக்குச் செய்யக் கூடாது.

ராய் ஜோதீந்தரநாத் vs செய்பிரஸன்ன குமார பானெர்ஜி.

11 கல். வீ. நோ. 404.

எப்பொழுது அன்னியன் ஆக்ஷேபிக்க இடமுண்டு என்பது:

கடனுக்காக ஒப்படைக் கொள்வோன், கடங்காரன் பேரில் பிரியாது செய்கையில், அந்தக் கடங்காரன், மூன்றவன் செய்த ஒப்படைப் பத்திரம் காரணமில்லாதிருக்கிறதென்று சாக்குக் கொண்டு வருவானுனால்; அந்த சாக்கின் காரணமாக அந்த பிரியாது செய்தால் போதாது. இந்த விதி, ஒப்படைப் பத்திரம் பினுமியாகிற தென்றும் கட்டத்தில் கூடி யிருக்கின்ற விஷயங்களைக் குறிக்கவும். அதன் மேல் குற்றஞ் சாட்டவிருக்கும் மனிதனின் சுதந்திரத்தை பேதப் படுத்தவும், ஆக செய்த பொய் நடவடிக்கை யென்று குற்றம் சாற்றுகிற விஷயத்திலும், செல்லாது. இந்த மாதிரி சந்தரங்களில் அந்த நடவடிக்கைப் பொய்யானதென்று குற்றம் கண்டு பிடிக்கப்படும். இம்மாதிரி கேசுகளில் இ.பி.1.15-வது விதி செல்லும்.

[illegible] vs நாகடு பசு.

9 பம்பாய். லா. ரி. 462

1889 ௵ இந்திய சட்டம் 6வதினால் சீர் திருத்தப்பட்ட 16-வது பிரிவு—மிதமிஞ்சின அதிகாரம்-கடன்காரனுக்கு மிகவும் அவசரமாகப் பணம் வேண்டுமென்பது.—

கடன் வாங்குகிறவன் உயிலின்பேரில் கடன் கொடுத்தவன்மேற் கொள்ளுவதற்கு, கடன்காரன் தனக்கு மிகவும் அவசர நிமித்தமாய் பணம் வேண்டுமென்று சொன்னால் மாத்திரம் போதாது.

ராணி சுந்தர கேஸர் vs ராய்ஷ்யம் கிருஷ்ணன்

9 பம்பாய் லா. ரி. 364; 11 கல். வீ. நோ. 249; 4 அ. லா. ஜ. 109; 31 கல். 150; 34 அ. ஜ. 9; பி. கல்.

16-வது பிரிவு—மிதமிஞ்சின அதிகாரம்-கொடுக் கொடுக்கிறவனும் வாங்குகிறவனும்-நம்பிக்கையான பந்துத்வம்-தகப்பனாரும் சுவீகாரப் பிள்ளையும்-உத்தரவாதம்:—

வாங்குகிறவன் கொடுப்பவனுக்கு நம்பிக்கையான உறவினராக யிருந்தால்-அதாவது, தகப்பனும் பிள்ளையுமாக யிருந்தால்-வாங்குகிறவன் கொடுப்பவனுக்குத் தக்க யோசனைகள் சொல்லவும், அவனது ஆஸ்தியை அவனுக்கு பதில் பார்த்துக்கொள்ளவும் இருக்கும் விஷயத்தில், வாங்குகிறவன் அவன் [illegible] குறைக்க வில்லை யென்று, தான் அவனிடத்திலிருந்து சொத்தைப் பெற்றது மிதமிஞ்சின அதிகாரத்தினாலன்று என்றும், ரூபிக்க வேண்டிய பாரம் வாங்கினவன் மேல் இருக்கிறது. சொத்தைக் கொடுத்தது நியாய வழிதான் யென்று ரூபிக்க வேண்டுமானால்: கொடுத்தவன் தனது சுய யோசனையினாலேயே செய்தான். என்றும், ஆஸ்தியை தானம் கொடுத்த காலத்தில் வாங்கினவனுடைய அதிகாரத்திற்குற் அவன் அடங்க வில்லை யென்றும் காட்டவேண்டும். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் யோசிக்க வேண்டியது என்னவென்றால், தானம் கொடுக்க வேண்டுமென்னும் எண்ணம் எப்படி யுண்டாயிற்று என்பது? அதாவது, தானம் கொடுத்தவனைச் சுற்றிலும் வேண்டிய ஜாக்கிரதைகள் இருந்தனவா வென்றும், பந்துத்வத்தினாலும், இடத்தினாலும், கொடுக்கிறவனை தமது போதனையினால் கொடுக்க வல்லவர்களின் அதிகாரத்திற்குள் இல்லாமல் விலகி யிருந்தவனு என்பதையும் யோசிக்க வேண்டியது தன்னுடைய, கொஞ்ச காலத்துக்கு முன்பாகத்தான் மெஜாரிடி யடைந்தவனும் சிறிது ஞானக்குறைவுள்ளவனும் ஆகிய தனது பிள்ளையினாலும் எழுதப்பட்ட ஒரு நம்பிக்கைப் பத்திரத்தை ஒரு தகப்பனார் தன்னிடத்தில் வைத்துக் கொண்டிருந்தான். இந்தப் பத்திரத்தில் எழுதியிருந்தாவது-அந்தப் பிறவாதியாகிய பிள்ளைக்கு பாகம்பிரியாத குடும்பத்தி[illegible]த்தை ஒழிக்கவும், பத்திரத்தில் குறித்திருந்த தான தருமங்களுக்காகவும், [illegible] வரும்படிக்காகவும்

கட்டடக்காரனுக ஏற்படுத்தப்பட்ட தகப்பன் பேரில் அதிகாரம் முழுமையும் தரவேண்டும் என்றுமாம்.

இந்த சந்தர்ப்பங்களில் இந்தப் பத்திரம் பிள்ளையினுல் தள்ளப்படலாம். தானம் பெருகிறவன், மிதமிஞ்சின அதிகாரத்தினுல் தான் தானத்தைப் பெற வேண்டும் என்று இவ்விரண்டு விஷயங்களும் தீர்மானத்தில் சொல்லப்பட்டன.

லக்ஷ்மீதாஸ் vs ரூம்லால்.

17 ம. லா. ஜ. 190; 30 ம. 169

16-வது பிரிவு—மிதமிஞ்சின அதிகாரம்-அநீதியான வியாபாரம்-உடன்படிக்கைத் தள்ளப்படும்.

ஒரு உடன்படிக்கை மிதமிஞ்சின அதிகாரத்தால் செய்யப்பட்டது என்று அந்த உடன்படிக்கையைத் தள்ள வேண்டுமென்றால், இந்தியன் உடன்படிக்கைச் சட்டம் 16-வது பிரிவில் சொல்லி யிருக்கும் வண்ணம், மிதமிஞ்சின அதிகாரத்தால் செய்யப்பட்டதென்று ரூபிக்கத்தக்க சாக்ஷிகள் கொண்டுவரவேண்டும். ஒரு வியாபார உடன்படிக்கையை தீங்கானதென்றும் அநீதியானதென்றும் அல்லவென்று சொல்லும்படியாய் நடு நியாயச் சபையாருக்கு (Court of Equity) அந்த வியாபாரத்தில் மிகவும் உயர்ந்த வட்டி இருந்தால் மாத்திரம் போதாது. உடன் நிகழ்ந்த பல சந்தர்ப்பங்கள் இருத்தல்வேண்டும். அவ்வாறன சர்தர்ப்பங்கள் இருக்குமே யானல், அவற்றை நியாயமாகவும் சரியாகவும் யோசிக்க வேண்டும், வியாபாரத்தைச் சேர்ந்த இருதரத்தாரும் சம நிலைமையில் இல்லாதிருக்கும் காலத்திலும், ஒரு பத்திரத்தின் உண்மையான தன்மை தெரியாமல் கடன் வாங்குகிறவன் கையெழுத்தும் போட்டான் என்று தெரிகிறது போதும், நிஜமாகிய வட்டி, பத்திரத்தில் எழுதி யிருப்பதை விட அநேக மடங்கு அதிகமாயிருக்கையிலும், அந்த பத்திரத்திலிருந்து சேர வேண்டியது என்று தெரிய வருகிறதைக் கொடுக்கும்படி கடன்காரனைத் தொந்தரவு படுத்தினுல், அவன் அத்தொந்திரவினுல் இன்னும் அதிகமான நிபந்தனைகளுக்கு வேறே பத்திரம் எழுதி கொடுக்கும் விஷயத்திலும் ஆகிய இந்த உடன் சந்தர்ப்பங்கள் எல்லாம், மிதமிஞ்சின அதிகாரத்தினுலுண்டானதென்று தக்கசேஸ் கொண்டுவரவும் பணம் கொடுத்தவனை அதை இல்லையென்று ரூபிக்க வேண்டிய உத்திரவாதி யாக்குதற்கும், போதுமானவை யாகும்.

சாலிவலிங்கு மூல் சண்டு vs வியூட். ஆர். ஹெச் விட்சர்ச்,

9 பம்பாய், லா, ரி. 1296,

476-நியாய விசாரணை—ஜப்தி செய்து நடவடிக்கை நடத்துவது, நியாய விசாரணையில் அடங்கினதன்று;—

கோர்ட்டார் முன்னிலையில் செய்துக் கொண்டதாவாவை விசாரித்தப் பிறகு செய்யும் ஜப்தி முதலானவை நியாய விசாரணையி லடங்கியவையல்ல

ஆகையினுல், டிக்ரியைப் பெற்ற ஒருவன், டிக்ரியில் குறித்திருக்கும் கடன் சரியான தென்று அறிந்த பிறகு, அந்த டிக்ரியின்படிக்கு ஜப்தி செய்ய ஆரம்பித்தல், அவன் மீது கிரிமினல் புரோசீஜர் சட்டம் 476-வது பிரிவின்படிக்குக் கேசை எடுக்கக் கூடாது

சாந்தோ ராமதாஸ் vs கோவ ரத்தினதாஸ்.

35 கல். 133.

476, 439-வது பிரிவுகள்—திருத்தல்-ஹைகோர்ட்டாரின் அதிகாரங்கள்-கிரிமினல் புரோசீஜர் சட்டம் 164, 162-வது பிரிவுகள்-போலீஸ், உத்தியோகஸ்தர் முன்னிலையிர் செய்யப்பட்ட வாக்குமூலங்கள்:—

ஒரு கேஸை ஹைகோர்ட்டார் திருப்பி மறுபடியும் பார்க்கையில், கீழ்க் கோர்ட்டாரால் அந்த சந்தர்ப்பத்தில் கிரிமினல் புரோசீஜர் சட்டம் 476-வது பிரிவின்படிக்குச் செய்யப்பட்ட உத்திரவிற் கூட அவர்கள் பிரவேசிக்கலாம். 161-வது பிரிவின்படிக்கு விசாரிக்கும் போலீஸ் உத்தியோகத்தினுடைய முன்னிலையில் சொல்லப்பட்டு, 162-வது பிரிவின் (கிரிமினல் சட்டம்) படிக்கு அவனுல் பதிவு செய்யப்பட்டு இருக்கின்ற வாக்குமூலத்தையே ஆதாரமாக வைத்துக்கொண்டு அந்த வாக்குமூலம் செய்தவனை இந்தியன் பீனல் சட்டம் 193-வது பிரிவின்படிக்கு நியாயவாயிலாக விசாரிக்க வேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்கக் கூடாது.

சக்ரவர்த்தி vs மஹமத் உஸ்மான்.

1908 அ. வீ. கோ. 22.

476, 439-வது பிரிவுகள்—மறுபடியும் விசாரித்தல் (ரிவிஷன்) ஹைகோர்ட்டாரின் அதிகாரங்கள்-வழக்கம்:—

கிரிமினல் புரோசீஜர் சட்டம் 476-வது பிரிவின் படிக்குச் செய்யப்பட்ட உத்தரவில் ரிவிஷன் காலத்தில், பிரவேசிக்க ஹைகோர்ட்டாருக்கு அதிகாரமிருந்தாலும், அந்த உத்தரவைதான் நன்ருக யோசித்து அறிந்த பிறகே பிறப்பித்ததாக மாஜிஸ்ட்ரேட்டு சொன்னல் அந்த உத்தரவில் ஹைகோர்ட்டார் பிரவேசிக்கக் கூடாது.

நயத்வலிங்கு vs நாராயணசிங்கு.

1908 அ. வீ. கோ. 27

482— வது பிரிவு—குற்றம் செய்யப்பட்ட அந்த தினத்திலேயே விசாரணை ஆரம்பித்தல்—அவசியமில்லாமை;—

குற்றம் செய்யப்பட்ட அன்றைக்கே நடவடிக்கை ஆரம்பிக்க வேண்டுமென்று 482-வது பிரிவு ஒரு மாஜிஸ்டிமரட்டைக் கட்டாயப்படுத்துவதில்லை.

இந்த பிரிவை கிரிமினல் புரோஸீஜர் சட்டம் 459

வது பிரிவுடன் சேர்த்தும் பார்க்க அவசியமில்லை.

பீபின் அக்கிரபால் vs சக்கிரவர்த்தி.

7 கல். லா. ஜ. 63

488 வது பிரிவு—செய்யலாம்—அறிவைப் பயன்படுத்துவது:—

கிரிமினல் புரோசீஜர் சட்டம் 488-வது பிரிவில் 'செய்யலாம்' என்னும் வார்த்தையின் பொருள் என்னவென்றால், எந்தெந்த கேசுகளில் ஜீவனும்சத்திற்கு உத்திரவிடுதல் நியாயமாகு மென்று கண்டறியும் விஷயத்தில் ஒரு மாஜிஸ்ட்ரேட்டு அப்படிச் செய்கையிலும், எல்லாக் காரணத்துடன் இருக்க வேண்டியதே தவிர காரணமில்லாமல் இஷ்டப்படிக்கே செய்யக்கூடாது.

தீர்மானம். தாழ்ந்த குலத்தானுகிய ஒருவனேடு சம்பந்தம் செய்து விபசாரம் செய்த ஒருவன் பெண்சாதி தனக்கு ஜீவனும்சம் வேண்டுமென்று தன் புருஷன்மீது கேஸ் எடுத்தாள், அவள் விபசாரம் செய்த காரணத்தால் அவளுக்கு ஜீவனும்சம் செல்லாது என்று தீர்மானிக்க மாஜிஸ்ட்ரேட் தன் ஞானத்தை உபயோகிக்கலாம் என்று தீர்மானிக்க மாஜிஸ்டிரேட் தன் விஞானத்தை உபயோகிக்கலாம் என்று தீர்மானம் செய்யப்பட்டது.

பொன்னுயீ vs பொரிய மூப்பன்

18 ம. ஜ. 150

96 முதல் 106 வரையிலும் உள்ள பிரிவுகள், 147, 325- பிரிவுகள்-தன்னைத்தான் காவல் செய்துகொள்ள ஒருவனுக்கு உள்ள சுதந்திரம்-காவல்-சண்டை செய்வதற்கென்றே ஆயுதபாணிகளாய் வந்த ஒருபெருங் கூட்டத்தார் எதிர்க்கப்பட்டாராம்:—

பிரதிவாதியின் எஜமானுடைய நிலத்திலிருந்த ஒரு பெரிய மண்மேடு வாதியின் நிலங்களுக்குப் போகும் ஜலத்தை தடுத்தது அதனுல் அவன் பயிரை யெல்லாம் அழியும்படி செய்ததால், வாதியானவன் 12 அல்லது 13 பெயர்களை அழைத்துக் கொண்டு போய் அந்த மேட்டை வெட்ட ஆரம்பித்தான். பிரதிவாதி இதைக் கேள்விப் பட்ட வுடனே 50 அல்லது 60 மனிதர்களை உடன் அழைத்துக் கொண்டு அந்த இடத்திற்குப் போனார்கள் பெருங் கூட்டத்துடன் பிரதிவாதி வருவதைக் கண்ட வாதியின் இனத்தார், அந்த மண்மேட்டை முழுதும் வெட்டி முடித்த காரணத்தாலோ அல்லது, இவர்களைப் பார்த்து வெட்டுவதை நிறுத்திவிட்ட காரணத்தாலோ, வேலை செய்யாமலிருந்தார்கள், பிரதிவாதி, எதிரிகள் வேலை செய்யாமலிருந்த போதிலும், அவர்களைத் துறத்திக் கொண்டு போய் அடித்து அவர்களுள் ஒருவனைக் கொன்று விட்டான்.

தீர்மானம் முதலிலிருந்தே பிரதிவாதியின் இனத்தார் கலகஞ் செய்வதற்கு என்றே வந்தவர்கள், அப்படி ஒருவேளை யில்லாவிட்டாலும், வாதியின் கூட்டத்தார் எதிரிகளைக்கொண்டு வேலையை நிறுத்தி யிருக்க, அவர்களைப் பிரதிவாதி துறத்து அடித்து அவர்களில் ஒருவனைக் கொன்றவுடனே, அவனும் அவனைச் சேர்ந்தவர்களும், கலகஞ் செய்வதற்கென்றே வந்தவர்கள் என்று சொல்லப்பட வேண்டும்.

சக்ரவர்த்தி vs அம்பிகாலால்.

3.5 கல். 443.

99, 47, 101, 104-வது பிரிவுகள்-கலகம்-ஆஸ்தியைக் காவல் செய்துக் கொள்வது-

எல்லா கேசுகளுக்கும் செல்லவுள்ளதாகிய பொது விதியை சட்டத்தில் ஏற்படுத்த இதுவரையிலும் தீர்மானித்த கேசுகள் இடம் கொடுக்க வில்லை, அப்படிக்குப் பொதுவாகிய ஒரு விதியை ஏற்படுத்தப் பிரயத்தினப் படுவது அபாயகரமானது. இந்தியன் பீனல் சட்டம் 8-வது அதிகாரத்தின் கீழ் வரும் கேஸில், கலகம் நேரிடுவதற்கு முன்னம், ஆஸ்திகள் எவருடைய அனுபவத்தில் இருந்தது என்னும் கேள்வி மிகவும் முக்கியமானதேயல்லாமல், சுவாதீனத்திற்குச் சுதந்தர முடைமையும், அல்லது சுவாதீனம் பெற ஆரம்பித்து இருப்பதும் ஆகிய கேள்விகள், அவ்வளவு முக்கியமானவையல்ல. கலகம் நடக்க இருப்பதற்கு முன்னுடி முழுமையும் தன்து சுவாதீனத்தில் இருக்கும் பொது, சுவாதீனத்திற்கு மாத்திரம் சுதந்திர முடையவனு, சட்டத்தின்படிக்கு சுவாதீனம் அடைய ஆரம்பித்தவனுய் இருக்கும் ஒருவன், தனக்கு நேரிட இருக்கும் தீங்குகளைத் தடுப்பதற்காக தகுந்த மேல் அதிகாரிகளுக்குத் தெரியப் படுத்த வேண்டுமே யல்லது, சொத்து தன்னுடைய சுவாதீனமென்றும், சொல்லக்கூடாது.

தீர்மானம் கோர்ட்டாரின் முன்னிலையில் இருக்கும் கேஸில் பிரதிவாதியின் தரப்பினராகிய மனுதார்கள், வாதியின் சுவாதீனத்திலிருந்த நிலங்களையும் பிடிங்கி தாங்கள் சுவாதீனமாக்கிக் கொண்டார்கள். அவர்கள் கலகக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் வாதியைத் துறத்திவிட்டு அவன் நிலங்களை சிறிது காலம் வரையிலும் தங்கள் சுவாதீனமாக்கிக் கொண்ட காரணத்தால், அவர்கள் வாதியை அடித்தது நியாயமென்று சொல்லக்கூடாது.

99, 47-வது பிரிவுகள்—தகுந்த மேல் அதிகாரிகளுக்குத் தெரியபடுத்திக் கொள்வதற்கு வேண்டிய காலம்—சொத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவன் கலகம்:—

தகுந்த மேல் அதிகாரிகளுக்குத் தெரியபடுத்திக் கொள்ளாவிட்டால், தனது சொத்தைத்தானே நியாயத்தால் தன்வசம் செய்துக் கொள்ளும் சுதந்தரமில்லை. தங்களுடைய சுவாதீனத்தை யல்லது சுவாதீனம் பண்ணுகிற எண்ணத்தை ஸ்தாபிக்க வேண்டி இருதரத்தார்களும் ஆயுதபாணிகளாய் பெருஞ்சண்டையிட்டு அச்சண்டையில் ஒருவன் இறந்து மற்றவர்களுக்கு காயம் பட்டிருந்தால், அந்த கேஸை விசாரிக்கும் காலத்தில் முதலில் அடித்துச் சண்டையை ஆரம்பித்தான் என்றும், சண்டைக்கு முன் எவர்களுடைய சுவாதீனத்திலிருந்ததென்றும் கேட்கப்பட மாட்டாது. சொத்துகளையும் உயிர்களையும் காக்க வென்று நியமித்திருக்கும் உத்தியோகஸ்தரின் அதிகாரத்தை அவ்வுத்தியோகம் பெருத எவனும் எடுத்துக் கையாளக் கூடாது; அப்படிச் செய்தால் அது சட்டத்திற்கு ஒத்ததல்ல. எதிர் கக்ஷியார் அனேகர் ஒன்றாய்ச் சேர்ந்து எதிர்த்து வருகையில் தானும் அநேகரை தன் பக்கத்தில் சேர்த்து அவர்களைத் தடுக்க எவனுக்கும் அதிகாரமில்லை, இம்மாதிரி சந்தர்பத்தில், தன் சொத்துகளுக்குச் செய்யும் சுய காவல் சுதந்திரம் இல்லாமல் போய்விடும்.

கபீருடின் vs சக்கிரவர்த்தி.

12 கல். வீ. கோ. 484; 7 கல். லா. ஜ. 359; 35கல். 368.

99, 147-வது பிரிவுகள்—கலகம்—பொதுவாகிய கருத்து—இதுதான் பொதுவாகிய கருத்து என்று கேஸ் கொண்டுவரப் பட்டிருக்கும் விசாரணையின் மேல் கண்டு பிடிக்கப்பட்ட பொதுவான கருத்திற்

ரும் உள்ள வித்தியாசம்—குற்றவாளி யென்று கண்
டு பிடிப்பது செல்லுமா—சுயகாவலின் சுதந்தரம்:-

வாதியின் சுவாதீன சுதந்தரத்தைக் கெடுத்து
விடவேண்டுமென்னும் பொது கருத்துடன் கலகஞ்
செய்தார்கள் என்று கீழ்கோர்ட்டில் பிரதிவாதிகள்
குற்றம் சாட்டப்பட்டார்கள். இவர்கள் ஸெஷன்ஸ்
ஜட்ஜிக்கு அப்பீல் செய்துக்கொள்ள அவர் கீழ்
கோர்ட்டாரின் தீர்மானத்தை ஸ்தாபித்தார். ஆனால்
அவர்கள் பொதுகருத்து வாதியின் சுதந்தரத்தை அழித்து
விடவேண்டும் என்பதல்ல; தங்களுக்கே உண்டாகிய சுதந்
தரத்தை அல்லது சுதந்தரம் உண்டென்றும் எண்ணத்தை
நிலை நிறுத்தும் பொருட்டு அவர்கள் கலகஞ் செய்தார்கள்
என்று அவர்கள் பொது எண்ணத்தில் வித்தியாசம் கண்டு
பிடித்தார்கள்.

தீர்மானம்:—முதலில் பொது எண்ணம் என்று குற்றம்
சாட்டியதற்கும், பிறகு பொது எண்ணம் என்று கண்டு பிடி
க்கப்பட்டதற்கும் வித்தியாசம் இருந்தாலும், அந்த வித்தியா
சம் மிகவும் கொஞ்சம். இரண்டு பொது எண்ணங்களும்
சட்டத்தில் ஒரே ஆக்ஷேபனைக்கு இடங் கொடுத்தமையாலும்,
குற்றவாளிகள் தங்கள் விசாரணையில் மனங் கலக்கப்படா
மையினாலும், அவர்கள் குற்றம் ஸ்தாபிக்கப்பட்டமை கெடுதி
யன்று. இந்த சந்தர்ப்பங்களில், இந்தியன் பீனல் சட்டம்
99-வது பிரிவின்படிக்குள்ள சுய காவலின் சுதந்தரம் என்
னும் ஆக்ஷேபனை எழுதுவதற்கு இடமில்லை.

மணிரோட்டி vs சக்கிரவர்த்தி,

12 கல். வீ. நோ. 579; 35 கல். 384.

124-வது பிரிவு (ஏ)—1906 வருஷத்திய கிரிமினல் புரொ
ஸீஜர் சட்டம்—ஸாங்க்ஷன்—குற்றம் சாட்டுகிறவனாகிய
வாதியை விசாரித்தல்—துணிவு—உரிமை—நியாய சபையா
ரால் நடத்தப்பட்ட நடவடிக்கைகள்:—

1867 வருஷத்திய 'அச்சுயந்திர சாலைகளும், சமாசாரப்
பத்திரிகைகளும் (இவற்றைக் குறித்த) சட்டம் 25-வது விதி
7-வது பிரிவு—அச்சிடுபவன் பிரதிக்கினை செய்தல்—அச்
சிடுபவனுடைய உத்திரவாதம்:—இந்தியன் பீனல் சட்டம்
124 ஏ-வது பிரிவின் கீழ்க்கருதவல்ல எந்த கேசும், அந்தந்த
இடத்தின் ஸர்க்கார் (Local Government) அதிகாரத்தால்
பிரியாது கொண்டுவரப்பட்டா லல்லாமல், விசாரிக்கப் படக்
கூடாதென்று கிரிமினல் புரொஸீஜர் சட்டம் 96-வது பிரி
வில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவன் குற்றவாளியென்று
கண்டு பிடிக்கப்பட்டு, ஆரம்பத்தில் போலீஸ் கோர்ட்டில்
விசாரணைச் செய்கையில், அவன் பெயர் இன்னதெனத் தெரி
ந்திருந்து பின் ஸர்க்கார் அதிகாரப் பத்திரத்தில் அவன்
பெயர் இன்னதெனத் தெளிவாக எழுதப்படா விட்டாலும்,
அவனைக் குற்றவாளி யென்றும், அவனை விசாரிக்கலாம் என்
றும் சட்டம் சொல்லும். அதிகாரப் பத்திரத்தில் கையெழுத்
திடுபவன் குற்றம் சாட்டுகிற வாதியல்ல; மேலும், அவன்
செய்த விசாரணையைச் சட்டத்தின்படிக்கு ஆளவேண்டுமென்
பது அவசியமில்லை. ஸர்க்கார் அதிகாரத்தைப் பெற்று, குற்ற
வாளி இன்னாரெனத் தெரிவிப்பதற்காகக் கோர்ட்டாருக்கு மனு
கொடுத்துக் கொள்கிறவன் எவனோ, அவன்தான் குற்றம்
சாட்டும் வாதி; அவனுடைய விசாரணையை எடுத்துக்கொள்ள
வேண்டியது. இம்மாதிரி ஸ்திதியில் கேஸ் இருக்கையில்
ஒரு பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டு (Presidency Magis-
trate) குற்றம் சாட்டுகிற வாதியைச் சத்தியம் செய்யச்
சொல்லவும் அவன் பிரியாதை எழுத்து மூலமாகவும், செய்ய
வேண்டியது அவசிய மில்லை. இடத்திற்குரிய ஸர்க்காரார்
(Local Government) பிரவேசிக்கும் விஷயத்தில், 196-
வது பிரிவின்படிக்கு அதிகாரப் பத்திரத்தில் லெப்டினண்டு
கவர்னரே (Licutenant-Governor) கையொப்ப மிடவேண்
டிய தென்பது அவசியமில்லை. கவர்ன்மென்டால் ஏற்றுபச
ரிக்கப்பெற்றவும், தங்கள் பெயர் கெஜட்டில் வெளியிடப் பெ
ற்றவுமாகிய, அவர் கீழ்ப்பட்ட சர்க்கார் உத்தியோகஸ்தரில்
எவனாவது கையொப்பமிட்டால் போதும். சர்க்கார் உத்தி
யோகஸ்தர் செய்ய வேண்டிய வற்றை யெல்லாம் சரிவர
முடித்தார்கள் என்று எண்ண வேண்டியது; விசாரணைக்கு
ஸர்க்கார் சாங்க்ஷன் கொடுக்கப்பட்டது என்னும் விஷய
த்தை ஒரு பிராஸிகூடிங் உத்தியோகஸ்தருக்கும் (Pro-
secuting officer) மாஜிஸ்டிரேட்டுக்கும் தெரிவிக்கும்
விஷயத்தில் எவையாயினும் விடுபட்டுப் போனாலும். அவற்
றை யெல்லாம் சாக்ஷியங்களின் சட்டம் (Evidence Act)
114-வது பிரிவில் பூராவாகக் காணலாம். சாங்க்ஷன்களை முத
ல் முதல் பிறப்பித்த காலத்தில், எந்த விஷயங்களை ஆதாரமா
கக் கொண்டு விசாரணைச் செய்ய வேண்டுமோ, அந்த விஷய
ங்கள் சாங்க்ஷன்களில் தவறாகச்சொல்லப் பட்டிருந்து, பிறகு
விசாரணை நடக்கும் காலத்தில், மறுதரம் பிறப்பித்த சாங்க்ஷ
னால் அவை சீர் திருத்தப் பட்டால்: மனுதாரன் நிலைமைக் கெடு
க்கப்பட வில்லை யென்றும், தவறுகளெல்லாம், கிரிமினல்
புரோசீஜர் சட்டம் 537-வது பிரிவின்படிக்குச் சரியாக்கப்
பட்டனவெனவும் தீர்மானிக்கப்பட்டது. இராஜ நிந்தனைக்
காக சமாச்சாரப் பத்திரிகைப் பிடிக்கப் பட்டு விசாரணை
க்கு கொண்டுவரப்பட்டது. விசாரணை காலத்தில் அந்த
சமாச்சாரப் பத்திரிகையில் எழுதப்பட்ட பல விஷயங்
களுள் ஒன்றுதான் கொண்டுவரப்பட்டது. பிராஸிகூ
ஷன் (Prosecution) தரப்பார், இன்னும் இதர விஷயங்
களையும் தங்கள் கேசுக்கு ஆதாரமாய்க் கொண்டு, அவற்றை
மொழி பெயர்த்து, அம்மொழி பெயர்த்த விஷயங்களை குற்ற
வாளியின் கையில் கொடுக்கலாம் என்று எண்ணி யிருந்தார்
கள். ஆனால் இவர்களைப் பற்றி ரிக்கார்டில் பதிவு செய்யப்
படவேயில்லை. இதற்குள்ளாக மொழிபெயர்க்கப் பட்டு அவ்
விஷயங்களெல்லாம் வேறோர் சமாச்சாரப் பத்திரிகையில்
வெளியிடப்பட்டது. இப்படி மறுதரம் அச்சிட்டது நியாய
ஸ்தலத்தின் நடவடிக்கைகளில் அடங்கியதன்று ஆதலால்,
அவ்விஷயங்களுக்கு யாதொரு ஆதாரமும் கிடையாது என்று
கொள்ளப்பட்டது. இம்மாதிரி கேசுகளில், எந்த தேசத்தில்
இது நடக்கின்றதோ அந்த தேசத்தின் நிலைமையும், மறுதரம்
அச்சிடப்பட்டது, சரியானதா அல்லவா என்று கண்டுபிடித்
தலும், ஆகிய இவற்றை கோர்ட்டார் செய்ய வேண்டியது.

அபுர்பா கிருஷ்ணபோஸ் vs சக்ரவர்த்தி.

7 கல். லா. ஜ. 49.

124 ஏ-வது பிரிவு—சண்டைக்கு தூண்டுதல்:—

சண்டையைப் பற்றி உபதேசித்து, ராஜங்கத்தாரை
எதிர்த்து கலகம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்
யச் சொல்லும் எழுதப்பட்ட விஷயங்கள் யெல்லாம் இராஜ
நிந்தனையாகும்.

சக்ரவர்த்தி vs பனேந்தரநாத மித்தர்.

35 கல். 945ல்

LAW OF TORTS-CONTINUED.

தீங்கு ஹிம்சை-இவைகளைக்குறித்தசட்டம்.(தொடர்ச்சி)

Chapter vs-ம் அத்தியாயம்

Foreign Torts-பிரதேச ராஜ்ஜியங்களில் செய்யப்படும் குற்றமானதீங்குகள்.

நமது இந்தியா தேசத்தை யடுத்த பெங்கால்
மகா சமுத்திரத்திற்கு வெளி தூரத்திலிருக்கும் பிர
தேச ராஜ்ஜியங்களில் செய்யப்படும் குற்றங்களை
இங்கிலீஷ் கோர்ட்டார் பல முறைகளிலும் விசார
ணை செய்து பைசல் செய்யக் கூடியதாய் தான் நடந்
தேறிக்கொண்டு வருகிறது. ஆனால் அவர்கள் அந்
தக் குற்றங்களை விசாரணை செய்கையில் அடியில்
கண்ட ஷராக்களுக்கு இணங்கி இருக்கிறதா என்று
கவனிக்க வேண்டியது அவசியம்-அதாவது-பிரதேச
ராஜ்ஜியத்தில் செய்யப்பட்டதாக சொல்லும் ஓர்
குற்றத்தை இந்த இந்தியா தேசத்தில் செய்யப்பட்
டதாயிருந்தால் இத்தேசத்தின் சட்ட திட்டங்களின்
படிக்கு அது விசாரிக்கத் தகுந்ததா அல்லவா என்
று கண்டறிய வேண்டியது.

1868-ஹு லா. ரி. 2. பி. கவுன்சல் 193.

2. அந்த குற்றம் அந்த பிரதேச ராஜ்ஜியத்தில்
செய்யப்பட்டதோ அந்த பிரதேச ராஜ்ஜியத்தின்
சட்ட திட்டங்களின்படிக்கு அது குற்றமாகுமா
ஆகாதா என்பதை கவனிக்க வேண்டிய நிமித்த
மில்லை.

1870-ம்ஹுத்திய லா. ரி. 6 மஹா ராணியின்
பென்ஞ் 1.

அந்த குற்றம் அந்தபிரதேச சட்டதிட்டங்களின்
படி குற்றமாகுமா ஆகாதா என்பது அவசியமல்ல.
அந்த செய்கை அக்கிரமமானதென்று தெரிய வந்
தால் போதும்.

3. ஓர் பூஸ்திதியை குறித்த குற்றங்களாகிய பூமி
யின் பேரில் அக்கிரமமாய் பிரவேசிப்பது அல்லது
ஒருவனை அவனுடைய பூமியினின்று வெளிப்படுத்தி
விடுவது இப்படிப்பட்ட அந்த பிரதேச ராஜ்ஜிய
சம்பந்தமான குற்றமாயிருந்தாலும் சரி அல்லது
பூமிக்குள்ள ஹக்கு சுதந்தரங்களைப் பற்றியதாயிரு
ந்தாலும் சரி அப்படிப்பட்ட குற்றத்தை விசாரணை
செய்ய நியாயம் கிடையாது.

ஓர் பிரதேச ராஜ்ஜியத்தில் ஒருவன் குற்றம் செய்
தால் அந்த பிரதேச ராஜ்ஜியத்தின் சட்ட திட்டங்
களின்படிக்கு அந்த குற்றம் செய்யப்படும் காலத்தில்
அது குற்றமாகாதென்றாலும் அல்லது அந்த பிரதே
ச சட்டத்தின்படிக்கு அந்த குற்றம் மன்னிக்கத்
தக்கதென்றாலும் அல்லது பின்னிட்டு செய்யப் பட்
ட சட்டதிட்டத்தின்படிக்கு குற்றமகாதென்றாலும்
அப்படிப்பட்ட செய்கையைப் பற்றி இங்கிலீஷ்
கோர்ட்டார் விசாரிக்க நியாயமில்லை.

குற்றமென்று சொல்லப்பட்ட ஓர் செய்கை இங்கி
லீஷ் லாபடிக்கும் எவ்விடத்தில் செய்யப்பட்டதோ
அந்த பிரதேச ராஜ்ஜிய சட்டபடிக்கும் குற்றமான
செய்கைதானென்பதாய் ஏற்பட்டாலும் அந்த செய்
கையினால் நேரிடும் சிவில் தாவா முதலிய நடவடிக்
கைகள் பிரதேச ராஜ்ஜியத்தில் தான் நடத்த வேண்
டுமென்பது அவசியமல்ல.

ஓர் பிரதேச ராஜ்ஜியத்தில் ஒரு குற்றம் செய்யப்
பட்டதாக சொல்லும் கேசில் அந்த பிரதேச சட்ட
ப்படிக்கு கிரிமினல் நடவடிக்கைகள் நடத்தப்பட
வில்லை ஆகையால் யாதொரு தாவாவும் செய்ய நியா
யமில்லை யென்று வாதிப்பது சரியல்ல.

இதற்காதாரமாய் இதனடியில் சில இங்கிலீஷ்
கேசுகளை எடுத்துக் காண்பிக்கப்பட்டிருக்கிறது:—

பப்ளிக் அதாவது சர்க்கார் உத்தியோகஸ்தர்
மேல் தாவா செய்தல்.

ஜேமேகாதீவின் பிரத்தியேக கவர்னர் ஒருவர் ஒரு
வனை அடித்து அக்கிரமமாய் அடைத்து வைத்ததாக
தாவா செய்யப்பட்டது. இப்படி நடந்தது எப்
போதென்றாலோ அந்த தீவில் பெருங்கலகமொன்று
நடந்தபோது துராங்காரமாய் பிரவேசித்த குற்ற
மென்று சொல்லப் பட்டிருக்கிறது. அந்த நம்பரில்
பிரதிவாதியாயிருந்தவர் அந்த ஜெமாகாதீவில் ஜாரி
செய்யப்பட்டு நடந்தேறிக்கொண்டு வரும் ஓர் சட்
டத்தை தன்னுடைய வாதத்திற்கு ஆதாரமாய் எடு
த்துக் காண்பித்தார். பிரதிவாதியின்பேரில் குற்றம்
சாட்டி நடவடிக்கை நடத்த அந்த பிரதேச சட்டத்
தின்படிக்கு நியாயம் கிடையாதென்று கண்டு வாதி
தாவா செய்யலாகாதென்று தீர்மானித்தார்கள்.
(பிலிப்ஸ்-vs-ஐரி)

1770-ம்ஹுத்தில் மைனார்க்கா என்னும் ஓர் தீவில்
மாஸ்டின் என்னும் ஓர் பிரபு கவர்னராயிருந்தாராம்.
அவர் ராஜ்ஜிய பரிபாலனம் செய்யும் தன்னுடைய
கொட்டகையில் தான் தன்னுடைய சுய இச்சைப்
படிக்கு விளையாடலாமென்று அபிப்பிராயங் கொண்
டு நடந்து வந்தாராம். ஆயினும், அந்த தீவில் வா
சஸ்தரா யிருந்த 'பாப்ரிக்ஸ்' என்பவர் ஒரு கவர்னர்
கொண்டிருந்த அபிப்பிராயத்தை ஒப்பாதவராய்
கவர்னருக்கு வருத்தம் வரும்படி நடந்துக்கொண்
டாராம் அதன்பேரில் அந்த கவர்னர் அந்தப் பிர
ஜையை ஒருவாரம்காவலில் அடைத்து வைத்திருந்து
பிறகு பாப்ரிக்ஸ் என்பவரை ஸ்பெயின் (Spain) தேச
த்திற்குப் போய்விடும்படிக்கு உத்தரவு செய்தாராம்
கவர்னர் இம்மாதிரியாய் தன்னுடைய சுய இச்சைப்ப
டிக்குச் செய்ததற்காக அவர்பேரில் பாப்ரிக்ஸ் என்ப
வர் வெஸ்ட் மினிஸ்டர் (Westminister) கோர்ட்டில்
தாவாசெய்தார். அப்படிப்பட்ட தாவாவில் மாஸ்டி
ன் என்னும் கவர்னர் தான் துராங்காரமாய் பிரவேசித்
ததாகச் சொல்லப்படும் குற்றம் மைனார்க்கா என்னு
ம் தீவில் நேரிட்டதென்றும் ஆகையால் இங்கிலாந்தி

ல் அவர் பேரில் தாவா செய்வதற்கு நியாயம் கிடையாதென்றும் வாதித்தார். பாப்ரிக்ஸ் என்பவர் இவ்விதமன வியாஜ்ஜியம்கொண்டுவர நியாயமுண்டென்று கண்டு அந்த பப்ரிக்ஸ் என்பவருக்கு 3,000பவுண்ட் நஷ்டம் கட்டிக் கொடுக்கும் படிக்கு டிக்ரி செய்யப்பட்டது. மாஸ்டின்- vs-பாப்ரிக்ஸ் (1774) சமுத்திரத்தில் செல்லும் ஸ்டீமெர்கள் வழியில் ஒன்றுக்கொன்று தாக்கி நாசமாய் நஷ்டம் விளைவித்தல். ஓர் ஸ்டீமரில் நிர்ப்பந்தித்து புதிதாய் நேமிக்கப்பட்ட மாலுமி(ஸ்டீமரோட்டி) அவனுடைய அஜாக்கிரதையினால் ஹாலி என்னும் பிரிட்டிஷ் ஸ்டீமர் ஒன்றுபெல்ஜியம் சமுத்திரத்தில் செல்லுகையில் நேப்போலியன் என்னும் ஸ்டீமரை வழியில் தாக்கி அதைச்சமுத்திரத்தில்மூழ்கிப் போகும்படிசெய்தது பெல்ஜியம் தேசத்தின் சட்டப்படிக்கு பிரிட்டிஷ்கார் நஷ்டத்தைக் கட்டிக்கொடுக்கப் பந்தப்பட்டவன்தான். ஆனால்இங்கிலீஷ்சட்டப்படிக்கு அது மாலுமியின் அஜாக்கிரதையினால் நேரிட்டதென்னும் காரணத்தினால் பந்தப்பட்டவரல்ல, ஆகையால் வியாஜ்ஜியம் செய்ய நியாயமில்லை யென்று இங்கிலாந்தில் தீர்மானிக்கப்பட்டது. (ஹாலிஸ்டீமர்கேசைப்பார்க்கவும்.)

பிரிட்டிஷாருடைய ஸ்டீமர்மஹா சமுத்திரத்தின் மத்தியில் செல்லும் போது ஸ்பெயின்(Spain) தேசத்து ஸ்டீமர்கள் அதைத்தாக்கி நஷ்டம் செய்ததென்றுஸ்பெயின் தேசத்து ஸ்டீமர்களுக்குச் சொந்தக்காரர்கள் மீது நஷ்டத்திற்காக வியாஜ்ஜியம் செய்யப்பட்டது. அப்படிப்பட்ட தாவாவின் பிரதிவாதிகள் ஸ்பெயின் தேசத்தின் சட்டப்படிக்கு பந்தப்பட்டவர்களல்லவென்றும் அந்தச்சட்டப்படிக்கு மேற்படி ஸ்டீமரின் சொந்தக்காரனும் அந்த ஸ்டீமரிலிருந்த பிரயாணிகளும் தான் பந்தப்பட்டவர்களென்று வாதித்தார்கள், அப்படிப்பட்டவாதாம் சரியானதல்லவென்று தீர்மானிக்கப்பட்டது.

லியான் ஸ்டீமர் கேசு (1881)

Hindu Law.

ஹிந்து லா.

—:o:—

IMPARTIBLE ESTATES IN HINDU LAW.

ஹிந்துலாவில் ஒரு குடும்பத்தில் பாகப்பிரிவினை செய்வதற்குக் கூடாமையென்று விவரிக்கப்பட்டிருக்கும் சொத்துகள்.

ஹிந்துக்களுக்குள் மிக்க பக்தி விசுவாசத்துடன் அனுசரித்து வரும் ஸ்மிருதிகளில் பாகப் பிறிவினைக்கு லாகியுள்ளதல்லவென்று சொல்லப்படும் அடியில் விவரித்திருக்கும் சொத்துகளெல்லாம் 'பாக்க்ககூடாத' ஸ்திதிகளென்று சொல்வது நியாயமல்ல.

ஓர் ஹிந்து குடும்பத்தில் பாகப்பிறிவினை செய்துக்கொள்வதற்கு சில சொத்துகள் லாகியுள்ளவைகள் அல்லவென்றும் அப்படிப்பட்ட சொத்துகளை குடும்பத்தி லுள்ளவர்கள் முறைபோட்டுக்கொண்டு அனுபவிக்க வேண்டுமென்றும் 'விரஹஸ்பதியும்' 'காத்யாயனுவும்' சொல்லி யிருக்கிறார்கள். அவைகளாவன:—

ஓர் மூதாதையினிடமிருந்து வரப்பட்ட சொத்தை ஒரு ஹிந்து குடும்பத்திலுள்ள தகப்பனும், பிள்ளையும் சமமாய் பாகித்துக்கொள்ளலா மென்கிற பொது விதி யிருந்திடினும், ஓர் பிதார்ஜித சொத்தில் தகப்பனுக்குள்ள சுதந்தரத்தை அவன் ஜீவித்திருக்கும் பொழுதே பிள்ளை தனக்கு பாகித்துக் கொடுக்கும்படி அவனுடைய தகப்பன் அனுமதியின்றி தகப்பன்மீது தாவா செய்வதற்கு நியாயம் கிடையாது.

ஓர் ஹிந்து குடும்பத்திலுள்ள வஸ்திரங்களையும், உடுப்புகளையும், ஆபரணங்களையும் இன்னும் இதுபோன்ற சொத்துகள் எதையும் பாகித்துக் கொடுக்கும்படி கேட்பதற்கு நியாயமில்லையென்று சொல்லி யிருப்பது சரியல்லவென்று கூறப்பட்டிருக்கிறது; ஏனென்றால் ஐஸ்வரியவான்களுடைய குடும்பத்திலுள்ள ஆடை ஆபரணங்கள் தான் மிக்க விலையுள்ளவைகளாயிருப்பதால் அவைகளை பாகிக்கத் தக்கதல்லவென்று சொல்லி யிருப்பது சரியல்ல.

ஓர் ஹிந்து குடும்பத்தின் ஆடை ஆபரணங்களை அந்த குடும்பத்திலுள்ள பாகஸ்தர்களுக்கு பாகித்துக் கொடுக்கவேண்டுமானால் அவ்விதமாயுள்ள ஆடை ஆபரணங்களை யெல்லாம் விற்று முதலாக்கி அப்படி வசூலாகிய மொத்தத்தை தாமாஷாப்படி அவர்களுடைய பாகாச்சார வீதம் பாகஸ்தர்களுக்கு பாகித்துக் கொடுக்கவேண்டும்.

ஓர் குடும்பத்திலிருந்து யாருக்காவது கடன் கொடுக்கப்பட்டிருந்தால் அந்த கடன் பத்திரத்தின் பேரில் வசூலாக வேண்டிய திரவியத்தை வசூல் செய்து அதை பாகஸ்தர்களுக்கு தாமாஷாப்படி பாகித்துக் கொடுக்கவேண்டும்.

ஓர் ஹிந்துகுடும்பத்தில் சமையல் செய்துவைக்கப்பட்டிருக்கும் தின்பண்டங்களை பாகித்துக் கொள்ளவேண்டுமானால் அதை ஒருவன் எடுத்துக்கொண்டு சமையல்செய்யப்படாமலிருக்கும் வஸ்துவை தாமாஷாப்படி பாகித்துக் கொடுக்கவேண்டும்.

ஓர் கிணற்றில் அல்லது குட்டையிலிருக்கும் ஜலத்தை அந்த குடும்பத்திலுள்ள பாகஸ்தர்கள் அவரவர்களுக்கு எப்படி தேவை யிருக்கிறதோ அப்படியே அந்த ஜலத்தை அனுபவித்துக் கொள்ளலாம்.

ஓர் குடும்பத்தில் வேலை செய்யப்பட்டவனாவது அல்லது செய்யப்பட்டவளாவது ஒருவரா யிருந்தால் அந்த வேலைக்காரன் அல்லது வேலைக்காரி அந்த குடும்பத்திலுள்ள பாகஸ்தர்களுக்கு முறைப்படி வேலை செய்து வரவேண்டும்; வேலைக்காரர்கள் அனேகரா யிருக்கும் பட்சத்தில் அவர்களையும் பாகஸ்தர்கள் சமபாகமாய் பாகித்துக் கொள்ளலாம்.

தெய்வீக விஷயமாயுள்ள பூஜை சாமான் முதலான வஸ்துகள் யாவற்றையும் ஓர் குடும்பத்தில் சமபாகமாய்ப் பாகித்துக் கொள்ளவேண்டியது.

பாகித்துக் கொள்ளக்கூடாத சொத்துகளைப்பற்றி ஹிந்துலாவில் சொல்லி யிருக்கும் சட்டம் முழுமைக்கும் ஆதியோடந்தமாய் மி-ர். J. D. மெயின்துரை பின்வருமாறு சுருக்கமாய் கூறி யிருக்கிறார்:—அதாவது,

ஓர் பாகிக்கக்கூடாத சொத்து பிதார்ஜிதமா யிருக்கும் பட்சத்தில் அந்த சொத்து முன்னிருந்த சொந்தக்காரனுக்குப் பின்வரும் சுதந்தர வாளியாகிய வார்சுக்கு மாத்திரம் தான் சொந்தமென்று சொல்லலாகாது. ஆனால் அந்த சொத்துக்கு

வார்சாய் வருபவனுக்கும் இன்னும் அந்த சொத்துக்கு தாயாதி பாகஸ்தர்களென்று வருபவர்களுக்கும் சொந்தமென்று தான் சொல்லவேண்டும். (மெயின்ஸ் ஹிந்துலா 5-வது பிரிதி 369-வது பக்கம் பார்க்கவும்.)

பாகிக்கக்கூடாத சொத்தின் விஷயமாயுள்ள இந்த ராத்பரியதின் கருத்தை சீராய் ஆராய்ந்து பார்த்து பிரிவி கவுன்சலார் (மந்திராலோசனை சபையார் இதனடியில் கண்டிருக்கும் கேசில் சொல்லி யிருக்கும் வண்ணம் தீர்ப்பு சொன்னார்கள்.

வெங்கடசூரிய மகிபதி vs கோர்ட் ஆப்வார்ட்ஸ் இ. லா. ரி. 22 மதராஸ் 383 இன்னும் இதற்காதாரமாய் இ. லா. ரி. 27 ம 435 பார்கவும். ஓர் பாகிக்கக்கூடாத சொத்துக்குச் சுதந்தரவாளி யாரென்று பார்த்தாலோ குடும்பத்தில் பிறந்த ஜேஷ்டன்தான் அந்த சொத்து முழுமைக்கும் சுதந்தரவாளி யென்பது எல்லோரும் அறிந்த விஷயமே. ஆனால் ஜேஷ்டன் என்பது வம்ச பரம்பரையை யொட்டி வரிசைக் கிரமமா யிருக்கவேண்டுமா அல்லது எவ்விதமாயிருக்கவேண்டுமென்பதைத் திர்மானிப்பது அநேக கேசுகளில் கஷ்டமா யிருந்ததாக சொல்லப்பட்டிருக்கின்றது- ஓர் குடும்பத்தில் ஜேஷ்டனா யிருப்பவனின் பரம்பரையை யொட்டிப் பிறந்தவனே என்று ருஜூ செய்யவேண்டியது அவசியமென்று மெயின் சொல்லி யிருக்கிறார். (மெயின்ஸ் ஹிந்துலா 713) பிரிவிகௌன்சலாரும் 'ஜேஷ்டாம்சம்' என்னும் விதியை அனுசரித்து தான் பாகிக்கூடாத சொத்தைப்பற்றி தீர்ப்பு சொல்லவேண்டியதென்று தீர்மானித் திருக்கிறார்கள். 'ஜேஷ்டாம்சம்'என்பதைப் பற்றி செய்யப்பட்டுள்ள 1869ம் ஹூத்திய 1வது ஆக்டின் படிக்கு வம்சப் பரம்பரை வரிசைக்கிரமமாய் தானிருக்க வேண்டுமென்றிருக்கிறது. மூத்தவன் பரம்பரையில் பிறந்தவன் கனிஷ்டன் பரம்பரையிலுதித்தவனைப் பார்க்கிலும் விசேஷமான வனென்று அவனை தான் செத்துக்கு சுதந்தரவாளி யென்று பிரிவிகவுன் சலார் தீர்மானித் திருக்கிறார்கள். இ. லா. ரி. 20 இ. அ. 77.

இதுவுமன்றி ஓர் குடும்பத்திலுள்ள ஜேஷ்டனுடைய வம்ச பரம்பரையில் பிறந்த பேரன் அந்த குடும்பத்தில் பிறந்திருக்கும் கனிஷ்டகுமாரனுக்கு யாதொரு சுதந்தர மில்லை யென்று சொல்லி பாகிக்கக்கூடாத சொத்தை தன் பரம் செய்துக் கொள்ள நியாயமுண்டு. இ. லா. ரி. 6 பம் 613. ராம சந்திர-vs-...ட்ராவ்; 5 இ- அ. 61, 26 கல் 90 (பிரிவுகவுன்சல்கேசு); ... 265. 6ம நார்கத்தி-vs.வெங்கடா இ. லா. ரி. 4 மதராஸ் 250; 6 ம. ஹை. ரி. 93; கச்சி யுவ-vs. கச்சி கல்லியாண் இ. லா. ரி. 11 ம. லா. ஜ. 191; 23 இ. அ. 128. 29 இ. அ. 62. சுப்பிரமணிய.vs- சிவசுப்பிரமணிய இ. லா. ரி. 17ம 325. ஜெதிஷ-vs- ஷியோ 28 இ. அ. 100. 23 அ369;8இ. அ.; 17வீ ரி. 55;) சுந்தரிலிங்கசாமி vs ராமசாமி 26 இ. அ. 55. 26 இ. அ. 24 6 பார்க்கவும்.

ஓர் பாகிக்ககூடாத செத்தையுடைய குடும்மத்தில் ஜேஷ்டனாயிருப்பவன் தான் ராஜ்ஜியபரிபாலனத்திற்கு சுதந்தரவாளியென்று கூறியிருப்பதற்கு மூலாதாரக்கருத்து யாதென்று பார்க்குமளவில்.

பண்டகாலத்தில் ஒவ்வொரு ரஜ்ஜியத்திலும் கனிஷ்ட புத்திராயிருப்பவருக்கு யுவராஜ் 'பட்டமளிப்பது வழக்கம் ஆதிகாலத்தில் சக்ஷாத் மகாவிஷ்ணு வாகிய ஸ்ரீ ராமர் தன்னுடைய ராஜ்ஜியத்தை விட்டு வனவாசம் போயிருந்த பன்னிரண்டு வருஷகாலமாய் அவருடைய இளைய சகோதராகிய யுவராஜ் பட்டம் பெற்ற பரதர் என்பவர் மேற்கூறிய ஸ்ரீ ராம பிரானுக்கு வார்சாக அரசாண்டுகொண்டிருந்து பிறகு ஸ்ரீ ராமபிரான் மேற்கண்ட பன்னிரண்டு வருஷங்களும் கடந்து லங்கையுத்தத்திற்குப் பின்வந்த போது ராஜரீகத்தை பரதர் தன்னுடைய சகோதராகிய 'ஸ்ரீ ராமமூர்த்திக்கு' ஒப்புவித்து விட்டதாக வாசித்திருக்கின்றோ மல்லவா- அதைப் போல் தான் இப்பொழுதும் பாகிக்கக்கூடாத சொத்துகளின் விஷயமாய் ஜேஷ்டாம்சம்' என்னும்விதி அனுசரிக்கப்பட்டு வருவதக தெரியவருகிறது.

ஓர் பாகிக்கூடாத சொத்துள்ள குடும்பத்தில் ஓர்' தத்து' புத்திரனிருந்து அதற்கு பின்கிரமமாய் பிறந்த ஔரச புத்திரனிருப்பானுகில். ஸ்வீகாரப் புத்திரனுக்கு அந்தசொத்துசேரா மல்ஔரச குமாரனுக்குத்தான் ரஜ்ஜியம்சேருமென்று தீர்ப்பாயிருக்கிறது ராமசாமி-vs- சுந்தாலிங்கசாமி இ. ல. ரி. 17 மதராஸ் 435 பார்க்கவும்.

ஓர் ரஜ்ஜியத்தின் சுதந்தரம் குடும்பத்தைச்சேர்ந்த விதவைகளுக்கும், குமாரத்திகளுக்கும் போகாதென்பது ஹிந்து லாவின் ஆதிகருத்தாயினும். வழக்கத்தைருஜூசெய்து விதவைகளும், பெண்களும் கூட ராஜ்ஜியத்திற்கு சுதந்தரவாளியாகிறார்கள்

விதவைகளுக்குள்- மூத்தவள் தான் ராஜ்ஜியத்திற்கு சுதந்தரவாளியே யல்லாமல் இளைய பெண்சாதியல்ல இ. லா. ரி. 1 ம 453;

குமாரத்திகளுக்குள் இளையவளைப் பார்க்கிலும் மூத்த பெண்ணே சுதந்தரவாளி யென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

காத்தமநாச்சியார்-vs-தொரைசிங்க 6 ம. ஹை. ரி. 310; 8 இ. அ. 99; 23 இ. அ. 128; 7 சதர்திவாலத் 198; 6 வீ ரி. 1 பிரிவி கவுன்சல் கேசு); இ. லா. ரி. 23 இ. அ. 147; 16 ம 54; 5 மூர் 169; 2 இ. அ. 263; 24 வீ. ரி. 255; 32 கல் 6; கல் 186; 11 ம லா. ஜ. 28; பார்வதி-vs-ஜெகதீஷ் 29 ஜெ. 82.

ஓர் பாகிக்கக்கூடாத சொத்துக்கு சுதந்தரவாளியாய் வரும் ஜேஷ்டன் அந்த குடும்பத்தைச் சேர்ந்த மற்ற தாயாதிகளாகிய இளையவர்களைக் காப்பாற்ற வேண்டு மென்பது ஓர் கடமை:

சாதாரணமாய் ஓர் ஹிந்து குடும்பத்திலுள்ள தகப்பன் ஒருவன் யுக்த வயதடைந்த அவனுடைய மற்ற பிள்ளைகளை காப்பாற்ற வேண்டு மென்பது சட்டப்படி அவசியமல்லாவிடினும் (12 வீ. ரி. 494). குடும்ப சொத்து சட்டப்படி பாகிக்கூடாத சொத்தாயிருந்தால் அந்த குடும்பத்தில் பிறந்த பிள்ளை தனக்கு ஜீவனும்சம் கொடுத்து வரவேண்டு மென்று தாவாசெய்ய நியாயமுண்டு. ஹிம்மத்சிங்கு -vs- கோபால் சிங்கு இ. லா. ரி. 12 பம். ஹை. ரி. 94; ராயசந்திர -vs- சகாராம் இ. லா. ரி. 2 பம் 346. பஞ்சகாதய்யன் -vs- நீலகண்டய்யன் இ. லா. ரி. 7ம 191; 5 மூர் 82; இ. லா. 27கல் 156 (பிரிவிகவுன்சல் கேசு). இ. லா. ரி. 31கல் 561. 20 ம 275; 1கல். லா. ஜ. 28 1கல். லா. ஜ; இ. லா. ரி. 21. அ232; மாதவா -vs- நாராயண. இ. லா.ரி. 9ம. 243.

CHAPTER I.—1-ம் அத்தியாயம்.

HINDU JURISPRUDENCE AND SOURCES OF HINDU LAW:—CONTINUED.

ஹிந்து தர்மசாஸ்திரப் பரிபாலனமும் ஹிந்துலாவின் மூலாதாரங்களும்:—தொடர்ச்சி.

—:o:—

நாம் முன் சஞ்சிகைகளில் கூறியபடி வேதங்களிலும், சாஸ்திரங்களிலும் என்னென்ன நீதி மொழிகள் சொல்லப்பட்டிரு

க்கின்றனவோ அந்நீதி மொழிகளாகிய பூர்வீக சமஸ்கிரதசுலோகங்களின் வாஸ்தவமான பொருள் யாதென்றும் அந்த பிரதி சுலோகமும் எந்தெந்த சாஸ்திரத்திலிருந்து எடுத்து எழுதப்பட்டதோ அதையும் எம்மால் கூடியவரையில் சுருக்கமாய் இதனடியில் விளங்கச் சொல்வோம்.

I. "நம்முடைய மூதாதைகளாகிய பெரியோர்களிடத்திலிருந்தும்; இன்னும் நம்முடைய தாய், தகப்பன் மாரிடத்திலிருந்தும் மானிடர்களாகிய நாம் தினே தினே கற்றுக்கொள்ளும் நல்லொழுக்கமென்று மேன்பாடாய்ச் சொல்லத் தகுந்த நற்பாதையினின்று எம்மை எக்காலத்திலும் விலக்காதேயும் என்று சதா மனந்தியானம் செய்யவும்."

ரிக்வேதப் 8 மறு 30 சூத்ரம் 30 பார்க்கவும்.

நிகண்டு (5–6–23) நிரகந் (12–3–4–1) இந்த சாஸ்திரங்களின்படி 'மநு' என்பதற்கு 'நியமம்' என்று அர்த்தம் சந்தேகிக்கிறார்கள். இதன்றி மநுவால் ஏற்பட்டிருக்கும் 'பிரம்மசாரியா' 'அக்னிஹோத்ரா' என்பவைகளையும் கவனிக்கவும்.

II. "நன்றாய் கற்றுணர்ந்த கியானஸ்தர்களால் சொல்லப்பட்டவைகள் 'மநுசடபதா பிரம்மண' என்று சொல்லப்படும்."

மநு நீதிசாஸ்திரப்.

III. "இப் பிரபஞ்சத்தில் பகை, கோபம், அருவெருப்பு இவைகளை நீக்கி லோகாச்சாரத்திற்கு விரோதமா யுள்ளவைகளை இச்சியாம விருப்பவர்களாகிய வேதங்களை நன்றாய்க் கற்றுணர்ந்த கியானிகளென்று சொல்லப்படும் புண்ணியவான்களால் மிக்க சிரேஷ்டமானதென்றும் உசிதமானதென்றும் மதித்து அநுசரிக்கப்பட்டு வரும் நீதி மொழியாகிய சட்டத்தை ஹிந்துக்கள் ஒவ்வொருவரும் கற்றுணர்ந்தொழுகவும்" II-I

IV. "சகஜமாய் மானிடர் யாதேனும் லாபகரமடையவேண்டுமென்கிற கோறிக்கையுடன் எச்செய்கையும் செய்ய விரும்புகிறார்கள். அப்படிச் செய்வது சரியானதென்று புகழ்ந்து கூறத்தக்கினதல்ல. அப்படிக் கிருந்திடினும் கோறிக்கையின்றி இப் பூமண்டலத்தில் வாழ்வதும் மிக்க கஷ்டமாய்த்தான் தோற்றுகின்றது. ஏனென்றால் அக்கோறிக்கையைக் கொண்டு தான் மானிடர் சகஜமாய் வேதங்களைக் கற்றுக்கொள்ளுகிறார்கள்." II-2.

V. "வாஸ்தவமாய் ஜனங்கள் பிரதி பலனடைவோமென்பதை மூலாதாரமாய் வைத்துக்கொண்டு தான் ஒவ்வொரு செய்கையும் செய்கிறார்கள். அப்படிப்பட்ட விருப்பம் சதா மானிடர் உள்ளத்தில் குடி கொண்டிருப்பதற்குப் பலனாய் பிரார்த்தனைகள் செய்துக்கொண்டு அவைகளைச்செய்கிறார்கள். இப்படிப்பட்ட பிரார்த்தனைகள் செய்துக்கொள்வதினால் லாபமடைவோமென்கிற அபேட்சை மானிடருக்குண்டு." II-3.

VI. "இதனடியில் கூறி யிருக்கும் ஒரு செய்கை கூட அப்படிப்பட்ட கோறிக்கை யில்லாமல் செய்ததல்ல. ஏனென்றால், மானிடன் செய்யும் ஒவ்வொரு செய்கையும் இவ்விதமான லாப மடைவோமென்கிற கோட்பாட்டின் பயனே." II-4.

VII. "சாஸ்திரத்தில் சொல்லி யிருக்கும் ஒவ்வொரு விதியையும் சரியாய் கற்றுணர்ந்து அதன்படி நடக்கும் ஒவ்வொரு மானிடனும் மரணமென்பதை அடையாமல் என்னும் சிரஞ்சீவியா யிருப்பது மல்லாமல் அவன் உயிருடன் ஜீவித்து வாழும் இந்தப் பிறப்பிலும் அவன் என்னென்ன விரும்பி எதெதைச் செய்கிறானோ அக்கோறிக்கைகளி வெல்லாம் தான் விரும்பியபடி பூர்த்தியாய் ஜெயமடைந்து சுகித்து வாழ்வான்." II-5.

VIII. "தெய்வ வாக்கென்று சொல்லப்படும் சட்டம் மிக்க திரவியம்சேகரித்து ஐஸ்வர்யவானா யிருக்கவேண்டுமென்றும், தான் விரும்பி செய்யும் கோறிக்கைகளில் ஜெயமடைந்து லாப மடையவேண்டுமென்றும் கருத்துள்ளவர்களுக் கல்ல செய்யப்பட்டது; ஆனால் அது முக்கியமாய் யாருக்காக செய்யப்பட்டதென்றாலோ மானிடராகிய நம்மையும் மற்றெல்லாவற்றையும் சிருஷ்டித்த நம்முடைய ஆண்டவனாகிய ஜெகதீசனுடைய அருளடைவோமென்று சதா சிந்தித்துக்கொண்டிருப்பவர்கள் இந்த தர்ம நீதி சட்டத்தை கற்றுணர்ந்து அதன்படி நடப்பதற்கு இந்த சட்டம் உண்டாயிருக்கிறது." II-13.

IX. "மநு என்பவரால் மானிடராகிய ஒவ்வொருவருக்கும் விதிக்கப் பட்டிருக்கும் ஒவ்வொரு சட்டத்தையும் வேதத்தில் பூராய் வெளியிடப் பட்டிருக்கின்றது. மநு என்பவர் ஓர் கற்றுணர்ந்த கியானி யென்று எல்லோருக்கும் புலப்படும் மஹான்". II-7.

X. "ஆனால் கற்றுணர்ந்த ஒவ்வொரு சீமானும் சட்டமென்று சொல்லப்படும் இந்த கிரந்தங்களில் சொல்லி யிருப்பவைகளை யெல்லாம் மிக்க அறிவுடன் தன்னுடைய கியானக் கண்ணினால் பரிசோதித்தறிந்து அந்த கிரந்தங்களில் வெளியிட்டிருப்பதின் பிரகாரம் சதா அதேக்கியானமாயிருந்து அதன்படி நடக்க வேண்டியது." II-8.

XI. "ஏனென்றால் தெய்வவாக்கென்று சொல்லப்படும் சாஸ்திரங்களில் வெளியிட்டிருப்பவைகளின் படி கீழ்ப் படிந்து நடக்கும் மானிடர் இப்பூமண்டலத்தில் மிக்க கீர்த்தி பெற்று வாழ்வதுமல்லாமல் அவர்கள் காலமான பின் நற்கெதி யடைந்து பேரானந்த சுகத்தைப் பெறுவார்கள்." II-9.

XII. "சட்டத்திற்கு மூலதாரங்களென்று சொல்லப்படும் ஸ்ருதி, ஸ்மிருதி இவைகளைப் பழித்து தூழிப்பவர்களுடைய மொழிகளை ஆதாரமாய்க் கொண்டு நடக்கும் ஒவ்வொரு இருபிறப்புள்ள மானிடனையும் தெய்வ பக்தி விசுவாசமில்லாத பிரஷ்டன் என்றும் வேதங்களைப் பழிக்கும் துரோழி என்றும் கருதி நல்லொழுக்க முள்ள புண்ணியவான்கள் அவனைத் தங்களுடைய கூட்டத்தி லிருந்து விலக்கிவிட வேண்டும்." II II

XIII. "தர்மநீதிப்படி நடவாதவர்களை தர்மநீதியே நாசம் செய்துவிடுகின்றது. தர்ம நீதிப்படி நடக்கும் புண்ணியவான்களையும் அந்த தர்ம நீதியே ஆதரித்து வருமென்பது திண்ணம். ஆகையால் தர்மநீதி யென்பவைகளை எக்காலத்திலும் விலக்கி நடக்களாகாது, அப்படிக்கல்லாமல் தர்மநீதியை விலக்கி நடப்பார்களாகில் அந்த தர்மநீதியே அழித்துவிடும்". VIII-15.

XIV. "ஆனால் மானிடர் செய்யும் ஒவ்வொரு குற்றத்திற்கும் சாஸ்திரங்களில் என்ன தண்டனை சொல்லப்பட்டிருக்கிறதோ இந்த சிக்ஷயை மானிடர் தம்மையாளும் ராஜ்ஜியப் பரிபாலனம் செய்யும் அரசனால் அநுபவிப்பாராகில் அவர்கள் இப்பிரபஞ்சத்தில் புண்ணியகரமான பெயர் போன நற்செய்கைகளைச் செய்த மஹான்கள் அடையும் 'மோக்ஷம்' என்று சொல்லப்படும் கீர்த்தியுள்ள பதவியை அடைவதற்குத் தகுந்தவர்களாவார்கள்". VIII-318.

Cases from the Indian Law Reports.

இந்தியன் லா ரிபோர்ட்டு கேசுகள்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 353of1909

ஜட்ஜுகள் :— { மிர். ஜ. மன்ரோ / மிர். ஜ. சங்கரன் நாயர் } முன்பாக

ஃP. K. கேலு.................................அப்பீல்வாதி.

vs

அம்மத்குன்னி வகையரா......ரெஸ்பான்டென்டுகள்.

பூமிக்குடையவனும் குடிக்கூலிதாரனும்-குத்தகைப்பத்திரம்-கேட்டபோது ஸ்வாதீனம் ஒப்புவிக்க வேண்டுமென்கிற நிபந்தனை ஒன்று அதிலிருக்கிறது-வீட்டை விட்டுக் காலிசெய்வதற்காக கொடுக்கப்பட்ட நோட்டீசு-ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராபெர்ட்டி ஆக்ட் (4 of 1882) 1)3-வது பிரிவு.

குத்தகைக்கு எடுத்துக்கொள்ளும் குடிக்கூலிதாரன் பூமிக்குடையவனுக்கு எழுதிக் கொடுத்த குத்தகைச் சீட்டென்னும் அக்ரிமென்டில் பூமிக்குடையவன் எப்பொழுது தனக்கு அந்த பூமியை தன்வசம் ஒப்புவிக்கும்படி கேட்கிறானோ அப்பொழுதே குடிக்கூலிதாரன் அந்தப்பூமியைக் காலிசெய்து அவன் வசம் ஒப்புவிப்பதாக ஓர் ஷரா கண்டு எழுதியிருந்தது. இப்படிப்பட்ட ஷரத்து-ஓர் பூமியை ஒப்புவித்துக்கொள்ள வேண்டுமானால் குடிக்கூலிதாரனுக்கு நோட்டீசு மூலமாய் தெரிவித்து பிறகுதான் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 106-வது பிரிவில் ஏற்பட்டிருக்கும் நிபந்தனைக்கு விரோதம்; ஏனென்றால் பூமிக்குடையவன்கேட்கும்பொழுதேகுடிக்கூலிதாரன் பூமியைஒப்புவித்து விடவேண்டுமென்று ஷரத்துகண்டு பத்திரத்தில் எழுதிக்கொண்டால் கவர்ன்மென்டாரால் செய்யப்பட்டிருக்கும் நோட்டீசுமூலமாய் அறிவிக்கவேண்டுமென்கிற நிபந்தனைக்கு பிரதிகூலமா யிருக்கிறது.

கள்ளிக்கோட்டை அட்டிஷனல் டி. மு. கோ174 of 1907ல் செய்த தீர்மானத்திற்கு விரோதமாய் தென்மலபார் ஜில்லா கோர்ட்டில் அப். நெ. 420 of 1908ல் செய்தடிக்ரியின்பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

கேசின் விபரம்:—வாதி முதல் பிரதிவாதிக்குத் தன்னுடைய சொத்தில் சிலதை ஒருவருஷகாலத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 10 குடிக்கூலி கட்டிக் கொண்டு வரும்படிக்கு அவனுடன் ஏற்பாடு செய்துக் கொண்டான். அந்த ஏற்பாட்டின்படிக்கு முதல் பிரதிவாதி ஒப்புக்கொண்டு 1905ஆ அக்டோபர் 15உ குத்தகைச் சீட்டென்னும் A-ஏ குறிப்பட்ட தஸ்தாவேஜுவென்று வாதிக்கு கையெழுத்து போட்டு எழுதிக்கொடுத்திருந்தான். அந்த அக்ரிமென்டின் ஒரு கண்டிஷன்—நிபந்தனை— என்னவென்றால் ஒருமாத குடிக்கூலி செலுத்தத் தவறினால் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 15 மேனிக்கு அதிகக் குடிக்கூலி கட்டிக் கொடுக்கக்கடவது—இதுவுமன்றி அந்த அக்ரிமென்டில் இன்னொரு கண்டிஷன்—நிபந்தனை என்னவென்றால் குடிக்கூலிதாரன் தான் அனுபவிக்கும் காலத்தில் தான் குடிக்கூலிக்கு எடுத்துக்கொண்ட அந்த சொத்தின்பேரில் யாதொரு புது கட்டடம் முதலிய எவ்விதமான விர்த்தியும் செய்யலாகாதென்றும்; அப்படி செய்தால் காலி பண்ணும் காலத்தில் அதன் பெருமானத்தை இழந்து விடவேண்டியது தானென்றும் நிபந்தனை கண்டெழுதி யிருந்தது. முதல் பிரதிவாதி மேற்படி பூமியை குடிக்கூலிக்கு எடுத்துக்கொண்டபிறகு மேற்கண்ட A-ஏ. குறிப்பிட்ட தஸ்தாவேஜியில் கண்டிருக்கும் ஷராவிற்கு விரோதமாய் அந்த பூமியின்பேரில் ஒரு கட்டடம் கட்டினனென்று வாதி தெரிந்துக்கொண்டு 1906-ம்ஆ ஜூலை 6உ நாலு தினத்திற்குள் பூமியைக் காலி படுத்தி தன்வசம் ஒப்புவிக்கும்படிக்கு B-பி. குறிப்பிட்ட நோட்டீசு கொடுத்தான். அதன்பேரில் டிஸ்ட்ரிக்ட் முன்சீபு அவர்கள் பூமியை வாதி வசம் ஒப்புவிக்கும்படிக்கும் குடிக்கூலி கொடுக்கத் தவறின காலத்திற்கு அதிக குடிக்கூலியாகிய மாதம் ஒன்றுக்கு ரூபாய் 15 வீதம் முதல் பிரதிவாதி கட்டிக் கொடுக்கவேண்டிய தென்றும் டிக்ரி செய்தார்.

அதன்பேரில் செய்யப்பட்ட அப்பீலில் என்ன க்ரவுண்டுகள் (ஆதாரங்கள்) என்றாலோ:—

(1) A-ஏ. குறிப்பிட்ட தஸ்தாவேஜியில் அதிக குடிக்கூலி கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கண்டெழுதி யிருக்கும் ஷரா ஒரு தண்டனையா யிருக்கிறது. ஆகையால் அது சட்டத்திற்கு விரோதம்.

(2) அந்த பூமியின்பேரில் கட்டப்பட்டிருக்கும் கட்டடத்திற்குப் பிரதி பலனாய் தாவா செய்த முழு மொத்தத்தையும் பிரதிவாதிக்கு வாதி கட்டிக் கொடுக்கும்படியாய் டிக்ரி செய்திருக்கவேண்டியது.

(3) பூமியை விட்டு காலிசெய்து வாதிக்கு ஒப்புவிக்கும்படி குடிக்கூலிதாரனுக்கு கொடுக்கப்பட்ட நோட்டீசு சட்டப்படி செலாவணி யுள்ளதல்ல.

மேற்கூறிய மூன்று க்ரவுண்டுகளில் முதல் க்ரவுண்டைப் பற்றி அப்பீல் வாதியின் வக்கீல் அவ்வளவாய் வற்புறுத்திப் பேசயில்லை. நிலத்தின்பேரில் குடிக்கூலிதாரன் செய்திருக்கும் விர்த்தியைப்பற்றிச் செய்யப் பட்டிருக்கும் தாவாவை கவனிக்குமளவில் பூமியை குடிக்கூலிக்கு எடுத்துக்கொள்ளும் தேதியில் அந்த நிலத்தின்பேரில் முதல் பிரதிவாதிக்குச் சொந்தமாய் எவ்வளவு விருத்தி செய்யப்பட்டிருக்கிறதோ அவ்வளவு விருத்தியின் பெருமானத்தை வசூல் செய்வதற்காக முதல் பிரதிவாதி தாவா செய்யலாமென்று மேற்கண்ட A-ஏ. குறிப்பிட்ட தஸ்தாவேஜியில் ஒரு ஷரா கண்டெழுதி யிருப்பது வாஸ்தவமே.

அதன்படிக்கு டிஸ்ட்ரிக்ட் முன்சீபு கமிஷனர் ரிப்போர்ட்டின்படிக்கு இரண்டாவது ஐடமாகிய இரண்டு கொட்டகைகளினுடைய பெருமானம் ரூபா. 62–10–7க்கு டிக்ரி செய்தார். இன்னும் முதல் பிரதிவாதி தான் அந்த நிலத்தின் பேரில் கட்டிய 1-வது ஐடமாகிய பட்டைகள், கட்டடங்கள், கொட்டகைகள் முதலிய வற்றின் பெருமானம் ரூபாய் 301–13–0 தனக்கு கட்டிக் கொடுக்க வேண்டு மென்று வாதி கேட்பதற்கு நியாய மில்லை யென்று சொல்லி விட்டார். குத்தகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த பூமியோ கொன்னூரி நதியின் கரையின்பேரில் இரண்டு துண்டுகளாயிருக்கின்றன. இந்த துண்டு நிலங்களின்பேரில் முதல் பிரதிவாதி மாத்துண்டுகளையும், தூலங்களையும் போட்டு வைத்திருந்தான் ஆனால் பூமியை குடிக்கூலிக்கு விட்டது பயிரிடுவதென்பதற்

கல்ல, ஓர் குடிக்கூலிதாரன் அவன் குத்தகைக்கு எடுத்துக் கொண்ட நிலத்தின்பேரில் யாதேனும் புதிய கட்டடம் முதலியவைகள் கட்டி விருத்தி செய்தால் அதன் பெருமானத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டியது அவசியமல்ல வென்று ஏற்பாடு செய்துக் கொள்வது மலபார் சட்டத்திற்கு விரோதமென்று சொல்லப்பட்டிருக்கிறது,

முதல் பிரதிவாதியின் வாதம் யாதெனில்:—

"வாதி அந்த பூமியின்பேரில் முன்னமேயே கட்டி யிருந்த கட்டடத்தை ரிப்பேர் முதலியது செய்து விருத்தி செய்தானேயல்லாமல் மற்றப்படி யாதொன்றும்செய்யவில்லை யென்று வாதாடினான். ஆனால் முதல் பிரதிவாதி முன் அந்த மனையின்பேரிலிருந்த கட்டடங்களை இடித்து விட்டு புதிதாய் கட்டடங்கள் கட்டினதாய் வாதி சொல்லுகிறான், கமிஷனரின் கணக்குபடி பார்த்தாலோ அந்த மனையின் பேரிலிருக்கும் 1-வது ஐடக் கட்டடங்களெல்லாம் சுமார் ஒரு வருஷத்திற்கு முன் கட்டியதாய் தான் தெரியவருகிறது. முதல் பிரதிவாதி கட்டிய கட்டடங்களின் விருத்தி பெருமானத்தை வாதி கட்டிக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை யென்று தீர்மானித்தது சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது- முதல் பிரதிவாதி மேற்படி மனையை குத்தகைக்கு எடுத்துக்கொண்ட பிறகு இரண்டு மூன்று தரத்தாருக்கு இரண்டு ஐடம்களை குடிக்கூலிக்கும் விட்டிருந்தான். அவன் இப்படி வேறொருவருக்கு குடிக் கூலிக்கு விடுவதற்கு அவனுக்கு சுதந்தரமில்லை யென்றும் அப்படி அவனுக்கு மனை வேண்டாதிருக்கும் பட்சத்தில் அதை வாதிவசம் விட்டுவிட வேண்டியதென்றும் கண்டெழுதி யிருந்தது. ஆனால் முதல் பிரதிவாதி அந்த குத்தகைச் சீட்டின் ஷரத்தின்படிக்கு நடவாத விஷயத்தில் வாதி மனையின் பேரில் பிரவேசித்து ஸ்வாதீனம் செய்துக் கொள்ளலாமென்று ஷரா கண்டெழுத வில்லை, அப்படிப்பட்ட நிபந்தனை கண்டெழுதாதபடியால் முதல் பிரதிவாதி செய்தது ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 10, 111 (c) வது பிரிவுகளின்படி செல்லாது.

மனையை தன் வசம் ஒப்புவிக்கும்படிக்கு வாதி 1906-ம௵ ஜூலைமீ 5௳ முதல் பிரதிவாதிக்கு கொடுத்த பி-குறிப்பிட்ட நோட்டீசு கிரமமானதல்ல. மேற்படி சொத்தாகிய மனையை ஒருவருஷ காலத்திற்கு குத்தகை விட்டிருந்தது அந்த ஒருவருஷ டயம் 1906-ம௵ அக்டோபர்மீ 15௳ கடந்து விட்டது. தாவாவோ 1907-ம௵ பிப்ரவரிமீ 2௳ செய்யப்பட்டது. ஆதியில் குந்நகைப் பத்திரமாகிய ஏ-குறிப்பிட்ட தஸ் தாவேஜியில் கண்டிருக்கும் ஒரு வருஷ காலத்திற்கு மேலேயே முதல் பிரதிவாதி இந்த மனையை அனுபவித்து வந்தவனாய் தெரியவருகிறது. ஆகையால் அவனுக்குச்-சட்டப்படி 15நாள் நோட்டீசு கொடுத்திருக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் நோட்டீசு கொடுக்க வேண்டியதில்லை என்னும் ஷரா பத்திரத்தில் காணோம்; ஆனால் வாதி கேட்டபொழுது முதல் பிரதிவாதி மனையை விட்டுவிட வேண்டுமென்னும் ஷரா சட்டத்திற்கு விரோதம். இப்படி பத்திரத்தில் எழுதி யிருப்பதினால் முதல் பிரதிவாதி தனக்கு நோட்டீசு கொடுக்க வேண்டு மென்னும் சுதந்தரத்தை இழந்து விட்டவனல்ல. சட்டப்படி கிரமமான நோட்டீசு கொடுக்கப்படவில்லை யென்று கண்டு முதல் பிரதிவாதியை மனையை காலி செய்து ஒப்புவிக்கும்படி கேட்பதற்கு நியாயம் கிடையாது. பூமிக்குடையவன் கேட்டபோது காலி செய்து ஒப்புவிக்க வேண்டுமென்று எழுதிக்கொள்வது ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராபெர்ட்டி ஆக்ட் 106-வது பிரிவின் நிபந்தனைக்கு நேர் விரோதம். ஆகையால் கீழ் அப்பீல் கோர்ட்டார் டிக்ரியை ரத்து செய்து டிஸ்ட்ரிக்ட் முனிசீபு செய்த டிக்ரியை இரண்டு [illegible] ட்டு செலவுடன் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பார்ட்டு 36[illegible]

MADRAS HIGH COURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 1162 of 1904.

ஜட்ஜுகள் :— { சர். ஆர்னல்ட் வொயிட், நைட் சீப் ஜஸ்டிஸ் / மி-ர். ஜஸ்டிஸ் வாலிஸ். } முன்பாக

வேலாயுதசெட்டி வகையரா...வாதிகள்...அப்பீல் வாதிகள்

vs

கோவிந்தசாமி நாய்க்கன்...பிரதிவாதி...ரெஸ்பான்டெண்டு

ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் (4 of 1882) 55-வது பிரிவு-கிரய மொத்தம் செலுத்தப்படயில்லை—கிரயம் பெற்றவன் சொத்தை ஸ்வாதீனம் செய்துக்கொள்ள ஹக் [illegible] ண்டா? அப்படி ஹக்குண்டா யிருக்குமா [illegible] ம் செய்தவனுக்குச் சேரவேண்டிய மொத்தத்திற்கு இந்த சொத்தே ஈடாகும்.

ட்ரான்ஸ்பர் ஆப்ப்ராப்பெர்ட்டி ஆக்டின்நிபந்தனைகளின்படிக்கு கிரய மொத்தத்தைச் செலுத்தாமலேயே ஓர் சொத்தைக் கிரயம் பெற்றவன் அந்த சொத்தை தன் ஸ்வாதீனம் செய்யும்படிக் கேட்க ஹக்குண்டு. கிரயம் செய்தவனுக்கு இன்னும் சேர வேண்டி யிருக்கும் பாக்கி கிரய மொத்தத்திற்கு கிரயம் செய்யப்பட்ட சொத்தே ஓர் ஈடான ஐவேஜியாகும்.

பெய்ஜனத் சிங்க் vs பல்டு இ. லா. ரி. 30 அ 125; அ. வி. நோ. (1908) 38; 5 அ. லா. ஜ. 96; சாகிப்லால் vs பகவான்தாஸ் இ. லா. ரி. 11 அ 244 சந்தேகிக்கப்பட்டது.

இங்கிலாந்தில் புழங்கி வரும் மாக்ஷிமை பொருந்திய சக்கிரவர்த்தியினுடைய 'ஸ்டாட்யூட்லா' என்பதை இந்த இந்தியா தேசத்திற்கு ஒவ்வின சட்டமாய் கோர்ட்டார் பிரயோகிப்பது உசிதமல்ல.

வெப் vs மெக்பெர்சான் 30 இ. அ. 238; 13 ம. லா. ஜ. 389; இ. லா. ரி. 5 பம். லா. ரி. 838; 8 கல். வீ. நோ. 41; இ. லா. ரி. 31 கல் 57 ஆதாரமாய் எடுத்துப் பார்க்கப்பட்டது.

ஈரோட் டி. மு. கோ. அ. நெ. 102 of 1908ல் செய்த டிக்ரியின்பேரில் கொயம்புத்தூர் ஜில்லா கோர்ட்டு அ. நெ. 175 of 1902ல் செய்த டிக்ரியின் பேரில் கொண்டு வரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

கேசின் விவரம்:—தாவா நிலத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொள்வதற்கும் தாவா நிலத்தின் விஷயமாய் சேரவேண்டி யிருக்கும் குடிக்கூலி நிலுவை பாக்கி மொத்தம் ரூபாய் 615ம் வசூல் செய்வதற்கும் இந்த வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டது. 1 முதல் 3 பிரதிவாதிகளின் [illegible] யாதெனில்:—வாதி தாவா நிலத்தை அனுப[illegible] நிலத்திற்கும் அவனுக்கும் [illegible] ம் கிடையாது. தாவா நிலங்கள் [illegible] பிரதிவாதிக்குச் சொந்தமென்றும் 1 மு[illegible] 3 பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதியின் குடித்தனக்[illegible]களென்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் மூவர்பேரிலும் வாதி ஒரே தாவா செய்ய நியாயமில்லை யென்றும் வாதித்தார்கள். இந்த தாவாவின் 4-ம் பிரதிவாதியின் பின்வருமாறு வாதித்ததினால் அவனையும் இந்த நம்பரில் கட்சிதாரனாய் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அவைகளாவன:—வாதி தாவா சொத்தை 4-ம் பிரதிவாதியிட மிருந்து கிரயத்திற்கு வாங்கிக்கொண்டதாக அவனிடத்தி லிருந்து ஒரு கிரய தஸ்தாவேஜு எழுதி வாங்கிக்கொண்டான். ஆனால் வாதி மேற்செப்பிய 4-ம் பிரதிவாதிக்கு கிரய மொத்தத்தைச் செலுத்தினவ னல்ல. ஆகையால் தான் வாதிக்கு தாவா சொத்தை ஸ்வாதீனப்படுத்தவில்லையென்றும் தாவாவிற்கு முன் வாதி தாவா சொத்தை பன்னிரண்டு வருஷங்களுக்கு அதிகமாய் அனுபவித்தவனுமல்ல. தாவாவிற்கு லிமிடேஷன் ஆக்டின் பிரகாரம் காலதோஷம் வந்துவிட்டதென்றும் வாதித்தான். தாவா சொத்தில் 1-வது ஐடத்தை 4-ம் பிரதிவாதி 1886ம௵ ஜனவரிமீ 27௳ முதல் வாதிக்கு கிரயம் செய்துவிட்டான். இரண்டாவது ஐடத்தை கூட வாதிக்கே 4-ம் பிரதிவாதியின் மனுஷன் ஒருவன் ஏ-என்பவன் 1886ம௵ பிப்ரவரிமீ 19௳ விக்கிரயம் செய்தான். அப்படி ஏ-என்பவன் 4-ம் பிரதிவாதிக்காக வாதி பேருக்கு எழுதிக்கொடுத்த கிரய தஸ்தாவேஜியில் 4-ம் பிரதிவாதி சாக்ஷி கையெழுத்து போட்டிருக்கிறான். இந்த தாவாவோ 1901ம௵ மார்ச்சுமீ 18௳ தாக்கல் செய்யப்பட்டது.

டிஸ்ட்ரிக்டு முனிசீபு வியாஜ்ஜியத்தில் ருஜுவாகிய சாக்ஷியத்தை யோசித்து வாதி கிரய மொத்தத்தை செலுத்திவிட்டா னென்றும், அப்படி கிரய மொத்தத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு 4-ம் பிரதிவாதி தாவா சொத்தை அனுபவித்து வந்தது வாதிக்கு விரோதமல்லவென்றும், 4-ம் பிரதிவாதி தாவா சொத்தை வாதிக்கு ஏஜென்டாய் அனுபவித்தவனென் [illegible]கண்டு வாதியின் தாவாவை வாதி பக்ஷம் தீர்ப்பு [illegible]ய்தார். அந்த டிக்ரியின்பேரில் 4-ம் பிரதிவாதி அப்பீல் செய்துக்கொண்டதில் ஜில்லா ஜட்ஜ் அவர்கள் வாதி கிரய மொத்தத்தை 4-ம் பிரதிவாதிக்கு பூராவும் செலுத்தினவனல்லவென்றும், வாதியின் தாவாவிற்கு காலதோஷம் வந்துவிட்டதென்றும் கண்டு முனிசீபு கோர்ட்டு டிக்ரியை மாத்தி வாதியின் தாவாவை தள்ளுபடி செய்து விட்டார். வாதி அதன்பேரில் ஹைகோர்ட்டுக்கு இந்த இரண்டாவது அப்பீல் செய்துக்கொண்டான்.

மி-ர். V. புருஷோத்தம ஐயர்......அப்பீல்வாதிகளின் வக்கீல்.

மி-ர். T. V. கோபாலசாமி ஜீ......ரெஸ்பான்டெண்டு வக்கீல்.

தீர்மானம்:—இந்த இரண்டாவது அப்பீல் பிரதமத்தில் விசாரணைக்கு வந்தபோது கீழ் அப்பீல் கோர்ட்டில் ஜில்லா ஜட்ஜ் அப்பீலை பைசல் செய்யும் காலத்தில் அந்த அப்பீலில் வாதியா யிருந்தவன் அப்பீல் பைசலாவதற்கு முன்னமேயே காலமாய் விட்டதாகவும் இறந்துபோன அந்த அப்பீல் வாதிக்கு சட்டப்படியுள்ள கிரமமான வார்சு இன்னானென்றும் நிட்சயித்து ரெக்கார்டில் பதிப்பிக்காமலேயே அப்பீலை பைசல் செய்தது பிசகென்றும் கண்டு மறுபடியும் ஜில்லாஜட்ஜை அப்பீலை விசாரிக்கும்படி ரெக்கார்டை கீழ்கோர்ட்டுக்கு அனுப்பினதின் பேரில் ஜில்லா கோர்ட்டாரால் கேசு மறுபடியும் விசாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டது. இங்கிலாந்தில் அனுசரித்து வரும் ஸ்டாட்யூட் சட்டங்களை இந்தியாவில் பிரயோகிப்பது நலமல்ல வென்று கண்டு தாவாவிற்கு காலதோஷம் வந்து விட்டதா இல்லையாயென்று ரெக்கார்டிலுள்ள சாட்டிசியத்தின்பேரில் ரிப்போர்ட்டுசெய்யும்படிக்கு அப்பீலை மறுபடியும் கீழ்கோர்ட்டுக்கு அனுப்பும்படிக்கு உத்தரவு செய்து பிறகு வாதிக்கு ஏஜென்டாய் 4-ம் பிரதிவாதி தாவா சொத்தை அனுபவித்தவனென்றும் வாதிக்கு விரோதமாய் அனுபவித்தவனல்லவென்றும் ஜில்லா ஜட்ஜு கண்டிருப்பதால் தாவாவிற்கு காலதோஷம் வரவில்லை யென்று கண்டு முனிசீபுகோர்ட்டு டிக்ரியை செலவுள்பட ஊர்ஜிதம் செய்தார்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள். 8-வது வால்யம் 3-வது பார்ட்டு 264. 1. ம. வீ. நோ, 637.

MADRAS HIGHCOURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

ரிவிஷன் மனு நெ. 309 of 1909.

ஜட்ஜுகள்:— { மி-ர். ஜ. வாலிஸ் / மி-ர். கிருஷ்ணசுவாமி ஐயர். } முன்பாக.

இங்தெத்தி சின்ன நாகடு......பிரதிவாதி.........மனுதாரன்

VS

போடு கஞ்சி வெங்கட சுப்பய்ய......வாதி......ரெஸ்பான்டெண்டு.

மதராஸ் எஸ்டேட்ஸ் (1 of 1908) 3-வது பிரிவு 2 (d) உட்பிரிவு-ஓர் எஸ்டேட்-சிவில் கோர்ட்டாருக்குள்ள அதிகாரம்-இனும் என்பதைப் பற்றி சரியான அர்த்தம் யாது-ருஜு செய்ய வேண்டிய பொறுப்பு.

மதராஸ் எஸ்டேட் ஸ்லாண்ட் ஆக்ட் 3-வது பிரிவு 2 (d)ல் சொல்லியிருக்கும் விவரணத்தின்படி இனும் கிரமம் என்று ருஜு செய்ய வேண்டிய பொறுப்பும் சிவில் கோர்ட்டாருக்கு விசாரணை செய்ய அதிகாரம் கிடையாதென்று சொல்வதையும்

ரூபிக்க வேண்டிய பொறுப்பு பிரதிவாதியினுடையதுதான். இனும் என்னும் பதத்திற்கு நிலவரி இனுமென்று அர்த்தமிருப்பதினுல் குடிவார பாத்தியதை யில்லாதவனுக்கு இவ்விதமான இனும் பாத்தியதை கொடுக்கப்பட்டிருக்கிறதென்று அர்த்தம் செய்வது சரியல்ல.

எல்லூர் டி. மு. கோர்ட்டு ஸ்மால்காஸ் நெ 670 of 1908 ல் செய்த டிக்ரியின் பேரில் 1887-ம்ஹுத்திய 25-வது ஆக்ட் 9-வது பிரிவின்படி கொண்டுவரப்பட்ட ரிவிஷன் மனு.

கேசின் விபரம்:—இனும் கமிஷனரால் ஓர் நபர் பேரில் இனுமாய் கொடுக்கப்பட்ட கிராமத்தில் வாதிக்கும் பாகமுண்டு பிரதிவாதியோ அந்த இனும் நிலத்தில் பயிர் செய்யும் குடித்தனக்காரன். அப்படி பயிர் செய்வதற்காக ரிஜிஸ்தர் முச்சலிக்கா கையெழுத்து போட்டு எழுதிக் கொடுத்திருந்தான்.

இந்த வியாஜ்ஜியத்தில் ஏற்பட்ட இஷ்யூக்களில் ஓர் இஷ்யூ என்னவென்றுல் இப்படிப்பட்ட வியாஜ்ஜியத்தை விசாரிப்பதற்கு சிவில் கோர்ட்டுக்கு அதிகார வரம்பு உண்டா இல்லையா? என்பது. இனும் கிராமம் என்பதற்கு எஸ்டேட் ஸ்லாண்டு ஆக்ட் 3-வது பிரிவு 2 (d) உட்பிரிவில் அர்த்தம் சொல்லி யிருப்பதின் பிரகாரம் இப்படிப்பட்ட குடிக்கூலி தாவா ரெவினியூ கோர்ட்டில் தான் கொண்டுவர வேண்டுமென்று வாதிக்கப்பட்டது. டிஸ்ரிக்ட் முனிசீபு அவர்கள் கோர்ட்டாருக்கு அதிகாரம் உண்டா இல்லையா என்பதை ருஜு செய்யவேண்டியவன் பிரதிவாதி தானென்றும் அப்படி இந்த நம்பரில் பிரதிவாதி ருஜு செய்யவில்லையென்றும் கண்டு தீர்மானித்தின்பேரில் பிரதிவாதி இந்த ரிவிஷன் மனு கொண்டுவந்தான்.

மி-ர். பி. நாராயணமூர்த்தி.............மனுதாரன் வக்கீல்.

VS

மி-ர். V. ராமேசன்.............ரெஸ்பான்டெண்ட் வக்கீல்.

தீர்மானம்:—தாவா கிராமத்திற்கு எஸ்டேட் லான்ட் ஆக்ட் 3-வது பிரிவு 2 (d) உட்பிரிவில் சொல்லி யிருக்கும் விவரணப்படி தான் ஆக்ஷ்ட சம்பந்தப்படுத்தி அர்த்தம் செய்ய வேண்டியது பிரதிவாதிக்கு தான் உளது. இனும் என்பதற்கு என்ன அர்த்தமிருந்திடினும் இனும் என்பது குடிவார பாத்தியதை யில்லாத குடித்தனக்காரனுக்குக் கூட கொடுக்கப்படுமென்று அர்த்தம் செய்வது சரியல்லவென்று கண்டு ரிவிஷன் மனுவை தள்ளுபடி செய்து விட்டார்கள்.

இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பாகம் 366. 1 ம. வீ. நோ. 639.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 1243 of 1909.

ஜட்ஜுகள்:— { மி-ர். ஜ. அப்துர் ரஹீம். / மி-ர். ஜ. கிருஷ்ணசுவாமி ஐயர். }

முன்பாக.

கிருஷ்ணய்யர்.........பிரதிவாதி.........அப்பீல் வாதி.

VS

சர்வோத்தமராயர் வகையரா...வாதிகள்...ரெஸ்பான்டென்டுகள்.

சிவில் புரோசிஜர் கோடு (5 of 1908) 41 உத்தரவு 33-வது ரூல்-அப்பீல் கோர்ட்டாருக்குள்ள அதிகாரம்.

ஓர் நம்பரில் முதல் கோர்ட்டார் ஓர் பிரதிவாதியின் பேரில் நம்பரைத் தள்ளுபடி செய்து டிக்ரி செய்திருந்து அந்த டிக்ரியின்பேரில் அப்பீலாவது ஆட்சேபனை மெமோவாவது (யாதாவ்தாவது) கொடுக்காத பட்சத்தில் கூட முதல் அப்பீல் கோர்ட்டாராவது இரண்டாவது அப்பீல் கோர்ட்டாராவது எந்த பிரதிவாதியின் பேரில் முதல் கோர்ட்டார் நம்பரைத் தள்ளுபடி செய்தார்களோ அந்தப் பிரதிவாதியின் பேரில் கூட டிக்ரி செய்வதற்கு அதிகாரமுண்டு.

வளங்கிமான் டி. மு. கோர்ட்டு அ. நெ. 108 of 1908-ல் செய்யப்பட்ட டிக்ரியின்பேரில் தஞ்சாவூர் ஜில்லா கோர்ட்டு அப்பீல் நெ.815 of 1908ல் செய்தடிக்ரியின் பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல்,

கேசின்விபரம்:—தாவா நிலங்களில் 1905, 1906, 1907-ம் வருஷங்களில் சாகுபடி செய்த மாகுல்களின் பெருமானமு ரூபாய் 154-8-0 வாதிக்குப் பிரதிவாதி களிடமிருந்து வசூலாக வேண்டியதற்காக கொண்டுவந்த தாவா. சில சொத்துகளில் பேர்பாதி தனக்கு ஸ்வாதீனம் கொடுக்கப்பட்டதென்றும் அப்படி ஸ்வாதீனம் பெற்ற பிறதிவாதி முதல் பிரதிவாதியுடன் கலந்து பாகப் பிறவினைச் செய்து அந்தப் பிரிவினையில் மேற்படி சொத்துக்களில் பாதி முதல் பிரதிவாதிக்குச் சொந்தமென்றும், இன்னெரு பாதி வாதிக்குச்சொந்தமென்றும் தீர்மானிக்கப்பட்டு ஓர் பேர்பாதி பாகத்தை வாதிக்கு ஏற்படுத்தப்பட்டது. ஆயினும் முதல் பிரதிவாதி தாவாவில் சொல்லியிருக்கும் மூன்று வருஷங்களாக வாதியின் பேர்பாதி பாகத்தை கூட அதாவது நிலங்கள் யாவற்றையும் அனுபவித்து வந்தவனுக ஏற்படுகிறது. சாகுபடி செய்து அந்த முழு நிலங்களிலும் கண்ட மாகுலையும் அனுபவித்தவனுகவும் ஏற்படுகிறது. இந்த நிலங்கள் யாவற்றையும் முதல் பிரதிவாதி தரப்பில் இரண்டாம் பிரதிவாதி அவனுடைய பறக்குடிக்கூலிதாரனுய் பயிரிட்டு வந்தான். முதல் பிரதிவாதியின் எதிர்வாதம் யாதெனில்:—அவன் (1st Defendant) தனக்குச் சேரவேண்டிய பேர்பாதி மாகுலைத்தான் தன்னுடைய குடித்தனக்காரனிடமிருந்து பெற்றுக் கொண்டதாகவும் அதற்குப் பின் (1st Defendant) அவனுடைய பேர்பாதி பாகத்தை அசலாரிடம் கொதுவை வைத்திருப்பதாகவும் சொன்னுன். இதுவுமன்றி வாதியின் பேர்பாதி பாகத்தைச் சேர்ந்த நிலங்கள் பிரதிவாதியின் ஸ்வாதீனத்திலிருந்ததாகவும் வாதி அவனுக்குச் சேரவேண்டிய பேர்பாதி பாகத்தின் மாகுலை 3-ம் பிரதிவாதியினிடமிருந்து வசூலித்துக்கொள்ள வேண்டுமென்றும் வாதித்தான்.

முனிசீபு தாவா நிலங்களை வாதி 1904-ம்ஹு செப்டெம்பர் ௴ 30௳ பாகப்பிரிவினைச் செய்துக் கொண்ட ஏற்பாட்டின்படிக்கு தாவா நிலங்கள் வாதிக்குச் சொந்தமானவைகளென்றும் அந்தப்படிக்கு வாதிக்குச் சொந்தமான நிலங்களை முதல் பிரதிவாதி இரண்டாம் பிரதிவாதியின் மூலமாய் 1905, 1906, 1907 இந்த மூன்று வருஷங்களாய் அனுபவித்து வந்தானென்றும் கண்டு தாவாவை மற்றவர்கள் பேரில் தள்ளுபடி செய்துவிட்டு முதல் பிரதிவாதியின் பேரில் மாத்திரம் தாவாவில் கேட்டிருப்பதின்படி வாதி பட்சம் டிக்ரி செய்தார்.

அந்த டிக்ரியின் பேரில் முதல் பிரதிவாதி ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீல் செய்துக் கொண்டான். ஜில்லா ஜட்ஜ் 1905-ம் வருஷத்திய மாகுலை கேட்பதற்கு கால நிர்ணய தோஷம்—லிமிடேஷனுப் விட்டதென்று கண்டு டிஸ்டிரிக்ட் முனிசீபு செய்த டிக்ரியை மற்ற விஷயங்களில் ஊர்ஜிதம் செய்து விட்டார். அதன்பேரில் முதல் பிரதிவாதி கீழ் அப்பீல் கோர்ட்டார் முதல் பிரதிவாதி (1 st Defendant)

இரண்டாம் பிரதிவாதி மூலமாய் தாவா நிலங்களை சாகுபடி செய்து அனுபவித்து வந்ததாக கண்டிருப்பதற்காக ரெக்கார்டில் சாக்ஷியமே கிடையாதென்று ஆக்ஷேபித்து ஹைகோர்ட்டுக்கு இந்த இரண்டாவது அப்பீல் செய்துக் கொண்டான்.

மி-ர். முத்தியா முதலியார்......அப்பீல் வாதியின் வக்கீல்.

மி-ர். ம. பலராமராவ்......ரெஸ்பான்டெண்ட் வக்கீல்.

அப்பீல் வாதியின் தரப்பில் ஆஜராகிய வக்கீல் பாகப் பிறவினைக்குப் பிறகு முதல் பிரதிவாதி தாவா நிலங்களை இரண்டாம் பிரதிவாதி மூலமாய் சாகுபடி செய்து மாகுலை அனுபவித்து வந்தானென்பதை ருஜு செய்வதற்கும் இரண்டாம் பிரதிவாதி முதல் பிரதிவாதிக்கு 1906, 1907 இந்த இரண்டு வருஷங்களாய் குடிக்கூலி செலுத்தி வந்தானென்பதை ரூபிப்பதற்கும் ரெக்கார்டில் சாக்ஷியமே கிடையாதென்று வாதித்தார். இப்படி தற்கித்துப்பேசுவது சரியான வாதமென்று நினைக்கப்பட்டது. வாதியும் ஜட்ஜ் சொல்லும் அந்த பேச்சுக்கு யாதேனும் சாக்ஷிய மிருப்பதாக எடுத்துக் காண்பித்தவனல்ல. 1906 ம்ஹு டிசம்பர்௴ 25௳ வாதி முதல் பிரதிவாதிக்குக் கொடுத்த நோட்டீசில் (EX-I) 1903ம் வருஷம் முதற்கொண்டு பிரதி வருஷமும் முதல் பிரதிவாதியையே அவனுடைய குடித்தனக்காரனுகிய இரண்டாம் பிரதிவாதியினிடமிருந்து குடிக்கூலி வசூல் செய்துக்கொள்ளும்படிக்குத் தெரிவித்திருந்தான். ஆகையால் அப்பீலை மஞ்சூர் செய்துக்கொண்டு முதல் பிரதிவாதியின்பேரில் செய்யப்பட்டிருக்கும் டிக்ரியை கீழ் கோர்ட்டு சிலவுகளுடன் ரத்து செய்து விடப்பட்டது.

இரண்டாம் பிரதிவாதி 1906, 1907 இந்த இரண்டு வருஷங்களுக்கு குடிக்கூலி கட்டிக் கொடுக்கப் பந்தப்பட்டவன் தானென்றும் அவன் (2nd Defendant) மூன்றும் பிரதிவாதியினிடம் அந்த குடிக்கூலியை செலுத்தி விட்டதாக சொல்லும் பேச்சு வாஸ்தவமானதா யிருந்திடினும் இரண்டாம் பிரதிவாதி இந்த குடிக்கூலி மொத்தத்தை வாதிக்குச் செலுத்த பந்தப்பட்டவனென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆனுல் டிஸ்ட்ரிகட் முனிசீபு அவர்கள் இரண்டாம் பிரதிவாதியின்பேரில் தாவாவைத் தள்ளுபடி செய்துவிட்ட டிக்ரியின்பேரில் ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீலாவது க்ராஸ் அப்பீலாவது செய்யப்பட வில்லையென்பது வாஸ்தவமே. புது சிவில் புரோசீஜர் கோடு (Act 5 of 1908) 41-வது உத்தரவு 33-வது ரூல் விதியானது ஜில்லா ஜட்ஜ் அப்பீலை பைசல் செய்த தினத்தில் செலாவணியாகிக் கொண்டு ஊர்ஜிதத்தி லிருப்பதால் மேற்படி பிரிவின் படிக்கு இரண்டாம் பிரதிவாதியின்பேரில் கூட ஜில்லா ஜட்ஜ் செய்திருக்கலாமென்று ஏற்படுவதால் ஹைகோர்ட்டாருக்கும் அந்த அதிகார முண்டென்றும் இரண்டாம் பிரதிவாதி தான் இந்த மாகுல் மொத்தத்தைச் செலுத்தப் பந்தப்பட்டவனென்றும் கண்டு இரண்டாம் பிரதிவாதியின்பேரில் டிக்ரி செய்யவேண்டிய தென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனுல் துர்ப்பாக்கியமாய் இரண்டாம் பிரதிவாதி கேசில் ஆஜராகி வாதித்தவனுமல்ல அப்படி யிருந்திடினும்இரண்டாம் பிரதிவாதிஇந்தமொத்தத்தைச்செலுத்தப் பந்தப் பட்டவனல்லவென்று கோர்ட்டாருக்கு ரூபிப்பது அசாத்தியமான விஷயம். ஆகையால் இரண்டாம் பிரதிவாதியின்பேரில் ரூபாய் 66—8—0க்கு வாதிபட்சம் சிலவுடன் டிக்ரி செய்யப்பட்டது.

அப்பீலை அப்பீல்வாதிபட்சம் டிக்ரி செய்யப்பட்டது.

வாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பாகம் 366. 1 ம. வீ. நோ. 640.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 871 of 1908.

ஜட்ஜுகள்:— { சர். ரால்ப் பென்சன், / மி-ர். ஜ. கிருஷ்ணசுவாமி ஐயர். }

முன்பாக.

புதிய வாசகம் தாவழிடார்வாட்....வாதி....அப்பீல் வாதி.

VS

குன்ஹி பார்வதி காதிலம்மா வகையரா........பிரதிவாதிகள்....ரெஸ்பான்டென்டுகள்.

மலபார் சட்டம்-புத்ரவாகசம் சொத்து-கார்னவனுயிருப்பது-சொத்துகளைப் பார்வை யிட்டுக்கொண்டு பரிபாலித்து வருவது—மூத்த ஆண் அல்லது பெண்ணிருப்பது.

எப்பொழுதும் தாவழி சொத்துகள் எல்லாவற்றையும் தாவாவழி யாரேடார்வாட் ஏற்பாடு செய்து பரிபாலித்துவருவது மாமூலான வழக்கம். டார்வாட் சொத்துகளை மூத்த புருஷன் பரிபாலித்து வரவேண்டுமென்றும் முன்னமே இந்த விதி மூத்த ஸ்திரீக்கு இருந்திடினும் இப்போது மூத்த புருஷனுக்குத் தான் அந்த அதிகார முண்டென்றும் கண்டு தீர்மானிக்கப் படட்து. முன்னிருந்த அந்த மூத்த ஸ்திரீக்குள்ள பாத்தியதை இப்போது தென் கன்னடத்தில் அனுசரித்து வரப்படுகின்றது. நாளைக்கும் மலையாள அரசு மக்கள் வம்சத்தில் நடந்தேறிக்கொண்டு வருகிறதாம். மலபார் வழக்கம் என்னவென்று கண்டறிய வேண்டுமானுல் சட்டம் என்னவென்று கண்டறிவதே அவசியமென்று கவனிக்கவேண்டியதே யல்லாமல் தேசாச்சார ஆசாரத்தை கவனிக்கலாகாது.

நாடாபுரம் டி. மு. கோ. 716 of 1905ல் செய்த டிக்ரியின்பேரில் வடமலபார் ஜில்லா கோர்ட்டுக்கு செய்துக்கொள்ளப்பட்ட அப். நெ. 131 of 1907ல் செய்யப்பட்ட டிக்ரியின்பேரில் கொண்டு வரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

மி-ர். ஜெ. எல். ரொசேரியோ...அப்பீல்வாதியின் வக்கீல்.

மி-ர். டி. ஆர். ராமசந்திர ஐயர்...முதல் ரெஸ்பான்டென்டின் வக்கீல்.

தீர்மானம்:—வாதியும் இரண்டாம் பிரதிவாதியும் குருங்கோட் டார்வாடின்தாவழியைச் சேர்ந்தவர்கள். அந்த தாவழியைச் சேர்ந்த அநேக சொத்துகளுடன் ஒன்றுயிருந்த சில சொத்துகளை கொதுவை வைத்திருந்த காணம் கொதுவையிலிருந்து மீட்டுக்கொள்ள வாதி இந்த தாவா கொண்டுவந்தான். அந்த சொத்துகள் புத்ரவாகாச சுதந்ரதித்தினுல் சம்பாதித்த சொத்துகள். இந்த தாவழிக்கு கார்

ணவன் இன்னுனென்று நிக்ஷயிக்க வேண்டியதுதான் இந்த தாவாவில் மிக்க முக்கியமான பாயின்ட். தாவழி சொத்துகளை தாவழியாரேட்டார் வாட் பரிபாலனமாய் வைத்துக்கொண்டு வரவேண்டியதென்பதாய் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஓர் தாய் வழியில் மூத்த ஆண் புருஷன் தான் ஓர் டார்வாட் சொத்தைப் பார்வையிட்டுக்கொண்டு பரிபாலித்து வரவேண்டியதென்பது மலபார் நாட்டில் ஓர் விதி. ஆனால் பழயவிதி இன்னும் தென்கன்னடத்திலும் மலபார் ராஜமக்கள் வம்சத்திலும் வழங்கி வருகின்றதாம். வாதி கொண்டுவந்த இந்த இரண்டாவது அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பார்ட் 367; 1 ம. வீ. நோ. 642.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

சிவில் ரிவிஷன் மனு நெ. 201 of 1909.

ஜட்ஜுகள்:— { மி-ர். ஜ. மன்ரோ
மி-ர். ஜ. சங்கரன்நாயர் } முன்பாக.

சுப்பிரமணிய ஐயர் ... ... மனுதாரன்.

VS

ஸ்ரீனிவாச ஐயர் வகையரா-ரெஸ்பான்டென்டுகள்

சிவில் புரோசீஜர் கோடு (Act 14 of 1882) 318, 622-வது பிரிவுகள்-ஏலத்தில் கிரயத்திற்கு வாங்குவோன் கவுண்டர் எதிரிகள் ஸ்வாதீனத்தை எதிர்த்து ஆக்ஷேபித்தல்—டிக்ரி கடன்தாரன் கீழ் ஸ்வாதீனம் கேட்பது-நிவர்த்திப்பது-கோர்ட்டார் அதிகார வறம்பு.

எதிரி கவுண்டர் தார்கள் ஏலத்தில் கிரயத்திற்கு எடுத்தவனை ஸ்வாதீனம் செய்துகொள்ள வொட்டாமல் தடுத்து மேற்படி ஏலம் போட்ட சொத்தை ஜப்தி செய்ததற்குப் பின் அவர்கள் டிக்ரி கடன்தாரனிடத்திலிருந்து பெற்ற ஹக்கின்படி ஏலக்கியதாரனுக்கு ஆக்ஷேபிக்க நியாயமில்லை அவனுக்கு ஸ்வாதீனப்படுத்த வேண்டியது அவசியமென்று தீர்மானிக்கப்பட்டது.

வளங்கிமான் டிஸ்ட்ரிக்ட் முனிசீபு அ. நெ. 3172 1900 E. P. No. 664 of 1908ல் செய்த உத்தரவின்பேரில் புது சிவில் புரோசீஜர் கோடு 115-வது பிரிவின் கீழ் அதாவது 1882ம் வருஷத்திய சிவில் புரோசீஜர் கோடு 622-வது பிரிவின் கீழ் கொண்டுவந்த சிவில் ரிவிஷன் மனு.

கேசின் விபரம்:—ஏ-என்பவன் ஒருவன் ஸ்மால் காஸ் நெ. 3172 of 1900ல் ஓர் ஸ்மால்காஸ் டிக்ரி பெற்று பிரதிவாதிக்கு சில சொத்துகளில் உள்ள ஹக்கு சுதந்தர பாத்தியதையை 1902ம்௵ அக்டோபர்௴ 25௳ ஜப்தி செய்தான். மேற்படி ஜப்தியின்படி ஷை சொத்தை 1908ம்௵ ஆகஸ்டு௴ 6௳ ஏலம் போடப்பட்டது. மூன்றுவது மனுஷனுகிய மனுதாரன் மேற்படி சொத்தை ஏலத்தில் கிரயத்திற்கு வாங்கினன். ஏலத்தில் எடுத்ததற்கு கிரய சர்ட்டிபிகேட்டும் 1908ம்௵ செப்டெம்பர்௴ 8௳ பிறப்பிக்கப்பட்டது. ஏலத்தில் எடுத்தவன் 1908ம்௵ நவம்பர்௴ 20௳ ஷை சொத்தை அவனுடைய ஸ்வாதீனம் செய்யும்படிக்கு மனு கொடுத்தான். எதிரிகளாகிய கவுண்டர் மனுதார்கள் பிரதிவாதிகள் அவர்கள் பேருக்கு 1904ம்௵ ஏப்ரல்௴ 27௳, 1906-ம்௵ ஜுலை௴ 12௳ இந்த தேதிகளில் ஸ்வாதீனக் கொதுவை தஸ்தாவேஜுகள் எழுதிக் கொடுத்திருக்கிறதாகவும் அந்த கொதுவை தஸ்தாவேஜுகளின் கீழ்தாவா நிலங்கள் அவர்களுடைய ஸ்வாதீனத்திலிருப்பதாகவும் வாதித்து ஸ்வாதீனம் ஒப்புவிக்கலாகாதென்று ஆக்ஷேபித்தார்கள். எதிரிகள் இம்மாதிரி ஆக்ஷேபனையை நிவர்த்தி செய்து தாவா நிலத்தை சிவில் புரோசீஜர் கோடு 318-வது பிரிவின் கீழ் தன்னுடைய வசம் செய்யும்படிக்கு மனுதாரன் அர்ஜி கொடுத்தான். டிஸ்டிரிக்டு முனிசீபு பின் வருமாறு தீர்ப்பு செய்தார்:—எதிரி கவுண்டர் மனுதாரர்கள் தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்களென்று மனுதாரன் ஒப்புக் கொள்ளுகிறுன். மேற்படி எதிரிகள் டிக்ரிதாரனிடத்திலிருந்து தாவா நிலங்களை ஸ்வாதீனக் கொதுவையில் பெற்று அனுபவித்து வருகிறார்களென்று வாதிக்கு இப்போதுதான் தெரிய வந்தது. அந்த கொதுவை சட்டப்படி செல்லாதென்று மனுதாரன் சொல்லுகிறுன். கொதுவை செல்லத்தக்கதா அல்லவா என்று இந்த வியாஜ்ஜியத்தில் கவனிக்க வேண்டிய அவசியமல்ல. எதிரிகளாகியகவுண்டர் மனுதாரர்கள் மனுதாரன் ஏல விக்கிரயத்தில் வாங்குவதற்கு அநேக காலத்திற்கு முன்னமேயே தாவா சொத்துக்களை கொதுவையில் பெற்று அனுபவித்து வருகிறார்களென்பது ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமாகையால் மனுதாரனுக்கு தாவா சொத்தை ஒப்புவிக்கும்படி உத்தரவு செய்வது நியாயமல்ல. மனுவைச் சிலவுடன் தள்ளுபடி செய்து விட்டார்கள். அதன்பேரில் மனுதாரன் சிவில் புரோசீஜர் கோட் 318-வது பிரிவின்படி டிஸ்ட்டிரிக்ட் முனிசீபு அவர்களுக்குள்ள அதிகாரத்தைச் செலுத்த தவறிப் போனுரென்று ஹைகோர்ட்டுக்கு இந்த ரிவிஷன் மனுதாக்கல் செய்துக் கொண்டான். அந்தப் பிரிவின் வாஸ்தவமான கோட்பாடென்ன வென்றால் ஏல விற்பனை தேதியல்ல கவனிக்க வேண்டியது ஸ்வாதீனக் கொதுவை பெறுததற்கு முன்னமேயே ஜப்தியிலிருந்தது என்பதைத்தான் முக்கியமாய் கவனிக்க வேண்டியதென்று ரிவிஷன் மனுவில் வாதித்தார்கள்.

மி-ர். T. V. சேஷகிரி ஐயர்......எதிரி கவுண்டர் மனுதாரர்கள் வக்கீல்.

மி-ர். R. N. K. தாதாசாரியார்......மனுதாரன் வக்கீல்.

தீர்ப்பு:—சிவில் புரோசீஜர் கோடு 318-வது பிரிவின் கீழ் ரெக்கார்டிலுள்ள சந்தர்ப்பங்களை அனுசரித்து வாதிக்கு தாவா சொத்தை ஒப்புவிக்கும்படி உத்தரவு செய்திருக்க வேண்டியதென்று கண்டு கீழ்கோர்ட்டு உத்தரவை ரத்து செய்து ரிவிஷன் மனுவை மனுதாரன் பட்சமாய் சிலவுடன் உத்தரவு செய்தார்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3வது பார்ட்டு 368.

1. ம. வீ. நோ. 648.

OUDH JUDICIAL COMMISSIONER'S COURT.

அவுட் மகாணத்தின் ஜுடிஷல் கமிஷ்னர் கோர்ட்டு.

——:o:——

சிவில் மனு நெ. 10 of 1910.

ஜட்ஜுகள்:— { மி-ர். இவான். A. J. B.
மி-ர். பிக்கட். A. J. B. } முன்பாக.

இக்பால் உசேன்......டிக்ரிதாரன்.........மனுதாரன்

VS

ஜபார் அலிகான்.... ....டிக்ரிகடன்தாரன்.......எதிரி

சிவில் புரோசீஜர் கோடு (Act v of 1908) 73வது பிரிவு-தமாஷப்படிக்கு பாகித்துக் கொடுப்பது-மனு செய்துக் கொள்ளல்-இன்னும் இதர டிக்ரி பெற்றிருக்கப்பட்டிருப்பவர்களுக்கு நோட்டீசு கொடுக்க வேண்டியது அவசியமா? அல்லவா? லக்நௌ சப் கோர்ட்டார் உத்தரவின்பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீல்.

மி-ர். சாமி உல்லாபேக்-மனுதாரன் வக்கீல்

மி-ர். ஜாஹுர் ஆமெட்......எதிரியின் வக்கீல்

தீர்மானம்:—அடியில் விவரித்திருக்கும் சந்தர்ப்பங்களின் பேரில் லக்நௌ சப் கோர்ட்டார் சிவில் புரொசீஜர் கோடு 73-வது பிரிவின் கீழ் மனுவை தள்ளுபடி செய்த உத்தரவின்பேரில் இந்த மனு கொண்டுவரப்பட்டது. நவாப் ஜாபர் அலிகான் என்பவர் பாதீமாபீகம் இன்னும் சிலபேர்கள்மேல் அடைந்த டிக்ரியை நிறைவேற்றி சில சொத்துக்களை ஜப்தி செய்வித்தார். சாடித் அலிகான் காசிம் அலிகான் என்னும் இரண்டு பேர்கள் மேற்செப்பிய பாதீமாபீகம் என்பவள் பேரில் பெற்றிருந்த டிக்ரியை நிறை வேற்றி மேற்கண்ட சொத்துகளை ஜப்தி செய்தார்கள். அதே சொத்தின் பேரிலோ அந்த சொத்தின் ஓர் பாகத்தின் பேரிலோ அவர்களும் ஜப்தி உத்தரவு பெற்றிருப்பதாக தெரிய வருகிறது. 1909-ம்௵ ஜுன்௴ 15௳ பின் செப்பிய இரண்டு டிக்ரிதாரர்களும் நவாப் ஜாபர் அலிகான் டிக்ரியின் கீழ் வசூலாகும் மொத்தத்தை தங்களுக்கும் சிவில் புரோசீஜர் கோடு (5 of 1908) 73-வது பிரிவின் கீழ் தாமாஷாப்படிக்குபாகித்துக்கொடுக்கும்படிக்கு மனு செய்துக் கொண்டார்கள். கோர்ட்டார் 1904-ம்௵ ஜுன்௴ 24௳ ஒரு தலை பட்சமாய் (Exparte) உத்தரவு செய்தார்கள். அந்த Exparte உத்தரவின் படிக்கு என்ன தாத்பரியமென்றால் பின் செப்பிய இரண்டு நபர்கள் நடத்தி வந்த நிறைவேற்றுதல் புரோசீடிங்சுகளை முன் செப்பிய நவாப் ஜாபர் அலிகான் நடத்தும் புரோசீங்சுகளுடன் சேர்த்து கடைசியாய் முன் செப்பிய நவாப்பின் டிக்ரியின் கீழ் என்னவசூலாகிறதோ அதில் தங்களுக்கும் தாமஷாப்படிக்குப் பாகித்துக் கொடுக்குய்படிக்கு உத்தரவாக வேண்டுமென்கிற நோக்கமேதான். 1909-ம்௵ ஜுலை௴ 22௳ கோர்ட்சார் மறுபடியம் ஆலோசித்து பின் செப்பியவர்களின் மனுவின் சம்பந்தமாய் தனியாய் ஓர் பிரத்தியேக விற்பனைப் பட்டி தயார் செய்யும்படிக்கு உத்தரவு செய்தார்கள். 1909-ம்௵ ஆகஸ்டு௴ 20௳ நவாப் ஜாபர் அலிகான் டிக்ரியின் கீழ் சொத்தின் ஓர் பாகத்தை மாத்திரம் ஜப்தி செய்து ஏல விற்பனை செய்ததில் மேற்படி நவாப் ஜாபர் அலிகான் டிக்ரியின் கிழ் எவ்வளவு மொத்தம் சேர வேண்டி யிருக்கிறதோ அதற்கு மிக்க அதிகமாகவே ஜப்தி செய்யப்பட்ட சொத்தை விக்கிரயம் செய்ததில் வசூலாயிற்றும். 1909-ம்௵ செப்டெம்பர்௴ 8௳ பின் செப்பிய இரண்டுநபர்களும் இவ்விதமாய் வசூசாலாயிருக்கும் தொகையில் தங்களுக்கும் தாமஷாப்படிக்கு பாகித்துக் கொடுக்கும்படிக்கு மனு செய்துக் கொண்டான். இந்த மனுவில் எந்த உத்தரவைப் பற்றி கவனிக்கப்படுகிறதோ அந்த உத்தரவை இரண்டு நாள் கழித்து செய்யப்பட்டது. உத்தரவென்னவென்றால்:—

"இந்த மனுவை தாக்கல் செய்துக் கொள்வதற்கே நியாயம் கிடையாது. இப்போது ஏலத்தில் விக்கிரயம் செய்யப்பட்ட சொத்துகள் தவிர இன்னும் ஏல விக்ரயம் செய்வதற்காக அநேக சொத்துக்களிருக்கின்றன. ஏல விற்பனையையும் இன்னும் ஊர்ஜிதப்படுத்த வில்லை. சாதித் அலிகான், காசிம் அலிகான் இவர்கள் பெற்றிருந்த டிக்ரியை சையத் இக்பால் உசேன் என்பவன் கிரயத்திற்குப் பெற்றவன். அந்த சையத் இக்பால் உசேன் என்பவன் தான் இந்த ரிவிஷன் மனுவை இந்த கோர்ட்டில் தாக்கல் செய்தவன். இந்த மனுவானது நவாப்ஜாபர் அலிகான் தரப்பில் ஆக்ஷேபிக்கப்பட்டது. இரு தரப்பிலும் பாரீஸ்டர்கள் ஆஜராகி வாதித்தார்கள்.

கற்றுணர்ந்த சப்கோர்ட்டார் முன் நடந்த புரோசீடிங்சுகளெல்லாம் மிக்க அதிருப்தியானவைகளாயிருக்கின்றன. அவர் 1909-ம்௵ ஜுன்௴ 14௳

செய்த உத்தரவை மற்ற இதர எதிரி டிக்ரிதாரர்களுக்கு நோட்டீசு கொடுக்காமல் செய்திருக்கக் கூடாது.

1909-ம்ஹு ஜூலைமீ 22உ கோர்ட்டார் செய்த உத்தரவின் விஷயமாய் கக்ஷிதாரர்களாகிய உபயத்திராளும் சிவில் புரோசிஜர் கோடு 70-வது பிரிவின் கீழ் யாதேனும் விதி செய்யப்பட்டிருப்பதாயும் அந்த விதியின்படிக்கு கோர்ட்டார் சாடிட் அலிகான், காசிம் அலிகான் இவர்கள் செய்துக் கொண்ட மனுவின்பேரில் தனியாய் ஓர் விற்பனை ஜாபிதா தயார் செய்ய வேண்டியதென்பது அவசியமென்பதை எடுத்துக் காண்பிக்கவுமில்லை. 1909-ம்ஹு செப்டெம்பர்மீ 10உ சப்கோர்ட்டார் செய்த உத்தரவு பிசகென்று கண்டு அதை ரத்து செய்து அந்த மனுவை மறுபடியும் புதிதாய் தாக்கல் செய்துக்கொண்டு விசாரணை செய்து சட்டப்படிக்கு முடிவான தீர்மானம் சொல்லும்படிக்கு உத்தரவு செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பார்ட்டு 368.

CHIEF COURT OF LOWER BURMA.

லோயர் பர்மா சீப் கோர்ட்டு.

—:o:—

சிவில் ரெபரேன்ஸ் நெ. 1 of 1909.

ஜட்ஜுகள் :— { சர். சாரல்ஸ் Fox (பாக்ஸ்) சீப் ஜட்ஜ். / மி-ர். ஜ. மூர்.

முன்பாக.

அருணாசலம் செட்டி...பிரதிவாதி....அப்பீல்வாதி
மி-ர். டான்ட்ரா .... வக்கீல்.

vs

பெரிய கருப்பன் செட்டி வகையரா....வாதிகள்....
ரெஸ்பான்டென்டுகள்.

மி-ர். N. M. கவாஸ்ஜி .... வக்கீல்.

ரெஜிஸ்தர் செய்யப்பட்ட கொதுவையும் வாசா கொதுவையும்-எது முன்னிட்டது—நோடீசு-1877ம் ஹுத்திய ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 48-வது பிரிவு.

அடியிற்கண்டிருக்கும் பாயின்டை புல்பெஞ்சாருடைய அபிப்பிராயத்திற்குத் தெரிவித்ததின்பேரில் செய்யப்பட்ட தீர்மானம்.

புல்பெஞ்சாருக்குத் தெரிவித்த கேள்வி:—"ஓர் பூஸ்திதியைப் பற்றி கொதுவைப் பத்திரம் எழுதி ரெஜிஸ்தர் செய்துக்கொண்டதற்கு முன்னமேயே அதே சொத்தைப்பற்றி வாசா கொதுவை ஒன்று செய்து நிலத்தை ஸ்வாதீனம் ஒப்புவிக்காம லிருந்தது அப்படிப்பட்ட வாசா கொதுவை செய்கையில் அந்த சொத்து எந்த இடத்திலிருந்ததோ அந்த இடத்தில் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்டு 59-வது பிரிவு ஊர்ஜிதமாய் செலாவணியாய்க் கொண்டிருக்கவில்லை. இரண்டாவது கொதுவை வைத்துக்கொண்டவன் மேற்கண்ட ரெஜிஸ்தர் கொதுவை செய்துக்கொள்ளும் பொழுது அவன் கொதுவைக்கு முன் இன்னொருவனிடத்தில் அதே சொத்து வாசா கொதுவையின் கீழிருந்ததென்பது அவனுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயமே. ரெஜிஸ்டர் செய்யப்பட்ட கொதுவை முன்னிட்டதாகுமா?"

தீர்ப்பு:—ரெஜிஸ்தர் கொதுவை செய்துக்கொள்கையில் அதற்கு முன் அதே சொத்தின்பேரில் முன் வாசா கொதுவை ஒன்றிருந்ததென்று ரெஜிஸ்தர் கொதுவைதாரன் நன்றாய் அறிந்திருந்தானென்பது ருஜுவாகும் பட்சத்தில் இந்த ரெஜிஸ்தர் கொதுவை அதற்கு முன் செய்துக்கொள்ளப்பட்ட வாசா கொதுவைக்கு முந்தியதென்று சொல்லலாகாது. இதற்காதாரமாய் ஷங்கர்டாஸ் vs ஷெர்ஜெமான், பஞ்சாப் ரெக்கர்ட் (1900) பக்கம் 199; கிருஷ்ணம்மா vs சூரன்ன இ. லா. ரி. 16 மதராஸ் 148; இ. லா. ரி. 13 கல் 70; 19 அ 145 ஒப்புக்கொள்ளப்பட்டன. லெஹ்ணு vs கன்பட் (1890) பஞ்சாப் ரெகார்டு (1890) 115-வது நெம்பர் 353 பக்கத்திலிருக்கும் கேசை இதற்குச் சம்பந்தப்பட்ட ஆதாரமாய் எடுத்துக்கொள்ளப் படவில்லை.

இன்னும் இ. லா. ரி. 10 கல் 250; L. B. R. 26; 9 மூர் இ. அ. 220 இவைகளை ஆதாரமாய் எடுத்துக் காண்பிக்கப்பட்டன.

தீர்மானம்.

கேசின் விபரம்:—இந்த தாவாவில் கக்ஷிதார்களாகிய வாதி பிரதிவாதிகள் ஒரே சொத்தின் விஷயமாய் இரண்டு கொதுவை டிக்ரி பெற்றவர்கள். இந்த அப்பீலில் ரெஸ்பான்டென்டா யிருப்பவர்கள் தங்களுடைய கொதுவை முன்னிட்ட தென்னும் காரணத்தால் அந்த கொதுவை சொத்தை வித்து முதலான தொகையிலிருந்து தங்களுக்கு முதலில் பணம் செலுத்தப் படவேண்டுமென்று டெக்லேர் செய்து தீர்ப்பு செய்யும்படிக்கு கொண்டுவந்த தாவா.

ரெஸ்பான்டென்டுகளின் கொதுவை 1903ம்ஹுத்தில் செய்யப்பட்ட வாசா கொதுவை அப்பீல் வாதிகளின் கொதுவையோ 1906ம்ஹு ஏப்ரல்மீ 17உயில் செய்யப்பட்ட ரெஜிஸ்தரான கொதுவை தஸ்தாவேஜு.

கீழ் இரண்டு கோர்ட்டுகளிலும் ரெஸ்பான்டென்டுகள் ஜெயமடைந்தார்கள். இந்த கேசில் கீழ் அப்பீல் கோர்ட்டார் முக்கியமான அம்சமென்று தீர்மானித்த விஷயம் யாதெனில் "ரெஜிஸ்தர் தஸ்தாவேஜியில் ஒரு சாக்ஷி கூட கையெழுத்து செய்யவில்லை ஆகையால் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்ட் 59-வது பிரிவின்படிக்கு செல்லாதென்பது தான். ஆனால் கீழ் அப்பீல் கோர்ட்டார் பிசகென்று உபயத்திராளும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். வாஸ்தவத்தில் அந்த ரெஜிஸ்தர் தஸ்தாவேஜியில் இரண்டு சாக்ஷிகளின் கையெழுத்துக ளிருந்தன.

ரெஸ்பான்டென்டினுடைய பெயர் ரெவினியூ ரிஜிஸ்தரில் சொந்தக்காரனுடன் பதிவா யிருக்கிற தாகையால் அது நியாயமான கொதுவை யென்று கீழ் அப்பீல் கோர்ட்டார் சொல்வது பிசகு.

ரெஸ்பான்டென்டினுடைய கொதுவை வாச்சா துவைதானே யல்லாமல் வேறல்ல.

ஆகையால் அப்பீல்வாதி தன்னுடைய ரெஜிஸ்தர் கொதுவை ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 48-வது பிரிவின் படிக்கு சட்டப்படிக்குச் செல்லத்தக்கினதென்றும் முன் கொதுவை யென்று சொல்லப்படும் வாசாகொதுவையைப் பார்க்கிலும் தன்னுடைய கொதுவை விசேஷமானதென்றும் மேற்கண்ட ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டு 48-வது பிரிவை தன்னுடைய கேசிற்கு ஆதாரமாய் எடுத்துக் கூறினார்.

ரெஸ்பான்டென்டுகளின் வாதம் யாதெனில்:—

ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 48-வது பிரிவில் சொல்லியிருக்கும் நிபந்தனை அப்படிக் கிருந்திடினும் அப்பீல் வாதி ரெஜிஸ்தர் கொதுவை தஸ்தாவேஜு பெற்றுக் கொள்கையில் ரெஸ்பான்டென்டினிடம் தாவா சொத்து முன்னமேயே வாசாகொதுவையிலிருந்ததென்று பூராய் அறிந்திருந்தும் ரெஜிஸ்தர்தஸ்தாவேஜு செய்துக்கொண்டமையால் ரெஸ்பான்டென்டினிட வாசாகொதுவை முன்னிட்டதென்றும் ரெஜிஸ்தர்தஸ்தாவேஜு பின்னிட்ட தென்றும் வாதித்தார்கள். இந்த வாதத்திற்காதாரமாய் சந்தர்நாத்ராய் vs பாய் சந்தர் சர்மாராய் இ. லா. ரி. 10 கல் 250 எடுத்துக் காண்பிக்கப்பட்டது. அந்த கேசு இதற்கு ஒவ்வினதல்ல. ஆயினும் இதே லோயர் பர்மா சீப்கோர்ட்டில் 1907-ம்ஹுத்திய 4 லோ. ப. ரி 26ல் செய்யப்பட்டிருக்கும் தீர்மானத்தின்படிக்கு இந்த பாயின்டைத் தீர்மானிப்பது உசிதம்.

ஆனால் இதே சீப்கோர்ட்டார் முன் ஒரு கேசில் ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 50-வது பிரிவையும் அந்த சட்டத்தின் முழு கிரந்தத்தையும் தீர்க்க யோசித்து மதராஸ் ஹைகோர்ட்டாருடைய தீர்மானத்தை ஒப்புக்கொண்டு அதற்குத் தக்கின முகாந்தரங்களும் காண்பித்திருக்கிறார்கள்.

ஆகையால் மேற்கூறிய கேள்வியை புல்பெஞ்சார் அபிப்பிராயத்திற்கும் தீர்மானத்திற்கும் தெரிவிக்கப்பட்டது. புல்பெஞ்சாருடைய தீர்மானத்தை இதனடியில் சுருக்கமாய் வரைந்திருக்கின்றோம்:—

மி-ர். மூர்:—

இந்த பாயின்டைப் பற்றி மதராஸ் ஹைகோர்ட்டார் இ. லா. ரி 16 மதராஸ் 148-ல் பின்னிட்ட ரிஜிஸ்தர் தஸ்தாவேஜுகாரன் முன்னிட்ட வாச்சா கொதுவை ஒன்றிருந்ததென்று அறிந்திருந்தும் ரெஜிஸ்டர் கொதுவைப் பெற்றுக் கொள்வானாகில் அது முன்னிட்டதாகா தென்று சொல்லி யிருக்கிறார்கள். பம்பாய் ஹைகோர்ட்டிலும் முன் வாச்சாகொதுவை யிருக்கிறதென்று தெரிந்திருந்தும் ரெஜிஸ்டர் கொதுவை செய்தால் வாசா கொதுவை தான் முன்னிட்டதேயல்லாமல் ரெஜிஸ்டர் கொதுவை முன்னிட்டதாகாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது (பம்பாய் ஹைகோர்ட்டார் அச்சிட்ட ஜட்ஜ்மென்ட் 278-வது பக்கத்தில் வோஹோராரெமட்ரெயின் vs ஹாகிலால் பெகிசன் கேசைப் பார்க்கவும்.

கல்கத்தா ஹைகோர்ட்டிலும் அப்துல் உசேன் vs-ரகுநாத்சாகு இ. லா. ரி. 13 கல் 70 இந்த கேசில் பின்னிட்ட ரெஜிஸ்தரான கிரிய தஸ்தாவேஜும் பார்க்கிலும் கிரயத்திற்கு முன்னமேயே கட்டாயமாய் ரெஜிஸ்தர் செய்ய வேண்டுமென்கிற அவசிய மில்லாத ரெஜிஸ்தராகாத கொதுவை பெற்றிருந்த தஸ்தாவேஜு தான் முன்னிட்டதென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. இந்த கல்கத்தா ஹைகோர்ட்டாருடைய தீர்மானத்தை ஆதாரமாய்க்கொண்டு அலகாபாத் ஹைகோர்ட்டாரும் இ லா. ரி. 19 அ-145-ல் உள்ள கேசை தீர்மானித்திருக்கிறார்கள். பிரிவி கவுன்சலாரும் இதை ஓர் விதமாய் ஒப்புக்கொண்டிருப்பதாக காண்பித்திருக்கிறார்கள். இதற்காதாரமாய் இ. ல. ரி. 16 ம 183 கேசையும் மஞ்சூர் செய்துக்கொள்ளப்பட்டது. ஓர் சொத்தின் விஷயமாய் முன்னிட்ட வாசா கொதுவை யிருந்து அதைப்பற்றி ஒருவன் பூராய் அறிந்திருந்தும் அதே சொத்தின் பேரில் பின்னிட்ட ரெஜிஸ்தர் தஸ்தாவேஜு பெற்றிருந்தாலும் முன்னிட்ட சட்டப்படி செல்லத்தக்கின வாச்சா கொதுவை தான் முன்னிட்டதென்றும் நியாயமானதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

லோயர் பர்மா ரூலிங்கஸ் 5-வது வால்யம் 6-வது பாகம் 184.

THE HONOURABLE Mr. JUSTICE KRISHNASWAMI AIYAR, B. A; B. L.

Appointed Ordinary Member in the Executive Council of Fort St George.

கனம் பொருந்திய மி-ா. ஜ, கிருஷ்ணசுவாமி ஐயர் பி. ஏ; பி. எல்.

சென்னைராஜதானியின் கவுன்சலில் ஓர் மெம்பராய் நேமிக்கப்பட்டார்.

நம்முடைய சென்னை ஹைகோர்ட்டில் ஓர் ஜட்ஜாயிருந்த கனம் பொருந்திய மி-ர். ஜ. கிருஷ்ணசுவாமி ஐயர் அவர்களை சென்னை ராஜதானியின் ராஜ்ஜிய பரிபாலன சபையில்-கவுன்சலில்-ஓர் மெம்பராய் நம்மையாளும் மாக்ஷிமை தங்கிய சக்கிரவாத்தி அவர்களால் நேமிக்கப்பட்டா ரென்னும் ஆச்சரியத்தை விளைவிக்கக்கூடிய ஓர் சந்தோஷகரமான சமாச்ராதை இந்ததனுர்மாதத்தில் நாம் கொண்டாடிய சங்கராந்தி பண்டிகை கழிந்த மறுவாரத்தில் தற்செய

லாய்க் கேட்க மிக்க மன உல்லாசம் கொண்டு ஆனந்தமடைந்தோம்.

மி-ர். கிருஷ்ணசுவாமி ஐயர் அவர்கள் மிக்க நன்ருய் கற்றுணர்ந்தவரென்றும் மேன்மை, பொருந்திய மேன்பாடான குணதிசயங்களுள்ள சீமானென்றும் அவருக்கு இந்த மேலான பதவியைத் தந்தருளியிருக்கிறதென்பதைப் பற்றி நாம் இன்னும் விவரித்து சொல்ல வேண்டுவதில்லை. இந்த கற்றுணர்ந்த சீமான் வக்கிலாயிருக்கையில் இவருடைய புத்தி சாதுரியத்தைப் பற்றி கக்ஷிதாரர்களும் இன்னும் பொவாய் ஜன சமூகத்தாராகிய எல்லா இனத்தோரும் மிக்க புகழ்ந்து கூறுகின்றுர்கள்.

இச்சீமான் ஜெகதீசன் அருளினுல் நீடித்தகாலம் சுகமாய் வாழ்ந்திருந்து இனி மதராஸ் கவுன்சலில் இவருடைய சகாயத்தினுல் நாமெல்லோரும் இன்னும் விசேஷமான நன்மைகளடைந்து வருவோமென்பதற்குச் சந்தேகமில்லை. சுபம்! சுபம்!! சுபம்!!!

Mr. P. R. SUNDARA IYER AVERGUL. B.A; B.L.
Appointed Judge of the High Court of judicature at Madras.

P. R. சுந்தரய்யர் அவர்கள் பி. ஏ. பி. எல்.

மதராஸ் ஹைகோர்ட்டில் ஓர் ஜட்ஜாய் நேமிக்கப்பட்டார்.

இந்த கற்றுணர்ந்த சீமான் கனம் பொருந்திய சென்னை ஹைகோர்ட்டில் ஓர் ஜட்ஜாய் நேமிக்கப்பட்டாரென்பதைக் கேட்க நம்மெல்லோருக்கும் மிக்க மன உல்லாசத்தைத் தந்தருளிற்று. இவர் பி. எல் பரிக்ஷையில் மிக்க உயர்வான அந்தஸ்த்தில் பரிக்ஷை கொடுத்தாரென்று இவருக்கு பரிசுகள் அளிக்கப் பெற்றுக் கொண்டு பின்பு சென்னை ஹைகோர்ட்டில் முன் ஜட்ஜாயிருந்த கனம் பொருந்திய சர். S. சுப்பிரமணிய ஐயர் அவர்களிடம் அப்ரென்டிஸ்ஸாயிருந்து பிறகு 1887-ம்ளு த்திய சென்னை ஹைகோர்ட்டில் ஓர் வக்கிலானர்.

இவர் வக்கிலானது முதற்கொண்டே மிக்க பெயர் போன சமார்த்திய முள்ளவரென்று எல்லோராலும் புகழ்ந்து கூறப்பட்டு வருகிறுர். இவர் சென்னை ஹைகோர்ட்டில் சென்ற 23வருஷகாலமாய் வக்கிலாயிருந்து மிக்க கீர்த்தி யடைந்து இப்போது ஹைகோர்ட்டு ஜட்ஜாய் நேமிக்கப் பட்டார. இவருடைய வயதோ 46 வருஷம் தானுகிறது. ஆகையால் இவர் நம்மாண்டவராகிய பரமசிவன் கிருபையால் ஆயுள்பெருகி அநேககாலம் சுகித்து வாழ்ந்திருந்து இவருடைய கல்வித் திறமையினுலும், இவருடைய மேலான சாத்மீக குணங்களாலும், இன்னும் இவருடைய புகழ்ந்து கூறக்கூடிய சட்ட ஞானத் திறமையினுலும் நம்மெல்லோருக்கும் பெரும் நன்மைகளைச் செய்துக்கொண்டு வருவாரென்பது திண்ணம்: சுபம்! சுபம்!! சுபம்!!!

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 308 of 1910.

ரெபர்ட் கேஸ் நெ. 44 of 1910.

ஜட்ஜு:— மி-ர். ஜஸ்டிஸ் சங்கரன் நாயர்....முன்பாக.

சக்கிரவர்த்தி.... ....

vs

தோட்டமேதா வகயரா........குற்றவாளிகள்.

கொயம்பத்தூர் மாஜிஸ்ட்ரேட் ஹைகோர்ட்டாருக்குத் தெரிவித்துக் கொண்ட கேசு (D. Dis No. 629 of 1910.

Criminal Procedure Code (Act v of 1908)-S. 106 (3)-Power of Appellate Court-Some of the accused ordered to furnish security-Liability.

கேசின் விபரம்:—கொள்ளேய காலம் சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கிரிமினல் அப்பீல் நெ. 6; 7 of 1910ல் இந்தியன் பீனல் கோடு 147, 323 பிரிவுகளின் கீழ் செய்த கீழ் கோர்ட்டாருடைய தீர்மானத்தையும் சிக்ஷைகளேயும் காயப் படுத்தி விட்டு சில குற்றவாளிகளை கிரிமினல் புரேசிஜர் கோடு 106 (3)-வது பிரிவின் கீழ் அமரிக்கையா யிருப்பதாக ஜாமீன் கொடுக்கும்படிக்கு உத்தரவு செய்தார். மதராஸ் ஹைகோர்ட்டார் முத்தியார் செட்டி-vs-சக்ரவர்த்தி இ. லா. ரி. 29 மதராஸ் 190; 3, கி. லா. ஜ. 88; தொரைசாமி நாயுடு-vs-சக்ரவர்த்தி இ. லா. ரி. 30ம. 182; ம. லா. டை. 343; 4 கி. லா. ஜ. 498.

கொள்ளேய காலம் மாஜிஸ்ட்ரேட்டை இப்படிப் பட்ட உத்தரவு செய்ததற்குக் காரணம் யாதென்று கேட்டதின் பேரில் அவர் இந்த உத்தரவைச் செய்த போது பம்பாய் ஹைகோர்ட்டார் சக்கரவர்த்தி-vs-பாசிங்குடுமால் சிங்கு இ. லா. ரி. 33பம் 33; 10 ப. லா. ஜ. 759; 8 கி. லா. ஜ. 267; 1 இ. கே. 454. இந்த பம்பாய் கேசுகளில் செய்த தீர்மானங்களை மனதில் வைத்துக் கொண்டு மதராஸ் ஹைகோர்ட்டாருடைய தீர்மானங்களிருப்பது கவனமில்லாமல் செய்துவிட்டதாகத் தெரிவித்தார்.

மதராஸ் ஹைகோர்ட்டாருடைய முடிவான தீர்மானத்தை ஆதாரமாய்க் கொண்டு ஜாமீன் கொடுக்கும்படி செய்த உத்தரவை ரத்து செய்து விடப் பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பாகம் 392.

8 ம. லா. டை. 191.

LOWER BURMA CHIEF COURT.

லோயர் பர்மா சீப் கோர்ட்டு.

—:o:—

கிரிமினல் ரிவிஷன் மனு நெ. 683 A. of 1909.

ஜட்ஜு:—மி-ர். ஜ. ஹார்ட்னல்......முன்பாக.

சக்கிரவர்த்தி ... ... மனுதாரன்.

vs

சித்மாங்க் ... ... ரெஸ்பான்டென்டு.

Revsision-Interference by chief Court. Sessions Judge passing heavier sentence than the verdict of the jury Cr. P. C. Ss. 423 (i-a) and 2; 307.

தெனே செரிம் ஸெஷன்ஸ் ஜட்ஜ் செய்த உத்தரவின் பேரில் செய்யப்பட்ட ரிவியூ மனு.

கேசின் விபரம்:—மாங்சிட் மாங்க் என்பவன் ஒருவன் அவனுடைய பெண்சாதியைக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு தெனே செரிம் ஸெஷன்ஸ் ஜட்ஜ் முன் விசாரணை செய்யப்பட்டான். அவனுடைய வாதம் யாதெனில்:—அவன் தன்னுடைய பெண்சாதி இன்னெருவனுடன் கலந்து சம்போகம் செய்துக்கொண்டிருந்ததை தான் நேரில் கண்டதினுல் அவன் தன்னுடைய பெண்சாதியைக் கொன்றுவிட்டதாகச் சொல்லுகிறுன்.

ஸெஷன்ஸ் ஜட்ஜ் அவர்கள் ஜுரிகளுக்கு கேசின் விர்த்தாந்தத்தைப் பூர்த்தியாய்த் தெரிவித்துக் கடைசியாய் குற்றவாளி அவனுடைய பெண்சாதி இன்னெரு புருஷனேடு கலந்து சுகித்துக்கொண்டிருந்ததை நேரில் கண்டு கோபமூண்டு கொன்றுவிட்டவனு யிருந்தால் குற்றம்கொலையாகுது, கொலையல்லாத மரண முண்டாக்கக்கூடிய உபத்திரவம் செய்தானென்று சொல்ல இடமுண்டு என்று எடுத்துக் காண்பித்தார். ஜுரிகள் எல்லோரும் கொலை யல்லாத மரணமுண்டாக்கக் கூடிய உபத்திரவமென்னும் குற்றத்தைச் செய்தவன் தானென்று தீர்மானம் சொன்னுர்கள். ஆனல் ஸெஷன்ஸ் ஜட்ஜ் அந்த அபிப்பிராயப்படாமல் கொலைசெய்தவன் தானென்று அபிப்பிராயம் கொண்டிடினும் ஜுரிகள் சொன்னதை ஏற்றுக்கொண்டு குற்றவாளியை 10 வருஷகாலம் தண்ணீர்மேலேத்தி விடும்படிக்குத் தீர்மானம் செய்தார். குற்றவாளிமேல் அதைவிட கடூரமான சிக்ஷை விதிக்கப் படவேண்டுமென்று இந்த ரிவிஷன் மனு கொண்டு வரப்பட்டது. இந்த ரிவிஷன் மனுவின்பேரில் யாதொரு உத்தரவு செய்யவேண்டுமென்பது அனுவசியமில்லை.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பாகம் 455. 3 பெ. லா. டை. 75.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

கிரிமினல் ரிவிஷன் கேசு நெ. 62 of 1910.

ஜட்ஜு:—மி-ர். ஜ. சங்கரன் நாயர்......முன்பாக.

முத்துப்பிள்ளை வகையரா.......................மனுதாரர்கள்.

Criminal ecedure Code (Act v of 1908) s. 110 cl (f) and S. 117-Security for good behaviour.

சாத்தூர் சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் மி. கே. நெ. 7 of 1900ல் மனுதாரர்களாகிய ஆறு பேருக்கு, தோட்டிச கொடுத்து அவர்கள் கிரிமினல் புரோசீஜர் கோடு 110 (f) பிரிவின்படிக்கு ஜனங்களுக்கு அபாயகரமான உபத்திரவம் செய்யாமல் நல் நடவடிக்கையுட னிருப்பதாக ஒப்புக்கொண்டு ஏன் ஜாமீன் பத்திரம் எழுதிக் கொடுக்க லாகாதென்று அவர்களை வரவழைத்து சாக்ஷி விசாரணை செய்து ஜாமீன் பத்திரங்கள் எழுதிக் கொடுக்கும்படிக்கு உத்தரவு செய்தார். அந்த உத்தரவின்பேரில் இந்த ரிவிஷன் மனு கொண்டு வரப்பட்டது. ரெக்கார்டிலுள்ள சாக்ஷியத்தைப் பார்த்தால் குற்றவாளிகள் மாமூலாய் குற்றவாளிகளாய் வருகிறுர்களென்று ஏற்படுகிறது. அப்படிப்பட்ட சாக்ஷியத்தின்பேரில் குற்றவாளிகள் மேல் குற்றம் சாட்டி அவர்களை கி. பு. கோ. 110-வது பிரிவின் கீழ் ஜாமீன் பத்திரம் எழுதிக் கொடுக்கும்படிக் கேட்பதற்கு தகுந்த சாக்ஷியம் கிடையாது.

இந்த கேசுக்கு ஆதாரமாய் சக்கிரவர்த்தி vs பித்யாபதி இ. லா. ரி. 25 அ 373, அ. வீ. நோ. (1903) 33; கலேஹல்டார் vs சக்கிரவர்த்தி இ. லா. ரி. 29 கல் 779; வகீத் அலிகான் vs சக்கிரவத்தி 11 கல். வீ. நோ. 789; 6 கி. லா. ஜ. 1 இந்த கேசுகளை மஞ்சூர் செய்துக்கொள்ளப்பட்டது.

எதிரிகள் மாமூலான குற்றவாளிகளென்று பெயர்போனவர்களென்பதாக சாக்ஷியம் இருக்கிறதே யல்லாமல் வேறல்ல. அந்த சாக்ஷியம் எதிரிகளை குற்றவாளிகள் தானென்று கி. பு. கோ. 110 (f) பிரிவின்படி ஜாமீன் பத்திரங்கள் எழுதிக் கொடுக்கும்படிக் கேட்பதற்குப் போதுமான சாக்ஷிய மாகாதென்று கண்டு மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவை ரத்து செய்து விடப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பாகம் 494. 8 ம. லா. டை. 347.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 377 of 1909.

கி. ரி. பி. நெ. 283 of 1909.

ஜட்ஜு:—மி-ர். ஜ. சங்கரன்நாயர்........முன்பாக.

T. S. குசப்ப பிள்ளை வகையரா...மனுதாரர்கள்.

Criminal trespass—Property in dispute—Order prohibiting possession being taken by complainent, Cr.P. C. 435 1-39.

திருச்சினப்பள்ளி முதல் கிலாஸ் சப்டிவிஷனல்மாஜிஸ்ட்ரேட்டின் அசிஸ்டான்ட் செய்ததீர்மானத்தை புனர விசாரணை செய்யும்படிக்கு ஹைகோர்ட்டாருக்குச் செய்துக்கொண்ட ரிவிஷன் மனு. பிரியாதியை அவனுடைய ஸ்வாதீனத்திலிருக்கும் தாவாநிலத்தைசுவாதீனம் செய்துக்கொள்ளலாகாதென்று 1908-ம்ளு ஜுலைமீ 8உ செய்த உத்தரவைப் பார்க்குமளவில்மனுதாரர்கள் தாவாநிலத்தின்பேரில் அக்கிரமமாய் பிரவேசித்தார்களென்று சொல்லுவதற்குக் கூடாமை. கீழ் கோர்ட்டாருடைய தீர்மானம் பிசகென்று அந்த தீர்மானத்தையும் சிக்ஷையையும் ரத்து செய்து விட்டு விதித்த அபராதத்தை வாபஸ் செய்து விடும்படிக்கு உத்தரவு செய்யப்பட்டது.

இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3 வது பாகம் 397. 8ம, லா. டை. 289.

PUNJAB CHIEF COURT.
பஞ்சாப் சீப் கோர்ட்டு.

கிரிமினல் ரிவிஷன் மனு நே 323 of 1910.

ஜட்ஜுகள்:— { சர். ஆர்தர் ரீட், நைட் சீப் ஜட்ஜ், மி-ர். ஜ. ஜான்ஸ்டன்.

முன்பாக.

சக்கிரவர்த்தி.........பிரியாதி,

vs

தீவாசிங்கு வகையரா..........குற்றவாளிகள்.

Crimlnal Procedure C de (Act V of 1908) Sections 110, 12I-Forfeiture of security bond Commission of offence in Native State-Proof-nature of "Offence punishable with imprisoument whereever committed" Tobe of good behaviour to His Majesty and to all his sub. jects.

கேசின் விபரம்:—தீவாசிங்கு என்பவன் ஒருவன் மாக்ஷிமைதங்கிய சக்கிரவர்த்திக்கும் அவருடையபிரஜைகளுக்கும்நல்நடவடிக்கையுள்ளவனாய் நடப்பதாக கிரிமினல் புரோசிஜர் சட்டம் 110-வது பிரிவின்படிக்கு சர்க்காருக்கு ஜாமீன்பத்திரம் எழுதிக் கொடுத்திருந்தான். பிறகு மேற்சொன்ன தீவாசிங்கு என்பவன் கபர்த்தாலா என்னும் பிரதேச ராஜ்ஜயத்திக அயோக்கியமாய் திருட்டு சொத்தை வாங்கினதால் குற்றம் சாட்டப்பட்டு ஷ கபர்தாலா கோர்ட்டாரால் இந்தியன் பீனல் கோடு 411-வது பிரிவின் கீழ் சிக்ஷை விதிக்கப்பட்டான். இதன்பேரில் அம்ரிஸ்டர் முதல் கிலாஸ் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் மேற்கண்ட செக்கூரிடி பாண்டென்று சொல்லப்படும் ஜாமீன் பத்திரத்தில் கண்டிருக்கும் குற்றவாளியினுடைய ஜாமீன் கொடுக்கப்பட்டிருக்கும் சொத்தை பறி முதல் செய்து சர்க்கார் வசம் செய்து விடும்படிக்கு உத்தரவு செய்தார். அதன்பேரில் செஷன்ஸ் ஜட்ஜ் அவர்கள் குற்றவாளி சிக்ஷையடைந்தானென்றும் ருஜுவின்பேரில் செக்கூரிடி கொடுக்கப்பட்டிருக்கும் தொகையை கவர்ன்மென்டார் பறி முதல் செய்துக் கொள்வதற்கு நியாய முண்டா இல்லையா யென்று சந்தேகித்து இந்த பாயின்டை ஹைகோர்ட்டுக்குத் தெரிவித்துக் கொண்டார்.

தீர்மானம்:— ஜாமீன் சொத்தைப் பறிகொள்வது நியாயமல்ல வென்று அபிப்பிராயம் கொண்டார்கள். இந்த கேசுக்கு ஆதாரமாய் 2 P. R. 1884 C, r; 17 P. R. 1904 C. r; 125 ப. லா. ரி. 1904 C. r, 1 க, லா. ஜ. 1061 இந்த கேசுகளை மஞ்சூர் செய்துக்கொண்டு குற்றவாளி இ. பீ. கோ. 411-வது பிரிவின்கீழ் ஒரு சுதேசராஜ்ஜியத்தில் - அதாவது நேடிவ் ஸ்டேட்டில் வாஸ்தவத்தில் குற்றம் செய்தவன்தானென்று ருஜுவானு லொழிய மற்றபடி எந்த சந்தாபத்திலும் ஜாமீன்சொத்தைப்பற்றி முதல் செய்யும்படிக்கு உத்தரவு செய்ய நியாயம் கிடையாதென்று சொல்லி முதல் கிலாஸ் மாஜிஸ்ட்ரேட் செய்த உத்தரவை ரத்து செய்து விட்டு கேஸை மறுபடியும் விசாரணை செய்யும்படிக்கு உத்தரவு செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பாகம் 383. 28 ப. ரி. 1910 கிரிமினல்.

PUNJAB CHIEF COURT.
பஞ்சாப் சீப் கோர்ட்டு.

கிரிமினல் அப்பீல் நே. 645 of 1909.

ஜட்ஜு:—சர். ஆர்தர் ரீட், நைட், சீப் ஜட்ஜ்...முன்பாக.

சாஸ்னி வகையரா.........கைதிகள்.........அப்பீல்வாதிகள்

vs

சக்கிரவர்த்தி..............................ரெஸ்பான்டென்டு.

Burden of proof-Rape on a child-Complaint of robbery-Report of Chemical Examiner-Confession.

கிரிமினல் புரோசீஜர் கோடு 30-வது பிரிவின்கீழ் அதிகாரங்கள் பெற்ற அம்ரிஸ்டார் முதல் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் அப்பீல்வாதிகளை குற்றவாளிகளென்று செய்த தீர்ப்பின்பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீல்.

தீர்மானம்:—பிரியாதி சொல்வதாவது முசமந்ரேஷன் என்னும் 11, 13-வயதுள்ள ஓர் பெண் அவளுடைய புருஷன் அவளைக் கட்டி அணையவந்தானென்கிற பயம் கொண்டு வெளியே ஓடி வந்து டிக்கட் வாங்காமலேயே ரயிலேறி சுமார் 130-மயில்தூரம் ரயிலில் பிரயாணம் செய்து பிறகு ஒரு சிறிய ஸ்டேஷனில் தண்ணீர் குடிக்க இறங்கினாள். ரயிலோ இவள் திரும்பி வருவதற்கு முன் ஓடிப்போய் விட்டது. இந்த சிறிய பெண் அந்த சின்ன ஸ்டேஷனிலேயே தங்கிப் போய் விட்டாள். அந்த ஸ்டேஷனில் சொற்ப ஊழியக்காரர்களாயிருந்த அப்பீல் வாதிகள் அவளைக் கெடுத்து விட்டதாக முதல் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டின் முன் ஒப்புக்கொண்டபடி இந்த வாதிகள் அந்தப் பெண்ணை சம்போகம் செய்து கொடுத்தவர்கள் தானென்பதற்குச் சந்தேகமில்லை போதுமான சாக்ஷியமிருக்கிறது. கெமிக்கல் எக்ஜாமினரின் ரிப்போர்ட்டும் பிரியாதியின் வாக்குமூலத்திற்கு ஒத்திருக்கிறபடியால் 22, 23-வயதுள்ள இந்த குற்றவாளிகளாகிய அப்பீல்வாதிகள் குற்றம் செய்தவர்கள் தானென்றும் குற்றவாளிகள் செய்த நடவடிக்கை மிக்க முறட்டுத்தனமான மிருகச்செய்கை யென்றும் கண்டு அப்பீலைத் தள்ளும்படி செய்யப்பட்டது.

சாதாரணமாய் பெண்சாதி யிழந்த புருஷன் மறு விவாகம் செய்துக்கொண்டால் அறியாத வயதாயிருக்கும் அவனுடைய பெண்சாதியை அவளுடைய புருஷனாகிய அவன் வீட்டிலிருக்கும்படிக்கு அனுப்பி வைப்பதின் பலன் இதுதானென்பதற்கு இந்த கேசே போதுமான அத்தாக்ஷி யென்று அறியவும் ஜனங்கள் இனி ஜாக்கிரதாயிருப்பார்களென்று கோறுகிறோம்.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பாகம் 33 ப. வீ. ரி. 1910—கிரிமினல்.

PUNJAB CHIEF COURT.
பஞ்சாப் சீப் கோர்ட்டு.

——:o:——

கிரிமினல் ரிவிஷன் நே. 630 of 1910.

ஜட்ஜு:—மி-ர். ஜஸ்டிஸ் ஸ்காட் ஸ்மித்...முன்பாக.

நான்கு என்கிற மகம்மதுடன்......கைதி......மனுதாரன்.

vs

சக்கிரவர்த்தி ... ... ரெஸ்பான்டென்டு.

Criminal Procedure Code (Act V of 1908) Section 110, 123-Security for good behaviour-Failiure to furnish security–Power of Magistrate to order-imprisonment for proiod exceeding one year-Reference under section 123-Duty of Sessions Judge Ex-conviet-Justificatien for an order to furnish security.

கேசின் விபரம்:—இந்த ரிவிஷன் மனுவானது ஜீலம் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் கிரிமினல் புரோசீஜர் கோடு 110-வது பிரிவின் கீழ் நான்கு என்பவனிடமிருந்து மூன்று வருஷ காலத்திற்கு நல் நடவடிக்கை யுள்ளவனாயிருப்பதற்காக செகூரிடி பாண்டு வாங்கிக்கொள்ளும்படி செய்த உத்தரவின்பேரில் கொண்டு வரப்பட்டது.

மேற்கண்ட செக்கூரிடியை நான்கு என்பவன் கட்டுவதற்குத் தவறிப்போனானென்று மாஜிஸ்ட்ரேட் அவர்கள் அவனை மூன்று வருஷகாலம் கடின காவலிலிருக்கும் படித்தண்டித்துவிட்டு கேஸை ஸெஷன்ஸ் ஜட்ஜ் அவர்கள் பின் வருமாறு உத்தரவு செய்தார்—அதாவது—"டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் நான்கு என்பவனை மூன்று வருஷத்திற்கு நல் நடவடிக்கையுடனிருப்பதற்காக ரூபாய் 200 ஜாமீன் கொடுக்கும்படி உத்தரவு செய்தது நியாயமானது தானென்று அவருடைய உத்தரவைக் காயப்படுத்துகிறேன்." ஆனால் நான்கு என்பவன் மேற்கண்ட செக்கூரிடி மொத்தத்தைக் கட்டத் தவறிப்போனதின் பேரில் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் செய்த நடவடிக்கைகள் கிரிமினல் புரோசீஜர் சட்டத்திலிருக்கும் நிபந்தனைகளுக்கு விரோதமென்று நான் சொல்லவேண்டும். டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் குற்றவாளியை ஜாமீன் கட்டத் தவறிப்போனானென்னும் காரணத்தைக் கொண்டு ஸெஷன்ஸ் ஜட்ஜ் அனுமதிக்குட்பட்டு மூன்று வருஷகாலம் கடினகாவலி லிருக்கும்படிக்கு உத்தரவு செய்ய அவருக்கு அதிகாரம் கிடையாதென்று நான் சொல்லவேண்டும்.

When a person has been ordered by a Magistrate to give security for a period exceeding one year, the Magistrate shall, if snch person does not give such security as aforesaid, issue a warrant directing him to be detained in prison pending the orders of the Sessions Judge, or if such Magistrate is a Presidency Magistrate, pending the orders of the High Court and the proceedings shall be laid before such Court.

Such Court after examining such proceedings and requiring from the Magistrate any further information or evidence which it thinks necessary may pass such order on the case as it thinks fit.

Provided that the period (if any), for which any person is imprisoned for failiure to give security shall not exceed three years.

"கிரிமினல் புரோசீஜர் கோடு 123-வது பிரிவின்கீழ் என்ன நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறதென்றால்:—யாராவது ஒருவனை ஒருமாஜிஸ்ட்ரேட் ஒரு வருஷத்திற்கு அதிகமாய் ஜாமீன் கொடுக்கும்படி செய்த உத்தரவின்படிக்கு குற்றவாளி ஜாமீன் கொடுக்கத் தவறிவிட்டால்அந்த மாஜிஸ்ட்ரேட்அவர்கள்அவனை காவலில் வைத்திருக்கும்படிக்கு வாரன்ட் பிறப்பிக்கும்படிக்கு உத்தரவு செய்துவிட்டு கேசை ஸெஷன்ஸ் ஜட்ஜியினுடைய உத்தரவிற்கு அனுப்பி விடவேண்டியது. அந்த மாஜிஸ்ட்ரேட் பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட்டா யிருந்தால் கேசை ஹைகோர்ட்டார் உத்தரவிற்கு அனுப்பிவிட வேண்டியது. அப்படி கேசை அனுப்பி வைத்ததின்பேரில் எந்த கோர்ட்டுக்கு அந்த கேசு அனுப்பப்பட்டதோ அந்த கோர்ட்டார் அதன்பேரில் ரெக்கார்டிலுள்ள சாக்ஷியங்களைப் பரிசோதித்து இன்னும் ருஜு வேண்டியதென்றால் அதை மாஜிஸ்ட்ரேட்டின் மூலமாய்த் தெரிந்துக்கொண்டு அந்த கோர்ட்டாருக்கு யுக்தமென்று தோற்றும் உத்தர்வு செய்யலாம். அப்படி ஜாமீன் கட்டத் தவறிப்போகிறவனை மேல் கோர்ட்டார் சிக்ஷை செய்யும் பக்ஷத்தில் அவனை மூன்று வருஷங்களுக்கு அதிகமாக சிக்ஷை செய்யக்கூடாது.

நான்கு என்பவன் வாஸ்தவத்தில் நேடிவ் ஸ்டேட்டில் குற்றம் செய்தவன் தானென்று சொல்லுவதற்கு வேண்டிய போதுமான சாக்ஷியம் கிடையாதாகையால் ஸெஷன்ஸ் ஜட்ஜ் குற்றவாளி ஜாமீன் கொடுக்கத் தவறிப்போனவனென்று அவனை ஜெயிலுக்கு அனுப்பி வைப்பதற்கு அவருக்கு அதிகாரம் கிடையாதென்று சொல்லி ஸெஷன்ஸ் ஜட்ஜ் செய்த உத்திரவை ரத்து செய்து செய்துவிட்டு குற்றவாளியாகிய நான்கு என்பவனை உடனே ஜெயிலிலிருந்து விடுதலை செய்யும்படிக்கு உத்தரவு செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பாகம் 385. 29 ம. ரி. 1910 கிரிமினல்.

PUNJAB CHIEF COURT.
பஞ்சாப் சீப் கோர்ட்டு.

——:o:——

கிரிமினல் ரிவிஷன் நே. 9 of 1910.

ஜட்ஜு:—மிர். ஜஸ்டிஸ் ஸ்காட் ஸ்மித்...முன்பாக.

சக்கிரவர்த்தி ... ... மனுதாரர்.

vs

சுந்தர்சிங்கு ... ...பிரியாதி...ரெஸ்பான்டென்டு.

அம்பாலா டிவிஷன் ஸெஷன்ஸ் ஜட்ஜு ரிப்போர்ட்டு செய்த கேசு.

Criminal Procedure Code (Act v 1908) Sec. 250-Case Compounded-Compensation Cannot be awarded-Practice-Magistrate Cannot dceline to allow the composition of compoundable offence.

கேசின் விபரம்:—சுந்தர் சிங்கு என்பவன் ஒருவன் கானாக்கு பட்டணத்திலிருக்கும் லால்சிங்கு என்பவனுக்கு பணம் கடன் கொடுக்கவேண்டியிருந்தது. லால்சிங்கு என்பவன் சுந்தரி வீட்டிற்குப்போய் தனக்கு கடனாய் கொடுக்கவேண்டியிருந்த பணத்தைக் கொடுக்கும்படி கேட்டதாகவும் பிறகு

அவன் பிரியாதியின் வீட்டிற்குள் துராங்காரமாய்ச் சென்று பிரியாதியின் தாடியைப் பிடித்துக்கொண்டு அவனுடைய இரண்டு கன்னங்களிலும் அறைந்ததாகவும் சுந்தர் சிங்கு என்பவன் லால்சிங்கை ப்ராசிகூட் செய்யும்படிக்குப் பிரியாது கொடுத்தான். லால்சிங்கென்பவன் பிரியாதியின் வீட்டிற்குப் போகவில்லையென்றும் அவன் அந்தக் குற்றத்தைச் செய்தவனல்லவென்றும் எதிர்வாதம் கூறி பிரியாதியின்பேரில் லால்சிங்கு என்பவன் பணத்தை வசூல் செய்வதற்காக செய்திருக்கும் சிவில் தாவாவைக் கெடுத்து விடுவதற்காகவும் இந்த பிராது கொடுத்தானென்று சொன்னான். அதன்பேரில் சிம்லா முதல கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் குற்றவாளியை விடுதலை செய்து விட்டு பிரியாதியை கிரிமினல் புரோசீஜர்கோடு 250-வது பிரிவின்படி குற்றவாளிக்கு ரூபாய் 15 காம்பென்சேஷன் கட்டிக் கொடுக்கும்படிக்கு உத்தரவு செய்தார். செஷன்ஸ் ஜட்ஜ் அவர்கள் ஓர் கிரிமினல் கேசில் கக்ஷிதாரர்கள் ராஜியாய் விட்டால் குற்றவாளிக்கு ஷை 250-வது பிரிவின்படிக்கு காம்பென்சேஷன் கட்டிக் கொடுக்கும்படி உத்தரவு செய்ய நியாயமுண்டா இல்லையா என்று சந்தேகித்து கேசை ஹைகோர்ட்டுக்குத் தெரிவித்துக் கொண்டார்.

தீர்மானம் :— சக்கிரவர்த்தினி vs குஷாலிராம் 18 ப. ரி. 1888-ம்ஹுத்திய கிரிமினல் இந்தகேசில் கிரிமினல் புரோசீஜர் கோடு250வது பிரிவின்படி காம்பென்சேஷன் கொடுக்கும்படி உத்தரவு செய்வதற்கு குற்றவாளியை மேற்படி கோடு 245 அல்லது 247 பிரிவின்கீழ் விடுதலை செய்திருக்கவேண்டும் இல்லாவிடில் செய்யலாகாது. ஆனால் ஓர் கிரிமினல் கேசில் கட்சிதாரர்கள் மேற்படி கோடு 345-வது பிரிவின்படி ராஜியாய் விட்டால் அந்த ராஜியினாலேயே குற்றவாளி விடுதலையாய் விடுகிறவனாகிறனென்னும் காரணத்தால் சட்டப்படி காம்பென் சேஷன் கொடுக்கும்படி உத்தரவு செய்ய நியாயம் கிடையாது.

குற்றவாளியின் பேரில் சாட்டப்பட்டிருக்கும் குற்றங்கள் ராஜியாகக் கூடியவைகளானதால் கட்சிதாரர்கள் கேசை ராஜி செய்துக்கொள்ள வாகாதென்று மாஜிஸ்ட்ரேட்டு உத்தரவு செய்தது பிசகு அவர் உடனே குற்றவாளியை விடுதலை செய்து விடவேண்டியது. மேற்கண்ட தீர்மானத்தின்படிக்கு அவர் உத்தரவு செய்ய நியாயம் கிடையாதென்று சொல்லி ரிவிஷன் மனுவை ஏற்றுக்கொண்டு லால்சிங்குக்கு ரூபாய் 15 காம்பென்சேஷன் கட்டிக்கொடுக்க வேண்டுமென்கிற உத்தரவு ரத்து செய்துவிடப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பாகம் 387. 30 ப. ரி. 1910 கிரிமினல்.

PUNJAB CHIEF COURT.

பஞ்சாப் சீப் கோர்ட்டு.

——;o;——

கிரிமினல் ரிவிஷன் நெ. 230 of 1910.

ஜட்ஜு;— மி-ர். ஜஸ்டிஸ் செவிஸ்...முன்பாக.

லேக்ராஜ்....,கைதி.......மனுதாரன்.

vs

சக்கிரவர்த்தி.,........................ரெஸ்பான்டென்டு

Jurisdieiton—Forging . Hundi-Hundi-Valuable security-Power of First class Magistrate to try a case of forging Hundi-Serious offence-Penal Code (Act 42 of 1864 section. 420, 467, 468.

கேசின் விபரம்:—மனுதாரன் மோசம் செய்யும் பொருட்டு ஓர் ஹூண்டியில் தப்பு கையெழுத்து செய்து போர்ஜெரி செய்தானென்று குற்றம் சாட்டப்பட்டு முதல் கிலாஸ் மாஜிஸ்ட்ரேட் இந்தியன் பினல் கோடு 421, 468-வது பிரிவுகளின் கீழ் அவனைக் குற்றவாளிதானென்று தீர்மானித்து சிக்ஷை செய்தார். ஹூண்டி என்பது ஓர் பெருமான பத்திரமானதால் இந்த குற்றம் இ. பி. கோ. 476-வது பிரிவின்கீழ் செய்யப்பட்டதாகவும் அப்படிப்பட்ட குற்றத்தை விசாரணை செய்வதற்கு செஷன்ஸ் ஜட்ஜுக்கும் அல்லது ஓர் செஷன்ஸ் ஜட்ஜுக்குள்ள விசேஷ அதிகாரங்களைப் பெற்ற மாஜிஸ்ட்ரேட்டுக்கும் தான் அதிகார முண்டே யல்லாமல் வேறல்ல. ஆனால் மேற் கண்ட பெரும் குற்றமாகிய போர்ஜெரி குற்றத்துடன் குற்றவாளி இன்னொரு சிறிய குற்றத்தையும் செய்தவனாக குற்றம் சாட்டப்பட்டானென்று முதல் கிலாஸ் மாஜிஸ்ட்ரேட் மேற்படி கேசை விசாரிக்க நியாயமில்லை. இதற்குக் காரணமாய் குலை செய்த குற்றத்துடன் ஓர் குற்றவாளி அடித்துத் துன்பப்படுத்தினனென்னும் காரணத்தைக் கொண்டு முதல் கிலாஸ் மாஜிஸ்ட்ரேட்டு குலை கேசையே விசாரணை செய்ய அவருக்கு அதிகாரம் கிடையாதல்லவா.

ஆகையால் மாஜிஸ்ட்ரேட்டின் தீர்மானத்தையும் சிக்ஷையையும் ரத்து செய்து விட்டு இன்னும் செஷன்ஸ் கோர்ட்டில் நடந்த எல்லா புரோசீடிங்ஸ்களையும் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டின் முன் சார்ஜ ஏற்படுத்தியது முதல் நடந்த நடவடிக்கைகளையும் ரத்து செய்துவிட்டு, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் மூலமாய் கேசை மறுபடியும் அனுப்பி விடப்பட்டது. மாஜிஸ்ட்ரேட் இந்த கேசை தன் கீழிருக்கும் 31-வது பிரிவின் கீழ் அதிகாரம் பெற்றுள்ள எந்த மாஜிட்ரேட்டுக்காவது ட்ரான்ஸ்பர் செய்து விசாரணை செய்யும்படிக்கு உத்தரவு செய்யலாமென்று சொல்லி கட்டைத் திருப்பி விடப்பட்டது. ஆனால் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரோட்டே இந்த கேசை விசாரணை செய்வதாயிருந்தால் அவர் கேசை விசாரித்து செஷன்ஸுக்கு கமிட் செய்துவிட வேண்டும் அல்லது குற்றவாளியை விடுதலை செய்து விடவேண்டும்; அது வரையில் மனுதாரனை ஜாமீன்பேரிலிருக்கும்படி உத்தரவு செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3 வது பாகம் 389. 31 ப. ரி. 1910 கிரிமினல்.

———

CHIEF COURT OF L ER BURMA.

லோயர் பர்மா சீப் கோர்ட்டு.

———

ஜட்ஜுகள்:— { சர். சாரல்ஸ் பாக்ஸ்(Fox)சீப்ஜட்ஜ்
மி-ர். ஜ. ஹார்ட்னல் } முன்பாக.

சிவில் முதல் அப்பீல் நெ. 51 of 1906.

A. R. A.S. சுப்பிரமணியன் செட்டி...வாதி...ரெஸ்பான்டென்டு.

மி-ர். லென்டெயி...வக்கீல்

vs

R. M. K. கருப்பன் செட்டி...வாதி...ரெஸ்பான்டென்டு.

மி-ர். கயில்ஸ்...வக்கில்

ஓர் ஹுண்டியை கொண்டுவருபவனுக்குப் பணம் செலுத்தும்படிக்கு கண்டெழுதியிருக்கும் ட்ராப்டுகளின்பேரில் தாவா சட்டப்படி அப்படிப்பட்ட ஏற்பாடுசெய்துக்கொள்ள நியாயமில்லை யென்பது-கோர்ட்டாரின் கடமை-1882ஹுத்திய இண்டியன் பேபர்கர்ரென்சி ஆக்டென்று (Paper Currency Act) சொல்லப்படும் நோட்டுகளைக்குறித்த சட்டம் 25-வது பிரிவு.

கேசின் விபரம்:—எ என்பவன் பேருக்கு பி என்பவன் சில ஹூண்டிட்ராப்டுகள் எழுதி அந்த ஹூண்டிட்ராப்டுகளைக் கொண்டுவருபவனுக்கு அவன்(பேருக்கு)அவன் கேட்டபோது அவைகளில்கண்டிருக்கும் மொத்தங்களைச் செலுத்தும்படிக்கு உத்தரவு செய்து ஏ என்பவன் பேருக்கு ட்ராப்டுகள் எழுதி தன்னுடைய ரங்கோன் ஏஜென்டுக்கு அனுப்பினான்.

பி என்பவன் 1882-ம்ஹுத்திய பேபர்கர்ரென்சி ஆக்ட் 25-வது பிரிவில் சொல்லியிருக்கும் நிபந்தனைக்கு விரோதமாய் நடந்தானென்றும் ஏ என்பவன் மேற்கண்ட ஹூண்டிகள் மேற்படி பிரிவின்கீழ் சொல்லியிருக்கும் விலக்கின் கீழ் வருகிறதென்று ருஜு செய்யவுமில்லை. சட்ட நிரூபண சபையார் செய்திருக்கும் சட்டத்திற்கு விரோதமாய் செய்துக் கொள்ளப்பட்ட ஓர் ஏற்பாட்டின் பேரில் (கண்ட்ராக்டின் பேரில்)-எ என்பவன் தாவா செய்வதற்கு நியாயமில்லை யென்று தீர்மானிக்கப்பட்டது.

இதற்காதாரமாய் எடுத்துக் காண்பிக்கப்பட்ட கேசுகள் பென்ஸ்லி -vs- பிக்னல்ட் (1822) 5 பார்ன் அண்ட் ஆல்ட் 335 24 R. R. 532. இந்த கேசுகள் இதற்குத் தகுந்த அத்தாரெட்டி யென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

பொர்த்தபர்க்கா - vs - ராமசந்திர விட்டோபா இ. லா. ரி, 16 பம்பாய் 689 இந்த கேசு பிரஸ்தாப கேசுக்கு சம்மந்தப்பட்டதல்ல வென்று ஒப்புக் கொள்ளவில்லை.

தீர்மானம்.

Fox (பாக்ஸ் சீப் ஜட்ஜு):—இந்த கேசில் தீர்மானிக்க வேண்டிய முக்கியமான அம்சம் யாதெனில்:-வாதி எந்தப் பத்திரங்களின் பேரில் தாவா செய்திருனோ அந்தப் பத்திரங்களின் பேரில் தாவா செய்ய நியாய முண்டா யென்பது.

தாவா பத்திரங்களில் என்ன எழுதி யிருந்ததென்றால்:—

"பரமசிவன் அனுக்கிரகம்"

"சோபகிருதுஹு மார்கழிமீ 12௳(27-12-1903)"

"கிலச்கிப்பட்டி R. M. L. M....கிரெடிட்"

"ஆத்தங்குடி A. R. S....டெபிட்"

"ரூபாய் 1,000-ஆயிரம்தான். ரங்கோனிலிருக்கும் எம்முடைய ஏஜென்டு முருகப்ப செட்டியாருக்கு உத்தரவு. ஹூண்டியைக் கொண்டு வருபவரின் (பெயர் வழிக்கு மேற்கண்ட தொகையை அந்த காலத்தில் ரங்கோனில் வழங்கி வரும் வட்டி வீதப்படிக்கு கணக்கிட்டு வட்டியுள்பட செலுத்தி A. R. S. கணக்கில் பத்தெழுதவும்".

"எண்டார்சு செய்தவர் "R. M. L. M."

("கையொப்பம்")

"A. R. S. சுப்பிரமனியன் செட்டி"

மற்ற இரண்டு ஹூண்டிகளும் இம்மாதிரியாகவே தான் எழுதப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டும் எண்டார்சுமென்டு செய்யப்பட்டு மிருந்தன.

இந்த கேசில் பிரதிவாதியாயிருப்பவன் தன்னுடைய ரங்கோன் ஏஜென்டிற்கு ஹூண்டிகள் எழுதி அதை அவரிடத்தில்கொண்டு வருபவருக்கு (Bearer) அதில் கண்டிருக்கும் மொத்தத்தைச் செலுத்தி விடும்படிக்கு உத்தரவு செய்திருக்கும் ஹூண்டியல் மேல்தான் இந்த தாவா கொண்டுவரப்பட்டது.

பிரதிவாதி இந்த உண்டியல்களை எழுதுகையில் அவர் 1882-ம் வருஷத்திய பேபர்கர்ரென்ஸி ஆக்ட் 25-வது பிரிவில் சொல்லி யிருக்கும் நிபந்தனைகளுக்கு விரோதமாய் நடந்தவனா அல்லவா என்பது ஓர் கேள்வியல்ல.

அந்த பிரிவில் பின்வருமாறு சொல்லி யிருக்கிறது.

"பிரிட்டிஷ் இந்தியாவில் எந்த கம்பெனியாராவது அல்லது ஒருநபராவது செக்குகொண்டு வரப்பட்டவனுக்கு(Bearerக்கு) அதில்கண்டிருக்கும் தொகையை அவர் கேட்கும்போது செலுத்தும்படிக்காவது கடன் வாங்கும்படிக்காவது யாதொரு பில் ஆப் எக்சேஞ்சாவது, ஹூண்டியாவது, கடன் பத்திரமாவது, ஓர் ஒப்பந்தமாவது எழுதலாகாது.

"No body corporate or person in British India shall draw, accept, Make, or issue any bill of Exchange, hundi, provissory, "note of engagement for the payment of Money payble to bearer on demand, or borrow, owe or take up any sum or sums of Money on the bills, hundies or notes payable to bearer on demand, of any such body corprate or of any such person. Provided that cheques or drafts payable to bearer on demand or otherwise may be drawn on bankers, shroffs or agents by their customers or constituents in respect of deposits of Money in the hands of such bankers, shroffs or agents and held by them at the cridit and disposal of the persons drawing such cheques or drafts."

ஆனால் கொண்டுவருபவனுக்கு (Bearer)க்கு கேட்கும்போது பாங்கார் மேலாவது, ஷராப்புகள் மேலாவது, வியாபாரஸ்தர்களின் ஏஜெண்டுகளின் மேலாவது அவர்களிட கஸ்டமெர்களின் மேலாவது அவர்களிடத்தில் வைக்கப்பட்டிருக்கும் டிபாசிட்டுகள் விஷயமாய் அப்படிப்பட்ட செக்குகள் அல்லது ட்ராப்டுகள் எழுதலாம்.

ஆனால் பம்பாய் ஹைகோர்ட்டார் 1882-ம்ஹத்தில் இ. லா. ரி. 16 மம் 689 ஜெதபார்க்கா-vs-ராமசந்திர விட்டோபா கேசில் ஜஸ்டிஸ் Farren (பாரன்) என்பவர் அப்படிப்பட்ட தஸ்தாவேஜியின் பேரில் பணத்தை வசூல் செய்வதற்கு ஏன் ஹக்கு கிடையாதென்று தனக்குப் புலப்படவில்லை யென்றும், அவ்விதமான பத்திரத்தை வைத்திருப்பவன் அந்தப் பத்திரம் மேற்கண்ட செக்ஷன் கீழ் சொல்லியிருக்கும் விலக்கின்படிக்குள்ளது தானென்று ருஜுசெய்தாலன்றி மற்றப்படி அவன் அதன்பேரில் தாவா செய்து பணத்தை வசூல் செய்ய நியாயமில்லையென்பது தனக்கு சந்தேகமாயிருப்பதாயும் சொல்லியிருப்பதைப்பார்த்தால் மேலேகண்ட ஜஸ்டிஸ் அவர்கள் அந்த விஷயத்தைப்பற்றிப் பூராகவும் தீர்க்க யோசித்துச் சொன்னவராகக் காணப்படவில்லை.

தாவா பத்திரங்கள் மேற்கண்ட செக்ஷனில் சொல்லியிருக்கும் விலக்கின்படி சட்ட சம்மதமான பத்திரங்கள் தானென்று வாதி ருஜு செய்யவில்லையென்று ஏற்பட்டால் அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அதற்குத் தகுந்த நியாயம் இன்னதென்று பென்லி-vs-ரெக்னல்ட் கேசில் சொல்லி யிருக்கிறது. அதாவது-வாதி மேற்கண்ட சட்ட நிபந்தனைக்கு விரோதமாய்ச் செய்துக்கொண்ட ஓர் ஒப்பந்தத்தின் கண்ட்ராக்டின்பேரில் நம்பர் செய்யலாகாதென்னும் விதி இம்மாதிரியாகவே கோப்-vs-ரௌலான்ஸ் 2M & W. 149; 46 R. R. 532லும் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

தாவா பத்திரங்கள் மேற்கண்ட பிரிவின் கீழுள்ள விலக்கின்படிக்கு தான் செய்யப்பட்டன வென்று வாதித்துப் பேசப்பட்டது. அந்த விலக்கின் கீழ் தான் தாவா பத்திரங்கள் செய்யப்பட்டன வென்று ருஜுவாக வில்லையென்று தான் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. பிரதிவாதி அவனுடைய நங்கோன் ஏஜெண்டென்று சொல்லப்படும் நபருடைய கஸ்டமரென்றுவது அல்லது அவருடன் லேவாதேவி செய்பவரென்றுவது அல்லது தாவா பத்திரங்கள் டிபாசிட்டுகள் விஷயமாய் செய்யப்பட்டன வென்றுவது தாவாவில் கொஞ்சமாகிலும் ருஜுவாகவில்லை.

ஆனபடியால் அப்பீலை ஏற்றுக்கொண்டு கீழ் கோர்ட்டார் செய்த டிக்ரியை ரத்து செய்து வாதியின் தாவாவை சிலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

லோயர் பர்மா ரூலிங்க்ஸ் 5-வது வால்யம் 6-வது பாகம் 182.

PUNJAB CHIEF COURT.
பஞ்சாப் சீப் கோர்ட்டு.

——:o:——

கிரிமினல் ரிவிஷன் நெ. 79 of 1910.

ஜட்ஜு:—சர். ஆர்தர் ரீட், நைட், சீப் ஜட்ஜ்.

சக்கிரவர்த்தி ... ... பிரியாதி.

vs

அப்துல்கானி ... ... குற்றவாளி.

Criminal Procedure Code,tc (A V of 1898)Sec. 250 Process Server's report-Institution of Criminal proceedings by District Judge-Acquittal of accused-Process Server's liability to pay Compensation-Complainant.

கேசின் விபரம்:—சம்மன்ஸ் முதலான கோர்ட்டு உத்தரவுகளை சார்வு செய்வதற்காக கேமிக்கப்பட்டிருக்கும் ப்ராசஸ் செர்வர் உத்தியோகஸ்தனுகிய அப்துல்கானி என்பவன் பின் வருமாறு ரிப்போர்ட்டு செய்தான். அதாவது,

படேசிங்கு என்பவன் ஒருவன் மாசா காடாலி என்னும் ஊரின் வாசஸ்தியாகிய கானியா என்பவரின் குமாரத்தியான முசம்மத்பானி என்பவளை வாரண்டில் பிடித்து வரும்படிக்கு 1905-ம்ஹ ஏப்ரல்மீ 15உ தனக்கு வாரண்டு உத்தரவு பிறந்ததாகவும் அவன் அந்த வாரண்டை யெடுத்துக்கொண்டு டிக்ரி பெற்றவனுடன் மேற்சொன்ன மாசாகாடாலி என்னும் ஊரைப்போய்ச்சேர்ந்ததாகவும் மேற்சொன்ன முசம்மத்பானி என்பவள் அவளுடைய வீட்டிற்கெதிரில் உட்கார்ந்துக்கொண்டிருந்ததாகவும் அவள் முதலில் வரமாட்டேனென்று எதிர்த்து ஆக்ஷேபனை செய்ததாகவும் பிறகு மேற்சொன்ன ப்ராஸெஸ் செர்வருடனும்டிக்ரிதாரனுடனும் சென்றதாகவும், இவர்கள் இவ்விதமாய் 300 அடி தூரம் போனபோது முசம்மத்கனேஷியும், நான்டோவும், முசம்மத்பானியின் கையைப்பிடித்துக்கொண்டு "முகம்மத்பானியை ப்ராசெஸ் செர்வர் அழைத்துக்கொண்டு போய்விடுகிறானே" என்று கூக்குறலிட்டதாகவும், அதன்பேரில் எதிரிகளாகிய ஏழு பெயர்கள் அவ்விடத்திற்கு வந்ததாகவும், அந்த ஏழு பெயர்களில் கப்பூர் சிங்க், ம்ட்சாடி என்பவர்களைத் தான் அந்த ப்ராசெஸ் செர்வர் குறித்துக் காட்டக்கூடுமென்றும், இன்னும் கப்பூர்சிங்கி வாரண்டைப் பார்க்கவேண்டுமென்று கேட்டதாகவும், அப்படியே அந்த வாரண்டை அவனுக்குக் காண்பித்ததின்பேரில் அந்த கப்பூர்சிங் கென்பவன் ப்ராஸ்செர்வர் கையிலிருந்த வாரண்டை பிடுங்கி துண்டு துண்டாய் கிழித்துப் போட்டுவிட்டு முசம்மத்பானி என்பவளை முரட்டுத்தனமாய் அழைத்துக் கொண்டுபோய் விட்டதாகவும் அந்த கிராம வாசிகளாகிய யாரும் அவனுக்கு—பேலீப்புக்கு—சாக்ஷியம் சொல்லமாட்டோமென்று சொல்லிவிட்ட படியால் அந்த பேலீப் அப்போது வீதி வழியாய்ப் போய்க்கொண்டிருந்த இரண்டு பாட்டைசாரிகளிடத்தில் சாக்ஷி கையெழுத்துப் பெற்று இந்த ரிப்போர்ட்டை அனுப்பியதாகத் தெரிவித்தான். ஆனால் இந்த இரண்டு பாட்டைசாரிகள் கூட இன்னதென்று தன்னால் சொல்ல முடியாதென்று பேலீப் சொல்லுகிறான். இந்த ரிப்போர்ட்டில் சாக்ஷி கையெழுத்து போட்டவர்கள் இன்னதென்று கண்டு பிடித்ததில் ஒருவன் இந்த விதமாய் சம்பவித்ததைப்பற்றி தனக்குயாதொன்றும் தெரியாதென்று சொல்லுகிறான். இன்னொருவன் அகப்படவே யில்லை. மூன்றுவது சாக்ஷியாகிய 'புன்னு' என்பவன் தனக்கொன்றும் தெரியாதென்றும், தான் தன்னுடைய விரல் முத்திரையை (Thumb impression) வைத்தவனல்லவென்றும் சொல்லுகிறான்.

அதன்பேரில் அம்பாலா டிஸ்ட்ரிக்ட் முதல்கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் குற்றவாளிகளை குற்றம் செய்தவர்களல்லவென்று கண்டு விடுதலை செய்துவிட்டு 9 குற்றவாளிகளாகிய ஒவ்வொருவருக்கும் ரூபாய் 5 ஆகமொத்தம் ரூபாய் 45 ப்ராசஸ் செர்வருக்கு பிரதி பலனாய் (Compensation) கொடுக்க 1909ம்ஹ ஜூலைமீ 5உ கிரிமினல் புரோசிஜர்கோடு 250-வது பிரிவின்படி உத்தரவு செய்தார்.

மாஜிஸ்ட்ரேட் அவர்கள் ப்ராசெஸ் செர்வர் எதிரிகளுக்குக் காம்பென்சேஷன் கொடுக்கவேண்டு மென்று செய்த உத்தரவின்பேரில் ரிவிஷன் செய்யும்படிக்கு கேசு அனுப்பப்பட்டது.

இதற்காதாரமாய் எடுத்துக்கூறிய கேசுகள் இ. லா. ரி. 26 அ 133; அ. வீ. கோ. (1903) 216; இ. லா. ரி. 20 கல் 481.

உத்தரவு:—மேற்கூறிய ஆதாரங்களைக் கொண்டு மாஜிஸ்ட்ரேட் பேலீப்பை எதிரிகளுக்கு காம்பென்சேஷன்—பிரதிபலன்—கொடுக்கும்படிக்கு செய்த உத்தரவை ரத்து செய்து விட்டார்.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பாகம் 382.

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS. ORDINARY ORIGINAL CIVIL JURISDICTION.
மதராஸ் ஹைகோர்ட்டு.

சிவில் சூட் நெ. 156 of 1909.

ஜட்ஜு:—மி-ர். ஜ. வாலிஸ்......முன்பாக.

பீஜான்பீ வகையரா ... ... வாதிகள்.

Vs

பதீமாபீ வகையரா ... ... பிரதிவாதிகள்.

மகம்மத்தியலா (Mahammadan Law)-காலமாய் விட்டவன் எழுதிவைத்த உயில் சாசனம்—காலமாய் விட்டவன் சாகப் பிழைக்கப் படுக்கையிலிருக்கையில் அவனுடைய வார்சுகள் சம்மதித்தல்-தானம்-ஸ்வாதீனம்-புருஷன் அவனுடைய பெண்சாதிக்குதானம் கொடுத்தல்-காண்ட்ராக்ட் ஆக்ட் (9 of 1872) 253-வது பிரிவு—பாகமாய் வியாபாரம் செய்யசெய்துக்கொண்ட ஏற்பாடுகள்.

உயிலெழுதி வைத்த துலுக்கர் ஒருவர் அவர் இறந்து போனதற்கு முன்னமேயே தான் எழுதிய உயில் தன்க்குப் பின் தனக்கு வார்சுகளாய் வரப்பட்ட வார்சுகளை சம்மதம் தாரும் என்று கேட்க அதற்கு அவர்கள் சம்மதித்தார்களென்பதினுலேயே அந்த உயில் சட்டப்படி செல்லத்தக்கின உயிலென்று சொல்வதற்கு நியாயமில்லை.

ஓர் துலுக்கர் குடும்பத்தில் தகப்பன் காயலாவாய் சாகப் பிழைக்கப் படுக்கையிலிருக்கையில் தன்னுடைய வார்சுகளைச் சம்மதிக்கும்படி செய்து பெற்ற சம்மதி-வார்சுகள் சுதாவாய் அவர்களே ஒப்பிக் கொடுத்தசம்மதமாகுமா, ஆகாதா?

மகம்மத்திய சட்டத்தின்படி (Under Muhammadan Law) ஒருவன் யாதேனும் ஓர் சொத்தைத் தானம் கொடுத்தால் அந்த சொத்தை எவனுக்குத் தானம் செய்யப்பட்டதோ அவன் வசம் தானப்பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட பொழுதே ஒப்புவித்து விடவேண்டியது அவசியம். ஆனால் புருஷன் தன்னுடைய பெண்சாதிக்குத் தானம் கொடுத்தால் மேற்சொன்னபடி உடனே அவள் வசம் செய்யவேண்டுமென்பது அவசியமல்ல இதை ஓர் விலக்காய் கூறப்பட்டிருக்கின்றது,

ஓர் கூட்டு வியாபாரஞ் செய்பவர்கள் அவர்களுடைய பாகஸ்தர்களுக்குள் எவ்விதமான ஏற்பாடுகள் செய்துக்கொண்டார்களென்று அறிவதற்கு ருஜுவில்லாவிடில் அந்த கூட்டு வியாபாரத்தில் சேர்ந்தவர்கள் எல்லோரும் லாபத்தைச் சமபாகமாய் பாகித்துக் கொண்டு, நஷ்டமிருந்தால் அந்த நஷ்டத்தை அந்த பாகஸ்தர்கள் ஒவ்வொருவரும் சமபாகமாய் அடையவேண்டியது.

மி-ர். இபராஹீம் சாயபு...வாதிகளின் வக்கீல்.

மி-ர். V. ரகுநாத சாஸ்திரி....1 முதல் 3பிரதிவாதிகளின் வக்கீல்

மி-ர். V. V. ஸ்ரீனிவாச ஐயங்கார்...4ம் பிரதிவாதியின் வக்கீல்

மி-ர். டேவிட்டும் ப்ரைட்வெல்...4-வது பிரதிவாதியின் லாயர்கள்

மி-ர். V. S. கோவிந்தாச்சாரியார்...6-வது பிரதிவாதியின் வக்கீல்

தீர்மானம்.

கேசின் விபரம்:—இறந்து போன மொஹிதீன் சாயபு என்பவரின் குமாரத்திகளில் இருவர் அவர்களுடைய தகப்பன் எழுதி வைத்ததாகச் சொல்லப்படும் உயில் சாசனம் மகம்மத்திய சட்டப்படி (Under Mahammadan Law) செலவாணியுள்ளதல்லவென்றும், சட்டத்திற்கு விரோதமாய் செய்யப்பட்டதென்றும், அதை மகம்மதிய சட்டப்படி ஊர்ஜிதப்படுத்தலாகாதென்றும், அது ரத்தாகக்கூடியதென்றும், சொல்லி டிக்லேர் செய்து இறந்து போன மொகிதீன் சாயபுவின் சொத்துயாவற்றையும் பாகப்பிறிவினை செய்து கொடுக்கும்படிக்கு இந்த தாவா கொண்டு வந்தார்கள்.

இந்த தாவாவில் முதல் இஷ்யூ என்னவென்றால்:-“காலம் சென்றமொகிதீன் சாயபுசாகப்பிழைக்க காயலாவாய் மரணப் படுக்கையிலிருக்கையில் வாதிகளும் காலம் சென்றவரின் இதர வார்சுகளும் அவர் அந்த உயில் சாசனத்தில் எழுதி வைத்த” ஏற்பாடுகளுக் கெல்லாம் சம்மதித்தவர்கள்தானா? அப்படிசம்மதித்தவர்களா யிருந்தவர்கள் அவ்விதமானசம்மதத்தின்பேரில் எழுதிவைத்த உயில் சாசனம் மகம்மத்திய சட்டப்படி செலவாணியாகக் கூடியதுதானா? காலம் சென்ற மொகிதீன் சாயபு இறந்து போவதற்கு முன் அவர் குடும்பத்திலுள்ள எல்லோரையும் ஒன்றாய்க் கூப்பிட்டு அவர் எழுதிய உயிலுக்கு சம்மதம்தானா வென்று அவர்களைக் கேட்டு அவர்களுடைய சம்மதத்தைப் பெற்றுக் கொண்டு செய்த உயிலா என்பதைப் பற்றிய சாக்ஷியமெல்லாம் பேதிக்கிறது. அந்த குடும்பத்திலுள்ள இருவர் அதாவது, வாதிகள் மாத்திரம் அவர்களுடைய புருஷன்மார்கள் மூலமாய் இறந்துபோனவர் குடும்பத்திலுள்ளவர்களை ஒன்றாய்க் கூப்பிட்டு கேட்டதுமில்லை, அவர்களிடத்திலிருந்து அப்படிப்பட்ட சம்மதம் பெற்றதுமில்லை யென்று வாதித்தார்கள். ஆனால், குடும்பத்திலுள்ள மற்றவர்களெல்லோரும் அப்படிப்பட்ட கூட்டம் கூடினது வாஸ்தவம்தானென்றும், அப்படிப்பட்ட சம்மதம் பெற்றதும் வாஸ்தவம் தானென்றும் சொல்லுகிறார்கள். அவர்கள் மிக்க படித்தவர்க ளல்ல. அவர்களுடைய சாக்ஷியத்தில் பேதங்க ளென்னமோ இருக்கின்றன. கனம் பொருந்திய ஜட்ஜு அவர்கள் மொத்தத்தில் காலம் சென்ற மொகிதீன் சாயபு இறந்துபோவதற்கு முன் அவருடைய குடும்பத்திலுள்ளவர்களை யெல்லாம் ஒரு கூட்டமாய்க் கூட்டி அப்படிப்பட்ட விசாரணை செய்தது வாஸ்தவம்தா னென்பதை ரூபிப்பதற்காகச் சொல்லப்பட்ட சாக்ஷியத்தை ஒப்புக்கொண்டு; ஆனால் இப்படி ருஜுவானது அவர்களுடைய அக்குபாத்தியத்தைக்கே விரோத மென்று அபிப்பிராயம் கொண்டார். குடும்பத்திலுள்ள தகப்பன் இறந்து போவற்கு முன் அவருடைய பெண்சாதி பிள்ளைகளை இன்னும் மற்றுமுண்டான மக்களை யெல்லாம் ஒன்றாய்க் கூப்பிட்டு அப்படி கேட்டிருப்பாரென்றும், அதற்கு அவர்களெல்லோரும் அந்த உயிலில் கண்ட ஷராக்களுக்கெல்லாம் சம்மதித்திருப்பார்க ளென்றும் சந்தேக மின்றி சொல்லக்கூடும்.

அது அப்படிக்கிருந்திடினும் அந்த ஒரு சாக்ஷியத்தினாலேயே முதல் இஷ்யூ முழுமைக்கும் பைசலாகவில்லை யென்று வாதிகள் எதிர்வாதம் கூறி உயிலுக்கு அப்படிப்பட்ட சம்மதம் பெற்றது வாஸ்தவமானதாயிருந்திடினும் அந்த சம்மதம் மகம்மத்திய சட்டப்படிக்குச் செல்லாதென்றும் அதை ஊர்ஜிதம் செய்யலாகாதென்றும் வாதித்தார்கள்.

4-ம் பிரதிவாதி இந்த உயிலின் கீழ் பலனடைவோர்களில் முதன்மையானவர். அவர் மி-ர். அமீர் அலிர் (Mr. Amir Ali) என்பவரால் செய்யப் பட்ட மகம்மத்தியலா புஸ்தகம் 2 வது பிரதி 1-வது வால்யம் 86-வது பக்கத்தைக் காண்பித்து அதில் பின்வருமாறு சொல்லி யிருப்பதைத் தன்னுடைய வாதத்திற்கு ஆதாரமாய்க் கூறினார் அதென்ன வென்றால்:—

“உயில் எழுதி வைத்தவா காயலாவாயிருக்கையில் தனக்குப் பிற்காலத்தில் தன்னுடைய சொத்துக்களுக்கு வார்சா யிருப்பவர்களை ஒன்றாய்க் கூப்பிட்டு, அந்த வார்சுகள் அப்பொழுது அவர்கள் தங்களுக்குத் தாங்களே வேணுமென்று கொடுத்த சம்மதத்தைப் பெறுவது போதுமானதுதானென்றும் சொல்லலாம்; ஏனென்றால் அவருடைய சொத்துக்கு அவருக்குப் பின்னுள்ள வார்சு அப்பொழுதே சுதந்தரவாளியாய் விடுகிறான். அது அப்படிக்கிருந்திடினும் இவ்விதமான சம்மதத்தைப் பெற்று எழுதப்படும் உயில் சட்டப்படி செலாவாணி யுள்ளதுதானென்று அதே மகம்மத்திய சட்டத்தில் எங்கேயாவது இந்த விதிக்கு ஓர் விலக்காய் கூறப்பட்டிருக்கிறதா வென்று கவனிக்கு மளவில் அப்படிப்பட்ட விலக்கு இருப்பதாக தெரிய வில்லை. இவ்விதமாய் எழுதிவைக்கப்படும் உயில் செலவாணியுள்ளது தானென்கிற இப்படிப்பட்ட மிக முக்கியமான விஷயத்தை மகம்மத்திய சமூகத்தார் எல்லோரும்ஒப்புக்கொண்டு நடக்கும் மகம்மதிய லா முதலான அவர்களுடைய சாஸ்திரங்களிலும், கிரந்தங்களிலும் சொல்லாமலிருப்பதைக் கவனிக்க வேண்டியது. இந்த பாயின்டை ஸ்திரப் படுத்துவதற்காக கோர்ட்டார் முன் எடுத்து காண்பிக்கப்பட்ட கேசுகள் C. V. A. குட்டிடம்மா vs-V. P. பீயாத்தம்மா 2 ஹை. கோ. (1865) 350; ராணி ஹஜுருன்னிசா-vs முசம்மத் ரௌஷன்ஜஹான் 3 இ; அ. 291; 2 கல் 184; 26 வீ ரி. 36-vs-இ. லா. ரி. 30 கல். 683; வாமிட சாணம் vs-ஜாவ்ரிகாணம் இ. லா.ரி. 30அ 153; அ. வீ. நோ (1908) 55; 5 அ. லா. ஜ. 169 இந்த கேசுகளில் இது விஷயத்தைப் பற்றி ஒன்றும் சொல்ல வில்லை. இதுகளு மன்றி, இன்னும் மஹம்மத் அப்துர் ரஹீமான் என்பவரால் துலுக்கருக்கென்று ஏற்படுத்தப்பட்ட மகம்மத்திய கல்விசாலைகளில் போதித்து வந்த பிரசங்கங்கள் என்று சொல்லப்படும கிரந்தத்தில் 472-வது பக்கத்தையும், உல்சன்மேலி என்பவர்களால் செய்யப்பட்ட மகம்மத்திய சட்டத்தின் சங்கிரகங்களின் 625-வது பக்கத்தையும் எடுத்துக் காண்பிக்கப்பட்டன.) மேற்கண்ட எந்த கிரந்தத்திலாவது இந்தவிதியை மஞ்சூர் செய்து எழுதப்படவில்லைஆகையால் கனம்பொருந்தியஜட்ஜ அவர்கள் மிர். அமீர் அலி ஒருவர் மாத்திரம் சொல்லி யிருப்பதைத் ஒப்புக்கொள்ளக் கூடாமை யென்று அதிவினயத்துடன் கூறி உயிலெழுதி வைத்த மகம்மதியன் ஒருவன் அவன் காயலாவாயிருக்கும்பொழுதே வார்சுகள் சம்மதம் பெற்று உயில் செய்தானென்பது ஒன்றினாலேயே அந்த உயில் சட்டப்படி செலவாணியுள்ளதென்று சொல்லக்கூடுமென்று தீர்மானிததார். இதன்றியும் மி-ர். அமீர் அலி என்பவர் அப்படி தகப்பன் பெறும் சம்மதம் வார்சுகள் தங்களுக்குத் தாங்களே வேணுமென்று பெற்ற சம்மதம்- ‘Voluntary assent’ என்று சொல்லி யிருக்கிறார். தகப்பன் சாகப் பிழைக்க மரணப்படுகையில் காயலாவாயிருக்கையில் தன்னுடைய குடும்பத்தாரெல்லோரையும் ஒன்றாய்ச் சேர்த்து அவர்களிடத்திலிருந்து பெற்ற சம்மதம் வார்சுகள் வேணுமென்று கொடுக்கப்பட்ட சம்மதம் ‘Voluntary assent’ என்று மகம்மத்திய சட்டப்படிக்குச் சொல்லத் தகுமா, தகாதா என்பதைப்பற்றிக் கவனிக்கவேண்டிய நிமித்த மில்லை. ஆகையால், கோர்ட்டார் இந்த முதல் இஷ்யூவைப் பற்றிப் பின்வருமாறு தீர்மானம் சொன்னார்கள். அதாவது,

“வாதிகளும் இன்னுமுள்ள மற்ற வார்சுகளும் மேற்படி உயிலில் கண்டிருக்கும் ஷராக்களுக்கு சம்மதித்தவர்கள் தானென்றும், ஆனால் அவர்கள் அப்படி சம்மதித்ததினாலேயே இந்த உயில் சாசனம் ஊர்ஜிதப்பட்டு சட்டப்படி செலவாணியுள்ளதென்று சொல்வதற்கு நியாயமில்லை, ஆகையால் காலம் சென்ற மொகிதீன் சாயபினுடைய பந்துவர்க்கத்தாருக்கும் இறந்துபோனவருடைய ஆஸ்தியில் பாகமுண்டென்று தான் முடிவாய்ச் சொல்ல வேண்டும். ஆனால் காலம் சென்ற மொகிதீன்சாயபுவின் ஆஸ்தியின் விவரங்கள் என்ன என்று கவனிக்க வேண்டியது

அவசியமாயிருக்கிறது.

இந்த தாவாவில் விவரித்திருக்கும் சொத்துகளைப் பற்றிக் கவனிப்போம்:—

பிரதமத்தில் ஆபரணங்களைக் குறித்துக் கவனிக்கு மளவில் வாதிகளின் சாக்ஷிகள் சொன்னதின்படிக்கு இறந்துபோனவர் அவருடைய சொந்தமான கைகெடியாரம் கொலுசின் கீழ் சில சொத்துகளை வைத்திருந்ததாக ருஜுவாகின்றது. ஆனால் அதை 4-ம் பிரதிவாதியும் அவன் தரப்பு சாக்ஷிகளும் மறுதளித்து அது பொய்யென்று வாதிக்கிறார்கள். வாதிகளின் சாக்ஷிகளை நம்பாமல் இறந்து போனவருக்கு மேலே சொல்லிய கை கெடியாரமும் கொலுசும் தவிர வேறே யாதொரு ஆபரணமும் சொந்தமல்லவென்று கண்டு 4-ம் பிரதிவாதியின் கையிலிருக்கும் கை கெடியாரமும் கொலுசும் தான் காலஞ் சென்றவருக்குச் சொந்தமான ஆபரணங்களென்று தீர்மானிக்கப்பட்டது

பிறகு தாவாவில் சொல்லியிருக்கும் மதராஸ் அங்கப்பநாய்க்கன் தெருவு, 223-வது நெம்பர் வீட்டைப்பற்றி கவனிக்குமளவில் இந்த வீட்டை வித்துவிட்டபோது அதை காலம் சென்ற மொஹிதீன் சாயபு 1903ம்௵த்தில் ஒரு ஷேக் என்பவரின்பேரில் நாமகார்த்தமாய் விலைக்கு வாங்கி பிறகு, மேற்படி மொஹிதீன் சாயபு மேற்கண்ட வீட்டை அவருடைய பெண்சாதி பேருக்கு அதைக் கிரயம் செய்துக் கொண்டார். இவ்விதமாய் பெண்சாதியின் பேருக்கு கிரயம் செய்துக்கொண்டு சில வருஷங்களான பின் பெண்சாதி இந்த வீட்டை 4-ம் பிரதிவாதிக்கு வித்துவிட்டாள். இறந்துபோனவரும் அவருடைய குடும்பத்தார்க ளெல்லோரும் இப்படிக் கிரயமான பின்பு கூட அதே கிரகத்தில் தான் ஷை மொகிதீன் சாயபு என்பவர் காலமாகும் வரையிலும் வாசம் செய்துக்கொண்டு வந்தார்கள். மேலும் இந்த வீட்டுக்காக சர்க்காருக்குக் கட்டவேண்டிய வறி இறைகள் யாவத்தும் இன்னும் ஷை வீட்டிற்குச் செய்ய வேண்டிய ரெப்பேர் முதலான மராமத்துகளும் ஷை மொஹிதீன் சாயபே தான் பார்த்துவந்தார். புருஷன் வீட்டைக் காலிசெய்து ஒப்பியாமல் பெண்சாதி பேருக்குச் செய்த இந்த தானம். மகம்மதிய சட்டப்படி (Under Mahomedan Law) ச் செலாவணியுள்ளதல்லவென்று வாதிக்கப்பட்டது. இதற்கு மறு உத்தர மென்னவென்றால் புருஷர்கள் அவர்களுடைய பெண்சாதிகள் பேருக்குச் செய்யும் தானம் இந்த மகம்மத்திய சட்டத்தில் சொல்லி யிருக்கும் விதிக்குச் சம்மந்தப்பட்டதல்ல; இப்படிப்பட்ட தானங்கள் மாத்திரம் அந்த விதிக்கு ஓர் விலக்கென்று சொல்லப்பட் டிருக்கிறது. இந்த மதராஸ் ஹைகோர்ட்டில் அநேக ஆண்டுகளுக்கு முன் கொண்டு வரப்பட்ட கேசில், அதாவது, H. H. அஜீஜுன்னிசாபேகம் vs கர்னாடிக் வம்சாஸ்தாருக்கு ரிசீவராயிருந்த கிளிமேண்ட்டால்டோ எஸ்கொயர் 6 ம. ஹை. கோ. ரி. 455. புருஷன் பெண்சாதி பேருக்குச் செய்யும் தானமாகிய சொத்தை புருஷனுடைய கடன்காரர்கள் அல்லது அந்த சொத்தை பின்னிட்டு ரொக்கம் செலுத்திக் கிரயம் பெருகிறவர்கள் இவர்கள் எல்லோருக்கும் விரோதமாகவே அந்த சொத்தைத் தானமாய்ப் பெற்ற அவருடைய பெண்சாதியே அனுபவித்துச் சுதந்தரம் பாராட்ட நியாய முண்டென்று தீர்மானிக்கப்பட்டது. பாவாசேட் vs மகமத் இ. லா. ரி. 19 ம 343 என்னும் இன்னொரு கேசில்கூட இம்மாதிரி யாகவே தான் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த கேசில் சம்பவித்திருக்கும் விஷயங்களை நோக்கினால் மகம்மத்திய சட்டத்தில் கூறியிருக்கும் விதிக்கு இணங்கி யிருப்பதாகவே தெரிய வருகிறது. ஆகையால் தாவாவில் சொல்லியிருக்கப்பட்ட தானம் சட்டப்படி செலாவணியுள்ளது தானென்றும் தாவா வீடு காலம்சென்ற மொஹிதீன் சாயபுக்குச் சொந்தமான சொத்துகளில் சேர்ந்ததல்லவென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த கேசில் முக்கியமாய் கவனிக்க வேண்டியவைகளில் இன்னொரு அம்சம் யாதெனில் இறந்துபோன மொஹிதீன் சாயபு என்பவர் அவர் காலமாவதற்கு முன் ஜீவித்திருக்கும் போதே அவருடைய குமாரனாகிய 4-ம் பிரதிவாதியைத் தான் செய்துக்கொண்டு வந்த வியாபாரத்தில் ஓர் பாகஸ்தனாய்ச் சேர்த்துக்கொண்டு வந்தவர் தானா? அல்லது அவர் செய்துக்கொண்டிருந்த வியாபாரத்தில் 4-ம் பிரதிவாதியும் ஒரு பாகஸ்தன் தானா அல்லவா? என்பது.

அப்படி அவருடைய குமாரனாகிய 4-ம் பிரதிவாதியும் வியாபாரத்தில்அவருடைய பாகஸ்தன்தானென்று சொல்லும் பட்சத்தில் அந்த வியாபாரத்தை ஷை மொஹிதீன் சாயபு இறந்துபோனவுடன் என்னென்ன ஏற்பாட்டுகளை ஆதாரமாய்க் கொண்டு நிறுத்தி விட்டார்களென்பதை கவனிக்கவேண்டியது அவசியம். இவர்கள் தகப்பனும் பிள்ளையும் பாகஸ்தர்களாய் தான் வியாபாரம் செய்துக்கொண்டு வந்தார்களென்பதை ருஜு செய்வதற்காக 4-ம் பிரதிவாதி 1906ம்௵ நவம்பர் மாதத்தில் தானும் தன்னுடைய தகப்பனுடன் வியாபாரத்தில் ஓர் பாகஸ்தனென்று மதராஸ் மெயில் பேபரில் பிரசுரம் செய்த விளம்பரத்தைப் பார்த்தால் 4-ம் பிரதிவாதியாகிய பிள்ளையை இறந்துபோன தகப்பன் அவருடன் ஒரு பாகஸ்தனாயிருக்கும்படி பல முறையும் கேட்டுக்கொண்டு கடசியாய் பாகஸ்தர்களானார்களென்று தெரிய வருகிறது. ஆனால் இறந்துபோன தகப்பன் அந்த விளம்பரத்தில் கையொப்பமிட்டதாக யாதொரு சாக்ஷியமும் கிடையாது. அப்படிப்பட்ட விளம்பர மிருந்ததை இறந்துபோன தகப்பனர் அறிந்தவரல்ல அவருக்கு அதைப்பற்றி ஒன்றும்தெரியாதென்று சொல்வதற்குக் கூடாமை. இது விஷயத்தைப்பற்றி 4-ம் பிரதிவாதி ருஜு செய்திருப்பதை பூராகவும் வாஸ்தவம் தானென்று நம்பிச் சொல்லவேண்டியதா யிருக்கிறது. இதன்றி இறந்துபோனவர் மதராஸ் பாங்காருக்கு எழுதியிருக்கும் சடிதத்தைப் பார்த்தால் இவர்கள் அந்த வியாபாரத்தில் ஒரு மெம்பர்களாப கையெழுத்துசெய்பவர்களாய்த்தானிருந்தார்களென்றும் 4-ம் பிரதிவாதியின் பெயர் அதில் கண்டெழுதியிருக்கிறதென்றும் தெரிய வருகிறது. 4-ம் பிரதிவாதியாகிய இன்னொரு சகோதரனுடைய பெயரும் அதில் ஒரு மெம்பராய்த் தான் கண்டெழுதி யிருந்திடினும், அவன் (3rd Defendant) அந்த வியாபாரத்தில் ஒரு பாகஸ்தனென்கிற வாதம் கூறவில்லை. இவன் இப்படி வாதிக்க யில்லையென்பது 4-ம் பிரதிவாதியின் பாகஸ்தனென்கிற வாஸ்தவமான வாதத்திற்கு கெடுதலை யாகாது. 18 மாதங்களுக்கு முன் இறந்துபோனவரால் எழுதி வைக்கப்பட்ட உயில் சாசனத்திலும் அவர் தன்னுடைய குமாரனாகிய 4-ம் பிரதிவாதியைத் தன்னுடன் சேர்ந்திருக்கும் ஒரு பாகஸ்தனென்று தான் எழுதி யிருக்கிறார். இதுவுமன்றி இறந்துபோனவரால அநேக காலத்திற்கு முன் ஏற்படுத்தப்பட்டு நெடுநாளாய் நீடித்துக கொண்டு வரும் தன்னுடைய வியாபாரம் தான் காலமானதற்குப் பின்னும் நடத்தப்பட வேண்டியதென்கிற கோரிக்கைகொண்டு அந்த வியாபாரத்தை புத்திசாலித்தனமாயும் கெட்டிக்காரத் தனமாயும் நடத்தி வருவதற்கு 4-ம் பிரதிவாதி தான் தகுந்த திறமையுள்ளவனென்று கண்டு மிக்க திருப்திகரமாய்

இறந்துபோனவர் தன்னுடைய குமாரனாகிய 4-ம் பிரதிவாதியையும் தன்னுடன் பாகஸ்தனாய் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்து வந்தாரென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. இதற்கு விரோதமாய் வாதிகள் காலம்சென்றவர் வைத்துவந்த சில கணக்கு புஸ்தகங்களை ஆஜர்படுத்தி அதிலுள்ள சில பதிவுகளின்படி பாகஸ்தர்களல்லவென்று ருஜூ செய்வதற்கு முயல்வது சரியல்ல, ஏனென்றால் இந்த கணக்கு புஸ்தகங்களின்படிக்கு பாகஸ்தர்களா அல்லவா என்பதைப்பற்றி நிஷ்கர்ஷிப்பதற்கு யாதொரு ருஜூவும் கிடையாது. இது இப்படியிருக்க 4-ம் பிரதிவாதியும் அவருடைய சகோதரரும் வியாபாரம் செய்யும் கம்பெனியிலிருந்து அப்போதைக்கப்போது பெற்றுவந்த தொகைகள் அவர்களுடைய சம்பளங்களாகவும் ஒரு இடம் மாத்திரம் 'கடனாகவும்' பதிந்தெழுதி யிருக்கின்றன. இறந்துபோனவர் ஜீவித்திருக்கும்பொழுது எப்பொழுதாவது இவ்விதமாய் இவர்கள் செய்துவந்த கூட்டு வியாபாரத்தின் வரவு செலவு கணக்குகளைப் பார்த்து லாபத்தைப் பங்கிட்டுக்கொண்டார்களென்றாவது அல்லது வியாபாரத்தில் நேரிட்ட நஷ்டத்தை அவரவர்களுடைய பாகச்சாரப்படிக்கு கொடுத்தார்களென்றாவது ருஜூ கிடையாது. ஆனால் தாவா குடும்பஸ்தர்கள் ஏக குடும்பமாய் தகப்பன்கீழ் மக்களாய் தகப்பன் சொல்லும் உத்தரவுபடிக்கு நடந்துவந்தவர்களென்பதை நன்றாய் மனதில் கவனிக்கவேண்டும். இப்படிப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த 4-ம் பிரதிவாதி அவனுடைய தகப்பன் ஜீவித்திருக்கும்பொழுது அவன் பாகஸ்தனென்கிற அவனுடைய ஹக்கைப் பாராட்டி அவனுக்கு ஓர் பாகம் கொடுக்கும்படி கேட்டவனல்லவென்று சொல்வது ஏற்கனவே வாஸ்தவமானதா யிருக்கலாமென்று சொல்வதற் கிடமுண்டல்லவா, 4-ம் பிரதிவாதி தனக்கு மாதாந்திரம் சம்பளமாக கொடுத்துவந்த ரூபாய் 20 or 30 தனக்குப் போதுமென்று திருப்தி யடைந்து நடந்து வந்தவனாக இருக்கவேண்டும். இந்த புஸ்தகம் முழுதிலும் இறந்துபோனவர் அவருடைய சொந்த கையெழுத்தினால் எழுதிவைக்கப்பட்ட புஸ்தகமானதால் அவர் தானிஷ்டப்பட்டபடி 4-ம் பிரதிவாதி பாகஸ்தனென்றும் வேறே விதமாகவும் எழுதி வந்தவராய் ஏற்படுகிறது. இவர்கள் பாகஸ்தர்களா அல்லவா என்பதைப்பற்றி இதுவரையில் விவரிக்கப்பட்ட இருதரப்பு சாக்ஷியம் யாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்குமளவில் இறந்துபோனவர் 4-ம் பிரதிவாதியை தன்னுடன் பாகஸ்தனாய் வைத்துக்கொண்டு தான் வியாபாரம் செய்து வந்தாரென்று நான் முடிவாய்ச் சொல்லவேண்டும். இறந்துபோனவர் 4-ம் பிரதிவாதியை தன்னுடன் பாகஸ்தனாய் எடுத்துக்கொண்ட போது என்னென்ன கண்டிஷன்களின்—ஏற்பாடுகளின்பேரில் எடுத்துக்கொண்டாரோ அதற்கு ருஜூ கிடையாது.

Section 253, cl. 2 of The Indian Contract Act (9 of 1872)

"All partners are entitled to share equally in the profits of the partnership business and must contribute equally towards the losses sustained by the partnership."

ஆகையால் இந்த பாயின்டை அடியிற்கண்டிருக்கும் இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்ட் (9 of 1872) 253-வது பிரிவு 2-வது கிலாசின்படி பைசல்செய்யவேண்டியது-அதாவது:—"சிலர் ஒன்றாய்ச் சேர்ந்து பாகஸ்தர்களாக வியாபாரம் செய்தால் அவர்கள் அந்த வியாபாரத்தில் உண்டாகும் லாபத்தைச் சமமாய்ப்பாகித்துக்கொண்டு அதில் நேரிடும் நஷ்டத்தைச் சமபாகமாய்க் கட்டிக்கொடுக்கப் பந்தப்பட்டவர்களாவார்கள்."

இந்த வியாபாரத்தில் 1906-ம்௵ நவம்பர்௴ முதற்கொண்டு தனக்கொரு பாகமுண்டென்று 4-ம் பிரதிவாதி சொல்வதற்கு அவனுக்கு ஹக்குண்டு. ஆனால் அவர்கள் என்னென்ன ஏற்பாடுகளின்மேல் அப்படிப்பட்ட கூட்டு வியாபாரத்தைப் பாகஸ்தர்களாய்ச் செய்து வந்தார்களென்று ஓர் கேள்வி உண்டாகுமல்லவா. இறந்து போனவர் தன் வியாபாரத்திற்கும் அந்த வியாபாரத்தைச் சேர்ந்த சரக்குகள் ஸ்டாக்கிற்கும் சொந்தக்காரரா யிருந்தார். அவர் வியாபாரத்தின் ஸ்டாக்கில் தனக்குண்டான ஹக்கு பாத்தியதையை 4-ம் பிரதிவாதிக்கு எப்போதாவது மாற்றிவிட்டதாக ருஜூ கிடையாது ஆகையால் 1906-ம்௵ நவம்பர்௴த்தில் வியாபாரத்தில் என்ன ஸ்டாக்கிருந்ததோ அதைத்தான் இறந்து போனவர் முதல் வைத்த 'ஐவேஜு' காப்பிடல் என்று சொல்லவேண்டும். 4-ம் பிரதிவாதி எப்பொழுதாவது ஷை வியாபாரத்தில் தன் சொந்தத்தில் யாதொரு பர்பத்தியம் வைத்ததாக என்னமோ ருஜூ கிடையாது.

கூட்டு வியாபாரத்தில் கணக்குகளை பார்க்கவேண்டியது அவசியம் அப்படி கணக்கெடுப்பதில் (4-ம்) பிரதிவாதி ஓர் பாகஸ்தனாய்ச் சேர்ந்த போது வியாபாரத்தில் என்ன ஐவேஜிருந்ததோ அதை முக்கியமாய் கண்டறிய வேண்டியது அவசியமென்று கண்டு அவசியமாய் வேண்டிய கணக்குகளைப் பார்ப்பதற்காக கேசை சேம்பருக்குத் தெரிவிக்கப்பட்டது. இறந்து போனவரின் பெண்ஜாதியாகிய 'காதிஜாபீபீ' என்பவள் ரூபாய் 5000 வரைக்கும் கவர்ன்மெண்ட் பத்திரத்திங்களின்பேரில் பெற்றிருக்கிறதாகவும் இன்னும் இந்த எஸ்டேட்டைச் சேர்ந்த சில சர்க்கார் பத்திரங்களை பற்றியும் சில தகரார்கள் உண்டாயிற்று அந்தப் பத்திரங்களெல்லாம் அவளுக்குச் சேரவேண்டிய பாகத்திற்காக கொடுக்கப்பட்டது. இன்னும் 4-ம் பிரதிவாதி அவருடைய தகப்பனார் இறந்துபோன பிறகு ரூபாய் 2000 வரையிலும் கவர்ன்மெண்ட் பத்திரங்களின் பேரில் வசூல் செய்திருப்பதாக சொல்லப்படுகிறது. இது வாஸ்தவம்தானென்று 4-ம் பிரதிவாதியும் ஒப்புக்கொள்ளுகிறார் அந்தப் பத்திரங்களெல்லாம் அவருடைய சொந்த பேரிலேதான் இருந்தனவென்று ஸ்பஷ்டமாய் புலப்படுகிறது. இந்த பத்திரங்கலெல்லாம் அவருடைய சொந்த பேரிலேதான் இருந்ததென்பதற்கும் அவர்கள் எஸ்டேட்டைச் சேர்ந்தவைகளல்லவென்று இந்தப் பத்திரங்களெல்லாம் அவர்பேரிலேயே இருந்தமையால் அவைகளெல்லாம் அவருடைய சொந்த சொத்தென்று சொல்லவேண்டியதே யல்லாமல் அவைகள் இறந்து போனவருடைய எஸ்டேட்டைச் சேர்ந்ததல்லவென்பதற்குப் போதுமான சாக்ஷியமிருக்கிறது.

வியாபாரத்தில் காலம் சென்றவரின் பாகத்திற்குச் சேரவேண்டிய லாபம் இவ்வளவென நிஷ்கரிஷை செய்து அதை வசூல் செய்ய வேண்டியதாயிருப்பதால் கூட்டு வியாபாரத்தைக் கலைத்து நிறுத்திவிட்டு அந்த வியாபாரத்தின் கணக்குகளைப் பரிசோதிக்க வேண்டியது அவசியம். இறந்து போனவருடைய எஸ்டேட்டை எல்லோருக்கும் பாகித்துக் கொடுக்க வேண்டி யிருப்பதால் இந்த கேசை சேம்பருக்குத் தெரிவிக்கப் பட்டது. கட்சிதாரர்களின் சிலவுகள் எஸ்டேட்டிலிருந்து தான் கொடுக்கப்பட வேண்டியது.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பாகம் 431.

DIEU ET MON DROIT

இந்திய சட்ட கெஜெட்.

உயர்தர மாதாந்திர சஞ்சிகை.

பத்திராதிபர் :—கமிட்டியார்.

பிரசுரிக்கிறவர்கள் :—ந. ராதாகிருஷ்ண அண்டு கோ.

...யம் 5.] சென்னப்பட்டணம் 1911௵ பிப்ரவரி ௴ [பாகம்

அடக்கம்.

		பக்கம்.
1.	மதராஸ் ஐகோர்ட் கனம் பொருந்தியஜட்ஜாகிய மி-ஸ். சி. சங்கர நாயர் அவர்கள் உருவப்படம்.	
2.	ஒரு ஹிந்து குடும்பமும் விதவையான மருமகளும்	147
3.	முக்கியமான தீர்ப்புகளும் முதலானவை...	153
4.	1902-ம் வருஷத்துச் சென்னபட்டணம் கோர்ட்ஆவ் வார்ட்ஸ் ஆக்டை திருத்துவதற்கான ஆக்ட் (1911-ம்௵த்து மதராஸ் ஆக்டு 1)	157
5.	விவசாய குறிப்புகள்	158
6.	இந்தியன் லா ரிப்போர்ட்டுகேசுகள்	159
7.	இந்து தேசத்து ரிஜிஸ்ட்ரேஷனைபற்றிய விளம்பரங்கள்	172

சந்தாவிபரம்.

வருஷ சந்தா ...	ரூபா	4-14-0	மூன்று மாதத்திற்கு	ரூபா	1-4-0
ஆறுமாதத்திய சந்தா	,,	2-8-0	(தபால் சார்ஜி கிடையாது		

சந்தா தொகையை அட்வான்சாகவே கட்டவேண்டியது அவசியம்.

நிரந்தரமான

கமிஷன்!

இந்த கெஜெட்டிற்கு 20 கையொப்பம்சேர்த்தனுப்புவோர்க்கு முதலில் பத்ன ரூபாய் மணியார்டர் செய்வதோடு போகாமல், அவர்களால் சேர்க்கப்பட்ட சந்தாதாரர்கள் இந்த கெஜெட்டை எத்தனை வருடம் ஆதரித்து வருகிறார்களோ அத்தனை வருடங்களுக்கும் வருடத்திற்கொருமுறை அவர்க்குச்சேர வேண்டிய கமிஷனை அனுப்பிக்கொண்டிருப்போம்:

இந்த இலாபகரமான ஏற்பாட்டைபோல் மற்றயாரும் செய்து கொடுக்கவில்லை. ஆதலால் வெளிநாட்டிலுள்ள ஒவ்வொரு நண்பர்களும் சட்ட ஞானம் நிறைந்த இந்த கெஜெட் விஷயமாக பெரு முயற்ச்சி செய்து சநதாதாரர்களைச் சேர்ப்பார்களானல் பென்ஷனை போல் வருடந்தோறும் பொருள் வருவாயடையலாம்.

கஷ்டப்பட்டு 100-சந்தாதாரர்களை சேர்ப்பாரானல் மாதத்துக்கு 50 ரூபாய் சம்பாத்தியமுடையவர்களாவார்.

இந்திய சட்ட கெஜெட் விளம்பரம்.

இந்திய சட்ட கெஜெட்டிற்கு 20 கையொப்பங்கள் சேர்த்துக்டுக்கும் நண்பர்களுக்கும் கனதனவான்களுக்கும் ரூ. 10- மணியார்டர் து அனுப்பத் தயாராயிருக்கின்றேம். சேர்த்துக்கொடுக்க இஷ்டமுளவர்கள் நமக்கு எழுதிக்கொண்டால் அவர்களுக்குக் கையொப்ப போவ கார்ட்டுகள் அனுப்பப்படும். அவைகளில் சந்தாதாரர்களின் கையெழுத் வாங்கித் தபால் ஸடாம்பு ஒட்டி நமக்கு அனுப்பிவிடலாம்.

ந. ராதாகிருஷ்ண கம்பெனியார், மானேஜர்.

இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ்,

49, ஆச்சாரப்பன் வீதி, ஜியார்ஜ் டவு

கிருப நேயர்கட்கறிக்கை.

கும்பகோணம் டி. கிருஷ்ண மூர்த்தி ஐயர்:—மதராஸ் ஹைகோர்ட் அசல் வியாஜ்ஜியம் 1910-ம்௵ 359-நெ S. சுப்பிரமணிய ஐயர் வாதி vs C. S. கிருஷ்ணசுவாமி ஐயரும்.-மற்றவரும்வியாபார கூட்டு பிரிவினையைப் பற்றி இந்த கேசு நிகழ்ந்தவருஷம்பிப்ரவரி௴ 14௳ மி-ஸ். ஜஸ்டிஸ் வாலிஸ்முன்பாக விசாரணைக்கு வந்தது ஷை வாதியினுடைய மனு பிரகாரம் இந்த கேஸ் விசாரணை முடிவுக்கு வருகிறவரையில் பிரதிவாதிகளை ரிசீவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதன் நிஷை கூட்டு கணக்குகளையும்; ஷை ரிசீவர் கணக்குகளையும் அப்போதைக்கப்போது பார்வையிட வாதியாகிய சுப்பிரமணிய ஐயருக்கு கோர்ட்டார் உத்திரவளித்திருக்கிறார்.

இந்தக்கேசில் வாதி தரப்பு வக்கீல்கள்,

மி-ஸ். C. P. ராமசுவாமி ஐயரும்

மி-ஸ். P. சுப்பிரமணிய முதலியார் அவர்களும்

பிரதிவாதி தரப்பு வக்கீல்.

மி-ஸ். G. கிருஷ்ணசுவாமி ஐயர்.

குலாம்மோகிதீன் சாயபு:—தாங்கள் இன்னரென்று தெரியவில்லை. ஆகையால் தங்களுடைய கடிதம் பிரசுரிக்கப்படவில்லை.

V. அப்பாவு பிள்ளை:—அநேக வந்தனம் கவனிக்கப்படும்.

S, வீரமுத்து நாடார்.—இந்திய சட்டம் கொளும்புக்குப் பொருந்தாது. ஆகையால் அவ்விடத்தியலாயரிடம் யோசிக்கவும்

மதுரை நீலகண்ட ஐயர்:—தங்களுடையகேசப்போல் ஒன்று எம்முடைய இந்தியா சட்ட கெஜட்டில் 1910 ௵ வால்யம் 5 பாகம் 2 பக்கம் 57-ல் பிரசுரித்திருக்கிறது தாங்கள் பார்க்க்வும்.

கல்கண்மேளிகை சோமசுந்திர செட்டி:—சிலோனில் ஊர்ஜிதமாயிருக்கும் சட்டத்தை அனுசரித்து நீங்கள் ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்.

———:(0):———

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
20 APR 1911
MADRAS.

THE HON'BLE JUSTICE C. SANKARA NAYAR, B.A., B.L.,
High Court, Madras.
ஹானரபில் ஜஸ்டிஸ் சி. சங்கர நாயர், பி.ஏ., பி.எல்.,
ஜட்ஜ் ஹைகோர்ட், மதராஸ்.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் V.] சென்னப்பட்டணம், 1911 ம்ஸு பிப்ரவரிமீ [பாகம் 5

☞ NOTICE:—Contributions other than original are neither invited nor required. All literary contributions and books for Review should be addressed to Mr. N. Rathakrishna Naidu, P. A., Indian Law Gazette, 49, Acharappan Street, Madras.

WIDOWED DAUGHTER-IN-LAW IN A HINDU FAMILY.

ஒரு ஹிந்து குடும்பமும் விதவையான மறுமகளும்.

—:o:—

ஒரு ஹிந்து குடும்பத்தில் புருஷன் இறந்துபோய் விதவையான மருமகளுக்குள்ள ஜீவனாம்ச பாத்தியம் சம்பந்தப்பட்ட வரையில் அவளுடைய நிலைமை இன்னதென்பதையும் கூடுமானால் அது விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் தீர்மானங்கள் திருப்திகரமாய் இல்லையென்பதையும் சுருக்கமாய் இந்த வியாசத்தில் விவரிக்க உத்தேசிக்கின்றோம். ஹிந்துக்களுக்குள் பாலிய விவாகங்கள் நடந்துவரும் வழக்கத்தைக்கொண்டு யோசிக்கும்பொழுது, ஒரு சிறு பெண் புருஷனுடைய ஆதரணையை இழந்து போகிறதையும் அவளுடைய கலியாணத்துக்குப் பிறகு அவளுடைய தகப்பன் சொத்தில் அவளுக்கு ஜீவனாம்ச பாத்தியமில்லாமல் போய் விடுவதையும் காண்பது அருமையாக இருக்கவில்லை. புருஷன் எவ்வளவு பாலியத்தில் இறந்து போனாலும் அவன் ஏதேனும் சொந்த சொத்தையோ அல்லது அவன் ஒரு அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவனாயிருந்து பிதுரார்ஜித சொத்தில் யாதாமொரு பாத்தியத்தையோ விட்டுவிட்டு இறந்து போனால் ஒரு சங்கடமும் இல்லை. ஏனென்றால் அந்த கேசில் அந்த விதவை தன்னுடைய ஜீவனாம்சத்தைப் பெற யாதொரு கஷ்டமுமில்லை. புருஷன் யாதொரு சொத்தையும் வைக்காமலும், சம்பாதிக்க ஆரம்பிக்கும் முன்னேயும் பிதுரார்ஜித சொத்தே அவனுக்கு இல்லாமலும் இறந்து போகின்ற கேசுகள் சொற்பமாயில்லை. அப்படிப்பட்ட கேசுகளில் அந்தப் புருஷனுடைய விதவைக்கு ஜீவனாம்சத்திற்கு ஏதேனும் ஆதாரம் இருக்க வேண்டியது அவஸ்யம். அதன்றியும் தன் புருஷனுக்குப் பிற்காலம் ஜீவித்திருக்கும் யாதாமொரு பந்துவின் பேரில் தொடரலாமா என்பதையும் அப்படித் தொடரக்கூடுமானால் அவர்களில் யார்பேரில் எவ்வளவு தொகைவரையில் தன்னுடைய ஜீவனாம்சத்திற்காகத் தொடரலாமென்பதையும் அறிவது அவளுக்கு உயிர்நிலைபோல் அவ்வளவு முக்கியமான விஷயம். வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு ஹைகோர்ட்டார்கள் இது விஷயமாய் என்ன அபிப்பிராயத்தைக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பதை முதல் முதல் சொல்லுவது சவுகர்யமாயிருக்கும். இரண்டாவது, அது சம்பந்தமாயிருக்கும் சில வசனங்களை விவகரித்து, மூன்றாவது ஏற்பட்டிருக்கும் தீர்மானங்கள் எவ்வளவு வரையில் ஹிந்து லாவினுடைய தாத்பரியத்துக்கு ஒத்தவையாயிருக்கின்றவென்பதை எடுத்துக் காட்டி, கடைசியாக அப்படிப்பட்ட கேசுகளில் விதவைகளின் நிலைமையைப் பற்றி எவ்வாறு எந்த விஷயங்களில் புனராலோசனை செய்வது உசிதம் என்பதையும் கூறுவோம்.

முதல் முதல் அலகாபாத் ஹைகோர்ட்டார் அவ

ர்களுடைய தீர்மானங்க[illegible] யோஇப்போ 1875-ம்ஹுத்தில் N. W. P. H. C. R. Page. 261 முகம்மதலால் திருவ[illegible] V. [illegible] ல் கண்ட புல் பெஞ்சு கேஸில் முந்தி யிறந்துபோன ஒரு குமாரனுடைய விதவை [illegible] குடும்பத்தின் பிதுரார்ஜித சொத்திலிருந்து ஆதரிக்கப்பட அவளுக்கிருக்கும் பாத்தியத்தை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. [illegible] தன்னுடைய [illegible] [illegible] பேரிலும் வியாஜ்ஜியம் கொடுத்தாள். [illegible] அந்தக் குடும்பத்தின் பொதுவான பிதுரார்ஜிதசொத்தென்றும் அந்த விதவையின் புருஷன் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவனதலினால் ஓர் பாகத்திற்குப் பாத்தியஸ்தன்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால் 1876 ம்ஹுத்தில் I. L. R. 1 All. 170-(கங்காபாத் V. சிதாராம்) ல் கண்ட கேஸில் மற்றொரு புல்பெஞ்சு தீர்மானம் ஏற்பட்டது, அது என்னவென்றால் முந்தி யிறந்துபோன ஒரு குமாரனுடைய விதவைக்கு அவனுடைய மாமனாரிடமிருந்து ஜீவனாம்சம் பெறும் பாத்தியமானது அந்த மாமனாரிடத்தில் பிதுரார்ஜித சொத்து இருந்தாலொழிய ஏற்படமாட்டாது என்பதே; இந்தக் கேஸில் ஒரு நாட்டுப்பெண் தன்னுடைய மாமனார் பேரில் ஜீவனாம்சத்திற்காக வியாஜ்ஜியம் கொண்டு வந்தாள். இதில் ஏற்பட்ட கட்சி, மாமனார் வசத்தில் பிதுரார்ஜித சொத்தோ, அல்லது ஸ்தாவர சொத்தோ கிடையாதென்றும், அவனுடைய குமாரன் உயிருடனிருந்தால் அதன் விநியோகத்தைத் தடுக்கக் கூடிய யாதொரு ஐவேஜியும் அவன் வசமில்லை என்றும், அவன் தன்னுடைய குமாரனுடைய சொத்து யாதொன்றையும் அவன் இறந்த பிறகு அடைய வில்லை என்றும், தன் குமாரன் இறந்ததனால் அவனுக்கு எந்த சொத்திலேயாவது பாத்தியம் அதிகரிக்க வில்லை என்றுமேயாம். அந்த நம்பர் ஜட்ஜிமெண்டில் "இந்த வியாஜ்ஜியத்திற்கு ஆதாரமாய் இந்த மாகாணங்களிலுள்ள எந்தி கிரந்தத்திலிருந்தாவது யாதொரு வாக்கியமும் எடுத்துச் சொல்லப்பட வில்லை, இந்த மாகாணங்களிலேயோ அல்லது இந்த இராஜதானியிலேயோ அல்லது மிதாக்ஷர லாவுக்கு உட்பட்ட சென்னப்பட்டண இராஜதானியின் எந்த பாகத்திலேயோ உள்ள, எந்த கோர்ட்டாராலாவது அந்த மாதிரி பாத்தியம் ஸ்தாபிக்கப் பட்டதாய் யாதொரு, தீர்மானமும் எடுத்துக் காட்டப்படவில்லை. ஆகையால் ஒரு நாட்டுப் பெண்ணுடைய பாத்தியமானது தர்ம சாஸ்திரப்படியே ஒழிய நியாய சாஸ்திரப்படி, கட்டுப்படுத்தத் தக்க தல்ல" என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு அடுத்த ஜானகி V. நந்தராம் கேசு 1888-ஹுத்தில் I.L.R. 11 All. 190-ல் கண்ட புல் பெஞ்சு தீர்மானம். இந்த கேஸில் சங்கதிகள் மிதாக்ஷர லாவுக்கு உட்பட்ட [illegible] குடும்பத்தில் யாதொரு பொது சொத்தோ அல்லது பிதுரார்ஜித சொத்தோ இல்லை. [illegible] டம் சில பிரத்தியேகமான சுயார்ஜித [illegible] ந்தது. அவனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் ஒரு விதவையை விட்டு விட்டு முந்தி இறந்துபோய்விட்டான். பிறகு தகப்பன் உயில் எழுதி வைக்காமல் [illegible] குமாரனையும் ஒரு விதவை[illegible] விட்டு [illegible] போனான். [illegible] சொல்லிய இறந்த [illegible] விதவை [illegible] ன் இறந்துபோன பொழுது [illegible] மைனராயிருந்தது மல்லாமல் தன் புருஷனுடன் கூடி வாழவாவது அல்லது அவன் குடும்பத்தில் வசிக்கவாவது அந்தக் குடும்பத்திலிருந்து யாதொரு போஷணையும் பெறவாவது இல்லை. ஆனால் அவள் தன்னுடைய தகப்பனோடேயே வசித்து தன்னுடைய தகப்பனாலேயே போஷிக்கப்பட்டு வந்தாள். அவள் தன்னுடைய மாமனார் இறந்த பிறகு தன்னுடைய மைத்துனன் பேரிலும் தன்னுடைய மாமனாரின் விதவையின் பேரிலும் ஜீவனாம்சம் கிடைக்கவேண்டுமென்று வழக்கிட்டாள். அவள் தனக்கு ஜீவனாம்சம் தன்மாமனார் உயிருடனிருக்கும்பொழுது அவருக்குச் சொந்தமாயிருந்ததும் இப்பொழுது பிரதிவாதிகளின் வசத்திலிருப்பதுமான ஸ்தாவரசொத்தைப் பொருத்துக்கிடைக்கவேண்டுமென்று பாத்தியம் கொண்டாடினாள். தர்ம சாஸ்திரப்படி மாமனாருக்கு ஒரு கடமையிருந்தது என்ற காரணத்தைக்கொண்டு அந்த வியாஜ்ஜியத்தை வாதி மைத்துனன் பேரிலும் மாமியார் பேரிலும், தொடர, பாத்திய முள்ளவளென்று தீர்மானிக்கப்பட்டது. அந்த தீர்மானத்தில் மாமனாருடைய கடமையானது "தன்னுடைய ஜீவகாலத்தில் மட்டும் விதவையான தன்னுடைய நாட்டுப் பெண்ணைப் போஷிக்க வேண்டியதுமட்டும் அல்லாமல் அவனுடைய மிந்திய ஜீவனாம்சத்திற்கு ஒருவகை செய்யதான் உபயோகப்படுத்தி யிருக்கக்கூடிய சுயார்ஜித சொத்து அவனுக்கிருந்தபடியால், அவன் இறந்தபிறகு அவளுக்கு ஜீவனாம்சம் கிடைக்கும்படி ஒரு ஏற்பாடு செய்ய வேண்டியதாகவும் இருக்கிறதென்றும்; சுயார்ஜிதமான சொத்திருந்த நிமித்தம் மாமனாருக்கு தர்ம சாஸ்திரப்படி உண்டான கடமையானது, அவன் இறந்த பிறகு சொத்தையடைந்த காரணத்தினால் மைத்துனனுக்கு நியாய சாஸ்திரப்படி ஒரு கடமையை உண்டாக்கியிருக்கிறதென்றும், அந்தக் கடமையை ஸ்தாபித்துக்கொள்ள, அவன் பேரிலும் விவாத சொத்தின் பேரிலும் வியாஜ்ஜியம் தொடரலாமென்றும், ஆனால் வாதி சம்பந்தப்பட்டவரையில் மேற்கண்ட சொத்தை, மைத்துனன் வசமிருக்கும் பிதுரார்ஜித சொத்து "என்று மதிக்கக்கூடாதென்றும்". தீர்மானிக்கப்பட்டது. 1900ஹுத்தில் I. L. R. 23 All 86-ல் பெச்சா V. முத்திலால் கண்ட கேஸில்

பிதுரார்ஜித சொத்தை வைத்துக்கொண்டிருக்கிறவன் விதவையின் ஜீவனாம்ச பாத்தியம் தவறிப்போகும்படியாய் அப்படிப்பட்ட சொத்தைப் பாராதீனம் செய்யக்கூடாதென்று இரண்டு ஜட்ஜிகளால் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. இந்த கேஸில் முந்தியிறந்துபோன ஒரு குமாரனுடைய விதவையானவள் தன்னுடைய மாமனாருடைய உயில் (மரணசாசனம்) மூலமாய்ப் பாத்தியம் கொண்டாடின பேர்கள் பேரில் தன்னுடைய ஜீவனாம்ச பாத்தியத்தை ஸ்தாபிக்க வியாஜ்ஜியம் தொடர்ந்தாள்.

சென்னப்பட்டணத்தில் 1870 ம்ஹுத்தில் M.H. C. R. 150-(விசாலாக்ஷியம்மாள் V. அண்ணாசாமி சாஸ்திரி) ல் கண்ட தீர்மானத்தில் ஒரு ஹிந்து விதவையானவள் தன்னுடைய மாமனாரின் சுவாதீனத்திலிருக்கிற சில நிலத்தின்பேரில் தன்னுடைய ஜீவனாம்சம் பாத்தியத்தை ஸ்தாபித்துக் கொள்ளலாம் என்றும், அந்த சொத்தானது குடும்பபிதுரார்ஜித சொத்தில் ஓர் பாகமாயிருந்து பாகப்பிரிவினை காலத்தில் அதன் பொருமானத்துக்குச் சரியான தொகைக்கு மற்றொருவரிடத்தில் பந்தகம் வைக்கப்பட்டிருந்தது, பிறகு அவளுடைய மாமனாரால் அவனுடைய சுயார்ஜித ஐவேஜியைக்கொண்டு மீட்கப்பட்டதாயிருந்தாலும் அந்த சொத்து அவள் மாமனாருடைய வசத்திலுள்ள பிதுரார்ஜித சொத்தென்று தீர்மானிக்கப்பட்டது. அந்த கேஸின் சங்கதிகள் இருந்தநிலைமையில் கோர்ட்டாரவர்கள் மாமனார் தன்னுடைய பிரத்தியேகமான சுயார்ஜித சம்பாத்திய ஐவேஜியிலிருந்து தன்னுடைய நாட்டுப்பெண்ணுடைய ஜீவனாம்சத்திற்கு ஒரு வகை செய்ய சட்டப்படி கடமைப் பட்டிருக்கிறான் என்பதைப் பற்றி யாதொரு அபிப்பிராயத்தையும் வெளிப்படுத்துவது அனாவசியம் என்று நினைத்தார்கள். பிறகு (1887)ஹுத்தில் I. L. R. 11 Mad 91-(அம்மாக்கண்ணு V. அப்பு) ல் கண்ட கேஸில் சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டார் ஒரு ஹிந்துவானவன் தன்னுடைய சுயார்ஜித சொத்திலிருந்து தன்னுடைய வயது வந்த குமாரனையோ, அல்லது தன் குமாரனுடைய விதவையோ போஷிக்கக் கடமைப்பட்டிருக்கவில்லையென்றும், ஒரு நாட்டுப் பெண்ணானவள் தன்னுடைய மாமனாருடைய சுயார்ஜிதமாயிருப்பதும் அவனுடைய [illegible] வனுக்குக் [illegible] த்திருப்பதுமான சொத்தின்பேரில் தன்னுடைய ஜீவனாம்சத்தைப் பற்றி—அவளுடைய ஜீவனத்திற்கு வகைசெய்யும் கடமைக்குட்பட்டு அந்த சொத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மாமனார் தன்னுடைய நடத்தையினாலே அல்லது வேறு விதமாகவோ, சந்தேகமில்லாதபடி தன்னுடைய கருத்தை வெளிப்படுத்தியிருந்தால் ஒழிய யாதொரு பாத்தியத்தையும் ஸ்தாபிக்க முடியாதென்று தீர்மானித்தார்கள். 1898ஹுத்தில் I. L. R. 22 Mad 305-(ரெங்கம்மாள் V. எச்சம்மாள்) ல் கண்ட கேஸில் அடியிற் கண்டபடி சங்கதிகள் இருந்த நிலைமையில் ஒரு விதவையான நாட்டுப்பெண்ணுக்கிருக்கும் ஜீவனாம்ச பாத்தியத்தைப் பற்றி ஆலோசிக்க வேண்டியிருந்தது:—

ஒரு ஹிந்து தன்னுடைய பெண்சாதிவசம் சொத்தை விட்டு விட்டு இறந்தான். அந்த சொத்தில் சில பாகம் அவனுடைய சுயார்ஜிதமாயும், பாக்கி சொத்து அவனுடைய மாதாமகனிடமிருந்து அடைந்ததாயு மிருந்தது. அவன் தன் பெண்சாதிக்கு ஒரு உயில் மூலமாகவும் சில சொத்தை கொடுத்தான். அவனுக்கு முந்தியே இறந்துபோன அவனுடைய குமாரனும் ஒரு பெண்சாதியை விட்டு விட்டு இறந்துபோய் விட்டான். இந்த நாட்டுப்பெண் தன் மாமியார் பேரில் ஜீவனாம்சத்திற்கு வழக்கிட்டாள். மாதாமகனிடமிருந்து கிடைத்த சொத்தானது சுயார்ஜித சொத்து ஆகமாட்டாது. சுயார்ஜித சொத்து ஜீவனாம்சத்துக்கு கட்டுப்படமாட்டாதென்னும் விதியானது மேற்சொல்லிய சொத்துக்குப் பொருந்தாதென்றும், ஆகையால் அந்த சொத்து ஜீவனாம்சத்துக்குக் கட்டுப்படமாட்டாதென்னும் தீர்மானித்தார்கள். மேற்சொல்லிய I.L.R 11 Mad. 91 (அம்மாக்கண்ணு V. அப்பு) ல் கண்ட தீர்மானத்துக்கு விரோதமாகவே ஒரு அபிப்பிராயம் ஒரு குமாரனுடைய விதவையைப் போஷிக்க அவனுடைய மாமனாருக்கு தர்ம சாஸ்திரப்படி உண்டாயிருக்கும் கடமையானது அவன் இறந்தவுடன் அவனுடைய வார்சுகளின் வசத்திலுள்ள அவனுடைய சுயார்ஜித சொத்தின்பேரில் சட்டப்படிக்குள்ள ஒரு கடமையின் வலிமையை அடைகிறதென்றும் அப்படிப்பட்ட சுயார்ஜிதமான சொத்தின் மூலமாய்ப் பராதீனம் செய்தாலும் அது தர்ம சாஸ்திரப்படிக்குள்ள பாத்தியம் சட்டப்படிக்குள்ள பாத்தியமாய் மாறியிருக்கிற ஒரு பேர்வழியின் பாத்தியத்தைக் கெடுக்கமாட்டாதென்று தெரிவித்தார்கள்.

நாம் கல்கத்தா கேசுகளை ஆராய ஆரம்பிப்போம். 1865ஹுத்தில 2 W. R. 134-(கூடி மொனிதாசியா V தாராசந்து சுக்கர் புத்தி) ல் கண்ட கேஸில் ஹைகோர்ட்டார் ஒரு குமாரனுடைய விதவையானவள் கற்புள்ளவளாய் இருந்து வருகிற வரையில அவள் ஜீவனாம்சம் பெற பாத்தியமுள்ளவள் என்று தீர்மானித்தார்கள். விதவையான நாட்டுப் பெண் தன் மாமனார் பெரில் ஜீவனாம்சம் கிடைக்க வேண்டுமென்று தொடர்ந்த தாவாவானது, அவனுடைய வசத்தில் ஏதாவது பிதுரார்ஜித சொத்து இருந்ததா இல்லையா என்கிற விஷயத்தைப் பற்றிய ஆலோசனை செய்யாமலேயே தாவாப்படியே தீர்ப்பு செய்யப்பட்டதென்று நாம் சொல்லத் தேவையில்லை.

1866-ஹுத்தில் 5 W. R. 134-(ரத்தன் சந்[illegible]

ஷடூரி V ஷிரி மூட்டி ஹூரி மொனி)ல் கண்ட கேசில் மாமனார் தன்னுடைய நாட்டுப் பெண்ணைப் போஷிக்கக் கடமை பட்டிருக்கிறான் என்ற விஷயம் வேறு இரண்டு ஜட்ஜிகளால் ஒப்புக் கொள்ளப் பட்டது. ஆனால் ஒரு ஹிந்து தன்னுடைய நாட்டுப் பெண்ணைப் போஷிக்கக் கடமைப் பட்டிருக்கிற விஷயம் அப்படி அவன் செய்யச் சக்தி யுள்ளவனாய் இருக்கின்றானா என்கிற விஷயத்தைப் பொருந்திருக்கிறதென்றும் தீர்மானித்தார்கள். பிறகு 1868-ம் ஹூத்தில் 2 Bengal L.R. 15; 10 W.R. 89-(சோத்திர மணிதாசி V கேசி, நரத்தாஸ்) ல் கண்ட கேசுக்கு வந்து சேருகிறோம். அந்தக் கேசில் ஒரு இந்து குமாரன் யாதொரு சொத்து மின்றி ஒரு பெண்ஜாதியை விட்டுவிட்டு இறந்துபோனான். அவன் இறந்து போனான். அவன் இறந்ததும் அவள் தன்னுடைய மாமனார் வீட்டை விட்டுப் புறப்பட்டு தன்னுடைய தகப்பனுடைய வீட்டில் வசிக்கப் போய்விட்டாள். அவளுடைய மாமனாருக்கு யாதொரு பிதுரார்ஜித சொத்தும் கிடையாது. அவள் தன்னுடைய மாமனார்பேரில் கடந்த ஜீவனும்சமும், எதிர்கால ஜீவனும்சமும் கிடைக்க வேண்டுமென்று வியாஜ்ஜியம் கொண்டுவந்தாள். அந்த கேசானது இரண்டு ஜட்ஜிகள் முன் விவரிக்கப்பட்டது. அவர்கள் அடியிற் கண்ட விஷயத்தைத் தீர்மானிப்பதற்காக புல் பெஞ்சுக்கு ரிப்ர் செய்து கொண்டார்கள்.

“ஒரு ஹிந்துவின் விதவை தன்னுடைய மாமனார் வீட்டில் வசிக்க மறுதளித்துவிட்டு ஜீவனும்சத்திற்காக சில தொகையை கொடுக்கவேண்டுமென்று அவன்பேரில் கொண்டுவந்திருக்கிற வியாச்சியத்தை ஆதரிக்கக் கூடுமா” என்கிற பிரஸ்னையின் விஷயமாய் அந்த புல் பெஞ்சிலிருந்த ஜட்ஜிகள் வித்தியாசமான அபிப்பிராயங்களைக் கொண்டார்கள். இரண்டு ஜட்ஜிகள் பிதுரார்ஜித சொத்தில்லாவிட்டாலும் சுயார்ஜித சொத்துமட்டும் இருந்தால் மாமனார் பேரில் விதவையான நாட்டுப்பெண்ணுக்கு ஜீவனும்ச பாத்தியமிருக்கிறதென்று அபிப்பிராயங் கொண்டார்கள். பின்னும் இரண்டு ஜட்ஜிகள் நாட்டுப் பெண் தன்னுடைய தகப்பனார் வீட்டில் வசிப்பதற்கு நாடும் வரையில் அவளுடைய மாமனாரால் போஷிக்கப் பட அவளுக்கு சட்டபடி யாதொரு பாத்தியமு மில்லையென்று அபிப்பிராயப் பட்டார்கள். ஆகையால் அந்த கேசானது சீப் ஜஸ்டிஸினுடைய அபிப்பிராயப்படி தீர்மானம் செய்யப்பட்டது. அந்த விதவை லெட்டர்ஸ் பேடெண்டு 15-வது பிரிவுப்படி அப்பீல் செய்துகொண்டாள். அந்த அப்பீலை ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் ஏழுபேர்களிருந்து விசாரித்தார்கள் அவர்கள் எல்லாரும் சீப் ஜட்ஜியினுடைய அபிப்பிராயத்தை ஒப்புக்கொண்டு வாதியின் வழக்கை தள்ளுபடி செய்துவிட்டார்கள். பிறகு 1875-ஹூத்தில் 2 4 N. R. 474 (மகமத் ஹெமா கூறி V அயோஜியா பிரசாத்) ல் கண்ட கேசில் ஜட்ஜி மேற்சொல்லிய 1868-ஹூத்திய கல்கத்தா கேசானது வங்காளத்திய லாவினால் ஆளப்படுகிறபடியால் அதை வேற்றுமை கண்டு, மிதாக்ஷரா லாப்படி தீர்மானிக்கவேண்டிய விஷயம் தகப்பனும் பிள்ளையும் அவிபக்தர்களா என்பதும் பிள்ளை இறந்துபோகும்பொழுது அப்படிபட்ட ஜீவனும்சம் கொடுபடவேண்டிய பாத்தியத்துக்குட்படுத்தி ஏதாவது அவிபக்த சொத்தை வைத்திருந்தானா என்பதுமே என்று தீர்மானித்தார். 1889-ஹூத்தில் I.L.R. 17 Cal 373 (சாமினகாஸ் V சந்திரபோதி கேசில்,) ல் கண்ட ஒரு சொத்தையடையும் வார்ஸானவன் முந்தின சுவாந்தாரனுடைய பரலோக சாதகத்துக்காக அதை அடைகிறான் என்றும் ஆகையால் முந்தின சுவாந்தாரன் தர்ம சாஸ்திரப்படி போஷிக்கச் சட்டப்படி கட்டுப்பட்டிருக்கிறான் என்றும் சொல்லும் விதியானது வங்காள சாஸ்திரிகளின்படி ஹிந்து லாவில் பூரண ஆதாரத்தைப் பெற்றிருக்கிற தென்று தீர்மானித்து மேலே சொன்ன ஜானகி V நந்தராம் உடைய கேசை அனுசரித்து, விதவை தன்னுடைய புருஷனுடைய சகோதரர்களின் பேரில் ஜீவனும்சத்திற்காக கொண்டுவந்திருந்த வியாச்சியத்தைத் தீர்ப்பு செய்தார்கள். இந்த கேசில் அந்த விதவையின் புருஷன் அவனுடைய தகப்பனுக்கு முந்தி இறந்துபோய் அவளுடைய மாமனாரின் சொத்துக்களை அவளுடைய புருஷனுடைய மேற்சொல்லிய சகோதரர்கள் அடைந்திருந்தார்கள். 1895 I. L. R. 22 Cal 410 தேவி பிரசாத் V குன்வந்திகோர் கேசில் ஒரு விதவை தன்னுடைய மைத்துனர்கள் பேரிலும் மைத்துனருடைய பிள்ளையின் பேரிலும் கொண்டுவந்த தாவாவை, அவளுடைய இறந்துபோன புருஷனுக்கு பாத்தியமுள்ள பிதுரார்ஜித சொத்து இருந்ததென்ற காரணத்தின்பேரிலும், பிதுரார்ஜித சொத்திருக்கிறதென்பதைத் தவிரவும் மைத்துனர்களும் மைத்துனன் பிள்ளையும் அவளுடைய மாமனாரின் தர்மசாஸ்திரப்படிக்குள்ள கடமையை நிறைவேற்ற சட்டப்படி கட்டுப்பட்டிருக்கிறார்களென்ற காரணத்தின்பேரிலும், தீர்ப்பு செய்தார்கள். 1902-ஹூ I. L. R. 29 கல்கத்தா 657-சித்திரூரி தாசி V ஜனார்த்தன சர்க்காரின் கேசில் ஒரு விதவையான நாட்டுபெண் அவளுடைய மாமனார் இறந்த பிறகு அவனுடைய சொத்தை யடைந்தவனிடமிருந்து பிரத்தியேகமான ஜீவனும்சம் பெறப் பாத்தியமுள்ளவளென்றும், இந்த அம்சத்தில் வங்காளா லாவுக்கும், மிதாக்ஷரலாவுக்கும் வித்தியாசம் கிடையாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கடைசியாய்ப் பம்பாய் தீர்மானங்களைப் பார்ப்போம். 1866-ஹூ 2 B. H. C. R. 323, சந்திரபாகாபாய் V காசிநாத்தின் கேசில் ஒரு விதவை தன்னுடைய மாமனார்பேரில் கொண்டு வந்திருந்த தாவாவை ஒப்புக்கொண்டு அவளுடைய நிலைமைப் பற்றிய

விசாரித்த அம்சங்களைத் தீர்மானிக்கும்படி ரிமாண்டு செய்தார்கள் 1868-ஹூ 5 B. H. C. R. 130 திம்மப்பட்டு V பர்மேஸ்வரியம்மாளினுடைய கேசானது இன்னும் பலமானது. அந்த கேசில் பிரதிவாதியின் முந்தியே இறந்துபோன குமாரனுடைய விதவைக்கு ஜீவனும்சம் தீர்ப்பு செய்திருந்த அப்பீல் கோர்ட்டாருடைய தீர்மானத்தை ஹைகோர்ட்டார் ஒப்புக்கொண்டார்கள். பிறகு 1872-ஹூ 2 B. H. C. R. 283 இராமாபாய் V திரிம்பக்கேஷ்வடைய கேசில் ஒரு விதவை தன்னுடைய புருஷனுடைய சிற்றப்பன்பேரிலும் சிற்றப்பன் மகன் பேரிலும் பிதுரார்ஜித சொத்தில் தன்னுடைய புருஷனுக்குள்ள பாகம் எவ்வளவோ அவ்வளவு தொகைக்கு தன்னுடைய ஜீவனும்ச பாத்தியத்தைப் பற்றி வியாஜ்ஜியம் செய்து பெற்றுக்கொள்ள பாத்திய முள்ளவளென்றும், தீர்மானித்தார்கள். அந்தக் கேசில் விதவையானவள் பிதுரார்ஜித சொத்து இருந்ததென்றும் அந்த சொத்தில் தன் புருஷனுக்கு அவன் இறந்து போகும் பொழுது பாத்தியம் இருந்ததென்றும் கட்சி யாடினாள். ஆனால் ஜட்ஜி, வாதியின் புருஷன் தன்னுடைய பாகத்தைப் பெற்றுக் கொண்டு பிரதிவாதிகளிடமிருந்து விலகி தனியாய்ப் போயிருந்தால் அவர்கள் பேரில் விதவைக்கு யாதொரு பாத்தியமும் இல்லையென்று சொன்னார். 1873ஹூ 10 B. H. C. R. 483 உதாராம் V கெங்காபாய் உடைய கேசில், ஒரு ஹிந்து மாமனார் தன்னுடைய இறந்த குமாரனுடைய விதவையை குமாரன் இறந்து போகையில் வைத்திருந்த சொத்து யாதொன்றும் தன்வசம் கிடைத்திராவிட்டாலும், போஷிக்கச் சட்டப்படி கட்டுப் பட்டிருக்கிறான் என்று தீர்மானித்தார்கள். பிறகு நாம் 1878ஹூ I. L. R. 2 Bom 573 சாவித்திரிபாய் V லெக்ஷுமி பாய் உடைய கேசுக்கு வந்து சேருகிறோம். அந்தக் கேசில் விதவையானவள் ஜீவனும்சம் கிடைக்க வேண்டுமென்று தன் புருஷனுடைய பாட்டியார் பேரிலும் சிற்றப்பன் பேரிலும்வழக்கிட்டாள். அந்தவியாஜ்ஜியத்திற்கு அநேகவருஷங்களுக்குமுந்தியும் வாதியின்புருஷன் இறப்பதற்கு முந்தியும் அவன் சிற்றப்பன் (2-ம்பிரதிவாதி),சதாசிவ வியாஜ்ஜியம் தொடர்ந்து குடும்ப சொத்துகளை பாகம் பிரித்துக்கொண்டுவிட்டானென்றும் பிறகு சொத்து விஷயத்தில் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாருடனும் மறுபடியும் சேர்ந்து கொள்ளவில்லையென்றும் ருஜுவாயிற்று. ஜட்ஜி விரிவாய்க் காரணங்களை எடுத்துக் காட்டி, முடிவில் அவளுடைய புருஷனும் அவனுடைய தகப்பனும் பிரதிவாதியாகிய சதாசிவமும் பாகம் பிரிந்துவிட்டார்களென்றும், வியாஜ்ஜிய தேதியில் வாதியின் புருஷனுக்கு அவனுடைய தகப்பனுக்கும் ஏதேனும் பங்குள்ள பிதுரார்ஜிதசொத்தும் பிரதிவாதியின்வசத்திலில்லையென்றும் ஆகிய இந்தஇரண்டுகாரணங்களுக்காக வாதியின் கேசு தவறி விட்டதென்று அபிப்பிராயப்பட்டார்; அதே தேதியில் (1878ஹூ மேமீ 1ல) மற்றொரு புல்பெஞ்சில்: சாவித்திரிபாய் V லெக்ஷுமிபாயுடைய கேசை அனுசரித்து ஒரு விதவைக்கு அவளுடைய புருஷனுடைய சொத்தோ அல்லது ஏதேனும் பிதுரார்ஜித சொத்தோ தன்வசமில்லாதிருக்கிற புருஷனுடைய சகோதரன்பேரில் ஜீவனும்சபாத்தியம் இல்லையென்று தீர்மானிக்கப்பட்டது. (1878ஹூ I. L. R 2Bom. 632 அம்பாஜி V கங்காபாய்.)

1882ஹூத்தில் I. L. R 7 Bcm 127 கானு V சுபிபாய் உடைய கேசில் முந்தி இறந்துபோன ஒரு குமாரனுடைய விதவையும் அவளுடைய குழந்தைகளும், அவளுடைய மாமனாரினால் அவனுடைய சுயார்ஜித சொத்தைக் கொண்டு போஷிக்கப்பட யாதொரு பாத்தியத்தையும் பெற்றிருக்கவில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. இந்தக்கேசில், கிரந்த வசனங்களையும் தீர்மானங்களையும் சுருக்கமாய் கவனித்து, முடிவில் கோர்ட்டார், ஹிந்துக்களுள் சாஸ்திரப்படிக்குள்ள கடமையானது எவ்வளவு விரிவாக இருந்த போதிலும், சட்டப்படிக்குள்ள கடமையை கிரந்த வசனங்களின் நடையினால் தெளிவாயும் வெளிப்படையாயும் ஏற்படுகிற அர்த்தத்தைக் காட்டிலும் விரிவாய்க் கொள்ளக்கூடாதென்று அபிப்பிராயப்பட்டார்கள்.

1886ஹூ I. L. R 14 Bom 199 ஆதிபாய் உடைய கேசில் விதவை தன் புருஷனுடைய சகோதரின் பேரில் கொண்டு வந்த தாவா ஒப்புக் கொள்ளப்பட்டது, அந்த கேசில் அவளுடைய மாமனாருடைய சொத்தானது அவளுடைய மைத்துனன் வசத்தில் வந்ததும் பிதுரார்ஜித சொத்தாகி விட்டதென்றும் அது விதவையின் ஜீவனும்ச பாத்தியத்துக்கு உட்பட்டதென்றும் ஜட்ஜி அபிப்பிராயங்கொண்டார்.

1890ஹூ I. L. R 14 Bom. 460 கோக்லபாய் V லெக்ஷுமிதாஸ் கிமஜி உடைய கேசில், மாமனார் பேரில் ஜீவனும்சத்திற்காக விதவை கொண்டுவந்த தாவாவை, ஒப்புக்கொள்ளப்பட்டது. ஏனென்றால் அந்தக்கேசில்பிரதிவாதி லெக்ஷுமிதாஸ்தன் வசத்தில் பிதிரார்ஜித சொத்திருக்கிறதென்று ஒப்புக்கொண்டுவிட்டான்.

1899ஹூ I. L. R 23 Bom 608 ல் முந்தி இறந்துபோன ஒரு குமாரனுடைய விதவை அவளுடைய தகப்பனுடன் சேர்ந்து வசித்துக்கொண்டிருந்தாள். அவள் அவளுடைய மாமியார் அவர்கள் கிரமத்தில் அடைந்திருக்கிற மாமனாருடைய சுயார்ஜித சொத்திலிருந்து மாமியாரால் போஷிக்கப்பட சட்டப்படி பாத்திய முள்ளவளென்று தீர்மானிக்கப்பட்டது. மி-ர் ஜஸ்டிஸ் ரான்டேல் ஜானகி V நந்தராமுடைய கேசின் ஜட்ஜ்மெண்டின் கடைசி பாகத்தில் குல்

டிஸ் மாமூது பிரஸ்த்தாபித்தபடி பொதுவான நடுநியாயத்தையும் ஜன சகவாச நியாயத்தையும் யோசித்து, ஆதிபாய், சரஸ்வதிபாய் கேசுகளை வேற்றுமைப் படுத்தி முந்தி யிறந்துபோன குமாரன் இறந்துபோன காலத்தில் அவனுடைய தகப்பனுடன் ஒன்றாய் வசித்துக்கொண்டிருந்த அந்தக் குமாரனுடைய விதவையின் ஜீவனும்ச பாத்தியமானது இறந்துபோன அவள் மாமனாருடைய வார்சுகளின் வசத்திலிருக்கும் மாமனாரின் சுயார்ஜித சொத்தின் பேரில் பரவுமென்று தீர்மானித்திருக்கிறார்.

1900௵த்தில் I. L. R. 25 Bom 263 பாய்பார்வதி V தோலத்ராம் உடைய கேசில் முந்தி யிறந்துபோன அவிபக்த குமாரனுடைய விதவையானவள் மாமனாருடைய யாவத்து சுயார்ஜித சொத்துக்களையும் உயில் மூலமாய் அடைந்திருக்கிறவனிடமிருந்து ஜீவனும்சம் பெற யாதொரு பாத்தியத்தையும் பெற்றிருக்க வில்லை யென்று தீர்மானிக்கப்பட்டது அந்த கேசில் ஜட்ஜிகள் ரெங்கம்மாள் V எச்சம்மாளுடைய கேசில் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் அவர்கள் சொல்லியிருப்பதை அனுசரிக்க மறுதளித்து யமுனாபாய் V மானுபாய் உடைய கேசை வேற்றுமைப்படுத்தினார்கள்,

இத்தோடு தீர்மானங்களின் பரீக்ஷை முடிந்துவிட்டது. விதவையான நாட்டுப் பெண்ணின் ஜீவனும்ச பாத்தியத்தைப்பற்றி அபிப்பிராயம் சொல்லும்படியாக யாதொரு கேசும் பிரிவி கௌன்சில் முன் விசாரணைக்குப் போனதாகத் தெரியவில்லை.

மேற்கண்ட தீர்மானங்களிலிருந்து அடியில் கண்ட சித்தாந்தங்களை நிதானிக்கலாம்.

I. முந்தி இறந்துபோன ஒரு குமாரனுடைய விதவையானவள், தன் புருஷன் இறந்துபோகிற காலத்தில் அவன் ஒரு பாகத்திற்கு பாத்தியஸ்தனாயிருந்த பிதுரார்ஜித சொத்து இருக்கிற பக்ஷத்தில் ஜீவனும்சம் பெற பாத்தியஸ்தனாவாள். அவள் தன்னுடைய பாத்தியத்தை தன்னுடைய மாமனார்பேரிலோ அல்லது பிதுரார்ஜித சொத்தை வைத்துக் கொண்டிருக்கும் தன் புருஷனுடைய எந்த பந்துவின் பேரிலோ ஸ்தாபித்துக்கொள்ள வல்லவளாய் இருப்பாள்.

II. மாமனார் முந்தி இறந்துபோன தன்னுடைய குமாரனுடைய விதவையை தன்னுடைய ஜீவ காலத்தில் தன்னுடைய சுயார்ஜித சொத்திலிருந்து போஷிக்கும் கடமையானது தர்ம சாஸ்திரப்படியே ஒழிய சட்டப்படிக்குள்ள கடமை யல்ல (ஆனால் இதற்கு விரோதமான அபிப்பிராயத்தை கல்கத்தா, பம்பாய் ஹைகோர்ட்டார்கள் ஒரு காலத்தில் கொண்டிருந்தார்கள்.)

III. முந்தி இறந்துபோன குமாரனுடைய விதவையைத் தன்னுடைய சுயார்ஜித சொத்திலிருந்து போஷிக்க மாமனாருக்கு தர்மசாஸ்திரப்படிக்குள்ள கடமையானது, மாமனார் இறந்த பிறகு சொத்தானது வார்சுகளின் வசம் போய்ச் சேர்ந்ததும் சட்டப்படிக்குள்ள கடமையாய் மாறி விடுகிறது.

IV. மாமனார் இறந்து போகும்பொழுது அவனோடு சேர்ந்து வசித்து வந்த முந்தி இறந்துபோன குமாரனுடைய விதவை யானவள் மாமனாருடைய சுயார்ஜித சொத்தை உயில் மூலமாய் அடைந்தவனிடமிருந்து ஜீவனும்சம் கேட்க யாதொரு பாத்தியதையும் பெற்றிருக்க வில்லை.

மேற்சொல்லிய தீர்மானங்கள் அன்றியும், கிரந்த வசனங்கள், ஒரு விதவையான நாட்டுப்பெண் அவளுடைய புருஷனுக்கு பாகங் கிடைத்திருக்கக் கூடிய யாதொரு பிதுரார்ஜித சொத்தும் இல்லாவிட்டாலும், அவளுடைய மாமனாரினாலோ அல்லது அவள் புருஷனுடைய மற்ற பந்துக்களினாலோ போஷிக்கப்படவேண்டு மென்பதில் யாதொரு சந்தேகத்தையும் ஹிந்துவினுடைய மனதில் உண்டாக்க மாட்டாது கோர்ட்டுகள் எல்லாம் இந்த கிரந்த வசனங்கள் வழியைக் காட்டினவே யொழிய கட்டாயமாய் அனுஷ்டிக்கப்பட வேண்டியவைகள் அல்ல வென்று அபிப்பிராயப் பட்டிருக்கிற படியால் அவைகளைப் பற்றி விவரமாய்ப் புனராலோசனை செய்வது அவசியமல்ல. கிரந்த வசனங்களில் அவைகள் கேவலம் தர்ம சாஸ்திரப்படிக்குள்ள கடமையே யொழிய சட்டப்படிக்குள்ள கடமை யல்லவென்று காட்டத் தகுந்த தொன்றுமில்லை யென்று இதனைப் படிப்பவர் அறியுமாறு இங்கே சில வசனங்களை மட்டும் எடுத்துச் சொல்லி யிருக்கின்றோம்.

மனு;—"ஜீவனும்சத்துக்குப் பாத்தியமுள்ளவர்களை நன்றாய் போஷிப்பதற்கு சுவர்கத்தில் சசம் பிரதிப் பிரயோஜனமாகும். யாருடைய அசட்டையினால் அவளுடைய குடும்பமானது துன்பமுறுகின்றதோ அவனுக்கு நரகம் கிடைக்கும். ஆகையால் அவன் தன் குடும்பத்தை அதிக ஜாக்கிரதையோடு போஷிக்கக் கடவன்."

பிரகஸ்பதி:—"ஒருவன் தன் குடும்பத்திற்கு அன்னவஸ்திரம் கொடுத்த பிறகு பாக்கி யிருப்பதைக் கொடுக்கலாம். தன்னுடைய குடும்பத்தாருக்கு வஸ்திரங்கூட இல்லாமற் செய்து ஜாஸ்தியாகக் கொடுக்கிறவன் முதல் முதல் தேனை உருசிபார்ப்பவன் ஆவான். ஆனால் பிறகு அதை அவன் விஷயமாய்க் காண்பான்."

"சகோதரர்களுடையவும் பிள்ளைகளுடையவும் குழந்தையில்லாத மனைவிகளுக்கு, ஏற்பட்ட விதியை கண்டிப்பாய் அனுஷ்டித்து, அவர்களுடைய ஞானசிரியர்களான பெற்றோர்கள், கேவலம் அன்னமும், கிழியாத பழைய வஸ்திரங்களையும் கொடுக்க வேண்டியது."

மேலே சொல்லிய வசனங்களை ஹிந்துக்களுடைய வழக்கங்களையும் ஹிந்துலாவின் மொத்தக் கருத்தையும் கிரந்த கர்த்தாக்களுடைய மனோபாவங்களையும் தெரிந்துக்கொண்டு வாசித்தால் அவைகள் சட்டப்படிக்குள்ள கடமைகள் என்பதை யறிந்து கொள்ளுவது கஷ்டமிருப்பதாக புலப்படவில்லை.

Important Rulings

முக்கியமான தீர்ப்புகள்.

——:o:——

16-வது பிரிவு, 1-வது வாக்கியம்—மிதமிஞ்சின அதிகாரம்—அவசர நிமித்தமாய் ஒருவனால் கடன் வாங்கப்பட்டது கொடுத்த கடன்மீது கொடுத்தவன் நிபந்தனைகள் ஏற்படுத்துவது-நிர்ணயித்தவனை கழிந்துபோன கடனுக்காக வட்டி கொடுப்பதாக வாக்தானம் செய்வது-அநீதியான உடன்படிக்கைகள் மோசம்-பலவந்தம் பண்ணுவது:—

இருவர் சேர்ந்து உடன்படிக்கை யென்று செய்கையில் 1872௵த்திய இந்திய உடன்படிக்கைச் சட்டம் 16-வது பிரிவு 1-வது வாக்கியத்தின்படிக்கு (1) அந்த வாக்கியத்தில் சொல்லி யிருப்பதுபோல் அவர்களுக்குள் ஒரு சம்பந்தம் இருக்கவேண்டும். (2) இருதிறத்தாராகிலும் பலமான நிலையிலிருப்பவன், மற்றவனிடத்திலிருந்து அநியாயமான லாபம் சம்பாதிக்க தனது நிலைமையை உபயோகித்திருக்க வேண்டும். ஒருவன் தனக்கு உண்டாயிருக்கும் தரித்திரத்தினாலும் அல்லது வேறே பணத்தினாலுண்டாகும் கஷ்டங்களினாலும் எதுவும் அவசர நிமித்தமாய் மற்றவனைப் பணம் கேட்கையில், மற்றவன், தனது சொந்த நிபந்தனைகளைச் சொல்லி அவனது இஷ்டத்தைத் தனது வசமாக்கிக் கொள்வதிலும், கடன் வாங்குகிறவனைத் தனது நிபந்தனைகளுக்கு ஒத்துக் கொள்ளச் செய்வதிலும், ஒருவிதத்தில் பலமான நிலைமையில் இருக்கிறான். கடன் வாங்கினவனுடைய அவசியத்தின் அளவு எவ்வளவென்றால், அவன் ஒத்துக்கொண்ட நிபந்தனைகளின் அளவாகும். இது, கடன் வாங்குகிறவன் விரும்படி யில்லாதவனாக யிருக்கவும், கடன் கொடுப்பவன் தனது பணத்தை மிகவும் சந்தேகமான நிலையில் வைப்பதும் ஆகிய இவைகள் சேர்ந்த பணம் கொடுக்கச் செய்யும் உடன்படிக்கைகளில் எல்லாம், ஒருகுணமாகும். ஆனால் இது 1872-வருஷத்திய இந்தியன் உடன்படிக்கைச் சட்டம் 16-வது பிரிவு 1-வது வாக்கியத்தில் தெளிவாக உரைத்திருக்கும் சம்பந்தமும், அதிகார நிலைமையும் ஆகாது. மேற்குறித்த சட்டத்தில் கூறியிருப்பது என்னவென்றால், மிகவும் தெளிவான சம்பந்தமும், அதிகார நிலைமையுமடம்; அதாவது, கார்டியனும் வார்டும் - தகப்பனும் பிள்ளையும் - நோயாளிடம் வைத்தியனும் லாயரும், சகூடிக்காரனும் பொறுப்பாளியும் பொறுப்பு வைக்கப்பட்ட சொத்துதாரனும், போல்வனவாம். இம்மாதிரியான விசேஷமாகிய சம்பந்தமில்லாமல் வேறே சாதாரணமாகிய சம்பந்தம் இருக்கும் பக்ஷத்தில் அனாவசியமான அதிகாரம் செலுத்த இடமுண்டாகும்; ஆனால் அப்படி அதிகாரம் செலுத்தப்பட்டதென்று சாக்ஷிகளைக் கொண்டு ரூபிக்க வேண்டும்; இந்த மாதிரி ஸந்தர்ப்பங்களில எவன்பேரில் மிதமிஞ்சின அதிகாரம் செலுத்தப்பட்டதென்று சொல்லப்படுகின்றதோ அவனுடைய நன்மை வயது, மனோதிடம், தேகஸ்திதி ஆகிய இவைகளின் தன்மையை யோசித்தல் மிகவும் முக்கியமானது சுறுக்கமாய்ச் சொல்லவேண்டுமானால், ஒருவன் நம்பினதும், மற்றவன் அதைக் காட்டிக் கொடுத்ததுமே, இதை அறிவதற்கு ஒருவழியாகும், அப்படி என்றால், மிதமிஞ்சின அதிகாரத்தைக் கூறித்துச் சொல்லும் சடங்களில் அடங்கத்தக்க மோசம் அல்லது பலாத்காரம் பண்ணுதல் ஆகிய இவை சிறிது இருக்கவேண்டு மென்பது. 1872௵ இந்தியன் உடன்படிகைச் சட்டம் 16-வது பிரிவு 1-வது வாக்கியத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கும் அநீதியான இலாபம் என்பதற்கு பொல்லாத வழிகளால் சம்பாதிக்கப் பட்ட இலயம் என்று அதே சட்டத்தில் பொருள் படுகின்றது. நிர்ணயித்தவனைக் கழிந்துபோன கடனைக் கொடுப்பதாய்ச் செய்யும் வாக்குதானம் செல்லும். அந்த மாதிரியான கடனை வட்டியுடன் கொடுப்பதாய்ச் செய்யும் வாக்கு தானத்திற்கும் அதுவே உண்மைதான் செல்லும். பிரதிவாதி வாதியின் மோசத்தால் தொந்தரவு செய்யப் பட்டான் அல்லது மனது பேதிக்கப் பெற்றான் என்று ரூபித்தாலல்லது ஒரு நியாயஸ்தர்கள் சட்டத்தின் நிபந்தனைகளால் அன்றி, சன்மார்க்க நிபந்தனைகளால் செய்யப்படும் உடன்படிக்கைகளைத் தள்ளக் கூடாது. இவ்விடத்தில் மோசம் என்பது, ஒருவனை ஏமாற்றினால் என்பது மாத்திரம் அல்ல; சில சந்தர்ப்பங்களில் நம்மையும் அறியாமல் அதிகாரம் செலுத்தி, அதனால், பிரதிவாதி. வாதியின் அநியாய வழிகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் இலக்காகி அதனால் தான் செய்வது இன்னது என அறியாமல் செய்துவிடுதல் என்பதாகிய இது முழுவதும் மோசம் என்பதற்குள் அடங்கும்.

கணேச நாராயணர் vs விஷ்ணு ராமசந்திரர்
9 பம்பாய் லா.-ரி. 1164.

164-வது பிரிவு—அநீதியான வியாபாரம்-கோர்ட்டாரால்விடுதலை தரக்கூடிய ஸந்தர்ப்பங்கள்:—

பணத்தை வீணிலே அதிகமாய்ச் செலவழித்து வந்தால் எப்போதும் பணம் வேண்டுமாயிருந்த 28 வயதுள்ள ஒரு செல்வர்களின் குமாரன், தனது தகப்பன் தனக்குப் பணம் கொடுக்க மறுத்தமையால், மொத்தத்திற்கு ஒருதரம் வட்டி கொடுக்கும்படியாக

ஏற்பாடு செய்து வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு 37 ரூபாய் வட்டியாக 500 ரூபாய் கடன் வாங்கிப் பத்திரம் எழுதிக் கொடுத்தான். மேலும் அந்தக் கடன் வாங்கினவன் 5 வருஷத்திற்குள்ளாகக் கடனைக் கொடுத்துவிடக் கூடாதென்றும் அப்படிக் கொடுத்தால் மேற் குறித்த படி வருஷத்திற்கு நூற்றுக்கு 37½ ரூபாய் வீதம் 500 ரூபாய்க்கு மூன்று வருஷத்திற்கு ஆகும் வட்டி முழுமையும் செலுத்தி விடவேண்டுமென்றும் அந்த பத்திரத்திலேயே எழுதப்பட்டிருக்கது. இந்த மாதிரி சந்தர்பத்தில், மிதமிஞ்சின அதிகாரத்தைச் செலுத்திப் பத்திரம் எழுதப்பட்டது என்று சொல்வதற்கில்லையானாலும், வட்டியும் மிகவும் அதிகம் என்று குற்றம் சாட்ட முடியாதானாலும், இந்த உடன் படிக்கை அநீதியானதென்றும், அதற்காகக் கோர்ட்டார் கடன்காரனை விடுவிக்கலாம் என்றும் தீர்மானிக்கப் பட்டது. வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு 24 ரூபாய் வீதம் வட்டியும் முதலும் சேர்ந்து பாதிக்குக் கொடுக்கும்படி கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்த தீர்மானத்தை ஹைகோர்ட்டார் காயப்படுத்தினர்.

பாலகிருஷ்ணதாஸ் VS மாதன்லால்.

1907 அ. வி. கோ. 55;

4 எ அ' லா. ஜ. 222; 29 எ. 303;

16, 19 எ. பிரிவுகள்—மிதமிஞ்சின அதிகாரம்—அநீதியான நடவடிக்கை-பிரதிகூலமாக விடுதலைச் செய்தது:—

வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு 75 ரூபாய் வீதமும், 60 ரூபாய் வீதமும் கடன் வாங்கியிருந்த இரண்டு ப்ராமிஸரி பத்திரங்கள் (Premissory Note) மீது வாதிகளால்கேஸ் எடுக்கப்பட்டது. பிரதிவாதி இந்த பத்திரங்களுக்கு உடன் பட்டு அவைகளை எழுதிக் கொடுத்த காலத்தில், அவனது மன நிலைமையை வாதிகள் பேதித்துத் தம் வசமாக்கிக் கொண்டாரெனத் தெரிய வருகிறது.

தீர்மானம்.—(1) உடன் படிக்கைச் சட்டம் 16-வது 19-வது பிரிவுகளை உடன் வைத்துப் பார்க்கையில் கோர்ட்டார் பிரவேசித்து, அநீதியான நடவடிக்கையாகிய இதினின்றும் பிரதிவாதியை நீக்குவதற்குக் கோர்ட்டாருக்கு அதிகாரம் உண்டு (2) வருஷத்திற்கு நூற்றுக்கு 24 ரூபாய் வீதம் வட்டி கேட்க வாதிக்கு இடம் உண்டு.

பேரமதங்கார் VS உவில்லியம் கில்லிஸ்பெ.

9 பம்பாய் லா. ரி. 3:4 31 பி. 318

7-வது பிரிவு, 11-வது (ச) 5-வது வாக்கியங்கள்-நிலத்தின் சுவாதீனத்தை மறுபடியும் பெறுவதற்காக செய்த பிரியாது நிலத்திற்குடையானும் குடியானவனும் "நிலத்தின் அநுபவம்" "தள்ளப்பட்டது" நிலத்தின் சொந்தக்காரன் பேரிலும் அவனிடத்திலிருந்து மேல்வாரம் கேட்கிறவர்களின் பேரிலும் நிலத்தின் சொந்தக்காரன் பேரிலும், அவனுக்கடங்கி நிலத்தின் சுவாதீனத்தைப் பெற்று வரும் மற்றவர்கள் பேரிலும் ஒரு பாயக்காரி தனக்கு அநுபவம் வேண்டுமென்று பிரியாது செய்வாருனால் அந்தப் பிரியாது 'கோர்ட்டு கட்டணச் சட்டம்' 7-வது பிரிவு-11வது(ச) வாக்கியத்திற்குள் அடங்காது; முக்கியமாய் இது எவ்விஷயத்னல் மேற் குறித்த சட்டத்தில் அடங்காதென்றால், நிலக்காரி விடத்திலிருந்து நிலத்தின் சுவாதீனம் பெற்று வருபவர் முழு சுவாதீனமும் பெருமல் மேல்வாரம் மட்டும் வாங்கி வரும் விஷயத்திலாகும். இந்த சந்தர்பத்தில் அந்த பிரியாதானது மேற்படி சட்டம் 7-வது பிரிவு 5-வது வாக்கியத்திற்குள் அடங்கும்; மேலும் இந்த பிரியாது நிலம், வீடு முதலியவற்றை சுவாதீனப்படுத்திக் கொள்வதற்குப் பிரியாதாகும்.

11-வது (ச) வாக்கியத்தில் எழுதப் பட்டிருக்கும் "நிலத்தின் அநுபவம்" "தள்ளப் பட்டது" என்னும் வார்த்தைகள் பிரதிவாதிகள் சிரத்துகளாகவாவது அல்லது முழுமையும் நிலத்தின் சுவாதீனம் பெற்றவர்களாகவாவது இருக்கும் விஷயத்தில்மாத்திரம் செல்லுமே யல்லது, அல்லது அவர்கள் மேல்வாரம் வேண்டும் என்று கேட்கும் விஷயத்தில் செல்லாது. பழனியப்ப செட்டி VS சேத்திரவேலு செட்டி 47 ம. லா. ஜா. 478

11-வது பிரிவு-செல்லும் விஷயம்-சென்றுபோன காலததில் வருங்காலத்திலும் கிடைத்தவும் கிடைக்க இருக்கவும் ஆகிய வாரத்திற்கு விடப்பட்டதனுல் வரும் இலயங்கள்:—

முன்னே இவ்வளவு வயிற்றென்றும், இனிமேல் இவ்வளவு ஆகும் என்று வாரத்திற்கு விடப்பட்டதனுலும் வரும் இலாயங்களை அறிய விரும்பிய வாதி சென்றுபோன காலங்களில் சேரவேண்டின் இலயத்தின் தொகைக்கு மாத்திரம்உரித்தான கோர்ட்டு கட்டணச் செலுத்துவானுனல், 'கோர்ட்டு கட்டணா சட்டம்' 11 வது பிரிவில் சொல்லியிருக்கும் விஷயங்கள் பிரியாது முழுமைக்கும் செல்லும்.

இபாதுல்லா பேயபியான் VS சந்திர மோஹன் பாஜினர்.

11-வது பிரிவு--அதிகமாய் கோர்ட்டு கட்டணம் கட்டினதின் பேரில் நடவடிக்கை நடத்துவது:—

கோர்ட்டு கட்டணச் சட்டம் 11-வது பிரிவில் சொல்லி யிருக்கும் விஷயத்தின் பொருள் என்னவென்றால், கோர்ட்டு கட்டணம் அதிகமாய் செலுத்த வேண்டியிருந்தால் அதற்காக ஒருவனையை நிர்ணயிக்க வேண்டுமென்பது அல்ல; ஆனல், சேரவேண்டிய கோர்ட்டு கட்டணத்தைச் செலுத்துகிற வரையிலும் அமுல்நடத்துவதை நிறுத்தி வைக்கலாம் என்பது.

பெரியண்ண செட்டி VS ராகப்ப முதலியார்.

16 ம. லா. ஜா. 543; 30 ம. 82.

193-வது பிரிவு—கிரிமினல் புரோசிஜர் சட்டம் 162-வது பிரிவின்படிக்கு போலீஸ் உத்தியோகஸ்தர் முன்னிலையில் கொடுக்கும் வாக்கு மூலங்களை ஆதாரமாகக் கொண்டு ஒருவனை இந்தியன் பீனல் சட்டம் 193-வது பிரிவின்படிக்கு விசாரணை செய்ய வேண்டியவசிய மில்லை.

1908 அ. வி. கோ. 22

193-வது பிரிவு—பொய் சாக்ஷிச் சொல்வது-சாக்ஷியஞ் சொல்லுகையில் கிடைற்த வாக்கு மூலததை குற்றவாளி அல்லது அவனுடைய பிளீடர் Pleader முன்னிலையில், சாக்ஷிக்கு வாசித்து காட்டாவலிருந்தது-கிரிமினல் புரோசிஜா சட்டம், 36-வது பிரிவின் படிக்குச் செய்யாமையால் வந்த பயன் சாக்ஷி சட்டம் 803, 91-வது பிரிவுகள்:—

கிரிமினல் கோர்ட்டாரின் முன்பாக சாக்ஷி சொல்லிக்கொண்டு வருகையில் பொய் வாக்குமூலம் தந்த ஒரு சாக்ஷிக்கு, கிரிமினல் புரோசிஜர் சட்டம் 360-வது பிரிவின்படிக்கு, அவன் சாக்ஷியத்தை, குற்றவாளியின் முனனிலையாவது அல்லது அவனுடைய பிளீடர் முன்னிலையாவது வாசித்துக் காட்டுவதற்கு முன்னர், அந்தப் பொய் வாக்குமூலம் தந்த சாக்ஷியை இந்தியன் பீனல் சட்டம் 193-வது பிரிவின் படிக்குத் தண்டிக்கக் கூடாது.

மோஹேந்திர நாத் மீஸர் VS சக்கிரவர்த்தி

12 சி. வி. கோ. 845

195-வது பிரிவு—பொய்சாக்ஷிச் சொல்வது-கிரிமினல் புரோசிஜர் சட்டம் 164-வது பிறிவின் படிக்கு வாக்குமூலம் கொடுத்ததற்காக அல்லது, பிறகு கோர்ட்டு சாக்ஷிச் சொல்லியதற்காக விசாரித்து தண்டிக்கப் படுதல்:—

இந்தியன் பீனல் சட்டம் 420-வது பிரிவின்படிக்குக்குற்றம் செய்தாரென்று, டி. எஸ். என்பவரிருவரும், இன்னும் ஒருவருமாகிய மூன்று பேர் பேரிலும் போலீசாரிடத்தில் பிரியாதி கொண்டு வரப்பட்டது. கிரிமினல், புரோசிஜர் சட்டம் 164-வது பிரிவின்படிக்கு சத்தியமிட்டுச் சொல்லும்படியாக (டி) என்பவர் மாஜிஸ்ட்ரேட்டால் விஜாரிக்கப் பட்டார். போலீசார் ஆராய்ச்சியின் மேல் (எஸ்) என்பவரும் விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டார். (டி) என்பவர் இந்த சந்தர்ப்பத்தில் பிராஸிகூஷன் தரப்பு சாக்ஷியாக வந்து வாக்குமூலம் கொடுத்தார். அவர் கொடுத்த வாக்குமூலம், முதல் முதல் 164-பிரிவின்படிக்கு அவர் செய்த வாக்குமூலத்தினின்றும் வேறுபெய்து என்று கோர்ட்டாருக்குத் தெரிய வந்தது. இந்தியன் பீனல் சட்டம் 193-வது பிரிவின்டிக்கு (டி) என்பவரை இந்த குற்றத்திற்காகவாவது தண்டிப்பதற்கு சட்டத்தில் ஆக்ஷேபனையொன்றுங் கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டது.

சக்கிரவர்தி-VS-தாடக்ஹுசேன்

1908 அ. வி. கோ. 73.

211-வது பிரிவு கிரிமினல் நடவடிக்கை நடத்துவது அல்லது பொய்யாகக் குற்றஞ் சாட்டுவது"—இதன் பொருள் கிரிமினல் புரொஸீஜர் சட்டம் 162-வது பிரிவின்படிக்குச் செய்த வாக்குமூலம்—கிரும முன்சிப்புக்குத் தெரியவந்த சங்கதி—தீப்பட்டிக் கொள்ளையென்று எப்படிக் கண்டுபிடிப்பது:-

கிராஸ் கேள்விகள் (Cross examination) கேட்பதுபோல விசாரித்த போலீஸ் இன்ஸ்பெக்டர் முன்னிலையில் 162-வது பிரிவு கிரிமினல் புரொஸீஜர் சட்டத்தின்படிக்குச் சொல்லப்பட்ட வாக்குமூலத்தை ஆதாரமாகக் கொண்டு ஒருவரை இந்தியன் பீனல் சட்டம் 211-வது பிரிவின்படிக்குப் பிடித்துக் குற்றவாளியாக்கி விசாரிக்கக்கூடாது. தீப்பட்டிக் கொள்ள அடிக்கப்போவதை முன்னடியாகவே கிரும முன்சிப்புக்குத் தெரிவித்தால், அது, கிரிமினலாக நடவடிக்கை நடத்துவது போலாகாது; ஏனென்றால், அந்த விஷயத்தை ஆராய்ந்து சோதனைச் செய்து, மேலதிகாரிகளிடத்து விசாரணைக்கு அனுப்புவதற்கு கிரும முன்சிப்புக்கு அதிகாரமில்லையாதலால் இந்தியன் பீனல் சட்டம் 211 -வது பிரிவின்படிக்குப் பொய்யாகிய குற்றம் என்று ஒன்றைக் கண்டுபிடித்து உண்டாக்க கோர்ட்டார் முன்னிலையிலாவது, அல்லது, நன்றாகச் சோதித்து விசாரணைக்கு மேலதிகாரிகளிடம் அனுப்புவதற்கு அதிகாரம் பெற்ற ஒரு உத்தியோகஸ்தன் முன்னிலையிலாவது, இக்குற்றத்தைப் பற்றிய விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கவேண்டும். கொண்டுவந்த சங்கதியின் உண்மையை யறியவேண்டுமென்றால், அவன் வேணுமென்றே ஒருவர்க்குப் பிரதிகூலமாக சங்கதியைத் தெரிவித்து, அவர்களை கிரிமினல் குற்றவாளியாக்கினரு எனக் காணவேண்டும்; ஏனென்றால் நியாய விசாரணைக்குள் ளடங்கிய குற்றத்தையுடைய கேஸானல் ரிபோர்ட்டு மூலமாக போலீஸாருக்கும் நியாய விசாரணைக்குள் ளடங்காத குற்றத்தையுடைய கேஸானல் மாஜிஸ்டிரேட்டுக்கும் தெரிவிக்கவேண்டும். நியாய விசாரணைக்குள் ளடங்காத குற்றமடங்கிய கேஸை போலீஸாருக்குத் தெரிவித்தலை கிரிமினல் நடவடிக்கை யென்று சொல்லமுடியாது.

சின்னரமணகேளட VS சக்கிரவர்த்தி,

18 ம. லா. ஜ. 573; 31 எம். 506.

441-ஹத்துமீறிப் பிரவேசிப்பது கிரிமினல் குற்றம்—பாகம் பிரியாத ஆஸ்திகளுக் குடையான்-சுவாதீனம்:—

பாகம் பிரியாத சொத்துகளுக்கு உடையான், பொது சுவாதீனத்தை ஸிவில் கோர்ட்டாரைத் தப் பெறவேண்டுமே யல்லாமல், தானே ஆஸ்திகளை அனுபவிக்கும் மற்றவர்களை பலாத்காரம் செய்து அவர்கள் சுவாதீனத்தைப் பெறக்கூடாது; அப்படிச் செய்வானுனல், ஹத்து மீறி நடந்ததாக கிரிமினல் குற்றம் அவன்மீது சாற்றப்படும்.

சக்கிரவர்த்தி VS கோபால் நிவ் வெங்கடேசர்.

10 பம்பாய் லா. ரி. 285

447-வது பிரிவு--சுதந்திரம் வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளல்:—

தனக்குச் சுவாதீனம் உண்டென்று நிஜமாகவே நம்பி ஒருவன் நடவடிக்கை நடத்துவானுனல் அவன் ஹத்துமீறி நடந்தானென்று சொல்லக்கூடாது.

ஜு ரக்கான் சிங்கு VS சக்கிரவர்த்தி,

7 கி. லா. ஜ. 238.

448-வது பிரிவு—வீட்டில் துராக்கிருதமாகப் பிரவேசித்தல்-கிரிமினல் புரொஸீஜர் சட்டம் 522-வது பிரிவு—சரியான சுதந்திரம் பெற்று ஒரு வீட்டுக்குள் பிரவேசித்தல் கிரிமினல் குற்றமாகாது—ஆனல் துராக்கிருதமாக ஹத்துமீறி நுழைவது குற்றமாகும்—தன்னுடையதென்று கண்டு பிடிக்கப்படாது சொத்துக்களைத் திருப்பிக் கொடுத்து விடுவது:—திருட்டுச் சொத்தென்று ரூபிக்க முடியாவிட்டால், வீட்டில் பிரவேசித்து அக்கிரமமாகும்—கிரிமினலாக பலாத்காரம் செய்யாமல், உத்திரவின்றியேவீட்டில் நுழைந்து விடுவது—குற்றம் சாட்டுகிற வாதிக்கு வீட்டைத் திருப்பிக் கொடுத்து விடுவது-சுவாதீனம் அக்கிரமம்:—

வாதி யில்லாதகாலத்தில் சிலர் அவள் வீட்டில் நுழைந்து அந்த வீட்டைத் தங்கள் சுவாதீனமாக்கிக்கொண்டு வாதியின் தகப்பனுருடைய சுவீகாரப் புதல்வன் என்று சொல்லப்பட்ட ஒரு பையனை அங்கே வைத்துவிட்டு வந்து விட்டார்கள். அதன்பிறகு வாதியானவள், தான் இல்லாதகாலத்தில் அவர்கள் பலாத்காரமாக வீட்டில் பிரவேசித்ததாகவும், திருடினதாகவும், அவர்கள் மீதில் ஒரு கேஸ் எடுத்தாள் அதன்பேரில் டிப்யுடி மாஜிஸ்டிரேட்டு, அந்த குற்றவாளிகளின்மேபரில் வீட்டில் பிரவேசித்த குற்றத்தை மாத்திரம் ஸ்தாபித்து, மற்றதைத் தள்ளிவிட்டார். அவர் ஏன் அப்படிச் செய்தாரென்றல், குற்றவாளிகள் எடுத்துக் சொன்ன சொத்துகள் வாதியினுடையதென்று கண்டு பிடிக்கவில்லை. அந்த சொத்துக்களைத் தங்களுடையனவென்று பிரதிவாதிகளாகிய குற்றவாளிகள் சொன்னபோதிலும், அந்த சொத்துக்களையும், வீட்டின் சுதந்தரத்தையும் வாதிக்குத் திருப்பிக் கொடுக்கும்படியாக உத்திரவிட்டார்.

தீர்மானம்—குற்றவாளிகள் வீட்டிற்குள் பிரவேசித்து கிரிமினல் அ[illegible] வியின் வியாஜ்ஜியத்தைச் சேர்ந்தது. வாதிக்குச் சொத்துக்களைத் திருப்பிக் கொடுக்கும்படியாக டிப்யுடி மாஜிஸ்டிரேட்டு உத்திரவிட்டிருக்கக்கூடாது. மேலும், பிரதிவாதிகள் கிரிமினலாக பலாத்காரம் செய்து அதனுல் குற்றஞ் செய்தாரென்று அவர்கள்மேல் குற்றம் சாட்டப்படாதிருக்கையில், தங்கள் சுவாதீன மாக்கிக்கொண்ட வீட்டை பிரதிவாதிகள் வாதிக்குக் கொடுத்து விடவேண்டுமென்று கிரிமினல் புரொஸீஜர் சட்டம் 522-வது பிரிவில் சொல்லப்படவில்லை.

சைதவிசுவாள் VS டோச்சி ஸ்திரீ,

சி. லா. ஜெ. 175; 12 வை. வீ. நோ. 269.

HUMAN BLOOD CAN BE DISTINGUISHED FROM OTHER MAMMILIAN BLOOD.

மானிட இரத்தத்தை அடையாளம் கண்டுபிடித்துச் சொல்லலாம்.

கிரிமினல் கேஸ் விசாரணையில் இரத்தத்தை அடையாளம் கண்டுபிடித்துச் சொல்வது பிராசிக்யூஷன் தரப்பிற்கும், டிபன்ஸ் தரப்பிற்கும் முக்கியமான சாக்ஷியமாய்யிருந்து வருகின்றது. இதைப்பற்றி நாளது வரையில் கெமிகல் எக்ஸாமினர் அனுப்பும் ரிப்போர்ட்டு, இரத்தம், “குட்டிகளுக்குப் பால் கொடுக்கும் தன்மையுள்ள பிராணியினுடையது” அல்லது வேறே பிராணியினுடையதென்று சொல்லுகின்றதே தவிர மற்றப்படி பால்கொடுக்கும் தன்மையை யுடைய வகுப்புப் பிராணிகளுக்குள் எந்தப் பிராணியின் இரத்தம் என்று சொல்ல முடியாது. பால் கொடுக்கும் வகுப்புப் பிராணிகளுக்குள் ஏறக்குறைய பத்து வகுப்புகளிருக்கின்றன; குதிரை நாய் பூனை முதலியவைகளும் அந்த வகுப்பைச் சேர்ந்த பிராணிகள் தான். மனிதன் குறங்குகள், வாலில்லாக்குறங்குகள் முதலியவைகளும் பால்கொடுக்கும் வகுப்புப் பிராணிகள்தான் ஒருவன் ஒரு பூனையைக் கொன்று அதன் இரத்தத்தை அவனுடைய விரோதியின் வேஷ்டியில் தெளித்து, அவன் ஒருவனைக் கொலை செய்ததாக அவன்பேரில் கேஸ் கற்பனை செய்து கொண்டு வந்தால், இந்தக் கேஸ் விசாரணையில் இரத்தம் மனிதனுடையதல்லவென்றும், பூனை இரத்தமென்றும் சொல்ல முடியாது. ஏனெனில், ராமாயண சாஸ்திரப்படி இரத்தத்தை இன்ன பிராணியின் இரத்தம் என்று தெரிந்துகொள்ளும் முறை கண்டுபிடிக்கப் படாமலிருந்தது. சில காலத்திற்கு முந்தி ஜெர்மனியில் ரிஸ்லால்ட் என்னும் நகரிலிருக்கும் டாக்டர் யுலன்கத் என்பவர் மனித இரத்தத்திற்கும், குதிரை பூனை, நாய் இரத்தத்திற்குமுள்ள பேதத்தைக் கண்டுபிடித்தார், மனிதன், குரங்குகள் வாலில்லாக் குறங்குகள் ஆகிய இவைகள் ஓரேவகுப்பு ஜெந்துகளானபடியால் அவைகளுடைய இரத்தத்திலிருக்கும் வித்தியாசத்தைக் கண்டுபிடிக்க முடியாமலிருந்தது. சிலகாலம் சென்று மனிதனுடைய இரத்தத்திற்கும் குறங்கின் இரத்தத்திற்குமுள்ள வித்தியாசத்தைக் கண்டுபிடித்தார். அப்போது மனிதனுடைய இரத்தத்திற்கும் வாலில்லாக் குறங்கினுடைய இரத்தத்திற்கும் வித்தியாசம் கண்டுபிடிக்கக் கூடாமலிருந்தது. இப்போது அந்த வித்தியாசத்தையும் கண்டுபிடித்துவிட்டார். ஆகவே இப்பொழுதும் கெமிகல் எக்ஸாமினர் ரிப்போர்ட் ஒரு குறிப்பிட்ட இரத்தம் மனிதனுடையதா அல்லவா என்று வியக்தமாய்க் கூறும்.

Act of The Government of Madras.

ஆலோசனை சபையிலுள்ள சென்னப்பட்டணம் கவர்னரவர்களால் செய்யப்பட்ட இந்த ஆக்டானது 1910-ம் ஸ் டிசம்பர்மீ 17வ சிறப்புற்றோங்கும் கவர்னரவர்களாலும், 1911-ம் ஸ் ஜனவரிமீ 12வ சிறப்புற்றோங்கும் கவர்னர் ஜெனரலவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, இதனுல் யாவர்கும் தெரியும்படி பிரசித்தஞ் செய்யப்படுகிறது:—

MADRAS ACT No. I OF 1911.

சென்னப்பட்டணம் 1911-ம் ஸ்லத்து I-வது ஆக்ட்.

AN ACT TO AMEND THE MADRAS COURT OF WARDS ACT, 1902.

1902-ம் ஸ்லத்துச் சென்னப்பட்டணம் கோர்ட்ஆவ் வார்ட்ஸ் ஆக்டைத் திருத்துவதற்கான ஆக்ட்.

—:o:—

பீடிகை.

1902-ம் ஸ்லத்துச் சென்னப்பட்டணம் கோர்ட் ஆவ் வார்ட்ஸ் ஆக்டைத் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனுல் விதிக்கப்படுகிறதென்னவென்றல்:—

பெயர்.

1. இந்த ஆக்ட் 1902-ஸ்லத்துச் சென்னப்பட்டணம் கோர்ட் ஆவ் வார்ட்ஸ் ஆக்டைத் திருத்துவதற்கான 1910-ம் ஸ்லத்து ஆக்ட் என்று சொல்லப்படும்.

சென்னப்பட்டணம் 1902-ம் ஸ்லத்து 1-வது ஆக்ட் 50-வது பிரிவுக்குப் பர்தியாக ஒரு நூதனப் பிரிவை அமைத்துக்கொள்வது.

2. 1902-ம் ஸ்லத்துச் சென்னப்பட்டணம் கோர்ட் ஆவ் வார்ட்ஸ் ஆக்ட் 50-வது பிரிவுக்குப் பர்த்தியாக அடியிற் கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்:—

வார்டிலுவது வார்டியன் மேலாவது நடத்தப்படும் வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கை.

“யாதொரு சிவில் அல்லது ரெவினியூ கோர்ட்டில் நடத்தப்படும் சகல வியாஜ்ஜியங்கள் அல்லது நடவடிக்கைகளிலும் வார்ட் வேறெருவர்மேல் வியாஜ்ஜியம் நடத்துவதா யிருந்தாலும் அவர் மேல் வேறொருவர் வியாஜ்ஜியம் நடத்துவதாயிருந்தாலும் அந்த வார்டியன் பெயரால் நடத்த வேண்டும்; மேலும் 24-வது பிரிவின்படி அந்த வார்டின் சொத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கிற மானேஜராவது, அப்படிப்பட்ட மானேஜர் எவரும் இராவிட்டால் 25-வது பிரிவின்படி மானேஜராகப் பிரவர்த்திக்க அதிகாரமுடைய உத்தியோகஸ்தராவது - சந்தர்பத்துக் கேற்றபடி வியாஜியத்துக்கு அடுத்த [illegible]ராகவாகிலும் சவரக்ஷகராகவாகிலும் அந்த வார்டுக்குப் பிரதிநிதியாயிருக்கவேண்டும்.”

சென்னப்பட்டணம் 1902-ஸ்லத்து 1-வது ஆக்ட் 51, 52-வது பிரிவுகளின் திருத்தம்.

3. 1902-ம் ஸ்லத்துச் சென்னப்பட்டணம் கோர்ட் ஆவ் வார்ட்ஸ் ஆக்ட் 51-வது பிரிவில் “கலேக்டர் அல்லது மானேஜர்” என்னும் வார்த்தைகளுக்கும் பர்த்தியாகவும் 52-வது பிரிவைச் சேர்ந்த முதல் வாக்கியத்தில் “கலெக்டராகிலும் மானேஜராகிலும்” என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாகவும் “மானேஜர் அல்லது 25-வது பிரிவின்படி மானேஜராகப் பிரவர்த்திக்க அதிகாரமுடைய வேறே உத்யோகஸ்தர்” என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

சென்னப்பட்டணம் 1902-ஸ்லத்து 1-வது ஆக்ட் 52-வது பிரிவின் திருத்தம்.

4. 1902-ம் ஸ்லத்துச் சென்னப்பட்டணம் கோர்ட் ஆவ் வார்ட்ஸ் ஆக்ட் 52-வது பிரிவைச் சேர்ந்த இரண்டாவது வாக்கியத்திலே “சந்தர்ப்பத்துக்கேற்றபடி கலெக்டர் பெயரிலாவது தம்முடைய பெயரிலேயேயாவது” என்னும் வார்த்தைகளை எடுத்து விட்டு, “மானேஜரானவர்” என்னும் வார்த்தைக்கு பர்தியாக மானேஜராவது மேலே சொன்ன வேறே உத்தியோகஸ்தராவது” என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

DEPARTMENT OF AGRICULTURE, MADRAS.

INDIVIDUAL MANURING OF PADDY.

நெல்நாற்று (ஒற்றை அலகு) கஜ நடவு, தனிமுதல் எருவிடுதல்.

நெல் சாகுபடியில் கிழத்தையுள்ளவர்கள் சென்ற சுமார் 5, 6, வருஷமாக நாற்றங்காலில் விதையைக் குறைத்துப் பரவி,அப்படி சிறுக விதை விடப்பட்ட நாற்றங்காலிலிருந்து கிடைக்கும் நாற்றை ஒவ்வொரு அலகாக (தனி முதலாக) நடுவதினால், விதை லாபமட்டுமன்று, நல்ல கண்டு முதலையும் அடையலாமென்று செவ்வையாய்க் கண்டுகொண்டிருக்கிறார்கள். ஒற்றை அலகுநட புதிதாய் எத்தனித்தவர்கள் முதல் 1 அல்லது இரண்டு வருஷத்தில் கொஞ்ச விஸ்தீரணத்தில் பரீக்ஷார்த்தமாக நட்டபோதிலும், வர வர தங்களுடைய முழு விஸ்தீரணத்திலும் ஒற்றை அலகாகவே நடப் பிரயாசம் படுகிறார்கள். அவ்விதமாய சாகுபடி செய்துவருகிறவர்களை விசாரித்தால் உண்மையாகவே தங்களுடைய முழு நிலத்திலும் ஒற்றை அலகு நடுவதில் சாதாரணமாக (பிடிபிடியாக) நடுவதினால் ஏற்படும் செலவைக்காட்டிலும் ஜாஸ்தியாவதில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவ்விதமாய் நட்டு அனுபவமில்லாதவர்களோ ஒற்றை அலகு நடுவதற்கு நாற்றங்காலுக்கும் வயலுக்கும் ஏராளமான உறம் முதலிய செய்நேர்த்திகள் செய்யவேண்டுமென்றும், ஜாஸ்தி கூலிகள் பிடிக்குமென்றும், இன்னும் பலவிதமான ஆக்ஷேபனைகள் சொல்லுவதுண்டு.

ஒற்றை அலகே அபிப்பியாசமாகக் கையாடி வருபவர்களுக்கு ஷை அபிவிருத்தி மார்கத்தினால் உண்டாகும் கண்டு முதலைக்காட்டிலும் ஜாஸ்தியான கண்டுமுதலைக் கொடுக்கக் கூடிய கஜ நடவு தனி முதல் எருவிடுதல், என்னும் அபி விருத்தியைப் பற்றி கீழே சொல்லப்பட்ட குறிப்புகள் உபயோகமுள்ளதாயிருக்கும். மேலே சொல்லப்பட்ட நடவு சென்ற வருஷத்தில் கும்பகோணம் தாலுக்கா, பாபநாசம் ஸ்டேஷனுக்கு தெற்கே சுமார் 4 மைல் தூரமுள்ள, திருக்கருகாவூரில் (திருக்களாவூர்) மகா-ள-ள-ஸ்ரீ T. S. நாராயணசாமி அய்யர் அவர்களால் பரீக்ஷார்த்தமாக நடத்தப்பட்டது. அது பின்வருமாறு ;—

பரீக்ஷார்த்தமாக நடப்பட்ட விஸ்தீரனம் 41 செண்டு நிலம். நடப்பட்ட ஸ்தலம் குருவை விதை விடப்பட்ட நாற்றங்கால் ஆனதாலும், ஷை பரீக்ஷை செய்ய யோசனை அவருக்கு பிற்பாடு தோன்றினபடியாலும், ஷை நடவுக்காக தனியாக நாற்று தயாரிக்கப்படவுமில்லை, ஷை-வயலுக்கு விசேஷித்த வேலைகளும் செய்யப்படவுமில்லை, நடப்பட்ட வயல் முன்னால் மண்வெட்டியால் கொத்தப்பட்டு மூன்றுசால் [illegible] உழப்பட்டிருந்தது. சாதாரணமாக (நெருக்க) விதை விடப்பட்ட பெரும்சம்பா (செம்பாளை) நாற்றிலிருந்து பட்டை உரப்புள்ளதாக பொறுக்கி நாற்பதாம் நாள் பிடுங்கப்பட்டு, அற்பசிமாத மத்தியில் நடவு நடப்பட்டது. நடவு சாலை சாலையாக எக்கண்டமும் 2 அடி இடைவெளி கொடுத்து ஒரே அலகு நடப்பட்டது. நடுவதற்கு முன் ஒவ்வொரு முதல் நடக்கூடிய இடத்தில் ஒரு சிராங்கை மணலுடன் ஒரு சிராங்கை தொழு (சாணி) எருவும் போட்டு கையால் குழப்பப்பட்டு, [illegible] நாற்று நடப்பட்டது, இப்படி எருவிட 12 வண்டி தொழு எருவும் 24 வண்டி மணலும் செல்லும். களை எடுக்கும் தருணத்தில் இடைவெளி மண்வெட்டியால் கொத்தப்பட்டது அந்த சமயத்தில் ஒரு ஏக்கருக்கு ஒரு பாரம் வீதம் ஷை 41 செண்டுக்கு உள்ள 8 மணங்கு கடலைக்கொட்டைப் பிண்ணாக்கை 2 வண்டி சாம்பலுடன் கலந்து, அதை 2 தடவையாகப் பிரித்து 20 நாளைக்கொருதரம் அதை முதலின் பேரில் வீதம் செய்து, ஒவ்வொரு முதலை சுற்றியும் கையால் பரித்துக்கொண்டு எருவைக்கப்பட்டது. அறுவடையாகும் வரையில் அங்குலம் ஜலம் பாய்ச்சப்பட்டது. முதல் 1க்கு 60 களைக்கு குறையாமல் 100 அலகு வரையிலுமிருந்தது. இதற்கு ஆள் கூலி, எருக்கிரயம் ஜாடவாக ஏற்பட்ட செலவு ரூபாய் 11-0-0ஆச்சுது. இதே விஸ்தீரணமுள்ளதும் இதே மாதிரி குருவை விரை விட்ட நாற்றங்காலில் சாதாரண நடவில் 6 கலம் (144 பட்டணம்படி) நெல்லும் 12 கட்டு வைக்கோலும் காண, இந்த வயலில் 26 கலம் நெல்லும் (ஏக்கர் 1க்கு 1522 பட்டணம் படி) 36 கட்டு வைக்கோலும் கிடைத்தது.

இந்த வருஷத்திலும் மகா-ள-ள-ஸ்ரீ நாராயணசாமி அய்யரவர்கள் மேலே சொல்லிய நடவை சுமார் 4-33 ஏக்கர் நிலத்தில் நடத்தியிருக்கிறார்கள். அதில் 3·33 ஏக்கர் நிலத்தில் பெரும்சம்பா என்ற செம்பாளை நெல்வகையையும், மீதி ஒரு ஏக்கர் நிலத்தில் மத்திய மாகாணத்திலிருந்து இந்த ராஜதானிக்கு புதிதாய ,சில வருஷங்களுக்கு முன் கொண்டு வரப்பட்ட பாங்கு நெல்லையும் பரீக்ஷார்த்தமாய் நட்டிருக்கிறார்கள் பெரும்சம்பா—நாற்றங்காலில் செண்டு 1க்கு ¾ பட்டணம்படி வீதர ஆடிமாத முதலில் விரை விடப்பட்டு, ஆவணிமீ 15 தேதில நடவு செய்யப்பட்டிருக்கிறது. வரிசைகள் சென்ற வருஷத்தைப்போலவே 2½ அடி தூரமுள்ளது. ஆனால் வரியில் முதல்கள் ஒரு அடி தூரத்தில் நடப்பட்டிருக்கிறது. சுமார் ஒரு பட்டணம்படி விதவையைக் கொண்டு 2-2½ ஏக்கர் நிலம் நடவாயிருக்கிறது. நடவாகி இப்போது ஒரேமாதமாயிருந்தும், ஒரு முதலுக்கு 50 களைக்கு குறையாமலும், சராசரியில் 60-65 களைக்கு குறையாமலும் இருக்கின்றன. நடுவதற்குமுன் சென்ற வருஷத்தைப் போலவே எருவைக்கப்பட்டதைத் தவிர,வேறு எரு இன்னும் வைக்கப்படவில்லை. இடைவெளி ஒரு தடவை நடவான 25-ம் நாள் மண் வெட்டியால் கொத்தப்பட்டு இப்போது முதல்களுக்கு எருவிட தயாயிருக்கிறது பாங்கு நெல் 4½ மாத வயதுள்ள இந்த நெல் தினுசானது வைகாசிமீ முதலில நாற்றங்காலில் விதை விடப்பட்டு ஆனிமீ முதலில் நடவாயிருக்கிறது. வரிசைக்கு வரிசை 2 அடியும், வரிசையில் 1 அடியும் வைத்து ஒரே முதல் நடப்பட்டிருக்கிறது. நட்ட 1½ மாதத்தில் இடைவெளி கொத்தப்பட்டு ஏக்கர் 1க்கு 5மணங்கு கடலைக்கொட்டைப் புண்ணாக்கும் 2 வண்டி சாணி எருவும் முதலின்பேரில் வீதம் செய்து வைக்கப்பட்டது. இப்போது பயிர் கதிராகி இன்னும் ஒருவாரம் அல்லது 10நாளில அறுவடையாகும் ஸ்திதியிலிருக்கிறது. ஒரு முதலில் 30 களைக்கு குறையாமலும், சராசரிக்கு 35 முதல் 50 களை வரையிலும் இருக்கிறது.

மேலே சொல்லப்பட்ட இரண்டுவகைகளும் காலத்தில நடப்பட்டு இப்போது பயிர் இருக்கும் அதிதியைக் கவனிக்கும்பொழுது சென்ற வருஷத்தில் கிடைத்த கண்டு முதலைக்காட்டிலும் இரட்டிப்பு கண்டு முதல் கிடைக்குமென்று தோன்றுகிறது, ஷை சாகுபடியையும் இன்னம் ஒற்றை அலகில் பத்தி நடவு என்ற சாலை நடவையையும் பார்வையிட இது நல்ல சமயமாகையால், இந்த நூதனமுறையை நம ஜில்லாவிலுள்ள மிராசுதார்கள் திருக்கருகாவூருக்குப் போய் நேரில் பார்த்து தங்களுடைய பண்ணைகளில் கொஞ்ச விஸ்தீரணத்திலாவது அடுத்த வருஷத்தில் நட்டு பெருத்த லாபத்தை அடையவேண்டுமென்றநோக்கத்துடன் இது எழுதப்பட்டது.

Cases from the Indian Law Reports.

இந்தியன் லா ரிபோர்ட்டு கேசுகள்.

LOWER BURMA CHIEF COURT.

லோயர் பர்மா சீப் கோர்ட்டு.

—:o:—

ரேகுலர் சிவில் அப்பீல் நே. 351 of 1908.

ஜட்ஜு:—மிர் ஜ. ராபின்சன்...முன்பாக.

மாங்சிட்பீ .... அப்பீல்வாதி.

Vs

மாடின் .... பிரதிவாதி.

புத்தரின் சட்டம்-தாய் தகப்பன் அனுமதியின்றி ஒரு மைனர் வயதுள்ள பெண்ணுக்கு விவாகம் செய்தல்-பிறகு தாய் தகப்பன் வீட்டில் புருஷனும் பெண்சாதியுமாய் புணர்ந்து வாழ்தல்-சம்மதத்தை ருஜு செய்யவேண்டியது.

மி-ர். பர்ஜோர்ஜி ... அப்பீல்வாதியின் வக்கீல்.

மி-ர். ஹால்கார் .... பிரதிவாதியின் வக்கீல்,

தீர்மானம்.

கேசின் விபரம்:— விவாக சம்மந்தமாயுண்டான சுதந்தரங்களைப் பெறுவதற்காக வாதி இந்த தாவா கொண்டுவந்தான். வாதியும் பிரதிவாதியாகிய பெண்ணும் ஒன்று சேர்ந்துவீட்டைவிட்டு வெளியே போயிருந்து 5 நாள் கழிந்தபின் பிரதிவாதியாகிய பெண்ணினுடைய தாய் தகப்பன்மார் வீட்டுக்குச் சென்றார்கள். அந்தப்பெண்ணினுடையதாயோ அவர்களை தன்னுடைய வீட்டில் வாசம் செய்ய விடமாட்டேனென்று தடுத்து அவளுடைய பெண்ணாகிய பிரதிவாதியை வாதியுடன் அனுப்பி விட்டாள். அதற்குப்பின் அவர்களிருவரும் வாதியினுடைய வீட்டில் வாசம் செய்துக்கொண்டிருந்தார்கள். வாதி பந்தய சவாரி செய்துக்கொண்டு ஊரைவிட்டு வெளியே போயிருந்தபோது பிரதிவாதியாகிய அந்தப்பெண் அவளுடைய புருஷனைவிட்டு அவளுடைய தாயாரிடம் சென்று அவளுடன் வாசம் செய்துக்கொண்டிருந்தாள். இவர்ள் இருவரும் சதி புருஷாளாய் ஒன்று சேர்ந்து பயிரங்கமாய் வாசம் செய்துக்கொண்டுவந்ததின்பின் இவர்கள் பிரதிவாதியாகிய பெண்ணினுடைய தாயார் வீட்டுக்குச் சென்று அவள் வீட்டில் எல்லோரும் ஒன்று சேர்ந்து அவளுடைய வீட்டில் போஜனதி செய்வது வழக்கம்தானென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

பிரதிவாதி சொல்வது யாதென்றால்:—வாதி அவளைப் பலமுறை அடித்ததாகவும், வாதி அவளுக்கு கொடுத்த காப்பு கொலுசு இவைகளைப் பிடுங்கிக் கொண்டதாகவும், வாதி அவளைவிட கேவலமானவளிடம் சென்று புருஷனும் பெண்சாதியுமாயிருப்பதாகவும், இதன்றி அவள் செய்துக்கொள்ளப்பட்ட விவாகம் அவளுடைய தாய் தகப்பன்மாராகிய அவளுடைய பெற்றோருடைய சம்மதமின்றி செய்துக்கொண்டமையால் அப்படிப்பட்ட விவாகம் புத்தர் சட்டப்படி செல்லத் தக்கினதல்லவென்றும் சொல்லுகிறாள். இந்த கேசில் முக்கியமாய்த் தீர்மனிக்கவேண்டிய அம்சங்கள் யாதென்று கவனிக்குமளவில் மேற்கூறிய காரணத்தின் வலிவினால் அவள் செய்துக்கொண்ட விவாகம் சட்டப்படி செலாவணியுள்ளதல்லவா? என்பதும். அப்படிச்செய்துக்கொள்ளப்பட்ட விவாகம் சட்டப்படி செல்லத்தக்கினதானால் வாதி பிரதிவாதியாகிய அந்தப் பெண்ணை பலவிதமான இம்சைகள் செய்து அவளைவிட தாழ்ந்தவளுடன் புருஷனும்பெண்சாதியுமாய் வாசம்செய்கிறானென்னும் காரணத்தைக்கொண்டு என் புருஷனும் பெண்சாதியும் தங்களுடைய விவாக சுதந்தரங்களைப் பெறுவதற்கு டிக்ரிசெய்யலாகாதென்பதும் தான்.

புருஷனாகிய வாதி அவனுடைய பெண்சாதியை இம்சை செய்தானென்பதற்கு பிரதிவாதியின் வாக்குமூலம் தவிர வேறே சாக்ஷியம் கிடையாது. ஆனால் வாதி அவனுடைய பெண்சாதியாகிய பிரதிவாதி பிவீஸ் என்பவன் வீட்டுக்கு இராக்காலத்தில் போவது சரியல்லவென்று வாதி அவளைப் பலமுறைகளில் கண்டித்துத் தடுத்தும் அவள் இராக்காலத்தில் பிவீஸ் என்பவனுடைய வீட்டிற்குப் போய்க்கொண்டிருப்பதின் விஷயமாய் சில சச்சரவுகள் நேரிட்டு அவர்கள் இருவரும் வைத்துக்கொண்டார்களென்பதை வாதி ஒப்புக்கொள்ளுகிறான். பிரதிவாதி தன்னை வாதி இம்சை செய்து நடத்தியதற்காக அவள் அவளுடைய தகப்பனை சாக்ஷியாகக் கூப்பிட்டாள். வேறே சாக்ஷியம் ஒன்றும் கிடையாது. இந்த கேசில் வாதிக்கு டிக்ரி கொடாமல் தீர்மானம் செய்வதற்காக வேண்டிய இம்சை வாதி செய்திருக்கிறானென்று சொல்லுவதற்கு நியாயமே கிடையாது.

வாதி அவனுடைய பெண்சாதியாகிய பிரதிவாதியைப் பார்க்கிலும் கேவலமான ஸ்திரீயை பெண்சாதியாய் வைத்திருந்தானென்பதற்கு சாக்ஷியமே கிடையாது. வாதியும் அந்தப் பேச்சு சுத்தப் பொய்யென்று சொல்லுகிறான். ஆகையால் வாதி, பிரதிவாதி சொல்லுகிறபடி வேறொரு கேவலமான ஸ்திரீயைப் பெண்சாதியாய் வைத்துக்கொண்டிருந்தானென்பது நிஜமல்லவென்று சந்தேகமின்றிச் சொல்லக்கூடும்.

பிறகு வாதியும் பிரதிவாதியும் செய்துக்கொண்ட விவாகம் பிரதிவாதி அவளுடைய தாய் தகப்பன்மாராகிய பெற்றோருடைய அனுமதியின்றி அவள்

மைனராயிருக்கும்போது செய்துக்கொண்ட விவாகம் சட்டப்படி செல்லத்தக்கினதா அல்லவா என்று பார்க்கவேண்டியது. அவளுடைய வயதோ இப்பொழுது 20 என்பதாகவும் ஏற்படுகிறது. அப்படிக்கில்லாமல் அவள் வாதியுடன் வெளிதாண்டிப் போகையில் அவள் யுக்தவயது வராத மைனராயிருந்தாலும் அவள் அவளுடைய பெற்ருேருடைய அனுமதி பெருமல் செய்துக்கொள்ள லாகாதென்றும் அவள் அவளுடைய தாய் தகப்பன்மாருடைய சம்மதி பெறவேண்டியது அவசியம்தானு வென்றும் கவனிப்போம். அப்படிப்பட்ட சம்மதம் அவசியம்தானென்று 4 லோ. ப. ரி. 340; 1 லோ. ப. ரி. 27 இந்த கேசுகளில் இரண்டு ஜட்ஜுகள் தீர்மானம் செய்திருந்தபோதிலும் அந்த கேசில் சீப் ஜட்ஜு சொல்லியிருக்கும் அவருடைய தாத்பரியம் அப்படிக்கிருந்திடினும் இந்த கேசில் பிரதிவாதி வாதியை இச்சித்து அவனுடன் வெளிதாண்டி போய் பிறகு அவள் அவளுடைய தாய் தகப்பன்மார் வீட்டிற்கு வந்து அவனுடன் புருஷனும் பெண்சாதியுமாய் பயிரங்கமாய் எல்லோரும் அறிய ஒன்றாய் போஜனுதி முதலானது செய்துக்கொண் டிருந்தமையால் இவர்கள் இவ்விதமாய் விவாகம் செய்துக்கொண்டதை பிரதிவாதியின் பெற்ருேர்கள் சம்மதித்தவர்கள்தானென்று அவர்களுடைய பின்னிட்ட நடத்தையினலேயே ஸ்பஷ்டமாய் தெரிய வருகிறது. இந்த கேசுக்கு பிரதிவாதி இதை ஓர் சாக்காய் சொல்லுகிறுள். கட்சிதாரர்களுடைய சினேகிதர்களும் அவர்களுடைய அருமுகமானவர்களும் இவர்கள் புருஷனும் பெண்சாதியுமாய் வாழ்ந்திருந்ததாகத் தான் பாவித்து வந்தார்கள்.

ஆகையால் வாதியும் பிரதிவாதியும் செய்துக்கொண்ட விவாகம் சட்டப்படி செலாமணியுள்ள விவாகம் தானென்றும், வாதி அவனுடைய பெண்சாதியாகிய பிரதிவாதியை இம்சை செய்தவனல்லவென்றும், வாதி அவனுடைய பெண்சாதியாகிய பிரதிவாதியைவிட கேவலமான ஸ்திரீயை பெண்சாதியாய் வைத்துக்கொண்டிருந்தவ னல்லவென்றும் கண்டு பிரதிவாதியாகிய அந்தப் பெண் வாதியாகிய அவளுடைய புருஷனிடம் மறுபடியும் சென்று அவனுடன் புருஷனும் பெண்சாதியுமாய் விவாகத்தினுல் உண்டாகிய சுதந்தரங்களை அனுபவித்துக்கொண்டு வாழ்ந்து வரவேண்டியதென்று வாதி பட்சம் டிக்ரி செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 8-வது வால்யம் 3-வது பாகம் 437. 3 ப. லா. டை. 43.

அப்பீல் கேஸ் (இரண்டாவது அப்பீல்)

ஜட்ஜிகள். 1. ஜஸ்டிஸ் சந்தரவர்கார்

2. ஜஸ்டிஸ் ஹீடன்

வாதி. முரளீதார் நாத்

பிரதிவாதி. வல்லபதாஸ் முரளீதார்

சாரம். கார்டியன் வார்டு சட்டம்; 1890-ம்௵த்திய VIII-வது ஆக்டு 41-வது பிரிவு—கார்டியன்—கோர்ட்டாரால் நீக்கப் படுவது—அதன் முடிவு.

சட்டம். 1890-ம் வருஷத்திய கார்டியன் வார்டு சட்டம் 41-வது பிரிவின் படிக்கு; ஒரு கார்டியன் உத்தரவாதத்தினின்றும் கோர்ட்டாரால் விடுதலைச் செய்யப் பட்டால், அவ்வாறு விடுதலைச் செய்யப்பட்ட பிறகு அவன் பாதுகார்த்து வந்த மைனரின் ஆஸ்தி விஷயமாக அவன் மோசம் செய்தானென்று தெரிய வந்தாலொழிய, மற்ற சந்தர்ப்பங்களில் அந்த ஆஸ்தியின் சம்மந்தமாக அவன் மீது கொண்டு வரப்படும் கேசுகளெல்லாம் செல்லாது. அவற்றினின்றும் அவன் காக்கப்படுவான்.

முதலில் இயோலா என்னும் ஊரில் சப் ஆர்டினேட் ஜட்ஜியால் தீர்மானிக்கப்பட்டது; பிறகு நாஸிக் ஜில்லாஜட்ஜியிடம்அப்பீல் செய்துக்கொள்ளப்பட்டு அவரால் கீழ்கோர்ட்டின் தீர்மானம் ஸ்தாபிக்கப்பட்டது; அதன்பேரில் ஹைகோர்ட்டுக்கு மறுபடியும் அப்பீல் செய்துக்கொள்ளப்பட்டது.

விவரம்.—நாது என்பவனொருவன் இரண்டு மனைவிமார்களை விட்டு விட்டு இறந்து போனுர். அந்த மனைவிமார்களிருவரில் ஒருத்தி விதவா விவாஹம் செய்துக்கொண்டாள்; மற்ருெருத்தி பகிரதி என்னும் ஒரு பெண் குழந்தையை விட்டு விட்டு 1888-வது வருஷம் இறந்து விட்டாள். (இந்த பகிரதி என்பவள் வாதி முரளிதார் நாதருடைய பெண்சாதி) 1889-ம் வருஷம் இரண்டாவது பிரதிவாதியாகிய கெமசண்டு என்பவர் மைனராகிய பகிரதியின் ஆஸ்திகளைப் பார்த்துக் கொள்ளவும் பாது காக்கவும் கார்டியனுக ஏற்படுத்தப்பட்டார் இந்த பகிரதி என்பவளும் இறந்து விட்டாள்; அவளுக்குப் பிறந்த ஒரு இளம் பெண்குழந்தையும் 1903-ம் வருஷத்தில் மரணமடைந்தது. அந்தக் குழந்தையின் தந்தையாகிய முரளீதார் நாதர் (வாதி) அந்தக் குழந்தையின் பிறகு ஆஸ்திக்கு வார்சுதாரராஞர்.

கார்டியனுடைய ஆதீனத்திற்கு வந்த ஆஸ்திகளில் ஒரு பெருந் தொகையுள்ள பணமும் சேர்ந்தது. இந்தப் பணத்தை கார்டியனுகிய கெமசண்டு (2-வது பிரதிவாதி,) முதல் பிரதிவாதியாகிய வல்லபதாஸ் முரளிதார் மானேஜ்மெண்டு செய்துக்கொண்டு வந்த கங்க்ராம் சபில்தாஸினுடைய பாங்கியில் வைத்தான். பாங்கிக்காரர்கள் 1893-94 வருஷம் வரையிலும், வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு 4½ ரூ

வீதம் வட்டி கொடுத்துக் கொ... டீட வந்தார்கள். பிறகு நிறுத்தி விட்டார்கள்.

1904-ம் வருஷத்தில் கெமசண்டு கார்டியன் வேலையிலிருந்து தன்னை விடுதலைச் செய்ய வேண்டுமென்று கோர்ட்டாருக்கு மனு செய்துக் கொண்டான். அவனுடைய மனுவின் படிக்கே, வாதி கூடாதென்று தடுத்தபோதிலும், கோர்ட்டார் கார்டியனை விடுதலை செய்தார்கள்.

பிறகு 1906-வது வருஷத்தில் வாதியாகிய முரளீதாஸ் நாதர் பிரியாது செய்தார். 1. பாங்கிக்காரர் தனக்கு கொடுக்க வேண்டிய மீதி வட்டியும் முதலும் வேண்டுமென்றும் (2) இரண்டாவது பிரதிவாதியும் கார்டியனும் ஆகிய கெமசண்டு அந்த பணத்தை ஜாக்கிரதையாக பார்க்காமையால் மோசஞ் செய்தாரெனவும் அதனுல் நேரிட்ட நஷ்டக்கிரயம் வேண்டுமென்றும் தாவா. இதன்பேரில் ஸப் ஆர்டினேட்டு ஜட்ஜி, முதல் பிரதிவாதியாகிய பாங்கிக்கார் கொடுக்க வேண்டிய பாக்கி ஒன்றுமில்லை யென்றும், கெமசெண்டு கடனை சீக்கிரத்தில் வாங்காமையால் அலக்ஷியமாக நடந்தானென்பது பிசகென்றும், ஆகையினுல் அவன் உத்திரவாதியல்லவென்றும் தீர்மானம் செய்தார்.

இந்த கேஸ் ஜில்லா ஜட்ஜிக்கு அப்பீல் செய்துக் கொள்ளப் பட்டது. ஜில்லா ஜட்ஜியால் கீழ் கோர்டின் தீர்மானம் ஸ்தாபிக்கப்பட்டது. தன்னுடைய தீர்மானத்தில் ஜில்லா ஜட்ஜி சொன்னதாவது, "கெமசண்டு என்பவன்கார்டியனுகநடந்துக் கொள்ளவேண்டிய படிக்கு நடந்தானென்று சொல்லமாட்டேன். பணம் நித்திய சிலவுக்கு வேண்டியதைக் காட்டிலும் அதிகமாக இருந்தாலும், அது வட்டி கொடுக்காத ஒரு பாங்கிக்காரிடத்தில் இருந்ததென்று தெரியவந்தாலும் அவன் அந்தப்பணத்தை உடனே வாங்கி, பணத்தை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளத்தக்கவும் வட்டியைத் தரவல்லவும் ஆகிய ஒரு பாங்கியில்கட்டி யிருந்திருக்கவேண்டியது, அப்படி செய்திருந்தால், சொத்துக்காருக்கு அதனுல் இலாபம் கிடைத்திருக்கும். அதை விட்டு இத்தனை வருஷகாலமாக, வட்டி யில்லாமல் அந்த பணத்தை ஒரு பாங்கியில் வைத்திருந்தது சரியானதன்று. தன்னுடைய சொந்த பணமாக விருந்தால் ஒரு ஜாக்கிரதையான மனிதன் அப்படித்தான் செய்வான். அதேமாதிரியாக கார்டியனுக இருப்பவனும், மைனரின் பணத்தைத் தன் பணமாகவே எண்ணி செய்திருக்க வேண்டும். கங்காரம் பாங்கி மிகவும் பத்திரமானதென்றும், அதனுல் தான் அந்த பணத்தை அவ்விடத்திலேயே வட்டிக்கு கூட இல்லாமல் வைத்திருந்ததென்றும் சொன்னுல் போதாது. இதைப்போலவே பத்திரமாகிய பாங்கிகள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றில் ஒன்றில் பணத்தை கட்டி வைத்திருந்தால், வட்டி வந்திருக்கும் ஆதலால், கெமசண்டு செய்தது அஜாக்கிரதை யானது. ஆனுல், இந்த காரணத்தைக் கொண்டு அவன் மீது தாவா செய்ய வாதிக்கு இடமில்லை. ஏனென்ருல் கெமசண்டை கார்டியன் தொழிலிலிருந்து ஜில்லா கோர்ட்டார் விடுதலைச் செய்திருக்கிருர். அதனுல் அவர் மோசம் செய்தானென்று தெரிய வந்தாலல்லது, வேறெ விஷயங்களில் அவர் மீது எந்த கேசும் செல்லாது. இந்த கேசில் அப்படிக்கு மோசம் ஒன்றும் கிடையாது. கெமசண்டு மோசம் செய்ய வேண்டுமென்றும் எண்ணத்தால் பணத்தை கங்காரமிடத்தில் வைக்க வில்லை. அவ்வாறு செய்தது மைனருக்கு நஷ்டம் உண்டாக்க வேண்டு மென்னும் எண்ணத்தாலன்று. முன்னுடியாகவே அறியத்தக்க உண்மையான நஷ்டம் வரும் என்று தெரிந்தும் அலக்ஷியமாக இருந்ததாக சொல்ல முடியாது. ஆகையினுல், இந்த பிரியாது கெமசண்டு மீது செல்லாது என்பது என்னுடைய எண்ணம்.

இதன்பேரில் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டது.

ஹைகோர்ட்டு தீர்மானம்.

சந்தரவர்கார் ஜட்ஜி;

வாதியின் பிரியாதுக்கு முதலாவதுப் பிரதிவாதியாகிய முரளீதார் உள்ளடங்க வில்லை யென்று கீழ்க் கோர்ட்டார் சொன்னது சரியென்று எனக்குத் தெரிகின்றது.

எவ்வளவு தூரம் இரண்டாவது பிரதிவாதியின் பிள்ளைகள் உத்தரவாதிகள் என்பது கேள்வி. இவர்களுடைய தகப்பனுர் ஒரு மைனரின் ஆஸ்திக்கு கார்டியனுக கோர்ட்டாரால் ஏற்படுத்தப் பட்டு, அந்த மைனர் இறந்த பிறகு கோர்ட்டாரால் விடுதலைச் செய்யப்பட்டார். கார்டியன் வார்டு சட்டம் 41-வது பிரிவு 4-வது வாக்கியத்தில் சொல்லியிருப்பது என்ன வென்ருல், தன்னுடைய ஆதீனத்திலிருக்கும் மைனரின் ஆஸ்தியையாவது அல்லது கணக்குகளையாவது கோர்ட்டார் சொன்னபடிக்குக் கொடுத்துவிட்டால், ஒரு கார்டியன் மைனரின் ஆஸ்திகளுக்குள்ள உத்தரவாதத்தினின்றும் விடுதலைச் செய்யப்படுவான். ஆனுல் விடுதலைச் செய்யப்பட்ட பிறகு அவன் மோசம் செய்திருக்கிருன் என்று தெரிய வந்தால் அவன் மேல் எடுக்கும் கேசுகள் செல்லும். இல்லா விட்டால் செல்லாது. கார்டியன் அப்படிக்கு ஏதாவது மோசம் செய்ததாக இந்த கேசில் ரூபிக்க வில்லை; ஆனுல் கார்யடின் வர்ட் சட்டத்தின் படிக்கு மாத்திரம் கார்டியன் மீது கேசுகள் செல்லாதென்றும், மீதி காரணமாகிய சட்டத்தின் படிக்கு அவன் மேல் கேசுகள் எடுக்க இடம் உண்டென்றும் வாதியின் லாயர் சொல்லுகிருர் அப்படிக்கு இரண்டு சட்டங்களுக்கும் ஏதவாது வித்தியாசம் உள்ளதென்று வைத்துக்கொண்ட போதிலும், இவ்விடத்தில் பிரியாது என்னவென்ருல், கார்டியன் தன் பணத்தை

யோசனை செய்யாமல்அஜாக்கிரதையாக வட்டி வராத இடத்தில் கட்டிவைத்தானென்பதுதான். இதன் அர்த்தமென்னவென்றல், இரண்டாவது பிரதிவாதியாகிய கெமசண்டு சட்டத்தின் 27-வது பிரிவின்படிக்கு மைனர் சொத்தின் விஷயத்தில் நடக்கவில்லை என்பது அந்தப் பிரிவில் சொல்லியிருப்பது என்னவென்றல், ஜாக்கிரதையுடைய ஒருவன் தன்சொந்தப்பணத்தை எப்படிப் பார்ப்பானே அப்படியேதான் ஒரு கார்டியனும் மைனர் சொத்தைப் பார்த்துக் கொள்ள வேண்டு மென்பது புத்திசாலியாகிய ஒருவன் தன்னுடைய பணத்தை பத்திரமான இடத்தில் வட்டிக்கு கொடுப்பான். இப்பொழுது பிரதிவாதிகளாக இருப்பவருடைய தந்தையாகிய கெமசண்டு இதைச் செய்யவில்லை. அதனல் சட்டத்திற்குப் பிரதியேகமாக அவன் உத்திரவாதியாகிருன் என்பதலல. அப்படியாவதும் சட்டத்திற்கும் அடங்கினதுதான இரண்டாவது பிரதிவாதியாகிய கார்டியனை கோர்ட்டார் விடுதலை செய்திருக்கிறபடியால் அவன் மேல் இந்த கேசு செல்லாது.

ஆகையினல் கீழ் கோர்ட்டார் செய்த தீர்மானம் கோர்ட்டு சிலவுடனே காயப் படுத்தப் பட்டது. முதல் பிரதிவாதிக்கும், இரண்டாவது மூன்ருவது பிரதிவாதிகளுக்கும் (கார்டியனுடைய பிள்ளைகள்) வெவ்வேருக சிலவு கொடுக்கப் படவேண்டும்.

MADRAS HIGH COURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 1542 of 1909.

ஜட்ஜுகள் :— { மி-ர். ஜ. அப்படுர் ரஹிம் / மி-ர். ஜ. எய்லிங் } முன்பாக.

சேனுக பாண்டியதேவன்......பிரதிவாதி...அப்பீல்வாதி.

VS

வீரபத்ரமூப்பன் வகையரா...வாதிகள்...ரெஸ்பான்டென்டுகள்.

மதராஸ் எஸ்டேட் ஆக்ட் (ரென்ட் ரெகவரி ஆக்டு) (VIII of 1865) மதராஸ் எஸ்டேட் லான்ட் ஆக்ட் (1 of 1908) பூமிக்குடையவனும் குடிக்கூலிதார னென்னும் பாயக்காரியும் பாயக்காரி விருத்தி செய்வதற்கு ஹக்குண்டா?—பழைய ஆக்டின் கீழ் கொண்டுவந்த தாவா—புது ஆக்டு அதற்குச் சம்மந்தப்படுமோ? பாயக்காரிதாரன் தான் பயிர் செய்வதற்கு குடிக்கூலிக்கு எடுத்துக்கொண்ட தாவாவில் விவரித்திருக்கப் பட்ட அவனுடைய பட்டா நிலத்தில் வெத்திலை பயிர் செய்வதை பூமிக்குடையவன் ஆக்ஷேபித்து அதன் விஷயமாய் சம்மந்தப்படுவதைத் தடுக்கும்பொருட்டு பழைய ரென்ட் ரெக்கவரி ஆக்டி (8 of 1865) ன்கீழ் பாயக்காரி தாவாவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அந்த டிக்ரியின்பேரில் அப்பீல் செய்துக்கொண்டதில் சப் கோர்ட்டார் வாதி பட்சம் டிக்ரி செயதாாகள. சப்கோர்ட்டார் டிக்ரியின்பேரில் ஜமீன்தார் இந்த இரண்டாவது அப்பீல் செய்துக்கொண்டார். குடிக்கூலிதாரன் தாவா நிலத்தில் செய்த விருத்தியின் விஷயமாய் கூட புது ஆக்டு சம்பந்தப் படுமென்று தீர்மானம் செய்து இந்த இரண்டாவது அப்பீலைத் தள்ளுபடி செய்யப்பட்டது

கேசின் விபரம்:—வாதிகளாகிய சேத்தூர் ஜெமீன்தாரியின் பாயக்காரிகள் பிரதிவாதியாகிய ஜெமீன்தாரியின் உத்தரவின்றி (அனுமதியின்றி) தாவா நிலங்களில் வெத்திலைக் கொடிப்பயிர் செய்வதற்கு ஹக்குண்டென்று டெக்லேர் செய்து பிரதிவாதியாகிய ஜெமீன்தாரர் பாயக்காரிகள் அவர்களுடைய நிலங்களில் கொடிக்கால் பயிர் செய்யலாகாதென்றும் தடுக்கலாகாதென்றும் சாஸ்விதமான இஞ்ஜெங்க்ஷன் உத்தரவு பிறப்பிக்கும்படிக்கு இந்த தாவா கொண்டுவந்தார்கள்.

பிரதிவாதியின் வாதம்:—வாதிகளாகிய பாயக்காரிகள் தாவா நிலங்களில் நெற்பயிர் தவிற வேறெந்தப் பயிரும் செய்வதற்கு ஹக்கு கிடையாதென்றும், வாதிகள் அப்படிப்பட்ட இதா பயிர் செய்வதற்கு எத்தனிப்பது ஜெமீனில் மாமூலாய் வழங்கி வரும் பழக்கத்திற்கு விரோதமென்றும், வாரப்பத்து நிலங்களை வைத்திருப்பவர்களாகிய வாதிகள் ஜெமீந்தாரின் அனுமதியில்லாமல் கொடிக்கால் பயிர் செய்ய நியாயமில்லையென்றும், கொடிக்கால் பயிர்கள் சாதாரணமாய் பண்ணை நிலங்களில் பயிர் செய்வது வழக்கமென்றும் பாயக்காரிகள் அவர்களுடைய பட்டா நிலங்களில் வெத்திலைப் பயிரிடவேண்டுமானல் ஜெமீன்தார் நெற்பயிர் செய்வதற்கு அதற்குப் பதிலாய் பண்ணை நிலங்கள் கொடுப்பது வழக்கமென்றும்,

பாயக்காரிகளாகிய வாதிகள் ஜெமீன்தாருக்குத் தெரிவிக்காமலேயே அவர்கள் கொடிக்கால் பயிர் செய்வதற்கு அவர்களுக்கு ஹக்குண்டென்று இரண்டு ருகாந்தரங்கள் எடுத்துக் காண்பித்தார்கள் அதாவது—

(1) பாயக்காரிகளாகிய வாதிகள் குடிவார சுதந்தரத்திற்குப் பாத்தியஸ்தர்களாகையால் அவர்கள் அவர்களுடைய நிலங்களில் எவ்விதமான பயிரும் செய்வதற்கு அவர்களுக்கு ஹக்குண்டென்றும்.

(2) ஜெமீன்தாரிக்குத் தெரிவிக்காமலேயே பாயகாரிகள் அவர்களுடைய நிலங்களில் எவ்விதமான பயிரும் அவர்களிஷ்டபடிக்குச் செய்வது ஜெமீனில் அநேக காலமாய் மாமூலாய் நடந்தேறிக்கொண்டு வருகிறதென்றும்-வாதித்தார்கள்.

டிஸ்ட்ரிக்ட் முனிசீபு அவர்கள் கேசை விசாரித்து கேசில் ருஜுவாகிய சாக்ஷியத்தின் பேரில் அப்படி செய்வது மாமூலாய் பழக்கத்தின் கீழ் வருகிறதென்பது ருசுவாகவில்லை யென்று கண்டு ஜெமீன்தாரியின் உர்தரவின்றி பாயகாரிகள் கொடிகால் பயிர் செய்வதற்கு ஹக்கு கிடையாதென்று தீர்மானித்து அவருடைய தீர்மானத்திற்காதாரமாய்-வெங்கடய்ய-VS-ராமசாமி இ-லா-ரி-28 ம 39; நாராயண ஐயங்கார்-VS-R. G. ஆர் இ. லா.ரி. 25 ம 252; காக்காய்யா அப்பய்ய-VS-ராய்ய வெங்கடபாப்பய்ய ராவ்-இ-லா-ரி 29 ம 24; 16 ம. லா. ஜ. 8 இந்த கேசுகளை எடுத்துதிருக்குர்.

மாமூலென்பதை வாதிகள் ருசு செய்ய வில்லை யென்று தீர்மானித்தார். அப்பீலில் சப்கோர்ட்டார் பின்வருமாறு பிரதிவாதியினிடம் ஸ்டேட்மென்ட் வாங்கினர்:—"ஜெமீன்தார் ஒத்துக்கொள்வதின் பேரில் பட்டாதார்கள் வெத்திலை பயிர் செய்ய ஹக்குண்டென்று பிரதிவாதி ஒத்துக்கொள்ளுகிருன். அந்த பாத்தியதை ஜெமீன்தாரிக்குமாத்திர முண்டென்பது சரியல்ல." நஞ்சை நிலத்தில் வெத்திலை கொடி பயிர் செய்வது கக்ஷிதாரர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்திற்கு விரோதமல்லவென்றும் அப்படி வெத்திலை பயிர் செய்வதினல் நிலம் பயிா செய்வதற்கு யோக்கியதை அற்றுபோகுமென்ருவது சட்டபடி. சுறம்பாய்விடுமென்ருவது ருசுவில்லையென்று

சொல்லி வாதிகள் பிரதிவாதியின் அனுமதி யின்றி கொடிகால் பயிர் செய்வதற்கு ஹக்குண்டென்றும் இ-லா-ரி 22 ம 39 தீர்ப்பை ஆதாரமாய் எடுத்துக்கொண்டு சப்கோர்ட்டார் தீர்மானித்தார்கள் ஜெமீன்தார் ஹைகோர்ட்டுக்கு இரண்டாவது அப்பீல் செய்துக்கொள்ள ரெஸ்பான்டென்டினுடைய வக்கீல் மி-ர். R. K. தாத்தாசாரியார் பின்வருமாறு வாதித்தார்.

"புது ஆக்ட் ஜாரியாவதற்கு முன்னுவது பின்னுவது கக்ஷிதாரர்களுக்குள் யாதேனும் ஏற்பாடிருந்தால் கூட அதனல் பாயகாரி அவன் அனுபவிக்கும் நிலத்தை பயிரிடுவதற்கு யோக்கியதை யில்லாமல் கறம்பாக்கி விடாமல் அல்லது அந்த நிலத்தின் பெருமானம் குறைந்து போகும்படிக்குச் செய்யாமல் அவன் தான் கோறியபடிக்கு எவ்விதமானப் பயிராவது செய்து உபயோகிக்கலாமென்று புது எஸ்டேட்லான்ட் ஆக்டின் 187-வது பிரிவிலும் பழய ரென்ட் ரெக்காவரி ஆக்டின் 8-வது பிரிவிலும் சொல்லியிருப்பதால் இந்த இரண்டாவது அப்பீலை தள்ளுபடி செய்ய வேண்டியதென்று வாதித்தார்."

மி-ர். P. S. சிவசாமி ஐயர்............அப்பீல்வாதிகளின் வக்கீல் இந்த புதிய எஸ்டேட்லான்ட் ஆக்டு ஜாரி செய்யப்பட்டு அமுலுக்கு வருவதற்கு முந்தி பசலியைப் பற்றி தாவா செய்திருந்தால் சப்கோர்ட்டார் பழய ஆக்டை இந்த கேசுக்கு ஆதாரமாய்க் கொண்டு தீர்மானித்தாரென்று எடுத்து காண்பித்தார்.

ரெஸ்பான்டென்டினுடைய வக்கீல் கூறிய வாதத்தை ஒப்புக் கொண்டு வாதிகளாகிய பாயக்காரிகள் அவர்களுடைய அனுபவத்திலிருக்கும் நிலங்களில் சட்டத்திற்கு விரோதமான் செய்கை ஒன்றும் செய்யாமல் அவர்களுடைய இஷ்டப்படிக்கு அந்த நிலங்களில் எவ்விதமான பயிரும் செய்ய ஹக்குண்டென்று தீர்மானித்து இந்த இரண்டாவது அப்பீலை தள்ளுபடி செய்தார்கள்.

மாகூர் இந்தியன் கேசுகள் 8வது வால்யம் 3-வது பாகம்434
1ம. வீ. கோ 673.

MADRAS HIGH COURT.
சென்னப்பட்டணம் ஐகோர்ட்.

—:o:—

ஜட்ஜிகள் :— { ஸர்ஜார்லஸ் ஆனல்ட் வொயிட், சீப் ஜஸ்டிஸ் / மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ். }

சி. வெங்கட்ட சுப்பய்யசெட்டி—வாதி—அப்பீல் வாதி.

V.

டீ. கோவிந்தராஜலு நாயுடு— 2-ம் பிரதிவாதி— அபீல் பிரதிவாதி,

இந்தியன் எவிடென்ஸ் ஆக்டு, பிரிவுகள் 91, 92. உடன் படிக்கையின் ஷரத்துகள்— ஒரு கம்பெனியார் பட்டகடனை கொடுக்கக்கட்டுப்பட்டவர்களாவார்.

கேசின்விபரம்:—இந்த வியாஜ்ஜியத்தில் 1, 2 பிரதிவாதிகள் இருவரும் ஒரு வியாபாரத்தில் பாகஸ்தர்களாய் கூட்டு வியாபாரம் செய்துக்கொண்டிருக்கிறார்கள். முதல் பிரதிவாதி வாதியினிடத்தில் ஒரு பாண்டின்பேரில் அந்தப்பத்திரத்தில் கண்டிருக்கும் தொகையை அந்த கம்பெனிக்காக கடன் வாங்கினர்களென்று தாவா செய்யப்பட்டது.

ஆனல் அந்த பத்திரத்தில் முதல் பிரதிவாதி மாத்திரம் கையெழுத்து செய்திருந்தான். முதல் பிரதிவாதி தனக்காகவும் அவனுடைய பாகஸ்தனென்று சொல்லப்படும் இரண்டாம் பிரதி வாதிக்காகவும் தாவா பத்திரத்தில் கையெழுத்துசெய்த சந்தர்ப்பங்களை வாதி ருஜுசெய்ய ஹக்கு கிடையாதென்று ஜில்லா ஜட்ஜி சொல்லுவதை நாங்கள் ஒப்புக் கொள்ளவில்லை.

ஒரு வியாபாரத்தைச் சேர்ந்த ஒரு பாகஸ்தன் பத்திரம் எழுதிக்கொடுத்து உடன்படிக்கை செய்துகொண்டால், அந்தஉடன்படிக்கையில் கையெழுத்துப்போட்ட பாகஸ்தனை மாத்திரம் கட்டுப் படுத்துமா அல்லது அவனுடன் கூட்டு வியாபாரஞ் செய்யும் பாகஸ்தனையும் சட்டப் பிரகாரம் கட்டுப் படுத்துமாவென்னும் விஷயம், எழுதிக்கொடுத்திருக்கும் உடன்படிக்கை தஸ்தாவேஜியின் ஷரத்துகளின்படி மாத்திரம் நிச்சயிக்க முடியாது (பாகஸ்த்தர்களாய் கூட்டுவியாபாரம் செய்வதை பற்றிய ஆக்டும் லிண்ட்லி என்பவரின் 7-வது எடிஷன் புஸ்தகத்தில் 207-வது பக்கத்தில் காணலாம்) ஒரு வியாபார விஷயமாய் ஒரே ஒரு பாகஸ்தன் அவன் பேரால் மாத்திரம செய்துகொள்ள வேண்டியதாயிருக்கிற ஒரு உடன்படிக்கையை செய்யும்பொழுது வாஸ்தவத்தில் அவன் அந்த வியாபாரம் செய்யும் கூட்டத்தாரெல்லோருக்கும் ஏஜண்டாகவும் செய்திருந்தால் அந்த ஒப்பந்த உடன்படிக்கையில் அவன் எல்லோருக்கும் ஏஜண்டாய் கையெழுத்து செய்ததாக கண்டிராவிடினும் அந்த கூட்டுவியாபாரத்தைச் சேர்ந்த பாகஸ்தர்கள் எல்லோரும் அந்தஒப்பந்தத்திற்கு உடன்பட்டவர்களாக எண்ணப்படுவார்களாகையால் பாகஸ்தர்கள் எல்லோர்பேரிலும் வியாஜ்ஜியம் செய்யலாம். இவ்விஷயம் பெக்காம் V. டிரேக் 11 M. W. 315 என்னும் கேசில் விசதமாய் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

அந்த வியாஜ்ஜியத்தின் விபரம்யாதெனில்; வாதி டிரேக், ஸ்டார்ஜி என்பவர்களுடன் கூட்டு வியாபாரம்செய்ய ஒப்புக்கொண்டு பாகப்பத்திரம் எழுதிக் கொண்டார்கள். ஆனல் அந்த உடன்படிக்கையின்படி நடவாமையால் வாதி டிரேக்,ஸ்டார்ஜி என்பவர்கள்பேரில் வியாஜ்ஜியம் செய்தான். அந்த பாகம் பத்திரத்தில் டிரேக் என்பவனுடைய பெயரைச் செப்பவில்லை. அவன் அந்த பாகப்பத்திரத்தில் கையெழுத்து செய்யவுமில்லை. அந்த ஒப்பந்த பத்திரம் ஏற்பட்ட காலத்தில் அவனை வாதியினுடன் ஒருபாகஸ்தனென்று நினைக்கவுமில்லை. ஆயினும் அந்த ஒப்பந்த பத்திரத்தில் சொல்லியிருக்கும் விஷயங்கள் மோத்தத்தில் கம்பெனி முழுதுக்கும் சம்பந்தப்பட்ட

கைகளுக்கு [illegible] மாய் தெரியவருகிற தாலையால் அந்த கம்பெனியைச் சேர்ந்த பாகஸ்தர்கள் மூவரும்ஒன்றுசேர்ந்து அந்தக் கடனைக் கொடுக்கக் கட்டுப்பட்டவர்களாவார்களென்று தீர்மானிக்கப்பட்டது. 18 ம வி. ஜ. 1.

—:o:—

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரனையர்.

அண்ணாமலை ஷ—
டிக்கிரியை பெற்றவன்-மனுதாரன் } அப்பீல் வாதி.

V.

ராமையர் வகையரு—
பிரதிவாதி } அப்பீல் பிரதிவாதி.

லிமிட்டேஷன் ஆக்டு 179 (4) ஆர்டிகலின்படி செய்தமனு—டிக்கிரியை நிறைவேற்றுவதற்கு ஆகாரமான—மனு சி. பு. கோ. 282-வது பிரிவு—டிக்ரியை கிரயம்பெற்றவன் தன்னை டிக்ரி கடன் தாரனாக ஒப்புக்கொண்டு டிக்கிரியை நிறைவேற்றுவதற்கு உத்தரவளிக்கும்படி செய்துகொள்ளும் மனு.

இது நாகப்பட்டணம் சப் கோர்டார் செய்த உத்திரவின் பேரில் செய்த அப்பீல்.

லாயர்கள் :—டி. நரசிம்ம ஐயங்கார் வாதி தரப்பிலும், டி வி. சேஷகிரி ஐயர் பிரதிவாதிகள் தரப்பிலும் பேசினார்கள்.

தீர்ப்பு :—இந்த வியாஜ்ஜியத்தில் அப்பீல் வாதி 1901ஆ டிசம்பர்மீ 2உ சி. பு. கோ. 232-வது பிரிவின்படி கோர்ட்டார் தன்னை ஒரு வியாஜ்ஜியத்தின் டிக்ரியை கிரயம் பெற்றவனாய் அங்கீகரித்து உத்தரவு செய்யும்படியாகவும் பிறகு தான் டிக்ரியை நிறைவேற்றுவதற்காக மனு செய்துக்கொள்வதாகவும் சொல்லி மனு செய்தான். 1902ஆ ஜூலைமீ 5உ கோர்ட்டார் வாதியின்மனுப்பிரகாரம் உத்தரவு செய்தார்கள். 1904ஆ மார்ச்சுமீ 11உ அப்பீல் வாதி டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்டு 89-வது பிரிவின்படி உத்தரவை ஊர்ஜிதப்படுத்தும்படி மனு செய்துக்கொண்டான். ஆனால் சப்கோர்ட்டார் டிக்கிரி ஆன தேதி (5-8-1900) முதல் மூன்று வருஷம் கடந்த பிறகு மனு செய்யப்பட்டதென்றும் 1901ஆ டிசம்பர்மீ 2உ செய்துகொண்ட மனு லிமிடேஷன் ஆக்டு இரண்டாவது ஷெடியூல் 179-வது ஆர்டிகல் (4) வினாதில் சொல்லியிருக்கிறபடி டிக்கிரியை நிறைவேற்றுவதற்காக செய்த ஒரு மனு ஆகாதென்று அபிப்பிராயப்பட்டு சப்கோர்ட்டார் தீர்மானத்தை ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் அங்கீகரிக்கவில்லை. மனுவில் எழுதியிருக்கும் விஷயங்களைப் படித்தால் டிக்ரியை கிரயம் பெற்றவன் அந்த டிக்கியை நிறைவேற்றுவதற்கு தனக்கு [illegible] உத்தரவு செய்யும்படி செய்த மனு வாகையால் அம்மனு டிக்ரியை நிறைவேற்றுவதற்கு அதை கிரயம் பெற்றவன் சட்டப்படி செய்துகொண்ட மனுவென்று தீர்மானித்தார்கள்.

இ. லா. ரி, 29 அ 301, 18 ம. லா. ஜ. 24.

BOMBAY HIGH COURT.

பம்பாய் ஐகோர்ட்.

—:o:—

சிவில் அப்பீல்.

ஜட்ஜி:—மி-ர். ஜஸ்டிஸ் சந்தவர்கர்.

ரிஸீவரின் நடவடிக்கை எப்பொழும் செல்லுபடியுள்ளது.

மெக்லியாட் வித்தால் ஷ வாதிகள் (அப்பீல் வாதிகள்)

கிசான் வித்தால்சிங்கு (அப்பீல் பிரதிவாதிகள்)

வியாஜ்ஜிய சங்கிரகம்.

ஒரு கோஜா வியாபாரியாகிய "சோம்ஜி யார்ப்பியா" என்பவர் 1885ஆ இறந்தார். அவருக்கு முதல் மனைவியால் 4 பிள்ளைகளும் இரண்டாவது மனைவியால் 4 பிள்ளைகளும் இருந்தார்கள். முதல் மனைவியின் 4 குமாரர்களும் தன்னுடைய எல்லா ஸ்தாவர சங்கம சொத்துகளையும் அடைகிறதென்றும் மற்ற பிள்ளைகளுக்கும் 30,000 ரூ ஆறு வருஷத்துக்குள் இவர்கள் கொடுத்து விடவேண்டுமென்றும் உயில் எழுதிவைத்தார். ஆகையால் சொத்து முதல் மனைவியின் புத்திரர்கள் வசத்திலிருந்தது.

1899ஆ ஜனவரிமீ 12உ முதல் மனைவியின் புத்திரர்கள் பம்பாய் பாங்கிக்காரரிடம் பெந்தகம் வைத்தாரசள்.

1903ஆ செப்டெம்பர்மீ 1உ பெந்தகப் பத்திரத்தின் ஷரத்துப்படி பெந்தகச் சொத்தை விற்கப் போகிறதாக விளம்பரஞ் செய்தார்கள்.

இது தெரிந்து இரண்டாவது மனைவியின் புத்திரர்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய 30,000ரூ கட்டுப்படுத்தித் தான் விலை பேசவேண்டுமென்று பாங்கிக்காரர்களுக்கு நோட்டீசு கொடுத்தார்கள். பாங்கிக்காரர் அதற்கு ஒத்துக்கொள்ளாததால் முதல் மனைவியின் புத்திரர்களையும் பாங்கிக்காரரையும் பிரதிவாதிகளாக்கி 1903ஆ த்திய 554 ெந. வியாச்சியங்கொண்டு வந்தார்கள். அவ்வியாச்சியம் பம்பாய் ஹைகோர்ட்டாரால் பாங்கிக்காரர் பட்சம் தீர்ப்பு சொல்லப்பட்டது. வியாஜ்ஜியம் நடவடிக்கையிலிருக்கும் மத்தியில் 1904ஆ ஜனவரிமீ 14உ பாங்கிக்காரர் "டுவார்க்தாஸ் தாரம்சே" என்பவருக்கு பெந்தகச் சொத்தை விற்றுவிட்டார்கள். இதற்கு முன் 1903ஆ டிசம்பர்மீ 2உ முதல் மனைவியின் புத்திரரில் ஒருவராகிய "கூலாம் ஹுசேன்" என்பவர் "கிசான் வித்தால் சிங்கு"க்கு பெந்தகச் சொத்தில் ஒரு பாகமாகிய [illegible] நாடகக்கொட்டகையை குத்தகைக்கு விட்டார்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS. REGISTERED 20 APR 1911 MADRAS

1904ஆ ஜனவரிமீ 26உ மிஸ்டர் மேக்லியாட்டை ரிசீவராக கோர்ட்டார் நியமித்து தாவா சொத்தை பரிபாலிக்க உத்தரவு செய்தார்கள். அந்தமீ 24உ தாவா சொத்தை அனுபவித்துக்கொண்டிருப்பவர்களை அதிலிருந்து விலக்கும்படியாக வியாஜியஞ் செய்துக்கொள்ள ரிசீவருக்கு கோர்ட்டாரால் அனுமதி கொடுக்கப்பட்டது. மேலே கூறிய 554 ெந. வியாஜ்ஜியம் விசாரணையாகிக் கொண்டுவரும்பொழுது கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட ரிசீவராகிய "மேக்லியாட்" என்பவர் "டுவார்க்கதாஸ் தாராம்சே" என்பவரையும் தன்னுடன் வாதியாகச் சேர்த்துகொண்டு "கிசான் வித்தால் சிங்கு" வையும் குத்தகைக்கு விட்ட "கூலாம் ஹுசேனு" வையும் பிரதிவாதிகளாக இவர்களை நாடகக் கொட்டகையினனுபவத்திலிருந்து விலக்கிவிட தாவா செய்தார். இக்கேஸ் ஹைகோர்ட்டில் நடந்தது. 554 ெந. வியாஜ்ஜியம் முடிவுக்கு வந்து ஹைகோர்ட்டு ஜட்ஜியால் பாங்கிக்காரருக்கு அனுகூலமாகி விட்டதால் ரிசீவரை நீக்கிவிட்டார்கள். ரிசீவரால் கொண்டு வரப்பட்ட வியாச்சியம் ஆரம்ப ஸ்திதியிலிருந்தாலும் அவர் நீக்கப்பட்டுப்போனதாலும் பின் வரும்இஷியூக்கள் ஏற்பட்டன

(1) 554ெந. வியாச்சியம் முடிவுக்கு வந்து இவ்வியாச்சிய மத்தியில் நியமிக்கப்பட்ட ரிசீவர் தன் உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டுபோனதால்இவ்வியாச்சியம் நடவடிக்கையிலிருக்கலாமா?

(2) வேற்றுமை யான வாதிகளின் சேர்க்கையினால் இவ்வியாச்சியம் கெடுதலையாக வில்லையா?

(3) 1889ஆ ஜனவரிமீ 12உ ஏற்பட்ட பெந்தகத்தில் நாடகக் கொட்டகை சேர்ந்திருக்கிறதா?

(4) பெந்தகம் 2-வது வாதிக்கு கிரயஞ் செய்யப்பட்டதா?

(4a) 2-வது பிரதிவாதி "ஆமட்பாயி"க்கு பதிலியா?

(4b) அப்படியானால் "ஆமட்பாயி" ஒரு கட்சிக்காரராகச் சேர்க்கப்படவேண்டிய தவசியமா?

(5) பெந்தகச் சொத்து 2-வது பிரதிவாதிக்குக் கிரயமாயிருந்தால் நாடகக் கொட்டகையில் பாத்திய முண்டா?

(6) நாடகக் கொட்டகையை தன் வசமாக்கிக் கொள்ள முதல் பிரதிவாதிக்கு பாத்தியமுண்டா?

(7) 1903ஆ டிசம்பர்மீ 2உ [illegible] குத்தகைப்பத்திரம் செல்லுபடியானதாயி வாதிகளை கட்டுப்படுத்துமா?

(8) குத்தகை மோசடியுள்ளதா குறைந்த தொகைக்கு ஏற்பட்டதா?

வாதிகளின் வாதம்:—[illegible] பிரதிவாதியாகிய "டுவார்க்கதாஸ் தாரம்சே" ரிசீவரின் ஸ்தானத்திலிருந்து கட்சியை நடத்த கூடியவர். இல்லாவிட்டால் ரிசீவரை விலக்க இடங்கொடுத்திருக்க மாட்டோமென்றும் இருவாதிகளையுஞ் சேர்த்து ஒரேவியாச்சியமாகக் கொண்டுவந்தது வியாச்சியங்களின் மிகுதியை குறைக்கவென்றும் வக்கீல்கள் சொன்னார்கள்.

பிரதிவாதிகளின் வாதம்:—இவ்வியாச்சியங் கொண்டுவர ரிசீவருக்குத் தான்பாத்தியமுண்டு ரிசீவரை அவ்வேலையிலிருந்து நீக்கப்பட்ட பொழுதே அவர் செய்த வியாச்சியம் முடிவுக்கு வந்து விட்டது. டுவார்க்கதாஸை ரிசீவருடன் வாதியாகச் சேர்த்தது வேற்றுமை வாதிச் சேர்க்கையாகும். எல்பின்ஸ்டோன் நாடகக் கொட்டகை பெந்தகத்துக்குப் பிறகு தான் கட்டப்பட்டது. "கட்டாயம் [illegible]யாக அமைக்கப்பட்டவைகள்" என்னும் வார்த்தைகள் பெந்தகப்பத்திரத்தில் இல்லாததால் இந்நாடகக் கொட்டகை பெந்தகத்துக் குள்ளானதல்ல.

ஹைகோர்ட்டார் தீர்மானம் :—இவ்வியாச்சியம் 554 ெந. வியாச்சியத்தின் கிளை வியாச்சியம் 554 ெந. வியாச்சியமும் இப்பொழுது விசாரிக்கும் ஜட்ஜினாலேயே விசாரிக்கப்பட்டு முடிவு சொல்லப்பட்டது. (தீர்மானிக்கப்பட்டது) 554 ெந. வியாச்சியத்தில் ரிசீவராக நியமிக்கப்பட்ட "மேக்லியாட்" என்பவரும் கிரயம் வாங்கின டுவார்க்க தாஸ்தாரம்சே என்பவரும் சேர்ந்து 1904ஆ மார்ச்சுமீ 18உ இந்த வியாச்சியஞ் கொண்டுவந்தார்கள். தாவா சொத்தை அனுபவிப்பதிலிருந்து கிசான் வித்தால் சிங்குவை நீக்க அவர் மேலும் அவருக்குக் குத்தகை கொடுத்த "கூலாம் ஹுசேன்" மேலும் தாவா செய்யப்பட்டது.

பம்பாய் பாங்கிக்கு அனுகூலமாக 554 ெந. வியாச்சியம் தீர்மானிக்கப்பட்டது. இச்சொத்துகள் இரண்டாவது மனைவியின் புத்திரர்களுக்குக் கிடைக்க வேண்டிய தொகைக்குக் கட்டுப்பட்டிருந்தாலும் நல்ல எண்ணத்துடன் பாங்கிக்காரர் பணம் கொடுத்து பெந்தகம் வாங்கியிருக்கிறதால் இவர்களுக்கு முந்திய பாத்தியமிருக்கிறதென்று [illegible] சொத்தைக் கட்டுப்படுத்தி ஹைகோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிறார்கள்

இந்த றுவாயில் இவ்வியாச்சியம் விசாரணையாகி வந்தது. 554 ெந. வியாச்சியத்தின் முடிவின்மேல் முதல் வாதியாகிய ரிசீவர் நீக்கப்பட்டபொழுது அவரால் கொண்டுவரப்பட்ட வியாச்சியம் [illegible] யதா என்பது முதல் பிரதிவாதியின் [illegible] யிருந்தது.

இவ் வாட்சேபனையை [illegible] பின்வருமாறு விரிக்கலாம்:—முதல் வாதி கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட ரிசீவரானதால் கோர்ட்டு உத்தியோகஸ்தராவார். அவர் [illegible] யாரையும் பெந்தகச் [illegible]

ளை அனுபவிப்பதிலிருந்து விலக்க தாவா செய்யும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அதனாற்றான் இவ்வியாச்சியஞ் செய்ய இவருக்குப் பாத்தியமில்லைபிராது செய்த தேதியில் முதல் வாதிக்கு மாத்திரந்தான் பிராது செய்யக்கூடிய பாத்தியமிருந்தது. இப்பிராது அவருடையது. கோர்ட்டாரால் ரிசீவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டபொழுது வியாச்சியஞ் செய்யக்கூடிய அவர் அதிகாரமும் அவர் செய்த வியாச்சியமும் முடிவுக்கு வந்துவிட்டது இது தான் பிரதிவாதி வக்கீல் கூறிய ஆட்சேஷபணையின் தாற்பரியம்,

இரு பக்கத்து வக்கீல்களின் பிரயாசையும் இதற்கு ஒற்றுமையான தீர்மானங்களை எடுத்துக்காட்ட முடியாமற் போயிற்று. ஆகையால் மூல விதிகளைக் கொண்டு தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

கோர்ட்டார் ஒரு ரிசீவரை நியமித்து அனுபவித்திலிருந்து கட்சிக்காரரல்லாத ஒருவன் விலக்க வியாச்சியஞ்செய்ய அதிகாரம் கொடுத்தால் அச்சொத்துக்கு சுவானுளியாக ஏற்படும் ஒருவரின் நன்மைக்காக அவருடைய பதிலி அல்லது டிரஸ்டியாக இந்த ரிசீவர் இவ்வியாச்சியஞ் செய்யவேண்டுமென்பது சட்டத்தின் கருத்தாகும், சொத்துக்கு பாத்திய முடையார் இன்னாரென்று நிர்ணயிக்கப்பட்டபொழுது இந்த ரிசீவர் அவருடைய ரிசீவராக பாவிக்கப்படுவார்.

554 செ. வியாச்சிய முடிவாவதற்கு முன் இவ்வியாச்சியத்துக்கு ஒரு தீர்ப்பு ஏற்பட்டால் நிர்ணயிக்கப்படுகிற சுவானுளிக்கும் இதன் பிரதிவாதிகளுக்கு முண்டாகும் இவ்விவாதத்தைப்பற்றிய எவ்வித வியாச்சியமும் கொண்டுவரக் கூடாதபடி ஓர் தடையாகும். இதற்கு வால்தலையாக ஒரு தீர்மானம் பின் வருமாறு செய்யப்பட்டிருக்கிறது. அது என்னவெனின் 1827௵ பம்பாய் ரெகுலேஷன் ஆக்டுப்படி தெரியக்கூடிய வார்சில்லாமலும் உயில் எழுதி வைக்காமலும் ஒருவன் இறந்துபோனால் அவ்விடத்துக்கு அதிகாரமுடைய ஜட்ஜி அவன் சொத்தைப் பரிபாலிக்க ஒரு "அட்மினிஸ் டிரேட்டரை" நியமிக்க வேண்டுமென்று 1827௵ பம்பாய் 8-வது ரெகுலேஷனில் விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 'ஏ' என்பவன் தெரியக்கூடிய வார்சில்லாமலும் உயில எழுதி வைக்காமலும் இறந்துபோனான். கோர்ட்டார் அவன் சொத்தை பரிபாலிக்க கோர்ட்டு நாதரை அட்மினிஸ் டிரேட்டராக நியமித்தார்கள். நாதர் வசத்திலிருக்கும்பொழுது 'பி' என்பவன் தான் வார்சென்று சொத்து தன் வசமாக நாதர் மேல் வியாச்சியஞ் செய்தான். இறந்து போனவனுக்கு 'பி' என்பவன் வார்சல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. பிறகு 'ஸி' என்பவன் வார்சென்று கோர்ட்டார் தீர்ப்புசெய்தார்கள். இதில் 'பி' என்பவன் கட்சிக்காரனல்ல. 'பி' என்பவன திரும்ப 'சி' என்பவன் மேல் தனக்குச் சொத்து கிடைக்கவேண்டுமென்று தாவா செய்தான். முன் நாதருக்கும் 'பி' என்பவரும் நடந்த வியாச்சியத்தின் தீர்மானம் அதேபாத்தியதை மேல் கொண்டு வந்த இவ்வியாச்சியத்துக்குத் தடையாயிருக்குமென்று தீர்ப்பு சொல்லப்பட்டது இத்தீர்ப்பில் "வெஸ்ட்" என்னும் ஜட்ஜி சொல்லுகிறதாவது:—"ஒரு சொத்தை பரிபாலிக்க சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஒரு உத்தியோகஸ்தர்மேல் அச்சொத்துக்கு வார்சென்று வியாச்சியஞ்செய்து அபஜெய மடைந்தவர்கள் பிறகு நிர்ணயிக்கப்பட்ட சொந்தக்காரர் மேல் அதே காரணத்துக்கு வியாச்சியம்தொடுப்பதுகூடாது சொந்தக்காரரின் பாத்தியம் முன்வியர்ச்சியத்தில் நிர்ணயிக்கப்படாமலிருந்தாலும் இவருக்குச் சேரவேண்டிய சொத்திலிருந்து அந்த வியாச்சியத்தில் செலவுசெய்து கட்சியாடப் பட்டிருப்பதால் சொந்தக்காரரின் பாத்தியம் ஸ்தாபிக்கப்பட்டதாகும்."

. இக்கருத்தைத்திருப்பி வால் தலையாகப்பார்த்தாலும் அதுவும் நஷ்ட சம்மதமானதே. எவ்வாறெனின் ஒரு சொத்தின் விஷயமாக சர்க்காரால் நியமிக்கப்பட்டவர் நியாய வாயிலாக ஒரு கோர்ட்டில் சிலசொத்தைக் கைவசப்படுத்தச்செய்த வியாச்சியத்தில் ஜயமடைந்ததால் பின் நிர்ணயிக்கப்படும் சொந்தக்காரர் இதில் கட்சிக்காரராக விராமற்போனாலும் இவர்கள் ஜயமடைந்ததாக பாவிக்கப்பட்டு எதிர் கட்சிக்காரர்களை அத்தீர்மானம் கட்டுப்படுத்தும்.

ரிசீவராகிய மேக்லியாடு **554** செ. வியாச்சியம் முடிவாவதற்கு முன் அவ்வுத்தியோகத்திலிருந்து நீக்கப்படாமல் • இவ்வியாச்சியத்தில் ஜயமடைந்தால் **554** செ. வியாச்சியத்தினால் அடமான பாத்தியமுடையவர்களாக தீர்மானிக்கப்பட்ட பம்பாய் பாங்கிக்கும் அதனிடமிருந்து கிரயம் வாங்கின வருக்கும் அத்தீர்ப்பு நலத்தைக்கொடுக்கும். அவ்வாறு பெற்றத்தீர்ப்பு இப்பிரதிவாதிகளை இப்பொழுது நடக்கும் வியாச்சியத்தில் கட்டுப்படுத்தாதென்று சொல்ல முடியாது. பம்பாய் பாங்கியின் பாத்தியம் அப்பொழுது நிர்ணயிக்கப்படாவிட்டாலும் பின் அப்பாத்தியம் ஏற்கனயிருந்து வருவதாக தீர்மானிக்கப்படுகிறது. அப்பாங்கியின் நலத்துக்காகவே ரிசீவர் வியாச்சியஞ்செய்து தீர்ப்பு பெற்றார். ரிசீவர் உத்தியோகம் வியாச்சியமத்தியில் நீங்கிவிட்டதாலும் இந்நியாயம் பொருந்தும்நிர்ணயமாகாத சொத்துக்காரரின் ஸ்தானத்தில் கோர்ட்டார் ஒரு ரிசீவர் நியமித்து தாவா செய்ய அதிகாரத்தின்படி ரிசீவர் தாவா செய்தால் அத்தாவா எவ்வியாச்சியத்தில் ரிசீவர் நியமிக்கப்பட்டாரோ அதுமுடிவாகிறதற்குள் இத்தாவாவும் முடிவாகாதென்பது தெரிந்தே கோர்ட்டார் ரிசீவரை நியமிக்கிறார்கள். அன்றியும் ரிசீவர் உத்தியோக முடிவு பெற்றாலும் அவர் நடத்திய தாவா தீர்ப்பாகிற வரையில் விசாரணையாகி வரவேண்டு மென்பதே ரிசீவரை

நியமித்த கோர்ட்டாரின் நோக்கமாயிருக்கிறது. ஆகையால் **554** செ. வியாச்சியம் தீர்ப்பாகி ரிசீவர் நீக்கப்பட்டபொழுது டிக்கிரிபெற்றவர் அவர் ஸ்தானத்திலிருந்து கட்சியாகும் பாத்தியமும் அடைகிறார் (ரிசீவர் ஜயமடைந்தவருக்கு பதிலாக நியமிக்கப்பட்டிருப்பதால்) ரிசீவரின் வேலை முடிவுக்குவந்தால் இவரால் நடத்தப்பட்ட சகல நடவடிக்கைகளும் இவர் உத்தியோகத்தோடு முடிவடையாமல் யாருக்காக ரிசீவர் நடத்தினாரோ அவர் டிக்கிரியினால் நிர்ணயிக்கப்பட்டதால் அவ்வாறு டிக்கிரி பெற்றவர் தொடர்ச்சியாக கட்சியாடவேண்டியது (இனி ரிசீவர் உத்தியோகம் அனாவசியமாகையால்.)

ரிசீவரின் ஸ்தானத்தில் நிர்ணயிக்கப்பட்ட கட்சிக்காரரிருந்து நடத்த எந்த சட்டம் இடம் கொடுக்கிறதென்று முதல் பிரதிவாதியின் வக்கீல் கேட்டார். சி. பு. கோ. **372**-வது பிரிவுப்படி இவ்வாறு செய்யலாமென்று மறுமொழி கூறலாம். **372**-வது பிரிவில் சொல்லியிருக்கிறதாவது "கோர்ட்டு நடவடிக்கையிலிருக்கும் ஒரு வியாச்சியத்திலுள்ள பாத்தியம் விற்கப்பட்டாவது, நூதனமாய் ஏற்பட்டாவது,மாறியாவது போகும் கேசுகளில், கட்சிக்காரரின் சம்மதத்தின் மேலாவது அவர்களுக்கு எழுத்து மூலமாக நோட்டீஸ் கொடுத்தாவது ஏதாவதிருந்தால் அவர்களின் ஆட்சேபனை ஏதாவதிருந்தால் அதை கேட்டு கோர்ட்டார் கொடுக்கும் அனுமதியின் மேல் யாரிடமிருந்து அப்பாத்தியம் வந்ததோ அவரோடு கூட அல்லது அவருக்குப்பதிலாக கேசின் சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி பாத்தியம் வரப்பெற்றவர் மேல் அல்லது அவரால்வியாச்சியம் நடத்தப்படலாம்." "பாத்தியம் மாறுதல்" என்னும் மொழிகள் ஒருவர் மரணத்தினால் மாறினது மாத்திரமல்ல "க்ஷோட்டாநாக்போர்" என்பவரின் கடன்முழுகின சொத்தினுடைய மானேஜர் நடத்தின வியாச்சியம், விசாரணையிலிருக்கும் பொழுது அம்மானேஜ்மெண்டு நீங்கி சொந்தக்காரர் வசமான பொழுது உண்டான பாத்தியமாறுதலுக்கும் பொருத்தமுள்ளதென்று இ. லா ரி. 28 கல். 171 இல் கூறியிருக்கும் சுரேந்திரமோகன் டாகோர் v சிரோமோனி டேபி கேசில் கல்கத்தா ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள், அக்கோர்ட்டார் "வரப்பெற்ற" என்னும் வார்த்தை இப்பிரிவில் உபயோகிக்கப்பட் டிருப்பதைப்பற்றி ஊன்றுதலாய்க் குறிப்பிட்டெழுதி யிருக்கிறார்கள். யுக்தி அமைந்த அத்தாற்பரியம் இவ்விடம் பொருத்தமுள்ளது. இந்தக் கோர்டில் இவ்வாறு அர்த்தங் கொள்ளக்கூடிய வார்த்தைகளடங்கிய பிரிவுகளிருந்து அவைகளைப் பொருத்த முடையதாக்க இடமிருக்கும் பொழுது இம்மாதிரியான கேசுகளுக்கு சட்ட நிரூபண சபையார் விதி ஏற்படுத்தாமல் விட்டு விட்டதாக அனுவு கொள்ளக்கூடாது. ஒருவருக்கு ஒரு சொத்து பாத்தியம் இருக்கிறதாக தீர்மானம் ஏற்பட்டால் அவருக்கு அப்பாத்தியம் ஏற்கனவே யுள்ளதாக கூறுகிறதேயல்லாமல் நூதனமாக அதில் பாத்தியம் இத்தீர்மானம் உற்பத்தி பண்ணுகிறதில்லை. ஒரு கட்சிககாரருக்கு பாத்திய மிருக்கிறதாக ஒரு டிக்கிரி கூறினால் அப்பாத்தியம் அட்டிக்கிரியினால் கட்சிக்காரருக்கு "வந்ததாக" எண்ணுவது நீதி முறைமையில் வழக்கம். "வந்ததாக" என்னும் சகசவார்த்தை **372**-வது பிரிவில் உபயோகித்திருப்பது, கிரயம் கலியாணம், மரணம் முதலியவைகளால் மாறும் பாத்தியத்தைப்பற்றி விதி ஏற்படுத்தினதாகும். இப்பொழுது டிக்கீரி ஏற்படுகிறவரையிலும் அப்பாத்தியம் ரிசீவரிடமிருந்தது. டிக்கிரிக்கும் ரிசீவரை நீக்கினதற்கும் பிறகு டிக்கிரியினால் நிர்ணயிக்கப்பட்ட கட்சிக்காரருக்கு "வந்தது" **554** செ. வியாச்சியத்தில் ரிசீவருக்குள்ள பாத்தியம் டிக்கிரியின் முடிவினால் அந் நம்பரின் 5-வது பிரதிவாதியாகிய பம்பாய் பாங்கிக்கு மாற்றிற்று. பாங்கிக்காரர் அல்லது அவர்களிடம் கிரயம் வாங்கின இரண்டாவது பிரதிவாதியாகிய "டுவார்க்கதாஸ்" கட்சியை நடத்திக் கொண்டு வந்தால் இம்மாதிரியான மனுசெய்யவில்லை பிராது செய்தபோது இருவருஞ் சேர்ந்து செய்தது நியாயமாகமலிருந்தாலும் அதுவேற்றுமை வாதிகளின் சேர்க்கையாகாது. உயில் செய்துவிட்டு இறந்துபோன ஒருவர்சொத்து, கடனால் முழுகிப்போனதாக அவருடைய கடன் காரர்கள் அவர்சொத்தைப் பரிபாலித்து கடனைத் தீர்க்கவேண்டியதற்கு ஒரு ரிசீவரை நியமிக்க வியாச்சியஞ் செய்தார்கள். அதில் ஏற்பட்ட ஒரு டிக்கிரியினால் ஒரு ரிசீவர் நியமிக்கப்பட்டார். இந்த ரிசீவரும் உயில்கண்ட காரியக்காரியாகிய ஒரு பெண்பிள்ளையும் இறந்துபோனவரின் சொத்து விஷயமாக ஒரு வியாச்சியஞ்செய்தார்கள். ரிசீவர் இறந்துபோனவருக்கு மரணத்துக்குமுன் வரவேண்டியதை மாத்திரம் வசூலிக்க வியாச்சியஞ் செய்யலாமென்றும் உயிலின் காரியக்காரி இறந்துபோனவருக்கு இறந்த பிறகு வரவேண்டியதை வசூலிக்கப்பிராது செய்யலாமென்றும் இருவரும் வாதிகளாக ஒரு வியாச்சியம் கொண்டு வரக்கூடாதென்றும் பிரதிவாதி எதிர்வாதஞ்சொன்னார். அந்தக்கேசுக்கு முடிவு சொன்ன ஜட்ஜிகள் தீர்மானித்ததாவது:- "இரண்டு தனி வியாச்சியங்கள் அனாவசியம். இதில் வரவேண்டியதை வசூலிக்க ரிசீவர் மாத்திரம் தனியாகத்தாவா செய்திருக்கலாம். காபந்துக்காக காரியக்காரியாகிய "பாக்ஷ்பாயை" கூடச்சேர்த்துக் கொண்டார். இப்படி சேர்ந்து செய்வது வேற்றுமை வாதிகளின் சேர்க்கையாக எண்ணக்கூடாது என்று தீர்ப்பு செய்திருக்கிறார்கள். இவ்வாறிருக்க **372**-வது பிரிவுப்படி தள்ளுபடியான ரிசீவருக்குப் பதிலாகத் தன்னை வைத்துக்கொண்டு கேசை நடத்த மனுசெய்யவேண்டிய "டுவார்க்கதாஸ்" ஏற்கனவே வாதியாக இருக்கிறார். "டுவார்க்கதாஸ்" வாதியாகச்சேர்க்கப்பட்டது சரியா வென்பதைப்பற்றி பிரதிவாதிக

...ளின் வாதம் கவனிக்கப்பட்டது. இவ்விதச் சேர்க்கை வேற்றுமைச் சேர்க்கையல்ல. வியாச்சியத்தை நடத்த டுவார்க்கதாஸ் வாதியாகச் சேர்க்கப்பட்டது நியாய விரோதமல்ல. ரிசீவரின் பெயர் முதலாம் வாதியாக ரிக்கார்டில் இருப்பது பிரதிவாதிகளை எவ்விதத்திலும் பாதிக்காது. 554 நெ. வியாச்சியத்தின் டிக்கிரியினால் ரிசீவர் நீக்கப்பட்டபோதிலும் வியாச்சியம் முதலில் செய்தவராகையால் அவர் பெயர் அதிக காபந்துக்காக ரிக்கார்டில் இருந்து வந்திருக்கிறது.

ஆகையால் வியாச்சியம் ரிசீவர் வேலை நீங்கின பிறகும் நடத்தப்படலாம் என்பதினால் முதலில் இஷியூ வாதிபக்கம் முடிவு சொல்லப்பட்டது.

இரண்டாவது இஷியூ கேள்விப்படி வேற்றுமை வாதிச் சேர்க்கையில்லை.

எல்பின்ஸ்டோன் நாடகக்கொட்டகை பம்பாய் பாங்கியின் பெந்தகத்துக்குள் பட்டதா?

554 நெ. வியாச்சியத்திலும் இது ஒரு இஷியூவாகக் குறிக்கப்பட்டிருந்தது. இந்நம்பரில் பாங்கியும் கிரயம் வாங்கின தற்கால வாதியாகிய "டுவார்க்கதாஸும் தற்கால 2-வது பிரதிவாதியாகிய கூலாம் ஹுசேனும் பிரதி வாதிகளாயிருந்தார்கள், அவ்வியாச்சியத்தில் பெந்தகத்துக்குள்ளானதென்றே தீர்ப்பு செய்யப்பட்டது. பாங்கி, டுவார்க்கதாஸ் கூலாம் ஹுசேன் அந்நம்பரில் பிரதி வாதிகளாகச் சேர்க்கப்பட்டிருந்தாலும், 554 நெ. வாதிகளும் தற்கால 2-வது பிரதிவாதி "கூலாம் ஹுசேனும்" சேர்ந்து" ஒரு பக்கத்திலும் பம்பாய் பாங்கி ஒரு பக்கத்திலும் ஆகிய இருதாரத்தாரின் மாறான விவாதத்திலுண்டான ஷை நம்பரின் இதே இஷியூவை விசாரித்துத் தீர்ப்பது அங்குள்ள பிரதிவாதிகளுக்குள் ஏற்பட்டாற்போல அந்நம்பரின் வாதிகளுக்கு நேரிட்டதாகச் சொல்லும் குறையைத் தீர்ப்பதற்கு அதிக அவசியமாயிருந்தது. அத்தீர்ப்பு அவ்வியாச்சியத்தின் பிரதிவாதிகளுக்குள் வேறு வியாச்சியங்கொண்டு வராதபடி தடை தீர்ப்பதற்கும். இ. லா. ரி. 11-பம். 116-இல் சொல்லியிருக்கும் ராம் சந்திரா நாராயன். v. நாராயண் மகாதேவ் கேஸ் இதற்குப் பொருத்தமுள்ளது தற்கால 2-வது பிரதிவாதியாகிய "கூலாம் ஹுசேன் முந்தின கேசின் இவ்விஷியூவின் முடிவுக்குக் கட்டுப்பட்டவராவார். இப்போது முதல் பிரதிவாதியாக விருக்கும் கிசான்வித்தாய் சிங்கு அந்நம்பர் பிராதுக்குப்பின் இவரிடமிருந்து பாத்தியம் பெற்றவராகையால் அங்கு கட்சிக்காரராக விராமற்போனாலும் அவரும் கட்டுப்பட்டவராகிறார். அப்பிராது 1903௵ செப்டம்பர்௴ 3௳ கொடுக்கப்பட்டது. குத்தகைப் பத்திரம் 1903௵ டிசம்பர்௴ 2௳ பிறந்திருக்கிறது. டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்டு 52-வது பிரிவுப்படி வியாச்சியகாலத்தில் ஏற்பட்ட குத்தகைப்பத்திரம் செல்லுபடியுள்ளதல்ல. இந்த இஷியூவைப்பற்றித் திரும்பவும் ஆலோசிக்கப்பட்டும், முன் ஏற்பட்ட முடிவுக்கு மாறாகக்கொள்ள யாதொரு காரணமும் தோன்றவில்லை. பெந்தகம் வைத்த சொத்தின் விவரத்தில் இந்நாடகக் கொட்டகைக் காணப்படாமலிருப்பதே பிரதிவாதிகளின் வாதத்துக்கு அனுகூலமாயிருக்கிறதென்று தர்க்கித்தார்கள். பெந்தகப்பத்திரம் இரண்டு சொத்துகளைக் குறிக்கிறது:—

(1) பாஜிபாலா தெருவிலுள்ள வீடு (2) தாவா சொத்தாகிய பால்க்லாண்டு தெருவிலுள்ள பகுதிக்கு வாங்கின சொத்து.

முந்தின சொத்தைப்பற்றி பின்வருமாறு பெந்தகப் பத்திரத்தில் கண்டிருக்கிறது. கீழ்குறித்த, முதல் ஷெடியூலில் முதலின் விவரித்திருக்கிற எல்லாப் பலவித ஸ்தாவர சொத்துக்களும் அந்நிலத்தைச் சேர்ந்த எல்லாக் கட்டடங்களும் நிறுத்தப்பட்டவைகளும் மரங்களும் பாத்தியங்களும் சௌகரியங்களும் இவைகளோடு சேர்ந்தவைகளும் அனுபவத்திலுள்ளதும் அல்லது கொண்டாடப்பட்டதும் அடமானம் வைக்கிறவர்களுக்கு இவைகளிலுள்ள எல்லா நிலைமையும் உரிமையும்வரவேண்டியவைகளும்." முதல் ஷெடியூலில் இந்த சொத்து "குடியிருக்குந் தோட்டமும் வீடும் அசையாப்பொருள் அல்லது அங்குள்ள வாசஸ்தலம்உள்பட பாசாண்டரி நிலத்திலுள்ள துண்டு நிலமெல்லாம்" என்று கண்டிக்கிறது. மேலே சொன்ன விஷயமாக நிலத்தின் மேலே நிற்கும் கட்டடங்களைப்பற்றி பெந்தகப் பத்திரத்தில் கூறியிருக்கிறது, பால்க்லாண்டு தெருவிலுள்ள மற்றொரு நிலத்தில் விஷயமாக கட்டடம் முதலானவை எழுதப்படவில்லை. அதைப்பற்றி பின்வருமாறு கண்டிருக்கிறது:—

"முதல் ஷெடியூலில் இரண்டாவது விவரிக்கப்பட்டிருக்கும் அசையாப்பொருளும் மேலே குறித்த பகுதிப்பத்ரத்தின் மூலமாகக் கிடைத்த தோட்டத்துக்குளடங்கியவைகளும் பெந்தகக்காரர்களுக்குச் சொந்தமாகிய எல்லா நிலைமைகளும் (அதாவது ஸ்திதிகளும்) ஷெடியூலில் இதைப்பற்றி "புது விக்டோரியா நாடகக்கொட்டகை நிற்கும் நிலமெல்லாம்" என்று எழுதப்பட்டிருக்கிறது.

கட்டடம் நிறுத்தப்பட்டவைகளென்று இதில்காணப்படாமலும் முன்னிலத்தில் அவ்விவரம் காணப்பட்டதாலும் பிரதிவாதியின் ஆக்ஷேபணைகளுக்கு ஒரு ஆதாரமிருப்பினும் இவைகளை மற்றவைகளோடு சேர்த்து யோசிக்கவேண்டும் "மாறான்கருத்துவெளியிடுத்தப்பட்டு அல்லது அவசியமானமாறான தற்பாரியம் கொள்ளக்கூடியதாயிருந்தாலொழிய ஒரு சொத்தை ஒருவருக்குக் கையடித்தால் கொடுத்தவருக்கிருக்கும் அச்சொத்தோடு செல்லக்கூடிய எல்லா பாத்தியங்களும் வாங்கினவரிடம் போய்ச்சேருகிறது "அச்சொத்து நிலமாயிருந்தால் அதைச்சேர்ந்த

சகல சௌகரியங்களும், நிலப்பகுதிகளும் கொடுபட்ட பிறகு ஏற்படும் லாபமும் நிலத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும் எல்லா வஸ்துக்களும் அவ்வுபகாரியங்களுக்குளடங்கும்" என்று டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி அக்டின் 8-வது பிரிவில் கூறியிருக்கிறது. இதில் 2-வது பாராப்படி பெந்தகம் வைக்கும்பொழுது நின்ற நாடகக்கொட்டகை "புது விக்டோரியா நாடகக்கொட்டகை" என்னும் பெயருடைய தாய் பூமியோடு இணைக்கப்பட்டிருந்ததால் மாறான தாற்பரியத்துக்கு வெளிப்படையாகவாகிலும் இடமில்லாதிருக்கின் பெந்தகம் வாங்கினவருக்கு கொட்டகையின் மேல் பாத்தியமுண்டாகிறது பெந்தகம்வைத்தபிறகு பெந்தகம் வைத்தவர்கள் இக்கொட்டகையை அழித்துவிட்டு எல்பின்ஸ்டோன் நாடகக்கொட்டகையென்னும் வேறு புதியகட்டடம் கட்டினார்கள். டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்டு 70-வது பிரிவில் "பெந்தகம்வைத்த சொத்தில் ஏதாவது சேர்க்கப்பட்டால் மாறான உடன்படிக்கையில்லாத பட்சத்தில் அவ்வாறு சேர்க்கப்பட்டது பெந்தக ஈட்டுக்காக பெந்தகம் வாங்கினவருக்கு பாத்தியமாகிறது" என்று கூறப்பட்டிருக்கிறது. இதனைப்பற்றிய 2-வது திருஷ்டாந்தத்தில் 'ஏ' என்பவன் 'பி' என்பவனுக்கு ஒரு கட்டடம் கட்டக்கூடிய நிலத்தை பெந்தகம் வைத்துப்பிறகு ஒரு கட்டடம் கட்டுகிறான். பெந்தக ஈட்டின் பலத்துக்காக அந்நிலத்திலும் கட்டடத்திலும் 'பி' என்பவனுக்கு பாத்தியமுண்டு" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையால் நிலத்தின்மேல் நிற்கும் நாடகக்கொட்டகை பெந்தகத்துக்குப் பிறகு கட்டப்பட்டிருந்தும் வேறுவிதமான உடன்படிக்கையில்லாவிட்டால் பெந்தகச்சொத்துக்குள் ளடங்கும். மேலே கூறியபிரிவுக்குள்ளடங்கிய சட்டவிதிகளின் கருத்துவிஷயமாக டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்டி ஆக்டு சுவாதீன நிலத்துக்கும் பகுதிக்குவாங்கின நிலத்துக்கு ஒரு வித்தியாசமும் ஏற்படுத்தாமல் யிருப்பதால் பெந்தச் சொத்து பகுதிக்குவாங்கின நிலமாயிருப்பதை முன்னிட்டு அவ்விதிகளுக்குக்கட்டுப்படாமலிருப்பதில்லை. வித்யாசமான கருத்து பெந்தகப் பத்திரத்தினால் ஏற்பட்டாலொழிய சொத்துடன் சேர்ந்திருக்கிற எல்லாகட்டடங்களும் பெந்தகச்சொத்துக்குள்ளடங்குகிறதினால் பத்திரத்தில் இந்த விவரம் காணவேண்டியதில்லை. இந்தச்சட்டம் இங்கிலீஷ் சட்டத்தை இந்தியாவில் விஸ்தரிக்கிறது; பத்திரத்திலிருந்து இதற்கு மாறான கருத்து கொள்ளலாமா வென்பதைப்பற்றி கவனிக்கவேண்டும். முதலிற்சொல்லிய சொத்தில்கட்டடத்தைச் சேர்த்து சொல்லியும் இத்தாவா சொத்து விஷயசொத்தில் அதைக்குறித்துச் சொல்லாமலிருப்பதே நாடகக்கொட்டகைபெந்தகத்தில் சேரவில்லையென்று பிரதிவாதிகள் வாதித்தார்கள். இது விஷயமாக யோசிக்கும்பொழுது "பாஜிபாலாத்தெருவில்" உள்ள கட்டடமும் நிலமும் பெந்தகம் வைத்தவருக்கு சொந்தமானது. தாவா சொத்தை சில வருஷங்களுக்கு பகுதிக்குவாங்கி அதில் நாடகக்கொட்டகை கட்டியிருக்கிறார்கள். இதற்காகவே அந்நிலம் பகுதிக்கு வாங்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. அப்படியே அது முதற்கொண்டு உபயோகிக்கப்பட்டு வருகிறது. அந்நிலத்தில் "பழைய விக்டோரியா நாடகக் கொட்டகை" என்று பெயருடைய ஒரு கொட்டகை நாடகத்துக்கு உபயோகிக்கப்பட்டு வந்தது என்று 2-வது பிரதிவாதி தன் வாக்மூலத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறார். பிறகு "புதுவிக்டோரியா நாடகக்கொட்டகை" என்று பெயருள்ள கட்டடம் ஒன்று கட்டப்பட்டது அது முதற்கொண்டு அக்கட்டடம் விரிவாகக் கட்டப்பட்டு "எல்பின் ஸ்டோன் நாடகக் கொட்டகை யென்றும் பெயரிட்டிருக்கிறது. பெந்தகம் வைத்தவர்கள் அந்நிலத்தில் நாடகத்துக்காகஉபயோகப்படுத்தும்படியாய் கட்டடம்கட்டிக்கொள்ளும் பாத்தியமுள்ளவர்களே யல்லாமல் வேறு பாத்தியமில்லை. சாஸ்வதமல்லாத அப்போதைக்கப்போது பகுதிக்கு வாங்கினவர்களின் சௌகரியத்துக்குத் தக்கபடி கட்டடம் கட்டிக் கொள்வதே அவர்கள் பாத்தியமென்று அந்நிலத்தை தொடர்ச்சியாக உபயோகப்படுத்தினதிலிருந்து தெரிய வருகிறது. ஆகையால் பெந்தகப் பத்திரத்தில் கட்டடத்தை குறிப்பிட வேண்டியதில்லை, பெந்தகம் வைத்தவர்களின் பாத்தியத்தைக் காண்பிக்க அக்கட்டடம் பெந்தகம் வைத்த நிலத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அந்நிலத்தில் கட்டடம் கட்டிக்கொள்வதே அப்பாத்தியமாக விருக்கின்றது. அன்றியும் இச் சொத்து விஷயமாக பெந்தகப் பத்திரத்தில் உபயோகிக்கப் பட்ட வார்த்தைகள் "ஷெடியூலில் சொல்லியிருக்கும் அசையாப் பொருளும் நிலமும் அதைச் சேர்ந்ததும் பெந்தகம் வைத்தவர்களுக்குள்ள எல்லாஸ்திதியும்" என்பவைகளே. "சேர்ந்தது" என்பதற்கு அர்த்தம். "அதை வியாபித்திருக்கும்" என்று பல தீர்மானங்களிற் சொலியிருக்கிறது. அதனால் அதிலிருக்கும் கட்டடத்தையுங்குறிக்கும். அந்நிலத்தில் பெந்தகம் வைத்தவர்களுக்குள்ள எல்லாஸ்திதியும் (நிலைமையும்) என்றால் அக்கட்டடமும் அந்த ஸ்திதிக்கடங்கும் கட்டடம் முதலிய வார்த்தைகள் இப்பத்திரத்தில் எழுதப்படாமலிருபபதற்கு காரணம் நன்றாய் விளங்குகிறது. சொத்தோ பகுதிக்கு வாங்கினது நிலம் அதை ஒரு விதமாய் அனுபவிக்க வேண்டியது. அதிலிருக்கும் கட்டடம் அனுபவிக்கும் விதத்தைக் காட்டுகிறது. இவ்வளவுதான் பெந்தகம் வைத்தவர்களுக்கு அங்குள்ள ஸ்திதி. ஒருக்கால் ஒரு நிலத்துக்குச் சொந்தக்காரர் அந்நிலத்தை வேறொருவனுக்கு இறங்குமதி ஏற்றுமதிக்கு உபயோகித்துக் கொள்ள அனுமதி கொடுத்து திருப்ப மீட்டுக் கொள்ளும் விதமாக பகுதிக்கு விட்டார். அதில் அனுமதி பெற்றவர் ஒரு சார்ப்பு கட்ட சொந்தக்காரர் இடங் கொடுத்தார். அவ்வாறு இடங்கொடுத்தது அனுமதியை மீட்கும் தன்மையுடையதல்ல. அனுமதி பெற்றவருக்கு அந்நிலத்தில் ஸ்திதி அல்லது பாத்தியம் ஏற்பட்டது. மேலே கூறியது ஒரு தீர்ப்பில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த பாத்தியத்தை ஒரு ஸ்திதி என்று [illegible] வாங்கினவர் அந்நிலத்தில் ஒரு குறித்த காலத்துக்கு ஒரு கட்டடம் கட்டி அனுபவித்து வருகிறதையும் [illegible] ஒரு ஸ்திதி என்று சொல்லலாம் அவ்விதம் கட்டடம் கட்டும் பாத்தியமே பகுதிக்கு வாங்கினவருக்கிருக்கும் ஸ்திதி. ஆகையால் "கட்டடம்" என்று பெந்தகப் பத்திரத்தில் காணப்படவில்லையென்ற வாதத்துக்கு இங்கு சொல்லியவைகள் [illegible] சமாதானமாயிருக்கிறது. 554 நெ. இத் தீர்ப்பில் [illegible]

ன்னதைப் பார்க்கிலும் இங்கு விரிவாகப் பேசப்பட்டதேனெனில் அந்த நம்பரில் சில முக்கியமான விஷயம் கோர்ட்டாருக்குத் தெரிவிக்கப்படாமலிருந்ததாக எதிர் கட்சி இப்பொழுது சொன்னார்கள். ஆகையால் இதனைப் பற்றி விரிவாகச் சொல்ல நேரிட்டது. பெந்தகப் பத்திரம் பிறப்பதற்கு முன்பு "புது விக்டோரியா நாடகக் கொட்டகை"யின் பிளானை பாங்கியார் வாப்சு செய்து விட்டு மற்ற தஸ்தாவஜிகளை தங்களிடம் வைத்துக் கொண்டார்கள் என்று சாட்சி விடப்பட்டது: இதனால் பெந்தகத்தில் சேர்ந்ததல்ல வென்று கட்சி சொன்னார்கள். பிளானைத் திரும்பக் கொடுத்துவிட்டதினால் இக்கட்சிக்கு பலமில்லை. பெந்தகப் பத்திரத்தில் பெந்தகம் வைத்தவர்களுக்குள்ள ஸ்திதி என்று கண்டிருப்பது போதுமானது. அடிக்கடி புதிது புதிதாகக் கட்டடம் கட்டும் பாத்தியமிருக்கும்பொழுது அழிக்கக்கூடிய கட்டடத்தின் பிளானை வைத்திருப்பதில் ஒரு பலனுமில்லை. மூன்றாவது இஷியூவும் வாதிகள் பக்கம் அனுகூலமாகத் தீர்மானிக்கப்பட்டது.

2-வது பிரதிவாதியாகிய "டுவார்க்கதாஸ் தாராம்சே"க்கு பாங்கிக்காரர் பராதீனம் பண்ணினார்களா? இந்த டுவார்க்கதாஸ் உண்மையாக கிரயம் வாங்கினவரா அல்ல பாங்கியில் டைரக்டராகிய "ஆமத்பாய் ஹாபிபாயி"க்குப் பதிலாக இவர் பேரால் பேரிரவலாக வாங்கப்பட்டதா? குடி ஆமத்பாய கட்சிக்காரராக வரவேண்டியதில்லையா என்கிற நான்காவது இஷியூவைப்பற்றி யோசிக்க வேண்டும். 1906ஞு ஜனவரிமீ 14உ பிறந்த பத்திரத்தினால் "டுவார்க்கதாஸ் தாராம்சே"க்கு பெந்தகம் கிரயமாகி யிருக்கிறது, நாஷனல் பாங்கியிலிருந்து தனக்கு வரவேண்டியதாயிருந்த தொகைக்கு செக்கு கொடுத்து பம்பாய் பாங்கிக்கு பணம் செலுத்தினதாக ருஜு பண்ணினார். அவரிடமிருந்த பாஸ் புக்கோடு இந்த ருஜு ஒத்திருக்கிறது. அவருடைய சொந்த பணத்திலிருந்து பம்பாய் பாங்கிக்குச் செலுத்தியிருக்கிறதாகத் தெரிகிறது. ஆமத்பாயிக்காக "டுவார்க்கதாஸ்" பேருக்கு பராதீனம் பண்ணியிருக்கிறதாக சொல்லுகிறதற்கு உண்டான காரணம் என்னவென்றால் "ஆமத்பாயி" பம்பாய் பாங்கியின் டைரக்டர் பெந்தகத்தைக் கிரயம் பண்ணி விடம்போகிற சமாச்சாரம் தெரிந்தவர். 2-வது பிரதிவாதி, தான் வாங்கிக்கொள்கிறதாக பாங்கிக்காரரை கேட்டார். அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. 'ரெடி மணி' என்னும் வேறொருவரும் அவ்வாறு கேட்டும் அதற்கும் பாங்கிக்காரர் ஒப்புக்கொள்ளவில்லை. "டுவார்க்கதாஸ் தாராம்சே" பாங்கிக்கு 42000ரூ. க்கு வாங்கிக்கொள்ளுகிறதாக 1903ஞு நவம்பர்மீ 24உ ஒரு லெட்டர் எழுதிக் கேட்டார். இத்தொகை மற்ற இருவர் கேட்ட தொகைக்கும் குறைந்திருந்தது. டி மாசம் 27உ டுவார்க்கதாஸ் எழுதின தொகைக்கு பெந்தகத்தை விட்டுவிடுகிறதாக பாங்கிக்காரர் ஒப்புக்கொண்டார்கள்.

அதிகமாகக் கொடுக்கிறதாக ஒப்புக்கொண்ட இருவருக்கும் கொடுக்காமல் 52000 பெந்தகத்தை ரூ 42000-க்கு 2-வது வாதியாகிய டுவார்க்க தாசுக்கு எழுதிக்கொடுத்து விட்டார்கள். "ரெடி மணி" கேட்ட உடனே 2-வது வாதி கேட்டிருக்கிறார் வழக்கமாக வேலையின் மேல் போகிறதுபோல ஒரு நாள் பாங்கிக்குப் போனபொழுது பாங்கிக்காரர் பெந்தகத்தை விற்கிற விஷயத்தைக் கேள்விப்பட்டதாக டுவார்க்கதாஸ் ஒப்புக்கொள்ளுகிறார். பாங்கியில் தனக்குச் சமாச்சாரம் சொன்னவரைச் சொல்லக்கூடியவராக வில்லை. பிறகு ஆமத்பாயின் மருமகனாகிய அப்துல்லா ஹூசேன் என்பவரை இவர்கேட்டபோது 42000-ரூ க்கு விட்டுவிடுவார்களென்பதாகவும் "ரெடி மணி" என்பவரும் வாங்கிக்கொள்கிறதாக பாங்கிக்காரரை கேட்டிருக்கிறதாகவும் சொன்னாரென்று ஒப்புக்கொண்டிருக்கிறார் 2-வது வாதி இவைகளை யெல்லாம் அப்துல்லா என்பவரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கிறார். 2-வது வாதி பெந்தகச் சொத்து விஷயமாக ஏற்பட்ட தஸ்தாவேஜிகளை வாங்குவதற்கு முன் பார்வையிடவில்லை. பம்பாய் பாங்கியின் வேலைத் திறமையில் நம்பிக்கை வைத்து கண்மூடித்தனமாய் வாங்கினேனென்று அவர் சொன்னார். வாங்கின பிறகு கூடி பெந்தகப் பத்திரத்தையாவது அதோடு கூட இருக்கும் பிளான்களையாவது பார்த்ததுமில்லை. வாங்குவதற்கு முன் 25000 ரூ க்கு ஆமத்பாயியோடு "உண்டி" லேவாதேவி பண்ணியிருந்ததுண்டு. 2-வது வாதியினால் என்டார்சு பண்ணப்பட்ட சில உண்டிகளை ஆமத்பாய் ஏற்றுக்கொண்டிருக்கிறார். வாங்கின பிறகும் ஆமத்பாயியோடு அநேக லேவாதேவி செய்து உண்டிகளை ஆமத்பாயி என்டார்சு பண்ணியிருக்கிறார். பெந்தகம் வாங்கின சமயத்தில் ரூ 55000 ஆமத்பாயிகு 2-வது வாதி கடன் கொடுக்கவேண்டியதிருந்ததாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

2-வது வாதியின் வாக்குமூலத்தைக் கொண்டு மேலே கூறிய சமாச்சாரங்கள் பொறுக்கிச் சேர்க்கப்பட்டது. இதனால் 2-வது வாதிக்குக் கடன் கொடுத்தவராகிய ஆமத்பாய் சொன்னபடி 2-வது வாதி நடத்தி யிருக்கிறாரென்றும் ஆமத்பாயி பாங்கியின் டைரக்டராயிருப்பதை முன்னிட்டு பெந்தகத்தை வாங்கக்கூடாதவராயிருப்பதால் 2-வது வாதியைக்காட்டி அவருக்கு ஆகவேண்டிய சங்கதிகளைச் சொல்லிக் கொடுத்து தனக்காக அவர் பெயரால் வாங்கியிருக்கிறாரென்றும் கோர்ட்டார் அறிந்துகொள்ளலாமென்றும் பிரதிவாதிகள் வாதித்தார்கள்,

சந்தேகிக்க இடமிருக்கின்றது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியது. 2-வது பிரதிவாதியும் ரெடிமணியும் கேட்டபோது பாங்கிக்காரர் ஒப்புக்கொள்ளாததற்கு காரணம் தெரியவில்லை. ஆமத்பாயிடம் இது விஷயமாக யாதொரு சம்பாஷணையுஞ் செய்ததில்லை யென்பது வாஸ்தவமாயிருக்கலாம். ஆனால் அவருடைய மருமகனிடமிருந்து சங்கதி யறிந்திருக்கிற விஷயம் ஒன்றிருக்கிறது. அவர் மருமகன் யாரிடமிருந்து இவ்விவரம் தெரிந்திருப்பார் என்னும் சங்கை யொன்றிருக்கிறது. பெந்தகம் வாங்கின சமயத்தில் ஆமத்பாயிக்கு கடன் கொடுக்க வேண்டியதாயிருந்த விஷயம் ஒன்றிருக்கிறது. இவைகள் எவ்வளவு சந்தேகத்துக்கிடமாயிருந்தாலும் பாங்கிக்காரர் 2-வது பிரதிவாதிகள் நேரில் பராதீனஞ் செய்திருந்தாலும் நேஷனல் பாங்கியில் தனக்குச் சொந்தமாய்ப் போட்டிருந்த தொகையைக்கொண்டு தான் வாங்கினதற்கு ஈடு செய்திருப்பதாலும் சந்தேகத்தைக் கொண்டு ஆமத்பாயிக்கு பதிலாக பேரிரவலாகத் தான் பேரால் வாங்கியிருக்கிறாரென்று எண்ணக்கூடாது. ஆமத்பாயியால் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் தான் பாங்கிக்கு 42000 அல்லது 40000ரூ கொடுக்க தான் காஷ் புக்கில் தொகை யில்லையென்றும் எதிர்களின் வக்கீல் ஆக்ஷேபித்தார். ஆனால் 2-வது வாதி அச்சமயத்தில் நாஷனல் பாங்கிக்கு பெருத் தொகைகளை அனுப்பி தன் பெயருக்கு கணக்கெழுதப்பட்டிருந்தாலும் ருஜுப்படுத்தினார். பாங்கிக்கு அனுப்பப்பட்டதால் இத்தொகையை தன் தினசரி வரவு செலவு கணக்கில் கொண்டு வரவில்லையென்று சமாதானங் கூறினார், "இம்மாதிரியான சந்தர்ப்பத்தில், கோர்ட்டார் செய்யுந் தீர்மானம் சந்தேகத்தைக் காரணமாக வைத்து ஏற்படக் கூடாது. ஆனால் சட்டத்துக்குரிய சாட்சியங்களால் ஸ்தாபிக்கப்பட்ட சட்ட ஆஸ்பதமான காரணங்களை முன்னிட்டு தீர்மானஞ் செய்யவேண்டுமென்று 11-மூர் இந்தியன் அப்பீல் 28-(44-வது பக்கத்தில்) பிரிவி கௌன்சிலால் கூறப்பட்டிருக்கிறது. மேலே எடுத்துக்காட்டிய கேசில் பேரிரவலாக வாங்கப்பட்டிருக்கிறதென்று எதிர்கட்சியால் வாதிக்கப்படுகிறது [illegible] வாங்கப்பட்டதென் பதற்குத் தகுந்த காரணங்கூறக் [illegible] அல்லது சில பாகத்தில் பொய்யானதாக [illegible] கொடுத்திருக்கிறதினால் பேரிரவலாகத்தான் வாங்கப்பட்டிருக்கிறதென்று செய்த தீர்மானத்தின்மேல் பிரிவி கௌன்சிலார் சொல்லுகிறதாவது "அப்பீல் வாதிக்கு பணங்கிடைத்த வழிக்கு திருப்திகரமில்லாத கணக்கு சொல்லியது அதிக ஆச்சரியமாயிருக்கிறது. ஆனால் சொத்தை வாங்கினவர் எவ்வாறு வாங்கினாரென்று கணக்குக்கொடுக்க பிரியப்பட்டிருக்க மாட்டார் என்று விசாரணை நடத்திய விதத்தினால் தெரிகிறது. இச்சந்தர்ப்பம் ஒரு சந்தேகத்தை உண்டு பண்ணக்கூடியதாக இருந்தாலும் அப்பீல் வாதி வாங்கின சொத்து வேறொருவருக்கு டிரஸ்டியாக இருந்து வாங்கினதாக எண்ணக்கொள்ளக்கூடியதான அப்பேர்க்கொத்த சங்கதியல்ல" என்று கூறிப்பிறகு "இச்சந்தர்ப்பங்களைக் கொண்டு யூகிக்கும் சூசனையினால் சொத்துக்களை உடையவர்களிடமிருந்து பிரித்துவிடுவோமானால் எந்தச்சொத்தும் காபந்தாயிருக்குமென்பது அசாத்தியம்" என்று பிரிவி கௌன்சிலில் கூறியிருக்கிறார்கள். ஆகையால் 4-(a), 4-(b) இஷியூக்கள் விஷயமாக 2-வது வாதியாகிய "டுவார்க்கதாஸ் தாரம்" எல்பின்ஸ்டோன் நாடகக் கொட்டகையுள்பட தாவா சொத்தில் ஒரு பாத்தியதையடைந்து உண்மையாகவே வாங்கினவரென்று வாதி பக்கம் முடிவு பண்ணப்பட்டது.

வாதி அச்சொத்தை ஒப்படைத்தபோதும் வியாச்சியங்கொண்டு வந்தபோதும் பகுதி முடிவு பெற்று புது பகுதி பத்திரம் ஏற்படாமலிருந்தால் 12 பிரதிவாதிகளை பகுதிச்சொத்திலிருந்து அப்புறப்படுத்தலாமாவென்பதைப்பற்றி யோசிக்க வேண்டியது. 2-வது பிரதிவாதியால் 1888-ஞு ஜூலைமீ 15உயிலிருந்து 15-வருஷத்துக்கு பகுதிக்கு 1892ஞு அக்டோபர்மீ 14உயில் வாங்கப்பட்டது. ஆகையால் 1903-ஞு ஜூலைமீ 15உ முடிவு பெற்றது. இன்னம் 10 வருஷத்திற்கு திரும்ப புதுப்பித்துக்கொள்ளுகிறதென்று அப்பத்திரத்தில் உடன்படிக்கை கண்டிருக்கிறது. அவ்வுடன்படிக்கை நிலத்தோடு செல்லக்கூடியது. (அதாவது நிலம் யார்வசமாகிறதோ அவர் வசம் போகிறது) என்று தீர்மானங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அன்றியும் பெந்தகப் பத்திரத்தில் பெந்தகம் வைத்தவர்கள் பகுதிப் பத்திரத்தை புதுப்பித்துக் கொடுக்காவிட்டால், பெந்தகம் வாங்கினவர்கள் புதுப்பித்துக் கொள்ளுகிறதென்று கண்டெழுதி யிருக்கிறது; இன்னமும் பெந்தகம் வைத்தவர்கள் கெடுவுக்குள் [illegible] பணங்கொடுக்காத பட்சத்தில் சொத்தை பெந்தகம் வைத்தவர்கள் சுவாதீனப்படுத்திக்கொள்ளுகிறதென்றும் பெந்தகப் பத்திரத்தில் கண்டிருக்கிறது அவ்வாறே பாங்கிக்காரர் [illegible] 1906-ஞு செப்டெம்பர்மீ 3உ கேட்டனுப்பி யிருக்கிறார்கள்; பெந்தகம் வைத்தவர்களும் தங்கள் மூலமாக பாத்தியங் கொண்டாடுகிறவர்களும் இலச் சொந்தக்காரர்களிடமிருந்து பகுதிப் பத்திரத்தைப் புதுப்பித்துக் கொள்ளாததால் தாங்களே அந்நிலத்தை வைத்துக்கொள்ள வேண்டுமென்று பெந்தகம் வைத்தவர்கள் சொல்லக்கூடாது. இவ்வாட்சேபனையை நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் சொல்லலாம். பெந்தகம் வைத்தவர்களுக்கும் வாங்கினவருக்கும் பெந்தகப் பத்திரத்தில் ஷரத்து கட்டுப்படுத்தும். பழைய பகுதிக் கெடுவு முடிந்தாலும் பெந்தகம் வைத்தவர்கள் அந்நிலத்தைத் தங்கள் வசம் வைத்துக்கொள்ள பாத்தியமுடையவர்கள் அப்படி வைத்துக்கொள்வது அயோக்கியதையால் கைவசப்படுத்தினதாகாது. பெந்தகம் வைத்தவர்கள் அப்பகுதியை புதுப்பித்துக் கொண்டால் அதுவும் பெந்தகம் வாங்கினவர்கள் நலத்துக்காகும். ஆகையால் பெந்தகம் வாங்கினவர்கள் சொத்தை சுவாதீனப்படுத்திக்கொள்வது. புதுப்பிக்காவிட்டாலும், புதுப்பித்துக் கொடுக்க அடைந்ததாக பாவிக்கப்படவேண்டும்.

2-வது பிரதிவாதியிடமிருந்து 1908-ஞு டிசம்பர்மீ 2உ முதல் பிரதிவாதி கீழ்க்குத்தகை வாங்கியிருக்கிறதாகச் சொல்லுகிறார், வியாஜ்ஜியம் நடவடிக்கையிலிருக்கும் பொழுது குத்தகைக்கு வாங்கினது செல்லாது. இக்குத்தகைகூட மோசடியானது. பெந்தகம் வாங்கினவர்களின் பாத்தியதை கெடுக்கிறதற்காகச் செய்யப்பட்டதென்று வாதிகள் பக்கத்தில் கட்டி சொன்னார்கள். இக்குத்தகை 3வருஷக் கெடுவுக்கு ஏற்பட்டது. ஆனால் முந்தின குத்தகைகள் குறைந்த கெடுவுக்கு ஏற்பட்டிருந்தது. இக்குத்தகைக்குப்பிறகு முதல் பிரதிவாதி 2-வது பிரதிவாதிக்கு ஒரு அதிகாரப் பத்திரங்கொடுக்க குத்தகை கொடுத்தவராகிய 2-வது பிரதிவாதி வாடகையை வசூல் பண்ணி வரி செலுத்திக்கொண்டு வந்திருக்கிறார். பெந்தகத்தை வாங்கிக்கொள்ளுகிறதாக 2-வது பிரதிவாதி பாங்கிக்காரரை கேட்டார்கள் அவர்கள் மறுத்த பிறகு கீழ் குத்தகை கொடுத்ததை யோசிக்கும் பட்சத்தில் சந்தேகத்திற்கு ஆஸ்பதமாயிருக்கிறது. இக்கீழ் குத்தகை புரட்டானதல்ல வென்று 2-வது பிரதிவாதி சாட்சியாக வந்து கூறாமலிருந்தாலும், இது மோசம் புரட்டென்று சாட்சியம் உறுதியாயும் தெளிவாகவும் ஏற்படவில்லை. இதைப்பற்றி விரிவாக யோசிக்கவேண்டியதில்லை. இக்கீழ் குத்தகை நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்டதென்று நினைத்தாலும் பெந்தகம் வைத்தவனும் அவன் மூலமாக பாத்தியம் கொண்டாடுகிறவனும் பெந்தகம் வாங்கினவன் அச்சொத்திற் பிரவேசிக்கிறவரையில் அவர்கள் பாத்தியம் நிச்சயமில்லாமல் பெந்தகம் வாங்கினவனின் இஷ்டத்தைப் பொருத்திருக்கிறது. பெந்தகம் வைத்தவன் பெந்தகம் வாங்கினவனுடைய அனுமதி

யில்லாமல் குத்தகைக்கு விட்டால் (அக்குத்தகை நியாயமான உடன்படிக்கையினால் சுவாதீனப்படுத்தி யிருந்தாலும் அல்லது மூரண சாதனத்தினால் கிடைக்கப் பெற்றாலும் குத்தகை கொடுத்தவனையும் குத்தகை எடுத்தவனையுங் கட்டுப்படுத்தினாலும்) மேற்பட்ட பாத்தியமுடைய பெந்தகம் வாங்கினவனின் பாத்தியத்துக்கு கீழாகவே கொள்ளப்படும். இவ்வபிப்பிராயம் சில தீர்மானங்களில் சொல்லப்பட்டிருப்பதால், முதல் பிரதிவாதியின் கீழ்குத்தகை வாதியைக் கட்டுப்படுத்தாது. ஆனால் இவ்வாறு கீழ் குத்தகை கொடுக்க பாங்கிக்காரர் இடங்கொடுத்து அச்சொத்தை அவர்கள் உடயோகித்து வரும் வழக்கமான பாத்தியத்தைக் காண்பிக்கிறதென்றும் ஆகையால் 2-வது பிரதிவாதி பாங்கியின் ஏஜெண்டாக நடத்தினதாகுமென்றும் அல்லது அப்பாக்கியின் சம்மதத்தின் மேல் நடத்தினதாகுமென்றும் இதனால் நல்ல எண்ணத்துடன் நடத்தினதாகுமென்றும் இதனால் நல்ல எண்ணத்துடன் நடத்தின கீழ்குத்தகையாகும் என்று கட்சி சொன்னார்கள். பெந்தகப் பத்திரத்தின் ஷரத்துக்குள்ள தங்கள் பாத்தியத்தை யிழந்து விடும்படியாக கீழ் குத்தகைவிட 2-வது பிரதிவாதியை ஏஜண்டாக நடத்தவாவது பாங்கிக்காரர் அனுமதி பெற்று நடத்தினதாகவாவது ஒரு சாக்ஷியமும் தோன்றவில்லை. 2-வது பிரதிவாதிவசத்தில் நிலத்தை அனுபவிக்க விட்டதால் இம்மாதிரி துணிவுகொள்ளக் கூடாது. பெந்தகப் பத்திரத்து ஷரத்துப்படி விட்டிருந்ததாகும். பணங்கேட்டு கொடுக்கத் தவறினால் பாங்கிக்காரர் சொத்தை சுவாதீனப்படுத்திக் கொள்ளலாமென்பதை பெந்தகப் பத்திரம் ரிஜிஸ்டராகி யிருப்பதால் முதல்பிரதிவாதி அறிந்திருக்கிறார். இ. லா. ரி. 26 சென். 792. இல் "ரெயில்ஹட்ஸ் ஆஷபி அண்டு சன் லிமிடெட்" கேசில் பெந்தகம் வாங்கினவர் பெந்தகம் கொடுத்தவரை அனுபவிக்க இடங் கொடுத்திருந்தால் எதுவுஞ் செய்து சொத்தை பாகிக்க பொது அதிகாரம் கொடுத்ததாக அர்த்தம் பண்ணுவது அதிக அபாயகரமானது. மற் இஷியூக்களும் இவ்வாது தீர்ப்பு சொல்லப்பட்டது.

(இதின் தொடர்ச்சி மார்ச்சுமாத சஞ்சிகையில் வரும்.)

—:o:—

JUDICAL NOTIFICATION.

விளம்பரங்கள்.

1900-௵ மேமீ 22௳ யுள்ள போர்ட் ஸெயன்ட் ஜார்ஜ் கெஜெட் 1-ம் பாகம் 704, 705-வது பக்கங்களிலே பிரசுரிக்கப்பட்ட ரெஜிஸ்ட்ரேஷனைப் பற்றிய 1-ம் செ. விதியை ரத்து செய்து அதற்குப் பர்த்தியாக, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற அடியிற்கண்ட விதியானது 1908-௵ த்திய இந்து தேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டின் 69-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி எல்லாருக்கும் தெரியும்பொருட்டு பிரசுரிக்கப்படுகிறது.

இந்த விதியானது 1910-௵ டிஸெம்பர்மீ 1௳ முதற்கொண்டு அமுலுக்கு வரும்:—

பாஷைகள்.

1. (1) அடியிற்கண்ட பாஷைகள் அவைகளின் கீழ் சொல்லப்பட்ட டிஸ்ட்ரிக்டுகளிலும் ஸப் டிஸ்ட்ரிக்டுகளிலும் சாதாரணமாய் வழங்குவதாக எண்ணப்படும்.

பிரிவு 19.

1. தெலுங்கு,

கஞ்சம், விசாகபட்டணம், கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர், கடப்பை, கர்நூல், பல்லாரி, வட ஆற்காடு டிஸ்ட்ரிக்டுகள்.

சேலம் டிஸ்ட்ரிக்டில் ஹொசூர், டெங்கிணிகோட்டை ஸப் டிஸ்ட்ரிக்டுகள்.

மதராஸ்-செங்கல்பட்டு டிஸ்ட்ரிக்டில் மதராஸ்; வட மதராஸ், தென் மதராஸ், மேற்கு மதராஸ், செம்பியம், பொன்னேரி, ஸத்யவேடு, திருவள்ளூர் ஸப் டிஸ்ட்ரிக்டுகள்.

2. தமிழ்.

மதராஸ்-செங்கல்பட்டு வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, மதுரை, திருச்சிணுப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி டிஸ்ட்ரிக்டுகள்.

3. கன்னடம்.

தென்கன்னடம், பல்லாரி டிஸ்ட்ரிக்டுகள்.

கோயம்புத்தூர் டிஸ்ட்ரிக்டில் ஹஹனூர், கொள்ளேகாலம், தாளவாடி ஸப் டிஸ்ட்ரிக்டுகள்.

சேலம் டிஸ்ட்ரிக்டில் ஹொசூர், டெங்கிணிகோட்டை ஸப் டிஸ்ட்ரிக்டுகள்.

4. மலையாளம்.

வட மலையாளம், தென் மலையாளம் டிஸ்ட்ரிக்டுகள்.

தென் கன்னடம் டிஸ்ட்ரிக்டில் ஹோஸ்த்ருக், காஸரகோட் ஸப் டிஸ்ட்ரிக்டுகள்.

நீலகிரி டிஸ்ட்ரிக்டில் கூடலூர் ஸப் டிஸ்ட்ரிக்ட்.

5. ஹிந்துஸ்தானி.

மதராஸ்-செங்கல்பட்டு டிஸ்ட்ரிக்டில் மதராஸ், வட மதராஸ், தென் மதராஸ், மேற்கு மதராஸ், செம்பியம் ஸப்டிஸ்ட்ரிக்டுகள்.

கர்நூல் டிஸ்ட்ரிக்டில் கர்நூல் ஸப் டிஸ்ட்ரிக்ட்.

வட ஆற்காடு டிஸ்ட்ரிக்டில் ஆற்காடு, சித்தூர், சித்தூர் பட்டணம், வேலூர் ஸப் டிஸ்ட்ரிக்டுகள்.

திருச்சிணுப்பள்ளி டிஸ்ட்ரிக்டில் திருச்சிணுப்பள்ளி, திருச்சிணுப்பள்ளிக்கோட்டை, திருச்சிணுப்பள்ளி பட்டணம் ஸப் டிஸ்ட்ரிக்டுகள்.

6. உரியா.

கஞ்ஜம் டிஸ்ட்ரிக்ட்.

(ii) இங்கிலீஷ், தெலுங்கு அல்லது தமிழில் எழுதப்பட்ட தஸ்தவேஜுகளை, அந்த பாஷைகளைத் தெரிந்திருக்கும் ரெஜிஸ்டர்செய்யும் உத்தியோகஸ்தர் இருக்கிற எந்த ஆபீஸிலாவது தாக்கல் செய்யலாம்.

(iii) தஸ்தவேஜியின் ஸ்டாம்ப்வெண்டர் (ஸ்டாம்ப் விற்பவர்) எழுதும் எண்டார்ஸ்மென்டை தஸ்தாவேஜைச் சேர்ந்த பாகமாக எண்ணவேண்டும்; அது ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தருக்குத் தெரியாத ஒரு பாஷையில் எழுதியிருக்கும்பட்சத்திலே, அதற்குச் சம்பந்தப்பட்டவரை அதற்கு ஒரு மொழி பெயர்ப்பு தாக்கல் செய்யும்படி கேட்கவேண்டும்.

(iv) ஒரு வக்காலத்து நாமாவானது அத்தாட்சிக் கையெழுத்து செய்யப்படுவதற்காகத் தாக்கல் செய்யப்பட்டாலாவது, அத்தாட்சிக் கையெழுத்து செய்யப்பட்ட ஒரு வக்காலத்து நாமாவானது, ரெஜிஸ்டர் செய்வதற்காகத் தாக்கல் செய்யப்படும் ஒரு தஸ்தாவேஜுடனாகிலும், அந்த தஸ்தவேஜு சம்பந்தமாகவாகிலும், ஒரு ஏஜெண்டினால் ஹாஜர்ப்படுத்தப்பட்டாவதிருந்து அந்த வக்காலத்து நாமாவானது அந்த டிஸ்ட்ரிக்டில் சாதாரணமாய் வழங்காத ஒரு பாஷையில் எழுதப்பட்டிருந்தால், ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தரானவர் தமக்கு அந்த பாஷை தெரியாத பட்சத்திலே, அதை தாக்கல் செய்தவரை அந்த வக்காலத்து நாமாவுக்கு இங்கிலீஷிலாவது அந்த டிஸ்ட்ரிக்டில் சாதாரணமாய் வழங்குகிற ஒரு பாஷையிலாவது சரியான ஒரு மொழி பெயர்ப்பு செய்துகொண்டு வரும்படி கேட்கலாம்.

(v) அந்த மொழி பெயர்ப்பை தாக்கல் செய்கிறவர் அது சரியான மொழி பெயர்ப்பென்று உறுதிமொழி கூறி, அதில் கையெழுத்து போடவேண்டும்.

(vi) இந்த விதியின்படிக்கான விஷயங்களில் மொழி பெயர்ப்பு தாக்கல் செய்வதற்காகக் கட்டணம் எதுவும் விதித்து வாங்கத்தக்கதல்ல.

1900-௵ மேமீ 22௳ போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் 1-ம் பாகம் 707 முதல் 709 வரையிலுள்ள பக்கங்களில் பிரசுரிக்கப்பட்ட ரெஜிஸ்ட்ரேஷனைப் பற்றிய 14, 23, 26, 27, 28, 29-வது விதிகளையும் 22-வது விதியின் கடைசி பாகத்தையும் ரத்து செய்து அவைகளுக்குப் பர்த்தியாக, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற அடியிற்கண்ட விதிகள் 1908-௵ த்திய இந்து தேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டின் 69-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படி எல்லாருக்கும் தெரியும்பொருட்டு பிரசித்தஞ் செய்யப்படுகின்றன.

இந்த விதிகள் 1911-௵ ஜனவரிமீ 1௳ முதற்கொண்டு அமுலுக்கு வரும்.

தஸ்தவேஜுகளுக்காகவும் கட்டணங்களுக்காகவும் ரசீதுகள்.

14. (i) ரெஜிஸ்டர் செய்வதற்காக தாக்கல் செய்யப்படும் பிரதி தஸ்தவேஜுக்காகவும், அத்தாட்சிக் கையெழுத்து செய்யப்படுவதற்காக தாக்கல் செய்யப்படும் பிரதி வக்காலத்துநாமாவுக்காகவும், கட்டிவைக்கப்பட்ட முத்திரையிட்ட உறை ஒவ்வொன்றுக்காகவும், ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் விதித்து வசூல் செய்யும் பிரதி கட்டணம் அல்லது அபராதத்துக்காகவும் ஒரு ரசீது கொடுக்கவேண்டும்.

ஆக்டின் 52-வது 61-வது பிரிவுகள்.

ரெவினியூ ரெஜிஸ்டரிலுள்ள பதிவை ஒருவர்பேரிலிருந்து இன்னொருவர் பேருக்கு மாற்றுவதற்காகச் செய்துக்கொள்ளப்படும் விண்ணப்பம் தஸ்தவேஜுடன் தாக்கல் செய்யப்பட்டால், அதைப் பெற்றுக்கொண்டதாக, தஸ்தவேஜுக்காகக் கொடுக்கப்படும் ரசீதில் காணவேண்டும்.

(ii) கட்டணங்களில் அநேக அம்சங்கள் இருந்தால், ஜாஸ்தி கட்டணம் ஏதாவது வாங்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அதைக் கண்டு பிடிப்பதற்கு அனுகூலமாயிருக்கும்படி, ஒவ்வொரு அம்சத்தையும் ரசீதிலும் கௌண்டர்பாயில் என்னும் எதிரிடையிலும் தனித்தனியே எழுதவேண்டும். நகல் தயார் செய்வதற்காகக் கட்டணம் வாங்கும் விஷயத்தில், வார்த்தைகள் இத்தனையென்றும், மைல் வீத வர்த்தனை வாங்கும் விஷயத்தில் மைல் இத்தனையென்றும் காணவேண்டும்.

(iii) அவசியமான பதிவுகளை எதிரிடை, ரசீது ஆகிய இவ்விரண்டிலும் செய்ய வேண்டும்; ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் அவைகளில் முறையே இனிஷல் செய்யவும் கையெழுத்து போடவும் வேண்டும்.

(iv) ஒரு தஸ்தாவேஜுக்காகக் கொடுக்கும் ரசீதை, தஸ்தாவேஜைத் தாக்கல் செய்யும் நபருக்காவது அந்த தஸ்தாவேஜைப் பெற்றுக் கொள்ளும்படி அவரால் நியமிக்கப்படுகிறவர்க்காவது கொடுக்க வேண்டும்; அப்படி கொடுப்பதற்கு முன், மேலே கண்டபடி நியமித்தெழுதும் எண்டார்ஸ்மென்டில், தஸ்தாவேஜு தாக்கல் செய்கிறவரின் கையெழுத்தையும், நியமிக்கப் பட்டவருக்கு எழுதத் தெரிந்திருந்தால் அவருடைய கையெழுத்தையும், எதிரிடையில் வாங்கிக்கொள்ள வேண்டும்; அப்படி கையெழுத்து வாங்கிக்கொள்வது மேலே கண்டபடி நியமிக்கப்பட்டவர் தஸ்தாவேஜை வாபஸ் வாங்கிக் கொள்ள வரும்போது ஒத்திட்டுப் பார்த்துக்கொள்ளும்பொருட்டாகும்.

(v) ஒரே நபர் ஏககாலத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தஸ்தாவேஜுகளைத் தாக்கல் செய்யும்போது கூட ஒவ்வொரு தஸ்தாவேஜுக்கும் பிரத்தியேகமான ஒரு ரசீது கொடுக்கவேண்டும்.

(vi) ஒரு தஸ்தாவேஜு தாக்கல் செய்யப்பட்ட தினத்திலேயே அது ரெஜிஸ்டர் புஸ்தகத்தில் எழுதுவதற்குச் சித்தமாயிருக்கும்பட்சத்தில், அது வாபஸ் செய்யப்படுவதற்குச் சித்தமாயிருக்கும் தினத்தையும் மணி நேரத்தையும் ரசீதின்மேல் எழுதவேண்டும். ஒரு தஸ்தாவேஜைக்குறித்து விசாரணையாகிறவரையிலாவது, அபிப்பிராயங் கேட்டிருந்து அதற்குப் பதில் வருகிறவரையிலாவது அதை நிறுத்தி வைத்துக்கொள்ளும் விஷயத்திலே, அதை வாபஸ் செய்யும் தினத்தையும் மணி நேரத்தையும், தஸ்தாவேஜு தாக்கல் செய்தவருக்காகிலும் அதை வாங்கிக்கொண்டுபோக அவரால் நியமிக்கப்பட்டவருக்காகிலும் அந்த தஸ்தாவேஜு ரெஜிஸ்டர் புஸ்தகத்தில் எழுதுவதற்குச் சித்தமாகும் தினத்திலே ஒரு பிரத்தியேகமான நோடிஸ் பிறப்பித்து அதன் மூலமாய்த் தெரிவிக்க வேண்டும். ஆயினும், பின் சொன்ன விஷயத்தில், தஸ்தாவேஜு ரெஜிஸ்டர் புஸ்தகத்தில் எழுதுவதற்குச் சித்தமாயிருக்கும் தினத்திலே ரசீது கொண்டுவரப்பட்டு, அந்த தினத்தில் தஸ்தாவேஜை வாபஸ் செய்ய முடியாமற்போனால், அந்த சங்கதியை ரசீதிலேயே எழுதிக்கொடுக்கலாம்.

ரசீதிலாவது நோடிஸிலாவது கண்டிருக்கிற தேதியில் ஒரு தஸ்தாவேஜு வாபஸ் செய்யப்படுவதற்குச் சித்தமாயிராவிட்டால், அந்த ரசீது அல்லது நோடிஸை ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் முன் ஹாஜர் செய்யும் பட்சத்திலே, அந்த தினத்தைப்பற்றிய பதிவை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பின் எந்த தேதியில் அந்த தஸ்தாவேஜு கொடுக்கச் சித்தமாகுமோ அந்த தேதியைப் பதிவுசெய்து, அதற்கு ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் இனிஷல் செய்யவேண்டும்; எதிரிடையில் அதற்கொத்தபடி பதிவுகளையும் திருத்தத்தையும் செய்யவேண்டும்.

(vii) ஒரு தஸ்தாவேஜு ரெஜிஸ்டர் செய்வதற்காக எந்த தேதியில் வாங்கிக்கொள்ளப்பட்டதோ அந்தத் தேதியிலேயே கூடுமானால் அதை வாபஸ் பண்ணிவிடவேண்டும்.

(viii) ஒரு தஸ்தாவேஜைப் பெற்றுக்கொண்டு போகவேண்டுமானால், அதை மறுபடியும் கேட்டு வாங்கிக்கொள்ள பாத்தியதையுடைய நபர் ரசீதைக் கொண்டுவந்து காட்டவேண்டும்; அதன்மேல், ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் எதிரிடையில் தஸ்தாவேஜைப் பெற்றுக்கொண்டதாக ஒப்புக்கொள்ளும் அம்சத்துக்கு அவருடைய கையெழுத்தை வாங்கிக்கொண்டு, தஸ்தாவேஜை வாபஸ்செய்யும் தேதியை ரசீதின்மேல் எழுதி அந்தப் பதிவுக்கு இனிஷல் செய்து அதையும் தஸ்தாவேஜையும் வாபஸ் பண்ணிவிடவேண்டும். ஒரு தஸ்தாவேஜை மறுபடியும் கேட்டு வாங்கிக்கொள்ள பாத்தியதையுடைய நபர் இன்னாரென்று ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தருக்குத் தெரிந்திருந்தால், அவர் அந்த தஸ்தவேஜை ஒரு ஆளினிடம் ஒப்பித்துவிடும்படி கேட்டுக்கொள்வதாய் ரசீதில் எழுதி கையெழுத்துப்போட்டு அந்த ரசீதை அந்த ஆள் மூலமாய் ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தருக்கு அனுப்பி அந்த தஸ்தவேஜை வாபஸ் பெற்றுக்கொள்ளலாம். அதன்மேல் தஸ்தவேஜை வாபஸ் பெற்றுக்கொண்டதற்கு அந்த ஆளின் கையெழுத்தையும் கைப் பெருவிரல் அடையாளத்தையும் ரசீதின் எதிரிடையிலே வாங்கிக்கொண்டபிறகு அந்த தஸ்தவேஜை அவனிடம் கொடுத்துவிடலாம்; அந்த ரசீதை ஆபீஸில் நிறுத்திக்கொண்டு எதிரிடையுடன் ஒட்டிவைக்க வேண்டும்.

(ix) ஒரு காணாமற் போகும் பட்சத்திலே, அதை ஹாஜர் செய்திருக்க வேண்டியவர் அது காணாமற் போயிற்றென்று உறுதிமொழி கூறி எதிரிடையில் கையெழுத்து செய்வதன் மேலும், ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் வேண்டுமென்று கேட்கும் பட்சத்திலே, தன் கைப்பெருவிரல் அடையாளத்தை அதில் போடுவதின்மேலும் தஸ்தாவேஜைப் பெற்றுக் கொள்ளலாம்.

(x) தஸ்தாவேஜு எந்த தேதியில் கொடுப்பதற்குத் தயாராயிருக்குமென்று ரசீதில் குறித்திருக்கிறதோ அந்தத் தேதி முதல் [illegible] தஸ்தாவேஜை வாங்கிக் கொள்ள நேமகமானவர் அதைத் திரும்பப் பெற்றுகொள்ளத் தவறுவாராகில், [illegible] நேமகஞ்செய்தவர் அந்த நேமகத்தை ரத்து செய்துவிட்டதாக எதிரிடையில் எழுதி கையெழுத்து

போட்டு அந்தப்படி ரத்து செய்யலாம்.

ஒரு தஸ்தாவேஜுக்குச் சம்பந்தப்பட்ட நபர்-அதை யாருக்குக் கொடுக்கும்படி ரசீது எழுதப்பட்டிருக்கிறதோ அக்நபருக்கு அந்த தஸ்தாவேஜை வாபஸ் செய்யக் கூடாதென்று ஆக்ஷேபித்தால், ஷை தஸ்தாவேஜை வாபஸ் பண்ணுதபடி ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தரைத் தடுக்கும் பொருட்டு இன்ஜங்ஷன் உத்தரவுக்காகத் தகுந்த அதிகாரமுள்ள கோர்ட்டாருக்கு ஷை நபர் விண்ணப்பம் செய்துகொண்டிருப்பதாக ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தருக்குத் திருப்திகரமாய் ஸ்தாபித்தாலன்றி மற்றப்படி, ஷை ஆட்சேபனை செல்லும்படி இடங்கொடுக்கக் கூடாது.

(xi) முத்திரைக் கட்டணக் குறைவுக்காக மறியல் செய்யப்பட்ட ஒரு தஸ்தாவேஜானது-முத்திரைத் தீர்வை இன்னதென்று தீர்மானித்தான பிறகு கலெக்டரிடத்திலிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டால் அந்த, ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தரானவர்-தஸ்தாவேஜை தாக்கல் செய்தவருக்காவது. அந்த தஸ்தாவேஜைப் பெற்றுக்கொள்ள அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிற நபருக்காவது, அந்த தஸ்தாவேஜை ரெஜிஸ்டர் செய்வதைக் பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டாகிலும் அந்த தஸ்தாவேஜை வாங்கிக் கொண்டு போகும்படியாகிலும் உடனே எழுத்து மூலமாக ஒரு நோடீஸ் கொடுக்க வேண்டும்.

(xii) ஒருவருடைய வீட்டில் ரெஜிஸ்டர் செய்யப் போகும்போது, ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் ரசீது புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு போகக் கூடாது; ஆனால், அதற்கு வேண்டிய ரசீதை, சம்பந்தப்பட்ட நபருக்குக் கொடுப்பதற்காக எதிரிடையிலிருந்து கிழித்தெடுத்துக் கொண்டு போகலாம்; எதிரிடையில் செய்யவேண்டிய பதிவுகளை, ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் தம்முடைய ஆபீஸுக்குத் திரும்பி வந்தபிறகு செய்துகொள்ளலாம். அப்படிப்பட்ட விஷயத்திலே, தஸதாவேஜைப் பெற்றுக் கொள்ளும்படி எவராவது நியமிக்கப்படுவதாயிருந்தால், அந்த நேமகத்தை ஒரு துண்டு கடிதாசியில் எழுதி வாங்கிக்கொண்டு. அதில் ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் இனிஷல் செய்து தேதிபோட்டு அதை எதிரிடையோடு ஒட்டி வைத்துக்கொள்ள வேண்டும்.

(xiii) 14-வது விதியைச் சேர்ந்த (iv) முதல் (xii) வரையில் குறிப்பிட்டுள்ள பகுதிகளிலே தபால் மூலமாய் ஒரு தஸ்தாவேஜை வாபஸ் செய்வதைக் குறித்துப் பேசவில்லை; ஆனால் ஒரு தஸ்தாவேஜை தாக்கல் செய்தவர்-அந்த தஸ்தாவேஜைத் தபால் மூலமாய்த் தமக்கு வாபஸ் செய்ய வேண்டுமென்று கோரும் பட்சத்திலே, அவருடைய சொந்த உத்தரவாதத்தின் மேலும் அடியிற்கண்ட ஷரத்துகளுக்குட்பட்டும் அப்படியே அதை வாபஸ் செய்யலாம்:—

(a) தஸ்தாவேஜைத் தாக்கல் செய்கிறவர் தாம் குறிப்பிடும் விலாசத்துக்கு ரெஜிஸ்டர் தபால் மூலமாய் அந்த தஸதாவேஜைத் திருப்பியனுப்பும்படி அதிகாரம் கொடுப்பதாய் ரசீதின் எதிரிடையில் எழுதி அதற்கு கையெழுத்து போட்டுக் கொடுப்பதுமல்லாமல், தகுதியான ஒரு லகோடாவின் மேல் அந்த விலாசத்தை எழுதி, ரெஜிஸ்டர் செய்வதற்குப் பிடிக்கும் கட்டணத்திற்கும் தபால் செலவுக்கும் விலாசதாரர் ஷை லகோடாவைப் பெற்றுக்கொண்டதாக ஒப்புக்கொள்ளும் ரசீதை வாங்கியனுப்புவதற்கான கட்டணத்துக்கும் சரிப்பட்டுப் போவதற்குப் போதுமான தபால் தலைகளையும் ஒட்டி அந்த லகோடாவை ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தரிடம் கட்டிவைக்கவேண்டும்.

(b) அவசியமான பதிவுகளைச் செய்வதற்காக வைத்து வைக்கப்பட்ட ரெஜிஸ்டரிலே அவைகளை எழுதிக்கொள்ளும்படி செய்த பிறகு அந்த லகோடாவை ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் பத்திரமாய் வைக்க வேண்டும்.

(c) தஸதாவேஜை ரெஜிஸடர் செய்தான பிறகு, ரெஜிஸடர் செய்யும் உத்தியோகஸதர் ஷை தஸதாவேஜை லகோடாவுக்குள் போட்டுத் தபாலில் போட்டு விட்டு, அந்த சங்கதியை எதிரிடையில் குறித்துக்கொள்ள வேண்டும்.

(d) விலாசதாரர் ஷை தஸதாவேஜைப் பெற்றுக்கொண்டதாக ஒப்புக்கொள்ளும் ரசீது வரப்பெற்றுக்கொண்டவுடன் அவை எதிரிடையோடு ஒட்டி வைத்துக்கொள்ள வேண்டும்.

(e) இது விஷயமாய் நடத்தும் ஒவ்வொரு காரியத்துக்கும் அதற்கொத்த பதிவுகளை (b) குறிப்பிட்ட பகுதியில் சொல்லப்பட்ட ரெஜிஸ்டரில் எழுதி வைக்க வேண்டும்.

கட்டணங்களும் அபராதங்களும்.

26. கட்டணம் விதிக்கும் விஷயத்தில் உத்திராவாதியாயிருக்கிற ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தரே-செலுத்த வேண்டிய கட்டணம் இவ்வளவென்று முதலில் தீர்மானிக்க வேண்டியவராவார். ஆக்டின் 78: 79, 80-வது பிரிவுகள். அதைச்-செலுத்திய பிறகு தஸ்தாவேஜை தாக்கல் செய்திருக்கிறவருக்கு அதிருப்தியாயிருந்தால், அவர் பிரஸ்தாப விஷயத்தை ரெஜிஸ்ட்ராருடைய அபிப்பிராயத்துக்குத் தெரிவிக்கலாம்; அவர் ஜாஸ்தி கட்டணம் விதிக்கப்பட்டதென்று அபிப்பிராயப் பட்டால், ஜாஸ்தியாயிருக்கிற யாதொரு தொகையை வாபஸ் கொடுத்துவிடும்படி ஸப் ரெஜிஸ்ட்ராருக்கு உத்தரவு செய்யவேண்டும். அவருடைய தீர்மானம் கட்சிக்காரருக்கு விரோதமா யிருந்தால், அந்த நபர் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு ஷை விஷயத்தைப் பின்னும் தெரிவித்துக் கொள்ளலாம்.

27. (i) ரெஜிஸ்டர் செய்ய நிராகரிக்கிற விஷயத்திலே கமிஷன் என்னும் கட்டளைகளுக்காகவும், ஸம்மன்களுக்காகவும், கட்சிக்காரர்களின் இருப்பிடத்தில் ரெஜிஸ்டர் செய்யப் போவதற்காகவும், பிரயாண வர்த்தனைகளுக்காகவும் கட்டணங்களும் வர்த்தனைகளும் வசூல் செய்யப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட கட்டணங்கள் தவிர மற்ற எவ்வித கட்டணம் அல்லது அபராதத்தையும் வாபஸ் செய்து விடவேண்டும். அப்படி வாபஸ் செய்ய வேண்டிய தொகையை, ரெஜிஸடர் செய்யும் உத்தியோகஸ்தரிடமிருக்கும் பெர்மனெண்ட் அட்வான்ஸ் என்னும் நிலையான முன் பணத்திலிருந்து செலுத்திவிட்டு, அப்படி வாபஸ் செய்யப்பட்ட தொகையைப் பர்த்தி செய்துகொள்வதற்கு விவரமான ஒரு (bill) பில்லை வழக்கப்படி அனுப்பவேண்டும்.

(ii) ஒரு அபராதம் அல்லது கட்டணத்தை வஜா செய்ய வேண்டுமென்று செய்துகொள்ளும் ஒவ்வொரு விண்ணப்பத்தையும், அதற்கு அனுமதி கொடுக்கும் அதிகாரிக்கு சரியானதுவாராவாக அனுப்பும்பொருட்டு, அதை விதித்து வசூல் செய்த ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தரிடம் முதலில் கொடுத்துக்கொள்ளவேண்டும்.

(iii) ஜாஸ்தியாகவாவது, இலாகாவினல் செய்யப்படாத வேலைக்காவது வசூல் செய்யப்பட்ட கட்டணங்கள் அல்லது அபராதங்களை வாபஸ செய்வதற்காகச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்களை டிஸ்ட்ரிக்ட் ரெஜிஸட்ரார்கள் தாங்களே பைசல் செய்யலாம்.

28. (i) ஒரு தஸ்தவேஜு ரெஜிஸ்டர் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டாலுஞ்சரி, அங்கீகரிக்கப் படாமற்போனாலுஞ்சரி, எல்லாக் கட்டணங்களையும் அபராதங்களையும் உடனே கணக்கில் கொண்டுவரவேண்டும்.

(ii) கஜானா உள்ள இடங்களில் கஜானா திறந்திருக்கும்போது, வசூலான தொகைகளைப் பிரதிதினமும் கஜானாவுக்கு இருசால் செய்து விடவேண்டும்.

(iii) கஜானா இல்லாத இடங்களிலே, இன்ஸ்பெக்டர் ஜெனரலவர்கள் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கக்கூடிய மத்திய காலங்களிலே அதிசமீபத்திலுள்ள கஜானாவுக்குக் கட்டணங்களை இருசால் செய்து விடவேண்டும்.

(iv) ஒவ்வொரு மாதத்தின் கடைசி மூன்று தினங்களிலும், ரொக்க லேவாதேவி நடத்தாத தாலூக்கா கஜானாக்களின் விஷயத்திலே. அந்த தினங்களில் வசூல் செய்யப்பட்ட கட்டணங்களை மறுமாத முதல்தேதி அனுப்பலாம்.

(v) கஜானாவுக்கு இருசால் அனுப்பும்போது செலான் புஸ்தகத்தில் எழுதவேண்டியவைகளை இரண்டைப் பிரதியாகக் கிரமமாய் எழுதி இருசாலுடன் அனுப்பவேண்டும்; பிரதி செலாவணையும் சேர்ந்த ஒரு பிரதியைக் கஜானா உத்தியோகஸ்தர் கையெழுத்துபோட்டுத் திருப்பிவிடுவதற்காக மேற்கண்டபடி இரட்டைப் பிரதியாக அனுப்பவேண்டும்.

29. (i) பல நபர்களால் எழுதிக் கொடுக்கப்பட்ட ஒரு வக்காலத்து நாமாவில் அத்தாட்சிக் கையெழுத்து செய்யவேண்டிய ஒவ்வொரு கையொப்பத்துக்கும் அத்தாட்சிக் கையெழுத்து செய்வதற்குண்டான கட்டணம் பிரத்தியேகமாய் வசூல் செய்யவேண்டும்; ஆனால், ஒரு நபர் தமக்காகவும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேறே நபர்களுடைய சமாட்சகர் அல்லது ஏஜெண்டாகவும் ஒரு வக்காலத்து நாமாவை எழுதிக்கொடுக்கிற விஷயத்திலே, ஒரே அத்தாட்சிக் கையெழுத்து செய்வதற்குண்டான கட்டணத்தான் வசூல் செய்யவேண்டும்.

(ii) அத்தாட்சிக் கையெழுத்து செய்வதற்காகத் தாக்கல் செய்யப்படும் வக்காலத்து நாமாவின் இரண்டாவது அல்லது மூன்றாவது பிரதியைப் பிரதியேகமான வக்காலத்து நாமாவாக பாவித்து, அதற்குப் பிரத்தியேகமான அத்தாட்சிக் கையெழுத்துக் கட்டணம் வசூல் செய்யவேண்டும்.

OFFICE OF ... BOOKS ... 1911 MADRAS

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் V.] சென்னப்பட்டணம், 1911ம்ஸு மார்ச்சு மீ [பாகம் 6

☞ NOTICE:—Contributions other than original are neither invited nor required. All literary contributions and books for Review should be addressed to Mr. N. RATHAKRISHNA NAIDU, P. A., INDIAN LAW GAZETTE, 49, Acharappan Street MADRAS.

LAW OF TORTS.

தீங்கு-ஹிம்சை இவைகளைக்குறித்த சட்டம்.

—:o:—

இந்தியாவிலுள்ள கவர்னெர்ஜெனரல் என்னும் ராஜப் பிரதிநிதியின்பேரிலும், மதராஸ், பம்பாய் கவர்னர்கள் மீதிலும் இன்னும் சட்ட நிரூபணை சபையிலுள்ள அத்தியட்சர்கள் (Members) பேரிலும் இந்தியா தேசத்திலுள்ள கோர்ட்டுகளென்று சொல்லப்படும் நியாயஸ்தலங்களில் மேற்கண்ட உத்தியோகஸ்தர்கள் அவர்களுடைய தொழில் முறையில் செய்யும் நடவடிக்கைகளுக்காக அவர்கள்மீது தாவா செய்து நடவடிக்கைகள் நடத்த நியாயம் இடையாது. 21 Geo III C 70 S. I; 4 Geo IV, C. 71.

கவர்னர் அவர்களும் சட்ட நிரூபணை சபையிலுள்ள மெம்பர்களும் தங்களுடைய தொழில் முறையில் செய்யும் நடவடிக்கைகளின் விஷயமாய் அவர்கள் மீது ஹைகோர்ட்டில் நடவடிக்கைகள் நடத்த நியாயமில்லை. ஆனால் யாதோ ஓர் தீங்கு செய்ததாக ஸ்டேட் செக்ரிடெரி (Secretary of State) மீது நடவடிக்கை நடத்த நியாயமுண்டு.

ஹிஹாங்கர்மானெ்ஜி vs ஸ்டேட் செக்ரிடெரி பம். லா. ரி. 65 இ. லா. ரி. 28 பம் 314; 6 பம். லா ரி. (1904) 763; இ. லா. ரி. 32 கல் 1 (பிரிவி கவுன்சல் கேசு.)

யாதேனும் ஒரு செய்கையை ஓர் உத்தியோகஸ்தர் சர்க்கார் தரப்பில் ஸ்டேட் செக்ரிடெரியினுடைய அனுமதி பெற்று அவருடைய உத்தரவின்பேரில் செய்திருக்கும் பட்சத்தில் அச்செய்கை நியாயப்படி செய்யப்பட்டதென்று தான் கருதவேண்டும். 2 ex 167; 9 பம். ஹை. கோ. ரி. (1872) 314.

ஜட்ஜ்:—நியாயஸ்தலமென்று சொல்லப்படும் கோர்ட்டிலுள்ள ஒரு ஜட்ஜு அவர்கள் தன்னுடைய தொழில் முறையில் கெடுதலையாக யாதேனும் ஓர் வார்த்தை சொன்னபோதிலும் அப்படிப்பட்ட வார்த்தைகளை அவர் சன்மார்க்கத்தனமாய் சொன்னவரல்லவென்று ருஜுவாயினும் அந்த ஜட்ஜியின்பேரில் எவ்விதமான நடவடிக்கையும் நடத்த நியாயமே இடையாது.

1 Q. B. 668, 671; 2 Ir. C. L. R. 460.

இந்த விதி ஹைகோர்ட்டு முதற்கொண்டு எல்லா கோர்ட்டுகளுக்கும் சம்மந்தப்படும்.

நியாயஸ்தலங்களென்று சொல்லப்படும் கோர்ட்டுகளில் நியாய பரிபாலனம் செய்யும் நியாயாதிபதிகள் (ஜட்ஜுகள்) யாதொரு அபிமானம், பயம் இவைகளில்லாமல் அவர்களுடைய சுய இச்சையாய் அவர்களுடைய தொழிலைச் செய்யும்பொருட்டு எல்லா கோர்ட்டுகளுக்கும் இப்படிப்பட்ட விதி செய்வது அவசியமென்று கருதப்படுகின்றது. இவ்விதமாய் கோர்ட்டுகளில் நியாய பரிபாலனம் செய்யும் ஜட்ஜுகளுடைய அனுகூலத்திற்கும், நன்மைக்காகவும் இவ்விதமான விதி செய்யப்பட்டதல்ல; ஆனால்

இப்படிப்பட்ட விதி செய்வதினால் பொதுவாய் ஜன சமுகத்தார் எல்லோருக்கும் நன்மையென்று கருதி இந்த விதி செய்யப்பட்டது.

ஓர் கோர்ட்டில் நியாய பரிபாலனம் செய்யும் ஒரு ஜட்ஜு தன் முன்னுள்ள கேசில் ருஜுவாயிருக்கும் சாக்ஷியத்தினால் தனக்கு அந்த வியாஜ்ஜியத்தை விசாரிக்க அதிகாரம் கிடையாதென்று தெரிந்துக் கொண்டாலொழிய மற்றப்படி அந்த ஜட்ஜு தன்னுடைய மன தீரத்தைக்கொண்டு தீர்மானம் செய்ய வேண்டியிருப்பதால் அவர் யாதொரு பயமின்றி தன்னுடைய சுய இச்சைப்படிக்குத் தீர்மானம்செய்யவேண்டிய தாகையால் அவர் மீதில் எந்த கோர்ட்டிலும் யாதொரு நடவடிக்கையும் நடத்த நியாயமில்லையென்னும் விதி செய்யப்பட்டிருக்கிறது.

IMPORTANT SECT ONS WITH NOTES.

THE INDIAN EVIDENCE ACT.

இந்து தேசத்து சாட்சி ஆக்ட்.

வாய்மொழி சாக்ஷியத்தினாலே சங்கதிகளுக்கு ருஜுப.

59. தஸ்தாவேஜிகளின் மற்றவைகள் தவிர சகல சங்கதிகளையும் வாய்மொழி சாட்சியத்தினாலே ருஜுபடுத்தலாம்.

வாய்மொழி சாட்சியும் நேராயிருக்கவேண்டும்.

60, வாய்மொழி சாட்சியானது எப்படிப்பட்ட விஷயங்களிலும் நேராக இருக்கவேண்டும். அதாவது,—அது பார்த்திருக்க கூடுமான சங்கதியைப் பற்றி யிருந்தால் அதைப் பார்த்ததாகச் சொல்லுகிற சாட்சிக்காரனுடைய சாட்சியமாக இருக்க வேண்டும்.

அது கேட்டிருக்கக் கூடுமான சங்கதியைப் பற்றியிருந்தால் அதைத்தான்கேட்டிருந்ததாகச் சொல்லுகிறசாட்சிக்காரனுடைய சாட்சியமாக அது இருக்க வேண்டும். அது வேறே யாதொருபுலனாலாவது எவ்விதமாயாவது தான் அறிந்திருக்கக் கூடுமான சங்கதியைப் பற்றியதாயிருந்தால் அதை அந்தப்புலனாலாவது எவ்விதமாயாவது அறிந்திருக்கிறதாகச் சொல்லுகிற சாட்சிக்காரனுடைய சாட்சியமாக அது இருக்கவேண்டும். அது யாதொரு அபிப்பிராயத்தைப்பற்றியாவது அந்த அபிப்பிராயம் கொள்ளுவதற்கு ஆதாரமாயிருந்த எதுக்களைப்பற்றியதாகவாவதிருந்தால், அந்த எதுக்களின் பேரில் அந்த அபிப்பிராயம் கொண்டிருக்கிற நபரினுடைய சாக்ஷியமாக அது இருக்கவேண்டும்.

ஆனால் சாதாரணமாய் விற்பனைக்காக இருக்கிற யாதொரு கிரந்தத்தில் தெரிவிக்கப்பட்ட நிபுணருடைய அபிப்பிராயங்களையும், எதின்பேரில் அந்த அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றதோ அந்த ஆதாரங்களையும், கிரந்த கர்த்தா இறந்துபோயிருந்தாலும் கண்டுபிடிக்கப்படாவிட்டாலும், சாட்சியஞ்சொல்ல அசக்தனாயிருந்தாலும், அவனை சாட்சியாக வரவழைக்க வேண்டுமானாலும் அதிக ஆவசியமாவது அதிக செலவாவது நேரிடுமாதலால் அப்படி செய்வது கிரமமல்லவென்று கோர்ட்டார் நினைத்தாலும் அப்படிப்பட்ட கிரந்தத்தைக் கொண்டுவந்து காட்டி ருஜுபடுத்தலாம்.

மேலும் வாய்மொழி சாட்சியமானது தஸ்தாவேஜியல்லாத வேறே யாதொரு சட்டப்பொருள் உண்டாயிருப்பதை அல்லது அதன் ஸ்திதியைப்பற்றியதாயிருந்தால், கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற பக்ஷத்தில், தாங்கள் பார்வையிடுவதற்கு அப்படிப்பட்ட பொருளைக் கொண்டு வந்து காட்டும்படி உத்தரவு செய்யலாம்.

வியாக்கியானம்.

இப்பிரிவின் பொருள் பார்க்கக்கூடிய கேட்கக்கூடிய அல்லது உரைக்கக்கூடிய விஷயங்களைப்பற்றி விசாரணைகளின் சந்தர்பத்தை அனுசரித்து வேறு விதசாக்ஷியும் ஒற்றுமையாகமாட்டா தென்பதல்ல 12 பங்காளம் லா. ரிபோர்ட் 18.

INDIAN COMPANIES ACT.

இந்தியன் கம்பெனிஸ் ஆக்ட்.

மீட்டிங்குகள்.

75. இந்த ஆக்ட் ஊர்ஜிதத்திற்கு வந்தது முதல் இந்த ஆக்டின் பிறகாரம் அமைக்கபட்ட ஒவ்வொரு கம்பெனியும் அதனுடைய மெமோராண்டம் அஸோஷியேஷன் ரிஜிஸ்டர் செய்யபட்ட ஆறுமாதங்களுக்குள்ளாக ஒருஜெனரல் மீட்டிங் கூடவேண்டும். இப்படி மீட்டிங்கூடாவிட்டால் ஆருவது மாதத்திற்கு பிறகு மீட்டிங்கு கூடுகிறதினம் வரையில் ஒவ்வொரு தினத்திற்கும் ரூபா 50க்கு அதிகபடாத அபராதம் விதிக்கப்படும். மீட்டிங்கு கூடவேண்டுமென்று தெரிந்திருந்தும் அப்படி மீட்டிங்கு கூடாமலிருந்தவும் கூடாமலிருக்கும்படி செய்தவுமான ஷை கம்பெனியின் டைரெக்டர் அல்லது மானேஜருக்காவது அல்லது இந்த கம்பெனியின் மெமோராண்டத்தில் கையெழுத்து செய்திருக்கும் ஒவ்வொரு சப்ஸ்கிரைபருக்கும் அதே அபராதம் விதிக்கப்படும்.

GUARDIANS AND WARDS ACT.

கார்டியன் ஆக்ட், (மைனர்களைப்பற்றிய ஆக்ட்.)

கார்டியன் நியமிப்பதற்குக் கோர்ட்டார்க்கிருக்கும் அதிகாரம்.

7, (1) மைனருடைய க்ஷேமத்தை உத்தேசித்து ஒரு உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமென்று கோர்ட்டார் திருப்திகாமாய் அபிப்பிராயப்பட்டால்,

(a) மைனருடைய தேகத்திற்காயினும் அல்லது சொத்துக்காயினும் அல்லது இரண்டினுக்காயினும் ஒரு கார்டியன் ஏற்படுத்தலாம்.

(b) கார்டியனாயிருப்பதற்கு ஒருவரைத் தெரிந்தெடுத்து நியமிக்கலாம்.

இந்தப்பிரிவின்படி செய்யப்பட்ட உத்திரவு உயிலாவது அல்லது கோர்ட்டாராலாவது நியமிக்சப்படாத கார்டியனை விலக்கிவிடுகிறது.

(3) ஒரு உயிலினாலாவது அல்லது வேறெந்த ஆதாரவாலாவது அல்லது கோர்ட்டார் மூலியமாயாவது ஒரு கார்டியன் நியமிக்கப்பட்டிருந்தால், இந்த கார்டியனுடைய அதிகாரம் முடிவடையும்பரியந்தம் இந்தப் பிரிவின்படி வேறொரு கார்டியனை நியமிக்கக் கோர்ட்டார் உத்தரவு செய்யக்கூடாது.

TRANSFER OF PROPERTY ACT.

டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட்

52. பிரிட்டிஷ் இந்தியாவில் அதிகாரமுடைய எந்தக் கோர்ட்டிலாகிலும் அல்லது பிரிட்டிஷ் இந்தியா எல்லைக்கப்பல் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரல் அவர்களால் நியமக்கப்பட்டிருக்கும் கோர்ட்டிலாகிலும் ஒரு ஸ்தாவர சொத்தின் பாத்தியதைக் குறித்து வியாஜ்ஜியம் மும்மரமாய் நடந்துக் கொண்டு வரும்போது ஷை வியாஜ்ஜியத்தில் சம்பந்தப்பட்ட எந்தக் கக்ஷிக்காரனும், அச்சொத்தில் பாத்தியதையுடையவர்கள் பாத்தியதையைப் பாதிக்கும்படியாக அந்த வியாஜ்ஜியத்தில் கோர்ட்டார் டிக்ரி கொடுக்கும்பரியந்தம் அச்சொத்தை டிரான்ஸ்பர் செய்யக்கூடாது. அப்படி டிரான்ஸ்பர் செய்ய வேண்டுமானால் கோர்ட்டார் சம்மதத்தைப் பெற்று அவர்கள் என்ன நிபந்தனைகள் குறிப்பிடுகிறார்களோ அவைகளை அனுசரித்து டிரான்ஸ்பர் செய்ய வேண்டும்.

53. சொத்தை அடையவேண்டியவர்களுக்காவது அல்லது கடன்காரருக்காவது கிடைக்காமலிருக்கும்படிச் செய்யவேண்டுமென்கிற கருத்துடனாவது அல்லது அவர்களுக்கு அச்சொத்துசேர்வதைத் தாமதப்படுத்தவேண்டுமென்கிற கருத்துடனாவது ஒருவன் ஒரு ஸ்தாவர சொத்தை டிரான்ஸ்பர் செய்தால் இந்த டிரான்ஸ்பரால் எவன் பாதிக்கப்பட்டிருக்கிறானோ அவன் இந்த டிரான்ஸ்பரை ரத்து செய்துவைக்கலாம்.

மோசக்கருத்துடனாவது அல்லது கடன்காரனை மோசப்படுத்த வேண்டுமென்கிற எண்ணத்துடனாவது அல்லது கடன்காரனுக்கு அச்சொத்து சேருவதைத் தாமதப்படுத்த வேண்டுமென்கிற கருத்துடனாவது ஒருவன் ஒரு அசையாப் பொருளை டிரான்ஸ்பர் செய்தால், அப்படி அவன் செய்த டிரான்பருக்கு யாதொரு தொகையும் வாங்காமலாவது அல்லது சரியானதொகை வாங்காமலாவது செய்திருந்தால் அவன் மோசக் கருத்துடன் இந்த டிரான்ஸபரை செய்திருக்கிறான் என்று யூகிக்கப்படும்,

நல்ல எண்ணத்துடனும் சரியான தொகை கொடுத்து டிரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவர்களின் பாத்தியதைகள் இந்தப்பிரிவால் பாதிக்கப்படமாட்டா,

INDIAN EASEMENTS ACT.

இந்தியன் ஈஸ்மெண்டு ஆக்ட்,

18. தேசவழக்கத்தால் ஈஸ்மெண்டு பாத்தியதையை ஸ்தாபிக்கலாம். இப்படிப்பட்ட பாத்தியதைகள் தேச வழக்க ஈஸ்மெண்டு பாத்தியதைகள் என்று சொல்லப்படுகின்றன.

உதாரணம்.

(a) ஒரு கிராமத்திலுள்ள கிருஷிகள் தங்களுடைய கால்நடைகளை ஒரு பொதுவான புல்லடர்ந்த மைதானத்தில்மேயவிடுகிறது வழக்கம். A என்பவன் இந்த கிராமத்தில் ஒரு தார்சு நிலத்தைக் குத்தகைப் பெற்று அதைச் சாகுபடி செய்கிறான். இந்த கிராமத்தின் வழக்கப்படி அந்த மைதானத்தில் தன்னுடைய கால்நடைகளை மேயவிடுவதற்கு A க்கு பாத்தியமிருக்கின்றது.

(b) அடுத்த வீட்டுக்காரனுடைய அந்தரங்களைப் பார்க்கும்படியான புதிய ஜன்னல் வைப்பது ஒரு ஊரில் வழக்கமில்லை இந்த ஊரில் A என்பவன் B என்பவனுடைய வீட்டிற்குப் பக்கத்தில் ஒரு வீடு கட்டுகிறான். A என்பவனுடைய வீட்டு அந்தரங்கள் தெரியும்படியாக B என்பவன் தன்னுடைய வீட்டில் ஒரு புதிய ஜன்னல் வைத்தால் அதை தடுக்க A க்கு ஈஸ்மெண்டு பாத்தியதையிருக்கிறது. இதேமாதிரி A தன்னுடைய வீட்டில் ஒரு ஜன்னல் வைத்தால் அதை தடுக்க B என்பவனுக்கும் ஈஸ்மெண்டு பாத்தியதையிருக்கிறது.

TRUST ACT.

டிரஸ்ட் ஆக்ட்.

20. இந்த ஆக்டின்பிரகாரம் டிரஸ்டியினிடம் ஒப்புவிக்கப்பட்ட டிரஸ்ட் சொத்து ரொக்கப்பணமாயிருந்து எந்தக்காரியத்திற்காக அது ஒப்புவிக்கப்பட்டதோ அதற்கு உடனே அதை உபயோகப்படுத்தாமலிருந்தால் அப்படிப்பட்ட ரொக்க டிரஸ்ட் பணத்தை டிரஸ்டி டிரஸ்ட் ஆதாரவில் சொல்லப்பட்டிருக்கிறதற்குட்பட்டு அடியிற்கண்ட பிறகாரம் பத்திரப்படுத்தக் கடமைபட்டிருக்கிறார்கள்.

(a) இந்தியா கவர்ன்மெண்டு அல்லது கிரேட் பிரிடன் கவர்ண்மெண்டு பிராமிசரி நோட்டு அல்லது டிபன்ஸர்களில்,

(b) இந்தியன் ரெவினியூவின்பேரில் சார்ஜ் செய்து அயன் பார்லிமெண்டார் விடுத்திருக்கும் டாண்டுகள் டிபன்சர்கள்.

(c) ஆலோசனை சபையிலுள்ள இந்தியா காரியதரிசி வட்டிக்கு ஜவாப்தாரியாகவிருக்கும் ரெயில்வே கம்பெனிகளின் பங்குகளில் அல்லது டிபன்ஸர்களில்.

(d) பிரிட்டிஷ் இந்தியாவில் அமுலிலிருக்கும் சட்டத்தின் அதிகாரத்தின் பிரகாரம் முனிசிபாலிட்டியார் அல்லது இன்னும் வேறு கூட்டததார் விடுத்திருக்கும் டிபன்ஸர்கள்.

(e) பிரிட்டிஷ் இந்தியாவிலிருக்கும் ஸ்தாவர சொத்தின் பேரில் முதல் பெந்தகத்தில்.

(f) அல்லது டிரஸ்ட் ஆதாரவில் கண்டிருக்கிற ஜாமீன் பேரிலாவது அல்லது ஹைகோர்ட்டார் அப்போதைக்கப்போது செய்யும் உத்தரவுபடிக்காவது.

INDIAN CONTRACT ACT.

இந்தியன் கண்டிராக்ட் ஆக்ட்.

19. A. தகாத செல்வாக்கைப் (Undue influence) பிரயோகப்படுத்தி ஒரு ஒப்பந்தத்திற்கு மற்றொருவனுடைய சம்மதத்தைப் பெற்றுவிட்டால், எவன் சம்மதம் கொடுத்தானோ அவனுக்கு இஷ்டமிருந்தால் அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்துவைக்கலாம்.

இப்படிப்பட்ட ஒப்பந்தங்களை கோர்ட்டார் அடியோடு ரத்து செய்து வைக்கலாம். தகாத செல்வாக்கை உபயோகப்படுத்தினதை முன்னிட்டு ஒப்பந்தத்திற்கு சம்மதம் கொடுத்த ஒருவன் ஸ்ரீ ஒப்பந்தத்தால் எதேனும் நன்மையைப் பெற்றிருக்கிறதாகக் கோர்ட்டாருக்குத் தெரிய வந்தால் எந்த நிபந்தனைகளுடன் ஒப்பந்தத்தை ரத்து செய்தால் நியாயமாயிருக்குமென்று கோர்ட்டாருக்குத் தோற்றுகின்றதோ அந்த நிபந்தனைகளுடன் அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்யலாம்,

உதாரணங்கள்.

(a) ஒரு பிராமிசரி கோர்டில் A என்பவனுடைய குமாரன் B என்பவன் கையெழுத்தைப் போர்ஜரி செய்துவிட்டான்

B என்பவன் ஷை குமாரனைப் பிராசிக்கியூட் செய்வதாகப் பயமுறுத்தி A என்பவனிடமிருந்து ஷை பிராமிசரிநோட்டு எழுதிவாங்கி அந்தத்தொகை வசூல் செய்யும்படி A என்பவன் பேரில் B என்வவன் வியாஜ்ஜியம் கொண்டுவந்தால் கோர்ட்டார் இந்தப் பிராமிசரி நோட்டை ரத்துசெய்து வைக்கலாம்.

A என்கிற சாவுகார் B என்கிற ஒரு விவசாயிக்கு ரூ 200 க்கு சடன்கொடுத்துத் தகாத செல்வாக்கைப் பிரயோகப்படுத்தி மாதம் ஒன்றுக்கு 6 வட்டிமேனிக்கு ரூ 200 க்கு ஒரு பிராமிசரிநோட் எழுதிக்கொடுக்கும்படி தூண்டுகின்றான் B என்பவனும் அப்படி எழுதிக் கொடுத்துவிடுகின்றான் இந்த ரூபாயையும் கூடுதலான வட்டியையும் வசூல்செய்ய A என்பவன் வியாஜ்ஜியம் கொண்டுவந்தான் கோர்ட்டார், ரூ 100 க்கு என்ன நியாயமான வட்டியோ அதையும் Aஎன்பவனுக்கு கொடுக்கும்படியாக B என்பவனுக்கு உத்தரவு செய்யலாம்.

Important Rulings.

முக்கியமான தீர்ப்புகள்.

——:o:——

இந்தியன் பினல் கோட்:—ஒரு குற்றவாளி பிடிப்பட்ட பிறகு வண்டியில் ஒரு சினேகிதனுடன் கொண்டுபோகபட்டான். வண்டியின் முன் பந்தோபஸ்தாக ஒரு போலீஸ்காரன் குதிரையின்பேரில் போய்க்கொண்டிருந்தான் சில தூரம் சென்ற பிறகு நடுவழியில் அவ்வண்டிக்கு மாடுகள் மாற்றவேண்டியதாயிருந்தது போலீஸ்காரன் மாடுகளைக் கொண்டுவர கிருமத்திற்குள் போய்விட்டான் அச்சமயம் குற்றவாளி தான் செய்த குற்றத்தை சினேகிதனிடம் ஒப்புக்கொண்டான் விசாரணை காலத்தில் சினேகிதனிடத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் சாக்ஷியமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வாதிக்கப்பட்டது கோர்ட்டார் ஒப்புக்கொள்ளவில்லை. போலீசார் காவலிலிருப்பவன் அப்படி காவலிருக்கும்போது மாஜிஸ்டிரேட் முன்னிலையில்லாமல் வேறு யாரிடத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டாலும் அது சாக்ஷியமாக மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்தியன் பினல் கோட்:—விவாகமான ஸ்திரியுடன் விபசாரஞ் செய்ததாகவும் துர்ச் செய்கைக்காக அவளை மயக்கி அழைத்துக்கொண்டு போனதாகவும் வந்த கேஸில் விசாரணை காலத்தில் பிரியாது கொடுத்தவன் தனக்கு விவாகமான விஷயத்தைக்குறித்து தன் பெண்சாதியை சாக்ஷியமாக விசாரிக்க ஒப்புக்கொள்ள வில்லை கேசை விசாரணை செய்த டிப்டி மேஜிஸ்டிரேட் கேசைத்தள்ளி குற்றவாளியை விட்டு விட்டார் செஷன்ஸ் ஜட்ஜி இந்தக்கேசை வேறொரு டிப்டி மாஜிஸ்டிரேட்டினிடம் அனுப்பி பெண்சாதியை சாக்ஷியாக விசாரணை செய்யும்படி உத்திரவு செய்தார் இந்தக்கேஸ் அப்பீலுக்கு வந்தபோது, செஷன்ஸ் ஜட்ஜி உத்திரவில் பிராசிக்கியூஷன் தாப்பில் கேசை ருஜூப் படுத்தவில்லை என்றும் பிராசிக்கியூஷன் தாப்பார் யாதொரு சாக்ஷியமுங் கொண்டுவந்து அதை டிப்டி மாஜிஸ்டிரேட் ஒப்புக்கொளள்ாமலிருக்கவில்லை என்று சொல்லியிருப்பதால் அப்படிச் சொல்லியிருந்தும் அவர் இந்தக்கேசை புனர் விசாரணைக்கு அனுப்பியதில் அவர் செம்மையாய் யோசிக்கவில்லை என்று தீர்ப்பு சொல்லப்பட்டது. இ. லா. ரி. 11 கல். 81. (I. K. R. 11 Cal 81)

ஹிந்துலா:—ஹிந்து குடும்பத்தில் புத்திரன் மைனராயிருக்கும்போது தகப்பன் ஒரு சொத்தை அடமானம் வைத்து அதன்மேல் பிறகு ஒரு வியாஜ்ஜியம் ஏற்பட்டால் அந்த அடமானம், அச்சொத்தில் புத்திரனுக்கிருக்கும் பாகத்தைக்கட்டுபடுத்த மாட்டாது தகப்பன் கடன் வாங்குவது துன்மார்க்க செலவு களுக்கல்லவென்று கடன் காரர்கள் அச்சமயத்தில் விசாரணைசெய்து திருப்தி செய்துகொண்ட விஷயத்தை ருஜூப்படுத்துவது வாதியைப் பொருத்ததல்ல ஒரு தகப்பன் துன்மார்க்கச் செலவுகளுக்கர்க கடன் வாங்கியிருந்து அந்தக் கடனைத் தீர்ப்பதற்காக வேறொருவனிடம் கடன்வாங்கி இந்த இரண்டாவது கடன் கொடுத்தவன் ஷை தொகையை அவன் புத்திரனிடமிருநது வசூல் செய்ய வியாஜ்ஜியம் கொண்டுவந்தால், தகப்பன் துன்மார்க்கச் செலவுகளுக்காக கடன் வாங்கினான் என்று புத்திரன் டிபன்ஸ் சொல்வது நல்ல டிபன்சாகும் சரவணத்தேவன் V. முத்தாயி அம்மாள் 6 சென். ஹை. ரி. 371. பக்கம் 383. (6 M

இந்தியன் சாக்ஷி சட்டம்.—ஒரு தஸ்தாவேஜில் சுத்தமாகவும் சந்தேகப்படக்கூடாதபடியும் எழுதப்பட்டிருக்கும் பதத்திற்கு கக்ஷிகாரர்கள் நினைத்துக்கொண்ட தாற்பரியத்தைக்குறித்த சாதாரண வாக்குமூல சாக்ஷியம் (Oral Evidcnce) ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது. கேஷவரால் V. ருயா 8 பம். லா. ரி. 287 (8 Bom. L. R. 287.)

தீர்ப்புக்கு முந்தின ஜப்த்தி:—தீர்ப்பு பெறுவதற்கு முந்தி ஜப்த்திசெய்வதின் கருத்து என்னவென்றால் வாதிக்கு டிக்கிரி கிடைத்தால் அந்த டிக்கிரியின் தொகையை வசூல்செய்து கொள்ளுவதற்கு ஒரு பந்தோபஸ்தே தவிர மற்றப்படி ஜப்த்திசெய்த கடன்காரனுககு மற்ற கடன்காரர்களைவிட (கடன் கொடுத்தவர்கள்) அச்சொத்தில் முந்திய பாத்தியதையிருக்கிறதென்று தாற்பரியப்படுத்திக் கொள்ளக்கூடாது. 10. கல். வீ நோ. 634

சாக்ஷி கையெழுத்து:—ஒருபத்திரத்தில் சாக்ஷி கையெழுத்து போட்டதினால் அப்பத்திரத்தில் சொல்லப்பட்ட விஷயங்களுக்கு சம்மதம் கொடுத்தவனாக மாட்டான் 10. கல், வி. நோ. (551 (10. Cal W. N,)

வைப்பாட்டி:—ஒருவன் ஒருவளை நீண்ட காலமாக வைப்பாட்டியாக வைத்திருந்து பின்பு விட்டு விடுகிறான் அவள் அப்புருஷன்பேரில் வழக்கிட நியாயமில்லை. ருமநாசு V. புசம்மா இ. லா. ரி. 23 சென் 282 (I. L. R. 23 Mad. 283

——————ஒருவன் ஒரு வைப்பாட்டியை வைத்திருந்து இறந்துவிடுகிறான் அவள் பிற புருஷமுகம் பார்க்காமலிருப்பவளாயிருக்கும் பக்ஷத்தில் அவனுடைய வைப்புப் புருஷனுடைய சகோதரர்கள் அவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர்கள். யஷலண்டிராவ் V. காக்ஷிபேய் இ. லா. ரி. 12 Bom 23 (I. L. R. 12 Bom 26.)

குஷ்டரோகி புத்திரன்:—குடும்பச்சொத்து பாகப்பிரிவினை செய்யப்படுவதற்கு முந்தி ஒரு பாகஸ்தனுக்கு கொடிதாகிய அல்லது ரணமுள்ள குஷ்டரோக முண்டாகிவிட்டால் அவனுக்குக் குடும்பச்சொத்தில் ஜீவனாம்சம் கிடைக்கக் கூடியதேயன்றி குடும்பசொத்தில் பாகம் கிடைக்கமாட்டாது. அனந்தா V. ருமபாய் இ. லா. ரி. 1 பம் 554. (I. L. R. 1 Bom 554.)

Cases from the Indian Law Reports.

இந்தியன் லா ரிபோர்ட்டு கேசுகள்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

2-வது சிவில் அப்பீல் ந. 735-1908.

ஜ. ஸர். R. பென்ஸன்.
கிருஷ்ணசாமி ஐயர். } முன்பாக.

போம் நர்சிகாடு—வாதி—அப்பீல்வாதி.

Vs.

மாசிரெட்டி புச்சிரெட்டிவகையாரா—பிரதிவாதிகள் அப்பீல் பிரதிவாதிகள்.

மதராஸ் எஸ்டேட் ஆக்ட் (ரென்ட்ரெகவரி ஆக்டு) (VIII of 1865) பட்டா ஒருவர் பேரிலிருப்பது இன்னொருவரால் வாங்கிக்கொண்ட நிலத்தின் பாகம்—வாங்கினவரால் வாடகை செலுத்தல்—பட்டாதாரர் பாக்கிக்காக நில்விற்பனை அப்பாகத்தை விற்கைசெல்லாது - பூமிக்குடையவனும் குடியானவனும். ஒரு ஜமீன்தாரர் ஒருவரிடத்திலிருந்து வாடகையின் ஒருபாகம் வாங்கியபோது, முழுநிலத்துக்கு பட்டா இன்னொருவர் பேரிலிருந்தாலும் அந்த பாகத்தையுடையவனுக்கு அறிக்கை செய்யாமல் முழு நிலமும் விற்பது கூடாது.

Orr V. Rakkumarathi, 29 M. 83.

1906ஹு நெல்லூர் ஜில்லா கோர்ட்டு அசல் ந. 167ல் கொடுத்த டிக்ரீயின் பேரில், நெல்லூர் டிஸ்டிரிக்ட்கோர்ட்டில் நடத்திய அப்பீல் வியாஜ்ஜியம் ந. 80 of 1907-ல் கொடுத்த டிக்ரீயின் மேல் செய்யப்பட்ட 2வது அப்பீல்.

தீர்மானம்.

2-வது பிரதிவாதியின் பட்டா நிலத்தில்ஒருபாகம் வாதிவாங்கினான், வாங்கினபிறகு, தன் பெண்ஜாதியின் மேல் தான் மாற்றிவைத்த பாகம் போக மற்றதை தான் வைத்துக் கொண்டிருந்தான். ஜமீன்தார் வாதியை குடிக்கூலிதாரனென்னும் பாயக்காரி என்று ஒப்புக்கொண்டு (முழு நிலத்துக்கும் பட்டா பிரதிவாதிபேரிலேயே யிருந்தும்) அவனிடத்தில் நீண்டகாலம் வாடகை வாங்கிவந்திருந்தார். 1313 பசலி பாக்கிக்காக Rent Recovery Actன் கீழ் 2வது பிரதிவாதி மேல் நடவடிக்கை நடத்தினார் 3-வது பிரதிவாதி வாதியின் பாகத்தைசேர்ந்த அந்த நிலத்தை விலைக்கு வாங்கினார் வாதியிந்த விற்பனை சட்டவிரோதம் என்று சொல்கிறார். அந்தவாதத்துக்கு நாம் சம்மதிக்கிறோம். வாதிக்குபாக்கியைப் பற்றியாவது ஜப்தியைப் பற்றியாவது நோடிஸ் கொடுக்கப்பட வில்லை.

ஆகையால் வாதியின்மேல் நடவடிக்கை செல்லாது உண்மையான குடித்தனக்காரன் பேரிலே செல்ல வேண்டிய அவசியமில்லை, யாருக்கு பட்டாதர தான் நியமிக்கிறனோ அவன் பேரில் தன் இஷ்டப்படி நடத்தலாமென்று (Orr Rakkumarathi I) ஆதாரமாக மிஸ்டர் சுப்பிரமணிய ஐயர் சொல்கிறார். யார் குடியானவனுடைய விஷயத்தில் பாத்தியதையுடையவனோ அவனைக்கண்டு பிடிக்கவேண்டியது நிலத்துக்குடையவனுக்குக் கட்டாயமென்றும் அவன் பேரிலேயே பாக்கிக்காக செல்லவேண்டுமென்றும் நாங்கள் அபிப்பிராயம் கொள்கிறோம். குடித்தனம் பூமிக்குடையவனால் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் அவன் பட்டாவில் தாவா நிலம் விற்பனையானதென்று பதிவுசெய்ய விரும்புகிறான். அப்படிசெய்ய அதிகாரமில்லை—ஆகையால் 3-வது பிரதிவாதிக்கு வாதியின் பாத்தியதை ஞாயப்படி விற்கப்படவில்லையென்று கொள்கிறோம். (See 2nd appeal No. 1213 of 1906.)

டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் டிக்ரீயை மாற்ற முன்சிப் தீர்மானத்தையே ஸ்தாபிக்கிறோம். 1-வது 2-வது பிரதிவாதிகள் வாதியின் முழுசெலவும் கொடுக்கவேண்டும்.

1-வது அப்பீல் பிரதிவாதி போட்ட ஆக்ஷேபனை யாதாஸ்து செலவுடன் தள்ளப்பட்டது.

LOWER BURMA CHIEF COURT.

லோயர் பர்மா சீப் கோர்ட்டு.

Civil Miscellaneous Appeal No. 75 of 1908.

Sir Charles Fox, chief Judge
Mr. Justice Parlett, } முன்பாக.

K. R. S. S. சோக்கலிங்க செட்டி—அப்பில் வாதி.

vs,

K. M. R. M. S. சுப்பிரமணியன் செட்டிவகையார் அப்பீல் பிரதிவாதிகள்.

Civil Procedure Code (Act XIV of 1882, S. 108—Application to set aside exparte decree—Applicant sued but not served personally—Sufficient Cause.

ஒரு பிரதிவாதி பாகஸ்தரில் ஒருவனை அவனுக்குத்தனியே சம்மன் ஜாரிசெய்தால் (exparte decree)டிக்ரிகொடுத்தபொழுது: அவன் தான் பாகஸ்தனல்லவென்று சொல்லி exparte டிக்ரீயை தள்ளி

விடும்படி மனுசெய்யும்பொழுது, கோர்ட்டார் அந்த கேசை புனர்விசாரனை செய்யவேண்டும். Exparte decree) யைதள்ளாதுமுன் பிரதிவாதி தான் பாகஸ்தனல்லவென்று ருஜூபண்ணும்படி கேட்கக்கூடாது. இந்த நடவடிக்கை சி.பி.கோ. (Civil Procedure Code 1882) 108-வது பிரிவின் கொள்ளப் படவில்லை.

இரு exparte டிக்ரியைத் தள்ளிவிடும்படி போட்ட மனுவின்மேல் 1908 ஜனவரி 4வ ஜட்ஜ் கொடுத்த தீர்ப்பின் பேரில் செய்த அப்பில்.

மி. டன்ஃரா—அப்பில் வாதி பக்ஷம்.

„ J. R. டாஸ்—அப்பில் பிரதிவாதிகள் பக்ஷம்.

தீர்மானம்.

Chief Judge Fox.—

ஒருவன் அவனுடைய கடன்காரன பேரில் தாவா கொண்டு வந்து அவன் பேரில் டிக்ரிவாங்குவதற்கு முன் அவனை கேஸ் விசாரணைச் சமயத்தில் ஆஜர் படுத்துவதற்கு சம்மன் ஜாரி செய்யவேண்டியது. தனக்கு பாக்கிதாரனென்று வாதி ருஜூ படுத்த வேண்டும்.

சட்டபிரகாரம் பொது எப்படி என்னவென்றால் ஒவ்வொரு பிரதிவாதிக்கும் சம்மன் சேர்வ் செய்ய வேண்டும். ஆனல் பிரதிவாதிகள் பாகஸ்தராயிருந்து, பாகத்துவம் சம்மனுக்கு உத்தாவாதியாயிருந்தால் சம்மன் ஒரு பாகஸ்தன் மேலாவது, அல்லது வேலை நடத்துவன் மேலாவது சம்மன் கொடுக்கலாம். ஆனல் பாகஸ்தரல்லாதவரை பாகஸ்தராக வாதி கொண்டு வியாஜ்ஜியம் தொடர்ந்தால், அல்லது அவர்களில் ஒருவனாவது; இன்னும் அதிகமாயாவது மற்றவரோடு பாத்தியப்பட்டவரல்லவென்று வாதித்தால், மேற்படி நிபந்தனை ஆதாரவற்றும் போதும். சம்மன் பெற்றுக்கொண்டவன் ஆஜராகவேண்டியவனுக்கு அதைத் தெரிவிக்காவிடில் அவனறியாமலே அவன் பேரில் டிக்ரீ கொடுக்கப்படலாம். ஆனல் அவன் டிக்ரீயை ரத்துசெய்ய கோர்ட்டாருக்கு மனு கொடுத்து, தன்வரையில் வாதித்துத் தீர்த்துக்கொள்வது தவிர வேறு முகாந்திரமில்லை—பிரதிவாதி பாகஸ்தனென்று கோர்ட்டாருக்கு திருப்தி செய்தாலே அவர்கள் டிக்ரீ கொடுப்பார்கள்—வாதி பிளெயின்ட் டில்மட்டும் அவன் பாகஸ்தனென்று சொல்லதினலேயும், அவனுக்குத் தெரியாமலே டிக்ரீவாங்கினலும் பிரதிவாதியின் நிலைமை மாருது—மதுதாரி 74-வது பிரிவின் நிபந்தனை தன் கேசுக்குப் பொருந்தாது என்று சொல்லக்கூடும், மேலும் வியாஜ்ஜியத்தின் கோஃஸ் தான் வாங்கவேயில்லை யென்றும், அதினலேதான் ஆஜராகக்கூடாமையானதென்றும் சொல்லலாம்—ஆகையால் இந்த கேஸில் டிக்ரீயைத்தள்ளிவிடுகிறேன்.

K, R. S. S. சொக்கலிங்க செட்டிமேல் கொடுத்த டிக்ரீயும் தள்ளப்பட்டு மறுபடியும் கேசு அவன்பேரிலேயே செய்யப்படும். அப்பில் வாதிமேல் இவ்வியாஜ்ஜியத்தில் என்ன முடிவோ அதன் இந்த அப்பீலின் செலவுகள் தொடரும்.

ஜட்ஜ் Louis—நான் அங்கிகரிக்கிறேன்.

ஆர்டர் தள்ளபட்டது.

LOWER BURMA CHIEF COURT.

லோயர் பர்மா சீப் கோர்ட்.

—:0:—

2 வது சிவில் அப்பில் ந. 268 of 1909.

ஸர் சார்ல்ஸ் பாக்ஸ்
மி. ஜ. பார்லெட் } முன்பாக.

மீயப்பசேட்டி வகைரா—பிரதிவாதிகள்—அப்பீல்வாதிகள்;

vs

மா. பாபு. மைனர் அவன் கார்டியன் [illegible]
அப்பீல் பிரதிவாதிகள்.

மகன்மீது தகப்பன் நிலத்தை வாங்குதல்.

இந்தியாவில் ஒருதகப்பனல் தன் பிள்ளை பேரில் அவன் பணத்தைக் கொண்டே கொஞ்சம் நிலம் வாங்கப்பட்டபோது அதுபிள்ளை பேரிலேயே வாங்கிறதாகக் கொள்ளவேணும், அது பிள்ளையின் விர்த்திக்காக வாங்கினதென்று சொன்னல், அதை ருஜூவு பண்ணுவது சொல்பவன் பாரம்.

பிறந்தவாடி டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டில் சிவில் வியாஜ்ஜியம் ந. 90 of 1907 தள்ளப்பட்டது. அதன் பேரில் செய்த சிவில் அப்பில் ந. 27 of 1909 Divisional கோர்டில் மாற்றப்பட்டது. அதன் மேல் இந்த அப்பில்.

மா. J. R. டாஸ். அப்பில் வாதிகளுக்கு.

தீர்மானம்.

ஒரு டிக்ரீயின் மேல் கொஞ்சம் நிலம் விற்கப்பட்டது. மைனர் வாதியின் தாயார் அவன் கார்டியனுக்கு அந்த நிலத்தைச் சம்பாதிக்க பாபர் (pauper) ஆக வியாஜ்ஜியம் தொடுத்தாள். வாதிக்கு தன்தகப்பனல் அந்நிலம் தரப்பட்டது என்பது தாவா தானமாகக் கொடுத்ததற்கு தஸ்தாவேஜு ஒன்றுமில்லை ஆனல் அந்த சொத்து சிறுவயதுள்ள போழுது அவன் தகப்பன் வாங்கி தன்பிள்ளை பேரில் செய்தான். அந்நிலம் வாங்கினபணம் தகப்பன் றென்றும், தகப்பன் உள்ளவரையில் தாய் தந்தைகளால் அநுபவித்து வரப்பட்டதென்றும், அவன் மரணத்

துக்குப்பின் தாய் தன் சொந்தமாகவே அநுபவித்து வந்தாளென்பது. தெளிவாயிருக்கிறது வாதிக்கு அந்நிலம் பவாதீனமாக்கவில்லை யென்றும் அவனது தானென்று அவன் தாய் தந்தையார் நடக்கவில்லை யென்றும் டிஸ்டிரிக்ட் கோர்ட்டார்கண்டு, இவ்வியாஜ்ஜியம் தள்ளிவிட்டார்கள்.

அந்நிலத்தை வாதியின் தகப்பன் அவன் ஆதாரவுக்காக வாங்கினதென்றும். விற்கியபத்திரத்திலும் சிவினியூ ரெஜிஸ்டர்களிலும் அவன் பேர் பதிந்திருப்பதால் அந்த சிறுவனுக்கு ஸ்வாதீனம் கொடுக்கப்பட்டதென்று டிவிஷனல் கோர்ட்டார் அபிப்பிராயம் கொண்டார்கள்.

இந்தியாவில் ஒருவன் சொத்துவாங்கி அதை ஒரு பந்துவின் பேரில் செய்வதைப்பற்றி யுள்ள நடவடிக்கைகளைக்குறித்து AmirAli Woodroffe's Evidence Act 531, 627 பக்கங்களில் காட்டியுள்ள நீண்ட தீர்மானவரிசைகளை மேற்சொன்ன 2 கோர்ட்டும் கவனிக்கவில்லை.

1854ம் வருஷம்வரையில் இங்கிலீஷ்லாபிரகாரம் அம்மாதிரிகேசில் சொத்து யார்பேரால் அது செய்யப்பட்டதோ அவன் பிரயோசனத்துக்காகும் கவே ஆனதென்று கொள்ளப்படுவது இந்தியாவுக் பொருந்தாது. யாருக்கு அந்த சொத்து கொண்டு போகப்பட்டதோ அவர் அந்த சொத்துக்கு பாத்தியதையுள்ளவரென்று ருஜூசெய்ய வேண்டுவது அவர் பாரம்.

எனக்குத் தோன்றுவதாவது:—

தகப்பன் தன்ஜீவிக்க அக்காலத்தில் வேறு சொத்தில்லாமலிருந்தான் அந்த சொத்து அவன் பிள்ளையின் பிரயோஜனத்துக்காகவே உபயோகித்தது. என்று ஒன்றும் காட்டவில்லை.

அந்நிலத்தின் வாடகை அவனுடைய தாயாரே வாங்கி அநுபவித்துவந்தாளென்று ஒப்புக்கொள்கிறான். தகப்பன் இறந்து போகவே அவள் அந்த சொத்தை தனதாகவே பாவித்தாள்.

நான் Divisional Court தீர்ப்பைத்தள்ளி, District Court தீர்ப்பேசரியென்று கொள்கிறேன். டிவிசனல் கோர்ட் செலவும் எல்லம் கோர்ட்டுகளிலும் பிரதிவாதிகள் செலவும் கொடுக்கும்படி Ma Hme க்கு உத்தரவு பண்ணுகிறேன். அவ்விதமாக டிக்ரீ மாற்றப்பட்டது.

—:0:—

LOWER BURMA CHIEF COURT.

2 வது சிவில் அப்பில் ந. 9 of 1910

மி. ஜ. பார்லெட்—முன்பாக,

பாணு மகமத் உசேன்—வாதி.—அப்பீல்வாதி

vs

மன்குக்லால்டூவுலத்சன்ட்—பிரதிவாதி—அப்பீல் பிரதிவாதி.

Injunction—Right te let the water run off from land on a higher level into that on a lower level.

Subramania Iyer V. Ramachandra Rau I Madras 335 அநுசரிக்கப்பட்டது.

இன்சேன் டவுன் ஷிம் கோர்டு டிகிரியை மாற்றி, ஹந்தவாடி டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டில் சிவில் அப்பில் ந. 126 of 1908ல, 26 october 1908 கொடுத்த டிக்ரீ மேல் அப்பில்.

மி. கைல்ஸ் அப்பில் வாதிக்கு
„ டன்ட்ரா அப்பில்பிரதிவாதிக்கு:

தீர்ப்பு.

வாதி அதிகமழையினல் தன் நிலத்திலிருந்து நீர் பாய்வதை தடுக்காமலிருக்க. பிரதிவாதிமேல். தாவா செய்தான்.

விபரங்கள் மேற்சொன்ன 2 கோர்ட்டுகளின் தீர்மானங்களில் போதியவரையில் செப்பியிருக்கின்றன

முன்னே 2 நிலங்களிலும் நெற்பயிர் செய்யப்பட்டது. அப்போது மேல் நிலக்காரன் வேண்டிய ஜலம் வைத்துக் கொண்டு மற்ற மிகுதியை கீழ்நிலத்துக்குப்பாய்ச்சி வந்தான். அதனல் இருவருக்கும் பிரயோசனமாயிருந்தது.

இப்போது இருவரும்நெற்பயிர் விட்டுபழங்கள் மரங்களும் நட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதனல் தண்ணீர்கட்டிவைப்பது இடங்கலாயிருக்குது. ஆகையால் வாதிக்கு ஜலம்வைத்து வைப்பதும், பிரதிவாதி அதுபெற்றுக்கொள்வதும் அவசியமில்லை.

வாதிமுன்னே தனக்கு ஜலம் நிறுத்திவைப்பதற்காக நிலத்தை ஒருவிதமாகக்கட்டி பின்பு அதிகம் தேவையில்லாமையால் மழை ஜலம் ஐரே லென்று பாயும்படி செய்து விட்டமையால், பிரதி வாதி தன் நிலத்தின் மேல் அதிக நீர்பாயாதிருக்க மாற்றிகட்டிக்கொள்ள சுதந்தரமுண்டு.

நிலத்துக்குடையவன் மழை ஜலம் தன் நிலத்து மேல் பாய்ந்தால் அதை இஷ்டப்படி உபயோகிக்கலாமென்றும் அல்லது இயற்கையாகவே அது பா

யும்படி விடலாமென்றும் இங்கிலீஷ் தீர்ப்புகள் ஆதாரவாகக்காட்டப்பட்டன.

ஜலம் தர்செயலானது ஆகையால் பூமிக்குடையவன் தன் நிலம் இன்னும் சீராய் பயிராவது நிமித்தம் அணைத்தடை செய்யஞாயமுண்டு. சொந்தக்காரன் ஜலத்தில்கொஞ்சமாவது எல்லாவற்றையுமாவது உபயோகிக்கினும் அவனுக்கு கிஷ்டமாயின் அது ஓடிப்போதும்படி செய்யும் சுதந்தரத்தை அவன் இடிக்க வில்லை.

சுபாவப்படி மேல் நிலத்திலிருந்து கீழ்நிலத்துக்கு ஜலம் பாயச்செய்ய மேல் நிலக்காரனுக்கு சுதந்தரமுண்டு அணைகட்டல் முதலியது செய்து ஜலத்தைத் தடுப்பதினால் அவனுக்கு இடைவது ஆண்டாவது தென்பது என்கருத்து Powmal Vs. Ramaswamy Chetty 4 இந்த கேசில் மழை ஜலப்பாய்ச்சல் அவசியமானவை யென்றதும், அப்படியே அது போகும்படிசெய்தல் ஞாயமென்றும் சொள்ளப்பட்டது. முதலாவது இயற்கையாய் ஜலம் பாயும்போது எங்கே நிலக்காரனுக்கு ஜலத்தை சேமிக்கவாவது போக்கி விடவாவது சுதந்தரமுண்டு என்பதை தெரிந்துக்கொள்ளவேண்டும்.

இந்த கேசில் சாக்ஷியால் என்ன ருஜுவாவது தென்றால், அதிக ஜலம்வாதி நிலத்திலிருந்து பிரதிவாதி நிலத்தில்பாயும், ஏனெனில் சுற்றியுள்ள நிலம் வடக்கே கிழக்கே மேற்கே வாதிநிலத்துக்கு உயர்ந்ததானது.

வாதிதன் நிலத்துக்கு 3 புறத்திலும் அணைகட்டினனென்பது தெரிகிறது. ஆகலால் ஜலம் தன் நிலத்திலிருந்து பிரதிவாதி நிலத்துக்கு குறுக்கே பாயும்படி செய்தான் இதனால் பிரதிவாதிக்குள்ள கஷ்டத்தை சுலபட்படுத்தினனே தவிர அதிகப்படுத்த வில்லை.

டிஸ்ட்ரிக்ட்டு கோர்ட்டு தீர்ப்பை நான் மாற்றுவதன்றி, வாதி நிலத்திலிருந்து பாயும் ஜலத்தின் இயற்கைப்பாய்ச்சலை எவ்விதமாயும் பிரதிவாதி தடை செய்யலாகாதென்றும் வாதிக்கு டிக்ரீ தருகிறேன்.

LOWER BURMA CHEIF COURT.
லோயர் பர்மா சீப் கோர்ட்.

2 வது சிவில் அப்பீல் ந. 38 of 1909.

மிர். லோயிஸ்—முன்பாக.

மான்ங்லுதை—வாதி—அப்பீல் வாதி.

VS

மூான்ங்கியூன்பு வகையரா—பிரதிவாதிகள் அப்பீல் பிரதிவாதிகள்.

Execution—Civil Procedure Code (Act XIV of 1882, S. 263)—occupation by Judgment-debtor after execution—Fresh Cause of action.

Execution ஆகியும் சுவாதீனத்தில் வைத்திருக்கும் ஓர் பிரதிவாதிசட்ட மீறி நடப்பவனாகக் கொள்ளப்பட்டு, மறுபடி புதியதாய் நடவடிக்கைக்கு இடங்கொடுக்கிறான். 1907 ந. 659 வாதி (அப்பீல் வாதியின்), வியாஜ்ஜியத்தைத்தள்ளி என்சாடா டவுன் கோர்ட் டிக்ரிமாற்றி 28 நவம்பர் 1908 என்சாடா டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டில் கொடுத்த டிக்கிரிமேல் அப்பீல்.

மிர். மிர். சாரி. அப்பீல் வாதிக்காக—

" சி. தன்ட்டா. பிரதிவாதிக்காக.

தீர்ப்பு.

1902ம் அப்பீல்வாதி அப்பீல் பிரதிவாதியின் மேல்நிலம் கைப்பற்றுவதற்காக வியாஜ்ஜியம் செய்து டிக்ரீபெற்று 1903ம்ஹு ஜப்திசெய்யத் தொடர்ந்தான்.

அபீல் பிரதிவாதியும் அவன்மனைவியும். அபீனு அந்த நிலத்தைவிட்டு வெளியாவதும்படி கோர்ட்மூலமாய் அறிக்கையிடப்பட்டார்கள். அப்படியே செய்வதாக அவர் சொல்லியும் செய்யவேயில்லை 1906ஹு அபீல்செய்ய ஆரம்பித்தவரையில் என்றும் நடக்கவேயில்லை. என்சாடா டவுன் சிப்பு கோர்டார் பழைய லிமிடேஷன் ஆக்ட் 2-வது செடூல் படி எக்ஸிகூஷன்க்காக மனு டைம் பார் ஆய்விட்டதென்று கொண்டு அதைத்தள்ளி விட்டார்கள். டிஸ்ட்ரிக்டு ஜட்ஜுக்கு அப்பீல்செய்யவே அவர் பழைய சிவில் புரொசிகோடு 230 செக்ஷன்படி டைம் பார் ஆகவில்லையென்று சொலி, மேற்படி டிக்ரியின் 1903ல் வாரன்ட் செய்துவிட்டதாக மறுபடியும் செய்யக்கூடாதென்று டவுன்சிப் கோர்ட்டார் சொன்னதைக் காயப்படுத்தினார். 1903ல் எக்ஸிகூஷன் செய்த டிக்ரீ 243-வது செக்ஷன் கீழ் செய்யப்பட்டதாய்த் தோன்றுகிறது. (பெயிலிப் அந்நிலத்துக்குப்போய் ஜப்தி ஆர்டரை முன்னே அ. பிரதிவாதிமனைவிக்கும் பின்பு அவனுக்கேயும் படித்து அவர்கள் அப்புறப்படவேண்டு மென்றும் சொன்னான். அ. பிரதிவாதி மனைகாலி செய்யமாட்டேனென்று சொல்லியிருந்தால, 263வது செக்ஷன்முடிவில் சொல்லியபடி நடத்தி அவனை வெளிப்படுத்தியிருப்பான் அந்த ஸ்திரீ ஆக்ஷேபிக்கவில்லை. காலிசெய்வதாகச் சொன்னாள். அ. பிரதிவாதி அப்படி என்றும் சொல்லவில்லை. என்ன அவன் சொன்னானோ அது தெரியவில்லை, ஆனால் அவன் ஆக்ஷேபித்ததாகக் காணவில்லை,

CALCUTTA HIGH COURT.
கல்கத்தா ஹைகோர்ட்டு.

—:o:—

கிரிமினல் ரிவிஷன் நெ. 935 of 1910.

1910ம்ஹு ஆகஸ்டுமீ 9உ.

மிர். ஜ. ஜாட்டர்ஜி
மிர். ஜ. டியூனன் } அவர்கள் முன்பாக.

ஹரிசரன் கோரையும் மற்றவர்களும் .... மனுதாரன்.

கிரிஷ்சரன் சாதுகான் .... எதிரிகள்.

ம-ஈ-ஈ-ஸ்ரீ சவுட்ரி,

" பாபு மானிந்தரநாத் பட்டாசாரியர்.
மனுதாரர் வக்கீல்கள்.

ம-ஈ-ஈ-ஸ்ரீ ஆஸ்கர்

" பாபு முானேந்திரநாத் சக்காரர்
எதிரி தரப்பு.

COMPLAINANT—OPPOSITE PARTY.

Criminal Procedure Code (Act V of 1898), ss. 94 96, 192—Account books, production of—Procedure to be followed—Valuable security—Title Page of account book signed by partners—Penal Code (Act XLV of 1860), ss. 30, 477.

The complainant complained before a Magistrate that the accused had fraudulenty tampered with the account books of a partnership business. The Magistrate directed the Police "to enquire and report and to take possession of the khata books" The Magistrate not being satisfied with the Police report submitted to him, referred the case to an Honorary Magistrate for further enquiry and report. The Honorary Magistrate reported that the Charge was not "utterly devoid of foundation" The Magistrate then directed the issue of process for the attendance of the accused in answer to charge under section 477 Indian Penal Code:

Held, that the order upon the Police to take possession of the account books of the firm was illegal and that if their production was necessary, the Magistrate should have issued either summons to produce under section 94 or a search warrant under section 96 of the Criminal Procedure Code,

Held, also that order directing the Honorary Magistrate to enquire and report was one not authorized by law, and that if the Magistrate thought proper to refer the case to some other Magistrate for an enqniry other than a local investigation, he should have transferred the case under section 192 of the Criminal Procedure Code to such Magistrate, not for report but for disposal,

A title page of an account book of a firm, containing the names of the several partners and showing the amount of Capital contributed by each if signed by the partners, may be a valuable security within the meaning of section 30 of the Indian Penal Code.

கூட்டு வியாபார சம்பந்தமான ஒரு கணக்கு புஸ்தகங்களை எதிரி வேண்டுமென்று கிழித்து விட்டதாக ஒரு மாஜிஸ்ட்ரேட்டிடத்தில் ஒருவன் பிராதி செய்தான். மாஜிஸ்ரேட் அந்தக் கேசை விசாரித்து தினசரி கணக்கு புஸ்தகத்தை எடுத்து வைத்துக் கொள்ள போலீசுக்கு உத்திரவு செய்தார்-போலீஸார் அனுப்பிய, ரிபோர்டினால் மாஜிஸ்ட்ரேட் திருப்தி அடையாமல் அதை இன்னும் நன்றாய் விசாரித்து ரிபோர்ட் செய்யும்படி ஒரு பென்சு மாஜிஸ்ரேட்டுக்கு அனுப்பினால் அந்த மாஜிஸ்ட்ரேட் அந்தக் கேஸில் கொஞ்சம் உண்மையிருப்பதாகதெரிய வருகிறதென்றுரிபோர்ட் செய்தார் இந்தியன் பினல்கோடு 477-வது செக்ஷன்படி மாஜிஸ்ட்ரேட்டால் குற்றம் சாட்டப்பட்டான். கடையிலிருந்து கணக்குபுஸ்தகத்தை எடுத்ததுசட்டவிரோதம் அந்த கணக்கு அவசியமிருந்தால் கிரிமினல் புரொசிஜர் கோடு 94- 96- செக்ஷன்படி சம்மனாவது அல்லது வாரண்டுக்காவது உத்திரவு செய்திருக்க வேண்டும் போலீஸ் விசாரணையில் திருப்தியில்லாத வரையில் பென்சு மாஜிஸ்ட்டுக்கு அனுப்பி யிருக்கக்கூடாது. அப்படி அனுப்ப உத்தேசித்தால் வேறே ஒரு மாஜிஸ்ரேட்டுக்கு விசாரித்து முடிவு செய்ய அனுப்ப வேண்டும். இந்தியன் பினல்கோடு 30-வது செக்ஷன்படி கடை புஸ்தகத்தில் பேரோடு, ஒவ்வொருவர் பாகத்தையை மொத்தத்தையை முதலான விபரங்களடங்கிய புஸ்தக மிருந்தால் மிகவும் நல்லது.

கல்கத்தா சீப் பிரசிடென்ஸி மாஜிஸட்ரேட் அவர்களின் 18-3-1910-உகளின் நடவடிக்கை, உத்திரவுக்கு விரோதமாக இந்த அப்பீல்.

கேசின் விபரம் 1911ஹு பிப்ரவரிமீ 3உ ஸ்ரீ சந்தரசாதுகான் என்கிற ஒருவன் அவனுடைய மைனர் பிள்ளைகளோடு சீப்பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட்டு முன்பாக, தாவா கொடுத்தது என்னவென்றால், தன்பெண்சாதி பொன்மணி தாசி என்பவளும் அவளுடைய தகப்பனும் காலஞ்சென்றார்கள் காலஞ்சென்றவர்கள், கூட்டு பாதியத்திற்கு பொன்னமணி தாசி பிள்ளைகள் அக்குடையை வாராளுர்கள் அக்கும் அதாவது தாயினுடைய அக்கும் பாட்டனுருடைய அக்கும்) அதே பிரகாரம் கூட்டு சம்பந்தமானகணக்கு புஸ்தகங்களடங்கிய முதல்பக்கம், (Title page) ல் பாட்டனுர் ஹரிதாஸ் பேரைஅடித்து அதற்கு பதிலாக பேரனுடைய பிள்ளைகள் பேரைமாற்றி இருந்து எப்பொழுதுபோல் வியாபாரம் நடந்து வந்தது இதன்பிறகு ஒருநாள் வாதி வெளியே போயிருக்கும் சமயத்தில் ஹரிதாஸினுடைய பேரர்களுடைய பேரை மாற்றி விட்டார்கள். இப்பெயர் மாற்றுவதினால் இந்த குற்றவாளி மோசம் எண்ணங்கொண்டவராக சீப், மாஜிஸ்ட்ரேட் முன்பாக ஸ்ரீ சந்திர

சாதுகான் தாவா செய்தார். அதன் பிறகு மாஜிஸ்ட்ரேட் அவர்கள் போலீஸ்ார் விசாரணை செய்து தனக்கு ரிபோர்ட் செய்ய உத்திரவளித்தார். அப்படி போலீசார் விசாரித்து ரிப்போர்ட் செய்தார்கள் அந்தா ரிப்போர்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு சரியாக இல்லாததாக தோற்றப்பட்டதனல் பென்சு மாஜிஸ்ட்ரேட்டுக்கு இந்த கேசை விசாரணைசெய்யும்படி அனும்பித்தார். அவர் விசாரணை செய்ததில் இந்த தாவாவில்செய்தபடி கொஞ்சம் உண்மையாக காணப்படுகிறதென்று ரிப்போர்டு கொடுத்தார்.

இந்த ரிப்போர்ட்பேரில், சீப் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் இந்தியன் பினல் கோடு 477 வது செக்ஷன் கீழ் நடவடிக்கை நடத்தினர்.

தீர்ப்பு:—இந்தகேசில் சீப், பிரசிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் செய்த, நடவடிக்கைகள் சரியானதல்லவென்று, ஜட்ஜுகள் அபிப்பிராயம் ஏனெனில் இந்தியன், பீனல் கோடு 477, செக்ஷன்படி ஒருவன் பேரில் குற்றம் சாட்டுவதற்கு வேண்டிய ருஜுகள் இந்த கேசில் இல்லையென்றும், இதன்றி, பென்சு மாஜிஸ்ட்ரேட்டுக்கு இந்த கேசை எப்படி அனுப்பலாமென்றும், கணக்கு புஸ்தகங்களை, எடுக்கச்சொன்னது தப்பென்றும், மேல்கண்ட காரணங்களை அனுசரித்து, சீப் மாஜிஸ்ரேட்டை ஜவாப் கேழ்க்கப்பட்டது.

சீப் மாஜிஸ்ட்ரேட் இந்த கேசில் சம்பந்தப்பட்ட கணக்கு புஸ்தகங்கள் கோர்ட்டுக்கு எடுத்து வரும்படி விரும்பினல், கிரிமினல் புரோசிஜர்கோடு, 94-வது செக்ஷன் கீழ் சம்மனுக்கு உத்திரவு கொடுத்திருக்கலாம் அல்லது 96,வது செக்ஷன் கீழ் சர்ச் வாரண்டு கொடுத்து எந்த வருஷத்து புத்தகங்கள் வேண்டுமோ அதை வரவழைத்திருக்கலாம். அப்படி செயயாமல் ஓரே காலத்தில் எல்லா கணக்கு புஸ்தகங்களையும் எடுத்துவந்ததில் ஞாயமில்லை இதுதவிர ஸரா ரிப்போர்டு ஓகேசில் குற்றம் சாட்டுவதற்கு சரியான ருஜுசெய்ய ஆதாரங்கள் இல்லாவிட்டால் மறுபடியும் யற்றொரு பென்சு மாஸ்ரேட்டுக்கு இக்கேஸ் அனுப்பித்தது சரியல்ல, ஏனெனில் இந்த சீப் மாஜிஸ்ட்ரேட் அவரே விசாரிக்க இஷ்டமில்லாவிட்டால், கிரிமினல் புரோகிராஜர்192 வது செக்ஷன்படி மாஜிஸ்ட்ரேட்டுக்கு கேசை முடிவு விசாரணைக்கு டிரான்பா செய்திருக்க வேண்டியது கேசை பூராக விசாரிக்காமல் ரிப்போர்ட் மாத்திரம் செய்வதற்கு ஒரு பென்சு மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுவிக்கக்கூடாது.

இந்த கூட்டு வியாபாரத்தில் ஹரிதாஸ் என்பவர் 1400 ரூபாய் முதல் வைத்தாக தெரியவருகிறது ஹரிதாசுக்கு ஜாகரலா என்பவன் ஒரு குமாரன், இருக்கிறதாய் தெரியவருகிறது ஹரிதாசுடைய அக்குபாத்தியதை ஜாகரலா என்பவனுக்குத் தான் சேரவேண்டுமென்று எதிரிகளுடைய கட்சி இதைப்பற்றி சிவில் கோர்ட்டில் வியாஜ்ஜியம் நடந்துவருவதாக தெரியவருகிறது ஆகையால் அந்த கேசில்சிவில் கோர்டில் முடிவாகிற வரையில், சீப், பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட் இந்த கேசில் செய்த நடவடிக்கைகளைபற்றிய ஆர்டரைத்தள்ளிவிட்டோம்.

ஜகத்சந்ரமகும்தா- V S- கியூன் எம்ரஸ் கல்கத்தா ஐகோர்ட. ரிப்போர்டின் 786 பக்கங்கள் இந்த கேசை இதற்கு ஆதாரமாய் எடுத்து கூரப்பட்டது, இ, கி, லா, ஜ, 11வது வால்யம் பக்கம் 525—

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

மிர். ஜ. பென்ஸன்.
மிர். ஜ. கிருஷ்ணசுவாமி அய்யர். } முன்பாக.

P. L. S. A. R. S. செட்டியப்ப செட்டியாா:—அப்பீல் வாதி,

N. பெரியசாமி தேவன் உடையார்:—அப்பீல் பிரதிவாதி பெரியகுளம் டிஸ்டிரிக்ட் முன்சீப் அவர்களின் 1906-ம் ஹூத்திய அசல் நெ. 409 தீர்மானத்துள் மதுரை சப்ஜட்ஜியிடம் 1908-ம்ஹூ A. S. நெ. 54-ன் தீர்மானத்தின்பேரில் இந்த இரண்டாவது அப்பீல்.

மகா-ா-ாஸ்ரீ T. நரசிம்மயங்காருக்காக கிருஷ்ணசாமி அய்யங்கார் } வாதி வக்கீல்.

மகா-ா-ா-ஸ்ரீ S. சீனிவாசய்யர் } பிரதிவாதி வக்கீல்.

முதலில் எழுதிகொடுக்கப்பட்ட அடமானம் பத்திரம் கிரய தஸ்தவேஜி சகிதம் யிழந்துவிட்டபடியால் இந்த அடமானம் செய்து கொள்ளப்பட்டது

பிந்திய அடமானம் செல்லாது என்று கீழ்கோர்ட்டார் தள்ளிவிட்டார்கள் கிரயபத்திரத்தை யிழப்பது ஒருவருடைய பாத்தியதையே யிழப்பதாகும் பட்டணத்தில் கிரயபத்திரம் அவசியம் இருக்கவேண்டும் கிடைக்காவிட்டால் ரிஜீஸ்டர் ஆபீஸில் தேடச் செய்யவேண்டியதவசியம் என்று வாதி வக்கீல் பேசினர்.

தீர்ப்பு:—11-வது பிரதிவாதி அலக்ஷியமாயிருந்தான் என்று சொல்லக்கூடாதென்பது: சப்ஜட்ஜ் அவர்கள் அபிப்பிராயம் 2-வது பிரதிவாதி தன்னிடம் கிரய ஆதரவு இல்லை என்று சொல்லுவதை சப்ஜட்ஜ் ஒப்புக்கொள்ளுகிறார் கிரய ஆதரவு இல்லை என்று சொல்லுவதை சக்ஜட்ஜ் ஒப்புக்கொள்ளுகிறார் கிரம ஆதாவுபட்டணத்தில் அவசியம் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேமென்றும் ரிஜிஸ்தராபிஸில் முன் அடமானத்தைப் பற்றி விசாரித்திருக்க வேண்டுமென்றும் சொல்லி இந்த 2-வது அப்பீல் சிலவு துகையுடன் தள்ளுபடி செய்யபட்டது.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு,

மிர். ஜ. பென்ஸன்
மிர். ஜ. கிருஷ்ணசுவாமி அய்யர் } முன்பாக.

மங்களஸாமி என்கிற முத்து விஜய ரகுநாததேவர் } அப்பீல்வாதி.

சுப்பையா பிள்ளை உடையார்:—அப்பீல் பிரதிவாதி.

ரிஜிஸதர் செய்யப்படாமல் ஒரு நிலத்தை ஒருவன் அநுபவித்தால் அவன் குற்றவாளி என்றுதீர்மானிக்கப்பட்டு சொந்தக்காரனுடைய கஷ்டத்துக்கு பாத்தியப்படுவான் பரமகுடி டிஸ்டிரிக்டு முன்சீப் கோர்ட்டாரின் 1903-ம் ஹூத்திய அசல் நெ. 693 தீர்ப்பின்பேரில் மதுரை டிஸ்டிரிக்டு கோர்ட்டில் 1905-ம் ஹூத்திய A. S. நெ. 581ன்மேல் இந்த 2வது அப்பீல் செய்யப்பட்டது.

அட்வோகேட் ஜனால்
மகா-ா-ா-ஸ்ரீ P. S. சிவசுவாமி அய்யர் } வாதி வக்கீல்.

மகா-ா-ா-ஸ்ரீ S.சீனிவாச அய்யங்கார் } பிரதிவாதி வக்கீல்.

தீர்ப்பு:—வாதி காவூர் கிராமத்தின்மேல் வார பாத்தியதையில் நாலிலொருபாகத்துக்குறியவன் 1898-ம்ஹூத்திய அசல் நெ. 24-ல் மேல்வார பாத்தியதையில் 3-20 பாகத்துக்குமுதல் பிரதிவாதி தீர்ப்பு பெற்றுக்கொண்டிருக்கிறன். வாதியின் கார்டியனும் முதல் பிரதிவாதியும் ஒரு உடன்படிக்கைசெய்துகொண்டிருக்கிறர்கள் அதன்படி வாதியின் தகப்பன் நியாய விரோதமாக 1307 1308 பசலியின் தன் கொடக்கூலிக்காக நாலிலொரு பாகத்தை முதல் பிரதிவாதிக்கு கொதுவை வைத்தான்.

இந்தக்கொதுவை முதல் பிரதிவாதிக்கு இனி சேரவேண்டிய கொடக்கூலிக்காகவும் ஏற்பட்டது தஸ்தாவேஜி ரிஜிஸ்தராகததால் செல்லத்தக்க தில்லையென்று கீழ் இரண்டு கோர்ட்டாருடைய அபிப்பிராயம்.

முன்சீபானவர் முதல் பிரதிவாதியின்பேரில் ரூபா. 496-8-6 க்கு வாதிக்கு தீர்ப்புசெய்தார்கள்.

ஜில்லா ஜட்ஜியிடம் அப்பீல் செய்ததில்வாதியின் தாவாவை தள்ளுபடிசெய்தார்கள் வாதியின் நாலிலொருபாகத்தை 4வது பிரதிவாதியாகிய கார்டியன் அடமானம் வைத்தது நியாயம் என்று எண்ணினர் முதல் பிரதிவாதிசெய்தது பிசகல்லவென்று வாதிக்கு விரோதமாக தீர்ப்பு செய்தார். 1307 1308 பசலியின் கொடக்கூலிக்காக முதல் பிரதிவாதியின் பாகம் அடமானம் வைக்கப்பட்டது ஆகையால் வாதிக்கு பாத்தியதை உண்டென்று வாதி வக்கீல் வாதாடினர் ரிஜிஸ்தராகாவிட்டாலும் செல்லத்தகாதென்று பிரதிவாதி வக்கீல் சொல்லுகிறார். இதை நாம் ஒத்துக்கொள்ள மாட்டோம் தஸதவேஜி இனி ஏற்படும் வாதியின் கொடக்கூலிக்காக ஏற்பட்ட அடமானம் அது 100 ரூபாயுக்கு அதிகப்பட்டது ரிஜிஸ்ட்ரேஷன் ஆகட் 3-வது செக்ஷன்படி அசையாப்பொருளில் நிலவரும்படியைத் தவிர இதர வரும்படிகளைக்குறிக்கிறது நிலத்தைதவிர இதர வரும்படி உண்டா என்பதை கவனிக்கவேண்டியது.

மேல் வாரம் அசையாப்பொருளாகாது இது ரிஜிஸ்தராகாத பத்திரத்தின் பாக்கியாயிருக்கிறது 100 ரூபாயுக்கு அதிகப்பட்டதானதால் 17-வது சொல்படிஅவசியம் ரிஜிஸ்தர் செய்திருக்கவேண்டியது நெருப்பினல் ஏற்பட்ட பிரதிவாதியின் நஷ்டத்தை ஒத்துக்கொள்ளவேண்டியது என்று ஜட்ஜ்சொல்லுகிறார்.

ஆகையால் வாதி ரூபா 496-8-5-ல் நஷ்டம் ரூா 124-8-6 போக பாக்கிக்கு தீர்ப்புபெறுவது நியாயம் ஆகையால் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் தீர்மானத்தைமாற்றி 2-வது 3-வது பிரதிவாதிகளின் குடும்ப பாகத்தில் ரூபா 2372க்கும் நாளது தேதி முதல் ½ வட்டியுடனும் வாதிக்கு தீர்ப்பு செய்யபட்டது அவரவர்கள் சிலவு அவரவர்களுடையது.

MADRAS HIGH COURT.

மதராஸ ஹைகோர்ட்டு.

—:o:—

மி-ர். ஜ- மில்லர்
மி-ர். ஜ. கிருஷ்ணசுவாமி அய்யர் } முன்பாக.

N. ஏகாம்பரேசுவய்யர்:—அப்பில் வாதி

M. வீரபத்திர தேவனுர் வகையரு:-அப்பில் பிரதிவாதிகள்.

கி. பு. கோடு. செக்ஷன் 195 (a) (c). சாங்கிஷன் மனுவை மாத்துதல்:—

குற்றம் விசாரணைசெய்யப்பட்ட கோர்ட்டுக்கு, மேல் கோர்ட்டில், சாங்கிஷனுக்கு மனுகொடுக்கலாம். அதன்மேல் கோர்ட்டைத்தவிர, இதர கோர்ட்டில் சாங்கிஷன் பெற்றுக்கொண்டால் செல்லாது.

ஹைகோர்ட்டார் இந்த மனுவை மாத்துதல் அவசியம் என்று எண்ணினர்கள்.

மனுவில் கண்ட காரணங்களைக் கொண்டு மதுரை செஷன்ஸ் கோர்ட்டு 1910 வது ஹூத்திய 27 நெ. மனுவை வேரே எந்த செஷன்ஸ் கோர்ட்டுக்காவது மாத்த கொடுத்த மனு:—

மகா-ா-ா-ஸ்ரீ. M. K. நாராயணசாமி அய்யர்:—வாதிவக்கீல்

மகா-ா-ா-ஸ்ரீ S. சுவாமி நாதன்:—பிரதிவாதி வக்கீல்.

கி. பு. கோடு 195 வது செக்ஷன்படி குற்றம் விசாரணை செய்யப்பட்ட கோர்ட்டைத் தவிர, இதர கோர்ட்டின்சாங்கிஷனுவது அல்லது குற்றம் விசாரணைசெய்யப்பட்ட கீழ்கோர்ட்டு சாங்கிஷனுவது செல்லாது என்றும் ஹைகோர்ட்டார் தவிர யிதர கோர்ட்டுக்கு மாத்தமுடியாதென்றும், ஹைகோர்ட்டுக்கு மாத்தத்தகுந்த காரணங்கள் சொல்லப்படவில்லை என்றும் செஷன் கோர்ட்டு தீர்மானத்தின் பேரில் இந்தக் கோர்ட்டில் அப்பில் செய்யலாமென்றும் பிரதிவாதி வக்கீல் வாதாடினர்.

கி. பு. கோடு 195 வது செக்ஷன் 526 வது செக்ஷனை அனுசரித்திருக்கிறது என்றும் 195வது செக்ஷன்படி வேரே செஷன்ஸ் கோர்ட்டுக்கு மாத்தப்பட்டாலும் 126 வது செக்ஷன் கிளாஸ் 2 படி எந்தக் கோர்ட்டிலிருந்து மாற்றப்பட்டதோ அந்த செஷன்ஸ் கோர்ட்டின் அதிகாரம் உண்டென்றும் வாதி வக்கீல் வதாடினர்.

உத்திரவு:— கி. பு. கோடு 195 வது செக்ஷன்படி (a) (c) உள் பிரிவுபடி குற்றம் செய்த ஒரு மனிதன்பேரில் சாங்கிஷனுக்காக இந்த மனு கொடுக்கப்பட்டது. அந்த செக்ஷன்படி முன்னல்உத்திரவு பெற்றுக்கொள்ளாமலும் குற்றம் விசாரனை செய்யப்பட்ட கோர்ட்டுதீர்ப்பில்அவன் குற்றவாளியென்று கண்டிருந்தாலொழிய எந்த கோர்ட்டுக்கும் உத்திரவு கொடுக்க அதிகாரமில்லை. கி பு. கோ. 26-வது செக்ஷன்படி கிரிமினல் கேஸ் ஆனதால் மாற்ற அதிகார மிருந்தாலும் 195-வது செக்ஷன்படி இந்த விஷயம் செல்லுபடியாகவில்லை. அப்பீல் வந்தாலொழிய இந்த கேசை இங்கே கவனிக்கப்படமாட்டாது. கி. பு. கோடு 110-வது செக்ஷன்படி குற்றம் விசாரனை செய்யப்பட்ட கோர்ட்டின்மேல் கோர்ட்டைத் தவிர இதர கோர்ட்டுக்கு மாற்ற ஹைகோர்ட்டாருக்கு அதிகாரமில்லை யென்றும் எங்கள் அபிப்பிராயம் 195-வது செக்ஷனை அனுசரித்து மனுறை தள்ளுபடி செய்யப்பட்டது.

பிரதிவாதியை efect|செய்ததாக bailiff சொல்லுகிறன், ஆனல் இது அவனை அப்புரப்படுத்த கட்டாயப்படுத்துகிறதாய்த் தோணுது இந்த கேஸ் முழு execution நடத்தினதாகவே கொள்ளவேண்டும் ஆகையால் இந்த வியாஜ்ஜியத்திற்கு காலநிர்ணய தோஷ சட்டம் பாதிக்க மாட்டாது. கீழ் அப்பீல் கோர்ட்டு தீர்ப்பும் டிக்ரியும் தனைப்

கட்டது முதல் கோர்ட்டு தீர்ப்பு கொள்ளப்பட்டது வாதிக்கு எல்லா கோர்ட்டு செலவுகளும் கிடைக்கும்.

அப்பீலுர்க்கு அனுமதி தந்தேன்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்.

Orginal side Civil Appeal No 15 of 1908.

ஜட்ஜுகள்.— { ஸர் R, பென்சன் / மி-ர் ஜ. சங்கரநாயர் } முன்பாக.

கந்த பொடிகார ஷேக்மீரான் சாயப்-பிரதிவாதி அப்பீல்வாதி.

VS

கமெர்ஷல் பாங்க் ஆப் இந்தியா-பிரதிவாதிகள் அப்பீல் பிரதிவாதிகள்.

Suit among partners in favor of one Decreed some of the partners for a certain sum against one of thc debtors of the firm—No opportunity given to the debtor to contest the correctness of the amount.

பாகஸ்தருக்குள்ள ஓர் வியாஜ்ஜியத்தில் பாகஸ்தனல்லாத ஒருவன் பாக்கி யென்று டிக்ரியில் ஒரு தொகை செப்பியபோது அவன் அந்த தொகை கொடுக்கவேண்டிய பாக்கியில்லை யென்று காண்பிக்க முன்னமே சமயம் கொடுக்கப்பட்டு அவன் அப்படி செய்யத் தப்பினுலல்லது அத்தொகையாவது அதிலெந்த பாகமாவது தான் கொடுக்க வேண்டியதில்லை யென்று காண்பிக்க சுகந்தரமுண்டு.

1895-ம்ஞு ஹைகோர்ட்டில் சிவில் வியாஜ்ஜியம் நெ. 160ல் கனம் மி-ர். ஜ. போடாம் 1907 டிசம்பர் 3உ கொடுத்த தீர்மானம் ஆர்டர் இவைபேரில் அபீல்.

தீர்ப்பு:—இந்த கேசானது கடன்கள் பாத்தியப்பட்டவரையில் வாதிக்கும் உண்மையாய் பாகஸ்தராக விருந்த பிரதிவாதிகளுக்கும் நடந்ததாயிருக்கிறது. அதில் அப்பீல் வாதி பாகஸ்தனல்ல டிக்ரியில் சொல்லியிருக்கும் Rs. 620-15-1 கொடுக்கவேண்டியதில்லை யென்று காண்பிக்க அபீல் வாதிக்கு சமயம் தரவேயில்லையென்று எமக்கு முன்னே வாதிக்கப்படுகிறது. அபில்வாதி வாதம் நல்ல ஆதாரமுள்ளது. மேற்படி ஆர்டரால நாலு கடன் காரர்களும் செலுத்தவேண்டிய தொகைகளை நிறுத்திக் கொடுக்க அவசிய மில்லை. மேற்படி கடனை வசூல் செய்ய அவசியமான வழி தேடும்படி நிசிவருக்குவிட்டு விட்டிருகலாம்.

ஆனல் இந்த உத்தரவானது சுமார் 10 கடன்காரர்கள் தரவேண்டிய பாக்கிகளை நிறுக்காய்க் காண்பித்தாலும் அவர்களிலொருவனுகிய இவ்வாதி அப்பீல் செய்திருப்பதாலும் ஏதாவது கடன் பாக்கியிருந்தால் அவ்வாதிகூட என்ன செலுத்த வேண்டுமோ அதைத் தீர்மானிப்பது மிகவும் வசதியாயிருக்கும்.

ஆகையால் ஏதாவது வாதி பாகஸ்தருக்குத் தரவேண்டியிருக்கிறதா அல்து பாகஸ்தரால் வாதிக்குச்சேர்பிக்கவேன்டியது ஏதாவது உண்டாவென்னும் கேள்வியைப் பற்றி தீர்மானம் வேண்டுகிறோம். வாக்குமூலம் உள்பட இதர சாகூநி ஒப்புக்கொள்ளப்படும். ஆக்ஷேபனைகள் தாக்கல் செய்ய நாள் சாவுகாசம் கொடுக்கப்பட்டது.

கேஸ் ரிமான்ட் ஆச்சுது.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்.

சிவில் ரிவிஷன் பிடிஷன்கள் நே. 739 745 of 1907.

சீப் ஜஸ்டிஸ்:—ஸ்ர் அர்னல்ட் வொயிட்—முன்பாக ஹஜரத் கிபூலெளசயித் குலாம் கௌஸ்ஷாசாஹில் காடிரி வாதி மனுதாரி

VS

ஷண்முகபிள்ளை வகையரா—பிரதிவாதிகள்—அபீல் பிரதிவாதிகள்.

Madras Rent Recovery (Act VIII of 1865) s 14-Limitation Act (XV of 1877) Sec II. act 110—When arrears become due starting point cf limitation.

எல்லாம்வியாஜ்ஜியங்களிலும் வாதியாயிருந்த ஓர் பூமிக்குடையவன் தீர்வை அல்லது குத்தகை வசூல் சட்டம் 6-வது செக்ஷன்படி 1902-ஞு தன் குடித்தனக்காரரை பட்டா உறுதிப் படுத்த ரெவினியூ கோர்ட்டில் தாவா செய்து 1904-வது வருஷம் மேமீ 24உ தீர்ப்பு சம்பாதித்தான். அதற்குமுன்னே அக்குடியானவர்கள் முந்திய பட்டாக்களை மாற்ற மேற்படி எஜமானனுக்கு சுதந்தரமில்லை யென்று தீர்ப்பு கொடுக்க சில கோர்ட்டுகளில் தாவா செய்து ரெவினியூ கேசு நடந்து கொண்டிருக்கும்போதே 1902-ஞு ஆகஸ்டுமீ 7உ ஹைகோர்ட்டில் ஓர் தீர்மானம் சம்மாதித்தார்கள். அதிலே இருபக்ஷத்தாரையும் சமயம் நேரிடும்போது பட்டாவை மாற்ற பொது டிக்ளரேஷன் கட்டுப்படுத்தாது என்ற அம்சம் அடங்கியுள்ளது.

இச்சந்தர்ப்பங்களில் ரெவினியூ கோர்ட்டு தீர்ப்பு தேதியிலிருந்தே (லிமிடேஷன் கால நிர்ணய தோஷம் ஆரம்பமாகுது என்று கொள்ளப்பட்டது.

விளங்கிமான் சின்ன கோட்டில் 1907வருஷ நெ, 620-626ல் அவ்வருஷப் செப்டெம்பர்மீ 6உ டி.மு. கொடுத்த டிக்ரியும் தீர்ப்பும் பார்வையிடும்படி 1887 Act IX செக். 25ன் கீழ் செலுத்திய பெடிஷன்கள்.

தீர்மானம்:—அவ்வியாஜ்ஜியங்கள் குத்தகை வரும்படிக்காக முனிசிப் இவைகள் காலநிர்ணய தோஷம் வந்தது வென்று கேசுகளை தள்ளிவிட்டார் நான் யோசிக்க வேண்டுவதென்னவென்றுல் அவர் செய்தது சரியாவென்பது முனிசிப் டைம் பாராயிற்று என்று தீர்ப்பு சொல்லும்போது இந்த கோர்ட்டில் Arunachallum Chettiar V. Kadir Rowthen கேசில் தந்த தீர்ப்பை அனுசரித்தால் அதிலே கல்வியுள்ள ஜட்ஜிகள் Privy Council Rangayya Appa Rao vs Bobbu Sriramulu (2) இந்த கேசில் நடத்தியபடி மட்டித்தீர்ப்பு சொன்னுர்கள்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

2 வது அப்பீல் நே. 543 of 1908.

—:o:—

ஸர் அர்னல்ட் வொயிட் / மி-ர். ஜ. மன்ரோ } முன்பாக.

சின்னதாயம்மாள்—வாதி அப்பீல்வாதி

சிக்கன்ன செட்டி பிரதிவாதி

VS

Civil Procedure Code (Act XIV of 1882) ss. 25 562 Powers of appelate Court to transfer appeals.

ஒரு அப்பீலில் கொஞ்சம் பாகம் டிஸ்டிரிக்ட் கோர்ட்டு கேட்ட பின், அதை சபார்டினேட் ஜட்ஜ் கோர்ட்டுக்கு மாற்ற டிஸ்டிரிக்ட் கோர்ட்டுக்கு அதிகாரமில்லை.

குமாரசாமி ரெட்டியார் v சுப்புராய ரெட்டியார் இ. லா. ரி. மதராஸ் 20 M. 314,

கிருஷ்ணகிரி டி, மு. கோர்ட்டில் O S No. 252 of 1901) கொடுத்த டிக்ரியின்மேல் சேலம் சப்ஜட்ஜ் கோர்ட்டில் செய்த அபீலின் மேல் 2-வது அபீல்.

தீர்ப்பு:—இதிலே அதிகார எல்லை யொன்று தான் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. அதாவது, டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் அபீலில் கொஞ்சம் கேட்டு விசாரணைக்கு இஷியூக்கள் கொடுத்த பின் மேற்படி அபீலை சப் ஜட்ஜுக்கு மாற்றக்கூடாது.

இந்த கேசில் டிரான்ஸ்பருக்கு உத்தரவு பண்ணது டிஸ்டிரிக்ட் ஜட்ஜாராயல்ல ஹைகோர்ட்டாரால் செய்யப்பட்டதென்று அட்விகேட் ஜெனரல் எடுத்துக் கூறினர். அவர் ரிக்காட் பார்த்ததில் ஹைகோர்ட்டார் இந்த கேசை டிரான்பர் செய்ததாக காணவில்லை. ஆனல் அவ்வுத்தரவு டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் தான் கொடுத்தது என்று நாம் கொள்ள வேண்டியது.

அது அப்படி இருக்கையால் இந்த கேசு குமாரசாமி ரெட்டி சுப்பையா ரெட்டி கேசின் தீர்ப்பில் அடங்கி யிருக்கிறது. நாங்கள் இந்த தீர்ப்போடு சம்மதிக்கிறோம்.

அட்வோகேட் ஜெனரல் நம்மை கேட்டபடி செய்யாமல் இக்கேசில் இவ்வபீலில் கொஞ்சம் கேட்டு தீர்ப்புக்காக ரிமாண்டு செய்த ஜட்ஜ் அபீலை விசாரித்த டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் அல்லவென்று கொள்வது தகுதியாயிருக்குது.

சப் ஜட்ஜ் டிக்ரியை தள்ளி, இந்த அபீலை சட்டப்படி நடத்த டிஸ்டிரிக்ட் ஜட்ஜுக்கு இந்த கேஸ் வாபீஸ் செய்யப்பட்டது,

MADRAS HIGH OOURT.

மதராஸ் ஹைகோர்ட்.

1-வது சிவில் அப்பீல் நே. 115 of 1907.

ஸர். அர்னல்ட் வொயிட் / மி-ர். ஜ. எயிலிங் } முன்பாக.

வெங்கடாசாரியார் மைனர் அவர் தந்தையும் கார்டியனுமான எ.கே.டி அப்பாவாசாரியார் மூலம் } அப்பீல் வாதி.

V.

அதன் சடகோபாசாரியார் வகையார். அ. பிரதிவாதிகள்

ஆசாரிய புருஷர் வகுப்பில் சேர்ந்த ஓர் ஹிந்து உயில்காரர் தனது கடைசி உயிலில் அப்பீல் வாதியை தனக்கு ஸ்வீகார நேமனம்பண்ணா அப்பீல் வாதி உயில்காரர் வாரிசு என்றும் உயில்காரர் செய்துதந்த மத சம்பந்தமான காரியங்கள் அவன்செய்யவேண்டுமென்றும் தனக்கு சேரவேண்டிய மரியாதை முதலானவை அவன் பெறவேண்டுமென்றும் அவ்வுயில் செப்பிற்று.

(1) ஸ்வீகாரம் செல்லுமா என்ற கேள்வி ஒருபக்கமிருக்க உயில்மாத்திரம் சரியானதென்றும், அதன்படி நடத்தவேண்டுமென்றும் கொள்ளப்பட்டது.

(2) உயிலில் ஸ்வீகார நேமனம் என்று சொன்னதால் சட்டப்படி அதற்குள்ள பிரயோஜனங்கள் எண்ணியே உயில்காரர் நேமித்தார்.

(3) அப்பீல் வாதியின் ஸ்வந்தரங்களை உயில்படி ஸ்தாபிக்க டிக்ரி கொடுத்தபோது அப்பீல் வாதியை ஸ்வீகாரஞ் செய்து கொண்டதைப் பற்றி declaration செய்ய வேண்டுவது கோர்ட்டார் இஷ்டத்திலுள்ளது.

தூத்துக்குடி சப்ஜட்ஜ் கோர்ட்டில் அசல் ந. 21 of 1904 ல் கொடுத்த டிக்ரியின்மேல் அபீல்.

தீர்மானம்:—காலஞ்சென்ற ஆழ்வார் திருநகர் சடகோபாசாரி 1903ஞு ஜூன்மீ 26உ எழுதிய உயில்சாசனம் அதே தேதியில் 2-வது பிரதிவாதியை ஸ்வீகாரமெடுத்துக்கொண்டதையும் ரத்து பண்ணும்படி வாதிகள் வியாஜ்ஜியம் பண்ணுகிறார்கள். மேலும் 2-வது பிரதிவாதி கையிலிருக்கும் சடகோபாசாரி சொத்துக்களையும் வசூல் பண்ணிக்கொள்ளவும் தாவா செய்கிறார்கள். கோர்ட்டார் ஸ்வீகாரம் சரியென்று ஒரு சமயம் ஒப்புக்கொண்டால் சொத்துகளை பாகப் பிரிவினை செய்து கொடுக்கும்படியாய் கேழ்க்கப்பட்டது.

சப்ஜட்ஜ் ஸ்வீகாரமேயில்லை யென்றும் அந்த உயில் சடகோபாசாரியார் தன் புத்தி ஸ்வாதீனத்திலிருக்கும்போது எழுதினதென்றும் ஆனல் அது 1-வது பிரதிவாதியை தன் விதவைக்கு ஸ்வீகாரமெடுத்துக்கொள்ள அதிகாரமாத்திரம் தந்ததென்

றும் ஆகையால் 2-வது பிரதிவாதிக்கு ஒரு ஸ்வாதீனமும் தரவில்லையென்றும் கருத்துகொண்டு வாதிகள் பக்ஷம் 1-வது அம்சங்களுக்கு டிக்ரி கொடுத்தார்.

2வது பிரதிவாதியின் வாதமென்னவென்றால் ஸ்வீகாரம் சரியோ சரியல்லவென்பது வேறே யிருக்க உயில் (Exhibit II) சரியானதாகையால் Plaintல் செப்பிய சொத்துக்கள் மேல் தனக்கு ஆக்ஷேபமில்லாத சுதந்திரமுண்டென்றும் அதனால் இவ்வியாஜியம் தள்ளிவிட வேண்டுமென்கிற இந்த வாதம் சரியானதானதென்று எங்களுக்கு இந்த உயில் காணப்படுகிறது.

இந்த உயில் தஸ்தாவேஜி (Exhibit II) முதல் கண்டிருப்பதை பார்த்தால் இது உயில் தஸ்தாவேஜி தவிர வேறொரு தஸ்தாவேஜியென்று பெயரிடலொப்பமாட்டாது அதின் சடகோபாசாரி கையொப்பத்தை பற்றி ஆக்ஷேபனை ஒன்றுமில்லை.

1903ஞு ஜூன்மீ 26உ உயில்காரர் தேக மனோஸ்திதியைப்பற்றிய சாக்ஷி பேதப்படுகின்றது. ஆகிலும் உயில் நிறைவேற்றியபோது அவர் நல்ல ஸ்திதியிலிருந்தாரென்று அ. வாதி சொல்வதுபோல கொள்ளவேண்டியிருக்கிறது.. மறு பக்ஷத்தில் வாதி சாக்ஷிகள் (ந 12-15 நம்பத்தகாதவைகளாயும்) பிரதிவாதி சாக்ஷி சப் ரிஜிஸ்டரால் சாக்ஷிக்கு விரோதமாயுள்ளது.

சப்ரிஜிஸ்டிரார் தன்னை வீட்டுக்கு உயில் ரிஜிஸ்டர் செய்ய அழைத்ததாயும் அவரதை உயில்காரருக்கு வாசித்ததாயும் அவர் அப்போது இளைத்து பலஹீனமாயிருந்தாலும் மனோதிடத்துடனிருந்தாரென்றும் வாக்கு மூலம் தருகிறார். மற்ற சாக்ஷிகள் அனேகர் அப்படியே சொல்லுகிறார்கள்.

சடகோபாசாரி பின்பு 13 நாளிருந்தார். அவர் இறந்துபோக அவ்வளவு நீண்ட காலத்துக்கு முன்னையே பிரக்ஞை தவறி யிருந்ததாகவாவது அல்லது எவ்விதமாவது கொள்ளதான் சுவாதீனத்தில் இல்லாததாவது அவர் நோயின் தன்மை குறிக்கவில்லை.

சடகோபாசாரி தன் உயிலெழுதி வைத்தபோது சித்த சுவாதீனத்தோடு இருந்தாரென்று சபார்டினேட் ஜட்ஜ் கண்டிப்பான தீர்ப்பெழுதியிருக்கிறார். (அவர் ஜட்ஜ்மெண்டில் 62-வது பாரா பார்க்க)

பின்னும் சில ஆதாரங்களின் கீழ் ஒரு முடிவுக்கு வருகிறார். அது அறிய அதிக கஷ்டமாயிருக்கிறது அதாவது உயில்காரருடைய மனசு உயிலின் ஏற்பாடுகளை நடத்தும்படி கட்டளை யிடவும் அவர் கருத்து விசிதமானவும் சந்தேகமற்றதுவுமான பாஷையில் எழுதப்பட்டதா எனப் பார்க்கவும் இக்கருத்து உயில்காரர் தன் விதவைக்கு 2-வது பிரதிவாதியை தத்து எடுத்துக்கொள்ள அதிகாரம் தருகை என்பதல்லது வேறல்ல.

இவ்வுயில் நீண்ட தஸ்தாவேஜி: சில அவ்வகையான கருத்தை அடக்கி யிருக்கவில்லை.

அது உயில்தாரர் வரணை பயத்தினால் அபீல்காரராகி வெங்கடாசாரியார் நேமனம் செய்யானென்று ஆரம்பிக்குது; பின்பு நான் ஆசாரிய புருஷனாகவிருந்து நடத்திய மதாசார தொழில்களை அவன் நடத்தும்படியும் அவைகளுக்குரிய மரியாதைகளையும் பெறவும் வெகு கிரமமாய்ச் சொல்லுகிறது. ஸ்வீகார நேமனம் என்றும் சொற்களது சரியான அர்த்தம் தர்க்கத்திலிருக்கிறது. இக்கோர்ட்டில் ஒரு லக்ஷத்தாரும் பின்னால் ஸ்வீகாரமெடுக்கையைக் காட்டுகிறது என்ற சப்ஜட்ஜ் கருத்தை ஆதரிக்கவில்லை, நாமும் அதை அனுசரிக்க ஞாயமில்லை.

ரெக்கார்டான சாக்ஷிமேல் உயில்காரர் மனோநிலைமையைப்பற்றி முன் தீர்ப்பு சொன்ன சப்ஜட்ஜ் இப்பேர்கொத்த முடிவுக்கு எப்படி வந்தாரென்பதை 6-வது அறிவது அசாத்தியமாயிருக்கிறது அம்முடிவு இவ்ஷ்யூமேல் அவர கொடுத்த தீர்ப்பை அர்த்தமில்லாமல் செய்யுது.

சப் ஜட்ஜி மேல்செப்பிய முடிவுக்கு வந்த ஆதாரமென்னவென்றால் சடகோபாசாரியார் மனைவி அச்சமயம் கர்ப்பமாயிருந்தாளென்றும் அப்படி யிருக்க வேறொருவரை ஸ்வீகாரமெடுக்க இந்த உயிலை செய்திருக்கமாட்டார் என்பதுதான் ஆனால் அவர் மனைவி கற்பம் தரித்திருந்தாளென்பது நாங்கள் நம்பந்தகுந்ததல்ல. ஏனெனில், அப்படியிருந்தால் இனி பிறக்கப்போகிற தன் குழந்தைக்கு தகுதியான ஏற்பாடுகள் அவசியம் செய்திருந்திருப்பார். பிறக்கப்போகிற தன் குழந்தையைபபற்றி உயிலில சொல்ல கூச்சப்பட்டிருப்பாரென்று எதிரி சொல்வதை கொஞ்சமேனும் ஆதாரமில்லாதது.

அப்பீல் பிரதிவாதியின் வக்கீல் வாதம் இவ்வாறானது

உயில்காரர் தான் வைதீகத் தொழில் கொண்டிருந்ததாகவும்: சாமானிய ஹிந்து தனக்குப்பின் ஆத்தொழிலுக்கு ஒருவனை நேமிக்கவும் தனக்கு எல்லாம் சுதந்திரம் உண்டென்றும் நம்பினார். அவ்வித நேமகத்தால் நேமிக்கப்பட்டவனை சகல காரியங்கட்கும் தன் ஸ்வீகார புத்திரனானான். அவ்வித நேமகம் செய்ததனை நம்பி அவர் உயிலெழுதினார், மேற்சொன்ன நடவடிக்கைகளினால் ஸ்வீகார புத்திரனுடைய நிலைமையை அ. வாதியிடைந்திருந்தால் உயில் ஆந்த ஆதாரத்து மேலானது அந்நிலையிலே தான் உயில்காரர் அ-வாதி பலனடையச் செய்தார்.

அவர் வகீல் Famindra Deb Raiket vs Rajesmar Das கேசின் தீர்ப்பை இதுக்கும் பொருந்துகிறார்.

சப்ஜட்ஜ் முன்பு இந்த அம்சம் வாதிக்கப்பட்டதாவென்பது சந்தேகமாயிருக்குது: அது அவர் தீர்

ப்பில் குறிக்கப்படவில்லை காதத்தினின்றும் கொள்ளக்கூடியதாயுமில்லை ரிபோர்ட் செய்த கேசில் குடும்ப அல்லது ஜாதி வழக்கத்துக்கு விரோதமான ஸ்வீகாரம் பண்ணதால் அது ஸ்திரமல்லவென்று தள்ளக்கூடியதாயிருக்கிறது.

இந்த கேசில் உயில்காரர் எவ்வித அறியாமையுடனும் இருந்ததாக நாம் காணவில்லை நாம் கண்டபடி அவர் நல்ல மனோநிலைமையிலே யிருந்ததாகக்கொள்ளை டால் தான் செய்துவந்த எந்த சடங்கைப்பற்றியும் தப்பு சொல்லியிரார் தப்பபிப்பிராயம் அதன் பிரயோசனங்கள் சட்ட சம்மந்தமானவையாயிருக்கும்.

அ பிரதிவாதிகள் வகீல் சடகோபாசாரி செய்தது சாதாரண ஹிந்துமதாசாரப்படி ஸ்வீகாரமல்ல 'நேமனம்' எனவு சொற்படி தனக்குப்பின் ஆசாரிய நேமகம் என்றே பொருள்படுமென்று சொல்லுகிறார். அ வாதி சாதாரண ஸ்வீகாரம் நடந்தது என்று சொல்லுகிறார். உயிலில் இரட்டை கட்டளை போட்டதுபோன்ற ஸ்வீகார நேமனம் என்ற வாக்கியம் இரு காரியங்களும் நடந்ததாககுறிக்கலாம்.

1903 ss நெ. 12ல் ஒரே ஆசாரிய குடும்பத்தவர்களால் கொள்ளப்பட்ட சொத்துகளின் தன்மையைப் பற்றிய சில கேள்விகளைப் பற்றிய சில கேள்விகளைக்குறித்து இந்த கோர்ட்டில் தீர்ப்பு கொடுத்திருக்குதென்றும், heirs நேமிக்க வேண்டிய முறைமை காட்டியிருக்குதென்று அது சடகோபாசாரிக்குத் தெரிந்திருப்பின் அவர் உயிலெழுதி யிராரென்றும் குறித்துக் காண்பிக்கப்படுகிறது. அந்த தீர்ப்பு சொல்வதெல்லாம் இதுதான் கோயில் வேலைகளுக்காக வைக்கப்பட்ட இனம் தவிர மற்றது சாதாரண சொந்த சொத்து மடங்களும் முதலானவைகளுக்கு சேர்ந்திருப்பது போன்றதல்ல.

உயிலில் சமாஷ்ரேனம்மந்திரோபதேசச் செய்கையென்று குருவுக்கு உரிய தொழிலை சடகோபாசாரி தன் மனசிலிருந்ததைக் குறிக்கையில் ஜட்ஜ்மெண்டு சொல்வதாவது:—

சட்டப்படி நேமகம் எச்சுதந்தரமுமுள்ளதல்ல. இறந்துபோனவர் தன் குருத்தொழில் வாதி பார்க்கவேண்டுமென்று இச்சைகொண்டாரென்று உத்தயம் கொள்ள வேண்டியிருக்குது. காலஞ்சென்ற குருவுக்குப பின்னாக வாதியை அங்கீகரிக்கலாமா வென்று சிஷ்யர்கள் தீர்மானிக்கவேண்டியது.

நேமகத்தின் பலனைப்பற்றி சடகோபாசாரி ஞாயப்படி கொண்டிருக்கலாமென்று உத்தேசிக்கக்கூடிய அபிப்பிராயங்கட்கு முரண்ணனது ஒன்றும்மேலும் சொன்னதில் நாம் காணவில்லை இந்த அம்சததை சாக்ஷியேயில்லாமையால் உததேசிக்கக்கூடிய என்று சொல்லுகிறோம். வாக்கு உயிலினால் சொத்தைப் பற்றி என்ன சுதந்திரமுண்டோ அது உள்ள வாரிசு

நேமனம் என்று ஜட்ஜ்மெண்ட் அறிகிறது.

இந்த உயிலுக்கு முன்னே ஒரு ஏற்பாடுண்டு. அது நிறைவேறவில்லையென்ற ஆதாரத்தால் இவ்வுயில் செல்லாது என்று ஆக்ஷேபிக்க நாம் ஒரு ஞாயமும் காணவில்லை.

மேற்படி உயிலை ரத்து செய்யவும், 2-வது பிரதிவாதி கையிலுள்ள (சடகோபாசாரி) சொத்துக்களை வசூல் செய்யவும் கேட்டவரையில் இவ்வியாச்சியம் செல்லாது. சப்ஜட்ஜ் தீர்ப்பு தள்ளப்பட்டாலொழிய ஸ்வீகாரம் செல்லாது என்று சொல்ல அபீல் பிரதிவாதி வக்கீல் தர்க்கிக்கிறார். இது எங்களுக்குச் சரியாயில்லை.

சப்ஜட்ஜ் தீர்மானம் தள்ளப்பட்டது; இரண்டு கோர்ட்டுகள் செலவுடனும் வியாஜ்ஜியம் டிஸ்மிஸ் செய்யப்பட்டது:—

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்.

2-வது சிவில் அபீல் நெ. 389 of 1906.

ஸர். R. பென்சன்
மிர். ஜீ. கிருஷ்ணசாமி ஐயர். } முன்பாக.

போடியா abas ஹமத் முக்ரி பியாரி—அ வாதி

vs

அப்துல் ரைமான் பியாரி வகையரா—பிரதிவாதிகள்

ஓர் மகுதியிலிருந்து டிரஸ்டியை அவன் தொழிலிலிருந்து நீக்கவும், அவன் மகுதி வேலையைச் செய்யாதிருக்க இன்ஜங்ஷனுக்காகவும் பிரார்த்திக்கும் சுதந்தரம் அம்மகுதியைச் சார்ந்த நிலங்களைக காப்பாற்றுவவர்கும் அவசியம் சுதந்தரம் தராது.—

புத்தூர் டி. மு. கோர்ட்டு அசல் நெ. 278 1904ல் கொடுத்த டிக்ரிமேல் 1905ஞு தென்கனரா டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அபீல் வியாச்சியம் நெ. 241 தந்த டிக்ரிமேல் 2-வது அபீல்.

இந்த கேசில் வாதிகள் தொழுபவர்களாக டிக்ரீப்படி இன்ஜங்ஷன் கேழ்க்க சுவாதீனமுள்ளவர்கள் ஆனால் நிலங்களை சுவாதீனமாக்கிக்கொள்ள சுதந்திரமுள்ளவர்களாகவென்பது வேறு விஷயம் Kamaraju vs Asnali Sheriff (1) பார்க்க. அவர்கள் ஜமத்துகளாக சுவாதீனத்துக்குறியவரென்று வாதிக்கப்படுகிறது. இந்த இஷ்யூமேல் தீர்ப்பு சொல்ல நாம் டிஸ்டிரிக்ட கோர்ட்டைக் கேட்கிறோம்.

வாதிகள் ஜமத்துகளாக விருக்க அவர்கள் சுதந்திரங்களென்ன; அவர் தாவா செய்திருக்கும் நிலங்களைப்பற்றிக்கொள்ள சுதந்திரமுள்ளவர்களா?

புது சாக்ஷி எடுத்துக்கொள்ளலாம். தீர்ப்பு அனுப்ப 2-வது மாசூலுக்கு ஆக்ஷேபணைகள் தாகல் செய்ய 10நாளும் தந்தோம்.

மேல் தீர்ப்பிலடங்கிய ஆர்டர்படி டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் பின் வருவதை அனுப்பினார்.

தீர்ப்பு:—வாதிகள் அச்லாமோக்ரு மகுதியில் தொழுபவராகவும், ஜமத்மொக்டேசர்களாகவும் பிரதி

களிடம்மிருந்து விண்ணப்ப சொத்தை அதன் லாபத்துடன் வசூல் செய்யவும் 1-வது பிரதிவாதியை டிக்ரீ வேலையிலிருந்து ஒட்டிவிடவும் இனி பிரதிவாதிகள் மேல் இன்ஜங்ஷன் பெறவும் வியாஜ்ஜியம் பண்ணுர்கள்.

அவாகள் ஜெயித்தார்கள் 1-வது பிரதிவாதி அபீல் செய்தான் இந்த அபீலை தள்ளிவிட்டது.

2-வது அபீலை மேற்சொன்ன அம்சங்களுக்காக இதர சாக்ஷிமேல் தீர்ப்பு சொல்ல என்னை கேழ்க்கப்படுகிறது.

இதர சாக்ஷி எடுத்துக்கொள்ளப்பட்டது. ஜமக்களன் என்பது ஒரு மசூதியைக் சேர்ந்தவனும் அத்திலே தொழுபவரும் அதுக்குக் கைங்கரியஞ் செய்யவருமெனக் காண்கிறது. நாணுவித மசூதிகளிருகின்றன சில அந்தரங்கமானவை சில மசூதியின் கமிட்டியின் கீழ் சன்னட் மொக்டேசர்களால் நடத்தப்படுகின்றன சில பிரெயின் மசூதி ஜமக்கள் அல்லது தொழுபவாகள் கூட்டத்தாரைச் சேர்ந்தன. இப்பேர்க்கொத்த கேஸில் விசாரணை செய்ய மொக்டேசர்களை நேமிக்கிறது வழக்கம் அவர்கள் தங்கள் வரிசையில் முக்கிரியை நேமகம் பண்ணுகிருர்கள்.

இந்த கேஸில் மசூதி 1-வது பிரதிவாதியின் சொத்தல்லவைன்றும் அவன் பரப்பரை முக்ரீயல்லவென்றும் தெளிவாய் இருக்கிறது.

ஆனல் 1251 பசலி எக்ஜிபிட் ஜமக்கள் கேட்டுகொண்டபடி வேறு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனை டிக்ரீயாக கலெக்டர் நேமித்தார். இவ்வித மசூதியில் சொத்து மசூதியதாகவும் முக்ரீ ஜமத்துகள் நேமித்த மசூதி வேலைக்காரனுயும் இருக்க முக்ரீயை நீக்கிவிட்டால் ஜமத்துகள் அதாவது தொழுபவரது பொதுக் கூட்டத்தால் நேமிக்கப்பட்ட சபகமிட்டி மசூதி சொத்துகளை யெல்லாமெடுதறுக்கொண்டு ஒரு டிக்ரீயை நேமிச்சும் வரையில் பார்வையிட்டு வரவேண்டும்.

இவ்வியாஜ்ஜிய நிமித்தமாகவே வாதிகள் ஜமத்துகளாக நேமிக்கப்பட்டார்கள் அது இப்போது எடுத்துக்கொண்ட சாக்ஷிமாத்திரத்தாலல்லாமல், தொழுபவர் எல்லார் பக்ஷத்திலும் 40-வது செக்ஷன் கீழ் தாவா செய்திருக்கிருர்கள். இப்போதுள்ளவர்களில் இவர்கள் தான் ஏதாவது செய்யக்கூடியவர்கள் ஆகையால் மசூதிக்காக நிலங்களை சுவாதீனப்படுத்திக்கொள்ளவும் அவர்கள் ஒரு புது டிக்ரியை நேமிக்கிறவரையில் மசூதி வேலையை நடத்திவரவும் சுதந்திரமுடையயவரென்று நான் தீர்மானம் சொல்லுகிறேன்.

முன்சீப் டிக்ரீ தொடங்கி வேலை நடத்திக்கொண்டும் நிலத்தைக் கைப்பற்றிக்கொண்டு மிருக்கிருர்கள் முதல் பிரதிவாதி வாதங்கள் முன்போலவே, எல்லாம் தனது என்பவைதான். இந்த 2வது அபீல் கீழ் அபீல் கோர்ட்டு தீர்ப்புகள் final ஈரங்கிக்கு வந்திருப்பதால் ஹைகோர்ட்டார் பின்வருமாறு சொல்லுகிருர்.

தீர்மானம்:—மசூதியை நடத்த வாதிகள் ஜமத்துகளாக நேமிக்கப்பட்டவரென்று டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் தீர்ப்பு சொல்லுகிருர். நாம் அத்தீர்ப்பு அங்கீகரித்து இந்த இரண்டாவது அப்பீலை செலவுடன் தள்ளிவிடுகிறேம்.

பிப்ரவரி சஞ்சிகையில் தொடர்ச்சியாக விட்டது.

ரூஸிங்ஸ் சொய்ஜி என்பவர் தன் சொத்தை 4-பிள்ளைகளுக்கு எழுதிக்கொடுத்து இவர்கள் நாலு பிள்ளைகளுக்கு 6-வருஷத் செடுவில் 3000 ரூபாய் கொடுக்கும்படியாய் உயில் எழுதிவைத்தார். முந்திய நாலு பிள்ளைகளும் பம்பாய் பாங்கிக்காரரிடம் பந்தகம் வைத்தார்கள். அவர்கள் பெந்தகப் பத்திர ஷரத்துப்படி பணங்கொடு கொடுக்காததால் அச்சொத்தைவிக்கிரயம்பண்ண ஆரம்பித்தார்கள் மற்ற நாலு குமாரர்களும் தங்களுக்கு பணங்கொடுக்க வேண்டியிருக்கிறதைத் தெரிவித்து அத்தொகைக்குக் கட்டுபடுத்த கிரயம் பண்ணும்படி நோட்டீஸ் கொடுத்ததற்கு பாங்கிக்காரர் ஒப்புக்கொள்ளாததால் பிராது பண்ணினபொழுது கோர்ட்டார் ரிசீவரை நியமித்து எவர்களையுஞ் அச்சொத்தை அனுபவிக்கிறதிலிருந்து நீக்க வியாச்சியஞ் செய்ய அதிகாரமும் கொடுத்தார்கள். ரிசீவர் பாங்கிக்காரரிடம் சொத்தை விலைக்கு வாங்கின "டுவார்க்கதாஸ் தாரம்சே" என்பவரை சேர்த்துக்கொண்டு சொத்தின் ஒரு பாகத்தில் கட்டியிருந்த நாடகக்கொட்டகையை கீழ் குத்தகைக்கு வாங்கின ஒருவரை அனுபவத்திலிருந்து விலக்க அவருக்கு குத்தகை கொடுத்த பெந்தகம் வைத்தவர்களில் ஒருவரைக் கூடச்சேர்த்து பிராது செய்தார். பிறகு ரிசீவரை நியமித்த வியாச்சியம் முடிவானதால் ரிசிவரை வேலை முடிவுக்கு வந்துவிட்டது.

வியாச்சியத்தை நடத்த பாத்தியமுடையவர் இவர்களில் ஒருவரால் வியாச்சியத்தை நடத்திக்கொண்டு போக மனு செய்துக்கொள்ளலாம்; டுவார்க்கதாஸ் ஏற்கனவே வாதியாயிருப்பதால் அம்மனு செய்ய வேண்டியதில்லை. டுவார்க்கதாஸை ரிசீவரோடு வாதியாகச்சேர்த்தது நியாயமாகாவிட்டாலும் அது வேற்றுமை வாதிச் சேர்க்கையாகாது என்றும்,

II. பெந்தகப்பத்திரம் எழுதிக்கொடுத்த பிறகு பெந்தக நிலத்தில் கட்டப்பட்ட நாடகக்கொட்டகை மாறுனஉடன்படிக்கை யில்லாத பொழுது பெந்தகத்துக்குள்ளாகுமென்றும்.

(டிரான்ஸ்பர் ஆப்பிராபர்ட்டி ஆக்டின் 8வது 70வது பிரிவில் சொல்லியிருக்கும் விதிகள் சொந்த நிலத்துக்கும் பகுதி நிலத்துக்கும் வேறுபாடில்லாமல் பொருத்தமுள்ளது. இந்த விஷயத்தில் இங்கிலீஷ் சட்டத்தையே இந்தியாவிலும் ஏற்படுத்துகிறது. அதாவது பெந்தகம் வைத்த சொத்துக்கு சேர்ந்திருக்கிறவைகளெல்லாம் பெந்தகத்துக்குள் ளாகுமென்பதே ஆகையால் பத்திரத்தில் கட்டடங்கள் முதலானவைகளைக்காண வேண்டியதில்லை. மாறுக எண்ண இடமில்லாத பட்சத்தில்)

III. பெந்தகம் வைத்தவன்வசம் சொத்திருக்கும் பொழுது பெந்தகம் பெற்றவன் அனுமதி யில்லாமல் ஒருவர் குத்தகை வாங்கினுல் நிச்சயமில்லாத பாத்தியமுடையவராவார். குத்தகை கொடுத்தவரும் எடுத்தவரும் கட்டுப்பட்டவர்களானுலும் மேலான பாத்தியமுடையவராவார் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 30. பம். 250.

N. C. Macleod v. Kissan, I. L. R. 30 Bom 250.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்.

2-வது அப்பீல் நெ. 1712 of 1908.

ஜட்ஜுகள்:—மி-ர். ஜ. வாலிஸ், மி-ர். ஜ. மில்லர் } முன்பாக.

அருணசலநாடான்..........அப்பீல்வாதி.

VS

கந்தசாமி பிள்ளைவகையரா...ரெஸ்பான்டென்டுகள்.

மதுரை.

ஸி. பு. கோ-ஆர்டர் 28 ரூல் 5, ஆடர் 1 ரூல் (a) கேசு இனனெரு கோர்ட்டுக்கு மாற்றப்பட்டபோது—ஜப்தி நடவடிக்கை நடந்துக்கொண்டிருக்கிறது. இன்னெரு கோர்ட்டுக்கு அதிகாரவரம் புண்டா.

திருமங்கலம் முனிசீபுகோர்ட்டு அ. நெ. 336 of 1886 டிக்ரியின்பேரில் மதுரை சப் கோர்ட்டுக்கு கொண்டுவந்த அப். நெ. 90ல் செய்த டிக்ரியின்பேரில்கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல். கேசின் விபரம்:—3-ம் பிரதிவாதிக்கு ஒரு வீடிருந்தது. அதை அவன் 5–9–1900 முதல் பிரதிவாதியிடம் கொதுவைவைத்து ரூபாய் 150 கடன் வாங்கிக்கொண்டான், முதல் பிரதிவாதி முதலில் தன்னுடைய கொதுவை ஹக்கை 4 ம் பிரதிவாதியிடமும் பிறகு 2 ம் பிரதிவாதியிடமும் கீழ்க் கொதுவை வைத்தான். 4 ம் பிரதிவாதி இதற்காக இரண்டு கொதுவை தஸ்தாவேஜுகள் எழுதிக்கொடுத்திருந்தான். 2 ம் பிரதிவாதியிடத்தில் வைத்த கீழ் கொதுவையின் தேதி 13–9–03. 4 ம் பிரதிவாதி தன்னுடைய கொதுவை ஹக்கை 2 ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்துவிட்டான் இவ்விதமாய் 4 ம் பிரதிவாதி தனிக் கொதுவை தாரானுனன். இரண்டாம் பிரதிவாதி மூன்று கொதுவை பத்திரங்களின் பேறும் அ. நெ. 514 of 1904 ல் 30–11–04 ஓர் டிககிரி அடைந்தான்.

வாதி முதல் பிரதிவாதியின்பேரில் மேல்மதுரை சப்கோர்ட்டு ஸ்மால் காஸ் நெ. 812 of 1903 ல் தனக்குப்பணம் சேரவேண்டியதென்று தாவா செய்தான் அந்த நம்பர் பிறகு கீழ் மதுரை கோர்ட்டுக்கு 827 of 1903 என்று மாற்றிவிட 3 ம் பிரதிவாதிமுதல் பிரதிவாதிக்கு கொடுக்கவேண்டிய கடன் மொத்தத்தை தீர்ப்புக்கு முன்னமேயேஜப்திசெய்ய மனு கொடுத்தான். அந்த மனுவின்பேரில் நோட்டீசுக்கு உத்தரவுசெய்து அதுவரையில் கண்டிஷனல் அட்டாச்சமெண்டுக்கு உத்தரவு செய்யப்பட்டது. அந்த மனுமேல் மதுரை சப் கோர்ட்டுக்குட் ரான்ஸ்பரான பிறகு விசாரணைக்கு வந்தது மேல் சப் கோர்ட்டார் ஜப்தி உத்தரவை ஊர்ஜிதம் செய்தார்கள்.

இவ்விதமாய் தீர்ப்புக்குமுன்ஜப்திசெய்வதற்காகச் செய்துக்கொண்ட மனுவின்பேரில் மேல் மதுரை சப் கோர்ட்டாருக்கு ட்ரான்ஸ்பராகிய பிறகு உத்தரவு செய்வதற்கு அதிகார வறம் புண்டா என்பது தான் இந்த கேசில் முக்கியமாய்த் தீர்மானிக்கவேண்டிய அம்சம். கடன் கொடுக்கவேண்டியவனும் மேல் மதுரை சப் கோர்ட்டாருடைய எல்லைக்கு வெளியே வசிப்பவன்.

5

தீர்மானம்:—இந்த கேசில் கீழ்மதுரை சப் கோர்ட்டாருடைய அதிகார வறம்பிற்குட்பட்ட ஓர் சொத்தின்பேரில் தீர்ப்புக்கு முன்னமேயே கண்டிஷனல் ஜப்தி உத்தரவு பிறப்பித்திருந்தார்கள். பிறகு ஜப்தி உத்தரவை ஊர்ஜிதம் செய்வதற்குமுன் தாவாவை மேல்மதுரை சப் கோர்ட்டாருக்கு மாற்றிவிடப்பட்டது. கீழ்மதுரை சப் கோர்ட்டை விட்டு எப்போது நம்பர் மாற்றிவிடப்பட்டதோ அப்போதே அந்த நெம்பரில் பின்னிட்டு யாதேனும் ஓர் உத்தரவுசெய்ய கீழ் சப் கோர்ட்டாருக்கும் அந்த மனுவின்பேரில் ஜப்தி ஊர்ஜிதம் செய்ய உத்தரவுசெய்ய அதிகாரம் கிடையாதென்றால் வேறே எந்த கோர்ட்டுக்கும் அதிகாரமில்லாமற் போய்விடுமாகையால் எப்பொழுது மேல் சப் கோர்ட்டுக்கு மாற்றிவிடப்பட்டதோ அப்பொழுதே அந்த நம்பரில் சகல உத்தரவுகளைச் செய்ய மேல் சப் கோர்ட்டாருக்கு அதிகாரம் உண்டென்று ஸி-பு-கோ (1882) 25, 483 பிரிவுகளினுல் தெரியவருகிறது. ஆகையால் கீழ்கோர்ட்டுகளில் செய்த டிக்ரிகளை ரத்து செய்துவிட்டு கேசை மறுபடியும் விசாரணைசெய்து தீர்ப்பு சொல்லும்படிக்கு முனிசீபு கோர்ட்டுக்கு ரிமாண்டு செய்யப்பட்டது.

மி-ர். K. N. ஐயா அப்பீவாதியின் வக்கீல்.

மி-ர். K. R. சுப்ரமணிய சாஸ்திரி, ரெஸ்பான்டெண்டுகளின் வக்கீல்.

20 ம-லா-ஜ-ரி. 980

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்.

கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ 70 of 1910.

கிரிமினல் ரிவிஷன் மனு நெ, 59 of 1910,

மி-ர். ஜ மன்ரோ, மி-ர். ஜ சங்கரன் நாயர் } முன்பாக.

சிதைருநாத பிள்ளை மனுதாரர்

ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ஒரு கேஸை விசாரித்து முடிவு செய்யும்படி டிப்டி மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பினர்.

டிப்டி மாஜிஸ்ட்ரேட் மனுதாரனை பிரமாண வாக்குமூலமில்லாமல் கிரிமினல் புரொசிஜூர் கோடு 96-வது செக்ஷன்படி வாரண்டுக்கு உத்தரவு செய்தார்.

ஷை வாரண்டு சரியானதல்ல வென்றலும் ரத்துசெய்தலும்.

திருநெல்வேலி 1-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் அவர்களின் 1909-ம் ஹு நவம்பர்மீ 13உயின் தீர்ப்பைமாற்ற கிரிமினல் புரொசிஜூர் கோடு 435, 439-வது செக்ஷன்படி ஹைகோர்ட்டாருக்கு கொடுக்கப்பட்ட மனு.

மகா-ா-ா-ஸ்ரீ, ரு. ரங்காசாரியார், ,, V. நரசிம்மய்யங்கார் } மனுதாரர் வக்கீல்

வர்ன்மெண்ட் வக்கீல்

தீர்ப்பு:—இந்தக் கேஸில் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ஒரு கேஸை விசாரித்து முடிவுசெய்ய டிப்டிமாஜிஸ்ட்ரேட் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் டிப்டி மாஜிஸ்ட்ரேட்டுக்கு கேஸை மாத்துவதற்குமுன் வாதியின் பிரமாண வாக்குமூலத்தை வாங்குவது அவசியமில்லை. ஆகையால் அப்படி செய்யப்படவில்லை

ஆனால் டிப்டி மாஜிஸ்ட்ரேட் கிரிமினல் புரொசிசர் கோடு 96-வது செக்ஷன்படி வாரண்டுக்கு உத்தரவு செய்வதற்கு முந்தி பிரமாண வாக்குமூலம் வாங்கவேண்டியது அவசியம். ஆகையால் வாரண்டை ரத்து செய்து சாமான்கள் ஏதாவது அகப்பட்டிருந்தால் அதைத் திருப்பிக் கொடுக்க உத்தரவு செய்யப்பட்டது.

மனு ஒப்புக்கொள்ளப்பட்டது.

அலகாபாத் ஹைகோர்ட்டு.

ALLAHABAD HIGH COURT.

கிரிமினல் ரிவிஷன் நெ 330 of 1910,

மி-ர் ஜ. சேமியர் முன்பாக

பக்வான் சாஹை — மனுதாரர்

சக்கரவர்த்தி — எதிர்தரப்பு

ஒருவனுடைய நல்நடைக்கு ஜாமீன் கொடுக்கவந்தவன் எதிரியின் வீட்டுக்கு 10 மைல் தூரத்துக்கு அப்பால் இருக்கிறானென்றும் எதிரிக்கு சினேகிதனென்றும் காரணத்தைக்கொண்டும் மாஜிஸ்ட்ரேட் ஜாமீனை ஒத்துக்கொள்ளவது நியாய விரோதம். ஜாமீன்கொடுக்கும் விஷயத்தில் ஜனங்களை அதிகமாய் துன்பம் செய்யாதிருத்தல்:—

மகா-ய-ஸ்ரீ. M. K. போட்டா:—வாதிவக்கீல்

R. மால்சம்ஸன்:— அசிஸ்டாண்ட் கவர்ன்மெண்ட் வக்கீல் } சகாரவர்த்திக்கு.

தீர்ப்பு:—மனுவின் 1-வது 2-வது காரணங்கள் ஏராளமயிருக்கிறது. 3-வது முக்கியமானது மனுதாரனால் கொடுக்கப்பட்ட ஜாமீன்களை மாஜிஸ்ட்ரேட் தடுத்தது பிசகு போலீஸ் சப்இன்ஸ் பெக்டரின் ஸ்டேட்மெண்டில் கண்டபடி ஜாமீன்தாரன் 10 மைல் தூரத்துக்கப்பால் இருக்கிறானென்றும் சிநேகிதனென்னும் காரணத்தால் மாஜிஸ்ட்ரேட் ஒத்துக்கொள்ளவில்லை என்று தெரிகிறது.

அவர்கள் சிநேகிதராயிராவிட்டால் ஜாமீனுகள் வரமாட்டார்கள். அந்த ஜாமீன் 10 மைல் தூரத்திலிருப்பதால் ஒத்துக்கொள்ளக்கூடாதென்பதற்கு தகுந்த காரணமில்லை. ஜாமீன்காரன் மனுதாரனுடைய ஊராளயிருக்கவேண்டுமென்று மனுதாரனுக்குச்சொல்லப்படவில்லை. மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவிலிருந்து தெரிகிற தென்னவென்றால் ஜாமீன்தாரர் 10 மைலுக்கு அப்பாலிருக்கிறானென்பதுதான் ஜாமீன் விஷயத்தில் ஜனங்களுக்கு அனுவசியமான சங்கடங்கள் கொடுக்கக்கூடாது அந்த ஜாமீனை ஒத்துக்கொள்ள உத்திரவு கொடுத்தோம்.

மனு ஒத்துக்கொள்ளப்பட்டது.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்:

உத்தரவின்பேரில் அபபீல் நெ. 248 of 1907.

ஜட்ஜிகள் :—மி-ர். ஜ. வாலிஸ் மி-ர். ஜ.. கிருஷ்ணசாமி ஐயர். } முன்பாக

குப்பனகவுண்டன்....மனுதாரன்...அப்பீல்வாதி

VS

குமாரகவுண்டன் வகையரா....ரெஸ்பான்டென்டுகள்

மதுரை.

சி. பு. கோ. ஆர். 21-ரூல் 99, 95, 102 செக்ஷன் 146-ஜப்தியின் பிறகு டிக்ரி கடன் தாரனிடமிருந்து கிரயம்பெற்றவன் விஷயமாய் 98வது ரூல் சம்பந்தப்படுமா.

மேல் மதுரை சப்கோர்ட்டு அசல்.நெ. 338 of 1896ல் செய்துக்கொண்ட மனு நெ. 1088of1909ல் செய்த உத்தரவின் பேரில் மதுரை ஜில்லா கோர்ட்டார் உத்தரவிற்கு விரோதமாய் செய்துக்கொள்ளப்பட்ட அப்பீல்.

கேசின் விபரம் :—ஒருவன் இன்னொருவன் மீதில் டிக்ரி பெற்று அந்த டிக்ரியை நிறைவேற்றி சில சொத்துகளை கிரயத்திற்கு வாங்கினதை சுவாதீனப்படுத்திக்கொள்ளுவதை ரெஸ்பான்டென்டுகள் ஆக்ஷேபித்தார்கள். அதன் பேரில் அப்பீல் வாதி கோர்ட்டுக்கு மனுகொடுத்து சொத்துகளைத்தன் வசப்படுத்தும்படி கேட்டுக்கொண்டான் அப்படிப்பட்ட உத்தரவின் பேரில் செய்துக்கொள்ளப்பட்ட அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது. இப்படிப்பட்ட உத்தரவின் பேரில் அபபீல் உண்டா?

தீர்மானம்:— அப்பீல் வாதி டிக்ரியை நிறைவேற்றும் ஏலத்தில் கிரயத்திற்குப்பெற்ற சொத்துகளை தன் ஸ்வாதீனம், செய்யும்படிக்கு சி. பு. கோ. 21-வது அத்தியாயம் 98-வது ரூல்படிக்கு சம்பந்தப் பட்டதல்லவென்று கண்டு ஜில்லா ஜட்ஜு. மனுவைத் தள்ளுபடி செய்து விட்டார். கேசில் 7-வது பிரதிவாதியாயிருந்தவன் பேரில் டிக்ரியில்லாமையால் ஜில்லா ஜட்ஜு செய்த உத்தரவு அவன் விஷயமாய் சரிதானென்றும் ஆனல் முதல் பிரதிவாதி விஷயமாயும் ஜப்திக்குப் பின்னும் இந்த மனு கோர்ட்டில் நடந்துக்கொண்டிருக்கும் போதும் வ. சொத்துகளை கிரயத்திற்கு வாங்கினவன் விஷயமாயும் ஜில்லா ஜட்ஜுசெய்த உத்தரவு சம்பந்தப்படுமென்று சொல்வதற்கு நியாயமுண்டென்று தீர்மானிப்பதற்கிடமில்லை-சி-பு-கோ-47-வது பிரிவின்படிக்கு ஜப்தி சொத்தை கிரயத்தில்பெற்றவனும் டிகரிதாரனுக்கு வார் சாகத்தான் எண்ணப்படுவான். இதற்காதாரமாய் இ. லா-ரி- 20-ம 378-பரமானந்தடாஸ்-V. S. மஹாபிர்டிரஸ்ஜி ; இ-லா-ரி-17அ. 332 லால்ஜமால்-கந்த்கிஷோர் ; இ-லா-ரி-21 அ. 20குர் பிரசாத்-V. S. ராம்லால் ; இ-லா-ரி. 28 க. 492. ஜாதவேதன் நம்பூத்ரி. V. S. குஞ்சு ஆசன் இ-லாரி. 30-ம 7-Zல் செய்திருக்கும் தீர்மானம் இந்த கேசுக்குச் சம்பந்தப்படமாட்டாது.

ஆகையால் இப்படிப்பட்ட மனுவை ஜில்லா ஜட்ஜு தள்ளிவிட்டது சுத்த பிசகென்று சொல்லி 7-வது பிரதிவாதியின் விஷயமாய் செய்த உத்தரவை மாத்திரம் காயப்படுத்தி விட்டு மற்ற விஷயமாய்

ஜில்லா ஜட்ஜு செய்த உத்தரவைரத்து செய்துவிட்டு மனுவை மறுபடியும் விசாரணை செய்து தீர்ப்பு சொல்லும்படிக்கு கேசை கீழ் கோர்ட்டுக்கு ரிமாண்டு செய்யப்பட்டது.

S. ஸ்ரீனிவாசய்யங்கார்-அப்பீல் வாதியின் வக்கீல்
B. சீதாராமராவ்-ரெஸ்பான்டென்டுகளின் வக்கீல்.

20 ம. லா-ஜ-961.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

2-வது அப்பீல் நெ. 1469 cf 1907.

ஜட்ஜுகள்.—மி-ர் ஜ. பென்சன் மி-ர் ஜ. கிருஷ்ணசாமி ஐயர் } முன்பாக.

மங்கலசாமி என்கிற முத்து விஜயரகுநாத தேவர் } வாதி...அப்பீல்வாதி.

VS

சுப்பய்யப்பிள்ளை வகையரா.......பிரதிவாதிகள்

ரெஸ்பான்டென்டுகள்,

மதுரை.

ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 17-வது பிரிவு-ஸ்தாவர சொத்து-இனி கொடுக்கப்படவேண்டிய வாடகை-மேல்வாரகுத்தகை ரெஜிஸ்டராகாத குத்தகை தஸ்தாவேஜு பத்திரத்திரமாயிருந்து அதனுடைய ஆதாரத்தின் பேரில் ஓர் ஸ்தாவர சொத்தை அனுபவிப்பன் அக்கிரமமாய் பிரவேசித்தவனாக எண்ணப்பட்டு அவன் அப்படி ஆக்கிரமித்து அனுபவிப்பதற்கு நஷ்டம் (damages) கட்டிக்கொடுக்க கடவானென்று தீர்மானிக்கப்பட்டது.

கேசின் விபரம்:— இந்த தாவாவில் வாதிகாவூர் கிராமத்தின் ஓர் மேல்வாரசுதந்தரத்தில் நான்கில் ஓர் பாகத்திற்குச்சொந்தக்காரன். அந்த கால்பங்கு மேல்வாரசுதந்திரத்தில் 20-ல் மூன்று பங்கின்பேரில் முதல் பிரவாதி டிக்ரி அடைந்திருந்தான் வாதியின் கார்டியன் முதல் பிரதிவாதியுடன் ஓர் ஒப்பந்தம் செய்துக்கொண்டு அதன் வாதியின் கால்பங்குமேல் வாரசுதந்தரத்தை முதல் பிரதிவாதியிடம் கொதுவைவைத்து அதைத்தான் கொடுக்கவேண்டிய சில பாக்கிகளுக்காகப் பொருமானமாய் வைத்துக்கொள்ளும்படி அக்ரிமெண்டு செய்துக்கொண்டான். இதை நோக்குமளவில், வாதி இனி தன்னுடைய கால்பங்கு மேல்வாரத்திற்குத்தனக்குச் சேரவேண்டிய வாடகை மொத்தத்தை முதல் பிரதிவாதியிடம் கொதுவைவைத்த மாதிரியாய் தான் தோற்றுகிறது.

கீழ் இரண்டு கோர்ட்டுகளிலும் தாவா குத்தகை தஸ்தாவேஜு ரெஜிஸ்டராகததாகையால் சாட்சியத்தில் ஒப்புக்கொள்ளத்தக்கதல்லவென்று தீர்மானித்தார்கள். முன்சீபு அவர்கள் முதல் பிரவாதி அக்கிரமமாய்ப் பிரவேசித்து ஆக்ரமித்திருப்பவனென்று கண்டு அவன் தாவா நிலத்தை அப்படி அக்கிரமமாய் அனுபவிப்பதற்காக ரூபாய் 496-சில்லரை நஷ்டம் (damages) கட்டிக்கொடுக்கவேண்டியவனுவானென்று டிக்ரி செய்தார். அந்த டிக்ரியின்பேரில் ஜில்லாகோர்ட்டுக்கு அப்பீல் செய்துக்கொண்டதில் ஜில்லா ஜட்ஜு அவர்கள் வாதியின் கார்டியன் செய்தது உண்மையென்றும்நியாயமானதென்றும் கண்டு தஸ்தாவேஜு சாட்சியத்தில் ஒப்புக்கொள்ளத்தக்கதாயில்லாவிடினும் முதல் பிரதிக் அக்கிரமமாய்வாதி பிரவேசித்தவனாக எண்ணப்பட மாட்டானென்னும் காரணத்தைக்கொண்டு வாதிக்கு முதல் பிரதிவாதியாதொரு நஷ்டமும் கட்டிக்கொடுக்கவேண்டியவனாகமாட்டானென்று தீர்மானித்தார். அந்தடிக்ரியின் பேரில் இந்த இரண்டாவது அப்பீல் கொண்டுவரப்பட்டது.

தீர்மானம்:— இந்த இரண்டாவது அப்பீலுக்கு ஆதாரமாய் அட்வோகேட் ஜெனரல், அவர்கள் வாதிப்பது யாதெனில் வாதியின் கால்பங்கு மேல்வாரசுதந்தரத்தை முதல் பிரதிவாதி 1-ம் தஜ்தாவேஜியின்ஆதாரத்தைக்கொண்டு அனுபவிக்கிறானுகையால் 1-ம் தஸ்தாவேஜு ரெஜிஸ்டராகாத தென்னும் காரணத்தினுல் செல்லத்தக்கினதல்லாமையால் முதல் பிரதிவாதி அக்கிரமமாய்ப் பிரவேசித்தவன் தானென்றும் அவன் வாதிக்கு நஷ்டம் கட்டிக்கொடுக்கக்கட்டும்பட்டவன்தானென்றும் வாதித்தார்.

அவருடைய வாதம் சரிதானென்று ஒப்புக்கொள்ளத்தக்கதென்று தீர்மானிக்கப்பட்டது. இவ்விதமான குந்தகை பத்திரங்கள் ரெஜிட்டராகவேண்டியது அவசியம் தானென்பதற்கு ஆதாரமாய் பின்வரும் அத்தாரெட்டிகளை எடுத்துக் காண்பிக்கப்பட்டது.

சிக்கந்தர்—vs. S. பகதூர், இ-லாரி. 27 அ. 462 தாமோதர்தாஸ்—V. S. கிதரிலால். இ-லா-ரி 27 அ. 564 வெங்காஜி பாபாஜி நாய்க். V. S. விட்ராமப்ப பாலப்பதேசாய் இ-லா-ரி 19 பம் 663. மிஸ்ரிலால்— V. S. சாண்ட்லால் இ-லா-ரி-10 அ. 133. காலியர்.

காலியர் V. S. ஐ. செக்ஸ் 4. R. 19. Ch. 362. ஹால் ராய்ட் V. S. மார்ஷல் 10. H. L. C. 191. ஆகையால் முதல்தஸ்தாவேஜு ரெஜிஸ்தராகவேண்டியகுத்தகைப் பத்திரம் தானென்று கண்டு வாதிக்கு முதல் பிரதிவாதி நஷ்டம் கட்டிக்கொடுக்கவேண்டியவன் தானென்று தீர்மானித்து ஜில்லா ஜட்ஜியின்

டிக்ரியை ஊர்ஜிதம் செய்து நெருப்பினால் நேரிட்ட நஷ்டம் ரூபா 124-சில்லரையை டிக்ரிமொத்தத்தில் கழித்துவிட்டு உபயத்திராளும் அவாள் அவாள் சிலவை பொறுத்துக் கொள்ளவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது,

அட்வோகேட் ஜெனரல் மீர் P. S. சிவசாமி ஐயர் S. ஸ்ரீனிவாச ஐயங்கார் ரெஸ்பான்டெண்டு வக்கீல்

20 ம. லா-ரி-966.

MDRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

ஜட்ஜிகள்:—மி-ர் ஜ பென்சன், மி-ர். ஜ. மன்ரோ } முன்பாக.

2-வது அப்பீல் நெ. 1578 of 1908.

சங்கரப்ப நாய்க்கன்—வாதி... அப்பீல்வாதி.

vs.

மதுரை கலெக்டர் மூலமாய் ஸ்டேட் செக்ரிடேரி }—பிரதிவாதி...ரெஸ்பான்டெண்டு.

மதுரை.

மதராஸ் ரெவினியூ ரெக்கவெரி ஆக்ட் (2 of 1864) 59-வது பிரிவு-கட்டிருக்கும் வாய்தா பணத்தை வாபஸ்செய்யும்படிக்கும், டெக்லெரேஷனுக்கும் இஞ்ஜங்க்ஷனுக்கும் கொண்டுவரப்பட்ட தாவா-இதற்கு லிமிடேஷன் 6 மாதம்

திருமங்கலம் முன்சீபு அ. நெ. 14 of 1906-ல் செய்த தீர்ப்பின்பேரில் மதுரை சப் கோர்ட்டுக்கு கொண்டுவந்த அப். நெ 525 of 1909-ல் செய்த டிக்ரியிலிருந்து வரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

கேசின் விபரம்:—வாதி கவர்ன்மெண்டாராகிய ரெஸ்பான்டெண்டு தன்னை சிலவத்தை அப்புறப்படுத்தும்படிக்கு உத்தரவு செய்து தன்னிடமிருந்து அக்கிரமமாய் கிஸ்தி வசூல் செய்தார்களென்று சொல்லி அவ்விதமாய் கவர்ன்மெண்டார் செய்த உத்தரவு பிசகென்று டெக்லேர்செய்து இனி கவர்ன்மெண்டார் அவ்விதமான உத்தரவு பிறப்பிக்காமலிருப்பதற்கு இஞ்ஜங்க்ஷன் ஆர்டர் பிறப்பிக்கும்படிக்கும் தன்னிடமிருந்து அக்கிரமமாய் வசூல்செய்த கிஸ்தி மொத்தத்தைத் தனக்கு வாபஸ் செய்யும்படிக்கும் வாதி தாவா கொண்டுவந்தான்.

வாதியினிடமிருந்து ரெவுனியூரெக்கவெரி ஆக்டின் நிபந்தனைப்படிக்கு கிஸ்திவசூல் செய்யபபட்டது. கீழ் கோர்ட்டார்வாதி தாவா ரெவினியூரெக்கவெரி ஆக்டின் 59-வது பிரிவின்படிக்கு காலதோஷம் (பார்) ஆய்விட்டதென்று தாவாவைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்

அப்பீல்வாதியின் பாரிஸ்டர் மி-ர். P. C. லோபோ என்பர் தண்டத் தீர்வை ரெவினியூரெக்கவெரி ஆக்டின் படிக்கு வசூல் செய்ததல்லவென்று வாதித்து ரெவினியூரெக்கவரி ஆக்டின் நிபந்தனைகள் இந்தத் தண்டப்பணத்திற்குச் சம்பந்தப்பட்டதல்லவென்றும் வாதியின் தாவாவஷ ஆக்டின் கீழ்டெக்லரேஷனுக்கும் இஞ்ஜங்க்ஷனுக்கும் கொண்டுவரப்பட்டதல்லவென்றும் தாவாவிற்குக்காலதோஷம் கிடையாதென்றும் வாதித்தார்.

கோர்ட்டார்:—இப்படிப்பட்டத் தண்டத் தீர்வை ரெவினியூரெக்கவெரி ஆக்டின் கீழ்வசூல் செய்யப்பட்டதுதானென்றும் ஷ ஆக்டின் நிபந்தனைகள் இதற்குச் சம்பந்தப்பட்டது தானென்றும் தீர்மானித்தார்கள்.

லோபோதுரை ரெவினியூரெக்கவெரி ஆக்டின்படிநிபந்தனைகள் இதற்குச் சம்பந்தப்பட்டதல்லவென்று மாதப்பு ராமய்யா V. S. ஸ்டேட்செரிடேரி இ. லா. ரி. 27 ம 386, 389 கேசை ஆதாரமாய்க் கூறினர்.

ஆனால் கோர்ட்டார் இந்த தீர்மானத்திற்கு விரோதமாய் வெங்கட V. S. செங்கடு இ. லா. ரி. 12 ம 168 கேசை அவருக்கு விரோதமாயெடுத்துக் காண்பித்தார்கள்.

கவர்ன்மெண்டு ப்ளீடர் சர்க்கார் தரப்பில் இந்த தாவா ஆறுமாதத்திற்குள் தான் கொண்டுவரப்பட்டிருக்கவேண்டுமென்று வாதித்து ராஜா கவுண்டன்-V.S. ராஜா கவுண்டன் இ-லா-ரி. 17-ம் 133-எடுத்து ஆதாரமாய்க் கூறினர்,

தீர்மானம்:—இந்த தாவாவில் வசூல்செய்யப்பட்டதென்று சொல்லப்படும் கிஸ்தி ரெவினியூ ரெக்கவெரி ஆக்டின் கீழ் தான் வசூல் செய்யப்பட்டதாகையால் இந்த தாவா ஷை ஆக்டின் நிபந்தனைப்படிக்கு 6 மாதத்திற்குள் தான் கொண்டுவரப்பட்டிருக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

அதன்பேரில் வாதியின் வக்கீல் கிஸ்தியின் விஷயமாய் தாவாவிற்குக் காலதோஷம் நேரிட்டபோதிலும் டெக்லரேஷனுக்கும் இஞ்ஜங்க்ஷனுக்கும் காலதோஷம் வரவில்லை யென்றும் பின்னும் வாதித்தார்.

டெக்லரேஷனும் இஞ்ஜங்க்ஷனும் இந்த கிஸ்தி விஷயமாய் நேரிட்டதாகையால் அதுவும் ஷை ஆக்டின் நிபந்தனைப்படிக்குத் தான் கேட்கவேண்டுமென்று கண்டு இரண்டாவது. அப்பீலை சிலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

மீர். பி. சி. லோபோ, அப்பீல் வாதியின் பாரிஸ்டர் கவர்ன்மெண்ட் ப்ளீடர், ரெஸ்பான்டெண்ட் தரப்பில்

20 ம. லா. ஜ. ரி. 977.

ACT OF THE GOVERNMENT OF INDIA.

ஆலோசனை சபையிலுள்ள இந்தியா கவர்னர் ஜெனரலவர்களால் செய்யப்பட்ட இந்த ஆக்டானது 1911-ம்ௌ மார்ச்சு மீ 16வ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ் செய்யப்படுகிறது:—

ACT No. VIII OF 1911.

1911-ம்ௌத்து 8-வது ஆக்ட்.

AN ACT TO AMEND INDIAN PAPER CURRENCY ACT, 1910.

1910-ம்ௌத்திய இந்துதேசத்து நோட் செலாவணி ஆக்டைத் திருத்துவதற்கான ஆக்ட்.

1910-ம்ௌத்து 2-வது ஆக்ட் — 1910-ம்ௌத்திய இந்துதேசத்து நோட் செலாவணி ஆக்டைத் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால்:—

சுருக்கமான பெயர். — இந்த ஆக்டை, 1911-ம்ௌத்திய இந்துதேசத்து நோட் செலவாணி (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

1910-ம்ௌத்து 2-வது ஆக்ட் 22-வது பிரிவின் திருத்தம். — 2. 1910-ம் ௌத்திய இந்து தேசத்து நோட் செலாவணி ஆக்ட் 22-வது பிரிவில், "பன்னிரண்டுகோடி" என்பதற்குப் பர்த்தியாக "பதினான்கு கோடி" என்பதையும், "இரண்டுகோடி" என்பதற்குப் பர்த்தியாக "நாலுகோடி" என்பதையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

ஆலோசனை சபையிலுள்ள இந்தியா கவர்னர் ஜெனரலவர்களால் செய்யப்பட்ட இந்த ஆக்டானது 1911-ம்ௌ மார்சு மீ 16வ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ் செய்யப்படுகிறது.—

ACT No. IX OF 1911.

1911-ம்ௌத்து 9-வது ஆக்ட்.

AN ACT FURTHER TO AMEND THE BIRTHS, DEATHS AND MARRIAGES REGISTRATION ACT, 1886.

ஜனனமரண விவாகங்களை ரெஜிஸ்டர் செய்வதைக்குறித்த 1886-ௌத்திய ஆக்டை பின்னும் திருத்துவதற்கான ஆக்ட்.

1886-ௌத்து 6-வது ஆக்ட், — ஜனனமரண விவாகங்களை ரெஜிஸ்டர் செய்வதைக் குறித்த 1886ௌத்திய ஆக்டைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால்; இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால்:—

சுருக்கமான பெயர். — 1, இந்த ஆக்டை ஜனனமரண விவாகங்களை ரெஜிஸ்டர் செய்வதைக் குறித்த 1911-ம் ௌத்து (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

1886-ம்ௌத்து 6-வது ஆக்ட் 22-ம் பிரிவின் திருத்தம். — 2. ஜனனமரண விவாகங்களை ரெஜிஸ்டர் செய்வதைக் குறித்த 1886-ௌத்திய ஆக்டின் 22-வது பிரிவில் அடியிற்கண்ட திருத்தங்களைச் செய்துக்கொள்ள வேண்டும், அந்தத் திருத்தங்கள் எவை யென்றால்:

(1) ஷை பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவுடன் அடியிற்கண்ட விலக்கான நிபந்தனையைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதாவது:—

"ஆனால், அறிக்கை செய்கிற நபர்-இது விஷயமாய் பிரதேச கவர்ன்மெண்டாரால் செய்யப்பட்ட எவைகளேனும் விதிகளினால் கட்டளையிடப்படக்கூடியபடி எழுத்து மூலமாய் அறிக்கை செய்தும், தன்னுடைய நபர் அடையாளத்தைக் குறித்து ரெஜிஸ்டிராருக்குத் திருப்திகரமாக சாட்சியம் சவதரித்தும் இருக்கும் பக்ஷத்தில், அவர் ரெஜிஸ்ட்ரார் முன்னால் ஹாஜராக வேண்டியதாவது அவசியமல்ல:

(2) மேற்படி பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிலே 'கையெழுத்து போட்டாகிறவரையில்' என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "அல்லது (1) உட்பிரிவைச்சேர்ந்த விலக்கான நிபந்தனையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின்படி நடந்துகொண்டாகிற வரையில்" என்னும் வார்த்தைகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

26-வது 28-வது பிரிவுகளின் திருத்தம் — 3, மேற்படி ஆக்டின் 23-வது பிரிவிலே "ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்ஜனரலவர்கள்" என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக "பிரதேச கவர்ன்மெண்டார்" என்னும் வார்த்தைகளையும், 28-வது பிரிவிலே ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் என்னும் வார்த்தைகளுக்குப் பர்த்தியாக பிரதேச கவர்ன்மெண்டாரால் என்னும் வார்த்தைகளையும் அமைத்துகொள்ள வேண்டும்.

36.- வது பிரிவை நூதனமாய் அமைப்பது. — 4. மேற்படி ஆக்டின் 36-வது பிரிவுக்குப் பர்த்தியாக அடியிற் கண்ட பிரிவை அமைத்துகொள்ளவேண்டும். அதாவது:

விதிகள். — '36, (1) பிரதேச கவர்ன்மெண்டார்-இந்த ஆக்டிலுள்ள காரியங்களை நிறைவேற்றுவதற்காக விதிகள் செய்யலாம்.

முக்கியமாகவும் மேலே கண்ட அதிகாரத்தின் பொதுதன்மைக்குப், பாதகமில்லாமலும், அப்படிப் பட்ட விதிகளைக்கொண்டு

(a) இந்த ஆக்டின்படி செலுத்தப்படத்தக்க கட்டணங்களை நிஷ்கரிஷையாய் ஏற்படுத்தலாம்;

(b) இந்த ஆக்டின் காரியங்களுக்காக வேண்டியிருக்கிற நமூனுக்களை நிர்ணயிக்கலாம்;

(c) ஜனனமரண ரெஜிஸ்ட்ராருக்கு யாதொரு ஜனனம் அல்லது மரணத்தைக்குறித்து அறிக்கை செய்ய இந்த ஆக்டின்படி அதிகாரங் கொடுக்கப்பெற்றிருக்கிறவர்கள் இன்னகாலத்துக்குள், இன்ன விஷயமாய் அப்படி அறிக்கை செய்யவேண்டுமென்று நிர்ணயிக்கலாம்;

(d) யாதொரு ஜனனம் அல்லது மரணத்தைக் குறித்து அறிக்கை செய்கிற நபர்கள் ஜனனமரண ரெஜிஸ்ட்ரார் முன் னேராய் ஹாஜராகவேண்டியிராத விஷயங்களிலே அவர்கள் அந்த ரெஜிஸ்ட்ராருக்குத் தங்கள் நபர்அடையாளத்தைக் குறித்து இன்ன சாக்ஷியம் கொண்டுவரவேண்டுமென்று நிர்ணயிக்கலாம் ;

(e) இன்னின்ன ரெஜிஸ்டர்களை வைத்திருக்க வேண்டுமென்றும், ஜனனமரண ரெஜிஸ்ட்ரார்கள் இந்த ஆக்டின்படி ஜனனங்களையும் மரணங்களையும் இன்ன நமூனைப்படி இன்னவிதமாய் ரெஜிஸ்டர்செய்யவேண்டுமென்றும், அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிற ரெஜிஸ்டர்களில் ஜனனமரணங்களைக் குறித்து எழுதியிருக்கிற பதிவுகளுக்குச்சரியான நகல்களை ஜனன மரண விவாக ரெஜிஸ்ட்ரார் ஜெனராலுக்கு இன்னின்ன தடவைகளில் அவர்கள் அனுப்பவேண்டுமென்றும் நிர்ணயிக்கலாம்;

(f) ஜனனமரண ரெஜிஸ்ட்ரார்கள் அவர்கள் வைத்திருக்கும் ரெஜிஸ்டர்களிலே ஜனன மரணங்களைக் குறித்து எழுதியிருக்கிற பதிவுகளை இன்ன திட்டங்களின்படியாய் இன்ன சந்தர்ப்பங்களிலும் திருத்தலாமென்று நிர்ணயிக்கலாம் ;

(g) 5-ம் அத்தியாயத்தின்படி நியமிக்கப்பட்ட கமிஷனர்கள் தயார் செய்யவேண்டிய விவர ஜாபிதா அல்லது ஜாபிதாக்களில் இன்ன விவரங்கள் கண்டிருக்கவேண்டுமென்றும், அவைகள் சம்பந்தப்படுகிற ரெஜிஸ்டர்கள் அல்லது ரெக்கார்டுகளையாகிலும் ரெஜிஸ்டர்கள் அல்லது ரெக்கார்டுகளையாகிலும் ரெஜிஸ்டர்கள் அல்லது ரெக்கார்டுகளின் பாகங்களையாகிலும் இன்னவிதமாய் அவர்கள் குறிக்கவேண்டுமென்றும் நிர்ணயிக்கலாம் ; மேலும்,

(h) இன்ன பந்தோபஸ்த்தில் அந்த ரெஜிஸ்டர்கள் அல்லது ரெக்கார்டுகளை வைத்துவைக்க வேண்டுமென்று நிர்ணயிக்கலாம்.

(3) விதிகள் செய்வதற்காக இந்த ஆக்டினால் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு அதிகாரமும்-அந்த விதிகள் முன்னதாய்ப் பிரசித்தம் பண்ணப்பட்ட பிறகு செய்யப்பட வேண்டுமென் னும் திட்டத்துக்குட்பட்டிருக்கிறது.

(4) இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட சகல விதிகளையும் பிரதேச சர்க்கார் கெஜெட்டில் பிரசுரம் செய்யவேண்டும் ; அப்படி பிரசுரம் செய்யப்பட்டதன்மேல் அந்த விதிக்கு இந்த ஆக்டில் செய்யப்பட்டிருந்தாற்போலவே செலவாணியாகும்.

37-வது பிரிவு ரத்து.

5. மேற்படி ஆக்டின் 37-வது பிரிவு இதனால் ரத்து செய்யப்படுகிறது.

ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரால் அவர்களால் இதற்குமுன் செய்யப்பட்ட விதிகள் செலாவணியாய்க்கொண்டேயிருக்குமென்பது

5, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரால் அவர்களால் மேற்படி ஆக்டின்படி இதற்குமுன் செய்யப்பட்ட சகல விதிகளையும், இந்த ஆக்ட்செலாவணியாகத் தொடங்கினதற்குப் பிறகு, கவர்ன்மெண்டாரால் செய்யப்பட்டிருப்பதாக பாவிக்கவேண்டும்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

THE FIRST CRIMINAL SESSIONS.

முதல் கிரிமினல் சேஷன்ஸ்.

FORGERY CASE.

தப்புகையெழுத்து செய்த போர்ஜெரிகேசு.

ஜட்ஜு:—மிர்-ஜு. எய்லிங்.

கேசின்விபரம் : 1911ஆம் வருஷத்திய மார்ச்சுமாதம் மதராஸ் செஷன்ஸ்கோர்ட்டில் பி. வெங்கடசாமி செட்டி என்பவனும், பி. சுப்பய்ய செட்டி என்பவனும் தப்பு கையெழுத்து செய்து ஒரு தப்பு பத்திரம் சிரிஷ்டித்துபோர் ஜெரி என்னும் குற்றம் செய்தார்களென்று விசாரிக்கப்பட்டார்கள்.

பாரிஸ்டர் மிர். ஆடம் துரைமார்களும், ஷாமாராவும் சர்க்கார்தரப்பிலும் மிர். T. வெங்கட சுப்பய்யரும், G. கிருஷ்ணசாமிஐயரும் குற்றவாளிதரப் பில் ஆஜரானார்கள்.

MARDAS, KORUKUPET MURDER CASE.

கோறுக்குபேட்டை கொலைகேசு.

கேசின்விபரம் :—செற்பகாலத்திற்குமுன் மதராஸ் ஹைகோர்ட்டில் மாணிக்கநாயகன் ஜெயராம், நாயகன் என்பவர்கள் பேரில் நடந்தகொலைகேசில் வீராசாமி நாய்கன் என்பவன் தான் ஜெயராம நாயகன் என்பவன் பெருமாள் நாய்க்கனை கத்தியால் குத்தி கொலை செய்ததை நேரில் பார்த்த தாகபொய் சாட்சியம் சொன்னானென்று அவன் பேரில் குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டான்.

ஜூரிகள் :—பார்சன்ஸ், திருவேங்கட பிள்ளை, சி. ஸ்ட்ரீட், பி. கெ. வெங்கடரமண ஐயங்கார், இ. ஜி. டப்ளியூ ஏவியெட், ஏ. ஸ்ரீனிவாசாச்சாரி, ஜெ. ராட்பாட், வி. குப்புசாமி நாயுடு. பாரிஸ்டர் ஜெ. ஆடம் என்பவர் சர்க்கார்தரப்பிலும், மிர். T. வெங்கசுப்பய்யர் என்பவர் குற்றவாளிதரப்பிலும் ஆஜரானார்கள் சாக்ஷிகளை எல்லாம் விசாரணை செய்து முடிந்த வுடன் மிர். ஆடம் துரை என்பவர் கேசின் சாராம் சத்தை கோர்ட்டுக்கும், ஜூரிமாரிமார்களுக்கும் சுருக்கமாக எடுத்துக் காட்டினார்.

ஜூரிகள் எதிரிகுற்றம் செய்தவன்தானென்று எல்லோரும் ஒருமிக்க கூறினார்கள்,

தீர்மானம் :—ஜூரிகளின் அபிப்பிராயத்தை கோர்ட்டார் ஒப்புக் கொண்டு குற்ற வாளியை 5 வருஷம் கடினகாவலிருக்கும் படிசிக்ஷை விதித்தார்கள்.

மேற்சொன்னகொலை கேசிலேயே மதராஸ் ஹைகோர்ட்டில் வெங்கடசாமி நாய்க்கன் என்பவன் ஒருவன் அதைப்போல வேதானும் ஜெயராம் நாயக்கன் என்பவனை எகிறிகுதித்துப் போய் பெருமாள் நாயக்கன் என்பவனை முதுகின்மேல் கத்தியினால் குத்திவிட்டு ஓடிப்போய் அவ்விடமிருந்தவாராவதியின் கீழ் ஒளித்துக்கொண்டானென்று சாக்ஷி சொல்லிருப்பது சுத்தபொய் யென்று ஷவெங்கடாசல நாய்க்கன் என்பவன் பொய் சாட்சியம் சொன்னதாக குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டான்,

இந்த கேசிலும் அநேக சாக்ஷிகளை விசாரணை செய்து தீர்மானம் சொல்லப்பட்டது.

LAWS DELAYS—REAL GRIEVANCE.

கோர்ட்டுகளில் வியாஜ்ஜியங்களை விசாரணைசெய்து பைசல் செய்வதில் குடிகளுக்குமிக்க கஷ்ட, நஷ்டம் தாமதங்கள் நேரிடுகிறதென்கிற குறைவுபாடு

நியாயஸ்தலங்களென்று சொல்லப்படும் கோர்ட்டுகளில் தினேதினே கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியங்கள் அனேக காலமாய் விசாரணைசெய்யப்படாமல் வாய்தா வென்று கால தாமதம் நேரிட்டுக்கொண்டுவருகிறதென்று யெங்கும் கூக் குறலாயிருக்கிறது. இவ்விதமாய் பிர ஜைகளுக்கு கோர்ட்டுகளில் காலதாமதம் நேரிடுகிறதென்பதற்குச் சந்தேகமில்லை, குடிகள் படும் கஷ்டநஷ்டங்களால் நேரிடும் துன்பங்களை நிவர்த்திசெய்துக் கொள்வதற்காக, நியாயஸ்தலங்களுக்கு வந்தால் அவ்விடங்களில் அவர்களுக்கு நியாயம் கிடைக்காமல் கஷ்டதுன் பங்களேநேரிட்டுக் கொண்டுவருகின்றதென்று எங்கும் துர்வதந்தியாயிருக்கிறது. இவ்விதமான கஷ்டதுக் கங்களைநிவர்த்திப்பதற்கு இரண்டு விதமான பரிகாரங்களிருப்பதாக மதராஸ் டைம்ஸ்பத்திரிகையில் எடுத்துக்காண் பிக்கப்பட்டிருக்கின்றன, அவைகளாவன.—

(1) கோர்ட்டுகளில் தற்காலத்தில் ஜட்ஜுக்கு கீழுள்ள சிப்பந்திகளை அதிகப்படுத்தவேண்டுமென்பதும் இன்னும் அப்படிப்பட்டசிப்பந்திகளின் வேலைகள் இன்னின்னதென்பதும்.

(2) இது வரையில் கோர்ட்டுகளில் விசாரணைக்கு வந்து யாதொருமுடிவான தீர்மானம் ஏற்படாதபாயின்கெளமைந்தகேசுகளில் தவவிரமற்றெல்லா கேசுகளில் ஜட்ஜுகள் வாச்சாதீர்மானம் கொடுப்பதே போதுமான தென்பதும் தான்.

சிலகேசுகளில் ஜட்ஜுகள் தங்களுடைய தீர்ப்புக்கு ஆதாரமாய் முன்னிட்ட தீர்மானங்களடங்கிய சிலதீர்ப்புகளை எடுத்துதர்கித்துப்பேசுவதும் அவைகள் பிரஸ்தாபகேசுக்கு சம்பந்தப்படுமா, படாதா என்று சொல்லும் வழக்கத்தை சுத்தமாய் நிறுத்திவிட்டால் நலமாயிருக்கும், ஏனென்றால் நியாயஸ்திலங்களில் அவ்விதமாய் செய்து வருவது ஜனங்களுக்கு அதிருப்தியாகவேயிருக்கிறது.

ஆகையால் இந்த சென்னை ராஜதானியின் ஹைகோர்டாரும் இன்னும் இதர கோர்ட்டுகளிலுமுள்ள சிப்பந்திகளை அதிகப்படுத்தி சிரேஸ்ததார அல்லது ரெஜிஸ்த்ரார் என்பவர் ஒருவரைநேமித்து அவர்மூலமாய் இப்போது ஜட்ஜுகள் செய்யும் அநேகவேலைகளை நிறைவேற்றிக்கொண்டு ஜட்ஜுகளுக்குச் சுளுவு செய்யலாம் தஞ்சாவூர் இன்னும் சில ஜில்லாக்களில் இப்பொழுது சிரேஸ்ததார் முதலான வர்கள் செய்துவரும் வேலையைப் போலவே இதர எல்லா கோர்ட்டுகளிலும் செய்து வருவார்களாகில் குடிகளுக்குள்ள இந்த குறைவுபாடு நீங்க ஜட்ஜுகள் அவசியமாய் செய்துவரும் வேலைகளெல்லா மொழிந்து சுகப்படுமென்பதற்குச் சந்தேகமில்லை,

தற்காலத்தில் கவொன்மெண்டார் குடிகளிடமிருந்து பிடிங்கிக் கொள்ளும் நிலத்துண்டு ஒன்றைவரப்படுத்து வதர்காககுடியானவன் ஒருவன் மூன்று கோர்ட்டுகளில் 4 வருஷகாலமாய் வியாஜ்ஜியமாட வேண்டியதாயிருந்தது. சியில் எல்லாகோர்ட்டுகளிலும் மேற்சொன்ன குடியானவருக்கு அனுக்கூலமாகவேடிக்ரி ஆயிற்று. அந்தடிக்ரியை நிறைவேற்றுவதற்குளத்தனிக்கையில் அதிலிருந்துநூதன கஷ்டங்கள் விளைந்தன. இப்படிப் புதிதாய் நேரிட்ட இடையூறுகளை நிவர்த்திசெய்துக் கொள்வதற்கு இன்னும் சில ஆண்டுகள் வேண்டியிருக்குமல்லவா. கோர்ட்டுகளில் ஜட்ஜகளின் கீழுள்ள சிப்பநதிகள் போதாதென்பது தான் இதற்கு முக்கியமானகாரணமென்று சொல்லலாம்.

இவவிதமாய் சிப்பந்திகளை அதிகப்படுத்தினால் இன்னும் அதிக சம்பளங்கொடுத்து பெருஞ்செலவு நேரிடும். ஜட்ஜுகள் அதிகமாயிருக்கவேண்டுமென்பது ஒழிந்துப்போகும். கிராம பஞ்சாயத்து கோர்ட்டுகள் ஏற்படுத்திஅவர்களுடைய தீர்மானமே முடிவானதென்றும் அதன்பேரில் அப்பீல் கிடையாதென்றும் நிபந்தனைசெய்து விட்டால் இவ்விதமான குறைவுபாடு நீங்கி குடிகளுக்குச் சந்தோஷத்தைத் தருமென்பது திண்ணம்.

ஹாவெர்ட் என்னும் ஓர்துரை நியூமௌண்லண்ட் என்னும்தேசத்தில் சதனபட்டணத்தில் 6000,700ரூ- ஆடுமாடுகளடங்கிய ஓர் பெரும்மந்தைக்குச்சொந்தக்காரனாய் வர்ணவேலையும் காகிதவேலையும் செய்துக்கொண்டிருந்தான். அவனுடைய தமையன் குமாரன் ஒருவன் அநேகநாளாய் தன்னுடைய 13-வயதுவரையிலும் அவனுடைய சிறிய தகப்பனுருடன் வேலை செய்துக்கொண்டிருந்து பிறகு அவனுக்கும் அவனுடைய சிறியதகப்பனுக்கும் சச்சரவுகள் நேரிட்டு அந்தப்பிள்ளை இனி தன்னுடைய சிறிய தகப்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS.
REGISTERED
15 AUG 1911
MADRAS.

பன் முகத்தில் தெரிசிப்பதில்லையென்று ஓர் பிடிவாதம் செய்துக்கொண்டு இங்கிலாந்துக்குப்போய் விட்டான். இப்போது அகஸ்மாத்தாய் திடீரென்று காலஞ்சென்ற ஹாவெர்டின் சொத்துக்குவேரே வார்சுகிடையாததாகையால் ஷெ பிள்ளையை அந்தசொத்துகளை ஒப்புக்காள்ளும்படிக்குக்கேட்டதில் அவன் இன்னும் சொற்பதினங்களில் இங்கிலாந்திலிருந்து நியூஜிலன்ட்தேசம் சவுதென்ட் பட்டணத்திற்குப்போய் ஷெ சொத்துகளுக்குப் புரோபேட்பெற்றுக்கொள்வதாய் தந்தி.

ASSAULT BY TWO POLICEMEN IN ASSAM.

ஆசாம் தேசத்தில் இரண்டு டாணாக்காரர்கள் ஒருவனை கொரூரமாய் அடித்து வதை செய்தது.

ஆசாம்தேசத்திலுள்ள பவாரிப்பூர்ப்பட்டணத்தில் ஓர் தினம் ராத்திரி ஓர் துரசானியிடம் வேலைசெய்யும் சையத் மகமத் என்பவன் ஒருவன் குடித்துவிட்டு ஒழுங்கீனமாய் நடந்தானென்று டபாரக், கங்காதீன் என்னும் இரண்டுடாணாக்காரர்கள் அவனைப்பிடித்துக்கொண்டு டாணாவிற்குப்போகையில் வழியில் அவனைநன்றாய் அடித்து வதைசெய்தபடியால் அவன் அதை பொறுக்கமுடியாமல் டாணாக்காரர்களை எதிர்த்தான். அதன்பேரில் டாணாக்காரர்கள் இரண்டுபேருக்கும் கோபம் அதிகரித்து அவனை பட்சபாதமின்றி நன்றாய் அடித்து வதைசெய்து விட்டார்கள். அவனை மறுநாள் காலையில் போலீஸ் டிப்டி கமிஷனரிடம் அழைத்துக்கொண்டு போனபோது அவர் நடந்த விர்த்தாந்தங்களை யெல்லாம் கேட்டுக்கொண்டு அவன் மேலிருந்தக் காயங்களையும்பார்வையிட்டு அந்த இரண்டு கான்ஸ்டேபில்களை அவர்களுடைய வேலையிலிருந்து நீக்கிவைத்து சையத் மகமத் என்பவனை விடுதலை செய்துவிட்டார். அதன்பேரில் சையத் மகமத் என்பவன் போலீஸ் கோர்ட்டுக்கு பிரியாது கொடுத்து அது நடந்துக்கொண்டிருக்கிறது. இவர்களையும் மெடிகல் பரிட்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பினர்.

Ths Coronation Durbar.

பட்டாபிஷேக தர்பார்.

நமது பட்டாபிஷேக தர்பார் பாரதவர்ஷமென்று சொல்லப்படும் இந்தியாவிலுள்ள டெல்லியில் அடுத்த டிசம்பர்மீ 12உயில் பட்டாபிஷேக மஹோற்சவம் கொண்டாடப்படுமென்று கல்கத்தா எக்ஸ்ட்ராகெஜெட்டில் மார்ச்சுமீ 23உ பிரசுரித்த விளம்பரமாகிய ராஜபத்திரிகையினால் தெரியவருகிறது. விளம்பரம் யாதெனில் "1910௵ மேமீ 6உ காலஞ்சென்ற நமது சக்கரவர்த்தி எட்வர்ட் மஹாராஜாவிற்குப் பின் சிம்மாசனத்திற்கு வந்த மாட்சிமைதங்கிய ஜியார்ஜ சக்கிரவர்த்திக்கு ஜூன்மீ 22உ கடவுள் கிருபையால் பட்டாபிஷேக மஹோற்சவம் நடக்கப்போகிறபடியால் அந்த விசேஷமான தினத்தில் இந்தியாவின் பிரதிநிதிகளாகிய வைசிராயென்னும் கவர்னர்ஜெனரலும் கவர்னர்களும், இன்னும் ராஜாக்களும், மற்றுமுள்ள சுதேசத்தலைவர்களும் வந்து மேற்கண்ட வைபவங்களை நடத்திவைப்பார்களென்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. முக்கியமாய் எல்லோருடைய சவுக்கியா சவுகரியங்களையோசித்து பிரதமத்தில் பட்டாபிஷேகத்திற்கென்று 1911௵ ஜனவரிமீ 1உ நேமிக்கப்பட்டிருந்தது. ஆனால் வருகிற ஜனவரி மாதத்தில் மொஹோரம் பண்டிகையென்று அறிந்து அந்ததேதியை மாற்றிப் பட்டாபிஷேகத்திற்காக மேற்கண்ட தேதியை மிக்க தகுந்த தினமென்று நம்மையாளும் மாட்சிமைதங்கிய சக்கிரவர்த்தி அவர்கள் நேமித்திருக்கிறார்கள்.

டெல்லி பட்டணத்தில் சாதாரணமாய் ஜனவரிமாதம் மிக்க குளிர்ச்சியான காலமானதால் அந்த ஜனவரிமாதத்திற்கு 20-தினங்களுக்கு முன் அந்தப்பட்டணத்தில் சீத உஷ்ண ஸ்திதிமிக்க நேர்த்தியாய் அதிக வெப்பமுள்ள பாகங்களிலிருந்து வரும் ஜனங்களுக்கு இப்போது டிசம்பர் மாதத்தில் குறித்திருக்கும் தினம் மிக்க திருப்திகரமானதாகவே யிருக்குமென்மதற்கு சந்வசமில்லை.

டில்லிபட்டணத்தில் கூடும் இந்த மஹாஜனக்கூட்டத்தின் வைபவக்காக்ஷி நமது கண்களுக்கு மிக்கநேர்த்தியாயும் கம்பீரமுள்ளதாயுமிருக்குமென்பதற்கு ஐயமில்லை. அந்த வைபவத்தைக் கண்ணுக்கிப்பார்த்து ஆனந்த மடைவோமென்று அப்போது அவ்விடத்திற்குப்போகிறவர்கள் நமது மாட்சிமைதங்கிய சக்கிரவர்த்தியின் பட்டாபிஷேக வைபவத்தைக்கண்டு களிக்கவேண்டுமென்று போக எண்ணங்கொண்டு அது அம்மஹான்களுக்கு ஓர் கௌரவத்தை அளிக்குமென்று உண்ணியும் செல்வார்களல்லவா. நமது மாட்சிமைதங்கிய மஹாப்பிரபுக்கு அதி வினயத்துடன் தங்களுக்குள்ள மரியாதையென்னும் கௌரவத்தை அடையும்பொருட்டு நமது சுதேசராஜாக்களும், அதிகாரிகளும் அவ்விடத்திற்குச் செல்வார்களென்பதும் திண்ணம். நம்மையாளும் மாட்சிமைதங்கிய சக்கிரவர்த்தியே களிகூர்ந்து பட்டாபிஷேகத்திற்கு இந்தியாவிலுள்ள டெல்லிபட்டணத்திற்கு நேரில் வருகிறாரென்னும் பெரும் ஆனந்தத்தை விளைவிக்கும் வர்த்தமானத்தியைக் கேட்க நாம் எப்போதும் அடைந்திராத பேரானந்தத்தை விளைவிக்கின்றனவல்லவா.!!!

ஈசன்கிருபையால் அந்தவைபவத்தைக்கண்ணுக்கச்செல்லும் ராஜாக்களும் அதிகாரிகளும் பிரபுக்களும் அதைக்கண்ணுற்றுப்பார்த்து மிக்க ஆனந்தத்துடன் திரும்புவார்களென்பதற்கும் ஐயமில்லை.

நம்மையாளும் மாட்சிமைதங்கிய சக்கிரவர்த்தி அவர்கள் நமது இந்தியாதேசத்தின் முக்கியபட்டணங்களாகிய கல்கத்தா, பம்பாய், மதராஸ் இந்த மூன்று இடங்களில் முதல் கூறியகல்கத்தா, பம்பாய்பட்டணங்களுக்குச் சென்று கௌரவிப்பதைப்போல் நம்முடைய மதராசுக்கு வராமலேயே போய்விடுவாரென்பதைக் கவனிக்க மிக்கவிசனகரமாக வேதானிருக்கிறது. இது நிற்க நமது மதராஸ் பட்டணத்திற்கு கவர்னராய் வரும் சர். ஜியார்ஜ்மேல கார்மைகேல் என்னும் பிரபு மதராசுக்கு வருகிற அக்டோபர் மாதம் கடசியில் வருவதாயிருந்தால் அவர் மேமாதத்திலேயேதன் நாடாகியமெல்போர்ன்பட்டணத்தை விட்டு புறப்படுவாரென்று தெரிந்திருப்பதால் அவர் பட்டாபிஷேகத்திற்கு ஜனமாதம் அவ்விடமிருந்து பின்புடிஜசம்பர்மாதத்தில் டெல்லியில் நடக்கும் பட்டாபிஷேகவைபவத்திலுமிருப்பார்.

J. H. BAKEWELL, Esq., LL.B., BAR-AT-LAW.

Chief Judge, Court of Small Causes, Madras.

மதராஸ் ஸ்மால் காஸ் கோர்ட்

சீப் ஜட்ஜ் மிஸ்டர் ஜே யச். பேக்வல், LL.B., BAR-AT-LAW.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் V.] சென்னப்பட்டணம் 1911 ௵ ஏப்ரல்மீ பாகம் 7.]

Important Rulings.

முக்கியமான தீர்ப்புகள்.

ஹிந்து சமஷ்டி குடும்பசொத்து—பாகிக்கக் கூடிய சொத்து.

மூன்று வகைப்படும் அவைகளாவன:—(1) ஏக சொத்து (2) ஏககுடும்பசொத்து (3) ஏககுடும்ப பிதிரார்ஜிதசொத்து,

ஓர் ஹிந்து தகப்பனும் பிள்ளையும் இருவருஞ்சேர்ந்து தங்களுடைய கஷ்டார்ஜிதங்களினால் சம்பாதித்து ஒன்றாய் வாசம் செய்துகொண்டும்,ஒன்றாய் சாப்பிட்டுக்கொண்டும், பிதிர் காரியங்கள் முதலான தெய்வீகச் சடங்குகளை நடத்திக்கொண்டும் வரும் குடும்பம் தான் ஓர் ஹிந்து சமஷ்டி குடும்பமென்று சொல்லப்படும். அந்த குடும்பத்திலிருப்பவர்கள் அவர்களுடைய தகப்பனிடமிருந்து யாதேனும்சொத்தடைந்திருந்தாலும் அல்லது அடையாதிருந்திடினும் அக்குடும்பம் ஹிந்து சமஷ்டி குடும்பமென்று தான் சொல்லப்படும். ஓர் ஹிந்து குடும்பத்தில் பெரியவாளிடத்திலிருந்து யாதேனும் சொத்தைப் பெற்றால் தான் ஹிந்து சமஷ்டி குடும்பத்தின் தாயாதி அல்லது பங்காளித்வம் கொண்டாடக்கூடுமென்பது சத்தியமாய் அவசியமல்ல அப்படிப்பட்ட தாயாதிகள் எல்லோரும் ஒன்றாய் வாசம் செய்துகொண்டும், சாப்பிட்டுக்கொண்டும் தெய்வீக விஷயங்களை நடத்திக்கொண்டும் அவர்களுடைய கஷ்டார்ஜிதங்களை பொதுவில் வைத்து அனுபவித்துக்கொண்டும் தகப்பன், பிள்ளை,தாயாதி முறையினர்களென்று இதரான் மதிக்க அவர்களுடன் லேவாதேவி செய்து வருகிறார்கள். இவர்களைத்தான் ஹிந்துலாவில் தாயாதிகள் அல்லது பங்காளிகளென்று சொல்லப்படும். ஓர் ஹிந்து சமஷ்டி குடும்பத்தைச்சேர்ந்த ஓர் தாயாதி மற்ற பங்காளிகளுடைய அனுமதியுடன் குடும்ப முழு சொத்தையும் விற்பனை செய்யலாம், ஆனால் மற்ற பாகஸ்தர்களுடைய ஜீவனாம்சம் முதலிய சுதந்தரத்திற்கு விரோதமாய் விற்பனை செய்ய நியாயம் கிடையாது. எப்பொழுது ஒரு குடும்பத்தின் சொத்து சமஷ்டி குடும்பத்தின் சொத்தாயிருந்தால் தாயாதிகளுக்கு அந்த சொத்தில் ஜீவனாம்சம் முதலிய பாத்தியதைகளுண்டாகின்றன—10 பம். லா. ரி 175.

தகப்பனும், சகோதரர்களும் வாசம் செய்யும் ஓர் ஹிந்து சமஷ்டி குடும்பத்தைச்சேர்ந்த தாயாதிகளில் ஒருவனாகிய [illegible] என்பவன் கொஞ்சம் தொகைவாங்கிக்கொண்டு தனக்கு அந்த குடும்ப சொத்திலுள்ளஉரிமை சுதந்தரத்தை ரிலீஸ்-விடுதலைச் செய்துவிட்டான். அப்படி அவன் ரிலீஸ் எழுதிக்கொடுப்பதற்கு முன்னமேயே அவனுக்கு ஒரு குமாரன் பிறந்தான். பிறகு அந்த குமாரன் தனக்கு அந்த குடும்ப சொத்தில் பாத்தியதை யுண்டென்றும் குடும்ப சொத்தில் தனக்குச் சேர வேண்டிய பாகத்தைத் தனக்குப் பங்கிட்டுக் கொடுக்கும் படிக்கும் அவனுடைய தாயாதிகள் பேரில் வியாஜ்ஜியம் செய்தான். அவனுக்குப் பாகமுண்டென்று குடும்ப சொத்தை பாகித்துக்கொடுக்கும்படி டிக்ரி செய்தார்கள். இவ்விதமாய் ரிலீஸ், பாகப்பிரிவினைச் செய்யும்படிக்குப் பிறந்த டிக்ரி இவைகளுக்குப் பின் ரிலீஸ் எழுதிக்கொடுத்தவனுக்கு இன்னொரு இரண்டாவது குமாரன் பிறந்தான். இந்த இரண்டாவது குமாரன் அவனுடைய தமையனாகிய முதல் குமாரனை அவனடைந்த குடும்ப சொத்தில் தன் பேர் பாதி பாகத்தை பாகித்துக்கொடுக்கும்படி

க்குஅவன்மீது தாவா செய்தான் இரண்டாவதுகுமாரனுக்கு குடும்பத்தில் யாதொரு பாத்தியத்தையும் கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டது. 10 பம். லா. ரி. 778.

ஓர் ஹிந்து ஏககுடும்பமும் குடும்பத்திற்குச் சேர வேண்டிய குடிக்கூலியும்:—

ஓர் ஹிந்து சமஷ்டி குடும்பத்திற்கு யாதேனும் குடிக்கூலி பாக்கிச் சேர வேண்டியிருந்தால் அந்த குடும்பத்திற்குக் கர்த்தாவாயிருப்பவன் ஒருவன் மாத்திரம் மற்ற தாயாதிகளை வாதிகளாயாவது அல்லது பிரதிவாதிகளாயாவது சேர்க்காமல் தாவா செய்யலாகாது, ஆனால் குடிக்கூலி காரன் அந்தக் குடும்பத்தின் தலைவனுடன் அவனை ஏக சுதந்தரவாளியென்று மதித்து வந்தால் அவன் தனியாய் தாவாசெய்யலாம். 7 கல். லா. ஜ. 252.

சி. பு. கோ. 372, 234, பிரிவுகள் புது ஆக்ட் ஆர்டர் 22 ரூல் 9, (1) (2)

பி என்பவன் ஏ அண்ட் கம்பெனி பேரில் தாவா செய்தான். அந்த தாவா நடந்துகொண்டிருக்கையில் ஏ அண்ட் கம்பெனியை சி என்பவனுக்கு வித்து விடப்பட்டது, ஆனால் அப்படி விற்பனையாய் விட்ட பிறகு கூட சி என்பவனுக்கு ஷ அண்ட் கம்பெனியார் ஏஜெண்டாய் ஷ கம்பெனியின் வியாபாரத்தை நடத்தி வந்தார்கள். ஏ அண்ட் கம்பெனியார் அவர்கள் தொழில் கொடுக்கவேண்டிய கடனுக்காக அவர்கள் மீது டிக்ரி பெற்று அந்த டிக்ரியை சி என்பவன் பேரில் வார்சாக நிறைவேற்றுவதற்கு எத்தனித்ததில் மேற்படி கம்பெனியின் வழக்கு சுதந்தர பாத்தியதையை சி என்பவன் சி. பு. கோ 234 வது பிரிவின்படி விக்கிரயம் செய்யவில்லையானதாலும் ஷ டிக்ரியின் கீழ் ஏ அண்டு கம்பெனியாருக்குள்ள பாத்தியதையை சி என்பவனுக்கு மாற்ற நியாயம் கிடையாதென்று கண்டு சி. பு கோ. 372 வது பிரிவு இதற்குச் சம்பந்தப்படாதென்று, தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி 31 ம. 464

காண்ட்ராக்ட் ஆக்ட் 23 வது பிரிவு:-

ஓர் ஹிந்து தகப்பன் தன்னுடைய குமாரத்தியை விவாகம் செய்துக் கொடுக்கிறேனென்று வாக்கு கொடுத்து அதற்குப் பிரதிபலனுய்த்தனக்கு இவ்வளவு தொகை கொடுக்கவேண்டியதென்று கல்யாணப் பிள்ளை அல்லது அவனுடைய தகப்பனிடம் ஓர் உடன்படிக்கைச் செய்யலாகாது. அப்படிப் பட்ட உடன்படிக்கையின் பேரில்தாவாசெய்து அவ்விதமாய்க் கொடுப்பதாகச் சொல்லியபணத்தை வசூல் செய்வதற்கு நியாயம் கிடையாது.

ஹிந்துலா பிரகாரம் அசுரவிவாகம் செய்வது சட்டப்படிச் செல்லத்தக்கதாயினும் அவ்விதமான விவாகவிஷயமாய்ச் செய்யும் ஒப்பந்தம் எதுவும் கோர்ட்டில் அமுல் நடத்தி வசூல் ஜிதப்படுத்திக்கொள்ள நியாயமில்லை.

இ. லா. ரி 17 ம 9; 22 பம் 658; வெங்கடகிருஷ்ணய்ய vs- லக்ஷ்மி நாராயண 18 ம- லா-ஜ 403(புல்பெஞ்ச் கேசு) இந்த தீர்ப்பின்படி இ. லா. ரி 13 ம 83 ரத்தாய் விட்டது.

ஒருவன் ஓர் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தனிடத்தில் ஓர் ஏற்பாடு செய்துக் கொண்டு அந்த ஒப்பந்தத்தினால் கவர்ன்மெண்ட் வேலைக்கு ஹாஜராகிறேனென்பதனால் அந்த ஒப்பந்தத்தில் அவ்விதமாய் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தனிடத்தில் செய்யும் உடன் படிக்கை செல்லாது 13 கல் வீ-கோ 59 (a)

ஓர் ஹிந்து ஒருவன் தன்னுடைய குடும்பத்திலுள்ள தன்னுடைய தாயாதிகள் முதலான இதர பாகஸ்தர்களுடன் சேர்ந்து ஒரே வீட்டில் வசிக்காமல் பிரத்தியேகமாய் வசித்துக்கொண்டிருந்தானென்பதினால் அந்த குடும்பம் பாகப்பிரிவினை செய்துகொண்ட விபக்த குடும்பமென்று சொல்வதற்கு அது ஓர் காரணமாகாது (இ. லா. ரி) 30 கல் 725.

ஓர் குடும்ப சொத்தைப்பாகித்துக்கொடுக்கும்படி செய்யப்பட்ட தாவாவில் ஓர் பாகஸ்தன் அவனுடைய தாயாதிகளை விட்டுக் குடும்ப வீட்டிலிராமல் தனியாய் வசித்துக்கொண்டிருந்தானென்பது பாகப்பிரிவினையாகிய குடும்பமென்பதற்கு ஓர் ருஜுவாகாது. இ. லா. ரி 31 ம. 482

ஓர் ஜெமின்தாரின் குமாரத்தி அந்த ஜெமீன் சொத்துகளிலிருந்துவரும் மாசூலைக்கொண்டு ஜீவித்துவந்தாள். அவள் அவ்விதமாய் காலம் கழித்து வருகையில் அவள் தனக்கு வரும் ஜீவனுக்க மொத்தத்தில் சொற்பதொகை சேகரித்து அந்த ஜெமீனைச் சேர்ந்த ஜெமீன்தார்கள்வசிப்பதற்கு ரூபாய் 40,000 ம் பெறுமான முள்ள ஓர் அரமனை கட்டினாள். அவள் அவ்விதமாய் கட்டின ஸ்திதி ஜெமீன் சொத்தென்று சொல்லப்படுமேயல்லாமல்மற்றப்படி, அந்தப் பங்களா அவளுடைய சுயார்ஜிதமான தனிச் சொத்தென்று சொல்வதற்கு நியாயமில்லை.

அப்பாராவ். vs. கோபாலராவ் 18 ம. லா. ஜ. 409 இ. லா. ரி. 31 ம. 321.

மிதாக்ஷர சட்டத்தை அனுசரிக்கும் ஓர் ஹிந்து விதவை அவளுடைய புருஷன் காலமான பிறகு அவனுடைய அசையும் பொருளை தனக்குக் குழந்தைகளில்லையென்று வேறொருவனுக்குத் தானம் செய்ய நியாயம் கிடையாது. 9 பம். லா. ரி. 305 இ. லா. ரி. 32 பம் 59.

ஒருவன் ஓர்தாசியினிடம் சம்போகம் செய்வதற்காக வேண்டியகடன் கேட்டால் அதுலோகாச்சார வழக்கத்திற்கு விரோதமாயிருப்பதாலும் அதனால் விபசாரத்தை அபிவிர்த்தி செய்வதாலும் அப்படிப்பட்ட கடன் லேவா தேவிசெய்யலாகாது. அவ்விதமாய் ஓர்தாசியினிடம் நீடித்தகாலம் சம்போகம் செய்யவேண்டுமென்கிற கருத்துடன் ஒருவன் ஒருவிந்தி ரீக்குப்பணம் செலுத்திக் கொண்டு வருவானாகில் அவன் அப்படிசெய்வது லோகாசார வழக்கத்திற்கு விரோதமாயிருப்பதாலும் அதுவிபசார விஷயத்தை அபிவிர்த்தி செய்வதாலும் அவ்விதமான கடன்களை கோர்ட்டுமூலமாய் வசூல் செய்வதற்கு நியாயம் கிடையாது. 18 ம. லா-ஜ-456.

ஒருபொருளை ஓர் இடத்திலிருந்து இன்னொருஇடத்திற்கு எடுத்துக்கொண்டு போவதாய் ஒப்புக்கொள்ளுகிற கம்பெனியாரின் சிப்பந்திகளுடைய பராமரிக்கையான நடத்தைகளால் நேரிடும் நஷ்டத்தை முதலாளியிடமிருந்து வசூல்செய்யநியாயமில்லையென்று ஒப்பந்தம் செய்துக்கொள்ளுவது லோகாச்சார வழக்கத்திற்கு விரோதமாயிருப்பதால் அப்படிப்பட்டஒப்பந்தத்தை கோர்ட்டு மூலமாய் வர்ஜிதப்படுத்திக்கொள்ள நியாயமில்லை. 18. ம. லா. ஜ. 497(புல்பெஞ்சு கேசு)

காலதோஷமாய்விட்ட கடனை ஓர் கடன் தாரன் தான் கொடுக்கவேண்டியது வாஸ்தவம் தானென்று ஒப்புக்கொண்டு கையெழுத்துப்போட்டு எழுத்து மூலமாய்த்தெரிவித்திருக்கிறனென்கிற தஸ்தா வேஜியில பணத்தைகொடுப்பதாக விசதமாயிருந்தாலொழிய மற்றப்படிகடனை ஒப்புக்கொண்டு இருந்தால் மாத்திரம் பாராய்விட்டகடனை வசூல்செய்ய நியாயங்கிடையாது.

5 அ லா. ஜ. 274; இ லா. ரி. 30 அ 268; 1908 அ, வீ. கோ 129

சி-பு-கோ-107-145 பிரிவுகள்,

இருவர் ஓர் நிலத்தைப்பற்றித் தகறார் செய்துக் கொண்டு வாஸ்தவத்திலேயே வியாஜ்ஜியங்களாடிக் கொண்டு அந்த நிலம் யாருடைய அனுபவத்திலிருக்கிறதென்கிற வழக்காடிக் கொண்டிருந்தால் அந்த நிலம் யாருடைய சுவாதீனத்திலிருக்கிறதோ அந்த நபரை மாத்திரம் கலகம் செய்யாமல் அமரிக்கையாயிருக்கும்படிக்கு சி. பு. கோ. 107-வது பிரிவின்படி செக்யூரிடி பாண்ட் ஜாமீன் பத்திரம் எழுதிக்கொடுக்கும்படி நிர்ப்பந்தித்து உத்தரவு செய்வது கிரமமல்ல. அபபடிப்பட்ட சந்தர்ப்பத்தில் சி. பு. கோ. 107-வது பிரிவின்படிக்கு சச்சரவுசெய்யும் இருதாரத்தாரும் கலகமின்றி அமரிக்கையாயிருக்கவேண்டுமென்று உத்தரவு செய்து அவர்கள் உபயத்திராளிடத்திலிருந்தும் செக்யூரிடி பாண்டும் எழுதி வாங்கிக்கொள்ள வேண்டியது அல்லது அவர்கள் இருவர் பேரிலும் சி. பு. கோ. 145-வது பிரிவின்படிக்கு நடவடிக்கை நடத்தவேண்டும். பேன்னல்டாஸ் பாபாஜி. vs. சக்கரவர்த்தி 2 கல். வீ. கோ 606.

சி. பு. கோ 110 வது பிரிவின்படி செய்யும் நடவடிக்கைகளை அது எந்த கோர்ட்டிலே செய்யப்பட்டதோ அந்த ஜில்லாவின் எல்லைக்கு வெளியே இருக்கும் கோர்ட்டுக்கு மாத்தலாகாது. 16 அ. 19 அ 291 சக்ரவர்த்தி vs. மஹேமந்தரசிங் (1907) அ. வீ, கோ 208 இ. லா. ரி. 30 அ 47

சி. பு. கோ. 28 வது (பிரிவு ஆர்டர் ரூல் 3, 4):—

ஓர் மைனர் யுக்தவயதடைந்தவுடன் அவனுக்கு கார்டியனாயிருந்த 2-ம் பிரதிவாதி அவனுடையசொத்துகளை சட்டத்திற்கு விரோதமாய் 1, 3 பிரதிவாதிகளுக்கு வித்து விட்டதாகவும் அந்த சொத்துகள் 1, 3 பிரதிவாதிகளின் சுவாதீனத்திலிருப்பதாகவும் செல்லாதென்றும் தீர்மானித்துச் சொத்தைத் தன்னுடைய ஸ்வாதீனம் செய்யும்படிக்கு தாவா செய்தான். அப்படிபபட்ட தாவாவில்கட்சிதாரர்களைத்தப்பாய்ச் சேர்க்கப்படவில்லையென்றும் அது சரியான தாவா யென்றும் தீர்மானிக்கப்பட்டது. துரைசாமி பிள்ளை vs அங்கம்மாள் 18 ம, லா, ஜ. 265. சி. பு. கோ. 28-வது பிரிவு.

ஒருவன் தன்னுடைய சொத்தை நியாயத்திற்கு விரோதமாய் அனுபவிப்பதால் தனக்கு வியாஜ்ஜிய மூலமுண்டாயிறதென்று தாவா செய்தான்; வாதி முழுசொத்தும் தனக்குச்சுவாதீனம் கிடைக்க வேண்டியதென்று அவ்விதமாய்க்கொண்டுவந்த தாவாவை ஆக்ஷேபித்து ஸ்வாதீனம் ஒப்புவிக்காமல் தடுக்கும் நபர்கள் எல்லோரையும் அந்த தாவாவில் கக்ஷிதாரர்களாய்ச் சேர்க்கவேண்டியது அவசியமென்று தீர்மானிக்கப்பட்டது. 7 கல். லா. ஜ. 460.

ஒருவன் தன் சொத்தை சொதுவை வைத்துக் கடன் வாங்கினான். அப்படிக் கடன் கொடுத்தவன் பிறகு அந்தக் கொதுவைக்கடன் பத்திரத்தை இன்னொருவனுக்கு விக்கிரயம் செய்துவிட்டான். அவ்விதமாய்க்கிரயம் பெற்றவன் கொதுவை வைத்தவன் மீதும் தாவா செய்துகொதுவை மொத்தம் வசூலாக வேண்டுமென்றும் அப்படிக்கிரயம் செய்தபிறகுதான் கொதுவை வைத்துக்கொண்டவனுக்குக் கொடுத்தத்திற்கு கொதுவை செய்தின்பேரில் டிக்ரிதரவேண்டுமென்றும் ஒரே நம்பரில் இருவர் பேரிலும் தாவா செய்ய நியாயமுண்டென்று தீர்மானிக்கப்பட்டது 18 ம. லா. ஜ. 2̣3, இ. லா. ரி. 31 ம 252

சி. பு. கோ. 28. 45 பிரிவுகள்:—

ஓர் மைனருக்குக் கார்டியனாயிருந்தவன் மைனருடைய திரவியத்தைக்கொண்டு சிலசொத்துகளைத்தன் பேரிலும், மூன்றுவது நம்பர்கள் பேரிலும் வாங்கினான். பிறகு சில சொத்துகளை அன்னியர்களுக்குவித்தான். மைனர், கார்டியன் பேரிலும், மூன்றுவது நபர்களின் மீதும் அன்னியர்கள் மீதும் தன் சொத்தை சுவாதீனம் பெறுவதற்குத் தாவா செய்தான். அ

டிப்பட்ட தாவா நியாயமானதென்று தீர்மானிக்கப்பட்டது. 18 ம. லா. ஜ. 434.

ஓர் நிலத்தை ஸ்வாதீனம் செய்யும்படிக்கும் வாதி தாவா செய்து டிக்ரீ அடைந்து சொற்பகாலம் சென்ற பிறகு அந்த நிலத்திலுண்டாகிய சாகுபடி தனக்கு அந்த தாவாவிற்கு முன்னமேயே பாக்கியிருந்ததென்று அந்த மாசூல் மொத்தத்தை வசூல் செய்ய நியாயமுண்டு 9 கல் 283; 19 கல் 615; 31 ம 405.

சி. பு. கோ. 50, 54 பிரிவுகள்.

ஒருவன் பிரதிவாதிகளிடத்திலிருந்து சொற்பதொகை வசூலாக வேண்டுமென்று தாவா செய்தான், அந்த பிராதில் தாவாவிற்குக் காலதோஷம் நேரிடவில்லையென்னும் காரணத்தைக் கண்டெழுதவில்லை. ஆனால் தாவாவில் சொல்லியிருப்பதைப்பார்த்தால் தாவாவிற்குப் பிரத்தட்சியமாய் காலதோஷம்வந்துவிட்டதென்று ஏற்படுகிறது. வியாஜ்ஜியம் விசாரணைக்கு வந்த தினத்தில் வாதி பிராதுக்குக்காலதோஷம்நேரிடவில்லையென்னும் காரணத்தை திருத்தி எழுதுவதற்கு உத்தரவு கொடுக்கும்படிக்குக் கேட்டு தாவாவிற்குக்காலதோஷம்நேரிடவில்லையென்பதற்கு ஓர் தஸ்தாவேஜியிருப்பதாகவும் சொன்னான்ஆனால் அந்த தஸ்தாவேஜியைப்பற்றி தாவாவுடன் தாக்கல் செய்த ஜாபிதாவில் செப்பவில்லையாகையால் பின்னிட்டு தாவாவைத் திருத்துவதற்கு உத்தரவு கொடுப்பது நியாயமல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. 10 பம் லா, ரி. 969.

சி. பு. கோ. 108-வது பிரிவு.

மூன்று பேர் மேல் செய்யப்பட்ட டிக்ரியை ரத்து செய்யும்படிக்கு மனுகொடுக்கப்பட்டது. அதில் 1, 2 பிரதிவாதிகள் பேரில் நபர் டிக்ரியும், மூன்றுவது பிரதிவாதியின்பேரில் தேவேச சொத்தை ஜப்தி செய்யும்படிக்கும்செய்யப்பட்ட டிக்ரியை ரத்துசெய்யும்படிக்கும் மனுவு கொடுக்கப்பட்டது. 1; 2, பிரதிவாதிகள் பேரில் பிறந்த டிக்ரியை ஊர்ஜிதம் செய்துவிட்டு மூன்றுவது பிரதிவாதியாகிய தேவேச சொத்தின்பேரில் செய்யப்பட்ட டிக்ரியை மாத்திரம் ரத்து செய்து மறுவிசாரணைச்செய்யும்படிக்கு உத்தரவு செய்ய நியாயமுண்டென்று தீர்மானிக்கப்பட்டது. 18 ம. லா. ஜ. 543.

ஓர் ஹிந்து ஸ்திரீ தன்னுடைய புருஷன் ஜீவித்திருக்கையில் அவள் அவனுடைய புருஷனை விட்டுப் பிரத்தியேகமாய் வசித்துக்கொண்டிருந்தாள். பிறகு அவளுடைய புருஷன் காலமாய் விட்டான். அவன் இறந்துவிட்ட பிறகு அவள் கற்புள்ளவளானால் அவனுடைய ஜீவனாம்சத்திற்காக தனக்கு மாதம் இவ்வளவு குடும்பசொத்திலிருந்து கொடுத்துவர வேண்டுமென்று அவளுடைய மாமனார் பேரில் தாவா செய்ய நியாயமுண்டு.

வாலிஸ் ஜ:—ஆனால் அவ்விதமாய் அவளுக்கு ஜீவனாம்சம் கொடுத்துவர வேண்டுமென்று உத்தரவு செய்கையில் மாதம் இவ்வளவு மொத்தமென்று நிஷ்கரிப்பதற்கு முன் அவள் கற்புள்ளவளா அல்லவா வென்று அவளுடைய நடவடிக்கையைத்தீர விசாரணை செய்யவேண்டியது அவசியம் பெண்சாதி அவளுடைய புருஷனை விட்டு பிரிந்திருந்தால் அவள் மறுபடியும் அவளுடைய புருஷனிடம்போய்ச்சேர்ந்துவசிக்கவேண்டு மென்பது அவளுடைய கடமையாகும்.

சங்கரன் நாயர்:—பெண்சாதி புருஷனை விட்டுப் பிரத்யேகமாய் வசித்திருந்தாலும் புருஷன் அவளைப்போஷித்துவர வேண்டுமென்பது தர்ம நீதி முறையாகும். புருஷன் ஜீவித்திருக்கையில் அவனுடைய பெண்சாதி அவனுடன் வசிக்காமல் பிரத்தியேகமாயிருந்தாளென்பது அவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டியதில்லையென்பதற்கு ஓர் காரணமாகாது.

18 ம. லா, ஜ. 254; இ. லா ரி. 31 ம 338.

BILL INTEODUCED INTO THE COUNCIL OF THE GOVERNOR OF FORT St. GEORGE FOR MAKING LAWS AND REGULATIONS.

சில நபர்கள் சென்னபட்டணத்து ஒருவருக்கே உரிய பூஸ்திதிகளின் கிராம ஊழியத்தைக் குறித்த 1894-௵த்து ஆக்டின்படிக்கும், சென்னபட்டணத்துப் பரம்பரையான கிராம உத்தியோகங்களைக் குறித்த 1895-௵த்து ஆக்டின்படிக்கும், ஸர்வேயையும் எல்லைகளையுங் குறித்த சென்னபட்டணம் 1897-௵த்து ஆக்டின்படிக்கும் பூஸ்திதிக்குடையவர்களுக்குள்ள அதிகாரங்களைச் செலுத்தக்கூடியவர்களாயிருப்பதற்கும் அலுவல்களைச் செய்யக்கூடியவர்களாயிருப்பதற்குமான மசோதா ஆக்டைப்பற்றி ஸெலெக்ட் கம்மிட்டியார் செய்த இதனடியிற்கண்ட ரிபோர்ட்டும் ஷை கம்மிட்டியாரால் திருத்தப்பட்ட பிரகாரமிருக்கும் ஷை மசோதா ஆக்டும் எல்லாருக்கும் தெரியும்பொருட்டுப் பிரசுரஞ் செய்யப்படுகின்றன:—

சட்டதிட்டங்கள் செய்வதற்காக ஏற்பட்டுள்ள

சென்னபட்டணம் கவர்னரவர்களின் கனம்பொருந்திய

ஆலோசனை சபையாருக்கு.

சில நபர்கள் சென்னபட்டணத்து ஒருவருக்கே உரிய பூஸ்திதிகளின் கிராம ஊழியத்தைக் குறித்த 1894-௵த்து ஆக்டின்படிக்கும், சென்னபட்டணத்துப் பரம்பரையான கிராம உத்தியோகங்களைக் குறித்த 1895-௵த்து ஆக்டின்படிக்கும். ஸர்வேயையும் எல்லைகளையும் குறித்த சென்னபட்டணம் 1897-௵த்து ஆக்டின்படிக்கும் பூஸ்திதிக்குடையவர்களுக்கு உள்ள அதிகாரங்களைச் செலுத்தக்கூடியவர்களாயிருப்பதற்கும் அலுவல்களைச் செய்யக்கூடியவர்களாயிருப்பதற்குமான மசோதா ஆக்டைப்பற்றி ரிபோர்ட் செய்வதற்காக 1911-௵ பெப்ரவரிமீ 21௳ நடந்த ஆலோசனைசபைக் கூட்டத்தில் நியமிக்கப்பட்ட ஸெலெக்ட் கம்மிட்டியைச் சேர்ந்த மெம்பர்களாகிய நாங்கள் அதைக்குறித்து எங்கள் ரிபோர்ட்டை ஆலோசனை சபையாருக்கு வினயமாய் அனுப்பிக்கொள்ளுகிறோம்.

2. இந்த மசோதா ஆக்டின் நிபந்தனைகளின் விஷயமாய்ப் பொதுஜனங்கள் எங்களுக்கு அந்த அபிப்பிராயங்களையும் தெரிவிக்கவில்லை ஆகவே, அதில் நாங்கள் செய்திருக்கும் திருத்தங்கள் அதன் ரூபத்தைப்பற்றிய விஷயங்களுக்கே முக்கியமாய்ச் சம்பந்தப்படுகின்றன. விசேஷமாய்க் கவனிக்கவேண்டிய அம்சங்களைப்பற்றியே அடியிற்கண்ட பாராக்களில் சொல்லியிருக்கிறது.

3. இந்த மசோதா ஆக்டின்படி பூஸ்திதிக்குடையவராக ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிற யாதொரு நபர் கவர்ன்மெண்ட் தீர்வை பாக்கியைச் செலுத்த வேண்டியதற்குள்ளாவாரென்று 9-வது (முன் 10-வது) பகுதியினால் விதிக்கப்பட்டிருக்கிறது; அதை விசேஷமாய்க் குறிப்பிட்டிருப்பதும் அடங்கியிருக்கும்படியாக பிடிகையை விஸ்தாரமாக்கி யிருக்கிறோம்.

4. ஆக்டின் பெயரை "வரையறுக்கப்பட்ட பாத்தியதையுள்ள பூஸ்திதிக்குடையவர்களைப் பற்றிய 1911-௵த்திய ஆக்ட்" என்று சுருக்கியிருக்கிறோம்.

5. சென்னபட்டணத்து ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராம ஊழியத்தைக்குறித்த 1894-௵த்து ஆக்டின் 4-வது பிரிவிலே பூஸ்திதிக்குடையவர் என்பதற்குச் சொல்லியிருக்கும் அர்த்தத்தையே சென்னபட்டணத்துப் பரம்பரையான கிராம உத்தியோகங்களைக் குறித்த 1895-௵த்து ஆக்டிலும், ஸர்வேயையும் எல்லைகளையுங் குறித்த சென்னபட்டணம் 1897-௵த்து ஆக்டிலும் மீண்டும் எடுத்தெழுதியிருக்கிறது. இந்த அர்த்தத்திலே சேர்த்துக்கொண்டு 4 குறிப்பிட்ட பகுதியைச் சுருக்கியிருக்கிறோம். இந்த அர்த்தத்திலே பிரதானமான இரண்டு விஷயங்கள் அடங்கியிருக்கின்றன, அவை எவையென்றால்.--

(i) பூஸ்திதிக்குடையவராக ரெஜிஸ்டர் செய்யப்பட்ட யாதொரு நபரைப்பற்றியதும்.

(ii) பூஸ்திதியின் அர்த்தத்தைக்கூறும் பிரிவின் (a), (b), (c) குறிப்பிட்ட பகுதிகளுள் எதன்படிக்காவதுள்ள யாதொரு பூஸ்திதியிலிருக்கும் ஒன்று அல்லது பலகிராமங்களை நிலையான கிழ்க்குத்தகைக்கு கைப்பற்றில் வைத்திருப்பவரைப்பற்றியதுமாம்.

இந்த மசோதா ஆக்டானது வாஸ்தவமாய் வரையறுக்கப்பட்ட பாத்தியதையையுடைய நபர்களுக்கே பிரயோகப்படவேண்டு மென்னும் உத்தேசத்துடன் "வசூல் செய்து கொள்ள அர்ஹராயிருந்து" என்னும் வார்த்தைகளுக்குமுன் "சொந்தக்காரராகவல்லாமல் மற்றப்படி" என்னும் வார்த்தைகளைச்சேர்த்திருக்கிறோம், யாதொரு பூஸ்திதியை விலைக்குவாங்கி அதனால் அந்த பூஸ்திதியின் சொத்துவ பாத்தியதை பெற்று, இப்போதுள்ள சட்டப்படி ரெஜிஸ்டர் செய்விக்கும்படி விண்ணப்பம் செய்துகொள்ள இஷ்டமிருந்தால் அந்தப்படியேசெய்து கொள்ளக்கூடியவர்களாயிருக்கிற நபர்கள் விசேஷவகையாய்ச் செய்யப்பட்ட இந்தச் சட்டத்தைத் தங்களுக்கு அனுகூலமாய்ப் பிரயோகித்துக்கொள்ளும்படி உத்தேசிக்கப்படவில்லை யென்பது வெளிப்படையாய்த் தெரிந்தவிஷயம்.

6. ஜில்லா கலெக்டர் சம்பந்தப்பட்டகட்சிக்காரர்கள் நேராய்வந்து விசாரிக்கப்பட இஷ்டப்படாத விஷயங்களிலே கிரமாசாரமான விசாரணை நடந்தாமலே ஆட்சேபங்களைப் பைசல் செய்யவும், தமக்கு முன் ஹாஜராக அக்கிரமமாய்த் தவக்களுஞ்செய்கிறவர்கள் நேராய் வருகிறவரையில் காத்திராமல் முடிவான உத்தரவுகள் ஜாரிசெய்யவும் சாத்தியமாயிருக்

கும்படிச் செய்யும்பொருட்டு 5-ம் பகுதியின் சொல்லமைப்பை மாற்றியிருக்கிறோம்.

கலெக்டர் தமக்குள்ள காரணங்களை எழுதிவைக்கவேண்டுமென்னும் நிபந்தனையை இந்தப் பகுதியிலிருந்து நீக்கி (12) குறிப்பிட்ட ஒரு புதிய பகுதியில் சேர்த்திருக்கிறோம்; அப்படிச் சேர்த்ததில் இந்த மசோதா ஆக்டின் எந்தப்பகுதியின்படியாவது கலெக்டரால் ஜாரி செய்யப்பட்ட உத்தரவுகள் அதில் அடங்கும்படி ஷை கட்டளையைப் பொதுவாயிருக்கும்படியாகச் செய்திருக்கிறோம்.

பிரதம மசோதா ஆக்டின் 8-வது பகுதியையும் அம்மாதிரியாகவே (12) குறிப்பிட்டபுதிய பகுதியைச்சேர்ந்த (2) அடையாளமிட்ட உட்பகுதிக்கு மாற்றியிருக்கிறோம்.

7. (முன் 10-வதாயிருந்த) 9-வது பகுதியுடன் (3) என்னும் இலக்கமிட்ட ஒரு உட்பகுதியைச் சேர்த்திருக்கிறோம்; அதில் ஒரு பூஸ்திதியை ட்ரான்ஸ்பர் செய்கிறவருக்கும் அவருடைய சட்ட சம்மதமான பிரதிநிதிக்கும் அதற்காகச் செலுத்தவேண்டிய கவர்ன்மென்ட் தீர்வை பாக்கிகளைச் செலுத்த வேண்டிய பொறுப்பு இன்னும் இருந்துகொண்டேயிருக்குமென்று கண்டிருக்கிறது. எனவே, ட்ரான்ஸ்பர் செய்கிறவரும் ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவரும் ஆகிய இருவரும் கவர்ன்மெண்டுக்கு பாக்கியைச் செலுத்தப் பொறுப்பேற்றவராவார்கள்.

ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவர்மேல் நிர்ப்பந்தகரமான நடவடிக்கைகள் முதலில் நடத்தவேண்டுமென்னும் நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறோம்.

8. (முன் 12-வதாயிருந்த) 11-வதுபகுதியை முன்னிலும் அதிகத் தெளிவாய் அர்த்தம் விளங்கும்படியாகவும், ரெஜிஸ்டர் செய்யப்பட்ட யாதொன்றை ரத்துசெய்ய ஜில்லாகலெக்டர் தம் இஷ்டப்படி கட்டளையிடவோ மறுக்கவோ அவருக்கு அதிகாரம் இருக்கும் படியாகவும் திருத்தியிருக்கிறோம்,

9. புதிதாய்ச் சேர்த்த 12-ம் பகுதியில் கண்ட சங்கதி எதிலிருந்து எடுக்கப்பட்டதென்பதைக் குறித்து மேலே 6-வது பாராவிலே ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறது. இனி சொல்லவேண்டிய ஒரே சங்கதி என்னவென்றால், ரெவினியு போர்டாருக்கு அப்பீல் செய்து கொள்வதாயிருந்தால் அதற்குக் கால அளவை மூன்றுமாதத்திலிருந்து இரண்டு மாதத்துக்குக் குறைக்கவேண்டுமா என்னும் விஷயத்தைக் குறித்து உபயபட்சத்திலும் சரிசமானமாய் அபிப்பிராயபேதமுண்டாயிற்று என்பதே. கால அளவை மாற்றவேண்டுமென்பதற்கு அனுகூலமாய்ப்பேசினவர்கள்-ரெயில் ஏற்பட்டிருப்பதனாலும் போக்குவரவு சாதனங்களில் உண்டாயிருக்கும் மற்ற அபிவிருத்திகளாலும் ஷை மூன்று மாதக் கால அளவு இருக்கவேண்டிய அவசியமில்லையென்று வாதித்தார்கள். இந்தப்படி மாற்றுவதற்குப்பெரும் பான்மையோருடைய அபிப்பிராயம் அனுகூலமாய் இல்லாதபடியால், எங்களுக்கு அனுப்பப்பட்ட மசோதா ஆக்டில் இருக்கிறபடியே இது சம்பந்தமான நிபந்தனையை வைத்துக் கொண்டிருக்கிறோம்.

ஜெ. என். அட்கின்ஸன்.
வி. கிருஷ்ணசுவாமி ஐயர்.
பி. எஸ். சிவசுவாமி ஐயர்.
டி. வி. சேஷகிரி ஐயர்.
எ. பட்டர்வொர்த்.
எல். எ. கோவிந்தராகவ ஐயர். *

1911-ம்ளு மார்ச்சுமீ 11உ.

* அபிப்பிராய பேதத்துக்குட்பட்டுக் கையெழுத்து செய்திருக்கிறோம்.

அபிப்பிராயபேதக்குறிப்பு.

அடியிற்கண்ட அபிப்பிராயங்களுக்குட்பட்டு நாங்கள் இந்த ரிபோர்ட்டில் கையெழுத்து செய்திருக்கிறோம்:—

இந்த மசோதா ஆக்டின் பிரதான சொல்கைகளின் விஷயத்தில் நாங்களும் இந்தக் கமிட்டியில் எங்களுடன்கூட இருந்த இதர அங்கத்தினர்களும் ஒத்த அபிப்பிராய முள்ளவர்களா யிருக்கிறோம். 9-வது பகுதியைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பகுதியின் விஷயத்திலே, ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவர் பூஸ்திதிக்குடையவரானதற்கு முன்னே அந்த பூஸ்திதி விஷயமாய்ச் சேரவேண்டிய பாக்கியைச் செலுத்துவதற்கு அவரை நேரில் பொறுப்பாளி யாக்கக்கூடாதென்பது எங்களுடைய தீர்மானமான அபிப்பிராயம். 1864-ம்ளுத்துச் சென்னபட்டணம் 2-வது ஆக்டினால் கவர்ன்மென்ட் தீர்வையானது பூஸ்திதியிலிருந்து செலுத்தவேண்டிய செலவாக ஏற்பட்டிருக்கிறது; அதனால், அந்த பூஸ்திதியாருடைய ஸ்வாதீனத்துக்கு வந்து விட்டாலுஞ்சரி அந்த பூஸ்திதியிலிருந்தே நிலுவை பாக்கி வசூல் செய்யப்படுகிறது. தீர்வையைச் செலுத்துவதற்கு பூஸ்திதிக்குடையவர் நேரில் உள்ளாவார் என்னும் ரெவினியு சட்ட நிபந்தனையானது தீர்வை சட்டத்தவறின வருக்கே பிரயோகப்படவேண்டும். பூஸ்திதிக்கு ஒருவருக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டதற்கு முன் பாக்கியான தீர்வைத்தொகையை வசூலிப்பதற்காக ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவர்மேல் நேரில் நடவடிக்கை நடத்தப்பட அவரை உள்ளாக்குவதற்கு நியாயமிருப்பதாக எங்களுக்குத் தோற்றவில்லை. வரையறுக்கப்பட்ட பாத்தியதையுள்ள பூஸ்திதிக்குடையவருக்கு ஒரு விசேஷ சுதந்தரம் ஏற்படுத்திக்கொடுப்பதை உத்தேசித்து இந்த சட்ட நிரூபணம் செய்யப்பட்டதென்

றும், விசேஷ அசமர்த்ததைகளுக்குத் தாம் உட்படுத்தப்பட்டிருப்பதைக்குறித்து அவர் முறையிடக்கூடாதென்றும் சொல்லப்பட்டது. உத்தேசிக்கப்பட்ட சட்ட நிரூபணத்தைப்பற்றி நாங்கள் இம்மாதிரி அபிப்பிராயப்படவில்லை; வரையறுக்கப்பட்ட பாத்தியதையுடைய சொந்தக்காரர்களை பூஸ்திதிக்குடையவர்களாக ரெஜிஸ்டர் செய்வது கவர்ன்மெண்டாருடைய க்ஷேமத்துக்கும் அனுகுணமாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். கவர்ன்மென்டார் ஏழையாயிருக்கும் ஒரு பூஸ்திதிக்குடையவர் தீர்வையைக் காலந்தவறாமல் செலுத்தி வருவாரென்று எதிர்பார்ப்பதற்குப் பர்த்தியாக, சாதாரணமாய்ப் பணக்காரராக இருக்கும் கொதுவைதாரராவது அந்தப்படி செலுத்தி வரும்படி அவர்கள் எதிர்பாக்கலாம்.

இந்த மசோதா ஆக்டை கொதுவை தாரருக்கும் குத்தகைதாரருக்கும் நன்மை செய்வதற்காகவென்றே செய்யப்பட்ட ஒரு விசேஷ சட்ட நிரூபணமாக எடுத்துக்கொண்டாலுங்கூட, அவரையே நேரில் பொறுப்பாளி யாக்குவதற்கு எவ்வித காரணமுமிருப்பதாக எங்களுக்குத் தோற்றவில்லை. ட்ரான்ஸ்பர் செய்தவர் செலுத்த வேண்டியதாயிருக்கும் பாக்கித்தொகை முழுவதையும் நியாயப்படி அவர் ஒருவரே செலுத்தக் கடமைப்பட்டவரா யிருக்கிறார்; அப்படியிருக்க, இப்போதிருக்கிறபடி ஷை நிபந்தனையினால் இந்தத்தொகை முழுவதையும் செலுத்தும்படி ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவர் ட்ரான்ஸ்பர் செய்தவரைக்கேட்பதற்குத்தடங்கலும் உண்டாகலாம். ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவர்மேல் முதலில் நடவடிக்கை நடத்தவேண்டுமென்னும் நிபந்தனையினால் அவருடைய நிலைமை முன்னிலும் பாழாய்விடுகிறது. அப்படிப்பட்ட நடவடிக்கை நடத்துவது நியாயமாகுமென்பதற்கு எவ்வித காரணமும் இருப்பதாக எங்களுக்குச் சிறிதுகூடத் தோற்றவில்லை.

எங்களுடைய அடுத்த ஆட்சேபனையானது 11-வது பகுதியிற்கண்ட பறிமுதல் பகுதி என்று நாங்கள் நினைக்க விரும்பும் பகுதிக்குச் சம்பந்தப்படுகிறது. ஸெலெக்ட் கம்மிட்டியாருடைய கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட அனுபவரீதியான திருஷ்டாந்தத்தையே நாம் எடுத்துக்கொள்வோம். பூஸ்திதிக்குடையவருக்கு ஐந்து கிராமங்கள் இருப்பதாகவும், அவைகளில் மூன்றை அவர் தாமே வைத்திருப்பதாகவும், மிகுதி இரண்டை அடமானம் வைப்பதாகவும் வைத்துக்கொள்வோம். இந்த விஷயத்திலே கொதுவை வைத்துக்கொண்டவர் தம்முடைய இரண்டு கிராமங்களின் தீர்வையைச் செலுத்தத்தவறிப்போய், கொதுவை வைத்தவர், தம்முடைய மூன்று கிராமங்களையும் விற்பனைசெய்து விடப்படாமல் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு, ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட கிராமங்களுக்குங்கூட செலுத்தவேண்டிய தீர்வையைச் செலுத்துகிற பட்சத்திலே, ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட இரண்டு கிராமங்களின் வரையறுக்கப்பட்ட பாத்தியதையுடைய சொந்தக்காரர் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பது ரத்துசெய்யப்படுமென்று கவர்ன்மெண்டார் பிரவேசித்து ஏன் சொல்லவேண்டும் தீர்வை செலுத்தாமலிருப்பதனால் ட்ரான்ஸ்பர் செய்தவருடைய மிகுதி கிராமங்களுக்கு அபாயமுண்டாகிறதென்னும் காரணத்தினால் அவர் ரெஜிஸ்டர் செய்ததை ரத்து செய்யவேண்டுமென்று விண்ணப்பம்செய்து கொள்வது நியாயந்தான். ஆனால், தீர்வையைக் கட்டிவிட்டு, அந்தப்படி கட்டின தொகையைத் தமக்குச் செலுத்தும்படி ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவரைக்கேட்க அர்ஹராயிருக்கிற ட்ரான்பர் செய்தவர் ரெஜிஸ்டர் செய்ததை ரத்து செய்யவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொள்வது நியாயந்தான். ஆனால், தீர்வையைக் கட்டிவிட்டு அந்தப்படி கட்டின தொகையைத் தமக்குச்செலுத்தும்படி ட்ரான்ஸ்பர் செய்யப் பெற்றவரைக்கேட்க அர்ஹராயிருக்கிற ட்ரான்பர் செய்தவர் ரெஜிஸ்டர் செய்ததை ரத்து பண்ணும்படி விண்ணப்பஞ்செய்துகொள்ள இஷ்டப்படாத பட்சத்திலே, ரெஜிஸ்டர் செய்ததைக் கவர்ன்மெண்டார் ஏன் தாங்களாகவே ரத்து பண்ணவேண்டுமோ அதற்குக் காரணமிருப்பதாக எங்களுக்குத் தோற்றவில்லை. "ரத்து செய்யவேண்டும்" என்பதை ஸெலெக்ட் கம்மிட்டியார் "ரத்து செய்யலாம்" என்று மாற்றியிருப்பதனால் இந்த ஆட்சேபத்துக்குச் சமாதானம் உண்டாகவில்லை.

டி. வி. சேஷகிரி ஐயர்.
எல். எ. கோவிந்தராகவ ஐயா.

[குறிப்பு.—1. [ ] என்னும் அடையாளங்களுக்குள் அச்சிட்டிருக்கும் வார்த்தைகள் ஸெலெக்ட் கம்மிட்டியாரால் செய்யப்பட்ட திருத்தங்களாகும்.

2. பக்கத்திலே [ ] என்னும் அடையாளங்களுக்குள் அச்சிட்டிருக்கும் இலக்கங்கள் பிரதமத்தில் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டின் பகுதிகளைக் குறிக்கின்றன.]

—:o:—

No 1 OF 1911.

1911-ம்ளுத்து I-வது நம்பர்.

A BILL TO AMEND THE LAW RELATING TO PROPRIETORS OF ESTATES.

—:o:—

[*As amended by the Select Committee.*]

பூஸ்திதிக்குடையவர்களுக்குச் சம்பந்தப்பட்ட சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்.

[ஸெலெக்ட் கம்மிட்டியாரால் திருத்தப்பட்டபடி.]

சென்னபட்டணத்து ஒருவருக்கே உரிய பூஸ்திதிகளின் கிராம ஊழியக்குடிகளுக்கு ...

1894-ம் ௵த்து ஆக்டிலும், சென்னபட்டணத்துப் பரம்பரையான கிராம உத்தியோகங்களைக்குறித்த 1895-ம் ௵த்து ஆக்டிலும், ஸர்வேயையும் எல்லைகளையுங் குறித்த சென்னபட்டணம் 1897-ம் ௵த்து ஆக்டிலும் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி பூஸ்திதிகளுக் குடையவர்களாயிராத சில நபர்கள் ஷை ஆக்டுகளின்படி பூஸ்திதிக்குடையவர்களுக்கு உள்ள அதிகாரங்களைச் செலுத்தக்கூடியவர்களாயிருப்பதும் அலுவல்களைச் செய்யக்கூடியவர்களாயிருப்பதும் யுக்தமாயிருக்கிற படியாலும், [அப்படிப்பட்ட நபர்களிடமிருந்து தீர்வை பாக்கியை வசூல் செய்வதற்காக நிபந்தனை ஏற்படுத்துவதுகூட யுக்தமாயிருக்கிற படியாலும்], இதனால் விதிக்கப்படுகிற தென்னவென்றால்:—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, வரையறுக்கப்பட்ட பாத்தியதையுள்ள [பூஸ்திதிக் குடையவர்களைப்]பற்றிய 1911-ம் ௵த்திய ஆக்டென்று சொல்லலாம்.

ரத்து.

2. சென்னபட்டணத்து ஒருவருக்கே உரிய பூஸ்திதிகளின் கிராம ஊழியத்தைக் குறித்த 1894-ம் ௵த்து ஆக்டின் 4-வது பிரிவிலும் ஸர்வேயையும் எல்லைகளையும் குறித்த சென்னபட்டணம் 1897-ம் ௵த்து ஆக்டின் 3-வது பிரிவிலும் பூஸ்திதிக்குடையவர் என்பதன் அர்த்தத்தைச்சேர்ந்த விலக்கான நிபந்தனையானது இதனால் ரத்து செய்யப்படுகிறது.

அர்த்தம்.

3: இந்த ஆக்டிலே, [சங்கதியினாலாவது] முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதம் ஏதேனுமிருந்தாலொழிய] "பூஸ்திதி" என்பதும் "கிராமம்" என்பதும்-முறையே சென்னப்பட்டணத்து ஒருவருக்கே உரிய பூஸ்திதிகளின் கிராம ஊழியத்தைக் குறித்த 1894 ௵த்து ஆக்டில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி ஒரு பூஸ்திதி என்றும் ஒரு கிராமம் என்றும் அர்த்தமாகும்.

பூஸ்திதிக்குடையவரென்று ரெஜிஸ்டர் செய்யும்படி கலெக்டருக்கு விண்ணப்பம்செய்து கொள்ளுவது.

4. யாதொரு நபர் ஒரு பூஸ்திதி முழுவதுக்குமாகிலும் ஒன்று அல்லது பல கிராமங்கள் அடங்கியதாயுள்ள அதன் யாதொரு பாகத்துக்காகிலும் உரிய குத்தகைத்தொகைகளை, [ஒரு] சொந்தக்காரரிடமிருந்து எவ்விதமாகவேனும் ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றிருப்பதனாலோ தகுந்த அதிகாரமுள்ள ஒரு கோர்ட்டார் செய்த யாதொரு [டிக்ரி அல்லது] உத்தரவினாலோ யாதொரு விதி அல்லது சட்டநிபந்தனையினாலோ [சொந்தக்காரராகவல்லாமல் மற்றப்படி] வசூல் செய்து கொள்ள அர்ஹராயிருந்து [சென்னப்பட்டணத்து ஒருவருக்கே உரிய பூஸ்திதிகளின் கிராம ஊழியத்தைக்குறித்த 1894 ௵த்து ஆக்டின் 4-வது பிரிவில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி] பூஸ்திதிக்குடையவராயிராவிட்டால், அவர் - சென்னப்பட்டணத்து ஒருவருக்கே உரிய பூஸ்திதிகளின் கிராம ஊழியத்தைக்குறித்த 1894-ம் ௵த்து ஆக்ட், சென்னப்பட்டணத்துப் பரம்பரையான கிராம உத்தியோகங்களைக்குறித்த 1895 ம் ௵த்து ஆக்ட். ஸர்வேயையுங் எல்லைகளையும் குறித்த சென்னப்பட்டணம் 1897-ம் ௵த்து ஆக்ட் ஆகிய இந்த ஆக்டுகளின் சகல காரியங்களுக்காகவாகிலும் எந்தக் காரியங்களுக்காகவாகிலும் ஷை பூஸ்திதி அல்லது பாகத்தின் விஷயமாக பூஸ்திதிக்குடையவரென்று ரெஜிஸ்டர் செய்யும்படி அந்த ஜில்லா கலெக்டருக்கு விணப்பம் செய்துகொள்ளலாம்.

அப்படிப்பட்ட விண்ணப்பத்தின்மேல் நடவடிக்கை.

5. [(1)] ஷை ஜில்லா கலெக்டரானவர் - ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிற [பூஸ்திதிக் குடையவருக்கும்] விண்ணப்பத்தின் தேறு கடையான முடிவில் அக்கறையுள்ளவர்களென்று தமக்குத்தோற்றுகிற இதர நபர்களுக்கும் அந்த விண்ணப்பத்தைக்குறித்து நோடிஸ் கொடுக்கவேண்டும்; மேலும், அவர்கள் [சொல்லிக்கொள்ள வேண்டியதைச் சொல்லிக்கொள்ளுவதற்கு அவகாசம் கொடுத்தபிறகும் அவருக்குத் தகுதியாகத்தோற்றும் விசாரணை செய்தபிறகும்] ஷை ஆக்டுகளின் சகல காரியங்களுக்குமாவது குறிப்பிட்ட எந்தக் காரியத்துக்காவது அந்தவிண்ணப்பதாரரை பூஸ்திதிக்குடையவராக ரெஜிஸ்டர் செய்யலாம், அல்லது ரெஜிஸ்டர் செய்யமாட்டேனென்று நிராகரிக்கலாம்.

ஆனால், தகுந்த அதிகாரமுள்ள யாதொருகோர்ட்டாருடைய [டிக்ரி அல்லது] உத்தரவை அனுசரித்தாவது யாதொரு விதி அல்லது சட்ட நிபந்தனையை அனுசரித்தாவது விண்ணப்பதாரர் குத்தகைத் தொகைகளை வசூல் செய்துகொள்ள அர்ஹராயிருந்தால், நோடிஸ் கொடாமலேயாகிலும் [யாதொரு] விசாரணையும் நடத்தாமலேயாகிலும் அவரை பூஸ்திதிக்குடையவரென்று ரெஜிஸ்டர் செய்ய ஜில்லா கலெக்டருக்கு இஷ்டமிருந்தால் அந்தப்படியே செய்யலாம்.

[(2)] [7-வது பிரிவின் நிபந்தனைகளுக்கும் 12-வது பிரிவின் நிபந்தனைகளுக்கும்] தகுந்த அதிகாரமுள்ள யாதொரு ஸிவில் கோர்ட்டார் பிறப்பிக்கும் [யாதொரு] டிக்ரிக்கும் உட்பட்டு, மேலேகண்டபடி ரெஜிஸ்டர் செய்தது - விண்ணப்பதாரர் குத்தகைத் தொகைகளை வசூல் செய்துகொள்ள அர்ஹராயிருக்கிறவரையிலே செலாவணியாய்க்கொண்டிருக்கும்.

விவாதமுண்டாகிற விஷயத்திலே இன்ன நடவடிக்கை நடத்தவேண்டுமென்பது.

6. குத்தகைத் தொகைகளை வசூல்செய்து கொள்ள விண்ணப்பதாரின் பாத்தியதையைக்குறித்துமுக்கியமான ஒருவிவாதம் ஏற்பட்டிருக்கிறதென்று ஜில்லா கலெக்டருக்குத் திருப்திகரமாகத் தெரியவந்தால், அவர் - இதர காரணங்களினால் அந்த விண்ணப்பத்தை ஜாரி செய்யக்கூடாதென்று அபிப்பிராயப்பட்டாலன்றி மற்றப்படி, அந்த விண்ணப்பதாரருக்கு ஒரு ஸிவில் கோர்ட்டிலே தம்முடைய பாத்தியதையை ஸ்தாபித்துக்கொண்டு வரும்படி உத்திரவு செய்யவேண்டும்.

ரெஜிஸ்டர் - செய்ததைக் கலெக்டர் மாற்றலாம் அல்லது ரத்து செய்யலாமென்பது.

7. 5-வது பிரிவின்படி ஜில்லா கலெக்டர் ரெஜிஸ்டர் செய்த யாதொன்றை அவர் - [சம்பந்தப்பட்ட நபர்களுக்கு நோடிஸ் கொடுத்தபிறகு] எப்போதேனும் ரத்து செய்யலாம் அல்லது மாற்றலாம்.

ரெஜிஸ்டர் செய்வதனால் இன்னது உண்டாகுமென்பது.

8. இந்த ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டதெதுவாவது [ஒரு பூஸ்திதியின் விஷயமாகவாகிலும் ஒரு பூஸ்திதியைச் சேர்ந்த பாகத்தின் விஷயமாக வாகிலும்] செலாவணியாய்க் கொண்டிருக்குங் காலத்திலே, அப்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்ட நபர்-எந்தக் காரியங்களுக்காகத் தாம் ரெஜிஸ்டர் செய்யப்படுகிறாரோ அந்தக் காரியங்கள் விஷயமாக ஷை பூஸ்திதி அல்லது பாகத்தில் சென்னப்பட்டணத்து ஒருவருக்கே உரிய பூஸ்திதிகளின் கிராம ஊழியத்தைக்குறித்த 1894-ம் ௵த்து ஆக்டின்படியும் சென்னப்பட்டணத்துப்பரம்பரையான கிராம உத்தியோகங்களைக் குறித்த 1895-ம் ௵த்து ஆக்டின் படியும் ஸர்வேயையும் எல்லைகளையும் குறித்த சென்ன பட்டணம் 1897-ம் ௵த்து ஆக்டின்படியும் ஒரு பூஸ்திதிக்குடையவருக்குள்ள அதிகாரங்களைச் செலுத்தலாகும்; அலுவல்களைச் செய்யலாகும்; ஷை பூஸ்திதியிலாவது பாகத்திலாவது அந்தக் காரியங்கள் விஷயமாக வேறே எந்த நபரும் பூஸ்திதிக்குடையவராகப் பிரவர்த்திக்கவுங்கூடாது, அந்தப்படி பாவிக்கப்படவுங்கூடாது.

ரெஜிஸ்டர் செய்யப்பட்ட நபர் கவர்ன்மென்ட் தீர்வையைச் செலுத்த உட்பட்டிருப்பது.

9. (1) இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கின பிறகு செய்யப்பட்ட யாதொரு ட்ரான்ஸ்பரை அனுசரித்து இந்த ஆக்டின்படி பூஸ்திதிக்குடையவரென்று ரெஜிஸ்டர் செய்யப்பட்ட யாதொரு நபர் - சென்னப்பட்டணம் ஸர்க்கார் தீர்வை வசூலைக் குறித்த 1864-ம் ௵த்து ஆக்டின் காரியங்களுக்காக சம்பந்தப்பட்ட பூஸ்திதியின் அல்லது [ஒரு] பூஸ்திதியைச் சேர்ந்த பாகத்தின் விஷயமாய் நிலத்துக்குடையவராக எண்ணப்படுவார்; மேலும், ரெஜிஸ்டர் செய்யப்பட்ட காலத்திலே சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த பூஸ்திதி அல்லது பாகத்துக்குச் சேரவேண்டியதாய், அல்லது அந்தப்படி ரெஜிஸ்டர் செய்தது செலாவணியாய்க் கொண்டிருக்கும் காலத்தில் எப்போதாகிலும் அதற்குச் சேரவேண்டியதாய் [ஷை ஆக்டின்படி நிலத்துக்குடையவரிடத்திலிருந்து வசூல் செய்யப்படக்கூடிய சகல தொகைகளுக்காகவும்] அந்த ஆக்டின்படி அவர்மேல் [முதலில்] நடவடிக்கை நடத்தப்படும்.

(2) யாதொரு பூஸ்திதியைச்சேர்ந்த ஒரு பாகத்தின் சொந்தக்காரருக்கும் அதன் விஷயமாய் பூஸ்திதிக்குடையவரென்று இந்த ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்ட நபருக்கும் அப்படிப்பட்ட பாகத்தின் [விஷயமாய்] செலுத்தத்தக்க தொகை இவ்வளவென்பதைக்குறித்து சட்டசம்மதமான உடன்படிக்கை ஏதுவாவது ஏற்பட்டிருக்கிற விஷயத்திலே, [அந்த உடன்படிக்கை] அநியாயமாயிருக்கிறதென்று ஜில்லா கலெக்டருக்குத் தோற்றினாலொழிய, [ஷை] தொகையை அந்த உடன் படிக்கைக்கு ஒத்தபடி நிர்ணயிக்கவேண்டும். அப்படிப்பட்ட உடன்படிக்கை எதுவும் ஏற்பட்டிராத விஷயங்களிலாவது, உடன் படிக்கை ஏற்பட்டிருந்து அது அநியாயமாயிருப்பதாகத் தோற்றுகிற விஷயங்களிலாவது [ஜில்லா கலெக்டரானவர்] சென்னப்பட்டணம் ஸர்க்கார தீர்வை வசூலைக்குறித்த 1864-ம் ௵த்து ஆக்ட் 45-வது பிரிவில் சொல்லியிருக்கிற மாதிரியாக [ஷை] தொகையை [நிச்சயிக்க வேண்டும்.]

[(3) ட்ரான்ஸ்பர் செய்கிறவராவது அவருடைய சட்ட சம்மதமான பிரதிநிதியாவது-சென்னபட்டணம் ஸர்க்கார் தீர்வை வசூலைக்குறித்த 1864ம் ௵த்து ஆக்டின்படி அவருக்கு ஏற்படும் யாதொரு பொறுப்பிலிருந்து இந்தப் பிரிவிலுள்ளதெதனாலும் இந்தப் பிரிவிலுள்ளதெதனாலும் நிவர்த்திக்கப்படமாட்டார்.]

தொகை கட்டத்தவறினால் இன்ன நடவடிக்கை நடத்தவேண்டுமென்பது.

10- ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவ[ராவது அவருடைய சட்ட சம்மதமான பிரதிநிதியாவது] இந்த ஆக்டின்படி பூஸ்திதிக்குடையவரென்று ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்து அவர் பாக்கியைச் செலுத்தத் [தவறிப் போனதனால் அதை] வசூல் செய்வதற்காக, எந்த பூஸ்திதி அல்லது [பூஸ்திதியைச் சேர்ந்த] பாகத்தின் விஷயமாய் பூஸ்திதிக் குடையவரென்று அவர் ரெஜிஸ்டர் செய்யபட்டிருக்கிறாரோ அந்த பூஸ்திதி அல்லது பாகத்தின்மேல் நடவடிக்கை நடத்துவது அவசியமாய்விட்டால், கலெக்டராவது இது விஷயமாய்க் கலெக்டரால் அதிகாரங் கொடுக்கப்பெற்ற வேறே உத்தியோகஸ்தராவது - சென்னபட்டணம் ஸர்க்கார் தீர்வை வசூலைக்குறித்த 1864-ம் ௵த்து ஆக்டின் 36-வது பிரிவில் நிர்ணயிக்கப்பட்ட நோடிஸுக்கு ஒரு நகலை, விற்பனைக்கு ஒரு மாதத்திற்குக் [குறையாமல்] முன்னதாக பூஸ்திதியின் சொந்தக்காரருக்கு[ம்] சேர்ப்பிக்கும்படிச் செய்யவேண்டும்.

தவறுதல் காரணமாக ரெஜிஸ்டர் செய்ததை ரத்து செய்வது.

11. ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவ[ராவது அவருடைய சட்ட சம்மதமான பிரதிநிதியாவது] இந்த ஆக்டின் படி [பூஸ்திதிக்குடையவரென்று ரெஜிஸ்டர் செய்யப் பட்டிருந்து அவர் தொகை கட்டத்தவறியது காரணமாக பூஸ்

திதியின் சொந்தக்காரர் [தொகை கட்டத்தவறினவரிடத்திலிருந்து] சேரவேண்டிய பாக்கியைச் செலுத்தினாலும், பூஸ்திதியின் எந்த பாகமாவது பாக்கி வசூல் செய்யப் படுவதற்காக விற்கப்பட்டாலும், [தொகை கட்டத்தவறினவர்] இந்த ஆக்டின்படி பூஸ்திதிக்குடையவரென்று ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பதை ஜில்லா கலெக்டர் [ரத்து செய்யலாம்]; [அப்படி ரத்து செய்யப்பட்ட தேதியிலிருந்தும், அதற்குமேல் அப்பீல் செய்யப்பட்டிருக்கும் விஷயங்களிலே, அதை ஊர்ஜிதப்படுத்தி அப்பீல் அதிகாரி பிறப்பிக்கும் உத்தரவின் தேதியிலிருந்தும்], [தொகை கட்டத்தவறினவர்] ஒரு பூஸ்திதிக்குடையவருக்குள்ள அதிகாரங்களைச் செலுத்துவதும் அலுவல்களைச் செய்துவதும் நின்றுபோவதல்லாமல் [அவர்-சென்னபட்டணம் ஸர்க்கார் தீர்வை வசூலைக் குறித்த 1864-ம்௵த்து ஆக்டின் காரியங்களுக்காக நிலத்துக் குடையவராக பாவிக்கப்படவு மாட்டார்; மேலும், அந்த தேதியிலிருந்து, சென்னபட்டணத்து ஒருவருக்கே யுரிய பூஸ்திதிகளின் கிராம ஊழியத்தைக்குறித்த 1894-ம்௵த்து ஆக்டின்படியும், சென்னபட்டணத்துப் பரம்பரையான கிராம உத்தியோகங்களைக் குறித்த 1895-ம்௵த்து ஆக்டின்படியும், ஸர்வேயையும் எல்லைகளையும் குறித்த சென்னபட்டணம் 1897-ம்௵த்து ஆக்டின்படியும் பூஸ்திதிக்குடையவருக் குள்ள அதிகாரங்களும் அலுவல்களும் மறுபடியும் அமுலுக்குவரும்].

ஜில்லா கலெக்டர்களின் உத்தரவுகள் எழுத்துமூலமாயிருக்கவேண்டு மென்பது.

12. [(1)] ஜில்லா கலெக்டரானவர் - [இந்த ஆக்டின்படி தாம்] ஜாரிசெய்யும் ஒவ்வொரு உத்தரவுக்கும் தம்முடைய காரணங்களை எழுத்து மூலமாய்ப் பதிவுசெய்யவேண்டும் [அந்த உத்தரவின் ஒரு நகலை, அதனால் பாதிக்கப்படும் நபர்களில் எவர்களின் மேல் விலாசங்களை விசாரித்தறியக்கூடுமோ அவர்களெல்லோருக்கும் தபால் மூலமாய் ரெஜிஸ்டர்செய்து அனுப்பவேண்டும்.]

ரெவினியு போர்ட்டாருக்கு அப்பீல்.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு உத்தரவின்மேலும், [மேலே கண்டபடி அனுப்பின தேதியிலிருந்து] மூன்று மாதத்துக்குள் ரெவினியு போர்டாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாகும்.

இன்ஜங்ஷன் என்னும் தடை உத்தரவுக்காக வியாஜ்ஜியங்கள் தொடருவதும் விண்ணப்பங்கள் செய்துகொள்ளுவதும் கூடாதென்பது.

13. ஒரு ஜில்லா கலெக்டரை இந்த ஆக்டின்படி நட வடிக்கை நடத்தக் [கூடாதென்று நிர்ப்பந்திக்கும் பொருட்டு] இன்ஜங்ஷன் என்னும் தடை உத்தரவுக்காக யாதொரு வியாஜ்ஜியம் நடத்தவுங் கூடாது விண்ணப்பம் செய்துகொள்ளவும் கூடாது மேலும், ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களையாவது யாதொரு கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தரையாவது அவர் நல்லெண்ணத்துடன் இந்த ஆக்டின்படி செய்த அல்லது செய்ததாகப் பொருள்படுகிற யாதொரு காரியத்தின் விஷயமாய் யாதொரு வியாஜ்ஜியத்துக்குக் கட்சிக்காரராக்கவுங் கூடாது, அவர் யாதொரு பொறுப்புக்கும் உட்படவுமாட்டார்.

விதிகள் செய்ய அதிகாரம்,

14. பிரதேச கவர்ன்மெண்டாருடைய அங்கிகாரத்துக்குட்பட்டு, ரெவினியு போர்ட்டார் - இந்த ஆக்டின் காரியங்களை நிறை வேற்றுவதற்காக இந்த ஆக்டுக்கு விரோதமாயிராத விதிகள் ஏற்படுத்தலாம்.

DEPARTMENT OF AGRICULTURE, MADRAS.

——:0:——

தென்னார்க்காடு ஜில்லா விவசாயத்தொழில் செய்யும் மிராஸ்தாரரும் விவசாசங்கமெம்பருமாகிய ஒருவருக்கும் விவசாயத்தொழில் செய்யும் கிராமவாசியாகிய ரெட்டியாருக்கும் ஒற்றைநாற்றுப்பயிர்செய்யும் விஷயமாய் நடந்த சம்பாஷணை.

மெம்பர்.—ஐயா ரெட்டியாரே, இந்த நஞ்சை நிலம் சாகுபடிக்காக தழைபோட்டு தயார்செய்து வைத்திருப்பது உம்முடையதா.

ரெட்டியார்.—ஆமாம் ; ஏன்.

மெம்பர்.—இந்த நிலத்தில் என்ன செய்யப்போகிறீர்.

ரெட்டியார்.—நெல் விதைக்கப்போகிறேன்.

மெம்பர்.—(1) இந்தநிலம் எவ்வளவு விஸ்தீரணம் ; (2) இதற்கு எவ்வளவு நெல் விதைக்கப்போகிறீர் (3) நாற்று விட்டால் எவ்வளவு விடுவீர்.

ரெட்டியார்.—(1) இது ஒரு காணி ; (2) இதற்கு கலநெல், அதாவது, பட்டணம் 30 படி விதைக்கப் பேர்கிறேன் ; (3) நாற்று விட்டால், 2 கலம், அதாவது, பட்டணம் 60 படி செல்லும்.

மெம்பர்.—ரெட்டியாரே நான் சொல்லும் எனது அனுபவத்தை நம்பி அந்தப்படி செய்தீரானால் உமக்கு நல்ல லாபமும் சௌக்கியமுமிருக்கிறது, அந்தப்படி செய்கிறீரா.

ரெட்டியார்.—இலாபமிருந்தால் செய்கிறேன்.

மெம்பர்.—இந்த நிலத்தில் நெல் விதைப்பதை நிறுத்தி, ஒரு தளயில், அதாவது 8 செண்டு நிலத்தில், 8 படி நெல்மட்டில் நாற்றுகவிட்டு 30 நாளைக்குள் ஒவ்வொரு பயிராக வழக்கம்போல் இடம் விட்டு நட்டுவிடும்.

ரெட்டியார்.—என்ன ஐயா ; நாங்கள் வழக்கமாய் 30 படி நெல் விதைக் காலாக விதைத்து, களைபறிச்சு கலப்பை போட்டால் சில வருஷத்தில் பயிர் கரைந்து, காணமற்போகிறதே, அது எப்படி 7-8 படி நெல் விதை ஒரு காணிக்குப் போதும்.

மெம்பர்.—அது உண்மைதான், அதற்குக்காரணம் சொல்லுகிறேன் : ஒரு காணி நிலத்தில் 30 படி நெல்லை விதைத்தால் அந்த நிலம் முழுதும் பரம்படித்து நாற்றுவிடும் நிலத்தைப்போலல்லாமல் மேடு பள்ளமாக விருப்பதால் பள்ள நிலத்தில் விழுந்த முளை நெல் அழுகியும் மேட்டில் விழுந்தது காய்ந்து முளையாமல் போயும் சில நெல் மிதிபடாமலிருக்குந் தழையின்மேல் விழுந்து முளையாமலும் அந்த நிலத்தில் விதைப்பதற்குத் தண்ணீர் நிறுத்தி விதைத்தபின் ஜலம் வடிய விடுங்காலத்தில் நெல்விதையை ஜலத்தோடு அடித்துக்கொண்டுபோயும் இப்படிக்கு நெல் விதைக்கும்போதே நஷ்டமாகிறது. அதாவது நாற்று விடவேண்டுமானால் அவைகள் ஒன்றோடொன்று சமீபத்தில் முளைத்து அதன் போஷணைகளின் அனுகூலத்தால் பயிர் கெடாமல் நாற்றுப்பலிதமாகும் ; அப்படிக்கில்லாமல், ஒரு காணியில் 30 படி நெல் விதைப்பதால். அந்த முளைப்பயிருக்கு இடைவெளி அதிகப்பட்டு அதில் களை முளைத்து பயிரையும் மூடி சாறல். காற்றிருல், நோய்கள் கண்டு பயிர் கரைந்தும் கெட்டுப்போய் இப்படி பலவித இடைஞ்சல்களினால் பயிர் நஷ்டமடைந்து போகிறதால் 30 படி ஒரு காணிக்கு நடாமலும் போகிறது.

ரெட்டியார்.—இப்படி விதைத்தால்தான் பயிர் நஷ்டமாய்ப்போகிறதென்கிறீரே, நாங்கள் நாற்றுவிட்டால் கொஞ்ச நிலத்தில் அடர்த்தியாய்விட்டு வைக்கிறோமே, அந்த நாற்று ஏன் 60 படி நெல் நாற்று ஒரு காணிக்குக் காணமலும் போகிறது.

மெம்பர்.— அதற்கு காரணம் சொல்லுகிறேன் : நீங்கள் விதை நெல்லை நாற்றங்காலில் அளவிற்கு மிஞ்சி அதிக அடர்த்தியாக ஒன்றின்மேல்ஒன்றாக நெல் ஏறிக்கொண்டிருக்கும்படி விதைத்து, அந்த நெல்லு முளைகள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு செழிப்பாய் வளர்வதற்கில்லாமல் நெருக்கத்தால் சிருமையடைந்தும் அந்தப் பயிர் சீக்கிரத்தில் வளர வொட்டாமலும் தடிக்க வொட்டாமலும் நாற்றங்காலைக் காயப் போட்டும் அந்தப்பயிர் 40, 50 நாள் வரையில் வைத்து அதைப்பிடுங்கி 10, 15 பயிர் சேர்த்து நடுவதால் ஒரு காணிக்கு 60 படி நெல் பயிர் காணமல் போகிறது.

ரெட்டியார்.—நாங்கள் வழக்கமாய் 10, 15 பயிருக்குமேல் பிடித்து நட்டு அந்தப் பயிரிலேயே 7, 8 கதிர் தானே காணுகிறது, ஒற்றைப்பயிராக நட்டால் ஒன்று இரண்டு கதிர்தானே காணும்.

மெம்பர்.—அப்படிக்கல்ல, ஒற்றைப்பயிர் நடும் வழக்கம் நமக்கு ஏற்கனேயாயுமிருப்பதை நாம் கவனிக்க இல்லை ; விதைத்த பயிரை கலப்பை போகும்போது ஒன்று இரண்டு பயிர்தான் சேர்த்து நடுகிற வழக்கம் ; அதில், 10, 15 கதிர் காணுகிறதை பார்த்திருக்கிறோம் ; அடர்ந்த நாற்று விடுவதில், நாற்றங்காலிலேயே அந்தப்பயிர் தடித்துவளர ஆரம்பிக்கும் பருவகாலத்தையெல்லாம் சிருமையோடு வளர்த்து அதைப் பிடுங்கும்போதும் கழிகொண்டு அடித்து கசக்கி அதை நடும்போதும் தனித்தனியாகப் பயிர் வேரூன்றி செழித்து வருவதற்கில்லாமல் 10, 15 பயிர்களைச்சேர்த்து நட்டுவிடுவதால் அதன் வேர்கள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டும் சேர்ந்து நட்டப்பயிர்கள் ஒன்றோடொன்று பிடித்துக்கொண்டு மட்கியும் கெட்டுப்போய் பூமியின் கொழுமையால் 10, 15 நாள் கழித்து பசுமை கண்டு சிருமையோடு வளர்ந்து மழையின் உதவியாலும் பூமியின் குணத்தாலும் வளர்ந்து கதிர் காணுகிறது இந்த ஒற்றை நாற்றுக்காக தயார்செய்யும் நாற்றங்கால் பயிரானது ஜாஸ்தியான அடர்த்தியில்லாமலும் விதைகால்போல் இடைவெளியில் பயிர் நஷ்டமில்லாமலும், முளைத்து இடைஞ்சலில்லாமல், செழுமையோடு வளருகிறது, அந்தப்பயிர் 25 நாளைக்கெல்லாம் நடத்தகுந்த வளர்ச்சியடைகிறது ; அதைப்பிடுங்கி கழியில் அடித்து கசக்காமல் மண்ணை அலம்பிவிட்டு ஒவ்வொரு பயிராக நட்டால் அந்தப் பயிர் நட்டதினமுதல் வளரவும் பக்க கிளைகள் கிளைக்கவும் ஆரம்பித்து தினேதினே வளர்ந்து 10, 15 நாளைக்கெல்லாம் 15. 20 பயிர்கள் செழித்து வளர்கிறது. இந்தப்பயிர் செழிப்பாய் துவக்கமுதல் சிருமையில்லாமல் வளர்வதால் ஒவ்வொரு பயிரும் கதிர் காணுகிறது; அடர்ந்த நாற்றுப்பயிர்கள். கதிர்காணும்போது பொந்தை கட்டிவிட்டதென்று சில கதிர்கள்மாத்திரம் விட்டு மற்றப்பயிர்கள் கட்டையாக நின்றுவிடுகிறது.

ரெட்டியார்.—ஒற்றை ஒற்றையாக நடுவதற்கு ஜாஸ்தியான ஆள்கள் பிடிக்கும், அதுவும் பழக்கமில்லை, அப்படி செய்யமுடியாது.

மெம்பர்.—அப்படியல்ல, நீர் ஒற்றை நடவுநட்டுப்பாரும்: வழக்கமாய் ஒருகாணி நடவேணுமானால் 15 ஆள்கள் செல்லும்; இந்த ஒற்றைநாற்று நடுவதற்கு கூலி ஆட்களுக்குச் சுலபமாயும் கஷ்டமில்லாமலு மிருப்பதால் 10 ஆளுக்குமேல் செல்லாது.

ரெட்டியார்.—விதைகால் சாகுபடியும் ஒற்றை நடவுபோல் தானே இருக்கிறது, அந்தப்படியே விதைத்துவிடுகிறேன்.

மெம்பர்.—அப்படி விதைப்பதால் உண்டாகும் விதை நஷ்டங்களை முன்னமேயே சொல்லியிருக்கிறேன் அதைப்பாராவிட்டாலும் அந்தப்பூராநிலத்திலும் விதைத்தது முதல் முளைக்குங்களைகள் பிடுங்குஞ்செலவு அந்தப்பயிரை கலப்பை போடுவதென்று அடர்ந்த பயிரைப்பிடுங்கி இல்லாத இடத்தில் நடுவதின் செலவுகளும் நாற்று நடும் செலவைவிட 3 மடங்கு அதிகப்படுகிறது அது தவிர அந்தப் பயிர் வளர 30 நாளைக்கு ஒரு காணி நிலத்திற்குத் தண்ணீர்பாய்ச்சி பாதுகாப்பதைவிட 8 செண்டு நிலத்தில் வேலைசெய்து பாதுகாப்பது சுலபம். அந்த ஒரு காணி நிலத்தில் எரு தழைபோட்டு விதைத்த பயிரும் முளைத்த களைகளும் ஒரு மாதத்தில் அந்த எருவின் சாரத்தை உட்கொண்டு குறைத்துவிடுகிறது இதனால் விதைத்து பயிர்செய்வதைவிட ஒற்றைநாற்றுகவிட்டு நடுவதே குறைந்த செலவும் உயர்ந்த வருமானமும் உள்ளதாக விருப்பதைக் காணலாம்.

ரெட்டியார்.—நாற்றுவிடும் 8 செண்டு நிலத்திற்கு களைபிடுங்க வேண்டாமோ.

மெம்பர்.—நாற்று நிலத்தை சமப்படுத்தி கொஞ்சம் விதைகாலைவிட அடர்ந்த பயிராகவிடுவதால் ஜாஸ்தியாக களைகளும் முளையாது கொஞ்சமுளைத்திருந்தாலும் அதை எடுக்கவேணும் என்று தோற்றினால் எடுக்கலாம், இல்லாவிட்டால் அப்படியே நாற்று பிடுங்கும்போது அந்தக்களைகள் கழிந்துவிடும்.

ரெட்டியார்.—அப்படியானால் அந்த விதை நெல்லைக் கொஞ்சம் காட்டினால் பார்க்கிறேன்.

மெம்பர்.—வேறு நெல்லு கிடையாது நாம் சாகுபடிசெயயும் கெருடன் சம்பா, சடைச்சம்பா, பெருஞ்சம்பா முதலியதுகள் தான் விதைக்கிறது.

ரெட்டியார்.—அது எப்படி இத்தனை நாளாய் ஏன் இந்தமாதிரி செய்யவில்லை அது வேறு நெல்லாகத்தான் இருக்கும்.

மெம்பர்.—அப்படி வேறு நெல்லாகவிருந்தால் நான் அதைச்சொல்லுகிறேன் இதே நெல்லுதான்.

ரெட்டியார்.—இந்த நெல்லுகளை யாராவது ஒற்றை நாற்றுகவிட்டு நட்டுப்பார்த்திருக்கிறதா.

மெம்பர்.—ஆம்: நான் என்னுடைய பண்ணையில் சென்ற வருஷத்தில் 5 ஏகருக்கு 20 படி நெல்விட்டு நடப்பட்டு, 225 கலம் நெல் கிடைத்தது.

ரெட்டியார்.—அப்படி யிருந்தால் உங்கள் நிலம் நல்ல கொழுமையுள்ளதும் அதிகமாகத் தழைபோட்டுப் பார்த்திருப்பீர்கள்.

மெம்பர்.—அப்படி அவசியமேயில்லை: என் பண்ணையில் 5 ஏகர் நிலங்களில் நல்ல மணல் பாங்குநிலம் தண்ணீர் அடிக்கக்கூடிய சவர்கால் நிலம், கீழ் கலிச்சல் உள்ள நிலம், எல்லாவித பூமியிலும் நடப்பட்டு மாதிரி பார்த்திருக்கிறது. எந்த நிலத்திலும் அவைகள் பின்வாங்க இல்லை இப்படி செழித்து வருவதற்குக் காரணம் முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது.

ரெட்டியார்.—இந்த ஒற்றை நாற்றுப் பயிர் தண்ணீர் அடிக்கும் வெள்ளச்சாய்கால் நிலத்தில நட்டால் இந்த ஒற்றைப்பயிரையும் அடித்துக்கொண்டு போய்விடும், அதில் செய்யமுடியாது.

மெம்பர்.—அப்படிப்பட்ட நிலத்தில் தான் அவசியம் இந்த ஒற்றை நாற்றை நடவேண்டும். அந்த நிலத்தில் அடர்ந்த நாற்று நட்டால் அவைகள் வேரூன்றி நிலைத்து நிற்க 15, 20 நாள் செல்லும்; அதற்குள் வெள்ளமடித்தால் அந்த நடவுகள் சாய்ந்து நஷ்டமடைந்துவிடும் இந்த ஒற்றை நாற்றுகள் நட்டதினமுதல் நிலைத்து வேரூன்றி கிளைக்கத்தொடங்குவதால் அந்தப்பயிரை வெள்ளமடித்து கெடுதி செய்யாது.

ரெட்டியார்.—இந்தமாதிரி செய்வதென்று உங்களுக்கு யார் சொல்லிசெய்தது.

மெம்பர்.—நான் பஞ்சகுப்பத்தில் கலெக்டர் துரையவர்கள் கச்சேரியில் கூடும் டிஸ்திரிக்டு விவசாய சங்கத்தில் மெம்பராக விருக்கிறேன்.

அந்த சங்கத்தில் இதன் நன்மையை பிரஸ்தாபித்ததில் தெரிந்தும் பாலூர் கவர்ன்மெண்ட் பாரம் மானேஜர் சுப்பிரமண்ணி யய்யரவர்களால் தெளிவாய் போதிக்கப்பட்டு ஷை பாரத்தில் எல்லா நஞ்சை நிலங்களும் ஒற்றையாக நட்டிருந்து அதன் உற்பத்தியும் பார்த்து தெரிந்துகொண்டேன்.

ரெட்டியார்.—சரி, அப்படியானல் நானும் நேரில் பார்க்கவேணும் எங்கள் ஊரிலும் எல்லாரும் நட்டால் தான் நானும் நடுவேன், அப்படிக்கில்லாவிட்டால் முடியாது.

மெம்பர்.—அப்படி யானல் எங்கள் ஊரில் என் பண்ணையிலும் இதைப் பார்த்த குடித்தனக்காரர்களும் நட்டிருக்கிறார்கள், அதைப்பார்த்துத் தெரிந்துகொண்டு வந்து செய்யலாம்.

ரெட்டியார்.—எனக்கு இப்போது ஒழிவு இல்லை யாராவது முந்திபார்த்து விட்டுவந்து நட்டிம், பார்க்கிறேன்.

மெம்பர்.—இதைப்போல் எல்லாரும் சொன்னல் யார் தான் தைரியமாய்ச்செய்கிறது, உம்மைப்போல் பெரிய பட்டாதார்களும் தெரிந்தவர்களும் தானே அதைப்பார்த்து செய்து மற்றவர்களுக்கு காண்பிக்கவேணும்.

ரெட்டியார்.—உங்கள் ஊரில் உங்களைப்பார்த்து எல்லாரும் இந்தப்படி செய்கிறார்கள்.

மெம்பர்.—ஆம், இதைப்பார்த்து எங்கள் ஊரிலும் பக்கத்து கிராமத்திலும் இந்தப்படி ஒற்றை நாற்றுப்பயிர்செய்ய துவக்கிவிட்டார்கள்.

ரெட்டியார்.—இந்தப்படி நடுவதால் என்னலாபம் கிடைக்கிறது.

மெம்பர்.—விதை நெல்லில் மாத்திரம் தவராமல் நாற்றுக விடுவதில் ஏகர் 1 க்கு 4, 5 ரூபாய்க்குக் குறையாமல் கிடைக்கும் பிறகு விளைச்சலும் காலத்திற்குத் தருந்தபடி கிடைக்கும்; விதைகால் விதைப்பதிலும் களைபறிப்பது கலப்பைபோடுவது முதலிய கூலிச்செலவுகளினாலும் விதையாலும் 4, 5 ரூபாய்க்கு மேற்பட்டே லாபமிருக்கிறது வழக்கமாய்நட்ட நாற்று அறுவடைக்கு 20 நாளைக்கு முன் அறுவடையாகும் தடித்த பயிரானதால் கொஞ்சம் காய்ச்சலு தாங்கும், நோயால் பிடிக்காது.

ரெட்டியார்.—நீங்கள் சொன்னது எனக்கு இன்னும் சந்தேகமாயிருக்கிறது நான் யோஜனைசெய்து எங்கள் குடித்தெய்வ கோவில் பூசாரியைக் கணிகேட்டு புதிதாகவிருப்பதால் அடுத்த வருஷமாவது கொஞ்சம் பார்க்கிறேன்.

தோட்ட நிலங்கள்.

இவைகள் அற்பமண்கண்டமுள்ள கடைசித்தரமான செவ்வல் தரையை உரமும் ஏராளமான கரம்பை (குளத்துவண்டல்) அடித்துத் திருத்தியனவாயிருக்கின்றன. ஐந்து வருஷகாலமாய் கேப்பையை (ராகியை) (மழை) காலத்தில் பார்போட்டு பாரின் இருபக்கத்திலும் நட்டு பார்களுக்கு ஊடே (மத்தியில்) இருக்கும் வாய்க்கால்களில் தண்ணீர்ப்பாய்ச்சிவந்ததில் சாதாரணமாய் பாத்தியில் நட்டுச்சாகுபடி செய்வதைக்காட்டிலும் குறைந்த தண்ணீர் செலவுடனே விளைவும் அதிகமாய் கண்டுவருகிறது.

பெரிய அகன்ற நாட்டுக்கலப்பையைவைத்து முழத்துக்கு ஒரு சாலடித்து திரும்பவும் சாலை ஒட்டிய மடக்கி பார்போட்டுவிடலாம். இவைகளை மண்வெட்டியைவைத்துக் திருத்திக்கொண்டு குறுக்கே 20 அடிக்கு ஒரு பொழி தண்ணீரும் வாய்க்கால்களும், போட்டுக்கொள்ளலாம் இப்படிக்கில்லாமல் அதிக நீளமாய்ப்போனல் தண்ணீர் செவ்வையாய் ஏறிப்பாயாது.

பாத்திகளில் நடுவதைக்காட்டிலும் பார்மேல் நட்டால் வெங்காயம் மிகவும் நன்றாய் உண்டாகிறது. வெங்காயம் நடத்தரை இறுகியிருக்கும்படி தண்ணீர் விட்டு நடுமுன்பாரின் உச்சியை செவ்வையாய் அமு

CALCUTTA HIGH COURT.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

சிவில் ரூல். நெ. 3291 of 1908.

ஜட்ஜிகள்: { மிர். ஜ. காஸ்பெர்ஜ் / மிர். ஜ. டாஸ் } முன்பாக.

ஜாய் நாரயண் ஜானு......பிரதிவாதி......மனுதாரன்

Vs.

உபேந்தர நாராயண் ராய். வாதி எதிரி.

ப்ராஸிகியூட் செய்வதற்கு அனுமதி கொடுத்தல். ஹைகோர்ட்டு நடவடிக்கையின் பழக்கம் கி. பு. கோ. (5 of 1898) 195, 439-வது பிரிவுகள்; சி. பு. கோ. (14 1882) 662-வது பிரிவு.

கேஸின் விபரம்:—காண்டே முனிசிபுகோர்ட்டில் நடந்த ஓர் சிவில் கேஸில் ஷமனுதாரன் ஓர் தஸ்தாவேஜியை ஒப்புக்கொள்ளவில்லை. ஆனல் அப்படிப்பட்ட தஸ்தாவேஜி பிறந்ததற்கும் எதிரியின் வக்கில் அதில் கையெழுத்து போட்டதற்கும் சாக்ஷிகளைக்கொண்டுருஜு செய்யப்பட்டிருப்பதினல் ப்ராஸிகியூட் செய்வதற்கு அனுமதிகொடுக்க இதுதகுந்தகேசென்று முனிசிபு அபிப்பிராயப்பட்டு அனுமதிகொடுத்தார். அந்த அனுமதியை ஜில்லாஜட்ஜும் ஊர்ஜிதம் செய்தார், பிறகு மனுதாரன் கி. பு. கோ. 439-வது பிரிவின்படி ஹைகோர்ட்டுக்கு மனுசெய்துக்கொண்டான். அதன்பேரில் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ரேட்டுக்கு நோட்டீசு கொடாமல் ஜில்லாஜட்ஜிக்கு நோட்டீசு கொடுத்து விசாரணை நடத்தப்பட்டது.

தீர்மானம்.

முனிசிபு கோர்ட்டில் மனுதாரனை விசாரிக்கையில் மேற்கண்ட தஸ்தாவேஜியை அவனுக்குக்காண்பிக்கவேயில்லை பத்திரத்தை அவனுக்கு காண்பித்திருந்தால் அது பலானதென்று தெரிந்துக்கொண்டு அவன் அதில் கையெழுத்து போட்டதை ஒப்புக்கொண்டிருப்பான். ஆகையால் இரண்டு கீழ்கோர்ட்டாரும் செய்த உத்தரவு பிசகென்று கண்டு முனிசிபு ப்ராஸிகியூட்செய்வதற்கு அனுமதி கொடுத்ததைரத்து செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் வால்யம் 9 பக்கம் 705
13 க. லா. ஜ. 216.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ 58 of 1910.

ஜட்ஜி:—மிர். ஜ—அப்டுர்ரஹீம்.

நாராயணசாமிசெட்டி......பிரியாதி.......மனுதாரன்

Vs.

வடிவேலு செட்டிவகையரா.........குற்றவாளிகள்.

பிரியாது—சிவில்கோர்ட்டில் தாவாசெய்யக்கூடியது

கேசின் விபரம்:—பிரியாதியும், இரண்டாவது குற்றவாளியும், முதல்சாக்ஷியும் ஒன்று சேர்ந்து பாகஸ்தர்களாய் வியாபாரம் செய்பவர்கள், இவர்கள் மூவரும் இரண்டாவது சாக்ஷிக்கு ஒரு பாண்டு எழுதிக்கொடுத்து கொஞ்ச நகைகளை அடவு வைத்து ரூபாய் 1150 கடன்வாங்கிக்கொண்டு கொயம்புத்தூர்ஜில்லா பொல்லாச்சி கிராமத்திற்குப்போய் சிலதான்யங்கள் பிடித்து மூட்டைகளைரயில் மார்க்கமாய்போத்தனூர் ஸ்டேஷனில் வாகன்களில் அடிக்கி பிரியாதியின் பேருக்கு ரயில்பாஸ்வாங்கி பிரியாதியினிடம் கொடுத்தார்கள், முதல் எதிரி (குற்றவாளி) தன் சுயவேலையைக்கவனிப்பதுமல்லாமல் கமிஷன் ஏஜண்டாகவுமிருந்தான். இவர் 2-வது குற்றவாளியின் மைத்துனர், இந்த மூட்டைகளையெல்லாம் 1-ம் குற்றவாளியின் மூலமாய் விற்பனைசெய்தால் மிக்கலாபம் கிடைக்குமென்று 2-து எதிரி பிரியாதிக்குச் சொன்னதின் பேரில் அவர் அதை வாஸ்தவமென்று நம்பி ரயில் வேபாசில் கையெழுத்து செய்து முதல் எதிரியிடம் கொடுத்துவிட்டார். ஆனல் மூட்டை ஒன்று ரூபாய் 10-க்கு குறைவாய் விற்கலாகாதென்றும் வித்த முதலிலிருந்து 100-க்கு 1 கமிஷன் பிடித்துகொண்டு மிகுதியை அவர்கள் கடன் வாங்கின ஆசாமியாகிய 2-ம் சாக்ஷியினிடம் கொடுத்துவிடும்படி சொன்னன். 1-ம் எதிரி அதற்கு ஒப்புக்கொண்டு பிறகு மூட்டைகளை விற்பனைசெய்து வித்த மொத்தத்தில் கமிஷன்பிடித்துக்கொண்டு மிகுதியை 2-ம் சாக்ஷிக்குச்சேர்ப்பிக்காமல் அவர்களே அந்த பணத்தை அவர்களுடைய சொந்த காரியங்களுக்குப் பிரயோகித்தார்களென்று பிரியாதி போலீசில் தாவாசெய்து தன்பணத்தைத்தான் பெற்றுக்கொள்வதற்கு இது சுலுவான மார்க்கமென்று முதல் கிலாஸ் மாஜிஸ்ட்ரேட் கண்டு இப்படிப்பட்ட வியாஜ்ஜியம் சிவில் கோர்ட்டில் தாவா செய்வதற்குத் தகுமென்று தீர்மானித்து மனுவை கி. பு. கோ. 203-வது பிரிவின்படி தள்ளிவிட்டார். அதன் பேரில் கி. பு. கோ. 435, 439-வது பிரிவுகளின்படி ஜில்லா ஜட்ஜிக்கு மனுகொடுத்ததில் அவர் வித்த மொத்தம் பாகஸ்தர்களில் ஒருவரிடத்தில் தான் முடிவில் சேர்ந்ததென்று கண்டு சிவில் கோர்ட்டில் தாவாசெய்துக்

கொள்ளும்படிச்சொல்லி மனுவைத்தள்ளுபடி செய்து விட்டார். அந்த உத்திரவின்பேரில் இந்த ரிவிஷன் மனுகொண்டு வரப்பட்டது.

உத்தரவு.

ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவை ரத்துசெய்து விடவேண்டியது தான். எதிரிகள் இருவரும் மூட்டைகளை விற்று வந்த தொகையை ஒப்பந்தப்படிக்கு கடன்தாரனுக்குச் செலுத்தாமல் அவர்களுடைய சொந்த விஷயத்திற்குப் பிரயோசனப்படுத்திக் கொண்டு நம்பிக்கைத்துரோகம்செய்தவர்கள்தானென்பது தெளிவாய் ஏற்படும்பட்சத்தில இந்த எதிரிகளும் வாஸ்தவத்தில் குற்றவாளிகள்தானென்று கண்டு கீழ் கோர்ட்டுகளின்உத்தரவை ரத்துசெய்துவிட்டுமறுபடியும்கேஸைத்திரு விசாரிக்கும்பொருட்டு மனுவைமறுபடியும் முதல்கிலாஸ் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பிவிடப்பட்டது.

மிர்.K. விஸ்வநாத சாஸ்திரி, அப்பில்வாதியின்வக்கீல் பப்ளிக் ப்ராசிகூட்டர், ரெஸ்பான்டென்ட் வக்கீல்.

லாகூர் இந்தியின் கேசுகள் 9-வது வால்யம் 726 2 ம. வி. நோ 125.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்.

கிரிமினல் அப்பீல் நே 469 of 1910.

ஜட்ஜ்:—மிர் ஜ. எய்லிங். முன்பாக.

ரங்கன்கோரவன்......மனுதார்கள். அப்பீல்வாதிகள்

Vs.

சக்கிரவர்த்தி.....................ரெஸ்பான்டென்டு

இ. பி. கோ (Act 45 of 1860)147, 304-வது பிரிவுகள். கலகம். தாத்பரியம்.

அநேகர் ஒன்று சேர்ந்து கலகம் செய்தார்கள் அதில் 2-வது வாதி மாத்திரம் தான் 304-வது பிரிவின் கீழ் குற்றவாளியென்று சொல்லப்படுமேயல்லாமல் மற்றவர்கள் அந்த விஷயத்தில் கலந்தவர்களாய் தோற்றுமையால் அவர்கள் அதே பிரிவின் கீழ் குற்றவாளிகளாக மாட்டார்களென்று கண்டு 2-வது எதிரியை மாத்திரம் இ. பி. கோ. 304-வது பிரிவின் கீழ் குற்றவாளியென்று ஸ்தாபிதம் செய்து மற்றவர்களை இ. பி. கோ. 147-வது பிரிவின் கீழ் கலகம் செய்ததற்கு மாத்திரம் சிக்ஷித்தார்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 9-வது வால்யம் 727 2 ம. வி. நோ. 130.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

முதல் சிவில் அப்பீல் நே. 216 of 1907.

ஜட்ஜுகள் { மிர். ஜ. கிருஷ்ணசாமிஐயர் / மிர். ஜ. எய்லிங் } முன்பாக

கூனப்பரெட்டி வெங்கம்மா வகையரா.........பிரதிவாதிகள் அப்பீல்வாதிகள்.

VS

கானப்பரெட்டி ராமய்ய வாதி. ரெஸ்பான்டென்டு.

உயில் ருஜு செய்யவேண்டிய பொறுப்பு.

கிருஷ்ணா ஜில்லா கோர்ட்டு அ. நெ. 50 of 1915ல் செய்த டிக்ரியின்பேரில் கொண்டு வரப்பட்ட அப்பீல்.

கேசின் விபரம்:—ஓர் தத்து செல்லாதென்று கண்டு அந்த தத்தை ரத்து செய்யும் படிக்கும் ஓர் உயில் வாஸ்தவமான தல்லவென்றும் டெக்லேர் செய்யும் படிக்கும் கொண்டு வந்த தாவா. வாதி காலம்சென்ற கிருஷ்ணமா என்பவளுடைய சிறியதாயார். கிருஷ்ணம என்பவர் 1904-ம்௵ ஆகஸ்டுமீ 7ல் இறந்துபோய் விட்டார் தத்துபிள்ளையென்றுசொல்லப்படுபவர் 2-ம் பிரதிவாதி. முதல் பிரதிவாதியோ கிருஷ்ணமா என்பவரின் விதவை. இவர்கள் காலம் சென்ற கிருஷ்ணமா என்பவர் இறந்துபோக 36 மணி நேரத்திற்கு முன் ஒரு உயிலெழுதி வைத்ததாகவும் அந்த உயில் தான் அவர்களுக்கு முக்கியமான ஆதாரம் என்றும் அதை 1-ம் நெம்பர் தஸ்தவேஜியாய் தாக்கல் செய்துக் கொள்ளப்பட்டது.

தீர்மானம்.

உயில் எழுதி வைப்பதற்கு முன்னமே உயில் எழுதினவர் என்னென்ன உத்தேசங்கள் செய்தாரோ அதற்குப்பின் அதைப்பற்றி என்னென்ன சந்தர்ப்பங்கள் நேரிட்டதோ அவைகளையும் இன்னும் மசோதாசெய்யும்வரையில் என்னென்ன சந்தர்ப்பங்கள் நேரிட்டதோ அவைகளையும் கவனித்து காலம்சென்றவரின் விவாகமாகாத இரண்டு குமாரத்திகளின் விவாக விஷயமாய் யாதொரு ஏற்பாடும் செய்யாமல் சிறிய தாயாருடைய விவாகத்திற்கு மாத்திரம் ரூபாய் 400 கொடுக்கும்படி அந்த உயிலில் எழுதியிருப்பதைக்கவனிக்குமளவில் உயில் வாஸ்தவமான தல்லவென்று கண்டு ஜில்லாகோர்ட்டு டிக்ரியை உறுதிப்படுத்திவிட்டார்கள்.

மிர். பிரகாசம், அப்பீல் வாதிகளின் வக்கீல்.

மிர். K. ஸ்ரீநிவாச ஐயங்கார், ரெஸ்பான்டென்ட் வக்கீல்.

லாகூர் இந்தியன் கேசுகள் 9-வது வால்யம் 727 2 ம. வி. நோ. 131.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

முதல் சிவில் அப்பீல் நே 23 of 1908.

ஜட்ஜு { சர்ரால்பபென்சன் / மிர். ஜ. கிருஷ்ணசாமி ஐயர் } முன்பாக

முனியப்ப தேவன் வகையரா. பிரதி வாதிகள். அப்பீல வாதிகள்.

VS

கோபால் வகையரா......வாதிகள்......ரெஸ்பாண்டுகள்.

சி. பி. கோ. (14 of 1882) 236 வது பிரிவு, ட்ரான்ஸ்பர் ஆப்ப்ராப்பர்ட்டிஆக்ட் (10 of 1882) 2(d), 135 வது பிரிவுகள்.

ஓர் பாண்டில்கண்டிருக்கும் ஹக்குபாத்தியதையை கோர்ட்டார் ஏலம் போட்டதில் என்ன விற்கபட்டதோ அதைப்பற்றி யாதொரு பிசகுமில்லாமலிருந்து அந்த பத்திரத்தில் கண்டிருக்கும் தேதி பிசகென்னும் காரணத்தினுல் கோர்ட்டு ஏலத்தில் பெற்ற ஹக்கு பாத்தியதைக்கு யாதொரு குறைவுபாடும் நேரிடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

இதற்காதாரமாய் இ. லா. ரி. 30 கல் 609 பார்வையிடப்பட்டு இந்த கேசிற்கு இது சம்பந்தப்பட்டதல்லவென்று தள்ளிவிடப்பட்டது. சி. பு. கோ. 236 வது பிரிவின்படிக்கு என்ன விற்கப்பட்டதோ அதன் விபரம் தான்ஸ் பஷ்டமாயிருக்கவேண்டும். ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்ட் 2 (d) பிரிவின்படி நிறைவேற்றுதலில் போடப்படும் ஏலவிற்பனைகள் விஷயமாய் மேற்படி ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்ட் 135வது பிரிவு சம்பந்தபடமாட்டாது.

மிர். G.S. ராமச்சந்திர ஐயர் அப்பில் வாதிகளின் வக்கீல்

மிர். C. V. அனந்த கிருஷ்ண ஐயர்.

லாகூர் இந்தியன் கேசுகள் 9-வது வால்யம் 729 8 ம. வி. கோ 133.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

இரண்டாவது அப்பீல் நே. 613 of 1909.

ஜட்ஜுகள் { மிர். ஜ. மன்ரோ / மிர். ஜ. எய்லிங் } முன்பாக.

தஞ்சாவூர் ரங்கசாமி ஐயங்கார் வகையரா. அப்பீல் வாதிகள்.

VS

தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட் போர்ட்...ரெஸ்பான்டென்டு

மதராஸ் லான்ட் எஸ்டேட் ஆக்ட் (I of 1908) 6-வது பிரிவு, அனுபவசுதந்தரம், ஆக்ட் அமுலுக்கு வந்தபோது ஸ்வாதீனம் பெற்றிருத்தல், திருத்துபாடு செய்யப்பட்ட பட்டாவின் டென்டர், பட்டாவை பெற்றுக்கொள்ளாமல் திருப்பிவிடுதல், ஜெமின்தார் அல்லது பூமிக்குடையவன் முச்சலிக்கா டென்டெர் செய்யவேண்டிய பொறுப்பு.

மதராஸ் லான்ட் எஸ்டேட் ஆக்ட் அமுலுக்கு வருகையில் ஒருவன் ஓர் நிலத்தை தன் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டு சாகுபடி செய்து வந்தானென்று ஒருவன் ருஜுசெய்தாலொழிய மற்றபடி மேற்படி ஆக்ட் 6-வது பிரிவு சம்பந்தப்படுத்தலாகாது.

பட்டாவை ஒப்புக்கொண்டு பெற்றுகொள்வதற்காக கொண்டு வரப்படும் சம்மெரி தாவாவில் கலெக்டர் அவர்கள் குடிகளிஷ்டத்தின்படி பட்டாவை ஒப்புக்கொண்டு பெற்றுக்கொள்ளும்படி உத்தரவு செய்வதுமல்லாமல் அந்ததிருத்திய பட்டாவின் ஷரத்துகளின்படி முச்சலிக்கா எழுதி கையெழுத்து போட்டுக் கொடுக்கும்படிக்கும் உத்தரவு செய்ய வேண்டியது அவசியம்.

திருத்துபாடு செய்யப்பட்டப் பட்டாவை டென்டர் செய்து அதை குடிகள் பெற்றுக்கொள்ளமாட்டோமென்று வாபஸ்செய்தால் அவர்கள் முச்சலிக்காவும் எழுதி கையெழுத்து செய்து கொடுக்கமாட்டார்களென்பதற்கு அதுவே போதுமான ருஜுவாகும். ஆகையால் பூமிக்குடையவன் முச்சலிக்கா கையெழுத்து செய்து கொடுக்கும்படி டென்டர் செய்யவேண்டுமென்பது அவசியமல்ல.

பட்டாவும் முச்சலிக்காவும் சேர்ந்தாப்போல் ஒரே தடவையில் கொடுபடவேண்டுமென்பது அவசியமல்ல.

மிர் G.S. ராமசந்திர ஐயர் அப்பில்வாதியின் வக்கீல்.

மிர். P.R. சுந்தரம் ஐயர் ரெஸ்பான்டென்ட் வக்கீல்.

லாகூர் இந்தியன் கேசுகள் 9 வது வால்யம் 730 2 ம. வி. நோ. 135.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

ரெபெர்ட் ட்ரயல் நே. 51 of 1910.

கிரிமினல் அப்பீல் நே. 650 of 1910.

ஜட்ஜுகள் { மிர். ஜ. எய்லிங் / மிர். அப்டுர் ரஹிம். } முன்பாக

பச்சையன்...வாதி.

Vs.

சக்கிரவர்த்தி...எதிரி.

சேலம் செஷன்ஸ் கோர்ட்டார் காலென்டர் கேஸ் நே. 86 of 1910-ல் குற்றவாளியைத் தூக்கு போடும்படிக்குத்தீர்மானித்து அந்த உத்தரவை ஊர்ஜிதம் செய்துக்கொள்வதற்காக தெரிவிக்கப்பட்ட கேசு.

தீர்மானம்.

இந்த கேஸில் குற்றவாளிதான் கொன்முன் என்பதற்குப் போதுமான சாக்ஷியம் கிடையாதென்று கண்டு குற்றவாளியை விடுதலை செய்யும்படிக்கு உத்தரவு செய்யப்பட்டது.

ஆனல் போஸ்ட்மார்ட்டம் சர்ட்டிப்கெட்டைப் பார்ர்கையில் அதில் இறந்துபோன பிரேதத்தின்மீதிலிருந்த குறிகளைப்பற்றி மாத்திரம் எழுதியிருக்கிறதே யல்லாமல்மற்றப்படிஉள்ளேயிருக்குங் குறிகளைப்பற்றி யாதொன்றும் சொல்லப்படவில்லையென்றுகண்டு இனி போஸ்ட்மார்ட்டம்சர்ட்டிபிகேட்டுகளில் இறந்துபோன பிரேதத்தின் மேற்குறிகளையும், உள்குறிகளையும் அவை இரண்டைப்பற்றியும் விசதமாய் நடந்த ஒவ்வொரு அம்சத்தையும் தனித்தனியே பூர்த்தியாய்க்கண்டு எழுதவேண்டியதென்று தீர்மானிக்கபட்டது.

மிர். N. ராஜகோபாலாச்சாரியார், வாதியின் வக்கில்
பப்ளிக்ப்ராஸிகூட்டர்.

லாகூர் இந்தியன் கேசுகள் 9-வது வால்யம் 730.
2 ம. வி. கோ 138.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

இரண்டாவது அப்பீல் நெ. 195 of 1908.

ஜட்ஜிகள்:— மிர். ஜ-பென்சன், மிர் ஜ. கிருஷ்ணசமிஐயர் முன்பாக

P.L S.A.R.S செட்டியப்ப செட்டியார்வாதி சுப்பீல்வாதி

vs.

N. பெரியசாமி தேவன் வகையரா......பிரதிவாதிகள்
ரேஸ்டான்டேன்டுகள்.

மதுரை T.P.A. டிரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்ட் 78-வது பிரிவு, கொதுவைகளில் எது முன்னிட்டது, மிக்க அசட்டையாயிருப்பது கொடுபட்டவை.

பெரியகுளம் டி. மு. கோர்ட்டு அ. நெ. 409 of 1906-ன் டிக்ரியின் பேரில் மதுரை சப் கோர்ட்டுக்குக்கொண்டு வந்த அபீல் நெ. 54 of 1908-ல் செய்த டிக்ரியின் பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

கேசின் விபரம்:—இரண்டு கொதுவைகளில் எது மிஞ்சிட்டதென்பது. இதை நிட்சயிப்பதற்கு முன் கொதுவை ரெஜிஸ்டராயிருக்கிறதாயென்று கவனித்துப்பார்க்கவேண்டியது அவசியம்.

தீர்மானம்.

மதராஸில் ரெஜிஸ்ட்ரேஷன் நோட்டீஸ் ஆகாதென்று தீர்மானிக்கப்பட்டது மூல தஸ்தாவேஜு காணாமலிருப்பது மிக்க அசட்டையானதென்று தொமஸ் ன்மல், Vs மதராஸ் பில்டிங் கம்பெனி இ. லா. ரி 15-ம் 268 எடுத்துக் காண்பிக்கப்பட்டது. இதற்கு ஆதாரமாய் இன்னும் சில. கேசுகளையும் எடுத்துக் காண்பிக் கப்பட்டது-மதராஸ்பில்டிங்கம்பெனி லான்ட்சன் இ. லாரி 13 ம 383; ரங்கசாமிநாய —Vs-அண்ணாமலை முதலி இ-லா-ரி 31 ம 9.

பின்கொதுவை தாரன் முன்கொதுவையிருக்கிறதாவென்று விசாரிக்கவேண்டியது அவசியம் தானென்றும் முன்ரெஜிஸ்ட் ரேஷனாயிருப்பது ஓர் நோட்டீஸ் தானென்றும் தீர்மானிக்கப்பட்டது-

இரண்டாவது அப்பீலை தள்ளுபடி செய்து விட்டார்கள்,

மிர்- நரசிம்ம அய்யங்காருக்காக மிர்-கிருஷ்ணசாமிஐயங்கார் அப்பில்வாதியின் வக்கில்

Vs

மிர்-S, ஸ்ரீ னிவாசஐயர்-ரெஸ்பான்டேன் வக்கீல்

20 ம-லா-ஜ-ரி- 979.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

இரண்டாவது அப்பீல் நெ, 1927 of 1908.

ஜட்ஜுகள் { மிர். ஜ. பென்சன், மிர். ஜ. கிருஷ்ணசாமிஐயர் } முன்பாக

சையத் நூருதின் சயாயப்பு வகையரா அப்பீல் வாதிகள்.

vs

சையத் இப்ராஹிம் சாயப்பு வகையரா ரெஸ்பான்டேன்டுகள்.

மதுரை லிமிடேஷன் ஆக்ட்டு 120, 144 ஆர்டிகல் ஸ்தாவர ஜங்கம சொத்துகளை பாகித்துக்கொள்வதற்கு செய்யப்பட்டதாவா.

கேஸின் விவரம்,—ஓர் மகம்மதிய குடும்பத்தைச் சேர்ந்த சொத்துகளை பாகித்து அதில் அவரை பாகத்தை தன் வசம் செய்யும் படிக்கு ஓர் ஆறுக்கன் வாதியாய்க்கொண்டு வந்ததாவா

(தீர்மானம் மற்ற இதர பாகஸ்தர்களாகிய தாயாதிகளும் இந்த வியாஜ்ஜியத்தில் பிரதி வாதிகள் தான். அவர்கள் டெ. சொத்துகளை வாதிக்கு விரோ
இன்னும் வரும்.

The Hon. Sir Justice R. S. BENSON, *Kt.*, M.A., L.L.B., I.C.S., (*Bar.-at-Law*

ஆனரபில் ஸர். ஆர். யஸ். பென்ஸன், *Kt.*, M.A. L.L.B., I.C.S., (*Bar.-at-Law*)

ஐகோர்ட் நியாயாதிபதி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 15 AUG 1911 MADRAS.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் V.] சென்னப்பட்டணம் 1911 ஆகஸ்டு மீ [பாகம் 8.]

☞ NOTICE:—Contributions other than original are neither invited nor required. All literary contributions and books for Review should be addressed to Mr. N. RATHAKRISHNA NAIDU, P. A. A. E. A. A. (LONDON) INDIAN LAW GAZETTE 49, Acharappan Street, Madras.

VILLAGE PANCHAYATS.

கிராம பஞ்சாயத்துகள்.

சென்னை ராஜதானியின் ஜில்லாக்களிலுள்ள கிராமங்களில் கிராம பஞ்சாயத்து கோர்ட்டுகள் ஏற்படுத்தி சொற்ப கேசுகளை பைசல் செய்வதனால் ஜனங்கள் திரவிய நஷ்டமும் அதிக கஷ்டமும் நீங்கப்பெறுவார்களென்று கருதி அநேகர் பற்றி கவர்ன்மெண்டார் பலமுறை வற்புறுத்தச் சொல்லியும் கவனியாமலிருப்பதைப்போல் தோன்றுகிறது. ஆனால் தற்காலத்தில் இந்தியா தேசத்தைச் சேர்ந்த கிழக்கு பெங்கால், அசாம் மாகாணங்களில் இவ்விதமான கிராமப் பஞ்சாயத்துகோர்ட்டுகள் ஏற்படுத்தி அவைகள் எவ்விதமாய் நடந்தேறி வருகின்றனவென்று செய்து வரும் பரிசோதனை [illegible] ராஜ கமிட்டியாரின் [illegible] இணங்கியிருக்கிறதாய்த் தோன்றுகின்றது. இப்பொழுது அந்த மாகாணங்களில் நடந்தேறி வருவதை நோக்குமளவில் பண்டைகாலத்தில் நடந்தேறிவந்ததைப்போல் அவ்விடங்களில் ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள கிராமங்களில் சிலதை ஒன்றுப்படுத்தி தனித்தனியே கிராம கோர்ட்டுகள் ஏற்படுத்தி அக்கந்த கிராமத்திலுள்ள புத்திசாலிகளாயிருக்கும் யோக்கியதையுள்ள பெரியவர்களை அந்த கோர்ட்டுகளில் உத்தியோகஸ்தர்களாய் நேமித்து வருகிறார்கள். இவ்விதமாய் ஏற்படுத்தப்படும் கிராம கோர்ட்டுகளில் அந்தந்த கிராமத்தின் சிவில் சம்பந்தமான [illegible] சம்பந்தமுடன் பொதுவாய் அவர்கள் கிராம பரிபாலனமும் நடத்திவருவதாயிருந்தால் நலமாயிருக்குமென்று மேற்படி கமிட்டியார் பரிந்துபேசியிருக்கிறார்கள். ஆனால் இந்த கிராம கோர்ட்டுகள் [illegible] நடத்திவரும்படி கேட்டுக்கொள்வதற்குச் சந்தேகமில்லை.

ராஜ கமிட்டியாரின் கோட்பாட்டுகளைக் கொண்டு இந்தியா தேசத்திலுள்ள இதர மாகாணங்களில் இவ்விதமாய் பரீட்சித்து வருகையில் நம்முடைய சென்னை ராஜதானியில் இவ்விதமான கிராம கோர்ட்டுகள் ஏற்படுத்துவதைப்பற்றி கவர்ன்மெண்டார் என்ன ஏற்பாடுகள் செய்துவருகிறார்களோ தெரியவில்லை. சென்னை ராஜதானியின் கவர்ன்மெண்டாரும் இவ்விதமாய் கிராமகோர்ட்டுகள் ஸ்தாபிப்பதினால் மிகுந்த நன்மையுண்டென்று அந்த ஏற்பாட்டை [illegible] வேண்டுமென்கிற கோரிக்கையுள்ளவர்களாயிருக்கிறார்கள். இதைப்பரீட்சிக்கும் பொருட்டு மதராஸ் கவர்ன்மெண்டார் பரெஸ்ட் இலாகாவைச் சேர்ந்த சில பாகங்களை கிராம அதிகாரிகளின் பாரம் ஒப்புவித்து அதை எப்படி பரிபாலனம் செய்து வருகிறார்களென்று சோதித்து வருகிறார்கள். [illegible] காலத்தில் இந்த கிராமகோர்ட்டு ஏற்பாட்டை [illegible] கவர்ன்மெண்டாரும் அனுசரித்து வருவதினால் [illegible] கவர்ன்மெண்டாரும் இந்த ஏற்பாட்டை அதி சீக்கிரத்தில் இந்த சென்னை ராஜதானியிலும் அமுலில் கொண்டுவரவேண்டுமென்கிற ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

இந்த கிராமகோர்ட்டுகள் ஏற்படுத்த வதினால் ஜனங்கள் அவரவர்களுடைய கிராமங்களிலேயே

அவர்களுக்குள் கோரிடும் தகருாறுகளைப் பரிசீலனைச் செய்துக்கொள் வதற்கு அனுகூலமாயிருக்குமென்று ஆதிகாலத்தில் உத்தேசிக்கப்பட்டது. இந்த கிராம கோர்ட்டுகளில் ஜனங்கள் அவரவர்களுக்குள் உள்ள தகருாறுகளைப் பரிசீலனைச் செய்துகொள்ளாமல் முனிசீபுகோர்ட்டுகளுக்குப் போவதைத்தடுத்து அந்தந்த கிராம கோர்ட்டுகளிலேயே அவரவர்களுக்குள் உள்ள சொற்பவியாஜ்ஜியங்களைப் பரிசீலனை செய்துக்கொள்வதற்கு வேண்டிய நிபந்தனைகளை செய்ய வேண்டியது அவசியமாய்த் தோன்றுகிறது. இது விஷயமாக தற்காலத்திலுள்ள சட்டம் போதுமான தாகக்காணப்படவில்லை ஆகையால் தற்காலத்தில் கிராமங்களில் தலைமையாய் ஏற்படுத்தவேண்டியவர்களை கவனித்துப் பரிட்சித்துப் பார்த்து பொறுக்கி யெடுக்கவேண்டுமென்பதற்குத்தகுந்த நிபந்தனைகள் செய்யவேண்டியது அவசியம். இவ்விதமாய் ஏற்படுத்தப் படும் பெஞ்சு கோர்ட்டுகளில் கிராமத்தலைவனுடன் ஒருவனும் இருக்கவேண்டுமா இல்லையா என்பதைப் பற்றி இவ்விடத்தில் யோசிக்கவேண்டியது அவசியமல்ல.

கிராமங்களில் பெஞ்சு பஞ்சாயத்து கோர்ட்டுகள் ஏற்படுத்தவேண்டுமென்கிற ஏற்பாடுமிக்க உசிதமானதென்பதற்கு அத்தாட்சியாய் மேன்மைபொருந்திய மைசூர் மஹாராஜாவின் சட்ட நிரூபணசபையிலும் கிராமகோர்ட்டுகள் ஏற்படுத்துவதற்கு மி-ர். S. V. [illegible] என்பவர் ஓர் மசோதா கொண்டுவந்திருக்கிறார் ஆனால் 1887-ம் வருஷத்தில் மதராஸ் கவர்ன்மெண்டார் கிராமகோர்ட்டுகளை ஆக்டு (I 1889) அமுலுக்குக் கொண்டுவந்தபோது கிராம முனிசீபுகள் விசாரணை செய்யக்கூடிய [illegible] பர்களின் [illegible]த்தை ரூபாய் பத்திலிருந்து இருபதுக்கு[illegible] இந்த பெஞ்சு கோர்ட்டுகளிலும் கிராமமுனிசீபுகள் [illegible] தலைமையாயிருக்கவேண்டியது என்பதைப்பற்றியும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

[illegible] ஒவ்வொருகிராமத்திலும் இந்த பெஞ்சு கோர்ட்டுகளுக்கு உத்தியோகஸ்தர்களை [illegible]தற்குத் தகுந்த யோக்கியதையும் [illegible] பொறுக்கியெடுக்கத் தனியாய் [illegible] தயார்செய்யும்படிக்கு உத்தரவு செய்து [illegible] ஜில்லா உத்தியோகஸ்தர்கள் அந்த [illegible]த்தைபற்றிக் கவனியாமலே இருப்பதாகத் தோன்றுகிறது. 1905-ம் வருஷத்தில் [illegible] கவர்னர் அவர்கள் கிராமகோர்ட்டுகளின் [illegible] சீர்திருத்தி விருத்திசெய்ய வேண்டுமென்று எல்லா ஜில்லா உத்தியோகஸ்தர்களுக்கும் [illegible]ப்பாய் உத்தரவு செய்திருக்கிறார். இ[illegible] கவர்ன்மெண்டார் இதைப்பற்றி [illegible] உத்தரவு செய்திருக்கிறார்கள். இந்த ஏற்பா[illegible] சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவருவ

தில் முக்கியமாயுள்ள கஷ்டம் யாதெனில் மதராஸ் ஆக்டு. 8-வது பிரிவின் நிபந்தனைகளே தான். இந்தப் பிரிவுகளை சீர்திருத்த மைசூர் கவர்ன்மெண்டார் [illegible]. இப்படி கிராம கோர்ட்டுகள் ஏற்படுத்துவதினால் ஜனங்கள் சொற்ப விவகாரங்களை அவரவர்களுடைய கிராமத்திலேயே கஷ்ட நஷ்டமில்லாமல் பைசல் செய்துகொள்வார்களென்று [illegible] முனிசீபு கோர்ட்டிலும் அவ்விதமான சொற்ப வியாஜ்ஜியங்களை தாக்கல் செய்யக் கொள்ளலாமென்கிற நிபந்தனை நலமானதாய்த் தோற்றவில்லை. ஆகையால் மைசூர் கவர்ன்மெண்டில் கிராம முனிசீபுகள் கோர்ட்டில் தன் ரூ 20 அதற்குக் குறைவாயுள்ள நம்பர்களை தாக்கல் செய்ய வேண்டுமென்றும் அவ்விதமான நம்பர்களை முனிசீபு கோர்ட்டுகளில் தாக்கல் செய்யக்கூடாதென்றும் நிபந்தனை செய்து மேற்சொன்ன மசோதா ஆக்டு கொண்டு வந்திருக்கிறார்கள்.

மதராஸ்கவர்ன்மெண்டார் ஆக்ட் 9-வது பிரிவில் [illegible] ஜில்லாக்களில் கிராமகோர்ட்டுகள் ஏற்படுத்து உசிதமென்று தோற்றுகிறது. அந்த கிராமங்களை கெஜட்டில் பிரசுரிக்கப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள் அப்படி சொற்ப காலத்திற்கு முன் அந்த கிராமங்களின் பெயர்களை கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டது. அதற்குப்பின் இது விஷயமாய் கிராம உத்தியோகஸ்தர்கள் பரிட்சையாயிருப்பதாக தெரியவருகிறது.

ஆதியில் மிஸ்டர் ஸ்ரீனிவாசராகவ ஐயங்கார் என்னும் சர் [illegible] 40-வருஷத்திய விருத்தி [illegible] கிராம கோர்ட்டுகளில் 20 ரூபாய் [illegible] பெருமானமுள்ள [illegible] செய்துகொள்ள [illegible] பெருமானமுள்ள [illegible] முனிசீபு கோர்ட்டுகளிலேயே தாக்கல் செய்[illegible] செய்வது உசிதமென்றும் அப்படியாய் 20 ரூ [illegible] முனிசீபு கோர்ட்டில் தாக்கல் செய்[illegible] முனிசீபு கோர்ட்டுகளில் தாக்கல் [illegible]. முனிசீபுகள் அந்த நம்பர்களை விசாரணை [illegible] இவ்விதமான [illegible] முனிசீபு கோர்ட்டுகளில் தாக்கலாய் விசாரணை [illegible]டிருந்தால் வ[illegible]க்கு என்ன [illegible] அந்த நிலைபொத்[illegible]வேண்டியதென்றும், டிஸ்டிரிக்ட் முனிசீபு கோர்ட்டில் [illegible] நிவைவாசித்[illegible] செய்வது உசிதமென்று [illegible].

ஆகையால் இவ்விதமான [illegible] பெஞ்சு கோர்ட்டுகள் இந்த ராஜதானியில் [illegible]

மத்திலும் அதிசீக்கிரத்தில் ஏற்படுத்துவதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமோ அந்த ஏற்பாடுகளை காலதாமதமின்றி கூடியசீக்கிரத்தில் அமுலுக்கு கொண்டு வருவார்களென்று கோரப்படுகிறது.

CASES FROM INDIAN LAW REPORTS.

இந்தியன் லா ரிப்போர்ட்டு கேசுகள்

CALCUTTA HIGH COURT.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

—:o:—

கிரிமினல் அப்பீல் நெ. 677 of 1910.

ஜட்ஜிகள்:—மி-ர் ஜ-ஹோம்வுட், மி-ர் ஜ-டீஸ் } முன்பாக.

ஆல்பர் ஷேயிக் ... ... அப்பீல் குற்றவாளி.

சக்கரவர்த்தி ... ... அப்பீல் பிரதிவாதி.

ஜூரிகள் ஏகோபித்து முடிவு அபிப்பிராயம்கொடுத்த பிறகு ஜட்ஜி அவர்களைக் கேள்வி கேட்பது சரியல்ல. இந்த கேஸில் முதல் விஷயம் சாக்ஷியமில்லை வாதி சாக்ஷியம் பிரதிவாதி சாக்ஷியத்துடன் ஒத்திருக்கிறது. சாக்ஷியத்தைத் தள்ளித்து வாக்குமூலத்தை ஒத்துக்கொள்ள ஜட்ஜ் ஜூரிகளுக்கு சொல்வது சரியல்ல. எதிர்கரு சாக்ஷியம் இல்லாததால் பிராஸிக்யூஷன் தரப்பு சாக்ஷியத்தை வைத்துக்கொண்டு முடிவு செய்யவேண்டியது. சந்தேகம் ஏதேனும் இருந்தால் அது பிரதிவாதிக்கு சாதகமாகவேண்டியது. விவாதத்துக்கு பிறகு எதிரியை, ஊராரும் ஊரிலில்லாததால் குற்றவாளி என்று சொல்லக்கூடாது.

மைமென்சிங் செஷன் ஜட்ஜி இந்தியன் பினல்கோடு 304-வது செக்ஷன்படி 5-வருஷம் தண்டனை ஆனதின்பேரில் இந்த அப்பீல் செய்யப்பட்டது.

மகாராஜஸ்ரீ, டிபேந்திர நாரேன் பட்டாசார்ஜி...எதிரிவக்கீல்

" ஓர் ... ... சக்கரவர்த்திக்காக

தீர்ப்பு:—இந்த கேஸை மறு விசாரணை செய்யவேண்டியது எங்களபிப்பிராயம். விஷயங்களைப்பற்றி எவர்களுக்கு ஒன்றும் சொல்ல [illegible]இல்லை.

ஆனால் இதில் இரண்டொரு தப்பு வழிகளும் சில விஷயங்களும் விடப்பட்டிருக்கின்றன. 304-வது செக்ஷனுக்குள் அடங்கிய 325-செக்ஷன்படி ஜூரிகள் அபிப்பிராயம் கொடுத்தபிறகு ஜட்ஜி அவர்களை கேள்வி கேட்டது நியாயமாகத் தோன்றவில்லை. இதில் முதல் தப்பு என்னவென்றால் சாக்ஷியமான பிறகு ஸ்டேட்மெண்டை ஒத்துக்கொள்ளச்சொல்லி ஜூரிகளுக்கு சொல்வது, இப்போது இந்த கேஸில் சாக்ஷியில்லை. வாதியின் வாக்குமூலம் பிரதிவாதியின் வாக்குமூலத்துக்கு ஒத்திருக்கிறது. சாக்ஷியங்களைப்பற்றி யோசிக்க ஜூரிகளுக்கு போதுமான சாவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது தப்பு என்னவென்றால் எதிரியைத் தவிர இன்னும் யாராவது குற்றம் செய்திருப்பார்களா என்பது. கேஸின் உண்மையைத் தவிர்த்து 5-வது சாக்ஷியை கோமளை வேறே இரண்டு மனிதர்கள் தடியால் அடிக்கவில்லையா என்று கேட்டிருக்கிறது. எதிரியின் வாக்குமூலத்திலும் அவன் குற்றவாளி அல்லவென்று தெரிகிறது. அவன் சொல்லுவதாவது இரண்டு கிராமத்தாரும் ஒருவரோடொருவர் சண்டைபோட்டதாகவும், என்ன நடந்ததோ எனக்குத் தெரியாது என்று சொல்லுவதுதான், அந்த சமயத்தில் நான் கோமளத்துக்கு

காயங்கள் ஏற்பட்டிருக்கவேண்டும். ஆனால் அநேக விஷயங்கள் விடப்பட்டிருக்கின்றன. ஸ்டேட்மெண்டைத் தவிர பிரதிவாதிக்கு சாக்ஷியமில்லை பிரதிவாதிக்கு சாக்ஷியமில்லாததையும், வாதியின் சாக்ஷியத்தையும், ஏதேனும் சந்தேகமிருந்தால் அதன் சாதகத்தை எதிரிக்கு தீர்மானத்துக்கு முந்தி ஜூரிகளுக்கு சொல்லப்படவில்லை. முதல் முக்கிய விஷயம் மெடிகல் சாக்ஷியம். கழுத்தின் காயம் [illegible] [illegible] தொண்டைக்கு இடையும் உள்ளேயும் போயிருப்பதாக சொல்லுகிறார்.

எதிரி இறந்தவனைவிட மிகவும் குட்டையான மனிதனென்று சாக்ஷியத்தினால் தெரிகிறது, ஆகையால் எதிரி, வைசைய கூடுமானவரையில் உயர்த்தி குத்தி கீழே யிழுக்கிறது முடியுமானதா என்பதை கவனிக்க ஜூரிகளுக்கு ஜட்ஜி தெரிவிப்பிக்கவேண்டும். எதிரியும் கிராமத்தாரும் ஓடிப்போனதாகவும் அவர்களைப் பிடித்ததாகவும் போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் எவ்வளவு தூரம் நம்பலாம் என்பதையும் கவனிக்க ஜூரிகளுக்குத் தெரியப்படுத்திருக்கவேண்டும். அவர்கள் தெரியாததனத்தால் ஓடியிருக்கும் பக்ஷத்தில் அதனால் அவர்கள் குற்றவாளியாகமாட்டார்கள். சாக்ஷியங்களைக்கொண்டு அதை கவனிக்கவேண்டியது. இக்காரணங்களைக்கொண்டு கீழ் செண்டனை மாற்றி வேறே ஜூரியை வைத்து மறு விசாரணை செய்ய தீர்ப்பு செய்யப்பட்டது.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

சிவில் ரிவிஷன்மனு நெ. 809 of 1909.

ஜட்ஜிகள்:—மி-ர். ஜ. அப்துர் ரஹீம், மி-ர். ஜ. கிருஷ்ணசுவாமிஐயர் } முன்பாக

லாட்கிரிதர்தாஸ் கோவிந்ததாஸ் கம்பெனி மேற்படி கம்பெனி மானேஜர் லாட்கிருஷ்ண தாஸ் கோவிந்ததாஸ். } வாதி அப்பீல் வாதி

பொட்டி நாயகனும் மற்றவர்களும் ... பிரதி வாதி அப்பீல் பிரதி வாதி.

தீர்ப்பு மூலமாய் ஏற்பட்ட கடன்காரன் இறந்துபோயிருக்காரிடமூலமாய் அவனுக்கு வாரிசுகொண்டுவரப்பட்டானென்று தீர்ப்புக்கு அனுகூலமாய் கடன் காரனைத்தவிர வேறே ஒருவராவது அல்லது அவனால் ஏற்பட்டவன் மூலமாயாவது உடன் படிக்கை ஏற்பட்டால் அது செல்லத்தக்கது.

ராணிபேட்டை டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டாரின் 1909ஹு சின்னமாஸ் கேஸ் நெ. 251-ன் தீர்ப்பின் பேரில் அந்த தீர்ப்பை மாற்ற 1887ஹு ஆக்ட் 9. செக்ஷன் 25-படி இந்த மனுவை ஹைகோர்ட்டாருக்கு கொடுக்கப்பட்டது.

தீர்ப்பு:—2-வது பிரதிவாதி பிரத்தியக்ஷமாய் அவனுக்கு வாரிசு கொண்டுவரப்படவில்லை. முதல் பிரதிவாதி தீர்ப்பு கடன்காரனல்ல அல்லது அவனுக்கு ஏற்பட்டவனுமல்ல 1882-ஹுத்திய பழைய சிவில் புரொசீஜர் 14-வது ஆக்ட் 257 A-ல் கடன்காரனாவது அல்லது அவனுக்கு ஏற்பட்டவனாவது. அந்த தொகைக்கு ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையைப்பற்றி ஒன்றும விரோதமாய்ச் சொல்லப்படவில்லை.

நாங்கள் அதன்படி ஒத்துக்கொண்டு 1-வது பிரதிவாதி விஷயமாக டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டாருடைய தீர்ப்பை மாற்றி அவன் பேரில் வாதியின் மனுப்படி கீழ் கோர்ட்டு செலவுக்கும் தீர்ப்பு செய்யப்பட்டது.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு

—:o:—

கிரிமினல் மனு நெ. 137 of 1903.

1903-ம் ஆண்டு செப்டம்பர் 16உ.

மிஸ்டர் ஜஸ்டிஸ் ஆர்னால்ட் வைட்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய ஐயர் } முன்பாக.

மாஷா லாப்ஜி சாகேப் ... எதிரி—மனுதாரன்

பொதுவாக மாற்றுதல் மனு நோட்டீசாக கொடுக்கவேண்டியது அவசியம். நோட்டீசு கொடுக்கத் தவறுதலினால், மாற்றல் உத்தரவு சட்ட விரோதமென்று சொல்லக்கூடாது. சில சமயங்களில் நோட்டீசு இல்லாமலே உத்திரவு செய்யலாம்.

திருசத்தூர் 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் அவர்களில் C. C. நெ. 477 of 1903-யை அந்தக் கோர்ட்டிலிருந்து வேறே எந்த முதல் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்காவது கிரிமினல் புரொசீஜர்கோடு 526-வது ஸெக்ஷன்படி ஹைகோர்ட்டாருக்கு மாற்றலுக்காகக் கொடுத்த மனு:—

மனுவில் கண்ட விஷயங்களைப்பற்றி மாற்றல் உத்திரவு செய்தது முற்றிலும் நியாயமென்று தோற்றுகிறது. இந்த சிறிய கேசை தீர்ப்பதற்கு இவ்வளவு கால தாமதத்துக்கு தகுந்த காரணம் சொல்லப்படவில்லை. வாணியம்பாடி 3-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் 15-மாதமாகவும் இப்போது தீர்ப்புக்காக 6-மாதகாலமாகவுமிருக்கிறது. இது நியாய விரோதமாய் தீர்ப்பாகுமென்பதற்கு தடையில்லை. உத்திரவுக்கு விரோதமாக எதிரியின் காரணம் கேட்காமல் மாற்றினது சட்டவிரோதமென்று ஆக்ஷேபிக்கப்பட்டது. நோட்டீசு கொடுக்க வேண்டியதென்பது பொது விதியாயிருந்தாலும் நோட்டீசு கொடாததினால் உத்தரவு சட்டவிரோதமென்று சொல்லக்கூடாது.

இந்தக் கேஸ் விஷயத்தில் எதிரிக்கு நோட்டீசு கொடாத ஆதாரவைக்கொண்டு உத்தரவு பிசகென்று சொல்லமாட்டோம்.

மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 634 of 1909.

கிரிமினல் ரிவிஷன் மனு நம்பர் of 486 of 1909.

1910-ம் ஆண்டு மேயீ 2உ.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் அவர்கள் | முன்பாக.

கிருஷ்ணசாமி உடையானும், மற்றவர்களும் .... பிரதிவாதிகள்-மனுதாரர்.

பிராஸிகூஷன் தரப்பில், சில சாக்ஷிகளின், விசாரணை முடிந்த பிறகு, ஷை தரப்பின் சில சாக்ஷிகள் அவர்களால் எழுதப்பட்ட ஒரு கடிதத்துக்கு விரோதமாக சாக்ஷி சொல்லுவதாகவும், அந்தக் கடிதத்தை ஒத்துக்கொள்ள மாஜிஸ்ட்ரேட்டுக்கும் மேலே அப்பீல் விசாரித்த ஸெஷன் ஜட்ஜ் அவர்களுக்கும் ஒரு மனுவை எதிரி கொடுத்தபோது அதை ஷை இரண்டு கோர்ட்டாரும் ஒத்துக்கொள்ளவில்லை.

ஷை சாக்ஷிகளை வரவழைத்து அந்தக்கடித சம்பந்தமாக விசாரிக்க எதிரிக்கு அதிகாரமுண்டு.

திருச்சிநாப்பள்ளி முதல் கிளாஸ் சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் அவர்களின் C. C. நெ. 73 of 1909 தண்டனையின்பேரில் திருச்சிநாப்பள்ளி ஸெஷன் ஜட்ஜ் அவர்களிடம் கிரிமினல் அப்பில் நெ 34 of 1909-ன் தீர்மானத்தின் பேரில் ஜட்ஜ்மெண்டை மாற்ற கிரிமினல் புரொசீஜர்கோடு 435, 439, ஸெக்ஷன்படிக்கு கொடுக்கப்பட்ட மனு.

ம-rா-rா-ஸ்ரீ, C. மாதவன் நாயர் அவர்கள்—எதிரி வக்கீல்.

" C. F. நேப்பியர் பப்ளிக் பிராஸிகூஷன் கவர்ன்மெண்டுக்கு வக்கீல்.

தீர்ப்பு:—எதிரிகளி லொருவன் டிப்டி மாஜிஸ்ட்ரேட் அவர்களுக்கு கொடுத்ததாகச் சொன்ன மனுவை அவர்கள் அங்கிகரித்திருக்கவேண்டியது நியாயம்.

அப்படி அந்த லெட்டர் பிராஸிகூஷன் தரப்பு சாக்ஷிகளால் எழுதப்பட்டிருந்தால் அவர்கள் இப்போது சொல்லும் சாக்ஷியம் நம்பத்தகுந்ததில்லை. ஷை சாக்ஷிகளை ஷை லெட்டர் சம்பந்தமாக விசாரிக்க எதிரிக்குச் சொல்லவேண்டியது அவசியம். ஷை செஷன் ஜட்ஜ் தீர்மானத்தை ரத்துசெய்து டிப்டி மாஜிஸ்ரேட்டுக்கு கொடுத்த லெட்டரை அங்கிகரித்து விசாரித்து முடிவு செய்ய தீர்ப்பு செய்யப்பட்டது.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

உத்தரவின்பேரில் அப்பில் நெ. 234 of 1909.

ஜட்ஜுகள் மிஸ்டர். ஜ. அப்டுர் ரஹீம்
மிஸ்டர். ஜ. எய்லிங் } முன்பாக

சங்கரபட்டா. மனுதாரன். அப்பில் வாதி

காசர்காட் முனிசிபு கோர்ட்டார் அ. நெ. 271 of 1902-ல் செய்த டிக்ரியின்மேரில் தென்கன்னட டிஸ்டிரிக்ட் கோர்ட்டுமுதல் அ. நெ. 137 of 1-11-ல் உத்தரவிற்கு விரோதமாய் கொண்டுவரப்பட்ட அப்பில்.

தீர்மானம்:—இந்த கேசில் பிறப்பிக்கப்பட்ட சம்மன் கட்டளையை பிரதிவாதிக்குச் சேர்க்காமல் அவன் வெளியே போயிருக்கையில் அவனுடைய சகோதரனிடம் சேர்ப்பிக்கப்பட்டது. பிரதிவாதி திருவநந்தபுரத்தில் தன்னுடைய வீட்டைவிட்டு திருவநந்தபுரத்திற்கு அதிதூரத்திலுள்ள ஆலத்தூர் கிராமத்திற்குப்போய் உத்தியோகம் செய்துக்கொண்டிருந்தான். இந்த நம்பரில் பிறப்பிக்கப்பட்ட கட்டளையை பிரதிவாதிக்கு நேரில் சேர்ப்பிப்பதற்கு யாதொரு கிருஷையும் செய்யாமல் அவனுடைய சகோதரனிடம் சேர்ப்பிக்கப்பட்டது.

இந்த நம்பரில் ஒருதலை பட்சமாய் செய்யப்பட்ட டிக்ரியை ரத்து செய்துவிட்டு கேசை டிஸ்ட்ரிக்ட் முனிசிபு மறுபடியும் விசாரணை செய்யும்படிக்கு உத்தரவு செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 9-வது வால்யம் 175 1-ம லா. டை. 271.

PRIVY COUNCIL.

பிரிவி கவுன்சில்.

லார்ட் மெக்நாட்டன்
லார்ட் மெர்ஜி
லார்ட் ராப்சன்
சர் ஆர்தர் உல்சன்
மிஸ்டர். அமீர் அலி } முன்பாக.

கிஷன்பிரசாத் வங்கயரா வாதிகள் அப்பீல்வாதிகள்.

ஹிந்து லா - மித்தாக்ஷர சமஷ்டி குடும்பம் - ரொக்கம் கடன் கொடுக்கல் வாங்கல் லேவாதேவி செய்பவர்கள் - லிமிடேஷன் ஆக்ட் (15 of 1877) 22-வது பிரிவு.

கேசின் விபரம்:—மித்தாக்ஷர சட்டத்தை அனுசரிக்கும் ஓர் அவிபக்த சமஷ்டி இந்து குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் மூவர் அந்த குடும்பத்தின் மானேஜர்களாய் ஒன்றுசேர்ந்து [illegible] என்னும் பட்டணத்தில் ரொக்கப் பணம் கடன் கொடுக்கும் லேவாதேவி செய்யும் வியாபாரம் [illegible]ரா

ராத் பிரகட்டாஞராம் என்னும் பேர்வகித்துக்கொண்டு நடத்திக்கொண்டு வந்தார்கள். மேலே சொன்ன மூவர்மாத்திரம் இன்னொரு ஹிந்து அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களுடன் பண லேவாதேவிசெய்து வந்தார்கள். இவர்கள் 1895-வருஷம் முதற்கொண்டு மேற்படி லேவாதேவியை ஆரம்பித்து கடைசியாய் 1901-ம் ஆண்டு ஆகஸ்டுமீ 9உ-யில் முடித்தார்கள். கடைசியாய் ஏற்பட்ட பாக்கிக்கு பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்திருந்தபடி வாதிகள் தாவா செய்தார்கள்.

தீர்மானம்:—லார்ட் ராப்சன்:—

இந்த வியாஜ்ஜியத்திற்கு காலதோஷம் வந்துவிட்டதா இல்லையா யென்பதுதான் இதில் முக்கியமான அம்சம். எப்படியெனில்,

பிரதமத்தில் வாதிகள் தாவா செய்தபோது மூன்று வருஷத்திற்குள்தான் செய்திருக்கிறார்கள். ஆனால் [illegible]கள் இந்த தாவா எல்லா பாகஸ்தர்களாலும் கொண்டுவரப்படவில்லை யென்று வாதித்ததின்பேரில் தாவாவை திருத்துபாடு செய்து மற்றவர்களையும் வாதிகளாய்ச் சேர்க்கப்பட்டனர். அப்படி பின்னிட்ட கக்ஷிதாரர்களாய் சேர்த்த தினத்தில் மூன்று வருஷம் கடந்துவிட்டபடியால் தாவாவிற்கு காலதோஷம் வந்துவிட்டதென்று வாதித்தார்கள். முதலில் இந்த தாவாவை மூன்றுபேர்கள் கொண்டுவந்தார்கள். அவர்கள் மித்தாக்ஷர சட்டத்தை அனுசரிக்கும் ஓர் அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அந்த குடும்பத்தின் மற்ற பாகஸ்தர்கள் இந்த லேவாதேவிகள் சம்பந்தப்பட்டவர்களல்ல; மேலே சொன்ன மூவர்மாத்திரம் பிரதிவாதிகளாகிய மூன்று நபருடன் ரொக்கக் கடன் லேவாதேவி [illegible] செய்துக்கொண்டு வந்தார்கள்.

1901-ம் ஆண்டில் பிரதிவாதிகள் தங்களுடைய லேவாதேவி கணக்கைப் பார்வையிட்டு கடைசியாய் ஏற்பட்ட பாக்கியை சரியென்று ஒப்புக்கொண்டு கணக்கு புஸ்தகங்களில் கையெழுத்து செய்து ஓர் அக்ரிமெண்டும் எழுதி கையெழுத்து செய்திருக்கிறார்கள்.

சப் கோர்ட்டார் பிரதிவாதிகள் மேலே சொல்லிய மூன்று வாதிகளிடத்தில் மாத்திரம் லேவாதேவி செய்துவந்து ஒப்பந்தம் செய்தார்களே யல்லாமல் மற்றவர்களிடத்தில் செய்யவில்லையென்று கண்டு 1904 ஆண்டு ஜூன்மீ 3உ வாதிகள் தாவா செய்திருப்பது [illegible]. மேலே சொல்லிய மூன்று வாதிகளும் ஆகஸ்டுமீ அக்ரிமெண்டு ஏற்பட்ட [illegible]யில் மற்ற பாகஸ்தர்கள் வாதிகளுடன் சேர்ந்தவர்களல்லவென்றும் அவர்கள் தான் மானேஜர்களென்றும் வாதித்தார்கள். ஆயினும் அந்த வாதத்தை நிவர்த்திசெய்வதற்கு தாவாவை 9-9-0-யில் திருத்துபாடு செய்யப்பட்டது. அப்படி திருத்துபாடு செய்யப்பட்ட தேதியில் தாவாவிற்கு மூன்று வருஷகாலதோஷம் வந்துவிட்டது. ஆகையால் பின்னால் வாதிகளாய் சேர்க்கப்பட்டவர்கள் முன்னமே தாவாவில் கக்ஷிதாரர்களா யிருக்கவேண்டுமென்பது அவசியமா அல்லவா என்பது முக்கியமாய் [illegible]வேண்டிய அம்சம்:—

காஜிபூர் சப் கோர்ட்டார் [illegible] தீர்ப்புசெய்தார். அதை வடமேற்கு மாகாணங்களின் ஹைகோர்ட்டார் ரத்து செய்துவிட்டார்கள்.

ஓர் இந்து குடும்பத்தில் குடும்ப சம்ரக்ஷணைக்காக மானேஜர்கள் செய்யும் வியாபாரத்தில் மானேஜர்கள் குடும்பத்திற்காக ஒப்பந்தம் செய்யவும், ரத்து செய்யவும், ராஜிபடுத்தவும் அவர்களுக்கு அதிகாரமுண்டென்றும் அப்படிக்கில்லாவிடில் வியாபாரம் நடத்துவது அசாத்தியமாய் விடுமென்றும் மேலே சொல்லிய மூன்று வாதிகளும் அவர்கள் மூன்றுபேர் மேலேயே க்ஷாப்பு தாவாக்கள் செய்யவும் நடந்தவுமிருந்தது. சரிதானென்றும் சப் கோர்ட்டார் செய்த தீர்மானம் சரியானதே.

அப்படி மானேஜர்கள் செய்வதற்கு அதிகாரம் கிடையாதென்று எந்த சட்டத்திலும் சொல்லப்படவில்லை. பிரதிவாதிகள் பிரதமத்தில் யார், யாருடன் லேவாதேவி ஒப்பந்தம் செய்தார்களோ அவர்களெல்லோரும் ஆதியிலேயே வாதிகளாய் தாவா செய்திருக்கிறார்கள். இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்படாமல் அந்த வியாபாரத்தின் லாபத்தில் மாத்திரம் பங்குள்ளவர்களும் இதில் சேரவேண்டு மென்றும் அவர்கள் ரசீது கொடுக்கவேண்டு மென்றும் ரெஸ்பான்டென்டுகள் சொல்வது நியாயமல்ல.

வடமேற்கு மகாணங்களின் ஹைகோர்ட்டார்கட்கு க்ஷேரிபிஷாரத்கண்ணு VS. மணக்கல்வல்லோட்டில் நாராயணன் இ. லா. ரி 3-ம் 234-கேசை ஆதாரமாய்க் கொண்டு சப் கோர்ட்டார் தீர்மானம் பிசகென்று டிக்ரியை ரத்து செய்துவிட்டார்கள்.

ஆனால் அந்த கேசின் விர்த்தாந்தம் இந்த கேசுக்கு சம்மந்தப்பட்டதல்ல.

அருணசலபிள்ளை VS. வைதிலிங்கமுதலியார் இ. லா. ரி. 642 கேசு இந்த கேசுக்குத்தகுந்த கேசென்று எடுத்துக்காண்பிக்கப்பட்டது.

ஹைகோர்ட்டார் எடுத்துக்கூறிய இன்னொரு கேசு அதாவது சாம்சேபக் VS. ராம்லால் குண்டு இ. லா. ரி. 6-கல் 815 ; 8-கல் வா. ரி. 457-ம் ரெஸ்பான்டென்டுகள் எடுத்துகூறிய.

இமாமுடீன் VS. வீலாதர் இ. லா. ரி. 14 அ. 324-ம் அளப்பசெட்டி VS. வள்ளியன் செட்டி இ. லா. ரி. 18-ம 32-ம் இந்த கேசுகளும் பிரஸ்தாப கேசுக்குச் சம்பந்தப் பட்டதல்ல.

ஆகையால் முதல் கோர்ட்டார் ஆதியில் மூன்று வாதிகளும் குடும்பத்தின் தனிமானேஜர்களாய் பிரதிவாதிகளிடத்தில்செய்த லேவாதேவி ஒப்பந்தம் கிரமமானதென்றும் அவர்கள் தங்கள் மூன்றுபேர் மேல் மாத்திரம் செய்துக்கொண்ட அக்ரிமென்டின் பேரில் தாவாசெய்யத்தகுமென்றும் மற்ற பாகஸ்தர்களையும் அந்த தாவாவில் கட்சிதாரர்களாய்ச் சேர்க்காமல் அவர்கள் சட்டப்படி தாவா செய்யலாகி யுண்டென்றும் கண்டு பிரிவி கவுன்சல் பிரபுக்கள் வடமேற்கு மாகாணங்களின் ஹைகோர்ட்டார் செய்த தீர்மானத்தை ரத்து செய்துவிட்டு காஜிபூர் சப்கோர்ட்டார் செய்த டிக்ரியை சிலவுடன் ஊர்ஜிதம் செய்யும்படிக்கு மாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்தி அவர்களுக்கு ரிப்போர்ட்டு செய்தார்கள்,

மெசர்ஸ் L. [illegible] K. டிபூப் பாரிஸ்டர்களும், மெசர்ஸ் பாரோ, ராஜர்ஸ், நெவில் அட்டெர்னிகளும்

மிர் ஜி. எஸ். எ. ராஸ் பாரிஸ்டரும், மெசர்ஸ் எஸ். எல். உல்சன் அண்டு கம்பெனியார் அட்டர்னிகளும். பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரானார்கள்.

வாகூர் இந்தியன் கேசுகள் 9-வது வால்யம் 749. 15-கல். வீ. நோ 321 ; 8-அ. லா. ஜ. 25-ம்.

OUDH JUDICIAL COMMISSIONER'S COURT.

அவுட் ஜூடிஷல் கமிஷனர் கோர்ட்டு.

2-வது சிவில் அப்பீல் நே. 438 of 1909.

ஜட்ஜி:—மி-ர். க்ஷாமியா J. C. முன்பாக.

மகம்மத் அடீல்கான்...பிரதிவாதி...அப்பீல்வாதி.

VS.

முசம்மத் பிபேல்பீபீ...வாதி...ரெஸ்பான்டென்ட்

மகம்மத்தியலா—உயில்.

கேசின் விபரம்:—ஜமேல்கான் என்னும் ஒருமகம்மத்தியன் 1879ளு நவம்பர்மீ தன்னுடைய சொத்துகளையெல்லாம் இந்த தாவாவில் முக்கியமான பிரதிவாதியாகிய தன்னுடைய குமாரன் அடீல்கான் அடையவேண்டியதென்று உயில் எழுதி வைத்தான். பிறகு அவன் 1901-ம்ளுத்தில் வேறொரு உயில் எழுதி அதன்படி மேற்சொல்லிய தன்னுடைய சொத்துகள் யாவற்றையும் தன்குமாரனாகிய அடீல்கானுடைய பத்தினியாகிய தன் மருமகள் அப்சரிசம் அடையவேண்டியதென்று முன் உயிலை ரத்து செய்து விட்டான். இதன்றி ஷஜமேல்கான் என்பவன் 1888ளுத்திலும் ஓர் உயிலெழுதி அதன்படி தன் சொத்துகளை தன்னுடைய இன்னொரு குமாரனாகிய இப்ராஹீம் கான் அடையவேண்டியதென்று சொல்லி பிறகு 1905ளு அக்டோபர் மாதத்தில் இன்னொரு உயிலெழுதி அந்த 1888ளுத்திய உயிலையும் ரத்து செய்து விட்டான். மேற்செப்பிய 1878, 1388ளுங்களில் எழுதிய உயில்களில் கண்டிருக்கும் சொத்துகளை பிறகு தான் இறந்து போவதற்கும் சில தினங்களுக்கு நாளைக்கு முன் அதாவது 1905ளு டிசம்பர்மீ 6உ எழுதிவைத்த உயிலின்படிக்கு தன் குமாரர்களாகிய அடீல்கான், இப்ராஹீம் கான் என்பவர்கள் இருவரும் அடையவேண்டியதென்று தான் முன் 1901, 1905 (அக்டோபர்) வருஷங்களில் எழுதிவைத்த உயில்களை ரத்து செய்து விட்டான். ஜமேல்கானின் பெண்சாதியாகிய விதவைமுசமத் பாடுல் பீபிஎன்பவளும் அவளுடைய குமாரர்கள் இருவரும் அவனுடைய குமாரத்தியும் தங்கள் தங்களுடைய குமாரர்கள் இருவரும் அவனுடைய குமாரத்தியும் தங்கள் தங்களுடைய பாகத்திற்ககாக தாவாசெய்தார்கள். இதஇரண்டுகேசுகளிலும் 8905-ம்ளுத்திய உயில் வார்சுகளின் பட்சமாயிருப்பதால் சட்டப்படி செல்லத்தக்கின தல்லவென்று வாதிகள் வாதித்தார்கள்.

இந்த தாவாக்களில் அநேக வாதங்கள் கூறப்பட்டன ஆயினும், முக்கியமாய் கவனிக்கவேண்டியவைகள் மூன்று பாயின்ட் யாதெனில்:—

(1) 1905ளு டிசம்பர்மீ 6உ எழுதிய உயில் செல்லும் ஏனெனில் சென்ற உயிலெழுதிவைத்தவனுடையவார்சுகள் அவன் இறந்து போவதற்குமுன் செய்யப்பட்டதென்றும், அவன் இறந்த பிறகும் அந்த (2) வாதிகளின் தாவா சட்டப்படி சொயில போக வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கவேண்டுமென்றும் வாதித்தார்கள்.

(3) 1905-வருஷத்தில் எழுதிய உயிலுக்கு வார்சுகள் சம்மதிக்காதபடியால் 1901ளுத்திய உயில் சட்டப்படி செல்லத்தக்கினதென்று வாதித்தார்கள்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

ஜட்ஜிகள்.—மி-ர ஜ-வாலிஸ் } முன்பாக.
மி-ர் ஜ-மில்லர் }

அருணசல நாடான் ... ... அப்பீல் வாதி.

கந்தசாமி ஆவகையரு .... அப்பீல் பிரதிவாதி.

ஒரு வியாஜ்ஜியத்தில் பந்தோபஸ்து விஷயத்தில் கோர்ட்டார் சில நிபந்தனைகளுக்குட்படுத்தி ஒரு உத்திரவை செய்தார்கள். ஆனால் கேஸ் முடிவடைவதற்கு, முந்தி வேறே கோர்ட்டுக்கு மாற்றப்பட்டது. பிந்திய கோர்ட்டார் பந்தோபஸ்து விஷயத்தில் பிரவேசிக்க அதிகாரமுண்டு.

திருமங்கலம் டிஸ்டிரிக்ட் முன்சிப் அவர்களின் 1906-ம் ளுத்திய அசல் நெ. 3ம6-ன் தீர்மானத்தின் பேரில் மதுரை டெம்பொரெரி சப் ஜட்ஜ் அவர்களின் 1907-ம் ளுத்திய C. S. 636 நெ. தீர்ப்பின் மேல் இந்த இரண்டாவது அப்பீல்.

3-வது பிரதிவாதிக்கு ஒரு காலிமனை யிருக்கிறது. அவன் அதை முதல் பிரதிவாதியிடம் 5-9ல் 1910-ல் ரூ 150 க்கு அடமானம் வைத்தான். முதல் பிரதிவாதி அதை [illegible] 4-வது பிரதிவாதிக்கும் பிறகு [illegible] பிரதிவாதிக்கும் அடமானம்வைத்தான். 4-வது பிரதிவாதியிடம் 25-6-01 லும் 3-4-03 லும் இரண்டு அடமானம் செய்தான். 2-வது பிரதிவாதிக்கு 13-7-03ல் அடமானம் வைத்தான். 4-வது பிரதிவாதி தன் அடமான சுவாதீனத்தை 13-9-0-3-ல் 2-வது பிரதிவாதிக்கு செய்தான். இவ்விதமாக 2-வது பிரதிவாதி முதல் பிரதிவாதியின் சொத்துக்கு பாத்தியஸ்தனானான். 1904-ம் ளுத்திய அசல் நெ 514-ல் 2-ம் பிரதிவாதி முதல் பிரதிவாதி பேரில் 3-அடமான பத்திரத்தின் பேரிலும் 30-11-04-ல் தீர்ப்பு [illegible]க்கொண்டான்.

வாதி 1903-ம் ளுத்திய ஸ்மால் காஸ் நெ. 812-ல் பணத்துக்கு சப்கோர்ட்டில் (மேற்கு) தாவா செய்தான். அதை சப்கோர்ட்டுக்கு (கிழக்கு) மாற்றினார்கள் அந்த கோர்ட்டு நெ. 827 of 1903. மாத்தனுக்கு [illegible] சொத்தை பந்தோபஸ்து செய்ய வா[illegible]ருந்தான் முதல்பிரதிவாதிக்குப் வாதி [illegible] கொடுக்கவேண்டியகடன் விஷயமாக தீர்ப்பு [illegible] முந்தி சப்கோர்ட்டார் (மேற்கு) கோர்ட்[illegible] பந்தோபஸ்துக்கும் உத்திரவுசெய்து விட்டார்கள். சப்கோர்ட்டார் (கிழக்கு) கேஸ்மாற்றி [illegible] கொடுக்கப்பட்டு [illegible] [illegible] தெரிந்து பந்தோபஸ்தை ஸ்திரப்படுத்[illegible].

[illegible] கொடுத்தவனும் வா[illegible] சப்கோர்ட்டு (கிழக்கு) எல்லைக்குவெளி

யில் யிருப்பதால் அந்தக் கோர்ட்டின் முடிவான தீர்மானம் செல்லத்தகுந்ததா என்பது கேள்வி.

ம-ா-ா-ஸ்ரீ K. N. அய்யர்:—அப்பீல் வாதி வக்கீல்

G. S ராமச் சந்திரய்யர் } அப்பீல்பிரதிவாதி வக்கீல்.
K. R. சுப்பிரமணிய சாஸ்திரிக்காக }

தீர்ப்பு:—இந்தக் கோயில் மதுரை (மேற்கு) சப் கோர்ட்டாரால் தன்எல்லைக்குட்பட்ட ஒருபந்தோபஸ்துக்கு உத்திரவு செய்யப்பட்டது. பிறகு முடிவுக்குமுந்தி மதுரை கிழக்கு) சப்கோர்ட்டுக்கு முடிவு செய்ய மாத்தப்பட்டது மதுரை (மேற்கு) சப்கோர்ட்டார் வெகுகாலமாக முடிவு செய்யாததால் மாத்தல் செய்யப்பட்டது. சப்கோர்ட்டுக்கு (கிழக்கு) அதிகாரம்யில்லாததால் முடிவு தீர்மானம்செல்லத்தகுந்ததாயில்லை. சிவில் புரோசீசர்கோடு 25-[illegible] வது செக்ஷன்கள் அநுசரிக்கப்பட்டிருக்கிறது [illegible]கையால் கீழ் கோர்ட்டு தீர்மானத்தை மாற்றி சட்டப்படி முடிவு செய்ய டிஸ்டிரிக்ட் முன்சீபுக்கு அனுப்பப்பட்டது. சிலவு தொகையை கொடுக்க வேண்டியது.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெம்பர் 538 of 1909.

கிரிமினல் ரிவிஷன் மனு நெம்பர் 402 of 1909.

மி-ர். ஜ. சங்கரன் நாயர் அவர்கள் | முன்பாக.

சரவணபிள்ளையும் மற்றவர்களும்:—பிரதிவாதிகள் மனுதாரர். இந்தியன்பினல்கோடு. 1860ளுத்திய XLV-சட்டம். 143, 4-6, 447. செக்ஷன். மீறி நடத்தல் சட்டவிரோத கூட்டம்.

எதிரி ஒரு காலி மனைக்குள் புகுந்து ஒரு சுவற்றை இடித்து அதை மறுபடி கட்டினான். அந்த சுவர் எதிரில் ஒருவனுக்குச் சொந்தம்.

தங்களுடைய சொந்த சுவற்றை கட்டிக் கொண்டிருந்ததினால் சட்டவிரோதமான கூட்டமாக மாட்டாது.

எதிரியின் குற்றத்துக்கு தண்டித்திருக்ககூடாது.

சிதம்பரம் 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் அவர்களின் C. C. நம்பர் 585 of 1908ன், தீர்ப்பின் பேரில் சிதம்பரம் 1-வது கிளாஸ் சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் அவர்களின் 1909ளுத்திய [illegible] 3உயில் கிரிமினல் அப்பீல் நம்பர் 38 of 1909ன் தீர்ப்பின் பேரில்சில மாறுதலுக்கு கிரிமினல் புரோசீஜர் கோடு 435, 439-வது செக்ஷன்படி கொடுத்த மனு:

தீர்ப்பு:—எதிரிகள் [illegible] தப்பு முதல் சாக்ஷியின் [illegible] விரோதமான பிரவேசிப்[illegible] ஆம். சட்டவிரோதமான கூட்டம் கூடியும் அவ[illegible]

போடப்பட்டிருந்த வேலையை மீறியும், ஒரு சுவற்றையிடித்தும், அதை மறுபடி, கட்டி முடித்ததற்கும் இந்தியன் பினல் கோடு 426, 143, & 447-வது ஸெக்ஷன்படி தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பிராஸிகூஷன் தரப்பின் முதல் சாக்ஷி, இடிந்த சுவறும் கொஞ்சம் புதுப்பிக்கப்பட்ட சுவறும் 2-வது எதிரியின் வீட்டின் கிழண்டை சுவர் என்று ஒப்புக்கொள்ளுகிறான்.

பிராஸிகூஷன் தரப்பின் முதல் சாக்ஷி ராஜிநாமா டிக்ரியை ஆதாரவாகசாக்ஷியம் கொடுக்கிறான் அந்த ராஜிநாமாவில் 2-வது எதிரியும் பந்தப் படவில்லை. அந்த சுவர் என்னுடைய தென்று வியாச்சியத்தில் பிரதிவாதி சொல்லியிருக்கிறான், தவிரவும் அந்த சுவற்றை அவனுக்கு கோர்ட்டு அமீனாமூலமாய் கொடுக்கப் படவில்லை என்று ஒப்புக் கொள்ளுகிறான் ஆகையால் அவன் தன்பாத்தியதையை ரிகார்டு மூலமாய் ஸ்தாபிக்கவில்லை. குற்றம் நடந்த ஜூலை 1-உக்கு முந்தி 5-அல்லது 6-அடிசுவறு கட்டப்பட்டதாகவும் ஒப்புக்கொள்ளுகிறான் ஆகையால் 2-வது எதிரியின் வீட்டில் அந்த சுவறு இருந்த தென்பதற்கு சந்தேகமில்லை தங்கள் சுவற்றை தாங்கள் கட்டிக் கொண்டிருந்ததால் 143-வது ஸெக்ஷன்படி சட்டவிரோதமான கூட்டம் என்று சொல்ல முடியாது எதிரிகள் எப்படி குற்றவாளிகள் என்று தெரியவில்லை தங்கள் சுவற்றைகட்டினாகளேயொழிய பிராஸிகூஷன்தரப்பின் முதல் சாக்ஷியினிடம் ஏதாவது கெடுதல் செய்யப்போனதாகவாவது அல்லது செய்ததாக வாவது தெரிய வில்லை கீழ்கோர்ட்டார் இதைக் கவனிக்காததால் இதை ஒப்புக்கொள்ளத் தக்கதில்லை. ஆகையால் தீர்ப்பை மாற்றி அபராதம் விதிக்கப்பட்டிருந்தால் திருப்பி வாப்ஸ் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

மதராஸ் ஹைகோர்ட்டு.

MADRAS HIGH COURT.

—:o:—

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜ. சங்கரநாயர். } முன்பாக.
மிஸ்டர் ஜ. பின்ஹே.

நயினப்பன் சேர்வையும் மற்றவர்களும் (1முதல் 5 வரையிலும் 7. கெ யிரதி வாதிகளும், } அப்பீல் வாதி.

வீரனும் மற்றவர்களும் வாதிகளில் 1 முதல் 13. நபர்களும் பிரதிவாதிகளில் 10-11 6 வது பிரதிவாதிககு பதிலாயுள்ளவர்கள் } அப்பீல் பிரதிவாதி.

மிராசுதாரும், குத்தகைக்காரரும். ஜலத்தை செலவழிக்க மேல்வாரத்துக்குள்ள சுதந்தரத்தை குளத்துக்காரருக்கு ஜலத்தை வழக்கமாக பாய்ச்சிக் கொண்டு வருகிற அநுஷ்டானத்தின் சுதந்தரம்.

மேல்வாரக் காரர்களும், குடிவாரத்தினுடைய சொந்தக்காரர்களும் தான் அநுபவித்த ஜலத்தை வழக்கமாக கொடுத்து வருவது தவிரவேயொழிய நிபந்தனையில்லை.

மேல்வாரம்தார் வேறுமனிதர்களுக்கு எந்த உடன்படிக்கையினாலும் எந்த விதமான சுதந்தரத்திலிருந்தும் குறைபடகூடாது.

இந்த அநுஷ்டானதுக்கு ஏதாவது விரோதம் ஏற்பட்டால் குடிவாரம் தார் மேற்கண்ட வேறுமனிதர்கள் பேரில் தாவா செய்யலாம.

குடிவாரம் தாருடைய சுதந்தரதுக்கும் கவர்ன்மெண்டாருடைய குடிகளுக்கும் வித்தியாசமுண்டு.

மேல்வாரக் காரரைப் போலல்லாமல் கவர்ன்மெண்டார் தீர்வை மாறுதல் செய்யவும் பொது நன்மையைக் குறித்து குடிகளுடைய சுதந்தரத்தை அநுசரித்து தங்களுக்கு வேண்டிய அளவுக்கு மேற்பட்டக் குலத்தை செலவழிககவும் அதிகாரமுண்டு.

சிவகங்கை டிஸ்ட்ரிகட்டு முன்சிப் S. ராகவய்யங்கார் அவர்களுடைய 1903ம் ஹு அசல் நெ. 317ன் தீர்மானத்தின் பேரில் மதுரை (கிழக்கு) சப்ஜட்ஜ் S. ராமசாமி அய்யங்கார் அவர்களுடை 1905 ஹு அப்பீல் வியாச்சியம் நெ. 70ன் தீர்மானத்தின் பேரில் இரண்டாவது அப்பீல்.

வாதிகள் M. என்னும் கிராமத்தின்குடிவாரக்காரர்கள். அதில் 10வது பிரதிவாதி மேல்வாரக் காரனாயிருந்தான் M. என்னும் கிராமத்தின் நிலங்கள் வெகு நாளாக வாதிகளுக்கு ஏற்பட்டிருந்த சுதந்தரத்தைதவிர்த்து ஒருகுளத்தினால் பாயப் பட்டுவருகிறது.

1. முதல் 5 வரையிலுள்ள பிரதிவாதிகள் 10 வது பிரதிவாதியோடு ஒரு உடன்படிக்கையால் N. என்னும் கிராமத்திலுள்ள சில நிலங்களை நஞ்சைபாக்கி அந்தகுளத்திலிருந்து ஒருவாய்க்கால் வெட்டி அதனால் N. என்னும் கிராமத்தை பாய்ச்சி பயிரிட்டார்கள்.

வாதிகள், 1 முதல் 5 வரையிலுள்ள பிரதிவாதிகளின் உபயோகப்படுத்துதலை சாசுவதமாக நிறுத்தவும் வாய்க்காலை நிரப்பவும் இன்னும் பாக்கிசாதகங்களுக்கு வியாச்சியம் செய்தார்கள்.

டிஸ்ட்ரிக்ட்டு முன்சிப் வாதிகள் கேட்டுக் கொண்டபடி தீர்ப்பு செய்தார்.

இந்த தீர்மானம் அப்பீலில் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

1. முதல் 5 வரையிலுள்ளவும் 7 வது பிரதிவாதிகளும் ஐகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள்.

அப்பீல் வாதிகளுக்கு வக்கீல் S. சீனிவாச அய்யங்கார் 1 முதல் 10 அப்பீல்பிரதிவாதிகளுக்கு வக்கீல் S. கோபாலசாமி அய்யங்கார்.

தீர்மானம்:—மருப்பணைத்தான் கிராமத்தின் குடிவாரக்காரர்களாக வாதிகள் ஆஜராகிறார்கள். அவர்களில் 10 வது பிரதிவாதி திருக்கலக்குடிகிராமம் தேவஸ்தானத்தின் மேல்வாரக் காரன்.

கீழ் கோர்ட்டார் 1 முதல் 7ம 10 வது பிரதிவாதிகள் வாதிகளின் கிராமத்து குளத்து ஜலத்தைக் கொண்டு செட்டிநத்தம் கிராமத்து நிலங்களை பாய்ச்ச பாத்தியதையில்லை என்றார்கள்.

வெகுகாலமாக வாதிகளின் நிலங்கள் நஞ்சை நிலமாக பயிரிடப்பட்டுக் கொண்டுவருகின்றன. அந்தக்குளத்தின் தண்ணீரானது மேல்கண்டநஞ்சைக்கே போததாயிருக்கும்போது அதை மற்ற நிலங்களுக்கு உபயோகப் படுத்தினால் வாதிக்கு அநியாயம் நஷ்டம் ஏற்படும்.

செட்டிநத்தம் கிராமத்தில் 1 முதல் 7 வரையிலுள்ள பிரதிவாதிகளின் நிலங்கள். 10 வது பிரதிவாதியினுடைய ஒரு உடன் படிக்கையின்பேரில் இந்தஜலத்தைக் கொண்டு இது வரையில் பாய்ச்சப்படாத புது நிலத்துக்கு பாய்ச்ச பிரயாசைப் பட்டதாகவும் தெரியவருகிறது.

1 முதல் 7 வரையிலுள்ள அப்பீல் பிரதிவாதிகள், வாதிகளுக்கும் 10 வது பிரதிவாதிக்கும் உடன்படிக்கையே என்னும் ஆகையால் வாதிக்க ஏதாவது சாதகமானது தனக்கு பாதகமென்றும் கக்ஷியாடப்பட்டது (இதற்கு ஆதாரம் 1901ஹு. இந்தியன் லா, ரிபோர்ட்டு 24 மதாரஸ் 36. இதில் வாதி சின்னைப்பன் முதலியார், பிரதிவாதி சிகாநாயகன்)

சட்டமானது கவர்ன்மெண்டார் குடிகளுக்கு ஜலம் கொடுப்பதைப்பற்றியிருக்கிறது.

இது வாது ராமச்சந்திர, பிரதிவாதி நாராயணசாமி. இவன் விஷயமாக ஏற்பட்ட அநுஷ்டானத்தை அநுசரித்தும் பிறகு ஜட்ஜ் சுப்பிரமணிய்யர் அவர்களால் வாதி சங்கரவடிவேலு பிரதிவாதி கவர்மெண்டார்ராகவும் ஏற்பட்ட வியாச்சியம் தள்ளுபடியானதை அனுசரித்து யிருக்கிறது.

கவர்ன்மெண்டாருக்கும் குடிகளுக்கும் எவ்வளவோ விவகாரங்கள் ஏற்படலாம்.

கவர்ன்மெண்டாருக்கு வருஷாவருஷம் வரிகளை மாத்தவும், பொது நன்மையைக்குறித்து குடிகளின் சம்மதத்தை அநுசரித்து ஜலத்தை செலவழிக்கவும்; குடிகளுக்கு தேவையில்லாத அதிகமானஜலத்தை ஏற்பாடு செய்யவும், தண்ணீர் உண்டாகும் பிரதம ஸ்தலதில் வேண்டியமாறுதல் செய்யவும் அதிகாரமுண்டு.

மேல்வாரக்காரனுக்கோ வரியில் மாறுதல் செய்யவாவது அல்லது இந்த ஜலத்தை ஏற்பட்ட குடிகளைத்தவிரவேறே யாருக்காவது செலவழிக்க அதிகாரமில்லை.

கவர்ன்மெண்டாருக்கும் குடிகளுக்கும் ஏ விதசிவகாரமிருந்தாலும் வாதிகளின் குடிவாரக்காரரின் சுதந்தரம் குளத்து ஜலத்தை கொடுக்கிறவழக்கத்தை அனுசரித்தும் நிலத்தின் பாத்தியதையைப் பொறுத்திருக்கிறது.

இவைகளை அநுசரித்து 2 வது அப்பீலை செலவுதுகையுடன் தள்ளிவிட்டோம்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

கிரிமினல் ரிவிஷன்மனு நெ. 215 of 1909.

மிஸ்டர் ஜ. ஸர். ஆர்னால்ட் ஒயிட் முன்பாக.

வெய்ய மாணிக்கமும் மற்றவர்களும் ... அப்பீல் மனுதாரர்.

வெங்கய்யவும் மற்றவர்களும் ... ... அப்பீல் பிரதிவாதி.

பாத்தியஸ்தாபனை விஷயமாக கக்ஷிக்காரர்களை விசாரித்துக் கொண்டிருக்கையில் பாத்தியங்கள், உயில், பாகபத்திரம் செட்டில்மெண்ட் முதலிய ஆதாரங்களால் பாத்தியம் கொண்டாடப் பட்டபோது மாஜிஸ்ட்ரேட்டுக்கு நியாயம் கண்டு பிடிக்க முடியாமல் சிவில் மூலியமாய் தங்கள் பாத்யதையை ஸ்தாபிக்கும்படி உத்திரவளித்தார். மாஜிஸ்ட்ரேட் தன் அதிகார எல்லையை கடந்து விசாரித்தது. பாத்தியதையை தீர்மானித்திருப்பது.

கல்லூர் டிப்டி மாஜிஸ்ட்ரேட் அவர்கள் 1909-ம்ஹு ஜனவரி 15உ மிசலேனியஸ் கேசு நெ. 17 of 1908-ன் தீர்மானத்தின்மேல் கிரிமினல் புரோசீசர் கோடு 435, 439-வது செக்ஷன்படி ஹைகோர்ட்டாருக்கு கொடுத்தமனு.

விஷயம்:—கீழ்கண்ட மாஜிஸ்ட்ரேட் அவர்களின் உத்திரவில் விஸ்தாரமாய் தெரியவருகிறது.

1908-ம்ஹு மார்ச்சுமீ த்தில் இறந்துபோன வேலுசாத்தினம் நிலபாத்தியதை விஷயமாக கிரிமினல் புரோசீசர்கோடு 145-வது பிரிவு படி ஏற்பட்ட தாவா.

இதில் முக்கிய மனுதாரர் ரத்தினம் என்பவரின் இ-வது டாரியை. எதிரி முதல் பெண்ஜாதியின் மாப்பிள்ளை (மருமகப்பிள்ளை) பிதுரார்ஜ்ஜிதசொத்தை எதிர்களும் என் புருஷனுமாக பங்கிட்டுக் கொண்டார்களென்று, மனுதாரர் சொல்லுகிறார். பாகபத்திரமில்லை. பிறகு 1907-ம்ஹுத்தில் இறந்த ரத்தினம் மனுதாருக்கு ஒரு செட்டில் மெண்டுபத்திரம் செய்தார், அதை ரிஜிஸ்டர் செய்யக்கூடாதென்று எதிரி ஆக்ஷேபித்தும் ரிஜிஸ்தா செய்யப்பட்டது. பிறகு சாவதற்கு முந்தி ரத்தினம் என்பவரால் எதிர்க்கு ஏற்படுத்தியதாகவும் அதைப் பத்தி வாதாடுகிறார். அதனால் இறந்தவனுக்கு வாரிசு யார் என்பதும். சொத்தின் பொருமானம் தெரியமற உயிலின் பாகத்தை விஸ்தாரமாயும் காட்டப்படவில்லை என்று தெரிய வருகிறது. எனக்கு தீர்மானிக்க அசாத்தியமானது. இந்தக் கோர்ட்டிலும் அதை விசாரிக்கக்கூடாது என்கிறார். அடியில் கண்ட நிலங்களை குறித்த வியாச்சியம் முடிந்தது.

ஏற்படுத்திய தஸ்தாவேஜின்படி அநுஷ்டிக்கப்பட வில்லை என்பது தெரியவருகிறது.

சிவில் கோர்ட்டாரால் வாரிசும், பாத்தியமும் ஏற்படுத்துகிற வரையில் சொத்தை கோர்ட்டில் வைக்கப்பட்டது.

உத்திரவு:—மாஜிஸ்ட்ரேட் அந்தக்கேசை தன்னால் தீர்க்க முடியாது என்று சொன்னது தப்பு தன்னுடைய எல்லை தவிர 146-வது செக்ஷனை கவனித்திருக்கவேண்டும்.

கீழ் உத்திரவு மாத்தப்பட்டது.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

2-வது சிவில் அப்பீல் நெ. 71 of 1909

ஜட்ஜிகள்;—மி-ர் ஜ-சங்கரநாயர் } முன்பாக.
மி-ர் ஜ-கிருஷ்ணசாமி ஐயர்

கிருஷ்ண ஐயர் ... ... அப்பீல் வாதி

vs.

பாலம்மாள் ... ... அப்பீல் பிரதிவாதி.

(1) கலியாணத்தின் சிலவை கேட்பதும் மறுதளிப்பும்; (2) முதலில் கேட்டு மறுதளித்தலானது உடன்படிக்கைக்குப் பிறகு வியாச்சியம் கொண்டுவர, காலாவதி யில்லை. (3) கக்ஷிக்காரர்கள் இந்துக்களாதலால் ஹிந்து சட்டப்படி உடன்படிக்கைபடி புருஷன் பெண்ஜாதி தனித்து வாழ்வது செல்லத்தக்கதில்லை.

கேசின் விபரம்:—1903-ம்ஹுத்தில் ஒரு புருஷன் தன் கலியாணச்சிலவைக் கொடுக்கும்படி தன் பெண்சாதியின்பேரில் வியாச்சியங்கொண்டுவந்தான். பிறகு 1904-ம் ஹுத்தில் இவர்களிருவரும் வழக்கப்படி சேர்ந்துவசிருப்பதென்று சமாதானமானார்கள். ஆனால் சமாதானப்படி அவர்கள் ஒருபோதும் சேர்ந்திருக்கவில்லை. ஆகையால் 1905-ம்ஹு

தில் புருஷன் தன் கலியாணச் சிலவைக் கொடுக்கும்படி மறுபடியும் வியாச்சியம் கொண்டுவந்தான். அவனுடைய கஷ்டத்தைக்கொடுக்கும்படி முன்சீப் கோர்ட்டில் தீர்மானமாயிற்று. ஆனால் ஜில்லா கோர்ட்டார் 1903ஞு இந்த வியாச்சியங்கொண்டுவந்த மறுதளிப்பு தேதி முதல் மூவாண்டு [illegible] க்கு மேற்பட்ட காலமாகிவிட்டபடியால் காலாவதியாகிவிட்டதென்று லிமிடேஷன் சட்டம் 15 of 1877 ஷெடியூல் 2. 35-வது ஆர்டிகலின்படி வியாச்சியத்தைத்தள்ளிவிட்டார்கள்.

ஸ்ரீ ரெங்கம் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் அவர்கள் தீர்மானத்தின் பேரில், திருச்சிறுப்பள்ளி ஜில்லா கோர்ட்டாரவர்களின் தீர்ப்புக்கு மேலாக இந்த இரண்டாவது அப்பீல்செய்யப்பட்டது.

தீர்மானம் :—ஜ. கிருஷ்ணசாமி ஐயர் :—இந்த வியாச்சியத்தில் புருஷன் தன் கலியாணச்சிலவைக் கேட்டிருக்கிறான். ஜில்லா கோர்ட்டார் லிமிடேஷன் ஆக்ட் 1877-ம் ஞு த்திய 35-வது ஆர்டிகலின்படி காலவதியானதாக தள்ளிவிட்டார்கள். இது விஷயமாக இந்தக் கோர்ட்டிலும், பம்பாய், கல்கத்தா ஹைகோர்ட்டுகளிலும் ஏற்பட்டிருக்கும் தீர்மானம் தெரிந்த விஷயம். ஆனால் இந்தக் கேசில கேட்டு மறுதளித்தபின்பே ரில் 1903-ம் ஞுத்தில் அசல் கெ. 313 வியாச்சியங் கொண்டுவரப்பட்டு 1904-ம் ஞு ஜூலைமீ 25உ யில் உலக வழக்கப்படி [illegible] என்றும் புருஷனுடன் வாழ பெண் [illegible] க்கு ஏதாவது காரணத்தைக்கொண்டு இஷ்டமில்லாத பக்ஷத்தில் அவன் அவளுக்கு ரூபா 350-கொடுக்கவேண்டுமென்ற நிபந்தனைகளுடன் சமாதானமானார்கள். அவர்கள் மனஸ் [illegible] மில்லாமல் ஒத்துவாழ சம்மதப்பட்டிருப்பதால் மறுபடி கலியாணச்சிலவைக்கேட்டு மறுதளித்தல் ஏற்பட்டாலொழிய காலாவதியாகமாட்டாது. சமாதானத்துக்குப் பிறகு கேட்டதாகவும் மறுதளித்ததாகவும் சொல்லப்படவில்லை, பெண் ஜாதி ஒத்து வாராதது உண்மை. இந்துக்கள் விஷயமாகவும் இந்தச் சட்டத்தை எவ்வளவு வரையில் அனுஷ்டிக்கலாம் என்பதைக் கவனிக்கவேண்டியது. இப்போது டை உடன்படிக்கையே இந்த வியாச்சியத்துக்கு காலாவதியா என்பதைக் கவனிக்கவேண்டியது. அந்த உடன்படிக்கைப்படி அவர்கள் [illegible] சேர்ந்து இறகு பிறிந்தால் மட்டில் நிபந்தனை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; பெண்ஜாதி உடன்படிக்கைக்குப் பிறகு புருஷனிடம் சேரவில்லை. ஆகையால் உடன்படிக்கையின் நிபந்தனைப்படி எதிர்வாதமில்லை. ஹிந்துலா. 1873-ம் ஞுத்திய மதராஸ் சட்டம் 3. பிரிவு 16ன் படி, புருஷன் பெண்சாதிக்குள், உடன்படிக்கைக்கு ஆதரவு உண்டா என்பதை சந்தேகிக்கவேண்டியது. கக்ஷிக்காரர்கள் ஹிந்துக்களும், பிராமணர்களாயுமிருக்கிறார்கள். ஹிந்து லாவில், இதற்கு ஏதாவது விலக்குவதி ஏற்பட்டிருக்கிறதா என்பதைக் கவனிக்கவேண்டியதில்லை. இந்த உடன் படிக்கை வழக்கத்துக்கு விரோதமாயிருப்பதால் இதை கவனிக்கவேண்டியதில்லை. ஆகையால் [illegible] அவர்கள் தீர்மானத்தை மாற்றி, முன்சிப் அவர்கள் [illegible] தை உறுதி செய்வதுடன் இந்த சிலவையும் [illegible] யும் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

ஐ-சங்கரநாயர் [illegible] தீர்மானம்:—டி. ஐ. கிருஷ்ணசாமி ஐயரவர்களின் [illegible] தை ஒத்திருக்கிறது.

அப்பீல் ஒத்துக்கொள்ளப்பட்டது.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

ஜட்ஜிகள்:—மி-ஸ். ஐ. பென்ஸன்
மி-ஸ். ஐ. மன்ரோ } முன்பாக.

சங்கரப்ப நாயகன் ... ... அப்பீல் வாதி

ராஜாங்கத்தார் (மதுரைகலெக்டர்துவாரா) அப்பீல்பிரதி

பாத்தியதையை ஸ்தாபித்தலும் கட்டடத்தை யிடிக்காமல் தடுத்தலும் செலுத்திய அபராதத்தை திருப்பி பெற்றுக் கொள்ளுதலும் ரிவினியு ரிகவரி ஆக்ட் 59-வது செக்ஷன்படி வியாச்சிய மூலதேதிமுதல் 6-மாதத்துக்கு மேல்பட்டால் விவகாரம் செல்லாது என்பதும்.

திருமங்கலம் டிஸ்டிரிக்ட்முன்சீப் அவர்களின் 1906-ம்ஞுத்திய அசல் கெ. 14-ன் தீர்மானத்தின் பேரில் மதுரை டெம்பொரெரி ஸப்ஜட்ஜ் அவர்களின் 1907-ம்ஞுத்தில் A. S. 525-நெம்பரின் தீர்ப்புக்கு மேல் இந்த இரண்டாவது அப்பீல்:—

பாத்தியதையை ஸ்தாபிக்கவும் படிக்கட்டுகளை யிடிக்க கொடுத்த உத்திரவை நிறுத்திவைக்கவும் வாதிக்கு ரிவினியு பாக்கிக்காக பிரதிவாதியால் விதிக்கப்பட்ட செலுத்தியிருக்கும் அபராதத்தை வாபஸ் செய்வதற்கும் இந்த வியாச்சியம் கொண்டுவரப்பட்டது. ரிவினியூரிகவரி ஆக்ட் 59-வது செக்ஷன்படி காலாவதி யாகிவிட்டதென்று தாலூகைகோர்ட்டார் தள்ளி விட்டார்கள்;

மகாராஜஸ்ரீ P. C. லோபோ ... அப்பீல் வாதி பாரிஸ்டர். கவர்ன்மெண்ட்பாரிஸ்டர் C. F. நேப்பியர்...அப்பீல் பிரதி வாதி பாரிஸ்டர்.

அபாரதம் வரியாகமாட்டாதென்றும் ரிவினியூ வசூல் சட்டத்தை இதில் உபயோகிக்கக்கூடாதென்றும் ரிவினியூபாக்கிக்காக விற்றதாகவுமிருக்கிறது என்றும் ரிவினியூ வசூல் சட்டப்படி படிக்கட்டுகளை இடிக்கக் கூடாதென்றும், 59-வது செக்ஷன்படி பாத்தியதை ஸ்தாபித்தலுக்கும் தடுத்தலுக்கும் காலாவதி ஆகவில்லையென்று அப்பீல் வாதி வக்கீல் வாதாடினார். 1905ஞு 3-வது சட்டப்படி யிடிக்ககொடுத்த உத்தரவுக்கு காலாவதி 6-மாதம் தானென்றும் 59-வது செக்ஷன்படி ரிவினியூபாக்கி விற்பனைக்கு பிறகு வாங்கின வனிடமிருந்து பெற்றுக் கொள்ளச் செய்யும் தாவாசெல்லா தென்றும் பிரதி வாதி வக்கீல் ஆக்ஷேபித்தார் ஆகையால் ஸ்தாபித்தலுக்கும் கட்ட 6-மாதத்துக்குள் கொண்டுவராததால் செல்லக்கூடியதல்ல வென்றும் சொன்னார்.

பிரதிவாதி வக்கீல் சொன்ன விஷயம் [illegible] கரித்தருள்வேண்டுமென்று வாதிவக்கீல் சொன்னார்.

தீர்ப்பு:—1864-ம்ஞு 2-வது சட்டம் 59-வது செக்ஷன்படி தீர்வை விதித்திருக்கும் விஷயம் தெரிந்திருக்கிறது. அந்த செக்ஷன்படி 6-மாதத்துக்குள் வியாச்சியம் கொண்டுவந்திருக்கவேண்டும்.

தீர்வை ஏற்படுத்தியதைப் பெற்றுக்கொள்ள காலாவதியானதும் பாத்தியதை ஸ்தாபித்தலுக்கும் உத்திரவை தடுத்தலுக்கும் காலாவதி ஆகவில்லை.

தீர்வை ஏற்பட்டதின் பேரில் இவ்வளவு ஆக்ஷேபணை [illegible] ஏற்படுகிறபடியால் 59-வது செக்ஷன் படி தன் ஆக்ஷேபணை [illegible] கோர்ட்டில் செய்து கொள்ள [illegible] [illegible] டன் இந்த 2-வது அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

OFFICE OF THE REGISTERED 15 [illegible] 1911 MADRAS.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் V.] சென்னப்பட்டணம் 19 : நவ [illegible] பாகம் 9.]

☞ NOTICE:—Contributions other than original are neither invited nor required. All literary contributions and books for Review should be addressed to Mr. N. RADHAKRISHNA NAIDU, B. A., A. L. A. A., (LONDON) INDIAN LAW GAZETTE 49, Acharappan Street, Madras.

Importont Rulinzs.

முக்கியமான தீர்ப்புகள்.

ஹிந்துலா:—ஹிந்து குடும்பத்தில் புத்திரன் மைனராயிருக்கும்போது தகப்பன் ஒரு சொத்தை அடமானம் வைத்து, அதன்மேல் பிறகு ஒரு வியாஜ்ஜியம் ஏற்பட்டால் அந்த அடமானம் அச்சொத்தில் புத்திரனுக்கிருக்கும் பாகத்தைக்கட்டுப்படுத்த மாட்டாது. தகப்பன் கடன்வாங்குவது துன்மார்க்கச் செலவுகளுக்கல்லவென்று கடன்காரர்கள் அச்சமயத்தில் விசாரணைசெய்து திருப்தி செய்துகொண்ட விஷயத்தை ருஜுப்படுத்துவது வாதியைப் பொருத்ததல்ல ஒரு தகப்பன் துன்மார்க்கச் செலவுகளுக்காக கடன் வாங்கியிருந்து அந்தக்கடனைத் தீர்ப்பதற்காக வேறொருவனிடம் கடன்வாங்கி இந்த இரண்டாவது கடன் கொடுத்தவன் அடி தொகையை அவன்புத்திரனிடமிருந்து வசூல் செய்ய வியாஜ்ஜியம் கொண்டுவந்தால், தகப்பன் துன்மார்க்கச் செலவுகளுக்காக கடன்வாங்கினான் என்று புத்திரன் டிபன்ஸ் சொல்வது நல்ல டிபன்சாகும். சரவணத்தேவன் v. முத்தாயி அம்மாள் 6 சென். ஹை. ரி. 371- பக்கம் 383. (6 Mad H. C. R. p. 371 at. P. 383)

[illegible] சாக்ஷி சட்டம்:—ஒரு தஸ்தாவேஜியில் [illegible] யும் சம்மதப்படக்கூடாதபடியும் எழுதப்பட்டிருக்கும் பக்ஷத்தில் கக்ஷிகாரர்கள் நினைத்துக் [illegible] அர்த்தம் நிரூபிக்கத்தக்க சாதாரண வா [illegible] மூல சாக்ஷியம் (Oral Evidance) ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. சேஷவால் v. ரூபா 8 பம். லா. ரி. 287 (8 Bom L. R. 287.)

தீர்ப்புக்கு முந்தின ஜப்த்தி:—தீர்ப்பு பெறுவதற்கு முந்தி ஜப்த்தி செய்வதின் கருத்து என்னவென்றால் வாதிக்கு டிக்கிரி கிடைத்தால் அந்த டிக்கிரியின் தொகையை வசூல்செய்து கொள்ளுவதற்கு ஒருபக்ஷ தோபஸ்தே தவிர. மற்றப்படி ஜப்த்திசெய்த கடன்காரனுக்கு மற்றகடன்காரர்களைவிட (கடன்கொடுத்தவர்கள்) அச்சொத்தில் முந்திய பாத்தியதையிருக்கிறதென்று தாரபரிப்படுத்திக் கொள்ளக்கூடாது. 10. கல். வி. நோ. 634 (10 Cal W. N)

சாக்ஷி கையெழுத்து:—ஒரு பத்திரத்தில் சாக்ஷிகையெழுத்து போட்டதினால் அப்பத்திரத்தில் சொல்லப்பட்ட விஷயங்களுக்கு சம்மதம் கொடுத்தவனாக மாட்டான். 10. கல். வி. நோ. 551 (10. Cel W. N. 551)

வைப்பாட்டி:—ஒருவன் ஒருவளை நீண்ட காலமாக வைப்பாட்டியாக வைத்திருந்து பின்பு விட்டு விடுகிறான். அவள் அப்புருஷன்பேரில் வழக்கிட நியாயமில்லை. ருமகாசு v. புச்சம்மா இ. லா. ரி. 23 சென் 282 (I. L. R. 23 Mad. 282.)

ஒருவன் ஒரு வைப்பாட்டியைவைத்திருந்து இறந்துவிடுகிறான் அவள்பிற புருஷமுறாம் பாக்கபவிருப்பவளாயிருக்கும் பக்ஷத்தில் அவளுடைய வைப்புப் புருஷனுடைய சகோதரர்கள் அவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர்கள். டஷலனடிராவ் v. காகூபாய் இ. லா. ரி. 12 Bom 26. (I. L. R. 12 Bom 26.)

குஷ்டரோகி புத்திரன்:—குடும்பச்சொத்து பாப்பிரிவினை செய்யப்படுவதற்கு முந்தி ஒரு பாகஸ்தனுக்கு கொடிதாகிய அல்லது ரணமுள்ள குஷ்டரோக முண்டாகிவிட்டால் அவனுக்குக் குடும்பச் சொத்தில் பாகம் கிடைக்கமாட்டாது. அனந்தா v. ருமபாய் இ. லா. ரி. 1 பம் 554. (I. L. R. 1 Bom 554.)

ஹிந்துலா:—ஸ்வீகாரப் பெற்றோர்கள் சொந்தப் பெற்றோர்களுக்கு எழுதிக்கொடுத்த எக்ரிமெண்டு தஸ்தாவேஜி சாதாரண புத்திக்குப் பொருந்தாத விஷயம் ஏதாவதிருந்தால் அது ஸ்வீகாரம் பெற்றோர்களைக் கட்டுப்படுத்தமாட்டாது. வெங்கய்யா v. மோசிர் தொண்டா 8 பம். லா. ரி. 346. (8 Bom L. R. 346.)

செய்யவேண்டிய வேலை:—ஒரு வேலையை அல்லது ஒரு காரியத்தை கோர்ட்டார் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அல்லது தேதிக்குள் செய்துமுடிக்கவேண்டுமென்று உத்திரவு செய்தாலும் அப்படி அக்காரியத்தினம் செய்து முடிக்கப்படாததற்கு உத்திரவு செய்யப்பட்டவனின் குற்றமாயில்லாவிடில் அந்த சாத்தியப்பட்டதினம் செய்தால் கோர்ட்டார் குறிப்பிட்ட தினத்திலேயே செய்ததாக எண்ணப்படும். டோபி v. ஹிர்மேயன் 8. வி. ரி. 223 8. W. R. 223.)

ஹிந்துவிதந்து:—விதந்து வாழப்போன பெண்ணை சம்ரக்ஷிக்க அவளுடைய தகப்பனும் தமயனும் சட்டப்படி கட்டுப்பட்டவர் களல்லவானாலும் நெருங்கினபாந்தியத்தை முன்னிட்டு அவளைப்பெலனை சம்ரக்ஷிக்க கடமைப்பட்டவர்கள். பசுமங்கல v. பாலகிருஷ்ணம் இ. லா. ரி. 23 பம் 291. (I. L. R. Bom 291.)

சக்களத்தி தாயார்:—பிதிரார்ச்சித சொத்துக்களை அடையாத சக்களத்தி பிள்ளைகள் தங்களுடைய சக்களத்தி தாயாருக்கு ஜீவனாம்சம் கொடுக்க சட்டப்படி கட்டுப்பட்டவர்களல்ல. பாய் தாயா v. நதகோவிந்தலால் இ. லா. ரி. 9 பம் 279. (I. L. R. 9. Bom 279.)

புருஷனும் பெண்சாதியும்:—ஒருவன் பெண்ஜாதியின் புருஷனுடன் கூடவிருந்து வசிக்காமல் தனியாயிருக்க ஜீவனாம்சம் வேண்டுமென்று புருஷன் பேரில் வியாஜ்ஜியஞ் செய்ய பாத்தியமில்லை புருஷன் தன்னை சரிவர சம்ரக்ஷிக்கவில்லை என்றும் புருஷன் உபசாரஞ் செய்கிறவன் என்றும், புருஷனும் கூடியாவது புருஷன் தடைசெய்தானென்றும் ருசுப்படுத்தினால் ஜீவனாம்சம் கிடைக்கும். சட்லிங்கப்பா v. சித்தவா இ. லா. ரி. 2 பம் 624 (I. L. R. Bom 624.)

மகமடன் லா (முகமதியச் சட்டம்):—மகமடன் லாப்படிக்கும் ஒரு தகப்பன் தன்னுடைய மைனர் புத்திரனின் சொத்துக்களை பராதீனம் முதலியவைகள் செய்ய யாதொரு சுதந்தரமும் கிடையாது. அவனால் எழுதிக்கொடுக்கப்பட்ட விக்கிரய சாசனம் செல்லுபடியாகமாட்டாது. சித்தாரம் இ. லா. ரி. 3 அல. 324. I. L. R. All 324.)

வட்டி:—சுவாதீன அடமானம் வைத்துக்கொண்ட ஒருவன் அடமானம் பெற்றுக்கொண்ட சொத்தை சுவாதீனப்படுத்திக்கொள்ளும் அடையும்வரை வட்டிய வாங்க (வட்டியை) அடைய மல் போயிருக்கு அதற்கு பதிலாக வட்டி கேட்கவென்ற வியாஜ்ஜியம் கொண்டுவருவது செல்லுபடியாவதல்ல. மத்து ஜி v. ஜைதி. இ. லா. ரி. 17 பம். 425. (I. L. R. Bom. 425.)

நிலவிர்த்தி:—நிலவிர்த்தி செய்யப்பட்டபோது நான் மைனராயிருந்தேன் என்று டிடன்ஸ் கூறுவது அப்படி நிலம் விர்த்தி செய்யப்பட்டதற்குப்பிறகு அதன் செலவைக் கொடுக்க கடமைப்பட்டிருப்பதனின்று விலக்க மாட்டாது. 10 வி. நோ. (10 W. N.)

பத்து வயதுக்குட்பட்ட குழந்தை தன் உண்மையில் ஒருவர் விசாரணைக்கு ஏற்றவராயிருக்கிறது. அப்படிப்பட்ட குழந்தையை காமயாய் உத்திரவு பெற்றுக்கொள்ளாமல் அழைத்துப்போகிறவன் அதினால் வரும் கஷ்டத்திற்கு உத்தரவாதியாயிருக்கிறான். குழந்தைக்கு ஞானம் கர்த்தன் உண்டா இல்லையா என்று விசாரிக்க வேண்டிய தில்லை என்கிற விஷயமே பிரிவின்படி யாவதற்கும் கொண்டுபோகப்பட்ட ஒருவனை நியாயமான விசாரணை காத்தன் வசத்திலிருந்து திருட்டுதனமாய் அழைத்துப்போனதென்றும் குற்றத்திற்குச் சமாதானமாக மாட்டாது. இ. லா. ரி. 3. பம் 176 (I. L. R. 3. Bom. 176)

கொண்டுபோனாலும் ஆசைகாட்டி வசியப்படுத்தினாலும் குற்றமாகும் வீட்டில் ஹிம்சை பொருக்காமல் தானாகவே ஓடிவந்து ஒருவனிடம் வந்து சேர்ந்தால் அவன் குற்றஞ் செய்தவனாக மாட்டான். 4. வி. ரி. 6 (4 W. R. 6.)

பதினைந்து வயதுள்ள ஒரு ஹிந்து பெண்பிள்ளைக்கு அவளுடைய புருஷனே கார்டியனாவான். அவன் சம்மதமில்லாமல் அவனிடமிருந்து அவளுடைய பிதாவே அழைத்துக்கொண்டு போனாலும் அவன் குற்றஞ்செய்தவனாவான். இ. லா. ரி. 17. கல் 298 I. L. R. 17. Cal 298)

மைனர் குழந்தை சம்மதம் கொடுத்ததென்பது நல்ல டிபன்சல்ல. 10 வி. ரி. 42 (10 W. R. 42)

கார்டியன் சம்மதி கொடுத்தான் என்று நல்ல எண்ணத்துடன் பிசகாய் நம்பினதாய் ருசுப்படுத்தினால் குற்றத்தின் தன்மை நீங்கிவிடும். இ. லா. ரி. 2 அல. 154. (I. L. R. All 154)

ஒரு போலிஸ் ஆபிசர் யாதொருவனை யாவதொரு தக்க காரணமில்லாமல் ஒருமணி நேரங்கூட அடைத்து வைக்க அதிகாரமற்றவனாவான். இ. லா. ரி. 12 பம் 377 (I. L. R. Bomb. 377.)

ஒரு அற்ப சண்டையில் குற்றவாளியானவன், இறந்துபோனவனை பலமாய் மல்லுக்கிழுத்தானான். அதினால் அவன் இரண்டரை முழ ஆழத்தில் கீழே பாட்டையில் விழும்படி நேரிட்டது. அப்படி விழுந்ததில் இறந்துபோனவனுக்கு துன்பம் நேரிட்டு அதின் பேரில் வலிகண்டு ஐந்து நாள் பொறுத்து அவன் மரிக்கும்படி நேரிட்டது. இந்த சங்கதிகளின்மேல் பீனல்கோட் 304 A பிரிவிற் கண்ட குற்றத்தைச் செய்தவனாகவில்லை; கொலையாகத் தீர்மானமுண்டு பண்ணியதாகவுமில்லை. ஏனெனில் அப்படிப்பட்ட சம்பவம் நேரிடுமென்கிற பிரமேயமிருந்திருக்கவில்லை. இ. லா. ரி. 16 சென். 224 (I. L. R. Mad 224)

ஒருவன் எல்லோரும் வருகிற பாட்டையில் பள்ளம் வெட்டுவானானால் சகலருக்கும் இடஞ்சல். செய்ததற்காக குற்றஸ்தாபனை செய்யக்கூடும். ஒருவன் அப்பள்ளத்தில் விழுந்து காலொடித்துக்கொண்டால் பள்ளம் வெட்டினவன் பேரில் நஷ்ட தாவாசெய்ய நியாயமேற்படும். இ. லா. ரி. 10 அல 498 (I. L. R. 10 All 498)

திருடனை திரும்பும்பொழுதே சர்க்கார் உத்தியோகஸ்தனல்லாத வேறெந்த மனிதன் பிடித்தாலுங்கூட பிடிக்கலாம். ஆகையால் அப்படி பிடிபட்டவனை மீட்பது குற்றமாகும். இ. லா. ரி. 11 சென் 441 (I. L. R. 11 Mad. 441.)

வில்லேஜ் மாஜிஸ்டிரேட் கைதியை போலிஸ் ஸ்டேஷனுக்கு தன்னுடைய வேலைக்காரனுடைய காவலில் அனுப்பினால் அந்த வேலைக்காரனிடமிருந்து தப்பித்து ஓடுவது குற்றமாகும். லா. ரி. சென 480. (I. L. R Mad. 480)

மாதாந்திரி வேக்காரன்:—ஒரு மாதாந்தர சம்பளக்காரன் யாதொரு தகுந்த காரணமின்றி அம்மாதத்தில் வேலையை விட்டுப்போய் விட்டால், அவன்வேலை செய்த நாட்களுக்கு சம்பளம் கேட்க பாத்திதை கிடையாது. ருஜா செஷம்பட் v. பெருமாள் 12. பர். லா. ரி. 77. (21 Burm L. R. 77).

ஸ்திரி தன்சொத்தின் உயில்:—புருஷனும் பெண்சாதியும் கூடிவாழுங்காலத்தில் புருஷன் பெண்சாதிக்கு அடிக்கடி சொந்த செலவிற்காக கொஞ்சம் பணமும் கொடுத்துவந்தான். இந்தப்பணத்தை அவள் சேர்த்துக்கொண்டிருந்தாள். இதையன்றி அவளுக்கு ஸ்திரிதனமுமிருந்தது. கொஞ்சபணமும்கொடுத்தது. இந்த இரண்டு இனங்களைக்கொண்டு அவள் சிலஸ்தாவரசொத்துக்கள் வாங்குகிறாள். இந்த சொத்துக்கள் அவளுடைய ஸ்திரிதன சொத்துக்களாக எண்ணப்படவேண்டும். அவள் அச்சொத்துக்களை தன் இஷ்டப்படி பராதீனம் செய்யலாம். உயில் எழுதிவைக்கலாம். வெங்கட்டருமாராவ் v. வெங்கட்ட குரியாராவ். இ. லா. ரி. 1 சென் 281. (I. L. R. 1. Mad. 281)

ஸ்திரிதன பாத்தியம்:—புருஷனுடைய பணத்தைக் கொண்டும் பெண்சாதிக்கு ஸ்திரிதனமுள்ளமாய்க் கிடைத்தபணத்தைக்கொண்டும் இருவரும் சேர்ந்து தங்கள் பெயரால் ஒரு நிலம் வாங்கியிருந்தால், புருஷனிறந்தவுடன் பெண்சாதி தன்னுடைய பாகத்தை பிரித்துக்கொள்ள பாத்தியமுடையவள். மாத

வராபா v. தீர்த்தசாமி இ. லா. ரி. 1 சென் 307. (I. L. R. 1. Mad. 307.)

தாசியின் விபசார வருமானம்:—ஒரு தாசி ஆலயத்தில் பாடுவதற்கு குலப்பழக்கத்தின்படி அமர்த்தப்பட்டாலும் அவளுடைய விபசார வருமானத்தால் அவள் சம்பாதித்த சொத்துக்கள் பாகிக்கப்பட மாட்டா. பூலம் v. சுபாரனா இ. லா. ரி. 4. சென் 330. (I. L. R. 4. Mad. 330)

—:o:—

பிதிரார்ஜித சொத்துக்கள் தகப்பனுடைய பாராதீனங்கள்:—பிதிரார்ஜித சொத்துக்களில் சில வற்றை தகப்பன் தன்புத்திரன் குறைந்த பிராயமாயிருக்கும்போது தன பெண்சாதிக்கும், சில வற்றை தன்னுடைய பெண்களுக்கும் ஸ்திரீதனமாகவும் கொடுத்துவிட்டான். புத்திரன் மைனராயிருக்கும் பொழுது அந்தச் சினேகிதன் (Next Freind) மூலியமாய், மேற்படி பாராதீனங்களை ரத்துசெய்யவும் சொத்துக்களைத் திரும்ப அடையும்பொருட்டு வியாஜ்ஜியம் கொண்டுவந்தான். தகப்பன் செய்த பாராதீனங்கள் கொஞ்சம்கூட செல்லமாட்டாதென்று சொல்லி கோர்ட்டார் அவைகளை ரத்துசெய்துவிட்டார்கள். ருபக்கான் v. சுப்பண்ணா இ. லா. ரி. 10. சென் 43. (I. L. R. 10 Mad. 84)

வைப்பாட்டி புத்திரன்:—ஒரு சூத்திரனுடைய வைப்பாட்டி அவனைச் சேரும்போது விவாகமான ஸ்திரீயாகவிருந்தால், வைப்பு புருஷனுக்குப் பிறந்த புத்திரனுக்கு தகப்பனின் சொத்துக்களிலிருந்து ஜீவனாம்சம் கேட்க பாத்தியமுண்டு விசாரமுத்து உடையான் v. சிங்காரவேலு இ லா ரி. 1 சென் 306 (I. L. R. 1 Mad. 306).

—:o:—

விதந்துவின் துர்விபசாரம்:—ஜீவனாம்சம் பெறுகிற விதந்து விபசாரஞ் செய்தால் அல்லது பதிவிரதாத்தன்மையை விடுத்துக்கொண்டால் ஜீவனாம்சம் கொடுப்பதாக ஒரு எக்ரிமெண்டு உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறதென்று அவ்வாறு படிக்கு சொல்லுவது ஒப்புக்கொள்ளப் படமாட்டாது. நாகம்ம v. வீரபத்திரா இ. லா. ரி. 17. சென் 392. (I. L. R. 17 Mad 392)

புத்திரனின் விதந்துவின் ஜீவனாம்சம்:—பிதிரார்ஜித சொத்துக்களில்லாத ஒரு ஹிந்து தகப்பன், வயது வந்த தன் புத்திரனையாவது அல்லது புத்திரனின் விதந்துவையாவது சம்ரக்ஷிக்க கடமைப்பட்டவனல்ல. ஆதலால் மாமனார் உயில் மூலியமாய் தன்னுடைய பேரப்பிள்ளைகளுக்கு எழுதிவைத்த சுயார்ஜித சொத்துக்களிலிருந்து மருமகள் ஜீவனாம்சம் கேட்கவே யென்றாவது செய்யக்கூடாது. மாமனார் தன்னுடைய சொத்துக்களை தன் பேரப்பிள்ளைகளுக்கு எழுதிவைத்த உயிலில் மருமகளுக்கு ஜீவனாம்சம் கொடுத்து வரும்படி எழுதியிருந்தால், ஜீவனாம்சம் கிடைக்கும். அம்மக்கண்ணு v. அப்பு இ. லா. ரி. 11 சென் 191 (I. L. R. 11 Mad. 191)

—:o:—

குடும்பகடனும் ஜீவனாம்சமும்:—பெண்சாதிபிள்ளைகளுக்கு ஜீவனாம்சம் கொடுக்கவேண்டிய கடமையானது குடும்பக்கடனை முக்கியமான கடன். ருமாபாய் v. திருப்பக்கனேஷ் முதலி இ. லா. ரி. 9. பம் ஹை. ரி. 283 (9 Bom H. C. 283.)

தாயாரை சம்ரக்ஷிக்கவேண்டும்:—ஹிந்துலாப்பிரகாரம் ஒருபுத்திரன் தன்னுடைய தகப்பனிடமிருந்து சொத்துக்கள் அடைந்தாலும்சரி அடையாவிட்டாலும் சரி தன்னுடைய தாயாரை சம்ரக்ஷிக்கக்கடமைப்பட்டவன். சுப்பிராயனை v. சுப்பக்கா இ. லா. ரி. 8 சென் 236 (I. L. R 8 Mad 236)

—:o:—

ஸ்வீகார உடன்படிக்கை:—ஒரு தகப்பன் தன்னுடைய புத்திரனை ஸ்வீகாரம் கொடுக்கும்போது ஸ்வீகாரத்தாயாரிடமிருந்து ஸ்வீகாரபுத்திரன் ஸ்வீகாரத்தகப்பனுடைய சொத்துக்களில் மூன்றில் ஒரு பாகத்தை அடையவேண்டுமென்று உடன்படிக்கை எழுதிவாங்கிக்கொண்டு புத்திரனை ஸ்வீகாரம் கொடுத்தான். இந்த உடன்படிக்கை செலாமாணியாகாதல்லவென்றும் புத்திரனுக்கு வயது வந்தபோது மாறுதலடையக் கூடியதென்றும் தீர்மானிக்கப்பட்டது. ருமசாமி அய்யன் v. வெங்கட்டருமய்யன். இ லா. ரி. 2 சென் 91. (I. L. R. 2 Mad 91.)

தாயாரின் சகோதரியின் புத்திரன்:—சூத்திரர்கள் தாயாரின் சகோதரியின் புத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வது சரியான ஸ்வீகாரம், இ. லா. ரி. 1 சென் 62 (I. L. R. 1 Mad 62)

சொந்த புத்திரனை இழந்த விதந்து ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாம்:—ஹிந்துலாப் பிரகாரம், சொந்த புத்திரன் பால்யத்தில் இறந்துபோனாலும் சரி அல்லது விவாகமாகாமலிருந்து போனாலும் சரி ஒரு ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாமென்று புருஷனுடைய உத்திரவைப்பெற்ற ஒரு விதந்து மேற்படி சொன்ன அசந்தர்ப்பங்கள் நடந்தேறினால் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாம். ராஜா வெளங்கி வெங்கட்ட கிருஷ்ணராவ் v. ருமலக்ஷ்மி இ. லா. ரி. 1 சென் 174. (I. L. R 1 Mad 174).

Cases from the Indian Law Reports.

இந்தியன் லா ரிபோர்ட்டு கேசுகள்.

—:o:—

LOWER BURMA CHIEF COURT.

கீழ் பர்மா சீப் கோர்ட்டு.

இரண்டாவது சிவில் அப்பீல் நே. 295 of 1909

ஜட்ஜு:—மிஸ்டர் ஜ. டி. டி.

மாங்க்பியா வகையரா.... பிரதிவாதிகள்.... அப்பீல் வாதிகள்.

vs.

மாங் ஓஜா வகையரா.... வாதிகள்.... ரெஸ்பான்டென்டுகள்.

கேசின் விபரம்:—வாதி தன்னுடைய நிலத்தை பிரதிவாதிக்கு ரூபாய் 25 -க்கு அர்த்தகிரயமாய் வித்துவிட்டான். அப்படி விற்பனைசெய்து இன்னும் 12-வருஷங்களாகவில்லை [illegible] அர்த்தகிரயம் செய்தபோது தான் மொத்தம் ரூபாய் 250 இன்னும் [illegible] அந்த காலத்தில் பிரதிவாதி மேற்படி நிலத்தை தனக்கு விட்டுவிட வேண்டியதென்று ஏற்பாடுசெய்துக்கொண்டிருப்பதாகவும் மேற்படி நிலத்தை மீட்டுக்கொள்வதற்காக தாவா செய்தான். அந்த கிரய தஸ்தாவேஜு ரெஜிஸ்தராகவில்லை. பிரதிவாதி மேற்படி நிலத்தை ஒப்பித்துக்கொண்டு தன் சுவாதீனத்தில் அனுபவித்து வந்தான். பிரதிவாதி அப்படிப்பட்ட ஏற்பாடு ஒன்றும் இல்லையென்று சொல்லிவிட்டு [illegible] கோர்ட்டு தள்ளுபடி செய்துகொண்டார்கள்.

ஜில்லா ஜட்ஜு கிரயபத்திரம் ரெஜிஸ்தர் ஆகாததினால் பிரதிவாதிகள் அந்த நிலத்தை 12-வருஷத்திற் சுவாதீனமாய் அனுபவிக்கவில்லை. ஆகையால் அவர்களுக்கு யாதொரு சுதந்தரமும் ஏற்படாதபடியில்லையென்று கண்டு வாதி மேற்படி மொத்தம் ரூபாய் 250 கட்டிவிட்டு நிலத்தைத் தான் ஸ்வாதீனம் செய்துகொள்ளலாமென்று டிக்கிரி செய்தார்.

தீர்மானம்:—வாதி மேற்படி நிலத்தை அர்த்தகிரயமாய் பிரதிவாதிக்கு வித்துவிட்டதாக நாமாவில் சொல்லி ஒப்புக்கொண்டிருப்பதை ஜில்லா ஜட்ஜு கவனிக்கவில்லை. கிரயத்தை ருஜு செய்யவேண்டுமென்னும் பொறுப்பு பிரதிவாதிகள் கிரய மொத்தத்தைக் கொடுத்து நிலத்தைத் தங்களுடைய ஸ்வாதீனம் செய்துகொண்டார்களோ அப்பொழுதே வாதி அந்த நிலத்திற்குள்ள ஹக்கு சுதந்தரத்தை ஒரு ரெஜிஸ்தர் தஸ்தாவேஜு மூலமாய் பிரதிவாதி பட்சம் செய்யவேண்டியவனாவனென்பது நியாயம். பிரதிவாதிகளின் சாக்ஷியத்தைப் பார்க்கிலும் விசேஷமாயிருக்கிறது. கொதுவைதா னென்று ருஜு செய்ய வேண்டிய பொறுப்பு எவிடென்ஸ் ஆக்ட் 110 வது பிரிவின்படிக்கு வாதியினுடையதாயிருக்க, அதன் அதை ருஜு செய்தபடியால் ஜில்லா கோர்ட்டு டிக்கிரி ரத்து செய்யப்பட்டு டவுன்சிப் கோர்ட்டு டிக்கிரி ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 9-வது வால்யம் 770

4 பர்-லா-டை 40.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 224 of 1909.

ஜட்ஜுகள்:—மிஸ்டர் ஜ-வாலிஸ் } முன்பாக.
மிஸ்டர் ஜ-சங்கரன்நாயர்

பாலசுப்பிரமணியன் வகையரா.... பிரதிவாதிகள்... அப்பீல் வாதிகள்.

vs.

ராமசாமி செட்டியார்.... பிரதிவாதிகள்... ரெஸ்பான்டென்டுகள்.

கேசின் விபரம்:—இந்த கேஸில் பிரதிவாதி தாவா சொத்தை கிரயத்திற்கு வாங்குகையில் கிரயத்திற்கு முன்னமேயே தாவா சொத்தை [illegible] ரிடத்தில் கொதுவை வைத்திருந்ததை தான் தொகையைச் செலுத்தி மீட்டு கொள்வதாக கிரயசீட்டு காகிதத்திலேயே ஒரு ஷரா கண்டு எழுதியிருந்தான். மேற்படி சொத்தை கொதுவை வைத்தவனிடம் தாவா சொத்திற்கு வேறே தகாதா கடையாதென்றும் இல்லங்க சுத்தியாயிருப்பதாய், தஸ்தாவேஜில் கண்டெழுதியிருந்தான். பிறகு மேற்படி வாதி தஸ்தாவேஜு சொத்தின் பேரில் தான் முன்னமேயே கடன் கொடுத்திருந்ததாக தாவா சொத்தை ஏலத்திற்கு கொண்டுவந்து தான் ஏலத்தில் வாங்கிக்கொண்டான். இவ்விதமாய் மேற்படி கொதுவை [illegible] பின் முதலானது கோர்ட்டில் நடந்துகொண்டிருக்கையில் பிரதிவாதி தாவா சொத்தை கிரயத்திற்கு வாங்கினது செல்லாதென்று ஏற்பட்டு ஏல விற்பனையின் பேரில் மேற்படி வாதி பிரதிவாதியின் அனுபோகத்திலிருந்த சொத்தை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ள தாவா செய்தான். கீழ் அப்பீல் கோர்ட்டார் வாதி பட்சம் தீர்ப்பு செய்தார்கள்.

பிரதி வாதி முன்னமேயே செலுத்தியிருக்கும் கொதுவை மொத்தத்தைக் கட்டிவிட்டு தான் வாதி மீட்டுக்கொள்ளவேண்டியதென்று கீழ் கோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கவேண்டுமென்று சொல்லி கீழ் கோர்ட்டுகள் செய்த டிக்கிரிகளை மாற்றிவிட்டு [illegible] மாதத்திற்குள் கொதுவை மொத்தம் ரூபாய் 89-ம் [illegible].

டிவிட்டு தாவாசொத்தை சுவாதீனம் செய்துக்கொள்ளும்படி தீர்ப்பு செய்தார்கள்.

இதற்காதாரமாய் சியமலராயடு vs. சுப்பராயடு இ லா. ரி. 21 ம. 143;

31 ம. 439; 3 ம. லா-டை 395; 18 ம-லா-ஜ.

மி-ர் சி-வி. அனந்த கிருஷ்ணய்யர் அப்பில் வாதிகளின் வக்கில்.

மி-ர் டி-வி. கோபாலசாமி ஐ ரெஸ்பான்டென்டின் வக்கில்,

லாகூர் இ. கே. 9 வால்யம் 789; 2 ம-வீ-நோ 197.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு,

—:o:—

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 1218 of 1909.

ஸ்ரீனிவாச வரதாச்சாரி....பிரதிவாதி......அப்பீல் வாதி.

vs.

நரசிங்கபிள்ளை......வாதி........ரெஸ்பான்டென்டு.

மதராஸ் ரேகுலேஷன் (6 of 1831)

மதராஸ் ஆக்ட்டு 3 of 1895.

கேசின் விபரம்.—ஓர் கிராமத்தில் கர்ணம் வேலை பார்ப்பவனுக்கு அவன் அவ்வேலை பார்ப்பதற்காக சில மான்யங்களும் வரும்படிகளும் ஏற்படுத்தப் பட்டிருந்தன. அவைகளை அவன் கொடுக்கவேண்டிய கடனுக்காக ஜப்தி செய்யப்பட்டன. ஆனால் பிரதிவாதி ஷை சொத்துகளை 12-வருஷங்களுக்கு அதிகமாகவே அனுபவிக்கிறான். என்னும் காரணத்தினால் தாவாவிற்குக் காலதோஷம் வந்துவிட்டதென்று வாதிக்கப்பட்டது. மதராஸ் ஆக்ட் 3 of 1895 வழங்கத்துடங்குவதற்கு முன் இப்படிப்பட்ட தாவா ரெவினியூ கோர்ட்டில் தான் செய்திருக்க வேண்டியது அப்படி ரெவினியூ கோர்ட்டில் செய்யப்படும் தாவாக்களுக்கு கால நிர்ணய சட்டம் சம்பந்தப்பட்டதல்ல. ஆகையால் 12-வருஷத்திற் கதிகமாய் அனுபவித்தவனென்று சொல்வதற்கு இடம் கிடையாது. (பிச்சுவய்யன் vs. விலங்குதயன் இ. லா ரி. 21 ம. 134 பார்க்கவும்).

இந்த தாவாவில் மதராஸ் ஆக்ட் 3 of 1895 அமுலுக்குவந்த முதல் இந்த தாவா செய்த தேதிவரையில் 12-வருஷ காலம் கடந்துபோகவில்லை யென்றும் பிரதிவாதி விரோதமாய் 12-வருஷம் அனுபவித்தவனு அல்லவாவென்று கூட யோசிக்கவேண்டியதில்லை யென்றும் தீர்மானித்தார்கள்.

மிஸ்டர் டி. ஆர். ராமச்சந்திர ஐயர் அப்பில் வாதியின் வக்கில்.

மிஸ்டர் டி. ரங்காச்சாரியார் ரெஸ்பான்டென்ட் வக்கில்.

லாகூர் இந்தியன் கேசுகள் 9-வது வால்யம் 796. 2 ம-வீ-நோ 208.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

முதல் சிவில் அப்பீல் நெ. 76 of 1908.

ஜட்ஜிகள்:—மி-ர் ஸர்-ரால்ப்பென்சன். மி-ர் ஜ-சுந்தரமய்யர் } முன்பாக.

முத்துகிருஷ்ணன்செட்டி .... அப்பீல் வாதி.

அன்னபூரணத்தாச்சி ... . ரெஸ்பான்டென்ட்

மதுரை.

கேசின் விபரம்:—ஒரு ஹிந்து ஒருவன் தன்னுடைய சொத்துகளின் பேரில் சில ரொணசல்லியங்களை வைத்து விட்டு இறந்துபோனான். அவன்காலமான பிறகு அவனுடைய பெண்சாதியாகிய விதவை அவளுடைய புருஷன் சொத்தைக்கிரயம் செய்து அந்த ரெணசல்லியங்களைத்தீர்த்து விட்டாள். அவ்விதமாய்ச்செய்யப்பட்டகிரயம் சட்டப்படி செல்லத்தக்கதா அல்லவா என்பது இந்த கேசில்முக்கியமாய் தீர்மானிக்கவேண்டிய விஷயம்.

தீர்மானம்:—இதற்கு முன்னமேயே காலம் சென்ற புருஷனுடைய சொத்திலிருந்த கடனை நிர்பந்தித்து வசூல் செய்ய நடவடிக்கை நடத்தப்பட்டதா இல்லையா யென்பதை கவனிக்க வேண்டுமென்பது அவசியமல்ல ஏற்கனவே புருஷன் பட்டிருந்த கடன் 400 ரூபாயின் பேரில் ரூபாய் 3 0 வட்டி ஏறியிருந்ததென்பதை பார்த்தாலே பெண்சாதி புருஷனுடைய சொத்தைவித்து ரொணசல்லியத்தை தீர்த்தது விட்டது மிக்கபுத்திசாலித் தனமாய்செய்ததாகவே புலப்படுகிறதாகையால் கீழ்கோர்ட்டார் தீர்மானத்தை வர்ஜிதம் செய்து அப்பீலைத்தள்ளுபடி செய்து விட்டார்கள்.

மிஸ்டர் K. N. ஐயா ஐயர்...அப்பீல்வாதியின் வக்கில்.

மிஸ்டர். S. சுந்தரராஜ ஐயங்கார...ரெஸ்பான்டென்ட்வக்கில்.

லாகூர்இந்தியன் கேசுகள் 9 வது வால்யம் 803

ALLAHABAD HIGH COURT.

அலகாபாத் ஹைகோர்ட்டு.

—:o:—

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 347 of 1910.

பிரிஜலால் சாஹு ... வாதிகள் ... அப்பீல் வாதிகள்.

vs.

ராமேஷர் சாஹு ... பிரதிவாதிகள் ... ரெஸ்பான்டென்டுகள்.

கேசின் விபரம்:—பிரதிவாதிகள் தாவா நிலங்களை குடிக்கூலிதாரர்களாய் அனுபவிக்கிறார்களென்றும் அந்த நிலங்களுக்காக பிரதிவாதிகள் குடிக்கூலி செலுத்துகிறதில்லை யென்றும் சொல்லி தாவா நிலங்களை தங்கள் சுவாதீனப்படுத்திக் கொள்ளவும் குடிக்கூலி பாக்கியை வசூல் செய்வதற்கும் இந்த தாவா கொண்டுவரப்பட்டது. பிரதிவாதிகள் தாவா நிலங்களை வாதியின் குடிக்கூலி தாரர்களாய் அனுபவிப்பவர்களல்லவென்றும் தாவா நிலத்தை பிரதிவாதிகள் 12-வருஷத்திற்கு அதிகமாகவே அனுபவித்து வருவதினால் தாவாவிற்குக்காலதோஷம் வந்துவிட்டதென்றும் வாதித்தார்கள்.

முதல் கோர்ட்டார் பிரதிவாதிகள் தாவா நிலங்களை அனுபவிக்கும் வாதியின் குடிக்கூலி தாரர்களல்லவென்றும அவர்கள் தாவா நிலங்களை 12-வருஷங்களுக்கு அதிகமாக்வே அனுபவிப்பதினால் தாவாவிற்குக் காலதோஷம் வந்துவிட்டதென்றும் தாவாவைத் தள்ளுபடிசெய்துவிட்டார்கள். அதன்பேரில் அப்பீல் செய்யப்பட்டு கீழ் அப்பீல் கோர்ட்டாரும் முதல் கோர்ட்டார் செய்த டிக்கிரியை வர்ஜிதம் செய்து விட்டார்கள்.

தாவா நிலங்களுக்கு வாதிகள் தான் சொந்தக்காரர்களென்றும் அதை அவர்கள் 12-வருஷ காலத்திற்குள் அனுபவித்து வருகிறவர்கள் தானென்றும் ருஜூசெய்யவேண்டிய பொறுப்பு வாதிகளுடையதாயிருக்க அதை வாதிகள் ருஜூசெய்யவில்லை யென்று இரண்டாவது அப்பீலைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

1882 அ-வீ-நோ. 40; 1910 அ-வீ-நோ. 188 பார்க்கவும்.

லாகூர் இந்தியன் கேசுகள் 9-வது வால்யம் 812,

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

மி-ர் ஜ-பென்சன் மி-ர் ஜ-கிருஷ்ணசுவாமி அய்யர் } முன்பாக

சையத் நாஹீன், சாகேப் வகையறா ... அப்பீல் வாதிகள்.

சையத் இபிராஹீம் சாகேப் வகையறா ... அப்பீல் பிரதிவாதிகள்.

அசையும் அசையாப் பொருளின் பாகவியாச்சியம்.

இறந்துபோமைகம் மதியனுடைய ஜீவேஜியில் அசையாப் பொருளுக்காக இறந்தவனுடைய வார்சுதாரனால் பாகத்தைப் பற்றி லிமிடேஷன் ஆக்ட் 120 வது சட்டம் செல்லத் தகுந்ததல்ல. மதுரை (மேற்கு) சப்ஜட்ஜ அவர்களின் 1905 வருஷத்திய அசல் நெ. 32ன் தீர் மானத்தின் பேரில் மதுரை டிஸ்டிரிக்டு கோர்ட்டாரின் 1907ம் வருஷத்திய A. S. நெ. 687ன் தீர்ப்பின் பேரில் இந்த 2 வது அப்பீல் செய்யப் பட்டது

ம-ள-ள-ஸ்ரீ, T. ரங்காசாரியார்—அப்பீல் வாதி வக்கில்.

,, K. சீனிவாச அய்யங்கார்:—அப்பீல் பிரதிவாதி வக்கில்.

இறந்தவனுடைய ஜீவேஜி (அசையும் அசையா பொருள்) யில் 120-செக்ஷன் படி கொண்டுவரப் பட்டதாக வியாஜ்ஜியம்என்றும் 120-வது செக்ஷன் படி அசையும் பொருளடைய வதிலும் 144-வது செக்ஷன்படி அசையாப் பொருளடைய வித்திலும் கவனிக்கவேண்டிய விஷயங்கள் அநேகம் உண்டு என்றும்.

எல்லாப் பொருளையும் பாகஸ்தருக்குள் பாகித்துக் கொடுக்க வேண்டுமே யொழிய லிமிடேஷன் சட்டப்படி கொஞ்சம் பாகத்தைப்பற்றி பாதிகாரம் கொண்டு வரக்கூடாது என்றும் அப்பீல் வாதி வாதாடுகிறார் பிரதிவாதி வக்கில் ரங்கர்டாஸ் vs. பார்வதிபாயி கேஸை கக்ஷியாக எடுத்துச் சொல்லுகிறார்.

தீர்ப்பு.—இந்த கேஸ் ஒரு மகம்மதியனால் தன்பெண்சாதி இறந்தபிறகு அசையும் அசையாப்பொருளின் பாகத்துக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. பிரதிவாதிகளிடத்தில் பாக்கிபாகங்கள் இருக்கின்றன. அவர்களின் அனுபோகம் பிசகு என்றாலும் 12-வருஷங்களுக்குட் பட்டதாயிருக்கின்றது பிரதிவாதிகளில் 27-முதல் 31-வரையில் 27-11-05 தாவாசெய்திருக்கிறார்கள் அசையாப் பொருள் விஷயமாக காலாவதி யாகவில்லை. அந்த அசையாப் பொருளின் தற்கால நிலை என்ன என்பதை கவனிக்க வேண்டியது. அசையாப் பொருள் விஷயமாக காலாவதியாகவில்லை. லிமிடேஷன் ஆக்ட் 144-வது செக்ஷனை அசையாப் பொருள் விஷயத்தருகு உடயோ

கப் படுத்தலாம் அசையாப் பொருளுக்கு காலாவதி யைச செல்லயிடமில்லை யாதலால் இந்த 2-வது அப்பீல் சிலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது. லாகூர் இந்தியன்கேசுகள் 9-வது வால்யம்.

MADRAS HIGH COURT.

மதராஸ். ஹைகோர்ட்டு.

—:o:—

சிவில் ரிவிஷன் மனு நெ. 8 to 15 of 1909.

வெங்கடகிரி ராஜா ... வாதி ... மனுதாரர்.

பி. வெங்கடசுப்பா நாயுடுவகையரா பிரதிவாதிகள் ரெஸ்பான்டெண்டுகள்.

நெல்லூர் டி. மு. கோர்ட்டு டிக்ரியின் பேரில் கொண்டுவரப்பட்ட ரிவிஷன் மனு.

கண்ட்ராக்ட் ஆக்ட் (9 of 1872) 63 வது பிரிவு

தீர்மானம்:—இஸ்திவஜா செய்தாய் குடியான வனுக்குத் தெரிவித்து அவன் ஒப்புக்கொண்டபிறகு ராஜா வஜாசெய்த தொகையை பாயக்காரியினிடமிருந்து வசூல் செய்ய தாவா செய்வது நியாயமல்லவென்று ரிவிஷன் மனுக்களை தள்ளுபடி செய்து விட்டார்கள்.

இதற்காதாரமாய டேவிஸ். வி. எஸ. கந்தசாமி முதலியார் இ. லா. ரி. 19-ம 398 பார்க்கவும்.

லாகூர் இந்தியன் கேசுகள் 9வது வால்யம் 763.

9 ம-லா-டை 270.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

சிட்டி சிவில் கோர்ட்டு அப்பீல் நெ. 13 of 1909.

ஜட்ஜுகள் { மிஸ்டர் ஜ. வாலிஸ், மிஸ்டர் ஜ. மனரோ } முன்பாக.

டி. சின்னம்மாள் வகையரா ... பிரதிவாதிகள்... அப்பீல் வாதிகள்.

தேவநேசம்மாள் வகையரா ... வாதிகள்...ரெஸ்பான்டெண்டுகள்.

ஈஸ்மெண்ட் (வசதி உரிமையைக் குறித்த ஆக்ட்) (5 of 1882) 13 வது பிரிவு, மதராஸ் சிட்டி சிவில் கோர்ட்டு அ. நெ. 251 of 1908-ல் செய்தடிக்ரியின் பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீல்.

கேசின் விபரம்:—வீதி வரையில் சமமாய் வெளிவந்திருக்கும் இரண்டு வீடுகளுக்கு ஒருவரே 4883 வருஷம் வரையிலும் சொந்தக்காரராயிருந்து பிறகு அவ்வீடுகளில் ஒன்றை விற்பனை செய்து விட்டார்கள். அந்த இரண்டு வீடுகளையும் பிரிப்பதற்கு நடுவில் ஓர் சந்திருக்கிறது. அந்த கிரயப்பத்திரத்தை தாக்கல் செய்திருந்தால் கேசின் சந்தர்ப்பங்களை நன்றாய் அறியலாம் அது தாக்கலாகவில்லை. இந்த சந்தை அனுபவிப்பதைப்பற்றி வியாஜ்ஜியம்

ஷ்டி இரண்டு வீடுகளுக்கும் புழக்கடைகளிருக்கின்றன ஒவ்வொன்றுக்கும் கேட்டு வைத்திருக்கிறது. அந்தகேட்டானது 20-வருஷங்களுக்கு முன் ஆதியில் இந்த வீடு கிரயமாவதற்கு முன்னமேயேயிருந்ததாக தெரியவருகிறது.

இதை கொண்டுவர அநேகதினங்களுக்கு முன்னதாகவே இதைகேட்டிருந்ததாக ருஜுவாகிறதாலும் இந்த சந்து அநேகவருஷகாலங்களாக பொதுவாகவே அனுபவிக்கப்பட்டு வருவதாலும் அப்பீலைத்தள்ளுபடி செய்து விட்டார்கள்.

இதற்காதாரமாய் 26 C. H. 434.
61-லா-டை 3:7,
15-அ. 270,

எடுத்துக்கூறினார்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 9-வது வால்யம்,
9-ம-லா-டை-274.

LOWER BURMA CHIEF COURT.

கீழ்பர்மா சீப்கோர்ட்டு.

சிவில் ரிவிஷன் பிட்டிஷன் நெ. 70 of 1909.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜ-பார்லெட் | முன்பாக.

சின்னய்யசெட்டி வகையரா ... மனுதாரர்கள்.

மாமி ... ... ரெஸ்பான்டெண்டுகள்.

சி. பு. கோ. (5-of-908) ஆர்டர் 34, ரூல், 2, 5.

கொதுவைப்பணத்தைக் கோர்ட்டில் கட்டிவிட்டு நிலத்தை மீட்டுக்கொள்ளும் ஒரு மார்கேஜ் டிக்ரியில் எந்த தேதிக்குள் ஷ்டி கொதுவைத்தொகையைக் கட்டும்படிக்கு கண்டிருக்கிறதோ அந்த தேதியை ஒத்தி இன்னொரு வைத்துக்கொள்ளும்படி உத்தரவு செய்ய கீழ் கோர்ட்டாருக்கு அதிகாரம் கிடையாதென்று கொண்டுவரப்பட்ட மனு தீர்மானம்:—கொதுவைப்பணத்தை ஆறுமாதத்திற்குள் கட்டிவிடவேண்டியதென்று வாதி 1908 ம்ஞு செப்டெம்பர்மீ 2-உ டிக்ரிபெற்றான்.

அந்த தேதியை ஒத்திவைக்க இன்னொரு தேதி குறிக்கும்படி மனுதாரர்கள் பிடிஷன் செய்துகொண்டார்கள் சப் டிவிஷனல் ஜட்ஜு அவர்கள் தேதியை ஒத்திவைத்து 5-2-10 குறித்தார்கள்.

அந்த உத்தரவின் பேரில இந்த ரிவிஷன் பிடிஷன் தாக்கல் செய்யப்பட்டது. ஜட்ஜு அவர்கள் அலா செய்த உத்தரவிற்கு அதிகாரமில்லையென்று எழுதியிராவிடினும் ஜட்ஜு அவர்கள் மேற்படி உத்தரவை செய்யும்போது சி-பு-கோ-ஆர்டர் 34-இரண்டாவது ரூலின் முடிவாரியில் செல்லியிருப்பது போலென்று சொன்னதாக எதிரியின் பாரிஸ்டர் சொல்லுகிறார்.

அந்தப்பிரிவு இதற்குச் சம்பந்தப்பட்டதல்லவென்று கண்டு அந்த தேதியில் டிக்ரிதாரன் சொத்தை வித்துக்கொள்வதற்கு நியாயமுண்டாகையால் கோர்ட்டார் அந்ததேதியை ஒத்திவைப்பதற்கு அதிகாரம் கிடையாதென்று சப் டிவிஷனல் ஜட்ஜு டிக்ரியில் கண்டதேதியை ஒத்திவைத்து செய்த உத்தரவை ரத்து செய்துவிட்டார்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 9-வது வால்யம் 771,
4-பர்-லா-டை-43.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்.

—:o:—

ஜட்ஜுகள் :—{ மி-ர். ஜ. அப்டுர்ரஹீம், மி-ர். ஜ. எய்லிங் } முன்பாக.

பட்டத்வீரன்குட்டி...பிரதிவாதி...அப்பீல்வாதி.

VS

குன்னிகண்டிமஜாத வீட்டில் அப்பு என்கிற உண்ணி கிருஷ்ணநாயர் .... டிக்ரிதாரன் ரெஸ்பான்டெண்ட்

கேசின் விபரம் :—ஒருவன் இன்னொருவன்மீது ரொக்கடிக்ரிபெற்று அதை நிறை வேற்றுவதற்கு மனு கொடுத்தல்-டிக்ரி கடன்தாரன் சொத்தை ஏலம் போடும்படி கேட்டிருக்கிறான் அந்தசொத்தை ஜப்திசெய்யும்படி கேட்கவில்லை. டிக்ரிதாரன்-அந்த மனுவை தித்தும்படிக்கு முன்சீபு உத்தரவும் பெறவில்லை. பிறகு சப்கோர்ட்டாருக்கு அப்பீல் செய்ததில் சப்கோர்ட்டார் அந்த மனுவில் ஜப்திசெய்யும்படிக்கான பிரார்த்தனை எழுதிதிருத்தும்படி உத்தரவு கொடுத்தார். அப்படி அவர் உத்தரவு கொடுக்கையில் டிக்ரிக்கு 3 வருஷம் கடந்து காலதோஷம் வந்து விட்டது.

தீர்மானம் :—சப்கோட்டார் இவ்விதமான உத்தரவு செய்தது சட்டத்திற்கு விரோதமென்று கண்டு சப்கோர்ட்டார் உத்தரவை ரத்து செய்துவிட்டு முன்சீபு உத்தரவை சிலவுடன் ஊர்ஜிதப்படுத்தினாகள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 9வது வால்யம் 780

2-ம. வீ. நொ. 181.

—...—

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்.

ஜட்ஜிகள்:—{ மி-ர் ஜ. அப்டுர்ஹீம், மி-ர். ஜ. எய்லிங் } முன்பாக.

2-வது அப்பீல் நெ. 1125, 1126 of 1907.

ஸ்ரீ ராஜ பொம்மதேவரா வெங்கடநரசிம்மநாயுடு பகதூர் } பிரதிவாதி-அப்பீல்வாதி

VS.

சஞ்ஜா சட்டய்யாவகையரா .... வாதிகள். ரெஸ்பான்டென்குகள்

மதராஸ் எஸ்டேட்லாண்ட் ஆக்ட் (1 of 1908) மதராஸ்ரெண்ட் ரெக்கவரி ஆக்ட் (8 of 865), பெஜ்வாடா சட்டிவிஷன் சப்கலெக்டர் முன் நடந்த சம்மேரி நெ. 566 of 1907 -ல் செய்த தீர்மானத்திற்கு விரோதமாய் கிருஷ்ணா ஜில்லா கோர்ட்டுக்கு செய்து கொண்ட அப்பீல் நெ. 749 and 750 of 1907-ல் செய்த டிக்ரியின் பேரில் கொண்டு வரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

கேசின் விபரம்.—இந்த இரண்டாவது அப்பீல் வாதி வல்லூர் ஜெமீன்தார்-பிரதிவாதிக அவருடைய பாயக்காரிகள். 1316-ம் பசலிக்கு அப்பீல் வாதியாகிய ஜெமீன்தார் கொடுத்த பட்டாவை ரெஸ்பான்டென்டுகளாகிய குடிகள் பெற்றுக்கொள்ள மாட்டோமென்று நிராகரித்து விட்டார்கள். அந்த பசலிக்காக ஜெமீன்தாரருக்குச் சேரவேண்டியிருந்த குடிக்கூலி பாக்கிக்காக ஜெமீன்தாரர் ரெஸ்பான்டென்ட் சொத்தை ஜப்திசெய்தார். அதன்பேரில் ரெஸ்பான்டென்டுகள் ஷ ஜப்தியை ரத்து செய்யும் படிக்கு தாவா செய்தார்கள். தீர்மானம் கீழ் இரண்டு கோர்ட்டுகளிலும் ஜெமீன்தார் இதுவரையில் பெற்றுக்கொண்டுவந்த ஏக்ரா ஒன்றுக்கு ரூபாய் 4-க்கு பதிலாய் ஏக்ரா ஒன்றுக்கு ரூபாய் 5 வீதம் போட்டு பட்டா கொடுத்தாரென்று கண்டு அப்படிப் பட்ட பட்டாகிரமமானதன்றென்று ரெஸ்பான்டென்டுகள் தாவா செய்தபடிடிக்ரி செய்தார்கள்.

அப்பில் வாதியின் வக்கீல் பின் வருமாறு வாதித்தார்-அதாவது கொடுக்கப்பட்ட பட்டாகிரமமானதாயில்லாவிடினும் குடிக்கூலி பாக்கி எவ்வளவுண்டோ அவ்வளவு மட்டிற்குஷஜப்தி சட்டப்படி செல்லத்தக்கதென்று சொல்லி கீழ் கோர்ட்டார்இருவரும் ஜப்தியைரத்துசெய்ததுபிசகுஎன்றெடுத்துக் காண்பித்தார். இந்த வாதத்தைப்பற்றி முன்னமே ஜில்லா ஜட்ஜு அவர்கள் இந்த வாதம் ஒப்புக்கொள்ளத் தகுந்ததல்லவென்று அதை அவர் தள்ளிவிட்டிருக்க அந்த வாதத்தையே இப்பொழுதும்இந்த இரண்டாவது அப்பீல்களிலும் எடுத்துக் கூறுகிறார்:

இந்த வியாஜ்ஜியங்களில் அமைந்திருக்கும் பாயின்டை பைசல் செய்வதற்கு 1908-ம் ஞு த்திய வது ஆக்ட் 53-வது பிரிவிற்கு அது அமுலுக்கு வந்ததிற்கு முன்னமேயே இது நடந்தமையால் இந்த பாயின்டை 1865ஞுத்திய 8-வது ஆக்டின் நிபந்தனைகளின்படி தான் பைசல் செய்யவேண்டியது. 1865-ம் ஞுத்திய 8-வது ஆக்டின் 7-வது பரிவின்படிபட்டா கொடுத்து முச்சிலிக்கா பேற்றிருந்தாலொழிய அல்லது முச்சிலிக்காதேவையில்லையென்று ஒப்புக்கொண்டிருந்தாலொழிய அல்லது கிரமமான பட்டா கொடுக்கப்பட்டிருந்தாலொழிய மற்றப்படி தாவாவாவது அல்லது யாதொரு நடவடிக்கையும் நடத்தலாகாதென்று நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது. பிரஸ்தாபதாவாவில் பட்டாகொடுத்து முச்சலிக்கா பெறவுமில்லை பட்டா முச்சலிக்கா வேண்டியதில்லையென்று ஒப்புக்கொள்ளப்படவுமில்லை. கொடுக்கப்பட்ட பட்டாவும் கிரமமானதல்லவென்று ஏற்பட்டிருக்கிறது ஆகையால் இந்தப் பிரிவின் நிபந்தனையின் படி ஜப்தி செல்லாதென்று முடிவில் சொல்லலாம்.

இதற்காதாரமாய் உபயத்திராளும் பின்வரும் கேசுகளை எடுத்துக் காண்பித்தார்கள்:—கர்ணம் வெங்கட கிருஷ்ணபிள்ளை. VS. ஏ. முத்தியாலு ரெட்டி. 20 ம. லா. ஜ. 821 ; 1 ம. வீ. நொ. 227 ; 7 ம. லா. டை 429;6 இந்தியன் கேசுகள் 209.

பெரியகருப்பபிள்ளை. VS. சிவகெங்கா ஜெமீன்குத்தகைதாரர்களின் மானேஜர். இ-லா-ரி.31-ம் 22 ; 17-ம. லா. ஜ. 479. ராமசந்திர. S8. நாராயணசாமி இ-லா-ரி-10-ம். 229. ரெஸ்பான்டென்டுகள் எடுத்துக்காண்பித்த கெசுகள்:—

முனிசாமிநாயுடு. VS. பெருமாள்ரெட்டி இ-லா-ரி. 23-ம் 615 பாஷ்யகார்லு நாயுடு. கண்டபனேனி சுப்பண்ண இ-லா-ரி. 27-ம் 4, வாமதேவதேசிகர். VS. முருகேசமுதலி. இ-லா-ரி. 29. முருகேசமுதலி இ-லா-ரி. 29-ம். 75 அப்பீல்வாதியின் தரப்பில் எடுத்துக் காண்பிக்கப்பட்ட கேசில் ஜட்ஜுகள் முழுதும் தீர்க்க யோசித்து தீர்மானம் சொல்லாமலேயேயிருக்கிறது. மேலே எடுத்துக் கூறிய கேசுகளில் 7-வது பிரிவைப்பற்றியாதொன்றும் சொல்லப்படவில்லைஇதற்காதாரமாய் ஷண்முகமுதலி VS. பல்வாலிகாப்புசெட்டி இ-லா-ரி 25-ம் 613 (புல்பெஞ்சு கேசு) எடுத்துக்காண்பிக்கப்பட்டது. பிச்சு வய்யங்கார். VS. நலிவர்.|இ-லா-ரி. 264, 260.

ஓர் குடியானவனுடைய சொத்தை ஜப்திசெய்வது மிக்கதுன்பகரமான நடவடிக்கைதான். அந்தக்குடியானவன் மாமூலாய் கட்டவேண்டிய குத்தகை மொத்தத்திற்கு அதிகமாகவே வாரண்டிலுள்ள மொத்தத்தைக் கட்டிவிட்டுதான் மேற்படி ஜபதியை அவன் ரத்துசெய்துக் கொள்ள வேண்டியவனுவான் அல்லது அந்தக் குடியானவன் வேறே தாவா செய்து ஜப்தியினுல் நேரிட்ட நஷ்டத்தை வசூல் செய்துக் கொள்வதற்கு நியாய மிருந்திடினும் அவன் அவ்வளவு கஷ்டமான நடவடிக்கையை நடத்தி தான் தன்னுடைய பரிகாரத்தைத் தேடிக்கொள்ளவேண்டுமென்பது நியாயமாய்த் தோற்றவில்லை.

மேலே கட்சியாய்க் கூறின கேசு ரெண்ட்ரெக்கவரி ஆக்ட் 7-வது பிரிவின்தாற்பரியத்திற் கிணங்கிருப்பதினுல் இந்த கேசுக்குத் சேருந்த அத்தாரெட்டி யென்று ஒப்புக்கொண்டு இந்தகேசில் செய்யப்பட்ட ஜப்தி சட்டத்திற்கு விரோதமான தென்று ஜில்லா ஜட்ஜு சொல்வதை ஒப்புக்கொண்டு இந்த இரண்டாவது அப்பில்கள் இரண்டும் தள்ளிவிடப்பட்டன.

மி-ர். பி. நாகபூஷணம். அப்பீல்வாதியின் வக்கீல்

மி-ர். டி. பிரகாசம். ரெஸ்பான்டென்ட் வக்கீல்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

1-வது சிவில் அப்பீல் நெ. 4 of 1908.

ஜட்ஜிகள் :—ச-ர். ரால்ப்பென்சன் / மி-ர். ஐ. சுந்தரம் ஐயர். } முன்பக

கோடா சுப்பய்ய குப்டகாரு வாதி...அப்பீல்வாதி.

VS.

இந்தியா ஸ் டேட் செக்ரிடேரி வகையார...பிரதிவாதிகள்...ரெஸ்பான்டென்டுகள்.

மதராஸ் ரெவனியூ ரெக்கவரி ஆக்ட் (II of 1864) 3,4,5, 26வது பிரிவுகள். கிஸ்தி கட்டத் தவரிப் போவது.

கேசின் விபரம் :—கார்வேட் நகர் ஜெமீன்தாரியைச்சேர்ந்த கொபாலபுரம் கிராமத்தின் 1309ம் பசிலிமுதல் 1311-ம் பசலிவரையிலும் இன்னும் 1312-ம் பசலியில் கொஞ்ச பாகத்திற்கும் சர்க்காகிஸ்தியைச் செலுத்தத் தவறிப்போன தன்காக|சற்காரார் செயத ஜப்தியை ரத்து செய்யும் படிக்குக் கொண்டு வந்ததாவா கார்வெட் நகர் ஜெமீன்தார் பேரில் அடைந்த டிக்ரியை நிறைவேற்றி ஷ்கிராமத்தை கோர்ட்டு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது. ஒரு ராமசாமி செட்டி என்பவர அந்த கிராமத்தை ஏலத்தில் வாங்கி 1890-ம் ளு மே மீ 26உ வாதிக்கு மாத்திவிட்டார். 1901-ம் ளு வரையில் ஷகிராயம் ஜெமீன்தார் பேர்லேயே ரெஜிஸ்டராய் வந்து பிறகு 5-8-1901 காலெக்டரால் வாதியின் பேருக்கு ரெஜிஸ்டர் செய்யப்பட்டது. ஜெமீன்தாரர் ரேஜிஸ்டர் சொந்தக்காரரா யிருக்கையில் 1309, 1310-ம் பசிலிகளின் கிஸ்தி முன்னதாகவே பாக்கியாயிருந்தது. கிஸ்தி ஜப்திமொத்தம் 1344-3-6 இதில் ரூபாய் 1000க்கு மேலேயே 1309, 1310-ம் பசலிக்குச் சேரவேண்டிட பாக்கி. கோர்ட்டு ஏலத்தில் அனேக ஒழுங்கீனங்கள் நடந்ததாகவும் அவ்வொழுங் கீனங்களினுல் ரூபாய 20000க்குப் போக வேண்டிய கிராமம் ரூபாய் 6260-க்கு விற்கப்பட்ட தென்று வாதி பிரியாது செய்தான், ஏலவிற்பனையில் யாதொரு ஒழுங்கீனமும் நேரிடவில்லை யென்றும், கிராமத்தின் கிஸ்திமொத்தம் தப்பாய் இஸ்தியாரிலிருந்த போதிலும் ஏலம் போடும் போது எல்லோருக்கும் அந்தத் தப்பைப்பற்றித் தெரிவிக்கப் பட்டதென்றும் வித்த விலை நியாயமான விலை யென்றும் கிராமத்தின் சரியான கிஸதிமொத்தம் இன்னதென்று எல்லோருக்கும் தெரிவிக்கப் பட்டதென்றும் தீர்மானித்தார். கிஸ்திபாக்கிக்காக சர்காரரா செய்தஜப்தி கிரமமானது தானெனப்தற்கு இ. லா. ரி. 30 ம 35 16 ம, லா. ஜ. 569 ; 1 ம. லா. டை 323 ; 33 ம 40·19 ம. லா. ஜ. 627 ; 3 இ. கே. 624.

இந்தியன் கேசுகள் 64 3. கேசுகளை ஆதாரமாய் கூறி அப்பீலை தள்ளும்படி செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 9வது வால்யம் 761

2 ம. வீ. நொ. 182.

THE ASHE MURDER TRACEDY.

திருநெல்வேலி கலெக்டர் ஆஷிதுரையின் விபத்து.

AN EYE WITNESS'S ACCOUNT.

பிரத்தக்ஷயமாய் பார்த்தசாட்சியின். கண்காக்ஷி விர்த்தாந்தம்.

ARREST OF SUSPECTS.

அனுமானித்த நபர்களின் மறியல்.

EXPRESSIONS OF SYMPATHY.

ஜனங்கள் விசனத்தில் முறையிடுதல்.

நேரிட்டுப்பார்த்தவன் சொல்லும் விர்த்தாந்தம், நேற்றியதினம் நான் திருநெல் வேலியிலிருந்து மதராசுக்கு வரும்பிராயிணிகளுடன் புறப்படுகையில் நான் வரும்ரயில் வண்டியிலேயே மிர். ஆஷிதுரையும் தன்னுடைய மனைவிகுழந்தையுடன் கொடைகெனுலுக்குப்போக வண்டி ஏறினர். நாங்கள் ஏறிவந்தவண்டி மணியாச்சிஸ் டேஷனுக்கு வந்து மேலண்டைபக்கத்தில் நின்றவுடன் நானும் அவர்களும் போட்மெயிலுக்காகக்காத்துக் கொண்டிருக்கையில் இதற்கும் கீழண்டை லயனுக்கும் நடுவிலுள்ள புக்கிங் ஆபீசில் திருநெல்வேலியிலிருந்து வரும் வண்டிக்குக் காத்துக்கொண்டிருக்கையில் அதாவது மூன்றுவது லயனில் காத்துக் கொண்டிருக்கையில் இரண்டாவது லயனில் நின்றுக்கோண்டிருந்த முதல் கிலாஸ் வண்டியில் தன்னுடைய மனைவியுடன் டிக்கட் ஆபீஸின் பக்கமாய் பார்த்துக் கொண்டும் அவருடைய மனைவி போட் மெயிலைப்பார்த்துக்கொண்டிருக்கையில் அவருடைய சிப்பந்திகள் சாமான்களை போட்மெயில் வண்டிக்குச் சேகரித்திக் கொண்டிருந்தாகள். நானும் என்னுடன் வந்த என்னுடைய சினேகிதனும் போட்மெயிலுக்காக மூன்றுவது லயனில் ஆஷிதுரையிருந்தவண்டிக்கெதிரில் நின்றுக்கொண்டிருந்தோம் எங்களுடன் திருநெல்வேலியிலிருந்து பிரயாணம் செய்தவர்களும் மூன்றுவது லயனுக்கு வந்து காத்துக் கொண்டிருக்கும் போது.

கூக்குறலும் வெடியும்.

திடீலென்று ஓர் வெடியில் கெட்க அது சோடாபுட்டியின் சப்த மாயிருக்கலாமென்று நினைத்தோம் ஆனல் முதல் கிலாஸ்வண்டியிலிருந்த ஆஷி துரைசாணியின் கூக்குறலைக் கேட்டுநாங்கள் அனைவரும் அந்தவண்டியினிடம் போனபோது இரண்டாவது லயனில் ஓர்நடு வயதும் சுமாரான உயரமுள்ள மனிதன் ஒருவன் தன்னுடைய கையில் ஓர் பிஸ்தெலென்னும்| துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டிருப்பதைக் கண்டோம், அவனண்டையில் ஓர் சிறயபிள்ளை நின்றுக்மொண்டிருப்பதை நோக்கி அவன் அவனுடைய வேலைக்காரனுயிருக்கலாமென்று பாவித்தேன். அப்படி சுட்டவன் தான் சுட்ட வெடியில் அவனுடைய கருத்து நிறைவேறிற்ரு இல்லையா யென்று நோக்கி சொற்பநேரம் அவ்விடமே நின்று பார்த்து பிறகு அவன் அவனுடைய கருத்து நிறைவேறிற் றென்று திருப்தியடைந்தஉடனே அப்படி சுட்டவன் அவன் நின்றுக் கொண்டிருந்த லயனின்| தென்னண்டைபக்கத்திலுள்ள கொல்லைபக்கமாய் ஓடிப்போனுன்.

விபத்து நேரிட்டபிறகு.

அப்பொழுதுசுடுபட்ட ஆஷிதுரையோ தன்னுடைய தலையிலிருந்த டோப்பியை யெடுத்து அவன்தான் தன்னைச் சுட்டவனென்று பிறர் அறியும் பொருட்டு அதை அவன் பேரில் எறிந்தார். ஆனல் அந்த டொப்பி அவன் பேரில் விழாமல் குறிதப்பி அவன் எதிரில் காலண்டையில்விழுந்தது. ஆஷிதுரையும் பின்பக்கமாய் விழுந்து விட்டார் அவருடைய மனைவி அவரை எடுத்து தன்னுடையவண்டியில் கிழேவளத்தி அவர்மேலிருந்த உதிரமெல்லாம் அச்சீமாட்டியின் கையெல்லாம் காணப்பட்டது அந்தலயனில் நின்றுக் கொண்டிருந்தரயில் வேபோலீஸ் சேவகர்களு மிருந்தார்கள். அந்தம் மாளின்கூக்குறலைக்கேட்டு போஸ்டா பீசைச் சேர்ந்தவராயிருந்த ஓர் ஐரோப்பியர் உடனே ஓடிவந்தார். அவர் இந்த விபத்தை நோக்கி ஆஷிதுரை சாணியையும். சாகப்படுத்திருக்கும் ஆஷிதுரையையும் திருநெல்வேலிக்குக் கொண்டு பேகதகுந்த ஏற்பாடுகள் செய்துக் கொண்டிருந்தார்.

அச்சமயத்தில் சுட்டவன் தப்பித்துக்கொண்டு ஓட எத்தனிக்கையில் அவ்விடமிருந்த ஜனங்களெல்லோரும் அவனைப்பிடிக்க அவனைச் சுத்தி ஓடுகையில் அவன் அவர்களை துப்பாக்கியால் சுடுவதாய் பயமுறுத்திதுப்பாக்கியைக்காண்பித்துக்கொண்டே கொல்லைக்குள் ஓடிகதவடைத்துக்கொண்டான். போலீசாரும், ரயில்வே ஸ்டேஷன் உத்தியோகஸ்தர்களும் அவன் கொல்லையை விட்டுத்தப்பித்துக் கொன்டுப்போக வொட்டாமல் கொல்லையைச் சுத்தி நின்றுக் கொண்டே உள்ளேபோகபயந்துக் கொண்டு ஜாக்கிரதை யாயிருந்தார்கள், இவ்வித மிருக்கையில் போட்மெயில் வண்டியும் வந்து சேரநாங்களும் அதில் ஏறிக் கொண்டோம். அவன் கொல்லைக்குள் போனதற்கும் போட்மெயில் ஸ்டேஷனை விட்டுப்புறப்பட்ட தற்கும் நடுவில் 10 நிமிஷம் சென்றிருக்கும் அதற்குள் யாவரும் அவனை கொல்லைக்குள் போய்பிடிக் கவுமில்லை யாதொரு வெடிசப்தமும் கேட்கவில்லை பிறகு சுட்டவன் தானே சுட்டுக் கொண்டு தற்கொலை செய்துக்கொண்டானென்று தெரியவந்தது (Hindu 19-6-11.)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
4 OCT 1911
MADRAS.

இன்னொருவிர்த்தாந்தம்.

இந்தியா அட்வோகேட் ஜூன் 7உ பத்திரிகையில் பின்வருமாறு தெரியவருகிறது.

ஆஷிதுரை அவருடைய மனைவியுடன் திருநெல்வேலியிலிருந்து மணியாச்சிஸ்டேஷனுக்கு வந்தவுடன் அவர்கள் இருவரும் முதல் கிலாஸ்வண்டியில் கொடைக்கெனலுக்குப் போகமெயில் வண்டிக்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஓர் பிராமணன் நன்றாய் உடுத்திக் கொண்டு அந்த வண்டியினிடம் சென்று அவருடைய மார்பைப் பார்த்து சுட்டான். அத்தருணத்தில் அவன ருகில் நின்றிக்கொண்டிருந்த வர்கள் அவனைப்பிடிக்க எத்தனிக்கையில் அவன் அவர்களையும் சுட்டுவிடுவதாக துப்பாக்கியைக் காண்பித்துட பயமுறுத்திக் கொல்லைப்பக்கமாய் ஓடி விட்டான். உடனே போலீசார் கொல்லைக்குள் போய்பார்க்கையில் அவன் செத்துப் பிரேதமாய் கிடந்தான்.

பிறகு ஆஷிதுரையைதிருநெல்வேலிக்குக் கொண்டுபோகையில் அவர் வழியிலே காலமாய் விட்டார். அவருடைய பிரேதத்தை திருநெல்வேலிஸ்டேஷனுக்கு அதேதினம் காலை 10மணிக்கு கொண்டு வந்து மாலை 5 மணிவரையில் ஸ்டேஷனிலேயே வைத்திருந்து பிறகு அவருடைய பங்களாவிற்கு எடுத்துக் கொண்டுபோய் அவ்விடமிருந்து அவருடைய பிரேதத்தை பாலம் கோட்டை கல்லறைக்கு அநேககனதனவான்கள் பின்செல்ல கொண்டுபோய் அடைக்கலம் செய்தரார்கள்..

அவ்விதமாய் அவருடன் சென்றகனதனவான்களில் முக்கிய மானவர்கள் 8 பேர், இந் பிரபுக்களில் தலைவராகிய ம-ா-ா-ஸ்ரீ. சிங்கம்பட்டி ஜெமீந்தார் அவர்களும், ம-ா-ா-ஸ்ரீ. குருசாமி ஐயரும் அவரைஉள்ளடக்கம் செய்யதிருந்த பெட்டியை அவரை செய்த நன்மையைவெளிப்படையாய் யாவரும் அறியும்படிஅவர்களே தூக்கிகொண்டுபோனதாகதெரிய வருகிறது.

இதுசம்பந்தமாய் இரண்டு பேர்களைப்பிடித்து அடைத்துவைத்திருக்கிறார்கள்.

பின்னிட்டசமாச்சாரம்.

ஜூன் 20உ இவ்விதமாய் சுட்டபிராமணனுடனிருந்த பிள்ளையைத் திருநெல் வேலிக்குப் பிடித்துக் கொண்டு போய்விசாரணை செய்ததில் அவன் தான் அவரைச்சுட்டதுப்பாக்கியைசுட்டவன்கையில்அத்தருணத்தில் கொடுத்ததாகவும் உடனே அவன் அவ்விடத்தை விட்டு இல்லவிலங்கால் கிராமத்திற்கு ஓடிப்போனதாகவும் அவனை அவ்விடத்தில் மறியல் செய்ததாகவும் தெரியவாருகிறது. சுட்டவனோ ஆதியில்சோத்துயில் கிராமதில்லூர்போலீஸ் ஹேட் கான்ஸ்டபிலாயிருந்ததாகவும் அவன் அவ்விடத்தில் லஞ்சங்கினனென்று அதனை காலம் சென்ற ஆஷிதுரை அக்குற்றத்திற்காக இரண்டுவெருஷகடினகாவலிலிருக்கும் படி சிக்ஷை விதித்ததாகவும் அவன் ஜெயிலிலிருந்து வெளிவந்த இரண்டு வாரத்திற்குள் இந்த விபத்து நேரிட்டதாகவும் தெரியவருகிறது. இவன் ஜெயிலிலிருந்து வெளிவந்து இரண்டொருவாரம் திருநெல்வேலி ராமய்யங்கார் ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டிருந்ததாகவும் தெரியவருகிறது.

இது விஷயமாய் மதராஸ் போர்ட் மெம்பர்கனம் பொருந்தியட் விக்துரையும், ஜில்லா போலீஸ் சூப்பெரின்டென்டென்ட் துரைஅவர்களும்இராவ் பகலாய் தங்களால் கூடிய பிரரயத்தினம் செய்து இந்த விபத்திற்கு உதவி புருஷளோயிருந்த வர்களை கண்டு பிடிக்க முயற்சி செய்துக் கொண்டு வருகிறார்கள்,

ஜூன் 21உ சென்கோட்டாவில் சுட்டவன் வீட்டில் சோதனை போடுகையில் தென்தேசதில் ராஜக் கலகம் செய்துக்கொண்டிருந்ததற் காலத்தில் புதுச்சேரியில் வசிப்பவர்களுடைய கடிதங்கள் கிடைத்ததாகவும் தெரிய வந்து மூன்று நபர்களை மறியல்செலுதிருக்கிறார்கள் Hindu 21-6-1911, பரிதாப பவிளக்கம் இவ்விதமாய்நடந்த விபத்தைநோக்கு மளவில் இவர் தன்தன் தொழிலைப்புறிந்துவரும்காலத்தில் இந்தராஜதானியில் அநேகருக்கு சன்மார்க்கராயும் அநேக நன்கைகளைப்புறிந்துவந்த புண்ணியவனாயிருந்த இவரை இப்படிகொலை செய்ததற்கு. யாதும் புலப்படவில்லை அக்காரணம் யாதாயிருந்திடினும் இவ்விதமாய் ஒருவரைக் கொலைசெய் வதுமிகதுக்கமாயும் நாகரிகள்ளத்தில் மிக்க அக்கிரமமானதாயும்பொதுவில் நம்மனை தருடைய கௌரவத்தையும் ஊரின் பொது பெயரைக்கெடுக்கவும் நம்முடைய ராஜதானியில் இவ்விதமான துன்பச்செயல் நடக்கவொட்டாமடல் தடுப்பதே நம்முடையகடைமையாக நாம் பாவித்து நடக்கவேண்டியது அவசியம்.

இந்த துக்ககரமான சமாச் சாரத்தைக் கேட்க நாம் அனை வரும் துககித்து ஆஷிதுரைசானியையும் குடும்பத்தையும் கடவுள் நீடித்தாலம் ரக்ஷிப்பாராக.

'he Hon. Sir Justice R. S. BENSON, *Kt.*, M.A., L.L.B., I.C.S., (*Bar.-at-Law.*)
ஆனரபில் ஸர். ஆர். யஸ். பென்ஸன், *Kt.*, M.A. L.L.B., I.C.S., (*Bar.-at-Law*)
ஐகோர்ட் நியாயாதிபதி.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் V.] சென்னப்பட்டணம் 1911௵ ஜூலை௴ பாகம் 10.]

NOTICE:—Contributions other than original are neither invited nor required. All literary contributions and books for Review should be addressed to Mr. N. RATHAKRISHNA NAIDU, P. A., A. L. A. A., (LONDON) INDIAN LAW GAZETTE. 49, Acharappan Street, Madras.

ACT III OF 1907.

THE PROVINCIAL INSOLVENCY ACT, 1907.

வெளிமாகாணங்களுக்காகிய 1907௵த்திய ப்ரொவின்ஷியல்-இன்சால் வென்ஸி (கடன் கொடுக்க சக்தியின்மை) ஆக்ட்:

—:0:—

இத்தேசத்தில், கடன் வாங்கியவர்கள் மீண்டும் கடன் கொடுத்தவர்களுக்குச்சேரவேண்டிய தொகைகளை செலுத்த சக்தியற்றுப்போகும் விஷயத்தில், சட்டசம்மதமாய் அவர்கள் பேரில் இத்தேசத்தில் துரைத்தனத்தாரால் ஏற்படுத்தப்பட்டுள்ள நியாயஸ்தலங்களில் சம்மன், வாரண்டு முதலாகிய அமுல்கள் நடத்தி வசூல் செய்வது வழக்கமல்லவா. இது இப்படிக்கிருக்க, கடன்காரர்களுடைய சொத்தின் பேரிலும், நபரின் பேலுரிம், வாரண்டுகள் முதலான அமுல்கள் நடத்தி வருவதினால் எற்கெனவே ஜனங்களுக்கு கஷ்டமும், துக்கமும், விளைவிக்கின்றதல்லவா. இவ்விதமாய் கடன் வாங்கினவர்களுக்கு விளையும் கஷ்டங்களையும், துன்பங்களையும் ஓர்விதமாய் நீக்குவதற்கு பரிகாரமாய் நிபந்தனைகள் செய்வது யுத்தமமென்று நம்மையாளும் சக்கரவர்த்திக்குத் தோன்றிற்று. அந்த நிபந்தனைகள் தான் இப்பொழுது இன்ஸால்வென்வஸி ஆக்ட் என்று வழங்கி வருகிறது. இப்படிப்பட்ட இன்ஸால்வென்வஸி ஆக்ட் என்னும் ஓர் நிபந்தனை இவ்விந்தியாதேசத்தில் இருந்ததேயில்லை. ஆனால், இதுகாலம் வரையில் கடன் வாங்கினவர்களுக்கு இன்ஸால்வென்வஸி கொடுத்து வருவது எவ்விதமெனில், இங்கிலாந்தில் ஆதிகாலத்தில் உண்டாகிய ஓர் ஸ்டாடியூட் (Statute) டின் பிரகாரம் தானே யொழிய மற்றப்படி இவ்விந்தியாதேசத்தின் இராஜதானிகளில் வேறே நிபந்தனை ஒன்றும் இருந்ததே யில்லை. கடன் கொடுக்க சக்தியற்றும் போகிறவர்களுக்கு கஷ்ட துக்கங்கள் விளைவிக்காமல் அவர்களை ஆதரிக்கும்பொருட்டு இந்தியாவிலும் ஓர் நிபநதனை ஏற்படுத்துவது யுக்தமமென்று துரைத்தனத்தாருக்கு தோன்றியது.

ஏனெனில், சொற்ப தினங்களுக்குமுன் விசேஷமாய் பெருந்தொகைகளில் ரொக்க லாவாதேவிகளும், பெரும்படியாய் பலவித சரக்களிலும் அனேக நூற்றாண்டாய் வியாபாரம் செய்துகொண்டுவந்தவர்களாக ஜனங்களுக்கு மதிப்புள்ள பெரும் கம்பெனியாராகிய அர்பத்னட்டாரும், இன்னும் சில பெரிய வியாபாரிகளும், குடிகளும், தாங்கள் வாங்கிய கடன்களை கொடுக்க சக்திபற்றுப்போன மாதிரியாய் இன்னும் அனேக குடிகள் இவ்விதமாய் கஷ்டப்படுவார்களெனக் கருதி, அவர்களை ஆதரிக்கத் தகுந்த பரிகாரங்கள் செய்ய யுக்தமமான நிபந்தனைகள் இது வரையில் வெளிநாடுகளில் இல்லாமையால், இந்த 1907, ப்ரொவின்ஷிப்ல் இன்ஸால்வென்வஸி ஆக்ட் என்னும் ஓர் சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அனேக நூற்றாண்டுகளுக்கு முன் இப்படி கடன் கொடுக்க சக்தியற்றுப் போகிறவர்களைப்பற்றி இரா

ஜாங்கத்தார் என்ன நிபந்தனைகள் செய்திருந்தார்கள், அவர்களை எவ்விதமாய் ஆதரித்து வந்தார்கள், என்பதைப்பற்றி சற்றுயூகித்துப் பார்ப்போம். அவ்விதமாய் நிதானிக்குமளவில் அதை விஸ்தரித்துச் சொல்லவேண்டியதா யிருக்கிறதே யன்றி சொற்ப வார்த்தைகளில் சுருக்கிவிடலா மென்பதற்கு இடம் கொடுக்கவில்லை. ஏனெனில், நியாயஸ்தலங்களில் ப்ளீடர்கள் என பெயர்வகித்து லாயர்களா யிருப்பவர்களுக்கு இச்சட்டம் தெளிவாய் தெரியவராது. அது யாது காரணமெனில், இராஜதானிகளின் முக்கிய பட்டணங்களாகிய, மதராஸ், பம்பாய், கல்கத்தா, கோர்ட்டுகளிலும் இந்த ப்ளீடர் என பெயர் வகித்த லாயர்மார்கள், கடன்கொடுக்க சக்தியற்றுப் போகிறவர்களாகிய இன்ஸால்வெண்டுகளுககாக ஆஜராகி வாதிக்க நியாயமில்லையென விதியிருக்கின்றதல்லவா. ஆகையால் தான் இந்த இன்ஸால்வென்ஸி ஆக்டின் நிபந்தனைகள் இவர்களுக்கு சரிவர தெரியாதென்று பின்னும் வற்புறுத்திச் சொல்லலாயிற்று.

“ இன்ஸால்வென்ஸி ” என்றால், ஒருவன் தனக்குச் சொந்தமாய் வைத்திருக்கும் சொத்தின் மதிப்பைவிட அவன் கொடுக்கவேண்டிய கடன்கள் அதிகரித்திருப்பதுதான். ஒருவன் தன் கடன்களை மீண்டும் கொடுக்க சக்தியற்றுப்போவது, அல்லது அவன் தன் மனப்பூர்வமாய் செய்திருந்த ஒப்பந்தங்களை நிறைவேற்ற தவறிப்போவது, இவைகளைத்தான் இன்ஸால்வென்ஸியாகப்போவது என இங்கிலாந்தின் நியாயஸ்தலங்களில் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். (James V. Scott, 53 P. st. 178). தினே தினே நாகரீகம் அதிகரித்துக்கொண்டுவரும் இத்தேசங்களில் இவ்விதமாய் கடன்கொடுக்க சக்தியற்றுப் போகிறவர்களுக்கு ஆதாரவாயும், கடன் கொடுத்தவர்கள் மீண்டும். அவர்கள் கொடுத்த தொகைகளை வசூலிக்க பரிகாரமாயும், எவ்விதமான நிபந்தனைகள் செய்வது நியாயமென்றால், அவர்கள் கடன்கொடுக்க சக்தியற்றுப் போகும்பொழுது பின்வருமாறு நடவடிக்கை நடத்துவது தான் ; அதாவது, கடன் கொடுத்தவர்களுடைய க்ஷேமத்தைக்கோறியும், கடன் வாங்கியவர்களின் கஷ்ட துக்கங்களை யனுசரித்தும், (1) கடன் வாங்கினவன் என்ன பெருமானமுள்ளவன் என்று தீர விசாரணைசெய்து பரீட்சித்துப்பார்ப்பது, (2) அவனுக்கு உள்ள சொத்துகளை கிரமமாய் வசூலிக்கவேண்டிய விதமாய் வசூலித்து அப்பொருளை கடன் கொடுத்தவர்களுக்கு நியாயப் பிரகாரம் அவரவர் கொடுத்த கடன் தொகைகளின் தாமாஷாவின்படி பாகித்துக்கொடுப்பது, (3) இவ்விதமாய் கடன்வாங்கினவர்களை வாரண்டில் பிடிப்பது முதலான கஷ்ட துக்கங்களிலிருந்து நிவர்த்திசெய்வது, (4) கடன் வாங்கினவர்களுக்கு உள்ள சொத்துகளை வசூல் செய்வதற்காக வேண்டிய சகாயங்கள் கடன் வாங்கினவன் செய்யவேண்டியதென்பது நிபந்தனைகள் செய்வது, (5) கடன் வாங்கினவன் தனக்கு வெளியில் வரவேண்டிய சொத்தை வசூல் செய்வதற்கு வேண்டிய சகாயங்கள்செய்து வரத்தவறினால் அவனை இன்ன சிக்ஷைசெய்து தண்டிக்கலாமென்று நிபந்தனைகள் செய்வது. இவைகள் தான் இன்ஸால்வென்ஸி ஆக்டின் பிரதம கோட்பாடென கூறலாம்.

பூர்வகலாத்தில் கடன் வாங்கியவர்களுக்கு இவ்விதமான நிபந்தனைகள் யாதொன்றும் இல்லாமல் அப்பண்டகாலத்தில் இது விஷயமாயுள்ள ஏற்பாடுகள் குடிகளுக்கு மிகக் குரூரமாகவும் கஷ்டமாகவுமிருந்தனவென்று சட்டத்தை வாசித்துவரும் பாலர்களுக்குத் தெரிந்த விஷயமல்லவா. அப்படிப்பட்ட குரூரமான சட்ட திட்டங்கள் யாதென தீரவிசாரிப்போமாகில், அக்காலத்தில் ஒருவன் கடன் கொடுக்க சக்தியற்றுப்போனவுடனே அவனுக்கு கடன் கொடுத்தவர்கள் அவனை யென்ன செய்யலாமென்று அவர்கள் புத்திக்குத் தோன்றுகிறதோ அவ்விதமாகவே அவன்பேரில் நடவடிக்கைகள் நடத்திக்கொள்ள கடன்கொடுத்தவர்களுக்கு விசேஷ அதிகாரங்கள் கொடுத்திருந்தன. அநேக நூற்றாண்டுகளுக்கு முன் “ The Twelve Tables ” என ஓர் சட்டம் ரோமன் தேசத்தில் வழங்கி வந்ததாம். அதிலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் கடன் கொடுத்த ஒருவன் கடன் வாங்கினவனுடைய சொத்தை விற்றுக்கொள்ளலாம், அல்லது அச்சொத்தை அவன் நினைத்தவண்ணம் வினியோகம் செய்யலாம் ; இம்மாதிரியாகவே Julius Caesar என்னும் அரசனுடைய அரசாட்சிவரையில் நடந்தேறி வந்தது. இவ்வரசனுடைய காலத்தில் தான் கடன் கொடுக்க சக்தியற்றுப்போகும் இன்ஸால்வெண்டுகளுக்கு ஓர் சட்டம் செய்யவேண்டுமென்பது யுக்தமாகத்தோன்றி இவ்விஷயத்தில் சட்டம் ஏற்படுத்தினார்கள். அச்சட்டத்தின் பிரகாரம் கடன்வாங்கினவர்கள் கடன்கொடுக்க சக்தியற்றுப்போகும் தருணத்தில் அவர்களுடைய சொத்தை கடன் கொடுத்தவர்களுக்கு அவர்களை விட்டுவிட்டுப் போய்விடவேண்டியது. இப்படி விட்டுவிட்டுப் போவதும் அவர்கள் வெறுமையாய்ப் போகலாமா என்று நிதானித்தாலோ அப்படியும் போகலாகாதாம் ; மற்றப்படி எவ்விதமாய்ப் போகலாமென்றால் கோர்ட்டார் அறிந்தோ அல்லது அறியாமலோ ஓர் உறுதிமொழி செய்துதான் அவர்களுடைய சொத்தை கடன் கொடுத்தவர்களுக்கு விட்டுவிடவேண்டுமாம். இப்படி கடன் வாங்கிக்கொண்டவர்கள் விட்டுவிடப்பட்ட சொத்தை விற்று முதல்செய்து அப்பொருளை கடன் கொடுத்வவர்களுக்குள் பாகித்துக்கொள்வது வழக்கமா யிருந்தது. ஆனால் ஒவ்வொரு கடன் கொடுத்தவனுடைய பாக்கித்தொகை பூராய் செல்லாகிறவரையில் கடன் வாங்கினவன் விடுதலை

யானவனாக பாவிக்கப்படாமல், கடன் வாங்கினவனை மறியல் (arrest) செய்து ஜெயிலில் அடைப்பது மாத்திரம் கடன் கொடுத்தவர்களுடைய இஷ்டத்தின் பேரில் நடந்தேறிக்கொண்டுவந்தது. அதாவது, ஓர் கடன் வாங்கினவன் இன்ஸால்வெண்ட் ஆய்விட்ட பின் யாதேனும் ஓர் சொத்தை சம்பாதிக்குமளவில், அவனுக்கு கடன் கொடுத்தவர்கள் அச்சொத்தையும் கைப்பற்றி கடன் வாங்கினவன் ஜீவிப்பதற்கு வேண்டிய அளவை நீக்கி தங்கள் கடனுக்கு செல்லாக்கிக்கொள்ளலாம். (Mackenze's Roman Law, 271). இது இப்படிக்கிருக்க இது விஷயமாய் அக்காலத்தில் இங்கிலாந்தில் சட்டம் யாதென்று கவனிக்குமளவில் அது மிக்க விநோதமாயிருக்கிறது ! அவ்விடத்திலேயோ கடன் வாங்கினவன் மீண்டும் கடனைக்கொடுக்க சக்தியற்றவனாய் பராரியாய் விட்டானென்று கடன் கொடுத்தவனுக்கு தெரிந்த அளவில். அவனுடைய சொத்துகள் யாவும் யாவென்றறிந்து அவைகளை கடன் கொடுத்தவர்கள கைப்பற்றிவிற்று முதல்செய்து அப்பொருளை அவர்கள் கடன்களுக்கு சரிவர பாகித்துக்கொண்டு, கடன்காரனை கடன்கொடுத்தவர்கள் சட்டப்படிநடவடிக்கைகள் நடத்தி கோர்ட்டு அமுல் மூலமாய் அவனை ஜெயிலடைக்காமல் விட்டுவந்தார்கள். இப்படி நடந்தேறி வருங்கால் Henry VIII. என்னும் அரசன் தன் காலத்தில் கடன் வாங்குகிற குடிகள் கடன்வாங்கும் அத்தொகையை தாங்கள் அபகரிக்கவேண்டுமென மோசமாய்க்கருதி அப்பொருள்களைக் கைப்பற்றிக்கொள்கிறவர்களுக்கும், பிறர் நபரின் சொத்தை ஒருவன் அடைந்து அதை மீண்டும் அவனுக்குத்தரலாகாதென்னும் மோச எண்ணத்துடன் அக்கடனைக்கொடாமல் ஓடிப்போய் சுகமாய் வாழ்ந்துவரும் குடிகளுக்கும், ஓர் சட்டம் ஏற்படுத்துவது நியாயமென்று எண்ணி 34, 35 ஸ்டாடியூட்—இங்கிலீஷ் பான்க்ரப்ட்ஸி லா (Statute—English Bankruptcy law) என்னும் சட்டத்தை ஏற்படுத்தினாராம். இச்சட்டத்தினால் அக்காதத்திலுள்ள Lord Chancellor, இன்னும் இதர பெரிய அந்தஸ்துள்ள உத்தியோகஸ்தர்கள் கடன்பட்டவர்களுடைய சொத்தைக்கைப்பற்றி அவைகளைக் கடன் கொடுத்தவர்களுக்கு பாகித்துக்கொடுத்து வந்தார்களாம். இப்படி சிலகாலம் நடந்தேறிவர, Elizabeth அரசாளும் காலத்தில் ஓர் சட்டம் (13. Eliz. Chap. VII) ஏற்பட்டதாம். அதன் பிரகாரம் இன்ஸால்வென்டுகளின் சொத்துகளை கைப்பற்றி கடன் கொடுத்தவர்களுக்கு பாகித்துத்தரவேண்டிய ஓர் அதிகாரத்தை Lord Chancellor, கமிஷனர்கள் ஏற்படுத்தி அத்தொழிலை செய்துவர அதிகாரம் உண்டென்று உத்தரவளிக்கலாம். ஆனால் அச்சட்டம் அக்காலத்தில் வியாபாரிகளுக்குள் மாத்திரம்தான் செலாவணியாய்க்கொண்டுவந்தது. இவ்விதமாய் இன்ஸால்வென்ஸியைப்பற்றிய சட்ட திட்டங்கள் அப்போதைக்கப்போது மாறிக்கொண்டு வந்தன. கடைசியாய் Queen Anne என்பவள் அரசாளும் காலத்தில் Bankruptcs Law ஓர் சட்டதிட்டம் உண்டாய் அதன்பிரகாரம் கடன்கொடுக்க சக்தியற்றவனை ஓர் குற்றவாளியாக பாவிக்கப்பட்டு அவனை கடன் கொடுத்தவர்கள் அவர்களுக்கு வேண்டியபடி என்ன செய்தாலும் செய்யலாமென ஏற்பட்டது. ஆயினும் அக்கடன் பட்டவர்கள் ஓர் தடவை இன்ஸால்வென்டாகிய பிறகு, யாதேனும் சொத்தை சம்பாதிக்குமளவில் அச்சொத்தின்பேரில் முன் கடன் கொடுத்தவர்கள் தொடரலாகாதென்று Queen Anne Statutes 4, C. 17 ; 10, C. 15. சட்டங்களின் நிபந்தனைகள் உண்டானது, முதல் முதல் இந்த Statutes களின் பிரகாரம் தான். இன்னும் அநேக திருத்துப்பாடுகளும், மாறுதல்களும் அப்போதைக்கப்போது உண்டாயின.

அவைகளைப்பற்றி இவ்விடத்தில் விசதமாய் எழுதுவது அனவசியமெனத் தோன்றுகிறது. கடைசியாய் William VI. என்பவர் அரசாளும் காலத்தில், Statutes 1 and 2. C. 56. உண்டாயிற்று. அதன் பிரகாரம் Court of Bankruptcy என்று ஓர் நியாய ஸ்தலம் ஏற்படுத்தி அதில் Official Assignee (அபீஷல் அசைனீ) என்னும் ஓர் உத்தியோகஸ்தனை நியமித்தார்கள். இது தான் முதல் முதல் உண்டான இங்கிலீஷ் பாங்கிரப்ட்ஸி லா என்று தெரியவருகிறது. அதற்குப் பின்னும் இது விஷயமாய் சில சட்ட திட்டங்கள் 1849, 1861-வது வருஷங்களில் உண்டாயின. இச்சட்ட திட்டங்களை கவனித்துப்பார்க்கிலோ, அவைகளை அரசன் இந்த இன்ஸால்வென்ஸி அதிகாரத்தை நாமே வகித்துக் கொள்ளலாமா, அல்லது சில உத்தியோகஸ்தர்களுக்கு இவ்வதிகாரத்தைக்கொடுத்து பரிபாலனம் செய்யச் சொல்லலாமா என்று மயங்கி கலவரத்துடன் செய்த சட்ட திட்டங்களாகத் தோற்றுகின்றது. ஆனால், இந்த ஆக்டுகளினால் உத்தியோகஸ்தர்கள் நியமித்து பரிபாலனம் செய்வதே யுக்தமமென்று தோற்றியதாக தெரிய வருகிறது. இது இப்படிக்கிருக்க 1869ஹுத்தில் இவ்விஷயமாய் ஓர் சட்டதிட்டம் உண்டாகி அதன் பிரகாரம் கடன் கொடுத்தவர்களுக்கு அனுகூலமாய் மிக்க சிரேஷ்டமான அதிகாரம் கொடுக்கப்பட்டது. இந்த இன்ஸால்வென்ஸி விஷயமாய் 1883ஹுத்தில் ஓர் நிபந்தனை உண்டாகி அதன் பிரகாரம் கடன்காரர்களுக்கு மிக்க அதிகாரம் கொடுத்திருக்கிறதெனக் கருதி அதை தடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதுநியாயமென்று உண்டாகிய ஓர் சட்டதிட்டமாய்த் தோன்றுகின்றது இத்தருணத்தில் தான் ஒருவன் இன்ஸால்வெண்ஸியாய் விடில் முக்கியமாய் எதை கவனிக்க வேண்டியதென்று தேன்றிற்றென்றால், கட

ன் கொடுத்தவர்களுக்குள் பாகிப்பதற்கு கடன்பட்டவர்களுடைய சொத்துகள் வாஸ்தவத்தில் எவ்வளவு உண்டென்று பரிட்சித்துப் பார்த்தான். இதுவுமன்றி ஒருவன் இன்ஸால்வெண்டாய் விடில் அதாவது, கடன்கொடுக்க சக்தியில்லாவிடில், அவ்விஷயம் கடன் கொடுத்தவர்களுக்கும், கடன் வாங்கினவர்களுக்கு மாத்திரம் உள்ள பொருப்பல்லவென்றும், அவ்விஷயம் இராஜங்கத்தாருடைய பொருப்பென்றும், ஆகையால் அவர்கள் நியாயஸ்தலங்களுக்குப் போய் ஓர் பரிகாரத்தைபடைய வேண்டியதென்றும் இப்பொழுது தான் தோன்றிற்றும். பிரிட்டிஷ் இந்தியாவில் இன்ஸால்வென்ஸி ஆக்டின் அதிகாரத்தை முதல் முதல் கல்கத்தா, மதராஸ் சுப்ரீம் கோர்ட்டுகளுக்கும், பம்பாய் ரெகார்டர் கோர்ட்டுக்கும், George III. 39, 40 C. 70. Statute டின்படி கொடுத்து அதன்பிரகாரம் (1759) வது லார்ட்ஸ் ஆக்ட்டின்படியுள்ள பரிகாரங்களை இந்தியாதேசத்திலுள்ள பரிகாரங்களை இந்தியாதேசத்திலுள்ள இன்ஸால்வென்ஸி கடன்காரர்களுக்கும் செய்துவருவதற்கு வேண்டிய விதிகளை செய்வதற்கு மேற்சொன்ன கோர்ட்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டதுமல்லாமல் அக்காலத்தில் சுப்ரீம் கோர்ட்டார் இது விஷயமாய் செய்திருந்த விதிகளை மஞ்சூர் செய்துகொள்ளப்பட்டது. ஆனால் George IV. அரசாளும் காலத்தில் 9. G. 73. என்னும் ஓர் சட்டம் உண்டாகி அதனால் பிரத்தியேகமாய் இன்ஸால்வெண்டு கோர்ட்டுகள் என்று ஏற்படுத்தி இவ்விஷயம் பரிபாலனம் செய்யப்பட்டு வந்தது. முதல் முதல் இச்சட்டம் நான்கு வருஷங்களுக்கு மாத்திரம் தான் என ஏற்படுத்தி, அதை மறுபடியும் 1848-ம் வருஷம் வரையிலும் அனுசரித்து கடைசியாய் ரத்து செய்து Queen Victoria அரசாளும் காலத்தில் 11, 12. C. 21 என்னும் ஓர் சட்டம் ஏற்பட்டது. இதுதானையா! இன்சால்வென்ஸி முதல் முதல் மதராஸ் ப்ரெசிடென்ஸி டவுனில் ஏற்பட்டு இதுகாலம் வரையில் நடந்தேறிவரும் சட்டம் (Act). இந்த ஆக்டு இந்தியாதேசத்தின் முக்கிய பட்டணங்களாகிய மதராஸ், கல்கத்தா, பம்பாய் டவுன்களில் மாத்திரம் கடன்பட்டு அதைக்கொடுக்க சக்தியற்றுப்போய் ஜெயிலில் அடைபடும் இன்ஸால்வெண்டு கடன்காரர்களுக்கு மாத்திரம் செலாவணியாய்க் கொண்டு வந்தது.

வெளிநாடுகளிலோ இப்படிப்பட்ட இன்ஸால்வென்ஸி லா இதுவரையிலும் இருந்ததே யில்லை. ஆனால், ஓர் உபசாரமாய் தற்காலத்திய சிவில் ப்ரொசிஜர் கோர்டு 295-வது செக்ஷன்படி (Corresponding to Sec. 271 of the old Code of Civil Procedure of 1859) முதல்முதல்கடன்பட்டவனுடைய சொத்தை எவன் ஜப்தி செய்கிறானோ அவனுக்குச் சேரவேண்டிய பூராய்த் தொகையும் செல்லான பிறகு மிகுதி நிற்கும் தொகையை இதர கடன்தாரர்கள் தாமாஷாப்படிபாகித்துக் கொள்ளவேண்டியதென்று ஓர் நிபந்தனை செய்திருக்கிறார்கள். ஆனால் இதுமிக்க நியாயமானதாக தோற்றவில்லை. 1877, 1882 இவ்வருஷங்களில் பிறந்த சிவில் ப்ரொசிஜர் கோடின்படியும், Dekhan Agriculturists Relief Act 1879, C. 4. and Punjab Laws Act 172. Secs. 22, 23 now repealed—இவைகளின்படியும் ஜில்லா கோர்டார்களுக்கு—தீர்ப்பான கடன்காரர்கள் விஷயமாய்—இன்ஸால்வென்ஸி அதிகாரம் கொடுக்கப்பட்டது.

இப்போது புதிதாய் அமுலுக்குவந்த இந்த இன்சால்வென்ஸி ஆக்டு இங்கிலாந்தில் 1883, 1890 இந்த வருஷங்களில் ஏற்படுத்திய Bankruptcy ஆக்டுகளின் நிபந்தனைகளை ஒன்றே அவைகளைப் போலவே செய்யப்பட்டிருக்கின்றது.

ஷெட்யூல் ஜில்லாக்களிலும், இத்தேசத்தின் முக்கிய பட்டணங்களாகிய மதராஸ், பம்பாய், கல்கத்தா இப்பட்டணங்களிலும் தவிர மற்றபடி பிரிட்டிஷ் இந்தியா முழுமைக்கும் இந்த ப்ரொவின்ஷியல் இன்சால்வென்ஸி ஆக்டு சென்ற 1908-௵ ஜனவரீ 1௳ முதற்கொண்டு பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆக்டின்படி ஒவ்வொரு ராஜதானியின் ஸிவில் அசல் விசாரணை அதிகார வரம்புள்ள ஜில்லா கோர்ட்டுகளுக்கு இந்த இன்சால்வென்ஸி லாவை பரிபாலனம் செய்து வரும்படி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. சில முக்கியமான தேசுகளில் ஜில்லா கோர்ட்டுகளுக்கு தாழ்ந்த சபார்டினேட் கோர்ட்டார்களுக்கும் இந்த இன்சால்வென்ஸிலாவை பரிபாலனம் செய்துவர அதிகாரம் கொடுக்க அவ்வவ்விடத்திய பிரதேச கவான்மெண்டார்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

Secs. 1 and 3; செக்ஷன் 1, 3:—இந்த ஆக்டின் 1-3 பிரிவுகளின்படி இன்சால்வென்ஸி லாவை பரிபாலனம் செய்துவர அதிகாரம் கொடுக்கப்பெற்ற எல்லாகோர்ட்டார்களும் இந்த ஆக்டின்படி செய்யப்படும் நடவடிக்கைகள் என்னவென்றால் அவ்வவ்விடத்திய அசல் ஸிவில் விசாரணை செய்ய அதிகாரவரம்புள்ள கோர்ட்டுகளில் தற்காலம் என்னென்ன நடவடிக்கைகள் நடந்தேறிவருகின்றனவோ அம்மாதிரியாகவே இந்த ஆக்டின்படி ஏற்படுத்திய இன்சால்வென்ஸி கோர்ட்டுகளிலும் நடவடிக்கைகள் நடத்திவரவேண்டியது.

Secs. 4; செக்ஷன் 4:—இந்த செக்ஷனில் இன்சால்வென்ஸி மனுக்கள் எங்கெந்த சந்தர்ப்பங்களில் எந்தெந்த ஹேதுக்களைக் கொண்டு, அதாவது எந்தெந்த க்ரவுண்டுகளின்மேல் செய்யலாமோ அவைகளை விபரமாய் சொல்லியிருக்கின்றன. அந்த க்ரவுண்டுகள் (grounds) யாதென்று அடியில் வருமாறு சுறுக்கிச்சொல்வோம் :—

(a) ஒரு கடன்காரன் தான் வசிக்கும் வீட்டைவிட்டாவது, அல்லது தான் மாமூலாய் தொழில் அல்லது வியாபாரம் செய்துவரும் இடத்தைவிட்டாவது வெளி தேசத்துக்கு பராரியாய் ஓடிப்போய் அவ்விடத்தில் இருப்பிடம் வைத்துக்கொண்டாலும்,

(b) இன்சால் வெண்டாகிப்போய்விடும் ஒருகடன்காரன் சாதாரணமாய் தன் சொத்தை கடன் கொடுத்தவர்களுடைய லாபகரத்துக்காவது, கடன்கொடுத்தவர்களை மோசம் செய்ய வேண்டுமென்கிற எண்ணத்துடனாவது, பராதீனம்செய்தாலும், கடன்கொடுத்தவர்கள் அனேகர் இருக்க ஒரு கடன்கொடுத்தவனின் நன்மைக்காக மாத்திரம் தன் சொத்தை பராதீனம் செய்தாலும் இந்த க்ரவுண்டுகளின் மேல் (grounds) இன்சால்வென்ஸி மனுக்கள் கொடுக்கலாமென்று சொல்லியிருக்கிறது.

Sec. 6; செக்ஷன் 6:—இந்த 6-வதுசெக்ஷனில் கடன் வாங்கினவனாவது கடன் கொடுத்தவனாவது எந்தெந்த நிபந்தனைகளுக்குட்பட்டு இன்சால்வென்ஸிக்காக மனுசெய்துக் கொள்ளலாமோ அவைகளைப் பற்றி சொல்லி இருக்கின்றது. ஒருவன் இந்த இன்ஸால் வென்ஸி ஆக்டின்படி மனு செய்துக்கொண்டால் இன்ஸால்வென்ஸி கோர்ட்டார் அம்மனுவை தள்ளி விடாமலாவது அல்லது அதை திருத்தும்படி வாபீஸ் செய்யாமலாவது வரப்பற்றிக் கொண்டு, அதாவது, அட்மிட் செய்துக்கொண்டு அம்மனுவு புலானதினம் விசாரணை செய்யப்படுமென்று ஓர் தினம் குறித்து அத்தினத்தைப்பற்றி கடன் கொடுத்தவர்கள் எல்லோருக்கும் நோடீஸ் மூலமாய் தெரிவிக்கவேண்டியது. இதுவுமன்றி ஒரு கடன்காரன் தன் இருப்பிடத்தை விட்டு வெளிநாட்டுக்கு பராதியாய் ஓடிப்போவான் அல்லது தன் சொத்தை மறைத்துவிடுவான் அல்லது தன் சொத்தை தானிருக்கும் கோர்ட்டாருடைய எல்லைக்கு வெளியே அனுப்பிவிடுவான் அல்லது தன் சொத்தைச் சேர்ந்த தஸ்தாவேஜு முதலான சாக்ஷியங்களை மறைத்துவிடுவான் என்று நினைக்க இடமிருந்தால் அப்படிப்பட்ட விஷயங்களில் கடன்காரன் தகுந்த ஜாமீன் கொடுக்க வேண்டுமென்றாவது அல்லது ஜெயிலில் அடைபட்டிருக்க வேண்டுமென்றாவது அல்லது அவனுடைய சொத்துகள், தஸ்தாவேஜுகள், கணக்கு முதலிய புஸ்தகங்கள் யாவற்றையும் ஜப்திசெய்து பந்தோபஸ்து செய்யவேண்டுமென்றாவது கோர்ட்டார் உத்தரவுசெய்யலாம். அப்படி கொடுக்கப்பட்ட இன்சால்வென்ஸி மனுவை விசாரணை செய்யும்பொழுது கோர்ட்டார் அந்த கடன்காரனுக்கு இன்சால்வென்ஸி ஆக்டில் சொல்லியிருக்கிறபடி முடிவான தீர்ப்பு சொல்லுவதற்கு முன் இந்த இன்சால்வென்ஸி ஆக்டின் 6-வது செக்ஷனில் கண்டிருக்கும் நிபந்தனைகளின்படி மனுகொடுக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்று திருப்திகரமாய் தெரிந்துக்கொண்டு அதன் பின்தான் முடிவான தீர்மானம் சொல்லவேண்டியது. ஆனால், கடன்கொடுத்தவன் ஒரு கடன் வாங்கினவனை இன்சால் வெண்டென்று தீர்மானிக்கும்படி கொடுத்த மனுவாயிருந்தால் கோர்ட்டார அம்மனுவைப்பற்றி கடன் வாங்கினவனுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டதா இல்லையா வென்று திருப்தியடைந்து தான் அம்மனுவின் பேரில் முடிவான உத்தரவு செய்யவேண்டியது. அப்படிப்பட்ட மனுவின்பேரில், கடன்வாங்கினவன் தன்லேவாதேவிகளில் கிரமமாய் நல் நடவடிக்கையுடன் நடந்தானென்பதையும் சொத்தை சட்டத்திற்கு விரோதமாய் பராதீனம் செய்யவில்லையென்பதையும் விசாரணை செய்து பரிக்ஷித்துப் பார்த்து அப்படி செய்த விசாரணையை எழுதிக் குறிப்பிட்டு அப்படி விசாரணை செய்ததில் கோர்ட்டாருக்கு கடன்காரன் மேற்செப்பியபடி செய்தவனல்ல அவன்தான் வாங்கிய கடனைக்கொடுக்க சக்தியுள்ளவனென்று திருப்திகரமாய் தெரிந்தால் கடன் கொடுத்தவன் இந்த இன்சால்வென்ஸி ஆக்டின்படி கொடுத்த மனுவை தள்ளும்படி செய்ய வேண்டியதுமன்றி அப்படிச் செய்யப்பட்ட மனுகடன்காரனை அனுவசியமாய் அலைக்கழித்து துன்பம்செய்ய வேண்டுமென்று செய்த மனுவாக கோர்ட்டாருக்குத் தோன்றுமாகில் கடன்கொடுத்தவன் கடன் வாங்கினவனுக்கு Rs. 1000 ஆயிரரூபாய் வரையில் காம்பென்சேஷன் (பிரதிபலன்) கொடுக்கும்படியாய் தீர்மானம் செய்யலாம். ஆனால் அந்தமனுதள்ளுபடி செய்யாவிடில் (1) கடன்காரன் தன்னுடைய சொத்துகளையும் விவசாரங்களையும் பரிபாலனம்செய்ய கடன் கொடுத்தவர்களுக்குள் ஓர் ஏற்பாடு செய்யலாம். அப்படிப்பட்ட ஏற்பாட்டை பெரும்பாலும் எல்லோரும் ஒப்புக்கொண்டால் அதாவது, கடன் கொடுத்தவர்களில் முக்கால்வாசி நம்பாகள் பேரில் ஆஜராயாவது அல்லது ப்ளீடர்கள் மூலமாயாவது ஒப்புக்கொண்டால் அப்படிப்பட்ட ஏற்பாட்டை இன்சால்வென்ஸி மனுவில் முடிவான உத்தரவு செய்தபிறகு கூட கோர்ட்டார் ஒப்புக்கொண்டு அவ்விதமாகவே செய்யும்படி உத்தரவு செய்யலாம். (2) அப்படிக்கில்லாவிடில் கடன்காரனை இன்ஸால் வென்டென்று தீர்ப்பு செய்து உத்தரவுசெய்யலாம். அவ்விதமாய் உத்திரவு செய்வதினால் கடன்பட்டவனுடைய (அமுல் நடத்தி) ஜப்தி செய்யக்கூடிய சொத்துகள் யாவும் கோர்ட்டார் ஏற்படுத்தும் ரிஸீவர் வசம் ஒப்புவிக்கப்படும் இன்சால்வென்டை அதன்பின் வாரண்டில் பிடித்து ஜெயிலில் அடைக்கலாகாது கடன்பட்டவன்பேரில் யாதொரு தாவா முதலிய நடவடிக்கைகள் இன்சால்வென்ட் கோர்ட்டார் உத்தரவின்றியில் நடத்தலாகாது.

Sec. 18, etc.; செக்ஷன் 18:—இந்த பிரிவுகளில் இன்சால்வென்டாய் விடும் ஒரு கடன்காரனுக்கு கோர்ட்டார் ரிஸீவர் (Receiver) ஏற்படுத்த் வேண்டிய விதிகளையும் அந்த ரீஸீவர் செய்யவேண்டிய தொழில்களையும் அவருக்கு அதன் விஷயமாயுள்ள அதிகாரங்களையும் இன்னும் இதர நடவடிக்கைகளைப்பற்றியும் விசதமாய் செப்பியிருக்கின்றது.

Sec. 21; செக்ஷன் 21.—இந்த பிரிவில் இன்சால்வென்டாய்விடும் கடன்காரனுடைய ஸ்தாவர சொத்துகளை எவ்விதமாய் விற்றுமுதல் செய்யலாம் என்பதைப்பற்றி செப்பியிருக்கிறது.

இந்த ஆக்டின்படி இன்சால்வென்டாய் விட்ட ஒரு கடன்காரனுடைய சொத்தை அவன்பேரில் டிக்ரி அடைந்த ஒருவன் ஜப்தி செய்து கோர்ட்டு ஏலத்தில் விற்றுமுதலாக்கியபின் அந்த கடன் காரனுடைய இன்சால்வென்ட் மனுவின்பேரில் கடசியான தீர்ப்பு சொல்லப்பட்டால் அப்பொழுது அப்படி விற்றுமுதலாக்கிய பொருள் டிக்ரி பெற்ற கடன் கொடுத்தவன் அடையவேண்டியதே ஒழிய மற்றபடி ரீஸீவருக்குப் போகாது ஆனல், ஒரு கடன்காரனுடைய சொத்தை ஜப்திசெயது கோர்ட்டுக்கு கொண்டுவந்து வைத்திருந்து அதை ஏலம் போடுவதறகு முன் இன்சால்வென்ட் மனுவின்மேல் முடிவான தீர்ப்பு சொல்லப்பட்டால் அந்த சொத்து ரீஸீவருக்கு ஒப்புவிக்கப்படும். (Secs. 34 & 35)

Secs. 36, stc செக்ஷன் 36:—இந்த பிரிவுகளின்படி கடன்காரன் மோசக்கருத்துடன் செய்யும் சில்பராதீனங்களை தடுக்கலாம்.

Sec. 22; செக்ஷன் 22:—இப் பிரிவின்படி ரீஸீவர் செய்யும் செய்கைகள் அப்பீனுக்குட்பட்டது.

Sec. 23; செக்ஷன் 23:—இப் பிரிவின்படி கோர்ட்டார் ரீஸீவர் ஏற்படுத்தாமல் கோர்ட்டாரே ரீஸீவர் செய்யவேண்டிய தொழில்களைச் செய்யலாம்.

Sec. 52; செக்ஷன் 52:—இப் பிரிவின்படி ரீஸீவர் பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதிக்குட்பட்டு, ஹைகோர்ட்டாரால் விதிக்கப்படும்தொழில்களை செய்யலாம்.

Secs. 24, etc.; செக்ஷன் 24:—இப்பிரிவுகளின்படி கடன்காரன் கொடுக்வேண்டிய ருசுவான கடன் தொகைகள் யாவற்றுக்கும் கோர்ட்டார் ஷெட்யூல் ஒன்று தயார் செய்யவேண்டியது. அந்த ஷெட்யூலை கடன்காரனாகிய இன்ஸால்வென்ட் அல்லது ரீஸீவர் மனுவுசெய்து கொள்வதன்மேல் திருத்தலாம் அல்லது மாற்றிவிடலாம்,

Sec. 39; செக்ஷன் 39:—இந்த பிரிவின்படி ரிஸீவர் வசூல் செய்யும் தொகைளில் எவ்வளவு தன்கையில் நிறுத்திக்கொள்ள வேண்டியதோ அதை நிறுத்திக்கொண்டு மிகுதி தொகையை வீதப்படி பாகித்து கொடுக்கவேண்டிய தென்பதைப்பற்றிசொல்லியிருக்கிறது.

Sec. 40; செக்ஷன் 40:—இந்த பிரிவின்படி வசூலாகிய தொகையில் கடன்காரனும் அவனுடைய குடும்பத்தாரும் ஜீவிப்பதற்காக இவ்வளவு கொடுத்துவர வேண்டியதென்று கோர்ட்டார் உத்திரவு செய்யலாம்.

Sec, 43; செக்ஷன் 43:—இந்த பிரிவின்படி கடன்காரனாகிய இன்சால்வென்ட் தன்னுடையகணக்குப் புஸ்தகங்கள் யாவும் ஆஜர்செய்ய வேண்டியதென்றும் அவனுக்கு வரவேண்டிய தொகைகளை வசூல் செய்வதற்கான சகாயம்செய்து வரவேண்டியதென்றும் அவனுக்கு கடன்கொடுத்தவர்களுக்கு பாகித்து கொடுத்த பிறகு யாதேனும் மிகுதி நிற்கும் பட்சத்தில் அந்த தொகையை வட்டியுடன் இன்ஸால்வென்டாய் விட்டாலும் கொடுத்துவிட வேண்டியதென்றும் சொல்லியிருக்கிறது. ஆனல் கடன்பட்ட இன்சால்வென்ட் ஒரே மூரட்டுத்தனமாய் கடன்கொடுத்தவர்களை மோசம் சேய்ய வேண்டுமென்கிற துர் எண்ணம் கொண்டவனாய் இருந்தால் அவனை கோர்ட்டார் ஒருவருஷத்திற்கு அதிகப்படாமல் சொற்பகாவலில் ஜெயிலில் அடைத்து வைக்கும்படி உத்தரவு செய்யலாம்.

Sec. 53; செக்ஷன் 53:—இந்த பிரிவில் ஒருவன் இன்சால்வென்டென்று கோர்ட்டு மூலமாய் உததரவு பெற்ற பிறகு ஒருவனிடத்தில் போய் தான் இன்சால்வென்டாய் விட்ட சமாச்சாரத்தை தெரிவிக்காமலேயே ரூபாய் 50 அல்லது அதற்கதிகப்பட்ட கடனை வாங்குவானாகில் அவனை ஆறுமாத காவலுக்காவது அல்லது அபராதம் விதித்தாவது அல்லது இரண்டுமாவது உத்தரவு செய்து தண்டிக்கலாம்.

Sec. 44; செக்ஷன் 44:—இந்த பிரிவில் எந்தெந்த விஷயங்களில் கடன்காரனுக்கு பூரான டிஸ்சார்ஜ கொடுக்கலாமோ எந்தெந்த விஷயங்களில் கொடுக்கலாகாதோ அந்த நிபந்தனைகளை விவரித்துச் சொல்லியிருக்கின்றன; பூராய் இன்ஸால்வென்ட் உத்தரவு பெற்றவன் ராஜாங்கத்தாருக்கு கொக்கவேண்டிய கடன் தவிர மற்ற கடன்கள் யாவற்றி லிருந்தும் பூராய் நிவர்த்தியானவனாக பாவிக்கப்படுவான்.

இன்னும் இன்சால்வென்ஸி மனுவை வாபீஸ் செய்துக்கொள்வதற்கும் இதர நடவடிக்கைகள் நடத்துவதற்கும் வேண்டிய நிபந்தனைகள் 7, 8, 9, பிரிவுகளில் செய்யப்பட்டிருக்கின்றன. இன்சால்வென்ட் ஆக்டின்பிரகாரம் செய்யப்படும் உத்தரவுகளின்பேரில் அப்பீல் செய்துகொள்ளலாமென்று 46-வது செக்ஷனில்கூறியிருக்கிறது. இந்த இன்சால்வென்ஸி ஆக்டின் நிபந்தனைகளை அனுசரித்து விதிகள்செய்ய ஹைகோர்ட்டாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது: முக்கியமாய் இந்த ஆக்டின் நிபந்தனைகளின்படி எப்பொழுதுஇன்சால்வென்ஸிக்கு மனுவு கொடுக்கலாமென்றால் ஒரு கடன்காரனை வாரண்டில் பிடித்து அல்லது ஜெயிலில் அடைத்தால் அல்லது அவன் சொத்துகளை ஜப்தி செய்திருந்தால் மாத்திரமே மனுவு கொடுக்கலாமே யொழிந்து மற்றப்படி கொடுக்கலாகாதென்று 63-வது செக்ஷன்படி தெரியவருகிறது.

ஆலோசனை சபையிலுள்ள இந்தியா கவர்னர் ஜெனரலவர்களால் செய்யப்பட்ட இந்த ஆக்டானது-1911-ம்ஞு மார்ச்மீ 22உ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, யாவர்க்கும் தெரியும்படி இதனல் பிரசித்தம் செய்யப்படுகிறது:—

ACT No. X of 1911.

1911-ம்ஞுத்து 10-வது ஆக்ட்.

—:o:—

AN ACT TO CONSOLIDATE AND AMEND THE LAW RELATING TO THE PREVENTION OF PUBLIC MEETINGS LIKELY TO PROMOTE SEDITION OR TO CAUSE A DISTURBANCE OF PUBLIC TRANQUILLITY.

இராஜத்துரோகத்தை உண்டாக்கக்கூடியதாகவோ ஜன அமரிக்கைக்குக் கெடுதியுண்டாக்கக்கூடியதாகவோவுள்ள பொதுக்கூட்டங்களைத் தடுப்பதற்குச் சம்பந்தப்பட்ட சட்டங்களைத் திருத்தி ஒன்றாய்ச் சேர்ப்பதற்கான ஆக்ட்.

—:o:—

இராஜத்துரோகத்தை உண்டாக்கக்கூடியதாகவோ ஜன அமரிக்கைக்குக் கெடுதியுண்டாக்கக்கூடியதாகவோவுள்ள பொதுக்கூட்டங்களைத் தடுப்பதற்குச் சம்பந்தப்பட்ட சட்டங்களைத் திருத்தி ஒன்றாய்ச்சேர்ப்பது யுக்தமாயிருக்கிறபடியால், இதனல் விதிக்கப்படுகிறதென்னவென்றால்:—

சுருக்கமான பெயரும் வியாபகமும்.

1. (1) இந்த ஆக்டை, இராஜத்துரோகக் கூட்டங்களைத் தடுப்பதற்கான 1911-ம்ஞுத்து ஆக்டென்று சொல்லலாம்.

(2) இது - ப்ரிடிஷ் இந்தியாமுழுமைக்கும் வியாபிக்கிறது ஆனல், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இந்தியா கெஜட்டிலே அப்போதைக்கப்போது பிரசித்தஞ்செய்கிற மாகணங்களில் அல்லது மாகாணங்களைச்சேர்ந்த பாகங்ளில்தான் இது செலாவணியாகும்.

பிரசித்தஞ்செய்யப்பட்ட விஸ்தீரணங்கள் இன்னவை யென்று பிரகரிக்கப் பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.

2. (1) இந்த ஆக்ட் அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கிற யாதொரு மாகாணம் முழுவதுமாவது அதன் யாதொரு பாகமாவது பிரசித்தஞ் செய்யப்பட்ட விஸ்தீரணமாகுமென்று பிரதேச கவர்ன்மென்டார் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு பிரதேச ஸர்க்கார் கெஜெட்டிலே விளம்பரமூலமாய் நிர்ணயித்துத் தெரிவிக்கலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு விளம்பரமானது ஆறுமாதத்துக்கு மேற்பட செலாவணியாய்க்கொண்டிராது ; ஆனல், பிரதேச கவர்ன்மென்டாருக்குத் தகுதியாகத் தோற்றுகிறபடி அதே விஸ்தீரணத்தைப்பற்றி அவர்கள் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு அப்போதைக்கப்போது இன்னும் விளம்பரங்கள் பிரசுரிப்பதற்கு இந்த உட்பிரிவிலுள்ள தெதனுலும் அவர்களுக்குத் தடையுண்டாவதாக எண்ணக்கூடாது.

அர்த்தம்.

3. (1) இந்த ஆக்டிலே, "பொதுக்கூட்டம்" என்னும் சொற்றொடரானது-பொது ஜனங்களாகிலும் பொது ஜனங்களைச்சேர்ந்தயாதொரு வகுப்பார் அல்லது பாகத்தாராகிலும் வரக்கூடிய கூட்டமென்று அர்த்தமாகும்,

(2) யாதொரு கூட்டமானது பொதுவானதல்லாத யாதொரு இடத்தில் கூட்டப்பட்டிருந்தபோதிலும் அதற்குப் போவதற்கு டிக்கெட் மூலமாகவோ மற்றப்படியோ வரையறையேற்படுத்தி யிருந்தபோதிலும் பாதக மில்லாமலே, அந்தக் கூட்டமானது பொதுக்கூட்டமாகலாம்.

பொதுக்கூட்டங்களைப்பற்றி நோடிஸ் கொடுக்க வேண்டுமென்பது.

4. (1) குழப்பத்தையோ பொதுஜனக் கலக்கத்தையோ உண்டுபண்ணக்கூடிய யாதொரு விஷயத்துக்கு அனுகூலமான நடவடிக்கைகள் நடத்துவதற்காக அல்லது அந்த விஷயத்தைப்பற்றி தர்க்கிப்பதற்காக வாகிலும், அப்படிப்பட்ட யாதொரு விஷயத்திற்குச் சம்பந்தப்பட்ட சங்கதி அடங்கியுள்ள யாதொரு எழுத்துப் பிரதியையாவது அச்சுப்பிரதியையாவது காட்டுவதற்காக அல்லது கொடுப்பதற்காகவாகிலும் கூட்டப்படும் எந்தப் பொதுக்கூட்டத்தையும்,—

(a) அப்படிப்பட்ட கூட்டம் கூடுவதற்கான உத்தேசத்தைப்பற்றியும் அது கூடும் காலம் இடம் ஆகிய இவைகளைப்பற்றியும் குறைந்தது மூன்று தினமாகிலும் முன்னதாக சந்தர்ப்பத்துக்கேற்றபடி டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது போலீஸ் கம்மிஷனருக்காவது எழுத்துமூலமாக நோடிஸ் கொடுத்திருந்தாலன்றி மற்றப்படி, அல்லது

(b) அப்படிப்பட்ட கூட்டம் கூடலாமென்று சந்தர்ப்பத்துக்கேற்றபடி, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டினிடமிருந்தாகிலும் பொலீஸ் கம்மிஷனரிடமிருந்தாகிலும் எழுத்து மூலமாக அனுமதி பெற்றிருந்தாலன்றி மற்றபடி,

பிரசித்தஞ் செய்யப்பட்ட யாதொரு விஸ்தீரணத்திலே கூட்டக் கூடாது.

ரிபோர்ட் எழுதுவித்துக் கொள்ள மாஜிஸ்ட்ரேட்டுக்குள்ள அதிகாரம்.

(2) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது இது விஷயத்திலே டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாவது (அப்படிப்பட்ட யாதொரு கூட்டத்தின்) நடவடிக்கைகளைப்பற்றி ரிபோர்ட் எழுதுவிப்பதற்காக அந்தக் கூட்டத்துக்குப் போகும்படி ஹெட் கான்ஸ்டெபிலின் அந்தஸ்துக்குக் கீழ்ப்படாமலுள்ள ஒரு பொலீஸ் உத்தியோகஸ்தரையாவது பல பொலீஸ உத்தியோகஸ்தர்களையாவது, வேறே நபர்களையாவது எழுதியுள்ள உத்தரவு மூலமாக நியமித்தனுப்பலாம்.

விலக்கு.

(3) யாதொரு சட்டதிட்டப்படி ஏற்பட்ட அதிகாரத்தைக் கொண்டாவது சட்டப்படி வெளிப்படையாய் ஏற்பட்ட வேறே அதிகாரத்தைக் கொண்டாவது கூட்டப்படும் எந்தப் பொதுக் கூட்டத்துக்காகிலும், யாதொரு ஷெரிப் (sheriff) என்னும் உத்தியோகஸ்தரால் கூட்டப்படும் பொதுக்கூட்டங்களுக்காகிலும், பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாய்ப் பிரதேசக வர்ன்மென்டாரால் இதுகாரியத்துக்காக நிவாரணை செய்யப் பட்டிருக்கிற எந்தப் பொதுக்கூட்டங்களுக்காகிலும் அப்படி நிவாரணை செய்யப்பட்டிருக்கிற எந்த வகுப்பைச்சேர்ந்த பொதுக்கூட்டங்களுக்காகிலும் இந்தப் பிரிவிலுள்ளதெதுவும் பிரயோகப்படமாட்டாது.

பொதுக்கூட்டங்கள் கூடக்கூடாதென்று தடுக்க அதிகாரம்.

5. சந்தர்ப்பத்துக்கேற்றபடி டிஸ்ட்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது பொலீஸ் கம்மிஷனராவது பிரசித்தஞ்செய்யப்பட்ட யாதொருவிஸ்தீர்ணத்திலே கூட்டப்படும் யாதொருபொதுக் கூட்டத்தினால் இராஜத் துரோகம் அல்லது (இராஜாங்கத்தாரிடத்தில்) பிரீதியின்மை உண்டாகக் கூடுமென்றாகிலும் அபிப்பிராயப்பட்டால், அவர் அப்படிப்பட்ட கூட்டம் கூடக்கூடாதென்று எழுதியுள்ள உத்தரவு மூலமாக எப்போதாகிலும் தடுக்கலாம்; ஷை உத்தரவைப் பற்றி உடனே யாவர்க்கு தெரியும்படி நோடிஸ் கொடுக்கப் படவேண்டும்.

தண்டனை.

6. (1) பிரசித்தஞ் செய்யப்பட்ட யாதொரு விஸ்தீர்ணத்திலே 4-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாக யாதொரு பொதுக் கூட்டத்துக்குச் சாதகமாயுள்ள காரியங்கள் செய்வதிலோ அந்தக் கூட்டத்தை நடத்துவதிலோ சம்பந்தப்படுகிற யாதொரு நபருக்கு ஆறுமாதத்துக்கு மேற்படாத யாதொரு காலவரையறைக்குக் காவலதண்டனை யாகிலும், அபராதமாகிலும், இவ்விரண்டு தண்டனைகளுமாகிலும் விதிக்கப்படும்.

1860-ம் வருஷத்து 44-வது ஆக்ட்.
1898-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

(2) 5-வது பிரிவின்படி தடுக்கப்பட்டிருக்கிற யாதொரு பொதுககூட்டமானது இந்தியன் பீனல் கோட் 8-ம் அத்தியாயத்தின் தாற்பரியப்படியும் 1898-ம் வருஷத்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் 9-ம் அத்தியாயத்தின் தாற்பரியப்படியும் சட்டத்துக்கு விரோதமான கூட்டமாகப் பாவிக்கப்படும்.

பொதுவான இடங்களிலே பிரசங்கங்கள் செய்வதற்காகத் தண்டனை.

7. சந்தர்ப்பத்துக்கேற்றபடி டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டினிடமிருந்தாவது பொலீஸ் கம்மிஷனரிடமிருந்தாவது எழுத்துமூலமான அனுமதி முன்னதாகப்பெற்றுக் கொள்ளாமல், 4-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி கூட்டப்பட்டு அல்லது அந்த நிபந்தனைகளினின்றும் நிவாரணை செய்யப்பட்டு இருக்கிற யாதொரு பொதுக்கூட்டத்திலல்லாமல் மற்றப்படி, எவரேனும் பிரசித்தஞ் செய்யப்பட்ட யாதொரு விஸ்தீர்ணத்திலே பொதுவான யாதொரு இடத்திலாகிலும் பொதுஜனங்கள் நடமாடுகிற யாதொரு இடத்திலாகிலும் குழப்பமோ பொதுஜனக்கலக்கமோ உண்டாக்கக்கூடிய யாதொரு விஷயத்தைப்பற்றி அப்போது வந்திருப்பவர்களுக்கு யாதொரு உபந்நியாசஞ் செய்தாலும் பிரசங்கம் பண்ணினாலும் பேசினாலும், அவரை வாரண்டில்லாமலே பிடிக்கலாம்; மேலும், அவருக்கு ஆறுமாதத்துக்கு மேற்படாத ஒரு காலவரையறைக்குக் காவல்தண்டனையாகிலும், அபராத மாகிலும், இவ்விரண்டு தண்டனைகளுமாகிலும் விதிக்கப்படும்.

குற்றங்களை விசாரிப்பது

8. யாதொரு ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் அல்லது யாதொரு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் அல்லது ஸப் டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டின் கோர்ட்டுக்கு கீழ்ப்பட்ட எந்தக் கோர்ட்டாரும் இந்த ஆக்டின்படிக்கான யாதொரு குற்றத்தைப் பரிசீலனை செய்யக்கூடாது.

ரத்து.

9. இராஜத்துரோகக்கூட்டங்களைத்தடுப்பதற்கான 1907-ம் வருஷத்து ஆக்டும், இன்னும் செலாவணியாகும்படி செய்வதற்கான 1910-ம் வருஷத்து ஆக்டும் இதனால் ரத்து செய்யப்படுகின்றன.

(24உ ஜூலை மீ 19011.)

ஆனரபில் மிஸ்டர் கோகலேயின் பிரசங்கம்.

:o:

வெகு ஆவலுடன் எதிர் பார்த்திருந்த நமது தலைவர்கள் வெகு கவலையுடன் கிரமப்பட்டுக்கூடின, மிஸ்டர் கோகலே பிரசங்கம் செய்த கூட்டம் சனியன்று கூடிற்று. அதைப்பற்றின விவரங்கள் இன்னொரு பத்திரிகையிற் பார்க்கலாம். ஸர். S. சுப்பிரமணிய அய்யர் அக்கிராசனம் வகிக்க, நவாப் சையத் மகமத் பகதூர் ஆனரபில் மிஸ்டர் கோகலேயின் மூலாதாரப்படிப்பு மசோதாவை இந்த ராஜதானி ஜனங்கள் ஏற்கிறார்களென்றும் அதற்காக ஒரு லீக் ஏற்படுத்தினது சரியென்றும் ஒரு தீர்மானத்தைப் பிரேரித்தார். அதை திவான் பகதூர் K. கிருஷ்ணசுவாமி ராவும் டாக்டர் T. M. நாயரும் மிஸ்டர் குலாம்மகமத் மகஜீரும் ஆமோதித்துப் பேசினார்கள். இவர்கள் பேசினதின் சாராம்சங்கள் இன்னவை யென்று இங்கு சொல்ல இன்று நமக்குச் சவகாசம் இல்லையாயினும், இவர்கள் சொன்னவை யெல்லாம் பொருத்த முள்ளனவாகவும் சமயோசிதமாகவும் இருந்தன. டாக்டர் T. M. நாயர் அன்னிய தேசங்களில் கட்டாயபடிப்பு ஏற்பட்ட விபரங்களை விஸ்தாரமாகச்சொன்னார். லண்டனில் ரைட் ஆனரெபில் அமீர் ஆலி படிப்பைக் கட்டாயமாக்கக் கூடாதென்பது லண்டன் முஸ்லிம் லீக்கின் அபிப்பிராயமென்று சொல்லி யனுப்பினதை நோக்கி, சென்னையில் நவாப் சையத் மகமத் பகதூரைப்போன்ற மகமதியப் பிரமுகர்கள் மிஸ்டர் கோகலேயின் மசோதாவிற் கண்டபடி கட்டாயப்படிப்பு நன்மை செய்வதாகுமென்று சனியன்று மீட்டிங்கிற் சொன்னது கவனிக்கத்தக்கது. நவாப் சையத் மகமத் பகதூர் இந்திய மகமதியத் தலைவர்களில் ஒருவர். இந்தியா முழுமையும் அவர் பேரையும் சட்டசபையிற் அவர் செய்யுங் காரியங்களையும் அறிந்திருக்க' தென்னிந்தியாவில் அவரைவிடக் கௌரவமும் உயர்ந்த பதவியுமுள்ள மகமதியப்பிரபு இல்லை. பொதுக் காரியங்களைப்பற்றின அவருடைய அபிப்பிராயங்கள் ரைட் ஆனரபில் அமீர் ஆலியின் அபிப்பிராயங்களைவிடக் கவனத்துக்குக் குறைந்த பாத்தியம் உள்ளவனல்ல. குலாம்மகமத் மகஜீர், இந்த மசோதா அவசரப்பட்டுச்செய்த காரியமென்றும் ஒரு தினமாவது முந்தி வந்ததென்றும் சொல்லக்கூடாதென்றார். இவர்கள் அபிப்பிராயத்தைப்போல் சென்னை மாகாணத்திலும் இந்தியா முழுமையிலும் அநேக மகமதியர் அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்கள். ஆனரபில் மிஸ்டர் கோகலே சனியன்று பேசியதைப் பார்த்து இப்போது தடுமாறிக்கொண்டிருக்கிற மகமதியரிற் பலரும் லண்டன் முஸ்லிம் லீகும் தங்கள் அபிப்பிராயத்தை மாற்றி இந்த மசோதாவுக்குச் சம்மதிப்பார்களென்று நம்புகிறோம்.

மிஸ்டர் கோகலே தமது மசோதாவை இந்தியா கவர்ன்மெண்டின் சட்ட சபையில் பிரேரித்த காலத்துக்குப் பிறகு அதைப்பற்றி இவர் பொதுப் பிரசங்கம்செய்தது இது முதல் தடவை யாகையால், மிஸ்டர் கோகலே தமது மசோதாவிலுள்ள அநேக அம்சங்களைப்பற்றி விஸ்தாரமாகப் பேசினார். இந்தியா தேசம் இப்போது எவ்விடத்திலும் கீழ்த்தரப் படிப்பைக் கட்டாயமாக்கத் தகுந்ததாயில்லை; பெண்களின் படிப்பைக் கட்டாயப்படுத்துவதும், அநேக மிலேச்ச ஜாதிகளைச் சேர்ந்த பிள்ளைகளை ஸ்கூலிற் படிக்கவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்துவதும், கேவலம் தினப்படிக் கூலிபெற்றுக் கஷ்ட ஜீவனம் செய்தும் பிச்சையெடுத்தும் பிழைப்பவர்களைப் பலவந்தம் செய்வதும், தற்காலம் பொருந்தா. ஆகையால், இந்தக் கட்டாயப்படிப்பைச் சிறிது சிறிதாகச் செய்துகொண்டு போவது தான் சரி. தம்முடைய பில்லினால் லோக்கல் போர்டுகள் கட்டாயப் படிப்பை யுண்டுபண்ணச் சமயம் பெறும். அதைத் தவிர அதிகமாய்ச் செய்தல் சாத்தியமல்ல காலந்தரத்தில் நம் ஜனங்கள் அனைவரும் படிப்புப் பெற்றவர்க ளாவது அநேகமாய் உயர்ந்த படிப்புப் பெற்ற வகுப்பாரின் பொறுப்பாகும். மிஸ்டர் கோகலேயின் பிரசங்கத்திற் பெரும்பாகம் இந்த விஷயத்திற்காகப் பிடிக்கும் செலவைப் பற்றிப் பேசுவதாயிருந்தது இந்தியாக் கவர்ன்மெண்ட் மாகாணக் கவர்ன்மெண்டுகளுக்குச் செய்யக்கூடிய பொருள் உதவியைப் பற்றியும், அப்படியே மாகாணக் கவர்ன்மெண்ட் முனிசிபாலிடிக்கும் டிஸ்டிரிக்ட் போர்டுக்கும் செய்யக்கூடிய உதவியைப் பற்றியும், இந்த ஸ்தல ஸ்தாபனங்கள் தங்கள் சௌகரியத்தையும் பொதுநலத்தையும் உத்தேசித்து வரி விதிப்பதை பற்றியும் பேசினார். சென்னையில் இதற்காகப் புது வரி விதிப்பது அவசியமானால் அது அதிகப்பளுவாயிரா தென்று காட்டப்பட்டது. முனிசிபாலிடிகளுக்கு ஏற்கெனவே புது வரி போட அதிகாரமுண்டு போடும் புதுவரி படிப்புக்காக வென்று தனியாய் எடுத்து வைப்பது தான் இப்போது புதிதாய்க்கொடுக்கும் அதிகாரம் இன்னும் பல அம்சங்களைப்பற்றி மிஸ்டர் கோகலே பேசினதை நாம் இன்னொரு சமயந்தான் சொல்ல முடியும். சென்னை "டைம்ஸ்" பத்திரிகைகூட இந்த மசோதா புரட்சி செய்யத் தக்க மசோதா வில்லையென்று, வெகுஜாக்கிரதையாய்ப் பற்பல ஆட்சேபங்களை எதிர்பார்த்துச் செய்யப்பட்டதென்றும் அந்த பத்திரிகைக்கே இருந்த பல தப்பு அபிப்பிராயங்கள் நீங்கி விட்டனவென்றும், ஒப்புக்கொண்டு எழுதுகிறதென்றால் மிஸ்டர் கோகலே சனியன்று செய்த பிரசங்கத்தின் திறமைக்கும் அவருடைய மசோதாவின் விவேகத்துக்கும் வேறு அத்தாட்சி என்னவேண்டும்?

சுதேசமித்திரன்.

(25உ ஜூலை மீ 1911.)

ஆனரபில் மிஸ்டர் கோகலே கீழ்த்தரப் படிப்பைப்பற்றி.

:o:

கீழ்த்தரப் படிப்பைப்பற்றி ஆனரபில் மிஸ்டர் கோகலே செய்த பிரசங்கத்தைச் சுருக்கமாய் நேற்று மித்திரனில் எழுதினோம். இன்று அந்தப் பிரசங்கத்தின் மற்ற முக்கிய அம்சங்களைப்பற்றிக் குறிப்பிடுகிறோம். மிஸ்டர் கோகலேயின் மசோதா மூன்று மூலவிதிகளின் பேரில் நிற்கின்றது முதலாவது கீழ்த்தரப்படிப்பைக் கட்டாயமாக்குவது ; இரண்டாவது, இந்தியா முழுவதிலும் ஒரே காலத்தில் இப்படிச் செய்யாமல் எந்த இடங்களில் சாத்தியமோ அந்த இடங்களில் மட்டும் செய்து சிறுகச்சிறுகப் படிப்பைக் கட்டாயமாக்கிக்கொண்டு போவது ; மூன்றாவது, கட்டாயப் படுத்துவதற்கு முனிசிபாலிடிகளையும் டிஸ்டிரிக்ட் போர்டுகளையும் பொறுப்பாளிகளாக்கி அவைகளையே அதைச் செய்யச் சொல்லுதல் லோகல் கவர்ன்மெண்டு, செலவில் ஒரு பாகத்தைக் கொடுக்கவேண்டியிருப்பதால் அதன் சம்மதத்தை முன்னதாகப் பெறவேண்டும் முனிசிபாலிடிகளிடம் டிஸ்டிரிக்ட் போர்டுகளையும் இதற்குப் பொறுப்பு வகிக்கும்படி செய்வதால் பிள்ளைகளை ஸ்கூலுக்குக் கட்டாயப்படுத்தி யனுப்புவதா லுண்டாகக்கூடிய புகாரானது நம்மவர்களால் நடத்தப்படும் ஸ்தல ஸ்தாபனங்களைப்பற்றினதாயிருக்கும் ; அன்னியர் நடத்தும் கவர்ன்மெண்டைப் பற்றினதாயிராது. கவர்ன்மெண்ட் எவ்விஷயத்திலாவது ஜனங்களைக் கட்டாயப்படுத்துவதால் அவர்களுடைய சம்மதமின்மையையும் விரோதத்தையும் அடைவார்கள். படிப்பு விஷயத்தில் இந்த சம்மதமின்மையையும் விரோதத்தையும் பெறாமல் நம்மவர்கள் நடத்தும் ஸ்தல ஸ்தாபனங்கள் அவைகளைப் பெறும்படி செய்வது விவேகமாகும். படிப்பு விஷயத்தில் ஏழைகளாயும் மூடர்களாயு மிருப்பவர்களைக் கட்டாயப்படுத்தினாலன்றி இந்தப்படிப்பு உண்டாகாதென்பது எத்தேசத்திலும் இப்போது அனுபவமா யிருக்கின்றது. இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் கீழ்த்தரப் படிப்பைக் கட்டாயமாக்கினபோது தேசமுழுவதிலும் அப்படிச் செய்யாமல் ஆரம்பத்தில் சில விடங்களில் மட்டும் செய்து பிறகு எல்லா விடங்களிலும் கட்டாயமாக்கினார்கள். எந்த விஷயத்துக்கானாலும் ஜனங்களைக் கட்டாயப்படுத்தும்போது அதற்கு அவர்கள் சம்மத மற்றவர்களாயிருக்கிறார்கள். அன்னிய தேசங்களில் ராஜாங்கம் சொந்தமா யிருக்கிறபடியால் இந்த அசம்மதத்தை அது ஏற்றது. இந்தியாவிலோ பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் சொந்த ராஜாங்கமா யில்லை யாகையால் இந்த அசம்மதத்தை ஸ்தல ஸ்தாபனங்கள் ஏற்பது அவசியமா யிருக்கின்றது.

பிறகு மிஸ்டர் கோகலே இதற்குப் பிடிக்கும் செலவைப்பற்றிப் பிரஸ்தாபித்தார். எத்தேசத்திலும் கீழ்த்தரப் படிப்பாலாகும் செலவிற் பெரும்பாகத்தைக் கவர்ன்மெண்டே பொறுத்துவருகின்றது. ஆயினும் சில பாகம் முனிசிபாலிடி முதலிய ஸ்தல ஸ்தாபனங்தள் பொறுத்துவருகின்றன. இந்தியாவிலும் இப்படிச் செய்தலவசியம். ஸ்தல ஸ்தாபனங்கள் இதற்காகத் தனியான வரி வசூல் செய்யவேண்டுமென்று மிஸ்டர் கோகலே சொல்லியிருப்பதைச் சிலர் நன்றாய்த் தெரிந்து கொள்ளாமல் ஆட்சேபிக்கிறார்கள். முதலாவது முனிசிபாலிடிகளாவது டிஸ்டிரிக்ட் போர்டுகளாவது கட்டாயப் படிப்பை அனுஷ்டித்துத் தீரவேண்டுமென்று சொல்லவில்லை. எங்கு எங்கு சாத்தியமோ அங்கு அனுஷ்டிக்கலாமென்று இந்த மசோதா இடங்கொடுக்கிறதே யன்றிக் கட்டாயம் செய்யவில்லை. மேலும், எங்கே பிள்ளைகளில் மூன்றிலொரு பாகத்தினராவது ஏற்கெனவே ஸ்கூல்களில் வாசித்துக்கொண் டிருக்கிறார்களோ அங்கே தான் படிப்பைக் கட்டாய மாக்கலாம். அநேக டிஸ்டிரிக்ட் போர்டுகளில் இத்தனை பிள்ளைகள் ஸ்கூல்களில் வாசிக்காததால் அந்த போர்டுகள் தற்காலம் இந்த மசோதாவால் பாதிக்கப்படா. ஆகையால், முனிசிபாலிடி ஆரம்பத்தில் கட்டாயப்படிப்பு முறையை அனுஷ்டிக்கவேண்டியதா யிருக்கும். இப்படி யிருப்பதிலும் சில முனிசிபாலிடிகளில் புது வரி இல்லாமலே கட்டாயப் படிப்பை அனுஷ்டித்தல் சாத்தியமென்று கொண்டதை டாக்டர் நாயர் எடுத்துச் சொன்னார். வேறு சில முனிசிபாலிடிகளிலும் இப்படியே

சாத்தியமாகும். படிப்பை இலவசமாக்குவதை விடக் கட்டாயப்படுத்துவதே முக்கியம். இங்கிலாந்திலும் ஜப்பானிலும் அப்படியே செய்யப்பட்டது. இலவசமாக்கினால் செலவு ஏராளமாய்ப் பிடிக்குமானதால் கவர்ன்மெண்ட் அவ்வளவு செலவு செய்யச் சம்மதிக்கமாட்டார்கள். ஆகையால், தற்காலம் படிப்பைக் கட்டாயமாகட்டும் செய்து பெற்றோர்களில் யார் பிள்ளைகளின் படிப்புக்காகச் சம்பளம் கொடுக்கக் கூடுமோ அவர்களிடத்தில் சம்பளம் வசூல் செய்து ஏழைகளுக்கு மட்டும் இலவசமாக்க வேண்டும். ஆகையால், பத்து ரூபாயாவது அல்லது அதிகமாவது யாருக்குவரும்படி வருகின்றதோ அவர்களுடைய பிள்ளைகளுக்குச் சம்பளம் வாங்கலாம். இந்தப்பத்து ரூபாயை இந்தியா கவர்ன்மெண்டுக்கு யுக்தமானபடி இருபது ரூபா அல்லது அதிகமாக்கலாமென்று இந்த மசோதாவிற் சொல்லப்படுகிறது. இப்படிப் பிள்ளைகளிடத்தில் சம்பளம் வாங்கியும் வரி வசூல் செய்தும் கிடைக்கும் பணம்போக பாக்கிப்பணத்தைக் கவர்ன்மெண்ட் கொடுக்கவேண்டும். மொத்தம் செலவாகும் பணத்தில் என்ன விகிதம் கவர்ன்மெண்ட் கொடுக்கவேண்டுமென்பது இப்போது இந்த மசோதாவிற் குறிப்பாகக் காணாமற்போனாலும், அப்படி குறிப்பாய்க் காணுவது நலம்.

பிறகு மிஸ்டர் கோகலே பிள்ளைகளின் வயதைப்பற்றிப் பேசினார். இப்போது ஆறு வயது முதல் பத்து வயதுவரையில் பிள்ளைகளைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்றுசொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பன்னிரண்டாக்கலாமென்று சிலர் சொல்லுகிறார்கள். பன்னிரண்டாக்குவதால் நலமுண்டாகுமானாலும் காலக்கிரமத்தில் அப்படியே முடியுமென்று சொல்லக்கூடுமாயினும், வயதை உயர்த்தினால் செலவும் அதிகமாகுமானதால் அப்படியாகாமலிருக்கும்படி வயதை ஆரம்பத்திற் குறைத்து வைத்தல் நலம். கட்டாயப் படிப்புப் பெறும் பிள்ளைகளின் வயது உயருமானால் செலவும் உயருமென்பதை மறக்கக்கூடாது. ஜப்பானில் ஆரம்பத்தில் நாலு வருஷமே பிள்ளைகள் கட்டாயப்படுத்தப்பட்டார்கள்; இட்டலி தேசத்தில் மூன்று வருஷமாயிருந்தது.

இந்த மசோதாவுக்கு வேறு ஆட்சேபங்களும் சொல்லப்படுகின்றன. படிப்பைக் கட்டாயமாக்கினால் யோக்கியதையுள்ள வாத்தியர்கள் கிடைக்கவேண்டாமா? கட்டிடங்கள் கட்ட வேண்டாமா? இந்த ஆட்சேபங்களுக்கு மிஸ்டர் கோகலே சரியான பதில் சொன்னார். பிள்ளைகளுக்கு முதல் தரமான படிப்பு கொடுக்கவேண்டுமென்பது இப்போது உத்தேசமல்ல. ஆகையால் சொல்லிவைக்கும் படிப்பு இளப்பமாயிருந்தாலும் அது படிப்பேயில்லாததைவிட உயர்த்தியாதலால் பயிற்சிபெறாத சாமானிய வாத்தியார்கள் கிடைத்தாற்போதும். அப்படிப்பட்ட வாத்தியார்கள் தற்காலத்தில் ஏதேஷ்டமாய்க் கிடைப்பார்கள். கட்டிடங்களைப்பற்றியோ வென்றால், ஆரம்பத்தில் திண்ணைகளிலும் வேறு காலி நிலங்களிலும் ஸ்கூல்களை வைத்து நடத்தலாம். இத்தகைய ஆட்சேபங்கள் மற்றத் தேசங்களிலும் ஆரம்பத்திற் செய்யப்பட்டன. இங்கிலாந்திலும் ஜப்பானிலும் இதேமாதிரி ஆட்சேபிக்கப்பட்டது. இந்தியாவில்தான் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டார் பெரிய கட்டிடங்கள் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஜப்பானில் 30-வருஷத்துக்குமுன்னால் படிப்பைக கட்டாயமாக்கின போது திண்ணைகளிலேயே ஸ்கூல்கள் நடத்தப்பட்டது,

இப்படித் தமது மசோதா சம்பந்தமான அம்சங்களை விஸ்தாரமாகப் பேசிவிட்டு மிஸ்டர் கோகலே வெகு வாசகதாட்டியுடன் தமது பிரசங்கத்தை முடித்தார். "நமது ஜனங்கள் அனைவரும் படிப்புப்பெறுவது. அவர்களுடைய பொருளாதார நிலைமையையும் ஒழுங்கத்தையும் பற்றின பிரசினைகளைத்துக்கும் வேராயிருக்கிறது. ஜனங்களுடைய இல்லாமையோ, துர்ப்பாக்கியமோ, அசுத்தமோ, அல்லது வியாதியோ, எதை நீங்கள் மன்றாடிவெல்ல வேண்டுமானாலும் நீங்கள் இம்மாதிரி முடிவு செய்யவேண்டியது அவசியமாகின்றது. நிவர்த்திகளுக் கெல்லாம் முதல் நிவர்த்தி ஜனங்களுடைய அறியாமையை நீக்கிக் கல்விப் பேற்றை அவர்களுக்கு அளிப்பதென முடிவு செய்ய வேண்டியிருக்கின்றது. வேலைக்காரர்களது கூலி சம்பாதிக்கும் திறமையை அதிகப்படுத்த வேண்டுமானாலும். விவசாயி பலவானாய் வளர்ந்து தனக்குக் கடன் கொடுப்போரிடத்தில் ஜாக்கிரதையாய் நடந்துகொள்ள வேண்டுமானாலும். சுகாதாரத்தின் நன்மைகளை அவன் நன்குணரவேண்டியிருந்தாலும், மூடபத்தியில் அழுந்திக் கிடப்பவன் அதை விட்டுக்கிளம்ப வேண்டுமானாலும்,—இவைகளில் எது செய்யவேண்டுமானாலும்,—அவனுக்கு மூலாதார அறிவை அளிப்பதே முதலாவது செய்யவேண்டியதாகும். நமது தேசத்தைப்பற்றி நாம் புகழ்ந்து கொள்ளுகிறோம். உலகத்தில் எல்லா ஜனங்களும் ராஜாங்களும் எதை முதற்கடமையாய் நினைக்கிறார்களோ அதை நாம் அப்படியே நினைத்து உலகத்து நாகரிகம் பெற்ற ஜனங்களில் நாம் ஒன்றாக மதிக்கப்படவேண்டும். நமது மனச்சாட்சி வெகுநாளாய் தூங்கிக்கொண்டிருக்கின்றது அதைக கிளப்பி நமது கடமையைச் செய்யக காலம் வந்து விட்டது. இந்த வருஷம் மஹாராஜா நமது தேசத்துக்கு முடிசூட்டுக்காக வருகிறபடியால் இந்தப் பெரு நன்மையை ஜனங்களுக்குச் செய்து அந்த முடிசூட்டு சம்பவம் ஜனங்கள் மனதில் எந்நாளும் குடிகொண்டிருக்கும்படிச் செய்யவேண்டும்."

சுதேச மித்திரன்.

ஆனரெபில் மிஸ்டர் கோகலே புனாவுக்குத் திரும்பி விட்டார்.

ஆனரெபில் மிஸ்டர் கோகலே புனாவை விட்டு சென்னைக்குப் புறப்பட்டு வரும்போது இங்கிருந்து நேரே கல்கட்டாவுக்குப் புறப்பட்டுப் போகிறதென்ற உத்தேசம் அவருக் கிருந்தது. அவர் நேற்று இவ்வூரைவிட்டுப் புறப்பட்டு நாளையதினம் கல்கட்டா போய்ச்சேர்வதாயிருந்தார். ஆனால் புனாவிலிருந்து, அவருடைய இளைய குமாரிக்கு உடம்பு சௌகரியமில்லையென்றும் டைபாயிட் (Typhoid fever) ஜுரத்தால் அப் பெண்மணி வருந்திக்கொண்டிருக்கிறாளென்றும், செய்திவந்து விட்டபடியால் அவர் கல்கட்டாவுக்குப் போவதை இச்சமயம் நிறுத்திக்கொண்டு புனாவுக்குத் திரும்பிவிட வேண்டியதாய் விட்டது. அதுபற்றி அவர் தம்முடைய கல்கட்டா சிநேகிதர்களுக்கு இந்த சமயம் தமக்கு கல்கட்டாவுக்கு வர அசௌகரியமாயிருக்கிறதென்று தெரிவித்துவிட்டு நேற்று இரவு புனாவுக்குப் புறப்பட்டுப் போய்விட்டார்.

சென்னையில் ஆனரபில் மிஸ்டர் கோகலே.

ஆனரபில் மிஸ்டர் கோகலே திங்களன்று ஒரு வேலையும் செய்யவில்லையென்றும் சிரம பரிகாரம் செய்துகொண்டாரென்றும் சொன்னோம். அவர் அன்று சாயங்காலம் சென்னை வாசிகள் அவரை உத்தேசித்து பீபில்ஸ்பார்க்கிலுள்ள மூர் பாவிலியனில் (Moore Pavilion) நடத்திய உல்லாசக் கச்சேரிக்குப் போய்த் திரும்பினார். ஆனரபில் மிஸ்டர் சேஷகிரி அய்யர் வீட்டில் அன்றிரவு விருந்துண்டார். உல்லாசக் கச்சேரிக்கு வந்த ஆனரெபில் மி-ர் கோகலேயை ஆனரெபில் மிஸ்டா T. V. சேஷகிரி அய்யர் எதிர்கொண்டு வரவேற்று அழைத்துப்போய் அக்கச்சேரிக்கு வந்திருந்த கனவான்களுக்கு அறிமுகஞ் செய்வைக்க அவர் அக்கனவான்களிடம் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார். அப்பால் எல்லோரும் சிற்றுண்டி சாப்பிட்டார்கள். அது முடிந்ததும் மூர் பாவிலியன் (Moore Pavilion) மேல் மெத்தைக்கு ஆனரெபில் மிஸ்டர் கோகலேயை யழைத்துக்கொண்டுபோனார்கள். அங்கே நடந்த சங்கீதக்கச்சேரி, சுகுணவிலாச சபையாரின் ஆட்டம், போன்ற பலவித தமாஷாக்களையும் அவர் பார்த்து ரஸித்தார். அதற்குள் இரவு 8-மணி ஆய்விட கோகலே யவர்கள் சகலரிடமும் உத்தரவு பெற்றுக்கொண்டு திரும்பினார். அப்போது ஆனரெபில் மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் அவருக்குப் பூமாலையிட்டுபசரித்தார். மறுபடியும் அன்றிரவு 9-மணிக்கு அவர் ஆனரெபில் மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் வீட்டுக்குச் சாப்பாட்டுக்குப் போயிருந்தார்.

நேற்றுக் காலமே கோகலே அவர்கள் விக்டோரியா பப்ளிக் ஹாலுக்குச் சென்று அங்கு சென்னை மாணாக்கர்கள் அவர் எழுதி வாசித்த அட்ரெஸைப் பெற்றுக்கொண்டு அதற்குப் பதில் சொன்னார். அப்போது இவ்வூர் மாணாக்கர்களுக்கு அவர் சில சிறந்த புத்திமதிகள் சொன்னார். நேற்றிரவு கல்கட்டாவுக்குப் போகாமல் புனாவுக்குப் பிரயாணமானதாக வேறொரு குறிப்பில் சொல்லியிருக்கிறோம்.

காவேரியாறும் கும்பகோணவாசிகளும்.

காவேரியாறு கும்பகோணப் பட்டணத்திற்குள் வடபாரிசமாக மேற்கேயிருந்து கிழக்கே ஓடுகிறதென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். அந்நதி 22-7-11 மாலை [illegible] மணிக்குமேல் கரை புரள்வெள்ளமெடுத்து ஓட்டத்தலைப்பட்டது. கரை பலவீனமாயிருந்த இடங்களாகிய பாலுசெட்டி அக்கிரகார வடகோடியிலும், அதற்கடுத்துள்ள கலியாணராமய்யர் அக்கிரகார மேலக்கோடியிலும் ஸ்ரீசக்கரபாணி சுவாமியின் மடக்குவீதியில்சந்திக்கும், அப்புக்குட்டி அக்கிரகார வடகோடியிலும் ஆற்று ஜலம் ததும்பித் ததும்பி கரையைப் பிரித்துக் கொண்டு அடுத்துள்ள ரெட்டி ராயர் அக்கிரகாரம், காமாக்ஷி கோசியர் அக்கிரகாரம், ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் மடத்துத் தெரு, டபீர்த் தெருக்கள் முதலிய நெருங்கிய பல தெருக்களின் வழியாய்த் தெற்கு நோக்கிச் சென்று, அங்கங்குள்ள வீடுகள் பலவற்றைச் சீர்குலையச் செய்துவிட்டது. அவ்வவ் வீட்டிலுள்ள ஆண்கள், பெண்கள், குழந்தை, குட்டிகள் எல்லாம் அச்சமுற்றுத் தவிக்கின்றார்கள். நிற்க இடமின்றி அயலூருக்குச் செல்லப் பிரயத்தனம் செய்பவர்களும் அடுத்த தெருவில் போய் அடங்காத் துக்கமுற்று தவிப்பவர்களும், பட்டினியாய்ப் பரிதபித்துக்கொண்டிருப்பவர்களுமாக இருக்கிறார்கள். இவ்வூர் ஒரு பெரிய முனிசிபல் பட்டணமாயிருந்தும் இவ்வித ஆபத்துக்குள்ளானது ஆச்சரியப்படத் தக்கதே.

முனையடுவார் தாசன்.

General News.

பொது வர்த்தமானங்கள்.

—:o:—

திருச்சினாப்பள்ளி.

செஷன்ஸ்:—கோடை காலத்திற்காக மூடப்பட்டிருந்த டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் திறந்தது முதல் செஷன்ஸ் விசாரணை தான் பலமாக நடந்துகிறது. இந்த மாதத்தில் போடப்பட்டிருந்த கேஸ்களில் அநேகம் அடுத்த மாதத்திற்கு மாற்றப்பட்டிருக்கின்றன. ஸ்பென்ஸர் சார்ஜு கொடுத்த பின் மிஸ்டர் தாரண்டன் அவருடைய வேலையை ஒப்புக்கொண்டு பார்த்து வருகிறார். மிஸ்டர் தாரண்டன் இந்த ஜில்லாவுக்கும் இந்த வேலைக்கும் புதியவரல்லர். கலெக்டராயும் டிஸ்டிரிக்ட் ஜட்ஜாகவும் அநேக வருஷங்களாக அடிக்கடி இருக்கிறார்.

தகப்பனைப் பிள்ளைகள் கொன்ற கேஸ்:—திருச்சினாப்பள்ளி தாலூகா வாத்தலைக் கூடலூர் போலீஸ் ஸ்டேஷன் சரகத்தைச் சேர்ந்த லா சோழங்கநல்லூர்க் கிராமம் குருவன்பட்டியிலிருந்த ஓவணன் முத்திரியனை அவன் மூத்ததாரத்தின் மகன்களான அடக்கன் வீரமணி ஆகிய இருவர்களும் கொன்றுவிட்டதாக ஸ்ரீரங்கம் டிவிஷன் போலீஸ்தாரரால் சார்ஜ் செய்யப்பட்டுத் திருச்சி ஸ்டேஷனரி சப் மாஜிஸ்திரேட்டால் கமிட்டி செய்யப்பட்டார்கள். வழக்கம்போல் பிராசிகியூஷன் சாக்ஷியான கரைக்காரன் அதாவது ஊரில் பெரியதனக்காரர்களில் ஒருவன், தாண்டவமுத்திரியனை ஜட்ஜ் விசாரித்து உண்மையைச் சொல்லவில்லையென்று அவனைப் போலீஸ் வசம் ஒப்புவித்துவிட்டு, கொஞ்ச நேரங்கழித்து மறுபடியும் அவனை விசாரித்து மன்னித்துவிட்டதாகச் சொல்லி அனுப்பிவிட்டார். (ஆ)

மறுபடியும் கிராமமுனிசிபை விசாரிக்கும்போது அவர் மரண சம்பவத்தைக் கேட்டவுடன் ரிபோர்ட் அனுப்பாமலிருந்தது பிசகென்றும், அந்த கேஸ் தள்ளுபடியாகி, குற்றவாளிகள் விடுதலை யடைந்தால் அதற்கு ஜவாபுதாரி அவர்தானென்றும், ஏனெனில் அதற்குக் காரணம் அவர் உடனே அதிகாரிகளுக்கு ரிப்போர்ட்டு அனுப்பாதது தானென்றும், எப்படியாயினும் அவர் சஸ்பெண்டு செய்யப்படுவரென்றும் சொன்னார். மற்றொரு சாக்ஷியான மகம்மத் காஸிம் என்னும் ஒரு ஹெட் கான்ஸ்டேபிள் விசாரிக்கப்படும்போது, எதிரி வக்கீல் கேட்ட கேள்விக்கு, தான் ஒரு நாளும் பொய்க்கேஸ் பண்ணினதாக வேலையில் தாழ்த்தப்படவில்லையென்றும், 50 பேர்களுக்கு அதிகமான ஒரு கூட்டமுள்ள கலகத்தில் தான் ஓடி ஒளித்துக் கொண்டதாயும், கோழைத்தனமாகத் தானிருந்ததாக டிபார்ட்டுமெண்டாரால் தான் தாழ்த்தப்பட்டிருந்ததாயும் ஒப்புக்கொண்டார். இவர் விசாரணை முடிந்து போகும்போது [illegible] அவ்விதம் கோழைத்தனமாக இருக்கக்கூடா தென்று ஜட்ஜ் எச்சரித்தார்.

814 நெம்பர் கான்ஸ்டேபிளை விசாரிக்கும்போது, ஒரு ரிப்போர்ட்டைக்கொடுத்து வாசிக்கச்சொன்னதில் நன்றாக வாசிக்கமுடியாததினால் பார்த்து ஜட்ஜ் போலீஸ் இன்ஸ்பெக்டரை ஏன்படிக்கத்தெரியாதவர்களைத் தாக்கல் செய்துகொள்ள வேண்டுமென்று கேட்க, இன்ஸ்பெக்டர் ஆள் அகப்படுகிறதில்லையென்றும், கூலி வேலையில் இதைக் காட்டிலும் ஜாஸ்தி கிடைக்கிறதால் போலீஸில் ஒருவரும் சேரா முன்வருகிறதில்லையென்றும், இப்போது இந்த ஜில்லாவில் 200 கான்ஸ்டேபிள் வேண்டியிருக்கிறதென்றும், இந்தச்சாக்ஷி, பட்டாளத்திலிருந்து போலீஸில் சேர்ந்து 1½ வருஷந்தானாகிறதென்றும், நன்றாக எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் அகப்படுகிறதில்லையென்றும் சொன்னார்.

[illegible] சாக்ஷி போகும்போது அவன் சொன்னதெல்லாம் பொய்யென்றும் போலீஸ்தார் குற்றம் நடந்ததாகச் சொல்லும் காலத்திற்கு முன்னேயே போயிருக்கிறதாயும் சாக்ஷி அடிக்கடி "மறதி மறதி" என்று சொல்லுவதினால் அவனுடைய சித்தசுவாதீன நிலைமையை அறியும்படி ஜில்லா வைத்திய இலாகாத் தலைவரிடம் அனுப்பவேண்டுமென்றும், ஏனெனில், அவனிடம் கைதியை ஒப்புவித்தால், விட்டு விட்டால் என்ன செய்கிறதென்றுஞ் சொன்னார்.

டிபன்ஸ் விசாரணை முடிந்து ஜட்ஜும் கேஸை [illegible] எடுத்து சொன்னபின் அசெஸர்கள் [illegible] எதிரிகள் [illegible] மில்லையென்றும் [illegible] 300 ரூபாய்க்கு [illegible] மகன் [illegible] ஆதலால் [illegible] சொன்னார்.

தொகை சங்கதி சொன்னவுடன் ஜட்ஜ் அது மானுஷிய சுபாவத்தை (Human natre) பொறுத்ததென்றார்.

மற்றொரு அசெஸர் எதிரிகள் குற்றவாளிகள் தானென்றும் ஆனாலது கொலை செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் செய்யாத கொலையென்றும், தகப்பனிடமிருந்து பணத்தைத்திருடவந்ததில் ஏற்சச்சரவில் நடந்த சம்பவமென்றும், கொலையுண்டவன் மகனான 12 வயதுள்ள சிறு பையனுடைய சாக்ஷியமே போதுமானதென்றும், எதிரிகளைத்தவிர வேறு எவனும் திருடினதாக ருஜுவாக வில்லையென்றும், மரணமானது கல்லடியாய் நேர்ந்திருக்கலாமென்றுஞ் சொன்னார்.

மறுதினம் ஜட்ஜ் எதிரிகளைத் தண்டிக்கச்சாக்ஷியம் போதாதென்றும், சாக்ஷி சொன்ன அந்தச்சிறுவனை எதிரிகள் யாதொரு தீங்கும் செய்யக்கூடாதென்றும், அவ்விதஞ்செய்ததாகத் தெரிந்தால்தான் அவர்களைத் தண்டிப்பதாகவும் சொல்லிஓடிப்போகச்சொல்லிவிட்டார்.

இந்தக் கேஸை எல்லோரும் வெகு பலமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள் போலீஸ் தார் இதனை நேரில் அப்பில் செய்வார்களெனத் தோற்றுகிறது.

சட்டி குளம் கொலைக்கேஸ்:—முத்தாலம் மாள் என்பவளை அவள் புருடனை பெருமாள் ரெட்டியும் சுந்தர ரெட்டியும் கொலை செய்ததாக முசிரி ஸ்டேஷனரி சப்மேஜிஸ்திரேட்டு நகமிட்டு செய்யப்பட்ட கேஸ் சென்ற இரண்டு தினங்களாக விசாரிக்கப்பட்டு வருகிறது.

P. S. R

ஆஷின் கொலைக் கேஸ்.

திருநெல்வேலிக்குப் போயிருந்த ஸ்பெஷல் பப்ளிக் பிராஸிகியூட்டர் ஆனரெபில் மிஸ்டர் T. ரிச்மாண்ட் சென்னைக்குத் திரும்பிவிட்டார். திருநெல்வேலி ஹெட்குவார்ட்டர்ஸ் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் இன்னும் சில தினங்களில் ஆஷ் கொலைக் கேஸிலும் சதிக்கேஸிலும் சம்பந்தப்பட்டவர்களின் பிரதம விசாரணையை நடத்தி, அக்கேஸ்களில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் 20 பேர்களையும் சென்னை ஹைகோர்ட் ஜட்ஜுகளில் மூவரைக்கொண்டமைக்கப்பட்ட விசேஷக் குற்ற விசாரணைக் கோர்ட்டுக்கு கமிட் செய்வார்.

செங்கோட்டையின் சமீபத்தில் [illegible] யப்பட்ட தர்மராஜய்யர் தான் [illegible] கொலை செய்துகொள்வப்பார் [illegible].

திருநெல்வேலியில் ஹைகோர்ட் [illegible] அஞ்செய்யும் மிஸ்டர் P. வெல்லையப்பிள்ளை தம்முடைய [illegible]

தியிருக்கிறதாயும் போலீஸாருக்குத் தெரிவிக்கிறார். அவர் திருநெல்வேலிக் கலகக் கேஸ்களில் பிராஸிகியூஷன் தரப்பாருக்கு வேண்டிய உதவியைச் செய்தவரெனப்படுகிறது.

ஸிலோன் பத்திரிகை யொன்றுக்கு ஒரு நிருபர் எழுதி யிருக்கும் கடிதத்தால் மாடசாமிபிள்ளை யாழ்ப்பாணம் பக்கம் போயிருக்கிறான் என்று ஊகிக்க வேண்டியதா யிருக்கிற தெனப்படுகிறது அந்த நிருபர் தம்மோடு யாழ்ப்பாணத்துக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னே பிரயாணஞ் செய்தவன் மாடசாமி பிள்ளையாய்த்தா னிருக்கவேண்டுமென்று எழுதி யிருப்பதாய்த் தெரிகிறது.

கும்பகோணத்தில் வெள்ளம்.

கும்பகோணத்திலே காவிரியாற்று வெள்ளம் பட்டணத்துக்குள் திரும்பி விட்டதென்றும் ஆற்றோரமாயுள்ள தெருக்களில் மட்டுமல்லாமல் காமாட்சி ஜோஸியர் தெரு டபீர் தெருவு போன்ற தெருக்களிலும் முழங்கால் அளவு ஜலம் போகிறதென்றும் ஜனங்கள் பயமேலிட்டுப் போயிருக்கிறாரென்றும், நமது கும்பகோணம் நிருபர் ஒருவர் அனுப்பியிருந்த கடிதத்தை நேற்று மித்திரனில் பிரசுரித்திருந்தோம். ஆனால் சப் கலெக்டர் அப்பர் அணைக்கட்டில் ஜலம் ஒரு அடி விழுந்து விட்டதென்று ஜனங்களுக்கு தைரியஞ் சொல்லிக்கொண்டும் வெள்ளம் டவுனுக்குள் திரும்பிவிடாதபடி கரையை உயரமாயில்லாத விடங்களில் உயர்த்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டும் வருகிறாரென்று இன்று வேறொரு நிருபர் அனுப்பியிருக்கும் கடிதத்தால் தெரிகிறது.

---

4 நாள் அடைத்து வைக்கப் படிருந்த மகமதியன்.

கல்கட்டா இரண்டாவது பிரெஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்முன் சில தினங்களுக்கு முன்னே ஒரு மகமதியன் ஆஜர் செய்யப்பட, அவன் தன்னைப் போலீஸார் அரெஸ்ட்செய்து 4-நாளாய் அடைத்துவைத்திருக்கிறார்களென்றும், எதற்காகத் தன்னைப் பிடித்து வைத்திருக்கிறார்களென்பது தெரியவில்லையென்றும் சொல்லிக்கொண்டான். உடனே பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் அவனை யார் பிடித்து அடைத்தது, என்ன காரணத்துக்காக அரெஸ்ட் செய்தது, என்று [illegible], அவன் இதற்காக இன்னாரால் அரெஸ்ட் செய்யப்பட்டானென்றும் இன்னதற்காக 4-நாள் அடைத்து வைக்கப்பட்டிருந்தானென்றும் தெரிவிக்க ஒருவரும் முந்த வில்லையாம். அதைப்பற்றி மாஜிஸ்டிரேட் யாதொருகுற்றமும் செய்யப்பட்டு 4-நாளாய் அடைத்து வைக்கப்பட்டிருந்ததற்காகத் தாம் வருத்தப்படுவதாய்ச் சொல்லி அந்த மகமதியனை விடுதலை செய்தாராம். அவர் [illegible] விடுதலை உத்தரவின் காபியொன்றையும் போலீஸ் கமிஷனருக்கு அனுப்பினாராம். கல்கட்டாவில் போலீசார் நடத்தும் கண்மூடி தர்பாருக்கு இது ஒரு தக்க சாட்சியாகும் போலும்.

4

மிதுனபுரி நஷ்ட ஈட்டுக்கேஸ்.

மிதுனபுரி நஷ்ட ஈட்டுக் கேஸின் விசாரணை போனவாரம் வெள்ளிக்கிழமையோடு முடிவடைந்துவிட்டது. அந்தக் கேசின் விசாரணை மொத்தத்தில் 180-நாள்கள் நடந்திருக்கிறது. மிஸ்டர் ஜஸ்டிஸ் ப்ளெட்ச்சர் தீர்ப்புச்சொல்லாமல் நிறுத்தி வைத்திருக்கிறார். அவர் தாம் ஜன்மதேசம் போவதற்கு முன்னே அந்தக்கேஸில் தாமே நேரில் தீர்ப்புச் சொல்லிவிட முடியுமென நினைப்பதாகவும். அப்படிச்செய்யச் சாத்தியப்படாவிட்டால் வேறொரு ஜட்ஜிடம் தமது தீர்ப்பைச்சொல்லி விடும்படியாய்க் கொடுத்துவிட்டுப் போவதாகவும் சொன்னார். அவர் அடுத்த மாதம் 8-ந்தேதி ஜன்ம தேசம் போகிறார்.

ரங்கூனில் டெல்லி தர்பார் கொண்டாட்டம்.

ரங்கூன் வாசிகள் டெல்லி தர்பார் மகோற்சவத்தைத் தங்கள் ஊரில் எப்படிக்கொண்டாடுகிறதென்று தீர்மானஞ்செய்ய போன வெள்ளிக்கிழமை யன்று மீட்டிங்கூடினார்கள். அப்போது 150 மெம்பர்கள் அடங்கிய பொதுக் கமிட்டியொன்று அம்மகோற்சவத்தைச் சரியானபடி கொண்டாடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய நியமிக்கப்பட்டது. அச்சமயம் மாகாணக் கவர்ன்மெண்ட் மூலமாய் மாட்சிமை பொருந்திய சக்கரவர்த்திக்கும் சக்கரவர்த்தினிக்கும் ஒரு அட்ரெஸ் அனுப்ப வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்தியா மந்திரியின் தேகஸ்திதி.

இந்தியா மந்திரி லார்ட் க்ரூவுக்கு தேகம் முழுதும் சௌக்கியமாய் விடவில்லையென்று இங்கிலாண்டிலிருந்து எட்டும் கடிதங்களால் தெரிகிறது. அவருக்கு உடம்பு நன்றாய்ச் சொஸ்தமாகாத வரையில் அவர் டெல்லி தர்பாருக்கு வரக்கூடிய ஸ்திதியில் இருக்கமாட்டாரென்றும் சொல்லப்படுகிறது.

மழையறிக்கைப் படம்.

சிம்லாவில் ஒவ்வொருநாள் சாயங்காலமும் இந்தியாக் கவர்ன்மெண்ட் மெம்பர்களுக்கு மழையறிக்கைப் படமொன்று ஸர்குலேட் செய்யப்படுகிறதாம். அதிலிருந்து இன்ன இன்ன இடத்தில் இவ்வளவு மழை பெய்திருக்கிறதென்றும், இன்ன இடங்களில் மழை பெய்யும்போலிருக்கிறதென்றும், இன்ன இடங்களில் மழை பெய்யவில்லையென்றும் அவர்கள் அறிந்து கொள்ளக்கூடுமாம்.

டெல்லிக்கு ராஜப்பிரதிநிதி.

அடுத்த அக்டோபர் மாதமுதலில் ராஜப்பிரதிநிதி லார்ட் ஹார்டிஞ்ச் தர்பார் காம்புகளைப்பார்வையிட டெல்லிக்கு வரக்கூடுமென்றும் அவர் அங்கிருந்து சிம்லாவுக்குத் திரும்பி டெக்ராடூனுக்குப்போகக் கூடுமென்றும் அங்கே நவம்பர் மாதம் 3-வது வாரம் வரை தாமதிக்கக்கூடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

டெல்லீ தர்பாரில் ராணுவப் பயிற்சியும் படைக்காட்சியும்.

டெல்லி தர்பார் சமயத்தில் படைக்காட்சி ராணுவப்பயிற்சி இவைகளில் 43-லட்சம் ரூபாய் செலவு செய்யப்படுமென்று மதிப்பிடப்படுகிறது.

கல்கட்டா டவுன்ஹாலின் தீபாலங்காரம்.

ஜார்ஜ் சக்கிரவர்த்தி கல்கட்டாவுக்கு விஜயம்செய்யும்போது கல்கட்டா டவுன்ஹாலை தீபாலங்காரம் செய்வதற்காக ரூபா 5000 கல்கட்டா கார்ப்பரேஷன் ஜெனரல் கமிட்டியார் சாங்க்ஷன் செய்வதாய்த் தீர்மானித்திருக்கிறார்கள்.

தென் இந்தியா ரயில்வேயின் பார பக்ஷம்.

போட்மெயில், மதுரா எக்ஸ்ப்ரஸ் தஞ்சை எக்ஸ்ப்ரெஸ் என்ற வண்டிகளில் 3 வது வகுப்புப் பிரயாணிகள் படும் பாடும், அவர்கள் பெருமூட்டைகளை எடுத்துக்கொண்டு உட்கார இடமில்லாமல் காரிடர் வண்டியின் நடப்பில் உட்கார்ந்து, போவோர் வருவோர்களின் செருப்புக்காலும், பூட்ஸுக்காலும் படஉடம்பை நெளித்து நெளித்துக்கொடுத்துக்கொண்டு அவஸ்தைப்படுகிற விஷயமும் பலதடவைகளில் தென்னிந்தியா ரயில்வே அதிகாரிகளுக்குத் தெரிவித்திருந்தும் இந்த 3-வது வகுப்புப் பிரயாணிகளின் ஸௌகரியத்திற்கு அவர்கள் இன்னும் தக்க ஏற்பாடுகள் செய்தாரில்லை. இது தான் செய்யவில்லை என்றாலோ, இவ்வகுப்புப் பிரயாணிகள் பின்னும் அதிகமாய்க் கஷ்டப்படும் படியாகச் சில வண்டிகளை பிரத்தியேகப்படுத்திப் பூட்டியும் வருகிறார்கள். இந்தியர்களைப்போலவே சமமான 3-வது வகுப்புக் கூலியைக் கொடுக்கும் ஐரோப்பிய யூரேஷ்யர்களுக்கு மட்டும் பல சௌகரியங்களும் அமைத்துத் தனி வண்டிகள் பூட்டுகிறார்கள். இளங் குழந்தைக்காரிகளும், கர்ப்பிணிகளும், கிழவர்களும் நடப்பு வழியில் நிற்பதற்கும் முடியாமல் வருந்த இட சக்ரமுள்ள ஐரோப்பிய யூரேஷ்ய ஆண் பெண்கள் வகுப்புக்கு ஒருவர் இவர் படுத்துக்கொண்டு ஆனந்தமாகத் தூங்குகிறார்கள். வலக்கணென்றும் இடக்கணென்றும் பாராமல் இரண்டையும் ஒரு நிகராகக் கருதுகிற இங்கிலீஷ் இராஜாங்கத்திலே இவ்வாறு பாரபக்ஷம் நடப்பதென்றால், இது மிகவும் விசனிக்கத்தக்கதுதான் ரயில்வேக் கம்பெனியார் இனிப் பிரயாணிகளுள் இவன் மேலானவன் இவன் கீழானவன் என்று பாராமல் சமானமான சத்தங்கொடுக்கும் எல்லாரையும் ஒக்கக் கருதுவாரென்றும் மூன்றுவது வகுப்பு பிரயாணிகளுக்குப் பின்னும் சில ஸௌகரியங்கள் செய்வாரென்றும் நம்புகிறோம்.

தஞ்சாவூர் முனிசிபாலிடி.

தஞ்சாவூர் முனிசிபல் கவுன்சிலர்கள் இன்று ஒரு மீட்டிங்கு கூடப்போகிறார்கள். அந்த மீட்டிங்கில் கலெக்டர் அந்த முனிசிபாலிடிக்கு ஒருவைஸ் சேர்மனைக் கொடுக்க மறுத்த விஷயங் கவனிக்கப்பட்டு மறுபடியும் அந்த விஷயத்தைப்பற்றிக் கலெக்டருக்கு ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளப்படும்.

கும்பகோணத்தில் ஒரு தர்பார்.

மாயவரம் சப் ஜட்ஜ் கோர்ட் கும்பகோணத்தில் நடந்து வருவது நேயர்கள் அறிந்த விஷயம். மாயவரம் சப் ஜட்ஜ் மிஸ்டர் C. கிருஷ்ணசாமி ராவுக்கு இந்த வருஷாரம்பத்தில் புது வருஷ கௌரவிப்பட்டமாக ராவ் பகதூர் பட்டம் கொடுக்கப்பட்டதும் நேயர்கள் அறிந்த விஷயமே. அவருக்கு அந்த ராவ் பகதூர் சன்னத்தை வழங்க கும்பகோணத்தில் இந்த வாரம் வியாழக்கிழமை யன்று ஒரு தர்பார் நடக்கப்போகிறது அந்த தர்பாரில் கும்பகோணம் டிவிஷனல் ஆபீஸர் மிஸ்டர் ஆஸ்டின் அந்த சன்னத்தை மிஸ்டர் கிருஷ்ணசாமி ராவுக்கு வழங்குவார்

புதுக்கோட்டைப் பிரதிநிதிச்சபை.

இந்த வருஷத்துப் புதுக்கோட்டைப் பிரதிநிதிச் சபை அடுத்தமாதம் 18-ந்தேதி புதுக்கோட்டையில் ஆரம்பமாகும். அச்சபை திவான் மிஸ்டர் V. R. துரைராஜாவின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறும். சமஸ்தான் சூபரின் டெண்டண்ட் மிஸ்டர் பிராக்கன் I. C. S. சமஸ்தான நிருவாகத்தைப்பற்றிய ரிபோர்ட்டை ஒரு அட்ரெஸ் ரூபமாகச் சபையோருக்கு வாசித்துக் காட்டுவார்.

புவனேஸ்வரி தேவி காலஞ் சென்றார்.

ஸ்வாமி விவேகாநந்தரின் தாயார் புவனேசுவரி தேவி போன வாரம் செவ்வாய்க்கிழமை திடீரென இறந்து போய் விட்டாரெனக் கல்கட்டாவிலிருந்து சமாசார மெட்டியிருக்கிறது. ஒரு வாரத்துக்கு முன்தான் அந்த அம்மாள் ஜகந்நாதத்திலிருந்து திரும்பி வந்தாராம். வரும்போது காட்டுச் சுரத்தால் (Malaria) அந்த அம்மாள் வருந்திக்கொண்டிருந்தாராம். ஆனால் இவ்வளவு சடுதிமரணம் அந்த அம்மாளுக்கு நேரிடுமென எதிர் பாராத அந்த அம்மாளின் குடும்பத்தார் மிகுந்த கிலேசம் மேலிட்டுப் போயிருக்கிறார்களாம். சுவாமி விவேகாநந்தரின் பிற்காலப் பெருமைக்கு அந்த அம்மாள்தான் மூல காரணமென்று நாம் சொல்ல வேண்டியது அநாவசியம்.

சித்திர கலாசாலையில் 20 புதிய ஸ்காலர்ஷிப்புகள்.

தொழிற்படிப்புப் பள்ளிக்கூடங்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த 199 ஸ்காலர்ஷிப்புகளில் 30 ஸ்காலர்ஷிப்புகள் சென்னை சித்திரகலாசாலை மாணாக்கர்களுக்குப் போன மார்ச்சுமாதம் 31-ந்தேதிவரை கொடுக்கப்பட்டு வந்தன. அதற்குப் பிறகு தொழிற்படிப்பு சூபரிண்டண்டெண்ட் தம்முடைய மேற்பார்வைக்குட்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு மட்டுந்தான் அந்த ஸ்காலர் ஷிப்புகள் கொடுக்கப்படுமென்று சொல்லிவிட, சித்திரக்கலாசாலை சூப்பரின்டெண்டண்ட் வித்தியாதிகாரியை தமது கலாசாலையின் ஸ்காலர்ஷிப்பு கிடைப்பதை எதிர்பார்த்து, நன்றாய்ப் படித்து வந்த பிள்ளைகளை ஏமாற்றுவது சரியல்லவென்றும், தவிரவும், தமது கலாசாலையில் வாசிக்கும் சிறுவர்களில் பெரும்பாலோர் ஏழைகளாயும் ஸ்காலர்ஷிப்பில்லாமல் வாசிக்க முடியாதவர்களாயுமிருக்கிறபடியால் அவர்களுக்குஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கத்தான் வேண்டுமென்றும் அது பற்றி சென்னை சித்திரகலாசாலைக்கென்று அதிகப்படியாய் 20-ஸ்காலர்ஷிப்புகள் சாங்க்ஷன் செய்யும் படி சிப்பார்சு செய்யவேண்டுமென்றும், கேட்டுக்கொள்ள, அவர் அப்படியே கவர்ன்மெண்டுக்குச் சிப்பார்சு செய்தார். அவருடைய சிப்பார்சைத்தழுவி கவர்ன்மெண்டார் சென்னை சித்திர கலாசாலைக்கு 20 அதிகப்படி ஸ்காலர்ஷிப்புகள் சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். அவைகளால் ஒரு மாதத்துக்கு 35-ரூபாய் செலவுக்கு மேலில்லை

டெல்லி தர்பார் கமிட்டியின் ஓர் அறிக்கைக் குறிப்பு.

டெல்லி தர்பார் கமிட்டியார் முடிசூட்டு தர்பாருக்கு மாட்சிமை பொருந்திய ஜார்ஜ் சக்கரவர்த்தியும் மேரி சக்கரவர்த்தினியும் பரிவாரங்களும் விஜயம் செய்வதைப்பற்றிய அறிக்கைப்பட்டி உத்தியோக முறையில் இன்னும் வெளிப்படவில்லை யென்றும், இப்போது தான் அவ்விஷயம் இங்கிலண்டில் ஆலோசிக்கப்பட்டு வருகிறதென்றும், சக்கரவர்த்தியின் ஆக்ஞா பத்திரம் இன்னும் இங்கு வந்து சேரவில்லையென்றும், தர்பார் கமிட்டியார், அடுத்த மாதத்தில் அந்த நிகழ்ச்சி சம்பந்தமாய் ஒரு விளம்பரம் வெளியிடக்கூடிய ஸ்திதியில் தாங்களிருக்கக் கூடுமென, நம்புகிறார்களென்றும், சமாசாரப் பத்திரிகைகளுக்கு அனுப்பியிருக்கும் ஓர் அறிக்கைக் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கமிட்டியார் தர்பார் கமிட்டி செக்ரெட்டேரிக்கு தர்பார் டிக்கெட்டுகள் வேண்டுமென அநேகர் நேரில் எழுதுகிறார்களென்றும், தர்பார் காம்புகளுக்கு அழைக்கப்படாதவர்களுக்கும் அவைகளில் வாசம் செய்யாதவர்களுக்கும் தாங்கள் டிக்கெட்டு கொடுக்க முடியாதென்றும், அப்படிப்பட்டவர்கள் மாகாணக்கவர்ன்மெண்டுகள் மூலமாய் டிக்கெட்டுகள் கேட்கவேண்டுமென்றும் மாகாணக் கவர்ன்மெண்டுகள் சிபார்சு செய்கிறவர்களுக்கு அந்தக் கவர்ன்மெண்டுகள் மூலமாய் டிக்கெட்டுகள் கொடுக்கப்படுமென்றும் தெரிவித்துக் கூடவிருக்கிறார்கள்.

ஒரு கவர்ன்மெண்ட் உத்தரவு.

ஜில்லா முனிசிபாலிடிகளின் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட வேண்டியதென்று சொல்லப்பட்டிருக்கிற ஒவ்வொரு பைலாவும் (By law) ஆர்டரும் (Order) நோட்டீசும் (Notice) தஸ்தாவேஜூம் தேச பாஷையில் எழுதப்பட்டாவது அல்லது ஆங்கிலத்திலிருந்து தேசபாஷையில் மொழி பெயர்க்கப்பட்டாவது முனிசிபலாபீசில் எல்லாரும் பார்க்கக்கூடிய இடத்திலும், முனிசிபல் எல்லைக்குள் முனிசிபல் கவுன்சிலர்களுக்கு யாரும் பார்க்கும்படி ஒட்டப்படவேண்டுமென்று தோற்றுகிற இடங்களிலும் ஒட்டப்படவேண்டுமென் ஜில்லா முனிசிபாலிடி, சட்டத்து செக்ஷன் 289-A சொல்லுகிறது. இவைகளைத் தவிர, முனிசிபல் கவுன்சில்கள் சில சமயங்களிலே காலரா பெரியம்மை போன்ற தொத்துவியாதிகள் பரவும்போ லிருக்கிறதென்று, முனிசிபல் சட்டத்தில் அப்படி தெரிவிக்கவேண்டியது கட்டாயமெனச் சொல்லப்படாமலிருக்கவும், ஜனங்களுக்கு அவசியம் தெரிவிக்கவேண்டி யிருக்கிறபடியால், ஜில்லா முனிசிபல் கவுன்சில்கள் போதுமான நோட்டீஸ் பலகைகள் தயார் செய்து முனிசிபல் எல்லைக்குள் லாயக்காயுள்ள இடங்களில் அவைகளை நட்டிவைத்து அவைகளின் சட்டவிதிகளின் கீழ் ஒட்டப்படவேண்டிய நோட்டீஸ்களையும் ஜனங்களை எச்சரிக்கவேண்டி ஒட்டவேண்டிய அவசியமாயிருக்கிற நோட்டீஸ்களையும் ஒட்டுதல் விரும்பத்தக்கதென்று கவர்ன்மெண்டார் லோகல் முனிசிபல் இலாகாவில் ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

மதராஸ் 'டைம்ஸ்' பத்திரிகை மன்னிப்புக்கேட்டுக் கொண்டது.

இந்த ஆங்கிலோ இந்தியப்பத்திரிகை இந்த மாதம் 19-ந்தேதி தனது தலையங்கத்தில் மிகவும் ஈனமுடன் ஒரு விஷயத்தில் சென்னை ஹைகோர்ட் ஜட்ஜான ஜஸ்டிஸ் மிஸ்டர் P. R. சுந்தர ஐயர் வெகே

ஷன் கோர்ட்டு நடத்தினதைத் தாறுமாறுகக் கண்டித்து எழுதிற்று. ஜஸ்டிஸ் மிஸ்டர் சுந்தர ஐயர் வெகேஷன் காலத்தில் பெங்களூர் பாலக்காடு முதலிய விடங்களில் கோர்ட்டு நடத்தி கக்ஷிக்காரர்களுக்கும் வக்கீல்களுக்கும் பெரிய தொந்தரவை உண்டு பண்ணி விட்டாரென்றும், அவர் ஜட்ஜு முறைமையில் தமது பொறுப்பைச்சிறிதும் உணரவில்லை என்றும், தமது சொந்த சௌகரியத்தைக் கருதி பிறருக்கு நஷ்டத்தை விளைத்தாரென்றும் பின்னும் பலவாறும் கண்டனம் செய்து எழுதிற்று. இன்றைக்கோ அது, தான் 19-ம் தேதி எழுதியது பெரிதும் அறியாமையால் எழுதினதென்றும், தான் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தர ஐயருடைய யோக்கியதையையாவது ஹைகோர்ட்டு யோக்கியதையையாவது இழிக்கவேண்டுமென்னும் கெட்ட எண்ணத்துடன் அக்காரியம் செய்யவில்லை என்றும், தான் அறியாமையால் எழுதியதற்குப் பச்சாத்தாபப்படுவதென்றும், ஜஸ்டிஸ் மிஸ்டர் சுந்தர ஐயரிடத்தில் தான் மனப்பூர்வமாய் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறதென்றும் எழுதியிருக்கிறது.

ஆனரபில் மிஸ்டர் கோகலேக்கு மாணுக்கர் அட்ரஸ்.

இன்று காலை 7-30 மணிக்கு விக்டோரியா ஹாலின் வடபுறத்தில் கூடிய மாணவர் மீட்டிங்கில் பச்சையப்பன் காலேஜ் பிரின்சிபல் மிஸ்டர் க்ளின்பார்லோ B. A. அக்கிராசனம் வகிக்க ஆனரபில் மிஸ்டர் கோகலேக்கு மாணவரட்ரஸ் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

மரத்திலிருந்து விழுந்திறந்தது.

நெல்லூர் ஜில்லா உதகிரியில் சுமார் 11-வயதுள்ள ஒரு இந்து வாலிபன் ஒருகிளையை வெட்டும்பொருட்டு ஒரு மரத்தில் ஏறினும். கைதவறிப்போகவும் கீழேவிழுந்து. கையை முறித்துக்கொண்டான். அவன் சென்னை ஜனரல் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட, அவன் கையைச் சேதிக்கவேண்டியிருந்ததால் அப்படிச் செய்தார்கள். அவன் அவ்வாதைதாங்காமல், இந்த மாதம் 22-ம் தேதி இறந்து போனுன். அவன் கையைமுறித்துக் கொண்ட விஷயமாய் ஒருவரும் ஸாக்ஷி சொல்ல முன்வரவில்லை. மரண விசாரணையில் மரத்திலிருந்து விழுந்து ஏற்பட்ட மரணம் என்று தீர்மானமாயிற்று.

கர்நூல் போலீஸ்.

இந்த ஊர் ஸப் இன்ஸ்பெக்டரும் பின்னும் சில கான்ஸ்டேபில்களும் ஒரு வியாபாரக் கனவானைத் தாக்கி, அக்கிரமமாக ஜெயிலிலிடைத்தார்களென்று அவர்கள் மீது கேஸ் கொண்டுவரப்பட்டிருந்தது. மாஜிஸ்டிரேட் மிஸ்டர் J. வெங்கன்ன பந்துலு அந்தஸப் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் வில்லியம்ஸின் மேலும், பின்னும் 2-கான்ஸ்டேபில்களின் மேலும் சார்ஜுப்படித்து ஸப் இன்ஸ்பெக்டருக்கு 2-மாசம் கடுங்காவலும் ரூபா 30-அபராதமும் 2-கான்ஸ்டேபில்களுக்கும் தனித்தனி 15-நாள் கடுங்காவலும் 30 ரூபா அபராதமும் சிக்ஷைவிதித்தார்.

மிஸ்டர் J. ராமய்யா பந்துலு முன்பாக.

மெஸர்ஸ் வால்காட்பிரதர்ஸ் கம்பனியின் ஏஜண்டின்மீது கேஸ்.

செஷனுக்குக் கமிட் செய்யப்பட்டார்.

மெஸர்ஸ் வால்காட் பிரதர்ஸின் துபாஷ் மிஸ்டர் டி. ஸதாசிவராவ் அக்கம்பெனியின் ஏஜண்டும், மானேஜருமான மிஸ்டர் E. ஸ்டீனர் மீதுபிராது கொண்டுவந்ததின் மேல் மாஜிஸ்ட்ரேட் பிரதிவாதியை ஸெஷனுக்குக் கமிட் செய்வதாகச் சொல்லியிருக்கிறர்.

மிஸ்டர் E. ஸ்டீனர் மீது, மாஜிஸ்ட்ரேட்டு, மோசம் செய்ததும், மோசம்செய்ய எத்தனித்ததுமாக 7-குற்றம் சாட்டியிருக்கிறர். முதலாவது கடுகு விஷயமாக மோசம் செய்தது, 2-வது மெழுகு வியாபாரத்தைப்பற்றிய குற்றம், 3-வது இன்வாய்ஸுகளை பைல் செய்வதில் மோசம் செய்ததாகக் குற்றம், 4-வது எள்ளு விஷயமாக மோசஞ் செய்ய எத்தனித்ததாகக் குற்றம், 5-வது எள்ளுக் கண்டிராக்டர் மூல தஸ்தாவேஜை அழித்ததாகக் குற்றம், 6-வது அந்ததஸ்தாவேஜுகளின் அச்சாபீஸ் நகலைச் சிதைத்ததாகக் குற்றம், 7-வது ரூபாய் 797-10-0 வைக் குறித்து பொய்க் கணக்கு எழுதினதாகக் குற்றம்.

இன்று பிற்பகலில் ஐகோர்டில் ஜஸ்டிஸ் முன்பாக மிஸ்டர் ஸ்டீனரை "பெயிலில் விடும்படி" அப்ளிகேஷன் செய்யப்பட்டு, அவர் விடப்பட்டிருக்கிறர்.

ஆகாயவிமானங்கள். பதினுயிரம் பவுன் பந்தயம்.

லண்டன், ஜூலை 24—

பதினேழு ஆகாய விமானிகள் பந்தயத்தின் மேல் எடிம்பரோ நகரத்துக்குச் செல்லுவதாக இன்று ஹெண்டான் ஏரோட்ரோமை விட்டுப்புறப்பட்டார்கள். வெட்ரயின்ஸ் என்பவர் ஏழுமணி நேரத்தில் எடிம்பரோ வந்து சேர்ந்தார். போமோண்ட் என்பவர் ஏழுமணி இருபது நிமிஷத்தில் வந்துசேர்ந்தார். வாலெண்டயின் என்னும் ஆங்கிலேயர் பன்னிரண்டு மணி நேரத்தில் வந்துசேர்ந்தார். மற்றவர்கள் பற்பல இடங்களில் இடையிலேயே தங்கிவிட்டார்கள்.

ரயில்வண்டியில் கொள்ளை.

1909-ஞு அக்டோபர் மீ 10உ ஹேமேன்ட் சாட்டர்ஜி, ராஷ்மோகன்டட், மற்றொருவருமாக ரயிலில் பிரயாணம் போனுர்கள் இவர்கள் மர, வியாபாரிக்ளான சோடைன்பால் என்பவரிடம் வேலை செய்கிறவர்கள். மாலை 5-10, மணி வண்டியில் நாராயண்கஞ்சிலிருந்து கோரேய்டுக்கு பிரயாணம் போனுர்கள். இவர்களுடன் 2,300 இருந்தது டெக்கா என்னும் ஸ்டேஷனில் இவர்கள் இருந்த வண்டியில், 6, 7-மனிதர்கள் வந்து ஏறினுர்கள். அவர்கள் தகுந்த அந்தஸ்துடையவர்களாக காணப்பட்டார்கள். அதன் பிறகு வண்டிபோய்க்கொண்டிருக்கும்பொழுது குற்றவாளிகளான, குப்தாவும், மற்றவர்களும் வண்டியின் நடைபாதை (foot board) வழியாகப்போய் ராஷ்மோகனும் மற்ற இருவர்களும் இருந்த வண்டிக்குள் நுழைந்து, கத்திகளால் அவர்களை காயப்படுத்தி அவர்களில் இருவர்களை வண்டிக்கு வெளியே தள்ளிவிட்டார்கள். பிறகு அவர்களுடைய தொகைகளை எடுத்துக்கொண்டு ஓடிப்போய்விட்டார்கள். போகும்போது ஒருவரும் தங்களிடம் வராமலிருக்க. துப்பாக்கியால் ஒரு குண்டு சுட்டுவிட்டு ஓடிப்போனுர்கள். இந்த சத்தத்தைக்கேட்டு வண்டியின் கார்டு ஹிக்கின்ஸ் துரை என்பவர் வெளியே பார்க்கும்போதும் இருவர்கள் ஓடுவதைக்கண்டு நடைப்பாதை (foot board) வழியாக திருட்டுநடந்த வண்டிக்குவந்து சங்கதிகளை ஹேமந்த்ராவிடம் தெரிந்துகொண்டார். அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றவுடன் போலிஸாரிடம் தெரிவித்து கைதிகளைப் பிடித்தார்கள். இவர்களை டெக்கா ஸெஷனில் விசாரித்து ஜூரர்கள் அவர்கள் குற்றவாளிகளல்லவென்று அபிப்பிராயம் கொடுத்ததின் பேரில் விடுதலைசெய்யப்பட்டார்கள். ஆனுலும் ஜட்ஜ் இதற்கு சம்மதியாமல் கல்கத்தா ஹைகோர்ட்டாரின் சம்மதத்துக்கு அனுப்பி யிருக்கிருர்கள்.

தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியாரின் வியாச்சியம்.

M. ரெங்கனுதசெட்டி என்பவரின் தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியார் வசூலித்த அதிகத்தொகையை திருப்பி வாப்ஸ் செய்யும்பொருட்டு கும்பகோணம் டிஸ்டிரிகட்டு முன்சீப் ம-ள-ள-ஸ்ரீ, R. S. சங்கரய்யர் அவர்கள் B.A., B.L., முன்னிலையில் வியாச்சியம்கொண்டுவரப்பட்டு டிக்ரி பெற்றர்.—

கேஸின் விவரம்:—வாதியும் அவருடன் கூட இருவரும் ஈரோடிலிருந்து கும்பகோணத்துக்கு 3-வது வகுப்பு டிக்கெட்டு வாங்கினுர்கள். அவர்கள் திருச்சினுப்பள்ளியிலிருந்து போட்டு மெயிலில் பிரயாணம் செய்தவர்கள் வழியில் அவர்களுடைய டிக்கட்டை ரயில்வே அதிகாரிகளால் திருச்சினப்பள்ளியிலும், தஞ்சாவூரிலும் சோதிக்கப்ப. வண்டி, தஞ்சாவூரிலிருந்து கும்பகோ கொண்டிருக்கும்போது டிக்கெட் எ குற்றமென்று கண்டுபிடிக்கப்பட்டு கும்பகோ ஸ்டேஷனில் அதிக சார்ஜ் வசூலிக்கப்பட்டது.

ரயில்வே ஆக்ட் 1890-ம்ஞுத்திய 9-வது 113-வது ஸெக்ஷன்படி கம்பெனியில் 72 (c) ரூல்படி கம்பெனியார் வசூலித்ததாக வாதாடினபோதிலும் 68-வது ஸெக்ஷன்படி தஞ்சாவூரிலிருந்து கும்பகோணத்துக்கு பிரயாணம் செய்ய அனுமதி கொடுத்திருக்கிறபடியால் வாதிக்கு டிக்கிரி கொடுக்கப்பட்டது.

Cases from the Indian Law Reports.

இந்தியன் லா ரிபோர்ட்டு கேசுகள்.

—:o:—

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

சிவில் ரிவிஷன் மனு நெ. 455 of 1908.

ஜட்ஜி:— மி-ர் ஜ. வாலிஸ் துரையவர்கள் முன்பாக.

எல்லூரிலுள்ள, நிடடவோல், எஸ்டேட் கிலிவராகிய, ஜி - நாராயணசாமி நாயுடுகாரு.	அப்பீல் வாதி:

அரிகி திரபாதிநாயுடு ... அப்பீல் பிரதி வாதி.

தானகு டிஸ்டிரிக்ட்டு முன்சீப் கோர்ட்டாரின், ஸ்மால்காஸ் நெம்பரின் 23-12-1907 ன் தீர்ப்பின்பேரில் 1887ஞுத்திய 9-வது சட்டம் 25-வது ஸெக்ஷன்படி கீழ்கோர்ட்டு தீர்ப்பை மாற்ற ஹைகோர்ட்டாருக்கு கொடுத்த மனு.

தீர்ப்பு:—வாதி தன்னுடைய வியாச்சியத்தை ருசுப்படுத்த தவறியதால், நான் மாற்றுவதற்கு இல்லை அவன் தான் கொடுக்கவேண்டிய வீதம் இவ்வளவு தானென்று டிஸ்டிரிக்ட்டு முன்சீபிடம் ருசுசெய்யவில்லை. 1864-ம்ஞுத்திய ரிவினியூ ரிகவரி சட்டப்படி ஒரு ஜமீன்தாருடைய குடித்தனக்காரன் நிலக்காரனுகவே பாவிக்கப்படுவான். 1865-ம்ஞுத்திய 7-வது சட்டத்தைமீறி நடக்கக்கூடாது. ஆகையால் கவர்ன்மெண்டாருக்கு வரி கொடுக்க வேண்டியது தான் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

AGPUR JUDICIAL COMMISSINOR'S COURT.
நாகப்பூர் ஜூடிஷியல் கமிஷனர் கோர்ட்டு.

——:o:——

மிஸ்லேனியஸ் சிவில் அப்பீல் நெ. 36 of 1910.

ஜட்ஜி:—மி-ர் பாட்டன் O. J. C. அவர்கள் முன்பாக.

ஜம்நதாஸ் ... ... அப்பீல் வாதி

விநாயக் ... ... அப்பீல் பிரதிவாதி

வார்டா. ஜில்லா ஜட்ஜி அவர்களின் 28-4-1910வ யின் உத்திரவின்பேரில் இந்த அப்பீல் செய்யப்பட்டது.

மி-ர் M. V. அய்யங்கார். அப்பீல்வாதி வக்கீல்

தீர்ப்பு:—இந்த கேஸில் அப்பீல் பிரதிவாதி 1907-ம் ளூத்திய 3-வது சட்டம் 16-வது ஸெக்ஷன்படி இன்சால்வென்டமனு கொடுத்திருக்கிறான். அவன் ஒரு எழுத்துக்கூலிக்காரன். ஷெடியூல் குறிக்கப்பட்டகடன் கொடுத்தவர்களில் ஒருவனை, இந்த அப்பீல்வாதி, எழுத்துக்கூலி வேலையில் அப்பீல் பிரதிவாதிக்குள்ள வருமானங்களடங்கியகணக்கைகோர்ட்டாரிடம் தாக்கல் செய்யமனு கொடுத்தான். இந்த மனுவை ஷை சட்டம் 16-வதுஸெக்ஷன் 4-வது உட்பிரிவுபடி, ஜில்லா ஜட்ஜ் இம்மாதிரியான மனு ஏற்றுக்கொள்ள முடியாதென்றுதள்ளிவிட்டார். ஷை 16-சட்டம் 4-வது உட்பிரிவுபடி இன்ஸால் வெண்டாவைனுடைய சொத்தாவது அல்லது தீர்ப்புக்கு பிறகு ரிஸிவர் அல்லது கோர்ட்டாரிடமாவது ஒப்புவிக்கப்பட்ட சொத்தாவது பாத்தியப்படுமேயல்லது அவனது இனிசம்பாத்தியம் கட்டுப்படாது அவனுடையவருமானம்குடும்பச்சிலவுபோகஅதிகமிருந்தால் ரிஸிவர் அல்லது கோர்ட்டாரிடம் கொடுப்பது நியாயமாகும் ஷை ஸெக்ஷன்படி அவனது வருமானமும் சொத்தாகவே பாவிக்கலாம்.

கோர்ட்டார் அவனது இனிவரும்படியைப்பற்றியும் சில நிபந்தனைகளை ஏற்படுத்தி முடிவுசெய்யலாம். இக்காரணங்களைக்கொண்டு உத்திரவைமாற்றி மேல் கண்டவிபரங்களை அனுசரித்து முடிவு செயய ஜில்லா ஜட்ஜிக்கு உத்திரவு செய்யப்பட்டது.

ALLAHABAD HIGH COURT.
அலகாபாத் ஹைகோர்ட்டு.

——:o:——

கிரிமினல் ரிவிஷன் நெ. 364 of 1910.

ஜட்ஜிகள் :—மி-ர். ஜ. கிரிவின் }
,, மி-ர். ஜ. சேமியர் } அவர்கள் முன்பாக.

மேட்டான் ... ... மனுதாரர்.

சக்கரவர்த்தி ... ... எதிரிபக்கம்.

இந்தியன் பெனல்கோடு 182 செக்ஷன்படி மாஜிஸ்ட்ரேட்டிடம் பிரமாண வாக்குமூல சாக்ஷியத்துக்காவது, வேறே கோர்ட்டிடம் விசாரணையில் இருக்கும் கேஸை வேறே கோர்ட்டுக்கு மாத்தும் காரணத்துக்காக.

ம-காராஜஸ்ரீ, சத்திய சந்தரமுகர்ஜி...அப்பீல் வாதி வக்கீல்.

சக்கரவர்த்திக்காக ... ... கவர்ன்மென்ட் வக்கீல்

ஜ-ஷேமியர் தீர்ப்பு:—இந்தியன் பினல்கோடு 182-வது செக்ஷன்படி ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் செய்த பிராஸிகூஷன் உத்திரவின்பேரில் அதை மாற்றுகிறதற்காக கொடுத்த மனு.

ராம்தேவ் என்பவன் சப் டிவிஷன் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டாரிடம் எதிரிபேரில் இந்தியன் பினல்கோடு 323 செக்ஷன்படி குற்றத்தை ஸ்தாபித்தான். அவர் அதை விசாரிக்க தாசில்தார் கேஸை விசாரணைசெய்து முடிப்பதற்கு முன்பாக அந்த கேஸை அந்த கோர்ட்டிலிருந்து வேறே எந்த கோர்ட்டுக்காகவாவது மாத்த ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டுக்கு மனு கொடுக்கப்பட்டது. மாத்தலின் காரணம் என்னவென்றால் மங்கலியா என்பவனுக்கு தன்னை ஜாமின் கொடுக்கச் சொல்லி தான் கொடுக்காததால் தாசில்தாருடைய தூண்டுதலினால் இந்த கேஸ் வந்திருப்பதாக காணப்பட்டிருக்கிறது. ஆனால் இதற்கு ஆதாரங்கள் ஒன்றுமில்லை. ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் மனுதாரனை பிரமாண வாக்குமூலத்தின்மேல் விசாரித்து மறுபடியும் தாசில்தார்பேரில் குற்றம் சாட்டியதாய் பிராஸிகூஷனுக்கு உத்திரவு செய்தார்.

இந்தியன் பினல்கோடு 193-வது செக்ஷன்படி கேஸை மாத்த கொடுக்கும் மனுவில் கண்ட காரணங்களுக்கு எதிரி ஒருவனை பிராஸிகூஷன் செய்யக்கூடாது என்று சொல்லியிருக்கிறது. மாத்தல் விஷயத்தில் அவன் மாஜிஸ்ட்ரேட்மீது ஏதாவது அவதூராக எழுதி யிருந்தாலும் கூட இந்தியன் பெனல்கோடு 228-வது செக்ஷன்படி அவனை பிராசிகூஷன் செய்யக்கூடாது. அபபடிப்பட்ட விஷயத்தில் இந்தியன் பினல்கோடு 500-வது செக்ஷன்படி அவன் பேரில் மானஷ்டத்துக்கு பிராது செய்யலாம். 182-வது செக்ஷன்படி பிராசிகூஷன் செய்யக்கூடாது என்று தோனுகிறது. மாஜிஸ்ட்ரேட்டின் கேள்விக்கு பதில் சொல்லியிருப்பதால் 182-வது செக்ஷன்படி குற்றமாகமாட்டாது. 182-வது செக்ஷன்படி கைதி பப்ளிக் உத்தியோகஸ்தர்பேரில் சொல்வது குற்றமாகாது. இந்த யிடத்தில் மனுதாரன் ஒரு கைதிக்கு சமானம். இது விஷயமாக மதராஸ் ஹைகோர்ட்டு தீர்மானமும் என் தீர்மானத்துக்கு ஒத்திருக்கிறது. ஆகையால் பிராஸிகூஷனை ரத்து செய்யப்பட்டது.

ஜ. கிரிவின்:—நான் ஒத்துக்கொள்ளுகிறேன். இந்தியன் பினல் கோடு 182-வது செகஷன்படி செய்த பிராசிகூஷனை ரத்து செய்தோம்.

மனு ஒத்துக் கொள்ளப்பட்டது.

MADRAS HIGH COURT.
மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

2-வது சிவில் அப்பீல் நெ. 213 of 1908

ஜட்ஜிகள் :—மி-ர். ஜ. மில்லர் }
,, மி-ர். ஜ. மன்ரோ. } முன்பாக.

ஆலோசனை சபையிலுள்ள இந்தியா தேச செக்ரடெரி ஆப்ஸ்டேட் கிருஷ்ணு ஜில்லா கலெக்டர் மூலமாய்.— } பிரதிவாதி அப்பீல் வாதி.

பசுபதி செங்கரய்யா மற்றவர்களும்.— } வாதிகள் பிரதிவாதிவாதிகள் அப்பீல் பிரதி வாதிகள்.

மதருஸ் ரெவின்யூ வரி வசூல்:—

குடிவாடா ஜில்லா முன்சீப் கோர்ட்டாரின் 1905-ளுத்திய அசல் நெ. 363-தீர்மானத்தின் பேரில் மஸ்லிப்பட்டணம். சப் கோர்ட்டார் அவர்களின் 1907-ளுத்திய அப்பீல் நெ. 61-ன் தீர்மானத்தின் பேரில் இரண்டாவது அப்பீல்.

தீர்ப்பு:—ஜ-மில்லர். இந்த கேசில் விற்கப்பட்ட நிலமானது. 1864-ம் வருஷத்திய 2-வது சட்டப்படி வரி கொடுக்க தவரினவனுடைய நிலமென்பதற்கு ஸந்தேகமில்லை இதில் 42-வது செக்ஷனை ஏன் உபயோகப்படுத்தககூடா தென்பது கேள்வி.

அப்பீல் முதல் பிரதிவாதியின் வக்கீல் விற்கப்பட்ட நிலமானது சிக்கல் உள்ளவையென்றும் ஏனென்றால் இரண்டாவது செக்ஷன்படி கிஸ்திக்கு ஜாமீனுக வைககப்பட்ட நிலமல்லவென்றும் சொல்லுகிறார்- அவர் சொல்லுகிறபடி 2-வது செக்ஷன் ருசு ஆகாததால் அது சரி யென்று நான் சொல்லமாட்டேன். ஆனால் சரி யென்று வைத்துக்கொண்ட போதிலும் 2-வது செக்ஷனை அநுசரித்து 42-வது செக்ஷனில் விஸ்தாரமாய் சொல்லப்படவில்லை. முதலாவது குற்றத்தை பலப்படுத்தவாவது அல்லது வேறே எவ்விதமாவது ஏலத்துக்கு முந்தி எல்லா சிக்குகளும் மாற்றப்பட்டு விற்பனை எவ்வித யிடையூரு இல்லாமலிருக்கலாம்- நல்ல எண்ணத்துடன் முன் சிக்கு இல்லாமல் வாங்கப்பட்டதென்றும் வரி பாக்கிக்கு மட்டில் அது ஈடாக யிருக்குமென்றும் ஜட்ஜிகள் சந்தேகமில்லாமல் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் 2-வது செக்ஷனுக்கு அவர்கள் சொல்லுகிறபடி அர்த்தமாகமாட்டாது. அது அந்தக் கேள்வியைப்பற்றினதல்ல. 1864-ளுத்திய 2-வது சட்டம் 42-வது பிரிவுபடி ரிவினியூ கிஸ்தி பாக்கியைப்பற்றி தெரிவிக்கிறது. ஏலம் விடப்பட்ட நிலத்துக்கு எவ்வித முள்ள சுதந்தையு மில்லை.

விவதாப்பட்ட நிலம் சட்டப்படி நியாயமானதால் இந்த அப்பீலை ஒத்துக்கொண்டு 1-வது பிரதிவாதியின் வியாச்சியத்தை சிலவு துகையுடன் தள்ளிவிடப்பட்டது.

மன்றோ-ஜ. 3-வது பிரதிவாதிக்கு ஒரு பட்டாவில் காளிடிண்டியில் நிலமும் மற்றொரு பட்டாவில் சானுபத்திரதத்தில் நிலமும் உண்டு. இந்த எல்லா நிலங்களையும் வாதி யிடம் அடமானம் வைக்கப்பட்டிருக்கிறது. அடமானத்துக்கு பிறகு ஏற்பட்ட சர்க்கார் கிஸ்தி பாக்கிக்காக ரிவினியூ உத்தியோகஸ்தர்களால் ஷை நிலம் ஏலம் போடப்பட்டது. அந்த ஏலத்தொகை போதுமானதல்லாததால் சானுபத்திரவத்திலுள்ள நிலம் ஏலம் போடப்பட்டு 2-வது பிரதிவாதியால் வாங்கப்பட்டது. வாதியால் இந்த வியாச்சியம் கொண்டுவரப்பட்டு இந்த 2-வது அப்பீலில் சானபத்திரவாரம் ஏலத்தை ரத்து செய்து நிலம் தன்னுடைய தென்பதை ஸ்தாபிக்க கோறுகிறேன். டிஸ்டிரிக்ட் முன்சீப் ஏலத்தை ரத்து செய்யாமல் வாதியின் அடமானம் செல்லத்தக்கதென்கிறார். இதை சப் கோர்ட்டார் உறுதி செய்தார்கள். இந்த 2-வது அப்பீல் இந்தியா செக்ரிடரி அவர்கள் நிலம் தங்களுக்கு பாத்தியம் உண்டென்கிறார். காளி டிண்டி கிராமமும், சான பத்திராவரம் கிராமமும் ஒரே ஜில்லாவிலிருக்கிறது. 1890-ளுத்திய 1-வது இதில் செல்லத்தகுந்ததில்லை. 1864-ளுத்திய 2-வது சட்டபடி யாருக்கு பாத்தியதை தீர்மானிக்கவேண்டியது. ஷை சட்டம் 5-வது செக்ஷன்படி வரி கொடுக்கத்தவரினவனின், அசையும், அசையாபொருள்மீதும், கொடுக்கத்தவரினவன்மீதும் வசூலிக்கலாம். பாக்கிக்காக நிலத்தை விற்கப்படாதென்று சொல்லப்படவில்லை. பாக்கி கிஸ்திக்காக காளி டிரஸ்டி நிலங்களும் சான பத்திராவரம் நிலங்களும் அந்த காலத்தில் அவனுடையதாகையால் விற்கலாம் என்று தெளிவா யிருக்கிறது. ஏலத்துக்கு முந்தி வாதிக்கு அடமானம் வைக்கப்பட்டதென்பது உண்மை 1864ளு 2-வது சட்டம் 42-வது செக்ஷன்படி கிஸ்தி பாக்கிக்காக போடப்பட்ட ஏலம் முன் சுதந்தை உடையவன் ஆகமாட்டாது

இதனல் 5-வது செக்ஷன்படி நிலம் அடமானம் வைக்கப்பட்டிருந்தாலும் கூட நிலத்தின் சொந்தகாரனுடைய கிஸ்தி பாக்கிக்காக ஏலம் போடலாம் என்பது நிச்சயம். சானபத்திரவாத்திலுள்ள 3-வது பிரதிவாதியின் நிலத்தை காளி டிரஸ்டி கிராமத்து கிஸ்தி பாக்கிக்காக 1864ளு 2-வது சட்டபடி 42-வது செக்ஷன்படி ஏலம் போடலாம். சட்டம் ஒன்றோடொன்று வித்தியாசமா யிருக்கிறதென்று ஆக்ஷேபிக்கப்பட்டது. மற்ற விஷயம் எப்படி யிருந்தாலும் அவன் எல்லா நிலங்களும் கிஸ்தி பாக்கிக்கு ஈடாகும், ஆகையால் கீழ் தீர்ப்பை மாற்றி இந்த வியாச்சியத்தை 1-வது பிரதிவாதிகள் சிலவு துகையுடன் தள்ளி விடப்பட்து.

PUNJAB CHIEF COURT.
பஞ்சாப் சீப் கோர்ட்டு.

——:o:——

சிவில் ரிவிஷன்மனு நெ. 1519 of 1910.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஷாடன்—முன்பாக.

உத்தம் சண்ட் ... வாதி ... மனுதாரன்.

vs.

தன்பட்ராய் ... பிரதிவாதி ... ரெஸ்பான்டென்ட்.

கேசின் விபரம்:—இந்த கேசில் பிரதிவாதியின் சொத்தாகிய ஒரு வீட்டை ஏலத்தில் விற்பனைக்குக்கொண்டுவந்து மனுதாரன் (வாதி) கோர்ட்டாருடைய அனுமதியின்பேரில் அந்த வீட்டை வாங்கிக்கொண்டான். பிறகு பிரதிவாதி ஏலவிற்பனையில் வாதியாரையும் விலைகேட்க வொட்டாமல் தூர்ப்போதனைசெய்து தானே அந்த சொத்தை வாங்கிக்கொண்டானுகையால் அந்த விற்பனையை ரத்து செய்யும்படிக்கு கோர்ட்டுக்கு மனு செய்துக்கொண்டான்- கீழ் கோர்ட்டார் இருவரும் ஏல விற்பனையில் ஒழுங்கீனங்கள் நடந்ததாய்க் கண்டு ஏல விற்பனையை ரத்துசெய்து விட்டார்கள். அந்த ஒழுங்கீனங்கள் என்னவென்றால் ஏல நோடீசில் தாவாநெம்பரும் இன்ன இடத்தில் ஏலம்போடப்படும் என்னும் சமாசாரமும் காணப்படவில்லை. ஜில்லா கோர்ட்டாரும் அம்மாதிரியாகவே ஒழுங்

னைங்கள் இன்னதென்று சொல்லாமலேயே முன்சீபு கோர்ட்டாருடைய உத்தரவை ஊர்ஜிதம் செய்தார்கள்.

தீர்மானம்:—பிரதிவாதி அவன் கோர்ட்டுக்குச் செய்துகொண்ட மனுவில் இன்ன ஒழுங்கீனமென்று காண்பித்திராவிடில் அதைப்பற்றி கோர்ட்டார் விசாரிப்பது சரியல்ல அவ்விதமான ஒழுங்கீனத்தினால் பிரதிவாதிக்கு யாதேனும் நஷ்டம் நேரிட்டதா யென்று கூட கோர்ட்டார் கவனிக்கவேண்டியது அவசியம்.

ஆகையால் கீழ் கோர்ட்டாருடைய உத்தரவைரத்துசெய்துவிட்டு மனுவை மறுபடியும் விசாரணை செய்யும்படிக்கு தீர்மானிக்கப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 9-வது வால்யம் 816,

ALLAHABAD HIGH COURT.
அலகாபாத் ஹைகோர்ட்டு.

—:o:—

லெட்டர்ஸ் பேடெண்ட் அப்பீல் நெ. 22 of 1910.
(புல் பெஞ்சு).

ஜட்ஜிகள் :— சீப் ஜஸ்டிஸ் சர் சான்ஸ்டான்லி.
,, மிஸ்டர் ஜஸ்டிஸ் பானெர்ஜி.
,, மிஸ்டர் ஜஸ்டிஸ் கிரிபின்.

ராம்சாரம் ... டிக்கிரிதாரன் ... அப்பீல் வாதி.

vs.

தாஸரத்தேவரரி பிரதிவாதிகள் ... ரெஸ்பான்டெண்டுகள்.

கேசின் விபரம்.—இந்த நம்பரில் வாதி பிரதிவாதிகளின் பேரில் 1893-ம் ஷுத்தில் ஓர் தொகைக்கு டிக்ரி அடைந்து 1905-ம் வருஷத்தில் டிக்ரியை நிறைவேற்றுவதற்கு மனு செய்துக்கொண்டான். அதை கோர்ட்டார் யாதோ காரணத்தினால் தள்ளிவிட்டார்கள். பிறகு வாதி மனுசெய்து மறுபடியும் பைலில் எடுத்துக்கொள்ளப்பட்டது. பிறகு படிப்பணம் கட்டாததினால் மறுபடியும் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்மேல் மனு கொடுத்து மறு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்பொழுது பிரதிவாதி கடைசியாய் செய்யப்பட்ட மனு டிக்ரிக்கு 12-வருஷம் கடந்த பிறகு செய்யப்பட்டதென்னும் காரணத்தினால் டிக்ரிக்கு காலதோஷம் வந்துவிட்டதென்று வாதித்தான்.

தீர்மானம் :—கடைசியாய்ச் செய்யப்பட்ட மனு முன் செய்யப்பட்டிருக்கும் நிறைவேற்றும் மனுவை விசாரிக்கும்பொருட்டாகையால் கடைசியாய் செய்யப்பட்ட மனு டிக்ரியை நிறைவேற்றுவதற்காக செய்யப்பட்ட பிரத்தியேக மனு அல்ல என்று கண்டு ஷை டிக்ரிக்குக் காலதோஷம் வரவில்லை யென்று ஹைகோர்ட்டார் டிக்ரியையும், ஜில்லா கோர்ட்டார் உத்தரவையும் ரத்துசெய்துவிட்டு முன்சீபு செய்த உத்தரவை ஊர்ஜிதம் செய்தார்கள்.

இதற்காதாரமாய் இ, லா. ரி. 18 அ. 482 பார்க்கவும்.

லாகூர் இந்தியன் கேசுகள் 9-வது வால்யம் 817.

ALLAHABAD HIGH COURT.
அலகாபாத் ஹைகோர்ட்டு.

—:o:—

2-வது சிவில் அப்பீல் நெ. 364 of 1910.

ஜட்ஜி :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பானெர்ஜி.

ஆர்தர்பார்பர் ... பிரதிவாதி ... அப்பீல் வாதி.

VS.

பத்ரிநாராயண்ராய். வாதிகள் ... ரெஸ்பான்டெண்டுகள்.

ஈஸ்மெண்ட் ஆக்ட் (5 of 1882) வது பிரிவு:—

கேசின் விபரம்:—எ என்பவன் தன்னுடைய நிலத்தின் பேரில் பி என்பவன் ஓர் ஆசார் கட்டியிருப்பதாயும் அதை இடித்துவிட்டு நிலத்தைத் தனக்கு ஒப்புவிக்கும்படிக்கும் தாவா செய்தான். பி என்பவன் அந்த நிலம் அவனுடைய சுவாதீனத்தில் அநேக காலமாயிருப்பதாகவும் அந்த ஆசாரை அவன் எ என்பவனுடைய சம்மதத்தின்பேரில் தான் கட்டினதாகவும் வாதித்தான். கோர்ட்டார் அந்த நிலம் எ என்பவனுக்குச் சொந்தமானதுதானென்று கண்டு ஆனால் அதன்பேரில் கட்டியிருக்கப்பட்ட ஆசாரோ எ என்பவனுடைய சம்மதத்தின் பேரில் தான் கட்டப்பட்டதாகையால் அந்த ஆசாரை இடித் ஒப்புவிக்கும்படி உத்தரவு செய்யவில்லை. பிறகு எ என்பவன் அந்த ஆசாருக்கருகாமையில் ஓர் சிறிய மதில் சுவறு கட்டினான். அதன் பேரில் பி என்பவன் அந்த சிறிய சுவற்றை இடித்துத் தான் அவ்விடம் போவதற்கு வழி கொடுக்கவேண்டுமென்று எ என்பவன் மீது தாவாசெய்தான்.

தீர்மானம்:—முந்திய டிக்ரியினால் பி என்பவனுக்கு உறிமை சுதந்தரம் ஒன்றும் உண்டாகவில்லை யென்றும் இந்த உறிமை சுதந்தரத்தைப்பற்றி பி என்பவன் முந்திய நம்பரில் வாதிக்கவில்லை யென்றும் கண்டு வாதி அப்படிப்பட்ட டிக்ரி கேட்பதற்கு நியாயம் கிடையாதென்று தீர்மானித்தார்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 9-வது வால்யம் 813.

மதராஸ் ஹைகோர்ட்டு.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

சிவில் அப்பீல்.

போஜா செல்லப்பரெட்டி:—வாதி—அப்பீல்வாதி.

விருத்தாசல ரெட்டி:—பிரதிவாதி—அப்பீல் பிரதிவாதி.

லாபாயிண்ட்:—ஒரு நிலம் ஒருவன் பேரில் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டிருக்கிறது. மற்றொருவன் அந்த நிலத்திற்குச் சர்க்கார் தீர்வை முதலியவை செலுத்தி அநேக வருஷகாலமாக அனுபவித்துக் கொண்டு வருகின்றான். இப்படியிருக்கும்போது இந்நிலம் எவன் பெயரால் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டிருக்கிறதோ அவன் தானே வலியசர்க்கார் தீர்வையைச் செலுத்திவிட்டு நிலத்தை அனுபவித்து வருபவன் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்து இந்தியன் காண்டிராக்ட் ஆகட் 69-வது பிரிவின்படிவசூல் செய்யலாமா ?

கேசின்விவரம்:—திருச்சினாப்பள்ள ஜில்லா குளித்தலையில் ஒரு நிலம் வாதி பெயரில் ரிஜிஸ்ட்டர் செய்யப் பட்டிருந்தது. ஆனால் அந்த நிலம் வெகு காலமாக பிரதிவாதியின் அனுபோகத்திலிருந்துகொண்டு வருகின்றது. அவரே சர்க்காருக்குச் சேரவேண்டிய கிஸ்திமுதலியவைகளைச் செலுத்திக்கொண்டு வருகிறார். இப்படியிருக்கும்போது வாதி அந்நிலம் தம்முடையதென்றும் தமக்குச் சேரவேண்டுமென்றும் பிரதிவாதியின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். இந்த வியாஜ்ஜியம் விசாரணையிலிருந்துகொண்டு வரும்போது ஷை நிலத்தின் சர்க்கார் தீர்வையைத் தம்மிடமிருந்து வசூல் செய்யும்படியாக ரெவினியூ அதிகாரிகளுக்கு மனுசெய்ய, அந்தப்பிரகாரம்வாதியிடமிருந்து வசூல் செய்யும்படி தாசில்தார் கிராமமுனிசீப்புக்கு உத்திரவு செய்ய, வாதி கிராமமுனிசீப்பினிடம் தீர்வையைச் செலுத்திவிட்டார். வாதி, பிரதிவாதி பேரில் நிலத்திற்காகச் செய்திருந்த வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டது.

இப்போது வாதி தாம் செலுத்திய சர்க்கார் தீர்வையாகிய ரூ. 45-யை பிரதிவாதியிடமிருந்து வசூல் செய்வதற்காகப் பிரதிவாதியின் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார்

டி. மு. கோர்ட்டார் விசாரணை செய்து வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் சிவில் ரிவிஷன்மனு தாக்கல் செய்தார்.

லாயர்கள்:—மிஸ்டர் T. V. முத்துகிருஷ்ண அய்யர் மனுதார் தரப்பிற்கும், மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர், அப்பீல் பிரதிவாதி தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

உத்திரவு:—வாதி தாமே வேணுமென்று வலியகிஸ்தியைச் செலுத்தியிருப்பதாகத் தீர்மானித்திருக்கிறார். அப்படித் தீர்மானித்திருப்பது சாக்ஷி விசாரணை செய்து தீர்மானித்திருப்பதாகத் தெரியவில்லை ஆகையால், வாதி தாமே வேணுமென்று வலிய கிஸ்தியைச் செலுத்தியிருக்கிறாரா அல்லாவா என்கிற ப்ரஸ்னையைப்பற்றி இருகக்ஷிக்காரர்களும் விடக்கூடிய சாக்ஷிகளை விசாரணைசெய்து முடிவும் செய்து அனுப்பும்படியாக டி. மு. கோர்ட்டாருக்கு உத்திரவு செய்கிறோம்.

நாளது தேதி முதல் ஒரு மாதத்திற்குள்ளாக டி. மு. கோர்ட்டார் செய்த தீர்மானம் அனுப்பப்படவேண்டும். ஷை தீர்மானம் இந்தக்கோர்ட்டிற்கு வந்துவிட்டதென்றும் புயிரங்கப்படுத்தப்பட்டபின் ஒரு வாரத்திற்குள்ளாக ஷை தீர்மானத்திற்கு ஏதேனும் ஆக்ஷேபனைகளிருந்தால் கக்ஷிக்காரர்கள் தாக்கல் செய்யவேண்டும்.

இதன்பேரில் டி. மு. கோர்ட்டார் மறுபடியும் கக்ஷிக்காரர்களைத் தருவித்து இருதரப்பிலும் விசாரணை செய்து பிரதிவாதி, வாதியின்குமாரத்தியை விவாகம் செய்திருந்ததாகவும் அந்தப்பெண்ணிறந்துபோய் விட்டதென்றும் இறந்து போனதுமுதல் இருவருக்கும் வனஸ்தாபமுண்டாகி வாதி இதே கோர்ட்டில் பிரஸ்தாப நிலம் தம்முடையதென்று சொல்லி பிரதிவாதியின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்திருந்தார் என்றும் அந்தவியாஜ்ஜியம் 1901-ம் ஷுத்திய 1183-வது அசல் வியாஜ்ஜியமாக தாக்கல் செய்யப்பட்டதென்றும் அந்தவியாஜ்ஜியம் விசாரணையிலிருந்து வந்தபோது வாதி ஷை நிலத்தின் கிஸ்தியைத் தம்மிடமிருந்து வசூல்செய்ய கிராம முனிசீப்பிற்கு உத்தரவுசெய்யும்படி தாசீல்தாருக்கு மனு செய்துகொண்டதாயும் தாசீல்தாரும் அப்படியே உத்தரவுசெய்ததாகவும் அதன்பேரில் வாதி கிராமமுனிசீப்பினிடம் கிஸ்தியைச் செலுத்தினதாகவும் பிரதிவாதி கிஸ்திசெலுத்திவந்தபோது அதைக் கிராமமுனிசீப்பெற்றுக்கொள்ளவில்லை என்றும் இதற்கு முந்திய 20-பசலிகளுக்கு அந்தநிலத்திற்காகப்பிரதிவாதியே கிஸ்தியைச் செலுத்திவந்திருக்கிறார் என்றும் இந்தப்பசலிக்குச் செலுத்தவும் தயாராயிருந்தாரென்றும் வாதி இந்தப்பசலிக்குமட்டிலும் கிஸ்திசெலுத்துவதற்கு யாதொருகாரணத்தையும் காணோமென்றும் ஆதலால் ஷை அசல் வியாஜ்ஜியத்தில் நிலம் தம்முடையதென்று ஸ்தாபிக்கவேண்டுமென்கிறகருத்துடன் வாதி அந்தப் பசலிக்குமட்டிலும் கிஸ்தியைச் செலுத்தியிருக்கிறதாக எண்ணவேண்டுமென்றும் ஆகவே வாதி வலிய தாமே இந்தக்கிஸ்தியைச் செலுத்தியிருக்கிறார். என்று தீர்மானித்து, இத்தத் தீர்மானத்தை ஹைகோர்ட்டாருக்கு அனுப்பினார்.

தீர்ப்பு:—இந்த வியாஜ்ஜியத்தில் நாம் தீர்மானிக்கவேண்டிய விஷயமென்னவென்றால், வாதி தம்பெயரில் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட நிலத்திறகு வேணுமென்று வலியச்செலுத்திய கிஸ்தித்தொகை ரூ. 45 யை பிரதிவாதியிடமிருந்து வசூல்செய்யப் பாத்தியமுடையவரா ?

இந்தியன் காண்டிராக்ட் ஆக்ட் 69-வது பிரிவுப்படி ஒருவன் சட்டப்பிரகாரம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கும் ஒரு தொகை செலுத்தப்படுவதில் பற்றுதலுடைய ஒருவன் ஷை தொகையைச் செலுத்தினால் இவனுக்கு அவன் ஷை தொகையைத் திருப்பிக்கொடுத்துவிடவேண்டும் என்று காண்டிராக்ட் ஆக்ட் 69-வது பிரிவு கூறுகின்றது.

அதாவது, உதாரணமாக A. என்கிற ஜமீன்தார் ஒரு நிலத்தை B. என்பவனுக்குக் குத்தகைவிடுகிறார். A. சர்காருக்குச் செலுத்தவேண்டிய கிஸ்தி நிலுவையில் விழுந்துபோக, சர்க்கார ஷை நிலத்தை ஐப்திசெய்து ஏலம்போடும்படி உத்தரவுசெய்துவிட்டார்கள். அப்படி ஷை நிலம் ஏலம்போட்டால் ரெவினியூ சட்டத்தின்படி B. என்பவனுடைய குத்தகை பாத்தியதை ரத்துசெய்யப்படும். ஆகையால் ஷை நிலம் ஏலம் போடப்படுவதைத் தடுக்கும்பொ

ருட்டு B. என்பவன் கிஸ்தியைச் செலுத்தினல் அந்தத் தொகையை A. என்பவர் B. என்பவனுக்குச் செலுத்திவிடவேண்டும். இந்தக் கேஸில், சர்க்கார் தீர்வையைச்செலுத்தக் கடமைப்பட்டவர் பிரதிவாதியல்ல. அவர் தீர்வையைச் செலுத்தச் சட்டப்பிரகாரம் கடமைப்பட்டவரல்லாதவரேனும், அத்தீர்வை செலுத்தப்படுவதில் பற்றுதலுடையவர். அல்லது கவலையுடையவர். கவர்ன்மெண்டார் நிலத்தீர்வையை ரெவினியூசட்டத்தை அனுசரித்து வசூல்செய்துவருகிருர்கள். ஒரு நிலத்தின் தீர்வையை செலுத்தப்படாவிட்டால் அந்நிலம் ஜப்திசெய்து ஏலம்போடப்படுவதுமன்றி, அந்நிலம் எவன் பெயரால் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதோ அவனுடைய இதர சொத்துக்களை ஜப்திசெய்யவும் ஏலம்போடவும் அவனை ஜெயிலில் பிடித்துவைக்கவும் சட்ட ஆதாரமிருக்கின்றது ஆனல் அந்நிலத்தை எவன் அனுபவித்துவருகிருனே அவனை இம்மாதிரிசெய்ய சட்ட ஆதாரமில்லை. ஷை நிலம் ஜப்திசெய்து ஏலம்போடப்பட்டால் நிலத்தை அனுபவித்து வருகிறவன் தன்னுடைய அனுபவ பாத்தியதையை இழந்துவிடவேண்டியதாய் நேரிடும். ஆகையால் நிலத்தை அனுபவித்துவருபவன் மேற்படி நிலத்திற்குத் தீர்வை செலுத்தப்படுவதில் பற்றுதலுடையவனே யொழிய தீர்வை செலுத்தத் சட்டப்பிரகாரம் கடமைப்பட்டவனல்ல. ஆகையால் இந்த வியாஜ்ஜியத்தில் சம்பந்தப்பட்ட நிலம் பிரதிவாதியின்பேரில் ரிஜிஸ்டர்செய்யப்படாமல் அவருடைய அனுபோகத்திலிருப்பதால் அவர் இந்தியன் கண்டிராக்ட் ஆக்ட் 69-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் சட்டப்பிரகாரம் செலுத்தக் கடமைப்பட்டவராக மாட்டார். ஆகையால் வாதி செலுத்திய தொகையை இந்தியன் காண்டிராக்ட் ஆக்ட் 69-வது பிரிவின்படி பிரதிவாதியிடமிருந்து வசூல்செய்ய முடியாது. இதுவுமன்றி, ரெவினியூ ரிக்கவரி ஆக்ட் 35-வது பிரிவின்படியும் வாதி இந்தத்தொகையைப் பிரதிவாதியிடமிருந்து வசூல் செய்யமுடியாது ஏனெனில், ஷை நிலம் கிஸ்திபாக்கிக்காக ஜப்திசெய்து ஏலம் போடப்படவில்லை. அப்படி யிருந்தபோதிலும் வாதி ஷை நிலத்தை அனுபவித்து வருகிறவருமல்ல. அதை அடமானமாகவைத்துக்கொண்டு கடன் கொடுத்திருப்பவருமல்ல. இதுவுமன்றி சி. பு. கோ. 501-வது பிரிவின்படியும் இந்தத்தொகையைப் பிரதிவாதியிடமிருந்து வசூல் செய்யமுடியாது. ஷை 501-வது பிரிவில், ஒரு நிலப்பாத்தியதையைப்பற்றி கக்ஷிக்காரர்கள் கோர்ட்டில் வியாஜ்ஜியமாடி வரும்போது அந்நிலம் தீர்வைக்காக சர்க்காரால் ஜப்திசெய்யப்பட்டு ஏலம் போடப்பட்டால் ஷை நிலம் எந்தக்கக்ஷிக்காரனுடைய வசத்திலிருக்கிறதோ அவன் ஷை கிஸ்திபாக்கியைச் சர்க்காருக்குச் செலுத்தி ஏலத்தை ரத்துசெய்யத் தவறிப்போயவிட்டால் எதிர்கக்ஷிக்காரன் ஷை கிஸ்தியைச்செலுத்திவிட்டு அந்நிலத்தைத் தன் வசம் ஒப்புவிக்கும்படி கோர்ட்டாருக்கு மனுசெய்துகொள்ளலாமென்றும், பிறகு அந்தக்கிஸ்தியை எதிரியினிடமிருந்து வசூலிக்கலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பிரஸ்தாப வியாஜ்ஜியத்தில் ஷை நிலம் கிஸ்திபாக்காக சர்க்காரால் ஏலம்போடப்படவில்லை. பிரதிவாதி கடந்த 20 பசலிகளுக்குத் தீர்வையைச் செலுத்தியிருப்பதுமன்றி பிரஸ்தாப பசலிக்கும் தீர்வையைக் கிராம முனிசீப்பினிடம் செலுத்தப்போனர். ஷை நிலம் வாதி பெயரால் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிற படியால் வாதி தீர்வையைப் பிரதிவாதியிடமிருந்து வசூலிக்கக்கூடாதென்று ஆக்ஷேபிக்க கிராமமுனிசீப் தாசில்தாருடைய உத்தரவை அனுசரித்துப் பிரதிவாதி செலுத்தத் தயாராயிருந்த கிஸ்தியைப் பெற்றுக்கொள்ளவில்லை.

ஆகையால் எவ்விதமாய்ப் பார்த்தாலும் இந்தக் கிஸ்தியை வாதி தாமேவேணுமென்று செலுத்தியிருக்கிருர் என்று முடிவுசெய்யவேண்டியதா யிருக்கிறது. ஆகையால் இந்த சிவில் ரிவிஷன்மனு செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

இ. லா. ரி 30 சென். 35.

ஜட்ஜி:—சீப் ஜஸ்டிஸ் சர் ஆர்னல் வொயிட்.

கிரிமினல் அப்பீல்.

மாரிவேலய்யன்—கைதிகள்—அப்பீல் வாதிகள்.

சக்ரவர்த்தியார்—பிரயாதி—அப்பீல் பிரதிவாதி.

கேசின் விபரம்.—கைதிகள் பேரில் இந்தியன் பினல்கோட் 395-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் தீவட்டிக்கொள்ளைக் குற்றம்சாட்டப்பட்டு கோயமுத்தூர் செஷன்கோர்ட்டாரால் விசாரணைசெய்யப்பட்டு பலவிதமான தண்டனை விதிக்கப்பட்டது. செஷன் கோர்ட்டில் விசாரணை ஜூரர்கள் முன்னிலையில் நடத்தப்பட்டது செஷன் ஜட்ஜி ஜூரர்களுக்குக் கேசின் சாராம்சத்தை எடுத்துச்சொன்னபோது அடியிற்கண்டபடி சொன்னர்.

"குற்றவாளிகளின் தீவட்டிக்கொள்ளை அடித்ததாகக் குற்றம்சாட்டப்பட்டிருக்கிருர்கள்.

ஐந்து பேர்களுக்குக் குறையாமல் எத்தனைபேர்கள் சேர்ந்து கொள்ளை அடித்தாலும் அக்குற்றம் தீவட்டிக்கொள்ளைக் குற்றம் என்று சொல்லப்படும்.

"ஒவ்வொரு குற்றவாளிபேரிலும் ஏற்பட்டிருக்கும் சாக்ஷியத்தைக்குறித்து யோசிக்குமளவில், 1, 2, 4, சாக்ஷிகள் முதல் குற்றவாளிசெய்த குற்றத்தைக்குறித்து சொல்லியிருக்கிருர்கள். இவர்கள் எல்லோரும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். முதல் குற்றவாளிசெய்த குற்றத்தைப்பார்க்கத் தங்களுக்கு நல்ல வசதியிருந்ததென்றும். அவன் முதல் சாக்ஷி

யைப்பிடித்து இழுத்ததையும், நான்காவது சாக்ஷி கழுத்திலிருந்த அட்டிகையைப் பிடுங்கினதையும் தாங்கள் கண்ணாரப்பார்த்த தாகச் சொல்லுகிருர்கள். 1, 2, 12 சாக்ஷிகள் இரண்டாவது குற்றவாளி செய்தகுற்றத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிருர்கள். 1, 2, 6, 12-வது சாக்ஷிகள் மூன்றாவது குற்றவாளியைக்குறித்தும், 1, 2, 8, 10, 11-வது சாக்ஷிகள் நான்காவதுகுற்றவாளியைக் குறித்தும், 1, 2, 9, 10, 12-வது சாக்ஷிகள் ஐந்தாவதுகுற்றவாளியைக் குறித்தும், 1, 2, 8, 9, 10, 11-வது சாக்ஷிகள் 6-வது குற்றவாளியைக்குறித்தும், 6, 7, 8, 10, 11-வது சாக்ஷிகள் 7-வது குற்றவாளியைக்குறித்தும் 6, 7, 8, சாக்ஷிகள் 8-வது குற்றவாளியைக்குறித்தும், 2, 5, 6, 7, சாக்ஷிகள் 9-வது குற்றவாளியைக் குறித்தும் பேசியிருக்கிருர்கள்."

தண்டனை அடைந்த கைதிகள் ஹைகோர்ட்டிற்கு அப்பீல் செய்துகொண்டார்கள்.

அப்பீல் கிரௌண்டுகள்:—(1) அப்பீல்தார்கள் பேரில் சாட்டப்பட்டிருக்கும் தீவட்டிக்கொள்ளைக் குற்றம் எப்படியிருக்கவேண்டும்? என்னென்ன செய்கைகள் சேர்ந்தால் தீவட்டிக்கொள்ளைக்குற்றமாகுமென்று செஷன்ஜட்ஜிஜூரர்களுக்கு எடுத்துக் கூறத் தவறிப்போயிருக்கிருர். அப்பீல்தார்கள்சேர்ந்து அடித்தினதாகச் சொல்லியபடி தீவட்டிக்கொள்ளையில் இன்னின்னவன் இன்னின்ன செய்கையைச் செய்தான் என்று ஜட்ஜிஜூரர்களுக்கு எடுத்துக் கூறத் தவறிப்போயிருக்கிருர்.

லாயர்கள்:—பாரிஸ்டர் மிஸ்டர் S. கௌடல் அப்பீல்தாரதரப்பிற்கும், பிராசிக்கியூஷன் தரப்பில் பப்ளிக் பிராசிக்கியூட்டருக்குப் பதிலாக மிஸ்டர் J. L. ரொஸாரியோவும் பேசினர்கள்.

தீர்ப்பு:—முதல் அப்பீல் கிரௌண்டு என்னவென்ருல், இன்னின்ன அம்சங்கள்சேர்ந்தால் தீவட்டிக்கொள்ளைக் குற்றமாகுமென்று சட்ட தாற்பரியத்தை ஜட்ஜி ஜூரர்களுக்கு எடுத்துக்கூறத் தவறிப்போயிருப்பதாக அப்பீல்தார்கள் கூறுகிருர்கள். ஜட்ஜி தீவட்டிக்கொள்ளைக் குற்றத்தைப்பற்றி என்ன சொல்லியிருக்கிருர் என்ருல், 5-பேர்களுக்குக்குறையாமல் சேர்ந்து கொள்ளையடித்தால் அது தீவட்டிக்கொள்ளையாகுமென்று சொல்லியிருக்கிருர். ஜட்ஜி சொல்லியிருக்கிறவரையில் சரியானதாயிருந்தபோதிலும் இம்மட்டிலும்சொல்லி நிறுத்திவிட்டது போதுமானதல்ல. இன்னின்ன அம்சங்கள் சேர்ந்தால் தீவட்டிக்கொள்ளைக் குற்றமாகுமென்றும் இ. பி. கோ. 390-வது பிரிவில் தீவட்டிக்கொள்ளைக் குற்றத்தைப்பற்றிச் சொல்லியிருப்பதையும் எடுத்துக்கூறியிருக்கவேண்டும். எல்லா ஜூரர்களும் சட்டஞானமுடையவர்களாக விருக்கமாட்டார்கள். சாக்ஷிவாக்குமூலங்களைக்கொண்டு கைதிகள் செய்த குற்றம் தீவட்டிக்கொள்ளையா அல்லவா என்று நிர்ணயிக்க அவர்கள் எல்லோருக்கும் சட்டஞானமிருக்கமாட்டாது. ஆகையால் கிரிமினல் புரொசீஜர்கோட் 297-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் ஜட்ஜி ஜூரர்களுக்குக் கைதிகள் பேரில் எந்தக்குற்றம் சாட்டப்பட்டிருக்கிறதோ அந்தக்குற்றம் என்னென்னன்ன அம்சங்கள் பொருந்திருக்கின்றனவென்று எடுத்துச்சொல்லவேண்டும். அப்படி எடுத்துச் சொல்லாமற்போவது சாமானிய ஒழுங்கீனமல்ல; சட்ட ஆக்கினைக்கு விரோதமாய் நடந்ததாக எண்ணப்படவேண்டும்.

இரண்டாவது அப்பீல் கிரௌண்டு என்னவென்ருல், ஒவ்வொரு குற்றவாளியும் இன்னின்ன குற்றத்தைச் செய்திருக்கிருன் என்றும் சாட்சி பேதங்களையும் ஜட்ஜி ஜூரர்களுக்கு எடுத்துக் கூறவில்லை என்பதே. ஜட்ஜி, முதல்குற்றவாளி மட்டிலும் இன்ன குற்றம் செய்திருக்கிருன் எடுத்துக்காண்பித்திருக்கிருர். மற்றக் குற்றவாளிகள் செய்த குற்றத்தை விவரமாய் எடுத்துக்காட்டாமல் பொதுவாய் இன்னின்ன சாட்சி இன்னின்ன குற்றவாளியைப்பற்றி சாட்சியம் சொல்லியிருக்கிருர்கள் என்று சொல்லியிருக்கிருர். அதுவும் சட்டவிரோதம். ஒவ்வொரு குற்றவாளியும் இன்னின்னகுற்றம் செய்திருப்பதாகச் சாட்சியத்தால் புலப்படுகிறதென்றும், சாட்சியத்தின் தாரதம்மியத்தையும் ஜட்ஜி ஜூரர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். ஆகையால் செஷன்கோர்ட்டார் செய்திருக்கும் குற்றஸ்தாபனையை ரத்துசெய்து அப்பீல்தார்களையும் புனர்விசாரணை செய்து கேசைப் பைசல் செய்யும்படியாக உத்தரவு செய்கிறோம் என்று தீர்ப்புசொல்லப்பட்டது.

இ. லா. ரி. 30 சென் 44.

(Republished on request.)

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

லெட்டர்ஸ் பேடெண்ட் அப்பீல் நெ. 1 of 1910.

ஜட்ஜுகள் மிர். ஐ. அப்டுர்ம் ரஹீம் மி-ர். ஐயலிங்.

தச்சகோவில் உன்னிசோயா...வாதி...அப்பீல் வாதி

vs.

அரப்பயில் பாதுப்டி உம்மா......பிரதிவாதி......ரெஸ்பான்டெண்டு.

சி-பி-கோ(14 of 882)23-வது பிரிவு.

எ என்ப பி என்பவன்மீதில்டிக்ரிபெற்றிருந்தான். எ என்பவன் சிஎன்பவனுக்குக்கொடுக்கவேண்டியபாக்கிக்காக சி என்பவன் எ என்பவன் பேரில்டிக்ரி அடைந்து அந்த டிக்ரியை நிறைவேற்ற எ என்பவன் பி என்பவன் பேரில் பெற்றிருந்தடிக்ரியை ஜப்திசெய்தான்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JAN 1912
MADRAS

இவ்விதமாய் எ என்பவன் அடைந்திருந்த டிக்ரியை சி என்பவன் நிறைவேற்றலாமே யல்லாமல் எ என்பவன் ஒன்றும் செய்ய நியாயம் கிடையாது. ஆனால் சி என்பவன் ஜப்திசெய்த பிறகு அந்த டிக்ரியின் பேரில் யாதொரு நடவடிக்கையும் நடத்தாமல் பிரதிவாதியுடன் உள்ளுளவாய்ச்சேர்ந்துக்கொண்டு அசாரமா யிருந்து அந்த டிக்ரிக்கு காலதோஷம் நேரிடும் படிச்செய்தால் எ என்பவன் சி என்பவன் பேரில் நஷ்டத்திற்குத் தாவா செய்யலாமே யல்லாமல் அவன் பி என்பவன் பேரில் அடைந்திருந்த டிக்ரியை நிறைவேற்றி அமுல் நடத்த நியாயம் கிடையாது. மி-ர். ஜ-சங்கரன்நாயர் செய்த தீர்ப்பை ரத்துசெய்துவிட்டு சப் கோர்ட்டார் செய்த தீர்ப்பை ஊர்ஜிதம் செய்தார்கள். (5 இ. கே. 56 7 ம-லா. டை 262 பார்க்கவும்) இதற்காதாரமாய் எடுத்துக் கூறின கேசுகள்.

மி-ர்-ஜ-சங்கரன் நாயர் அவருடைய தீர்மானத்தில் கூறியிருந்த அத்தாரட்டிகள்.

பாதும்மா பி இதிவி பி- 13 ம-லா-ஜ-265.

சாமிபிள்ளை-vs-கிருஷ்ணசாமி செட்டி இ-லா-ரி-21 ம 417 ஆதாரசந்திர தாஸ்-vs-லால் மோஹன் தாஸ் இ-லா-ரி. 27 கல் 778, 1 கல்-வீ-நோ 676. லெட்டர்ஸ் பேடெண்ட் அப்பீலில் இரண்டு ஜட்ஜுகள் செய்ததீர்மானத்திற்கு அத்தாரட்டிகள்.

மனவர் உசேன்-vs-ஜெயின் பிரசஷங்கர் இ-லா-ரி-27 அ 119 1905 அ. வீ. நோ. 182 2 அ. லா. ஜ. 376.

பூர்ணசந்திர மண்டல்-vs-ராதாரத்தாளி இ-லா. ரி. 33 கல் 8674; கல். லா. ஜ. 141.

குருபதேபபாசப்ப-vs-வீரப்பத்ரப்பா-இ. லா.ரி. 7 பம் 459.

லாகூர் இந்தியன் கேசுகள் 9 வது வால்யம் 786.

2 ம. வீ. நோ. 187; 9 ம-லா-டை 312.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

கிரிமினல் அப்பீல் நெ 670 of 1910

ஜட்ஜுகள் { மி-ர். ஜ. அப்துர் ரஹீம், மிர்-ஜ-ஏய்லிங் .... } முன்பாக.

திருநெல்வேலி பலவேசதேவன் வகையரா அப்பீல் வாதிகள்.

vs.

சக்கரவர்த்தி ... ரெஸ்பான்டெண்ட்.

கி-பு-கோ- (5 of 898) 303 வது பிரிவு.

ஜூரிகளுடன் விசாரணைசெய்யப்பட்ட கேசில் ஜட்ஜு ஜூரிமார்களுக்குத் தெரிவிக்கும் சார்ஜுடன் ப்ராசிக்யூஷன் டிபன்ஸ் தரப்பு சாக்ஷிகளின் சாக்ஷியத்தையும் இன்னும் ஜூரிமார்களுக்குச்சகாயமாய் என்னென்ன சந்தர்ப்பங்களைஎல்லாம் எடுத்துக்காட்ட வேண்டுமோ அவைகளையெல்லாம் விஸ்தமாய்த் தெரிவிக்க வேண்டியது அவசியம்.

கி-பு-கோ 304-வது பிரிவின்படி ஜட்ஜு ஜூரிமார்களைசில கேள்விகள் கேட்கவேண்டியது அவசியமாய்த் தோன்றினால் ஜட்ஜு அவர்கள் ஜூரிமார்களைக் கேட்கும் கேள்விகளையும் அந்தக்கேள்விகளுக்கு ஜூரிமார்கள் சொல்லும் மறு உத்தரங்களையும் ரெக்கார்டில் பதியவேண்டுமென்பது அவருடைய முக்கியமான கடமையாகும்.

ஜூரிமார்கள் ஓர் முக்கியமான சந்தர்ப்பத்தில் சட்டம் இன்னதென்று அவர்களுக்குத் தெளிவாய் புலப்படவில்லையென்று சொல்லும் பட்சத்தில் ஜட்ஜு அவர்கள் சட்டம் இன்னதென்று அவர்களுக்குத் தெளிவாய்த் தெரியும்படிக்கு விவரித்துச் சொல்ல வேண்டிய கடமை அவருடையதாகும்.

ஜூரிமார்கள் ஒருவனை குற்றவாளியல்லவென்று முடிவானத் தீர்மானம் சொல்லி செஷன்ஸ் கோர்ட்டார் தீர்மானத்தை ரத்துசெய்துவிட்டு கேஸை மறுபடியும் விசாரணை செய்யும் படிக்கு உத்தரவு செய்தார்கள்.

லாகூர் இந்தியன் கேசுகள் 9 வது வால்யம் 788. 2 ம-வீ- நோ. 190.

மி-ர். சடகோபாசாரியார்.—அப்பீல் வாதிகளின் வக்கீல்.

மி-ர். நேபியர்—சர்க்கார் பாரிஸ்டர்.

The Hon'ble Justice Sir T. MUTHUSAWMY IYER, B.L., C.I.E.

ஹானரபில் ஜஸ்டிஸ் சர். T. முத்துசாமி அய்யர், B.L., C.I.E.

OFFICE OF THE REGISTRAR OF ...
19 JAN 1912
MADRAS.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

சென்னப்பட்டணம் 1911ஹு ஆகஸ்டுமீ பாகம் 11.

வால்யம் V.]

☞ NOTICE:—Contributions other than original are neither invited nor required. All literary contributions and books for Review should be addressed to Mr. N. RATHAKRISHNA NAIDU, P. A., A. L. A. A., (LONDON) INDIAN LAW GAZETTE. 49, Acharappan Street, Madras.

THE REGISTRATION OF PARTNERSHIP IN INDIA.

இந்தியாவில் கூட்டு வியாபாரத்தை ரிஜிஸ்டர் செய்தல்.

பலபேர் ஒன்று சேர்ந்து யாதேனும் ஒரு கூட்டு
வியாபாரம் செய்தால் இன்னின்னார் கூட்டாளி என்
றும் இன்ன வியாபாரம் செய்வதற்காகக் கூட்டு சே
ர்ந்திருக்கிறார்கள் என்றும் பத்திரப்பதிவு ஆபீசில்
ரிஜிஸ்டர் செய்ய அவர்களைக் கட்டாயப்படுத்துவ
தற்குத் தற்காலம் இந்தியாவில் யாதொருசட்டமும்
கிடையாது. இந்தியா கவர்ன்மெண்டாரிடம், கூட்
டாளிகள் கூட்டுச்சேர்ந்து வியாபாரம் நடத்துவதற்
கு முந்தி அவர்கள் பெயர்களையும் வியாபாரத்தை
யும் ரிஜிஸ்டர் செய்துவைக்கும்பொருட்டு ஒரு சட்
டம் பிறப்பித்தால் மிகுந்த நலமாயிருக்குமென்று எ
ண்ணுகின்றோம், இப்படி ஒரு சட்டம் பிறந்தால்
இந்தேசத்தின் வியாபாரத்தை உள்ளபடி விர்த்தி
செய்யுமென்பதில சந்தேகமில்லை. கூட்டு வியாபா
ரத்தை ரிஜிஸ்டர் செய்யக் கட்டாயப்படுத்தக்கூடிய
சட்டமில்லாமலிருப்பதால் தகுந்த ஐவேஜியுள்ளவர்
கள் கூட்டுச்சேர்ந்து வியாபாரம் நடத்தப் பின் வா
ங்குகிறார்கள். இந்தச் சட்டம் பிறந்தால் அனேக
ஜனங்களுக்கு வர்த்தகத்தில் பெரும் நம்பிக்கை உ

ண்டாகும். யாதொரு மோசக்கருத்தின்றி யோக்
கியத்துடன் வியாபாரம் நடத்த இஷ்டப்படும் வர்த்
தக கம்பெனியார்கள் இம்மாதிரி சட்டத்திற்குப் ப
யப்படவே மாட்டார்கள். இன்னும் சொல்லப்போ
னால் இந்த கம்பெனிகளின் கூட்டாளிகள் ஒருவர்
மேல் ஒருவர் பெரும் நம்பிக்கை வைத்து
வியாபாரத்தை விர்த்தி செய்து வருவார்கள். இ
ந்தசட்டம் பிறந்தால் மோச வர்த்தகக் கம்பெனியா
ர்கள் எளிதில் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவா
ர்கள். போகப்போக இத்தேசத்தில் மோசக் கம்
பெனிகள் உண்டாவதற்கே ஏதுவிருக்க மாட்டாது.
ஏகாங்கியாய் வியாபாரம் செய்கிறவர்கள் கூட "அ
ண்டுகோ" என்று மேல்விலாசம் பூண்டு கொள்வதா
ல் இதைப் பார்ப்பவர்கள் இது கூட்டுக்கம்பெனி எ
ன்று நினைத்து அதன்பேரில் எவ்வளவு மதிப்பு வை
க்கவேண்டுமோ அதைவிட அதிகமாக மதிப்புவைப்
பதற்கு ஏதுவா யிருக்கின்றது. "அண்டுகோ"
என்று மேல் விலாசம் பூண்டு வியாபாரம் நடத்துவ
தில் மோசடியின்றி வியாபாரம் நடத்துவர்களுமிருக்
கிறார்கள். பார்வைக்குப் பெரிய கம்பெனிபோல்
பாவனைசெய்து மோசம் செய்யவேண்டுமென்கிற
கருத்துடன் "அண்டுகோ" என்று மேல் விலாசம்
பூண்டு கொள்ளுவர்களு மிருக்கிறார்கள். நல்ல எண்
ணத்துடன் "அண்டுகோ" என்று மேல்விலாசம் பூ
ண்டு யோக்கியத்துடன் வியாபாரம் நடத்தினால் இத
னால் யாதொரு தீங்கும் நேரிடாதென்று கவர்ன் மெ
ண்டார் ஏகாங்கியாய் வியாபாரம் செய்யும் ஒருவன்
"அண்டுகோ" என்று மேல் விலாசம் வைத்துக்
கொள்வதைக் கண்டிக்காமல் விட்டிருக்கிறார்கள். இ
ருந்தபோதிலும், ஏகாங்கியாய் வியாபாரம் செய்யும்

ஒருவன் பலபேர் கூட்டாளிகளாய்ச் சேர்ந்து நடத்தும் கம்பெனிபோற் பார்வைக்குப் படட்டுமென்று நினைத்து "அண்டுகோ" என்று வைத்துக் கொள்வது பிரதமதத்திலேயே புரட்டாயிருப்பதுமன்றி, மனச்சாக்ஷிக்குப் பொருந்தாததாயு மிருக்கின்றது. இந்த துர்வழக்கத்தைக் கவர்ன்மெண்டார் கண்டிக்க வேண்டுமென்று மிக வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம். நிற்க, மேலே நாம் கூறின சட்டம் பிறப்பிக்கப்பட்டால் "அண்டுகோ" என்று மேல் விலாசம் பூண்டு வியாபாரம் செய்கிற கம்பெனிகளின் சுதந்தரஸ்தர் ஏகாங்கியா அல்லது பலபேர்களாவென்றும் கண்டு பிடிக்கமுடியும், ஏனெனில், உள்ளபடி பலபேர் கூட்டுச்சேர்ந்து நடத்தும் வியாபாரமாயிருந்தால் இச்சட்டத்தின்படி கூட்டாளிகள் தங்கள் பெயரை ரிஜிஸ்டர்செய்து வைத்திருப்பார்கள். ஆகவே மேலே நாம் கூறின சட்டம் பிரப்பிக்கப்பட்டால் பெரும்பாலும் மோசக் கம்பெனிகளின் கொட்டம் அடங்கிப்போகும். மேலும் இப்போது வரவர வியாபாரத்தில் ஒரு மாறுதல் உண்டாகி வருகின்றது. அதென்னவென்றால், கூட்டுக் கம்பெனிக்காரர்கள் சிலகாலம் கூட்டு வியாபாரஞ்செய்து திரண்ட பொருள் சம்பாதித்துப், பிறகு தங்களுடைய பாகங்களை ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளாக மாற்றி இந்தியன் கம்பெனி ஆக்ட்டின்படி ரிஜிஸ்டர் செய்து ஒருபங்கு ஒன்றுக்கு இத்தனை ரூபாய் என்று நிர்ணயித்துப் பொது ஜனங்களைப் பங்குதாரிகளாகச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். இப்படி ஒவ்வொரு கூட்டுக் கம்பெனியாரும் ஜாயிண்ட் ஸ்டாக்கம்பெனியாராகமாறி பொது ஜனங்களைப் பங்குக்காரர்களாகச் சேரும்படித் தூண்டி போட்டிபோடுதலால் பங்கு மலிந்துபோய் ஏழை ஜனங்களும் வியாபார முயற்சியில் சேர்ந்து லாபமடைவதற்கு ஏதுவா யிருக்கின்றது. இது நல்லகாரியமென்றும் வியாபாரத்தை விருத்திசெய்யு மென்றும், பொது ஜனங்கள் சேர்ந்து லாபமடையக் கூடியதாயிருக்கிற தென்றும் ஐயமின்றிச் சொல்லலாம். ஆனால் இப்படி செய்வதற்கு முந்தியிருந்த கூட்டுவர்த்தகக் கம்பனிக்காரர்கள் தங்கள் கம்பெனியில் பார்ட்னர்களா யிருப்பவர்கள் பெயரை ரிஜிஸ்டர் செய்து வைக்கும்படி கட்டாயப்படுத்த சட்டம்பிறந்தால் பொது ஜனங்களுக்கு அந்த கம்பெனியில் என்றும் விசேஷ நம்பிக்கை யுண்டாகி வியாபாரம் விர்த்தியடையுமென்று எண்ணுகின்றோம்.

ADVANTAGES OF REGISTRATION.

தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்வதின் பயன்கள்.

தஸ்தவேஜுகளை ரிஜிஸ்டர் செய்துக்கொள்வதினாலும் செய்துகொள்ளாததினாலும் உண்டாகும் பயன்களைப்பற்றி இந்த வியாஸத்தில் பேசுவோம். ரெஜிஸ்டரான தஸ்தவேஜு ரெஜிஸ்டரான தேதி முதற்கொண்டல்லாமல் எழுதப்பட்ட தேதி முதற்கொண்டே செலாவணியாகிவரும். ஸ்தாவர சொத்தைப் பொருத்த தஸ்தாவேஜுகள் எல்லாம் ரெஜிஸ்டர் செய்யப்பட்டால் தான் பயனுள்ளவையாகும்; இல்லாவிட்டால் அவைகளில் காணப்படும் சொத்தைப் பாதிக்கமாட்டாது. கோர்ட்டுகளில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. ரெஜிஸ்டர் செய்யப்பட்ட தஸ்தவேஜுகளில் பின்னால் மோசடியாக ஏதேனும் மாறுதல் செய்வதற்கு முடியாது. தஸ்தவேஜுகள் காணாமல் போனாலும், நாசமாய்ப் போனாலும் அவைகளுக்கு ஸரியான நகல்களை ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அந்த நகல்கள், அஸல் தஸ்தவேஜுகளைப்போலவே, கோர்ட்டுகளில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படும். ஒரு சொத்தைப்பற்றி ஏற்பட்டிருக்கும் வில்லங்கங்கள் இன்னின்னவை யென்று தெரிந்துக்கொள்ளலாம். இதனால் மோசமான விநியோகம் தெரிந்து விடுவதினால் வாங்குகிறவர்கள் ஜாக்கிரதையாக இருக்கலாம்.

ரெஜிஸ்டர் செய்துகொள்ளும்பொருட்டு வரும் கக்ஷிக்காரர்கள் தஸ்தவேஜுகளை நேராக ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தரிடமே கொடுக்கவேண்டும் அவருடைய குமஸ்தாவினிடமாவது சேவகனிடமாவது கொடுக்கக்கூடாது. ஸ்டாம்புத் தீர்வை, பத்திரத்தேதி, இவைகள் ஸரியானபடி யிருந்தால், ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் அந்த தஸ்தவேஜின் மேல் அது தாக்கல்செய்யப்பட்ட தேதி, மணி, இடம் முதலியவைகளை எழுதிக்கொண்டு தாக்கல் செய்தவருடைய கையெழுத்தையும் வாங்குவார் பின்பு எழுதிகொடுப்பவரை விசாரணை செய்வார். அவருடைய கையெழுத்தும் சாக்ஷிகளுடைய கையெழுத்தும் பத்திரத்தில் வாங்கப்படும். எழுதிக்கொடுப்பவருடைய கையெழுத்தோடு அவருடைய இடது பெருவிரல் குறியும் பத்திரத்தில் வாங்கப்படும் ஒருவருடைய விரல் மற்றவர்களுடைய விரல் அடையாளங்களோடு ஒத்திருப்பதில்லை. ஆதலால் பொய்க் கையெழுத்து, ஆள் மாராட்டம் முதலிய குற்றங்களைத் தடுப்பதற்கும் கண்டு பிடிப்பதற்கும் இந்தப் பெருவிரல் குறி பயன்படுகிறது. ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு நேரில் தெரிந்தவர்கள், குஷ்டரோகிகள், முதலியவர்களிடமிருந்து பெரு விரல் குறி எடுக்கவேண்டியதில்லை.]

தஸ்தவேஜு எழுதிக்கொடுப்பவருக்கு ரெஜிஸ்ட்ரார் முன்பு பணமாவது, வேறு பொருளாவது கொடுப்பதாக இருந்தால் அவ்விஷயமும் தஸ்தவேஜில் எழுதப்படும். ரெஜிஸ்ட்ராருக்கு வரும் தஸ்தவேஜுகள் வாஸ்தவத்தில் செல்லக்கூடியவையா என்பதைப்பற்றி விசாரிக்க ரெஜிஸ்ட்ராருக்கு அதிகாரமில்லை. அவருடைய வேலை யெல்லாம். பத்திரத்தை எழுதிக் கொடுத்ததுண்டா என்னும் விஷயத்தை மட்டும் தெரிந்து கொள்ளவேண்டியது. எழுதிக்கொடுத்ததுண்டானால் பத்திரத்தை ரெஜிஸ்டருக்கு அங்கீகரிக்கவேண்டும். ரெஜிஸ்டருக்கு வரும் தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்யமாட்டோமென்று ரெஜிஸ்ட்ரார் மறுதளிப்பதற்குப் போதுமான காரணங்கள் இருக்கவேண்டும். அத்தாட்சி செய்யப்படாத வரிபிளப்பு, அடித்தல், திருத்தல், முதலியவை பத்திரத்தில் இருந்தாலும், தஸ்தவேஜில் குறிக்கப்பட்ட சொத்து ஸரியானபடி விவரிக்கப்படாமலிருந்தாலும், ரெஜிஸ்ட்ராருக்குத் தெரியாத பாஷை யொன்றில் தஸ்தவேஜு எழுதப்பட்டிருந்தாலும், தஸ்தவேஜுடன் வரும்படங்களுக்கு நகல் ஆஜராகாமலிருந்தாலும், தஸ்தவேஜு குறித்த காலங் கடந்தபின் ஆஜர் செய்யப்பட்டாலும், எழுதிக்கொடுப்பவர்கள் குறித்த காலம் ஆனதன் பின் ஆஜர் ஆனாலும், எழுதிக்கொடுப்பவர் இன்னார் தான் என்று ரெஜிஸ்ட்ராருக்குத்திருப்திகரமாகத்தெரியாவிட்டாலும், ஏஜெண்டு மூலமாய் வருபவர்களுக்கு அப்படி வரும் பாத்தியதை திருப்திகரமாய் விளங்காவிட்டாலும், பத்திரத்தை எழுதிக்கொடுத்ததாகச் சொல்லப்படும் ஒருவன், தான் அதை எழுதிக்கொடுத்ததில்லை என்று சொன்னாலும், எழுதிக்கொடுத்தவன் மைனராகவாவது, ஊமைத்தனகவாவது, பைத்தியம் பிடித்தவனாகவாவது இருந்தாலும், பத்திரம் எழுதிக்கொடுத்தவன் இறந்து போனபின் அவனுடைய பிரதிநிதியாக வருபவன் பத்திரம் எழுதிக்கொடுக்கப்படவில்லை யென்று மறுத்தளித்தாலும், எழுதி வைத்தவன் இறந்துபோன பின்வரும், உயில், ஸ்வீகார அதிகாரம், இவைகள் உண்மையாக எழுதி வைக்கப்படவில்லை யென்று விசாரணையால் ரெஜிஸ்ட்ராருக்குத் தோன்றினாலும், உயிலை அடக்கம் செய்திருக்கும் பை முத்திரை யிடப்படாமல் இருந்தாலும், செலுத்தப்படவேண்டிய கட்டணம் செலுத்தாமலிருந்தாலும், அந்தக் காரணங்களைக் கண்டெழுதி ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் அந்தத் தஸ்தவேஜுகளின் மேல் ரெஜிஸ்ட்ரேஷன் நிக்கிரகிக்கப்பட்டது என்று எழுதிக்கொடுத்துவிடவேண்டும். இப்படி ஸப் ரெஜிஸ்ட்ரார்கள் செய்யும் உத்தரவுக்குமேல் ஜில்லா ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில் அப்பீல்செய்து கொள்ளலாம். அங்கு ரெஜிஸ்ட்ரேஷன் நிக்கிரகிக்கப்பட்டால் ஸிவில் கோர்ட்டில் பத்திரத்தைத் தாக்கல்செய்து ரெஜிஸ்டர் செய்யச் சொல்லும்படி கேட்கலாம்.

இனி, ரெஜிஸ்ட்ரேஷன் இலாகாவினால் உண்டாகக்கூடிய வேறு சில பயன்களைக் கூறிவிட்டு அவ்வியாஸத்தை முடிவுசெய்வோம். பொதுவாக எல்லாவித தஸ்தாவேஜுகளும் ரெஜிஸ்டர் செய்யப்படுவதால், ஜனங்களுடைய செல்வ ஸ்திதி இன்னபடி யிருக்கிறதென்பது தெரியவரும். அதிகக் கடன்பட்டு விட்டபடியால் நிலத்தை விற்றுவது கடனைக்கொடுக்க முந்துபவர் சிலர்; கல்யாணமும் முதலியவைகளில் வீண் செலவுக்காகப் பணம் வாங்குவோர் சிலர், விவஸாயச்செலவு, வியாபாரம், ஸர்க்கார் கிஸ்தி, முதலியவைகளுக்காகப் பணம் தேடுபவர் சிலர்; இவர்களுடைய செல்வ நிலையெல்லாம் அவர்கள் எழுதிக்கொடுக்கும் தஸ்தவேஜினால் வெளியாகும். ஷைலாக்கைப்போல அநியாயவட்டி வாங்குவோரும் வெகு அற்பமான வட்டிக்குக் கடன் கொடுப்போரும் இன்னின்னாரென்று விளங்கும். பூமிகளின் விலைவரவா அதிகரிக்கிறதா, குறைகிறதா, என்பதைத் தெரிந்து கொள்ளலாம். விவஸாயிகளிடமிருந்த பூமி அவர்களுடைய கையைவிட்டுக் கடன் காரணமாக வேறு வகுப்பாரிடத்துக்குப் போகிறதா என்பதைக் கவனிக்கலாம். உண்மையில் மேற்கூறிய விவரங்களை ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ்களில் வெகு சிரமப்பட்டுத் தேடி வருஷாவருஷம் கணக்குகள் கொடுக்கப்படுகின்றன. தேச க்ஷேமத்தைக் கவனிக்கும் மகான்களுக்கு இவ்விஷயம் வெகு உபயோகமுள்ளதாக விருக்கும்.

இவ்வளவு பெரிய இலாகாவின் வரவு செலவைப் பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லுவது மிகையாகாது. ரெஜிஸ்டருக்கு வரும் தஸ்தவேஜின் மேல் செலுத்தப்படும் கட்டணம், நகல்கள் எடுப்பதற்காகச் செலுத்தப்படும் தேடுகூலி, நகல்கூலி, வில்லங்க ஸர்டிபிகேட் வாங்கக் கொடுக்கும் கட்டணம், விசேஷ காரனங்களை முன்னிட்டுச்செய்து கொள்ளும் ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணங்கள், ஆகிய இவைகளிலிருந்து தான் இந்த டிபார்ட்டுமெண்டின் வரும்படி வருகிறது. உத்தியோகஸ்தர்கள் ஆபீஸ் சிப்பந்திகள் சம்பளம், புஸ்தகம், கடுதாசி, மசி, அச்சுக்கூலி, ஆபீஸ் கட்டிடங்கள் முதலிய செலவுகள், ஆகிய இனங்கள் பற்றுக்கலத்தில் சேருகின்றன. நாளுக்கு நாள் தஸ்தவேஜுகள் அதிகமாக ரெஜிஸ்டர் செய்யப்படுதால் இந்த டிபார்ட்டுமெண்டுக்கு ஏராளமான லாபமுண்டாகிறது. 1909-ம் வருஷத்தில் வருமானம் ரூ 19,29,095 ஆகவும், செலவு ரூபா 13,71,558 ஆகவும் இருந்து ரூ 5,57,537 லாபம் கிடைத்தது.

(பிழைக்கும் வழி)

MISCELLANEOUS CASES.

COMPROMISES AND REGISTRATION.

ராஜினாமாக்களும் ரெஜிஸ்ட்ரேஷனும்.

காக்கினாடா சப் கோர்ட்டில் ஓர் அசையாப்பொருள் விஷயமாய் செய்துகொண்ட ராஜினாமா பின் வந்த ஓர் வியாஜ்ஜியத்தில் முன் பைசலாகிய ஓர் நம்பரில் விவாதத்திற்கு வராத ஓர் அம்சத்தை பின் செப்பிய நம்பரில் ஓர் வாதமாய் எடுத்துக்கூறுவது சட்டப்படி செல்லத்தக்கதா அல்லவா என்று வாதிக்கப்பட்டது.

கேசின் விவரம்.—இந்த வியாஜ்ஜியத்தில் பிரதிவாதியினிடமிருந்த சில ஸ்தாவர சொத்துகளை வரப்படுத்திக்கொள்ள தாவா செய்தான். பிரதிவாதிகளோ ஷை அசையாப்பொருளை வாதியினிடமிருந்து இதற்குமுன் அக்கிரமமாய் ஸ்வாதீனப்படுத்திக்கொண்டதாக தெரியவருகிறது.

பிரதிவாதிகள் தாவா சொத்தின் விஷயமாய் முன் ஓர் வியாஜ்ஜியம் நடந்ததாகவும் அந்த வியாஜ்ஜியத்தில் முன்னமேயே ராஜிஞமா ஆயிருப்பதாகவும் அந்த ராஜிஞமாவில் மேல் செப்பிய தாவா சொத்துகளைப்பற்றி ராஜியா யிருந்திடினும் பிரஸ்தாப தாவா சொத்துகள் விஷயமாய் அந்த நம்பர் செய்யப்படவில்லை யாகையால் அதைப்பற்றி டிக்ரி செய்யாமல் மேற் செப்பிய நெம்பரில் தாவா செய்திருந்த சொத்தின் விஷயமாய் மாத்திரம் டிக்ரி செய்யப்பட்டதாகையால் இந்த தாவாவில் செப்பியிருக்கும் சொத்தின் விஷயமாய் டிக்ரி கிடையாதென்றும் வாதித்தார்கள்.

டிஸ்ட்ரிக்ட் முனிசீபும், சப் கோர்ட்டாரும் பிரஸ்தாபதாவாவில் மேறகண்ட ராஜிஞமா ஆக்ட் 3 of 1877-ன் படி ரிஜிஸ்தராகவில்லை என்னும் காரணத்தைக்கண்டு இந்த தாவாவில் பிரதிவாதிகள் சொல்லும் வாதம் செல்லாதென்று சொல்லி வாதிக்கு அனுகூலமாயும் பிரதிவாதிகளுக்கு விரோதமாகவும் டிக்ரி செய்தார்கள்.

பிரதிவாதிகள் கீழ் கோர்ட்டார்கள் டிக்ரியின் பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீலில் அவர்கள் தரப்பில் ஆஜராகிய வக்கீல் மேற்கண்ட தாவா சொத்து முன் செப்பிய கோர்ட்டார் ஜாரி செய்த ராஜிஞமாவில் அடங்கிய தாகையால் அச்சொத்தைப்பற்றி ரிஜிஸ்தராக வேண்டிய அவசியமில்லையென்று வாதித்து பின் செப்பிய கேசுகளை ஆதாரமாய் எடுத்துக் கூறினர்.

(இ. லா. ரி. 20 அ 66, 22 ம 508; 28 அ 78 33 ம 102).

எதிரிகளாகிய (ரெஸ்பான் டென்டுகள்) தரப்பில் ஆஜராகிய வக்கீல் வாதித்தது .—

ரெஜிஸ்ட்ரேஷன ஆக்டு பிரகாரம் கோர்ட்டு டிக்ரிகளும் உத்தரவுகளும் மாத்திரம் ரெஜிஸ்தராக வேண்டியதில்லையென்றும் மேற் செப்பிய ராஜிஞமாவை சாட்சியத்தில் ஒப்புக்கொண்டபோதிலும் ரெஜிஸ்தராகவேண்டியது அவசியமென்றும் அப்படிப்பட்ட ரெஜிஸ்தராகாத ராஜிஞமா ஸ்தாவர சொத்தின் ஹக்கை ரெஜிஸ்தரேஷன் ஆக்ட் 49-வது பிரிவின்படி பாதிக்காதென்றும் வாதித்தார். அதற்காதாரமாய் பின்வரும் கேசுகளை எடுத்துக் காட்டினர்.

(இ-லா-ரி 25 ம 553; 29 ம 365; 36 கல் 193; 32 அ.)

தீர்மானம்:—ஹைகோர்ட்டு ஜட்ஜிகளாகிய கனம் பொருந்திய மி-ர் ஜ. அப்டுர் ரஹீம், மி-ர் ஜ. பி. ஆர். சுந்தரய்யர் அவர்கள் ஆகஸ்டு மாதம் 11௳ இந்த கேசில் பின்வருமாறு ஜட்ஜ்மெண்ட் செய்தார்கள்:—

ஷை செப்பிய 20 அ; 22 ம இந்த கேசுகளில் பிரிவிகவுன்சல் ஜட்ஜிகள் ஸ்தாவர சொத்தின் விஷயமாய் செய்த வாதங்களில் சொல்லி யிருந்திடினும் அது விஷயமாய் கோர்ட்டு உத்தரவு யாதேனும் இல்லாவிடினும் அது ஸ்தாவர சொத்தின் ஹக்கை பாதிக்காதென்றும், ரெஜிஸ்தரா யிருக்கவேண்டிய தவசியமென்றும் தீர்மானித்திருக்கிறார்களென்று கண்டு ஜ. வாலிசும், ஜ. சங்கரநாயரும் இ-லா-ரி. 33 மதராஸ் 102-வது பக்கத்தில் செய்திருக்கும் தீர்ப்பை அனுசரிக்க முடியாதென்றும் சொல்லி மேற்படி ராஜிஞமா ரெஜிஸ்தராக வேண்டியதென்பது சட்டப்படி அத்தியாவசியமென்று தீர்மானித்து இரண்டாவது அப்பீல் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

ஆகையால் இப்படிப்பட்ட கேசுகளில் ராஜிஞமா அல்லது எவ்விதமான வாதமா யிருந்திடினும் அப்படிப்பட்டவைகளை கோர்ட்டார் டிக்ரி அல்லது ஆர்டர் என்று பாவிக்காமல் ரெஜிஸ்தராக வேண்டியதென்று கவனித்து நம்முடைய நேயர்கள் நடப்பார்களென்பது தான் எம்முடைய முக்கிய கருத்து.

PRESIDENCY MAGISTRATE'S COURT, EGMORE.

மதராஸ் ப்ரேசிடேன்சி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு.

மிஸ்டர் F. D. பெர்ட் | முன்பாக.

ILLICIT DISTILLATION OF LIQUOR.

வீட்டில் சாராயம் காய்ச்சின கேசு.

கேசின் விவரம்:—மைலாபூரை யடுத்த கொசப்பேட்டை செல்ல முதலி வீதியில் அப்துல் கரீம், அப்துல் போஸ் என்பவர்கள் அவர்களுடைய வீட்டில் சட்டத்திற்கு விரோதமாய் திருட்டுத் தனமாக சாராயம் காய்ச்சுகிறார்களென்று எக்சைஸ் டிபார்ட்டுமென்டாருக்குத் தெரிந்து. ஷை டிபார்ட்மென்டைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் புருஷோத்தமராவ் என்பவர் சென்ற ஜூன்௴ 27௳ முதல் ஜூலை 11௳ வரையில் மேற்கண்ட நபர்களுடைய செய்கைகளை கண்ணுற்றுப் பார்த்துக்கொண்டு வந்ததில் நாணுஸரி என்பவர் ஸ்மித் பீல்ட் மார்க்கட்டில் (Smitlh Field Market) வைத்திருக்கும் 15-ம் நெம்பர் பட்டைசாராயக்கடையைச் சேர்ந்தவர்கள் சிலர் மேற்கண்ட நபர்களின் வீட்டிற்கு சில மூட்டைகளுடன் போக்குவருத்தா யிருப்பதை 25 தடவைக்கு அதிகமாகவே கண்டதாக ஜூலை௴ 11௳ எக்ஸைஸ் டிப்பார்ட்மென்ட் அசிஸ்டென்ட் கமிஷனரும் இன்ஸ்

(இதன் தொடர்ச்சி 283 பேஜில் பார்க்கவும்.)

REGISTERED

ஆலோசனை சபையிலுள்ள சென்னபட்டணம் கவர்னரவர்களால் செய்யப்பட்ட இந்த ஆக்டானது 1911-ம்௵ ஜூன்௴ 14௳ சிறப்புற்றோங்கும் கவர்னரவர்களாலும், 1911-ம்௵ ஜூலை௴ 4௳ சிறப்புற்றோங்கும் கவர்னர் ஜெனரலவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவருக்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகிறது.

MADRAS ACT No. IV OF 1911.

சென்னபட்டணம் 1911-ம்௵த்து 4-வது ஆக்ட்.

—:o:—

AN ACT TO AMEND THE LAW RELATING TO PROPRIETORS OF ESTATES.

பூஸ்திதிக்குடையவர்களுக்குச் சம்பந்தப்பட்ட சட்டத்தைத் திருத்துவதற்கான ஆக்ட்.

பீடிகை.

சென்னபட்டணத்து ஒருவருக்கே உரிய பூஸ்திதிகளின் கிராம ஊழியத்தைக் குறித்த 1894-ம்௵த்து ஆக்டிலும், சென்னபட்டணத்துப் பாரம்பரையான கிராம உத்தியோகஸ்தர்களைக்குறித்த 1895-ம்௵த்து ஆக்டிலும், ஸர்வேயையும் எல்லைகளையுங்குறித்த சென்னபட்டணம் 1897-ம் ௵த்து ஆக்டிலும் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி பூஸ்திதிக்குடையவர்களாயிராத சில நபர்கள் ஷை ஆக்டுகளின்படி பூஸ்திதிக்குடையவர்களுக்கு உள்ள அதிகாரங்களைச் செலுத்தக்கூடியவர்களா யிருப்பதும் அலுவல்களைச் செய்யக்கூடியவர்களாயிருப்பதும் யுக்தமாயிருக்கிறபடியாலும், அப்படிப்பட்ட நபர்களிடமிருந்து தீர்வைபாக்கியை வசூல் செய்வதற்காக நிபந்தனை ஏற்படுத்துவதுகூட யுக்தமாயிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிற தென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, வரையறுக்கப்பட்ட பாத்தியதையுள்ள பூஸ்திதிக் குடையவர்களைப்பற்றிய 1911-ம்௵த்திய ஆக்டென்று சொல்லலாம்.

ரத்து.

2. சென்னபட்டணத்து ஒருவருக்கே உரிய பூஸ்திதிகளின் கிராம ஊழியத்தைக் குறித்த 1894-ம்௵த்து ஆக்டின் 4-வது பிரிவிலும், ஸர்வேயையும் எல்லைகளையும் குறித்த சென்னபட்டணம் 1897-ம்௵த்து ஆக்டின் 3-வது பிரிவிலும் பூஸ்திதிக்குடையவர் என்பதன் அர்த்தத்தைச்சேர்ந்த விலக்கான நிபந்தனையானது இதனால் ரத்து செய்யப்படுகிறது.

அர்த்தம்.

3. இந்த ஆக்டிலே, சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதம் ஏதேனுமிருந்தாலொழிய "பூஸ்திதி" என்பதும் "கிராமம்" என்பதும்-முறையே சென்னப்பட்டணத்து ஒருவருக்கே உரிய பூஸ்திதிகளின் கிராம ஊழியத்தைக் குறித்த 1894-ம்௵த்து ஆக்டில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி ஒரு பூஸ்திதி என்றும் ஒரு கிராமம் என்றும் அர்த்தமாகும்.

2

பூஸ்திதிக்குடையவரென்று ரெஜிஸ்டர் செய்யும்படி கலெக்டருக்குவிண்ணப்பம் செய்துகொள்ளுவதாவது.

4. யாதொரு நபர் ஒரு பூஸ்திதி முழுவதுக்குமாகிலும் ஒன்று அல்லது பல கிராமங்கள் அடங்கியதாயுள்ள அதன் யாதொரு பாகத்துக்காகிலும் உரிய குத்தகைத்தொகைகளை ஒரு சொந்தக்காரரிடமிருந்து எவ்விதமாகவேனும் ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றிருப்பதனாலோ தகுந்த அதிகாரமுள்ள ஒரு கோர்ட்டார் செய்த யாதொரு டிக்ரி அல்லது உத்தரவினாலோ யாதொரு விதி அல்லது சட்ட நிபந்தனையினாலோ சொந்தக்காரராகவல்லாமல் மற்றப்படி வசூல் செய்துகொள்ள அர்ஹராயிருந்து, சென்னபட்டணத்து ஒருவருக்கே உரிய பூஸ்திதிகளின் கிராம ஊழியத்தைக்குறித்த 1894-ம் ௵த்து ஆக்டின் 4-வது பிரிவில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி பூஸ்திதிக்குடையவராயிராவிட்டால், அவர் சென்னபட்டணத்து ஒருவருக்கே உரிய பூஸ்திதிகளின் கிராம ஊழியத்தைக்குறித்த 1894-ம்௵த்து ஆக்ட், சென்னபட்டணத்துப் பாரம்பரையான கிராம உத்தியோகஸ்தர்களைக்குறித்த 1895-ம் ௵த்து ஆக்ட், ஸர்வேயையும் எல்லைகளையுங்குறித்த சென்னபட்டணம் 1897-ம்௵த்து ஆக்ட் ஆகிய இந்த ஆக்டுகளின் சகல காரியங்களுக்காகவாகிலும் எந்தக்காரியங்களுக்காகவாகிலும் ஷை பூஸ்திதி அல்லது பாகத்தின் விஷயமாக பூஸ்திதிக்குடையவரென்று ரெஜிஸ்டர் செய்யும்படி அந்த ஜில்லா கலெக்டருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்.

அப்படிப்பட்ட விண்ணப்பத்தின் மேல் நடவடிக்கை.

5. (1) ஜில்லா கலெக்டரானவர்-ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிற பூஸ்திதிக்குடையவருக்கும் விண்ணப்பத்தின் தேதுகடையான முடிவில் அக்கறையுள்ளவர்களென்று தமக்குத் தோற்றுகிற இதர நபர்களுகக்கும் அந்த விண்ணப்பத்தைக் குறித்து நோடிஸ் கொடுக்கவேண்டும் ; மேலும் அவர்கள் சொல்லிக்கொள்ள வேண்டியதைச் சொல்லிக்கொள்வதற்கு அவகாசம் கொடுத்தபிறகும் அவருக்குத் தகுதியாகத்தோற்றும் விசாரணை செய்தபிறகும் ஷை ஆக்டுகளின் சகல காரியங்களுக்குமாவது குறிப்பிட்ட எந்தக் காரியங்களுக்காவது, அந்த விண்ணப்பத்தாரரை பூஸ்திதிக்குடையவராக ரெஜிஸ்டர் செய்யலாம், அல்லது ரெஜிஸ்டர் செய்யமாட்டேனென்று நிராகரிக்கலாம்.

ஆனால், தகுந்த அதிகாரமுள்ள யாதொரு கோர்ட்டாருடைய டிக்ரி அல்லது உத்தரவை அனுசரித்தாவது யாதொரு விதி அல்லது சட்ட நிபந்தனையை அனுசரித்தாவது விண்ணப்பத்தார் குத்தகைத் தொகைகளை வசூல்செய்துகொள்ள அர்ஹராயிருந்தால், நோடிஸ் கொடாமலேயாகிலும் யாதொரு விசாரணையும் நடத்தாமலேயாகிலும் அவரை பூஸ்திதிக்குடையவரென்று ரெஜிஸ்டர் செய்ய ஜில்லா கலெக்டருக்கு இஷ்டமிருந்தால் அந்தப்படியே செய்யலாம்.

(2) 7-வது, 11-வது, 13-வது பிரிவுகளின் நிபந்தனைகளுக்கும் தகுந்த அதிகாரமுள்ள யாதொரு ஸிவில் கோர்ட்டார் பிறப்பிக்கும் யாதொரு டிக்ரிக்கும் உட்பட்டு, மேலே கண்டபடி ரெஜிஸ்டர் செய்தது—விண்ணப்பத்தாரர் குத்தகைத்தொகைகளை வசூல்செய்து கொள்ள அர்ஹராயிருக்கிறவரையிலே செலாவணியாய்க்கொண்டிருக்கும்.

விவாதமுண்டாகிற விஷயத்திலே நடவடிக்கை.

6. குத்தகைத் தொகைகளை வசூல்செய்துகொள்ள விண்ணப்பத்தாரரின் பாத்தியதையைக்குறித்து முக்கியமான ஒரு விவாதம் ஏற்பட்டிருக்கிற தென்று ஜில்லா கலெக்டருக்குத் திருப்திகரமாகத் தெரியவந்தால், அவர்-இதர காரணங்களி

ஞல் அந்த விண்ணப்பத்தை ஜாரிசெய்யக்கூடாதென்று அபிப்பிராயப்பட்டாலன்றி-மற்றம்படி, அந்த விண்ணப்பத்தாருக்கு ஒரு ஸிவில் கோர்ட்டிலே தம்முடைய பாத்தியதையை ஸ்தாபித்துக்கொண்டுவரும்படி உத்தரவு செய்யவேண்டும்.

ரெஜிஸ்டர் செய்ததைக் கலெக்டர் மாற்றலாம் அல்லது ரத்து செய்யலாமென்பது.

7. 5-வது பிரிவின்படி ஜில்லா கலெகடர் ரெஜிஸ்டர் செய்த யாதொன்றை அவர் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு நோடிஸ் கொடுத்த பிறகு எப்போதேனும் ரத்துசெய்யலாம் அல்லது மாற்றலாம்.

ரெஜிஸ்டர் செய்தவனுல் இன்னது உண்டாகுமென்பது.

8. இந்த ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்ட தெதுவாவது ஒரு பூஸ்திதியின் விஷயமாகவாகிலும் ஒரு பூஸ்திதியைச் சேர்ந்த பாகத்தின் விஷயமாகவாகிலும் செலாவணியாய்க்கொண்டிருக்குங் காலத்திலே அப்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்ட நபர்-எந்தக் காரியங்களுககாகத்தாம் ரெஜிஸ்டர் செய்யப்படுகிருரோ அந்தக்காரியங்கள் விஷயமாக ஷை பூஸ்திதி அல்லது பாகத்தில் சென்னபட்டணத்து ஒரு வருக்கே உரியபூஸ்திதிகளின் கிராம ஊழியத்தைக்குறித்த 1894-ம்௵த்து ஆக்டின்படியும் சென்னபட்டணத்துப்பரம்பரையான கிராம உத்தியோகங்களைக் குறித்த 1895-ம்௵த்து ஆக்டின்படியும் ஸர்வேயையும் எல்லைகளையும் குறித்த சென்னபட்டணம் 1897-ம்௵த்து ஆக்டின்படியும் ஒரு பூஸ்திதிக்குடையவருக்குள்ள அதிகாரங்களைச் செலுத்தலாகும், அலுவல்களைச் செய்யலாகும்; ஷை பூஸ்திதியரவது அந்தக் காரியங்கள் விஷயமாக வேறே எந்த நபரும் பூஸ்திதிக்குடையவராகப் பிரவர்த்திக்கவுங்கூடாது, அந்தப்படி பாவிக்கப்படவுங்கூடாது.

ரெஜிஸ்டர் செய்யப்பட்ட நபர் கவர்ன்மெண்ட் தீர்வைபாக்கியைச் செலுத்த உட்பட்டிருப்பது.

9. (1) இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கின பிறகு செய்யப்பட்ட யாதொரு ட்ரான்ஸ்பரை அனுசரித்து இந்த ஆக்டின்படி பூஸ்திதிக்குடையவரென்று ரெஜிஸ்டர் செய்யப்பட்ட யாதொரு நபர் (இதில் பின்னுல் ட்ரான்ஸ்பர் செய்யபெற்றவர் என்று சொல்லப்பட்டவர்) கவர்ன்மெண்டாருக்குச் சம்பந்தப்பட்டமட்டில், சென்னபட்டணம் ஸர்க்கார் தீர்வை வசூலைக்குறித்த 1864-ம்௵த்து ஆக்டின் காரியங்களுக்காக சம்பந்தப்பட்ட பூஸ்திதியின் அல்லது ஒரு பூஸ்திதியைச்சேர்ந்த பாகத்தின் விஷயமாய் நிலத்துக்குடையவராக எண்ணபடுவார்; மேலும், அவர் - ரெஜிஸ்டர் செய்யப்பட்ட காலத்திலே சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த பூஸ்திதி அல்லது பாகத்துக்குச் சேரவேண்டியதாய் அல்லது அந்தப்படி ரெஜிஸ்டர் செய்தது செலாவணியாய்க்கொண்டிருக்குங் காலத்தில் எப்போதாகிலும் அதற்குச் சேரவேண்டியதாய் ஷை ஆக்டின்படி நிலத்துக்குடையவரிடத்திலிருந்து வசூல்செய்யப்படத்தக்க சகல தொகைகளுக்காகவும் அந்த ஆக்டின்படி தம்மேல் நடவடிக்கை நடத்தப்படுவதற்குள்ளாவார்.

(2) யாதொரு பூஸ்திதியைச்சேர்ந்த ஒரு பாகத்தின் சொந்தக்காரருக்கும் அதைட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவருக்கும் அப்படிப்பட்ட பாகத்தின் விஷயமாய் வசூல் செய்யப்படத்தக்க தொகை இவ்வளவென்பதைக்குறித்து சட்டசம்மதமான உடன்படிக்கை ஏதுவாவது ஏற்பட்டிருக்கிற விஷயத்திலே, அந்த உடன்படிக்கை அநியாயமாயிருக்கிறதென்று ஜில்லா கலெக்டருக்குத் தோற்றினுலொழிய, ஷை தொகையை அந்த உடன்படிக்கைக்கு ஒத்தபடி நிர்ணயிக்கவேண்டும். அப்படிப்பட்ட உடன்படிக்கை ஏதுவும் ஏற்பட்டிராத விஷயங்களிலாவது, உடன்படிக்கை ஏற்பட்டிருந்து அது அநியாயமாயிருப்பதாகத் தோற்றுகிற விஷயங்களிலாவது, ஜில்லா கலெக்டரானவர் சென்னபட்டணம் ஸர்க்கார் தீர்வை வசூலைக்குறித்த 1864-ம்௵த்து ஆக்ட் 45-வது பிரிவில் சொல்லியிருக்கிற மாதிரியாக ஷை தொகையை நிச்சயிக்கவேண்டும்.

(3) ட்ரான்ஸ்பர்செய்கிறவராவது அவருடைய சட்டசம்மதமான பிரதிநிதியாவது சென்னபட்டணம் ஸர்க்கார் தீர்வை வசூலைகுறித்த 1864-ம்௵த்து ஆக்டின்படி அவருக்கு ஏற்படும் யாதொரு பொறுப்பிலிருந்து இந்தப் பிரிவிலுள்ள தெதனுலும் நிவர்த்திக்கப்படமாட்டார்.

தொகை கட்டத்தவறினுல் நடவடிக்கை.

10. ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவராவது அவருடைய சட்டசம்மதமான பிரதிநிதியாவது இந்த ஆக்டின்படி பூஸ்திதிக்குடையரென்று ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்து அவர் தொகை கட்டத் தவறிப்போனதனுல் அதை வசூல் செய்வதற்காக, எந்த பூஸ்திதி அல்லது பூஸ்திதியைச் சேர்ந்த பாகத்தின் விஷயமாய் பூஸ்திதிக்குடையவரென்று அவர் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிருரோ அந்த பூஸ்திதி அல்லது பாகத்தின்மேல் நடவடிக்கை நடத்துவது அவசியமாய்விட்டால், கலெக்டராவது இது விஷயமாய்க் கலெக்டரால் அதிகாரங்கொடுக்கப்பெற்ற வேறே உத்தியோகஸ்தராவது - சென்னப்பட்டணம் ஸர்க்கார் தீர்வை வசூலைக்குறித்த 1864-ம்௵த்து ஆக்டின் 36-வது பிரிவில் நிர்ணயிக்கப்பட்ட நோடிஸுக்கு ஒரு நகலை, விற்பனைக்கு ஒரு மாதத்திற்குக் குறையாமல் முன்னிதாக பூஸ்திதியின் சொந்தக்காரருககும் சேர்ப்பிக்கும்படிச் செய்யவேண்டும்.

தவறுதல் காரணமாக ரெஜிஸ்டர் செய்ததை ரத்து செய்வது.

11. ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவராவது அவருடைய சட்டசம்மதமான பிரதிநிதியாவது இந்த ஆக்டின்படி பூஸ்திதிக்குடையவரென்று ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்து அவர் தொகை கட்டத் தவறியது காரணமாக, பூஸ்திதியின் சொந்தக்காரர் தொகை கட்டத்தவறினவரிடத்திலிருந்து சேரவேண்டிய பாக்கியைச் செலுத்தினுலும், பூஸ்திதியின் எந்த பாகமாவது பாக்கி வசூல் செய்யப்படுவதற்காக விற்கப்பட்டாலும், தொகை கட்டத்தவறினவர் இந்த ஆக்டின்படி பூஸ்திதிக்குடையவரென்று ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பதை ஜில்லா கலெக்டர் ரத்துசெய்யலாம்; அப்படி ரத்துசெய்யப்பட்ட தேதியிலிருந்தும், அதற்குமேல் அப்பீல் செய்யப்பட்டிருக்கும் விஷயங்களிலே, அதை ஊர்ஜிதப்படுத்தி அப்பீல் அதிகாரி பிறப்பிக்கும் உத்தரவின் தேதியிலிருந்தும், தொகைகட்டத்தவறினவர் ஒரு பூஸ்திதிக்குடையவருக்குள்ள அதிகாரங்களைச் செலுத்துவதும் அலுவல்களைச் செய்வதும் நின்றுபோவதெல்லாமல், அவர்-சென்னபட்டணம் ஸர்க்கார் தீர்வை வசூலைக்குறித்த 1864-ம்௵த்து ஆக்டின் காரியங்களுக்காக நிலத்துக்குடையவராயிருப்பதும் நின்றுபோய்விடும்.

இந்த ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டது கழிந்த போவதன்மேல் சாதாரணமான பூஸ்திதிக்குடையவருக்குள்ள அதிகாரங்களும் அலுவல்களும் மறுபடியும் அமுலுக்கு வருவது.

12. இந்த ஆக்டின்படி ரெஜிஸடர் செய்யப்பட்டதெதுவாவது எந்தக் காரணத்தினுலாவது செலாவணியாகாமல் நின்றுபோகிற தேதிமுதல், நிலங்களை ரெஜிஸ்டர் செய்வதைப் பற்றிய 1802-ம்௵த்து சென்னபட்டணம் ரெகுலேஷன்படியாவது, சென்னபட்டணம் நிலத்தீர்வை விதிப்பதைப் பற்றிய 1876-ம்௵த்து ஆக்டின்படியாவது அப்போது ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பூஸ்திதிக்குடையவர் - சென்னபட்டணத்து ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராம ஊழியத்தைக்குறித்த 1894-ம்௵த்து ஆக்டினுலும் சென்னபட்டணத்துப் பரம்பரையான கிராம உத்தியோகங்களைக்குறித்த 1895-ம்௵த்து ஆக்டினுலும் ஸர்வேயையும் எல்லைகளையுங்குறித்த சென்னபட்டணம் 1897-ம்௵த்து ஆக்டினுலும் பூஸ்திதிக்குடையவருக்குண்டான அதிகாரங்களை உடையவருமாவார், பூஸ்திதிக்குடையவருக்கு ஏற்பட்ட அலுவல்களுக்குட்பட்டவருமாவார்.

ஜில்லா கலெக்டர்களின் உத்தரவுகள் எழுத்துமூலமாயிருக்கவேண்டுமென்பது.

13. (1) ஜில்லா கலெக்டரானவர் - இந்த ஆக்டின்படி தாம் ஜாரிசெய்யும் ஒவ்வொரு உத்தரவுக்கும் தம்முடைய காரணங்களை எழுத்துமூலமாய்ப் பதிவுசெய்யவேண்டும். அந்த உத்தரவின் ஒருநகலை, அதனுல் பாதிக்கப்படும் நபர்களில் எவர்களின் மேல்விலாசங்களை விசாரித்தறியக்கூடுமோ அவர்களெல்லோருக்கும் தபால்மூலமாய் ரெஜிஸ்டர்செய்து அனுப்பவேண்டும்.

ரெவினியு போர்டாருக்கு அப்பீல்.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு உத்தரவின்மேலும், மேலே கண்டபடி அனுப்பின தேதியிலிருந்து இரண்டு மாதத்துக்குள் ரெவினியுபோர்டருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

இன்ஜங்ஷன் என்னும் தடை உத்தரவுக்காக வியாஜ்ஜியங்கள் தொடருவதும் விண்ணப்பங்கள் செய்துகொள்ளுவதும் கூடாதென்பது.

14. எரு ஜில்லா கலெக்டரை இந்த ஆக்டின்படி நடவடிக்கை நடத்தக்கூடாதென்று நிர்ப்பந்திகும்பொருட்டு இன்ஜங்ஷன் என்னும் தடை உத்தரவுக்காக யாதொரு வியாஜ்ஜியம் நடத்தவுங் கூடாது விண்ணப்பம் செய்துகொள்ளவும் கூடாது; மேலும், ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களையாவது யாதொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தரையாவது அவர் நல்ல எண்ணத்துடன் இந்த ஆக்டின்படி செய்த அல்லது செய்ததாகப் பொருள்படுகிற யாதொரு காரியத்தின் விஷயமாய் யாதொரு வியாஜ்ஜியத்துக்குக் கட்சிக்காரராக்வுங்கூடாது, அவர் யாதொரு பொறுப்புக்கு உட்படவுமாட்டார்.

விதிகள் செய்ய அதிகாரம்.

15-பிரதேச கவர்ன்மெண்டாருடைய அங்கீகரித்துக்குட்பட்டு, ரெவினியு போர்டார்— இந்த ஆக்டின் காரியங்களை நிறைவேற்றுவதற்காக இந்த ஆக்டுக்கு விரோதமாயிராத விதிகள் ஏற்படுத்தலாம்.

EXTRACTS.

ஆனரபில் மி-ர். ஜஸ்டிவ்ஸசங்கரன் நாயர் ஆசாரதிருத்தத்தைப்பற்றி.

ஆனரெபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் இங்கிலாந்தில் பிரசுரமாகும் "கண்டெம்பரரி ரெவியூ" என்கிற மாகவின் அல்லது மாதாந்தப் பத்திரிகையில், ஹிந்துக்களின் ஆசாரங்கள் சட்டசபைகளால் எப்படித் திருத்தப்படலாமென்று ஒரு நீண்ட வியாசம் எழுதியிருக்கிருர். ஆனரெபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் ஒரு பெரிய ஆசாரத் திருத்தக்காரர். ஹிந்துக்களின் ஆசாரங்களிற் பல தற்கால நாகரிகத்துக்கு விரோதமென்றும், ஹிந்துக்கள்மேல் நாட்டாரைப் போலவும், ஜப்பானியரைப் போலவும், உயர்ந்த நிலைமையை அடையவேண்டுமானுல், இந்த ஆசாரங்களிலுள்ள குறைகளும் ஊழல்களும் சட்டங்கள் செய்து நீக்கப்படவேண்டுமென்றும், அபிப்பிராயமுள்ளவர். இந்த விஷயத்தில் இந்தியாவுக்கும் இங்கிலாந்து போன்றமேல் நாடுகளுக்கும் விசேஷ வித்தியாசமிருக்கின்றது. இங்கிலாந்தில் ஜனங்களின் வழக்கங்களைத் திருத்தி அவர்கள் வாழ்க்கையை நல்ல நிலைமைக்குக் கொண்டுவரவேண்டுமானுல் பார்லிமெண்டில் சட்டம் செய்தும், அல்லது சட்டத்தின் தாற்பரியங்களைக் கோர்ட்டுகள் சமூகத்தின் அபிவிர்த்திக்குத் தக்கவாறு மாற்றித் தீர்ப்புகள் செய்தும் நிறைவேற்றலாம். இந்தியாவில் அப்படிச் செய்தல் சாத்தியமல்ல இங்கே ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்னுற் செய்யப்பட்ட ஸ்மிருதிகள் என்ற சட்டங்கள் அனுஷ்டானத்திலிருந்து திருத்தங்கள் செய்யப்படாமல் தடைப்படுகின்றன கோர்ட்டுகளும் இந்தச் சட்டங்களை மாற்றிச் சமூகத்தின் முற்போக்குக்கு இசைந்தவாறு அவைகளைப் பொருட்படுத்த அஞ்சுகின்றன. இங்கிலாந்தில் பிரிவி கொன்சில் (Privy Council) லுன்றிருந்து, இந்தியாவின் சட்டங்களைப் பொருட்டு பத்த அதிகாரமிருந்தாலும், அது இந்திய ஜட்ஜுகளின் நோக்கத்துக்கு விரோதமாய்ப்போக இஷ்டப்படுகிறதில்லை இந்த இரண்டு காரணங்களாலும் மற்றத் தேசங்களில் சமூகவாழ்க்கை அப்போதப்போது திருத்தம் பெற்று உயர்ந்து வருவதுபோல இந்தியாவில் வருவதில்லை.

இப்படியிருந்தபோதிலும், பிரிட்டிஷ் துரைத்தனம் இந்தியாவில் ஸ்திரம் பெற்ற கால முதல் ஹிந்துக்களின் ஆசாரங்கள், சமூகத்தின் நல்வாழ்க்கைக்கு விரோதமாய் இருந்தபோது, அந்தத்துரைத்தனம் அவைகளை மாற்றிவந்திருக்கிறது. ஹிந்துக்களின் பூர்வீக சட்டப்படி பிராமணர்கள் மற்ற ஜாதிகளைப் போல தண்டனை யடையாமலிருந்ததை ஈஸ்ட் இந்தியாக் கம்பெனியின் துரைத்தனம் மாற்றியிருக்கின்றது. கங்கை நதியில் பிராணனை விடுவதையும் குழந்தைகளைத் தள்ளிக்கொல்லுவதையும் ஜனனத்தின் அந்தகாரத்தில் பெண் குழந்தைகளைக் கொல்லுவதையும் தடுத்து விட்டது. கடன் கொடுக்க வேண்டியதென்று ஒருவன் வீட்டில் 'தர்ணு' (Dharna) கிடப்பதையும், அதாவது கடனைக்கொடுத்தாலொழிய வீட்டை விட்டுப் போவதில்லையென்று அங்கே பட்டினியாய்ப் படுத்து உயிர் துறப்பதாகப் பயமுறுத்துவதையும், அது சட்ட விரோதமாக்கி விட்டது. பிறகு, ஸ்திரீகள் உடன்கட்டை யேறுவது தண்டனைக்குட்படுத்தப்பட்டது. ஹிந்து விதவைகள் புனர்விவாகம் செய்துகொள்ளலாமென்றும், அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் சொத்துக்களுக்குப் பாத்தியங் கொண்டனவென்றும் சட்டம் செய்யப்பட்டது. ஒரு ஸ்திரீ தன் புருஷனுடன் பத்து வயதுக்குள் புணர இஷ்டப்பட்டாலும் அது சட்ட விரோதமென்று பினல்கோடில் செய்திருந்ததை ஸார் லான்ஸ்டௌன் கவர்னர் ஜெனரலாயிருந்தபோது பன்னிரண்டு வயதுக்குள்ளாகப் புணர்தல் 'ரேப்' என்னும் குற்றமாகுமென்று மாற்றப்பட்டது. இவைகளையும் பின்

னும் சில திருத்தங்களையும் பிரிட்டிஷ்ராஜாங்கத்தார் சட்டத்தாற் செய்ய, அவை ஒவ்வொன்றையும் மத சம்பந்தமான விஷயங்களில் கவர்ன்மெண்ட் பிரவேசிக்கிறார்களென்று ஹிந்து சமூகம் பலமாய் ஆட்சேபித்தது.

இப்போது ஆசாரத்திருத்தங்களிற்கவலைகொண்ட ஹிந்துக்கள் அதிகப்பட்டு வருகிறார்கள். பழையமாதிரிகளைக்கொண்ட ஹிந்துக்கள் பூர்வீக ஆசாரங்களை மாற்றக் கூடாதென்று வீம்புசெய்ய, திருத்தக்காரர்கள் சாஸ்திரங்கள் ஒரு வழியா யில்லை யென்றும், அவர்கள் கோரும் திருத்தங்களுக்கு அவைகளில் ஆதார மிருக்கின்றதென்று வாதிக்கிறார்கள். ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் பழைய மாதிரிகளை அனுஷ்டிக்கும் இந்தியர் விஷயத்தில் முழு நியாயமுமில்லாமல் தப்பெண்ணங்கொண் டிருக்கிறாரெனச் சொல்லவேண்டி யிருக்கின்றது. இந்த ஹிந்துக்களின் இஷ்டப்படி விடப்பட்டுப்போமானால் ஸ்திரீகள் உடன்கட்டையேறும் வழக்கம் மறுபடியும் அனுஷ்டானத்துக்கு வந்து விடுமென்று இவர் சொல்லுகிறார். இது சரியல்ல. ஏதோ இரண்டொரு ஸ்திரீகள் உடன்கட்டை யேறுவதைக் கண்டு சில ஹிந்துப் பத்திரிகைகள் புகழ்ந்தபோதிலும், இந்த வழக்கத்தைப் பொதுவாய் ஹிந்து சமூகம் இப்போது ஆதரிக்காதென்றே நம்புகிறோம். ஸ்திரீகளின் புனர் விவாகத்தைக் கூட எதிர்த்து புனர்விவாகம் செய்தவர்களை அடமாய்த் தொந்தரவு செய்யும் வழக்கமும் இப்போது குறைந்து வருகின்றது. அன்னிய தேசங்களுக்குக் கடல்தாண்டிப் போகிறவர்களையும் சாமானியஜனங்கள் இப்போது அவ்வளவு தொந்தரவுசெய்கிறதில்லை ஆங்கிலங்கற்காத ஜனங்கள் சமூக விர்த்திக்கு விரோதமான வழக்கங்களை முன்போல ஆதரிக்காமல், திருத்தங்களை அவர்கள் செய்யாது போனாலும்: பிறர் செய்தால் அவைகளுக்குச் சம்மதிக்கிறார்கள். மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் சட்டங்கள் செய்து திருத்தங்களைப் பலவந்தப்படுத்த வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார். இந்தக் கொள்கைக்கு ஆங்கிலங் கற்றவர்களே பலர் விரோதமாயிருக்க, சாமானிய ஜனங்கள் விரோதமாயிருக்கக் கேட்பானேன்?

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் தமது வியாசத்தின் இறுதியில் சமீபத்தில் திருத்தம் பெற்ற சட்ட சபைகள் கூட அவைகள் செய்யும் சட்டங்களால் பூர்வீக ஆசாரங்களை மாற்றச் சக்தியற் றிருக்கின்றனவென்று எழுதுகிறார். இந்த சபைகளில் பிரதிநிதி மெம்பர்களும் கவர்ன்மெண்டால் நியமிக்கப்படும் மெம்பர்களும் இருக்கிறார்கள். பிரதிநிதி மெம்பர்கள் ஜனங்களிற் சிலராலேயே நியமிக்கப்படுகிறபடியால் அந்தமெம்பர்கள் பொது ஜனங்களின் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதாகச் சொல்லக் கூடாது. கவர்ன்மெண்டால் நியமிக்கப்படும் மெம்பர்களும் ஜனப்பிரதிநிதிகளாகமாட்டார்கள். ஆகையால் இங்கிலாந்தில் பார்லிமெண்ட் சமூக நல்வாழ்க்கைக்கு வேண்டிய திருத்தங்களைச் செய்யக்கூடியது போல இந்திய சட்ட சபைகள் செய்ய முடியாது தற்சமயம் ஜனங்களிற் பெரும் பான்மையோரால் நியமிக்கப்படும் பிரதி நிதிகள் சட்ட சபைகளில் இல்லாதபடியினால் இப்போதுள்ள சட்டசபைகளைக்கொண்டு எப்படி முன்செல்லலா மென்பது ஆசாரத திருத்தக்காரர்களின் கவலை.

General News.

பொது வர்த்தமானங்கள்.

EXTRACTS :—

தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட்டு போர்டு மீட்டிங்கு.

இந்த போர்ட்டு மீட்டிங்கில் சமீபத்தில் ஒரு தீர்மானமாயிற்று. இந்த போர்டு இஞ்சினீயருக்கு வல்லம்ரோட்டில் 12100-ரூபாயில் ஒரு பங்களாக்கட்டுவதென்றும், அதில் குடியிருக்கும் எஞ்சினீயர்களிடமிருந்து அவர் சம்பளத்தில் 10-ல் ஒருபாகம் குடிக்கூலிக்கு ஏற்று வஸூல் செய்து விடுகிறதென்றும் ஏற்பாடாயிற்று.

இந்த பங்களாவின்கட்டிடமாதிரிஇப்படி என்று குறித்து கவர்ன்மெண்டுக்கு மாதிரி அனுப்பினார்கள் கவர்ன்மெண்டாரு அந்தப் பிளானை தஞ்சைசர்க்கில் ஸூபரின்டெண்டிங் இஞ்சினீயருக்கு அனுப்பியதன் மேல் அவர் 16700-ரூபா திட்டத்தில் வேறு ஒரு பிளான் அனுப்பினார். கவர்ன்மெண்டார் டிஸ்ட்ரிக்டு போர்டார் பிளானையும் ஸூபரின் டெண்டெண்டு பிளானையும் அப்போர்டாருகளுக்கே அனுப்பி இவ்விரண்டில் எது உங்களுக்குப்பிடித்ததுஎன்று கேட்டு விட்டார்கள். டிஸ்ட்ரிக்டு போர்டார் தாங்கள் முதலில் அனுப்பிய பிளானையே விரும்பி, கவர்ன்மெண்டு ஸாங்ஷனை எதிர்பாத்திருக்கிறார்கள்.

கும்பகோணம் முனிசிபாலிடி.

ஸர் A. சேஷய். சாஸ்திரியாரின் பேரப்பிள்ளை மைனரா யிருக்கின்றபடியால், அந்த எஸ்டேட்டு இப்பொழுது கோர்ட்டு ஆப் வார்ட்ஸிலிருந்து, தஞ்சாவூர் கலெக்டர் மேல் விசாரணையில் இருந்து வருகிறது. இப்பொழுது கும்பகோணம் முனிஸிபாலிடியார் அந்த எஸ்டேட்டுக்குச் சில வரிகள் கோர்ட்டார்கள் அவற்றை ஆக்ஷேபித்து தஞ்சை கலெக்டர், முனிஷிபாலிடிக்கு விண்ணப்பம் செய்துகொண்டார். சேர்மன் அந்த விண்ணப்பம் கால அவதி ஆன பிறகு செய்யப்பட்ட தென்று தள்ளிவிட்டார். கௌன்ஸிலர்களும் இத்தீர்மானத்தை ஒப்பி விட்டார்கள்.

சக்கரவர்த்தியின் செலவு.

லண்டன், ஆகஸ்டு 9—

ஜியார்ஜ் சக்கரவர்த்தி டெல்லி தர்பாருக்கு விஜயமாவதை முன்னிட்டு அவருடைய செலவுக்காக் 120,000 பவுன் விசேஷமாகக் கொடுக்கக் கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

ஜஸ்டிஸ் போடாம் மெமோரியல்.

இந்த மெமோரியலுக்குப் பணம் உபகரித்தவர்களுடைய ஒரு பொதுக்கூட்டம் சென்ற 11-ம் உ மாலை 5-30-க்கு ஜீவஹிம்ஸை நிவாரண ஸங்க ஆபீஸில் ஆனரபில் ஸர் C. ஆர்னால்டு ஒயிட் சீப் ஜஸ்டிஸ் அக்ராஸனத்தின் கீழ்க் கூடிற்று அப்பொழுது ஜஸ்டிஸ் போடாமின் ஞாபகார்த்தமாக் அமைக்கப்பட்ட அவருடைய உருவச்சிலையானது பரிசோதிக்கப்பட்டது: எல்லாரும் நன்றாயிருக்கிற தென்று ஒப்புக்கொண்டதன் மேல், அது எங்குவைக்கப்படவேண்டுமென்று யோசிக்கப்பட்டது உத்தேசித்த விடத்திலேயே இவ்வுருவச்சிலை வைக்கப்படவேண்டுமென்றும் மேலதிகாரிகளின் உத்தரவு கிடைத்தவுடன், இந்த மெமோரியலின் கமிட்டியார் அவ்வுருவச்சிலையைத் திறந்துவைக்கும் சிறப்புத் தொழிலை சென்னைக் கவர்னரைக் கொண்டு செய்விக்கவேண்டு மென்று கருதியிருக்கிறார்கள். இது சலவைக்கல்லினால் செய்து கம்பீரத்தோற்றத்தை யுடையதா யிருக்கிறது.

பிரிடிஷ் ஜெனரல் போஸ்டாபீஸ்.

புது செக்ரிடரி நியமனம்.

லண்டன், ஆகஸ்டு 9—

இதுவரையில் பிரிடிஷ் ஜெனரல் போஸ்டாபீஸின் செக்ரிடரியாக இருந்து வந்த ஸர் மாத்யூநாதன் என்பவருடைய ஸ்தானத்தில் இப்போது ஸர் அலக்ஸாந்தர் கிங் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பேங்களூரில் ஒரு டிஸ்டிரிக்ட் அண்ட்

ஸெஷன்ஸ் கோர்ட்.

பங்களூரில் ஒரு டிஸ்டிரிக்ட் அண்ட் செஷன்ஸ் கோர்ட் புதிதாய் ஸ்தாபிக்கப்படப் போகிறது. இப்போது மைசூர் சீப் கோர்ட்டில் மூன்றாவது ஜட்ஜாய் ஆக்ட்கொண் டிருக்கும் மிஸ்டர் ஜஸ்டிஸ் பரமசிவ அய்யர் அந்தப் புதிய கோர்ட் ஜட்ஜாய் நியமிக்கப்படுவார். அந்தக் கோர்ட் புதிதாய் ஸ்தாபிக்கப்படப் போவதைக் கருதி மைசூர் சமஸ்தானக்கவர்ன்மெண்டார் பங்களூர், கோலார், தும்கூர், இந்த மூன்று ரெவினியூ ஜில்லாக்களிலும் மைசூர் சீப் கோர்ட்டுக்கு 1907-ம் வருஷத்தில் கொடுக்கப்பட்ட சிவில் கிரிமினல் அதிகாரங்கள் இந்த மாதம் 21-ந்தேதி யோடு சீப் கோர்ட்டைவிட்டு எடுத்துவிடப்படுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். பங்களூர் டிஸ்டிரிக்ட் அண்ட் செஷன்ஸ் கோர்ட். பங்களூர், கோலார், தும்கூர் இந்த மூன்று ஜில்லாக்கள் சம்பந்தமான சிவில் கிரிமினல் வழக்குகளைவிசாரித்துத் தீர்க்க அதிகாரம்பெறும், இந்தப் புது ஏற்பாட்டின் கீழ், பங்களூர் சப் ஜட்ஜிக்கு 1907-ம் வருஷம் கொடுக்கப்பட்ட வரம்பெற்ற சிவில் அதிகாரம் எடுபட்டுப்போம். அவர் ரூபா 10,000-வரை அசல் சிவில் நம்பர்களை விசாரணை செய்ய அதிகாரம் பெறுவார்.

டிப்டி கலெக்டர் ஸ்தானமும் குதிரை சவாரி செய்யும் பழக்கமும்.

மதராஸ் புரொவின்ஷியல் சிவில் சர்விஸ் விதிகளின் கீழ் டிப்டி கலெக்டர்கள் குதிரை சவாரி செய்யும் பரீட்சையில் அவர்கள் டிப்டி கலெக்டர்களாய் நியமனம் பெற்ற பிற்கு தேறவேண்டுமென்று ஒரு ஒழுங்கு இதுவரை யிருந்து வந்தது. சில டிப்டி கலெக்டர்கள் அந்த ஸ்தானங் கிடைத்துவிட்ட பிற்பாடு அந்தப்பரீட்சைக்குச் சென்று அதனில் தேறுமலே டிப்டி கலெக்டர் வேலையாக்க தமக்குக் கவர்ன்மெண்டார் உத்தரவு கொடுத்துவிட வேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொண்டு வந்தார்கள். அப்படி பலபேர் விண்ணப்பஞ்செய்து கொள்வதைக் கருதி சென்னைக் கவர்ன்மெண்டார் இப்போது ஒரு புது உத்தரவு பிறப்பித்து விட்டார்கள். அவர்கள் டிப்டி கலெக்டர் பதவிக்கு ஆசைபபடுகிறவர்கள் குதிரை சவாரி செய்யும் பரீட்சையில் முன்னைக்கூடியே தேறி யிருக்க வேண்டுமென்று உத்தரவு செய்திருக்கிறார்கள். குதிரை சவாரிப்பரீட்சைக்கு ரெவினியூ பரீட்சைகளில் தேசபாஷைப் பரீட்சை நீங்கலாக மற்றப்பரீட்சைகளைப் பாஸ் செய்திருக்கிறவர்களும் ரூபா 150 சம்பளத்துக்கு உயர்ந்து விட்டவர்களும் போகலாமென்று உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது.

ஆனைதாண்டவபுரம் ரயில்மோதலும்.

மிஸ்டர் K. பஞ்சநத ஐயரும்.

இந்த ஆனைதாண்டவபுரம் ரயில்மோது ஸம்பவத்தில் அதிகக் காயம் பட்டவர் மதுரை D. P. W. ஸப் டிவிஷனல் ஆபீஸர் மிஸ்டர் K. பஞ்சநத ஐயரே. இவர் இது வரையில் மதுரை டிஸ்ட்ரிக்டு ஸர்ஜன் மேஜர் ஹாரிஸ்னுல் சிகிச்சை செய்யப்பட்டுச் சிறிது தேறி யிருக்கிறார். அவர் திரிசிரபுரத்திலுள்ள தென்னிந்தியா ரெயில்வே டிராபிக் மானேஜருக்கு எழுதித்தமக்கு நேரிட்ட இந்த விபத்துக்காக ரூபா 5000 நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டார். மானேஜர் கம்பெனி டாக்டர் ஒருவரை அனுப்பி, இவருடைய தேகஸ்திதியைச் சோதித்து ரிபோர்ட்டு செய்யும்படி அனுப்ப, அவர் வந்து சோதனை செய்ததில், மிஸ்டர் K. பஞ்சநத ஐயரின் தேக ஸ்திதி அவ்வளவு நஷ்டஈடு செய்

யப்படும்படி சனமா யிருக்கவில்லை என்றும், இப்பொழுது திடசரீரியா யிருக்கிறாரென்றும் சொன்னதன்மேல், டிராபிக்கு மானேஜர் அந்த ஐயரின் விண்ணப்பத்தை அங்கிகரிக்க மாட்டேனென்று விட்டார்.

கராச்சி நஷ்ட ஈட்டுக் கேஸ்.

கராச்சியிலே சிண்டு கெஜட் என்று ஒரு பத்திரிகை நடந்துவருகிறது. அதற்கு மிஸ்டர் J. கவன்பவர் ஆசிரியர். அப்பத்திராசிரியர் கராச்சி வக்கீல் சங்கத்தார் போன மே மாதத்தில் செய்த ஏதோ சில தீர்மானங்களைக் குறித்து தமது பத்திரிகையில் எழுதினதில் மானபங்கமாய் எழுதிவிட்டாரென்றும் நஷ்டஈடு கிடைக்கவேண்டுமென்றும் அந்த வக்கீல் சங்கத்தார் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்கிட்டிருந்தார்கள். ஆனால் மாஜிஸ்டிரேட் சிண்ட் கெஜட்டின் பத்திராசிரியர் வக்கீல் சங்கத்துத் தீர்மானங்களைப்பற்றி யெழுதி யிருந்தவை மானநஷ்டத்தை யுண்டாக்கக் கூடியவைகளல்லவென்றும் அப்பத்திராசிரியர் யாதொரு நஷ்டஈடும் கொடுக்கவேண்டியதில்லை யென்றும் தீர்ப்புச் செய்து விட்டார்.

ஜெனரல் போத்தா. இமிகிரேஷனைப்பற்றி.!

லண்டன், ஆகஸ்டு 13—

ஜெனரல் போத்தா லண்டனைவிட்டு ஆப்பிரிக்காவுக்குப் புறப்படுவதற்கு முன் ராய்ட்டரின் பிரதிநிதி ஒருவர் அவரைக்கண்டு பேசினார். அப்போது தென் ஆப்பிரிக்கா விஷயத்தில் தாம் அநேக பெரிய காரியங்களை எதிர்பார்த்திருப்பதாகவும் அதிலும் முக்கியமாய் இன்னும் சில வருஷங்களுக்குள் விவசாயம் தென் ஆப்பிரிக்காவில் மிக விருத்தி ஆகும் என்பதில் தமக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறதென்பதாகவும் மிஸ்டர் போத்தா சொன்னார். தென் ஆப்பிரிக்காவில் குழப்பம் ஏதாவது நேரிடுவதுபோல் ஆங்கிலேயருக்குத் தோன்றும் பட்சத்தில் ஒருவரை யொருவர் நன்றாய்த் தெரிந்துகொள்ளக் கற்றுக்கொண்டவர்களும், ஐக்கிய பாவத்தின் அவசியத்தை அறிந்துகொண்டவர்களுமான இரண்டு கட்சியாரால் தென் ஆப்பிரிக்கா விஷயங்கள் நிர்வகிக்கப்படுகின்றன என்பதை உணரவேண்டுமென்று மிஸ்டர் போத்தா ஆங்கிலேயர்களுக்கு எச்சரித்துக்கூறினார். மற்ற ராச்சியங்களில் இமிகிரேஷன் முறை எவ்விதம் இருக்கிறதென்பதைத் தாம் கவனித்து வந்திருப்பதாகவும், இரட்சண்ய சேனையின் தலைவரான ஜெனரல் பூத் என்பவரைக்கண்டு அது சம்பந்தமாய் நெடுநேரம் விவாதித்ததாகவும் மிஸ்டர் போத்தா கூறினார். இமிகிரேஷன் விஷயத்தில் தமக்குப் பூரண சம்மதமெனவும், ஆனால் இப்போது தென் ஆப்பிரிக்காவில் பட்டினி கிடந்து வரும் கூலிகளுக்கு அவர்களுடையஜீவனோபாயத்துக்கு ஏதாவது வழி பிறந்திருக்கிறதா என்பதைத் தாம் முதலில் நிச்சயமாய் அறிந்துகொள்ளவேண்டுமென்பதாகவும் தென் ஆப்பிரிக்காவுக்குக் கூலிகள் வந்தால் அவர்கள் விவசாயிகளாகத் தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்பதாகவும் மிஸ்டர் போத்தா கூறினார்.

முனிசிபல் கவுன்சில்களுக்கு புதிதாய் நியமன அதிகாரம்.

ஜில்லா முனிசிபல் கவுன்சில்கள் டெம்பரரியாக 6-மாத காலத்துக்கு 50-ரூபாய் சம்பளத்துக்கு மேற்படாத உத்தியோகங்களை சாங்க்ஷன் செய்யலாமென்று சென்னைக் கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். ஆனால் அம்மாதிரி உத்தியோகங்களின் நியமனத்தைப்பற்றி ஒருரிப்போர்ட் உடனே கலெக்டருக்கு அனுப்பப்பட வேண்டும். அவர் முனிசிபல் கவுன்ஸில் நடத்திய நடவடிக்கை சரிதானென்று கவனித்துக் கொண்டுவந்து முனிசிபல் கவுன்சில் நடத்தி யிருக்கும் நடவடிக்கையில் ஏதேனும் தவறுத லிருந்தால் அதனைக் கவர்ன்மெண்டுக்கு ரிப்போர்ட் செய்வார். ஆனால் இப்படி முனிசிபல் கவுன்சில்களின் அதிகாரம் விசாரிக்கப்பட்டிருந்தாலும், காலரா வேலைக்காவது, பிளேக் வேலைக்காவது டெம்பரரியாக சிப்பந்திகளை நியமிக்கவேண்டியிருக்கும்போது அவ்வதிகாரத்தை யுபயோகித்து முனிஸிபல் கௌன்ஸில்கள் நியமனங்கள் செய்யக்கூடாது. அம்மாதிரி சிப்பந்திகளை நியமிப்பதற்கு கவர்ன்மெண்டாரின் உத்தரவாவது கலெக்டரின் உத்தரவாவது எப்போதும் போல் பெறப்படவேண்டும்.

டெல்லி தர்பார் சமயத்தில் வண்டி வாடகைகள்.

டெல்லி தர்பார் சமயத்தில் வாடகைக்குவண்டிகள் விடும் வண்டிக்காரர்கள் இன்ன வாடகை வாங்கலாம், இதற்கு மேற்பட்டு வாங்கக்கூடாது என்று விதிகள் செய்யப்படப்போகின்றன. அவ்விதிகளை யோசிக்க டெல்லி முனிசிபாலிடியின் ஸ்பெஷல் மீட்டிங் கொன்று அடுத்த செப்டம்பர் மாதம் 5-ந்தேதியன்றாவது, அதற்குப் பிறகாவது, நடக்கும். வண்டிக்காரர்கள் முனிசிபாலிடி எல்லைகளுக்குள் தங்கள் வண்டிகளில் முதல் வகுப்பு வண்டிகளுக்கு ஒரு மணி நேரத்துக்கு 5-ரூபாயும், 10-மணி நேரங்கொண்ட ஒரு நாளைக்கு 4 -ரூபாயும், இரண்டாவது வகுப்பு வண்டிகளுக்கு ஒரு மணிக்கு 4-ரூபாயும், ஒருநாளைக்கு 30-ரூபாயும், மூன்றாவது வகுப்பு வண்டிகளுக்கு ஒரு மணிக்கு 3 ரூபாயும் ஒரு நாளைக்கு 20 ரூபாயும், 3-வது வகுப்பு டாங்கா (Tonga) வண்டிகளுக்கு மணிக்கு 1½ ரூபாயும் நாளைக்கு 15-ரூபாயும், 4-வது வகுப்பு எக்கா வண்டிகளுக்கு மணிக்கு 1-ரூபாயும் நாளைக்கு 10-ரூபாயும் வாடகை கேட்கலா

மென்று தர்பார் கமிட்டியார் விசேஷவிதிகள் செய்திருக்கிறார்கள். இந்த விதிகளை முனிசிபாலியார் அங்கீகரித்து விடக்கூடும். மேலே சொன்ன விகிதப்படி வண்டி வாடகைடெல்லி நகரத்தில் அடுத்த நவம்பர் மாதம் 15-ந்தேதி முதல் டிசம்பர் மாதம் 24-ந்தேதி வரைவாங்கப்படும்.

சில ஸென்ஸஸ் தொகைகள்.

மத்திய மாகாணங்களுக்கும் பேரார் நாட்டுக்குமாகச் சேர்ந்து எடுக்கப்பட்ட ஸென்ஸஸ் தொகைகள் கடைசியாய் தணிக்கை செய்யப்பட்டபடி அந்நாடுகளின் ஜனத் தொகை 1,60,33,310 என்று தெரிகிறது. 1901-ம் வருஷம் எடுக்கப்பட்ட ஸென்ஸஸ்படி அவைகளின் ஜனத்தொகை 1,36,02,592 ஆகவிருந்தது.

பர்மா நாட்டுக்கும் அதனோடு சேர்ந்த ஷான் நாடுகள், பக்கோக்கு மலைப்பிரதேசங்கள், சின் மலைகள் இவைகளுக்கும் எடுக்கப்பட்ட ஸென்ஸஸ் தொகைகள் கடைசியாய் தணிக்கைசெய்யப் பட்டபடி அந்த நாடுகளின் ஜனத்தொகை 1,21,15,217 என்று தெரிகிறது பர்மா நாட்டின் ஜனத் தொகை மட்டும் 1,06,10,256 ஆகிறது அதனைச் சேர்ந்த நாடுகளின் ஜனத் தொகை 15,04,961 ஆகிறது.

ஆனரபில் மிஸ்டர் பூபேந்திரநாத் பாஸு.

இங்லண்டுக்குச் சென்றிருந்த ஆனரெபில் மி-ர் பூபேந்திரநாத் பாஸு நேற்றுக்காலமே பம்பாய் வந்து சேர்ந்து, கல்கட்டாவுக்குப் புறப்பட்டுவிட்டார். அவரை அப்பாலோ பந்தரில் சில வங்காளிகள் எதிர்கொண்டு வரவேற்றுப்பூமாலையிட்டு உபசரித்தார்கள் அவரை, சமாசாரப்பத்திரிகைகளின் சம்பந்தமுள்ள பிரதிநிதி யொருவர் கண்டு பேச, அவர் இங்கிலண்டிலுள்ள உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தர்களல்லாதவர்களும் இந்தியா விஷயத்தில் ஒற்றுமையுணர்ச்சி காட்டி வருகிறார்களென்றும், இந்தியா மந்திரி ஆபீஸ் உயர்பதவி உத்தியோகஸ்தர்கள் இந்தியாவுக்கு நன்மை செய்வதில் கவலையுள்ளவர்களா யிருக்கிறார்களென்றும், லார்ட் மார்லியின் சீர்திருத்தங்களை மேன்மேலும் இந்திய நிருவாக முறைகளில் செய்யப்படப்போகிற சீர்திருத்தங்களுக்கு அஸ்திவாரமாகவே இங்கிலண்டிலுள்ள ராஜாங்க விஷயவிவகாரிகள் நினைக்கிறார்களென்றும், இங்கிலண்டிலே இந்தியாவுக்குப் பலபேர் சிநேகிதர்களிருக்கிறார்களென்றும் சொன்னதுமன்றி, வருஷந்தோறும் இந்திய ஜனத்தலைவர்கள் இங்கிலண்டு சென்று பிரிடிஷாருக்கு இந்தியாவின் முன்னேற்றத்தை சம்பாதித்துவிடலாமென்றும், இந்திய பட்ஜட் விஷயமாய் பார்லிமெண்ட் சபையில் காட்டப்பட்ட ஊக்கமும், பேசப்பட்ட பேச்சுகளும் இந்தியாவின் பிற்கால நிலை நன்றாகத்தா னிருக்குமென நம்புவதற் கிடந்தருகின்றனவென்றும் சொன்னார். வங்காளப் பிரிவினை மாற்றப்படுமாவென்று கேட்கப்பட்டதற்கு மட்டும் அவர் பதில் சொல்லவில்லை.

பேர்ஷியாவின் நிலைமை, பிரிடிஷாரின் செய்கை.

லண்டன், ஆகஸ்டு 19—

மேஜர் ஸ்டோக்ஸின் இராஜிநாமாவை பிரிடிஷ் கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ள மாட்டார்களென்று பிரிடிஷ் மந்திரி பெர்ஷியாவுக்கு அறிவித்திருக்கிறாரென்று டெகிரானிலிருந்து வரும் தந்தி ஒன்று கூறுகிறது. வடக்குபெர்ஷியாப் விஷயமாய் ருஷியர்களும், ஜெர்மனியர்களும் செய்துகொண்டிருக்கும் உடன்படிக்கை இன்று அநேகமாய்க் கையெழுத்தாகிவிடுமென்று "டைம்ஸ்" பத்திரிகையின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்நிருபர் ஒருவர் தந்திசமாசாரம் அனுப்புகிறார். டெகிரான் என்னுமிடத்திலிருந்து கானிகின் என்னுமிடம் வரையில் ருஷியா ரயில் போட்டுக்கொள்ளுவதைப் பற்றி அந்த உடன்படிக்கை மிகுதியும் பிரஸ்தாபிக்கிறதுமன்றி, பாக்டாட் ரெயில்வேத் தொடரைப்போட்டு முடிப்பதைத் தடுக்கக்கூடாது என்பதைப்பற்றியும் பிரஸ்தாபிக்கிறது.

துருக்கி, காலரா பிரவேசம்.

லண்டன், ஆகஸ்டு 18—

நேற்று துருக்கியில் 70 பேருக்குக் காலரா கண்டு 54 பேர் இறந்து போனார்களென்று கான்ஸ்டான்டிநோபில் தந்தி ஒன்று கூறுகிறது. மசூதிகளில் இக்கொடு நோய் தொலைவதற்காக பிரார்த்தனைகளும், ஜெபங்களும் செய்யும்படி துருக்கி சுல்தான் உத்தரவிட்டிருக்கின்றாராம்.

பாக்டாட் ரெயில்வே அந்நிய மந்திரியின் பேச்சு.

லண்டன் ஆகஸ்டு 18—

மிஸ்டர் லாய்டு கேட்ட கேள்விக்கு ஸர் எட்வர்டு கிரே பதில் சொல்ல நேரிட்டபோது, கஸ்டம்ஸ் வரிகளை நூற்றுக்குப் பதினைந்து வீதம் அதிகப்படுத்துவதில் பிரிடிஷாரின் சமமதத்தைப் பற்றிய உடன்படிக்கை நடந்துகொண்டிருக்கிறதென்று சொன்னார். ரயில்வே சம்பந்தமான பொருளாதார விஷயத்தில் சமமாய்ப்போகும்படியான ஏற்பாட்டைச் செய்வதற்காகக் கவர்ன்மெண்டார் சில பிரேரணை செய்திருக்கிறார்கள். தவிர பெர்ஷியன் வளைகுடா விஷயமாயும் ஒரு திட்டமான ஏற்பாடு செய்துவைக்கப்படுமாம்.

மரணம், லார்டு ஜேம்ஸ்—ஆப்—ஹியர்போர்டு.

லண்டன், ஆகஸ்டு 18—

யூனியனிஸ்டுக் கட்சியாரின் தலைவராகிய லார்டு ஜேம்ஸ் ஆப்—ஹியர்போர்டு மரணமடைந்துவிட்டாரென்று சமாசார மெட்டுகிறது.

ராவ்பகதூர் V. J. கீர்த்திகர் காலஞ் சென்றுர்

பம்பாய் வக்கீல் மிஸ்டர் V. J கீர்த்திகர் இந்த வாரம் புதன்கிழமை யிரவு இறந்துபோய் விட்டாரென்று சமாசார மெட்டுகிறது. அவர் 12 வருஷ காலம்போலக் கவர்ன்மெண்ட் வக்கீலா யிருந்தவர் சிறிது காலம் பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜாய்க் கூட அவர் ஆக்ட்செய்ததுண்டு. அவருக்கு வயது 72.

மதிராஸ் மேடிகல் காலேஜ் அபாதிகிரி வகுப்புகள்.

மதராஸ் மெடிகல் காலேஜ் அபாதிகிரி வகுப்புகளுக்கு மெட்ரிகுலேஷன் பரீட்சையாவது, ஸ்திரீகளுக்கென்று ஏற்பட்ட உயர் பரீட்சையாவது (Higher Examination for Women) பாஸ் செய்திருக்கும் ஸ்திரீகள் மட்டுந்தான் இதுவரை சேர்த்துக்கொள்ளப்பட்டு வந்தார்கள் இப்போது இம்மாகாண வித்தியாதிகாரி அரைகுறை யில்லாத ஸ்கூல் லீவிங் சர்டிபிகேட்டு (Completed S. L. Certificate) பெற்றிருக்கும் ஸ்திரீகளை அந்த காலேஜ் பிரின்ஸ்பால் இஷ்டமிருந்தால் சேர்த்துக் கொள்ளலாமென்று செய்திருந்த சிப்பார்சை கவர்ன்மெண்டார் அங்கீகரித்து விட்டார்களாதலால், இனிமேல் ஸ்கூல் லீவிங் சர்டிபிகேட்டு பெற்றிருக்கும் ஸ்திரீகள் மெடிகல் காலேஜில் அபாதிகிரி வகுப்புகளில பிரின்ஸ்பாலுக்கு இஷ்டமிருந்தால் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

பாலக்காட் முனிசிபல் கவுன்சிலர்களின் ராஜிநாமா.

பாலக்காட் கவுன்சிலர்களில் இன்னும் 3-பேர் தங்கள் ஸ்தானங்களை ராஜிநாமா கொடுத்துவிட்டார்கள். மிஸ்டர் P. K. சுப்பிரமணிய அய்யர், மிஸ்டர் S. K. ராமசாமி அய்யர், மிஸ்டர் V. K. காயித்திரி அய்யர், மிஸ்டர் கோவிந்த மேனன் இவர்கள் நால்வரும் ராஜிநாமா கொடுத்துவிட்டதாய்ச் சொன்ேனும். இப்போது வக்கீல் மிஸ்டர் K. A. வெங்கடேசுவர அய்யரும் பாங்கர் மிஸ்டர் T. L. சாமிநாத அய்யரும், பாங்கர் மிஸ்டர் C. S. சிவராமபட்டர் காரியகாரும் தங்கள் ஸ்தானங்களை ராஜிநாமா கொடுத்துவிட்டார்களென்று தெரிகிறது. இவர்களில் மிஸ்டர் C. S. சிவராம பட்டர் காரியகார் கவர்ன்மெண்டாரால் கண்டிக்கப்பட்ட கவுன்சிலர்களில் ஒருவர் அல்லர் அவர் சமீபத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர் என்று காண்கிறது. இவர்கள் ராஜிநாமா கொடுத்தது விசேஷமில்லை. அம் முனிசிபாலிடியில் காலியா யிருந்த கவுன்சிலர் ஸ்தானத்தைவிரும்பி அபேட்சகராய் நின்ற மிஸ்டர் N. R. கேசுவ்யாரென்ற வக்கீல் கவர்ன்மெண்டாரின் பைசல் உத்தரவு வெளியாகும் அபேட்சகராய் நிற்பதனின்றும் விலகிக்கொண்டாராம்.

டெல்லி.

16—8—11.

தர்பார்:—இது சம்பந்தமான காரியாபிவிர்த்தி திருப்திகரமா யிருக்கிறது.

காலரா:—மேகங்கள் வந்துகூடுகின்றனவே யன்றி மழையைக்காணேம், பஞ்சம் பரவாமலிருக்கும்படியான வழியை மிக்க கவலையுடன் கமிஷனர் கர்னல் தாலஸூரும் டிப்டி கமிஷனர் மிஸ்டர் பாரென்னும் நாள் முழுவதும் வெளியே சென்று கவனித்து வருகிறார்கள்.

காம்புகள் ஏற்படுத்தல்:—ஸர்ஜான் ஹிவெட்டும், ஸர் ஹென்ரி மாக்டோனலும் அகோரமான உஷ்ணத்தையும், பரவியிருக்கும் காயலாவையும் சற்றேனும் கவனியாமல் காம்புகள் நிர்மாணஞ்செய்து முடிப்பதிலும் இன்னும் பல விசேஷ காரியங்களைச் செய்து முடிப்பதிலுமே கண்ணுங் கருத்துமா யிருக்கிறார்கள். 437 காம்புகள் தயாராகவேண்டும். 25 சதுர மைல் விஸ்தீரணமுள்ள காம்புப்போர்வைகள் தேவை. ஸர்ஜான் ஹிவெட் கால்வாய் ஜலம் முழுவதையும் உபயோகித்து வரும்படியான வழியைக் கவனித்து வருகிறார். அதனுல் அங்கு வசித்துவரும் தோட்டக்காரர்களுக்கு உண்டாகும் அசௌகரியங்களையும் அவைகள் பரிகாரமாகும் வழியையும் கவனித்து வருவார். காம்பு சம்பந்தமான வேலைகள் அனைத்தும் சந்தர்ப்போசிதமாய்க் கட்டப்படும் கட்டிடங்களும் அக்டோபர் மாதம் துவக்கத்தில் முடிவுபெறும் இருப்புப்பாதை சம்பந்தமான வேலைகள் செப்டம்பர் மாதம் முதல் தேதியில் முடிவு பெறும்

ராஜவாயில் (The King's Gate):—ராஜ சக்கரவர்த்தியவர்கள் வந்து இறங்குவதற்கு யோக்கியமாய், ஸெலிம்கர் என்ற ஓர் சிறிய ஸ்டேஷன் கட்டப்பட்டு வருகின்றது. இராஜ சக்கரவர்த்தியவர்களின் அசுவங்களும் எல்லா உத்தியோகஸ்தர்களும் கோட்டையில் தயாராக இருக்கவேண்டும். இவ்வாயிலுக்கு ஓர் விசேஷ மகிமை யுண்டு. அரசர் ஒருவரே இதன் வழியாக ஜம்ம மசிதுக்குச் செல்லலாம் என்று ஏற்பட்டிருந்தது. கோட்டையின் உட்புறத்திலிருந்து இத்துவாரத்தின் வழியாகப் பெரியமசிது வரையிலும் தரையில் ஜமுக்காளம் பரப்பியிருப்பது வழக்கம். இந்த வழியில் டெல்லி அரசரின் குமாரர்கள் கூட செல்லக்கூடாது என்ற நிபந்தனையுண்டு. டெல்லி அரசர் ஒருவரே தனிமையாக வெள்ளை நிலை யங்கி தரித்துப் பயபக்தியுடன் தலைகுனிந்து பாதரட்சை யின்றி, மேல்ஜோடணிந்த பாதங்களுடன் இந்தப் பரிசுத்தமான வாயிலின் வழியாக மசிதுக்குச் சென்று தொழ ஆரம்பிக்கும்பொழுது, ராஜவரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் பல்லாயிரம் ஜனங்கள் ராஜாவந்ததும் அவருடன் தாங்களும் தொழ ஆரம்பிப்பார்கள். கடைசியாக 1857-ம் வருஷத்தில்

ரம்ஜான் காலத்தில் டெல்லி அரசர் தொழுவதற்கு வந்தபொழுது இந்த வாயில் திறக்கப்பட்டது. அன்று முதல் நாளது வரையிலும் இது மூடப்பட்டிருக்கிறது. இவ்வளவு பரிசுத்தமும் சரித்திர சம்பந்தமுமான இந்த மோக்ஷாலய வாயிலின் வழியாக, நம் ராஜ சக்கரவர்த்தியவர்கள் செல்லும்படியாய் ஏற்பாடு செய்திருக்கும் ஸர்ஜான் ஹிவெட் என்பவரின் புத்தி கூர்மை உலகம் மெச்சத்தக்கதா யிருக்கின்றது.

பாண்டு வாத்தியக்கூட்டம்:—இந்தக் கூட்டத்தில் ஐரோப்பியர்களும் இந்தியர்களும் அடங்கியுளர். இவர்களை நடத்தும் அதிகாரம் கர்னல் சோமர்வைல் என்பவர் தாகும். இதற்கு டைரெக்டர் மேஜர் ஸ்டிரீடன் என்பவர் காம்பு அட்ஜூடண்டு வேலையை காப்டென் D. C. போ என்பவர் வகிப்பார்.

காலரா: பழைய பாழடைந்த கிணறுகளிலிருந்து ஜலத்தை உபயோகித்து வருவதினுல், டெல்லி நகரத்தில், சில காலரா கேசுகள் நடந்துவருகின்றன. இந்த நோய் பரவாம லிருக்கும்படியான பிரயத்தனங்கள் பலவும் செய்யப்பட்டு வருகின்றன. தர்பார் காம்புகள் ஏற்பட்ட விடங்களில், சுகாதார சம்பந்தமான சகல காரியங்களும் மிக்க திருப்திகரமாக இருக்கிறபடியால், இவ்விடங்களில் யாதொரு விதமான நோயும் பரவுவதற்கு வழியில்லை. தவிர, அதிகாரிகளும் கவலையுடன் உழைத்து வருகிறார்கள். சுத்த ஜலத்திற்கு வேண்டிய வசதியும் ஏற்பட்டிருக்கின்றது.

M. ராகவேந்திராசார்.

KISSING THE WIFE.

மனையாளை முத்தமிடல்:—அமெரிக்காவில், ஒரு கணவன், தன் மனையாளைத் தினமொன்றுக்கு 10 தடவைக்குமேல் முத்தமிடக்கூடாது அப்படி முத்தமிடும்போது மனையாளுடைய உத்தரவு பெறவேண்டும். மனையாளுடைய உத்தரவில்லாமல் ஒருவர் முத்த மிட்டதற்கு 25 டாலர் அபராதம் விதிக்கப்பட்டார்.

A MAN WITH 35 BOYS.

35 பிள்ளைகளைப் பெற்றவன்.—அமெரிக்காவில் ஓட்டேவா பட்டணத்துக்கு ஸமீபத்திலுள்ள ஹல்பட்டணத்தில் குருல்ஸ் என்ற ஒருவன் இறந்துபோனான். க்யூபெக் மாகாணத்திலாவது, கனடா தேச முழுவதிலுமாவது அவனுடைய குடும்பந்தான் மிகப்பெரியதென நிச்சயமாய்ச் சொல்லலாம். அவனுக்கு 35 பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் இறந்துபோனவர்கள் போகத் தகப்பன் மரணத்தின் போவது 24 பேர் அவன் சவச்சடங்குக்கு வந்திருந்தார்கள். அவன் ஓட்டேவா பட்டணத்துக்கு வந்தபோது அவன் பேர் பையனாயிருந்தான். அவனுக்கு அவன் முதலில் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டான். அவள் ஒரு பிள்ளையை மாத்திரம் விட்டுவிட்டு வெகு சீக்கிரத்தில் காலகதியடைந்தாள். பிறகு வேறொருவர் பெண்ணை மணந்துகொண்டான். அவள் 21 பிள்ளைகள் பெற்றுள். 20 வருஷங்களுக்கு முன் அவள் இறந்துபோகவே மூன்றும் முறையும் அவன் ஒருத்தியை மணம்புரிந்தான். இவள் 13 பிள்ளைகள் பெற்றுள். குருல்ஸ் தன்னுடைய பாரி குடும்பத்தைப் பற்றிப் பெருமையும் பாக்கியமுமுள்ளவனு யிருந்தான். அவனுடைய குமாரர்கள் அனேகர் கலியாணமாகித் தங்கள் தகப்பனைப் போல ஸந்தான விர்த்தியுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

CUTTING OFF THE EAR.

காதை அறுத்தல்.—கொள்ளே காலத்தைச் சேர்ந்த ஒரு கிராமக்கர்ணத்திற்குச் சொந்தமான ஒரு மட்டக்குதிரையின் காதை வேறு ஒருவன் அறுத்துவிட்டானென்று அவன் மேல் பிராது தொடரப்பட்டது. கொள்ளே காலம் ஸப் மாஜிஸ்ட்ரேட்டு இதை விசாரித்து, இந்தக்குற்றம் அங்கஹீனம் செய்ததாகும் என்று இந்தியன் பினல்கோடு 429-வது பிரிவின்படி குற்றவாளிக்கு அபராதம் போட்டார். அந்தக்கேஸ் டிப்டி மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் அப்பீலுக்குவந்தது. அங்கும் கீழ்க் கோர்ட்டு தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது. பிறகு ஹைகோர்ட்டுக்கும் இது 2-வது அப்பீலாக வந்தது. அப்பொழுது வாதிகக்ஷிக்கு வக்கீல் அங்கஹீனம் செய்வதென்றால், சண்டையில் எதிர்ப்பதற்காகவாவது, அதிலிருந்து காத்துக் கொள்வதற்காகவாவது உபயோகப்படுத்தப்படும் ஏதாவது ஒரு உறுப்புக்கு ஊனத்தை விளைத்தாலும் சரி, அல்லது அது முழுமையையும் சிதைத்தாலும் ஸரி. அது குற்றமாகுமே ஒழிய காதை அறுத்ததினுல் அந்த குற்றமாகாதென்றும் இது அழகைக் குறைத்தல் (விரூபமாக்குதல்) என்ற குற்றமே யாகும் என்று வாதித்தார். மி-ர் ஜஸ்டிஸ் பின்ஹே இந்தக் கேஸில், காதை அறுத்த தானது மட்டக் குதிரையின் புலனுக்கு ஊனம் விளைவித்த, தாவதால் அங்கஹீனம் செய்த குற்றமே என்று அபராதத்தை உறுதி செய்துவிட்டார்.

மெட்ரிகுலேஷன் பரீட்சையும் சர்க்கார் உத்தியோகமும்.

இச்சென்னை வித்தியாதிகாரி 1911, 1912, 1913, இந்த மூன்று வருஷங்களிலும் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறுகிறவர்கள் சர்க்கார் உத்தியோகத்துக்கு லாயக்குள்ளவர்களாய்க் கருதப்பட வேண்டுமென்று அவ்விஷய சம்பந்தமாய் அவருடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்ததில், கவர்ன்மெண்டாருக்குச் சிப்பார்சு செய்திருந்தார். அந்த சிப்பார்சைக் கவர்ன்மெண்டார் சரியென்று ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

வேலையை ராஜிநாமா கொடுத்துவிட்டார்கள்.

பாலக்காட் முனிசிபல் கவுன்சிலர்களில் எந்த 3 பேரை, அவர்கள் மிஸ்டர் A. T. ராமானுஜாச்சாரி

யாருக்குச் சாதகமா யிருந்தார்களென்று கவர்ன்மெண்டார் முனிசிபல் கவுன்சிலர் பதவியைவிட்டு நீக்கிவிடுவதாய் முதலில் பயமுறுத்தி, பிற்பாடு அவர்களுடைய நடத்தை விசேஷமாய்க் கண்டிக்கப்படுகிறதென்று சொல்லி யிருந்தார்களோ, அவர்களில் மி-ர் P. K. சுப்பிரமணிய ஐயரும், மிஸ்டர் V. K. காயத்திரி அய்யரும், மி-ர் S. K. ராமசாமி அய்யரும், மிஸ்டர் A. கோவிந்த மேனனும் தங்களுடைய முனிசிபல் கவுன்சிலர்கள் ஸ்தானத்தை ராஜிநாமாக் கொடுத்துவிட்டார்களென்றும் மற்றக் கவுன்சிலர்களும் இன்னும் இரண்டு தினங்களில் ராஜிநாமாக் கொடுத்து விடுவார்களென்றும் ஹிந்து பத்திரிகைக்கு ஒரு பாலக்காட் நிருபர் எழுதியிருக்கிறார். தன் மதிப்புள்ள கனவான்கள் அம்மாதிரி நடந்துகொள்ளாமல் கவர்ன்மெண்டாரின் கண்டனத்தைப் பொறுத்துக்கொள்ளுதல் சாத்தியமில்லை.

ரயில்வே டிக்கட்டை விலைக்கு வாங்கி விற்கலாமா ?

சென்ற மே மாதம் 29-ந்தேதி மதராஸ் ரெயில்வேயில் ஒருவன் காவலியிலிருந்து சென்னைக்கு மெயில் வண்டிக்கு டிக்கெட்டு வாங்கினான். அவன் பிரயாணப்படக்கூடாமையாய் அந்த டிக்கெட்டைக் குறைந்தவிலைக்கு மற்றொருவனுக்கு விற்றான். இந்த வியாபாரம் ஒரு போலீஸ் கான்ஸ்டேபிளினால் கண்டுகொள்ளப்பட்டமையால், அவன் ரயில்வே அதிகாரிக்கு ரிப்போர்ட்டு செய்ய, விற்றவன்மீது பிராது தொடரப்பட்டது. அவன் கக்ஷி வக்கீல், ரயில்வே ஆக்டு அதிகாரம் கொடுக்கப்பட்ட ரயில்வே நிர்வாகச் சட்டத்தில் டிக்கெட்டு மாற்றுவது கூடாதென்று சொல்லப்பட்டிருக்கவில்லை எனறும், இந்தப் பொது ரெயில்வே ஆக்டுக்கு உபகரணமாகக் கம்பெனிகளினால் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கைடு முதலியவைகளில் குறித்துள்ள நிர்ப்பந்தங்கள் நியாயமான அதிகாரத்துக்கு அதிக்ரமித்தவை யென்றும், இந்தப் பிராஸிகூஷன் இந்த நிர்ப்பந்தச் சட்டத்தின் பலத்தின்மேல் செய்யப்பட்டதாதலால், தகக காரணத்தோடு செய்யப்பட்டதென்று என்றும் வாதித்தார். இவ்வாதத்தை காவலி டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டு, மிஸ்டர் L. V. வரதராஜ சர்மா, ஒப்பிக் கேஸைத் தள்ளி விட்டார்.

பெண்களைக் கெட்ட வழியில் உபயோகப்படுத்தல்.

சில தினங்களுக்கு முன்னதாகச் சிறு பெண்களைக் கெட்ட வழியில் உபயோகப்படுத்தும் நோக்கத்துடன் அவர்களுக்குக் கோவில்களில் பொட்டுக்கட்டுவதும் அவர்களைத் தத்து வாங்கிக்கொள்வதுமாகிய வழக்கத்தைப்பற்றி இந்தியருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து ரிப்போர்ட் செய்யும்படி இந்தியா மந்திரி ஓர் உத்தரவு அனுப்பினார். அதைப்பற்றி அவசியமானால் சட்ட நிபந்தனைகள் செய்யப்படுவதாக யோசனை இருக்கின்றது. இந்தியா செக்ரிடெரி செய்திருக்கும் யோசனையை ஹிந்துக்கள், முக்கியமாய்ப் படித்தவர்கள், சம்மதத்துடன் ஏற்பார்களென்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்த யோசனை வேசித்தொழில் செய்யும் ஸ்திரீகளாலும் அவர்களுக்குப் பந்துக்களான புருஷர்களாலும் ஆதரிக்கப்படுமென்று ஒருவரும் எதிர்பார்த்திருகக மாட்டார்கள். ஆனாலும் அப்படி கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், இந்த ஜில்லாக்களைச் சேர்ந்த நாற்பது ஸ்திரீ புருஷர்கள் இந்தியா செக்ரிடெரியின் ஆலோசனையை ஏற்று அதை நிறைவேற்றும்படி ஒரு பெடிஷன் அனுப்பி யிருப்பதாக அறிகிறோம். இந்தப் பெடிஷனில், இவர்கள் சொல்லுவதென்னவென்றால், சில காலமாக ஆசாரத்திருத்தக்காரர்களும் தங்களைச் சேர்ந்த சிலரும் மேற்கண்ட வழக்கத்தை நிறுத்தித் தங்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவர வேண்டுமென்று முயன்றும், கவர்ன்மெண்டின் உதவி இல்லாமல் இந்த முயற்சி பயன்படவில்லை. இப்போது நாட்டியப் பெண்கள் ஜாதியைச் சேர்ந்தவர்கள் தத்தெடுத்துக் கொள்ளக் கூடாதென்று சட்டம் செய்வதாகக் கவர்ன்மெண்ட் யோசித்திருப்பது தங்களுக்குச் சந்தோஷமென்றும் தேசத்துப் பல இடங்களில் மீட்டிங்குகள் கூடிக் கவர்ன்மெண்டின் கைகளைப் பலப்படுத்த வேண்டுமென்றும், இப்படி சட்டம் செய்தால் தங்களைச் சேர்ந்த பெண்கள் நல்ல நிலைமைக்கு வருவார்களென்றும் துன்மார்க்கத்துக்காகத் தத்தெடுத்துக்கொள்ளும் வழக்கம் நின்றுபோ மென்றும் சொல்லுகிறார்கள். இப்படி எல்லூரி லிருந்து மிஸ்டர் M. ராமச்சந்திராராவ் என்பவர் 'ஹிந்து'ப் பத்திரிகைக்கு எழுதுகிறார். இது உண்மையானால் தெலுங்கு தேசத்தில் ஸ்திரீகளின் நிலைமை ஆசாரத்திருத்தக்காரர்களின் முயற்சியால் எவ்வளவு தூரம் சீர்பட்டு வருகிற தென்பதைக் காட்டுகின்றது. இந்தியாவில் வேசித்தொழில் செய்வோர் ஒரு ஜாதியாயும் ஜாதிக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவர்களாயு மிருப்பதால் அந்தத் தொழில் மேல்நாடுகளில் இருப்பது போல அவ்வளவு கோரமா யிருககவில்லை. ஆனாலும் இக்காலத்தில் வேசித்தொழிலை எல்லா ஜாதியாரும் செய்யத் தலைப்பட்டு விட்டார்கள், கோவில்களைச் சுற்றியும் ஸ்கூல்களைச் சுற்றியும் பட்டணங்களில் ஜன நெருக்கமுள்ள இடங்களிலும் வேசிகள் குடியிருந்து சன்மார்க்கத்துக்குக் கேடு செய்கிறாகள். இந்தப் பெருந் தீங்கை சமூகத்தலைவர்களும் கவர்ன்மெண்டும் தக்கபடி கவனித்து சட்டங்கள் செய்து ஒருவரை யறைக்குள் அடக்குவார்களானால் இந்தத் தீங்கு அதிகக் கோரமாய் வளர்ந்து சிறுவர்களும் பொருள் படைத்தவர்களும் கெட்டுப்போகாம லிருக்க ஏதுவாகும்.

திருச்சி ரயில்வே ஸ்டேஷனில் மந்திரவாதி.

சென்ற மாதம் 27-ந்தேதி இரவு சேலத்திலிருந்து வந்த ஒரு தந்தியின்மேல் கவர்ன்மெண்டு ரயில்வே போலீசில் ஒரு சப் இன்ஸ்பெக்டர் சுந்தரராமா என்ற ஒருவனை அரஸ்டு செய்தார். அவன் மந்திரவாதி

யென்று கருதப்பட்டான். அவன் சரீரத்தைச் சோதனை போட்டதில் அவன் கழுத்தில் 500 ரூபாய் பெறுமான ஒரு காறையும், 500 ரூபாய் பெறுமான ஒரு அட்டிகையும், அவன் சட்டையி னுட்புறத்தில் 5 பவுன்கள் தைக்கப்பட்டும் காணப்பட்டன அவன் C. V. S. என்ற குறி எழுதிய டிரங்குப் பெட்டியைக் கொணர்ந்திருந்தான். அதைத் திறந்து பல சாக்ஷிகளின் முன் பரிசோதிக்க, அதில் 500 ரூபா பெறுமான முள்ள ஒரு தங்க நகையும், அதைத் தவிர தங்கம் வெள்ளி நகைகளாகவும் துணிமணிகளாக ரூபா 2000-க்கு மேல் அகப்பட்டன. சேலத்திலிருந்து தந்தி கொடுத்தவர் வருகையை எதிர்நோக்கி அவனை அரஸ்டு செய்திருக்கிறார்கள்.

ரெயிலிலிருந்து தவறி விழுந்தார்.

நேற்று மாலை சென்னையி னின்றும் புறப்பட்ட போட் மெயில் விக்கிறவாண்டிக்கும் முண்டையம்பாக்கம் ஸ்டேஷனுக்கு மத்தியில் செல்லும்போது, அதிலிருந்த சிப் கார்ட் எவ்விதமோ தவறி கீழே விழுந்து விட்டார். போட் மெயில் போய்விட்டது. பின்னர் தெற்கே யிருந்து வரும் மதுரை பாசஞ்சர் வண்டியை விழுந்தவர் கண்டு சைகை காட்டி நிறுத்தச் சொல்லி, அதில் ஏறிக்கொண்டு வந்து, மீண்டும் சென்னையிலிருந்து போகும் எக்ஸ்பிரஸ் டிரெயினைச் சந்தித்து அதிலேறிப் போயினர். அவர் அங்கு சென்றாரெனத் தெரியவில்லை. அவருக்குக் காயங்களும் காணப்படவில்லை.

ஸர் S. சுப்பிரமணிய ஐயர் ஆதி சங்கராசாரியரைப்பற்றி.

சென்னை ஹைகோர்ட் ஜட்ஜியா யிருந்த ஸர் S சுப்பிரமணிய அய்யர் " இந்தியன் ரெவியூ " வுக்கு எழுதியிருக்கும் வியாசத்தில், ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியரைப்பற்றி நம்மவர்களுக்குள்ளிராத நூதனமான அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவித் திருக்கிறார். கௌதம புத்தர், ஸ்ரீ சங்கராச்சாரியர், ஸ்ரீ கிருஷ்ணபகவான், யேசுகிறிஸ்து, இவர்கள் முக்கியமான அவதாரங்களென்றும், முதலிற் குறித்த இரண்டு அவதாரங்களென்றும் கர்மமார்க்கத்தைப் போதிக்க உண்டாயினவென்றும், பின் சொன்ன இரண்டும் பக்திமார்க்கத்தைக் கற்பிக்கத் தோன்றின வென்றும், ஸ்ரீ சங்கராசாரி கௌதம புத்தருக்கு நூறு வருஷத்துக்குப் பின்னால் அவதாரமானவ ரென்றும், சொல்லுகிறார். ஜனங்கள் நம்பும் ஆதி சங்கராசாரியார், சுமார் 1,200 வருஷத்துக்கு முன்னால் மலையாளத்தில் பிறந்து ஷண்மத ஸ்தாபனம்செய்து உபநிஷத்துகள் முதலான கிரந்தங்களுக்குப் பாஷியங்கள் எழுதினவர். வேறு சங்கராசாரியர்களுக்கு வாய்மொழியாய் உபதேசம் செய்தாரே யன்றி பாஷியங்கள் எழுதவில்லை யென்றும், அபிப்பிராயப்படுகிறார். இரண்டாவது சங்கராசாரியருக்குக் குரு கோவிந்தர். அவருக்குக் குருவான கௌடபதாசாரியர் எழுதின காரிகையில் பௌத்த ஞானியாகிய நாகார்ஜுனன் எழுதினதில் " ஆதி பௌத்த பிரகிருத்யைவ சர்வே தர்ம சுநிஸ்ச்சித:," என்ற சுலோகத்தைத் தமது வேதாந்த புஸ்தகத்தில் தம்மதுபோல் பெயர்த்து எழுதிக்கொண்டாரென்றும் சொல்லுகிறார்.

ஒரு தீ விபத்து, மெஸ்ஸர்ஸ் வார்ட்லாக் அண்டு கம்பெனிக்கு நஷ்டம்.

லண்டன், ஆகஸ்டு 31—

லண்டன் பிளீட்டுத் தெருவிலுள்ள இந்தக் கம்பெனிக் கட்டிடத்தில் நேற்றிரவு தீப்பற்றிக்கொள்ள அக்கினி கொழுந்துவிட்டுக்கொண்டு ஆகாயத்தில் சுமார் 100-அடி கிளம்பி இரண்டு மாடத்திலும்பற்றிக்கொண்டது. லண்டன் பட்டணத்தில் முழுவதும் இத்தீ வெளிச்சத்தினால் தகதகவென்று பயங்கரமாகப் பிரசித்தது. இந்தக் கம்பெனியின் ஆயிரக் கணக்கான புஸ்தகங்கள் சாம்பலாயின.

கள்ளிக்கோட்டையில் ஒரு பார்ஸியின் தற்கொலை.

கள்ளிக்கோட்டையிலே மிஸ்டர் மனக்ஜி தொஸாபாய் என்ற ஒரு பார்ஸி தற்கொலை செய்துகொண்டு இறந்துபோய் விட்டாரென்றும் அவருடைய பிரேதம் ஒரு குளத்திலிருந்து எடுக்கப்பட்டதென்றும் தெரிகிறது. அவர் கண்ணனூர் ஸெண்டிரல் ஜெயிலில் ஜெயிரா யிருந்தவராம். அவர் நடத்திவந்த தொழிலில் நஷ்டம் நேர்ந்துவிட, அவர் அவமானம் பொறுக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டிருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. புதன் கிழமை முதல் அவர் போன விடந் தெரியாதிருந்ததென்றும் நேற்றுக்காலமே தான் அவர் பிரேதம் அகப்பட்டதென்று காண்கிறது.

கல்கட்டா அட்வோகேட் ஜெனரல்.

வெங்காள அட்வோகேட் ஜெனரல் மிஸ்டர் கென்ரிக் ரஜாவின்மேல் போயிருக்கிறபடியால் அவருக்குப் பதிலாய் ஸ்டாண்டிங் கவுன்சில் (Standing Counsel) மிஸ்டர் B. D. மித்தர் அட்வோகேட் ஜெனரலாய் ஆக்ட் செய்ய நியமிக்கப்பட் டிருக்கிறார். மிஸ்டர் கென்ரிக்குககு நாஜோல் மகாராஜா தமது ஸொலிஸிட்டார்கள் மூலமாய் கொடுத்திருந்த நோட்டீஸ் என்னவாயிற்றோ தெரியவில்லை, மிஸ்டர் கென்ரிக் அந்த மகாராஜாவிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு விட்டார் போலும்.

ரங்கூனில் ஸென்ஸஸ் வேலைபார்த்து வந்த குமாஸ்தாக்கள்.

ரங்கூனில் ஸென்ஸஸ் வேலை பார்த்துவந்த குமாஸ்தாக்கள் வேலை நிறுத்தல் செய்திருந்தார்களென்றும் அவர்கள் தங்கள்

முறைப்பாடுகள் தீர்க்கப்படுமென்று உறுதி கூறப்பட்டதும் வழக்கம்போல வேலை செய்ய ஆரம்பித்தார்களென்றுந் தெரிகிறது.

பூனு மாமல்தார் கோர்ட்.

மாமல்தார்—வாட்கார் ஹாவாலி.

பெண்சாதியைத் தலைக்கீழாய்க் கட்டி அடித்த கேஸ்.

குற்றவாளி:—ஈபுரோபாறு.

கேஸின்விபரம்:—குற்றவாளியின் பெண்சாதி கடந்த மூன்றுமாதம் தன்னுடைய தாயார் வீட்டில் வசித்துவந்தாள். ஒரு நாள் இவள் வெளியே ஒரு வேலையாகப் போய்க்கொண்டிருந்தபோது மூக்கா என்னும் பெயருடைய ஒரு ஸ்திரீ அவளைப்பிடித்துக்கொண்டு வந்து தன்னுடைய புருஷனிடம் விடவே அவன் ஒரி உத்திரத்தில் தலைகீழாகக்கட்டித் தொங்கவிட்டு ஒரு கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு தொண்டையை அறுப்பதாகச் சொல்லி தலையில் ஒரு வெட்டுப்போட்டான். மூக்கா என்கிற ஸ்திரீ அவளை முதுகில் அடித்தாள். பெண்சாதி வேதனை பொறுக்க முடியாமல் கூச்சல் போடவே தெருவில் போய்க்கொண்டிருந்த ஜனங்களும் போலீசாரும் சென்று தப்பித்துவிட்டார்கள்.

பெண்ஜாதி புருஷன்பேரில் கடுங்காயம் விளைவித்த குற்றம் சாட்டினாள்.

கேஸின் நடவடிக்கை:—பிராசிக்யூஷன் தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டதில் பெண்ஜாதி கொடுத்த வாககுமூலத்தை அனுசரித்துச் சொல்லியிருக்கிறார்கள்.

(இன்னும் விசாரணை முடியவில்லை).

—:o:—

SALE DEED AND AGREEMENT.

கிரயசாஸனமும் எகிரிமெண்டும்:—ஒருவன் இன்னொருவனுக்கு ஒரு சொத்தைக் கிரையம் செய்துகொடுத்த கிரயசாஸனம் எழுதிக்கொடுத்தான். இந்தக் கிரயசாஸனத்தில் சொத்து வில்லங்க சுத்தியாகக் கிரையம் செய்யப்பட்டதென்றும், வாங்கினவனாவது விற்வனாவது கிரயத்தை ரத்து செய்து கிரயத்தொகையை முறையே கொடுத்து விடவாவது வாங்கிக்கொள்ளவாவது பாத்தியமில்லை என்றும், கிரயம்செய்து கொடுத்தவனுக்கு கிரைய சொத்தில் யாதொரு பாத்தியமுமில்லை என்றும் பொருள் படும்படியாக எழுதப்பட்டிருந்தது. இது நிற்க, இந்த கிரய ஆதாவுபிறந்த தேதியிலேயே கிரயம் பெற்றவன் கிரையம் செய்தவனுக்கு ஒரு எக்ரிமெண்டு எழுதிக்கொடுத்திருக்கிறான். அதில் கிரயம் செய்தவன் 5 வருஷத்திற்குள் கிரயத் தொகையைத் திருப்பிக் கொடுத்துவிட்டால் தான் கிரய ஸொத்தைவிட்டு விடுவதாய் சம்மதித்து எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. கிரய ஆதாவு ஆக்ஷேபிக்கப்படக்கூடாத பூர்த்தியான கிரய ஆதாவென்றும் அதனுடன் ஒரு எக்ரிமெண்டு கூடப் பிறந்திருப்பது இந்தக் கிரயத்தை, கிரயரூபமான அடமான மாக்கிவிட மாட்டாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கிரய ஆதாவுடன், திருப்பிக் கிரயம் செய்து கொடுத்துவிடுவதாய், ஒரு எக்ரிமெண்டும் ஏற்பட்டிருந்தால் இது உண்மையான கிரயமா அல்லது கிரைய ரூபமான அடமா என்று நிச்சயிக்கவேண்டியது. ஒவ்வொரு கேஸிலும், ஏற்பட்டிருக்கும் ஆதாவுகளின் தாற்பரியத்தையும் அது விஷயமாக ஏற்படும் சாக்ஷி வாய்மொழி வாக்குமூலத்தையும் ஆராய்ந்து பார்த்துத் தீர்மனிக்கவேண்டும்.

பயிர்களை எப்படிக் காப்பது?

வடக்கே விவசாயச் சோதனைக் காலேஜில் உத்தியோகம் வகிக்கும் மிஸ்டர் மாக்ஸ்வெல் லெப்ராய் என்பவர் 'பூச்சி சங்காரன்' என்று பயிர்களை அழிக்கும் பூச்சிகளைக் கொல்லும் விதங்களைப்பற்றி ஒரு சிறிய புஸ்தகம் பிரசுரம் செய்திருக்கிறார். பயிர்கள் பூச்சிகளினால் அழிந்துபோவதை நமது விவசாயிகள் நன்றாய் அறிவார்கள். இவைகளைக் கொல்லும் வழிகள் அவர்களுக்குத் தெரிந்திருந்தால் பயிர்களைக் காப்பாற்றக் கூடியவர்களாவார்கள். இப்படிக் கொல்லும் வழிகளை மிஸ்டர் மாக்ஸ்வெல்-லெப்ராய் ஆங்கிலத்தில் பிரசுரம் செய்திருப்பதை அந்தந்த மாகாணக் கவர்ன்மெண்டுகள் தேச பாஷைகளிற் பிரசுரம் செயவதால் விவசாயிகள் அறிந்துகொண்டு நன்மை பெறுவார்கள் அப்படியன்றி ஆங்கிலத்திற் பிரசுரம் செய்திருப்பதால், அவைகள் விவசாயிகளுக்குப் பிரயோசனமில்லை பத்திரிகைகளை நடத்துவோருமபூச்சிகளைக் கொமருந்துகள் ஆங்கிலவார்த்தைகளில் இருப்பதைத் தேச பாஷைகளிற் சொல்லத் தெரியாதவர்களாயிருப்பார்கள். உதாரணமாக, லெட்க்ரோமெட் (Lead Chromate) என்கிற மருந்து, பூச்சிகளைச் சங்கரிக்கும் மருந்துகளில் உயர்ந்ததென்று மிஸ்டர் லெப்ராய் சொல்லுகிறார். ஜலம் தெளிக்கும் கருவியால் பயிர்களின் குலைகளின் பேரில் விஷமாகிய இந்த மருந்தைத் தெளிக்க வேண்டுமென்றும், சில சமயங்களில் இந்த விஷத்தைப் பொடியாக சுண்ணாம்பு அல்லது புழுதியோடு கலந்து பயிர்கள் மேல் தெளிக்கலாமென்றும், இதைத் தவிர பூச்சிகள் தின்று இறந்துபோகும்படியான மருந்து (Stomach Poison) வேறில்லையென்றும் சொல்லுகிறார். வாசனையினால் பூச்சிகளைக் கொல்லும் மருந்துகளில் ரோஸின் காம்பவுண்ட் க்ரூட் ஆயில் எமல்ஷன் (Rosin compound & Crude oil emulsion) இவைகளைச் சொல்லலாமென்றும், இவைகள் பழங்கள் பயிர் செய்வதில் விசேஷமாய் உபயோகப்படுமென்றும் பயிர்களின் எந்தப் பாகத்தில் பூச்சிகள் இருக்கின்றனவோ அந்த பாகத்தில் இந்த மருந்தைத் தெளிக்கவேண்டுமென்றும், மாமரங்கள் பூக்கும்போது இந்தப் பூக்களிலும் இலைகளிலும் இந்த மருந்தைச் செவ்வையாய்த் தெளிப்பதால் பூச்சிகள் வாசனையைக் கண்டு இறந்துபோம், அல்லது ஓடிப்போமென்றும் சொல்கிறார். இப்படி இவர் சொல்லுவதை யெல்லாம் தமிழில் பிரசுரித்தால் விவசாயிகள் அறிந்து நன்மை பெறுவார்கள். பூசா என்ற ஒரு சிறிய வசிப்பில் உத்தியோகமாயிருக்கும் பெரிய சாஸ்திர விற்பன்னர்கள் சோதனை செய்து அறிந்ததை ஆங்கிலத்தில் பிரசுரம் செய்வது தான் சாத்தியம். ஆனால் அந்தந்த மாகாணக் கவர்ன்மெண்டில் விவசாய டைரெக்டர் உத்தியோகம் செய்கிறவர் ஒருவர் இருக்கிறபடியால், அவரைக்கொண்டு தேசபாஷையில் பிரசுரம் செய்வித்தா லொழிய இந்த சாஸ்திர விற்பன்னர்கள் சோதனைசெய்து அறிந்தது முழுதும் பயன்படாது.

—:o:—

Cases from the Indian Law Reports.

இந்தியன் லா ரிபோர்ட்டு கேசுகள்.

—:o:—

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

கிரிமினல் ரிவிஷன் மனு நெ. 439 of 1909.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜ. எய்லிங் முன்பாக.

சக்கிரவர்த்தி ... ... பிரியாதி.

vs.

ஆதம்கான் ... ... எதிரி.

மதராஸ் லோக்கல் போர்ட் ஆக்ட் (3 of 1900) 162 (a) பிரிவு.

அனந்தபூர் சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் அ. நெ 19 of 1900-ல் செய்யப்பட்ட தீர்மானத்தின் பேரிலும் உத்தரவின்பேரிலும் கி-பு-கோ-436, 432-வது பிரிவுகளின் கொண்டுவரப்பட்ட ரிவிஷன் மனு.

கேஸின் விபரம்:—இம் கோர்ட்டில் அப்பீல்வாதியாயிருந்தவன் பெனுகொண்டா யூனியனுக்கு மனுவுசெய்து தன் வீட்டெதிரில் தன் வீட்டின் பேரில் சாய்ந்து தொங்கி கிடக்கும் உணர்ந்துபோன வேப்பமாக்கிளையினால் தன்னுடைய வீட்டிற்கு அபாயம் நேரிடுமென்று சொல்லி அந்த காய்ந்துபோன வேப்பங்கிளையை வெட்டி விடும்படிக் கேட்டுக்கொண்டான். அதன் பேரில் யூனியன் சேர்மென் அப்பீல்வாதியின் சொந்த சிலில் சானிட்டெரி இன்ஸ்பெக்டர் எதிரில் வெட்டி விடும்படிக்கு உத்தரவளித்தார்.

அப்பீல் வாதி வெட்டிய கிளையைத்தான் வீட்டிற்குள் கொண்டுபோய் வைத்துக்கொண்டான். யூனியன் சேர்மென் வெட்டியகிளையை ஏலத்தில் விற்பனை செய்ய உத்தரவு செய்திருப்பதாகவும் ஆகையால் அதை அழித்த எல்லா கிளைகளுடன் அவனுடைய வீட்டெதிரில் ஓர் தினம் எடுத்துவைக்கும்படிக்கு உத்தரவு செய்தார்.

அதன்பேரில் அப்பீல் வாதி தன் சொந்த செலவில் வெட்டினதை எந்த விற்பனை அல்லது சட்டப்படி அவன் அப்படியே செய்யவேண்டியதென்று சேர்மென்னை கேட்க அதற்கு சேர்மென் அந்த வேப்பங்கிளை அவனுடைய சொந்தபொருளல்லவென்றும் அது யூனியன் பஞ்சாயத்தாருக்குச் சொந்தமென்று சொல்லி ஏன் அதை ஏலத்தில் விற்கலாகாதென்று சொன்னார்.

5

தீர்மானம்:—சேர்மென் உத்தரவின் பேரில் எதிரி சாலைமேலிருந்த அந்த மரக்கிளையை வெட்டினான். பிறகு அவன் வெட்டின கிளையைத் தன் சொந்த பிரயோஜனம் செய்துக் கொள்ளலாமென்று கருதி அதை யூனியனுருக்குத் தரமாட்டேனென்று நிறுத்திக்கொண்டான். பிறகு இவ்விதமாய் மாற்றிவிடப்பட்ட மரம் அல்லது எந்தப் பொருளைப்பற்றியாவது மதராஸ் லோக்கல் போர்ட்டு ஆக்டில் நிபந்தனை இடையர் தாகையால் மேற்படி ஆக்ட் 162 (c) வது பிரிவின்படி தீர்மானித்து சிக்ஷை செய்தது நியாயமானதல்லவென்று கண்டு அதை ரத்துசெய்துவிட்டு வசூல்செய்த அபராதத்தை வாப்ஸ் செய்துவிடும்படிக்கு உத்தரவு செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 10-வது வால்யம் 577.

9 மா-லா-டை 458.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

முதல் சிவில் அப்பீல் நெ. 182 of 1905.

ஜட்ஜிகள்:—மி-ர் ஜ. கிருஷ்ணசாமி ஐயர். } முன்
" மி-ர் ஜ. எய்லிங். } பாக.

சஞ்ஜனபல்லி அப்பாஜீபந்து வகையறா—வாதிகள் அப்பீல் வாதிகள்.

ஆலூர் ராமாசார்லு வகையரா—பிரதிவாதிகள்—ரெஸ்பான்டென்டுகள்.

இந்துலா:

கேஸின் விபரம்:—ஒருவன் காலமான பிறகு அவனுடைய விதவை அவனுடைய யாத்திரை முதலான செலவுகளுக்காக அவனுடைய புருஷனுடைய பூஸ்திதியை கொதுவை வைத்து ரொக்கம் கடன் வாங்கி அந்தக் கடன் மொத்தத்தை கொதுவை வைத்துக் கொண்டவனிடத்திலேயே டிப்பாட்கிட்டர்கள் வைத்து அவளுக்கு திரவியம் வேண்டியிருந்தபோதெல்லாம் சிலாசிலாவாய் ரொக்கம் பெற்றுக்கொண்டே வந்தாள். அவள் காலமான பிறகு அந்த சொத்துக்குச் சட்டபடி பாத்தியதை யுள்ள அனந்தரவார்சுகள் அப்படிப்பட்ட கொதுவை செல்லாதென்றும் அவள் வாங்கிய தொகை காலம் சென்றவனுடைய குடும்பத்திற்காக வாங்கியதல்ல வென்றும் சொல்லி மேற்படி கொதுவை ரத்துசெய்துவிட்டு சொத்தை தன்வசம் செய்யும்படிக்கு வாதி தாவா செய்தான்.

ஜில்லா ஜட்ஜி அவர்கள் கொதுவை மொத்தந்தைக்கட்டிவிட்டு நிலத்தை மீட்டுக்கொண்டு வாதி பரம் செய்துகொள்ளும்படிக்கு டிக்ரி செய்தார். அந்த டிக்ரியின் பேரில் இந்த இரண்டாவது அப்பீல் கொண்டுவரப்பட்டது.

தீர்மானம்:—காலம் சென்றவனுடைய விதவை அவளுடைய யாத்திரை முதலான சொந்த செலவிற்காக பட்ட கடன். காலம் சென்ற அவளுடைய புருஷனுடைய சொத்தைக் கட்டுப்படுத்தாதென்று கண்டு ஜில்லா ஜட்ஜியின் டிக்ரியை ரத்துசெய்துவிட்டு வாதிக்கு தாவா சொத்தை மாசூலுடன் ஒப்புவிக்கும்படி டிக்ரி செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 10-வது வால்யம் 676

9 ம-லா-டை 307, டா. வீ. நோ, 267.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது சிவில் அப்பீல் நே. 1614 of 1908.

ஜட்ஜிகள்:—மி-ர் ஜ. வாலிஸ்.
,, மிர் ஜ. சங்கரன் நாயர். } முன்பாக.

கோடாகிருஷ்ணய்யர்—பிரதிவாதி ... அப்பீல் வாதி.

VS.

மதூரி சுப்பய்யர் ... வாதி ரெஸ்பான்டென்டு

மசுலிப்பட்டணம் சப் கோர்ட்டார் செய்த டிக்ரியின்பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல் :—

கேசின் விபரம்.—இந்த வியாஜ்ஜியத்தில் ஒருவன் எல் கிஸ்தியாரின் குறித்த தன்னுடைய பூஸ்திதியின் சொற்ப பாகத்தை வாதிக்கு வித்துவிடுவதாக ஒப்புக்கொண்டான். அவன் அவ்விதமாய் ஒப்புக்கொண்டபிறகு அந்த சொத்தின் ஓர் பாகத்தைப் பாராதீனம்செய்ய அதன்பேரில் வித்துவிடுவதாக ஒப்புக்கொண்ட ஏற்பாட்டை அல்லது உடன்படிக்கையை ஊர்ஜிதப்படுத்தி அந்த பாக நிலத்தை தன்னுடைய சுவாதீனம் செய்யும்படிக்கு வாதி இந்த வியாஜ்ஜியம் கொண்டு வந்தான்.

இவ்விதமான சந்தர்ப்பங்களில் வாதி ஸ்பெஸிபிக் ரிலீப் ஆக்ட் 14-வது பிரிவின்படி உடன்படிக்கையை ஸ்திரப்படுத்தி நிறைவேற்றும்படி கேட்பதற்கு பாத்தியதை கிடையாதென்று தீர்மானிக்கப் பட்டது.

இந்தியன் கேசுகள் 10-வது வால்யம் 678.

9 ம-லா-டை 318.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

உத்தரவின்பேரில் அப்பீல் நெ. 82 of 1910.

ஜட்ஜிகள் .—மி-ர் ஜ. அப்டுர் ரஹீம்
,, மி-ர் ஜ. எய்லிங் } முன்பாக.

M. R. M. S. வேலயப்பசெட்டி வகையரா—பிரதிவாதிகள் ... அப்பீல் வாதிகள்.

VS.

R. செல்லயப்பபிள்ளை வகையரா—வாதிகள் ... ரெஸ்பான்டென்டுகள்.

சி-பு-கோ-(5 of 1908) ஆர்டர்; 41 ரூல் 23-ஆக்ட் 14 of 1882-568-வது பிரிவு.

கேசின் விபரம் :—இந்த கேசில் முக்கியமாய் தீர்மானிக்கப்பட்ட பாயின்டுகள், இரண்டு, அதாவது, (1) ஒருவன் டி. முனிசிபு கோர்ட்டில் அவனுடைய கேசு நடந்து கொண்டிருக்கையில் ஓர் தஸ்தாவேஜை தன்னுடைய கேசுக்கு முக்கியமானதென்று தாக்கல்செய்து சாக்ஷியத்தில் ஒப்புக்கொள்ளும்படி கேட்டான். ஆனால் அந்த தஸ்தா வேஜு ஸ்டாம்பு ஆக்டில் குறித்திருக்கும் கிரமமான ஸ்டாம்பு கடுதாசியில் எழுதப்படாமல் குறைவான ஸ்டாம்பில் எழுதப்பட்டிருந்தமையால் அதை சாக்ஷியத்தில் ஒப்புக்கொள்ளாமலேயே தாவாவைப் பைசல் செய்துவிட்டார். அந்த தஸ்தாவேஜியின் பேரில் சட்டப்படி கட்டவேண்டிய ஸ்டாம்பை கட்டிவிட்டு ஸ்டாம்பு ஆக்ட் நிபந்தனையின்படி கலெக்டர் என்டார்சுமெண்டு பெற்று அதை சாக்ஷியத்தில் ஒப்புக்கொள்ளும்படி அப்பீல் கோர்ட்டில் மனுவு செய்துக்கொண்டான் ஜில்லா ஜட்ஜி அதை சாக்ஷியத்தில் ஒப்புக்கொண்டு தாவாவை மறுபடியும் விசாரணை செய்யும்படிக்கு டி. முனிசிபுக்கு உத்தரவு செய்தார்.

தீர்மானம் :—ஜில்லா கோர்ட்டில் தாக்கல் செய்துக்கொண்டு சாக்ஷியத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட தஸ்தாவேஜு சி-பு-கோ 568-வது பிரிவின்படி புது தஸ்தாவேஜல்லவென்றும் அது கலெக்டர் என்டார்சுமென்டுக்குப் பிறகு ஸ்டாம்பு ஆக்ட் நிபந்தனைப்படிக் கிரமமாய் எழுதப்பட்ட தஸ்தாவேஜென்று சொல்லப்பட்ட ஓர் பத்திரமென்று சொல்லி இரண்டாவது அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இதற்காதாரமான கேசுகள் :—இ. லா. ரி. 31 பம், 381; பேஜ் 2 ம-லா-டை 435; 9 பம். லா. ஜா. 671, ம-லா-ஜ 17, 347.

9 ம. லா-டை 347.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது அப்பீல் நே. 679 to 682 of 1906.

ஜட்ஜிகள் :—சர் ரால்ப்பென்சன்
,, மி-ர் ஜ. வாலிஸ் } முன்பாக.

சுப்பராயரெட்டி வகையரா—பிரதிவாதிகள் ... அப்பீல் வாதிகள்.

VS.

தியாகராயசெட்டி—வாதி ... ரெஸ்பான்டென்டு.

மதராஸ் ரென்ட் ரெக்கவரி ஆக்ட் (8 of 1885) 11-வது பிரிவு.

செங்கல்பட்டு ஹெட் அசிஸ்டென்ட் கலெக்டர் முன்பாக நடந்த சம்மேரி விசாரணையின் பேரில் ஜில்லா கோர்ட்டில் செய்துக்கொள்ளப்பட்ட அ. நெ. 125 of 19, 5-ல் செய்யப்பட்ட டிக்ரியின் பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

உத்தரவு :—மதராஸ் ரென்ட் ரிகவரி ஆக்ட் 11-வது பிரிவின் கீழ் ஓர் ஷ்ரோத்தியம்தாரன் தனக்கு யுக்தமமாய்த் தோற்றும் விதம் தன்னுடைய இச்சைப்படி கிஸ்தி வசூல் செய்யலாமென் றிருந்த போதிலும் பூஸ்திதியின் ... தென்று ... ஷ்ரோத்தியம் தாரன் அவனுடைய சுய இச்சைப்படிக்கு கிஸ்தி விதம் வசூல் செய்ய மேற்படி ஆக்ட் 11-வது பிரிவு 1 to 3 உட்பிரிவுகளின் கீழ் நியாயம் கிடையாதென்று தீர்மானம் செய்யப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 10-வது வால்யம் 669.

9 ம. லா-டை-283.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 1231 of 1908.

ஜட்ஜிகள்:—சர் ஆர்னல்ட் வொயிட் Kt. சீப் ஜஸ்டிஸ்
,, மி-ர் ஜ. மன்ரோ } முன்பாக.

சுப்பய்யர் ... ... அப்பீல் வாதி.

VS.

மணியம் சுப்பிரமணிய ஐயர் வகையரா—ரெஸ்பான்டென்டுகள்.

கேசின் விபரம் :—ஒருவன் மற்றொருவனுக்கு தன்னுடைய பூஸ்திதியில் ஒன்றைக் கிரயம்செய்து விக்கிரயப்பத்திரம் எழுதி ரெஜிஸ்தர்செய்து நிலத்தை அவன் ஸ்வாதீனம் செய்துவிட்டான். மேற்கண்டபடியே தஸ்தாவேஜியின் கீழ் கிரயம் பெற்றவனுக்கு அந்த நிலத்தில் சர்வ ஹக்கு சுதந்தர பாத்தியதை ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 54-வது பிரிவின் நிபந்தனைப்படி உண்டாயிற்று. அப்படிப்பட்ட கிரய தஸ்தா வேஜியில் யாதொரு சூது, மோசம் கிடையாதென்று ருஜூவாகி அந்தக் கிரயப்பத்திரத்தில் செப்பியிருக்கும் தொகை கொடுக்கப்படவில்லையென்று ஏற்படினும் அவ்விதமான கிரயதஸ்தா வேஜியை ரத்து செய்வதற்கு நியாயம் கிடையாதென்றும் ஆனால் அதை ரத்துசெய்யும்படிக்கு தாவா கொண்டுவந்த வாதி தான் செலுத்தியிருப்பதாகச்சொல்லும் கிரய மொத்தத்தை தாவாசெய்து வசூல் செய்யக்கூடுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் கிரய தஸ்தாவேஜியில் கண்டிருக்கும் கிரய மொத்தத்தைக் கொடாமல் அதற்குப் பதிலாய் கிரயம் பெற்றவன் கிரயம் செய்தவன் ஆயுசு பரியந்தம் ஜீவனாம்சம் கொடுத்து காப்பதாக கண்டெழுதியிருந்தால் அது சட்டப்படி போதுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு ஆதாரமாய் இ-லா-ரி. 23 பம் 525 (சாகாஜி-VS-நம்தேவ்) ; 30 அ 125 (பேஜ்னாத் சிங்க்-VS-பட்டு) ;

16 மலா-ஜ-524 (கோவிந்தம்மாள்-VS-கோபாலசாரியார்)

லாகூர் இந்தியன் கேசுகள் 10-வது வால்யம் 546.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

——:o:——

2-வது சிவில் அப்பீல் நே. 722 of 1909.

ஜட்ஜிகள் :—சர் ரால்ப்பென்சன்
,, மி-ர் ஜ. சுந்தரய்யர் } முன்பாக.

கே-சேஷாத்ரி அய்யங்கார் வகையரா .... அப்பீல் வாதிகள்.

VS.

ரங்காபத்தர் ... ரெஸ்பான்டென்டு.

மதாச்சாரவிஷயமாய் செய்யும் தெய்வீக கைங்கிரயங்கள் ஓர் தேவாலயத்தின் அர்ச்சகரை சொற்ப காலம் தொழிலிலிருந்து நீக்கிவைக்கும் "சஸ்பென்ஷன்" உத்தரவு சட்டப்படி செல்லத் தக்கினதா அல்லவா ;

ஓர் தேவாலயத்தில் அர்ச்சகரா யிருப்பவருக்கும் அதே தேவாலயத்தில் ட்ரஸ்டியா யிருப்பவருக்கும் பேதமுண்டு - தொன்று தொட்டுப் பரம்பரையாய் வேலைபார்த்து வரும் ஓர் தேவாலய அர்ச்சகரை அந்த தேவாலயத்தின் ட்ரஸ்டி தகுந்த காரணங்களைக் கண்டு அவரை வேலையிலிருந்து நீக்கிவைக்கலாம். இதற் காதாரமாய் கிருஷ்ணசாமி தா

தாசாரி-vs-கோமேதம் ரங்காசாரி 4 ம-ஹை-ரி 63; பவானிசங்கர்-vs-திம்மன்ன இ-லா-ரி. 80 பம் 508.

ஓர் தேவாலயத்தில் வேலை செய்பவர்களில் ஒருவன் பேரில் யாதேனும் பிராது கொண்டுவரப்பட்டு அந்தப் பிராதை விசாரணை செய்து முடிவதற்குள் எவன்பேரில் பிராது செய்யப்பட்டதோ அவனைவிசாரணைசெய்து முடியும் வரையில் அவனுக்கு நோட்டீசு கொடாமலேயே அவனை சஸ்பெண்ட் செய்ய நியாயமுண்டு.

ஓர் தேவாலயத்தில் அர்ச்சக வேலைபார்ப்பவர் யேதோ சில ஒழுங்கீனமான நடவடிக்கைகள் நடத்துகிறாரென்று அவர் மேல் பிராதுகொண்டு வந்து அந்த பிராதை விசாரணை செய்துகொண்டிருக்கையிலும் அவரைக் குற்றவாளிதா னென்று தீர்மானிப்பதற்கு முன்னும் நோட்டீசு இல்லாமலேயே அவரை சஸ்பெண்ட் செய்துவைத்தால் அந்த உத்தரவு சட்டப்படி செலாவணியுள்ளது தான்.

இதற்காதாரமாய் பின்வரும் ரிப்போர்ட்டுகளைப் பார்க்கவும்:—

சேஷாத்ரி அய்யங்கார்-vs-நடராஜய்யர் இ-லா-ரி. 21 ம 179.

பார்ட்டன்-vs-டெய்லர், இ-லா-ரி. 11 அலகாபாத் 197; (55 லா-டை-158); (55 லா-ஜ-பிரிவி கவுன்சல் 1.)

ஆயினும், செய்யப்பட்ட சஸ்பென்ஷன் உத்தரவு நியாயமானதுதா னென்று தோற்றும் பட்சத்தில் அதை கோர்ட்டார் ரத்துசெய்ய நியாயமில்லை.

சக்கரவர்த்தி-vs-லண்டன் மேயர் 100 இ-ரி-96; விஜயராகவ-vs-ஸ்டேட் சக்ரிடெரி. இ-லா-ரி 7 ம 466. லாகூர் இந்தியன் கேசுகள் 10-வது வால்யம் 548.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

சிவில் ரிவிஷன் பிட்டிஷன் நெ. 194 of 1910.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங் | முன்பாக.

S. M. சீதாபதிநாயுடு ... மனுதாரன்.

vs.

M.L.R.M. லட்சுமணசெட்டி மைனர் } ரெஸ்பான்
N.M.R. அண்ணாமலைசெட்டி ஏஜெண்டு } டெண்டு.

ப்ரெசிடென்சி ஸ்மால்காஸ் கோர்ட்ஸ் ஆக்ட் (15 of 1882) 38-வது பிரிவு.

சென்னப்பட்டணம் ஸ்மால்காஸ் கோர்ட்டார் ஸ்-கா-நெ. 13067 of 1809-ல் செய்த டிக்ரியை புனர்விசாரணை செய்யும்படிக்கு கொண்டுவரப்பட்ட ரிவிஷன் மனு.

மிஸ்டர் வி-நாருநம்பியார்....மனுதாரன் வக்கீல்.

மெசெர்ஸ் வி-வி-ஸ்ரீனிவாசய்யங்கார், டி. ராஜகோபால சாரியார் ரெஸ்பான்டெண்ட் வக்கீல்கள்.

தீர்ப்பு:—இந்த கேசின் மனுதாரன் ஸ்மால்காஸ் கோர்ட்டு டிக்ரியின் பேரில் ஷெடி ஆக்ட் (15 of 1882) 38-வது பிரிவின் கீழ் புல்பெஞ்சுக்கு மனுவு செய்துக்கொள்ளவேண்டியதென்றும் ஹைகோர்ட்டில் இந்த ரிவிஷன் மனு செய்துக்கொள்வதற்கு நியாயம் கிடையாதென்றும் சொல்லி ஆஞ்ஜெலோ-vs-டி ஆஞ்ஜெலிஸ் (Crl. P. No. 81 of 1908)-ல் செய்ததீர்மானத்தை ஆதாரமாய் எடுத்து காண்பித்தார். இந்த கேசில் ஜ-மில்லர், ஜ-சங்கரன் நாயர் அவர்களால் ஸ்மால்காஸ் கோர்ட்டு தீர்ப்பின் பேரில் விசேஷ காரணமின்றி ரிவிஷன் செய்ய நியாய மில்லைஎன்று தீர்மானித்திருக்கிறார்.

இந்த கேசுக்கு விரோதமாய் அப்பீல் வாதி பச்பெருமாள் செட்டியார்-vs-சம்பத்து செட்டி L. P. A. No. of 1910) என்றும் கேசை எடுத்துக்கூறினார்.

ஆனால் பின் சொல்லிய கேசில் முன் சொல்லிய கேசைப்பற்றி எவ்விதமான மாறுதலும் கிடையாதென்று சொல்லப் பிரஸ்தாப கேசில் விசேஷமான சந்தர்ப்பம் கிடையாதென்று எடுத்துக்காண்பித்து ரிவிஷன் மனுவை தள்ளுபடி செய்து விடப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 10-வது வால்யம் 551.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

இரண்டாவது அப்பீல் நெ. 809 of 1909.

ஜட்ஜிகள்:—மி-ர் ஜ. வாலிஸ் }
,, மி-ர் ஜ. மன்ரோ } முன்பாக.

கோடிபலபூடி வெங்கட நாராயணு...அப்பீல் வாதி.

vs.

மகந்தி சிதைய்ய வகையரா...ரெஸ்பான்டெண்டு.

சி-பு-கோ 295—(b).

கேசின் விபரம்:—ஒருவன் தன்னுடைய பூஸ்திதியை குதுவை வைத்து கடன் வாங்கினன் பிறகு குதுவை வைத்துக்கொண்டவனுக்கு செல்லாமையால் அவன் குதுவை வைத்தவன்பேரில் குதுவைப்பணத்தை வசூல் செய்வதற்காக சிவில் கோர்ட்டில் தாவா செய்து டிக்ரிபெற்று அந்த டிக்ரியை நிறைவேற்று கையில்டிக்ரியாயிருக்கும் குதுவை சொத்தில் ஓர் பாகத்தை கோர்ட் எலத்தில் விற்பனைசெய்து விற்பனை மொத்தம் கோர்ட்டில் கட்டப்பட்டது. சொற்ப காலம் சென்ற பிறகு வாதி டிக்ரி மொத்தம் பூராகவும் தனக்கு வட்டி உட்பட வசூல் ஆகவேண்டியதென்று வாதித்தான் அதின்பேரில் இந்த இரண்டாவது அப்பீல் கொண்டுவரப்பட்டது.

தீர்மானம்.—குதுவை சொத்தின் ஓர் பாகத்தை கோர்ட்டார் எலத்தில் விற்பனைசெய்து வசூலாகிய தொகை கோர்ட்டில் கட்டப்பட்டிருந்த போதிலும் அந்த தொகையை வாதி பூராய் கொடுவை மொத்தத்திற்கும் அவனுக்கு வட்டி கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேப்பது நியாயந்தானென்று தீர்மானிக்கப்பட்டது.

லாகூர் இந்தியன் கேசுகள் 10-வது வால்யம் 552

(266-வது பக்கத்து தொடர்ச்சி).

நப பெக்டரும் திடீரென்று மேற்சொல்லியிருக்கும் செய் ர்களுடைய வீட்டிற்குள் நுழைந்து சோதனை செய் சாராய ததில் இரண்டு காலன் காய்ச்சின பட்டை சா புட்டிகளில் நிறப்பியிருப்பதைக்கண்டு அவர்களை ர்ஜா செய்தார்கள்.

மி-ர். வெங்கட சுப்பய்யர் என்பவர் எதிரிகள் தரப்பில் ஆஜரானர்.

ப்ராசிகூஷன் தரப்பு சாக்ஷிகளின் விசாரணை நடந்துக்கொண்டு வருகிறது.

CASE AGAINST RAILWAY COMPANY, BOMBAY.

பம்பாயில் ரயில்வேயார் மேல் செய்த கேசு.

ஆகஸ்டுமீ 10உ பம்பாய் ஸ்மால்காஸ் கோர்ட்டு புல் பெஞ்சார் முன் B. B. and C. I. என்னும் ரயில்வே கம்பெனியார் மீதில் அலிபை என்பவன் நஷ்டத்திற்கு தாவா செய்த கேசு விசாரணைக்குவந்தது.

கேசின் விபரம்:—இந்த கேசில் வாதி அலிபை என்பவன் ரட்லாண்டுக்குச் சில பழய இருப்பு சட்டங்களை ரயில் மார்க்கமாய் அனுப்பியதாகவும், அதன் விஷயமாய்த் தனக்கு ரயிலார் கொடுத்த ரசிதை தான் ரட்லாண்டுக்கு அனுப்பியதாகவும் அந்த ரசிதை யாரும் பெற்றுக்கொள்ளாமல் தனக்கே வாப்ஸ் ஆய்விட்டதாகவும் ரயில்வேயார் மேற்படி இரும்பு சாமான்களை அனுப்பிவைத்த யிடத்தில் கொடாமல் அவர்களுடைய சொந்தப் பிரயோசனம் செய்துக்கொண்டதாகவும் சொல்லி அதனுல் தனக்கு நேரிட்டிருக்கும் நஷ்டத்திற்கு தாவா செய்தான். ஆனால் ரட்லாண்டில் ஷெடி சாமான்களை வாதியின் ஏஜெண்ட் ரயில்வே ரசிது கைசேர்ந்துபோய் விட்டதென்றும் அதனுல் கேரிடும் ரூபா 140 நஷ்டத்திற்குத் தான் பொறுப்பாளி யென்றும் சொல்லி ஓர் இன்டேம்நீட்டி பாண்டு எழுதிக்கொடுத்து விட்டு ஷெடி சாமான்களைப் பெற்றுக்கொண்டதாகவும் ரயில்வேயார் சொல்லியதற்குப் பதிலாய் வாதி தனக்கு ரட்லாண்டில் ஏஜெண்டு கிடையாதென்று சொல்லிரயில்வேயார் சொல்லுவது சுத்த பிசகென்று வாதித்தார்.

தீர்மானம்:—புல்பெஞ்சு ஜட்ஜிகள் கீழ் கோர்ட்டார் தீர்ப்பு சரியென்று வாஜிதம்செய்து வாதியின் தாவாவை சிலவுடன் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

இதர கோர்ட்டு வர்த்தமானங்கள்.

கி. அ. நெ. 12 of 1911.

தஞ்சாவூர் செஷன்கோர்ட் ஜட்ஜி மி-ர் ஜிலெஸ்பி துரை அவர்கள் முன்பாக சுக்லயாஜீ மான நஷ்ட கேசு.

மேற்படி கோர்ட்டார் இந்த கேசின் ரெக்கார்டுகளைப் பார்வையிட்டு அப்பீல் வாதி தரப்பில் ஆஜராகிய மிஸ்டர் டி. ஆர். நரசிம்ம மூர்த்தி சாஸ்திரி அவர்களுடைய வாதத்தையும் கேட்டு பின்வருமாறு தீர்ப்பு செய்தார்கள்.

தீர்மானம்:—இந்த கேசில் அப்பீல் வாதியை மான நஷ்ட செக்ஷன்படி குற்றம் செய்ததாக இ. பி. கோ. 500-வது பிரிவின்படி ரூபாய் 60 அபராதம் விதித்தார்.

கேசின் விபரமாவது: அப்பீல் வாதி மன்னார் குடியில் மதாசார விஷயமாய் அநேக பிரசங்கங்கள் செய்ததாகவும் அவர் அப்படி செய்த பிரசங்கங்களில் 25-12-10-ல் சுக்லயாஜீ பிராமண மதஸ்தர்களுக்கு பொய் சொல்லும் சாபம் இருப்பதாய் விவரணம் செய்து பிரசங்கித்தார். அதன் பேரில் அந்த மதஸ்தனுகிய பிரியாதி மானநஷ்டத்திற்கு சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் முன்பாக பிரியாது செய்தான். அவர் மேற்கண்டபடி பிரசங்கித்தவரை 60 ரூ. அபராதம் செலுத்தும்படி சிக்ஷை செய்தார்.

எதிரி தரப்பு வக்கீல் தன்னுடைய அப்பீலில் அவர் மானநஷ்ட குற்றத்தை செய்தவரல்ல வென்று வாதித்தார். அது விஷயமாய் தகுந்த ஆதாரம் இருப்பதாக சொல்லி அந்த மதஸ்தாருக்கென்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கும் தஞ்சாவூர் ஜில்லா கெஜட்டியார் முதல் வால்யம் 78,238 பக்கங்களையும், கர்ஸ்டன் துரை அவர் இம்மதத்தைக்குறித்து பதிப்பித்திருக்கும் வால்யம் 1, பக்கம் 344 எடுத்துக் காண்பித்தார்.

மேற்படி பிரசங்கத்தில் நல்லெண்ணத்துடன்சொல்லியிருப்பதால் இ. பி. கோ. 499 வது பிரிவின் 9-வது நிவாரணைபின்படி தான் குற்றவாளி யாகாதென்று வாதிக்கப்பட்டது.

பிரசங்கம் செய்தவர் அந்த மதாச்சாரத்தின்படி கோர்ட்டின்படி அவ்விதம் சொல்லத்தக்குமென்று கண்டு அவர் குற்றவாளியல்லவென்று தீர்மானித்து அபராதத் தொகையை வாபீஸ் செய்துவிடும்படிக்கு உத்தரவு செய்தார்.

A LESSON ON MALARIA.

மலேரியா என்னும் விஷஜ்வரத்தைப்பற்றிய ஒரு பாடம்.

மலேரியா அல்லது விஷஜ்வர மென்பது அபாயகரமான ஒரு வியாதி, இதனால் பிரதி வருஷமும் ஆயிரக்கணக்காக ஜனங்களுக்கு—முக்கியமாய் யௌவன பருவத்திலுள்ள ஜனங்களுக்கு தேக துர்ப்பலமோ அல்லது மரணமோ சம்பவிக்கிறது. கொசுக்கடி மூலமாய் மனிதனின் இரத்தத்தில் புகுந்து அந்த இரத்தத்தையே உணவாகக் கொண்டிருக்கிற கிருமிகளால் இந்த வியாதி உண்டாகிறது. இரத்தத்திலே சிவப்பணுக்கள், வெள்ளையணுக்கள் என்னும் இருவகை அணுக்கள் இருக்கின்றன. விஷஜ்வரக் கிருமிகள் சிவப்பணுக்களைப் பிடித்து அவைகளில் பலவற்றை அழித்துவிடுகின்றன; இக்காரணத்தினால்தான் விஷஜ்வரத்தினால் வருந்தும் ஒருவன் தேகம் வெளுத்து மெலிந்துபோகிறான். மேலும் ஷை கிருமிகளால் மண்ணீரலில் நாட்பட்ட வீக்கமும் நோயும் ஏற்பட்டு இதனால் காலக்கிரமத்தில் ஜ்வரக்கட்டி உண்டாகிறது. விஷஜ்வரக் கிருமிகளில் மூன்று வகைகள் உண்டு; அவற்றுள் ஒரு வகை ஒரு வகையானது வெகு வேகமாய் விருத்தியடைகிறபடியால் பிரதி இருபத்துநாலு மணிநேரத்துக்கொருதடவை அவைகளிலிருந்து நூதன கிருமிகள் உற்பத்தியாகின்றன; மற்றொரு வகையான கிருமிகள் பிரதி நாற்பத்தெட்டு மணிநேரத்துக்கொரு தடவை விருத்தியடைகின்றன; மூன்றாவது வகையில் நூதன கிருமிகள் உற்பத்தியாவதற்கு எழுபத்திரண்டு மணிநேரம் பிடிக்கிறது. இப்படி விருத்தியடைவதெல்லாம் மனிதனின் இரத்தத்தில் நேரிடுகிறபடியால் அந்த இரத்தத்தில் நூதன கிருமிகள் முட்டையிலிருந்து வெளிப்படும் தக்ஷணமே ஒருவனுக்கு ஜ்வரம் காணுகிறது. ஆகையால் அவனுக்குக்காணும் ஜ்வரம் இன்னவிதமென்பது கொசுக்கடியினால் அவனுடைய தேகத்துக்குள் என்னவிதமான கிருமி செலுத்தப்பட்டிருக்கிறதோ இதை அனுசரித்ததாகும். முதல்வகையான கிருமியாயிருந்தால் அவனுக்குப் பிரதி தினமும் ஜ்வரம் வரும். இரண்டாம் வகையான கிருமியாயிருந்தால், ஒன்றுவிட்டு ஒரு நாள் ஜ்வரம் வரும் (இது சர்வ சாதாரணமானது); மூன்றும் வகையானதாயிருந்தால் மூன்று நாளைக்கொருதரம் ஜ்வரம் வரும்; இவ்வெல்லா விஷயங்களிலும் நோய்க்குச் சிகிச்சை செய்யாமல் விட்டிருந்தால் தான் மேற்கண்டபடி ஜ்வரம் வரும்.

இம்மூன்று வகைக் கிருமிகளில் ஒவ்வொரு வகையைச்சேர்ந்த கிருமிகளாலும் ஒவ்வொரு விதமான ஜ்வரம் உண்டாகிறதென்பதல்லாமல் இந்த கிருமிகளில் ஒருவகையைச் சேர்ந்தவைகள் மற்றொருவகையைச் சேர்ந்தவைகளிலிருந்து தோற்றத்தில் வேறுபட்டிருக்கிறபடியால் அணுதரிசனி என்னும் பூதக்கண்ணாடியைக்கொண்டு இரத்தத்தைப் பரீக்ஷித்துப் பார்க்கும்பட்சத்தில் கிருமியின் தோற்றத்தைக்கொண்டு நோயாளிக்கு இன்னவிதமான விஷஜ்வரம் கண்டிருக்கிறதென்று சாமர்த்தியமுள்ளவொருவன் உடனே சொல்லக்கூடும்.

விஷஜ்வரங்கண்ட ஒருவனுடைய இரத்தத்தில் இந்த கிருமிகள் வெகு அதிகமாயிருக்கக்கூடும்; ஒவ்வொரு இரத்தத்துளியிலும் அவை நூற்றுக்கணக்காய் இருகின்றன. பெண் கொசுக்கள் இரத்தத்தை உண்டு ஜீவிப்பவையாகையால் அவைகள் தங்களுக்கு உணவு கிடைப்பதற்காக மனிதரை நருக்கென கடிப்பதுமல்லாமல் அவைகளை ஓட்டாமலிருந்தால் ஒவ்வொரு தடவையிலும் பல இரத்தத்துளிகளை உறிஞ்சுவிடுகின்றன. எவனுடைய இரத்தத்தை கொசுக்கள் உட்கொள்ளுகின்றனவோ அந்த மனிதனுடைய இரத்தத்தில் விஷஜ்வரக் கிருமிகள் இருக்கும் பட்சத்தில், அந்தக்கிருமிகளில் அநேகம் அந்தக் கொசுக்களின் இரைப்பையில் புகுந்துவிடும். அந்தக் கொசுவானது அநோபிலிஸ் (anopheles) என்னும் ஜாதியைச்சேர்ந்த ஒரு குறிப்பிட்டவகையானதாயிருந்தால் அதன் இரைப்பையிலே ஷை கிருமிகளில் சில விருத்தியாகி இரைப்பையின் சுவரின் மூலமாய்த் துளைத்துக்கொண்டு அவ்வவயவத்தின் சவ்வுகளுக்குள் சென்று கடைசியாக அதன் உமிழ்நீர்க் கோளங்களில் பிரவேசிக்கும் அந்தக் கொசு மனிதனைக் கடிக்கும்போது தன் உமிழ்நீர்க்கோளங்களில் அடங்கியிருப்பவைகளில் சிலவற்றை அவனுடைய தோலுக்குள் செலுத்துகிறது: அதனால் நம்மைக் கொசு கடிக்கும்போது நம்மெல்லோருக்கும் எவ்வளவோ பழக்கமாயிருக்கிற தினவு உண்டாகிறது; இந்த உமிழ்நீர்க் கோளத்திலுள்ள பதார்த்தத்திலே தான் விஷஜ்வரக் கிருமிகள் இருக்கின்றன ஆகவே, இவ்விதமாக ஒரு மனிதனிடத்திலிருந்து இன்னொரு மனிதனுக்கு ஷை கிருமிகள் மாற்றப்படுகின்றன. இந்தக் கிருமிகள் மனிதனுடைய இரத்தத்தில் வெகு வேகமாய் விருத்தியடைகின்றன. இவை போதுமான அளவுக்கு விருத்தியடைந்த பிறகு, அந்த மனிதனுக்கு ஜ்வரம் கண்டு, அதற்கப்புறம் அது பிரதி 24 அல்லது 48 அல்லது 72 மணி நேரங்களுக்கொருதடவை வந்துகொண்டேயிருக்கும்.

விஷஜ்வர வியாதியஸ்தனைக் கொசுகடித்தவுடனே அவனிடத்திலுள்ள கிருமியையும் ஜ்வரத்தையும் இன்னொருவனிடத்தில் மாற்ற முடியாது. கொசு விஷஜ்வர ரத்தத்தை உட்கொண்ட பிறகு, கிருமிகள் அதன் உமிழ்நீர்க் கோளங்களில் புகுவதற்குமுன் பல நாட்கள் (சுமார் ஒரு வாரம்) கழியவேண்டும். மேலும் தொத்துவியாதி சம்பந்தமுள்ள கொசு தேகாரோக்கியமுள்ள ஒருவனுக்குள் கிருமிகளைச் செலுத்தினவுடனே ஜ்வரம் காணாது. அந்த கொசு சில கிருமிகளை மாத்திரமே செலுத்துகிறது; அவைகள்

ஜ்வரமுண்டாகும்படி செய்யக்கூடியவைகளாயிருப்பதற்குமுன் அநேக லக்ஷக்கணக்காய் விருத்தியாகவேண்டும். சாதாரணமாக கொசுக்கடியுண்டான பிறகு முதல் தடவை ஜ்வரம் காணும்படி செய்வதற்கும் போதுமானபடி கிருமிகள் வளர்வதற்கு 14 நாளுக்குக் குறையாமலும் 24 நாளுக்கு மேற்படாமலும் பிடிக்கிறது.

எல்லா கொசுக்களுமே விஷஜ்வரத்தைப் பரவச்செய்யும் சக்தியுடையவர்களல்ல. பல வர்ணமுள்ள இறக்கைகளையுடைய கொசுக்களில் அநோபிலன் என்னும் ஜாதியைச் சேர்ந்தவைகளுக்கே அவைகளிலும் பெண் கொசுக்களுக்கு மாத்திரமே இந்த சாமர்த்தியம் உண்டாயிருக்கிறது.

கொசுக்களில் மேற்சொன்னவகைபோக மற்றதும் மிக சாதாரணமுமான வகைக்கு குலிஸைன்ஸ் என்று பெயர். அவை விஷஜ்வரத்தைப் பரவச்செய்வதில்லை; ஆனால், போகப்போக யானைக்காலில் கொண்டுவந்துவிடக்கூடிய ஒருவித கடும் ஜ்வரத்தை உண்டாக்குகிற பிலேரியா என்னும் கிருமிகளை ஒரு மனிதனிடத்திலிருந்து இன்னொரு மனிதனுக்குப் பரவச்செய்கின்றன. ஆகவே கிராமங்களிலும் பட்டணங்களிலும் அவைகளைச் சுற்றிலும் உள்ள கொசுக்களையெல்லாம் அடியோடு அழிக்கவேண்டும்; ஜனங்கள் பரஸ்பரம் ஒத்துழைத்தால் இந்தக் காரியம் நிறைவேறும்.

வயதுவந்த அநோபிலன் கொசுக்கள் சுவரின்மேல் தங்கும்போது தம் சரீரங்களை மூலை வாட்டாக வைத்துக் கொண்டிருக்கும்; அதாவது தலையும், துதிக்கையும் (கொசுக்கள் கடிக்கும் வாயின் பாகமும்) சரீரமும் சமரேகையாயிருந்து, கொசுவானது சுவரில் சாய்வாக ஒட்டிக்கொண்டிருக்கும். ஒரு சிறு முள்ளைப்போல் காணப்படும்; இந்த அடையாளத்தைக்கொண்டு இந்த ஜாதிக் கொசுக்களைத் தெரிந்து கொள்ளலாம். குலிஸைன் கொசுக்கள் சுவரின்மேல் தங்குகையில் அவைகளின் சரீரம் சுவர் மட்டத்துக்குச் சரியாயிருப்பதுடன் கூன்முதுகுள்ளவைபோல் காணப்படும். அநோபிலன் கொசுக்கள் இளங்கபில நிறமுள்ளவைகளாகவே கருங்கபில நிறமுள்ளவைகளாகவோ இருக்கும்; குலிஸைன் கொசுக்கள் சாம்பல் நிறமாகவோ கபில நிறமாகவோ கரு நிறமாகவோ இருப்பவைகளாய் வெண்ணிறப் பட்டைகள் அல்லது கீற்றுகள் உடையவைகளாயிருக்கும். அநோபிலன் கொசுக்களின் இறக்கைகள் சாதாவாயிருக்கும்.

எல்லாக் கொசுக்களும் ஜலத்தில் உற்பத்தியாகின்றன. ஜலத்திலேயே அவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. புழு தசையிலுள்ள (larvae) அல்லது நெளிந்து புரண்டோடும் தசையிலுள்ள (wrigglers) கொசுக்கள் 24 மணி நேரமுதல் 46 மணி நேரத்துக்குள்ளாக முட்டைகளிலிருந்து ஜலத்தில் வெளிப்படுகின்றன. அப்போது அவைகள் உணவு கிடைப்பதற்காக நீர்மட்டத்துக் கீழ் இருக்கவேண்டும். சுவாஸம் விடுவதற்காக அவைகள் இடையிடையே நீர்மட்டத்துக்குமேல் கர் வேண்டியிருக்கிறது; இல்லாவிட்டால் அவைகள் முழுகிப்போய்விடும். அவைகள் தேகத்தின் மேல் நுனியிலுள்ள ஒரு குழாய் மூலமாய் சுவாஸம் விடுகின்றன. நெளிந்து புரண்டோடும் தசையிலுள்ள கொசுக்கள் நனைந்த புல்லிலாவது ஈரமான தரையிலாவது வளரமுடியாது. அவை குறைந்தது அரை அங்குலம் ஆழமுள்ள தண்ணீரில் ஜீவிக்கின்றன; அதனால் அவைகள் பூர்த்தியாய் வளர்ந்து தலைகீழாய் மிதக்கும்போது, நீரின் அடிப்பாகத்தைத் தொடாமலிருக்கின்றன.

புழு தசையிலிருக்கும் அநோபிலன் ஜாதியைச் சேர்ந்த கொசுக்களை, அவைகள் நீர்மட்டத்துக்கு அடியிலேயே தடையாய்ப் படுத்திருப்பதையும் துள்ளித்துள்ளி பின்பக்கமாய் அசைவதையுங்கொண்டு சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். குலிஸைன் ஜாதியைச்சேர்ந்த கொசுக்கள் நீரில் தலைகீழாய்த் தொங்குகின்றன; அவைகளுக்கு நீண்ட சுவாஸக் குழாய் இருக்கிறது; அவை நெளிந்து புரண்டு முன்னுக்கு அசைந்து செல்லும்.

மேற்கண்ட புழுதசையிலாவது அல்லது புரண்டோடும் தசையிலாவது அவைகளின் பூர்ணமான பரிமாணத்துக்குச் சரியாய் வளர்வதற்கு ஆறு முதல் பத்து நாள் வரையில் செல்லும்; சில சமயத்தில் அதைவிடக் குறைந்த காலம் செல்லும் அவைகளின் பூர்ணமான பரிமாணத்துக்குச் சரியாய் அவை வளர்ந்துவிட்டால் அவை திடீரென்று தங்கள் தோல்களிலிருந்து வெளிப்பட்டுத் தண்ணீரில் அங்குமிங்கும் டள்ளிக்கொண்டு முற்றும் புதிய பூச்சிகளாய்க் காணப்படுகின்றன. இந்தப் பூச்சிகளுக்கு ப்யூபே (Pupae) அல்லது நிம்புகள் (Nymphs) என்று பெயர். இந்த தசையானது இரண்டு நாள் முதல் நாலுநாள் வரையில் இருக்கிறது. பிறகு அவைகள் தண்ணீரில் மேற்பாகத்தில் மிதந்து கொண்டிருக்க, அவற்றிலிருந்து கொசுவானது இறக்கைகளுடன் கூடிய வயதுவந்த பூச்சியாக வெளிப்படுகின்றது; இந்தக் கொசு முழு வளர்ச்சியடையதாய் ஒருவேளை உணவு கிடைத்தவுடனே தன் இனத்து ஜந்துக்களை உற்பத்திசெய்வதற்கு ஸித்தமாயிருக்கும். மூன்று நான்கு தினத்தில் அது நீரில் தன் முதல் வரிசை முட்டைகளையிட்டு இன்னும் அதிகமான முட்டையிடுவதற்காக அதிக இரத்தம் உறிஞ்சும் பொருட்டு இராக்காலத்தில் புறப்பட்டுப் போகும்.

வீடுகளில் எவ்விதமாகவாவது சேர்ந்துவைக்கப்பட்டிருக்கிற தண்ணீரிலும், குட்டைகளிலும், தொட்டிகளிலும், சாக்கடைகளிலும், குளங்களிலும், கிணறுகளிலும, வாய்க்கால்க

ளிலும், சகலவிதமான தண்ணீர்க்கால்வாய்களிலும், கொசுக்கள் உற்பத்தியாகக்கூடும். குறைந்தபக்ஷம் அரை அங்குலம் ஆழம் தண்ணீர்த் தேக்கமிருந்தாலொழிய அவைகள் தாறுகன்க்ரோடன்கள், புஷ்பத்தொட்டிகள் முதலியவைகளில் உற்பத்தியாகமுடியாது.

தண்ணீர்ப்பாத்திரங்களை மூடிவைப்பதனால் வீடுகளிலாவது வீடுகளின் சமீபத்திலாவதுள்ள தண்ணீரில் கொசுக்களைச் சேரவொட்டாமல் தடுப்பதும், வீடுகளின் சமீபத்தில் தண்ணீர் சேர வொட்டாமல் தடுப்பதும் மிகவும் முக்கியமானவை யாகும்: தண்ணீர் தங்கக்கூடிய உடைந்துபோன பழஞ்சட்டிகள், கெரோஸின் எண்ணெய் டப்பிகள், உடைந்துபோன புட்டிகள் முதலியவைபோன்ற அனாவசியமான எந்த சாமான்களையும் வீடுகளிலிருந்து ஒழித்துவிடவேண்டும். வீடுகளின் சமீபத்தில் தண்ணீர் தேங்கியிருக்கும் குட்டைகள் எந்தப் பள்ளங்களில் ஏற்படுகின்றனவோ அவைகளை தூர்த்து ஷை குட்டைகளை எல்லாம் எடுத்துவிடவேண்டும் ; குட்டைகளைத்தூர்த்துவிடமுடியாத இடங்களிலே, தண்ணீரின் மேல்பாகத்தில் சிறிது (மேல்பாகத்தின் ஒரு சதுரகஜத்துக்கு தேகத் தண்ணீர்க் கிண்ணியில் அரை அளவுள்ள) கெரோஸின் எண்ணெயை வாரத்துக்கு இருமுறை ஊற்றவேண்டும். இதனால் புழு தசையிலுள்ள கொசுக்களெல்லாம் செத்துப்போம். வீடுகளிலுள்ள கொசுக்களில் சில ஏற்கனவே விஷஜுரத்தின் தொத்துவியாதி சம்பந்தத்தைப் பெற்றிருக்கக்கூடு மாகையால், அக்கொசுக்களெல்லா வற்றையும் நூயன்று கொல்வதே விவேகமான காரியமாகும்.

தெரிந்திருக்கிறவரையில் விஷஜுரம் பரவுவதற்குக் கொசுவே சாதனமாயிருக்கிறது. விஷஜுரம் விசேஷமாயிருக்கிற இடங்களிலிருந்து வரும் தண்ணீரைக் குடிப்பதனால் விஷஜுரம் உண்டாகாதென்பது அடிக்கடி நடத்தப்பட்ட பரீக்ஷைகளால் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் கொசுக்களில்லாதிருக்கும்பக்ஷத்தில் விஷஜுரமிராது ; ஒரு நபர் தன்னை எப்போதும் கொசு கடிக்காமல் பாதுகாத்துக்கொள்ளக்கூடுமானால், அவனுக்கு விஷஜுரம் ஒருகாலும் வராது இக்காரணத்துக்காகவே விஷஜுரப் பிரதேசங்களிலே பிரயாணஞ்செய்யும் உத்தியோகஸ்தர்கள் கொசுவலைகளை உபயோகித்துத் தங்களுக்குக் கொசுக்கடி உண்டாகாமலிருக்கப் பிரயத்தனப்படுகிறார்கள் ; ஆனால் அவர்கள் எப்போதுமே கொசுவலைக்குள் இருக்கமுடியாதாகையால் சிற்சில சமயங்களில் அவர்களைக் கொசு கடிக்கவே கடித்து சிற்சில சமயங்களில் அவர்களுக்கு விஷஜுரம் காணவே காணுகிறது.

இதை மாற்றிச் சொல்லும்பட்சத்தில், மனிதர்களே இல்லாமலிருந்தால், கொசுக்களுக்கு விஷஜுரத்தின் தொத்துவியாதி சம்பந்தமே உண்டாகாது ; ஆகவே, ஜனசஞ்சாரமற்ற நெடுந்தூரத்துக்காட்டுப் பிரதேசங்களில் அனோபிலென் ஜாதிக்கொசுக்கள் நிரம்பியிருந்தபோதிலும், அவைகளில் ஒன்றுக்காவது தொத்துவியாதி சம்பந்தம் உண்டாகமுடியாதாகையால், எப்போதோ ஒரு கால் அங்கேபோகு மொருவனை அவை கடித்தாலும் அவனுக்கு விஷஜுரம் உண்டாகாது. விஷஜுரம் வாராமல் தப்பித்துக்கொள்வதற்கான வழிகளுள் ஒன்றைத் தெரிந்துகொள்ள இதன் மூலமாய் நமக்கு நேராக ஒரு உபாயம் கிடைக்கிறது. விஷஜுரத்துக்குப் பேர்போன பிரதேசத்தில் பிரயாணஞ்செய்கையில், சாத்தியப்பட்டால் கிராமத்திலாவது மனிதர் குடியிருக்குமிடத்திலாவது அவைகளின் சமீபத்திலாவது இராக்காலத்தில் முகாம்போடாமலாகிலும் தங்காமலாகிலும் இருக்கவேண்டும் ; அவ்விடத்துக்கப்பால் அரை மைல் தூரத்தில் இருப்பது க்ஷேமமாகும். முகாமில் ஒருவன் கூடவரும் பரிவாரத்தில் ஒருவனுடைய ரத்தத்தில் விஷஜுரக்கிருமிகள் ஏற்கெனவே நிறைந்திருக்கக்கூடும். ஆனால் ஒரே இடத்தில் ஒரு வாரத்துக்காவது அதற்கதிகமான காலத்துக்காவது தங்காமலிருக்கும்பட்சத்தில் அப்படிப்பட்ட சேவகனால் கூட்டுக்கெடுதி உண்டாகாது ; ஏனென்றால், அவனிடத்திலிருந்து தொத்துவியாதி சம்பந்தத்தைப் பெறுகிற கொசுக்கள் அவனைக் கடித்தபிறகு குறைந்தது பழுநாளாகிறவரையில் இன்னொருவனுக்கு அதைத் தொத்தவைக்க முடியாது ; ஆகவே முகாம் அவ்வூரைவிட்டுக் கிளம்பும்போது, அவை பின் தங்கிப்போய் விடுகிறபடியால் அவை ஒருவருக்கும் தொத்துவியாதி சம்பந்தத்தைப் பரவச்செய்கிறதில்லை. மனிதர் வசிக்கும் இடங்களுக்குச் சுற்றுப்புறங்களிலுள்ள தொத்து வியாதி சம்பந்தமுடைய பழைய கொசுக்களே அபாயகரமானவை.

இப்போது தெரிந்திருக்கும் வரையில் விஷஜுரக் கிருமிகளை அழிக்கக்கூடிய மருந்து ஒன்றே. அது க்வினைன் என்று சொல்லப்படும் மருந்து. பிரதிதினமும் ஒரு தடவை க்வினைனை உட்கொள்ளும் பட்சத்தில், கொசுக்களால் சரீரத்துக்குள் செலுத்தப்படும் இளங்கிருமிகள் அப்படி செலுத்தப்படும்போதே நசித்துப்போகிறபடியால் விஷஜுரம் விருத்தியாவது முற்றிலும் தடைப்பட்டுப்போம். விஷஜுரம் வாஸ்தவமாய்க் காணும்போது, க்வினைனை அதிக அளவாக உட்கொண்டு வந்தால் அது குணமாகும் ; ஆனால் அப்போது இரத்தத்திலிருக்கும் கிருமிகளை யெல்லாம் அடியோடு அழித்துவிடுவதற்கு மூன்றுமாத காலம் தினந்தோறும் க்வினைன் ஒரு தடவை உட்கொள்ளவேண்டியதவசியமாகும். பெரியவர்கள் (எப்ஸம் ஸால்ட் என்னும்) மக்னீஸியம் ஸல்பேட் 1 ட்ராமுடன் க்வினைன் ஸல்பேட் சுமார் 10 க்ரெயின் சேர்த்து சாப்பிடவேண்டும்.

விஷஜுர பிரதேசத்திலுள்ள கிட்டத்தட்ட எல்லாக்குழந்தைகளின் இரத்தத்திலும் விஷஜுரக்கிருமிகள் இருக்கின்றன. இந்தக் கிருமிகளின் காரணமாக ஷை குழந்தைகளில் பலருக்கு ஜுரக்கட்டி உண்டாயிருக்கும். விஷஜுரம் கண்டிருக்கிற எல்லாக் குழந்தைகளுக்கும் ஜுரக்கட்டி உண்டாயிருக்கும் சகலவர்களுக்கும் மூன்றுமாதகாலமாக தினந்தோறும் க்வினைன் கொடுத்துவரவேண்டும். அப்படி செய்யும் பட்சத்தில் அவர்களுக்கு விஷஜுரம் பூர்த்தியாய் குணமாய்விடும் ; ஆனால்) அவர்களை மறுபடியும் கொசுகடிக்காமலும், மறுபடியும் தொத்துவியாதி சம்பந்தம் அவர்களுக்கு உண்டாகாமலும் அவர்களைக் காப்பதற்காக அவர்கள் வசிக்கும் இடத்தைச் சுற்றிலும் உள்ள எல்லாக்கொசுக்களையும் அழித்துவிடுவதற்காக ஏற்பாடு செய்யவேண்டும்.

அடியிற்கண்ட விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும் :—

(1) விஷஜுரமானது தொத்துவியாதி சம்பந்தமுள்ள ஒருவனிடத்திலிருந்து தேகாரோக்கியத்துடனிருக்கு மொருவனுக்கு கொசுவினால் பரவுகிறதே யொழிய, தெரிந்தவரையிலும் வேறெந்த மூலமாகவும் பரவுகிறதில்லை.

(2) ஆகையால் கொசுக்களில்லாத பட்சத்திலும் அல்லது உங்களுக்கு கொசுக்கடி உண்டாகாமல் பாதுகாத்துக்கொள்ளக்கூடிய பட்சத்திலும், உங்களுக்கு விஷஜுரம் ஒருபோதும் வாராது.

(3) தண்ணீரிலேயே உற்பத்தியாகிற படியால், தண்ணீர் இல்லாத இடத்தில், கொசுக்களும் இராது, விஷஜுரமும் இராது.

(4) ஒரு ஜில்லாவிலுள்ள கொசுக்களெல்லாவற்றையும் அழிப்பதவசியமில்லை ; மனிதர் வசிக்கும் இடத்திலும் அதைச் சுற்றிலுள்ள கொசுக்களே அபாயகரமானவை. வசிக்குமிடங்களைச் சுற்றிலும் கால்மைல் தூரம்வரையிலுள்ள பிரதேசத்திலும் கொசுக்கள் உற்பத்தியாவதற்கேற்ற இடங்கள் இல்லாதிருக்கும்பட்சத்தில், கொசுக்கள் மிகவும் கொஞ்சமாயிருக்கும் அல்லது இருக்கவேயிராது ; விஷஜுரமும் இராது.

The Indian Law Gazette.

இந்திய சட்ட கெஜட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

சென்னப்பட்டணம் 1911ளு செப்டம்பர்மீ

வால்யம் V.] பாகம் 12.]

NOTICE:—Contributions other than original are neither invited nor required. All literary contributions and books for Review should be addressed to Mr. N. RATHAKRISHNA NAIDU, B. A., A. L. A. A., (LONDON) INDIAN LAW GAZETTE. 49, Acharappan Street, Madras.

A WARNING TO LAND-OWNERS.

பூஸ்திதியுள்ளவர்கள் எல்லோரும் முக்கியமாய் கவனிக்கவேண்டிய ஓர் எச்சரிக்கை.

மதராஸ் ஹைகோர்ட்டு புல்பெஞ்சார் சொற்பத்தினங்களுக்கு முன் ஸ்தாவர சொத்துக்களைக் குத்தகைக்கு விடுவதைப்பற்றிப் பின்வருமாறு சில முக்கியமான தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள். கவனியுங்கள். குடியானவர்களே அதாவது அசையாப் பொருள்களை அல்லது நிலம், வீடு முதலியவைகளைக் குத்தகை அல்லது வாடகைக்கு விடும்பொழுது நிலத்தை அல்லது வீட்டை குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டவன் சட்டப்படி எழுதிக்கொடுக்க வேண்டிய குத்தகை அல்லது வாடகைப்பத்திர மென்று சொல்லப்படும் தஸ்தாவேஜியில் குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டவன் மாத்திரம் அப்பத்திரத்தை எழுதி கையெழுத்து போட்டுக்கொடுத்தால் போதுமென்றும் குத்தகைக்குவிட்டவன் அதில் கையெழுத்துசெய்யவேண்டிய அவசியமில்லை யென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். அதே கேஸில் நிலம் குத்தகை விஷயமாய் இன்னும் சில முக்கியமான விஷயங்களையும் தீர்மானித்திருக்கிறார்கள். அதாவது ஓர் குத்தகை அல்லது வாடகைப்பத்திரம் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருந்தால், அந்த பூஸ்திதிக் குறியவனாகிய குத்தகைக்கு விட்டவன் அந்த தஸ்தாவேஜியில் ஒப்புக்கொண்டிருக்கும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டவனே யல்லாமல் மற்றப்படி அதில் செப்பியிருக்கும் கண்டிஷன்களுக்கு அவன் உட்பட்டவனல்லவென்றும் அவன் சொல்வதற்கு நியாயம் கிடையாதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள் மதராஸ் ஹைகோர்ட்டு சீப் ஜஸ்டிஸ் (பிரதம ஜட்ஜி) மேற்படி தீர்மானங்களின் முக்கியக்கருத்து யாதென்று அடியில் வருமாறு விவரித்திருக்கிறார்,

ஓர் நிலத்தை அல்லது வீட்டைக் குத்தகைக்கு விட்டவன் குத்தகைப்பத்திரமென்று சொல்லப்படும் முச்சிலிக்கா அல்லது வாடகைச்சீட்டில் கையெழுத்து செய்திராவிட்டாலும் அதில் கண்டிருக்கும் ஷரத்துகளின்படி அந்தச்சீட்டை ஆதாரமாய்க்கொண்டு அவன்மீதிலும் அமுல் செலுத்தி லர்ப்பிரகாரம் கோர்ட்டில் நடவடிக்கைகள் நடத்த நியாயமுண்டு. இவ்விதமான ஹைகோர்ட்டார் தீர்மானத்தைப் பார்க்குமளவில் பூஸ்திதிக்குறியவர்களாகிய நிலச்சொந்தக்காரர்களுக்கு மேற்கண்ட தீர்மானம் ஓர் பயங்கரத்தையும் மனக் குழப்பத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது. இப்படிப்பட்ட தீர்மானம் குத்தகைச்சீட்டில் கையெழுத்து செய்திராத நிலச்சொந்தக்காரர்களுக்கு ஓர் விபத்தாக அல்லது ஓர் விதமான கெடுதலையை யுண்டு பண்ணுமென்று எண்ணப்படுகிறது.

இவ்விதமான புல்பெஞ்சாருடைய தீர்மானத்தின் முக்கியக்கருத்து யாதென்று அறியவேண்டியதற்கு அடியில் செப்பியிருக்கும் இரண்டு முக்கியமான பாயின்டுகளை (ஆதாரங்களை) மனதில் கவனிக்க வேண்டியது.

(1) இச்சென்னை ராஜதானியில் சாதாரணமாய்
பெரும்பாலும் நிலங்களை வருஷத்திற்கு வருஷம் குத்
தகைக்கு விடும்போது நிலத்திற் குறியவன் அவ்வரு
ஷத்தின் குத்தகைத் தொகையை முன்னடியாகவே
அட்வான்சாய்ப் பெற்றுக்கொண்டு அதற்கு சாக்ஷி
யமாக யாதொரு தஸ்தாவேஜு- அல்லது சீட்டில்
லாமலேயே மனத்திருப்தி யடைந்து குத்தகைக்கு
விட்டுவிடுகிறார்கள். இல்லாவிடில் பிரதமத்தில் ஓர்
சாதா வெற்றுக் காகிதத்திலெழுதி அந்த சீட்டை
அவர்களிடம் வைத்துக்கொண்டிருந்து பிறகு குத்த
கைக்கு எடுத்துக்கொண்டவன் வருஷக் குத்தகை
மொத்தத்தை அவனிடம் அட்வான்சாய் செலுத்தி
விடும்பொழுது மேற்கண்ட வெற்றுகாகிதத்தை குத்
தகைதாரனுக்கு வாப்ஸ் செய்துவிடுகிறார்கள். இம்
மாதிரியாக குத்தகைச் சீட்டுகள் ரிஜிஸ்தர் செய்வ
தே கிடையாது. (2) எவன்பேருக்குக் குத்தகைச்
சீட்டுகள் எழுதப்படுகின்றனவோ அவன் ஆஜரில்லா
மலேயே எழுதி ரிஜிஸ்தர் செய்யப்பட்டு வருகின்ற
ன. ஆகையால் குத்தகைச் சீட்டென்று சொல்லப்
படும் வாடகைச் சீட்டுகள் குத்தகைக்கு விட்டவன்
எதிரிலில்லாமல் அவனுடைய அனுமதியின்றி ரிஜிஸ்
தர்செய்யப்பட்டு வருகின்றன. இவ்விதமாய் நடந்
துவருவதை நோக்கும் பக்ஷத்தில் நிலத்தை குத்த
கைக்கு எடுத்துக்கொள்ளுகிறவர்கள் குத்தகைச்சீட்
டென்று சொல்லப்படும் 'கபூலியத்' முச்சலிக்கா
முதலான சீட்டுகளை சொந்தக்காரன் அனுமதியின்றி
ரிஜிஸ்தர்செய்து அநேக வருஷ காலங்களாக அனு
பவித்துவருவதற்கு இது ஓர் அனுகூலமான விதமா
யிருக்கிறது.

அதற்குதாரணமாய், ஒருவன் ஓர் நிலத்தை வரு
ஷத்திற்கு வருஷம் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு
அதற்காகச்செலுத்த வேண்டிய அட்வான்ஸ் மொத்
தத்தைக்கொடுத்துவிட்டு முதல் வருஷத்தில் மாத்தி
ரம் ஓர் குத்தகைப்பத்திரத்தில் குத்தகைவிட்டவனு
டைய கையெழுத்தும் அனுமதியில்லாமல் குத்தகை
எடுத்துக்கொண்டவன் மாத்திரம் அதில் கையெழு
த்துசெய்து கொடுத்துவிட்டு பிறகு மூன்றுவது அல்
லது நான்காவது வருஷத்தில் வேறே ஓர் புது குத்த
கைப்பத்திரம் எழுதிக்கொடுக்க மாட்டேனென்று
நிராகரிப்பது மல்லாமல் நிலத்தைக்காலிசெய்து ஒப்
புவிக்கமாட்டேனென்றும் சொல்லிவிடுகிறான். நிலத்
தை குத்தகைக்கு எடுத்துக்கொண்டவன் முதல் ரிஜி
ஸ்தர்செய்து கொடுக்கப்பட்டிருக்கும் தஸ்தாவேஜி
யின் கீழ் குத்தகைதாரனுகையால் அவன் பேரில்
மூன்றுவது அல்லது நான்காவது வருஷத்தில் இஜெ
க்ட்மென்டு செய்து அவனை அப்புறப்படுத்துவதற்கு
சட்டம் கிடையாது. ஏனெனில் குத்தகை தாரன்
முதல் ரிஜிஸ்தர் தஸ்தாவேஜியின் கீழ் பின் வருஷங்
களிலும் நிலத்தைச் சாகுபடி செய்துக்கொண்டு யா
தொரு கலஹ மின்றி அனுபவித்து வருவதால் பின்
னிட்டு மூன்று அல்லது நான்காவது வருஷத்திலும்
அந்த முதல் ரிஜிஸ்தர் தஸ்தாவேஜியின் கீழே குத்
தகை விட்டவனுடைய அனுமதியின் பேரில் அவன்
அனுபவித்துவருகிறானென்பதற்கு அது ஓர் ருஜு
வாயிருக்கிறது. இது விஷயமாய் வாசா சாக்ஷியம்
ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இத்தியாதி விஷ
யங்களையும் நோக்குமளவில் குத்தகைக்கு விட்டவர்
களுடைய சம்மதத்துக்கு விரோதமாய் குத்தகைச்
சீட்டுகளின்பேரில் சட்டப்படி நடவடிக்கைகள் நடத்
தப்படுமென்று விசதமாய் ஏற்படுகிறது. இவ்வித
மான குறைவுபாட்டை சீர்திருத்த இப்பொழுது இ
துவிஷயமாயுள்ள சட்டத்தைக் திருத்தி தான் சீர்
படுத்தவேண்டுமென்பதாய் சீப் ஜஸ்டிஸ் சொல்லியி
ருக்கிறார்.

முக்கியமாய் கவனிக்கவேண்டிய அம்சங்களில் கு
த்தகைச் சீட்டென்று சொல்லப்படும் 'கபூலியத்'
அல்லது முச்சிலிக்கா என்னும் வாடகைச்சீட்டுகளை
சட்டப்படி ரிஜிஸ்தர் செய்யவேண்டியது அத்தியா
வசியமென்று ஏற்படுகிறது. இதன் விஷயமாயுள்ள
விசேஷத்தை தீர்க்க யோசிக்குமளவில் ரிஜிஸ்ட்ரே
ஷன் முதலானவைகளுக்கு நேரிடும் சிலவு அற்பமா
னதாகையால் இதை ஓர் பொருட்டாகக் கருதாமல்
கட்டாயம் எல்லா குத்தகைப் பத்திரங்களையும் ரிஜி
ஸ்தர் செய்யவேண்டியது அவசியம்.

நம்முடைய நேயர்களாகிய சந்தாதாரர்கள் இதெ
ன்னமோ என்று பராமரிக்கையா யிராமல் முக்கிய
மாய் இதைக் கவனித்து நடப்பார்களென்பது தான்
எம்முடைய கருத்து.

யூனியன் பஞ்சாயத்துக்களில் எலெக்ஷன்.

சென்னைச் சட்டசபையில் சென்ற மே மாதம்
15ந்தேதி ஆனரபில் மிஸ்டர் P. கேசவப்பிள்ளை யூ
னியன் பஞ்சாயத்துக்களில் சில மெம்பர்களையாவது
ஜனங்கள் எலெக்ஷன் செய்ய வேண்டுமென்று கே
ட்க, அதற்குக் கவர்ன்மெண்ட் சில குறித்த யூனிய
ன் பஞ்சாயத்துக்களில் அம்மாதிரி செய்துபார்க்கத்
தங்களுக்குச் சம்மதந்தானென்று பதில் சொன்னார்
கள். இப்போது அந்த விஷசத்தைப்பற்றி ஆலோ
சனைசெய்து பின்வருமாறு உத்தரவுசெய்திருக்கிறார்
கள். ஒரு ரெவினியூ டிவிஷனது முக்கிய ஸ்தலத்
திற்கு அருகிலுள்ள ஒரு யூனியன் பஞ்சாயத்தில்
மொத்த பெம்பர்களில் நாலி லொரு பாகத்துக்கு
அதிகப்படாத மெம்பர்களை ஜனங்கள் எலெக்ஷன்
செய்யலாமென்று உத்தரவு செய்திருக்கிறார்கள். ஆ
னால் செங்கற்பட்டு, தஞ்சாவூர், கோயமுத்தூர், சே
லம் இவைகள் முற்பட்ட ஜில்லாக்ளாகனபடியால்,
இவைகளில் டிஸ்டிரிக்ட் போர்ட் பிரசிடெண்ட் அபி
ப்பிராயப்பட்டால் இரண்டு யூனியன்களில இப்படி
ச்செய்து பார்க்கலாம்; நீலகிரி ஜில்லாவிலும் தென்
கன்னட ஜில்லாவிலும் லோக்கல்பண்டு யூனியன் இ

ல்லை; வடக்கே கொரப்பட்டு ஜில்லாவில் ஜயப்பூர்
யூனியன்கள் தவிர வேறு யூனியனில்லை; ஆகையா
ல் இந்த ஜில்லாக்களில்இந்த விஷயம் கவனிக்கப்பட
வேண்டியதில்லை. சில ஜில்லாக்களில் மெம்பர்களில்
நாலிலொரு பாகத்தை எலெக்ஷன் செய்வது அதிக
மாயிருக்குமானல் அதைக்குறைக்கவும்சில, ஜில்லாக்
களில் நாலினல் வகுக்க முடியாத மொத்த மெம்பர்
கள் யூனியனில் இருக்கும்போது நாலிலொரு பாகத்
தோடு ஒருமெம்பரைச்சேர்த்து எலெக்ஷன் செயய
வும் டிஸ்டிரிக்ட் போர்ட் பிரசிடெண்ட் சிபார்சு செ
ய்தால் அதைக் கவர்ன்மெண்ட் கவனிப்பார்கள். இ
ப்படி எலெக்ஷன் செய்வதற்காக ரூல்கள் தயார்செ
ய்து அவைகளைப்பற்றி ஜனங்கள் அபிப்பிராயப் பட
வும் டிஸ்டிரிக்ட் போர்ட் பிரசிடெண்ட்களின் பார்
வைக்கும் பிரசுரம் செய்யப்படும். இந்த ரூல்களில்
எலெக்ஷன் செய்வோருக்கும் எலெக்ஷன் செய்யப்
படும் அபேட்சகர்களுக்கும் குறிக்கப்பட் டிருக்கும்
சொத்து யோக்கியதையைப்பற்றிப் பிரசிடெண்ட்
கள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். இந்த யோக்
கியதையினல் எலெக்ஷன் செய்வோராவது அபேட்
சகர்களாவது எண்ணிக்கையில் ஜாஸ்தியாகும் பட்
சத்தில் அந்த யோக்கியதையை உயர்த்தலாமோவெ
ன்று அவர்களுடைய அபிப்பிராயம் தெரிவிக்கப்பட
வேண்டும். அடுத்த நவம்பர் மாசம் 30-ந் தேதிக்குள்
இந்த உத்தரவுக்குப் பிரசிடெண்ட்கள் பதில் அனு
ப்ப வேண்டும்.

ஆனரபில் மிஸ்டர் கேசவப்பிள்ளை கேட்டதற்குக்
கவர்ன்மெண்டார் இசைந்து அனுகூலமான உத்தரவு
செய்தது சந்தோஷகரமானது. ஆயினும் இந்த உ
த்தரவு சிறிது உதாரகுணத்தோடு செய்யப்படாமல்
சுருக்கமாய்ச் செய்யபபட்டிருப்பது கவனிக்கத் தக்
கது. முதலாவது டிஸ்டிரிக்ட் போர்ட் பிரசிடெண்ட்
களின் அபிப்பிராயத்தைக் கவர்ன்மெண்ட் நம்பியிரு
ப்பது அவ்வளவு சரியாகத் தோன்றவில்லை. டிஸ்டிரி
க்ட் போர்ட் பிரசிடெண்டைக் கேட்காமல் அந்த
போர்டின் மெம்பர்களின் அபிப்பிராயத்தை நம்பியி
ருந்தால் ஜனங்களுடைய விருப்பம் அதிகமாய்நிறை
வேறும். டிஸ்டிரிக் போர்ட் பிரசிடெண்டின் அபிப்
பிராயம். அநேக ஜில்லாக்களில் ஜனங்கள் எலெக்
ஷன் செய்வதற்குச் சாதகமா யிராது. முனிசிபா
லிடிகள் டிஸ்டிரிக்ட் போர்ட்கள் முதலான ஸ்தல
ஸ்தாபனங்களால் நன்மை யுண்டாகிறதென்கிற அ
பிப்பிராயம் இந்தப் பிரசிடெண்டுகளுக்கு இல்லை.
இரண்டாவது யூனியன் பஞ்சாயத்துகளின் மொத்த
மெம்பர்களில் நாலிலொரு பாகம் எலெக்ஷன் செய்ய
வேண்டுமென்று உத்தரவிட் டிருப்பது கவர்ன்மெ
ண்டின் ஔதாரியத்தைக்காட்ட வில்லை. மொத்த
மெம்பர்களில் பாதிப்பேரையாவது எலெக்ஷன் செ
ய்யலாமென் றிருந்தால் எலெக்ஷன் செய்வதாலுண்
மையான நன்மை யுண்டாகும். நாலி லொருபாகத்
தை எலெக்ஷன் செய்வதால் எலெக்ஷன் செய்யப்
பட்ட மெம்பர்கள் யூனியனில் பிரயோசன மில்லாம
லிருப்பார்கள்.

முற்பட்ட ஜில்லாக்களிலும் இரண்டு யூனியன்க
ளில் எலெக்ஷன் செய்து பார்ப்பது டிஸ்டிரிக்ட்போ
ர்ட் பிரசிடென்டின் அபிப்பிராயத்துக்கு விடப்பட்
டிருக்கின்றது. இதுவும் டிஸ்டிரிக்ட் போர்ட் மெம்
பர்களின் அபிப்பிராயதுக்கு விடப்பட்டிருக்க வேண்
டும், இந்த ராஜதானியில் 24 ஜில்லாக்கள் இருக்க,
நாலு ஜில்லாக்கள் தான் முற்பட்ட ஜில்லாக்க ளெ
ன்று கவர்ன்மெண்ட் பொறுக்கி யெடுத்திருப்பது ச
ரியல்ல, தெலுங்கு ஜில்லாக்களில் முற்பட்ட ஜில்லா
க்கள் எவையுமில்லையா? மேலும், சொத்து யோக்கி
யதை குறைவென்றும், அதை அதிகப்படுத்த வே
ண்டுமென்றும் கூறி, அதிகப்படுத்தி நியமகர்களையும்
அபேட்சகாகளையும் எண்ணிக்கையில் குறைக்கவே
ண்டுமென்று சூசிப்பி த்திருப்பதும் கவர்ன்மெண்ட்
இந்த விஷயத்தில் அநாவசியமான ஜாக்கிரதை பா
ராட்டுகிறார்க ளென்று காட்டுகின்றது. சோதனை
செய்து பார்ப்பதில் அந்தச்சோதனை கூடிய வரையி
ல் நிறைவேறும்படியான நிலைமையில் செய்து பார்த்
தலே தகும்.

MISCELLANEOUS CASES.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

கிரிமினல் ரிவிஷன் கேஸ் இரு-78 of 1911.

ஜட்ஜிகள்:—மி-ர் ஜ. சுந்தரய்யர் } முன்பாக.
,, மி-ர் ஜ. ஏய்லிங்

கச்சிமதார்லப்பை ... மனுதாரன்.

கேசின் விபரம்:—பிரஸ்தாப கேசில் மனுதாரன்
தன்னை நிர்ப்பந்தித்து வதைசெய்து அவனிடத்தி
லிருந்து சொற்பதொகை கைதிகள் பெற்றுக்கொ
ண்டாரென்று பிரயாதுசெய்யப்பட்டது. மேற்சொ
ல்லிய நான்கு கைதிகளில் இருவர் போலிஸ் கான்ஸ்
டேபில் உத்தியோகஸ்தர்கள் ஆகையால் அவர்கள்
சட்டத்திற்கு விரோதமாய் லஞ்சம் பெற்றுக்கொ
ண்டார்களென்று பிறாது கொண்டுவந்தது ஷை கை
திகளை இந்தியன் பினல் கோட் (182, 211) பிரிவு
களின்படி பிராசிகியூட் செய்து அவர்களை சிட்சிக்
கும்படிக்கு செய்துகொள்ளப்பட்ட மனு. தூத்துக்
குடி சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் ஷை பிராதை தா
க்கல் செய்துகொண்டு பிராது கொண்டுவந்தவனுகிய
மனுதாரனை பிரமாணத்தின் பேரில் பிரதம விசார
ணை செய்து கி-பு-கோ 202-வது செக்ஷன்படிக்கு
எதிரிக்கு நோட்டீசு கொடாமலே விசாரணைசெய்து
ருசுவாகிய சாட்சியத்தின் பேரில் எதிரியை கூப்பிட்
டு விசாரிக்காமலேயே பிராதை தள்ளுபடி செய்து
பிராது கொண்டுவந்தவனையே பிராசிகியூட் செய்யு
ம்படிக்கு உத்தரவு செய்தார்.

அந்த உத்தரவின்பேரில் பிரியாதி செஷன் ஜட்ஜிக்கு ரிவிஷன் மனு கொடுத்தான். ஜில்லா ஜட்ஜி அவனுடைய மனுவின்பேரில் பிராதை மறுபடியும் விசாரிக்கும்படி உத்தரவு செய்தார். ஆனால் மாஜிஸ்ட்ரேட் மனுதாரனை பிராஸிக்கியூட் செய்யும்படிக்கு செய்த உத்தரவைப்பற்றி யாதொன்றும் சொல்லவில்லை. சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டும் மனுதாரனை விடுதலைசெய்து கி.-பு. கோ. 476-வது பிரிவின் யாதொரு உத்தரவும் எழுதவில்லை.

சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் செஷன் ஜட்ஜ் உத்தரவைப்பெற்றுக்கொண்டு கேஸை மறு விசாரணை செய்யும்படிக்கு எட்குவார்ட்டர்ஸ் டெப்டி மாஜிஸ்ட்ரேட் அவர்களுக்கு அனுப்பிவிட்டார். பின் செப்பிய மாஜிஸ்டிரேட் ரிவிஷன் மனுவும் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் முன் நடக்கும் விசாரணையும் முடியும் வரையில் பிராது பைலில் வைத்திருக்கும்படி உத்தரவு செய்தார். பின் செப்பிய மாஜிஸ்ட்ரேட் எதிரியை விடுதலை செய்ததின் பேரில் ப்ராஸிக்யூடிங் இன்ஸ்பெக்டர் கேஸை விசாரிக்கும்படி கேட்டுக்கொண்டார். அதன்பேரில் டெப்டி மாஜிஸ்ட்ரேட் கேஸை பைலில் வைத்திருக்கும்படி உத்தரவு செய்திருப்பதால் மேல் கோர்ட்டிலிருந்து உத்தரவு வந்தாலொழிய தான் அந்த பிராதின் பேரில் யாதொரு நடவடிக்கையும் நடத்துவதற்கு தனக்கு அதிகாரம் கிடையாதென்று அபிப்பிராயப்பட்டார்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

ஜட்ஜிகள்:—மி-ர். ஜ. எய்லிங்
,, மி-ர். ஜ. ஸ்பென்ஸர் } முன்பாக.

சின்ன செல்லப்ப கவுண்டன் என்பவன் ஒருவனை கொலைசெய்து விட்டதாக கோயம்புத்தூர் ஜில்லா ஜட்ஜி முன்னிலையில் விசாரணைசெய்து அவன் மீதில் குற்றஸ்தாபனை செய்து அவனை ஆயுசு பரியந்தம் தண்ணீர்மேலேற்றி விடும்படிக்கு சிக்ஷை விதித்தார். அந்த தீர்ப்பின்பேரில் கைதி செல்லப்ப கவுண்டன் என்பவன் ஹைகோர்ட்டில் செய்துகொண்ட அப்பீல் விசாரணைக்குவந்தபோது -ா டி. ரிச்மண்ட் என்பவர் கைதி தரப்பில் ஆஜராகி வாதித்தார்.

கேஸின் விவரம்:— கைதியும் கொலையுண்ட பால கவுண்டன் என்பவனும் ஓர் செட்டிப்பெண்ணை வைத்துக்கொண்டிருந்தார்கள். இதன் விஷயமாய் அவர்கள் இருவருக்கும் மனஸ்தாபங்களிருந்தன. குற்றவாளி கொலை நேரிட்ட சொற்பதினங்களுக்கு முன் கொலையுண்டவனை மாடுபிடித்துக்கொண்டு வருவோமென்று சொல்லி சந்தைக்கழைத்துக்கொண்டுபோய் அவனை கொன்றுவிட்டதாக கேசு.

எதிரியின் பாரிஸ்டர் பின்வருமாறு வாதித்தார்:- எதிரியும் பாலகவுண்டன் என்பவனும் சந்தையில் மாடுபிடித்துக்கொண்டு வரும்பொழுது வழியில் அவர்களை ஓர் சிநேகிதன் கண்டு பக்கத்திலிருக்கும் திருப்பூருக்கு வரும்படி அவர்களை அழைத்துக்கொண்டுபோனதாகவும் அப்பொழுது இராக்காலமானதால் அவர்களை திருடர்கள் மடக்கிக்கொண்டு அடித்ததாகவும் பாலகவுண்டனை வெட்டிக்கொலை செய்ததாகவும் சொல்லிவிட்டு கைதி குற்றவாளி யல்லவென்று வாதித்தார்.

தீர்மானம்:—பிராசிக்யூஷன் தரப்பில் போதுமான சாக்ஷியம் கிடையாதென்று குற்ற ஸ்தாபனையையும் சிக்ஷையையும் ரத்துசெய்துவிட்டு கைதியை விடுதலை செய்யும்படிக்கு உத்தரவு செய்தார்கள்.

மணப்பாரை சப் மாஜிஸ்ட்ரேட் முன்பாக

ஒரு புது விநோதமான லா பாயின்ட்.

திருச்சினாப்பள்ளி ஜில்லா குளித்தலை தாலூக்கா திருக்கம்பிளியூர் கிராம முனிசீபும் மிராசுதாருமாகிய மிஸ்டர் சுப்பாராவ் என்பவர் ஷை கிராமத்திலிருக்கும் காட்டூர் ரங்கனாதம் செட்டியாரும் அவருடைய குமாரனும் இன்னும் அவருடைய இதர குடும்பத்தார்களும் இ. பி. கோ. 379, 323 பிரிவுகளின்படி குற்றம் செய்ததாக சார்ஜ் செய்யப்பட்டார்கள்.

ப்ராசிகூஷன் தரப்பில் குளித்தலை மிஸ்டர் C. S. மகாதேவ ஐயர், பி-ஏ, பி-எல்., வக்கீல்.

டிபன்ஸ் தரப்பில் மிஸ்டர் டி. வி. வைத்யநாத ஐயர் பி-ஏ, பி-எல்., ஆஜரானார்கள்.

கேஸின் விவரம்.—பிரியாதிக்கும், மைனருக்கும் இன்னும் கிராமத்திலுள்ள அநேகருக்கும் பொதுவில் பாத்தியதையுள்ள சமுதாய நிலத்தில் கைதிகள் சுமார் 50 ரூபாய் மதிப்புள்ள பாபுல் முதலான சில மரங்களை வெட்டி எடுத்துக்கொண்டுபோய்விட்டதாக சார்ஜ் செய்யப்பட்டார்கள். இன்னும் பிராசிகூஷன் தரப்பில் வாதித்த தென்னவென்றால் பிரியாதியும் எதிரிகளாகிய ரங்கனாதசெட்டியும் அவருடைய குமாரர்களும் பிரஸ்தாப நிலத்திற்கு ஜாயின்ட் (கூட்டு) பட்டாதார்ாளல்லவென்று ஆகையால் எதிரிகள் பொது ஹக்கு-பாத்தியதை யல்லவர்களென்றும் வாதித்தார்கள். தாவா நிலத்திற்கு அவர்கள் எக்காலத்திலும் கூட்டு சுதந்தரவாளிகளா யிருந்ததில்லை யென்றும். இன்னும் தாவா நிலம் 1898-ம் வருஷம் முதல் சுப்புகுட்டி மானவர் வகையராக்களிடத்தில் ஸ்வாதீனக் குதுவையில் அவர்களுடைய பாத்தியதையில் இருக்கிறதென்று தெரிவித்தார்ாள்.

எதிரில் ஷை மரங்களை வெட்டிக்கொண்டுபோய் விட்டதைப்பற்றி எதிர்த்து வாதிப்பவர்களாகத் [illegible]ற்றப்படவில்லை.

சப் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் கேஸில் பின்வருமாறு ஒரு புது விநோதமான லா பாயின்டிருப்பதாய் எடுத்துக் காண்பித்திருக்கிறார்கள் :—

"ஓர் நிலத்தை பொதுவில் அனுபவித்துவரும் கூட்டு பட்டதார்களின் ஒருவன் அந்த நிலத்தின்மேலுள்ள மரங்களை இதர கூட்டு பட்டாதார்களின் அனுமதியின்றி வெட்டி எடுத்துக்கொண்டுபோய் தன்னுடைய சொந்தப் பிரயோசனம் செய்துக்கொள்ள [illegible] அவனுக்கு ஹக்குண்டாவென்றும் [illegible] இல்லையா என்பது தான். விசாரணை நடந்துகொண்டிருக்கிறது.

PRESIDENCY MAGISTRATE'S COURT, EGMORE.

எழும்பூர் ப்ரெசிடேன்சி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு.

மிஸ்டர் F. D பெட் | முன்பாக.

ALLEGED INDIA SWINDLING.

இந்தியா முழுமையும் மோசம் செய்த கேசு.

—:o:—

[illegible] அப்துல் அஜீஜ், நூர் மகமதுபட், [illegible] என்பவர்கள் மோசம் செய்ததாக நடந்த [illegible]

[illegible] 1905-[illegible] செப்பிய மூவரும் ஒன்று சேர்ந்து A. A. லால் ப்ரதர்ஸ் என்னும்பெயர் வகித்துக்கொண்டு அவர்கள் வியாபாரிகளென்றும், பப்ளிஷர் காரனென்றும், கமிஷன் ஏஜெண்டுகளென்றும் சொல்லி அவர்கள் அனுப்பிவைக்கும் 500 ரூபா மதிப்புள்ள சாமான்களை விற்று முதலாக்குபவர்களுக்கு ரூ. 30 மாத சம்பளம் கொடுப்பதாகவும் அதற்காக அவர்கள் ரூபாய் 300 செக்கூரிடி (ஜாமீன்) கட்டவேண்டுமென்றும் பிறகு மேற் செப்பிய மாத சம்பளம் ரூ. முப்பதை ரூபாய் 500-க்கு அதிகப்படுத்துவதாகவும் பிரசுரம் செய்து அநேகரிடத்திலிருந்து மோசக்கருத்துடன் மேற்கண்ட தொகை ரூபாய் 300 பெற்றுக்கொண்டதாகவும் சார்ஜ் செய்யப்பட்டார்கள். அவர்களில் ஷாட்ரியன் என்பவன் மாத்திரம் அகப்பட்டு அவனைச் சென்ற பிப்ரவரி மாதத்தில் மோசம்செய்த குற்றத்தைச் செய்தவன் தானென்று அவன்பேரில் குற்றஸ்தாபனை செய்து அவனை ஒரு வருஷ கடின காவலுக்கு [illegible]த்தார்கள். மற்ற இருவரும் ஓடிப்போனார்கள், அவர்களில் ஒருவன் பர்மா தேசத்தில் [illegible] தரப்பில் மிஸ்டர் குருசாமி செட்டியார் என்பவர் ஆஜராகி அவனை ஜாமீன்பேரில் விடும்படிக்கு மனுச்செய்து ரூபாய் 500 ரொக்க ஜாமீனும் இரண்டு நபர் ஜாமீன்கள் மேலும் அவனை விடுதலை செய்திருக்கிறார்கள். கேசு விசாரணைக்கு [illegible]வைக்கப்பட்டிருக்கிறது.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

THIRD CRIMINAL SESSIONS.

மூன்றுவது கிரிமினல் ஸெஷன்ஸ்:

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல்.

ஓர் குழந்தையை கொலை செய்த கேசு.

கேஸின் விவரம்:—சென்னை பரச்சேரிக்கடைக்காரமையில் துரைசாமி முதலி என்பவன் ஒருவன் சென்ற ஜூலை மீ 3உ மூன்று வயது பையன் ஒருவனை அடித்து வதைசெய்து கொலையல்லாத மரணத்தை யுண்டுபண்ணினனென்று சார்ஜ் செய்யப்பட்டு ஜூரிகள் 19 பேர் எதிரில் விசாரணை செய்யப்பட்டான்.

கைதி தான் குற்றவாளி யல்லவென்று சொன்னான்: அவன் தரப்பில் வக்கீல் யாரும் ஆஜராகவில்லை.

சர்க்கார் தரப்பில் க்ரௌன் ப்ராசிகூடர் ஆஜரானார்.

மரணமடைந்த குழந்தை சென்னை ஜியார்ஜ் டவுனில் வாசம் செய்யும் ஓர் பொன்னம்மாள் என்பவளுடைய பிள்ளை. அவளை துரைசாமிமுதலி என்பவன் சோரநாயகியாய் வைத்திருந்தான் குற்றவாளி அவளை அடிக்கடி போய் பார்ப்பது வழக்கம். கொலை நேரிட்ட சொற்பதினங்களுக்கு முன் மரணமடைந்த குழந்தை அவனுடைய தாயாரிடத்திற்கு குற்றவாளி வருவதும் போவதுமா யிருப்பதாக அவனுடைய தகப்பன் சின்னதம்பியிடம் முறை யிட்டான். இதை குற்றவாளி தெரிந்துகொண்டு மனவெறுப் படைந்து அந்தக் குழந்தையை அடித்தான். குழந்தையோ அடிபட்ட உடனே அடியின் உபத்திரவத்தினால் இறந்துபோயிற்று.

குற்றவாளியின் டிபன்ஸ் யாதெனில்:—அந்த குழந்தை வீதியிலிருந்ததாகவும் அதன் பேரில் வண்டியேறிப்போகப் போவுதென்று பயந்து அதை வீட்டிற்குள் போகும்படி அவன் சொன்னதாகவும் ஆனால் அக்குழந்தை உள்ளே போகாமல் அங்கேயே நின்றுக்கொண்டிருந்தபடியால் அவன் அதை ஓர் அறை அறைந்து வீட்டண்டை விட்டுவிட்டு பக்கத்து வீட்டு திண்ணையில் மேல் உட்கார்ந்து கொண்டதாகவும், அப்பொழுது அந்த குழந்தையின் வீட்டில் குடியிருக்கும் வீட்டின் திண்ணையின் [illegible] முதல் சாக்ஷி முருகேசன் [illegible] கொண்டிருந்ததாகவும் சொன்னான். அந்த முருகேசன் அத்தருணத்தில் வீதி மார்க்கமாய் போய்க்கொண்டிருந்த [illegible] ஸ்டேபிலுக்கு இதோ யிருக்கின்றான் மனிதன் என்று காண்பிக்க அந்த கான்ஸ்டேபில் அவனை அவன் தான் கொலைசெய்தவனென்று பிடித்துக்கொண்டா

னென்றும். அவன் அந்தக் குழந்தையைக் கொல்வதற்கு யாதொரு காரணமுமில்லை யென்றும் சொன்னான்.

குற்றவாளி தரப்பில் இரண்டு சாக்ஷிகள் விசாரிக்கப்பட்டார்கள்.

பிறகு க்ரௌன் ப்ராசிகூடரும், ஜட்ஜும் ஜூரிகளுக்கு கேசை விவரித்துச்சொல்ல ஜூரிகள் எதிரியை குற்றவாளியைக், கொலை செய்த குற்றத்திற் கல்லாமல் அடித்து வதை செய்தானென்றும் குற்றத்தை செய்தவன் தானென்று ஏகோபித்து அபிப்பிராயம் கூற ஜட்ஜி குற்றவாளியை 5-வருஷம் கடினகாவலில் இருக்கும்படி சிக்ஷை விதித்தார்.

FORGERY OF A VALUABLE SECURITY

ரொக்கவிஷயமாய் எழுதிக்கொடுத்த ஓர் தஸ்தாவேஜியில் தப்பு கையெழுத்து போர்ஜேரி கேசு.

—:o:—

கோவிந்தசாமி முனிசாமி, கோபாலசாமி என்பவர்கள் தப்பு கையெழுத்து செய்து சொத்தை அபகரித்து மோசம் செய்தார்களென்று அக்குற்றத்திற்கு உடந்தையா யிருந்தார்களென்று குற்றம் சாட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்கள். சாக்ஷிகளை விசாரித்தான பிறகு ஜட்ஜும் வக்கீலும் ஜூரிகளுக்குக் கேசை விசாரித்துச் சொல்ல ஜூரிகள் பின்வருமாறு அபிப்பிராயம் கூறினார்கள்.

முதல் குற்றவாளி:—டெக்லரேஷனில் தப்பு கையெழுத்துசெய்து போஸ்ட் ஆபீஸ் ஆக்டின்படிக்கு இந்தியன் பினல் கோடின் கீழ் மோசமென்றும் குற்றத்தை செய்தவன் தானென்றும்,

இரண்டாவது குற்றவாளி:—6 ஜூரார்கள் குற்றவாளியல்லவென்றும்,

மூன்றுவது குற்றவாளி:—உடந்தையாயிருந்த குற்றத்தைச் செய்தவன்தா னென்றும் ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

ஜட்ஜி இரண்டாவது குற்றவாளியைப்பற்றிச்சொல்லியதை ஒப்புக்கொள்ளவில்லை ஆனால் அவனை மறுபடியும் விசாரணை செய்யும்படிக்கு உத்தரவு செய்யாமல் விடுதலை செய்துவிட்டார்.

1,3 குற்றவாளிகள் போஸ்ட் ஆபீஸ் குற்றத்திற்காக ரூபாய் 100 அபராதம் செலுத்தவேண்டிய தென்றும் அவர்கள் மோச குற்றத்தைச் செய்தவர்கள் தானென்று கண்டு அவர்கள் ஒவ்வொருவனும் மூன்று வருஷ கடினகாவலில் இருக்கவேண்டிய தென்று சிக்ஷை விதித்தார்.

CONSTABLE MURDERCASE.

போலீசு உத்தியோகஸ்தனாகிய ஓர் கான்ஸ்டேபிலை கொலை செய்த கேசு.

கேசின் விவரம்:—வேலு கிராமணி என்பவன் ஒருவன் ஓர் போலீசு கான்ஸ்டேபிலை அடித்து வதை செய்து கொலை யல்லாத மானை ஹிம்சையை யுண்டு பண்ணினானென்றும் குற்றத்தைச் சாட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டான்.

பிராசிகூஷன் தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாக்ஷிகள் எல்லோரும் கொலை செய்த மனுஷன் வேலு கிராமணி என்பவன் மரணமடைந்தவனை அடிக்கிறானென்று கூவினதாகவும் அதற்கு வேலு கிராமணி உன்னை அடித்தேன் ஆள் தெரியாமல் அடித்து விட்டேனே, கோவிந்தா என்று கூவினதாக சொன்னார்கள்.

டாக்டர் அடிவலது பக்கத்து காதின் பக்கத்தில் பட்ட அடியினால் அவன் இறந்துவிட்டா னென்று தலைஓட்டை எடுத்து காண்பித்து சாக்ஷி சொன்னார்.

குற்றவாளி தரப்பிலும் சாக்ஷிகள் விசாரணை செய்ததில் அவர்களெல்லோரும் கொலை நேரிட்ட தினம் ராத்திரி 10 மணிக்கு குற்றவாளியைப் பார்த்ததாக சொன்னார்கள்.

கோர்ட்டார் பிராசிகூஷன் தரப்பு சாக்ஷிகள் சொல்லியதை நம்புவதற்கிடமில்லை யென்று சொல்லி கைதியாகிய வேலுகிராமணியை விடுதலை செய்து விட்டார்கள்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

கிரிமினல் அப்பீல்.

ஜட்ஜிகள்:—மி-ர் ஜ. பென்சன் } முன்பாக.
,, மி-ர் ஜ. சுந்தரய்யர் }

நாராயண முதலி ... அப்பீல் வாதி...மனுதாரன்.

vs.

சக்கரவர்த்தி ... ...

கொலை கேசு.

ஜில்லா ஜட்ஜி ஒரு மாரிமுத்து என்பவனுடைய ஒரு சாக்ஷியத்தின்பேரில்குற்றவாளியின்பேரில் குற்றஸ்தாபனை செய்து சிக்ஷை விதித்தார். இந்த சாக்ஷி

கீழ் கோர்ட்டில் அதற்கு முன் இரண்டிடத்தில் அவனுக்குக் குற்றம் நேரிட்டதைப்பற்றி ஒன்றும் தெரியாதென்று சொல்லி யிருக்கிறான். மரணமடைந்தவனுடைய தகப்பன் அவனைத் தொந்தரவு செய்து கேட்டதின பேரில் அவன் கொலையுண்டவன் அவன் மேல் போட்டுக்கொண்டிருந்த ஓர் துணியை கோர்ட்டார் முன் ஆஜர் செய்தபடியினால் அவன் தான் கொலை செய்திருப்பானென்று சந்தேகிப்பதிற் கிடமா யிருந்தது. இவ்விசமான வேறே ருஜு வில்லாத சாக்ஷியத்தின் பேரில் குற்றவாளியை சிக்ஷைசெய்தது சரியல்லவென்று அபிப்பிராயம் கொண்டார்கள். மாரிமுத்து என்பவனுடைய வாக்கு மூலத்திற்கு தக்கபடி வேறே சாக்ஷியம் ஒன்றும் கிடையாது. ஆகையால் குற்றவாளி கொலை செய்தவன்தானென்பதற்குச் சந்தேகத்திற் கிடமில்லாத சாக்ஷி ஒன்றும் கிடையாது. ஆகையால் கீழ் கோர்ட்டார் செய்த குற்றஸ்தாபனையையும் சிக்ஷையையும் ரத்து செய்துவிட்டு வாதியை விடுதலை செய்துவிடும்படிக்கு உத்தரவு செய்தார்கள்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

ஜட்ஜிகள்:—சர் ஆர்னால்ட்வொயிட் சீ-ஜ. } முன்பாக.
,, மி-ர் ஜ. மன்ரோ. }

சுப்பய்ய ... வாதி ... அப்பீல் வாதி.

vs.

மணியம் சுப்பிரமணிய ஐயர் வகையரா .... பிரதிவாதிகள்—ரெஸ்பான் டென்டுகள்.

எவிடென்ஸ் ஆக்ட் செக்ஷன் 92-ம் கிரயப்பத்திரமும்.

கேசின் விவரமும், தீர்மானமும்:—

சர் ஆர்னால்ட் வொயிட். சீ-ஜ:—இந்த வியாஜ்ஜியத்தில் ஓர் கிரயப்பத்திரத்தை ரத்துசெய்யும்படிக்கு தாவா செய்திருந்தான். கிரயப்பத்திரம். 1-வது நெம்பர் குறித்த தஸ்தாவேஜியாய் சாட்சியத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. 1-ம் நெம்பர் தஸ்தாவேஜு வாதிக்கும் முதல் பிரதிவாதியின் புருஷனுக்கும் மத்தியில் எழுதிக்கொள்ளப்பட்ட ஓர் கிரய தஸ்தாவேஜு. இரண்டாவது பிரதிவாதி முதல் பிரதிவாதியினிடத்திலிருந்து வாங்கினவன் கிரயம் செய்யப்பட்ட நிலம் அவனுடைய (2 Dfdt) ஸ்வாதீனத்தி லிருக்கிறது. அந்தப் பத்திரத்தையும் ரிஜிஸ்தர் செய்து முதல் பிரதிவாதியின் புருஷனிடத்தில் கொடுக்கப்பட்டது. அந்த நிலமும் இப்பொழுது இரண்டாவது பிரதிவாதியின் சுவாதீனத்தி லிருக்கிறது. அந்தக் கிரயப் பத்திரத்தில் கீழ் கொடுக்கப்பட்ட மொத்தம்-ரூபாய் 300-ன்று அந்த தஸ்தாவேஜியின் கண்டெழுதி யிருக்கிறது.

வாதியின் கேசு யாதெனில்:—இந்த தஸ்தாவேஜியின் கீழ் வாஸ்தவமாய் செய்துக்கொள்ளப்பட்ட ஏற்பாடு யாதென்றால் முதல் பிரதிவாதியின் புருஷன் வாதியை அவன் ஜீவகால மெல்லாம் காப்பாற்றி வருவதாய் ஒப்புக்கொண்டதின் பேரில் இந்த தஸ்தாவேஜு எழுதி ரிஜிஸ்தர் கொடுக்கப்பட்ட தென்றும் சொன்னான். இதன்றி 1-ம் நெம்பர் பத்திரம் எழுதிக்கொடுக்கையில் வாதி மிக்க விர்த்தாப்பியனா யிருந்ததாகவும். அவன் இறந்து போகும் வரையில் அவனைக் காப்பாற்றுவதென்றும் ஏற்பாடு செய்துக் கொள்ளப்பட்டதாகவும் சொன்னான்.

ஜில்லா ஜட்ஜி அவர்கள் கிரய தஸ்தாவேஜுக்கு செய்துக்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்படும் ஏற்பாடு பத்திரத்தில் கண்டெழுதியிராவிடில் அப்படிப்பட்ட சாக்ஷியம் எவிடென்ஸ் ஆக்ட் 92-வது பிரிவின்படிக்கு ஒப்புக்கொள்ள நியாயம் கிடையாதென்று தீர்மானித்தார்.

அப்படிப்பட்ட வாசா சாட்சியம் ஒப்புக்கொள்ளப்படினும் வாதி இந்த வியாஜ்ஜியத்தில் கிரயப்பத்தை ரத்துசெய்யும்படி கேட்க நியாயம் கிடையாதென்று சீப் ஜஸ்டிஸ் அவர்கள் அபிப்பிராயம் கொண்டார். அந்தப் பத்திரத்தைப் ரிஜிஸ்தர்செய்துகொடுக்கையில் அதன் விஷயமாய் மோசம், அல்லது யாதொரு பித்தலாட்டம் கிடையாதாகையால் அதை ரத்து செய்யும்படி கேட்க சட்டமில்லையென்று எடுத்துக் காண்பித்தார். ஆகையால் மேற்படி நிலத்தின் சுதந்தரம் எப்பொழுது கிரயப்பத்திரம் எழுதி ரிஜிஸ்தர் செய்துகொடுக்கப்பட்டதோ அப்பொழுதே அதனுடைய பாத்தியதையாயும், ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்ட் 54-வது பிரிவின்படிபோய் விட்டது அல்லது மாறிவிட்டது. இந்த பாயின்டை இருதாத்தாரும் வாதித்தவர்கள் அல்ல,

ஓர் ஸ்தாவர சொத்தை கிரயம்செய்துவிட்டு அதற்காக கிரய தஸ்தாவேஜியும் எழுதி ரிஜிஸ்தர் செய்துகொடுத்துவிட்டால் அப்பொழுதே அந்தக்கிரயப் பத்திரத்தில் செப்பி யிருக்கும் தொகை கொடுக்கப்படாவிட்டாலும் அதை ரத்துசெய்ய கேட்பதற்கு நியாயமில்லாமல் சுதந்தரம் மாறி விடுகின்றது. இதற்காதாரமாய் இ-லா-ரி. 23 பம் 525 ; 30 அ 125 ; 16 ம-ல-ஜ. 545 எடுத்துக் காட்டப்பட்டன.

அப்பீல் வாதியின் வக்கீல் இந்தியாவில் பெரும்பாலும் குடியானவர்கள் அவர்களுடைய விர்த்தாப்பிய காலத்தில் அவர்களைக் காப்பாற்றுவதற்காக தங்களுடைய சொத்தை அவர்கள் பாத்தியஸ்தர்மேல் செய்துவைப்பது வழக்கமா யிருக்கிறது. பிறகு எழுதி வாங்கிக்கொண்டவன் அவர்களைக் காப்பாற்றாமற் போனால் அது மிக்க கஷ்டமா யிருக்கிறதென்று எடுத்துச்சொல்லி இதற்காதாரமாய் அமெரிக்கன் சட்டத்தைக் காண்பித்தார். சீப்-ஜஸ்டிஸ் அவர்கள் இங்கிலாந்திலும், இந்தியாவிலும் அப்படிப்

பட்ட தீர்மானம் கிடையாதாகையால் கஷ்டமாயிருந்திடினும் கிரயப் பத்திரத்தை ரத்துசெய்ய நியாயம் கிடையாதென்று சொல்லி கீழ் கோர்ட்டார் தாவாவை தள்ளுபடி செய்து தீர்மானம் செய்து சரிதானென்று இரண்டாவது அப்பீலை சிலவுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

அப்பீல்வாதி வக்கீல்:—மி-ர் C. P. ராமசுவாமி ஐயர்.

ரெஸ்பான்டெண்ட் வக்கீல்:—மிஸ்டர் நைருநம்பியார்.

ம-வி-நோ. 6.

Cases from the Indian Law Reports.

இந்தியன் லா ரிபோர்ட்டு கேசுகள்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

Original Side Appeal Nos. 46,52 and 56 of 1909

ஜட்ஜிகள்:—மி-ர் ஜ. மன்ரோ.
,, மி-ர் ஜ. அப்டுர் ரஹீம் } முன்பாக.

தென் இந்தியா கைத்தொழில் கம்பெனி ... மனுதார்கள்—அப்பீல் வாதிகள்.

vs.

மதராஸ் அபிஷல் அசைனி வகையரா .... எதிரிகள்—ரெஸ்பான்டெண்டுகள்.

இன்சால்வேன்சி ஆக்ட் 11,12 பிரிவுகள்.

கேசின் விபரம்:—முன் அர்பத்னட் கம்பெனியாருடைய சில சொத்துகளை அபிஷல் அசைனி ஏலத்தில் விற்பனை செய்வதற்கு முன் மெசர்ஸ் ரிப்லி கம்பெனியார் அந்த சொத்துகளை ரூபாய் 16,000-க்கு வாங்கிக்கொள்வதற்காக அபிஷல் அசைனியை கேட்டார்கள். இவ்விதமாய் ரிப்லி கம்பெனியார் கேட்டதை இதர கடன்தாரர்களுடைய கமிட்டியாருக்கு மாத்திரம் தெரிவித்து பொதுவில் ஜனங்கள் எல்லோருக்கும் தெரிவிக்கவில்லை. ஏலத்தில் மேற்படி ரிப்லி கம்பெனியார் ஷை சொத்துகளை அவர்கள் முதலில் கொடுப்பதாய் சொல்லிய தொகைக்கு வாங்கிக்கொண்டார்கள். இன்சால்வென்சி கோர்ட்டு கமிஷனரென்று சொல்லப்படும் ஜட்ஜூம் ஷை கிரயத்தை ஊர்ஜிதப்படுத்தி விட்டார். இப்பொழுது தென் இந்தியா கைத்தொழில் கம்பெனியார் அந்த சொத்துகளுக்கு ரூபாய் 20,000-கொடுப்பதாக பிரமாணப்பத்திரிகை தாக்கல்செய்து கேட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி அபிஷல் அசைனிக்கும் நோட்டீசு கொடுத்துத் தெரிவித்து கோர்ட்டில் ஏல விற்பனையை தங்கள் பரம் செய்யும்படிக்கு கேட்டுக்கொண்டார்கள். இப்படிப்பட்ட மனுவின்பேரில் செய்த உத்தரவிற்கு விரோதமாய் இந்த அப்பீல் கொண்டுவரப்பட்டது.

மி-ர். C. R. திருவேங்கடா சாரியார் .... அப்பீல் வாதி.

மி-ர். டௌனிங் பாரிஸ்டர் ரெஸ்பான் டெண்டு தரப்பில்.

தீர்மானம்:—சாதாரணமாய் அபிஷல அசைனி ஏலத்தில் விற்பனை செய்யும்படி செய்த உத்தரவைப் பற்றி கமிஷனர் செய்த உத்தரவின் விஷயமாய் சம்பந்தப்படுவதற்கு அப்பீல் கோர்ட்டு ஜட்ஜிகளுக்கு அதிகாரம் கிடையாது. ஆனால் இந்த கேசின் சந்தர்ப்பங்களை அனுசரித்து அப்பீல் கோர்ட்டார் விசாரிக்கவேண்டியது அவசியமென்று தான் தோன்றுகிறது. மெசர்ஸ் ரிப்லி கம்பெனியார் முதலில் ஷை சொத்துகளுக்கு ரூபாய் 16000-கொடுப்பதாய்சொல்லியதை வேறே யாராவது அதிக மொத்தத்திற்கு வாங்கிக்கொள்ளப்போகிறார்களென்று கருதி ரிப்லி கம்பெனியார் வேண்டுகோளின் கடன்காரர்கள் தரப்பில் மிஸ்டர் சேஷகிரி ஐயருக்கு மாத்திரம் தெரிவித்துவிட்டு பின்னிட்டு ஏலத்திலும் அதே மொத்தத்திற்கு வாங்கிக் கொண்டார்கள். இன்சால்வென்ட் கமிஷனரென்று சொல்லப்படும் ஜட்ஜி 1909-ம் வருஷம் அக்டோபர்ஸ்ரீ 15உ உத்தரவுசெய்தபோது இவ்விதமான சந்தர்ப்பங்களை அனுசரித்து ரூபா16000-க்கு கிறயத்தை ரிப்லி கம்பெனியாருக்கு காயப்படுத்தினார்கள். பிறகு அப்பீல் வாதிகள் எதிரிகளுக்கு நோட்டீசு மூலமாய் தெரிவித்துவிட்டு இந்த மனு செய்துக்கொண்டார்கள். இவர்கள் இப்பொழுது அந்த சொத்துகளுக்கு ரூபாய் 20,000 கொடுப்பதாகப் பிரமாண பத்திரிகையும் தாக்கல் செய்திருக்கிறார்கள். மெஸர்ஸ் ரிப்லி கம்பெனியார் இவ்விதமாய் கேட்டிருக்கிறார்களென்று பொதுவில் ஜனங்கள் எல்லோருக்கும் தெரிந்திருந்தால் அநேகர் போட்டியாய் அதிகமாக கொடுப்பதாக வந்திருப்பார்களென்பது விசதமாய் ஏற்படுகிறது. இச்சந்தர்ப்பத்தைப் பற்றி இன்சால்வெண்ட் கமிஷனருக்குத் தெரியவராது. இப்படிப்பட்ட மனுவை விசாரிப்பதற்கு அப்பீல் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டென்பதற்கு இன்சால்வென்சி ஆக்டில் நிபந்தனை யிருக்கிறது. இந்த சொத்துகளை போட்டி யில்லாமல் விற்றிருப்பதால் கீழ் கோர்ட்டார் உத்தரவை ரத்துசெய்துவிட்டு அப்பீல் வாதிகள் கோர்ட்டில் ரூபாய் 20,000-கட்டும் விஷயத்தில் சொத்தை மறுபடியும் ஏலத்தில் விற்பதாக தெரிவித்து அதில் ரிப்லி கம்பெனியாரும் கைத்தொழில் கம்பெனியாரும் ரூபாய் 20,000 மு

தல் விலை கூறியார் அதிகத் தொகைக்கு கேட்கிறார்களோ அவர்கள் பெற்றுக்கொள்ளலாமென்று உத்தரவு செய்தார்கள். ம. வி. நோ-367.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

Criminal Revision Case No. 65 of 1911.

ஜட்ஜி:—மி-ர் ஜ. சங்கரன் நாயர் | முன்பாக.

சுப்பிரமணிய ஐயர் ... ... குற்றவாளி

vs.

ஜவுளி கடை பக்ருதீன் சாயபு ... ...

அனந்தபூர் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் கி-பு-கோ. 438 வது பிரிவின் கீழ் ஹைகோர்ட்டாருடைய உத்தரவிற்குத் தெரிவித்துக்கொண்ட கேஸ்.

உத்தரவு:—இந்த கேசில் பக்ருதீன் என்பவன் ஒருவன் தான் சுப்பிரமணிய ஐயரிடத்தி லிருந்து பெற்ற நோட்டென்று சொல்லி அவனிடம் அவன் வைத்துக்கொண்டிருந்த ஓர் 10-ரூபாய் நோட்டை போலீசார் அவனிடமிருந்து வரப்பற்றிக் கொண்டார்கள். சுப்பிரமணிய ஐயர் என்பவர் இந்த 10 ரூபா நோட்டு அவர் ப்ராசிகூஷன் முதல் சாக்ஷியினிட மிருந்து திருடின அநேக நோட்டுகளில் ஒன்று. இந்தத் திருட்டுக் குற்றத்திற்காக அவர் சிக்ஷை விதிக்கப்பட்டார். மாஜிஸ்ட்ரேட் அவர்கள் இந்த 10-ரூபாய் நோட்டை கி-பு-கோ. 517-வது பிரிவின்படி ப்ராசிகூஷன் முதல் சாக்ஷியின் வசம் ஒப்புவித்து விடும்படி உத்தரவு செய்தார்கள்.

அந்த நோட் கடைசியாய் பக்ருதீன் ஸ்வாதீனத்தி லிருந்தமையால் அது இன்னாருடைய தென்று ருஜூவாகும் வரையில் அதை அவன் தான் அடைய வேண்டியதென்று தீர்மானித்து கீழ் கோர்ட்டு உத்தரவை ரத்துசெய்து விட்டு அந்த 10 ரூபா நோட்டை பக்ருதீனிடம் கொடுத்து விடும்படிக்கு உத்தரவு செய்தார்கள்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்டு.

—:o:—

Criminal Revision Case No. 78 of 1911.

ஜட்ஜிகள்:—மி-ர் ஜ. சுந்தரய்யர்
,, மி-ர் ஜ. ஸ்ப்லிங் } முன்பாக.

தர்சிமதார்லப்பை ... ... பிரியாதி.

vs.

சக்கரவர்த்தி ... ...

கேசின் விவரம்:—இந்த கேசில் தூத்துக்குடி சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கி-பு-கோ. 476-வது பிரிவின் கீழ் மனுதாரனை இ-பி-கோ. 182, 211-பிரிவுகளின்படிக்குப் ப்ராசிகூட் செய்யும்படிக்கு செய்யப்பட்ட உத்தரவை ரத்துசெய்யும்படிக்கு கொண்டுவரப்பட்ட ரிவிஷன் மனு. ப்ராசிகூஷன் செய்யும்படிக்கு எந்த சந்தர்ப்பங்களில் கூத்தரவு செய்யப்பட்டதோ அதை அடியில் சுருக்கமாய் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த கேசில் பிரியாதி அவனை நிர்ப்பந்தித்து ஹிம்சைசெய்து நாலுபேர் அவனிடமிருந்து லஞ்சம் பெற்றுக்கொண்டதாக பிராது செய்தான். அந்த நான்கு பேரில் இருவர் போலீஸ் கான்ஸ்டேபிகள், மாஜிஸ்ட்ரேட் பிரியாதியை விசாரணைசெய்து எதிரிகளுக்கு சம்மன் கொடாமலேயே கி-பு-கோ. 202-வது பிரிவின்படிக்கு பிரதம விசாரணைசெய்து கேசில் உள்ள சாக்ஷியத்தை அனுசரித்து பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டு பிரியாதியை ப்ராசிகூட்செய்யும்படிக்கு 1909-ம் வருஷம் நவம்பர்ஸ்ரீ 22உ உத்தரவு செய்தார். பிராதைத் தள்ளுபடி செய்த உத்தரவின்பேரில் பிரியாதி திருநெல்வேலி செஷன் சட்ஜிக்கு ரிவிஷன் மனு செய்துக்கொண்டான். ஜில்லா ஜட்ஜ் அவர்கள் அந்த மனுவை தாக்கல்செய்துகொண்டு பிரியாதிக்கு அனுகூலமாய் கேசை இன்னும் மறுவிசாரணை செய்யும்படிக்கு உத்தரவு செய்தார். அதன் பேரில் சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் எதிரிகளுக்கு சம்மன்கள் கொடுத்து மறு விசாரணை செய்தார். ஆனால் ஜில்லா ஜட்ஜி ரிவிஷன் மனுவின்பேரில் உத்ரவு செய்கையில் சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் பிரியாதியை ப்ராசிகூட் செய்யும்படிக்கு செய்த உத்தரவைப்பற்றி யாதொன்றும் சொல்லாமல் எவ்விதமான உத்தரவும் செய்யவில்லை. அன்றியும் சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டும் அவர் மறு விசாரணைசெய்து தீர்ப்பெழுதி எதிரியை விடுதலை செய்யும்பொழுது கி-பு-கோ. 476-வது பிரிவின்படிக்கு வேறே யாதொரு புது உத்தரவும் செய்தவரல்ல. கி-பு-கோ 476-வது பிரிவின்படிக்கு சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் ஷை கேசின் ரிக்கார்டுகளை எட்குவார்ட்டர்ஸ் டிப்டி மாஜிஸ்டிரேட்டுக்கு அனுப்பினபோது ஷை டிப்டி மாஜிஸ்ட்ரேட் செஷன் ஜட்ஜ் உத்தரவை வரப்படுத்திக்கொண்டு ரிவிஷன் மனு செஷன் ஜட்ஜி முன்னிலையில் நடக்கும்போது சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் மறு விசாரணை செய்யும்போதும் அவர்கள் கடைசி உத்தரவு செய்யும் வரையிலும் ப்ராசிகூஷன் நடவடிக்கைகளை நிறுத்திவைக்கவேண்டியதென்று யாதொரு நடவடிக்கையும் நடத்தாமல் நிறுத்திவைத்தார்.

முன் டிப்டி மாஜிஸ்ட்ரேட் நடவடிக்கைகளை நிறுத்திவைக்கும்படி உத்தரவு செய்திருப்பதால் ப்ராசிகூஷன் உத்தரவின்பேரில் நடவடிக்கை நடத்துவதற்கு; மேல்கோர்ட்டார் உத்தரவில்லாமல் செய்யலாகாதென்று அபிப்பிராயப்பட்டார். பிரியாதி டிப்டி மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் ப்ராசிகூஷன் நடவடிக்கைகள் நடத்தாமல் அந்த ப்ராசிகூஷன் உத்தரவை

ரத்து செய்யும்படிக்கு மனுவு செய்துக்கொண்டான்.

மனுதாரன் தரப்பில் ஆஜராகிய மி-ர் பால் அப்பாசாமி என்பவர் இவ்விதமான உத்தரவின் விஷயமாய் ஹைகோர்ட்டார் சம்பந்தப்படுவதற்கு நியாயம் இடையாதென்று இரண்டு க்ரவுண்டுகள்-பாயின்டுகளை எடுத்துக்காண்பித்தார். அதாவது:—

(1) பிரியாதியின் பிராதை சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் தள்ளுபடி செய்த உத்தரவை செஷன் ஜட்ஜி ரத்துசெய்துவிட்டபோது கி-பு-கோ. 476-வது பிரிவின் கீழ் செய்த இந்த ப்ராசிகூஷன் உத்தரவை அமுலுக்குகொண்டு வருவதற்கு நியாயம் இடைதென்றும்,

(2) சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் இந்த உத்தரவை பிரதம விசாரணையிலேயே அவரெதிரில் அப்பொழுதிருந்த சந்தர்ப்பங்களைக் கொண்டு செய்த உத்தரவாகையாலும் அப்படிப்பட்ட உத்தரவு சட்டப்படி செய்யப்பட்ட கோர்ட்டு உத்தரவல்லாமையாலும் அந்த கி-பு-கோ. 476-வது பிரிவின் கீழ் செய்த உத்தரவின் விஷயமாய் ஹைகோர்ட்டார் சம்பந்தப்படுவதற்கு அதிகார வரம்பு கிடையாதென்றும் வாதித்தார்.

இப்படிப்பட்ட வாதங்களில் செப்பியிருக்கும் பாயின்டின் விஷயமாய் ஹைகோர்ட்டார் சம்பநதப்படுவதற்கு அதிகாரம் கிடையாதென்று மி-ர் ஜ. சுந்தரய்யர் சொல்லிவிட்டார். ஏனென்றால் கி-பு-கோ. 476-வது பிரிவின் கீழ் செய்யப்பட்ட உத்தரவிற்கு பிரியாதைத் தள்ளுபடி செய்த உத்தரவிற்கும் சம்மந்தம் கிடையாதென்று எடுத்துக் காண்பித்தார். மேலும் ஜில்லா ஜட்ஜி மறு விசாரணை செய்யும்படிக்கு உத்தரவு செய்தபோது சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் பிரியாது பொய் பிராதென்று சொல்லியதைப்பற்றி யாதொரு தீர்மானமும் சொல்லவில்லை. பிரியாதியின் பாரிஸ்டா அவர் சொல்லிய வாதத்திற் காதாரமாய் 12 க-வீ-நோ. எடுத்துக்கூறிய கேசு இதற்கு ஆதாரவாகாதென்று சொன்னார். இதன்றி கி-பு-கோ-195, 476-வது பிரிவின்படி ப்ராசிகூஷன் உத்தரவு செய்கையில் எதிரிகளுக்கு நோட்டீசு கொடுத்து தெரிவித்து கேசில் ஆஜர் செய்திருக்கும்சாக்ஷிகள் எல்லோரையும் விசாரித்து இன்னும் தாக்கல் செய்யப்பட்ட ரிகார்டுகள் எல்லாவற்றையும் பார்வையிட்டு தான் உத்தரவு செய்யவேண்டிய தென்று மிஸ்டர் ஜ-சுந்தரமய்யர் சொல்லியதை மிஸ்டர் ஜ. எய்லிங் என்பவரும் ஒப்புக்கொண்டார். இதற்காதாரமாய் 5-கல்-வீ-நோ. 106; இ-லா-ரி. 14 கல் 707 எடுத்துக் காண்பிக்கப்பட்டன.

ஆகையால் ஆதியில் சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் ப்ராசிகூஷனுக்கு உத்தரவு செய்யும்போது எல்லா சாக்ஷிகளையும் விசாரியாமல் அவசரத்தில் அப்பொழுது தன்னெதிரிலிருந்த சாக்ஷியத்தின்பேரில் ப்ராசிகூஷனுக்கு உத்தரவு செய்தது நியாயமாகாதென்று எடுத்துக்காண்பித்தார். சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் பிரியாதை தள்ளுபடி செய்வதற் காதாரமாய் எடுத்துக்காண்பித்திருக்கும் காரணங்கள் ப்ராசிகூஷன் உத்தரவு செய்வதற்குத் தகுந்த காரணங்கள் தானென்று சொல்லலாகா தென்று மிஸ்டர் ஜ. எய்லிங் கூறி யிருக்கிறார்.

ஆகையால் ஜாயின்ட் மாஜிஸ்ட்ரேட் 1909-ம்ஹு நவம்பர்மீ 22உ கி-பு-கோ. 476-வது பிரிவின் கீழ் செய்த உத்தரவை ரத்து செய்துவிடும்படிக்கு தீர்மானிக்கப்பட்டது.

பால் அப்பாசாமி-மனுதாரனுடைய பாரிஸ்டர்.

மி-ர் நேப்பியர்-சர்க்கார் தரப்பில் ஆஜரானார்கள்.

21. ம-வீ-நோ. 9-ஆகஸ்ட் 1911.

(REFERRED CASES.)

மதராஸ் ஹைகோர்ட்டு.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கிரிமினல் அப்பீல்.

இரட்டைக் கொலைக் கேஸ்.

கேசின் விவரம்:—தென் மலையாளத்தில் காளியப்பன் என்பவனும் அவனுடைய பெண்சாதியும், குழந்தையும், மாமியாரும் சென்ற அக்டோபர்மீ 19உ அவனுடைய வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தார்கள். காலையில் காளியப்பன் எழுந்திருந்து தன்னுடைய பெண்சாதியை வேலைக்குப்போகும்படி ஏவினான். அவள் போக மறுக்க, அவளையும் அவளுடைய குழந்தையையும் கொன்றுவிட்டான். மாமியாரையும் கத்தியால் குத்தி காயப்படுத்தி விட்டு ஓடிவிட்டான். மறுநாள் அவனே போலீஸ் ஸ்டேஷனிற் போய் ஆஜராக, போலீசார் அவனை அரஸ்ட் செய்தார்கள். நிற்க, காளியப்பனுடைய கழுத்திலும் தொண்டையிலும் சில வெட்டு காயங்கள் பட்டிருந்தன. போலீசார் அவைகளைப்பற்றிக் காளியப்பனைக் கேட்டபோது, தான் தற்கொலை செய்துகொள்ள எத்தனித்தபோது உண்டான காயங்கள் என்று சொன்னான். போலிசார் இவன் பேரில் கொலைக்குற்றம் சாட்டித் தென் மலையாளம் செஷன்ஸ் கோர்ட்டார் விசாரணைக்குக் கொண்டுவந்தபோது, இவன் கொலை செய்ததை இவனுடைய மாமியார் நேரே பார்த்ததாகச் சாக்ஷியம் சொன்னாள். கைதி தன்னுடைய பெண்ஜாதியையும் குழந்தையையும் கொலைசெய்ததை ஒப்புக்கொண்டு தனக்குப் பிசாசு பிடித்திருந்ததாகவும் தான் கொலை செய்யும்போது சித்த சுவாதீனமற்றிருந்ததாகவும் வாக்குமூலம் எழுதிவைத்தான். இருந்தபோதிலும் இந்தக் கேசை விசாரணைசெய்த அசெசர்கள் கைதி குற்றம் செய்திருக்கிறான் என்று அபிப்பிராயம் கூறக் கோர்ட்டார் அந்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு கைதிக்கு மரணதண்டனை விதித்தார்கள்.

கைதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டான்.

உத்தரவு:—டாக்டர் பரிசோதனை செய்து ரிப்போர்ட் செய்யும்படி உத்தரவு செய்யப்பட்டது. பரிசோதனை செய்த டாக்டர் கோர்ட்டில் கைதியின் வக்கீலின் முன்னிலையில் விசாரணை செய்யப்படவேண்டுமென்று உத்தரவு செய்திருக்கிறார்கள்.

ஜட்ஜிகள்:—மி-ர ஜ. சுப்பிரமணிய அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.

ரெவினியூ அப்பீல்.

கேசின் விவரம்:—உதக மண்டலத்தில் சேரிங்கிராஸ் என்கிற விடத்திலும் மெசர்ஸ் மீயான்ஜி சேட்டிற்குச் சொந்தமான நிலத்தை உதகமண்டலம் ரயில்வேய்க்காக கவர்ன்மெண்டார் வாங்கிக் கொண்டார்கள். நீலகிரி எட் அசிஸ்டன்ட் கலெக்டர் ரூ. 3053—4—0 ஷ நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு காம்பென்சேஷன் பணம் கொடுக்கும்படி உத்தரவு செய்தார். மியான்ஜி சேயிட் கம்பெனியார் ஷ தொகை ஷ நிலத்திற்கு மிகுந்த கேவலமான தொகை என்று ஆக்ஷேபனை சொல்லி அந்தத்தொகையைப் பெற்றுக்கொண்டு இந்தக் கேசை ஜில்லா ஜட்ஜியிடம் அனுப்பும்படி எட் அசிஸ்டன்ட் கலெக்டரைக்கேட்டுக் கொண்டார்கள். அப்படியே இந்தக்கேஸ் கோயமுத்தூர் ஜில்லா ஜட்ஜினிடம் அனுப்பப்பட்டது. ஜில்லா ஜட்ஜி இந்த நிலம் ஷாப்பு வைப்பதற்குக் கட்டிடம் கட்டுவதற்குத் தகுந்தவிடமென்றும், மெசர்ஸ் மியான்ஜி சேயிட் 1899-ம்ஹு நிலத்தை வாங்கின விலைகூட எட் அசிஸ்டன்ட் கலெக்டர் கொடுக்கவில்லை என்றும், இதன் பிறகு மெசர்ஸ் மியான்ஜி சேயிட் கம்பெனியார் விசேஷ பணம் செலவு செய்து அந்த நிலத்தைச் சீர்திருத்தியிருக்கிறார்கள் என்றும், எட் அசிஸ்டன்ட் கலெக்டர் மிகுந்த கேவலக்கிரயம் கொடுத்திருக்கிறார் என்றும் தீர்ப்பில் சொல்லி நில சொந்தக்காரர்களுக்கு ரூ. 9732—3—9 காம்பன்சேஷன் பணம் கொடுக்கும்படி உத்தரவு செய்தார். இந்தத் தீர்மானத்திற்கு விரோதமாக ரெவினியூ டிவிஷனல் ஆபிசர் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

லாயர்கள்:—அப்பீல் தாருக்காக கவர்ன்மெண்டு பிளீடர் ஆஜரானார்.

பாரிஸ்டர் மிஸ்டர் C. F. நேப்பியர் நிலச் சொந்தக்காரர்களுக்காக ஆஜரானார்.

தீர்ப்பு:—ஜில்லா ஜட்ஜியின் தீர்மானத்தை உறுதிப்படுத்தி, அப்பீலைத் தள்ளிவிட்டார்கள்.

ஆள் மாருட்டம் செய்து ஏமாற்றின கேஸ்.

கிரிமினல் அப்பீல்.

கேசின் விவரம்:—ஆறுமுகம் பிள்ளை என்பவன் வேணுகோபால பிள்ளை என்று பெயர் வைத்துக்கொண்டு தான் மெட்ரிகுலேஷன் பாஸ் செய்திருப்பதாகவும் தனக்கு உத்தியோகம் தேவை என்றும் மதுரை ஜில்லா ரிஜிஸ்டிராருக்கு மனு அனுப்பினான். வேணுகோபால பிள்ளை பேருக்குக் கொடுக்கப்பட்டிருந்த மெட்ரிகுலேஷன் சர்ட்டிபிகேட்டை ரிஜிஸ்டிரார் பார்த்து திர்ப்தி அடைந்து அவனுக்கு அருப்புக்கோட்டை சப் ரிஜிஸ்ட்ரார் ஆபிசில் குமஸ்தா உத்தியோகம்கொடுத்தார். அவன் அந்த உத்தியோகத்தை ஒப்புக்கொண்டு வேணுகோபாலபிள்ளையென்றே எல்லோராலும் கூப்பிடப்பட்டு வந்தான். சில காலம் சென்ற பின் இவன் ரஜாஎடுத்துக்கொண்டு போயிருந்தபோது ஒரு கிரிமினல் கேசில் சிக்கி அரஸ்ட் செய்யப்பட்டு இவன் பேரில் கேஸ் நடந்ததில் இவன் பேர் ஆறுமுகம்பிள்ளை என்றும், இவன் வேணுகோபால பிள்ளை என்னும் பெயர் வைத்துக்கொண்டு சால்ட் சப் இன்ஸ்பெக்ட்டரிடம் பியூனாக விருந்தான் என்றும் இவன் காண்பித்த மெட்ரிகுலேஷன் சர்ட்டிபிகேட் ஷ வேணுகோபால பிள்ளையிடமிருந்து திருடப்பட்ட சர்ட்டிபிகேட் என்றும் புலப்பட்டது.

ஆகவே, இவன் பேரில் ஆள்மாருட்டம் குற்றம், போர்ஜரிக்குற்றம் ஆகிய இருகுற்றமும் சாட்டப்பட்டு மதுரை செஷன்ஸ் கோர்ட்டாரால் 5-வருஷக் கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டான்.

கைதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

தீர்ப்பு:—கீழ்க்கோர்ட்டு குற்றஸ்தாபனையை உறுதிப்படுத்திக் கைதி பெருங் குற்றம் செய்திருப்பதால் அவனைக் கடுமையாய் தண்டிப்பது அவசியமா யிருந்தாலும் செஷன்ஸ் கோர்ட்டார் மிகுந்த கடுமையாகத் தண்டித்துவிட்டார்கள் என்று ரிமார்க்செய்து 5-வருஷ கடினகாவல் தண்டனையை மூன்று வருஷ கடினகாவல் தண்டனையாக மாற்றிவிட்டார்கள்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கிரிமினல் அப்பீல்.

அப்பீல்தார் : மிஸ்டர் செல்டானு.

பிளேக் சட்டங்களை மீறின கேஸ்.

கேசின் விவரம்:—மங்களூரிலிருக்கும் செல்டானு என்பவர், மைசூருக்குப்போய் திரும்பிவரும்போது பிளேக்நோய் அதிகாரிகளிடமிருந்து பாஸ் போர்ட்டு வாங்கிக்கொள்ளாமல் வந்த குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டு ரூபாய் 25-அபராதம் விதிக்கப்பட்டாரென்றும், அந்த தண்டனைக்கு விரோதமாக ஹைகோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார் என்றும் ஹைகோர்ட்டார் அப்பீலை தாக்கல் செய்துக்கொண்டு எதிரிக்கு நோட்டீஸ் அனுப்பும்படி உததரவு செய்திருக்கிறார்கள் என்றும் நம்முடைய இந்திய சட்ட கெஜெட் முதல் வாலும் 132-வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கும் கேசில் சொல்லியிருக்தோம் இந்தக் கேஸ் இப்போது ஹைகோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டு மிஸ்டர் செல்டானுவுக்கு விதிக்கப்பட்ட ரூபா 25 அபராத தண்டனையை மாற்றி 5 ரூபா அபராத தண்டனை விதித்திருக்கிறார்கள்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

ஹைகோர்ட்டார் அபிப்பிராயத்துக்கு அனுப்பப்பட்ட கேஸ்.

கேசின் விவரம் :—நாகபட்டணத்தில் ஒரு வண்டிக்காரன் தன்னுடைய வண்டியையும் மாட்டையும் அஜாக்கிரதையாய் ஓட்டினதால் அவைகள் ஐந்துமாத வயதுள்ள ஒரு பஞ்சம ஜாதிப் பெண் குழந்தைமேல் ஏறவே அக்குழந்தை இறந்துபோய்விட்டது. வண்டிக்காரன் இ. பி. கோ. 304-வது பிரிவில் சொல்லப்பட்ட குற்றத்தைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டான். இந்தக் கேசை விசாரணை செய்த நாகபட்டணம் முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட் குற்றவாளிக்கு ரூபா. 20 அபராதம் விதித்து இந்த அபராதம் வசூல் செய்யப்பட்டால் குழந்தையை இழந்த தகப்பனுக்கு ஷை அபராத ரூபாய் இருபதையும் பரிகாரப்பணமாய் கொடுத்துவிடும்படி கி. பு. கோ. 545 (C.) பிரிவின்படி உத்தரவு செய்தார். இந்த மேஜிஸ்ட்ரேட் தம்முடைய தீர்ப்பில் "அந்தப் பெண் குழந்தை உயிருடனிருந்தால் சம்பாதித்துக்கொடுக்கக்கூடிய சம்பாதிதனையைத் தகப்பன் இழந்துபோனவனு யிருப்பதால் அவனுக்குப் பரிகாரப்பணமாக இந்த அபராதத்தைக் கொடுக்கும்படியாக உத்தரவு செய்கிறேன்" என்று எழுதியிருந்தார். இந்தக் கேஸ் செஷன்ஸ் கோர்ட்டார் பார்வைக்கு வந்தபோது, இறந்துபோன குழந்தை 5-மாத வயதுடையதா யிருப்பதாலும், பெண் குழந்தையா யிருப்பதாலும், அது கொலையுண்ட சமயத்தில் சம்பாதிக்கும் வயதுடையதா யிருந்தபோதிலும் கூட சிவில் கோர்ட்டில் நஷ்ட ஈடு கொடுக்கும்படியாக உத்தரவுசெய்யமாட்டார்கள் என்று அபிப்பிராயப்பட்டு ஷை குழந்தையின் தகப்பனுக்கு அபராதப் பணத்தைப் பரிகாரமாகக் கொடுக்கும்படி மாஜிஸ்டிரேட் செய்த உத்தரவை ரத்து செய்யும்படி சிபார்சு செய்து இந்தக்கேசை ஹைகோர்ட்டாருக்கு அனுப்பினூர்கள்.

ஹைகோர்ட்டார் தீர்ப்பு:—குழந்தையின் தகப்பனுக்குப் பரிகாரப்பணம் கொடுக்கும்படி மாஜிஸ்டிரேட் செய்த உத்தரவை ரத்துசெய்து விட்டார்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

அர்பத்னட்பாங்கியின்இன்சால்வென்சியைப்பற்றியமனு

மனுதார் : இராஜா சர் சவலை இராமசாமி முதலியார்.

மனுவின் விவரம் :—மனுதார் அர்பத்னட் கம்பெனியின் துபாஷ் உத்தியோகம் செய்துவருவதற்கு ஷை கம்பெனியாரிடம் ரூபா. 30100-பெறுமான கவர்ன்மெண்டு பிராமிசரிநோட்கள் டிபாசிட்டு கட்டி யிருந்தாராம். இந்தக் கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகளை மனுதாருக்குத் திருப்பிக்கொடுத்துவிடும்படி கோர்ட்டார் அபிஷியல் அசயினுக்கு உத்தரவு செய்யவேண்டுமென்று மனுதார் பாரிஸ்டர் மிஸ்டர் டி. சுவாமியர் மூலியமாய் மனு செய்து கொண்டார்.

அபிஷியல் அசயினியாகிய மிஸ்டர் ஆர்ச்சிபால்ட்ரீட் நேரில் ஆஜராகி இந்த மனுவை ஆக்ஷேபித்தார்.

உத்திரவு:—துபாஷ் உத்தியோகத்திற்காக டிபாசிட்டு கட்டப்பட்டது. அந்த உத்தியோக முறையில் துபாஷ், கம்பெனிக்குப் பணம் கொடுக்கும்படியாக யிருக்கும், கம்பெனியார் துபாஷிக்கு பணம் கொடுக்கும்படியாக யிருக்கும், ஆகையால் இருதாரந்தாருக்கும் கணக்குவழக்குந் தீரவேண்டியதாயிருக்கிறது. இப்படிப்பட்ட விஷயங்கள் மனுவில் தீர்மானிக்கமுடியாது. ஷை கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகள் பத்திரமாய் பாதுகாக்கப்படும் பொருட்டு கம்பெனியாரிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தால் இந்த மனு விசாரணையில் அவைகளை மனுதாருக்குக் கொடுத்துவிடும்படி உத்தரவு செய்யலாம். ஆகையால் மனுதார் தாம் ஜாமீனுக்காக கட்டியிருப்பதாகச் சொல்லும் கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்கு வியாஜ்ஜியம் செய்வதே சிலாக்கியமான வழியென்று உத்தரவு செய்தார்கள்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

கிரிமில் அப்பீல்.

கேசின் விவரம்:—கோயமுத்தூர் ஜில்லாவில் சென்ற அக்டோபர்மீ த்தில் சின்ன அம்மாசி என்பவனுடைய தாயார் இறந்துபோய் விட்டாள். பிரேதத்தை மயானத்திற்குக் கொண்டுபோகும்போது பிரேதத்தின் பந்துக்கள் கொமர நாவிதன் என்கிற அம்பட்டனை அழைத்துக்கொண்டு போனூர்கள். மயானகிருத்தியங்கள் முடிந்தவுடன் எல்லோரும் சின்ன அம்மாசியை வழக்கம்போல் வீட்டிற்குக்கொண்டுவந்துவிட்டுத் திரும்பி அவரவர்கள் வீட்டிற்கு போக ஆரம்பித்தார்கள். இந்த சமயத்தில் வீட்டு வாசற்படியில் நின்றுகொண்டிருந்த கொமரநாவிதன் ஒரு உலக்கையைக் கையில் எடுத்துக் குட்டிக்கவுண்டன் தலையில் அடித்து வீழ்த்த அவன் இறந்துபோயவிட்டான். இதன்பிறகு வழியில் போக்குவரத்து செய்துகொண்டிருந்தவர்களைத் துரத்திக்கொண்டு ஓடினுன். அதன் பிறகு அவனைப்பிடித்துப் போலீசாரிடம் ஒப்புவித்து விட்டார்கள். கொமரநாவிதன்கொலைக்குற்றம் சாட்டப்பட்டு கோயமுத்தூர் செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரணைசெய்யப்பட்டபோது இதற்கு முன் ஒரு சமயம் இந்தக் கைதிக்கு பயித்தம் பிடித்திருந்தது என்று வெளியாயிற்று.

கோர்ட்டார் கைதியை விசாரித்தபோது, தான் கொலை செய்தபோது சித்த சுவாதீன மில்லாதிருந்ததாக முதலிற் சொன்னுன். பின்பு கேட்டதில் குட்டிக் கவுண்டன் தன்னை அடித்ததாகவும் அதற்குப் பதிலாகத் தான் கொலைசெய்ததாகவும் சொன்னுன். கைதி யாதொரு கோபமும் மூட்டப்படாமலும், யாதொரு விரோதமின்றியும், யாதொரு கலகமின்றியும் கொலை செய்திருப்பது அவன் பயித்தியகாரன் என்று நினைப்பதற்கு ஏதுவாயிருக்கிறதென்று செஷன்ஸ் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டபோதிலும் அவனைப் பைத்தியகாரகைதி என்று நினைக்க இஷ்டப்படாமல் அவனுக்கு மரணதண்டனை விதித்தார்கள்.

கைதி ஹைகோர்ட்டில் மனுசெய்து கொண்டான்.

தீர்ப்பு :—கைதி கோயமுத்தூர் மெடிக்கல் ஆபீசர் பார்வையில் ஒருமாதம் வைக்கப்பட்டுப் பரிசோதனை செய்யும்படியாக உத்தரவு செய்திருக்கிறூர்கள். மெடிகல் ஆபீசர் ரிப்போர்ட்டையும், கைதி தான் கொலை செய்யும் சமயத்தில் சித்த சுவாதீன மிழந்திருந்ததற்கு யாரையேனும் சாக்ஷி கூறினல் அந்த சாக்ஷியத்தையும் வாங்கி ஹைகோர்ட்டிற்கு அனுப்பும்படியாக உத்தரவு செய்யப்பட்டது.

General News.

பொது வர்த்தமானங்கள்.

—:o:—

(*Extracts*) (5—9—11)

கிளாஸ்கோவில் தீவிபத்து, ஏராளமான நஷ்டம்.

லண்டன், செப்டம்பர் 4—

மாரிஸன் தெருவிலுள்ள மொத்த வியாபாரி ஐக்கிய ஸங்கத்தின் கட்டிடத்தில் பெருந் தீப்பற்றிக்கொண்டது. நஷ்டம் 100000 பவுனிருக்குமென்று மதிக்கப்படுகிறது. சரித்திரப் பிரவித்தி பெற்ற டான்டயன் ஹவுஸ் நாசமாயிற்று. செருப்புக்கடை, காகிதம் பேனு முதலியன விற்கும் கடை, சிற்றுண்டிக்கடை முதலிய வெல்லாம் சிதைந்தன. சரித்திரப் பிரக்கியாதியுள்ள கிளாஸ்கோ கிராஸ் மட்டும் தீயணைக்கும் பயர்மனின் பெரு முயற்சியால் விபத்தினின்றும் தப்புவிக்கப்பெற்றது. இந்த பயர்மன்களில் நாலு பேர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்ட வேண்டியவர்களாய் விட்டார்களாம். நஷ்டத்தின் மதிப்பு ஏராளமா யிருக்குமென்று கருதப்படுகிறது.

உதகமண்டலம் முனிசிபாலிடியும் ஸர் ஆர்தர் லாலியும்.

உதகமண்டலம் முனிசிபாலிடியார் சர் ஆர்தர் லாலிக்கு ஒரு பிரிவு உபசாரப்பத்திரிகை வாசித்துக் கொடுப்பதற்காக 300 செலவு செய்ய உத்தரவுவேண்டுமென்று கவர்ன்மெண்டைக் கேட்டிருந்தார்கள். கவர்ன்மெண்டார் அந்த முனிசிபாலிடியார் கேட்டுக் கொண்டபடியே செய்யலா மென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறூர்கள்.

திருச்சிறைப்பள்ளியில் டாக்டர் T. M. நாயர்.

திருச்சி முனிசிபல் வரிசெலுத்துவோர் சங்கத்தார் போன ஞாயிற்றுக்கிழமை அவ்வூரில் ஒரு மீட்டிங்கு கூட்டினூர்கள். அந்த மீட்டிங்குக்கு திருச்சி புதிய முனிசிபல் சேர்மன் திவான் பகதூர் T. தேசிகாச்சாரியும, சென்னைச்சட்டசபை மெம்பர் ஆனரபில் மோல்வி சயித்முர்த்தாஸா சாகிப்பும் வேறு சிலரும் வந்திருந்தார்கள் அப்போது சென்னை ஹைகோர்ட் வக்கீல் திவான் பகதூர் K. நாராயண ராவின் அக்கிராசனத்தின் கீழ் டாக்டர் T. M நாயர் ஸ்தல சுய ஆட்சியைப்பற்றி சிறந்ததோர் பிரசங்கஞ் செய்தார். அங்கு அவர் போயிருந்தபோது நாஷனல் ஹைஸ்கூலின் வெள்ளி ஜூபிலிக் கொண்டாட்ட சமயம் நேரிட, அச்சமயத்தில் ஹைகோர்ட் வக்கீல் மிஸ்டர் T. ரெங்காசாரியாரின் அக்கிராசனத்தின் கீழ் கல்வியைப்பற்றியும், ஒரு பிரசங்கஞ் செய்தார். இந்தப் பிரசங்கங்களைப்பற்றிப் பேச நமக்குச் சாவகாச மில்லையென்று விசனப்படுகிறேம்.

(6—9—11)

சைனுவில் வெள்ளம்.

லண்டன், செப்டம்பர் 5—

நியூயார்க்கு:—ஆஹுவிலுள்ள ஒரு அமெரிகா வாஸியா ங்ட்ஸீ என்ற நதியின் பெரு வெள்ளத்தினுல் லக்ஷம் ஜனங்கள் மூழ்கி இறந்தனரென அறிவிக்கிறூர்.

4

காங்கிரேஸ் மகாசபை.

இந்த வருஷக் கடைசியில் நடக்கப்போகிற காங்கிரெஸ் மகாசபையின் தலைமையை வகிக்க மிஸ்டர் ராம்ஸே மாக்டானல்ட் இங்கிலண்டை விட்டு இந்தியாவுக்கு அடுத்த டிசம்பர் மாதம் 1-ந்தேதி புறப்படப்போகிறு ரென்று லண்டன் டெயிலி கிரானிகல் பத்திரிகை கூறுகிறது.

(7—9—11.)

துன்மார்க்கத்துக்காக வளர்க்கப்படும் பெண்கள்.

காக்கிநாடா வாசியாகிய மிஸ்டர் V. பிரகாசராவ் கோதாவரி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டுக்கு ஒரு நிருபம் எழுதி, அதில் துன்மார்க்கத்துக்காக விலைக்கு வாங்கப்பட்டாவது, தத்து எடுத்துக்கொள்ளப்பட்டாவது, அல்லது, இயற்கையாய்ப் பிறந்தாவதுள்ள பெண்கள் வளர்க்கப்படும்போது, அவர்களைக் கவர்ன்மெண்ட் கவனித்து வருகிறூர்களென்று காட்டுவதற்காக ஸ்தல அதிகாரிகள் 16-வயதுக்குக் குறைந்த பெண்களை வருஷமொரு முறை ரெஜிஸ்டரில் பதிவு செய்யவேண்டுமென்று ஆலோசனை சொல்லுகிறூர். இப்படி வடக்கே ஐக்கிய மாகாணங்களில் செய்யப்பட்டு வருகிறதாம்.

இந்தியா சட்ட சபை.

இந்த மாதம் 11-ந் தேதி ஸிம்லாவில் கூடப்போகிற இந்தியா சட்டசபை (ராஜப்பிரதிநிதியின் சட்ட சபை) யில் இன்ன நடவடிக்கைகள் நடத்தப்படுமென்று சூசிப்பிக்கும் நடவடிக்கைப்பட்டி யின்னும் தயாராகவில்லை. ஆனால் சமீபத்தில் கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா கெஜட்டில் வெளியான மசோதாக்களும், கிறிஸ்தவக் கலியாண மசோதாவும், கோர்ட் கட்டணை மசோதாவும் அந்நடவடிக்கைப் பட்டியில் இடம் பெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. வழக்கம்போல் ஜனப்பிரதிநிதி மெம்பர்கள் கேள்விகள் கேட்பார்கள். பம்பாய் வியாபாரச்சபையின் பிரதிநிதியாகிய ஆனரெபில் மிஸ்டர் ஆரம்ஸ்டிராங் இந்நாட்டில் தங்க நாணயங்கள் வார்ப்பதைப்பற்றியும், தங்க நாணயங்கள், வெள்ளி காணயங்கள் இவைகள் சம்பந்தமானகவர்ன்மெண்ட் நோக்கத்தைப்பற்றியும் கேள்விகள் கேட்கக் கூடுமென்று கருதப்படுகிறது.

மிஸ்டர் ஆஷின் கொலைக் கேஸ்.

திருநெல்வேலி கலெக்டர் மிஸ்டர் ஆஷைக் கொலை செய்ததில் சம்பந்தப்பட்ட 14 குற்றவாளிகள் வருகிற திங்கட்கிழமை தினம் ஹைகோர்ட்டில் சீப் ஜஸ்டிஸ் சங்கர நாயர், மி-ர் ஜஸ்டிஸ் எயிலிங் இவர்கள் முன்னுல் விசாரணை செய்யப்படுவார்கள். சில குற்றவாளிகள் தரப்பில், ஆனரபில் மிஸ்டர் L. A. கோவிந்தராகவய்யர், மிஸ்டர் தேவதாஸ், மிஸ்டர் V. ரைரு நம்பியார், மிஸ்டர் J. L. ரொஜோரியோ இவர்கள் ஆஜராவார்கள். கேஸ் ஆரம்பிக்கப்பட்டு வக்கீல்கள் ஆஜராகாத குற்றவாளிகள் தரப்பில் கவர்ன்மெண்டாரே வக்கீல்களை நியமிக்கும்படி இந்த் கேஸ் ஒரு வாரம் வரை விசாரணை நிறுத்தி வைக்கப்படுமாம்.

(9—9—11)

கர்ரன்ஸி நோட்டுகள்.

அடுத்த அக்டோபர் மாதம் முதல் கர்ரன்ஸி நோட்டுகள் அவைகள் முழு நோட்டுகளிருந்தாலுஞ் சரி, அரை நோட்டுகளாயிருந்தாலுஞ் சரி, இன்ஷூர் செய்யப்பட்டிருந்தாலன்றி தபால் மூலமாய் அனுப்பப்பட மாட்டாதென்று உத்தரவு பிறந்திருக்கிறது.

டெல்லி முனிசிபாலிடியாரும் மகாராஜா சக்ரவர்த்தியும்.

மகாராஜா சக்கரவர்த்திக்கும் மகாராணி சக்கரவர்த்தினிக்கும் டெல்லி முனிசிபாலியார் ஒரு அட்ரெஸ் வாசித்துக்கொடுக்கப் போகிருர்கள். அந்த அட்ரெஸ்ஸை வைத்துக்கொடுக்க ரூபா 2000 முதல் ரூபா 5000 வரை செலவில் ஒரு சிமிழ் செய்ய உத்தேசித்து அதற்கு மாதிரி யொன்று வேண்டுமென்று தெரியப்படுத்தி யிருக்கிருர்கள். அந்தச் சிமிழ் தங்கத்தில் செய்யப்படும்.

(11—9—11).

திருநெல்வேலி சதிக் கேஸ்.

(ஹைகோர்ட் ஸ்பெஷல் பென்ச் முன்பாக.)

கலெக்டர் மிஸ்டர் ஆஷின் கொலையை அஸ்திவாரமாகக்கொண்டு உண்டாயிருக்கும் மேற்படி கேஸை விசாரிக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட கோர்ட்டு இன்று காலே 11-35-க்கு இரண்டாவது அப்பெல்லேட் கோர்ட் கட்டிடத்தில் கூடியது. போலீஸ் காவல் ஜாஸ்தியாயிருந்தது. வக்கீல்களிலும் சிலரே உள்ளே போகவிடப்பட்டார்கள். ஆனரபில் மிஸ்டர் சீப் ஜஸ்டிஸ் ஸர் ஆர்னல்ட் ஒயிட், ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன்நாயர், ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏயிலின், மூவரும் வந்து ஸ்பெஷல் பென்சாக ஆசனத்தி லமர்ந்தார்கள். அதற்குச் சில நிமிஷங்களுக்கு முன் குற்றவாளிகளான 14-பேரும் புதிதாய் அமைக்கப்பட்ட கூட்டில் வரிசையாக நிறுத்தப்பட்டார்கள். ஒவ்வொருவரும் இருபுறமும் உருவிய கத்தியோடு நின்ற இரண்டு போலீஸ் கான்ஸ்டேபில் இடையில் நின்ருர்கள். சார்ஜ் ஒவ்வொரு குற்றவாளி முன்னும் படிக்கப்பட, ஒவ்வொருவரும் தாம் குற்றவாளியல்லவென்று சொன்ஞர்கள். அப்புறம் மிஸ்டர் ஜான் ஆடம் எழுந்து இந்தக் கேஸில் பாரிஸ்டர்கள் மட்டுமே ஆஜராகிப் பேசக்கூடும் என்று விதிக்க வேண்டு மென்று கேட்க, சீப் ஜஸ்டிஸ் அப்படி தடைபடுத்தத் தமக்கு இஷ்டமில்லே யென்று சொல்லிவிட்டார். இந்தக் கேஸில் 4 அப்ரூவர்க ளிருக்கிருர்கள். முதற் குற்றவாளியைத் தவிர மற்றெவ்வொருவருக்கும் டிபென்ஸின் பொருட்டு வக்கீல்கள் ஏற்பட்டிருக்கிருர்கள். கேஸ் வியாழக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட் டிருக்கிறது. அன்று சாட்சி விசாரணை ஆவகும்.

(12—9—11).

மொராக்கோ யுத்தம்.

லண்டன், ஸெப்டம்பர் 9—

மாடரிட்டு:—இன்று காலே மூர்ஜாதியார் மேலில்லா வெளற விடத்தில் ஸ்பெயின் படையைத் தாக்கிஞர்களாம். ஆனல் பெரு நஷ்டத்தோடு தோலவியுற்ருர்களாம். ஸ்பெயினின் நஷ்டமோ ஒரு ஆபீஸரும் 9 பேரும் கொல்லப்பட்டதும், ஒரு ஆபீஸரும் 25 பேரும் காயம்பட்டதுமாம். பின்னும் சேனைகள் ஸ்பெயினிலிருந்து அனுப்பப்பட்டு வருகின்றன.

ஸ்பெயினும் மொராக்கோவும்.

லண்டன், ஸெப்டம்பர் 11—

ஸ்பெயின் கவர்ன்மெண்டார் மேலில்லாவிலுள்ள தமது படையோடு சேர்ந்து கொள்ளும்படி 3000 வீரர்களை அனுப்பி யிருக்கிருர்கள்.

ராஜத் துவேஷத்துக்கு ஜாமீன்.

பம்பாய் மகாணத்திலே கெய்ரா டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரெட் ஆமதாபாத் வக்கில் சோமேசுவ பட்டன்பவர் ராஜத்துவேஷத்தைப் பாவச் செய்யாம லிருப்பாரென்ற உறுதி ஏற்படும்படி, தலைக்கு ரூ 10,000 வீதம் இரண்டுபேர்வழிகளை தமக்குப் பதிலாய் ஜாமீன் கொடுக்கச் சொல்லவேண்டு மென்றும், இல்லாவிட்டால், ஒரு வருஷம் வெறுங்காவல் தண்டனைக்குள்ளாக வேண்டுமென்றும் உத்தரவு செய்தார். அந்த உத்தரவின்மேல் பம்பாய் ஹைகோர்ட் அப்பலேட் தரப்பில் ஒரு அப்பீல் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட, சீப் ஜஸ்டிஸ் ஸர் B. ஸ்காட்டும் மி-ர் ஜஸ்டிஸ் ரஸ்ஸலும் அந்த அப்பீலே பொப்புக்கொண்டதுமன்றி சோமேசுவரப்பட்டை அவரிடம் 2000-ரூபாய்க்கு ரொக்க ஜாமீனும் ரூபாய் 1000-க்கு இரண்டு நபர் ஜாமீன்களும் வாங்கிக்கொண்டு விட்டு வைத்திருக்கிருர்கள்.

ஹைகோர்ட் ஸ்பெஷல் டிரைபுனல்.

ஆஷ் கொலைக் கேஸையும் திருநெல்வேலி சதிக்கேஸையும் விசாரிக்க ஏற்படுத்தப்பட்டிருக்கும் விசேஷக்குற்ற விசாரணைக் கோர்ட்டார் அந்தக் கேஸ்களில் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பவர்கள் சொல்லிக்கொள்ளுகிறவர்களைக் கேட்கவும் ஏதேலும் விண்ணப்பங்கள் செய்து கொள்ளப்படுமானல் அவைகளை ஏற்றுக்கொள்ளவும் நேற்று தங்கள் கோர்ட்டை நடத்திஞர்கள். அக்கோர்ட் நடவடிக்கைகள் பின் வரும் பத்தியில் விஸ்தாரமாய் எழுதப்பட்டிருக்கின்றன. அக்கேஸ்களில் 14-பேர் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிருர்களென்று நாம் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேம் அந்த 14-பேர்வழிகளும் பிரிடிஷ் ராஜாவுக்கு விரோதமாய்ச் சண்டை செய்ய சதி ஆலோசனை செய்ததாகவும், ஆஷின் கொலைக்கு உடந்தையாயிருந்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட் டிருக்கிருர்கள். இரண்டாவது ரிமாண்ட் கைதி சங்கரகிருஷ்ண அய்யர் மணியாச்சியில் ஆஷின் கொலைக்கு நேரே உடந்தையா யிருந்ததாகப் பிரத்தியேகமாய் சார்ஜ் செய்யப்பட்டிருக்கிருர்.

தென்னிந்தியா ரயில்வே கம்பெனியார் கவனிக்க வேண்டும்.

இன்று மித்திரனில் வேறொரு பத்தியில் ஒரு இந்தியா மாது சில தினங்களின் முன் ரயில்வேப் பிரயாணத்தில் தாம் அனுபவித்த கஷ்டங்களைப் பற்றிக் கூறும் கடிதம் ஒன்றைப்பிரசுரிக்கிறேம். 19-8-11-ல் ஆடுதுறையிலிருந்து மதராஸ் வந்தபோதும், மறுபடி எழுமூரிலிருந்து திரும்பிப் போனபோதும் முறையே மதுரை பாஸென்ஜரிலும், எக்ஸ்ப்ரெஸிலும் ஸ்திரீகளுக்கான வண்டிகளோ, கக்கூஸ் சௌகரியமோ கம்பெனியார் ஏற்படுத்தவில்லையென் றறிய யாரும் ஆச்சரியமடைவார்கள். இந்திய மாதர்களின் தன்மையைக் கருதி நெடுந்தூரப் பிரயாணத்துக்கே ஹும் வசதிகள் அமைப்பது ரயில்வேயாரின் பொறுப்புகளி லொன்று என்று நாம் நினைக்கிறேம். அவ் வாறு அமைக்காததால் நேர்ந்த சங்கடங்களைப் பற்றி நம் சகோதரி எழுதியிருக்கும் கடிதந், கம்பெனியாருக்குத் தக்கபடி இவ்விஷயத்தில் தம் கடமை யுணர்ச்சியை யுண்டாக்கு மென்று நம்புகிறேம். சென்னைச் சட்டசபை மெம்பராயுள்ள இந்தியர்களும் ரயில்வேப் பிரயாணத்தில் பொது ஜனங்களின் ஏற்பாடுகளில், எம்மட்டும் தென்னிந்தியாக் கம்பெனியார் கவனித்து வருகிருர்களென்று ஒரு கேள்வியால் விசிதப்படுத்துவது யுக்தமாகும்.

இந்தியாக் கவர்ன்மேண்ட் வரவு செலவு மந்திரி.

இப்போதைய ஏற்பாட்டின்படி இந்தியா கவர்ன்மெண்ட் வரவு செலவு மந்திரி ஆனரெபில் ஸர் G.F. வில்ஸன் அடுத்த அக்டோபர் மாதம் 23-ந் தேதி சிம்லாவை விட்டுப் புறப்பட்டு நேரே கல்கட்டாவுக்குச் செல்லுகிருர்.

விவசாயிகளுக்குத் தக்காவி.

இந்த பஞ்சக் காலத்தில் விவசாயிகளுக்குக் தக்காவியாய்க் கடன்கொடுக்க இந்தியாக் கவர்ன்மெண்டார் 35-லட்சம் ரூபாய் விசேஷ திரவிய சகாயஞ்செய்திருக்கிருர்களென்று சொன்னேம் அத்தொகைஐக்கிய மாகாண விவசாயிகளுக்கு தக்காவியாகக் கடன் கொடுப்பதற்காக அந்த மாகாணக் கவர்ன்மெண்டாரின் வேண்டுகோளின் மேல் கொடுக்கப்பட் டிருப்பதாய் இப்போது தெரிகிறது.

ஸ்ரீ காசியில் சிவில் விவாக மசோதா.

காசி ஹிந்துக்கள் அவ்வூர் தச அஸ்வமேத கட்டத்தில் மகா மகோபாத்தியாயர் பண்டித சிவகுமார சாஸ்திரிகள் அக்கிராசனம் வகித்திருக்க, ஒரு மீட்டிங் கூடி ஆனரபில் மிஸ்டர் பூபேந்திரநாத் பாஸுவின் சிவில் சிவில் மசோதாவைக் கண்டித்துப்பேசிஞர்கள். அந்த மீட்டிங்கின் நடவடிக்கைகளில் படித்த ஹிந்துக்கள்கூடக்கலந்து அம்மசோதாவுக்குவிரோதமாய்ப் பேசினதாய்த் தெரிகிறது.

(13—9—11).

நிஜாம் அரசரும் டேல்லி தர்பாரும்.

தமது தகப்பனர் இறந்துபோய் விட்டபடியால் புதிய நிஜாம் அரசர் டெல்லி தர்பாருக்குப் போகிருரோ, இல்லேயோ, என்று நேயர்கள் சந்தேகிக்கக்கூடும். புதிய நிஜாம் அரசர் தமது தகப்பனர் இறந்துபோய்விட்டாரென்று தாம் டெல்லி தர்பாருக்குப் போவதை நிறுத்தப்போகிருரில்லே. அவர் டெல்லி தர்பாருக்குச் சென்று மகாராஜா சக்கரவர்த்தியிடம் தமக்குள்ள ராஜ விசுவாசத்தைக் காண்பித்துவிட்டு வருவதே சரியாகும்.

(14—9—11).

எட்ஞ எரிமலே.

லண்டன், ஸெப்டம்பர் 12—

இம்மலே இன்றைக்கும் தீ கக்குகிறது. ஒண்டிநீரோவிலும் அக்கினிவாய் பிளக்க ஆரம்பித்து விட்டது. அடிக்கடி பூகம்பமும், நெருப்பு மழையும் சம்பவிக்கின்றன. லாவாவென்ற உலோக முருகிய அக்கினிக்குழம்பு 300-மீடர் அகலமுள்ளதாய் ஓடி வருவதால், ரயில்வேக்களுக்கு அபாயம் விளையும் போ லிருக்கிறது.

லண்டன் ஸெப்டம்பர், 13—

இன்று இந்நெருப்புக் குழம்பாற்றின் வேகம் பயங்கரமான இருக்கின்றது. இதற்குள் இது 7 மைல் விஸ்தீரணத்தை மூடிவிட்டதாம். அதனல் திராக்ஷைப்படுகை யனைத்தும் சேதமாயின சில குடிசைகளும் அழிந்தன வென்கிருர்கள்.

ஸ்பெயின் சேனை தாக்கப்பட்டது.

போர் மிகக் கொடுமையாம்.

மேலில்லா—மூர் ஜாதிப்படை கெர்ட்டு நதிக்கரையில் ஸ்பெயினின் படையைத் தாககலும் இருதிறத்தார்க்கும் கொடும்போர் விளைந்ததாம். ஸ்பெயின் கக்ஷியில் ஒரு கர்னலும், 2 ஆபீஸர்களும், 13 ஸோல்ஜர்களும் கொல்லப்பட்டதோடு, 43 வீரருக்கும் காயமாம். மூர் கக்ஷியிலோ 76 மரணமும் பல பேருக்கும் காயமுமாம்.

இந்தியாவிற்குத் தங்கம்.

லண்டன், ஸெப்டம்பர் 13—

போர்ட்டு ஸெயிடு:—அரோபியா என்னும் பேருடைய கப்பலில் இந்தியாவுக்கென்று 4000-பவுன் ஏற்றப்பட்டிருக்கிறதாம்.

(15—9—11).

மாப்பிள்ளேகளின் விலே.

விவாகத்துக்குப் பிள்ளேகள் வைத்துக்கொண்டிருக்கும் பெற்றேர்கள் தங்கள் பிள்ளேகளின் விவாக காலத்தில் பெண் வீட்டுக்காரரிடமிருந்து பெரிய

தொகைகள் வரதக்ஷிணையாகப் பேசி அந்தத் தொகைகளைப் பெண் வீட்டுக்காரர்கள் அந்தச் சமயம் கொடுக்கச் சௌகரியமில்லாவிட்டால் அவர்களிடம் "பிராமிஸரி நோட்" வாங்குகிருர்கள் என்று திவான்பகதூர் ரகுநாதராவ் எழுதுகிருர். பெண்வீட்டுக்காரிடமிருந்து முடையான சமயங்களிலெல்லாம் மாப்பிள்ளைகள் பணம் வாங்கும் வழக்கம் இருக்கிறதென்று திவான் பகதூர் ராஜரத்ன முதலியார் சமீபத்தில் வெகு கோபமாய்ப் பத்திரிகைக்கு எழுதினுர். சாஸ்திரத்தில் ஆதாரமில்லாததும், சில வருஷத்துக்கு முன்னுல் அனுஷ்டானத்தில் இல்லாததுமான இந்த மகா கொடிய வழக்கம் எப்படி நம்மவருக்குள் உண்டா தெரியவில்லை. ஜாதி உட்பிரிவு வித்தியாசங்களாலும் சிறு பெண்களுக்கு விவாகம் செய்வதாலும் வரதக்ஷிணை கொடுக்கும் வழக்கம் உண்டாகி அநேக குடும்பங்களைக் கெடுத்து வருகின்றது. இந்த வழக்கம் தமிழருக்குள்ளேயே அதிகமா யிருக்கிறதென்று தோன்றுகிறது. இதற்கு விமோசனத்தை நம் பெரியோர்கள் ஒன்று சேர்ந்து ஆலோசனை செய்து தேடினுலொழிய உயர்குல ஹிந்துக்களின் குடும்பங்கள் பல அழிந்துபோய்க்கொண்டு தான் இருக்கும். (*Swadesmitran*).

NATTUKOTTAI CHETTI'S ACCOUNTS.

நாட்டுக்கோட்டை செட்டிகளின் கணக்கு.

வித்தியாபாது என்னும் மாதாந்தரப் பத்திரிகையின் ஆடி மீ த்து சஞ்சிகையில் 'நாட்டுக்கோட்டையர்கும் மூன்று வருஷக் கணக்கும்' என்ற தலைப்பெயரின் கீழ் மு. சின்னையா செட்டியார் ஒரு வியாசம் எழுதியிருக்கிருர். நாட்டுக்கோட்டை செட்டிகள் பல தூர தேசங்களில்கூட வியாபாரம் செய்து வருகிருர்கள். முதலாளி ஒரு ஊரிலிருந்துகொண்டு அங்கங்கே ஏஜெண்டுகளை அனுப்பி வியாபபாரம் நடத்துகிருர். ஒரு ஊருக்குப்போகும் ஏஜெண்டு மூன்று வருஷம் அங்கேயே இருந்து வேலைசெய்து லாப நஷ்டத்துக்குக் கணக்குச் சொல்லவேண்டும். இந்த மூன்று வருஷ காலமும் பெண்சாதி குழந்தைகளை விட்டுப் பிரிந்தே இருக்கவேண்டி யிருக்கிறது ஏனென்றுல் நாட்டுக்கோட்டை மார்களின் ஸ்திரீகள் கப்பலேறக் கூடாதாதலால் அவர்கள் தூரதேசம் போகும் தங்கள் புருஷர்களோடு கூடப்போக முடியாமல் பின் தங்கி விடுகிருர்கள். ஆகவே மூன்று வருஷம் தனிமையாக இருக்கமுடியாமல் தூரதேசத்து ஏஜெண்டுகள் வேசிகளிடத்திற்போய் வியாதியைவாங்கிக் கொள்ளுகிருர்கள். தற்காலத்தில் அன்னிய நாடு சென்று வருகிற இளைஞர்கள் பெரும்பாலும் நோயுற்றவர்களாகவே திரும்பிவருவது இதற்கு ஸாக்ஷியாகும். இதனுல் சந்தான விருத்தி குறைவதோடு நோயுற்று அற்ப ஆயுளாசப் போகிற குழந்தைகள் உண்டாகவும் ஹேதுவாகிறது. இது முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயத் தவிர, புருஷனோடு போகாமல் பின்னே தங்கிவிடும் பெண்களுடைய பரிதாப நிலைமையையும் கவனிக்கவேண்டும். இப்படிப்பட்ட கஷ்டங்களில்லாமல் மூன்று வருஷத்துக்கு ஏஜெண்டு வேலை பார்த்து கணக்குக் கட்டவேண்டுமென்னும் வழக்கத்தை நிறுத்தி ஒன்றரை அல்லது இரண்டு வருஷமாக்குவது நலமென்று சின்னையா செட்டியார் சொல்லுகிருர். இந்த விஷயத்தை நாட்டுக்கோட்டை செட்டிப்பிள்ளைகள் கவனிக்கவேண்டும்.

PORAMBOKES.

புறம்போக்குகள்.

ஆனரபில் திவான் பகதூர் ஆர். ரகுநாத ராவ் அடியிற் கண்டவாறு ஹிந்துப் பத்திரிகைக்கு எருதுகிருர்.

(1) புறம்போக்கு என்டது சாகுபடி செய்யாததும் அல்லது செய்ய முடியாததுமான நிலங்கள்.

(2) இவைகளை ராஜாங்கத்தார் (1) பொது ஜனங்களுடைய ட்ரஸ்டியாகவோ, (2) ஒரு வகுப்பாரின் ட்ரஸ்டியாகவோ, அல்லது (3) தனி மிராசுதாரனுடைய ட்ரஸ்டியாகவோ இருந்து, காத்து வருகிருர்கள்.

மூன்ருவதாகச் சொன்ன தனி மிராசுதாரனுக்குச் சொந்தமான புறம்போக்கு யாவை யெனில் (1) தீர்வைப்பட்ட நிலங்களின் கரைகள், (2) நீர்பாயும் கண்ணிகள், (3) மனைக்கட்டுகள். இவை ஸெட்டில்மெண்டு வரையில் தீர்வைப்படாமலிருந்தன.

இரண்டாவது சொன்ன வகுப்பாருக்கு ஸொந்தமான புறம்போக்கு (1) ஆலயங்கள், (2) ஸ்நாநகட்டடங்கள், (3) குடிநீர்க் கிணறுகள், (4) குளிக்கும் குளங்கள், (5) விரைவிடும் குளங்கள், (6) விளையாட்டிடங்கள், (7) ஸமசானங்கள் அல்லது புதைக்கு மிடங்கள் என்ற இவைகள். இவை நிலத்தீர்வையோடு சேர்த்துத் தீர்வைப்படக்கூடியவல்ல.

முதலாவது சொன்ன பொதுஜன ஸொத்தான புறம்போக்கு என்றவை (1) மலைத்தொடர்கள் (2) கடற்பரப்புகள் (3) மனுஷிய ஸஞ்சாரமற்ற (இரும்பு) சிறு காடுகள் (4) வற்ருத ஊற்றுள்ள ஆறுகள் (5) ராஜபாட்டைகள் (6) பெரிய ஏரிகள் (இவை இயற்கையாக அமைந்தவானுலும் சரி, பட்ளிக் நிதியைக்கொண்டு செயற்கையாக அமைக்கப்பெற்றவானுலும் சரி (7) பப்ளிக் நிதியைக்கொண்டு அமைத்த கிணறுகள், தோப்புக்கள் சத்திரங்கள் முதலியன.

தரிசு அல்லது தீர்வைப்படாத பண்படுத்தக்கூடிய நிலம்:— இது யாதெனில் சாகுபடி செய்யக்கூடியதேனும் ஸாகுபடி செய்ததாக ஒரு புருஷாயுசில் அறியப்படாதது. இதற்கு அனுதில் தரிசு என்றும் பெயர்.

தீர்வைத் தரிசு என்பது ஒரு காலத்தில் ஸாகுபடி செய்யப்பட்டுத் தீர்வைப்பட்டும் இருந்து இப்பொழுது ஸாகுபடி செய்யப்பெருது மிராசுதாரனுல் கவர்ன்மெண்டுக்குக் கைவிடப்பட்ட நிலம். கவர்ன்மெண்டார் இதைச் சில நிபந்தனைகளின் பேரில் யதேச் சாவினியோகம் செய்யலாம்.

இத்தரிசில் வேறொருவகையுமுண்டு. அது தீர்வைப்பட்டதாகவும், சில காரணங்களால் தீர்வைப்படாததாகவும் இருக்கும். ஆனுல் ஸாகுபடி செய்யப்படாதது. மிராசுதாரனுடைய பட்டாவில் மட்டும் இது கண்டிருக்கும்.

சுமார் 80 வருஷத்திற்கு முன்பே எடுத்த பைமாஷ் கணக்கில் மேற்கண்டபடி நிலங்களை வகுத்திருக்கிறது. இந்தக் கணக்கு குடியையும் கவர்ன்மெண்டையும் சோதுப் பந்தப்படுத்துவதாய் ஏற்பட்டது

இனும் நிலங்கள் :—இவை இரண்டாவது மூன்ருவது வகுப்புப் புறம்போக்கை ஒருவாறு ஒக்கும். இந்த இனும் நிலங்களை அனுபவிக்கும் இனும்தாரர்கள் அவைகளைப் பெற்றுக் கொள்ளும்போது எந்த நிபந்தனைகளின் பேரில் பெற்றுக் கொண்டிருக்கிருர்களோ அந்த நிபந்தனைகளுக்கு இனும்தாரர்களும் இராஜாங்கத்தாரும் கட்டுப்பட்டவர்களாவார்கள். கைங்கரிய இனுங்கள் (அதாவது ஊழியமான்யம்) கைங்கரியம் செய்ததற்குக் கூலியாகவோ, சிரம பரிகாரார்த்தமாகவோ விடப்பட்டவை. மற்ற இனும் நிலங்கள் இரண்டாவது மூன்ருவது வகுப்பைச்சேர்ந்தவை. அதாவது ஒரு வகுப்பாரைச் சேர்ந்தனவும் ஒரு பட்டாதாரனைச் சேர்ந்தனவுமாகஇருக்கும். பிற்கண்ட சட்டம் இனும் நிலத்திற்குப் பொருந்தியவை.

4-வது ஆக்டு சென்னை 1862.

4-வது ,, சென்னை 1896.

8-வது ,, சென்னை 1869.

செப்டம்பர் மாதம் 11-ந்தேதி திங்கட்கிழமை.

(சீப் ஜஸ்டிஸ, மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர், மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங் இவர்கள் முன்பாக.)

திருநெல்வேலி கலெக்டர் கொலைக் கேஸ்.

இன்று காலையில் 10 மணி முதல் ஹைகோர்ட்டைச்சுற்றி போலிஸ்தார்கள் பந்தோபஸ்துசெய்து நாலா பக்கத்திலும் காவல் காத்துக்கொண்டு வந்தார்கள். திருநெல்வேலி கலெக்டர் கொலைச் சம்பந்தமாய் 14 கைதிகள் கோர்ட்டிற்கு கொண்டுவரப்பட்டதும், ஒரு பெரிய சத்த முண்டாயிற்று. ஜனங்கள் குற்றவாளிகளைப்பார்க்க இந்தப்பக்கம் அந்தப்பக்கம் அலைந்து ஓடிக்கொண் டிருந்தார்கள். ஆனுல் போலிஸ்தாரர்கள் குற்றவாளிகள் யாருடனும் பேச அனுமதி கொடுக்கவில்லை.

கேசில் கீழ் சொல்லப்பட்ட 14 குற்றவாளிகள் கோர்ட்டில் கூட்டில் நிறுத்தப்பட்டாரகள். அவர்களைச்சுற்றி போலிஸ்தாரர்கள் கத்தியை உருவிக்கொண்டு பாரா கொடுத்து வந்தார்கள் :—

(1) நீலகண்ட பிர்ம்சாரி
(2) சங்கர கிருஷ்ணய்யர்
(3) மடத்துக்கடை M. சிதம்பரம் பிள்ளை
(4) முத்துகுமார சுவாமி பிள்ளை
(5) சுப்பராய பிள்ளை
(6) ஜகன்னுத அய்யங்கார்
(7) ஹரி ஹர அய்யர்
(8) பாபு பிள்ளை என்றும் இராமசாமிபிள்ளை
(9) V. தேசிகாச்சாரி
(10) வேம்பு அப்பர் என்றும் மகாதேவய்யர்
(12) சாவடி அருணுசலம் பில்ளை
(12) அழகப் பிள்ளை
(13) வந்தேமாதரம் சுப்பிரமணிய அய்யர்
(14) பிச்சுமணி அய்யர் என்னும் வெங்கடாசல அய்யர்.

இந்த 14 குற்றவாளிகள் பேரிலும் குற்றப் பத்திரிகை ரிஜிஸ்திராரால் வாசிக்கப்பட்டது. யாவரும் குற்றம்செய்யவில்லை யென்ருர்கள். இவர்கள் மேல் மூன்று சார்ஜ்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவை யாவன :—

முதல் சார்ஜ்:—1911-ம் வருஷம் ஜனவரிமாதம் முதல் தேதிக்கும் 1911-ம் வருஷம் ஜூன் மாதம் 17-ந் தேதிக்கும் இடையில், நீங்கள் தென்காசி, தூத்துக்குடி. செங்கோட்டை, புனலூர் ஒட்டப்பிடாரம் முதலிய விடங்களிலும், வேறு சில விடங்களிலும் மாட்சிமை தங்கிய இந்திய ராஜ சக்கரவர்த்தியவர்களுக்கு விரோதமாகப் போர் செய்யவும் போர் செய்ய எத்தனிக்கவும் சதியோசனை செய்ததாகவும், மாட்சிமை தங்கிய இந்திய ராஜ சக்கரவர்த்தி யவர்களிடமிருந்து பிரிட்டிஷ் இந்தியாவின் ஆட்சியை அபகரிக்கச் சதியோசனை செய்ததாகவும், இந்தியா கவர்ன்மெண்டையும், சென்னை கவர்ன்மெண்டையும் பலப்பிரயோகம் செய்து அல்லது செய்வதாகக் காட்டிப் பயமுறுத்தும்பொருட்டுச் சதியோசனை செய்ததாகவும், அதனுல் இ. பி. கோ. 121 A செக்ஷன்படியானதும் மதராஸ் ஹைகோர்ட்டின் விசாரணைக்கு உட்பட்டதுமான குற்றஞ் செய்ததாகவும்,

2-வது சார்ஜ்:—மேற்சொன்ன குற்றத்தோடு மேற்சொன்ன காலத்திலேயும் மேற்கூறிய இடங்களிலேயும் ஐரோப்பியர்கள் அனைவரையும் கொல்வதைப் பல நோக்கங்களில் ஒன்ருகக்கொண்ட ஓர் சதியோசனையில் கலந்து 1911-ம் வருஷம் ஜூன் மாதம் 17-ந் தேதி திருநெல்வேலி டிஸ்டிரிக்ட்டு மேஜிஸ்ட்டிரேட்டா யிருந்த ராபர்ட் வில்லியம் டி. எஸட்கார்ட்டு ஆஷ் என்பவரை வாஞ்சி ஐயர் கொலை செய்ததில் நீங்கள் உடந்தையாயிருந்ததாகவும், அதனுல் இ. பி. கோ. 302-109-111 ஆகிய செக்ஷன்களில் அடங்கியவும் மதராஸ் ஹைகோர்ட்டு விசாரணைக்கு உட்பட்டவுமான குற்றங்களைச்செய்ததாகவும்,

3-வது சார்ஜ்:—இக்கேசில் 2-வது குற்றவாளியாகிய சங்கர கிருஷ்ணய்யர் என்னும் நீர், மேற்சொன்ன ராபர்ட்டு வில்லியம் டி. எஸ்ட் கார்ட்டு ஆஷ என்பவரைக் கொலை செய்யும் பொருட்டு, வாஞ்சி அய்யருடன் சதியோசனைசெய்து 1911-ம் வருஷம் ஜூன் மாதம் 17-ந்தேதி மணியாச்சி ரயில்வே ஸ்டேஷனில் மேற்படி வாஞ்சி அய்யர் மேற்படி கலெக்டர் ஆஷைக் கொலை செய்ததில் உடந்தையா யிருந்ததாகவும், மேற்படி ஆஷைக்கொலைசெய்தபோது நீர்கூட இருந்ததாகவும்' அதனுல் இ. பி. கோ. 302-104 செக்ஷன்களின் அடங்கியதும், மதராஸ் ஹைகோர்ட்டு விசாரணைக்கு உட்பட்டதுமான குற்றத்தைச் செய்ததாகவும்,

திருநெல்வேலி சப் டிவிஷன் மாஜிஸ்திரேட்டும், ஹிஸ் மாஜிஸ்டினுடைய ஜஸ்டிஸ் ஆப்-தி-பீஸுமம் ஆனரபில் மிஸ்டர் A. M. G C. டாம்போவினுல் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறீர்கள்.

இரண்டாவது குற்றவாளியாகிய சங்கர கிருஷ்ணய்யர் திருநெல்வேலி கலெக்டர் சுடப்பட்டபொழுது மணியாச்சி ஸ்டேஷனில் இருந்து சுட்டவனுக்கு ஒத்தாசை செய்ததாய்ச் சாட்டிய குற்றம் பிரத்தியேகமாக விசாரணை செய்யப்படவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது.

கவர்ன்மெண்டு தரப்பில், பப்ளிக் பிராசிகூடர் மி-ர் C. F. நேபியர், ஸ்பெஷல் பப்ளிக் பிராசிகூடர் ஆனரபில் மிஸ்டர் T. ரிச்மெண்டு, திருநெல்வேலி பப்ளிக் பிராசிகூடர் மிஸ்டர் சுந்தர சாஸ்திரி, ஆகிய மூவருடன் அவர்களுக்கு சகாயமாக C. I. D. டிப்டி சூபரின்டெண்டு மிஸ்டர் வெங்கோபராவ் ஆஜராயிருந்தார்.

மெஸர்ஸ் C. P. ராமஸ்வாமி அய்யர், C. K. மகாதேவ அய்யர் ஆகிய இரண்டு வக்கீல்களும் திருவாங்கூர் கவர்ன்மெண்டின்பொருட்டு கேஸ் நடவடிக்கையைக் கவனித்துவந்தார்கள்.

முதல் குற்றவாளி தரப்பில் யாரும் ஆஜராகவில்லை.

மற்றக் குற்றவாளிகள் தரப்பில் கீழ் சொல்லப்பட்டவர்கள் ஆஜரானுர்கள் :—

லாயர்கள்.	குற்றவாளிகள்,
மிஸ்டர் T. பிரகாசம் பாரிஸ்டர்	10, 2,14.
,, M. D. தேவதாஸ் பாரிஸ்டர்	3, 8,
,, J. L. ரொஜேரியோ வக்கீல்	

மெஸ்ஸர்ஸ் T. M. கிருஷ்ணசாமி அய்யர், P. நரசிம்மராவ் வக்கீல்கள்	4, 5,
மிஸ்டர் N. K. ராமசுவாமி அய்யர், வக்கீல்	6
ஆனரேபில் திவான் பகதூர் L. A கோவிந்தராகவய்யர், வக்கீல்	7
மிஸ்டர் M. G. கிருஷ்ணசாமி அய்யர் வக்கீல்	9
மிஸ்டர் முத்தய்யா முதலி வக்கீல்	11
,, ஸ்ரீனிவாச கோபாலாச்சாரி அட்வோகேட்	12
மெஸ்ஸர்ஸ் V. ஸாரு நம்பியார், G. குப்புசாமி அய்யர் வக்கீல்கள்.	13

முதற் குற்றவாளிக்கு டிபன்ஸ் வக்கீல் வைத்துக்கொள்ளச் சக்தியுண்டா, பிரியமுண்டா வென்று சீப் ஜஸ்டிஸ் கேட்க, பப்ளிக் பிராசிக்யூடர் எழுந்து "இக் குற்றவாளியின் ஜீவேஜியைப்பற்றித் தெரியாது இவர் தகப்பன் தஞ்சாவூர் ஜில்லாவில் விவசாயம் செய்கிறார். சென்ற இரண்டு வருஷமாக இக்குற்றவாளிக்கு ஸ்திரமான வாசஸ்தலமோ, ஜீவனமார்க்கமோ இருந்ததில்லை. இக்குற்றவாளிக்கு விரோதமாய் வலுத்த சாட்சியிருக்கிறது" என்றார்.

குற்றவாளிகள் தரப்பில் வக்கீல்கள் கேசை நிறுத்திவைக்க வேண்டியதென்று மனுச்செய்துகொள்ள அதேமாதிரி உத்தரவளிக்கப்பட்டது.

மிஸ்டர் ஜான் ஆடம் பாரிஸ்டர், எழுந்து இந்தக் கேசில் பாரிஸ்டர்கள் தவிர மற்ற யாரும் ஆஜராகக்கூடாதென்று உத்தரவளிக்கவேண்டுமென்று ஒரு மனுச் செய்துகொள்ள, சீப் ஜஸ்டிஸ் அம்மாதிரி உத்தரவளிக்க மாட்டோமென்றார். இத்துடன் கோர்ட்டு கலைந்தது.

(இரண்டாவது தினம்.)

செப்டம்பர் மாதம் 14-ந்தேதி வியாழக்கிழமை.

(சீப் ஜஸ்டிஸ், மிஸ்டர் ஜஸ்டிஸ சங்கரன்நாயர், மிஸ்டர் ஜஸ்டிஸ எயிலிங் இவர்கள் முன்பாக.)

திருநெல்வேலி கலெக்டர் கொலைக் கேஸ்.

பிராஸிகியூஷன் தரப்பில் மிஸ்டர் நேபியர் கேஸை யெடுத்துச்சொல்ல ஆரம்பிப்பதற்கு முன்னேயே திவான் பகதூர் L. A. கோவிந்தராகவய்யர் இரண்டு கவுண்டுகளும் (சார்ஜுகளும்) ஒரு சதியைச் சுட்டிப்பேசுகின்றன வானாலும் இன்னாரோடு குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் 14-பேர் வழிகளும் சதி செய்தார்களென்று சொல்லப்பட்டிருக்கவில்லை யென்றும், சதி செய்ய இரண்டு பேர்வழிகள் இருந்திருக்க வேண்டுமென்றும் வாதித்தார். ஜட்ஜிகள் அவரை ஆதாரங்கள் கேட்க அவர் ஆதாரங்கள் எடுத்துக்காட்டி இப்போது இருக்கிறபடி கைதிகளின்மேல் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சார்ஜ்கள்குறை (Defective) சார்ஜ்களாகுமென்றார் அதன் மேல் மிஸ்டர் நேபியர் கைதிகள் ஒருவரோடொருவர் சதிசெய்தார்களெனவும், இறந்துபோய்விட்ட வாஞ்சி அய்யரோடும், தர்மராஜய்யரோடும் வேறு சிலரோடும் சதிசெய்தார்களெனவும் சார்ஜ்களை மாற்றலாமென்று தெரிவித்துக்கொள்ள, அப்படியே சார்ஜ்கள் மாற்றப்பட்டு கைதிகளுக்கு வாசித்துக் காட்டப்பட்டன. அவர்கள் அவைகளைக் கேட்டுவிட்டுத் தாங்கள் குற்றவாளிகளல்ல வென்று வாதித்தார்கள்.

அப்பால் மிஸ்டர் நேபியர் கவர்ன்மெண்ட் பக்கம் கேஸை யெடுத்துச்சொல்ல ஆரம்பித்து: சார்ஜுகளைப்பற்றிய செக்ஷன்களைக் குறித்துச் சிறிது பேசிவிட்டு, ராஜாவுக்கு விரோதமாய்ச் சண்டைசெய்தல் முதலியன, அவைகளைப் பொறுத்தமட்டில் இங்கிலீஷ் சட்டத்துக்கும் இந்தியன் சட்டத்துக்குமுள்ள வித்தியாசத்தை யெடுத்துக்காட்டினார். கொலைக்குற்றத்தைப்பற்றிப்பேச ஆரம்பித்து ஆஷின் கொலை ஒரு சதி ஆலோசனையை அநுசரித்தோ, அல்லது, அதன் பயனாகவோ, அச்சதிக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு நபராலேயே செய்யப்பட்ட குற்றமாகுமென்பதை ஜூரிகள் மனதில் வாங்கவேண்டுமென்று சொன்னார். அப்புறம் அவர் சதி ஆலோசனையே ஒரு குற்றமாகு மாகையால், சதி இருந்ததென்று ருபிக்கப்பட்டால் போதுமானதென்றும், சதிக்காரர்கள் சேர்ந்து ஒரு சதிச் செயலைச் செய்திருக்க வேண்டியதில்லை யென்றும், அவர்கள் மீட்டிங்க் கூடி ஆலோசனை செய்திருக்கவேண்டியது அவசியமில்லை யென்றும், அவர்களுக்குள் கடிதப் போக்குவரத்து இருந்திருக்கவேண்டியது அவசியமில்லை யென்றும் சொன்னார். பரஸ்பரம் சதிக்காரர்கள் தாங்கள் குற்றத்தைச் செய்ய உத்தேசித்திருந்தார்களென்றும், ஒத்துப்பேசிக்கொண்டிருந்தார்களென்றும், கோர்ட்டாருக்குத் தெரியவந்தால் போதுமானதென்று சொல்லிக்கொண்டார். அவர் பிரஸ்தாப திருநெல்வேலி சதியின்நோக்கம் இந்தியாவின்சுவாதீனத்தைப்பெறுதலையன்றி வேறில்லை யென்றும் அச்சுவாதீனத்தை சதிக்காரர்கள் ஆங்கிலேயர்களைக் கொலைசெய்துவிடுவதாகிய உபாயத்தைக் கைப்பற்றிப்பெறப் பார்த்தார்களென்றும் தெரிவித்ததுமன்றி, நான் சுவாதீனமென்று சொல்கிறேனாயினும் சதிக்காரர்கள் அதனை சுவாராச்சியம் என்பார்களென்றும், இந்தக் கேசில் அப்ரூவர்களாய் எடுக்கப்பட்டிருக்கிறவர்கள் சொல்லும் சாட்சியால் திருநெல்வேலி சதியின் நோக்கம் வெளியாகுமென்றும் சொன்னார். அதன்மேல் அச்சதியின் சரித்திரத்தைச் சொல்லபுகுந்து. 1910-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் ஒரு சதிச்சங்கம் இருந்து வந்திருப்பதற்கும் அதனில் இரண்டாவது கைதியும் 6-வது கைதியும், ஆஷைக்கொன்ற வாஞ்சி அய்யரும், 10-வது கைதியும் சேர்ந்திருந்தார்களென்பதற்கும் பிராஸிகியூஷன் தரப்பாருக்கு சாட்சிய மிருக்கிறதானாலும் அது பற்றும் பற்றாததாயிருப்பதால் கவர்ன்மெண்டார் அதனை ஒரு ருசுவாய்ப் பொருட்டாக்க வில்லையென்றும், இருந்தாலும் அச்சாட்சியம் தான் இது வரை கிடைத்திருக்கும் முற்பட்ட சாட்சியமாகு மென்றும் சொல்லிவிட்டு அச்சங்கத்தார் வாழ்த்துச் சொல்லாக வைத்துக்கொண்டிருந்த 'பாரத மாதா வாழ்க' என்ற வார்த்தைகள் பின்னாலே ராஜத்துரோக எண்ணங்கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட சங்கத்தாரால் கெட்ட அர்த்தத்தில் உபயோகிக்கப்படும் குறிப்பு வார்த்தைகளாய் வழங்கத் தலைப்பட்டன வென்றும் தெரிவித்தார்.

இப்படிப் பொதுப்படப் பேசிவிட்டு, மிஸ்டர் நேபியர் பிரஸ்தாபக் கேசில் முதல் கைதி சம்பந்தப்படத் தலைப்பட்டதைப் பற்றி சாட்சியம் சொல்ல, சாட்சிகள் விடப்படுவார்களென்று சொல்லிக்கொண்டு ஆரம்பித்து, இச்சதியில் முதல் கைதி முக்கிய வழிகாட்டியிருந்து சதிக்காரர்களை ஆட்டிவைத்தானென்றும், தென்னிந்தியாவில் இச்சதிக்கு அவனே காரணபூதனென்றும் அவனுக்குப் பின் பலமாய் புதுச்சேரியில் பலர் இருந்தார்களென்றும் சொன்னதுமன்றி, புதுச்சேரியிலிருந்துதான் இச்சதிக் கூட்டங்கள் உற்பத்தியாயின வென்றும் இக்கேஸில் இனி விடப்போகிற சாட்சியத்தால் தெரியவருமென்றும், முதல் கைதி புதுச்சேரியில் சமாசாரப் பத்திரிகைகள் நடத்துவதில் சம்பந்தப்பட்டிருந்தா னென்றும் தெரிவித்தார். அவ

னைப்பற்றி சாட்சி சொல்லப்போகிறவர் ஒரு வக்கீலென்றும், அவர் முதல் கைதியைப் புதுச்சேரியில் சந்திக்க, அவன் அவரிடம் தன்னுடைய எண்ணமும், நோக்கமும் இவைகளாகுமென்று சொன்னதுமன்றி, அந்த நோக்கம் நிறைவேறுவதைப்பற்றி தனக்குள்ள நம்பிக்கை இதுவாகுமென தெரிவித்திருக்கிறானென்றும், அவன் அவரிடம் சொன்னவைகளெல்லாம் அவர் சொல்லும் சாட்சியத்தால் சாங்கோபாங்கமாய்த் தெரியவருமென்றும். சுவராச்சியம் பெற வேண்டுமென்ற ஒரே படிவாதமான நோக்கத்தோடு பின்னால் ஒரு ரகசியக் கூட்டம் ஏற்படாயிற்றென்று முதல் கைதி அவரிடம் புதுச்சேரியில் சொன்னது அவர் விசாரிக்கப்படும்போது வெளிவந்தே தீருமென்று சொன்னார். அப்பால் மிஸ்டர் நேபியர் 2-வது கைதிக்கும் முதல் கைதிக்கும் இந்தச் சதியில் நெருங்கிய சம்பந்தமிருந்ததும், இரண்டாவது கைதி முதல் கைதிபோகவினைத்த பல இடங்களுக்கும் சென்று அங்கே செய்யப்பட வேண்டிய வேலைகளைச்செய்து வந்ததும் சாட்சிகளின் விசாரணையில் தெரியவருமென்றார். அப்புறம் அவர்களது சதியாலோசனை மீட்டிங்குகள் நடந்த இடங்கள் எங்கெங்கே யிருக்கின்றனவென்றும், முதல் இரண்டு கைதிகளும் வாஞ்சி அய்யரோடும் மற்[illegible] பேசியதற்கு என்னென்ன சாட்சியங்[illegible]ன்றன வென்று சொன்னதுமன்றி, சதிக்காரர்கள் சபதஞ்செய்து கொண்டது, முதல் [illegible] சென்றது. ரகசியக் கூட்டத்தார் செய்துவந்த வேலை, இவைகளையெல்லாம் விஸ்தாரமாய் எடுத்துச் சொன்னார்.

மறுபடி மூன்று மணிக்குக் கோர்ட்டு கூடியதும், பப்ளிக பிராசிகூடர் மிஸ்டர் நேபியர் எழுந்து பின்வருமாறு பேசினார்:—

முதல் குற்றவாளி குற்றத்தை ஒத்துக்கொண்டதைப்பற்றி இதற்கு முன்னமே சொல்லி இருக்கிறேன். இக்குற்றவாளியை அரெஸ்டு செய்தபோது அவன் வசம் இருந்தது. இதில் ஒரு நீண்ட கடிதம் [illegible] பல குறிப்புகள் இருந்தன. அகௌண்டெண்டாக இருந்து நாடகக்காரராக மாறி அப்புறம் சப் எடிட்டராக மாறி பிரசங்கியாக மாறி அப்புறம் அனுபக கூஷிக் பின் தலைவராக மாறி மறுபடி சப் எடிடர் ஆகவும் அதைவிட்டு நூல் ஆசிரியர் ஆகவும் அதை விட்டு தேச சஞ்சாரியாகவும் மாறியதை இந்தக் கடிதத்தில் குற்றவாளி தாமாகவே குறித்திருக்கிறார். பாரத மாதா என்னும் பதம் பல கடிதங்களில் உபயோகி[illegible]. தூத்துக்குடியிலிருந்து ஆறுமுகம் [illegible] எழுதிய கடிதத்தில் 'மதாவிசம் வாஞ்சி ஐயருக்கு எழுதிய கடிதத்தில் 'மாதாவின் அருளால் எல்லாம் க்ஷேமம்' என்றும், ராமமூர்த்தி கையெழுத்து செய்திருக்கும் கடிதத்தில் 'மாதாவின் க்ஷேமத்தைக்கோரி' என்றும், அபிஹர அய்யர் வாஞ்சி அய்யருக்கு எழுதி இருக்கும் கடிதத்தில் பாரத மாதா வழி [illegible] வரையில் காத்திருக்க வேண்டு'மென்றும், [illegible] நான் அறிந்த எப்பொழுது [illegible] செய்வாளோ. நான் அறியேன்' என்றும், மாடசாமி வாஞ்சி அய்யருக்கு எழுதிய கடிதத்தில் 'நாம் அடிமைத்தன்மையினின்றும் [illegible] விடுவிக்கத்தக்க சந்திரிகை [illegible] மாதாவை நாம் பிரார்த்திப்போமாக' என்றும் எழுதப்பட்டிருந்தது. ஆறுமுகத்தை அரெஸ்டு செய்தபோது இந்திய மாதாவின் படம் ஒன்று அவனிடத்தில் இருந்தது. இது ராஜ துவேஷத்திற்காகத் தண்டிக்கப்பட்டும் வெளியேற்றப்பட்டும் போனவர்களின் படங்களைக் கழுத்தணியாகக் கொண்ட ஒரு பெண் உருவம். பாரதமாதா என்னும் பதத்திற்குப் பொருள் அது. ராஜத்துவேஷ நோக்கங்களின் பொருட்டு இந்த செனைட்டு உபயோகப் படுத்தும் மொழி அதுவாகும். வேறு கடிதங்களும் உண்டு. ஒன்றில் 'நம் தூத்துக்குடி நண்பர் வீட்டில் ஒரு சிறு அசௌகரியம் நேர்ந்ததால் முன்னே அதை அனுப்பக்கூடவில்லை. அவன் அதை அனுப்பும்படி நான் செய்கிறேன்' என்று இருக்கிறது. அது என்பது தர்மா என்னும் பத்திரிகை. இதில் ராமமூர்த்தி என்று கையெழுத்து இருக்கிறது. இப்பெயர் மாடசாமி ராஜத்துவேஷ வேலைக்காக புனைந்து கொண்ட மறு பெயர். மாடசாமி ஓட்டப்பிடாரத்தைச் சேர்ந்தவர். வாஞ்சி அய்யருக்கும் அவருக்கும் சம்பந்தமில்லை. அப்ரூவர் ஆறுமுகமும் வாஞ்சியும் நேசமான பிறகு ஆறுமுகம் வாஞ்சிக்கு எழுதிய கடிதம் இன்னொன்று. இதைப் படித்தால் பிராமணன் அல்லாதவன் ஒரு பிராமணனுக்கு எழுதுவது போலவே சாதாரண விதமாகவோ இல்லையென்று தெரியவரும் இக்கடிதத்திற்கு அர்த்தம் இன்னதென்று ஆறுமுகத்தால் வெளிப்படும். இக்கடிதங்களைத் தனித்தனி பார்க்கும்போது உபயோகமற்றதாகத் தோற்றலாம். ராஜத்துவேஷத் தன்மையைத் தெரிவிக்கும் அறிகுறிகளாக நான் அவைகளைச் சேர்த்து இங்கு எடுத்துச் சொல்லுகிறேன். மாடசாமி அகப்படாததால் அவன் சாட்சியும் கிடைக்கவில்லை. ஆனால் ஆறுமுகம் இருப்பதால் அவனால் எல்லாம் வெளிப்படும். இம்மட்டும் கடிதங்களைப் பற்றிப் பேசினேன். தக்க சாட்சிகளும் இருக்கிறார்கள். அவர்கள் குற்றவாளிகள் தங்கள் குணத்தில் எப்படி மாறினார்கள் என்று தெரிவிப்பார்கள். குற்றவாளிகளின் கூட்டத்தின் ராஜத்துவேஷத் தன்மையைத் தெரியாதவரையில் அவர்களோடு சேர்ந்து புழங்கி அப்புறம் விலகியவர்களாய் சில சாட்சிகள் இருக்கிறார்கள். இதனால் அச்சாட்சிகள் நம்பத்தகாதவர்கள் என்று நினைக்கப்படாது. சில பத்திரிகைகளும் துண்டுப் பிரசுரங்களும் குற்றவாளிகள் வசம் அகப்பட்டன. இவையும் இவர்கள் குற்றத்தையும் வற்புறுத்தும் இப்பத்திரிகைகள் சந்தேகத்துக்கு இடமின்றி ராஜத்துவேஷத் தன்மை வாய்ந்தவையாயும் கவர்ன்மெண்டாரால் தடுக்கப்பட்டவையாயும் இருக்கின்றன. துண்டுப் பிரசுரங்கள் சந்தேகத்துக்கு இடமின்றி ராஜத்துவேஷத்தைக் குறிக்கின்றன. ஒரு துண்டுப் பத்திரிகையில், ஜனங்கள் பிளேக்கினாலும், பஞ்சத்தினாலும் பட்டினியாலும் ஆயிரக்கணக்காக இறந்துபோகிறார்கள் என்றும் இதற்குக் கொடுங்கோன்மையே காரண மென்றும் இதற்கு ஆங்கிலேயர்கள் தேசத்தில் புகுந்ததே சொல்லப்பட்டிருக்

கிறது. மேலும் உயர்ந்த உத்தியோகங்கள் எல்லாம் பரங்கிகள் வைத்துக்கொண்டு அதிகார மற்ற உத்தியோகங்களைச் சுதேசிகளுக்கு நாய்க்கு எலும்பு போடுவதுபோல் கொடுக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறது. மேலும் துண்டுப் பத்திரிகையில் பரங்கிகள் ஏராளமாய்ப் பணத்தை அள்ளிக்கொண்டு போகிறார்கள் என்று புகார் செய்து, அவர்களுக்கு விரோதமாய் மாச்சரியத்தை வகித்து அவர்களை நீக்கவேண்டுமென்று சபதம் செய்துகொள்ள வேண்டுமெனக் குறிப்பிட்டிருக்கிறது. அம்மட்டோடு நிற்கவில்லை. 'அவனைக் கத்தியாலோ தடியாலோ கல்லாலோ கொல்' என்று சொல்லி, 'சுதேசி சண்டை துவக்கி இருக்கிறமு, ஆனந்த வருஷத்தில் கொடும் சண்டை நடக்கும்' என்று முடித்திருக்கிறது இத்துண்டுப் பிரசுரம் தமிழில் புதுச்சேரியில் அச்சிடப்பட்டிருக்கிறது. இன்னொரு பிரசுரத்தில் இந்த ஸொசைடியில் சேருகிறவர்கள் செய்துகொள்ளவேண்டிய சபதம் சொல்லப்பட்டிருக்கிறது ஆனந்த வருஷத்திற்குள் பரங்கி தேசத்தைவிட்டு அப்புறப்பட வேண்டுமென்பது கடவுளின் இச்சை, இதை நிறைவேற்றுவதற்கு மார்க்கம் ரகசிய சபைகள் சேர்ப்பது என்று காட்டிப்பட்டிருக்கிறது. இச்சபைகளில் நவீன பாரத என்பது முக்கியமானது. யுத்தம் நடக்கும்போது இதன் மெம்பர்கள் பகிரங்கமாய் வெளிப்படுவார்கள் மேலும், இந்தப் பிரசுரத்தில் தேசம் சுராஜ்யம் பெறுகிறவரையில் நீதி நடக்காது என்றும் ஆங்கிலேயரை இத்தேசத்தை விட்டுத் துரத்துகிற வரையில் சுயராஜ்யம் கிடைக்காது என்றும் சொல்லப்பட் டிருக்கிறது. இப்பிரசுரங்களின் ராஜத்துவேஷம் நிரம்பி யிருக்கிறது. சதியோசனைக் குறிகளும் இருக்கின்றன முதல் குற்றவாளியினிடம் இருந்து இந்திய ம்த்தம் 1857 (Indian war of independence)என்று பெயருள்ள புத்தகம் அகப்பட்டது. இப்புஸ்தகத்தில் அங்குமிங்கும் சில பாகங்களை இப்போது நான் படிக்கப் போகிறதில்லை. நான் அதை முழுவதையும் படித்ததில் அது மறுபடியும் கலகத்தை தூண்டி டத் தக்கதென்று அறிந்தேன். இப்புஸ்தகம் நன்றாய் எழுதப்பட்டிருக்கிறது. சென்றுபோன சரித்திரத்தைமட்டும் இது சொல்வதாயிருந்தால் குற்றம் வொன்று மிராது. ஆனால் ஐரோப்பியர்களைக் கெட்டவர்களாக வர்ணித்து மறுபடி கலகத்தை மூட்ட சகல பிரயத்தனமும் இதில் செய்யப்பட்டிருக்கிறது.

இப்படி பப்ளிக் பிராசிகூடர் முடித்த வுடன், C. I. D. போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் P. B. தாமஸ் பிராசிகூஷன் முதல் சாக்ஷியாகக் கூப்பிடப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

(மூன்றாவது தினம்.)

(செப்டம்பர் மாதம் 15-ந்தேதி வெள்ளிக்கிழமை).

மிஸ்டர் P. B. தாமஸ்.

ரெயில்வேக்கும் கிரிமினல் இன்வெஸ்டிகேஷன் டிபார்ட்டுமெண்டுக்கும் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாகிய மிஸ்டர் P. B. தாமஸ், பிராசிகூஷன் தரப்பில் விசாரணை செய்யப்பட்ட முதல் சாக்ஷியாகும் திருநெல்வேலிக்குத் தாம் போனதைப்பற்றியும், ஆஷ் கொலையைப்பற்றி விசாரணையை தாம் சார்ஜில் எடுத்துக்கொண்டதையும், குற்றஞ்சாட்டபட்டவர்கள்வரிசையாய் அரெஸ்டுசெய்யப்பட்டதையும் அப்படி அரெஸ்டு செய்யப்பட்ட இடங்களையும் விவரமாகச் சொன்னார். கிரிமினல் இன்டெலிஜன்ஸ், டிபார்ட்மெண்டு டிப்டி சூபரின்டென்டெண்டு மிஸ்டர் வெங்கோபாராவிடம் இந்தக் கேஸ் டயரின் சார்ஜை (தினப்பதிவு புத்தகம்) ஒப்புவித்தார் அப்ரூவர் ஆறுமுகம்பிள்ளை கொண்டுவரப்பட்டபோது சாக்ஷி ஆறுமுகம் பிள்ளையுடன் பேசினார். அப்போது ஆறுமுகம்பிள்ளை அரஸ்டிலில்லை ஆறுமுகம் பிள்ளை தனக்கு சிலர் கெடுதி செய்யாதபடி காக்கப்படவேண்டுமென்று சாக்ஷியிடம் கேட்டுக்கொண்டான். பின்னை சொல்லிய ஸ்டேட்மெண்டை போலீஸ் டிப்டி சூபரின்டென்டெண்டு மிஸ்டர் ஹாமில்டன் ரிக்கார்டு செய்தார். இறந்துபோன வாஞ்சி அய்யரிட மிருந்த கைத் துப்பாக்கியைப்பற்றி சாக்ஷி விவரங்கள் சொன்னார். அது பெல்ஜியம் தேசத்தில் செய்யப்பட்ட பிரௌனிங் ஆடோமாடிக் பிஸ்டல். அந்துப்பாக்கியின் மேலிருந்த நம்பரும், அதன் உள்பாகங்களிலிருந்த நம்பர்களும் அழித்துவிடப் பட்டிருந்தன.

மிஸ்டர் J. C. ஆடம் மேற்படி சாக்ஷியைக் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

மிஸ்டர் T. பிரகாசம் குறுக்கு விசாரணை செய்தது—ஆகஸ்டு மாதம் முதல் தேதியில் சாக்ஷி பைல் செய்த கம்பளெயின்டில் பதினொரு சாட்சிகளின் பெயர்கள் தான் குறிப்பிடப்பட்டன. 14-வது குற்றவாளி ஜூன்மாதம் 21-ந்தேதி அரஸ்டு செய்யப்பட்டான்.

இந்தக்கேஸ் விசாரணையைப்பற்றி சாட்ஷி டயரி (தினப்பதிவு புத்தகம்) வைத்திருந்தாரா என்று கேட்கப்கட்டபோது சாட்சி அக்கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியதில்லை என்று சொன்னார். இந்தக்கேஸ் டைரியில் காணப்பட்ட விஷயங்களைப்பற்றி கேள்விகள் ஒன்றும் கேட்கப்படக் கூடாதென்று பிராசிகூஷன் தரப்பார் ஆக்ஷேபணை கொண்டுவந்தார்கள். ஆனால் சீப் ஜஸ்டிஸ் மேற்படி ஆக்ஷேபணை செல்லாதென்றும், ஒரு டயரி எழுதப்பட்டு வந்ததா இல்லையா என்பதைப்பற்றி பொதுவான கேள்விகளுக்கு சாக்ஷி பதில் சொல்லவேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

கம்பளெயின்ட் பைல் செய்யப்பட்டதற்கு முன்பாக, மணியாச்சி ஸ்டேஷன் மாஸ்டரும் அவருடைய இரண்டு புத்திரர்களும் விசாரணை செய்யப்பட்டார்களா இல்லையா என்பது சாக்ஷிக்கு ஞாபகமில்லை என்றும், கம்பளெயிட்ன் பைல்செய்யப்பட்டதற்கு முன் ஸ்டேஷன் மாஸ்டரும் அவர் புத்திரர்களும் ஸ்டேட்மென்டுகள் கொடுத்தார்களென்று ஞாபகமிருக்கிறதென்றும், அவர்களுடைய பெயர் கம்பளெயின்டில் காணப்படாததற்குக் காரணம் எல்லா சாக்ஷிகளின் பெயரும் குறிப்பிடவேண்டியது அவசியமில்லை என்று அவர் நினைத்ததாகுமென்றும் சாக்ஷி சொன்னார் சாக்ஷிக்கு ஞாபகம் இருந்த வரையில் இரண்டாவது குற்றவாளி கொக்கரகுளம் சப்ஜெயிலில் வைக்கப்பட்டிருந்தான்.

கேள்வி—பிடித்து அடைக்கப்பட்டவர்களுள், வாஞ்சி அய்யருக்கு உடந்தையா யிருந்தவன் இன்னொன்று யார் மேல் முதல் முதலில் சந்தேகம் பிறந்தது ?

மிஸ்டர் நேபியர்—இந்த ஆக்ஷேபிக்கிறேன். இது போலீஸ் விசாரணையைப் பற்றிய விஷயங்களை அறிவதற்காகும்.

இக்கேள்வி கேட்கக் கூடாதென்று தடுக்கப்பட்டது.

கேள்வி—இரண்டாவது குற்றவாளிக்கு முன்னால் யார் அரஸ்டு செய்யப்பட்டது ?

விடை—முத்துசாமி அய்யர்.

கேள்வி—முத்துசாமி அய்யர் பிடிக்கப்பட்டபோது தலைமயிர் கத்திரித்திருந்ததா ?

விடை—எனக்கு ஞாபகமில்லை.

கேள்வி—முத்துசாமி அய்யர் இன்னென்று ருஜிக்கப்படுவதற்கு கொண்டுவரப்பட்டபோது நீர் அங்கே இருந்தீரா ?

விடை—இல்லை.

கேள்வி—எந்த குற்றவாளி வாஞ்சி ஐயருக்கு உடந்தையாளிகை என்று சந்தேகிக்கப்பட்டான் ?

விடை—உடந்தையா யிருந்தவன் இன்னானென்று ருஜிக்கப்பட்ட வரைக்கும் ஒவ்வொரு குற்றவாளியையும் உடந்தையானவன் என்று சந்தேகித்தேன்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏயிலிங் 'உடந்தையானவன்' என்ற பதத்தைக் காட்டிலும் 'உடனிருந்தவன்' என்ற பதத்தை உபயோகித்தால் தெளிவா யிருக்கும் என்று சொன்னார்.

வாஞ்சி அய்யரோடு கூட இருந்தவன் எப்படியிருப்பான் என்பதை சாக்ஷி சொன்னார். அவன் கொஞ்சம் பால்யமானவன்; மத்தியமான உயரம்; மார்பில் ஒரு சரிகை உத்தரீயத்தை அணிந்திருந்தான்; அவனுடைய தலைமயிர் கத்திரித்திருக்குமென்றுசொல்லப்பட்டதாகவும் சாக்ஷி எண்ணினார். கொக்கரகுளம் சப் ஜெயிலில் 2-வது குற்றவாளி இன்னானென்று ஞானமுத்து ருஜித்தபோது சாக்ஷி அங்கிருந்ததாகச் சொன்னார். ஞானமுத்து 2-வது குற்றவாளியைக் குறிப்பிட்டதோடு கூட, 11-வது குற்றவாளி (அருணாசலம் பிள்ளை)யையும் காண்பித்தான் ஆனால் 11-வது குற்றவாளி, மணியாச்சி ஸ்டேஷனில் கொலை நடந்தபோது, பிளாட்பாரத்தில் இருந்ததாக காண்பிக்கப்பட்டானே யொழிய கொலை நடந்தபோது பிளாட்பாரத்திலிருந்து வாஞ்சி அய்யருடைய தோழன் என்று காண்பிக்கப்படவில்லை.

அப்ரூவர் ஆறுமுகம் பிள்ளைக்கும் மற்ற இரண்டு அப்ரூவர்களுக்கும் எப்போது மன்னிப்புக் கொடுக்கப்பட்டதென்பது சாக்ஷிக்கு ஞாபகமில்லை என்று சொன்னார். ஆறுமுகம் பிள்ளை தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலி ஜங்ஷன் ரெயில்வே போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுவரப்பட்டபோது சாக்ஷி அவனைப் பார்த்தாரென்றும், அப்போது அவன் அரெஸ்ட் செய்யப்படவில்லையென்றும், டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் உத்தரவுப்படி 6 அல்லது 7-ந்தேதி ஜூலை மாதம் அரெஸ்ட் செய்யப்பட்டா னென்றும் சாக்ஷி சொன்னார். ஜூன் மாதம் 22-ந்தேதி முதல் அரெஸ்டு செய்யப்பட்ட தினம் வரையிலும் ஆறுமுகம்பிள்ளை போலீஸுடன் தான் இருந்து வந்தான். இதற்குக் காரணம், தன்னை யாராவது கொன்றுவிடுவார்களென்று போலீஸ் காப்புவேண்டுமென்றதே யாகும். ஆறுமுகம் பிள்ளையை முன்னாலேயே அரெஸ்டு செய்யாததற்குக்காரணம், சார்ஜ் ஷீட் பைல் செய்வதற்கு முன்னால் அவனை அரெஸ்டு செய்யவேண்டியதில்லை என்று சாக்ஷி எண்ணியதாகும். சோமசுந்தரம்பிள்ளை என்ற அப்ரூவரை தூத்துக்குடி போலீஸார் அரெஸ்டு செய்தார்கள். சோமசுந்தரம் பிள்ளையை ஸ்டேட்மென்ட் கொடுக்கும்படி சாக்ஷி கேட்கவில்லை. ஆறுமுகம் மென்று விரும்பியதால் நான் ஆறுமுகம் பிள்ளையை அப்படிச்செய்யும்படிச் சொன்னார். மூன்றாவது அப்ரூவராகிய ராமசாமி அய்யருடன் சாக்ஷி ஒன்றும் பேசவில்லை ராமசாமி அய்யர் அப்படிய மாஜிஸ்டிரேட்டின் முன் சாக்ஷியம் சொன்னதற்கு முன்னால் ராமசாமி அய்யரை அரெஸ்டுசெய்து திருநெல்வேலிக்குக் கொண்டு வந்தார்கள்.

பாரிஸ்டர் மிஸ்டர் தேவதாஸ்ஸால் குறுக்கு விசாரணை:—பிராசிக்கூஷன் செய்ய சாங்க்ஷன் வாங்கும் பொருட்டுக் குற்றவாளிகளின் பெயர்கள் வெளியிடப்பட்டன. 19 பேர்கள் மேல் சாங்க்ஷன் கொடுக்கும்படி மனுச் செய்யப்பட்டது. எப்போது செய்யப்பட்டதென்று தெரியாது. அந்த மனுப்பப்பட்டதும் தெரியாது. அந்த 19 பேரில் ஆறுமுகம், இறந்துபோன தர்மராஜு, ஓடிப்போயிருக்கும் மாடசாமி இவர்களடங்கியவர்கள். சோமசுந்தரம் பிள்ளை இவர்கள் மேல் சாங்க்ஷன் கேட்கப்படவில்லை. மூல

...ங் கேஸில் 2 சார்ஜுகள் செய்யப்பட்டன. 2-வது சார்ஜில் ஆகஸ்ட் மாதம் 18-ந் தேதி போடப்பட்டிருக்கிறது" தூத்துக்குடி ஷண்முகம் பிள்ளை திருநெல்வேலிக்குக் கொண்டுவரப்பட்டவுடன் விடுதலை செய்யப்பட்டான். அது ஜுலை அல்லது ஆகஸ்டில். சோமசுந்தரம் பிள்ளை எப்போது விடுதலை பெற்றானென்று எனக்குத் தெரியாது. அவன் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டான். சோதனை செய்யும் நிமித்தம் தூத்துக்குடி சென்றவர்கள் புறப்படுந் தறுவாயில் நான் திருநெல்வேலிக்குப் போனேன். என் ஆள்களில் ஒருவனை அவர்களுடன் அனுப்பினேன். பிராஸிக்யூஷன் சாக்ஷிகளின் ஸ்டேட்மெண்டை வாங்கும்பொருட்டு ஒரு மாஜிஸ்டிரேட் முன் கொண்டு போனோம். அப்ரூவர் ஆறுமுகமும் மாஜிஸ்டிரேட் முன் கொண்டுபோகப்பட்டான். டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் உத்தரவுப்படி அவன் அரெஸ்ட் செய்யு[illegible]ன் கொண்டுபோகப்பட்டான். பிராஸிக்யூஷன் சாக்ஷி திருமலை முத்துவினிடமிருந்து ஜுலை அல்லது ஆகஸ்டில் ஸ்டேட்மெண்ட் வாங்கப்பட்டதென்று நினைக்கிறேன். திருநெல்வேலிப் பாலத்திற்கு ஆறு பர்லாங்கு தூரத்திலுள்ள கொக்கிரகுளத்தில் திருநெல்வேலி சப் ஜெயிலிருக்கிறது. இடையிலொரு நதியிருக்கிறது. காலை தோறும் குளிக்கும் பொருட்டு சப் ஜெயில் கைதிகளை நதிக்கு அழைத்துச் செல்வதுண்டோ, என்னவோ எனக்குத் தெரியாது.

வக்கீல் மிஸ்டர் நரஸிம்மராவால் குறுக்கு விசாரணை யானபிறகு, மிஸ்டர் N. K. ராமசாமி அய்யர் குறுக்கு விசாரணை செய்ததில், கம்பிளெயிண்ட் பைல் செய்வதற்கு முன் அப்ரூவர் ராமசாமி அய்யரைச் சாக்ஷி பார்த்ததில்லையென்றும், சாக்ஷிகள் வெங்கடராமய்யரையும் திருமலைப் பிள்ளையையும் கம்பிளெயிண்ட் பைல் செய்யுமுன் பார்த்த துண்டா இல்லையா வென்று சாக்ஷிக்கு ஞாபகமில்லையென்றும், கம்பிளெயிண்ட் பைல் செய்யுமுன் இந்த சாக்ஷிகள் விசாரணை செய்யப்படவில்லையென்று தாம் நினைப்பதாகவும் சாட்சி சொன்னார். கம்பிளெயிண்ட் பைல் செய்த பிறகு எப்போது இந்த சாக்ஷிகள் முக்கிய சாக்ஷியம் கொடுக்கக் கூடியவர்களானார்களென்று தம்மால் சொல்லமுடியாதென்று சாக்ஷி சொன்னார்.

ஆனரபில் மிஸ்டர் L. A. கோவிந்தராகவையர் கேட்டதற்கு, பிரிலிமினரி விசாரணையில் சாக்ஷியம் கொடுத்தபோது அப்ரூவர் ராமசாமி அய்யரைத் தாம் பார்த்ததாகச் சாக்ஷி சொன்னார்.

மிஸ்டர் முத்தைய முதலியார் கேட்டதில் குற்றவாளிகளைத் தம் கையால் அரெஸ்ட் செய்யவில்லையென்றும், குற்றவாளிகள் எந்தச் சந்தர்ப்பத்தில் அரெஸ்ட் செய்யப்பட்டார்களென்று தமக்கு ஞாபகமில்லை[illegible]வது குற்றவாளி மரத்தின் மேல் ஏறி[illegible] அரெஸ்டு செய்யப்பட்டதைத் தாம் சொல்லக் கேட்டதன்றி நேரில் கண்டதில்லையென்றும் சாக்ஷி சொன்னார். "மாடர்ன் ரவ்யூ" பத்திரிகை கவர்ன்மெண்டால் தடுக்கப்பட்ட பத்திரிகையென்று தாம் சொல்ல முடியவில்லையெனச் சாக்ஷி சொன்னார்.

வக்கில் மிஸ்டர் குப்புசாமி அய்யர் கேள்வி கேட்ட பிறகு, மிஸ்டர் V. ரைரு நம்பியார் கேட்க, 13-வது குற்றவாளி கொஞ்சக்காலமாக வந்தே மாதரம் சுப்பிரமணியையர் என்று கூப்பிடப்பட்டு வந்தான், அம்மாதிரி பேர் பதிப்பட்டதென்றும், அப்பெயரால் அக்குற்றவாளியைத் தமக்குத் தெரியுமென்றும் சாக்ஷி சொன்னார்.

மிஸ்டர் நேப்பியரால் மறு விசாரணை செய்யப்பட்டதில் முதலில் தயாரித்த சார்ஜில் மணியாச்சிஸ்டேஷன் மாஸ்டர் பேரும் அவர் இரண்டு குமாரர்களின் பேரும் சேர்க்கப்பட்டிருந்தன வென்று சாக்ஷி சொன்னார்.

மிஸ்டர் F. A. ஆமில்டன்.

திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் போலீஸ் சூபரின்டெண்டண்ட் மிஸ்டர் ஹாமில்டன் மிஸ்டர் ரிச்மண்டால் பிராஸிக்கூஷன் 2-வது சாக்ஷியாக விசாரிக்கப்பட்டார். மிஸ்டர் ஆஷின் கொலையையும், அவர் பிரேதமும் கொலை செய்தவன் பிரேதமும் திருநெல்வேலிக்குக் கொண்டுவரப்பட்டுச் சோதனை செய்யப்பட்டதையும் பற்றிய விவரங்களைச் சொல்லிவிட்டு, சங்கர கிருஷ்ணையர் 21-ந் தேதி அரஸ்ட் செய்யப்பட்டதாகவும், தூத்துக்குடிக்குப் போனவர்கள் சோமசுந்தரம் பிள்ளை, குமாரசாமி பிள்ளை, சுப்பையபிள்ளை இம்மூவரையும் அரெஸ்ட் செய்து ஜுன் 22-ந்தேதி கொண்டு வந்ததாகவும் ஆறுமுகத்தை அரெஸ்ட் செய்யாமல் கொண்டுவந்ததாகவும் சொன்னார். தன் கூட்டாளிகள் தன்னைக் கொல்லுவார்களென்று ஆறுமுகம் பயந்து தன்னை ரக்ஷிக்கவேண்டுமென்று கேட்க, சாக்ஷி அவனைப் பாதுகாத்து வந்தார். ஜுன் 22, 23-ந் தேதிகளில் ஆறுமுகத்தினிடம் சாக்ஷி ஸ்டேட்மெண்ட் வாங்கினார். அப்ரூவர் ராமசாமி அய்யரை ஆகஸ்ட் முதல் தேதி அரஸ்ட் செய்து அன்று மாலையே சாக்ஷியால் ஸ்டேட்மெண்ட் வாங்கப்பட்டது. இவனை ஆகஸ்ட் 17-ந் தேதி அப்ரூவராக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இங்கு சாக்ஷிக்கு ஒரு கடிதங் காட்டப்பட, இக்கடிதம் மிஸ்டர் ஆஷால் 1910-ம் வருஷம் டிசம்பர் மாதம் 22-ந்தேதி தம்மிடம் கொடுக்கப்பட்டதாகச் சாக்ஷி சொன்னார். பாரதமாதா சபையின் மெம்பர் மிஸ்டர் ஆஷைப் பயமுறுத்தும்படி அனுப்பிய கடிதமது. அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது. "பாரத மாதா சபையின் மெம்பர்களாகிய நாங்கள் இதனால் உமக்கு எச்சரிக்கை செய்கிறோம். இந்த எச்சரிப்பின் பின்னும் பிடிவாதமாயிருப்பீரானால்

[illegible] உன் சித்திரத்தில் [illegible] மையான [illegible] பிள்ளையின் கை[illegible] எழுதப்பட்டிருக்கிறதெ[illegible] மிஸ்டர் ரிச்மண்டன் [illegible]. அப்புறம் சாக்ஷியானவர் தம்மால் கூ[illegible] சொன்னார். [illegible] செய்யப்ப[illegible] சொன்னார்.

மி-ர் J. C. ஆடம் விசாரித்ததில் சாக்ஷி, ஆஷின் [illegible] மாதத்திற்குப் பிறகுதா[illegible] தாம் தூத்துக்குடிக்குப் போனதாகவும், மி-ர் ஆஷ்க்கு வந்த கடிதத்தைப்பற்றி அப்போது விசாரித்ததில் தமக்கு ஒன்றும் [illegible] வெளிப்படவில்லையென்றும், ஆறுமுகத்தைத் தாம் பார்த்தபோது அவன் பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்தானென்றும், அவன் மட்டும் [illegible] தம்மிடம் இன்ஸ்பெக்டர் வீரராகவையரால் கொண்டுவரப்பட்டானென்றும் சொன்னார்.

இன்ஸ்பெக்டர் வீரராகவ அய்யங்கார் சாக்ஷியாகச் சேர்க்கப் போவதாகப் பப்ளிக் பிராஸிக்யூடர் சொன்னார்.

மி-ர் T. பிரகாசம் குறுக்கு விசாரணை செய்ததில் சாக்ஷி சொன்னதாவது.—2-வது குற்றவாளி வீட்டைச் சோதனை செய்ததில் ஏதேனும் அகப்பட்டதோ என்னவோ ஞாபகமில்லை. மணியாச்சி ஸ்டேஷன் மாஸ்டரையும் அவர் பிள்ளைகளையும் நான் விசாரிக்கவில்லை, 18-ந் தேதி அவர்கள் விசாரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஜுன் 18-ந் தேதி காலை நான் வந்தேன். நான் நாங்குனேரியிலிருந்து திருநெல்வேலிக்கு வருமுன் அவர்கள் விசாரிக்கப்பட்டிருக்க வேண்டும். மறுபடியும் அவர்கள் மாஜிஸ்டிரேட்டால் விசாரிக்கப்பட்டார்கள். போலீசாரால் விசாரிக்கப்படவில்லையென்றே எனக்கு ஞாபகம். கொலை செய்தவன் கூட்டாளியின் அங்க அடையாளங்களைத் [illegible] ஜுன் மாதம் 18-ந் தேதி விளம்பரப்படுத்தப்பட்டன. முத்துசாமி ஐயர் கொலை செய்தவன் கூட்டாளி யென்று முதலில் சந்தேகித்ததில்லை. சங்கர கிருஷ்ணய்யர் கொக்கிரகுளம் ஸப் ஜெயிலில் ஸ்டேஷன் மாஸ்டரின் பிள்ளையால் அடையாளங் கண்டு பிடிக்கப் பட்டான். அப்போது நான் கூட இருக்கவில்லை. அப்போது இரண்டாவது குற்றவாளி தலைமயிரைக் கத்தரித்துக்கொண்டிருந்தான். பிச்சுமணி ஐயர் இப்போது வளர்த்திருக்கிறார். [illegible] செய்யப்பட்டான். அது ஜுன் 21-ந்தேதி [illegible]. ஆறுமுகம் காமுதல் போலீஸ் வசம் இருந்தான். தன்னைக்கொல்லுவார்களென்று அஞ்சினவனாக எனக்குத் தோ[illegible] போலீஸ் வசமிருந்தான். அ[illegible] சில நாள் [illegible] கொலைக் கேஸை விசாரணை [illegible] போலீசார் [illegible] அப்புறம் சதிக்கேஸை செய்துகொண்டிருந்தார்கள்.

விசாரித்தபோது போலீஸார் அவனை அப்ரூவராக்கினார்கள். ஆறுமுகம் தன்னிச்சையாய் வந்து இன்ஸ்பெக்டர் வீரராகவ ஐயரிடம் ஸ்டேட்மெண்ட் கொடுக்க விரும்பினான்.

வக்கில் மி-ர் ரொஸேரியோ கேட்டதற்கு, குற்றவாளிகள் வாரண்டில்லாமல் அரெஸ்ட் செய்யப்பட்டு [illegible]ப் ஜெயிலில் வைக்கப்பட்டிருந்தார்களென்று சாக்ஷி சொன்னார். அப்புறம் N. K. ராமசாமி ஐயர் கேட்க, எச்சரிக்கைக் கடிதம் வந்தநாள் முதல் கொலை நடந்த நாள் வரைக்கும் மி-ர் ஆஷ் ஏதாவது பொதுக் காரியத்தில் தலையிட்டதாகத் தமக்கு தெரியாதென்றும், பாரதமாதா சபை என்ற ஒன்றுண்டென்பது தமக்குத் தெரியுமென்றும், ஆத்திரத்தைக் கிளப்பும்படியான துண்டுப் பிரசுரங்கள் ஜில்லாவில் புழங்கி வந்தனவென்று தமக்குத் தெரியுமென்று சாக்ஷி சொன்னார்.

மிஸ்டர் P. S. சக்கரவர்த்தி ஐயங்கார்.

பிராஸிகூஷன் மூன்றாவது சாக்ஷியாக விசாரிக்கப்பட்டார். இவர் சொன்னதாவது:—கூடலூர் டவுனில் நான் முதல் கிரேட் பிளீடர். சென்ற வருஷம் ஈஸ்டர் விடுமுறையில் நான் புதுச்சேரிக்குச் சென்றிருந்தேன். காளவாய்த் தோட்டம் என்ற வீட்டில் தங்கினேன். அங்கொரு ரூமிலிருந்த ஒருவனோடு பேசினேன். என்னை நீர் சக்கரவர்த்தி ஐயங்காரா வென்று அவன் கேட்டான். ஆமென்றேன். என்னை சீகாழியில் தாம் பார்த்ததாகச் சொன்னான். நீ யாரென்று நான் கேட்டேன் தன்னூர் திருப்பூர், நீலகண்ட ஐயர் என்று பெயரென்றான். தான் சுதேச பத்திரிகையின் எடிட்டரென்று சொன்னான். அந்த பத்திரிகையின் நோக்கமென்ன அதில் உனக்கு சம்பந்தமென்ன வென்று கேட்டதற்கு, இந்தியாவின் சுயேச்சையைப் பற்றி பிரசங்கம் செய்துகொண்டு ஊரூராய்த் தான் சஞ்சாரம் செய்துகொண்டுவருவதாகச் சொன்னான். ஆச்சரியப்பட்டு அவன் செய்வது அபத்தமானதென்றும், நெருப்போடு விளையாடுவது கூடாதென்றும் புத்தி சொன்னேன். தேசத்துக்கு மிகுந்த விரோதியாயுள்ளவனும் அவன் செய்வதுபோல் அவ்வளவு கெட்ட காரியம் செய்யமாட்டானென்று சொன்னேன். தேசத்துக்கு மிகுந்த விரோதியாயுள்ளவனும் அவன் செய்யமாட்டானென்று சொன்னேன். அதற்கு முதல் குற்றவாளி தானும் தன் கூட்டாளிகளும் இந்திய நேசர்களென்றும், காங்கிரஸ்காரர்களில் மிதவாதிகளாயுள்ளோர் தேசவிரோதிகளென்றும் சொன்னான். அம்மாதிரி தீர்மானம் ஏன் செய்தாரென்று கேட்க, மிதவாதிகள் இரந்து கேட்கும் பயனற்ற முறையைக் கைக்கொண்டிருக்கிறார்களென்றும் அதனால் தேசவிரோதிகளாவார்களென்றும், தானும் தன் கக்ஷியோரும் பலத்தை யுபயோகித்து இந்தியாவை உத்தாரணம் செய்யக் கருதி மிதவாதிகளினின்று மாறுபட்ட வழி

யைத் தேசத்துக்கு ஒப்பிப்பதாகவும் சொன்னான்.

இந்த சம்பாஷணையில் ஆஷ்பெரயில் மி-ர் V. கிருஷ்ணசாமி அய்யர் பேர் குறிக்கப்பட்டது. மி-ர் கிருஷ்ணசாமி அய்யர் மதராஸில் காங்கிரெஸ் நடக்கு முன் பேசிய ஒரு பேச்சில், அமிதவாதிகள் கொலையவேண்டுமென்று சொல்லியிருந்தார். அவர் பேசியபோது நானிருந்து வந்தனப் பிரேரணை செய்திருக்கிறேன். முதற் குற்றவாளி இதை சுட்டிப்பேசி, அமிதவாதிகள் தொலையமாட்டார்களென்றும் அமிதவாதிகள் தொலையவேண்டி வருமென்றும் சொன்னான். அவன் சொன்னவைகள் அபாயகரமும் நாசகரமுமானவையென்று, நான் அவற்றை யிகழ்வதாகவும் சொல்லி, அமிதவாதிகளை எளனம் செய்வது எளிதான காரியமல்லவென்றும், அமிதவாதிகளையெல்லாம் சிலர்களாக தேசத்தில் நுழைந்து மிதவாதிகளைக் கணக்கொழிக்கும்படி கேட்குங் காலம் சமீபிக்கிறதென்றும் சொன்னான். மிதவாதிகள் தங்கள் நடத்தைக்குப் பிராயச்சித்தம் தங்கள் இரத்தத்தால் செய்யவேண்டி வருமென்றும் சொன்னான். முதற் குற்றவாளியின் கருத்தின் போக்கைக் கவனித்தபோது அவன் கொடுமையும் புரட்சியுமான வழிகளைக் கையாடக் கருதியிருக்கிறானென்று நினைத்தேன். முதல் குற்றவாளி குறிப்பிட்ட காலம் வருவதற்கு எத்தனை நாளாகுமென்று நான் கேட்டபோது, அவன் கையால் தொடையில் ஒரு குத்து குத்தி, "பத்து வருஷங்களில் இந்தியா சுயேச்சை யடையும்" என்றான். அதைக் கேட்க எனக்குப் பயமாயிருக்கிறதென்றும், அவனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதென்றும் சொன்னேன். அப்போது முதல் குற்றவாளி என்னை நோக்கி, இந்திய சுயேச்சை யுத்தம் (Indian War of Independence) என்று பேருள்ள ஒரு புஸ்தகத்தை எறிந்து, இந்தியா 1857-ல் என்ன செய்ததென்று அதில் தெரியுமென்றான். அது கவர்ன்மெண்டாரால் தடுக்கப்பட்ட புஸ்தகமென்றும், அது ராஜத்வேஷத்தைப் புகட்டும் புத்தகமென்றும் நான் சொன்னேன். முதற் குற்றவாளி அதை மறுத்து, "இந்திய சுயேச்சை சுவிசேஷம்" ஆகும் என்றான். முதற் குற்றவாளிக்கு, எனக்குத் தொந்தரவு செய்யாதே போ வென்று சொல்லி விட்டுப் போய், ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்துத் தூங்கினேன். அவன் இவ்வழியில் தனியாயில்லையென்றும், வேறு சிலர் அவனுக்கு ஆதரவாயிருந்துகொண்டு எல்லோரும் சேர்ந்து புரட்சிச்செயல் செய்ய உத்தேசித்திருக்கிறார்களென்றும் எனக்குத் தோன்றிற்று. வானூர் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் என் வேலை முடித்துக்கொண்டு கூடலூர் திரும்பியபோது மறுபடியும் புதுச்சேரி வழியாய் வந்து முதற் குற்றவாளியை, சுப்பிரமணிய பாரதி ஸ்ரீனிவாஸாசாரி என்ற வேறிருவர்களுடன் பார்த்தேன். முதற் குற்றவாளி என்னுடன் பேச எத்தனிக்க, நான் விலகிப்போய் விட்டேன். சென்ற வருஷம் அக்டோபர் டிசம்பர் இம்மாதங்களிடையில் அவனை மறுபடியும் புதுச்சேரியில் பார்த்தேன். திருநெல்வேலி ஜில்லாவில் பிரசங்கங்கள் செய்துவிட்டு அப்பொழுதுதான் திரும்பி வந்ததாகக் குற்றவாளி சொன்னான்.

மி-ர் J. C. ஆடம் விசாரித்ததில் சாக்ஷி, தாம் பக்ஷவிடிஷன் (ராஜீயக்காரன்) அல்லவென்றும், பிரசங்கங்கள் செய்வதில்லையென்றும், அந்த ஜில்லாக் கோர்ட்டுகளில் தம் வேலையிருப்பதினிமித்தமாகப் புதுச்சேரி வழியா யடிக்கடி போகவேண்டியிருந்ததென்றும் தாம் வைத்திருந்த 1910-ம் வருஷத்து டைரி தொலைந்துபோயிருந்ததென்றும், வானூரில் ஒரு கேஸை விசாரிக்கும்படி போக வேண்டியிருந்ததென்றும் சொன்னார்.

மிஸ்டர் S. சக்கரவர்த்தி அய்யங்கார்.

வெள்ளிக்கிழமை ஆகஸ்ட் 3-ம் தேதி கோர்ட்டு கூடினதும் மஸ்டர் J. C. ஆடம் மிஸ்டர் சக்கரவர்த்தி அய்யங்காரை மறுபடியும் குறுக்கு விசாரணை செய்தார். சாக்ஷி சொன்னதாவது:—வானூர் சப் மாஜிஸ்டிரேட் அய்யங்கார் பிராமணர். அவரிடம் கோர்ட்டு சம்பந்தமான வேலையிருந்ததால் அவர் வீட்டில் சாப்பிடப்போகவில்லை; ஏனென்றால் அவர் பேர் கெட்டுப்போய்விடும். எனக்கு கேஸ்கள் அதிகமாய் வந்துகொண்டிருக்கும். வானூருக்குப்போன கேஸ் விஷயத்தில் எனக்கு நல்ல வரும்படி. புதுச்சேரி கலவைத் தோட்டத்துக்குப் போனபோது சுமார் நாலரை மணி இருக்கும். முதற் குற்றவாளியோடு பேச ஆரம்பித்தபோது சாயந்திரம் சுமார் 5½ மணியிருக்கும். சாப்பிடப்போகும் வரையிலும் முதற் குற்றவாளியோடு பேசிக்கொண்டே யிருந்தேன். நான் சாப்பிட ஹோட்டல் ஸ்மார்த்தனால் வைக்கப்பட்டிருந்தது. நான் ஸ்மார்த்தர்களோடு சாப்பிடுவது சகஜம். இப்படிச் செய்வது சாதாரணமாய் வருகிறது. சென்னப்பட்டணம் ஹோட்டல்களில் இப்படி நடந்ததை இப்போதும் பார்க்கலாம். முதல் குற்றவாளியோடு நான் பேசிக்கொண்டிருக்கும்போது இன்னொரு மனிதன் அங்கே நின்றுகொண்டிருந்தான், அவன் முதல் குற்றவாளியின் சிஷ்யனென்று நினைத்தேன். அவன் என் சம்பாஷணையில் கலக்கவில்லை. இந்த சம்பாஷணையை நான் அப்போது எழுதிவைக்கவில்லை. இப்பேர்ப்பட்ட அதிசயமான சம்பாஷணை நான் இதற்கு முன் கேட்டதில்லை யாகையால், என் ஞாபகத்தில் அது நன்றாய்ப் பதிந்திருக்கின்றது. இந்த விஷயத்தை டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டிடம் இவ்வருஷம் ஜூலைமாசம் 16-ம் தேதிதான் சொன்னேன். இந்த சம்பாஷணை நடந்தது 1910-ம் வருஷம் மார்ச்மாசம். டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் முன்பாக இவ்விஷயத்தைச் சொல்லும் வரைக்கும் இதை நான் எழுதி வைக்கவில்லை. இந்த சம்பாஷணை நடந்ததற்கும் இதை டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டிடம் சொன்னதற்கும் இடையே 15 மாதங்கள் ஆயிருக்கின்றன. இந்த 15 மாதகாலமாய் மேலதிகாரிகளுக்கு இதைத் தெரிவிக்கவில்லை. ஆனால் என் உறவினர் சிலருக்குத் தெரிவித்தேன். நான் ராஜவிசுவாசி என்பதற்குச் சந்தேகமில்லை; நான் ராஜவிசுவாசி என்றே நினைக்கிறேன். அந்த வாலிபன் ராஜத்வேஷமான விஷயங்களைப் பரவச்செய்வதை மேலதிகாரிகளுக்குத் தெரிவிப்பது நான் ராஜ விசுவாசியா யிருந்தால் வேலைக்குப் பொருந்தும்.

(இன்னும் வரும்).

166912